Registered No. M-4345.

SECRETARIAT LIBRARY 1946 MADRAS GOVERNMENT

# யுத்த சந்சிகை.

மலர் II.] 1942-ஆம் வருஷம் பிப்ரவரி மீ 6வ, வெள்ளிக்கிழமை. [இதழ் 5

## குருவும், சிஷ்யனும்!

சிஷ்யர்களிலே எத்தனையோ ரகங்கள் உண்டு. அந்த ரகங்களிலே குருவுக்கு மிஞ்சிய சிஷ்யன் என்பது ஒரு ரகம். அதிலே சேர்ந்தது ஜப்பானென்பது இப்போது தெளிவாக தெரிந்து வருகிறது.

ஒரு நாள் ஒரு குரு தன் சிஷ்யனுக்கு "அப்பா சிஷ்யா! எப்பொழுது ஜலம் சாப்பிட்டாலும் உட்கார்ந்து கொண்டே ஜலம் சாப்பிடணும்! வைத்திய சாஸ்திரம் அப்படித்தான் சொல்லுகிறது" என்று உபதேசம் செய்தாராம். பையன் பிரமாதமாகத் தலையை ஆட்டி வைத்தானாம்.

அன்றைய தினம் சாயங்காலம் வாத்தியாருக்கு அவசரமாக எங்கோ போக வேண்டி வந்ததாம். தடபுடலாக டிரஸ் செய்து கொண்டு, கைப்பிரம்பை எடுத்துக்கொண்டு, கண்ணாடி முன்னால் நின்று அழகு பார்த்துவிட்டு, புறப்பட்டாராம். அந்த சமயம் பார்த்து, வாத்தியாருடைய சம்சாரம் உள்ளேயிருந்து ஓடியே வந்தாளாம்; ஒரு கப் காப்பியை எடுத்துக்கொண்டு. 'ஐயோ' காப்பி கூட சாப்பிடாமல் போறேளே! அப்படி என்ன தலைபோற காரியம் அது! என்று கத்தினாளாம். வாத்தியார் கோபத்தோடு திரும்பி வந்து, காப்பியை வாங்கி நின்றபடியே உள்ளே தள்ளிவிட்டுப் புறப்பட்டாராம் வேகமாக.

அந்தசமயம் அவருடைய சிஷ்யன் வந்து சேர்ந்தானாம். "நீயும் வா [illegible] அடியே! இவனுக்கும் காப்பி இருந்தா கொடுடி!" என்றாராம் வாத்தியார். அப்படியே அவருடைய சம்சாரம் காப்பியைக் கொண்டு வந்தாளாம், வாத்தியாருக்கு ரொம்ப அவசரம்.

நீங்க போங்கஸார்! இதோ வந்துட்டேன் என்று கூறிக்கொண்டே, முன்னால் நடந்து செல்ல ஆரம்பித்த வாத்தியாரோடு, கூடவே நடந்து கொண்டு, காப்பியையும் சாப்பிட்டுவிட்டு, வாசல் திண்ணையில் பாத்திரத்தை வைத்துவிட்டு, ஓடினான். என்னடா இது? நடந்து கொண்டே காப்பி சாப்பிடலாமாடா? நான் என்ன சொல்லிக் கொடுத்திருக்கிறேன்? என்று கேட்டாராம் குரு.

"எழுந்து நிற்பது என்பது நடந்து செல்வதற்கு ஆரம்பம்" என்று சொல்லிக் கொடுத்திருக்கேன் ஸார்! நீங்கள் நின்று கொண்டே காப்பி சாப்பிட்டேள். அப்படி செய்வதும், நடந்துசெல்வதும் ஒண்ணுதான்னு நினைச்சிட்டேன் ஸார்! என்றானாம் சிஷ்யப்பிள்ளை.

அந்த நினைவலேதான் ஜப்பான் சிஷ்யன், ஜெர்மன்குருவைப் பின்பற்றிக்கொண்டுவருகிறான் இப்பொழுது. ஜெர்மெனி என்பது பலகலைகளுக்கு இருப்பிடம்; அங்கு கலைதேவதை நிம்மதையாகவும், சந்தோஷமாகவும் அமர்ந்திருக்கிறாள் என்று எண்ணி, உலகத்தின்பல பாகங்களிலிருப்பவர்களும் எண்ணிக் கொண்டிருந்தார்கள். சங்கீதத்திலே ரொம்பப் பேர் பெத்த தேசம் ஜெர்மனி என்றும் சொல்லுகிறதுண்டு. ஆனால், [illegible] இருபத்தொன்று வருஷங்களாக அங்கு நாமறிந்த கலைவாணி இல்லை. அவள் இருந்த இடத்திலே யுத்த கலைவாணி குடிகொண்டிருக்கிறாள் என்பது இப்பொழுது தான் தெரிகிறது. அங்கு [illegible] கற்றுக் கொடுக்கப்பெற்ற விஷயம் எல்லாம், [illegible] தனமாகப் பேராசை கொள்ளவேண்டும் என்பதும், கூடச் சேர்ந்த [illegible] வரை அமுக்க வேண்டுமென்பதும், நெஞ்சாரப் பொய்ச் சொல்லி புளுகவேண்டுமென்பதுதான்.

இந்த விஷயத்தையெல்லாம் ஜப்பானிலிருந்து ஜெர்மனிக்குப் போய்வந்த பயல்கள் கற்றுக்கொண்டு வந்து விட்டார்கள். அதே பயல்கள்தான் இப்பொழுது பெரியவர்களாகி, ஜப்பானின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய ஆத்மாக்களாக இருக்கிறார்கள். ஆகவே, ஜப்பானின் தலைவிதியை அவர்கள் தங்கள் மனப்போக்கின்படியே தானே தீர்மானம் செய்வார்கள்?

ஆமாம்! அதில் சந்தேகம் ஒன்றுமேயில்லை. ஜப்பானியர் இப்பொழுது செய்து வரும்காரியங்கள் ஒவ்வொன்றுமே அதற்கு தக்க ருஜுக்களாகும். அசல் குருவுக்கு மிஞ்சின சிஷ்யனாகவே ஆகி விட்டது, ஜப்பான்.

அது செய்யும் மடத்தனமான, முரட்டுத்தனமான காரியங்களையும், திடீர்ப்புளுகுகளையும், ஆடம்பரப் பேச்சுகளையும் புதிதாக கவனிப்பவர்கள், 'எந்தப் பள்ளிக்கூடத்திலே படிச்சாண்டா இவன்?' என்றே கேட்பார்கள். எல்லாம் ஜெர்மன் பள்ளிப்படிப்புத்தான்!

ஜெர்மனி என்ன செய்கிறதோ, என்ன பேசுகிறதோ அதைவிட ஒருபடி அதிக மோசமாகவே ஜப்பான் நடந்துவருகிறது. ஜெர்மன் பிரசார மந்திரி கப்பல்ஸின் போக்கை ஜப்பான் பிரசாரகர்கள் நன்றாகக் காப்பியடிக்கிறார்கள். அந்த ஜெர்மன் மந்திரிக்கு யார் குரு? ஹிட்லர்தான!

ஹிட்லர் என்ன சொல்லிக்கொடுத்திருக்கிறார். "பொய் என்று சொல்ல ஆரம்பித்தால், அதுவும் யுத்த காலங்களிலே பொய் பேச ஆரம்பித்துவிட்டால், பிரமாண்டமான 'அவுட்' புளுகாகப் புளுகிவிட வேண்டியது. யானை கரைந்தால், காகா வாவது ஆகாதா? அனுமாதிரி, நீ சொல்லுகிற பொய் ரொம்பப் பெரிதாக இருந்தால்தான், அது எவ்வளவு அலசிப்பார்க்கப்பட்ட பின்னும், கொஞ்சமாவது நிற்கும். சொல்லுகிற பொய்யை, தொடை நடுக்கத்தோடு சிறிதாகச் சொல்லிவைத்தால், அது இருக்குமிடமே தெரியாது போய் விடும்" என்று சொல்லிக்கொடுத்திருக்கிறார். அதை அனுசரித்தே ஜெர்மன், ஜப்பானிய பிரசார மந்திரிகள் நடந்துவருகிறார்கள். இதை அறிந்தவர்களுக்கு, ஜெர்மன், ஜப்பானிய செய்திகள் நிச்சயம் சிரிப்பை மூட்டிவிடும். 'நமக்கு பிரதேச ஆசை கிடையாது, கிடையாது' என்று பிரசார மந்திரி சொல்லிக் கொண்டே இருக்க வேண்டியது. அதே சமயம், யுத்த மூலமாக, பல இடங்களைப் பிடிக்க பலமான திட்டம்போட்டுக்கொண்டே இருக்கவேண்டியது. எதிரிகள் இருக்கும் இடத்திற்கு இருநூறு மைல்களுக்கப்பாலிருக்கும்பொழுது, 'அந்த இடம் ஹரோஹரா ஆயிட்டுதுடோய்!' என்று சொல்ல ஆரம்பித்துவிடவேண்டியது. நாம் ஒரு இடத்தை பிடித்துவிட்டால், 'இது போன்ற முக்கியமான இடம் இந்த நாட்டிலேயே கிடையாது. விரோதிக்கு இது போனது மலையத்தனை நஷ்டம்!' என்று கூறிவிடவேண்டியது. [illegible] கைவிட்டுப் போய்விட்டால், 'பூ இது என்ன பிரமாதம்! சுத்த பொட்டல்காடு. தம்பிடிக்கு உதவாது!' என்று சொல்லிவிடவேண்டியது. எப்பொழுது பார்த்தாலும், தன் நாட்டவருக்கு நம்பிக்கையும், உற்சாகமும் ஏற்படும்படியாக, போர்முனையில் ஒன்றும் நடந்ததைப்பற்றி ஏதும் தெரிவிக்காமல், குஷியாக ஏதாவது கதை கட்டிக்கொண்டிருக்கவேண்டியது. எதிரியின் விமானங்கள், கப்பல்கள், டாங்கிகள், பலம் ஆகியவற்றை [illegible] அடித்து நொறுக்கிக்கொண்டிருக்கவேண்டியது.

இதெல்லாம் ஜெர்மன் பள்ளிப்படிப்பு. இதையெல்லாம் ஜப்பான்காரர்கள் நன்றாகவே கற்றுக்கொண்டிருக்கிறார்கள். சிங்கப்பூர் யுத்தம் சென்ற நான்கைந்து நாளாகத்தான் நடந்துவருகிறது. நம் படைகள் அதிதீரத்துடன் சகல எதிர்ப்பையும் சமாளித்துவருகின்றன. சாதாரண வெடிகுண்டுகளைவிடப் பயங்கரமாக உள்ள அதிர் குண்டு வெடிகளை ஜப்பானியர் சிங்கப்பூர் மீது எறிந்து வருகிறார்கள். அதனால் பல இடங்களில் நெருப்புப்பற்றி எரிகிறது. சிங்கப்பூர்த்தீவிற்கு வட பக்கத்தில், எதிர்க்கரையில் ஜோஹோர்பாரு என்ற இடம் இருக்கிறது. அங்கு ஒரு சுல்தான் இருந்தார். மகா வீரர். 'எதுவந்தாலும் இங்கேயேதானிருப்பேன்' என்று கூறினார் அவர். அவரது மனைவியோ, 'என் கணவரைவிட்டுப் பிரியப்போவதில்லை நான்' என்று சொன்னார். கடைசியாக அவர்களைச் சிறைப்பிடித்துவிட்டார்கள் ஜப்பானியர்.

அந்த சுல்தான் உள்ள ஜோஹோரிலிருந்து, சிங்கப்பூருக்குச் செல்ல, சுமார் ஒரு மைலுக்கு அதிக அகலமில்லாதிருக்கும் சமுத்திரத்தைக் கடந்துபோகவேணும். அதற்கு ஒரு பாலம் இருந்தது. அதே பாலத்திலே ரயிலும், வண்டியும், ஜலசப்ளைக் குழாயும் போய்க்கொண்டிருந்தன. ஜப்பானியரின் மலேயாவிலிருந்து, அசாத்திய எதிர்ப்பைப் பலகாலம் சமாளித்தபின், பிரிட்டிஷ், மலேய, ஆஸ்திரேலிய, இந்தியப் படைகள் எல்லாம், வெள்ளத்தை எதிர்ப்பது புத்திசாலித்தனமல்ல என்று, சிங்கப்பூர் தீவுக்கு வந்துவிட்டன. தங்களைத் தொடர்ந்து, ஜப்பானியர் வந்துவிடக்கூடாது என்பதற்காக, பாலத்தையும் தகர்த்து எறிந்துவிட்டார்கள்.

ஆகவே, இனி சிங்கப்பூர் தீவில் உள்ளவர்களை, ஜப்பானியர் லேசில் தோற்கடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. சிங்கப்பூர் தீவு சிறியதுதான். ஜோஹூர்பாருவிலிருந்து பதினைந்து, பதினாறுமைல் தூரத்திற்குள்ளாகவே இருக்கிறது. நீண்டதூர பீரங்கிகள் தாக்கும்படியான தூரம்தானிது. ஆனால் இதுவரை ஜப்பானியர் அத்தகைய பீரங்கிகளை ஜோஹூர்பாருவிற்குக்கொண்டு வந்ததாகத்தெரியவில்லை. ஆனால் ஜோஹூர்பாருவிலுள்ள அருமையான விமான நிலையம் ஜப்பான்கையில் சிக்கிவிட்டதல்லவா? அது ஒரு அவஸ்தைதான். அது காரணமாக சிங்கப்பூரில் ஒரு நாளைக்கு பலதடவை அபாய அறிவிப்பு சங்கு ஊதிக்கொண்டே இருக்கிறது.

சிங்கப்பூர் தீவிலிருந்து பெரிய பீரங்கிகள் ஜப்பானியரை நோக்கிச்சுட்டவண்ணமே இருக்கின்றன. கோலாலம்பூர், குளுவான் ஆகிய இடங்களில் கூடியிருக்கும் விரோதி விமானங்களை, நம் விமானங்கள் அவ்வப்பொழுது 'க்ளோஸ்' செய்து வருகின்றன.

சிங்கப்பூர் யுத்தம் கோரமான யுத்தம் தான். ஜப்பானியர் இதைப்பிடிக்கவேண்டுமானால் ஏகமாக மனிதர்களைப்பலி கொடுத்து, அளவற்ற [illegible] நஷ்டப்படுத்திக்கொண்டாகவேண்டும். படையெடுத்து வெற்றிபெறுவது என்பது லேசான காரியமல்ல, எத்தனையோ கஷ்டங்கள்தான், குடிதண்ணீருக்குக்கஷ்டம். எதிரியின் விமான நிலையங்கள் வெகு சமீபத்திலிருப்பதால் சிங்கப்பூர் விமான நிலையத்தில் அதிக விமானங்களை வைத்திருப்பதற்கு முடியாது. இந்தத் தீவிலே கொஞ்சம் தோண்டினாலும் ஜலம்வந்துவிடும். அதனால், ஆழமான பாதுகாப்பறைகள் கட்டமுடியாது.

மூன்றுபுறங்களில் ஜப்பானியர் நின்றுகொண்டிருக்கிறார்கள். தென்திசை ஒன்றிலிருந்துதான் ஏதாவது நற்செய்திகள்வர

வேண்டும். மற்ற திசைகளுக்கெல்லாம் சென்றதூதர்கள் உதட்டைப் பிதுக்கிக் கொண்டுதான் வந்தார்கள். ஆனால் தென் திசையிலிருந்து தானே 'கண்டேன் சீதையை!' என்ற நற்செய்தியோடுவந்து குதித்தார் அனுமார் அதேபோல், தென் திசையிலிருந்து, சிங்கப்பூரில் நின்று போராடிவரும் மகாசூரர்களுக்கு நல்ல செய்தி வரத்தான்செய்யும்.

யுத்தகாலத்தில் இருமாதிரி இடங்களில் ஏற்படும் ஒற்றுமையைப்போல் சமாதான காலங்களில் ஏற்படவேபடாது. சிங்கப்பூரில் உள்ள சகலமானவர்களும், ஒரே சிந்தையுடன் எது வந்தாலும் எளிதில் விட்டுப்படாது என்ற திடசங்கல்பத்துடன் நெருப்பு மழையைச் சமாளித்து வருகிறார்கள்.

தெற்கே, ஜாவாவில் ஜெனரல் வேவல் இருக்கிறார். அவர் தனது சாமர்த்தியத்தை வெளிப்படுத்த தக்க சந்தர்ப்பம் வந்துவிட்டது. அவரிடம் பிரிட்டிஷாருக்கும், அமெரிக்கருக்கும் எவ்வளவு பூரண நம்பிக்கை இருக்கிறதோ, அவ்வளவு பயம் ஜப்பானியருக்கு அவரைக் கண்டால்! இல்லாவிட்டால், ஜப்பானியர் அவசர அவசரமாக ஜாவாவில், ஜெனரல் வேவல் தங்கியுள்ள சௌரப்யா என்ற கடற்படைத் தளத்தை ஜப்பான் விமானங்கள் படையெடுத்திருக்குமா?

'இது பனங்காட்டு நரி மிஸ்டர்? இந்த சலசலப்பிற்கெல்லாம் பயப்படாது!' என்பது போலிருக்கிறார் ஜெனரல் வேவல். ஜப்பான் குண்டு அவருக்குப் புதிதல்ல. சமீபத்தில், அவர் சைனாவிற்குப்போன போது, அவர் இருந்த இடத்திற்குப் பக்கத்திலேயே ரங்கூனில் ஒரு குண்டு விழுந்ததே! அப்புறம் அவர் மலேயாவிற்குப் போர் முனைக்குப் போயிருந்தார். ஒரு பத்துப் பதினைந்து நாளைக்கு முன்னாலே கூட ரங்கூனுக்குப் போய்வந்தாரே! அவர் ஜப்பானுக்கு தன் சுவய ரூபத்தை வெகு சீக்கிரமே காட்டக்கூடும்.

அமெரிக்காவிலிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும், தலைவர், அரசர், பிரதம மந்திரிகள், பெரிய மனுஷர்கள் சிங்கப்பூராருக்கு தைரிய வார்த்தைகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பெரிய உதவியும், அலைபோல் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருக்கிறது என்ற நம்பிக்கையை அளித்துவருகிறார்கள். கன்னங்கரேல் என்ற இருட்டிலே, ஒரு நெருப்புக்குச்சியை ஒரு மைலுக்கு அப்பாலே கிழித்தால்கூட, இருட்டில் கிடந்து தவிப்பவனுக்கு உத்சாகம் மேற்படுமோ இல்லையோ! அதேபோல், உதவி வருவதாகக் கிடைத்த செய்திகள், சிங்கப்பூர் தீவில் உள்ளவர்களுக்கு ஒரு புது பலத்தையும், ஆவேசத்தையும் அளிக்கலாம்.

சிங்கப்பூரைப் பிடிப்பது, கல் உருண்டையைக் கடிப்பதுபோல் என்பது ஜப்பானுக்குத் தெரியும். அதனால் அது சிங்கப்பூரை நாலு திசைகளிலும் வளைத்துக்கொண்டுப் பட்டினிபோட்டுப் பணியவைக்க முயற்சிக்கலாம்.

சிங்கப்பூருக்குக் கீழ்த்திசையிலே, போர்னியோ எனும் தீவின் தலை நகர் இருக்கிறது. அதை ஜப்பானியர் பிடித்துவிட்டனர். அடுத்தபடி ஜாவாவிலும், சுமத்ராவிலும் கால்வைக்க அவர்கள் முயற்சிக்கலாம். முயற்சியும் செய்து வருகிறாப்போலிருக்கிறது. ஆகவே சிங்கப்பூருக்கு இது ஒரு பெரிய சோதனைகாலம் தான்! வந்து கொண்டிருக்கும் உதவி வந்து சேரும் வரை, அந்த வீரரார் சமாளித்திருந்துவிட்டால், ஜோர்தான்!

சிங்கப்பூர் நமக்குள்ளதைவிட, எதிரிக்கு ரொம்ப முக்கியமாக உள்ள இடமாகும். அதைப் பிடித்துவிட்டால், ஜப்பான் நீர்மூழ்கிகள், நாசகாரிகள் ஆகியவை அங்கே வந்து ஆகாரம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம். அங்கிருந்து தெற்கே உள்ள கடல்களையும், தீவுகளையும் நொறுக்கவைக்கலாம். இந்து மகா சமுத்திரத்திற்குப் போகும் பாதையை ஆபத்தானதாக்கலாம். ஆஸ்திரேலியாவிற்கும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் உள்ள கடல் தொடர்பை கொஞ்சம் அறுத்துவிட்டுவிடலாம். இதையெல்லாம் உத்தேசித்தே சிங்கப்பூரில் ஏக ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறார்கள். அதை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்று பார்க்கிறார்கள். அங்கே எத்தனையோ இந்தியர்களும் இருக்கிறார்கள். பகவான் இருக்கிறார் ராக்ஷஸர்களிடமிருந்து பக்தர்களைக் காக்க!

ஜப்பான், போனவாரத்தில், ஆஸ்திரேலியாவிற்கு அருகில் உள்ள தீவுகளில் கொஞ்சம் காலடி எடுத்துவைத்திருக்கிறது. சில இடங்களில் கட்டையடியும் பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியா மேலே அதற்கு ஒரு கண் இருக்கிறாப்போல்தானிருக்கிறது. ஆனால் ஆஸ்திரேலியாவைப் படையெடுப்பதென்பதும் லேசான காரியமல்ல. அங்கு ஜப்பானியர் சென்றால், அவர்களுக்கு நல்ல சூடு கொடுக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. ஆஸ்திரேலியாவின் வட புறமெல்லாம் அவ்வளவு உருப்படியான பிரதேசங்கள் அல்ல. தென் நாடுகள்தான் செழிப்பானவை. அதை எட்டிப்பிடிப்பது எளிதல்ல.

ஆனாலும் ஆஸ்திரேலியா அருகே அமெரிக்கக் கப்பல்களோ, பிரிட்டிஷ் உதவியோ நெருங்காமலிருக்கும்படி செய்ய, ஜப்பான் முயற்சிக்கக்கூடும். இவ்வளவுதூரம் வந்துவிட்டால், ஜப்பானின் பாடு நாளுக்குநாள் அவஸ்தைதான். இவ்வளவு தூரத்திற்கு வந்துள்ள ஜப்பானியப்படைகளுக்கும், விமானங்களுக்கும் தீனி போட்டுக் கட்டவேண்டாமா?

ஒருபுறம் வரவு என்றால், மற்றோர்புறம் செலவும் இருப்பது இயற்கை தானே? சீனாவிலிருக்கும் ஜப்பானியப் படைகளில் ஒரு பகுதி கப்பலேறக் காத்துக்கொண்டிருக்கிறதாம். அதுகாரணமாக சீனாவில் ஜப்பானுக்கு உதை இப்பொழுது கிடைத்து வருவதைவிட அதிகம் கிடைக்கலாம். சீனர்களின் கை சில இடங்களில் இப்பொழுது ஓங்கியிருக்கிறது. அவர்களிடம் தோற்றதன் காரணமாக அவமானம் தாளாது, தன் நாட்டினரின் வழக்கத்தைப் பின்பற்றி ஒரு சேனாபதி தற்கொலை செய்து கொண்டு விட்டாராம். இதே முறையை எல்லா ஜப்பானியரும் பின்பற்றுவதானால், இன்னும் பல தலைவர்கள் சீக்கிரமே ஹரிகரி (தற்கொலைக்கு ஜப்பானில் உள்ள பெயர்) செய்துகொள்ள நேரிடலாம்.

சீனாவில் ஓங்கி நிற்கும் சீனரது கை, அப்படியே ஓங்கி நின்றுக்கொண்டே இருந்தால் நமக்கெல்லாம் க்ஷேமம். ஜப்பானை அங்கு அந்நாடு கவனித்துக்கொண்டிராவிட்டால், ஜப்பானின் முறுக்கு அதிகமாகிவிடும். அப்புறம் ஆபத்துத்தான்.

அதனால்தான், சைனாவிற்கு உயிர் நிலை போன்றிருந்து, ஒரு மாதத்தில் கிட்டதட்ட முப்பதாயிரம் டன் எடையுள்ள ஆயுதம், வெடி மருந்து எல்லாம் சைனாவிற்கு வந்து சேர உதவும் பர்மா சாலையை அவ்வளவு பத்திரமாகப் பாதுகாத்து வருகிறார்கள். அமெரிக்க விமானங்கள்கூட அங்கு பாரா செய்துவருகின்றன. அந்தப் பாதைக்கு வாய்போலிருப்பது ரங்கூன்தான்.

அதனால்தான், அதை நொருக்கப் பார்க்கிறார்கள் ஜப்பானியர். பர்மாவின் தென் கோடியிலிருந்து, ஏக நஷ்டத்தோடு அவர்கள் மோல்மீன் துறைமுகம் வரை முன்னேறியிருப்பதும், இங்குள்ளதோர் நதியைக் கடக்க முயன்று குண்டு மழைக்கு ஆளாவதும் ரங்கூனை தரை மார்க்கமாகப் போய் பிடிக்கவேண்டும் என்ற எண்ணமிருப்பதால்தான்.

ரங்கூனை மோல்மீன் விமான நிலையத்திலிருந்து அரை மணிக்குள் வந்தடையலாம். தாய்லாந்து பக்கத்திலிருந்தும் விமானங்கள் வந்துக்கொண்டிருக்கின்றன. அநேகமாக தினசரி எதிரி விமானங்கள் ரங்கூனை வட்டம் போடுகின்றன. செத்து விழுகின்றன. கிழக்கு ரங்கூனில்தான் இதுவரை அதிகச் சேதமாம். பொது ஜனங்கள் வசிக்குமிடத்திற்கு ஆபத்து அதிகமாக வரவில்லை. ரங்கூன் ஹார்பர் மீதும், ரங்கூன் விமான நிலையத்தின் மீதும்தான் குண்டுகளை வீச ஜப்பானியர் குறி பார்க்கின்றனராம். ஜப்பானியர் ரங்கூனுக்கு டிசம்பரில் கிருஸ்துமஸ் பண்டிகையின் போது வர ஆரம்பித்தது முதல், நூற்றுக்கணக்கான விமானங்களை இழந்திருக்கிறார்கள். அதே மாதிரி மலேயாவில் பல விமானங்களையும் திறமைமிக்க வீரர்களையும் பறிகொடுத்திருக்கிறார்கள்.

சிங்கப்பூரைப் போலவே ரங்கூனைப் பாதுகாக்கவேண்டியதும் அவசியமாகும். அதனால் ரங்கூனுக்கு நிறைய உதவி போய்க் கொண்டிருக்கிறது. அந்த ஊரின் பொது ஜன வாழ்வு சீர்குலையாமலிருக்க ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். ரயில்களும், பஸ்களும், டிராம்களும் வழக்கம் போல் ஓடுகின்றன. ஆபீஸ்கள் நடக்கின்றன. சாத்யமானவரை, கப்பல்களில் இந்தியாவிற்கு வர விரும்புவோர் வந்துகொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரமே ஜப்பானியர் பர்மாவில் பெரிய சண்டையில் ஈடுபட வேண்டியிருக்கும் என்பது சீனாவிலிருந்துவரும் செய்திகளிலிருந்து தெரிகிறது. சீனர்களுக்கு ஜப்பானியரின் எலும்பை இங்காவது ஒடிக்கவேண்டும் என்று ஆத்திரமாக இருக்கிறதாம். சீனப் படைகள் அந்த நோக்கத்துடன் பர்மாவிற்குள் வந்து குவிகின்றதாம்.

இங்கு இப்படியிருக்க, சென்ற வாரம் திடுதிப்பென்று அமெரிக்கக் கடற்படை சீறி எழுந்த விஷயம் வெளியாயிற்று. பஸிபிக் மகாசமுத்திரத்திலே ஜப்பானுக்குச் சொந்தமாக உள்ள சில தீவுகளை அந்தப் படை தாக்கி, பெருஞ் சேதம் விளைத்தது. இது ஜப்பானுக்குக் கொஞ்சம் திகிலை உண்டாக்கியிருக்கும். இதனால் நம்மவர்களுக்கு அதிக லாபம் இல்லைதான்; ஆனாலும் ஏதோ சிறிது பலனும் இல்லாமல் இல்லை. அமெரிக்கக் கடற்படை தாங்கவில்லை என்பது தெரிகிறதா இல்லையா?

அது என்ன செய்கிறது, எங்கே இருக்கிறது என்பதைப்பற்றி, நமக்கெல்லாம் அறிய ஆவலாகத்தானிருக்கிறது. நம்மைவிட ஜப்பானியருக்கு அதை அறிய ரொம்ப ஆசை. அதனால்தான், அமெரிக்கர்கள் மௌனமாகவே காரியத்தை நடத்திவருகிறார்கள்.

ஜப்பான் திருட்டுத்தனமாக தனது கப்பற் படையைப் பெருக்கிக்கொண்டுவிட்டது; அமெரிக்கா இப்பொழுதே கப்பல்கள் கட்டுவதில் முனைந்திருக்கிறது. 1943-ம் வருஷ கோடிக்குள் அமெரிக்கா ஒரு கோடியே இருபது லக்ஷம் டன் எடையுள்ள கப்பல்களை கட்டிவிடும். ஜப்பானிடம் 1940-ல் 2,418 கப்பல்களிருந்தன. அதற்கப்புறம் அது எவ்வளவு கட்டியிருக்கிறதோ தெரியவில்லை. அதன் தற்போதைய பலத்திற்குச் சமமாக, நேச நாடுகளின் பலம் பெருகவேண்டும்; பெருகிக்கொண்டுமிருக்கிறது. அதுவரை ஜப்பான்பாடு கொண்டாட்டம்தான். அதற்குள் அதன் பலமும் சிதறிப்போகும். அப்புறம் அது உதைவாங்க ஆரம்பித்தால், இந்தக் கதையிலே ஒவ்வொரு அத்தியாயமும் உதைவாங்கு படலமாகவேதானிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

ஜப்பானியர் சாதாரணமானவர்கள் இல்லைதான். அவர்களில் ஒரு விமானியின் விமானம் ரங்கூன் அருகே சுட்டு வீழ்த்தப்பட்டது. அதிலிருந்து குதித்த விமானி அருகிலிருந்த பிரிட்டிஷ் விமான பீரங்கி நிலையத்தாரைத் தைரியமாகத் தாக்கினார். அப்பால் சுடப்பட்டுமடிந்தார். அவரது வீரத்தைப் பாராட்டி, ராணுவ மரியாதையோடு அவரது சவத்தை அடக்கம் செய்திருக்கிறார்கள் நம்மவர்கள்! உண்மை வீரன் எந்த நாட்டைச் சேர்ந்தவனாக இருந்தால் என்ன, அவனுக்கு மரியாதை காட்டவேண்டியது நியாயந்தானே? அந்த நியாயம் நமக்குத் தெரியாதா என்ன?

நமது பிரதம மந்திரி சர்ச்சில்கூட, சமீபத்தில், ஆபிரிக்காவில் போர்புரியும் ஜெனரல் ராமலைப்பற்றி உயர்வாகப் பேசவில்லையா? இன்னொரு மனுஷனாக இருந்திருந்தால், இதற்குள் பிரிட்டிஷார் கொடுத்த பூசையைத் தாளாமல், ஓடியே போயிருப்பான். தனது படையில் முக்கால் பாகம் போனபின்பும் இந்த ஜெர்மன் சேனாதிபதி ராமல் ஆப்பிரிக்காவிலே அட்டை போல் ஒட்டிக்கொண்டிருக்கிறார். இழந்த இடங்களில் சிலவற்றைத் திரும்பப் பிடித்துக்கொண்டிருக்கிறார். இன்னும் சண்டை போட வருகிறார். அவருக்கு ஊரிலிருந்து உதவி வந்திருக்கிறாப்போலிருக்கிறது.

அவரது எதிர்ப்பு எதிர்பார்க்கப்பட்டதல்ல. ஆனாலும் அவரது படைகளால் வளைக்கப்பெற்ற இந்தியப்படைகள் பெங்காசி என்ற நகரிலிருந்து வெகு சாமர்த்தியமாக, அப்படைகளின் கண்களில் மண்ணைவாரிப்போட்டு விட்டு, தப்பிவிட்டன.



ஏகமழை. எப்படித்திரும்பினாலும் எதிரிப்படைகள், இந்த நிலைமையில் எது வந்தாலும் மௌனிகள் போல், இருந்து பாய்ந்துகப்புவது என்று அந்த இந்தியப்படையினர் தீர்மானித்திருக்கிறார்கள். புறப்படும்போது புத்திசாலித்தனமாக, சில ஜெர்மானிய லாரிகளையும் எடுத்துப் போனார்கள், வழியே ஜெர்மன்படைகளுக்கு மத்தியில் செல்லவேண்டி வந்தது. அப்பொழுது இந்த ஜெர்மன் வண்டிகள் பயன்பட்டன. நம்ம ஆட்கள் தான் என்று ஏமாந்து விட்டுவிட்டார்களாம் ஜெர்மானியர். அதேமாதிரி, மேலே இருந்து விமானங்கள் சுட்டபோது கூட, இந்தியப்படையினர்சும்மா இருந்து அந்த விமானிகளைத்திகைத்து விடச்செய்தார்களாம், இந்தியப்படையினர் எங்கு சென்றாலும் பிரமாதமான புகழுடன் விளங்கிவருவது கண்டு, நம்மவரது தோள்கள் பூரிக்கின்றன அல்லவா.

சென்றவாரம் நடந்த பல விசேஷங்களில் பிரதம மந்திரி சர்ச்சில் பேசியது, அமெரிக்கத்தலைவர் ரூஸ்வெல்ட் நமக்கு ஊக்கம் தரும் முறையில் பிரசங்கித்தது, ஹிட்லர் சுமார் இரண்டு மணி நேரம் தொண்டையைக் கிழித்துக்கொண்டது, முஸோலினி பிதற்றியது ஆகியவை ஒரு சிலவாகும். பிரிட்டிஷ்பார்லிமெண்டில் பிரதம மந்திரி சர்ச்சில், பட்டவர்த்தனமாக இப்பொழுதுள்ள நிலைமையை எடுத்துச் சொல்லி, பார்லிமெண்டு அங்கத்தினர்களின் ஆதரவையும் நம்பிக்கையும் வோட்மூலம் பெற்றார். நமக்கெல்லாம் இன்னும் ஏகக் கஷ்டங்கள் ஏற்படக்கூடு மன்றும், ஆனால் கடைசியில் வெற்றி சூரியன் உதயமாகியேதீருவான் என்றும், விடியுமுன் இருட்டு அதிகமாகத்தானிருக்கும் என்றும் பேசினார். உதவி வருகிறது என்றார் ரூஸ்வெல்ட். இப்பொழுதெல்லாம் முடியாது பெரிதாகிறது சண்டை, மார்ச்சுமாதம் பிறக்கட்டும் சொல்லுகிறேன், எனது நீர்மூழ்கிகள் என்ன வேலைகள் செய்யப்போகிறது பாருங்கள், ருஷ்யாவில் குளிர்சகிக்க முடியாததாலேயே சில பொட்டல் பிரதேசங்களைக் காலி செய்தோம், ருஷ்யர்கள் ஒன்றும் கிழிந்து விடவில்லை, நாம் நடத்தும் சண்டை நமக்காக மட்டுமில்லை மனிதவர்க்கத்தின் பொது க்ஷேமத்திற்காகத்தான், என்றார் ஹிட்லர். ஐயோ பாவம் மனித வர்க்கத்திற்கு இவரிடம் வக்காலத்து கொடுத்தது யாரோ? வக்கீலின் அழகைப்பாருங்கள் அழகை!

எல்லோரும் எதையோ உலர்த்துகிறார்கள் என்று எலியும் வாலை உலர்த்திற்றும். அதுமாதிரி முஸோலினியும் வெட்கமில்லாமல் பேசினார். ஹே வீரர்களே! நீங்கள் பெற்ற வெற்றிகள் மகத்தானவை. உங்களைப்பிடிக்க யாரால் முடியும்; (ஓடுகிற ஓட்டத்தில் யார் பிடிப்பது) நேற்று நீங்கள் நடந்து கொண்டமாதிரியே நாளையும் நடந்து கொள்ளுவீர்கள் என நம்புகிறேன், என்றார் அவர். பாவம்! நேற்று வரை அவரது படைகள் எங்கும் ஓடிக் கொண்டு தானே இருந்தன இன்னும் ஓடு என்று இரக்கமில்லாமல் சொல்கிறாரே இந்த மனுஷர்! பாவம்! அவர்கள் தான் என்ன செய்வார்கள்! சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி என்றது போல், சும்மா இருந்த உலகத்தை யுத்தகளமாக மாற்றி விட்டார்கள்; இப்பொழுது தவிக்கிறார்கள். கெடுவான் தானே கேடுநினைப்பான்?

# வடக்கு ஆப்பிரிக்காவில் யுத்தம்

## ஜெர்மன் முன்னேற்றத்துக்குத் தடை

### சென்ற நவம்பரில் நடந்த தந்திர முயற்சி

### எதியோபியா பிரிட்டன் உடன்படிக்கை.

வடக்கு ஆப்பிரிக்காவில் பெரிய சண்டை நடந்து வருகிறது. ஜெர்மனியின் தளகர்த்தரான ஜெனரல் ராம்மலுக்கு உதவியாகத் துருப்புகள் வந்து சேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த உதவியை எவ்வளவுதூரம் உபயோகப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் உபயோகப்படுத்த ஜெனரல் ராம்மல் முடிவு செய்திருக்கிறார் போலும். ஜெர்மன் துருப்புகள் பெங்காசியைப் பிடித்தபிறகு வடகிழக்குத் திக்கை நோக்கி முன்னேறிச் சென்றிருக்கின்றன. ஜெர்மன் டாங்கிப்படைகள் பார்ஸ், எல் அபியார், என்ற இரண்டு இடங்களையும் பிடித்துக்கொண்டன. ஆனால் ஜெனரல் ராம்மலின் ஒரு முக்கியமான முயற்சி நிறைவேறுமல் போய்விட்டது. பெங்காசியிலுள்ள ஏழாவது இந்திய காலாட்படையை பிரிட்டிஷ் பட்டாளத்துடன் சேராமல் தனியாகப் பிரித்துவிடவேண்டுமென்று ஜெர்மன் பட்டாளம் முயற்சி செய்தது. ஆனால் இந்தியப்படை ஜெர்மன் பட்டாளத்தை ஊடுருவிச் சென்று அந்த முயற்சியைப் பாழாக்கிவிட்டு, நான்காவது இந்தியப் பட்டாளத்துடன் சேர்ந்துகொண்டது. ஜெனரல் ஆக்கின்லெக் என்ற பிரிட்டிஷ் தளகர்த்தர் இதைப்பாராட்டிக் கூறியிருக்கிறார். ஜெபல் அக்தார் என்ற பிரதேசத்திலிருந்து இந்தியப்பட்டாளம் ஒழுங்காக பின் வாங்கிக் கொண்டு செல்கிறது.

**எதிர் தாக்குதல்.**

இதற்குத் தெற்கில் சற்று தூரத்தில், மிய்ஸ் என்ற இடத்துக்கு வடகிழக்கில் உள்ள பாலைவனப் பிரதேசத்தில், பிரிட்டிஷ் பட்டாளங்கள் ஜெர்மானியர்களைப் பல விடங்களில் எதிர்த்துக்கொண்டு வருகின்றன.

பெங்காசியிலுள்ள விமானச் சாலையை ஜெர்மானியர்கள் உபயோகித்து வருகிறார்கள். ஆனால் பிரிட்டிஷ் விமானப்படையின் முயற்சிதான் மேல்கையில் இருக்கிறது.

சிரி நெய்காவிலும், திரிபோலி தானியாவிலும் எதிரி மோட்டார் படைகள், டாங்கிப் படைகள், விறகு கொண்டு செல்லும் வண்டிகள் முதலியன நமதுபடைகளால் கடுமையாகத் தாக்கப்படுகின்றன. சிரி நெய்காவில் ஜெனரல் ராம்மல் முன்னேறி வருவதற்காகச் செய்யும் முயற்சி தடுக்கப்பட்டு வருகிறதென்று லண்டன் "டெய்லி மெயில்" பத்திரிகையின் கெய்ரோ நிருபர் தெரிவிக்கிறார்.

அகடேபியா என்ற இடத்துக்கு வடகிழக்கில் உள்ள பேரில்லாத பாலைவன முக்கோணத்தில் ஒரு பெருஞ்சண்டை நடக்கிறது. ஜெனரல் ராம்மலின் மூன்று டாங்கிப் படைகள் பிரிட்டிஷ் படைகளால் எதிர்க்கப்படுகின்றன. பிரிட்டிஷ் மோட்டார் படைகளும், காலாட் படைகளும், விமானங்களும் கடுமையாகப் போர்புரிந்து வருகின்றன.

**மாறிய நிலைமை**

இந்த சண்டை ஒரு முக்கியமான சண்டை. இதில் நம்முடைய துருப்புகள் பின்வாங்கிக் கொண்டன. நம்முடைய துருப்புகள் பலமாக எதிர்ப்பதற்குத் தயாராயிருந்தன. அதற்குள் ஜெனரல் ராம்மல் தாக்கிவிட்டார். இதேமாதிரியாக சென்ற நவம்பர்மாதம் நடந்தது. அப்போது ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் தளகர்த்தராயுள்ள ஜெனரல் ஆக்கின்லெக் முந்திக்கொண்டார். ஜெனரல் ராம்மல் பலமாகத் தாக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கும்போது, ஜெனரல் ஆக்கின்லெக் முந்தித் தாக்கி, முக்கியமான வெற்றிகளைப் பெற்றார். இப்போது அதே நிலைமை சற்று மாறியிருக்கிறது.

இது இப்படியிருக்க, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எதியோபியாவின் சக்கிரவர்த்தி, ஹெயிலி செலாசியிடம் ஒரு உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். சாதாரண அரசியல் தொடர்பு இரண்டு நாடுகளுக்கும் மறுபடியும் ஏற்படுத்தப்பட்டது. மிஸ்டர் ஆர். ஒ. ஹௌ என்பவர் எதியோபியாவின் தலை நகரமாகிய அட்டிஸ் அபபாவில், பிரிட்டிஷ் ஸ்தானீகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி, பிரிட்டன் இரண்டு வருஷத்துக்குள் 25 லட்சம் பவுன் எதியோபியாவின் அபிவிருத்திக்காகக் கொடுக்கவேண்டும். எதியோபிய சக்கிரவர்த்தி சில திறமையான ஆலோசகர்கள் வேண்டுமென்று கேட்டிருந்தார். அதன்படி, சில பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் எதியோபியாவுக்கு அனுப்பப்படுகிறார்கள். எதியோபியாவில் சாதாரண அரசாங்கம் மீண்டும் ஒழுங்காக நடைபெறுவதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் அவர்கள் செய்வார்கள்.

**பிரிட்டிஷ் ராணுவக் கோஷ்டி.**

புதிய எதியோபியாவின் பட்டாளங்களை ஒழுங்குபடுத்தி, சீர்திருத்துவதற்காக, பிரிட்டனிலிருந்து ஒரு ராணுவ ஆலோசனைக் கோஷ்டி அனுப்பவேண்டுமென்று எதியோபிய சக்கிரவர்த்தி கேட்டிருந்தார். இதற்காக, பிரிட்டனுக்கும் எதியோபியாவுக்கும் ஒரு ராணுவ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. அதன்படி சில பிரிட்டிஷ் பட்டாளங்கள் எதியோபியாவில், பாதுகாப்புக்காகவும், ஆப்பிரிக்க யுத்த நிலையின் அவசியத்துக்காகவும், தங்கியிருக்கும்.

எதியோபியாவில் நடந்த பெருஞ்சண்டையில், நேச தேசத்துருப்புகளால் எதிரிகளிடமிருந்து ஏராளமான யுத்த தளவாடங்களைப் பற்றப்பட்டன. அவைகளெல்லாம், எதியோபிய பட்டாள யுத்த முஸ்தீப்புக்காக உபயோகப்படுத்தப்படும்.

இம்மாதிரியான ஏற்பாடுகளால், எதியோபியாவில் சீர்குலைந்து கலைந்த அரசியல் நிலைமை ஒழுங்காய் விட்டது. பிரிட்டனுடைய பண உதவியாலும், ராணுவத் துணையினாலும், அரசியல் ஒத்துழைப்பாலும், எதியோபியா பழையபடி ஒரு சுதந்தர அரசாங்கமாக ஏற்படுத்தப்பட்டு, கூடிய சீக்கிரத்தில் நல்ல நிலைமைக்கு வரும் என்று எதிர் பார்க்கலாம்.

# இந்திய சிப்பாய்களின் சாமர்த்தியம்

## பென்கர்சியில் நடந்த சம்பவம்

ஜெர்மன் 'பான்சர்' பட்டாளங்களைத் துளைத்து ஊடுருவிச் சென்ற 7-வது இந்தியக் காலாட்படையைப் பாராட்டி, இந்தியாவின் பிரதம தளகர்த்தர், ஜெனரல் ஆக்கின்லெக், ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார். "நீங்கள் மிகுந்த தைரியவான்களாயிருந்தால், எதிரிப் படைகளை ஊடுருவிச் சென்று, நம்முடைய பட்டாளத்தோடு வந்து சேர்ந்தீர்கள். உங்களுடைய தைரியத்தை நான் மெச்சுகிறேன். எப்போதும் நீங்கள் தைரியமாயிருங்கள்," என்று ஜெனரல் ஆக்கின்லெக் கூறினார்.

இந்தியப் படையின் தளகர்த்தர் பென்காசி சம்பவத்தைப்பற்றிச் சில விவரங்களைக் கூறியிருக்கிறார். எல்லா சிப்பாய்களும் ஒரே உறுதியுடன் இருந்தால்தான் எதிரிகளுடைய பட்டாளத்தின் மூலமாகப் பாய்ந்து செல்ல முடிந்தது என்று அவர் கூறுகிறார்.

மழை விடாமல் பெய்ந்துகொண்டிருந்தது. வழி சேரும் தண்ணீருமாயிருந்தது. இரவில் இந்தியப் பட்டாளம் பென்காசியை விட்டு நீங்க ஆரம்பித்தது. ஒரு ஜெர்மன் பட்டாளத்தை அவர்கள் அறியாமலே இந்தியர்கள் தாண்டிவிட்டார்கள். மற்றொரு டாங்கிப் படை இந்தியர்கள்மேல் பீரங்கிகளைத் திருப்பியது. ஆனால் யாதொரு சேதமும் இல்லாமல் நமது சிப்பாய்கள் தப்பித்துக் கொண்டு சென்றார்கள். எதிரி விமானங்கள் தாக்குவதற்குக் கீழே வந்தன. ஆனால் கீழிருந்து யாரும் சுடவில்லை. ஆகையால் எதிரி விமானிகள் விஷயம் அறியாமல் யாரோ போகிறார்கள் என்று நினைத்து விமானங்களைத் திருப்பிச் சென்றார்கள்.

பென்காசியைவிட்டுப் போவதற்குமுன் எதிரிகளுக்கு உபயோகமாகக் கூடிய எல்லா சாமான்களையும் பொருள்களையும் நீக்கிரையாக்கிவிட்டபிறகு தான் இந்தியத் துருப்புகள் வெளியேறின.

# ரஷ்ய யுத்தம்: ஜெர்மனி பின் வாங்குதல்

## மார்ஷல் தீமோ ஷெங்கோவின் வெ றிகள்

### ஹிட்லருடைய பயனில்லாத் திட்டம்

ரஷ்யாவில் நடக்கும் பெரும் போராட்டம் ரஷ்யர்களுக்கு இப்போது வெற்றியளித்துக்கொண்டு வருகிறது. ஜெர்மானியர்களால் கைப்பற்றப்பட்ட பட்டணங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருக ரஷ்யர்களால் திரும்பக் கைப்பற்றப்படுகின்றன. வடக்கில் லெனின்கிராட் பிரதேசத்தில், ரஷ்யர்களுடைய முன்னேற்றத்தைத் தடுக்க ஜெர்மானியர்கள் எவ்வளவோ பிரயாசை செய்கிருர்கள். ஆனல் இல்மான் ஏரியின் தெற்கில், ஜெனரல் சூகோவின் தலைமையின் கீழ் ரஷ்யர்கள் தாங்களடைந்த வெற்றிகளை பலப்படுத்திக்கொண்டு வருகிருர்கள். அடுத்தபடியாக, லெனின்கிராடைச் சுற்றியிருக்கும் ஜெர்மன் துருப்புகளைத் தாக்க வேண்டுமென்பது ரஷ்யர்களின் நோக்கம். அதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்துகொண்டு வருகிருர்கள்.

ரஷ்யப் போர் முனையில், மத்தியப் பகுதியில் ஜெர்மானியர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படியான நிலைமையில் வைக்கப்பட்டிருக்கிருர்கள். ஸ்மோலென்ஸ்க் என்ற ஒரு முக்கியமான பட்டணத்துக்குப்போகும் ராஜ பாட்டை நெடுக ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தாக்கிக்கொண்டிருக்கிருர்கள். லெனின்கிராடிலிருந்து வெள்ளை ரஷ்யாவுக்குப். போகும் ரயில் பாதையை மீண்டும் ரஷ்யர்கள் கைப்பற்றி விடுவார்கள் போலிருக்கிறது.

### கொறடா முனை தந்திரம்

தெற்குப் பகுதியில், ரஷ்யாவின் மாபெரும் ராணுவத்தளகர்த்தரான மார்ஷல் தீமோ ஷெங்கோ யூக்ரேயின் மாகாண முழுவதையும் ஒரேயடியாய்த் திரும்பப் பிடித்துக் கொள்வதற்கு, சகல ஏற்பாடுகளும் செய்திருக்கிருர். இதல்லாமல், கார்கேஸ் என்ற ரஷ்யாவின் தொழிற் சாலைப்பட்டணத்தை நோக்கி, அவருடைய துருப்புகள் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றன.

மார்ஷல் தீமோ ஷெங்கோ ஒரு பிரம்மாண்டமான கொறடா முனை தந்திரத்தைக் கையாளுகிருரென்று தெரிகிறது. ஒரு முனை யூக்ரேயினிலும், மற்ருெரு முனை அசாப் கடல் பிரதேசத்திலும், இருக்கும்படி செய்து, ஜெர்மானியர்களைக் கொடுக்கில் நறுக்குவதுபோல நறுக்குவதற்கு அவர் முயற்சி செய்து வருகிருர்.

அசாப் கடற்கரையில் தாகன்ரோக் என்ற பட்டணம் இருக்கிறது. இதற்கு 100 மைல் மேற்கில் உள்ள பிரெஸ் போவாய் என்ற பட்டணம் ரஷ்யர்களால் மீண்டும் கைப்பற்றப்பட்டது. ஆனல் கிரைமியாவில் கிழக்குக் கரையில் உள்ள பியோடோசியா என்ற இடத்திலிருந்து ரஷ்யர்கள் பின் வாங்கிச் சென்றிருக்கிருர்கள். இருந்தபோதிலும் காகசஸ் பிரதேசத்திலிருந்து கிரைமியாவுக்குச் செல்வதற்கு கர்ச் ஜலசந்தி மூலமாக அவர்களுக்கு ஒரு வழி இருக்கிறது.

### கவனத்தைத் திருப்புதல்

முதலில் பியோடோசியாவை ரஷ்யர்கள் தாக்கியதன் நோக்கம் செபாஸ்டபூலைச் சுற்றியுள்ள ஜெர்மன் படைகளின் கவனத்தை வேறு வழியில் திருப்புவதற்காகத்தான். இந்த நோக்கத்தில் ரஷ்யர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். செபாஸ்டபூலில் உள்ள ரஷ்யத் துருப்புகள் இப்போது ஜெர்மானியர்களைக் கடுமையாக எதிர்த்துத் தாக்குகின்றன.

மார்ஷல் தீமோ ஷெங்கோவினுடைய நோக்கம் கிரைமியாவை மாத்திரம் ஜெர்மானியர்களிடமிருந்து விடுவிப்பதல்ல; நிலக்கரியும், இரும்பும் உள்ள சுரங்கங்கள் நிறைந்த டோனெட்ஸ் தொழிற்சாலை பிரதேசத்தையும், கிழக்கு யூக்ரேயின் பிரதேசத்திலுள்ள பெரிய நகரங்களையும், மாஸ்கோவிலிருந்து அசாப் கடலுக்குச் செல்லும் பெரும்பாதையையும்—இவைகளெல்லாவற்றையும் ஜெர்மானியர்களுடைய பேராசையிலிருந்து விடுவிப்பதற்காக மார்ஷல் தீமோ ஷெங்கோ முயற்சிசெய்து வருகிருர்.

மழைக்காலத்தில் மாஸ்கோ அசாப் பாதையை கைப்பற்றிவிட வேண்டுமென்று ஹிட்லர் திட்டம் போட்டிருந்தார். அவருடைய திட்டம் பயனில்லாமல் போய் விட்டது.

இப்போதிருக்கிற நிலைமையைப் பார்த்தால், லெனின்கிராடைத் தாக்கியதிலும், மாஸ்கோவைத் தாக்கியதிலும் எப்படி ஹிட்லர் தோல்வியடைந்தாரோ, அதைப்போல தெற்கு ரஷ்யப்போர் முனையிலும், அசாப் கடற் பிரதேசத்திலும், கடுந்தோல்வியடைவார். என்பதற்குச் சந்தேகமில்லை.

# தூரக்கிழக்கு யுத்த நிலைமை.

## ஜப்பான் காலத்துடன் போட்ட பந்தயம்

### நேசதேசத் துருப்புகளுக்கு உதவி

#### அமெரிக்கக் கடற்படை தாக்குதல்

தூரக் கிழக்குப் பிரதேசத்தில் நடக்கும் யுத்தத்தில், இந்த வாரம் நல்ல செய்தியும் கிடைத்திருக்கிறது; கெட்ட செய்தியும் கிடைத்திருக்கிறது. மலேயா யுத்தம் முடிந்துவிட்டது; சிங்கப்பூர் யுத்தம் ஆரம்பமாய்விட்டது.

நம்முடைய துருப்புகள் சிங்கப்பூர் தீவுக்குப் பத்திரமாய் வந்துசேர்ந்தன. சேர்ந்ததும், சிங்கப்பூருக்கும் மலேயாவுக்கும் இடையில் உள்ள ஜோஹூர் பாலம் உடைக்கப்பட்டது. ஜப்பானியர்கள் மலேயா தீபகற்பத்தின் வழியாக சிங்கப்பூரைத் தாக்குவதற்காக வந்துகொண்டிருக்கிருர்கள். சிங்கப்பூரின்மேல் ஜப்பானிய விமானத்தாக்குதல் அதிகரித்திருக்கிறது.

### உலகப் பிரசித்திபெற்ற பீரங்கிகள்

ஆனல் சிங்கப்பூருக்குத் தகுந்த பாதுகாப்பு இருக்கிறது. வேண்டிய அளவுக்கு விமானபலம் இருக்கிறது. சிங்கப்பூரில் உள்ள உலகப் பிரசித்திபெற்ற அதிகபலமான பீரங்கிகள் ஜோஹூரில் எதிரிகளின் துருப்பு ஏற்பாடுகளை நாசம்செய்து வருகின்றன.

சிங்கப்பூரில் உள்ள ஆஸ்திரேலியத்துருப்புகளுக்கு ஆஸ்திரேலிய ராணுவ மந்திரி மிஸ்டர் போர்டு ஒரு செய்தி அனுப்பியிருக்கிருர், அதாவது:—

"உங்களுக்கு அதிக சீக்கிரத்தில் எவ்வளவு உதவி அனுப்பமுடியுமோ அவ்வளவும் அனுப்புவதற்கு எங்களாலான எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம். குறைந்த அளவுள்ள பண்டசாலையிலிருந்து சாமான்கள் அனுப்புவதுபோல உதவி அனுப்பமாட்டோம். நாங்கள் அனுப்பும் உதவி ஒரு ஆறுபோல வரும்; போகப்போக அது ஒரு பெரிய வெள்ளமாய்க் கரைபிரண்டு செல்லும். பிரம்மாண்டமான ஏற்பாடுகள் தயாராகின்றன. உங்களைத் தனியாக வெறுங்கையுடன் விட்டுவிடமாட்டோம், நேசதேசத்தார்களெல்லாம் உங்கள் பின்னிருக்கிருர்கள். அவர்களுடைய தேச சாமான்களும் ஆதாயங்களும் அதிவிரைவில் உங்களுக்கு அனுப்பப்படும். எதிரிக்குக் காலத்தின் முக்கியம்தெரியும். அதனல் அதிசீக்கிரத்தில் வெற்றிபெறுவதற்கு முயற்சிசெய்கிருன். ஆஸ்திரேலியாவில் உள்ள உங்கள் நாட்டு மக்கள் உங்களைப்பற்றிப் பெருமையடைகிருர்கள்; உங்களைப்பற்றி நல்ல மதிப்புகொண்டிருக்கிருர்கள். உங்களுடைய அருமையான உதவியினல், நேசதேசத்தார்களுக்கு வேண்டிய காலவசதி கிடைத்திருக்கிறது. உங்களுக்கு நல்லதிர்ஷ்டம் கிடைப்பதாக!"

### பாதுகாப்பு ஏற்பாடுகள்

சிங்கப்பூரைப் பாதுகாப்பதன் சம்பந்தமாக நேசதேசத்தார்கள் எல்லா முயற்சிகளும் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிருர்கள். மோச எண்ணத்துடன் திடீரென்று தாக்கி, கைப்பற்றப்பட்ட மலேயாநாடும், பசிபிக் பிரதேசத்தில் உள்ள சில தீவுகளும், ஜப்பானியர்களுடைய கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு அவர்களைத் துரத்துவதற்காக நேசதேசத்தார்கள் தங்களுடைய பலத்தை எல்லாம் ஒருமித்துச் சேர்ப்பதற்குச் செய்யவேண்டிய முயற்சிகளெல்லாம் செய்துவருகிருர்கள்.

இந்த வார ஆரம்பத்தில், அமெரிக்காவின் கடற்படையும், விமானப்படையும், மார்ஷல் தீவுகளிலும், கில்பர்ட் தீவுகளிலும் உள்ள ஜப்பானியத்தலங்களைப் பலமாகத்தாக்கின. ஏராளமான சேதம் ஏற்படுத்தப்பட்டதென்று டோக்கியோ ரேடியோவே ஒப்புக் கொள்ளுகிறது. அமெரிக்காவின் பசிபிக்கடற் படையின் பிரதம தளகர்த்தரான அட்மிரல் நிமிட்ஸ் என்பவர், கூடிய சீக்கிரம் ஜப்பானுடைய வாசற்படிக்கு அருகேயுத்தம் கொண்டு போகப்படுமென்றும், அதற்காக அமெரிக்கக் கடற்படையின் ஒவ்வொரு பாகமும் சேர்ந்து வேலை செய்கின்றது என்றும் கூறினர்.

அமெரிக்காவின் கடற்படை எங்கிருக்கிறது என்று தெரியாமல் மயங்கிய ஜப்பானுக்கு இப்போது தகுந்த பாடம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அமெரிக்கா கடுமையாகவும், விரைவாகவும் தாக்கும் திறமையுள்ளது என்பதை ஜப்பான் அறிந்துகொண்டிருக்க வேண்டும்.

### அமெரிக்க "கோட்டை" விமானங்கள்

அமெரிக்காவின் "கோட்டை" வெடிகுண்டு விமானங்கள் சுறுசுறுப்பாக வேலை செய்து வருகின்றன. ஆஸ்திரேலியாவுக்கும், நேசதேசத்தளங்களுள்ள டச்சுக் கிழக்கு இந்திய தீவுகளுக்கும் செல்வதற்கு உள்ள கடல் வழிகளைப்பாதுகாக்கும் மகாசர் ஜலசந்தியில் உள்ள ஜப்பானியக் கப்பல்களை இவ் விமானங்கள் நாசம் செய்கின்றன.

டச்சுத்தளமாகிய அம்பாய்னவில் கடுமையாக எதிர்த்துத் தாக்கப்பட்ட ஜப்பானியர்கள் இப்போது வேறு வழியில் திரும்பியிருக்கிருர்கள். ஜாவா தீவைத்தாக்க ஆரம்பித்திருக்கிருர்கள். ஆனல் சூரபாயா என்ற இடத்தின் மேல் நடத்திய அவர்களுடைய விமானத்தாக்குதல் வெற்றிகரமானதாகயில்லை. ஆனல் இண்டோ-சீனவிலும் தாய்லாந்திலும் உள்ள ஜப்பானிய விமானத்தளங்களை பிரிட்டிஷ் விமானப்படை துவம்சம் செய்துவருகிறது.

பிரிட்டிஷ் விமானப்படையையும், அமெரிக்க சுதந்திர சேனைப்படையையும், அவைகள் காட்டிய போர்த்திறமையையும் பாராட்டி மிஸ்டர் சர்ச்சில் கூறியிருக்கிருர். ரங்கூன் துறைமுகத்தையும், பர்மா ரோட்



டையும் அவர்கள் பாதுகாத்த தீரத்தை, 1940-ம் ஆண்டு பிரிட்டனைப் பாதுகாத்த வீரர்களுடைய தீரத்துக்குச் சமானமாகக் கூறினர்.

பர்மாவிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகள் மோல்மீனிலிருந்து பின் வாங்கிச் சென்றன. பர்மாவிலுள்ள பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் துருப்புகளுக்கு வேண்டிய உதவிகள் அனுப்பிக் கொண்டே இருப்பதாக, மிஸ்டர் சர்ச்சில் வாக்களித்தார்.

### சீனவின் அடுத்த முயற்சி

சீனவிலிருந்து ஒரு பிரம்மாண்டமான எதிர்தாக்குதல் நடக்கும் என்று தெரிகிறது. மார்ஷல் சியாங்கே ஷெக்கினுடைய துருப்புகள் சமீபத்தில் ஒரு பெருந் தாக்குதலை ஆரம்பிக்குமென்று தெரிகிறது.

சீனவில் நடக்கும் யுத்தத்தில், இப்போது ஜப்பானியர்கள் தெற்கில் உள்ள காண்டனுக்குப் பின் வாங்கிப்போகும்படி நேர்ந்திருக்கிறது. இதல்லாமல், வடக்கிலும், முன் கைப்பற்றியிருந்த இடங்களைவிட்டு ஓடும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பசிபிக்கடல் பிரதேசத்தில் இதர பாகங்களில் இருக்கும் நிலைமையைச் சற்று கவனிப்போம். டச்சுக் கிழக்கிந்திய தீவுகளில் ஒன்ருன போர்னியோவைக் கைப்பற்ற ஜப்பான் முயற்சி செய்கிறது. ஆனல் டச்சு துருப்புகள் ஜப்பானியர்களை எதிர்த்து அதிக தைரியத்துடன் போராடி வருகிருர்கள். படான் தீபகற்பத்தைக் கைப்பற்றவேண்டுமென்று ஜப்பான் செய்த முயற்சி வெற்றிகரமாகத் தடுக்கப்பட்டது. ஜெனரல் மெக்கார்த்தருடைய தலைமையின் கீழுள்ள அமெரிக்கத் துருப்புகளும் பிலிப்பைன் துருப்புகளும் ஜப்பானியத் துருப்புகளைத் தடுத்துள்ளன. சரணகதியடையும்படி கேட்ட ஜப்பானியர்களின் உத்தரவை ஜெனரல் மெக்கார்தர் அலட்சியம் செய்தார். அவருடைய செய்கையை பிலிப்பைன் குடியாட்சித்தலைவர் க்வீசான் ஆதரித்திருக்கிருர். முடிவில் நேசதேசத்தார்கள்தான் வெற்றியடைவார்கள் என்பதில் தனக்குள்ள நம்பிக்கையை பிரசிடெண்ட் க்வீசான் ஆணித்தரமாகக் கூறியிருக்கிருர்.

### அதிகரிக்கும் பலம்

பசிபிக் யுத்தமுனையில் எல்லா பகுதிகளிலும், ஜப்பான் காலத்துடன் பந்தயம் போட்டு ஓடிக்கொண்டிருக்கிறது. சீக்கிரத்தில் வெற்றிபெறவேண்டுமென்பது ஜப்பானுடைய நோக்கம். நாளுக்குநாள் நேசதேசத்தார்களுடைய யுத்த தளவாட உற்பத்தி அதிகரித்துக்கொண்டு வருகிறதென்பது ஜப்பானுக்கு நன்ருகத் தெரியும். பல பகுதிகளிலும் பாதுகாப்பு வேலை செய்யும் சிப்பாய்களுக்கு உதவி அனுப்பப்பட்டு வழியில் வந்துகொண்டிருக்கிறது.

இந்த உதவி வரும் வரையில், நமது துருப்புகள் ஜப்பானியர்களை எதிர்த்து, சமாளித்துக்கொள்ளும் என்று நம்பிக்கையுடன் கூறலாம்.

## பிரிட்டிஷ் 'டாங்கி' தொழிற்சாலைகளி ல் அதிகமான உற்பத்தி



பிரிட்டிஷ் 'டாங்கி' தொழிற்சாலைகளில் இப்போது அதிகப்படியான 'டாங்கி' கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேலே காட்டப்பட்ட படத்தில் 'டாங்கி' கள் செய்யப்படுவதின் பலவித அமைப்புகளைக் காணலாம்.

# ரஷ்யாவில் ஜர்மானியரின் அட்டூழியங்கள்

## ஜெர்மன் சிப்பாய்களுக்கு விபசாரவிடுதி!

### ரஷ்யப்பெண்களின் மானபங்கம்: ராட்சதர்களின் அக்கிரமங்கள்

ரஷ்யாவில் ஜெர்மானியர்கள் செய்து வரும் அட்டூழியங்களுக்குக் கணக்கே கிடையாது. தாங்கள் கைப்பற்றிய கிராமங்களிலும், பட்டணங்களிலும் உள்ள ரஷ்ய மக்களை அவர்கள் சித்திரவதைசெய்கிருர்கள். ஏராளமான மக்களைக் கொன்றுவிடுவது அவர்களுக்கு சாதாரண வழக்கமாய்விட்டது.

ஜெர்மானியர்கள் செய்துவரும் அட்டூழியங்களைப்பற்றி ஒரு நீண்ட அறிக்கையை, மிஸ்டர் மாலதோவ் நேசதேச அரசாங்கங்களுக்கு அனுப்பி யிருக்கிருர். மிஸ்டர் மாலதோவ் ரஷ்ய அரசாங்கத்தில் அயல் நாட்டு மந்திரியாக இருக்கிருர்.

அவருடைய அறிக்கை பல பிரிவுகளாக வெளியிடப்பட்டுவருகிறது. இன்றையதினம் (பிப்ரவரி மீ 6உ) வெளியிடப்படும் பிரிவில், ரஷ்ய ஆண் பிள்ளைகளையும், பெண் மக்களையும், குழந்தைகளையும் ஜெர்மானியர்கள் எம்மாதிரி நடத்துகிருர்களென்ற விவரங்கள் அடங்கியிருக்கின்றன. அதனுடைய சாராம்சம் பின்வருமாறு:—

### தூக்குமேடை

ஏதாவது ஒரு ஊரை ஜெர்மானியர்கள் பிடித்தவுடன், அங்கு ஒரு தூக்கு மேடையை ஏற்படுத்துகிருர்கள். முதலில் அகப்படும் மக்கள் பலரை, அதாவது ராணுவத்தைச் சேராத மக்களை, அவர்கள் தூக்கிலிட்டுக் கொல்லுகிருர்கள். தூக்கில் இறந்தவர்களை உடனே கீழே இறக்குவதில்லை. தூக்கு மரத்திலிருந்து சில நாள்கள் வரைக்கும் இறந்துபோனவர்களுடைய உடல் தொங்கிக்கொண்டே இருக்கும். சில சமயத்தில், சில வாரங்களாக இந்த கொடூர காட்சி அப்படியே இருக்கும்.

கார்கோப் என்ற பட்டணத்தைப் பிடித்ததும், ஜெர்மானியர்கள் இப்படியே செய்தார்கள். பட்டணத்தின் மத்தியிலுள்ள ஒரு பெரிய கட்டடத்தின் ஜன்னலிலிருந்து கட்டப்பட்ட கயிற்றில் அநேக ரஷ்யர்கள் தூக்குப்போடப்பட்டார்கள். இதே பட்டணத்தில் 1941-ம் ஆண்டு நவம்பர் மீ 16உ வீடுகளின் மேல் மாடிகளிலிருந்து 19 பேர் தூக்கிலிடப்பட்டார்கள். தூக்கிலிடப்பட்டவர்களில் ஒரு பெண் பிள்ளையும் இருந்தாள்.

காலீனின் பிரதேசத்தில் செரிபெஸ் என்ற இடத்தில் 27 குடியான குடும்பங்களை ஜெர்மானியர்கள் சுட்டுக்கொன்ருர்கள். கொன்றவர்களை ஒரு பெருந்தீ உண்டாக்கி அதில் போட்டுவிட்டார்கள்.

லெனின்கிராட் பிரதேசத்தில் உள்ள டிக்வின் என்ற பட்டணத்தில், ராம்சாண்ட்சேவ் என்ற ரஷ்ய ராணுவ டாக்டர் ஒரு வீட்டில் கொல்லப்பட்டுக்கிடந்தார். அவருடைய மூக்கு அறுக்கப்பட்டிருந்தது; கைகள் வெட்டப்பட்டிருந்தன; தலை காயப்படுத்தப்பட்டிருந்தது; அவருடைய கழுத்தில் துப்பாக்கிக் கத்திமுனையால் குத்தப்பட்ட அநேக காயங்கள் இருந்தன.

### கொடூரச் செயல்கள்.

யூக்ரேயின் பிரதேசத்தில், வரோங்கி என்ற கிராமத்தில் 40 காயமடைந்த ரஷ்ய சிப்பாய்கள் ஒரு பழைய ஆஸ்பத்திரியில் அடைக்கப்பட்டார்கள். அருகில் இருந்த டாக்டர்களிடம் உள்ள மருந்துகள், உணவு, காயம் கட்டும் துணிகள் முதலியவற்றைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அங்கிருந்த செவிலித்தாய்களை ('நர்சு'களை) கற்பழித்தார்கள்; பிறகு அவர்களைச் சுட்டுக்கொன்றுவிட்டார்கள்.

காயமடைந்த ரஷ்ய சிப்பாய்களுக்குக் காவல்வைத்தார்கள். நான்கு நாள் வரைக்கும் யாரையும் போகவொட்டாமல் தடுத்தார்கள். உணவும் மருந்தும் இல்லாததால், சிலர் இறந்து போனர்கள். உயிருடன் இருந்தவர்களை ஆற்றில் தூக்கிப்போட்டுவிட்டார்கள். அவர்களுடைய சொந்தக்காரர்களாவது, அல்லது ஊர் மனிதர்களாவது இறந்துபோனவர்களுடைய பிரேதத்தை எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படவேயில்லை.

ரஷ்யமக்களை எந்த ஜெர்மானியன் வேண்டுமென்ருலும் கொலை செய்து விடலாம். கேள்விமுறை கிடையாது. உண்மையில் ஜெர்மன் அதிகாரிகள் கொலை செய்கிறவர்களைப் பாராட்டுகிருர்கள்.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் ரஷ்யப் பெண்கள் கற்பழிக்கப்படுகிருர்கள்.

யூக்ரேயினில் பரோடீயீவ்கா என்ற கிராமத்தில் உள்ள ஒவ்வொரு பெண்ணையும் ஜெர்மானியர்கள் கற்பழித்தார்கள். ஸ்மோலென்ஸ் பிரதேசத்தில் உள்ள பெரிசோவ்கா என்ற கிராமத்தில் 15 வயதிலிருந்து 30 வயது வரையிலுள்ள பெண்களை எல்லாம் ஜெர்மானியர்கள் கற்பழித்தார்கள்; அத்தோடு நிற்காமல் அந்தப் பெண்களையெல்லாம் தங்களுடன் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள்.

### கற்பழிக்கும் காதகர்கள்

ஸ்மோலென்ஸ்க் பட்டணத்தில், ஜெர்மன் ராணுவக்காரியாலயம் தங்களுடைய ராணுவ உத்தியோகஸ்தர்களின் உபயோகத்துக்காக ஒரு விபசார விடுதியை எற்படுத்தினார்கள். அதற்குள் நூற்றுக்கணக்கான ரஷ்யப் பெண்மணிகள் அடைக்கப்பட்டார்கள். தெருக்களில் அவர்களுடைய தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய், யாதொரு இரக்கமுமில்லாமல் விபசார விடுதியில் ஜெர்மன் சிப்பாய்கள் அவர்களை அடைத்தார்கள்.

எங்குபார்த்தாலும், ஜெர்மன் ராட்சதர்கள், வீட்டுக்குள் புகுந்து, சுற்றத்தார், குழந்தைகள் இவர்களுக்கெதிரிலேயே, பெண்களைக் கற்பழிக்கிறார்கள். கற்பழிக்கும் பெண்களைப் பரிகாச வார்த்தைகள் பேசி, பிறகு அவர்களை சுட்டுக் கொன்று விடுகிறார்கள்.

லவோவ் என்ற பட்டணத்தில், லவோவ் துணி நெய்யும் சாலையில் வேலை செய்து கொண்டிருந்த 32 தொழிலாளப் பெண்கள், ஜெர்மன் சண்டமாருதப்படை ("ஸ்டார்ம் ட்ரூப்பர்ஸ்")யைச் சேர்ந்த சிப்பாய்களால் கற்பழிக்கப்பட்டு கொல்லப் பட்டார்கள். லவோவிலுள்ள பல யௌவனப் பெண்களை, குடிவெறி கொண்ட ஜெர்மன் சிப்பாய்கள் கோஸ்க்சுயிஸ் கோபார்க் என்ற தோட்டத்தில் கற்பழித்தார்கள்.

ஒரு வயது சென்ற பாதிரி, கையில் சிலுவையை வைத்துக்கொண்டு, பெண்களைக் கற்பழிப்பதைத் தடுக்க முயன்றார். அவரை ஜெர்மன் சிப்பாய்கள் நொறுங்க அடித்து, அவருடைய பாதிரி உடையைக்கிழித்து, அவருடைய தாடியைக் கொளுத்தி விட்டார்கள். பிறகு அவரை ஊருக்கு வெளியில் அழைத்துச்சென்று, துப்பாக்கிக் கத்தி முனையில் குத்திக் கொன்று விட்டார்கள்.

### பாரிசோவ் சம்பவம்.

பாரிசோவ் என்ற பட்டணத்துக்கு அருகில் பையிலோ ரஷ்யா என்ற இடத்தில், ஒரு பாகத்தில் முன்னேறிக்கொண்டு வரும் ஜெர்மன் துருப்புகளுக்கு அஞ்சி 75 பெண்கள் ஓடும்போது, சில ஜெர்மன் சிப்பாய்கள் கையில் அகப்பட்டுக்கொண்டார்கள். அவர்கள் எல்லோரும கற்பழிக்கப்பட்டார்கள். பிறகு 36 பெண்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

மெல்சுகோவா என்ற பெயருடைய 16 வயது பெண்ணை காட்டுக்கு அழைத்துச் செல்லும்படி ஒரு ஜெர்மன் ராணுவ உத்தியோகஸ்தர் கட்டளையிட்டார். காட்டில் பல சிப்பாய்கள் அப்பெண்ணைக் கற்பழித்தார்கள். கொஞ்சநேரம் பொறுத்து, மற்ற பெண்கள் காட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு அவர்கள் ஒரு கோரமான காட்சியைக் கண்டார்கள். மெல்சுகோவா மரணத்தறுவாயில் இருந்தாள். ஒரு மரத்தில் சாயவைத்து அவள் கத்தியால் குத்தப்பட்டுக்கிடந்தாள்.. மற்ற பெண்களின் கண்முன்னேயே, மெல்சுகோவாவினுடைய மார்புகளை ஜெர்மன் சிப்பாய்கள் அறுத்து விட்டார்கள். இதைப் பார்த்த பெண்களில் இருவர், ஆல்பெரொங்கோ, பெரிஸ்நி கோவா, என்ற பெயருடையவர்கள்.

மாஸ்கோ பிரதேசத்தில் சீவெனிகொரோட்ஸ்கி ஜில்லாவில், பரோவ்கா என்ற கிராமத்தில், அநேக பெண்களையும் குழந்தைகளையும், ஜெர்மானியர்கள் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். பெண்களின் முன்னேயே, அக்குழந்தைகளைச் சுட்டுக்கொன்று விட்டார்கள்.

### திக்வினில் நடந்த கொடூரம்

லெனின்கிராட் பகுதியில், திக்வின் என்ற பட்டணத்தில், கொலோதக்ஸ்காயா என்ற 15-வயது பெண் வெடிகுண்டு சிதள்கள் பட்டு காயமாய்க் கிடந்தாள். அவளை ஒரு ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு வந்தார்கள். அதற்குமுன் அந்த ஆஸ்பத்திரி சாமியார்கள் இருந்த ஒரு பெரு மடாலயமாயிருந்தது. காயமடைந்து இருந்த பெண்ணை அந்த ஆஸ்பத்திரியிலேயே இருந்த சில ஜெர்மன் சிப்பாய்கள் கற்பழித்தார்கள். பிறகு அந்தப் பெண் இறந்து போனாள்.

ஜெர்மானியர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலையாக்கப்பட்ட பல பட்டணங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும், ஜெர்மானியர்கள் பெண்கள் மேலும், குழந்தைகள் மேலும் செய்த அட்டூழியங்களின் விவரங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. மாஸ்கோ, லெனின்கிராட், கலினின், தூலா, ஓரல், குர்ஸ்க், வாரஷிலோவ்கிராட், ஸ்டாலின், ராஸ்டோவ் முதலிய பல ஜில்லாக்களிலிருந்து இம்மாதிரியான விவரங்கள் தெரியவருகின்றன. கற்பழிக்கப்படுகிற பெண்களெல்லாம் பெரும்பாலும் உடனே கொல்லப்படுகிறார்கள்.

இப்படிப்பட்ட அநியாயங்களும், அட்டூழியங்களும், கொலைகளும், ஜெர்மானியர்களால் அதிகாரிகளுடைய அனுமதியின்மேல் நடைபெற்று வருகின்றன.

## மத்தியக் கிழக்கில் இந்தியத் துருப்புகள்

### சர் சிக்கந்தர் ஹயத்கானின் செய்தி

### பஞ்சாப் முதல் மந்திரி குமாரரின் வீரமொழி

பஞ்சாப் என்பது இந்தியாவின் வடக்கிலுள்ள ஒரு மாகாணம். அதனுடைய முதல் மந்திரி, சர் சிக்கந்தர் ஹயத்கான் என்பவர், சமீபத்தில் மத்திய கிழக்குப் பிரதேசத்துக்குச் சென்று, அங்குள்ள இந்தியத் துருப்புகளைப் பார்வையிட்டார்.

அவர், இராக்குக்கும் இரானுக்கும் சென்றிருந்தார். அங்கு பட்டாளத்தில் சேர்ந்திருக்கும் தன்னுடைய குமாரராகிய ஷவுகத் ஹயத்கான் என்பவரைச் சந்தித்தார். சந்தித்தபோது, ஷவுகத் ஹயத்கான் இந்தியத் துருப்புகளின் நிலைமையைப்பற்றிக் கூறியதாக சர் சிக்கந்தர் ஒரு பத்திரிகை நிருபரிடம் சொன்னார். ஷவுகத் ஹயத்கான் கூறியதாவது:—

"என்னுடைய பட்டாளங்கள் எல்லாம் சந்தோஷமா யிருக்கின்றன; ...ங்களுடைய வேலைகளைச் சரிவரச் செய்துவருகின்றன. இந்திய சிப்பாய்கள் தகுந்த யுத்தமுஸ்தீப்புடன் இருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் சண்டையில் கலந்துகொண்டு போர் செய்வதற்கு ஆசையாயிருக்கிறார்கள்."

சர் சிக்கந்தர் ஹயத்கான், மத்திய கிழக்குப் பிரதேசத்தில் இந்தியத் துருப்புகளுக்காகச் செய்யப்பட்ட எற்பாடுகளைப் பற்றி அடுத்தபடியாகக் கூறினார். சிப்பாய்களின் சௌகரியத்துக்காக, சகல எற்பாடுகளும் அதிகாரிகளால் செய்யப்பட்டிருக்கின்றன என்றும், இந்தியசிப்பாய்களில் தேக அசௌக்கியமடைந்தவர்கள் சமாதான காலத்தைவிட இப்போது மிகக் குறைவு என்றும், அவர் தெரிவித்தார். ஆனால் மத்திய கிழக்குப் பிரதேசத்தில் ஒரு கஷ்டம் இருக்கிறது: அதாவது கடுமையான குளிர், என்று அவர் அறிவித்தார்.

பஞ்சாப் மாகாணத்தின் முதல் மந்திரியாகிய சர் சிக்கந்தர் ஹயத்கான், மத்திய கிழக்குப் பிரதேசத்திலுள்ள இந்தியத் துருப்புகளிடையே மூன்று வாரங்கள் இருந்தார்.

சர் சிக்கந்தர் மத்தியக் கிழக்குப் பிரதேசத்துக்கு இதற்கு முன் ஒரு தடவை சென்றிருக்கிறார்.

## பேசும் தபால் கடிதங்கள்

### ரஷ்யப் போர்முனையில் ஒரு விந்தை

### ஆச்சரியக் கடிதம்

போர்முனையில் இருக்கும் சிப்பாய்கள், தங்களுடைய குடும்பத்தார், உற்றார், உறவினர் முதலியவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதலாம். அவர்களிடமிருந்து பதில் கடிதங்களைப் பெறலாம். சிப்பாய்களுக்கு பல இடங்களிலிருந்து வரும் கடிதங்கள் ஏராளமா யிருந்தாலும், அவைகளைக் கொண்டுவரும் விமானங்கள் முதலியவைகளுக்கு பளுவு அதிகப்பட்டதாலும், கடிதங்களைப் படம் பிடிக்கும் முறை கையாளப் பட்டது.

படம் என்றால் சினிமா படங்கள் பிடிக்கும் 'பிலிம்' என்ற சிறு அளவில் படம் பிடிப்பது. சிப்பாய்களுக்கு வரும் கடிதங்களை எல்லாம் ஒன்றன் பின்னொன்றாக ஒட்ட வைத்து, சிறு 'பிலிம்'மாகப் படம் பிடித்து போர் முனைக்கு அனுப்புகிறார்கள். அங்கே அந்தச் சிறு படம் பெரிதாக்கப்பட்டு, ஒவ்வொரு கடிதமும் தனியாகக் கத்தரிக்கப்பட்டு, அந்தந்த சிப்பாய்களுக்குக் கொடுக்கப்படும்.

இந்த எற்பாடு மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் துருப்புகள் இருக்கும் இடங்களில் கையாளப்பட்டு வருகிறது.

ஆனால் ரஷ்யாவில் தபால் கடிதங்கள் 'பிலிம்' மூலமாகப் படமெடுத்து அனுப்புவதில்லை. "பேசும் கடிதங்கள்" அனுப்பப்படுகின்றன!

இதென்ன ஆச்சரியம்! கடிதமாவது? பேசுவதாவது? என்று கேட்கலாம். ஆனால் இந்த ஆச்சரியம் ரஷ்யாவில் நடக்கிறது.

ஒரு ரஷ்யத் தாயார் போர் முனையில் உள்ள தன்னுடைய அருமை மகனுக்கு ஒரு அன்பான செய்தி அனுப்ப விரும்புகிறாள் என்று வைத்துக்கொள்வோம். அவர் ரஷ்யாவின் தலைநகரமாகிய மாஸ்கோவுக்குச் சென்று, ராணுவ 'அதிகாரிகளிடம், தெரிவிக்கவேண்டும். உடனே ஒலி பதிவிக்கும் காரியாலயத்துக்கு அவள் அழைத்துச் செல்லப்படுவாள். அங்கே தன் மகனுக்கு அனுப்பும் செய்தியை அவள் உறக்கக் கூறினால், ஒலி பதிவிக்கும் கருவி அதை எடுத்துக்கொள்ளும்.

இதை ஒரு உதாரணத்தால் விளக்கலாம். 'கிராமபோன்' என்ற சங்கீதப் பெட்டி இருக்கிறதல்லவா? அந்தப் பெட்டியில் இசைத் தட்டுகள் வைத்து சுத்தும்படி செய்தால் பாடுகிறதல்லவா? முதலில் யாராவது பாடினால், அந்தப் பாட்டு ஒலிப்பதிவு கருவியால் இசைத் தட்டில் பதிவு செய்யப்படுகிறது. இசைத் தட்டை 'கிராமபோனி'ல் வைத்தால், பாட்டுக் கேட்கிறது.

### ஒலியும், தபாலும்

அதைப்போலவே ரஷ்யத் தாயினுடைய செய்தி மிக மெல்லியதான 'செல்லுலாய்ட்' என்ற தக்கையின்மேல் ஒலிப்பதிவு செய்யப்படுகிறது. பிறகு இந்த 'செல்லுலாய்ட்' தக்கை ஒரு சாதாரண தபால் கார்டில் ஒட்டப்படுகிறது. பிறகு இந்தக் கார்டு தபால் மூலமாக, மற்ற கடிதங்கள் அனுப்பப்படுவதுபோல, அனுப்பப்படுகிறது. இது ரஷ்யப் போர் முனைக்குச் செல்கிறது.

ஒவ்வொரு ரஷ்யப் பட்டாளத்தினிடமும், ஒரு 'கிராமபோன்' இருக்கிறது. அந்தக் 'கிராமபோனி'ல் 'செல்லுலாய்ட்' தக்கைத் தட்டை வைத்து, சாவியைத் திருப்பிவிட்டால், அந்தத் தபால் கார்டு பேசுகிறது. தனது ஆருயிர்த் தாயின் அருமையான வார்த்தைகளை ரஷ்யச் சிப்பாய் தன் காதாரக் கேட்கிறான். தன்னுடைய தாய் நேரில் நின்று பேசுவதுபோல அவனுக்குத் தோன்றுகிறது.

தாயினுடைய அன்பான வார்த்தைகள் அவனுக்கு ஆறுதல் அளிக்கின்றன. அவளுடைய உணர்ச்சி மிகுந்த மொழிகள் அவனுக்கு இன்னும் அதிக தைரியத்தையும் மனவுறுதியையும் உண்டாக்குகின்றன

பேசும் தபால் கடிதங்கள் தற்கால யுத்தத்தின் ஆச்சரியங்களுள் ஒன்றாகும்.



# சிங்கப்பூர் சண்டை

## அனுகூலமான விஷயங்கள்

### மாஸ்கோ யுத்தத்தின் கதி

### பிரிட்டிஷ் விமானப்படையின் வேலைகள்

ஒருநாள் குப்பன் சந்தைக்குப் போய்க் கொண்டிருந்தான். அன்றைய தினம் வெள்ளிக்கிழமை. வெள்ளி சந்தைக்கு போனால் துள்ளும் மாடு வாங்கலாம் என்ற எண்ணத்துடன் குப்பன் போய்க்கொண்டிருந்தான்.

கையில் ஒரு தடியும், காலில் செருப்பும் இருந்தால் காதவழி கஷ்டமில்லாமல் நடப்பேன் என்பான் குப்பன். அன்றையதினம், கையில் தடியும், காலில் செருப்பும், பையில் பணமும் இருந்தது குப்பனிடம். அவசரம் அவசரமாக போய்க்கொண்டிருந்தான்.

ஒரு ஜதை மாடு வாங்கவேண்டுமென்பது அவனுடைய நெடுநாளைய ஆசை. எத்தனை காலம் இரவல் மாடுகளை வைத்துக்கொண்டு பயிர், பச்சை செய்வது? நேற்றுப்பிறந்த பையன்களெல்லாம் சொந்த மாடுகள் வைத்துக்கொண்டு பண்ணையம் செய்கிறார்கள். எத்தனை நாளாகக் குப்பன் இரவல் காளைகளை வாங்கிக்கொண்டு, அவைகளுக்குக் கூலி கொடுத்துக்கொண்டு வருவான்? எப்படியாவது ஒரு ஜதை மாடு வாங்கிவிட வேண்டும்; வாங்காவிட்டால், தான் மனிதன் என்று உள்ளூரில் தலை எடுக்கமுடியாது என்று குப்பன் அடிக்கடி கூறுவான்.

### சந்தைப் பாதையில்

எப்படியோ, கொஞ்சம் கொஞ்சமாக, பணம்சேர்த்து, இன்னும் வேண்டிய தொகைக்குத் தன் பெண்சாதியின் கம்மலை அடகுவைத்துப் பணம் வாங்கிக்கொண்டு, குப்பன் சந்தைப்பாதைவழியே போய்க் கொண்டிருந்தான்.

மடியிலே கனம் இருந்தால் வழியிலே பயம் என்று சொல்லுகிறார்களல்லவா? குப்பனுக்குக் கொஞ்சம் உள்ளுக்குள் பயம் தான். யார் கண்டார், இந்தக்காலத்தில்? யாரை நம்புவது? யாரோ ஒருவன் பின்னாலேயே வந்து 'பொட்' டென்று தலைமேல் ஒன்று போட்டால் என் கெதி என்ன? மடியிலிருக்கும் பணத்தைப் பையோடே 'அபேஸ்' போட்டுக்கொண்டு போய்விட்டால், எங்கே போய், யாரிடம், என்னவென்று சொல்வது?

சந்தையிலடித்ததற்குச் சாட்சியா என்று சொல்லுவார்கள். சந்தை வழியில் தன்னந்தனியாகப் போகும்போது ஒரு தட்டுத்தட்டினால், கேட்பார் யார்? பணம் போனாலும் போகிறது, தலையில் அடிபட்டாலும் கட்டு கட்டிக்கொள்ளலாம்; ஆனால் அடகு வைத்துப் பணம் வாங்கின பெண்சாதியின் கம்மலுக்கு வழி சொல்லவேண்டுமே?

சே,சே, அதெல்லாம் ஒன்றும் நடக்காது? பட்டப்பகலில் யார் என்ன செய்வார்கள்? அதுவும் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தைக் காத்தவராயன் பார்த்துக்கொள்ள மாட்டானா?

குப்பன் இப்படி எல்லாம் யோசனை செய்துகொண்டே போய்க்கொண்டு இருந்தான். திடீரென்று அவன் மனதில் 'திக்' கென்று ஒரு பயம் தோன்றியது. யாரோ ஒரு ஆசாமி தன்னைத் தொடர்ந்து பின்னால் வருவதையறிந்தான். செருப்பு சத்தம் 'பட்', 'பட்' என்று கேட்டுக் கொண்டு வந்தது.

திரும்பிப்பார்க்கலாமென்றால் அவனுக்குப் பயமாயிருந்தது. திரும்பாமல் நேரே போகலாமென்றால், நேரில், பாதைக்கருகில் ஒரு அடர்த்தியான மாந்தோப்பு இருந்தது. அருகாமையில் யாரும் இல்லை. ஒரு காக்கா குஞ்சு, கூடக் காணோம்!

ஆனது ஆகிறது, பார்த்துக் கொள்ளலாம், என்று தைரியப் படுத்திக்கொண்டு குப்பன் நடக்க ஆரம்பித்தான். ஆனால் முன்னிருந்த வேகம் இப்போது அவன் கால்களில் இல்லை. கால்கள் சற்று பின்னிக்கொள்ள ஆரம்பித்தன.

இதற்குள் காலடி சத்தம் நெருங்கிவிட்டது. குப்பன் பாடு ஒரே குழப்பமும், கலக்கமுமாய் இருந்தது. எந்த நிமிஷமும் தலையில் அடிவிழும் என்று எதிர் பார்த்தான்.

"குப்பா! என்று ஒரு சத்தம் கேட்டது.

குப்பனுக்குத் தூக்கிவாரிப் போட்டதுபோல ஆய்விட்டது; ஒரு வெடி குண்டு சத்தம் கேட்ட பயங்காளியைப்போல திடுக்கிட்டான்.

இரண்டு விநாடி கழித்துத் திரும்பிப்பார்த்தான். அவனுடைய முகத்தில் ஒரு மகிழ்ச்சிக் குறி தோன்றியது.

"ஓ! நீங்கதானா? முனிசிப்பு அய்யா, வணக்கம். நான் யாரோ என்று பயந்துகிட்டேனுங்க" என்றான் குப்பன்.

"எனப்பா, பயம்? ஒன்னைப் புடிக்கலாமிண்ணுதான் வேகமாய் வந்தேன். ரொம்ப நாளாச்சு ஒன்னைப் பாத்து சந்தைக்கா போகிறாய்?" என்று கேட்டார் கிராம முனிசிப்பு.

குப்பன் :—ஆமாங்க. மாடு புடிக்கலாமிண்ணு போறேனுங்க. மாடில்லாதே ரொம்ப கஷ்டமாயிருக்குதுங்க. அதுக்கோசரம்தான் எங்கூட்டுக்காரி கம்மலை அடவு வச்சு பணம் வாங்கிகினு போறேன்.

கிராமமுனிசிப்பு :—உம் பெண்சாதி நகையையா அடவுவெச்சே?

குப். :—ஆமாங்க. வேறெ வழியில்லிங்க. நகை போனா போவுதுங்க. அதுவும் இந்தக் காலத்திலே என்னா நிச்சயம் இருக்குதுங்க? சண்டையுங் கிண்டையும், ஊரெல்லாம் ஒரே 'குபாரா' யிருக்குதுங்க?

கி.மு :—என்ன 'குபார்'? ஊரிலே என்னா பேசிக்கிறாங்க?

### சிங்கப்பூர் தீவு

குப். :—அதென்னமோ சிங்கப்பூராமே, அதுங்கிட்ட ஜப்பான்காரன் வந்து விட்டானாமே? இதெல்லாம் நெசந்தானுங்களா? சிங்கப்பூர் இண்ற ஊர் எங்கேயிருக்குது இண்ணு கூட எனக்குத் தெரியாதுங்க.

கி.மு. :—நீ இந்தியாவின் பூகோள படத்தைப் பாக்கணும். ஒன்னுடைய சின்ன பையன்தான் பள்ளிக்கூடத்தில் படிக்கிறானே. அவனுடைய பூகோள புஸ்தகத்தை வாங்கிப்பார். பார்த்தால், பர்மாவுக்குத் தெற்கிலே மலேயா என்ற தேசம் தெரியும். அதன் தென்கோடி முனையில் இருக்கும் தீவுதான் சிங்கப்பூர். சிங்கப்பூருக்குக் கிட்ட ஜப்பான்காரன் வந்திருப்பது நெசம்தான்.

குப். :—சரிதானுங்க அந்த ஊருக்கு அபாயம் இருக்குதுங்களா? ஜப்பான்காரன் கையில் ஆப்பிடாமல் தப்பிச்சுக்குமா?

கி. மு. :—இதே கேள்விதான் அல்லாரும் கேக்கிறாங்க. நம்ப தேசத்திலே மாத்திரமில்லை, சீனா, டச்சுக்கிழக்கிந்திய தீவுகள், ஆஸ்திரேலியா, பிலிப்பைன் தீவுகள், இந்த இடங்களிலெல்லாம் இதே கேள்விதான் கேக்கிறாங்க. சிங்கப்பூரை ஜப்பான் பிடிப்பது ரொம்பவும் கஷ்டம்.

குப். :—சரிதானுங்க என்னென்னமோ எடங்களை எல்லாம் ஜப்பான்காரன் புடிச்சுட்டான் இண்ணு சொல்றாங்களே, அவன் கொஞ்சம் பலசாலிபோலத் தோணுதுங்க.

கி. மு. :—ஆரம்பத்திலே பல இடங்களைப் புடிச்சுகிட்டான் இண்றது நெசந்தான், மலேயா தேசங்கூட அவன் கையிலே ஆப்பிட்டுகிச்சு, மலேயா சண்டை முடிஞ்சு போய், சிங்கப்பூர் சண்டை ஆரம்பமாய் இருக்கிறது. அதைப்பத்தி நம்ப பட்டாளத் தளகர்த்தர் ஒரு சமாச்சாரம் சொல்லியிருக்கிறார்.

குப். :—அவர் என்னா சொல்றாறுங்க? சிங்கப்பூரில் ஜப்பான்காரன் வரமுடியாத மாதிரி தடுத்துடுவாங்களா?

### அமெரிக்காவிலிருந்து வரும் உதவி

கி. மு. :—கட்டாயம் தடுப்பாங்க. போன மாசம் 31-ந் தேதி, நம்ப பட்டாளத்தளகர்த்தர் எதிரிங்களுக்கு ஆகாய விமான பலம் சாஸ்தியாயிருக்குது, அதனாலேதான் மலேயாவைக்கைப்பத்த அவுங்களாலே முடிஞ்சது இண்ணு சொல்றார். ஆனால், சிங்கப்பூர், ஒரு பெரிய கோட்டையைப்போல. அதை நம்ப படைகள் கட்டாயம் பாதுகாக்கும் இண்றதைப்பத்தி சந்தேகமேயில்லை.

குப். :—நீங்க சொல்றது சரிதானுங்க. ஆனால், அவுங்களுக்கு விமான பலம் சாஸ்தியாயிருந்தாக்கா, நம்பளாலே என்ன முடியுங்க?

கி. மு. :—அப்படியில்லே, நம்பளவங்கோ சிங்கப்பூரைக் கொஞ்சகாலம் பாதுகாத்துக்கினு இருந்தால் போதும். என் இண்ணாக்கா அமெரிக்காவிலிருந்து ஏராளமான உதவி வந்துகினு இருக்கிறது. அது வரும் வரைக்கும் சிங்கப்பூரை நாங்கள் கட்டாயம் பாதுகாப்போம் இண்ணு நம்ப தளகர்த்தர் சொல்லியிருக்கிறார்.

குப்:—ரொம்ப சந்தோசங்க!

கி.மு.:—இது மாத்திரமல்ல நம்ப ராஜா கூட சிங்கப்பூர் மக்களுக்கு ஒரு நல்ல சேதி அனுப்பியிருக்கார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் துருப்புகள் ஜப்பானியர்களை எதிர்த்துச் சண்டை போட்டு தைரியத்துடன் போராடி வருகிறதை மெச்சியிருக்கிறார். சிங்கப்பூர் மக்களெல்லாம் எதிரிகளை எதிர்த்துப் போராடத் தயாராயிருக்கிறாங்க. அவுங்களுக்கெல்லாம் நன்மை உண்டாகவேணும், இண்ணு நம்பராஜா சொல்லியிருக்கார்.

குப் :—சிங்கப்பூரிலே இருந்த ஜனமெல்லாம் ஊரைவிட்டு வெளியே வந்துடுச்சிங்களாமே? ரங்கூன்லே இந்த ரொம்ப ஜனம் பட்டணத்துக்கு வந்திச்சி இண்ணு எங்கூட்டுக்காரி சொன்னா, சிங்கப்பூரிலே கூடவா அப்படி?

கி.மு. :—சண்டையிலே சம்பந்தப்படாத சாதாரண ஜனங்கள் சிங்கப்பூரில் சில பாகங்களிலிருந்து வெளியே வந்தூட்டது வாஸ்தவம்தான். கரையோரம் சுற்றி ஒரு மைல் தூரத்திலிருக்கும் எல்லோரும் காலி செஞ்சுட்டுப்போய்வுடணும் என்று ராணுவ அதிகாரிகள் உத்தரவு போட்டிருக்காங்க.

### சுற்றி வளைத்தல்.

குப். :—சிங்கப்பூரைப்பிடிக்கறது 'ரொம்ப கஷ்டம் இண்ணு சொன்னிங்களே. அதைக் கொஞ்சம் விவரமாக சொல்லுங்க, கேட்போம்.

கி.மு. :—சிங்கப்பூர் தீவுக்கும் மலேயாவுக்கும் மத்திலே ஜோஹூர் ஜலசந்தி இருக்கிறது. அதைத்தாண்டிகினு வந்து, நேரா சிங்கப்பூரை ஜப்பான் காரனுங்க தாக்குவாங்களா இண்றது சந்தேகம். அநேகமா, சிங்கப்பூர் தீவைச் சுத்தி வளைச்சுகிறத்துக்குப் பாப்பாங்க, மலேயா அவுங்க கையிலிருக்குது. தெற்கே போர்னியோ இண்ற தீவு இருக்குது. அந்த தீவின் வடமேற்கு பாகம், ஜப்பானியரிடத்தில் இருக்குது. இதனால, மலாக்கா ஜலசந்தியும், நமக்குப் பிரயோசனமில்லாமல் போயுடுச்சி, இது ஒரு கஷ்டமான நிலைமை தான். ஆனால் சில முக்கியமான அனுகூலங்கள் நம்ப பட்டாளங்களுக்கு இருக்குது. வடக்கு சுமாத்ராவிலிருந்து ரியோ ஆர்ச்சி பிலகோ வழியாக ஒரு 'சப்ளை' வழி நம்பளவங்களுக்கு இருக்குது. பல சண்டைகளிலே ஜெயிச்ச ஜெனரல் வேவல் நம்ப பட்டாளங்களுக்குத் தளகர்த்தராக இருக்கார். அவருக்குத் தற்கால யுத்த முறைகளும், தந்திரங்களும் எல்லாம் நல்லா தெரியும். எந்த காலத்தில், எந்த இடத்தில் ஜப்பான்காரனுங்களை எதிர்த்துத் தாக்கி, விரட்டியடிக்கணும் இண்ற விஷயம் 'சப்ளை'யைப் பொறுத்திருக்குது.

குப். :—'சப்ளை' ஒதவியும், படை ஒதவியும் இப்போ வந்துகினு இருக்குதுங்களா?

கி. மு :— ஆமாம். ஜப்பான்காரனுங்க புடிச்ச எடத்துங்க மேலே, அமெரிக்க சன்

டைக் கப்பல்களும், ஆகாய விமானங்களும், வெடி குண்டு போட்டு தாக்க ஆரம்பிச்சாச்சி. இதனாலே, அமெரிக்காவிலிருந்து ராணுவ 'சப்ளை'யும், படை உதவியும் வந்து கொண்டிருக்குது, இன்னும் வந்து கொண்டே யிருக்கும் இண்ணு நல்லா தெரியுது.

### ரஷ்யாவின் உபமானம்.

குப் :— இந்த சிங்கப்பூர் சண்டை நடக்குதுங்களே, அது போற போக்கு எப்படியிருக்குங்கோ? அதைக் கொஞ்சம் சொல்லுங்க.

இ. மு :—ஜெர்மனிகாரனுங்க ரஷ்யாவிலே மாஸ்கோவைப் பிடிக்கப் பாத்த மாதிரி தான் இதுவும் ஆவும்.

குப் :— மாஸ்கோவைப் பிடிச்சாங்களா ?

இ. மு :— புடிக்கவுமில்லே, கிடிக்கவுமில்லே; மாஸ்கோவிலிருந்து வெகுதூரம் வரைக்கும் ஜெர்மனியருங்க தூரத்தியடிக்கப் பட்டாங்க. ரஷ்யாவிலே ஜெர்மனிக்கு ஏற்பட்ட அசௌகரியங்களைப் போல, சிங்கப்பூரிலும் ஏற்படும் இண்ணு சொல்லலாம். இரண்டு இடங்களிலும், விமான எதிர்ப்புப் பீரங்கிங்க ஏராளமா இருக்குது. சிங்கப்பூரிலே, பிட்டிஷ் விமானப் படைக்கு உதவி வந்து கொண்டே இருக்குது. தெற்கு ஜோஹூரிலும், சிங்கப்பூர் தீவிலும் நல்ல பாதுகாப்பு வேலை நடக்குது. இதெல்லாம் பாத்தால், நிலைமை நமக்கு அனுகூலமாக மாறும் போல இருக்கிறது.

குப் :—எப்போ மாறுங்க ?

இ. மு :—அவசரப்படக்கூடாது. கொஞ்ச காலம் ஆகும். தூர திருஷ்டியாக பாத்தால், நம்பிக்கைக்கு நல்ல ஆதாரம் பல இருக்குது.

குப் :—இதுக்கெல்லாம் மின்னியே தகுந்த ஏற்பாடு சேஞ்சிருக்கக் கூடாதுங்களா ?

### மிஸ்டர் சர்ச்சில் விளக்கம்

இ. மு :—இதைப்பற்றி பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், நன்றாக விளக்கிச் சொல்லி யிருக்கார். சண்டை நடக்கும் இடங்களில் ராணுவ பலத்தை உபயோகப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், காரியம் செய்யப்பட்டது. சண்டை நடக்காத இடங்களில் பாதுகாப்பு அதிகமாகச் செய்தால், சண்டை நடக்கும் இடங்களுக்கு உதவி ஏது ? ஆகையினாலே தான் இந்த நிலைமை ஏற்பட்டது. பிரிட்டிஷ் விமானப் படை வடக்குக் கடலில் ஜெர்மன் கப்பல்கள் மேலே வெடி குண்டு போட்டுக்கொண்டே வருகிறது; ரஷ்யாவின் வடக்குப் பகுதிக்கு 'சப்ளை' உதவி செய்கிறது; அட்லாண்டிக் கடலில் போகும் கான்வாய் துணை உதவி கப்பல்களுக்கு பாதுகாப்பு உதவி செய்கிறது; பிரிட்டனையும், பிரிட்டிஷ் விமானத் தளங்களையும் பாதுகாக்கிறது; ஜெர்மன் யுத்த தொழிற் சாலைகள் மேலும், ரயில்வே போக்கு வரத்து சாதனங்கள் மேலும் வெடி குண்டுமாரி பெய்கிறது. வடக்கு ஆப்பிரிக்கா, சிசிலி கால்வாய், சிரியா, பாலஸ்தீனம், இராக், இரான் முதலிய பிரதேசங்களைப் பாதுகாத்து வருகிறது.

குப் :—இத்தனை வேலையும் செய்யரது இண்ணா கஷ்டம்தான்.

இ. மு :—அதனால்தான் மலேயா தீபகற்பத்தில் விமான பலம் அதிகமாகக் காட்ட முடியவில்லை. நான் சொன்ன இடங்களை எல்லாம் பாதுகாத்துவிட்டு, 53,220 சதுர மைல் விஸ்தீரணத்தையும் பாதுகாக்க வேண்டுமென்றால் கஷ்டம்தானே. இருந்த போதிலும், பசிபிக் கடல் பிரதேசத்தில் உயிர் நிலைப் பாதைகள் காப்பாற்றப்பட்டன; சப்ளைகள் வந்து கொண்டே யிருக்கின்றன. இதனால் கடைசியில் எல்லாம நம்முடைய படைகளுக்கு நன்மையாக முடியும். நீ ஒன்றும் பயப்படவேண்டியதில்லை.

### முடிவில் அனுகூலம்

குப் :—இல்லிங்கோ, நீங்க சொன்னதிலிருந்து சண்டை நிலைமையின் போக்கு நல்லா புரிஞ்சிகிட்டேனுங்க. இப்போ கொஞ்சம் கஷ்டமாயிருந்தாலும், கடைசியில், பசிபிக் சண்டையில் நம்பளுக்குத் தான் அனுகூலம் இண்ணு சொன்னீங்க. உங்க வாக்கு பலிக்கணுங்க. நான் வரேனுங்க.

இ. மு :—குப்பா, போய்வா, நல்லபடியாய் இரு. வீண்புரளிக் கதை எல்லாம் நம்பாதே. சந்தைக்குப் போறியே, அங்கே கூட யாராவது வீண் பயமுறுத்தல் சேதிகளைச் சொன்னால், அதை எல்லாம் தடுத்து, விவரங்களைச் சொல், நீ போய்வா.

குப் :—அப்படியே செய்றேனுங்க. வணக்கங்க.

பிறகு, குப்பன் மாட்டுச் சந்தைக்குப் போனான். கிராம முனிசிப்பு சில்லரைக் கடைச் சந்தைக்குப் போனார்.

## மலேயாவில் ஒரு விமான சம்பவம்

### இந்திய ஜமேதாரின் சாமர்த்தியம்

#### சுட்டு வீழ்த்தப்பட்ட ஜப்பானிய விமானம்

மலேயா நாட்டில் ஒரு மலையின்மேல் ஜப்பானிய ஆகாய விமானமொன்று பறந்து கொண்டிருந்தது. அந்த மலையில் ஒரு இந்தியப்பட்டாளம் இருந்தது. மலையை நோக்கி திடீரென்று அந்த விமானம் கீழே பாய ஆரம்பித்தது. இந்தியப் பட்டாளத்தின் ஜமேதார் ஒரு லூயி துப்பாக்கியை எடுத்து நன்றாகக் குறிபார்த்து ஜப்பானிய விமானத்தைச் சுட்டார்.

சுட்டபிறகு, அந்த விமானம் அதிவேகமாக கீழே நோக்கி, ஒரு அம்பு பாய்வது போல, வந்தது. ஜமேதார் உடனே இது "டைவ்-பாம்பர்" என்ற கீழே பாயும் வெடி குண்டு விமானம் என்று நினைத்தார். தன்னுடைய பட்டாளத்தைச் சேர்ந்த சிப்பாய்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காக, அவர்களை உடனே கீழே குப்புறப்படுத்துக் கொள்ளும்படி, ஜமேதார் உத்தரவிட்டார்.

#### சத்தமும், அமைதியும்

சிப்பாய்கள் எல்லோரும் கீழே குப்புறப் படுத்துக் கொண்டார்கள். கொஞ்சநேரம் பொறுத்து, ஒரு பெரிய சத்தம் கேட்டது. சிறிது தூரத்தில் ஒரு வெடிகுண்டு விழுந்திருக்கிறது என்று அவர்கள் நினைத்தார்கள். சற்று நேரத்தில் எல்லாம் அமைதியாயிருந்தது.

எல்லோரும் படுத்த இடத்திலிருந்து எழுந்து பார்த்தார்கள். சமீபத்தில் வெடி குண்டு விழுந்த அடையாளங்கள் ஒன்றும் தெரியவில்லை. சுற்று முற்றும் பார்த்தார்கள். அப்போதும் ஒன்றும் தெரியவில்லை. பிறகு மலையிலிருந்து கீழே, பள்ளத்தாக்கில், பார்த்தார்கள். ஜப்பானிய விமானம் முறிந்து விழுந்து நாசமாய்க் கிடப்பதைக் கண்டார்கள்.

தான் குறிபார்த்துச் சுட்டது விமானத்தில் சரியான இடத்தில் பாய்ந்தது என்பதை ஜமேதார் அப்போது தான் உணர்ந்தார். இந்தியச் சிப்பாய்களும் இதையறிந்து மகிழ்ந்தார்கள்.

இந்த ஜமேதார் தெற்குப் பிரதேசத்தில் நடந்த வேறொரு சண்டையில் பின்னால் கலந்துகொண்டார். இந்தச் சண்டையில் ஒரு துப்பாக்கி குண்டுபட்டு அவர் காயமடைந்தார். இப்போது அவர் ஒரு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று சௌக்கியமடைந்து கொண்டு வருகிறார்.

மேலே குறிக்கப்பட்ட விவரங்கள் சிங்கப்பூரில் இருக்கும் "ராய்ட்டர்" செய்தி ஸ்தாபனத்தின் பிரத்தியேக நிருபரால் அனுப்பப்பட்டவை.

## ஹாங்காங்கில் இந்தியர்களின் வீரம்

### சீனக்காரரின் புகழ்ச்சி

#### ஜப்பானியர் இந்தியர்களுக்கு நண்பரல்ல

ஹாங்காங்கைப் பாதுகாப்பதற்காக எவ்வளவு திறமையாகவும் தைரியமாகவும் இந்திய சிப்பாய்கள் போர்புரிந்தார்கள் என்பதைப்பற்றி, அவ்விடத்திலிருந்து சுங்கிங்குக்குத் தப்பி ஓடிவந்த ஒரு சீனக்காரர் சில விவரங்களைத் தெரிவித்திருக்கிறார். கடைசி வரைக்கும் தளராத மனவுறுதியுடன் போர்புரிந்த பஞ்சாப் சிப்பாய்களைப்பற்றி அவர் முக்கியமாகக் குறிப்பிடுகிறார். ஹாங்காங்கில் இருந்த சாதாரண இந்தியர்களும் மிகவும் ஒழுங்காகவும், மெச்சதகுந்த விதமாகவும் நடந்துகொண்டார்கள் என்று அவர் கூறுகிறார். சீக்கியர்களுடைய தொழுகைக் கோயில் பிரதேசம் வெடிகுண்டுகளால் தகர்க்கப்பட்டபிறகு, அந்தப் பிரதேசத்தில் வசித்திருந்த மக்கள் தங்குவதற்கு செய்யப்பட்ட திறமையான ஏற்பாடுகளைப்பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். அவர்கூறிய விவரங்களிற் சில பின்வருமாறு :—

கௌலூன் என்ற இடத்துக்கு வடக்கில் உள்ள மலையிலிருந்து இந்தியத் துருப்புகள் பின்வாங்கிச் செல்லும்படி நேரிட்டது. 2/14-வது பஞ்சாப்பட்டாளமும், 5/7-வது ராஜபுத்திரப் பட்டாளமும் மிகுந்த வீராவேசத்துடன் போர்புரிந்தன. ஹாங்காங் தீவின் தெருக்களிலும், மலைகளிலும், கிராமங்களிலும் இந்திய சிப்பாய்கள் தொடர்ந்து சண்டை நடத்தினார்கள்.

### போற்றத்தக்க செய்கை

ஹாங்காங்—சிங்கபூர் பீரங்கிப் படையைச் சேர்ந்த பஞ்சாபிகளும் திறமையாகப் போர் புரிந்தார்கள்.

ராணுவத்தைச்சேராத இந்திய மக்கள் ஹாங்காங்கில் 2,500 பேர் இருந்தார்கள். தைரியத்துடனும், சாவதானத்துடனும் இருந்த இவர்களுடைய செய்கை மிகவும் போற்றத்தக்கது.

ஹாங்காங் முற்றுகை முடிந்து, ஜப்பானியர்களுடைய கையில் அப்பட்டணம் சிக்கியதும், அநேக இந்திய சிப்பாய்களும், இதர இந்தியர்களும் ஜப்பானியர்களால் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். அவர்களை ஜப்பானியர்கள் பலவிதமாகத் துன்புறுத்தினார்கள். சிலர் கொல்லப்பட்டார்கள்; சிலருடைய பணமும், சாமான்களும் பறிக்கப்பட்டன; சில இந்தியர்களுக்குக் கொஞ்சம் அசௌகரியம் மாத்திரம் ஏற்படுத்தினார்கள்.

இதனுடைய நோக்கம் என்னவென்றால், ஜப்பான் இந்தியர்களுக்கு சிநேக பாவமாய் இருக்கிறது என்ற தப்பு எண்ணத்தை உண்டாக்குவதற்குத்தான். ஆனால் ஹாங்காங்கில் பொதுவாக இந்தியர்களை நடத்தியதிலிருந்து, அங்கிருந்த இந்திய மக்களுக்கு இம்மாதிரியான அபிப்பிராயம் உண்டாகவே யில்லை.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் ஆபீஸர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

42)ᴄered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

ர் II.] 1942-ம் வருஷம் மார்ச்சுமீ 6உ, வெள்ளிக்கிழமை [இதழ் 9

## "சீனாவின் நாள்" கொண்டாட்டம்

### சீனக் குடியரசின் தலைவர் அனுப்பிய செய்தி

' சீனாவின் நாள் " இந்தியாவில் கொண்டாடப்படுவதன் சம்பந்தமாக, பிரசிடெண்ட் லின்செனற்ற சீனக்குடியரசு அரசாங்கத்தின் தலைவர், இந்தியாவுக்கு, ரேடியோமூலமாக ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருக்கிறார். அதில் அவர் கூறுவதாவது:—

" சீனதேச மக்கள் எல்லோருடைய சார்பாக, நான் சீனாவுக்கு நீங்கள் காட்டும் அன்புக்காக நன்றி யறிதலை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய பிரதமதளகர்த்தர், மார்ஷல் சியாங்கேஷெக் உங்களுடைய நாட்டுக்கு சமீபத்தில் விஜயம் செய்திருந்தார். அவர் இரண்டு நோக்கத்துடன் இந்தியாவுக்குச் சென்றார்; முதலாவது, இரண்டு நாடுகளும் ஒத்துழைத்து, பொது லட்சியத்தை அடைவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென் [illegible] ண்டு நாட்டு மக்களின் [illegible] லுப்படுத்தி ஒன்று [illegible] எங்கு போனபோதி [illegible] வும், மகிழ்ச்சிப் பெருக்குடனும், நீங்கள் வரவேற்று, பெருமைப் படுத்தினீர்கள். இப்போது நீங்கள் " சீனாவின் நாளை "க்கொண்டாடுகிறீர்கள். சீனாவிடம் நீங்கள் காட்டும் அன்பிற்கு இது மற்றொரு அறிகுறி. இதனால் சீன மக்களின் இருதயத்தில் ஒரு பெரிய நட்பு உணர்ச்சியை நீங்கள் உண்டாக்கியிருக்கிறீர்கள். ரேடியோ மூலமாக, உங்களுடைய அன்பிற்கு சீன தேச மக்களின் பாராட்டுதலை நான் தெரிவிக்கிறேன்.

" சீனாவும், இந்தியாவும், பண்டைக் காலத்திலிருந்து நாகரீகமடைந்து வந்த இரண்டு பெரிய நாடுகள். இவைகளின் நட்பு நீண்டகாலமாக கலை ஒற்றுமையினால் இணைக்கப்பட்டது. இனிமேல் இந்த ஒற்றுமை இன்னும் நெருங்கிய நட்பாகும் என்பதில் சந்தேகமில்லை.

" சீனா நடத்தும் போராட்டத்தில் நீங்கள் உங்களுடைய அனுதாபத்தையும் ஆதரவையும் அளித்து வந்தீர்கள். இதை நாங்கள் என்றும் மறக்கமாட்டோம். இப்போது ஆக்கிரமிப்பின் ஜுவாலைகள் உங்களுடைய வாயிற்படியண்டைவந்து விட்டன. எங்களோடு சேர்ந்து போராடுவதாக நீங்கள் இதற்கு முன்பே முடிவு செய்திருக்கிறீர்கள். உங்களுடைய முன் யோஜனையையும், தைரியத்தையும், மன உறுதியையும் சீன மக்கள் பாராட்டுகிறார்கள். ஆக்கிரமிப்பை அடியோடு ஒழிக்க வேண்டுமென்பது நம்முடைய பொதுவான லட்சியம். நம்முடைய வெற்றி கூடிய சீக்கிரம் வரும் என்று நாங்கள் நம்புகிறோம்."

முடிவில், இந்தியா தன்னுடைய புதிய பெருமையை உலகம் அறியக்காட்டுமென்றும், இந்தியாவிலுள்ள எல்லா நண்பர்களுக்கும் ஆரோக்கிய வாழ்வும், மகிழ்ச்சிப்பெருக்குடைய வாழ்க்கையும் இருக்கவேண்டுமென்று தான் விரும்புவதாகவும், பிரசிடெண்ட் லின்சென் கூறினார்.

### உலக யுத்தப்போக்கு

சென்றவார யுத்த நிலைமையைச் சுருக்கமாகக் கூறலாம் ஜாவாவில் யுத்தம் கடுமையாக நடக்கிறது. ஜப்பானியர்கள் வடக்கு ஜாவாவில் மூன்று இடங்களில் இறங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கப்பற்படைகளுக்கும், விமானப் படைகளுக்கும் நேசநாட்டுப் படைகளால் பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டது. மலேயாவின் வீழ்ச்சி, சுமாத்ராவில் ஜப்பானியர்கள் பிரவேசித்தது, இந்த இரண்டு விஷயங்களும் பர்மாவை, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து முழுவதும் பிரித்துவிட்டது. ஆகையால் அங்குள்ள நேசதேசத் துருப்புகள் முழுவதும் டச்சு ராணுவத் தலைவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. ஆகவே, இந்தியாவுக்கு பழையபடி ஜெனரல் வேவல் பிரதம தளகர்த்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பர்மாவில் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. நேசதேசத் துருப்புகள் கடுமையாக எதிர்த்துப் போராடுகின்றன.

ஆஸ்திரேலியத் துறைமுகங்களை ஜப்பானிய ஆகாய விமானங்கள் தாக்கிக்கொண்டு வருகின்றன. ஆஸ்திரேலிய ஆகாய விமானப்படை ஜப்பானியத் தளங்களைத் தாக்கிக்கொண்டு வருகிறது.

## சீனாவின் தனிச் சிறப்பு

### ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய முதல் நாடு

#### மார்ஷல் சியாங்கே ஷெக் இந்தியாவுக்கு விடுத்த வேண்டுகோள்

சீனாவின் தலைவர், மார்ஷல் சியாங்கே ஷெக், இந்தியாவை விட்டுப்போகும்போது, இந்திய மக்களுக்கு ஒரு பாராட்டுச்செய்தி அனுப்பியிருக்கிறார். அதில், தானும் தனது மனைவியாகிய சியாங்கேஷெக் அம்மையாரும் [illegible]ருமாட்டியும், இரண்டு வாரங்களாக இந்தியாவில் தங்கியிருந்தபோது, இந்திய மக்கள் காட்டிய அன்பிற்காகத் தங்களுடைய நன்றியறிதலைத் தெரிவித்திருக்கிறார். இந்தியாவில் தான் தங்கியிருந்த போது, இந்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களையும், இந்திய ராணுவ அதிகாரிகளையும், சில இந்திய நண்பர்களையும், சந்தித்து, இந்தியாவும் சீனாவும் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காக கூட்டுத்திட்டம் போடுவதைப்பற்றி விவரமாகப் பேசியதாக அவர் கூறியிருக்கிறார். அவர் மேலும் கூறியிருப்பதன் சாராம்சமாவது :—

**.ட்டுத் திட்டம்.**

" நான் அதிக காலம் இந்தியாவில் தங்கமுடியாததனால், இந்திய மக்களுக்கு நான் சொல்லவேண்டிய அநேக விஷயங்களைச் சொல்லுவதற்கு முடியவில்லை. அதனால்தான் அவர்களுக்கு நான் இந்தச் செய்தியை அனுப்புகிறேன். இதில் இந்தியாவின் சம்பந்தமாக எனக்கு உள்ள உயர்ந்த மதிப்பையும் அன்பையும், நெடுங்காலமாக நான் கொண்டுள்ள நம்பிக்கைகளைப்பற்றியும் கூற விரும்புகிறேன்.

1450 40

" நான் இந்த நாட்டுக்கு வந்த பிறகு, ஒரு விஷயத்தைக்கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன். இந்திய மக்கள் எல்லோரும் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதில் ஏகோபித்த அபிப்பிராயங்கொண்ட மன உறுதியுடையவர்களாயிருப்பதை அறிந்து நான் மகிழ்ந்தேன்.

" சீனாவும், இந்தியாவும் உலக ஜனத்தொகையில் பாதி மக்களைக்கொண்டிருக்கின்றன. அவைகளுடைய பொது எல்லைக்கோடு 3,000 கிலோ மீடர் (8 கிலோமீடர் சேர்ந்தால் ஒரு மைல் தூரம்) நீளமுள்ளது 2,000 வருஷகால சரித்திரத்தில், கலை சம்பந்தமாகவும், வர்த்தக சம்பந்தமாகவும் சம்பந்தம் இருந்ததே ஒழிய, எந்தக்காலத்திலும் யுத்தம் நடந்தது கிடையாது. இதனால், இரண்டு நாட்டு மக்களும் சுபாவமாகவே சமாதானத்தை விரும்பும் மக்கள் என்று நன்றாகத்தெரிகிறது. இப்போது இந்த நாடுகளுக்கு ஒரே நோக்

**ஒரே நோக்கம்,**

கம் இருக்கிறது. ஒரே எதிர்கால வாழ்வு இருக்கிறது. இந்தக் காரணத்தால்தான், இரண்டு நாடுகளும் ஆக்கிரமிப்பை எதிர்க்கும் நாடுகளுடன், உலக முழுவதும் சமாதானம் நிலை பெறுவதற்காக ஒன்று சேர்ந்து போராடவேண்டும்.

" நம்முடைய நாட்டு மக்களுக்கு ஒரு பொதுவான குணதிசயம் இருக்கிறது; அதாவது, நியாயத்துக்காகவும், ஒழுங்கு முறைக்காகவும், தியாகம் செய்யும்படியான உயர்ந்த உணர்ச்சி இருந்தவர்களிடமும் உண்டு. இது தொன்று தொட்டு இருக்கும் உணர்ச்சி. இந்த உணர்ச்சிதான் ஆக்கிரமிப்பை முதல் முதலாக எதிர்ப்பதற்கு சீனாவைத் தூண்டிற்று. இப்போது நடக்கும் யுத்தத்தில் ஆக்கிரமிப்பை எதிர்க்கும் நாடுகளுடன் சேர்ந்து போராடுவதற்கும் அந்த உணர்ச்சிதான காரணம். சீனா தன்னுடைய சுதந்தரத்தை மாத்திரம் பெறுவதற்குப் போராடவில்லை; எல்லா மக்களும் சுதந்தரமும் நியாயமும் பெறவேண்டும் என்பதற்காகப் போராடுகிறது.

" என்னுடைய இந்திய சகோதரர்களுக்கு நான் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். நம் கண் உலக சரித்திரத்தில் மிக நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது ".

சீன மக்களும், இந்திய மக்களும் உலக சுதந்தரத்துக்காக, தங்களாலான முயற்சியைச் செய்ய வேண்டும். ஏனென்றால் சுதந்தர உலகத்தில்தான் சீனாவும், இந்தியாவும் தங்களுடைய சுதந்தரத்தை அடைய முடியும். அப்போது சீனாவுக்காவது இந்தியாவுக்காவது சுதந்தரம் மறுக்கப்பட்டால், உலகத்தில் சமாதானம் நிலைத்திருக்காது.

" இப்போதுள்ள அகில தேசிய நிலைமை உலகத்தை இரண்டுபாகங்களாகப் பிரிக்கிறது. ஒன்று, ஆக்கிரமிக்கும் நாடுகள், மற்றொன்று ஆக்கிரமிப்பை எதிர்க்கும் நாடுகள். ஆக்கிரமிப்பை எதிர்ப்பவர்களெல்லாம் ஆக்கிரமிப்பை எதிர்க்கும் நாடுகளுடன் சேரவேண்டும். இந்த இரண்டுக்கு மத்தியில் இருக்க முடியாது. இரண்டில் ஒன்றைச் சேரவேண்டும்.

" இப்போதிருக்கும் பிரச்சினை ஒரு மனிதன், அல்லது நாட்டைப்பற்றிய யுத்தமல்ல; குறிப்பிட்ட சில விஷயங்களை பொறுத்ததல்ல. இதில் இந்திய மக்கள் தங்களுடைய முழுப் பொறுப்பையும் உணர்ந்து, யுத்தத்தில் தான் செய்யவேண்டிய

**இந்தியாவின் பொறுப்பு.**

கடமையைச் செய்யவேண்டும். இந்த யுத்தம் சுதந்தரத்துக்கும் அடிமைத்தனத்துக்கும் நடக்கும் யுத்தம்; ஒளிக்கும், இருட்டுக்கும் நடக்கும் யுத்தம்; நன்மைக்கும், தீமைக்கும் நடக்கும் யுத்தம்; ஆக்கிரமிப்பின் எதிர்ப்புக்கும், ஆக்கிரமிப்புக்கும் நடக்கும் யுத்தம். இதில் ஆக்கிரமிப்பை எதிர்ப்பவர்கள் யுத்தத்தை இழந்தால், நாகரீகம் குறைந்தது நூறு வருஷம் பின்னுக்குப் போய்விடும். மக்களுடைய கஷ்டங்களுக்கு முடிவே கிடையாது.

" ஆசியாவைப் பொறுத்தவரையில், ஜப்பானிய ராணுவத் தலைவர்கள் சொல்லமுடியாத அக்கிரமங்கள் செய்திருக்கிறார்கள்.

" ஜப்பானுடைய கொடுங்கோல் ஆட்சியின் கீழ் உள்ள பார்மோசா, கொரியா, நாடுகளின் மக்கள் படும் கஷ்டங்களும், கொடுமைகளும், ஒரு எச்சரிக்கையைப்போல் இருக்கின்றன.

" எங்களுடைய எதிர்ப்பு யுத்தம் ஆரம்பித்த பிறகு ஜப்பானியர்கள் அநேக அக்கிரமங்கள் செய்தார்கள். 1937-ம் வருஷம் டிசம்பரில், பழைய சீனத் தலை நகராகிய நான்கிங் வீழ்ச்சியடைந்ததும், 2 லட்சம் சாதாரண மக்கள் ஒரு வாரத்தில் ஜப்பானியர்களால் கொல்லப்பட்டார்கள். சென்ற ஐந்து வருஷ காலமாக, சுதந்தர சீனாவில் வெடிகுண்டுகள் தினந்தோறும் போடப்படுகின்றன. ஜப்பானியர்கள் பிரவேசிக்கும் இடங்களில் உள்ள மக்கள், ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும் தாக்கப்படுகிறார்கள், அல்லது கொல்லப்படுகிறார்கள். படித்த அறிவாளிகள் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். இது மாத்திரமல்ல.

" கலை சம்பந்தமான ஸ்தாபனங்கள், சரித்திர சம்பந்தமான அருமையான கண்காட்சிப் பொருள்கள், [illegible] வாழ்க்கைக்கு வேண்டிய சாமான்கள் [illegible] கலப்பைகள், விவசாய [illegible] லியன துராக்கிருதமாக [illegible] கைப்பற்றப்பட்டுக் கொண்டுபோகப்படுகின்றன; அல்லது அடியோடு அழிக்கப்படுகின்றன."

" ஜப்பானியர்களுடைய ராணுவ ஆக்கிரமிப்பில் இருக்கும் பிரதேசங்களில், கற்பழித்தல், கொள்ளையடித்தல், நெருப்பு வைத்தல், கொலை செய்தல் முதலியன சர்வ சாதாரணமாய் இருக்கின்றன. ஜப்பானிய அதிகாரிகளுடைய அனுமதியின்பேரில், கஞ்சா கிடங்குகள், சூதாட்ட வீடுகள், விபசார விடுதிகள் அநேக இடங்களில் திறக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலமாக சீன மக்களின் தைரியத்தையும், ஆண்மையையும் குறைத்துவிட வேண்டும் என்று ஜப்பானியர்கள் விரும்புகிறார்கள்."

" இம்மாதிரியான கட்டுமிராண்டித்தனமும், முரட்டுத்தனமும் தாண்டவமாடும் இக்கொடுங்காலத்தில், சீன மக்களும், அவர்களுடைய சகோதரர்களான இந்திய மக்களும், நாகரீகத்தையும். சுதந்திரத்தையும் காப்பாற்றுவதற்காக, ஆக்கிரமிப்பை எதிர்க்கும் நாடுகளுடன் சேர்ந்து தங்களுடைய முழு ஆதரவையும் அளிப்பது அவர்களுடைய கடமையாகும். அட்லாண்டிக் சாசனத்தில் கூறப்பட்ட கொள்கைகளுக்கும், 26 நாடுகள் கையெழுத்திட்ட கூட்டு அறிக்கைக்கும் அவர்கள் முழு ஆதரவு அளிக்கவேண்டும்."

**இந்திய மக்களின் கடமை.**

# மார்ஷல் சியாங்கேஷெக்

## சீனாவின் வீரத் தலைவர்

### வைஸ்ராய்க்கு வாழ்த்துச் செய்தி

சீனாவுக்கு புதிய உயிரும் உணர்ச்சியும் கொடுத்தவர் மார்ஷல் சியாங்கே ஷெக் என்ற வீரத்தலைவர். இவர் டாக்டர் சன்யாட்சன் என்ற பெரிய அரசியல் ஞானியின் சிஷ்யர். டாக்டர் சன்யாட்சன்தான் சீனாவில் குடியரசை ஸ்தாபித்த பெரிய மகான். இவர் குடியரசை ஸ்தாபிப்பதற்குமுன், சீனா கொள்ளைகாரர்களுடைய ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. ஆனால் பேருக்கு மாத்திரம் ஒரு அரசாங்கம் நடந்து வந்தது. 1644 ம் வருஷத்திலிருந்து 1911-ம் வருஷம் வரைக்கும் மஞ்சு என்ற அரச சந்ததியார் சீனாவை ஆட்சிபுரிந்து வந்தார்கள். 1911-ம் வருஷத்தில் சீனச் சக்ரவர்த்தியை, டாக்டர் சன்யாட்சனின் இளஞ் சீனர்கட்சி விலக்கி விட்டு, சீனாவைக் குடியரசாக்கி விட்டது.



டாக்டர் சன்யாட்சன்னின் மூன்று கொள்கைகளான தேசீயம், குடியரசு, எல்லா மக்களுக்கும் உணவு—என்பவை அவருடைய சிஷ்யராகிய மார்ஷல் சியாங்கே ஷெக்கினால் கைக் கொள்ளப்பட்டது. டாக்டர் சன், பீக்கிங்கில் 1924-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் இறந்துபோனார்.

டாக்டர் சன்னுடைய கட்சியில் சில சில்லரைச் சண்டைகள் நடந்துவந்தன. முடிவில், 1926 ம் வருஷம் ஜூலையில் மார்ஷல் சியாங்கேஷெக், தம்முடைய தேசியத் துருப்புகளை நடத்திச் சென்று ஹாங்கோ என்ற ஒரு முக்கியப் பட்டணத்தைக் கைப்பற்றிக்கொண்டார். இதற்கு இரண்டு மாதங்களுக்கு முன், ஏப்ரல் மாதம், நான்கிங்கைத் தலை நகரமாகவைத்து, சியாங் ஒரு சீன அரசாங்கத்தை ஏற்படுத்தினார். 1927 ம் வருஷ முடிவுக்குள் சியாங் தம்முடைய முயற்சியில் பூரணமான வெற்றி பெற்றார். 1937-ம் வருஷக்கடைசியில் ஜப்பான சீனாவைத்தாக்கி, நான்கிங்கைக் கைப்பற்றியபோது, சீன அரசாங்கத்தின் தலை நகரம் சுங்கிங்குக்கு மாற்றப்பட்டது. இப்போது சீனாவின் யுத்த முயற்சிக்குத் தலைமை ஸ்தானமாக விளங்குவது சுங்கிங்தான்.

**சீனத்தலை நகரம்.**

மார்ஷல் சியாங்கே ஷெக் சுங்கிங்கிலிருந்து சென்ற மாதம் இந்தியாவுக்கு வந்தார். சீன தேசத்து வீரத் தலைவர் இந்தியாவுக்கு வந்தபோது, இந்திய மக்கள் அனைவரும் அவரை ஏகோபித்து, பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். இந்தியாவும் சீனாவும் ஒற்றுமையுடன் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதற்காக அவர் இந்திய அரசாங்கத்துடன் கலந்து ஆலோசித்தார். எதிர்கால ஜப்பானிய யுத்தப் போக்கு சீன இந்திய ஐக்கிய முயற்சியில் பெரிதும் பாதிக்கப்படும் என்பதில் சந்தேகமே இல்லை.

சீனத் தலைவர் இந்தியாவுக்கு வந்தபோது, மாட்சிமைத் தாங்கிய மன்னர்பிரான் " நைட் கிராண்டு கிராஸ் அப்தி ஆர்டர் அப்தி பாத் " என்ற பட்டத்தை அளித்தார்.

மார்ஷல் சியாங்கே ஷெக் உலகப் பிரசித்திப் பெற்ற பெருந்தலைவர்களுள் முக்கியமான ஒருவர். அவர் சீனாவை ஒரு அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்தார்.

சீனாவுக்கு ஒற்றுமையும், சுதந்தர வாழ்க்கையும், உலக நாடுகளுள் சிறந்த நற்பேரையும் சம்பாதித்துக் கொடுத்தார்.

**ஒற்றுமையும் சுதந்தரமும்.**

அவர் இந்தியாவுக்கு வந்ததன் பயனாக, இந்திய யுத்த முயற்சியின் வேகம் அதிகரிக்கப்பட்டது. அவர் தம்முடைய நாட்டுக்குப் போவதற்குமுன், சென்ற மாதம் 21உ, இந்தியாவின் வைஸ்ராய்க்கு ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பினார். அதில், வைஸ்ராயும், லேடி லின்லித்கோவும், மேடம் சியாங்கே ஷெக்குக்கும் தனக்கும் காட்டிய அன்பான விருந்து உபசாரத் துக்கு தங்களுடைய நன்றியை முதலில் தெரிவித்தார். பிறகு அவர் கூறியதாவது :—

" இரண்டு நாடுகளும் (சீனாவும், இந்தியாவும்) ஒன்று சேர்ந்து ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காக திட்டம் போடப்பட்டதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சீனாவும் இந்தியாவும் ராணுவ ஒற்றுமையுடன் சந்தோஷகரமாக வேலை செய்து, பசிபிக் கடலில் வெற்றிபெறுவதற்கு அனுகூலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டது ஒரு விசேஷமான காரியம். சிங்கப்பூரை இழந்துவிட்டதை, இந்த ஒற்றுமை திட்டம் அதிகமாக சரிக்கட்டிவிட்டது. இந்த ஒற்றுமை திட்டம் இன்னும் அதிகமாகப் பலப்படுத்தப்பட்டு, அக்கிரமத்தை கூடிய சீக்கிரம் அழித்துவிடும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்."

மார்ஷல் சியாங்கே ஷெக் அனுப்பிய செய்திக்கு இந்திய வைஸ்ராய் மேன்மை தங்கிய லார்டு லின்லித்கோ தன்னுடைய நன்றியறிதலையும், லேடி லின்லித்கோவின் நன்றியறிதலையும் தெரிவித்திருக்கிறார். அவர் கூறியதாவது :—

**இந்தியாவின் ஒத்துழைப்பு.**

" ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒற்றுமைத் திட்டத்தைச் குறித்து நீங்கள் கொண்ட மகிழ்ச்சியில் நானும் பங்கு எடுத்துக்கொள்ளுகிறேன். சீனப்பட்டாளத்துடன் இந்தியப் பட்டாளம் தோளோடு தோள் சேர்ந்து நின்று, உங்களுடைய திறமையான தலைமையின் கீழ் போராடி வரும். எது வந்தாலும் சரி, நாங்கள் ஜப்பானுடைய பலம் அடியோடு உடைக்கப்படும்வரையில், உங்களுடன் சேர்ந்து யுத்தம் செய்வோம்."

மார்ஷல் சியாங்கே ஷெக்கினுடைய விஜயத்துக்கு மற்றொரு கௌரவம் செய்யவேண்டிய முறையில், சனிக்கிழமை தினத்தை (1942-ம் வருஷம் மார்ச்சுமீ 7உ) இந்தியா முழுவதும் " சீனாவின் நாளாகக் " கொண்டாட வேண்டுமென்று, மேன்மை தங்கிய வைஸ்ராய் கட்டளையிட்டிருக்கிறார். அதன்படியே, இந்தியாவின் முக்கியமான பட்டணங்களிலும், இதர இடங்களிலும் " சீனாவின் நாள் " விமரிசையாகக் கொண்டாடப்படும்.

" சீனாவின் நாள் " கொண்டாட்டத்தின் ஒரு அம்சமாக இன்றைய " யுத்த சஞ்சிகை " இதழில் சீனாவைப்பற்றிப் பல கட்டுரைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. சீனாவின் வீரத் தலைவர், மார்ஷல் சியாங்கே ஷெக்கின் படமும், சீனாவின் வீரப் பெண்மணி, மேடம் சியாங்கே ஷெக் அவர்களின் படமும், இவ் இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# சீனாவின் அற்புதமான யுத்தம்

## கஷ்டங்களுக்கிடையில் தொடர்ந்து நடக்கும் போராட்டம்

### மார்ஷல் சியாங்கேஷெக் செய்த சேவை

### சீனர்களுடைய ஒற்றுமையும், வீர உணர்ச்சியும்

உலகத்தில் அநேக ஆச்சரியமான விஷயங்களைப் பற்றியும், அற்புதமான சம்பவங்களை பற்றியும், நாம் கேள்விப்படுகிறோம். யுத்த சம்பந்தமான ஆச்சரியங்களில் சீனதேசத்துப் போராட்டம் ஒன்று. ஜப்பான் சீனாவின்மேல் போர்தொடுத்து 4½ வருஷங்களுக்கு மேலாய்விட்டது. சீனா ஜப்பானுக்கு அஞ்சவில்லை; சரணமடையவில்லை, சரணமடையப் போவதுமில்லை. என்ன கஷ்டங்கள் நேர்ந்தாலும், சீனா அதற்குத் தளரப்போவதில்லை. தளரா மனவுறுதியுடன் இனிமேலும் தொடர்ந்து போராடப்போவதற்கு அறிகுறியாகத்தான் சீனாவின் மாபெருந்தலைவர், மார்ஷல் சியாங்கே ஷெக், இந்தியாவுக்கு விஜயம்செய்தார்.

இந்தியாவும், சீனாவும், ஜப்பானுக்கு எதிரிடையாக நடத்தப்படும் பெரிய யுத்த முயற்சியில் ஒன்றுபட்டு, ஒத்துழைக்கும் வேலை, மார்ஷல் சியாங்கேஷெக்கின் இந்திய விஜயத்தினால், பலமடங்கு பலப்படுத்தப்பட்டது.

சீனா இப்போதும் ஜப்பானை எதிர்த்துப் போராடும்படியான நிலைமையிலிருக்கிறதற்குக் காரணம் அதனுடைய ஒற்றுமையும், அஞ்சா நெஞ்சமும், கஷ்டங்களினால் மனம் குன்றாமல் அவைகளை சமாளிக்கும் சாமர்த்தியமும் தான். இதெல்லாம் சீனாவை ரஷ்யாவுக்குச் சமானமாகச் சொல்லலாம். ஜப்பானை கிழக்குப் பிரதேச ஜெர்மனி என்று ஜெர்மனியர்கள் கூறுகிறார்கள். சீனாவை பசிபிக் பிரதேச ரஷ்யா என்று கூறலாம். எப்படி ரஷ்யா ஜெர்மனியை எதிர்த்து, போராடி, சமாளித்து, தன்னுடைய கௌரவத்தையும், சுதந்தரத்தையும் காப்பாற்றிக் கொண்டு வருகிறதோ அதைப்போலவே, சீனாவும் ஜப்பானை எதிர்த்துப் போராடி வருகிறது.

ஒரு விஷயத்தில், சீனாவினுடைய போராட்டம் ரஷ்யாவின் போராட்டத்தை விட சிறந்ததென்று சொல்லும்படியாக இருக்கிறது. ஏனென்றால், தன்னை விட அநேகமடங்கு அதிக ராணுவபலம் பொருந்திய ஜப்பானை, ஐரோப்பிய யுத்தம் ஆரம்பிப்பதற்கு

இரண்டு வருஷங்களுக்கு முன்னமேயே எதிர்த்துப் போராடிக் கொண்டு வருகிறது. தனக்கு எவ்வளவோ பலக்குறைவு இருந்தும், சீனு தைரியத்துடன் போராடிவரும் திறமையை உலகமக்கள் சரியான அளவுக்கு பாராட்டவில்லை என்று சொல்லலாம். ஏனென்றால், மற்றப் பிரதேசங்களில் நடக்கும் சண்டைகள் இதனுடைய தனிப்பட்ட முக்கியத்வத்தைக் குறைத்துவிட்டன.

ஜப்பான் சீனுவுக்கு எதிரிடையாகப் போர்க்கோலந் தாங்கியது, உண்மையில், ஒன்பது வருஷங்களுக்குமுன்.

சீனுவை ஜப்பானுடைய குடியேற்ற நாடாக ஆக்கிவிட வேண்டும் என்று ஜப்பான் ஒனது வருஷங்களுக்கு முன் முடிவு செய்துவிட்டது என்ற விஷயம் முக்டன் சம்பவம் என்ற சண்டையினுல் தெரிகிறது.

முக்டன் சண்டையின் பிறகு ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றிக் கொண்டது. இதைக் கைப்பற்றிக் கொண்ட பிறகு தான், மஞ்சுகுவா என்ற பொம்மை அரசாங்கம் சீனுவில் ஜப்பானுல் ஏற்படுத்தப்பட்டது.

இது சீனுவுக்கு ஏற்பட்ட ஒரு பெரிய விபத்து. ஏனென்றல் மஞ்சூரியா சீனுவின் ஒரு முக்கியமான மாகாணம். உதாரணமாக, இந்தியாவில் உள்ள ஒரு மாகாணம் எதிரி கையில் அகப்பட்டுக்கொண்டது என்று வைத்துக் கொள்வோம். நிலைமை எப்படியிருக்கும்? அதைப்போன்ற நிலைமை சீனுவில் ஏற்பட்டது. மஞ்சூரியாவை ஜப்பானியர் கைப்பற்றியவுடன் சீனு மன அதைரியப்பட்டால், யாரும் அதைக் குறைகூற மாட்டார்கள். ஆனுல் சீனு என்ன செய்தது? தைரியத்தைக் கைப்பிடித்தது; கொஞ்சங்கூட பயப்படவில்லை; சரணமடையவில்லை.

ஆனுல் ஒரு விஷயத்தை சீனு எதிர்பார்த்தது; மஞ்சூரியா போனுலும் போகட்டும்; அத்துடன் ஜப்பான் திருப்தியடைந்துவிடும் என்று சீனு நினைத்தது. நினைத்து தன்பாட்டில் தன்னுடைய தேசீய வாழ்க்கையை சாவதானமாக நடத்திக்கொண்டு வந்தது. அதனுல் தான், எதிர்த்துப்போராடுவதற்கு யாதொரு முயற்சியும் செய்யாமல் சீனு சும்மா இருந்தது. பல நூற்றுண்டுகளாக சீனு எப்படி அமைதியுடன்வாழ்க்கை நடத்திக்கொண்டுவந்ததோ, அதேமாதிரியாக மஞ்சூரியா கைப்பற்றப்பட்டபின்பும் நடந்தது.

ஜப்பான் வேறு எண்ணத்துடன் இருந்தது. யுத்தத்திற்கு இன்னும் அதிகமான ஏற்பாடுகளெல்லாம் செய்து வந்தது. சரிதான், சீனுவினுடைய சுதந்தர வாழ்க்கை அத்தியாயம் முடிந்து விட்டது என்று உலகம் நினைத்தது; ஜப்பானும் அதே மாதிரியாக நினைத்தது. சீனுவைக் கைப்பற்றுவதைவிட சுலபமான காரியம் வேறென்றுமில்லை, என்று தோன்றியது.

1937-ம் வருஷம் ஜப்பான் வடக்கு சீனுவைத் தாக்கியது. மஞ்சூரியாவைத் தாக்கி சுலபத்தில் வெற்றி பெற்றதைப்போல, சீனு முழுவதையும் தாக்கிக் கைப்பற்றிவிடலாம் என்று ஜப்பான் நினைத்தது. ஆனுல் ஜப்பானுடைய எண்ணம் நிறைவேறவில்லை.

ஜப்பான் வடக்கு சீனுவைத் தாக்கியதை "சீன சம்பவம்" என்று கூறுவார்கள். இந்த சம்பவம் ஆரம்பிக்கப்பட்டதே ஒழிய முடிந்தபாடில்லை. இந்த "சீன சம்பவத்"தைப்போன்ற ஆச்சரியமான காரியம் இது வரையில் உலகத்தில் நடந்ததில்லை என்று சொல்லலாம். ஏனென்றல், இதற்கு முன் நடந்த யுத்தங்களெல்லாவற்றையும்விட, இந்த யுத்தம் வேறு மாதிரியாக இருக்கிறது. இதற்கு முன் அநேக நாடுகள் தாக்கப்பட்டிருக்கின்றன; அவைகளில் சில தங்களை நன்றுகப் பாதுகாத்துக்கொள்வதும் உண்டு; இதல்லாமல், எதிரியை எதிர்த்துப் போர் புரிந்து தாங்களே வெற்றி பெற்ற நாடுகளும் சரித்திரத்தில் உண்டு. ஆனுல் அவைகளுக்கு அனுகூலமாகச் சில சௌகரியங்கள் இருந்தன. அவைகளுக்கு யுத்த தளவாடங்கள் இருந்தன; பொருளாதார பலம் இருந்தது; அல்லது பூகோள அமைப்பில் அவைகள் கைப்பற்றப்பட முடியாத நிலையில் இருந்தன. இதுபோன்ற சௌகரியங்கள் இருந்ததால் தான் அவைகள் தப்பிப்பிழைக்க முடிந்தது. ஆனுல் சீனுவுக்கு இந்த சௌகரியங்களில் ஒன்று கூட சரியாக இல்லை.

சீனதேசத்துக்கு அதிக நீளமான கரையோரம் இருக்கிறது. இது முழுவதையும் பாதுகாப்பதென்பது முடியாத காரியம். சீனுவின் பொருள் பலம் பெரும்பாலும் காரியத்துக்கு உதவாத நிலைமையில் இருக்கிறது. சீன இயற்கைச் செல்வம் பயன்படுத்த வேண்டிய அளவுக்குப் பயன்படுத்தப் படவில்லை. சீனுவுக்கு யுத்த தளவாடங்கள் ஒன்றுமே இல்லை என்று சொல்லும் படியான நிலைமையில், ஜப்பான் தாக்கியபோது, சீனு இருந்தது.

சீனு இப்படி இருக்க, ஜப்பான் அதற்கு நேர்மாறுன முறையில் இருந்தது. ராணுவ வித்தையில், மேல் நாடுகளிடம் எவ்வளவு எவ்வளவு கற்றுக்கொள்ள வேண்டுமோ, அவ்வளவும், அதற்கு மேலும், ஜப்பான் கற்றுக்கொண்டிருந்தது. ஜப்பானுக்குப் பொருள் பலமும், பயன்படுத்தப்பட்ட இயற்கை வசதிகளின் பலமும், ஏராளமாக இருந்தது.

தன்னுடைய ராணுவ பலத்தின் மமதையினுலே; ஜப்பான் உலகத்தையே ஒரு குடைக்கீழ் ஆள வேண்டுமென்றும், அதற்கு முதற்படியாகச் சீனுவைக் கைப்பற்றவேண்டுமென்றும், தீர்மானித்தது.

சீனு என்பது பூகோள படத்தில் ஒரு நாடு தான். அதற்கு ஒரு பெ[illegible] இருக்கிறதென்பதும் உண்மை [illegible] கோலியாவிலிருந்து தெற்கு [illegible] சீனத் முறைமுகங்கள் வ[illegible]வது ஒரே சீன பாஷைதான. ஆனுல் வடக்கிலிருக்கிற சீனர்களுக்கும், தெற்கிலிருக்கிற சீனர்களுக்கும், கலந்து நடமாடும் சம்பந்தம் கிடையாது. ரஷ்யர்களும், பிரெஞ்சுக்காரர்களும் எப்படி வேறுபட்ட சமூகங்களாக இருக்கிறுர்களோ, அதைப்போல, வட சீனர்களும், தென் சீனர்களும் இருந்தார்கள். அதாவது, தேசீய ஒற்றுமையும் நாட்டு ஐக்கியமும் சீனுவில் இல்லை.

இந்தக் காரணத்தினுல்தான், ஜப்பான் ஒன்றன்பின்னென்றுக ஐந்து சீன மாகாணங்களைக் கைப்பற்றிக்கொண்டே வந்தது. அது போகிற போக்கைப் பார்த்தால், சீக்கிரத்தில் சீனு என்பது ஜப்பானின் குடியேற்ற நாட்டின் பெயர் என்று சொல்லும்படி ஆய்விடும்போலிருந்தது.

சீனுவினுடைய தற்கால நிலைமை பெரிதும் மாறுதலடைந்திருக்கிறது. சீனுவின் தனிப்பெருந் தலைவர், மார்ஷல் சியாங்கே ஷெக்கின் தலைமையில், சீனர்கள் ஒன்றுபட்டு நேசநாடுகளின் உதவிபெற்று, மிகுந்த தைரியத்துடனும், வீராவேசத்துடனும் போராடுகிறுர்கள். சீனுவைக் கைப்பற்றுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்று ஜப்பான் உணர்ந்து கொண்டது. சீனத் தலைவரின் இந்திய விஜயத்தினுல், இந்தியாவும் சீனுவுடன் சேர்ந்து போராடப் போகிறதென்பது சீனுவுக்கு அதிக தைரியம் அளித்திருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

ஆகையால், இதுவரை வீரத்துடன் போர் புரிந்த சீனர்கள் இனிமேல் அதிக நம்பிக்கையுடன் போர் புரியப்போகிறுர்கள். ஜப்பானுக்கு இருக்கிற பலத்தைவிட, சீனுவுக்கு ஒரு சிறப்பான பலம் இருக்கிறது. அதுதான் சுதந்தரக் கொள்கையில் உள்ள தீவிரமான பற்று. அந்த சுதந்தர உணர்ச்சி இருக்கும் வரைக்கும், சீனுவை ஜப்பான் ஒன்றும் செய்ய முடியாது.



## இரானில் உள்ள பெட்ரோல் எண்ணெய்ச்சாலைகளுக்குப் பிரிட்டிஷ் பாதுகாப்பு



இரானில் உள்ள ஆங்கிலோ—இரானியக் கம்பெனியின் பெட்ரோல் சுத்தம் செய்யும் சாலை, உலகத்திலேயே மிகப் பெரியவைகளுள் ஒன்று, பிரிட்டிஷ் துருப்புகள் இரானில் பிரவேசித்ததும் முதலில் பாதுகாக்க முயன்றது இந்த தொழிற்சாலையைத் தான். பாரசீகக் குடாக்கடலின் மேல்பக்கத்தில் அபாதான் என்ற தீவில் பிரிட்டிஷ் துருப்புகள் இறங்கி இதைப்பாதுகாத்தன. பிரிட்டிஷ் துருப்புகள் இறங்கும் இடத்தைப் பாதுகாக்க வைக்கப்பட்ட இந்தியப்பட்டாளத்தைச் சேர்ந்த இரண்டு யந்திர பீரங்கிக்காரர் [illegible]

## [illegible]ப் பெண் சிப்பாய்கள்
### யுத்த முயற்சிக்குப் பேருதவி
### மேடம் சியாங்கே ஷெக் சீனுவுக்கு செய்த சேவை

**சுங்கிங்கில் "பெண்கள் நாள்"**

இந்த ஞாயிற்றுக்கிழமை (1942-ம் வருடம் மார்ச்சுமீ 8-ந் தேதி) சீனுவின் தலை நகரமாகிய சுங்கிங்கில் ஒரு கொண்டாட்டம் நடைபெறும். அதுதான், "அகில தேசியப் பெண்கள் நாள்" கொண்டாட்டம். இந்தக் கூட்டத்துக்கு, சீனுவின் பிரதம தளகர்த்தர், மார்ஷல் சியாங்கே ஷெக்கினுடைய மனைவியாராகிய மேடம் சியாங்கே ஷேக் தலைமை வகிப்பார். தலைமை வகித்து அவர் ஒரு நீண்ட பிரசங்கம் செய்வார். சுங்கிங்கிலுள்ள அகில தேசீயப் பெண்கள் சங்கத்தின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் பேசுவார்கள்.

சுங்கிங் நகரத்திலுள்ள பெண்கள் எல்லோருக்கும் அன்றையதினம் வெட்டவெளியான மைதானங்களில் மூன்று இடங்களில் சினிமா படக்காட்சிகள் காட்டப்படும். தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்களெல்லோரும் அன்றையதினம் வேலை செய்ய வேண்டியதில்லை. அன்று காலையில் எல்லா நாடகசாலைகளிலும் பெண்கள் இனமாகச் சென்று நாடகங்களைப் பார்க்கலாம்.

இந்த "பெண்கள் நாள்" கொண்டாட்டத்தில் யுத்த சம்பந்தமாக பெண்கள் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி முக்கியமாக பேசப்படும். இப்போது நடைபெறும் யுத்தத்தில் பெண்கள் செய்து வரும் பெருஞ் சேவையைப்பற்றி ரஷ்யப்பத்திரிகையாகிய "பிராவ்தா" எழுதுவதாவது:—

"மனிதனுல் தான் செய்யமுடியும் என்ற வேலையே கிடையாது. நம்முடைய பெண்கள் போர் புரிகிறுர்கள்; ரயில் வண்டிகளை ஓட்டுகிறுர்கள்; தொழிற்சாலைகளில் யந்திர வேலைக்காரர்களாக வேலை செய்கிறுர்கள். அவர்கள் எந்தக்காலத்திலும் ஹிட்லரிசத்துக்கு அடிமையாக மாட்டார்கள்".

"பிராவ்தா" பத்திரிகை கூறியிருப்பது சீனப் பெண்களுக்கும் மிகப் பொருத்தமானது. மேடம் சியாங்கே ஷேக்கின் தலைமையின் கீழ் சீனப் பெண்கள் யுத்த முயற்சியில் அற்புதமான வேலை செய்து வருகிறுர்கள்.

இதைப் பற்றிப் பாராட்டி, லண்டனில் சீன ஸ்தானிகராயிருக்கும் டாக்டர் வெல்லிங்டன் கூ என்பவர் சமீபத்தில் கூறியிருக்கிறுர். அவர் கூறியதாவது.—

"சீனப் பெண்கள் இரண்டு பெரிய வேலைகளைச் செய்து வருகிறுர்கள். ஒன்று, போர் முனையில் எதிரியோடு போராடுவது; இரண்டாவது, நாட்டைச் சீர்திருத்தி அமைப்பது. இதில் அவர்கள் திறமையான சேவை செய்து வருகிறுர்கள். நான் அதைப் பற்றி மிகுந்த பெருமை அடைகிறேன். 6,000 சீனப் பெண்கள் சீன சிப்பாய்களோடு போர்முனையில் இப்போது யுத்தம் செய்து வருகிறுர்கள். சீனப் பெண் சிப்பாய்களுக்கு தனி ஜாகைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**லேடி சாயோவின் தாண்டு**

இந்த பெண்கள் படையை முதலில் தயார் செய்தது லேடி சாயோ என்ற பெண்மணி, இவர் மஞ்சூரியாவைச் சேர்ந்தவர். மஞ்சூரியாவில் ஜப்பானியர்கள் தன்னுடைய குடும்பத்தினர்க்கும், அக்கம்பக்கத்தார்க்கும் செய்த அக்கிரமங்களைக் கண்டு, சகிக்காமல், பெண் சிப்பாய்களைத் தயார் செய்யும் வேலையை மேற்கொண்டார். கடைசிவரையில் ஜப்பானியரை எதிர்த்துப் போராடுவேன் என்று சபதங்கூறினுர். அப்படியே செய்தார்; யுத்தகளத்தில் ஜப்பானியருடன் போர்புரிந்து உயிர் துறந்தார். அவருடைய மகனும் 50 000 கொரில்லா துருப்புகளுக்குத் தலைவராயிருந்து அவரும் போர் களத்தில் மாண்டார். அவருடைய தாயாராகிய லேடி சாயோ சாதாரணப் பெண்; படித்தவரல்ல; ஆனுல் அவருடைய நாட்டுப் பற்றும், ஆவேசமும் பெண்களிடத்திலும், ஆண்களிடத்திலும் தீவிர உணர்ச்சியை உண்டாக்கின.

பெண்கள் போர்முனையில் செய்யும் வேலையைவிட, போர்க்குத் துணையாயிருக்கும் வேலைகள் பல செய்து வருகிறுர்கள். செஞ்சிலுவைச் சங்க வேலை செய்

இருர்கள்; துருப்புகளுடைய உடைகளைத் தைத்து, சீர்திருத்தி, சுத்தப்படுத்துகிறார்கள். ஒரு பட்டாளத்திலிருந்து மற்றொரு பட்டாளத்துக்குச் செய்தி கொண்டுபோகும் வேலையை அவர்கள் செய்கிறார்கள். ஆஸ்பத்திரிகளிலும் வெளியிடங்களிலும், சீனப் பெண்கள் செய்யும் வேலை அபாரமானது.

சீனப்பெண்களின் தலைவர்கள் சூங் சகோதரிகள் என்ற மூன்று பெண்மணிகள். இவர்கள்தான் சீனப் பெண்களுக்கு உணர்ச்சியூட்டி, யுத்த முயற்சியில் ஈடுபடும்படி செய்தார்கள். இவர்களில் ஒருவர்தான் மேடம் சியாங்கேஷெக் என்பவர். இவருடைய சகோதரி, சீனக்குடியரசை ஸ்தாபித்த டாக்டர் சன்யாட்சன் அவர்களுடைய மனைவி. மூன்று சகோதரிகளில் மூத்தவர், மேடம் குங் என்பவர். இவர் சீனக் குடியரசின் உபதலைவரின் மனைவி. இவர்கள் மூவரும் மிகுந்த திறமையுள்ள பெண்மணிகள்; புதிய சீனாவுக்கு அடிக்காலிய பெருந்தலைவர்கள்.

**மேடம் சியாங்கே ஷேக்**

இவர்களில் மேடம் சியாங் கே ஷெக்தான் சீனப் பெண்மக்களிடத்தே தைரியமும், உணர்ச்சியும், தியாகமும், சேவையும் அதிகமாக உண்டாக்கி வருபவர். சிலகாலம் அவர் சீனாவின் விமான இலாகாவின் உதவிமந்திரியாயிருந்தார். பிறகு வேறுபல வேலைகளை அவர் கவனிக்கவேண்டியிருந்ததால், இதை ராஜிநாமா செய்துவிட்டார். யுத்த கஷ்ட நிவாரண வேலைக்கு இப்போது அவர் தலைவராக இருந்து, அரியபெரிய சேவை செய்து வருகிறார். சீனாவில் செஞ்சிலுவைச் சங்க வேலைக்குத் தூண்டுகோலாக இருப்பவரும் அவர்தான். அவருடைய சுதந்தர உள்ளம் சீனப் பெண்ணுலகத்தில் ஒரு பெரிய மாறுதலைச் செய்திருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை தினம் சுங்கிங்கில் அவர் செய்யப்போகும் பிரசங்கம் இந்த பெரிய மாறுதலைப்பற்றிக் குறிப்பிடும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

# சீனாவுக்குப் புதிய உயிர்நிலைப்பாதை

## 2,200 மைல் நீளமுள்ள அஸ்ஸாம் ரோட்டும், அதைப்பற்றிய குறிப்புகளும்

### பர்மா ரோட்டுக்கு ஆபத்து

#### சீனாவின் முன்ஜாக்கிரதையான ஏற்பாடுகள்

சீனாவுக்கு உயிர்நிலைபோல இருப்பது பர்மா ரோட்டு என்கிற பிரம்மாண்டமான பாதை. இதன் வழியாகத்தான் பிரிட்டனும், அமெரிக்காவும், சீனாவுக்கு யுத்ததளவாடங்களை அனுப்பிக்கொண்டு வந்தன. இதனால் சென்ற சுமார் 4½ வருஷங்களாக, ஜப்பானை எதிர்த்து, சீனா போர்புரிவதற்கு முடிந்தது. இந்த யுத்தகாலத்தில், வெளி உலகத்துக்கும், அதாவது, நேச நாடுகளுக்கும், சீனாவுக்கும் பர்மா ரோடு மூலமாகத்தான் சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த சம்பந்தத்தை உடைக்கவேண்டுமென்பது ஜப்பானுடைய நெடுநாளைய எண்ணம். பர்மாவின் மேல் ஜப்பான் படையெடுத்ததற்கு உள்ள முக்கிய காரணங்களில் ஒன்று பர்மா ரோட்டாகும். பர்மாவில் ஜப்பானியர் பிரவேசிப்பதற்கு முன்னமேயே, பர்மா ரோட்டுக்கு நேரக்கூடிய ஆபத்தை சீனா உணர்ந்துகொண்டது. ஆகவே, சீனா பர்மா ரோட்டைப் பாதுகாப்பதற்காக, சீனத் துருப்புகளை அனுப்பிற்று.

யுத்த விஷயங்களில், எப்போதும் முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்வது நல்லது. வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பது நல்லதல்லவா? ஆகவே, ஒருக்கால் பர்மா ரோட்டுக்கு ஏதாவது அபாயமாவது அல்லது ஆபத்தாவது நேரிட்டால், சீனாவுக்கு வேறு புதிய பாதை உண்டாக்கவேண்டிய தன் அவசியம் புலப்பட்டது. உடனே அதற்காகச் செய்யவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் ஆரம்பிக்கப்பட்டு, இப்போது அந்த பாதை தயார்செய்யப்பட்டு வருகிறது.

### சில விவரங்கள்

சீனாவின் புதிய உயிர்நிலைப்பாதையைப்பற்றி, லண்டனில் வெளியாகும் "டெயிலி டெலிகிராப்" பத்திரிகையில், ஒரு நிருபர் சில விவரங்களைக் கூறியிருக்கிறார். அவை பின்வருமாறு:—

இந்தியாவிலிருந்து சீனாவுக்குச் செல்லும் புதிய பாதை, இந்தியத் துறைமுகங்களிலிருந்து அஸ்ஸாம் மாகாண வழியாக வடக்கு பர்மாவுக்குப் போய் அங்கிருக்கும் பர்மா ரோட்டோடு சேர்ந்து விடும். இதற்கு முன் இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் தரைவழியாகச் செல்வதற்கு முக்கியமான பாதை கிடையாது. இதனால் பாதையே கட்டமுடியாதென்று அர்த்தமல்ல. மூன்று பாதைகள் கட்டுவதற்கு வழிகள் இருக்கின்றன. இதில் வடக்கு பர்மா வழியாகச் செல்லும் பாதை தான் முக்கியமானது. பின்னால் இந்தப் பாதையில் ஒரு ரயில் பாதை கட்டப்படலாம். ஆனால் இப்போது செய்யவேண்டிய வேலை, அதிக சீக்கிரத்தில் இந்தப் புதிய பாதை கட்டப்படவேண்டும் என்பது தான்.

ஜப்பானியர்களை, தெற்கு பர்மாவுக்கு மேலேற வொட்டாமல் தடுக்கவேண்டுமென்பது மிக முக்கியமான விஷயம். இதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று, வரப்போகும் மழைக்காலமாகும். மழைக்காலம் இன்னும் இரண்டு மாதங்களில் வரும். அப்போது ஜப்பானியர்களுக்கு உள்ள அசௌகரியங்களும், கஷ்டங்களும் அதிகப்படும். மோல்மீனுக்குக் கிழக்கில் உள்ள பிரதேச முழுவதும் வெள்ளத்தால் மூடப்படும். 10 அல்லது 15 அடி ஆழம் தண்ணீர் இருக்கும்.

பர்மாவிலிருந்து சீனாவுக்கு மற்றொரு புதிய பாதை கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். பர்மாவிலுள்ள பாமோ என்ற இடத்திலிருந்து, சீனாவிலுள்ள யாங்கோசாங் என்ற இடத்துக்கு ஒரு ரயில் பாதை போடவேண்டுமென்று சில வருஷங்களுக்கு முன் திட்டம் போடப்பட்டது. யாங்கோசாங் என்ற பட்டணம் சீனாவுக்குள் 100 மைலுக்கப்பால் பர்மா ரோடில் இருக்கிறது. இந்த பாமோ-யாங்கோசாங் ரோட்டு ஒரு விஷயத்தில் மிக முக்கியமானது. ஏனென்றால், பர்மா பிரதேசத்திலுள்ள பர்மாரோட்டின் பாகம் ஜப்பானியர்களால் ஒருக்கால் தாக்கப்பட்டால், இந்த ரோட்டு மிகவும் உபயோகப்படும்.

### சுங்கிங் அறிக்கை.

ஆனால், சுங்கிங்கில் அதிகார பூர்வமாக வெளியிடப்பட்ட அறிக்கையில், நாம் முதலில் குறிப்பிடப்பட்ட ரோட்டைப்பற்றித்தான் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு அஸ்ஸாம் ரோட்டு என்ற பெயர் வழங்கப்படுகிறது. இந்த ரோட்டு கட்டுவதற்கு ஆரம்பித்தது, சீனாவின் முன்னறிவையும், முன் ஜாக்கிரதையான ஏற்பாடு செய்யும் திறமையையும், காட்டுகிறது. இண்டோ-சீனாவில் உள்ள ராணுவத் தளங்களை விஷி பிரெஞ்சு அரசாங்கம் ஜப்பானுக்குச் சரணமடைந்தபோதே, சீனா முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகளின் அவசியத்தை உணர்ந்துகொண்டது; வெளி உலகத்துக்கும் தனக்கும் உள்ள பாதையை, யுத்தம் பசிபிக் பிரதேசத்தில் பரவுமானால், பாதுகாக்கவேண்டும் என்று அறிந்துகொண்டது.

சீன எஞ்சினீயர்களும், அமெரிக்க எஞ்சினீயர்களும் உடனே ரோட்டு கட்டுவதன் சம்பந்தமாக 'சர்வே' வேலை செய்ய ஆரம்பித்தார்கள். இதற்கு அநேக அசௌகரியங்களும், கஷ்டங்களும் இருந்தன. எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும், எடுத்த காரியத்தை முடித்துவிடவேண்டும் என்று சீன அரசாங்கம் வேலையை விரைவில் ஆரம்பித்துவிட்டது. ஏராளமான தொழிலாளர்கள் ரோட்டு வேலை செய்து வருகிறார்கள்.

### பாதையின் மார்க்கம்

பர்மா ரோட்டு 1,000 மைல் நீளமுள்ளது. புதிதாகக் கட்டப்படும் அஸ்ஸாம் ரோட்டு 2,200 மைல் நீளமுள்ளதாயிருக்கும். இதனுடைய முடிவு சீனாவின் தலை நகரமாகிய சுங்கிங்காகும். சுங்கிங்கிலிருந்து இந்தப் பாதையின் வழியைக் கவனிப்போம். அஸ்ஸாம் ரோட்டு, சுங்கிங்கிலிருந்து வடமேற்கு வழியாக செங்டூவுக்குப் போய், அங்கிருந்து சிக்காங் பிரதேச வழியாக 1,000 மைல் சென்று, பர்மாவின் வடக்கு எல்லையோரமாக கலந்து, தெற்கு நோக்கிப் போய் சாடியா என்ற பட்டணத்தைச் சந்திக்கலாம் என்று தெரிகிறது. சாடியா என்பது வங்காள—அஸ்ஸாம் ரயில்வேயில் ஒரு முக்கியமான பட்டணம். இது கல்கத்தாவோடும், சித்தகாங்கோடும் ரயிலினால் சேர்க்கப்பட்டிருக்கிறது.



சித்தகாங் துறைமுகத்தை, அமெரிக்காவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் வரும் யுத்த சாமான்கள் செல்லும் வழியாக வைத்துக் கொள்ள முடியுமானால், அஸ்ஸாம் ரோட்டினுடைய நீளம் 300 மைல் குறையும்.

இப்போது தெரிந்தவரைக்கும், இந்த புதிய அஸ்ஸாம் ரோட்டில் சுமார் 500 மைல் கட்டப்பட்டாய் விட்டது. இன்னும் 1,700 மைல் ரோட்டு போட்டாகவேண்டும் இப்போது கட்டப்பட்டு வரும் கணக்கின்படி பார்த்தால் மீதி ரோட்டைக் கட்டுவதற்கு சாதாரணமாக, அநேக வருஷங்கள் பிடிக்கும். ஆனால் யுத்த நெருக்கடியில், அநேக அற்புதமான காரியங்களெல்லாம் செய்யப்பட்டுவருகின்றன. இந்த ரோட்டு அதிக விரைவில் கட்டப்பட்டால் யுத்த அற்புதங்களுள் அது ஒன்றாக விளங்கும்.

சீனாவிலும் இந்தியாவிலும் ஏராளமான ஆள் பலம் இருக்கிறது. இதன் உதவியைக்கொண்டு மேற்குப்பிரதேச நாடுகள் செய்ய முடியாதகாரியங்களைக்கூட, அவைகள் செய்துவிடலாம். அஸ்ஸாம் ரோட்டு கட்டுதல் காலத்தோடு செய்யும் ஒரு ஓட்டப்பந்தயமாகும். அதாவது, எவ்வளவு குறைந்த காலத்தில் ரோட்டைக்கட்டி முடிக்க முடியுமோ, அவ்வளவு குறைந்தகாலத்தில் அதைக்கட்டி முடித்து விடவேண்டும்.

### ஒரு உதாரணம்

இந்த சமயத்தில், ஒரு விஷயம் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். பர்மா ரோட்டு 1937-ம் வருஷம் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. யுத்தம் ஆரம்பித்தபோது, அதாவது 1939-ம் வருஷத்தில், பாதி வேலைதான் முடிந்திருந்தது. ஆனால் சில மாதகாலத்துக்குள், கடுமையான முயற்சியின் பலனாக, அந்த ரோட்டு ரங்கூனில் இருந்து வரும் ஏராளமான யுத்த தளவாட மோட்டார் லாரிகள், வண்டிகள், முதலியன செல்வதற்குத் தயார்செய்யப்பட்டது.

இரண்டு வருஷங்களில் பாதி கட்டப்பட்ட பர்மா ரோட்டு, சில மாதங்களில் மற்றப்பாதியும் கட்ட முடிந்ததென்றால், அதே மாதிரியாக அஸ்ஸாம் ரோட்டும் பூர்த்திசெய்யப்படலாம். அதிசீக்கிரமாக, ஏராளமான தொழிலாளபலத்தை உபயோகித்து, அஸ்ஸாம் ரோட்டின் மிகுதியான பெரும் பாகத்தைத் துரிதமாகக் கட்டி முடிப்பது முடியாத காரியமல்ல.

# சீன வீரப்பெண்களின் செய்கைகள்

## யுத்த காலத்தில் செய்யும் சேவை

சீன-ஜப்பான் யுத்தம் ஆரம்பித்த பிறகு, சீனப் பெண்மணிகளும், தங்களுடைய பழைய பழக்க வழக்கங்களை விட்டு விட்டு, யுத்தத்திற்காக புதிய வேலை [illegible] வர்கள், தங்களுடைய [illegible]ட்டு, தேசத்திற்காக பல [illegible]வேண்டுமென்ற புதிய [illegible]றனர். போர்க்களத்தில் ஜப்பானியர்களால் கொல்லப்பட்ட தங்களுடைய கணவர்கள், சகோதரர்கள், புதல்வர்கள் ஆகியவர்களுக்காக பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அந்த பெண்மணிகள் போர்க்கோலங்கொண்டு யுத்தகளத்திற்கு புறப்பட்டுவிட்டனர். யுத்த களத்தில் உள்ள சீனர்களுக்கும் பலவிதங்களில் உதவியாகவும் இருந்துவருகிறார்கள்.

பர்மாவிற்கு அடுத்தாற்பாலுள்ள தெற்கு சீனாவில், குவாங்சி மாகாணத்திலுள்ள சீனப்பெண்மணிகள், வீரத்தில் சிறந்தவர்கள்; பேர்பெற்றவர்கள். அவர்கள், குதிரை சவாரி நன்றாக செய்வார்கள்; துப்பாக்கியால் குறிபார்த்து சுடுவார்கள்; ஆண்பிள்ளைகளைப்போல, யுத்தத்தில் கையாளும் எந்த விதமான ஆயுதங்களையும் சாமர்த்தியமாக உபயோகிப்பார்கள். விமான அறிவிப்பு சங்கு ஊதிக்கொண்டிருக்கும்போதே, அவர்கள் விரோதிகள் வருவதற்குள், தெருக்களில் வந்து பொதுஜனப் பாதுகாப்புக்கான வேண்டிய வேலைகளைத் தைரியமாக செய்துவருகிறார்கள். பொது மக்களை பத்திரமான இடங்களில் கொண்டுபோய் விமானத் தாக்குதல்கள் முடியும்வரையில் அங்கேயே இருக்கும்படி செய்கிறார்கள். யுத்த களத்திற்குச் செல்லும் படைகளில் சீனப் பெண்மணிகளும், துப்பாக்கிகளை ஏந்திக்கொண்டு, தங்களுடைய கணவர்களோடு வீராவேசத்துடன் போர் செய்யப் போயிருக்கின்றார்கள்.

### வீரத்தாய்மார்கள் படை

1939-ம் ஆண்டு எப்ரல் மீ த்தில் குவாங்சி பட்டாளத்தைச் சேர்ந்த 500 சீன வீரத் தாய்மார்கள் ஹாங்கோவிலிருந்து யுத்த களத்திற்குப் போனார்கள். ஐந்து மாதயுத்தத்திற்குப் பிறகு, திரும்பிவந்த அந்த பட்டாளத்தை ஹாங்கோ நகரவாசிகள் வரவேற்றார்கள். அவர்கள் 250 வீரத்தாய் மார்களைத்தான் கண்டார்கள்; மற்ற 250 பேர் தங்களுடைய நாட்டிற்காக உயிரை விட்டு விட்டார்கள்!

சீனாவில் உள்ள பேர்பெற்ற பெண்மணிகளில் சோ டங் என்ற ஒரு வீரத்தாயிருக்கிறார். இவர் தலை நரைத்த பழுத்த கிழவி. இவரால் ஜப்பானியர்களுக்குச் சொல்லமுடியாத கஷ்டமாம். இவர் சீன கொரில்லாக்களுக்கு (குரங்குப்படைகளுக்கு) தலைவராக இருக்கிறார். இவருடைய படையில் உயர்தரக் கலாசாலையைச் சேர்ந்த ஆண் உபாத்தியாயர்கள் 2000 பேர் இருக்கிறார்கள்; உயர்தரக் கலாசாலை மாணவர்கள், பழைய கொள்ளைக்காரர்கள், விடுதலையான கைதிகள், இதர தேசாபிமானிகள் ஆகியவர்கள் இவருடைய அதிகாரத்தின் கீழிருக்கிறார்கள். வட கிழக்கு சீனாவிலுள்ள பீய்ப்பிங்—சுயூஆன் ரயில் பாதையிலெல்லாம் இவருடைய கொரில்லாக்கள் பல பகுதிகளாகப் பிரிந்து ஜப்பானியர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டு வருகின்றன. இவர் உயிருடனிருப்பது ஜப்பானியர்களுக்கு அடிக்கடி ஊசி எடுத்துக் குத்துவது போலிருக்கின்றது. ஆகையால் இவரை எப்படியாவது ஒழித்துவிடவேண்டுமென்று ஜப்பானியர்கள் முயற்சி செய்கிறார்கள். இவர் ஜப்பானிய துருப்புகளை ஏற்றிச் செல்லும் ராணுவ ரயில் வண்டிகளை எத்தனையோ தடவைகள் திடீர் திடீரென்று தாக்கியிருக்கிறார்.

மேல் கூறப்பட்ட வீரத்தாயின் கீழ் உள்ள பேர்பெற்ற கன்னிப் பெண் லியு ஹூசி என்பவர். இவருடைய சகோதரரை சில ஜப்பானிய சிப்பாய்கள் கொன்றுவிட்டார்கள். இவர், வீரத்தாய் சோ டங்கிடம் வேண்டிய பயிற்சி யடைந்த பிறகு, தான் செய்யவேண்டியது என்ன என்றும் அதை எப்படிச் செய்யவேண்டுமென்றும் தெரிந்துகொண்டார். இவர் ஒரு நாள் திடீரென்று காணாமற் போய்விட்டார்; பிறகு, திரும்பி வரவே இல்லை. இவர் பிச்சைக்காரி போல மாறு வேடம் போட்டுக்கொண்டு தன்னுடைய சொந்த கிராமத்திற்குச் சென்றார். அந்த கிராமம் ஜப்பானியரின் ஆதிக்கத்திலிருந்தது. இவர் மிகவும் அழுக்கான பிச்சைக்காரிபோலிருந்ததில் ஜப்பானியர்கள் இவரைக் கவனிக்கவில்லை. இவர் ஜப்பானிய சிப்பாய்கள் இருக்கும் பாசறைக்குச் சென்று பிச்சை கேட்டுக்கொண்டிருந்தார்.

இவருடைய கைக் கூடையில் மறைவாக ஒரு வெடிகுண்டும் ஒரு கத்தியும் வைத்திருந்தார். ஒரு நாள் சாயங்காலத்தில் ஐந்து ஜப்பானிய சோல்ஜர்கள் இவளைப் பார்த்து கேலி பண்ணி சிறித்துக்கொண்டிருந்தார்கள். இவர் உடனே தன்னிடமிருந்த வெடி குண்டை அவர்கள் மேல் வீசி எறிந்து, பிறகு கத்தியால் தன்னையே குத்திக்கொண்டார். ஜப்பானிய சோல்ஜர்கள் உடனே அவரை நோக்கி ஓடி வந்தார்கள். அவர்களால், அவருக்கு கெடுதி ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் வருவதற்கு முன்பே அவர் இறந்துவிட்டார்.

### வீரப்பாட்டுகள்

நூற்றுக்கணக்கான சீனப்பெண்கள் யுத்தசேவைப் படையில் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள் யுத்தம் நடக்கும் இடங்களுக்கு அருகிலும் மற்ற இடங்களிலும், சீன சிப்பாய்கள் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும்போது, களியாட்டங்களும், நாடகங்களும் நடத்தி அவர்களைச் சந்தோஷப்படுத்தி உற்சாகமுண்டாக்கும் வீரப்பாட்டுகளைப் பாடுவார்கள். இந்த சீனப்பெண்களின் வீரப்பாட்டுக்களைக் கேட்ட சீன சிப்பாய்கள் வீராவேசத்துடன் போர்க்களத்திற்குச் செல்வார்கள்.

மிகவும் பிரபலமான "மார்ச் அப் வாலண்டியர்ஸ்" என்ற சீனப்பாட்டு ஒவ்வொரு கிராமத்திலும் சீனப் பெண்களால், உற்சாகமுண்டாக்கும் வண்ணம் பாடப்படுகிறது. உணர்ச்சி ததும்பும் மாதிரியாக சீனப் பெண்கள் பாடி பொதுமக்களை உதவி செய்யும்படி தூண்டுகிறார்கள். பொதுமக்களுக்காக பாட்டுகளைப் பாடுகிறார்கள்; அவர்களுக்கும் அந்த பாட்டுகளைக் கற்றுக்கொடுக்கிறார்கள். சீனப்பட்டாளம் யுத்த களத்திற்குப் புறப்படும்போது வழியிலுள்ள சீனப் பெண்களும் பொதுமக்களும் மேல்கூறப்பட்ட பாட்டுகளை ஏகோபித்துப்பாடி சீன சிப்பாய்களின் வீராவேச உணர்ச்சியை அதிகமாக்கிவிடுவார்கள்.

### மற்றவேலைகள்

சீனப்பெண்கள் இன்னும் பலவிதங்களில் தேசத்திற்காக தொண்டுசெய்து வருகிறார்கள்.

ரேடியோ மூலமாக வரும் செய்திகளை காகிதங்களில் எழுதி அந்த காகிதங்களை தெருக்களிலும், மார்க்கெட்டுகளிலும் இராக்காலங்களில்கூட ஒட்டி பொது மக்களுக்குச் செய்திகளைத் தெரிவிக்கிறார்கள்.

வசந்த காலத்தில். இந்த பெண்கள் நெல் வயல்களில் வேலை செய்கிறார்கள்., நெல் அறுவடையை மிகவும் சுறுசுறுப்பாகவும், உற்சாகத்துடனும் செய்கிறார்கள். ஆண்பிள்ளைகள் செய்யவேண்டிய வேலைகளை எல்லாம் பெண்களே இப்போது சீனாவில் செய்து வருகின்றனர்.

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

[மலர் II.] 1942-ம் வருஷம் மார்ச்மீ 13உ, வெள்ளிக்கிழமை [இதழ் 10

## மேன்மை தங்கிய வைஸ்ராய் அவர்களின் அறிக்கை

### இந்திய மக்களுக்கு ஒரு வேண்டுகோள்

### "தேசியப் போர்முனையில் சேருங்கள்"

மேன்மை தங்கிய வைஸ்ராய், லார்டு லின்லித்கோ அவர்கள், 10-ந் தேதியன்று, இந்திய மக்களுக்கு ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அவர் கூறுவதாவது:—

"இந்தியாவில் உள்ள மக்கள் எல்லோருக்கும்—அவர்கள் எந்த அரசியற் கொள்கை உடையவர்களாயிருந்தாலும் சரி, எந்த மதத்தைச் சார்ந்தவர்களாயிருந்தாலும் சரி, எந்த மனித சமூகத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி—அவர்கள் எல்லோருக்கும் நான் இந்த செய்தியை அனுப்புகிறேன். அடுத்த சில வாரங்களில், தேசீயப் போர்முனையில் சேரும்படி நீங்கள் எல்லோரும் அழைக்கப்படுவீர்கள்.

"நாம் வசிக்கும் இந்த நாட்டுக்கு அபாயம் வரும்போலிருக்கிறது. இந்த சமயத்தில் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய கடமையைச் செய்யவேண்டும். நமக்குள் இருக்கும் பிளவுகளை நீக்கி, நாம் ஒன்று சேரவேண்டும்; சமாதானமாய் வாழ்ந்து வந்த நாடுகளை ஆக்கிரமித்து, அங்கு இரக்கமற்ற தன்மையையும், காட்டுமிராண்டித்தனத்தையும், காட்டிக்கொண்டு வரும் எதிரியை நாம் ஒன்றாக நின்று எதிர்க்க வேண்டும்.

"இந்தியாவினுடைய வீரச்சிப்பாய்கள் உலகத்தின் பல பாகங்களில் போர் புரிந்திருக்கிறார்கள்; போர் புரிந்துகொண்டு வருகிறார்கள்; தங்களுடைய தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காகவும், தங்களுடைய புராதன நாகரிகத்தையும், கலையையும், அழியாமல் வைத்திருப்பதற்காகவும், தங்களுடைய நாடு எதிர்காலத்தில் அடையவேண்டிய லட்சியங்களைப் பெறுவதற்காகவும், அவர்கள் மிகுந்த சிறப்பான முறையில் வீரத்துடன் போர் புரிகிறார்கள்.

"இப்போது, போர்முனை மிகவும் அகன்றுவிட்டது. இதனால் ஒவ்வொருவரும் ஒரு சிப்பாயைப்போல வேலை செய்யலாம். நீங்கள் அனைவரும் தளராத மன உறுதியுடன் இருங்கள்; தைரியவான்களைப் பாராட்டுங்கள்; அதைரியமாயிருப்பவர்களுக்குத் தைரியம் சொல்லுங்கள்; பொறுப்பில்லாமல் பேசுபவர்களைக் கண்டியுங்கள்; நம் நாட்டுக்குள்ளேயே ஒளிந்திருக்கும் துரோகிகளை வேரறுத்து விடுங்கள்.

"நம்முடைய நாட்டுப்பாதுகாப்புகளை இன்றையதினமே பலப்படுத்துங்கள்; அப்போது தான் முன்னேறிச் சென்று வெற்றியடையலாம். வெற்றியடையாவிட்டால், சுதந்தர ஸ்தாபனங்கள், கலை, அன்பு முதலிய வாழ்க்கை நலன்கள் உலகத்தில் நின்று விளங்க முடியாது.

நாம் ஒரு கண்ணியமான கூட்டத்தில் சேர்ந்திருக்கிறோம். சீனா, ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் இன்னும் இதர நேச நாடுகளுடன் சேர்ந்து போராடுகிறோம். இந்தியாவிலுள்ள நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நாட்டுக்குப் பெருமை வரும்படியாக நடந்து கொள்வோமாக! அப்போது தான், நம்முடைய வெற்றி அதிக விரைவாகவும், நிச்சயமாகவும் வரும்."

"நான் உங்களுடைய தைரியத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்."

---

## மேன்மை தங்கிய சியாங்கே ஷெக் அவர்களின் அறிக்கை

### சீன மக்களுக்கு ஒரு வேண்டுகோள்

### "சீனா புத்துணர்ச்சி பெற்று எழும்"

சீனாவின் யுத்த முயற்சித் தலைவர், மேன்மை தங்கிய மார்ஷல் சியாங்கே ஷெக் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

"ஒரு நாட்டுமக்கள் மறுபடியும் புத்துணர்ச்சிபெற்று எழ வேண்டுமானால், சில அம்சங்கள் அவசியம் வேண்டியிருக்கின்றன. அவைகளில், நாட்டுமக்கள் முதலில் கஷ்டங்களையும், துன்பங்களையும் அனுபவிக்க வேண்டும், என்பது ஒன்றாகும்.

"அவைகள் எல்லாவற்றையும் விட முக்கியமானது, நாட்டுமக்கள் தங்களுடைய தேசீய லட்சியத்தில் பூரண நம்பிக்கை வைத்திருக்கவேண்டும் என்பது தான். அப்படிப்பட்ட நம்பிக்கையிருந்தால், மக்கள் தங்களுடைய பொறுப்பை உணருகிறார்கள்; இந்த உணர்ச்சி லட்சியத்தை அடைவதற்கு வேண்டிய பலத்தைக் கொடுக்கிறது.

"சீன நாட்டுமக்கள் 5.000 வருஷங்களுக்குமேற்பட்ட கலையையும், சரித்திரத்

தையும் உடையவர்கள். ஜப்பானுடைய கொடூரமான ஆக்கிரமிப்பினால் அவர்கள் அடியோடு அழிக்கப்படும்படியான நிலைமையில் இருந்தார்கள். எந்தக்காலத்திலும் கண்டிராத இந்த நெருக்கடியான சமயத்தில் அவர்களுடைய தேசிய உணர்ச்சி வீரத்துடன் பொங்கி எழுந்தது. அவர்கள் நீண்டகாலம் போராடப் போராட, வெற்றியடையவேண்டும் என்ற அவர்களுடைய மனவுறுதி இன்னும் அதிகமாக வலிமையடைந்துவருகிறது. சீனு புத்துணர்ச்சி பெற்றுவருகின்றது.

"பண்டைக்காலத்து மக்கள் ஒரு உலக உண்மையைக் கூறுவது வழக்கம்: "பெரிய கஷ்டங்கள், நாட்டுமக்களுக்கு ஒற்றுமையும், பலமும், அளிக்கும்." இது எவ்வளவு உண்மையான வாக்கியம்! கஷ்டங்களும், துன்பங்களும் அனுபவித்துக் கொண்டு வரும் சீனு, இன்னும் அதிக பலம் பொருந்திய நாடாக ஆகப்போகிறது. சீன நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் இந்த மனவுறுதி உண்டு. உலக முழுவதும் சீனுவைப்பற்றி இப்படிப்பட்ட அபிப்பிராயம் பரவியிருக்கிறது.

"பழங்காலத்து மக்கள் புதிய உயிர் பெற்று வாழவேண்டுமானால், அவர்கள் உயிருக்கே ஆபத்து வரும்படியான போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றிபெறவேண்டும். தனிப்பட்டவர்களுடைய வாழ்க்கையில் உள்ள உண்மை, நாட்டுமக்கள் வாழ்க்கையிலும் உண்மையாயிருக்கிறது. அதாவது; துன்பம் இல்லாமல் இன்பம் கிடையாது, கஷ்டமில்லாமல் சந்தோஷம் இல்லை.

"காரியத்தில் செய்யாமல், வெறும் வார்த்தைகள் பேசுவது வெறுக்கத்தக்க காரியம். எதையும் எதிர்த்துத் தடுக்காமல் இணங்கிப்போவது ஒரு பயங்காளியின் முறை. தன்னிடம் இருக்கும் குறைகளைக் கவனியாமல், மற்றவர்களைக் குற்றம் சாட்டுவது ஒருவிதமான சுய நலத்தன்மை; நாட்டுக்குத் துரோகஞ்செய்யும் குணமும் இதுதான். புரட்சி உணர்ச்சியுடைய நம் நாட்டு இளைஞர்கள், இப்படிப்பட்ட குறைகளை நீக்கி, இரும்புபோன்ற திட சித்தம் உடையவர்களாயிருக்கவேண்டும்.

"நமக்கு முன்னிருக்கும் பாதையில் முள்களும், முள் புதர்களும் நிறைந்து இருக்கின்றன. இவைகளை எல்லாம் ஊடுருவிச் சென்று, தைரியத்துடனும், விடா முயற்சியுடனும், நாம் முன்னேற வேண்டும். அப்போதுதான் நாம் புதிய சீனுவை உண்டாக்கியவர்களாவோம். இது சீனுவுக்கு நாம் செய்யும் ஒரு நன்மை மாத்திரமல்ல, உலகம் முழுமைக்குமே நாம் செய்யும் ஒரு பெரிய நன்மையாகும்."

# உலக யுத்தப் போக்கு

## வரப்போகும் ரஷ்ய—ஜெர்மன் போராட்டம்

### ஜெர்மனியின் முயற்சிகளும், ரஷ்யாவின் தயாரான ஏற்பாடுகளும்

**வசந்த காலத் தாக்குதல்.**

ரஷ்யப் போர் முனையில் ஒரு பெரிய தாக்குதல் வசந்த காலத்தில் ஆரம்பிக்கப் போகிறது என்று ஜெர்மானியர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் இந்தத் தாக்குதலை யார் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்று நிச்சயமாகச் சொல்வதற்கு இல்லை. இப்போதிருக்கிற நிலைமையைப் பார்த்தால், ஜெர்மனிக்குப் பதிலாக, ரஷ்யா தான் வசந்த காலத் தாக்குதலை நடத்தும் போலிருக்கிறது. இனிமேல் இரண்டு பிரம்மாண்டமான போர்கள் நடக்கப் போகின்றன. ஒன்று, ரஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் நடைபெறப்போகும் வசந்த காலப் போராட்டம். இதைப்பற்றி, துருக்கி தேசத்துப் பத்திரிகையாகிய, "உலூஸ்" பின்வருமாறு எழுதுகிறது:—

> "ஸ்லாவ் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் (அதாவது, ரஷ்யர்களும்), ஜெர்மானியர்களும் உலக சரித்திரத்திலேயே இதுவரை கண்டிராத அவ்வளவு பெரிய ரத்தக்களரியாகும் யுத்தத்திற்குத் தயாராக சகல ஏற்பாடுகளும் செய்துகொண்டு வருகிறார்கள்."

மற்றொரு பிரம்மாண்டமான போராட்டம், இந்து மகா சமுத்திரத்தில் நடக்கப் போவது. இது நேச தேசத்தார்களுடைய கடற்படைக்கும், ஜப்பானுடைய கடற்படைக்கும் நடக்கப்போகும் யுத்தம். இதல்லாமல், பாரசீகக் குடாக்கடலிலும், செங்கடலிலும், நேசதேசத்தார்களுக்குள்ள கடல் வலிமையை ஒடுக்குவதற்கு எதிரிகள் முயற்சி செய்வார்கள்.

இப்போது, ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் நடக்கப் போகும் போராட்டத்தைபற்றிய சில விவரங்களை கவனிக்கலாம். யுத்தபலம் மூன்று விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. அவையாவன:—

1. யுத்த தளவாடபலம்.
2. ராணுவ ஆள்பலம்.
3. தொழிற்சாலை ஆள்பலம்.

முதலில் குறிப்பிடப்பட்ட யுத்த தளவாட பலத்தைப்பற்றிக் கவனித்தால், ஜெர்மனி ரஷ்யாவில் ஏராளமான நஷ்டம் அடைந்திருக்கிறது. டாங்கிகள் ஆகாய விமானங்கள், யுத்த மோட்டார் வண்டிகள் முதலிய ஜெர்மன் தளவாடங்களை, அதிகமான அளவுக்கு, ரஷ்யர்கள் நாசம் செய்திருக்கிறார்கள். இதனால் ஜெர்மனியினுடைய யுத்த தளவாட பலம் குறைந்திருந்தாலும், வேறு வழிகளில் இந்த பலக் குறைவை ஜெர்மனி சரிக்கட்டிக்கொள்ள முயற்சி செய்து வருகிறது. ஜெர்மனியினுடைய யுத்த தளவாட உற்பத்தியோடு, செக்கோஸ்லாவாக்கியா, பிரான்சு, பெல்ஜியம், இத்தாலி முதலிய நாடுகளுடைய உற்பத்தியும் ஒன்று சேர்க்கப்படுகிறது.

**ராணுவ ஆள்பலம்.**

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டது ராணுவ ஆள் பலம். ஜெர்மனியினுடைய பட்டாளம் 290 படைகள் அடங்கியது. ஆனால் 1942-ம் வருஷத்திய படைகள் இதற்கு முன்னிருந்த படைகளைவிட அனுபவத்திலும், பலத்திலும் குறைந்தவை. சென்ற வருஷம் ஜூன் மாதத்தில் ரஷ்ய எல்லையைத்தாண்டி, ஆவேசம் பிடித்தவர்களைப்போல் போராடிய ஜெர்மன் இளைஞர்கள் ரஷ்யாவில் நடந்த சண்டைகளில் இறந்து போனார்கள். ஜெர்மனியின் திறமைவாய்ந்த இளஞ்சிப்பாய்கள் இறந்துபோனதினாலும், ரஷ்யாவில் நடந்த யுத்தத்தில் பொதுவாக நேர்ந்த ஆள் நஷ்டத்தினாலும் ஏற்பட்ட பலக்குறைவை சில வழிகளால் ஜெர்மனி சமாளித்துக்கொள்ள முயற்சி செய்கிறது. அந்த வழிகள் பின்வருமாறு:—

(1) ஜெர்மனியிலுள்ள ராணுவ சம்பந்தமில்லாத 'சிவில்' அல்லது சாதாரண அரசாங்க உத்தியோக இலாகாவைச் சேர்ந்த இளைஞர்களையும், யுத்த உற்பத்தித் தொழிற் சாலைகளில் வேலைசெய்துவரும் இளைஞர்களையும், ராணுவத்துக்கு அனுப்புகிறார்கள். பொதுவாக 17-வயதுடைய சிறுவர்களை எல்லாம் ராணுவத்தில் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள்.

இவ்வளவு சிறுவயதுடைய இளைஞர்களைப் பட்டாளத்தில் சேர்ப்பதில் பிரயோசனமில்லை என்று சென்ற யுத்தத்தில் நன்றாகத் தெரிந்தது.

(2) ரஷ்யாவில், ஒடெஸ்ஸாவிலும் கிரிமியாவிலும் நடந்த சண்டைகளில், 2 லட்சம் ருமேனியர்கள் இறந்துபோனார்கள். ருமேனியர்கள் ஜெர்மானியர்களுடைய உதவிக்காக வந்தார்கள். அவர்களுக்கு ஜெர்மனியின் அநியாய யுத்தத்தில் கலந்து கொள்வது பிடிக்கவேயில்லை. ருமேனியாவில் ஜெர்மனியின்மேல் மக்களுக்கு அதிருப்தி அதிகரித்துக்கொண்டு வருகிறது. அங்கிருந்து 5 லட்சம் துருப்புகள் இப்போது வருவதாக ஜெர்மானியர்கள் கூறுவது உண்மையல்ல என்று தெரிகிறது. இதுவரையில் வந்திருக்கும் துருப்புகளையும், இனிமேல் வரப் போகும் துருப்புகளையும் சேர்த்துத்தான் இந்தக் கணக்கு போடப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது.



**ஜெர்மனியின் பயமுறுத்தல்.**

(3) ஹங்கேரியை 5 லட்சம் துருப்புகளை அனுப்பும்படி ஜெர்மனி கேட்டிருக்கிறது. அனுப்பாவிட்டால், டிரான்சில்வேனியா சம்பந்தமாக ஹங்கேரிக்குக் காட்டிய சலுகையை ஜெர்மனி ரத்துசெய்துவிடுவதாகப் பயமுறுத்தி இருக்கிறது. இதல்லாமல், தன்னுடைய சகாவாகிய இத்தாலிக்குக் கொடுக்கப்பட்ட குரோஷியாவில் ஏதாவது நஷ்டஈடு கொடுப்பதாகக் கூறியிருக்கிறது.

(4) பல்கேரியர்கள் ஜெர்மனிக்கு அனுகூலமாகப் போர்புரிவதாகத் தெரியவில்லை. அவர்கள் உள்ளுக்குள் ரஷ்யா வெற்றியடையவேண்டுமென்று, விரும்புகிறார்கள். ரஷ்யத் துருப்புகள் முன்னேற முன்னேற, இந்த விருப்பம் அவர்களுக்கு அதிகப்படுகிறது. சர்பியாவில் உள்ள பல்கேரியத் துருப்புகள் ஜெனரல் மிகேவியோவிகின் கொரில்லாத் துருப்புகளை எதிர்த்துப் போர்புரிய முடியவில்லை என்றால், அவைகளுடைய பலம் எவ்வளவில் இருக்கிறதென்பது நன்றாக விளங்கும்.

பொதுவாக, ருமேனியா, பல்கேரியா முதலிய நாடுகள் அடங்கிய பால்கன் பிரதேசத்தில், ஜெர்மனிக்கு அனுகூலமான நிலைமை இல்லை என்று சொல்லலாம்.

**தொழிற்சாலை ஆள் பலம்.**

ராணுவ ஆள்பலத்தில் குறைவு ஏற்பட ஏற்பட, உள் நாட்டில் யுத்த தளவாட உற்பத்திசெய்யும் தொழிற்சாலை ஆள்பலமும் குறைந்து வருகிறது. ஜெர்மனியில் பெண் தொழிலாளிகள் ஏராளமாக வேலைசெய்கிறார்கள். சமீபத்தில், பர்லின் (ஜெர்மனியின் தலைநகரம்) ஒரு முக்கியமான செய்தியைத் தெரிவித்தது. அதாவது, ஒரு லட்சத்து 80 ஆயிரம் சிறுவர்களும், சிறுமிகளும் நிலத்தில் விவசாய வேலைசெய்வதற்குச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

14 வயதுச் சிறுவர்கள் பெரிய மோட்டார் விவசாய வண்டிகளை ஓட்டுகிறார்கள்.

வெளி நாடுகளிலிருந்து ஜெர்மனிக்குத் தொழிலாளர்களைக் கொண்டுவந்து சேர்ப்பதற்காக ஒரு பெரிய கங்காணித்திட்டம் தயார்செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டவேலையெல்லாம் டாக்டர் மான்ஸ்பீல்டு பார்த்துவருகிறார். அவர் 27 நாடுகளில் சுதந்தர ஒப்பந்தம் செய்யும்படி தொழிலாளர்களைக் கேட்கிறார். எங்கெல்லாம் தொழிலாளர்கள் வருவதில்லையோ, அங்கு கட்டாயப்படுத்தி ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்குகிறார்.

நார்வேயிலுள்ள குஸ்லிங் அரசாங்கம் (குஸ்லிங் என்பவர் தன்னுடைய நாட்டை ஜெர்மனிக்குக் காட்டிக்கொடுத்த துரோகி) 5,000 நார்வீஜியர்களை ஜெர்மனிக்கு அனுப்புவதாக சமீபத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறது. நார்வேய்க்கு வெளியில் கட்டாய விவசாயவேலை செய்யும்படி தன்னுடைய நாட்டுமக்களை உத்தரவிடுவதற்கு, மேஜர் குஸ்லிங் என்ற ஜெர்மனிக்கு அனுகூலமான முதல் மந்திரி ஒப்புக்கொண்டிருக்கிறார்.

**ராணுவ வேலைக்குச் சிறுவர்கள்.**

செக்கோஸ்லவாக்கியா என்ற நாட்டில் உள்ள கிளேடோனி என்ற பட்டணத்தில், 13 வயதிலிருந்து 16 வயது வரைக்கும் உள்ள 450 பள்ளிக்கூடச் சிறுவர்கள் ராணுவவேலை சம்பந்தமாக ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டார்கள்.

ஹாலந்தில் ஒரு லட்சத்து 84 ஆயிரம் வேலையில்லாத மக்கள், ஜெர்மனிக்கு அனுப்பப்படலாம் என்று ஒரு ஸ்விட்சர்லாந்து பத்திரிகையின் பர்லின் நிருபர் கூறுகிறார். ஆனால், ஹாலந்து நாட்டுமக்களாகிய டச்சுக்காரர்கள் ஜெர்மனிக்கு விரோதமான உணர்ச்சி உடையவர்கள். அவர்கள் யுத்த தொழிற்சாலைகளில் வேலை செய்தால், யுத்த ஆயுதங்கள் சரியாகச் செய்யப்படமாட்டா; விரைவாகவும் வேலை நடைபெறாது.

பெப்ரவரிமாதம், அதாவது பெப்ரவரியில், 3 லட்சம் இத்தாலியத் தொழிலாளிகள் வேண்டுமென்று ஜெனரல் கோயரிங் இத்தாலியுடன் ஒப்பந்தப் பேச்சு பேசிக்கொண்டிருந்தார். ஆனால் இத்தாலியர்களுக்கு ஜெர்மானியர்களென்றால் பிடிக்காது.

பெல்ஜியத்திலிருந்து 6 லட்சம் தொழிலாளர்கள் ஜெர்மனிக்குச் செல்லவேண்டும். இல்லாவிட்டால், அவர்களுக்கு உணவு அனுமதிச்சீட்டு கொடுக்கப்படமாட்டாது; பட்டினியாகக் கிடந்து சாகவேண்டியதுதான். ஆகையால், அநேக பெல்ஜியர்கள் ஜெர்மனிக்குச் சென்று வேலை செய்கிறார்கள். இது அவர்களுக்குப் பிடிக்கவேயில்லை.

இம்மாதிரியான முறைகளால் ஜெர்மனி தன்னுடைய பலத்தை அதிகப்படுத்திக் கொள்வதற்குப் பார்க்கிறது.

**ரஷ்யாவின் நிலைமை.**

ஜெர்மனியினுடைய நிலைமை இப்படியிருக்கிறது; ரஷ்யாவினுடைய நிலைமை எப்படிப்பட்டது என்று பார்ப்போம். ஜெர்மனியைவிட ரஷ்யா சில விஷயங்களில் அனுகூலமான நிலைமையில் இருக்கிறது என்று சொல்லலாம். ஜெர்மனிக்கு 8 கோடி ஜனத்தொகை இருக்கிறது; ஆக்கிரமித்த நாடுகளில் இதில் பாதி இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம்; ஆகமொத்தம் 14 கோடி. ஆனால் ரஷ்யாவுக்கு சுமார் 19 கோடியே 30 லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டு மக்கள் ஜெர்மனிக்கு விரோதமான மனப்பான்மை உடையவர்கள். ரஷ்யாவில் உள்ள மக்கள் ஏகோபித்த நோக்கத்துடன் ஒற்றுமையுடன் வேலை செய்கிறார்கள். ரஷ்யத் தொழிற்சாலைப் பலம் யுத்தத்தினால் குறைந்த போதிலும், ரஷ்யாவுக்குப் பொருளாதார ஆதாயங்கள் அதிகமாக உண்டு. ஆகையால் அது மற்ற நாட்டினர்களுடைய உதவியில்லாமலே சமாளிக்க முடியும்.

ரஷ்யா முழுவதும் பல இடங்களில் புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன. ரஷ்யாவின் செஞ்சேனைக்கு இன்னும் அதிகமாகவேண்டிய யுத்த தளவாடங்களை இத்தொழிற்சாலைகள் 'சப்ளை' செய்யும். புதிதாகத் தயார்செய்யப்பட்டு, யுத்த முஸ்திப்புபெற்ற பல ரஷ்யப் படைகள் போர் முனைக்கு வந்துகொண்டே இருக்கின்றன. ரஷ்யாவின் பின்பக்கத்திலுள்ள பிரதேசங்களில் ஏராளமான படைகள் தயார்செய்யப்படுகின்றன.

ராணுவத்தில் இவ்வளவு அதிகமாக ஆள்கள் சேர்ந்த போதிலும், தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு வேண்டிய ஆளகள் இருக்கிறார்கள். ரஷ்யாவில் உடல் வலிமை உள்ள எல்லோரும் யுத்த உற்பத்தித் தொழிற் சாலைகளில் வேலை செய்யும்படி ரஷ்ய ஜனநாயகத் தலைவர் உத்தரவிட்டிருக்கிறார். சில பிரத்தியேகமான தொழிற்சாலைகளில் இளைஞர்கள் வேலை செய்கிறார்கள். 16 வயதிலிருந்து 55 வயது வரையில் உள்ள ஆண் மக்களும், 16 வயதிலிருந்து 45 வயது வரையில் உள்ள பெண் மக்களும், யுத்த உற்பத்தி வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ரஷ்ய செஞ்சேனை எவ்வளவு பிரம்மாண்டமானதாயிருந்தாலும், அதற்கு வேண்டிய எல்லா யுத்த தளவாடங்களையும் 'சப்ளை' செய்யும் வேலை இவர்களால் நன்றாகச் செய்யப்படும் என்பதில் சந்தேகமில்லை.

**ரஷ்ய மக்கள் ஒற்றுமை.**

ரஷ்யாவில் ஒன்றுபட்டு, ஜெர்மன் அக்கிரமங்களுக்குப் பழிக்குப்பழி வாங்கி வஞ்சம் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்ற மனவுறுதியுடன், எல்லா மக்களும் இருக்கிறார்கள். ஜெர்மனியின் ஆதிக்கத்தின் கீழுள்ள நாட்டு மக்கள் கொடுங்கோன்மையினால்தான் ஒன்றுயிருக்கிறார்கள்; சமயம் வந்தபோது அவர்களுடைய கஷ்டங்களும், வெறுப்பும் ஜெர்மனியின் வீழ்ச்சிக்குப் பெரிதும் உதவி செய்யும். இதுதான் ரஷ்ய யுத்த சம்பந்தமான நிலைமை.

இந்தியாவினுடைய யுத்த சம்பந்தமான பொருளாதார நிலைமையை இப்போது சற்று கவனிப்போம். இந்தியாவின் பொருளாதார மந்திரி, சர் ஜெரிமி ரெய்ஸ்மன் சில நாட்களுக்குமுன் சில விவரங்களை வெளியிட்டிருக்கிறார்.

இந்த நடைமுதல் வருஷத்தில், இந்தியாவின் பாதுகாப்புக்காக 300 கோடி ரூபாய் செலவாய்க் கொண்டு வருகிறது. இதில் 200 கோடி ரூபாய் செலவை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த வருஷத்து மொத்த பாதுகாப்புச் செலவு 533 கோடி ரூபாய். இதில் இந்தியா 133 கோடி ரூபாய் தான் செலவு செய்யும்; மற்ற 400 கோடி ரூபாய் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்குக் கொடுக்கும். பிரிட்டன் தன்னுடைய பாதுகாப்புக்காக 1 கோடியே 30 லட்சம் பவுன் தினந்தோறும் செலவு செய்கிறது. இவ்வளவு பெரிய பளுவைத் தாங்கிக்கொண்டு, இந்தியாவினுடைய பாதுகாப்புப் பளுவில் ஒரு பெரிய பாகத்தையும் பிரிட்டன் தாங்குகிறது. பிரிட்டன் தன்னுடைய யுத்தத்திற்காக இந்தியாவை உபயோகப்படுத்திக்கொள்கிறது என்று எதிரிகள் பிரசாரம் செய்துகொண்டு வருகிறார்கள். இது எவ்வளவு பொய்யான பிரசாரம் என்பது மேலே குறிப்பிட்ட விவரங்களால் விளங்கும்.

**அச்சுநாடுகளின் அக்கிரமம்**

அச்சுநாடுகள் இதற்கு நேர்மாறாக நடந்துகொண்டு வருகின்றன. தங்களுடைய ஆதிக்கத்தின் கீழிருக்கும் நாடுகளின் பொருள்ஆதாயங்களை எல்லாம் அக்கிரமமாக தங்களுடைய யுத்தத்திற்கு உபயோகித்துக் கொண்டு வருகின்றன.

பெல்ஜியத்தில் ஒரு ஜெர்மன் 'மார்க்' நாணயம் 12½ பெல்ஜியம் 'மார்க்' நாணயத்துக்குச் சமானம் என்று ஜெர்மன் அதிகாரிகள் உத்தரவிட்டார்கள். இதனால் ஜெர்மன் சிப்பாய்களுடைய பணத்துக்கு 100 மடங்கு அதிக மதிப்பு ஏற்படுத்தப்பட்டது. பெல்ஜியத்திலுள்ள ஜெர்மன் சிப்பாய்களைப் பராமரிப்பதற்காக, பெல்ஜியம் ஏராளமாகப் பணம் செலவு செய்து வருகிறது. தன்னுடைய பட்டாளத்துக்கு எவ்வளவு செலவு செய்து வருகிறதோ அதைவிட 6 மடங்கு அதிகமாக ஜெர்மன் பட்டாளத்துக்கு பெல்ஜியம் செலவு செய்யும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

கிரீஸ் தேசத்தில், ஜெர்மானியர்கள் காகித நோட்டுகளைத் தாராளமாக அச்சடித்துக்கொள்கிறார்கள். இந்த நோட்டுகளை வாங்காதவர்கள் உடனே சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

மலேயாவிலும், பிலிப்பைன் தீவுகளிலும், ஜப்பானியர்கள் இதேமாதிரியாகச் செய்து வருகிறார்கள். தாய்லாந்து ஜப்பானுடைய நேச நாடு. ஆனால் இந்த நேச நாட்டின் கதி என்ன? ஜப்பானின் தலை நகரமாகிய டோக்கியோவிலிருந்து வரும் தங்கத்துக்குப் பதிலாக 450 லட்சம் 'பாஹ்ட்' என்ற நாணயத்தை ஜப்பான் வாங்கிக் கொண்டது. தாய்லாந்து பணம் ஜப்பானுக்குக் கொடுக்கப்பட்டது; ஆனால் ஜப்பானுடைய தங்கம் மாத்திரம் இன்னும் வந்து சேரவில்லை. இந்த நாணய மாற்றுக்கு ஒரு காரணம் உண்டு. தாய்லாந்து, சமாதான காலத்தில், தன்னுடைய நாணயமாகிய 'பாஹ்ட்'டை தங்கப் பவுன் 'ஸ்டர்லிங்'கோடு, நாணயமாற்று சம்பந்தமாக, சேர்த்துக்கொண்டது. இந்த ஜப்பான் தன்னுடைய சொந்த உபயோகத்துக்கு இப்போது உபயோகித்துக் கொள்ளுகிறது.

**இந்தியாவினுடைய ஆள் பலம்.**

இந்தியாவினுடைய பாதுகாப்புச் செலவைப்பற்றிச் செய்யப்படும் பொய்ப் பிரசாரத்தைப்பற்றி முன்னர் குறிப்பிட்டோம். மற்றொரு விஷயம் பொய்ப் பிரசாரம் செய்யப்படுவதற்கு இடங்கொடுக்கலாம். பிரிட்டிஷ் பார்லிமெண்டில், லார்டு சபை விவாதத்தில் லார்டு கிரான்போர்ன், சென்ற பெப்ரவரி மீ 24வ இந்தியாவின் ஆள் பலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். இந்தியாவில் உள்ள துருப்புகளை இன்னும் சரியாக உபயோகப்படுத்தவேண்டும் என்று ஒரு அங்கத்தினர் தெரிவித்தார். அதற்குப் பதிலளிக்கும்போது, "யுத்த முஸ்தீப்புடைய ஒவ்வொரு சிப்பாயையும் அப்படியே உபயோகப்படுத்தப்படுகிறது" என்று லார்டு கிரான்போர்ன் பதிலளித்தார். இதை சில கெட்ட எண்ணமுள்ள குறும்புக்காரர்கள் வேறுவிதமாகத் திரித்துக் கூறலாம்; அதாவது, இந்தியாவிலுள்ள பட்டாளங்களெல்லாம் வெளியில் அனுப்பப்பட்டுவிட்டன என்றும், இந்தியா யாதொரு பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறதென்றும் அவர்கள் சொல்லலாம்.

இப்படிப்பட்ட வியாக்கியானம் மிகவும் தவறானது. இந்தியாவின் வெளிக் கொத்தளங்களில், அதாவது தூரக்கிழக்கு அரங்கம், பர்மா, மத்தியக்கிழக்குப் பிரதேசம், முதலிய இடங்களில் இந்திய சிப்பாய்கள் போர்புரிந்து வருகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால், இந்தியாவில் முக்கியமான பாதுகாப்புத் தளங்களில் இந்தியப் படைகள் சேமிக்கப்பட்டு இருக்கின்றன. இந்தியாவின் எல்லைகளுக்கு வெளியில் போர்புரியும் இந்திய சிப்பாய்களைவிட இந்தியாவுக்குள் இருக்கும் இந்திய சிப்பாய்களின் எண்ணிக்கை மிக அதிகம் என்ற விஷயத்தை உணரவேண்டும்.

**ரங்கூன்.**

ரங்கூனுக்கு ஆபத்துநேர்ந்து விட்டது ஆனால் ரங்கூன், பர்மா அல்ல என்ற விஷயத்தை ஆலோசிக்கவேண்டும். பர்மாவை விட்டு நேசதேசத் துருப்புகள் விலகப்போவதில்லை. இந்தியப் படைகளும், சீனப் படைகளும் எதிரியைக் கடுமையாகத் தாக்குகின்றன. வடக்கு நோக்கிச் செல்வது மிகவும் கஷ்டமான காரியம் என்பதை இப்போது நடக்கும் சண்டை காட்டுகின்றது. ஷான் பிரதேசங்களில் இருக்கும் சீனத் துருப்புகள் தாய்லாந்துக்குள் பிரவேசித்து, ஜப்பானியர்களைப் பின்னால் தாக்கும்படியான நிலைமையை ஜப்பான் விரும்பவில்லை. சீனத் துருப்புகள் சீனாவில் நடந்த பல கொரில்லா சண்டைகளில் அனுபவம் பெற்றவை. ஜப்பானியப் போர் முனை இன்னும் நீண்டு செல்லுமானால் அதை உடைத்து விடுவதற்கு சீனத் துருப்புகளால் முடியும். இதை ஜப்பானியர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.

**அமெரிக்காவின் பலம்.**

"நியூயார்க் டெய்லி நியூஸ்" என்ற அமெரிக்கப் பத்திரிகை, பெப்ரவரி மீ 16வ இதழில், அமெரிக்காவின் ராணுவ பலத்தைப்பற்றிய சில விவரங்களைப் பிரசுரித்திருக்கிறது. அமெரிக்க பட்டாளத்தில் சுமார் 17 லட்சம் பேர் சேர்ந்திருக்கிறார்கள். இந்த வருஷ முடிவுக்குள் 36 லட்சத்திலிருந்து 40 லட்சம் வரைக்கும் சிப்பாய்கள் தயார்செய்யப்படுவதற்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. தரைப் படையைச் சேர்ந்த விமானப் படையில் 20 லட்சம் பேர் இன்னும் அதிகமாகச் சேர்க்கப்படுகிறார்கள். ஜெர்மன் விமானப்படை 12½ லட்சம் பேர்களும், பிரிட்டிஷ் விமானப்படை 10 லட்சம் பேர்களும் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளும் என்று தெரிகிறது. இரண்டு சமுத்திரங்களில் உள்ள அமெரிக்கக் கடற்படையில், 5, லட்சம் பேர் சேர்ந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சிறந்த வலிமை உடைய அமெரிக்கா, ஜப்பான் ஏன் இந்த யுத்தத்தை ஆரம்பித்தோம் என்று வருத்தப்படும்படியாகவும், ஹிட்லர் அமெரிக்காவைப்பற்றிக் கேள்விப்படாமலே இருந்தால் நன்றாயிருக்கும் என்று நினைக்கும்படியாகவும், இந்த யுத்தத்தை முடிக்கப் போகிறது என்று அந்த "டெய்லி நியூஸ்" பத்திரிகை எழுதியிருக்கிறது.

# அதிலும் ஒரு பாடம்!

ஒரு புறம் மதயானை துரத்திவருகிறது, மற்றோர் புறம் கருநாகம் ஒன்று சீறிக்கொண்டு கொத்த வருகிறது. தலைக்குமேலே கழுகொன்று வட்டமிடுகிறது. கால்கள் தள்ளாட, நிலைதடுமாறி, பாழுங்கிணறு ஒன்றில் விழுந்து விடுகிறான் ஒரு மனிதன். தெய்வச்செயலாக, அவன் கையில் ஒரு கெட்டியான ஆலம்வேர் கிடைக்கிறது. அதை அவன் இறுகப் பிடித்துக்கொண்டு தொங்குகிறான். அந்த வேரையும் ஒரு எலிவந்து கறுவத்தொடங்கிவிடுகிறது. என்னசெய்வான் பாவம்! பகவானைப் பிரார்த்தித்துக்கொண்டே, அண்ணாந்து மேலே பார்க்கிறான். தலைக்குமேலே உள்ள தேன் கூட்டிலிருந்து ஒரு துளி தேன் நேராக அவன் வாயில்வந்து விழுகிறது. அந்த சமயத்தில் அந்தத் தேனின் ருசி அவனுக்கு எப்படியிருக்கும்? தேவாமிர்தம் எல்லாம் அதன் ருசிக்கு எந்த மூலை?

அதேபோல் தானிருக்கிறோம் நாமும். கொடிய காட்டுமிருகங்களையும், விஷப்பாம்புகளையும், கழுகுகளையும், எலிகளையும் போல் ஜெர்மானியரும், இத்தாலியரும், ஜப்பானியரும், சிவனே என்றிருந்த பூலோகத்தாரை, நிலைகுலைந்து, தடுமாறி, யுத்தம் என்னும் பாழுங்கிணற்றிலே விழும்படிச் செய்துவிட்டார்கள். இந்தச் சமயத்திலே நம்போன்றவர்களுக்குச் சற்று ஆறுதல் அளிக்கும்படியாக இருப்பது என்ன தெரியுமா? மேலே சொன்னகதையில் உள்ள மனிதனுடைய வாயில் சொட்டிய தேன்போல், அதிருசியாக இருக்கக்கூடிய விஷயம் என்ன தெரியுமா?

நாம் எல்லாம் பிரிட்டிஷாருடைய பேராதரவைப் பெற்றிருக்கிறோம்; அந்த பிரிட்டிஷாருடன் கைகோத்துக்கொண்டு, இந்தக் காட்டுமிருகங்களையும் கதறி ஓடச்செய்யவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு, அமெரிக்கா, சீனா, ருஷ்யா ஆகிய பிரம்மாண்டமான தேசங்கள் எல்லாம் போர்க்கோலம் பூண்டிருக்கின்றன; மேற்கண்ட நாடுகள் எல்லாம் சேர்ந்தால், உலகிலே உள்ள மொத்த ஜனத்தொகையிலே ஐந்தில் நாலுபங்காகிறது. ஐந்தில் நாலுபங்கு, எப்பொழுதாவது, ஐந்தில் ஒன்றைத் தன் மனம்போன போக்கில் விட்டுவிடவாபோகிறது? என்றாவது ஒருநாள் இந்த மிருகங்கள் எல்லாம் அலறிக்கொண்டு, சிதறி ஓடத்தான் போகின்றன என்பதுபோன்ற விஷயங்கள் நம் செவிகளில் விழுந்துகொண்டேயிருக்கின்றன. இது நமக்கு எவ்வளவோ ஆறுதலை அளிக்கிறதா இல்லையா?

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் உலகெங்கும் பரவிநிற்கிறது. அதன் பலம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. பிரிட்டனில் உள்ள தொழிற்சாலைகள் எல்லாம் இரவும், பகலும், எந்த நேரத்திலும் இடைவிடாது, விமானங்களையும், பீரங்கிகளையும், டாங்கிகளையும், புதுப்புது தினுஸான பயங்கர வெடிகுண்டுகளையும், டார்பிடோக்களையும், நீர் மூழ்கிகளையும், கப்பல்களையும் கட்டிக்கொண்டே இருக்கின்றன.

அதேமாதிரி அமெரிக்காவிலும் மும்முரமாக வேலைகள் நடந்துவருகின்றன. அமெரிக்க சரித்திரத்திலேயே எந்தக் காலத்திலும் கேள்விப்பட்டிராத அளவில், அதாவது வருகிற வருஷத்திற்குமட்டும், உத்தேசமாக, 14,200 கோடி டாலர்களை யுத்தத்திற்காகச் செலவிட, ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அனுமதி பெற்றுவிட்டார். இத்தனை பணத்திலிருந்து உதிக்கும் வெடிகுண்டுகளும், கப்பல்களும், ஆட்களும் ஜெர்மனி, ஜப்பான், மற்றும் அவாள் கோஷ்டியிலிருப்பவர்கள் தலைக்கு உலை வைக்கவே உபயோகிக்கப்படவிருக்கின்றன.

ஜப்பானும், ஜெர்மனியும் ஏதோ கொஞ்சம் முந்திக்கொண்டுவிட்டார்கள். அதன் பலனாக, கொஞ்சம் முன்னால் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். நாமும் கொஞ்சம் பின்னால் வந்துகொண்டிருக்கிறோமே தவிர, வெறுமனே தூங்கிக்கொண்டிருக்கவில்லை. முன்னால் ஓடுகிறவர்கள் தாமாகக் களைத்துவிழுவது நிச்சயம். அப்பொழுது நாம் கட்டாயம் முன்னே போய்விடுவோம். முன்னால் கிளம்பியது காரணமாக, நமது எதிரிகளை அங்கங்கே சில வெற்றிகளைக்கண்டு வருவது இயற்கைதானே! சாப்பிட்டும், சாப்பிடட்டும்! ஒரேயடியாக மண்டையிலடிபட்டுக் கீழே விழப் போகிறவன் எவ்வளவு சாப்பிட்டால்தான் என்ன?

இப்பொழுது இந்தியாவின் வராந்தாவிற்கு யுத்தம் வந்திருக்கிறது. வீட்டிற்குள்ளேயிருக்கும் நமக்கு ஊக்கமும், தைரியமும் ஊட்ட சரியான ஆட்கள் இருக்கிறார்கள் அவர்கள்தான் வைசிராய் பிரபு, நமது மேன்மை தங்கிய கவர்னர் துரை போன்றவர்கள். நம்மிடையில் உள்ள வேற்றுமைகளை மறந்து, ஒரே மனதுடன், எதிரியைத் துரத்தியடித்தே தீரவேண்டும், இல்லாவிட்டால் அவஸ்தை தான் என்ற ஒரே நினைவுடன் இந்தியர்களாகிய நாம் எல்லாம், யுத்த முயற்சியில் பிரிட்டனுக்கும், நேசதேசத்தாருக்கும் பேராதரவு அளிக்கவேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து தூதுகோஷ்டி ஒன்று இந்தியாவிற்கு வரப்போகிறது. இந்த கோஷ்டியார் வந்து, இந்தியாவை சப்ளை இடமாக வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்போகிறார்களாம். இங்கேயே, யுத்தத்திற்கு வேண்டியவற்றையெல்லாம் தயாரிக்க வழி செய்யப்போகிறார்கள். இதனால் இந்தியாவிற்கு எவ்வளவோ நன்மை உண்டாகுமே! இதெல்லாம் தேன் போன்ற ருசியான சேதிகளா இல்லையா!

இது ஆச்சா? சீனத்தலைவர் ஜெனரல் சியாங்கே-ஷேக் இந்தியாவிற்கு வந்து போனார். சீன தேசத்தின் பெருமை எத்தகையது என்பது இப்பொழுது நம் தேசத்தாருக்கெல்லாம் தெரிந்துவிட்டது. சென்ற சனிக்கிழமை, இந்தியாவெங்கும் ரொம்பரொம்ப விமரிசையாக, சீனா தினம் கொண்டாடினார்கள். கொடிய ஜப்பானியரை, சுமார் ஐந்துவருஷகாலமாக வெற்றிகரமாக எதிர்த்து நிற்கும் சீனர்கள், நம் நண்பர்களானார்கள். இப்பொழுதுகூட ஆங்காங்கே சீனர்கள் சீனாவில் ஜப்பானியரை விரட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எதிர்ப்பின் தன்மையை அறிந்தே, ஜப்பானியர் சீனாவில் ஏராளமான படைகளை வைத்திருக்கவேண்டியிருக்கிறது. சீனாவை எப்படியாவது நிர்க்கதியான நாடாக்கி, பணியவைத்துவிடவேண்டும் என்று துடிக்கிறது ஜப்பான்.

அதனால்தான், அது பர்மாவின்மீது கண்போட்டது. அங்குதானே பர்மா ரஸ்தா இருக்கிறது! பர்மா ரஸ்தா மூலம் தானே தினசரி பல ஆயிரக்கணக்கான டன் யுத்த சாமான்கள் சீனாவிற்குச் சென்று வந்தன. இந்த ஜீவ நாடியைத் துண்டிக்கவே ஜப்பானியர் பர்மாவிற்குள் புகுந்தார்கள். இங்கே புகுந்து இரண்டுமாதங்களுக்குமேலாகப் போகின்றன. இதற்குள்ளாகவே கால் ஆயிரம் விமானங்களையும், கணக்கற்ற ஆட்களையும் இழந்துவிட்டார்கள். பர்மாவில் உள்ள அமெரிக்கத் தொண்டர் படையினர், ஜப்பானியருக்குச் சரியான யமன்களாக இருக்கிறார்கள்.

இவர்களும், பிரிட்டிஷ், இந்தியப்படைகளும் கொடுக்கும் உதைகளை வாங்கிக்கொண்டு, பல நதிகளைக்கடந்து, திருட்டுத்தனமாக ரங்கூனில் புகுந்துவிட்டார்கள் ஜப்பானியர். பர்மியரைப்போல் உடை உடுத்துக்கொள்கிறார்களாம். பர்மிய, இந்திய, இங்கிலீஷ் பாஷைகளில் பேசிக்கொண்டு, பர்மாக்காரர்கள்போல், பத்துப்பன்னிரெண்டு பேர்களாக, சைகிள்களில் வந்துவிடுகிறார்களாம்.

சென்றவாரம், பயங்கரப்போர் பெகூ எனும் நகரத்துக்கருகே நடந்துகொண்டிருந்தது. அங்கிருந்த பிரிட்டிஷ் படைகளுக்கும் ரங்கூனுக்கும் தொடர்பு விட்டுப்போயிற்று. ஜப்பானியரும் எதிர்பாராதபடி தென்திசையில் தோன்றிவிட்டனர். உடனே ரங்கூன் நகரில் உள்ள தொழிற்சாலைகளையும், எதிரிக்கு உபயோகப்படக்கூடிய இடங்களையும் சம்பூரணமாகப் பாழாக்கிவிட்டு, பிரிட்டிஷார் அந்த ஊரைக் காலி செய்துவிட்டார்கள். காலி செய்துவிட்டு, வடக்கே கிளம்பினார்கள். வடக்கே போகும் ரஸ்தாவிலும் ஜப்பானியர் தோன்றினார்கள். தங்களுடைய டாங்கிகள், படைகள் ஆகியவற்றின் பலத்தால், எதிரிகளைப் பிளந்துகொண்டு பிரிட்டிஷார் வடக்கேபோய்விட்டார்கள்.

இனி மத்ய, வடபர்மாக்களில் யுத்தம் ஆரம்பமாகும்போலிருக்கிறது. ப்ரோம்-ரங்கூன் ரஸ்தாவில் உள்ள தாராவதி எனும் ஊரை தாங்கள் பிடித்துவிட்டதாகச் சொல்லுகிறார்கள் ஜப்பானியர். வடக்கே ஓரிடத்தில் ஒரு நாள், பிரிட்டிஷாரும், சீனர்களும் கலந்த படைகளுடன், ஜப்பானியரும் சயாமியர்களும் கலந்த படைகள் ஐந்துமணிநேரம் கடும்போர் புரிந்தனவாம். இதிலிருந்து சீனர்கள் பர்மியப் போரில் கலந்துகொண்டது தெரிகிறதா இல்லையா? மேலும் மேலும் சீனர்கள் வந்து குவிந்த வண்ணமாகவே இருக்கிறார்கள் பர்மாவில். ஆகவே ஜப்பானியர் எளிதில் பர்மாவில் வெற்றி கண்டுவிடமுடியாது. அவர்களுக்கு பர்மாவில் ஐந்தாம்படை உதவி இருக்கிறதுபோலிருக்கிறது. ஆனாலும் என்ன? பர்மாவிலே ஜப்பானியருக்கு எங்காவது ஓரிடத்தில் நல்ல சிக்ஷை கிடைக்கத்தான் போகிறது.

இப்போதைக்கு ஜப்பான் கொஞ்சம் குஷியாகவே இருக்கிறது. ஜாவாவின் தலை நகரம் அவர்கள் வசமாகிவிட்டது. அந்தத் தீவிலே உள்ள நகர்கள் சில அவர்கள் கைக்குப் போய்விட்டன. அங்கிருந்த, டச்சு கிழக்கிந்திய கவர்னர்-ஜெனரல், சில அதிகாரிகளுடன் ஆஸ்திரேலியாவிற்குப் போய்விட்டார். அங்கே போய் சும்மா இருக்கப்போகிறாரா என்ன?

ஜப்பானியருக்கு உலைவைக்க திட்டம் போடப் போகிறார். அமெரிக்காவிற்கும், இங்கிலாந்திற்கும் போய் வரப்போகிறார். 'கடைசிவரை போராடுங்கள்' என்ற அவரது கட்டளையை சிரமேல் தாங்கி, வீர டச்சுப்படைகள் ஜாவா தீவில் இன்னும் போரா

டிக்கொண்டிருக்கின்றன. அவை தப்பிப்போகவும் வழியில்லை. விமான உதவி கிடைபாது, துறை முகங்களும் பாழாகிவிட்டன. இந்நிலைமையில் இருந்த ஜாவாவை, இரண்டு லக்ஷம் பேர்களுடன் ஜப்பான் தாக்கிற்று. எவ்வளவோ நஷ்டம்தான் இந்த முயற்சியில் ஏராளமான கப்பல்கள் 'கோவிந்தா' ஆகின. ஆனாலும் ஜாவா விரோதி கையில் போனதுபோல்தான்.

ஜாவாவிற்கு அடுத்த சுமத்ரா தீவு இருக்கிறதே, அதன் தலைநகரம் இன்னும் டச்சுக்காரர்களிடமே இருக்கிறது. தென் சுமத்ரா தான் ஜப்பானியருக்குக் கிடைத்திருக்கிறது. வட சுமத்ராவில் அவர்கள் கொஞ்சம் போராடவேண்டியிருக்கலாம்.

ஜாவா ஆச்சு, சுமத்ராவில் கொஞ்சமாச்சு, பாலித் தீவு ஆச்சு, ஜப்பானியர் உத்சாகம் தாளாது குதிக்கிறார்கள். அடுத்தாற்போல் நியூ கினி எனும் தீவை அவர்கள் தங்கள் லக்ஷ்யமாகக்கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது.

அங்கேயும் அவர்களுக்கு நிம்மதியளிக்கவில்லை, ஆஸ்திரேலிய விமானிகள். ஜப்பானியரிடம் ஒரு குணம். மேலே பாயும் வேலையில் புலிகளாம், ஆனால் நாம் அவர்களைத் தாக்க முன்னே போனால், அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டி ஏற்படுமல்லவா? அந்த நிலைமை வந்துவிட்டால், ஒரே ஓட்டம் தானும் அவர்கள். பிரிட்டிஷாரிடம் சிக்கினால், சித்ரவதை செய்து விடுவார்கள் என்று மேலதிகாரிகள் அவர்களுக்கு பீதி காட்டியனுப்புகிறார்களாம். அதனாலேயே, அடிபட்ட விமானங்களிலிருந்து குதிக்கும் ஜப்பானியர், தாமாகவே தம் உயிரைவிட்டுவிடுகிறார்களாம்.

உயிரை விடுவது என்றதும், பிலிப்பைன் தீவிலே தற்கொலை செய்து கொண்ட ஜப்பானிய சேனாதிபதியின் நினைவு வருகிறது. அங்கே, ஜப்பானியர் கண்ட கனவெல்லாம் எதிர்பார்த்தபடி நிறைவேறவில்லை. அவர்களுக்கு அமெரிக்க சேனாதிபதி மாக் ஆர்தர் சரியான உதை கொடுத்து வருகிறார். அவரை இது வரை பணியவைக்கவே முடியவில்லை. அந்தக் காரியத்தில் ஈடுபட்ட ஜப்பானிய விமானங்களும், வீரர்களும், கப்பல்களும் ஏராளமாக நாசமடைந்தாயிற்று. இதைப்பார்த்ததும், அங்குவந்த ஜப்பானிய சேனாதிபதிக்கு அவமானம் தாங்கவில்லையாம். உடனே தற்கொலை செய்துகொண்டு விட்டாராம். இவருக்குப் பதில், சிங்கப்பூரை ஜெயித்த சூரப் புலியை அனுப்பியிருக்கிறார்களாம்.

ஜப்பானியர் அடுத்தாற்போல் என்ன செய்வார்கள் என்பதைப்பற்றி சும்மா ஏதாவது அவரவர்கள் தமக்குத்தோன்றியபடி ஜோசியம் சொல்லலாமே ஒழிய, நிச்சயமாக ஒன்றும் சொல்லமுடியாது.

ஆஸ்திரேலியா தன் நியூ கினிக்குப் பக்கத்திலிருக்கிறது. ஜாவா முதலிய இடங்களிலிருந்தும் ஆஸ்திரேலியாவைத் தாக்கலாம். ஏற்கெனவே ஆஸ்திரேலியாவின் வடபாகத்தில் சில இடங்களை ஜப்பானியர் தரிசித்துவிட்டார்கள், ஆகாயத்திலிருந்தபடியே.

இதைப் பார்த்து 'ஆஸ்திரேலிய யுத்தம் ஆரம்பமாகிவிட்டது' என்றே சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆஸ்திரேலியாவிலே ஜப்பானியருக்குச் சரியான பாடம் கற்பிக்க, ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. 'பாதுகாப்பு யுத்தத்தைவிட, பாய்ந்தடிக்கும் யுத்தமே தேவை; அதையே கைக்கொள்ள வேண்டும்' என்கிறார்கள் விஷயமறிந்தவர்கள். மலேயாவிலிருந்து தப்பிவந்த மேஜர் ஜெனரல் கார்டன்பென்னெட்டும், தன் அநுபவத்திலிருந்து அவ்வாறே கூறுகிறார்.

ஆஸ்திரேலியா போர்க்கோலம் பூண்டுவருகிறது. அங்குள்ள ராணுவ முக்யமான இடங்களை, தேவையானால் நாசமாக்க, ராணுவத்திற்கு அநுமதியளிக்கப்பட்டுவிட்டது. மனோ உறுதியிலும், பயங்கரமாகப் போராடுவதிலும், ஆஸ்திரேலியா, ஜப்பானியருக்கு இளைத்தவர்கள் அல்ல. இத்தகையா ஆஸ்திரேலியர்களுக்கு, ஜப்பானியரின் தந்திரப் போர் முறைகளைக் கற்றுக்கொடுக்கும் உத்தியோகம் கார்டன் பென்னட்டிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதோடு, அமெரிக்காவிலிருந்தும் உதவி வந்துகொண்டிருக்கிறது. ஜாவாவிற்கு வர தாமதமாகிவிட்ட உதவி, ஆஸ்திரேலியாவிற்கு உற்ற சமயத்தில் வரலாம். ஆஸ்திரேலியாவை எப்படியும் காப்பாற்றியே தீரவேண்டும் என்பது நேசதேசத்தாருக்குத் தெரியாதா என்ன? நாளை ஜப்பான்மீது படையெடுக்க, இது ஒரு முக்யதளமாக உபயோகப்படுமா? இதைக் கைவிட்டால் அப்புறம் அவஸ்தைதானே? இதோடு இந்தத் தீவும் போய்விட்டால், ஜப்பானியர் தக்க சமயத்தில் ருஷ்யாமீது தங்கள் கவனத்தைச் செலுத்தக்கூடுமல்லவா? அதற்கு இடங்கொடுத்தால் மகா ஆபத்தாச்சே! ஆகவே, ஆஸ்திரேலியாவிலேயே ஜப்பானியருக்கு புத்தி கற்பித்தாக வேண்டும் என்று அமெரிக்கத் தலைவர் உள்பட சரியான திட்டம் போட்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரமே அந்த பிளான்—அமுலுக்கு வரலாம். ஜப்பானுக்கு ஜாவா தீவுகள் கிடைத்துவிட்டதாலும், நியூ கினி பிரதேசத்தில் அதன் கை ஓங்கி வருவதாலும், இந்துமகா சமுத்திரப் பிரதேசத்திற்கும் ஆபத்து அதிகமாகவிருக்கிறது. இங்கிருந்தே தென் ஆபிரிகா அருகே ஜப்பானியர் போகக்கூடும்; வசந்த கால ஜெர்மன் தாக்குதலுக்கு இந்த வகையில் ஜப்பான் உதவக்கூடும் என்கிறார்கள்.

ஆக மொத்தம் நம் நாட்டை யுத்தம் சூழ்ந்து கொள்ளப்பார்க்கிறது. வசந்த காலத்தில் உலகில் பல பயங்கரமான யுத்தங்கள் நடக்கலாம். ஜெர்மனி அதற்கு வேண்டிய யத்தனங்கள் செய்து வருகிறதாம். ருஷ்யாவிலே அது படுகிறபாடு நாய் கூடப்படாது. சுமார் எழுபது, எண்பதினாயிரம் ஜெர்மானியர் ஒரு பிரதேசத்தில் பொறியிலகப்பட்ட எலிகள்போல் தவிக்கிறார்கள். ஜெர்மானியரை நொறுக்கித் தள்ளிக்கொண்டு, பல இடங்களில் முன்னேறி வருகிறார்கள். சில இடங்களில் பனி உருக ஆரம்பித்துவிட்டது. அது பெரு வெள்ளமாக மாறும். ஆகவே இன்னும் ஓரிரண்டு மாதங்களுக்கு ஜெர்மனி இங்கே ஒன்றும் செய்யமுடியாது.

ஆனால், வசந்தகாலம் பிறந்ததும் ஜெர்மானியர் பிரிட்டன்மீது விமானப் படையெடுப்பை நடத்தலாம். அதற்கு முன்பாகவே, பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மனி மீது ஏராளமாகப் படையெடுக்கத் தயாராயிருக்கின்றன. பிரிட்டிஷ் விமான பலம் இப்பொழுது ரொம்ப ரொம்ப அதிகமாகி வருகிறது. ஜெர்மனியில் உள்ள தொழிற்சாலைகளையெல்லாம் பிரிட்டிஷ் விமானிகள் பாழாக்கிவருகிறார்கள். நடுநிலைமை வகிப்பதுபோன்ற வேஷத்துடன், விஷி சர்க்கார் ஜெர்மனிக்கு நிறைய உதவி செய்கிறார்களாம். அதுவும் வெளியாகிவிட்டது. உடனே பிரிட்டிஷ் விமானங்கள் பாரிஸ் நகர் அருகே உள்ள பிரெஞ்சுத் தொழிற்சாலைகளை அழிக்க ஆரம்பித்துவிட்டனர். விஷி சர்க்கார் போன வருஷம் மட்டும் சுமார் 3,500 விமானங்களை ஜெர்மனிக்கு அனுப்பியிருக்கிறதாம். தவிர, நாற்பது கப்பல்களையும் அளித்திருக்கிறதாம் என்ன சூதுகார வேலை பாருங்கள்! ஜெர்மனியர் இப்படியெல்லாம் தம் பலத்தை அதிகரித்து வருகிறார்கள். அவர்களுடைய விமானங்கள் தினசரி மால்டா தீவைத் தாக்கி வருகின்றன; தீவில் உள்ள பீரங்கிகளுக்குப் பலியாகியும் வருகின்றன. ரஷியாவில் மட்டும் இது வரை பதினைந்து லக்ஷம் ஜெர்மானியர்கள் பலியாகியிருக்கிறார்களாம்.

வட ஆபிரிகாவில் ஜெர்மன் சேனாதிபதி ராமல் மெள்ள வாலாட்டிக் கொண்டிருக்கிறார். அவரை முன்னேறவிடாதபடி பிரிட்டிஷ் படைகள் தடுத்து வருகின்றன. சுதந்திர பிரஞ்சுப் படைகள் ஒருநாள் திடீரென்று ராமலின் ஆட்களிருந்த சில இடங்களைப் பிடித்துவிட்டன. வட ஆபிரிகாவில் ஓரிடத்தில் வெறும் மரத் துப்பாக்கிகளையும், சிப்பாய்கள்போன்ற பொம்மைகளையும் கொண்டு, பிரிட்டிஷார் 5,248 இத்தாலியர்களை நடுங்க வைத்து, கைதியாகப் பிடித்துவிட்டார்கள். இத்தாலியரின் சூரத்தனமே சூரத்தனம்!

ஜெர்மன் நீர்மூழ்கிகள் அமெரிக்காவில், பனாமா கால்வாய் அருகே வேலைசெய்கின்றனவாம். பஸிபிக் மகா சமுத்திரத்திற்கும், அட்லாண்டிக் மகா சமுத்திரத்திற்கும் தொடர்பு உண்டாகும் இம்முக்கிய பிரதேசத்தைப் பாழாக்கிவிட ஜெர்மானியர் நினைக்கிறது போலிருக்கிறது. ஆனால் அது சுலபமா என்ன!

அமெரிக்காவிலே ஜப்பானிய ஐந்தாம் படையினர் ஏராளமாக இருக்கிறார்களாம். அவர்களின் வாலை அறுக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. அமெரிக்காவிற்கு, கிழக்கு ஆபிரிகாவிலே, செங்கடல் பிரதேசத்திலே ஒரு கடல் படைதளம் கட்டப்படுகிறது. தவிர, அமெரிக்கப் படைகளும் சீமைக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஜெர்மானியரை எதிர்ப்பதற்குத்



தான் இந்த ஏற்பாடுகள் எல்லாம். ஜெர்மனியின் இடுப்பை ஒடித்துவிட்டால், அப்புறம் ஜப்பானின் ஆட்டம் தானாகவே அடங்கிவிடாதா? இதை மனதில் வைத்துக்கொண்டே நேச தேசத்தார் புது திட்டங்கள் போட்டுவருகிறார்கள். அவர்களுடைய திட்டங்கள் அமுலுக்கு வருமுன், அவர்களுடைய சுய பலம் உச்ச நிலைமைக்கு வரவேண்டாமா? அதற்கிடையில் சில கெட்ட செய்திகள் வரக்கூடும். அவற்றிலிருந்தும் நல்ல பாடங்கள் கற்றுக்கொண்டு, தோல்விகளையும் வெற்றிகளுக்கானபடிகளாகவே மாற்றிக்கொள்வது தான் புத்திசாலிகளுக்கழகு. கஷ்டம் வந்த காலத்தில் கலங்குவது வீரர்களுக்கழகா என்ன?

ஜப்பானியர் ஹாங்காங்கிலே பல அட்டூழியங்கள் புரிந்தார்களாம். பிரிட்டிஷாரைக் கட்டிவைத்து, சனியனால் குத்திக்கொன்றார்களாம், ஸ்திரீகளைக் கற்பழித்தார்களாம். ஒரு ஜில்லாவையே விபசார விடுதிகள் நிறைந்த இடமென அறிவித்தார்களாம். இன்னும் சொல்வதற்கே நாக்குக் கூசும்படியான காரியங்களைச் செய்தார்களாம். இதற்கெல்லாம் இருக்கிறது பின்னால் அவர்களுக்கு!

இறுதிவெற்றி நமக்குத் தான். அப்பொழுது மேற்கண்ட பாதகச் செயல்கள் புரிந்தவர்களுக்கெல்லாம், சரியான மரியாதை செய்யப்படாமலா போகிறது. இப்போதைக்கு நாம் நம் நாட்டை ஜப்பானியர் கையில் விழாதபடிச் செய்வதோடு, நம்முடைய ஸ்வரூபத்தையும் காட்டி, ஒற்றுமையோடு எழுந்து நின்று, ஜப்பானியரது தோல்விக் களம் இது தான் என்று ரூபிக்கவேண்டிய கடமை நம் தலையில் விழுந்திருக்கிறது. இதற்கு உங்களாலான உதவியெல்லாம் செய்தே ஆகவேண்டும்!

### "பறக்கும் யுத்தக் கப்பல்"



பிரிட்டிஷ் விமானப் படையின் கரையோரப் பாதுகாப்புப் பகுதியைச் சேர்ந்த "சண்டர்லண்டு" விமானங்களுக்கு, "பறக்கும் யுத்தக் கப்பல்கள்" என்று பெயர். இவைகள் பலமான யுத்த முஸ்தீப்புடன், பிரிட்டிஷ் கப்பல்களுக்குத் தகுந்த ஆகாயப் பாதுகாப்பு அளிக்கின்றன. பிரிட்டனுடைய கடல் வழிகளையும், அட்லாண்டிக் கடலில் உள்ள 'கான்வாய்' துணை உதவிக் கப்பல் வழிகளையும், இவைகள் பாதுகாக்கின்றன. விமான முகப்பில் குறிபார்த்து சந்தேகப்படும்படியான ஒரு கப்பலின்மேல் குண்டு போடுவதற்குத் தயாராகும் காட்சியை படத்தில் காணலாம்.

# தூரக்கிழக்குப் பிரதேசத்தில் யுத்த நிலைமை

## எதிர்த்துத் தாக்குவதற்கு நேசநாடுகள் திட்டம்

### ஆஸ்திரேலியா, பர்மா, இந்தியா முயற்சிகள்

**உதவிவர வில்லை!**

தூரக்கிழக்குப் பிரதேச நிலைமையைப்பற்றி ஆலோசனை செய்வதற்கு முன் ஒரு விஷயத்தை நாம் நன்றாக உணரவேண்டும். அதாவது, அமெரிக்கா தன்னுடைய முழு பலத்தையும் சேகரித்து, தயார் செய்து, முடிவில் ஜப்பானைத் தோற்கடிக்கும் என்பதுதான். இதை மனத்தில் வைத்துக்கொண்டு, ஜப்பானுடைய ஆக்கிரமிப்பு வெற்றிகளைப் பற்றிக் குறிப்பிடலாம். படேவியா, பாண்டுங் ஜப்பானியர்களால் கைப்பற்றப்பட்டன. சுரபாயா என்ற கடற்படைத்தளம் ஜப்பானியர்கள் கைக்குப் போவதற்கு முன் நேச தேசத்தார்களால், "கரிந்தபூமி"க் கொள்கையின்படி, நாசம் செய்யப்பட்டது. ஜாவாவில் ஜப்பானியர்களுக்கு எதிர்ப்பு நின்று போய்விட்டது. ஜாவா தீவில், சில பாகங்களில் நேச தேசத் துருப்புகள் இன்னும் போராடிக் கொண்டுதானிருக்கின்றன. ஆனால், இவைகள் அதிக காலம் எதிர்த்துப் போராட முடியாது.

ஜாவாவில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதற்குக் காரணமென்ன? ஜப்பானியர்களுக்கு, அதிகமான துருப்பு பலம் இருந்தது; நேச தேசத்தார்களுக்கு, சரியான காலத்தில் வந்து சேர வேண்டிய சப்பல்

படை உதவியும், விமானப்படை உதவியும் வந்து சேரவில்லை. ஜாவாவில் உள்ள "நியூயார்க் டைம்ஸ் நிருபர்" ஒளி மறைவில்லாமல் சில விஷயங்களைத் தன்னுடைய அமெரிக்க நாட்டு மக்களுக்குத் தெரிவித்திருக்கிறார். அமெரிக்காவின் தொழிற்சாலைகளில் ஒரு வாரத்தில் செய்யப்படும் யுத்த தளவாடங்கள், சில அமெரிக்க யுத்தக் கப்பல்கள், ஒரு அமெரிக்கப் பட்டாளம், பிரிட்டனில் இருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் ஒவ்வொரு பட்டாளம்— இவைகளெல்லாம் இருந்தால், ஜாவா, பாலி, தெற்கு சுமாத்ரா ஆகியவைகளைப் பலமாதங்கள் வரைக்கும் பாதுகாக்கலாம் என்று அவர் கூறுகிறார். "சிகாகோ சன்" பத்திரிகையின் பிரபல நிருபரான மிஸ்டர் நிக்கர் பாக்கர், "நாம் ஜாவாவைத் தப்பவைத்திருக்கலாம்" என்று கூறுகிறார்.

ஜாவாவின் வீழ்ச்சி, சிங்கப்பூர் நஷ்டத்தைப்போல் ஒரு பெரிய நஷ்டம்தான்.

**அமெரிக்காவின் ஏற்பாடுகள்**

ஆனால் நிலைமை கூடிய சீக்கிரம் மாறப்போகிறது. அமெரிக்கா தன்னுடைய ராணுவத் தலைமையையும், கப்பற்படைத் தலைமையையும், சீர்திருத்தி பலப்படுத்தியிருக்கிறது. கப்பற்படை மந்திரி கர்னல் நாக்ஸ், ஐரோப்பாவிலுள்ள அமெரிக்கக் கப்பற்படை தளகர்த்தர் அட்மிரல் ஸ்டார்க், பசிபிக் கடலிலும், அட்லாண்டிக் கடலிலும் உள்ள அமெரிக்கக் கடற்படைத் தளகர்த்தர் அட்மிரல் கிங், பசிபிக் பிரதேசத்திலிருந்து வந்திருக்கும் அட்மிரல் ஹார்ட் ஆகிய தலைவர்களுடன் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கலந்து பேசியிருக்கிறார். பசிபிக் பிரதேசத்தில் ஜப்பானுடைய கடற்படை பலத்தை ஒடுக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று தெரிகிறது. அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் சுமார் 6 ஜப்பானிய யுத்தக்கப்பல்களை இந்த வாரம் நாசம் செய்திருக்கின்றன.

ஆஸ்திரேலியாவுக்கு ஆபத்து நெருங்கியிருக்கிறது. ஆனால் ஆஸ்திரேலியா மனச்சோர்வு அடையவேண்டிய அவசியமில்லை. அமெரிக்காவினுடைய உதவி நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. ஜப்பானியர்கள் நியூகினி என்ற தீவில் மூன்று இடங்களில், அதாவது சாலமுவா, லாயி, பின்ஸ்சேபன், இவைகளில் இறங்கியிருக்கிறார்கள். மோரெஸ்பி என்ற துறைமுகத்தை விமானங்களால் தாக்கியிருக்கிறார்கள்.

ஆஸ்திரேலியா, பாதுகாப்பு வேலை மாத்திரம் செய்யப்போவதில்லை; முன்னேறிச்சென்று, எதிரியைத் தாக்குவதற்கு திட்டம், தகுந்த ஆலோசனையின் பிறகு, போடப்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலிய மந்திரிகளும் ராணுவத் தலைவர்களும் சந்தித்து சில முடிவுகளுக்கு வந்திருக்கிறார்கள். எதிரியின் பிரதேசத்தில் யுத்தத்தை நடத்துவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியப் பிரதிநிதிகளும், நியூஜிலாந்து பிரதிநிதிகளும், எதிரியை எதிர்த்துத்தாக்குதல் விஷயமாக, சில கூட்டு ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள், இந்த ஏற்பாடுகள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும், அமெரிக்க அரசாங்கத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இது இப்படியிருக்க, இந்தியாவில், ஜெனரல் வேவெலின் தலைமையின்கீழ், பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆஸ்திரேலியாவிலிருந்து, ஜப்பானை எதிர்த்துத் தாக்குவதற்கு தளம் ஏற்படுத்தப்பட்டிருப்பதைப்போல

**இந்தியாவும், ஜெனரல் வேவெலும்**

இந்தியாவிலும் ஜப்பானை எதிர்த்துத்தாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. லஷியோ என்ற இடத்தில் ஜெனரல் வேவெல், மார்ஷல் சியாங்கே ஷெக்கைச் சந்தித்து யுத்த நிலைமையைப் பற்றிப் பேசின பிறகுதான், ரங்கூனிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் பின் வாங்கிச் சென்றன.

இப்போது, சீனாவுக்குச் செல்லும் பர்மா ரோட்டையும், மத்திய பர்மா பிரதேசத்தையும், இந்திய துருப்புகள் சீனத் துருப்புகளுடன் சேர்ந்து பாதுகாப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ரங்கூனிலிருந்து நமது துருப்புகள் பின்வாங்குவதற்கு முன், அங்குள்ள கப்பல் சாலைக்கட்டடங்கள் எண்ணெய் சுத்தம் செய்யும் சாலைகள், யந்திரங்கள் முதலியவை எல்லாம் அழிக்கப்பட்டன டில்லியிலிருந்து இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட அறிக்கையில் சிலவிவரங்கள் காணப்படுகின்றன. அந்த அறிக்கை கூறுவதாவது:—

"பெகூ என்ற இடத்தில் நமது துருப்புகள் சுற்றி வளைத்துக்கொள்ளப்பட்டதாலும், பாகிர் ஆற்றுக்கு வடக்கிலும், ரங்கூன் ஆற்றுக்கு மேற்குக் கரையிலும் ஜப்பானியர்கள் இறங்கிவிட்டதாலும், ரங்கூனிலிருந்து நமது துருப்புகள் வெளியேறும் படியான நிலைமை ஏற்பட்டது."

பர்மாவில் நடக்கும் சண்டையில், அமெரிக்க விமானிகளும், இந்திய விமானப் படையினரும், பிரிட்டிஷ் விமானப்படையினரும் தங்களுடைய திறமையையும், மேன்மையையும் காட்டிக்கொண்டு வருகிறார்கள்.

**ஜப்பானுடைய நஷ்டம்**

அவர்களெல்லோரும் சேர்ந்து ஜப்பானியர்களுக்கு ஏராளமான நஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். நமக்கு 1 பங்கு நஷ்டமென்றால் ஜப்பானியர்களுக்கு எட்டு பங்கு நஷ்டம் ஏற்படுத்தினார்கள்.

மற்றொரு முக்கியமான விஷயம், லெப்டினண்டு ஜெனரல் சர் ஹெரால்டு அலெக்சாண்டர் பர்மாவின் பிரதம தளகர்த்தராக நியமிக்கப்பட்டிருப்பதாகும். அவர் ஒரு சிறந்த தளகர்த்தர். சென்ற யுத்தத்திலும், இந்த யுத்தத்திலும், ஜெர்மன் யுத்த முறைகளை நேரடியாக அறிந்து அனுபவம் பெற்றவர். "பாதுகாப்பில் இருந்தாலும் கூட எதிர்த்துத்தாக்க வேண்டும்" என்று அவர் கூறியது பட்டாளத்தில் ஒரு நன்மொழியாகக் கொண்டாடப்படுகிறது.

சர் ஹெரால்டு அலெக்சாண்டர், ஜெனரல் வேவெல் மார்ஷல் சியாங்கே ஷெக், இவர்களுடைய தலைமையின் கீழிருக்கும் துருப்புகள். நேச நாடுகள் பலம் சேகரித்து, எதிர்த்துத்தாக்கும் வரையில் பர்மாவையும், அல்லது குறைந்த பட்சம் இந்தியாவையும், பாதுகாத்துப் போராடும் என்பதில் சந்தேகமில்லை.

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் வருஷம் மார்ச்சு மீ 20உ, வெள்ளிக்கிழமை [இதழ் 11

## சீன---இந்திய உறவு

### ஜெனரல் சியாங்கே ஷெக்கின் இந்திய விஜயம்

### சீனப் பத்திரிகைகளின் கருத்து

சீனாவின் பிரதம தளகர்த்தராகிய ஜெனரல் சியாங்கே ஷெக், இந்தியாவிற்கு விஜயம்செய்தது பற்றி சுங்கிங் ரேடியோ மூலம் மிஸ்டர் எஸ். எச். ஸ்மித் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

உலக ஜனத்தொகையில் மூன்றிலொருபங்கு மக்கள் இந்தியாவிலும் சீனாவிலும் வசிக்கின்றார்கள். இந்த இரண்டு நாடுகளின் சம்பந்தம், நல்லுணர்ச்சியாலும், பரஸ்பர நேசத்தாலும் ஏற்பட்டிருக்கிறது. ஜெனரல் சியாங்கே ஷெக் இந்தியாவிற்கு விஜயம்செய்ததினால், இந்த நல்லுறவு இன்னும் பலப்பட்டிருக்கிறது. இவர் இந்தியாவிற்கு வந்த செய்தி, உலகம் முழுவதும் ஒரு பிரமிப்பை உண்டாக்கி யிருக்கிறது. இவர் சீனத் தலைவராக மாத்திரம் இந்தியாவிற்குச் செல்லவில்லை; சீனா, தாய்லாந்து, இந்தோ சீனா ஆகிய நாடுகளின் நேசதேச சேனைத் தலைவராகவும் அவர் அங்கு சென்றார். அங்குள்ள பலதிறப்பட்ட கூட்டத்தாரும் அவரைச் சிறப்புடன் வரவேற்றது இந்திய மக்கள் அவரிடம் வைத்துள்ள மதிப்பைக் காட்டுகிறது.

'மகத்தான கிழக்காசியா' வைத் தாங்கள் ஏற்படுத்தப்போவதாக ஜப்பானியர்

**மகத்தான கிழக்காசியா.**

கூறுவதன் காரணத்தைப்பற்றி ஜெனரல் சியாங்கே ஷெக் இந்தியத் தலைவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியிருப்பார். ஜப்பானியர் கூறும் 'மகத்தான கிழக்காசியா' வென்பது ஒரு கற்பனைத் தோற்றமேயொழிய வேறல்ல. ஜப்பானியர் ஆதிக்கத்திலுள்ள பிரதேசங்களில் உள்ள ஆயிரக்கணக்கான சீனர்களை அவர்கள் நடத்தும் முறையே அவர்கள் கூறுவது ஒன்று, செய்வது மற்றொன்று என்பதைக் காட்டுகிறது. இவர்களுடைய காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளினால் வறுமை தலைவிரித்தாடுகிறது. இன்பம் பொங்கிவழிந்த இடத்தில் துன்பம் தாண்டவமாடுகிறது; சுயேச்சையாய் இருந்த மக்கள் அடிமைகளாக்கப்பட்டார்கள். இன்னும் எதற்காக இதை விவரிக்கவேண்டும்? சீனர்களுக்கு இந்த விஷயம் நன்றாகத்தெரியும்; அதிலும் இதைப்பற்றி சியாங்கே ஷெக்கைவிடத் தெரிந்தவர் யாருமில்லை.

ஜெனரல் சியாங்கே ஷெக் சென்ற 5 வருடங்களாக பேராசைப் பேய்பிடித்த ஜப்பானைத் தடுத்துக்கொண்டேயிருக்கிறார். இப்போது ஜப்பானின் தலைநகரமாகிய டோகியோவிலிருந்து அதிகதூரம் ஜப்பானியப் பேயின் ஆதிக்கம் பரவியிருக்கிறது.

இந்தியாவையும் பிடிக்கவருகிறது. ஜெனரல் சியாங்கே ஷெக் இந்திய மக்களுக்கு வந்துகொண்டிருக்கும் அபாயத்தையும் ஜப்பானுடைய உண்மையான நோக்கங்கள் என்ன என்பதைப் பற்றியும் தெளிவாக இந்தியர்களுக்குக் கூறியிருக்கக்கூடும்.

ஜப்பானியர்கள் மூன்று ஆயுதங்களை உபயோகிக்கின்றனர். அவையாவன:—

**ஜப்பானியர் தளவாடங்கள்**

1. வீண் வாக்குறுதிகள், 2. பெரும் பொய்கள், 3. மற்றவர்கள் மேல் வீணாகக் குற்றஞ்சுமத்துதல்; இந்த மூன்று பாடங்களும் ஜெர்மானியரிடம் இருந்து கற்றுக்கொண்டவை. உதாரணமாக, இந்தியச் சேனைகளுக்குள் மிகுந்த மனக்கசப்பு ஏற்பட்டுவிட்டதாகத் தம் ரேடியோவில் வெகுவாகத் தெரிவிக்கிறார்கள். உண்மையிலேயே, இந்தியத்துருப்புகள் மிகச் சிறந்த முறையில் தம் கடமைகளை நிறைவேற்றிப் புகழ் பெற்றிருக்கின்றன. இது எவ்வளவு இழிவான பிரசாரம்!

இந்த யுத்தத்தில் இந்தியாவும் சீனாவும் இன்னும் நெருங்கிய கூட்டுறவு கொள்ளவேண்டும்.

**சீனாவுக்குத் தளவாட உற்பத்தி ஸ்தலம்.**

ஏனென்றால், ஜப்பானியர்களோடு சீனர்கள் நடத்தும் போருக்கு இந்தியாதான் தளவாடங்கள் உற்பத்தி செய்து அனுப்புமிடமாக அமையவேண்டும். இந்த இரு நாடுகளிலும் ஏராளமான மனித பலமுண்டு. இந்தியாவின் உதவி சீனாவுக்குத் தேவை; அது போலவே, சீனாவின் உதவி இந்தியாவுக்குத் தேவை.

இந்திய மக்களிடையே ஜெனரல் சியாங்கே ஷெக்குக்கு அதிகச் செல்வாக்குண்டு. முஸ்லீம்களுக்குள்ளும் இவருக்கு அதிகச் செல்வாக்கு இருக்கின்றது. ஏனென்றால் சீனாவில்மட்டும் 1½ கோடி முஸ்லீம்கள் வசிக்கிறார்கள். அன்றியும் இவர் இந்தியாவிற்கு விஜயம் செய்யுமுன்பே, இந்தியத் தலைவர்களுள் ஒருவரான பண்டித ஜவஹர்லால் நேரு, சுங்கிங் நகரத்திற்குச்சென்று ஜெனரல் சியாங்கே ஷெக்குடன் உறவு கொண்டிருக்கிறார். அப்போதே ஜப்பானியரை முறியடித்து வெல்லுகிறவரைத் தம்முயற்சிகளைக் கைவிடுவதில்லை என்ற முடிவுக்கு அங்கே எவ்வளவு பலமுண்டு என்பதை பண்டிதர் நேரு நேரில் கண்டவர் தான்.

இவர், தன் இளமையிலேயே போர்த்திறப் பயிற்சியை ஜப்பானில் பயின்றவர்.

**சியாங்கே ஷெக் வரலாறு.**

1923-ம் வருஷம் மாஸ்கோவிற்குப் போனார். அங்கே, செஞ்சட்டை வீரர்களின் அமைப்பைக் கற்றார். இவர் ஜனத்தலைவர் ஆனபிறகு தன் நாட்டைவிட்டு வெளியேறியது இதுதான் முதல் தடவை. இவர் எவ்வளவு திறமைசாலியோ அவ்வளவிற்கு அவருடைய மனைவியாரும் சிறந்த திறமைசாலி. பாசிஸத்தை நசுக்குவதற்காக நடக்கும் இந்த யுத்தத்தில் இந்தியாவின் பொறுப்பு மகத்தானது.

**சீனப் பத்திரிகைகள் கூறுவது.**

ஒரு சீனப் பத்திரிகையின் தலையங்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:—

"இந்தியா மீது ஜப்பானுக்கும் நாஜிகளுக்கும் நெடுநாட்களாகக் கண். எனவே, இந்தியர்களுக்குள்ளாக, மிகுந்த வேற்றுமைகளை யுண்டாக்க எதிரிகள் பலவகைகளிலும் வேலைசெய்து வருகிறார்கள். இதன் பயனாக மக்களிடையே மிகுந்த ஒற்றுமை தான் ஏற்பட்டது. யுத்தத்தில் ஏராளமான மக்கள் ஈடுபட்டிருப்பதுவே இதற்குப் போதுமான காரணமாகும்."

மற்றொரு பத்திரிகை கூறுவதாவது:—

"ஆசிய மக்களின் விடுதலைக்கு, ஜெனரல் சியாங்கே ஷெக் இந்தியாவிற்குப் போய் அஸ்திவாரம் போட்டுவிட்டார்."

அன்றியும் 'தா குங் போ' என்ற மிகுந்த செல்வாக்குள்ள மற்றொரு பத்திரிகை கூறுவதாவது:—

"ஜப்பானியரின் அக்கிரமத் தழல்கள் இந்தியாவை நெருங்கிவிட்டன. ஜெனரல் சியாங்கே ஷெக் இந்தி

யாவிற்கு வந்ததினால் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் மிகுந்த நெருக்கமான தொடர்பு ஏற்படும். சீனாவின் நிலைமையும், இந்தியாவின் நிலைமையும் அந்தந்த நாடுகளின் கைகளிலேயே இருக்கின்றன. அவைகள் விரும்பினால், நிலைமையைச் சமாளித்து வெற்றியடையலாம்.

சீனாவிற்கும், இந்தியாவிற்கும் ஒருவகை ஒற்றுமையை உண்டாக்க இதற்குமுன் 2,000 ஆண்டுகளுக்குமுன் முயற்சி செய்யப்பட்டது. இந்து மகா சமுத்திரம், இந்தியாவிற்கும் சீனாவிற்கும் உரியது. இதைத் தாங்கள் பயன்படுத்திக்கொள்ள ஜப்பானியர் பார்க்கிறார்கள். இந்தப் பேராசையில் மண் போட வேண்டியது சீனா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளின் கடமையாகும்.

# சீனாவின் நான்கு லட்சியங்கள்

## மார்ஷல் சியாங்கே ஷெக்கின் ரேடியோ பிரசங்கம்

### “முடிவில் வெற்றி நம்முடையதே”

**உண்மையான போர்.** சீனத் தலைவர், மார்ஷல் சியாங்கே ஷெக் சமீபத்தில் ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். அதன் சாராம்சம் பின்வருமாறு: உண்மையான போர் இப்போது தான் ஆரம்பமாகி யிருக்கிறது. எனவே, சீனமக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். இறுதியில் வெற்றி அடையும் பொருட்டு பல வகைகளிலும் தியாகங்கள் செய்ய முன்வர வேண்டும். முன்னையைவிட மிக அதிகமாக யுத்தத் தளவாடங்களைச் செய்து குவிக்க வேண்டும். இதற்கு, சீனாவின் இயற்கைப்பொருள்களை ஏராளமாக எடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

வெற்றி நம்முடையதே. நான் சீன மக்களுக்குக் கொடுக்கும் வாக்குறுதி இது தான். நமக்கும் நம் நேச சர்க்கார்களுக்கும் தான் வெற்றி என்பது பற்றி கொஞ்சங்கூடச் சந்தேகமே கிடையாது. ஆனாலும் நாம் இந்த வெற்றியடையும் முன்பு, நேச தேச மக்கள் பெருங் கடமையொன்று செய்யவேண்டியது உண்டு. அதாவது மேலும் தியாகங்கள் செய்யத் தயாராயிருக்கவேண்டும்; அன்றியும் நெடுநாள் போராட்டத்திற்கும் தயாராயிருக்க வேண்டும். ஏனென்றால், பஸிபிக் மகா சமுத்திரத்திலும் அதையடுத்துள்ள நாடுகளிலும் தனியரசு செலுத்த வெண்டுமென்று ஜப்பான் மனப்பால் குடித்துக்கொண்டு வந்திருக்கிறது. இன்றையத்தினம் ஜப்பான் கப்பல்கள் நாலாபக்கங்களிலும் திரிந்து கொண்டிருக்கின்றன. ஜப்பானியர் படைகளும் எல்லாத் திசைகளிலும் பரவியிருக்கின்றன. எதிரியைச் செம்மையாக அடித்து நசுக்கி எறிய வேண்டிய நிலைமை நேச நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

**சீனாவின் பங்கு.** இந்தப் போராட்டத்தில் சீனாவும் முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். பஸிபிக் யுத்தம் ஆரம்ப காலம் முதல், ஆசியாக் கண்டத்திலேயே யுத்தத் தளவாடங்கள் ஊற்று நீர் போல ஜப்பானில் தயாரிக்கப்பட்டன.

இந்த யுத்தத்தில் சீனா எந்த வகையில் தன் கடமையை நிறைவேற்ற முடியும்? நடப்பு வருஷத்திலே நான்கு விஷயங்களிலே மக்கள் தம் கவனத்தைச் செலுத்த வேண்டும்; அவையாவன:—

(1) உற்பத்தியைப் பெருக்க சீன மக்கள் முயற்சிக்க வேண்டும். பொதுவாக உண்ணவும், உடுக்கவும், இருக்கவும் தேவையான பொருட்கள் மட்டுமன்றி போராடவும் தேவையான பொருள்களைச் செய்து குவிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

(2) தேசீயப் பாதுகாப்பை முன்னிட்டு இயற்கை சம்பந்தமான அறிவுநூல்களை மக்களிடையே பரவச் செய்யவேண்டும்.

(3) நேச சர்க்கார்கள் வெற்றியடைவதற்கான எல்லா உதவிகளும் செய்யவேண்டும்.

4. படை திரட்டும் தெய்வீக இயக்கத்தின் போக்கை துரிதப்படுத்த வேண்டும். ஏனென்றால், “லௌகீக ஆற்றலைவிட தெய்வீக ஆற்றலே மிகவும் உயர்ந்தது”

#### நியாயப் போர்

தெய்வீகத் துறையில் ஜப்பானைவிட நேச தேசங்கள் மிகவும் ஓங்கி யிருக்கின்றன. எப்படியென்றால், நியாயத்திற்காகவும், விடுதலைக்காகவும், சமத்துவத்திற்காகவும் நேச தேசங்கள் போராடுகின்றன; ஆனால் நம் எதிரிகளோ தம் பேராசையை நிறைவேற்றிக்கொள்ளும்பொருட்டு மட்டுந்தான் போராடுகிறார்கள். “நியாயத்தை அநியாயம் ஒரு போதும் வென்றதில்லை.”

தெய்வீக சக்தியினால் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கும், லௌகீக சக்தியினால் நூற்றுக்குப் பத்து பங்கும் வெற்றி கிடைக்கும். எப்படியென்றால், ஒரு நாட்டின் தெய்வ சக்தி யெல்லாம் திரட்டினால் அஃதுடன், அந்நாட்டிலுள்ள லௌகீக சக்தியும் தானாகவே திரண்டு விடுகிறது.

#### நேச தேச பலம்

அன்றியும், சீனா, அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகள், சோவியத் ருஷ்யா, நெதர்லாந்துகள், ஆஸ்திரேலியா முதலிய விடுதலையை நாடும் தேசங்களெல்லாம் ஒன்று திரண்டு இருக்கும்போது, மனித பலத்திலாவது எல்லை பலத்திலாவது, வருமான பலத்திலாவது நம் எதிரிகள் எதிர்த்து நிற்கமுடியுமா?

இவற்றைக்கொண்டு நாம் ஆராய்ச்சி செய்வோமானால், இந்த அக்கிரமக்காரர்களை எதிர்த்துப் போராடுவதில் முன்னணியிலிருப்பது சீனாதான் என்று கருதப்படவேண்டும். உலகம் முழுதுமே ஏற்படவிருக்கும் இந்த அக்கிரம யுத்தம் பரவவொட்டாமல் தடுக்கவே சென்ற $4\frac{1}{2}$ வருஷங்களாகச் சீனர்கள் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

# இந்தியாவிலிருந்து மெக்காவுக்கு யாத்திரீகர்கள்

## யுத்தகாலத்தில் நடக்கும் கடற் பயண விவரங்கள்

### இந்தியாவிலிருந்து ஹாஜ் யாத்திரீகர்கள்

யுத்த காலத்திலுள்ள நெருக்கடியான நிலைமையிலுங்கூட ஹாஜ் யாத்திரைக்கு ஏராளமானவர்கள் இந்தியாவிலிருந்து மெக்காவுக்கு சென்றிருந்தார்கள். மெக்காவின் முக்கிய பரிசுத்த ஸ்தலமாகிய காபாவில் சுமார் 10,400 யாத்திரீகர்கள் எழுமுறை, சென்ற டிசம்பர் மாதம் 28-ம் தேதியன்று அதாவது ஹாஜ் நாளன்று, வலம் வந்திருக்கிறார்களென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவர்களுள் 5,000 பேர் சமீபத்தில்தான் இந்தியாவிற்குத் திரும்ப வந்து சேர்ந்திருக்கிறார்கள். இன்னு 5,400 பேர்கள் வந்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு முஸ்லீமும் தன் வாழ் நாளில் ஒரு முறையாவது ஹாஜ் நாளன்று ஹாஜ் சடங்கை



செய்து தீரவேண்டுமென்பது முஸ்லீம் மதபோதனைகளுள் ஒன்று. பணவசதியும் மற்ற வசதிகளுமுடையவர்கள் தாங்களே மெக்காவுக்கு யாத்திரை செல்கிறார்கள். நேரில் போக முடியாதவர்கள், தம் சார்பாக வேறொருவரைத் தம் செலவில் அனுப்பி அந்தச் சடங்குகளைத் தம் பெயரால் செய்யும்படி ஏற்பாடு செய்வதும் உண்டு.

**ஹாஜ் சடங்குகள்.** இங்கே, ஹாஜ் சடங்குகள் எவை என்பது பற்றி சில வார்த்தைகள் கூறலாம். அரகாவில் “இரக்கக் குன்று” என்ற மலையைச் சுற்றியும், யாத்திரிகர்கள் கூடுவது வழக்கம். இந்த மலை மெக்கா நகரத்திற்குக் கொஞ்ச தூரத்திலிருக்கிறது. அங்குள்ள மீனா என்ற குகையில் கல் வீசுவது ஒரு சடங்கு. பலி கொடுத்தல், பூஜை, சாப்பாடு, யாத்திரீகர்கள் மொட்டையடித்துக் கொள்ளுதல், ‘காபா’ வைச் சுற்றி பிரதட்சணம் செய்தல் ‘கருப்புக் கல்லை’ முத்தமிடுதல் முதலியன, சில இதரச் சடங்குகள்.

இந்தச் சடங்குகளை எல்லாம் முடித்துவிட்டு, சமீபத்தில் பம்பாயிலும் கராச்சியிலும் ஹாஜ் யாத்திரீகர்களுள் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், வந்திறங்கினார்கள். அவர்கள் இந்தியாவின் பல மாகாணங்களையும் சேர்ந்தவர்கள். சில சீன யாத்திரீகர்களும் வந்திறங்கினார்கள். இவர்களும் ஹாஜ் யாத்திரீகர்கள் தான். இவர்களுக்கு இந்திய மொழிகள் ஒன்றும் தெரியாது. முஸ்லீம் மதப்பற்று இவர்களுக்கு மிகுதியும் உண்டு. இவர்கள் திபேத்து வழியாக இந்தியாவிற்கு வந்து ஹாஜ் யாத்திரையை மேற்கொண்டவர்கள்.

இந்த யுத்த காலத்திலுங்கூட இந்த ஹாஜ் யாத்திரைக்காகக் கப்பல்கள் விடுத்த அதிகாரிகளுக்கு அவர்கள் நன்றி கூறினார்கள். சென்ற இரண்டு வருஷங்களில் யாத்திரை செய்தவர்களைவிட இந்த வருஷம் அதிகம் பேர்கள் யாத்திரை செய்திருக்கின்றார்கள்.

மொகல் லைன் கப்பல்களில் மிகவும் அதிகமான பேர்கள் பிரயாணம் செய்தார்கள் என்று சர்க்கார் கருதி அதிகப் பேருக்கு இடசௌகரியம் செய்திருந்தார்கள். ஆனால், சர்க்கார் கணக்கிட்டதை விட 100க்கு 40 பங்குக்கு அதிகமான யாத்திரீகர்கள் அதில் பிரயாணம் செய்தார்கள்.

அன்றியும், எல்லாப் பொருள்களின் விலையும் உயர்ந்துவிட்டபடியால், கடற்பிரயாணத்தின் போது, முந்திய வருஷங்களைவிடச் சற்று அதிகமான செலவு ஏற்பட்டது.

இந்தியாவிலிருந்து கப்பல் புறப்பட்டது முதல், திரும்ப வந்துசேரும் வரை, நேர்ந்த சம்பவங்களைக் குறித்து அநேகக் கதைகள் கூறுகிறார்கள். முக்கியமான சம்பவம் எதுவுமில்லையானாலும், முதன் முதல் யாத்திரை செய்கிறவர்கள் அக்கரை கொள்ளத்தக்க அநேகக் கட்டங்கள் இருந்தன. சீதோஷ்ணம் நன்றாயிருந்தது. கடலில் கொந்தளிப்பில்லை. சாந்தமாகவேயிருந்தது, யாத்திரீகர்களின் உடல் நிலை பொதுவாக மிகவும் திருப்திகரமாகத் தான் இருந்தது.

**வழிபாடும் தியானமும்.** கப்பல் பிரயாண காலம் முழுவதும் இரவில், ‘ப்ளாக் அவுட்’ திட்டம் அனுசரிக்கப்பட்டது; விளக்கே கொளுத்தப்படவில்லை. ஹாஜ் யாத்திரீகர்களுள் பெரும்பாலானவர்கள் இதை, வெறுக்கத்தக்கதோர் தடையாகக் கருதவே இல்லை. ஏனென்றால் அவர்கள் இறைவனை வழிபடுவதிலும் தியானத்திலுமே பொழுதைக் கழித்துக் கொண்டு வந்தார்கள். திரும்பிவரும் போது உடற்பயிற்சி முறைகளில் கலந்துகொள்ள விரும்பாத ஒரு வயது சென்ற ஹாஜி, “நாம் தான் ஏற்கெனவே சுகமாக வீடுதிரும்பும்படியும் பிரிட்டன் வெற்றி பெற வேண்டுமென்றும் கோரி கடவுளைத் தொழுதிருக்கிறோமே” என்று கூறினார்.

# ஜப்பானியக் கைதிகள் நடத்தப்படும் முறை

## சீனக்கைதிக் கொட்டடியில் வாழ்க்கை

உலக மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்னும் உயர்ந்த தத்துவத்தை உலகத்துக்கு எடுத்துக்கூறிய பெரியவர்களுள் கன்ப்யூஸியஸும் ஒருவர். சர்வதேச நல்லுறவை நிலை நாட்டவேண்டுமென்பது சீன ஜனநாயக முதல் தலைவரான டாக்டர் சன் யாட் சென் அவர்களுடைய கொள்கை. இந்த இரு கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டுதான் தாங்கள் கைப்பற்றிய ஜப்பானியக் கைதிகளைச் சீனர்கள் நடத்தி வருகிறார்கள். ஒரு சீன யுத்தக் கைதிக் கொட்டடியில் ஜப்பானியக் கைதிகள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பது கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து தெரியவரும்:—

பல யுத்தக் கைதிகள். மூன்று நாடுகளைச் சேர்ந்த ஆண்களும் பெண்களுமிருக்கிறார்கள். அக்கிரம யுத்தக்காரர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த வாயில்லாப் பூச்சிகள். இவர்களுக்கு சுங்கின் நகரத்திற்கு அருகில் ஒரு காவற்கூடம் அமைத்திருக்கிறார்கள். தாங்கள் இதுவரை வாழ்ந்து வந்த கஷ்ட வாழ்விற்கும் இப்போது நடத்தும் சௌக்கியமான வாழ்விற்குமுள்ள வேற்றுமையை அவர்கள் நன்கு உணருகிறார்கள். இவர்களுள் அநேகர் கைதியாகுமுன் காயப்பட்டவர்கள். கொஞ்ச நாட்களுக்குமுன் மக்களைக்கொன்று சாய்க்கும் கொடுஞ் செயலில் ஈடுபட்டிருந்த இவர்கள், தாம் அக்கொடுஞ் செயல்களைச் செய்யாதிருக்கத் தருணம் கிடைத்ததே என்று பெரும் மகிழ்வோடிருக்கின்றனர்.

**துப்பறிபவர்கள்.** இவர்களுள் பெரும்பாலோர் ஜப்பானியர், 30 பேர் கொரியாக்காரர்கள். ஒருவர் உக்ரேனியா வாசி. இவர் சீனப் படைகளிடையே யிருந்து துப்பறிந்து ஜப்பானியர்களுக்கு உளவு கூறும்போது கைது செய்யப்பட்டவர். அங்குள்ள பெருங் கூட்டத்தில் 6 பேர்கள் கொரியா பெண்கள். ஜப்பானியப் படைகளுக்கு மகிழ்வுண்டாக்கும்பொருட்டு படைகளோடு வந்தவர்கள். அங்குள்ளவர்களில் மிகவும் உயர்ந்த உத்தியோகஸ்தர் ஜப்பானிய குதிரைப் படையைச் சேர்ந்த கர்னல். மற்றவர்களெல்லாம் சாதாரண சிப்பாய்களும் படைத்தலைவர்களும் தான். அவர்களுள் நன்கு பயின்றவர் ஒரு கல்லூரியின் ஆசிரியர். ஜப்பானியக் கைதிகள் அனைவருக்கும் எழுதப்படிக்கத் தெரியும்; ஆனால் கொரியாக்காரக் கைதிகளுக்குத் தெரியாது. ஏனென்றால் அவர்கள் ஜப்பானிய அரசாங்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். எனவே, கல்வி வசதிகள் எதுவும் கொரியாவில் கிடையாது.

**நல்ல வாழ்க்கை.** ஜப்பானியக் கைதிகள் காவற் கொட்டடியில் நன்கு அமைக்கப்பட்ட வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். காலை 5 மணிக்கு எழுந்து பெயர் கொடுக்கவேண்டும். பிறகு உடற் பயிற்சி; 7 மணிக்குக் காலை உணவு. காலை 9 மணி முதல் 11 மணி வரை கல்வி பயிலலாம். பிறகு பகலுணவு; 2 மணி நேரம், 2 முதல் 4 மணி வரை, ஓய்வு. அப்போது அவர்கள் வகுப்புகளுக்குப் போய்த் தம் விருப்பம்போல எதை வேண்டுமானாலும் எழுதலாம், படிக்கலாம். இன்னின்ன பாடங்கள் தான் நடைபெற வேண்டுமென்னும் கட்டுப்பாடான நியதி கிடையாது. மாலை 4 மணிக்கு நீராடுகிறார்கள்; $5\frac{1}{2}$ மணிக்கு உணவருந்துகிறார்கள். 6 மணிக்குமேல் களியாட்டங்களில் இறங்குகிறார்கள். ‘பிங்பாங்’, ‘சதுரங்கம்’ முதலியன ஆடுகிறார்கள். 9 மணிக்குப் பெயர் கொடுத்துவிட்டு உறங்குகிறார்கள்.

**மொழிப் பயிற்சி.** அநேக ஜப்பானியக் கைதிகளும், கொரியக் கைதிகளும் தம் காவலாளிகளுடன் சீன மொழியைப் பயின்று வருகிறார்கள்; அதுபோலவே சீனக் காவலாளிகளும் ஜப்பான் மொழியையும் கொரியா மொழியையும் பயின்று வருகிறார்கள். மொழிகள் தெரியாத காரணத்தினால்

முன்பு அநேக தப்பெண்ணங்களுக்கு இடங் கொடுத்துவிட்டது. எனினும் இப்போது நிலைமை மாறிவிட்டது. அவர்களுக்குள்ளாக ஒரு வகைச் சகோதர உணர்ச்சி தழைத்து வருகிறது. சில கைதிகள் பிடிவாதக்காரர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதமான வார்த்தைகள் கூறியுங்கூடக் கேட்க மறுக்கிறார்கள். எனினும் இக் காவற் கூடத் தலைவரான கர்னல் த்ஸோ, நிலைமை விரைவில் முன்னேற்றமடையும் என்று நம்புகிறார்.

**சொந்தச் சாப்பாடு.**

தம் சாப்பாட்டைத் தாமே சமைத்துக்கொள்ள இக்கைதிகள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். தம் இஷ்டம்போல் வேண்டியதைச் சமைத்துண்ணலாம். ஒவ்வொரு புதன்கிழமையும் ஜப்பானிய மிட்டாய்போன்ற மிட்டாய் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. திராட்சை ரசமும் சிகிரெட்டும் உண்டு.

புகை பிடிப்போருக்கு நாள் ஒன்றிற்கு ஒரு டப்பி சிகிரெட் வழங்கப்படுகிறது. ஒரு வாரத்திற்கொரு முறை 4 அவுன்ஸ் திராட்சை ரசம் வழங்கப்படுகிறது. இது ஜப்பானிய திராட்சை ரசத்தைப்போலிருக்காதாலும், ஏறக்குறைய அதையொத்திருக்கும்.

**கடிதங்கள் எழுதலாம்.**

கைதிகள் கடிதங்கள் எழுதலாம். இவர்கள் எழுதும் கடிதங்களையும், இவர்களுக்கு வருகிற கடிதங்களையும், தணிக்கை செய்து தான் அனுப்பப்படும். அவர்களுடைய சொந்த ஊர்களிலுள்ள உறவினர் முதலியோரிடமிருந்து துணிகளோ ரொக்கமோ தருவித்துக் கொள்ளலாம். இப்படியாகப் பெரும் நிதியைத் (ஜப்பானிய நாணயங்களாக) திரட்டிவிட்டார்கள். பெரும்பாலும் மஞ்சூரியாவிலிருந்து தான் இத் தொகைகள் வருகின்றன. ஜப்பானிலிருந்து வருவது கிடையாது. ஏனென்றால் அங்கே கட்டுப்பாடுகள் மிகவும் அதிகம்.

**விசேஷ சிகிச்சைகள்.**

யுத்தத்தில் காயம்பட்ட கைதிகளுக்கு இன்னும் விசேஷ சிகிச்சைகள் நடைபெறுகின்றன. அன்றியும் பால், சிவப்பு மொச்சைக்கொட்டை, உருளைக்கிழங்கு முதலிய சத்தான இலகுவில் சீரணிக்கத்தக்க, உணவுகள் அளிக்கப்படுகின்றன.

இந்தக் காவற்படைச் செலவை ஈடு செய்துகொள்ளத்தக்கபடி ஏதேனும் ஒரு திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கர்னல் த்ஸோ இப்போது முயன்று கொண்டிருக்கிறார்.

---

# உலக யுத்தப் போக்கு

## ஜப்பான் சமரச எண்ணங்கள்

### சீனாவில் "இந்திய நாள் கொண்டாட்டம்"

**ஜப்பான் திட்டம்.**

ஜப்பான் அரசரின் பெயர் மிக்காடோ. 1927-ம் வருஷம் அவருக்குப் பிரதம மந்திரியாயிருந்தவர் பெயர் தனுகா. இவர் ஜப்பானிய ராஜாவுக்கு ஒரு திட்டம் தயார் செய்து கொடுத்தார். இதில் அவர் குறிப்பிட்ட திட்டத்தின் படியேதான் ஜப்பானிய யுத்தம் நடக்கிறது என்று சொல்லலாம். இதில் சீனாவை வெல்ல வேண்டி, அமெரிக்க ஐக்கிய மாகாணங்களையும், மஞ்சூரியாவையும், மங்கோலியாவையும் வெல்லவேண்டும்; உலகத்தைக் கட்டியாள வேண்டும்; இதற்கு சீனாவை ஜெயித்தே தீர வேண்டும். அப்போது ஆசியாவிலுள்ள மற்ற நாடுகள் நமக்கு அஞ்சிப் பணிந்துவிடும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இதுதான் அந்தப் பிரதம மந்திரியின் திட்டம். இதையொட்டி 1927-ம் வருஷம் ஜூலை மீ முதல் முதல் ஜப்பானியர் சீனா மீது படையெடுத்தனர். 1941-ம் வருஷத்திற்குள் சீனாவைச் சேர்ந்த 11 மாகாணங்களை ஜெயித்து குடியேறி விட்டார்கள்.

ஹாங்கோ என்பது சீன தேசத்தைச் சேர்ந்த ஒரு மாகாணம். அங்கே சமீபத்தில் ஒரு போர் நடந்தது. அதில் ஜப்பானியர் படுதோல்வியடைந்தனர். இப்போது மீண்டும் 30,000 பேர் கொண்ட சேனையோடு போர் தொடுத்திருக்கிறார்கள். இந்தப் போரிலும் படுதோல்வியடைவார்கள் என்பது நிச்சயம். எப்படியென்றால், இந்த 30,000 பேர்களும் சிறுசிறு படைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அல்லாமலும் இவர்கள் ஜப்பானியர்களல்ல; ஆனால், மஞ்சூரியர்களும் கொரியர்களும் தான்.

ஜப்பான், மலேயா, ஜாவா முதலிய நாடுகளை ஜெயித்துவிட்டது. இனி பெரிய கண்டங்களான ஆஸ்திரேலியாமீதும் இந்தியாமீதும் பாயலாம். இப்படிப் பாய்வதனால், ஜப்பானுக்கு சில அசௌகரியங்களும், கஷ்டங்களும் இருக்கின்றன. ஆஸ்திரேலியாவும், இந்தியாவும், மிகப்பரந்த நாடுகள். இவற்றில் எதை வளைக்கவேண்டுமானாலும் ஜப்பானியச் சேனைகள் விரிந்து செல்லவேண்டும். இந்த நாடுகள் எதிரிகளைத் தடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு பெரிய நாடுகளைத் தாக்கினால், கைப்பற்றப்பட்ட நாடுகள் ஜப்பானை எதிர்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இதன் பயனாக ஜப்பானியர் இப்போது ஜெயித்திருக்கிற மலேயாவையும் ஜாவாவையுங்கூட இழந்து போகும் படியான நிலைமை ஏற்படும்.

**ஒரே காலத்தில் தாக்கினால்?**

ஒரே காலத்தில் இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் ஜப்பான் தாக்கினால், தன் சேனைகளைப் பிரித்தனுப்ப வேண்டியிருக்கும். அப்போது இந்த இரண்டு பெரிய நாடுகளிலுள்ள சேனைகளை எதிர்க்க முடியாது போய்விடும். இவற்றையெல்லாம் ஒருவாறு ஜப்பான் சமாளித்தாலும், இப்போது வந்து கொண்டிருக்கும் அமெரிக்க 'கப்பற்' படை உதவியும், விமானப்படை உதவியும் அதனுடைய நிலைமையை மாற்றிவிடும்.

**சமரசம் ஏற்படலாமா?**

இந்தச் சிக்கலில் ஜப்பான் சிக்கிக்கொண்டிருக்கிறது. ஆகையால், சமரசம் செய்து கொள்ளவும் விரும்பக் கூடும். அப்படியானால், ஜப்பான் என்னென்ன நிபந்தனைகளை விதிக்கக் கூடும் என்று கவனிப்போம்.

கிழக்கிந்தியத் தீவுகள், சுமாத்ரா, ஜாவா, போர்னியோ, சிலிபிஸ் முதலியன. இங்கே ஏராளமான எண்ணைக் கிணறுகளும் ரப்பர் தோட்டங்களும் இருக்கின்றன. இவை நல்ல வருவாய் தருகின்றன. இவற்றைத் தம்மால் கூடியவரை சுரண்டிவிட ஜப்பானியர் பார்ப்பார்கள். இரண்டாவதாக, நேசதேசங்களிலிருந்து சீனா விலகிக்கொண்டால், சீனாவோடு ஒப்பந்தம் செய்துகொள்ள ஜப்பான் இணங்கலாம். (நேச தேசங்கள், அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், ருஷ்யா.) சீனாவோடு ஜப்பான் ஒப்பந்தம் செய்து கொண்டால், அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் நஷ்டம் குறையும். அதாவது சீனாவிற்கு உதவவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இல்லாது போய்விடும். அப்போது இந்த இரண்டு நாடுகளும் ஜெர்மனிமேல் போராட இலகுவாயிருக்கும். பஸிபிக் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தப் போவதாகப் பயமுறுத்தினால் அமெரிக்காவும் பிரிட்டனும் ஜெர்மனியோடு சமரசம் செய்து கொள்ளலாம் என்று ஜப்பான் எதிர்பார்க்கக் கூடும்.

**ஒரு ஏமாற்றம்.**

இது ஒரு ஏமாற்றந்தான். இந்த ஏற்பாடு ஜப்பான் இஷ்டத்தின்படி நடந்தால் ஜப்பான் சீனாவை முதலில் விழுங்கிவிடும்; பிறகு தென் கிழக்கிலுள்ள ஆசியா நாடுகளையும் சாப்பிட்டுவிடும்; அதன் பிறகு ஆசியா முழுவதையுமே ஜெயிக்கப்பார்க்கும் ஆனால் ஜப்பான் நினைக்கிறபடி காரியம் நடக்கப்போகிறதில்லை.



ஜெர்மனி முதலில் ஸெக்கோஸ்லோவேகியா என்னும் சிறிய நாட்டின் மீது படையெடுத்தது. பிறகு, அதனுடன் ஒப்பந்தம் செய்து அடிமைப்படுத்திக்கொண்டது. அது போலவே தான் ஜப்பானும் சீனாவை அடிமைப் படுத்தப் பார்க்கிறது. அல்லாமலும் மற்ற நாடுகளையும் வலைக்குள் சிக்க வைக்க முயற்சி செய்கிறது. இப்படியெல்லாம் தற்போது செய்து கொண்டால், தனுகா (ஜப்பானின் பழைய பிரதம மந்திரி) திட்டமிட்டபடி உலகத்தையே ஜெயிக்கத் தயார் செய்துகொள்ள அவகாசம் கிடைக்கும். இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு நம் நேச தேச சர்க்கார்கள் ஒருபோதும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

**ஜப்பானை நம்பலாமா?**

இப்படிப்பட்டதோர் சமரசத் திட்டத்தை ஜப்பான் அனுப்புவதாக வைத்துக் கொள்ளுவோம். இதை நாம் உண்மையென்று நம்பத் தான் முடியுமா? முடியவே முடியாது. சென்ற வருஷம் நவம்பர் மாதம் 26-ம் தேதி அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட் ஒரு சமரசத் திட்டத்தை ஜப்பானுக்குக் கொடுத்தார். அதில் ஜப்பானுக்கு நல்ல வசதிகளெல்லாம் வழங்க அவர் சம்மதித்தார். அதில் 1. சீனாவிலும் இந்தோ சீனாவிலும் உள்ள ஜப்பானியத் துருப்புகளை வாபீஸ் செய்து கொள்ளவேண்டும்; 2. ஜெனரல் சியாங் கே ஷெக் தான் சீன ஜனத் தலைவரென்று ஒத்துக் கொள்ளவேண்டும்; 3. சீனாவில் ஜப்பானும் அமெரிக்காவும் கைப்பற்றியுள்ள நாடுகளை விட்டுக் கொடுத்து விடவேண்டும்; இவற்றிற்கு ஈடாக 4. அமெரிக்கா ஜப்பானோடு ஒரு வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ளும்; 5. பணச் செலாவணியைக் கட்டுப்படுத்தாது; 6. ஜப்பான் நாணயமான யென்னுக்கும் அமெரிக்க நாணயமான டாலருக்கும் நிரந்தரமான மதிப்பு ஏற்படுத்திக் கொள்ளும்; 7. அமெரிக்கா, பிரிட்டன், ஹாலந்து, ருஷ்யா, சையாம், சீனா ஆகிய நாடுகள் மீது ஜப்பான் போர் தொடுக்கக் கூடாது.

இப்படிப்பட்ட சிறந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள ஜப்பான் மறுத்துவிட்டது.

**ஜப்பான் துரோகம்.**

இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக ஜப்பான் உடனே அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் டச்சுக்காரர்களுக்கும் சொந்தமான கிழக்கிந்தியத் தீவுகளைத் திடீரெனத் தாக்கிப் பிடித்துக்கொண்டது. இது போன்ற துரோகம் யாரும் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

**சீனாவில் இந்தியா நாள்.**

சென்ற மார்ச் மாதம் 17-ம் தேதி செவ்வாய்க் கிழமையன்று சீனாவில் இந்தியா நாள் கொண்டாடினார்கள். அதுபோலவே இந்தியாவிலும் சீனாநாள் கொண்டாடப்பட்டது. இந்த இரண்டு நாடுகளுக்கு முள்ள கலையொற்றுமையைத்தான் இது குறிப்பிடுகிறது. தா குங் போ என்பது ஒரு சீனப்பத்திரிகை. அதில் புத்தபிரான் ஒரே பாடத்தைத்தான் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் போதித்தார் என்று சென் சுப்யூ என்பவர் எழுதுகிறார். அந்தப் பாடந்தான் 'நீயும் வாழ்; பிறரையும் வாழும்படி அனுமதி' என்பது. இந்த உயர்ந்த கலைக்கு சீனாவும் இந்தியாவும் இரண்டு தூண்களாக விளங்குகின்றன. இந்தக் கலையை அடிப்படையாகக் கொண்டு தான் உலகிலுள்ள ஜனங்கள் இனி வாழ வேண்டும்.

**சீனாவின் பெரிய ஆயுதம்.**

இந்தியா நாளன்று ஸ்ரீமதி சியாங்கே ஷெக் ரேடியோ மூலம் இந்தியாவைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்கள். அப்போது அவர்கள்கூறியதாவது:—

ஜப்பான் மகத்தான பலங்கொண்டிருக்கலாம்; ஆனால், சீனாவை வெல்ல அதனால் முடியாது. எங்களிடம் ஒரு பெரிய ஆயுதம் இருக்கிறது. அதாவது, நாங்கள் தோல்வியடைந்ததாக ஒருபோதும் ஒத்துக்கொள்வதே கிடையாது. சென்ற ஐந்து வருஷங்களாகப் போராடுகிறோம். எதிரிகளைத் தடுத்துக் கொண்டுதானிருக்கிறோம். அதுபோலவே இந்தியாவும் செய்யலாம்.

* * * *

சில நாட்களுக்கு முன்பு சுதேச மன்னர்கள் சபையின் ஆண்டு விழாவின்போது வைசிராய் பிரபு ஒரு பிரசங்கம் செய்தார். அவர் அப்போது கீழ்க்கண்டவாறு கூறினார்:—

பொது ஜனங்களின் நல்லுணர்ச்சி கெடாதிருக்க வேண்டும். இதைக்குலைக்க முயற்சிப்பவர்களை ஒழிக்க வேண்டும்; ஐந்தாம் படையினரின் எல்லா வித நடவடிக்கைகளையும் அழிக்கவேண்டும். நம்பிக்கையை உண்டாக்கவேண்டும். தைரியத்தை வளர்க்க வேண்டும். கஷ்டங்களைச் சகிக்குந் தன்மையையும் பெருக்கவேண்டும். நாஸி தத்துவமும் பாஸிஸ்ட் தத்துவமும் எந்த உருவிலிருந்தாலும் அதை எதிர்த்து வெற்றிகொள்ள நாடு முழுதும் திரண்டு கிளம்பவேண்டும். இவைதான் நம் நோக்கம். சீனாவும் இதே நோக்கத்தைத் தான் கொண்டிருக்கிறது.

**அமெரிக்காவிலும் திருவிழா.**

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் ஏற்பட்ட நேசத்தை முன்னிட்டு அமெரிக்காவிலும் சென்ற 14-ம் தேதியன்று ஒரு திருவிழாக் கொண்டாடினார்கள். அங்கே கீழ்நாட்டு மேல் நாட்டு சங்கம் என்றொரு சங்க மிருக்கிறது. அந்தச் சங்கத்தார் தான் இந்த விழாவைக் கொண்டாடினார்கள். இதற்கு வெண்டெல் வில்கி என்பவர் தலைமை வகித்தார். அவர் இந்தியாவின் வைசிராய்க்கு ஒரு பாராட்டுத்தந்தி அனுப்பினார். அதற்கு நன்றி கூறி வைசிராயும் அவருக்கு ஒரு பதில் தந்தி கொடுத்தார்.

**அமெரிக்காவில் பர்மா ரோடு.**

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களுக்கும் வடதுருவத்திற்கு அருகேயுள்ள அலாஸ்காவுக்கும் ஒரு பாதை நிர்மாணிப்பதெனத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்தப்பாதை அமெரிக்காவிலுள்ள பல மாகாணங்களிலுமுள்ள தொழிற்சாலைகளில் தயார் செய்யும் தளவாடங்களை ஏற்றுமதி செய்ய உதவும். இது கனடா தேசத்தின் வழியாகச் செல்லுகிறது. ஜப்பானோடு போராடுவதற்கு இது மிகவும் முக்கியமானது. பல விமானத் தளங்களுக்கு இதன் வழியாகத் தளவாடங்களை அனுப்பலாம். சைபீரியாவுக்கும் இர்க்குட்ஸ்க்குக்கும் விரைவாகப் போய்ச் சேர இந்தப் பாதை உதவும். இது ஒரு முக்கியமான இராணுவப்பாதை. இதைக்கட்டி முடிக்க 5,000,000 பவுன் செலவாகுமெனத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இவ்வளவு முக்கியமானதோர் பாதைக்கு பர்மா ரோட் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் ஏற்பட்டுள்ள சிநேகத்திற்கு அறிகுறியாகவே இந்தப் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள் என்பது தான்.

**ஹிட்லர் டம்பப் பேச்சு.**

அமெரிக்காவில் பர்மா ரோடு போடுவதனால், ருஷ்யாவிற்குச் சாதகம் தான். சென்ற வாரங்கூட ருஷ்யாவுக்கு யுத்தத்தில் வெற்றி மேல் வெற்றி தான் கிடைத்தது. இதைக்கண்டு ஹிட்லர் சிறிது நடுக்கங் கொள்ளுகிறார். சமீபத்தில் பெர்லின் நகரத்தில் அவர் செய்த பிரசங்கத்திலிருந்தே அது தெளிவாக விளங்குகிறது. இப்போது தான் அவருடைய எதிரி (ருஷ்யா) எவ்வளவு தூரம் தயாராகி விட்டது என்று கண்டு பிடித்தாராம்! அதோடு ருஷ்ய வெற்றிகளுக்குக் காரணம் குளிர்காலமாயிருந்தது தானேயொழிய அவர்களுடைய போர்த் திறமையல்ல வென்றும் கூறுகிறார். தன் பெருமைகளையே அவர் பேசி டம்பமடித்துக் கொண்டார். குளிர்காலத்திலேயே ஜெர்மன் சேனைகளை வெல்ல முடியாத செஞ்சேனைகளை ஒழித்து விடுவாராம்!

**வீழ்ச்சிக்கு அறிகுறி.**

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் உதவி மந்திரி சும்னர் வெல்ஸ். இவர், ஹிட்லருடைய பிரசங்கத்தில் அவருடைய வீழ்ச்சிக்கு அறிகுறிகள் தோன்றுகின்றன வென்று குறிப்பிடுகிறார்.

**ஜப்பானும் ஜர்மனியும் தோற்கும்.**

டாக்டர் பீனேய்க்கு ஜெர்மனியிலிருந்து ஒரு செய்தி கிடைத்திருக்கிறதாம். ஜெர்மனியிலுள்ள இராணுவத் தலைவர்கள் தம் நாடு காக்கப் படவேண்டுமானால் கடவுளால் தான் முடியுமென்று கருதுகிருர்களாம். 1943-ம் வருஷம் வேனிற்காலத்திற்குள்ளாகவே நாஸிகளின் ஆதிக்கம் ஒடுங்கி விடுமாம். அதையடுத்து ஜப்பானும் தோற்றுப் போகும். இவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து ஜெர்மனியைத் தப்புவிக்க ஜப்பானால் முடியாதாம்.

ருஷ்யாமீது ஜப்பான் படையெடுக்கக் கூடுமென்று ருஷ்ய ஜனத்தலைவர் ஸ்டாலின் எதிர்பார்த்து முன்னேற்பாடுகளெல்லாம் செய்து முடித்து விட்டார். ஜெர்மனியோடு போராடுவதற்கு எவ்வளவு சேனை தேவையாயிருக்கிறதோ அவ்வளவு சேனையைத் திரட்டி விட்டார். இதைக் கிழக்கு ருஷ்யாவின் எல்லைப்புறங்களில் அமைத்து இருக்கிருர். ஹிட்லர் போட்ட திட்டம் எப்படிக் குலைந்ததோ அதுபோலவே, ஜப்பான் போட்ட திட்டமும் குலைந்து போகும்.

### இங்கிலாந்தில் ஒரு நகரத்திலே அமைக்கப் பட்டிருக்கும், விமான எதிர்ப்புப் பீரங்கி



ஜெர்மானியர் இடைவிடாது இப்போது இங்கிலாந்தில் தாக்குவது கிடையாது. ஆகையால் விமான எதிர்ப்புப் பாதுகாப்புகளைப் பலப்படுத்துவதற்கு பிரிட்டிஷ் இராணுவ இலாகாவிற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது, இந்தப் பீரங்கியில் ஒரு வெடிகுண்டை நிரப்பும் காட்சியை படத்தில் காணலாம்.

# தூரக்கிழக்கு யுத்த அரங்கம்

## எதிர்ப்பது தான் நமது நோக்கம்

### பர்மா நிலைமை

### இலங்கையில் இராணுவ ஆட்சி

**ஆஸ்திரேலிய யுத்த முஸ்தீப்பு.**

ஆஸ்திரேலியாவை அடுத்துள்ளது நியூகினி. இங்கே டார்வின், மோர்ஸ்பி என்று இரண்டு துறைமுகங்களிருக்கின்றன. இவற்றின் மீது ஜப்பானிய ஆகாயக் கப்பல்கள் மீண்டும் குண்டுகளை வீசின. முதலில் குண்டுகளை வீசுவதும், பிறகு அங்கே போய் இறங்கி விடுவதும் ஜப்பானியரின் தந்திரம்.

இப்போது டார்வின் நகரம் இராணுவ அதிகாரத்தின் கீழ் இருக்கிறது. எதிரியைத் தலை தூக்கவொட்டாதபடி அடித்துத் துரத்திவிடுவதென நேச தேச சர்க்கார்களும், ஆஸ்திரேலிய சர்க்காரும் முடிவு செய்து கொண்டிருக்கிருர்கள். அது மட்டுமல்ல; ஆஸ்திரேலிய விமானப் படைகள் எதிரிகளை எதிரி தளங்களிலேயே தாக்குகின்றன. ரபால் முதலிய எதிரி விமானத் தளங்களைத் தவிடு பொடியாக்கிவிட்டன. இதனால் ஜப்பானிய விமானங்கள் கிளம்பி வரக் கூட வில்லை.

இப்போது நேச தேசங்கள் தளவாடங்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றன. இவை அங்கு போய்ச் சேருமுன் ஆஸ்திரேலியாவை ஜெயித்துவிட வேண்டுமென்பது ஜப்பான் ஆசை. இந்த ஆசையை ஆஸ்திரேலிய விமானப் படைகள் வீணாக்கி விட்டன.

**எதிர்ப்பது தான் நமது நோக்கம்.**

ஆஸ்திரேலியப் பிரதம மந்திரியாகிய கர்டின், சமீபத்தில் ரேடியோவில் பேசினார். அப்போது, 'நமது' நோக்கம் எதிர்த்துப் போராடுவது தானேயொழிய, தற்காப்புக்காகப் போராடுவதல்ல' என்று தெளிவாகக் கூறினார்.

**நல்ல பலன் கிடைத்தது.**

நேச நாடுகளின் உதவியை ஆஸ்திரேலியா நாடியதற்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது. அமெரிக்காவின் யுத்த மந்திரி சமீபத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது ஏராளமான விமானப் படையும், தரைப்படையும், அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் போய் இறங்கி விட்டதாக அறிவித்தார்.

**ஜெனரல் மெக்கார்தர்.**

ஜெனரல் மெக்கார்தர் பிலிப்பைன் தீவுகளில் அமெரிக்க சேனைத்தலைவராக இருந்தவர். பேடான் என்னும் மாகாணத்தை ஜப்பானியர் பிடிக்க வொட்டாதபடி 3 மாதகாலம் தடுத்துக் கொண்டிருந்தவர். மணிலா துறைமுகத்தை எதிரிகள் கப்பல் தளமாக உபயோகிக்க முடியாதபடி நாசம் செய்தவர். இப்படிப் பட்ட ஒரு சிறந்த சேனைத் தலைவரை பிலிப்பைன் தீவுகளிலும், ஆஸ்திரேலியாவிலும், தளபதியாக



அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட் நியமித்திருக்கிருர். இவர் தன் வேலையையும் ஒப்புக் கொண்டுவிட்டார்.

**பர்மா யுத்த நிலைமை.**

பர்மாவில் ஜப்பானியர் வடக்கே போக முடியாதபடி பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும், சீனத் துருப்புகளும், தடுத்துக் கொண்டிருக்கின்றன. பர்மாவிலிருக்கும் ஷின்ராய் என்பது எதிரிகளின் தனம். இதற்கு 70 மைல்களுக்கு வட மேற்கே மான்துங் என்னும் ஊர் இருக்கிறது. இதன் எல்லைக்கருகில்தான் சீனத் துருப்புகள், எதிரிகளான சையாம் துருப்புகளோடு போராடி 100 பேரைக் கொன்றனர்.

ஷின்ராய் என்னும் எதிரி தளத்தைப் பலமுறை நம் நேசநாடுகளின் விமானங்கள் தாக்கின.

**ஷ்வாஜியின் கைப்பற்றப் பட்டது.**

ஷ்வாஜியின் பர்மாவிலுள்ள ஒரு பகுதி. இதை எதிரிகள் கைப்பற்றியிருந்தனர். இதன் மீது நம் விமானப்படை சென்று எதிரிகளை ஜெயித்து மறுபடியும் கைப்பற்றிக்கொண்டது. இந்த வெற்றியில் ஒரு இந்திய ஹவில்தாரின் சாமர்த்தியத்திற்கும் பங்குண்டு அவர் ஒரு கூலியைப்போல வேஷம் போட்டுக்கொண்டார். எதிரிகளோடு கலந்து உளவுகளைத் தெரிந்துகொண்டார். திரும்பவும் தன் சேனையில் வந்து சேர்ந்து கொண்டார். தான் அறிந்த உளவுகளை அதிகாரிகளுக்குக் கூறினார்.

**புதிய சேனாதிபதி.**

பர்மாவுக்கு இப்போது ஒரு புதிய சேனாதிபதி வந்திருக்கிருர். அவருடைய பெயர் ஜெனரல் சர் ஹரால்ட் அலெக்ஸாந்தர் ஜப்பானை வெல்ல இவர் புதிய முறைகளைக் கையாளுவார்.

ரங்கூனுக்கு 200 மைல்களுக்கு வடக்கேயும் ப்ரோமுக்கு 120 மைல்களுக்கு வடக்கேயுமுள்ள மண்ணெண்ணெய்க் கிணறுகள் மீது ஜப்பான் கண்ணோட்டம் வைத்திருக்கிறது. இவற்றைக் கைப்பற்றிவிடாமல், தடைசெய்யப் போவதாக அவர் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

பர்மாவில் நல்ல ரோட்டு வசதிகள் கிடையா. எனவே நேசத்துருப்புக்களின் போக்குவரவு மிகவும் கஷ்டமாயிருந்தது. ஜப்பானியர்களோ காடுகளில் நன்கு போராடிப் பழகியவர்கள். அவர்கள் ரோட்டு மார்க்கமாக வரவேண்டுமென்ற அவசியமே அவர்களுக்குக் கிடையாது.

அல்லாமலும் இவர் தன் பதவியை ஏற்றுக் கொள்ளும்போது, ஜப்பானியப்படைகள் நம் படைகளை பெகு மாகாணத்தில் சூழ்ந்துகொண்டார்கள். மேலும் மாண்டலே ரோட் வழியாக ரங்கூன்-ப்ரோம் ரோட்டை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். இந்த நிலையிலே, ரங்கூன் எதிரி கையில் சிக்கிவிடும் போலிருந்தது. அப்போது நம் துருப்புக்கள் பின்னடைந்திருக்காவிட்டால், பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கும். நம் சேனைகள் பின்னடைந்திருக்காவிட்டால் ஜப்பானியர் வெகு சுலபத்தில் எண்ணெய்க்கிணறுகளைக் கைப்பற்றியிருப்பார்கள். பிறகு, மாண்டலேயையும் கைப்பற்றி யிருப்பார்கள். வட பர்மாவுக்கும் தென் பர்மாவுக்கும் மாண்டலே ஒரு மத்திய ஸ்தலம்.

இதுவரை நாம் பின்வாங்கிக் கொண்டேயிருந்தோம் ரங்கூனும் எதிரி வசமானது. ஆனபோதிலும் இன்னும் பர்மா யுத்தம் ஆரம்பமாக இல்லை என்று ஜெனரல் அலெக்ஸாந்தர் கூறுகிருர்.

**இலங்கையில் இராணுவ ஆட்சி.**

இலங்கை ஒரு சிறிய தீவு, நம் இந்தியாவிற்குத் தெற்கே இருக்கிறது. இந்த யுத்தத்தில் இது முக்கியமான இடமாகும். இதைக்காக்க வேண்டிய பொறுப்பு இந்திய சர்க்காருடையது. ஆகையால் இப்போது இலங்கைத் தீவுக்கு ஒரு இராணுவ உத்தியோகஸ்தரை நிர்வாக அதிகாரியாக சர்க்கார் நியமித்திருக்கிருர்கள். இவர் பெயர் வைஸ் அட்மிரல் சர் ஜெப்ரி லேட்டன். இவர் கப்பற்படை, தரைப்படை, விமானப்படை முதலிய இராணுவங்களைத் தலைமை வகித்து நிர்வகிப்பார். அல்லாமலும் பொது ஜனங்களையும் ஆளுவார்.

# ஒற்றுமை வலுக்கிறது!

"ஒன்றரை லக்ஷம் விமானங்கள் தயாரிக்க பணம் வாங்கியாயிற்று. அல்லும்பகலும் அறுபது நாழிகையும் விமானங்கள் தயாராகி வருகின்றன. புதிது புதிதாகக் கப்பல்கள் மிதக்க விடப்படுகின்றன. வெடிகுண்டுகளுக்கும், பீரங்கிகளுக்கும், டாங்கிகளுக்கும் கணக்கே இல்லாத அளவில் தயாராகின்றன. சென்ற வருஷம் மட்டும் 26 கோடி டாலர் விலையுள்ள யுத்த தளவாடங்களும், மற்ற சாமான்களும் நேச நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு மளமளவென ஏராளமான விமானங்களும், துருப்புகளும் வந்து குவிந்த வண்ணமாயிருக்கின்றன. ஆஸ்திரேலியாவிற்கு அமெரிக்காவிலிருந்து கிடைக்கும் உதவி அபாரமானது. தரைமீது நின்று சண்டைபோடுகிறவர்கள், விமானிகள், டாங்கிப்படையினர் எல்லாம் அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலிய மண்ணில் சென்று இறங்கியிருக்கிருர்கள். அமெரிக்கத் தொண்டர் படையினர், பர்மாவிலே சக்கைப்போடுபோட்டு, இதுவரை இருநூற்றைம்பது ஜப்பான் விமானங்களை 'ஹோகயா' ஆக்கிவிட்டார்கள். சீனாவிற்கும் ருஷ்யாவிற்கும் அமெரிக்க உதவி கிடைத்து வருகிறது."

இவ்வாறாக அமெரிக்காவிலிருந்து செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

இங்கே ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு சந்தோஷமான தகவல் எட்டியிருக்கிறது. சென்ற மூன்று மாதகாலமாக ஜப்பானியருக்கு யமனாக இருந்து வந்த அமெரிக்க வீரரான ஜனரல் மாக்ஆர்தரை, ஆஸ்திரேலியாவிற்கும், பிலிப்பைன் தீவுகளுக்கும் பிரதம சேனாதிபதியாக ஆக்கியிருக்கிருர்களாம். பிள்ளைகுட்டிகளோடு அவர் வழியிலிருந்த பேராபத்துக்களையெல்லாம் சாமர்த்தியமாகக் கடந்துகொண்டு, ஆஸ்திரேலியாவிற்கு வந்துவிட்டார். கணக்கு வழக்கில்லாத படைகளோடும், விமானங்களோடும், கடற்படையோடும் வந்த ஜப்பானியர், கேவலம் ஒரு சிறு படையோடு, பாட்டான் தீபகற்பத்திலே இருந்த மாக் ஆர்தரை ஒன்றும் செய்ய முடியவில்லை. சுதந்திர தாகத்தோடு போராடும் பிலிப்பைன் சுதேசப் படைகளை ஜப்பான் படைகள் என்ன செய்யமுடியும்? பிலிப்பைன் தீவிலிருந்து யுத்தத்தை நடத்த ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

ஆனால் ஆஸ்திரேலியாவும், நியூஸீலந்தும்தான் இப்பொழுது அதிஜாக்கிரதையாகக் காப்பாற்றப்பட வேண்டிய பிரதேசங்கள். அந்த இரண்டு தீவுகளும் நேசநாட்டினரிடம் இருந்தால், போதுமான பலமும், நல்ல சந்தர்ப்பமும் கிடைக்கும்போது, ஜப்பான்மீது பாய இந்தத் தீவுகளே பெரிதும் உபயோகமாக இருக்கும். இதையும் கோட்டைவிட்டுவிட்டால், அப்புறம் தென்பஸிபிக் மகா சமுத்திரத்திலும் சரி, இந்து மகா சமுத்திரத்திலும் சரி, ஜப்பானின் பலம் அளவு கடந்துபோய்விடும். அப்புறம் ஜப்பானை ஜெயிக்க ரொம்பக் கஷ்டப்படவேண்டியிருக்கும். இது தெரிந்தேதான் ஜெனரல் மாக் ஆர்தரை பிலிப்பைன் தீவுகளைவிட, இப்போதைக்கு அதிக முக்கியம்வாய்ந்த ஆஸ்திரேலியாவிற்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் போகச் சொல்லியிருக்கிருர். இந்த சேனாதிபதிக்கு வேண்டியதெல்லாம், நிறைய விமானங்களும், ஆட்களும், ஆயுதங்களும்தான். அவற்றையெல்லாம் நிறைய அனுப்ப அமெரிக்கா ஏற்பாடு செய்துவருகிறது.

ஆஸ்திரேலியாவிலும் பிரமாத யுத்த ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. ஆஸ்திரேலிய பிரதம மந்திரி, ஆஸ்திரேலியர்களை நெருங்கிவரும் ஆபத்தின் தன்மையை விளக்கிக்கூறிவிட்டார். மலேயாவிலிருந்து தைரியமாகத் தப்பிவந்த மேஜர் ஜெனரல் கார்டன் பென்னெட் என்ற ஆஸ்திரேலிய வீரர், ஜப்பானியரின் சக்தியைப்பற்றியும், ஆஸ்திரேலியர்கள் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றியும் தெளிவாகச் சொல்லிவிட்டார். அவரே ஆஸ்திரேலியப்படைகளுக்கு, புது வழிகளைச் சொல்லிக்கொடுக்கும் பெரிய

அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜப்பானியரின் தந்திரவழிகளை இவர் மூலம் ஆஸ்திரேலியர்கள் இனி தெரிந்துகொண்டுவிடுவார்கள். அப்புறம் ஜப்பானியர் ஆஸ்திரேலியாவில் போய் இறங்கும்பொழுது, அவர்களை ஆஸ்திரேலிய வீரர்கள் நிச்சயம் திணற அடிப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

இந்தியா வெகுகாலமாக விரும்பிக் கேட்டுக் கொண்டிருந்தவற்றில், இப்பொழுது சாத்யமானதை யெல்லாம் கொடுக்க பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபை தீர்மானித்து, தங்கள் யோசனைகளை இந்தியத் தலைவர்களிடம் நேரில் எடுத்துக் கூறி, இந்தியர்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொண்டுவர, ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸ் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பியிருக்கிறது. இந்த வாரத்தில் இவர் இந்தியாவுக்கு வந்து சேரக் கூடும். பால் மனசோடு வருகிறார் இந்தியர்களின் நண்பராகிய அவர். ருஷ்யாவில் சென்று, ருஷ்யாவிற்கும் பிரிட்டனுக்கும் தொடர்பு ஏற்படும்படி செய்து, ஜெர்மனியின் முகத்தில் கரிய அள்ளிப்பூசிய நிபுணர் இவரே. இன்றல்ல, நேற்றல்ல, பலகாலமாகவே இவர் இந்திய விஷயத்தில் ரொம்ப சிரத்தை காட்டி வந்திருக்கிறார். முன்பொருதடவைகூட இந்தியாவிற்கு வந்திருந்தார்.

இப்படியாக, எங்கு பார்த்தாலும் ஏக்கமான முஸ்தீப்புக்கள் நடந்து வருகின்றன. அச்சுநாடுகளுக்கு எதிராக நேச நாடுகளிடை ஒற்றுமை வலுத்து வருகிறது.

இவ்வாறு நம்மவர்களிடையே ஒற்றுமை வலுக்க வலுக்க அச்சு நாடுகளுக்குத் தலைவலியும் அதிகமாகும். வயிற்றிலே புளியையும் கரைக்குமா, இல்லையா?

இது சமயம் தவறினால் மறு சமயம் வாய்ப்பதரிது தினுஷிலேதான் ஜப்பானும், ஜெர்மெனியும் சேர்ந்து போராடி வருகின்றன. அமெரிக்கா யுத்தத்திற்குப் பூரணமாகத் தயாராயில்லை என்று தெரிந்தே ஜப்பான் திடீரென்று போர்க்கோலம் பூண்டுவிட்டது. அமெரிக்காவின் சக்தி அபாரமானது. அது பூரண பலத்தையும் பெற்று விட்டால், அதற்கு எதிரே யாரும் நிற்க முடியாது என்பது அச்சு நாடுகளுக்குத் தெரியாததல்ல. அதனால் தான் வெறி பிடித்தது போல், ஜப்பான் எங்கெங்கோ போய் மூக்கை நுழைத்து வருகிறது.

இப்பொழுது ஜப்பானியர் பிலிப்பைன் தீவுகளிலே தம் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். அந்தத் தீவுகள் பூரணமாக அவர்கள் கையிலே சிக்கவில்லை. அந்த வேலையை எத்தனை காலமானாலும் அவர்கள் முடித்தே தீரவேண்டும். ஜாவாவிலும், சுமத்ராவிலும் டச்சுக்காரர்கள் உபத்திரவம் அவர்களுக்கு லேசில் தீர்ந்துவிடாது. சுமத்ரா தீவிலே பல இடங்கள் டச்சுக்காரர்களிடமே இருக்கின்றன.

நியூகினியாவிலே ஜப்பானியர் கால் வைத்திருக்கிறார்களே ஒழிய, பிரமாத வெற்றிகள் எதையும் கண்டுவிடவில்லை. இந்தத் தீவை தம் வசப்படுத்திக் கொண்டால்தான், அவர்களுக்கு ஆஸ்திரேலியாவில்போய் இறங்க சௌகரியம் நிறையக்கிடைக்கும். அதற்கு முன்னால், அவர்கள் இப்பொழுது செய்து வருவதுபோல்தான், டார்வின் எங்கே, வியாழக்கிழமை தீவு எங்கே மற்றொரு ஊர் எங்கே என்று விமானத்தில் தேடி அலைந்து சென்று, குண்டுகளைப் போட்டுவரவேண்டும். இப்படியெல்லாம் அவர்கள் செய்வது என்னமோ, ஆஸ்திரேலியாவை ஜப்பானிய பிசாசு பிடிக்க யத்தனிப்பதற்கான அடையாளம் என்றே கொள்ளவேண்டும்.

இந்தப் பிசாசை அமெரிக்க உதவி நிறையக் கிடைத்துவிட்டால், நொறுக்கி அடித்துவிடலாம். 'வெறும் பாதுகாப்புப் போர் மட்டும் நடத்திப் பிரயோஜனமில்லை. ஜப்பானியர் மீதே பாய்ந்து போராடவேண்டும். அதனால் என்ன கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் வரட்டும் என்று துணியவேண்டும்' என அமெரிக்காவிலிருந்து ஹாலிபாக்ஸ் பிரபு கூறுகிறார்.

அவர் சொல்லுகிறபடி செய்யவே ஆஸ்திரேலியாவிலும், இந்தியாவிலும் வசதிகள் செய்துகொள்ளுகிறார்கள். நேசநாட்டுப் படைகளுக்குள்ள வீரத்திற்கு ஒன்றும் குறைவே இல்லை.

ஜாவா தீவுகளுக்கருகே, ஒரு சிறிய கடற்படையும், ஒரு சில விமானங்களும், புயல் காற்றென வந்த ஜப்பானிய கப்பல், விமானப் படைகளைக் கதி கலங்க அடித்து, ஏராளமான சேதத்தை விளைவித்து, இந்தப் பிரதேசத்திலே சிறிது காலம் ஜப்பானின் எதிர்ப்பே ஸ்தம்பித்துப்போகும்படி செய்துவிட்ட அதிசயம் சென்ற வாரமே வெளியாயிற்று. பிரிட்டிஷ், நேசதேச கப்பல்கள் பல சேதமாயின. ஆனாலும் என்ன ? எதிரிக்கு எவ்வளவு நஷ்டம் !

இத்தகைய வீரத்துடன் உள்ள நம் நேசதேசப் படைகளுக்குப் போதுமான ஆள், ஆயுத, விமான பலங்கள் மட்டும் இருந்தால், வெளுத்துவாங்கிவிடமாட்டார்களா ? பிலிப்பைன் தீவுகளில், மட்டும், ஜப்பானியர் ஒண்ணேகால் லட்சம் பேர்களைப்பலி கொடுத்திருக்கிறார்களென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன் ! அவர்கள் கொண்டுவந்த சுமார் இரண்டரை லட்சத்திலே பாதி 'காலி' என்றால், நம் நேசதேசப் படையினரின் சமர்த்தைப்பற்றி இதைவிட அதிகம் கூறவேண்டுமா என்ன ?

'ஜப்பானிய விமானிகள் நல்ல பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஜப்பானிய படைகளுக்கு நல்ல தைரியமும், ஆபத்துக்களை லக்ஷ்யம்செய்யாது பாய்ந்து தாக்கும் தன்மையும், கானகப்போரில் நல்ல அநுபவமும் இருக்கின்றன'.

இப்படிப்பட்ட படைகளை, பாலைவனப் போரில் பழக்கப்பெற்ற படைகளால், அதிலும் போதிய விமான உதவியற்ற படைகளால் சமாளிக்கமுடியாமல்போய், மலேயாவும், சிங்கப்பூரும் நம் கைகளை விட்டு நழுவியதில், இந்திய பிரதம சேனாபதி ஸர் வேவல் கூறுவதுபோல், ஆச்சரியமென்ன இருக்கிறது ?

ஆனால், மலேயா, சிங்கப்பூர் கதைவேறு; பர்மா, இந்தியா கதைவேறு என்பதை ஜப்பானியரே கண்டுகொள்ளப்போகிறார்கள். வட பர்மாவிலே, சீனர்கள் வந்து குவிந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒத்துழைப்போடு, ஜப்பானியர் புறமுதுகு காட்டியோடும்படி அடிக்க சந்தர்ப்பங்கள் கிடைக்கலாம் என்று நம்புகிறோம். இந்தியாவிலும் பல புது விமானக் கூடங்கள் கட்டவும், நீண்ட கடற்படைப் பிரதேசங்களைப் பாதுகாக்கவும் தீவிரமான ஏற்பாடுகள் நடக்கின்றன. பர்மாவையும் எப்படியும் பாதுகாப்பதென முடிவாகிவிட்டது.

இலங்கைத் தீவுமேலே ஒரு வேளை ஜப்பானியர் கண் விழுந்தாலும் விழக்கூடும். அதை முன்கூட்டியே எதிர்பார்த்து, அங்கு பல இடங்களில் உள்ள ஸ்திரீகளையும், குழந்தைகளையும் உள்நாடுகளுக்கு அனுப்பியாயிற்று. இலங்கையைப் பாதுகாக்கும் பொறுப்பை, ஒரு ராணுவ அதிகாரியிடம் ஒப்புவித்து அவருக்கு பிரதம சேனாபதி பட்டமும் அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்துமகா சமுத்திரத்திலும் வாலாட்டலாம் என்ற துணிச்சல் ஜப்பானுக்கு ஏற்படலாம். ஏனென்றால், தென் ஆபிரிக்கா அருகேயுள்ள மடகாஸ்கர் தீவு, ஜெர்மனியின் பிடியிலகப்பட்டுள்ள விஷிக்குச் சொந்தமானது. அங்கேபோய் இறங்கிக் கொண்டு, ருஷ்யாவிற்கும், இந்தியாவிற்கும் வரும் வெளிநாட்டு உதவிகளைத் தடுக்க ஜப்பான் ஆசைப்படக்கூடும். ஆனால், அவ்வாறு செய்தால், அகலக் கால் வைத்து ஆற்றில் விழுந்து, 'அரோஹரா' ஆனவனின் கதியே, அதன் கதியாகும் !

ஜப்பான் இங்கேயும் இவ்வாறு ஆசை வைத்துக் கொண்டு, ருஷ்யாவையும் ஜெர்மனியின் கட்டாயத்திற்காக, தாக்கக்கூடும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் ருஷ்யா தூங்கிக்கொண்டிருக்கவில்லை. கிழக்கு ருஷ்யாவில் யுத்தத்திற்கு முஸ்தீப்புகள் செய்ய ஆரம்பித்துவிட்டது அது. வ்ளாடி வாஸ்டாக் என்ற நகரத்திலே, நினைத்தமாத்திரத்தில், 'உஸ்' என்று கிளம்ப பல வீரர்களும், விமானிகளும் காத்திருக்கிறார்களாம். ஜப்பான் ருஷ்யாவோடு மோதினால், பாதையோடு போகிற சனியனை விலை கொடுத்து வாங்கிக்கொண்டதுபோல்தானாகும். ஜப்பானிய மக்களுக்கு, யுத்தத்தின் கோரம் இன்னும் நன்றாகத் தெரியாது. ருஷ்ய ஜப்பானிய யுத்தம் தொடங்கினால், அப்புறம் ஜப்பானிய நகரங்களில் அக்னி பகவான்பாடு ஆனந்தம்தான் !

ஜப்பானின் போக்கைப் பார்த்தால் அதுவே முன்கூட்டி ருஷ்யாமீது பாயும்போல் தானிருக்கிறது.



ருஷ்யாவிலிருந்தும், கொரியாவிலிருந்தும், மஞ்சூரியாவிலிருந்தும் முக்யஸ்தர்கள் ஜப்பானின் தலைநகருக்குச் சென்றிருக்கிறார்கள். ருஷ்யாவின் சக்தி எப்படியிருக்கிறது. இது தக்க சமயம்தானா ருஷ்யாவைத் தாக்க என்று ஜப்பான் ஆலோசனை கேட்கிறாப்போலிருக்கிறது. அதற்குப் போதாத வேளை சீக்கிரமே வரவேண்டுமென்பது அதன் தலைவிதியானால்தான். அது இப்பொழுது ருஷ்யாவுடன் போர் தொடுக்கப்போகும். ஜப்பானின் பத்து லக்ஷம் படைகள் ருஷ்ய எல்லையில் தயாராயிருப்பதென்னமோ வாஸ்தவம். ஆனால் அதற்கு எதிராக முப்பது லக்ஷம் படைகளை ருஷ்யர்கள் சேர்த்துவைக்கப்போகிறார்களாமே !

வசந்தகாலம் வரட்டும் என்றிருக்கிறார்கள் எல்லோரும். ருஷ்யாவோ அதற்குள்ளாக ஜெர்மனிக்கு ஏக நஷ்டத்தை விளைவித்துவிடும். அதை, பத்து வாரங்களில் பணியவைத்து விடலாமெனக் கனவு கண்ட ஹிட்லர், இப்பொழுது பதறித்துடிக்கிறார். என்னென்னமோ சமாதானங்கள் கூறி, ஜெர்மானியருக்கு ருஷ்யாவில் ஏற்பட்ட நஷ்டத்தையும், தோல்விகளையும் மெழுகப்பார்க்கிறார். வாரா வாரம் பதினாயிரக்கணக்கில் ஜெர்மானியர் பலியாகிறார்கள். கிரிமியாவில் ருஷ்யர்கள் புதிதாகத் தாக்குகிறார்கள். லெனின் கிராட் இன்னும் ஜெர்மானியருக்குக் கிட்டிய பாடில்லை. பனி உருகுகிறது. எங்கும் வெள்ளக்காடாகும். ஆகவே இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு ஹிட்லர் ஒன்றும் செய்யமுடியாது. வட ஆபிரிகாவிலும் ராமல் இருந்த இடத்திலேயே இருக்கிறார். சுதந்திர பிரஞ்சுப்படைகள் வட ஆபிரிகாவில் சில இடங்களில் அச்சு நாட்டைச் சேர்ந்த இத்தாலியர்களைத் தோற்கடித்துக் கொண்டிருக்கிறார்கள். மால்டா தீவு மீது தினசரி வெடிகுண்டுகளை ஜெர்மானியர் வியர்த்தம் செய்து வருகிறார்கள்.

ருமேனியாவிலும், பல்கேரியாவிலும் நாஜிகளுக்கு விரோதமாக ஜனங்கள் கிளர்ச்சிகள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். பொது உடைமைப் பிரசாரம் நாஜிப் படைகளிடை கலகத்தை மூட்டிவருகிறது. ஜெர்மனிக்கு உதவி வந்த பிரஞ்சு ஆலைகளின்மீது பிரிட்டிஷ் விமானிகள் குண்டுகளைப் பொழிகிறார்கள். அங்குள்ள பிரஞ்சு மக்களுக்கு எச்சரிக்கை செய்து, அவர்களை விலகி இருக்கச் சொல்லிவிட்டார்கள். பிரிட்டிஷ் விமானிகள் ஜெர்மனியின் கையில் உள்ள பல இடங்களில் தைரியமாகப் போய் இறங்கி, எதிரிகளைத் திகைக்க அடிக்கிறார்கள்.

இத்தனை கஷ்டங்களுக்கிடையே அச்சு நாடுகள் வசந்த காலப் போரிலே தம் சக்தியனைத்தையும் உபயோகிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். அதைச் சமாளிக்க நேச நாடுகளும் தயாராக இருக்கின்றன. அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும், அமெரிக்கக் கடற்கரை யோரங்களிலும் ஜெர்மன் நீர்மூழ்கிகள் தொல்லைகள் விளைவிக்கின்றன. அங்கும் பிரிட்டிஷ் படைகள் போயிருக்கின்றன, ஹிட்லரின் ஆசைகளை நிராசையாக்க.

இந்த நிலைமையிலே ஜெர்மனி 1943-ல் நிச்சயம் படு தோல்வி அடையும் என்று ஜோஸியம் சொல்கிறார் ஸெக் தேச மாஜித்தலைவரான டாக்டர் பினே. இது 'இச்சமயம் தப்பினால் மறு சமயம் வாய்ப்பதரிது' என்றதுபோன்ற யுத்தம்தானே அவர்களது? இச்சமயத்திலேயே அவர்கள் ஜெயிப்பதும் சிரமம்; மறு சமயம் அவர்களுக்கு வாய்க்காது; மறு சமயம் வருமுன் நேச நாடுகளின் பலம் அபாரமாகிவிடும். அப்பொழுது ஜெர்மனியின் இடுப்பு ஒடிபடும். ஜப்பானும் அதைப் பின்தொடரும். இறுதி வெற்றி நமக்கே !

---

# ஹாங்காங்கில் ஜப்பானியரின் அட்டூழியங்கள்.

## நேச தேசக் கைதிகளுக்கு நீராகாரம்.

### பெண்களை மானபங்கம் செய்தனர்.

### பார்லிமெண்ட் சபையில் அயல் நாட்டு மந்திரி அறிவிப்பு.

ஜப்பானியர் கைவசமான ஹாங்காங்கில், பிரிட்டிஷ் மக்கள் எவ்வளவு கொரோமாக சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்களென்பதைப்பற்றி, பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரியாகிய மிஸ்டர் ஈடன் பார்லிமெண்ட் சபையில் தெரிவித்தார்.

அவர் கூறியதின் சாராம்சம் பின்வருமாறு :—

ஹாங்காங்கில் ஜப்பானியர் செய்த கொடுமைகளைப் பற்றி உறுதியான விவரங்கள் வெளிவருவதற்குள், அவைகளை வெளிப்படுத்தினால், கொல்லப்பட்டவர்களின் சொந்தக்காரர்களுக்கு வருத்தம் அதிகமாகுமாகையில், சர்க்கார் இவ்வளவு தாமதிக்கவேண்டியதாயிருந்தது. இப்போது அங்கு நடந்தவை உண்மைதான் என்று தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அந்தக் கொடுமைகளைக் கண்ணால்கண்டு, ஹாங்காங்கிலிருந்து தப்பிவந்தவர்களின் மூலமாக, ஜப்பானின் அதிக்கிரமங்களும், அட்டூழியங்களும் தெரியவருகின்றன.

**துப்பாக்கிக் கத்தியால் குத்திக் கொல்லுதல்.**

பொது மக்கள் எல்லோரும், நிறபேதமில்லாமல், விரோதிகளினால் சித்திரவதை செய்யப்பட்டார்கள். 1937-ல் நான்கிங்கில் நடந்த கொலைகளைப்போல ஹாங்காங் கொடுமைகளும் உலகத்தையே திடுக்கிடச் செய்யக்கூடியவையாக இருக்கின்றன.

50 பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களும் கைகால், கட்டப்பட்டு, ஜப்பானியர்களால் துப்பாக்கி முனைக்கத்திகளால் குத்திக்கொல்லப்பட்டார்கள். ஹாங்காங் வீழ்ச்சியின் 10 நாட்களுக்குப் பிறகு காயமடைந்தவர்கள் ஹாங்காங் மலைப்பகுதிகளில் சேகரிக்கப்பட்டார்கள். அவர்களில் இறந்து போனவர்களைப் புதைக்க ஜப்பானியர் அனுமதிக்கவில்லை.

**பெண்கள் கற்பழிக்கப் பட்டனர்.**

ஐரோப்பியரும், ஆசியாக்காரருமான பல ஸ்திரீகள் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்களென்று தெரிய வருகிறது. சீனர் வசிக்கும் ஒருபிரதேசம் விபசாரத்திற்கு ஒரு இடமாக ஜப்பானியரால் மாற்றப்பட்டது. ஜன்னல்கள், கதவுகள் இல்லாமல் பாழடைந்த குடிசைகளில் கூட்டம் கூட்டமாக, ஹாங்காங் நேசப் படையில் கைதியான, எல்லா இந்தியர்களையும், சீனர்களையும், போர்ச்சுகீசியர்களையும், ஜப்பானியர் அடைத்துவைத்தனர். இந்தக் கைதிகள் முகாமில், ஜனவரி மாதத்திற்குள் 150 பேர் வயிற்றுக்கடுப்பு நோயால் கஷ்டப்பட்டனர். வைத்திய உதவி இவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. இறந்த கைதிகள் அவர்கள் இருக்கும் இடத்திலேயே ஒரு பக்கத்தில் புதைக்கப்பட்டார்கள். ஜப்பானியத்துருப்புகள் செய்த கொடுமைகள் ஜப்பானிய படைத்தலைவர்களின் ஆதரவின்பேரிலேயே நடந்திருக்கின்றன.

**கைதிகளுக்கு சாதமும், தண்ணீரும் ஆகாரம்.**

ஹாங்காங்கிலுள்ள நேசதேசக் கைதிகளின் விவரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| பிரிட்டிஷார் | .. | 5,072 பேர். |
| கனடாக்காரர்கள் | . | 1,689 ,, |
| இந்தியர்கள் | .. | 3,829 ,, |
| மற்றவர்கள் | .. | 357 ,, |
| ஆக மொத்தம் .. | .. | 10,947 ,, |

மேற்கூறிய விவரங்களை ஜப்பானியர்கள் பெப்ரவரி மாதக்கடைசியில்தான், தெரிவித்தார்கள்.

எல்லா ஐரோப்பியர்களும், தேக அசௌக்கிய மானவர்கள் உள்பட, கைதியானுர்கள். எல்லாருக்கும் கொஞ்சம் சாதமும், தண்ணீரும் தான் கொடுக்கப்பட்டன. எப்போதாவது ஒரு தடவை வேறு உணவுப் பொருள்கள் கொடுக்கப்படும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்களோ, அல்லது நடுநிலைமை நாட்டுப் பிரதிநிதிகளோ, ஹாங்காங்கிற்கு விஜயம் செய்ய ஜப்பானிய சர்க்கார் இதுவரையில் இடங்கொடுக்கவில்லை.

**வெளிநாட்டு ஸ்தானிகர்கள் வெளியேற்றம்.**

ஜப்பானியர் கைப்பற்றிய பிரதேசங்களிலுள்ள அந்நியநாட்டு ஸ்தானிகர்களை, ஜப்பானிய சர்க்கார் வெளியேறும் படித் தெரிவித்திருக்கிருர்கள். ஏனென்ருல், ஜப்பானியர் கைதிகளை நடத்தும் முறையைப்பற்றி விசாரணை நடந்தால் மிகவும் அநியாயமாயிருக்கிறதென்பது தெரிந்துவிடும்.

மலேயாவிலுள்ள பிரிட்டிஷ் கைதிகளின் நிலைமையைப்பற்றி ஒரே ஒரு செய்திதான் இதுவரையில் கிடைத்திருக்கிறது. ஜப்பானிய ராணுவ செய்தி ஸ்தாபனம், 77,699 சீனர்கள் கைது செய்யப்பட்டு, கடுமையான சோதனைகளுக்கு ஆளானுர்கள் என்பதை இந்த மாதம் 3-ம் தேதி தான், தெரிவித்தது. மேற்கூறியவைகளிலிருந்து, விரோதிகள் பெருந்தன்மையாகவும், கண்ணியமாகவும் நடந்து கொண்டிருப்பதாக கூறுவது வெறுக்கத்தகுந்த வெளி வேஷப்பேச்சு என்பது தெரியவரும்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு மார்ச்மீ 27உ, வெள்ளிக்கிழமை [இதழ் 12

# தமிழ்த் தொழிலாளர்களின் வீரம்

## சிங்கப்பூரில் குண்டுமாரி

### பாதுகாப்பிலிருந்தால் பயமில்லை

**சிங்கப்பூர் பாரிஸ்டரின் ரேடியோ பேச்சு**

மிஸ்டர் என். எஸ். மலால் சிங்கப்பூரில் இருந்த ஒரு பாரிஸ்டர். அங்கே ஜப்பானியர்கள் குண்டு போட்டபோது அங்கிருந்து கப்பலேறி பம்பாய்க்கு வந்து சேர்ந்தார். இவர் அகில இந்திய ரேடியோவில் சமீபத்தில் பேசினுர். அவர் கூறியதன் சாராம்சம் பின்வருமாறு :—

சென்ற பிப்ரவரி மாதம் 2-வது வாரம் நான் சிங்கப்பூரிலிருந்து பம்பாய் வந்து சேர்ந்தேன். நான் ஏறிவந்த கப்பல் பம்பாய் துறைமுகத்திற்குள் நுழைந்தவுடனேயே பம்பாயில் அபாய அறிவுப்புச் சங்கு ஊதப்பட்டது. நாங்கள் சிங்கப்பூரிலிருந்து வந்திருந்தபடியால் இந்தச் சத்தமே எங்களுக்குப் பிடிக்கவில்லை. பிறகு, அது டிரீட் ரார்த்தமாக ஊதப்பட்ட சங்கு என்று தெரிந்து கொண்டோம்.

**எதிர் பாராத தாக்குதல்**

மலேயாவை ஜப்பானியர்கள் தாக்குவார்களென்று சிங்கப்பூரிலிருந்த நாங்கள் கனவுகூடக் காணவில்லை. நாங்கள் அதற்கான முன்னேற்பாடுகள் எதையும் செய்து கொள்ளவில்லை. பொது ஜனங்கள் ஒளிந்துகொள்ளுவதற்கு எந்தவித பாதுகாப்பிடமுமில்லை. கோட்டையில்மட்டும் இரும்பினுலும் சிமெண்ட்டாலும் கட்டப்பட்ட சில கட்டிடங்களிருந்தன. இவை பகல் நேரத்தில் அலுவலிலிருக்கும்போது மட்டுந்தான் உபயோகப்பட்டது. நாங்கள் தாக்கப்பட்ட பிறகுதான் வீடுகளிலும், தோட்டங்களிலும் திறந்த வெளிகளிலும் பள்ளங்கள் தோண்ட ஆரம்பித்தோம். அதுவும் 3 அல்லது 4 அடி ஆழத்திற்கு அதிகமாகத் தோண்ட முடியவில்லை. ஏனென்ருல், நீரூற்றுகள் கிளம்பி விடுகின்றன. இந்தப் பள்ளங்களைச் செவ்வையாகக் கட்டிக்கொள்வதற்குத் தேவையான சிமெண்ட்டும், இரும்பும் கிடையாது. ஆகையால், பள்ளங்களின் இரண்டு பக்கங்களிலிருந்தும் மண் சரிந்து விழுந்து விடாதபடி பலகைகளைச் சொருகியிருந்தோம்.

சென்ற டிசம்பர் மாதம் 8-ம் தேதி ஜப்பானியர் சிங்கப்பூரைத் தாக்க ஆரம்பித்தார்கள். அதுவரை பாதுகாப்பு வேலைகளில் பொது ஜனங்கள் கொஞ்சங்கூட அக்கரை கொள்ளவேயில்லை. ஆனுல் ஒரு குண்டு விழுந்தவுடனேயே எல்லோரும் பாதுகாப்பு வேலைகள் ஏதாவதொன்றை செய்வதாகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார்கள். அங்கே, இந்தியர்கள், சீனர்கள், மலேயர்கள், டச்சுக்காரர்கள், பிரிட்டிஷ்காரர்கள், சுயேச்சை பிரஞ்சுக்காரர்கள் ஆகியோர் வசிக்கின்றனர். ஆபத்துக் காலத்தில் இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தம் வீடுகளையும் சொத்துக்களையும் உயிர்களையும் காப்பாற்ற முனைந்தார்கள்.

**இந்தியர்களை மிஞ்ச எவராலும் முடியாது**

இந்த பாதுகாப்புத் திட்ட வேலைகளில் எங்களுக்குப் பழக்கமே கிடையாது. ஆனுலும், ஜப்பானியர் சிங்கப்பூரை முழு மனதோடு தாக்கிய போது எல்லோரும் நன்ருகப் பழகியவர்களைப்போலவே தம் கடமைகளைச் செய்தார்கள். விமானப் பாதுகாப்புப் படை, பொதுமக்கள் பாதுகாப்புப்படை, வைத்திய உதவிப்படை, முதலிய பல ஸ்தாபனங்களிலும் இந்தியர்கள் அநேகம் பேர்கள் சேர்ந்து வேலை செய்தார்கள். ஆபத்துக் காலத்தில் மனதைத் தளர விடாமலும், வீரத்தோடும் கடமையை உணர்ந்தும் வேலை செய்வதில் இந்தியர்களை மிஞ்ச ஒருவராலும் முடியாது.

முக்கியமான வேலைகளைச் செய்யும் பொறுப்பு சிங்கப்பூரில் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறியுள்ள தொழிலாளர்களுக்குத் தான் ஏற்பட்டது. ஒரு தமிழ்க் கூலி மிகவும் பணிவாக நடந்து கொள்ளுகிறவன். எதிர்த்துப் பேசாதவன். கனத்த குண்டுகள் அடிக்கடி விழும்போது அவன் தாங்குவானே மாட்டானே என்று நாங்கள் சந்தேகப்பட்டோம். ஆனுல், தமிழ்த் தொழிலாளர்களும் சீனத் தொழிலாளர்களும் இந்தக் கஷ்டகாலத்தில் தம் கடமையை வெற்றியோடு செய்து முடித்தார்கள்.

ஒரு தடவை நான் வசித்துவந்த ஜில்லாவில் எதிரி விமானங்கள் ஏராளமாக வந்து தாக்கின. என் வீடு உள்பட அநேக வீடுகள நாசமடைந்தன. ஆனுலும் அந்த ஜில்லாவில் மிகவும் கொஞ்சம் பேர்தான் குண்டுகளால் மடிந்தார்கள். இதற்குக் காரணம், நாங்கள் பாதுகாப்பிடங்களில் புகுந்து கொண்டதுதான். இந்த இடங்களில் மறைந்து கொள்ளாதவர்கள்தான் மடிந்தார்கள். உதாரணமாக, என் சகோதரர் வீட்டின்பக்கத்தில் ஒரு பாதுகாப்புப் பள்ளம் தோண்டிக்கொண்டிருந்தனர். அப்போது, அபாயச் சங்கு ஊதியது. அங்கிருந்த தொழிலாளரில் மூன்று பேர் பள்ளத்தில் பதுங்கிக்கொண்டார்கள். ஒருவர் மட்டும் தன் வீட்டிற்கு ஓடினுர். அவர்மட்டும் குண்டு பட்டு இறந்து போனுர். என் சகோதரர் வீட்டிற்கு அருகிலேயே குண்டு விழுந்தது. ஆனுல் அவ் வீட்டிலிருந்த ஒருவருக்காவது எவ்விதக் காயமும் இல்லை.

அன்றையதினம் வீசப்பட்ட குண்டுகளால், அப்பக்கத்திலிருந்த எலெக்ட்ரிக் தந்திக் கம்பிகளெல்லாம் பலவிடங்களில் சேதமாயின. இரண்டு நாட்களுக்குப் பிறகு தமிழ்த் தொழிலாளர்கள் அந்தக் கம்பிகளைப் பழுது பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அநேக எதிரி விமானங்கள் அந்தப் பக்கம் வந்துகொண்டிருந்தன. அந்தச் சத்தம் கேட்டவுடனே, மளமளவென்று கீழே இறங்கி வந்து அந்த ரோடில் எதிர்ப்புறத்திலுள்ள ஜலதாரைக் கால்வாயில் தம் சாமான்களுடன் ஒளிந்து கொண்டார்கள். எதிரிகள், குண்டுகளைச் சரமாரியாகப் பெய்தார்கள். அநேகக் குண்டுகள் அவர்கள் அருகிலேயே விழுந்தன. ஆனுல் அவர்களுள் ஒருவரும் காயப்படவேயில்லை. எதிரி விமானங்கள் போய்விட்டன. மீண்டும் அத் தொழிலாளர்கள் தம் வேலையை வழக்கம்போல் ஆரம்பித்தனர். சற்று நேரத்திற்கு முன் தமக்கு நேரவிருந்த ஆபத்தைக் குறித்துக் கொஞ்சங்கூட கவலைப்படவில்லை. என் நாட்டவர்களின் இந்தச் சிறப்பைக் கண்டு நான் மிகவும் பெருமை கொள்ளுகிறேன். அங்கிருந்த பாங்கிகளும், வியாபார ஸ்தலங்களும் பெரிய கடைகளும் வழக்கம்போல் தம் அலுவல்களைக் கவனித்து வந்தன. அங்கு வேலை செய்யும் சிப்பந்திகள் பாதுகாப்புப் படைகளில் வேலை செய்துவிட்டு தம் உத்தியோகங்களையும் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. இதனுல் இரவு தூக்கம் கெட்டது.

பெரிய கட்டிடங்களின் மேல் மெத்தைகளிலிருந்து கவனித்து எதிரி விமானங்கள் வரும்போது அறிவிக்கும்படி ஆட்களை நியமித்தோம். எதிரி விமானங்கள் நகரத்தின் வேறொரு பக்கத்திலிருக்கும்போது நாம் நம்வேலையை விட்டுப் போய்விடுவது கூடாது. மேல் மெத்தைகளிலுள்ள ஆட்கள் அறிவிக்கும்போது அக்கட்டிடத்தின் அடி தளத்திற்காவது பாதுகாப்புள்ள இடத்திற்காவது போய்விடலாம். இதனால் அநேக மணி நேர வேலையை மிச்சப்படுத்தலாம்.

கலவரமடைந்தவர்கள் சின்னக் கடைக்காரர்கள்தான். பல சரக்குக் கடைக்காரர்கள், காய்கறிக்கடைக்காரர்கள் முதலியவர்கள் ஊரை விட்டுபோய்விட்டார்கள். சாப்பாட்டுக் கடைக்காரர்களுங்கூட எங்கேயோ மறைந்துவிட்டார்கள். இவற்றால் மிகுந்த சங்கடமேற்பட்டது. கம்பெனிகளிலும் மற்றும் பல உத்தியோகங்களிலுமிருக்கிறவர்கள் காலையில் தம் பாதுகாப்புப் படை வேலையிலிருந்து நேரே தம் ஆபீசுக்குப் போகிறார்கள். அதனால், காலையில் தம் வீடுகளிலிருந்து எந்த வகை உணவும் எடுத்துப்போக முடிவதில்லை. பகலில் வீட்டிற்குப் போய்ச் சாப்பிட்டுவரலாமென்றாலோ, போக்குவரத்துச் சாதனங்கள் கிடையாது. சாப்பாட்டுக் கடைகளும் மூடிக்கிடந்ததால் சாப்பாட்டிற்கே வழியில்லாமல் திண்டாட நேர்ந்தது.

ஆகையால் இப்படிப்பட்ட அசந்தர்ப்பங்களிலே உணவுப் பொருள்கள் எல்லாவற்றையும் கைப்பற்றி பொதுஜனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கத் தக்கபடி சர்க்கார் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். உணவு இல்லாது போனாலும் அல்லது உணவை வாங்க வசதி இல்லாது போனாலும், மிகுந்த அதிருப்திக்கும் கலவரங்களுக்கும் இடங்கொடுக்கும்.

**பாதுகாப்புப் படைகள் ஒன்று பட வேண்டும்.**

நான் இங்குவந்த பிறகு சில விவரங்கள் பத்திரிகை மூலமாகத் தெரிகிறது. சில உத்தியோகப் பற்றில்லாத ஸ்தாபனங்களும், அரசியல் கட்சிகளும் பாதுகாப்புப் படைகளைத் திரட்ட முயற்சிக்கின்றன. இதற்குக் காரணம் அரசியல் கட்சிகளுக்கும் அரசாங்கத்திற்குமுள்ள கருத்துவேற்றுமைதான். ஒரு ஊரைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு மிகவும் கடினமானது. இதில், இராணுவ அதிகாரிகளுக்கும், விமானப் பாதுகாப்புப் படைக்கும், வைத்தியப் படைக்கும், தீயணைக்கும் படைக்கும் மற்றும் பலவகைப் படைகளுக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கவேண்டும். இந்தச் சம்பந்தம் இல்லையானால் குழப்பம்தான் உண்டாகும். ஆகையால் அரசாங்கத்தார் தவிர வேறு யாரும் இப்படைகளைத் திரட்டவேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரேவகை வேலைக்கு இரண்டு படைகள் இருந்தால் வேலை செம்மையாக நடைபெற முடியாது.

தேசப் பாதுகாப்புக்கும் அரசியலுக்கும் எந்த விதமான சம்பந்தமுமில்லை. இதை நாம் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகாயத்திலிருந்து குண்டுகள் விழும்போது, அவை ஒருவித வரைமுறையின்றி விழும். ஆகையால் இந்தப் போட்டிப் படை திரட்டுவதை விட்டுவிடும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். மனித உயிர் மிக உயர்ந்தது. இதற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. நமது அரசியல்போக்கு எதுவாக விருந்தாலும், அதைக் காக்கவேண்டியது நம் எல்லோருடைய கடமையாகும்.

சிங்கப்பூரிலும் அதைச் சுற்றியும் ஜப்பானியர் குண்டுகளை வீசினார்கள். அவை மிகப் பெரிய குண்டுகளல்ல. ஜப்பானிலிருந்துதான் அவர்கள் குண்டுகளைக் கொண்டுவரவேண்டியிருந்தது. அவர்கள் வெகு தூரத்திலிருந்து கஷ்டப்பட்டுக் கொண்டுவரும் பெரிய குண்டுகளைப் பொது ஜனங்கள் மீது வீசி வீணாக்கமாட்டார்கள். அதுபோலவேதான் இந்தியாமீதும் குண்டுகள் வீசுவார்களானால் அவை பெரிய குண்டுகளாக இருக்கமாட்டா. சிறிய குண்டுகளால் அதகச் சேதம் விளையாது.

இந்தச் சிறிய குண்டு, உறுதியான இரண்டடுக்கு மெத்தை வீட்டின்மேல் விழுந்தது. ஆனால் அடித் தளத்திற்கு அந்தக்குண்டு இறங்கவில்லை.

இந்தக் குண்டுகளைக்கொண்டு ஜனங்களைக் கொல்லவேண்டுமென்றோ ஜனங்களுடைய சொத்துக்களை நாசஞ் செய்யவேண்டுமென்றோ ஜப்பானியர் அவற்றை வீசுவதில்லை; ஆனால் ஜனங்களுக்குள் கலவரம் உண்டாகவேண்டுமென்பதுதான் அவர்கள் நோக்கம். பாதுகாப்பிடங்களில் பதுங்கிக்கொண்டால், சிறிய குண்டுகளால் ஒருவித பயமுமில்லை.

நமது இந்தியப் போர் வீரர்கள் சிங்கம் போல் மலேயாவில் போராடினார்கள். இந்தியப் பொது ஜனங்களோ மனந்தளராமல், வீரத்தோடும் தியாகஞ் செய்தனர். இதைக்கண்ட அனைவரும் இந்தியர்களைப் பெரிதும் மதித்துப் பாராட்டினார்கள். இந்தியாவிலும் அப்படிப்பட்ட நிலைமை உண்டாகுமானால், இந்த நல்ல பெயரைக் காப்பாற்றிக்கொள்ளுவார்களென்று நம்புகிறேன்.

# ரஷ்ய-யூரால் தொழிற்சாலை முன்னேற்றம்

## ரஷ்யர்கள் உணவுத் தியாகம்

### அமெரிக்கப் பத்திரிகை நிருபர் கூறும் விவரங்கள்

"பாரன்ஸ் வீக்லி" என்னும் அமெரிக்கப் பத்திரிகையில் அதன் நிருபராகிய ஜான் ஸ்காட் என்பவர், "ஸ்டாலினுடைய யூரால் கோட்டை" என்பதைப் பற்றி எழுதியிருக்கிறார். இந்தக் கட்டுரையில் காணப்படும் விவரங்கள் உண்மைதானா என்று தெரிந்து கொள்வதற்கு ஜான் ஸ்காட்டைப்பற்றி முதலில் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. இவர் 1930-ம் வருஷத்தில் கலாசாலைப் பட்டம் பெற்றார். உடனே, தான உலகைச் சுற்றிவர விரும்பினார். ரஷ்யா நாட்டைச் சுற்றிப்பார்ப்பது இவர் போட்ட திட்டத்தின் ஒரு பகுதி. 1932-ம் வருஷம் ரஷ்யாவில் உள்ள மாக்னிடாகொர்ஸ்க் தொழிற்சாலையில் வேலைக்கமர்ந்தார். பிறகு அங்கே, அவர் இஞ்சினீர் பதவி பெற்றார். ஒரு ரஷ்யப்பெண்ணையும் கலியாணம் செய்துகொண்டார். அதனால், அவர் திட்டம் போட்டபடி உலகத்தைச் சுற்றிவர முடியவில்லை. ஏனென்றால், ரஷ்யர்கள் யாரும் தம் எல்லையைத் தாண்டிப்போகும்படி ரஷ்ய சர்க்கார் அனுமதிப்பதில்லை. 1941-ம் வருஷம் சோவியத் ஆட்சி முறையைப்பற்றி இவர் பத்திரிகைகளில் எழுதியது அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் அவரை நாடு கடத்திவிட்டார்கள். அப்போது அங்கிருந்த அமெரிக்க ஸ்தானிகரின் உதவியால் தன் குடும்பத்தையும் அழைத்துக்கொண்டு அமெரிக்காவுக்குப் போய்ச்சேர்ந்தார். அதனால், இவர் கூறுவது உண்மைதான் என்று நிச்சயமாக நம்பலாம்.

அவர் தன் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

**ஒரு ரகசிய நாடு**

ரஷ்யா ஒரு இரகசியநாடு. அங்கே நடைபெறும் வேலைகளைப்பற்றி வெளி நாட்டார் ஒன்றும் தெரிந்துகொள்ள முடிவதில்லை. இந்த இரகசிய நாட்டில் சில உண்மைகளைப் பரம இரகசியமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவை ரஷ்யாவின் தொழிற்சாலைகளைக் குறிக்கும். இந்தத் தொழிற்சாலைகள் யூரால் மலைப்பிரதேசத்திலிருக்கின்றன. இந்தப் பிரதேசம் இப்போது யுத்தம் நடைபெறும் இடத்திற்கு சுமார் 800 மைல்களுக்குக் கிழக்கேயிருக்கிறது.

ரஷ்யாவிலுள்ள தொழிற்சாலைகளில் சில, எதிரிகள் வசமாயின. மற்றவை வெடிகுண்டுகளால் நாசமாயின. இப்படிப்பட்ட நிலமை வரக்கூடும் என்று எதிர்பார்த்து 15 வருஷங்களுக்கு முன்னேயே யூரால் மலைப் பிரதேசத்தில் அநேகத் தொழிற்சாலைகளை சோவியத் சர்க்கார் உண்டாக்கி நடத்தி வருகின்றனர். இவற்றில் உற்பத்தியாகும் பொருட்



களைக் கொண்டுதான் சோவியத் சர்க்கார் ஜெர்மனியோடு போராட முடிகிறது.

**யூரால் தொழிற்சாலை முன்னேற்றத் திட்டம்**

'யூரால் தொழிற்சாலை முன்னேற்றத் திட்டம்' என்பது ஒரு கட்டுக்கதையென்று பத்திரிக்கைக்காரர்கள் நினைக்கிறார்கள். அப்படியல்ல. உண்மையிலேயே அப்படிப்பட்டதோர் திட்டம் இருக்கிறது. அது அசைக்க முடியாத, உறுதியான ஒரு திட்டம். அங்குள்ள ஒரு பெரிய தொழிற்சாலையில் நான் 5 வருஷங்கள் வேலை பார்த்தேன். வேறு அநேக தொழிற்சாலைகளையும் பார்த்திருக்கிறேன். உலகத்திலே உள்ள மிகப் பெரிய தொழிற்சாலைப் பகுதிகளில் இதுவும் ஒன்றாகும். இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலைப் பகுதியிருக்கிறது என்று சொன்னால் யாரும் நம்பக்கூட மாட்டார்கள்.

1939-ம் வருஷம், ஜெர்மனி, யுத்தத்தில் இறங்கியவுடனே ரஷ்யாவிலிருந்து யூரால் மலைப்பிரதேசத்திற்கு 200 இயந்திரங்களை ரஷ்யர்கள் அப்புறப்படுத்திவிட்டார்கள். இவைகளைப் பார்த்தால் பிரமிக்கவேண்டும். அவ்வளவு பெரியவை. இவைகளையெல்லாம் 1940-ம் வருஷத்திற்குள் கட்டி முடித்து இன்று வரை வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இவற்றிற் சில இயந்திரங்களை நான் நேரில் பார்த்தேன். மற்றவையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். யுத்தத் தளவாட உற்பத்தி வேலை ரஷ்யாவில் பலமாகவேதான் நடந்து வருகிறது.

**யூரால் மலை வளம்**

உலகத்திலேயே மிகப் பெரிய நாடு ரஷ்யா. இதை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பது யூரால் மலை. இந்தப் பிரதேசம் 500 மைல் நீளமும் 500 மைல் அகலமும் உடையது. இங்கே, இரும்பு, நிலக்கரி, தாமிரம், அலுமினியம், ஈயம், அஸ்பெஸ்டாஸ், மாங்கனீஸ், பொட்டலுப்பு, தங்கம், வெள்ளி, பிளாடினம், துத்தநாகம், மண்ணெண்ணெய் முதலிய சுரங்கப் பொருள்கள் ஏராளமாய் இருக்கின்றன. இவை அல்லாமல், காடுகளில் விளையும் பொருள்களும் ஏராளமாயிருக்கின்றன. சாகுபடி செய்யத்தகுந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இங்கேயிருக்கிறது.

இவ்வளவு வளப்பமான பிரதேசமிருந்துங்கூட 1930-ம் ஆண்டு வரையில், இதைப் பயன்படுத்த ஒருவரும் முன்வரவில்லை. ஆனால் இப்போதோ ரஷ்யாவில் தயாராகும் பொருள்களில் 100-க்கு 90 பங்கு இந்தப் பிரதேசத்திலிருந்துதான் வருகிறது. இது மிகவும் அபாயகரமான திட்டம் என்பதை அரசாங்கத்தார் அறிவார்கள். ஆகையினால், எதிரிகள் வரமுடியாத இடத்தில் ஒரு பெரிய தொழிற்சாலையைக் கட்டி முடித்தார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில், ரஷ்ய ஜனாதிபதியான ஸ்டாலின் கொடுமையாகக்கூட நடந்து கொண்டாரென்று சொல்லலாம். ஆனாலும் அவர் அந்தத் திட்டப்படியே செய்து முடித்தார். இது அதிக பணச் செலவினாலும், பட்டினியாலும் கடுமையான உழைப்பினாலும் நிறைவேற்றப்பட்ட திட்டம். 1932-ம் ஆண்டில் மாத்திரம் ரஷ்யாவின் மொத்த வருமானத்தில் 56 சதவிகிதம் தொழிற்சாலைகளின் பொருட்டே ரஷ்ய சர்க்கார் செலவிட்டனர்.

1860-ம் ஆண்டிலிருந்து 1870-ம் ஆண்டிற்குள்தான் அமெரிக்காவில் ஏராளமான தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. அப்போது அவைகளுக்காகச் செலவான தொகை அமெரிக்காவிற்குக் கிடைத்த மொத்த வருமானத்தில் 12 சதவிகிதத்திற்கு அதிகமானதாயில்லை. இந்தத் தொகையை பிரிட்டிஷார் கடன் கொடுத்து உதவினார்கள். அல்லாமலும் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்றுகொண்டிருந்த ஏராளமான ஜனங்களைக் கொண்டுதான் தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. ஆனால், ரஷ்ய சர்க்காரோ தம் தொழிற்சாலைத் திட்டத்தை முடிப்பதற்காக யாரிடமும் கடன் தொகைகள் வாங்க வில்லை. ரஷ்ய தொழிலாளர்களைக்கொண்டே கட்டி முடித்தார்கள்.

ரஷ்யாவில், மாக்னிடோகர்ஸ்க் என்ற இடத்தில் இப்போதிருக்கும் தொழிற்சாலை 1929-ம் ஆண்டில் இல்லை. அப்போது அந்த இடம் நாடோடி ஜனங்கள் வசித்து வந்த ஒரு கிராமமாக இருந்தது.

**காந்த மலை**

யூரால் மலையடிவாரத்திலிருந்து வடதுருவக் கடல் வரை ஒரே சம பூமியாயிருக்கிறது. மலை முழுதும் இரும்பு படிந்த மண்ணாயிருக்கிறது. அதனால்தான் இந்த மலைக்குக் 'காந்த மலை' (Magnetic mountain) என்று பெயர். சென்ற 200 வருஷங்களாக வெயில் காலத்தில்மட்டும் கொஞ்சம் இரும்பு கலந்த மண்ணைத் தோண்டி எடுத்து வந்தார்கள். இந்த இடத்திற்கும் 'பொலாரெட்ஸ்க்' என்னும் ஊருக்கும் சுமார் 70 மைல் தூரம். மழைக்காலத்தில் பனி உறைந்து கிடக்கும். அந்தக் காலத்தில் சருக்கு வண்டிகளில் இந்த மண்ணை ஏற்றி அந்த ஊருக்கு அனுப்பி வந்தார்கள் இங்கேதான் ஒரு பெரிய நிலக்கரி அடுப்பு இருக்கிறது. இதைத்தவிர அக்கம்பக்கத்தில் விறகாக உபயோகப்படுத்த ஒரு குச்சிகூடக் கிடையாது.

இந்த இரும்புச் சுரங்கப்பொருள்கள் இருக்கும் இடத்திற்கும் நிலக்கரிச் சுரங்கத்திற்கும் 2,000 மைல்கள் தூரம். இந்த இரண்டு பிரதேசங்களையும் சேர்க்கவேண்டுமென்று இஞ்சினீர்களும் பொருளாதார நிபுணர்களும் ஒரு திட்டம் போட்டார்கள்.

**ரஷ்யர்கள் உணவுத் தியாகம்**

இந்த திட்டப்படிக் கட்டிமுடிக்க 3 கோடி ரூபாய் பெறுமானமுள்ள இயந்திரங்களை வெளி நாடுகளிலிருந்து வாங்கினார்கள். அப்போது, அவைகளுக்குப் பதிலாக ரஷ்யா, உணவுப் பொருள்களைக் கொடுத்துத் தீர்த்தது. அதாவது, கோதுமை வெண்ணெய் முதலியவை ரஷ்யர்களுக்கே போதாமலிருக்கும்போது, அந்நிய நாடுகளுக்கு அவற்றை அனுப்பிக் கடனைத் தீர்த்தார்கள்.

ஸூலோவயா என்னும் இடத்தில் மிக உயர்ந்த வகை எஃகு செய்யப்படுகிறது. எவர்ட்லொவெஸ்க் என்னும் ஊரில் ஒரு பெரிய இயந்திரத் தொழிற்சாலையிருக்கிறது. இங்குள்ள 2-ம் நம்பர் இயந்திரத் தொழிற்சாலையின் நீளம் ஒரு மைல். இங்கே தற்கால முறைப்படி தயாரிக்கப்பட்ட எல்லாவகை அமெரிக்க இயந்திரங்களும் இருக்கின்றன. இங்கே இப்போது நீர் மூழ்கிக் கப்பல்கள் செய்யப்படுகின்றன. மின்சாரச் சாமான்கள் செய்யும் மற்றொரு தொழிற்சாலையும் இங்கே இருக்கின்றது. யுத்தத் தளவாடங்கள் செய்யவும் தொழிற்சாலைகள் பல இந்த இடத்தில் இருக்கின்றன.

ஸூலோவயாவிற்குக் கிழக்கே க்ரஸ்நூரல்ஸ்க் என்னும் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. இங்கேதான் யூரால் மலைச்சுரங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படும் தாமிரத்தைச் சுத்தம் செய்கிறார்கள். மற்றும், செலியாபின்ஸ்க் என்னுமிடத்தில் துத்தநாகமும், அலெபெவ்ஸ்க் என்னுமிடத்தில் ஏராளமான அஸ்பெஸ்டாசும், காஹிலோவோ என்னுமிடத்திலும், உபாலி என்னுமிடத்திலும் நிக்கலும், காபின்ஸ்க் என்னுமிடத்தில் அலுமினியமும் கிடைக்கின்றன.

**எண்ணெய்க் கிணறுகள்**

மேலும் யூரால் மலைப்பிரதேசத்தில் ஏராளமான எண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. உலகத்திலேயே இவைதான் மிகப் பெரியவை. இவற்றிற்கு மத்தியிலுள்ள உபா என்னுமிடத்தில் ஊற்று எண்ணெயைச் சுத்தம் செய்கிறார்கள். இந்த இயந்திரம் அமைக்கப்பட்ட முதல் வருஷத்திலேயே விமானத்திற்குத் தேவையான காஸோலின் எண்ணெய் 5 லட்சம் டன் தயாராயிற்று. 1941-ல் மற்றொரு எண்ணெய்த் தொழிற்சாலை வால்கா நதிக்கரையிலுள்ள சரடவ் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது.

இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சாமான்களை ஏற்றிக்கொண்டு போவதற்கு அநேக ரயில் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. ரஷ்யாவின் இதர பாகங்களில் போவதைவிட இங்கே அதி விரைவாக ரயில் வண்டிகள் போகின்றன. அல்லாமலும் ஒரு தொழிற்சாலை பழுதாகிவிட்டாலும், மற்றத் தொழிற்சாலைகள் தடையில்லாமல் வேலைசெய்யத் தகுந்தபடி அமைக்கப்பட்டிருக்கின்றன.

**விமான உற்பத்தி**

பெர்ன் என்னுமிடத்தில் பிரம்மாண்டமான விமான உற்பத்திச்சாலை ஒன்று இருக்கின்றது. யுத்தம் இப்போது நடக்கும் இடத்திற்கும் இந்த இடத்திற்கும் 1000 மைல்களுக்கு அதிகமிருக்

கும். இங்கே அந்நிய நாட்டார் ஒருவரையும் அனுமதிப்பதில்லை. இங்கு வேலை செய்கிறவர்களுக்கும் வெளி தேசங்களுக்குப் போக வசதிகள் அளிப்பதில்லை. அல்லாமலும், வாரனேஷ், கோர்க்கி, கஜான், காம்ஸ்க், இர்குடஸ்க், காப்ராவ்ஸ்க், காம்லோமல்ஸ்க் ஆகிய இடங்களிலும். விமானங்கள் உற்பத்தி செய்கிறார்கள். இவை யுத்தம் நடக்கிற இடத்திற்கு 200 முதல் 3000 மைல்கள் தூரம் வரையில் இருக்கின்றன. ரைபின்ஸ்க், பெர்ம் என்னுமிடங்களில் விமான இஞ்சின்கள் தயார் செய்யப்படுகின்றன.

இவற்றைக்கொண்டு ஆராய்ந்து பார்த்தால், பொருளாதார விஷயத்தில் ரஷ்யா கொஞ்சம் நஷ்டமடைந்திருந்தாலும் அது ஐரோப்பிய ரஷ்யாவில் மாத்திரம்தான் நேர்ந்திருக்கிறது. ஆனால் ரஷ்யாவின் ஆசியா பகுதியில் உற்பத்தி செய்வதைப்பற்றி மற்ற நாட்டார் ஒன்றும் தெரிந்துகொள்ளமுடியாது.

# உலகப் போக்கு

பிரிட்டனின் யுத்தத் தளவாட உற்பத்தி வெகுவாக உயர்ந்து கொண்டே போகிறது. இது பற்றி உதவிப் பிரதம மந்திரியான மிஸ்டர் சி. ஆர். அட்லி கூறியதன் சுருக்கம் பின்வருமாறு:—

**யுத்தத் தளவாட உற்பத்தியின் அதிகரிப்பு**

யுத்தம் ஆரம்பித்தபோது நம்மிடமிருந்த யுத்தத் தளவாடங்களைப் போல் பத்துப் பங்கு அதிகத்தளவாடங்கள் தயாராகியிருக்கின்றன. டன்கர்க் நகரம் முற்றுகையிடப்பட்டபோது இருந்த டாங்கிகளை விட ஐந்து மடங்கு அதிக டாங்கிகள் தயாராகியிருக்கின்றன. ஆறு மாதங்களுக்கு முன்பிருந்ததைவிட இரண்டு மடங்கு அதிக டாங்கிகள் தயாராகியிருக்கின்றன. யுத்தத்திற்கு முன் மூன்று மாதங்களில் தயாரான யுத்தக்கப்பல்களைவிட 1941-ம் வருஷத்தின் கடைசி மூன்று மாதங்களில் 4 பங்கு அதிகக் கப்பல்கள் தயாராகியிருக்கின்றன. யுத்தத்திற்கு முன்பிருந்த வியாபாரக் கப்பல்களைப் போல் இரண்டு மடங்கு அதிகக் கப்பல்கள் 1941-ம் வருஷத்திய கடைசி மூன்று மாதங்களில் கட்டி முடித்திருக்கிறோம். சென்ற வருஷம் 330 கப்பல்கள் 11,000 மைல் பிரயாணஞ் செய்தன. இவை 10 லட்சம் டன் பொருள்களும் 30,000 மோட்டார்களும் ஏற்றி மத்திய யுத்த களத்துக்குக்கொண்டு போய்ச் சேர்த்தன. முன்பிருந்ததைவிட இப்போது நம் நிலைமை மிகவும் திருப்திகரமாயிருக்கிறது, மேலும் அவர் கூறியதாவது:—

இப்போதுள்ள நிலையை எல்லா வகைகளிலும் நீங்கள் ஆராயவேண்டும். அப்போதுதான், இரண்டு வருஷங்களுக்கு முன் இருந்ததைவிட மிகவும் முன்னேறியிருக்கிறோமென்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுவீர்கள். அச்சு சர்க்கார்களின் கடைசிக் கையிருப்பு ஜப்பான் சேனைகள் தான். இவை நன்ருகப் பழக்கப்பட்ட சேனைகள். ஆனால் நம் கட்சியில் பெரிய சீன தேசமும், அமெரிக்காவும் சேர்ந்து இருக்கின்றன நேச தேசங்களுடைய சக்தி மிகவும் அதிகம் தான். அது உருவாகக் கொஞ்சம் நாட்கள் செல்லும். டன்கர்க் முற்றுகைக்குப் பிறகும் நாம் எப்படிப் போராடிக் கொண்டு வந்தோமோ, அதுபோலவே தான் மேலும் போராடவேண்டும்.

அச்சு நாடுகள் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவை. நேச தேசங்கள் பிரிட்டன், அமெரிக்கா கனடா, முதலியவை. விமானங்களும் டாங்கிகளும் யுத்தக் கப்பல்களும் அச்சு நாடுகளைவிட நேச தேசங்களில் மிக அதிகமாகச் செய்யப்படுகின்றன என்று "வால் ஸ்ட்ரீட் பத்திகை" எழுதுகிறது.

சாதாரணத் துப்பாக்கிகள் செய்யும் தொழிற்சாலைகள் பல அமெரிக்காவிலிருக்கின்றன. அவற்றில் இப்போது விமானப் பாதுகாப்பு இயந்திரங்களின் எல்லாப் பாகங்களும் செய்து உருவாக்கப்படுகின்றன. இந்த வருஷம் 37½ கோடி பவுன் பெறுமானமுள்ள இயந்திரங்கள் இங்கே செய்யப்படுகின்றனவென்று "பிலெடெல்பியா இன்கொயரர்" என்னும் பத்திரிகை எழுதுகிறது.

**வெற்றியின் சிகரம்**

லண்டனில் சமீபத்தில் யுத்தக் கப்பல்கள் திருநாள் ஒன்றைக் கொண்டாடினார்கள். அப்போது மாட்சிமைதங்கிய மன்னர் பிரானும் கனம் மந்திரிகளும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பினார்கள். மன்னர் பிரான் அனுப்பிய வாழ்த்துத் தந்தியில்

"சமீபத்தில் பிரிட்டிஷ் தீவுகள் முழுதும் கப்பற்படைத் திருவிழா திருப்திகரமாக நிறைவேறியதுபற்றி நான் மிகவும், சந்தோஷப்படுகின்றேன். லண்டனில் நடைபெறும் இந்தத் திருவிழா மேலும் வெற்றிகரமாயிருக்குமென்று உறுதியாக நம்புகிறேன்"

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சுகாதார மந்திரியான மிஸ்டர் எர்னெஸ்ட் பெவின் அனுப்பிய வாழ்த்துத் தந்தியில்,

"சண்டையிடுவதனால் நாம் இந்த யுத்தத்தில் ஜெயமடைந்துவிட முடியாது, ஆனால் ஆயுதங்களைக் கொண்டும் அவைகளின் உற்பத்தியைக் கொண்டுந்தான் வெற்றி பெற முடியும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அமெரிக்காவிலே டெத்ராய்ட் என்னும் நகரம் இருக்கிறது. இங்கே ஹென்ரி போர்டு என்ற கோடீஸ்வரர் ஒரு பெரிய தொழிற்சாலையைக் கட்டிக் கொண்டிருக்கிறார். இதன் நீளம் ½ மைல்; அகலம் ¼ மைல். ஒரு மணிக்கு ஒரு பாம்பர் விமானம் கட்ட வேண்டுமென்பது இவரது நோக்கம். மற்றத் தொழிற்சாலைகளில் இஞ்சின்கள் விமான விசிறிகள் துப்பாக்கிகள் முதலியவற்றை ஏராளமாக, நிமிஷக் கணக்கில் செய்து குவிக்கின்றார்கள்.

**ஜெர்மனி திண்டாட்டம்.**

இப்போது ஜெர்மனியில் தொழிற்சாலைகளுக்கும் சேனைகளுக்கும் ஆட்கள் தேவை. ரஷ்யாவுடன் போராடியதில் ஏராளமான ஜெர்மானியர்கள் மடிந்து போனார்கள். கைப்பற்றிய நாடுகளைக் காப்பாற்ற பெரிய சேனைகள் தேவை. வெகு தூரத்திற்கப்பால் போராடும் சேனைகளுக்கு யுத்தத் தளவாடங்களும் உணவுப்பொருள்களும் அனுப்புவது ஜெர்மானியருக்குக் கஷ்டந்தான். அங்கே, வேலை செய்யக்கூடிய வயதுடையவர்கள் 2 கோடிப்பேர் இருந்தார்கள். இவர்களுள் 90 லட்சம் பேர் போர் முனையில் இருக்கின்றனர். 15 லட்சம் பேர், யுத்தத்தில் மடிந்து போனார்கள். ஆகவே முன்பு இருந்ததில் பாதிப்பேர் தான் இப்போது வேலை செய்யக்கூடும்.

**ரஷ்யாவில் ஜெர்மானியர் கஷ்டம்.**

இங்கிலாந்திலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் ரஷ்யாவிற்கு யுத்தத் தளவாடங்கள் வந்து சேர்ந்தவண்ணமாகவே இருக்கின்றன. இவை வந்திறங்கிய ஒரு வாரத்திற்குள் போர் முனைக்கு அனுப்பப்படுகின்றன.

ரஷ்யர்கள் படிப்படியாக ஜெர்மானியர்களை வென்றுகொண்டுவருகிறார்கள். ஜெர்மானியர்கள் வெகு வேகமாகத் தம் சேனைகளுக்குவேண்டிய தளவாடங்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியிலிருந்து சேனைகள் ரஷ்யாவுக்கு வந்தவுடனேயே, ரஷ்யர்கள் அவைகளை நிர்மூலம் செய்து விடுகிறார்கள். சென்ற வாரம் நடந்த யுத்தத்தில் 249 ஜெர்மன் விமானங்களும், 77 ரஷ்ய விமானங்களும் சேதமாயின.

ஜாவாவைக் கைப்பற்றியது முதல், ஜப்பான் மேல் நோக்கிப் போராடாதபடி தற்காப்பிலேயே இருக்கின்றது தவறாகுமென்றும், இதனால் நேசதேசங்கள் தம்மைப் பலப்படுத்திக்கொள்ளக்கூடும் என்றும் இந்து மகா சமுத்திரத்தையும் ஆஸ்திரேலியாவையும் இந்தியாவையும் கைப்பற்றவேண்டுமென்றும், ஜப்பானிய கடற்படை அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

**ஆஸ்திரேலியாவின் உறுதி.**

நியூகினியாவில் சலாமஸ், பின்ஷாவன், ரபால் ஆகிய இடங்களிலும் லே சலர்மஸ் என்னும் இடத்திலேயும் ஜப்பானியக் கப்பற்படைகளை நேசதேசக் கப்பற் படைகள் தாக்கி, 8 எதிரிக் கப்பல்களை மூழ்கடித்தன. போர்த்துகீசிய தைமூர் என்னுமிடத்தில், ஜப்பானியர் வசமுள்ள டெலி என்னும் விமான நிலயத்தை நேசதேச விமானங்கள் தாக்கின.

நியூகினியில் விமானத் தளங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்னும் நோக்கத்தோடு, மோர்ஸ்பி, டார்வின் துறைமுகங்களிலும், தர்ஸ்டே தீவிலும், எதிரிகள் தாக்கியபோது, அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

ஜப்பானியர்களை விரட்டியடிப்பது தான் தம் யுத்த முறையென்று ஆஸ்திரேலிய மந்திரிகள் கூறுகின்றனர். இதை முன்னிட்டு, உணவுப் பொருள்கள் இலாகா ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக வேலை செய்பவர்களின் அநேக லீவு நாட்களை ரத்து செய்திருக்கிறார்கள்.

தாம் கைப்பற்றிய நாடுகளை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டி ஜப்பானியர் மும்முரமாய் வேலை செய்கிறார்கள். நேசத்துருப்புகள், எதிரி தாக்குதலை தடுக்க, தம்மை ஆயத்தம் செய்து கொள்கின்றன. பிரிட்டிஷ் தளகர்த்தரும், சீன தளகர்த்தரும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாகவேயிருக்கிறார்கள். சீனாவிலிருந்து பர்மாவுக்கு வந்து சேரும் துருப்புகளை மிகவும் குதூகலமாக பர்மியர்கள் வரவேற்கிறார்கள். நம நேசதேச விமானங்கள மோல்மீனைத் தவிடு பொடியாக்கிய போது, ஜப்பானிய விமானங்கள் எட்டியே பார்க்கவில்லை. **இது எதிரிகளின் பலக் குறைவைக் காட்டுகிறது.** பர்மாவில் யுத்தம் ஆரம்பமாகும் போது இருந்ததைவிட இப்போது நம் விமானப்படை மிகப் பெரிது. ஆகையால் பர்மாவை நாம் காப்பாற்றிக் கொள்ளலாம்.

**ஏன் ரங்கூனை காலி செய்தோம்?**

பர்மாவின் புதிய தளகர்த்தராகிய ஜெனரல் அலெக்ஸாந்தர் கூறுவதாவது:—யுத்த தந்திரத்தையொட்டித்தான் ரங்கூனைக் காலி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எதிரிகளின் எண்ணிக்கை வெகு அதிகம். பூமியும் நமக்குச் சாதகமானதாயில்லை. ஆகையால் எண்ணெய்க் கிணறுகளையும் வட பர்மாவையும் காப்பாற்றுவதற்காக நாம் பின் வாங்கினோம். அடுத்தாற்போல் எதிரிகள் நான்கு இடங்களைத் தாக்கலாம். அவையாவன (1) பர்மாவிலுள்ள எண்ணெய்க் கிணறுகள், (2) அஸ்ஸாமிலிருந்து சாமான்கள் வரும் வழி, (3) சீனாவுக்குப் போகும் பாதையிலுள்ள மாண்டலேயைத் தாக்குவதற்காக, ஐராவதி வழியே டாங்கூ மாகாணத்தைக் கைப்பற்றிக்கொண்டு பிறகு வடக்கே வரலாம், (4) ஷான் நாடுகளிலுள்ள சீனர்கள், படைகளில் சேர்ந்து விடாதபடி தடுக்க முயற்சிக்கலாம்.

பர்மா யுத்தத்தில் நம் படையினர் மிகுந்த வீரச் செயல்களைச் செய்திருக்கிறார்கள். வானெட்சாங் என்பது பர்மா ரயில்வேயில் ஒரு சிறிய ஸ்டேஷன். இதைத் திடீரென்று ஜப்பானியர் தாக்கினார்கள். நம் படைகள் அந்த ஸ்டேஷன் வழியாகப் போக வேண்டி இருந்தது. ஆகையால் அன்றிரவு முழுதும் எதிரிகளோடு ரயில்வேக்காரர்களும் போராடிக் கொண்டிருந்தார்கள்.

# ஜப்பானியக் கப்பல்கள் ஐந்தில் ஒரு பங்கு சேதம்

## கிடைத்த வெற்றிகள் ஸ்திரமானவையல்ல

### சேதத்தைச் சரிப்படுத்த முடியவில்லை

### ஜப்பானியர் கடல் ஆதிக்கத்தின் அழிவு

அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும், டச்சுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும், சொந்தமான நாடுகளைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்த ஜப்பான் பெரும் முயற்சி செய்கிறது. இந்த முயற்சியில் அது அடையும் வெற்றிகள் மிகுந்த ஆபத்தை உண்டாக்கக் கூடியவை.

**56 ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் நாசம்.**

சமீபத்தில் கிழக்கிந்தியத் தீவுகளின் மீது ஜப்பான் படையெடுத்தது. இவை பெரும்பாலும் டச்சுக்காரர்களுக்குச் சொந்தமானவை. டச்சுக்காரர்களுக்குச் சாதகமாக பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆகிய நேசதேசத் துருப்புக்கள் போராடின. கிழக்கிந்தியத் தீவுகளில் ஒரு சில அமெரிக்காவுக்குச் சொந்தமானவை. இந்த யுத்தத்தில் ஜப்பான் கப்பற்படைக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. யுத்தம் ஆரம்பமாகி 9 வாரங்களில் 56 யுத்தககப்பல்களையும், 126 வியாபாரக் கப்பல்களையும் ஜப்பான் இழந்துவிட்டது.

**பழுது பார்ப்பதில் உள்ள கஷ்டம்.**

இங்கே, ஜப்பான், யுத்தத்தை ஆரம்பித்த காலத்தில் அவர்கள் வசம் 250 யுத்தக்கப்பல்களும், கடல் வெடிகுண்டுகளை அழிக்கும் கப்பல்களும் தான் அவர்களுடைய கடற்படையிலிருந்தன. இவற்றில் 56 கப்பல்கள் சேதமானதால் அவர்களுடைய கடற்படையில் ஐந்தில் ஒரு பங்கு சேதமாயிருக்கிறது. இப்படிச் சேதமடைந்த கப்பல்களைப் பழுதுபார்ப்பதும் ஜப்பானியர்களுக்குச் சுலபமான காரியமல்ல. ஏனென்றால், ஜப்பானியர் துறைமுகங்களுக்கும், கப்பல்கள் சேதமடைந்த இடங்களுக்கும் ஏறக்குறைய 3,000 மைல்கள் தூரமிருக்கும். ஆகையால் 3,000 மைல்கள் தூரம் சேதமடைந்த கப்பல்களை இழுத்துக்கொண்டுபோவது என்பது லேசான காரியமல்ல. அன்றியும், இவ்வளவு தூரம் கடந்து போகும்போது, அந்தக் கப்பலும் அதை இழுத்துக்கொண்டுபோகும் கப்பலும் செய்ய வேண்டிய மற்ற யுத்த சம்பந்தமான வேலை தடைப்படும்.

இதுவரை ஜப்பான் அடைந்துள்ள வெற்றிகள் ஸ்திரமானவையாயிருக்க முடியாது. கடலில் தமக்கு ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டதென்று ஜப்பான் பெருமையடித்துக்கொண்டிருக்கலாம். இவை தற்காலிகமான வெற்றிகளே. கிழக்கிந்தியத் தீவுகளிலுள்ள துறைமுகங்களையும் தளங்களையும் கைப்பற்றியதனாலேயே! கடல் முழுவதிலும் ஆதிக்கம் ஏற்பட்டு விட்டது என்று நினைப்பது தவறு. கடலில் போய் வந்துகொண்டிருக்கும் கப்பல்களின் எண்ணிக்கையினால்தான் கடலில் ஆதிக்கம் ஏற்படக்கூடும்.

**அமெரிக்க கடற்படை.**

அமெரிக்காவுக்கு பெர்ல் துறைமுகத்தில், ஏராளமான கப்பல்கள் நாசமாயின. ஆனாலும், அமெரிக்க யுத்தக் கப்பல்களின் எண்ணிக்கை ஜப்பானியக் கப்பல்களின் எண்ணிக்கையை விட மிகவும் அதிகமாகவேயிருக்கிறது. ஆகையால்தான் கடலில் ஜப்பானுக்கு ஆதிக்கம் ஏற்படவொட்டாதபடி, அமெரிக்கா செய்துவர முடிகிறது.

அல்லாமலும், தான் ஜெயித்த நாடுகளைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, ஜப்பான் தன் கப்பற்படையை அதிகப்படுத்திக்கொண்டே போகவேண்டும். ஆனால் நடந்ததென்ன? உள்ள கப்பல்களிலேயே ஐந்தில் ஒரு பங்கு சேதமடைந்திருக்கிறது. இந்தச் சேதத்தை சரிப்படுத்திக்கொள்ள ஜப்பானால் முடியவில்லை. இப்படி ஈடு செய்து, கப்பல்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டால்தான், மற்ற சர்க்கார் கடற்படைகளோடு சமமாகப் போராட ஜப்பானால் முடியும்.

**பாழான இடத்தல் பயன் என்ன?**

கிழக்கிந்தியத் தீவுகளில் அமெரிக்க கப்பற்படை யொன்றிருந்தது. அதோடு ஜப்பான் கப்பற்படை போராடியது. அந்தப் போராட்டத்தில் ஜப்பான் கப்பல்களில் சில நாசமாயின. இதை ஒரு சேதமென்றேசொல்ல முடியாது. ஆனால், எரிந்து போன எண்ணெய்க் கிணறுகளையும், நாசமடைந்த துறைமுகங்களையும் கைப்பற்றும் பொருட்டு ஜப்பானியர் கடுமையாகப் போராடினார்கள். இப் போராட்டத்தில், அவர்கள் கப்பல்களுக்கு மிகுந்த சேதமேற்பட்டது. இவ்வளவு சேதத்திற்கு உள்ளானது யுத்த தந்திரமாகாது. எரிந்து போன எண்ணெய்க் கிணறுகளால் பயன் என்ன? நாசமடைந்த துறைமுகங்களில் கப்பல்கள் வந்து தங்கக் கூடுமா? முடியாதே. ஆகையால், இவற்றிற்காக இவ்வளவு கடுமையாகப் போராடி, தமக்கும் சேதத்தை உண்டாக்கிக்கொண்டது ஜப்பானியரின் மடமைத்தனத்தைத் தான் காட்டுகிறதே ஒழிய வேறில்லை.

## பிரிட்டிஷ் பெண்மணிகள் யுத்த உதவி



பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளில் உள்ள பெண்மணிகள் இங்கிலாந்தில் யுத்தப் பள்ளிக்கூடத்தில் மிகவும் சிறந்த வேலை செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு பெண்மணி வெடிகுண்டுகள் எவ்வளவு தூரத்தில் சமுத்திரத்தில் போய் விழுகின்றன என்பதை ஒரு கருவியின் மூலமாகக் கண்டு பிடித்துக் கொண்டிருப்பதை மேலுள்ள படத்தில் காணலாம்.

## வருக! வருக!!

வாடி நிற்கும் பயிர்களுக்கு, நாலு துளி மழை பெய்தால் எவ்வளவு ஜோராக இருக்கும்! அதே மாதிரி சந்தோஷம் இப்பொழுது இந்திய மக்கள் மனசில் எல்லாம் தோன்றியிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபை ஒன்று கூடி, பூரணமாக யோசித்து, ஏகோபித்ததோர் முடிவை அடைந்தது. எது விஷயமாக? இந்தியா விஷயமாகத்தான். இந்தியர்களின் கோரிக்கைகளைப்பற்றியும், இப்பொழுது அது சம்பந்தமாக என்ன செய்வது சாத்யம் என்றும் இந்த யுத்த மந்திரி சபை யோசித்திருக்கிறது. யோசனையின் முடிவில் ஏற்பட்ட தீர்மானங்களை உடனே வெளியிடுவது புத்திசாலித்தனமல்ல. நேரே ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸ் என்ற புது மந்திரியை இந்தியாவிற்கு, இந்தத் தீர்மானங்களோடு அனுப்புவது. அவர் அங்கு போய், பிரபல இந்தியத் தலைவர்களையும், பல அரசியல் கட்சியார்களையும், சிறுபான்மை வகுப்பாரையும், வைசிராய், கவர்னர்கள், நிர்வாக சபையினர், சமஸ்தானாதிபதிகள் ஆகியோரையும் சந்தித்து, தனித்தனியே ஒவ்வொருவரிடமும் பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபையின் முடிவுகளைச் சொல்லி, இந்தியர்களின் அபிப்பிராயத்தை அறிந்து வரச்செய்வது என்று யோசிக்கப்பட்டது. உடனே சமாதான தூதராக ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸ் இந்தியாவிற்குப் புறப்பட்டார். இந்தச் செய்தியைக் கேட்டு சந்தோஷப்படாத நாடுகளே இல்லை. ஜெர்மனியும், ஜப்பானும் இருக்கிறதே என்று கேட்பீர்கள்! வாஸ்தவம். வயிற்றெரிச்சல்காரனுக்கு என்றுதான் சந்தோஷம் ஏற்படப்போகிறது?

ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸ் இங்கு வரப்போகிறார், இப்பொழுது வந்திருக்கிறார், இந்தியப் பிரதிநிதிகளுடன் பேச ஆரம்பித்திருக்கிறார், என்பதில் எல்லாம் உலகோரே இவ்வளவு சிரத்தை காட்டுவானேன் என்றொரு கேள்வி கேட்கலாம் நீங்கள். அது நியாயமான கேள்வி.

இந்திய விஷயம் அவ்வளவு முக்கியமானதாகி விட்டது இப்பொழுது. இத்தனை காலமாக, உலக யுத்தம் இந்தியாவிற்கு வெகு தூரத்திலிருந்தது. அது இந்தியாவிற்காவது, வருவதாவது என்று இருந்தார்கள் பலர். ஆனால் இன்றைய நிலைமை என்ன? இதோ வந்துவிட்டது அந்த யுத்தம் நம் வீட்டு வாசல்படிக்கு!

பர்மாவிலே ஜப்பானியர் புகுந்துவிட்டார்கள். பர்மா முழுவதையும் பிடித்துவிட்டால், சீனாவைத் தனிமைக அடித்துவிடலாம்; அப்புறம் நம்மை யாரும் அசைக்கமுடியாது; நமது படைகளை எடுத்துக்கொண்டு எங்கு வேண்டுமானாலும் போகலாம்; யாரை வேண்டுமானாலும் எதிர்க்கலாம் என்று ஜப்பான் கனவு கண்டுகொண்டிருக்கிறப் போலிருக்கிறது. இந்தக் கனவு 'புஸ்' என்று ஒரு நாள் புகைந்து போனாலும் போய்விடலாம். ஆனாலும் இந்தியா அருகே யுத்தம் நெருங்கிவிட்டது; ஒரு வேளை இந்தியாவிற்குள்ளேயே இது தன் தலையை நீட்டினாலும் நீட்டலாம் என்பதை எந்தப் புத்திசாலியாவது மறுப்பானா?



ஜப்பானின் கொட்டத்தை அடக்க, அதன் மீது பாய்ந்தாகவேண்டும். அதற்கு, முதலில் நின்று தயார்செய்துகொள்ள ஒரு நல்ல இடம் வேண்டாமா? ஐயா, அனுமார் கடலைத்தாண்டி லங்கைக்குப் போனார் என்று சொல்கிறது ராமாயணம். அவ்வாறு தாண்டிப்பாய்வதற்கு முன்னாலே, அவர் ஒரு நல்ல உறுதியான மலைமேலே ஏறி நின்றுகொண்டு, கண்ணை மூடிக்கொண்டு, தீவிரமாக ராமநாமஜபம் செய்துவிட்டுத் தானே தாண்டினார்.

அம்மாதிரி, நம்மை வலுப்படுத்திக்கொண்டு, பாய்வதற்கு ஒரு நல்ல இடம் வேண்டாமா? அதற்கு இப்போதுள்ளவற்றில் இந்தியாதான் சிறந்த இடமாகும் அடுத்தபடியாகத்தான் ஆஸ்திரேலியா, நியூஸீலந்தெல்லாம். ஆனால் இம்மூன்று பிரதேசங்களையும் நன்றாகப் பலப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடந்து வருகின்றன.

இந்தியாதான் சீனத்திற்கு சமீபத்திலிருக்கிறது. சீனர்தான் ஜப்பானுக்கு எதிர் வீட்டிலிருக்கிறார்கள். ஆகவே சீனரும் இந்தியரும் சேர்ந்து சரியானபடி ஒரு திட்டம்போட்டால், ஜப்பான் உதைபடுவது நிச்சயம். ஆனால், இந்தியாவிலிருந்தே சீனாவிற்கு உதவி போயாகவேண்டும். இப்பொழுது இத்தகைய நிலைமையிலிருக்கும் இந்தியாவை, ஜப்பானியர் நெருங்கி வருவதால், நேசநாடுகளிடை கவலையும், இந்திய விஷயத்தில் அதிக சிரத்தையும் ஏற்பட்டது நியாயந்தானே?

இந்திய ப்ரச்னை மகா கடினமானது. கல்உருண்டையைக்கூட, கடபுடஎன்று கடித்துவிடலாம். இந்திய ப்ரச்னை கல்லினும் கடியது. ஆனால் தீரவே தீராது என்று சொல்லிவிடமுடியாது. இதற்கான வேளை இத்தனைகாலமாக வரவில்லை, இவ்வளவுதான்! தவிர, மற்ற நாடுகளைப்போலில்லாமல், பிரமாண்டமான இத்தேசத்தில் பல்வேறு அபிப்பிராயங்களும், பல்வேறு பழக்கவழக்கங்களும், பல்வேறு பாஷைகளும், பல்வேறு மதங்களும் உள்ள மனுஷர்களே நிறைந்திருக்கிறார்கள். இவர்களிடை ஒற்றுமை ஏற்படுவதும், ஏற்படுத்துவதும் வெகு சிரமமானகாரியம் என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள். குள்ளமாயிருப்பவன் உயரமாகயிருப்பவனைப் பார்த்து, 'உலகில் இருப்பவர்கள் எல்லாம் குள்ளமாக இருந்தால்தான் நல்லது' என்று பிடிவாதமாகச் சொல்லுகிறான். அதை நெடியன் உடனே ஏற்றுக்கொண்டு விடுவானா? நெடியன், பருமனாக உள்ளவனைப் பார்த்து, 'சீ' இப்படியா இருப்பார்கள். குச்சிபோலிருந்தாலும் உயரமாக இருப்பதில் உள்ள சௌக்கியம் வேறெதிலும் இல்லை, என்கிறான். அதைப் பருமனாக உள்ளவர்கள் ஒப்புக்கொண்டு விடுவார்களா? இதெல்லாம் பேசுவது தவறு. இது முடிவற்றவாதம்; இப்பொழுது நெருக்கடியான காலம் வந்திருக்கிறது. உங்களிடை உள்ள வேற்றுமைகளை மறந்து, மனிதர்களாக இருந்து, ஒற்றுமையோடு வாழ்வதில்தான் க்ஷேமம் இருக்கிறது என்று அவர்களுக்கு யாராவது எடுத்துச் சொல்லவேண்டும். அவ்வாறு சொல்ல முன்வருகிறவரும், மேற்கண்டவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரரானவராக இருக்கவேண்டும். தவிர, சமர்த்தராகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவரது பேச்சால் பலன் ஏற்படக்கூடும்.

மேற்கண்ட நிலைமையே இந்தியாவில் இருந்து வருகிறது. மேற்கண்ட வாதநிலைமையை மாற்றி, அனைவரிடையிலும் ஒற்றுமை ஏற்படுத்த வழிசெய்து எல்லோரும் சேர்ந்து ஏகமனதோடு எதிரியை விரட்டும் சேவையில் உடனே ஈடுபடவேண்டும் என்பதற்காகவே, பிரிட்டிஷ் யுத்த மந்திரிசபை ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸை இந்தியாவிற்கு அனுப்பியிருக்கிறது.

ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸ் மகாசூரர். பெரிய பாரிஸ்டர் அவர். ஏழைகள் அன்பர். இந்தியா விஷயத்தில் பூரணஅனுதாபங் காட்டுகிறவர். இந்தியாவைப் பற்றியும், இந்தியர்களில் பலரைப்பற்றியும் நேரில் நன்கு தெரிந்துகொண்டிருப்பவர். பெரிய சச்சரவுகளைத் தீர்த்து, சமரச இன்பத்தை இருசாராரும் பருகவைப்பதில் திறமை பெற்றவர் என்பது, சென்றவருஷம் ரஷ்யாவிற்கும் பிரிட்டனுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தி, ஜெர்மனிக்கும் ரஷ்யாவிற்கும் இருந்த தொடர்ப்பு அறுபட்டுப் போகும்படி செய்த இவரது செய்கையிலிருந்தே உலகோருக்கு வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது.

ருஷ்யாவிற்கும் ஜெர்மனிக்கும் இருந்த தொடர்பு அறுந்துபோனதால்தான், ருஷ்யா ஜெர்மானிய யுத்தம் ஆரம்பமாயிற்று. இல்லாதிருந்தால் ஹிட்லர், பிரிட்டன்மீது தனபடைகளை நிச்சயம் ஏவிவிட்டிருப்பார். ரஷ்ய யுத்தத்தால் அந்த ஆபத்து குறைந்தது. தன்னைவிட பராக்ரமம் மிகுந்ததோர் நாட்டுடன் ஜெர்மனி மாட்டிக்கொண்டதால, அந்த யுத்தத்திலே அது அதிகப்படியான கவனத்தைச் செலுத்தவேண்டிவந்தது. அதிகமான சேதங்களையும் ஏற்கவேண்டிவந்தது. ரஷ்ய யுத்தத்தால்தான், என்றும் ஜெயிக்கமுடியாதது என்று அதுவரை ஜெர்மன் சேனைகளுக்கு இருந்தபெயர், எங்கோ பறந்தோடிப்போய்விட்டது. எங்குபார்த்தாலும் ஏகமாகப் பூசைக்காப்பு வாங்கிக்கொண்டு, ஜெர்மன் பட்டாளங்கள் விழித்துங்க, பின்வாங்கிக்கொண்டிருக்கின்றன. பல இடங்களில் பதினாயிரக்கணக்கான ஜெர்மானியப்படைகள ரஷ்யர்களால் சூழப்பட்டு, வாழைக்காய், கத்தரிக்காய் பஜ்ஜிகள் செய்ய அறுப்போமே, அம்மாதிரி அறுத்துத்தள்ளப்படுகிறார்கள். படுசேதம் என்றால் என்ன என்பதை இன்று ரஷ்யாவிலே போய்ப் பார்க்கவேண்டும். ஜெர்மானியர் இன்னும் ஒரு இடத்தில்கூட நிற்கவில்லை. இதுவரை அவர்களுக்கேற்பட்ட கஷ்ட நஷ்டங்களால், இனி அவர்கள் நடத்தும்போரில் ஜெர்மன் வீரர்களுக்கு முன்போல் அவ்வளவு குஷி இராது என்றே தோன்றுகிறது.

ஜெர்மனியின் சக்தி எல்லாம் ஒரு இடத்திலேயே செலவழிந்து வருகிறது. கொள்முதலையே எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டுவரும் வியாபாரி எவராவது உருப்பட்டதுண்டா? அதேமாதிரி, மூலப்படைகளையே கரைத்துப் போராடும் நிலைமைக்கு வந்த ஹிட்லர், அடுத்த வருஷத்திற்குள் பூரண அசக்தராகிவிடுவார் என்றே விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கிய சமர்த்தர் ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் என்றே சொல்லவேண்டும். பிரதமமந்திரி சர்ச்சிலுக்கும், இவருக்கும் முன்பெல்லாம் பிரமாத அபிப்பிராயபேதங்களிருந்தன. ஆனாலும் இவரை இப்பொழுது யுத்த மந்திரிசபையில் சேர்த்துக்கொண்டார் அவர். ஏன்? உயிருக்காகப் போராடும் இந்த யுத்தகாலத்தில், வெறும் அபிப்பிராய பேதங்களுக்கா அதிக மதிப்புக்கொடுப்பது? சமர்த்தர் யாரானாலும் இழுத்துப்போட்டுக்கொண்டு, அவரால் செய்யக்கூடிய நல்ல சேவைகளைச்செய்ய இடம் கொடுத்து, இறுதிவெற்றியிலேயே கண்ணாக இருப்பதுதானே புத்திசாலிகளுக்கு அழகு. அதையே நிபுணரான பிரதமமந்திரி சர்ச்சில் செய்தார். ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸை மந்திரி சபையில் சேர்த்துக்கொண்டதுமில்லாமல், மிகப் பெரிய ப்ரச்னை, அதி அவசரமாகத் தீர்க்கவேண்டியதுமான இந்திய ப்ரச்னையைத் தீர்க்க இந்தியர் தம் நண்பராகக் கருதும் ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸை இந்தியாவிற்கு அனுப்பியிருக்கிறார். இத்தகைய தூதரின் வருகையால் இந்தியாவிற்குப் பல நன்மைகள் விளையும் என்றே எல்லோரும் எதிர்பார்த்திருக்கிறார்கள். பரஸ்பரம் தம்மிடை உள்ள சிறுவேற்றுமைகளை மறந்து, எதிரியைத் தோற்கடித்து விரட்டவேண்டும் என்ற விஷயத்தில் எல்லோரும் ஒற்றுமைகாட்டினால், ஸர் க்ரிப்ஸின் விஷயம் பூரணபலனைப் பெற்றுவிடும். ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸ் தமது தூதுவிஷயத்தில் வெற்றிபெற்றுவிட்டால், அவருடைய பெயர் என்றும் அழியாப் புகழுடன், உலகசரித்திரத்திலேயே இடம்பெறும். சமர்த்தரான அவரது விஜயம், வெற்றி விஜயமாகவேண்டும் என்று விரும்புமுன், அவருக்கு நல்வரவு கூறவேண்டியது உங்களது கடமையல்லவா? உங்கள் சார்பில் அவருக்கு நல்வரவு கூறுகிறோம்.

# இ தோ டு ச ரி யா ?

ஜாவாத் தீவைக் கைப்பற்றும்வரை ஜப்பானியருக்கு வெற்றிமேல் வெற்றியாகச் சேர்ந்துகொண்டு வந்தது. ஆனால், அதற்கப்புறம்? அது வேறே கதையாக ஆகிவிடும் போலிருக்கிறது. ஜாவா அருகிலேயே அவர்களுக்கு ஏக நஷ்டம். ஆனாலும் பலன் அதிகமில்லை. ஜாவா, சுமத்ராவில் இருந்த எண்ணெய்க் கிணறுகள், ஆலைகள் எல்லாம் நாசம் செய்யப்பட்டுவிட்டன. ஒரு இலையில், பக்குவமாகச் சமைக்கப்பெற்ற சாப்பாடு பரிமாறப் பெற்றிருக்கிறது. பசியால் வாடித் துடித்துக்கொண்டிருப்பவன் ஒருவன் தூரத்திலிருந்தே அதைப் பார்க்கிறான். பின்னங்கால் புட்டத்திலடிக்க ஓடியே வருகிறான். பக்கத்தில் வந்து ஆவலோடு அந்தச் சாப்பாட்டை எடுக்க முயற்சிக்கையில், அந்த இலைமீது ஒரு பெட்டி மண்ணும், மண்ணாங்கட்டியும், விழுந்தால் எப்படியிருக்கும்? அதுமாதிரி ஆகிவிட்டது ஜப்பான் ஜாவாவை நோக்கி வந்த வேகமும், ஜாவாவில் முக்யமான பாகங்கள் மண்ணாகப் போன வைபவமும்.

ஜாவாவிற்கு அப்பால், எங்கு போவது, என்ன செய்வது என்றே ஜப்பானுக்குத் திட்டமாகத் தெரியவில்லை போலிருக்கிறது. ஒருபுறம் ஆஸ்திரேலியா இருக்கிறது. மற்றோர்புறம் இந்தியாவும் பர்மாவும் இருக்கின்றன. எங்கு அதிக கவனம் செலுத்துவதென்று முடிவாகவில்லை அதற்கு. இதற்கு மத்தியில் அமெரிக்காவிலிருந்து படைகளும், ஆட்களும் இந்தியாவிலும், ஆஸ்திரேலியாவிலும் வந்து குவிய ஆரம்பித்துவிட்டார்கள். ஆஸ்திரேலிய விமானிகளோ, அருகே உள்ள தீவுகளில் இறங்கியிருக்கும் ஜப்பானியருக்கு நிம்மதியில்லாமல் செய்கிறார்கள். ராபால் என்னுமிடத்திலே ஜப்பானியருக்கு ஏகச் சேதம். நியூகினி தீவில் ஜப்பானியர் சற்று மும்முரமாக வேலை செய்கிறார்கள். அந்தத் தீவை ஸ்வாஹா செய்து கொண்டால்தான், செழிப்பான கிழக்கு ஆஸ்திரேலியாவை ஜப்பானியர் தாக்க முடியும்.

அவர்களின் இந்த ஆசையை நிராசையாக்கவே, ஆஸ்திரேலியா வீரர்கள், நியூகினி அருகில் ஜப்பானியக் கப்பற் படையைத் தாக்கி, 23 கப்பல்களை, கடலுக்கடியில் போகச்செய்துவிட்டார்கள். இவை தவிர, தெற்கே போனதால் ஜப்பானியருக்கு ஏகமாகக் கப்பல் நஷ்டங்கள் ஏற்பட்டன. சேதமடைந்த கப்பல்களையெல்லாம ரிப்பேர்செய்தால் தானே பிரயோசனப்படும்? ரிப்பேர்செய்ய இடமெங்கே இருக்கிறது, வந்த இடத்திலே?

மலேயா, சிங்கப்பூர்களை வெறும் விமானங்களாலும், தரைப்படைகளாலும் கைக்குள் போட்டுக்கொண்டார்கள் ஜப்பானியர். ஆனால் ஆஸ்திரேலியாமீது பாய்வதென்றால் கப்பல் படையையும்கூட எடுத்துச் சென்றே ஆகவேண்டும். அது ஆபத்தான முயற்சியேயாகும். அந்த முயற்சியில் ஜப்பான் இறங்குமுன், ஆஸ்திரேலியாவின் சக்தியை அதிகப்படுத்திவிடவேண்டும் என்றே அங்கு ஜெனரல் மக் ஆர்தரை பிலிப்பைனிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு மாற்றி, அவரை அந்தப் பிரதேசத்திற்குப் பிரதம சேனாபதியாக்கினார்கள். எந்தப் பெரிய சேனாபதியானாலும் என்ன, போதுமான பலம் இருந்தால்தானே, போராட முடியும்? அதையறிந்தே ஆஸ்திரேலியாவின் படை, விமான, கப்பல் பலங்களையெல்லாம் அதிகப்படுத்தி வருகிறார்கள்.

அமெரிக்காவும் சும்மா இல்லை. அங்கே ஒற்றுமை மகா நாடு என்று ஒன்று நடந்திருக்கிறது. அதிலே ஒரு முடிவு செய்திருக்கிறார்கள். அதன்படி, "சர்வ மதக் காரர்களையும், எல்லா ஜாதியார்களையும் கொண்டதோர் பட்டாளத்தை அமெரிக்காவில் திரட்டவேண்டும்; அப்பொழுது பிரமாண்டமான படை சேர்ந்து ஒற்றுமையுடன் போராடி, ஜப்பானை ஜெயிக்கலாம்' என்ற அபிப்பிராயம் வெளியாகியிருக்கிறது. ஹாவாய் தீவுகளும் பலப்படுத்தப்படுகின்றன. பிரபல மோட்டார் கம்பெனி சொந்தக்காரரான போர்டு துரை, ' மணிக்கொரு (வெடிகுண்டு வீசும்) விமானம் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளை அனேகமாகச் செய்து முடித்துவிட்டேன் ' என்கிறார்.

எல்லோருமாகச் சேர்ந்து, ஜப்பானுக்கே யுத்தத்தை நடத்திச் செல்லவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து, சியாங்கே ஷெக்கின் பிரதம ராணுவ நிர்வாகஸ்தராகச் சென்றிருக்கும் ஸ்டில்வெல் துரைகூட அதேயோசனையை வெளியிட்டிருக்கிறார்கள். அவரை, சீனாவிலும், இந்தியாவிலும், பர்மாவிலும் உள்ள அமெரிக்கப் படைகளின் சேனாபதியாக ரூஸ்வெல்ட் நியமித்திருக்கிறார். தவிர, பர்மாவில் இப்பொழுது, பிரிட்டிஷ் இந்தியப் படைகளோடு நின்று வீரப்போர் புரியும் சீனப்படைகளுக்கும் சேனாபதியாக்கியிருக்கிறார் சியாங்கேஷெக்.

நாளுக்கு நாள் ஜப்பானுக்கு அவஸ்தை அதிகம் தானாகும். பர்மாவிலே சில நாட்கள் ' கம் ' என்றிருந்து விட்டு, ஜப்பானியர்கள் இப்பொழுது முன்னேற ஆரம்பித்திருக்கிறாப்போலிருக்கிறது. மாந்தலேயை நோக்கியிருக்கிறது அவரது திருஷ்டி. வழியிலே டோங்கூ என்ற நகர் அருகே போயிருக்கிறார்கள் அவர்கள். இங்கு தான் ' உல்ப்ரம் ' என்ற முக்யமான பொருள் கிடைக்கும் சுரங்கங்கள் இருக்கின்றன. இன்னொரு ஜப்பானியப் படையின் திருஷ்டி ப்ரோம் நகரைத் தாண்டி, வடக்கே உள்ள ஐராவதி எண்ணெய்க் கிணறுகள்மீது விழுந்திருக்கிறாப்போலிருக்கிறது. ஜப்பானியருக்கு சென்ற வாரத்தில் கிடைத்தவற்றுள், அந்தமான் தீவுகளையும் சேர்க்க வேண்டிவந்திருக்கிறது. கொலைக்குற்றம் செய்து தீவாந்தர தண்டனை அடைகிறவர்களை இத்தனை காலமாக அங்கு அனுப்பிக்கொண்டிருந்தோம். அதற்கான சிறைச்சாலையும், அதில் வேலை செய்யும் காவலாளிகளும் தவிர, ஒரு துறைமுகமும் அங்கிருக்கிறது. முன்கூட்டியே [illegible]தை அங்கிருந்தவர்கள் காலி செய்து விட்டார்கள். ஜப்பானியர் இங்கே காலடி வைத்ததற்குக் காரணம், வங்கக்குடாக் கடலில் அதிகத்தொல்லை விளைவிக்கவேண்டுமெனும் நோக்கத்துடன் தானிருக்கும்.

ஜப்பானியரில் ஒரு பகுதியினர் பிலிப்பைன் தீவில் உள்ள பட்டான் பிரதேச மலைகளில் இன்னும் மண்டையை உடைத்துக்கொண்டுதானிருக்கிறார்கள். அங்குதான் இருந்தார் இதுவரை மாக் ஆர்தர் துரை. விரோதிகளிடை தைரியமாகப் பாய்ந்து வெளியேறினார் அவரும், அவரது சகாக்களும். இந்தத் தீவிலே, ஜப்பானியரது தாக்குதலின் வேகம் அதிகமாக ஆரம்பித்திருக்கிறதாம். ஆகவே சேதமும் உயர்ந்திருக்கும் என்பது நிச்சயம்.

ஜப்பானியர் விஷயம் இப்படியிருக்க, ஜெர்மானியர் விஷயத்தைக் கவனிப்போம். ஹிட்லர் ஏதேதோ ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார். பல்கேரியாவையும் ரஷ்யாவிற்கெதிராகக் கிளப்பிவிடச் சூழ்ச்சி செய்கிறார்போலிருக்கிறது. கோடை காலத்தாக்குதலுக்கு அதிக ஆட்கள் வேண்டுமோ இல்லையோ? தவிர, துருக்கியையும் போரிலிறங்கச் செய்ய அவர் முயற்சிப்பார் போலிருக்கிறது. அழுகல் பழம் ஒரு கூடையிலிருந்தால், அது நல்ல பழங்களையும் சும்மா இருக்கவிடுமா?

ஜெர்மானியர்கள் ஈசல்கள் மழைக் காலத்தில் மடிந்து விழுவதுபோல் ரஷ்யாவில் சாகிறார்கள். பத்து நாட்களில் 32 ஆயிரம் பேர்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். பல நகரங்களில், ரஷ்யர்களின் தாக்குதல்களால் மடியும் ஜெர்மானியருக்கு, வீடுகளின் கொல்லைப்புறங்களிலேயே சவக்குழிகள் தோண்டப்படுகின்றனவாம். நாற்புறமும் ருஷ்யர்கள் சூழ்ந்து சூழ்ந்து, நாஜிகளைத் தினற அடிக்கிறார்கள். ரஷ்யாவிற்கு, பாரசீக நாட்டு வழியே உதவிவர, 2,000 மைல் நீளமுள்ள ரஸ்தா கட்டப்பட்டுவிட்டது.

சீமையிலே, பூமிக்கடியிலே பெரிய விமானப் பட்டறைகள் கட்டிவிட்டார்கள். விமானங்களில் சென்று ஜெர்மனியில் இறங்கிப் போராட ஏராளமான பேர்கள் பழக்கப்படுகிறார்கள். அதற்கு ஐரோப்பிய மேல் கரையிலே சில இடங்களில் ஒத்திகைப் பார்த்து வெற்றி பெற்றுவிட்டார்கள். யுத்தத்திற்கு முன்பு இருந்ததைப்போல் ஒவ்வொன்றும் இப்பொழுது பத்து மடங்கு அதிகமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. யுத்தக் கப்பல் வாரம் என்று ஒன்று ஆரம்பித்து அதிலே 12 கோடி பவுன் சேர்த்து விட்டார்கள். எங்கும் ஒரே உற்சாகமாயிருக்கிறது. எதிரிக்கு இதெல்லாம் தலைவலி தானே? அதற்கு யாரென்ன செய்வார்கள்? தெருவிலே போகிற சனியனை விலை கொடுத்து வாங்கினால், பட்டும் அவஸ்தை.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு ஏப்ரல் மீ 3உ, வெள்ளிக்கிழமை [இதழ் 13

## வெற்றிச் சிகரத்தை நெருங்குகிறோம்.

### மன்னர்பிரான் பிரசங்கம்.

மன்னர்பிரான் சமீபத்தில் லண்டனிலிருந்து ரேடியோ மூலம் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் பின்வருமாறு :—

நான் முந்தி பிரசங்கம் செய்ததிலிருந்து இதுவரையில் மிகவும் கஷ்டத்தோடும் கவலையோடும் தான் இருந்துவருகிறோம். இதுவரை நமது கொடியின் கீழிருந்து சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அனுபவித்துக்கொண்டிருந்த நம் ஜனங்கள் இப்போது சொல்லமுடியாத கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். நெருக்கடியான நிலைமையிலுள்ள ஆஸ்திரேலியா, நியூஜிலந்து, இந்தியா, பர்மா ஆகிய தேசத்தவர்களுக்கு நாம் மிகவும் இரங்குகிறோம். நம் நாட்டிலுள்ளவர்களுக்குக் கஷ்டங்கள் வரும்போது எப்படி மனதைத் தளரவிடாது தைரியத்தோடு இருந்தார்களோ, அதுபோலவேதான் அந்த நாட்டவர்களும் இருக்கிறார்கள் என்று நாம் அறிவோம். கூடியவரை நாம் அவர்களுக்கு உதவி செய்வோம். அவர்களுக்கு உதவியாக பெரிய அமெரிக்க சேனைகள் அங்கே போய்ச்சேர்ந்துவிட்டன என்று தெரிந்து நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

**இப்படி ஒரு போதும் இருந்ததில்லை.**

இந்தத் துக்கமான சம்பவங்களுக்கிடையே, தாம் சாதித்ததென்னவென்று தம்மைத்தாமே விசாரணைசெய்து கொள்ளப் பலர் தலைப்பட்டார்கள். இது நல்லதுதான். ஏனென்றால், நாம் செய்தது தீமையாக இருந்தாலுங்கூட நம் நோக்கம் உயர்ந்த நோக்கமாக இருக்குமானால், அந்தச் செயலையும் நல்லதாக மாற்றிவிடலாம். இப்படியாகச் சிறந்த காரியங்களைச் செய்ய முடிந்திருக்கிறது. நம் முயற்சிகளைக் குறை சொல்லுவது ஒரு பெரிய குற்றமாகும். அப்போது நமக்கும் நேசதேச சர்க்கார்களுக்கும் நாம் பெரும் தீங்கு செய்தவர்களாவோம். நம் நாடு இப்போது ஒன்றுபட்டிருப்பதுபோல் ஒரு போதும் இருந்ததில்லை; இப்போது கஷ்டப்பட்டு வேலை செய்ததுபோல ஒருபோதும் வேலைசெய்ததும் இல்லை. இதிலிருந்து நாம் செய்யவேண்டிய வேலை இவ்வளவுதானென்று நினைத்துவிடக்கூடாது. நாம் இன்னும் விரைவாக முன்நோக்கிப் போகவேண்டும்; ஏனென்றால், தற்கால யுத்தத்தில் வேகம் ஒரு ஊக்கம் தரக்கூடியதாயிருக்கிறது. இவை, அதிகாரிகள் மட்டும் கவனிக்க வேண்டியவையல்ல. நாம் ஒவ்வொருவரும் நம் முழுபலத்தையுங்கொண்டு நம் வேலைகளைச்செய்து உதவவேண்டும். இனி மிகுந்த நெருக்கடி ஏற்படப்போகிறது. அப்போது உங்களுக்குள் ஒரு புது உணர்ச்சி பிறக்கவேண்டும். அதிக ஊக்கம் ஏற்படவேண்டும். உங்களுக்குள் பரஸ்பர நம்பிக்கை அதிகப்படவேண்டும்.

**வெற்றிச் சிகரத்தை நெருங்குகிறோம்.**

இரண்டரை வருஷங்களுக்கு முன்பு யுத்தம் என்னும் மலைமேல் நாம் ஏற ஆரம்பித்தோம். நமக்குள் அநேகர் அப்போது கொண்டிருந்த புதிய உணர்ச்சி இப்போது அவர்களுக்கு இல்லாதிருக்கலாம். நாம் வெற்றிச் சிகரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்; அதை அடைந்துவிடுவது நிச்சயம். இதை நாம் மறந்துவிடக்கூடாது. நாட்டின் உயிர் நாடி போன்றவர்களின் பலம் அதிகப்பட்டிருக்கிறது. அவர்களுடைய முற்போக்கும் ஒரே நிதானமாக இருக்கிறது. தீமைகளை வேரறுக்க நாம் கங்கணங்கட்டிக்கொண்டு வேலை செய்கிறோமென்று உலகத்தவர்கள் உணர்ந்துகொள்ளுவார்களானால் நமது சகிப்புச்சக்தி மேலும் உறுதிப்படும். அறியாமை இருளைப்போக்க நாம் தர்மப்போராடுகிறோமென்பதை அறிவோம். அறியாமை இருள் நிலைத்திருக்குமானால், சுயேச்சை, சகிப்புத்தன்மை, அன்பு ஆகியவை இன்னும் பல சந்ததிகளுக்கு ஏற்படாது என்று சொல்லிவிடலாம். உலகத்தைப் பாழ்படுத்தி வரும் இந்தத் தீமைகள் அடியோடு அழிந்தால் தான், சமாதானம் ஏற்படமுடியும். வெளி நாடுகளிலுள்ள நம் சகோதரர்களுடனும் சகோதரிகளுடனும், மகத்தான வீரம் பொருந்திய நம் நேசதேசத்தவர்களுடனும் நாம் சேர்ந்து நம் நோக்கம் வெற்றியடையும் வரையில் முன்னேறிப்போவோம்.

**கடவுளுக்கு நன்றி.**

நியாயமான காரியத்திற்காக நாம் போராடுகிறோம். ஆகையால் நாம் அந்தக் காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும். பல ஆபத்துக்களுக்கிடையே நம்மைக் காப்பாற்றி நடத்தி வந்த கடவுளுக்கு நாம் நன்றி செலுத்துவோம். உயர்ந்த காரியங்களைச் செய்து முடிப்பதற்கான தெய்வீக பலத்தைக் கொடுக்கும்படி கடவுளை நாம் வேண்டிக்கொள்ளவேண்டும். நாம் உறுதியான நம்பிக்கையோடு இருக்கிறோம். எப்படிப்பட்ட தியாகமானாலும் அதைச் செய்யப் பின்வாங்க மாட்டோம். நியாயம் வெற்றியடைவதற்காக நாம் மேல் நோக்கிப் போவோம். அப்போதுதான் நமக்கு நல்ல காலம் பிறக்கும்.

## உ ல க ப் போ க் கு

ரஷ்யாவிலுள்ள சேனைகளுக்கு செஞ்சட்டைச் சேனைகள் என்று பெயர். இந்தச் சேனைகளின் ஆண்டுவிழா சமீபத்தில் நடந்தது. அப்போது ரஷ்ய சர்வாதிகாரியான ஸ்டாலின் ஒரு பிரசங்கம் செய்தார். அதில், "எதிரிகள் வசமிருந்து சோவியத் ரஷ்ய நாடுகளை மீட்கவேண்டியது செஞ்சட்டைச் சேனைகளின் கடமை" என்று குறிப்பிட்டிருந்தார். இந்த வாக்கியத்திற்குத் தப்பான அர்த்தம் கற்பித்து இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பிரசாரம் செய்ய ஜெர்மானியர்கள் முயற்சிக்கிறார்கள். ஹிட்லரின் தத்துவத்தையே வென்று கொடுமைக்குள்ளாகியிருக்கும் ஐரோப்பிய நாடுகளை மீட்கவேண்டும் என்னும் எண்ணம் ரஷ்யாவுக்கு ஒழிந்துபோய்விட்டதென்றும், எதிரிகளை சோவியத் எல்லைகளிலிருந்து விரட்டிய பிறகு சமாதானம் செய்துகொள்ள ஸ்டாலின் தயாராக இருப்பதாகவும் அந்தப் பிரசங்கம் அர்த்தங் கொடுக்கிறது என்று தவறான பிரசாரம் செய்ய முயற்சிக்கிறார்கள்.

இந்தத் தப்புப் பிரசாரத்தால் ஜெர்மனி தனக்குச் சாதகமுண்டு என்று நினைக்கலாம். ஆனால் ஒரு உண்மையை பிரிட்டனும் அமெரிக்காவும் நன்கு உணர்ந்திருக்கின்றன. முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு கம்யூனிஸ்ட் இராஜ்யத்தைக் கட்டிமுடிக்க வேண்டுமென்பது ஸ்டாலினுடைய முழு நோக்கம். இந்த எண்ணம் ஈடேறவொட்டாதபடி தடுப்பது ஜெர்மனி. ஆகையால் ஜெர்மனியை

ஒழிக்கத்தான் வேண்டும். இதற்கு நேசதேசங்களின் உதவி மிகவும் பொருத்தமானதே. இப்படிப்பட்ட சிறந்த சந்தர்ப்பத்தை ரஷ்யா இழந்து விடுமா ?

**இன்னொரு பொய் வதந்தி.**

இன்னொரு பொய் வதந்தியையும் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். அதாவது ஜெர்மனியோடும் ஜப்பானோடும் தனித் தனியே ஸ்டாலின் ஒப்பந்தம் செய்துக் கொள்ளப் போகிறாராம். அப்போது ஜெர்மனி பிரிட்டனைத் தாக்க இலகுவாயிருக்குமாம். ஆனால் சீனர்கள் அபிப்பிராயம் எப்படி இருக்கிறது தெரியுமா ? சைபீரியாவில் பனி பெய்ய ஆரம்பிக்கு முன்னதாகவே, ஜப்பான் ரஷ்யாவைக் கைப்பற்றிவிட எண்ணம் கொண்டிருக்கிறதாம். ரஷ்யத் தலை நகரமாகிய மாஸ்கோவில் ஜப்பானிய ஸ்தானீகராக விருக்கும் தாதக் கோவா, கொரியா கவர்னர் ஜெனரல், மஞ்சுகோ பிரதம மந்திரி ஆகியோரை, டோகியோவிற்கு வரும்படி ஜப்பான் சர்க்கார் உத்தரவிட்டனர். அவர்களும் வந்துவிட்டனர். இந்தத் திட்டத்தைக் குறித்து ஆலோசிக்கத்தான் அவர்களை வரச் செய்தார்கள் என்று சீனர்கள் கருதுகிறார்கள்.

கிழக்கே ஜப்பானும் மேற்கே ஜெர்மனியும் ரஷ்யாவை ஏக காலத்தில் தாக்கலாம். கிழக்கு ரஷ்யாவிலுள்ள ரஷ்யச் சேனை மகத்தானது. எந்தவித உதவியையும் மேற்கு ரஷ்யாவிலிருந்து எதிர்பாராதது. ஏராளமான யுத்தத் தளவாடங்கள் உடையது. இதை ஜப்பானியர்கள் தாக்க ஆரம்பித்தால், எளிதில் பற்றி எரியக்கூடிய ஜப்பான் நகரங்கள் சாம்பலாகிவிடும். இது உண்மை.

ரஷ்யாவிற்குத் தெற்கே துருக்கியிருக்கிறது. இங்கே ரஷ்யாவோடு சம பலத்தோடிருக்கத் தகுந்தபடி துருக்கி அமையவேண்டும் என்றும், ஜெர்மனியோ பல்கேரியாவோ துருக்கியைத் தாக்கவே மாட்டாது என்றும் ஜெர்மனி பிரசாரம் துருக்கியில் நடக்கிறது. இந்தப் பிரசாரத்தை துருக்கி சர்க்கார் நம்பவில்லை.

**ரஷ்யாவை பல்கேரியா தாக்கலாம்.**

அங்காராவிலுள்ள ஜெர்மன் தூதர் சமீபத்தில் ஒரு செய்தியை வெளியிட்டார். அதில், பல்கேரியா ரஷ்யாவோடு போராடினால், துருக்கி எந்தெந்த வகைகளில் பாதிக்கப்படவேண்டி வரும் என்பதுபற்றி ஆலோசிக்க, ஜெர்மன் ஸ்தானீகரான வான் பாபன், பல்கேரியா அரசர் போரிஸ், ஆகிய இரண்டு பேரும் கலந்து பேசினார்கள் என்று குறிப்பிட்டார். 24 புதிய விமான தளங்களையும் 50 விமான இறங்கு மிடங்களையும் பல்கேரியாவில் கட்டும் வேலையை ஜெர்மன் இஞ்சினீயர்கள் மேல்பார்வை செய்திருக்கிறார்கள். மேலும் பல்கேரிய சேனைகளை எல்லைப்புறத்தில் பக்குவமான இடங்களில் அமர்த்திவைத்திருக்கிறார்களென்றும் தெரிகிறது.

**ரஷ்யப்போர் முனையில் ஜெர்மனி ஏன் தோற்கிறது?**

ரஷ்யப் போர் முனையில் ஜெர்மானியர்கள் படு தோல்வியடைந்து வருகிறார்கள். எனவே ஏராளமான சேனைகளைப் போர்க்களத்திற்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஸ்மாலென்ஸ்க் முதலிய போர்முனைகளில் சுமார் 4 லட்சம் பேர்களைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள். ரஷ்யர்களோ வெற்றிமேல் வெற்றியோடு, ஸ்தாரயா ரூஸா, வியாஸ்மா, கார்கோவ் முதலிய ஊர்களை நோக்கி முன்னேறிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். 10 நாட்களில் நடந்த யுத்தத்தில் ருஷ்யாவிற்கு 118 மிஷன் துப்பாக்கிகளும், ஜெர்மனிக்கு அதன் ஆகாயப்படையைச் சேர்ந்த 306 விமானங்களும் சேதமாயின. ஆகாய விமானப் படைகளில் ஒரு பெரும் பகுதியை ஜெர்மானியர்கள் மத்தியதரைக் கடல் போர்முனைக்கு அனுப்ப வேண்டியிருந்தது. 4 மாதங்களுக்கு முன்பு ஒரு ஆகாயப் படையை ஜெர்மனிக்குத் திருப்பியழைத்துக்கொண்டார்கள்.

'லுஃப்ட் வாப்' என்பது ஒருவகை ஆகாயப்படை. இதில் 6 விமானப்படைக் கூட்டங்கள் உண்டு. ஒவ்வொரு கூட்டத்திலும் 1,000 முதல் 1,500 மெஷின் பீரங்கிகள் இருக்கும். இந்தப் படைகளை கிரீஸ் தேசத்திற்கும், டொடக்கனீஸ், தெற்கு இத்தாலி முதலிய பாகங்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். ஜெர்மனியின் போக்குவரவுகள் சிறிது தடைப்பட்டுத்தான் இருக்கின்றன. ஆனாலும் எண்ணெய்ப் பஞ்சம் இன்னும் கடுமையாக இருக்கிறது.

**ரஷ்யர் யுத்த முறை**

வியாஸ்மா, கார்கோவ் ஆகிய பிரதேசங்களில் நடைபெறும் போரில் முன்புறம் சிறந்த அரண்கள் அமைந்திருக்கின்றன. பின்புறம் தமக்கு வேண்டிய தளவாடங்கள் வருவதற்காக அரண்கள்—கட்டப்படவில்லை. இரண்டு புரங்களிலும் உள்ள பாதுகாப்புக்கள் ரஷ்யர்களால் மிகவும் உடைக்கப்பட்டு விட்டன. ஆகையால், இங்கேதான் ஜெர்மானியப் படைகள் வந்து ஏராளமாகச் சேர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பகுதிகளைப் பிடித்து விடவேண்டுமென்பது ரஷ்யர்களின நோக்கமல்ல; ஆனால், ஜெர்மானியர்கள் பலக்குறைவாயுள்ள பகுதிகளில் பலமாகத் தாக்கி அவர்களைக் களைப்படையும்படி செய்யவேண்டுமென்பதுதான் அவர்கள் நோக்கம், மொஜெயஸ்க் பகுதியை ரஷ்யர்கள் கைப்பற்றியதும் இதே முறையைக் கைக்கொண்டதால்தான்.

**ஜெர்மானியர் அவஸ்தை**

ஸ்தரயா ரூஸா, ஓரெல், ழெவ் ஆகிய பகுதிகளில் ஜெர்மானியர் உணவுக்கும் வழியில்லாதபடி மற்ற சேனைகளிலிருந்து துண்டிக்கப்பட்டு விட்டார்கள். தகுந்த சாப்பாடில்லாமல் பல வியாதிகள் அவர்களுக்கு உண்டாகியிருக்கின்றன. இவர்கள் இரவில் தூங்கக்கூடாதபடி ரஷ்ய சேனைகள் இரவுகளில் இவர்களைத் தாக்குகின்றன. ஜெர்மானியர் எதிர்க்க முற்படுமுன்னலேயே ரஷ்ய விமானங்கள் தப்பிக்கொண்டு திரும்பி விடுகின்றன.

**கோபெல்ஸ் புதுப்பாடம்.**

உணவுப் பொருள்களை ஈவுவைத்துக் கொடுக்கும் திட்டம் இப்போது ஜெர்மனியில் அமுலுக்கு வந்திருக்கிறது. இது பற்றி ஜெனரல் கோபெல்ஸ் ஒரு பத்திரிகையில் எழுதும் போது இதற்கு 8 காரணங்களைக் குறிப்பிடுகிறார். 1. மிகப் பெரிய ஜெர்மன் சேனைகளுக்குச் சாப்பாடு போட வேண்டியிருக்கிறது, 2. சென்ற 2 வருஷங்களாக பருவ மழை கிடையாது; அதனால் பயிர் விளைவில்லை, 3. விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது; அதனால் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டது. வேறு பல காரணங்களையும் அவர் குறிப்பிடுகிறார். விளைவுப் பொருள்களையாவது உணவுப் பொருள்களையாவது யாராவது சேதம் செய்தாலும் ஏராளமாகச் சேகரித்து வைத்திருந்தாலும், அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுமென்று ஜெர்மன் சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

கோபெல்ஸ் மேலும் கூறுவதாவது :—" இப்போது நாம் அனுபவிக்கும் துன்பம் மிகவும் கொஞ்சம். யுத்தத்தில் நாம் தோற்றுவிடுவோமானால் நாம் அனுபவிக்கவேண்டிய துன்பம் மிகவும் அதிகமாயிருக்கும்."

கொஞ்சகாலமாக கோபெல்ஸ் பிரசங்கங்களில் ஒருவகை ஊக்கம் காணப்படுகிறது. உண்மையானபடி யுத்த நிலைமையை ஜனங்களுக்கு அறிவித்து எந்த விதமான கஷ்டத்தையும் சகித்துக்கொள்ள அவர்களைத் தன் பிரசங்கங்களினால் பக்குவப்படுத்திக் கொண்டு வருகிறார். ஜனங்களுக்கு அதைச் சாதித்து விடுகிறோம், இதைக் கொடுத்துவிடுகிறோம், என்று சொல்லி ஏமாற்றப்பார்த்தால், அது பெரிய ஆபத்தாக முடியும் என்று கோபெல்ஸுக்குத் தெரியும். ஜனங்களுக்குள் ஊக்கம் குறைந்திருப்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. ஆகையினால்தான், ஜெர்மானியர்கள் அனைவரும் ஒருமுகமாக ஒத்துழைக்காவிட்டால் யுத்தத்தில் கட்டாயம் தோற்றுப் போகவேண்டியிருக்குமென்று கூறி படைகளுக்கு ஊக்கமூட்டுகிறார்.



## எலிசபெத் அரசி மரம்வெட்டுபவர்களைப் பார்வை இடுதல்.



கனடாவில் பிரம்மாண்டமான மரம் வெட்டுபவர்கள் இப்போது பிரிட்டிஷ் யுத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். கனடாவின் காட்டுப் படையில் சேர்ந்து அவர்கள் ஸ்காட்லாந்தில் மரம் வெட்ட உதவி செய்கிறார்கள். பால் மொரால் கோட்டை என்ற அரசமாளிகைத் தோட்டத்தில், மாட்சிமை தங்கிய எலிசபெத் அரசி அப்படையைப் பார்வையிடுகிறார்.

# ஏ. ஆர். பி. என்றால் என்ன ?

## அதன் உத்தியோகஸ்தர்களும் கடமைகளும்.

### சம்பவங்களின் நிலையைத் தெரிந்துக்கொள்ள வசதிகள்.

சென்ற 1941-ம் ௵ நவம்பர் ௴ புது டில்லியில் உள் நாட்டுப் பாதுகாப்பு மகாநாடு ஒன்று நடைபெற்றது. அப்போது, "உள் நாட்டுப் பாதுகாப்புக் கமிஷனர்" என்ற உத்தியோகத்தையே எடுத்துவிடுவது என்று முடிவு செய்தார்கள். இந்த உத்தியோகஸ்தர் செய்துவந்த வேலைகளை இனி ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளாவது, அல்லது இதற்கென்று நியமிக்கப்படும் ஒரு உத்தியோகஸ்தராவது செய்துவருவார். உள் நாட்டுப் பாதுகாப்புக்குப் பொறுப்பான உத்தியோகஸ்தர்கள் இவர்கள் தான்.

ஜில்லா மாஜிஸ்திரேட்டும் ஏ. ஆர். பி. கண்ட்ரோலரும் ஒருவராகவே இருக்கவேண்டுமென்றும் இவர்களுக்கு உதவியாக ஒரு ஏ. ஆர். பி. உத்தியோகஸ்தரை நியமிக்கவேண்டுமென்றும் அநேக மாகாண சர்க்கார்கள் முடிவு செய்துவிட்டார்கள். ஆகையால் ஜில்லா மாஜிஸ்திரேட் என்றாலும் ஏ. ஆர். பி. கண்ட்ரோலர் என்றாலும் ஒரே உத்தியோகஸ்தரைத் தான் குறிக்கும்.

**தலைமை ஸ்தானம்**

எதிரிகள், விமானங்களில் வந்து தாக்கவரும் சமயத்தில், ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டும், ஏ.ஆர்.பி. கண்ட்ரோலரும், ஏ.ஆர்.பி. தலைமை உத்தியோகஸ்தர்களும், மற்ற அவசியமான வேலைக்காரர்களும் ஒருவருக்கொருவர் கலந்து பேசி, சீக்கிரத்தில் என்ன செய்யவேண்டுமென்று முடிவுசெய்ய வேண்டும். இதற்காக,

(1) அவர்களுக்கென்று ஒரு தலைமை ஸ்தானம் இருக்கவேண்டும்.

(2) அந்த இடத்தில், எல்லா விதமான முக்கியமான தகவல்களும் உடனே கிடைக்கக்கூடியதாய் இருக்கவேண்டும்.

(3) உத்தரவுகளையும் தகவல்களையும் எல்லோருக்கும் அறிவிக்கத் தகுந்த வசதிகள் அங்கே அமைந்திருக்கவேண்டும்.

இந்தத் தலைமை ஸ்தானத்திற்குத்தான் "கண்ட்ரோல் சென்டர்," அல்லது "கம்பைண்ட் கண்ட்ரோல் சென்டர்" அல்லது "கம்பைண்ட் கண்ட்ரோல் அண்ட் ரிபோர்ட் சென்டர்" என்று சொல்லுவது.

எதிரி விமானங்கள் தாக்குவதனால் நம் நாட்டில் சேதம் உண்டானால், ஏ.ஆர்.பி. வார்டன்களாவது போலீசாராவது விவரங்களை ரிபோர்ட் சென்டருக்கு அறிவிக்கிறார்கள். மெஸ்ஸெஞ்சர்ஸ், ஆம்புலென்ஸ், முதல் வைத்திய உதவி, மீட்சிப் படை ஆகியவற்றில் எந்தப் படையினரின் உதவி அங்கே தேவையோ, அந்தப் படையினருக்கு "ரிபோர்ட் சென்டரி"லிருந்து அந்த இடத்திற்குப் போகும்படி உத்தரவு அனுப்பப்படும்.

"ரிபோர்ட் சென்டரில்" எல்லாச் செய்திகளையும் சேகரம் செய்கின்றார்கள். அந்தந்தப் படையினர் என்னென்ன செய்யவேண்டுமென்று முக்கியமான தகவல்களைத் தெரிவிக்கின்றார்கள். இந்தத் தகவல்களைக் "கண்ட்ரோல் சென்டர்"களுக்கும் அறிவிக்கிறார்கள். அப்போது தான் "கண்ட்ரோல் சென்டரி"லுள்ளவர்கள், உள்ள நிலைமையைப் பொதுவாக உணர்ந்துகொண்டு விசேஷ உதவிகள் இன்னும் என்னென்ன தேவையிருக்குமென்று முடிவு செய்ய முடியும்.

அநேக இடங்களில் ரிபோர்ட் சென்டரும், கண்ட்ரோல் சென்டரும் ஒன்றாகவே இருக்கிறது. மற்றும் சில இடங்களில் அநேக ரிப்போர்ட் சென்டர்களும் அவற்றில் ஒன்று இருக்கிற கட்டிடத்தின் மற்றொரு பக்கத்திலேயே 'கண்ட்ரோல் சென்டரும்' அமைந்திருக்கின்றன. வேறு சில இடங்களில் 'ரிபோர்ட் சென்டர்'கள் இல்லாத இடத்தில் 'கண்ட்ரோல் சென்டர்'களை அமைத்திருக்கிறார்கள், 'கண்ட்ரோல் சென்டரும்', 'ரிபோர்ட் சென்டரும்' ஒரே இடத்தில் இல்லாதிருந்தால், வார்டன்கள் அனுப்பும் அறிக்கை உடனுக்குடனே 'கண்ட்ரோல் சென்டரு'க்குக் கிடைக்காது. ஆனால் ஒரு சம்பவத்தின் நிலைமை எந்தவிதமாக மாறுகிறதோ அப்போதெல்லாம் ஒரு 'ரிபோர்ட் சென்டரோ' அல்லது, பல

'ரிபோர்ட் செண்டர்களோ' 'கண்ட்ரோல் செண்டருக்கு' அப்போதைக்கப்போது தகவல்கள் கொடுத்துக்கொண்டிருக்கும்.

**ஆபிஸ் அறைகள் விவரம்.**

'கண்ட்ரோல் செண்டரும்', 'ரிபோர்ட் செண்டரும்' ஒரே இடத்திலிருந்தால் அந்தக் கட்டிடத்தில் 3 அறைகள் இருக்கவேண்டும். (1) வெளியே செய்திகள் கொண்டுபோகிறவர்கள் அறை (Messengers' room), (2) செய்தி அறை, (3) பட அறை. பட அறையில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் (ஏ.ஆர்.பி கண்ட்ரோலர்), ஏ.ஆர்.பி. உத்தியோகஸ்தர்கள், அவர்களுடைய உதவியாளர்கள், ஏ.ஆர்.பி. படைகளின் தலைவர்கள், ஆபிஸ் பொறுப்பாளி, இன்டெலிஜென்ஸ் ஆபிஸர், ப்ளாட்டிங் ஆபிஸர், சார்ட் எழுதுபவர், ஒரு ரெகார்டு குமஸ்தா, ஒரு டாலி போர்டு குமஸ்தா ஆகியார் இருக்க இடமும், ஒரு பில்லி போர்டு (இதைப்பார்த்தவுடனேயே ஏ.ஆர்.பி. முதலிய படைகள் எத்தனை பேர்கள் இருக்கிறார்களென்றும், என்னென்ன வேலையில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்களென்றும், தெரிந்து கொள்ளலாம்) ஒரு பெரிய ஊர்ப்படம் ஆகியவையும் இருக்கும். இந்தப் படத்தில், கண்ட்ரோல் செண்டர்கள், ரிபோர்ட் செண்டர்கள், வைத்தியசாலைகள், முதல் வைத்திய உதவிச்சாலைகள், ஏ.ஆர்.பி. டிபோக்கள், வார்டன் போஸ்ட்கள், போலீஸ் ஸ்டேஷன்கள், நெருப்பணைக்கும் இன்ஜின் ஸ்டேஷன்கள் முதலியன குறிக்கப்பட்டிருக்கும்.

செய்தி அறையில் மெஸ்ஸேஜ் சூபர்வைசர், வெளியிலிருந்து வருகிற செய்திகளையும், ஆபிஸிலிருந்து வெளிப்படுகிற செய்திகளையும் டெலிபோன் எக்ஸ்சேஞ் மூலம் கையாளுகிற ஆபரேடர்கள், நேர்முகமாக டெலிபோன் செய்திகளை வாங்கி, கொடுக்கும் ஆபரேடர்கள் முதலியோர் இருக்கின்றனர்.

**உத்தியோகஸ்தர்களின் கடமைகள்.**

எதிரிகள், விமானங்களிலிருந்து நம்மைத் தாக்கினால், அப்போது எடுத்துக் கொள்ளப்படவேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் கட்டுப்பாடாகச் செய்யும்படி மேல்பார்ப்பது ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டான ஏ.ஆர்.பி. கண்ட்ரோலருடைய கடமை. முக்கியமான பிரச்னைகள் எதுவும் ஏற்பட்டால் அவைகளைப்பற்றி அவர் முடிவுசெய்வார். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு ரிபோர்ட் செண்டருக்கு அதிகமாக இருக்குமானால், இவற்றிற்குள் பரஸ்பர உதவியிருக்கத் தகுந்தபடி அவர் ஏற்பாடுகள் செய்வார்.

ஏ.ஆர்.பி. படைகளின் தலைவர்களும் அவர்களுடைய உதவியாளர்களும் பொதுவாக தம் படையினரின் வேலைகளை மேல்பார்ப்பார்கள். இவர்களுக்குள் ஏதேனும் தகராறுகள் உண்டானால் அவைகளைப்பற்றி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கூறும் தீர்ப்பே முடிவானதாகும். மின்சாரம், தண்ணீர் சப்ளை போன்ற முக்கியமான வேலைப் படைகளின் தலைவர்களுக்குங்கூட இவைபோன்ற வேலைகள்தான்.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டாகிய ஏ. ஆர். பி. கண்ட்ரோலருக்கும், ஏ. ஆர். பி. படையின் தலைவர்களுக்கும், அவசியமான வேலைப்படைகளின் தலைவர்களுக்கும் ஏற்கெனவே உள்ள வேலைகளுக்குக் குந்தகம் ஏற்படாதபடி கண்ட்ரோல் செண்டரையும் ரிபோர்ட் செண்டரையும் நிர்வகிக்கும் பொறுப்பை ஒருவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவர்தான் ஆபிஸ் பொறுப்பாளி. இவர் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டான ஏ. ஆர். பி. கண்ட்ரோலருக்கு நேர்முகமாக உள்பட்ட உத்தியோகஸ்தர். இவர் ஆபிஸில் இல்லாத காலத்தில் இவருக்குப் பதிலாக வேறொருவரை இவர் நியமிக்கலாம். இவர் செண்டர்களை அமைக்கவேண்டும், சிப்பந்திகளை வேலையில் பழக்கவேண்டும், இன்னின்னார் இந்த நேரத்திற்கு வேலைக்குவரவேண்டும், போகவேண்டும் என்பதைக் குறித்துள்ள வேலை நேரக் குறிப்புப் புத்தகத்தையும் சரிவரக் குறித்து எழுதிவைக்கவேண்டும்.

**ப்ளாட்டிங்உத்தியோகஸ்தர் கடமைகள்,**

வார்டன்களிடமிருந்தோ அல்லது மற்ற உத்தியோகஸ்தர்களிடமிருந்தோ செய்தி அறிக்கைகள் வந்தால், படத்தில், சம்பவம் நடந்த இடத்தைக் குறிக்கும் பகுதிகளில், ஒரு ஊசியையோ நாடாகட்டிய ஆணியையோ பதியவைத்து அப்போதைக்கப்போது உள்ள நிலைமையைத் தெளிவுபடுத்துபவர் ப்ளாட்டிங் உத்தியோகஸ்தர். இந்த ஊசிகளின் தலைப்பகுதியில் நீலம், சிவப்பு முதலிய வர்ணங்கள் பூசப்பட்டிருக்கும். நீல ஊசி பதியவைத்திருந்தால் அங்கே, பெரிய வெடி குண்டு விழுந்ததாக அர்த்தம், சிவப்பு ஊசி பதிய வைத்திருந்தால் இன்னும் அந்த இடத்தில் நெருப்பு எரிந்துகொண்டிருக்கிறதென்று அர்த்தம்.

அந்தந்த சம்பவங்களுக்கு ஏற்றபடி நடவடிக்கைகள் எடுத்து முடிந்துபோனவுடனே ஆபிஸ் பொறுப்பாளியைக் கலந்துகொண்டு அந்த ஊசிகளை அப்புறப்படுத்திவிடவேண்டும். இவருக்கு உதவியாக ஒரு சார்ட் ரைட்டர் இருக்கிறார். இவர் சார்ட் படம் ஒன்றைக் குறிக்கிறார். இதில், சம்பவத்தின் எண்ணிக்கை, சம்பவம் நடந்த இடம், அதை அறிவித்தார் யார் என்னும் விவரங்களைக் குறிக்கிறார்.

**இன்டெலிஜென்ஸ் ஆபிஸர்**

இன்டெலிஜென்ஸ் ஆபிஸர் ஒவ்வொரு சம்பவத்திலும் முக்கியமான விஷயம் என்ன என்பதுபற்றியும் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன என்றும் குறிப்புகளை எழுதிவைத்திருப்பார். எந்தச் சம்பவத்தைக் குறித்தும் எந்த நேரத்திலும் விவரமாகச் சொல்லத் தக்கபடி அவர் தகவல்கள் சேகரித்து வைத்துக்கொண்டிருப்பார்.

டாலி போர்டு குமாஸ்தா, பொறுப்பாளி மேற்பார்வையில் டாலி போர்டைக் கையாளுகிறார். வெளியே இருந்து ஆபிசுக்கு வரும் செய்திகளையும், ஆபிசிலிருந்து வெளியே போகும் செய்திகளின் நகல்களையும், அந்தந்தச் சம்பவங்களின் எண்ணிக்கைப்படி அந்தந்தக் காகிதக்கட்டுகளில் கோத்து வைக்கிறார்.

மேலும் வெளியேயிருந்து வரும் செய்திகளுக்கெல்லாம் சூபர்வைசர் பொறுப்பாளி. இவர் ஆபிஸ் பொறுப்பாளியின் கட்டளைப்படி நடக்கவேண்டியவர். ஆபிசில் எப்போதும் எல்லாவகை வேலைகளுக்கும் போதுமான பேர்கள் தயாராக இருக்கும்படிக்கும், அவசியம் வந்தால் கூடிய சீக்கிரத்தில் சம்பந்தப்பட்ட எல்லா சிப்பந்திகளையும் திரட்டத் தகுந்தபடியும் வேலை நேரப் புத்தகத்தில் பதிந்துவைத்திருக்க வேண்டும்.

---

# பர்மாவிலிருந்து வந்த இந்தியர்கள்

## குறைவாக நடத்தப்பட்டார்கள் என்ற பொய் வதந்தி மறுப்பு

பர்மாவைவிட்டு வெளியேறிய இந்தியர்களை ஒரு விதமாகவும், ஐரோப்பியர்களை வேறு விதமாகவும் நடத்தியதாகச் சில பொய் வதந்திகள் இந்நாட்டில் பரவிவருகின்றன. இவைகளைப்பற்றி, சமீபத்தில் பர்மாவிலிருந்து சென்னைக்குத் திரும்பி வந்த ஒரு இந்தியர் விளக்கிக் கூறியிருக்கிறார். அவர் கூறிய விவரங்கள் சென்னை "மெயில்" பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான பொய் வதந்திகளைக் கேட்டு, சகிக்க முடியாமல், 1942-ம் வருஷம் மார்ச்மீ 25உ அவர் நேராக "மெயில்" ஆபிசுக்குச் சென்று உண்மையாக நடந்த விஷயங்களைத் தெரிவித்தார்.

அவர் பர்மாவிலிருந்து, மார்ச்மீ 12உ ஒரு பெரிய ஆகாய விமானத்தின் மூலமாக சென்னை வந்துசேர்ந்தார். அந்த விமானம் ஒரே காலத்தில் 50 பிரயாணிகளைத் தாங்கிச் செல்லும் விமானம். இந்த விமானம் பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு ஒரு நாளில் நான்கு தடவை வருகிறது. அதாவது, விமான மூலமாக ஒரு நாளில் 200 பேர் பர்மாவிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்படுகிறார்கள்.



**விமானத்தில் இட வசதிகள் சம்பந்தமாக இந்தியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் யாதொரு வித்தியாசமும் காட்டப்படுவதில்லை.** முதலில், விமானத்தில் செல்வதென்றால் அதற்குக் கட்டணம் கொடுக்க வேண்டும். அப்போதும் எப்படிப்பட்ட வித்தியாசமும் காட்டப்படவில்லை. பிறகு, பணம் கொடுக்க முடியாதவர்கள் இனமாகக் கொண்டுவரப்பட்டார்கள். அப்போதும் எந்த நிற வித்தியாசமும் காட்டப்படவில்லை.

சென்னைக்கு வந்த இந்தியர் பிரயாணம் செய்த விமானத்தில் அநேக ஐரோப்பியர்களும், இந்தியர்களும், ஆங்கிலோ இந்தியர்களும் இருந்தார்கள். சிட்டாகாங்குக்கு விமானம் போய்ச் சேர்ந்ததும், இவர்கள் **எல்லோரும் ஒரே விதமாக வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டார்கள்.** முக்கியமாக, சிட்டகாங் கமிஷனரின் மனைவியாராகிய மிஸஸ். ஓ. எம். மார்டின் அவர்களைப்பற்றியும், சிட்டகாங்கிலுள்ள இதர ஐரோப்பிய பெண்மணிகள் செய்த அன்பான சேவையைப்பற்றியும் குறிப்பிடவேண்டும். **பர்மாவிலிருந்து வந்த இந்தியர்களுக்கெல்லாம் "ஐரோப்பியர்கள் கிளப்"பில் விருந்தளித்தார்கள்.**

சிட்டகாங்கிலிருந்து கல்கத்தாவுக்குப் போகும்போது, இடம் கிடைப்பது ரொம்பவும் கஷ்டமாய் விட்டது. பர்மாவிலிருந்து வந்த இந்தியர்கள் படகிலும், ரயிலிலும், உள்ள இடங்களில் எல்லாம் உட்கார்ந்து கொண்டார்கள். **இதனால் ஐரோப்பிய பெண்களும் ஆங்கிலோ-இந்தியப் பெண்களும் இடம் இல்லாமல் பின்தங்க வேண்டியதாய் விட்டது.** அவர்களுடைய புருஷர்களும், இதர சொந்தக்கார ஆண்பிள்ளைகளும் பர்மாவிலேயே இருக்கும்படி நேர்ந்ததால், அவர்கள் தனியாகப் பிரயாணம் செய்தார்கள். அவர்களுக்கு இதனால் அதிக அசௌகரியம் ஏற்பட்டது.

சென்னைக்கு வந்த இந்தியர் தன்னுடைய இடத்தை, இரண்டு ஆங்கிலோ-இந்தியப் பெண்கள் உட்காருவதற்காக விட்டுவிட்டார். அந்தப் பெண்களில் ஒருவருக்கு கால் ஊனமாய் இருந்தது.

**சில பாதைகளில் செல்வதற்கு இந்தியர்கள் அனுமதிக்கப்படவில்லை என்று ஒரு வதந்தி கூறப்படுகிறது. இதுவும் உண்மையல்ல.** மாண்டலேயிலிருந்து மணிப்பூருக்குப் போகிற பாதையின் ஒரு பாகத்தில், சில வண்டிகள் அனுமதிக்கப்படாததற்கு ஒரு காரணம் உண்டு அந்த வழியில் ஒரு பெரிய தண்ணீர் சேமித்துவைத்திருக்கும் 'ரிசர்வாயர்' இருந்தது. அது ஜன நெருக்கத்தினால், அல்லது வியாதியஸ்தர்கள் அருகில் வருவதால், கெட்டுப் போகக்கூடும் என்பதற்காக, முன் ஜாக்கிரதையாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆகவே, இந்தியர்கள் ஒருவிதமாகவும், ஐரோப்பியர்கள் வேறு விதமாகவும் நடத்தப்பட்டார்கள் என்ற வதந்திகளில் யாதொரு உண்மையும் இல்லை என்று சென்னைக்கு வந்த இந்தியர் கூறியது கவனிக்கத்தக்கது.

---

## பிரிட்டிஷ் முதல் மந்திரியின் மகள்.



**மிஸ் மேரி சர்ச்சில் என்ற பிரிட்டிஷ் முதல் மந்திரியினுடைய கடைசிப் பெண் பட்டாளத்தில் சேர்ந்திருக்கிறார். அவருக்கு வயது 18, விமான எதிர்ப்புப் பீரங்கி சம்பந்தமான பயிற்சியில் அவர் இப்போது தேறியிருக்கிறார்.**

---

# மாஸ்கோ சர்வகலாசாலை மாணவர்கள்

## ஆணுக்கும் பெண்ணுக்கும் இராணுவ போதனை

### இளைஞர்களின் அருமையான வேலைகள்

ரஷ்ய நாட்டிற்கு மாஸ்கோ தலை நகரம். இங்கே ஒரு சர்வகலாசாலை இருக்கிறது. அநேக உயர்தரப் பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. யுத்தம் ஆரம்பிக்குமுன் அநேகம் பிள்ளைகள் இங்கே படித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது மிகக் கொஞ்சம் பேர்தான் படிக்கிறார்கள். 6 மாதங்களுக்கு முன் பள்ளிக்கூடங்களில் படித்துக்கொண்டிருந்தவர்களில் அநேகம் பேர், இப்போது, புகழ் பெற்ற விமானிகளாகவும், இராணுவ உத்தியோகஸ்தர்களாகவும் விளங்குகிறார்கள்.

யுத்தம் காரணமாக அநேகம் பள்ளிக்கூடங்களை. மாஸ்கோ நகரில் மூடிவிட்டார்கள். மாஸ்கோ சர்வகலாசாலையின் மத்தியப் பகுதியில் எதிரிகள் குண்டு விழுந்தது. கட்டிடத்திற்குச் சேதம் ஏற்பட்டது. அதனால், அந்தப் பகுதியை மூடிவிட்டார்கள். ஆனாலும், அந்தக் கட்டிடத்தை வெகு விரைவாகப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாஸ்கோ நகரத்தில் பலமாக யுத்தம் நடந்துகொண்டிருந்தபோதிலும், மற்ற சர்வகலாசாலை மாணவர்கள் வழக்கம்போல் தம் பாடங்களைப் படித்துக் கொண்டுதானிருந்தார்கள்.

**யுத்தத்திற்கு அவசியமான பாடங்கள்**

மாஸ்கோ நகரத்தில் உபாத்தியாயர்களைத் தயார் செய்யும் காலேஜ் ஒன்று இருக்கிறது. இங்கே சொல்லிக்கொடுக்கப்படும் பாடத் திட்டத்தில் எந்த விதமான முக்கிய மாறுதலுமில்லை. ஆனால் யுத்த காலத்திற்கு அவசியமான முறையில், உடற்கூறு சாஸ்திர பாடம் சொல்லிக்கொடுக்கும் போதே, காயப்பட்டவர்களுக்கு எந்த முறையில் சிகிச்சை செய்து கட்டுக்கட்டவேண்டுமென்றும் சொல்லிக்கொடுக்கிறார்கள். டார்வின் தத்துவத்தைக் குறித்துச் சொல்லிக்கொடுக்கும் போது அதற்குப் பதிலாக நாஜி இனத்தாரின் தத்துவத்தைக் குறித்துச் சொல்லிக்

கொடுக்கிறார்கள். குரங்கு இனத்திலிருந்து மனிதன் தோன்றினான் என்பதுதான் டார்வின் தத்துவம்.

**இராணுவப் பாடங்களில் ஆண் பெண் வித்தியாசமில்லை**

நாள் தோறும், உபாத்தியாயர்களைத் தயார்செய்யும் காலேஜில் சில மணி நேரங்கள் இராணுவப் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. மாணக்கர்கள் ஆண், பெண் என்ற வேற்றுமையில்லாமல் விமானப் படையில் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். இது மிகவும் கடுமையான வேலைதான். இதற்கு சர்வகலாசாலையின் 7 பகுதிகளில் பாடஞ் சொல்லிக் கொடுக்கின்றார்கள். ஆகையால் இந்தப் பகுதிகளைக் காவல் செய்யவேண்டிய பொறுப்பு மாணக்கர்களுடையது. இரவும் பகலும் ஆண்களும் பெண்களும் 40 பேர்கள் காவல்செய்து வருகிறார்கள்.

மாஸ்கோ நகரத்தை எதிரிகள் முற்றுகையிட்ட போது இந்தக் காலேஜ் மாணவர்கள் கோட்டை கொத்தளங்களிலேறி அரண்மதில்களைப் பலப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அல்லாமலும், பூமிக்கு அடியில் உள்ள பாது காப்புக்காக ஒளிந்துகொள்ளும் இடங்களையும் இரவும் பகலும் மாணக்கர்கள் தான் காவல் புரிந்து வந்தார்கள். தேச சரித்திரங்களைக் குறித்தும் அரசியலைக் குறித்தும் அங்கே பிரசங்கங்கள் செய்து வந்தார்கள். மற்றும் சில மாணவர்கள் மாஸ்கோவிலிருந்து வெளியேறிப்போகும் ஜனங்களுக்கு உதவிசெய்யவேண்டி ஒவ்வொரு ரயில்வே ஸ்டேஷன்களிலும் வேலைசெய்து வந்தார்கள். செஞ்சட்டைச் சேனைகளுக்குக் கம்பளித் துணிகள் சேகரிப்பதில் வேறு சில மாணக்கர்கள் ஈடுபட்டிருந்தனர்.

**பாடங்களைப் படிக்கத் தவறுவதில்லை**

படிப்பு விஷயத்திலும் யுத்த உதவியிலும் மாணக்கர்களும் உபாத்தியாயர்களும் ஒருவரையொருவர் கலந்துகொண்டே தம் காரியங்களைச் செய்கிறார்கள். இவ்வளவு கஷ்டமான வேலைகளைச் செய்து வந்தபோதிலும் மாணக்கர்கள் தம் பாடங்களையும் தவறாது படித்து வருகிறார்கள். அரசியல் பிரச்சனைகளையும் தமக்குள் விவாதிக்கிறார்கள். மேலும் இங்கிலீஷ் பாஷையையும் அதன் இலக்கியங்களையும் ரஷ்ய மாணவர்கள் மிகுந்த ஆவலோடு படிக்கிறார்கள். பிரிட்டனிடத்திலும் அமெரிக்காவினிடத்திலும் ரஷ்ய மாணக்கர்களுக்கு உள்ள அக்கறையை இது காட்டுகிறது.

# முதல் கடமை தேசத்திற்கு.

## இரண்டாவது கடமை மனைவிக்கு.

### கணவனுடன் போர்க்களம் போன சீனப் பெண்மணி.

சீனா பெரிய தேசம். அங்கே ஜப்பானியர் சீனர்களோடு போர் புரிகிறார்கள். வாங்-லியு-டிங் என்னும் சீன இளைஞன் ஒரு புது மாப்பிள்ளை. இவன் சீனப் படையில் சேர்ந்தான். யுத்தத்திற்குச் சென்றான்; காயப்பட்டான். அதிகாரிகள் அவனை ஊருக்கு அனுப்பிவிட்டார்கள். காயங்கள் ஆறின, மீண்டும் போராடப் புறப்பட்டான். அவன் மனைவி தடுத்தாள். தன் கணவன் தன்னுடனேயே வசிக்க வேண்டுமென்று வற்புறுத்தினாள். கணவனோ யுத்தத்திற்குப் போகவேண்டுமென்று பிடிவாதம் செய்கிறான். மனைவியோ அவனுக்குமேல் பிடிவாதக்காரி. கடைசியாக இருவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். ஊர் பஞ்சாயத்தார் தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டு நடப்பது என்று முடிவு செய்து கொண்டார்கள். பஞ்சாயத்து நடந்தது. அதில் அவன் நிறைவேற்ற வேண்டிய முதல் கடமை தேசத்திற்குத் தான் என்றும், இரண்டாவது கடமைதான் மனைவிக்கு என்றும் கூறி அவன் யுத்தத்திற்குப் போகவேண்டுமென்று தீர்ப்புக் கொடுத்தார்கள். தன் கட்சி தோற்றதைக் கண்டு அவள் அஞ்சவில்லை. தன் கணவன் சேர்ந்த அதே படையில் நர்ஸ் வேலைக்கு அமர்ந்தாள். பிறகு அவர்களுடைய சமாச்சாரம் தெரியவில்லை. இதல்லவோ தேச பக்தி.

# இந்திய வீரர்களுக்கு வைசிராய் விருந்து.

இந்தியப் போர் வீரர்கள் எரிட்ரியா, மேற்குப் பாலைவனம், சிரியா முதலிய போர்க் களங்களில் கடுமையாகப் போராடினார்கள். அவர்களுள் ஒரு சிலர் காயப்பட்டு இந்தியாவிற்குத் திரும்பினார்கள். இவர்களுடன் கர்னல் பிண்டன் பிளட் என்னும் இராணுவ உத்தியோகஸ்தரும் வந்து சேர்ந்தார். இவர்களுள் பெரும்பாலோர் இராஜபுதனவாசிகளும், பாஞ்சால முஸ்லீம்களும் தான். இவர்களுக்கு சென்ற 1942-ம் ஞு மார்ச்மீ 24உயன்று மேன்மை தங்கிய வைசிராய் பிரபு ஒரு தேநீர் விருந்து நடத்தினார். அப்போது வைசிராயின் மனைவியார் வைசிராய் மாளிகையையடுத்துள்ள தோட்டத்திற்கு அவர்களையழைத்துக்கொண்டுபோய் அங்கே இருப்பவைகளைக் காட்டினார். இவையனைத்தையும் சினிமாப் படமாகப் பிடித்திருக்கிறார்கள்.

# மணி ஓசை கேட்கிறதா?

ஏப்ரல் பிறந்துவிட்டது. இன்னும் சில வாரங்கள் போனால் சரியான வசந்தகாலந்தான். சாதாரணமாக, வசந்தகாலம் வருகிறது என்றால் எல்லோரும் சந்தோஷப்படுவார்கள். அதன் வருகையைக் கொண்டாடக்கூடச் செய்வார்கள். அதுவும் மேனாடுகளிலே, சகிக்கமுடியாத பனிகாலம் நீங்கினதும், இந்த வசந்தகாலம் உண்டாகிறதா; அது காரணமாக, அங்குள்ள ஜனங்களுக்கு வசந்தகாலம் வருகிறதென்றால் பரம உத்சாகம். கரடித் தோல்களையும், ஆட்டு ரோமங்களையும் தடிதடியான உடுப்புகளாக்கி, காலிலே ஒரு வண்டி கனமுள்ள பூட்ஸுகளை அணிந்துகொண்டு, தலையிலே, குல்லா என்ற பெயரில் பெரிய சுமையைச் சுமந்துகொண்டு, சும்மா நடுங்கிக்கொண்டு இருப்பவர்களுக்கு, அந்தச் சனியன்களையெல்லாம் வீசி எறிந்துவிட்டு, ஹாயாகச் சுற்றும் காலம் வருகிறதென்றால், அவர்களுக்குக் குஷியாக இருக்குமா இராதா?

இவ்வருஷம் வசந்தகாலம் அநேகமாக ஆரம்பமாகிவிட்டது என்றே சொல்லவேண்டும். ஆனாலும், எப்பொழுதுமுள்ள கொண்டாட்டம், ஐரோப்பாவிலும், ருஷ்யாவிலும், பிரிட்டனிலும் இவ்வருஷம் இருக்குமா என்ன? கொண்டாட்டத்திற்குப் பதில் ஒரே பரபரப்பாகத்தானிருக்கும், சில இடங்களில் பயம்கூடத் தோன்றிக்கொண்டிருக்கும். ஏன்?

எல்லாம் இந்த ஹிட்லர் கோஷ்டி கட்டிக்கொள்ளும் புண்ணியம்தான்! இந்த வசந்தகாலத்திலே தான் அந்த மகா பரமாத்மாக்கள் ஏதேதோ செய்யத் திட்டம் போட்டிருந்தார்களாம். உண்டு இல்லை என்று பார்த்துவிடவேண்டியதுதான் அவர்கள்! அதிலென்னமோ சந்தேகமேயில்லை. எத்தனையோ நிபுணர்கள்கூட இதை எடுத்துச் சொல்லிவிட்டார்களே! 'ஜெர்மனி, இந்த வசந்தகாலத்திலோ, அதைத் தொடரும் கோடைகாலத்திலோ ருஷ்யாமீது



நன்றாகப்பாய்ந்து, தனது காரியத்தை அடுத்த பனிகாலத்திற்குள் முடித்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், அதற்கு அப்புறம் 'சான்ஸ்' கிடைப்பதே மகா கஷ்டம், அதுமட்டுமில்லை, அப்புறம் அதற்கு விநாசகாலம் தான்! ஜெர்மனி படுத்துவிட்டால், அதோடு தொடர்பு வைத்துக்கொண்டு, அதன் வெற்றிகளில் நம்பிக்கை கொண்டிருக்கும் ஜப்பானும் தானாகவே ஒழிந்துபோகும்" என்று சொல்லுகிறார்கள் அநுபவசாலிகள்.

வாஸ்தவம்! நமது நேச தேசத்தார் இப்பொழுதென்ன சும்மாவா இருக்கிறார்கள்? அல்லும் பகலும் அறுபது நாழிகையும், 'ஹிட்லரை ஒழித்தே தீரவேண்டும்; அப்புறம்தான் உலகத்திற்கே க்ஷேமம்' என்ற ஒரே எண்ணத்தோடுதானிருக்கிறார்கள். அந்த எண்ணத்தை, காரியத்திற்கு மாற்றவும் பர்வதத்திற்கு ஒப்பான முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நாளுக்குநாள் நம்பிக்கை தரத்தக்க செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. வட அமெரிக்கா என்பது கனடா, யு.எஸ்.ஏ., மெக்ஸிகோ, பனாமா ஆகிய பிரதேசங்களைக் கொண்டதாகும். அந்தப் பிரதேசங்களில் எல்லாம் இன்று அதிக மும்முரமாக யுத்தவேலைகளே நடந்துகொண்டிருக்கின்றன. அதுமட்டுமில்லை, உலகிலேயே மகா பணக்கார நாடு "அமெரிக்க ஐக்ய மாகாணங்கள்தான்" இக்கால யுத்தத்திற்கு வேண்டியது ஏராளமான பணமும், கச்சா சாமான்களும் அளவற்ற ஆயுதங்களைத் தயாரிக்க வசதிகளும், கணக்கற்ற ஆள் பலமும்தான். இத்தனையும் அந்த அமெரிக்க ஐக்ய மாகாணங்கள் என்று சொல்கிறோமே அந்த யு.எஸ்.ஏ. யில் இருக்கிறது.

அப்படிப்பட்ட யு.எஸ்.ஏ. இன்று நமது கட்சியில் இருக்கிறது. தவிர, அந்த தேசம் முழுவதுமே! ஆமாம்! அதிலிருக்கிற துரும்பு முதல்கொண்டு இந்த யுத்தத்திற்காகப் பயன்பட்டே தீரவேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்திவிட்டார், மகா தீரமான அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட். எடுத்த எடுப்பிலேயே எல்லோரையும் திகைக்கவைக்கக்கூடிய காரியங்களையெல்லாம், ஜனாதிபதி ரூஸ்வெல்ட், வெகு தைரியமாகவே செய்துவருகிறார். அமெரிக்க ஜனங்களுக்கும், அவர்களின் பிரதிநிதிகளுக்கும் இவரிடத்தில் உள்ள நம்பிக்கை அபாரமானது. இவருக்கு அவர்கள் கொடுத்துள்ள அதிகாரத்தைப் போல், யாரும் பெற்றிருந்ததே கிடையாது என்றுகூடச் சொல்லிவிடலாம். இத்தனை அதிகாரங்களையும் கொண்ட அவர், காலதாமதம் செய்வதால் உண்டான பிரதிகூலங்களை நன்றாக தெரிந்துகொண்டு, இப்பொழுதிலிருந்தே பகீரதப் பிரயத்தனம்செய்து, பெரிய கங்காப்ரவாகம்போல், அமெரிக்காவிலிருந்து ஆயுதங்களும், விமானங்களும், டாங்கிகளும், வெடிகுண்டுகளும், கப்பல்களும், ஆட்களும், பாய்ந்தோடி, ஹிட்லர் கோஷ்டியை அந்த வெள்ளத்திலே சிக்கவைத்து, திணறஅடிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். தனது தேச முழுவதையுமே, ஒரு சிறுசட்டத்தால் போர்கோலம் பூணும்படி செய்துவிட்டார். அது என்ன சட்டம் தெரியுமா? அமெரிக்காவில் உள்ளவர்களின் சொத்துகளில் எதைவேண்டுமானாலும், யுத்தத்திற்கு உதவுவதற்காக யு.எஸ்.ஏ. சர்க்கார் எடுத்துக்கொள்ளலாம்; எந்தத் தொழிற்சாலையில் வேண்டுமானாலும் அவர்கள் தங்களிஷ்டப்படி தங்களுக்குத் தேவையான சாமான்களைத் தயாரித்துக்கொள்ளலாம். நீங்க குண்டா கேக்கிறீங்க, நாங்க மூண்டு இல்ல செய்யறோம் இங்கே, குண்டு செய்ய சௌகரியப்படாதே! என்று இனிமேலே அங்குயாரும் பேசமுடியாது. 'குண்டு வேணுமா, இதோ ரெடி' என்று சொல்லிவிட்டு, மூண்டு செய்கிற இயந்திரங்களைப் பக்குவமாக மாற்றி, குண்டுசெய்ய வேண்டியதுதான். இம்மாதிரி மகா சக்தி என்று தனது சக்தியையெல்லாம் காட்டத் தீர்மானித்துக்கொண்டிருக்கிறது. "இதுவரை தயாரித்ததும் போதாது, தயாரிப்பதற்கென்று போட்ட திட்டமும் போதாது. இன்னும் 31 ஆயிரம் விமானங்கள் தயார் செய்தாகவேண்டும். அதற்கு இன்னுமொரு 1830 கோடி டாலர் தேவை 'உம்' என்று சொல்லுங்கள். அவசரமய்யா!" என்று கேட்கிறார் ரூஸ்வெல்ட். 'ஹூஹூம்' சொல்வோரே அங்குகிடையாது.

இதுமட்டுமா? ருஷ்யாவிற்குச் சரியானபடி உதவி செய்தால்தான், ஹிட்லரின் பலம் ஒடுங்கும். அந்த பலத்தை ஒடுக்கினால்தான், நேசநாட்டவர்களுக்கு சௌகரியம் என்பதை ரூஸ்வெல்ட் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்.

அது எப்படித் தெரிகிறது என்றால், அவர் பகிரங்கமாகப்பேசிய பேச்சிலிருந்துதான். "ருஷ்யாவிற்கு நாம் அளிப்பதாகக் கூறிய அளவுக்குக் குறைந்தே தான் போகிறது உதவி" அது தவறு, இன்னும் நிறைய உதவவேண்டும். யாரப்பா அங்கே, கப்பல்காரர்களை மேய்க்கிறவர் யாரப்பா? இங்கே வாப்பா! நம் நாட்டிலுள்ள கப்பல்கள் செய்யும் முதல் வேலை, ருஷ்யாவிற்கு உதவி எடுத்துச்செல்லும் வேலையாக இருக்கவேண்டும். அப்புறம்தான் மற்றதெல்லாம், என்று சொல்லிவிட்டார் அவர்.

இது தவிர, யு. எஸ். ஏ.-யிலிருந்து பல சூரர்கள் நம் இந்தியாவிற்கும், பர்மாவிற்கும், ஆஸ்திரேலியாவிற்கும் வந்தவண்ணமாகவே இருக்கிறார்கள். அமெரிக்க நிபுணர்களில் ஒருவரான ஜெனரல் ஸ்டில்வெல் என்பவர் சீனசர்க்காருக்கு வலக்கை போல் போய் அமர்ந்திருக்கிறார். இவரே, பர்மாவில் உள்ள அமெரிக்கப்படைகளுக்கும் சேனாபதி. ஆஸ்திரேலியாவிலே மாக் ஆர்தர் பிரதம சேனாபதியாகிவிட்டார். இதெல்லாம் எதை வெளியிடுகிறது? மகா பராக்ரமம் வாய்ந்த யு. எஸ். ஏ., எப்படியாவது நம் எதிரிகளை மண்டிபோட்டு மண்ணைக்கௌவ வைத்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது என்பதைத்தான்.

யு. எஸ். ஏ. விஷயம் இப்படியாச்சா? அதற்கு வடக்கே உள்ள கானடா, பிரிட்டிஷாருடன் ஒட்டியதாகும். அங்கே இப்பொழுது ஆறுலக்ஷம் தொழிலாளர்கள் இரவு, பகல் என்று பாராமல் யுத்தத்திற்குச் சாமான் தயாரிக்கிறார்கள். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய விமானிகளில் பலருக்கு, அங்குதான் பயிற்சி நிலையமிருக்கிறது. போன யுத்தத்திலிருந்ததைவிட, இந்த யுத்தத்திற்குக் கானடாவிலிருந்து கிளம்பியுள்ள சேனைகளின் தொகையே ரொம்ப ஜாஸ்தி. பிரிட்டனிலே, கனடியப் படைகள் வந்து இறங்கிய வண்ணமாகவே இருக்கின்றன. ஆயுதபாணிகளாக வந்திறங்கியிருக்கும் இவர்களுடைய கைகள் தினவெடுத்துக் கொண்டே இருக்கிறதாம். நாளை உத்தரவு கொடுத்துவிட்டால் போதும், அம்பெனப் பாய்ந்துவிடுவார்கள் ஐரோப்பா மேலே. ஐரோப்பா மீது படையெடுப்பதென்றால், இந்தப் படை, 'நான் தான் முதலில் போவேன்' என்று கூடப் போட்டி நேரிடும்போலிருக்கிறது. இப்படியாக ஐக்ய அமெரிக்காவும், கானடாவும் பிரிட்டனுக்குப் பூரண உதவியளித்து வருகின்றன. போன யுத்தத்தைப்போலன்றி, இதிலே அமெரிக்காவிற்கு ரொம்ப ரொம்ப அதிக சிரத்தை ஏற்பட்டிருக்கிறது. போன யுத்தத்திலும் அது செய்த உதவி அபாரமானதுதான். ஆனாலும் அமெரிக்காவிற்கே யுத்தம்போய் எட்டவில்லையல்லவா அப்பொழுது? இப்பொழுது அமெரிக்காவையே நேர் சவாலுக்கு அழைத்து விட்டதே ஜப்பான். தவிர, அமெரிக்க நகர்கள் சிலவற்றிலேயே குண்டுகளைப் போட்டுவிட்டது ஜப்பான் அமெரிக்காவில் பல லக்ஷக் கணக்கில் ஜப்பானியர்கள் வேறே வசிக்கிறார்கள். இவர்களில் யாரை நல்லவன், யாரைக் கெட்டவன் என்று நினைப்பது? எல்லாருமே ஐந்தாம் படைப் பேர்வழியாக இருந்தால் ஆபத்தாச்சே! அமெரிக்காவிற்குள்ளும் ஜப்பானியர் புகுந்துவிடுவார்களே! இந்த எண்ணத்தால், அமெரிக்காவிற்கு இந்த யுத்தத்தில் அதிக சிரத்தை ஏற்பட்டிருப்பது இயற்கை தானே?

தவிர, அமெரிக்கக் கப்பல்களிலேகூட எத்தனையோ ஜெர்மன் நீர்மூழ்கிகளுக்குப் பலியாகிவிட்டன. அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையான அட்லாண்டிக் கடற்கரையோரமாகவே, ஜெர்மன் 'யு' படகுகள் சுற்ற வருகின்றன. ஆபத்து சமீபித்துவிட்டது என்பதைக் காட்டுகிறதா இல்லையா, இது? இந்த ஆபத்தைத் தவிர்த்தே தீரவேண்டும் என்று அவர் நினைப்பதும் சகஜந்தானே? எப்பொழுதும் தமாஷ் வாழ்விலேயே மூழ்கியிருக்க விரும்பும் அமெரிக்க மக்களுக்குக்கூட இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் அளவில்லாத அக்கறை ஏற்பட்டிருக்கிறது. வாழ்வா, சாவா என்ற பிரச்னைக்கு முடிவு

காண நடக்கும் யுத்தம் இது என்பதை அவர்கள் எல்லோரும் உணர்ந்துகொண்டு விட்டார்கள். இப்படிப்பட்ட உணர்ச்சி ஏற்பட்டிருப்பது ஹிட்லர் கோஷ்டிக்கு நல்லதென்று நினைக்கிறீர்கள்.

மகா பலம் வாய்ந்த அமெரிக்கா, ருஷ்யா், சைனு ஆகிய மூன்று நாடுகளும் தன் பக்கத்தில் இருக்கும் பொழுது, இப்போதைக்கு, ஏதோ கால வித்யாசத்தால் எத்தனை நஷ்டங்கள் வந்தால் தான் என்ன, நமது பலம் நாளுக்குநாள் வளர்ந்து வருவதால், ஒரு நாள் அது நம் விரோதிகளின் பலத்தைவிட அதிகமாகும் என்பது நிச்சயம். அந்த சமயத்திலே விரோதி தடுமாறிவிடுவான். அப்புறம் இறுதி வெற்றி நமக்கே! இதில்கூட உங்களுக்குச் சந்தேகமா ?

சென்ற வாரம் பிரதம மந்திரி சர்ச்சில் பேசியிருக்கிறுரே, பத்திரிகைகளில் பார்த்தீர்களா ? அவர் தான் பச்சை, பச்சையாக, இப்போதுள்ள நிலைமையை வெட்டிப்பேசுகிறுரே ! 'எத்தனை கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும், நம்மை விட்டு எங்கும் போகப்போவதில்லை இறுதியில் உள்ள ஜயம்' என்று அடித்துச் சொல்லுகிறுர் அவர். அவரது ஊக்க மூட்டும் மொழிகளைப்போல், நேச நாட்டினருக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடியது வேறு ஒன்றுமே இல்லை என்று கூடச்சொல்லலாம்.

இந்த உற்சாகத்திலே தான், சென்ற வாரம்கூட ஒரு நாள், பிரிட்டிஷ் விமான, நில, ஜலப்படைகள் எல்லாம் ஒற்றுமையோடு, பிரான்ஸ் தேசத்திலே, ஜெர்மானியரின் பிடியிலகப்பட்டுக் கிடக்கும் பிரமாண்டமான ஸெயின்ட் நஸார் என்ற துறைமுகத்தைப் போய்த் தாக்கின. ஒரு பிரிட்டிஷ் கப்பல் வெகு துணிச்சலாக அத்துறைமுகத்தின் வாசலைப்போய், மோதித் தகர்த்தது. அக்கப்பலின் முன் பாகம் நொறுங்கிற்று. ஆனாலும் பரவாயில்லை. துறைமுக வாசலும் நொறுங்கிவிட்டது. அக்கப்பலில் ஐந்து டன் கனமுள்ள வெடிமருந்துகள் இருந்தன. அத்தனையும் அத் துறைமுகத்தின் மீது வீசிவிட்டனர். தவிர, தரைப்படையினர் அத்துறைமுகத்தில் தைரியமாக இறங்கி, பல முக்கியமான இடங்களைப் பாழக்கினுர்கள். எதிரிகளின் எதிர்ப்பு பிரமாதமாக இருந்தது. ஆனாலும் பிரிட்டிஷ் வீரர்களில் பலர் படுகாயம் அடையும் வரையோ, கைதிகளாகும் வரையோ பயங்கரமாகப் போராடினுர்களாம். சிலர் சில வீடுகளில் நுழைந்து, ஜன்னல்கள் வழியாக, ஜெர்மானியரைச் சுட்டார்களாம். வேண்டிவரை அத்துறைமுகத்தைப் பாழாக்கிவிட்டு, ஜர்மானியரின் வயிற்றைக் குழப்பி விட்டு, ஒருபகுதிப் படையை இழந்துவிட்டு, சீமைக்குத் திரும்பிவிட்டனர் அந்த கோஷ்டியார். ருஷ்யர்களும், வேறு பலரும், ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை உண்டாக்கி, ஹிட்லரைத் தடுமாறச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கும் இச்சமயத்திலே, பிரிட்டிஷார் ஸெயின்ட் நஸாரைத் திடீரென்று தாக்கவாவே, 'ஏயோ! படையெடுப்பு ஆரம்பமாகிவிட்டது போலிருக்கிறதே!' என்று அலறிவிட்டதாம் ஜெர்மன் சர்க்கார். பிரசார மந்திரி கொயபெல்ஸிற்கேற்பட்ட குழப்பத்திலிருந்தே இது நன்கு வெளியாகியிருக்கிறது.

இம்மாதிரி அவ்வப்பொழுது, ஐரோப்பாவைப் படையெடுப்பதற்கான ஒத்திகைகள் வெற்றிகரமாகவே நடந்துகொண்டிருக்கின்றன. பிரிட்டனில் பெரிய பாராசூட் படை தயாரிக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டனையும் நன்ருகப் பாதுகாக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

பிரிட்டிஷ் விமானிகள் அழகாகத்தமக்கிட்ட கட்டளைப்படி ஜெர்மனிமீது பறந்து சென்று பல முக்கிய தொழிற் சாலைகள் நிறைந்த நகரங்களில் தீ மூட்டிவிட்டு வருகிருர்கள். மத்யதரைக்கடலிலும், வேறு கடல்களிலும், பிரிட்டிஷ் விமானப் படையினரும், கப்பல் படையினரும், நீர்மூழ்கிகளும் ஜெர்மனிக்குத் தலைவலியை உண்டாக்கிக் கொண்டிருக்கிருர்கள்.

ருஷ்யாவிற்கு ஏராளமான உதவி போய்க்கொண்டிருக்கிறது. இரானில் ஒரு சிறந்த ரஸ்தா போடப்பட்டுவிட்டது. இதன் வழியேதான் உதவி போகிறது. கடல் வழியே சென்ற வாரம் அமெரிக்க, பிரிட்டிஷ் சாமான்கள் ருஷ்யாவிற்குச் சென்று கொண்டிருக்கையில், ஜெர்மன் கப்பல்களும், நீர் மூழ்கிகளும், விமானங்களும் அவற்றை மறித்தன. ஆனல் அவர்களைப் படுசேதத்தோடு விரட்டியடித்துவிட்டனர். பிரிட்டிஷ், ருஷ்யக் கடற்படையினர் இம்மாதிரியாக எங்குமே உஷாராக இருக்கிருர்கள்.

இதைப் பார்த்ததும் ஹிட்லர் வயிறிலே புளியைக் கரைக்கிறுப்போலிருக்கிறது. வசந்த காலத் தாக்குதலுக்கு வெறி பிடித்தவர் போல அவர் ஏற்பாடு செய்திருக்கிறுப்போலிருக்கிறது. பால்கன் நாடுகளுக்கு ஒரு பக்கா ஆளை அனுப்பி ஆள் திரட்டுகிறுப்போலிருக்கிறது. யுகோஸ்லேவியாவிலிருந்தும், பல்கேரியாவிலிருந்தும், ருமேனியாவிலிருந்தும் அதிக உதவியை அவர் கோருகிறுர்போலிருக்கிறது. துருக்கி எல்லையில் நிறையப் படைகளை அவர் குவிக்க ஏற்பாடு செய்திருக்கிறுர் என்றொரு பிரஸ்தாபம் இருக்கிறது. அது ஒன்றுமில்லை என அவரது ஆட்கள் கூறுகிறுர்கள். சத்ய ஹரிச்சந்திரர்களா என்ன அவர்கள் ? ரோட்ஸ் தீவிலே, கணக்கற்ற பாராசூட் படையினர் காத்திருக்கிறுர்களாம். க்ரீஸ், ஸிஸிலி, டாடிகானஸ் (துருக்கிக்கு அருகே இருக்கும் தீவுகள்) இங்கெல்லாம் படகுகள், நாசகாரிகள், யுத்தக்கப்பல்களையெல்லாம் சேர்த்துவைத்திருக்கிறுராம். ஆனல் இந்த வசந்த காலத்திலேயே ருஷ்ய யுத்தம் முடிந்துவிடும் என்று அவர் எதிர் பார்க்கவில்லைபோலிருக்கிறது. இல்லாவிட்டால், நாலே கால் லக்ஷம் ஜதை பனிச் செருப்புகளுக்கு ஏன் அவர் ஆர்டர் கொடுத்திருக்கிறுர் ? நார்வே தேசத்திலுள்ள காடுகளில், பனிக்கட்டி மீது சருக்கிக்கொண்டுபோவோர், அணியும் வழுக்கல் செருப்பிற்கான மரம் இருக்கிறதாம் நிறைய. செப்டெம்பர் மாதத்திற்குள் இத்தனை ஜோடுகளும் தயாராகவேண்டுமென்ருல் என்ன அர்த்தம் ?

ருஷ்யாவின் பலம் எப்படிப்பட்டது என்பதை அவர் இப்பொழுது நன்ருக அறிந்துகொண்டிருக்கிறுரா இல்லையா ? அவரும் புத்திசாலிதானே ? ருஷ்யாவில் ருஷ்யர்களின் கைதான் இப்பொழுது ஓங்கியிருக்கிறது; அதைத் தணியச்செய்துதான் தமது கையை ஓங்கவேண்டும் என்பது அவருக்குத் தெரியாதா? வெகு சிரமப்பட்டு முன்பு பிடித்த எண்ணற்ற கிராமங்களை சிரமத்தோடு அவரது ஆட்கள் இழந்து வருகிருர்கள்.

ஆனல் ருஷியாவில் பனிக்கட்டி இளக ஆரம்பித்துவிட்டது. குளங்கள், ஏரிகள் எல்லாம்கூட இத்தனை நாட்களாக விமானங்கள் வந்திறங்க உபயோகமாக, கெட்டியாக இருந்தன. இப்பொழுது எங்கும் ஒரே வெள்ளக்காடாக இருக்கிறது. இரண்டு கட்சிகளுக்கும் இது கஷ்டம்தான். இந்த வெள்ளம் வற்றிய பின்னும், ருஷ்யர்கள் தொடர்ந்து துரத்துவார்களா ஜெர்மானியரை என்பதைப் பார்க்கவேண்டும். தெற்கு ருஷ்யாவில்தான் ஜெர்மானியரின் வசந்த காலத்தாக்குதல் ஆரம்பமாகும் என்கிருர்கள் யுத்த ஜோஸியர்கள்.

அந்த வழியேயாவது, துருக்கிவழியேயாவது போய்த்தான், காகஸஸ் எண்ணெய்க்கிணறுகளை அடையவேண்டும்; இரானைத் தாக்கி ருஷ்யாவிற்குப் போகும் உதவிகளை மடக்கவேண்டும்.

இந்த சமயத்திலே ருஷ்யர்கள் சாத்தியமானவரை ஹிட்லரின் வசந்தகாலத் தாக்குதலை அதிக பலனில்லாது செய்துவிட முயற்சித்து வருகிருர்கள். வடக்கே, ஜெர்மானியர்களுக்குப் பின்னல் திடீரென்று ருஷ்யப் படை போய் இறங்கிவிட்டது. மத்ய அரங்கத்திலே பல்லாயிர ஜெர்மானியர் நாதியற்றுப் பிண்மாகக் குவிந்துகிடக்கிருர்கள். ருஷ்யர்கள் புதுமாதிரி நீர் மூழ்கிகளைத் தயாரித்திருக்கிருர்கள். இவை ஏற்கெனவே ஜெர்மன் கப்பல்கள் சிலவற்றைத் தண்ணீருக்குள் அமிழ்த்திவிட்டனவாம். இதையெல்லாம் ஜெர்மானியர் சமாளித்தாகவேண்டும். ஆகவே இந்த வசந்தகாலத் தாக்குதல் பிரமாத வேகத்துடன் ஆரம்பிக்கும் என்று நிச்சயமாக நம்பலாம் நாம் எல்லாம்.

ஹிட்லரின் வசந்தகாலத் தாக்குதல் வெற்றிகரமாக முடிய, ஜப்பானியர் ருஷ்யா மீது கீழ்த் திசையில் பாயக்கூடும் என்று பேசிக்கொள்ளுகிருர்கள்.



ஆனல் ஜப்பானின் நிலைமை என்ன ? நியூகினியில் ஜப்பானியர் திணறுகிருர்கள். அங்கே அவர்கள் ஒரு மலைப் பள்ளத்தாக்கில் கூடியிருந்தார்கள். அங்கெல்லாம் பெரிய மழையால் பிரமாண்டமான வெள்ளக்காடாக ஆகிவிட்டது. பேசாது பின் வாங்குகிருர்கள் ஜப்பானியர். கடற் கரையோரத்திலே சில இடங்களில் அவர்கள் வேரூன்றிக் கிடக்கிருர்கள். கடற்கரைப் பிரதேசம் இப்பொழுது சுகமாக இருக்குமா என்ன ? ஆஸ்திரேலியா மும்முரம கப் போருக்குத் தயாராகிவருகிறது. ஆஸ்திரேலிய விமானங்களும், பிரிட்டிஷ் கப்பற் படைகளும் போட்ட போட்டிலே, அப்பிரதேசத்திலே ஜப்பானியரின் முன்னேற்ற வேகம் குறைந்துவிட்டது. அமெரிக்க விமானக் கோட்டைகள் நியூகினியில் அட்டகாசம் செய்கின்றன. ஜப்பானியரின் தாக்குதலின் ஜோர் தீர்ந்துவிட்டது. வெள்ளம் உச்ச நிலைமையை அடைந்த பின், வடியவேண்டியதுதானே ? அதே மாதிரிதானிருக்கும் ஜப்பானின் படையெடுப்பின் பலனும் என்கிருர்கள் அங்கிருப்போர்.

ஜப்பானிய விமானங்கள் டார்வின் நகரைச் சும்மா தாக்கி வருகின்றன. வட ஆஸ்திரேலியா ராணுவப் பிரதேசமாக ஆகிவிட்டது. பிலிப்பைன் தீவுகளில் மும்முரமாகவே நடக்கிறது யுத்தம். பட்டான் தீபகற்பத்தில் ஜப்பானியர் மண்டையை உடைத்துக் கொண்டேயிருக்கிருர்கள். ஓரிடத்தில் ஜப்பானியரை பிலிப்பைன் துருப்புகள் பின் வாங்கச் செய்துவிட்டன.

பர்மாவிலே ஜப்பானியர் ஆரம்பத்திலிருந்த குஷியில் முன்னே போகக் காணும். பர்மிய துரோகிகளின் உதவியும், விமானப் படை உதவியும் அவர்களுக்கு நிறையக் கிடைத்திருக்கின்றன. ஆனல், ஜப்பானிய அண்ணுத்தையின் குணத்தை நன்ருக அறிந்த சீனர்கள் ஏராளமாக பர்மாவில் இருக்கிருர்கள். அவர்களோடு டாங்கூ என்ற நகரில் ஜப்பானியர் ஒருவாரமாகத் தொடர்ந்து போராடவேண்டி வந்தது. சீனர்கள் மகா வீரத்துடன் போராடினர். தாம்பிடித்த இடத்தை எளிதில் விடவில்லை அவர்கள். இந்த இடத்திலே ஜப்பானியருக்கு ஏக நஷ்டம்.

ஜப்பானியர் ஐராவதி நதியின் இருபுறங்களிலும் முன்னேறி வருகிருர்கள். பர்மியக் கடற்கரை நகர்கள் சிலவற்றின்மீது குண்டுகளை வீசி, தீ மூட்டிவிட்டன ஜப்பானிய விமானங்கள். பர்மா ரஸ்தா ஆரம்பமாகும் இடத்திற்கு லாஷியோ என்று பெயர். அந் நகரத்தையும் ஜப்பானிய விமானிகள் தாக்கப்பார்த்து, தவடையிலடி வாங்கிக் கொண்டே திரும்பியிருக்கிருர்கள். சமுத்திர வழியாகவே இருபத்தையாயிரம் பேர்கள்வரை ஜப்பானியர் பர்மாவில் இறங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. பிரிட்டிஷ் பீரங்கிப் படையினர், ஜப்பானிய ரத்தத்தைப் பருக வெகு ஆவலோடு இருக்கிருர்கள். டாங்கூ நகரம் காலி செய்யப்பட்டுவிட்டதாம். யோக்யமான முறையில் சண்டைபோடுவதால் சரியான பலன் கிடைக்கவில்லைபோலிருக்கிறது. விஷக் கிருமிகளையும், விஷப் புகையையும் ஜப்பானியர் பர்மாவில் உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்களாம். இது உண்மையானல், இது ஜப்பானுக்கு பலம் குறைகிறது என்பதற்கான அறிகுறியல்லவா ?

இந்தோ சீனவில் உள்ள சைகோன் முதலிய நகரங்களில் விளக்கணைப்பதில்லையாம். காரணம் அங்கு எதிரிகள் விமானங்கள் அதிகம் வருவதில்லை என்கிருர்களாம்.

இலங்கையில் உள்ள கொளும்பு நகரிலே விமான படையெடுப்பு அபாயச் சங்கு ஒலித்தாம். ஜப்பானியர்களுக்கு இலங்கைமீதும், அப்பால் இந்திய மகா சமுத்திரத்தைக் கடந்து, ஆபிரிக்கா அருகில் உள்ள மடகாஸ்கர் தீவு மீதும் கண் என்று சொன்னுர்களே, அது வாஸ்தவமாகப் போகிறதா ? ஹிட்லருக்கு எப்படியாவது உதவ வேண்டும். ஜப்பான் இது விஷயத்தில் ஜப்பான் எவ்வளவு நஷ்டமடைந்தால் ஜெர்மனிக்கு என்ன ? எல்லா சாமான்களும் ஜப்பானிலிருந்தே கப்பலில் வந்தாக வேண்டிய நிலைமையிலிருக்கும் ஜப்பானின் ஓட்டம் எவ்வளவு காலம்தான் நீடித்திருக்குமோ பார்க்கலாம். அதைப் பார்க்கு முன் வசந்தகாலப் போரைப் பார்க்கவேண்டும். அது மிகவும் கொடிய போராகவே இருக்கும் என்று தோன்றுகிறது. அதற்கான மணி ஓசை உங்கள் காதுகளில் விழுகின்றதா ? அப்படியானல் இப்பொழுதே நீங்கள் மனப்பூர்வமாக இந்தியாவில் நடக்கும் யுத்த முயற்சிகளுக்கு உதவ வேண்டும். ஜப்பானியரைத் தவிக்க அடித்தது இந்தியா; அதனல் யுத்தத்தின் போக்கே மாறியது என்ற பெருமை உங்களுக்குக் கிடைப்பதில் உங்களுக்கு உற்சாகமில்லையா ?

---

# பசிபிக் யுத்த கௌன்சில் ஏற்பட்டது

## ஜப்பான் ஜம்பம் பலிக்கவில்லை

### தாய் நாட்டில் ஜப்பானுக்குப் பாதுகாப்பு இல்லை

**ஜப்பான் ஜம்பம் பலிக்கவில்லை**

பர்மாவிலுள்ள டாங்கூ மாகாணத்தில் ஜப்பானிய சேனைகளை எதிர்த்து சீனப்படைகள் கடுமையாகப் போராடுகின்றன. சீனர்களின் எண்ணிக்கையைவிட இரண்டு பங்கு ஜப்பானியர்களிருந்துங்கூட ஜப்பானியர் ஜம்பம் பலிக்கவில்லை. டாங்கூ மாகாணத்தின் கீழ்ப்பாகத்தை சீனர்கள் மீண்டும் கைப்பற்றிக்கொண்டார்கள்.

மாண்டலேக்குப் போகும் ரயில்பாதை நெடுக சீனப் படைகள் இருக்கின்றன. ஜப்பான் படைகள் தம் ஆகாய விமானங்கள், டாங்கிகள், பீரங்கிகள் முதலியவைகளைக்கொண்டு 4 நாட்கள் இரவும் பகலும் கடுமையாகச் சண்டையிட்டார்கள். ஆனாலும் சீனர்களை ஜெயிக்க இவர்களால் முடியவில்லை. விஷவாயுவை ஜப்பானியர் உபயோகித்துங்கூட சீனர்கள் அசையவில்லை. டாங்கூ மாகாணத்திற்கு வடக்கே தான் ஜப்பானியர் தம் இருப்புச் சேனைகளை வைத்திருக்கிருர்கள். இங்கே தான் கடுமையான யுத்தம் நடக்கவேண்டி வரும் என்று சீன சர்க்கார் கருதுகிருர்கள்.

பர்மாவிற்கு நடு நாயகம் போன்றது டாங்கூ மாகாணம். இங்கே ஜப்பானிய சேனைகளை எதிர்த்துப் போராடும் சீனச் சேனைகள் நான்கயுன் கயுங்கான் ஆகிய இரண்டு விமான நிலயங்களைப் பிடித்துக் கொண்டனர். டாங்கூ மாகாணத்தில் இராணுவச் சட்டத்தையும் சீனர்கள் அமுல் நடத்துகிருர்கள்.

ஐராவதிப் பிரதேசத்தில் ஜப்பானியர் மூன்று திசைகளில் முன்னேறி வந்து கொண்டிருக்கின்றனர். முதலாவது ப்ரோம் ரஸ்தாவிலும் இரண்டாவது ஐராவதியின் கிழக்குக் கரையிலும், மூன்ருவது ஐராவதியின் மேற்குக் கரையிலும் எதிரி சேனைகள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை சீனச் சேனைகள் விரட்டி அடித்துக்கொண்டிருக்கின்றன.

**பிரேக் போர்டு கூறும் விவரம்**

அமெரிக்க விமான மந்திரியான மிஸ்டர் பிரேக்போர்டு கீழ்க்கண்டவாறு கூறுகிருர்: —

நியூ கினியிலும் நியூ பிரிட்டனிலும் ஆகாய யுத்தத்தில் நேச தேசங்கள் மிகவும் சிறந்து விளங்கின. இதனல் ஜப்பானியர்கள் முன்னேற்றம் மிகவும் தடைப்பட்டது. ஆகையால் தொடர்ந்து சண்டை போடுவதற்காக மற்ற இடங்களிலிருந்து விமானங்களை ஜப்பானியர் இங்கே தருவிக்கிருர்கள்.

மார்ச் மாதம் 10-ம் தேதியும் அதற்குப் பிறகும் நடைபெற்ற சண்டைகளில், ஜப்பானியர் சண்டையில் இறங்கும் முன்பு வைத்திருந்த 'க்ரூய்சர்' கப்பல்களில் 10-ல் ஒரு பங்கை நேசத்துருப்புக்

கள் இப்போது நாசம் செய்து விட்டன. அல்லாமலும், ஆஸ்திரேலியாவிலும் அதையடுத்துள்ள தீவுகளிலும் மட்டும் வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்லும் 48 விமானங்களை நாசம் செய்தனர்.

நியூ பிரிட்டனின் தலை நகரமான ரபால் நகரத்தை இரண்டு மாதங்களுக்கு முன்பு ஜப்பானியர்கள் இடைவிடாது தாக்கிக் கைப்பற்றினார்கள். அப்போது 100 விமானங்களையும் 50 கப்பல்களையும் ஜப்பானியர் இழந்தார்கள். நியூ கினியில் செய்வதென்ன என்று தெரியாமல் ஜப்பானியர் இப்போது திண்டாடுகிறார்கள்.

சென்ற மார்ச் மாதம் 31-ம் தேதி எட்டாவது முறையாக டார்வின் விமான நிலயத்தை எதிரிகள் தாக்கினார்கள். ஆனால் எந்த விதமான சேதமும் ஏற்படவில்லை. மோர்ஸ்பி துறைமுகத்தின் மேலே எதிரி விமானங்கள் பறந்தன. உடனே விமான எதிர்ப்பு பீரங்கிகள் சுட ஆரம்பித்து அவற்றை விரட்டி விட்டன. மார்காம் பி தேசத்தை ஜப்பானியா ஏற்கெனவே தம் வசப்படுத்தியிருந்தனர். இந்தப் பகுதியில் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. ஆகையால் ஜப்பானியர் அதை விட்டு வெளியேற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

### பசிபிக் யுத்த கௌன்சில்

அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் 1942-ம் ஞு ஏப்ரல்மீ 1உ வாஷிங்டன், நகரத்தில் 'பசிபிக் யுத்த கௌன்சில்' என்றொரு கௌன்சிலை ஏற்படுத்தியிருக்கிறார். இதில், ஆஸ்திரேலியா, நியூ இங்கிலாந்து, நெதர்லாந்துகள், கனடா, சீனா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் கலந்து கொள்ளும், இந்தக் கௌன்சில் ஆரம்ப விழாவின்போது ரூஸ்வெல்ட் செய்த பிரசங்கத்தின் சுருக்கமாவது :—யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் எல்லா நேச தேச நாடுகளும் ஒன்று கூடி கலந்து பேசிய பிறகுதான் எந்த முறையில் யுத்தத்தை மேற்கொண்டு நடத்தவேண்டுமென்று தீர்மானம் செய்யவேண்டும். நேச தேச சர்க்கார்கள் எல்லாம் ஒன்றிற்கொன்று நெருங்கிய கூட்டுறவு வைத்துக் கொண்டிருந்தால்தான் யுத்தத்தைச் சரியானபடி நடத்த முடியும். இந்தக் கௌன்ஸில் போலவே லண்டனில் வேறொரு கௌன்ஸில் இருக்கிறது. அந்தக் கௌன்ஸிலோடு இந்தக் கௌன்ஸில் நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொள்ளும்.

இந்தக் கௌன்ஸில் ஏற்படுத்தியதைக் குறித்து ஆஸ்திரேலிய சர்க்கார் பிரதம மந்திரியான மிஸ்டர் கர்டின் கூறியதன் சுருக்கமாவது :—இதை நான் வரவேற்கிறேன். இது எனக்கு மிகவும் திருப்தியளிக்கிறது. ஏனென்றால் யுத்தத்தை நடத்தும் மிகவும் முக்கியமான வேலையில் ஆஸ்திரேலியாவிற்கும் பங்கு இருக்கிறது. இந்த யுத்தத்தினால் எதிர் காலத்தில் பாதிக்கப்படக்கூடிய எல்லா நாடுகளும் தம் ஆலோசனையைக் கூற இந்தக் கௌன்ஸில் ஒரு சந்தர்ப்பத்தைத் தருகிறது.

கனடாவும், இந்தக் கௌன்சில் ஏற்பட்டதைப் பெரிதும் பாராட்டுகிறது.

### அமெரிக்கப் படை நினைப்பு ஊட்டுகிறது

ஜப்பானியர்கள் வெகு தூரம் கடல்தாண்டி தம் சேனைகளைக் கொண்டுபோகிறார்கள். தம் தாய் நாட்டிற்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்று அவர்கள் பயப்படும்படி அமெரிக்கக் கடற்படை நினைப்புமூட்டி வருகிறது. பசிபிக் மகா சமுத்திரத்தில் ஒரு அமெரிக்கக் கடற்படை 3,500 மைல்கள் தூரம் அட்மிரல் ஹால்ஸி தலைமையில் போய் வேக், மார்கஸ் என்னும் இரண்டு தீவுகளைப் பிடித்துக்கொண்டன. இவை ஜப்பானுக்குச் சொந்தமான தீவுகள். இவைகளைக் காப்பதற்கு ஒரே ஒரு சிறிய துப்பாக்கிக் கப்பலைத்தான் ஜப்பான் அங்கே வைத்திருந்தது. இந்த இடத்தில் ஆகாய விமானப் பாதுகாப்பும் கிடையாது. இதிலிருந்து ஜப்பானியர் மூலபலமெல்லாம் தென் சீனக்கடலில் போய்ச் சேர்ந்திருக்கிறது என்று தெரிகிறது. அந்தமான் தீவுகளை ஜப்பான் கைபபற்றிவிட்டதால், ஜப்பான் தீவுகளை அமெரிக்கக் கப்பற்படை தாக்க ஆரம்பித்தால், ஜப்பான் எதுவும் செய்ய முடியாது.

இவற்றிலிருந்து எதிரிகள் என்னதான் முன்னேறிக்கொண்டுபோனாலும், நாம் எதிர்த்துப் போராடுமுன்னாலேயே அவர்களுக்கு ஆபத்து இருக்கிறது என்று தெளிவாகத் தெரிகிறது.

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு ஏப்ரல்மீ 10உ, வெள்ளிக்கிழமை [இதழ் 14

## ஜெர்மன் இரகசியப் போலீஸ் அக்கிரமம்

### உண்மையை வெளிப்படுத்த கொடுஞ் செயல்கள்

"டெய்லி மெயில்" பத்திரிகை, ஜெர்மன் இரகசியப் போலீஸார் செய்யும் கொடுமைகளைக் குறித்து எழுதுவதாவது :—

சுவீடனில் விக்டோரியா டெரஸ் என்னும் இடம் ஒன்றிருக்கிறது. அங்குள்ள ஒரு பெரிய மாளிகையில்தான், யுத்தத்திற்கு முன்பு, வெளிநாட்டு இலாக்கா மந்திரியின் காரியாலயம் இருந்தது. இப்போது ஜெர்மன் இரகசியப் போலீஸ் தலைமைக் காரியாலயமாக அதை உபயோகிக்கிறார்கள்.

தம் சொற்படி நடக்காதவர்களென்றும், தம்மோடு ஒத்து உழைக்காதவர்களென்றும் சந்தேகம் ஏற்பட்டால், அவர்களை இந்த இடத்திற்கு இரகசியப் போலீஸார் கொண்டுபோகிறார்கள். இரவு நேரத்தில்தான் இங்கே விசாரணைகள் நடைபெறுவது வழக்கம். விசாரணை ஆரம்பமாகு முன்பு, இரகசியப்போலீஸார் 6 பேர்கள் நன்றாகக் குடிக்கிறார்கள். அப்போதுதான் அவர்கள் எவ்வளவு கொடிய காரியத்தையும் இலகுவில் செய்வார்கள்போலிருக்கிறது. இவர்களில் மூன்றுபேர்கள், சந்தேகப்பட்ட பேர்வழிகளை செம்மையாகத்தாக்கி சித்திரவதை செய்கிறார்கள். மற்ற மூன்றுபேரும் அப்போது அவர்களைப்பார்த்து நையாண்டி செய்கிறார்கள். இந்த விசாரணை இரவு முழுதும் நடைபெறுவதுண்டு. இவ்வளவு செய்தும் பயன்படவில்லையானால், பக்கவாத நோய் உண்டாகத்தக்க முறைகளைக் கையாளுகிறார்கள். இதிலும் பிரயோசனமில்லையானால், மறுநாள் பகல் முழுதும் ஒரு தனியறையில் அடைத்துவைத்திருந்து அந்த இரவும் முன்சொன்னபடியே கொடுமைப்படுத்துகிறார்கள்.

இப்படிக் கொடுமைக்கு உள்ளாகிறவர்கள் யாரேனும் முரட்டுத்தனமாக நடந்துகொண்டால், ஒரு இருட்டான அறையில் பனிக்கட்டிகளைப்போட்டு அந்தக கட்டிகளின்மேல் அவனை சுவரோரமாக நிறுத்தி, ரப்பர் தடிகளால் உடல் முழுதும் குறிப்பாக பாதத்தில் அடிக்கிறார்கள். இந்தக் கைதிகளை அருணோதய வேளையில் எழுப்பி 'இன்னும் இரண்டுமணி நேரத்தில் உன்னைச் சுட்டுக் கொல்லப்போகிறோம்' என்றும் சொல்லுகிறார்கள்.

ஒரு பெண் பிள்ளையை இந்த இரகசியப் போலீசார் சந்தேகத்தின்மீது கைது செய்தார்கள். செம்மையாக அடித்தார்கள். அவர் ஒரு விவரமும் கூறவில்லை. 8-மணி நேரம் பனிக்கட்டியின்மீது சுவற்றையொட்டி முதுகுகாட்டி நிற்கச் செய்தார்கள். ஒரு சிறிய இருட்டறையில் போட்டு அடைத்து வைத்து திடீரென்று மிகப் பிரகாசமான வெளிச்சத்தை அவர் முகத்தில் பிடித்தார்கள். ஒரு அலமாரிக்குள் போட்டு அடைத்துப் பூட்டி வைத்தார்கள். இன்னும் எத்தனையோ வகைகளில் கொடுமைகள் செய்தார்கள். ஆனாலும் பலிக்கவில்லை. கடைசியாக அவரை விடுதலை செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டது. மிகப் பரிதாபகரமான நிலையில் அவர் தப்பி ஸ்வீடனுக்கு ஓடினார். இவரும், இவர்போல, நார்வேயிலிருந்து ஸ்வீடனுக்குத் தப்பி யோடியவர்களும் ஜெர்மானியர்களிடம் தாம் பட்ட தொல்லைகளையும் கொடுமைகளையும் கூறிய விவரங்களை, ஸ்வீடிஷ் தேசத்திலுள்ள 17 பத்திரிகைகள் வெளியிட்டன. இந்தப் பத்திரிகைகள் ஸ்வீடிஷ் ஜனங்கள் மனதில் ஒருவிதக் கொதிப்பை உண்டுபண்ணிவிட்டன. ஆகையால் ஸ்வீடிஷ் நீதி மந்திரி இந்தப் பத்திரிகைகள் இனிப் பிரசுரமாகக் கூடாதென்று தடுத்துவிட்டார்!

## ஹிட்லரின் சொந்த வருமானம்

### பணமே தெய்வம் என்னும் கொள்கை

#### ஜெர்மானியரை ஹிட்லர் ஏமாற்றுகிறார்

ஜெர்மானியர்களைப்போலவும் இத்தாலியர்களைப் போலவும், ஜப்பானியர்கள் மிகுந்த வீரத்துடன் தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் கடுமையாகப் போராடுகிறார்கள். ஜனநாயகத்துவத்தை வெல்லவும் பணமே கடவுள் என்னும் தத்துவத்தை நிலைநாட்டவுமே இந்தப் போர் ஆடுகிறார்கள் என்று ஹிட்லர் சமீபத்தில் கூறினார். ஆனால், இவர் ஜெர்மனியிலுள்ள பத்திரிகைகளின் கூட்டுச் சங்கத்தில் மூன்றில் இரண்டு பங்குகளுக்குச் சொந்தக்காரர். மற்ற பத்திரிகைகளின் விளம்பர வருவாயிலும் இவருக்குப் பங்கு உண்டு. இந்தக் கூட்டுக் கம்பெனியின் மொத்த வருவாய் ஒரு வருஷத்திற்கு 7 கோடிப் பவுன். இந்தப் பத்திரிகைகளின் விற்பனை தொகை மட்டும் ஒரு வருஷத்தில் 2½ கோடி பவுனாகிறது. இவையல்லாதபடி சர்வாதிகாரி என்னும் முறையில் அலவன்ஸாக 3½ லட்சம் பவுன் எடுத்துக்கொள்ளுகிறார். இவ்வளவு தொகைக்கும் என்ன செலவு என்று யாருக்கும் தெரியாது. இருந்தபோதிலும், ஹிட்லருடைய நிதி மந்திரி, ஜெர்மானியர்களை மிகவும் பயப்படுத்தி வைத்திருக்கிறார். இந்தக் கடுமையான யுத்தத்தின் செலவுகளை ஜெர்மானியர் வீரமாக ஏற்றுக் கொள்ளவேண்டுமாம்! இந்தப் பெரும் செலவை ஈடு செய்யவேண்டி ஐரோப்பிய மக்கள் எல்லோரும் கடுமையாக உழைத்துத் தீரவேண்டுமென்றும் கூறுகிறார். ஹிட்லருக்குக் கிடைக்கக்கூடிய வருமானங்களெல்லாம் எந்தவகையில் செலவாகின்றன வென்று விக்ஹாம் ஸ்டீட் என்னும் ஒரு பத்திரிகாசிரியர் கேட்கிறார்.

## கொள்ளைக்கார ஜெர்மானியர் முறைகள்

### அராபியர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள்

#### "சாத்-அ-ஹக்" கூறும் விவரம்

"சாத்-அ-ஹக்" என்னும் பத்திரிகை "ஜெர்மானியர்கள் வசப்பட்ட நாடுகளிலுள்ள துர்ப்பாக்கிய நிலையிலுள்ளவர்களை அவர்கள் பட்டினிபோடுகிறார்கள்" "நாஜிக்கொடுங்கோலின்கீழ் பிரான்சின் பரிதாப நிலை" என்னும் தலைப்புக்களுடன், எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :—

ஐரோப்பியச் சரித்திரத்தில் நிகழ்ந்துவரும் சில சம்பவங்களைக்குறித்து நாம் ஏற்கெனவே எழுதியுள்ளவற்றை படித்தாலே மனம் பெரிதும் வருந்தும். ஜெர்மானியர் செய்யும் ஏற்பாடுகளால், ஜெர்மானியர்கள் ஐரோப்பாவையே சூறையாடுகிருர்கள். அதன் பயனுக அந்த நாடுகளிலுள்ள ஜனங்கள் அனைவரும் பட்டினி கிடக்கிருர்கள். தம் எஜமானர்களின் தொந்திகளை நிரப்பவேண்டி ஜெர்மானியரல்லாதவர்கள் பட்டினி கிடக்கவேண்டுமென்று ஜெர்மானியர் பிரசங்கங்கள் செய்கிருர்கள். ஆனல், இதே பேர்வழிகள் அராபியர் ஏழைகளாகவிருக்கிருர்களென்று நீலிக் கண்ணீர் வடிக்கிருர்கள்! அராபியர்களுக்குள் மிகவும் ஏழைகளாயுள்ளவர்களைவிட, தம் வசமுள்ள ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஜனங்களில் 100-க்கு 90 பேர் மிகவும் கேவலமான நிலையிலிருக்கிருர்கள் என்று ஜெர்மானியர் அராபியர்களுக்குச் சொல்வதில்லை.

அன்றியும், பிரான்சைக் கைப்பற்றிய 3 மாதங்களுக்குள் 1,800-டன் கோதுமையை ஜெர்மானியர்கள் கொண்டுபோய்விட்டார்கள். 1940-ம் வருஷக் கடைசியில் 4 வாரங்களுக்குள் 116 டன் அரிசியும், 125 டன் எண்ணையும், 70 டன் தோலும் திராட்சை சாகுபடி அத்தனையும் கொண்டுபோய்விட்டார்கள். இதோடு போகவில்லை. வருஷந்தோறும் 82 கோடி, 70 லட்சம் பவுனும் ஜெர்மானிக்கு பிரான்ஸ் கப்பம் கட்டவேண்டுமாம்! சென்ற மகா யுத்தம் முடிந்தபோது ஜெர்மனி நேச தேசங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று முடிவான தொகையை, விட இது மூன்று பங்கு அதிகமாகும்.

# நம்மை எப்படிப் பாதுகாத்துக் கொள்வது?

## ஸ்பெய்னில் விமானத்தாக்குதலின் அனுபவம்

### திரு. மாரிஸ் லின்டன் கருத்து

திரு. மாரிஸ் லின்டன் ஸ்காட்லாந்திலுள்ள ஒரு பத்திரிகாசிரியர். ஸ்பெயினில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றபோது அவர் அங்கே இருந்தார். இந்த யுத்தம் ஆரம்பித்தவுடனேயே கிளாஸ்கோ நகர விமானத்தாக்குதல் பாதுகாப்பின்பொருட்டு, இவர் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் காணப்படும் சில முக்கியமான அம்சங்களை இங்கே வெளியிடுகிருேம்.

"முதல் முதல் நான் விமானத்தாக்குதலுக்கு உள்ளானது எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறது. நான் எதிர்பார்த்திருந்தபடி அவ்வளவு பயங்கரமானதாக அது இல்லை. ஒரு நாள் சாயுங்காலம் என் தோழர்களுடன் என் வீட்டுமாடியில் இருந்தேன். அபாய அறிவிப்புச் சங்கின் சத்தத்தை நான் கேட்கவில்லை. அங்கே காவல் காத்துக்கொண்டிருந்த ஒரு போர்வீரன் 'விளக்கணைத்து விடுங்கள்' என்று கூவிக்கொண்டே தெருவில் ஓடினன். உடனே எல்லா விளக்குகளும் அணைந்தன. இதனல் ஐந்தாம் படையினர்கள் எதிரிகளுக்கு எதுவும் சமிக்ஞை செய்ய ஒட்டாதபடி செய்துவிட்டார்கள். எங்கெல்லாம் விளக்குகளை அணைக்காமலிருந்தார்களோ அங்கே, இந்த காவல்வீரர்கள் கொஞ்சங்கூட தயங்காமல் ஜன்னல்வழியாக விளக்குகளைச் சுட்டு அணைத்தார்கள்.

நாங்களெல்லாம் பாதுகாப்பிடங்களுக்குச்சென்று பதுங்கிக்கொண்டோம். ஆனலும், ஒரு சிலர், விமானத்தாக்குதல் நேர்ந்தாலுங்கூடத் தம் வேலையை விட்டு வரமுடியாது என்று கருதி தம் இடத்திலேயே வேலை செய்து கொண்டிருந்தார்கள். பத்திரிகைப் பிரதிநிதிகளும், செய்தித் தணிக்கைக்காரர்களும் வேலைசெய்யும் இடத்தில்தான் இப்படி நேர்ந்தது. அந்தக் கட்டிடத்தின் 2-வது தளத்திலும் 4-வது தளத்திலும் வெடிகுண்டுகள் வந்து விழுந்தபோது, 3-வது தளத்தில் கொஞ்சங்கூடக் கவலைப்படாமல் தம் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட விமானத்தாக்குதல்கள் லண்டனில் நடக்கும்போதுகூட, இப்படிப்பட்ட தைரியஸ்தர்கள் அநேகர் இருந்தனர்.

**எப்படிப் பாதுகாத்துக் கொள்வது?**

வெடிகுண்டுகள் வெடிக்கும்போது அது நம்மை வந்து தாக்காதிருக்கத்தான் நாம் தரையில் குப்புற படுத்துக் கொள்ளுகிருேம். வெடிகுண்டு மிகவும் பலமானது. கட்டிடங்களைக்கூட அது இடித்துவிடும். ஆகையால் நாம் தரையோரமாக இருந்தால் மிகவும் நல்லது. வெடிகுண்டு வெடிக்கும் இடத்திற்கு அருகில் நாம் இருந்தால், நம்மை தூரத்தில்தூக்கி தரையில் எறிந்துவிடும். காங்கிரீட் தரையாகவிருந்தால், அது மிகவும் உறுதியானது. இந்தத் தரைமீது நாம் குப்புறப் படுத்தாலுங்கூட வெடிகுண்டு நம்மைத் தூக்கிதூர எறிந்துவிடும். ஆனலும் நாம் தரையில் குப்புறப் படுத்துக் கொள்ள வேண்டியதும் அவசியந்தான்.

# சீனுவில் விமானத் தாக்குதல்

## பொது ஜனங்களின் அமைதி

### சர் ஜாலி கூறும் விவரம்

சீனுவின் தற்போதைய தலை நகரம் சூங்கிங். இங்கே எதைப்பார்த்தாலும் சாம்பல் நிறமாகத்தான் தோன்றும். அக்டோபர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை இங்கே மேகங்கள் மிகவும் அதிகமாகக் கவிந்திருக்கும். ஆகையால் இந்நகரம் இருக்கும் இடத்தை எதிரி விமானங்கள் எளிதில் கண்டுகொள்ள முடிவதில்லை. மற்ற மாதங்களில் எதிரிகள் விமானங்களிலிருந்து இங்கே குண்டுகளை ஏராளமாக வீசுகிருர்கள். ஆனலும் சாதாரணமாக உயிர்ச்சேதம் ஏற்படுவதில்லை. ஏனென்ருல், அந்நகரம் ஒரு மலைமேல் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே இரண்டு ஆறுகள் கலக்கின்றன. இந்த மலைகளில் பள்ளங்களை வெட்டி மிகவும் பந்தோபஸ்தாக இருக்கத்தக்க வசதிகள் செய்திருக்கிருர்கள். ஆகையால் எதிரி விமானங்கள் தென்பட்டவுடனேயே ஜனங்கள் இந்தப் பள்ளங்களில் போய்ப் பதுங்கிக் கொள்ளுகிருர்கள். மற்ற சீன நகரங்களில் இந்த அளவிற்கு வசதிகள் இல்லை யானலும், பதருமலும் விரைவாகவும் பள்ளங்களுக்குள் போய்ப் பதுங்கிக் கொள்ளுகிருர்கள். ஆகையால் சீன நகரங்களில் விமானத்தாக்குதலால் உயிர்ச்சேதம் அதிகம் ஏற்படுவதில்லை.

**உள் நாட்டுப் பாது காப்பு**

உள் நாட்டுப் பாதுகாப்பிற்காக ஒரு நல்ல திட்டம் வகுத்து அதன்படி பொது ஜனங்கள் நடந்து கொள்ளுவார்களானல், உயிர்ச்சேதம் மிகவும் கொஞ்சம்தான் ஏற்படுமென்பது அனுபவ சித்தாந்தம். ரங்கூனை எதிரிகள் தாக்கியபோது நடந்த சம்பவங்களிலிருந்து நாம் இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம்.



விமானத்தாக்குதல் காலத்தில் நாம் பதருமலும் தைரியமாகவும் நடந்துகொள்ளவேண்டும். இதனல் நம் சேனைகளுக்கும் புது உற்சாகம் உண்டாகும். இதனல்தான் சீனுவை ஜெயிக்க ஜப்பானுல் இன்னும் முடியவில்லை. ஜனங்களுக்குள் ஒரு பீதியையும் கலவரத்தையும் உண்டாக்க வேண்டுமென்றுதான் ஜப்பானியர்கள் குண்டுகளை வீசுகிருர்கள். ஜப்பானியர் எண்ணத்தில் பொது ஜனங்கள் மண்ணைப் போடவேண்டும். ஏ.ஆர்.பி. காரர்கள் சொல்லுகிறபடி தற்காப்பு முறைகளைக் கைக்கொள்ளவேண்டும். அப்போது நம் எதிரிகளை நாம் போராடாமலே வெல்லக்கூடும்.

## பிரிட்டிஷ் பீரங்கி உற்பத்தி அதிகரிப்பு.



பிரிட்டனில் பீரங்கி உற்பத்தி பெருவாரியாக செய்யப்பட்டு வருகிறது. 1940 செப்டம்பரில் செய்ததைவிட 1941 செப்டம்பரில் 7 மடங்கு டாங்கி எதிர்ப்பு பீரங்கி உற்பத்தி அதிகமாயிருக்கிறது. இந்தப் படத்தில் பலவிதமான பீரங்கிகளைக் காணலாம்.

# தொழில் பயிற்சித் திட்டம்

## 18,000 பேர் படிக்கிருர்கள்

### மாணுக்கர்களுக்கு வசதிகள்

இந்தியாவில் இப்போது 18,000 மாணுக்கர்கள் தொழில் கல்வி கற்றுவருகிருர்கள் 5,000 பேர் கற்று தேறி வேலையில் அமர்ந்திருக்கிருர்கள். 1942-ம் வருஷ மார்ச்சு மாதத்திற்குள் 15,000 பேர்களைத் தொழில் கல்வியில் தயார்செய்யவேண்டும் என்னும் இந்திய சர்க்காரின் முதல் எண்ணம் ஈடேறிவிட்டது.

1943-ம் வருஷ மார்ச்சு மாதத்திற்குள் 48,000 பேர்களைத் தயார்செய்துவிடவேண்டுமென்று இப்போது திட்டமிட்டிருக்கிருர்கள். இப்போது எல்லா தொழிற் பள்ளிக்கூடங்களிலும் போதுமான அளவிற்கு எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. தொழில்கல்வி உபாத்தியாயர்களைத் தயார் செய்ய விசேஷப் பள்ளிக்கூடங்களை ஆரம்பித்திருக்கிருர்கள். இந்தத் திட்டப்படி எத்தனை மாணுக்கர்கள் பள்ளிக்கூடங்களில் சேருகிருர்களோ, அதைப் பொருத்துத்தான் இத்திட்டத்தின் வெற்றி அமைந்திருக்கும். அந்தத் தொழில் கல்வியைப் போதிக்க 100 உபாத்தியாயர்கள் இங்கிலாந்திலிருந்து வந்திருக்கிருர்கள். அல்லாமலும், மந்திரி பிவின் திட்டப்படி இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குப்போய் தொழில் கற்று திரும்பியுள்ளவர்களும் இப்போது உபாத்தியாயர்களாகி விட்டார்கள்.

இந்தத் திட்டம் முதல் முதல் 1940-ம் வருஷ ஜனவரியீ ஆரம்பமானது. ஒரு வருஷத்திற்குள் 310 பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டுவிட்டன. இவற்றில் 43 இந்திய சமஸ்தானங்களில் இருப்பவை. இப்போது மொத்தம் 28,500 பேர்கள் படித்துக்கொண்டிருக்கிருர்கள். இன்னும் அதிகம்பேர் சேர்ந்து படிக்க வேண்டியது தான் இப்போது மிகவும் அவசியமாகும்.

**சம்பள உயர்வு**

இதுவரை இம் மாணுக்கர்களில் 10-வது தேறியுள்ளவர்களுக்கு மாதம் ரூ. 25 சம்பளம் கொடுத்துவந்தார்கள்; தேருதவர்களுக்கு ரூ. 20 கொடுத்துவந்தார்கள். இப்போது 10-வது வகுப்புத் தேறியவர்களுக்கு ரூ. 27-ம், தேருதவர்களுக்கு 22 ரூபாயும் கொடுப்பதென்று சர்க்கார் முடிவு செய்திருக்கிருர்கள். அல்லாமலும் எல்லோருக்கும் வேலை செய்யும்போது போட்டுக்கொள்ளும் துணிகள் ரூ. 7-8-0 செலவில் இலவசமாகக் கொடுக்கிருர்கள். அவர்களுக்கு வேண்டிய மற்ற துணிகள் வாங்கிக்கொள்ள அட்வான்ஸ் ரூ. 7-8-0-ம் கொடுக்கிருர்கள்.

# சீனுவுக்கு வைத்திய உதவி

## சீன வைத்தியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி

### சர் ஜார்ஜ் ஜாலி சீனு விஜயம்

இந்திய வைத்திய இலாகா டைரக்டர் ஜெனரல் லெப்டினென்ட் ஜெனரல் சர் ஜார்ஜ் ஜாலி சமீபத்தில் சீனுவிற்குப் போனுர். அங்கே, சீன சர்க்காருடன் கலந்து பேசினுர். கொய்னு சல்பஸ் என்னும் மருந்தில் 5 க்ரெய்ன் மாத்திரைகள் 50 லட்சம் இந்தியாவிலிருந்து சீனுவிற்கு அனுப்புவதென்று முடிவு செய்திருக்கிறுர். அம்மைப் பால் செய்துகொள்ளும் முறைகளையும் மலேரியா காய்ச்சல் வராதபடி தடுக்கும் முறைகளையும் கற்றுக்கொண்டு போகும் பொருட்டு சீன வைத்தியர்களை இந்தியாவிற்கு வரச் செய்வது என்று முடிவுசெய்திருக்கிறுர். சீனுவிற்கு மருந்து வகைகளில் என்னென்ன தேவையோ அவற்றை சேகரிக்க ஒரு கமிட்டியை சீனத் தலைநகரான சூங்கிங்கில் ஏற்படுத்தியிருக்கிறுர்கள். சர் ஜாலி, சூங்கிங்கில் 3 நாட்கள் தான் தங்கியிருந்தார். அப்போது, அமெரிக்க இராணுவ சர்ஜன் ஜெனரலோடும், சீன தேசீய சுகாதார நிர்வாக சங்க டைரக்டரோடும், சீன செஞ்சிலுவைச் சங்க டைரக்டரோடும் கலந்து பேசினுர். சீன வைத்தியர்களுக்கும் இந்திய வைத்தியர்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்ளுவதைப்பற்றியும் பேசியிருக்கிறுர்.

**மருந்து சப்ளை.** சீனர்கள் அநேக மருந்துகளைத் தாங்களே செய்கிறுர்கள். இவற்றில் சிலவற்றை ஏராளமாகச் செய்கிறுர்கள். மற்றும் சில மருந்துகளை அவர்கள் செய்வதே இல்லை. செய்த போதிலும் மிகவும் கொஞ்சமாகத் தான் செய்கிறுர்கள். வேறு சில மருந்துகளை சீனுவும் இந்தியாவும் இறக்குமதி செய்கின்றன.

இந்தியாவில் இறக்குமதியாகும் மருந்துகளை சீனுவுக்கு இந்தியாவிலிருந்து அனுப்பப்படும். அல்லாமலும் இந்தியாவிலிருந்து சீனுவிற்கு என்னென்ன மருந்து வகைகள் தேவையோ, அவைகளை வழங்குவதற்கு இந்தியாவில் எல்லாவகை முயற்சிகளும் செய்யப்படுகின்றன.

பம்பாய் ஹாப்கைன் இன்ஸ்டிட்யூட்டில் அம்மைப் பால் செய்யும் முறையைக் கற்றுக்கொள்ள 2 சீன டாக்டர்களுக்கு ராக்பெல்லர் பௌண்டேஷன் ஸ்தாபனத்தார் ஸ்காலர்ஷிப் கொடுப்பதாக இசைந்திருக்கிறுர்கள். அது போலவே, இந்திய மலேரிய இன்ஸ்டிட்யூட்டில், மலேரியா வராதபடி தடுப்பதைக் குறித்துப் படித்துக்கொள்ள 5 சீன டாக்டர்களைத் தயார் செய்வதென்றும், இவர்களுக்கு இந்தியா சர்க்கார் ஸ்காலர்ஷிப் கொடுப்பது என்றும் முடிவு செய்திருக்கிறுர்கள்.

---

# உலகப் போக்கு

**பர்மாவில் யுத்த நிலை**

தென் பர்மாவில் ஜப்பானியர் மேல்நோக்கி வந்து கொண்டிருக்கிறுர்கள். ஏராளமான உயிர்ச் சேதங்களுக்குப் பிறகுதான், முன்னேற அவர்களால் முடிகிறது. தெற்கேயே எதிரிகளைத் தாமதப்படுத்தி விடவேண்டும் என்பது தான் நேசதேசச் சேனைகளின் போக்கு. அப்போது தான் எதிரிகள் வடக்கு நோக்கிவர முடியாது. இந்த முறையில் நேசதேசச் சேனைகள் வெற்றி பெற்றன வென்றுதான் சொல்லவேண்டும். சமீபத்தில் நம் சேனைகள் அங்கிருந்து பின்வாங்கவேண்டிய அவசிய நிலைமை ஏற்பட்டது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. நம்மைத் தற்காத்துக்கொள்ள மிகவும் ஏற்ற முறையில் நம் படைகளை யமைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. இது முதல் காரணம். எதிரிகளின் ஆகாய விமானப் படை மிகவும் பலமானது என்பது இரண்டாவது காரணம்.

பர்மாவில் நமக்குச் சொந்தமாயிருந்த அநேக விமான தளங்களை ஜப்பானியர்கள் அழித்துவிட்டார்கள். சிலவற்றை சேதப்படுத்திவிட்டார்கள். இதனுல் நம் சேனைகளுக்கு மிகுந்த கஷ்டமாகத்தான் இருக்கிறது. தகுந்த பக்கபலம் வந்து சேருவதற்கு ரோடுகள் போட்டு முடிகிற வரைக்கும், விமானப் படையில் நாம் மிகவும் மேலான நிலைமையை அடையும் வரையிலும், நாம் இப்போது உள்ள நிலைமையையே காப்பாற்றிக்கொண்டிருக்கவேண்டும். அதுவரையில் நாம் கடுமையாகப் போராடித்தான் தீரவேண்டும். பர்மாவின் நிலைமையைக் குறித்து கீழ்க்கண்டவாறு சுருக்கமாகச் சொல்லலாம்:—

கஷ்டகாலத்தோடு நாம் இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கிறேம். முன்னேக்கி வர எதிரிகளுக்கு வசதிகள் அமைந்திருக்கின்றன. நம் சேனைகள் சிதறிப் போகாதபடி சில சமயங்களில் பின்வாங்கவேண்டியது அவசியமாகிறது. மிகுந்த கஷ்டங்களுக்கு இடையே நம் சேனைகள் பர்மாவில் போராடிக் கொண்டிருந்தாலும், அவர்கள் கட்டுப்பாடாகவே இருந்து வருகிறுர்கள்.

பிரிட்டிஷ் யுத்த விமானங்கள் சேதமடைந்தது ரொம்பக் கொஞ்சம்தான். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றுல், விமானப் போராடும் வீரர்களும் தளகர்த்தர்களும் கட்டுப்பாடு சிதையாமல் இருக்கிறுர்கள் என்றுதான் தெரிகிறது. விமான நஷ்டங்களெல்லாம் ஈடானவுடனே, மறுபடியும் விமானப் போராட இவர்கள் ஆயத்தமாயிருக்கிறுர்கள். இதற்கு ரொம்ப நாட்கள் பிடிக்காது. இந்த யுத்த களத்தின் நெருக்கடியில் தான் நல்ல மாறுதலைக் காணலாம்.

**புதிய யுத்த தந்திரம்.**

பர்மாவில் இப்போது இரண்டு இடங்களில் யுத்தம் நடக்கிறது. முதலாவது யுத்தகளம் பிரிட்டிஷார் வசமிருக்கும் ஐராவதி நதியையொட்டிய பிரதேசத்தில். இரண்டாவது, மாண்டலே - ரங்கூன் ரோடிலும், சீனர்கள் காப்பாற்றிக்கொண்டிருக்கும் ரயில்வே பிரதேசத்திலும். அல்லாமலும் சையாம்-பர்மா எல்லைப்புரத்திலும் போர் நடக்கிறது. இங்கே, சீனப்படைகளுடன் ஷான் சமஸ்தானங்களிலிருந்து வடமேற்கு சியாம்மீது படை யெடுத்துச் சென்ற நேச தேசத் துருப்புக்கள் கட்டியிருக்கும் அரண்களை ஜப்பானியப் படைகள் நெருங்கும்போது, மிகக் கடுமையாகத் தாக்கப்படுகிறுர்கள். ரங்கூனில் நடைபெற்ற யுத்தத்திற்கும் இந்த யுத்தத்திற்கும் மிகவும் வித்தியாசமுண்டு. யுத்தகளத்திற்குப் பக்கத்திலிருந்த நீளமானதோர் ரோடைக் காக்கவேண்டிய நிலையில் அப்போது நேசதேசப்படைகள் இருந்தன. ஜெனரல் வேவல் கூறியது போல, தற்காப்பிற்காகப் போராடும் யுத்தத்தில் இது மிகவும் கஷ்டமான பாகம். ஏனென்றுல், நம் சேனைகள் சற்று முன்னேறிப்போனுல், ரோடு துண்டிக்கப்பட்டுவிடலாம். அதனுல் நாம் பின்வாங்க வேண்டிய அவசியம் நேரக்கூடும். இப்போது நம் சேனைகளின் அணிவகுப்பிற்குப் பின்புரத்தில் ரோடு இருக்கிறது. நாம் முன்னேறிப்போனுல், நாம் போனவரைக்கும் நாம் கைப்பற்றி விட்டதாகத் தான் அர்த்தம். இந்தப் புதிய யுத்த தந்திரத்தால் பர்மாவிற்கு ஆபத்தில்லையென்று சொல்லிவிட முடியாது. சில கஷ்டங்களை நாம் அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.

நம் நேச தேச சேனைகளுக்கு யுத்தத்தளவாடங்கள் முதலிய வசதிகள் வந்து சேருவதற்கு ஏற்ற நீண்ட ரோடுகள் பர்மாவி லில்லை. அதாவது இந்தியாவிலிருந்து பர்மா யுத்த களங்களுக்குப் படைகளை கொண்டு போகக்கூடிய ரோடுகள் கிடையாது. மிகவும் கடினமான பாதை. காடுகள் அடர்ந்த மலைப் பிரதேசத்தின் வழியாக ஒத்தையடிப்பாதை வழியாகத்தான் பர்மாவிலிருந்து அஸ்ஸாமுக்குப் போகலாம். இந்த வழியாக அனுப்பப்படும் உதவிப் படைகளும் தளவாடங்களும் மற்ற உதவிகளும் முன்போல விரைவாகப்போக முடியவில்லை. ரங்கூன் எதிரிகள் வசமாகுமுன் எளிதாகக் கப்பல் வழியாக எல்லாம் வெகு சீக்கிரத்தில் போய்ச் சேர்ந்துகொண்டிருந்தன. இப்போது ஜப்பானியர்களுக்கு இந்த வசதி ஏற்பட்டுவிட்டது. இருந்தபோதிலும், நம் படைகள் ஜப்பானியப் படைகளைவிட அடக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இது ஒரு நல்ல சகுனந்தான்.



## விமான விரி குடை மூலம் இரங்குதல்.



பிரிட்டனிலுள்ள போலிஷ் துருப்புகள் ஆகாய விமான விரி குடை மூலமாக கீழிறங்கும் பயிற்சி செய்து காண்பித்தன. மேலுள்ள படத்தில் ஒரு போலிஷ் விமான விரி குடைக்காரர் ஒரு உயர்ந்த இடத்திலிருந்து கீழே இறங்கிக்கொண்டிருப்பதைக் காணலாம்.

---

**ஜப்பானியர் வெற்றிக்குக் காரணம்.**

பர்மாவில் ஜப்பானியர் எப்படி வெற்றி பெற்றுர்கள் என்று எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஜப்பானியர்களில், காரணம் இல்லாமல் உயிர் விடுகிறவர்கள் பலர் இருக்கின்றுர்கள். அவர்கள் நாட்டில் ஏராளமான படை வீரர்கள் இருக்கிறுர்கள். இரண்டாவதாக தாய்லாந்து மக்களின் உறவையும் சம்பாதித்துக் கொண்டார்கள். இவர்கள் ஜப்பானியப் படைகளுக்கு ஆள் பலமும் பொருள் பலமும் கொடுத்து உதவுகிறுர்கள். மூன்றுவதாக, தாகின்ஸ் ஜாதியாரும் பர்மாவிலுள்ள ஐந்தாம் படையினரும் நம் படைகளின் போக்கு வரவுகளை அப்போதைக்கப்போது எதிரிகளுக்கு அறிவித்து விடுகிறுர்கள். தமக்கு ஜப்பானியர்கள் ஏதேனும் இனும் கொடுப்பார்கள் என்றுதான் இப்படிச் செய்கிறுர்கள். ஆனுல், எதிரிகளோ கொஞ்சங்கூட விசுவாசமில்லாமல் அவர்களை நடத்துகிறுர்கள். இருந்தபோதிலும் இவர்கள் எதிரிகளுக்கு தானியமும் ஆடுமாடுகளும் கொடுத்து உதவுகிறுர்கள். இதனுல் ஜப்பானியர்களுக்கு உணவு கிடைத்து விடுகிறது. நமக்கு பர்மாவில் விமான பலம் அதிகம் என்பது உண்மைதான். நம் எதிரிகளின் 3 விமானிகளுக்கு நம் 1 விமானி சமம்.

நேருக்கு நேர் சண்டை போட நேரும்போது நம் இராணுவத்துடன் கைச் சண்டை போட முடியாமல் ஜப்பானியர் ஓடிப் போகிறுர்கள். சனியன் குத்துக்களைத்தாங்க அவர்களால் முடிவதில்லை. சத்தியைக் கண்டாலே நடுங்குகிறுர்கள். இதனுல் அவர்களைக் கோழைகள் என்றும் சொல்லிவிட முடியாது. தைரியமுள்ள வீரர்கள்தான். ஒரு கூர்க்கபடை, எதிரிகளைத் தாக்கிப் பிடித்துக் கொண்டபோது, ஜப்பானியர் தம் நெற்றியைக் காட்டித் தம்மைச் சுட்டுக் கொன்றுவிடும்படிக் கோரினுர்களாம். திடீரென ஈட்டிகளாலும் கத்திகளாலும் நேச தேசப் படைகள் தாக்கும் போது, ஜப்பானியர் உடல் பலம் குறைவானவர்கள் ஆனதால், அதைத் தாங்கமாட்டாது பணிந்து விடுகிறுர்கள்.

ஜெர்மானியர்களைப் போலவே ஜப்பானியர்களும் அநேக வகைகளில் யுத்த தந்திரங்களைக் கையாளுகிறுர்கள். இவர்கள் சில இங்கிலீஷ் வார்த்தைகளைக் கற்றுக் கொண்டிருக்கிறுர்கள். நம் சேனைகள் நெருங்குகிறபோது, அந்தப் பதங்களைக் கூவுகிறுர்கள். நம் சேனையினர் உடனே பதிலளித்தால், நம்மவர்கள் நிலை இன்னது என்று தெரிந்து கொள்ள முடிகிறது. இரண்டாவதாக சீனி வெடி பட்டாசுகளையும் வெத்து வேட்டுகளையும் கிளப்பி, தம்மிடம் அக்கினிப் படை ஏராளமாக இருக்கிறதாக நம்பும்படிச் செய்துவிடுகிறுர்கள். மரக்கிளைகளின் மேல் மிஷின் துப்பாக்கிகளை ஏற்றி வைத்திருக்கிறுர்கள். தம் விமானங்களில் பிரிட்டிஷ் விமானங்களைப் போல் எழுதி வைத்திருக்கிறுர்கள். கூர்க்கர்களைப் போல தொப்பிகளை உபயோகிக்கிறுர்கள்

**பியன்தூசாவில் இந்தியர் வீரம்.**

டங்கூ மாகாணத்தில் பியன்தூசா ஒரு ஊர். இதை ஜப்பானியர் முந்தியே கைப்பற்றிவிட்டனர். இதை மீட்க ஒரு இந்தியப் படை கிளம்பியது. தெருக்களில் கடுமையான யுத்தம் நடைபெற்றது. கடைசியில் எதிரிகள் நெடுந்தூரம் பின்வாங்கி ஓடினுர்கள் இதற்கிடையில் எதிரிகளுக்குப் பலமான உதவி வந்து சேர்ந்துவிட்டது. ஆகையால் நம் சேனை பின் வாங்கவேண்டி நேர்ந்தது.

இந்தப் படையில் 3 கம்பெனிகள் இருந்தன, ஒன்று பியன்தூசாவிற்குக் கிழக்கேயிருந்தும், மற்றொன்று மேற்கேயிருந்தும் தாக்கின. அப்போது ஜப்பானிய சேனைகள் பின்னடைந்து ஓடும்போது, அவற்றைத்துண்டிக்கும்படி மூன்றுவது கம்பெனிக்கு

உத்திரவு. இந்தக் கம்பெனிகள் இரவிலேயேபோய் அதிகாலையிலேயே தாக்கின. முதல் கம்பெனி சற்று விலகிப்போய் கடைசியில் அந்த ஊரின் தென்மேற்குப் பகுதியைப் பிடித்துக்கொண்டது. மற்ற இரண்டு கம்பெனிகளும் அந்த ஊரை வளைத்துக்கொண்டன. அதனால் பியன்தூசா பிடிபட்டது.

இந்தச் சமயத்தில் ஜப்பானியர்களுக்கு ரோடு வழியாக டாங்கிகள் சகிதம் பக்கபலம் வந்துசேர்ந்துவிட்டது. உடனே அவர்கள் நம்மை எதிர்த்துத் தாக்கினார்கள். முதல் கம்பெனி இங்கே தோற்றுப் போனது. இவர்களை மீட்கும்பொருட்டு அனுப்பப்பட்ட மற்றொரு கம்பெனியும் பின்வாங்க நேர்ந்தது. இந்தப்போரில் நூற்றுக்கணக்கான போர் வீரர்கள் மடிந்தனர்.

**தப்புவது எப்படி?**

வெடிகுண்டுகள் விழுந்த இடத்திற்கு அருகிலிருந்தவர்கள் அநேகம் பேர் தப்பிக்கொண்டார்கள்; ஆனால் கொஞ்சம் தூரத்திலிருந்தவர்கள் காயப்பட்டார்கள். நடந்துகொண்டிருந்தாலும், முழங்காலை வயிற்றோடு சேர்த்து அணைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாலும் ஆபத்து நேரக்கூடும்.

ஒரு திறந்த வெளியில் போய்க்கொண்டிருக்கும் போது எதிரி விமானங்கள் தாக்கினால் என்ன செய்ய வேண்டும்? அப்போது இயல்பாகவே ஓடிப்போக வேண்டும் என்ற எண்ணந்தான் உண்டாகிறது. இது சாதாரணமாக ஆபத்தில் தான் முடியும். தலைக்குமேல் விமானங்கள் காணப்பட்டால் உடனே பள்ளங்களில் போய் குப்புறப்படுத்துக்கொண்டு இரண்டு கைகளால் பின் கழுத்தையும் தலையின் பின்புரத்தையும் கட்டிக்கொள்ளவேண்டும். சரியான முறையில் இதைச் செய்தால், காதுகளையும் முகத்தையும முன்கைகளால் மறைத்துக்கொள்ளலாம். அதோடு கால்களையும் பின்னிக் கொள்ளுவது நல்லது. ஆபத்துக்காலத்தில் எந்த விதமான பாதுகாப்பாக இருந்தாலும் அதில் பதுங்கிக்கொள்ளவேண்டும். ஒரு பள்ளம் மிகவும் சிறந்த பதுங்குமிடம். ஒரு சுவற்றின் பக்கத்திலேயாவது, மரத்தின் பக்கத்திலேயாவது, மோட்டார்காருக்குக் கீழேயாவது பதுங்கிக் கொள்ளலாம். எத்தக் காரணத்தை முன்னிட்டும் கூட்டங் கூடக் கூடாது.

ஒரு கட்டிடத்திலிருந்தால் ஜன்னல் அருகில் இருக்கக்கூடாது. எனென்றால் ஜன்னலில் பதிக்கப்பட்டிருக்கும் கண்ணுடித் தகடுகளால் மிகுந்த ஆபத்துக்கள் நேரும். ஆகையால் மூடிவிடவேண்டும். நெருக்கமாகப் பின்னிய வலைகளை ஜன்னல்களில் தைத்துவிடலாம்.

எதிரிகள் விமானங்கள் தாக்கினால், பதறாமல் தகுந்தபடி ஆயுத்தம் செய்துகொண்டிருந்தால் விமானத் தாக்குதலால் ஏற்படக்கூடிய தீமையை மிகவும் குறைத்துவிடலாம்.

**ஆங்கிலோ அமெரிக்க தளவாட உற்பத்தி**

சென்ற 20 மாதங்களில் அமெரிக்காவில் உற்பத்தியாகும் பொருள்கள் என்றுமில்லாதபடி அதிகமாயிருக்கின்றன. ஒரு வருஷத்தில் இத்தனை யுத்த விமானங்கள் கட்டி முடிக்க வேண்டுமென்று ரூஸ்வெல்ட் திட்டமிட்ட அளவிற்கு ஜனவரி பிப்ரவரி மார்ச்சு மாதங்களிலேயே செய்து முடித்துவிட்டார்கள். டாங்கி உற்பத்தியும் மிகவும் அதிகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வருஷத்தில் கட்டி முடிக்கவேண்டுமென்று திட்டமிட்டபடி வியாபாரக் கப்பல்களையும் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் முதலியவற்றையும் செய்து முடிக்கவேண்டும்; முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இந்தக் காலத்தில் கூட்டுறவு அமைந்திருக்கிறது. இதனால், அமெரிக்காவிற்கே மிகுந்த நன்மையுண்டு. இதுவரை இல்லாத அளவிற்கு என்னதான் நாம் தளவாடங்கள் உற்பத்தி செய்தபோதிலும், நம் தேவைகளுக்குப் போதுமான அளவு நாம் இன்னும் செய்யவில்லை. நமக்கு எவ்வளவு தளவாடங்கள் அவசரமாகத் தேவையாயிருக்கிறது என்பதுபற்றி நாம் கணக்கிடாது போனால், இப்போது உற்பத்தியாகும் அளவு, மிகவும் ஆச்சரியப் படத்தக்கதாகத்தான தோன்றும்.

**சிறைச்சாலைகள் தொழிற்சாலைகள் ஆகின**

அமெரிக்காவிலுள்ள சிறைச்சாலைகளை தொழிற்சாலைகளாக விரைவில் மாற்றிக் கொண்டு வருகிறார்கள். சிறைக் கைதிகளை அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்படி திரட்டுகிறார்கள். ஜார்ஜியா மாகாணத்திலுள்ள அத்லாந்தா சிறையை ஒரு நெசவுத் தொழிற்சாலையாக மாற்றி விட்டார்கள். இராணுவங்களுக்கு வேண்டிய துணிகளை இங்கே தான் நெய்கிறார்கள். பென்சில்வேனியா மாகாணத்தைச் சேர்ந்த லூயிபரோ என்னும் ஊரில் ஒரு சிறைச் சாலையிருக்கிறது. இங்கே விமான வெடிகுண்டுகள் செய்வதற்கான தகரக் குழாய்களைச் செய்கிறார்கள். அமெரிக்காவில் செய்யப்படும் எல்லா ரயில்வே இஞ்சின்களையும் வண்டிகளையும் சர்க்காருக்குக் கொடுத்து விடவேண்டுமென்று உத்திரவிட்டிருக்கின்றனர். இந்தத் தொழிற்சாலைகளையும் ஓடிக்கொண்டிருக்கும் எல்லா இஞ்சின்களையும் வண்டிகளையும் சர்க்கார் கைப்பற்றிக் கொண்டார்கள்.

**அமெரிக்காவின் இரண்டு கடமைகள்**

அமெரிக்காவிற்கு இப்போது இரண்டு வகைக் கடமைகள் ஏற்பட்டிருக்கின்றன. முதலாவதாக அங்குள்ள பொருள்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு போதுமான அளவிற்கு யுத்தத் தளவாடங்களைத் தயார் செய்து கொள்ளவேண்டும். இரண்டாவதாக, யதேச்சைக்காகப் போராடும் நாடுகளுக்கு உணவும் யுத்தத் தளவாடங்களும் அமெரிக்கா வழங்கவேண்டும். இதன் பொருட்டு அமெரிக்க சர்க்கார் 7,100 கோடி டாலர் சென்ற நவம்பர் மாதம் 25-ம் தேதிக்குள் செலவிட்டார்கள். நம் தேவைக்கு ஏற்ற அளவு தளவாடங்கள் தயார் செய்ய, இது போல் இரண்டு பங்குத் தொகை தேவையானாலும் ஆகலாம்.

**புள்ளி விவரங்கள்**

யுத்தத்திற்கு முன்பு, உலகத்தில் தயார் செய்யப்பட்ட பிளஷர் மோட்டார் கார்களில் 100-க்கு 72 பங்கு அமெரிக்காவில் செய்யப்பட்டன. அது போலவே உலகத்திலுள்ள டெலிபோன்களில் 100-க்கு 50 பங்கும், ரேடியோக்களில் 100-க்கு 45 பங்கும் அமெரிக்காவில் செய்யப்பட்டன.

அமெரிக்காவை ஜப்பான் திடீரெனத் தாக்கிய போது, அதாவது சென்ற டிசம்பர் மாதம் 7-ம் தேதியன்றே, அமெரிக்காவின் தளவாட உற்பத்தி 100 க்கு 30 பங்கு உயர்ந்திருந்தது. மிஷின் சம்பந்தமான ஆயுதங்களின் உற்பத்தி மட்டும் ஒரு வருஷத்தில் $4\frac{1}{2}$ கோடி டாலரிலிருந்து $7\frac{1}{2}$ கோடி டாலராக அதிகப்பட்டது. ஒரு வருஷத்தில் 20 லட்சம் டன் எஃகு உற்பத்தியானது. அடுத்த வருஷத்தில் $9\frac{1}{2}$ கோடிடன் தயாராகு மெனத் திட்டமிட்டிருக்கிறார்கள். சென்ற வருஷம் 120 கோடி பீப்பாய் எண்ணெயும் இந்த வ்ருஷம் 140 கோடி பீப்பாய் எண்ணெயும் தயாராகியிருக்கின்றன. சென்ற வருஷம் 300 கோடி டன் மாக்னீஷயமும் இந்த வருஷம் 660 கோடி டன்னும் உற்பத்தியாயின. சென்ற டிசம்பர் மாதத்தை யடுத்து மாதந்தோறும் பிரிட்டனுக்கு 500 யுத்த விமானங்களை அமெரிக்கா அனுப்பியது. இப்போது மாதந்தோறும் 650 அனுப்புகிறது. சென்ற நவம்பர் மாதத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு யுத்தக் கப்பல் வீதம் அமெரிக்கா கட்டி முடித்தது. இந்த வருஷம் 2 வீதம் கட்டி முடிக்கிறது. இது போலவே எல்லாவகை யுத்தத் தளவாடங்களும் ஏராளமாகத் தயார் செய்யப்படுகின்றன. இதுபற்றி மிஸ்டர் புல்லர் கூறுவதாவது :—



அமெரிக்க யுத்தக் கப்பல் ஒன்று முழுகினால் இரண்டு கட்டப்படும். அமெரிக்கக் கைத்தொழில் வெகு விரைவாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. உலகத்தில் சுயேச்சை அழியாதிருக்கும்வரை, ஜனங்களுக்குள் நல்உறவு ஏற்படும்வரை இந்த உற்பத்திகள் பெருகிக்கொண்டேயிருக்கும்.

**எதிர்கால இந்திய அரசியல்**

எதிர் காலத்தில் இந்திய அரசியலை வகுக்கும் பொறுப்பு எந்த சட்ட சபைக்கு விடப்படுகிறதோ அதைப்பொருத்துத்தான் அந்த அரசியல் அமைப்பும் அமையும். இந்திய ஜனங்கள் தாங்களே தம் அரசியல் அமைப்பை வகுத்துக் கொள்ளலாம் எனக் கூறுவதற்கும், அரசியல் ஞானத்தோடும் பொது ஜன சம்மதத்தோடும் அமையும் அரசியல் திட்டத்திற்கும் வேற்றுமை யுண்டு. அவசரப்பட்டும் அரசியல் அறிவில்லாமலும் வகுக்கப்பட்ட அநேக அரசியல் திட்டங்கள் நாசமாகிவிட்டன. இந்திய அரசியல் திட்டத்தை வகுக்கும் சட்ட சபைக்கு இரண்டு முக்கியமான பொறுப்புகள் உண்டு. 1. இந்திய அரசியலை வகுப்பது; 2. பிரிட்டனுக்கும் இப்படி அமைக்கப்படும் அரசியல் ஸ்தாபனத்திற்கும் எப்படிப்பட்ட சம்பந்தம் இருக்கவேண்டும் என்று முடிவு கட்டுவது.

அரசியல் திட்டங்களை வழங்கும் முறைகள் அநேகம் உண்டு. அரசியல் தலைவரே தயா தாட்சண்யமாக 'நான் உங்களுக்கு சுயராஜ்யம் கொடுத்து விட்டேன்' என்று சொல்லிவிடுவது ஒரு முறை. இந்தத் திட்டம் வழங்கப்படுவதே யொழிய, இருதரத்தாராலும் விவாதித்து ஒப்புக் கொள்ளப்பட்டதல்ல. ஆகையால், அதன் நடை முறையில் காணப்படும் குற்றங்களைப் பொது ஜனங்கள் குறை கூறத்தான் செய்வார்கள்.

இரண்டாவது முறை விவாதித்து உடன்படிக்கை செய்து கொள்வதன் மூலம் அரசியல் அமைப்பை வகுப்பது. கீழ்க்கண்ட சமயங்களில் இந்த முறை மிகவும் உபயோகமானதாக இருக்கும் :—1. மற்ற அரசாங்கங்களோடு அரசியல் சம்பந்தம் வைத்துக் கொள்ளும் போதும். 2. பொது ஜனங்களுடைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஐக்கிய அரசியல் கட்சிகள் தமக்கு இன்னின்ன உரிமைகளும் பாதுகாப்புக்களும் இருக்கவேண்டும் என்று கோரும் போதும்.

மூன்றாவது முறை பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களால் வகுக்கப்படுவது. இப்படி வகுக்கப்பட்ட திட்டங்களும் விரைவில் நாசமாயின. இவற்றை வகுக்கும்போது பெரும்பான்மையான ஜனங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது என்னும் காரணத்திற்காகத்தான் ஒப்புக் கொள்ளப் பட்டதே யொழிய, அரசியல் ஞானத்தைக் கொண்டு வகுக்கப்படவில்லை என்பது தான் இதற்குக் காரணம்.

இந்தியாவில் தாராளமான முறையில் ஓட்டுரிமை பெற்று சட்ட சபை யங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். இப்படி மாகாணக் கீழ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் தம்மில் ஒரு சிலரை மத்திய சபைக்குத் தேர்ந்தெடுப்பார்கள். இவர்கள் தான் இந்தியாவின் எதிர்கால அரசியலை வகுக்க வேண்டுமென்பது சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் திட்டம். இதன்படி, அரசியல் அறிவாளிகளின் கருத்துக்களையும் பொது ஜனங்களின் கருத்துக்களையும் கலந்துகொண்டு இந்த அரசியல் திட்டம் வகுக்கப்படும். அமெரிக்காவின் அரசியல் திட்டமும் இதே முறையை யொட்டியது தான்.

**அமெரிக்க விமானங்கள் அந்தமானை தாக்கின.**

ரங்கூனுக்கும் அந்தமானுக்கும் 400 மைல் தூரம்; இந்தியாவுக்கும் அந்தமானுக்கும் 750 மைல். அமெரிக்க விமானப்படை இந்தியாவிலிருந்து அந்தமானை முதல் முதல் தாக்கின. எதிர்கால யுத்தத்திற்கு இது ஒரு முக்கியமான சம்பவம். அந்தமானை ஜப்பானியர்கள் கைப்பற்றி விட்டதனால், எந்த அளவிற்குச் சாதமுண்டு என்று அவர்கள் நினைக்கிறார்களோ அந்த அளவிற்கு அவர்களுக்கு பாதகமுமுண்டு.

---

# ஜப்பான் சிலந்தி

உங்களுக்கு சிலந்தியும், ஈயும் என்ற கதை தெரியுமா? தெரிந்திருந்தால்கூட, அதை நினைவிற்குக் கொண்டுவர, இதைவிட நல்ல சமயம் வேறு கிடைக்காது. தெரியாதவர்கள், அக்கதையைக் கட்டாயமாக இப்பொழுது தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு பெரிய சிலந்திப்பூச்சி. சிலந்தினைத் தெரியாதா, அதுதான், எட்டுக்கால் பூச்சி. அது ரொம்ப அழகாகவும், வெகு சிரமப்பட்டும் வலை ஒன்றைப் பின்னிக்கொண்டிருந்தது. மலைக் குகைகளுக்குள் செல்லும் ரயில் பாதைபோல், ஒரு பாதை அந்த வலையின் மத்தியில் இருந்தது. சிலந்தி சற்றுநேரம் வலையைப் பின்னும், வெளியிலே ஏதாவது ஓசை கேட்டால், 'விர்'ரென்று அந்தப் பாதைவழியே உள்ளே தன் அந்தப்புரத்திற்கு ஓடி ஒளிந்துகொள்ளும். வெளியே வந்திருப்பவர் அல்லது சந்தடி செய்பவர் யார் என்பதை மெள்ள எட்டிப்பார்த்து அறிந்து கொள்ளும். இப்படியாக இருக்கையில், ஒரு ஈ, ஜோராக சற்று தூரத்திற்கப்பால் பறந்துகொண்டிருந்தது. அது தன் வலையருகே வரும், வரும் என்று, சிலந்தியானது வெகுநேரம் காத்துக் கொண்டிருந்தது. ஈ, வந்தபாடில்லை.

அப்புறம், சிலந்தி, தன் வீட்டு வாசலில் வந்து நின்றுகொண்டு, 'ஐயா! ஈயாரே! உம்மைத் தானே!' என்று அன்புடனே அழைத்ததாம்.

ஈ அப்பொழுதும் திரும்பிப்பாராது, வேறெதையோ கவனித்துக்கொண்டிருந்ததாம். மறுபடியும் விடாது, 'ஆஹா! நீரே பாக்யசாலி! உமக்குத் தான் பகவான் எத்தகைய அழகைக் கொடுத்திருக்கிறார்! உமது மேனிதான் என்ன, தங்கத்தால் வார்த்ததுபோலிருக்கிறதே! அதிலே சூரியன் ஒளி படும் பொழுது, பல வர்ணங்கள் தோன்றுவது, பார்க்கப் பார்க்க ஆனந்தத்தைத் தருகிறதே! அடாடா! உமக்கென்று எவ்வளவு அழகான இறக்கைகளைக் கொடுத்திருக்கிறார் கடவுள்! அது படபடக்கும் ஜோரே ஜோர்தான்! அதிலிருந்து கிளம்பும் சப்தமோ. காதிற்கு தேவகானமாக இருக்கிறது! ஒரு தேவராகப் பிறக்கவேண்டிய உம்மை, சற்று ஞாபக மறதியால், பூமியில் பிறக்கவைத்து விட்டார்போலிருக்கிறது பிரம்மன். உமது பாக்கியத்தை என்னவென்று சொல்லுவேன்! எங்கு வேண்டுமானாலும் பறக்கலாம் நீர்! எத்தனையோ அற்புதக் காட்சிகளைக் காணலாம்! நீர் பலமாதிரியான அரண்மனைகளையெல்லாம் பார்த்திருப்பீர்! இதோ எனது சிறு குடிலையும் நீர் பார்க்கவேண்டுமென்பதே எனது ஆசை! உங்களுடைய நன்மைக்காகவே சொல்லுகிறேன். வெளியில் நீங்கள் இருப்பதில் எத்தனையோ சிரமங்களுண்டு. காற்று, மழை, பல்லி, குருவி, ஓணான் இதெல்லாம் உம்மைப் பிடிக்கும். அதோடு, சும்மா பறந்துகொண்டிருந்தாலும் உமக்கு இறக்கைகள் நோகாதா! தயவு செய்து அடியேனுடைய வார்த்தைகளைக் கேட்டு, எனது கிரகத்திற்கு வாரும். நாம் இருவரும் இங்கே சேர்ந்து வாழ்ந்திருப்போம். உங்களைப் போன்ற முரட்டு சுபாவ மற்றவர்களுக்காகவே, இந்த மனையை எவ்வளவோ சிரமப்பட்டுக் கட்டியிருக்கிறேன். பட்டுப்போன்ற கயிறுகளாலேயே இத்தனை வேலைகளையும் பல நாட்களாகச் செய்துவந்திருக்கிறேன். முரட்டு ஆத்மாக்களுக்கு இங்கு இடமில்லை. தயவுசெய்து வாருங்கள்! என்று தேனொழுகப்பேசி அழைத்ததாம், அந்தச் சிலந்தி.

அதன் வார்த்தைகளையெல்லாம் உண்மையென்று நம்பி, முதலில் வெகு ஜாக்கிரதையாகவே தூரத்திலேயே பறந்துகொண்டிருந்த அந்த அப்பாவி ஈ, மெள்ள மெள்ள அந்தச் சிலந்தி வலையருகே வந்து, வட்டமிட்டு, அந்த வலையினழகைப் பார்த்ததாம். சற்று நேரத்தில் அந்த வலையினழகிலும், சிலந்தியின் இனிப்பான வார்த்தைகளிலும் மயங்கிவிட்டதாம். அப்புறம், அது அந்த வலைக்குள் பிரவேசித்ததாம். அவ்வளவுதான்! அதன் இறக்கைகள் அந்த வலையிலே மாட்டிக்கொண்டுவிட்டன. மனம் பதைக்க தனது இறக்கைகளை படபடவென்று அடித்தது அந்த ஈ. ஆரம்பத்தில், தன் வலையின் அந்தப் புரத்திலே போய்ப் பதுங்கியிருந்த சிலந்தி, மெள்ள வெளியே வந்தது. ஈயின் படபடப்பால் தன் வலைக்கு ஆபத்து வந்துவிடுமுன், அந்த ஈயின் தலையிலே வந்து ஒரு கொட்டுக் கொட்டி, விஷத்தையும் 'இஞ்செக்ட்' செய்துவிட்டது. அப்புறம் என்ன ஆகியிருக்கும் என்று சொல்லவேண்டுமா? அந்த சிலந்திக்கு அது பக்ஷணமாகிவிட்டது. அவ்வளவுதான்!

அந்தச் சிலந்தி மாதிரியும், சிலந்தியின் வலை மாதிரியும் இருக்கிறது ஜப்பானியரின் வார்த்தைகளும் ஜப்பானின் சூழ்ச்சிகளும், அந்த ஈயைப்போலிருக்கிறது இந்தியா.

முந்தியெல்லாம் சும்மா இருந்த ஜப்பானுக்கு, இந்த யுத்தம் ஆரம்பமானதிலிருந்துதான் இந்தியா விஷயத்தில் ரொம்ப ரொம்ப அக்கரை உண்டாகியிருக்கிறது. இந்தியரின் பெருமையைப்பற்றியும், அவர்களுக்குள்ள சுதந்திர அபிலாஷையைப் பற்றியும் ஜப்பான் சும்மா ரேடியோவில் பேசிக்கொண்டேயிருக்கிறது. தான் படையெடுத்துப் போர்புரிந்து வருவதெல்லாம், இந்தியாவை அடிமைத்தளைகளிலே இருந்து விடுவிக்கத்தான் என்று ஜப்பான் சும்மா வாய்பந்தல்போடுகிறது. தன்வாயால் இந்தியருக்கெல்லாம ரொம்ப நன்மையுண்டாகும் என்று தம்பட்டமடிக்கிறது. ஆனால், ஜப்பான், ஒரு கொடிய சிலந்தி! அந்தக்கதையில் உள்ள ஈயைப்போலவே, இந்தியாவும் தன் பசப்பு வார்த்தைகளிலே மயங்கி, தன் கொடிய போர்வலையில் வந்து சிக்கிக்கொள்ளும்; அப்புறம் தன் இஷ்டப்படி இந்தியாவை விழுங்கி, எப்பம் விடலாம் என்று ஜப்பான் சிலந்தி எண்ணிக்கொண்டிருக்கிறுப் போலிருக்கிறது.

ஆனால், ஜப்பானின் உண்மையான குணம் என்ன என்பது இந்தியருக்குத்தெரியும். சீனாவில் ஒரு பிரதேசத்தையும், கொரியாவையும் தன் வலைக்குள் சிக்கவைத்துக்கொண்ட ஜப்பான், அங்கு என்னென்ன தர்பார் செய்திருக்கிறது என்பது இந்தியருக்கெல்லாம் தெரிந்த விஷயம்தானே! அப்புறம், இப்பொழுது பிடித்த ஹாங்காங்கிலே ஜப்பானியர் செய்த அக்ரமங்கள் உலகப்பிரசித்தமாயிற்றே!

இப்பொழுது ஆஸ்திரேலியா அருகேயுள்ள நியூகினியா தீவில் ஜப்பானியர் எவ்வளவு கோரமாக நடந்துகொண்டிருக்கிறார்கள் தெரியுமா? அங்கு கைதுசெய்யப்பெற்ற ஆஸ்திரேலியர்களை அவர்கள் படுத்தும்பாடு கொஞ்ச நஞ்சமல்லவாம். ஒவ்வொருவருக்கும் ஒரு துப்பாக்கியைக்கொடுத்து, தற்கொலை செய்துகொள்ளச் சொல்லுகிறார்களாம். இல்லாவிட்டால், துப்பாக்கிகளின் முனைகளில் உள்ள சனியன்களால் குத்திக்கொல்லுகிறார்களாம். இப்படிப்பட்ட ஆத்மாக்களோ, இந்தியா, இந்தியர்களுக்காக ஆவதற்காகவும், இந்தியர்கள் சுகமடைய வேண்டுமென்பதற்காகவுமே, தாங்கள் கிளம்பியிருப்பதாகக் கூறுகிறார்கள்! அதெல்லாம்போகட்டும்; போன திங்கட்கிழமையன்று, உங்கள் பாரத நாட்டின்மீதே, ஜப்பானியர் குண்டுகளை வீசிவிட்டார்களே! விசாகப்பட்டணம், காகிநாடா என்பதெல்லாம் பாரததேவியின் குழந்தைகள் வசிக்கும் பிரதேசங்கள்தானே! இதற்கப்புறம்கூடவா, ஜப்பானியச் சிலந்தியின் உண்மைநோக்கம் இந்தியர்களுக்குத் தெரியாதிருக்கும்?

இந்தியாபற்றி ஜப்பானுக்குள்ள உண்மை நோக்கம் என்ன என்பது இந்தியருக்கு எங்கே தெரியாது போய்விடப்போகிறதோ என்று இனி நாம் கவலைப்படவேண்டியதே இல்லை. ஜப்பானிய பிரதம மந்திரியான டோஜோ இருக்கிறாரே, அவரே தன்னுடைய பசுப்போர்வையைக் கொண்டு கொஞ்சம் தூக்கிப் பேசிவிட்டார். என்று? அன்று விசாகையிலும், காக்கிநாடாவிலும் குண்டுகள் விழுந்துகொண்டிருந்ததே, அன்றுதான், ஆனால் அன்றும் பசப்பு வார்த்தைகள் பல அவரது பிரசங்கத்தில் கலந்திருந்தன.

'அமெரிக்காவையும், பிரிட்டனையும் நசுக்கிவிட, நமது ஏகாதிபத்யம், திடமாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. இதைப் படிப்படியாகக் காரியத்தில் காட்டிவருகிறோம். இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் படைகளை முறியடிக்க, நாம் நடவடிக்கை எடுக்கும்போது, இந்தியா ரொம்பக் கஷ்டப்படும் என்பது தெரியும். அதற்காக, என்னசெய்வது? ஜப்பான் இப்பொழுதே இந்தியருக்கு அதுபற்றி அநுதாபம் தெரிவித்துக்கொள்ளுகிறது' என்று கூறினார் அவர்.

இதிலிருந்தே, இந்தியாமீது படையெடுப்பது, ஜப்பானியத்திட்டத்தில் ஒன்றாக இருக்கிறது என்பது சந்தேகமில்லாமல் தீர்ந்துவிட்டதா இல்லையா?

டோஜோவின் சிஷ்யர் ஒருவர் இன்னும் கொஞ்சம் பச்சையாகப் பேசியிருக்கிறார். இந்தியாவில் ஆயுதந்தாங்கிய படைகள் யாருடைய தலைமையின் கீழ் இருக்கின்றன என்பதைப்பற்றி நமக்கு அக்கரையில்லை. நமக்கு எதிரேவரும் எந்த சைனியத்தையும் நசுக்கவேண்டியதே நமது நோக்கம் என்றார் அவர்.

இன்னுமா சந்தேகம் ஜப்பானியரது நோக்கத்தைப் பற்றி? ஜப்பானியர் ஆரம்பத்திலிருந்தே, 'சீனா சீனருக்கே' என்று சொல்லிக்கொண்டுதான், ஐந்து வருஷ காலமாக சீனாவிலே குண்டு மழை பொழியச் செய்துகொண்டிருக்கிறார்கள். வெறி பிடித்தவன் நீதி, நியாயம், சொல்தவறாது நடத்தல் என்பதையெல்லாம் கவனிப்பானா என்ன? அதிலும், இதுவரை, தனது திடீர் தாக்குதல்களால், அயர்ந்திருந்த நாடுகள் சிலவற்றை ஜெயித்த குஷி வேறே அதற்குச் சேர்ந்திருக்கிறது. வெறி பிடித்தவன், கள் சாப்பிட்டுவிட்டது மாதிரி இது. இதற்கப்புறம் அவனுடைய லக்ஷணங்கள் எப்படியிருக்கும் என்று சொல்ல வேண்டுமா? ஆகவே, இந்தியர்கள் ஈக்கள் போல, ஜப்பானியச் சிலந்தியின் வலையிலே விழுந்து, மோசம் போகக்கூடாது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டுவிட்டது. யுத்தம் உங்கள் வீட்டிற்குள் நுழைந்துவிட்டது. எல்லோரும் சேர்ந்து அதை எதிர்க்காவிட்டால், அப்புறம் உங்களுக்கு எப்பொழுதும் சுதந்திரம் என்பதன் வாசனைகூட எட்டாது. ஜப்பான்காரன் வரவால் நன்மை ஏற்படும் என்று நினைப்பவர்கள் வீண் கனவு காண்பவர்களே! உங்கள் நாட்டைக் காக்க, அமெரிக்காவிலிருந்து பறக்கும் கோட்டைகளும், அமெரிக்கப் படைகளும் வந்துவிட்டன. முதன் முதலாக, அந்த விமானங்கள், அந்தமான் தீவிற்குச்சென்று, அங்குள்ள துறைமுகத்தில் கொடிய நோக்கத்துடன்கூடியிருக்கும் ஜப்பானியக் கப்பல் கோஷ்டியைத் தாக்கிவிட்டு, பெருஞ் சேதத்தை விளைவித்துவிட்டு வந்திருக்கின்றன. இந்தியாவைப் பாதுகாக்கும் விஷயத்தில் உங்கள் பூரண ஒத்துழைப்பையும், எதையும் சமாளிக்கத் தயாராக வந்திருக்கும், அமெரிக்க, பிரிட்டிஷ் இந்தியப் படைகளுக்கும் அளித்தால், உலக சரித்திரத்திலேயே என்றும் நிலைக்கக்கூடிய அற்புதத்தைச் சாதித்துவிடலாம். இந்திய யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. கொளும்பு தாக்கப்பட்டதென்றால், அதுவும் இந்தியாவின் வராந்தா மாதிரிதானே? இந்தியாவிற்கும், பர்மாவிற்கும் நடுவே உள்ள வங்காளக் குடாக்கடலில் இரண்டு விமானந் தாங்கிக் கப்பல்கள் நடமாடுவதாகத் தெரிகிறது. ஆகவே கிழக்குக் கடற்கரைப் பிரதேசங்களுக்கு ஆபத்து அதிகமாகிவிட்டது. ஆனாலும் பயப்படாதீர்கள்! ஜப்பானியருக்கு, உங்கள் ஒத்துழைப்போடு நல்ல பாடம் கற்பிக்க, உங்கள் உதவி உடனே தேவை! என்ன சொல்லுகிறீர்கள்?



# கிழக்கிலும் மேற்கிலும்

வசந்த காலம் ஆரம்பித்து விட்டது போலத்தான். இந்த வசந்த காலத்திலே கிழக்கும், மேற்கும் ஒன்றுகூடப் பார்க்கிறது. கிழக்கு, கிழக்கிலேயே இருப்பதும், மேற்கு, மேற்கேயே இருப்பதும் தானே நியாயம்? அதைவிட்டு, இவ்விரண்டும் சந்திப்பதென்றாலும்சரி, சந்திக்கவிடுவதென்றாலும்சரி, பெருத்த விபரீதங்கள் விளையுமல்லவா?

கிழக்கேயுள்ள ஜப்பானும், மேற்கேயுள்ள ஜெர்மனியும் ஏகாதிபத்ய வெறிபிடித்த நாடுகள், அவை இரண்டும், இந்த வசந்த காலத்திலே, எங்கோ ஓரிடத்தில் கைகோர்த்துக் கொள்ளப்பார்க்கின்றன, அவ்வாறு இந்த இருநாடுகளும் சந்தித்துவிட்டால், உலகத்திற்கே கஷ்டம் அதிகரித்து விடுவது நிச்சயம்.

ஜப்பான் இந்தியா வழியாகவோ, இலங்கையைப் பிடித்துக்கொண்டு, இந்துமகா சமுத்திரத்திலும் அரபிக்கடலிலும் ஆதிக்கம் செலுத்த ஆரம்பிப்பதன் மூலமாகவோ ஜெர்மனியைச் சந்திக்க முயலலாம்.

ஜெர்மனி வெகு மும்முரமாக, அடுத்த தாக்குதலுக்குத் தன்னைத் தயார் செய்துகொண்டிருக்கிறது. ருஷ்யாவைத்தாக்கவென்றுமட்டும் நாற்பது லக்ஷம் பேர்களைக்கொண்ட சைனியத்தைத் திரட்டியிருக்கிறதாம். லெனின்கிராட் அருகே ஏராளமான விமானங்களைக்கொண்டு குவித்திருக்கிறதாம். இத்தலியிலேயும் பெரிய ஜெர்மன் விமானப்படை வந்து இறங்கியிருக்கிறதாம். கிரீஸ், பல்கேரியா, டாடிகானஸ் ஆகிய பிரதேசங்களில் எல்லாம் நாஜிப் படைகளின் நடமாட்டம் அதிகமாயிருக்கிறதாம். இவற்றைக்கொண்டு, சூயஸ் பிரதேசத்தை ஹிட்லர் தாக்க நினைத்திருக்கிறார்போலிருக்கிறது. அதற்கு மால்டா இடைஞ்சலாக இருக்கும் என்றுதான், அத்தீவை தினசரி ஜெர்மானிய விமானங்கள் தவறாது தரிசனம் செய்துபோகிறுப்போலிருக்கிறது. அந்தத் தீவைத்தாக்க முயற்சிப்பது, கரும்பாறையிலே தலையை மோதிக்கொள்வதற்குச் சரியான பலனைத்தான் தந்துகொண்டிருக்கிறது. தினம் நூறு விமானங்கள் வரவு, பல செலவு என்று கதை நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் ஏககாலத்தில் எல்லா இடங்களிலும் மிகுந்த பலத்தோடு விமானங்கொண்டு தாக்கும் நிலைமையில் இல்லை ஜெர்மனி என்பது வெளியாகிவிட்டது. லிபியாவில் கப், சிப் என்றிருக்கிறது. ஆனால் அமைதிக்குப்பிறகு புயல் ஏற்படலாமல்லவா? அதற்கு இரண்டு கட்சிக்காரர்களும் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். ஜிப்ரால்டர் மீதும் சென்றவாரம் குண்டுகள் வீசியிருக்கிறார்கள். கருங்கடல் பிரதேசத்திலே கன ஜோராக ஏற்பாடுகள் செய்கிறார்களாம். ஆனால், கருங்கடலில் அதிகம் வாலாட்ட ஆரம்பித்தால், ருஷ்யக் கடற்படையிடம் சரியான உதை கிடைக்கலாம். ஜெர்மானியரின் புதுத்தாக்குதல் எதிர்பார்க்கப்பட்டதுதானே? ஆகவே ருஷியரும் தம்மைத் தயாராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் புது யந்திரத் துப்பாக்கியைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். அவர்களுக்கு பிரிட்டிஷ் உதவி இடைவிடாது சென்றுகொண்டிருப்பதாலேயே, இத்தனை காலம் அவர்கள் தங்கள் வெற்றியை நீடித்து வைத்து நடத்திக்கொண்டிருக்க முடிந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

ருஷ்யப் பெண்மணி ஒருத்தி ஒரு விமானப்படையின் தலைவி ஆகியிருக்கிறாள். ஜெர்மனி, துருக்கியை தன் வலைக்குள் வீழ்த்தப்பார்க்கிறது. கொஞ்சம் மிரட்டலும் அதன் வார்த்தைகளில் கலந்திருக்கிறது. அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் அலை அலையாக ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் தாக்கிக்கொண்டிருக்கிறதாம். அதனால் ஏற்படக்கூடிய ஆபத்தைத் தவிர்க்க அமெரிக்காவும் ரோந்துக்கான கப்பல்களின் எண்ணிக்கையை அதிகரித்து வருகிறது. இதுவரை அமெரிக்க விமானங்களும், கப்பல்களும் இருபத்தைந்து நீர்மூழ்கிகளை 'அரோஹரா' ஆக்கிவிட்டன. ஜெர்மானியருக்கு பிரான்ஸின் உதவி மறைமுகமாக ஆனால் பூரணமாகக் கிடைத்து வந்துக்கொண்டிருந்தது இத்தனை காலமாக. அதையறிந்த பிரிட்டிஷார், பிரான்ஸில் உள்ள தொழிற்சாலைகளை த்வம்சம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். 200, 300 என்று பிரிட்டிஷ் விமானங்கள் பாய்ந்து செல்லுகின்றன. ஜெர்மானியர் படித்த பாடத்தை அவர்களுக்கே பிரிட்டிஷ் விமானிகள் படித்துக் காட்டி வருகிறார்கள். இதுகாரணமாக, ஜெர்மனியின் சக்தி ஒருபுறம் குறைந்து கொண்டேதானே இருக்கும்! அமெரிக்காவிற்கும் இவ்வருஷக் கடைசிக்குள் தயாரிக்கும் சக்தி அதிகமாகிவிடும். 'சீக்கிரமே டோக்கியோவைச் சுட்டு சாம்பலாக்கக் கூடிய காலம் வரும்' என்கிறார் ஒரு அமெரிக்கர். யுத்தத்தில் சேவை செய்ய, தலைவர் ரூஸ்வெல்ட்கூட தன் பெயரைப் பதிவு செய்துகொண்டுவிட்டார். கப்பல்களை கட்டும் வேகமும் அதிகமாகிவருகிறது. நீக்ரோவர்களுக்குக்கூட ராணுவத்தில் இடம் கொடுக்கிறார்கள். சிலரை ஆபீஸர்களாகவும் ஆக்கப் போகிறார்கள். அமெரிக்க நீர்மூழ்கிகள் சீனக் கடலில் ஜப்பானியருக்குப் பெருஞ்சேதம் விளைவித்து வருகிறது.

ஜப்பானியர் பிலிப்பைனில் இன்னும் மண்டையை உடைத்துக்கொண்டவண்ணமே இருக்கிறார்கள். இப்பொழுது அங்கு அவர்கள் தாக்கும் வேகம் அதிகமாயிருக்கிறது. புதுமாதிரி வெடிகுண்டுகளை அவர்கள் அங்கு உபயோகிக்கிறார்களாம். ஓரிடத்தில் ஜப்பானியர், அமெரிக்கப் படைகளின் நடுவரிசையைப் பிளந்துவிட்டனவாம். இரண்டு தடவை பேர்முானை ஆஸ்பத்திரிகளை அவர்கள் தாக்கியிருக்கிறார்கள். முதல் தடவை தாக்கியதும் மன்னிப்புக் கேட்டுவிட்டு, மறுபடியும் அதைத் தாக்கினால், வேண்டுமென்றே செய்வது போல் தானே ஆகிறது இது! அவர்களுக்கு ஏதய்யா நியாயம் கியாயம் எல்லாம்?

பார்மோஸா என்ற பிரதேசத்திலே சுமார் முக்கால் லக்ஷம் பேர்களைச் சேர்த்து வைத்திருக்கிறார்களாம். அப்படைகள் பர்மாவுக்கோ, ஆஸ்திரேலியாவிற்கோ போகக்கூடும்.

ஆஸ்திரேலியாவிற்கு இருக்கும் ஆபத்தின் அளவு குறையவில்லை. டார்வின் நகரம், பல விமானப் படையெடுப்புகளைப் பார்த்தாயிற்று. ஜப்பானியர் சாலமன் தீவுகளில் சில இடங்களில் இறங்கியிருக்கிறார்களாம். இதில், பிஜி தீவுகளுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இதற்கிடையில், பர்மாவுக்குண்டான ஆபத்தும் அதிகரித்து வருகிறது. ப்ரோம் முனையிலும், டாங்கூ முனையிலும் ஜப்பானியர் முன்னேறி வருகிறார்கள். பர்மியத் துரோகிகளின் உதவியால் அவர்களுக்கு சௌகரியங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் ஜப்பானிய டாங்கிகளை அழித்து அஞ்சா நெஞ்சம் படைத்த சீனர் பலர், 'சீனத் தற்கொலைப் படை' என்ற பெயருடன் கிளம்பியிருக்கிறார்கள். பர்மாவில் ஜப்பானியரின் விமான பலம் அதிகமாகவே இருக்கிறது. ரங்கூன் நகரை, இந்தியாவிலிருந்து சென்ற அமெரிக்க விமானங்கள் தாக்கியிருக்கின்றன; கொழும்பு மீது படையெடுத்ததில், ஒரு நாளிலேயே நாற்பது, ஐம்பது ஜப்பானிய விமானங்களுக்குச் சேதம் ஏற்பட்டுவிட்டது. இது ஜப்பானியருக்குப் பெரிய ஏமாற்றம்தான். லட்டு மாதிரி பிடித்து நொறுக்கிவிடலாம் என்று போன இடத்தில் இவ்வளவு உதை என்றால், ஏமாற்றம்தானே? ரங்கூனுக்குப் போகவிருந்த விமானங்கள், பீரங்கிகள் எல்லாம் இலங்கையைப் பலப்படுத்த உபயோகமாகிவிட்டன. இலங்கையிலே இறங்கும் விரோதிகளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் வரை வெகுமானம் அளிக்க இலங்கை சர்க்கார் தயாராக இருக்கிறார்கள். இலங்கை மள மளவெனப் போர்க்கோலம் பூணுகிறது. ஆனால், லங்கயே முதல் போரரங்கம் ஆகலாம் என லண்டன் டைம்ஸ் பத்திரிகை கூறுகிறது. எது எப்படியானால் என்ன? எதற்கும் நாம் தயாராக இருப்பது தானே உத்தமம்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஆண்டு ஏப்ரல் மீ 17உ, வெள்ளிக்கிழமை [இதழ் 15

## போர்க்கோலங்கொண்ட சென்னை

இந்த வாரம் சென்னை நகரம் போர்க்கோலம் கொண்டு விளங்குகிறது. யந்திர பீரங்கிப் படைகள் வீதிகளில் அதிக வேகமாக ஓயாது போய்க்கொண்டேயிருக்கின்றன. இவைகளை ஏற்றிப்போகும் வண்டிகளைப் பார்த்தாலே, அவைகள் இன்னவை என்று தெரிந்துகொள்ள முடியாது. இவை வீதிகளில் போவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. நம் படையின் பலத்திற்கு இது ஒரு அத்தாட்சியாக இருக்கிறது. அநேக 'காம்பவுண்டு'களிலிருந்து நீண்ட ஒடுக்கமான பீரங்கிகள் தம் தலைகளை வெளியே நீட்டிக்கொண்டிருக்கின்றன. பிரிட்டிஷ் துருப்புகள் தங்கள் சட்டையைக் கழற்றிவிட்டு, மண் வெட்டுகிறார்கள்; கட்டிடங்கள் கட்டுகிறார்கள்; தம்மைச் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கிறவர்களுடன் வேடிக்கையாகப் பேசுகிறார்கள்.

**சர்க்கார் அறிக்கையும் பொது ஜனங்கள் கருத்தும்**

சென்ற சனிக்கிழமை சர்க்கார் ஒரு அறிக்கை விடுத்தார்கள். அதில், இதுவரை இருந்ததைவிட மிகவும் சமீபத்தில் எதிரிகள் வந்திருக்கிறார்களென்றும், சென்னை நகரத்திற்கு ஆபத்து ஏற்படக் கூடுமென்றும் எச்சரிக்கை செய்து, சென்னையில் முக்கியமான வேலையில்லாதவர்களெல்லாரும் வெளியேறி விடலாமென்றும் குறிப்பிட்டார்கள். சென்னை நகரத்திற்கு அவசியமான வேலைகள் தடைப்படாதிருக்கவும், சென்னை நகரத்தைக் காப்பாற்றவுமே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த அறிக்கையைக் கண்டு ஒரு சிலர் முணுமுணுப்பதாகவும் தெரிகிறது. சென்னையிலிருந்து வெளியேறுகிறவர்களின் பொருட்டு இப்போது செய்யப்பட்டிருக்கும் பிரமாதமான ஏற்பாடுகள், முன்பே செய்யப்பட்டிருக்கவேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். ஆபீஸ்களையும் பாங்கிகளையும் அரசாங்கக் காரியாலயங்களையும் இவ்வளவு அவசரப்பட்டு அனாவசியமாகச் சென்னையில் மூடியது தவறு என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். இதனால் ஜனங்களுடைய தைரியம் குறைந்துவிடும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இந்த அறிக்கையைக் கண்டு பொது மக்கள் பலர் புதிய ஊக்கத்துடன் இருக்கிறார்கள். பத்து நாட்களுக்கு முன்பு அபாயச் சங்கு ஊதியது. பிறகு அபாயம் எதுவும் உண்டாகவில்லை.

ஜப்பானியர் நம்மைத் தாக்காது போனால் நல்லதுதான். தாக்குவார்களானால், இந்தியர்களும் பிரிட்டிஷாரும், உத்தியோகஸ்தரும், குமாஸ்தாவும், தொழிலாளியும் முதலாளியும், முதல் படையும் உதவிப்படையும், தம் கடமையை ஆகாயத்திலும், தரையிலும் கடலிலும், தவறாது நிறைவேற்றுவார்கள். இந்தப் படைகள் நமக்கு உதவி புரிவதற்காகவே விரைவாக வந்து இருக்கின்றன.

அரசியல் முன்னேற்றத்திலும், நகர பரிபாலனத்திலும், பிற மதங்களை நன்கு மதிக்கும் தன்மையிலும் சரித்திர பூர்வமாக சென்னைக்கு நல்ல பெயர் உண்டு. ஆனாலும், நமக்கு ஒரு புதிய சோதனைகாலம் வருமானால், தன்னலமில்லாத செஞ்சிலுவைச் சங்கத்தாரும், ஏ. ஆர். பி. யின் திறமையும் உறுதியும், தீயணைக்கும் உதவிப் படையின் திறமையும் உறுதியும், நாட்டுப் பற்று மிகவும் கொண்ட பொது ஜனங்களுக்கு, நம் அன்பிற்குரியவரான கவர்னர் பிரபுவின் தலைமையுந்தான், நமக்கு வெற்றி தரும்.

## அமெரிக்கா-ஜப்பான் நிலைமை

### யுத்தத் தளவாட இருப்பு

ஜப்பானியர்களும் அமெரிக்கர்களும் கப்பல் கட்டுவதில் ஒருவர் செய்வது மற்றவருக்குத் தெரியாமல், இரகசியமாக, போட்டியிட்டுக் கொண்டு வந்தார்கள். அமெரிக்கர்கள் கட்டிய 'நார்த் கரோலினா', 'வாஷிங்டன்' என்னும் மிகப் பெரிய இரண்டு கப்பல்களுக்குச் சமமாக, ஜப்பானியர்கள் 'நிஸ்ஷின்', 'தக்கமச்சு' என்னும் இரண்டு கப்பல்களைக் கட்டி முடித்திருக்கிறார்கள்.

யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பு அமெரிக்காவிற்கு 17 வியாபாரக் கப்பல்களும், ஜப்பானுக்கு 12 வியாபாரக் கப்பல்களும் இருந்தன. அல்லாமலும் 16 அங்குல குறுக்களவுள்ள பீரங்கிகள் 42-ம், 14 அங்குலக் குறுக்களவுள்ள பீரங்கிகள் 124-ம் கொண்ட கப்பற் படை தான் அமெரிக்காவிலிருந்தன. ஜப்பானுக்கோ, 16 அங்குல பீரங்கிகள் 34-ம், 14 அங்குல பீரங்கிகள் 80 மட்டுந் தான் இருந்தன. அமெரிக்கர்

களின் கப்பல்களும் பீரங்கிகளும் எண்ணிக்கையில் அதிகமா யிருந்த போதிலும், அவை ஐப்பானியக் கப்பல் போல அவ்வளவு வேகமாகப் போகாதென்றும், பீரங்கிகள் அவ்வளவு தூரம் சுடாதென்றும் ஐப்பானியர்கள் கூறுகிறார்கள். மிகப் புதிதாகத் தாம் கட்டியுள்ள இரண்டு கப்பல்கள் மணிக்கு $38\frac{1}{2}$ மைல்கள் வேகமும், நான்கு கப்பல்கள் 33 மைல்கள் வேகமும், மற்றவை மிக மிக மெதுவாகச் செல்லுபவை $29\frac{1}{2}$ மைல்கள் வேகமும் செல்கின்றன. அமெரிக்க யுத்தக் கப்பல்களில் மிகவும் வேகமாகச் செல்லும் 'நார்த் கரோலினு'வும், 'வாஷிங்டனு'ம் ஒரு மணிக்கு 36 மைல்களைவிட அதிக வேகமாகப் போகமுடியாது. இவற்றிற்கு அடுத்தபடியாகவுள்ள 'இத்தாக்கோ', 'நியூ மெக்ஸிகோ' என்னும் கப்பல்கள் மணிக்கு $27\frac{1}{2}$ மைல்கள் வேகம் தான் போகின்றன. மற்றவை எல்லாம் 28 மைல் வேகந்தான் செல்லுகின்றன. இவற்றிலும் 3 கப்பல்கள் 26 மைல் வேகந்தான் போகின்றன.

ஐப்பானியர் 1934-ம் வருஷந் தான் தம் வியாபாரக் கப்பல்களை யெல்லாம் தற்கால இயந்திரங்களை யமைத்துத் திருத்தினார்கள். ஆனால் அமெரிக்கர்கள் 1920-ம் வருஷத்தில் 5 கப்பல்களும், 1931-ம் வருஷத்தில் 2 கப்பல்களும், 1934-ம் வருஷம் 3 கப்பல்களும் தற்கால இயந்திரங்களை யமைத்துத் திருத்தினார்கள். இன்னும் 5 கப்பல்களை 1941-ம் வருஷம் திருத்தியமைப்பதாக ஏற்பாடுகள் செய்தார்கள். ஆனால், அது அவ்வளவு அவசரமான காரியமல்ல வென்று முடிவு கட்டி இத்திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள். 9000 டன் கனமுள்ள சண்டை கப்பல்கள் அமெரிக்காவிற்கு 27 ம் ஜப்பானுக்கு 8 ம் இருக்கின்றன. அதிகக் கனமில்லாத சண்டை கப்பல்கள் ஜப்பானிடம் 27 ம் அமெரிக்காவினிடம் 14 ம் இருக்கின்றன.

அமெரிக்கா, க்ரூய்சர் (பெரிய யுத்தக் கப்பல்) பலத்தில் அதிகப் பட்டிருக்கிறது. இதை சமப்படுத்துவதற்காக 4 பாக்கெட் சண்டைக் கப்பல்களை ஜப்பானியர் கட்டி முடிப்பதென்று திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால் இவற்றில் ஒன்றுதான் 1941-ம் வருஷம் கட்டி முடிந்தது. மற்ற கப்பல்களைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். இவற்றின் கனம் 12,000 முதல் 14,000 டன். இவை ஜெர்மானியருக்குச் சொந்தமான கனமான யுத்தக் கப்பல்களைவிட மிகவும் உறுதியாகக் கட்டப் பட்டிருக்கின்றன. இதில் ஒவ்வொன்றிலும் 6 அங்குல பீரங்கிகள் 12 ம், 12 அங்குல பீரங்கிகள் 5 ம் அமைத்திருக்கிறார்கள்.

விமானங்கள் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் 13 ஜப்பானியரிடம் வேலை செய்கின்றன. அன்றியும் இன்னும் 2 கப்பல்களைக் கட்டி முடித்துக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கர்களிடம் 7 கப்பல்கள் இவை போன்றவை வேலை செய்கின்றன. 12 கப்பல்கள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கக் கப்பல்கள் மிகப் பெரியவை. இவை 11,500 டன் முதல் 33,000 டன் வரை கனமுள்ளவை. ஜப்பானியர்களிடம் 22,900 டன் கனமுள்ள கப்பல்கள் 2 தான் இருக்கின்றன. சிறியவையான 11 கப்பல்களில் 5 கப்பல்கள் 10,000 டன் கனமுள்ளவை. ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் சொந்தமான கப்பல்களின் விவரம் பின்வருமாறு:—

| கப்பல் பெயர் | முடிந்த தேதி | டன் எடை | வேகம் மைல்கள் |
|---|---|---|---|
| ஜப்பான் | | | |
| 1. நிஸ்ஷின் | 1941 | 35,000 முதல் 40,000 | 38 |
| 2. தக்கமச்சு | | | |
| 3. முச்சு | 1921 | 37,220 | 31 |
| 4. நகடோ | 1920 | | |
| 5. ஹருணு | 1915 | 29,330 | 33 |
| 6. கிரிஷிமா | | | |
| 7. காங்கோ | 1913 | | |
| 8. ஹியை | 1914 | | |
| 9. ஹையுகா | 1918 | 29,990 | 29 |
| 10. ஐசி | 1917 | | |
| 11. புசோ | 1915 | 29,330 | 30 |
| 12. யமாஷிரோ | 1917 | | |
| அமெரிக்கா | | | |
| 1. நார்த் கரோலினு | 1941 | 35,000 | 36 |
| 2. வாஷிங்டன் | | | |
| 3. இத்தாக்கோ | 1919 | 33,400 | 27 |
| 4. நியூ மெக்ஸிகோ | 1918 | | |
| 5. பெனின்ஸில்வேனியா | 1916 | 33,100 | 27 |
| 6. மிஸிஸிப்பி | 1917 | 33,000 | |
| 7. அரிஸோனு | 1916 | 32,600 | 27 |
| 8. கலிபோர்னியா | 1921 | | |
| 9. கொலாரடோ | 1923 | 32,500 | 27 |
| 10. டெனுசி | 1920 | 32,300 | |
| 11. மேலவெர்ஜீனியா | 1923 | 31,800 | |
| 12. மேரிலாந்து | 1921 | 31,500 | |
| 13. நிவடா | 1916 | 29,000 | 26 |
| 14. ஓக்லஹாமா | 1916 | | |
| 15. நியூயார்க் | 1914 | 27,100 | 27 |
| 16. டெக்ஸாஸ் | 1914 | | |
| 17. அர்கன்சாஸ் | 1912 | 26,000 | 26 |

முன் கூறியுள்ள புள்ளி விவரங்கள் ஜப்பான் யுத்தத்தில் இறங்கிய போது தயாரிக்கப் பட்டவை. இதற்குப் பிறகு அமெரிக்க யுத்தத் தளவாட உற்பத்தி அதிகமாக உயர்ந்து விட்டது. இந்த அளவிற்கு உற்பத்தி செய்ய ஜப்பானால் முடியாது. ஏனென்றால் ஜப்பானியர் எண்ணிக்கை மிகவும் கொஞ்சம். போதுமான பொருள்களும் அவர்கள் வசம் இப்போது கிடையாது. ஆகையால் முடிவில் அமெரிக்காவின் உதவியால், நாம் கட்டாயம் வெற்றி பெறுவோம்.

## செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நன்கொடைகள்

### மிஸஸ் சர்ச்சில் நன்றி

க்ளாஸ்டர் பிரபு ஆம்புலென்ஸ் நிதிக்கும் செயின்ட் ஜான்ஸ் ஆம்புலென்ஸ் நிதிக்கும் பொறுப்புள்ள வெளிநாட்டுக் கமிட்டித் தலைவரான ஹெண்டிங்பீல்ட் பிரபு கீழ்க்கண்டவாறு இந்திய வைசிராய்க்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்:—



"ருஷ்யாவிற்கு உதவி வேண்டுமென்று நாம் ஒரு விசேஷ வேண்டுகோள் அனுப்பினோம். உடனே மிகத் தாராளமாக இந்தியா உதவியிருக்கிறது. அதற்காக நாம் பெரிதும் நன்றி செலுத்துகிறோம்."

"வைசிராய் யுத்தச் செலவு நிதியிலிருந்து இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 1 லட்ச ரூபாய் கொடுத்தும், மகாராஜா ஹோல்கார் 50,000 ரூபாய் கொடுத்தும் உதவியிருக்கிறார்கள். இது மிகவும் சிறந்த போக்கு. இவை பற்றி மிஸஸ் சர்ச்சில் தன் மனமார்ந்த நன்றியைத் தங்களுக்கு அறிவிக்கும்படி என்னைக் கோரி யிருக்கிறார்கள்.

"இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்காக வசூலாகும் தொகைகளில், இந்தியாவில் செலவானது போக மிகுந்துள்ளதை இங்குள்ள செஞ்சிலுவைச் சங்கத்தாருக்கு அனுப்பினால் மிகுந்த நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்."

## ஜப்பானிய வெடிகுண்டுகளை அணைக்கும் விதம்

ஜப்பான் வெடிகுண்டுகள் சாதாரணமாக $1\frac{1}{2}$ மணங்கு கனமா யிருக்கின்றன. இவற்றில், அநேகம் ரப்பர்க் குச்சிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குச்சிகளுக்குள் இருக்கும் குழாய்களில், பாஸ்பரஸ் என்னும் ஒருவகை வஸ்துவை நிரப்பி யிருக்கிறார்கள். இந்த வஸ்து வெகு எளிதில் தீப் பற்றிக்கொள்ளும் தன்மையுடையது. இந்தக் குச்சியின் நீளம் 1 அங்குலம்; குறுக்களவு 1 அங்குலம்.

வெடிகுண்டு விழுந்தவுடனேயே தீப்பொறி உண்டாகி வெடிக்கிறது. அதிலுள்ள இந்த ரப்பர்க் குச்சிகளிலுள்ள பாஸ்பரஸ் உடனே தீப் பற்றிக் கொள்ளுகிறது. இது காற்றுடன் சம்பந்தப்பட்ட வுடனேயே கொழுந்து விட்டு எரியும். இது எரியும்போது ரப்பர் உருகி எரிகிறது. இந்தத் தழல் 4 முதல் 6 அங்குல நீளம் எரிகிறது. வெடிகுண்டு வெடித்தவுடனே அதிலுள்ள ஆயிரக் கணக்கான ரப்பர் குச்சிகள் சுமார் 50 கஜ தூரம் சுற்றிலும் சிதறுகின்றன. இவை உடனே தீப்பற்றிக் கொள்ளுவதனால் மிகுந்த சேதம் உண்டாகக் கூடும்.

இந்தத் தீயை அணைக்க ஒரு சுலபமான வழி இருக்கிறது. பாஸ்பரஸுக்கு தண்ணீர் விரோதம். தண்ணீரில் பாஸ்பரஸ் எரியாது. அதனால் தான், இதைத் தண்ணீரில்போட்டு வைத்திருக்கிறார்கள். ஆகையால், இந்த வெடிகுண்டு விழுந்த வுடனேயே, அதை அணைக்க முயலவேண்டும். ஏனென்றால், விழுந்த இரண்டொரு நிமிஷங்களிலேயே அவை வெடித்து விடுகின்றன. ஆகையால், விழுந்தவுடனேயே தண்ணீர்த் தொட்டிகளுடன் ஸ்டர்ரப் பம்பு முதலியவற்றை அதன் அருகில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு, அது வெடிக்காதபடி வேலை செய்யவேண்டும். இதற்குக் குறைந்தது 3 பேர்கள் தேவை. ஒருவர் குழாயின் முனையைக் கைப் பற்றிக் கொண்டு மற்றவர்கள் வேலைகளையும் மேற்பார்க்க வேண்டும். இரண்டாவது பேர்வழி அந்த பம்பை தண்ணீர் தொட்டிக்குள் வைத்து, அடித்து, குழாய் வழியாகத் தண்ணீரை வெளியேற்ற வேண்டும். தொட்டியில் தண்ணீர் குறையக் குறைய மூன்றாவது பேர்வழி தண்ணீரை நிரப்பிக் கொண்டிருக்க வேண்டும். பம்பு அடிப்பதனால், இரண்டாவது பேர்வழியின் கைகள் அசந்து போனால், மூன்றாவது பேர்வழி இரண்டாவது பேர்வழியை மாற்றி, தான் பம்பு அடிக்க வேண்டும். அப்போது 2-வது பேர்வழி தொட்டிகளை நிரப்பிக் கொண் டிருக்க வேண்டும்.

பம்பில் இணைத்திருக்கும் குழாயின் நீளம் 25 அடி. இதில் தண்ணீர் நிறையவேண்டுமானால், பம்பை 4 அல்லது 5 முறை அடித்தாலே போதுமானது; நிரம்பிவிடும்.

வெடிகுண்டை அணைக்க ஆரம்பித்ததிலிருந்து ஒரு நிமிஷத்திற்கு 70 முறை பம்படித்தால், தண்ணீர் கூராகப் பாயும் குழாய் வழியாக, 30 அடி தூரம் பாயும்; அதுபோலவே தண்ணீர் சிதறிப் பாய வேண்டுமானால் ஒரு நிமிஷத்திற்கு 35 முறை பம்பு அடிக்கவேண்டும். அப்போது தண்ணீர் 15 அடி தூரம் சிதறிப் பாயும்.

இப்படியாக அந்த வெடிகுண்டை முழுதும் நனைத்து தீ பரவ வொட்டாதபடி செய்த பிறகு, அதை ஜாக்கிரதையாக ஈர மணலால் மூடி, இந்த மணலோடே ஒரு தண்ணீர்த் தொட்டியில் போட்டு, ஜனப் போக்கு வரவு இல்லாத ஒரு இடத்தில் போட்டு விடவேண்டும். அங்கே அந்த ஈர மணல் காய்ந்த பிறகு அந்த வெடிகுண்டு வெடிக்கும். இதனால், யாருக்கும் சேதம் ஏற்படாது.

சிங்கப்பூரிலும், பர்மாவிலும் இதே முறையை யொட்டி அநேக ஜப்பான் வெடிகுண்டுகளை நாசஞ் செய்து விட்டார்கள்.

## யுத்த களத்தில் தபால் ஆபீசுகள்

### வேலை செய்யும் விதம்

இப்போது நடைபெறும் யுத்தத்தில் நேச தேசங்களின் சார்பாக பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூசிலந்து, அமெரிக்கா, தென்னுப்பிரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளி லிருந்து படைகள் யுத்த களத்திற்குப் போயிருக்கின்றன. இந்தப் படைகள் தம் கடமைகளைச் சரிவரச் செய்ய அடிக்கடி ஊக்கம் பிறக்கத்தக்க சம்பவங்கள் ஏற்படவேண்டும். இதற்கு படைவீரர்களின் வீடுகளிலிருந்து அவர்களுக்கு வரும் கடிதங்களைப் போல ஊக்கந் தரக் கூடியது வேறு எதுவும் கிடையாது. ஆகையால் தாமத மில்லாமல் அவர்களுக்குக் கடிதங்கள் கிடைக்கும்படி செய்ய வேண்டியது இராணுவ அதிகாரிகளின் பொறுப்பு. இந்தப்

பொறுப்பை அவர்கள் எப்படி நிறைவேற்றுகிறார்கள் என்று இனிப் பார்ப்போம்.

சென்னையிலிருந்து ஒரு படைவீரர் யுத்த களத்திற்குப் போயிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். அவருடைய விலாசத்தில் பெயர், இராணுவ உத்தியோகம், நம்பர், இத்தனாவது பேஸ் தபாலாபீஸ் என்று குறிப்பிட்டெழுதி பம்பாய்க்குத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். இந்தக் கடிதம் கப்பல் வழியாகப் போக 3 அணாத் தபால் தலையும், ஆகாய விமானம் வழியாகப் போகவேண்டுமானால் 8 அணாத் தபால் தலையும் ஒட்டி தபாற் பெட்டியில் போடவேண்டும். விமானத் தபாலாக விருந்தால், விமானத் தபால் தலையும் அந்தக் கடிதத்தில் ஒட்டிப் போடவேண்டும்.

பேஸ் தபால் ஆபீசு

அந்த விலாஸக்காரர் சேர்ந்திருக்கும் பட்டாளம் எந்த யுத்த களத்தில் இருக்கின்றது என்று பம்பாயிலுள்ள பேஸ் டிப்போவுக்குத் தெரியும். ஆகையால் அந்த யுத்த களத்துக்குப் போகும் தபால் பைகளில் இந்தக் கடிதத்தையும் சேர்த்து விடுகிறார்கள்.

இந்தக் கடிதம் கப்பல் மூலமாகப் போவதாக வைத்துக்கொள்ளுவோம். கப்பல் போய் நிற்கும் துறைமுகத்தில் ஒரு தபால் சிப்பந்தி ஒரு வேலைக்காரருடன் ஒரு மோட்டார் லாரியைக் கொண்டுவந்து சேர்க்கிறார். கப்பலில் வந்த தபால் பைகளையெல்லாம் அந்த லாரியில் ஏற்றி அனுப்புகிறார். இந்த ஆபீசு ஒரு முக்கியமான இராணுவ அதிகாரியின் தலைமையில் வேலை செய்கிறது. அவர் ஒரு மேஜராகவோ, காப்டனாகவோ இருக்கலாம். இங்கே சுமார் 200 பேர்களுக்கு அதிகமாகவே வேலை செய்கிறார்கள். தபால் பைகளைப் பிரித்து அதிலுள்ள தபால்களை எந்தெந்த இராணுவங்களுக்கு அனுப்ப வேண்டுமென்று பிரித்துக் கட்டுகிறார்கள். போர்முனைத் தபால் ஆபீசுகளிலிருந்து ஒரு மோட்டார் லாரி வந்து, தம் இராணுவத்திற்குரிய தபால் பைகளை எடுத்துக் கொண்டு போகின்றன. போர்முனைத் தபால் ஆபீசுகளில், 1 தபால் அதிகாரி, 2 குமாஸ்தாக்கள், 1 தபால்காரர், 1 பாக்கர், 1 மோட்டார் டிரைவர், சில இடங்களில் 1 மசாலிச்சி ஆகிய எழு பேர்கள் இருக்கிறார்கள். இங்கே தபால் பைகள் வந்தவுடனே, அவற்றைப் பிரித்து அதிலுள்ள தபால்களின் விலாசதார்கள் எங்கெங்கே இருக்கின்றார்களெனத் தெரிந்து தபால்காரர் அவர்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறார். படையின் முன்வரிசையிலிருந்தாலும் அங்கே அவரவர் தபால்கள் கொண்டு போய்க் கொடுக்கப்படுகின்றன. இந்தப் போர்முனைத் தபால் ஆபீசுகள் சாதாரணமாக ஒரு குகைக் குள்ளாகவாவது ஒரு பெரிய பள்ளத்திற்குள்ளாகவாவது அமைந்திருக்கும். இதற்கு முன்பு சிவப்பும் வெள்ளையும் பட்டையிட்ட கொடி நாட்டப் பட்டிருக்கும்.

---

# துருக்கியை ஜெர்மனி தாக்குமா?

## நேச ஒப்பந்தத்தால் பலன் இல்லை

1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் முதல் தேதி ஹிட்லருடைய சேனைகள் கிளம்பின. 15 நாட்களுக்குள் அநேக இடங்களில் போராடி ஜெயம் பெற்றன. கிரேக்க தேச எல்லைப்புரத்தைக் கடந்து, துருக்கியின் எல்லைப்புரத்தையும் அடுத்து விட்டன. துருக்கியையும் ஹிட்லர் கைப்பற்றி விடக்கூடும் என்று அப்போது நினைக்க இடம் இருந்தது. ஆனால் அப்படிப்பட்ட எண்ணம் ஹிட்லருக்கு அப்போது கிடையாது. அந்த வருஷத்திற் குள்ளாகவே ருஷ்யாவை வென்று விட வேண்டும் என்பது தான் ஹிட்லருடைய திட்டம். இதற்கு டார்டெனெல்ஸைக் கைப்பற்ற வேண்டியது அவசியம் என்று அவர் நினைத்தார். அதனால்தான் க்ரீட் தீவைக் கைப்பற்றினார். அவருடைய நோக்கம் கீழ்த்தேசங்களின் மீது படையெடுக்க வேண்டும் என்பது அல்ல.

இப்போது ருஷ்யாவைத் தாக்கவேண்டுமானாலும் காக்கசஸ் மலையை யடுத்து ஜெர்மனி படையெடுக்க வேண்டும். இந்தப் பிரதேசம் துருக்கியின் எல்லைப் புரத்திலிருக்கிறது. அல்லது பாரசீக வளைகுடாவையும் சூயஸ் கால்வாயையும் கைப்பற்ற ஜெர்மன் சேனையும் இத்தாலி சேனையும் வருவதாக இருந்தாலும் துருக்கி எல்லைப்புரத்தைக் கடந்து தான் வர வேண்டும்.

துருக்கியின் வடமேற்கு எல்லைப்புரத்திலிருப்பது அனடோலியா என்னும் மாகாணம். இது ஒரு பீடபூமி. இது சில இடங்களில் 9,500 அடி உயரம் இருக்கிறது. இதன் மத்தியில் ஒரேயொரு ரயில்பாதை இருக்கிறது. இதைத் தவிர வேறு எந்த விதமான ரோடுகளோ மற்ற போக்குவரவு சாதனங்களோ கிடையாது. இவ்வளவு கஷ்டமான வழியில் ஜெர்மன் படைகளை அழைத்துக்கொண்டு போவது மிகவும் கஷ்டம். இந்தக் கஷ்டங்களைப் பொருள்படுத்தாமல் அழைத்துக் கொண்டுபோனாலும், அவைகளுக்குச் சாப்பாடு, தளவாடங்கள் ஆகியவசதிகளை அனுப்புவது முடியாத காரியம். ஆகையால் இந்தப் பக்கம் திரும்ப, ஹிட்லர் சம்மதிக்க மாட்டார்.

இனி பாரசீக வளைகுடாவையும் சூயஸ் கால்வாயையும் ஹிட்லர் தாக்குவாரா என்று கவனிப்போம். இவை, துருக்கியின் தென்கிழக்கு எல்லைப் புரத்தில் இருக்கின்றன. இந்த எல்லைப் புரத்தில் இருந்து ஈரான் ஈராக் எண்ணெய்க் கிணறுகள் வரை, மலைகள் கிடையாது; சமமான பூமி. இராணுவ வண்டிகள் மிகச் சுலபமாக அங்கே வரலாம். இருந்தபோதிலும் இங்கேயும் உணவுப்பொருள்களையும் தளவாடங்களையும் அனுப்புவது மிகவும் கஷ்டம்.



### பிரிட்டிஷ் கடற்கரை வியாபாரக் கப்பல் குண்டுவீசும் ஜர்மானிய ஆகாய விமானத்தைத் தோற்கடிக்கிறது.



சிறு பிரிட்டிஷ் வியாபார கப்பல்கள் சிகப்பு 'என்சைன்' கோடியின் கீழ்த் தங்கள் விலையுயர்ந்த சரக்குகளை, ஒரு பிரிட்டிஷ் துறைமுகத்திலிருந்து மற்றொரு துறைமுகத்திற்கு தைரியமாக ஏற்றிச்செல்லுகின்றன. அவைகளுக்கு 'கான்வாய்' பராமரிப்பு இல்லாததால், குண்டுவீசும் ஜர்மானிய விமானங்களுக்கு எளிதில் இரையாகி விடும்போல் காணப்படுகின்றன. ஆனால் அப்படியல்ல. அவைகள் வீராவேசத்தோடு அடிக்கடி தங்கள் எதிரியோடு போர்புரிவதால் எதிரி விமானங்களே நஷ்டமடைகின்றன.

அவ்விதமான ஒரு சம்பவம் சமீபகாலத்தில் நேர்ந்தது. அதையே நமது சித்திரக்காரர் மேலே காட்டியுள்ள படத்தில் விளக்குகிறார். சேன்ட் யூனன் என்னும் சிறுகரைக் கப்பல் ஒன்று குண்டுவீசும் ஜர்மன் விமானத்தால் கண்டுபிடிக்கப்பட்டுத் தாக்கப்பட்டது. அதன் தலைவராகிய காப்டன் G. H. ராபர்ட்ஸ் என்பவரோ அந்த விமானம் 1000 அடி உயரத்தில் வட்டமிட்டுத் தன் கப்பலைத் தாக்கத் தலைக்கு உச்சியில் தணித்து வருவதைக் கவனித்தார். ஆனால் அது தன் கப்பலுக்கு நேர் உச்சியில் வரும்வரை தம் துப்பாக்கியை உபயோகிக்காமலிருந்தார். தலைக்கு நேரே எதிரி விமானம் வந்தவுடன் 'லுயி' இரட்டைத் துப்பாக்கியால் அதைத் தாக்கினார். உடனே அந்த ஜர்மன் விமானம் தீப்பிடித்தெரிந்து, கடலில் விழுந்து, நாசமாயிற்று. அந்தச் சிறு கப்பலோ ஒரு சேதமுமின்றித் தப்பினது.

---

இந்தப் பிரதேசங்களின் மீது ஹிட்லர் படையெடுக்கிறதாக இருந்தால் ஒரு தரத்திற்குப் பலதரம் நன்றாக ஆலோசித்துச் செய்ய வேண்டும். காரண காரியங்களை ஆராய்ந்து செய்வதில் ஹிட்லர் ஒருபோதும் சிறந்து விளங்கியது கிடையாது.

**துருக்கி தாக்கப்படுமோ?**

துருக்கியைத் தாக்கத் தான் வேண்டும் என்று ஹிட்லர் முடிவு செய்தால், அப்படியே தான் தாக்குவார். தாக்காதிருந்தால் ஜெர்மனிக்கு எந்தவித இலாபமும் கிடையாது. சென்ற வருஷம் அக்டோபர் மாதம் துருக்கிக்கும் ஜெர்மனிக்கும் ஒரு வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தை ஒரு சிறந்த ஆதாரமாக வைத்துக்கொண்டு ஜெர்மானியர் தம்மை மிக அதிகமாகப் பிரசாரம் செய்துகொண்டார்கள். இந்த ஒப்பந்தம் எழுதிக் கையெழுத்து ஆனது தான். அதனால் ஒரு இம்மி அளவிற்குக்கூட பிரயோசனமே கிடையாது. இப்படிப் பட்ட நிலைமை ஏற்படும் என்று பொருளாதார நிபுணர்கள் முந்தியே எதிர்பார்த்தது தான்.

இந்த ஒப்பந்தம் ஏற்படும் முன்பு விசேஷ நஷ்ட ஈடுகள் கொடுப்பது என்னும் முறை இருந்து வந்தது. இந்த வசதியைக் கொண்டு ஜெர்மனியும் துருக்கியும் தம் பொருள்களை மாற்றிக்கொண்டன. ஆனால், அந்தப் பொருள்களின் விலையில் 100-க்கு 60 பங்குக் கூட வசூல் ஆவதில்லை. அல்லாமலுமா துருக்கி ஜெர்மனிக்குக் கொடுத்த ஆர்டர்களை நிறைவேற்ற, ஜெர்மனியால் முடியவில்லை. இதற்குக் காரணம் எல்லா ஜெர்மன் தொழிற்சாலைகளும் யுத்த வேலைகளில் மும்முரமாய் வேலைசெய்து வருகின்றது தான். துருக்கியோ, தன் துறைமுகத்தில் 1 டன் பொருட்கள் ஜெர்மனியிலிருந்து வந்து இறங்கினால்தான், 1 டன் பொருள் ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்யும். இது, அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளில் ஒன்று. சில்லரைச் சாமான்கள் சில, ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது உண்மைதான். இருந்தாலும், மத்திய ஐரோப்பாவிலிருந்து பல்கேரியத் துறைமுகங்கள் வழியாக, திருட்டுத்தனமாக வந்து துருக்கித் துறைமுகங்களில் இறக்குமதியான பொருள்களின் மதிப்பு 10 லட்சம் பவுன். இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தால், துருக்கியைத் தாக்காது இருப்பதனால் ஜெர்மனிக்கு இலாபம் இல்லை என்று தெளிவாகிறது.

இனி, அரசியலை ஒட்டி, இதுபற்றி கவனிப்போம். துருக்கிப் பத்திரிகைகள் ஜெர்மனியை

யும் பிரிட்டனையும் ஒப்பிட்டு எழுதும்போதெல்லாம் ஜெர்மனியைக் குறித்து "நம் நண்பர்கள்" என்றும், பிரிட்டனைக் குறித்து "நம் அரசியல் கூட்டாளி"கள் என்றும் குறிப்பிடுகின்றன. துருக்கியோடு ஜெர்மனி பத்து வருஷ சிநேக ஒப்பந்தம் செய்ததற்கு, ஹிட்லர் இந்த ஒரு பலனைத்தான் கண்டார். துருக்கிப் பத்திரிகைகளுக்கு மிகுந்த உரிமைகள் உண்டு. அச்சு நாட்டு அரசாங்கங்களின் போக்கைக் கண்டிப்பது போலவே, நேசநாட்டு அரசாங்கங்களின் போக்கையும், அவசியமானால், துருக்கிப் பத்திரிகைகள் கண்டிக்கின்றன. ஆகையால் ஜெர்மனி துருக்கியைத் தாக்காது இருக்க, எந்த விதமான அரசியல் காரணமும் கிடையாது.

**அரசியல் தடையும் கிடையாது.**

ஹிட்லர் தன் சேனைகளை முதலில் சிதறவிட்டு துருக்கியை வளைத்துக்கொள்ளுவார். அப்போது துருக்கி துண்டிக்கப்பட்டு விடும். வேறு நாடுகளோடு துருக்கி போக்குவரவு வைத்துக்கொள்ள முடியாது. உணவுப்பொருள்களோ தளவாடங்களோ பிற நாடுகளிலிருந்து துருக்கிக்குக் கொண்டு போக முடியாத நிலை ஏற்படலாம். அப்போது 'எமது நாடு' என்ற பேச்சுக்கே இடம் இல்லாது போய்விடும். ஆகையினால் தான் லிபியாவிலும் ருஷ்யாவிலும் யுத்த நிலைமை எப்படியிருக்கிறது என்று துருக்கி மிகுந்த ஆவலோடும் அக்கரையோடும் கவனித்துக் கொண்டிருக்கிறது.

**துருக்கியைத் துண்டிப்பது தான் நோக்கம்.**

---

# உலகப்போக்கு

இலங்கையை ஜப்பானியர் முதல் முதல் தாக்கிய வுடனேயே படுதோல்வி அடைந்தார்கள். இலங்கைத் தீவில் இறங்குவதற்காக, முதல் முறையாக, அத்தீவைத் தாக்கிப் பதம் பார்த்தவுடனேயே அவர்களுக்கு மனம் பதறிப் போகும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. கொழும்பு நகரத்தை 75 விமானங்கள் தாக்கின. இவற்றை கப்பலில் ஜப்பானியர் ஏற்றி வந்திருக்கவேண்டும். விமானங்களை ஏற்றிப் போகக்கூடிய பெரிய கப்பல்கள் ஜப்பானியரிடம் 2 கப்பல்கள்தான் உண்டு. ஒரு கப்பலின் பெயர் தகா; மற்றொன்றின் பெயர் அகாகி. தகா 60 விமானங்களை மட்டுந்தான் ஏற்றிச் செல்லக்கூடும். அகாகியில் 50 விமானங்களைத் தான் ஏற்றலாம். இந்த இரண்டு கப்பல்களில் ஒன்றுதான் இலங்கைக்கு அருகே வந்திருக்க வேண்டும். ஆகையால், தான் ஏற்றி வரக்கூடிய அளவிற்கு அதிகமாகவே விமானங்களை இந்தக் கப்பல் ஏற்றி வந்து இருக்கவேண்டும் என்று இலங்கைத் தலைமைப் படைத் தலைவரான சர் ஜெப்ரி லேடன் சொல்லுகிறார். ஜப்பானியருக்குச் சொந்தமான மற்ற கப்பல்களில் 20 முதல் 40 விமானங்களைத் தான் ஏற்றிப்போக முடியும். இதிலிருந்து என்ன விளங்குகிறது? தகா அல்லது அகாகி என்னும் கப்பல் இந்து மகா சமுத்திரத்திலும், வங்காளக் குடாவிலும் உலவிக் கொண்டிருக்கிறது.

**இலங்கையில் முதல் விமான குண்டு வீச்சு.**

அந்தமான் தீவைச் சமீபத்தில்தான் ஜப்பானியர் கைப்பற்றினார்கள். இலங்கைக்கும் அந்தமானுக்கும் ஆகாயவழியாக 940 மைல் தூரம். இங்கே தம் விமான தளங்களை ஜப்பானியர் அமைத்துக்கொண்டு அங்கிருந்து விமானங்களை அனுப்பியிருக்க முடியாது. ஏனென்றால், தம் தளத்திற்கு 400 மைல்களுக்கு அப்பாலுள்ள எந்த இடத்தையும் தாக்க ஜப்பான் விமானங்கள் முயன்றதே கிடையாது. ஆகையால் கப்பலில் தான் இந்த விமானங்களை ஏற்றி வந்திருக்கவேண்டும். கப்பலோ பெரிது. அடிக்கடி எண்ணெய், கரி முதலியவற்றை கப்பலில் நிரப்பிக் கொள்ள வேண்டும். ஆகையால், இக்கப்பல் ஒரே இடத்தில் இருந்து சண்டை போடமுடியாது. எண்ணெயும் கரியும் கிடைக்கக்கூடிய இடங்களுக்கு அடிக்கடி போய்வரத்தான் வேண்டும். அல்லாமலும், இந்தக் கப்பல் ஒரே இடத்தில் இருந்து சண்டை போடுமானால், பிரிட்டிஷ் விமான எதிர்ப்புப் பீரங்கிகளுக்காவது பிரிட்டிஷ் கடற்படைக்காவது இரையாகி விடும். இதற்காகத் தான் அந்தக் கப்பல் இலங்கையைச் சுற்றி 2,500 மைல் தூரம் சுற்றி யிருக்கிறது. இது மறுபடியும் எண்ணெயும் கரியும் ஏற்றிக்கொள்ளுவதற்காகத் தன் தளத்திற்குப் போகும் முன்பு இந்திய கடற்கரையை அடுத்து வந்து சில இடங்களைத் தாக்கிக் கொண்டு போகக் கூடும்.

கொழும்பு ஒரு முக்கியமான துறைமுகம். இந்தியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குள் நடக்கும் வியாபாரம் கொழும்பு வழியாகத்தான் நடைபெற வேண்டும். இந்தியாவிலுள்ள எல்லாத் துறைமுகங்களிலும் சேர்ந்து எவ்வளவு வியாபாரம் நடைபெறுகிறதோ அதைவிட அதிகமாகவே இங்கே ஏற்றுமதி இறக்குமதியாகிறது. இது பிரிட்டிஷ் கப்பற்படைத் தளம். இதற்குப் பக்கத்தில் உள்ள திரிகோணமலையில் எண்ணெயும் கரியும் திரட்டி வைத்திருக்கிறார்கள். இந்த இடத்தையுங் கூட ஜப்பானிய விமானங்கள் தாக்கின. இந்துமகா சமுத்திரத்தில், பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்கள் போக்கு வரவைப் பாதுகாப்பதற்காக அமைக்கப் பட்ட துறைமுகச் சங்கிலியில் கொழும்பு ஒரு முக்கியமான துறைமுகம். மேலும், கிழக்கிந்திய கப்பற்படைச் சதுரத்தின் முக்கிய தளமாகவும் இருக்கிறது.

**கொழும்பு நகரச் சிறப்பு.**

எடுத்த எடுப்பிலேயே கொழும்பில் ஜப்பானியர் தோல்வியடைந்தார்கள். இதில் இருந்து இலங்கைத் தீவு நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்று தெளிவாகத் தெரிகிறது. அல்லாமலும் பொதுவாக இலங்கை வாசிகள் தம் கடமைகளை நன்றாகத் தெரிந்துகொண்டு, மிகுந்த எச்சரிக்கையோடும் நடந்துவந்திருக்கிறார்கள். "டைம்ஸ் ஆப் சிலோன்" பத்திரி



கையின் உதவி ஆசிரியராக இருந்த மிஸ்டர் ட்யூடர் ஜேம்ஸ் இதுபற்றி கூறியதாவது:—

> இலங்கையைக் காப்பாற்ற வேண்டியது மிகவும் அவசியம். ஏனென்றால் இது, இந்தியாவைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பான நிலைமையில் இருக்கிறது. அவசியம் நேரும்போது, கிழக்கே நம் கப்பல்களைக் கொண்டுபோக மிகவும் பொருத்தமான தளமாக இது அமைந்திருக்கிறது. ஆகையால் இந்தத் தீவைத் தாக்க எதிரிகள் முயற்சிக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், ஜப்பானியர்கள் ஏற்கெனவே அந்தமானுக்கு வந்துவிட்டார்கள். இது அவர்களுக்கு ஒரு முதல்படியாக இருந்தபோதிலும், இலங்கைக்கும் அந்தமானுக்கும் வெகு தூரம். இரண்டு வாரங்களுக்கு முன்புதான் சர் ஜெப்ரி லேடன் இலங்கையின் முதல் படைத் தலைவராக நியமிக்கப்பட்டார். இவருடைய கட்டளைப்படியே இலங்கையிலுள்ள பொது ஜனங்களும், தரைப்படை, கடற்படை, ஆகாயப் படை ஆகிய மூன்றுவகைப் படைகளும் நடக்கவேண்டும். இந்தத் துறைமுகத்தில் கடல் யுத்தம் செய்வது என்று முடிவுகட்டியிருப்பது சரியான யோசனைதான். போராடும் திறமையுடையவர்கள் இலங்கையில் அநேகம் பேர்கள் உண்டு. ஐந்து வருஷங்களுக்கு முன்பு, நான், அங்கிருந்த வாலன்டியர் பாதுகாப்புப்படையில் சேர்ந்திருந்தேன். இனி, என்ன ஏற்படப் போகிறதென்று அப்போதே எனக்குத் தெரியும். ஜப்பானியர்கள் இலங்கையில் வந்து இறங்குவதுபோலவும் அவர்களோடு போராடி ஜெயிப்பதுபோலவும் நாங்கள் போலிச் சண்டைகள் செய்தது உண்டு. இங்கே ஐரோப்பியப் படை இருந்தது. மற்ற நாட்டுப் படைகளும் இருந்தன.

தரையில் தளங்கள் இருந்தால்தான் விமானங்கள் அங்கிருந்து கிளம்பி இடைவிடாது தாக்கிக்கொண்டிருக்க முடியும். இலங்கைக்கு அருகில், ஜப்பானியர்களுக்கு விமான தளம் இல்லாதபடியால் தான், இலங்கையை அடுத்து அடுத்துத் தாக்க, அவர்களால் முடியவில்லை. ஜப்பானிய விமானங்கள் மொத்தத்தில் 39 டன் நிறையுள்ள விமானக் குண்டுகளை இலங்கையில் வீசின. இராணுவக் கொள்கையின்படி முக்கியமான இடங்களில் மட்டும் இக்குண்டுகளை வீசினார்கள் என்று சொல்லமுடியாது. ஏனென்றால், முதல் விமானத் தாக்குதலால் மடிந்தவர்களில் பாதிப்பேர்கள், ஆஸ்பத்திரியில் இருந்த நோயாளிகள். ஜப்பானியர்களுக்குச் சொந்தமான விமானப்படையில் பாதிக்குமேல், அதாவது மூன்றில் இரண்டு பங்கு விமானங்களை ஜப்பானியர் இழந்துவிட்டார்கள். இது இலங்கையைப் பாதுகாக்கிறவர்களின் சிறந்த திறமையைக் குறிக்கிறது.

**39 டன் விமான குண்டுகள் வீசப்பட்டன.**

பாதுகாப்புக்கள் சிறந்த முறையிலும் எச்சரிக்கையோடும் அமைக்கப்பட்டிருந்தால், எதிரி தாக்குதலுக்குக் கொஞ்சங்கூட அஞ்ச வேண்டியதில்லை என்று இலங்கையில் நடைபெற்ற சம்பவங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. இலங்கையின் பிரதம படைத்தலைவரான சர் ஜார்ஜ் லேடன் சமீபத்தில் செய்த ரேடியோ பிரசங்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

> இவ்வளவு இலேசாக நாம் தப்பியது அதிர்ஷ்ட வசத்தினால் அல்ல. இந்த அபாயத்தை எதிர்க்கும்பொருட்டு நம்மை ஆயத்தம் செய்து கொண்டிருந்தது தான் இதற்குக் காரணம். நாம், தளர்ச்சி யடையாமலும், ஒன்றுபட்டும், வெற்றியடையத்தான் வேண்டும் என்னும் மன உறுதியோடும், உழைத்து வரவேண்டும். அச்சத்திற்குக் கொஞ்சங்கூட இடம் கொடுக்கப்படாது. அப்போது எதிர்காலத்தில் நாம் எதற்கும் பயப்படவேண்டிய அவசியமே கிடையாது.

சென்னை நகரத்திலும் இம்மாகாணக் கடற்கரைப் பட்டினங்களிலும் உள்ள பொதுமக்கள், இலங்கை முதல் தாக்குதலிலிருந்து ஒரு நல்ல பாடம் படித்துக்கொள்ளவேண்டும். எப்படிப்பட்ட ஆபத்து வந்தாலும், அதை எதிர்க்க தைரியமும் மன உறுதியும் கொள்ளவேண்டும்.

மிகவும் வீரமான சண்டைகளில் ஒன்று சென்ற வாரம் முடிவடைந்தது. பட்டான் யுத்தம் முடிந்தது. எதிர்த்து வந்த ஜப்பானியர் ஏராளமான படைகளைக் கொண்டு வந்து சேர்த்துவிட்டார்கள். ஆகையால் பட்டானைப் பாதுகாத்துக் கொண்டிருந்தவர்கள் தோற்க நேர்ந்தது. 1,35,000 வீரர்களைக்கொண்ட ஒரு பெரும் சேனையின் உதவியால் ஜப்பானிய படைத்தலைவரான யோமாஷிட்ஸ் இங்கே வெற்றி பெற்றார்.

**பட்டான் யுத்த முடிவு.**

இந்த யுத்தத்தைப்பற்றி அமெரிக்கப் படைத் தலைவரான ஜெனரல் வெய்ன்ரைட் ஜனத்தலைவர் ரூஸ்வெல்ட்டுக்கு அனுப்பிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

> என் வசம், போராடக்கூடிய வீரர்கள் மிகவும் கொஞ்சம் பேர்கள்தான் இருந்தார்கள். அவர்களுடைய உதவியைக்கொண்டு நான் என்னென்ன செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்தேன். இந்தப் படை பட்டினியாலும், கடுமையான உழைப்பினாலும் மிகவும் சோர்ந்திருந்தபோதிலும், மிகக் கடுமையாகப் போராடியது. ஆனால், ஜப்பானியர்களின் விமானப்படைகளும் தரைப்படைகளும் ஏராளமாக வந்து எங்களைத் தாக்கின. நாங்கள் தோற்றுப் போக வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டது.

இவ்வளவு சிறிய படை, பட்டான் பிரதேசத்தை இவ்வளவு வீரத்தோடு, இதுவரைப் பாதுகாத்ததைக் குறித்து, அமெரிக்கப் பத்திரிகைகளும் பொது ஜனங்களும் இப்படையை மிகவும் புகழுகிறார்கள். ஏனென்றால் இந்தச் சிறிய படை மூன்று ஜப்பானியப் படைகளோடு போராடி யிருக்கிறது. அல்லாமலும் இந்தப் படையிலுள்ள ஒருவருக்கு, ஜப்பான் படைவீரர் 8 பேர் வீதம் போராடி யிருக்கிறார்கள்.

**யுத்த தந்திரப்படி முக்கியமானது.**

யுத்த தந்திரப்படி இந்தப் போர் மிகவும் முக்கியமானது. எப்படி யென்றால், பசிபிக் சமுத்திர தளங்களில் அமெரிக்கக் கப்பல்கள் போய்ச் சேர, குறிப்பாக ஆஸ்திரேலியாவிற்கு அமெரிக்கக் கப்பல்கள் போய்ச் சேர பட்டான் யுத்தம் அவகாசம் கொடுத்தது. இதைப்பற்றி "அட்லான்டா கான்ஸ்டிட்யூஷன்" என்னும் பத்திரிகை எழுதுவதாவது:—

இந்தத் தாக்குதலை ஜெனரல் வெய்ன்ரைட்டும் அவருடைய வீரர்களும் தாங்குவார்களானால், யாராலும் முடியாத காரியத்தைச் செய்து முடித்தவர்களாவார்கள். இந்த யுத்தத்தின் பலம் எதுவானாலும் இந்தப் படையினர் மிகவும் உயர்ந்த முறையில் தம் கடமைகளைச் செய்து முடித்திருக்கிறார்கள். அமெரிக்க வீரர்களின் பட்டியலில், இந்தப் படையின் வீரர் ஒவ்வொருவர் பெயரும் எழுதப்படவேண்டும். பசிபிக் சமுத்திரத்தில் அமெரிக்கக் கடற்படையைத் திரட்டியமைக்க உதவியவர்கள் இவர்கள் தான். ஆஸ்திரேலியா இவர்களுக்குத் தான் நன்றி கூற வேண்டும். சமீபத்தில் நம் நேசதேசப் படைகளுக்கு ஏற்பட்ட தோல்விச் சரித்திரங்களில், பட்டான் யுத்தம் ஒரு அழகிய சித்திரமாக விளங்குகிறது. மகா வீரச் செயல்களில் தலை சிறந்து விளங்குகிறது. அமெரிக்கப் படைகள் பெருமை யடையக் கூடிய செயல்களில் மிகவும் மேன்மையானதாக இது விளங்கும்.

கர்னல் ஈவ்பாங்கி சமீபத்தில் ஒரு அறிக்கை யனுப்பியிருக்கிறார். அதிலிருந்து சில உண்மைகள் தெரிகின்றன. எதிரிகளுக்குச் சொந்தமான 55 போர்க் கப்பல்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன. 46 போக்குவரவுக் கப்பல்களும் 16 பெரிய யுத்தக் கப்பல்களும் மூழ்கடிக்கப் பட்டன. நான்கு புரங்களிலும் ஐந்து மாத காலம் மிகக் கடுமையான போராட்டம் நடந்தது. ஜப்பானின் பெருமை குலைந்தது. மிகவும் முக்கியமான, காலமும் முயற்சியும் ஜப்பானுக்கு வீணாயின.

**ஜப்பான் படைத்தலைவர் தற்கொலை.**

இங்கே, ஜப்பானிய படைத்தலைவர் ஹோமா தற்கொலை செய்துகொண்டதிலிருந்து, அவர்களுடைய நிலை எப்படியிருந்து இருக்கும் என்று அனுமானித்துக்கொள்ளலாம். இவருக்குப்பிறகு யோமாஷிட்ஸ் ஜப்பான் படைத்தலைவர் ஆனார். அப்போது பர்மாவில் ப்ரோமுக்கும் மணிலாவிற்கும் இடையே இருக்கும் 4,000 மைல் பிரதேசத்தில் ஜப்பான் படைகளுக்கு ஏராளமான வேலை இருந்தது.

**தனிக் காரணம் இருக்கவேண்டும்.**

ஜப்பானியர் பட்டானை மிகமிகக் கடுமையாகத் தாக்கியதற்கு தனிப்பட்ட காரணம் இருக்க வேண்டும் என்று "லாஸ் ஏஞ்செலிஸ் டைம்ஸ்" என்னும் பத்திரிகை கருதுகிறது. அது கீழ்க் கண்டவாறு எழுதுகிறது:—

"அமெரிக்கப் படைகளை பட்டானில் வெல்ல ஜப்பான் படைத்தலைவரான ஹோமாவால் முடியவில்லை. ஆகையால் அவர் தற்கொலை செய்துகொண்டார். ஜப்பானியர் திட்டப்படி இன்னும் 16 நாட்களுக்குள் பட்டானைப் பிடித்துத் தீரவேண்டும். தனக்கு முன் இருந்த படைத் தலைவரால் செய்து முடிக்க முடியாத காரியத்தை, குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டும் என்னும் உறுதியினால் தான் இவர் இவ்வளவு கடுமையாக பட்டானைத் தாக்கிப் பிடித்தார்."

பட்டான் எதிரிகள் வசமாகி விட்டது; ஆனாலும், ஒன்றும் முழுகிப்போய்விடவில்லை. மிஸ்டர் ஸ்டிம்ஸன் தன் அறிக்கையில் குறிப்பிட்டதுபோல, பிலிப்பைன்க்காரர்கள் தம் காரியத்தை நடத்திக் கொண்டு தான் இருப்பார்கள். அவர்களில் நல்ல வீரர்கள் இருக்கிறார்கள். லூசான் பள்ளத்தாக்குகள், மின்டனேசிலுள்ள மறைவிடங்கள், காரிகிடோரிலுள்ள நரிவளை போன்ற பதுங்கு மிடங்கள் ஆகியவற்றிலிருந்து கொஞ்சங்கூட தளர்வடையாமல் எதிர்த்துக்கொண்டே இருப்பார்கள். பட்டானை ஜப்பானியர்கள் மிகக் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருக்கும்போதுகூட, பிலிப்பைன் காரர்கள் எதிரிகளுக்குத் தப்பி பட்டானிற்கு வந்து சேர்ந்தார்கள். அதனால் சாப்பாட்டுக்குக் கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. எந்த நிலைமையையும் சமாளிக்க வேண்டுமானால், உணவுப் பொருள்களும் தளவாடங்களும் அவ்வப்போது குறைவில்லாமல் வந்து கொண்டிருக்க வேண்டும். சென்ற ஜனவரி மாதத்திலிருந்து அமெரிக்கப் படைகளுக்கு எந்தவிதமான உணவுப்பொருள்களும் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. இதிலிருந்து அந்தப் படைகள் பட்டினி கிடந்து, எதிர்த்துச் சண்டைபோட முடியாமலிருந்தன என்று தெரிகிறது. இருந்தபோதிலும் இந்தப் போராட்டத்தினால், நேசதேசப்படைகள் தமக்குத் தேவையான ஆயத்தங்கள் செய்துகொள்ள, போதுமான அவகாசம் கிடைத்தது. சிங்கப்பூரைக் கைப்பற்றிய பிறகு பர்மாவில் ஜப்பானியர் அதிகமாக முன்னேற முடியாததற்குக் காரணம் இதுதான். கண்மூடித்தனமாக அந்தமான், இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளை ஜப்பானியர் தாக்க முயற்சித்து நஷ்டப்பட்டார்கள்.

ஜெனரல் மக்கார்தர் கூறியதுபோல, பட்டான் வீரர்கள் புகழ் பெற்றார்கள்.

"சாக ஆயத்தமாயிருப்பவர்களுக்குத் தான் வாழ உரிமை உண்டு" என்பது தான் ஜெனரல் மக்கார்தர் கொள்கை.

PRINTED BY V. M. PHILIP AT THE DIOCESAN PRESS, 18 CHURCH ROAD, VEPERY, MADRAS—B 8237

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம்௵ ஏப்ரல்௴ 24௳, வெள்ளிக்கிழமை [இதழ் 16

## "முடிவில் நாம் கட்டாயம் ஜெயிப்போம்"

### இந்திய பாதுகாப்புக்கள் பலப்படுத்தப் படுகின்றன

ஜெனரல் வேவல் ரேடியோ பிரசங்கம்

ஜெனரல் வேவல் இந்தியாவின் பிரதம படைத் தலைவர். அவர் டில்லியில் 21–4–42 ம் தேதி ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். இப்போது இருக்கிற யுத்த பீதியை இது தணிக்கிறது. ஆகையால், அதன் முக்கிய பகுதிகளை மட்டும் பிரசுரிக்கிறோம். அது வருமாறு:—

இந்தியாவை அநேக வருஷங்களாக யாரும் படை யெடுத்துத் தாக்கியதே கிடையாது. இப்போது திடீரென்று ஜப்பானியர் தாக்க முனைந்திருக்கிறார்கள். இதனால் பொது ஜனங்கள் மனதில் பயமும் சந்தேகமும் உண்டாகியிருக்கின்றன. தம்மையும், மனைவி மக்களையும், சொத்துக்களையும் ஜப்பானியர் நாசம் செய்து விடுவார்களோ என்ற பயமும், ஜப்பானியர்களோடு எதிர்த்துப் போராடக் கூடிய படைகளும் தளவாடங்களும் நம் அரசாங்கத்தாரிடம் இருக்கின்றனவா என்னும் சந்தேகமுந்தான் அவர்கள் மனதில் கலக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. சென்ற இரண்டு மாதச் சம்பவங்கள் உண்மையிலேயே இந்தியர்களுக்குக் கலக்கத்தை உண்டாக்கக் கூடியவை தான்.

சென்ற 2½ வருஷங்களாகப் போர் நடந்தும், இந்தியா இதுவரை பாதிக்கப் படவில்லை. இதற்கு லிபியாவில் நம் சாம்ராஜ்யப் படைகள் அடைந்த வெற்றிகள் தான் காரணம். இந்தப் படைகளில், வீரம் மிகுந்த இந்திய சிப்பாய்களும் இருக்கிறார்கள். இவர்கள் மேல் நாட்டிற்குப் போனது போலவே, கீழ் நாடுகளுக்கும் இந்தியப் போர்வீரர்கள் போயிருக்கிறார்கள். அங்கேயும் அவர்கள் வெற்றி யடைவார்கள் என்றும், எதிரிகள் இங்கே தலை காட்ட முடியாதபடி தடுத்து விடுவார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

மலேயாவிலும் பர்மாவிலும் யுத்தம் நடைபெறும்போது ஏற்பட்ட கஷ்டங்களைப்போல், தங்களுக்கும் நேருமோ என்று, பொது ஜனங்கள் பயப்படுவது இயற்கை தான். அங்கே ஜப்பானியர்கள் வெடி குண்டுகளை வீசு முன், அங்கிருந்து தப்பி இந்தியாவிற்கு ஓடி வந்தவர்கள், ஒன்றை பத்தாகப் பெருக்கிச் சொல்லி, பொது ஜனங்களுக்கு ஏற்கெனவே இருக்கும் பயத்தை அதிகப்படுத்தி விட்டார்கள். போதாக் குறைக்கு, நம் எதிரிகளான ஜப்பானியர்கள், தம் ரேடியோ மூலம் செய்யும் பிரசாரத்தினால் பொது ஜனங்கள் அதிக பீதி யடையும் படிச் செய்து விடுகிறார்கள்.

**நிச்சயமாக ஜெயிப்போம்.**

இந்தியாவைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புடையவன் நான். பொய்யான வாக்குறுதிகளை நான் உங்களுக்குச் சொல்ல மாட்டேன். இந்தியாவிற்கு ஆபத்தில்லை என்றும் சொல்ல மாட்டேன். ஆனால் ஒன்று மட்டும் நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்லக் கூடும்.

அச்சு நாடுகளான ஜெர்மனி ஜப்பான் இத்தாலி ஆகியவற்றின் மிருகத் தனத்தையும் கொடுமைகளையும் வென்று முடிவில் நிச்சயமாக ஜெயிப்போம் என்று உறுதி கூறுகிறேன்.

உங்களுக்கு ஆதரவாக பலமான நான்கு அரசாங்கங்கள் இருக்கின்றன. சமாதான காலத்தில் பிரிட்டிஷார்கள் இன்பமாகவே காலங் கழிக்கிறவர்கள் தான். ஆனால் யுத்த காலத்திலேயோ எத்தனைக் கஷ்டங்கள் வந்தாலும் அவற்றை சகித்துக் கொண்டு போராடக் கூடியவர்கள். விட்டுக் கொடுக்கிற வழக்கம் அவர்களுக்கு ஒரு போதும் கிடையாது. இவர்கள் உதவி உங்களுக்கு இருக்கிறது. இரண்டாவதாக சீனர்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய நாகரிகம் மிகவும் பழமையானது. இதைக் காக்க சென்ற 5 வருஷங்களாக, தான் தோன்றி ஜப்பானியர்களுடன் போராடுகிறார்கள். முடிவில் இவர்கள் கட்டாயம் வெற்றி அடைவார்கள். மூன்றாவதாக ரஷ்யர்கள் உதவி இருக்கிறது. தம்மை மிகக் கடுமையாகத் தாக்கிய ஜெர்மானியர்களை இவர்கள் இப்போது விரட்டி யடித்துக் கொண்டிருக்கிறார்கள். நான்காவதாக அமெரிக்காவின் உதவியும் உங்களுக்கு இருக்கிறது. உங்களுக்கு உதவி செய்வதென்று அவர்கள் முடிவு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் வெற்றி நிச்சயமாக நமக்குத் தான் கிடைக்கும். ஆனால், எப்போது கிடைக்கும்? எப்படிக் கிடைக்கும்? என்னும் கேள்விகளுக்கு மட்டும் இப்போது பதில் சொல்ல முடியாது.

**தகுந்தபடி படைகள் இருக்கின்றன.**

இப்போது இந்தியாவைப் பாதுகாக்க, தகுந்த படைகள் இங்கே இருக்கின்றன. பர்மாவிலும் மலேயாவிலும் நாம் ஜெயிக்கக் கூட வில்லை தான். இதைக் கொண்டு, நம்முடைய படைகள் திறமை இல்லாதவை என்றோ, ஜப்பானியப் படை நம் படைகளைவிட மேலானவை

என்றோ முடிவு கட்டாதீர்கள். தகுந்தபடி நாம் ஆயத்தமாய் இல்லாததனால் தான் அங்கே ஜெயிக்கக் கூட வில்லை. இது நமக்கு ஒரு நல்ல படிப்பினை. ஆகையால், அதே குற்றத்தை நாம் இப்போதும் செய்ய மாட்டோம் என்று உறுதி கூறுகிறேன்.

ஜப்பானியர்கள் கடுமையான வீரர்கள் தான். நன்றாகவும் சண்டை செய்வார்கள். ஆனாலும், தனித்தனியாகப் பார்த்தால், நம் போர் வீரர்களும் அவர்களை விட மேலானவர்களாக இருக்கிறார்கள்.

**விமானப் படை தான் முதல் ஆபத்து.**

இந்தியாவிற்கு முதல் ஆபத்து ஜப்பானியரின் விமானப் படை யெடுப்பாகத் தான் இருக்க வேண்டும். இங்கிலாந்திலுள்ள ரொட்டர்டாம் முதலிய நகரங்களை ஜெர்மானியர் தாக்கியபோது அளவு கடந்து குண்டுகளை வீசினார்கள். பொது ஜனங்களின் மனதில் பீதியை உண்டுபண்ண வேண்டும் என்பது தான் அவர்களுடைய நோக்கம். அவர்களுடைய நோக்கம் பலிக்க வில்லை.

ஜெர்மானியர்கள் இங்கிலாந்தை விமானங்களைக் கொண்டு தாக்கியது போலவோ, பிரிட்டிஷார் ஜெர்மனியைத் தாக்கியது போலவோ, அவ்வளவு கடுமையாகவும் இடைவிடாதும் ஜப்பானிய விமானங்கள் இந்திய நகரங்களின் மேல் வீச முடியாது. சிங்கப்பூர் நகரத்தை ஜப்பானியர்கள் பிடிப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு நான் அங்கே போயிருந்தேன். அங்கே ஜப்பானிய விமானங்களால், உயிர்ச் சேதம் எதுவும் உண்டாக்க முடியவில்லை. அங்கே தகுந்தபடி போதுமான விமானப்படைப் பாதுகாப்புக்கள் அமைக்கப்படவில்லை. ஆனால் ஒரு நாள் மட்டும் ஏராளமான விமானங்கள் திடீரென்று வந்து தாக்கின. பாதுகாப்புக்குள் போய்ப் பதுங்கிக் கொள்ள சிங்கப்பூரில் வசித்தவர்களால் முடியவில்லை. அன்றைக்கு மட்டும், சிலர் காயப்பட்டு இறந்து போனார்கள். மற்றபடி ஏ. ஆர். பி. காரர்கள் சொல்லுகிற ஆலோசனைப்படி நடந்துகொண்டால், கண்டிப்பாக ஆபத்தே கிடையாது என்று கூறலாம்.

இப்போது இந்தியா மீது ஜப்பானியர் விமானப் படைகளைக் கொண்டு தாக்கினால், எங்கெல்லாம் தாக்கக்கூடுமோ அங்கெல்லாம் நம் விமான எதிர்ப்புப் பீரங்கிகளை அமைத்திருக்கிறோம். இன்னும் அதிக பீரங்கிகள் இருந்தால் நல்லது தான். இருந்தாலும் சில வாரங்களுக்கு முன்பு இருந்ததை விட எத்தனையோ மடங்கு அதிகமாகப் பாதுகாப்புக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

விமானப் பாதுகாப்புக்கள் மூன்று வகைப்படும்: 1. போராடும் விமானங்கள்; 2. விமான எதிர்ப்புப் பீரங்கிகள்; 3. ஏ. ஆர். பி. ஏற்பாடுகளும் பொது ஜனங்களின் மன உணர்ச்சியும். சமீபத்தில் ஜப்பானிய விமானங்கள் கொழும்புவையும் திரிகோணமலையையும் தாக்கிய போது, முன்னே சொன்ன மூன்று வகைப் பாதுகாப்புக்களும் மிகவும் சிறப்பாக வேலை செய்தன.

நம் பாதுகாப்புக்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. இந்தியா முழுதும் பரவுகின்றன. இருந்தபோதிலும், நான் விரும்புகிற அளவிற்கு இது பெருகி விட்டது என்று சொல்ல மாட்டேன். சில மாதங்களுக்கு முன் எதிரி விமானங்கள் வந்து நம்மைத் தாக்கினால், நம்மைப் பாதுகாத்துக்கொள்ள எந்தவகையிலும் முடியாத நிலைமையில் இருந்தோம். இப்போது நிலைமை அதிகமாக மாறி விட்டது. இன்னும் கொஞ்ச நாட்களில் இன்னும் பலமான பாதுகாப்புக்கள் ஏற்படக் கூடும் என்று எதிர் பார்க்கிறேன்.

**கப்பல் படையால் தாக்கலாம்.**

ஜப்பானியர் கப்பல் படையைக் கொண்டு இந்தியாவைத் தாக்கலாம். தம் படைகளைக் கொண்டு இந்தியாவில் இறக்கவும் செய்யலாம். இதைத் தடுக்க வேண்டுமானால், இந்து மகா சமுத்திரத்தில் நமக்குப் பூரண ஆதிக்கம் இருக்க வேண்டும். இந்த ஆதிக்கம் கூடிய சீக்கிரமே கிடைக்கலாம். இந்தியாவின் கடற்கரை மிகவும் நீளமானது. இது முழுதும் காவல் செய்வது, முடியாத காரியம். ஆனாலும், ஜப்பானியப் படைகள் இந்தியாவில் காலடி எடுத்து வைத்தால், அவற்றை நாசம் செய்து விடக் கூடிய அளவிற்கு, விமானப் படைகளும் தரைப் படைகளும் இங்கே இருக்கின்றன. இவை உடனே விரைந்து சென்று எதிரிகளை நாசம் செய்து விடும்.

நமக்கு ஆபத்து இருக்கிறது என்று தெளிவாகத் தெரிகிறது. அதுவும் மகத்தான ஆபத்துத் தான். இருந்தாலும் மனந் தளரப் படாது. ஒரு படைத் தலைவனும், மற்றவர்களும், இப்படிப்பட்ட சமயங்களில் பதறாமல் சில விஷயங்களைக் குறித்து ஆராய வேண்டும். எதிரிகள் நம்மீது படை யெடுத்து வருவதாக இருந்தால், எவ்வளவு கஷ்டங்களுக்கு அவர்கள் உள்பட வேண்டும். முதலாவதாக, ஜப்பானிய தளங்களுக்கும் இந்தியாவிற்கும் எவ்வளவு தூரம்; இரண்டாவதாக, ஜப்பானியர். எவ்வளவு தூரம் தம் படைகளை அனுப்பிப் போராட வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். மூன்றாவதாக, அவர்கள் இந்தியா மீது படை யெடுத்து வருவதாக இருந்தால், வழியிலேயே விரட்டி யடிக்கப்பட முடியாதபடி, அவ்வளவு பலமான சேனைகளைக் கொண்டு வரக் கூடுமா? நான்காவதாக, அவர்கள் கைப்பற்ற விரும்பும் நாடு எவ்வளவு பரந்தது, முதலிய விஷயங்களை நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

எதிர் காலத்தில் மிகவும் கஷ்டங்கள் உண்டாகலாம். ஆபத்துக்கள் ஏற்படலாம். எனக்கும், பொறுப்புக்கள் மிகவும் அதிகம். இந்தியாவைப் பாதுகாக்கும் பொருட்டு எல்லா வகைகளிலும் உதவி செய்வது என்று பிரிட்டிஷ் சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். வெற்றியடையும் வரையில் போராடியே தீருவோம். இதற்கு நீங்கள் யாவரும் ஒத்து உழைக்க வேண்டும். சமீபத்தில் இந்திய தேசியத் தலைவர்கள் பொது மக்களுக்கு ஒரு சங்கநாதம் ஊதி யிருக்கிறார்கள். எல்லா வகைகளிலும் எதிரிகளைத் தடுக்க வேண்டும் என்று குறிப்



பிட்டிருக்கிறார்கள். கடைசி வரை போராடியே தீர வேண்டும் என்னும் உறுதி உங்களுக்கு ஏற்பட வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள நாம் அனைவரும் ஒரு முகமாக நம் கடமைகளைத் தவறாது செய்து வந்தால், எதற்கும் பயப்பட வேண்டிய அவசியமே கிடையாது. அப்போது, எனக்குள்ள பொறுப்பு மிகவும் குறைந்து விடும்.

இந்தப் பேச்சில் உண்மையான நிலைமையை, நம் படைத் தலைவர், விளக்கிக் கூறுகிறார். நமக்கு ஆபத்து ஏற்படக் கூடுமானாலும், அதைத் தடுத்துக் கொள்வதற்கு வேண்டிய வசதிகள் செய்யப் பட் டிருக்கின்றன. நம் எதிரிகள் இந்தியாவில் கால் அடி வைக்க முடியாதபடி செய்ய நம்மால் முடியும். நமக்கு உதவியாக மகத்தான தேசங்கள் இருக்கின்றன. நாம் எதற்கும் அஞ்ச வேண்டியதே கிடையாது.

# "அடங்க மாட்டோம்! பணிய மாட்டோம்"

## நம்மைத் தாக்குகிறவர்களா விடுவிப்பவர்கள்?

பண்டித நேரு பிரசங்கம்

சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் பிரிட்டிஷ் சர்க்காரின் தூதராக இந்தியாவிற்கு வந்தார். இந்திய அரசியலை மாற்றி அமைப்பதே இவருடைய தூதின் நோக்கம். இவருடைய நோக்கம் நிறைவேற இல்லை. ஆகையால், அவர் திரும்ப இங்கிலாந்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்.

இது பற்றி அவர் இந்தியாவிலுள்ள எல்லா அரசியல் கட்சியினரையும் கலந்து பேசினார். முடிவில் எந்த விதமான பலனும் இதனால் ஏற்பட வில்லை. இந்திய காங்கிரஸ் பிரதிநிதியாக அவருடன் பேசியவர்களில் பண்டித ஜவஹர்லால் நேருவும் ஒருவர். இவர் 11-4-42-ம் தேதி வெளி நாடுகளில் உள்ள இந்தியர்களுக்கு ஒரு செய்தி அனுப்பினார். அதில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

"சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸுடன் நாங்கள் நடத்தும் சமரச முயற்சிகள் எப்படி முடிவானாலும், தம்மால் ஆன வரையிலும் இந்தியாவிற்காக உழைத்து அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு இந்தியனுக்கும் உண்டு. இந்த நிலைமையி லிருந்து தப்பி ஓடி, நம்மைப் பாது காத்துக் கொள்ள முடியாது. இந்தியாவிற்கே ஆபத்து ஏற்பட்டால், நமக்குப் பாதுகாப்பு ஏது? இந்தியா அழிந்தால், நம்மில் யார் வாழ முடியும்? தன்னைக் காக்கும்படி இந்தியத் தாய் தன் மக்களைக் கூவி அழைக்கிறாள். இந்தியர்களாகப் பிறந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தன் கடமையைச் செய்யத் தவறக் கூடாது."

சமரசப் பேச்சு முறிந்த பிறகு 19-4-42-ம் தேதி இந்தியப் பத்திரிகாசிரியர் சங்கத்தார் அவருக்குக் கல்கத்தாவில் ஒரு விருந்து அளித்தார்கள். அப்போது அவர் கூறி யிருக்கும் வார்த்தைகளை இந்தியர்கள் ஒவ்வொருவரும் நன்றாக ஆலோசித்துப் பார்க்க வேண்டும். அவர் அப்போது கூறியதாவது:—

"எதிரிகள் நம் தலைவாசலில் இருக்கிறார்கள். நாம் இதை அசட்டை செய்ய முடியாது. இந்தியாவைத் தாக்க வருகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை எதிர்க்கத் தான் வேண்டும் என்னும் மன உறுதி நமக்கு ஏற்பட வேண்டும்."

"இப்போதுள்ள நிலைமையில் நாம் நம் அரசாங்கத்திற்கு எந்த விதமான கஷ்டமும் உண்டாக்கக் கூடாது.

**அரசாங்கத்திற்குக் கஷ்டம் உண்டாக்கக் கூடாது.**

கஷ்டம் உண்டாக்க வேண்டும் என்னும் எண்ணமே அருவருக்கத் தகுந்தது. நாம் இப்படிப்பட்ட எண்ணங் கொண்டால், எதிரிகளுக்குத் தான் ஊக்கம் உண்டாகும்.

எதிரிகள் நம்மைத் தாக்கினால் நாம் என்ன செய்ய வேண்டும் என்னும் கேள்வி பிறக்கக் கூடும். இதற்குத் தெளிவான பதில் எதுவும் சொல்லுவதற்கு இல்லை. ஆனால், ஒன்று மட்டும் சொல்லலாம். யார் எதிர்த்து வந்தாலும் "அடங்கமாட்டோம்; பணியமாட்டோம்."

அந்நிய நாட்டுப் படை நமக்கு விடுதலையைத் தேடித் தரும் என்ற எண்ணமே கூடாது.

**நம்மைத் தாக்க வருகிறவர்களா விடுவிக்கிறவர்கள்?**

இது கையால் ஆகாத நாட்டின் போக்கு. ஊறிப்போன அடிமை மனம் உடையவர்கள் தான் அப்படி நினைப்பார்கள்.

பெல்ஜியம் சிறிய நாடு. ஆகையால், ஜெர்மானியர்கள் வெகு சுலபமாகத் தாக்கி, கைப்பற்றி ஆளத் தலைப்பட்டு விட்டார்கள். ஆனால், இந்தியாவோ சீனாவைப் போலப் பரந்த நாடு. இங்கே, இராணுவங்களின் போக்கு, மிகச் சிறிய எல்லைக்குள்ளாகத் தான் இருக்கும். இந்த எல்லைகளுக்கு வெளியே இருக்கிறவர்கள், எதிரிகளோடு ஒத்து உழைக்காமல் எவ்வளவோ காரியங்களைச் செய்யலாம்.

அல்லாமலும் 'யாருக்கும் அடங்க மாட்டோம்; பணியமாட்டோம்' என்னும் உணர்ச்சி ஒவ்வொருவர் மனத்திலும் பதிந்து இருக்க வேண்டும். மேலும், நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் ஒவ்வொரு படையைத் திரட்டி அமைக்க வேண்டும். இந்தப் படைக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் மற்ற சாதனங்களையும் அந்தந்தக் கிராமத்தாரும் நகரத்தாரும் அவர்களுக்கு உதவ வேண்டும். இந்தப் படையினர் தம் கிராமத்தையும் நகரத்தையும் பாதுகாக்க வேண்டும்.

பிரிட்டிஷாரோடு ஒத்துழைக்கக் கூடாது என்று இந்திய மக்கள் ஒருவேளை நினைக்கலாம். இந்தக் கேள்விக்கே இது அல்ல சமயம். ஏன் என்றால், நாம் பிரிட்டிஷாரோடு ஒத்துழைக்க வில்லை என்பதற்கு, ஜப்பானியர்களான எதிரிகளை வரவேற்கிறோம் என்று தான் பொருள். உண்மை நிலையை நாம் உணரவேண்டும். பழைய பாட்டுக்களைப் பாடிக்கொண் டிருப்பதனால், எந்த விதமான பலனும் கிடையாது. நிலைமை மாறிக் கொண்டிருக்கிறது; அது போலவே, நம் போக்கையும் கொள்கையையும் கூட மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். இதனால், இந்தியாவின் விடுதலை, இந்தியாவின் பாதுகாப்பு ஆகிய நம் இலட்சியங்களை விட்டு விடக் கூடாது.

## எதிர் பார்த்தபடியே!

'பல்லை உதிர்த்துக் கையிலே கொடுத்துடுவேன் தெரியுமா?' என்றானாம் ஒருவன்.

'நீங்க பல்லை உதிர்த்துக் கொண்டிருக்கிற போது, எங்க கை என்ன புளியங்காய் பறிக்கப் போயிருக்குமா என்ன?' என்றானாம் மற்றொருவன்.

அது மாதிரி, ஜப்பான், சென்ற நாலு மாத காலமாக, ஏகமாக அட்டகாசம் செய்து கொண்டு வந்தது என்றால், அந்த நிலைமை அப்படியே நீடித்திருக்கும்; அமெரிக்காவும், நேச நாட்டினரும் அதை யெல்லாம்\ அப்படியே சும்மா பார்த்துக் கொண்டே இருப்பார்கள் என்று நினைக்கலாமா? அவ்வாறு யாராவது நினைத்திருந்தால் அது சுத்த அசட்டுத்தனம் தான்! ஜப்பானியருக்கே தெரியுமே இது! அமெரிக்காவிற்கு உள்ள சக்தி அபாரமானது. அந்த நாட்டிலிருந்து கிளம்பும் 'பறக்கும் கோட்டைகள்' இன்று உலகிலே பல மூலை முடுக்குகளுக்குக் கூடப் போய், வெளுத்து வாங்கிக் கொண்டிருக்கின்றன. சதா சர்வ காலமும் ஆனந்தமும், இன்பமும் கலந்த வாழ்க்கையிலேயே மூழ்கி யிருந்த அமெரிக்கர், ஏகமனதாக, யுத்த முயற்சியில் ஈடுபட்டு விட்டனர். அங்குள்ள தொழிற்சாலைகள், எல்லாம் யுத்தத்திற்கான பொருள்களையே தயாரிக்கின்றன. தேசத்திலே உள்ளவர் எவர் சொத்துக்களை வேண்டுமானாலும், யுத்தத்திற்குத் தேவையானால், சர்க்கார் எடுத்துக் கொள்ளலாம்' என்றொரு சட்டத்தை தலைவர் ரூஸ்வெல்ட் நிறைவேற்றியிருக்கிறார். பொது ஜனங்களிடை இருந்து இதற்கு எத்தகைய எதிர்ப்புமில்லை. எப்படியாவது நேசநாட்டினரின் விரோதிகளை ஒழித்தே தீரவேண்டும் என்ற திடமான எண்ணம் அமெரிக்கர்களிடையே ஏற்பட்டு விட்டது.

அங்கு இப்பொழுது, ஆடவர்கள் அணிவது போன்ற நீண்ட கால்சராய், சட்டை ஆகியவற்றையே ஸ்திரீகளும் அணிய ஆரம்பித்து வருகிறார்களாம். தொழிற்சாலைகளிலே சேர்ந்து வேலை செய்யும் மாதர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதி வேகமாக உயர்ந்து கொண்டே போகிறதாம். வேலை செய்வதற்கு ஆடவர் அணிவது போன்ற உடைதான் சௌகரியமா யிருக்கிற தென்று கண்டு கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

மளமளவென யுத்தக் கப்பல்களும், விமானங்களும், டாங்கிகளும் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப் படுகின்றன. இந்தியாவிற்கும், ரஷ்யாவிற்கும், ஆஸ்திரேலியாவிற்கும் அங்கிருந்து கப்பல் கப்பலாக சாமான்களையும், ஆட்களையும் ஏற்றி அனுப்புகிறார்களாம்.

இத்தனையும் ஜப்பான்காரனுக்குத் தெரியாது என்றா நினைக்கிறீர்கள்? கட்டாயம் தெரியும்! ஜெர்மனியின் வலுக்கட்டாயத்தின் பேரிலும், பேராசையாலும், ஜப்பான், தன்னை விட மகா பலசாலியான அமெரிக்காவுடன் சண்டைக்குப் புறப்பட்டிருக்கிறது என்பது நாமறிந்த ரகசியம். எடுத்த எடுப்பிலேயே திப் திப்பென்று தாக்கி, கிடைத்ததைச் சுருட்டிக் கொள்ளலாம் என்று புறப்பட்டது ஜப்பான். அது எதிர் பார்த்ததை விட, அதி வேகமாகவே அதற்குத் தொடர்ந்தாற்போல் வெற்றிகள் பல கிடைத்தன.

ஆனால், எந்த நிமிஷத்திலும் அமெரிக்கரும், நேச நாட்டினரும் ஜப்பானைத் தாக்கக் கூடும் என்பது ஜப்பானியருக்குத் தெரிந்தது தான். 'தினே தினே பலம் பெற்று வரும் அமெரிக்கர்கள், கூடிய சீக்கிரமே ஜப்பானிய பூமியிலே குண்டுகளை வீசத்தான் போகிறார்கள்' என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூடச் சொன்னார். அது வெறும் விளையாட்டுப் பேச்சாகப் போகவில்லை.

சென்ற வாரம், சனிக்கிழமை யன்று, நடுப்பகல் வேளையிலே, ஜப்பானிய முக்ய நகரங்களான டோகியோ, யோகஹாமா, கோபி ஆகிய இடங்களில் உள்ள ஜப்பானியர் மீது, அமெரிக்க விமானங்கள் குண்டுகளாகிய அக்ஷதையைத் தெளித்து, ஏழு மணி நேரம் அந்நாட்டிலே அபாய அறிவிப்புச் சங்குகளை ஊளையிட்டுக் கொண்டிருக்கச் செய்துவிட்டு, மறைந்துவிட்டன என்ற செய்தியை ஜப்பானிய செய்தி ஸ்தாபனம் ஒன்று வெளியிட்டது. சனிவாரம் என்பது நல்ல ஸ்திர வாரம் என்பார்கள். ஆகவே, அன்றையதினம் ஆரம்பித்த காரியங்கள் தொடர்ந்து, ஸ்திரமாகவே நடந்து வரும் என்றும் சொல்லுவார்கள். அதன் பிரகாரமே, டோக்கியோ நகரில் தொடர்ந்தாற்போல், சில தினங்கள் அபாய அறிவிப்புச் சங்குகள் ஊதிக்கொண்டே இருந்தனவாம்.

ஜப்பானில் குண்டுகள் விழுந்தே தீரும் என்று எதிர்பார்த்தது தான். எதிர்பார்த்தபடியே அங்கு குண்டுகள் விழுந்தன. அமெரிக்காவிலும், சீனாவிலும், பிரிட்டனிலும் உள்ளவர்கள், இச்செய்தியைக் கேட்டு அளவிலாத ஆனந்தத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள்.





### ரஷ்யாவில் புதிய ஜெர்மானிய வேட்டை விமானத்தின் கதி

இந்த ஜெர்மானிய புது விமானம் (109 F fighter) சோவியத் விமானஞ் சுடும் பீரங்கியால் வீழ்த்தப்பட்டது அதை ரஷியப் போர் வீரர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இதன் விமான ஓட்டி லெட்டினென்ட் ரேயின்ஹார்ட் ஹேய்ன் ஒரு பகுதித் தலைவராக யுத்தந் தொடங்கிய காலத்தில் பிரான்சிலும் பிரிட்டனிலும் விமானப் போர் செய்திருக்கிறார். இப்போது அவர் சோவியத்தாரின் கைதியாக இருக்கிறார்.

யுத்தம் என்றால் என்னவென்றே இத்தனை நாட்களாக ஜப்பானிய நகரங்களில் வசிப்பவர்களுக்குத் தெரியாது. சீனர்கள் ஜப்பானியரது எதிர்ப்பை வெற்றிகரமாகச் சுமார் ஐந்து வருஷங்களாக சமாளித்து வருகிறார்களே ஒழிய, ஜப்பானிய நகரங்கள் மீது சென்று குண்டுகளை வீச, அவர்களிடம் போதுமான சாதனங்கள் இல்லை. ஆகையால் யுத்த ரசத்தைப் பருக ஜப்பானியப் பொது மக்களுக்கு இதுவரை சந்தர்ப்பமே வாய்க்காமல் இருந்தது. அந்தக் குறை இனி இராது.

குண்டுகள் விழுந்ததும், ஜப்பானிய மந்திரிகள், தங்கள் ராஜாவிடம் 'க்ஷேமமாக இருக்கிறேளா?' என்று கேட்க ஓடினார்களாம். அவர் நிம்மதியாக உட்கார்ந்திருந்தாராம். ஆனாலும் கவலை ததும்பிக் கொண்டிருந்ததாம் அவர் முகத்திலே. ஐயோ பாவம்! அவர் என்ன செய்வார்? யுத்த வெறி பிடித்த அவரது ராணுவ மந்திரிகள் ஜப்பானைப் போரிலிறக்கி விட்டால், அதனால் ஏற்படும் பலாபலன்களை பொது ஜனங்கள் மட்டுமில்லாமல், ராஜாவும் சகித்துத் தானே தீரவேண்டும்!

'அப்படி அடிடா சிங்கம்!' என்று ஜப்பான் மீது குண்டெறிந்தவர்களை அமெரிக்காவில் பாராட்டி வருகிறார்களாம். முதன் முதலில் குண்டு வீசியவர் யார் என்பதைத் தெரிந்து கொண்டு, அவருக்குப் பரிசுகள் அளிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

அது என்னய்யா அப்படி, அவ்வளவு ஆனந்தம் என்று கேட்கலாம். அதிலே இருக்கு விஷயம். ஜாப்பானில் குண்டு வீச்சு என்றால், யுத்தத்தின் போக்கே மாறுமோ, இல்லையோ? இத்தனை காலமாக, குள்ளத் தம்பி சண்டப்பிரசண்டமாக, தட்டி அடக்க ஆள் இல்லாமல், சுற்றி வந்துகொண்டிருந்தான். இனிமேல், சொந்த ஊரைக் காக்கவேண்டும் என்ற நினைவும் ஏற்படுமா இல்லையா?

ஜப்பான் அருகே மூன்று பெரிய அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல்கள் வந்திருக்கின்றன என்று ஜப்பானியச் செய்தி ஒன்று கூறுகிறது. ஜப்பானிய செய்தி ஸ்தாபனத்திற்குத் தெரியாமல், என்னென்ன படைகள் ஜப்பான் அருகே இருக்கின்றனவோ தெரியாது.

ஆனால், வெகு சீக்கிரமே, ஜப்பானை, சீனாவிலிருந்தும், அமெரிக்காவின் வடகோடியான அலாஸ்கா பிரதேசத்திலிருந்தும், இந்தியாவிலிருந்தும் தாக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்று சில அமெரிக்க நிபுணர்கள் கூறுகிறார்கள்.

சென்ற பத்து நாட்களாகவே, ஜப்பானியரைப்பற்றிய செய்திகள் அதிகமாக இல்லை. 'இதோ வந்துட்டான்! அதோ அங்கே போறான்! போடப் போறான் குண்டு! போட்டான் அங்கே!' என்ற பரபரப்பான செய்திகள் நான்கைந்து நாட்களுக்கு வந்து கொண்டிருந்தன. ஜனங்களிடை அது காரணமாக, கொஞ்சம் காபராவும் ஏற்படத்தான் செய்தது. ஆனால், அதெல்லாம் அடங்கி விட்டது.

வங்காளக் குடாக் கடலில் தென்பட்ட, ஜப்பானியக் கப்பற் படை எங்கோ மாயமாகப் பறந்து விட்டது. நேச நாட்டினர் ஜப்பானியரை ஆங்காங்கே நொறுக்கித் தள்ள ஆரம்பித்திருக்கும் செய்திகள் ஒவ்வொன்றாக வந்து கொண்டிருக்கின்றன.

தென்மேற்கு பசிபிக் பிரதேசத்திற்கு, ஜெனரல் மாக்ஆர்தரை சர்வாதிகாரம் கொண்ட சேனாபதியாக நியமித்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியா ஒரு நாளைக்கு பத்துக்கோடிப் பவுன் யுத்தத்திற் கென்று செலவழித்து வருகிறது. அமெரிக்க உதவியோ, சராசரியாக வந்து குவி

கிறது. முன்னேறித் தாக்கும் சக்தி தனக்கு அதிகரித்திருக்கிறது என்பதை ஆஸ்திரேலியா நன்றாகக் காட்டி வருகிறது. ஜப்பானியர் பிடித்துக் கொண்டு, கால் வைத்துள்ள தீவுகள் பலவற்றை, ஆஸ்திரேலியாவிலிருந்து செல்லும் விமானங்கள் த்வம்சம் செய்து வருகின்றன. ஜப்பானியருக்கு இங்கெல்லாம் ஏக நஷ்டம்.

ஆனால், சென்ற தடவை உங்களைச் சந்தித்ததற்கு அப்பால், பிலிப்பைன் தீவிலிருந்து ஒரு கெட்ட செய்தி வந்தது. பதினாயிரக் கணக்கில் உள்ள பல அமெரிக்க, பிலிப்பைன் வீரர்கள், படான் தீபகற்பத்தில், மூன்று மாதம், வெளி உதவியின்றி, தீரமாகப் போராடிவிட்டு, கடைசியாக உடம்பில் வலுவில்லாது போனபின், ஜப்பானியருக்கு விட்டுக்கொடுத்தார்கள். இந்தப் போரில், ஜப்பானியர் எண்ணற்ற வீரர்களையும், விமானங்களையும், கப்பல்களையும் இழந்திருக்கிறார்கள். அவர்களிடம் சுமார் அறுபதாயிரம் பேர்கள் கைதியாகவோ, காயம்பட்டோ அகப்பட்டிருக்கிறார்கள். பிலிப்பைன் யுத்தம் இன்னும் தீரவில்லை. காரிக்டார் என்னுமிடத்தில் அது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

இதற்கு மத்தியில் ஜப்பானியர், பிலிப்பைன் தீவுக் கும்பலில், தெற்கே உள்ள சில தீவுகளைப் பிடித்துக் கொண்டார்கள். அங்கும் அவர்களுக்கு எதிர்ப்பு இல்லாமலில்லை.

இன்றில்லா விட்டாலும், நாளை, ஆஸ்திரேலியாவில் போதுமான பலம் சேர்ந்ததும், நேசநாட்டினர் முன்னேறித் தாக்கக்கூடும்; அதற்கான திட்டங்களை வகுக்குமாறு, மாக் ஆர்தருக்குக் கூட உத்திரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது என்பது ஜப்பானியருக்குத் தெரியும். அதனால்தான், அவர்கள், ஆஸ்திரேலியாவிற்கும், ஜப்பானுக்கும் நடுவில் உள்ள தீவுகளில் எல்லாம் நன்றாக வேரூன்றிக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

பர்மாவிலே அவர்களுடைய கை ஓங்கித்தானிருக்கிறது. ஆனாலும், அவர்களுடைய முன்னேற்ற வேகம் ஒன்றும் பிரமாதமாக இல்லை, பர்மாவில் ஓரிடத்தில், மாதம் பத்து லக்ஷம் காலன் உற்பத்தி செய்யும் எண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. அந்த இடத்தை ஜப்பானியர் பிடிக்க வந்தார்கள். ஆனால் பிரிட்டிஷ் படைகள் அங்குள்ள கிணறுகளை அழித்து விட்டுப் பின்வாங்கினார்கள். அவ்வாறு கிணறுகள் அழிக்கப் படுவதை, ஜப்பானியர் தடுக்க முயற்சித்தும் பிரயோசனப் படவில்லை. அதோடு மட்டுமில்லை, சில தினங்களுக்கு அப்பால், சீனத் துருப்புகள், ஜப்பானியரை அந்தப் பிரதேசத்தை விட்டே ஓட்டி விட்டார்கள்.

இத்தனை காலமாக, ஜப்பானியருக்கு எங்கும் முன்னேற்றமாக இருந்தது. ஆகவே இந்த ஒரு பின்னேற்றம் அவர்களிடை திகிலை உண்டு பண்ணியிருக்கலாம்.

இந்தியாவிலிருந்து, குண்டு வீசும் விமானங்கள் பர்மா, அந்தமான் ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று, வெற்றிகரமாக போர்ட் ப்ளேர், ரங்கூன் ஆகிய இடங்களில் குண்டுகளை வீசி, துறைமுகம், கப்பல்கள் ஆகியவற்றைப் பாழடித்து விட்டு வந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் ஜப்பானியரோ, மானசீகமாகவே பல நேச நாட்டுக் கப்பல்களை ஜலத்துக்கடியில் மூழ்கடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு பிரதேசத்தில் பதினைந்து கப்பல்களை மூழ்கடித்ததாக அவர்கள் தெரிவித்தார்கள். என்னடா என்று பார்க்கப் போனால், அந்தப் பிரதேசத்தில் அன்று நேச நாட்டுக் கப்பல்களே போகவில்லை என்று தெரிந்தது. பேச்சாலேயே கப்பல்களை மூழ்கடிப்பதும் ஒரு தமாஷ் தானே!

ஜப்பானியருக்கு தற்சமயம் இந்துமகா சமுத்திரத்தில் கொஞ்சம் வாலாட்ட சான்ஸ் இருக்கிறது. ஆனால், இதற்கு ஹிட்லரின் வசந்த காலப் போர் தான் உதவி செய்யக் கூடும். "ஹிட்லர் என்னடா என்றால், வசந்த காலம் வரட்டும், வரட்டும் என்று கூறிக்கொண்டிருந்தவர், வசந்த காலம் நெருங்க, நெருங்க ஏதும் செய்வதாகவே காணோம்". ஜப்பானியருக்கு இதனால் ஜெர்மானியர் மீது சந்தேகம் ஏற்பட இடமிருக்கிறது. ஹிட்லர் தடபுடலாகப் போரைத் தொடங்கினால், ஜப்பானியரும் குஷியாக மடகாஸ்கர் பக்கம் போய் வாலை ஆட்டலாம்.

ஆனால், ஹிட்லருக்கு உள்ள அவஸ்தைகள் ஜப்பானியருக்குப் பூரணமாகத் தெரியப் போகிறதா என்ன?

அவருடைய பேச்சுக்களில் முன்பிருந்த கேலி இல்லை. 'வெளுத்து வாங்கப் போகிறோம் பாருங்கள்' என்று கூறிக்கொண்டிருந்தவர், 'ஐயா! ஜெர்மன் மக்களே! நேச தேசத்தார் ஜெயிப்பதானால், நம் பாடு அரோஹரா தான்! ஆகவே, சகல கஷ்ட நஷ்டங்களையும் சகித்து, யுத்தத்திற்கு உதவுங்கள். ருஷ்யாவிலே நம்மவர்கள் பனிக் காலத்தில் பட்ட பாட்டிற்கு, நீங்கள் படும் கஷ்டம் பிரமாதம் இல்லையே!' என்று சொல்லி வருகிறார்.

அமெரிக்காவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் பலர் பேசுகிற தினுசைப் பார்த்து, ஹிட்லருக்கு வயிற்றிலே புளியைக் கரைத்து விட்டதுபோலிருக்கிறாப் போலிருக்கிறது. பிரிட்டனிலே பெரிய கனடியப் படை ஒன்றும், அமெரிக்கப் படை ஒன்றும் இருக்கிறது. இப்படையினர் அவ்வப்போது, ஹிட்லர் பிடித்த நாடுகளில் போயிறங்கி, பல இடங்களைப் பாழடித்து விட்டு வருகிறார்கள்.

சமீபத்தில் ஒரு நாள், பட்டப் பகலில் சீமையிலிருந்து ஒரு டஜன் விமானங்கள் கிளம்பின. தரைக்குமேல் முப்பது அடி உயரத்திலேயே பறந்து பிரான்ஸைக் கடந்து, துரத்த வந்த ஜெர்மன் விமானிகளைத் துரத்தியடித்து விட்டு, நேரே ஹிட்லர் வாசம் செய்யும் மலைப் பிரதேசத்திற்குச் சில மைல்களுக்கு அருகேயுள்ளதோர் பெரிய தொழிற்சாலை நகர் மீது தைரியமாகக் குண்டுகளை வீசி, கண் குளிர, அந்த நகரில் உள்ள பெரிய தொழிற்சாலைகள் தூளாவதைப் பார்த்து விட்டுத் திரும்பினார்கள். தினசரி 300, 400 விமானங்கள் பகலிலும், இரவிலும் ஜெர்மனியிலும், ஜெர்மனி பிடித்துள்ள பிரதேசங்களிலும் குண்டுகள் வீசி வருகின்றன. யுத்த ஆரம்பமானது முதல் பிரிட்டிஷ் விமானிகள், பத்தாயிரம் ஜெர்மன்



விமானங்களை அழித்திருக்கிறார்களாம். ஒவ்வொரு கப்பலிலும் இடமுள்ளவரை பிரிட்டிஷ் சிப்பாய்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றி அனுப்பப்படுகிறார்கள். தினம் அறுநூறு கப்பல்கள் பல கடல்களில் ரோந்து சுற்றி வருகின்றன. பிரிட்டனில், போலந்து, பெல்ஜிய, நார்வீஜியப் படைகள் சேர்க்கப்படுகின்றன. 'உடனே ஜெர்மனியைத் தாக்க வேண்டும்' என அமெரிக்காவிலிருந்தும், ருஷ்யாவிலிருந்தும் ஒலிகள் கிளம்புகின்றன.

இதை யெல்லாம் பார்த்தார் ஹிட்லர். நமக்கு முந்தி இவர்கள் கிளம்பிவிட்டால் நம் கதி அதோகதி யாச்சே என்ற பீதி ஏற்பட்டிருக்கிறது அவருக்கு. தான், ருஷ்யாவைத் தாக்கிக்கொண்டிருக்க, மேற்குத் திசையிலே பிரிட்டிஷ், அமெரிக்கப் படைகள் பொங்கி எழுந்துவிட்டால் என்ன செய்வது என்ற உதறல் ஏற்பட்டது.

என்னடாப்பா செய்வது என்று, பிரான்ஸிலே தனக்கு வேண்டியதோர் ஆளை வைத்து விட்டால் கொஞ்சம் பயமில்லாதிருக்கலாம் என்று எண்ணினார். லவால் என்ற தன் கையாளை, பிரான்ஸ் தேசத்திற்கே சர்வாதிகாரியாக ஆக்கினார். கிழவர் பீத்தானால் இதைத் தடுக்க முடியவில்லை. எது வந்தாலும் லவாலுக்கு இடங் கொடோம் என்று கூறிக்கொண்டிருந்த அட்மிரல் டார்லானுக்கும், ஒரு துண்டு எலும்பை வீசுவதுபோல், சகல சேனைகளுக்கும் அவரை அதிபதியாக்கச் செய்தார்.

லவால் பிரான்ஸ் தேசத்தின் அதிகாரியானதும், எதிர்பார்த்தபடியே பிரஞ்சுக் கடற்படையை எல்லாம் ஜெர்மனிக்குத் தானம் செய்து விட்டார் அவர். பல நவீன யுத்தக் கப்பல்களும், நாசகாரிகளும், சப்மரைன்களும், விமானந் தாங்கியும், பல வியாபாரக் கப்பல்களும் கொண்ட பிரஞ்சுப் படை ஜெர்மனி வசமாகி விட்டது. இந்தோ சீனாவில் உள்ள பிரஞ்சுக் கப்பற்படை, ஜப்பான் வசமாகும்போலிருக்கிறது. இத்தகைய துரோகச் செயலைச் செய்தது போதாமல், 'ஜெர்மனியோடு சேர்ந்தால் தான் சுகமுண்டு. ஆகவே நான் ஜெர்மனிக்கு சகல உதவியும் செய்யப் போகிறேன், என்னை யாரும் தடுக்க முடியாது' என்று லவால் பகிரங்கமாகக் கூறிவிட்டார். ஹிட்லருக்குக் கொஞ்சம் கவலை விட்டது.

ஆனாலும் முழுக் கவலை விட்டது என்று சொல்ல முடியாது. அவ்வாறு விட்டிருந்தால் அவர் ஏன் நார்வேயிலே பெரிய டாங்கிப் படையைக் கொண்டு வைத்திருக்கிறார்? உள்ளூரப் பயம் தான்!

ருஷ்யா பக்கம் திரும்பினால் அவருக்கே கஷ்டமாக இருக்கிறது. லெனின்கிராட் லேசில் விழுவதாகக் காணோம். அந்தக் கோபத்தில் அங்குள்ள சேனாபதியை 'டிஸ்மிஸ்' செய்தார். அவ்வளவு தானே செய்யலாம், அதற்கு மேல்?

ருஷ்யர்கள் பாடு கொண்டாட்டம் தான். சென்ற ஒன்பது மாதங்களில் அவர்கள் 38 ஆயிரம் ஜெர்மன் விமானிகளை மண்ணைக் கௌவ அடித்திருக்கிறார்கள். தினம் பல வெற்றிச் செய்திகள் போர் முனையிலிருந்து வருகின்றன. வட திசையில் பனி மழையும் புயலும் நிற்கவில்லை. பனி உருக, எங்கும் சேறாக, ஜெர்மானியர் சேற்றில் சிக்கித் தவிக்கின்றனர். ருஷ்யர்கள் அவர்களை உதைக்கிறார்கள்.

பின்னிஷ் படைகளையும் ருஷ்யர்கள் விரட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். ஜெர்மன் படை வரிசைகளுக்குப் பின்னால், ருஷ்யக் குரங்குப் படை பிரமாத சேஷ்டை செய்து வருகிறது. ஜெர்மானியரது பெரிய படையெடுப்பு ஆரம்பமாகும் காலம் எது வென்று தீர்மானமாகத் தெரியவில்லை. வசந்த காலம் போய், கோடை வரட்டும் என்று இருக்கிறாப் போலிருக்கிறது அவர்கள். அதுவரை ருஷ்யர்கள் சும்மா இருப்பார்களா என்ன?

ஜெர்மானியர் மால்டாவைத் தவிடு பொடியாக்கப் பார்க்கிறார்கள். அந்தத் தீவில் பல பாகங்கள் தவிடு பொடியான போதிலும், அங்குள்ள வீரர்களின் தைரியம் குலையவில்லை. அது குலையாத வரை, ஹிட்லரின் புதுத் திட்டங்கள் எல்லாம் பாழாகத் தான் செய்யும்.

லிபியாவில் மணல் காற்றடிக்கும் காலம் மாறி விட்டதாம். இனி அங்கு பெரிய யுத்தம் நடக்கலாம்.

நம் விஷயம் என்ன? 'பாதுகாப்பற்ற நாடில்லை இது இனிமேல்! சாத்யமான வரை விமானங்களைச் சுடும் பீரங்கிகளும், விமானங்களும் இங்கு வந்திருக்கின்றன. நாம் தோற்கவே போவதில்லை. ஜப்பானியரால் நம்மைப் பிரமாதமாக ஏதும் செய்து விட முடியாது. நாம் மட்டும் தைரியமாக இருக்கும் இடத்திலேயே, ஏ. ஆர். பி. விதிகளை அறிந்து, அதன்படி நடந்து; ஒற்றுமையாக இருந்தால், யாரும் நம்மை அசைக்க முடியாது' என்று சேனாபதி வேவல் கூறியிருக்கிறார். அவர் சொல்லுகிறபடி செய்வது உங்களுக்குச் சிரமமா என்ன?

# மலேயாவில் தென்னிந்தியத் தொழிலாளர்கள் நிலைமை

## ஜப்பானிய முதலாளிகளின் இரக்கமற்ற தன்மை

மலாய் நாடு வளப்பமான நாடு. நல்ல பருவ மழை உண்டு. உயிர் வாழுவதற்குத் தண்ணீர் மிகவும் அவசியம். வேண்டிய மழை பெய்கிற போது மலேயாவில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படக் காரணமே இல்லை. இருந்தாலும் இந்தத் தண்ணீரைத் தகுந்தபடி பயன் படுத்தினால் தான் நன்மையுண்டு. இல்லா விட்டால், பெய்யும் மழை எல்லாம் நேரே கடலில் போய்க் கலந்து விடும். தண்ணீரைத் தகுந்தபடி பயன்படுத்தி சாகுபடி செய்வதில், தென் இந்தியர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். ஆகையால் தென்னிந்தியர்களை மலேயாவிற்கு அழைத்துக் கொண்டு போக, அந்த நாட்டு அரசாங்கம் முயன்றது. இலட்சக் கணக்கான தென் இந்தியர்கள் அங்கே போய் நிலத்தைச் செப்பனிட்டார்கள். சாகுபடி செய்தார்கள். அதை ஒரு

பொன் கொழிக்கும் நாடாகச் செய்து விட்டார்கள். இதனால், அங்கிருந்த தோட்டக்கார முதலாளிகள், ஏராளமான இலாபம் அடைந்தார்கள். ஐரோப்பியர்களும் ஜப்பானியர்களும் ஒரு சில சீனர்களும் தான் தோட்ட முதலாளிகள்.

ஒரு ஐரோப்பியத் தோட்ட முதலாளி சமீபத்தில் மலேயாவிலிருந்து இந்தியாவிற்கு வந்திருக்கிறார். மலேயாவை ஜப்பானியர்கள் தாக்கும் முன்பு அங்கிருந்த ஜப்பானியத் தோட்ட முதலாளிகள் தொழிலாளர்களிடம் எப்படி நடந்து கொண்டார்கள் என்று அவர் விளக்கிச் சொன்னார். அது பின்வருமாறு:—

"நான் சமீபத்தில் தான் இங்கே வந்தேன். இங்கே இருப்பவர்களில் சிலர் ஜப்பானியர்களைப் பற்றிய உண்மை விவரங்களைத் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் என்று நன்றாகத் தெரிகிறது. இப்போது இருப்பது போலவே தான், ஜப்பானியர் ஆட்சியிலும் தாம் வாழக்கூடும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது சுத்தப் பிசகு."

"மலேயாவில் ரப்பர் தோட்டங்கள் ஏராளம். அங்கே வேலை செய்கிறவர்களில் 100 க்கு 90 பேர் தென் இந்தியர்கள். எனக்கு 23 வருஷங்களாக ரப்பர் தோட்ட அனுபவம் உண்டு. ஜப்பானியர்களுக்குச் சொந்தமான தோட்டங்களுக்கு அடுத்த தோட்டங்களில் நான் இருந்திருக்கிறேன். ஜப்பானியர் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களின் சுகாதாரத்தைக் குறித்தோ, மற்ற நன்மைகளைக் குறித்தோ, அந்த முதலாளிகள் கொஞ்சங்கூட அக்கரை கொள்ளுவதே கிடையாது. ஏறக்குறைய எல்லாத் தொழிலாளருக்கும் மலேரியாக் காய்ச்சல் வருவது உண்டு."

"ஜப்பானியர்களுக்குச் சொந்தமான 3 தோட்டங்களை ஒன்றின் பின் ஒன்றாக நான் வாங்கினேன். அப்போது, அங்கிருந்த தொழிலாளர் வீடுகளைத் திருத்திக்கட்டவும் மலேரியாக் காய்ச்சலைத் தடுக்கவும் நான் பெருந் தொகைகள் செலவு செய்யும்படி நேர்ந்தது. இவற்றை செய்து முடித்த பிறகு தான், நான் அத்தோட்டங்களில் சரியானபடி வேலை ஆரம்பிக்க முடிந்தது."

"அப்படியானால், ஏன் தொழிலாளர்கள் ஜப்பானியர் தோட்டங்களுக்கு வேலைக்குப் போனார்கள் என்னும் கேள்வி பிறக்கக் கூடும். வேலைக்காரர்களுக்கு மற்ற தோட்டங்களை விடக் கொஞ்சம் அதிகச் சம்பளம் தருவதாக ஜப்பானிய முதலாளிகள் விளம்பரப் படுத்துகிறார்கள். தொழிலாளர்கள் ஏழைகள். பணம் சம்பாதிக்க வேண்டும் என்னும் நோக்கத் தோடேயே தென் இந்தியாவிலிருந்து மலேயாவிற்குப் போனவர்கள். ஆகையால், கைநிறைய பணம் சம்பாதிக்கலாம் என்னும் ஆசையால், ஜப்பானியர் தோட்டங்களுக்கு வேலைக்குப் போகிறார்கள். இப்படிப் போனவர்கள் அநேகம் பேர் மலேரியா காய்ச்சல் முதலிய நோய்களுக்கு ஆளாகி, அங்கிருந்து தப்பி ஓடி, ஐரோப்பிய முதலாளிகள் தோட்டங்களுக்கு வருகிறார்கள். இப்படி வருகிறவர்கள் தம் நோய்க்குத் தகுந்த மருந்து கொடுத்து குணப்படுத்தி, தம் சவுகரியங்களைக் கவனித்துக் கொள்ளத் தக்க அளவு கூலி கொடுத்தால் போதும், என்று கேட்டுக் கொள்ளுகிறார்கள்."

"நான் தோட்டங்களில் மானேஜராக 23 வருஷ காலம் வேலை பார்த்தேன் என்று முந்தியே சொன்னேன். அத்தனை வருஷங்களில் ஒரு தரமாவது எனக்கும் தொழிலாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டதே கிடையாது. எப்படிப்பட்ட விஷயமானாலும், நான் தொழிலாளர்களுடன் கலந்தே செய்து வந்தேன்."

**துப்பாக்கி முனையில் தீர்ப்பு.**

"ஆனால் ஜப்பானியர் தோட்டங்களிலோ நிலைமை வேறு. தொழிலாளர்களோடு முதலாளிகளுக்கு ஏதேனும் தகராறு ஏற்பட்டால், மானேஜரும் அவருடைய சிப்பந்திகளும் துப்பாக்கிகளோடு வந்து தொழிலாளர்களை மிரட்டி வேலை வாங்குறார்கள்."

"ஒரு தொழிலாளிக்கு வயது அதிகமாகிக் கிழவன் ஆனாலும், நோயினால் மெலிந்து வேலை செய்ய பலம் இல்லாமல் போனாலும், ஜப்பானியர் தோட்டங்களிலிருந்து வெளியேற்றப் படுகிறார்கள். அவர்களுக்கு எந்த விதமான உதவியும் கிடையாது. ஆனால் ஐரோப்பியத் தோட்டங்களிலோ, அவர்களை நன்றாகப் பராமரிக்க வேண்டுமென்று கண்டிப்பான விதிகள் இருக்கின்றன. அல்லாமலும், 'அவர்கள் இந்தியாவிலுள்ள தம் சொந்த ஊருக்குப் போய்ச் சேர எவ்வளவு செலவாகுமோ அவ்வளவுத் தொகையைக் கொடுக்க வேண்டும் என்னும் கண்டிப்பான உத்திரவும் இருக்கிறது.

இது மட்டுமல்ல; உலகத்தில் உள்ள, எல்லா நாடுகளிலும் தொழிலாளர் சங்கங்கள் அமைத்துக் கொள்ள, சட்டம் இடங் கொடுக்கிறது. தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தம் கோரிக்கைகளை முதலாளிகளுக்கு அறிவிக்க சங்கங்களே ஏற்ற சாதனங்கள். இந்த உண்மையை எல்லா நாகரிக நாடுகளும் ஒப்புக்கொள்ளுகின்றன. ஆனால், ஜப்பானிலும், ஜெர்மனியிலும் கூட, தொழிற் சங்கங்கள் அமைத்துக் கொள்ள முடியாது. தொழிலாளர்கள் தான் ஒரு அரசாங்கத்தின் அச்சாணி போன்றவர்கள். எந்த நாட்டில் தொழிலாளர்கள் இன்பமாக வாழ்ந்து வருகிறார்களோ, அந்த நாட்டின் அரசாங்கந் தான் அந்நாட்டு ஜனங்களின் நன்மையில் அக்கரை கொண்டது என்று துணிந்து சொல்லலாம். ஜனங்களின் நன்மையில் அக்கரை கொள்ளாத அரசாங்கம், உண்மையான அரசாங்கமே ஆகாது.' இதிலிருந்து ஜப்பான் அரசாங்கம் ஒரு அரசாங்கம் என்னும் பெயருக்கே தகுதி உடையதா என்று வாசகர்களே சிந்தித்து முடிவு கட்டட்டும்.



# ஜப்பானியர் இந்துக் கோவில்களை இடித்தனர்

## சிறந்த புத்தகங்களைச் சாம்பலாக்கினர்

புத்தர் அன்பு மயமானவர். அவர் தோற்றுவித்த மதம் புத்த மதம். இது, இந்து மதத்திலிருந்து உண்டானது. இந்து மதத்தின் ஒரு பிரிவு தான் புத்த மதம். ஜப்பானியர் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால் அவர்களும் எல்லா உயிர்களிடத்திலும் அன்போடு நடந்து கொள்ளுகிறவர்கள் என்றெல்லாம் ஒரு சிலர் கூறக்கூடும். இது எந்த அளவிற்கு உண்மை என்று கவனிப்போம்.

சீனர்கள் ஜப்பானுக்கு அடுத்து இருக்கிறவர்கள். இவர்களும் ஜப்பானியர்களைப் போலவே புத்த மதத்தைச் சார்ந்தவர்கள் தான். இருந்தாலும் 4 அல்லது 5 வருஷங்களாக சீனர்களின் நாட்டைப் பிடிக்க ஓயாது ஜப்பானியர் சண்டை போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இத்தனை வருஷங்களாக எத்தனை உயிர்கள் சண்டையில் மடிந்து போயிருக்கும்! அன்பு மதமான புத்த மதத்தினர், தம் சகோதரர்கள் போன்ற சீனர்களைப் படுகொலை செய்யலாமா? சீனர்களின் உரிமைகளைப் பறிக்க முயற்சிக்கலாமா? புத்தர்பிரான் உபதேசத்திற்கு நேர் மாறாகவே தான் ஜப்பானியர்கள் போக்கு இருந்து வருகிறது. ஆகையால், இவர்களுக்குக் கொஞ்சங்கூட புத்த மதக் கொள்கைகளில் நம்பிக்கையில்லை யென்று தான் சொல்ல வேண்டும்.

திரு. மேத்தா ஜெயமணி உலக மெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து லக்னோ நகரத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கே ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அதில் பேசும்போது, அவர் கூறிய விவரங்கள், ஜப்பானியர்களின் உண்மையான மனோபாவத்தை விளக்குகின்றன. அவர் கூறியதாவது:—

கீழ்க்கோடி நாடுகளில் ஜப்பானியர் செய்யும் அக்கிரமங்களுக்கு அளவே கிடையாது. தாய்லாந்திலும் பர்மாவிலும் உள்ள கோவில்கள் மிகவும் பெரியவை. இந்திய சில்ப சாஸ்திரப்படி கட்டப்பட்டவை. ஏராளமான ஜனங்கள் இக்கோவில்களுக்குப் போய் கடவுளைத் தொழுவது வழக்கம். இப்படிப்பட்ட மிகச் சிறந்த, அநேகக் கோவில்களின் மேலே ஜப்பானியர் வெடி குண்டுகளை வீசி தரை மட்டமாக்கி விட்டார்கள். இது மட்டுமா? அநேகச் சிறந்த புத்தகங்களையும் நாசம் செய்துவிட்டார்கள்.

இப்படிப்பட்டவர்கள் இந்தியர்களிடம் அன்போடு நடந்து கொள்ளுவார்கள் என்று எதிர்பார்ப்பது சுத்த பைத்தியக்காரத் தனமாகத் தான் முடியும்.

# விமானங்களிலிருந்து தாக்கினால் எப்படித் தப்புவது?

## இந்தியா சர்க்கார் கூறும் முறைகள்

இது யுத்த காலம். பழைய காலத்தில் நடைபெற்ற யுத்தங்களைப் போல இப்போது நடப்பதில்லை. அக்காலத்தில் யுத்த களத்தில் மட்டும் தான் யுத்தம் நடக்கும். வெற்றியும் தோல்வியும் அங்கேயே முடிவாகி விடும். பொது ஜனங்களுக்கும் யுத்தத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. யுத்த விதிகளை மீறாமல் இரண்டு தரத்தார்களும் யுத்தம் செய்வார்கள். இப்போதோ, இந்த நிலை முழுதும் மாறி விட்டது. பெரிய நகரங்களிலும் பட்டணங்களிலும் யுத்தம் ஆரம்ப மாகிறது. பொது ஜனங்களும் யுத்தத்தில் மடிய நேருகிறது. நம் எதிரிகள், யுத்த விதிகளின்படி நடப்பது கிடையாது. வைத்திய சாலைகளின் மேலும் கூட, விமானங்களிலிருந்து வெடிகுண்டுகளை வீசுகிறார்கள். இதனால், வைத்திய சாலைகளில் இருக்கும் நோயாளிகள் அநேகர் சாகும்படி நேருகிறது.

நாம் இருக்கும் இடத்திற்கு மேலே இருந்து, நம் மேல் வெடி குண்டுகளை எதிரிகள் வீசுவார்களானால், அதற்குத் தப்ப, முடியவே முடியாது. ஆனால் நம்மை அடுத்து இருக்கும் இடங்களில் வெடி குண்டுகள் விழுந்தால் அதிலிருந்து தப்ப வழியுண்டு.

பொது ஜனங்களைப் பாது காக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவ தற்காக, இந்தியா சர்க்கார் ஒரு தனி இலாக்காவை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதற்கு சிவில் பாதுகாப்பு இலாக்கா என்று பெயர். பொது ஜனங்கள், தங்களை எந்த எந்த முறைகளில் பாதுகாத்துக் கொள்ளக் கூடும் என்பது பற்றி இவர்கள் அடிக்கடி பிரசுரங்கள் வெளியிடுகிறார்கள். இவற்றில் ஒன்று சமீபத்தில் வெளி வந்தது. இதன் பெயர் ஏ. ஆர். பி. 6-வது புத்தகம். எதிரிகள், விமானங்களிலிருந்து குண்டுகளை வீசினால், நாம் எப்படித் தற்காத்துக் கொள்ளவேண்டும் என்பது பற்றி, இதில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.

**வெடி குண்டுகளுக்குத் தப்புவது எப்படி?**

ஒரு வெடி குண்டோ, பீரங்கிக் குண்டோ ஒரு இடத்தில் விழுகிறது என்று வைத்துக் கொள்ளுவோம். விழுந்தவுடனே அந்தக் குண்டு தீப் பற்றிக் கொள்ளுகிறது. அதற்குள் இருக்கும் எல்லா வஸ்துக்களும் மழைப்போல் சூடு ஏறி விடுகின்றன. உடனே குண்டு வெடிக்கிறது. அப்போது அதற்குள் இருக்கும் இரும்புச் சுக்கல்களும் குச்சிகளும் உயரக் கிளம்பி நாலா பக்கங்களிலும் சிதறுகின்றன. இந்த வெடியினால் இடிந்து போகும் கட்டிடங்களின் கல் கட்டிகளுங் கூட, அப்படியே உயரக்

ளெம்பி நாலா பக்கங்களிலும் சிதறுகின்றன. பாதுகாப்புக் குழிகளோ மற்ற பாதுகாப்புக்களோ இல்லாத இடத்தில் நாம் போய்க் கொண்டு இருக்கும் போது, எதிரிகள் குண்டுகளை வீசலாம். இந்த குண்டுகள் வரும் வேகத்தில் ஒரு வகைச் சத்தம் உண்டாகிறது. இதில் இருந்து வெடி குண்டு விழப் போகிறது என்று நாம் தெரிந்து கொள்ளலாம். அப்போது நாம் சற்று எச்சரிக்கை யோடு இருக்கலாம். தரையில், முழங்காலை வயிற்றில் உதைந்து கொண்டு குப்புறப் படுத்துக் கொள்ளலாம். அல்லது சாதாரணமாகவே குப்புறப் படுத்துக் கொள்ளலாம். அப்போது முழங்கைகளைத் தரையில் ஊன்றி, கை விரல்களால் தலையின் பின் புறத்தைச் சங்கிலி கோர்த்து இறுகப் பிடித்துக் கொள்ள வேண்டும். மார்பு தரையின்மேல் படக் கூடாது. ஏனென்றால் வெடி குண்டுகள் வெடிக்கும்போது பூமி அதிருகிறது. அந்த அதிர்ச்சியினால், நம் உடம்பிற்கு உள்ளே இருக்கும் அவயவங்களுக்குக் காயம் உண்டாகலாம். இதைத்தடுப்பதற்காகத் தான், மார்பு தரையில் படாது இருக்க வேண்டும். அல்லாமலும், ஒரு கைக் குட்டையைச் சுருட்டி நம் வாய்க்குள் இறுகத் திணித்துக் கொள்ள வேண்டும். வாய்ப் பூட்டு மிகவும் மென்மையானது. வெடி குண்டு சத்தத்தினால் கூட, வாய்ப் பூட்டு விட்டு விடலாம். இதனால் கடுமையான காயம் உண்டாகக் கூடும். இதற்காகத் தான் கைக் குட்டையையோ துணியையோ வாயில் திணித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வது.

அல்லாமலும் காதுகளையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வெடி குண்டுகள் விழும் போது பெருத்த சத்தம் உண்டாகிறது. அதையடுத்து ஒரு அதிர்ச்சியும் ஏற்படுகிறது. இவை இரண்டும் நம் காதுகளிலுள்ள ஜவ்வுகளைக் கிழித்து விடுகின்றன. அப்போது காதுகள் செவிடாகி விடுகின்றன. ஆகையால், நம் காதுகளையும் பாதுகாக்க வேண்டியது அவசியம். இதற்குக் கொஞ்சம் பஞ்சை எடுத்து, அதில், கூடுமானால் கொஞ்சம் வாசலின் தடவி, இரண்டு காதுகளிலும் மேலாக அடைத்துக் கொள்ளவேண்டும்.

பாதுகாப்புக் குழிகள் இல்லாத இடங்களில் சாக்கடைக் குழிகள் இருந்தால், அங்கே இறங்கிக் கொள்ளலாம். ஆனால் அக்குழிகளில் இரண்டு புரங்களிலும் இருக்கும் சுவர்களின் மேல் சாயக் கூடாது. அதுபோலவே, வீடுகளிலும் சுவர் ஓரங்களில் நிற்கக் கூடாது.

வெடி குண்டுகள் வெடிக்கும் இடத்திற்கு அடுத்து இருக்கும் கட்டிடங்களுக்குச் சேதம் உண்டாகலாம். அல்லது அடியோடு அவை இடிந்து விழவும் கூடும். இதனால், அங்கிருப்பவர்களுக்குக் கடுமையான காயம் ஏற்படலாம். நுரை ஈரலுக்கும் மற்ற அவயவங்களுக்கும் சேதம் உண்டாகலாம். அதனால், இறந்து போகும்படி நேரக் கூடும்.

வெடி குண்டுகள் வெடிக்கும்போதும், பீரங்கிகள் வெடிக்கும் போதும், விமான எதிர்ப்புப் பீரங்கிகள் வெடிக்கும் போதும் அவற்றில் இருந்து, மிகவும் சூடேறிய இரும்புத் துண்டுகள் வெளிப்படுகின்றன என்று ஏற்கெனவே குறிப்பிட்டோம். இவற்றால், நமக்குக் காயம் ஏற்படாது இருக்க, ஒரு சுவர் அல்லது கட்டிட வளைவு, பாதுகாப்பாய் இருக்கும். ஆனால் சுவற்றின் மேலாவது கட்டிட வளைவின் மேலாவது சாயக் கூடாது. சாய்ந்து இருந்தால், வெடி குண்டுகள் வெடிக்கும் போது உண்டாகக் கூடிய அதிர்ச்சியினால், நம் உள் அவயவங்களுக்குக் கடுமையான காயங்கள் உண்டாகலாம். ஆகையால், ஒரு மெத்தையையாவது, துணி மூட்டையையாவது, திறந்த புத்தகத்தையாவது இடையே அமைத்துக் கொள்ள வேண்டும்.

**வீட்டிற்குள் பாதுகாப்பு.**

ஒரு வீட்டிற்குள் இருக்கும் போது, நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவசியம் உண்டாகுமானால், வெளிப்புரத்தில் இருக்கும் சுவற்றை அடுத்து இருக்கப் படாது. உள்புரத்தில் இருக்கும் ஒரு சுவற்றை யொட்டித் தான் இருக்கவேண்டும். கதவுகளுக்கு நேராகவாவது ஜன்னல்களுக்கு நேராகவாவது இருக்கக் கூடாது. கண்ணாடிக் கதவுகளோ ஜன்னல்களோ இருந்தால், அவற்றிலுள்ள கண்ணாடிகளைக் கழற்றிவிட வேண்டும். இல்லாவிட்டால், கண்ணாடித் துண்டுகள் நாலா பக்கங்களிலும் சிதறி பெருத்த சேதத்தை உண்டாக்கும்.

**கடைசி எச்சரிக்கை.**

இவ்வளவு எச்சரிக்கைகளோடும் நாம் இருந்தபோதிலும், மற்றொரு எச்சரிக்கை மிகவும் முக்கியமானது. ஒரு வெடி குண்டு விழுந்து வெடித்தவுடனே, நாம் பாதுகாப்பிடத்திலிருந்து வெளிவந்து விடக்கூடாது. ஏனென்றால் அடுத்து அடுத்து எதிரிகள் குண்டுகளை வீசுவார்கள். அந்தக் குண்டுகள் நம்மைத் தாக்கிக் கொல்லக் கூடும். அபாயம் நீங்கிவிட்டது என்று தெரிவிக்கும் சங்கு ஊதுகிற வரையிலும், அந்தப் பாதுகாப்பிடத்திலேயே இருக்கவேண்டுமே யொழிய, வெளியே வரவே கூடாது.

---

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் வருஷம் மே மீ 1வ, வெள்ளிக்கிழமை [இதழ் 17

## "ஆபத்து குறைந்துகொண்டு வருகிறது"

### "கஷ்டங்களை எல்லாம் வென்றுவிடலாம்"

### சென்னை கவர்னர் ரேடியோ பிரசங்கம்.

சென்ற 1942-ம் வருஷம் எப்ரல் மீ 27வ மாலை மேன்மை தங்கிய சென்னை கவர்னர் சென்னை ரேடியோ நிலையத்திலிருந்து ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது :—

சென்ற சில வாரங்களாக ஏற்பட்ட சம்பவங்களால், நம் நாட்டிலேயே, குறிப்பாக சென்னை மாகாணத்திலே மிகுந்த கவலை உண்டாகிவிட்டது. இயற்கையாகவே இது ஏற்படக்கூடிய கவலைதான். இப்போது உள்ள, உண்மையான நிலைமையை நான் உங்களுக்கு விளக்கிச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

சென்ற எப்ரல் மாதம் 11-ம் தேதி அரசாங்கத்தார் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். அப்போது சென்னை நகரத்தையும் அதையடுத்திருக்கும் கடல் கரையையும் எதிரிகள் தாக்குவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு, தகுந்த காரணங்கள் இருந்தன. நல்லவேளையாக நம் நகரம் தாக்கப்படவில்லை.

> "வங்காளக் குடாக் கடலை விட்டு
> ஜப்பானியர்களை விரட்டியடித்தால்
> அன்றி, அவர்கள் நம்மை எப்
> போது வேண்டுமானாலும் தாக்கக்
> கூடும். அந்த ஆபத்து எப்போ
> தும் இருக்கத்தான் செய்யும்."

என்று மேன்மை தங்கிய பிரதம மந்திரி தலைவர் சமீபத்தில் செய்த ரேடியோ பிரசங்கத்தில் கூறியது முழுதும் உண்மை.

**ஆபத்து குறைந்து வரும்**

இந்த ஆபத்து ஒவ்வொரு வாரமாகக் குறைந்து கொண்டு வரும்; எப்படி என்றால், எல்லா விதமான யுத்தத் தளவாடங்களும் ஏராளமாக வந்து குவிந்து கொண்டே யிருக்கின்றன. அல்லாமலும், சமீபத்தில் விசாகபட்டிணத்திலும் காக்கினாடாவிலும் விமானங்களி லிருந்து தாக்கியது போலத் தாக்கவும் கூடும், ஆனாலும் நாம் எதற்கும் ஆயத்தமாய் இருக்கவேண்டும். இருந்த போதிலும், பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மன் நகரங்களைத் தாக்குவது போல அவ்வளவு கடுமையாகத் தாக்க மாட்டார்கள் என்று தான் நினைக்கிறோம் ஏனென்றால் விமானங்கள் வெகு தூரம் பறந்து வந்து தான் வெடி குண்டுகளை எறியவேண்டும். விமானங்களை ஏற்றிக் கொண்டு போகும் சண்டைக் கப்பல்களிலும் சில விமானங்களைத் தான் ஏற்றிக்கொண்டு போக முடியும். ஆகையால், கடுமையாகத் தாக்க, எதிரிகளால் முடியாது என்று நம்புகிறேன்.

**நகர வாசிகள் என்ன செய்யவேண்டும்?**

இப்போது சென்னை நகரவாசிகள் என்ன செய்ய வேண்டும்? கடல் கரை ஓரங்களில் வேலை யில்லாதவர்களும், வெளியூர்களில், தம் சொந்தக்காரர்களுக்கோ நண்பர்களுக்கோ தொந்தரவு கொடுக்காமல் வசிக்கக்கூடியவர்களும் வெளியூர்களுக்குப் போய் விட வேண்டும். வெளியூர்களில் செய்யமுடியாத வேலைகளில் இருப்பவர்கள், இங்கேயே தான் இருக்க வேண்டும். இவர்கள் வெளியூர்களுக்குப் போய் இருந்தாலும், திரும்பி வந்து விட வேண்டும்: ஆபத்துக்கள் ஏற்படுவதாக இருந்தால், கூடிய சிக்கிரமாகவே எச்சரிக்கபடும். வெளியூர்களில் ஆபத்து அதிகம் இல்லை. மலைகளில் ஆபத்து இல்லை என்றே சொல்லலாம். இதனால், யாரும் ஊர் ஊராகத் திரிய வேண்டாம். ஒவ்வொரு நாளும் நம்முடைய பலம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகாய வழியாகவோ, கடல் வழியாகவோ எதிரிகள் நம்மைத் தாக்க வந்தால், அவர்களைத் தடுக்க எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம்; இன்னமும் செய்துகொண்டிருக்கிறோம். இதைத்தான் நான் முன்பு சொன்னேன். இப்போதும் இதையே தான் சொல்லுகிறேன்.

இது கஷ்டமான காலம்; ஆனாலும் இந்தக் கஷ்டங்களை எல்லாம் நாம் வென்று விடலாம். இதற்கு, நகரவாசிகள் எல்லோரும் ஒன்று பட வேண்டும். இதற்கு முன் அவர்களுக்குள் இருந்த மனத் தாங்கல்களை மறந்து விட வேண்டும். இந்த நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டு மிகத் திறமையோடு போராடும் தம் தோழர்களுக்கு எல்லா வகைகளிலும் உதவி, ஆதரவு அளிக்க வேண்டும்.

வருங் காலம் மிகவும் பயங்கரமானதாகத் தோன்றலாம். வெற்றி கிடைக்காது என்னும் எண்ணமும், பொய் வதந்திகளும், பொது மக்களுக்கு, உள்ள நம்பிக்கையை அழித்துவிடக் கூடும். இருந்த போதிலும் முடிவில் எப்படியாகும் என்பதைத் தான், நாம் கவனிக்க வேண்டும். முடிவில் நிச்சயமாக, நமக்குத்தான் வெற்றி கிடைக்கும். இதுபற்றி எந்த விதச் சந்தேகமும் இல்லை, ஐக்கிய நாடுகள் ஏராளமான பக்க பலங்களை நமக்கு உதவிக் கொண்டிருக்கின்றன. ஆகையால் நிச்சயமாக நாம் வெற்றி பெறுவோம்.

**'உங்கள் பாச்சா பலிக்காது'.**

எப்படிப்பட்ட கஷ்ட காலத்திலும் இங்கிலாந்தில் உள்ள பொது மக்கள் தம் அலுவல்களை வழக்கம் போலச் செய்து கொண்டு மன உறுதி யோடும் ஒற்றுமையாகவும் இருக்கிறார்கள். 'ஜெர்மானியர்களே ! உங்கள் பாச்சா இங்கே பலிக்காது' என்று சொல்லுவதற்குச் சமமாக இது இருக்கிறது. அதுபோலவே, 'ஜப்பானியர்களே! உங்கள் கை இங்கு ஓங்காது' என்று சொல்வதற்குச் சமமாக நீங்களும் ஒற்றுமையோடும் மன உறுதியோடும் உங்கள் அலுவல்களை வழக்கம் போல் கவனித்து வர வேண்டும். இப்படிப் பட்ட நிலைமை ஏற்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.

எப்போதும் போல உங்கள் அலுவல்களைக் கவனியுங்கள்; பொய் வதந்திகளை நம்பாதீர்கள். உங்களால் இயன்ற அளவு அதிகாரிகளுக்கு உதவி செய்யுங்கள். இப்படியாக, நாம் ஒவ்வொருவரும் சிறிதளவிற்காவது நம்மால் ஆனதைச் செய்யலாம். இப்படிச் செய்வதனால், நாம் பெரிது விரும்பும் வெற்றியை அடைய, உதவியவர்கள் ஆவோம்.



# உலகப் போக்கு

**ஹிட்லர் சாயம் வெளுக்கிறது.**

சென்ற ஞாயிற்றுக் கிழமை ஜெர்மன் சர்வாதிகாரியான ஹிட்லர் ஜெர்மனியின் பொது மக்கள் சபையில் ஒரு பிரசங்கம் செய்தார். இது ஒரு வகையில் மிகவும் முக்கியமானது. எப்படி என்றால், ருஷ்யப் போர் முனையில், தான் தோற்றுப் போனதை, இங்கே தான் முதல் முதலாக ஒப்புக் கொள்ளுகிறார். அல்லாமலும், ஜெர்மனியிலேயே அடி படையான தகராறுகள் ஏதோ இருக்கின்றன என்பதை வெகு தெளிவாக அவர் ஒப்புக் கொள்ளுகிறார். இதற்கு முன்பு அவர் பேசும் போது எல்லாம், தன்னைப் பிரமாதமாகப் பீத்திப் பெருமை யடித்துக் கொண்டு ஆடம்பர வார்த்தைகளை அடுக்கடுக்காகக் கொட்டி அளப்பது வழக்கம். அந்த அளப்புக்களை இப்போது அடியோடு காணோம். தன் மேலும், தன் படையின் மேலும், தன் நாட்டு மக்கள் மேலும் அவருக்கிருந்த நம்பிக்கை தொலைந்து விடடது. அவருடைய வார்த்தைகளில் பயத்திற்கு உரிய அறிகுறிகள் காணப்படுகின்றன; இனி ஏற்படப் போகும் தொல்லைகளினால் உண்டாகும் பொறுப்பை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள அவர் இப்போது ஆசைப் படுகிறார்.

**எண்ணத்தில் மண் விழுந்தது.**

ருஷ்யா மீது ஜெர்மானியர்கள் படை எடுத்துப் போய்த் தோற்றுப் போனதைக் குறித்து ஹட்லர் குறிப்பிட்டதாவது:—

ஜெர்மன் டாங்கிகளும் மற்ற வண்டிகளும் அந்தக் குளிரில் ஒன்றும் செய்து கொள்ள முடியவில்லை. ஆகையால் தான் 'விதியை நாம் வெல்ல வேண்டும்; இல்லாவிட்டால் விதி நம்மை வென்று விடும்' என்று கருதி மகா மன உறுதியுடன் எப்படிப் பட்ட எதிர்ப்பையும் பொருள் படுத்தாமல் போராட்டத்தை ஒருவாறு

நிறுத்தினேன். ஆகையால் நான் சொல்வதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டுமெனக் கோருகிறேன்.

கோடைகாலத்தில் ருஷ்யாவைத் தாக்கி ஒழித்து விடப் போவதாக ஆடம்பரமாக ஹிட்லர் வாய்ப் பந்தல் போட்டுக் கொண்டிருந்தார். அவருடைய எண்ணத்தில் மண் விழுந்தது. ருஷ்யாவைத் தாக்குவதைத் தள்ளி வைக்க வேண்டியது. அவருடைய தலை எழுத்து ஆகி விட்டது. மழை காலத்தில் தாக்கப் போவதாக இன்னமும் இவர் பீத்திக் கொண்டிருக்கிறார். இப்போது எதிர்பார்க்கப்படும் நிலைமைக்குத் தகுந்தபடி ஜெர்மனி தயாராகி விடுமாம்! மேலும் அவர் கூறியதாவது:—

ரஷ்யா அழிகிற வரை கிழக்கே போர் நடந்துகொண்டு தான் இருக்கும். ஒவ்வொரு வருஷமும் ஜெர்மன் 'யூ' போட் கப்பல்களும் யுத்தத் தளவ டங்களும் பெருகிக் கொண்டு வருவதை பிரிட்டன் காணும்.

இவை எப்போது ஏற்படும் என்று மட்டும் அவர் குறிப்பிட வில்லை. அதாவது ரஷ்யா அழிவது:— எப்போது? வருஷா வருஷம் யுத்தக் கப்பல்களும் தளவாடங்களும் பெருகி முடிவது எப்போது? இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. வெகு சீக்கிரத்தில் வெற்றி பெற்று விடுவேன் என்று சவடால் அடித்துக் கொண்டிருந்த ஹிட்லரின் எண்ணம், அடிமாண்டு போனது.

**வெற்றி வீரன் இப்படிச சொல்லுவாரு.**

"நியூ யார்க் டைம்ஸ்" என்னும் பத்திரிகைக் கீழ்க் கண்டவாறு எழுதுகிறது:— ஜெர்மனி தோற்றால் என்றென்றைக்கும் தலை தூக்க முடியாதபடி அழிந்தே போகும் என்று ஹிட்லர் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு வெற்றி வீரன் என்று தன்னை நினைத்துக் கொண்டிருப்பவன், இப்படிச் சொல்லுவானா? தன்னைக் காத்துக் கொள்ளுவதற்காகப் போராடும் ஒரு படையின் தலைவனுடைய வாயில் மட்டும் தான் இப்படிப் பட்ட வார்த்தைகள் வரலாம். ஹிட்லர் தன் குறைபாடுகளை ஒப்புக் கொள்ளலாம், ஹிட்லரின் படைகள் மறைமுகமாக ஏதேனும் மிகவும் பலக் குறைவு அடைந்திருக்கலாம். அதே படைகள் முன்பு இருந்ததை விட மிகவும் பலம் அடைந்து இருக்கவும் கூடும். இவற்றைக் கொண்டு நாம் ஏமாந்து தூங்கி விடக் கூடாது. நம்மால் இயன்றவரைப் பலமாக எதிரிகளைத் தாக்கி நசுக்க வேண்டும் என்னும் ஒரே கொள்கையைத் தான், நேச தேசப் படைகள் கைக் கொள்ள வேண்டும். இதே கொள்கையைத் தான் ஹிட்லரும் கைக் கொள்வார் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகளையும் அவர் இப்போது ஜெர்மனியில் செய்து கொண்டிருக்கிறார். இந்த நிலைமையைச் சமாளிக்க நாம் நம்மை ஆயத்தம செய்து கொள்ள வேண்டும். உள்ளூர் விவகாரங்களைச் சரிப்படுத்த வேண்டும் என்பதில் அவர் மிகவும் அக்கரை கொண்டிருக்கிறார்.

**கலவரத்திற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன.**

ஏனென்றால் அங்கே உள் நாட்டில் கலவரங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. இந்த நிலைமையைச் சமாளிக்கத் தான் தனக்கு விசேஷாதிகாரங்கள் வேண்டும் என்று அவர் கோருகிறார்."



"நம் நாடு வாழ்வதா சாவதா என்னும் நிலைமையில் இருக்கும்போது, என் இச்சையாக எந்தக் காரியத்தையும் செய்ய அனுமதிக்கவேண்டும்" என்று அந்தச் சபையினரை ஹிட்லர் வேண்டுகிறார். அல்லாமலும், யாராக இருந்தபோதிலும், எப்படிப்பட்ட சிறந்த உரிமைகளை உடையவர்களாய் இருந்தபோதிலும், தம் கடமைகளைச் செய்யவேண்டும் என்று அவர்களை வற்புறுத்தவும் அப்படிச் செய்யத் தவறுவார்களானால், எச்சரிக்கவோ டிஸ்மிஸ் செய்துவிடவோ தனக்குச் சட்டப்படி முழு அதிகாரமும் வழங்கப்படவேண்டும் என்றும் கோருகிறார். இந்த அதிகாரங்களை எல்லாம் பொதுமக்கள் சபை அவருக்கு இப்போது அளித்திருக்கிறது. சிவில் உத்தியோகஸ்தர்களையும் ராணுவ தளகர்த்தர்களையும் நசுக்கித் தன் கட்சிக்கு ஹிட்லர் அளவு கடந்த பலம் தேடிக் கொண்டு விட்டார் என்று லண்டன் வட்டாரங்களில் விஷயம் தெரிந்தவர்கள் நினைக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மிகுந்த கவலைகளுக்கு இடையே தான், ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்க மூன்றும் முறை கிளம்பப் போகிறாராம்! 1940, 1941-ம் ஆண்டுகளில் ரஷ்யா மீது ஹிட்லர் படை எடுத்த போது ஏக ஆட்ம்பரமாக எக்காளங்களை ஊதிக்கொண்டு கிளம்பினார்கள். ஆனால், இந்த முறை இவை ஒன்றையும் காணோம். அப்போது, ஒரு நொடிப்பொழுதில் வெற்றி கிடைத்துவிடும் என்று ஹிட்லர் உறுதி கூறினார்; ஆனால், இப்பொழுது, எந்த முறையை ஒட்டித் தாக்குவது என்பதுபற்றி கலந்து ஆலோசனைகள் செய்வதும், திட்டம் வகுப்பதுமாக இருக்கிறார்.

"பாக்கப்பாக்கப் பாடுபட்டேன் படுக்க பாய் இல்லை; இறைக்க இறைக்க உழைத்து வந்தேன் இருக்க இடமில்லை" என்பது வாழ்க்கையில் சலித்துப் போனவர்கள் கூறும் பழமொழி.

ஜெர்மானியர்கள் வெற்றிமேல் வெற்றி பல முறை அடைந்துகொண்டு வந்தார்கள். அப்படி இருந்தும் முழு வெற்றி இன்னமும் கிடைக்கவில்லை என்பதைத் தெளிவாக உணரத் தலைப்பட்டு விட்டார்கள். சென்ற இரண்டு வருஷங்களாக "வானத்தை வில்லாக வளைத்துவிடுவோம், மணலைக் கயிறாகத் திரித்துவிடுவோம்" என்று கூறிக்கொண்டிருந்ததுபோல இப்போது ஜெர்மன் தலைவர்கள் கூறுவதில்லை. ஒவ்வொரு ஜெர்மன் குடும்பத்தில் இருந்தும் அநேக வீரர்கள் போர்முனைக்குப் போய் இருக்கிறார்கள். நாள்தோறும் வாழ்க்கை மிகவும் கஷ்டமாகிக்கொண்டு வருகிறது. இந்தப் பளுவை எல்லாம் தாங்கவேண்டிய பொறுப்பு இப்போது பொது மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது. இதை, 'டாஸ் ரெய்ச்' என்னும் பத்திரிகையில், கீழ்கண்டவாறு எழுதுவதன்மூலம் கோபெல்ஸ் ஒப்புக்கொள்ளுகிறார்:—

"யுத்தத்தினால் உண்டாகும் கஷ்டங்களைப் போக்குவதிலேயே எங்கள் கவலை பதிந்திருக்கிறது. யுத்தம் எப்போதும் மிகவும் கொடுமையானது; பயங்கரமானது .......... சில சமயங்களில் குளிர்காய நிலக்கரியும், சாப்பிட உருளைக்கிழங்கும் கூடக் கிடைப்பதில்லை."

**ஜெர்மனியில் ஆள் பஞ்சம்.**

ஜெர்மனியில் ஏற்பட்டிருக்கும் ஆள் பஞ்சத்தைக் குறித்து மிஸ்டர் ஆர். எச். க்ராஸ்மான் தன் ரேடியோ பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது:—

ஆள் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்று இந்த மழை காலத்தில்தான் ஜெர்மனி உணரத் தலைப்பட்டிருக்கிறது. மழை காலத்தில் விதை விதைக்கப் போகும் படையினர் இடைவிடாது போராடிக்கொண்டிருக்கவேண்டிய அவசியத்தில் இருந்தனர். இது முதல் காரணம். இரண்டாவதாக, போர் வீரர்களுக்கு ஓய்வு கொடுத்து நிலங்களை விதைக்கவும் தொழிற்சாலைகளில் வேலைசெய்யவும் அனுமதித்துக் கொண்டிருந்த ஹிட்லர், இப்போது வயல்களிலும் தொழிற்சாலைகளிலும் எந்த ஆள் அகப்படுவான் என்று வலை போட்டு அரித்துக்கொண்டிருக்கிறார். கிழக்கு யுத்த அரங்கத்தில் தன் படையில் ஏற்பட்டிருக்கும் காலி இடங்களுக்கு ஏராளமான ஆட்கள் தேவை. 38 ஜெர்மன் டிவிஷன் படைகள் இந்த மழை காலத்தில் ஓய்விற்காகத் திருப்பி யனுப்பப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவை எல்லாம், இன்னும் போராடிக்கொண்டேதான் இருக்கின்றன.

அல்லாமலும், ஜெர்மன் தொழிற்சாலைகளில் ரஜா என்பதே கிடையாது. ஆபீஸ்களில் வேலைசெய்கிறவர்களின் சம்பளத்தை மிகவும் குறைத்து விட்டார்கள். படைகளில் நிர்வாகப் பதவிகளுக்கு 56 வயது கிழவர்களை எல்லாம் தேடிப் பிடித்து, நியமித்திருக்கிறார்கள். சென்ற மார்ச்சு மாதக் கடைசியில், முக்கியமான பதவிகளில் இருந்தவர்களைக்கூட இராணுவத்திற்குக் கொண்டுபோய்விட்டார்கள். அல்லாமலும் பள்ளிக்கூடப் பிள்ளைகள் 2 லட்சம் பேர்களுக்குப் படிப்பு முடிந்தவுடனே, டாங்கிகளும், விமானங்களும் செய்யும் தொழிற்சாலைகளுக்குப் போய் வேலை செய்யும்படி உத்திரவிட்டு இருக்கிறார்கள்.

**வாக்குறுதி என்ன ஆயிற்று?**

சென்ற மகா யுத்தத்தைப்போல் இல்லாமல், இந்த யுத்த காலத்தில், எல்லோருக்கும் ஒரே மாதிரியாக, சண்டை ஆரம்பம் முதல் கடைசி வரை உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என்று ஜெர்மன் அரசாங்கம் வாக்குறுதி கொடுத்திருந்தது. ஆனால் இப்போது உணவுப் பொருள்களிலும் 100-க்கு 25 பங்கு குறைத்துவிட்டார்கள். 1917-ம் வருஷம் கிடைத்துவந்ததைவிட குறைவாகத்தான், இப்போது ஜெர்மன்யர்களுக்குச் சர்க்கரை கிடைக்கிறது; இறைச்சி அதே அளவுதான் கிடைக்கிறது. இவ்வளவு கஷ்டங்கள் இருந்துங்கூட, அவர்கள் மன உறுதியில் கொஞ்சமும் தளர்ச்சியடையவில்லை. இதற்குக் காரணம் அவர்கள் அவ்வளவு நன்றாகப் பழக்கப்பட்டு இருக்கிறார்கள். இருந்தாலும், யுத்தக் களைப்பினால், நம்புத் தளர்ச்சியும் முன் கோபமும் அவர்களுக்கு உண்டாகிறது. இதற்காக அவர்களைக் கண்டிக்கும் முறையில் கொஞ்ச காலத்திற்கு முன்பு கோபெல்ஸ் கூறியதாவது:—

"நம்மில் அநேகர், அளவிற்குமிஞ்சி வேலை செய்கிறார்கள் என்று நாம் நன்றாகத் தெரிந்துகொண்டு இருக்கிறோம். அதனால் அவர்கள் வெகு இலகுவில் கோபம் அடைகிறார்கள். இதை ஒரு காரணமாகக்கொண்டு, விடிந்தது முதல் இருட்டுகிறவரை, எல்லோரிடமும் கோபப்பட்டுக்கொண்டே இருக்கக் கூடாது."

இதில் இருந்து ஜெர்மானியருடைய ஒழுக்கம் கெட்டுவிட்டது என்று சொல்லுவதற்கில்லை. கவலையிலும் துன்பத்திலும் மூழ்கி இருக்கும் மக்களின் மன நிலை எப்படி இருக்கும் என்பதைத்தான் இது படம் பிடித்துக் காட்டுகிறது.

**ஜெர்மனியர் இனித் தாங்க மாட்டார்கள்.**

சமீபத்தில் ஹிட்லர் செய்த பிரசங்கத்திலிருந்து அவர் மிகவும் கடுமையான கவலையில் மூழ்கி யிருக்கிறார் என்று தெளிவாகத் தெரிகிறது. இது பற்றி செக்கோஸ்லோவேகியக் குடிய சின் தலைவரான டாக்டர் பீன்ஸ் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:—

இரண்டாவது முறையாக வரப்போகிற மழைகாலத்திலும் ருஷ்யாவோடு போராடுவதாக இருந்தால், தன் படைகளால் தாங்கமுடியாது என்று ஹிட்லருக்கு நன்றாகத் தெரியும். இப்போது ஜெர்மனியில் உள் நாட்டு நிலவரம் எப்படி இருக்கிறது என்று நமக்கும் ஒருவாறு தெரியும். ஆனால், நாம் எதிர்பார்த்ததைவிட, மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டு இருக்கிறதென்று, சென்ற ஞாயிற்றுக் கிழமை ஹிட்லர் செய்த பிரசங்கத்திலிருந்து தெரிகிறது. நாஜி இராணுவங்கள் நாசம் அடைந்து மண்ணைக் கவ்வப்போவது நிச்சயம். அப்போது மிகவும் பயங்கரமானதோர் குழப்பம் ஏற்படத்தான் போகிறது. இந்தப் பிரசங்கத்தின் உள்கருத்து என்ன என்று முக்கியமான ஜெர்மன் இராணுவ அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் எந்த விதத்திலாவது சமாதானம் செய்துகொள்ள அவர்கள் விரும்புவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

சமாதானம் ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும், ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. ஜெர்மனியின் நிலைமை ஒன்றும் சரியில்லை. ஆகையினால் தான், கோடை காலத்தில் ரஷ்யாவைத்தாக்க ஜெர்மனியால் முடியவில்லை.

# அன்றும் இன்றும்

பையிலும் சரி, பாங்கியிலும் சரி பணம் நிறைய இருக்கும்வரை, ஐயாவைக் கையிலே பிடிக்கமுடியாதுதான். அவருடைய பேச்சின் முடுக்கே அலாதியாக இருக்கும். யாரும் தனக்கு நிகரில்லை என்றுதான் பேசவார். "எந்தப்பயல் என்னசெய்ய முடியும் என்னை? அசைக்கமுடியாது நம்மை!" என்ற த்வனியில்தான் இருக்கும் அவர் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் எல்லாம்! ஆரம்பத்திலே அவர் காசுகளை எடுத்து எறிகிறதினுஸைப்பார்த்தால் யாராலும் அசந்துதான் போய்விடுவார்கள். "பெரிய கைபோலிருக்கே இது" என்று பேசிக்கொள்வார்கள் எல்லோரும் அத்தகைய ஐயாவந்தால் கூட, எல்லோரும் கொஞ்சம் ஒதுங்கியே போவார்கள்.

ஆனால், பாங்கியிலே பணம் குறையக்குறைய, ஊரிலே விரோதிகள் அதிகமாவார்கள். அந்த சமயத்திலே ஐயாவின் பேச்சே வரவரக் குறைய ஆரம்பிக்கும். முன்பிருந்த சவடால் எல்லாம் மாறி, 'த்சு! நடக்கிறது நடக்கட்டும், பகவான் இருக்கிறார்' என்ற வேதாந்தப்பேச்செல்லாம் கிளம்பும். இது மனிதசுபாவம்.

ஹிட்லரும் மனிதர்தானே! அப்படியிருக்க, அவர் மட்டும் இந்த மனித சுபாவத்தைத் தன்னிடம் கொள்ளாது இருக்க முடியுமா? முன்பெல்லாம் அவரே ச ஆரம்பித்துவிட்டால், ஒரே அதிர்வேட்டுப் பிரசங்கமாக இருக்கும். அதை ரேடியோவில் கேட்க ஆரம்பித்தால், ரேடியோபெட்டியே உடைந்துபோய் விடுமோ என்று பயப்படும்படியாக இருக்கும். நடுநடுவே, அவரது சந்நிதியிலிருப்பவர்கள் செய்யும் கரகோஷமும், எழுப்பும் கூச்சலும் ஏக தடபுடலாக இருக்கும்.

ஹிட்லர் இன்னும் சிலதினங்களுக்குள்ளாகவே உலகத்தையேபிடித்து, தனது சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டு விடுவார்போலிருக்கிறதே என்றுகூட எண்ணத்தோன்றும். அப்பொழுதெல்லாம் பிரிட்டிஷாரும், அமெரிக்கரும், நம்மைப்போலவே இந்தப் பிரசங்கங்களைக் கேட்டுக்கொண்டு உலகிலே சாந்தி நிலவுவதற்கான மார்க்கங்களில் தங்கள் கவனங்களைச் செலுத்திக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், யுத்தம் ஆரம்பித்த இரண்டரை வருடங்களுக்குப் பிறகு, போனவாரம் ஹிட்லர் பேசியிருக்கிறார். போனதடவை அவர் பேசினது சென்ற டிஸம்பரில், நாலுமாசம் வாயடைத்துக்கிடந்தவர், இப்பொழுது திரும்பவும் பேசியிருக்கிறார். அந்தப் பிரசங்கத்தை வாசித்தாலே, ஹிட்லரின் மனசிலிருப்பதென்ன என்பது தெளிவாகத் தெரிந்துவிடுகிறதே! சாதாரண மனுஷர்களுக்கே அது அவ்வளவு தெளிவாகத் தெரியும்பொழுது, நிபுணர்களுக்கு ஜெர்மனியில் உள்ள அந்தரங்க நிலைமையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலப் புரிந்துவிடுகிறது.'

"ஜெர்மன் மக்களுக்குத்தான் எனது பிரசங்கம். எனது வார்த்தைகளை நம்பாதவர்களின் செவிகளில் விழுவதற்காக ஏற்பட்டதல்ல எனதுபேச்சு" என்று ஹிட்லரே அக்ஷதை போட்டுக்கொண்டிருக்கிறார். யார் கேட்பார்கள் இதை? அவருக்கே தெரிந்துவிட்டது தன் அடம்பரப்பேச்சுகளை வெளி உலகோர் யாரும் நம்பமாட்டார்கள் என்று. ஜெர்மன் மக்களைத்தானே, தனது சர்வாதிகார பலத்தால், ஆடுகள் போலவைத்து, தன் இஷ்டப்படியெல்லாம் கும்மாளம் கொட்டலாம்! அதனால்தான் அவர் இவ்வாறு சொன்னார்.

அர்த்தபடியாக, அவரது பேச்சிலிருந்து, ருஷ்யாவில் அவரது படைகள் பட்ட உதை நன்றாகத் தெரிகிறது. 'இவ்வளவாவது சிரமப்பட்டு, நமது படைகள் ருஷ்ய மண்ணிலேயே இருக்கிறதே, அதுவரை நமது பாக்யம்தான! அந்தப்பாழும் ருஷ்யப்பனி சென்ற நூற்று நாற்பது வருஷம் இல்லாத கொடுமையுடன் சென்ற வருஷம் ஸ்வரூபத்தைக் காட்டிக் குட்டிச்சுவராக அடித்துவிட்டது. ஜெர்மன் படைகள் பின்வாங்குவதற்கும் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. எதிரிகள் ஏராளமாகத் தோன்றினர் சப்ளை விஷயம் ரொம்பக் கஷ்டமாகிவிட்டது. ரயிலும், டாங்கியும் போக முடியாதபடி அவ்வளவு குளிரும், பனிக்கட்டிகளும் இருந்தன. ஆகவே, நானே தலையிடவேண்டி வந்தது. ஈவிரக்கமில்லாமல்கூட நடக்கவேண்டி வந்தது. என்ன செய்வது? அப்படியிருந்ததே அப்போதைய நிலைமை! நமக்கு உதவியளித்த ஐரோப்பிய நாட்டு சகோதரர்களுக்கெல்லாம் ரொம்ப தாங்க்ஸ். இப்பொழுது ஏற்பட்ட அனுபவம் ரொம்ப நல்லதாகப்போச்சு! அடுத்த குளிர் காலத்திலே, இந்த மாதிரி அவஸ்தைகள் எல்லாம் ஜெர்மன் படைகளுக்கு ஏற்படாது' என்றாரே பார்க்கலாம் அவர்.

முந்தியெல்லாம் அவர் பேசும்பொழுது, 'ஜெர்மன் மக்களே! நமது படைகளை எந்தப் பயலும், ஜெயிக்க முடியாது. இன்னும் கொஞ்ச காலத்திற்குள்ளாக லட்டு போல வெற்றி நமக்குக் கிடைக்கப்போகிறது பாருங்கள்' என்று கூறிவருவதுண்டு. ஆனால் அந்த ஸ்ருதியில் இப்பொழுது பேசக்காணோம் அந்த மனுஷர். அடுத்த குளிர் காலத்தைப்பற்றியும் தன்னையும் அறியாமல் பேசியிருக்கிறார். ஆகையால், ருஷ்யா சாதாரண நாடல்ல, அதை, ஆரம்பத்திலே ஹிட்லர் நினைத்ததுபோல், பத்து வாரங்களிலும் ஜெயிக்க முடியாது; பல மாதங்களிலும் தோற்கடிக்க முடியாது என்பது தெரியவில்லையா? அதோடு, இந்த வருடத்திய குளிர் காலம் வருமுன்னும் ருஷ்ய யுத்தம் நிற்காது என்று ஹிட்லர் நினைத்திருப்பதும் வெளியாகிறதா இல்லையா?

அமெரிக்க உதவி நாளுக்குநாள் அதிகமாக உலகெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது. அந்த உதவியால், மெலிந்து கிடந்த பல நாடுகள் வலுப்பெற்று, துளிர்விட்டு, தலைதூக்கி, 'உம்! சண்டைக்குத் தயார். என்று கிளம்பி நிற்கின்றன. உடம்பிலே சக்தியில்லாவிட்டாலும் நேற்றுவரை ஏதோ ஜப்பானை நாலரை வருடங்களாக சமாளித்து நின்ற சைனா, இப்பொழுது பர்மாவில் உள்ள ஜப்பானியரையும் எதிர்க்க முன்வந்துவிட்டார்கள். இதற்குக் காரணம் என்ன? பிரிட்டிஷ், அமெரிக்க உதவி அந்த நாட்டிற்குக்கிடைப்பதுதான். பத்துக்கோடி டாலர், நூற்றுக்கு நான்கு வட்டி வீதம், அமெரிக்கா சீனாவிற்குக் கடன் கொடுத்திருக்கிறது பணம் தானே ஐயா வேண்டும், எந்தக் காரியம் செய்யவேண்டுமானாலும்! அதற்காகத்தானே உங்களை, உங்களால் இயன்ற அளவு, தர்மமாகவோ, சேமிப்பு நிதியில் பணம் போடும் விதமாகவோ, வேறு வகைகளிலோ உதவிசெய்ய வேண்டுமென்று, ரூஸ்வெல்ட், சர்ச்சில், நமது வைசிராய் பிரபு, கவர்னர் பிரபு எல்லோரும் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

'சைனாவிற்கு எப்படியாவது மேற்கொண்டு உதவிகள் அனுப்பப்பட்டே வரும்.' பிரஞ்சுப் பிரதேசங்களை அச்சு நாட்டார் பயன் படுத்திக்கொள்ளாமலிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் நாம் எடுத்தே தீருவோம். அமெரிக்கக் கப்பற்படை உலகெங்கும் போயிருப்பதோடு, மத்ய தரைக் கடலிலும் தன் ஸ்வரூபத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது! ஆகவே பயப்படவேண்டாம்' என்று ரூஸ்வெல்ட் தெரிவித்திருக்கிறார். தினே தினே, சீமையில் ஏராளமான அமெரிக்கப்படைகளும், ஆயுதங்களும் வந்து இறங்கிய வண்ணமிருக்கின்றன. அதேமாதிரி ஆஸ்திரேலியாவிலும் அமெரிக்கர்கள் குவிகிறார்கள். இந்தியாவிற்கோ, அமெரிக்கப்படைகள், அமெரிக்க விமானங்கள், அமெரிக்கத் தொழில் நிபுணர்கள் அமெரிக்க சாமான்கள் எல்லாம் வந்து இறங்கியவண்ணமாக இருக்கின்றன.

'கத்தியை உருவியபின், வெற்றி கண்டால் அல்லது கத்தியை உறையில் போடப் போவதில்லை நாங்கள், உலகிலே எல்லோரும் பொருளாதார அரசியல் துறைகளில் சம நிலைமை பெற்றிருக்க வேண்டுமென்பதே அமெரிக்க சர்க்காரின் நோக்கம். இந்தியாவில் யுத்த முயற்சிகளை சாத்யமானவரை அதிகரிக்கச் செய்வதே எங்கள் உத்தேசம். ஆனால் இங்கு எங்கள் சொந்தக் கம்பெனிகள் வைப்பதாக இல்லை. ஐரோப்பாவிலும், வேறு பல நாடுகளிலும் நாங்கள் வைத்த சாலைகள் விரோதிகள் வசமாகிவிட்டன. ஆகவே, உதவி செய்வதே எங்கள் உத்தேசம். "ஜப்பானைத் தாக்க இந்தியா நல்ல



இடமாகும். ஆகவே இந்த நாட்டைப் பலப்படுத்த வேண்டும்' என்று அமெரிக்காவிலிருந்து வந்துள்ள லூயி ஜான்ஸன் என்ற தூதர் சொல்லியிருக்கிறார்.

இது மட்டுமா? அமெரிக்கப்படைகள், ஆஸ்திரேலியாவிற்குக் கிழக்கே உள்ள, விஷிக்குச் சொந்தமானதோர் முக்யமான தீவிலே இறங்கியிருக்கின்றன. அச்சு நாடுகளில் ஒன்றான ஜப்பான்வந்து இதைப் பிடித்துக் கொண்டால், ஆஸ்திரேலியாவிற்கு அதிக ஆபத்து உண்டாகும். ஆகவே முன்னெச்சரிக்கையாக அமெரிக்கர்கள் அத் தீவிலிறங்கி, சண்டைக்குத் தயாராக இருக்கிறார்கள்.

இதையெல்லாம் ஹிட்லர் அறிந்துகொள்ளாமலிருப்பாரா என்ன? அவர் நேசநாடுகளின் பல விருத்தியை நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பதால்தான், ஜெர்மன் மக்களிடம் தடபுடலாகப் பேசாது, 'ஐயா! இன்னும் அதிகமான தியாகங்களை நீங்கள் செய்ய வேண்டியிருக்கும்! நீங்கள் வீட்டிலே அவஸ்தைப்படத்தான் செய்கிறீர்கள். ஆனால், போர்க்களத்திலே, அதிலும் அந்த ருஷ்யப்பனியிலே நமது வீரர்கள் பட்ட கஷ்டங்களுக்கு முன்னால் உங்களது கஷ்டங்கள் எம்மாத்திரம்? இன்னும் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள். எனக்கு சர்வாதிகாரம் கொடுத்து விடுங்கள். இது மிகவும் அவசியம். அப்புறம் நான் என்ன செய்கிறேன் பாருங்கள்' என்று அலறியிருக்கிறார் ஹிட்லர்.

இது எதற்கய்யா சர்வாதிகாரம்? இத்தனை காலமாக இந்தச் சரக்கை ஹிட்லர் கண்ணாலேயே பார்க்கலையா என்ன? செய்வதெல்லாம் சர்வாதிகாரத்தோடுகூடிய வேலைகள்தானே? ஜெர்மன் பொது ஜனங்களின் இஷ்டப்படியே நடப்பதாக இருந்திருந்தால், ஹிட்லர் ருஷ்யப்போரைத் தொடங்கியிருக்க முடியுமா என்ன? அவரது சேனாபதிகள்கூடப் பாடினார்களாமே, 'இது நல்ல சமயமல்ல, என்சாமி, ருஷ்யாவைத் தாக்க' என்று. அவ்வாறு கூறியவர்களைச் சீட்டுக் கிழித்து வீட்டுக்கு அனுப்பினார் ஹிட்லர். தனது சொல்லை யாரும் தட்டக்கூடாது என்று நடத்திவரும் ஆட்சிக்கு, சர்வாதிகார ஆட்சி என்றில்லாமல் வேறென்ன நாமதேயமோ தெரியவில்லை. இப்பொழுது திரும்பவும் சர்வாதிகாரம் கொடுங்கள் என்று கேட்டு வாங்கிக்கொண்டிருக்கிறாரே! அவர் கேட்டபின் யார் மறுக்கமுடியும்? மறுத்தால் யமனுலகு போகவேண்டியதுதானே?

இந்தப் புது சர்வாதிகாரத்தைக் கேட்டுப் பெற்றதற்கு, என்ன காரணம் தெரியுமா? ஜெர்மனியிலே உள்நாட்டு நிலைமை ஒன்றும் சரியாக இல்லை. வெளி உலகிற்கு, உள்புறம் அழுகி வெளியே மினுமினுப்போடு இருக்கும் ஆப்பிள்மாதிரி இருக்கிறது ஜெர்மனியரின் நிலைமை. அங்குள்ள ஜனங்கள் படும் கஷ்டத்திற்கு அளவே இல்லையாம். உள்ளுக்குள்ளேயே ஏகப்புகைச்சலாம். அந்தப் புகைச்சலை இன்னும் முரட்டுத்தனமாக அடக்கிவிட நினைக்கிறார்போலிருக்கிறது ஹிட்லர். தவிர, அவருக்கு பெரிய விரோதிகளும் அதிகமாகியிருக்கக்கூடும். அவர்களை ஒடுக்கவும் இருக்கலாம் இப்புது அதிகாரம்.

ஜெர்மனியில் நடக்கும் உள்நாட்டுக் குற்றங்கள் அதிகமாகியிருக்கின்றன. அவ்வாறு குற்றம் செய்வோரைத் தண்டிக்கும் நியாயாதிபதிகளும் அலக்ஷிய மனசுள்ளவர்களாக இருக்கிறார்கள். தம்மனச்சாட்சிக்கு விரோதமாக அவர்கள் நடக்க விரும்பவில்லை. அதனால் லேசான தண்டனைகளையே விதிக்கிறார்கள் என்று தெரிகிறது. அவர்களையெல்லாம் எச்சரித்திருக்கிறார் ஹிட்லர். கண்மூடித்தனமாகக் கடுந்தண்டனை விதிக்காவிட்டால் கல்தாதான் என்று கூறியிருக்கிறார்.

இதோடு, தனது உயிருக்கு ஆபத்துவரும் என்றுகூட அவர் பயப்படுகிறார்போலிருக்கிறது. இல்லாவிட்டால், 'ஜெர்மன் மக்களுக்கு நேரிடுகிற கதியே எனக்கும் நேரட்டும். ஜெர்மன் மக்களின் போர் இது. இதற்கு எனது சேவை எத்தனை காலம் அவசியம் என்று கடவுளுக்குத் தோன்றுகிறதோ, அத்தனை காலம் நான் உயிருடனிருக்க கடவுள் உதவட்டும். அதோடு, இத்தனை காலம் நம்மைக் காத்ததுபோல், இனியும் நம்மை எல்லாம் பகவான் காப்பாற்றட்டும்' என்று சொல்லியிருக்கிறார். கஷ்டம் அதிகமானால்தானே ஐயா கடவுளை இப்படியெல்லாம் பிரார்த்திப்பார்கள் மனுஷர்கள்? சட்டியிலே இருக்கிறது குறைந்தால், அப்புறம் தாராளம் எங்கிருந்து வரும்? தைரியமும் எங்கிருந்து வரும்?

இவ்வளவும் பேசினவர் கொஞ்சம் மிரட்டலும் செய்திருக்கிறார். வருஷா வருஷம் ஜெர்மானிய நீர்மூழ்கிக்கப்பல்கள் பெருகப்போகிறதாம். அவை நேசநாட்டுக் கப்பல்களை நொறுக்கப்போகின்றனவாம். நொறுக்கட்டும், நொறுக்கட்டும். ஹிட்லர் இவ்வாறு செய்வார் என்று அவர்கள் எதிர் பார்க்காதது அல்லவே! அட்லாண்டிக்கில் ஹிட்லரது நீர் மூழ்கிகள் அட்டகாசம் தான் செய்கின்றன. ஆனாலும், பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும், ஆபிரிகாவிற்கும், ருஷ்யாவிற்கும் உள்ள தொடர்பு அறுந்துவிடவில்லையே! ஒருவன் ஆக்னேயாஸ்திரம் தொடுத்தால், அதை அணைக்க வருணாஸ்திரம் தொடுக்க வேண்டும் என்று அக்காலத்தில் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதே மாதிரி, நீர்மூழ்கிகளின் நடமாட்டம் அதிகமானால், சுரங்க வெடிக் கப்பல்களை அதிகம் தயார் செய் என்ற பாடம் இந்தக் காலத்தில் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. ஆகவே ஹிட்லர் சும்மா ஜம்பம் அடித்துக் கொள்ளவேண்டியதில்லை. அவரையும், அவரது சகாக்களையும் எப்படியும் நொறுக்கிவிட நேசதேசத்தார் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற வருடம் ருஷ்ய யுத்தம் ஆரம்பமானதால், ஜெர்மனியில் தொழிலாளர் பஞ்சம் அதிகமாயிற்று. நாடெங்கும் பேயாகப்பறந்து போய், ஆட்களைத் திரட்டி வரச்சொன்னார் ஹிட்லர். பிரான்ஸின் தயவை எதிர் பார்த்தார். இன்னும் போதவில்லை என்றே தன் கையாளான லவாலைத்தூக்கி, தலைமைப் பதவியில் வைத்திருக்கிறார். அந்த மனுஷனும், பிரான்ஸில் உள்ள தொழிற்சாலைகளையே மத்ய ஐரோப்பாவிற்கு மாற்ற அநுமதிக்கப்போகிறார்போலிருக்கிறது.

இது ஏன் தெரியுமா? பிரிட்டிஷ் விமானிகள், தினம் விடிந்தால், ராஸ்டாக் எங்கே, ரைன் பிரதேசம் எங்கே, ஸ்கோடா தொழிற்சாலை எங்கே, நீர்வெளி எங்கே என்று போய் 400 டன், 500 டன் என்ற குண்டுகளை வீசி வருகிறார்கள். பிரான்ஸில் பல இடங்களைத் தவிடு பொடியாக்கி விட்டார்கள். அங்கங்கே கடற்கரைகளில் துணிச்சலாக இறங்கி, ஆலைகளுக்கும், துறைமுகங்களுக்கும், கப்பல்களுக்கும் தீ மூட்டிவிட்டுப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சீமைக்குப் பக்கத்திலே அதிகமாக, பிரான்சுத் தொழிற்சாலைகள் இருப்பது மோசம் என்று நினைத்தே ஹிட்லர் இந்த ஏற்பாட்டை எடுத்துக்கூறியிருக்கிறார் போலிருக்கிறது.

நார்வேயிலும், பெல்ஜியத்திலும், ஹாலந்து டென்மார்க் பிரதேசங்களிலும் ஏகமாகப் படைகளைக் கொண்டு குவிக்கச் செய்கிறாராம் ஹிட்லர். பிரிட்டிஷாரும், அமெரிக்கரும் கலந்து செய்யும் ஏற்பாடுகளையும், இரண்டாவது முனை ஏற்படுத்துங்கள், என்று அடிக்கடி பாடப்பெறும் பல்லவியையும் பார்த்தும், கேட்டும பதட்டமடைந்திருக்கிறார் ஹிட்லர் என்பது மேற்கண்ட ஏற்பாடுகளை அவர் செய்வதிலிருந்து தெரிகிறது.'

அதோடு, மால்டா வேறே மோசமாக இருக்கிறது. அதைப் பிடிக்கவே, பல விமானங்களும், வெடி குண்டுகளும் செலவாகிக்கொண்டிருக்கின்றன. அந்த வேலை முடிந்தால் தானே இந்த விமானங்களை வேறிடங்களுக்கு அனுப்பலாம்? வசந்த காலம் வேறே வந்துவிட்டது. யுத்த ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்து முடித்து, போரைத் தொடங்கவேண்டும். போன வருஷம் மாதிரி 'லேட்'டாக ஆரம்பித்து அவஸ்தைப்படக் கூடாதல்லவா? அப்பொழுது ருஷ்யர்கள் அவ்வளவு தயாராக இல்லை. அப்பொழுதே ஜெயிக்கமுடியவில்லை ஹிட்லரால். இப்பொழுது ருஷ்யர்களும் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே ஹிட்லர் பாடு ரொம்ப கஷ்டந்தான்! கஷ்டமென்றால், யுத்த வரக்கனையார் அவிழ்த்துவிடச் சொன்னார்கள் அவரை? படட்டும் கஷ்டம் நன்றாக! ஆனால் அவர் செய்த தவறுகளுக்காக உலகமே அவதிக்குள்ளாகியிருக்கிறது. இந்தத் துஷ்டப்பிள்ளைகள் ஒடுங்கினால் தான், உலகத்திற்கே க்ஷேமம். இந்தப் பிள்ளைகளை ஒடுக்கவே நேசதேசத்தார் போராடி வருகிறார்கள். இதுவரை ஏற்பட்ட தோல்விகள் எல்லாம் வெற்றிகளாக மாறி, உலகம் என்று க்ஷேமத்தை அடையப்போகிறதோ தெரியவில்லை.

## ஹவில்தாருக்கு வீர விருது.

### ஆரோக்கியசாமிக்கு ஐ.டி.எஸ்.எம். பதக்கம்.

ஹவில்தார் ஆரோக்கியசாமி சென்னை சாப்பர்ஸ் அன் மைனர்ஸ் பட்டாளத்தைச் சேர்ந்தவர். இவர் கிழக்கு யுத்த அரங்கத்தில் மிகவும் தைரியத்தோடும் சிறந்த முறையிலும் வேலை செய்தார். இதைப் பாராட்டி இந்திய இராணுவ இலாக்கா இவருக்கு ஐ.டி.எஸ்.எம். பதக்கத்தை ஒரு விருதாக அளித்திருக்கிறது.

---

## பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல் போராடக் கிளம்புகிறது.



இந்த நீர் மூழ்கிக் கப்பலில் உள்ள பீரங்கியை, அதில் உள்ள உத்தியோகஸ்தர்கள் ஆயத்தம் செய்து வைக்கிறார்கள். இது எதிரிகள் இலாக்காவிலுள்ள கடலுக்கு புறப்படுகிறது.

---

# ஐந்தாம் படையின் விஷம வேலைகள்.

**இது தான் எதிரிகள் நோக்கம்.**

ஐந்தாம் படை வேலைகள் மிகவும் கேவலமான முறையில் இன்னமும் நடந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் படையினரும், இந்தியப் படையினரும் மிகக் கேவலமான நடத்தையுடையவர்கள் என்று பொய்ப் பிரசாரம் ஓயாமல் நடந்து கொண்டிருக்கிறது. இதனால், நம்மைக் காக்கும் படையினருக்கும் பொது ஜனங்களுக்கும் விரோதம் உண்டாகிவிடும். இந்த இரண்டு தரத்தாருக்கும், கொஞ்சங்கூட நம்பிக்கைக்கு இடமே இல்லாது போய்விடும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட வேண்டும் என்பது தான் நம் எதிரிகளின் நோக்கம்.

ஒவ்வொரு நாட்டிலேயும், ஒவ்வொரு யுத்தத்திலேயும் ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் முகாங்களில் இருக்கிறார்கள். இவர்கள் தம் உடல் நிலையையும் மன நிலையையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டியவர்கள். அவர்களில் ஒரு சிலர் ஒழுக்கக் குறைவாகவோ, மரியாதைத் தவறாகவோ நடந்து கொள்ளக்கூடும். இது சகஜம் தான். புத்திசாலியான ஒவ்வொரு இந்தியருக்கும் அங்கிலேயருக்கும் இது தெரிந்த விஷயம். இதற்கு முன்பும் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டது உண்டு. என்றாலும், இப்போது, இடைவிடாது பிரிட்டிஷ் இராணுவங்களையும் சாம்ராஜ்ய இராணுவங்களையும் குறை கூறி வருவதுபோல, ஒரு போதும் குறை கூறியதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் வெறுப்பு, அல்லது தெரியாத்தனம் அல்லது கெட்ட எண்ணமாகத் தான் இருக்கவேண்டும். சென்ற சில வருஷங்களாக எத்தனையோ முகாங்களில் எத்தனையோ ஆயிரக்கணக்கான பேர் வீரர்கள் தங்கி இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஒழுக்கக்குறைவாகவோ மரியாதைக் குறைவாகவோ நடந்துகொண்ட சந்தர்ப்பங்கள் மிக மிகக் கொஞ்சம். ஒரு ஜில்லாவில் உள்ள பொது ஜனங்கள் செய்யும் குற்றங்களோடு போர் வீரர்கள் செய்யும் குற்றங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், பொது ஜனங்கள் செய்யும் குற்றம்தான் மிகவும் அதிகம் என்று வெளிவாகத் தெரியும். ஆகையால் படையினர் மீது, வீணாகக் குறை கூறி, தப்புப் பிரசாரம் செய்வது ஐந்தாம் படையினர் வேலையாகத் தான் இருக்கவேண்டும்.

இன்று நம் படையினர் இருப்பது போல, அவ்வளவு ஒழுக்கத்தோடு உலக சரித்திரத்திலேயே ஒரு போதும் எந்தப்படையும் இருந்ததில்லை என்னும் உண்மையை அனைவரும் உணரவேண்டும். இது விஷயத்தில் இராணுவ அதிகாரிகள் மிகவும் அக்கரையோடிருக்கிறார்கள். இப்படியிருக்க, இப்போது சில இந்தியர்கள் நம் படையினர் மீது சந்தேகமும் பயமும் கொண்டிருக்கிறது தெரிந்து, மனம் சலித்துப் போய் இருக்கிறார்கள். வீரத்திலேயோ, தன்னடக்கத்திலேயோ, எதிரியை வெல்லவேண்டும் என்னும் தம் கடமையை நிறைவேற்றுவதில் மிகுந்த மன உறுதி கொண்டு இருப்பதிலேயோ, இவர்களுக்குச் சமமாக எந்த நாட்டிலும் எந்தப் படையும் இருந்தது கிடையாது என்று துணிந்து சொல்லலாம்.



## பர்மாவிற்கு ஜெனரல் வேவல் விஜயம்.



சமீபத்தில் இந்தியாவின் பிரதம படைத் தலைவர் ஜெனரல் வேவல் பர்மாவில் சிட்டாங் போர் முனையில் உள்ள சீனப் படைகளைப் பார்வையிட்டார். இந்தப் படத்தில், ஜெனரல் வேவல், பர்மா படைத் தலைவர் ஜெனரல் அலெக்ஸாந்தர், சீனப் படைத் தலைவர், அவருடைய பிரதம உத்தியோகஸ்தர் ஆகியோர் காணப்படுகிறார்கள்.

---

# வாழ்வை விட கடமையே பெரிது

## அந்தமானில் கைதியான உத்தியோகஸ்தர்கள்

### உலகம் புகழும் வீரர்கள்

அந்தமான் தீவுகள் வங்காளக் குடாக்கடலின் நடுவில் இருக்கின்றன. கடுமையான தண்டனைக்கு உள்ளாகும் கைதிகளை இந்தியாவிலுள்ள எல்லா அரசாங்கங்களும் அங்கே அனுப்பிக் கொண்டிருந்தன. இதன் தலைநகரம் 'போர்ட் ப்ளேர்', இக்கைதிகளை நடத்தி நிர்வகிக்க ஒரு சிறு இராணுவமும் சில உத்தியோகஸ்தர்களும் அங்கே இருந்தார்கள். இந்தத் தீவுகளின் பிரதம கமிஷனருடைய பெயர் மிஸ்டர் சி. எப். வாடர்பால், ஐ.சி.எஸ்.

இத்தீவுகள் பினாங்கு, ரங்கூன், கலகத்தா, சென்னை, கொழும்பு ஆகிய துறைமுகங்களுக்கு நடுவில் இருக்கின்றன. ஆகையால் இதை ஜப்பானியர்கள் தாக்கிப் பிடித்துக் கொள்ளக் கூடும் என்று இந்தியா சர்க்கார் எதிர்பார்த்தனர். ஆகவே, சமயோசிதம் போல் நடந்துகொள்ளும்படி அந்த பிரதம கமிஷனருக்கு இந்தியா சர்க்கார் அனுமதி கொடுத்து விட்டனர்.

அதன்படி, ஜப்பானியர் தாக்கும் முன்பே அந்தமான் தீவுகளில் உள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களை, அவர் இந்தியாவிற்கு அனுப்பி விட்டார். அல்லாமலும், அவசியமில்லாத இலாக்காக்களையும், அந்நிய நாட்டார்களுடைய மனைவி மக்களையும், சில உத்தியோகஸ்தர்களையும், கைதிகளையுங் கூட இந்தியாவிற்கு அனுப்பி விட்டார். ஆனால் தானும், சில உத்தியோகஸ்தர்களும் கடைசி வரை அங்கேயே இருப்பது என்று முடிவு கட்டி விட்டார். அதன்படியே அங்கேயே இருந்து ஜப்பானியர்களின் கைதியாக ஆகிவிட்டார். இவருடன் 5 ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களும், 2 இந்திய உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய சிப்பந்திகளும் கைதியாகி விட்டனர்.

மிகுந்த கஷ்டங்களுக்கு இடையே தம் கடமையை நிறைவேற்ற அவர்கள் பின் வாங்கவே இல்லை. இவர்கள் தம் உயிரையும் வாழ்வையும் மதித்திருந்தால், இந்தியாவிற்குத் திரும்பி வந்திருக்கலாம். ஆனால், அவர்கள் தம் கடமையையே பெரிதாக மதித்தார்கள். ஆகையால் உலகம் புகழும் வீரர்களாக விளங்குகிறார்கள்.

---

# ஜப்பான் ஜெகஜாலப் புரட்டு

## மதிப்பில்லாத நோட்டுகள் போடுகிறார்கள்

### அடிமை நாடுகளைச் சுரண்ட புது வழி

ஜப்பான் சாமான்கள் என்றாலே ஒரு தனி விசேஷம் உண்டு. வெடிக்காத குண்டு, சுடாத துப்பாக்கி, முதலியவைகளைச் செய்வதில் ஜப்பானியர் கைக்காரர்கள். இவை எல்லாம் ஏமாற்றும் வித்தைகள் தான். இப்போது இன்னொரு வித்தையைக்கைக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு பெரிய ஜெகஜாலப் புரட்டு.

சில நாடுகளை ஜப்பானியர் கைப்பற்றி யிருக்கிறார்கள். இங்கே தம் ஆதிக்கத்தை நிலை நாட்ட வேண்டும். இதற்கு முதல்படி நாணயச் செலாவணி.

இங்கெல்லாம் ஒரு புது மாதிரி நோட்டுகளைச் செலாவணி செய்கிறார்கள். நோட்டுச் செலாவணி என் ஏற்பட்டது என்று விளக்கவேண்டியது அவசியம் என்று நினைக்கிறோம். பெருந் தொகைகளை நாணயங்களாக ஒரு இடத்தி லிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துக்கொண்டு போவது எப்போதும் இயலாத காரியம். அப்போதெல்லாம் நாணயங்களுக்குப் பதிலாக நோட்டுகளாக மாற்றி எடுத்துக் கொண்டு போகலாம் என்பதற்காகத் தான் நோட்டுச் செலாவணி ஏற்பட்டது. எந்த அளவிற்கு நோட்டுக்கள் அச்சாகி, செலாவணிக்கு அனுப்பப்படுகிறதோ, அந்த அளவிற்கு அரசாங்கப் பணக் களஞ்சியத்தில், நாணயங்கள் ரொக்கமாக இருக்கவேண்டும். அப்போது தான் அந்த நோட்டுச் செலாவணிக்கு மதிப்பு உண்டு.

ஆனால், இப்போது ஜப்பானியர் வெளியிட்டிருக்கும் நோட்டுக்கள், ஜப்பான் பாங்கிகளே ஒப்புக் கொள்ளாதவை. இவை இராணுவ நோட்டுக்கள் என்றும் சிவில் நோட்டுக்கள் என்றும் இரண்டு வகைப் படும். சீனாவில் தாம் கைப்பற்றி, ஒரு பொம்மை அரசாங்கத்தை ஏற்படுத்தியுள்ள பகுதிகளில், 6 வகை நோட்டுகளை ஜப்பானியர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

**கிழக்கு ஆசியா முன்னேற்ற திட்டம்!**

கிழக்காசிய விலுள்ள நாடுகளை முன்னேறச் செய்வதே தம் நோக்கம் என்று ஜப்பானியர் வாய்ப்பந்தல் போடுகிறார்கள் அல்லவா? அந்தத் திட்டப்படி தான் இந்த நோட்டுகளையும் வெளியிட்டிருக்கிறார்களாம்! "நீ அரிசி கொண்டுவா; நான் உமி கொண்டு வருகிறேன்; இருவரும் புடைத்துத் தூற்றிச் சாப்பிடலாம்" என்று சொன்னாளாம் ஒரு காரியக்காரி. அதுபோல் இருக்கிறது இந்த ஜப்பான் திட்டம். அடிமைப்பட்ட நாடுகள் எல்லாம் இப்போது "ஆமாஞ் சாமி" போட வேண்டிய நிலைமையில் தானே இருக்கின்றன. இதன் மூலம், ஜப்பானிய இராணுவங்களுக்குக் கொள்ளையோ கொள்ளை.

இது மட்டுமா? ஜப்பானில் நாணய மாற்று விகிதத்தை நிர்ணயிக்கும் முறையே, ஒரு பெரிய தகிடுதத்தம். இதனால், ஜப்பானியருக்கு அடிமைப்பட்டு நாட்டு மக்கள் சூறையாடப் படுகிறார்கள்; ஜப்பானிய ஏகாதிபத்தியம் அதன் பயனாகக் கொழுக்கிறது.

## ருஷ்யாவிற்கு அமெரிக்க உதவிகள்

### பாரசீகம் வழியாகப் போகின்றன

### பாரசீகத்தில் போக்குவரவு வசதிகள்

யுத்தம் நடைபெறுவதற்கு இரண்டு அம்சங்கள் தேவை. 1. யுத்தத் தளவாடங்கள்; 2. உணவுப் பொருள்கள். இவை இரண்டும் இப்போது ருஷ்யாவிற்கு மிகவும் தேவை. இவற்றை வழங்க அமெரிக்கா ஒத்துக் கொண்டிருக்கிறது. இவற்றை அமெரிக்காவி லிருந்து ருஷ்யாவிற்குக் கொண்டு போய்ச் சேர்க்க, பிரிட்டன் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆகையால், அமெரிக்காவி லிருந்து கப்பல்கள் தளவாடங்களையும் உணவுப் பொருள்களையும் ஏராளமாக ஏற்றிக் கொண்டு வந்து பாரசீக வளைகுடாவிலுள்ள துறை முகங்களில் இறக்குகின்றன. அங்கிருந்து தரை வழியாகவும் கால்வாய்கள் வழியாகவும் அவற்றை வட பாரசீகத்திற்கு அனுப்புகிறார்கள். அங்கே ருஷ்யப் போர் வீரர்கள் அவற்றை பெற்றுக் கொண்டு, கருங்கடல் வழியாகவும், ரயில் வழியாகவும் ருஷ்யாவிற்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்றார்கள்.

பந்தர் ஷா பூர் என்பது ஒரு துறைமுகம். இது பாரசீக வளைகுடாவில் இருக்கிறது. இங்கே மட்டும் ஒரு நாளில் 1,000 டன சாமான்கள் இறக்குமதியாகின்றன. இது போல, இந்த வளைகுடாவில், அநேகத் துறைமுகங்கள் இருக்கின்றன. இந்த ஒவ்வொரு துறைமுகத்திலும் ஏராளமான சாமான்கள் இறக்குமதியாகின்றன.

இந்தத் துறைமுகங்களில் இறக்குமதியாகும் சாமான்களை வட பாரசீகத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்க, நல்ல ரோடுகளைப் புதிதாக அமைத்திருக்கிறார்கள். தென் பாரசீகத்தில் பாலைவனங்கள் அதிகம். இவற்றின் வழியே வண்டிகள் போவது மிகவும் கஷ்டம். ஆகையால் ஒரு மோட்டார் லாரிக்குப் பின்னே அநேக வண்டிகளை ஒன்றின் பின் ஒன்றாகக் கட்டி அவற்றில் சாமான்களைப் போட்டு, ஓட்டிக் கொண்டு வட பாரசீகத்திற்குக் கொண்டு போகிறார்கள். வட பாரசீகம் மிகவும் செழிப்பான நாடு. இங்கே தான் ருஷ்யப் போர் வீரர்கள் சாமான்களைப் பெற்றுக் கொண்டு கப்பல் வழியாகவும், தரை வழியாகவும் ருஷ்யாவிற்குக் கொண்டு போகிறார்கள். அல்லாமலும், அங்குள்ள ஆற்றுப் படகுகள் மூலமும் தெற்கேயிருந்து வட பாரசீகத்திற்குச் சாமான்களை அனுப்புகிறார்கள்.

இந்த வழியாக யுத்தத் தளவாடங்கள் மட்டுமன்றி, பதனிட்ட தோல், கோதுமை, சணல், அரக்கு, கம்பளி, ஈயம், கொய்னா, ரப்பர், ரசம், தகரம், பித்தளை, சர்க்கரை, தாமிரம், அலுமினியம் ஆகிய பொருள்களும் போய்ச் சேருகின்றன.

இங்குள்ள ரோடுகள் மிகவும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பக்தாதிலிருந்து தோராணுசகு 500 மைல் தூரம். இவ்வளவு தூரத்தையும் ஒரு மோட்டார் காரில் இரண்டே நாட்களில் கடந்து விடலாம்.



## நம் உயிர் மட்டும் அவ்வளவு பெரிதா?

### மாட்ஜ் ஜெரார்ட் அம்மையார் சமீபத்தில் சென்னை ரேடியோவில் கூறியதாவது :—

சொத்துக்களை விட மனித உயிர் மிகவும் உயர்ந்தது என்று சிலர் கூறுகிறார்கள். இதற்காக, தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டி, மாகாணம் முழுதும், பந்தோபஸ்தான இடம் எங்கே இருக்கிறது என்று தேடித்திரிகிறவர்களுடைய உயிர் பெரிதா? அல்லது, தன் வேலையை விட்டுப் போகாமல், இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு, அவசியம் நேரும் போது மட்டும் பாதுகாப்பு இடங்களில் பதுங்கிக் கொண்டு, தம் அலுவல்களைச் சாதாரணமாகக் கவனித்துக்கொண்டிருக்கிறவர்களுடைய உயிர் பெரிதா?

பிறருக்குக் கடும் கஷ்டங்கள் ஏற்பட்டு நாட்டில் கலவரமும் குழப்பமும் ஏற்படும்போது தனிப்பட்டவர்களின் உயிர் மட்டும் உயர்வு என்று கருதுவது சரியா என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டும்."

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் வருஷம் மேமீ 8உ, வெள்ளிக்கிழமை [இதழ் 18



## ஜெர்மன் பாங்கர்கள் கொழுக்கவே இந்த யுத்தம்

### பொய் சொல்லி நா தடிப்பேறியவர்கள்

### செஞ்சேனைகளைக் கண்டால் ஓட்டம்

### மே விழா அன்று ஸ்டாலின் உபதேசம்

மே மாதம் 1-ம் தேதி தொழிலாளர் திருநாள். இந்தத் திருவிழாவை உலகம் எல்லாம் கொண்டாடுகிறார்கள். இருந்தாலும் ருஷ்யாவில் தான் இது சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இதற்குக் காரணம், அங்கே, முதலாளி தொழிலாளி என்ற வேற்றுமை கிடையாது. எல்லோரும் தொழிலாளிகள் தான். இந்தத் திருநாளை முன்னிட்டு ருஷ்யா நாடு முழுதும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் லீவ் விடுவது வழக்கம்.

இந்த வருஷம் நடை பெற்ற திருநாளின்போது ருஷ்ய ஜனத் தலைவர் ஸ்டாலின் தன் நாட்டுப் பொது மக்களுக்கு ஒரு கட்டளை விடுத்திருக்கிறார். அதன் சுருக்கமாவது :—

தோழர்களே! செம்படையினரே! சிவப்புக் கப்பல் படையினரே! கமிஷனர்களே! அரசியலார்களே! பதுங்கிப் பாயும் வீரர்களே! தொழிலாளர்களே! விவசாயிகளே! அறிஞர்களே! தற்காலிகமாக எதிரிகள் கைப்பற்றியிருக்கும், சோவியத் நாடுகளில் வசிக்கும் சகோதரர்களே!

**அருமையான தியாகம்**

ஜெர்மனியோடு போராட்டம் ஆரம்பித்த பிறகு வரும் முதல் மே திருநாள் இன்றுதான். இன்று உங்களுக்கு லீவ் வேண்டாம் என்று நீங்களே கூறி விட்டீர்கள். இது ஒரு அருமையான தியாகம் தான். நம் நாட்டைக் காக்க வேண்டி யிருக்கிறது. போர் முனையில் உள்ளவர்களுக்குப் போதுமான யுத்தத் தளவாடங்களை அனுப்ப வேண்டியிருக்கிறது. அவர்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களும் தேவை. இதற்குப் போர் முனையில் போராடுகிறவர்களும் தளங்களில் இருந்து வேலை செய்கிறவர்களும் ஒத்து இருக்கவேண்டும். இதனால்தான் உங்களுக்கு இன்று லீவ் வேண்டியது இல்லை என்று தெரிவித்துவிட்டீர்கள்.

ஜெர்மனி போர் தொடுத்து இரண்டு வருஷங்களுக்கு அதிகமாகி விட்டது. பிரான்சு, நார்வே, டென்மார்க், பெல்ஜியம், ஹாலந்து, செக்கோஸ்லோவேகியா, போலந்து, யுகோஸ்லேவியா, கிரீஸ் முதலிய ஐரோப்பிய எதேச்சை நாடுகளின் மீது, அக்கிரமமாகப் படை எடுத்துப் போய், கைப்பற்றி, அந்நாட்டு மக்களின் இரத்தத்தை ஜெர்மானியர் உறிஞ்சிக் கொண்டு இருக்கின்றார்கள். இது காரணமாகஜெர்மன் பாங்கர்கள் கொழுக்கிறார்கள்.

**உண்மை உருவம் வெளிப் படுகிறது**

பத்து மாதங்களுக்கு முன்பு தான் ஜெர்மானியர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்து நம்மைத் தாக்கினார்கள். நம் நாட்டு மக்களைச் சூறையாடினார்கள். நகரங்களையும் கிராமங்களையும் நாசஞ் செய்தார்கள். பொது மக்களைக் காயப் படுத்தினார்கள்; கொன்றார்கள். இந்த மிருகத்தனமான எதிரியோடு போராடி நம் நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக நாமும் சென்ற 10 மாதங்களாகப் போர் ஆடிக் கொண்டு தான் இருக்கிறோம். அவர்கள், சொல்லுவது போல் நடந்து கொள்ளுவது கிடையாது. இந்த உண்மையை நாம் இப்போது தான் உணர்ந்து கொண்டோம். அவர்களுடைய உண்மை உருவம் இப்போது தான் வெளிப்படுகிறது.

**தேசிய வாதிகளா ? கொள்ளைக்காரர்களா ?**

ஜெர்மன் பாசிஸ்ட்கள் தேசிய வாதிகள் என்றும், பிற நாட்டவர்கள் தம் மீது படை எடுத்து வந்து தாக்காதபடி பாது காத்துக் கொள்ளுவதற்காக, நாட்டின் ஒற்றுமைக்காகவும் ஏதேச்சைக்காகவும் போராடுகிறவர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்ளுகிறுர்கள். இது ஒரு பச்சைப் பொய். இவர்கள் படை எடுத்துப் போய்க் கைப்பற்றிய நாடுகள் இவர்கள் ஒற்றுமையைக் குலைத்தது உண்டா ? ஏதேச்சையைக் கெடுத்தது உண்டா ? கிடையாதே. உண்மையிலேயே இவர்கள் தேசீய வாதிகள் அல்ல ; தமக்குச் சொந்த மல்லாத நாடுகளைக் கைப்பற்றி சூறையாடி, அதனுல் கொழுக்கும் பணப் பேய்கள்.

ஜெர்மன் பாசிஸ்ட்களின் தலைவர் கோயரிங். அங்கே இருக்கும் பெரிய லேவாதேவிக்காரர்களுக்குள் அவரும் ஒருவர். பணமே தெய்வம் என்று நினைக்கிறவர். இவருக்கு டஜன் கணக்கான தொழிற்சாலைகளில் பங்குகள் உண்டு. ஹிட்லர், ரிப்பன்ட்ராப், கோயபெல்ஸ், ஹிம்லர் முதலியவர்கள், தம் நன்மை ஒன்றிலே மட்டும் கண்ணுய் இருக்கும் கடுவாய்ப் புலி போன்றவர்கள். இவர்கள் கைக்குள்ளாகத் தான் ஜெர்மன் படை இருக்கிறது. இப்படையினருடைய இரத்தத்தையும் அன்னியர்களுடைய இரத்தத்தையும் சிந்தும்படி செய்து, அங்கங்களை இழக்கும்படி செய்கிறவர்கள் இவர்கள் தான். இவ்வளவும், தாமும் தம் பணப்பைகளும் கொழுப்பதற்காகத் தான்.

**கொள்ளைக்காரர்களிடமிருந்து விடுவிக்க வேண்டும்.**

பொய் சொல்லி நா தடிப்பேறியவர்கள் தான் ஜெர்மன் பாசிஸ்ட்கள். ஐரோப்பிய நாகரிகத்தைக் காப்பாற்றுகிறவர்கள் என்று தம்மைச் சொல்லக் கூடும். உண்மையில் நாகரிகத்தை நாசஞ்செய்து விட்டு அதனுல் கொழுக்கிறவர்கள் தான் ஜெர்மாணியர்கள்.

யுத்த காலத்தில் ஜெர்மன் படைகளில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஜெர்மன் பொது ஜனங்கள் பெருத்த ஏமாற்றம் அடைந்திருக்கிறுர்கள். கோடிக் கணக்கான மக்கள் மடிந்தனர். கோடிக் கணக்கானவர்கள் பசியினுலும் வறுமையினுலும் வாடித் தவிக்கின்றனர். தம் தோல்வியை இப்போது தான் உணரத் தலைப்பட்டிருக்கிறுர்கள். ஹிட்லர், கோயரிங் முதலிய கூட்டுக் கொள்ளைக்காரர்களிட மிருந்து ஜெர்மனியை மீட்டால் தான் தமக்கு விமோசனம் உண்டு என்று உணரத் தலைப்பட்டுவிட்டார்கள்.

தாம் கைப்பற்றிய நாடுகளில் ஜெர்மனியர்கள் படும் தொல்லைகள் கொஞ்சம் அல்ல. ஜெர்மானியர் தொழிற்சாலைகளும் சாமான்களும் தீக்கு இரையாகின்றன. ஜெர்மனியிலிருந்து யுத்தத் தளவாடங்களை ஏற்றிப் போகும் ரயில் வண்டிகளை நம்மவர்கள் உடைத்து விடுகின்றனர். ஜெர்மன் உத்தியோகஸ்தர்களையும் ஆட்களையும் கொன்று விடுகின்றனர். பத்து மாதங்களுக்கு முன்பு இருந்ததை விட ஜெர்மன் படை இப்போது மிகவும் பலக் குறைவாய் இருக்கிறது.

**நம் நாடு வலுக்கிறது.**

நம் நாடு இப்போது மிகவும் வலுவடைந்திருக்கிறது. ரஷ்யப் பொது மக்களுக்கும் ரஷ்ய அரசாங்கத்திற்கும் இப்போது இருப்பது போல ஒரு போதும் நெருக்கம் இருந்ததில்லை. இந்த உண்மையை சோவியத் அரசாங்கத்தின் எதிரிகள் கூட ஒப்புக் கொள்ளுவார்கள். நம் நாடு முழுதும் ஒரு யுத்த முகாமாகத் தான் இருக்கிறது.

ஏதேச்சையை நாடும் நாடுகள் எல்லாம் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை ஒழிக்க ஒன்று கூடி இருக்கின்றன. நமக்கு உதவியாக பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகள் சேர்ந்திருக்கின்றன.

இது வரை தற்காப்பிற்காகப் போராடிக்கொண்டிருந்த நம் சேனைகள் இப்போது எதிரிப் படைகளை தாக்கி வெல்லுகின்றன. ஹிட்லருக்கு ஆளாகாதபடி ரஷ்யாவைக் காப்பாற்ற வேண்டி நம் படைகள் மிகக் கடுமையான குளிர் காலத்திலும் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகிப் போராடுகிறுர்கள். வெற்றி மேல் வெற்றி நமக்குக் கிடைக்கிறது. குளிர் காலத்தில் போரை நிறுத்தி ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஜெர்மனியர் நினைத்தார்கள். இந்த எண்ணத்தில் மண்ணைப் போட்டு விட்டோம். அவர்கள் தம் தளங்களில் கை யிருப்பில் வைத்திருந்த போர் வீரர்களையும் தளவாடங்களையும் போர் முனைக்கு அனுப்ப வேண்டிய தாயிற்று.

கைதிகளாகப் பிடிபட்டவர்களையும் ரஷ்யப் பொது மக்களையும் ஜெர்மானியர்கள் படுத்திய பாட்டைக் கண்டு, இப்போது பழி வாங்கும் எண்ணத்தோடு நம் படைகள் இருக்கின்றன. "அதட்டிப் பேச ஆள் இல்லாவிட்டால், தம்பி சண்டப் பிரசண்டன்" என்னும் பழமொழி ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் மிகவும் உண்மையாய் இருக்கிறது. ரஷ்யப் பொது மக்களை வெகுவாக அதட்டி மிரட்டும் ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள், செஞ்சேனைகளைக் கண்டால் ஓட்டம் எடுக்கிறுர்கள்.

**ஏன் போராடுகிறோம் ?**

நாம், நம் நாட்டிற்காகவும், நியாயத்திற்காகவும், ஏதேச்சைக்காகவும்தான் போராடுகிறோம். பிறர் நாடுகளைக் கைப்பற்ற வேண்டும் என்பதோ, அன்னியர்களை அடக்கி ஆளவேண்டும் என்பதோ, நமது ஆசை அல்ல. நமது நோக்கம் தெளிவானது ; கண்ணியமானது. ஜெர்மன் பாசிஸ் மிருகங்களின் வசம் இருந்து நம் சோவியத் நாட்டை மீட்க நாம் விரும்புகிறோம். இதற்கு ஜெர்மன் சேனையிலுள்ள ஒவ்வொருவரும் தம் ஆயுதத்தைக் கீழே வைக்கிற வரை அடியோடு அழிக்கத் தான் வேண்டும். இந்த வேலையைச் செஞ்சேனை செய்தே தீரும். நம்மிடம் எல்லா விதமான ஆயுதங்களும் இருக்கின்றன. அவற்றைக் கையாள சோவியத் படைகள் கற்றுக் கொள்ள வேண்டும். அந்தந்தப் படையைச் சேர்ந்தவர்கள் தம் படைக்கு உரிய ஆயுதங்களைத் திறமை யோடு கையாள நன்ருகப் பழகிக் கொள்ள வேண்டும்.

**ஸ்டாலின் உபதேசம்**

காலாள் படையினரே ! துப்பாக்கி எடுத்துச் சுடுவதில் நன்ருகத் தேர்ச்சியடையுங்கள் ! அதில் வல்லவர்கள் ஆகுங்கள் ! அப்போது தான் குறி தவருமல் எதிரியைச் சுடக்கூடும்.

டாங்கிப் படையினரே ! பீரங்கிப் படையினரே ! விமானப் படையினரே ! உங்கள் ஆயுதங்களை எந்தெந்த வகைகளில் எல்லாம் உபயோகிக்கலாமோ அப்படி எல்லாம் உபயோகிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் ! அதில் நிபுணர்கள் ஆகுங்கள் ! அப்போது தான் எதிரியை அடியோடு அழிக்க முடியும்.

படைத் தலைவர்களே ! உங்கள் படையினரை எப்படி எல்லாம் பயன் படுத்தலாம் என்று தெரிந்து கொள்ளுங்கள். தலைவர்களாக இருப்பதில் நிபுணர்கள் ஆகுங்கள ! செஞ்சேனை, தான் மேற் கொண்டுள்ள மீட்சி வேலையைச் செய்தே முடிக்கும் என்று உலகத்திற்குக் காட்டுங்கள்.

செஞ்சேனை வீரர்களே ! 1942-ம் வருஷத்திலேயே ஜெர்மன் சேனைகளை அடியோடு வென்று, ஜெர்மனியர் வசமான சோவியத் நாடுகளை மீட்டு விடுங்கள்.

பதுங்கிப் பாயும் வீரர்களே ! எதிரிகளுக்குப் பின்ருல் உங்கள் வேலையைத் தொடர்ந்து நடத்துங்கள். அவர்களுடைய போக்கு வரவு வசதிகளையும் வண்டிகளையும், அவர்களுடைய முகாம்களையும் நாசம் செய்யுங்கள்.

வெல்ல முடியாத லெனினுடைய கொடியின் கீழ் நாம் முன்னேறிப் போய் வெற்றி பெறுவோமாக !



# தேசீயப் போர்முனை.

[இந்திய அரசியலே, பொய் மயமாக இருக்கிறது. இதனுல் சில சமயங்களில், உண்மையான நாட்டுப் பற்று உள்ளவர்களுக்கு மனம் உடைந்து போகிறது. நாட்டின் உண்மையான நிலையை எடுத்து "ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகையில், ஒரு இந்தியர் எழுதியிருப்பதின் சுருக்கமாவது] :—

ஜப்பான் சம்பந்தமாக நான்கு வகைக் கருத்து வேற்றுமைகள் உள்ள கட்சிகள்தான் இருக்கின்றன என்று காந்தியார் குறிப்பிடுகின்ருர்.

1. பலாத்காரத்தினுல் ஜப்பானை எதிர்க்கும் பிரிட்டிஷ் படைகள்.
2. பிரிட்டிஷ் தளைகளிலிருந்து ஜப்பான் இந்தியாவை விடுவிக்கும் என்று நம்பி, ஜப்பானை வரவேற்கும் பெருவாரியான இந்துக்கள்.
3. எந்த ஆட்சி நடைபெற்ருல் தான் நமக்கு என்ன என்று அக்கரையில்லாது இருக்கிறவர்கள். இவர்களுக்கு பிரிட்டிஷார் மீதோ ஜப்பானியர் மீதோ வெறுப்புக் கிடையாது.
4. சத்தியாகிரகிகள். காந்தி தத்துவத்தையும் அஹிம்சையையும் நம்பும் இந்தியர்கள். தம் வீடு, வாசல், சொத்து, சுகம் எல்லாவற்றையும் ஜப்பானியரிடம் ஒப்புக்கொடுத்து, பிறகு அவர்களோடு ஒத்து உழைக்காதவர்கள்.

இந்த நான்கு வகையினர் தவிர, மற்றும் பல முக்கியமான கட்சிகளும் இந்தியாவில் இருக்கின்றன என்பதை காந்தியார் மறந்து விடுகிருர். அவையாவன :—

(1) முஸ்லிம்கள், (2) இந்திய சமஸ்தானங்கள், (3) விவசாயத் தொழிலாளர் சங்கங்கள், (4) பூர்வீகக் குடிகள், (5) பார்ப்பன ரல்லாத திராவிடர் களடங்கிய ஜஸ்டிஸ் கட்சி, (6) தாழ்த்தப்பட்டவர்கள், (7) ஆங்கிலோ இந்தியர்களும் குடியேறிய ஐரோப்பியர்களும், (8) இந்தியக் கிருஸ்துவர்கள், (9) இந்தியத் தொழிற் சங்கங்கள், (10) ராடிகல் பாசிஸ்ட் எதிர்ப்புக் கட்சி, (11) சமதர்ம மார்க்ஸ்வாதிகள், (12) க்ஷத்திரியர்கள், (13) இந்து மிதவாதிகள், (14) மாணவர்கள் ஆகியோர்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானுல், இந்தியாவின் தனிப் பிரதிநிதித்துவ சபை காங்கிரஸ் அல்ல. ஜப்பான் சம்பந்தமாக காங்கிரஸ் கொண்டுள்ள கொள்கை, தோல்வி மனப்பான்மையைத் தான் குறிக்கிறது. ஆனுல் முற் கூறிய 14 இனத்தவர்களின் எண்ணிக்கை, இந்திய ஜனத் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு. இந்தப் பெரும்பான்மையான மக்கள் ஜப்பானை எதிர்த்தே தீரவேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்டு இருக்கிருர்கள்.

இந்த 14 இனத்தவர்களையும் ஒன்று திரட்ட அரசாங்கம் முன் வருமானுல், ஒரு சிறந்த ஜெயிக்க முடியாத சதுரங்கப் படையை அமைக்கலாம். அது, பாசிஸத்திற்கு எதிர்ப்பான தோர் தேசீயப் படையாக அமையும்.

# சைப்ரஸ் தயார்.

## எதிரிகள் பாடு திண்டாட்டம் தான்.

க்ரீட் தீவை ஜெர்மானியர்கள் தாக்கியபோது ஏராளமான படைகளையும் விமானங்களையும் கொண்டு வந்து அங்கே இறக்கிக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆனுல், இப்போது அதுபோல சைப்ரஸ் தீவைப் பிடிக்க அவர்களால் முடியாது. ஏனென்ருல், அப்போது ஜெர்மானியர்களுக்கு இருந்த வசதிகள் எல்லாம், இப்போது சைப்ரஸில் உள்ள பிரிட்டிஷ் படைகளுக்கு இருக்கின்றன.

அச்சு நாடுகளின் விமான நிலயங்கள் சைப்ரசுக்கு 300 மைல் தூரத்தின் உள்ள ரோட்ஸ் என்னும் இடத்திலும், 250 மைல் தூரத்தில் உள்ள காஸ் டெல்லோரிசோ என்னும் இடத்திலும் இருக்கின்றன. இந்த இடங்களி லிருந்து எதிரி விமானங்கள் சைப்ரசைத் தாக்கினுல், பிரிட்டிஷ் விமானங்கள் சைப்ரசிலிருந்து எதிர்க்கும். இவற்றிற்கு உதவியாக 150 மைல் தூரத்திலுள்ள சிரியாவிலிருந்து விமானங்கள் வந்துவிடும்.

இரண்டாவதாக க்ரீட் தீவு ஒரு வருஷத்திக்கு முன்பு இருந்ததைவிட, தாக்குதலை எதிர்த்து நிற்க, இப்போது சைப்ரஸ் மிகவும் சிறந்த நிலைமையில் இருக்கிறது. ஏக காலத்தில் ஒரு எதிரி ஆகாய வழியாகவும், தரை வழியாகவும் தாக்கினுல் எப்படித் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி க்ரீட்டிலும் தொப்ருவிலும் நல்ல பயிற்சி பெற்று விட்டோம்.

சென்ற ஒரு வருஷத்தில் மிகப் பிரமாதமான வேலைகள் சைப்ரசில் நடந்திருக்கின்றன. பூமிக்கு அடியிலே அநேக தளங்களைக் கட்டி முடித்திருக்கிறோம். விமான நிலயங்கள் புதிதாகக் கட்டியிருக்கிறோம். போக்கு வரவு சாதனங்களையும் வெகுவாகப் பெருக்கி இருக்கிறோம்.

ஆகவே, சைப்ரசை வெல்ல நம் எதிரிகளால் இலகுவில் முடியாது.

# பெண்களைச் சோரம் செய்யும் நாஜிகள்

## பிறப்பு விகிதத்தை உயர்த்த நாஜி முறை

போலந்து ஜெர்மானியர்களால் வெல்லப்பட்ட நாடு. இன்று நாஜிகளுக்கு இது அடங்கிக் கிடக்கிறது. இங்கே, லோட்சந்த், போஸ்னம் என்னும் பகுதிகளில் வசிக்கும் குடும்பத்தினர்கள், தம் பெண்கள் திடீரென மறைந்து போவதாகப் புகார் செய்கிருர்கள்.

உண்மை என்னவென்ருல், மேலப் போலந்தில் உள்ள ஹெலிஜெ என்னும் இடத்தில் ஜெர்மானியர்கள் ஒரு முகாம் அமைத்திருக்கிருர்கள். அந்த முகாமுக்கு, போலந்து பெண்களைத் திருடி அனுப்புகிருர்கள். அங்கே, அவர்களுக்கு நல்ல வைத்திய உதவி உண்டு. பிறகு ஜெர்மானிய ஆண்களோடு அவர்கள் சேரவேண்டும். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைக் கொண்டு நாட்டு மக்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பது ஜெர்மானியர் எண்ணம்.

சுத்த இரத்தம் உடையவர்கள் ஜெர்மானியர் தான் என்று அவர்கள் பெருமையாகப் பேசிக்கொள்ளும் பேச்சுக் குலைந்து போனுலும் பாதகமில்லை என்று அவர்கள் கருதுகிருர்கள்.

# சீனப்பெண்கள் யுத்த முஸ்தீபு

## போர் முனையில் நிற்கின்றனர்

பெண்கள் ஆண்களுக்கு அடிமைகள் என்பதற்குச் சின்னமாக சீனு இருந்து வந்தது. அதனுல் தான் சீனப் பெண்களின் கால் பாதங்களை வளரவொட்டாதபடி குழந்தைப் பருவத்திலேயே சிறிய இரும்புச் செருப்புக்குள் நுழைத்து இறுக்கி வந்தனர்.

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமானவர்கள் என்னும் உணர்ச்சி இப்போது அவர்களிடையே தோன்றி விட்டது. போர்வீரர்களைப் போல முரட்டுத் துணிகளால் செய்யப்பட்ட உடுப்புக்களை அணிந்து கொண்டு போர்முனையில் போராடுகிறுர்கள். மற்றும் பல வகைகளிலும் போர்க்களத்தில் இருந்து கொண்டு உதவுகின்றனர். அச்சம் அவர்களைவிட்டு அகன்றுவிட்டது. விடுதலை உணர்ச்சி, அவர்கள் மனத்தில் வேர் ஊன்றி விட்டது. வீரம் அவர்கள் உள்ளத்தே தாண்டவம் ஆடுகிறது.

போர்முனைகளில், வீரர்களுக்குக் களிப்பு உண்டாக்க வேண்டி, நாடகங்கள், பாட்டுக் கச்சேரிகள், பலவகை விளையாட்டுக்கள் முதலியவற்றை நடத்துகிறுர்கள். என்றுலும், போர்வீரர்கள் இவர்களிடம் மிகவும் கண்ணியமான முறையில் நடந்து கொள்ளுகிறுர்கள். அதனுல் தான் இவர்கள் தம் வேலைகளைத் தொடர்ந்து செய்ய முடிகிறது. நம் படையினர் மிகவும் ஒழுக்கமுடையவர்கள் என்பதற்கு இதுவே ஒரு தகுந்த உதாரணமாகும்.

# தன் திட்டப்படி நடக்க ஹிட்லரால் முடியவில்லை

## நேச தேசங்கள் செய்ய வேண்டியவை

ஹிட்லரின் முக்கிய நோக்கம் மழைகாலம் வரும் முன்பு பாகு எண்ணெய் கிணறுகளைக் கைப்பற்றிவிட வேண்டும் என்பதுதான். இன்னும் ஒரு மாதத்திற்குள் இந்த வேலை முடிய வேண்டும்.

**தன் திட்டப் படி நடக்க முடியவில்லை.**

ஹிட்லர் தனக்கு என்று ஒரு திட்டம் வகுத்திருக்கிருர். இதற்குப் பெயர் 'மெய்ன் காம்ப்' என்பது. இதன்படியும் நடந்து கொள்ள அவரால் முடியவில்லை. தான் யுத்தம் ஆரம்பித்த போதே, இரண்டு அரங்கங்களில் யுத்தத்தைத், தான் நடத்தக்கூடாது என்னும் மனஉறுதியோடுதான் இருந்திருக்கிருர்.

இதை முன்னிட்டே இவர் இப்போது தன் நாட்டைப் பாதுகாக்கும் வேலையில் ஈடுபட்டு இருக்கிருர். நேச தேசங்கள் எல்லாம் மேற்கு ஐரோப்பாவில் கூடியிருப்பதைக் கண்டு ஐரோப்பாவின் மேலக்கரையைக் காப்பதற்காக 'ரன்ஸ்டட்' என்னும் சேனைத்தலைவருக்கு உத்திரவு கொடுத்திருக்கிருர். கையாலாகாத இத்தாலி போன்ற நாடுகளில் உள்ள வீரர்களை எல்லாம் இவர் திரட்டினுலும் கூட 55 லட்சம் முதல் 60 லட்சம் பேர்களைத் தான் திரட்ட முடியும். இதில் குறைந்தது 5 லட்சம் பேர்களையாவது கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ரஷ்யாவில் ஜெர்மானியர்கள் முறியடிக்கப் பட்ட பிறகு, ஜெர்மனியின் தற்போதைய சக்தி எவ்வளவு என்று யாரும் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. எது எப்படி இருந்தாலும், ஜெர்மனி ரஷ்யாவோடு கடைசிவரை போராடியே தீரவேண்டும். அடுத்த மழைகாலத்தில் கூட போராடும்படியான நிலைமைக்கு ஜெர்மனி இடங் கொடுக்கக் கூடாது. எண்ணெய்க் கிணறுகளை செப்டம்பர் மாதத்திற்குள் கைப்பற்றிவிட வேண்டும். இது வெற்றிகரமாக முடியவேண்டுமானுல் லிபியாவில் இருந்து சூயஸ் கால்வாய்ப் பக்கம் போய்த் தாக்கும்படி ஜெனரல் ரோமெல்லுக்கு ஹிட்லர் உத்திரவிடலாம். விமானங்களில் ஜெர்மன் படைகள் க்ரீட்டிலிருந்து புறப்பட்டு எகிப்தையும் சிரியாவையும் தாக்கக் கூடும். ஆனுல், ஜெர்மானியர்களின் இந்த முயற்சியை, மால்டாவில் உள்ள பிரிட்டிஷ் விமானப் படைகளும் கப்பல் படைகளும் சிதறடித்து விடும் என்பது நிச்சயம்.

நேச தேசப் படைகள் உடனே செய்ய வேண்டியதென்ன ? இந்து மகா சமுத்திரத்தைக் கடந்து ஜப்பானியர் வரவொட்டாதபடி தடுத்து விட வேண்டும். இரண்டாவதாக ஐரோப்பாவைக் கடந்து கிழக்கே வந்து விடாதபடி ஜெர்மனியையும் தடுக்கவேண்டும். இந்த நிலைமையை நேசதேசப் படைகள் உணர்ந்து முக்கியமான இடங்களில் எல்லாம் தக்க பாதுகாப்புக்களை இப்போது கட்டிக் கொண்டிருக்கிருர்கள். மூன்முவதாக மேல்திசையிலிருந்து ஜெர்மனியை மிகக் கடுமையாகத் தாக்குவார்கள்.

"அடுத்த மழைகாலத்திற்குள், எதிர்பார்க்கப் படுவதைவிட மிகச் சிறந்த முறையில் ஜெர்மன் தளவாடங்கள் அமைந்து இருக்கும்" என்று சென்ற 1942-ம் ஏப்ரல் 26உ ஹிட்லர் பிரசங்கத்தில் கூறியிருப்பது, இங்கே கவனிக்கத் தகுந்தது.

ரஷ்ய விமானப்படையும் ஜெர்மன் விமானப் படையும் இந்த வருஷம் ஒத்த நிலையில் இருக்கவேண்டும் என்ருல், மேல்திசையில் போராடும் விமானங்களை ரஷ்யப்போர் முனைக்குத் தருவித்தால்தான் முடியும்.

இதனுல், ரஷ்ய விமானப படையின் பொறுப்பு குறையும். ஜெர்மன் தரைப்படையின் நிலைமை கஷ்டமாகும். பிரிட்டிஷ் விமானப்படையும் அமெரிக்க உதவியும் சேர்ந்தால் தகுந்தபடி நாசவேலைகள் செய்யலாம்.

# ஜெர்மன் மக்கள் பயம்

## தோல்வி மனப் பான்மை வாட்டுகிறது

### ஜெர்மன் பாதுகாப்புகளைத் தகர்த்துவிடலாம்

ஹாம்பர்க் துறைமுகத்திற் கப்பல்களை கட்டும் தளங்கள் இருக்கின்றன. வட பிரான்ஸிலும், ஹாம்பர்க்கை அடுத்துள்ள தாழ்ந்த பகுதிகளிலும் விமான தளங்கள் இருக்கின்றன. நார்வே கரையில் இராணுவ இலக்குகள் இருக்கின்றன. செண்ட் நாசேர் என்னும் இடத்தில் நீர் மூழ்கிக் கப்பல் தளங்கள் இருக்கின்றன. இவற்றை பிரிட்டிஷ் விமானப் படைகள் பலமாகத் தாக்கின. இதனுல், அவற்றிற்குப் பெருத்த சேதம் ஏற்பட்டது. ஜெர்மனியிலும், ஜெர்மானியர்கள் கைப்பற்றியிருக்கும் நாடுகளிலும் இருக்கும் முக்கியமான இராணுவ இலக்குகளை நெடுநாட்களாக பிரிட்டிஷ் ராணுவ விமானங்கள் முறைப்படித் தாக்கிக் கொண்டிருக்கின்றன.

இடைவிடாது நீங்கள் ஜெர்மனியையும், ஜெர்மானியர் கைப்பற்றியிருக்கும் நாடுகளையும் தாக்கிக் கொண்டிருப்பதனுல், நல்ல பலன் ஏற்படத் தான் செய்கிறது. இதன் பயனுக இரண்டாவது யுத்த களம் எங்கே ஏற்பட்டு விடுமோ என்று பொது ஜனங்கள் மிகவும் பயப்படுகிறுர்கள். அல்லாமலும் தாம் தோற்று விடுவோம் என்னும் எண்ணம் அவர்களை வாட்டிக் கொண்டிருக்கிறது. அவர்கள் மன உறுதி குலைந்து விடுகிறது. இருந்த போதிலும் தமக்கும் ஒருவேளை வெற்றி கிடைத்தாலும் கிடைக்கலாம் என்றும் நம்புகிறுர்கள். ஆகையால், கடைசி முறையாக ஹிட்லருக்கு ஒரு சந்தர்ப்பத்தை யளிக்க வேண்டும் என்றும் நினைக்கிறுர்கள்.



## சுடப்பட்டு வீழ்ந்த ஜெர்மன் விமானத்தின் மேல் "வி" வெற்றிக் குறி.



**லிபியா மாகாணத்தில் ஜெர்மானிய விமானத்தை ஆஸ்திரேலிய சேனை சுட்டு வீழ்த்தியது. விழுந்த விமானத்தின் சிறகில் "வி" என்னும் வெற்றிக் குறியை ஒரு ஆஸ்திரேலிய வீரர் எழுதுகிருர்.**

சமீபத்தில் பெர்லினிலிருந்து துருக்கிக்கு வந்து சேர்ந்துள்ள சில யாத்திரீகர்கள் இதுபற்றி கூறுவதாவது :—

ரியர் அட்மிரல் க்ளார்க் உட்வர்ட் அமெரிக்கக் கப்பல் படை ஒன்றின் மாஜி உத்தியோகஸ்தர். இவர் கூறுவதாவது :—

நாஜிகளுடைய மன உறுதியை பிரிட்டிஷ் விமானத் தாக்குதல்கள் சிதறடித்துவி டுகின்றன. இப்போது நேசதேசப் படைகள் எந்த நோக்கத்தின் பொருட்டு போராடிக் கொண்டு வருகின்றனவோ, அந்த நோக்கம் கைகூடிக் கொண்டு வருகிறது. திடீரென்று பிரஞ்சுக் கரையில் உள்ள போலோன் நகரத்தை பிரிட்டிஷ் விமானங்கள் வெற்றிகரமாகத் தாக்கியதைக் கேட்டு, ஜெர்மானியர் திடுக்கிட்டுப் போய்விட்டார்கள். நாஜிகள் மன உறுதி குலைந்து போனதைப்பற்றி, ஹிட்லர் பெரிதும் கவலை கொண்டிருக்கிருர். ஐரோப்பாக் கண்டத்தையே பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கக்கூடும் என்று ஜெர்மானியர்கள் இப்போது பயப்படுகிருர்கள். பிரஞ்சுக் கரையில் ஜெர்மானியர்கள் அமைத்திருந்த பாதுகாப்புகளைத் தகர்த்து எறிந்து உள் நுழைந்து போலோன் நகரத்தை பிரிட்டிஷ் படைகள் பிடித்துக் கொண்டதி லிருந்து ஒரு உண்மை தெளிவாகத் தெரிகிறது. முக்கியமான இடங்களில் கூட ஜெர்மானியர்கள் அமைத்திருக்கும் பாதுகாப்புக்களைத் தகர்த்துவிடலாம் என்று தைரியம் உண்டாகிறது.

இங்கிலாந்தில் உள்ள பொது மக்கள் இரண்டாவது யுத்த களத்தை உண்டாக்கவேண்டுமென்று மிகவும் அக்கரையோடு இருக்கிருர்கள். திடீரெனப் பாய்ந்து தாக்கும் பிரிட்டிஷ் படைகளின் வெற்றிகளும், விமானப் படைகள் மேலும் மேலும் அடையும் வெற்றிகளும் பொது மக்களின் ஊக்கத்தை அதிகப்படுத்துகின்றன. ஜப்பானியர் இப்போது யுத்தத்தில் இறங்கியதிலிருந்து நிலைமை மிகவும் சிக்கலாகி விட்டது. இருந்த போதிலும் ஹிட்லரின் நாடுகளை பெரிய சேனைகளைக் கொண்டு தாக்கினுல் என்ன பலன் உண்டாகுமோ, அந்தப் பலனை, பிரிட்டிஷ் படைகள் பதுங்கித் தாக்குவதனுலும் விமானங்களில் இருந்து தாக்குவதனுலும் பெற, வழி கோலிவிட்டன. இந்த விமானத் தாக்குதல்கள், தரையில் நேர்முகமாகத் தாக்குவதற்கு ஈடாகாது. ஆனுலும், இரண்டாவது போர்க்களம் ஒன்றிருக்குமானுல், அதனுல் என்ன பலன் ஏற்படுமோ, அந்தப் பலன் இந்த விமானத் தாக்குதல்களினுலும் ஏற்படுகின்றன. எப்படி என்ருல், இப்படித் தாக்குவதனுல், முக்கியமான யுத்த வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழிற்சாலைகள் நாசமாகின்றன ; சாமான்களும் போக்குவரவு வசதிகளும் சேதமாகின்றன ; எதிரிகளின் பாதுகாப்புப் படைகள் சிதறிப் போகின்றன. ஜெர்மனியோடு போராட ரஷ்யாவிற்கு இவை மிகவும் சாதகமா யிருக்கின்றன.

**பிரிட்டிஷார் ஆசை.**

எல்லா வகைகளிலும் ரஷ்யாவிற்கு உதவ வேண்டும் என்று பிரிட்டிஷ் பொது மக்கள் மிகவும் ஆசையாய் இருக்கிருர்கள். இதற்காக அரசாங்கத்தார் தம் முயற்சிகளை அதிகப்படுத்த வேண்டும் என்றும், தேவைப்பட்ட தியாகத்தைச் செய்ய அனைவரும் மன உறுதியோடு இருக்கவேண்டும் என்றும், அரசாங்கத்தார் இவை பற்றி தகுந்தபடி வழி காட்ட வேண்டும் என்றும் பொது மக்கள் கோருகிருர்கள். ஆனுல், படை எடுப்பு ஏற்பட்டால், பொது ஜனங்கள் விரும்புகிருர்கள் என்பதற்காக அது ஏற்படாது ; ஆனுல், இராணுவத் திட்டங்களை நன்ருக அலசிப் பார்த்துப் பரிசீலனை செய்த பிறகு தான் ஏற்படும்.

பிரிட்டிஷ் சர்க்கார் வேண்டா வெறுப்பாகவும் மிகவும் கொஞ்சமாகவும் தான் யுத்த முயற்சி செய்து வருகின்றனர் என்று எதிரிகள் பொய்ப் பிரசாரம் செய்து வருகிருர்கள். பீவர்ப்ரூக் பிரபு இரண்டு வாரங்களுக்கு முன்பு நியூயார்க் நகரத்தில் செய்திருக்கும் பிரசங்கத்திலிருந்து, இந்தப் பிரசாரம் எவ்வளவு பொய்ப் பிரசாரம் என்று தெளிவாகிறது.

பீவர்ப்ரூக் பிரபு கூறியதாவது :—

16 வயதிற்கு மேற்பட்டு 64 வயதிற்கு உட்பட்டவர்கள் பிரிட்டனில் 3 கோடி 30 லட்சம் பேர்கள் இருக்கிருர்கள். இவர்களுள் 2 கோடிப் பேர்களைப் படைக்காகவும் மற்ற தொழில்களுக்காகவும் திரட்டி விட்டோம். 1941-ம் வருஷத்தில் மத்திய கிழக்குப் போர் அரங்கத்தில் ஏழு இடங்களில் பிரிட்டிஷ் படைகள் போராடின. ஒரு வருஷத்தில் 300 நாட்கள் பிரிட்டிஷ் க்ரூய்ஸர் கப்பல்கள் வேலை செய்திருக்கின்றன- பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்கள் எதிரிக்குச் சொந்தமான 326 கப்பல்களை சேதப்படுத்தியோ மூழ்கடித்தோ இருக்கின்றன. இவற்றில் 64, யுத்தக் கப்பல்கள் பிரிட்டிஷ் படைகள் விமானங்களி லிருந்தும் கப்பல்களிலிருந்தும் போராடி, 52 லட்சத்து 50 ஆயிரம்

டன் சாமான்களையும், 3 பெரிய கப்பல்களையும், 13 க்ரூய்சர்களையும், 53 நாசகாரிகளையும் அநேக நீர்மூழ்கிக்கப்பல்களையும் நாசம் செய்திருக்கின்றன. அன்றியும், எதிரிகளின் விமானங்களில் 10,800 விமானங்களை நாசம் செய்தனர். நமக்கு 5,400 விமானங்கள் மட்டும் தான் சேதமாயின. 1941-ம் ஷத்தில் மட்டும் பிரிட்டனை விட்டு வெளியேறிய விமானங்கள் 9,171 ; இறக்குமதியானவை 2,134.

# இது நல்ல பாய்ச்சல் தான் !

கொழும்புத் துறைமுகம் தாக்கப்பெற்றது; திரிகோண மலையில் குண்டு வீச்சு என்ற சேதிகள் வந்ததுமே, சரி! ஜப்பான்காரன் இந்துமகா சமுத்திரத்திற்கு வந்துட்டான் ; இனிமேலே அவன் கண்ணிலே ஆபிரிகாவிற்குப் பக்கத்திலே உள்ள மடகாஸ்கர் தீவுதான் படும். மடகாஸ்கரிலே போய், அவன் இறங்கிவிட்டால், நேசதேசப்படைகளுக்கு ஆபத்துதான்! அப்புறம், ருஷ்யா, வட ஆபிரிக்கா, இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு அமெரிக்காவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் வரும் உதவிகளுக்குப் பெரிய இடைஞ்சல்கள் உண்டாகும். பிறகு ஹிட்லர் பாடு கொண்டாட்டம்தான்! என்றே எல்லோரும் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

போதாக்குறைக்கு லவால் துரை வேறே பிரான்ஸ் தேசத்திற்குத் தலையாக வந்துவிட்டார். ஹிட்லரின் கையாளான இந்த மனுஷன் பதவிக்கு வந்துவிட்டதால், நேச நாடுகளுக்குக் கொஞ்சம் சங்கடம்தான். அந்தச் சங்கடங்களிலே, இந்த லவால், பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளில் ஒன்றான மடகாஸ்கர் தீவை, வெற்றிலை பாக்கு தக்ஷிணையோடு ஜப்பான்காரனிடம் 'கிருஷ்ணார்ப்பணம்' என்று தத்தம் செய்துவிடக் கூடும் என்ற நிலைமை பெரிய சங்கடத்தை விளைவித்துவிடுமல்லவா ?

ஜப்பானியர்களும் பாவம், கசாப்புக்கடைக்கு முன்னால் நீர் சொட்டும் நாக்கை நீட்டிக்கொண்டு, எதிரே கடையில் தொங்கும் ஆட்டு மாமிசத்தை ஆவலோடு பார்த்துக்கொண்டிருப்பதுபோல் இருந்தார்கள். தென் ஆபிரிக்காவில் உள்ள தலைவர் ஸ்மட்ஸும், 'வந்துவிட்டது ஆபத்து! தென் ஆபிரிக்கர்களே! துள்ளி எழுங்கள்' என்று எச்சரித்துவிட்டார். என்ன ஆகப்போகிறதோ, எப்பொழுது ஜப்பானியர் வரப்போகிறார்களோ என்று எல்லோரும் கொஞ்சம் பயந்து கொண்டு தானிருந்தார்கள். போதாக்குறைக்கு வங்கக் குடாக்கடலில் வாலாட்டிக்கொண்டிருந்த பிரமாண்டமானதோர் ஜப்பானியக் கப்பற்படை திடீரென்று எங்கோ மாயமாக மறைந்துவிட்டது. அதைப்பற்றித் தாக்கலுமில்லை, தகவலுமில்லை. அது எங்காவது ஆபிரிக்கா பக்கம் போயிருக்குமோ என்று கூடப் பலர் நினைத்தார்கள்.

இந்த நிலைமையிலே, நேற்று முன் தினம் மாலை "மடகாஸ்கர் தீவில் பிரிட்டிஷ் படைகள் இறங்கிவிட்டன. கடற் படையும், தரைப் படையும் சேர்ந்து வேலை செய்கின்றன. ஆகாயத்திலிருந்து குதிக்கும் படையினரும் தம் ஸ்வரூபத்தைக் காட்டிவருகிறார்கள். ஜாடாவாக பிரிட்டிஷ் துருப்புகள்தான். இதற்குப் பூரண அமெரிக்க சம்மதி இருக்கிறது. 'ஏதாவது எதிர்ப்பு இருந்தால் என் கிட்டே சொல்லு, நான் அனுப்புகிறேன் சரியான ஆட்களை' என்று ரூஸ்வெல்ட் சொல்லியிருக்கிறார். ஆனால் எதிர்ப்பு அதிகமாக இல்லை. எல்லாம் சுகமாகவே நடந்து கொண்டிருக்கிறது. அங்குள்ள பெரிய கப்பற் படைத்தளத்தை பிரிட்டிஷ் படைகள் அணுகிவிட்டன. நேச தேசங்களில் எங்கும் இதைக்குறித்து சந்தோஷம் பொங்கி வழிந்துக் கொண்டிருக்கிறது. அச்சு நாடுகள் இடிந்துபோய்விட்டன. விஷியில் லவால் தவிக்கிறார். "போடு சண்டை! விடாதே சும்மா!" என்று மடகாஸ்கரில் உள்ள பிரதம அதிகாரிக்கு லவால் தந்தி தட்டியிருக்கிறார். ஆனால் மடகாஸ்கரில் உள்ள படை பலமும் சரி, விமான பலமும் சரி, ஊதி எறிந்துவிடக் கூடியதுதான்" என்ற செய்திகள் வந்தன.

பேஷ்! பேஷ்!! பலே! பலே!! நல்லவேலை செய்தாங்கடா! இப்படிதான் முந்திக்கணும் எதுக்கும்! தும்பை விட்டுவிட்டு வாலைப்பிடிக்கிறதைவிட, தும்பு சும்மா கீழே கிடக்கும்பொழுதே, அதைப் பிடித்துக்கொண்டு விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? அதேபோல், பிரிட்டிஷார் மடகாஸ்கரை முன் எச்சரிக்கையாகப்பிடித்துக் கொண்டது நல்லவேலை தான்! பெரிதாக வந்திருக்கக்கூடிய ஆபத்தை, முளையிலேயே கிள்ளிவிட்ட பிரிட்டிஷாருக்கு ஜே! என்று உலகெங்குமிருந்து பலர் புகழ்பாடினர்.

இந்தத்தீவிலே அவ்வளவு விசேஷமாக ஏதாவது இருக்கிறதோ என்று கேட்கிறீர்களா? இரண்டே கால் லக்ஷம் சதுரமைல் பரப்பு உள்ள இந்தத்தீவு பெரிய தீவுதான். இங்கே நாற்பது லக்ஷம் சுதேசிகளும், 25 ஆயிரம் துரைமாரும் இருக்கிறார்கள். இங்கேயிருந்து நெல், காப்பிக்கொட்டை, சர்க்கரை, வாழை, தேங்காய் ரப்பர், பருத்தி, தங்கம், கந்தகம், கிராணட் இது மாதிரி சாமான்கள் எல்லாம் கிடைக்கின்றன. இங்கே டைகோ சுவாரஸ் என்ற இடத்தில் ஒரு 'பஸ்ட் கிளாஸ்' துறைமுகமிருக்கிறது. சுமார் அறுபது வருஷங்களுக்கு முன்னாலே பிரஞ்சுக்காரர்கள் இங்கே பல லக்ஷக்கணக்கில் பணத்தை வாரிக்கொட்டி ஒரு பலமான கோட்டை கட்டி, துறைமுகத்தையும் பெரிதாக்கினார்கள். இந்த இடத்தை அச்சு நாட்டார் ரொம்ப சுகமாக உபயோகித்து வந்தார்கள். பிரான்ஸிற்கென்று இங்கிருந்து சாமான்களை ஏற்றிச் சென்று ஜெர்மனிக்குச் சேர்த்துவரும் தகடுதத்த வேலைகள் பல நடந்தன. தென் ஆபிரிக்காவைச் சுற்றிவரும் கப்பல்கள் ருஷ்யாவிற்கும், இந்தியாவிற்கும், வட ஆபிரிகாவிற்கும் உதவிகொண்டு சேர்க்க வேண்டுமென்றால், இங்கே வந்துதான் போக வேண்டும். இல்லாவிட்டால் இதற்கருகே போக வேண்டும். தவிர தென் ஆபிரிகாவில் ஒரு பிரதேசம், இத்தீவின் ஒரு பிரதேசத்திலிருந்து 250 மைல்களுக்கு உள்ளாகவே இருக்கிறது. ஆகவே, ஜப்பானியர், தங்கள் திட்டப்படி மடகாஸ்கர் தீவை வந்து வளைத்துக்கொண்டிருந்தால், ஆபத்து பிரமாதமாக இருந்திருக்கும். தென் ஆபிரிகாமீது குண்டுகளை வீசவும், ருஷ்யாவிற்கும்; வட ஆபிரிகாவிற்கும், இந்தியாவிற்கும், ஆஸ்திரேலியாவிற்கும் செல்லும் கப்பல்களை வழிமறித்தடிப்பதற்கும், ஜெர்மனிக்கு தன்னாலான உதவி புரிவதற்கும் ஜப்பானுக்கு வேண சௌகரியமாயிருந்திருக்கும். மடகாஸ்கர் ஜப்பான் வசமாயிருந்தால், யுத்தத்தின் போக்கே வேறு தினுஸாக மாறியிருக்கக்கூடும். ஆகமொத்தம் மடகாஸ்கரில் பிரிட்டிஷார் இறங்கினதால் ஏற்படக்கூடிய நன்மைகளைவிட, அங்கே அவர்கள் இறங்காது, சும்மா ஜப்பானியர் வந்திறங்கும் அழகைப்பார்த்துக்கொண்டிருந்தால் ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டம் அதிகம் என்கிறவரையில் பச்சை உண்மையாகும். இதை யாரும் மறுக்கமுடியாது. அதனால்தான், பிரிட்டிஷாரின் யூக மிகுந்த இந்த வேலைக்காக அவர்களை விஷயமறிந்த நேசதேசத்தார் பாராட்டுகிறார்கள்; விஷயமறிந்த விரோதிகள் பற்களை நெநநறவென்று கடிக்கிறார்கள்.

அது சரி! மடகாஸ்கர் தீவு விஷி சர்க்காருக்குச் சொந்தமானதாச்சே! அதை பிரிட்டிஷார் இப்படி ஆக்ரமித்துக்கொள்ளுகிறார்களே! இதனால் விபரீதம் ஏதாவது விளையாதா? என்று கேட்கலாம் ஒரு கேள்வி.

வி. பிரிட்டிஷாருக்கு இந்தத் தீவைப் பிடித்து, தங்கள் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டுவிடவேண்டுமென்ற யோசனையே கூடாது. இது ஒரு ஆபத்தான தீவு; இதை சும்மாவிட்டு வைத்திருந்தால் நேசதேசத்தாரின் நேர்மையான போர் நடவடிக்கைகளுக்கு இது இடைஞ்சலை உண்டாக்கும். அதனாலே, லவால் ஐயா! இந்தத் தீவை எங்கள் பார்வையிலே பத்திரமாக யுத்தம் முடிகிறவரை வைத்திருந்து, யுத்தம் முடிந்ததும் முளை முறியாமல் கொடுத்துவிடுகிறோம் உங்கள் கையிலே!' என்று பிரிட்டனும் அமெரிக்காவும் கூறிவிட்டது. இது போதாதா?

ஆனால் லவால் 'எஸ்' என்று தலையை ஆட்டிவிடுவார் என்று எதிர்பார்க்க வேண்டாம்! அங்கே தானிருக்கிறாரே ஹிட்லர் அண்ணாத்தை, சரியானபடி 'ஸ்குரூ' கொடுக்க. அந்த 'ஸ்குரூ' வின் வேகத்தை தாளாது, 'கர்புர்' என்று லவால் ஏதாவது எரிந்து விழக்கூடும். இந்த சம்பவத்தைக் காரணமாகக்கொண்டு, விஷி சர்க்கார், பகிரங்கமாக பிரிட்டனுடனும், அமெரிக்காவுடனும் போர் தொடுக்க ஆரம்பிக்குமா என்றொருவர் கேட்கிறார்.

அது கொஞ்சம் சந்தேகந்தான்! இந்தோ சீனாவை ஜப்பானியர் பிடித்துக்கொண்டு, 'யுத்தம் முடியும்வரை நம்பகிட்டே இருக்கட்டும் இது' என்று சொன்னபோது, விஷி சர்க்கார் என்ன கிழித்துவிட்டது. அதே கிழிப்பைத்தான் இப்போதும் கிழிக்கப்போகிறது. அது தவிர, விஷி சர்க்காரைப் பகிரங்கமாகப் போரரங்கத்தில் இழுத்துப்போட்டு மாட்டிவிடுவதால் ஹிட்லருக்கு லாபம் அதிகமிராதே! விஷி மேலே கொஞ்சம் கோபம்காட்டி, விஷியிலிருக்கிற தங்கள் பிரதிநிதியை ரூஸ்வெல்ட் திரும்ப அழைத்துக்கொண்டபோதுகூட 'நம்பளுக்குள்ள சண்டை என்னத்துக்கு! நம்ப எப்பவுமே சேத்திதான்!' என்கிற தினுசிலே லவால் அந்தத் தூதரிடம் பேசி, வழி அனுப்பியிருக்கிறார். அப்படியிருக்க, மடகாஸ்கர் போச்சு என்றதும், மடமடவென போர்க்கோலம் பூணுவதென்பது மடத்தனமாச்சே! விஷி சர்க்கார் பகிரங்கமாக யுத்தம் செய்ய ஆரம்பித்தால், இப்பொழுது ஜெர்மன் நகரங்களுக்கும், ஜெர்மன் தொழிற்சாலைகளுக்கும், ஜெர்மன் கப்பல்களுக்கும், விழுகிற உதையைப்போல், பலமடங்கு உதைகள் பிரான்ஸ் மீது விழும் என்பது நிச்சயம். எட்டிப் பிடிக்கிற தூரத்திலிருந்துகொண்டு, எட்டி உதைக்கவந்தால், சும்மாவிட்டுவிடுவார்களா பிரிட்டிஷார். இது தெரிந்தே, நடுநிலைமை நாடகத்தை விஷி சர்க்கார் தொடர்ந்து அழகாக ஆடிவருகிறார்கள்!

பிரிட்டிஷ் படைகள் மடகாஸ்கரைப் பிடித்து விடுவதுபோல், இன்னும் நல்ல சேதிகள் பல வராதா? இதுமாதிரி முன்னேறித்தாக்குவதே ஒரு ஜோர்தான்! நமக்குக் கொண்டாட்டம் என்றால், நண்டுக்குத் திண்டாட்டம் தானே? பிரிட்டிஷாரும், அமெரிக்கரும் கூடிக்கலந்து யோசனை செய்து திட்டங்கள் பல. போட்டிருக்கிறார்கள், அவற்றில் இதுதான் 'போனி'!

அமெரிக்காவிலே இப்பொழுது யுத்த ஏற்பாடுகள் அதிகம் மும்முரமாக நடக்கின்றன. அங்கே யுத்தத்திற்கு உபயோகமில்லாத பொருள்களைத் தயாரிக்கும் ஆலைகளுக்கெல்லாம் நோட்டீஸ் கொடுத்துவிட்டார்கள். இன்னும் மூன்று மாதம் போனால், பவுண்டன் பேனா, ஸ்நானத்தொட்டி, மோட்டார் ரிப்பேர் சாமான்கள்—இவையெல்லாம் தயாரிப்பது நின்றுவிடும். இரும்பை அநாவசியமாகச் செலவழிக்கக் கூடாது என்பது அவர்கள் யோசனை.

ஒரு புதுரக விமான எதிர்ப்பு பீரங்கியிலே, முன்பு தயாரானதைப்போல இருமடங்கு தயாரிக்க ஏற்பாடாகிவிட்டதாம். அமெரிக்க ராணுவத்திற்கு இன்னும் இருபத்து மூவாயிரம் விமானங்களையும், பீரங்கிகளையும் கட்டித் தள்ளப்போகிறார்களாம். அறுபது லக்ஷம் ஆட்கள் ராணுவத்தில் இருக்க ஏற்பாடு செய்கிறார்கள். இதற்காக தலைவர் ரூஸ்வெல்ட் 3,500 கோடி டாலர் தேவையென அமெரிக்க சபையிடம் கேட்கப் போகிறார். 'இல்லை'யென்று சொல்லப் போகிறார்கள் அவர்கள்?

சென்ற யுத்தத்திலே, 1914 லிருந்து 1918 வரை 2,600 கோடி டாலர்தான் அமெரிக்கா செலவு செய்தது. ஆனால் 1941 மத்தியிலிருந்து இப்பொழுது வரை அந்த 2,600 கோடியும் செலவாகிவிட்டது. இனித்தான் அசல் அமெரிக்க ஜப்பானிய யுத்தம் ஆரம்பமாக வேண்டும். இன்னும் எத்தனை கோடி டாலர்களைக் கொட்டிக்குவிக்க வேண்டுமோ?

'எவ்வளவானாலும் பரவாயில்லை. ஒன்று அச்சு நாட்டினர் ஒழியவேண்டும். இல்லாவிட்டால் நாம் ஒழியவேண்டும். ஒரு கை பார்த்துத்தான் விடப் போகிறோம்' என்று அமெரிக்கக் கடற்படை மந்திரி கர்னல் நாக்ஸ் கர்ஜிக்கிறார். அவரது கடற்படையில் 5 லக்ஷம் பேர்கள் இருக்கிறார்களாம். அடுத்த வருஷ மத்திக்குள் இன்னுமொரு ஐந்து லக்ஷம் சேர்ந்துவிடுமாம்.

அமெரிக்கக் கப்பற்படைகள் உலகெங்கும் போயிருக்கின்றன. மத்யதரைக் கடலிலும் அவை வேலை செய்கின்றன. ருஷ்யாவுக்கு மேலும் மேலும் அமெரிக்க உதவி போய்க்கொண்டிருக்கிறது. பர்மாவிலே ஜப்பானியர் கை ஓங்கியே நிற்கிறது. சீனர்களில் ஒரு பகுதியினர் பர்மாவிலிருந்து சீன எல்லைக்குப் பின்னாலும் பின்வாங்கிவிட்டனர். லாஷியோவிலிருந்து சென்ற ஜப்பானியர் சீனமண்ணில் காலடி வைத்துப் போராடி வருகிறார்கள். அங்கிருந்து அவர்கள் மேற்குத்திசையில் திரும்பி இந்திய எல்லையை நோக்கி வரக்கூடும். மற்றொரு ஜப்பான் படையின் முன்னால், பிரிட்டிஷ் படைகள் தீவிரமாகப் போராடிக்கொண்டே இந்திய எல்லையை நோக்கிப் பின்வாங்குகிறது. ஆனால் 'ஆள் சேதம் எதும் இல்லாமல், நம் படைகளைத் திரும்ப அழைத்துக்கொள்ளக்கூடும். தளவாடங்களைத்தான் கொஞ்சம் தாரைவார்த்துவிட்டு வரவேண்டியிருக்கும்' என்று ஒரு அறிக்கை கூறுகிறது.

ஆனால், மத்ய பர்மாவில் டவுங்கி எனும் நகரை சீனர்கள் குரங்குப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அதோடு, குரங்குச் சண்டை முறைக்கும் துவஜாரோகணம் செய்துவிட்டார்களாம். பர்மாவிலிருந்து ஒரேயடியாகக் காலிசெய்துகொண்டு போகப் போவதில்லை என்ற பிடிவாதத்துடனிருக்கிறார்களாம், அவர்கள். ஜப்பானியப் படைகளுக்குச் சாத்தியமானவரை தொல்லை விளைவிப்பதே அவர்கள் நோக்கம்.

பர்மாவில் இவ்வளவு வெற்றிகள் ஜப்பானியருக்குக் கிடைத்தும், சுகமில்லை. வருஷத்திற்கு பத்துலக்ஷம் டன் பெட்ரோலைக் கொடுக்கும் எண்ணெய் கிணறுகள் எல்லாம் அக்னி பகவனுக்கு இரையாகிவிட்டன. அந்தக் கண்றாவிக்காட்சி மறக்கமுடியாதது என்கிறார்கள் நேரில் பார்த்தவர்கள்! பெரிய பெரிய இயந்திரங்களையும், நிபுணர்களையும்கொண்டு, அக்கிணறுகளைப் புதுப்பிக்க இரண்டு வருஷங்களாகுமாம்.

மாந்தலே, லாஷியோ ஆகிய நகர்கள் பர்மா பாதையிலிருக்கின்றன. அவற்றை ஜப்பானியர் பிடித்தபின், பிரிட்டிஷ் விமானங்கள் அவற்றை நொறுக்கி வருகின்றன. அக்யாப் நகர்மீது ஜப்பானியர் குண்டு வீசியிருக்கிறார்கள். ஆகமொத்தம் பர்மாச்சண்டை பூராவாக முடிந்துவிட்டது என்று சொல்லத்தகாத நிலைமையிலிருக்கிறது. யுத்தம் ஆரம்பமாகி ஐந்து மாதங்களாகு முன் ஜப்பானியருக்கு இவ்வளவு செழிப்பான பிரதேசங்கள் கிடைத்தது பெருத்த அதிர்ஷ்டமும், லாபமும்தான்! இதனால், சீனர்களுக்கு ரொம்ப நஷ்டம்தான்! அவர்களுக்குச் சுலபமாகப் போய்க்கொண்டிருந்த உதவிக்குப் பங்கம் வந்துவிடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறதல்லவா?

ஆனால் சீனர்கள் தளராமனம் படைத்தவர்கள். வெகு தைரியமாக அவர்கள் இந்த சமயம் பார்த்து, ஷாங்கை, ஹாங்கோ, நாங்கிங் ஆகிய நகரங்களை ஆக்ரமித்திருக்கும் ஜப்பானியரை முன்னேறி உதைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஹாங்கோவில் தெருச் சண்டைகூட நடக்கிறதாம். இது ரஸமான சேதி அல்லவா? ஜப்பானியருக்கு சீனா சரியான சனியன் மாதிரிதான்! இதை அறிந்தே சீனரின் கையைப் பலப்படுத்திக்கொண்டே இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன், தலைவர் ரூஸ்வெல்ட் சீனருக்குத் தைரியம் சொல்லி வருகிறார். 'பயப்படாதேயுங்க பிரெதர்ஸ்' பர்மாப்பாதை, இந்தியப்பாதை இரண்டும் அடைபட்டாலும் எப்படியாவது பரவாயில்லை.

உங்களுக்கு உதவியைக்கொண்டு சேர்க்க ஏற்பாடு செய்கிறேன் என்கிறார் அவர். ருஷ்யா வழியாகக் கூட சீனத்திற்கு உதவி போகக்கூடும். ஆனால் ருஷ்யாவிற்கு நிறைய சப்ளை வந்தால்தானே, சீனத்திற்கும் சம்திங் அனுப்பலாம். ருஷ்யாவிற்குத் தடையின்றி உதவி வர, பாரசீக தேசவழி ஆபத்தின்றி இருக்கவேண்டும். அங்கு வர தென் ஆபிரிக்காவைச் சுற்றியே வரவேண்டும். அங்கே வரும்வழியில்தான் மடகாஸ்கர் தீவு இருக்கிறது. அது நம் வசமிருந்தால்தான் பாரசீக நாட்டிற்கு ஆபத்து இராது. அது எதிரி வசமாகிவிட்டால் ஆபத்துதான். மடகாஸ்கரைப் பாயுமிடமாகக்கொண்டு, ஜப்பானியர் அட்டகாசம் செய்வார்கள். அதனால்தான் பிரிட்டிஷார் அதை, காதும் காதும் வைத்ததுபோல் கைப்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது தெரிகிறதா 'இது நல்ல பாய்ச்சல் தான்' என்று!

எங்கோ சுற்றி எங்கெங்கோ போய்விட்டு, திரும்பவும் இந்தத் தீவிற்கே வந்து சேர்ந்தீர்களே ஸார் என்று கேட்கிறீர்களா? யுத்தமே அப்படித்தானய்யா!

## மற்றகதைகள் எப்படி யிருக்கு ?

'ஜெர்மனி ஏன் இன்னும் பெரிய சண்டைக்குப் புறப்படவில்லே ? ஜப்பான் ருஷ்யாவைத் தாக்குமா ? தாக்குவதானல் தாமதிப்பதேன் ? ஜெர்மனியின் தற்போதைய நிலைமை என்ன ?'—இதெல்லாம் ரஸமான கேள்விகள் அல்லவா ? இவற்றிற்கான விடைகளும் ரஸமானவைதான்.

"ஜெர்மனி சும்மா இல்லே. நாற்பது லக்ஷம் பேர்களை ருஷ்ய எல்லேயில் கொண்டுவந்து வைத்திருக்கிறதாம், காளி கோவில்முன் பலிக்கு வைத்திருக்கும் கடாக்களைப்போலே ! தெற்கே காகஸஸ் பிரதேசத்திலே தரை கெட்டியாகிவிட்டதாம். ஆகவே அங்கே எதிரி நடமாட்டம் அதிகமாகும்போலிருக்கிறதாம். காகஸஸில் உள்ள எண்ணெய் கிணறுகளைப் பிடித்து, அந்த எண்ணெயை ரயிலில் ஏற்றி ஜெர்மனிக்குக் கொண்டுபோவதென்பது இப்பொழுது சாத்யமில்லேயல்லவா ? எடுப்பு சாப்பாடு எடுத்துவர வேண்டுமானல், 'டிபன் காரியர்' வேண்டும். அது இல்லாவிட்டால், நேரே ஹோட்டலில் போய்த்தானே ஐயா சாப்பிட்டுவிட்டு வரவேண்டும்' அந்த மாதிரியாக, காகஸஸிலிருந்து ஜெர்மனிக்கு எண்ணெயை எடுத்துவர முடியாதிருக்கும் நிலைமையில், நேரே காகஸஸிற்கே போய், அங்கேயே தங்கி, அங்கேயே எண்ணெயை உபயோகித்துக்கொண்டு, ருஷ்யாவைத் தெற்கிலிருந்து தாக்கலாம் என்று ஜெர்மனி நினைத்திருக்கும் போலிருக்கிறது.

ஏற்கெனவேயே ருஷ்ய யுத்தத்தில் நாற்பதாயிரம் சூர விமானிகளையும், பதினையாயிரம் விமானங்களையும் ஜெர்மனி இழந்தாயிற்று. 'ஹிட்லரின் ஸ்ருதி அடங்கி வருகிறது. அவர் முதலாளிகளின் கையாள். முன்பிருந்த சேனுபலம் அவருக்கு இப்பொழுதில்லே. இவ்வருடம் ஹிட்லர் தோற்கடிக்கப்படுவது நிச்சயம். ஸோவியத் சேனே முன்னல் ஜெர்மானியர் பெட்டிப் பாம்பாகி விடுகிருர்கள். வீரர்களே ! தோழர்களே ' பயப்படாதீர்கள் ! மேலே சென்று நொறுக்குங்கள் ! என்று ஸ்டாலின் எல்லோரையும் உத்சாகப்படுத்தி யிருக்கிருர்.

ருஷ்ய கொரில்லாக்களும், யூகோஸ்லேவிய கொரில்லாக்களும் ஜெர்மானியருக்கு ஏகமாகத் தொல்லேயை விளைவித்து வருகிருர்கள். ருஷ்ய முனைக்குச் செல்லும் பெட்ரோல் ரயில்கள் எரிகின்றன. உணவுப்பொருள்கள் பறிபோகின்றன. நாட்களோ ஓடுகின்றன.

ஹிட்லர் என்ன செய்வார் ? முஸோலினியைச் சந்தித்துப் பேசினுர். அதிகப்படியான இத்தாலியரை ருஷ்ய முனைக்கு அனுப்பச்சொல்லி கேட்டுக் கொண்டிருக்கிருர்போலிருக்கிறது.

இத்தாலியிலோ, ஜெர்மானியரைக் கண்டால் வேப்பங்காயாக ஆகிவருகிறதாம். இத்தாலிக்கு வந்த கோதுமை ரயிலே, ஜெர்மானியர் மடக்கி, தங்கள் நாட்டுக்குத் திருப்பினுர்களாம். இதை ஒட்டி இத்தாலியர் காவல்காரர்களும், ஜெர்மானியரும் ஒருவரை யொருவர் சுட்டுக்கொள்ள, ஐம்பது பிணங்கள் விழுந்தனவாம்.

ஜெர்மனிக்குள்ளே எப்படி இருக்கிறது. பிரிட்டிஷ் விமானிகள் போடுகிற போடு, ஜெர்மன் தொழிற்சாலேகளுக்கும், நகரங்களுக்கும் படுசேதம் விளேந்திருக்கின்றன. அதைப் பார்த்து, ஜெர்மனி ஆலே முதலாளிகள் இடிந்து போய், சீக்கிரமே யுத்தத்தை நிறுத்த விரும்புகிருப் போலிருக்கிறது. அவர்கள் ஹிட்லருக்கு விரோதமாகவும் வேலே செய்வதாகத் தெரிகிறது. இந்த வசந்தப் போரில் ஹிட்லர் தோற்ருல், அதோடு அவருக்குக் கல்தாதான் ; ராணுவ அதிகாரிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள் என்கிருர்கள்.

கிரீஸ் தேசத்திலே ஜெர்மானியரின் கீழ் கிரேக்கர்கள் படும் அவதி சொல்லி முடியாதாம். ஏகப் பஞ்சமாம். இதுவரை நாற்பதாயிரம் பேர்கள் பசிக் கொடுமை தாளாது மண்டையைப் போட்டுவிட்டார்களாம். தப்பியோடும் பிரிட்டிஷ் கைதிகளுக்கு கிரேக்கர்கள் செய்யும் உதவியி லிருந்தே, அவர்களுக்கு ஜெர்மானியர் மீதுள்ள வெறுப்பு தெரியலேயா ?

மேற்றிசையில், ஹிட்லர் பல இடங்களில், பிரிட்டன் மீது படையெடுக்க ஏற்பாடு செய்துவருகிருராம். தெருச் சண்டைகளில் பலரை நிபுணர்களாக்கி வர ஆக்ஞை இட்டிருக்கிருராம். ஜெர்மன் விமானங்கள் இங்கிலாந்தில் உள்ள பெரிய நகர்கள் சிலவற்றை தாக்கியிருக்கின்றன. அதோடு மால்டா மீதும் அவை அட்டகாசம் செய்திருக்கின்றன. வட ஆபிரிகாவில் உள்ள ராமெலுக்கு ஏராளமான உதவி போயிருக்கிறதாம். அதோடு, சில சேனுதிபதிகளும் சென்றிருக்கிருர்களாம்.

சீமையிலே, பல சோல்ஜர்கள் ஜெர்மன் பாஷை கற்றுக்கொள்ளுகிருர்களாம். யுத்தத்தில் பிரிட்டன் ஜெயித்து, அங்கே போய்க்குடி யேறவேண்டி வந்தால், ஜெர்மன் பாஷை தெரிந்திருக்க வேண்டுமா இல்லேயா ? அதற்கு ஏற்பாடாம் இது.

பிரஞ்சுக் கரைகளில் பிரிட்டிஷ் படையெடுப்புக் கோஷ்டியினர் பல இடங்களில் இறங்கி, தம் கை வேலேகளைக் காட்டி விட்டுச் சென்றிருக்கிருர்கள். ஜெர்மன் நீர் மூழ்கித் தளங்களையும், ஜெர்மன் யுத்தக் கப்பல்களையும் பிரிட்டிஷ் விமானிகள் சேதப்படுத்தி யிருக்கிருர்கள். இதோடு விட்டுவிடவாப் போகிருர்கள் அவர்கள் ?

பிலிப்பைன் யுத்தம் முடிந்துவிட்டது மாதிரிதான். அதி தீரத்துடன் காரிக்டார் எனும் தீவிலிருந்து ஓடி வந்த அமெரிக்கப் படை அன்ன ஆகார ஆயுத மில்லாது போனபின் சரணுகதி யடைந்துவிட்டதாம். ஜப்பானியர் நியூகினியாவிலும் முன்னேறி வருகிருர்களாம். இன்னும் பதினைந்து நாட்களில் பெரிய படை யெடுப்பு இருக்கும் என்கிருர்கள் சிலர். 'இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் ஏககாலத்தில் தாக்கப்படலாம்'. என்கிருர் ஒரு நிபுணர். ஜப்பானையும், ஜெர்மனியையும் ஒரே சமயத்திலேயே அழிக்கவேணும். ஒருவரை முன்னுலும், மற்ருெருவரைப் பின்னுலும் கவனிக்கலாம் என்றிருப்பது தவறு' என்கிருர் ஒருவர்.

'ஹிட்லருக்கு ருஷ்யாவில் வெற்றி ஏற்பட்டால் தான், ஜப்பான் அவருக்கு உதவியாக ஏதாவது செய்ய முன்வந்து, ருஷ்யாவைத் தாக்கக் கூடும்' என்கிருர்கள் வேறு சிலர்.

ஆனல் யுத்தத்தின் போக்கைக் குறித்து முன் கூட்டி யார் தான் சரியான ஜோஸ்யம் சொல்ல முடியும் ?

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம்ஞு மேமீ 15உ, வெள்ளிக்கிழமை [இதழ் 19



## வெற்றி பெறுவதா! வேறேடு அழிவதா!!

### ஹிட்லர் செய்த தவறுகள்.

### யுத்தத்தின் நான்கு கட்டங்கள்.

#### சர்ச்சில் பிரசங்கம்.

சென்ற 1942-ம்ஞு மேமீ 10உயில் லண்டன் ரேடியோவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் பேசியதன் சுருக்கமாவது :—

போராட்டத்தினல் மனம் சோர்ந்து எங்கள்மீது விஷ வாயுவைப் பிரயோகிக்க ஜெர்மானியர் துணியக் கூடும் என்று ரஷ்ய சர்க்கார் நமக்கு அறிவித்திருக்கிருர்கள். இந்த ஆயுதத்தைக் கையாளக்கூடாது என்னும் உறுதியோடு நாம் இருக்கிரேம். ஆனல் ஜெர்மானியர்கள் அதை உபயோகிப்பார்களானல், நாமும் கட்டாயம் அதை உபயோகிக்க வேண்டி யிருக்கும் என்று எதிர்பார்த்து ஏராளமாகச் செய்திருக்கிரேம். ரஷ்யர்கள் மீது இந்த ஆயுதத்தை அவர்கள் உபயோகிப்பதானல், அது நம்மேல் உபயோகித்ததற்குத்தான் சமம். ஜெர்மனியிலுள்ள இராணுவ இலக்குகள் எல்லாவற்றின் மேலும் ஏராளமாக இதை உபயோகிப்போம். போர்க்களத்தில் ரஷ்ய சேனைகளோடு நம் சேனைகள் உண்மையான தோழமை கொண்டுவிட்டன. எனவே, எப்படிப்பட்ட தியாகமானலும், அவர்களுக்காகச் செய்ய, நம் சேனைகள் தயாராயிருக்கின்றன.

**கொஞ்சமும் பின் வாங்க மாட்டோம்.**

முசோலினி ஒரு தப்புக்கணக்குக்காரர் அவரது திட்டப்படி எதுவும் நடக்கவில்லே. ஜெர்மானியர்கள் பல நாடுகளைப் பிடித்தார்கள் என்ருலும், இத்தாலி செய்த துரோகத்தினல்தான் பிரஞ்சு தேசம் ஜெர்மானியர் வசமாயிற்று. அதுமட்டுமல்ல. மத்திய தரைக் கடலில் பிரிட்டிஷ் கப்பல்கள் போக வரமுடியாதிருந்தது. ஆப்பிரிக்காவைச் சுற்றி தான், கப்பல்கள் போய் வந்தன. எகிப்திலும் சூடானிலும் இருந்த நம் சிறிய சேனைகளை அழித்து விடுவார்கள் என்றும் எதிர்பார்த்தோம். வெற்றி பெறுவதா அல்லது வேறேடு அழிவதா என்பது தான எம் கேள்வி. அப்போது நம் கடமைகளை நாம் தவருது, செய்தோம் ; கடவுளும் நமக்குத் துணையிருந்தார். நாம் தப்பினும். பிரான்சு எதிரி வசம் ஆனபிறகு ஒரு வருஷம் வரையிலும் சுதந்தரக் கொடியைத் தூக்கிக் கொண்டு போராடிக் கொண்டிருந்தோம். கடைசியாக இத்தாலிய சாம்ராஜ்யத்தை வென்ரேம். ஆப்பிரிக்காவி லிருந்த முசோலினியின் படையினர் அனைவரையும் அழித்தோம், அல்லது கைது செய்தோம். அபிசினியாவை விடுவித்தோம். பாலஸ்தினம், சிரியா, பாரசீகம், ஈராக் ஆகிய நாடுகளில் ஜெர்மானியர் தந்திரம் பலிக்காதபடி வெற்றிகரமாகக் காப்பாற்றி இருக்கிரேம். வீரம் மிகுந்த கிரேக்கர்களுக்கு உதவப் போனபோது நமக்குத் தோல்வி தான கிடைத்தது. இவ்வளவிற்கும் அமெரிக்க ஜனத்தலைவர் ரூஸ்வெல்ட் நம்மை ஊக்கப்படுத்திக் கொண்டு மட்டுந்தான் இருந்தார். நாம் தனித்திருந்து போராடிக் கொண்டிருந்தோம்.

**வெற்றிக்கு வழி.**

தோல்விகள் எல்லாம் வெற்றிக்கு அறிகுறி. நம் சகிப்புத் தன்மையும் விடாமுயற்சியும் முடிவில் வெற்றிதரும். நமக்குத் தேவையான ஆயுத பலம் கிடைத்துவிட்டது. நாம் இப்போது தனித்திருந்து போராடவில்லே. மகத்தான அதிர்ஷ்டியங்கள் நமக்குத் துணை நிற்கின்றன. இதன் முடிவு எப்படி எப்போது வரும் என்று நான் சொல்லமுடியாது. இப்போதுள்ள மூலபலத்தை எல்லாம் ஒருமுகப்படுத்தி விருத்தி செய்தால், வெற்றிபெறுவோம் என்னும் முழு நம்பிக்கையுடன் நாம் மேற் செல்லலாம்.

14540
600 008.

**ஹிட்லர் தவறுகள்.**

ஜெர்மனியி லிருந்த இளைஞர்களையும், ஆண்களையும் ரஷ்யப் போர்முனைக்கு விரட்டினர் ஹிட்லர். இது அவர் செய்த முதல் தவறு. வேறு எந்த நாட்டு அரசாங்கமும் சகிக்க முடியாத கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு ரஷ்ய வீரர்கள் போராடினர்கள். எதிரிகளுக்கு ஒரு போதும் இணங்குவ தில்லை என்று உறுதி கொண்டிருக்கிறார்கள். ரஷ்யர்களை ஜெர்மானியர் தாக்கியது முதலேயே, நாம் ரஷ்யாவோடு சகோதரத்துவம் கொண்டோம். நாசிகளின் ஆட்சியையும் அதன் வேலைகளையும் அழிக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். மழை காலம் வந்தவுடனே ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் திருப்பி எதிர்த்துத் தாக்க ஆரம்பித்தார்கள். இதனால் எந்தனைக் கோடி ஜெர்மானியர் மாண்டிருப்பார்கள் என்று யாரும் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. ஆனால் ஒன்று.மட்டும் உறுதி. சென்ற மகா யுத்தம் 4¼ வருஷம் நடந்த போது ஜெர்மானியர்கள் மடிந்ததைவிட, இந்தக் குளிரில் அதிகம் பேர்கள் ஜெர்மானியர் மடிந்து போனார்கள். இது ஹிட்லர் செய்த இரண்டாவது தவறு

**இரத்த வெறியும், வெற்றி வெறியும்.**

இரத்த வெறியும் வெற்றி வெறியும் கொண்டலைகிறார் ஹிட்லர். இவரது கையில் தான் ஜெர்மானியரின் தலை எழுத்து அடங்கி இருக்கிறது. அடுத்த மழைகாலத்திற்குத் தன் படைகளுக்குத் தகுந்தபடி குளிரைத் தாங்கத் தக்க வசதிகள் அளிக்கப் போகிறாராம். இதிலிருந்து ஒரு உண்மை விளங்குகிறது. சீக்கிரத்தில் போராட்டத்தை முடித்துவிட வேண்டும் என்னும் எண்ணம் அவருக்குக்கிடையாது என்று தெரிகிறது. இது ஜெர்மானியர்கள் மனதில் மிகவும் பீதியை உண்டாக்கிவிட்டது. சென்ற வருஷம் இருந்ததைவிட, இந்த வருஷம் ரஷ்யப் படைகள் மிகவும் பலமாகி இருக்கின்றன. இவை தான் ஹிட்லர் மனதை வாட்டிக் கொண்டிருக்கும் கேள்விகள்.

**இதுவே தருணம்.**

இந்த உலக யுத்தத்தில் பிரிட்டனும், அமெரிக்காவும் சேர்ந்து, ஜெர்மனியை விமானங்களைக் கொண்டு தாக்கப் போகின்றன. பலவிதக் கொடுமைகளுக்கு மூலபீடமாகவிருந்த ஜெர்மனியை, உயர்ந்த விமானப் படை பலத்தைக் கொண்டு, இடைவிடாது பலமாகத் தாக்கப் போகின்றன. யுத்த முயற்சிகளுக்கு மிகவும் அவசியமான தொழிற்சாலைகளையும் துறைமுகங்களையும் ஜெர்மன் படைகள் தம் அதிகாரிகள் உத்திரவுப்படி அழிக்கின்றன. இவ்வளவு கொடுமைகளுக்கும் ஜெர்மன் ஆட்சி தான் காரணம் என்று ஜெர்மானிய மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் இதுவே தருணம்.

**'சாகிறகாலத்தில் சங்கரா, சங்கரா!'**

18 மாதங்களுக்கு முன்பு ஹிட்லர் தன் விமானப் படையே மிகச் சிறந்தது என்று மனப் பால் குடித்தார். நமது நகரங்களை அடியோடு தரை மட்டமாக்கி விடுவேன் என்று அட்டகாசம் செய்தார். ஆனால் அவர் எண்ணம் பலிக்கவில்லை. எடுபுரண்டு விட்டது. நமது விமானப் படைகள் எதிரி நகரங்களையும் தவிடு பொடியாக்குகின்றன. ஹிட்லர் இப்போது வேதாந்தம் பேசத் தலைப்பட்டிருக்கிறார். அவருடைய ஆட்சி 'சாகப்போகிற காலத்தில், சங்கரா! சங்கரா!' என்கிறார். ராட்டர்டாம் நகரத்தில் 20 ஆயிரம் டச்சுக்காரர்களைப் படுகொலை செய்தபோதும், காப்பாரற்றுக் கிடந்த பெல்கிரேட் நகரத்தையும் கூடக் கடுமையாகத் தாக்கிய போதும், அவருக்கு இந்த ஞானம் உதயமாக வில்லை.

**தெய்வம் நின்று கொல்லும்.**

'தெய்வம் நின்று கொல்லும்' இது தவறாது. கோடிக்கணக்கான ரஷ்யப் பெண்களையும், குழந்தைகளையும் ரஷ்யக் குளிரில் மடியும்படி ஜெர்மானியர் செய்தார்கள். யுத்தக் கைதிகளை அடிமைகளைப் போல நடத்தி வருகின்றனர். அவர்கள் செய்த வினை அவர்களையே இப்போது சுடுகிறது.

ரஷ்யாவின் பளுவைக் குறைக்க வேண்டி நாம் ஜெர்மனியைத் தாக்கி இரண்டாவது போர் அரங்கத்தை உண்டாக்க வேண்டும் என்று நம் பொது மக்கள் விரும்புகிறார்கள். இது ஒரு நல்ல யோசனை தான். இதுபற்றி நான் என்ன செய்யப் போகிறேன் என்று இப்போது சொல்லுவதற்கு இல்லை. என்றாலும் ஒரு விஷயம் எனக்குப் பெரும் மகிழ்ச்சி தருகிறது. போர் ஆரம்பமாகி 32 மாதங்கள் ஆகிவிட்டன. என்றாலும், நம் பொது மக்கள் எதிரியோடு சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்திற்கே இடங் கொடுக்கவில்லை. மேலும் ஊக்கமாகப் போராடவேண்டும் என்று சொல்லி நமக்கு ஊக்கம் உண்டாக்குகிறார்கள்.

**3 மாதங்களுக்கு முந்திய முடிவு.**

மடகாஸ்கர் தீவைக் கைப்பற்றி விடவேண்டு மென்று 3 மாதங்களுக்கு முன்பே முடிவு செய்து விட்டோம். இதற்கென்று இங்கிருந்து படை கிளம்பி 2 மாதங்கள் ஆகிவிட்டன. இத்தீவின் முக்கியமான துறைமுகம் டிகோ சாரஸ். இதை ஜப்பானியர் கைவசப் படுத்திக் கொண்டால், இந்தியாவிற்கும் மத்தியக் கிழக்குப் பிரதேசங்களுக்கும் போக்குவரவிற்கு இடைஞ்சலாக இருக்கும். பிரான்சு ஒரு வீர நாடு. நாம் அந்நாட்டு மக்களை நன்கு அறிவோம். அவர்களோடு சேர்ந்திருந்து போராடி இருக்கிறோம். எதிர்காலத்தில் இந்நாடு எதேச்சை நாடாக இருந்தால் தான், உலகத்தில் சமாதானம் நிலவமுடியும். ஆகவே, எதேச்சை பிரான்சின் பொருட்டு நாம் அத்தீவைக் காத்து வருவோம்.

**நான்கு கட்டங்கள்.**

இந்த யுத்தத்தில் நான்கு கட்டங்கள் உண்டு. 1 மேற்கு ஐரோப்பிய நாடுகளை நாசிகள் கைப்பற்றி பிரான்சை வீழ்த்தியது. 2 ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்கும் வரை தனித்திருந்து ஜெர்மனியோடு பிரிட்டன் போராடி வந்தது. 3 அதன் பிறகு ரஷ்யாவிற்குக் கிடைத்த புகழ். 4 பேர்ல் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்கி அமெரிக்கர்களுக்கும் பிரிட்டானியர்களுக்கும் சொந்தமான தீவுகளைக் கைப்பற்றியது. இந்தக் கட்டங்களில் உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஜப்பானியர் பொய்ப் பிரசாரத்தி லிருந்தே அவர்களுக்கு ஏராளமான நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. ஆஸ்திரேலியாவின் வட கரையிலும், பவளக்கடலிலும், கொழும்புவிலும், திரிகோண மலையிலும் ஜப்பானியர் மிகவும் நஷ்டப்பட்டார்கள். பேராசை கொண்ட இவர்களுக்குத் தகுந்த பாடங் கற்பிக்க அமெரிக்கா ஏராளமாக யுத்தத் தளவாடங்களைச் செய்து கொண்டிருக்கிறது. இந்த வேலையைச் செய்து முடிக்க பிரிட்டன் தயாராக இருக்கிறது. கடைசி வரை நம் கடமையை நாம் செய்வோம். வெற்றியும் தோல்வியும் கடவுள் சித்தப்படி நடக்கும்.



## எந்தப் பக்கம் போய்த் தாக்குவது என்ற யோசனை.



இங்கிலாந்து கடற்கரையில் காவல் இருந்துகொண்டே, 3 நாட்களில் 13 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்திய விமானம். கனடிய விமானிகளும் மற்ற உத்தியோகஸ்தர்களும் எந்தப் பக்கம் போய்த் தாக்குவது என்று கலந்து யோசிக்கிறார்கள்.

# "எதிரிகளை எதிர்ப்பதே நம் சிந்தனை."

## "பொது ஜன உணர்ச்சி தான் வெற்றி தரும்."

### தேசிய யுத்த முனையைக் கட்டி முடியுங்கள்.

**வைசிராய் ரேடியோ பிரசங்கம்.**

"எந்தக் காரியத்தையும் செய்துமுடிக்க வேண்டும் என்ற மன உறுதியும் ஒற்றுமையும் ஏற்படவேண்டும். சில சமயங்களில் எதிரிகளை, எதிர்த்துத் தாக்காதபடி நாம் தற்காத்துக்கொண்டே இருக்கும்படி நேரலாம். அல்லது புத்திசாலித் தனமாய் பின்வாங்கும்படி நேர்ந்தாலும் நேரலாம். இவற்றைக் கொண்டு நாம் யுத்தங்களை வெல்ல முடியாது. நம் வேலைத் தலங்களில் வேலைகளோடு போராடலாம். பொய் வதந்திகளைக் கிளப்பிப் பரப்புகிறவர்களோடு போராடுவோம். தோல்வி மனப் பான்மையைத் தாக்குவோம். நமது போர் முனையை எதிர்க்கும் போர்முனையாக அமைத்துக் கொள்ளுவோம். எதிர்ப்பைக் குறித்தே எப்போதும் நாம் சிந்திக்க வேண்டும்."

சென்ற 1942-ம் வருஷம் மேமீ 7உ மேன்மை தங்கிய இந்திய வைசிராய் புது டில்லி ரேடியோ நிலையத்திலிருந்து ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது :—

யுத்தம் இந்தியாவின் தலைவாயிலில் இருக்கிறது. எல்லாத் துறைகளிலும் போராட வேண்டிய அவசிய நிலைமை நம் அனைவருக்கும் ஏற்பட்டிருக்கிறது என்று நான் முன்பு செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். அதன் பிறகு எவ்வளவோ நேர்ந்துவிட்டன. இந்தியாவையும் எதிரிகள் தாக்கினார்கள்; இலங்கையையும் தாக்கினார்கள். வங்காளக் குடாவில் போய் வந்து கொண்டிருந்த கப்பல்களை மூழ்கடித்தார்கள். ஜப்பான் படைகள் இப்போது இங்கில்லை என்பது உண்மை தான். ஆனால், அவை திரும்ப வந்து தாக்கும் என்பது மட்டும் உறுதி.



**நாம் அதிர்ஷ்ட சாலிகள் தான்.**

உண்மையாகவே எதிரிகள் நம் நாட்டைத் தாக்கு முன்னதாக நமக்கு ஏராளமான அவகாசம் கிடைத்திருக்கிறது. ஆகையால், நாம் அதிர்ஷ்டசாலிகள் தான். இதற்குக் காரணம் ஜெனரல் அலெக்ஸாந்தரும், இந்தியப் படைகளும், சீனப்படைகளும், பிரிட்டிஷ் படைகளும் தான். இவர்கள் எதிரிகளோடு கடுமையாகப் போராடிக் கொண்டிருந்ததனால் தான், இந்த அவகாசம் நமக்குக் கிடைத்தது. அவர்களுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.

படையில் சேராத நாம் என்ன செய்ய முடியும்? நமக்கு ஆயுதங்களைக் கொடுத்தால், நம் நாட்டைக் காக்கக் கொதித்துக் கிளம்புவோம்' என்று சிலர் கூறக் கூடும். நான் அவர்களை ஒரு கேள்வி கேட்க ஆசைப்படுகிறேன்.

1940-ம் வருஷம் பிரிட்டனி லிருந்த எல்லோர் வசமும் ஆயுதம் இருந்ததா? 1941-ம் வருஷம் ரஷ்யப் பொது மக்களிடம் ஆயுதம் இருந்ததா? சீனப் போராட்டத்தில் எல்லாச் சீனர்களிடமும் ஆயுதம் இருந்ததா? **கிடையவே கிடையாது.** இப்படிப்பட்ட போராட்டங்கள் நடைபெறும் எந்த நாட்டிலேயும், பொது மக்கள் எல்லோரும் ஆயுதம் வைத்திருந்ததே கிடையாது.

**ஏராளமாகப் படை திரட்டுகிறோம்.**

எதிரிகளுக்குப் பின்புரம் இருந்து திடீர் என்று தாக்குவதும், ஓடி மறைந்து கொள்ளுவதுமாகப் போராடுவது மிகவும் கடினம் தான். இந்தப் போர் முறையில் நன்றாகப் பழக்கப் பட்டால் மிகவும் நல்லது. இந்தப் போர் முறையைத் தான்

விருத்தி செய்து கொண்டு வருகிறோம். போதுமான ஆயுதங்கள் கிடைத்த வுடனே மேலும் இதை விருத்தி செய்வோம். இப்போது நாம் ஏராளமாகப் படை திரட்டுகிறோம். இந்தப் படைகளுக்குத் தேவையான ஆயுதங்களையும் சேகரிக்க வேண்டி யிருக்கிறது.

"பொது ஜனங்களின் உணர்ச்சி தான் தற்கால யுத்தத்தில் வெற்றி பெற மிகவும் உதவுவது."

என்று ஜெனரல் வேவல் கூறியதை உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன். இது உங்கள் பொறுப்பும் என் பொறுப்பும் ஆகும். இதனால் தான் தேசிய **யுத்த முனை** ஒன்றைக் கட்டிமுடிக்கும்படி நீங்கள் எல்லோரும் ஒன்று பட வேண்டுமென்று உங்களை அழைக்கிறேன். இந்த இயக்கத்தை எந்தப் பெயர் கொண்டு அழைத்தாலும் நான் அதைக் குறித்துக் கவலைப்படப் போவதில்லை. இந்த இயக்கத்தின் தத்துவம் ஒற்றுமைப்பட்ட மன உறுதி தான். இது ஜாதி, மத அரசியல் வேற்றுமைகளுக்குக் கொஞ்சமும் இடங் கொடுக்கக் கூடாது. நமது சொத்துக்களையும் சம்பாத்தியங்களையும் காப்பாற்றிக் கொள்ள நாம் ஒன்றுபட வேண்டும்.

**விரும்பி, பேசி பலனில்லை.**

இந்தியப் போர்முனையைக் 'கட்டி' முடியுங்கள் என்று கோருகிறேன். கட்டி முடிக்க விரும்புவதனாலேயோ பேசுவதனாலேயோ காரியம் ஒன்றும் ஆகாது. செயலில் இறங்க வேண்டும். இதற்கு முதலில் ஒன்று பட வேண்டும், இரண்டாவது செயலாற்ற வேண்டும். ஒற்றுமை யடைவதில் எதுவும் கஷ்டம் இருக்காது என்று தான் நினைக்கிறேன்.

கீழ்க்கண்டவை தான் நம்மோடு சேருகிறவர்களின் கொள்கைகளா யிருக்க வேண்டும்.

1. பொது ஜனங்கள் யுத்தத்தைத் தடுக்க வேண்டி கொண்டுள்ள பலத்தைப் பெருக்க வேண்டும்.

2. பலம் பெருகுவதைத் தடுக்கும் எல்லாவற்றையும் அழிக்க வேண்டும்.

3. ஐந்தாம் படையினரின் எல்லா வித முயற்சிகளையும் எதிர்த்து மறுத்து விட வேண்டும். ஏனென்றால், அவர்கள் பேச்சு, கருத்து, எழுத்து, செய்திகள் ஆகியவற்றால் பொது ஜனங்களுக்குள் தோல்வி மனப் பான்மை தோன்றி விடலாம். எனவே அதை வேர் அறுக்கவேண்டும்.

4. நம்பிக்கையும், வீரமும் சகிப்புத் தன்மையும் உண்டாக்க வேண்டும்.

5. பாசிஸமும், நாசிஸமும் எந்த உருவத்தில் அமைந்திருந்தாலும் சரி, நம் நாட்டிற்குள்ளாகவோ, வெளி நாடுகளிலோ இருந்தாலும் சரி, இந்த அக்கிரமத்தை அடியோடு அழிக்கும் வரையிலும் அதை எதிர்த்துப் போராட வேண்டும் என்னும் உணர்ச்சியை மக்களிடையே உண்டாக்கி ஒற்றுமையைப் பெருக்க வேண்டும். நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும், தன் எந்தக் கொள்கைக்கும் நோக்கத்திற்கும் பாதகம் நேராதபடி, இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளக் கூடும் என்று நம்புகிறேன்.

**உடனே படையில் சேருக.**

'இந்த யுத்தத்தில் நான் என்ன செய்ய முடியும் என்று எனக்கே தெரியவில்லை' என்று சிலர் சொல்லக் கூடும்.

படையில் சேரக் கூடியவர்கள் உடனே சேருங்கள்! மற்றவர்கள் சேருவதற்கு உள் நாட்டுப் பாதுகாப்பாளர்கள் படை, டாக்டர், நர்சுகள், ஆம்புலென்ஸ் படை, சிவிக் கார்டுகள், ஹோம் கார்டுகள், பயனியர் படை முதலியவை இருக்கின்றன. ஆஸ்பத்திரிகளுக்கும் ஆபீசுகளுக்கும், இராணுவங்களின் உணவுச் சாலைகளை நடத்துவதற்கும் பெண்கள் தேவை. அல்லாமலும், வெளி நாடுகளி லிருந்து இங்கே வந்து சரண் புகுந்தவர்களுக்கும் உதவ செய்வோர்கள் தேவை.

நாம் வெற்றி பெற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? பணம், உணவுப் பொருள்கள், துணி, மின்சாரம், பெட்ரோல், நிலக்கரி முதலிய அவசியமான பொருள்களை வீணாக்கக் கூடாது. வீணாக்குவோமானால் வெற்றி யடைவதைத் தடைப்படுத்தியவர்களாவோம். நாம் அனாவசியமாக ரயிலில் பிரயாணம் செய்யக் கூடாது. விவசாயிகள் உணவுப் பொருள்களை ஏராளமாகச் சாகுபடி செய்ய வேண்டும். தொழிற் சாலைகளில் வேலை செய்வோர்கள் தம்மால் இயன்ற அளவிற்குக் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டும். யுத்தம் ஒரு நாள் அதிகமாக நடந்தாலுங் கூட, அதனால் ஏற்படும் உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் மிகவும் அதிகம்.

நம்மிடம் உள்ள மூல பலத்தைக் கொண்டு நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்று, ஆலோசனை காரர்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இந்த யுத்தத்தில் வெற்றியும் தோல்வியும் நம்மைப் பொருத்து இருக்கிறது. ஆகையால், நமக்கு அவகாசம் இருக்கின்ற இப்போதே நம் நாட்டிலேயே யுத்த முனையைக் கட்டி முடிப்போம். கொஞ்ச காலத்திற்கு முன் என் மனைவி ஒரு பிரசங்கத்தில் கூறிய ஒரு செய்யுளைக் கொண்டு என் பிரசங்கத்தை முடிக்கிறேன் அந்தச் செய்யுளின் தமிழ்மொழி பெயர்ப்பாவது:—

"அரிய தோர் சமய மாகுமிப் போதில்
உரிய நற் செயல்கள் உளதோ செய்தவை?
என்னுமிக் கேள்வியை எங்கணுங் கேட்டு
உன்னியே பாரீர் உள்ளுளே ஊன்றி!"

# ஜெர்மன் போலீஸ் இதாலியை ஆளுகிறது.

## முசோலினிக்குக் கிரக சாரம்.

"இத்தாலியில் 15,000 முதல் 20,000 ஜெர்மன் இரகசியப் போலீஸார் மிகவும் முக்கியமான உத்தியோகங்களில் இருக்கின்றார்கள். இவர்கள் தான் இத்தாலிய அரசரையும் முசோலினியையும் ஆட்டி வைக்கிறவர்கள் என்று "வாஷிங்டன் போஸ்ட்" பத்திரிகை எழுதுகிறது.

மற்றொரு பத்திரிகாசிரியர் எழுதுவதாவது:— "முஸோலினிக்கு நெடு நாட்களாகவே கிரகசாரம் பிடித்துக் கொண்டிருக்கிறது லவால் இப்போது ஹிட்லரின் முதல் கையாள் ஆகிவிட்டார், அச்சு நாடுகளின் விஷயங்களில் மிகப் பலமான தோர் நிலைமையைப் பெற, அவர் மிகவும் பாடு படுகிறார். ஆகையினால், அவர் இத்தாலிய நாட்டையே ஏலம் கூறுகிறார். இப்படியாக, இவர் ஹிட்லருடைய செல்வாக்கைப் பெற்று, அவரை வற்புறுத்தி, மத்தியதரைக் கடலில் விரைவில் யுத்தத்தை ஆரம்பிக்கும்படித் தூண்டுகிறார்."

டைம்ஸ் பத்திரிகை எழுதுவதாவது:— கடுங் கஷ்டங்கள், கொடுமையான அயோக்கியத் தனங்கள், பெரியதனக்காரர்கள் வியாபாரிகள் ஆகியோருடைய கையால் ஆகாத் தன்மை, ஆகியவற்றால், இத்தாலியர்கள், தாம் இயல்பாக அனுபவிக்கக்கூடிய சுகங்களையும் அனுபவிக்க முடிவ தில்லை."

இத்தாலியர்களுக்குக் கிடைக்கும் உணவைப் போல இரண்டு மடங்கு உணவு ஜெர்மானியருக்குக் கிடைக்கிறது. 15 லட்சம் இத்தாலியர்கள், தம் பழத் தோட்டங்களைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், இன்று யுத்தக் கைதிகளாகவும், ஜெர்மனியில் தொழிலாளர்களாகவும், அச்சுப் போர்முனையில் வீரர்களாகவும் இருக்கிறார்கள்.

லவாலை பிரஞ்சுத் தலைவராக்கியது முஸோலினிக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. என்றாலும், என்ன செய்வது? "கழுதைக்கு வாழ்க்கைப்பட்டு, உதைக்கு அஞ்சினால் முடியுமா?" என்பதுபோல, ஹிட்லரின் தோழமை கொண்டதற்கு, வேறு என்ன தான் செய்வது? உலகப் பொது மக்கள் மீது கொடுமையான குற்றங்களைச் செய்வதில் இருவரும் கூட்டாளிகள் அல்லவா? இதனால் இத்தாலிய மக்கள் உள்ளத்திலே, வாய் விட்டுச் சொல்ல முடியாத கவலை நிறைந்திருக்கிறது.



# "இப்போது எதிரிகள் தாக்க முடியாது"

## உறுதியாகவும் ஒன்றுபட்டும் இருங்கள்.

### கவர்னர் பிரசங்கம்.

**"இந்த நாட்டை எதிரிகள் ஒரு மாதத்திற்கு முன்பு வெகுவாகத் தாக்கி யிருக்கலாம். ஆனால், இப்போது முடியாது. நிலைமை பெரிதும் மாறிவிட்டது. என்றாலும் கடற்கரையோரத்தில் உள்ள ஊர்களை எதிரிகள் தாக்கக் கூடும். அதற்கு நாம் ஆயத்தமாய் இருக்க வேண்டும். நமது போக்கு, முடிவில் நிச்சயமாக நமக்கு வெற்றி தரும்."**

**சென்ற 1942-ம் ஞு மேமீ 7உ வெள்ளிக் கிழமை மாலை நீலகிரி யுத்தக் கமிட்டியின் ஆதரவில் அஸெம்பிளி மண்டபத்தில் மேன்மை தங்கிய சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப் ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது:**

மலை மேலுள்ள ஊர்களுக்கு அவ்வளவு ஆபத்து கிடையாது கைதிகளைத் தவிர வேறு எந்த ஜப்பானியரையும் நீங்கள் நீலகிரி மலைமேல் காண முடியாது. சிங்கப் பூரிலிருந்து ஜப்பானியர்கள் இங்கே வர வேண்டுமானால் தூரம் மிகவும் அதிகம். அல்லாமலும் பாதையும் மிகவும் கஷ்டமானது.

இந்த ஜில்லா யுத்தக் கமிட்டியார் மிகுந்த ஊக்கத்தோடு தம் வேலையைச் செய்து வருகிறார்கள். இதுபற்றி நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அல்லாமலும் மலேயாவி லிருந்தும் சிங்கப்பூரி லிருந்தும் இங்கே வந்து சேர்ந்திருக்கிறவர்களுக்குப் பொது ஜனங்கள் செய்துள்ள உதவிகளுக்காக அவர்களையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்.

**ஜப்பானியர் கேவல மனப் பான்மை.**

ஜெர்மானியர்களும் இத்தாலியர்களும் மிகக் கேவலமான மனப் பான்மையுடையவர்கள். அதனால் தான் உலகத்தையே கட்டியாள வேண்டும் என்ற பேராசை கொண்டிருக்கிறார்கள். இதே பேராசை தான் ஜப்பானையும் பற்றி யிருக்கிறது. இப்போது ஜப்பானியர்கள் மலேயாவைக் கைப்பற்றி யிருக்கிறார்கள்; பர்மாவைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதன் பிறகு இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் ஏக காலத்தில் தாக்குவார்களா அல்லது ஒன்றன் பின் ஒன்றாகத் தாக்குவார்களா என்று யாரும் சொல்ல முடியாது.

**எச்சரிக்கையும் பாதுகாப்பும்.**

சென்ற மாத ஆரம்பத்தில், சென்னையிலேயே இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லாதவர்கள் எல்லோரையும் வெளியேற்றி விட சென்னை சர்க்கார் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார்கள். ஏனென்றால், அப்போது ஜப்பான் கப்பற் படை இலங்கையைத் தாக்கி விட்டு, வங்காளக் குடாக் கடலில் போய்க் கொண்டிருந்த கப்பல்களை மூழ்கடித்துக் கொண்டிருந்தது. விசாகப்பட்டணத்தையும் தாக்கியது. எனக்கு கிடைத்த தகவல்களில் இருந்தும் சென்னையை அவர்கள் நேர்முகமாகத் தாக்கக் கூடும் என்று நான் நினைத்தேன். ஆகையால் நான் முன்னெச்சரிக்கையாகவும் பாதுகாப்பை முன்னிட்டும், சென்னையிலேயே இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லாதவர்கள் எல்லாம் வெளியேறி விடலாம் என்று ஒரு அறிக்கை பிறப்பித்தேன். கடவுளின் கருணையினாலே, அப்படிப் பட்ட நிலைமை ஏற்பட வில்லை. அப்படிப் பட்ட தோர் ஆபத்து ஏற்பட்டு நாம் அப்படிப்பட்ட அறிக்கையைப் பிறப்பிக்காதிருந்தால், எப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கும் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆபத்தில் இருந்த பொதுமக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய முழுப் பொறுப்பும் நான் ஏற்றுக்கொண்டிருந்தேன்.

**"உறுதியாகவும் ஒன்றுபட்டும் இருங்கள்!"**

மேலும் அவர் கூறியதாவது:—போன மாதமே சென்னையைத் தாக்க முடியாத ஜப்பானியர்களால், இப்போது தாக்க முடியவே முடியாது. ஏனென்றால், நமது பலம் இப்போது மிகவும் அதிகமாகி விட்டது. வாராவாரம், மாதாமாதம் யுத்தத் தளவாடங்கள் இந்தியாவிற்கு வந்து இறங்கிய வண்ணமாகவே இருக்கின்றன. இந்தியாவிலேயே யுத்தத் தளவாட உற்பத்தி மிகவும் அதிகரித்து விட்டது. இவற்றால் இந்தியாவின் பலம் மிகவும் அதிகமாகி விட்டது; இன்னும் இரண்டு மாதங்களில் அதன் பலம், பல மடங்கு அதிகப்பட்டு விடும். ஜனங்கள் உறுதியோடும் ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன். ஜப்பானியர்கள் இந்தியாவிற்கு வருவார்களானால், அவர்களுக்கு, படைகள் மட்டுமன்றி, பொது ஜனங்களுங் கூட, தகுந்த மரியாதை நடத்துவார்கள்; அதாவது தகுந்தபடி தண்டித்துத் திருப்பி யடிப்பார்கள் இப்படிப் பட்ட சிக்கலான நிலைமையிலே, இந்தியப் பொது ஜனங்களும், அவர்களுடைய தலைவர்களும், தம் பொறுப்புக்கள் எவ்வளவு மகத்தானவை என்று உணருகிறார்கள். இது பற்றி நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன்.

# வெற்றி நமக்கு நிச்சயம்.

## ஆண்டு விழாவில் இராஜகுமாரி பிரசங்கம்.

ஜெர்மனி ஹாலந்து மீது போர் தொடுக்க ஆரம்பித்த இரண்டாவது ஆண்டு விழாவை அமெரிக்காவில் உள்ள 'லோ கண்ட்ரீஸ்' என்னுமிடத்தில் ஹாலிபாக்ஸ் பிரபு தலைமையில் கொண்டாடினார்கள். அப்போது அவர் கூறியதாவது:—

"பிரமாதமாகப் பீத்திக் கொண்டிருந்த ஜெர்மன் விமானப் படை இங்கிலாந்தின் மீது தொடுக்கும் போர் போன்றது அல்ல இப்போது நடக்கும் போர். போலந்தைத் தாக்க ஹிட்லர் திட்டம் போட்டது போன்ற போரும் அல்ல இது. அந்த மாதிரிப் போராட்டம் முடிந்து விட்டது. இப்போது நடைபெறும் போர், வேறு விதமானது. இப்போது எப்படிப் பட்டவர்களோடு போராட வேண்டும் என்று எதிரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்."

அது போன்ற ஆண்டு விழா வட கரோலினாவில் உள்ள ஆஷ்வில்லா என்னுமிடத்தில் நடைபெற்ற போது, ஜூலியானா இராஜகுமாரி கூறியதாவது:—

"ஒவ்வொரு ஜனநாயக நாடும், தன் நாட்டு மக்களின் உரிமைகளைப் பற்றி பெரிதும் பெருமை யடைகின்றது. நெடு நாட்களாக இந்த உரிமைகளை அழிக்க, கெட்ட எண்ணங் கொண்ட அரசாங்கங்கள், முயன்று கொண்டிருக்கின்றன. இவர்கள் நமக்குப் பொது விரோதிகள். அவர்களோடு நாம் போராட வேண்டி இருக்கிறது. ஆரம்பத்தில் நாம் சற்று தோல்வி அடைந்திருந்தாலும், நம் மனம் தளர்வடையாது. எல்லா யுத்த களங்களிலும் நாம் நம் எதிரிகளைத் தாக்கிப் போராடத் தான் போகிறோம். அப்போது, வெற்றி நமக்கு நிச்சயமாகக் கிடைக்கும்."

> நம் நாடு உண்மையிலேயே ஆபத்திற்கு உள்ளாகி இருக்கிறது. இந்தியத் தலைவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டிருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. நடைமுறைக்கு உதவாத கொள்கைகளால் எந்தவிதமான நன்மையும் கிடையாது நம் நாட்டைக் காக்க நாம் எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டியதே இப்போது தேவை. இவற்றை உணர்ந்து, சர்க்கார் கருத்திற்கு இணங்கி, பொது ஜனத் தலைவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள் என்று தெரிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

யுத்த நிலைமை முன்பு இருந்ததை விட மிகவும் சாதகமாக இப்போது இருக்கிறது. வெற்றி யடையும் வழியில் நாம் இப்போது போய்க் கொண்டிருக்கிறோம். இப்போது அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன் ஆகிய நான்கு சாம்ராஜ்யப் படைகளும் ஒன்று பட்டிருக்கின்றன. எதிரியை அடியோடு வெல்லும் வரைப் போராடுவதே அவற்றின் கொள்கை.

# சிப்பாய்களைப் பற்றி தவறான பிரசாரம்.

## ஐந்தாம் படையினரின் சேஷ்டை.

பிரிட்டிஷ் துருப்புக்களும் இந்தியத் துருப்புக்களும் சென்னையில் பல காலமாக இருந்து வருகின்றன. அவைகள் இருப்பது நமக்குப் பழக்கமாய் விட்டது அவைகள் யாருக்கும் ஒரு கெடுதலும் செய்ததில்லை. சமாதான காலத்தில் சென்னையில் துருப்புக்கள் இருப்பதைக் கண்டு, சாதாரண மக்கள் யாதொரு அச்சமும் கொள்ள வில்லை. யுத்தம் நடக்கும் இந்தக் காலத்தில் அதே துருப்புக்களைக் கண்டு அவர்கள் பயப்படுவானேன்? தங்களுடைய உடல் நலத்துக்கும், சொத்து சுதந்திரங்களுக்கும் அவர்களால் கேடு நேரிடக் கூடும் என்று அவர்கள் நினைப்பானேன்? முன்னிருந்ததை விட இப்போது அதிகமான துருப்புக்கள் இருக்கின்றன என்பது உண்மை தான்; இதனால் பொது மக்களுடைய நம்பிக்கை அதிகப்பட வேண்டுமே. ஒழிய, குறைவதற்கு யாதொரு காரணமும் கிடையாது. ஏனென்றால் துருப்புக்கள் சென்னை நகர மக்களை எதிரியின் தாக்குதலிலிருந்து பாது காப்பதற்காக இருக்கின்றனவே யொழிய வேறல்ல.

ஆனால் பலர் இதைப் பற்றி தப்பபிப்ராயங் கொண்டிருக்கிறார்கள். சென்னைக்கு வெகு தூரத்தில் நடந்த ஒரு சம்பவத்தை எடுத்துக் கொள்ளலாம். அங்குள்ள ஒரு தொழிற்சாலையில் சுமார் 10,000 பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். நெருக்கடியான நிலைமையில் அது ஒரு பாதுகாக்கப் படவேண்டிய முக்கியமான இடம் என்று கருதப்பட்டதால், சில இந்தியத் துருப்புக்கள் அங்கு அனுப்பப் பட்டன. "ஓகோ சோல்ஜர்கள் வந்து விட்டார்களா?" என்று கூறிக் கொண்டு தொழிலாளர்கள் அவ்வூரை விட்டு வெளி யேறி விட்டார்கள். எங்கு போகிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது; ஏன் போகிறோம் என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்கவுமில்லை. தாங்கள் போகிறோம் என்பது மாத்திரம் அவர்களுக்குத் தெரியும். ஊரை விட்டுப் போனார்கள். பிறகு என்ன நடந்தது? வாங்கின சம்பளம் எவ்வளவு நாளைக்குத் தாங்கும்? கையி லிருந்த பணம் செலவான பிறகு, அவர்கள் திரும்பி வந்தார்கள். வந்தவுடன் பட்டாளத்தார்களுக்கும், தொழிலாளர்களுக்கும், ஒரு கால்பந்துப் பந்தய ஆட்டம் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டது. தகுந்த சமாதான வார்த்தைகளால் சரிப்படுத்தப் பட்ட பிறகு, தொழிலாளர்கள் பந்தய ஆட்டத்தில் விளையாடினார்கள். ஆட்டத்தில் பட்டாளத்தார்களை நன்றாகத் தோற்கடித்து விட்டார்கள். பிறகு "சோல்ஜர்கள்" அப்படி ஒன்றும் அபாயகரமானவர்க ளல்ல என்று அவர்கள் முடிவு கட்டினார்கள்.

ஆனால் ஏன் அவர்கள் முதலில் ஊரை விட்டு ஓடவேண்டும்? சில துருப்புக்கள் வந்ததால் ஒரு முக்கியமான யுத்த தொழிற்சாலையின் வேலை ஏன் அலங்கோலப் பட வேண்டும்? இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவைகளைச் சற்று ஆராய்ந்து பார்க்கலாம்.

சென்ற உலக யுத்தத்துக்கும் இப்போதுள்ள யுத்தத்துக்கும் ஒரு முக்கியமான வித்தியாஸம் இருக்கிறது. 1914-ம் வருஷம் யுத்தத்தில் கேள்விப் படாத ஒரு பலம் பொருந்திய ஆயுதம் இப்போது இருக்கிறது. அது தான் ரேடியோ, அல்லது மின்சார ஒலி பரப்புப் பிரசாரம் என்பதாகும். இதன் மூலமாக பொது மக்களின் மனோ நிலையைக் குலைத்து, அவர்களுடைய எதிர்க்கும் சக்தியை அழிக்க, நமது எதிரிகள் முயற்சி செய்கிறார்கள். இது தான் முதலாவது காரணம். யுத்த காலத்தில், பொது மக்கள் கலவரத்துடன் இருப்பது இயற்கையே! அக்கலவரத்தை அதிகப்படுத்துவது எதிரிகளுடைய நோக்கம். ஒன்றுமில்லாத சாதாரண சம்பவங்களை மிகை படக் கூறி, பொய் வதந்திகளைப் பரப்பி, வீண் சம்பவங்களை உண்டாக்கி, எதிரிகள் பொது மக்களின் மனத்தைக் கலைக்க முயற்சிக்கிறார்கள்.

சென்ற உலக யுத்தத்தின் போது கேள்விப் படாத பல புதிய வார்த்தைகளை இப்போது கேள்விப்படுகிறோம். "ஐந்தாம் படை" இவைகளில் ஒன்று. ஐந்தாம் படை என்றால், அரசாங்கத் துரோகம் என்பது தான் பொருள், ஐந்தாம் படையைச் சேர்ந்தவர்கள் பொது மக்களுக்கும் துருப்புக்களுக்கும் விரோத உணர்ச்சியை உண்டாக்கி அதை வளர்த்து வருவார்கள். அப்படிப் பட்ட துரோக இயக்கம் இங்கு வேலை செய்து வருகிறது, என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. நமக்கும் எதிரிக்கும் இடையில் நிற்கும் பிரிட்டிஷ் துருப்புக்களையும், இந்தியத் துருப்புக்களையும், ஐந்தாம் படையினர் இழித்துக் கூறி வருகிறார்கள். சில பத்திரிகைகள் இப்படிப் பட்ட பிரசாரத்தை வேண்டு மென்றே வளர்த்துக் கொண்டு வருகின்றன. இந்த் ஐந்தாம் படை வேலை, பொது மக்கள் கலவரத்துக்கு இரண்டாவது காரணம் என்று சொல்லலாம்.

உதாரணமாக, ஒரு இந்திய சிப்பாய், ஒரு சிறிய சண்டையை ஆரம்பிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அதனால் சிறிது அமைதி யின்மை ஏற்படுகிறது. இதைப் பிரமாதப்படுத்தி பெரிய எழுத்துக்களுள்ள தலைப்பின் கீழ், சில பத்திரிகைகள் பிரசுரித்து விடுகின்றன. ஒரு பிரிட்டிஷ் சிப்பாய் தன் ஓய்வு நேரத்தில் ஒரு பெண்மணியைக் கண்டு "குட் ஈவினிங்" என்று சொல்லுகிறார் என்று வைத்துக் கொள்வோம். உடனே, பிரிட்டிஷ் சிப்பாய்கள் பெண்களை யெல்லாம் அவமானப் படுத்துகிறார்கள் என்று வதந்தி பரப்பப்படுகிறது. பத்திரிகைகளில் பெரும் பெரும் எழுத்துக்களுடன் மிகை படுத்தப் பட்ட செய்தி பிரசுரிக்கப்படுகிறது. சில சிப்பாய்கள் சற்று மதுபான மருந்தி கொஞ்சம் முரட்டுத் தனம் செய்கிறார்கள் என்றால், அதைப்பற்றி "வெட்கப்படும்படியான நடத்தை" "அவமானமான காரியம்" என்று சில பத்திரிகைகள் எழுத ஆரம்பித்து விடுகின்றன.

பிரிட்டிஷ் துருப்புக்களா யிருந்தாலும் சரி, இந்தியத் துருப்புக்களா யிருந்தாலும் சரி, அவர்களுக்குள் சில விஷயங்களில் நாம் விட்டுக் கொடுக்கலாகாதா? அவர்கள் சில சில்லரை சேஷ்டைகள் செய்தால், அவைகளை 'போனால் போகிறது' என்று பெரிய மனதுடன் நாம் விட்டு விடக் கூடாதா? சாதாரண சுதந்திர வாழ்க்கையில் இருக்கும் பலர், எவ்வளவோ தவறுகள் செய்கிறார்கள். ஒடுக்கமானதும், கட்டுப் பாடானதும்,



கண்டிப்பானதுமான வாழ்க்கையில் பழக்கப் பட்ட சிப்பாய்கள் ஓரோர் சமயத்தில் தவறி விட்டால், அதை நாம் மன்னித்து விடவேண்டும், மறந்து விடவேண்டும். அபிஸினியா, லிபியா, மலேயா, பர்மா, ஆகிய போர் முனைகளில் இந்திய சிப்பாய்களுக்கு அளிக்கப் பட்ட பெரும் புகழுரைகளை நாம் மறக்க முடியுமா? டங்கர்க், கிரீட், தோப்ருக், முதலிய பெரும் போர்களில் பிரிட்டிஷ் சிப்பாய்கள் காட்டிய ஒப்புவமையில்லா வீரத்தை நாம் என்று மறக்கக் கூடும்.

உங்களில் சிலருடைய நண்பர்களும் உறவினரும் பட்டாளத்தில் சேர்ந்திருக்கலாம். பட்டாளத்தில் சேருவதற்கு முன் சமுதாயத்தில் மதிப்புக் குரிய கண்ணிய புருஷர்களாக அவர்களை நீங்கள் கருதி இருக்கலாம். ஆனால் அவர்கள் சிப்பாய் உடையைத் தரித்தவுடன் அவர்களுடைய மதிப்பு மறைந்து போய் விடுகிறதா? பட்டாளத்தில் சேர்ந்த காரணத்தால் அவர்களுடை, மதிப்பும், கண்ணியமும் அதிகப்பட வேண்டுமே!

சிப்பாய்கள் எவ்வளவு கஷ்டமான வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். போரில்லாத காலத்தில், எவ்வளவு ருசிகரமற்ற வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய சுறு சுறுப்பான நாள் வேலை முடிந்ததும் வீட்டுக்குச் செல்கிறோம். அங்குள்ள சௌகரியங்களையும், வாழ்க்கை நலன்களையும், அனுபவிக்கிறோம். சிப்பாய்களுடைய வாழ்க்கை அப்படிப் பட்டதல்ல. சிப்பாய் விடுதிகளில், அசௌகரியங்கள் பல உண்டு. மே, ஜூன் மாதங்களில் சென்னையில் ஒரு கூடாரத்தில் வசிக்க யாராவது விரும்புவார்களா? இது போன்ற அசௌகர்யங்களையுடைய வாழ்க்கையை நடத்தி வரும் சிப்பாய்கள் விஷயத்தில் நாம் கண்டிப்பாய் இருப்பது கடூர சிந்தனையைத் தான் காட்டும்.

எப்படிப் பட்டவர்கள் சிப்பாய்களாகச் சேருகிறார்கள்? யுத்தத்திற்கு முன்னிருந்த பட்டாளத்திற்கும், இப்போதுள்ள பட்டாளத்துக்கும், ஒரு வித்தியாஸ மிருக்கிறது. இந்த யுத்தத்திற்கு முன் சென்னையிலுள்ள பட்டாளத்தில், ராணுவத்தை ஒரு நிரந்தர உத்தியோகமாகக் கருதிய, சிப்பாய்கள் இருந்தார்கள். இப்போது அவர்களோடு கூட யுத்த காலம் வரைக்கும் மாத்திரம், சிப்பாய்களாக இருக்க விரும்பும், சாதாரண மக்களும் இருக்கிறார்கள். பெரும்பாலும் இவர்கள் தான் அதிகப்படியான எண்ணிக்கையாய் இருப்பார்கள் என்று கூறலாம். சென்னைக்குச் சற்று தூரத்தில் உள்ள ஒரு பட்டாளத்தில் வக்கீல்கள், பாதிரி உத்தியோக மாணவர்கள், கணக்காளர்கள், பாங்கி குமாஸ்தாக்கள், சர்வே செய்பவர்கள், சித்திரக் காரர்கள், எஞ்சினியர்கள், மோட்டார் ஓட்டிகள். பண்ணையத் தொழிலாளர்கள், தகரச் சுரங்கக் காரர்கள், கடை வேலையாளர்கள் விற்பனைக்காரர்கள், முதலிய பல திறப்பட்டவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இவர்க ளெல்லோரும், சிப்பாய் உடை தரித்தவுடன் சாதாரண சமாதான வாழ்க்கை விரும்பும் மக்களி லிருந்து, பொது மக்கள் பயப்படும் படியான கொள்ளைக் கூட்டத்தினராக மாறி விடுவார்களா? இவர்களில் அநேகர் பிளிமத் நகரத்தில் எதிரி விமானத் தாக்குதலின் போது போராடியவர்கள். மற்றொரு படையில், 100-க்கு 60 பேர் மதுபானம் ஒழித்தவர்கள். இப்படிப் பட்டவர்கள் தானா தெருக்களை அபாயகர மாக்குபவர்கள்?

இதல்லாமல், யுத்தகாலத்தில் ராணுவக் கட்டுப்பாடு மிகவும் கண்டிப்பானது. அதை மீறி நடந்ததாக பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளில் பத்தில் ஒன்று சற்று உண்மையானதா யிருக்கலாம். ஒழுங்கு மீறி நடப்பவர்கள், கடுமையாகத் தண்டிக்கப் படுகிறார்கள். பெருங் கூட்டமான பட்டாளத்தில் ஏதோ ஒன்றிரண்டு பேர் நிலை தவறிச் செல்வது சகஜமே. இதில் ஆச்சரிய மென்ன வென்றால், இப்படித் தவறுபவர்கள் மிகக் கொஞ்சமாக இருக்கிறார்கள் என்பது தான்.

ஆகையால், இந்த விஷயத்தில் நாம் சற்று தாராள சிந்தனையுடன் இருக்கவேண்டும். நன்றி என்பது ஒரு அபூர்வமான நற்குணம். பிரிட்டிஷ் சிப்பாய்களும், இந்திய சிப்பாய்களும் இங்கில்லா விட்டால், இதற்குள் நாம் ஜப்பானிய சிப்பாய்களைச் சந்திக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கும். அதை நாம் எக்காலத்தும் விரும்பமாட்டோம். ஆகவே பட்டாளத்தை சேர்ந்து நம்மை பாதுகாத்து வரும் மதிப்பு வாய்ந்த சிப்பாய்களுக்கு நமது நன்றியைச் செலுத்தி அவர்கள் உடல் நலனும், போர்வலிமையும் இன்னும் அதிகமாக அடைய வேண்டுமென்று வாழ்த்துவோமாக!

—(சென்னை ரேடியோவில் செய்யப்பட்ட ஒரு பிரசங்கம்)

# வெளியேறி வந்தவர்களுக்குச் சர்க்கார் உதவி.

## சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பள பட்டுவாடா.

### ஏழைகளுக்குச் சாப்பாட்டுக்குப் பணம்.

பர்மாவில் 10 முதல் 12 லட்சம் இந்தியர்கள் இருந்தார்கள். இவர்களுள் எத்தனைப்பேர் இந்தியாவிற்குத் திரும்பி வந்து விட்டார்கள் என்று தெளிவாகக் கணக்கெடுக்க சந்தர்ப்பம் இல்லை. இதுவரை 2½ லட்சம் முதல் 3 லட்சம் பேர்கள் வரைத் திரும்பி விட்டார்கள் என்று ஒருவாறு சொல்லலாம். இன்னும் நாள்தோறும் 2000 பேர்கள் வரை வந்து கொண்டு தான் இருக்கிறார்கள். சுமார் 50 ஆயிரம் பேர்கள் உரை கப்பலில் வந்தார்கள். பல்லாயிரம் பேர்கள் ஆக்யாபிலிருந்து கப்பல் ஏறி வந்தார்கள். அநேகம் பேர்கள் விமானங்களில் வந்தார்கள்.

பர்மாவி லிருந்து இந்தியாவுக்கு வரும் ரோட்டுப் பாதை மிகவும் கடினமானது. கொஞ்ச நாளைக்குள் இந்த வழியில் உணவு, தண்ணீர், இளைப்பாறுமிடம் முதலிய வசதிகளை அமைப்பது கஷ்டமான காரியம். இவை, அமைக்கப் பட்டிருக்கின்றன என்றாலும், மட்டமான முறையில் தான் அமைக்க இயன்றது. இவற்றை விருத்தி செய்ய இயன்ற அளவு முயற்சிக்கப்படுகிறது. போக்கு வரவுச் சாதனங்களை அமைப்பது தான் மிகவும் சிக்கலான பிரச்னை.

**வைத்திய உதவி.**

இந்த வழியாக வருகிறவர்களுக்கு வைத்திய உதவி மிகவும் அவசியமாயிருந்தது. ஒரு சமயம் வாந்தி பேதி அதிகமாகி, அந்த ரோடு வழியாகவே ஜனங்கள் வரவொட்டாதபடி செய்யலாமா என்று கூட சர்க்கார் கருதினார்கள். இப்போது அந்நோய் காண்பதே கிடையாது. ஒரு பெரிய வைத்தியப் படை அஸ்ஸாமுக்குப் போயிருக்கிறது. அதில் ஒரு பகுதி பர்மாவிற்குக் கூடப் போய் இருக்கிறது.

**செலவே கிடையாது**

இந்தியாவின் எல்லையிலுள்ள 'தாமு' என்ற ஊருக்கு வந்தது முதல் ஒரு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்ச் சேரும் வரை எந்த விதச் செலவும் இங்கே வருகிறவர்களுக்கு கிடையாது. உணவு, தங்குமிடம், தண்ணீர், கூலிகள் மோட்டர் லாரிகள் முதலியவை எல்லாம் அரசாங்கத்தாரே இலவசமாக உதவுகிறார்கள் ரயில் பிரயாணத்திற்குக் கூட பணம் இல்லாதவர்களை இலவசமாக அழைத்துப் போகிறார்கள். சில வாரங்

களில் ஒரு ரயில்வே ஸ்டேஷனில் மட்டும் ரூ. 8½ லட்சத்திற்கு டிக்கெட்டுகள் விற்றிருக்கின்றன். பர்மாவிலிருந்து வருகிறவர்களை வரவேற்று அவரவர்கள் ஊர்களுக்கு அனுப்பும் விஷயத்தில் உத்தியோகப் பற்றில்லாத பல ஸ்தாபனங்கள் அரசாங்கத்தாரோடு ஒத்துழைத்திருக்கின்றன. இந்த நிர்வாகச் செலவுகளுக்காகவும் அரசாங்கத்தார் தொகை உதவியிருக்கின்றார்கள்.

**வேலையில்லாத் திண்டாட்டம்**

பர்மாவிலிருந்து வந்தவர்களுக்கு வேலை இல்லை. ஆகையால் வேலை தேடித் தரும் ஸ்தாபனம் ஒன்றை ஸ்தாபிக்கும்படி மாகாண சர்க்கார்களுக்கு உத்திரவாகி யிருக்கிறது. தொழிற் கல்வியுடையவர்கள் நாஷனல் சர்விஸ் லேபர் ட்ரிப்யுனல் அதிகாரியிடம் அறிவிக்க வேண்டும்.

**கல்வி வசதி**

மாணவர்கள் படிப்பதற்கு பலவகைகளிலும் வசதிகள் செய்யப் பட்டிருக்கின்றன. கல்லூரிகளில் சேர்ப்பது, சம்பளத்தைத் தள்ளிக் கொடுப்பது, பாடத் திட்டங்களைக் கூட மாற்றி அமைப்பது முதலிய வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன.

**பண உதவி**

மிகவும் ஏழைகளாக இருக்கிறவர்களுக்கும், எதிரிகள் வசப்பட்டிருக்கும் நாடுகளில் இருக்கிறவர்களைச் சார்ந்தவர்களுக்கும், சாப்பாட்டிற்குப் பணம் கடனாக உதவ ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். உதவி தேவையாய் இருக்கிறவர்கள் உடனே முழு விவரங்களையும் அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும்.

பர்மா சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய சம்பளம், பென்ஷன், பிராவிடெண்ட் பண்டு முதலியவை பற்றி பைசல் செய்ய பர்மா சர்க்கார் தம் பிரதிநிதி ஒருவரை இந்தியாவில் நியமித்திருக்கிறார்கள். பர்மா சர்க்கார் யுத்த நஷ்ட இன்ஷ்யூரென்ஸ்படி சேரவேண்டிய தொகைகளைப் பாலிஸிதார்களுக்குக் கொடுக்க விரைவில் ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறோம்.

**நிற வேற்றுமை கிடையாது**

ஐரோப்பியர்களுக்கு மட்டும் பர்மா பாதையில் விசேஷச் சலுகை காட்டப்படுகிறது என்று புகார் கூறுகிறார்கள். எல்லா ரோடுகள் வழியாகவும் எல்லோரும் வரலாம். எல்லா முகாம்களிலும் எல்லோரும் தங்கலாம், எங்கேனும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தால், அது எல்லோருக்கும் விதிக்கப்பட்டிருக்கும்.

# முகம் மலருகிறது.

அப்பொழுது தான் பசு கன்று போடுகிறது. மழை சோவென்று கொட்டுகிறது. வீடு தட, தடவென்று இடிந்து விடுகிறது. ஆத்துக் காரிக்கு இடுப்பு வலி ஆரம்பிக்கிறது, ஒரு நாவிதனுக்குச் சொல்லி யனுப்பலாமென்றால், அதே சமயம் கொல்லையிலே 'ஐய்யய்யோ!' குரல் கிளம்புகிறது. 'ஆண்டே! உங்க அருமை அடிமை, மண்டையைப் போட்டுட்டாங்களே!' என்று அலறுகிறார்கள் சில பெண் பிள்ளைகள். 'கஷ்டம்! கஷ்டம்' என்று தானே வெளியே கிளம்பிப் போகையில், 'மாமனார் வைகுண்ட ப்ராப்தியானார்' என்ற விஷய மடங்கிய கடிதத்தைக் கொண்டு நீட்டுகிறான் தபால்காரன். அப்பொழுது தான், 'எமி ஸாமி! அப்பு இங்க ஈலேதே! காலம் ரொம்ப மோட்மாய் போயிந்தே!' என்று கடன்காரச் செட்டியார் எதிரே வந்து நிற்கிறார். எப்படியிருக்கும் இத்தனை சம்பிரமத்திலும் சிக்கிக் கொண்டுள்ள மனுஷருக்கு? இதே மனுஷர் அன்று ஆபீஸிற்குப் போகிறார். பெரிய துரை அவரை அழைக்கிறார். 'மிஸ்டர்......! போனமாதம் நீர் ஒரு யோசனை சொன்னீரல்லவா? அதனால் கம்பெனிக்கு நல்ல லாபம் வந்திருக்கிறது. உமக்கு நூறு ரூபாய் ப்ரமோஷன்' என்று சொல்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். எப்படி யிருக்கும் அந்த மனுஷருடைய முகம். கடவுள் கொடுத்தது எத்தனை பல் என்பதை விளம்பரப் படுத்துகிறவர் போல், அவர் பல்லை இளித்து விட மாட்டாரா? இருக்கிற கஷ்டமெல்லாம் மறந்து, அவரது முகம் மலர்ந்து விடாதா?

இன்னொரு கதை கூட உண்டே! நினைவிருக்கிறதா? ஒரு வேடன். அவனை ஒரு மத யானை திடீ ரென்று எதிர்பாராமல் துரத்த ஆரம்பித்து ஓடுகிறான் தன்னால் முடிந்தவரை. கால்கள் தள்ளாட ஆரம்பித்து விட்டன. இனி ஓட முடியாது என்று தோன்றி விட்டது. திரும்பிப் பார்த்தான், யானை எங்கே வருகிற தென்று. அதற்குள் வழியிலிருந்த பாழுங் கிணற்றில், காலிடறி விழுந்தான். நல்ல வேளையாக, அவனது கை, ஒரு விழுதைப் பற்றிக் கொண்டது. அங்கேயே சற்று நேரம் ஊசலாடிக் கொண்டிருந்தான் அவன். கீழே பார்த்தால், பாம்புகள் நடமாடுவது தெரிந்தது. உயரப் பார்த்தான். கடவுளை நினைத்துக் கொண்டு. மேலே ஒரு கழுகு வட்ட மிட்டுக் கொண்டிருந்தது. அவன் பற்றியிருந்த விழுதை, அப்பொழுது தான் வெகு ஸ்வாரஸ்யமாக ஒரு எலி கறுவிக் கொண்டிருந்தது. 'சரி! தொலைந்தோம்! கடவுள் விட்ட வழி இதுதான' என்று அவன் மனமுடைந்துபோக விருக்கையில் மேலே யிருந்த தேன் கூட்டிலிருந்து ஒரு துளி தேன் கீழே சொட்ட, அது நேரே அவன் உதட்டில் வந்து விழுந்தது. அந்த நேரத்தில், நாவரட்சியுடன் மனம் பதைத்திருக்கும் அவனுக்கு, அந்தத் தேன் எவ்வளவு மதுரமாக இருந்திருக்கும் தெரியுமா?

'அப்புறம் என்ன கதை?' என்று கேட்கிறீர்களா? மேலே யிருந்த கழுகு அந்த எலியைப் பாய்ந்து கௌவிக் கொண்டு போயிற்று. எங்கிருந்தோ சிம்ம கர்ஜனை கேட்கவே, மத யானை எடுத்தது ஓட்டம். எங்கிருந்தோ வேறு பல வேடர்கள் வந்து கூடினார்கள். அவனைத் தப்புவிக்கச் செய்தார்கள். ஏதோ, அந்த வேடனுக்குப் போதாத வேளை, இவ்வளவு அவஸ்தைகளுக்குள் மாட்டிக் கொண்டான். போதாத வேளை நிரந்தரமாக இருக்காது என்பதாலும், அதிர்ஷ்ட சக்கரம் சுற்றிக் கொண்டே இருப்பதாலும், கஷ்டப் பட்டாலும், பிறகு சுகமடைந்தான் அவன் என கதா காலக்ஷேப பாகவதர்கள் கூறுவார்கள்.

'இந்த இரண்டு தினுசு மனுஷாளையும் இப்பொழுது இங்கே இழுத்துக் கொண்டு வந்து, எங்களுக்கு முன்னால் நிறுத்துவதின் அர்த்தமென்ன?' என்று நீங்கள் கேட்கலாம். அந்த மனுஷாள்களைப் போலவே தானே நாமும் இருக்கிறோம், ஐயா! நம்ம மேலே குண்டு ஒன்று தான் நேரே விழ வில்லையே ஒழிய, நாமும் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களை அடைந்தாச்சா இல்லையா? 1939-ம் வருஷம் செப்டம்பர் மாசம் 2-ந் தேதிக்கு முன்னாலேயோ, அது தான் போகட்டுமய்யா, 1941-ம் வருஷம் டிஸம்பர்மீ 7-ந் தேதிக்கு முன்னாலேயோ, உங்களுக்கு இருந்ததே அந்த மன நிம்மதி, இப்பொழுது இருக்கிறதா, சொல்லுங்கள்?

"அ! அதுக்கு முன்னாலே மட்டும் என்ன? எங்காத்து மாப்பிள்ளைக்கு வேலையில்லாமே, 'லோல்' பட்டுக்கொண்டிருந்தான், பேத்திக்குக் கல்யாணமாகலை, வீட்டுக்கு வெள்ளை யடிக்கக் காசில்லை, பேரனுக்குப் படிக்கப் போடலை. திருப்பதிக்குப் போய் மொட்டை யடிச்சிக் கொண்டு வரலை, வடாம் போட வெயிலே வரலை" என்று சிலர் சொல்லக்கூடும். ஆனால், இதெல்லாம் சங்கடங்களா என்ன? உலகத்திலே உள்ளவர்களுக்கு எந்தக் காலத்திலு முள்ள நச்சுப் பிச்சு மனக் குறைகள். ஆனால், மாப்பிள்ளை என்றுமே வேலையில்லாமலோ, பேத்தி கன்னியாகவேயோ, பேரன் பள்ளிக்குப் போகாமலேயோ இருந்து விட்ட தில்லை. இந்தக் குறைகள் நீங்கினால், வேறு குறைகள் ஆஜராவது இயற்கை.

ஆனால், இந்த யுத்தத்தினால் ஏற்பட்டதே, பீதியும் கஷ்டமும், நஷ்டமும் அதற்கு ஈடே கிடையாது. உலகெங்கும் பரவி விட்ட இந்த யுத்தத்தினால், யுத்தம் நடக்கும் பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு உயிருக்கும், பொருளுக்கும், வீட்டிற்கும், வாசலுக்கும் படுசேதங்கள் ஏற்பட்டு வருகின்றன. மற்ற பிரதேசங்களில் உள்ளவர்களை யுத்தபீதி பிரமாதமாக வாட்டுகிறது. சாமான்களின் விலை விஷம் மாதிரி ஏறிக் கொண்டிருக்கிறது. புருஷனும் பெண்டாட்டியும், தந்தையும் குழந்தைகளும் ஒன்றாக ஒரு இடத்தில் வசிக்க முடிய வில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் வேறே! வியாபாரம் படுத்தது வேறே! செலவு அதிகமாவது வேறே, இந்தக் கஷ்டங்களை யெல்லாம் யுத்தம் மோந்து பார்க்காத பிரதேசங்களில் உள்ளவர்கள் அநுபவித்தே தீர வேண்டி யிருக்கிறது.



ஐரோப்பாவில் ஜெர்மானியர், 'ஆரம்பிக்கப் போகிறோம்' என்று ஆர்பாட்டம் செயது கொண்டிருந்த, வசந்த காலத் தாக்குதல், ஒரு மட்டிலும் ஆரம்பித்து விட்டதாகத் தெரிகிறது. தெற்கு ருஷ்யாவில், டானட்ஸ் நதிப் பிரதேசத்திலே மட்டும், 20 லக்ஷம் புது ஜெர்மன் வீரர்களும், இருபத்தி நான்கு, கவசம் தரித்த படைகளும், கிட்டத் தட்ட இரண்டாயிரம் விமானங்களும், பாய ஆரம்பித்து விட்டதாம். போர் அதிக மும்முரமாக உள்ள பிரதேசம் இருநூற்றைம்பது மைல் முன்னணியைக் கொண்டது தான்.

இங்கே தான் வசந்தத் தாக்குதல் ஆரம்பமாகும் என்று பலர் எதிர் பார்த்தார்கள். அதன்படியே நடந்திருக்கிறது. இங்கு போர் ஆரம்பமானதற்குப் பல காரணங்களுண்டு என்று, இங்கே தான், முதலில் தரை கெட்டியாக மாறி யிருக்கிறது, தவிர, இந்தப் பிரதேசத்தில் திட்டமான வெற்றி கண்டால் தான் பிரயோசனமான எண்ணெயக் கிணறுகள் உள்ள காகஸஸ் பிரதேசத்தைப் பற்றியே நினைக்கலாம். திரி யில்லாமல் விளக் கெரியுமா? அதுபோல், எண்ணெ யில்லாமல், யுத்த வண்டி ஓடுமா ஐயா? முன்பே, இந்த எண்ணத் தோடு தானே மளமளவென, போன வருஷ முடிவில் ஜெர்மானியர், ராஸ்டாவ் நகர் வரை வந்து விட்டார்கள். எதிர் பாராது அங்கு விழ ஆரம்பித்த உதை, தொடர்ந்து பனிகாலம் முழுவதிலும் அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டே யிருந்தது. அந்த வகையில் ருஷ்யர்கள் தங்களுக்கேற்பட்ட கஷ்ட நஷ்டங்களை லக்ஷியம் செய்யவே இல்லை.

ஏதோ பலஆயிர மைல்கள் சிரமப்பட்டு வந்த விருந்தாளிகளை, 'செமத்தி' யாகக் கவனிக்க வேண்டாமா? 'போதும்! போதும்' என்கிற வரையில் போட்டுத் தீர்த்து விட்டார்கள் ருஷ்யர்கள். இப்படியாகத் தானே கைக்கெட்டியது வாய்க் கெட்டாமல் போச்சு நம்ப ஜெர்மன் அண்ணாத்தைகளுக்கு. அதனாலே அவர்கள் இந்தத் தெற்கத்திச் சீமையிலேயே, புதுத் தாக்குதலை ஆரம்பித்திருக்க வேண்டும்.

'நமக்கு நிகர் யாருமில்லை. நம்பளை விரட்ட இன்னொருத்தன் பிறக்கணுமய்யா!' என்று மமதை கொண்டிருந்த ஜெர்மானியரை; தலையைத் தொங்க விட்டு நிற்கச் செய்தவர்கள், இந்தத் தெற்கத்தி ருஷ்ய சீமைக்ககாரர்கள் தானே? அதனாலும், ஜெர்மானியர் தங்கள் ஆத்திரத்தைக் காட்ட இந்தப் பிரதேசத்தைத் தெரிந் தெடுத்துக் கொண்டிருக்கலாம்.

அதோடு, ஹிட்லர் துருக்கி மீதிலும் மோதக் கூடும். துருக்கியைப் பிடித்துக் கொண்டால், (பஜ்ஜி செய்ய வெங்காயம் வெட்டுகிறது மாதிரி அவ்வளவு சுளுவான வேலையா என்ன இது?) அப்புறம், இடுக்கியில் மாட்ட வைப்பது போல், காகஸஸ் பிராந்தியத்தை இரண்டு புறங்களி லிருந்தும் தாக்கலாமோ, இல்லையோ?

மற்றும், சென்ற எட்டாந் தேதி யன்றே, க்ரைமியாவிலே ஜெர்மானியர் பிரமாதமாகப் போராட ஆரம்பித்து விட்டார்களாம். சில பகுதிகளில் அவர்கள் அடி பட்டாலும், ஒரு பகுதியில் முன்னேறினார்களாம். சென்ற டிசம்பரிலே கைசோர விட்ட கெர்ச் பிரதேசத்தைத் திரும்பவும் பிடித்துக் கொள்ள அவர்கள் முயற்சிக்கிறாப் போலிருக்கிறது. ஏனென்றால், கெர்ச்சையில் இல்லா விட்டால், காகஸஸ் பக்கம் தைரியமாகத் தலையை நீட்ட முடியாது. எற்கெனவே, க்ரைமியாவிலே போர் நடந்து கொண்டிருப்பதாலும், ருமேனியாவி லிருந்து சுலபமாக, தென் பிரதேசத்திற்கு ஆளை இழுத்து வரக் கூடுமாதலாலும், ஹிட்லர் வசந்தப் போரை இங்கே தொடங்கி யிருக்கக் கூடும்.

இந்தச் சமயத்திலே, வடக்கே, நார்வேயை ஒட்டினாப் போல் உள்ள, ஆர்க்டிக் பிரதேசத்திற்கு ஆசாரவாயில்போல் உள்ள ஸ்வீடன் தேசத்திற்கும் ஹிட்லர் தலை வலியை உண்டாக்குவார் போலிருக்கிறது. "யானை வரும் பின்னே, மணி ஓசைவரும் முன்னே" என்ற கதைபோல, ஸ்வீடனில் இருக்கும் அமெரிக்கர்களை 'கிளப்புங்கள் உடனே!' என்று அமெரிக்க சர்க்கார் கூறுவதி லிருந்தும், ஜெர்மனிக்கும் ஸ்வீடனின் தலைநகருக்கும் இடையே தடைப் பட்டிருந்த டெலிபோன் போக்கு வரத்திற்கு உயிர் கொடுக்கப் பட்டதி லிருந்தும், வரப் போகும் மாதங்களில், யுத்தச் செய்திகளில் ஸ்வீடனின் பெயர் அடிபடக் கூடும் என்ற எண்ணம் எல்லோருக்கும் தோன்றக் கூடும்.

நார்வேயைப் பிடித்த ஹிட்லர், ஸ்வீடனை மட்டும் சும்மா விட்டு வைத்ததற்கும் காரணங்களுண்டு. அதாவது, மற்ற சிறு நாடுகளைப் பிடித்த சனியன், இந்த நாட்டை இதுவரை பற்றாததற்கு, ஹிட்லரின் சுயநலமே காரணமாகும். இந்த நாட்டை நடுநிலைமை நாடாக வைத்துக் கொண்டே அவர் ஜெர்மனிக்குச் சாதகமான காரியங்கள் பலவற்றைச் சாதித்துக் கொண்டிருக்கிறார். ஆனால், ஸ்வீடன் நடு நிலைமையில் இருப்பதால், ருஷ்யாவிற்கு வடகடல் வழியே செல்லும் உதவியைத் தடுக்கவும் அவரால் முடியவில்லை. ருஷ்யா மீது வசந்த காலப் போர் ஆரம்பித்தாயிற்று. இம்முறை உண்டு, இல்லை என்று பார்த்து விட வேண்டும், என்று இருக்கும் ஹிட்லருக்கு, எதிரியான ருஷ்யாவின் கை பலப்பட்டுக் கொண்டே யிருந்தால் எப்படி யிருக்கும்? ஆகவே, அவர் ஸ்வீடன் தேசத்தை கபளீகரம் செய்து கொண்டு, ஆர்க்டிக் கடலில் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி, 'இந்த வழி ஆபத்தானது' என்று நேசதேசத்தார் நினைக்கும்படி செய்ய வேண்டுமென அவர் தீர்மானித் திருக்கக் கூடுமல்லவா?

ஸ்வீடனை அவர் கைப்பற்றி விட்டால், ருஷ்யாவிற்குக் கொஞ்சம் சிரமம் தான்! ஆனால் அது வரை நேசதேசத்தார் சும்மா பார்த்துக் கொண்டிருப்பார்களா என்ன? தென் திசையி லிருந்து ஏற்படக் கூடிய 'மஞ்சள்' விபத்தை, அதாவது ஜப்பானிய யமனது போக்கை, மடகாஸ்கரை சட்டென்று, அதிக சேதமும், எதிர்ப்பும் இல்லாது தடுத்து, எல்லோரும் கொஞ்சம் பெருமூச்சு விடும்படி செய்த பிரிட்டிஷார், வடக்கே ஹிட்லர் யமனை வாலாட்ட விட்டு விடுவார்களா?

ஹிட்லர் மத்ய கிழக்குப் பிரதேசத்தில் தான் ரொம்ப நம்பிக்கை வைத்திருக்கிறாப் போலிருக்கிறது. வட ருஷ்யாவில் இருந்த, விமானப் படையைக் கூட அதனால் தான் அவர் திரும்ப அழைத்துக் கொண்டு விட்டாப் போலிருக்கிறது. ஆனால் லெனின் கிராட் முற்றுகையை அவர் தளர விட வில்லை. ஸ்டாலனெஸ்க் பிரதேசத்திலும் உயிர் தோன்றும்படி செய்துகொண்டிருக்கிறாராம் அவர். தெற்கே, அலெக்ஸாந்திரியா மீது அடிக்கடி குண்டுகளை வீச ஏற்பாடு செய்திருக்கிறார். மால்டாவைத் தூளாக்க ஆசைப் படுகிறார். ஆனால் அங்குள்ளவர்களோ, உலக சரித்திரத்திலேயே முதலிடம் பெறத் தீர்மானித்திருப்பவர்கள் போல் போராடுகிறார்கள். போன வாரம் 2 நாட்களில் 96 ஜெர்மன விமானங்களைச் சுக்கல் நூறாக அடித்து விட்டார்கள். அவர்களுக்கு பிரிட்டிஷ் விமான உதவி கிடைத்த வண்ணமாகவே இருக்கிறது.

வட ஆபிரிகச் சண்டையையும் ஹிட்லர் மும்முரமாக்கக் கூடும். அங்கு போராட வலுக் கட்டாயத்தின் பேரில் ஆக்ரமிக்கப் பெற்ற ருஷ்யாவிலிருந்து ஆட்களை திரட்டிக் கொண்டு வர உத்திர விட்டிருக்கிறாராம். ஜெர்மன் சோல்ஜர்களுக்கோ வரவர வெறுப்பு ஏற்பட ஆரம்பித்து விட்டதாம். வடக்கே ஒரு இடத்தில் நானூறு பேர்கள் கலகம் செய்து, போரிட மறுத்து விட்டார்களாம். வடகடலில் பிரிட்டிஷ் கப்பற் படையொன்றை சமீபத்தில் கண்டும், சில ஜெர்மன் கப்பல்கள் தூரத்திலேயே இருந்து விட்டு ஓடிவிட்டனவாம். ஏதோ ஒன்றிரண்டு மட்டும் போராடி, ஒரு பெரிய பிரிட்டிஷ் யுத்தக் கப்பலை மூழ்கடித்ததாம். ஹிட்லருக்காகப் போராட பலருக்கு மனமே இல்லாத நிலைமையி லிருக்கிறார்கள். பலர் என்று கூறப் படுகிறது, ஆனாலும், ஹிட்லரை விட்டால், ஜெர்மானியருக்கு இப்பொழுது வேறு கதி யில்லை.

ஹிட்லரோ, ஒரு அனுபவஸ்தர் கூறி யுள்ளதுபோல், நன்றாக இடிபட்டு விழுந்து, ஆத்திரத் தோடு எழுந்து நின்று, எங்காவது ஓரிடத்தில் தனது பலத்தை

யெல்லாம் சேர்த்து வைத்து, ஓங்கி ஒரு குத்து விட்டு விட்டு, எதிரியை வீழ்த்தி, வெற்றி வீரனுகப் பார்க்கும் குத்துச் சண்டைக் காரன் மாதிரி தானிருக்கிறுர். அவர் பலமாகவே குத்து விட நினைத்திருக்கலாம். ஆனல், எதிரி அவரை விட சூரனுக இருந்து, அவன் சமயம் பார்த்து, சட்டெனக் குனிந்து கொடுத்து விட்டால், பாய்ந்த வேகத்தில், குத்துச் சண்டை வீரன், நிலை தடுமாறி தள்ளாடிப் போய், கீழே விழுந்துருள நேரிடு மல்லவா ?

அதேபோல், ஹிட்லர், இந்த வருடம் எப்படியும் வெற்றி கண்டே தீர வேண்டும்; இத் தருணம் தப்பினல் மறுசமயம் வாய்ப்பதரிது ; போனல் வராது பொன்னம்மாள் கிருபை" என்பது போல், ஒரே ஆத்திரத்துடன் ஜப்பானையும் தூண்டிவிட்டு விட்டு, ஏககாலத்தில் அமெரிக்காவை இரண்டு நாடுகளும் தாக்க ஏற்பாடு செய்யக் கூடும். ஜப்பான், அமெரிக்காவின் வடமேற்கு மூலையில் உள்ள, ஜப்பானுக்கு சமீபமாக உள்ள, அலாஸ்கா பிரதேசத்தையும், லவாலின் தயவால் கிடைக்கக் கூடிய மேற்காப்பிரிக்கப் பிரதேசமான டாக்பாரி லிருந்து, ஜெர்மானியர் அமெரிக்காவின் கிழக்குப் பிரதேசத்தையும் தாக்கக் கூடும். இதை எதிர்பார்த்தே, அமெரிக்க உபதலைவர், '1942-ம்ஸு த்தில் கோடை அதி பயங்கரமாக இருக்கக் கூடும். என்றுமே கண்டிராத நெருக்கடி இந்தக் காலத்தில் ஏற்படக்கூடும்' என்றும் எச்சரித்திருக்கிறுர். அதோடு, எழுபது லக்ஷம் விஷ வாயுவைத் தடுக்கும் முக மூடிகளை அமெரிக்காவில் விநியோகிக்க தலைவர் ரூஸ்வெல்ட் உத்திர விட்டிருக்கிறுர்.

ஹிட்லரோ, எந்த தர்ம நியாயத்திற்கும் கட்டுப் படாது, தன் நிலைமையை ஸ்திரப் படுத்திக் கொண்டு, தான் ஆரம்பித்த பைத்தியக்காரச் சண்டையைக் கடைசி வரை நடத்தி முடித்து விட்டுத் தான் விடுவார் என்பதில் சந்தேகமே இல்லை. சென்ற வாரம் கூட, க்ரைமியாவில் ஜெர்மானியர் விஷ வாயு அடங்கிய சுரங்க வெடியை உபயோகித்ததாக ஒரு செய்தி எழுந்தது. அதைக் கேட்டதும், உலகமே திடுக்கிட்டு விட்டது. இந்தக் கட்டுரை ஆரம்பத்திலே விவரித்த இரண்டு தினுசு மனுஷர்களைப் போல், எல்லோரும் மாறிவிட்டார்கள். 'மனித யுத்தம் அசல் ராக்ஷச யுத்தமாகி விடும்போலிருக்கே! இதனல் விபரீதங்கள் பல விளையுமே! ராணுவக் குறிகள் மீது வீசப்படும் விஷவாயு குண்டுகள், ஒரு பாவமு மறியாத சாதாரண மக்களையும் பாதிக்கும் போலிருக்கிறதே!' என்று அனைவரும் எண்ணி வருந்தினர்கள். விழுதிலே, பேராபத்திடையிலே ஊசலாடிக் கொண்டிருந்த மனுஷன் நாக்கிலே தேன் சொட்டியதுபோலவும், குடும்ப அவஸ்தைகளில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டு முழி பிதுங்கிய வண்ண மிருந்தவனுக்கு, 'ப்ரமோஷன்' என்ற வார்த்தை காதில் விழுந்தது போலவும், 'பயப்படாதீர்கள்! ஜெர்மானியர் ருஷியர் மீது விஷப்புகை விட்டால் நாம் சும்மா இருக்கமாட்டோம். நம் ஆட்கள் மீது விஷப் புகை ப்ரயோகிக்கப் பெற்றதாகவே எண்ணி, பதிலுக்கு நாமும் விஷப் புகையை விடுவோம். ஹிட்லர் பொல்லாத மனுஷர், போகிற போக்கிலே இந்த கோரக் கொலையும் செய்யத் தயங்கமாட்டார் என்று எதிர் பார்த்தே, பிரிட்டனில் விஷ வாயு ஆராய்ச்சிகளைப் பிரமாதமாகச் செய்யச் சொல்லி யிருந்தேன். நிலைமை ரொம்பவும் மோசமாகப் போனலன்றி, இந்தப் பழிக்குப் பழி வாங்கும் தொழிலில் இறங்க மாட்டோம். ஹிட்லர்தான் இதற்கு ஒரு முடிவு கூறவேண்டும்.

பாவம்! ஹிட்லர் தவறுமேல் தவறு செய்துவிட்டார். இனி அவர் தலை தூக்குவது சிரமம்தான். வரப்போகும் மாதங்களில், ஜெர்மனியின் இடுப்பை ஒடிக்க, எண்ணற்ற விமானிகள் காத்திருக்கிறுர்கள். பதினெட்டு மாதங்களுக்கு முன்னலேயே, சீமையைத் தரை மட்ட மாக்கி விடப் போவதாக ஜம்பம் பேசினர் அந்தப் பெரியார். ஆனல் அவரது ஜம்பம் சாயவில்லை. யுத்தம் ஆரம்பித்து 32 மாதங்களாகிவிட்டன. இந்தச் சமயத்திலே, நமக் கேற்பட்டுள்ள பிரதிகூலங்களைப் பார்த்தால், நாம் எல்லாம் சளைத்தே போய் விட்டதாகவே எல்லோரும் நினைப்பார்கள். ஆனல், இரண்டாவது முனை ஏற்படுத்துங்கள். நொறுக்குவோம் ஜெர்மானியரை" என்ற கோஷம் எங்கு மிருக்கிறது. நமது மனே திடத்தை இது வெளிப்படுத்த வில்லையா? அஞ்ச வேண்டாம்! அனைத்திற்கும் தயாராக, புது நேசர்களுடன், வெற்றிக் கொடி நாட்டத் தயாராக இருக்கிறேம். நீண்ட காலம் போர் நடந்தாலும், கவலைப் பட வேண்டாம். மேல் விழுந்து தாக்க சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி வருகின்றன" என்ற மொழிகள் வானத்தில் ஒலித்து, உலக மக்கள் காதில் விழுந்தன. பேசியது யார்? இத்தனை நாட்களாக இல்லாத வீரத்துடனும், திட நம்பிக்கையுடனும் பேசுபவர் யார் என்று பார்த்தால், நமது பிரதம மந்திரி சர்ச்சில் தான்.

அவர் தைரியமாக ஜெர்மனியை எச்சரிக்கை செய்ததும், இந்நாள்வரை இருந்தது போலில்லாமல் மேல் விழுந்து தாக்கும் முறையில் பேசியதும், அமெரிக்கருக்கும் நேச தேசத்தாருக்கும், 'டானிக்' கொடுத்தது போலாகி விட்டது. சட்டியிலே நிறையச் சேர்ந்து விட்டாப் போலிருக்கு ; அதனல் தான், கை தாராளமாக இருக்கு ; பேச்சும் முடுக்காக இருக்கு' என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். தக்க தருணத்தில் வந்த இந்த மொழிகள், எல்லோரது முகங்களையும் மலரச் செய்திருப்பதில் ஆச்சரிய மென்ன இருக்கிறது!.

இதுமட்டுமல்ல! இனி வரப்போகும் மாதங்களில் ஏராளமான பிரிட்டிஷ் வெடிகுண்டெறியும் விமானங்கள் ஜெர்மனியைத் தாக்கப் போகின்றன. ஜெர்மனியின் ஆலைகளையும், தொழிற்சாலைகளையும், கப்பல், சப்மரைன் தளங்களையும் தவிடு பொடியாக்கி விட்டால், ஜெர்மானியரே கதிகலங்கி, 'போறுமே இந்த யுத்தம்' என்ற பாட்டைப் பாடி கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விடுவார்கள். ஒரு நாட்டில் உள்ளவர்களின் மனே தைரியம் குலைந்து போனல், மகா முரடன் அதன் தலைவனுக இருந்தாலும் ஒன்றும் செய்யமுடியாதல்லவா ? அந்த நிலைமைக்கு ஹிட்லரை விரட்டியடிக்கவே சர்ச்சில் ஏற்பாடு செய்து வருகிறுர்.

'ஒரு இருபதினுயிரம் வெடிகுண்டு விமானங்களிருந்தால் போதும், மறுநாள் காலையில் ஜெர்மனியே இல்லாது செய்து விடலாம்' என்கிறுர் பிரிட்டிஷ் விமானப் படைத்தலைவர்.

இத்தனை காலமாக யுத்தம் நடந்தும் ஒன்றே முக்கால் லக்ஷம் பிரிட்டிஷ் டைகளுக்குத் தான் சேதமேற்பட்டிருக்கிறது. இதிலிருந்தே பிரிட்டிஷ் படையின் திறமை வெளியாக வில்லையா? நேச நாடுகள், ஹாலிபாக்ஸ் பிரபு கூறியதுபோல், ஜெர்மனியை நையப்புடைக்கும் காலம் வந்து விட்டது என்றே சொல்லலாம்.

ஜெர்மனியை மட்டு மில்லை, அதன் கூட்டாளிகளையும் தீர்க்கும் காலம் வந்துவிட்டது என்றே சொல்லலாம். நமது முகங்களை மலரச் செய்ய வந்த சேதிகள் இரண்டில், ஆஸ்திரேலியா அருகே யுள்ள பவழக்கடலில் ஜப்பானியர் சுமார் இருபது பெரிய கப்பல்களை இழந்து விட்டு, அமெரிக்கக் கடற்படைக்கு முன் நிற்கமுடியாது, ஆஸ்திரேலியா மீது படையெடுக்க வந்த நோக்கம் தற்சமயம் நிறைவேருது ஓட்டம் பிடித்த சேதியும் ஒன்ருகும்.

ஜப்பானியர் பர்மாவில் வெற்றியும், தோல்வியும் பெற்று வருகிறுர்கள். பர்மா கெவர்னரும், மந்திரிமார்களும் இந்தியா வந்து விட்டார்கள். ஜப்பானியர் சீன எல்லையைக் கடந்து விட்டனர். அஸ்ஸாம் மாகாணத்தில் குண்டு வீசுகிறுர்கள், சிட்டகாங்கிலும் குண்டு விழுந்தது. ஆனலும் ஜப்பானியர் பர்மா யுத்தத்தை முடித்து விட்டதாக எண்ணுவதற் கில்லை.

இந்தியாவில் அவர்களை எதிர்த்து நிற்க, பத்து லக்ஷம் பேர் அடங்கிய படை ரெடியாக இருக்கும். பிரிட்டனி லிருந்தும், அமெரிக்காவி லிருந்தும், இங்கு படைகளும், விமானங்களும் வந்து குவிகின்றன. இந்தியாவின் வட கிழக்கு எல்லையில் பலத்த ராணுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இலங்கையிலே, குரங்குச் சண்டை நிபுணர்களான கிழக்காப்பிரிக்கத் துருப்புகள் வந்திறங்கி விட்டன. இந்திய விமானிகள் பல இடங்களில் பர்மாவில் அதிதீரமான காரியங்களைச் சாதித்திருக்கிறுர்கள். ஜப்பானியர் இந்தியாவில் கால் வைத்தால், அவர்களைத் தாக்க இங்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்பதும் முகத்தை மலரும்படி செய்யக் கூடிய சேதி அல்லவா ?

ஆரம்ப ஜோரில், ஜப்பானிய மக்களும், ஜெர்மானிய மக்களும், பல்லை இளித்திருக்கக் கூடும். இனிப் பல்லைக் காட்டி, முகமலர்ச்சியோடு இருக்க வேண்டியது நமது 'சான்ஸ்' அல்லவா? இதற்காக நமது எதிரிகள் கஷ்டப் பட்டால் முடியுமா ஐயா ?

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

5 Cps

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் வருஷம் மேமீ 22உ, வெள்ளிக்கிழமை [இதழ் 20



## "புகழுக்கு உரியவர்களாகக் கிளம்புவார்கள்"

### சென்னை மக்களுக்கு வைசிராய் செய்தி

#### கவர்னர் நன்றி

சென்ற 1942-ம் வருஷம் மேமீ 12உ செவ்வாய்க் கிழமை இந்தியா வைசிராய் மேன்மை தங்கிய லின்லித்கோ பிரபு சென்னைக்கு வந்தார். இரண்டு நாட்கள் இங்குள்ள இராணுவ ஏற்பாடுகளைப் பார்வை யிட்டார். 1942-ம் வருஷம் மேமீ 14உ திரும்பினர். அப்போது, சென்னைப் பொது மக்களுக்கு, அவர் அனுப்பிய செய்தியாவது :—

"நம் அனைவருக்கும் இது, கவலைக் கிடமான கஷ்ட காலம். இந்த யுத்த முன்னணியில் இருப்பது சென்னை தான். உங்களுடைய பிரச்னைகளைக் குறித்து நேரில் காண விரும்பினேன். இந்தப் பிரச்னைகளில் நேர்முகமாக ஈடுபட்டிருப்பவர்களையும் கண்டு, ஏதேனும் குறை பாடுகள் இருந்தால், அவற்றை திருத்தி விட வேண்டும் என்றும் விரும்பினேன். அன்றியும், அநேக வருஷங்களாக நன்ருக இயங்கிக் கொண்டிருக்கும் இந்த மாகாணத்தின் உறவை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் இங்கே இரண்டொரு நாட்கள் மட்டுந் தான் தங்கக் கூடிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. சென்னையும் சென்னை மக்களும் மிகச் சிறந்த எண்ணத்தோடு இருப்பதைக் காண, சந்தோஷப்படுகிறேன. அவர்களுடைய நல் உணர்ச்சியில் எனக்கு மிகுந்த நம்பிக்கை யுண்டு. அவர்கள் யுத்தத்தில் ஈடுபட வேண்டிய அவசியம் நேரக் கூடாது என்று தான் நான் நம்புகிறன். அவசியம் சேருமானல், புகழுக்கு உரியவர்களாக அவர்கள் கிளம்புவார்கள் என்பது நிச்சயம்.

இந்தியாவின் இந்தப் பகுதியி லுள்ள பாது காப்பு ஏற்பாடுகளை, இந்தச் சொற்ப காலத்திற்குள், நான் பார்வை யிட்டேன். உண்மையிலேயே, அந்த ஏற்பாடுகள் படிப்படியாக முன்னேறிக் கொண்டு போவதைக் காண்கிறேன். நீங்களே இதைக் கண் கூடாகக் காணலாம். இந்த முன் ஏற்பாடுகள் தொடர்ந்து பெருகிக் கொண்டும் பலப் படுக் கொண்டும் போகும் என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். ஏ.ஆர்.பி.-யும் உள் நாட்டுப் பாது காப்புப் படையும் சிறந்த முறையில் வேலை செய்து வருவது கண்டு சந்தோஷ மடைகிறேன். சென்னை மாகாணத்தில் பல படைகள் ஆங்காங்கே இருக்கின்றன. நான் அவற்றை பார்வை யிட்டேன். தம் கடமைகளில் அவர்கள் மிகவும் அக்கரை கொண்டு இருக்கிறுர்கள். அவர்களுடைய திறமையும் போராடும் உணர்ச்சியும் நான் நேரில் கண்டேன். இப்படைகள் மிகவும் பலமானவை. எதிரிகள் முன்னேறி தாக்காதபடி நன்ருகத் தடுக்கக் கூடியவை. இவை எனக்கு மிகுந்த திருப்தியையும் ஊக்கத்தையும் தருகின்றன.

**மேலும் உதவலாம்**

மிகச் சிறந்த முறையில், யுத்த முயற்சிக்கு, ஏற்கெனவே சென்னை உதவி யிருக்கிறது. மேலும் அதிகமாகச் சென்னை உதவலாம்.

சென்னையைப் பாது காத்துக் கொண்டிருக்கும் படைகளுக்கும் பக்க பலமாக இருக்கலாம். நீங்கள் சிறந்த முறையில் ஒற்றுமை யோடு இருக்க வேண்டும். இந்த ஒற்றுமை நம் எதிரியைத் திகைக்கச் செய்யும். இந்தத் தேசிய யுத்த முனைக்கு நீங்கள் எல்லோரும் முழு மனதோடும் ஊக்கத் தோடும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று கோருகிறேன். உங்களுடைய கவர்னர், தளராத ஊக்கமும், தலைமை வகித்து நடத்தும் திறமையும் மிகவும் உடையவர். அவருடைய தலைமையில் நீங்கள் எல்லோரும் உங்கள்

கடமைகளைச் செம்மையாகச் செய்வீர்கள் என்று நான் எதிர் பார்க்கிறேன். இன்று நம்மில் ஒருவரும் மனத் தடுமாறம் கொள்ளக் கூடாது. இந்தியாவின் பொருட்டு நாம் ஒன்றுபட்டு நிற்போம். இந்த மகத்தான மாகாணத்தின் சரித்திரம் மிகவும் புகழ் பெற்றது. ஆகையால் என் வேண்டுகோளுக்குத் தக்க பலன் கட்டாயம் இருக்குமென்று நான் அறிவேன்."

இந்தச் செய்திக்கு மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அளித்துள்ள பதில் வருமாறு :—

தாராள மனப்பான்மையுடனும், ஊக்க முண்டாக்கத் தக்க முறையிலும், தாங்கள் விடுத்துள்ள செய்திக்கு சென்னை வாசிகளின் சார்பாகத் தங்களுக்கு என் மனமார்ந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தாங்கள் இங்கு விஜயம் செய்தது பெரிதும் விரும்பத் தக்கது தான். நமது கடற்கரையை எதிரிகள் தாக்குவார்களானால், அவர்களை எதிர்த்துப் போராடி திருப்பி யடிப்பதற்கான முயற்சிகளைச் செய்ய, என்னென்ன ஏற்பாடுகள் அவசியம் என்பது பற்றி உணர்ந்து கொள்ள, தாங்கள் எவ்வளவு அக்கரை கொண்டிருக்கிறீர்கள் என்று, தங்கள் சென்னை விஜயம், எடுத்துக் காட்டுகிறது.

மிகவும் நெருக்கடியான காலம் வருமானால், அந்த ஆபத்து வேளையிலே, இந்தியாவை விட்டுக் கொடுப்பதில்லை என்று உறுதி கொண்டிருக்கிறோம். வெற்றி பெறும் வரை நம் படைகளுடன் ஒத்து நின்று உறுதி யுடன் போராடுவோம்.

---

# தேசீயப் போர் முனை அமைப்பு.

## இந்தியா சர்க்கார் 30 லட்சம் ஒதுக்கி யிருக்கிறது.

### சேருகிறவர்கள் மேற்கொள்ளும் வாக்குறுதி.

தேசீயப் போர் முனை என்றால் என்ன என்று மேன்மை தங்கிய வைசிராய் பிரபு தன் ரேடியோ பிரசங்கத்தில் குறிப்பிட் டிருக்கிறார். சென்ற வாரம் வெளி வந்த இதழில் அதை வெளியிட் டிருக்கிறோம். இது ஒரு இயக்கம். ஆயுதம் இல்லாத படைகளைத் திரட்டுவதே இதன் நோக்கம். இந்த இயக்கத்தை நடத்துகிறவர்களும், இதன் கொள்கைகளை நிறைவேற்றுகிறவர்களும் உத்தியோகப் பற்று இல்லாதவர்களாக இருக்க வேண்டும் என்பது தான் இதன் கருத்து.

இந்த இயக்கம் கிராமங்களில் பரவ வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள தலைவர்களின் தலைமையில், அங்கு வேலை செய்யும் அனைவரையும் ஒன்று திரட்ட வேண்டும். இந்தக் கிராம ஸ்தாபனங்களை அடிப்படையாகக் கொண்டு மாகாணத் தலைவரை அமைக்கப் பட வேண்டும். இந்த மாகாணத் தலைவர் தனிப்பட்டவராகவோ, அல்லது ஒரு சிலர் கூடிய ஒரு போர்டாகவோ இருக்கலாம். ஊக்கமும் அறிவும் படைத்தவர்களும், பிறருக்கு உதவ வேண்டும் என்னும் நல் எண்ணம் கொண்டவர்களும் தான் அந்தத் தலைமைப் பதவிக்குத் தகுந்தவர்கள்.

மாகாண அமைப்பாளர் ஒருவர் மட்டுந் தான் உத்தியோகப் பற்றுடையவர். என்றாலும், இவர் மாகாணத் தலைவர் உத்தரவுப்படி தான் நடக்க வேண்டும். பணம், கூட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்வது, பிரசுரங்களைத் தயார் செய்து வெளியிடுவது முதலிய வேலைகளை மாகாணத் தலைவர் செய்ய வேண்டும். சென்னை மாகாணத்தில், ஒருவர் தவிர, மற்ற எல்லா ஜில்லா அமைப்பாளர்களும் உத்தியோகப் பற்றில்லாதவர்கள் தான்.

பிரசாரத்திற்கான எல்லா வகைப் பொருள்களையும் உதவும் பொருட்டு ஒரு வருஷத்திற்கு 30 லட்சம் செலவிடுவது என்று இந்தியா சர்க்கார் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

தேசீயப் போர்முனையில் அக்கரை யுள்ள ஒவ்வொருவரும் முழுமனதோடு இதில் ஈடு பட்டிருக்கிறார்கள் என்பதற்கு அறிகுறியாக, கீழ்க்கண்டபடி வாக்குறுதி கொடுக்க வேண்டும் :—

"இந்தியாவின் ஒரு குடி என்று கூறிக் கொள்ளுவதில் நான் பெருமை யடைகிறேன். ஆகையால் தோல்வி மனப்பான்மையை விரட்டி, பய முறுத்தும் பொய் வதந்திகளை ஓட்டி, இந்தியாவின் தேசீய கௌரவத்தையும் பாதுகாப்பையும் குலைப்பவற்றை எதிர்த்து வென்று, வெற்றி தரும் வழியில் ஒவ்வொரு நாளும் செல்லுவேன் என்று உறுதி கூறுகிறேன்."

---

# போர் முனையில் சகோதரத்துவம்.

## 'என் வாழ்நாளிலேயே காணாத நிலை.'

### தன் நண்பருக்கு லிபியா தளபதி எழுதும் கடிதம்.

சாம்ராஜ்யப் படைகளைக் குறித்து, லிபியாவில் உள்ள இந்தியப் படையின் தளபதி ஒருவர் தன் நண்பர் ஒருவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

இந்தப் படையில் பாதிப்பேர் இந்தியர்கள்; பாதிப் பேர் பிரிட்டிஷார்.

யுத்த களத்தில் இவ்வளவு சிறந்த முறையில் சகோதரத்துவம் அமைந் திருந்ததை என் வாழ் நாளிலேயே கண்டதே கிடையாது. இதற்குக் காரணம் ஒருவரை யொருவர் மதிப்பது தான். உலகத்திலுள்ள எல்லா பீரங்கிப் படையினரிலும் இவர்களே தலை சிறந்தவர்கள். இது ஜெர்மானியர்களுக்கும் தெரியும்.

பிரிட்டிஷ் காலாட் படைகளைக் குறித்து ஏதேனும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், இந்திய காலாட் படைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்; அது போலவே, இந்திய காலாட் படைகளைக் குறித்து ஏதேனும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், பிரிட்டிஷ் காலாட் படைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.



## மேலைப் பாலைவனத்தில் 'சிக்னல்' படை



தலைமைக் காரியாலயத்திற்கும் அதற்குட்பட்ட இராணுவ ஸ்தலங்களுக்கும் பேசுந் தந்தி அமைப்பது, இந்த சிக்னல் படையின் முக்கியமான வேலை. இந்தத் தந்திகளைப் போடுவதற்கு ஒரு தனி வண்டியை உபயோகிக்கின்றனர்.

---

# இத்தாலியர் செய்த கொடுமைகள்.

### பழிவாங்கும் அராபியர் மனப்போக்கு.

ஜெர்மன் நாசிகளுக்கு அராபியர்கள் பயப்படுகிறார்கள். அவர்களை வெறுக்கிறார்கள். ஆனால் இத்தாலிய பாஸிஸ்ட்களுக்குப் பயப்படுவதில்லை. அவர்களிடம் அருவருப்புக் கொள்ளுகிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய அக்கிரமங்களை அவர்கள் கண்கூடாகக் கண்டார்கள்.

ஜெனரல் க்ரேஸியானி ஆகாய விமானத்திலிருந்து அபிஸீனியர்களைச் சுட்டுப் பொசுக்கிக் கண்களைப் பிடுங்கினான். லிபியாவில், செனுசி ஷேக்குகளை ஆகாய விமானத்தில் ஏற்றிச் சென்று அநேக அடி உயரத்திலிருந்து அவர்களுடைய கிராமத்திலேயே விழத் தக்கபடி அவர்களைக் கீழே தள்ளி விட்டான்.

இதை விட அதிகம் தான் ஹிட்லர் செய்த கொடுமைகளும். இருந்தாலும் இவை வெளி வருவதில்லை. பத்திரிகைகளின் மூலமாகவும் ரேடியோ செய்திகளின் மூலமாகவுந் தான் சில சில விஷயங்கள் வெளி வருகின்றன. இவை பற்றி நேர் முகமாகத் தெரிந்து கொண்டவர்கள், சரண் புகுந்திருக்கும் கிரேக்கர்களும் யூகோஸ்லேவியர்களும் தான். அவர்கள் இக்கொடுமைகளைக் குறித்து கூறினாலும் கூட, "எங்களை நாசிகள் எதுவும் செய்ய வில்லை" என்று தான் அராபியர்கள் பதில் சொல்லுகிறார்கள்.

**முஸ்லீம்களின் பாதுகாவலன் நானே.**

க்ரேஸியானி செய்த கொடுமைகளைப் பரிகரிக்க வேண்டும் என்று சில வருஷங்களுக்கு முன் முஸோலினி முயன்றது உண்டு. இதில் சுமார் 50 வருஷங்களுக்கு முன் ஜெர்மன் கெய்சர் கையாண்ட முறையை இவரும் கையாண்டார். வேகமாய் பாய்ந்து செல்லக் கூடிய ஒரு குதிரை மேல் ஏறிக்கொண்டார். கையில் கத்தியை எடுத்து வீசிக் கொண்டு "உலகில் உள்ள எல்லா முஸ்லீம்களின் பாதுகாவலன் நானே" என்று பிரகடனம் செய்தார். என்றாலும், இந்த முயற்சி பலிக்க வில்லை. "எம்மைப் பாது காக்க ஒரு முஸ்லீமைத் தான் விரும்புவோம்," என்று முஸ்லீம்கள் பதில் அளித்து விட்டார்கள்.

அல்லாமலும், கடந்த யுத்தத்தில் போராடிய வீரரான சையிது அட்ரிஸ் அல் செனுஸி தலைமையில் நன்றாகத் தயார் செய்யப்பட்ட படைகள் பிரிட்டிஷ் கொடியின் கீழ், கட்டியும் முதலுமாக இத்தாலியர்களைப் பழிக்குப் பழி வாங்குகிறார்கள்.

# ஜெர்மன் படைகள் நஷ்ட ஜாபிதா

## இழந்த ஊர்களை ரஷ்யர்கள் மீட்டனர்

### கார்கோவ் போர் முனை 100 மைல் நீளம்

கார்கோவ் பிரதேசத்திலுள்ள போர் முனையில் ஜெர்மானிய விமானங்களி லிருந்து பாரச்சூட் மூல மாக 150 பேர்கள், 50 பேர்கள், 30 பேர்கள் வீதம் படைகளைக் கொண்டு வந்து இறக்குகிறார்கள். இந்த பாரச்சூட்டுகளில் அநேகம் தரைக்கு வந்து சேரு முன்பாகவே, ரஷ்ய விமான எதிர்ப்பு பீரங்கி களுக்கு இரையாகின்றன.

இந்தப் போர் முனையின் நீளம் 100 மைல்கள். தென் மேற்கே க்ராஸ்னோக்ரேட் வரை இந்தப் போர் முனை எட்டுகிறது. என்றாலும், இந்த நகரத்திற்கு அருகில், செஞ் சேனையே காணக் கிடைக்க வில்லை. இந்தப் படைகளின் தலைவர் மார்ஷல் டிமோ ஷேங்கோ, ஜெர்மானியர் வயப்பட்டிருந்த அநேக ஊர்களை இந்தப் படைகள் மீட்டன. அன்றியும் ஜெர்மன் படைகள் எதிர்த்துத் தாக்க வொட்டாத படியும் தடுத்துக் கொண்டு வருகின்றன. இதில் ஒரு பகுதியில் மட்டும் ஜெர்மானியர்களுக்குச் சொந்த மான 59 டாங்கிகளை ரஷ்யர்கள் கைப்பற்றினார் கள். மற்றொரு பகுதிக்கு ஜெர்மன் சேனைகள் சென்றன. அங்கேயும் அதே கதி தான் வாய்த்தது.

சோவியத் செய்தி நிலயத்திலிருந்த 1942-ம் ஞு மேமீ 18-ம் தேதி வெளி வந்த அறிக்கையில் குறிப் பிட்டிருப்பதாவது :—

> சென்ற 1942-ம் ஞு மேமீ 12-ம் தேதி நம் படைகள் கார்கோவ் போர் முனைக்குச் சென்று தாக்கின. ஜெர்மன் சேனைகள் அமைத் திருந்த பாது காப்புக்களைத் தகர்த் தெறிந் தன. எதிரிகள் ஏராளமான டாங்கிப் படை களைக் கொண்டு மீண்டும் நம் படைகளைத் தாக்கினர். என்றாலும் அவற்றை, நம் படை கள் விரட்டியடித்து விட்டன. மே மாதம் 12-ம் தேதி முதல், 16-ம் தேதிக்குள், அதாவது 5 நாட்களுக் குள்ளாக. 12 மைல் கள் முதல் 37 மைல்கள் வரை நம் படைகள் முன்னேறிப் போய் இருக்கிறார்கள். 300 ஊர் களுக்கு மேலாகவே ஜெர்மானியர்களிட மிரு ந்து மீட்டிருக்கின்றனர்.
>
> இந்தப் போராட்டங்களில், எதிரிகளின் வச மிருந்து நாம் கைப் பற்றிக் கொண்டவை பின் வருமாறு :—365 பீரங்கிகள், 25 டாங்கி கள், 118 குழி பீரங்கிகள், 379 மிஷின் துப்பாக்கிகள், 46,413 ஷெல் குண்டுகள், 23,284 ஷெல் குண்டுகள் நிரம்பிய 39 பெட்டிகள், 10 லட்சம் தோட்டாக்கள், 13,000 எறி வெடி குண்டுகள்; 90 லாரி கள், 29 கம்பி யில்லாத் தந்தி இயந்திரங் கள், வெடி மருந்து, உணவு, இதர சாமானங்கள் எல்லாம் சேர்ந்து 39 குவியல் கள், 1,200 யுத்தக் கைதிகள் ஆகியன. அன்றியும், இப் போராட்டத்தில் ஜெர்மன் உத்தியோகஸ்தர்களும் போர் வீரர்களும் 12,000 பேர் இறந்து போனார்கள்.
>
> அல்லாமலும் எதிரிகளின் கீழ்க் கண்ட தளவா டங்களையும் நம் படைகள் நாசமாக்கின :—
>
> 400 டாங்கிகள், 210 பீரங்கிகள், 33 குழி பீரங்கி கள், 217 மிஷின் பீரங்கிகள், 700 லாரிகள், 12 வகைச் சாமானங்கள் கொண்ட 100 வண் டிகள, 147 விமானங்கள்.

மற்றொரு பகுதியில், பலமாக அரண் செய்யப் பட்ட ஜெர்மன் ஸ்தானம் ஒன்றை ரஷ்ய சேனைகள் கைப்பற்றி, அங்கிருந்து 80 பெரிய பீரங்கிகளையும் வசப்படுத்திக் கொண்டன.

கலினின் பகுதியின் ஜெர்மானியர் ரஷ்யச் சேனை களைத் தாக்கினார்கள். அங்கே நடை பெற்ற போரில் அவர்கள் விரட்டி யடிக்கப் பட்டனர். போர்க் களத்தி லேயே 230 ஜெர்மானியர்கள் கொல்லப் பட்டனர்.

ஸ்மோலென்ஸ்க் போர் முனையில் ஜெர்மன் சேனைகளை, பதுங்கிப் பாயும் ரஷ்யப் படைகள், பல முறை தாக்கி, சென்ற 3 மாதங்களுக்குள் 2,000 ஜெர்மானியர்களைக் கொன்றிருக்கின்றன.

கார்கோவ் போர் முனையில், பல மாதங்களாக, ஜெர்மானியர் தம் ஸ்தானங்களை வெகுவாக பலப்படுத் திக் கொண்டிருந் திருக்கிறார்கள். குழி பீரங்கிகள், நெருப்புக் குண்டுகள், மிஷின் பீரங்கிகளை வைத் திருக்கும் இடங்கள், பாதுகாப்புச் சுரங்க வெடிகள், டாங்கிகள் முதலியவற்றைக் கொண்டு வெகுவாகப் பலப் படுத்தி யிருந்தனர். இத்தனையையும் ஐந்தே நாட்களில் ரஷ்ய சேனைகள் நிர்மூலமாக்கி முன்னே றிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்களும், ஜப் பானியர்களும் சோதிடம் பார்ப்பது போல, ரஷ்யர் கள் பார்ப்பதில்லை.

> இப்படிப் பட்ட நிலைமை ஏற்படு மென்று ஜெர்மானியர்கள் எதிர் பார்த்தவர்களே அல்ல. இந்த அளவிற்கு அவர்கள் ஆயத்தம் இல்லாமல் தான் இருந்தார் கள் என்று சொல்ல வேண்டும். எனவே போர் முனைக்கு ஏராளமான சேனைகளைக் கொண்டு வந்து இப்போது சேர்க்கிறார்கள்.

இதன் பயனாக ரஷ்யச் சேனைகள் முன் போல அவ் வளவு வேகமாக முன்னேறக் கூடவில்லை. ஜெர்மன் தளபதி தன் படைகளுக்கு விடுத்திருக்கும் அறிக்கை வெற்றி கிடைக்கும் என்னும் உறுதி யில்லாதபடி அமைந்திருக்கிறது. என்றாலும், ரஷ்யர்களுக்கு ஏராளமான நஷ்டம் என்று கூறும் அந்த அறிக்கை யில், தமக்கு நேர்ந்த நஷ்டம் என்ன என்று, கூறவில்லை.

#### மூன்று மலைகள்

லேக் ஹில், கோல்டன் ஹில், நேம்லெஸ் ஹில் ஆகிய மூன்று மலைகள் கார் கோவ் பிரதேசத்தில் இருக்கின் றன. இவை முக்கியமான இடங் களில் அமைந்திருக்கின்றன. இம் மலைகளை அரண் செய்து கொண்டால், அவற்றை எதிரிகள் தாண்டிப் போவது முடியாத காரியம் என்று தான் சொல்ல வேண்டும். ஜெர்மன் படைகள் பொதுவாக பள்ளங்களில் இருந்து போராடுவது வழக்கம். அந்தப் பள்ளங் களில், ஒரே பாய்ச்சலாகப் பாய, இம்மலைகள் ஏற்ற வசதியாக அமைந்திருக்கின்றன. அப்படி இருந்தும், இந்த மலைகளைக் காக்கும் பொருட்டு 4 பெரிய படைகளை ஜெர்மானியர்கள் வெகு விரைவாகக் கொண்டு வந்து சேர்த்தார்கள். இந்த மூன்று மலைகளையும் ஒரே மூச்சில் ரஷ்ய சேனைகள் கைப்பற்றி விட்டன. அதை மீட்க ஜெர்மன் சேனைகள் எத்தனையோ தரம் முயன்று எதிர்த்தன. என்றாலும் பலனில்லை.

தன் வசம் இருக்கும் படைகளைக் கொண்டு ரஷ்யப் படைகளைச் சிதற அடித்து விடலாம் என்று ஜெர்மன் தளபதி மனப்பால் குடித்தார். ஆனால், ரஷ்யச் சேனைகளுக்கு தம் தளவாடங்களில், மிகுந்த நம் பிக்கை உண்டு.

சென்ற சில நாட்களாக ப்ரயான்ஸ்க் போர் முனை யில், பதுங்கிப் பாயும் ரஷ்யப் படை வீரர்கள் ஜெர் மானியர்களைப் பின்புறமாகத் தாக்கி 830 ஜெர்மானி யர்களை கொன்று விட்டனர்.

மேலப் போர் முனையின் ஒரு பகுதியில் ஜெர்மானி யர்களுக்கு பெருத்த சேதம் உண்டாகிப் பின் வாங்குகிறார்கள். இங்கே நடந்த ஒரு போரில் மட்டும் 500 ஜெர்மானியர்கள் கொல்லப் பட்டனர்.



## மத்திய கிழக்குப் போர் முனையில் தளபதி



மத்திய கிழக்குப் போர் முனையின் பிரிட்டிஷ் தளபதியான சர் க்ளாட் ஆச்சின்லக் சிரியாவில் சமீபத்தில் படைகளைப் பார்வை யிட்டார். இவருக்குப் பின்புரம் இருக் கிறவர் ஜெனரல் சர் எச். எம். வில்சன்.

---

# இந்தியாவில் மருந்து உற்பத்திப் பெருக்கம்

## எல்லாப் போர் முனைகளுக்கும் இந்தியா தான் சப்ளை செய்கிறது

யுத்தத்திற்குத் தேவையான மருந்து முதலிய சாமான்களை, யுத்தத்திற்கு முன்பு 100-க்கு 25 பங்கு மட்டுந் தான் இந்தியாவில் வாங்கினார்கள்; இப் போது 100-க்கு 65 பங்கு இந்தியாவிலேயே வாங்கு கிறார்கள்.

உள்ளூரில் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு அரசாங்க வைத்திய ஸ்டோர் தொழிற் சாலையில் இப்போது செய்யப்படும் 350 வகை மருந்துகளும் முன்பு வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய் யப்பட்டு வந்தன. இப்படி இறக்குமதியான மருந்து களுக்குச் சமதையாக, மருந்துகள் செய்யும் கைத் தொழிலும் ஓங்கி இருக்கின்றது. இதன் பயனாக இப்போது ஏராளமாக மருந்து வகைகள் கிடைக்கின் றன. உதாரணமாக 1940-41-ம் வருஷத்தில் மெடி கல் ஸ்டோர்ஸ் இலாக்கா இந்தியாவிலேயே வாங்கி யுள்ள மருந்துகளின் மொத்த விலை 1 கோடி 4 லட்ச ரூபாய். யுத்தத்திற்கு முன்பு வாங்கப்பட்ட மருந்துகளின் விலையை விட $6\frac{1}{2}$ பங்கிற்கு அதிகமான தொகைக்கே வாங்கப் படுகிறது.

கீழ் நாடுகளிலேயே சத்திர சிகிச்சைக்குத் தேவை யான கருவிகளைச் செய்வதில், இந்தியா தான் சிறந்து விளங்குகிறது. இந்தியாவில் உள்ள ஆஸ்பத்திரிக ளுக்குத் தேவையான சாமான்களையும் சத்திர சிகிச் சைச் சாலைகளுக்குத் தேவையான சாமானங்களையும் இந்தியாவிலேயே செய்கிறோம். மிகவும் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் கையாளும் மிக மிக நுட்பமான கருவிகள் மட்டுந் தான் வெளி நாடுகளில் இருந்து தருவிக்க வேண்டி யிருக்கிறது. இந்த நடப்பு வரு ஷத்தில் மட்டும், பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களின் உபயோகத்திற் கென்று 50 லட்சம் கருவிகள் இந்தி யாவில் செய்து முடிக்கப் பட்டிருக்கும்.

காயங்களுக்குக் கட்டும் டிரெஸ்ஸிங்குகள் ஏராள மாகத் தயார் செய்யப் படுகின்றன. சமீபத்தில் 1 கோடி 20 லட்சம் கஜம் துணி பான்டேஜ் சுருட்டுவ தற்காக மட்டும் வாங்கி இருக்கிறார்கள். மாதந் தோறும் 120,000 பவுண்ட் பஞ்சும் 16,000 பவுண்டு லின்ட் துணியும் இந்தியாவில் செய்யப் படுகின்றன. ஒரு மெடிகல் ஸ்டோர் டிப்போ தொழிற் சாலையில் மட்டும் 10 லட்சம் ஷெல் டிரெஸ்ஸிங்கு கள் ஒரு மாதத்திற்குள் செய்து முடிக்கிறார்கள்.

#### ஏராளமான யுத்தத் தேவைகள்

இந்தத் துறைகள் எல்லாம் வெகுவாய் பெருகிக் கொண்டு போகின்றன. என்றா லும், தேவைகளைப் பூர்த்தி செய் யக் கூடிய அளவிற்குப் பெருக வில்லை. பல யுத்த முனைகளுக்கு நடு நாயகமாக இப்போது இந் தியா இருக்கிறது. இந்த எல்லா முனைகளிலும் காயப்படுகிறவர்களுக்குச் சிகிச்சை செய்ய வேண்டிய பொறுப்பு இந்தியாவிற்கு ஏற்பட்டு விட்டது மத்திய கிழக்குப் போர் முனை, ஈரான், ஈராக், பர்மா ஆகிய போர் முனைகளில் உள்ள சேனைகளுக்கு மருந்து ஸ்டோர்களும் மற்ற வசதிகளும் பெரும்பாலும் இந்தியாவில் இருந்து தான் போகின்றன. கொய்னா முதலிய மருந்துச் சாமானங்கள், தமக்கு ஏராள மாகத் தேவை என்று சீனா கூட இந்தியாவைக் கேட்டிருக்கிறது. செஞ்சிலுவைச் சங்கத்தார் மூலம் 76,000 சத்திர சிகிச்சைக் கருவிகள் ரஷ்யாவிற்கு இந்தியா அனுப்பி யிருக்கிறது.

இவை மட்டும் அன்றி, பிரிட்டிஷ் இந்தியாவில் மட்டும் 8,540 இராணுவ வைத்திய சாலைகள் இருக்கின்றன. இவற்றின் சேவைகளும் மிக வும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய

விஷயம். இந்த வைத்திய சாலைகளில் 29 கோடி 70 லட்சம் ஜனங்களுக்கு மட்டு மன்றி, வெளி நாடுகளில் இருந்து காயப்பட்டு வருகிறவர்களுக்கும், தாய் நாட்டிற்குத் திரும்பி வருகிறவர்களுக்கும், யுத்தக் கைதிகளுக்கும் பயன் பட வேண்டி யிருக்கிறது.

**முக்கியமான அவசியம்.**

இவை எல்லாவற்றையும் விட, மிகவும் முக்கியமான அவசியம் ஒன்று இருக்கிறது. இந்த நாட்டையே வெகுவாக விமானங்களைக் கொண்டு எதிரிகள் தாக்குவார்களானால், இந்தப் பொருள்கள் எல்லாம் இன்னும் ஏராளமாகத் தேவைப் படும்.

கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களைக் கொண்டு, தன்னால் இயன்ற வரை, இந்தியா, பொருள்களைச் செய்து கொண்டிருக்கிறது. இருந்தாலும், சில பெருங் கஷ்டங்களும் இருக்கின்றன. முதலாவதாக, தகுந்த இயந்திர வசதிகள் இல்லை. இரண்டாவதாக உள்ளூரி லிருந்து கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களை மட்டும் கொண்டு, மருந்துகளும், மற்ற கருவிகளும் செய்து முடிப்பதற் கில்லை. ஏனென்றால் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்த பொருள்களையும் சேர்த்தால் தான், அந்த மருந்துகள் செய்ய முடியும். இருந்த போதிலும், இப்போது அமெரிக்க சர்க்காரின் உதவி அதிகரித்துக் கொண்டிருப்பதனால், இந்தத் தடைகள் எல்லாம் நீங்கி விடும் என்று நாம் எதிர் நோக்கலாம்.

# உ ல க ப் போ க் கு.

**கூட்டு முன்னேற்றம்.**

லண்டனிலுள்ள இந்திய ஹை கமிஷனர் சர் அஜீசுல் ஹக் இந்த மாத முதல் வாரத்தில் கூறி யிருப்பதாவது :—

"ஜப்பானியன் தேவைகளுக்கு ஏற்றபடி மற்ற எல்லா நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளையும் மாற்றி அடிமைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தான் 'கூட்டு முன்னேற்றம்' என்பதன் பொருள் என்று இந்தியாவிற்குத் தெரியும்."

ஜப்பானியர் வயப்பட்ட நாடுகளுள், குறிப்பாக, ஏராளமாக நெல் விளையும நாடான பர்மாவிலும் கூட, இதே கொள்கைப் படி தான் ஜப்பானியர் நடந்து கொண்டார்கள். ரங்கூனுக்கு ஜப்பானியர் வரும் முன்பாகவே, தாங்கள் யாரை மீட்க வருவதாகக் கூறுகிருர்களோ, அவர்களிட மிருந்து, எவ்வளவு உணவுப் பொருள்களைச் சூறை யாடிக்கொண்டு போகக் கூடும் என்பது பற்றி பெருமை யடித்துக் கொண்டிருந்தார்கள். "மீட்சிப் படலத்தை" வெற்றிகரமாக ஜப்பானியர் முடித்தது பற்றி சென்ற எப்ரல் மாத ஆரம்பத்தில் ஜெர்மன் ரேடியோ பாராட்டிப் பேசும் போது குறிப்பிட்டதாவது :—

"பர்மாவை எந்தெந்த முறைகளில் பொருளாதாரத்துறையில் சூறையாடுவது என்பது பற்றி ஒரு தற்காலிகத் திட்டத்தை ஏற்கெனவே ஜப்பான் வகுத்தாகி விட்டது."

ஜெர்மானியர்களின் பேராசைக்கு இலக்கானவர்கள் இரானியர்கள். சென்ற மார்ச்சு மாதம் 21-ம் தேதி இத்தாலி ரேடியோ இவர்களுக்கு ஒரு செய்தி கூறியது. அதில்,

"ஐராவதிப் பிரதேசத்தி லிருந்த ஏராளமான கோதுமையை, ஜப்பானியர்கள் பர்மாவைச் சூறையாடும் போது, கொண்டு போய் விட்டார்கள்."

ஜப்பானியர் ஆட்டுவிக்கிறபடி ஆடுகிற ஒரு ரேடியோ நிலயம் சைகோன் நகரத்தில் இருக்கிறது. அதற்கு முன் தினம் இங்கிருந்து வெளிவந்த செய்தியாவது :—

"தென் கடல்களி லிருந்து சர்க்கரை, அரிசி முதலிய உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு இரண்டு கப்பல்கள் ஜப்பான் போய்ச் சேர்ந்தது பற்றி ஜப்பானிய பொது மக்கள் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள்."

இவைதான் கூட்டு முன்னேற்றத்தின் இலட்சணம் போலும்!

**நண்பனும் எதிரியும் ஒன்றுதான்.**

தங்களுடைய நன்மைகள் பாதிக்கப் படுவதாக இருந்தால், நண்பனுகை இருந்தாலும், எதிரியாக இருந்தாலும் ஜெர்மானியர்களுக்கு ஒன்றுதான். இத்தாலியும், ஜெர்மனியும் நட்புள்ள நாடுகள் என்றாலும், இத்தாலியில் விளையும் நெல்லில் ஐந்தில் ஒரு பங்கு ஜெர்மனிக்குக் கொடுத்து விடவேண்டும். இத்தாலியப் படைகளுக்கு என்று ஒதுக்கப் பட்டிருக்கும் அளவைப்போல் இது இரண்டு பங்கு. வட இத்தாலியில் அரிசியே முக்கிய உணவாகச் சாப்பிடுகிறார்கள். இங்கே 1 கோடி 90 லட்சம் பேர்கள் வசிக்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான அளவில் முக்கால் பங்கு ஜெர்மனிக்குப் போய்ச் சேருகிறது.

சோவியத் ரஷ்யாவில் ஜெர்மானியர் ஏராளமாகச் சூறை யாடலாம். உதாரணமாக, துலு மாகாணத்திலுள்ள 25 ஜில்லாக்களில் மட்டும் 140,008 பசுக்கள், 28,459 செம்மறியாடுகள், 213,678 கோழிக் குஞ்சுகள், பெரு வாத்துக்கள், குள்ள வாத்துக்கள் முதலியன தமக்குத் தேவை என்று ஒரு கட்டளை பிறப்பித்தனர். இவையன்றி 25,000 தேன் கூடுகளையும் நாசம் செய்து விட்டனர்.

பசுத்தோல் போர்த்திய இந்தப் புலிகளின் கொடுமைகளை இனியும் மறைத்து வைக்க அவர்களால் முடியாது.

**ஜப்பான் கப்பல் படை சிதறியது.**

பவளக் கடலில் நடை பெற்ற கடல் போரில், ஜப்பானியர்களுக்குச் சொந்தமான பெரிய கப்பற் படை ஈடு பட்டிருந்தும் கூட, சிதறடிக்கப்பட்டன. இந்தக் கப்பற் படையைச் சேர்ந்த 2 க்ரூய்ஸர்கள், விமானங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் 2, நாசகாரிகள் 2, பீரங்கிப் படகுகள் 4, ஒரு சிறிய க்ரூய்ஸர், போக்கு வரவுக் கப்பல்கள் 3 ஆகியவை மூழ்கடிக்கப்பட்டன. 4.000 முதல் 5,000 பேர்கள் வரை மாண்டார்கள் என்று தெரிகிறது. ஜப்பானியர்களின் மூலபலம் அவர்களுக்குச் சொந்தமான 9 சண்டைக் கப்பல்களில் தான் அடங்கி யிருக்கிறது. கடல் போர்களில் எல்லாம் ஜப்பானியர் க்ரூய்ஸர்களையே உபயோகித்து, ஏறக்குறைய ஒரு டஜன் க்ரூய்ஸர்களை இழந்தனர்; இன்னும் 23 க்ரூய்ஸர்கள் மட்டுந் தான் அவர்களிடம் இருக்க வேண்டும். விமானங்கள் ஏற்றிச் செல்லும் கப்பல்களில் அவர்களிடம் 9 இருந்தன வென்றும், இப்போது 6 தான் இருக்கின்றன என்றும் தெரிகிறது.

பவளக் கடலில் நடை பெற்றது போல, பல இடங்களில் போர் நடக்குமானால், இந்த நஷ்டங்களைத் தாங்க ஜப்பானால் முடியாது. கடலில் வெகு தூரம் போய்ப் போராட வேண்டிய நிலமையில் அவர்கள் இருக்கிறார்கள். அன்றியும், பசிபிக் தாக்குதலுக்காகத் தம் படைகளை இப்போது திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்போதே நஷ்டத்திற்கு இடங் கொடுத்து விட்டால், மேற்கொண்டு சண்டை செய்ய இயலாமல் போய் விடும்.

நிற்க, ரஷ்யாவிற்கு அமெரிக்காவி லிருந்து, வட துருவக் கடல் வழியாகத் தளவாடக் கப்பல்கள் போய்க் கொண்டிருக்கின்றன. இவற்றை மூழ்கடிக்க ஜெர்மன் படைகள் எவ்வளவோ முயன்றும் 10 சதவிகிதங் கூட மூழ்கடிக்க முடியவில்லை. 1942-ம் ௵ மார்ச்சு ௴ 29௳ முதல் 1942-ம் ௵ எப்ரல் ௴ 30௳



வரை இந்தத் தளவாடக் கப்பல்கள் ஒன்றுவது மூழ்கடிக்கப் படவில்லை. இப்போது ஏழு கடல்களிலும் முக்கியமான இடங்களில் எல்லாம் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் இருக்கின்றன.

சென்ற சில மாதங்களாக ஜப்பானியர்கள் வெகு சீக்கிரத்தில் போராடி நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு வந்ததனால், நேச தேசப் படைகளை ஒரே இடத்தில் திரட்டி வைக்கக் கூடவில்லை. இதன் பயனாக 3 அல்லது 4 கடற் போர் முனைகள் ஏற்பட்டிருக்கின்றன. **1. மத்தியதரைக் கடல் போர் முனை.** இங்கு இருக்க வேண்டிய அளவிற்கு படைகள் இப்போது இங்கில்லை. இந்தப் படையை வெகுவாக அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. இத்தாலியர் போர் தொடுத்து முதல் 23 மாதங்களில் மட்டும் 1,273,000 டன் கப்பல்கள் எதிரிகளுக்குச் சொந்தமானவற்றை நேச தேசப் படைகள் நாசஞ் செய்து விட்டன. இதனால் தான், 1941-ம் ௵ மே மாதமே சூயஸ் கால்வாயைக் கைப்பற்றிக் கொள்ளுவோம் என்று எதிரிகள் கூறிய சபதம் நிறைவேற வில்லை. **2. அத்லாண்டிக் போர் முனை.** ரஷ்யாவிற்குத் தளவாடக் கப்பல்கள் இதன் வழியாகப் போகின்றன. எனவே இவற்றை பாதுகாக்கவேண்டும். **3. பசிபிக் சமுத்திர இந்திய சமுத்திரப் போர் முனை.** முதல் இரண்டு போர் முனைகளைப் போலவே, இதுவும் மிகவும் முக்கியமான கட்டம்.

## தேசியப் போர் முனையின் தத்துவங்கள்.

### "அச்சு நாடுகளின் ஆசையில் மண்."

### எக்காளம் ஒலிக்கிறது.

இந்தப் பத்திரிகை அச்சு வாகனத்தை விட்டு வெளி யேறுகிற இப்போதில், சென்னை மாகாணத்திற்கே ஒரு முக்கியமான சம்பவம் நடை பெறுகிறது.

சுமார் 10 வாரங்களுக்கு முன், மேன்மை தங்கிய, வைசிராய் பிரபு ரேடியோ மூலம் ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது இந்தியப் பொது மக்கள் உணரத் தக்கபடி தேசியப் போர் முனையின் தத்துவத்தை விளக்கிக் கூறினார், இதில், நாம் அனை வரும் சகோதரர்கள் என்னும் புதிய உணர்ச்சி துலங்கியது. மன உறுதியோடு எக்காரியத்தையும் தெளிவுடன் செய்ய வேண்டும் என்று கூறினார். இன்று முதல் நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோமோ அதை ஒட்டித் தான் இந்தியாவின் தற்கால சுயமரியாதையும், எதிர்கால சமாதான உலகில் இந்தியாவின் நிலைமையும் அமையும் என்றும் வற்புறுத்தினார். இந்த உபதேசத்தை அடிப் படையாகக் கொண்டு ஸ்தாபனங்களை அமைத்து வேலை செய்ய எல்லா மாகாணங்களும் முன் வந்திருக்கின்றன.

இந்தக் கருத்துக்களை மேன்மை தங்கிய சென்னை கவர்னரும் வெகுவாக ஆதரிக்கிறார். இந்தத் தேசியப் போர் முனையில் அவருக்கு மிகுந்த ஊக்கமும் நம்பிக்கையும் இருக்கின்றன. ஆகையினால் தான், தானே அதன் தலைமை தாங்கி, நேர்முகமாக, இருந்து நடத்துகிறார். இதன் ஆரம்ப விழாவின் போது, பொது மக்கள் மனதில் தைக்கத் தக்க முறையில் ஒரு அரிய பிரசங்கம் செய்வார்.

நல்லெண்ணம் உள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தேசியப் போர் முனையில் சேர்ந்து வேலை செய்ய முன் வருவார்களானால், செய்ய வேண்டிய வேலைகள் அதிகமா யிருக்கின்றன. இந்த இயக்கம் ஆரம்பித்ததும் புதிய உணர்ச்சி உண்டாவதை சென்னை வாசிகள் உணர்வார்கள். அப்போது அவர்கள் மனம் உறுதிப்படும். அவர்களுடைய ஊக்கம் ஒரு முகப்படும். அப்போது அச்சு நாடுகளின் ஆசையில் மண் போட, நம்மால் இலகுவில் முடியும்.

தேசியப் போர் முனைச் சங்கு, கன்னியா குமரி முதல் கீழ் கோடிக் கடற்கரை வரை ஒவ்வொரு ஆண், பெண், குழந்தை காதிலும் ஒலிக்கப் போகிறது. ஒவ்வொருவருடைய ஜாதி, மதம் அரசியல் கொள்கைகள் ஆகியவை எப்படிப் பட்டவையாய் இருந்தாலும், அனைவர் காதுகளிலும் இந்த எக்காள நாதம் ஒலிக்கத் தான் போகிறது. இந்த நாதத்தின் இசை மிகத் தெளிவானது. ஆளுக்குத் தகுந்தாற் போல் இந்த நாதம், மாறி ஒலிக்காது. குறை கூறுவார்களே, எதிர்த்துப் பேசுவார்களே என்று இந்த நாதம் அஞ்சப் போவது மில்லை. தேச பக்தியும், வீரமும், தன் நம்பிக்கையும் மன உறுதியும் கொண்டவர்கள் மனதில் ஒரு விதக் கிளர்ச்சியை உண்டாக்கி விடும் ஒரு வேண்டுகோள் தான், இந்த நாதம்.

சோம்பேறித் தனமான தோல்வி மனப் பான்மையுடைய விரோதக் கொள்கைக் காரர்கள் காதுகளில் இந்த நாதம் ஒலிக்காது. இதற்கு முன் நாம் இது விஷயத்தில் விரோதமாக நடந்து கொண்டிருந்தாலும், இப்போது இந்த நாதத்தி லிருந்து ஒரு பொரி நெருப்புக் கிளம்பி விட்டது. கவர்னர் முதல் குடியானவர் வரை எல்லோரும் இந்தப் போக்கை ஆதரிக்கிறார்கள். இதன் பயனாகத் தோன்றும் ஸ்தாபனம் உத்தியோகப் பற்று இல்லாதவர்களைக் கொண்டது. பெரிய மனிதர்கள், தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள், சம்பளக் காரர்கள், சம்பள மில்லாது உழைக்கிறவர்கள் ஆகிய எல்லா வகையினரையும் எல்லாச் சாதியினரையும் கொண்டது, இந்த ஸ்தாபனம்.

இந்தத் திட்டத்தைக் கண்டு பிடித்து வகுத்தவர்கள் நாம் தான். ஆகவே, இந்த மாகாணத்தில் உள்ள பொது மக்கள் அனைவரும் முன் வந்து ஊக்கத்தோடு உழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தன் வேண்டு கோள் பலிக்கும் என்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் கருதுவது போலவே நமது வேண்டு கோளும் பலிக்கும் என்றும் நம்புகிறோம்.

# வசந்தகாலம் வந்தாச்சா ?

இலை உதிர்ந்து, தாயற்ற பிள்ளைகளைப் போல் நிற்கும் மரங்களில் எல்லாம் இளந் துளிர்கள் கிளம்பின. பல செடிகளில், அழகான புஷ்பங்கள் மலர்ந்தன. வசந்தனின் வருகைக்காக பச்சைப் பசேலென்று எங்கும் பச்சைப் பாய் விரித்தது போல், புல் முளைத் தெழுந்தது. பக்ஷிகள் பரமானந்தத்துடன் அங்குமிங்கும் பறந்தோடின. எங்கு பார்த்தாலும் செழிப்பான தோற்றம் தான். இயற்கையன்னை, நம்மனைவருக்கும் இன்பமூட்ட நினைத்தவள் போல், எல்லோர்மீதிலும் நறுமணம் கலந்த காற்றை வீசச் செய்தாள். காதலர்கள் உள்ளங்களில் ஏதேதோ இன்ப மயமான எண்ணங்கள் உதித்தன. வசந்தன் வந்தான்; வசந்த காலம் வந்தது என்ற சந்தோஷம் எல்லோருக்கும் ஏற்பட்டது.

இப்படியாகத் தானே, தத்தம் கவிதா சக்திக்கும், எழுதும் சக்திக்கும், வாசிப்பவர்க்கும் தக்கபடி முறையே கவிகளும், எழுத்தாளர்களும் வசந்த காலத்தைப் பற்றி வர்ணிப்பார்கள். வசந்த காலம் வருகிறது என்றாலே ஒரு சந்தோஷம் ஏற்படுவதுண்டு என்ற நம்பிக்கையின் பேரில் தான். இவர்கள் எல்லாம் இப்படி எழுதி வந்திருக்கிறார்கள். ஆனால், இவர்களுக் கெல்லாம் 1942-ம்வருஷத்தில் வசந்த காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதைப் பற்றி முன் கூட்டி ஒன்றும் தெரிந்திரா தல்லவா? அது தெரிந்திருந்தால், அவர்கள் தங்கள் எழுதுகோலைக் கொஞ்சம் அடக்கியே எழுத விட்டிருப்பார்கள்! அது தவிர, மேற்கண்ட கவிகள், கதாசிரியர்கள் ஆகியோரின் வர்ணனைப் படி, இயற்கை யன்னையின் தோற்றத்தில் அவர்கள் விவரிக்கும் மாறுதல்கள் ஏற்பட்டதும், சரி! வசந்த காலம் வந்து விட்டது! என்று எல்லோரும் தெரிந்து கொள்வதற்குச் சௌகரியமாக இருந்தது. ஆனால், இந்த 1942-ம்வருஷத்திலே ஐரோப்பாவிலே எப்படி யிருக்கிறது தெரியுமா விஷயம் ?

இயற்கை யன்னையின் தோற்றத்தில் ஏற்படும் மாறுதல்களையும், பனி உருகி தரை கெட்டியாவதையும், பக்ஷிகள் பாடுவதையும், இலைகள் துளிர்ப்பதையும், பூக்கள் மலர்ந்து மணத்தை வீசச் செய்வதையும் பொருத்து இல்லை வசந்த காலத்தின் வரவு! வசந்த காலம் வந்து விட்டது என்று இந்த மாறுதல்களால் மட்டும் அங்குள்ளவர்கள் நம்பத் தயாராக இல்லை. அங்குள்ளவர்கள் என்ன, உலகிலே உள்ள சகலமான பேர்களும் தான் நம்பத் தயாராக இல்லை.

'வசந்த காலம் வந்ததும், நான் ஏக தடபுடலாக என் ஸ்வ ரூபத்தைக் காட்டப் போகிறேன். அப்பொழுது ருஷ்யாவே கிடுகிடாய்க்கப் போகிறது' என்று ஹிட்லர் தமுக்கடித் திருக்கிறார். அவ்வாறு தமுக்கடித்ததோடு இல்லாமல், ஏதேதோ பிரமாதமான ஏற்பாடுகளும் செய்து கொண்டிருப்பதாக செய்திகள் 'ஒழுகி' வந்து எல்லோர் செவிகளிலும் விழுந்து கொண்டிருந்தன. ஆகவே, ஹிட்லர் எப்படா, எங்கேடா பெரிய போரைத் துவக்கப் போகிறார் என்று தான் எல்லோரும் ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவர் போர் துவங்கிவிட்டால், வசந்த காலம் வந்து விட்டது என்று அர்த்தம் என்று கூட எண்ண வேண்டி வந்தது. அதனால் தான, மேயீ முடிந்து, ஜூன் பிறக்கப் பார்க்கிற இந்த சமயத்தில் கூட, வசந்தகாலம் பிறந்தாச்சா இல்லையா என்ற சந்தேகமான கேள்வியைக் கேட்கவேண்டி வந்தது ? எல்லாரும் பிரமாதமாக எதிர்பார்த்திருந்தபடி, ருஷ்யாவில் ஏதும் நடந்ததாகவே தெரியவில்லை.

ஏதோ மே மாதம் எட்டாந் தேதியிலே, க்ரைமியாவில் ஒரு சண்டை நடந்ததே, அதைத் தான் வசந்த காலத் தாக்குதலாக வைத்துக் கொள்ளுங்களேன் என்று சொல்வது போல், அங்கிருந்து செய்தி யனுப்புகிறவர்கள் சாவதானமாக ஒரு வாரம் கழித்து ஒரு செய்தியை அனுப்பினார்கள். இத்தனை காலமாக அம்மாதிரி சண்டை அங்கே நடந்திராம லிருந்திருந்தால், இந்தச் சண்டையைப் புதுத் தாக்குதல் என்று சொல்லலாம். அங்கு தான் நாஜிகளைத் தூங்குவதற்கும், நிற்பதற்கும் கூட அவகாசம் கொடாது, ருஷ்யர்கள் அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கிறார்களே! ஒருவேளை, தரை கொஞ்சம் கெட்டியானதும், தவித்துக் கொண்டிருக்கும் தங்கள் படைக்கு ஜெர்மானியர் மேற்கொண்டு சகாய மளித்திருக்கலாம். கொஞ்சம் பெரிய சண்டை நடந்திருக்லாம். குண்டு சப்தம் கொஞ்சம் பலமாக இருந்திருக்கலாம். ஜெர்மானியர் தங்களுடைய அதிகப்படியான பலத்தால் கெர்ச் நகரைப் பிடித்துக் கொண்டிருக்கலாம். முன்பு கூடத் தான் ஒரு தடவை இந்த நகரை வெகு சிரமப்பட்டுப் பிடித்தார்கள். அதை ருஷ்யர்கள் சமயம் பார்த்துத் திரும்பப் பிடித்தாகள். ருஷ்யர்களின் கையும் சளைத்த கையாக இல்லை. இப்பொழுது திரும்பவும் கெர்ச், நாஜிகள் வசமானால் தான் என்ன ? தக்க தருணத்தில் தட்டிப் பறித்துக் கொள்ளுகிறார்கள் மறுபடியும்.

கெர்ச் நகரைப் பிடிக்க இந்தத் தடவை ஜெர்மனியர் ஏகமாகப் பலி கொடுத்தார்களாம். தரை கெட்டியாச்சு என்று வந்தால், மழை கொட்டித் தள்ளி விட்டது. தரை யெல்லாம் ஒரே சேறு ஆகிவிட்டது. மார்பளவு சேறில், ஜெர்மன் சூரர்கள் எல்லாம், தலைக்கு மேலே துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டு, தடுமாடிக் கொண்டு முன்னேற வேண்டியது என்றால், உல்லாசமா யிருந்திருக்குமா என்ன, கெர்ச் க்ஷேத்திரத்தை அடைந்த அழகு ?

கெர்ச் ஒரு முக்யமான இடம் தான். ஜெர்மானியரிடம் அது இருப்பதால், ருஷ்யர்களுக்கு ஏற்படக் கூடிய சங்கடத்தை விட, ருஷ்யர்களிடம் அது இருப்பதால், ஜெர்மானியருக்குத் தலைவலி அதிகமாகும். ஆகவே கெர்ச் நகரத்தைப் பிடித்துக் கொண்டதால், நாஜிகள் தம் தலைவலி குறைந்தது என்று சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம். அதோடு, அவர்கள், அங்கிருந்து, விமானங்கள் மூலமாக எண்ணெய்க் கிணறுகள் நிறைந்த காகஸஸ் பிரதேசத்தின் மீது பாயலாம் என்றும் ஒரு பேச்சு இருக்கிறது.

அது அப்புறம்! கெர்ச் சண்டையே இன்னும் சரியாகத் தீர்ந்த பாடில்லையே! அதுமட்டுமா ? பாவம்! தென் ருஷ்யாவிலே, க்ரைமியாவிற்கு வடக்கே, கார்க்கோவ் என்ற பிரபல, தொழிற்சாலைகள் நிறைந்த நகரை மூல ஸ்தானமாகக் கொண்டு. ருஷ்யாவில் வசந்த காலப் போரை நடத்தலாம் என்று ஹிட்லர் நினைத்திருந்ததாக ஒரு செய்தி கூறுகிறது.

இது வாஸ்தவமானால், அந்த மனுஷன் இப்பொழுதே இடிந்தே போயிருக்க வேண்டும். அந்த நகரிலிருந்து ஜெர்மானியர் ஆடம்பரமாகக் கிளம்பி, ருஷ்யரை அடிப்பதற்குப் பதிலாக, 'ஐயோ! சகிக்கலையே! கொல்றாங்களே! அடேடே! இங்கே உடைச்சிட்டாங்கடா கரையை! ஏதோ அங்கு வந்துடுத்துடா, அவர்களுடைய குதிரைப் படை! ராக்ஷஸர்கள் மாதிரி வந்து விழுகிறார்களே! சமாளிக்க முடிய வில்லையே! ஐயா! ஐயா! அடிக்காதே ஐயா! அநியாயமாக எங்கம்மா மார்களுக்குப் பிள்ளைகள் இல்லாமல் செய்யாதிங்க ஐயா! இதோ வைத்து விட்டோம் பீரங்கி, துப்பாக்கிகளை தூர! இதோ கும்பிடறோம் சாஷ்டாங்கமாக விழுந்து! எங்களை வேணுமானாலும் பிடித்துக் கொண்டு போங்கள்!' என்று சொல்ல வேண்டிய நிலைமை அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டு விட்டது.

ருஷ்ய சேனாபதியான மார்ஷல் டிமோஷங்கோ வெகு சாமர்த்தியமாக, சென்ற பல மாதங்களாக இந்தப் பிரதேசத்தில் ஏராளமான ஆயுதங்களையும், டாங்கிகளையும், படைகளையும் சேகரித்து வைத் திருக்கிறார். ஹிட்லருக்கு முன் இவர் கிளம்பி விட்டார், முன்னேறித் தாக்குவதில் உள்ள சந்தோஷமும், பலனும் வேறெதிலு மில்லை என்பதை அநுபவத்தால் அறிந்த இந்தச் சேனாபதி செய்த வேலை, நல்ல பலனை அளித்து விட்டது. ஹிட்லரின் திட்டத்தை எல்லாம் தற்காலிகமாகவாவது இது குட்டிச் சுவராக அடித்து விட்டதோ இல்லையோ? மேலும் மேலும் அலைபோல் வரும் டிமோஷிங்கோவின் படைகளைச் சமாளித்து நிறுத்த, ஜெர்மன் படைகள் பிரம்மப் பிரயத்தனம் செய்ய வேண்டி யிருக்கும் என்பதில் தடையே இல்லை. கார்க்கோவ் நகரின் வெளி எல்லையைக் கூட ருஷ்யப் படைகள் அடைந்து விட்டனவாம்.

ஜெர்மானியருக்கு, சமீபத்திலேயே ரிசர்வ் படைகள் இருக்கின்றன. முன்னேற நினைத்திருந்த ஜெர்மன் படைகளுக்கு அவ்வப்பொழுது ஓய்வு கொடுத்து விட்டு, அவர்கள் ஸ்தானத்தைத் தாங்கள் எடுத்துக் கொள்ளலாம் என்றிருந்த ரிசர்வ் படைகள், இப்பொழுதே, கார்கோவில் தவிப்பவர்களுக்கு சகாயத்திற்கு ஓட வேண்டி வந்து விட்டது. ருஷ்யர்கள் சரியான கூழாங் கல் உருண்டை போல் தான். கடிக்க முயன்றால், பல் உடைபடும் என்பது தெளிவாகி விட்டது. ஆனால், இதைப் பல்லால் கடிக்கக் கூடாது, வேறு பலமான ஆயுதங்களால் தான் தாக்கித் தகர்க்க வேண்டும் என்று தெரிந்து கொண்டு, ஹிட்லர் வேறு ஏதாவது ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பிக்கக் கூடும். அதற்குள்ளாக அவரது வாயிலே இன்னும் பல கல் உருண்டைகளைத் திணித்து விட்டால், ஆசாமி தடுமாறியே போவார். இன்னும் பல கல் உருண்டைகள் என்றால் என்ன ?

ருஷ்யாவிலும், பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் அடிக்கடி பேசப்படும் இரண்டாம் முனை என்பது ஒரு கல் உருண்டை. மேற் கொண்டு அதிவேகமாக, ருஷ்யாவிற்கு உதவி அனுப்புதல் என்பது மற்றொரு கல் உருண்டை. பிரசாரத்தினாலும், இடை விடாத குண்டு வீச்சுகளாலும் ஜெர்மன் மக்களின் மனம் நிலை கெட்டுப் போய், அவர்களிடை ஆத்திரம் மூண்டு, அவர்கள் ஹிட்லரின் பேராசைப்போர்த் திட்டத்தை எதிர்த்துக் கலகம் செய்யும்படி தூண்டுவது மற்றொரு கல் உருண்டை. தனது சகாவான ஜப்பானிடம் ஹிட்லர் ரொம்ப நம்பிக்கை வைத்திருக்கிறார். பவழத் தீவுகளருகே செய்தது போல், இன்னும் பல இடங்களில் ஜப்பானியக் கப்பற் படையின் இடுப்பைச் சரியாக ஒடித்து விடலாம். இவ்வாறு செய்வதும் ஹிட்லருககு அவதியை உண்டாக்குவது போல் தான்.

இத்தனை கல் உருண்டைகளையும் ஏககாலத்தில் 'சப்ளை' செய்வ தென்பது சிரமம் தான். ஆனாலும், நேசதேசத்தார் சும்மா இல்லை. கார்க்கோவ் நகரி லிருந்து கிளம்பி நடத்த விருந்த போருக்கு மட்டும், இருபதாயிரம் டாங்கிகள் என்று ஏற்பாடு செய்திருந்தாராம் ஹிட்லர். ஆனால். ருஷ்யர்களிடமும் பலமான டாங்கி களிருக்கின்றன. தமது டாங்கி பலத்தின் மீதே ஜெர்மானியர் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். 'டாங்கி' என்பதைத் தமிழ்ப் படுத்தினால், 'குளம்' என்று ஆகிறது. ஆகவே, ஜெர்மானியர் குளங்களை நம்பி இந்தப் போரில் இறங்கியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. பாவம்! அந்தக் குளங்களே அவர்களுக்கு யமனாக முடியப்போகிறது!

இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் போருக்கும், ஜெர்மானிய-ருஷ்ய யுத்தம் ஆரம்பமான போது நடந்த போருக்கும் ஏக வித்தியாசம் இருக்கிறது. அப்பொழுது போர் முனை இரண்டாயிர மைல் வியாபித்திருந்தது. ஆனால் இப்பொழுதோ, இருநூற்றைம்பது மைல்கள் தான் நீண்டிருக்கிறது. இந்த 250 மைல் போர் முனையிலே, ஜெர்மானியர் 20 லக்ஷம் பேர்களை மாட்ட விட்டிருக்கிறார்களாம். இடம் குறைவு, ஆள் அதிகம். ஆகவே, யுத்தத்தின் பயங்கரம் அதிகமாகவே இருக்கும். கார்க்கோவ் நகரப் போர் ஆரம்பமாகி இரண்டு வாரங்கள் கூட ஆகவில்லை. இதற்குள்ளாகவே, இரண்டு கட்சிகளிலும் பல லக்ஷக் கணக்கானவர்கள் சேதமாகி விட்டார்களாமே! கெர்ச்சில் கூட ஜெர்மானியர் நினைத்த அளவு முன்னேற்ற வேகம் இருப்பதாகத் தெரியவில்லை.

தனது கை, பலமாக இருந்தால், எதிற் வீட்டுக்காரனை, 'அண்ணே! கொஞ்சம் ஒரு கைகொடுக்க வாராயா?' என்று கூப்பிட வேண்டாம் பாருங்கள். அதுமாதிரி, ஜெர்மனிக்கு, தனது வெற்றிகளிலேயே பூரண நம்பிக்கை இருககுமானால், அது ஜப்பானின் உதவியை எதிர்பார்க்க வேண்டிய அவசியமென்ன? இந்தச் சமயத்திலே, ஜப்பானியர் சைபீரியாவில் இறங்கி ருஷ்யரைப் பின்னாலிருந்து தாக்க வேண்டும் என்று ஜெர்மானியர் விரும்பு கிறார்களாம். அப்பொழுது, ருஷ்யாவின் படைகள் இரண்டு இடத்தில் பிரிந்து போகக் கூடு மல்லவா? அது ஜெர்மானியருக்கு சாதகந் தானே? இப்பொழுது, ஜெர்மானியரின் பருந்துப் பாய்ச்சல் விமானங்களின் அட்டகாசத்தையும், மழையையும், பனி உருகுவதையும் வெகு தீரத்தோடு சமாளித்துக் கொண்டு, பல இடங்களில் பிரிட்டிஷ் படைகளும் ருஷ்யப் படைகளும் ரஸ்தாக்களைப் போட்டு வருகிறார்கள். பாலங்களை மளமளவெனக் கட்டி வருகிறார்கள். அவர்கள் கொடுக்கும் அடி தாங்காது, பல ஜெர்மானியர் அவர்களிடம் சரணாகதி அடைந்து விட்டார்களாம். ருஷ்யர்களிடம் ஈசல்கள்போல் வந்து காலில் விழும் ஜெர்மானியரது எண்ணிக்கையைப் பார்த்தால், அவர்களுக்கு ஹிட்லர் உத்திரவுப்படி போராட விருப்பமில்லை என்பதே தெளிவாகிறது என்கிறார்கள் ருஷ்யப் போர்க் களத்தி லிருப்பவர்கள் இது மாதிரியான நிலைமையில் ஜப்பான, ருஷ்யாவில் இரண்டாவது முனையை ஏற்படுத்த வேண்டு மென விரும்புவது இயற்கை தானே ஹிட்லருக்கு, இத்தாலியி லிருந்து நிறைய ஆள் சகாயம் கிடைத்திருக்கிறாப் போலிருக்கிறது. ஆக்ரமித்த நாடுகளி லிருந்து, ஆட்டு மந்தைகளைச் சேர்த்து வருவது போல் ஆட்களைச் சேகரித்து வருகிறார் அவர். மகாசூரர்கள் எல்லாம் முன்பே மண்ணை கௌவி விட்டார்கள். ருஷ்யர்களும் பனி காலத்தில் ஜெர்மானியருக்கு ஓய்வு கொடுக்க வில்லை. அது காரணமாக, வழக்கம் போல, இருபது முப்பது லக்ஷம் பேர் போர்முனையி லிருந்து, சுகமாக ஊர் திரும்பி, சற்று ஓய்வெடுத்துக் கொண்டு, உள்ளூர்த் தொழிற்சாலைகளில் வேலைக்குப் போய், வசந்தகாலப் போருக்கு ஏராளமாக சாமான்கள் தயாரிப்பது முடியாது போய்விட்டது. வெளி நாடுகளி லிருந்து தொழிற்சாலைகளுக்கு ஆள் பிடித்து வர நேர்ந்தது. அவர்களுக்கு என்ன, கர்ம சிரத்தையோடு வேலை செய்ய வேண்டும் என்று. அன்பால் கிரகிக்கக் கூடியதைவிட, அதிகாரத்தால் குறைவாகத் தானே கிரகிக்க முடியும்? உள்ளத்திலே கொதிப்பு; வெளியிலே வேலை என்றால் எப்படி யிருக்கும் அந்த வேலை? ஆக மொத்தம், ஜெர்மனி, நேசநாடுகளுக்கு எதிராக இருந்து நடத்தும் போர்களில், யுத்தசாதன உற்பத்திப் போரில் அது தோற்றே வருகிறது எனலாம். கச்சா சாமான்கள் வேண்டாமா, வேண்டியதுசெய்ய? அங்கு இரண்டரைக் கோடிப் பேர்கள் தொழிற்

சாலைகளுக்கென பட்டயம் கட்டிக் கொண்டிருக்கிறார்களாம். ஒரு கோடிப்பேர் யுத்தமுனைக்கென்று தீர்மானிக்கப் பெற்றிருக்கிறார்களாம். இதுவரை ருஷ்ய யுத்தத்தில் முப்பத்தைந்து லக்ஷம் பேர் காலி என்கிறார்கள்.

இரண்டு ஆடுகள் சண்டைபோடும் போது மண்டை உடைய, ஒரு நரி குறுக்கே வந்து அந்த ரத்தத்தை நக்கிற்றும். அதுபோல, முஸோலினி முன்பே அடிபட்டு, உடம்பெலாம் நொறுங்கிய சூரப்புலி. அவர், இப்பொழுது பார்த்து, தனது சகாக்களோடு கூட்டம் போட்டு, கார்ஸிகா, ட்யூனிஸ் போன்ற பிரதேசங்களைப் பிடிக்க நினைக்கிறாராம். அவருடைய நாட்டினர் கலாட்டா செய்கிறாப் போலிருக்கிறது. நாம் சண்டையில் சேர்ந்து மண்டையை உடைத்துக் கொண்டு மடிந்து விழுவதால் நமக்கென்ன லாபம்? கேவலம், கார்ஸிகா, ட்யூனிஸ் இந்தப் பிரதேசங்களை, ரொம்பவும் விரும்பி, நூறுயிரம் தடவை கேட்டாச்சு கேட்டுக் கேட்டு தொண்டை கூடப் புண்ணாகி விட்டது. அப்படியிருந்தும் அவற்றை நாம் பெறுவிட்டால், இந்த யுத்தத்தால் நாமடையப் போகும் பலன் என்ன? இங்கே நம் ஊரிலும் ஜெர்மன் அதிகாரிகள் வந்து நம் தலைமேலே உட்கார விட்டிருக்கிறீரே, இதுதானா பலன்? அடபோ ஐயா புத்திகெட்ட மனுஷா! நம்மாலே இனிமேலே நீர் சொல்கிறபடி கேட்க முடியாது, என்று சொல்கிறார்களோ என்னமோ?

அதோடு, இத்தாலி மீதிலும் பிரிட்டிஷ் விமானங்கள் அவ்வப்பொழுது, குண்டுகள் எனும் அக்ஷதைகளைப் போட்டு, இத்தாலியரை ஆசீர்வதித்து வருகின்றன. தவிர, சர்ச்சில் வேறே, ஹிட்லருக்கு விளக்கெண்ணெய் கொடுத்து விட்டார். 'ஏ ராக்ஷஸ ஸ்வரூபமே! நீ விஷப் புகையைப் பிரயோகிக்க உத்திர விட்டால், உன் ஆட்கள் மீது மகா பயங்கரமான விஷப் புகையை விட என் ஆட்களுக்கு உத்திர விட்டுவிடுவேன். உஷார் தேக்கோ!' என்று ஒரு போடு போட்டார் சர்ச்சில்.

'விஷப் புகையா? ஐயோ! நாங்கள் அந்த வழிக்கே போக மாட்டோமே!' என்று ஜெர்மனியிலிருந்து ஒருவர் அலறி யிருக்கிறார். சர்ச்சில் துரை சொன்னால் சொன்னபடி என்பது ஹிட்லருக்குத் தெரியாதா என்ன?

ஜெர்மானியரை அடியோடு முறியடிக்கும் நிலைமை நேசதேசத்தாருக்கு இன்னும் ஏற்படவில்லை. ஆனால் அந்த நிலைமையை அடைவதே தம் இறுதி நோக்கமென நேசதேசத்தார் கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமே யில்லை. ஜெர்மானியர் நடத்தும் கொடுமைக்கு எல்லாம் கொடுமையையும், அவர்கள் அளிக்கும் அடிக்கு எல்லாம் பலத்த அடியும் பிரதியாகக் கொடுக்க, நேசதேசத்தார் தீர்மானித்து விட்டார்கள். ஐரோப்பாவில் இரண்டாம்முனை ஏற்படுத்துவது சர்க்காரின் நோக்கம் கூட. ஆனால் பொது ஜனங்களைப் போல் சர்க்கார் இதையெல்லாம் முன்கூட்டியே பேசவோ, விளம்பரப் படுத்தவோ முடியாது. தக்க தருணம் பார்த்து, பூரணமாக ஏற்பாடு செய்து கொண்டு, வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்ற நிலைமை ஏற்பட்டதும் மேல்விழுந்து கடித்துக் குழறி எறிந்து விடுவோம்' என்று ஸர் க்ரிப்ஸ் தன் ஊரில் பேசியிருக்கிறார். பிரிட்டிஷ் விமானங்களும், ஆக்ரமிக்கப் பெற்ற பிரான்ஸிலே அட்டகாசம் செய்து அனைவரையும் கதிகலங்க அடிக்க வைக்கின்றன. அந்த விமானிகளின் அடி பொறுக்காது, நார்வேயிலிருந்து ஜெர்மன் கரைக்குத் தப்பி ஓடிக் கொண்டிருக்கையில், பிரின்ஸ் ஈகன் என்ற பிரமாண்டமான ஜெர்மன் யுத்தக் கப்பலை அதே விமானிகள் காயப் படுத்தினார்களாம்.

அமெரிக்காவும் அதிவேகமாக தன்னைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறது. தனது சகாக்களுக்கும் வேண்ட உதவி அளித்து வருகிறது. சென்ற ஏப்ரல் மாதத்தில் மட்டுமே, அமெரிக்காவிலிருந்து 6770-லக்ஷம் டாலர் பெறுமான பலவித சாமான்கள் குத்தகை இரவல் சட்டத் திட்டப்படி கப்பலேறிற்றும். அமெரிக்காவின் சேனாபலத்தை 10 கோடியாக்க ரூஸ்வெல்ட் தீர்மானித்திருக்கிறாராம். ஸ்திரீகள் படை வேறே திரட்டுகிறார்கள். அங்கே இதுவரை எந்நாளும் கண்டிராத வேகத்திலே வியாபாரக் கப்பல், விமானம், டாங்கி எல்லாம் உற்பத்தியாகி வருகின்றனவாம். விஷியிலே ஜெர்மன் கையாளான லவால் பதவிக்கு வந்ததால், அமெரிக்கா அருகே யுள்ள பிரஞ்சு மார்டினிக் வகையறாத் தீவுகளை அச்சு நாட்டினர் பிடித்துக் கொண்டு, அமெரிக்காவிற்குள்ள ஆபத்தை அதிகமாக்கக் கூடும். அதைத் தவிர்க்க அமெரிக்க சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறார்கள். அத்தீவில் உள்ள யுத்தக் கப்பல்களை நிராயுதபாணிகளாக்கி விட்டார்கள். பாக்கிக் கப்பல்களை அமெரிக்காவிடம் ஒப்படைக்க விஷி மறுக்கிறது. இந்தத் தகராறு முற்றினால், மடகாஸ்கரை பிரிட்டிஷார் பிடித்துக் கொண்டதைப் போல, அமெரிக்கர் இதைப் பிடித்துக் கொள்ளக் கூடும்.

அமெரிக்கா இங்கு மட்டுமல்ல, ஆஸ்திரேலியா அருகே கூட உஷாராக வேலை நடக்க ஏற்பாடு செய்திருக்கிறது. பவளத்தீவு அருகே தான் அமெரிக்கக் கப்பற் படை ஒரு போடு போட்டு, ஜப்பானியரது திட்டங்களைத் தற்காலிகமாகக் குலைத்ததே! ஆனால், இதனால் ஆஸ்திரேலியா மீது ஜப்பான் பாயாது திரும்பிப் போய்விடும் என்று எண்ணுவதற்கில்லை. அங்குள்ள படையெடுப்பு ஆபத்து இருக்கத் தானிருக்கிறது. தென்மேற்கு பஸிபிக்கில் ஜப்பானியர் தமது பலத்தை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்களாம். மீண்டும் அமெரிக்கக் கடற்படைக்கு பெரிய வேலை ஏற்படலாம்.

பிலிப்பைன் போர் முடிந்த போதிலும், அதனால் பல படிப்பினைகளை நேசதேசத்தார் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். பல விஷயங்களில் ஜப்பானிய வீரர்கள் அமெரிக்கரை விட மட்டமாம். அதிகப்படி ஆயுத பலத்தால் அவர்கள் பிரகாசிக்கிறார்களே ஒழிய, தனி மனுஷர்களாக இருக்கும் பொழுது அவர்களுடைய சாமார்த்தியம் குறைவு தானாம். எதிர் காலத்திற்கு ரொம்ப உதவக் கூடிய படிப்பினை அல்லவா இது?

இன்னும் பர்மாச் சண்டை பூர்த்தியாகவில்லை. அங்கு வந்த சீனப் படை, ஊருக்குத் திரும்பப் போவதில்லையாம். கடைசி ஆள் வரை இங்கேயே தங்கி, ஜப்பானியருக்கு இடைவிடா உபத்திரவ மளிப்பதென கங்கணம் கட்டி கொண்டிருக்கிறதாம். பர்மாவிலிருந்து பர்மா ரஸ்தா வழியாக சீனத்திற்குள் புகுந்த ஜப்பானியர் திணறுகிறார்களாம். சீனர்கள் அவர்களை அங்கு நையப் புடைக்கிறார்களாம். சில இடங்களில் ஜப்பானியர், பெருத்த நஷ்டத்தோடு பின் வாங்க நேரிட்டிருக்கிறது.

அமெரிக்க வாலண்டியர் படையினரும், இந்தியாவிலிருந்து செல்லும் விமானிகளும் ஜப்பானியப் படைகளைத் தடுமாடச் செய்கிறார்கள். ஜப்பானியர் பிடித்த அக்யாப் மீது இந்திய விமானங்கள் குண்டுகளைப் பொழிந்து வருகின்றன. கிழக்கு அஸ்ஸாமிலே சில இடங்களில் ஜப்பானிய குண்டு விழுந்திருக்கிறது. ஆனால் எவ்விதப் படையெடுப்பிற்கும் தயாராக இருக்கிறது அப்பிரதேசம். இந்தியாவின் பாதுகாப்பு சக்தி நாளுக்கு நாள் விருத்தியாகி வருகிறது. ஜப்பானியர் இந்த நிலைமையில், அதிலும் பலத்த மழை அஸ்ஸாமில் தொடங்க விருக்கும் இச்சமயத்தில், இந்தியா மீது படையெடுப்பார்களா என்பது சந்தேகந் தான்.

ஆனால் தென் ஆபிரிக்கத் தலைவர் கூறியது போல் இந்துமகா சமுத்திரத்திலும, ஆஸ்திரேலியாவிலும் பெரிய போர் நடக்கலாம். லிபியாவிலே ஜெர்மானியர் ஏராளமான படைகளைக் கொண்டு குவித்து விட்டார்கள். ஆகவே அங்குகூட, 'புஸ்'ஸென்று ஏதாவது கிளம்பி, அதுவே பெருந் தீயாகலாம். எதற்கும் நேச தேசத்தார் தயார் என்றிருக்கும் பொழுது, மேற்கொண்டு சொல்லிக் கொண்டே போவானேன்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ஆம் ஆண்டு மேமீ 29௳, வெள்ளிக்கிழமை [இதழ் 21

## "வாழ்விற்கு அவசியம் நம்பிக்கை"

### நம் முடிவு உறுதியானது

### இந்தியா மந்திரி பிரசங்கம்

சென்ற 1942-ஆம் ஆண்டு மேமீ 24௳ சாம்ராஜ்ய நாள் விழாவை இந்திய மந்திரி கனம் அமெரி ஆரம்பித்து வைக்கும் முறையில் ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது:—

> உலகில் உள்ள எல்லா ஸ்தாபனங்களிலும் குறைகள் உண்டு: அது போலவே தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும். என்றாலும் விடுதலையையும் நீதியையும் நிலை நாட்டுவதில் உலகத்திலேயே சிறந்த ஸ்தாபனமாக விளங்குகிறது.

தற்போதுள்ள கஷ்ட நிலையில், நம் சம்ராஜ்ய வாழ்விற்கு மிகவும் இன்றியமையாதது நம்பிக்கை தான். இப்போது நாம் மிகவும் கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளாகி யிருப்பதன் காரணம், சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு நாம் நம்பிக்கை யிழந்தது தான்.

ஹாங்காங், சிங்கப்பூர், மலேயா, பர்மா ஆகிய நாடுகளை நாம் இழந்தோம். இந்த அழகிய நாடுகளை எதிரிகள் கைப்பற்றி அடிமைப் படுத்தி விட்டார்கள். இதற்குக் காரணம் அந்நாட்டு மக்கள் இராஜ விசுவாச மில்லா திருந்தார்கள் என்று சொல்ல முடியாது. அல்லது அங்கிருந்த நிர்வாகிகள் திறமை யில்லாதவர்களாகவோ; அனுதாப மில்லாதவர்களாகவோ இருந்தார்கள் என்றும் சொல்ல முடியாது. ஆனால் பிரிட்டிஷ் கடற் படையின் உதவியினால், சமாதானத்தை நிலை நாட்டி விடலாமென்று நாம் நினைத் திருந்தது தான் தவறு. போருக்கு அந்நாட்டு மக்களை நாம் பழக்கவு மில்லை. யுத்தத்தின் பொருட்டு நாம் அவர்களைக் கஷ்டப் படுத்தவு மில்லை.

**இந்திய விடுதலை**

எதிர் காலத்தில் இந்தியா விடுதலை பெற வேண்டும் என்பது பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் எவ்வளவு உண்மையாகவே ஆசைப் படுகிறார்கள் என்பதை மெய்ப்பிக்கிறதற்காகவே தான் சர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் இந்தியாவிற்குப் போனார். நாம் வழங்க இருந்ததை இந்தியர்கள் ஏற்க மறுத்து விட்டாலுங் கூட, நாம் கொண்டிருக்கும் முடிவு மட்டும் உறுதியானது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் ஒரு கௌரவமான அங்கமாக இந்தியாவும் இருக்க வேண்டும் என்பது தான் நமது ஆசை.

## சென்னையில் தேசீயப் போர் முனை.

### ஆரம்ப விழாவில் கவர்னர் பேச்சு.

### சென்னையின் படை பலம்.

சென்னை நகரமே சேர்ந்து விட்டது. ஐலண்ட் மைதானத்தில். ஏ.ஆர்.பி. நகரப் பாது காப்புப் படை, செஞ் சிலுவை சங்கத்தாரும் அணி வகுத்து நின்றனர். எண்ணிக்கைக்கும் அடங்காத மோட்டார் கார்கள் முறைப் பட்டு நின்றன. ஒரே திருவிழாக் கோலம். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் பல்லாயிரக் கணக்கில் பவனி வருவது போல் அங்கே போய்க் கொண்டிருந்தார்கள். அங்கு அமைக்கப் பட்டிருந்த மேடை மீதே அனைவர் கண்களும் பதிந்திருந்தன. ஒரு மகத்தான ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. ஆம், தொழிலாளர்கள் தான். அவர்கள் உள்ளத்தில் ஊன்றி யிருக்கும் ஊக்கம் அவர்களுடைய முகங்களில் பிரதி பலித்தது. அவர்கள் கையில் ஒரு பெரிய கொடியைப் பிடித்துக் கொண்டு வந்தனர். அக் கொடியில் "அனைவரும் ஒன்று பட்டு, தேசீயப் போர் முனையில் சேர வாருங்கள்" என்று எழுதி யிருந்தது. இந்த ஊர்வலம் எங்கிருந்து கிளம்பியது தெரியுமா? தேசீயப் போர் முனையின் சென்னை ஜில்லா அமைப்பாளரான ராவ் சாஹிப் ஆல்பர்ட் ஜேசுதாசன் அவர்கள் வீட்டிலிருந்து தான். ஏ.ஆர்.பி. வண்டிகளும், படையினரும் ஊர்வலமாகச் சென்றனர். உடற் பயிற்சி யாளர்கள் தம் திறமையை விளக்கிக் காட்டினார்கள். இன்று 1942-ஆம் ஆண்டு மேமீ 23௳ மாலை மணி 5-30.

மேன்மை தங்கிய சென்னை கவர்னர் வந்திறங்கினார். காப்டன் ஹார்வி அவரை வரவேற்றார். திவான் பகதூர் ஏ. அப்பாதுரைப் பிள்ளை அவருக்கு மாலை யிட்டார். சென்னை நகரத்தைக் காக்க வேண்டி என்னென்ன முயற்சிகள் செய்யப் பட்டிருக்கின்றன என்று பொது மக்கள் உணரத் தக்க படி இராணுவ அணிவகுப்பும் நகர காவலர் அணிவகுப்பும் நடந்தன. பிறகு மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் செய்த பிரசங்கத்தின் சுருக்கமாவது.

இன்று சென்னையில் தேசீயப் போர் முனையை ஆரம்பித்து வைக்கின்றேன். இது மிகவும் நெருக்கடியான காலம். எனவே, இந்தியாவை முதன்மை யாக்க வேண்டும். இந்தியாவின் எல்லைகளிலே அட்டகாசம் செய்து கொண்டிருக்கும் நாஜிகளின் கொடுமைகளையும் ஜப்பானியரின் கொடுமைகளையும் கவிழ்த்து விட வேண்டு மென்னும் மன உறுதியோடு ஒன்று பட வேண்டும். இதற்காகத் தான் இந்த ஸ்தாபனம் நாடு முழுதும் அமைக்கப் படுகிறது.

**அரசியல் வேற்றுமைக்கு அல்ல.**

இந்தியாவிலுள்ள அரசியல் கட்சிகளோடு மாறுபட்டு நிற்க வேண்டும் என்பது இந்த ஸ்தாபனத்தின் எண்ண மல்ல.

நம் தலை வாசலில் வந்து நிற்கும் விரோதியை விரட்டி அடிக்கும் பொருட்டு இந்தியர், பிரிட்டிஷார், இந்து, முஸ்லீம், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், ஆகிய எல்லோரும், அவர்களுடைய கட்சி எதுவாயிருந்தாலும், தேசப் பற்றோடு வந்து இந்த தேசீய யுத்த முனைக்கு ஆதரவு தரும்படிக் கோருகிறேன். இம்மாகாணத்தி லுள்ள முக்கியமான இனங்களின் பிரதி நிதிகள் இங்கே இன்று கூடியிருக்கிறார்கள்.

அரசியல் துறையிலே இவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டிருந்தவர்கள் அல்ல. தம் நாட்டுப் பற்றினாலும், வெற்றி யடைய வேண்டும் என்னும் மன உறுதி காரணமாகவும் அவர்கள் இன்று ஒன்று கூடி யிருக்கிறார்கள்.

இந்த ஸ்தாபனத்தின் நோக்கங்களாவன :—

**நோக்கங்கள்.**

1. யுத்தத்தை எதிர்த்து நிற்க வேண்டும் என்னும் எண்ணத்தைப் பொது மக்கள் மனத்தில் உறுதிப் படுத்த வேண்டும். 2. இந்த உணர்ச்சி பரவ வொட்டாதபடி தடுக்கும் எல்லாவற்றையும் வேர் அறுக்க வேண்டும். 3. ஐந்தாம் படையினரின் முயற்சிகளைத் தடுக்க வேண்டும். 4. நாஜி தத்துவமும், பாசிசத் தத்துவமும் எந்த உருவத்தில் அமைந்திருந்தாலும், அவற்றை நம் நாட்டு மக்கள் எதிர்த்துப் போராடுவதற்கு வேண்டிய நம்பிக்கையையும், தைரியத்தையும், மன உறுதியையும் மக்களிடையே உண்டாக்க வேண்டும்.

இந்தப் போர் முனை இரண்டு வகை வேலைகளைச் செய்ய வேண்டி யிருக்கிறது. 1. வெளியே யிருந்து வரக் கூடிய பயத்தைப் போக்க வேண்டும். 2. உள் நாட்டில் உள்ள தோல்வி மனப்பான்மையை அகற்ற வேண்டும். நம் நாட்டில் உள்ளவர்களின் போராடும் திறமையைக் குறைக்கும் பொருட்டு பேசுகிறவர்களையும், எழுதுகிறவர்களையும் நடந்து கொள்ளுகிறவர்களையும், வெளிக்குக் கொண்டு வந்தால் மட்டும் போதாது. தேசீயப் போர் முனைப் படையினர், தாங்கள் நாள்தோறும் பேசும் போதும், எழுதும் போதும் வெற்றி உணர்ச்சி அவர்கள் உள்ளத்தில் பதியத் தக்கபடி செய்ய வேண்டும். பணமே பிரதானம் என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆதிக்கம் பெற்றுள்ள அரசுகளை வெல்லும் பொருட்டு நம்மால் ஆன அனைத்தும் செய்ய வேண்டும் என்பது இந்தியா மீது உண்மையான பற்றுள்ளவர்களின் முதல் கடமையாகும் என்று விளக்கிக் கூற வேண்டும். இதே கருத்துடையவர்கள் அனைவரும் தம் நண்பர்கள் என்று அவர்கள் நினைக்க வேண்டும்.

இந்த தேசீய போர் முனையை உத்தியோகஸ்தர்கள் அங்கீகரித்து ஆதரித்து இருந்த போதிலும் இதில் பெரும்பாலும் உத்தியோகப் பற்றில்லாதவர்களே இருக்கிறார்கள். உத்தியோகம், அதில் மேல்படிக்கு உயருவது, அரசியல் கட்சி சம்பந்தம், ஆகியவை இவர்களுடைய இலட்சியங்கள் அல்ல. ஆனால் இந்தியாவின் சுய மரியாதையில் மிகுந்த அக்கரை யுடையவர்கள் ; உலக அமைப்பில் எதிர்காலத்தில் இந்தியாவின் நிலைமை எப்படி இருக்க வேண்டும் என்பதில் கவலை யுள்ளவர்கள். தம் முழு நேரத்தையும் இதன் பொருட்டே செல விடுகிறவர்கள்.

இவர்கள் ஆயிரக் கணக்கான ஆண்களையும், பெண்களையும் இந்த இயக்கத்தில் சேர்ப்பார்கள். இவர்கள் உண்மையானபடி யுத்தச் செய்திகளையும், சரியான கருத்துக்களையும் பொது ஜனங்கள் உணரத் தகுந்தபடி அறிவிப்பார்கள். இதன் பயனாக, தம் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தம் நாட்டின் நிலைமையும், தம் நிலைமையும் என்ன என்று எளிதில் தெரிந்து கொள்ளும்படி செய்வார்கள்.

தரைப்படை, கப்பல்படை, ஆகாயப்படை, நகரக் காவல்படை ஆகிய படைகளில் சேரும்படி பொது ஜனங்களை ஊக்கி உதவுவார்கள். யுத்த வீரர் அரசாங்க உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், தொழில் நிபுணர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் அனைவரும் இந்தத் தேசீய யுத்த முனையில் சேர வேண்டும்.

இதன் நோக்கம் என்ன? ஒற்றுமை. யுத்த மனப்பான்மை. நாம் மிகவும் அருமையான தென்று கருதுவது நம் நாகரிகம். நமக்கும் நம் நாகரிகத்திற்கும் எதிரிகள் என்று முடிவு கட்டப் பட்ட ஜெர்மானியர்கள், இத்தாலியர்கள், ஜப்பானியர்கள் ஆகியோரைத் தாக்கி வெல்லும் பொருட்டு, நமக்குள் இருக்கக் கூடிய வேற்றுமைகளை மறந்து, கூட்டுற வோடும், தைரியமாகவும், மகிழ்ச்சியோடும் நம் பலமெல்லாம் திரட்டி எதிரிகளைத் தாக்க வேண்டும். அதனால் எவ்வளவு மகத்தான நிலைமை ஏற்படுமென்று எண்ணிப் பார்க்கும்படி பொது ஜனங்களைத் தூண்ட வேண்டும்.

**சென்னையின் சிறந்த தொண்டு.**

நான் இந்த இயக்கத்தின் தலைவனாக இருக்கிறேன். இந்தத் தேசீயப் போர் முனையை மேன்மை தங்கிய வைசிராய் பிரபு ஆரம்பித்த காலத்தில், தற்காலத்திற்கு மிகவும் அவசியமானதோர் காரியத்தைத் தான் அவர் செய்கிறார் என்று நான் நினைத்தேன். சென்ற இரண்டு வருஷங்களாக யுத்த முயற்சியில் நாம் சிறந்த வேலை செய்திருக்கிறோம். நாம் செய்துள்ள வேலையால் நமக்குப் பெருமை யுண்டு. இருந்தபோதிலும், அடுத்த சில மாதங்களில் இந்தியாவிற்கு நேரக் கூடிய ஆபத்துக்களி லிருந்து காப்பாற்றும் பொருட்டாக வாவது, தம் வேற்றுமைகளைப் பாராட்டாது, ஆண்களும், பெண்களும், குழந்தைகளுங் கூட, ஒன்றுபட வேண்டியது அவர்கள் கடமையாகும்.

தன் நாட்டில் நம்பிக்கையும், இந்தியாவிற்கும் எதிர்காலத்தில் ஒரு நல் வாழ்வு உண்டு என்பதில் நம்பிக்கையும், (பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் எதிர் காலத்தில் நம்பிக்கை கொள்ளா விட்டாலும்) கொண்டவர்கள் ஒவ்வொருவரும் தேசீயப் போர் முனையில் சேர்ந்து எல்லா வகைகளிலும் உதவ வேண்டியது அவசியமாகும்.

**யுத்த மனப் பான்மையை உண்டாக்குக.**

நம்மால் என்ன முடியும்! நாம் எல்லோரும் செய்யக் கூடிய வேலைகள் எத்தனையோ இருக்கின்றன. நாம் எல்லோரும் போர் வீரர்களாகச் சேர்ந்து விடமுடியாது. ஆனால் படைகளில் சேரும்படி மற்றவர்களுக்கு நாம் எடுத்துச் சொல்லலாம். வயதானவர்களுடைய பயத்தைப் போக்க நாம் முயற்சிக்கலாம். தம் பிள்ளைகள் படைகளில் சேருவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். இன்னும் யுத்தம் முடிய வில்லை யாகையால் இளைஞர்கள் மேலும் மேலும் படைகளில் சேர வேண்டியது அவசியம் என்று அவர்களுக்கு நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். யுத்தம் முடிய வெகு காலம் செல்லலாம். அப்போது நம் மாகாணத்தி லிருந்து அநேக இளைஞர்கள் போர் முனைக்குப் போக வேண்டி நேரலாம். இதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி பயத்தைப் போக்கலாம்.

இது சமாதானமான கால மல்ல, யுத்த காலம் என்னும் எண்ணத்தைப் பொது மக்கள் உள்ளத்தில் ஊன்றும்படி செய்ய வேண்டும். அதற்கேற்றபடி, நம் ஒவ்வொருவர் வாழ்க்கை முறையையும் மாற்றி யமைத்துக் கொள்ள வேண்டும். சிக்கனமான முறையில் எளிய வாழ்க்கையை நாம் நடத்தி எவ்வளவு தொகை மீதி செய்யக் கூடுமோ அவ்வளவு தொகைக்கும் சேம நிதிப் பத்திரங்களாவது, யுத்தக் கடன் பத்திரங்களாவது வாங்கிக் கொள்ள வேண்டும். சமாதான காலத்திய இன்ப வாழ்வை மறந்து விட வேண்டும். யுத்த காலத்தின் கொடுமைகளைத் தான் நம் மனதில் நினைக்க வேண்டும். அரசியல் துறையிலும், சமூதாயத் துறையிலும் மற்றெல்லாத் துறைகளிலும் நம் பழைய நிலைமையை மறந்து விட வேண்டும். தற்கால நிலையில் நம் கவனத்தைச் செலுத்தி எதிர்கால வாழ்வில் கண்ணோட்டமாயிருக்க வேண்டும்.

வெளி ஜில்லாக்களில் உள்ளவர்கள் ஏராளமாக எல்லா வகை உணவுப் பொருட்களையும் சாகுபடி செய்ய வேண்டு மென்று தூண்ட வேண்டும். ஏனென்றால் உணவுப் பஞ்சம் ஒருக்கால் ஏற்படக் கூடும். புதிதாக எந்த அளவிற்கு நிலம் சாகுபடியாகிறதோ, அந்த அளவிற்கு நம் மாகாணத்திற்கு நல்லது.

**தோல்வி மனப்பான்மையைத் தடுக்கவும்.**

எல்லா வகைகளிலும், தோல்வி மனப்பான்மையை, ஒவ்வொருவரும் தடுக்க வேண்டும். ஜப்பானியர்களோடு நேசம் கொண்டாட வேண்டு மென்று சொல்லுவது கோழைத் தனமாகும். பொய் வதந்திகள் ஒருவர் வாயினின்று பிறந்து, பிறர் வாயிலிருந்து பெருகிப் பிறந்து, உருமாறி விடுகின்றன. இவற்றையும் தடுக்க வேண்டும். ஜப்பானியர்கள் இந்தியாவை விட்டுப் போகும் போது தம் கை யாட்களை இங்கே வைத்து விட்டுப் போய் இருக்கிறார்கள் என்பதில் கொஞ்சம் கூடச் சந்தேகமே கிடையாது. இந்தக் கை யாட்கள் இம்மாகாணத்திலுள்ள ஜனங்களைப் பயமுறுத்த தம்மால் ஆனவையெல்லாம் செய்கிறார்கள். இந்தியா முழுதிலும் இவர்கள் வேலை செய்கிறார்கள் ; முடிவில் ஜப்பானியர்கள் வெற்றி யடைவார்கள் என்று கூறுகிறார்கள். இந்த துர் பிரசாரம் வெகு விரைவாகப் பரவுகிறது. இந்தப் பிரசாரத்தையும் தடுக்க வேண்டும். நாள் தோறும் பொய் மூட்டைகளை அளக்கும், டோக்கியோ ரேடியோவைக் கேட்காதீர்கள். அகில இந்திய ரேடியோவும், பி.பி.சி. ரேடியோவும் உண்மைகளையே கூறுகின்றன. இந்த உண்மைகள் சில சமயங்களில் விரும்பத் தகாதனவாகவும் இருக்கலாம்.



'ஜப்பானுக்கு மகத்தான வெற்றிகள் கிடைத்திருக்கின்றன ; ஆகையினால் ஜப்பான் தான் யுத்தத்தில் ஜெயிக்கும். "அப்போது தாம் சென்று யுத்தப் போர் முனையிலோ யுத்தமுயற்சியிலோ ஈடுபட வில்லை என்றும், ஜப்பானியர்களுக்கு விரோதமாகத் தாம் எதுவும் செய்ய வில்லை என்றும், கூறி, நாங்கள் நல்ல பிள்ளைகள், எங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறக் கூடிய தோல்வி மனப்பான்மை படைத்தவர்களும் இருக்கின்றார்கள். இந்த மனப்பான்மை அதிகமாக இல்லை. என்றாலும், இப்படிப்பட்ட மனப் பான்மை யுடையவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். இந்த மனப் பான்மை அவர்களுடைய கேவலமான, நாட்டுப் பற்றில்லாத, கோழைத் தனத்தைத் தான் குறிக்கிறது. இப்படிப்பட்ட மனப் பான்மையைப் போக்க, நல் லெண்ணமுடைய அனைவரும் தம்மாலான முறைகளை யெல்லாம் கையாள வேண்டும். எதிர் காலத்தில் நிகழக் கூடியவற்றை எதிர்க்க அவர்களை ஆயத்தப் படுத்த வேண்டும் அவர்கள் உண்மையை உணரும்படி செய்ய வேண்டும். ஜப்பானியர்கள் ஒருக்கால் வெற்றி பெற்று வந்த போதிலும் கூட அவர்கள் மதிக்காத கோழைத் தனமான போக்கில் நம்பிக்கை கொள்ளக் கூடாது என்று எடுத்துச் சொல்லுங்கள். 'ஜப்பானியர்கள் ஒருக்கால் வெற்றி பெற்ற போதிலுங் கூட' என்று நான் கூறியதிலேயே, அவர்கள் வெற்றி யடைய முடியாது என்னும் பொருள் அடங்கியிருக்கிறது. ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய மூன்று நாடுகளும் ஒரே மாதிரியாக பிறரைக் கொடுமைப்படுத்தும் மனப் போக்குடையன. உலகத்தையே கட்டியாள வேண்டும் என்னும் பேராசை கொண்டவை. இதன் பொருட்டு அவர்கள் பிறநாடுகளில் நுழைந்து, வென்று, அந்த நாட்டு மக்களை கொலை செய்கிறார்கள். அவர்கள் வென்ற மற்ற நாட்டு மக்களை அவர்கள் எப்படி நடத்துகிறார்களோ, அதுபோலவே தான் உங்களையும் நடத்துவார்கள். ஜப்பானியர்களை வெல்ல யாராலும் முடியாது என்பது தோல்வி மனப்பான்மையுடையவர்களின் வாயிலிருந்து கிளம்புவது. எனவே, இது பற்றி நீங்கள் எச்சரிக்கையா யிருக்க வேண்டும். ஜப்பானியர்களை வெல்ல யாராலும் முடியாது என்பது தப்பு. அவர்கள் செய்த துரோகத்தினால் அவர்களுக்கு முதலில் சில வெற்றிகள் கிடைத்திருக்கலாம். ஆனால் முடிவு கட்டுவதற்கான பருவம் இன்னும் வரவில்லை. அந்தக் காலத்தில் ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளைப் போலவே ஜப்பானும் தோல்வி யடைவதை நாம் காண்போம் (கரகோஷம்). இவர்கள் அனைவரையும் நாம் வெல்ல வேண்டும். நாம் ஜெர்மனியை முதலில் வென்று விடுவோமானால், அதன் கூட்டாளிகள் தாமாகவே தலை கீழாய்க் கவிழ்ந்து தோல்வி யடைவார்கள்.

அச்சு சர்க்கார்களை நாம் வென்று, அவர்களை உச்ச ஸ்தானத்தி லிருந்து நிச்சயமாகக் கீழே இறக்கி விட முடியும் என்று நான் உறுதியாகச் சொல்லுகிறேன். எப்படித்தெரியுமா? நேச தேசங்களிடம் எனக்கு பரிபூர்ண நம்பிக்கை யுண்டு. அவற்றின் ஒற்றுமையில் எனக்கு நம்பிக்கை யுண்டு. ஏனென்றால், அவர்கள் நினைவும் செயலும் போராட்டமும் ஒன்று போல் இருக்கின்றன. இந்த நாடுகளில் உள்ள ஒவ்வொருவரும் ஒன்று பட்டிருக்கிறார்கள். தேசீயப் போர் முனையைத் தோற்றுவிக்கும் இன்று, நான உங்களிடம் கோருவது அது போன்ற ஒற்றுமையைத் தான். எதிரியை முடிவாகத் தோற்கடிக்க வேண்டும் என்னும் ஒரே எண்ணத்தைக் கொண்டு எல்லோரும் ஒன்றுபட்டு யோசிக்க வேண்டும், செயலாற்ற வேண்டும், போராடவேண்டும். அந்த முடிவான தோல்வி அவர்களுக்கு ஏற்படுவது உறுதி. ஏனென்றால், நேச தேசத்தார்கள் அத்தனைப் பேரும் ஒன்று பட்டிருப்பது மட்டு மல்லாமல், ஏராளமான பலமும் படைத்திருக்கிறார்கள். இந்தப் பலம், நாள் தோறும், வாரந் தோறும், மாதந்தோறும் பெருகிக் கொண்டே போகிறது. உள்ளூரில் எவ்வளவு பலம் இருக்கிறது என்று நீங்கள இன்று மாலை ஒருவாறு நேரில் கண்டீர்கள். இப்படிப் பட்டதோர் பலம் நமக்குக் கிடைக்கும் என்று, சில மாதங்களுக்கு முன் நாம் கனவு கூடக் கண்டிருக்க மாட்டோம். இனி, நாம் காணப் போவதின் ஒரு மிகச் சிறிய பகுதி தான் இன்று கண்டது. இந்தியாவைப் பாதுகாக்கும் பொருட்டு, இந்தத் தருணத்திலே வாரந் தோறும் எல்லா விதமான தளவாடங்களும் ஏராளமாக வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. அன்றியும் எதிரிகளைத் தாக்க இதை நாம் ஒரு தளமாகவும் பயன் படுத்தப் போகிறோம். இதற்காகவும் ஏராளமான தளவாடங்கள் வந்து குவிகின்றன. நாம் எப்போதும் தற்காப்பிலேயே இருந்து கொண்டிருக்க முடியாது. தாக்கிப் போராட வேண்டிய நிலைமையும் மீண்டும் ஏற்படும். இந்திய மக்களின் ஆதரவைக் கொண்டு எதிரிகளை நாம் தாக்குவோமானால், அது எவ்வளவு அற்புதமாயிருக்கும்! சந்தர்ப்பம் ஏற்படுகிற போது ஜப்பானியர்களை தகுந்தபடி உதைக்கிறதற்கு நம் படைகளுக்கு அது ஊக்கந் தரும்.

**நேச தேசங்களின் பலம் பெருகு கிறது.**

இந்த யுத்தம் எப்போது முடியும் என்று எனக்குத் தெரியாது. 'வானத்தை வில்லாய் வளைத்து விடுவேன' என்று வீண் வாக்குறுதி தருவதில் பயன் இல்லை. ஆனால், ஒன்றுமட்டும் எனக்குத் தெரியும். அதாவது, தளவாடங்கள், படைகள், விமானங்கள் ஆகியவற்றிலும், மற்றெல்லா வகைகளிலும் நாம் நாளுக்கு நாள் மிகவும் பலமடைந்து வருகிறோம். இது வரை ஜெர்மனியின் உற்பத்தி உச்ச நிலையை அடைந்திருக்க வேண்டும். இது வரை நமக்குச் சில தோல்விகள் ஏற்பட்டாலும், இறுதியில் நாம் உறுதியாக வெற்றி யடைவோம் என்று மட்டும் நான் சொல்லுவேன். இதற்குக் காரணம் நேசதேசங்கள், தம் ஒற்றுமையைக் கொண்டு உதவுவது தான். அந்த வெற்றி எல்லா வகைகளிலும் முழு வெற்றியாகத் தான் அமையும். நாஜி தத்துவத்தையும் பாசிச தத்துவத்தையும் அடியோடு அது அழிக்கும். இன்னும் அநேகத் தலைமுறைகளுக்கு உலகத்திலேயே யுத்தம் நடவாத முறையில் நாம் வெற்றி பெறுவோம் (கரகோஷம்).

மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் ஆங்கிலத்தில் நிகழ்த்திய இப் பிரசங்கத்தை தோழர் ராவ் சாஹிப் ஆல்பெர்ட் ஏசுதாசன் அவர்கள் சுருக்கமாகத் தமிழில் எடுத்துச் சொன்ன பிறகு, ராவ் பகதூர் டி. எஸ். நடராஜ பிள்ளை நன்றி கூறினார். அப்போது, மிகுந்த ஊக்கத்தோடு காப்டன் ஹார்வியும், மிஸ்டர் மாத்யூகம் செய்த அரும் பணிகளை, அவர் பாராட்டினார்.

# ஜப்பானியர் ஆட்சியில் மதங்களுக்கு ஆபத்து.

## மற்ற மதங்களை நசுக்க முயற்சி,

ஜப்பானியர் வென்றுள்ள நாடுகளில் மத சம்பந்தமான சுயேச்சை கூட மறைந்து வருகிறது. இந்த நாடுகளை அடிமை நாடுகளாக்க ஜப்பான் திட்டம் இட்டிருக்கிறது. இங்குள்ளவர்கள் எல்லோரும் ஜப்பானியர் மதமான ஷின்டோய்ஸத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நிர்பந்திக்கப் படுவார்கள்.

மகா கிழக்காசிய கூட்டு முன்னேற்றத் திட்டத்தை நிலை நாட்ட வேண்டி எல்லா வகை மத வேற்றுமை

களும் ஒழிந்து ஒற்றுமைப் பட வேண்டு மென்று ஜப்பான் ரேடியோ கூறுகிறது.

ஆசியாவில் உள்ள எல்லா மதங்களையும் ஒன்று படுத்தி ஒரு ஆசிய மதச் சங்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சமீபத்தில் டோக்கியோவில் நடைபெற்ற டோக்கியோ மத மகா நாட்டின்போது ஒரு திட்டம் வகுத் திருக்கிறார்கள். இதிலிருந்து ஜப்பானியர் கைப்பற்றிய நாடுகளில் உள்ள மத சம்பந்தமான ஏதேச்சைகளைக் கூட அழித்து விடுவார்கள் என்று அமெரிக்கர்கள் கருதுகிறார்கள்.

**மதங்களின் இணைப்பு.**

அடுத்த செப்டெம்பர்மீ ஒரு மத மகாநாடு நடைபெறு மென்றும், அதற்கு சீனு மங்கோலியா, மஞ்சுலியா, இந்தோசீனு, தாய்லந்து, பர்மா, இந்தியா, இலங்கை, பிலிப்பைன் தீவுகள், மலேயா, டச்சுக் கிழக் கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளி லிருந்து பிரதிநிதிகள் அழைக்கப் படுவார்க ளென்று டோக்யோ ரேடியோ கூறுகிறது. மேலும், இந்து மதம், புத்த மதம், கிருஸ்துவ மதம், இஸ்லாம் மதம், முதலிய எல்லா மதங்களையும் குறித்து விவாதித்து இவற்றை ஒன்று படஇணைப்பதைக் குறித்து அப்போது விவாதிக்கப்படும் என்றும் அறிவிக்கிறது. இதன் மூலம் மற்ற மதங்களை எல்லாம் ஒழித்து விட்டு, மறை முகமாக ஷின்டோ மதத்தை நிலை நாட்டுவதாகும் இது என்றும், இதனுல் மற்ற எல்லா மதங்களும் அதற்குக் கீழ்பட்டிருக்க நேரும் என்றும் அமெரிக்க உத்தியோகஸ்தர்கள் கருதுகிறார்கள். ஜப்பான் அரசருடைய மதம் ஷின்டோ மதம். இந்த மத விஷயங்களை நடத்துகிறவர்கள் ஜப்பான் இராணுவ அதிகாரிகள். தாம் வென்ற நாடுகளில் வசிக்கிறவர்களை இந்த மதத்தில் சேரும்படி வற்புறுத்தும் பொருட்டுத்தான் இந்த சூழ்ச்சி நடக்கிறது. தாம் கைப்பற்றிய நாடுகளில், அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அறிவுத் துறையிலும் தம் கொள்கை இது தான் என்று ஜப்பானியர் போக்கி லிருந்தே ஒருவாறு அறியலாம். தாம் வென்ற நாடுகளிலுள்ள அரசியல் ஸ்தாபனங்களை ஜப்பானியர் நசுக்கி விடுகிறார்கள். அவர்களுடைய செல்வ மெல்லாம் கப்பல் கப்பல்களாகக் கொண்டு போய் விடுகிறார்கள். தம் மொழியையும் அடிமைப் பட்ட நாட்டினர் கற்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்.

# லிபியாவில் இந்தியச் சேனைகள்.

## சர் ஷாபத் அகமத் கான் ஆப்பிரிக்கா விஜயம்.

மத்திய கிழக்குப் பிரதேச யுத்த களங்களைப் பார்வை யிட்டு விட்டு, இப்போது தான் சர் ஷாபத் அகமத் கான் ஜோஹனுஸ்பரோ போய்ச் சேர்ந்தார். அவர் காங்கோவிற்கும் சென்றிருந்தார். லிபியா பாலை வனத்தில் முக்கியமான இந்தியப் படைகளைப் பார்வை யிட்டார். பிறகு, பிரிட்டிஷ் காங்கோவின் அரசியல், பொருளாதார நிலையைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்படி அந்நாட்டு கவர்னர் ஜெனரல் அனுப்பிய அழைப்பை ஏற்றுக் கொண்டு, அங்கேயும் சென்றார். அவரைப் பத்திரிகைப் பிரதிநிதி பேட்டி கண்ட போது, அவர் கூறியதாவது:—ஜெனரல் ஆசின்லக் தலைமையில் உள்ள படைகளின் உணர்ச்சியைக் கண்டு நான் ஆச்சரிய மடைகிறேன்.

இந்த யுத்தத்தில் தலை சிறந்து விளங்கும் இரண்டு படைத் தலைவர்களும் இந்தியப் படைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களா யிருப்பது பற்றி இந்தியர் நன்றி பாராட்ட வேண்டும்.

பிறகு சர் ஷாபத் எல்லா வகைப் படையினருடனும் பேசினர். ஏழு படைகளுக்கு முன்னுல், இந்துஸ்தானியில் ஒரு பிரசங்கம் செய்தார். வட ஆப்பிரிக்காவிலுள்ள நேச நாட்டுப் படைகள், சிரிநெய்காவி லுள்ள நாஜிகளை விட யுத்தத் தளவாடங்களிலும், உணர்ச்சியிலும் ஒழுக்கத்திலும் எத்தனையோ மடங்கு மேலானவர்கள்.

வீரத்திலும் ஊக்கத்திலும் மிகவும் நல்ல பெயரை, இந்தியப் படைகள் தமக்கு உண்டாக்கிக் கொண்டன. இதன் பயனுக, வட ஆப்பிரிக்கா முழுதும், இந்தியாவின் மதிப்பு பெரிதும் உயர்ந்து விட்டது. இந்தியச் சேனைகளை விட உயர்வாக வேறு எந்தச் சேனையும் நடந்து கொண்டிருக்க முடியாது.

இந்தியர்களுக்கும் வட ஆப்பிரிக்கர்களுக்கும் ஏற்பட்டுள்ள பரஸ்பர நன் மதிப்பைக் கண்டு நான் மகிழ்ச்சி யடைகிறேன். எதிர் காலத்தில் இந்த இரண்டு நாடுகளுக் குள்ளும் ஒரு நல்ல கூட்டுறவு அமைவதற்கு இது ஒரு நல்ல அறிகுறியாகக் காணப்படுகிறது.

# "விடுதலை பவனி வெற்றி பவனியாக மாறட்டும்."

## ஜெனரல் ஸ்மட்ஸ் பிரசங்கம்.

பிரிட்டிஷ் தென் ஆப்பிரிக்காவின் முதல் மந்திரியான பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் சமீபத்தில் ஜோஹனுஸ்பரோ என்னும் நகரத்தில் விடுதலை பவனியொன்றை ஆரம்பித்து வைத்தார். அப்போது அவர் பேசியதன் சுருக்கமாவது:—

ஜப்பானுக்குக் குருட்டு அதிர்ஷ்டம் அடித்தது. வெற்றிகளும் கிடைத்தன. இப்போது நிலைமை மாறிவிட்டது. இனி சக்திக்குத் தகுந்தபடி தான் பலன் கிடைக்கும். இந்த யுத்தத்தில் நடப்பு வருஷத்தில் மிகவும் முக்கியமான அம்சம், ஜப்பான் யுத்தத்தில் கலந்தது அல்ல. ஆனுல் நமது கட்சியில் உலகத்திலேயே மிகவும் மகத்தானவையும் மகா பலம் பொருந்தியவையுமான ருஷ்யாவும் அமெரிக்காவும் சேர்ந்திருக்கின்றன. இது தான் முக்கியமானது. இந்த இரண்டு நாடுகளும் நம் கட்சியில் சேர்ந்ததனுல், அச்சு நாடுகளுடன் ஜப்பான் சேர்ந்ததினுல் அவற்றிற்கு ஏற்படக் கூடிய பலத்தை விட, அதிக பலம் பெற்றிருக்கிறோம்.

அல்லாமலும் நாம் ஏராளமாக உற்பத்தியும் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். யுத்தத் தளவாடங்களிலும், வெடி மருந்துகளிலும் இருந்த குறைபாடுகளை நாம் நீக்கிக் கொண்டோம். நம் படைகளை யுத்தத்திற்குப் பழக்கவும் ஆயத்தம் செய்யவும் போதுமான அவகாசம் இருந்தது. அதன் பயனுக, நிலைமை முன்பிருந்ததை விட மிகவும் முன்னேற்ற மடைந்திருக்கிறது.

**1942**-ம் வருஷத்தில் மிக மிகக் கடுமையான யுத்தம் நடை பெறப் போகிறது என்று எனக்குத் தெரியும். இந்த யுத்தத்திலேயே இந்த வருஷந் தான் மிகவும் கடுமையானதாக இருக்கும். இது வரையிலும் கண்டிராத முறையில் தென் ஆப்பிரிக்காவிலும் கூட, இதனுல் பல விளைவுகள் ஏற்படக் கூடும். இந்த நிலையை நான் எதிர் பார்க்கிறேன். இதன் பயனுக, ஒரு புதிய சகாப்தம் பிறக்கலாம் என்று நினைக்கின்றேன். இந்த யுத்தத்தின் முடிவை நாம் காண முடியாதிருந்த போதிலும், அந்த முடிவு எந்தத் திசையிலிருந்து வரும் என்று கண்டு கொள்ளலாம். இப்போது நடை பெறும் விடுதலை பவனி, அப்போது வெற்றி பவனியாக மாறட்டும்.



செங்குத்தான பாறை மேல் ஏறும் பிரிட்டிஷ் கமான்டோ படை.



இவர்கள் மிகவும் கடுமையான வாழ்க்கைக்குத் தங்களை ஆயுத்தப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பல நாட்களுக்குத் தண்ணீரும் தூக்கமும் இல்லாமல் காடு மலைகளெல்லாம் ஏறிப் போராடுவார்கள். எதிரி டாங்கிகளைக் கண்டு பிடித்து திடீரென்று கைப்பற்றுவதில் மிகவும் கெட்டிக்காரர்கள்.

# பர்மாவைப் பற்றி வேவல் கருத்து

## இழந்ததற்குக் காரணம் என்ன ?

லண்டன் "டெய்லி டெலிகிராப்" பத்திரிகையின் நிருபர் ஒருவர் இந்தியப் பிரதம படைத் தலைவர் சர் ஆர்ச்பால்ட் வேவலை அவருடைய முகாமில் மே மாதம் 13-ம் தேதி பேட்டி கண்டு பேசிய போது நம் படைத் தலைவர் கூறியதாவது:—

நாம் இரங்கூனை இழந்த பிறகு, கடல் மார்க்கமாக சப்ளைகள் வருவதற்கே இடம் இல்லாமல் போய் விட்டது. மழை காலம் வரையிலுமாவது வட பர்மாவை நாம் காப்பாற்றிக் கொண்டிருக்கலா மென்று நாம் எதிர்பார்த்தோம். நமது இடது புரத்தி லிருந்த சீனப் படைகளைப் பிளந்து கொண்டு ஜப்பானியர் படைகள் வந்து விட்டன. இதன் பயனுக லாஷியோவை இழந்தோம். இதை விட முக்கியமான விஷயம் ஒன்று உண்டு. சீனப் படைகளுக்கும் நமக்கும் இப்போதைக்குத் தொடர்பு இல்லாமற் போய் விட்டது. நம் படைகள் மாதக் கணக்காக ஓய்வு என்பதே இல்லாமல் மிகத் திறமையோடு போராடினுர்கள். இவர்களுக்குப் பக்க உதவி யில்லை; வசதிகள் இல்லை. போதாக் குறைக்கு பின்புறமிருந்து சுட்டுக் கொல்லுவதற்கு பர்மியர்கள் தயாராயிருக்கின்றனர். ஒரு குண்டு முதலில் விழுந்தவுடனேயே எல்லாத் தொழிலாளர்களும் ஓடிப் போய் விட்டார்கள். இதன் பயனுக, நாட்டின் நிலைமை, தலை. கீழாக மாறி விட்டது.

பர்மாவில் 5 டிவிஷன் படைகளை ஜப்பானியர் வைத்திருக்கிறார்கள். இப்போதைக்கு, மேலும் பெரிய சேனைகளை இங்கே அனுப்புவார்கள் என்று நாம் எதிர் பார்க்க வில்லை. நாம் போராட இப்போது சாதகமா யிருக்கிறது. எதிரிகள் மேலும் வருவதற்கு மழை தடையா யிருக்கிறது. மலைப் போராட்டத்தில் ஜப்பானியர் மிகவும் கெட்டிக்காரர்கள் தான். என்றுலும், இந்த எல்லைப் புரத்திலே நாம் அவர்களுடன் போராடுவதற்கு, தகுந்த பலத்தோடு தான் இருக்கிறோம். 'நான் சென்ற இடங்களில் எல்லாம், நம் படைகள் மிகவும் உற்சாகமாகவே இருக்கிறார்கள். ஜப்பானியர்களை வென்று விடலாம் என்னும் உறுதியோடு இருக்கின்றார்கள்.

# ஜப்பானியர்கள் ஆதரவு என்றுல் என்ன ?

## பசியும் கொடுமையுந் தான்.

சென்ற **1941**-ம் வருஷம் ஜப்பான் சர்க்காரும், இந்தோ-சீனு சர்க்காரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இதன்படி, இந்தோ சீனர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க ஜப்பானியர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனுல், இப்போது அங்கே நடப்பது என்ன ? வளம் மிகுந்த அந்த நாட்டைச் சூறையாடுகிறார்கள். ஜனங்களைக் கொடுமைப் படுத்துகிறார்கள், இனி, ஜப்பானியர் ஆதிக்கத்தில் மகா கிழக்காசியப் பொருளாதாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தோ-சீனு அமையும் என்று டோக்கியோ ரேடியோ கூறுகிறது. பொருள் நாசம், பசிப்பிணி, ஊழியம் செய்யவேண்டும் என்னும் கட்டாயம் இவற்றுல் அந்த நாட்டு மக்கள் கஷ்டப் படுகிறார்கள். ஜப்பானியர்கள் உணவு விகிதம் மிகவும் குறைவானது. அதைவிடக் குறைவான நிலைக்கு இந்தோ-சீனு மக்கள் வந்து விட்டார்கள்.

-2

# ஒரு கையில் துப்பாக்கி மறு கையில் சமாதானம்.

## விடுதலை வழங்கும் ஜப்பான் போக்கு.

### ஜெய தேவர் ரேடியோ பேச்சு.

*திருவாளர் ஜெய தேவர் கீழ் நாட்டு விவகாரங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்யும் ஒரு மாணவர். இவர் லண்டன் பி.பி.சி. ரேடியோ மூலம் 1942-ம்வருடம் மேமீ 13-ம் தேதி ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது :—*

அரசியல் தந்திரத்தில் கைதேர்ந்த பேர்வழி ஜப்பானிய முதல் மந்திரி ஜெனரல் தோஜோ. பிரிட்டிஷாரைத் தலைகீழாகக் கவிழ்த்து விட்டு "இந்தியா இந்தியருக்கே" என்னும் நெடுங் கால ஆசையை மீண்டும் புதுப்பித்துக் கொள்ளுங்கள்" என்று இந்தியர்களுக்கு 'நேசமான' முறையில் இவர் ஆலோசனை கூறுகிறார். இவர் மகா கொடியவர். எனவே இவருக்கு 'சவரக் கத்தி' என்று புனைபெயர் இட்டிருக்கிறார்கள். இந்த ஆலோசனை ஒரு முறையில் வேண்டுகோள்; மற்றொரு முறையில் பயமுறுத்தலும் ஆகும். நேசத்தோடு கைகுலுக்க ஒரு கையை நீட்டுகிறார். மறுகையில் துப்பாக்கியைக் கொண்டு உங்கள் பேரில் குறி பார்க்கிறார். "இந்திய மக்களைத் தம் எதிரிகளாகக் கருதவேண்டும் என்பது ஜப்பானுடைய எண்ணமே அல்ல; என்றாலும் யுத்தக் கொடுமைகளுக்கு அவர்களும் ஆளாக நேருமே என்று தான் பெரிதும் அனுதாபப் படுகிறார்கள்," என்று வெகு கெட்டிக் காரத் தனமாக எதும் தெரியாத மகா புண்ணியவானைப் போலப் பேசுகிறார். இவர்கள் வென்ற சீனப் பகுதிகள், மலேயா, ஜாவா, பர்மா ஆகிய நாடுகளில் இவர்கள் வாக்குறுதி கொடுத்தது போல் நடந்து கொள்ள வில்லை என்பது உலகறிந்த உண்மை. அங்கே அவர் கையாண்ட துப்பாக்கி இன்னும் புகைந்து கொண்டு தான் இருக்கிறது.

**பழைய பாடந்தான்.** 1931-ம்வருடம் மஞ்சூரியாவை ஜப்பானியர் தாக்கிய போது தம் தற்காப்பிற்காகவே அதைத் தாக்கியதாகக் காரணம் கூறினார்கள். ஆஸ்திரியா, ஜெக் கோஸ்லோவேகியா, லக்செம்பர்க், பெல்ஜியம் முதலிய நாடுகளைத் தாக்கிய ஜெர்மனியுங் கூட, இதே பாடத்தைத் தான் படித்தது. 1931-ம்வருடத்திலும் கூட, தமக்கு சீனர்கள் மீது கொஞ்சங் கூட வெறுப்பே கிடையாது என்று தான் வாய் டம்பம் பேசினார்கள். ஆனால் 'நன்றி கெட்ட' சீனர்கள் சியாங் கெய் ஷேக் ஆட்சியைக் கவிழ்க்க வில்லை. இந்த ஆட்சி மட்டுந் தான் ஜப்பானியர்களுக்கு எதிரியாம்! இந்தப் பழைய பாடத்தைத் தான் மீண்டும் இப்போது ஜப்பானியர்கள் இந்தியர்களிடம் படிக்கிறார்கள். இந்த யுத்தம் கடவுளால் நிர்ணயிக்கப் பட்ட புதிய தர்ம யுத்தமாம்! இதிலிருந்து மூடி வைத்துக் கழுத்து அறுக்கும் இயல்பு உடையவர்கள் ஜப்பானியர் என்று தெளிவாகிறது.

**ஒரு சூழ்ச்சி.** நம் தலைவாசலில் ஜப்பானியர்கள் வந்து விட்டார்கள். இவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய யுத்தத் திட்டம் என்ன என்றும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்கு எந்த விதமான பிரதிப் பிரயோசனத்தையும் எதிர் பாராமல் நமக்கு விடுதலையைத் தேடித் தருவதாக் கூறும் இந்தக் கனவான்கள் யார்? அவர்களுடைய உண்மையான நோக்கம் என்ன? ஆசியா, ஆசியாக்காரர்களுக்கே, என்னும் இயக்கத்திற்குத் தலைமை தாங்கி உபாத்தியாயர் தனம் செய்ய இவர்களுக்கு என்ன உரிமையுண்டு? தம் நாட்டிலேயுள்ள ஆராய்ச்சியாளருக்கும் அறிஞர்களுக்கும் விடுதலை யளிக்க மறுக்கும் இவர்கள் நமக்கு விடுதலையைத் தேடித் தருவதாகக் கூறுவதை எப்படி நம்புவது? இவர்களில் ஆயிரக் கணக்கானவர்களை ஏன் சிறைப் படுத்தி வைத்திருக்கிறார்கள்? இவர்கள் தானா நமக்கு விடுதலை தேடித் தருகிறவர்கள்! தன் நலத்தின் பொருட்டு நம்மை ஏமாற்ற அவர்கள் செய்யும் சூழ்ச்சி இது.

**அடக்கு முறைகள்.** அறிவை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகத் தத்துவ சம்பந்தமான கருத்துக்கள் பரவ ஒட்டாதபடி "சமாதானப் பாதுகாப்புச் சட்டப்படி" நசுக்கி விடுகிறார்கள். எல்லா நாடுகளிலும் புகழ் வாய்ந்திருக்கும் மிதவாதிகளான பேராசிரியர்களும், பாரிஸ்டர்களும், டாக்டர்களும், ஆசிரியர்களும் சிறைப் படுத்தப் பட்டார்கள். இந்த அபாயகரமான கருத்துக்களை யுடைய மாணவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

"அரசாங்கத்தின் ஒரு பகுதி தான் அரசர்" என்னும் உண்மையை எடுத்துக் கூறிய பேராசிரியர் மினோக் என்பவரை அவர் பதவியி லிருந்து டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். ஏனென்றால் அரசன் தெய்வப் பிறவியாம்! சட்டம் முதலிய கட்டுப் பாடுகள் அவரைக் கட்டுப்படுத்தாவாம்!

நாஜி ஜெர்மனியில் தொழிலாளர் இயக்கமும் தொழிற் சங்கங்களும் எப்படி நசுக்கப் படுகின்றனவோ, அதே முறையிலே தான் ஜப்பானிலும் ஆயிரக் கணக்கான தொழிற் சங்கத்தார்கள் நசுக்கப் படுகிறார்கள். அவர்கள் செய்த குற்றந்தான் என்ன? தமக்கு சாதாரண வாழ்க்கைக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்ள வேண்டி, கொஞ்ச அதிகச் சம்பளம் கேட்கிறார்கள். தங்களுக்கு, மேலும் கொஞ்சம் சுயேச்சை வேண்டு மென்று கோருகிறார்கள். இது தான் அவர்கள் செய்த 'குற்றம்.'

நாஜிகளும் ஜப்பானியர்களும் தம் வாழ்க்கையின் போக்கில் ஏறக்குறைய ஒத்திருக்கிறார்கள். ஜெர்மனியைப் போலவே ஜப்பானிலும் சிறந்த அறிவியக்க நூல்கள் வெளிவர ஒட்டாதபடி நசுக்கி விடுகிறார்கள். சமீபத்தில், பிரஞ்சு மொழியில் சிறு கதைகள் எழுதுவதில் மிகவும் புகழ்பெற்றவரான 'கை டி நாப்பசன்' எழுதிய ஒரு நூலை ஜெர்மனியில் தடுத்து விட்டார்கள். ஜப்பானியக் கல்வி இலாக்கா 'தேசீய அரசியல்' என்றொரு நூலை வெளியிட்டிருக்கிறார்கள். அன்றியும் அநேக சங்கங்களின் வாயிலாக, அரசன் ஆணைகளுக்கு நாம் கண் மூடித் தனமாகக் கீழ்ப்படிய வேண்டு மென்றும் போதிக்கிறார்கள். இதுதான் நாஜிகள் பிரசார முறையும்.

சர் ரவீந்திரநாத் தாகூர் 1937-ம்வருடம் கீழ்க்கண்டவாறு எழுதி யிருக்கிறார் :—

கீழ் நாடுகளில் காப்பார் அற்றிருக்கும் மக்களுக்கு ஜப்பான் மகா கொடிய ஆபத்தாக இருக்கப் போகிறது என்பதற்குத் தெளிவான அறிகுறிகள் இப்போதே தோன்றுகின்றன. பொருளாதாரத் துறையில் கொள்ளையடிக்கிறார்கள். நாடுகளையும் பலாத்காரமாகக் கைப்பற்றுகின்றனர். இந்தக் கொடுமைகளைக் கேவலமான முறையில் மறைக்க வேண்டி, அநேகம் பேர்களை ஒரே மூச்சில் கொன்று விடுகிறார்கள்.



# வே ண் டு வ து எ ன் ன?

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவுவேண்டும், உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் என்று ஆரம்பித்து, பொய்மை பேசாதிருக்கவேண்டும், மதிவேண்டும், நின்கருணை நிதி வேண்டும், நோயற்ற வாழ்வில் நான்வாழ வேண்டும், அப்படி இப்படி என்று ஸ்ரீ இராமலிங்க ஸ்வாமிகள், கந்த கோட்ட கடவுளைப் பார்த்து ஏதேதோ வேண்டிக் கொண்டிருக்கிறார். அவரைப் போலவே தான் நம்மவர்களில் பலரும் பகவானைப் பார்த்து, எதை எதையோ வேண்டும், வேண்டும் என்று கேட்ட வண்ணமாக இருக்கிறார்கள். அவ்வாறு கேட்கிறதிலே தப்பு ஒன்றுமில்லை. ஆனால் இப்பொழுது, நாம் எல்லோரும் வேண்டுவது, நோயற்ற வாழ்வு, பொய் பேசாதிருப்பது, நல்லவர்கள் உறவு, இது மாதிரி விஷயங்கள் தவிர, தோல்வி மனப்பான்மை வேண்டாம், இறுதியில் வெற்றி என்ற நம்பிக்கை வேண்டும், சீக்கிரமே அச்சு நாட்டினரின் இடுப்பு ஒடிய வேண்டும், நேச நாட்டினர் கை ஓங்கவேண்டும், ஆதாயத்திலே ஆதிக்கம் பெற வேண்டும். ஐரோப்பாவிலே இரண்டாம் முனை ஏற்படுத்தப்பட வேண்டும். ருஷ்யர்களுக்கு பன்மடங்கு பலத்தைப் பகவான் கொடுக்க வேண்டும். சீனர்கள் அதி சீக்கிரமே வெல்லவேண்டும். ஹிட்லருக்குக் கண் முழி பிதுங்க வேண்டும், உலகத்தி லிருந்து சீக்கிரமே யுத்தம் ஒழிய வேண்டும். என்றெல்லாம் பிரார்த்தனை செய்ய வேண்டிய காலம் வந்திருக்கிறது. எல்லாவற்றையும் வேண்டினாலும், வேண்டா விட்டாலும், இந்தத் தோல்வி மனப்பான்மை இல்லாதிருக்க வேண்டும்; எதிரியை நின்ற விடத்திலேயே எதிர்க்கலாம் என்ற துணிவு ஏற்பட வேண்டும் என்று மட்டும் கட்டாயம் வேண்டியே தீர வேண்டும்.

ஏன் தெரியுமா? ஒரு சிறு கதை. ஒரு மோட்டா மனுஷன். அவனுக்கு ஜென்மத்திலேயும் வியாதி என்பதே வந்த தில்லை. ஒரு நாள் கூட, சுக்குத் தட்டி கஷாயம் போட்டுச் சாப்பிட்டான், டாக்டருக்கு தட்சணை சமர்ப்பிச்சான், ஆஸ்பத்திரிக்கு நடை நடையாக நடந்தான், பகலிலும் படுக்கை விரித்துப் படுத்தான் என்பதே கிடையாது. அப்படிப் பட்ட மனுஷனைப் பார்த்து, அவனுடைய சிநேகிதர்களே ஆச்சரியப் பட்டனர். அந்த சிநேகிதர்களில் ஒரு விஷமி அவனுக்கு என்ன தோன்றிற்றோ என்னமோ, முரடனிடம் வந்தான்.

'என்ன ப்ரதர்? என்ன வந்துடுத்து உங்களுக்கு ப்ரதர்? நேற்றுக் கூடப் பார்த்தேன் சரியாக இருந்தேளே! முகம் வாடியிருக்கு! கண்ணெல்லாம் ஒரு தினுஸா யிருக்கு! தொண்டை கூட! கம்மினாப்போலிருக்கு!' என்று ஆரம்பித்தான். முரடனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்த விஷமி சொன்னதில், மருந்துக்குக் கூட நிஜக் கலப்பு கிடையாது. ஆனாலும், அவன் கேட்ட கேள்விகளும், நடித்த நடிப்பும் முரடன் மனதில் சந்தேகத்தைக் கிளப்பி விட்டு விட்டன.

கண்ணாடி முன்னாலே ஓடிப் போய் நின்றானவன். கண்களையும், கன்னங்களையும் தடவிப் பார்த்தான். கண்களைக் கையால் அகலத் திறந்து பார்த்தான். 'அ! அ!' என்று வாய் விட்டுக் கத்திப் பார்த்தான். தொண்டையைத் தடவி விட்டுக் கொண்டான். இரண்டு தடவை உட்கார்ந்து எழுந்து 'பஸ்கி' போட்டான். ஒன்றும் கோளாறு இருப்பதாகத் தெரியவில்லை.

'அப்படி மாறுதல் இல்லா விட்டால், நமது ஆப்த நண்பனான அவன் சும்மா சொல்லி யிருப்பானா? அப்படி சும்மா சொல்ல வேணு மென்று அவனுக்கென்ன தலை எழுத்தா? எனக்கே தெரியாமல் என் உடம்பு கெட்டுத் தான் போய்க் கொண்டிருக்கிறாப் போலிருக்கிறது' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் அவன்.

விஷமி சிநேகிதனும் அன்றி லிருந்து தினம் அவன் மனைக்கு வருவது, அவனுடைய உடம்பு நாளுக்கு நாள் தளர்ந்து போவதாகக் கூறுவது, உள்ளூர கறையான் மாதிரி ஏதோ கறுவிக் கொண்டே இருக்கிறாப் போலிருக்கு ப்ரதர்! நீங்கள் இப்படி அலக்ஷ்யமாக இருக்கப்படாது. உசிருக்கே ஆபத்து வந்தாலும் வந்துடக் கூடும். சும்மா வெளியில் நட மாடாதிங்க ப்ரதர்! பேசாமே நாலு நாள் படுக்கையிலேயே படுத்துக் கிடங்க. எல்லாம் சரியாப் போயிடும். எல்லாம் போறாத வேளை தான். நீங்கள் சாப்பிட்றத்துக்கு என்ன குறைவா? டிபன் சாப்பிட்றத்துக்கு என்ன குறைவா? சுக வாழ்வுக்கு என்ன குறைவா? நம்ப் கையிலே என்ன ப்ரதர் இருக்கு? எல்லாம் அவன் செயல், வருவது வந்தே தீரும், பட்றது பட்டே ஆகணும்னு சும்மாவா சொன்னாங்க பெரிய வங்க? நீங்க பயப் படாதிங்க. கொஞ்சம் உடம்பை மட்டும் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுங்க என்று சொல்லிப் போய்க் கொண்டிருந்தான்.

சும்மா குண்டு போல் இருந்த அந்த முரடன், இந்த விஷமி விதைத்த பீதி விதை பெரிய மரமாக வளர்ந்து விடவே, சில தினங்களில் உண்மையாகவே காயலாவாகப் படுத்து விட்டான். 'எனக்கு உடம்பு சௌக்கிய மில்லையா? என் கண்கள் உள்ளே போயிடுத்தா? அப்படித் தான் தோன்றது! நடை கூட தள்ளாட்றதே! வயிறிலே ஏதோகட முடாங்கறதே! என்று மனசால் எண்ணி, எண்ணி, அப்படியே படுத்த படுக்கையாகி விட்டான். ஆளே பைசலாகி விடுவான் போலிருக்கு' என்று சொல்லும் படியான கட்டம் கூட வந்துவிட்டது. அவனைக் குணப் படுத்து வதற்குள் எத்தனையோ நூறு ரூபாய்கள் அவன் பெட்டியி லிருந்து கிளம்பிப் போய்விட்டன. ஆளும் துரும்பாகி விட்டான். வியாதி வருமோ, வியாதி வந்துடுத்தோ, வியாதி தானோ என்றெல்லாம் வீணாக மனசால் நினைக்க நினைக்க, அந்தத் தரித்திரம் பிடிச்ச மனசு உடம்பையே கடைசியில் கெடுத்து விடுகிறது.

அதே போல, நாம் தோற்று விடுவோமோ; எதிரி நம்மை எல்லாம் கட்டிப் பிடித்துக் கொண்டு விடுவானோ என்ற நினைவே நம் மனசிலே ஏற்படக் கூடாது. எல்லோரும் தைரியமாக, வெற்றி நமக்கே! நம்கட்சி நியாயமான கட்சி. ஆகையால் 'நியாயமே

கடைசியில் ஜெயிக்கும்' என்ற எண்ணத்தோடு, யுத்த முயற்சியில் ஈடுபட வேண்டும். தோல்வி நினைவு சும்மா ஏற்பட்டுக் கொண்டிருந்தால் உள்ள தைரியமும், பலமும் போய் விடக் கூடும். வியாதியே இல்லாத முரடனும் வியாதியாக விழுந்தது போல, பலமிக்க நமக்கே, நமது மனதிலேற்பட்ட தவறான நினைப்புக் காரணமாக தோல்வி ஏற்படலாம்.

இதையே தான் நமது கவர்னர் அவர்களும் சென்றவாரம் தேசிய யுத்த முன்னணியை ஆரம்பித்து வைத்து, அதன் தலைவராகத் தானும் சேர்ந்த போது சொன்னார்கள். இதில் உள்ள பரந்த அர்த்தத்தைத் தமிழ் நாட்டவர் நன்குர் ரசித்துக் கொள்ள வேண்டும். யுத்த நிதி திரட்டுவதிலும், பட்டாளத்திற்கு ஆட்கள் சேர்ப்பதிலும் சென்னை மாகாணம் இந்தியாவிலேயே முதல் ஸ்தானம் பெற்று நிற்கிறது. இதே மாதிரி எல்லாத் துறைகளி லும் இது முதல் ஸ்தானத்தைப் பெற்றிருக்க வேண் டும் என்பது நமது ஆசை. இது நியாயமான ஆசை தானே! ஓட்டப் பந்தயத்திற்குப் போகிறோம். அதில், நாம் முதலில் வர வேண்டு மென்று தானே பந்தயத் தில் கலந்து கொள்ளுகிறவர்கள் எல்லாம் ஆசைப் படுவார்கள்?

# வெளியில் பப்பள பளபள! உள்ளே?

ஹிட்லர் ரொம்ப புத்திசாலி தான். இதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. ஏன் என்று கேட்கிறீர்களா? தான் பதவிக்கு வந்தது முதலே, அவர் யுத்தத்திற் கான ஏற்பாடுகளைத் தீவிரமாகச் செய்ய ஆரம்பித்தா ரல்லவா! அப்பொழுதி லிருந்தே, பிரசார இலாகா வையும் பலப் படுத்த ஏற்பாடு செய்திருக்கிறார் அவர். அந்த முறையில் தான், டாக்டர் கொய பெல்ஸ் என்ற வாயாடி வீரர் நாஜிக் கட்சியில் ஒரு பெரிய ஸ்தானத்தைப் பெற்றார். இந்தப் பிரசார மந்திரியின் வேலைகள் என்னென்ன என்பதையும் ஹிட்லர் பாடமாக எழுதிக் கொடுத்திருக்கிறார். 'புளுகுகிற புளுகைப் பெரும் புளுகாகப் புளுகு. யானை கரைந்து கடுகாகயாவது ஆகட்டுமே!' என்பதே அவரது பாடம். அந்தப் பாடத்தை படித்து, பஸ்டு கிளாஸில் தேறி யிருக்கிறார் டாக்டர் கொயபெல்ஸ். வெளியிலே விழுகிற அடிக்கும், உதைக்கும் கணக்கே இராது; அப்பொழுது கொயபெல்ஸ் சொல்லுவார். "நமது வீரர்கள், எதிரிகளை நொறுக்கு நொறுக்கு என்று நொறுக்கி விட்டார்கள். இன்று எதிரிகளில் பல ஆயிரம் பேர்கள் நஷ்டமானார்கள். நமக்கு சொற்ப சேதம்தான்!" என்று.

இம்மாதிரியே, ருஷ்யாவில் நாளுக்கு நாள் ஜெர் மானியர் அதிக நஷ்டத்தை அடைந்து வந்த காலத் தில் கூட, கொயபெல்ஸ், தம் நாட்டு மக்களுக்கு அழகான சித்திரங்களையே வர்ணித்துக் காட்டிக் கொண்டிருந்தார். உண்மையை யாராலும் மறைக்க முடியாது தான். ஆனாலும், ஜெர்மனியில் உள்ள கட்டுப் பாடுகளும், கொயபெல்ஸின் வாய்ப் பந்தலும் உண்மையை ஓரளவு மறைத்துத் தான் வைத்திருக் கின்றன.

ஜெர்மானியப் படைகளுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங் களைக் குறித்து ஜெர்மன் மக்கள் ஒன்றும் தெரிந்து கொள்வதற் கில்லை. அதே மாதிரி ஜெர்மன் மக்கள் படும் அல்லல்களையும், அவர்களுடைய தற்கால மனோ நிலைமையையும் பற்றி அதிகமாக வெளி உலகத்திற் குத் தெரிவதில்லை. ஆனாலும், ஜெர்மனியின் உண் மை நிலைமை, வெளிப்புறம் பளபளவென்றும், உள்ளே எல்லாம் பாசி படர்ந்தும் உள்ள பாத்திரங் களை ஒத்தும் இருக்கிறது.

லர் யுத்தத்தை ஆரம்பித்த ஜோரையும், ் போகிற போக்கையும் பார்த்த ஜெர்மன் நக்கு, கூடிய சீக்கிரமே யுத்தம் முடிந்து விடும், ஜெர்மனியின் உருவம் உப்பிப் போய்விடும். தங்கள் பாடு அப்போது வேட்டை தான் என்ற ஆசைக் கனவு கள் தோன்றி யிருக்கும்.

ஆனால், அவர்களுடைய நினைப்புப் படி யுத்தம் சீக்கிரம் முடிவதாகக் காணோம். ஹிட்லரின் வாயாடி சகாவான கொயபெல்ஸ் சொன்னபடி, ஜெர்மன் தேசத்திற்கு மேலே எந்தப் பயலும் தைரியமாகப் பறந்து வந்து விட்டு, உயிரோடு திரும்பிப்போய் தன் அம்மாவுக்குப் பிள்ளையாக மாட்டான் என்பதும் பொய்யாகி, டம், டம் என்று தினம், ராத்திரி பக லென்றில்லாமல் குண்டுகள், மழை போல் சொரிந்து கொண்டிருக்கின்றன. போதாக் குறைக்கு ருஷ்ய யுத்தம் என்னும் சேறிலே வேறே, ஜெர் மனியின் கால்களைச் சிக்க வைத்துவிட்டார் ஹிட்லர். அந்தச் சேறும் கொஞ்ச தூரம் வரை வியாபித்திருந் தால் பரவாயில்லை. கண்ணுக் கெட்டாத தொலை வரை பரந்திருக்கிறது அந்தச் சேறு. அதிலிருந்து ஜெர்மனி தப்புமா என்பது கவனிக்கப் பட வேண்டிய விஷயம். இப்போதைக்கு எத்தனையோ லக்ஷம் ஜெர்மன் வீரர்கள் ருஷ்ய மண்ணில் பலியாகி விட்ட னர். ஓய்வுக் கென்று ஊர் திரும்புவார்கள் தம் மக்களும், மணாளர்களும் என்று எண்ணி, கீழ்த் திசையையே பார்த்துப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்த எண்ணற்ற தாய்மார்களும், காதலி மார்களும், இன்று ஜெர்மனியில் மன முடைந்து கிடப்பார்கள் என்பது உண்மை.

நாளுக்கு நாள் உணவுப் பொருள்களுக்குப் பஞ் சம் வரப் பார்த்துக் கொண்டிருக்கிறது. சென்ற வருஷமோ சரியான மழை இல்லை. ஆகவே போது மான சாகுபடி இல்லை. இந்த வருஷமாவது நல்ல மழை பெய்யாதா என்று எதிர் பார்த்திருக்கிறார்கள். புது வருஷம் பயிரிட என்று, உணவுக் கென வைத் திருந்த ஏராளமான உருளைக் கிழங்குகளைக் கூட, பலர் ஒதுக்கி வைத்து விட்டார்களாம். வெளி நாடு களி லிருந்து ஜெர்மனியில் வேலை செய்ய ஆள் திரட்டி வருகிறார்கள். போலந்திலே கட்டாய ராணுவ சேவைக் கென ஆள் சேர்க்க ஆர்டர் போட்டு விட்டார் கள். ஏற்கெனவே பத்து லக்ஷம் போலந்து தொழி லாளர்கள் ஜெர்மனியில் வாட்டி வதக்கப் படுகின்ற னர். ஆகவே இந்தப் புதுச் சட்டம் போலந்தில் ஏகக் குமுறலை எழுப்பி யிருக்கிறது. அங்கங்கே, ஜெர்மானியருக்கு விரோதமான ஆர்ப்பாட்டங்களும், சதி வேலைகளும் நடந்து வருகின்றன.



உள்நாட்டில் வேலை செய்யவும் வெளியார் தயவு வேண்டி யிருக்கிறது; மலை போல் அசையாது நிற்கும் ருஷ்யர்களை அசைக்கவும் வெளி உதவி தேவையாக இருக்கிறது. ஹிட்லருக்கு முஸோலினியிடம் அவர் தயவாக தயவு கேட்டுக் கொண்டிருக்கிறாப் போலிருக் கிறது. முஸோலினி தான் என்ன செய்வார் பாபம்! அடிபட்ட கிழப் புலியாகி விட்டார் அவர். அவருடைய வார்த்தைக்கு முன்பிருந்த மதிப்பெல்லாம், காற்று வாக்கில் போய் விட்டது. இத்தாலியிலே அவரது பேச்சை லக்ஷ்யம் செய்கிறவர்களின் எண்ணிக்கை தடா லென்று விழுந்து விட்டாப் போலிருக்கிறது. இந்த யுத்தத்தில் நாம் கலந்து கொண்டதால், நமக்குக் கிடைத்த தென்ன? கேவலம், கார்ஸிகா, நைஸ், ட்யூனில் இம்மூன்று பிரதேசங்களைக் கூட பெறுவதற்கு வழியைக் காணோம். யுத்தத்தில் சேரப் போக, ஏகச் செலவில் பிடுங்கி வைத்திருந்த அபிஸீனியா அரோஹரா ஆனது தான் நாம் கண்ட பலன். சீ! இது என்ன சண்டை வேண்டியிருக்கு?' என்று இத்தாலியர்கள் கலாட்டா செய்கிறாப் போ லிருக்கிறது.

ஆனால் இந்தச் சமயத்திலேதான் ஹிட்லருக்கும் ஆள் பலம் அத்யாவசியமாக இருக்கிறது. அதற் காக வேண்டியே அவர் முஸோலினியின் செல்வாக் கைப் பெருக்க, நைஸ், கார்ஸிகா பிரதேசங்களை விஷி சர்க்காரிட மிருந்து கேட்கும் முஸோலினியின் கட்சியை ஆதரிக்கிறாப் போலிருக்கிறது.

இது ஒரு புறமிருக்க, இத்தாலியில் சில இடங் களில் இத்தாலியர் பகிரங்கமாகவே ஜெர்மானியர் மீது தமக்குள்ள த்வேஷத்தை வெளிக் காட்டி யிருக்கிறார் கள். அடுத்த வீட்டுக்காரன் நம் கழுத்து மேலே வந்து, 'ஸ்நேகம், ஸ்நேகம்' என்று உட்கார்ந்தால், நாம் சும்மா இருப்போமா?

இத்தாலியில் மட்டுமல்ல, பிரான்ஸிலேயும் ஜெர் மானியரது மூஞ்சியையே காணச் சகியாத மக்களும் இருக்கிறார்கள். சென்ற வாரம் ஒரு நாள், பீத் தேன் வாலிபர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், பாரீஸ் நகரத் தெருக்களிலே போலீஸாருடன் சண்டை போட்டார்களாம். இது போக, பிரான்ஸில் பல இடங் களில் நாச வேலைகளும் நடந்து வருகின்றன. ஜெர்மானியர் ஆக்ரமித்துக் கொண்டுள்ள பிரதேசங் களில் உள்ளவர்களும் கொதித்துக் கொண்டிருப்பார் கள். ஹிட்லரின் கை கொஞ்சம் தாழ்ந்தது என்று தெரிந்தால், இந்தப் பிரதேசத்தவர்கள் எல்லாம் 'குப்' என்று கிளம்பி விடுவார்கள் என்பது நிச் சயம்.

இந்தக் கதையை எல்லாம் மறைத்து, அனைத்தும் மலரணையில் படுத்து உருளுவது போலவே நடந்து வருகிற தென்று ஓயாது ஜெர்மன் மக்களுக்குச் சொல்லி வருகிறார் கொயபெல்ஸ். ஆனாலும் என்ன பயன்? ஜெர்மன் மக்களுக்கு இத்தனை காலம் வரை உண்மை தெரியாது என்று நினைப்பது சுத்தத் தப்பு.

நேற்று வரை சுகமாக இருந்தவர்களுக்கு, இன்று சோற்றுப் பஞ்சம் என்றால், 'நிலைமை மோசமாகி விட்டது டோய்' என்று தெரியாதா என்ன?

வசந்த காலப் போர் என ஹிட்லர் தொடர்ந்து நடத்தும் பழைய போரிலே, அவருக்குக் கொஞ்சம் பலன் கிடைத்திருக்கிறது, கெர்ச் பிரதேசத்தை ருஷ் யர்கள் ஜெர்மானியர்களுக்குக் காலிசெய்து கொடுத்து விட்டனர். ஆனால் கார்கோவ் நகர் அருகே ஜெர் மானியருக்கே ஏக நஷ்டம். நஷ்டமிருந்தாலும், அந் நகரைத் தாக்கும் ருஷ்யப் படைகளை மூன்று திசை களில் சூழ்ந்து கொண்டு விட்டதாக ஹிட்லரின் சீப் பிள்ளைகள் கூறுகிறார்கள். சீக்கிரமே இந்தச் சண்டை யில் முடிவு கண்டால் தான், காஸஸ் பக்கம் ஜெர் மானியர் போகக் கூடும். ஆனால், நல்ல ஆயுதத்துட னிருக்கும் ருஷ்யரை அவ்வளவு லேசாகத் தள்ளிக் கொண்டு போய்விட முடியுமா என்ன? முடியாது தான்!

ஜெர்மன் நீர் மூழ்கிகள் வேறெது செய்தாலும், செய்யா விட்டாலும், மெக்ஸிகோ எனும் அமெரிக்க நாட்டின் பகைமையைச் சம்பாதித்து வந்திருக்கின் றன. அந்நாட்டைச் சேர்ந்த கப்பல்களை இவை தவிடு பொடியாக்கவே, அந்நாடு அச்சு நாட்டுடன் போர் தொடுக்கத் தீர்மானித்து விட்டது. அவ்வளவுக் கவ் வளவு அதிக சங்கடம் தானே?

'அமெரிக்கருக்கு ஏக கப்பல் நஷ்டம்; ஆனாலும் பரவா யில்லை. நீண்ட நாள் நடக்கும் இந்த யுத்தத் தில் நேச நாடுகள் நிச்சயம் வெற்றி பெறும்' என்று ரூஸ்வெல்ட் கூறியிருக்கிறார். அவரது ஆக்ஞைப் படி அமெரிக்கா வெகு ஜரூராக ஆயுதங் களை உற்பத்தி செய்து வருகிறது. மாதத்திற்கு எட் டாயிரத்திற்கு மேற்பட்ட விமானங்களை அது தயாரிக் கிறதாம். இந்த விமான ஆதிக்கம் இல்லாததால் தானே, இதுவரை பர்மா, மலேயா, சிங்கப்பூர் எல் லாம் போயிருக்கிறது. ஆனால், இன்னும் கொஞ்ச காலத்தில் இந்த நிலைமை மாறும். நம் கை உயரும். அப்பொழுது விழப் போகும் அடிகளின் வேகத்தைப் பாருங்கள். அது வரை நாம் கட்டுப் பாடாக, தோல்வி பீதி மனப் பான்மைகளின்றி, வெற்றி ஒன்றையே நமது லக்ஷ்யமாகக் கொண்டு, தீவிரமாக நமது பலத் தைப் பெருக்கவேண்டும், அவ்வளவே! நேசதேசத் தார் பிரம்மாண்டமான சூறுவளிக் காற்றை சிருஷ் டித்து வருகிறார்கள். அது பூரண ஸ்வரூபத்தைப் பெற்றதும், அச்சு நாடுகளை ஆடிக் காற்றி லகப்பட்ட பஞ்சுபோல் பறக்க அடிக்கும் என்பது திண்ணம்.

# யுத்தத்தில் சேதமடைந்தவர்கள்.

## சென்னை சாப்பர்ஸ் மைனர்ஸ்.

சென்னை சாப்பர்ஸ் மைனர்ஸ் பட்டாளத்தில் 5 பேர் இறந்து விட்டனர். 12 பேர் காயப்பட்டனர். 30 பேர் காணாமற் போய் விட்டனர். இவர்கள் பெயர் விவரமாவது :—

| நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| | **இறந்தவர்கள்.** | |
| 13188 | சாப்பர் .. .. | அப்பலசாமி. |
| 17362 | ஷை .. .. | நீலையா. |
| .. | சலவைக்காரர் .. | இராமசாமி. |
| 17500 | சாப்பர் .. .. | சின்னப்பன். |
| 62840 | ஷை .. .. | பெரியசாமி. |
| 62068 | சாப்பர் .. .. | பொன்னுசாமி. |
| 19115 | ஷை .. .. | ராஜாராவ். |
| | **காயமடைந்தவர்கள்.** | |
| 17845 | சாப்பர் .. .. | அப்துல் ஜபார். |
| 60867 | ஷை .. .. | கோவிந்தராஜுலு. |
| 1132 | தண்ணீர்காரர் .. | கண்ணன். |
| 62039 | சாப்பர் .. .. | முகமத். |
| 15547 | நாயிக் .. .. | முனுசாமி. |
| 17230 | லான்ஸ் ஹவில்தார். | ராமதாஸ். |
| 62024 | சாப்பர் .. .. | ஷேக் சின்ன மஸ்தான். |
| 17843 | நாயிக் .. .. | தாமஸ். |
| 62004 | சாப்பர் .. .. | சுப்பிரமணி. |
| 19437 | ஷை .. .. | குருசாமி. |
| 6339 | ஷை .. .. | டி. நாராயணன். |
| 16170 | லான்ஸ் நாயிக் .. | ஷேக் ஹுஸ்ஸென். |
| 14617 | சாப்பர் .. .. | துரைசாமி. |
| 12734 | ஷை .. .. | தியானகாளி. |
| 42418 | ஷை .. .. | ஹரிசிங். |
| 62080 | ஷை .. .. | கண்ணுசாமி. |
| 19544 | ஷை .. .. | கேசவலு. |
| 19365 | ஷை .. .. | கிருஷ்ண ரெட்டி. |
| 61240 | ஷை .. .. | குப்பன். |
| 19505 | ஷை .. .. | நரசிம்மலு. |
| 11912 | ஷை .. .. | ராம பான்ஸ்லே. |
| | **காணாமற் போனவர்கள்.** | |
| 19513 | சாப்பர் .. .. | அந்தோனி. |
| 17529 | ஷை .. .. | அப்பாசாமி. |
| 62716 | ஷை .. .. | ஆறுமுகம். |
| 16184 | ஷை .. .. | சின்னப்பா. |
| 1547 | சமையல்காரர் .. | சின்னப்பா. |
| 14243 | லான்ஸ் நாயிக் .. | சின்னசாமி. |
| 61282 | சாப்பர் .. .. | தஸ்தகீர். |
| 19683 | ஷை .. .. | துரைசாமி. |
| 19377 | ஷை .. .. | துரைசாமி. |
| 17232 | சாப்பர் .. .. | கோபால். |
| 18443 | ஷை .. .. | ஜோஷுவா. |
| 62051 | ஷை .. .. | கண்ணன். |
| 16999 | ஷை .. .. | கே. புச்சையா. |
| 1415 | சமையல்காரர் .. | கேளு நாயர். |
| 62079 | சாப்பர் .. .. | கிருஷ்ணன் நாயர். |
| 62080 | ஷை .. .. | மோசே. |
| 14998 | ஷை .. .. | முனுசாமி. |
| 17010 | நாயிக் .. .. | முனுசாமி. |
| 19478 | சாப்பர் .. .. | முனுசாமி. |
| 16594 | ஷை .. .. | முருகேசம். |
| 19617 | ஷை .. .. | நாராயணசாமி. |
| 15553 | ஷை .. .. | பெருமாள். |
| 16603 | ஷை .. .. | பெருமாள். |
| 19491 | ஷை .. .. | சங்கரலிங்கம் பிள்ளை. |
| 19627 | ஷை .. .. | ஷேக்கலிபுல்லா. |
| 16682 | ஷை .. .. | சூசை. |
| 19953 | ஷை .. .. | டி. சி. சுப்பிரமணியம். |
| 6352 | ஷை .. .. | தம்பையன். |
| 62010 | ஷை .. .. | உத்தமன். |
| 18909 | ஷை .. .. | யாகம். |

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு ஜூன்மீ 5உ, வெள்ளிக்கிழமை [இதழ் 22

# லிபியா போர் பற்றிய விவரங்கள்.

## தளபதி அறிக்கை.

### காமன்ஸ் சபையில் பிரதம மந்திரி பிரசங்கம்.

சென்ற 1942-ம் ஞு ஜூன்மீ 2உ காமன்ஸ் சபையில் பிரதம மந்திரி சர்ச்சில் லிபியாவில் நடைபெறும் போரைக் குறித்து லிபியாவிலுள்ள படைத் தலைவர் ஜெனரல் ஆச்சன்லெக் விடுத்துள்ள அறிக்கையை வசித்தார். அதன் சுருக்கமாவது :—

சென்ற 1942-ம் ஞு மேமீ 26உ ஜெர்மன் தளபதி ரோமெல் ஜெர்மன் ஆப்பிரிக்கப் படைகளைக் கொண்டு நம்மைத் தாக்க ஆரம்பித்தார். இதற்கு முன்னதாகவே தம் சிறந்த தளவாடங்களை எல்லாம் இந்தத் தாக்குதலுக்காக ஆயத்தம் செய்து வைத்திருந்தார். இந்த யுத்தத்தில் முடிவு கண்டு விட வேண்டு மென்பது இவருடைய எண்ணம். இந்த எண்ணத்தை தினசரி அறிக்கையில் குறிப்பிட்டாராலும், இந்த அறிக்கையை ஜெர்மன் படைகளுக்கும், இத்தாலியப் படைகளுக்கும் தான் வழங்கினரே யொழிய, ஜெர்மன் ஆப்பிரிக்கப் படைகளுக்கு வழங்கவில்லை.

**எதிர் பார்த்தது தான்.**

இதற்கு முன்பு நாம் கைதி செய்தவர்களிடம் இருந்த தஸ்தாவேஜிகளில் இருந்து, தளபதி ரோமெல்லன் போக்கு இன்னது என்று தெளிவாகத் தெரிந்தது. ஆகையால், இப்படிப் பட்ட நிலைமையை நாம் எதிர்பார்த்து முன்னெச்சரிக்கையாகவே, எல்லா ஆயத்தங்களும் செய்திருந்தோம்.

தளபதி ரோமெல்லின் திட்டம் என்னவென்றல் : 1. பாதுகாப்பி லிருக்கும் பீர் ஹகீம் என்னும் இடத்தைக் கைப்பற்றுவது. 2. பிறகு தன் படைகளைக் கொண்டு அந்த ஊரைத் தென்புரமாகப் போய் வளைத்துக் கொள்ளுவது. 3. கடற்கரையில் கஸாலாவி லிருந்து காபுசோ வரை யுள்ள நம் வசமிருக்கும் பகுதியை மிகுந்த பலங் கொண்டு தாக்குவது.

**முதல் அடி நமது.**

நமது வேவு பார்க்கும் விமானங்கள் எதிரிகளின் ஏற்பாடுகளைத் தெரிந்து வந்தவுடனே, 1942-ம் ஞு மேமீ 21உ முதல், இரவுகளில் நம் விமானங்கள் சென்று முக்கியமான எதிரி விமான நிலயங்களை எல்லாம் சேதப் படுத்தி விட்டு வந்தன. இதனால், எதிரிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. இதே முறையை தளபதி ரோமெல்லும் 27உ கையாண்டார். தன் திட்டப் படி இதில் ஓரளவிற்கு வெற்றியுங் கண்டார். பீர் ஹகீம் நகரத்தின் தென்புரமாகப் போய், வெகு விரைவாக வடக்கே திரும்பி அக்ரோமு, எல் அதா, சிடி ரசக் ஆகிய ஊர்களை அடுத்து விட்டார். என்றாலும் நம் படைகள், எதிரி படைகளை அங்கிருந்து அடித்து விரட்டி விட்டன.

**கரை சேர முடிய வில்லை.**

டொப்ருக் நகரத்தை யடுத்து எதிரி சப்பற் படை கரையில் இறங்க முடிய வில்லை. பீர் ஹகீமுக்குக் கிழக்கே எதிரிகள் மிகவும் பலங் கொண்டு தாக்கினர்கள். அப்போது அவர்களோடு போராடியது மூன்றுவது இந்திய மோட்டார் பட்டாளக் கூட்டம் மட்டுந் தான. இந்தப் போரில் எதிரிகளுக்கு ஏராளமான உயிர்ச் சேதம் ஏற்பட்ட படியால் தான், மேற்கொண்டு முன்னேறி வரக் கூட வில்லை. மேலும், பீர் ஹகீமை இத்தாலியப் படைகள் தாக்கிய போது அதற்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது. இந்தப் படை யோடு போராடியது ஏதேச்சை பிரஞ்சுப் படை.

வட திசையிலுள்ள அதாவது அஸாலாவிற்குத் தெற்கே யுள்ள நம் முக்கியமான பகுதிகளைத் தாக்கிப் பிடிக்க வேண்டும் என்பது தளபதி ரோமெல்லின் மூன்றுவது திட்டம். 1942-ம் ஞு மேமீ 27உ அத் திட்டப்படி ஜெர்மன் ஆபிரிக்கப் படைகளைக் கொண்டும் இத்தாலியப் படைகளைக் கொண்டும் தாக்கினர். பலன் இல்லை. அநேகம் பேர் உயிரிழந்தது தான் மிச்சம். 28, 29, 30உ நம் படைகளுக்கும் எதிரிகள் படைகளுக்கும் மிகக் கடுமையான போர் நடந்தது. வடக்கே அக்ரோமாவி லிருந்து 40 மைல்களுக்குத் தெற்கே யுள்ள பீர் ஹகீம் வரையிலும், தொப்ருக்குக்கு அருகிலுள்ள எல் ஆதமிலிருந்து மேற்கே 30 மைல்களுக்கு அப்பாலுள்ள நம் சுரங்கங்கள் வரையிலும் இந்த யுத்த களம் பரவி யிருந்தது. இங்கே எதிரிகளுக்கு ஒரு விநாடி கூட ஓய்வில்லாத படி நம் படைகள் போராடின. தளவாட சப்ளையும், உணவுப் பொருள்களும், தண்ணீரும், குறைந்து விட்டன. ஆகவே, சுரங்கங்கள் இருக்கும் நம் இடங்களில், இடை வெளிகள் ஏற்படத் தக்க படி கபிஸோ ரோடு நெடுகவும், தெற்கே 10 மைல்களுக்கு அப்பாலிருக்கும் மற்றொரு ரோடிலும், தம் படைகளை எதிரிகள் அமைத்திருந்தார்கள். இந்த இடை வெளிகளில் தம் சேனைகளை மேலும் செலுத்திக் கொண்டு வர எதிரிகள் முயன்றார்கள். அப்போது நம் விமானப் படை வந்து, எதிரி முயற்சியைக் குலைத்தது. 31உ தன் டாங்கிகளையும் மோட்டார் படையையும் ஒரு இடை வெளிக்குள் பின் வாங்கிக் கொண்டு, அதைத் தகுந்தபடி பாதுகாத்துக் கொண்டு வந்தார்கள். இங்கே இன்னும் கடுமையான போர் நடந்து கொண்டு தான் இருக்கிறது.

எதிரிகளின் முன் தளத்திலிருந்து மேற்கே 20 மைல்கள் தூரம் வரை, எதிரிகள் பரவி யிருக்கக் கூடும். பீர் ஹகீமுக்குக் கிழக்கே யுள்ள பகுதிகள் நமக்குச் சொந்தமானவை. இங்கே போய் எதிரி படைகள் புகுந்து கொண்டன. எனவே நம் படைகள் எதிரிகளை நாசம் செய்து கொண்டு வருகின்றன. அநேக டாங்கிகளையும் மோட்டார் வண்டிகளையும் நாசஞ் செய்து விட்டன. இரண்டு பெரிய தொழிற்சாலைகளைக் கைப்பற்றிக் கொண்டன. இன்னும் கடுமையான போர் நிகழ்ந்தாலும் நிகழக் கூடும். ஆனால் ஒன்று மட்டுமே உறுதி. தளபதி ரோமெல்ஸ் திட்டம் நிறை வேறுது. என்றாலும், இந்தப் போரில் இரு தரத்தாருக்கும் மிகுந்த நஷ்டந் தான். நம் படைகளின் உணர்ச்சி மிகவும் பாராட்டத் தகுந்தபடி இருக்கிறது.

# கொரியர்களுக்கு மேலும் தொல்லைகள்.

## கட்டாய இராணுவப் படை திரட்டுகின்றனர்.

### ஜப்பான் சர்க்கார் பிரகடனம்.

ஜப்பானிய சர்க்கார் ஒரு பிரகடனம் செய்திருக்கின்றனர். இதன்படி, கொரியாவிலுள்ள வாலிபர்கள் அத்தனைப் பேரும் இராணுவத்தில் 1944-ம் வருஷ சேரவேண்டும். இதிலிருந்து ஒரு விஷயம் உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெரிகிறது. ஜப்பான் ஆள் பலம் குறைந்து விட்டது என்பதைத் தான் இது அறிவிக்கிறது. ஆசியாவின் மற்ற எல்லாப் பகுதிகளை விட கொரியாவில் தான் ஜப்பானியர்களை மிகவும் அதிகமாக வெறுக்கிறார்கள். இது காரணமாக, இங்கே இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பது ஜப்பானியர்களுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கும். தன் சேனைகளுக்குக் கட்டாயமாகக் கொரியர்களைச் சேர்ப்பதன் மூலம் அவர்கள் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்களென்று தெரியுமா? காடு வெட்டுதல், ரோடுகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல் முதலிய கடுமையான வேலைகளுக்கு, கட்டாயமாக, கொரியர்களில் போதுமான பலமுள்ளவர்களைச் சேர்த்து, அவர்களைத் தகுந்தபடி காவல் புரியவேண்டும் என்பது தான் அவர்கள் உத்தேசம்.

கட்டாயப் படுத்தி, கொரியர்களைக் கொண்டு ஒரு இராணுவத்தை அமைத்த போதிலும் கூட, அது நம்பத் தகாததோர் படையாகத் தான் அமையும். ஏனென்றால், ஜப்பானியர்களைக் கொரியர்கள் வெறுக்கிறார்கள். தம்மை ஜப்பானியர்கள் படுத்திய கொடுமைகள் தான், இந்த வெறுப்புக்குக் காரணம். எனவே, மீண்டும் தம் விடுதலை பெறும் நாளை, கொரியர்கள் எதிர் நோக்கி யிருக்கின்றார்கள்.

---

# கார்க்கோவ் முனையில் ஜெர்மானியர் பின் வாங்குகிறார்கள்.

### இலாப நஷ்டக் கணக்கு.

சென்ற 1942 ம் வருஷம் மே மீ 30௳ இரவு சோவியத் தகவல் போர்டார் கீழ்க் கண்ட விசேஷச் செய்தியை வெளி யிட்டார்கள் :—

ரோஸ்தோவ் போர் முனையின் ஒரு பகுதியில் ஜெர்மானிய பாசிசப் படைகள் எப்படித் தாக்குவதெனத் திட்ட மிட்டிருந்தார்களோ, அத்திட்டத்தை சோவியத் படைத் தலைவர்கள் கொஞ்ச காலத்திற்கு முன்பே தெரிந்து கொண்டார்கள். இந்தப் போர் முனைப் பகுதியில், அத்திட்டப்படி ஜெர்மன் படைத் தலைவர்கள் குறைந்தது 30 காலாட் படை டிவிஷன்களையும் 6 டாங்கி டிவிஷன்களையும், ஏராளமான விமானப் படையையும் திரட்டி வைத்திருந்தனர். இவர்கள் இந்தப் படைகளை அங்கே திரட்டி வைக்கும் முன்னதாகவே, சோவியத் படைத் தலைவர்கள், இவ்வளவு பெரிய படையை வெல்லத் தகபடி ஒரு பெரிய படையை திரட்டிக் கொண்டு போய், பதிய வைத்திருந்து, தாமே ஜெர்மன் படைகளை முதலில் தாக்கினார்கள். அதனால் தான் கார்கோவ் நகரத்தைக் கைப்பற்ற ருஷ்யப் படைகளால் முடிந்தது. இந்த நகரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று சோவியத் படைத் தலைவர் முதலில் திட்ட மிடவே யில்லை. இங்கே பாசிசப் படைகளுக்குச் சரியான தோல்வி கிடைத்தது.

இந்தப் போராட்டத்தில் சோவியத் படைகளுக்கும் மிகுந்த சேதம் ஏற்படத் தான் செய்தது. சென்ற இரண்டு வாரங்களாக பாசிசப் படைகள் இங்கே போராடிக் கொண்டிருந்தாலும், ஒரு இடத்திலாவது, அவர்கள் ஆற்றைக் கடந்ததாகத் தெரியவில்லை.

இந்த நடைபெற்ற போராட்டத்திலிருந்து மூன்று கேள்விகள் பிறக்கின்றன—(1) வசந்த காலத்தில் தாக்குவதற்காக ஜெர்மானியர் போட்டிருக்கிற திட்டத்தை சோவியத் படைத் தலைவரான திமோஷேங்கோ கவிழ்த்து விட்டாரா? (2) எவ்வளவு பெரிய சேனையை ஜெர்மானியர்கள் இந்தப் போர் முனைக்கு அனுப்பினார்கள்? (3) இங்கே அவர்களுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டது?

கார்கோவ் யுத்த முனையில் ஏற்பட்ட இலாப நஷ்டக் கணக்கை ரஷ்யப் படைத் தலைவர் வெளியிட்டிருக்கிறார். ஜெர்மானியர் வெளியிட்டிருக்கும் அறிக்கையோடு இந்த அறிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால், ஜெர்மன் அறிக்கை எவ்வளவு தூரம் பொய் என்பது நன்றாகத் தெரியும்.

ஜெர்மன் படையில் இறந்து போனவர்களும் கைதியானவர்களும் 95,000 பேர்கள். இவர்களில் ஒரு சிலர் உத்தியோகஸ்தர்கள்; அன்றியும் 540 டாங்கிகளும், 200 விமானங்களும் கைப்பற்றப் பட்டன. சோவியத் படைகளில் இறந்து போனவர்கள் 5000 பேர்கள், காணமல் போனவர்கள் 70,000 பேர்கள். 300 டாங்கிகளும், 832 பீரங்கிகளும் சோவியத் படைகளுக்கு நஷ்டம்.

இந்த யுத்தத்திலேயே ஜெர்மன் தளபதி மார்ஷல் வான்பாக்குக்கும் சோவியத் தளபதி மார்ஷல் திமோஷேங்கோவிற்கும் நடைபெற்ற போர் தான மிகவும் கடுமையான போர். அளவு கடந்த வீரத்தோடும் மன உறுதியோடும் இரு கட்சியினரும் போராடினார்கள். இங்கே ஜெர்மானியர் வசம் இருந்த ஒரு கிராமத்தை சோவியத் படைகள் மீண்டும் கைப்பற்றியதுடன், அதை யடுத்து ஜெர்மானியர் ஆதீனத்திலிருந்த ஒரு குன்றையும் கைப்பற்றினர். இங்கிருந்த ஜெர்மன் படைகளை விரட்டி யடித்து விட்டனர். இந்தக் குன்றை விட உயர்ந்த மற்றொரு குன்றிற்கு ஜெர்மன் படைகள் போய்ச் சேர்ந்து, அதைக் காப்பாற்றிக் கொள்ள அரும் போராடிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் ஏராளமான படைகளையும் யுத்தத் தளவாடங்களையும் திரட்டிக் கொண்டு வந்து வைத்திருந்த போதிலும், இரண்டு வாரங்களுக்குள் சோவியத் படைகள் அவற்றை வெகுவாகச் சின்னா பின்னப் படுத்தி விட்டன.

சென்ற 1942-ம் வருஷம் மே மீ 31௳ நடு இரவில் சோவியத் படைத் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தம் யுத்தக் கப்பல்களும் விமானங்களும், எதிரிகளுக்குச் சொந்தமான 8500 டன் போக்கு வரவுக் கப்பல் ஒன்றை கருங் கடலிலும், எதிரிகளின் ட்ராலர் ஒன்றையும், போக்கு வரவுக் கப்பல் ஒன்றையும் பின்லந்து வளைகுடாவில் மூழ்கடித்து விட்டன என்று தெரிவிக்கிறார்.

---

## வருந்துகிறோம்.

**சென்னை சாப்பர்ஸ் அன்டு மைனர்ஸ் படையைச் சேர்ந்த 12948 நம்பர் ஜமேதார் ஆர். கே. சீனிவாசய்யா காயப்பட்டார் என்று கேட்டு வருந்துகிறோம்.**



### விமானம், வெகு தூரத்தில் பறக்கிறதோ?



பூதக்கண்ணாடி கொண்டு பார்ப்பவர் பிரிட்டிஷ் விமானப் படைத் தலைவர் ராம்ஸ்பாட்டம் இஷர்உட். இவர் ரஷ்யாவில் சோவியத் விமானப்படைகளுடன் சேர்ந்து கொண்டு போராடுகிறார். இவருடன் இருக்கும் இருவரும் சோவியத் விமானப் படைத் தலைவர்கள்.

---

# "நடுப் பகலில் டோக்கியோவைத் தாக்கினோம்"

## விமானத் தொழிற்சாலை மீது வெடிகுண்டு உற்பத்திக்குப் பெரும் தடை.

ஜப்பானிய நகரங்கள் மீது, அமெரிக்க விமானிகள் வெடி குண்டுகளை வீசிப் பெருத்த சேதத்தை உண்டாக்கினார்கள். இது பற்றி பிரிகேடியர் டூலிட்டில் என்பவர் பல உருசியான விவரங்களைக் கூறுகிறார். அவர் கூறுவதாவது :—

"நடுப் பகலிலே தான் நாம் வெடி குண்டுகளை வீசினோம். அப்போது நம் விமானங்கள் மிகவும் தாழப் பறந்தன. மேகங்கள் தடை செய்யவு மில்லை."

திடீரென்று புகுந்து தாக்கும் முறை தம் சொந்தச் சொத்தாக ஜப்பானியர் மதித்து வந்தார்கள். இப்போது இதே முறையைத் தான் நாமும் கையாண்டோம்.

**தளத்திலே புதுக் கப்பல் நாசம்.**

தென் டோக்கியோ கடற் படைத் தளத்திலிருந்த ஒரு புதிய யுத்தக் கப்பலை நம் விமானங்கள் நேர் முகமாகத் தாக்கி நாசம் செய்தன மேலும், நகோயாவிற்குச் சமீபத்தில் இருக்கும் விமானத் தொழிற்சாலை மேல், சுமார் கால் மைல் தூரத்திற்கு, நெடுக சில்லரை வெடி குண்டுகளை நம் விமானங்கள் பெய்து கொண்டே போயின. இது மித்சுபிஷி தொழிற்சாலை என்பதில் சந்தேகமே இல்லை. இங்கே தான் யுத்த விமானங்கள் தொகுக்கப் படுகின்றன.

ஜப்பானின் முக்கிய தீவில் வெவ்வேறு இடங்களில் 21 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவற்றை ஜப்பானிய சர்க்கார் மேற் பார்க்கிறார்கள். ஒவ்வொரு தொழிற்சாலையும் யுத்த விமானத்தின் ஒவ்வொரு பகுதியைச் செய்து முடிக்கிறது. இவை எல்லாம் நகோயாவின் வெளிப் புறத்திலுள்ள மித்சுபிஷி தொழிற்சாலைக்கு அனுப்பப் படுகின்றன. இங்கே தான், இந்தப் பாகங்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து இணைக்கிறார்கள்.

ஆகையால் இந்தத் தொழிற்சாலை நெடுக வெடி குண்டுகளை வீசினால், எந்த அளவிற்குச் சேதம் விளையும் என்று இலகுவில் உணர்ந்து கொள்ளலாம். இணைக்கப்படும் பகுதியிலேயோ இணைத்து வைக்கப் பட்டிருக்கும் பகுதியிலேயோ நாசம் ஏற்பட்டால், விமான உற்பத்தி பெரிதும் தடைப்படும்.

இப்போது யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளில், ஜப்பானில் தான் மிகவும் தாமதமாக விமானங்கள் தயாரிக்கப் படுகின்றன. இங்கே $1\frac{1}{2}$ மணி நேரத்தில் ஒரு விமானம் தயாரிக்கிறார்கள்; ஆனால், அமெரிக்காவில் $8\frac{1}{2}$ நிமிஷங்களில் ஒரு விமானம் தயாரிக்கிறார்கள்" இப்போது அமெரிக்க விமானங்கள், மித்சுபிஷி தொழிற்சாலையைத் தாக்கியதனால், ஜப்பான் விமான உற்பத்தி இன்னும் அதிகமாகத் தடைப் படும்.

# தேசியப் போர் முனையில் ஏன் சேர வேண்டும்?

## ஸ்டாதாம் கூறும் காரணங்கள்.

'மாப்பிள்ளை ரிவியூ' என்னும் பத்திரிகையில், சென்னை கல்வி இலாக்கா டைரக்டர் மிஸ்டர் ஆர். எம். ஸ்டாதாம் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சுருக்கமாவது:—

**தேசிய போர் முனையில் ஏன் சேர வேண்டும்?**

எதிரிகள் நம்மைத் தாக்குவதனால் உண்டாகக் கூடிய அபத்துக்களி லிருந்து தென்னிந்தியாவிலுள்ள பெண்களையும் குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டிய பொது நோக்கத்தோடு எல்லோரும் ஒன்று பட வேண்டியது தான் தேசியப் போர் முனையின் முக்கியமான கடமை என்று எனக்குத் தோன்றுகிறது. இம்மாகாணத்தி லுள்ள பையன்களுக்கும் பெண்களுக்கும் மிகச் சிறந்த முறையில் கல்வி புகட்ட வேண்டிய பெரிய புனிதமான பொறுப்பை நான் மேற்கொண்டிருக்கிறேன். கடைசியில் ஆண் பெண் அடங்கலும் படித்தவர்களாக இருக்க வேண்டு மென்பதே என் ஆசை. ஆனால், தேசிய போர் முனையின் அங்கத்தினன் என்னும் முறையில், என் பொறுப்பு மேலும் அதிகரித்திருக்கிறது. 35 லட்சம் மாணவர்களின் பாதுகாப்பிற்கும் நான் பொறுப்பாளியாயிருக்கிறேன். உங்களுக்கு ஒரு வேண்டுகோள்! ஆபத்து ஏற்படுமானால், கல்வி சம்பந்த முள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும், பெண்களையும் குழந்தைகளையும் காப்பாற்றுவதில் மிகுந்த அக்கரை கொள்ள வேண்டும். இதன் பொருட்டு நாம் அனைவரும் தேசியப் போர் முனையில் சேர வேண்டும். அப்போது, இந்தியாவைப் பாது காக்கும் நம் படைகளுக்கு நம் ஆதரவை அறிவித்தவர்களாவோம். அன்றியும் உள்ளூரில் நேரக் கூடிய சம்பவங்களிலும் நம் நாட்டவர்களுக்கு உதவியாய் இருப்போம்.

இப்போது இந்நாட்டில் உள்ள மனத் தாங்கல்களைப் பொருள் படுத்தாது, நம் நாட்டு இளைஞர்களின் இன்பத்திலும் நல்வாழ்விலும் தான் அக்கரை கொண்டிருக்க வேண்டும். இந்த வேண்டுகோள் நான் விடுத்ததா யிருந்தாலும் சரி, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் விடுத்ததாயிருந்தாலும் சரி, குழந்தைகளை நேசிக்கிறவர்களும், பெண்களைக் காப்பாற்றும் ஆண்மை யுள்ளவர்களும் இந்த வேண்டு கோளை மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

---

# விவசாயிகளுக்கு சர்க்கார் வாக்குறுதி.

## விலைகள் குறையாதபடி தடுக்க ஏற்பாடுகள்.

ஏராளமாக உணவுப் பொருள்கள் சாகுபடி செய்ய வேண்டு மென்று இந்தியா சர்க்கார் விவசாயிகளைப் பெரிதும் தூண்டுகிறார்கள். ஒவ்வொரு விவசாயியும் ஏராளமாக உணவுப் பொருள்களைச் சாகுபடி செய்கிறதாக வைத்துக் கொள்ளுவோம். இந்த ஏராளமான சாகுபடிக்கு கிராக்கி இருக்குமா என்னும் கேள்வி இதிலிருந்து பிறக்கிறது. இப்போது நடை பெறும் போர், திடீரென்று நின்று விடுமானால், இந்த அளவிற்கு உணவுப் பொருள்கள் தேவைப் படாது. அப்போது ஏராளமான உணவுப் பொருள்கள் மிகுதியாகும். இவற்றை வாங்குவோர் இல்லையானால், விலை குறையத் தான் செய்யும்.

இப்படிப்பட்ட நிலைமை ஏற்படவே இடமில்லை என்று இந்தியா சர்க்கார் கருதுகிறார்கள். இதனால் பெருத்த நஷ்டம் ஏற்படு மென்று பெருக்கிக் கூறுவோர்களின் வார்த்தைகளைக் கேட்க வேண்டாமென்று இந்தியா சர்க்கார் விவசாயிகளுக்குக் கூறுகிறார்கள். அன்றியும், இந்த நெருக்கடியான நிலைமையில், உணவுப் பொருள்கள் சாகுபடியை, தேவைக் கேற்றபடி அதிகப் படுத்திக் கொண்டு போக வேண்டு மென்றும் கோருகிறார்கள். உணவுப் பொருள்கள் எல்லாப் பக்கங்களிலும் ஏராளமாகத் தேவைப் படுகின்றன. எனவே, இப்போதைக்கு அவற்றின் விலை வெகுவாகக் குறைய சாத்திய மில்லை.

யுத்தம் நின்று போன போதிலும் கூட, அதனால், நாசமான நாடுகளுக்கு தேவைப் படும் உணவுப் பொருள்கள் அதிகமாகுமே ஒழிய, குறையாது. மேலும், இப்போது இந்தியாவில் சாகுபடி யாகும் உணவுப் பொருள்களை விட மிகவும் அதிகமாகவே, இனி இந்தியாவுக்கே தேவைப் படும். ஏனென்றால், இந்தியாவின் ஜனத்தொகை பெருகிக் கொண்டேயிருக்கிறது.

நிற்க, சாகுபடியாகும் உணவுப் பொருள்களை களத்தி லிருந்து, தேவைப்படும் இடங்களுக்கு அனுப்ப தற்காலிகமாகக் கஷ்டங்கள் ஏற்படலாம். இது காரணமாக இந்தச் சரக்குகளை விற்கவும் கொஞ்சம் கஷ்டமாக இருக்கலாம். அப்படிப் பட்ட நிலைமை ஏற்படுமானால், சரக்கின் விலை மிகவும் குறைந்து விடாத படி, அவற்றை இந்திய அரசாங்கத்தாரே வாங்கிக் கொள்ள வேண்டும் என்று, சென்ற 1942-ம் வருடம் ஏப்ரல் மீ 4வ டில்லியில் கூடிய உணவுப் பொருள் சாகுபடி மகா நாட்டார் சிபார்சு செய்தது, இந்த மாதிரி நிலைமையைச் சமாளிக்க வேண்டித் தான்.

இந்தச் சிபார்சின் தத்துவத்தை இந்தியா சர்க்கார் ஒப்புக் கொண்டு விட்டார்கள். இதில் சம்பந்தமுள்ளவர்களைக் கலந்து ஒரு தெளிவான திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற் கிடையே இந்தியா சர்க்கார் விவசாயிகளுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கிறார்கள். சாகுபடியாகும் உணவுப் பொருள்களின் விற்பனையைப் பாதிக்கத் தகுந்த முறையில், ஏதேனும் நிலைமை ஏற்படுமானால், அதனால் சரக்கின் விலை குறைந்து விடாதபடி தடுக்க வேண்டி, பிரிட்டிஷ் இந்தியாவிலும், இந்திய சமஸ்தானங்களிலும் உள்ள சரக்குகளை, சர்க்காரே விலைக்கு வாங்கிக் கொள்ளுவார்கள். ஏராளமாக உணவுப் பொருள்களைச் சாகுபடி செய்ய வேண்டு மென்று இந்தியா சர்க்கார் வேண்டிக் கொள்ளுவதற் கிணங்க, சாகுபடி செய்கிறவர்கள் நஷ்ட மடையாதபடி பார்த்துக் கொள்ளுவதில் அவர்கள் மிகவும், அக்கரையோடு இருக்கிறார்கள்.

---

# இந்தோ-சீனாவைப் பங்குபோட முயற்சி.

## ஜப்பான் இரகசியத் திட்டம்.

இந்தோ-சீனாவைப் பங்கிட்டு, கம்போடியாவையும் லோசையும் தாய்லாந்துக்கும், கொச்சின் சீனா, அன்னம், டாங்கிங் ஆகிய பகுதிகளை நாங்கிங்கி லுள்ள பொம்மை சர்க்காருக்கு கொடுப்ப தென்று ஜப்பானிய சர்க்கார் இரகசியத் திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறதாக வாஷிங்டனுக்குச் செய்தி எட்டுகிறது. இது பற்றி இந்தோ-சீனா அதிகாரிகளையோ, பொது ஜனங்களையோ ஜப்பான் சர்க்கார் கலந்து கொள்ள வில்லை என்று தெரிகிறது.

ஜப்பானிய 'ஆதரவு' என்பது இதுதான்!



# சிரித்தவர் துடிப்பு.

'லண்டனில் எண்ணற்ற கட்டிடங்கள் சாம்பலாயின. பிரசித்தி பெற்ற சரித்திர சம்பந்தமான இடங்கள் பாழாயின. ஒரு பாவமும் அறியாத குழந்தைகளும், ஸ்திரீகளும், கிழவர்களும், நோயாளிகளும் தாக்கப்பட்டனர். சொல்லி முடியாத சேதம்' என்ற சேதிகள் ஜெர்மன் விமானிகள் ஜெர்மன் மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்த பொழுது, ஜெர்மானியர் எல்லாம் எவ்வளவு குதூகல மடைந்திருப்பார்கள்? 'நாஜிப் படைகளுக்கு எதிராக, பிரம்மதேவன் வந்தாலும் நிற்க முடியாது' என்று தம்பட்டம் கொட்டிக்கொண்டு, மளமளவென அப்படைகள் முன்னேறிக் கொண்டிருந்ததைப் பார்த்து, நாஜிகள் எவ்வளவு ஆனந்த மடைந்திருப்பார்கள்! ஹிட்லரைப் போன்ற மகா சூரர் இனி உலகிலே பிறக்கப் போகிறாரா என்ன என்றே நினைத்திருப்பார்கள்!

ஆனால், அதெல்லாம் பழைய கதை. இன்று நடப்ப தென்ன? முதல் இரண்டு வருட காலமாக இளித்துக்கொண்டிருந்த ஜெர்மன் மக்கள், மூன்றும் வருடம் பிறந்தது முதல், முழி பிதுங்க, பல்லை கடித்துக் கொண்டு, 'உம்' என்று இருக்க வேண்டி வந்து விட்டது. அதோடு மட்டு மில்லை. நாளாக ஆக, அவர்கள், 'அப்பப்பா! ஐய்யய்யோ! சகிக்கலையே!' என்று அலற வேண்டிய நிலைமையும் உண்டாகி விட்டது. பாவம்! முதலில் சிரித்தால், கடைசியில் அழ வேண்டியது தான் என்ற பழமொழி அவர்கள் ஊரில் பழக்கத்தி லில்லை போலிருக்கிறது. ஆனால், இந்தப் பாடமும் முதலில் துடித்தாலும், பிறகு சுகமுண்டு என்ற பாடமும் நம் ஊர்களிலே உண்டு. அதோடு, பொறுத்தார் பூமி ஆள்வார் என்பதும் நமக்குத் தெரியும். அப்பளாத்தை அடுப்பில் போட்டு சுட்டு எடுப்ப தென்றால், அவ்வப்பே துகையில் கொஞ்சம் சூடு படத் தானே செய்யும்? 'உப்! உஸ்' என்று ஊதிக் கொண்டு, அப்பளாத்தைச் சுட்டு விட்டால், அப்புறம் 'க்றக், முறுக்' என்று ஜோராக இருந்து தின்னலா மல்லவா?

அதே போல், யுத்தத்திலே சிக்கிக் கொண்டு விட்ட நேச நாடுகளை, அவ்வப்போது சூடு பெற்றாலும், கடைசியில் தனித்து வெளியில் எடுத்து விட்டு, இன்புறலாம் என்ற நம்பிக்கை ஜன நாயக நாட்டு கோஷ்டியினருக்கு இருக்கத் தான் இருக்கிறது.

ஆனால், ஜெர்மானியரோ, அப்பளாத்தை அடுப்பில் போடுவதற்குப் பதிலாக, கையையே அடுப்பில் திணித்துக் கொண்டு விட்டார்கள். 'எங்கள் நாஜி முஷ்டி மகா பலமானது! இதோ பாருங்கள்' என மூடின கையைத் திறக்காமல் அடுப்பில் திணித்துக் கொண்டு விட்டதால், இப்பொழுது அக்கையைச் சட்டெனத் திரும்ப எடுத்துக் கொள்ள முடியவில்லை. கைவெந்து, ரணமாகி விடும் போலிருக்கிறது. அப்படியே அந்தக் கையை வெளியே இழுத்துக் கொண்டாலும், அப்புறம் வெகு காலத்திற்கு அது உபயோகப்படுமா என்பது சந்தேகமே! வாய்க்கு ருசியாக ஏதாவது தபாரிக்கப் போய், கையை வேக வைத்துக் கொள்ளுகிறவனை யாராவது புத்திசாலி என்பார்களா? அவனைப் புத்திசாலி என்று அழைப்பவர்கள் தான், ஹிட்லரையும் புத்திசாலி என்று அழைப்பார்கள்!

'ஜெர்மானியருக்கு வாழ இடம் பெற்றளிக்கிறேன்; சென்ற யுத்தத்தில் ஏற்பட்ட அவமானங்களைப் போக்குகிறேன். ஐரோப்பாவிலே ஒரு நவ யுகத்தைச் சிருஷ்டிக்கிறேன்' என்று ஆடம்பரமாகப் பேசிக் கொண்டே, ஜெர்மனியைப் போரில் சிக்க வைத்து விட்டார் ஹிட்லர். ஆனால், சென்ற மகா யுத்தம் முடிந்ததி லிருந்தே ஜெர்மனியில் வெகு ரகசியமாக, மறு யுத்தத்திற்கான ஏற்பாடுகள் நடந்து வந்திருக்கின்றன. ஹிட்லர் பதவிக்கு வந்ததி லிருந்து, வெகு காரசாரமான முயற்சிகளில் ஈடுபட்டார். பழைய சமாதான நிபந்தனைகளையும், சர்வதேச சட்டத்தையும் மீறி, ஜெர்மனியின் ஆயுத பலத்தை வெகுவாக அதிகரிக்கச் செய்து விட்டார். ஆனால், ஜன நாயக நாடுகள், தர்ம நியாயத்திற்குக் கட்டுப் பட்டு, போருக்கு எத்தகைய யத்தனமும் செய்யாமலிருந்தன. ஆகவே, திடீரென்று நாஜிகள் தாக்க ஆரம்பித்ததும், நேச நாட்டினர் திகைத்து விட்டனர். தங்களது அதிகப்படியான ஆட்களையும், ஆயுத பலத்தையும் கொண்டு, நாஜிகள், நிராயுதபாணிகளை எல்லாம் தோற்கடித்து, அவர்களிருந்த பிரதேசங்களை ஆக்ரமித்துக் கொண்டனர்.

அவர்களுடைய நாடுகளை நாஜிகள் பறித்துக் கொண்டார்களே ழிய, அவர்களுடைய மனங்களை நாஜிகள் கொள்ளை கொண்டு விட வில்லை. தம்மீது அந்தந்த நாட்டு மக்களுக் குண்டான த்வேஷத்தைத் தான் அதிகமாகும்படி செய்திருக்கிறார்கள் நாஜிகள். ஹிட்லர் ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் நாடுகளின் சர்க்கார்கள் எல்லாம், பிரிட்டனி லிருக்கின்றன. தமது பலத்தை அவை மெதுவாகப் பெருக்கிக் கொண்டு வருகின்றன. போதாக் குறைக்கு, இப்பொழுதே, நாஜிகள் ஆக்ரமித்த நாடுகளில், அங்கங்கே புகைச்சல் தோன்றிக் கொண்டிருக்கிறது.

நாஜிகளில் பயங்கரப் புலியாகிய ஹீட்ரிச் என்பவரை, யாரோ தாக்கி விட்டார்கள். அவர் ஆபத்தான நிலைமையை அடைந்து விட்டார். இந்த மகா ஹீனமான ஜெர்மானிய ரகசிய போலீஸ் இலாகாவின் தலைவன், மனுஷப் புலி, கொலைசெய்வ தென்றால், கத்தரிக் காயை வெட்டச் சொல்வதுபோலவே நினைப்பு இந்தப் புண்ணியவானுக்கு. ஆக்ரமிக்கப் பெற்ற பிரதேசங்களில், ஒரு ஜெர்மானியர் சுடப் பட்டாலோ, தாக்கப்பட்டாலோ, அதற்கு ஈடாக, அந்தப் பிரதேசங்களில் உள்ள பலர் உடனே பிடிக்கப் பட்டு, துப்பாக்கி முனையில் சுடப்படுவர் என்ற அழகான ஆக்ஞையைப் பிறப்பித்து அதை அமுல்படுத்தி வருகிறவர் இவர்தான். இவர் கழுத்திற்கும் எவனோ ஒருவன் வைத்து விட்டான் கத்தி. இவரைத் தாக்கியவனைப் பிடிப்பவர்களுக்குக் கோடி நாணயம் தருவதாக, ஜெர்மன் அதிகாரிகள் சொல்லி யிருக்கிறார்களாம். ஹீட்ரிச்சின் காயங்கள் பலமாக இருந்தும், அவரது திடமான தேக பலம் காரணமாக, அவர் குணமடையக் கூடும் என்கிறார்கள். இம்மாதிரியே, ஹீக், பிரான்ஸ் தேசங்களில் அடிக்கடி ஜெர்மானியர் கொலை செய்யப் படுவதும், பதிலுக்கு அந்தந்த நாட்டினர் சுடப் படுவதுமா யிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது? ஜெர்மானிய ஆட்சி வேப்பங் காயாக இருப்பதைத் தானே காட்டுகிறது? இந்தப் புகைச்சல் என்றோ ஒரு நாள் பெருந் தீயாகப் பிடிக்கப் போகிறது என்பதில் சந்தேகமே யில்லை.

இதற் கிடையில், ஜெர்மானியர், முதல் இரண்டு வருடங்களில் சிரித்த சிரிப்பை விட, இப்பொழுது துடிக்கும் துடிப்பு அளவில் நிச்சயமாக அதிகமாகவே இருக்கு மென்பதில் சந்தேகமே வேண்டாம்.

நாளுக்கு நாள் நேச நாடுகளின் பலம் வலுத்து வருகிறது. பிரிட்டனின் கை ஓங்கி வருகிறது. இந் நாஜிய யுத்தம் வியாபித்த படியால், சென்ற மூன்று வருடங்களாக, இந்த விமான உற்பத்தி வேலையை, மற்ற வேலைகளை விட அதிக சிரத்தை யோடு பிரிட்டன் கவனித்து வந்திருக்கிறது. 'நெருப்புக் கக்கி' (ஸ்பிட்பையா) விமானம் என்பது பிரிட்டிஷ் விமானங்களில் மிகச் சிறந்தது. அதி வேகமாகப் பறக்கக் கூடியது, அசாத்திய முள்ளது. அதோடு, அமெரிக்கப் 'பறக்கும் கோட்டை' விமானங்கள் சேர்ந்திருக்கின்றன. அடிக்கவும், குண்டு போட்டு நொறுக்கவும் ரொம்ப சௌகரி மாகப் போச்சு!

இப்பொழுது, தங்களுடைய விமான பலத்தை பிரிட்டிஷார் ஜெர்மன் மக்களுக்குக் காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். சும்மா, தங்களுடைய ஊர் விமானங்களைப் பார்த்துப் பார்த்து, ஜெர்மானியர் சலித்துப் போயிருப்பார்கள். அவ்வாறு சலித்து போன அவர்களுடைய கண்களுக்கு, பிரிட்டனின் நூதன விமானங்கள் நல்ல காட்சியாகவே இருக்கும் என்பதில் சந்தேகமே யில்லை. அதுமட்டுமா? 'எதப்பா! என்ன போடு போட்றுங்க இந்தப் பசங்க!' என்று, பதுங்கிய இடத்தி லிருந்து, மனசால் எண்ணி வியந்து கொண்டிருப்பார்கள் ஜெர்மானியர்.

காரணம், சென்ற சில மாதங்களாக, பிரிட்டிஷ் விமானிகள் செய்து வரும் சாகசச் செயல்கள் தான். சென்ற வாரக் கடைசியிலும், சென்ற திங்கட்கிழமை

யன்றும் ஆயிரம் பிரிட்டிஷ விமானிகள், ஜெர்மனியின் ஜீவ நாடிகள் போன்றிருக்கும் தொழிற்சாலைகள நிறைந்த இரு பிரதேசங்கள் மீது படையெடுத்துச் சென்று, சக்கைப் போடு போட்டு விட்டு வந்துவிட்டார்கள். முதல் நாளிட்ட தீ, மூன்று நாட்களுக்குப் பால் கூட எரிந்துகொண்டிருந்ததாம்.

லங்கா தகனவலின் எல்லாம், இதற்கு முன்னால் என்ன செய்ய முடியும்? இவ்வாறு பிரிட்டிஷார் ஆயிரம் விமானங்களோடு வந்து போனார்கள் என்ற விஷயம் ஜெர்மானியரில் அனைவருக்கும் தெரிந்திருக்க முடியாது. ஏனென்றால், இம்மாதிரியான செய்திகள் அவர்கள் செவிகளில் விழ வொட்டாதபடி கூடிய வரை ஜாக்ரதையாகவே பார்த்து வருகிறார் ஹிட்லர். "ஏதோ சிறு உபத்திரவம் தான்" நேற்றிரவு, வடமேற்கு ஜெர்மனியின் இந்த பிரிட்டிஷ் விமானிகளால் ஏற்பட்டது. சில ஆஸ்பத்திரிகள், பள்ளிகள் மீது 'பாம் களையும், எரிவெடிகளையும் எரிந்து விட்டு போனார்கள் அவர்கள்" என்ற செய்தியையே ஜெர்மன் ரேடியோ ஒலி பரப்பிற்றும். ஆனால், ஜெர்மானியரில் யூகமிக்கவர்கள் மட்டும், வடமேற்கு ஜெர்மனியில் தான், பிரமாண்டமான விமானம் கட்டும் தொழிற்சாலைகளும், வேறு யுத்தத் தளவாடங்களைத் தயாரிக்கும் பல ஆலைகளும் இருக்கின்றன என்பதையும், வெறும் ஆஸ்பத்திரி மீது குண்டு வீச பிரிட்டிஷ் விமானிகள் இவ்வளவு தூரம் வந்திருக்க மாட்டார்கள் என்பதையும் தெரிந்து கொண்டிருப்பார்கள். உரக்கப் பேசினால் உதை விழும். ஆகவே, உள்ளூரவே எண்ணி, உதறல் எடுத்துக் கொண்டு, 'கடவுளே! எங்கிருந்து கொணர்ந்து இந்த நாட்டிலே போட்டு வைத்தாய் இந்த ஹிட்லர் யமனை, ஒரு நாள் போவது ஒரு யுகமாக இருக்கிறதே! இன்னும் பல தியாகங்கள் செய்ய வேண்டுமாம். இவரை யார் ருஷ்யச் சேற்றிலே கால் வைத்துத் திணறச் சொன்னார்கள்? இவருடைய பேராசையைத் திருப்தி செய்ய, ஜெர்மன் மக்களாகிய நாம் தானா காவு கொடுத்து வர வேண்டும் நமது அருமைக் காதலர்களையும், மக்களையும், பந்துக்களையும், நமது அரிய ஆஸ்தி, பாஸ்திகளையும்? சீ! என்ன மனுஷன் இவன்! எவ்வளவோ அழகான நமது நகரங்கள் எல்லாம பாழாகி வருகின்றனவே! என்று மனசிற் குள்ளாகவே குமுறிக் கொண்டிருப்பார்கள் அவர்கள் எல்லோரும்.

சென்ற வருடத்திலும் சரி, ஏன், இந்த வருட ஆரம்பத்திலும சரி, ஜெர்மனி மீது, ஒரே நாளில் ஆயிரம் விமானங்களைப் படை யெடுக்க பிரிட்டன் அனுப்பக் கூடும் என்று யாராவது சொல்லி யிருந்தால், அதைக் கேட்டு, 'சரிதான்! அனுப்புகிறபோது பார்த்துக் கொள்ளலாம்! அத்தைக்கு மீசை முளைத்தால் தானே சித்தப்பா?' என்று பதில் கேள்வி கேட்டிருப்பார்கள் பலர். ஆனால், சென்ற வாரம் உண்மையிலேயே அத்தகைய படையெடுப்புகள் நிகழ்ந்து விட்டன. இதற்கு மேல் யாரும் கிண்டலாகப் பேச முடியாது. 'ஆயிரம் அல்ல, இரண்டாயிரம் மூவாயிரம் என்று கூட அனுப்புவோம். ஜெர்மனியின் யுத்தத்திற்கு உதவும் ஒவ்வொரு நகரையும் உண்டு இல்லை என்று பார்த்துத் தீர்த்து விடும் வரை சும்மா இரோம். ஹிட்லரை வழிக்குக் கொண்டு வர இதை விடச் சிறந்த வழி வேறு எதுவுமில்லை' என்று சீமையில் உள்ளவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் வார்த்தை பொய்யாகாது என்பது மட்டும் நாம் தைரியமாகச் சொல்லலாம். 'எப்பொழுது அனுப்புவார்கள் அத்தனை விமானங்களையும்?' என்று கேட்டால், அதற்கு 'சட்' என்று பதில் கூற முடியாது.

மெள்ள மெள்ளத் தான், திட்டமாக ஏற்பாடுகள் செய்து கொண்டு வர வேண்டும். ஏற்பாடுகள் பூர்த்தியான பிறகு தானே, மேலே விழுந்து தாக்குவது எப்பொழுது என்று சொல்லலாம். இல்லை! அதை முன் கூட்டிச் சொல்வது தான் சரியாகுமா? ஜெர்மானியர் எதிர்பார்த்திருக்கையில், எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத சமயத்தில், 'டம், டம்', என்று கொண்டு போய், குண்டுகளை வழங்கினால் தானே, அவர்களும் அச்சரியப்படுவார்கள்? கூடிய சீக்கிரமே அமெரிக்காவிலிருந்துங் கூட, இந்தக் கைங்கரியத்தைச் செய்வதற்கென்று ஏராளமான விமானங்கள் வரப் போகின்றனவாம். தவிர, சீமையில், ஐரோப்பா மீது படையெடுக்க வென்று ஏராளமான படைகள் குவித்து வைக்கப் பட்டிருக்கின்றன. அவர்களுடைய திவ்ய தரிசனத்தையும், ஜெர்மானியர் தக்க சமயத்தில் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. மற்றொரு முறை சென்றால், மற்றொரு 'டங்கர்க்' கதை நிகழாதென்பது நிச்சயம். யுத்தக் கதையை ஒரேயடியாக முடிக்கவே, பிரிட்டனிலிருந்து ஐரோப்பாவில் சென்று படைகள் இறங்கும்.

இந்தப் படையெடுப்புப் பீதி ஜெர்மானியருக்கு ஏகமாக இருக்கிறது. அதனால் தான், அவர்கள் மேலைக் கடற்கரை யோரத்தில் உள்ள நாடுகளில் எல்லாம் சரியான காவலுக்கு ஆட்களையும் விமானங்களையும் வைத்திருக்கிறார்கள். இந்தப் பீதியில்லா விட்டால், ருஷ்ய யுத்த ரங்கத்திற்கு இங்கிருந்து எவ்வளவோ விமானங்களையும் ஆட்களையும் அனுப்பி யிருப்பார்களே! நார்வேயிலே படையெடுப்பு ஏற்பட்டால், கடற்கரை யோரத்தில் உள்ள பட்டணங்களை யெல்லாம் காலி செய்ய திட்டம் போட்டு வைத்திருக்கிறார்களாம்.

திட்டம் என்றதும் ஆப்பிரிக்கா நினைவு வருகிறது. அங்குள்ள ஜெர்மன் தலைவர் மகா சூரர் தான். ஆனாலும், அவர் போட்ட திட்டங்க ளெல்லாம் பாழாகி விட்டன ஜெர்மனிக்கு அவசர அவசரமாக ஓடிப்போய், 'ஓய் ஹி லரே! ஆப்பிரிக்கச் சண்டையில் வெற்றி பெற்றால் அல்லாது, மற்றச் சண்டையில் ஏற்படும் வெற்றிகளுக்கு மதிப்பில்லை. ஆகவே, ஆப்பிரிக்காவில் உள்ள நமது பலத்தைப் பெருக்க வேண்டும். அதற்கு, அங்கு ஆட்களையும், விமானங்களையும், பீரங்கிகளையும், மற்றப் பொருட்களையும் ஏராளமாகக் கொண்டுபோக வேண்டும். அதற்கு, பிரிட்டிஷ் விமானங்களும், மத்யதரைக் கடற்படைகளும் இடைஞ்சலாக இருக்கும். அதற்காக, உடனே மால்டாவைப் பாழாக, இடைவிடாது தாக்க உத்திரவிடும். அங்கே பிரிட்டிஷ் நினைவெல்லாம் போய்விடும். அந்த சந்தடி சாக்கிலே, நான் விட்டு அடிக்கிறேன் ஒரு அடி மளமள வென இத்தாலி, ஸிஸிலி, க்ரீட், க்ரீஸ் இங்கிருந் தெல்லாம். கப்பல்களில் கொண்டு குவித்துக் கொள்ளுகிறேன் வேண்டியதை என்று சொல்லியிருக்கிறார். அந்தப்படியே காரியம் நடந்தது. ஆனால், நேச தேசத்தாரும் அப்பொழுது சும்மா இல்லை என்பது, ராமெல் மும்முரமாக சென்ற வாரம் போரைத் தொடங்கியதும் தெரிந்து விட்டது. ராமெலிடம் ஏராளமான டாங்கிகள் இருக்கின்றன இந்த பலத்தைக் கொண்டு, நேசதேசப் படைகளைத் திணற செய்து, டோப்ருக்கைக் கூடப் பிடித்து விடலாமென்று கனவு கண்டு கொண்டிருந்தார் போலிருக்கிறது. கடல் வழியாகக் கூட ஆட்களைக் கொணர்ந்து இறக்கி விட்டார். கொஞ்சம் முன்னேறினாலும், அவர் நினைத்தபடி எதும் நடக்க வில்லை. பயங்கரமாக, அங்கே போர் நடந்து கொண்டிருக்கிறது. வெயிலின் கடுமையும் மணற்காற்றின் அட்டகாசமும் சொல்லி முடிய வில்லை, நிலைமை ரொம்ப நெருக்கடியானது தான். எதிரிக்குச் சேதம் எவ்வளவு என்பதைக் கூடக் கணக்கிட முடிய வில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஆனால், ராமெலுக்கு இந்தப் போரின் போது, ஒரு கட்டத்திலே தூக்கி வாரிப் போட்டிருக்கும் என்பது நிச்சயம், வெகு ரகசியமாக முதல் தடவையாக, லிபியப் போர்முனையிலே, நெருப்புக் கக்கி விமானங்களும், நூதன வெடிகுண்டெறியும் விமானங்களும் தோன்றி, அச்சு நாட்டுப் படைகளை ஹதம் செய்ய ஆரம்பித்ததும், ராமெலுக்கே ஆச்சரியமாகத் தானிருந்திருக்கும்!

மத்யதரைக் கடலில் பிரிட்டிஷ் கடற்படை பூரண பலத்துடனில்லை. ஆகவே, ராமெலுக்குக் கூடிய வரை அதிக 'சப்ளை' போய்க் கொண்டு தானிருக்கிறது ஆனால் நேசதேசப் படைகளுக்குச் செல்லும் உதவிகளுக்கும் அதிக இடைஞ்சலில்லை.

லிபியப் போரில் இப்பொழுது ஒரு விசேஷம். அச்சு நாட்டு டாங்கிகள், பிரிட்டிஷாரின் பிரதேசங்களில் வந்து வாலாட்டுகின்றன. ஆகவே அடிபட்ட டாங்கிகளை, அச்சு நாட்டினர் எடுத்துப் போய், ரிப்பேர் செய்தும் மீண்டும் உபயோகிக்க முடிவதில்லை. அதுவரை நூழுக்கு அத்தனையும் லாபந் தானே?



இங்கே நடக்கும் போர் ஒரு திட்டமான முடிவை எப்படிக் காணமுடியாது திகைக்கிறதோ, அதே போல் தான், ருஷ்ய அரங்கத்திலும், கார்க்கோவ் பிரதேசத்தில் நடக்கும் போரும் முடிவு காணாதிருக்கிறது.

ருஷ்யர்களின் திடமனதையும், வீரத்தையும் புகழ்ந்து ஜெர்மனியரே அடிக்கடி பேசி வருகிறார்கள். 'எப்பக்கந் திரும்பினாலும் எரி நெருப்பு என்று ஏற்பட்டால் ஒழிய, ருஷ்யர்கள் களைப்பதேயில்லை. அவர்களை வெல்வது என்பது விளையாட்டு விஷயமல்ல' என்கிறாராம் ஒரு ஜெர்மானியர்.

ருஷ்யர்களும், ஜெர்மானியர்களும், இரண்டு பயங்கர வேட்டை நாய்கள் போல், ஒரு கழுத்தில் மற்றொருவர் நன்றாகக் கடித்துக் கொண்டு, விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறாப் போலிருக்கிறது. இரு கட்சிகளுக்கும் ஏக நஷ்டம். ருஷ்யர்கள் நீண்ட தூரம் சுடும் பீரங்கிகளையும், குதிரைப் படைகளையும் கொண்டு வந்திருக்கிறார்களாம். அவர்களுடைய நோக்கம் என்னவோ, கார்க்கோவைப் பிடிப்பது அல்ல என்பதையும், ராஸ்டாவ் பக்கமாகப் பாய எண்ணிக் கொண்டிருந்த ஏராளமான ஜெர்மன் படைகளின் கவனத்தை வேறு பக்கம் திருப்புவது தான் என்பதையும் ருஷ்யர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ருஷ்யர்களுக்குச் சீமையிலிருந்து, பல கஷ்டங்களையும் தாண்டிக் கொண்டு, உதவி வந்து கொண்டிருக்கிறது. 'அச்சு நாடுகளின் யுத்த யந்திரங்கள் பூரணமாக அழியும் வரை ராஜி யில்லை. வருஷத்திற்கு அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட விமானங்களைத் தயாரிப்போம்" இவ்வருஷக் கடைசிக்குள் 45 லக்ஷம் பேர்களை ராணுவத்தில் கொண்டிருப்போம். அமெரிக்கப் படைகள் ஐரோப்பியப் படையெடுப்பில் கலந்து கொள்ளும் என்று அமெரிக்காவி லிருந்து முழங்குகிறார்கள் பலர்.

அமெரிக்க உதவி (நசநாடுகளுக்குப்) பூரணமாக இருக்கிறது. உலகெங்கும் அமெரிக்கப் படைகள் பரவி யிருக்கின்றன. இந்தியாவிலே போருக்கான ஆயத்தங்கள் ஜரூராக நடந்து வருகின்றன. கொரில்லாச் சண்டை கூட கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஜப்பானியர் சீனா மீதே கண்ணா யிருக்கிறார்கள். அங்கே சில இடங்களில் அவர்கள் விஷவாயுக்களைக் கூடப் பிரயோகிக்கத் தயங்கவில்லை. என்ன செய்து என்ன! அகலக் கால் வைத்தவனுக்கான கதி தானே இவர்களுக் கெல்லாம்?

# ரூஸ்வெல்டுக்குப் பொதுஜன ஆதரவு.

இப்போது அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்டின் போக்கு சரிதானா அல்லவா என்பது பற்றி பொது ஜனங்களின் கருத்தை அறிய வேண்டி ஒட்டு எடுத்ததில் 100-க்கு 78 பேர்கள் சாதகமாகவும் 13 பேர்கள் பாதகமாகவும் ஓட்டுக் கொடுத்தார்கள். இதிலிருந்து அவருடைய போக்கைப் பொது ஜனங்கள் பெரிதும் ஆதரிக்கிறார்களென்று தெரிகிறது.

# போர் வீரர்களுக்குப் படைத் தலைவர் ஆறுதல்.

பர்மா போர் முனையி லிருந்து இந்தியாவிற்குத் திரும்பி வந்துள்ள இந்தியப் போர் வீரர்களுக்கும் பிரிட்டிஷ் போர் வீரர்களுக்கும் பிரதம தளபதி ஜெனரல் ஸர். ஏ. வேவல் கீழ்க் கண்ட ஆறுதல் மொழியைக் கூறி யிருக்கின்றார் :—

பர்மாவில், எதிரிகளோ ஏராளம். அவர்கள் ஆகாயப் படையோ மிகவும் பலம் பொருந்தியது. உங்களுக்கு ஓய்வோ, பக்க பலமோ, கிடையாது. இவ்வளவு கஷ்டமான நிலைமையில் நீங்கள் சென்ற சில மாதங்களாகப் போராடிக் கொண்டு வந்தீர்களென்று நான் நன்றாக அறிவேன்.

இப்படிப் பட்ட நிலை ஏற்படத் தான் செய்யும். ஏனென்றால், தற்காலிகமாக ஜப்பானியர்கள் கடலில் ஆதிக்கம் பெற்று விட்டார்கள் இதனால் தான் ரங்கூனை நாம் காப்பாற்ற முடிய வில்லை. அன்றியும் பக்க பலச் சேனைகளை எதிரிகள் ஏராளமாகக் கொண்டு வந்து சேர்த்துக் கொண்டார்கள். இந்தியாவிலிருந்து பக்க பலச் சேனைகளை உங்களுக்கு அனுப்பவும் வழி தடைப் பட்டு விட்டது.

**முக்கியமான வேலை.** உங்களுடைய முக்கியமான வேலை, எதிரிகளைத் தடைப்படுத்தி, இந்தியப் பாதுகாப்புக்களைத் தகுந்தபடி பலப்படுத்திக் கொள்ள அவகாச முண்டாக்கித் தருவது தான். இந்த வேலையைச் செய்து முடிப்பதில் உங்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருந்த போதிலும், மிகவும் கெட்டிக்காரத் தனமாகவும் வீரத்தோடும் இதைச் செய்து முடித்தீர்கள்.

பெருத்த கஷ்ட நஷ்டங்களைச் சகித்துக் கொண்டு மன உறுதியோடு இக்கடமையை நீங்கள் செய்து முடித்ததற்கு நான் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். நீங்கள் பண்பட்ட படையினர். கொஞ்ச கால ஓய்விற்குப் பிறகு, மீண்டும் நீங்கள் போர் முனைக்குச் சென்றால், இப்போது நமக்குள்ள சாதகமான நிலைமையில், எதிரிகளை வெல்ல உங்களால் நிச்சயமாக முடியும் என்று அறிவீர்கள்.

# பர்மா படைத் தலைவர் அறிக்கை.

பர்மா படைத் தலைவர் ஜெனரல் ஹானரபில் சர் எச். ஆர். எல். ஜி. அலெக்சாந்தர் கீழ்க் கண்ட விசேஷ அறிக்கையை விடுத்திருக்கிறார் :—

பர்மாவி லிருந்து நம் படைகள் பின் வாங்கியவுடனேயே, பர்மாவில் படைத் தலைவன் என்னும் முறையில் என் கடமை தீர்ந்து விட்டது. நாம் பின் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்ட போதிலும், சாம்ராஜ்யப் போர் முயற்சியில், நம் உத்தியோகஸ்தர்களும் வீரர்களும் செய்துள்ள வேலைகளைப் பற்றி பெருமை கொள்ள வேண்டும்.

ரங்கூனை இழந்த பிறகு, நம் படையும் சீனப் படைகளும் சேர்ந்து எதிரிகள் தம் இருப்புப் படைகளை எல்லாம் போர் முனைக்கு அனுப்பும்படி செய்து, வேறெந்தப் போர் முனைக்கும் அப்படைகள் போக ஒட்டாதபடி அவர்கள் நடவடிக்கைகளில் மிகவும் தாமத மேற்படத் தக்கபடி செய்து வந்தன. இந்தக் கடுமையான வேலையைச் செய்து முடிக்க, உங்களுக்கு எந்த விதமான உதவியு மில்லை. ஓய்வு மில்லை. இந்தப் போராட்டம் மிகவும் கடுமையானது தான். நம் படைகள் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் சகித்துக் கொள்ளுகின்றன. வீரமும் மிகுந்தவை. இவை காரணமாகத் தான், மழை காலத்திற்கு முன்னதாகவே எதிரிகள் இந்திய எல்லைப் புரத்திற்கு வந்து விடாதபடி தடுக்க முடிந்தது.

மீண்டும் எதிரிகளோடு போராட வேண்டியதற்கு நம் படைகள் தம்மை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். இறுதியில் நிச்சயமாக வெற்றி கிடைக்கும் என்னும் உறுதியோடும் அவர்கள் தம் கடமைகளைச் செய்ய முற்படுவார்களென்று நம்புகிறேன்".

# ஜப்பானே! உனக்கு நன்றி!

"இந்தியர்களை எதிரிகள் என்று நினைக்க வேண்டுமென்ற எண்ணமே ஜப்பானுக்கு இல்லை".

—ஜெனரல் தூஜோ.

ஜப்பானே ! உனக்கு நன்றி.—ஏனென்றால், ஹாங்காங்கிலும் மலேயாவிலும் பர்மாவிலும் இந்தியப் படை வீரர்களைக் கொன்றீர்கள், கைதி செய்தீர்கள், கொடுமைப் படுத்தினீர்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—எச்சரிக்கை யில்லாமல் கப்பல்களை மூழ்கடித்தீர்கள். அப்போது இந்தியக் கப்பல் படை வீரர்களும் மூழ்கி மடிந்தார்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—ரங்கூன், கொழும்பு, திரிகோணமலை, காக்கிநடா, விசாகப்பட்டினம் ஆகிய ஊர்களில் உள்ள பொது ஜனங்களைக் கொன்றீர்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—உன் அழிவு வேலையால் இந்தியாவில் கைம்பெண்களும் அநாதைப் பிள்ளைகளும் ஏற்பட்டு விட்டார்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—மலேயாவிலும் பர்மாவிலும் தம் முயற்சியால் தமக்கு இருப்பிடத்தைத் தேடிக்கொண்ட இந்தியர்கள், மீண்டும் இந்தியாவில் புகலிடம் கொள்ள வேண்டிய அவசிய நிலமைக்குக் கொண்டு வந்து விட்டீர்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—அநேக இந்தியக் குடும்பங்களை, கவலைக்கும் தடுமாற்றத்திற்கும் ஆளாக்கி விட்டீர்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—இந்தியாவில் விலை வாசிகள் மிகவும் உயர்ந்து விட்டன.

ஜப்பானே ! உனக்கு நன்றி.—பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவு கிடைப்பது கூட அரிதாகி விட்டது.

ஜப்பானே ! உனக்கு நன்றி.—ரயில்வே, தபால் முதலிய வசதிகளுக்கு மிகுந்த கஷ்டத்தை உண்டாக்கி விட்டீர்கள்.

ஜப்பானே ! உனக்கு நன்றி.—அவரவர்கள் தம் வேலைகளைச் செய்ய முடியாமல் தடைப்படுத்தி வாழ்க்கையை மிகவும் கஷ்டமான தாக்கி விட்டீர்கள் !

ஜப்பானே ! உனக்கு நன்றி.—இந்தியாவிற்கு யுத்தத்தைக் கொண்டு வந்து விட்டீர்கள் !

"உங்களை விடுவிக்கவே வருகிறோம் என்று அவர்கள் சொல்வார்கள்.—அது சுத்தப் பொய்."

திருமதி ஷியாங்கே ஷேக்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-மூ ஜூன்மீ 12உ, வெள்ளிக்கிழமை [இதழ் 23

## நேசக் கொடித் திருநாள்

### ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட் வேண்டுகோள்

அமெரிக்காவில் ஒவ்வொரு வருஷமும் ஜூன் மாதம் 14-ம் தேதி தேசியக் கொடி விழா நடத்துவது வழக்கம். இந்த வருஷம் நேச தேசக் கொடிகள் எல்லாவற்றிற்கும் விழாக் கொண்டாடுவது என்று அமெரிக்க ஜனத் தலைவர் முடிவு செய்து, அது பற்றி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

"நாம் ஒருதேசத்தார் என்னும் முறையில், தனித்திருந்து போராடவில்லை. இந்த உலகப்போரில் நாம் ஒரு பகுதியில் தான் ஈடுபட்டிருக்கிறோம். நேச தேச வீர மக்களுடன் சேர்ந்து நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். வெற்றியிலும் தோல்வியிலும் நாம் எல்லோரும் ஒன்று பட்டிருப்போம்."

"ஆகையால், நாம் வழக்கமாக நடத்தும் கொடித் திருநாள் அன்று, நமது கொடியை மட்டு மன்றி, நேச தேச ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டிருக்கும் எல்லா நாடுகளின் கொடிகளுக்கும் வணக்கம் செலுத்துவோம். நாம் எந்தக் கொடுமைகளை ஒழிக்கப் போராடுகிறோமோ, அந்தக் கொடுமையி னின்று விடுதலையை இந்நாடுகள் எதிர் நோக்கி யிருக்கின்றன. இவற்றில் சில நாடுகள் இன்னும் யுத்தத்திற்கு உள்ளாக வில்லை; மற்றும் சில நாடுகள் இந்த யுத்தத் தீயை எதிர்த்து நின்று வீரமாய் போராடிக் கொண்டிருக்கின்றன."

"எனவே, பிரிட்டன், வட அயர்லாந்து, சோவியத் சோஷியலிஸ்ட் குடியாட்சி நாடுகள், சீனா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கானடா, கோஸ்டா ரிக்கா, க்யூபா, செக்கோஸ்லோவேகியா டாமினிகன் குடியரசு, எல் சல்வடர், கிரீஸ், கௌதிமலா, ஹைதி, ஹந்தூரஸ், இந்தியா, லக்ஸம்பர்க், நெதர்லாந்து, நியூ சீலந்து, நிகராக்வா, நார்வே, பனாமா, போலந்து, தென்னாப்பிரிக்க யூனியன், யூகோஸ்லேவியா ஆகிய நாட்டு மக்களை நம் நாட்டு மக்கள் 1942-ம் வருஷம் ஜூன்மீ 14-ம் தேதி யன்று நடைபெறும் கொடித் திருநாளின் போது, கண்ணியப் படுத்த வேண்டு மென்று அமெரிக்க ஐக்கிய மாகாண ஜனத் தலைவரான பிராங்கிலின் டி. ரூஸ்வெல்ட் இதன் மூலமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். மக்கள் இனத்திற்கு விடுதலையும் உலகில் சமாதானமும் நிலவ வேண்டுமானால், இந்நாடுகளின் அசைக்க முடியாத ஒற்றுமை பலமும் வீரமும் தான் வேண்டும் என்பதை நான் அறிவேன்."

# அச்சு நாடுகளுக்கு அழிவு காலம்!

நாளது ஜூன்மீ 14உ ஞாயிற்றுக் கிழமை அமெரிக்க அரசாங்கமும் பொது மக்களும் ஐக்கிய தேசக் கொடி விழாவைக் கொண்டாடுவார்கள். அது போலவே பிரிட்டன், சீனு, இந்தியா முதலிய நேச தேசங்களும் கொண்டாடும்.

**கண் கொள்ளாக் காட்சி.**

"குதிரைக் கொம்பைச் சீவி கூரிய பட்டாக் கத்தி" செய்திருக்கிறேம் என்று சொன்னுல், ஒருக்கால் சரித்திராசிரியர்கள் நம்பக்கூடும்; ஆனுல், பல திறப்பட்ட அரசாங்கங்கள், ஒரே மாதிரி உள்ளத்துடனும், ஒரே எண்ணத்துடனும், ஒரே போர்த் தந்திரங்களுடனும் தற்காலத்தில் கூடி யிருக்கின்றன என்றுல், ஒரு போதும் நம்ப மாட்டார்கள். சாம்ராஜ்ய நாடுகள், அவற்றிற்கு உட்பட்ட நாடுகள் (இங்குள்ள அரசியல் அமைப்புகளைக் குறித்து வாய்ச்சாலக்குக் காரர்கள் என்ன தான் அட்டகாசமாகப் பேசிய போதிலும், இவையும் சாம்ராஜ்ய நாடுகளை ஒத்தவை தான்) பழைய முறையில் அமைந்த குடியரசுகள், புதிய முறையி லமைந்த குடியரசுகள், வகுக்கப்பட்ட அரசியல் அமைப்பைக் கொண்ட அரசாங்கங்கள், கட்சிகள் நடத்தும் அரசாங்கங்கள், கூட்டுக் கட்சி அரசாங்கங்கள், சொந்த நாட்டை விட்டு வெளியேறி அந்நிய நாடுகளி லிருந்து ஆட்சி செலுத்தும் அரசாங்கங்கள், ஆகிய 27 அரசாங்கங்கள் இப்போது போர்க் கோலங் கொண்டிருக்கின்றன. இவற்றின் மூல பலத்தையும் ஆதிக்கத்தையும் குறித்துக் கூறும் போது, "என்று மில்லாதது" "தவிர்க்க முடியாதது" என்று மட்டும் கூறினுல் போதாது. இப்போது நாம் காணப் போவது இப்படிப் பட்ட காட்சி தான்.

ஐக்கிய சோவியம் குடியரசு நாடுகள், அமெரிக்கா, சீனு, மெக்ஸிகோ முதலிய குடியரசுக ளோடு அரசாங்கங்களான பிரிட்டன், ஹாலந்து, கிரீஸ், நார்வே, யுகோஸ்லேவியா ஆகிய அரசுகள் சம நிலையில் இப்போது வந்து சேருகின்றன. பீன்ஸ், தெகால், மக்ஸாரிக் ஆகியோரின் நேசத்தை ஸ்மட்ஸும், கமச்சோவும், மெக்கென்ஸீ கிங்கும் வரவேற்று பூரிக்கிருர்கள். வெனிசூலா, ஹக்ஸெம்பர்க், கோஸ்டா ரிக்கா ஆகியவற்றிற்கும் இந்தியாவிற்கும் என்ன சம்பந்தம்? மாறுபட்ட அளவு, கனம், நிறம், அமைப்பு ஆகியவற்றை கொண்ட கற்களால் எந்தக் கட்டிட வேலை நிபுணன் தான், ஒரு கட்டிடத்தைக் கட்டி முடிக்க முடியும்? இத்தனை வகை வேற்றுமைகளைக் கொண்ட கற்களை எந்த வகை சிமின்டைக் கொண்டு தான் இணைக்க முடியும்?

சிமின்டில் சுண்ணும்பு கலந்த மண்ணும் உறுதியான பாறையுந் தான் கலந் திருக்கின்றன. இந்த யுத்தத்தில் மனித இனம் பூர்வ கால நிலைக்குப் போய் விட்டது, என்று தான் சொல்ல வேண்டும். இந்த யுத்தத்தின் பொறுப்பைப் பற்றியோ காரணத்தைப் பற்றியோ யாரும் ஆலோசிக்க வேண்டியதில்லை. சரிக்கு மாறுபட்டது தவறு; பற்றுதலுக்கு மாறுனது துரோகம்; நட்பிற்கு மாறுனது மிருகத்தனம்; ஒழுக்கத்துக்கு மாறுனது காம இச்சை; எதேச்சைக்கு மாறுனது அடிமைத் தனம்; தனிமைக்கு மாறுனது கூட்டம். இந்த மாறுபாடுக ளெல்லாம் நீங்கி ஒன்று படுவது ஊழி காலத்தில் தான். இந்த மாறுபட்ட குணங்கள், மாறுபட்ட இயல்புகளையுடைய மக்களைக் கொண்ட பூமியைக் குறிக்கிறது. அதாவது பாறையைக் குறிக்கிறது.

சிமின்டின் மற்ருெரு பகுதி சுண்ணும்பு. இது வெறுப்பைக் குறிக்கிறது; பழிக்குப் பழி வாங்குந் தன்மையைக் குறிக்கிறது. எழு மகா கொடிய பாவங்களில் வெறுப்பும் ஒன்று என்று கிருஸ்துவர்கள் தம் வேதங்களில் படிக்கிருர்கள். என்றுலும் வேத பாஷியக் காரர்கள் இதன் பொருளை இப்போது மாற்றி எழுத வேண்டி யிருக்கிறது. மிகவும் உன்னத மானதாகவும் அவசியமான தாகவும் இப்போது வெறுப்பு அமைந்திருக்கிறது. ஏனென்றுல் உதாரணமாக, பணத்தை எந்த வகையிலும் திரட்டுவதே இலட்சியம் என்னும் கொள்கையே பெரிதும் அருவருக்கத் தக்கது; அதன் பொருட்டு கையாளப்படும் முறைகளோ மகா கேவலமானவை. ஆகவே இந்த இலட்சியத்தை சுத்தமான மனதோடு எல்லோரும் கூடி வெறுக்க வேண்டியது மிகவும் அவசிய மல்லவா?

**கழுகு தாவிப் பாய்கிறது.**

ஒரு கழுகு. அதன் தலையோ வழுக்கை. அதன் மேலுள்ள சிறகுகள் எல்லாம் நாள் தோறும் ஒவ்வொன்றுகப் பிடுங்கப் படுகின்றன. அதன் கூரிய நகங்களில் விஷந் தோய்ந் திருக்கிறது. அது குடித்த இரத்தக் கறைகள் அதன் தலை யெல்லாம் படிந் திருக்கின்றன. இந்தக் கழுகு ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டின் மீதும் பாய்ந்து கொண்டு வருகிறது. இந்த நாடுகள் எல்லாம் ஏற்கெனவே வாடி வதங்கி யிருக்கின்றன. இந்தக் கழுகு தான் ஹிட்லர். சாக்கடை குழிக்குள் பதுங்குகிறது முஸோலினி நரி; வெற்றிகள் அடைந்த செருக்கினுலே, தன் சிறகைக் கொட்டிக் கொண்டு 'கொக்கரக்கோ' வென்று கூவிக் கொண்டிருந்த காக்கை ஜப்பான், சவுக்கடி பட்டு, சிதைந்து போய், ஊளை யிட்டுக் கொண்டு உட்கார்ந் திருக்கிறது. என்றுலும், அழுகிப் போன பிணத்தைக் கொத்தித் தின்னும் தன் கூரிய மூக்கினுல், இப்போது, கீழ் கோடி நாடு களிலுள்ள இனிமையான உணவுகளைக் கொத்திக் கெடுத்து விடுகிறது. இவற்றை வெறுப்பது ஒரு சிறப்புத் தான்; பழிக்குப் பழி வாங்குவதும் நியாயந் தான்.

இந்த உணர்ச்சிகள் தான் 27 நாடுகளின் மகத்தான கூட்டாயுதம். இதைத் தான் அடுத்த ஞாயிற்றுக் கிழமை வலியுறுத்திக் கொள்ளப் போகிருேம். வீர வணக்க மயக்கத்தினுலேயோ, துரோகம் செய்து அடைந்த வெற்றிகளினுலேயோ, இறுதியில் நிச்சயமாக நமக்கே வெற்றி கிடைக்கும் என்னும் உறுதியினுலேயோ, அச்சு நடுகளின் ஒழுக்கம், இப்போது சரியானபடி அமைந் தில்லை. மக்கள் இனத்தின் கடுங் கோபத்திற்கு ஆளாகி விட்டோமே என்னும் பெரும் பயம் அவர்கள் உள்ளத்தை வாட்டிக் கொண்டிருக்கிறது. அடுத்த ஞாயிற்றுக் கிழமை நடை பெறப் போகும் விழாவிற்குப் பிறகு, ஜெர்மானியனுக்கோ, இத்தாலியனுக்கோ, ஜப்பானியனுக்கோ தூக்கமே வராது. இது நிச்சயம்.



## போராடத் தயார்!



அமெரிக்காவி லிருந்து ஏராளமான டாங்கிகள் பிரிட்டனுக்கு அனுப்பப் படுகின்றன. அவற்றுள் ஒன்று எகிப்தில் உள்ள துறை முகத்தில் இறக்கப் படுகிறது.

# ஏ.ஆர்.பி. பயிற்சியின் அனுபவங்கள்.

## வார்டன் கடமைகள்.

ஏ.ஆர்.பி. பயிற்சியி லிருந்து ஒரு விஷயம் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது, ஏ.ஆர்.பி. பயிற்சி நடத்தும் முன்னதாக ஒவ்வொரு வீட்டில் உள்ளவர்களும் எந்த இடத்தில் பதுங்கிக் கொள்ள வேண்டு மென்று வார்டன்கள் போய்த் தெரிவிக்க வேண்டும்.

**பயிற்சி ஏன் வேண்டும்?**

இந்தப் பயிற்சிகள் ஏன் வேண்டுமென்றுல், (1) ஏ.ஆர்.பி. காரர்கள், போலீஸார், உள் நாட்டுப் பாதுகாப்புப் படையினர் ஆகியோர் ஒத்துழைக்கப் பழக வேண்டும். (2) விசேஷ சம்பவங்கள் ஏதேனும் நடைபெற்றுல், அந்த இடங்களுக்கு வேண்டிய உதவிகளை, தகுந்த முஸ்தீபுடன் அனுப்பப் பழக வேண்டும். (3) போக்கு வரவு வசதிகள் தகுந்தபடி அமைந் திருக்க வேண்டும். (4) இந்த உதவிப் படைகளைத் தலைமை வகித்து நடத்துவதற்குப் போதுமான பயிற்சி ஏற்பட வேண்டும். எனவே தான் அடிக்கடி இந்தப் பயிற்சிகள் நடை பெறுகின்றன.

**வார்டன் கடமைகள்.**

ஏ.ஆர்.பி. வார்டனின் கடமைகளாவன:— 1. விமானத் தாக்குதலினுல் நேர்ந்த சேதம் எவ்வள வென்று சரியானபடி மதிப்பிட வேண்டும். 2. அதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிவிக்க வேண்டும். 3. மற்ற ஏ.ஆர்.பி. காரர்களுக்கு ஏற்றபடி ஆலோசனை கூறி உதவி செய்ய வேண்டும். 4. பொது ஜனங்களுக்கு உதவி புரிய வேண்டும். இவை எல்லாவற்றையும் விட மிகவும் முக்கிய மானது 5. தன் வார்டி லுள்ளவர்களுக்கு ஏ.ஆர்.பி. யைப் பற்றி நன்கு தெரிவிக்க வேண்டும்.

**பதுங்கிக் கொள்ளும் பயிற்சி.**

பதுங்கிக் கொள்ளும் பயிற்சி ஏ.ஆர்.பி. பயிற்சியோடு சம்பந்த முடையதாக இப்போது இருக்கப்படாது. முதலில் ஒரு பட்டணத்தின் ஒரு பகுதியில் மட்டும் பரீட்சிக்க வேண்டும். அப்பகுதியிலுள்ள அனைவரும் கட்டாயம் பதுங்கிக் கொள்ள வேண்டும். இந்தப் பயிற்சி 15 நிமிஷங்களுக்கு மேல் நடத்தப் படக்கூடாது.

நமக்குப் போதுமான கருவிகள் இல்லை என்று வார்டன்கள் சும்மா இருந்து விடக் கூடாது. சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் கருவிகளை உபயோகிக்கப் பழக வேண்டும். நமக்குப் போதுமான பயிற்சி இல்லையானுல் நம் உயிருக்குத் தான் ஆபத்து. ஆகவே நாம் அலட்சியமா யிருக்கப் படாது.

பொது மக்களும் இதில் அக்கரை கொள்ள வேண்டும். விமானத் தாக்குதல் ஏற்பட்டு எங்கேனும் ஒரு இடத்தில் நெருப்புப் பிடித்துக் கொண்டால், அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள், உடனே அதை அணைக்க முயல வேண்டும். தீயணைக்கும் இயந்திரம் வரும் என்று காத்திருந்தால், அவர்களுடைய வீடுகளே சாம்பலானுலும் ஆகக் கூடும்.

**போக்கு வரவு.**

ஆபாய அறிவிப்புச் சங்கு பிடித்தவுடனே ஓடிக் கொண்டிருந்த வண்டிக ளெல்லாம் இடது பக்கம் நின்று விடாது ஓடிக் கொண்டிருந்தன. ரோடு சந்திப்புகளில் போலீஸாரும், வார்டன்களும் அவற்றை நிறுத்தி விட்டார்கள். இதனுல், அபாயம் நீங்கியதை அறிவிக்கும் சங்கு பிடித்த வுடனே, வண்டிகள் போக்கு வரவிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. ஆகையால், அபாயச் சங்கைக் கேட்ட வுடனே வண்டிக ளெல்லாம் இடது புரம் நின்று விட வேண்டும்.

இந்தியாவில் விமானத் தாக்குதல் ஏற்பட்டால் நெருப்பால் தான் மிகுந்த அபாயம் நேரக் கூடும். எனவே, போதுமான தண்ணீர் வைத்திருக்க வேண்டும். இப்போது கட்டப் பட்டிருக்கும் குளங்கள் போதாது. இன்னும் அநேகக் குளங்கள் கட்டப் பட வேண்டும்.

'எஜமான இனமும் அடிமை ஜனங்களும்.' என்னும் கொள்கையைக் கொண்ட நாஜி தத்துவம், உலகிலுள்ள எல்லா முஸ்லீம்களுக்கும் ஒரு யமன் போல் இருக்கிறது. அச்சு நாடுகள் வெற்றி யடைந்தால், முஸ்லீம் இராஜ்யங்களே அழிந்து விடும் என்று தான் அர்த்தம், என்று ஈராக் பிரதம மந்திரி நூரி சையத் குறிப்பிட்டிருக்கிறுர்.

# சீனாவிற்கு இந்தியாவி லிருந்து ஏற்றுமதி

## 2 கோடி 33 லட்சம் ரூபாய்க்கு யுத்தத் தேவைகள்

யுத்தத்தை நடத்துவதற்கு ஏராளமான சாமான்கள் சீனாவிற்குத் தேவையா யிருக்கிறது. இவை சீனாவில் கிடைக்காது. எனவே, இந்தியாவி லிருந்து 2 கோடி 33 லட்ச ரூபாய்க்குச் சாமான்கள் வாங்கி அனுப்பும்படி பீகிங் சின்டிகேட் லிமிட்டெட்டுக்கு உத்திர விட்டிருக்கிறார்கள்.

இந்தச் சாமான்களைக் கடனாகத் தான் அனுப்புகிறார்கள். இதற்கு லண்டனி லுள்ள மன்னர்பிரான் கஜானா இலாக்கா ஜாமீனாக இருக்கிறது. சில சாமான்களை ரொக்கமாகவும் வாங்குகிறார்கள்.

சீனாவிற்கு எந்த சாமான்கள் தேவை என்பது பற்றி இந்திய சர்க்கார் சப்ளை இலாக்கா அப்போதைக்கப்போது ஆலோசித்து வருகிறது. அவசரமாகத் தேவைப்படும் சாமான்கள் அரிதாக இருந்த போதிலும், கிடைத்த அளவிற்காவது அனுப்புகிறார்கள்.

துணி வகைகளில் 1 கோடி 66 லட்சம் ரூபாய்க்கு அதிகமாக ஆர்டர் கொடுத் திருக்கிறார்கள். பெட்ரோல், விமான ஸ்பிரிட், தறி இயந்திரங்கள், காயித இயந்திரங்கள், சில்லரை இயந்திரங்கள், ஆயுதங்கள், கத்திகள், ரம்பங்கள், செப்புக் கம்பி, பித்தளைத் தகடு, அல்யூமினியம், அபிரேகம், க்ராபைட், எமரி துணி, மணிலா கயிறுகள், வர்ணங்கள், வார்னிஷ்கள், சாயங்கள், இரசாயனப் பொருள்கள், மருந்து வகைகள் முதலியவற்றிற்கும் ஆர்டர் கொடுத் திருக்கிறார்கள்.

# சூச்சோவ் நகர வீழ்ச்சி.

## ஜப்பானியர் கல் நெஞ்சம்

சூச்சோவ், சீனாவின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்று. வெகு அழகானது. சரித்திரப் பெருமை வாய்ந்தது. 3½ லட்சம் மக்களைக் கொண்டது. சென்ற நவம்பர் மாதம் 2 வது வாரம் ஒரு நாள் ஜப்பான் விமானங்கள் உயரத்தில் வட்ட மிட்டன. குண்டுமாரி பொழிந்தன. மகா அபாயகரமான குண்டுகளை வீசின. பயங்கரமான கொலை பாதகம். வெறுக்கத் தக்க அக்கிரமம். மனித இறைச்சியை மழை போலச் சிதறடித்தன. காணவும் கண் கூசும். இரவும் பகலும் ஓயாத கொலை பாதகம்!

வெடி குண்டுகளைக் கொலை பாதகர் எறிய ஆரம்பித்த கொஞ்ச நேரம் வரையில் பெரும்பாலானவர்கள் பள்ளங்களில் பதுங்கிக் கொண்டிருந்தோம். இடை விடாது எதிரிகள் தாக்கிக் கொண்டே யிருந்தனர். அப்போது நாங்கள் எல்லோரும் அங்கேயே கூடி, பள்ளங்களிலேயே இருந்து விடுவதா, அல்லது, வெளி யேறி, உயிரைப் பொருள் படுத்தாமல், நம் அலுவல்களைக் கவனிப்பதா என்று விவாதித்தோம். முடிவில் வெளியேறி அலுவல்களைக் கவனிப்பது என்று தீர்மானித்து அதன்படிச் செய்தோம்.

நவம்பர் மாதம் 9-ம் தேதி விமானங்களில் இருந்து துண்டுப் பிரசுரங்களை ஜப்பானியர் வீசினார்கள். மூன்று நாட்களில், நகரத்தை மேலும் வெடி குண்டுகளால் அடியோடு நாசம் செய்து விடப் போவதாக அதில் குறிப்பிட் டிருந்தார்கள். நரக வேதனைக்கு உள்ளாகி இருந்த நாங்கள், இது சாத்தியமா என்று சந்தேகித்தோம். அப்போது நாங்கள் அடைந்த அச்சத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. ஆயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் நகரத்தை விட்டு தம் மூட்டை முடிச்சுகளுடன் வெளி யேறிய காட்சி மிகப் பரிதாபகரமானது.

ஷாங்ஹையை விட்டு சீனர்கள் பின் வாங்கியதையடுத்து ஜப்பானியர் சூச்சோவ் நகரத்தை வசப்படுத்திக் கொண்டார்கள்.

# நாஜிகள் தந்திரம் பலிக்க வில்லை

## கார்க்கோவ் போர் முனையில் ரஷ்யர் வெற்றி

“ டெய்லி எக்ஸ்பிரஸ் ” பத்திரிகையின் இராணுவ நிருபர் தன் பத்திரிகைக்குக் கீழ் கண்டவாறு எழுதுகிறார் :—

நான் முன்பு எழுதியதில் தப்பில்லை. கார்க்கோவ் போரில் ருஷ்யர்களுக்குத் தான் வெற்றி. ஜெர்மானியர் தம் பிரசாரத்திற்காக மறுத்துச் சொல்லும் விவரங்களை விட்டுவிட்டு, உண்மையான புள்ளிகளைப் பார்ப்போம்.

நாஜிகளின் வசந்த காலத் தாக்குதலைத் தடுக்க வேண்டி, திமோஷேங்கோ 5 லட்சம் பேர் கொண்ட ஒரு படையையும், 1,500 டாங்கிகளையும், 6,000 பீரங்கிகளையும், 1,000 விமானங்களையும் தயார் செய்து வைத்திருந்தார். மூன்று வாரங்களில், 90,000 போர் வீரர்களையும், 540 டாங்கிகளையும், 1,511 பீரங்கிகளையும், 200 விமானங்களையும் எதிரிப் படைகளில் நாசமாக்கினார். இதன் மூலம் ஜெர்மன் படைத் தலைவரான வான் பக் படைவீரர்களில் ஐந்தி லொரு பங்கு படைகளுக்குச் சேதம். தளவாடங்களில் மூன்றில் ஒரு பங்கு சேதம். இதனால், இன்னும் இரண்டொரு மாதத்திற்கு காக்கஸஸ் பக்கம் ஜெர்மன் படைகள் எட்டிப் பார்க்காதபடி செய்து விட்டார். கார்க்கோவைச் சுற்றிலும் தன் படைகளைப் பலப் படுத்திக் கொண்டார். அப்போது தான் நேர் முகமாக அந்ந ரத்தைத் தாக்கவும் போக்கு வரவு சாதனங்களைக் கைப்பற்றிக் கொள்ளவும் முடியும். தற்போதுள்ள தம் போர்த் தந்திரத்தை ஜெர்மானியர்கள் மாற்றியமைத்துக் கொண்டு புதிய முறையைக் கையாள வேண்டும்; அல்லது, தம்மைப் பலப்படுத்திக் கொள்ள இன்னும் சில வாரங்கள் அவகாசம் ரஷ்யர்களுக்கு ஜெர்மானியர் கொடுத்தாக வேண்டும். இங்கே ஒரு விஷயம் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நிச்சயமாக வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே, சென்ற வருஷத்தை விட இவ் வருஷம் ஒரு மாத காலம் தாமதித்து போரைத் தொடங்கி யிருப்பதாக மறை முகமாக ஜெர்மானியர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

டாங்கிகளைக் கொண்டு போராடி நாசஞ் செய்து விடாதபடி, காலாட் படைகளைக் கொண்டே போராடும்படியான அவசியத்தை ஜெர்மன் படைகளுக்கு திமோஷேங்கோ உண்டாக்கி விட்டார். சிடானிலும், போலந்திலும் நடத்தியது போல டாங்கிப் போர் நடத்த வொட்டாதபடி கொன்று விட்டார். வெற்றிக் கொடிகளுடனும், வீர முழக்கத்துடனும் போர்க் களத்திலிருந்து செஞ்சேனைகள் திரும்புகின்றன.

ஒரே போரில் யுத்தத்தை வென்று விடலா மென்று நாம் நினைக்கக் கூடாது. பிரியான்ஸ்க்குக்கும், ஸ்மோலென்ஸ்க்குக்கும் பின்புறமுள்ள தீவிலிருக்கும் ஸ்டாலினோ பகுதியில் ஹிட்லர் பெருவாரியான படைகளைத் திரட்டி வைத்திருக்கிறார். ரஷ்யர்கள் பலத்தைப் பரீட்சிக்கத் தக்கபடி, புதாக இப் படைகள் தாக்கப் புறப்படலாம். எங்கே ஆபத்து அதிகம் என்று தோன்றுகிறதோ, அங்கே முதலில் எதிரிகளை அடித்து நொறுக்கி விட வேண்டும் என்பது ஸ்டேலின் நோக்கம். அடிமேல் அடி அடித்தால் ஜெர்மன் படையும் பலவீன மடையத் தான் செய்யும். ஆனால் ரஷ்யாவில் வசந்த காலம், ஐந்து மாதங்கள் மட்டுந் தான்.



# இலங்கையில் நம் விமான பலம்

## ஜப்பானியர்கள் ஓடியது ஏன்?

### ஒரு உத்தியோகஸ்தர் கூறும் விவரம்

இலங்கை ஆகாய விமானப் படையைச் சேர்ந்த ஒரு பொறுப்பாளி, பத்திரிகைப் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு மகா நாட்டில், மலேயாவில் யுத்தம் நடைபெற்ற நாள் முதல் இன்று வரை இலங்கையின் ஆகாயப் படை எவ்வளவு விரைவில் ஓங்கி வளர்ந்திருக்கிறதென்றும், சந்தர்ப்பம் நேரும்போது ஜப்பானியர்களைத் தாக்கப் புறப்பட, விமானங்களுக்கு எவ்வளவு வசதியான இடமாக அமைந்திருக்கிறது என்றும் விளக்கிக் கூறினார். அதன் விவரமாவது :—

ஆரம்பத்தில் நம் கப்பல்களை எதிரிகள் தாக்கி விடாதபடி வட்ட மிட்டுக் கொண்டிருக்கும் படியும், எதிரிகள் நடமாட்டம் தென்பட்டால், உடனே, நம் கப்பற் படைக்குத் தெரிவிக்கும் படியுந் தான், சில சிறு விமானங்களை வைத்திருந்தோம். சிங்கப்பூரை இழந்த பிறகு தான் பலமான தோர் ஆகாயப் படையைத் திரட்டினோம். வெகு வேகமாகப் பறக்கக் கூடிய விமானங்களை அமைப்பதற்கு இடங்களைக் கட்டி முடிக்க, வெகு துரிதமாக வேலைகள் நடைபெற்றன. ஏற்கெனவே உள்ள விமான நிலையங்களைப் பெரிதாக்க வேண்டி யிருந்தது; புதிய விமான நிலயங்களையும் அதிகமாகக் கட்ட வேண்டியிருந்தது. இதில் ஒரு பகுதியை ஒரே வாரத்தில் கட்டி முடித்தோம்.

சென்ற ஈஸ்டர் வாரத்தில் ஜப்பானியர்கள் இங்கே வந்து தாக்கிய போது பெரிதும் ஏமாற்ற மடைந்திருப்பார்கள் என்பது உறுதி. நம் சுழற் காற்று விமானங்கள் நம் எதிரிகளைக் கடுமையாகத் தாக்கி விரட்டி யடித்து விட்டன. அல்லாமலும், நமது புதிய விமான நிலையங்கள் எங்கிருக்கின்றன என்று அவர்களுக்குத் தெரியாது. நாள் தோறும், மணித் தோறும், வேவு பார்க்கும் நம் விமானங்கள், புயற் காற்று, வீறிட்டடிக்கும் காலத்திலேயுங் கூட, கொந்தளிக்கும் கடலுக்கு மேலே சென்று, தம் கடமைகளை வெகு திறமை யோடு செய்து வந்தன.

அந்த உத்தியோகஸ்தரைப் பத்திரிகைப் பிரதிநிதிகள் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த விடையாவது :—

நமது விமானங்களை விட ஜப்பானிய விமானங்கள் பல வகைகளில் மட்டமானவை. தம விமானங்கள் விரைந்து சென்று காரிய சித்தி பெற வேண்டியதற்காக அவ்விமானங்களி லுள்ள சிலவற்றைக் கூட, அவர்கள் தியாகஞ் செய்யத் துணிந் திருப்பதாகத் தெரிகிறது.

யுத்தத் தேவைகளின் பொருட்டு இப்போது இலங்கையில் அமைக்கப்பட் டிருக்கும் விமான வசதிகள் பெரிதும் மதிக்கத் தக்கவை. உலக விமானப் பாட்டைகளில் மிக முக்கியமான தோர் இடமாக இலங்கையும் விரைவில் அமையும் என்று நினைக்கிறேன்.

# சோவியத் சர்க்காரில் மத உரிமைகள்

## முஸ்லீம் ரஷ்ய நாடுகளில் கல்வி நிலை

### நாட்டு மொழியே முக்கியம்

சோவியத் நாடுகளைப் பாது காப்பதில் முஸ்லீம்கள் எல்லாப் போர் முனைகளிலும் இருந்து போராடுகிறார்கள். இவர்களில் அநேகர் தம் வீரம் மிகுந்த செயல்களுக்காக இராணுவ விருதுகளும் பெற்றிருக்கிறார்கள்.

**சோவியத் சர்க்கார் அமைப்பு**

சோவியத் சர்க்கார் அமைப்பின் படி எல்லா விதமான வேற்றுமைகளும் ஒழிந்து விட்டன. அங்குள்ள எல்லா மொழிகளையும் சமமாகவே கருதுகிறார்கள். அரசாங்க மொழிகள், ரஷ்ய மொழியும், அந்தந்த நாட்டில் வசிப்பவர்களில் பெரும்பாலோர் பேசும் மொழியும் தான. 1941-ம் வருடம் ஜனவரி மீ 1உ யில் 16,921,900 மாணக்கர்களுக்கு முஸ்லீம் மொழிகளில் பள்ளிக் கூடங்களில் பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டது. மற்ற மொழிகளில் சொல்லிக் கொடுக்கப்படும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணக்கர்களை இந்த எண்ணிக்கையில் சேர்க்க வில்லை. மத்திய ஆசியாவி லுள்ள சோவியத் குடியரசு நாடுகளில் 140 ஆட்டக் கொட்டகைகள் இருக்கின்றன. அவற்றில், உள்ளூர் மொழிகளில ஆட்டம் நடத்துபவை 103. மொத்தத்தில் 7,407 புத்தக சாலைகளும், 8,'42 கிளப்புக்களும், 53 மியூசியங்களும், இருக்கின்றன. முஸ்லீம்களின் பழைய மொழிகளையும் நூல்களையும் புதுப்பிக்கிறார்கள். ரஷ்ய, உக்ரேனியா முதலிய மொழிகளில் உள்ள நூல்களை முஸ்லீம் மொழிகளில் பெயர்த்து எழுதுகிறார்கள். இக்குடியரசு நாடுகளில் வசிக்கும் முஸ்லீம்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

அஸர்பெய்ட் ஜான் குடியரசில் வசிக்கும் 32 லட்சம் பேர்களில் 2,500 பேர்களும், 1,254,000 பேர்கள் வசிக்கும் துருக்கிமன் குடியரசில் 4,000 பேர்களும், 51 லட்சம் பேர்கள் வசிக்கும் கசாக் குடியரசில் 28,000 பேர்களும் உயர்தரக் கல்வி படிக்கிறார்கள். உயர் தரக் கல்வி பெறுவதற்கான எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டிருக்கின்றன. சர்க்கார் இசைக் கழகம் ஒன்றும் 14 மத்திய சர்வ கலாசாலைகளும் ஆசிய ரஷ்யாவில் இருக்கின்றன. சோவியத் விஞ்ஞானக் கழகத்தார் தம் கிளைகளை முஸ்லீம் பகுதிகளில் வைத்து நடத்துகிறார்கள். அங்கே முஸ்லீம் விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகளை நடத்துகிறார்கள்.

மத்திய ஆசியா, காக்கேஷியா, வால்கா பிறப்பிடம் முதலிய பகுதிகளில் வசிக்கிறவர்கள், ஹிட்லர் தம் நாட்டில் கால் வைக்காத படி தடுத்து விடக் கூடியவர்கள் தான்.

**கடவுள் வழிபாடு**

சோவியத் சர்க்காரிலே மத சம்பந்தமான தடைகள் கிடையாது. எந்த மதத்தைச் சார்ந்தவர்களும் சம உரிமைகளோடு வாழலாம். அங்கே 1,312 மசூதிகள் இருக்கின்றன. அங்கே தொழுகையை நடத்த, 8,052 முல்லாக்களும், 282 ஷேக்குகளும், 528 இஷான்களும் மற்றவர்களும் இருக்கிறார்கள்.

# ஜப்பானியர் ஜாவா முழுதையும் ஜெயிக்க வில்லை.

## இரண்டு நெதர்லந்து கொடிகள் பறக்கின்றன.

### இரண்டு படைகள் பதுங்கி யிருக்கின்றன.

ஜாவா ஜப்பானியர் வசமான போதிலும் இன்னும் அங்கே இரண்டு இடங்களில் நெதர்லந்து சர்க்கார் கொடிகள் பறந்து கொண்டு தான இருக்கின்றன. இரண்டு டச்சு சேனைத் தலைவர்கள் உள் நாட்டி லுள்ள கோட்டைகளுக்குள் தம் சேனைகளோடு இருக்கின்றனர். சேனைத் தலைவர் வில்லெல்ம் ஷெல்லிங் தன்னுடன் 56,000 பேர் கொண்ட சேனையுடன், தென் மேற்கு ஜாவாவி லுள்ள பாந் தோங்குக்கு அருகில் காட்டிற்குள் இருக்கும் கோட்டைக்குள் இருக்கின்றனர். இவர்களைப் பிடிக்க ஜப்பானியர் செய்த முயற்சிக ளெல்லாம் வீணாயின. இவருடன் உள்ள சேனைகள், காட்டுச் சண்டையில் வல்லவர்கள். போதுமான துப்பாக்கிகள் இவர்க ளிடம் இருக்கின்றன. இந்தச் சண்டைகளுக்கு பீரங்கிகளே தேவையில்லை. இவர்கள் வசமுள்ள உணவுப் பொருள்கள் 18 மாதங்கள் முதல் 2 வருஷங்கள் வரை உதவும்.

மற்றொருவர், தளபதி பெஸ்மன். இவர் ஒரு மலை மேலுள்ள பீடபூமியில் தன் 20,000 பேர்கள் கொண்ட படைகளுடன் இருக்கிறார். இவர் இருக் கும் இடத்தைச் சுற்றி செங்குத்தான பாறைகள் உயரமாக இருக்கின்றன. எனவே இதுவே ஒரு இயற் கைக் கோட்டையாக அமைந்திருக்கிறது.

### வருந்துகிறோம்.

இந்தியன் இஞ்சினீரிங் இலாக்காவில் சாப்பாட்டுக் கட்டு சிப்பந்தியாகப் போன 1557-ம் நம்பர் அந்தோனி போர்க் களத்தில் இறந்தார் எனக் கேட்டு வருந்துகிறோம். அவருடைய குடும்பத் தாருக்கு நம் அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

**காணாமற் போனவர்கள்.**

சென்னை சாப்பர்ஸ் அன் மைனர்ஸ் :—

| நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 63577 | சாப்பர் .. .. | சொக்கலிங்கம். |
| 63217 | ஷை .. .. | ஞானசாமி. |
| 63697 | ஷை .. .. | ஐயம் பிள்ளை. |
| 63720 | ஷை .. .. | கிருஷ்ணசாமி நாயுடு. |
| 60170 | ஷை .. .. | மாட செட்டி. |
| 63135 | ஷை .. . | மாரப்பன். |
| 64116 | ஷை .. .. | நாராயணசாமி. |
| 63559 | ஷை .. .. | பரசுராமன். |

ஆர்.ஐ.எ.எஸ்.சி :—

| | | |
|---|---|---|
| 893946 | பி. லான்ஸ் நாயிக் | ஏகாம்பரம் பிள்ளை. |
| 899536 | சிப்பாய் .. .. | கோபால கிருஷ்ணன், ஆர். |
| 896017 | ஷை | லட்சுமணன். |
| 900252 | ஷை .. | முனுசாமி, ஆர். |
| 894114 | ஏ.பி.எல். நாயிக். | முனுசாமி. |
| 900288 | சிப்பாய் .. .. | இராஜமாணிக்கம். |
| 894115 | ஷை | சுப்பிரமணிய பிள்ளை, சி. |
| 893977 | யு.பி.எல். நாயிக். | வடிவேலு. |
| 896156 | சிப்பாய் .. .. | வெங்கிடசாமி. |
| 899860 | ஷை | வெங்கடேசன், பி. |

**காயப்பட்டவர்கள்.**

இந்திய உதவிப் பயனியர் படை :—

| | | |
|---|---|---|
| 48661 | ஹவில்தார் .. | நாராயண நாயர். |
| 48660 | லான்ஸ் நாயிக் .. | பெருமாள் நாயுடு. |
| 49152 | ஷை .. | சி. ஆர். சாமி. |

இந்தியன் சிக்னல் படை :—

| | | |
|---|---|---|
| 15255 | சிக்னல் .. .. | முனிரத்தினம். |
| ஏ.2556 | ஷை .. .. | முனிசாமி. |
| ஏ.7623 | ஷை .. .. | ராதாகிருஷ்ணன். |
| ஏ.5641 | ஷை .. .. | சூசை மாணிக்கம். |
| 15975 | லான்ஸ் நாயிக் .. | தங்கப்பன் பிள்ளை. |

எப் பி.ஓ :—

| | | |
|---|---|---|
| 1544 | லான்ஸ் நாயிக் .. | கரிமுல்லா. |
| 1133 | சிப்பாய் .. .. | சுந்தர மகாலிங்கம், பி. |

ஆர்.ஐ.எ.எஸ்.சி :—

| | | |
|---|---|---|
| 896300 | சிப்பாய் .. .. | இருதயம், |

**காயப்பட்டவர்கள்.**

| நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| ஐ.எ.ஓ.சி :— | | |
| 0/30717 | சிப்பாய் .. .. | பிரான்ஸிஸ் பெர்ரி ஞண்டோ. |

"காட் அன் வோலக்" என்பது நாஜிகள் வெளி யிட்ட ஒரு புத்தகம். அதில், இஸ்லாம், இந்து, ஹீப்ரு, கிருஸ்து ஆகிய மதங்கள் எல்லாவற்றையும் ஒழித்து விட வேண்டும் என்று வற்புறுத்தி யிருக் கிறது.

### ஆச்சரியந் தான்.

இங்கிலாந்தி லுள்ள லீஸ்டர் நகர வியாபாரி யொருவர் இந்தியாவில் இருக்கும் தன் சகோதரருக்கு எழுதி யிருக்கும் ஒரு கடிதத்தில் கீழ்க் கண்ட வாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

"சமீபத்திலுள்ள இத்தாலியக் கைதிகள் தாம் சேமித்து வைக் கும் தொகைகளைக் கொண்டு பிரிட்டிஷ் யுத்த சேம நிதிப் பத்திரங்கள் வாங்குகிறார்கள் என்ற செய்தி வெளியாக இங்கே மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது"

முஸ்லீம் அறிஞர்களுள் ஒருவரான சர்தார் இக்பால் அலி ஷா கூறியதாவது :—ஜெர்மன் நாஜி களுக்கும், கிழக்கே யுள்ள முஸ்லீம்களுக்கும் கட வுளைக் குறித்த விஷயங்களில் நேர் மாறான கருத்துக் களே இருந்து வருகின்றன. குர் ஆன் கட்டளைகளை முஸ்லீம்கள் நெடு நாள் தொட்டு மீறுவ தில்லை. அவற்றுள் ஒன்று வாக்குறுதியை மீறக் கூடா தென் பது. ஆனால் நார்டிக் இன மல்லாதவர்க ளோடு செய்து கொள்ளப் படும் ஒப்பந்தம் செல்லத் தக்க தல்ல என்பது நாஜிகளின் கொள்கை!



# நடு வழியிலே!

இரண்டு வியாபாரிகள், அவர்களில் ஒருவர் லக்ஷ ரூபாய் லாபத்தை நிச்சயமாக எதிர்பார்த்து, ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்கிறார். தன்னுடைய சாமர் த்தியத்திலும், தனது வியாபார முறையிலும் அவரு க்கு அபார நம்பிக்கை. லக்ஷ ரூபாய் கைக்கு வந்து விட்டதாகவே கனவு கண்டு கொண்டிருக்கிறார் அவர். அதோடு நிற்க வில்லை. அந்த லக்ஷ ரூபாய் கைக்கு வந்ததும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிக் கூடத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார். இப்படிப் பட்ட மனுஷருக்கு, எதிர் பாராமல் நடுவழி யில் நல்ல உதையும் கிடைத்து, எதிர் பாராத இடைஞ் சல்களும் உண்டாகி, நஷ்டமும் ஏற்பட்டால் எப்படி யிருக்கும்? அதிகப்படி லாபத்தை எதிர் பார்த்ததால் அவருக்கு சிறு நஷ்டம் கூட, மிகப் பெரிதாகவே தோன்றும், இது மட்டு மில்லை! அந்த வியாபாரி, தன்னிடம் கொஞ்சம் அதிகப் பசை இருக்கிறது; புது பணம் வேறே வந்திருக்கிறது என்று எண்ணி, ரங்கு ஆட்டம், குடி அட்டம், மைனர் ஆட்டம் ஆகியவற்றில் எல்லாம் இறங்குகிறார் என்றால், எத்தனை நாள் தான் அவருடைய புது ஜோர் நீடித்திருக்கும்? மற்றொரு வியாபாரி இருக்கிறார், அவர் பரம சாது. போட்டி மனப் பான்மை அவரிடம் அதிகம் கிடையாது. எதிர்க் கடைக் காரரான ஆடம்பரப் பிரியர் செய்த அட்டகாசத்தால், இவருக்குக் கொஞ்சம் கையைக் கடிக்கத் தான் செய்தது. ஆனால் தன்னைத் தானே சமாளித்துக் கொண்டு, தனது சக்தியைக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப் படுத்திக் கொண்டு. சந்தர்ப்பம் கிடைத்த இடத்தில், எதிர்க் கடைக் காரரைத் திகைக்க வைத்துக் கொண்டிருப்பதையே தனது போக்காக வைத்துக் கொண்டிருக்கிறார். சில வருடங்களுக்கப் புறமாவது எதிர்க் கடைக்காரரை விட ஒரு படி உயர்ந்து நிற்கலாம் என்ற திட நம்பிக்கை இவருக்கு இருக் கிறது. தவிர, எதிர்க் கடைக் காரருடைய கண்மூடித் தனமான போக்கு, நாளடைவில் அவரை ஓட்டாண்டி யாக்கி விடும் என்ற விஷயம் வேறே இருக்கிறது.

ஆரம்பத்திலே மட்டும் மளமளவெனப் பிரமாத லாபம் வந்தால் போறுமா? பிறகு, பெரிய பெரிய நஷ்டங்களும் வந்து, கையிலே சரக்கும் இல்லாமல், லாபத்திற்கும் வழி இல்லாமல் போகுமானால் யாரானாலும தவிடு தாங்கிப் போய் விட வேண்டியது தானே!

அச்சு நாட்டாரை மேற்கண்ட இரு வியாபாரிகளில், முதல் ரக வியாபாரிக்கு ஒப்பிடலாம். பிரிட்டிஷாரை பொதுவாக நேச தேசத்தாரை இரண்டாம் ரக வியா பாரிக்கு ஒப்பிடலாம்.

'எல்லாரும் ஏமாந்திருக்கும் இடம் எங்கே என்று பார்த்து நொறுக்கு!' என்ற கொள்கையோடு ஜெர்மனியும சரி, இத்தலியும் சரி, ஜப்பானும் சரி தமது சூரத் தனங்களைக் காட்டின. ஆரம்பத்தில் அவற்றிற்கு நல்ல லாபமும் இருந்தது. ஐந்து வருடங்களுக்கு முன் தட்டிப் பேச ஆளில்லாத காலத் தில், தம்பி (முஸோலினி) சண்டப்ரசண்டமாக அபிஸீனியாவிலும், அல்பேனியாவிலும் அடித்து முடித்தார். சுமார் இரண்டு வருடங்களுக்குள் ஜெர் மனி, உலகோர் கண்டு பிரமிக்கும்படியான வெற்றி களைப் பெற்றது சென்ற ஆறு மாதங்களுக்குள்ளாக, ஜப்பானின் மடியும், பையும் நன்றாகக் கனத்து விட்டது. இதனால் எல்லாம், அச்சு நாடுகளின் மண் டைகளும் கனத்தன. அது காரணமாக, தம்மையே மறந்து அவை சில அசட்டுக் காரியங்களையும் செய்ய ஆரம்பித்தன. அதிலே சட்டென வெற்றிக் கிடைக் காது போனதோடு, நஷ்டமும், கஷ்டமும் உண்டாகவே அவை அடைந்த ஏமாற்றமும், திகைப்பும் கொஞ்ச நஞ்சமல்ல. நடு வழியில மாட்டிக் கொண்டு முழித் தன.

இத்தலி அபிஸீனியாவைப் பறி கொடுத்தது. அதற்கப்பால், கிரீஸிடம் போய் வாலாட்டிற்று. நல்ல உதை பெற்றது. ஜெர்மனி ஓடியே வந்து அதற்கு உதவி செய்திரா விட்டால், அதன் கதி அதோ கதியாகி யிருக்கும்!

ஆனால், அந்த ஜெர்மன் அண்ணாத்தை இருக் கிறாரே, அவர் மட்டும் ஒன்றும் ஒசத்தி யில்லை. தன் தம்பியா பிள்ளையான இத்தலி செய்தது போன்ற தவறையே அவரும் செய்யத் தொடங்கினார். அது தான், ஜெர்மனி ருஷ்யா மீது பாய்ந்த அசட்டுக் கதை. இந்தப் புது யுத்தத்தில், ஹிட்லர் வியாபாரி எதிர் பார்த்த பெரிய லாபம் வராத தோடு மட்டு மில்லை; சகிக்க முடியாத கஷ்டங்களும், சொல்ல முடியாத நஷ்டங்களும் அவருக்கு ஏற்பட்டு விட்டன. சுடுகிற நெய்யை வாயில் ஊற்றிக் கொண்டு விட்டால், துப்ப வும் மனம் வராது; முழுங்கவும் மனசு வராது. அதே மாதிரி, ருஷ்யாவிலே போய் தலையை நீட்டி விட்டார் ஹிட்லர். இனிப் பின் வாங்கினாலும் ஆபத்து; முன்னே போகவும் முடிய வில்லை. இருக் கிற இடத்திலேயே நின்று விடலாம் என்றாலோ, இந்த சலாட்டாக்கார ருஷ்யர்கள் விட மாட்டேன என் கிறார்கள்.

'எங்களை ஏமாந்த சோணகிரிகள் என்று நினைத்து வந்தீர்கள்! அடே பயல்களா! வாங்கிக் கொள் ளுங்கள் சரியாக!' என்று நொறுக்கித் தள்ளு கிறார்கள் ருஷ்யர்கள்.

போதாக் குறைக்கு இயற்கை அன்னை வேறே ஜெர் மானியர்களுக்கு விரோதமாக வேலை செய்துவிட்டாள். எதிர்பாராத சமயத்தில், வழக்கமான காலத்திற்கு முன்பாகவே பனி மழைகளைப் பெய்ய விட்டு, கண்ட இடமெல்லாம் 'ஐஸ்' மலைகளைக் கிளம்ப விட்டு, ஜெர்மானியர் வெட வெடத்து, நடுநடுங்கி, விரைத்து மடியச் செய்து விட்டாள். ஜெர்மானியர் பாடு, படு மோசமாகி விட்டது. ருஷ்யாவில் செய்ய வந்த வியா பாரம் இவ்வளவு லக்ஷணமாக நடந்து கொண்டிருக் கும் பொழுது, மேற் கொண்டு வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தி, இன்றில்லா விட்டாலும் நாளை க்கோ, அதற்கு மறு நாளோ, இரண்டு வருடத்திற் கப்பாலோ, போட்ட முதலையாவது எடுத்து விடலா மென்று பார்த்தால், மேற்கொண்டு சரக்கே வருவ தற்கு வழியில்லாது செய்து கொண்டிருக்கிறார் எதிர்க் கடை வியாபாரியான பிரிட்டிஷார். அவரது கையாட் களான விமானிகள் என்ற ஆத்மாக்கள், ஆட்டைப் பிடித்து, மாட்டைப் பிடித்து, ஆளையே பிடித்து, அவன் கழுத்தையும் பிடித்து அமுக்குகிற கதையாக, எதோ அங்கு மிங்கும் நாலு விமானங்களில் வந்து, பத்து வெடி குண்டுகளை உதிர்த்து விட்டுப்போன கதை யெல்லாம போய், இப்பொழுது சில நாட்களில் ஆயிரம் விமானங்களை ஓட்டிச் சென்று, ஜெர்மனியின் ஜீவநாடிகள் போன்றுள்ள கொலோன், ரூர், எம்டன், கீல் போன்ற இடங்களில் இருக்கும் பிரமா ண்டமான தொழிற்சாலைகளை த்வம்சம் செய்து வரு கிறார்கள். இதனால் ஜெர்மனியின் தளவாட உற்பத்தி வேகம் குறைந்து தானே தீரவேண்டும்!?

இதோடு நிறக வில்லையே பிரிட்டிஷார்! 'ஜெர் மனிக்கு பித்த ஜுரம் அதிகமாகி வருகிறது. அதற் காக நாங்கள் கொடுக்கும் முதல் டோஸ் மருந்து இது. இந்த டோஸ் போறாது என்றால், அதிகப் படியான டோஸ் கொடுக்க சித்தமாக இருக்கிறோம்' என்கிறார் கள் பிரிட்டிஷார். அதாவது, 'தினசரி ஆயிரம் விமானங்களை உங்களால் ஜெர்மனிக்கு அனுப்ப முடியுமா?' என்று ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுகையில், ஒரு அதிகாரி பதிலுரைத் திருக்கிறார். "தினசரி ஆயிரம் அனுப்ப முடியுமா என்ற கேள்வியே இனிமேல் இராது. இதற்கு மேல் எவ்வளவு அதிகமாக அனுப்பலாம் என்பதையே நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த எண்ணிக்கை வளர்ந்து கொண்டே தான் போகப் போகிறது. பாருங்களேன். ஜெர்மனியின் முதுகெ லும்பை முறித்து, இடுப்பை ஒடித்து, நடமாட்டம் இல்லாதபடி செய்யும் வரை, நாங்கள் நிற்கப் போவ தில்லை' என்றாராம். அப்பாடோய்!

நேசதேசத்தாரின் கை இப்பொழுது தான் வளர்ந்து வருகிறது. இத்தனை காலமாக ஜெர்மனியும், அதன் சகாக்களும் வெற்றிகள் பல பெற்றது உண்மை. நேசதேசத்தார்க்குப் பல வகைகளில் நஷ்டங்கள் ஏற்பட்டதும் உண்மை. ஆனால், அந்த வெற்றிகள் எல்லாம் யானை முன் எலி போல் தோற்றும்படியான வெற்றிகள் நேச தேசத்தாருக்கு வர விருக்கின்றன. சிறுகக் கட்டிப் பெருக வாழப் போகிறார்கள் இவர்கள். அச்சு நாட்டாரோ, எடுத்த எடுப்பிலேயே பிரமாண்ட

மான அரண்மனையைக் கட்ட ஆரம்பித்து விட்டார்கள். அந்த வேலை அஸ்திவாரத்தோடு நின்று விடுகிறதோ, இல்லா விட்டால், கட்டிடம் முடிந்து, அதற்கு விளக்குப் போடவும் விதி யில்லாமல் போகும் நிலைமையில் நிற்கப் போகிறதோ, தெரியவில்லை.

அச்சு நாட்டினருக்கு, தினம் விடிந்தால் வந்து எட்டும் செய்திகள், பெரிய தலை வலியாகவும், வயிறைக் குழப்பும் படியாகவும் இருக்கு மென்பதில் சந்தேகமே யில்லை. துருக்கிசகும், பிரிட்டனுக்கும் லடாய் என்று ஜெர்மனி ஒரு கப்ஸாவைக் கிளப்பி விட்டது. ஆனால் ஒரு நாளைக்கு 25 ஆயிரம் டன் வீத முள்ள உணவுப்பொருள்களும், என்ஜின்களும், ஆயுதங்களும் பிரிட்டனி லிருந்து, மாசு மருப்படாது துருக்கியில் வந்து இறங்கிற்று' என்ற சேதி திட்டமாக அதன் காதில் வந்து விழுந்தது. எப்படியிருக்கும் அதற்கு?

"பாஸ்ராவிலே இருபதாயிரம் அமெரிக்கர்கள் வந்து இறங்கி விட்டார்கள்! இந்தியாவிலே பெரிய கப்பல் கோஷ்டி ஒன்று வந்து சேர்ந்து விட்டது. இந்தக் கப்பல்களிலே யிருந்து ஏராளமான ஆயுதங்களும், யுத்தத் தளவாடங்களும், விமானங்களும், ராணுவ உத்தியோகஸ்தர்களும், பட்டாளங்களும், விமானிகளும் இறங்கியாகி விட்டது. பிடிபட்ட ஐரோப்பாவிலே, ஏககாலத்தில் பல இடங்களிலே, பிரிட்டிஷ் விமானிகள் படையெடுத்து, ஜெர்மானிய ரிடை குழப்பத்தை மூட்டி விட்டு விட்டார்கள். பல இடங்களில் பிரிட்டிஷ் குரங்குப் படையினர் தைரியமாக வந்திறங்கி, படுசேதத்தை விளைவித்து விட்டுச் சென்று விட்டார்கள் ஒரு நாள். அவர்களில் இருவர் ஜெர்மானியரிடம் சிக்கிக் கொண்டார்கள். அவர்களிடம் ஜெர்மானியர் கேட்டார்கள்", நீங்கள் வந்த கப்பலில் வெடி மருந்து இருக்கிறதா? என்று.

'இல்லை!' என்று சொல்லி விட்டார்கள் அவ்விருவரும். அதோடு நில்லாமல், தம் முகங்களிலே யாதொரு மாறுதலையும் காண்பித்துக் கொள்ளாது, அந்த அதிகாரிகளோடு தங்கள் கப்பல்களில் ஏறினார்கள். மறு க்ஷணமே அந்தக் கப்பலி லிருந்த வெடி மருந்துகள் வெடித்து விட்டன. அந்த இரு பிரிட்டிஷ் வீரர்களும் தூளாயினர். ஆனால், தம்மையே தியாகம் செய்து கொண்ட இந்த முறையால், ஜெர்மன் அதிகாரிகள், வீரர்கள் ஆகியோர் பலரது உயிரையும் பலியாகப் போகும்படி செய்து விட்டார்கள் அல்லவா? இந்தச் சேதிகளை எல்லாம் ஜெர்மானியர் கேட்ட பொழுது எப்படி யிருந்திருக்கும் அவர்களுக்கு?

அமெரிக்காவிலே விமான உற்பத்தியின் வேகம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறதாம். 1944-ல் இது மகோன்னத நிலைமையை அடையுமாம். அது தவிர, டாங்கிகளும், மற்ற சாமான்களும் இப்பொழுது அங்கு தயாராகும் வேகத்தைப் பார்த்தால். "ஹிட்லரும், கொயரிங்கும், தமது திட்டங்களை யெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு, தரையிலே மண்டையை மோத விட்டுக் கொண்டு மடிவார்கள்" என்கிறார் ஒரு அமெரிக்க அதிகாரி. இது மட்டுமல்ல. "இன்னும் ஐந்து வருடங்களுக்குள், 25,000 மைல் பறக்கக் கூடிய வெடி குண்டு விமானங்களைச் சிருஷ்டிக்கும் வல்லமை அமெரிக்காவிற்கு ஏற்பட்டு விடும். அப்புறம், உலகின் எந்த பாகத்தை வேணுமானாலும் அமெரிக்காவி லிருந்தே தாக்கலாம்" என்கிறார் மற்றொரு அமெரிக்கர்.

இதை யெல்லாம் ஹிட்லர் கோஷ்டியார் கேட்காமலிருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? அவர்கள் என்னமோ தங்கள் வேலையைக் கவனித்துக் கொண்டு தானிருக்கிறார்கள். ஜெர்மானியர் ருஷ்யாவிலே வசந்த காலப் போரை ஆரம்பித்துப் பல நாட்களாச்சு. இன்னும் உருப்படியாக எத்தகைய பலனையும் காண வில்லை. ருஷ்யர்கள், எளிதில் கடிக்கப் பட முடியாத கல்லுருண்டைகளாகவே இருக்கிறார்கள். சபாஸ்டபோல் எனும் இடத்தில் இருந்து கொண்டு அவர்கள் ஜெர்மானியரைத் தவிக்க அடித்துக் கொண்டிருக்கிறார்கள். வெகு காலமாகவே இத் துறைமுகத்தை ஜெர்மானியர் முற்றுகை போட்டிருக்கிறார்கள். இதையும் சரி, லெனின் கிராடையும் சரி, ஜெர்மானியரால் இன்னும் பிடிக்கவே முடியவில்லை. இதற்காக, எத்தனை விமானங்கள் எத்தனை ஆயுதங்கள், டாங்கிகள், ஆட்கள் பாழாகியாச்சு.

லிபியாவிலேயும் ஜெர்மானியர் சரியான பலனைக் காணவில்லை. அங்கு அவர்களது டாங்கிப் படைகள் அட்டகாசம் செய்கின்றன. ஆனால், பிரிட்டிஷார், பாதுகாப்புப் போரையும், எதிர்ப்புப் போரையும் நடத்தி வருகிறார்கள். ஓரிடத்தில் இந்திய மோட்டார்ப் படை யொன்று காட்டிய வீரத்தை எல்லோரும் புகழுகிறார்கள். ஜெர்மானியருக்கு ஏகப் பட்ட டாங்கிகள் நாசமாம். லிபிய யுத்தம் மும்முரமாகவே நடக்கிறது. இம்மாதிரியாக ஜெர்மானியர் நடுவழியிலே அகப்பட்டு முழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜப்பானியர் கதையும் இப்படியே தானிருக்கிறது. இப்பொழுது ஜப்பானியர் அசல் நடுவழியில் இடிபட்டுத் திரும்பி யிருக்கிறார்கள். மிட்வே ஐலண்டஸ் என்பதற்கு நடுவழித் தீவுகள் என்பது தானே தமிழ். அமெரிக்காவிற்கும், ஜப்பானுக்கும் நடுவே இத் தீவுகள் இருக்கின்றன. இத்தீவுகளைக் கைப்பற்றினால், அமெரிக்காவிற்குச் சொந்தமான ஹாவாய்த் தீவுகளைத் தாக்க சௌகர்யமா யிருக்கும் என்று ஜப்பான் நினைத்தது. போன வாரம் இந்த நடுவழித் தீவுகளை, இந்த யோசனை யோடு ஜப்பானியக் கப்பற் படை தாக்க வந்தது. துருப் பேற்றிக் கப்பல்களும் அந்த கோஷ்டியி லிருந்தன.

ஆனால் முத்துத் துறைமுகத்தைத் தாக்கிய போது இருந்ததைப் போல, அமெரிக்கர்கள் இப்பொழுதில்லை. ஜப்பானியப் படையைப் அமெரிக்கப் படை எதிர்த்து நின்றது. கடும் போர் நிகழ்ந்தது. முடிவிலே ஜப்பானியர் ஓட்டம் பிடித்தனர். பல விமானந் தாங்கிக் கப்பல்கள், அவற்றி லிருந்த விமானங்கள், துருப் பேற்றிக் கப்பல்கள், யுத்தக் கப்பல்கள் எல்லாம் ஜப்பானியருக்கு நஷ்டம். 'முத்துத் தீவை முன்பு ஜப்பானியர் தாக்கியதற்குப் பழிக்குப் பழி வாங்கியது போலாயிற்று இந்தப்போர்' என்கிறார்கள் அமெரிக்கர்கள்.

நடுவழியிலே ஜப்பானியர் பட்ட இந்த உதை, இன்னும் கொஞ்ச காலத்திற்கு அவர்களுக்கு நல்ல வலியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமே யில்லை. படை யெடுப்புகளுக் கெல்லாம், கப்பல்களையும், விமானந் தாங்கிகளையும் நம்பி யிருக்கும் ஜப்பானுக்கு, பல விமானந் தாங்கிகள் சேதமாவது என்றால், படுநஷ்டம் தானே! முன்பே ஒரு தடவை பவளக் கடலில் சரியான அடி பட்டாயிற்று. இது இரண்டாவது அடி.

'ஆனாலும் ஜப்பானுக்கு இன்னும் நல்லபலம் இருக்கிறது. தரையி லிருந்து பாயும் விமான பலம் அதற்கு அதிகமாக இருக்கிறது. தவிர நீர் மூழ்கிகளைக் கொண்டு, அமெரிக்காவி லிருந்து ஆஸ்திரேலியாவிற்கு உதவி போக விடாதபடி செய்யப் பார்க்கிறது ஜப்பான், இந்த ஆபத்தை யெல்லாம் தடுத்து, ஜப்பானைப் பூரணமாக ஒடுக்கி, மனசாற உதைக்கும் வரை நாம் நிற்கப் போவ தில்லை' என்று தலைவர் ரூஸ்வெல்ட் அவர்களே கூறி விட்டார்கள்.

ஜப்பானிய நீர் மூழ்கிகள் ஆபிரிகா அருகிலும் சென்றிருக்கிறாப்போ லிருக்கிறது. சென்ற வாரம் ஒரு நாள் திடீரென கேப் டவுனிலும், மற்றொரு ஊரிலும் அபாய அறிவிப்புச் சங்கு ஊதிற்றாம், மடகாஸ்கர் கால்வாயில் சில கப்பல்கள் சேதமாடனவாம், நேச நாட்டினர் இங்கெல்லாம் உஷாராகத் தானிருக்கிறார்கள். ஆகையால் பயப்பட வேண்டாம்.

ஜப்பானியர் இப்போதைக்கு ஆஸ்திரேலியா மீது படை யெடுப்பார்கள் என்று தோன்ற வில்லை. ஆனாலும், அவர்களால் அத்தீவுக்கு உண்டாகக் கூடிய ஆபத்தும் குறைய வில்லை. ஆஸ்திரேலியாவின் விமான பலம் பெருகி வருகிறது.

சீனாவில் ஜப்பானியர் அயோக்யமான வழிகளையும் கைப்பற்றி, எப்படியாவது சீனர்களை ஒரேயடியாக அடித்து, அமுக்கி விட நினைப்பவர்கள் போல் போராடுகிறார்கள். சீனா, நேசநாடுகளுடன் இருக்கும் வரையிலும், ஜப்பான் பாடு ஆபத்து தான். ஹிருதயத்திலே அடிபட்டால ஆள் காலிதானே! அதனால் தான், அசல் ஜப்பானுக்கு எத்தகைய ஆபத்தும் வரக் கூடா தென, ஜப்பானியர் அலாஸ்காவையும், நடுவழித் தீவுகளையும், சீனாவையும் தாக்குகிறார்கள். இது வரை இல்லாத அமெரிக்க, பிரிட்டிஷ் விமான உதவி, சீனருக்கு இப்பொழுது கிடைத்து வருகிறதாம். இனி சீனர் பாடு கொண்டாட்டம் தான். நரிக்குக் கொண்டாட்டம் என்றால் நண்டுக்கு?

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.



Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஜூன் 19உ, வெள்ளிக்கிழமை [இதழ் 24

## எல்லோரையும் பாதிக்கும் யுத்தம்.

### ரஷ்ய குரங்குப் படைகளின் சாமர்த்தியம்.

### ஜெர்மானியர் படும் நரக வேதனை!

டில்லி, அகில இந்திய ரேடியோ மூலம் மிஸ்டர் பிலிப் யோர்தான் பேசியதன் சாரமாவது:—

தற்கால யுத்தம், போராடுவதே தம் தொழிலாகக் கொண்டவர்கள் மட்டும் நடத்துவ தல்ல. மக்கள் அனைவருக்கும் இதில் பங்கு இருக்கிறது. எந்தெந்த நாடுகள் பாதிக்கப் படுகின்றனவோ, அந்த நாட்டவர்கள் அனைவரும் அதில் அக்கரை கொள்ள வேண்டி யிருக்கிறது. இந்த உண்மையை படைகளிலேயே பணியாற்றுபவர்கள் ஒப்புக் கொள்ளுவ தில்லை என்றாலும், நேச தேசப் படைத் தலைவர்களில் ஒருவராவது இந்த உண்மையை உணர்ந்திருக்கிறார். இந்தக் கருத்தைச் செயலிலேயும் செய்து வெற்றிகரமாக முடித்து விட்டார். இவர் இப்படிச் செய்யா திருந்தால், இந்தக் கருத்தே பிரயோசன மில்லாதது என்று முடிவு கட்டி யிருப்பார்கள். இவர் தான் ருஷ்யப் படைத் தலைவர். இந்த யுத்தம் உங்களையும் என்னையும் அனைவரையும் பாதிக்கக் கூடியது என்பதை அவர் நன்கு உணர்ந்தார். பதுங்கிப் பாயும் குரங்குப் படையினரைத் திரட்டினார். அவர்களுக்கு ஊக்கத்தை உண்டாக்கி, தகுந்தபடி பயிற்சி கொடுத்தார். இவர்களைத் தான் ரஷ்யாவில் 'பங்காளிகள்' என்று கூறுகிறார்கள்.

> **ரஷ்யத் திருநாள்**
>
> **22—6—1942**
>
> **திங்கட்கிழமை**

யுத்தப் போக்கில் எந்த விதமான முடிவான பயனையும் இவர்களால் காண முடியவில்லை என்றாலும், எதிரிகளான ஜெர்மானியர்கள் தம் நாட்டை வெல்ல ஒட்டாதபடி தடுக்க இவர்கள் வீரம் பெரிதும் உதவுகிறது.

ஜெர்மனிக்கும் ரஷ்யாவிற்கும் யுத்தம் மூண்டது முதல், 7 மாத காலம், நான் சோவியத் நாடுகளில் இருந்தேன். ரஷ்ய யுத்த முயற்சிகள் எவ்வளவு மகத்தான முறையில் நடை பெறுகின்றன என்பதைக் காண எனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள், வேறு எந்த நேச தேசத்தவர்களுக்கும் கிடைத்த தில்லை.

**முன் ஏற்பாடுகள்.**

ஜெர்மானியர்கள் தம்மைத் தாக்குவார்களானால், தாம் அவர்களை எதிர்த்து அடிக்கும் முன்பு, கட்டாயம் கொஞ்சம் பூமியை இழக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்று, யுத்தம் ஆரம்பமாகு முன்பே ரஷ்யப் படைத் தலைவர் உணர்ந்தார்.

அப்போது அவர் என்ன செய்தார் தெரியுமா? கிராமங்களுக்கும் பண்ணைகளுக்கும் போனார் அங்கெல்லாம் பதுங்கிப் பாயும் குரங்குப் படைகளை அமைத்தார். இந்தப் படைகளுக்குத் தலைவராகக் கிராமத் தலைவரையாவது, அந்த ஊரிலுள்ள அரசியல் கட்சித் தலைவரையாவது நியமித்தார். இந்தப் படையினர் உணவுப் பொருள்களையும் யுத்தத் தளவாடங்களையும் காட்டிற்குள்ளே பத்திரமான இடங்களில் புதைத்து வைத்தார்கள். "எதிரிகள் வந்தால், அவர்களுக்கு எவ்வளவு தூரம் கஷ்டங் கொடுக்க வேண்டுமோ, அவ்வளவு கஷ்டம் கொடுப்பதுடன், அவ்வப்போது எனக்கு அறிவிக்கவேண்டும்" என்றும் ரஷ்யப் படைத் தலைவர் அப்படையினருக்கு அறிவித்தார்.

**நரக லோக வாழ்வு.**

ஜெர்மானியர்கள் ரஷ்யாவிற்கு வந்தார்கள். குரங்குப் படையினர், காட்டிற்குள்ளும் மலைகளிலும் பதுங்கிக் கொண்டார்கள் நரக லோக வாழ்விற்கு ஜெர்மானியர்களை ஆளாக்கினார்கள். இவர்களால் ஜெர்மனியரோடு நேர் முகமாக இருந்து போராட முடிய வில்லை. தாம் பதுங்கி யிருக்குமிடங் களிலிருந்து இரவில் திடீரென்று வெளி வந்து ஜெர்மன் டாங்கிகள் சேர்த்து வைத்திருக்கும் இடங்களையும், இராணுவத் தலைமைக் காரியாலயங்களையும். ஜெர்மன் போக்கு வரவு சாதனங்களையும் நாசம் செய்து விட்டார்கள். ஜெர்மன் படைகளுக்கு சப்ளைகள் கொண்டு வரும் ரயில் வண்டிகளைத் தண்டவாளத்தை விட்டு நழுவி, மேலே செல்ல ஒட்டாதபடி பல முறை செய்து விட்டார்கள்.

இரவில் மட்டுந் தான் இவர்கள் வேலை செய்கிறார்கள் என்பதல்ல. பகலிலும் பதுங்கி யிருந்து போராடுகிறார்கள். இவர்களிடம் எப்போதும் துப்பாக்கி யிருப்பதில்லை. துப்பாக்கி இல்லாத சமயங்களில் அரிவாள்களைக் கொண்டும், கத்திகளைக் கொண்டும் தம்மால் இயன்ற வரை எதிரிகளைக் கொன்று விடுகிறார்கள். பெரிய தெருக்களில் மட்டுந் தான் தம் சாமான்களை ஜெர்மானியர்கள் கொண்டு போகலாம் என்னும் அளவிற்கு, இந்தக் குரங்குப் படையினர் பாதித்து விடுகிறார்கள். ரஷ்ய விமானப் படைகள் எதிரி சப்ளைகளைத் தாக்குவதற்கு இது மிகவும் உதவியா யிருக்கிறது. ரஷ்யர்களுக்கு வரும் சப்ளைகளை ஜெர்மானியர்

தாக்கி நாசப்படுத்துவதை விட, மிகவும் பல மடங்கு அதிகமாக ஜெர்மானியர்களின் சப்ளைகளை ரஷ்யர்கள் நாசப் படுத்துகிறார்கள். இதும் மோ? ஜெர்மன் போக்குவரவு சாதனங்களைக் காக்க ஜெர்மானியர்கள் சாதாரணமாக நியமிக்கும் காவல்காரர்களை விட, வெகு அதிகமான காவல்காரர்களை நியமிக்க வேண்டிய அவசியத்தை ரஷ்யர்கள் உண்டாக்கி விடுகிறார்கள்.

எந்த நேரத்தில் நம் முதுகில் கத்தி பாயுமோ என்று உள்ள உலகத்தில், வாழ்க்கை எப்படி அமைதியா யிருக்க முடியும்? ரஷ்யாவிற்குப் போயுள்ள ஜெர்மன் படைவீரர்கள் வாழும் உலகம் இப்படிப்பட்டது தான். ரஷ்யாவில் தாம் கைப்பற்றி யுள்ள நாடுகளில் உள்ள ஜெர்மன் படை வீரர்கள் அங்கே இரவில் படுக்கப் போகும் போது, மறு நாள் காலையில் தாம் உயிருடன் விழிப்போம் என்னும் நம்பிக்கையோடு இருக்க முடியாது. நாட்டுப் பற்று மிகுதி புங் கொண்ட ரஷ்ய ஆண்களும், பெண்களும், பையன்களும், சிறுமிகளும் கூட, இரவுகளில் காம் பதுங்கி யிருக்கும் இடங்களி லிருந்து திடீரென்று வெளிப்பட்டு ஜெர்மன் வீரர்கள் படுத்துத் தூங்கும் இடங்களை வெடி வைத்துப் பொசுக்கி விடுகிறார்கள். இதற்குத் தப்பி ஜெர்மானியர்கள் ஓடுவார்களானால், அவர்களைக் கத்தியால் குத்திக் கொல்லுவார்கள், அல்லது துப்பாக்கியால் சுட்டுக் கொல்லுவார்கள்.

**முதல் பாடம்.** தாம் இருந்த இடத்தில் இருந்து கொண்டே தான் குரங்குப் படையினர் போராட வேண்டும் என்பது அவர்களுடைய முதல் பாடம். பயிற்சி பெற்ற மற்ற போர் வீரர்களைப் போல இவர்கள் சுற்றி ஓடி ஆடிப் போராடுவ தில்லை. இருந்த இடத்தி லிருந்தே போராடுவதனால் தான் அவர்கள் மிகவும் பலசாலி ளாக இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் குடியானவர்கள். அதே இடத்தில் நெடுநாட்களாக வசித்து வருகிறவர்கள். அந்தப் பகுதியி லுள்ள ஒவ்வொரு குழிக்கு இடமும் அவர்களுக்குத் தெரியும். அந்தந்த எல்லையி லுள்ள ஒவ்வொரு மரமும், புல்லுங் கூட அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஜெர்மன் படையினருக்கோ புதிய இடம். ஒன்றும் தெரியாது. எனவே, இந்தக் குரங்குப் படையினரைப் பிடிக்க ஜெர்மன் படையினரால் முடிவ தில்லை.

தம் படையை விட்டு வழி தவறிப் போன அநேக ரஷ்ய வீரர்களை மீண்டும் தம் படையுடன் சேர்க்க இந்தக் குரங்குப் படையினர் பல முறை அவர்களுக்கு உதவி யிருக்கின்றனர். சில சமயங்களில் அவரைத் தம் படைத் தலைவராகத் தம்மோடேயே வைத்துக் கொள்ளுவது முண்டு.

எதிரிகள் மனத்தில் பெரும் பீதியை உண்டாக்குவது தான் ரஷ்யக் குரங்குப் படையினரின் முக்கியமான வேலை. இவர்கள் ஜெர்மன் படைகளுக்கு ஓயாத தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தம் மீது எந்த நிமிஷம் திடீரென்று பாய்ந்து தம்மை யழித்து விடுவார்க ளென்று, ஜெர்மானியர்களுக்குத் தெரியாது. இவர்கள் நாட்டுப் பற்று மிகக் கடுமையானது. எல்லாவற்றிலும் தம் நாட்டு விடுதலையே தலைமை யானது என்று கருதுகிறவர்கள். இவர்கள் போராட்டம் படித்திருந்தாலும் இல்லாவிட்டாலும், இதற்காகவே போராடுகிறவர்கள்.

---

# பிரிட்டிஷ்---ரஷ்யக் கூட்டுறவின் சின்னம்.

## இராணுவ வேலைகளே மிகவும் முக்கியம்.

### மர்மான்ஸ்க் மாஸ்கோ ரயில்வே பிரயாணம்.

மிஸ்டர் நெக்லி பார்சன் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—

ரஷ்யர்களுக்கு நன்றி செலுத்துங்கள். நேச தேசத்தார் எந்த அளவிற்குக் கொடுக்கக் கூடுமோ, அந்த அளவிற்கு, பீரங்கிகளையும் விமானங்களையும் ரஷ்யாவிற்குக் கொடுத்து உதவுங்கள். தம்மால் இயன்ற வளவுக்கும் மிகவும் புத்திசாலித் தனமாகவும் செம்படையினர் அவற்றை பயன் படுத்துவார்கள். சோவியத் நாடுகளில் சில மாதங்கள் நான் இருந்து நேரில் கண்டவற்றைக் கொண்டு, நான் வந்த முடிவு இது தான். இந்த யுத்தத்தைக் கடைசி வரை போராடியே தீருவது என்னும் உறுதி யோடு அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, நாம் எதை அனுப்பினாலும், அதை அவர்கள் வீணாக்க மாட்டார்கள்.

நான் மாஸ்கோவி லிருந்து திரும்பி வரும் போது, பத்து நாட்களுக்குப் பிறகு தான் மர்மான்ஸ்க் வந்து சேர்ந்தேன். நான் ஏறி வந்த ரயில் வண்டி இரண்டொரு நாட்களில், ஒரு நாளைக்கு 50 மைல் விகிதம் கூடப் போக வில்லை. எங்கள் வண்டி பெரும்பாலும் ரயில்வே ஸ்டேஷன்களில் உள்ள பக்கத்து லைனில் தான் நின்று கொண்டிருந்தது. நான், உதவிக் கப்பல் ஒன்றில் ஏறி வர வேண்டியவன். ஆகையால், இந்தத் தாமதத்தால் நான் கடுங் கோபம் கொண்டேன். இதில் ஏறிப் போகிறவர்கள் காலா காலத்தில் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேர வேண்டுமே என்பது பற்றி ஒருவராவது கவலை கொண்டதாகத் தெரியவில்லை. எங்கள் வண்டி ஸ்டேஷனி லுள்ள பக்கத்து லைனில் நிற்கும் போதெல்லாம் அடுத்தடுத்து பல வண்டிகள் யுத்தத் தளவாடங்களை ஏற்றிக் கொண்டு எதிர்ப் புறமிருந்து வந்து கொண்டிருந்தன. வட சமுத்திரத்தின் வழியாக அப்பொழுது தான் வந்திறங்கிய யுத்தத் தளவாடங்களைத் தான், அந்த வண்டிகளில் ஏற்றிக் கொண்டு போனார்கள். விமானங்களும், டாங்கிகளும், புதுப் பெட்டிகளும் அவற்றில் ஏராளமாக ஏற்றப் பட்டிருந்தன.

மாஸ்கோவிற்கும் மர்மான்ஸ்க்குக்கும் இடையே சம தூரத்தில் ஒரு ஜங்ஷன் இருக்கிறது. இங்கே இரண்டு நாட்கள் நான் தங்கும்படி நேர்ந்தது. மிகவும் தாமதம் ஏற்பட்டதனால், எனக்குப் பதைபதைப்பு மிகவும் அதிகமா யிருந்தது. ஏராளமான ரஷ்யர்கள் ஒவ்வொரு வண்டியி லிருந்தும் சாமான்களை இறக்கிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இவற்றை இறக்குவதற்கு எந்த வகை இயந்திரத்தையும் உபயோகிக்க வில்லை; தம் கை வலிமையைக் கொண்டு தான் இறக்கினார்கள். தண்டவாளங்களில் இருக்கும் வண்டிகளையுங் கூட, அவர்கள் தம் கைகளால் தள்ளிக் கொண்டு போய்த் தான் இணைத்தார்கள். இது கண் கொள்ளாக் காட்சியாய் இருந்தது. பிரிட்டிஷாரும், அமெரிக்கர்களும் ரஷ்யாவிற்கு அனுப்பும் சப்ளைகள் எல்லாவற்றையும் பெரிதும் பாராட்டி ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்று இதி லிருந்து தெளிவாகத் தெரிகிறது.

**சிறுமிகள் வீரம்.** மர்மான்ஸ்க் துறைமுகம் மிகவும் ஜன நெருக்கமான இடம். இங்குள்ள கிடங்குகளின் மேல் சிறுமிகள் காவல் புரிந்து வந்தனர். அப்போது, அந்தப் பகுதி தாக்கப் பட்ட போதிலும், அச்சிறுமிகள் தம் இடம் விட்டுப் பெயரவே இல்லை. யுத்தத் தளவாடங்கள் ரஷ்யாவில் இறக்குமதி யாவதற்கும் அவற்றை உபயோகிப்பதற்கும் ஏற்படும் எந்த வகைத் தடையையும் ரஷ்யர்கள் சகித்திருக்க மாட்டார்கள்.

நான் ரஷ்யாவிற்குப் போன போது ஒரு துணைக் கப்பலில் தான் ஏறிப் போனேன். அந்தக் கப்பல்களில் டாங்கிகளும், விமானங்களும் ஏராளமாக



ஏற்றி யிருந்தார்கள். நாங்கள் வந்து கரை சேர்ந்தவுடன் அங்கு நடை பெற்றவற்றை கவனித்தோம். தாழ்ப் பூட்டுகளைக் கழற்றும் வரையிலும் கூட, ரஷ்யர்கள் காத்திருக்க வில்லை. நாம் இந்த ஆபத்தான பிரயாணத்தை மேற் கொண்டது மிகவும் நியாயம் தான் என்று எங்கள் கப்பலில் இருந்த ஒரு தொழிலாளி கூறினர். இங்கே வந்து இறங்குவது வன போஜனத்திற்கான பொருள்கள் அல்ல. இந்த வார்த்தையை மறுக்க உண்மை யறிந்த எவரும் முன் வர மாட்டார்கள். இவ்வளவு ஆபத்தான தோர் பிரயாணத்தை இந்தத் தொழிலாளி மேற் கொண்ட போதிலும், மீண்டும் ஒரு முறை ரஷ்யாவிற்கு வர வேண்டு மென்று தான் கூறுவார். பிரிட்டிஷ் கப்பல் தொழிலாளியின் இந்தப் போக்கு மிகவும் சிறந்தது. இது தான் பிரிட்டிஷ்—ரஷ்யக் கூட்டுறவின் சின்னம்.

---

# புதிய ஆங்கிலோ-ரஷ்ய ஒப்பந்தம்.

## முழு விவரங்கள்.

### யுத்தத்திற்குப் பிறகும் ஒற்றுமை.

ஹிட்லர் ஆட்சிக் குட்பட்ட ஜெர்மனி யோடும் அதைச் சேர்ந்த ஐரோப்பியக் கூட்டாளிகளோடும் போராட வேண்டி, சோவியத் சமதர்ம குடியரசு நாடுகளும், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளும், வட அயர்லாந்தும் கூட்டுறவோடு இருக்கவும், பரஸ்பர உதவி புரிந்து கொள்ளவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் முழு வாசகம் வருமாறு :—

1. ஐரோப்பாவைக் கொடுமைப் படுத்தும் ஜெர்மனியோடும் அதன் கூட்டாளிகளோடும் போராட வேண்டி, பிரிட்டிஷ் சாம்ராஜ்யங்களும், சோவியத் ஜனநாயகக் குடியரசுகளும் கொண்டுள்ள நேசப் பான்மைக்கு ஏற்ப, இராணுவத் துறைகளிலும் மற்றும் எல்லாத் துறைகளிலும் பரஸ்பரம் உதவி செய்து எல்லா வகைகளிலும் ஆதரித்துக் கொள்ள வேண்டும்.

2. ஹிட்லர் சர்க்காரோடாவது, பிறரை கொடுமைக் குள்ளாக்க வேண்டும் என்னும் எண்ணத்தை அடியோடு விட்டு விடாத எந்த ஜெர்மன் சர்க்காரோடாவது, இந்த ஒப்பந்தத்தில் கட்டுப் பட்டுள்ள எந்தக் கட்சியாரும் எந்த விதமான சமரச முயற்சியும் நடத்தக் கூடாது; எந்த வித முடிவிற்கும் வரக்கூடாது. ஆனால் இருதரத்தாரும் பரஸ்பரம் இசைந்தால் மட்டுந் தான், ஜெர்மனியோடாவது, கொடுமைப் படுத்துவதில் அதைச் சார்ந்துள்ள மற்ற நாடுகளோடாவது, சமரசம் செய்து கொள்ளலாம்.

3 (i) யுத்தம் முடிந்த பிறகு, சமாதானத்தை நிலை நாட்டவும் கொடுமைகளைத் தடுக்கவும், பொதுவாக என்ன செய்ய வேண்டும் என்று இந்த இரு சர்க்கார்களைப் போலவே கருதும் மற்ற சர்க்கார்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு அந்த சர்க்கார்களோடு ஒற்றுமை கொள்ள விரும்புகிறது. (ii) இந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளுவது ஒருபுறம் இருக்க, யுத்தம் முடிந்த பிறகு, இப்போது நடந்து வரும் கொடுமைகள் மீண்டும் நடை பெறுதிருக்கும் படித் தடுக்கவும், ஜெர்மனியாவது அல்லது ஐரோப்பாவைக் கொடுமைக் குள்ளாக்கும் மற்ற சர்க்கார்களாவது சமாதான பங்கம் உண்டு பண்ணு திருக்கும் படி தடுக்கவும், எல்லா முறைகளையும் கையாள வேண்டும்.

4. யுத்தம் முடிந்த பிறகு, இந்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்படும் கட்சிகளில் ஏதாவதொன்றோடு, ஜெர்மனியாவது, 3 (i)-வது விதியில் குறிப்பிட்டுள்ள எந்த சர்க்காராவது விரோதங் கொண்டு அந்தக் கட்சியாரைத் தாக்கும்படி நேர்ந்தால், விரோதத்திற்கு உள்ளான இந்தக் கட்சிக்கு, மற்ற கட்சி, தம்மால் ஆன வரை இராணுவ உதவியும் மற்ற உதவிகளும் வழங்க வேண்டும். 3 (i)-வது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளுவதன் மூலம் இந்த விதி அமுலி லில்லை என்று இரு கட்சியாரும் ஒப்புக் கொள்ளும் வரை, இந்த விதி அமுலில் இருக்கும். அந்த ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளத் தவறினால் இந்த விதி இருபது வருஷங்கள் வரையிலும், அதற்குப் பிறகும் 8-வது விதியில் குறிப்பிட்டுள்ளபடி இந்த ஒப்பந்தக் காரர்களுள் ஒருவர் இந்த விதியை ரத்து செய்ய வேண்டு மென்று விரும்புகிற வரையிலும் அமுலில் இருக்கும்.



5. சமாதானம் ஏற்பட்ட பிறகு, ஐரோப்பாவின் பொருளாதார முன்னேற்றத் துறைகளைப் பலப்படுத்தி அமைக்கவும் தம் ஒவ்வொருவருடைய பாதுகாப்பை முன்னிட்டும் நெருங்கிய நேசமான முறைகளில் ஒத்துழைக்க வேண்டும். இதில் நேச தேசத்தாரின் நன்மைகளையும் கவனிப்பார்கள். பிறர் நாடுகளைத் தம்மோடு சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடவும் மாட்டார்கள்.

6. யுத்தத்திற்குப் பிறகு இந்த ஒப்பந்தக் கட்சியார்கள் ஒருவருக்கொருவர் பொருளாதார உதவியும் செய்து கொள்ளுவார்கள்.

7. இந்த ஒப்பந்தக் கட்சிகள், தம்மில் ஒரு கட்சியாருக்கு விரோதமாக ஏற்படும் எந்த வித ஒப்பந்தத்திலாவது, கூட்டமைப்புகளிலாவது கலந்து கொள்ள மாட்டாது.

8. இந்த ஒப்பந்தம் கூடிய சீக்கிரம் ஊர்ஜிதம் செய்யப்படும். இந்த ஒப்பந்தப் பத்திரங்களில் கூடிய சீக்கிரம் மாஸ்கோவில் கையெழுத்திட்டு, அதை சம்பந்தப்பட்ட கட்சியார்கள் மாற்றிக் கொள்ளுவார்கள். இப்படி மாற்றிக் கொள்ளப் பட்ட வுடனேயே இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வரும். 1941-ம் வருஷம் ஜூலை மீ 12உ சோவியத் சர்க்காருக்கும் பிரிட்டிஷ் சம்ராஜ்ய மன்னர் பிரான் சர்க்காருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தை இந்த ஒப்பந்தம் ரத்து செய்து விடுகிறது.

**1-ம் பாகம்.**—இந்த ஒப்பந்தக் கட்சியார்களுக்கும், ஜெர்மனிக்கும், ஐரோப்பாவில் கொடுமைகள் செய்யும் அதன் கூட்டாளிகளுக்கும் மீண்டும் சமாதானம் ஏற்படும் வரையிலும், இந்த ஒப்பந்த (1, 2 விதிகள்) அமுலில் இருக்கும்.

**2-வது பாகம்.**—இந்த ஒப்பந்த (3 முதல் 7 விதிகள்) 20 வருஷ காலம் அமுலில் இருக்கும். 20 வருஷங்களுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் ரத்தாக வேண்டும் என்று, அதற்கு 12 மாதங்களுக்கு முன்பாகவே ஒரு கட்சியார் மற்றக் கட்சியாருக்கு அறிவித்திருந்தா லல்லது, இந்த ஒப்பந்தம் தொடர்ந்து அமுலில் இருக்கும். எனினும் இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்து விட வேண்டு மென்று எழுத்து மூலமாக நோட்டீஸ் கொடுத்த 12 மாதங்களுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் ரத்தாகும்.

இந்த ஒப்பந்தத்தை இங்கிலீஷிலும், ரஷியன் மொழியிலும் எழுதி, 1942-ம் வருஷம் மேமீ 26உ லண்டனில் மிஸ்டர் ஈடனும், தோழர் மலோடோவும் முறையே கையெழுத் திட்டார்கள்.

# ஜெர்மானியனுக்கு, ரஷ்யன் எஜமான்

## ரஷ்ய வீரனின் பெருமிதம்.

### 5-வருஷத் திட்டங்களின் பலன்.

எப்போதும் ஜெர்மானியனுக்கு ரஷியன் எஜமான். இதை நெப்போலியன் கூட எழுதி வைத்திருக்கிறார். சென்ற யுத்தத்தில் வென்றது போலவே, இந்த வருஷத்திலும் கூட சனியனைக் கொண்டு தாக்கிய போதெல்லாம ரஷ்யர்களே வெற்றி பெற்றார்கள். பிரபுக்களின் பூஸ்திதிகளையோ முதலாளிகளின் சொத்துக்களையோ செஞ் சேனைகள் இன்று காவல் புரிய வில்லை. ஆனால், தம் நாட்டவர்கள் அனைவருக்கும் உரிமை யுள்ள தேசியச் சொத்துக்களைத் தான் காவல் புரிகின்றன. பெரிய இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் படை வீரர்களுக்கு மிருந்த வேற்றுமைகள் அடிமாண்டு போயின. ஒவ்வொரு ரஷ்ய வீரனும் ஒரு பிரதம தளகர்த்தனுக் குரிய பெருமிதத் தோடு போர்க் களத்திற்குப் போகிறான்.

சேனையின் பின் அணிகளில், 1812-ம் வருஷம் இருந்த போர் உணர்ச்சி, இன்று அவர்களுக்குள் காணப்படுகிறது. தோழர் ஸ்டாலின் வகுத்த 5 வருஷ உற்பத்தி திட்டங்களால், எந்த விதமான நிலைமையையும் சமாளிக்கக் கூடிய பலம், ரஷ்யர்களுக்கு ஏற்பட்டு விட்டது. அன்றியும் எல்லா வகைத் தொழிலாளர்களும் தாம் சாதாரணமாகத் தயார் செய்வதைப் போல் இரண்டு பங்கு பொருள்கள் தயார் செய்கிறார்கள்.

—பெர்னார்ட் பேர்.

# போர்க்களங்களுக்கு நாடகக் கோஷ்டி

## சிறந்த வேலைகள் செய்கின்றன

நம் நாட்டிலிருந்து இரண்டு நாடகக் கோஷ்டியார் மத்தியக் கிழக்குப் போர் அரங்கத்திற்குப் போய் நம் படையினர் முன் ஆடி சந்தோஷிக்கச் செய்கிறார்கள். இவற்றில் ஒன்று நடனக் கோஷ்டி. இந்தக் கோஷ்டியில் புகழ் வாய்ந்த இந்திய சினிமா நடிகரும் போய் இருக்கின்றார். மற்றொரு கோஷ்டி பல திரப்பட்டவர்களைக் கொண்டது. இதில் ஒரு 'மந்திரவாதியும்' போய் இருக்கிறார்.

நிற்க, பஞ்சாப் கூட்டுறவு சங்கங்கள் இரண்டு கோஷ்டிகளைத் தயார் செய்து கொண்டிருக்கின்றன. இந்தக் கோஷ்டிகள் கூடிய சீக்கிரம் இந்தியாவை விட்டுக் கப்பல் ஏறும். மற்ற மாகாணங்களிலும் கிராமக் கோஷ்டிகள் தயார் செய்ய முயற்சிகள் நடைபெறுகின்றன. இது வரை சென்றுள்ள கோஷ்டிகள் மிகவும் சிறந்த முறையில் அதிகக் கஷ்டப்பட்டுத் தம் கடமைகளை நிறை வேற்றிக் கொண்டிருக்கின்றன. இவற்றை நம் படைகள் மிகவும் பாராட்டுகின்றன ; எனாலும், தேவைகளுக்கு ஏற்ற அளவிற்கு இந்த கோஷ்டிகள் இல்லை. எனவே, இன்னும் பல கோஷ்டிகளைச் சேகரிக்க வேண்டும்.

களியாட்டக்காரர்கள், பாடகர்கள், நடிகர்கள், வேடிக்கை காட்டுவோர்கள் ஆகியோர் ஏராளமாகத் தேவை. வெளி நாடுகளிலுள்ள நம் படையினரோடு போக விருப்ப முள்ளவர்கள், சிம்லா, ஜெனரல் ஹெட் குவார்டர்ஸ், ஏ.சி.இ.எஸ். டைரக்டொரேட்டுக்கு எழுதிக் கொள்ளலாம்.

இந்தியப் படைகளுக்கு மற்றொரு அவசரத் தேவையு முண்டு. வைத்திய சாலைகளிலும், இளைப்பாறும் விடுதிகளிலும் சுவர்களில் ஒட்டத் தகுந்த கண் கவரும் வர்ணப் படங்களும் தேவை. ஏற்கெனவே ரயில்வே போர்டார் நூற்றுக் கணக்கில் கொடுத்து உதவி யிருக்கிறார்கள் ; இவை போதாது. இந்தியாவிலுள்ள அநேக பெரிய கம்பெனிகள் அழகிய கண் கவரும் வர்ணப் படங்களையும் விளம்பரங்களையும் கொடுத்து உதவலாம்.

# சோவியத் தலைவருக்கு நம் மன்னர் கடிதம்

## 'உலக நன்மைக்கு வழி'

ஆங்கிலோ—ரஷ்ய இராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத் திட்ட போது இங்கிலாந்து மன்னர் பிரானும் ஐக்கிய சோவியத் சமதர்மக் குடியரசுகளின் சுப்ரீம் கௌன்சில் தலைவரான தோழர் எம். கலினினும் பரிமாறிக் கொண்ட செய்திகளாவன :—

**மன்னர் அனுப்பிய செய்தி :—**

இன்று, நமக்குள் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கையெழுத்தானது பற்றி, தலைவரே! என் நன்றியை இச்சமயத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம் நாடுகள் தொடுத்துள்ள கடுமையான போராட்டத்திற்கு இந்த ஒப்பந்தம் புதிய பலத்தைத் தருகிறது. நாம் அடையப் போகும் வெற்றிக்குப் பிறகு அநேக வருஷங்கள் வரையில், முழு மனதோடு கூட்டுறவாடி பரஸ்பரம் உதவி புரிய வேண்டும் என்று இரு தரத்தாரையும் கட்டுப் படுத்துகிறது. இந்த ஒப்பந்தத்தின் பலனாக நம் இரு நாடுகள் மட்டு மன்றி, மற்றும் உலக மெல்லாம் நன்மையடையு மென்று நான் கருதுவது போலவே, தாங்களும் கருதுவீர்க ளென்று நான் நம்புகிறேன்.

**தோழர் எம். கலினின் மன்னருக்கு அனுப்பிய செய்தி :—**

நம் இரு நாடுகளும் ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டது பற்றி தாங்கள் அடைந் துள்ளது போலவே நானும் மகிழ்ச்சி யடைகிறேன். நம் பொது எதிரியோடு, கொஞ்சங் கூட விட்டுக் கொடுக்காமல் போராடுவதில் நம் இரு நாடுகளும் கொண்டுள்ள இராணுவ நேசம் இந்த ஒப்பந்தம் கை யெழுத் தானதனால் மேலும் பலப் பட்டிருக்கிறது என்று நான் பெரிதும் நம்புகிறேன். வெற்றிக்குப் பிறகு பல வருஷங்கள் வரை, மனமுவந்து கூட்டுறவும் பரஸ்பர உதவியும் கட்டாயம் ஏற்படும் என்றும் நம்புகிறேன். தங்கள் வரவேற்பது போலவே நானும் இந்த ஒப்பந்தத்தை மனதார வரவேற்கிறேன். நம் இரு நாடுகளுக்கு மட்டு மன்றி உலகம் முழுதுக்குமே இதனால் நன்மை யுண்டு என்றும் நான் நம்புகிறேன்.



# கன வேகமாகப் போகிறதே வண்டி !



சலவைத் தொழில் செய்து கொண்டிருந்த பெண், பெரிய இராணுவ மோட்டார் லாரியை ஓட்டக் கற்றுக் கொள்ளுகிறார்.

## இரங்குகிறோம்.

சென்ற வாரம் வெளி வந்த இதழில் இந்தியன் இன்ஜினீரிங் இலாகாவைச் சேர்ந்த 63559-ம் நம்பர் சாப்பர் பரசுராமன் காணப்படவில்லை என்று அறிவித்திருந்தோம். அவர் இறந்து போனார் என்ற செய்தி இப்போது எமக்குக் கிடைத்திருக்கிறது. அவருடைய குடும்பத்தாருக்கு எமது அனுதாபம் உரித்தாகுக!

யுத்தத்தில் ஏற்பட்டுள்ள நஷ்டங்களைக் குறித்து கீழ்க்கண்ட தகவல்கள் எமக்குக் கிடைத்திருக்கின்றன :—

### காணாமற் போனவர்கள்.

இந்திய வைத்திய படை :—

| நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 181529 | நாவிதன் .. | லட்சுமணன். |
| எச். 192253 | ஏ சமையல்காரர். | அம்பிகா. |
| ,, 193417 | என். சமையல்காரர் | அப்பாத்துரை. |
| ,, 19274 | எஸ். கே. சிப்பாய். | எஸ். என். சக்கரவர்த்தி. |
| ,, 189018 | டபுள்யு. வெண்ட். | செர் தேவசகாயம். |
| எச். 194316 | எம். சமையல் காரர். | சந்தனசாமி. |
| ,, 167122 | சமையல்காரர் .. | தம்புசாமி. |

### காயப்பட்டவர்கள்.

| நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 188812 | தையல்காரர் .. | கே. நாகையா. |
| ஐ.ஏ.ஓ.சி :— | | |
| ஓ. 121964 | லான்ஸ் நாயிக் .. | சி. ஏ. பத்மநாபன். |
| ஆர்.ஏ.ஏ.எஸ்.சி :— | | |
| ஓ. 71221 | சிப்பாய் .. .. | என். மாமுண்டிசாமி. |
| சென்னை சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் :— | | |
| 35720 | சாப்பர் .. .. | கிருஷ்ணசாமி நாயுடு. |
| 60170 | ஷை .. .. | மாட செட்டி. |
| இந்திய இஞ்சினீரிங் இலாகா :— | | |
| 63633 | சாப்பர் .. .. | கோவிந்தசாமி. |
| 63065 | ஷை .. .. | கெ. குன்னி ராமன் நாயர். |
| 62800 | ஷை .. .. | ராஜு. |
| 63153 | ஷை .. .. | இராமச் சந்திர ரெட்டி. |

# வேற்றுமையில் ஒற்றுமை முளைக்கிறது !

## போர்க் கடவுளால் இணைக்கப்பட்டவர்கள்

யுத்த காலத்தில் ஆங்கிலோ ரஷ்யக் கூட்டுறவு எப்படி அமைந் திருக்கிறதோ, அது போலவே சமாதான காலத்திலும் ஆங்கிலோ—ரஷ்யக் கூட்டுறவு அமைய வேண்டும். ரஷ்யர்கள், தனிப் பட்ட முறையில் சட்டத்திற்கு விரோதமாகப் போராடியவர்கள், மத உரிமைகளை எதிர்த்தவர்கள். இவற்றிற்காகத் தனிப்பட்ட முறையில் நாம போராடினோம். கூட்டுப் பொருளாதார முறை கூடாது என்று நம் நாடு முழுதும் போராடுகிறது. பொது மக்களுக்கு ஏற்றபடி தான் மதம் அமைய வேண்டும் என்பதையும் நாம் கடுமையாக எதிர்க்கிறோம். என்றாலும், நாம் ஒரு பொது விஷயத்தில் தோழர்களாக இருக்கிறோம். தாங்க முடியாதவை என்று நாம் எதிர்த்த கொள்கைகளிலும், ஏதேனும் நன்மை இருக்கக் கூடும் என்று கருதத் தலைப்பட்டிருக்கிறோம். "போர்க் கடவுளால் இணைக்கப்பட்டவர்களை மனித சமாதானம் பிரிக்கா திருக்கட்டும் ". இந்தக் கடிதம் எழுதிய தினம், அமெரிக்க

ஜனாதிபதியும் நம் பிரதம மந்திரியும் மூவரசு மகாநாட்டிற்கு சோவியத் பிரதம மந்திரியையும் அழைத்த செய்தியைப் படித்திருப்பீர்கள். முழு வெற்றியை நாம் அடையும் முன் நாம் கடக்க வேண்டிய கட்டங்கள் மிகவும் கஷ்டமானவை. ஆகவே, நம் நாட்டு மக்களைக் கொண்டு எந்தெந்த வழிகளில் உற்பத்தியைப் பெருக்கலாம் என்பது பற்றி ஆலோசிக்கவே இம் மகாநாடு கூட்டப்படுகிறது. யுத்த முரசு கொட்டியவர்கள் தான் வெற்றி முரசும் கொட்டக் கூடியவர்கள்.

—ஜார்ஜ் யங்.

# வாக்குறுதியை மீறும் ஜப்பானியர்.

## தன்னலம் ஒன்றே குறி.

### சயாம் ஏமாந்த சரித்திரம்.

பேராசை கொண்ட அரசியல் வாதிகளுக்கு ஏராளமான லஞ்சங்கள் கொடுத்து, சயாம் நாட்டைத் தம் வசம் ஒப்புவித்து விடும்படி ஜப்பானியர்கள் தூண்டினார்கள். இதில் வெற்றியும் பெற்றார்கள். எனவே, சயாமுக்கும் ஜப்பானுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி சயாம் ஜப்பானியர் கைக்கு மாறி விட்டது. சயாமுக்கும் இந்தோ சீனாவிற்கும் இருந்த எல்லைத் தகராறுகளில் சயாமுக்குச் சாதகமாக ஜப்பான் இருந்தது. 2 லட்சம் என் (ஜப்பான் நாணயம்) வரை பண உதவி புரிவதாக ஜப்பான் சயாமுக்கு வாக்குறுதி கொடுத்தது. "இரு தரத்தாருக்கும்" நன்மை தரத் தக்க முறையில் வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ளலாமென்றும் ஜப்பானியர்கள் கூறினார்கள். ஜப்பானியரோடு இந்தியர்கள் சமரசம் செய்து கொண்டால், மிகுந்த நன்மை இந்தியாவிற்கு ஏற்படும் என்று நினைக்கும் ஒரு சிலர் இந் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் சயாமின் நிலை இப்போது என்ன என்று சற்று சிந்தித்துப் பார்க்கட்டும்.

முன் கூறிய வாக்குறுதிகளெல்லாம் தென் பசிபிக் யுத்தத்தை ஆரம்பிக்கும் முன்பு தான், அதாவது, 1941-ம் வருஷம் டிசம்பர்மீ 7உக்கு முன்பு தான் கொடுத்தார்கள். ஆனால், ஜப்பானியர்கள் வென்ற நாடுகளில், தம் நன்மைகளைக் காப்பாற்றுவதையே லட்சியமாகக் கொண்டார்களே யொழிய, வெல்லப்பட்ட நாடுகளின் நன்மைகளைக் குறித்து அவர்கள் ஒரு சிறிதும் கவலை கொள்ளவே கிடையாது. 20 லட்சம் என் உதவுவதாக ஜப்பான் சயாமுக்குக் கொடுத்த வாக்குறுதி இன்னும் நிறைவேற வில்லை. ஆனால் இதற்குப் பதிலாக 8 லட்சம் டன் அரிசியை சயாமிலிருந்து, கொண்டு போய் விட்டார்கள். இது மட்டுமா? சயாமுக்குச் சொந்தமான எல்லா விமான நிலயங்களையும் வசப் படுத்திக் கொண்டார்கள். பாங்காக் ரேடியோ, தமக்கு அடக்கமானதாகவும், தம் சௌகரியம் போல பயன படுத்திக் கொள்ளக் கூடியதுமாக வைத்துக் கொண்டார்கள். சயாமிய மொழியையுங் கூட கொடுமைக்கு உள்ளாக்கி விட்டார்கள். அதிலிருந்த உயிரெழுத்துக்களில் 5-ம், மெய் யெழுத்துக்களில் 13-ம் நீக்க விட வேண்டும் என்று உத்தரவிட்டு விட்டார்கள். 50 லட்சம் தேல்கள் (சயாம் நாணயம்) மதிப்புள்ள பாங்கி நோட்டுக்களை ஜப்பான் தலை நகரமான டோக்கியோவில் அச்சிடப் படும் என்று சென்ற மாதம் டோக்கியோ ரேடியோ ஒரு செய்தியை வெளியிட்டது. அதாவது, என் (ஜப்பான் நாணயம்) மதிப்பை விட பாட் (சயாம் நாணயம்) மதிப்பு மூன்றிலொரு பங்கு குறைந்து விடும். சயாம் பாங்கிகளின் ஆதிக்கம் ஜப்பான் கைக்கு மாறும் முன்பு, 100 பாட் பெறுமான சாமான்களுக்கு 100 என் விலை கொடுத்தார்கள். 100 என் பெறுமான முள்ள ஜப்பான் சாமான்களுக்கு சயாமியர்கள் 64 பாட் தான் கொடுத்தார்கள். அல்லாமலும், ஜப்பானிலிருந்து வந்து சயாமில் இறக்குமதியாகும் செய் பொருள்களுக்கு இப்போது 100-க்கு 50 பங்கு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஜப்பானியப் படைகளுக்காக சயாமிலிருந்து அனுப்பப்படும் விளை பொருள்களுக்கு, ஜப்பானியக் கம்பெனிகளான மித்சுயி மிதசுபூஷி, கம்பெனியார் விதிக்கும் விலையையே ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் சயாமிய விவசாயிகள் இருக்கிறார்கள்.

**மொழிக்குங் கூட ஆபத்து.**

தலை நகரத்தைக் கூட மாற்றி விடுவார்கள் போலிருக்கிறது. 'நிச்சி நிச்சி ஷிம்புன்' என்னும் பத்திரிகையில் வெளி வந்திருக்கும் அறிக்கையிலிருந்து, தற்போதுள்ள தலை நகரமான பாங்காக்குக்குக் கிழக்கே 110 மைல்கள் தூரத்திலுள்ள 'குராபுரி' என்னும் இடத்திற்கு சயாம தலை நகரத்தை மாற்றி விடும்படி வற்புறுத்தப் படுவதாகத் தெரிகிறது. மஞ்சூரியாவைக் கைப்பற்றிய போதுங் கூட, இது போலவே தான ஜப்பானியர்கள் செய்தார்கள். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. பழைய சம்பந்தங்களை எல்லாம் அறவே அறுத்து விட வேண்டுமென்பது முதல் காரணம். புதிய தலை நகரத்தில் பூமி விலைகளில் பேரம் செய்ய ஜப்பானிய உத்தியோகஸ்தர்களுக்குச் சந்தர்ப்பங் கொடுக்க வேண்டும் என்பது இரண்டாவது காரணம்.

**ஜப்பானியர் போலித் தனம்.**

சயாமிய தேசியத்தை வளர்க்கத் தாம் மிகவும் அக்கறை கொண்டு இருப்பதாகப் பாவனை செய்வது தான, சயாமிலுள்ள ஜப்பானியர் கொள்கை. சென்ற மே மாதம் 1-ம் தேதி பாங்காக் ரேடியோவில் கீழ்க் கண்டவாறு கூறப்பட்டது :—

"தாய் (லாந்து) சம்பந்தமான எல்லாவற்றையும் ஆதரியுங்கள். காலையில் எழுந்து இரவில் படுக்கும் வரை தாயைப் பற்றியே சதா நினைத்துக் கொண்டிருங்கள். ரேடியோ உள்பட தாயிலே தாயார் செய்தவற்றையே வாங்குங்கள் !"

தாய்லாந்தில் தயாராகும் ரேடியோக்கள் மிகவும் மட்டமானவை. அந்த நாட்டுக்குள் நடை பெறும் நடவடிக்கைகளைத் தான், அவற்றைக் கொண்டு கேட்கக் கூடும். இந்த மாதிரி ரேடியோக்களையே வாங்கும்படி கூறும் ரேடியோ செய்தி, எப்படி அந் நாட்டுக்குப் பயன் தரக் கூடியதா யிருக்கும் ?

# நேச தேச விமான வெற்றிகள்

## ஆக்யாப் துறைமுகம் தாக்கப் பட்டது.

ஜப்பானியர் வசப்பட்ட பர்மிய நாடுகளின் மீது நேச தேச விமானங்கள் 60 முறை மே மீ தத்தில் மட்டும் படை எடுத்துப் போயிருக்கின்றன.

வங்காளக் குடாக் கடலில் அரிசி ஏராளமாக ஏற்றுமதியாகும் துறைமுகம் ஆக்யாப். நம் விமானப் படைகள் இதைத்ய குறியாக ஒரு மாதத்தில் 15 முறைகள் தாக்கின. சென்ற 18 நாட்களுக்குள்ளாக 10 முறை தாக்கின. ஆக்யாபின் முக்கியமான துறைமுகம் நாசமாகி விட்டது. அடுத்த யடுத்திருந்த நெல் அரைக்கும் யந்திரமும், கம்பியில்லாத தந்தி ஆபீசும் நாசமாகி விட்டன.

நமது விமானப் படை யொன்று ஆக்யாபில் பூமி மட்டத்திற்கு 100 அடி உயரத்தில பறந்து வந்து ஆக்யாப் விமான நிலயத்தையும், அதை யடுத்திருந்த சில கட்டிடங்களையும், சில மைல்களுக்கு அப்பால் இருந்த எதிரி முகாமையும் மிஷின் பீரங்கிகளால் நாசம் செய்து விட்டது.

ரங்கூன் துறைமுகத்தைத் தாக்குவதில் அமெரிக்க விமானிகள் மிகவும் புகழ்பெற்று விட்டார்கள். அந்த ஒரு மாதத்தில் 5 முறை அத்துறை முகத்தைத் தாக்கினார்கள். சிந்துவின் ஆற்றில் போய்க் கொண்டிருந்த எதிரி கப்பல்களை நம் விமானப் படைகள் திடீரெனத் தாக்கின. தாம் தாக்கப்படுவதை அவர்கள் உணரு முன்பே, அவர்களுடைய 3 கப்பல்கள் முழுகி விட்டன.



# இன்னும் என்ன வேணும்?

ஒன்றல்ல, இரண்டல்ல, எத்தனையோ மூளைகள் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் பிரமாதமாக வேலை செய்து கொண்டு தானிருக்கின்றன. வண்டைக்காயில் வழவழப்பு இருப்பதேன் ? முட்டைக்கோஸில் இத்தனை இலைகள் மூடிக் காண்டிருப்பதேன் ? மாங்காய்க்கு மூக்கு இருப்ப தேன் ? ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாததேன் ? அதற்குக் கடவுள் ஏன் தக்க கண்ணாடி சப்ளை செய்யவில்லை ? என்பது போன்ற விஷயங்களை ஆராய்ச்சி செய்வதில், மேற்கண்ட மூளைகள் ஈடுபட்டிருக்க வில்லை. ஆனால், இப்பொழுது இந்த உலகத்தையே அல்லோல கல்லோலப்படுத்திவிட்டிருக்கும் கோர யுத்தத்திற்குச் சீக்கிரமே ஒரு முடிவு காண வேணும் அல்லவா ? இது தானே உங்களுடைய விருப்பமும் ? ஏன், உலகோர் அனைவரது ஆசையும் அதுவே தான். இந்த ஆசையையும், விருப்பத்தையும் பூர்த்தி செய்வதற்கான சுருக்கு வழி எது என்பதை ஆராய்வதிலேயே மேலே குறிப்பிட்ட மூளைகள் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன. ஒவ்வொரு மூளையும் ஒரு அரிய யோசனையை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. அம்மாதிரி வெளியான யோசனைகளில் ஒரே நாளில் ஆயிரம் வெடி விமானங்களை ஜெர்மனியில் உள்ள பிரபல தொழிற்சாலை நகரமான கொலோன் மீது குண்டு மழை பெய்துவர அனுப்பினது ஒரு மூளையின் யோசனை தான். அதன் பயனாக, இருநூற்றைம்பது தொழிற்சாலைக் கட்டிடங்கள் பாழாகி விட்டனவாம். பல ரயில் பாதைகள் நாசமாகி விட்டனவாம். அவ்வளவுக் கவ்வளவு ஜெர்மானிய யுத்த யந்திர யமனுக்குக் கிடைக்கும் தீனியில் கொஞ்சம் மண் விழுந்தது போல் தானே ?

ஜெர்மனியின் கைவசமுள்ள பெல்ஜியம், ஹாலந்து நார்வே, பிரான்ஸ் இங்கெல்லாம் சமயம் பார்த்து போயிறங்கி, சாத்தியமான வரை துறைமுகங்களையும், போக்கு வரத்து சாதனங்களையும், கடற்கரை யோரமாக உள்ள ஆலைகளையும் நாசமாக்கி வரவேண்டும் என்ற யோசனையை எடுத்துக் கூறியது மற்றொரு மூளை. அதன் பலன் ஜெர்மானியருக்கு எந்த நாளும் திகில்தான், எங்கே மறுமுறை வந்து உபத்திரவம் செய்வார்களோ என்று.

'டக்' என்று ஸிரியாவிலும், இரானிலும், மடகாஸ்கரிலும் நமது படைகளைக் கொண்டுபோய் இறக்கி யுத்தம் முடியும் மட்டும் மேற்கண்ட பிரதேசங்களை நமது ஆதிக்கத்திற்குள் வைத்துக் கொண்டு, அச்சு நாட்டினர் அங்கு, அபர்ந்த சமயத்தில் காலடி எடுத்து வைக்க விடாது தடுக்க வேண்டும் எனத் திட்டம் போட்டது வேறு சில மூளைகள்.

இம்மாதிரியாகச் சிறுக சிறுகப் பலவிதப் பலன்களை பெறும்படி செய்திருக்கின்றன பல மூளைகளின் வேலைகள். இவற்றில் எல்லாவற்றிலும் சிறந்தது என்று சொல்லும்படியான தோர் வேலையை சென்ற வாரம் ஒரு பெரிய மூளை அற்புதமாகச் செய்து முடித்து, 'சபாஷ் ! சபாஷ் ! அரக்கனை ஒழிக்க அற்புதமான வழி இது' என்று எல்லோரும் புகழ்ந்து பாடும்படி செய்து விட்டது. அது என்ன வேலை ? அதைச் செய்தது யாருடைய மூளை ? என்று அறிய ஆசைப்படுவீர்களே !

ருஷ்யாவிலே உள்ள மாலடோவ் என்ற அன்னிய நாட்டு மந்திரியின் மூளை தான் இத்தகையதோர் பெரிய வேலையைச் செய்தது. அவர் பார்த்தார், இப்பொழுது யுத்தம் போய்க் கொண்டிருக்கும் போக்கை. ஜெர்மானிய யமன், நீதி, நியமம், மக்களுடைய உயிர், சாமான்களின் நாசம், எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய துன்பம் இதையெல்லாம் லக்ஷியம் செய்யாது, கண்மூடித்தனமாக ருஷ்ய மண்ணில் போராடிக் கொண்டிருப்பதை அவர் பார்த்தார். இந்த யமன், ருஷ்யாவிற்கு வெளி உலகிலிருந்து வரும் உதவியையே ஒரு காலத்தில் உள்ளே வந்து சேராதபடி தடுத்து விட்டாலும். தடுத்து விடுவான் என்ற யோசனை அவருக்கு எழுந்தது. வரு முன் காத்து, வலுப்படுத்திக் கொள்வதே புத்திசாலிகளுக்கு அழகு என்று நினைத்தார்.

'கூட்டிக் கொண்டுவா, நம் ஊர் பத்திரிகைக்காரர்களை யெல்லாம்' என்றார். பத்திரிகைக் காரர்கள் வந்தார்கள். 'மகானுபாவர்களே ! ஒரு வேண்டுகோள் ! நான் ஒரு முக்கிய காரியமாக சீமை வரை போய் வரப் போகிறேன். நீங்கள் தயவு செய்து, நான் இவ்வூர் திரும்பி வரும்வரை, நான் ஊரை விட்டுப் போயிருப்பதைக் குறித்து ஒரு அக்ஷரம் கூட எழுதாமலிருக்க வேண்டும். உங்கள் திருப் பேனாக்களுக்கு வேறு எதாவது திருவேலைகளைக் கொடுத்துக் கொண்டிருங்கள். அதோ நம்முடைய சேனாபதி டிமொஷெங்கோ தென் ருஷ்யாவில் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கிறாரே, அதைப் பற்றி எழுதுங்களேன் ! என்னுடைய பயணத்தைப் பற்றி மட்டும், ஆமாம் ! மூச்சுக்கூட விடாத உங்கள் திருவாய்களைக் கொஞ்சம் மூடிவைத்துக்கொண்டிருந்தால், ரொம்ப நன்றாயிருக்கும். என்ன, போய்வரட்டுமா ? என்று கேட்டார்.

'சரி !' என்ற பதில் கிடைத்து விட்டது. உடனே ஒரு பெரிய விமானத்தில் கிளம்பி விட்டார் லண்டனை நோக்கி. அங்கும் ஏக ரகசியமாக உலாவினார். பிறகு, அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனுக்குப் பறந்து போனார். அங்கு, 'மிஸ்டர் பிரௌன்' என்ற நாமதேயத்தோடு சுற்றி வந்தார். அப்பால் நேரே மாஸ்காவிற்குத் திரும்பி விட்டார் அவர் ஊர் போய்ச் சேர்ந்ததும், அதுவரை மன நிம்மதியில்லாது, தமது வாக்குகளாலேயே கட்டுப்பட்டுக் கிடந்த பத்திரிகைக்காரர்கள் ஆனந்தத்தோடு அவிழ்த்து விட்டு விட்டார்கள் சேதியை.

'ருஷ்யாவும், பிரிட்டனும் ஒரு கெட்டியான ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன. அதேமாதிரி தான் அமெரிக்காவுடனும் ருஷ்யா ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. இந்த ஒப்பந்தம் இருபது வருஷங்களுக்கு அமுலில் இருக்கும். ஒரு வருஷ நோட்டீஸ் கொடுத்தே, இதை நீக்கிக் கொள்ள வேண்டும். எல்லோரும் ஒன்றுகககூடி, இந்த ஹிட்லரின் இடுப்பெலும்பை ஒடித்து விட வேண்டும் என்பதே இந்த ஒப்பந்தங்களின் நோக்கமாகும். அதோடு, யுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பாவில் அமைதியும் க்ஷேமமும் ஏற்படவும் எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டுமென்றும் இந்த ஒப்பந்தங்களில் உள்ள விதிகள் கூறுகின்றன. ஹிட்லர் மற்றும் ஹிட்லர் கையின் கீழ் சிக்கி யிருக்கும் ஜெர்மனி—இவை நேசநாட்டினரின் பரம விரோதிகள். இவர்களோடு, யாரும் தனித்தனியாக எத்தகைய உடன்படிக்கையோ, ஒப்பந்தமோ, ராஜியோ கொள்ளவே கூடாது என்பதும் இந்த ஒப்பந்தங்களின் ஷரத்துக்கள். இதைப் போன்ற அரிய சம்பவம் இந்த யுத்தம் ஆரம்பமானது முதல் நடந்ததே யில்லை' என்று பத்திரிகைக் காரர்கள் தெரிவித்தார்கள்.

இந்தச் சேதி ஹிட்லருடைய மலைக்கோட்டைக்கு எட்டியிருக்காதென்று நினைகிறீர்களா ? சீ ! ஹிட்லர் அவ்வளவு மோசமா என்ன, தன் காதுகளில் பஞ்சை அடைத்துக் கொண்டு, வெளி உலகச் சேதிகளையே கேட்காதிருக்க ? மற்றெல்லோரையும் விட, தனது எதிரிகள் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவதில் அவருக்கே அதிக சிரத்தை இருக்குமல்லவா ? ஆகவே, அவரது செய்திகளில், இந்த இரு அற்புத ஒப்பந்தங்களைப் பற்றிய தகவல் விழுந்தவுடன், அப்படியே அவருடைய வயிற்றிலே புளியைக் கரைத்து விட்டது போலிருக்கும் என்பதில் சந்தேகமா என்ன ?

'1942-ல் கட்டாயமாக ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனையை ஆரம்பித்து விடுகிறோம்' என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறிவிட்டதும்; 'அதை நாங்கள் ஆமோதிக்கிறோம்' என்று பிரிட்டன் தலையை ஆட்டி யிருப்பதும், ருஷ்யாவிற்கு ஆயுத உதவி அனுப்பும் வேகத்தை இன்னும் அதிகரிக்கச் செய்யப் போகிறோம் என்று அந்நாடுகள் தெரிவித்திருப்பதும், அமெரிக்க வீரர்கள் உலகெங்கும் போய், ஆயுதங்களுடன் இறங்குவதும், ஹிட்லருக்குப் பெருந் திகைப்பை உண்டாக்கத் தான் செய்திருக்கும். தனது காரியம் ஒரு தினுசாக முடிந்த பிறகோ, அல்லது எக்கச்சக்கமாக எங்காவது மாட்டிக்

கொண்டிருக்கும் பொழுதோ, ருஷ்யாவின் காலிலே ரகசியமாக விழுந்து, சமாசத்திற்கு வழி செய்து கொள்ளலாம் என்று ஹிட்லர் நினைத் திருந்தால, அந்த நினைவிலும், இந்த ஒப்பந்தங்கள் மண்ணைப் போட்டு விட்டிருக்கும்.

தவிர, ஜப்பான் ஏதாவது கொஞ்சம் உதவி செய்யக் கூடும் என்று ஹிட்லர் நினைத்திருந்திருப்பார். ஜப்பான் என்னடா என்றால் பெரிய குள்ள நரியாக இருக்கிறது. தன் வயிற்றுப் பாட்டைப் பார்த்துக் கொள்வதிலேயே அது தன் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறது. ஏமாந் திருப்போர்களை இதமாகப் பேசி நன்றாக ஏமாற்றவும், ஓய்ந்திருப்போரை ஓங்கி அடிக்கவும், திருட்டு வழிகளைக் கண்டு பிடிப்பதில் மும்முரமாக முனைந்திருக்கிறது.

பாருங்களேன் ! யாரோ ஒரு ஜப்பானிய விமானி, அவனது விமானம், வங்க மண்ணில், ஒரு கோடியில் தீப்பற்றி விழுந்திருக்கிறது. அதிலிருந்த விமானி காயம் பட்டுக் கிடந்தான. அவனைத் தைரியமாக ஒரு காவலாளி பிடித்துப் போலீஸில் ஒப்படைத்தான். அந்த வியானி நடு நடுவே மகாத்மா காந்தியின் பெயரையும் உச்சரிக்கிறானும். அப்படிச் சொன்னால் தப்ப விட்டு விடுவார்கள், நம்மிடம் அநுதாபம் கொண்டு என்ற நினைப்புப் போலிருக்கிறது அவனுக்கு. எல்லாம்வேஷம் ! மோசம் ! கபட நாடகம் ! இதெல்லாம் தானையா சொல்லிக் கொடுக்கிறார்கள் அவர்களது பள்ளிக்கூடங்களில். இந்தக் கபட நடிப்புகளைக் கண்டும், வாழைப் பழத்தில் ஊசி இறக்குவது போன்ற 'நைஸ்' பேச்சைக் கேட்டும், யாரும் ஏமாறக் காணோம். யாரும் ஏமாறக்கூடாது என்றே அதிகாரிகள் வெகு ஜாக்கிரதையாகப் பொது மக்களைப் பல விதங்களிலும் எச்சரித்து வருகிறார்கள். இதையெல்லாம் பற்றிக் கேள்விப்பட்ட ஹிட்லருக்கு, ஒரே தலைவலி மயமாக ஏற்பட்டிருக்கத் தான் செய்யும் !

இது ஆச்சா ? ருஷ்யாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் பலனுள்ளதாக நீடித்திருக்கச் செய்யவும், 1942-ல் ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்கிறேன் என்று கொடுத்த வாக்கைக் காப்பாற்றவும், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பல சட்டங்களை இயற்றப் போகிறார். கப்பல் கஷ்டம், அது, இது என்று இனிச் சொல்லப் போவதில்லை அவர். எப்படியும் ருஷ்யாவிற்கு உதவி போய்ச் சேரும்படி செய்தே தீருவார் அவர். அமெரிக்க சாமான்களின் உற்பத்தி வேகமோ, அமோகமா யிருக்கிறது. இந்த சாமான்கள் எல்லாம் நேச நாடுகளுக்கு விநியோகமாகி வருவதே ஹிட்லருக்கு கலக்கத்தை உண்டாக்குகிறது.

அதோடு, சீமையி லிருந்து, லிட்டில்டன் என்பவர் அமெரிக்காவிற்குப் போய் பிரிட்டன் சாதிப்பவற்றையெல்லாம் பற்றி பெரிய புராணம் படித்து விட்டார்.

அமெரிக்காவும் பிரிட்டனும் சேர்ந்து தயாரிக்கும் விமானங்களின் எண்ணிக்கை, இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் இம்மூன்று நாடுகளும் சேர்ந்து தயாரிக்கும் விமானங்களின் எண்ணிக்கையை விட அரை மடங்கு அதிகம். நேச நாடுகள் எல்லாம் சேர்ந்து தயாரிக்கும் விமானங்கள், அச்சு நாட்டு விமானங்களைப் போல் இரு மடங்கு அதிகம். யுத்தத் தளவாட உற்பத்தியின் சிகரத்தை இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில பிரிட்டன் எட்டி விடும். பிரிட்டனிலே ஐந்து வீட்டுக்கு ஒரு வீடு வீதம் பாழாகி விட்டது. ஆனாலும் பிரிட்டிஷ் மக்களுக்கு உள்ள மனோவலிமை சற்றும் குறைய வில்லை. குறையாதது மட்டுமில்லை; அவர்களுடைய உத்சாகமோ நாளுக்குநாள் அதிகமாகிவருகிறது. வருடத்திற்கு நாற்பத்தி மூவாயிரம் பீரங்கிகள் என்ன, இரண்டரைக் கோடி தோட்டாக்களென்ன, ஏராளமான விமானங்களும், டாங்கிகளும் என்ன, தயாராகிய வண்ணமாகவே இருக்கின்றன. பிரிட்டிஷ் ராஜ்யத்தின் வரும்படியிலே நூற்றுக்கு அறுபது இந்த யுத்தத்திற்காகச் செலவிடப் படுகிறது. முன்னேவத்த காலைப் பின் வையோம் என்று ஐரோப்பா மீது படையெடுப்போம் என்றும் லக்ஷ்க்கணக்கான, அனுதினமும் பயிற்சி பெற்று வரும் வீரர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் ஆயிரம் வெடி விமானங்களை அனுப்பினோமா, இந்த எண்ணிக்கை எவ்வளவு உயரம் போகிறது பாருங்கள் என்று கூறினார் 'அவர்.' இதைக் கேட்டும் ஹிட்லர் நிம்மதியாக இருந்திருப்பார் என்று நினைக்கிறீர்கள்?

எந்த சமயத்திலும் இனிப் படையெடுத்தே தீருவார்கள் என்ற பீதி அவருக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது, மேலைக் கடற்கரை யோரங்களில் நடக்கும் தீவிர ஏற்பாடுகளிலிருந்து நன்றாகத் தெரிகிறது. பெல்ஜியக் கடற் கரையில் பலமான முஸ்தீப்புகள் நடக்கின்றனவாம், கரையி லிருந்து பத்து மைல் தூரத்திற்கப்பால் வரை, பயங்கரமான பதுகாப்பு செய்யப்பட்டிருக்கிறதாம். ருஷ்யாவிற்கு அனுப்பப் பெற்ற படை வீரர்கள் திரும்பவும் பெல்ஜியத்தைப் பாதுகாக்கத் திரும்பி விட்டார்களாம். ஏராளமான பீரங்கிகள், மோட்டார்ப் படைகள், விமானங்கள் எல்லாவற்றையும் இங்கே சேகரித்து வைக்க ஹிட்லர் உத்திர விட்டிருக்கிறாராம். பாரிஸிலே அடிக்கடி தண்டா செய்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு ஒரே இறுதி முடிவைக் காட்டச் செய்திருக்கிறார். ஆனாலும் ஜெர்மானியர் என்றால் வேப் பங்காயாகப் பாவிப்போரின் எண்ணிக்கை தான் அதிகரித்து வருகிறதாம்.

சமீபத்தில் ஹீட்ரிச் என்ற நாஸி சூரர் தாக்கப்பட்டு, பின் மரண மடைந்ததும் மேற்கண்ட கோஷ்டியில் உள்ள ஒருவரது செய்கையாகத் தானிருக்கும். அதற்காக ஒரு லீக்கிராமம் முழுவதையுமே தரைமட்டமாக்கி, குழந்தைகள், மாதர், ஆடவர் அனைவரையும் சித்திர வதை செய்தார்களாம். நூற்றுக் கணக்கில் பலரை, பழிக்குப் பழி என்று தூக்கி லிட்டார்களாம்.

இதற்கெல்லாம் இருக்கிறது சரியாகப் பின்னால், யுத்தம் முடிந்ததும். இந்தக் கோரச் செயல்களைப் புரிந்தவர்களை நாமும் சித்திரவதை செய்தே தீருவோம், என்று லண்டனில் உள்ள லீக் தலைவர் டாக்டர் பீனஸ் கூறியிருக்கிறார்.

ருஷ்யாவிலோ எதிர் பார்த்த வேகத்தில் வெற்றிகள் கிடைக்க வில்லை. லிபியாவிலும் சூரர் ரோமெல் சட்டென முன்னேறக் காணோம். அமெரிக்கக் கப்பற் படையோ, பவழக் கடலிலும், நாவழித் தீவுகள் அருகிலும் அச்சு நாட்டு சகாவான ஜப்பானின் கப்பற் படைக்கும், விமானங்களுக்கும், விமானந் தூக்கிகளுக்கும் படுசேத முண்டாக்கி விட்டது. ஒரு மனுஷனின் மனதைக் குழப்ப, இதை விட இன்னும் என்ன வேணுமய்யா ? யாரானாலும் சரி, தொங்கித் தான் போய் விடுவார்கள் இவ்வளவு எதிர்ப்புகளுக்கிடையில் என்ற தைரியத்தில் தான், இவ்வருடத்தோடு ஹிட்லரின் தலை விழுந்து விடும் என்று சொல்கிறார்கள் போலிருக்கிறது. அவர்கள் வாய் முகூர்த்தமோ, அல்லது உலகின் நல்ல காலமாகவோ, சீக்கிரம் இந்த நாஸி யமனுக்குச் சாவு வந்தால் தேவலை போலிருக்கிறது.



Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு ஜூன்மீ 26உ, வெள்ளிக்கிழமை [இதழ் 25

## சென்னைக்கு கிளாஸ்டர் பிரபு செய்தி.

### மகத்தான பாதுகாப்புப் படை.

#### எதிரிக்கு நல்ல பாடம் கற்றுக் கொடுங்கள் !

நமது ராஜாவோடு பிறந்தவர் கிளாஸ்டர் கோமகன்: இவர் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தார். இந்த ஊரை விட்டுப் போகும் போது, சென்னை கவர்னர் மூலமாக, சென்னையி லுள்ளவர்களுக்கு ஒரு செய்தி அனுப்பி யிருக்கிறார். அது வருமாறு :—

"மிகச் சிறந்த முறையில் சென்னை நகரத்தார் என்னை வர வேற்றார்கள். இன்னும் கொஞ்ச நாட்கள் நான் சென்னையி லிருக்க எனக்கு அவகாச மில்லை. இது பற்றி நான் வருந்துகிறேன். இங்குள்ள படைகளை நான் பார்வை யிட்டேன். எப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டாலும், அதற்குத் தயாராகவும் ஊக்கத் தோடும் அவர்கள் இருக்கிறார்க ளென்று தெரிகிறது. உங்கள் நகரப் பாதுகாப்புப் படையையும் நான் பார்வை யிட்டேன். அநேகம் பேர் இப்படையில் சேர்ந்திருக்கிறார்கள். சுருசுருப்பாகவும் இருக்கிறார்கள். இவர்களை நான் பாராட்டுகிறேன். இவர்கள் அதிர்ஷ்ட சாலிகள் தான். எல்லா விதமான வசதிகளும் அமைந்த ஆம்புலென்ஸ் முதலிய மோட்டார் வண்டிகள் இவர்களுக்கு இருக்கின்றன. இப்படிப் பட்ட சிறந்த படைகளையும் நகரப் பாதுகாப்புப் படையையும் பார்த்த பிறகு, எனக்கு முழு நம்பிக்கை உண்டாகிறது. சென்னையைக் காக்கவோ அல்லது எதிரிகளைத் தாக்கவோ, வேண்டிய அவசியம் ஏற்படுமானால், இந்தப் படைகள் மிகவும் சிறந்த முறையில் உதவும் என்னும் முழு நம்பிக்கை எனக்கு உண்டு.

ஆபத்து இந்தியாவிற்கு வெகு தூரத்திற்கு அப்பால் இருக்கும் போதே, மகத்தான தோர் தொகையை யுத்த நிதிக்காகக் கொடுத்து உதவினீர்கள். வேறெந்த மாகாணமும் உங்களைப் போல் உதவ வில்லை. நீங்கள் உதவிய தொகையைக் கொண்டு 3 போர் விமானப் படைகளையும் ஒரு வெடிகுண்டுப் படையையும் அமைக்க முடிந்தது. இந்தப் படைகளுக்குச் 'சென்னை'ப் படை என்று பெயர். படைகளுக்கு ஆட் சேர்ப்பதில் குறிப்பாக, போராடுவோர்களையும் நர்சுகளையும் சேர்ப்பதில், நீங்கள் செய்துள்ள வேலை பெருமை யானது தான். விசாகப் பட்டினமும் காக்கினடாவும் எதிரியின் தாக்குதலுக்கு ஆளாயின. நாம் இதற்குப் பழி வாங்குவோம். இதைப் பற்றி நீங்கள் உறுதியா யிருக்கலாம். மறுபடியும் எதிரிகள் இங்கே வரலாம். அப்போது உங்கள் தாய் நாட்டைக் காக்க வென்று, தேசீய யுத்த முனை உணர்ச்சி யோடு ஒற்றுமைப் பட்டு உறுதியா யிருப்பீர்களென்று நான் நம்புகிறேன். எதிரிகள் இங்கே வந்தால், நீங்கள் அவர்களுக்குத் தகுந்தபடி பாடம் கற்பிப்பீர்கள். நாம் அவர்களைத் தாக்கினால், அவர்களால் எதிர்த்து நிற்க முடியாது."

* * * * *

நமது ராஜா வோடு பிறந்தவர் மாட்சிமை தங்கிய கிளாஸ்டர் பிரபு. இவர் இந்தியாவி லுள்ள இராணுவங்களை எல்லாம் பார்வை யிட்டுக் கொண்டிருக்கிறார். விமானப் பாதுகாப்புக் காரர்கள் நடத்திய ஒரு அணி வகுப்பையும் செண்ட் ஜான் பிரிகேட் நடத்திய ஒரு அணி வகுப்பையும் சென்ற ஞாயிற்றுக் கிழமை காலை பார்வையிட்டார். மேலும் சென்னை சாபர்ஸ் அண்டு மைனர்ஸ் பட்டாளத்தையும் பார்வை யிட்டார்.

நிஜாம் ராஜ்ய சுற்றுப் பிரயாணம் முடிந்த பிறகு க்ளாஸ்டர் பிரபு நிஜாம் மன்னருக்கு அனுப்பி யிருக்கும் செய்தியாவது :—

> நான் தங்கள் இராஜ்யத்தில் மிகக் கொஞ்ச காலமே தங்கியிருந்தேன் இப்போது, உலக சரித்திரத்திலேயே ஒரு நெருக்கடியான பருவம். இந்தக் காலத்தில், தங்கள் இராஜ்யத்திற்கு வரும்படியான சந்தர்ப்பங் கிடைத்தது, என் அதிர்ஷ்டந் தான். உண்மையான தோழர்கள் யார் என்பதைப் பரீட்சிக்க யுத்த காலமே ஏற்றது; சமாதான காலமல்ல. தற்காலப் போராட்டத்தின் முடிவு என்ன என்பதைக் குறித்து ஹைதராபாத் மக்கள் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். நம் நண்பர்களிடத்திலும் நேச தேசத்தாரிடத்திலும் உறுதியான பற்றுதல் கொண்டிருக்கிறார்கள். போர்க் களத்தில் இருக்கும் வீரர்களுக்கு இந்த உணர்ச்சி மிகவும் ஊக்கம் தரும். நம் எதிரிகளுக்கு குழப்பத்தை உண்டாக்கும்.

மாட்சிமை தங்கிய கிளாஸ்டர் பிரபு அவர்கள் கூறியுள்ள மொழிகளில் உணர்ச்சி ததும்புகிறது. இந்திய மன்னர்களுக்கும், சமஸ்தானக் குடிகளுக்கும், பிரிட்டிஷ் இந்திய மக்களுக்கும் இதே உணர்ச்சி தான் ஏற்படும். இவர்கள் அனைவரும் அச்சு அரசாங்கங்கள் கட்டாயம் தோல்வியடைய வேண்டும் என்று ஏக மனதாக விரும்புகிறார்கள்.

# ஜெர்மனியின் தோல்விக்கு அறிகுறி

## முதலாளிகளின் கடும் முயற்சி

### உலக வியாபாரத்தைக் கைப்பற்ற ஆலோசனை

ஜெர்மனி தோற்று விட்டால் ஜெர்மன் பொது மக்களுக்கு மகத்தான துன்பம் நேருமென்று கோம்பல்ஸ் புலம்பிக் கொண்டிருக்கிறார். ஜெர்மன் தொழிற்சாலை முதலாளிகளோ உலகத்திலுள்ள மற்ற நாட்டினருக்கு உபதேசம் செய்யப் புறப்பட்டிருக்கிறார்கள்.

ஜெர்மனி தோற்றுப் போனால், வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தை விட கடுமையானதோர் ஒப்பந்தம் ஏற்படவேண்டியிருக்கும் அந்த ஒப்பந்தத்தை ஜெர்மன் தொழிற்சாலை முதலாளிகள் மீது சுமத்துவதனால், எவ்வளவு பாதகம் நேரக் கூடுமென்று ஆலோசிக்கும்படி, அவர்கள் உலகத்திலுள்ள மற்ற நாட்டவர்களைக் கோருகிறார்கள். இவர்களுள் ஒருவரான முதுசியஸ் கூறும் வாதம், எவ்வளவு நியாயமானதென்று பாருங்கள்!:—

> "ஜெர்மனியின் தொழிற்சாலைகளைப் பாழாக்கி விட்டால், உலகம் முழுதுக்குமே பெருங்கேடு நேரும்; உலகம் முழுதும் வறுமை. தலை விரித்தாடும். ஏனென்றால், தொழில் முன்னேற்றம் மிகுதியும் அடைந்துள்ள நாடுகள் ஒன்றிற்கொன்று பண்டம் மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம். நேச தேசத்தார் எதற்காக இப்படிப் போராடுகிறார்கள் என்று உணருவார்களானால், இந்த உலகத்திலுள்ள நம் எதிரிகள், பெருத்த சேதத்திற்கு உள்ளாவார்கள். பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதற்கில்லாமல், சிதறிப் போய் விடும்."

மற்றொரு முதலாளியான பிராங்க்பர்டர் சீதுங் என்பவர் வேறொரு முறையில் வாதிக்கிறார். இவருடைய வாதம் உள்ளதைக் கவரத் தக்கது. அவர் கூறுவதாவது:

> "ஜெர்மனியில் பாதிப் பேர் கைத் தொழில் செய்து ஜீவிக்கிறவர்கள். சில லட்சம் பேர்கள் தான் விவசாயம் செய்ய முடியும்.
>
> மற்ற 4 கோடிப் பேர்களுக்கோ?"

இவற்றிலிருந்து என்ன விளங்குகிறது? தாம் வெற்றியடைவது உறுதி என்ற எண்ணம் ஜெர்மன் முதலாளிகளுக்கு மலை ஏறிவிட்டது. எதிர் காலத்தில் ஜெர்மன் கைத் தொழில்கள் எந்த நிலையையடையுமோ என்னும் கவலையும் பயமும் அவர்களை வாட்டுகின்றன.

என்றாலும், அவர்கள் சும்மாயில்லை. ஜெர்மானியர் கைப்பற்றியுள்ள நாடுகளில் நடைபெறும் தொழில்களில் சம்பந்தம் வைத்துக் கொள்ள பெரிதும் ஆசை கொள்ளுகிறார்கள். போலந்து, செக்கோஸ்லேவேகியா முதலிய நாடுகளில் தம் மிருக பலத்தால் வியாபாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். தாம் கைப் பற்றியுள்ள நாடுகளில் "சட்டப்படி வாங்குவது" என்னும் புதிய முறையை அவர்கள் கையாளுகிறார்கள். ஐரோப்பாவிலுள்ள எல்லா வகை வியாபாரங்களிலும் பாங்கிகளிலும் ஜெர்மன் கம்பெனிகளுக்குப் பங்கு உண்டு. தாம் சட்டப்படி வாங்கியுள்ள வியாபார உரிமைகளை ஜனநாயக நாடுகள் மதிக்கும் என்று பெரிய ஜெர்மன் வியாபாரிகள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, யுகேஸ்லேவ் ஈயம், தாமிரம் ஆகிய சுரங்கங்களை ஜெர்மன் கம்பெனிகள் "வாங்கி விட்டன."

சந்தேகத்திற்கிடமான முறையில் இவற்றை "வாங்குவது" எதிர் காலத்தில் செல்லுபடியாகாமற் போகக் கூடுமென்று, சென்ற சில வாரங்களாகவும் மாதங்களாகவும் நடைபெறும் சம்பவங்களிலிருந்து அவர்கள் சந்தேகிக்கிறார்கள்.

ஜெர்மனி தோற்றுப் போகுமானால், நாஜிகளின் அரசியல் சட்டங்கள் அழியும்.

**ஜெர்மனி தோற்றால்?**

அதுபோல, பிற நாட்டுக் கைத் தொழில்களை விலைக்கு வாங்கும் அவர்கள் கொள்கையைக் கைவிட்டு விடுவார்கள். ஆகவே, நிரந்தரமான வெற்றி தரக் கூடிய முறையைக் கையாள, ஜெர்மன் முதலாளிகள் முனைந்திருக்கிறார்கள். இந்தப் புதிய முறைக்குத் தான் 'டெக்னிகல் பெனிட்ரேஷன்' என்று சொல்வது. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள கைத்தொழில்களின் தொழில் முறை நுட்பத்தை உணர்ந்து கொள்ள, ஜெர்மன் முதலாளிகள் வெகுவாக நுழைந்து கொடுக்கிறார்கள். வெளி நாடுகளிலுள்ள வியாபாரத்தில் ஜெர்மன் முறைகளைப் புகுத்தவும், ஐரோப்பாவில் கைத்தொழில்கள் எல்லாவற்றிற்கும் ஜெர்மனியே மூலப் பொருள்களைக் கொடுத்துதவத் தக்கபடியும் தான், இந்தப் புதிய முறையைக் கையாளுகிறார்கள். இந்த முறையை யொட்டி, செயற்கைப் பஞ்சைக் கொண்டு தம் ஆலைகளில் துணி நெய்யும்படி பிரஞ்சு, சுவித்சர்லந்து நெசவாலை முதலாளிகளைத் தூண்டுகிறார்கள். தம் நாட்டிலுள்ள நெசவாலைகளுக்கே செயற்கைப் பஞ்சு போதாமல் இருந்த போதிலும், அந்நாடுகளுக்குக் கொடுக்கத் தயாராயிருக்கின்றார்கள்.

லியான்ஸ் என்னும் நகரத்தில் பட்டு நெசவாலைகள் இருக்கின்றன. அவற்றில் செயற்கைப் பட்டு செய்ய வேண்டுமென்று ஆலோசனை கூறினார்கள். இந்த மாறுதலை எந்தத் திட்டப்படி நிறைவேற்ற வேண்டும் என்றும் ஹாம்பர்க்கர் ப்ரேம்டென்பிலாட் எனனும் ஒரு முதலாளி, கொஞ்ச நாட்களுக்கு முனபு முயன்றார்.

இந்த முயற்சி வெற்றியடைந்தால், ஜெர்மனி தவிர மற்ற நாடுகளிலுள்ள கைத்தொழில்கள், தம் மூலப் பொருள்களுக்கு ஜெர்மனியின் உதவியை எதிர் நோக்கியிருக்க நேரும். யுத்தத்தில் ஜெர்மனி தோற்ற போதிலும் இந்த நிலை கட்டாயம் ஏற்படும் என்று அவர் நம்புகிறார்.

இங்கே மற்றொரு விஷயமும் கவனிக்க வேண்டியிருக்கிறது. இயற்கைப் பொருள்களின் விலைகளை விட செயற்கைப் பொருள்களைத் தயாரிக்கும் செலவு மிகவும் அதிகமாகிறது. இயற்கை ரப்பரை விட புனா என்னும் செயற்கை ரப்பரின் விலை 4 அல்லது 5 மடங்கு அதிகமாகிறது.

ஜெர்மனி தோற்று விட்டால், மற்ற நாடுகளோடு செய் பொருள்களில் போட்டியிட முடியாது. அதனால் தான், மற்ற ஐரோப்பிய நாடுகளையும் தம் கைத்தொழில்களோடு சிக்க வைத்துக் கொண்டால், தமக்கு நேரக் கூடிய பாதகத்தை எல்லா நாடுகளும் பகிர்ந்து கொள்ளும் என்றும், அப்போது நிலைமையைச் சமாளித்துக் கொள்ளலாமென்றும் எதிர் பார்க்கிறார்கள்.

இவற்றிலிருந்து என்ன விளங்குகிறது? ஜெர்மனி தோற்றாலும், மற்ற நாட்டுக் கைத் தொழில் முதலாளிகளோடு உறவு கொள்ள வேண்டும். அப்போது தான், அந்நாட்டு முதலாளிகள், ஜெர்மன் முதலாளிகள் சார்பாக, தம் அரசாங்கத்தாரிடம் பரிந்து பேசி, வியாபாரத்தை நிரந்தரப் படுத்தப் பார்ப்பார்கள். ஜெர்மானியர்களின் இந்தத் தந்திரத்தால், மற்ற நாடுகளுக்கு ஆபத்து ஏற்படத் தான் செய்யும். இதை அலட்சியம் செய்யவோ, அற்பமாகக் கருதவோ முடியாது. இந்தத் தந்திரத்திற்கு, பிரான்சும், சுவித்சர்லாந்தும், ஸ்வீடனும் இணங்காமல், தடுத்துக் கொண்டு தான் இருக்கின்றன.



# ம ற க் க   மு டி யா த   வா ர ம்.

சென்ற ஒரு வாரத்தில் தான் எத்தனை பிரமாதமான காரியங்கள் நடந்து போயிருக்கின்றன! ஏ அப்பா! அந்தக் காரியங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் எங்கு பார்த்தாலும் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள்.

யுத்தம் இவ்வளவு மும்முரமாக இருக்கும் இந்தச் சமயத்திலும், நமது மன்னர்பிரான் நம்மை மறக்கவில்லை; இந்தியர் விஷயத்தில் அவருக்கு ஏக சிரத்தை இருக்கிறது என்ற விஷயங்கள் உள்ளங்கை நெல்லிக்கனி பால் வெளியாகியிருப்பது முதல் காரியம். எப்படி? மன்னர் பிரானின் சகோதரரான கிளஸ்டர் கோமகன் சென்னை மாகாணத்திற்கு விஜயம் செய்து இங்கு எதிரி வந்தால் அவனுக்குச் சுடச் சுடப் பிரசாதங்கள். பூசைக் காப்புகள் எல்லாம் கொடுக்க நாம் என்னென்ன ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறோம்! நம்மை நாமே பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ள சௌகரியங்கள் செய்து கொண்டிருக்கிறோமா என்பதை யெல்லாம் நேரில் பார்த்து விட்டுப் போயிருக்கிறார். இதே மாதிரி, இந்தியாவிலே சில முக்கியமான இடங்களை மட்டும் மளமள வெனப் பார்த்துச் சென்றார் அவர். எது வந்தாலும் எளிதில் சமாளித்துக் கொள்ள இந்தியா தயாராக இருக்கிறது என்பதையும், இந்திய மக்கள் தனக்களித்த வரவேற்பைக் கண்டு, தான் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டதையும் பற்றி கிளஸ்டர் கோமகன் பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார். இங்கிருந்து அவர் இலங்கைக்குப் போய் விட்டார். அங்கிருந்து தன் திட்டப்படி மற்றப் பிரயாணங்களை முடித்துக் கொண்டு, அவர் சீமைக்குப் போய் மன்னர் பிரானிடம், இங்கு, தான் கண்டவற்றைப் பற்றியெல்லாம் உத்சாகத்தோடு விவரமாகச் சொல்லுவார். 'ஜப்பானியர்கள் இவ்வளவு அருகில் வந்து விட்டார்களே, இந்தியப் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ன நிலைமையில் இருக்கிறதோ, தெரியவில்லையே!' என்பது போன்ற கவலைகள் மன்னர் பிரானுக்கு அப்பால் இராதல்லவா? இதற்குக் காரணமாக இருக்கப் போவது கிளஸ்டர் கோமகனின் இந்திய விஜயம் தானே? ஆகவே இந்த விஜயம் ஒரு பெரிய விசேஷம் அல்லவா? இது நடந்தது சென்ற வாரத்தில் தானே?

அடுத்தாற்போல, சென்ற வாரத்தில் தான் ருஷ்ய தினத்தைக் கொண்டாடினோம். சும்மா இருந்த ருஷ்யாவை, கொழுத்துப் போய், வீண் சண்டைக்கு ஜெர்மனியானது இழுத்து, ஒரு வருடமாகி விட்டது.

இந்த ஒரு வருட காலத்திற்குள்ளே ருஷ்யப் போர் அரங்கத்திலே ஜெர்மானியர் பட்ட உதையும், அவஸ்தைகளும், கஷ்ட நஷ்டங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. இருபதினாயிரம் விமானங்கள், பல்லாயிரம் டாங்கிகள், முப்பத்தைந்து லக்ஷம் வீரர்கள், மற்றும் பல பீரங்கிகள், லாரிகள், யுத்த தளவாடங்கள், சுய மதிப்பு எல்லாம் காலி. ஜெர்மனியின் ஆசைக் கோட்டைகளை யெல்லாம் அந்த வீர ருஷ்யர்கள், தங்களுடைய இணையற்ற எதிர்ப்பால், தகர்த்து எறிந்து விட்டார்கள். அது காரணமாக, பிரிட்டனுக்கு வேண்டிய ஓய்வு கிடைத்தது. அந்த ஓய்வு காலத்திற்குள்ளே, பிரிட்டன் தன் பலத்தை அமோகமானதாக ஆக்கிக் கொண்டு விட்டது. அப்பொழுது சேகரித்த பலத்தைக் கொண்டு தான், ஒரு நாளில் ஆயிரம் பிரிட்டிஷ் விமானங்களையும், அவை படுத்திய பாட்டையும் ஜெர்மானியரில் பலர் பார்த்துப் பிரமித்து நடுங்கச் செய்ய முடிந்தது. ஐரோப்பாவிலே 1942-ல இரண்டாவது போர் முனையை ஏற்படுத்துவோம் என்று பிரிட்டன் சொல்வதற்கான சௌகரியங்கள் ஏற்பட்டதும் இந்த ஓய்வு காலத்தில் தான். நார்வேயிலே நேச நாட்டினர் படை யெடுத்து வந்தால் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை யெல்லாம் ஒத்திகை மூலம் ஜெர்மானிய வீரர்களுக்குக் காட்டி வருகிறார்கள்; மேற்கு ஐரோப்பாவில் நாற்பது டிவிஷன்களை நிறுத்தி வைத்திருக்கிறார்களாம். இதெல்லாம் எதற்காக? ருஷ்ய யுத்தத்தில் ஈடு பட்டிருந்தால், ஜெர்மனி, மேற்குத் திசையில், தன் வாலை ஆட்ட முடியாது போனது காரணமாக, பிரிட்டனின் பலம் பிரமாதமாக அதிகரித்து விட்டதும், எந்த சமயத்திலும், பிரிட்டனில் துடி துடித்துக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் கானடா, அமெரிக்க நாட்டுப் படைகள் ஐரோப்பாவில் வந்து இறங்கக் கூடுமென்பதும், அவ்வாறு இறங்கும் படைகள், ஒரேயடியாக வழியில் உள்ளவற்றை யெல்லாம் த்வம்சம் செய்து கொண்டு, வெற்றி மாலை சூடி, பெர்லின் வரை போன பிறகே நின்று மூச்சு வாங்குவார்கள் என்று பல பிரபலஸ்தர்கள் பச்சையாகச் சொல்லியிருப்பதும், ஹிட்லரின் வயிற்றிலே புளியைக் கரைத்து விட்டு விட்டாப் போலிருக்கிறது. இந்த நிலைமையை உண்டு பண்ணியது ருஷ்ய யுத்தம் தானே! அந்த யுத்தத்திலே சளையாது இன்று வரை நின்று, விடாது போராடி வரும் ருஷ்யர்களை நாமெல்லாம் மறக்க முடியுமா? மறக்க முடியாது தான்! அதனால் தான் சென்ற வாரம் ருஷ்ய தினத்தை எங்கும் கொண்டாடினோம். அப்பொழுது, 'வெற்றி நமது தான்' என்று ஸ்டாலின், ருஷ்யாவிலிருந்து செய்தியனுப்பியிருக்கிறார்.

சென்ற வாரத்தில் நடந்த மற்றொரு பெரிய விசேஷம், டோப்ருக் கோட்டையின் வீழ்ச்சியாகும். லிபியாவிலிருக்கும் இந்தக் கோட்டையை நினைக்கும் பொழுதெல்லாம், ஜெர்மானியருக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது. அவர்கள், லிபியாவிலும் சரி, மத்ய தரைக்கடலிலும் சரி, கிழக்கிலே அதிகாரம் புனைந்தேற வொட்டாது செய்து கொண்டிருந்தது இந்தக் கோட்டை தான். எத்தனையோ சிரமங்களிடையிலும், இந்த கோட்டைக்கு நேச நாட்டினர் ஏராளமான உதவிகளை அனுப்பி வந்தார்கள். முனபு ஆறு மாத காலமாக இந்தக் கோட்டையை ஜெர்மானியர் முற்றுகை போட்டு, என்னென்னமோ ஜெகஜால வேலைகள் எல்லாம் செய்து இதைப் பிடித்து விட முயற்சித்தார்கள். அப்பொழுதெல்லாம் ஒன்றும் பலிக்கவில்லை. அகவே ஜெனரால் ராமல் என்ற ஜெர்மானிய சேனாதிபதி, தனக்கேற்பட்ட அவமானத்தை மறக்க முடியாது. இப்பொழுது, கணக்கற்ற டாங்கி பலத்தோடும், ஆட்களோடும் வந்து டோப்ருக்கைத் தாக்கினார். ஆனாலும் பிரிட்டிஷ், தென் ஆப்பிரிக, இந்தியப் படைகள் சளைக்கவில்லை. தங்களால் முடிய மட்டும், ஜெர்மானியருக்குப் படுசேதமுண்டாக்கி, அவர்கள் களைத்து நிற்கும்படி செய்தார்கள். அந்தச் சமயத்தில் மட்டும். இன்னும் கொஞ்சம் வெளி உதவி மளமள வெனக் கிடைத்திருந்தால், களைத்து நின்ற ஜெர்மானியரை ஓட்டி விரட்டியிருக்கலாம். ஆனால், நேச தேசப் படைகளும் களைத்து விட்டன. அச்சு நாட்டினருக்கு, பிரஞ்சு வட அபிரிகாவிலிருந்து உதவி வந்து விட்டது. அது காரணமாக, டோப்ருக் ஜெர்மானியர் வசமாக நேர்ந்தது. நேச தேசப் படைகளில் ஒரு பகுதி ஜெர்மானியர் கையில் சிக்கிக் கொண்டது. ஆனாலும் டோப்ருக் துறைமுகத்திலிருந்த கப்பல்களும், படைகளில் பெரும் பகுதியினரும் தப்பிச் சென்று விட்டது ஒரு பெரிய விசேஷம் தான்.

டோப்ருக் கோட்டையின் வீழ்ச்சி மறக்க முடியாததோர் துக்ககரமான சம்பவந்தான். அதன் வீழ்ச்சி காரணமாக, தற்சமயம் லிபியாவில் அச்சு நாட்டினருக்குச் சில சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த சௌகரியங்களைப் பயன் படுத்திக் கொண்டு, (இப்பொழுது பீல்ட் மார்ஷல் என்ற புதுப் பட்டத்தை ஹிட்லரிடமிருந்து பெற்றிருக்கும்) ராமல், எகிப்து தேசத்தின் மீதும் பாய எத்தனிக்கிறாப் போலிருக்கிறது. ஆனால், எகிப்திலே உள்ள வாசற் கதவுகள் அகலத் திறந்து கிடக்கவில்லை. திறந்த வீட்டிலே ஏதோ புகுந்தது போல் என்பார்களே, அம்மாதிரி ராமலும் அவரது படைகளும், மடமட வென எகிப்திற்குள்ளே புகுந்து போய் விட முடியாது. எகிப்திய மண்ணிலே இனி எத்தனை பயங்கரப் போர்கள் நடக்கவிருக்கிறதோ, எத்தனை பேர்கள் அங்கு பலியாகப் போகிறார்களோ யார் கண்டார்கள்? எப்படியும்

எகிப்தைப் பாதுகாத்தே தீர வேண்டும் என்பதை நேச தேசத்தார்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது மூன்றாம் முறையாக அமெரிக்காவிற்குச் சென்று, ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுடன் பேசிக் கொண்டிருக்கும் பிரதம மந்திரி சர்ச்சில் அவர்கள், இந்த விஷயத்தைக் குறித்துக் கட்டாயம் பேசி யிருப்பார். அடுத்தாற் போல என்ன செய்ய வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது, எகிப்திற்கு உடனே உதவி அனுப்ப வேண்டும், ருஷ்யாவிற்கும் சீனாவிற்கும் உதவி செய்தாக வேண்டும் என்பதைப் பற்றி யெல்லாம் பேசாதிருந் திருப்பார்களா என்ன? ஒரு பிரபல அமெரிக்க அதிகாரி சொல்லி யிருக்கிறார், 'தேவையானால் இரண்டாவது மட்டு மல்ல, மூன்றாவது, நான்காவது போர் முனைகளை ஏற்படுத்தக் கூட நாங்கள் தயார். அமெரிக்காவில் தயாராகி யிருக்கும் முப்பத்தைந்து லக்ஷம் பொறுக்கிய வீரர்களும் சும்மா இருக்கப் போவதில்லை' என்று. இதெல்லாம் பிரதம மந்திரி, ஜனாதிபதி சம்பாஷணைகளிலும் கலந்த விஷயங்கள் என்பதில் சந்தேகமே யில்லை. ஆகவே, பீல்ட் மார்ஷல் ராமலே அவர் இஷ்டப்படி சுலபமாக எகிப்தில் ஓட விட்டுவிட மாட்டார்கள் நேச தேசத்தார் என்பது நிச்சயம். அவ்வாறு ஓட விட்டால், சூயஸ் கால்வாய்க்கும், அலெக்ஸாந்திரியா போன்ற முக்கியமான துறை முகத்திற்கும் ஆபத்து ஏற்படு மல்லவா? மால்டாவிற்கும், மத்திய தரைக் கடல் பிரதேசங்களில் உள்ள நேச தேச நாடுகளுக்கும் இந்த வழியாகத் தானே வெளி உதவி போய்க் கொண் டிருக்கிறது. இப்பொழுதே, டோப்ருக் போனதால், அலெக்ஸாந்திரியாவிற்கும் ஜெர்மானிய விமான கூடத்திற்கும் உள்ள தூரம் குறைந்து விட்டது. ஆகவே, இனிச் சங்கடங்கள் அதிகம் தான் என்பதில் சந்தேகமே யில்லை. இந்தச் சங்கடங்களைத் தவிர்ப்பதற்கான மார்க்கங்களை, சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் அதி தீவிரமாக யோசித்துக் கொண்டு தானிருக்கிறார்கள்.

சென்ற வாரத்தில் நடந்த மற்றொரு பெரிய விஷயம், க்ரைமியாவில் உள்ள ஸெபாஸ்டபோல் எனும் பல மிக்க கோட்டையை, ஜெர்மானியர் நெருங்கிப் பிடிக்க வந்தது தான். மேலும் மேலும் நாஜி டாங்கிப் படைகளும், காலாட் படைகளும் இந்த இடத்தைத் தாக்கின. ஓரிடத்தில், ருஷ்யப் படைகளைப் பிளந்து கொண்டு கூட, இப் படைகள் முன்னேறினவாம். டாப்ருக் நேச நாடுகள் வசம் இருந்த வரை, ஜெர்மானியருக்கு மத்திய தரைக் கடலில் என்னென்ன சிரமங்கள் எல்லாம் ஏற்பட்டு வந்தனவோ, அவை எல்லாம், ஸெபாஸ்டபோல் ருஷ்யர் வச மிருப்பதால், ஜெர்மானியருக்குக் கருங் கடலில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்தத் துறை முகத்தை எப்படியாவது பிடித்தே தீர வேண்டு மென்று தான் ஏராளமான டாங்கிகளையும், ஆட்களையும் பலி கொடுத்து, இடை விடாது விமானங்களைக் கொண்டு அந் நகரை நாஜிகள் தாக்கி வருகிறாப் போலிருக்கிறது.

கார்க்கோவ் எனும் நகருக் கருகிலும் பெரிய யுத்தம் நடந்து வருகிறது. ஓரிடத்தில் இருக்கும் நாஜிப் படைகள், முன்னேறி யிருக்கிறதாம்.

இதெல்லாம் சற்று மனச் சோர்வு அளிக்கும் செய்திகள் தான். ஆனால், சீன தேசத்தி லிருந்து வரும் செய்திகள் கொஞ்சம் உத்சாக மூட்டக் கூடியவையாகவே இருக்கின்றன. ஜப்பானியர் பிரமாதமான ப்ளான் ஒன்று போட்டிருக்கிறாப் போலிருக்கிறது. அது என்ன பிளான் தெரியுமா? சீனத்தில் உள்ள ஷாங்கே நகரிலிருந்து, தெற்கே சிங்கப்பூர் வரை தொடர்ச்சியான ரயில் பாதையைப் போட்டு விட வேண்டு மென்பது தான் இந்த ப்ளான். இவ்வாறு போட்டு விட்டால், அதிக சிரம மின்றி தெற்கே உதவிப் படைகளையும், சாமான்களையும் அனுப்பலா மல்லவா?

கப்பல் வழியாக சாமான் சீக்கிரம் போய்ச் சேருவதில்லை. தவிர, அந்த மார்க்கம் கூடிய சீக்கிரமே அதிக ஆபத்தான மார்க்கமாகக் கூடும். ஏனென்றால், அமெரிக்காவில் மள, மளவெனக் கட்டப்படும் கப்பல்களை எல்லாம், ஊறுகாய் போடுவதற்கா கட்டுகிறார்கள் என்று நினைக்கிறீர்கள். அங்குள்ள விமானந் தாங்கிகள் எல்லாம் பார்த்து மகிழுவதற்கு மட்டுமா ஏற்பட்டவை? அமெரிக்க நீர் மூழ்கிகளோ, ஏற்கெனவே ஜப்பானியக் கப்பல்கள் நடமாடும் பிரதேசங்களில் ஓடி ஆடிக் கொண்டிருக்கின்றன. கூடிய சீக்கிரமே ஜப்பானின் கப்பற்படை பலத்தைத் தகர்க்க ஆசை கொண்டிருக்கிறது அமெரிக்கா என்ற விஷயம் ஜப்பானுக்குத் தெரியாதா என்ன? அப்பொழுது, ஜப்பானியக் கப்பல்கள் சண்டை போடப் போகுமா? மூட்டை தூக்கப் போகுமா? சண்டை போடத் தானே? அச்சமயம், ஜப்பான் வசப்பட்ட பர்மா, மலேயா, சிங்கப்பூர், ஜாவா, சுமத்ரா பிரதேசங்களுக்கு வேண்டிய சாமான்கள் எப்படிப் போகும்? தரை வழியாக, அதுவும் ரயிலின் வழியாகச் செல்ல வசதிகள் இருந்து விட்டால், ஜப்பானுக்கு சௌகரியந் தானே? இதைமனதில் வைத்துக் கொண்டே ஜப்பானியர் சீனாவிலுள்ள முக்கியமான தோர் ரயில் பாதையைக் கைப்பற்ற போராடி வருகிறார்கள். முதலில் கொஞ்சம் வெற்றியே கண்டார்கள் ஆனால், சென்ற வாரத்திலா, ஜப்பானியரை, பல இடங்களில் சீனர்கள் புறமுதுகு காட்டி ஓடச் செய்து விட்டார்கள். சீனர்களின தீரம் போற்றத் தக்கது தான். அவர்களுக்கு மட்டும் சரியான உதவி கிடைத்துக் கொண்டே யிருந்தால், ஜப்பானியரை சக்கையாக வெளுத்துத் தள்ளிக் கொண்டே இருப்பார்கள் என்பதில் சந்தேகமே யில்லை. பர்மா ரஸ்தாவும், பர்மாவும் போனதில், இந்த உதவி போவது கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. ஆனாலும், சீனா நேசதேசத்தாரிடமே இருக்க வேண்டியது மெத்த அவசியம். இதையும் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தெரிந்து கொண்டிருக்கிறார்.

இந்த நிலைமையில், சென்ற வாரம் மற்றொரு பரபரப்பான சேதி வந்திருக்கிறது. ஜப்பானியப் படைகள் மஞ்சூரியாவில் போய் குவிந்த வண்ணமாக இருக்கின்றனவாம். வட அமெரிக்காவையும் ஆசியாவையும் சங்கிலி போல் பிணைக்கும் அலூஷியன் தீவுகளில் ஜப்பானியரது நடமாட்டம் இருக்கிறதாம். அங்கு போய் சில கப்பல்களை அமெரிக்க விமானங்கள் சேதப்படுத்தி வந்தனவாம். கானடாவில் உள்ள வான்கோவர் என்ற தீவு மீது ஜப்பானிய நீர்மூழ்கி ஒன்று பீரங்கிப் பிரயோகம் செய்ததாம்.

அமெரிக்கக் கப்பற் படையின் கவனத்தைக் கவருவதற்கும், ஹிட்லருக்குத் திருப்தி யளிக்கும் முறையில் ஏதோ செய்தது போலிருக்கட்டும் என்பதற்காகவுமே இந்த நடவடிக்கைகள் என்று தோன்றுகிறது. அதோடு, ஜப்பானியர் ருஷ்யாவைத் தாக்க சித்தமாக இருக்கிறார்கள் என்றும், ஹிட்லர் விருப்பப் படி ஆசியாவில் இரண்டாவது போர் முனையை ஜப்பான் சிருட்டிக்கக் கூடு மென்றும் கூறப்படுகிறது. அவ்வாறு இரண்டாவது போர்முனை ருஷ்யாவில் ஏற்பட்டால், ருஷ்யா இரண்டு முனைகளையும் சமாளித்து நிற்க வேண்டி வரும். அப்பொழுது அதன் கை சளைக்காம லிருக்க வேண்டும். அதன் கை சளைத்தால், நேசநாடுகள் பாடு ரொம்பக் கஷ்டம். அதற்காகவே ஆங்கிலோ-ருஷ்ய, அமெரிக்க-ருஷ்ய ஒப்பந்தங்கள் செய்யப் பட்டிருக்கின்றன. லிபியாவிற்கு இல்லா விட்டாலும் பரவாயில்லை என்று கூட ருஷ்யாவிற்கு டாங்கிகளை அனுப்பினார்கள். அதனால் லிபியாவில் பெருத்த நஷ்டம் ஏற்படத் தான் செய்தது. ஆனாலும் இதை எப்படியாவது ஈடு கட்டிக் கொள்ளலாம் என்ற தைரியம் நேசதேசத்தாருக்கு இருக்கிறது.

தவிர, ஜப்பான், பர்மாவில் தேவைக்கு அதிகமான, படைகளைக் கொணர்ந்து குவித்து வைத்திருக்கிறதாம். மலேயாவிலும் நிறையப் படைகளிருக்கின்றனவாம். இந்தோ சீனாவிலோ கேட்க வேண்டாம். ஜபானியப் படை டிப்போவாக அது ஆகிவிட்டாப் போலிருக்கிறது. இதெல்லாம் இந்தியா மீது பாயத் தான் என்கிறார் ஒரு சீனர். இருக்கும்! இருக்கும்! இந்தியர் சகாயன் என்று இந்த ஜப்பான் காரன் தனைப்பற்றித் தம்பட்ட மடித்துக் கொள்ளும் பொழுதே, ஏதோ ஆபத்துடேய் என்று தான் எண்ணத் தோன்றுகிறது. ஆனால் நடுவழித் தீவுகளிலே போய், அமெரிக்கக் கடற் படையண்டை சரியான உதை பட்டு, விமானந் தூக்கிகளை இழந்ததால், ஜப்பான் இந்தியா மீது உடனே தன் கவனத்தைச் செலுத்த முடியாது தான். நடுவழித் தீவருகே கொடுத்தது போல் இன்னும் பல இடங்களில் ஜப்பானுக்கு உதை கொடுத்து விட்டால், கீழ்த் திசையி லிருப்போர் கொஞ்சம் நிம்மதியாக இருக்கலாம்.



மேல் திசையிலே ஹிட்லரின் கொட்டத்தை அடக்க, பிரிட்டிஷார் சகல ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்கள். ஜெர்மன நீர் மூழ்கிகள் அட்லாண்டிக் கடலில் நேசதேசக் கப்பல்களுக்கு ஏராளமான சேதத்தை உண்டு பண்ணி யிருக்கிறது. அது காரணமாக அச்சு நாட்டு நீர் மூழ்கிகளை அடக்கி வைக்க அமெரிக்க வர்த்தகக் கப்பல்களுக் கெல்லாம் பலத்த பாதுகாப்பு அனுப்பப் படுகிறது.

ஜெர்மனியி லுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்ய, அடிமையான நாடுகளி லிருந்து ஆட்கள் கட்டாயத்தின் பேரில் கொண்டு வரப் படுகின்றனர். இது சம்பந்தமாக ஜெர்மானியர் செய்யும் ஹிம்ஸை கொஞ்ச நஞ்ச மல்லவாம். இதற் கெல்லாம் சரியாக வைப்போம் வழி! நாஜிகளுக்கு, பிறகு நல்ல பாடம் கற்றுக் கொடுக்கிறோம்' என்று ஈடன் எச்சரிக்கை செய்திருக்கிறார். ஆனாலும் நாஜிகள் ஈவிரக்க மில்லாதவர்களாகவே விளங்குகிறார்கள்.

அவர்களுக்கு லவால் அசல் கையாளாகி விட்டார். ஜெர்மனிக்கு உதவுவதே தனது நோக்கம் என்றும், பிரான்ஸிலே வேலை யில்லா திருப்போர் தைரியமாக ஜெர்மனியில் போய் வேலை செய்து அதிகச் சம்பளம், போனஸ் எல்லாம் பெறலாம் என்றும் இரகமாகப் பேசி யிருக்கிறார். ஆனால் பிரஞ்சு மக்கள் எல்லாம் இதை விரும்புவார்கள் என்று தோன்ற வில்லை. நேச நாடுகளின் படைகள் ஐரோப்பாவி லிறங்கினால், டிகாலை ஆதரிப்போர் பலர் அப்படைகளுக்கு உதவுவார்கள் என்று கூறப் படுகிறது. இதிலிருந்தே பிரஞ்சு மக்களின் உண்மை மனப் பான்மை தெரியுமே! அதோடு, நேச நாட்டு விமானங்கள் எம்டன், ரூர் பிரதேசங்களில் போடும் குண்டுகளின் அதிர்ச்சி ஜெர்மன் மக்களின் செவிகளில் விழாம லிருக்கு மென்று நினைக்கிறீர்கள்?

இப்படியாகத் தானே பல முக்யமான சம்பவங்களைக் கொண்டிருந்தது சென்ற வாரம். இதைவிட முக்யமான சம்பவங்கள் பல இன்னும் நடக்கக் கூடும். இறுதி வெற்றி காணு முன் எத்தனையோ இடைஞ்சல்களைச் சகிக்க வேண்டி யிருக்கும். பொறுப்பவர் தானே ஐயா பூமி ஆள்வார்?

## பிடிபட்ட கைதி



யுத்தத்தில் பிடிபட்டவர்களைக் கைதி என்கிறோம். பிடிபட்ட கப்பல்களையும் கைதி என்று சொல்வதால் தவறென்ன இருக்கின்றது? இந்த ஜெர்மன் யு படகை, நம் விமானப் படை அட்லாண்டிக் சமுத்திரத்தில் கைப்பற்றி, பிரிட்டிஷ் துறைமுகத்திற்கு தகுந்த காவல்களுடன் கொண்டு வந்து சேர்க்கிறது.

## தன்னல மில்லாத பிரிட்டிஷ் போர் வீரர்கள்

### இந்தியர்களிடம் காட்டும் இரக்கம்

பர்மாவில் சென்ற 5 மாதங்களாக இடைவிடாது நம் படைகள் போராடிக் கொண்டிருந்தன. கொஞ்சங் கூட ஓய்வு என்பது கிடையாது. இப்படைகள் கடைசியாக அஸாம் எல்லையைக் கடந்து விட்டார்கள். மழை கடுமையாகப் பெய்து கொண்டிருந்தது. எல்லைப் புரத்திலிருந்து மேற்கே வரும் மணிபூர் ரோட், மலைக் காடுகளுக் கிடையே போகிறது. மழையினால், அந்த ரோடின் நிலை மிகவும் சீர் கெட்டிருந்தது. இவர்களை ஏற்றிப் போக ஒரு மோட்டார் லாரி வந்தது. அதில் இந்தப் போர் வீரர்கள் தம் சாமான்களை யெல்லாம் ஏற்றினார்கள். அச்சமயத்தில் பர்மாவி லிருந்து தப்பி இந்தியாவுக்குப் போகிறவர்கள் சுமார் 2,000 பேர்கள் ஒரு கூட்டமாக வந்தார்கள். உடனே அந்த பிரிட்டிஷ் போர் வீரர்கள், தம் சாமான்களை யெல்லாம் இறக்கிக் கொண்டு, அவர்களை ஏற்றி அனுப்பினார்கள். மழையினால், அந்த ரோடு மிகவும் பழுதா யிருந்ததனால், மேலும் மோட்டார் லாரிகள் அங்கே போக முடியவில்லை. எனவே 5 மாதங்களாக இடைவிடாது போராடிய சோர்வையும் பொருட் படுத்தாமல், அவர்கள் அந்த 46 மைல் தூரமும் கடும் மழையில் நடந்தே வந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய பாதங்க ளெல்லாம் புண்ணா யிருந்தன. மஞ்சள் காய்ச்சல் அவர்களை வாட்டியது. என்றாலும் பிறர் வசதிகளையே இப் போர்வீரர்கள் முக்கியமாகக் கருதினார்களே யொழிய, தம் நலத்தை அவர்கள் கொஞ்சங் கூட பொருட் படுத்தவே யில்லை.

"அவர்களுள் அநேகம் பெண்களும் குழந்தைகளும் இருந்தார்கள்; ஆகையால் எங்களை விட அவர்களுக்குத் தான் வண்டி மிகவும் அவசியம்"

என்று அந்தப் போர் வீரர்களுள் ஒருவர் சொன்னார்.

# ஜப்பானியர் அக்கிரமங்களுக்கு அளவில்லை

## ஜப்பானியன் டைரியிலிருந்து வெளியான விவரங்கள்

### கிருஸ்மஸ் கொண்டாட மனிதர்களைக் கொல்லுவதாம்!

போர்க் களத்திலிருந்து பின் வாங்குவது, அவஸ்த்தைப் படுவது, சாவது ஆகியவை தான் பர்மா யுத்தக் கதை என்று சிலர் நினைக்கலாம். ஜப்பானியருக்கு அது வன போஜனமா யிருந்தது என்றும் சிலர் நினைக்கலாம். ஆனால் 'சிட்னி ஹெரால்ட்' பத்திரிகையின் யுத்த நிரூபரான வில்லியம் மண்டி என்ன கூறுகிறார் தெரியுமா? ஜப்பானியர்களுக்கும் கஷ்டங்கள் ஏற்பட்டன. அவர்களும் கூடத் தப்பிதம் செய்தார்கள். குண்டுகள் வீசும் பிரிட்டிஷ் விமானங்களின் சத்தம் தம் தலைக்கு மேலே கேட்டவுடனே, ஓடிப் பதுங்கினார்கள். தம் யுத்த விமானிகள் அங்கு வந்து தம்மைக் காப்பாற்றாதது பற்றி, அவர்களைச் சபித்தார்கள். தங்களுக்கு மிகவும் கஷ்டமாயிருந்த தென்றும், உஷ்ணம் மிகுதியா யிருந்த தென்றும் முறை யிட்டுக் கொண்டார்கள். அவர்கள் மனத் தளர்ச்சி யடைந்த காலமும் உண்டு.

மேலும் அவர் கூறியதாவது.— பெகுவிற்கு அருகில், ஒரு ரோடை ஒரு ஜப்பானிய பட்டாளம் தடுத்துக் கொண்டிருந்தது. அந்த பட்டாளத்தின் தலைவர் அங்கே நடந்த சண்டையில் காயப்பட்டு இறந்து கிடந்தார். அவருடைய சட்டைப் பையில் ஒரு தினசரிக் குறிப்புப் புத்தகம் இருந்தது. அதில் திக்கற்ற சண்டைக் கைதிகளை எப்படி மிருகத் தனமாகக் கொன்றார்க ளென்றும், ஜப்பானின் யுத்தவேலைகளைச் செய்யும் அடிமைகளாக எப்படி பர்மியர்களையும் இந்தியர்களையும் அவர்கள் நடத்தினார்க ளென்றும் குறிப்பிட்டிருந்தார். அதில் எழுதி யுள்ளவற்றிலிருந்து அவர்களுடைய கீழ்க்கண்ட எண்ணங்கள் வெளியாகின்றன. (1) ஜப்பான் சக்கிரவர்த்தியையே கடவுளாக வணங்க வேண்டும். (2) உலகத்தையே வெல்ல வேண்டியது ஜப்பானின் கடமை,

**எல்லோரையும் மறந்து விட வேண்டும்**

அந்தக் குறிப்புப் புத்தகத்தின் முன் புறத்தில் அவருடைய, தாய், தந்தை, புன்சிரிப்புடைய ஒரு பெண் ஆகியோரின் படங்கள் இருந்தன. அவற்றின் கீழே என்ன எழுதப் பட்டிருந்தது தெரியுமா?

"அவர்களை எல்லாம் மறந்து விட வேண்டும்; சாம்ராஜ்யப் படைகளுக்கு எல்லாம் அடக்கமாக இருக்கவேண்டும், நான்கு கடல்களிலும் (அதாவது உலகம் முழுதிலும்) சக்கிரவர்த்தியின் ஆதிக்கத்தை முழு மனதோடு உயர்த்த வேண்டும்."

மற்றொரு பக்கத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது.—நாங்கள் ஹலிவுண் என்னுமிடத்திற்குப் போனோம், அங்கிருந்தவர்களின் வண்டிகளை எடுத்துக்கொண்டு, எங்களுக்கு கூலி வேலை செய்யும்படி இந்தியர்களைக் கோரினோம். அவர்கள் வர மறுத்தார்கள். மற்றொரு உத்தியோகஸ்தர் சில இந்தியர்களைப் பற்றிக் கொண்டு நெல் வயலின் வரப்பிற்கு அழைத்துக் கொண்டு போனார். இதைக் கண்ட மற்ற இந்தியர்கள், நாங்கள் எது கட்டளை யிட்டாலும் செய்ய வேண்டும் போலிருக்கிறது என்று நினைத்து, அப்படியே செய்தார்கள். இந்தியர்கள் கோழைகள், அடிமைகளா யிருக்கத் தான் தகுதி யுடையர்கள்.

டிசம்பர் மாதம் 19-ம் தேதி நாங்கள் விக்டோரியா முனை வந்தடைந்தோம், அப்போது அங்கிருந்த எண்ணெய்க் கிடங்குகள் எல்லாம் எரிந்து கொண்டிருந்தன எதிரிகள் தப்பி ஓடி விட்டார்கள். அடுத்தாற் போல் கோசுன் என்னும் ஊருக்குப் போய்த் தங்கினோம். அந்த ஊர்க்காரர்கள் எல்லாம் ஒளிந்து கொண்டார்கள். அப்போது ஒளிந்து கொண்டிருந்த சில பெண்களைப் பிடித்து இழுத்து தமாஷ் செய்தோம்.

**கொலை செய்வது எங்கள் கிருஸ்மஸ்**

நாங்கள் தங்கியிருந்த வீடுகளில் எங்களுக்கு முன்பு பர்மியரும் இங்கிலீஷ்காரர்களும் இருந்தார்கள். அவர்கள் அத்தனைப் பேரையும் நம் சேனைகள் கைது செய்து விட்டன. திடீரென்று தங்கள் நிலைமை மாறியதைக் கண்டு அவர்கள் மிகவும் ஆச்சரியப் பட்டார்கள். இவர்களில் சிலரைக் கொன்றோம், மற்றவர்களையும் பிறகு கொல்லுவோம் என்று நினைக்கிறேன். இப்படித் தான் கிருஸ்மஸ் விழாவைக் கொண்டாடினோம்.

2602-ம் (ஜப்பான்) வருஷம் பிறந்தது. மத்தியானம், கிழக்கு நோக்கி எங்கள் சக்கரவர்த்தியை வணங்கினோம். மத்தியானத்திற்கு மேல் சயாமிய சக்கரவர்த்தியின் அரண்மனைக்குள் இருக்கும் கோவிலுக்குள் நம் படைகளை அழைத்துக் கொண்டு போனேன். அங்கே, தாய் நாட்டு கப்பற் படை உத்தியோகஸ்தர் ஒருவர் வந்தார். அவருடன் நான் இங்கிலீஷில் பேசினேன். சயாம் நன்றாக வாழ வேண்டுமானால், அது எங்கள் சாம்ராஜ்யத்தோடு சேர்ந்து இருக்க வேண்டு மென்று நான் வாதித்தேன். இப்படி நான் பேசியது ஒருக்கால் தவறாக இருக்கலாம். பிறகு கோபமாகவே நாங்கள் இருவரும் பிரிந்தோம்.

மெசோட் விமான நிலயத்தைச் சுற்றி எங்கள் மூன்று விமானங்களை எதிரிகள் ஜெயித்தார்கள். இவர்கள் அமெரிக்க விமானிகள். இவர்கள் திறமை ஆச்சரியப் படத் தக்கது.

மேற் கொண்டு நாங்கள் புறப்பட்டோம். மிருந்த ஆபத்துக்களுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளானோம். அளவிற்கு மீறிய கனமான சுமைகளை எங்கள் குதிரைகள் சுமந்து கொண்டு போயின. அதனால் சில குதிரைகள் செத்துப் போயின. பிறகு நாங்கள் ஒரு குறுகிய மலைப் பாதை வழியாக மியோனுங் நோக்கி வந்து கொண்டிருந்தோம். அப்போது அங்கே ஒரு பர்மியப் படையை எங்கள் குதிரைப் படை ஜெயித்தது. அங்கே பிரிட்டிஷ் படைத் தலைவரின் பிணத்தை ஒரு மரத்தில் கட்டித் தொங்க விட்டிருந்ததைக் கண்டேன். எங்கே போனாலும் பர்மியர்கள் மிகவும் நேசமாகவே இருந்தார்கள். தாமிண்டட் என்னும் இடத்திற்கு நாங்கள் போன போது, அந்த ஊரார் எங்களை அன்பாக வரவேற்று இளநீரைக் கண் திறந்து கொடுத்துக் குடிக்கச் செய்தார்கள்.

பிறகு ஜானி ஆற்றைக் கடந்தோம். இதற்கு 7 மணி நேரம் பிடித்தது. மோல்மீனுக்குப் புறப்பட்டோம். அங்கே இடைவிடாது எங்கள் மீது வெடி குண்டுகளும், துப்பாக்கி குண்டுகளும் பாய்ந்தன. துப்பாக்கிகளின் சத்தம் பூமியையும் வானத்தையும் கிடுகலங்க செய்தன. ஜனவரி மாதம் 31-ம் தேதி மோல்மீன் விமான நிலயத்தின் வட பாகத்தை யடித்தோம். விமானங்கள் வந்திறங்கும் மைதானத்தைக் கைப்பற்றிக் கொண்டோம். எங்களை பீரங்கி குண்டுகளால் தாக்கினார்கள். எங்கள் படைத் தலைவர் மிகவும் காயப்பட்டார்.

இதற்காக ஒரு சண்டைக் கைதியை ஒரு போர் வீரர் தன் சனியனால் முதுகுப் புறம் குத்தினார். இது எல்லோருக்கும் தமாஷாக இருந்தது. பிறகு வயிற்றில் குத்தினார். அந்தக் கைதி உடனே சாக வில்லை. நாங்கள் பிடிக்கும் கைதிகளைக் கொல்ல குண்டுகளை உபயோகிக்கக் கூடாது என்பது இராணுவக் கட்டளை.

நாங்கள் மேலும் மோல்மீனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம். கொள்ளைப் பொருள்களும் உணவுப் பொருள்களும் ஏராளமாகக் கிடைத்தன.



எங்கள் படை உத்தியோகஸ்தர்கள் வயிறார சாப்பிட்டார்கள். அன்றைக்கு இன்னும் 3 சண்டைக் கைதிகளைக் கொன்றோம்.

பிப்பிரவரி மாதம் 1-ம் தேதி காலை 4 மணி யிருக்கும். ஆற்றில் ஏதோ சலசல வென்னும் சத்தம் கேட்பதாக சில காவல்காரர்கள் வந்து தெரிவித்தார்கள். அவர்கள் ஆற்றைக் கடக்க முடியாமல் நீந்திக் கொண்டிருந்த இந்தியர்கள். அவர்கள் அத்தனைப் பெயர்களையும் உடனே, சுட்டுக் கொன்றோம்.

பிப்ரவரி மாதம் 2, 3-தேதிகளில் மோல்மீனைச் சுற்றி யுள்ள சண்டைக் களத்தை சுத்தம் செய்தோம். அங்கே அநேகம் பிணங்கள் கிடந்தன. 11 நாட்களுக்குப் பிறகு மோல்மீனில் நான் ஆடர்லி ஆபீசராக இருந்த போது கொள்ளையாடிக் கொண்டிருந்த அநேக பர்மியர்களையும் இந்தியர்களையும் கைது செய்தேன். பசிக்கொடுமை தாங்க மாட்டாமல், தாங்கள் கொள்ளை யடித்ததாக அவர்கள் வாதித்தார்கள் அவர்களை எல்லாம் சுட்டுக் கொல்லும்படிச் செய்தேன். கொள்ளை யடிப்பவர்களுக்கும் இதே கதி தான் கிடைக்கும் என்று மற்றவர்களை எச்சரிக்க வேண்டி, இவர்களுடைய பிணங்களை அங்கேயே போட்டு வைத்திருப்பேன். ஆனால் சுகாதாரத்தை முன்னிட்டு அவற்றை அப்புறப் படுத்தினேன்.

மார்ச்சு மாதம் 2-ம் தேதி எதிரி விமானங்கள் வந்து எங்கள் மீது வெடிகுண்டுகளை எறிந்தன. அப்போது, எங்கள் விமானிகள் எங்கே போய் இருந்தார்களோ தெரிய வில்லை. இது நாடு வெறுக்கத் தக்கது. பசிங்கமான பைதாக்கள் வசிப்பதற்கேத் தான இது தகுந்தது உள்ளூர்க்காரர்களுக்கு அறிவில்லை. எதிரிகளின் டாங்கிகளின் மீது நான் 5 முறை சுட்டேன். எதிரிகளில் எட்டுப் பேர் தப்பி விட்டார்கள. அநேக ஜப்பானிய வீரப் படையினர்களை கொன்று விட்டார்கள். போராட்டத்தில் மிகக் கொடியவர்கள்.

# உலகப் போக்கு

**பசிபிக் யுத்த புதிய போக்கு.**

ஜப்பானோடு நடத்தும் பசிபிக் யுத்தத்தில் மிட்வே தீவுப் போர், ஒரு புதிய போக்கைக் குறிக்கிறது. எப்படி என்றால், இங்கே நடை பெற்ற போரில் ஜப்பான் கப்பற் படைக்கு அமெரிக்கக் கப்பற் படையும் விமானப் படையும் பெருந்த சேதத்தை உண்டாக்கி விட்டன. ஜப்பான் கப்பற் படைகளைக் காக்கும் பொருட்டு அவற்றிற்கு மேலே 'குடை' பிடித்தது போல் ஜப்பானிய விமானங்கள் போவது வழக்கம். இந்த விமானங்களை ஏற்றிப் போகும் 2 அல்லது 3 கப்பல்களை அமெரிக்கர்கள் மூழ்கடித்து விட்டார்கள். இதற்குப் பிறகு அமெரிக்க விமானிகள், காவலில்லாமல் இருந்த பல ஜப்பானிய யுத்தக் கப்பல்களை நாசம் செய்து விட்டார்கள். எத்தனை சேதப் பட்ட கப்பல்கள் ஜப்பான் போய்ச் சேர்ந்தன என்று தெரிந்தால் மட்டுந் தான் ஜப்பானுக்கு ஏற்பட்ட சேதத்தைக் கணக்கிட்டுச் சொல்ல முடியும். பவளக்கடல் போரைப் போலவே, தான் மிட்வே தீவுப் போரும் விமானப் போராகவே யிருந்தது. பீரங் களுக்கு எட்டாத உயரத்தில் தான் இந்தப் போர் நடைபெற்றது. விமானங்களை ஏற்றிப் போகும் கப்பல்கள் நாச யடைந்த பிறகு, ஜப்பானின் போர் முறையைக் கவனிக்கும்போது, விமானந் தாங்கிக் கப்பல்களையே ஜப்பானியர்கள் மிகவும் நம்பி யிருக்கிறார்க ளென்று தெரிகிறது.

மிட்வே தீவில் நடை பெற்ற போர் காரணமாக, அமெரிக்காவிற்குச் சொந்தமான மேற்குப் பசிபிக் தீவுத் தளங்களுக்கு அமெரிக்காவி லிருந்து படைகளும் தளவாடங்களும் அனுப்பப்படலா மென்று தெரிகிறது. இதற்கு முன்னதாகவே ஏன் படைகளையும் தளவாடங்களையும் இங்கே அனுப்பி யிருக்கக் கூடாது என்று கேட்கலாம். ஜப்பானுக்குச் சொந்தமான விமானந் தாங்கிக் கப்பல்கள் சிலவற்றை நாசம் செய்து விட்டபடியால், ஜப்பான் இலகுவில் அமெரிக்காவைத் தாக்க முடியாது. ஆகையால், அமெரிக்காவிற்கு மிகுந்த காவல் இப்போது தேவையில்லை. அதனால் தான் காவலிருந்த படைகளையும் தளவாடங்களையும் இப்போது அனுப்ப முடிகிறது.

நிற்க, ஜப்பானியர்கள் மூன்று காரியங்கள் செய்ய முயன்று கொண்டிருந் திருக்கிறார்க ளென்று இப்போது தெரிகிறது: (1) அமெரிக்காவி லிருந்து சாமோ மூலமாக அஸ்திரேலியாவிற்குப் போகும் சப்ளைகளைத் தடுத்து விடுவது: (2) மிட்வே தீவுகளிலும் மற்ற பசிபிக் தளங்களிலும் இராணுவம் சேர ஒட்டாதபடி தடுத்து விடுவது; (3) ஜப்பானைத் தாக்க ஒரு முதற் படியாக அலயூஷியன் தீவுகளை அமெரிக்கர்கள் உபயோகிக்க ஒட்டாதபடி தடுத்து விட வேணடு மென்பது. தகுந்தபடி தங்கள் விமான பலத்தையும் கப்பற் படை பலத்தையும் ஜப்பானியர் விருத்தி செய்து கொண்டால் மட்டுந் தான், இவர்கள் நோக்கங்கள் ஒரு வேளை நிறை வேறலாம்; என்றாலும் ஜப்பானியர் தம் நாடுகளை இப்போது தற்காத்துக் கொள்ள வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் ஜப்பானைத் தாக்க அமெரிக்கா முற்படு மானால், இந்த யுத்தத்தின் போக்கையே, மிட்வே தீவுப் போர், மாற்றி விடும்.

**ஜப்பான் நஷ்டக் கணக்கு.**

மிட்வே தீவுப் போரினால், இன்னும் சில மாதங்கள் வரை, தாக்க முடியாதபடி, ஜப்பான் கப்பல் படை, பலக் குறைவு அடைந் திருக்கிறது. ஜப்பானியக் கப்பற் படைக்கு அமெரிக்கக் கப்பற் படையினால் 1942-ம் வருஷம் ஜூன் மாதம் 12-ந் தேதி வரை எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிற தென்று அமெரிக்கக் கப்பற் படை இலாக்கா புள்ளி விவரங்களை வெளி யிட்டிருக்கிறது. யுத்தமாடும் கப்பல்கள் 51 மூழ்கடிக்கப் பட்டன; 43 கப்பல்கள் சேத மாயின. யுத்தமாடும் கப்பல்களில் மூழ்கியவையும் சேதப்பட்டவையும் சேர்த்து மொத்தம் 110 கப்பல்கள். யுத்தமாடாத கப்பல்கள் சேதப்பட்டவையும் மூழ்கிப் போனவையும் 122, வாஷிங்டனில் 51 யுத்தக் கப்பல்கள் தான் நிச்சயமாக மூழ்கடிக்கப் பட்டன வென்று சொல்லுகிறார்கள். இந்தக் கணக்குப் படிப் பார்த்தால், 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் 7-ந் தேதியில் 10 லட்சம் டன யுத்தக் கப்பல்கள் இருக்கும் என்று கணக்கிட்டதில், 6 மாதங்களுக்குள், எட்டில் ஒரு பங்கு கப்பல்களை அமெரிக்கக் கப்பல்கள் சேதபபடுத்தி விட்டன என்று கணக்கிடலாம்.

ஜப்பான் கப்பல் படையை 5 பிரிவுகளாகப் பிரிக்கலாம், 1 முக்கிய கப்பல், 2 விமானந் தாங்கிக் கப்பல், 3 க்ரூய்சர், 4 நாசகாரி, 5 நீர்மூழ்கிக் கப்பல் ஆகியன. இவற்றின் மொத்த எண்ணிக்கை 262, அமெரிக்கக் கப்பல் படை இவற்றில் 4 விமானந் தாங்கிக் கப்பல்களையும், 11 க்ரூய்சர்களையும், 17 நாசகாரிகளையும், 6 நீர்மூழ்கிக் கப்பல்களையும், அதாவது 262 கப்பல்களில் 38 கப்பல்களை நிச்சயமாக மூழ்கடித்திருக்கிறது. அதாவது ஜப்பான கடற்படையில் 100-க்கு 15 பங்கு கப்பல்கள் உபயோக மில்லாதவை யாகி விட்டன. மற்றும் 19·4 சதமானம் கப்பல்கள் மூழ்கியோ சேதப் பட்டோ இருக்க வேண்டும். அப்படியானால் ஜப்பானின் படைக் கப்பல்களில் மூன்றி லொரு பங்கு நிரந்தரமாகவோ தற்காலீகமாகவோ சேதப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

பசிபிக் யுத்தத்தின் முடிவு கடற்படை பலத்தை யொட்டித் தான் இருக்கும். பவளத் தீவிலும் மிட்வே தீவுகளிலும் சமீபத்தில் போராடிய போது, விமான தளங்களை அத்தீவுகளில் நியமித்துக் கொண்டதனால் தான் சிறந்த வெற்றிகள் அடைய முடிந்தது. இப்போது சேதப் படுத்தியது போலவே, ஜப்பானிய விமானந் தாங்கிக் கப்பல்களைச் சேதப் படுத்திக் கொண்டிருப்போமானால், நாம் ஜப்பானைத் தாக்கலாம்.

விமான பலமும் கடற்படை பலமும் சேர்ந்திருந்ததனுல் தான், தென் மேற்குப் பசிபிக் தீவுகளில் வெற்றி யடைய ஜப்பானுல் முடிந்தது. வெற்றி பெற்று கைப்பற்றிய நாடுகளை நிர்வகிக்க வேண்டுமானுலும் கப்பல் பலம் வேண்டும். இப்போது நேசதேச நாடுகளின் விமான பலமும் கப்பல் பலமும் பெருகிக் கொண்டே போகிறது. இதனுல் ஜப்பானிய கப்பல் பாதைகளில் ஜப்பானுக்கு அதிகக் கஷ்டம் உண்டாகும். அப்போது அப்பாதைகளைக் காக்கும் பொருட்டு ஜப்பான் யுத்தக் கப்பல்கள் அங்கே போகும்படி நேரும். அப்போது ஜப்பான் கப்பல் பலத்தை அழிக்க சந்தர்ப்பங்கள் அதிகப் படும். இந்த நிலைமையைத் துரிதப்படுத்தியது மிட்வே தீவுப் போர் தான். இங்கே ஜப்பானியர்கள் தோற்று விட்டதனுல், மத்திய பசிபிக் சம்பந்தமாக அவர்கள் போட்டிருந்த திட்ட மெல்லாம் வீணுகி விட்டது. அல்லாமலும் மற்ற இடங்களிலும் பெரும் படைகளைத் திரட்டிக் கொண்டு தாக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது.

**டோப்ருக் வீழ்ந்தது.**

சென்ற செவ்வாய்க் கிழமை காமன்ஸ் சபை கூடிய போது, பிரதம மந்திரி சர்ச்சில் வரவில்லை. ஆகவே, அவருக்குப் பதிலாக டிபுடி பிரதம மந்திரியான மிஸ்டர் அட்லி, லிபியாவில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றியும் குறிப்பாக டோப்ருக் ஏன் வீழ்ந்தது என்பது பற்றியும் தெரிவித்தார். அதன் சுருக்கமாவது :—

> டோப்ருக்கில் மிகுந்த வீரத்தோடு போராடிய படைகள் வீழ்ந்ததைக் குறித்து அரசாங்கம் மிகவும் வருத்தப் படுகிறது. தென் ஆப்பிரிக்கப் படைகளை இழந்ததற்காகவும் தம் அனுதாபத்தை அரசாங்கம் ஜெனரல் ஸ்மட்சுக்குத் தெரிவிக்கிறது.

பிறகு ஜெனரல் அச்சின்லெக் அனுப்பி யுள்ள ஒரு கடிதத்தைப் படித்தார். அதில் குறிப்பிட்டிருப்பதாவது :—

போராட்டத்தின் ஒரு நிலையிலே நம் எதிரிகள் முன்னேறவோ, பின்வாங்கவோ முடியா திருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தை நாம் உபயோகப்படுத்திக் கொண்டிருப்போமானுல், நிலைமை வேறு விதமாய் இருந்திருக்கும். ஆனுல், நம் நேசதேசப் படைகளும் போராடிக் களைத்துப் போய் இருந்தன. ஆகையால் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ள முடிய வில்லை.

யதேச்சை பிரஞ்சுப் படைகள் மிகக் கஷ்டங்களுக்காளாகி பீர் ஹக்கீமை தீரமாகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அதை ஜெயித்த பிறகு, எதிரிகள் நைட்ஸ் பிரிட்ஜ், எல்-அடம் பகுதிகளைத் தாக்கினுர்கள். மூன்று நாட்கள் வரை நம் நேச தேசப் படைகளும் விமானங்களும் கடுமையாகப் போராடின. பிறகு நைட்ஸ்பிரிட்ஜின் ஒரு சில பகுதிகளை விட்டு விட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் மூலமாக எதிரிகள் கடற் கரையை அடையலாம். அப்போது கஜாலாவி லிருந்த நம் படைத் தலைவர் ஜெனரல் ரிச்சி. இவர் தன் சேனைகளில் இரண்டு டிவிஷன்களை கஜாலா விற்குத் தெற்கே பின் வாங்கிக் கொள்ளும் படி உத்திர விட்டார். இப்படியாக இந்த டிவிஷன்களை எதிரிகள் பிரித்து விடாத படி தடுத்து விட்டார். நான்கு நாட்கள் வரை நம் எதிரிகள் நம்மோடு விமானத்தி லிருந்தும் தரையிலும் போராடிக் கொண்டிருந்தார்கள். ஆனுல் ஜெனரல் ரிச்சி பின் வாங்குவது என்று முடிவு செய்துவிட்டார். எல்-அடம், எல்-டுடி, சிடி, ரெஜெக் பக்கங்களில் நம் படைகளைச் சேகரித்து எல்லைப் புரத்தைக் காக்க ஏற்பாடு செய்து கொண்டார். டோப்ருக்கிலும் ஒரு சேனையை, வைத்திருந்தார்.

**டோப்ருக் ஏன் வீழ்ந்தது ?**

7 மாதங்களாக வீழாத டோப்ருக், இப்போது ஏன் வீழ்ந்தது? இதற்கு ராய்ட்டர் நிருபர் கீழ்க் கண்டவாறு பதில் கூறுகிறுர் :—

ஜெர்மன் ஆப்பிரிக்கப் படைகள் ஏராளமாக எதிரிகளுடன் சேர்ந்து நம்மைத் தாக்கியதனுல் தான் டோப்ருக்கை இழந்தோம். லிபியா போரில் ஜூன் மாதம் 13-ம் தேதி தான் மாறுதல் ஏற்பட்டது. அன்று இங்கிலீஷ் படைகள் கடுமையான தோல்வி யடைந்தன. மிகுந்திருந்த படைகளையும், அக்ரோமா எல் அடெம், நைட்ஸ்பிரிட்ஜ், முக்கோணத்தில் டாங்கி எதிர்ப்பு பீரங்கிகளை எதிரிகள் பத்திரமாக ஒளிய வைத்திருந்து, அவற்றின் உதவியால், மடக்கிக் கொண்டார்கள்.

முதல் முறையாக விமானங்கள், டாங்கிகள், பீரங்கிகள் சகிதம் நம் 8-வது படை திரண்டது. இந்த நம் படை, திறமையில் எதிரிகளுக்குச் சமமா யிருந்த போதிலும், எண்ணிக்கையில் நம் எதிரிகள் தான் அதிகம். எண்ணிக்கை பலத்தினுல் தான் அவர்களால் அங்கே ஜெயிக்க முடிந்தது. இவ்வளவு தோல்வி ஏறபட்டபோதிலும், இன்னும் நிலைமையை மாற்றி விடக் கூடிய பலம், நமக்கு இருக்கிறது.

"டெய்லி டெலிகிராப்' என்னும் பத்திரிகையின் விசேஷ நிருபர் ஜூன் மாதம் 15-ம் தேதி எழுதியதாவது :—

எதிரிகள் ஜெயிப்பார்களானுல், நமது நிலைமை மிகவும் மோசமா யிருக்கும். எதிரிகளுக்கும் எகிப்திய எல்லைக்கும் இடையே ஏராளமான சேனைகளை வைத்திருக்கிறேம். நாம் ஜெயித்தாலும் கூட எதிரிகளை நாம் பிடித்து விட முடியாது. 'காஸ்ட்ரன்' கணவாய் வழியாக அவர்கள் பின் வாங்க இட மிருக்கிறது. கிழ க்கே மேல் நோக்கி வர வேண்டும் என்னும் எண்ணம் நம் எதிரிகளுக்கு இருக்குமானுல், அந்தக் கணவாயை வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். இப்போது, டோப்ருக்கை ஜெனரல் ரோமெல் பிடித்து விட்டதனுல், நேச தேசத்தாரின் வேலை மிகவும் கஷ்டமாகி விட்டதென்று தெரிகிறது. என்றுலும் நம் வேலை, செய்து முடிக்க முடியாத தல்ல.

மிஸ்டர் அட்லி காமன்ஸ் சபையில் பேசும் போது இன்னும் லிபியாவில் யுத்தம் நடக்கிற தென்றும் போர்க் களத்தில் நேச தேசப்படைகள் மிகவும் பலமாய் இருக்கின்றன என்றும் அறிவித்தார்.

**வருந்துகிறேம்.**

ஆர். ஐ. ஏ. எஸ். சி.-யைச் சேர்ந்த 899891-ம் நெம்பர் சிப்பாய் சங்கரையாவும், ஐ.ஏ.ஓ.சி—சி.சி. 4601-ம் நெம்பர் எல்.டி. கிளர்க்கு, எஸ்.எஸ். ராஜுவும் போர்களத்தில் இறந்து போனுர்கள் என்ற செய்தி கேட்டு வருந்துகிறேம்.

**காயப்பட்டவர்கள்.**

ஐ.ஏ.ஓ.சி. :—

| நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 0/31095 | சிப்பாய் சி. அன் ஜே. | கே. எஸ். பெருமாள். |

ஐ ஜி.எஸ்.சி. :—

| | | |
|---|---|---|
| ஜி.எஸ்.எப். 7634 | எம்/டபுள்யு .. | கண்ணன் நாராயணசாமி. |

**காணுமற் போனவர்.**

ஆர்.ஐ.ஏ.எஸ்.சி. :—

| | | |
|---|---|---|
| 766886 | பி. ஏ. எல். நாயிக். | பி. குஞ்சண்ணி. |

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு ஜூலைமீ 3உ, வெள்ளிக்கிழமை [இதழ் 26

## சர்ச்சில்—ரூஸ்வெல்ட் அறிக்கை.

### யுத்தத்தை ஜெயிக்க திட்டம்.

### ஜெர்மன் படைகள் சிதறிப் போகும்.

பிரிட்டிஷ் முதல் மந்திரி சர்ச்சில் சமீபத்தில் அமெரிக்காவுக்குப் போனுர். அங்கே பிரசிடென்ட் ரூஸ்வெல்டைச் சந்தித்தார். இருவரும் ஒரு வாரம் வரை அடிக்கடி சந்தித்துப் பேசனுர்கள். நேசதேச இராணுவங்களைக் குறித்தும், போரை மேலும் நடத்த வேண்டிய முறைகளைக் குறித்தும் விவாதித்தார்கள். அப்போது இராணுவ நிபுணர்களும் கூட இருந்தார்கள். இவர்களுடைய பேச்சுக்களில் ஒருவித வேற்றுமையும் இல்லை. இது பற்றி ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் சேர்ந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். அதன் சாராம்சமாவது :—

இந்த வாரம் முழுதும் பிரசிடென்டும் முதல் மந்திரியும் அடிக்கடி சந்தித்துப் பேசினுர்கள். எல்லாக் கண்டங்களிலும் எல்லாக் கடல்களிலும் நடக்கும் யுத்தத்தில் முக்கியமான எல்லா அம்சங்களையும் குறித்து நன்றாக விவாதித்தார்கள். நமக்குள்ள எல்லா சாதக பாதகங்களையும் குறித்து ஆராய்ந்தார்கள்.

"நமது பொறுப்பு மகத்தானது என்பதை உணர்ந்திருக்கிறேம். நமது எதிரிக்குள்ள முழு ஆதிக்கத்தையும் மூல பலத்தையும் நன்றாக உணர்ந்து கொண்டு தான் பேசினேம். உற்பத்தி சம்பந்தமான முழு விவரங்களையும் பரிசீலனை செய்தோம். மிகவும் திருப்தி கரமாகவே இருக்கிறது. மாதந் தோறும் இவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டு மென்று திட்டமிட்ட அளவிற் செய்ய வில்லை யென்றுலும், கிட்டத்தட்ட அவ்வளவிற்கு எட்டுகிறது."

யுத்தம் உலகம் முழுதும் பரவி யிருக்கிறது. இந்த எல்லாப் போர் முனைகளுக்கும் படைகளையும் யுத்தத் தளவாடங்களையும் சாமான்களையும் அனுப்ப வேண்டி யிருக்கிறது. ஐக்கிய நாடுகளுக்கு இது ஒரு முக்கியமான பிரச்னை. எதிரிகளின் நீர் மூழ்கிக் கப்பல்கள் அநேக சாமான் கப்பல்களை மூழ்கடிக்கின்றன. என்றுலும், மாதத்திற்கு மாதம் நாம் கட்டும் கப்பல்களின் எண்ணிக்கையும் பலமும் அதிகப்பட்டுக் கொண்டே யிருக்கிறது. இப்போது திட்டம் போட்டிருக்கிறதில் நம் வியாபாரக் கப்பல்கள் மூழ்குவதைத் தடுக்க நம் யுத்தக் கப்பல்கள் கிளம்ப வேண்டு மென்று ஏற்பாடாகி யிருக்கிறது.

ஜெர்மனியின் தாக்குதலை எதிர்த்து நிற்கும் ருஷ்யாவை நாம் பாராட்டுகிறேம். அது போலவே ஜப்பானை எதிர்த்துப் போராடும் சீனப் படைகளையும் பாராட்டுகிறேம். ஜப்பானுக்கு விரோதமாக என்ன முறைகளைக் கையாள வேண்டு மென்றும், சீனு விற்கு உதவ என்ன முறைகளைக் கையாள வேண்டு மென்றும் எல்லா நுணுக்கங்களையும் பற்றி, இராணுவ ஆலோசகர்களோடு கலந்து பேசினேம்.

நாங்கள் பேசி முடித்த திட்டத்தை வெளி யிட முடியாது. ஆனுல் ஒன்று மட்டும் உறுதி. ருஷ்யாவைத் தாக்கும் ஜெர்மனியின் பலம் சிதறிப் போகும்.

இதற்கு முன் 1941-ம் ஞு ஆகஸ்டு மாதத்தில் ஒரு முறையும் டிசம்பர் மாதத்தில் ஒரு முறையும் பிரசிடென்ட் ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் கலந்து பேசினுர்கள். அப்போதிருந்ததை விட, இப்போதைய நிலை வெற்றிக்குச் சாதகமா யிருக்கிறது என்ற முடிவிற்குத் தான வந்திருக்கிறுர்கள்.

பிரிட்டிஷ் கப்பற் படைகளும் அமெரிக்கக் கப்பற் படைகளும் மிகுந்த கூட்டுறவோடு வேலை செய்கின்றன. இந்த இரண்டு படைகளும் அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் சேர்ந்து வேலை செய்யும். நீர் மூழ்கிக் கப்பல்களை எதிர்த்துப் போராடும் பிரிட்டிஷ் கப்பல்கள் அமெரிக்கக் கரைகளையும், அமெரிக்கக் கப்பல்கள் பிரிட்டிஷ் கரைகளையும் காவல் புரிகின்றன. இதன் பயனுக, வியாபாரக் கப்பல்கள் நாசமாவது குறையும் என்று உறுதியாக நம்பலாம்.

## இந்தியாவைப் பாதுகாப்பது சுலபம்.

### ஐந்து முக்கிய அம்சங்கள்.

மிஸ்டர் ஜி. எஸ். எலியட் என்னும் அறிஞர், இந்தியாவைச் சுலபமாகப் பாதுகாக்கக் கூடும் என்பதற்கு 5 காரணங்கள் கூறுகிறுர்.

1. பசிபிக் சமுத்திரத்தில் இடைவிடாது, நேசதேசப் போர்க் கப்பல்கள் நடமாடுவதோடு இந்துமகா சமுத்திரத்திலும் வங்கக் குடாவிலும் எதிரி கப்பல்கள் வர வொட்டாதபடி தடுக்கின்றன.
2. சீனுவிற்கு விமானங்கள், ஒட்டகங்கள், மோட்டார்கள், யானைகள் முதலிய எல்லா வசதிகளையும் வழங்கி, இடைவிடாது உதவி செய்வதன் மூலம் எதிரிகளோடு போராடுவதனுல், இந்தியா மீது எதிரிகள் பாய முடியாது.
3. ஆங்கிலோ அமெரிக்க விமானப் படைகளை இந்தியாவிலும் இலங்கையிலும் பலப்படுத்துவது.
4. விமான இஞ்சின்கள், டாங்கிகள், பீரங்கி மோட்டார்கள், இயந்திரக் கருவிகள் முதலிய தளவாடங்களை மேலும் இந்தியாவிற்கு அனுப்புவது.
5. இந்திய இராணுவத்தின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது..

# உலகப் போக்கு

**டோப்ருக் வீழ்ச்சி.**

டோப்ருக்கைத் தோற்றது உண்மையிலேயே நேசப் படைகளுக்கு பெரிய நஷ்டந் தான். ஒரு சிறந்த தளத்தை இழந்தோம். பல ஆயிரக் கணக்கான போர் வீரர்களையும் ஏராளமான யுத்தத் தளவாடங்களையும் தோற்றோம். எதிரிக்கு ஒரு துறைமுகம் கிடைத்து விட்டது. இதன் மூலம் எதிரி மேற்கே போக வர சுலபம். சென்ற 7 மாதங்களாக அதாவது 1941-ம் ஞு ஏப்ரல்மீ முதல் நவம்பர்மீ வரை எதிரிகள் விமானங்களிலிருந்தும் தரையிலும் டோப்ருக்கைத் தாக்கினார்கள். இதிலிருந்து டோப்ருக், தாக்கப் பட முடியாத தோர் கோட்டை என்று கருதப்பட்டது. இங்கே ஒரு விஷயத்தை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த இயந்திர யுத்தக் காலத்தில், வெல்லப் பட முடியாத படையுமில்லை; தகர்க்கப் பட முடியாத கோட்டையுமில்லை. வெற்றியும் தோல்வியும் நாம் உபயோகிக்கும் யுத்தத் தளவாடங்களின் அளவைப் பொறுத்துத் தான் இருக்கிறது. தம்மை வெல்ல யாராலும் முடியாது என்று ஜெர்மானியர் மார் தட்டினார்கள். அதைப் பொய்யாக்கி விட்டார்கள் செஞ்சேனை வீரர்கள். லிபியாவில் ரோமெல் வெற்றிக்குக் காரணம், ஏராளமான யுத்தத் தளவாடங்களை அவர் உபயோகித்தது தான்.

**10,000 முறை தாக்கப்பட்டது.**

1911-ம் ஞு முதல் டோப்ருக் கோட்டையை இத்தாலியர்கள் பலப் படுத்திக் கொண்டு வந்தனர். ஆனால் 36 மணி நேரத்தில் ஜெனரல் வேவல் இந்தக் கோட்டையைப் பிடித்தார். அன்று, 1941-ம் ஞு ஜனவரிமீ 22உ 20,000 இத்தாலியர்களைச் சிறை பிடித்தார். இவர்களில் ஒருவர் ஒரு படைத் தலைவர், மற்றொருவர் டிவிஷன் தலைவர்; இரண்டு பேர் ஜெனரல்கள்; ஒருவர் அட்மிரல். அப்போதிருந்த மொத்த இத்தாலியக் கைதிகள் ஒரு லட்சம் பேர். ஆனால் 3 மாதங்களுக்குப் பிறகு நம்முடைய படைகளில் சிலவற்றை கிரேக்க தேசத்திற்கு அனுப்பினோம். அதனால் டோப்ருக்கில் நமது பலம் சற்று குறைந்தது. இந்த நிலைமையில் நம் எதிரிகள் பெருவாரியாக வந்தார்கள். ஆகையால் நம் படைகள் பின் வாங்க நேர்ந்தது. ஆனாலும் இந்த கோட்டையை காக்க 7 மாதங்கள் வரை நம் படைகள் போராடின. இதில் இந்தியர்கள், பிரிட்டிஷார், ஆஸ்திரேலியர்கள், போலந்துக்காரர்கள், செக் நாட்டவர்கள் ஆகியோர் சேர்ந்திருந்தனர். பதினாயிரம் முறைகளுக்கு அதிகமாகவே எதிரிகள் டோப்ருக்கைத் தாக்கினார்கள். இதைப் போலத் தாக்கப் பட்ட கோட்டை மத்திய கிழக்குப் போர் முனையிலேயே கிடையாது. ஆனாலும், அப்போது ஏராளமான யுத்தத் தளவாடங்களைக் கொண்டு வராததினால் தான். அதை வெல்ல எதிரிகளால் முடியவில்லை.

இப்படித் தாக்கப்படும் காலத்தில் எதிரிகளுக்கு வரும் சப்ளை வண்டிகளை நம் படைகள் நாசஞ் செய்து கொண்டிருந்தன. ஆகையால் டோப்ருக்கைச் சுற்றி 40 மைல் நீளத்திற்கு எதிரிகள் ஒரு ரோடு போட்டார்கள்.

**சப்ளை டிப்போ.**

1941-ம் ஞு நவம்பர்மீ 18உ ஜெனரல் ஆக்கின்லெக் டோப்ருக்கைத் தாக்க ஆரம்பித்தார். ஒன்பது நாட்களில், எதிரிகளின் மூலஸ்தானம் வரை புகுந்து வெற்றி பெற்றார். அது முதல் இது ஒரு சப்ளை டிப்போவாக 8-ம் படைக்கு உதவியது. 1941-ம் ஞு ஏப்ரல்மீ 12உ முதல் 1941-ம் ஞு டிசம்பர்மீ 10உக்குள்ளாக 29,000 பிரிட்டிஷ் கடற்படை வீரர்கள் டோப்ருக்குக்குப் போய்ச் சேர்ந்தனர்; 33,000 பேர் அங்கிருந்து வெளியேற்றப் பட்டனர்; 34,000 டன் தளவாடங்களும் உணவுப் பொருள்களும் அனுப்பப் பட்டன. இது நாள் ஒன்றிற்கு 142 டன் விகிதம் கணக்காகும். ஏறக்குறைய $1\frac{1}{2}$ வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் அது எதிரிகள் வசமானது. தான் தாக்க ஆரம்பித்த மறு நாளே, அதைக் கைப்பற்ற ரோமெல் முயன்றார்; ஆனால் மூன்று வாரங்கள் கடுமையாகப் போராடிய பிறகு தான், அதைக் கைப்பற்ற அவரால் முடிந்தது. இதனால், அவருக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது.

இது நிரந்தரமான தோல்வி யல்ல என்றும், எகிப்துச் சண்டையின் முடிவை இது பாதிக்காது என்றும் சர்ச்சில் கூறுகிறார். எகிப்திய எல்லைப் புறத்திலிருக்கும் 8-ம் படை, தகுந்த பலத் தோடு தான் இருக்கிறது. இதன் போக்கு வரவு அதிக தூரத்தி லில்லை. ஆகையால், தற்காப்பு, பலமாகத் தான் இருக்கும். இந்தப் படை லிபியப் போரில் முதலில் வெற்றி பெற்றது; பிறகு தோல்வி யடைந்தது. ஆனால் எகிப்திய யுத்தத்தில் இது வரை வெற்றியுமில்லை தோல்வியுமில்லை. இதில், எந்தக் கட்சி அதிக தளவாடங்களை உபயோகிக்கின்றதோ அது தான் ஜெயிக்கும்.

"டெய்லி டெலிகிராப்" பத்திரிகையின் இராணுவ நிருபர் இது பற்றி எழுதுவதாவது :—

> "எகிப்தையும் அலெக்சாந்திரியாவையும் கைப்பற்ற வேண்டும் என்பது ரோமெலின் எண்ணம். இவற்றிற்கு ஆபத்தேற்படு முன்பே எதிர்ப்புக்கள் கிளம்பியிருக்க வேண்டும். எதிர்ப்புக்கள் கிளம்பினால், லிபியாவில் வெற்றி தோல்விகள் மாறிக் கொண்டிருந்தது போலவே இங்கேயும் ஏற்படும்."

பிரிட்டிஷ் உற்பத்தி மந்திரியான மிஸ்டர் ஆலிவர் லிட்டில்டன் சமீபத்தில் கூறியதாவது :—

லிபியா சம்பவங்கள் நம் நெஞ்சில் தைக்கின்றன. முடிவில் நமக்குத் தான் வெற்றி கிடைக்கும்; ஆனால், அதற்குள் நாம் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கும். மற்ற கஷ்டங்களை நாம் சகித்து வந்தது போலவே, இந்தக் கஷ்டங்களையும் சகிப்போம். எகிப்து யுத்தம் முடிந்து இரண்டு வருஷங்களுக்குள்ளாக ஏற்பட்ட இக்கஷ்டங்கள் நமக்குப் புதியவையல்ல; எதிர்பார்த்தது தான். உண்மையாகவே டோப்ருக் ஒரு பலமான பிரிட்டிஷ் கோட்டையாகத் தான் இருந்தது. அதற்கு முன் அது நம் எதிரிகளின் வசந் தான் இருந்தது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால், முந்தி பாது காத்தது போலவே, இப்போதும் எகிப்தைப் பாதுகாப்போம்.

**எகிப்து நிலமை.**

சில நாட்களாக எகிப்தில் யுத்தம் கடுமையாக நடந்து வருகிறது. எதிரிகள் தம்மைச் சூழ்ந்து கொள்ளாதபடி நேசதேசப் படைகள் சில இடங்களிலிருந்து பின் வாங்கி விட்டன. இது ஒரு சாமர்த்தியமான போக்கு. 8-வது படையைச் சேர்ந்த ஏஜென்ஸி நிருபர் கீழ்க்கண்டவாறு அறிவிக்கிறார் :—

யுத்தம் நடைபெறும் எல்லா இடங்களையும் பார்க்க முடியாது. யுத்த களம் மிகப் பரந்தது. அங்கங்கே போராட்டங்கள் நடை பெறுகின்றன. மெர்சா மாத்ராவைக் காலி செய்தாயிற்று. சென்ற டிசம்பர் மாதத்திலிருந்து, முதன் முறையாக நியூசிலந்து வீரர்கள் இப்போரில் கலந்து கொள்ளுகிறார்கள். இருதரத்தாருக்கும் பெரும் நஷ்டங்கள் நேரத் தான் செய்யும்.

சில நாட்களுக்கு முன்பு எகிப்திய பார்லிமெண்டு சபை கூடியது. அப்போது, பிரதம மந்திரி நகாஸ் பாட்சா, இந்த யுத்தத்தில் தன் சர்க்காரின் கொள்கை இன்னது என்று தெளிவு படுத்தினார். அச்சு நாடுகளுக்கு விரோதமாக ஒரு எகிப்தியப் படையைத் திரட்டும்படி, பிரிட்டிஷ் சர்க்கார், தன் சர்க்காரைத் தூண்டியிருப்பதாக அச்சு சர்க்கார் பொய்ப் பிரசாரம் செய்வதை மறுத்தார். பொய்ப் பிரசாரம் செய்கிறவர்களையும் எதிரிகளுக்கு உளவு கூறுகிறவர்களையும் கடுமையாகத் தண்டிக்கப் போவதாக அறிவித்தார். எந்தக் கட்சியிலும் சேராமல் எகிப்து தனித்திருக்கும் என்பது பற்றி இரண்டு மாதங்களுக்கு முன்பும் ஒரு பிரகடனம் செய்தார்.



எகிப்தின் அன்னிய நாட்டுக் கொள்கைகளாவன :—யுத்தத்தைத் தவிர்ப்பது ; (2) யுத்த வேலைகளில் எகிப்தியப் போர் வீரர்களையும் தொழிலாளர்களையும் ஈடு படுத்தாதிருப்பது. என்றாலும், ஜனநாயகத்தைக் காக்கும் பொருட்டுப் போராடும், எகிப்திலிருக்கும் பிரிட்டிஷ் படைகளையும், நேசப் படைகளையும் காக்க வேண்டி எல்லா வித முறைகளையும் எகிப்திய சர்க்கார் கையாளுவார்கள் என்று ஒரு பிரகடனம் செய்தார். இந்தப் படைகளைத் தாக்கும்படி எகிப்தியர்களையாவது அன்னிய நாட்டவர்களையாவது தன் சர்க்கார் அனுமதிக்காதென்றும் அறிவித்தார். மேலும் அவர் கூறியதாவது :—

> "பிரிட்டிஷாருடன் நாம் செய்து கொண்ட நேச ஒப்பந்தத்தின் முழு தத்துவப் படி நான் நடப்பேன். நம் நண்பர்களின் இராணுவப் பாதுகாப்பிற்கு ஆபத்து உண்டாக்கத் தக்க முறையில் எவரும் எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது. ஜனநாயகத்தையும் விடுதலையையும் நிலை நாட்ட வேண்டி இப்போது போராடுகிறவர்களுக்கு எந்த விதக் கவலையையும் உண்டாக்கக் கூடாது. இது தான் என் கொள்கை. இதை நம் நண்பர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நம் நண்பர்களின் படைகளும், அவர்களுடைய நண்பர்களின் படைகளும் தெரிந்து கொள்ள வேண்டும் ஏனென்றால், அவர்கள் போர்க் களத்தில் பல விதக் கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். உண்மைக்காகவும், நியாயத்திற்காகவும் போராட வேண்டி, தம் மனைவி மக்களையும் விட்டு வெகு தூரம் வந்திருக்கிறவர்கள்."

எகிப்திலும், எகிப்திற்கு வெளியேயும் எதிரிகள் செய்யும் துர்ப் பிரசாரத்திற்கு இவருடைய பிரகடனம் சரியான பதிலாகும்.

**எகிப்தில் இந்தியப் படைகள்.**

இந்தியாவின் வெளி எல்லைகளில் எகிப்தும் ஒன்று. இந்த யுத்தத்தில் இந்தியப் படைகள் முக்கியமான பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன. அநேக இடங்களில் சமீபத்தில் போராடி வெற்றி பெற்ற இந்திய வீரர்கள் இப்போது கௌரவமான பதவிகளிலிருந்து கொண்டு, நைல் நதிக் கரையிலுள்ள பிரதேசங்களைக் காவல் புரிகிறார்கள். இவர்களுக்குத் துணையாகப் புதிய வீரர்களும் இந்தியாவிலிருந்து போய் இருக்கிறார்கள். இவர்கள் இதுவரை எதிரிகளை எதிர்த்துப் போராடியதில்லை. ஆனால், போராடுவதற்கு இவர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள், குறையாத ஊக்கமுடையவர்கள். எப்போதும் வெகு சந்தோஷமாகவே இருக்கிறார்கள். வெற்றி தோல்வி யாருக்கு ஏற்பட்டாலும், தம் கடமையைச் செய்ய இவர்கள் ஒரு போதும் தவற மாட்டார்கள். நம் எதிரிகளுக்கு சூயஸ் கால்வாயைக் கைப்பற்ற வேண்டும் என்பது கருத்து. இந்த எண்ணம் ஈடேற ஒட்டாதபடி இவர்கள் எதிரிகளை அடித்துக் கொன்று விடுவார்கள். ஈராக்கிலும் ஈரானிலும் சிரியாவிலும் இந்தியத் துருப்புகள் தம் கடமையை நிறைவேற்றுவதில் பெரும் புகழடைந்திருக்கிறார்கள். அது போலவே எகிப்துப் போரிலும் மிகத் திறமையோடு போராடி புகழ் பெறுவார்களென்று எதிர்பார்க்கப் படுகிறது. ஏனென்றால், மிகவும் முக்கியமான போராட்டங்களில் இதுவும் ஒன்று.

---

# இங்கிலாந்தில் யுத்த முயற்சி.

## நாடு முழுதும் ஈடு பட்டிருக்கிறது.

### மந்திரி கூறும் புள்ளி விவரங்கள்.

பிரிட்டிஷ் சர்க்காரின் உற்பத்தி மந்திரி மிஸ்டர் ஆலிவர் லிட்டில்டன். இவர் சமீபத்தில் அமெரிக்காவிற்குப் போனார். அங்கே ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது :—

**உற்பத்தி பலம்.**

நாங்கள் ஏராளமாக உற்பத்தி செய்கிறோம். எங்கள் நாட்டு வரும்படியில் நூற்றிற்கு 60 பங்கு யுத்தத்திற்காகச் செலவிடுகிறோம். உற்பத்தியோ இலாபமோ எப்போதும் போல, இப்போது கிடையாது. எங்கள் உடைமைகள் எல்லாவற்றையும் இந்த யுத்தத்திற்காகக் கொடுக்கிறோம். இதில் கொஞ்சங் கூட நாங்கள் மாற மாட்டோம். ஒரு வருஷத்தில் 257,000 டாங்கிகளும், 'ஜீப்'களும் மற்ற வண்டிகளும் செய்கிறோம். 1940-ம் வருஷத்தின் கடைசி கால் வருஷத்தில் செய்ததை விட, $3\frac{1}{2}$ மடங்கு அதிகமாகச் செய்திருக்கிறோம். ஒரு வருஷத்தில் 40,000 பெரிய பீரங்கிகளையும் $2\frac{1}{2}$ கோடி பீரங்கிக் குண்டுகளையும், கோடிக் கணக்கான சிறு பீரங்கிகளையும் 2,000,000,000 குண்டுகளையும் செய்கிறோம். 1940-ம் வருஷத்திய கடைசி கால் வருஷத்தில் செய்ததைப் போல ஒரு மடங்கு அதிகமாகவே இப்போது விமானங்கள் செய்து முடிக்கிறோம். அது போலவே வியாபாரக் கப்பல்களும் நூற்றுக்கு 57 விகிதம் அதிகமாகக் கட்டி முடித்தோம். சென்ற 12 மாதங்களில் பொதுவாக எல்லா யுத்தத் தளவாடங்களும் ஒரு மடங்கிற்கு இரு மடங்கு உற்பத்தி செய்திருக்கிறோம்.

**படை பலம்.**

எங்கள் நாட்டின் ஜனத் தொகை 33,000,000. இதில், 14 க்கு மேல் 62 வயதிற்குட்பட்டவர்கள் 22,000,000 பேர்கள். இவர்கள் தொழிற்சாலைகளிலும், போர் வீரர்களாகவும், உள் நாட்டுக் காவலாளிகளாகவும் வேலை செய்கிறார்கள். அமெரிக்காவில் 60,000,000 வீரர்களைத் திரட்டுவதற்கு இது சமமாகும். 5,500,000 பெண்கள் வேலைக்குப் பதில் செய்து கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாகப் போர் வீரர்கள் செய்யும் ஏ.டி.எஸ். வேலைகளை இப்போது 76,000 பெண்கள் செய்கிறார்கள்.

நிற்க, எங்கள் தொழிற் சாலைகளில் தொழில் தகராறுகளே கிடையாது என்று சொல்லலாம். 14 க்கு மேற்பட்டு 18 வயதிற்குட் பட்ட ஆண்களும் பெண்களும் யுத்த வேலைகளைச் செய்கிறார்கள். உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்த கப்பல்களில் ஒரு பாதி, உலகில் பல பாகங்களிலுமுள்ள நேச நாட்டுத் துருப்புகளுக்கு சப்ளைகள் ஏற்றிக் கொண்டு போகின்றன. நிலங்கள் எல்லாம் பண்ணைகளாக மாறி விட்டன. தொழிலாளர்களும் அரசாங்க மந்திரிகளும் ஒரே வகை உணவு தான் உண்ணுகிறார்கள்.

இங்கிலாந்திலுள்ள வீடுகளில் ஐந்தில் ஒரு பங்கு சேதமாகி விட்டன. அதாவது 13,00,00 வீடுகள் நாசம். என்றாலும் காலையில் ஒருவர் படுக்கையை விட்டு எழுந்தவுடன், தான் இராணுவ வேலைகள் செய்ய முடியுமா என்று பார்க்கிறார். முடியாதானால், தொழிற் சாலைக்குப் போய் வேலை செய்கிறார். இவர் சாதாரணமாகச் சாப்பிடும் சாப்பாட்டில் பெரும் பகுதியை உணவு மந்திரி எடுத்துக் கொள்கிறார், வியாபார போர்டின் தலைவர் ஒரு அளவிற்குத் தான் அவருக்குத் துணி விற்க வியாபாரிகளை அனுமதிக்கிறார்; இவருடைய மனைவியுங் கூட ஒரு தொழிற் சாலையில் வேலை செய்கிறார். கஜானா அதிகாரி அவருக்கு தலைக்கு மேலே வரியை உயர்த்தி விடுகிறார். அவருடைய வருவாயில் ஏதேனும் மிச்சமிருந்தால், அதைக் கொண்டு யுத்த சேமநிதிப் பத்திரங்கள் தான் வாங்க முடியும். வேறேதேனும் வாங்க வேண்டுமென்றாலும், எதுவும் கிடைக்காது.

# ஜப்பானுக்குப் பொறுப்பு அதிகரிக்கிறது.

## வெற்றிக்கு 3 காரணங்கள்.

### ஜப்பான் தோல்வி பற்றி ஜெர்மன் நிபுணர் கருத்து.

ஜப்பான் உலகத்தின் கீழ் கோடியில் இருக்கிறது. ஆகையால், கீழக் கோடி யுத்த முனைக்கு ஏராள மான வீரர்களையும், பீரங்கிகளையும், கப்பல்களையும், விமானங்களையும் எளிதில் கொண்டு போக ஜப்பானால் முடியும். இவற்றைக் கொண்டு யுத்தத்தின் ஆரம்பத்தில் வெற்றிகள் பெறலாம். வெற்றிகள் கிடைத்த பிறகு, ஜப்பானின் பொறுப்பு அதிகப் படுகிறது. கீழக் கோடி தீவுகளையும் நாடுகளையும் காக்க வேண்டிய பொறுப்பு மிகவும் மகத்தானது.

**மகத்தான பொறுப்பு.**

இலாபத்தை விட பொறுப்புத் தான் இந்த வெற்றிகளால் ஜப்பானுக்கு ஏற்பட்டிருக்கிறது. 4,000 மைல்கள் நீள மானதும் சந்துகள் நிறைந்ததுமான கடற்கரையைக் காக்க வேண்டி யிருக்கிறது. அதுபோலவே தான விமானப் படைக் காவலும் வேண்டும். ஒரு குறிப் பிட்ட இடத்தில் சேனைகளைத் திரட்டி வைக்கலாம் என்று அவர்கள் நினைக்க முடியாது. ஜப்பானைச் சுற்றிலும் சுமார் 2,500 மைல்களுக்காவது கடற் படையையும் ஆகாயப் படையையும் தகுந்தபடி காவல் புரிய நியமிக்க வேண்டும். அல்லாமலும், எதிரிகள் வந்தால், அவர்களோடு போராடுவதற்குத் தேவையான படைகளையும் யுத்தத் தளவாடங்களையும் இருப்பில் வைத்திருக்க வேண்டும். இதற்கு ஏற்ற அளவு பலம் இப்போது ஜப்பானுக்குக் கிடையாது. ஜப்பான் எதிரிகளைத் தாக்கத் தொடங்கிய போது, தன் முழு பலத்தையுங் கொண்டு தான் தாக்கியது, அப்போதிருந்த பலம், இப்போது ஜப்பானுக்குக் கிடையாது. அல்லாமலும், தான் ஜெயித்த நாடுகளி லுள்ள மூலப் பொருள்களைத் திரட்டிக் கொண்டு போனாலும், அவற்றைக் கொண்டு செய பொருள்களைச் செய்ய, போதுமான இயந்திரங் களோ, ஆட்களோ ஜப்பானில் கிடையாது.

ஆனால் நேச நாடுகளிலோ, குறிப்பாக அமெரிக் காவிலோ, உற்பத்திகள் நாளுக்கு நாள் அதிகப் பட் டுக் கொண்டே போகின்றன. யுத்தக் கப்பல்கள், டாங்கிகள், பீரங்கிகள், விமானங்கள் ஆகியவைகளும், உணவுப் பொருள்களும் பெருகிக் கொண்டே போகின் றன.

சென்ற மகா யுத்தத்தில் 1918-ம் ஞு ஜூலைமீ 15உயன்று ஜெர்மனியை வெல்ல எவராலும் முடியாது என்று நினைத்தார்கள். ஆனால் 3 மாதங்களுக்குப் பிறகு, அதனுடைய நிலை எப்படி மாறியது?

**பழைய பாடம்.**

தானே சமாதானத்தைக் கோர வேண்டிய நிலைக்கு வந்து விட்டது. பட்டாளத்திற்குச் செல்வாக்கு அதி கமா யுள்ள நாடு, மற்றொரு நாட்டைத் தாக்கினால், அது தோல்வி யடைகிற வரையிலும் கூட, பலங் குறை யாதிருப்பது போலத் தோன்றலாம். இதே நிலை யையில் தான் இன்று ஜப்பான் இருக்கிறது.

1941-ம் ஞுத்தில், நாம் நினைத்தது போல அவ் வளவு பலக் குறைவாய் ஜப்பான இருக்கவில்லை. இப்போது எவ்வளவு பலம் அதிகப்பட்டிருக்கிறது என்று பொதுவாகக் கருதுகிறார்களோ, அவ்வளவு பலத் தோடும் ஜப்பான் இல்லை.

> தன் தலைக்கு மிஞ்சிய தலைப் பாகையை ஜப் பான் மாட்டிக் கொண்டிருக்கிறது. ஆகை யால், அந்தத் தலைப் பாகை, அதன் கண்ணை மறைத்து, மேலே போக ஒட்டாதபடி தடுத்து விடுகிறது.

மேஜர் எலியட் ஒரு யுத்த நிபுணர். இவர் ஜப் பானியர் வெற்றிகளைக் குறித்து கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—

கீழக் கோடி யுத்தத்தின் முன் பகுதியில் ஜப்பா னியர் அடுத் தடுத்து எளிதில் வெற்றி பெற்றார்கள். இதற்கு 3 காரணங்கள் உண்டு. 1 திடீரென்று தாக்கியது. 2. ஏராளமான படைகள். 3. தம் நாட் டிற்கு அருகாமை. இரண்டாவது யுத்தப் பகுதி இப்போது தான் ஆரம்பம் ஆகிறது. இப்போது ஜப் பான் கண்டிப்பாகத் தோற்று விடும் என்று ஜெர்மன் இராணுவ நிபுணர்கள் கூடக் கருதுகிறார்கள். ஏனென்றால் ஜப்பானுக்கு இப்போது இரட்டை வேலை ஏற்பட்டிருக்கிறது 1 ஜப்பான், யுத்தமும் ஆட வேண்டும் ; 2. ஜெயித்த நாடுகளி லுள்ள மூலப் பொருள்களைத் தகுந்தபடி பயன் படுத்தவும் வேண்டும். இந்த இரண்டு வகை வேலைகளுக்கும் போதுமான அவகாசம் வேண்டும். அல்லாமலும், ஜப்பானுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுக் கொண் டிருக்கிறது. இந்த நஷ்டத்தையும் ஈடு செய்ய வேண்டும். இவற்றை யெல்லாம் ஜெர்மன் இராணுவ நிபுணர்கள் முந்தியே எதிர்பார்த்தார் கள். அவர்களுள் ஒருவரான அட்மிரல் கடாவ் 1936-ம் ஞு என்ன எழுதியிருந்தார் தெரியுமா?

> "ஹாங்காங்கையும் சிங்கப்பூரையும் பிலிப்பைன் தீவுகளையும் ஜப்பான் வென்றாலும் கூடப் பாதகமில்லை. விலாடிவாஸ்டோக், பெத்ரோ பவ்லோஸ்க், நிக்கோல்சீவ்ஸ்க், டச் ஹார்பர், ஹவாய், சாமோ ஆகிய ஊர்கள் எதிரிகள் வசம் இருக்கும் வரை, ஜப்பானுக்கு பெரும் ஆபத்துத் தான."

என்று குறிப்பிட்டிருந்தார்.

நிற்க, ஜெர்மன் ஆகாயப் படை நிபுணரான கர்னல் வான் ப்யூலா கூறியதாவது :—

> மேல் நாடுகளுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் நடக்கும். அந்த யுத்தத்தின் முதல் பகுதி யில் தந்திரத்தைக் கையாண்டு, திடீரென்று பலமாகத் தாக்கி, ஜப்பானியர் வெற்றி யடை யக் கூடும் ; ஆனால் இந்த வெற்றி நிரந்தர மான வெற்றியாக இருக்க முடியாது. ஏனென்றால், தனக்கு உண்மையிலேயே ஆப த்து விளைக்கக் கூடிய தளங்களை முதலிலேயே கைப்பற்ற ஜப்பானால் முடியாது. பாதுகாப்பிற் காக ஜப்பான் இராணுவங்கள் போக முடி யாத இடங்களி லெல்லாம், ஜப்பானின் எதிரி கள் தாக்குவார்கள். அப்போது ஜப்பான் கை சளைத்துப் போகும். எதிரிகள் தம் தளங்களி லிருந்து தன்னைத் தாக்கும் போது, தற்காத் துக் கொள்ளவும் முடியாத நிலை ஏற்பட்டு விடும்.

யுத்தம் ஆரம்பித்த முதல் வருஷத்தில் "நாம் யுத்தத்தில் வென்று கொண்டிருக்கிறோம்" என்று ஹிட்லர் சொன்னார் ; மறு வருஷத்தில் "வெல்லுவோம்" என்றார் ; மூன்றாவது வருஷத்தில் "வெல்ல வேண்டும்" என்று

**ஹிட்லரின் மூன்று வகை பேச்சு.**

சொல்லுகிறார். அவருடைய நம்பிக்கை படிப் படி யாகக் குறைவதை அவருடைய வார்த்தைகளே தெரிவிக்கின்றன.



# யுத்தக் கைதிகளுக்குக் கடிதங்கள்,

## அனுப்புவதற்கு வசதிகள்.

ஹாங்காங், மலேயா, பர்மா ஆகிய நாடுகளில் யுத் தம் நடை பெற்ற போது கைதியான பட்டாளங்களைச் சேர்ந்தவர்களுக்கும், அங்கே போய் இருந்து இப்போது எதிரிகளின் ஆட்சிக் குட்பட்டிருக்கும் பொது ஜனங் களுக்கும் இப்போது இந்தியாவி லிருந்து கடிதங்கள் எழுதலாம். எழுதுகிறவர்கள் நெருங்கிய சொந்தக் காரர்களா யிருக்க வேண்டும். விலாசத்திற்கு மேலே 'யுத்தக் கைதி தபால்' என்று எழுத வேண்டும். தபால் தலைகள் ஒட்ட வேண்டிய தில்லை. இந்தக் கடி தங்களை எல்லாம் ஜப்பான் சர்க்கார் அதிகாரிகள் பிரித்துத் தணிக்கை செய்கின்றார்கள். ஆகையால் கடிதங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப் பட வேண்டும். இப்போதைக்கு, பார்சல்கள் அனுப்ப முடியாது.

**பட்டாளத்தைச்சேர்ந்தவர்களானால், கீழ்கண்ட விவரங்கள் விலாசத்தில் குறிப்பிட வேண்டும்.**

1 நம்பர். 2. பதவி, இனிஷியல் விலாசம், 3. பெயர், 4. பட்டாளத்தின் பெயர், 5 கைதியாக இருந்ததாக அல்லது வேலை செய்ததாகக் கேள்விப் பட்ட இடம். இந்த ஐந்து விவரங்களையும் இங்கிலீ ஷில் அச்செழுத்துக்களில் எழுதி, 'டோக்கியோ யுத் தக் கைதிகள் தகவல் ப்யூரோ, மேல்பார்த்து, பிரிட் டிஷ் யுத்தக் கைதி இன்னாருக்கு' என்று எழுத வேண்டும்.

**பொது ஜனங்களானால், கீழ்க் கண்டபடி விலாசம் எழுதப் படவேண்டும்.**

டோக்கியோ. யுத்தக் கைதிகள் தகவல் ப்யூரோ மேல் பார்த்து, இன்ன விலாசத்தி லிருந்த, யுத்தக் கைதி இன்னாருக்கு என்று எழுத வேண்டும்.

## இது ஒரு பிரமாதமா ?



இது ஒரு பீரங்கி வண்டி. எவ்வளவு கரடு முர டான பாதைகளிலும் வேகமாய் போகக் கூடியது. வட அமெரிக்காவின் ரோடு லாந்திலுள்ள மலைகள் மேல் ஏறிப் போவது இதற்கு ஒரு பிரமா தமா ?

# இந்திய கப்பல் படை.

## பல வகைகளிலும் பெருகுகிறது.

### படை வீரர்கள் எண்ணிக்கையில் 15 பங்கு அதிகம்.

எதிரிகளின் கப்பல்களை உடைக்கும் குண்டுகளை ஏற்றிச் செல்லும் படகுகளுக்கு 'டார்பிடோ' என்று பெயர். இந்தப் படகுகளைக் கையாளுவதற்குக் கற்றுக் கொடுக்க, புதிதாக ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பிப்பதென, இந்திய கப்பற் படை இலாக்கா தீர்மானித் திருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் படை வீரர் களுக்கும் டார்பிடோவைப் பற்றி மட்டும் கற்றுக் கொடுப்ப தில்லை. எதிரி கப்பல்களை சமுத்திர மட்டத் திற்குக் கீழே ஆழத்தில் தாக்கவும், கடல்களில் சுரங்க வெடிகளைப் போடவும், எதிரிகள் போடக் கூடிய சுரங்க வெடிகளை நாசஞ் செய்யவும், கப்பலி லுள்ள மின்சார இயந்திரங்களைக் கையாளவும் காட்பாற்றவும் கற்றுக் கொடுக்கப்படும். இவை ஒவ்வொன்றும் இது வரை தனித் தனிப் பள்ளிக் கூடங்களில் சொல்லிக் கொடுக்கப்பட்டு வந்தது. இனி ஒரே பள்ளிக்கூடத்தில் கற்றுக் கொடுக்கப்படும். இனி இந்தப் பள்ளிக் கூடத்தி லிருந்து, தேர்ந்த கைகள் வெளி யேறுவார்கள். ஒரு கப்பலுக்கு, தேர்ந்த மின்சார நிபுணர்கள் முக்கியமானவர்கள். 1914-ம் ஞுத்திற்கு முன்பு சாதாரணமாக விளக்கு களுக்குத் தான் மின்சார சக்தியை, கப்பல்களில் உபயோகித்தனர். இன்று, அது எல்லா வகைகளி லும் பயன் படுகிறது. மின்சார சக்தியைப் பொறுத் துத் தான் ஒரு கப்பலின் திறமை அமைந்திருக்கிறது. எனவே, மின்சார நிபுணர்கள் தேவை.

இந்தப் பள்ளிக்கூடத்தில் படித்துத் தேறியவர்கள் கப்பற் படையை விட்டு விட்டாலும் கூட, சிவில் உத்தி யோகங்களுக்கு மிகவும் தகுந்தவர்களா யிருப்பார் கள். மிகவும் திறமை யுடையவர்கள் வாரண்ட் உத்தியோகஸ்தர்களாகவும் கமிஷன் உத்தியோகஸ் தராகவும் உயர்ந்த பதவிகளை யடையலாம்.

மற்றொரு பள்ளிக் கூடத்தையும் ஆரம்பிக்கப் போகிறார்கள். இங்கே நீர்மூழ்கிக் கப்பல்களை எதிர்த்துப் போராடும் முறைகளைக் கற்றுக் கொடுப் பார்கள். பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலேயே இதை விட பெரிய பள்ளிக்கூடம் இங்கிலாந்திலே மட்டுந் தான் இருக்கிறது. இப்போதுள்ள பள்ளிக் கூடம் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது.

கப்பல் படையின் பீரங்கிப் பள்ளிக்கூடமும் பெரி தும் விருத்தி யடைந்து கொண்டிருக்கிறது.

யுத்தம் ஆரம்ப மாவதற்கு முன் பிருந்ததை விட 15 மடங்கு அதிகமான போர் வீரர்கள் இந்தப் பள்ளிக் கூடத்தில் இப்போது கற்றுக் கொள்ளு கிறார்கள்.

# பால் சிந்திற்று

பானையில் உள்ள பாலில் கொஞ்சம் சிந்தி விட்டது என்பதற்காக, பிலாக்கணம் வைத்து அழுது கொண்டேயிருப்பார்களா யாராவது ? பசு இருக்கிறது பால் கொடுக்க ! பானை இருக்கிறது பாலை வந்த ! கை இருக்கிறது பால் பீச்ச ! அங்கங்கே நல்ல புல்வெளி இருக்கிறது பசு மேய ! பாலுக் கென்னய்யா குறைவு?

அதுமாதிரி, லிபியாவில் இருக்கும் டோப்ருக் கோட்டை அச்சு நாட்டார் வசமாகி விட்டது என்பதற்காக வருந்திக் கொண்டே இருக்கலாமா ? யுத்தத்திலே, இது கேவலம் ஒரு சிறு சம்பவம். இந்த சம்பவம் நடக்காம லிருந் திருந்தால் எல்லாம் வேறே தினுஸாகத் தான் ஆகி யிருக்கும்.

ஆனால் என்ன செய்வது ? இது நடந்து விட்டதே ! இது காரணமாக சில விபரீதங்கள் நடக்கத் தான் நடக்கும். அதைத் தவிர்க்க முடியாது தான். ஆனால், இதற்கப்புறம் நன்மையும் உண்டாகக் கூடும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதாவது, நேச தேசப் படைகள் மீண்டும் ஒன்று சேர்ந்து நின்று, மேற்கொண்டு உதவியும் பெற்று விட்டால், எகிப்திற்குள்ளே ஓடிவந்து கொண்டிருக்கும் அச்சுநாட்டுப் படைகளை ஒரு கை பார்க்கத் தான் பார்க்கும்.

அம்மாதிரி ஒரு கைபார்க்காமல், எதிரியைச் சும்மா முன்னேற விட்டுக் கொண்டிருந்தால், அப்புறம் யுத்தம் என்ன வேண்டி யிருக்கிறது ? ருஷ்யாவில் கூடத் தான் நாஜிப் படைகள் குடுகுடு என்று மாஸ்கோ நகர வாசல் வரைக்கும், தெற்கே ராஸ்டால் நகருக் குள்ளும் சென்று விட்டார்கள். அதற்காக யாராவது அழுதார்களா ? பேசாமல் இருந்து விட்டார்களா ? தக்க சமயம் பார்த்து, நாஜிகளை எதிர்த்துத் தாக்கி, விரட்டி ஓட்டினார்கள். அதே போல, லிபியாவி லிருந்து கிழக்கே கிளம்பி யிருக்கும் நாஜிப் படைகளும், இத்தாலியப் படைகளும், திடீரென நாளையே பின்வாங்கி ஓட ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கலாம். முன்பு, லிபியாவிலே என்ன நடந்தது?

எகிப்திய எல்லை வரை வந்த அச்சு நாட்டுப் படைகளைத் தானே, ஜெனரல் ஆச்சின்லெக் என்பவர், பிரிட்டிஷ் எட்டாவது படையின் தலைமையில் நின்று, பின்வாங்கி ஓடச் செய்தார் ? அதே மாதிரி இப்பொழுதும் நடக்கக் கூடும் !

அது எப்படி என்று கேட்பீர்கள் ? அதே ஆச்சின்லெக் துரை தான், இப்பொழுது திரும்பவும் முன்னால் வந்து, படைத் தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கிறார். தம் கையில் உள்ள பலத்தை யெல்லாம் ஒன்று சேர்த்து, ஒரு சரியான இடத்தில் எதிரியைத் தடுத்து நிறுத்தும் வழியை இவர் யோசித்து வைத்திராம லிருப்பாரா என்ன ?

இது ஒரு காரணம். இரண்டாவது, எகிப்திற்கு அதிகப் படியான வாக்குறுதியை அளிக்கும்படி, எகிப்திலுள்ள பிரிட்டிஷ் பிரதிநிதிக்கு, பிரதம மந்திரி சர்ச்சில் அதிகாரம் கொடுத்திருக்கிறார். 'கடைசி வரை போராடிக் காத்தே தீருவோம் எகிப்தை !' என்ற வாக்கை அளித்திருக்கிறார் பிரதம மந்திரி சர்ச்சில். சும்மாத்துக் காணும், இப்படி சொல்லக் கூடியவரா அவர் ? அதுவும் இப்பொழுது தான் அமெரிக்காவி லிருந்து வந்திருக்கிறார். எகிப்தில் ஏறபடக் கூடிய நெருக்கடியான நிலைமையைத் தீர்க்கமாக யோசித்து எதிர்பார்த்து, அந்த மோசமான நிலைமையை மாற்றுவதற்கான வழியையும் கூறி, அதற்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் ஆதரவையும் கோரி, அதையும் பெற்றிருப்பதால் தான், அவர் இவ்வாறு பேசுகிறார்.

அதோடு, எகிப்திற்கும் பெரிய தோர் அமெரிக்கப் படை அனுப்பப் படும் என்றும் கூறியிருக்கிறார். அப்படை இப்பொழுது எகிப்து நோக்கி வந்து கொண்டிருக்கவும் கூடும். தென் ஆபிரிகாவைச் சுற்றி வர வேண்டும் இந்தப்படை. சரியான காலத்திற்குள் மட்டும் இது வந்து சேர்ந்து விட்டால், ஜோர் தான் !

தவிர, நியூஸீலர்துப் படைகள் வேறே எகிப்தியப் போரில் ஈடுபட்டிருப் தாகத் தெரிகிறது. இந்தியப் படைகளோ அதிதீரத்துடன் முன்னணியில் நின்று போராடி வருகின்றன என்று பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. எகிப்தில் உள்ள படைகளுக்கு வேண்டிய விமானப் படை உதவி அளிப்பது பற்றி தீவிரமாக யோசித்து வருவதாக, ஒரு பிரிட்டிஷ் மந்திரி கூறி யிருக்கிறார். அலெக்ஸாந்திரியா என்ற துறை முகத்திற் கருகே வேறே பெரிய படைகள் இருக்கக் கூடும். அது பிரமாண்டமான, அதி முக்யமான துறைமுகமாகும். அதை எப்படியும் பாதுகாத்தாக வேண்டும். தென் ஆபிரிகாவி லிருந்து புது உதவி கிடைக்கலாம். சிதறிகிடக்கும் எட்டாவது படையை ஒன்று கூட்டியாகி விட்டாப் போலிருக்கு, அதற்கு நல்ல தலைவர் வேற வந்துவிட்டார்.

பீல்ட் மார்ஷல் ராமலின் படைகள் முன்னேறி வரும் ஒவ்வொரு அடியிலும் சரியான அடியும் உதையும் பெற்று வருகின்றனவாம். மெர்ஸா மதரூ, எல்டபா, பூகா போன்ற இடங்களுக்கு அருகில் எல்லாம் அதிகோரமான யுத்தங்கள் நடந்த பின்பே, தற்காப்பையும், வளைக்கப் படுவதைத் தவிர்க்க வேண்டியதையும் முன்னிட்டு, பிரிட்டிஷ் படைகள் பின் வாங்கி யிருக்கின்றன. அச்சு நாட்டாருக்கு டாங்கி பலம் அசாத்தியமா யிருக்கிறது. ஆனாலும் பிரிட்டிஷ் விமானங்களும், டாங்கி எதிர்ப்புப் பீரங்கிகளும், எதிரியின டாங்கி பலத்தைக் குறைத்துக் கொண்டே தான் வருகின்றன. இரண்டு நாட்களுக்கு முன்பாக அச்சுப் படைகள், அலெக்ஸாந்திரியாவிற்கு தொண்ணூறு மைல்களுக்கு உள்ளாகவே வந்து விட்டதா அறிவிக்கப் பட்டது அதோடு, பிரிட்டிஷ் எதிர்ப்பு காரணமாக அப்படைகள் முன்னேறும் வேகம் குறைந்து வருவதாகவும் கூறப் பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள காரணங்களை வைத்துக் கொண்டு பார்த்தால், அச்சு நாட்டார் எகிப்தைக் கடக்கு முன் எங்காவது ஒரு சில இடங்களில் பிரமாண்டயான யுத்தங்களைச் சமாளித்தே தீர வேண்டும் என்றே தோன்றுகிறது. இப்பொழுது அச்சு நாட்டாருக்கு சாதகமான விஷயங்கள் சில இருக்கின்றன. அவற்றுள் ஒன்று டோப்ருக் கோட்டை அவர்கள் வசப் பட்டது. அத்துறை முகத்திலே ஜெர்மன் கப்பல்கள் வந்து நிற்கின்றன. அதன மூலமாக அச்சுப்படைகளுக்கு உதவி கிடைக்கும். அதோடு, அலெக்ஸாந்திரியா மீது குண்டு போட விரும்பும் அச்சு நாட்டு விமானங்களுக்கு, டோப்ருக் அருகே உள்ள விமான நிலையங்கள் பயன படும். மற்றும், நேச தேசத்தினர் எகிப்திலே அவசரமாகக் காலி செய்ய நேரிட்ட இடங்களிலே, பெட்ரோல் ஸ்டாக் நிறைய இருந்ததாம். அதுவும் எதிரிகள் கைவசமாகி யிருக்கக் கூடுமாதலால், அவர்கள் பாடு கொஞ்சம் சௌகரியம் தான். ஆனால் ஒன்று. எதிரிகளுக்கு, மேற்கொண்டு படைகளும், ஆயுதங் ளும், உணவும் வர வேண்டிய தூரம் ரொம்ப ரொம்ப அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எங்காவது இவ்வழியை பிரிட்டிஷார் கத்தரித்து விட்டால், அப்புறம் பீல்ட் மார்ஷல் ராமலின் பாடு ஆபத்துத் தான்.

இது மட்டுமா ? இப்பொழுதே பிரிட்டிஷ் விமானிகள் டோப்ருக் துறைமுகத்தைப் போய்த் தாக்கிய வண்ணமாக இருக்கிறார்கள். ஆகவே நாஜிப் படைகள் எகிப்திலும் இறுதியான வெற்றியைக் கண்டு விட்டன என்று யாரும் தைரியமாகக் கூற முடியாது. ஏதோ தன் டாங்கி பலத்தாலும், பிரிட்டிஷாருக்குப் போதிய விமான பலம் இல்லாது போனதாலும் லிபியாவில் அச்சு நாட்டுப் படைகளின் கை கொஞ்சம் மிஞ்சி விட்டது. இனி யல்லவோ பார்க்க வேண்டும் ? இத்தனை காலம் நடந்த சண்டைகள் எல்லாம் பொய், இனி நடக்கப் போவது தான் பெரிய சண்டை என்று சொல்லும்படியாகவே ஒவ்வொரு சண்டையும் நடந்து வருகிறது.

அச்சு நாட்டு விமானங்கள் அலெக்ஸாந்திரியா மீதும், சூயஸ் கால்வாய் மீதும் பறந்து கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த விமானப் படைகள் யுத்த ஆரம்பத்தில் இருந்தது போல் அவ்வளவு குஷியாக இல்லை இப்பொழுது. பல வருடங்களாகப் பயிற்சி பெற்ற சூராதி சூரர்கள் எல்லாம் யமனுலகிற்கு 'டிரான்ஸ்பர்', ஆக்கப் பெற்றதாலும், கற்றுக் குட்டிகளே இப்பொழுது ஏராளமாக வந்திருப்பதாலும், ஜெர்மனிக்கு விமான நஷ்டமும். விமானப் படையெடுப்புகள் எதிர் பார்த்த பலனை அளியாமல் போவதும், அதிகமாகி வருகிறது.



பாருங்களேன் ஸெபாஸ்டபோல் என்ற ருஷ்யக் கோட்டை யருகே நடக்கும் யுத்தத்தை ! அந்த ருஷ்யக் கோட்டையைப் பிடிக்க பத்து டிவிஷன் நாஜிப் படைகளாம் ! எண்ணற்ற டாங்கிகளாம். எத்தனையோ விமானங்களாம் ! இத்தனையை வைத்துக் கொண்டும் வெற்றியின் கொடியைக் கூட அவர்கள் காண வில்லை என்றால், ஜெர்மன் படைகளின் தற்போதைய உண்மை பலம் என்ன என்பது தெரிய வில்லையா ? பதினைந்து நாட்கள், பதினெட்டு நாட்கள் என்று கணக்கிட்டு, பெல்ஜியம், ஹாலந்து, பிரான்ஸ் ஆகிய தேசங்களை அடிமைப் படுத்திக் கொண்ட நாட்கள் எங்கே ! ஒரு சிறு கோட்டைக்காக, முக்கு முக்கு என்று முக்கிக் கொண்டு, நான்கு வாரங்களாகியும் கோட்டை வாயிலை அடையாது, கோட்டைக்குச் சற்று தூரத்திலேயே ஐம் தினாயிரம், அறுபதினாயிரம் வீரர்களையும், இருநூறு டாங்கிகளுக்கு மேலும், பல விமானங்களையும் காவு கொடுத்துக் கொண்டிருக்கும் நாட்கள் எங்கே ! ஸெபாஸ்டபோலை வீழ்ச்செய்தால் அல்லாமல், மேற்கொண்டு கிழக்கே காலடி எடுத்து வைக்க முடியாது ஆனால் ஸெபாஸ்டபோலையும் ருஷ்யர்கள் லேசில் விடுவதாக இல்லை. இடைவிடாத பீரங்கிப் பிரயோகமாம் ; ஒரே நாளில் ஆயிர விமானங்களின் படை யெடுப்பாம். வெளி உதவி வருவது சிரமமாம். இத்தனை கஷ்டங்களிலும், எதிரிகளைச் சமாளித்து நிற்கும் ஸெபாஸ்டபோல் கோட்டை வீரர்களின் தீரத்தை என்னென்று புகழ்வது ? ஹிட்லரின் ஆசையை நிராசையாக்கும் முட்டுக்கட்டைகளில், ஸெபாஸ்டபோல் அதி முக்யம் வாய்ந்தது என்பதில் அணுவளவும் சந்தேகமே யில்லை. இந்தக் கோட்டைக்கான அரண்களில் ஓரிரண்டு இடங்களில் பிளவு கண்டிருக்கிறதாம். அந்தப் பிளவுகள் வழியாக உள்ளே புகப் பார்க்கிறார்களாம் நாஜிகள். ஆனாலும் கடுமையான எதிர்ப்பு இருக்கிறதாம். இத்தனை நாட்களாக எங்கும் உபயோகிக்காத புது, பிரமாண்டமான பீரங்கிகளை நாஜிப் படைகள் இங்கு உபயோகித்து வருகின்றனவாம். நிலைமை ரொம்ப மோசமாகிக் கொண்டே தான் வருகிறதாம். ஆகவே ஸெபாஸ்டபோலுக்குப் பேராபத்து வந்தாலும் கூட, ஜெர்மானியருக்கு ஏராளமான நஷ்டமும் கொடுத்து, அவர்களுக்கு அருமையாக விளங்கும் காலத்தையும் கடக்கச் செய்து, யுத்தத்தின் போக்கையே மாறச் செய்த பெருமை, ஸெபாஸ்டபோலுக்கும், அங்கிருந்த வீரதீர ருஷ்யர்களுக்கும் கிடைக்கத் தான் செய்யும்.

ருஷ்யாவிலே மற்றொரு பகுதியான கார்கோவிற்கு அறுபது மைல் தூரத்திற் கப்பால் நாஜிப் படைகள் முன்னேறிப் போய் விட்டனவாம் அங்கு ஆகாயத்தில் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் அதி பயங்கரமான விமானப் போர்கள நடந்து கொண்டிருக்கின்றனவாம் லெனின்கிராட் அருகிலும் கடும் யுத்தமாம். இரண்டாயிர மைல் யுத்த அரங்கக் கதை யெல்லாம் பழங்கதை யாகி விட்டது. எத்தனை நாளய்யா ஒருவன் ஆயிர ஆயிர ரூபாய் நோட்டாகவே எடுத்துச் செலவழித்துக் கொண்டிருக்க முடியும் ? அந்தக் காலம் கொஞ்ச காலம் நீடித்திருக்கும். அப்புறம், ஐயா, நூறு ரூபாய் நோட்டுக்கு இறங்கி, பத்து ரூபாய் நோட்டுக்கு மாறி, ஒரு ரூபாய் நோட்டை மட்டும் எடுத்து நீட்டி, 'சில்லறை கிடைக்குமா ஸார் ?' என்று கேட்கும்படியான நிலைமை வரத் தான் செய்யும், இல்லையா ? அதேபோல், எத்தனை காலத்திற்குத் தான் இரண்டாயிர மைல்கள் பரந்துள்ள போர்முனைக்கு ஆட்களையும், இயந்திரப் படைகளையும், விமானங்களையும் அனுப்பிக் கொண்டிருக்க முடியும் இந்த ஜெர்மனிக்கு ? அந்தக் காலம் ருஷ்யர் போட்ட போட்டிலே, சீக்கிரமே மாறிற்று. இப்பொழுது லெனின்கிராடைச் சுற்றி, கார்கோவிற்கு அருகிலே, ஸெபாஸ்டபோல் முன்னாலே இன்று தான் யுத்தம் நடந்து வருகிறது. இவ்வருடத்திற்குள் ஜெயிக்கா விட்டால், ஹிட்லர் என்றுமே ஜெயம் காண முடியாது என்று கூறிய நிபுணரின் வாக்குப் படி பார்த்தால், ஹிட்லருக்கு இன்னும் நான் கைந்து மாதக் கெடுவு தான் இருக்கிறாப் போலிருக்கிறது ஆனால் அவரது படைகள் ஜெயிக்க வேண்டிய பிரதேசமோ கடல் போலிருக்கின்றன. ஹூம் ! இன்னும் கம்யூனிஸ்ட் கரப்பசனைகூட முடிய வில்லை யா ஐயா ! அப்புற மல்லவா முழு ருஷ்யா, முழு சைனா சண்டை யெல்லாம் !

இந்த சமயத்திலே, பிரான்ஸிற்குத் தலைவரா யிருக்கும் லவால் துரை, பெர்லினுக்குப் போ ருக்கிறாராம். பின்லாந்திலிருந்து மானர்ஹீம் துரையும் ஹிட்லரைத் தரிசிக்கச் சென்றாராம். தனியே நின்றே சாவதையும் கைக்கொள்ளாமை என்ற நிலைமை போய், பக்கம் பக்கத்தில் உள்ளவர்களை யெல்லாம், "அண்ணாத்தே வாங்க ! தம்பி வாங்க ! ஏதாவது 'சம்திங்' உதவியாக அனுப்பித் தாரீங்களா ?" என்று பல்லைக் காட்டிக் கேட்கும் நிலைமை வந்திருக்கிறது ஹிட்லருக்கு.

அவருடைய சகாக்களோ, க்ரீட்டிலும், க்ரீஸிலும், ஸீக் நாட்டிலும், அக்ரமங்கள் பல செய்து வருகிறார்கள். இத்தனைக்கும் இந்த நாஜிகளை எல்லாம் பதில் சொல்ல வைத்தே ஆக வேண்டும் என்று சீமையில் பலர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சீமை என்றதும், அங்கு நடக்கும் பல விஷயங்கள் நினைவிற்கு வருகின்றன. அவற்றில் ஒன்று, சீமையில் பல்லாயிரக் கணக்கிலே தயாராகி வரும் புது மாதிரியான சிறு துப்பாக்கி இதன் தற்போதைய விலை இரண்டு பவுன் தானும். முன்பெல்லாம் சிறு துப்பாக்கிகள் தயாரிப்ப தென்றால் நாற்பது பவுன்களுக்கு மேலே ஆகுமாம். இவ்வளவு குறைவான செலவில், குணமும் குறையாது. இத்தகைய துப்பாக்கி யொன்றைத் தயாரிக்க வழி கண்டு பிடித்திருப்பது ஒரு விசேஷ மல்லவா ?

சென்ற வாரம் சீமையி லிருந்து ஒரே நாளில் ஆயிரம் விமானங்கள், ஜெர்மனியின் இரண்டாவது பெரிய நகரமான பிரமென் நகரிற்கு சென்று குண்டு மாரி பொழிந்து வந்தன. தொடர் நாவல்களை எழுதுவோர் பத்திரிகைகளில் குறிப்பிடுவது போல, இம்மாதிரிப் படையெடுப்புக்கள் 'இன்னும் வரும்' என்றே நாமும் குறிப்பிட விரும்புகிறோம்.

ஐரோப்பாவிலே இரண்டாவது போர்முனையை ஏற்படுத்தியே தீர்ப்பார்கள் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அந்த படை யெடுத்துச் செல்ல, அமெரிக்க, கனடியப் படைகள் அடிக்கடி பிரிட்டனில் வந்து இறங்கிய வண்ணமாக இருக்கின்றன. அந்தப் படைகளுக்குத் தலைமை வகிக்கக் கூட ஆளை நியமித்தாச்சு. அவர் மேஜர் மேஜர் ஜெனரல் ஹோவர். இவ்வளவு ஆன பின் சும்மா இருப்பார்களா ? ஓங்கின கை விழாம லிருக்குமா என்ன ? எப்படியும் இவ்வருஷத்திற்குள் ருஷ்யாவில் போராடிக் கொண்டிருக்கும் எண்ணற்ற நாஜிப் படைகள் நிச்சயமாக வேறு திசையில் திரும்பும்படி செய்யப் படும் என்று அறிவிக்கப் படுகிறது. அது மட்டும் சித்தியானால், அப்புறம் ருஷ்யர்களுக்கும் ஓய்வு கிடைக்கும். அந்த ஓய்வு கிடைத்தால், அவர்கள் தங்கள் பலத்தை நன்றாகப் பெருக்கிக் கொண்டு, ஜெர்மானியருக்கு நல்ல பாடம் கற்பிக்க, மீண்டும் தயாராவார்கள். அதற்குள் ருஷ்யப் பனியும் உதவிக்கு வரக் கூடும்.

பிரிட்டிஷ் விமான உற்பத்தி நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இப்பொழுதே அது ஜெர்மனியின் உற்பத்தி வேகத்தை விட அதிகமாகி விட்டது என்கிறார்கள். சும்மா தன்னைத் தானே அலட்டிக் கொண்டு, தள்ளாடி விழும் பயில்வானைப் போல இருக்கிறது ஜெர்மனி. அந்த பயில்வானோடு நிதானமாக நின்று, சமயம் பார்த்து நாலு குத்து முகத்தில் விட்டு, அவனை எழுந்திருக்க வொட்டாமல் வீழ்த்தும் பயில்வானைப் போலிருக்கின்றன நேச நாடுகள் என்கிறார் ஒருவர். ரொம்ப சரியான உதாரணம் இதை வைத்துக் கொண்டு பார்த்தால், நிதான பயில்வானுக்கு அவ்வப்பொழுது கிடைக்கும் குத்துக்கள் போலவே, நேச நாடுகளுக்கும் அவ்வப்பொழுது கிடைத்து வருகின்றன. அச்சு

நாடுகளை ஒரு தேர்ச்சி பெற்ற பயில்வானுக்கு ஒப்பிடுவதில் தவறு ஒன்று மில்லை. அந்த பயில்வான் குஸ்தி செய்வதையே தொழிலாகக் கொண்டிருக்கிறான். ஆனால் நம்ம பயில்வானோ வேறு நல்ல வேலைகளையும் கவனித்துக் கொண்டிருப்பவன். ஆனாலும் குஸ்தியும் தெரிந்தவன். ஆனால், கொஞ்சம் 'டச்' விட்டுப் போயிருக்கிறது. நாலு 'பஸ்கி' போட்டுக் கொண்டு, கையையும் காலையும் உதறி விட்டு விட்டு, முண்டாவில் ரெண்டு தட்டுத் தட்டி விட்டுக் கொண்டு, தர்ம யுத்தம் செய்கிறோம் என்பதை மனதில் கொண்டு, கிளம்பி விட்டான் என்றால், அப்புறம் தொழில் பயில்வான் பாடு கஷ்டம் தான். அதுவரை கொஞ்சம் சமாளிக்கத் தானே வேண்டும். விழும் குத்துக்களையும் சகித்துக் கொண்டு தானே இருக்க வேண்டும். கடைசி அடி இவனுடையது தான். அதாவது நேச நாடுகளுடையது தான்! அதில் சந்தேகமே வேண்டாம்!

## வருந்துகிறோம்.

போர் முனையில் கீழ்க்கண்டவர்கள் இறந்து போனார்கள் என்னும் செய்தியை வருத்தத்துடன் அறிவிக்கிறோம் :—

'காணாமற் போனவர்' என்று கருதப்பட்ட, இந்திய வைத்திய இலாக்காவைச் சேர்ந்த லெப்டினென்ட் கே. எஸ். இராஜகோபாலாச்சாரி, ஐ. எம். எஸ்.

இந்திய இஞ்சினீரிங் இலாகாவைச் சேர்ந்த சாப்பர்களான 6 603 ம் நெ. கே. நாராயணனும் 62885-ம் நெ. ரங்காவும், 1929-ம் நெ. கூத்தாலிங்கமும் ஜமேதார் 100025 நெ. லட்சுமணனும்.

காணாமற் போனவர்களென்று கருதப் பட்டு இப்போது யுத்தக் கைதிகளாய் எதிரிகள் கையில் சிக்கி யிருப்பவர்கள் :—

**சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 16 21 | சாப்பர். | அகமத் கான். |
| 1:697 | ௸ | சின்னப்பன். |
| 1' 726 | ௸ | தேவராஜ். |
| 14 96 | ௸ | முத்துச்சாமி. |
| 15014 | ௸ | பாஞ்சாலி. |
| 13002 | ௸ | பரசுராமன். |
| 17747 | ௸ | பாதவி. |
| 15192 | ௸ | சுப்பிரமணியம். |
| 17680 | லான்ஸ் நாயிக். | மோகனவேலு. |
| 18915 | நாயிக். | முத்து. |

**இந்தியன் சிக்னல் படை.**

| | | |
|---|---|---|
| ஏ. 2670 | சிக்னல்லர். | ஐ. என். கரியப்பா. |
| ஏ. 2681 | ௸ | சங்குண்ணி நாயர். |
| ஏ. 3615 | ௸ | டி. சூசைநாதன். |
| ஏ. 1764 | பி. லான்ஸ் நாயிக். | ஜி. கேசவ ராவ். |
| ஏ. 1524 | நாயிக். | ஆர். பெருமாள். |

**ஆர். ஐ. ஏ. எஸ். சி.**

| | | |
|---|---|---|
| எம்.'டி./50'674 | சுவீப்பர். | குமாரசாமி. |
| எம்.'டி./895349 | சிப்பாய். | எஸ். குப்புசாமி. |
| எம்.'டி./8953 2 | ௸ | முனுசாமி. |
| எம்.'டி./899541 | ௸ | பொன்னு நாயர். |

### காணாமற்போய் மீண்டும் வந்து சேர்ந்தவர்கள்.

**சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்.**

| | | |
|---|---|---|
| 63163 | சாப்பர். | மாரப்பன். |
| 64116 | ௸ | நாராயணசாமி. |

**இந்தியன் இஞ்சினீர்.**

| | | |
|---|---|---|
| 19066 | லான்ஸ் நாயிக். | ஜான் பொன்னையா. |
| 17536 | சாப்பர். | நடேசன். |
| 60428 | லான்ஸ் நாயிக் | எல். சிவராமன். |

### காயப்பட்டவர்கள்.

**இந்தியன் இஞ்சினீரிங் இலாகா.**

| | | |
|---|---|---|
| 63031 | சாப்பர். | சின்னத்தம்பி. |
| 63658 | ௸ | தனபால். |
| 18072 | ௸ | பிரான்சிஸ். |
| 13944 | ஹவில்தார். | காதர் மொஹிதீன். |

### காயப்பட்டவர்கள்.

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 1883 | மெஸ் வெய்டர். | கிருஷ்ணசாமி. |
| 635 0 | சாப்பர். | முனுசாமி. |
| 18273 | ௸ | சுப்பிரமணியம். |

**சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்.**

| | | |
|---|---|---|
| 63561 | சாப்பர். | நரசிம்மா. |
| 659 2 | ௸ | ராஜு. |
| 13020 | ௸ | அப்துல் கபூர். |
| 60994 | ௸ | முத்துச்சாமி. |

**ஐ. எஸ். சி.**

| | | |
|---|---|---|
| ஏ./1468 | சிக்னல்மான் | ஏ. சங்கையா. |

**ஆர். ஐ. ஏ. எஸ். சி.**

| | | |
|---|---|---|
| எம்.'டி./899433 | சிப்பாய். | பாலகிருஷ்ணன். |
| எம்.'டி./891138 | சிப்பாய் டிரைவர். | என். கருப்பண்ணன். |
| எம்.'டி./899921 | சிப்பாய். | கொமுரு சீதாராமசாமி. |
| எம்.'டி./895861 | ௸ | கிருஷ்ண ரெட்டி. |
| எம்.'டி./896157 | ௸ | பெருமாள். |
| எம்.'டி./920037 | ௸ | ராமன் நம்பியார். |

**ஐ. ஏ. ஓ. சி.**

| | | |
|---|---|---|
| ஓ./109837 | சிப்பாய். | கே. எஸ். பெருமாள். |

**ஐ. ஜி. எஸ். சி.**

| | | |
|---|---|---|
| ஜி.எஸ் எப்./5254 | எம்./டபுள்யூ. | முனுசாமி. |
| ஜி.எஸ்.எப்./9484 | மெஸ் வெய்டர். | பெரியண்ணன் சாமி. |

**இந்தியன் ஆர்டில்லெரி.**

| | | |
|---|---|---|
| | சுபேதார். | அழகிரிசாமி. |

### காணமற்போனவர்கள்.

**ஐ. எம். டி.**

| | | |
|---|---|---|
| | ஜமேதார். | எஸ். ஜி. பாண்டியா. |

**சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்.**

| | | |
|---|---|---|
| 64569 | சாப்பர். | கே. ஆர். பாலகிருஷ்ண பிள்ளை. |
| 19608 | ௸ | குட்ல அப்பாராவ். |
| 17208 | லான்ஸ் நாயிக். | ஜோசப். |
| 19896 | சாப்பர். | மருத பிள்ளை. |
| 64213 | ௸ | முகமத் ஹூஸெயின். |

**இந்தியன் ஆர்டில்லெரி.**

| | | |
|---|---|---|
| | டி. காப்டன். | ஏ. எஸ். நாராயணே. |

### யுத்தக் கைதியானவர்.

**ஐ. எம். டி.**

| | | |
|---|---|---|
| | அஸிஸ்டெண்ட் சர்ஜன். | இ.பி. பெரைரா. |

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஆண்டு ஜூலை மீ 10உ, வெள்ளிக்கிழமை [இதழ் 27

## வீண் புகார்களுக்கு ஹலிபாக்ஸ் பதில்.

### பிரிட்டன் செய்த அருமையான வேலைகள்.

சமீபத்தில், சில புள்ளி விவரங்களை, லார்டு ஹலிபாக்ஸ், அமெரிக்கர்களுக்குத் தெரிவித்திருக்கிறார். யுத்தத்தினாலும், யுத்தமாடும் முயற்சியினாலும் பிரிட்டன் எவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளாகி யிருக்கிறது என்று அதில் தெளிவாகக் குறிப்பிடுகிறார். பிரிட்டன் தன் கடமைகளைச் சரிவரச் செய்ய வில்லை என்று முணுமுணுத்துக் கொண்டிருக்கும் ஒரு சிலருக்கு, இது தகுந்த விடையாகும். அச்சு நாடுகளின் பிரசாரத்திற்கு ஆளாகிறவர்கள் தவிர, மற்றவர்களெல்லாம் இதைக் கேட்டால், அவர்கள் மனதில் இது தைக்கும்.

**பிரிட்டிஷ் படைகள் வேலை.**

பிரிட்டிஷ் படைகள், ஜெர்மனிக்கும், இத்தாலிக்கும் சொந்தமான 9,396 விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. எதிரிகளுக்குச் சொந்தமான 5,250,000 டன் வியாபாரப் பொருள்களை ஏற்றிப் போன கப்பல்களை மூழ்கடித்தன. 1941-ம் வருஷம் பிரிட்டனின் மொத்த வரும்படியில் 100-க்கு 60 பங்கு யுத்தத்தின் பொருட்டு செலவு செய்தது. இந்த வருஷத்தில் பிரிட்டன் தனித்து நின்று போராடியது. எந்த நாடும் செய்ய முடியாத ஒரு செயல் இது. என்றாலும், இதை, பொதுவாக எல்லாரும் மறந்து விட்டார்கள். 1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பிரான்சு தேசம் சரணாகதி யடைந்தது முதல், 1941-ம் வருஷம் ஜூன் மாதம் ருஷ்யாவை நாஜிகள் தாக்குகிற வரையிலும், உலக விடுதலைக் கோட்டைகளை பிரிட்டன் தனித்து நின்றே போராடிக் காத்துக் கொண்டிருந்தது. அந்த வருஷம் ஜெர்மனி யோடும் இத்தாலி யோடும் போராடியது. பிரஞ்சு கப்பல் படைகளின் போக்கு வரவுகளையும் விச்சி சர்க்காரின் மோசத் தனத்தையும் கண்காணித்துக் கொண்டிருந்தது. கீழ்க் கோடியில் வளர்ந்து கொண்டு வரும் ஜப்பானிய ஆதிக்கத்தை வெட்டி, முக்கியமான தளங்களை ஜப்பானியர்கள் நெருங்க ஒட்டாத படியும், சப்ளைகள் போய் ஜப்பானுக்குச் சேர ஒட்டாதபடியும் செய்தது. மத்திய தரைக கடல் பாது காப்புத் தான் மிகவும் சிக்கலானதா யிருந்தது. லிபியாவி லுள்ள அகலமான பாலை வனத்தை தனியாகப் பாது காக்க வேண்டி யிருந்தது. அமெரிக்க கப்பல்கள் போக்கு வரவுப் பாதைகளைப் பாது காக்க வேண்டிய பொறுப்பும் பிரிட்டிஷ் கப்பல் படைக்கு ஏற்பட்டது. இவை எல்லாவற்றையும் விட மிக்க கடுமையான எதிர்ப்பு ஜெர்மன் விமான எதிர்ப்புத் தான்.

ஹலிபாக்ஸ் பிரபு, பிரிட்டன் மீது அமெரிக்கர்கள் பரிதாபம் கொள்ள வேண்டும் என்பதற்காக, அந்தக் கடுமையான வருஷத்திய சம்பவங்களைக் குறிப்பிட வில்லை. 1940-ம் வருஷக் கடைசியில் ஜெர்மானியரின் திமிர் விமானப் படைகள், மிருகத் தனமாக இங்கிலாந்தை, குறிப்பாக லண்டன் நகரத்தையும் பார்லிமெண்ட் கட்டிடங்களையும் வெஸ்ட் மினிஸ்டர் அபியையும் தாக்கினார்கள். 1941-ம் வருஷத்திய வெயில் காலத்தில் பால்கன் மீது ஜெர்மனி பாய்ந்தது மனதைப் பிளக்கிறது. அப்போது இங்கிலாந்து யூகோஸ்லேவியா விற்கும் கிரீசுக்கும் உதவிக் கொண்டிருந்தது.

**வெள்ளத் திற்கு முன் அணை.**

பிரிட்டன், வெள்ளத்திற்கு முன் அணை கோலியது. அந்த வருஷம் அமெரிக்கக் கடன் மசோதா நிறைவேறியது. தாங்க முடியாத கடும் போரி லிருந்து, ருஷ்யப் படைகள் பிரிட்டிஷ் படைகளுக்குச் சற்று ஓய்வு கொடுத்தன. டன்கர்க்கை எதிரிகள் பிடித்து 12 மாதங்களாகியும் கூட, பணக்கார வெள்ளத்தில் பிரிட்டன் சிக்க வில்லை. அதாவது பணக்காரர்களின் கடுமையான ஆட்சிக்கு பிரிட்டன் உள்ளாக வில்லை. ஒரு வருஷம் வரையில் பிரிட்டன் தனிமையாகப் போராடிக் கொண்டிருந் திரா விட்டால், விடுதலைக் கோட்டைகளாக இருக்கும் ஒவ்வொரு ஊரும் எதிரிகள் வசப் பட்டிருக்கும்.

## லிபியா இரண்டாவது போர் முனை

லண்டனிலிருந்து வெளி வரும் "சண்டே டைம்ஸ்" என்னும் பத்திரிகை எழுதுவதாவது :—

ஒரு பெரிய யுத்தத்தின சம்பவங்களைக் குறித்து பரிசீலனை செய்ய வேண்டு மானால், முதலில் உலக நிலைமையைக் குறித்து ஆராய வேண்டும்; இரண்டாவதாக, இதை யொட்டிய முக்கியத்துவத்தையும் கொள்கையையும் நிர்ணயிக்க வேண்டும். மூன்றாவதாக, கடைசியாக என்ன செய்வது பொருத்தமாகும் என்று முடிவு கட்ட வேண்டும். யுத்த தந்திர முறைப்படி, ஏக காலத்தில் க்ரைமியாவையும் லிபியாவையும் தாக்குவதனால், என்ன பலன் ஏற்படும் என்பது பற்றி, ஜெர்மானியர்களின் கருத்து என்ன என்று கவனிப்போம். கருங் கடலிலும், மத்திய தரைக் கடலிலும் ஜெர்மானியர்கள் ஆதிக்கம் பெற வேண்டும்; துருக்கியைத் தனியாகப் பிரித்து விட வேண்டும்; தம் யுத்தக் கப்பல்களும் வியாபாரக் கப்பல்களும், தடை யில்லாமல் ஜல சந்தியில் போக வர வசதிகள் தேடிக் கொள்ள வேண்டும். காகஸஸ் மலைகளையும் அதை யடுத்திருக்கும் எண்ணைக் கிணறுகளையும் மத்திய கிழக்கி லுள்ள எண்ணைக் கிணறுகளையும் கைப்பற்றுவதற்காக முன்னேறிப் போக, புதிய வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். இவை தான் ஜெர்மானியர்கள் கருத்து.

எகிப்து யுத்தத்தில் ஜெர்மானியர்கள் தோற்று விடுவார்களானால், இவர்களுடைய எண்ணத்தில் மண் விழுந்து விடும். வாஷிங்டனில் அமெரிக்கக் காங்கிரஸ் தலைவர்களுக்கு மிஸ்டர் சர்ச்சில் கூறியிருக்கும் வாக்குறுதிகளில் ஊக்கமும் நம்பிக்கையும் உண்டாகின்றன. உண்மையான விவரங்கள் அவருக்குத் தான் தெரியும்.

பொதுவாக யுத்தச் சம்பவங்களை ஆராயும் போது, லிபியா யுத்தத்தில் தோல்வி ஏற்பட்ட போதிலும், அது ஒரு இரண்டாவது போர் முனையாக உதவியது. இதனால் ரஷ்யப் படைகளுக்கு இலாபம். முதலாவதாக ஜெர்மானியர்களின் பான்சர் டிவிஷன்கள், புது மாதிரி டாங்கிகள், டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள் முதலிய யுத்தத் தளவாடங்கள் ஆகியவற்றை லிபியா யுத்தத்திற்கு ஜெர்மானியர்கள் கொண்டு போனதனால், ரஷ்யர்களை ஜெர்மானியர்கள் தாக்கும் கொடுமை, சற்று தணிந்திருந்தது. இரண்டாவதாக, லிபியா யுத்தத்திற்காக ஏராளமான விமானங்களை ஜெர்மானியர்கள் உபயோகிக்க வேண்டி யிருந்தது; அல்லாமலும், அச்சு நாடுகளின் போக்கு வரவுகளை மால்டாவிலிருந்து கொண்டு தடை செய்யும் பிரிட்டிஷ் விமானங்களோடு போராடவும் ஜெர்மானியருக்கு விமானங்கள் ஏராளமாகத் தேவையா யிருந்தன.

ஆகையினால் லிபியா இரண்டாவது போர் முனையாக உதவியது.

# யுத்த முயற்சிகளுக்கு உதவும் யோசனைகள்

## ஆராய்ச்சிக்கான விஷயங்கள்

சென்ற 3 மாதங்களுக்குள், தலைமை இராணுவக் காரியாலயத்தைச் சேர்ந்த சப்ளை டெவலப்மெண்ட் கமிட்டியாருக்கு, யுத்த முயற்சிகளுக்கு உதவத் தக்க 270 யோசனைகள் வந்திருக்கின்றன. இவற்றில் 12 யோசனைகளை ஏற்றுக் கொண்டு பாதுகாப்பு முறைகளில் உபயோகிக்கிறார்கள். 7 முறைகளை இந்தியாவிலேயே சோதித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் சோதிக்கும் பொருட்டு 10 யோசனைகளை இங்கிலாந்திற்கு அனுப்பி யிருக்கிறார்கள். மற்றும் இந்தியாவிலுள்ள, தொழில் நிபுணர்களடங்கிய ஸ்தாபனங்களில் 123 யோசனைகளைக் குறித்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியர்கள் அனுப்பிய யோசனைகளில் 100-க்கு 10 விகிதம் உபயோகப் பட்டன; ஆனால், இங்கிலாந்தி லுள்ளவர்கள் அனுப்பிய யோசனைகள் 400-க்கு 1 விகிதந் தான் உபயோக மாயின. இவற்றில் பெரும்பாலும் இராணுவப் பழக்கம் இல்லாதவர்கள் அனுப்பியவை. ஒரு பாதிக்கு மேல், விமானங்கள், வெடிகுண்டுகள், டாங்கிகள் முதலியவை பற்றியன. இவை எல்லாம், இப்போது நடக்கும் யுத்த அனுபவங்களைக் கொண்டு, எல்லா நாட்டாரும் ஆராய்ந்து வருகின்றார்கள். இந்த அனுபவம் இராணுவத்தைச் சாராதவர்களுக்குக் கிடையாது. ஆகையால், இவர்களுடைய ஆராய்ச்சி வீணாகாமல் போக வேண்டி, 3 விஷயங்களைக் குறித்து மட்டும் இவர்கள் ஆராய்ச்சி செய்வது நல்லது என்று சப்ளை டெவெலப்மெண்ட் கமிட்டியார் நினைக்கிறார்கள்.

முதல் விஷயம், ஒரு பொருளுக்குப் பதிலாக வேறொரு பொருளை உபயோகிக்கும் முறையைக் கண்டு பிடிப்பது. சில பொருள்கள் கிடைப்பது கஷ்டமா யிருக்கிறது. அந்தப் பொருளின் உபயோகத்தைக் குறைக்க வேண்டும்; அல்லது அதற்குப் பதிலாக வேறொரு பொருளை உபயோகிக்கும் முறையைக் கண்டு பிடிக்க வேண்டும். இது மிகவும் உபயோகமான வேலையாகும். இரண்டாவது விஷயம், பிரயோசன மில்லாது எறிந்து விடக் கூடிய பொருள்களை உபயோகிக்க வேண்டும். இது சம்பந்தமான புதிய யோசனைகள் நம் நாட்டிற்கு மிகவும் உபயோகமா யிருக்கும். மூன்றாவது விஷயம், நம் நாட்டில் இயற்கையாகக் கிடைக்கும் மூலப் பொருள்கள், உலோகங்கள், செடி கொடி மரங்கள் முதலியவற்றை உபயோகிக்கும் முறைகளைக் கண்டு பிடிப்பது. சில பொருள்கள் செய்வதற்கு முடியாமல் இருந்த போது, ஒரு வகைப் புல், அதைச் செய்வதற்கு உதவியது. இந்தப் புல் இந்தியாவின் சில பாகங்களில் ஏராளமாக முளைக்கின்றது. இப்படிப் பட்ட ஆராய்ச்சிகளால் நமக்கு மிகுந்த நன்மை யுண்டு.

ஒவ்வொரு, போர்வீரரும் அணிந்து கொண்டிருப்பவற்றையும், சுமந்து கொண்டு போகும் பொருள்களையும், கன மில்லாமல் இலேசாக்கவோ, மாற்றியமைக்கவோ ஆராய்ச்சி செய்யலாம். இப்படிப் பட்ட ஆலோசனைகள் ஏதேனும், இருந்தால், உடனே அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டுமே யொழிய, தம் யோசனையைப் பரீட்சிக்க முயற்சிக்கக் கூடாது. கமிட்டியார் அதைப் பற்றி ஆலோசனை செய்து தகுந்தபடி இருந்தால், ஏற்றுக் கொள்ளுவார்கள்.

இந்தக் கமிட்டி ஏற்பட்டதே போன வருஷக் கடைசியில் தான். போர்வீரர்களுக்குத் தேவையான உடுப்புக்கள் முதலியவை பற்றியும் ஸ்டோர் சாமான்களைப் பற்றியும் ஆலோசிப்பதும், புதிய முறைகளைக் கண்டு பிடிப்பதும், புதிய கருத்துக்களை முன்னேற்றுவதும் தான் இக்கமிட்டியார் வேலை.

புதிதாக யாராவது ஏதேனும் கண்டு பிடித்தால், அவர்களைப் பாராட்ட வேண்டியது இக் கமிட்டியின் வேலை. ஒரு ஆராய்ச்சிக் காரருடைய யோசனை ஒப்புக் கொள்ளப்பட்டால், உடனே அவருக்குக் கமிட்டியார் ஒரு கடிதம் எழுதுவார்கள். இந்தக் கடிதத்தை ஆதாரமாகக் கொண்டு, தாம் கண்டு பிடித்ததை, யுத்தம் முடிந்த பிறகு பேடெண்ட் பதிவு செய்து கொள்ளலாம்; அல்லது அதற்கு ஈடாக இனும் தொகை பெற்றுக் கொள்ளலாம்.

புதிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும், புதிய டில்லி, ஹைதராபாத் அரண்மனை, ஜெனரல் ஹெட் குவார்டர்ஸ், சப்ளை டெவெலெப்மெண்ட் கமிட்டி காரியதரிசி என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

# கமிஷன் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந் தெடுக்கும் முறை

இந்தியத் தரைப் படை, விமானப் படை, கப்பல் படை ஆகியவற்றிற்கு கமிஷன் உத்தியோகஸ்தர்களை விரைவாகத் தேர்ந் தெடுக்க வேண்டி யிருக்கிறது. இதற்காக மூன்றாவது மத்திய போர்டு ஒன்றை நியமிப்ப தென்று முடிவா யிருக்கிறது. இந்த போர்டார், அபேட்சகர்களைக் கண்டு தேர்ந் தெடுப்பார்கள். இதன் பொருட்டு, வடக்கு, மத்திய, தெற்கு இந்தியா வென்று மூன்று டிவிஷன்களாக இந்தியாவை வகுத் திருக்கிறார்கள்.

வட டிவிஷன் போர்டு டேரா டூனிலும் மத்திய டிவிஷன் போர்டு ஜபல்பூரிலும், தென் டிவிஷன் போர்டு பூனாவிலும் ஜூலை மாதம் 6-ம் தேதி முதல் வாரங்கள் வரையிலும் கூடும். விமானப் படை அபேட்சகர்களை விமானப்படை வைத்திய போர்டார் ஜூலை 6, 7, 8 தேதிகளில் டேரா டூனிலும், ஜூலை 2 முதல் ஆகஸ்ட் 2-ம் தேதி வரை ஜபல்பூரிலும் ஆகஸ்ட்டு 8 முதல் 18-ம் தேதி வரையிலும் பூனாவிலும் பரீட்சை செய்வார்கள்.

# முக்கியமான கஷ்டம் நீங்கியது

## இரத்தம் உதவுகிறவர்கள் தேவை

விமானத் தாக்குதல்கள் நேர்ந்தால் அதனால் காயப்பட்டு இரத்தம் அதிகமாகச் சேதமாகலாம். அப்போது பிறருடைய இரத்தத்தைப் புகுத்தி காயப் பட்டவர்களின் உயிர் போகாமல் காப்பாற்றலாம். இதன் பொருட்டு இரத்தத்தைச் சேகரித்துச் சேமித்து வைப்பதற்குத் தகுந்த முறை தெரியா திருந்தது. இப்போது, அந்த முறையைக் கண்டு பிடித்து விட்டார்கள். இந்த முறையைக் கொண்டு இரத்தம் கெட்டுப் போகாதபடி வெகு நாட்கள் வரை வைத்திருக்கலாம். ஆனால் இரத்தங் கொடுத்து உதவுகிறவர்கள் தான் இப்போது தேவை.

இந்தியாவில் பல பகுதிகளில் இரத்தத்தை சேகரித்துப் பதப் படுத்தி வைத்திருக்கிறார்கள். வெளி நாடுகளி லிருந்தும் வந்திறங்குகின்றது. இதன் பொருட்டு இங்கிலாந்தில் இரண்டு மிஷின்கள் இப்போது வேலை செய்கின்றன. மற்றொரு மிஷின் இந்தியாவிற்கு வந்து கொண்டிருக்கிறது.



# இந்தியாவில் டின் உணவுகள் தயாரிப்பு.

## இறக்குமதி நின்று விட்டது.

முன்பை விட இப்போது அதிகமாக டின் உணவுகள் போர் வீரர்களுக்கு அனுப்ப முடிகிறது. சென்ற மகா யுத்தத்தின் போது பசுக்களை இந்திய வி லிருந்து ஏற்றுமதி செய்யும் போது, ஏராளமான ஆட்சேபனைகள் கிளம்பின. இப்போது பால் கட்டி, காய்ந்த பழங்கள், காய்கறி சத்துக்கள், உருளைக் கிழங்கு, கோழிக் குஞ்சு சத்து ஆகியவற்றை தகுந்தபடி இந்தியாவிலேயே பதப் படுத்தி தகர டப்பிகளில் அடைத்து அனுப்புகிறார்கள். யுத்தத்தினால் சோர்வடைந்திருக்கும் வீரர்களுக்கு இவை தகுந்த ஆகாரமாய் உதவுகின்றன.

காய்ந்த பழங்கள் 4,000 டன்களும், 300 முதல் 400 டன் பால் கட்டியும், 23,000 டன் உருளைக் கிழங்கும், 62,000 இலந்தை அடையும் 1,000 டன் காய்கறி சத்தும், 5,000 டன் உயர்ந்த ஷர்பத்துகளும் வருஷந் தோறும் சப்ளை செய்ய முடியும். இந்தப் புதிய கைத்தொழில்கள் ஏற்பட்டு விட்ட படியால், இனி இவை இங்கே இறக்குமதியாகா.

## சபாஷ்! வெற்றி வீரா!



ஜெர்மனிக்குச் சொந்தமான ப்ரெஸ்ட் துறைமுகத்தைத் தாக்கி நாசப் படுத்தித் திரும்பிய இந்த விமானத்தை, 7 எதிரி விமானங்கள் வந்து தாக்கியுங் கூட, பல காயங்களுடன் மீண்டும் இங்கிலாந்திலுள்ள தன் இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டது.

# "கொள்ளை யடிப்பதே ஜப்பானியர் நோக்கம்"

## யுத்தம் நின்ற வுடன் வியாபரம் ஆரம்பம்

"ஆசியா ஆசியாக் காரர்களுக்கே" என்னும் சித்தாந்தம் பிரமாதமாக அமர்க்களப்படுகிறது. இதற்கு ஜப்பானியர்கள் செய்திருக்கும் அர்த்தம் என்ன தெரியுமா? ஜப்பானியர்கள் கைப்பற்றி யிருக்கும் நாடுகளில் இது மிகத் தெளிவாக விளங்குகிறது என்று "நியூ யார்க் டைம்ஸ்" என்னும் பத்திரிகை 1942-ம் ஜூன் 26உ வெளியீட்டில் குறிப்பிட் டிருக்கிறது.

தாம் கைப்பற்றிய நாடுகளையே ஜப்பானியர்கள் கொள்ளை யடிக்கிறார்கள் என்றும் தம் கலைகளை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துகிறார்கள் என்றும் பொது மக்களின் பொருளாதாரத்தைக் கட்டுப் படுத்துகிறார்கள் என்றும் வெளி நாடுகளி லிருந்து கிடைக்கும் ரேடியோச் செய்திகளை, வாஷிங்டன் யுத்தத் தகவல் உத்தியோகஸ்தர் திரட்டி யிருக்கிறார். இவர் மேலும் கூறுவதாவது:—

பர்மாவிலும், மலேயாவிலும், நெதர்லாந்து இந்தீவிலும், ஜப்பான் சேனைகளை யடுத்து, பிரசாரகர்களும், பாங்கர்களும், கைத்தொழில் முதலாளிகளும், வியாபாரிகளும் வந்தார்கள். புதிதாகக் கைப் பற்றப் பட்ட நாடுகளை ஆள வேண்டி ஜப்பானியர்களின் நன்மைக்காக அந்நாடுகளின், இயற்கைப் பொருள்களைக் கொள்ளை யடிப்பதில் விசேஷப் பாடங்கள் படித்த ஒரு சில சிவில் உத்தியோகஸ்தர்களும் வந்தார்கள்.

போர்க் களத்தின் புகைச்சல் போகு முன்பாகவே, 'க்ரேட்டர் ஈஸ்ட் ஏஷியா டெவெலெப்மெண்ட் கார்ப்பொரேஷன்' என்னும் ஜப்பான் கம்பெனியார் அங்கே தமக்கு ஏற்ற இடங்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். யோக்கஹாமா ஸ்பீஷி பாங்கியின் ஏஜெண்டுகள் வந்து இறங்கினார்கள்; அந்நாடுகளின் கைத்தொழில், பாங்கி, வியாபாரம் ஆகியவற்றை கைப்பற்றிக் கொண்டார்கள். ஜப்பானியருடைய இராணுவ நாணயங்கள் தான் இப்போது செல்லுபடி யாகின்றன. ஏற்கெனவே உள்ள நாணயங்கள் செல்லாக் காசுளாகி விட்டன. வாங்கக் கூடியது எதுவாக இருந்தாலும், ஜப்பானியர் தம் புதிய நாணயங்களைக் கொண்டு அவற்றை வாங்கி விடுகிறார்கள்.

இது, இப்போது, ஒரு சர்வ சாதாரணமான தோர் முறையாகி விட்டது. சீனாவின் ஒரு சில பகுதிகளைக் கைப்பற்றி வாங் சிங் வெய் பொம்மை சர்க்காரை ஜப்பானியர்கள் நியமித்தது முதல், "ஆசியா ஆசியாக் காரர்களுக்கே" என்னும் வாக்கியத்திற்கு அர்த்தம் 'ஆசியா ஜப்பானியர்களுக்கே' என்னும் பொருளைத் தான் தருகிறது என்று அந்தப் பத்திரிகை தன் தலையங்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

# சீ னருக் கு ஜே!

ஒரு பெரிய காலாடி. அவன் என்னடா என்றால், வெளியூர்களில் எல்லாம் போய் அட்டகாசம் செய்கிறான். வீண் சண்டை போடுகிறான். கரட்டு வழக்கு ஆடுகிறான். தனக்குச் சொந்தமில்லாத பொருள்கள் மீதெல்லாம் கை போடுகிறான். இப்படிப் பட்ட ஒருவனை, எங்காவது சரியாக நையப்புடைத்து, கையையும், காலையும் முடக்கி அனுப்பி விட வேண்டுமென்று பலர் காத்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் காலாடிக்கு, ஊரிலே காசுத் திமிர் அதிகமாக இருக்கிறது. அதனாலே அவனுக்கு மண்டைக் கனம் அதிகமாக இருக்கிறது. இந்தக் காசு இருப்பதால், எது வேண்டுமானாலும் செய்யலாம் என நினைத்துக் கொண்டிருக்கிறான் அவன். ஆகவே, இந்தக் காலாடியை வெற்றிகரமாக அடுக்குவதற்கு, அவனுடைய கையில் உள்ள காசு சீக்கிரமே கரைந்து போகும்படி செய்து விட வேண்டும். கையிலே காசு இல்லாவிட்டால், ஆசாமி தானாகவே பெட்டிப் பாம்பாக ஆகி விடுவான் அல்லவா?

இந்தக் காலாடியைப் போலவே இருந்து வருகிறது ஜப்பான். பல வருடங்களாகவே, அதி ரகசியமாகவே, ரப்பர் பொம்மை செய்கிறேன். பலூன் தயாரிக்கிறேன், தம்பிடிக்கு மூன்றாக விற்கக் கூடிய 'அம்ஜி' சாமான்களை உற்பத்தி செய்கிறேன் என்ற பெயரில், யுத்தத்திற்கு வேண்டிய சாமான்களை மளமளவெனச் சேகரித் திருக்கிறது. இப்பொழுது திடீரென தன் சுய ரூபத்தைக் காட்டிக் கொண்டு, பெரிய யுத்தத்தில் இறங்கி தெற்கே வெகு தூரம் சென்று பர்மா, மலேயா, சிங்கப்பூர், ஜாவா, பிலிப்பைன்ஸ் ஆகிய பிரதேசங்களை எல்லாம் நியாய மில்லாமல் கையாண்டு விட்டது. இன்னும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. ஆஸ்திரேலியா மீதோ, ருஷ்யா மீதோ, எங்கோ ஒருபுறம் அது அடுத்தபடி பாயக் கூடும் என்ற நிலைமையி லிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம், அதற்கு தன் சொந்த நாட்டில் உள்ள ஆயுத பலமும், பிடித்த நாடுகளில் கிடைத்த உபயோகமான பொருள்களும் தான்.

ஜெர்மனியைப் போலவே ஜப்பானும் பேராசை கொண்டு, தனது நாட்டு மக்களை, ஈக்களைப் போல் மடிய விட்டுக் கொண்டு, தன் சொந்த நாட்டை விட்டு வெகு தூரத்திற் கப்பால் தன் நாட்டு வீரர்களை அனுப்பி யிருக்கிறது. ஆனால், ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் ஒரு வகையில் வித்தியாசம் இருக்கிறது. ஜெர்மனி பிடித்த நாடுகளில் எல்லாம் ஆயுத உற்பத்தி சாலைகளும், அந்த ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப் பொருள்களும் கிடைத்தன. ஆனால், ஜப்பானுக்கோ, ரப்பர், டின் போன்ற பொருள்கள் மட்டுமே கிடைத்ததே ஒழிய, அங்கங்கே பெரிய தொழிற்சாலைகள் எதும் கிடைக்க வில்லை. ஒவ்வொரு பொருளையும், பல ஆயிர மைல்கள் கடந்து சென்று, தன் சொந்த நாட்டிற்கு எடுத்துப் போய், அங்கு சுத்தப்படுத்தி, விமானம், பீரங்கி, ரப்பர் டயர், மோட்டார் எல்லாம் தயாரிக்க வேண்டி யிருக்கிறது. இதெல்லாம் இந்தக் காலத்திலே, லேசான காரியமா என்ன? எப்படியோ இந்தக் கஷ்டமான காரியத்தையும் ஜப்பான் செய்து வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை இப்படியே விட்டு வைத்திருப்பது நல்லதா? நல்ல தல்ல தான்! முதலில், அதன் ஆயுத பலம் குறைய வேண்டும். அதனுடைய தொழிற்சாலைகளுக்கு ஆபத்தை உண்டாக்க வேண்டும். இந்த இரண்டு காரியங்களில், முதல் காரியத்தைச் செய்து முடிப்பதில் ஜப்பானுக்கு அருகில் உள்ள சீன தேசம் மும்முரமாக முனைந் திருக்கிறது. ஜப்பானிய வீரர்களில், டல்லாயிரக் கணக்கானவர்களை சீனர்—ஜப்பானிய யுத்தம் சீனாவிலேயே முடக்கி வைத்திருக்கிறது. சீனாவில் உள்ள விமான நிலையங்களைக் கண்டு, ஜப்பான் எப்பொழுதும் திகிலடைந்த வண்ணமாகவே இருக்கிறது. நேச நாட்டினர் சீனாவைத் தாண்டு மிடமாகக் கொண்டு, தன் நாட்டைத் தாக்க முயலக் கூடும் என்ற பீதி எப்பொழுது மிருக்கிறது.

இதனால் எல்லாம் என்ன பிரயோசனம் என்று கேட்கலாம்? ஜப்பான் சேகரித்து வைத்திருக்கும் அளவற்ற ஆயுதங்களையும், அதன் பிரமாதமான யுத்த முஸ்தீப்புகளையும் மனதில் கொண்டு, ஜப்பானுடைய எதிர்ப்பை சீனா மட்டும் சமாளித்து நின்றிரா விட்டால், என்ன ஆயிருக்கும் என்பதை மனதால் நினைத்துப் பார்த்தோமானால், இதனால் எல்லாம் என்ன பிரயோசனம் என்பது தெளிவாகத் தெரியும்? அப்புறம் ஜப்பானைக் கட்டிப் பிடித் திருக்க முடியுமா? ருஷ்யாவிலேயும், வட ஆபிரிகாவிலும் நடந்து கொண்டிருக்கும் பயங்கரமான போர்களைச் சமாளிப்பதிலேயே நேசதேசத்தார் முனைந்திருக்கிறார்கள். நம்மைத் தட்டி அடக்க யாரும் வர மாட்டார்கள் என்ற திமிரின் பேரில் தானே, ஜப்பான் தெற்கே கிளம்பி தன் வாலை ஆட்ட ஆரம்பித்தது. இப்படிப் பட்ட சமயத்தில், அதாவது கீழ்த் திசையைப் பற்றிப் பூரணமாக, நேசநாட்டினர் கவனிக்க முடியாம லிருக்கும் சமயத்திலே, நேசநாட்டினருக்கு, சாத்தியமான வரை உதவி புரியும் வகையில், ஜப்பானியரை மடக்கி நிறுத்திக் கொண்டிருந்தது சீனா தானே?

இந்த சீனா, இப்படி யெல்லாம் தொந்தரை கொடுக்கும் என்பதை முன் கூட்டியே அறிந்து தான், ஜப்பான், இந்த உலக யுத்தம் ஆரம்பமாவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னாலேயே, சீனா மீது போர் தொடுத்தது. சீனா வெறும் பல மற்ற தேசம், அதை எளிதில் நசுக்கி விடலாம். அப்புறம் நமது மனக் கோட்டை உண்மையாகி, உலகோரே நம்மைக் கண்டு பயப்படும் நிலைமை ஏற்பட்டு விடும், கீழ்த் திசைக்கு நாமே ராஜா என்று கனவு கண்டு கொண்டிருந்தது. அந்தக் கனவை நனவாக்க விடாது தடுத்த பெருமை, சீனாவையே சேரும். ஒன்றல்ல இரண்டல்ல, ஐந்து வருட காலங்கள் கழிந்து விட்டன சீன-ஜப்பானிய யுத்தம் ஆரம்பமாகி, ஆறாவது வருடமும் பிறந்து விட்டது. இன்னும் இந்த யுத்தத்திற்கு ஒரு முடிவை ஜப்பான் கண்ட பாடில்லை. வெளி நாட்டினரின் உதவி அதிகம் இல்லாமலிருந்த ஆரம்ப காலத்திலேயே, ஜப்பானால் சீனாவை ஜெயிக்க முடியவில்லை. ஏதோ கடற்கரைப் பிரதேசங்களிலே சில பாகங்களை மட்டும் அது ஆக்ரமித்துக் கொள்ள முடிந்தது. ஆனால், நாளடைவில் சீனாவிற்கு நேசநாட்டினரது உதவி சிறு துளியி லிருந்து பெருவெள்ளமாகப் பெருகிச் சென்றது. ஜப்பானின் பாடும் திண்டாட ஆரம்பித்து விட்டது. ஒரு புறம் ஜெயித்தால், மறு புறம் பின் வாங்க வேண்டி நேரிடுகிறது. நாளுக்கு நாள் போரின் தன்மை கடுமையாகி வருகிறது. சில இடங்களில் விஷ வாயுவைக் கூட ஜப்பானியர் பிரயோகித்தார்கள் என்று கூறப் பட்டது. தன்னுடைய நேரடியான யுத்தத்தாலே எதிரியை ஜெயிக்க முடிய வில்லை என்ற நிலைமை ஏற்படும் போது தானே, ஒருவன் அதர்ம வழியைக் கையாளத் தொடங்குவான்? அந்த வகையிலே, ஜப்பானியர் விஷ வாயுவைப் பிரயோகித்ததைப் பார்த்தால், அவர்களது ஜம்பம் சீனரிடம் சாயவில்லை என்று தானே தெரிகிறது?

சீனா ஒரு பெரிய தேசம். அதன் ஜனத்தொகையும் அதிகம். ஆனாலும் அதற்கு ஆயுத பலம் குறைவு. உள நாட்டிலே ஏகபோகப் பூசலும், வறுமையும் மிகுந்திருக்கிறது. இதை யெல்லாம் எப்படியோ சமாளித்துக் கொண்டு, சீனர்களை ஒன்று கூட்டி, என்ன வந்தாலும் அக்ரமமாக நம்மை அடக்கியாண்டு, நம் நாட்டைக் கவரப் பார்க்கும் ஜப்பானியருக்கு நம் நாட்டில் இடங் கொடுக்கக் கூடாது என்ற தீர்மானத்துடன், ஜப்பானியரை எதிர்க்கத் துணிந்த பெருமை, வீர மார்ஷல் சியாங் கே-ஷேக் தம்பதிகளையே சாரும். தங்கள் சக்திக்கு மிஞ்சியே சீனர் அதி வீரத்துடன் போராடி வருகிறார்கள். பயமென்பதே அவர்களது உள்ளத்தை விட்டு ஓடி விட்டது. சாவிற்கு அஞ்சவில்லை அவர்கள் ஜப்பானியன் என்றாலே மண்டையை உடைக்க வேண்டும் என்ற மனப் பான்மை ஒவ்வொரு சீனன் மனதிலும் வேரூன்றி விட்டது. அவர்களுக்கு வேண்டிய தெல்லாம் விமானங்களும், யுத்தத் தளவாடங்களும் தான். சீனாவிலேயே எல்லாவற்றையும் தயாரிக்க வசதிகள் இல்லை. இனிமேல் அங்கு தொழிற்சாலைகளைக் கட்டி முடித்து, ஆயுதங்களை, உற்பத்தி செய்வ தென்பதும் லேசல்ல. ஆனாலும், சீனர்களின்



ஊக்கம் குறையவில்லை. எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியிலே, தம் நாட்டிலேயே துப்பாக்கிகளையும், கையால் வீசும் வெடி குண்டுகளையும் தயாரிக்க ஏற்பாடு செய்து விட்டார்கள். ஆனால் இந்த நவீன யுத்தத்தை, வெறும் துப்பாக்கிகளையும், கைகுண்டுகளையும் கொண்டு நடத்த முடியுமா? அதற்கே வெளி உதவி அவசியமாக வேண்டும் என்பது. ரூஸ்வெல்ட்டும், சர்ச்சிலும் இந்த உண்மையை அறியாம லில்லை. சீனாவிற்கு, சாத்தியமான வரை உதவி அனுப்ப அவர்க ளிருவரும் சகல ஏற்பாடுகளும் செய்யத் தான், செய்திருக்கிறார்கள். அதனாலேயே, சீனாவில் இன்று சில இடங்களில் ஜப்பானியரை சீனர்கள் பின்வாங்கச் செய்ய முடிந் திருக்கிறது. சீனர்கள் ஜப்பானியருடைய எதிர்ப்பை சமாளித்து நிற்க, நேச நாட்டினர் கீழ்த் திசையில் தம்முடைய பலத்தைப் பெருக்கிக் கொள்ள அவகாசம் கிடைத்துக் கொண்டே யிருக்கிறது. இந்தியாவிலே எண்ணற்ற அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளும், விமானங்களும், ஏராளமான ஆயுதங்களும் வந்து குவிந்த வண்ணமாகவே இருக்கின்றன. விமான மூலமாக இங்கிருந்து சீனாவிற்குத் தினம் உதவி போய்க் கொண்டிருக்கிறது. நாளாக ஆக, சீனா ஜப்பானியருக்குப் பெரிய தலைவலியை உண்டாக்க வல்ல நாடாக மாறி வருகிறது. முன்பு ஒரு தடவை, ஜப்பான் மீது அமெரிக்க விமானங்கள் பறந்து சென்று, முக்கியமான ஜப்பானிய நகரங்களைத் தாக்கிற்றே, அந்த விமானங்கள் கூட, சீனாவில் உள்ள விமான நிலையங்களி லிருந்தே சென்றதாகக் கூறப் பட்டது. இம்மாதிரி மேற் கொண்டும் அமெரிக்க விமானங்கள், சீனத் தளங்களைத் தங்கு மிடமாகக் கொண்டு, ஜப்பான் மீது பாய்ந்தால் என்ன செய்வது என்ற பீதி ஜப்பானுக்கு இருந்து கொண்டே யிருக்கிறது. எத்தனை ஜப்பானியர் போரில் மடிந்தாலும், ஜப்பான் கவலை கொள்ளப் போவதில்லை. ஆனால், ஜப்பான் நடத்தும் யுத்தத்திற்கே ஜீவ நாடி போன்ற, ஜப்பானியத் தொழிற்சாலைகளை அவர்களுடைய எதிரிகள் தூள் பறக்கச் செய்வது என்றால், ஜப்பானியர் பாடு திண்டாட்டம் தானே! இத்தகைய திண்டாட்டத்தை உண்டாக்கத் தான் போகிறோம் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறிக் கொண்டே யிருக்கிறார்கள். இந்த கிலியோடு ஜப்பான் மற்றப் போர்களைக் கொஞ்சம் தூங்க விட்டு விட்டு, முதலில், தற்சமயத்திற்கு, சீனப் போரை மும்முரமாக நடத்தி வருகிறது. இவ்வாறு ஜப்பானுக்கு ஒரு கிலியை உண்டாக்கி, அதன் சக்தி யெல்லாம் விரயமாகும்படி செய்து வருடக் கணக்கில் போராடி நின்று, நேசதேசத்தாருக்கும், முக்யமாக இந்தியாவிற்கும் ஓர் ஒப்பற்ற நண்பனாக விளங்கும் சீனாவை, நாம் மனமார வாழ்த்த வேண்டியது நமது கடமை யல்லவா? சீனாவிற்கு ஜே! வீர சீனர் நீடூழி வாழ்க!

---

# எ திர் பா ரா த வை.

நாம் ஒன்று நினைக்கிறோம். தெய்வ மொன்று நினைக்கிறது. டோப்ருக் கோட்டை சக்தி வாய்ந்த தோர் கோட்டை. இதனை அச்சு நாட்டினர் பிடிக்கவே முடியாது என்று இருந்தோம். எதிர்பாராதபடி அது நம் கையை விட்டுப் போய் விட்டது. அது காரணமாக லிபியா போயிற்று. அப்புறம் அச்சு நாட்டினர் மளமளவென எகிப்திற்குள் புகுந்து விட்டனர். ஆனால் அவர்களுக்கு எகிப்திலே 'கேட்' டுகளை எல்லாம் அகலத் திறந்து கிடக்க வில்லை. ஆகவே அவர்கள், தம் இஷ்டப் படி முன்னேறிப் போய் விட முடியாது என்று சொன்னோம். அதே மாதிரியே, பீல்ட் மார்ஷல் ரோமலின் எண்ணங்கள் சிதறிப் போயின. அவருடைய படைகளைத் தடுத்து நிறுத்தி சிதறி ஓடச் செய்து விட்டன எட்டாவது பிரிட்டிஷ் படை. எல் அலாமின் என்ற இடத்தருகே பயங்கரமான போர் தொடங்கி நடந்து கொண்டிருக்கிறது. சில முக்கியமான இடங்களி லிருந்து, நாஜிப் படைகள் பின் வாங்க நேர்ந்திருக்கிறது. அலெக்ஸாந்திரியாவிற்கு அறுபத் தைந்தாம் மைலில் இந்த யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது அலெக்ஸாந்திரியா என்ற முக்கியமான துறைமுகத்திற்கு இருந்த ஆபத்து சற்று குறைந் திருக்கிறது. ரோமலுக்கு மேற்கொண்டு உதவி கிடைத்துக் கொண்டே இருக்கிறதாம். அவருடைய படைகளுக்கு ஜல சப்ளைக் கஷ்டம் ஏற்படும்படி செய்ய நேசதேசப் படைகள் முயற்சித்து வருகின்றனவாம். ரோமலுக்கு மேலும் மேலும் உதவி வந்து சேர உதவி புரிவது பெங்காஸி, ட்ரிபோலி, டாப்ருக் போன்ற துறைமுகங்கள் தான். அங்கெல்லாம் தினம் அமெரிக்க, பிரிட்டிஷ் வெடி விமானங்கள் காட்சி யளித்து, தம்மாலான வரை நாசத்தை விளைவித்து வருகின்றன. ரோமலுக்கு விஷி சர்க்காரும் உதவி புரிந்து வருவதாகக் கூறப் படுகிறது.

இந்த சமயத்திலே, பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே, லிபியப் போரில் ஏற்பட்ட தோல்வியைக் குறித்து காரமான வாக்கு வாதங்கள் நடந்தன. பிரதம மந்திரி சர்ச்சிலின் சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கூட கொண்டு வந்தார்கள். ஆனால் சர்ச்சில் மகா சூரர். உள்ள நிலைமையைத் தெள்ளென எடுத்து விளக்கினார். இதற்கு மேல் என்ன தான் செய்ய முடியும்? ஜனநாயக ஆட்சியின் மகத்துவம் இதுதான்! இந்த சமயத்திலே எதிரி பார்த்துக் களிக்க, நீங்கள் உங்கள் சகாக்களையே அவமானப் படுத்தப் பார்க்கிறீர்களா? எதிர்பாராது ஏற்பட்ட சம்பவத்திற்கு நாம் என்ன செய்யலாம? போர் முனையில் போயிருந்து பார்த்தா லல்லவா, சிரமம் தெரியும்! என்று உருக்கமாகப் பேசி, தன்னை எதிர்க்கத் துணிந்தவர்களுக்கு இருபத் தைந்து பேர்களே ஆதரவு கொடுக்கும்படி செய்து, 475 பேர்களின் ஆதரவோடு தன் கட்சிக்கு வெற்றி தேடிக் கொண்டார் பிரதம மந்திரி.

வட ஆபிரிக்காவி லிருந்த பிரிட்டிஷ் படைகளிடம் ஏராளமான டாங்கிகள் இருந்த தென்னமோ வாஸ்தவம். ஆனால் அவை எல்லாம் பாலைவனப் போருக்கு லாயக்கானவை அல்ல. ஆயினும் மத்தியில் ஒரு கட்டத்திலே, மேற்கே பெங்காஸிக்கும் அப்பால் அச்சு நாட்டுப் படைகளை பிரிட்டிஷ் படைகள் துரத்தி யடித்து, நாற்பதினாயிரம் பேர்கள் வரை கைதியாகப் பிடித்து, அச்சு நாட்டாரின் பிளான்களை பாழாக்க வில்லையா? அப்பொழுது ஜெயித்த தெல்லாம் இப்பொழுது போய் விட்டதே என்பீர்கள்! ஆனாலும் என்ன? சுழலும் சக்கரம் போல் தானே யுத்தப் போக்கு எல்லாம். இன்று போகும், நாளை வரும். அதற்காக வருந்தக் கூடாது தான்.

இப்பொழுது ஜெர்மானியரே கண்டு பிரமிக்கிறார்களாம், நேசநாட்டுப்படைகள், எத்தனையோ அசௌகரியங்களோடு எல் அலாமினுக்கு அருகே அச்சு நாட்டினரை மடக்கி நிறுத்தி விட்டதைப் பார்த்து!

அசௌகரியங்கள் என்றதும் செபாஸ்டபோலின் நினைவு வருகிறது. எதிர் பாராதபடி, அநியாயமாக அச்சு நாட்டார் வசமான அந்த அற்புதமான கோட்டையை நினைத்தால், மிகவும் வருத்தமாகத் தானிருக்கிறது. பாறைகள் மீதிலேயே பக்குவமாக அமைந்த கோட்டை அது. அதனை ஏராளமான விமான டாங்கி, படை உதவிகளால் ஜெர்மானியர் கைப்பற்றி விட்டனர். இந்த ஒரு வகையில் மட்டும் நாஜிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனாலும் ஸெபாஸ்டபோலால் அவர்களுக்குக் கிடைத்தது ஒரு பெரிய லாபம் கூட.

ஸெபாஸ்டபோல் சண்டை முடிந்ததாலேயே, ருஷ்யாவில் வேறு பல இடங்களில் உக்ரமான யுத்தம் தொடங்கி யிருக்கிறது. லெனின்கிராட் முதல் மாஸ்கோ வரை, உள்ளேயே புகைந்து கொண்டிருக்கும் எரிமலையை ஒத்திருக்கிறதாம். எந்த நிமிஷமும் இங்கு பெரும் போர் நடக்கக் கூடுமாம்.

தெற்கே, கார்க்கோவ் அருகே நடந்து கொண்டிருந்த யுத்தம் நாஜிகளுக்குச் சாதகமாகவே இருக்கிறதாம். இந்தப் பிரதேசத்திலே பல இடங்களில் அவர்கள் பெரும் படை யுடன் பாய்ந்து தாக்குகிறார்

களாம். கொஞ்சம் வலுக் குன்றி யிருந்த ஒரு இடத்திலே அவர்கள் முன்னேறி, டான் நதியை அடைந்து அதைக் கடந்து விட்டதாகவும் கூறப் படுகிறது. ராஸ்டாவ் அருகிலும் போர் ஆரம்பமகி யிருக்கிறதாம். மாஸ்கோவிற்கும், தென்திசையில் உள்ள காகஸஸிற்கும் இருக்கும் தொடர்பைக் கத்தரித்து, ருஷ்யப படைகளை மூன்று நாலு துண்டுகளாகப் பிரித்து விட வேண்டு மென்பதே, அச்சு நாட்டாரின் நோக்கம் போலும். அப்புறம் அவர்கள் காகஸஸ் மீது பாயக் கூடும், ருஷ்ய மண்ணிலே திரளும் குவியும் ஜெர்மானியப் பிணங்களுக்குக் கணக்கே யில்லையாம். அப்பிணங்களின் மீதிலேயே டாங்கிகளும், ஆட்களும் பாய்ந்து செல்ல வேண்டி யிருக்கிறதாம். ருஷ்யப் போர் முனைக்கு அதிபிரமாண்டமான பீரங்கிகளையெல்லாம் நாஜிகள் கொணர்ந்து நிறுத்தி யிருக்கிறார்களாம்.

ருஷ்யாவிற்கு பிரிட்டனி லிருந்தும் அமெரிக்காவிலிருந்தும், வாக்களித் திருந்தபடியே உதவிகள் சென்ற வண்ணமாக இருக்கின்றனவாம். ஜெர்மானிய நகர்கள் மீதிலே பிரிட்டிஷ் விமானங்கள் அடிக்கடி தென்பட்டு, அதி பயங்கரமான குண்டுகளை வீசி வருகின்றனவாம். நேச நாட்டைச் சேர்ந்த கானடாவிலே, யுத்த சேவைக்காக எல்லா ஸ்திரீகளும் முன் வரப் போகிறார்களாம். ஹிட்லருக்கு இனிமேல் தானிருக்கிறது கஷ்டங்கள் எல்லாம. இவை எல்லாம் கூட, எதிர் பாராதவையாகவே இருக்கு மென்பதில் சந்தேகமே யில்லை.

ருஷ்யாவில் அவரது படைகள் திரும்பி ஓட்டமெடுக்க ஆரம்பித்ததி லிருந்தே, எதிர் பாராத விஷயங்கள் பலவற்றை அவர் கண் கூடாகக் கண்டாயிற்றே! இனனும் காண வேண்டியதை எல்லாம் பார்த்து விட்டுத்தானே அவர் கண் மூடவேண்டும்? அப்புறம் தான் உலகிற்கே க்ஷேமம் பிறந்தது போலாச்சே!

## யுத்த சேத ஜாப்தா.

1942-ம௵ ஜூன்மீ 19உ யுத்த சஞ்சிகையில் யுத்தத்தில் ஏற்பட்ட நஷ்டங்களை கலந்து வெளிப்படுத்திய படியால் அவைகளுக்கு பதில் கீழ்கண்ட உண்மையான தகவல்களை பிரசுரப்படுத்துகிறோம்.

சண்டையிடாதவர்களும் மற்ற இந்திய படையை சேர்ந்தவர்களும்.

**காயப்பட்டவர்கள்**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| ஐ. எச். சி. 188812 | தையல்காரர். | கே. நாகையா. |

**காணமற்போனவர்கள்.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| ஐ. எச். சி. 181529 | நாவிதன். | லட்சுமணன். |
| எச். 192253 | ஏ. சமையல்காரர். | அம்பிகா. |
| எச். 193417 | எம். சமையல்காரர். | அப்பாதுரை. |
| எச். 19274 | எஸ். கே. சிப்பாய் | எஸ். என். சக்ரவர்த்தி. |
| எச். 189018 | டபுள்யு. செர்ஜென்ட். | தேவசகாயம். |
| எச். 193416 | எம். சமையல்காரர். | சந்தனசாமி. |
| எச். 167122 | சமையல்காரர். | தம்புசாமி. |

**கொல்லப்பட்டவர்கள்.**

| | | |
|---|---|---|
| ஐ. ஏ. ஓ. ஸி. ஓ. 121964 | லான்ஸ் நாயிக். | ஓ. ஏ. பத்மநாபன். |

**காணமற்போய் யுத்தக் கைதிகளாக கருதப் படுகிறவர்.**

| | | |
|---|---|---|
| ஆர். ஐ. ஏ. எஸ். சி. ஓ. 71221 | சிப்பாய் | .. என். மாமண்டிசாமி. |

**முன்பு காணமற் போனவர்களென்று தெரியப் படுத்தியதில் காணமற் போகாதவர்கள்.**

**சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்.**

| | | |
|---|---|---|
| 63720 | சாப்பர் | .. கிருஷ்ணசாமி நாயுடு. |
| 60170 | ஷை | .. மாட செட்டி. |

**இந்திய இஞ்சினியர்கள்.**

| | | |
|---|---|---|
| 63633 | சாப்பர் | .. கோவிந்தசாமி. |
| 63056 | ஷை | .. குஞ்சுராமன் நாயர், கே. |
| 62600 | ஷை | .. ராஜு. |
| 63153 | ஷை | .. ராமசந்திர ரெட்டி. |

**காணமற்போனதாக அறிவிக்கப்பட்டு இப்போது இறந்துவிட்டவர்.**

**சென்னை சாப்பர்ஸ அண்டு மைனர்ஸ்.**

| | | |
|---|---|---|
| 63559 | சாப்பர் | .. பரசுராமன். |

# உலகப் போக்கு.

**எகிப்திய நிலைமை.** ஒரு இராணுவ நிபுணர் கீழ்க்கண்ட வாறு கூறுகிறார்:—

சில நாட்களுக்கு முன்பு இருந்ததை விட எத்தனையோ வகைகளில் எகிப்திய நிலைமை ஊக்கம் தரக் கூடியதாய் இருக்கிறது. பிரிட்டிஷ் படைகளின் நிலைமை பலமாக இருக்கிறது. ஆகின்லெக்கின் கீழுள்ள படைகள் மிகவும் திறமை யோடிருக்கின்றன. ரோமெலின படைகள் முன்னேறுக படி தடுக்கப் பட்டிருக்கின்றன தற்போது நடை பெறும் பாலை வன யுத்தத்தில், படைகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போவது கஷ்டம். ஆகையால், நிலைமையில் திடீரென்று மாறுதல்கள் ஏற்படவுங் கூடும். ரோமெலை இருக்கும் இடத்திலேயே விட்டு வைக்கக் கூடாது; முழுதும் வெல்ல வேண்டும்; அவரை அழிக்க வேண்டும், என்று ஆகின்லெக் குறிப்பிட்டார். மேற்குப் பாலைவனத்திலும், எகிப்திலும் உள்ள நிலைமைக்கு, சில முக்கியமான காரணங்கள் உண்டு. இவை பற்றி நன்றாக ஆராய வேண்டியது அவசிய மாகும்.

போன வருஷம் மழைக் காலம் முழுதும் கடுமையான யுத்தம் நடந்தது. அப்போது ஜப்பானுக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்தது. அப்போது எல்லோரும் கவலை யோடு எதிர் பார்த்தது, வெயில் காலத் தாக்குதல் 'இது பற்றி' பிரமாதமாக முந்தியே பிரசாரம் செய்திருந்தார்கள். ஜெர்மனிக்கு உள் நாட்டிலேயே தொந்தரவுகள் கிளம்பின. ஜெர்மானியர்கள் கைப்பற்றிய நாடுகளில் ஜெர்மன் இரகசிய போலீசாரான 'கெஸ்டபோ'வும் ஜெர்மன் படைகளும் நடத்தும் கொடுமைகளால், அந்நாடுகளின் மக்கள் ஜெர்மானியர் மீது, மிகவும் வெறுப்புக் கொண்டிருக்கிறார்கள். அதனாலும் ஜெர்மனிக்கு மிகவும் தொந்திரவு இருக்கிறது. அல்லாமலும், ஜெர்மன் சர்வாதிகாரி தன் மந்திரிகளையும் சேனாபதி களையும் மாற்றி யமைத்தார். இதற்கும் ஏதோ தொந்தரவு தான் காரணமாயிருக்க வேண்டும் என்று நினைத்தார்கள்.

இந்தக் காரணங்களால் ஜெர்மனிக்குத் தோல்வி உண்டாகிவிடும் என்று யாரும் நினைக்க வில்லை. ஆனால், இவை, ஒன்றை மட்டும் தெளிவாகக் குறிக்கின்றன. ஐக்கிய நேச நாடுகள் ஒன்று சேர்ந்து தம்மைத் தாக்கும் முன்பே, தான் தாக்கி விட வேண்டு மென்பதற்காக, எவ்வளவு கடுமையான முறையானாலும், அதைக் கையாள, ஒரு மகத்தான திட்டத்தை ஹிட்லர் வகுத்தார். ரஷ்யப் போர் முனையில் எதிர் பார்த்தபடி வெற்றிகள் பெற, ஹிட்லரால் முடியவில்லை.



அதனால், தன் நோக்கத்தையே பிரிட்டிஷ் தீவுகள் மீது திருப்பக் கூடும் என்று சிலர் நினைத்ததுண்டு. அப்படியே ஜெர்மன் விமானங்கள் பிரிட்டனைத் தாக்கின. ஆனால் பிரிட்டிஷ் விமானப் படைகள் அந்த ஜெர்மன் விமானங்களை நெருங்க வொட்டாமல் அடித்து விரட்டி விட்டன. அதே சமயத்தில், ஜெர்மன் படைகளை ரஷ்யப் படைகளும் எதிர்த்து நின்று கடுமையாகப் போராடின. ஆகையால் ரஷ்யப் போர் முனையி லிருந்து விமானக் கூட்டங்களை இங்கிலாந்தைத் தாக்குவதற்கு, ஏராளமாக அனுப்புவதற்கு, ஹிட்லரால் முடிய வில்லை.

இந்த நிலைமையிலே, மழை காலத்தில் ரஷ்யா மீது பாயாமல், தன் சேனைகளை ஹிட்லர் உறுதிப் படுத்திக் கொண்டார். அல்லாமலும், மத்திய கிழக்கில், வெயில் காலத்தில், தான் தாக்குவதற்கு ஏற்ற இடம் எது என்று பரீட்சை பார்த்துக் கொண்டிருந்தார். இந்த நோக்கத் தோடு தான், துருக்கியை சற்று மிரட்டிப் பார்த்தார். மத்திய தரைக் கடலில் தனக்கு தகுந்த தங்கு மிடம் எங்கே கிடைக்கும் என்று துளாவிப் பார்த்தார். இதற்காக, பிரான்சைத் தந்திரமாகக் கட்டுப் படுத்தப் பார்த்தார்; மால்டாவை எவ்வகையான பிரயோசனமும் இல்லாமல் மிகக் கடுமையாகத் தாக்கினார்; கிரீட், கிரேக்கத் தீவுகளில் ஏராளமாகத் தன் படைகளைக் கொண்டு போய் இறக்கி பலப் படுத்தினார். அல்லாமலும் மத்திய தரைக் கடலில் போகும் வியாபாரக் கப்பல்கள் எல்லாம் துணைக் கப்பல்களுடனேயே போக வேண்டும் என்னும் நிர்ப்பந்தத்தை நேச நாடுகளுக்கு உண்டாக்கினார்.

இந்தக் காரணங்களால் தான், ஜெர்மனியின் வெயில் காலத் தாக்குதல் வெற்றி பெற வில்லை. இப்போது ஏற்பட்ட அவகாசத்தை நேச நாடுகள் பயன் படுத்திக் கொண்டன.

இதனால் இந்தியா உள்ளாக விருந்த ஆபத்து, குறைந்து விட்டது என்று பொது ஜனங்கள் எண்ணினார்கள். பர்மாவை இழந்தது ஒரு பெரிய நஷ்டம் என்று தான் இந்தியா நினைக்கிறது. ஜெனரல் அலெக்சாந்தர் தன் சேனைகளை மிகவும் கெட்டிக் காரத் தனமாக பர்மாவி லிருந்து பின் வாங்கும்படிச் செய்தார். பவளத் தீவுகளிலும், மத்திய வழித் தீவுகளிலும நேச தேசக் கப்பல் படைகளுக்கு மகத்தான வெற்றிகள் கிடைத்தன. வங்காளக் குடாக் கடலில் தமக்குக் கிடைத்த வெற்றிகளைக் கொண்டு மேல் நோக்கி, ஜப்பானியர்கள் வர வில்லை. இவற்றைக் கொண்டு, இந்தியாவிற்கு ஏற்பட விருந்த ஆபத்து நீங்கி விட்டது என்று நினைக்க இடந் தருகிறது. சென்ற 3 மாதங்களாக இந்தியாவின் பாதுகாப்புக்கள் வெகு அதிகமாகப் பலப்பட்டிருக்கின்றன. முன்பு இருந்ததை விட, இப்போது மிகவும் பலமான நிலைமையில் இந்தியா இருக்கின்றது. நிற்க, மிகச் சிறந்த தளங்களும் ஏராளமான மூலப் பொருள்களும் ஜப்பானுக்கு இப்போது கிடைத்திருக் கின்றன. ஜப்பான் ஜெயித்த நாடுகளிலிருந்து அதை விரட்டி விட வேண்டுமானால், நேச தேசங்களின் படைகளெல்லாம் திரண்டு வர வேண்டி யிருக்கும்.

**1940–42-ம் வருஷங்களில் எகிப்து.** 1940-ம் வருஷம் ஜூன் மாதம் ஆரம்பமான எகிப்திய யுத்தம் இன்னும் மிகுந்த உக்கிரத் தோடு நடந்து கொண்டிருக்கிறது பிரிட்டிஷ் படைகளுக்குப் பதில் சொல்ல மாட்டாமல், ஜப்பான் தோற்று விடும் என்று இத்தாலி நினைத்தது. 1940-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 15-ம் தேதி க்ராஸியானி தலைமையில் இத்தாலியப் படைகள் எகிப்திய எல்லையைக் கடந்தன. அதே நாளில் தான் ஹிட்லர் பிரிட்டிஷ் துறைமுகங்களை விமானங்களைக் கொண்டு முதல் முதல் தாக்கினார். அலெக்சாந்திரியா நகரத்திற்குள், தான் செப்டம்பர் மாதம் 18-ம் தேதியே புகுந்து விடப் போவதாக அறிவித்தார். ஆனால் ஜெனரல் வேவல், அவருடைய எண்ணத்தில் மண்ணைப் போட்டார்.

1940-ம் வருஷத்தில் நடந்த ஆபிரிக்க யுத்தம் எப்படி உலக சம்பந்த முடையதோ, அது போலவே, இப்போது நடை பெறும் யுத்த களங்களுக்கு எல்லாம் அது சம்பந்த முடையது. எஸ்ஸான் யுத்தமும் மத்திய வழித் தீவு யுத்தமும் வடஆப்பிரிக்கா யுத்தத்திற்குச் சம்பந்த முடையவை. அது போலவே, தென் ரஷ்யாவில் நடை பெறும் யுத்தத்திற்கும், வட துருவ சமுத்திரத்திலேயோ இந்து மகா சமுத்திரத்திலேயோ போகும் துணைக் கப்பல்களை நாசஞ் செய்வதற்கும் சம்பந்த முண்டு.

எகிப்தில் 1940-ம் வருஷம் நடை பெற்ற யுத்தத்திற்கும் இப்போது நடைபெறும் யுத்தத்திற்கும் ஒரு முக்கியமான வித்தியாச முண்டு. 1940ல் பிரிட்டிஷார் தனித்துப் போராடி மிகவும் களைத்துப் போயிருந்த சமயத்தில், இத்தாலி புகுந் தடிக்கப் பார்த்தது. ஜெர்மனியைத் திருப்தி செய்ய வேண்டித் தான் இத்தாலியும் எகிப்தைத் தாக்கினது. இதன் பயனாக கீழ் ஐரோப்பாவிலும் மற்ற பகுதிகளிலும் வெற்றிகள் கிடைக்கக் கூடும் என்பது அவர்கள் எண்ணம். ஆனால் 1942-ம் வருஷத்தில், நடைபெறும் இந்த யுத்தம், கொறடா பிடியின் ஒரு பகுதி போல உதவுகிறது. அச்சு சர்க்கார் திட்டமிட்ட படியே எல்லாம் நடந்திருக்குமானால், இந்த யுத்தத்திற்கே இடமிருந் திருக் காது. சந்தர்ப்பங்களினாலும் தன் பேராசையினாலும் சிக்கிக் கொண்டிருக்கும் ஜெர்மனியை விடுவிக்க, இது ஒரு வழி. ரஷ்யாவில் நேச தேசத்தார் வெகு கடுமையாகத் தற்காப்பின் பொருட்டுப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் வெற்றிக்கு வழியாகும். ஜெர்மனி, தன் எதிரிகளை நாசஞ் செய்ய வேண்டும் அல்லது தான் நாசமாக வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அச்சு சர்க்கார், தாம் திட்டமிட்டபடி தம் காரியங்களைக் காலா காலத்தில் செய்து முடிக்க வில்லை.

**தற்கால நிலைமை.** இப்போது ஜெர்மனியை எதிர்த்து நிற்பவை வல்லரசுகள். இவற்றோடு ஒரே காலத்தில் பல யுத்த களங்களில் ஜெர்மனி போராட வேண்டி யிருக்கிறது. இந்த வெயில் காலத்தில் ஹிட்லருக்குக் கடுமையான பொறுப்புக்கள் ஏற்பட் டிருக்கின்றன. (1) எதிர் பாராத விதமாக வெகு அதிக பலம் பெற்றிருக்கும் ரஷ்யாவை நசுக்க வேண்டும். (2) பிரிட்டிஷ் விமானப் படைகளின் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாகாத படி தப்ப வேண்டும். (3) ஐரோப்பாவில் தரை மூலம் ஏற்படக் கூடிய தாக்குதல்களையும் சமாளிக்க வேண்டும். (4) அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் அமெரிக்கக் கப்பல் படையோடும் வியாபாரக் கப்பல்களோடும் போட்டி யிட வேண்டும். (5) இத்தாலி நிறை வேற்ற முடியாது விட்டுப் போன மத்திய தரைக் கடல் யுத்தத்தை, இப்போது, காலங் கெட்ட காலத்தில், நடத்தித் தீர வேண்டும்.

கீழ் நாடுகளில் ஜப்பானியர் முன்னேற்றத்தினால், பிரிட்டிஷ் படைகள் சிதறிப் போய் இருக்கின்றன. தன் பொறுப்பை நிறைவேற்றும் முறையில் பிரிட்டன் இந்தியாவிற்கு அனுப்பி யிருக்கும் துணைக் கப்பல்கள் சமீபத்தில் இந்தியாவிற்கு வந்து சேர்ந்தன. இந்தத் துணைக் கப்பல்கள் சரியான சமயத்தில் செங்கடல் பக்கம் போய் ஆகின்லெக் படைகளுக்கு உதவி யிருந்தால், இந்த யுத்தத்தின் போக்கே மாறி யிருக்கும். நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு ஒரு துணைக் கப்பல் மத்திய கிழக்குக்கு வரவேண்டுமானால் 3 மாதங்கள் செல்லுகின்றன. ஆனால் ரோமெல் தனக்குத் தேவையானவற்றை 3 நாட்களில் மத்தியதரைக் கடலைக் கடந்து, கொண்டு வந்து விடலாம்.

**டோப்ருக்கின் முக்கியம்.** கிழக்கு மத்திய தரைக் கடலில், பிரிட்டனுக்கு இருக்கும் ஆதிக்கத்தைக் குலைக்க வேண்டு மென்பது தான் ரோமலின் நோக்கம். இதில் சந்தேகமே கிடையாது. அப்போது தான் ஜெர்மானியர்கள் எளிதில் காக்கஸஸைத் தாக்கலாம். வடக்கே, காக்கஸஸைத் தாக்குவதற்கு செபஸ்டபோலைத் தாக்கிப் பிடிக்க வேண்டியது எவ்

ளவு அவசியம் என்று நினைத்தார்களோ, அது போலவே, கிழக்கே டோப்ருக்கைப் பிடிக்க வேண்டியதும் அவசியம் என்று ரோமல் நினைத்தார். இப்போது டோப்ருக்கை ஜெர்மானியர்கள் பிடித்து விட்டதனால், அவர்களுடைய சப்ளைகளைக் கொண்டு போவதற்கு தரை வழியில், 300 மைல்கள் மிச்சமாயின. அதாவது, இப்போது ஒரு குறுக்கு வழி ஏற்பட்டிருக்கிறது. இதனால் சப்ளைகள் போக வேண்டிய தூரத்தில் 300 மைல்கள் குறைகின்றன.

டோப்ருக்கையும் சிரெனெய்காவி லுள்ள விமான நிலயங்களையும் ஜெர்மானியர் கைப் பற்றிக் கொண்டதனால், அலெக்ஸாந்திரியா விலிருந்து மத்தியக் கிழக்குப் போர்க்களத்திற்குத் துணைக் கப்பல்களை அனுப்புவது பாதிக்கப் பட்டிருக்கிறது. அலெக்ஸாந்திரியா விற்கும் மால்டா தீவிற்கும் 820 மைல் தூரம். அலெக்சாந்திரியாவி லிருந்து ஒரு துணைக் கப்பல் மால்டாவிற்குப் போக வேண்டுமானால் 175 மைல்கள் வரை க்ரீட்டுக்கும் சிரெனெய்காவிற்கும் இடையிலுள்ள கால்வாய் வழியாகப் போக வேண்டி யிருக்கிறது. க்ரீட் தீவில், ஜெர்மன் விமான நிலயங்கள் இருக்கின்றன. கப்பல்கள் அக் கால்வாயில் போனால் இந்த விமான நிலயத்தி லிருந்து ஜெர்மன் விமானங்கள் கிளம்பி வந்து, தாக்குகின்றன. கிரெனெய்கா பிரிட்டிஷார் வசம் இருக்கும் வரையிலும், இந்தத் துணைக் கப்பல்களுக்குத் தகுந்த பாதுகாப்புக்கள் ஏற்படுத்த முடிந்தது.

நமது போர் விமானப் படைகள் இதற்கு 100 மைல்களுக்குக் கிழக்கே தான் இருக்கின்றன. முன்பு பாதுகாத்தது போல இப்போது இந்த விமானங்கள் கப்பல்களுக்கும் பாதுகாப்புகள் அளிக்க முடியாது. இந்த விமான நிலயத்திற்கு 100 மைல்களுக்கு அப்பால் தான், எதிரி விமான நிலயங்கள் இருக்கின்றன. ஆகையால் அவர்கள் எப்போது வேண்டுமானாலும் நம் நிலயங்களைத் தாக்க முயலக் கூடும். இதன் பயனாக, இதுவரை விமானத் தாக்குதல்களுக்கே உள்ளாகா திருந்த அலெக்சாந்திரியாவும், பெரிதும் பாதிக்கப்படக் கூடும். எதிரி விமானங்கள் முன்னேறிக் கொண்டு வந்தால், வழியி லுள்ள சைப்ரசும் ஹலிபாவுங் கூட பாதிக்கப் படலாம் என்று லண்டன் அதிகார வட்டாரங்களில் நினைக்கிறார்கள். மேலும், தரையிலும் கடலிலும் ஒரு பெரிய யுத்த களத்தில் பின் வாங்கிக் கொண்டிருக்கிறோம், நம் ரஷ்யத் தோழர்களுக்கு எது மிகவும் முக்கியமென்று தோன்றுகிறதோ, அதைத் தான் நாம் செய்து கொண்டிருக்கிறோமே யொழிய, இரண்டாவது போர்முனையை ஆரம்பிக்க வில்லை. வெண் கடலிலிருந்து இந்து மகாசமுத்திரம் வரை எட்டும் பொதுவான யுத்த களத்தின் இடது பக்கம் மட்டும் தான், நம் வசமிருக்கிறது. பிரிட்டனுக்கே ஆபத்து தலைக்கு மேல் இருக்கும் போது, 8-வது படையையும், மத்திய கிழக்கு யுத்த களத்திற்குத் தேவையான மற்ற படைகளையும் திரட்டி யிருக்கும் போது, மிகவும் முக்கியமான பகுதிகளுக்கு ஆபத் தேற்பட்டிருக்கும் போதுங் கூட, தம கடமைகளை நிறைவேற்ற ஒரு போதும் பிரிட்டிஷார் தவறவில்லை.

**மூலபலம்.** நமக்கு நஷ்டம் அதிகமாக ஏற்பட்டிருந்த போதிலும், இன்று எகிப்தைக் காத்துக் கொள்ளக் கூடிய நிலைமையில் நாம் இருக்கிறோம் எதியோபியாவிலும், லிபியன் போர் முனையிலும் எதிரிகளோடு போராடுகிற போது, ஜெனரல் வேவல் வசமிருந்த படைகளை விட, மிகவும் பலமான படை, இப்போ திருக்கிறது. இப்போது மிகவும் கஷ்டமான ஆபத்தான நிலைமை தான். ஆனால், நம் தளங்களுக்கு அருகி லிருக்கிறோம் என்னும் ஒரு வசதி இருக்கிறது. அன்றியும் நமக்கு ஏராளமான சப்ளைகள் கைவச மிருக்கின்றன. இன்னும் சில மாதங்களில், நம் எதிரிகள் கட்டாயமாகத் தாக்கி காக்கஸஸ் பிரதேசத்தையும் மத்திய கிழக்குப் பகுதியையும் கடைசி முறையாகக் கைப்பற்றப் பார்ப்பார்கள். வடக்கே ரஷ்யர்களையும் தெற்கே பிரிட்டிஷாரையும் ஜெர்மானியர்கள் வெகுவாகத் தாக்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம் நேசதேசப் படைகளும் சாம்ராஜ்ய மக்களும் கூட, நிலைமையைச் சமாளிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

மேற்குப் பாலை வன யுத்த களத்தி லிருந்து ஒரு பத்திரிகை நிருபர், 8-ம் படைத் தலைவர்களின் ஊக்கம் குறையவில்லை என்றும், சூயஸ் கால்வாய்க்காகப் போராடும் வீரர்களின் ஊக்கமும் குறைய வில்லை என்றும் குறிப்பிடுகிறார். டோப்ருக்கைத் தோற்ற பிறகு ஜெனரல் ஸ்மட்ஸ் குறிப்பிட்டதாவது :—

இந்தப் படைகளும், தென்னாப்பிரிக்காவி லிருந்து வந்திறங்கும் நம் படைகளும் எகிப்தைக் காக்கப் பெரிதும் பயன் படும். அச்சு சர்க்கார் வச மிருந்து மீண்டும் டோப்ருக்கைக் கண்டிப்பாகக் கைப்பற்ற வேண்டும். தென் ஆப்பிரிக்கா, ஜெர்மானியரை பழிக்குப் பழி வாங்கியே தீரும்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஆண்டு ஜூலை மீ 17உ, வெள்ளிக்கிழமை [இதழ் 28

## "மிகச் சிறந்த வேலை,"

### சென்னைப் பட்டாளத்திற்குப் பாராட்டு.

இந்திய பீரங்கிப் படை யொன்று லிபியாவில் பீர் எல் ஹகிம் என்னும் இடத்தில் போராடிக் கொண்டிருந்தது. இந்தப் படையில் சென்னைப் பட்டாளமும் சேர்ந்திருந்தது. இந்தப் படையின் தலைவரிடம் இருந்து மிகவும் நம்பகமான செய்தி கிடைத் திருக்கிறது. அதில் சென்னைப் பட்டாளத்தின் வீரமான செய்கைகளை அவர் குறிப்பிட்டிருக்கிறார். அவர் கூறுவதாவது :—

"அவர்கள் மிகச் சிறந்த முறையில் வேலை செய்திருக்கிறார்கள். அவர்களை எந்த முறையில் புகழுவது என்று எனக்குத் தெரிய வில்லை. உத்தியோகஸ்தர்களும் படை வீரர்களும் மிக மிகச் சிறந்த முறையில் போராடினார்கள். ஒரு ஜெர்மன் படையும் ஒரு இத்தாலியப் படையும் இந்தப் பட்டாளத்தைத் தாக்கின. தம்மை அவைகள் வெல்லு முன்பு, அவர்களுடைய 56 டாங்கிகளை நம் பட்டாளம் நிர்மூலப் படுத்தி விட்டது. இவர்கள் எதிரிகளுக்குக் கொஞ்சங் கூட விட்டுக் கொடுக்க வில்லை. இருந்த இடத்திலேயே இருந்து, எதிரிகளை வெல்லுகிற வரை, அவர்களை அடித்து வீழ்த்திக் கொண்டே யிருந்தார்கள். நம் படைகளை மீண்டும் செம்மையாக அமைத்துக் கொண்டிருக்கிறோம். படையைச் சேர்ந்த எல்லோரும் போர்க் களத்தில் இறங்க ஆவலா யிருக்கிறார்கள். இவர்களுடைய வேலையைப் பாராட்டி கர்னல் ஒரு தந்தி யனுப்பி யிருக்கிறார். பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும் கம்பி யில்லாத் தந்தி மூலம் பாராட்டி யிருக்கிறார்.

## இந்தியக் கப்பல்களின் அருமையான வேலை.

### எந்த பிரிட்டிஷ் கப்பலும் இவ்வளவு தூரம் போன தில்லை.

யுத்தம் ஆரம்ப மானதி லிருந்து இந்திய கப்பற் படையைச் சேர்ந்த கப்பல்கள் எத்தனைக் கப்பல்களுக்குக் காவலாக எவ்வளவு தூரம் போயிருக்கின்றன என்று கவனிப்போம். இந்த புள்ளி விவரங்கள் முற்றும் சரியானவை என்றும் கூறுவதற் கில்லை. இந்தியப் பாதுகாப்பிற்காக இந்தக் கப்பல்கள் எவ்வளவு வேலை செய்திருக்கின்றன வென்றும், அந்தக் கப்பல்கள் கடலிலே வேகமாகப் போகத் தக்கபடி வைத்திருக்க, அந்தக் கப்பல்களின் இஞ்சினீர்களும் மற்ற உத்தியோகஸ்தர்களும் எவ்வளவு உழைத்திருக்க வேண்டும் என்றும், இந்த விவரங்கள் அறிவிக்கும்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கப்பல்களின் போக்கு வரவைக் கணக் கெடுப்பது வழக்கம். ஒரு கால் வருஷத்தில் 6 இந்தியக் கப்பல்கள் 143,492 மைல்கள் ஓடி யிருப்பதாகத் தெரிகிறது. அதாவது, 11,958 மைல்கள் சராசரிக்கு ஒவ்வொரு கப்பலும் போய் இருப்பதாகத் தெரிகிறது. சில சமயங்களில் சராசரி 12,730 மைல்கள் போனதாகவும் தெரிகிறது.

இவற்றுள் ஒன்று, மத்திய கிழக்கில் காவல் இருந்த 3 மாதங்களில் 16,000 மைல்கள் போயிருக்கிறது. ஒரு பாய் மரக் கப்பல் மத்திய ரேகையைச் சுற்றி 6 மாதங்களில் 25,000 மைல்கள் போனது. ஒரு வருஷத்தில் மற்றொரு கப்பல், பாரசீக வளைகுடாவிலும், செங் கடலிலும் வங்காளக் குடாக் கடலிலும் 47,000 மைல்கள் போனது. இந்த மாதிரிக் கப்பல்கள் இவ்வளவு தூரம் போவது மிகவும் சிறந்த வேலை தான். இவை பல வகையான வேலைகளைச் செய்திருக்கின்றன. சில சமயங்களில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த கப்பல்கள் எதுவும் போகாத தூரம், இந்தியப் படைக் கப்பல்களில் சில, போயிருக்கின்றன.

சுரங்கங்களைப் பெருக்கும் கப்பல்கள் இடை விடாது வேலை செய்து கொண்டிருக்கின்றன. அப்போது தான் துறை முகங்களுக்குக் கப்பல்கள் தாராளமாக வரவும் போகவும் முடியும். இப்போதுள்ள கப்பல் கட்டும் திட்டத்தில், மகா சமுத்திரங்களில் போகக் கூடிய பெரிய கப்பல்கள் கட்ட திட்ட மிட்டிருக்கிறார்கள். இவை கரை யோரங்களிலும் போகும்.

# அவசரப்படேல்!

'அவசரப்படேல்!' என்று ஔவையார்க் கிழவி சொன்னாளே. ரத்னச் சுருக்கமான தோர் மணியான மொழி தான்! அதை நினைவு மூட்டிக் கொண்டு, பதருமலிருந்து பலன் பெற்றவர்கள் பல் கோடிப் பேர்கள். இப்பொழுது நாமும் அதே மணி மொழியை ஞாபகத்திற்குக் கொண்டு வர வேண்டியிருக்கிறது.

ஜெர்மானியர் ருஷ்யாவில் முன்னேறி வரும் வேகம் கவலைக் கடலில் தான் அனைவரையும் மூழ்க வைத்து வருகிறது. இதை ருஷ்யர்களே ஒப்புக் கொள்ளுகின்றனர். ஒன்றுக்கு மேற்பட்ட திசைகளில் நாஜிப் படைகள், ருஷ்யாவிலே மணியான தோர் பிரதேசத்திலே முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அங்கே டான் நதி, டானெட்ஸ் நதி, வால்கா நதி என்றெல்லாம் இருக்கின்றன. இவற்றிற்கு இடையில் உள்ள பிரதேசங்கள் வெகு செழிப்பானவை. டானெட்ஸ் நதிப் பிரதேசத்தில் ஏராளமான நிலக்கரியும் இரும்பும் கிடைக்கின்றன. டான் நதி தீரத்திலோ, அளவற்ற உணவுப் பொருள்கள் அற்புதமாகப் பயிராகிக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது அங்கெல்லாம் வயல்களில் கதிர்கள் 'ஜம்' என்று கிளம்பிக் கொண்டிருக்கின்றன. இன்னும் கொஞ்ச காலம் போனால், கொழுத்த அறுவடை தான். வால்கா நதி அருகே தான் ஸ்டாலின் கிராட் என்ற பிரமாண்டமான நகரம் இருக்கிறது. இங்கே யுள்ள தொழிற் சாலைகளுக்கு அளவே யில்லை. அற்புதமான ருஷ்ய டாங்கிகளில் பல, இந்நகரில் உள்ள 2 தொழிற் சாலைகளில் தான் தயாரிக்கப் படுகின்றன.

மேற்கண்ட பிரதேசங்கள் மீதெல்லாம் நாஜிகள் கண் வைத்திருக்கிறார்கள். எங்கிருந்தோ மேலும் மேலும் சிருப்புகளையும், டாங்கிகளையும், விமானங்களையும் கொணர்ந்து குவிக்கிறார்கள். பல திசைகளி லிருந்து நாஜிப் படைகள் டான் நதியைக் கடந்து, ஸ்டாலின் கிராடை நோக்கிப் போகும் உத்தேசத்துடன் சென்று கொண்டிருக்கின்றன.

ஸெபாஸ்டபோல் போர் முடிந்து விட்டதால், அங்கு சிக்கிக் கொண்டிருந்த பல விமானங்கள் இந்தப் பிரதேசத்தில் போராட வந்து விட்டன. தவிர, ஜெர்மனி, சென்ற குளிர் காலத்தில், ருஷ்யாவிலே சரியான உதை பட்டுக் கொண்டிருந்த பொழுதே, தன் ஊரிலே, எண்ணற்ற அடிமைகளை ஐரோப்பாவில் உள்ள பத்து நாடுகளி லிருந்து கொணர்ந்து குவித்து, கட்டாயப் படுத்தி வேலை வாங்கி, யுத்தத்திற்கு வேண்டிய சாமான்களைத் தயாரித் திருக்கிறது. சுமார் பனி ரெண்டாயிரம் விமானங்களை அது சிருஷ்டித் திருக்கிற தென்கிறார்கள். வருடத்திற்கு பத்து, பனிரெண்டாயிரம் விமானிகளையும், மிதந்து வந்து இறங்கும் 'கிளைடர்' விமான மோட்டிகளையும் ஜெர்மனி தயார்ப் படுத்துகிறதாம். தயார்ப் படுத்தித் தானே ஆக வேண்டும்! நேச நாடுகளின் விமான பலம் நாளுக்கு நாள் தான் அதிகரித்து வருகிறதே! எகிப்திலே, மட மட வென தலை குப்புற அடித்துப் புரண்டு முன்னே ஓடி வந்த ராமெலின் படைகள், எல்அலமீன் என்ற ஊரருகேயே நின்று போன தேன்? முக்யமான துறைமுகமான அலெக்ஸாந்திரியாவைப் பிடிக்கும் ஆசையை ஒத்திப் போட வேண்டிய கதி அவர்களுக்கு ஏற்பட்ட தேன்? ராமெலின் படைகள் ஆரம்பத்தில் போன ஜோரைப் பார்த்து, சூரர் முஸோலினி கூட ஏமாந்து போனார். கிடுகிடென அச்சு நாட்டுப் படைகள் அலெக்ஸாந்திரியாவை அடைந்து விடும். அந்நகரத்திற் குள்ளே, அச்சு நாட்டுப் படைகளோடு, வெற்றி வீரனாக தானும் ஜம்பமாக நுழையலாம், 'முஸோலினிக்கு ஜே!' என்ற கோஷத்தைக் கேட்டு மகிழலாம் என்ற ஆசையோடு தான் முஸோலினி எகிப்து தேசத்திற்குப் போயிருக்கிறார் போலிருக்கிறது. பாவம்! ரொம்பவும் ஏமாந்து தான் போயிருப்பார் அந்த மனுஷர். அபிஸீனியாவை ஐந்து வருடம் ஆண்டு விட்டு, பறி கொடுத்து அவமான மடைந்ததை ஈடு கட்டிக் கொள்ளவே, ஹிட்லரிடம் ரொம்ப கெஞ்சிக் கேட்டுக் கொண்டு அலெக்ஸாந்திரியாவிற்குள் புகும் ஆசையோடு வந்தார் போலிருக்கிறது. அவர் எதிர் பார்த்தபடி இதுவரை அச்சுப் படைகள் அந்நகரை அடையவில்லை. ஏன்? பிரிட்டிஷ் விமானங்கள் போட்ட முட்டுக் கட்டை தான்!

இவ்வளவு உபயோகமாக உள்ள விமானங்களை பிரிட்டனும், மற்ற நேசதேச நாடுகளும் அதி வேகமாகத் தயாரித்து வருவது ஹிட்லருக்குத் தெரியும். அதனால் தான் அவரும் தன் நாட்டு விமான உற்பத்தியின் வேகத்தை அதிகமாகும்படி செய்திருக்கிறார் போலிருக்கிறது. ருஷ்யாவில் டான் நதிப் பிரதேசத்திலே, இருபது நாட்களுக்கு முன் ஐம்பது, அறுபது விமானங்களே நடமாடிக் கொண்டிருந்தனவாம். திடீரென்று அங்கே ஐந்நூறு, அறுநூறு விமானங்கள் வந்து விட்டனவாம். நாளுக்கு நாள் போரின் தன்மை அதி பயங்கரமானதாகி வருகிறதாம். சுமார் இருபது லக்ஷம் அச்சு நாட்டுப் படைகள் இந்த ஒரு பிரதேசத்தில் மட்டும் அட்டகாசம் செய்கின்றனவாம்; டான் நதிக்கும், வாரனேஷ் நதிக்கும் இடையில் உள்ள அதி செழிப்பான பிரதேசம், இன்று ஒரே படு நரகக் குழி போல் விளங்குகிறதாம். டான் நதியிலே செக்கச் செவேலென ரத்த வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கிறதாம். திடீரெனப் பாய்ந்து தாக்கும் ஜெர்மன் படையினர், வீட்டுக் கூரைகள், மரங்கள் மீதிருந்தும், புதர்கள் சாக்கடைகள் ஆகிய வற்றிற்குள் பதுங்கி யிருந்தும் குண்டுகளை வீசுகிறார்களாம். அகழிகளில் பதுங்கி நின்று போராடும் ருஷ்யப் படைகளை வெளிக் கிளப்ப, தீப்பந்தங்களை எறிகிறார்களாம். டான் நதிக்குக் கிழக்கே, டாங்கிகளைத் தடுத்து நிறுத்த, ஏராளமான தடைகள் இருக்கின்றனவாம். அங்கெல்லாம் கைச்சுழல் துப்பாக்கி ஏந்தியவர்கள் ரகசியமாக முன்னேறி அட்டூழியம் செய்கிறார்களாம். டான் நதியை, ஏராளமான பேர்களைப் பலி கொடுத்து, நாஜிப் படைகள் கடந்து விட்டன. பல்லாயிரக் கணக்கான வீரர்களும், டாங்கிகளும் மறு கரையி லிறங்கி, மாயமாக முன்னேறுகின்றனர். வாரனேஷ் என்ற முக்யமான இடத்திலே சென்ற புதனன்று உக்ரமான தெருச் சண்டை நடந்து கொண்டிருந்தது, இதற்குள் அந்த நகரம் எதிரி வசப் பட்டிருந்தாலும் ஆச்சரிய மில்லை. ஆனால் இந்த ஒரு இடத்திற்காக ஜெர்மானியர் கொடுத்த காவு கணக்கைப் பார்த்தால், யாரும் பிரமித்தே போவார்கள்.

அச்சு நாட்டினர், ருஷ்யாவிலே, இந்தப் பகுதியிலே அடைந்த வெற்றி, பெரிய வெற்றி தான். அவ்வளவுக் கவ்வளவு ருஷ்யர்களுக்கு நஷ்டந் தான். எந்த வகையில் தெரியுமா? காகஸஸ் பிரதேசத்திற்கும், வடக்கே யுள்ள மாஸ்கோவிற்கும் தொடர்பாக மாஸ்கோ—ராஸ்டாவ் ரயில் பாதை இருந்தது. நினைத்த மாத்திரத்தில் இப்பாதை வழியாக, வடக்கி லிருந்து தெற்கேயும், தெற்கி லிருந்து வடக்கேயும் படைகளைக் கொண்டு போக முடிந்தது. மார்ஷல் டிமோஷெங்கோவிற்கு இது ரொம்ப சௌகரியமா யிருந்தது. அத்தகைய முக்கியமான ரயில் பாதையை, நாஜிப் படைகள் துண்டித்து விட்டன. ருஷ்யர்களுக்கு இது ஒரு பெரிய நஷ்டந் தானே?

நாஜிப் படைகள் இப்பொழுது போரும் தினுசைப் பார்த்தால், அவற்றின் நோக்கமே ருஷ்யப் படைகளைப் பல துண்டுகளாகப் பிரித்து விடுவது தான் என்று தோன்றுகிறது. அதோடு, அங்கங்கே இடுக்கித் தாக்குதல் முறையையும் நாஜிப் படைகள் அனுஷ்டிக்கின்றன. இதனால் ருஷ்யப் படைகளுக்குப் பேராபத்து நேரிடும் போலிருக்கிறது. ஆனாலும் மார்ஷல் டிமோஷெங்கோ வெகு சாமர்த்தியமாக, தனது படைகளைப் பின்னுக்குக் கொண்டு போய் விடுகிறார். இவ்வாறு செய்யும் போது, சில முக்கியமான நகரங்களைக் காலி செய்து, நாஜிகள் கையில் அவை விழுந்து போகும்படி செய்யத் தான் வேண்டி வருகிறது. வேறென்ன செய்வது?

நாஜிகளுக்கு மேலும் மேலும் ரிசர்வ் படை உதவி கிடைத்து வருகிறதாம். பல இடங்களில் அவர்களுக்குப் படு சேதத்தை விளைவித்த பின்னரே ருஷ்யர்கள் பின் வாங்கி யிருக்கிறார்கள். ஆகவே ஜெர்மானியருக்குக் கிடைக்கும் வெற்றிகள் எல்லாம் எளிதில் கிடைக்கும் வெற்றிகள் அல்ல!



மாஸ்கோவிற்கு வடமேற்கேயும் ஒரு போர் முனையில் பயங்கரமான விமான, நில யுத்தங்கள் நடந்து வருகின்றன. பாரசூட் மூலம் ஜெர்மானியப் படைகள் கீழே இறக்கப் படுகின்றன. அவற்றைக் கீழே வந்து சேரு முன் இறந்து படும்படி செய்து வருகிறார்களாம் ருஷ்யர்கள். இந்தப் போர்முனையில் ஜெர்மானியரது முன்னேற்றம் நிறுத்தப் பட்டிருக்கிறதாம்.

ரிஷெவ் என்ற இடத் தருகே நடந்த போரில் மட்டும், இரு கட்சியினருக்கும் ஏக நஷ்டமாம். ருஷ்யர்களில் ஏழாயிரம் பேர்கள் கொல்லப் பட்டோ காயமடைந்தோ போனார்களாம், ஐயாயிரவரைக் காணோமாம். எண்பது டாங்கிகளும், 85 பீரங்கிகளும் சேதமாம். நாஜிகளுக்கோ பத்தாயிரம் பேர் பலி. 200 டாங்கிகள், 70 பீரங்கிகள், 30 மோட்டார்கள் நஷ்டம்.

இத்தனை ஆச்சே! ஜெர்மானியர்களின் எண்ணம் போலவா எல்லாம் நடக்கிறது என்று நினைக்கிறீர்கள்?

அவர்களது திட்டங்களில் எல்லாம் வீர ருஷ்யர்கள் மண்ணைப் போட்டு மண்ணாக்கி வருகிறார்கள். சென்ற வருஷம் ருஷ்யாவில், இரண்டாயிர மைல் நீளமுள்ள போர் அரங்கத்தில் யுத்தத்தை நடத்திய அதே ஜெர்மானியர், இன்று நூறு மைல், ஐம்பது மைல், பத்து மைல் நீளங்க ளுள்ள போர்முனைகளில் போரிடுவதிலேயே திருப்தி யடைந்திருக்கின்றனர்.

ஏன்? ஒரே விரக்தி ஏற்பட்டு, பொய் வெற்றிகள் வேண்டா மென்று தோன்றிவிட்டதா? இல்லை, சட்டியிலே இருந்தால் தானே ஐயா அகப்பையிலே வரும்! ஆரம்ப ஜோரில் அடித்து நொறுக்கி விடலாம்; எதிரி அயர்ந்து இருந்து கோட்டை விட்டு விடுவான்; பாய்ந்து போய் விடலாம் என்ற நினைவிலே, ஏககாலத்திலே அத்தனை பெரிய பிரதேசத்திலே யுத்தத் தீயை மூட்டினார்கள். அந்தத் தீ, எதிர்பார்த்தபடி பலனளிக்கவில்லை. ஆகவே, இப்பொழுது சிறுசிறு பிரதேசங்களில், ஒருமித்துத் தாக்குகிறார்கள். ஏதோ கொஞ்சம் கொஞ்சம் வெற்றியின் வாடை பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் மூக்குகளிலே, சம்பிரமமாக இலை முன்னால் உட்கார்ந்து, பஞ்ச பக்ஷ பரமான்னத்தோடு விருந்து சாப்பிடுவ தெப்படி? அந்த விருந்து நடக்கு மிடத்திலே ஒரு மூலையிலே நின்று கொண்டு, சாம்பார் வாசனையை மட்டும் மூக்கால் இழுத்து உருஞ்சிக்கொண்டிருப்ப தெப்படி? நாஜிகள் இப்பொழுது செய்வது, மேற்கண்ட இரண்டில், இரண்டாவது காரியத்தையே தான்.

ஆனாலும், ருஷ்ய நிலைமை ரொம்ப நெருக்கடியானது தான். இந்த நிலைமை நீடித்திருந்தால், காகஸஸ் எண்ணெய் வயல்களுக்கு ஆபத்து வந்து விடும். இந்த ருஷ்யச் சண்டையும், எகிப்துச் சண்டையும் ஒன்றுக் கொன்று தொடர்புள்ளது. இவ் விரண்டில் ஒன்றில் ஹிட்லர் தோற்றாலும், அவர் நாடகம் 'க்ளோஸ்' என்கிறார்கள். இப்போதைக்கு அவர் நாடகம் சுமாராக நடந்து கொண்டு தானிருக்கிறது. அதைப் பாழடிப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் மெதுவாகவும், ஆனால் நிச்சயமாகவும் செய்யப்பட்டு வருகின்றன. அதற்குள்ளாக, 'ஐயா! முன்னேறுகிறார்களே!' என்று துடித்தால், 'அவசரப்படேல்!' என்ற முதுமொழியைத் தான் நினைவு மூட்ட வேண்டி யிருக்கிறது. பொறுத் திருந்து பாருங்கள், நம்மவர்கள் போடும் போட்டை! அச்சு நாட்டினருக்கு முதல் 'ரவுண்ட்' குஸ்தியில் வெற்றியும் ஆனந்தமும் என்றாலும், கடைசி 'ரவுண்டி'லே, எதிரியை எழுந்திருக்க முடியாது செய்து, குப்புறவே கிடக்கும்படி வீழ்த்தி பெருமை அடையும் நோக்கம் நேச நாட்டினருக்கு இருக்கிறது. அந்த நினைவுடன் தான் சகல ஏற்பாடுகளையும் அவர்கள் செய்து வருகிறார்கள். இறுதி வெற்றி நமக்கே!

## படைகளுக்கு ஆள் சேர்க்கும் திட்டம்,
### சென்னையி லிருந்து ஏராளமான பேர்கள்.

ஒரு போதும் இல்லாத அளவிற்கு போன மே மாதத்தில இந்தியப் படைக்கு ஆட்கள் சேர்க்கப் பட்டனர். அதாவது சற்று குறைய 70,000 பேர்கள் படைகளில சேர்ந்தனர். இதற்கு அடுத்த படியாக 60,000 பேர்கள், ஜப்பானியர்கள் யுத்தத்தில் இறங்கிய டிசம்பர் மாதத்தில், சேர்ந்தனர். சமீப மாதங்களில் ஒவ்வொரு மாதமும் சராசரி 50,000 பேர்கள் விகிதம சேர்ந திருக்கிறார்கள். சென்ற மகா யுத்தத்தில் மிக அதிகமாகச் சேர்த்ததில் ஒரு மாதத்தில் 40,000 பேர்கள் மட்டுந் தான் சேர்ந்தனர்.

1939-ம் ஆண்டு படையி லிருந்த இனத்தவர்கள் அல்லாதவர்கள் தான், இப்போது சேர்ந்தவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள். இவர்கள் பெரும்பாலும் சென்னை வாசிகள் தான். இந்த மாகாணத்தில் ஆட்கள் சேர்க்கப் பட்டதைக் குறித்து அதிகாரிகள் "மகத்தான வேலை" என்று புகழுகிறார்கள். என்றாலும், இவர்கள் எல்லோரையும் இப்போதைக்கு எடுத்துக் கொள்ளக் கூட வில்லை என்றும் குறிப்பிடுகிறார்கள். படைகளைப் பெருக்க வேண்டும் என்னும் இத்திட்டத்திற்கு முன்பு, இந்தியப் படைகளில் எந்த இனத்தவர்கள் அதிகமாக இருந்தார்கள் என்று நாம் கவனிக்கிறபோது, இப்போது சேர்ந்திருக்கிற புது வகுப்பினர்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் சில மாறுதல்களைச் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

பலமான சென்னைப் பட்டாளங்களுக்கு ஜூனியர் தலைவர்கள் போதுமான பேர்களைத் தயார் செய்வது தான் ஒரு பிரச்னையா யிருக்கிறது. இவர்களைத் தயாரிக்க, நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்களையும் கமிஷன் இல்லாத உத்தியோகஸ்தர்களையும் இரண்டு இடங்களில் தயார் செய்கிறார்கள். சென்னைக்காக மாத்திரம், மற்றொரு இடத்தில் தயார் செய்ய ஏற்பாடுகள் நடை பெறுகின்றன. தேவைப் பட்ட அளவிற்கு இவர்களைத் தயார் செய்யக், கூடுமானால், சென்னை ரெக்ரூட்களைத் தாமாகவே ஏற்றுக் கொள்ளுவார்கள்.

பழைய இராணுவ இனத்தைச் சேர்ந்தவர்களை அடிப் படையாகக் கொண்டது தான் நமது பட்டாளங்கள். இவை தான் பெரிதாக்கப் பட்டன. பழைய படைகள் யுத்த களத்திற்குப் போய் அங்கே இறந்து போவதினாலோ, நோயாவதனாலோ காலியாகிற ஸ்தானங்களுக்குத் தகுந்தபடி ரிசர்வ் ஆட்களைப் பழைய இராணுவ இனத்தவர்களி லிருந்து இருப்பில வைத்திருக்கக் கூடாது என்று அதிகாரிகள் ஆட்சேபிக்கிறார்கள். யுத்த காலத்திற்கு முந்திய நிலைமையை யொட்டி இவர்கள் திரட்டப் பட்டவர்கள். ஆகையால் இவர்களுடைய எண்ணிக்கை குறைந்திருக்கிறதை அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். இதனால் பயனுக பட்டாளத்தில் சேர, இந்த இனத்தவர்களி லிருந்து, முன் போல, அநேகம் பேர், முன் வரவில்லை.

### ரிசர்வ் படைகள் பிரச்னை.

குறிப்பிட்ட சில இனத்தவர்களை மட்டுந் தான் இந்திய இராணுவங்களில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள் என்று சிலர் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள். சமுதாயம் முதலிய நிலைமைகள் தான் இதற்குக் காரணம். பலவகை இனத்தவர்களுக்கு வேறு பட்ட பலவகை உணவுகள் தேவைப் படுகின்றன. நிர்வாக ஏற்பாடுகளும் வெவ்வேறு முறைகளில் செய்ய வேண்டி யிருக்கின்றன. ஒரு யூனிட்டுக்கு ஒரே மாதிரி உணவு வகைகள் கொடுக்க ஏற்பாடு செய்வதைப் போன்ற வசதி, உத்தியோகஸ்தர்களுக்குக் கிடையாது. இதிலிருந்து, வகுப்பு வேற்றுமையை வளர்ப்பதாக அர்த்தம் செய்யக் கூடாது. ஆனால் நிர்வாகத்திற்கு இது பெரிதும் உதவியா யிருக்கும்.

ஆயுதங்களைக் குறித்த விசேஷப் பயிற்சி பெறுவதற்கும் போதுமானவர்கள் முன் வந்து சேரவில்லை என்னும் குறை இருந்தது. இப்போது இந்தக் குறையும் சிறுகச் சிறுக நீங்கிக் கொண்டு வருகிறது.

# சபாஷ்! சென்னை!

'அப்படி அடிடா தெப்பல்'னும் ஒருவன். அவன் எப்பொழுது இப்படி சொன்னான் என்பதைப் பற்றி யாமே திட்டமாகக் குறித்து வைக்கவில்லை. ஆனால், அவன் சொன்னதை, அப்படியே திரும்பவும் ஒரு தடவை சொல்வதற்கான, அதி பொருத்தமான சந்தர்ப்பம் ஒன்று இப்பொழுது வந்திருக்கிறது.

மாதா மாதம் இந்திய ராணுவத்திற் கென்று ஆள் சேர்த்து வருகிறார்களோ இல்லையோ. அந்த மாதிரி ஆள் சேர்த்துக் கொண்டு வருவதிலே, போன மாசத்துக்கு முந்தின மாசமான மே மாசத்திலே மட்டும் கிட்டத் தட்ட எழுபது ஆயிரம் பேர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று புது டில்லியிலேயிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது. இதிலே என்ன விசேஷம் இருக்கு. யுத்தக் காலத்திலே இம்மாதிரி சேர்ப்பது சகஜந் தானே என்று நீங்கள் கேட்கலாம்.

யுத்த காலத்திலே இந்த மாதிரி படைக்கு ஆள் திரட்டறது என்னமோ சகஜந் தான். ஆனால் இந்த மே மாசத்திலே ஆள் சேர்த்ததிலே ஒரு பெரிய விசேஷம் இருக்கிறது. யுத்தம் ஆரம்பமானது முதல், ஒரு தனி மாதத்திலே, இத்தனை பெரிய தொகையுள்ள ஆட்கள் சேர்க்கப் பட்டதே யில்லை. இந்தியாவிற்கே இது ஒரு தனி 'ரிக்கார்ட்' ன்னு போங்களேன்! போன டிசம்பரிலே, ஜப்பான்காரன் யுத்தத்திலே இறங்கினதும், கிட்டத் தட்ட அறுபதாயிரம் பேர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அந்த நம்பரையும் மிஞ்சி விட்டதே இந்த மே மாத நம்பர். இப்படி எழுபதாயிரம் பேர்கள் ராணுவத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், ராணுவத்தில் சேர, மனு போட்டவர்களின் எண்ணிக்கை இது தான் என்று எண்ணி விடக்கூடாது. அது ஒரு பெரிய எண்ணிக்கை. கிட்டத் தட்ட லக்ஷம் பேர் சுமாருக்கு மனு போட்டார்கள் எனத் தோன்றுகிறது. அதிலே வேண்டாதது, பிரயோசன மில்லாதது என்றெல்லாம் கழித்தது போக, பாக்கி தேறினவர்களின் எண்ணிக்கை தான் கிட்டத் தட்ட எழுபதாயிரம்.

ரொம்ப சரி! அதனாலே நமக்கு என்ன? வாத்தியார் பெண்ணுக்குக் கல்யாணம்னு, எனக்கென்ன ஆச்சு, என் பிள்ளைக்கு என்ன ஆச்சு என்று கேட்டாராம் ஒருவர். அதே போல், இந்திய ராணுவத்திற்கு எழுபதாயிரம் பேர் சேர்த்தால் தான் என்ன, எழுபது லக்ஷம் சேர்த்தால் தான் என்ன, நம்பளுக்கு என்னய்யா ஆச்சு என்று சுய நலப் பேர்வழிகள் சிலர் கேட்கலாம்.

" 'நம்பள்கிம்' இருக்கய்யா விசேஷம்" என்ற பதிலைத் தான் அவர்களுக்கு அளிப்போம். இந்த எழுபதாயிரம் பேர்களிலே, இந்தியாவிலே மூலை முடுக்குகளில் இருந் தெல்லாம் வந்தவர்கள் இருக்கிறார்கள். அப்படி இருக்கிறவர்களிலே, நம்ப மெட்ராஸ் மாகாணத்தி லிருந்து போனவர் தான் ரொம்ப ரொம்ப ஜாஸ்தி என்று அறிவிக்கிறார்கள் டில்லி மனுஷா!

அதோடு நிறுத்த வில்லை அந்த டில்லி மனுஷா. சென்னை மாகாணத்திலே, ராணுவத்திலே சேர வேணும் என்ற ஆவல் பொது ஜனங்களிடையிலே, எவ்வளவு இருக்கிறது என்பதைக் கவனித்துப் பார்க்கும் பொழுது, எங்களுக்கே ஆச்சரியமா யிருக்கிறது, ரொம்ப ரொம்ப ஜோர் என்று தான் நாங்கள் கூறுவோம். ஆள் தேவை என்றது தான் தாமதம் வந்து குவிந்து விட்டார்கள் வண்டி வண்டியாக. அத்தனை பேர்களையும் இப்பொழுது சேர்த்துக் கொள்ள வசதி இல்லையே என்று தான் வருத்தமாக இருக்கிறது. பட்டணத்தார்களைச் சேர்த்துக் கொண்டால், அவர்களைப் பழக்க, அவர்களைச் சேர்ந்த குட்டித் தலைவர்களே வேணும். இந்தக் குட்டித் தலைவர்களைப் பழக்க, போதிய வசதி, இப்பொழுது இல்லை. அந்த வசதியையும் சீக்கிரமே ஏற்படுத்தி விடுவோம். அப்புறம் எவ்வளவு பேர்களை வேணுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம்.

இதிலே இன்னொரு விஷயம். இப்பொழுது சேர்க்கப் பட்டிருப்பவர்களிலே, நூற்றுக்கு ஐம்பது பேர்கள் வீதம், ராணுவத்திற்கே அநேகமாக புதிதான இனத்தவர்கள். 1939-ம் வருஷத்திலே, இந்த இனத்தவர்கள், ஒன்று ராணுவத்திலேயே இருந்த தில்லை; அல்லது வெகு சொற்பமாக இருந்தார்கள். இவ்வாறு புது ஆட்களிடை இந்த் உத்சாகம் ஏற்பட்டிருப்பது விசேஷ மில்லையா? என்று கேட்கிறார்கள் புது டில்லியில் உள்ள அதிகாரிகள்.

இவ்வாறு, இந்தியாவின் தலை நகரி லிருந்தே நம் மாகாணத்திற்குப் பாராட்டுதல் வந்திருப்பது நமக்கெல்லாம் பெருமை தரக் கூடிய விஷயமா இல்லையா ஐயா? ஆங்கிலத்தில் சொல்வது போல, நமது முதுகை நாமே கூட தட்டிக் கொடுத்துக் கொண்டு, 'சபாஷ்! சென்னை' என்று சொல்லிக் கொள்ளலாம் போலிருக்கிறது.

யுத்த நிதிக்கு இத்தனை காலத்திற்குள் இரண்டு கோடிக்கும் அதிகமாகப் பணம் சேர்த்து, 'இவ்வளவு அதிகமான தொகையைச் சேகரித்த மாகாணம் வேறு எதுவுமே இல்லை' என்ற பெருமையை நமது சென்னை மாகாணம் பெற்றது. அது நம்பர் 1 பெருமை.

ராணுவத்தி லிருப்பவர்களுக்கு முக்கியமாக வேண்டியது உண்ண உணவும், உடுக்க உடையும். அந்த உடைகளை சப்ளை செய்வதில், சென்னை மாகாணம் 'பஸ்ட் பிரைஸ்' அடித்தது. இது இரண்டாவது பெருமை.

மூன்றாவது தான் இப்பொழுது ராணுவ காரியாலயத்தி லிருந்து வந்திருக்கும் பெரிய பெருமை. இத்தனையும் பார்த்து விட்டு, 'அப்படி அடிடா தெப்பல்!' என்று சொல்வது சரிதானே?

சென்னை மாகாணமே! இதோடு விடாதே! இன்னும் பல விதங்களிலும் தொடர்ந்து பெருமையை அடை! யுத்த நிதிக்கு சகாயம் செய்வதிலும் சரி, பட்டாளத்திற்கு வந்து சேருவதிலும் சரி, அதிகாரிகளே கண்டு திகைத்து, மூக்கு மீது கை வைத்து நிற்கும்படி செய்! இந்த விஷயத்திலே அதிகாரிகளைத் திணற வைத்தால் கூட தப்பில்லை. தெரிந்ததா?

## 2,000 ஜெர்மானியர்கள் இறந்தனர்.

### பிரிட்டிஷ் விமானத் தாக்குதல்.

### டான்சிக் துறைமுகத்திற்குப் பெரும் சேதம்!

டான்சிக், ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு துறைமுகம். இங்கே நீர்மூழ்கிக் கப்பல்களும் மற்ற கப்பல்களும் கட்டவும் மிதக்க விடவும், பழுது பார்க்கவும் வேண்டிய வசதிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஏற்றுமதி இறக்குமதிகளும் மிகவும் அதிகம். இது ஜெர்மானியர்களுக்கு மிகவும் முக்கியமான இடமல்லவா?. இதைத் தான் சென்ற 11-ம் தேதி பட்டப் பகலிலேயே பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின. பிரிட்டிஷ் கடற்கரைக்கும் டான்சிக்குக்கும் சுமார் 800 மைல் தூரம். என்றாலும், இவ்வளவு தூரத்தையும் கடந்து எதிரிகளின் எல்லைக்குள் வந்து அவர்களுடைய தளங்களைத் தாக்குவ தென்றால் இலேசான காரியமா? இப்படிச் செய்த பெருமை பிரிட்டிஷ் விமானங்களுக்கு உண்டு.



டான்சிக்குக்குப் போகும் வழியில் பாதி தூரத்தில், ப்லென்ஸ்பரோ என்னும் கடற்கரைப் பட்டிணம் ஒன்றிருக்கிறது இங்கே இஞ்சினீரிங் பள்ளி கூடமும் கப்பற் கட்டும் தொழிற்சாலைகளும், இரும்பு உருக்கி வார்க்கும் பட்டறைகளும் இருக்கின்றன. இங்கு நீர்மூழ்கிக் கப்பல்களும் கட்டுகிறார்கள். இந்தப் பட்டிணத்தையும் சென்ற சனிக்கிழமை பிரிட்டிஷ் விமானங்கள் கடுமையாகத் தாக்கின. இந்த இரண்டு இடங்களிலும் பெருத்த நஷ்டம் தமக்கு ஏற்பட்டதாக ஜெர்மானியர்களே ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

நிற்க எஸ்ஸென் நகரத்திலுள்ள தைசென் ஆயுத உற்பத்திச் சாலையையும் பிரிட்டிஷ் விமானப் படைகள் கடுமையாகத் தாக்கின. அந்தத் தொழிற்சாலையின் முக்கியமான பகுதிகள் எல்லாம் தரை மட்டமாகி விட்டன வென்றும், மற்ற பகுதிகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கிற தென்றும் தெரிகிறது. ஒரு இரவுத் தாக்குதலில் மட்டும் 2,000 ஜெர்மானியர்கள் இறந்து போனார்களாம்.

## இது வல்லவா சேவை!



நடுக் கடலில் பலர் தவிக்கின்றனர். பிரிட்டிஷ் கடற் படை விமானம் கண்டது. அங்கே விரைந்து போனது. தவிப்பவர்களை எல்லாம் விமானத்தில் ஏற்றிக் கொள்ள இடமில்லை. அவர்கள் பற்றிக் கொண்டிருந்த ஆபத்துக் காலப் படகுகளைத் தன் விமானத்தோடு கட்டி, தண்ணீரின் மேலேயே போக ஆரம்பித்து. அப்போது மற்றொரு விமானமும் கப்பலும் வந்தன. கப்பலில் ஏற்றி சுகமே கரை சேர்த்தது. அந்த விமான மோட்டிக்கு பிரிட்டிஷ் எம்பையர் பதக்கம் வெகுமதி கிடைத்தது.

## பிரிட்டிஷார் பலத்தில் முழு நம்பிக்கை.

### எகிப்திய முதல் மந்திரி பிரகடனம்.

### எதிரிகள் முயர்ச்சி பலிக்க வில்லை.

லண்டனி லிருந்து வெளிவரும் "டைம்ஸ்" பத்திரிகை தன் தலையங்கத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது :—

எகிப்தை தம் வலையில் சிக்க வைக்க ஜெர்மனியும் இத்தாலியும் எத்தனையோ ஜெகஜால வித்தைகள் எல்லாம் செய்து பார்க்கின்றன. என்றாலும் அதன் உறுதியை அசைக்க முடிய வில்லை. பிரிட்டனுக்கும் தனக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தையே பெரிதும் ஒப்புக் கொண்டிருக்கிறது. அதிர்ஷ்டவசமாக, தெளிந்த அரசியல் ஞானியான நஹாஸ் பாட்சா இப்போது எகிப்தியத் தலைவராக இருக்கிறார். தாம் அடைந்த வெற்றிகளால், இத்தாலியும் ஜெர்மனியும், மற்ற சிறிய நாடுகளைப் பயமுறுத்திக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்று, எதிர் பார்க்கின்றன. இவற்றில் கடைசி தான் எகிப்து. ஆனால், இப்போது நடை பெறும் கொடுமைகளுக்குப் பிறகு என்ன ஏற்படும் என்று உணர்ந்து கொள்ளக் கூடிய ஒரு அரசியல் ஞானி இன்று அதன் உண்மைத் தலைவராக இருக்கிறார்.

பணப் பேய்களான இத்தாலி ஜெர்மனி நாடுகளின் கொடுமைகளி லிருந்து தன்னைக் காப்பாற்றி கொள்ள பிரிட்டிஷார் உதவியையே எகிப்து நாடியிருக்கிறது. இந்த யுத்தத்தினால், எகிப்தியர்களின் வாழ்விற்கும் சொத்துக் களுக்கும் ஏற்படக் கூடிய நஷ்டத்தைச் சரிக் கட்டித் தருவதாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

நமது நல்லெண்ணத்திலும் ஆதிக்கத்திலும் தனக்குள்ள நம்பிக்கையை எகிப்திய முதல் மந்திரி தெளிவாக பகிரங்கப் படுத்தி யிருக்கிறார். இப்போது ஏற்பட்டிருக்கும் ஆபத்தை எதிர்த்து நிற்க, நாடு முழுவதையும் ஒன்று படுத்துவதில் மன்னர் பரூக் செய்துள்ள முயற்சி மிகவும் அதிகம். இந்தப் பெரிய ஆபத்துக் காலத்திலும் கூட, மிகவும் பாராட்டக் கூடிய முறையில் பதட்ட மில்லாமலும் ஒழுங்காகவும் அந்த நாட்டு மக்கள் நடந்து கொள்ளுகிறார்கள்.

நீல நதிக் கரையின் முகத்துவாரத்தை யடுத்திருக்கும் வளப்பமான பிரதேசங்களைக் கைப்பற்ற ஜெர்மன் படைகளும் இத்தாலியப் படைகளும் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கின்றன. அதே சமயத்தில், தம் சிநேகத்தை ஏற்றுக் கொள்ளும்படி எகிப்தியர்களைத் தூண்டுவதற்காக முஸோலினியும் ஹிட்லரும் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து வருகிறார்கள். என்றாலும், இவை எல்லாம் வெளிப் பகட்டு என்று எகிப்தும், துருக்கியும் மற்ற முஸ்லீம் நாடுகளும் தெளிவாக உணர்ந்து கொண்டன. இவர்களுடைய மிகவும் கேவலமான கொடுங்கோல் ஆட்சியை அவர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மகா கொடிய மிருகத்தனமான கூட்டாளிகளின் பேராசையில் மண் விழ வேண்டு மென்பதே, மத்திய தரைக் கடலை யடுத்துள்ள எல்லா நாடுகளின் ஆசையு மாகும்.

# டோப்ரூக் எப்படி வீழ்ந்தது?

## எதிரிகளின் போர்த் தந்திரம்

### நேரில் கண்டவர் கூறும் விவரங்கள்:

டோப்ரூக் கோட்டையைத் தோற்பதற்கு முன்பு, யுத்த களத்திற்குப் போயிருந்த ஒருவர் கீழ்க் கண்டவாறு அறிவிக்கிறார்:

நான் டோப்ரூக்கை விட்டுப் புறப்பட்ட மறு நாள் தான், எதிரிகள் அதை வளைத்துக் கொண்டார்கள். நான் புறப்படும் போது, எதிரிகள் மேற்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் மிகவும் வலுத்திருக்கிறார்கள் என்னும் செய்தி கிடைத்தது. அப்போது பார்டியா-டோப்ரூக் ரஸ்தாவை எதிரிகள் வெட்டி விட வில்லை. ரோமலின் முக்கியமான படை தென் கிழக்கே எல் ஆதமை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன.

சிடி ரெஸக்குக்குத் தெற்கே யிருந்த ட்ரீஸ்டி டிவிஷன் படைகள் பார்டியா-டோப்ரூக் ரோடை வெட்டுவதற்காக வடக்கே போய்க் கொண்டிருந்தன. டோப்ரூக்குக்குத் தென் மேற்கே யுள்ள முக்கோணத்தில் நம் முக்கியமான படைகள் ஆயத்தமாயிருந்தன. டோப்ரூக்குக்குத் தென்கிழக்கே யிருக்கும் முக்கோணத்தை நம் 11-வது பிரிகேட் பட்டாளம் காக்க வேண்டு மென்று ஏற்பாடாகி யிருந்தது. தெற்கே கூர்க்கப் படையும், மத்தியில் மாராட்டியப் படையும், வலது புறத்தில் காமரான் படையும் ஆயுத்தமா யிருந்தன. இவற்றிற்கு ஆதரவாக 25-வது பீல்ட் பாட்டரியும், 63-வது மீடியக்ஸும் இருந்தன.

20ம் தேதி காலையில் டோப்ரூக்கை விட்டு வெளி வருவதற் கிருந்த ஒரே பாதையை, ஜெர்மன் படைகள் வெட்டி விட்டன. இது பார்டியா—டோப்ரூக் ரோட்டி லிருக்கிறது. இதை வெட்டி விட்டதனால், ஜெர்மன் படைகள் டோப்ரூக்கைச் சூழ்ந்து கொள்ள இடம் ஏற்பட்டு விட்டது. இரண்டு மணி நேரத்திற்குள் ஜெர்மானியர்கள் மும்முரமாகத் தாக்க ஆரம்பித்து விட்டார்கள். நம் படைகளில் மிகவும் பலவீனமா யிருந்தது மாராட்டியர் படை தான். அந்த இடத்தில் தான் ஜெர்மானியர் தாக்கினார்கள். 2-மணிக் கெல்லாம் வெகு மும்முரமாக இந்த இடத்தில் தாக்கினார்கள். அதே சமயத்தில் எதிரியின் விமானங்கள் பூமிக்கு வெகு அருகில் பறந்து வந்து குண்டுகளை வீசின. வேறு சில விமானங்கள் பயங்கரமான ஷெல் குண்டுகளை வீசின. இந்தக் குழப்பத்தில், பார்டியா—டோப்ரூக் ரோட்டில் ஏற்பட்ட இடை வெளி வழியாக ஜெர்மன் திடீர் படைகள் டோப்ரூக்குக்குள் நுழைந்தன. இவற்றை யடுத்து டாங்கிகளும் இத்தாலியப் படைகளும் நுழைந்தன.

முன்னே நுழைந்த ஜெர்மன் திடீர் படைகள் ஒரு வகை மெழுகு வர்த்தியைக் கொளுத்திக் கொண்டே போயின. அதனால் கிளம்பிய புகையில், பின்னே வரும் டாங்கிகள், முன்னே யிருப்பவர்களுக்குத் தெரிய வில்லை. என்றாலும் மாராட்டியப் படைகள் வெகு உக்கிரமாகப் போராடின. அரை மணி நேர யுத்தத்தில் எதிரிகளில் அநேகரைப் பூமியிலேயே குத்திக் கொன்றன. என்றாலும் ஓயாது எதிரி விமானங்களி லிருந்து குண்டுகள் பெய்து கொண்டே யிருந்தன. இதனால் தான், டாங்கிகள் கிட்டே வர முடிந்தது. மேலும் மேலும் எதிரிகளின் படைகள் வந்து குவிந்து கொண்டே யிருந்தன. எதிரிகளின் காலாட் படைகளும் சில ஆயுதப் படைகளும் கூர்க்கப் படை யோடும் காமரான் படையோடும் போராடிக் கொண்டிருந்தன; அப்போது, எதிரிகளின் டாங்கிப் படைகள், நம் பீரங்கிப் படைகள் இருக்குமிடத்திற்கு நேரே போய் அவைகளை உபயோகிக்க முடியாதபடி செய்து விட்டன. இந்தச் சமயத்தில் மராட்டியப் படைத் தலைவரான கர்னல், டாங்கிகள் உதவி தனக்குத் தேவை என்று ஒரு செய்தியை தலைமை ஸ்தானத்திற்கு அனுப்பினார். இந்த உதவி வந்து சேரும் முன்னதாகவே, ஜெர்மானியர்கள், அது போல மூன்று மடங்கு டாங்கிகளைக் கொண்டு வந்து குறிப்பிட்ட இடங்களில் நிறுத்தி விட்டார்கள். ஆகையால் உதவிக்குப் போன நம் டாங்கிகளை, இவை காலி செய்து விட்டன.

பிறகு எதிரிகளின் டாங்கிகள் விசிறியை வீசியது போல் பரவின. 11-வது பிரிகேட் தலைமைக் காரியாலத்தை நோக்கிப் போயின. வழியிலிருந்த 25-வது பீல்ட் பாட்டரி தலைமைக் காரியாலயத்தையும் பீரங்கிகளால் தகர்த்துப் பிடித்தன. 11-வது பிரிகேட், தலைவர் கடைசி வரை போராடினார். இனித் தாள முடியாது என்று தெரிந்த வுடனே எல்லா தஸ்தப் வேஜுகளையும் எரித்து விடும்படி உத்தாவிட்டார். டோப்ரூக்குக்குத் தெற்கே யுள்ள கடற் கரைக்குப் போகும்படி கட்டளை யிட்டார்.

இதற் கிடையில், கூர்க்கர்களும் காமரான்களும் கடைசி வரை போராடியே தீருவது என்று முடிவு கட்டிக் கொண்டனர். சிறு சிறு படைகளாகத் தம்மை வகுத்துக் கொண்டு போராடினார்கள். அப்போது, தென்னாப்பிரிக்கர்களின் உதவியைக் கோரி அந்தப் படையின் தலைவரும் மற்றொரு உத்தியோகஸ்தரும் ஒரு மோட்டார் லாரியில் ஏறிக் கொண்டு விரைவாகப் போனார்கள்.

இதற்கிடையில், விமானத் தாக்குதல் வலுத்து விட்டது. அநேக எதிரி டாங்கிகள் கோட்டைக் குள்ளே வந்து விட்டன.

நமது கப்பற் படையும் மிகவும் சிறியது தான். கோட்டைக்கு மேற்கே யிருந்து, ஜெர்மன் கப்பல் படை டோப்ரூக் துறைமுகத்தையும் அதிலிருந்த நம் கப்பற் படையையும் கடுமையாகத் தாக்கின.

கை விடப்பட்ட 11-வது பிரிகேடைச் சேர்ந்த 40 அல்லது 50 பேர்கள் விமான குண்டுகளுக்குத் தப்பி துறைமுகத்தை யடுத்தள்ள தெற்கு மலையுச்சிக்கு வந்து சேர்ந்தனர். இங்கிருந்து கரை யோரம் போனார்கள். இது யாராலும் முடியாத காரியம் என்று தான் சொல்ல வேண்டும். அங்கிருந்த நம்முடைய டார்பிடோ படகில் ஏறிக் கொண்டு கிளம்பினார்கள். இவர்கள் ஏறிய உடனேயே அந்தப் படகின் மேல் இரண்டு குண்டுகள் வீழ்ந்தன. உடனே அந்தப் படகை விட்டு, வேறொரு கப்பலுக்குப் போனார்கள். இவர்கள் எல்லையைக் கடந்து போனவுடனே பீரங்கிகளின் சத்தம் அவர்களுடைய காதுகளைத் துளைத்தது; என்றாலும் கூர்க்கர்களும் காமரான்களும் கொஞ்சமும் தளர்ச்சி யடைய வில்லை. கடைசியில் இக்கப்பல் பந்தோபஸ்தான இடத்திற்குப் போய்ச் சேர்ந்தது.

---

# பாஸ்டில் திருநாளில் ஆங்கிலோ-அமெரிக்கப் பாராட்டு.

## டி கால் இயக்கத்தின் பெயர் மாற்றம்.

பிரஞ்சு மக்கள் தேசீயத் திருநாள் என்று ஒரு நாளைக் கொண்டாடுகிறார்கள். பாஸ்டில் நகரம் வசமான நாளைத் தான் அவர்கள் தேசீயத் திருநாள் என்று நினைக்கிறார்கள். உலகி லுள்ள எல்லா பிரஞ்சுக் காரர்களும் இதைக் கொண்டாடுவது வழக்கம்.

லிபியாவில் பீர் எல் ஹகீம் என்னும் இடத்தில் மிக மகத்தான முறையில் போராடிக் கொண்டிருந்த யதேச்சை பிரஞ்சுக்காரர் களைக் குறித்துக் கூறுகிறபோது "போராடும் பிரஞ்சுக்காரர்" என்று சர்ச்சில் அவர்களைக் குறிப்பிட்டார். இந்த வார்த்தைகளை ஒட்டி 'யதேச்சை பிரான்சு' என்னும் பெயரை மாற்றி "போராடும் பிரான்சு" என்னும் பெயரை டி கால் இயக்கத்திற்குச் சூட்டுவது என்று முடிவாயிருக்கிறது.



**பிரான்சு உயிரோடு இருக்கிறது.**

இந்தத் திருநாளன்று டி கால் கீழ்க் கண்ட செய்தியை உலகி லுள்ள எல்லா பிரஞ்சுக்காரர் களுக்கும் ரேடியோ மூலம் சென்ற திங்கட் கிழமை மாலை தெரிவித்திருக்கிறார்:—

> எதிரிகள் வசமாகாத பிரஞ்சுப் பிரதேசங்களில் நாளை ஒவ்வொரு வீட்டிலும் மூன்று வர்ண பிரஞ்சுக் கொடி பறக்கும். ஒவ்வொரு பிரஞ்சுக்காரர் ஆணும் பெண்ணும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அணி வகுத்து நின்று, மரியாதை செலுத்திப் போக வேண்டும். மக்கள் தங்கள் உள்ளத்தி லிருந்து எழும் உணர்ச்சியினால் மார்செயல்ஸ் பாட்டைப் பாடுவார்கள். அப்போது அவர்கள் கண்களில் கண்ணீர் பெருகும்.
>
> இதனால் பிரான்சு செத்துப் போகவில்லை; உயிரோடிருக்கிறது என்று அவர்கள் அறிவிப்பார்கள். கஷ்டங்களைச் சகிக்க மாட்டாமல் பிரான்சு அழிந்து விட வில்லை. எதிரிகள் என்ன தான நாட்டைத் தாக்கி மக்களைக் கொடுமைப் படுத்திய போதிலும், இன்னும் பிரான்சு உயிரோடு தான் இருக்கிறது. எதிரிகளின் தாக்குதல்களையும் கொடுமைகளையும் பிரஞ்சு மக்கள் அலட்சியப் படுத்துகிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிற தென்றால் பிரான்சு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது; பழி வாங்க இரகசியமாக ஆதிக்கம் தேடிக் கொண்டிருக்கிறது. அப்போது ஜெர்மானியர்கள் வீழ்வார்கள். நம் நாட்டில் நேசதேசத்தார் வெற்றி கொண்டாடுவார்கள். துரோகிகள் அழிவார்கள். நாடு முழுதும் ஒரு முகமாகக் கிளம்பி எதிரியைத் தக்கபடி தண்டிக்கும்.

அமெரிக்க பிரசிடென்ட் ருஸ்வெல்ட் தெரிவிக்கிறதாவது:—

> ஜனநாயகத் தத்துவத்தில் ஆசையுள்ள ஒவ்வொருவருக்கும் இந்த ஆண்டு விழா மிகவும் முக்கியமானதாகும் "விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம்" என்னும் இன்பங்களை மீண்டும் பிரஞ்சு மக்கள் விரைவில் அனுபவிப்பார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

பிரிட்டிஷ் ஐக்கிய நாட்டு மந்திரி அந்தோனி ஈடன் பிரான்சுக்கு விடுத்த கீழ்க் கண்ட செய்தியை அச்சிட்டு 50 லட்சம் துண்டுப் பிரசுரங்களை விமான மூலம் பிரஞ்சு தேசம் முழுதும் வினியோகிக்கப் பட்டது:—

நண்பர்களே!

இந்த நூற்றாண்டிலே மூன்று தரம் ஜெர்மனி பிரான்சு தேசத்தின் மேல் படை யெடுத்துத் தாக்கியது. அதனால், இப்போது ஜெர்மனி பாராட்டும் நேசத்தை பிரான்சு நம்ப முடியாது. ஆகையால் ஐரோப்பாக் கண்டம் முழுதையும் வெல்ல வேண்டும் என்று மனப்பால் குடிக்கும் ஜெர்மனிக்குத் தம் ஆட்களை உதவ ஒரு போதும் பிரான்சு சம்மதிக்காது. பிரான்சைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்று பிரிட்டன் கண் வைத்திருப்பதாக ஜெர்மனி செய்யும் பிரசாரம், முழுப் பொய். பிரான்சின் ஜன நாயகத்துவத்தை மீட்பதே நம் நோக்கம். அதன் கலைகளையும் பண்டையப் பெருமைகளையும் மீட்க வேண்டு மென்பதே நமது ஆசை. பிரான்சைக் கைப்பற்ற வேண்டு மென்னும் எண்ணம் பிரிட்டனுக்குக் கிடையவே கிடையாது. விரைவில் பிரான்சு விடுதலை பெறும். அப்போது நாம் பிரான்சின் உண்மை நண்பர்கள் என்று தெளிவாக உலகம் உணர்ந்து கொள்ளும்.

---

# மூன்றாவது கடன் பத்திர விற்பனை.

## பொது ஜனங்களின் பொறுப்பு.

### நிதியங்கத்தினர் கூறும் காரணங்கள்.

இந்திய அரசாங்கத்தின் நிதி அங்கத்தினர் சர் ஜெரிமி ரெய்ஸ்மன். இவர், மூன்றாவது பாதுகாப்புக் கடனைக் குறித்து டில்லி, ரேடியோ மூலம் சென்ற 7-ம் தேதி ஒரு பிரசங்கம் செய்தார். அதன் முழு விவரமாவது:—

நாளை முதல் மூன்றாவது பாதுகாப்புக் கடன் பத்திரங்கள் விற்கப்படும். ஆகையால் இந்தச் சமயத்தில், நமது அரசாங்கப் பொருள் நிலையின் அடிப்படையான தத்துவங்களைக் குறித்து பொது ஜனங்களுக்குத் தெரிவிப்பது பொருத்தமாகும். யுத்தத்தினால் ஒரு நாட்டின் பொருள் நிலை மிகவும் பாதிக்கப் படுகிறது. என்றாலும், இந்த நாட்டின் பொருள் நிலை பாதிக்கப்பட வில்லை. இது நன்றாகக் கவனிக்கத் தக்க விஷயம். இதை இந்தியர்களும் அந்நியர்களும் தெளிவாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். யுத்தக் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு தன் பொருள் நிலையைச் சிதற விடாமல் காப்பாற்றிக் கொள்ளுவதில் இந்த நாட்டிற்குச் சமமாக, வேறெந்த நாட்டையும் சொல்ல முடியாது. நமது பொருள் நிலை பலப் பட்டதற்கு முக்கியமான காரணம், அந்நிய நாட்டாருக்கு நாம் கொடுக்க வேண்டிய தொகைகள் எல்லாம் ரத்து செய்யப்பட்டன.

> எனவே, இப்போது விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளின்படி இந்தியா சர்க்காருக்குக் கடன் கொடுப்பது ஒரு மிகச் சிறந்த லேவா தேவியாகும்.

தம் பணத்தைத் தகுந்தபடி கொடுத்து வாங்க வேண்டும் என்னும் பொறுப்பு உடையவர்களுக் கெல்லாம் இது ஒரு தகுந்த சந்தர்ப்பம். பொருள் நிலை பற்றிய விஷயங்களில் அனுபவ முள்ளவர்களுக்கு நான் கூறும் உண்மை தெளிவாக விளங்கும். பொது மக்கள் எல்லோரும் இந்த உண்மையைத் தெரிந்து கொண்டு, தாம் சேர்த்து வைக்கும் தொகைகளைக் கொடுத்து கடன் பத்திரங்கள் வாங்க இது ஏற்ற சமயம் என்பதை விளக்கிக் கூற வேண்டியது அவசியமாகிறது. யுத்தத்திற்காக ஏராளமான யுத்தத் தளவாடங்களும் உணவுப் பொருள்களும் படைகளுக்கு ஆட்களும் தேவையா யிருக்கின்றன. இதனால் பொது ஜனங்களுக்குக் கிடைக்கக் கூடிய வசதிகள் கிடைக்காமற் போய் விடுகின்றன. யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் நாடுகள் எந்த அளவிற்கு இதனால் பாதிக்கப் படுமோ, அந்த அளவிற்கு இந்தியாவும் பாதிக்கப் படுகிறது. அது மட்டு மல்ல. தளவாடங்களும், உணவுப் பொருள்களும் படைகளும் நாம் அனுப்ப வேண்டிய அளவு, நாளுக்கு நாள உயர்ந்து கொண்டு போகிறது. இதனால் ஒரு விஷயம் தெளிவாகிறது. பொது ஜனங்கள் தம் பணத்தைக் கொண்டு வாங்குவதற்குப் பொருள்கள் மிகவும் கொஞ்சமாகத் தான் இருக்கின்றன. இப்போது, தமக்கும் தம் நாட்டிற்கும் நல்ல பலன் தரத் தக்க முறையில் நல்ல அறிவும் நாட்டுப் பற்றும் உடையவர்கள் செய்யக் கூடிய தென்ன? யுத்தத் தேவைகளுக்கான பொருள்களை வாங்கப் போட்டி யிடக் கூடாது. போட்டி யிட்டால் விலைகள் தாமாகவே உயர்ந்து விடும். இதனால் அவருக்கும் மற்றவர்களுக்கும் தான் கஷ்டம். எளிய வாழ்க்கை நடத்த வேண்டும். எதிர் காலத்தை முன்னிட்டு பணத்தைத் திரட்டி வைக்க வேண்டும். பொருள்களை வாங்குவதற்கு எதிர் காலம் தான் மிகவும் ஏற்றதா யிருக்கும்.

> இன்றைக்குச் செலவழிக்காததை எப்பொழுதும் நாளைக் கென்று ஒதுக்கிவை

என்பதே அவர்களுடைய கொள்கையா யிருக்க வேண்டும்.

இப்படி மிகுதியாகும் தொகையை, தம் நாட்டிற்குக் கடன் கொடுத்து உதவ வேண்டும். ஒரு விஷயத்தை நான் இங்கே உங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

> எதிர் காலத்தில் உங்கள் நாட்டைப் பற்றிய பொறுப்பு உங்கள் ஒவ் வொருவருக்கும் உண்டு. இது உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ; உங்கள் நாட்டின் பொருளாதாரத்தை உறுதிப் படுத்தி, காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. தான் மிகுதிப் படுத்தும் தொகைகளை அரசாங்கத்திற்குக் கடன் கொடுப்பதனுல், இரண்டு வகைகளில் உதவுகிறீர்கள். 1. நாட்டின் பொருளாதார நிலையை உறுதிப் படுத்திக் காப்பாற்றுகிறீர்கள். 2. தன் பணத்திற் குள்ள மதிப்பையும் நாட்டில் தனக் குள்ள செல்வாக்கையும் நிலை நிறுத்திக் கொள்ளுகிறீர்கள். இதனுல், தனிப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி, நாடு முழுதுக்குமே நன்மை உண்டாகிறது.

யுத்தத்திற்கு மூல பலம் பணந் தான். யுத்தத்தில் வெற்றி பெற வேண்டுமானுல், பொருளாதாரத்திலும் ஒழுக்கத்திலும் நாடு பெரிதும் முன்னேறியிருக்க வேண்டும். தற்கால உலகத்தையும் அதன் நாகரிகத்தையும் நாசஞ் செய்து வரும் கொடிய யமனை வெல்ல, உங்களுடைய உடல் பலத்தை உதவக் கூடாதவர்களாக உங்களில் சிலர் இருக்கலாம். நாம் ஓரளவிற்குத் தியாகம் செய்து இந்தக் கடன் பத்திரங்களை வாங்கலாம். இந்த நாச கால யமனை வெல்லும் பொருட்டாகத் தான், நம் வீரர்கள் போர்க் களத்தில் தம் இரத்தத்தைச் சிந்துகிறுர்கள் என்று நீங்கள் உணர வேண்டும். இரவு கழிந்ததும், பகல் வருகிறது. அதுபோலவே, இந்த யுத்தத்திற்குப் பிறகு வெற்றி நிச்சயமாக நமக்குக் கிடைக்கப் போகிறது. இந்த நம்பிக்கையோடு மட்டும் நாம் இருந்தால் பயனில்லை. செயலில் இறங்க வேண்டும்.

## யுத்த சேத ஜாப்தா.

கீழ்க் கண்டவர்கள் யுத்தத்தில் இறந்து போனுர்கள் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவிக்கிறேரும் :—

**இந்தியன் ஆர்டில்லெரி.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| .. | ஜமேதார் | லட்சுமணன். |
| 101372 | எப். லான்ஸ் நாயிக். | கே. பி. அச்சுதன். |
| 100088 | டிரைவர் | அண்ணஞ்ச பெருமாள் பிள்ளை. |
| 18932 | யு. லான்ஸ் நாயிக். | திவான் சிங். |
| 101424 | கன்னர் சிக்னல்லர். | கணபதி நாயுடு. |
| 100846 | ஏ. நாயிக் | ஜெகந்நாதன். |
| 100068 | கன்னர் | கே. ஜான். |
| 101293 | கன்னர் சிக்னல்லர். | கண்ணையா. |
| 102505 | கன்னர் | கிருஷ்ண குருப். |
| 34298 | ஹவில்தார் | மனன்கான். |
| 101295 | கன்னர் சிக்னல்லர். | முகமத் நசிருதீன். |
| 101428 | கன்னர் | எஸ். முத்துப் பிள்ளை. |
| ஏ. 3 | சமையல்காரர் ஐ.டி. | பார்த்தசாரதி முதலியார். |
| 101242 | யு/பி/லான்ஸ் நாயிக். | இராஜகோபால். |
| ஏஏ/4474 | கன்னர் | சாஹிப் தீன். |
| 102499 | கன்னர் சிக்னல்லர். | சவுந்தரபாண்டியன். |
| 101312 | கன்னர் | ஷம்சுதீன் சாஹிப் |
| 101427 | லான்ஸ் நாயிக். | கே. சித்தையன். |
| 100259 | லான்ஸ் ஹவில்தார். | வீராசாமி. |

**ஐ. எச் சி.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 87563 | ஏ. சிப்பாய் | பி. கங்கர ராஜு. |
| 82828 | ஷை | சின்னசாமி. |

**சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 17747 | சாப்பர் | பாதவி. |

### காயத்தினுல் இறந்தவர்.

**1-வது சோம். எல். ஐ.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| .. | பெருக்குவோன். | ராஜு. |

முன்பு காணுமற் போனவர்கள் என்றும் யுத்தக் கைதிகளாகி விட்டவர்கள் என்றும் கருதப்பட்டவர்கள் இப்போது யுத்தக் கைதிகள் தான் என்று உறுதியாகத் தெரிகிறது :—.

**சென்னை சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 16375 | சாப்பர் | அந்தோனிமுத்து. |
| 16215 | ஹவில்தார் | ஆரோக்கியசாமி. |
| 18316 | சாப்பர் | ஆரோக்கியசாமி. |
| 18150 | ஷை | பாட்சா. |
| 18586 | ஷை | சின்னப்பன். |
| 18529 | ஷை | டானியல், ஆர். |
| 1000 | பெருக்குகிறவன். | எல்லிகாடு. |
| 13900 | சாப்பர் | வி. எஸ். கணேஷ். |
| 18012 | ஷை-7 | ஞானப்பிரகாசம். |
| 17310 | நாயிக் | கோவிந்தராஜ். |
| 14048 | சாப்பர் | ஹெனரி. |
| 18523 | ஷை | கிருஷ்ண பிள்ளை. |
| 13552 | ஷை | மாணிக்கம். |
| 16050 | ஷை | முனுசாமி. |
| 18369 | ஷை | பொன்னுசாமி. |
| 14741 | ஷை | ராஜு. |
| 17144 | ஷை | தங்கவேலு. |

**இந்திய சிக்னல் படை.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 9351 | சிக்னல்லர் | அப்துல் அஜிஸ். |
| ஏ. 3850 | ஷை | அப்துல் ஹபீஸ். |
| ஏ. 1430 | ஷை | அப்துல் ஹபீஸ் கான். |
| ஓ. 2071 | டபுள்யு/சி.ஆர். | ஆதிமுலம். |
| 9726 | சிக்னல்லர் | என். கோபாலசாமி. |
| ஓ. 2580 | சமையல்காரர், ஐ.டி. | கோவிந்தன் |
| 8203 | சிக்னல்லர் | முகமத் இனயத். |
| ஏ. 2918 | ஷை | முகமத் ஷரீப். |
| ஓ. 2412 | பெருக்குகிறவன். | பூசின். |

**ஆர். ஐ. ஏ. எஸ். சி.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| என்.டி/891342 | சிப்பாய் | என். மாமண்டிசாமி. |
| என்.டி/599552 | ஷை | கே. சோமசுந்தரம். |

**ஐ. எச். சி.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 93330 | ஏ/சிப்பாய் | கே. ஏ. கோபால். |
| எச்/186256 | 2-ஜி/பெருக்குவோன். | முனியப்பா. |



| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| எச்/185250 | வண்ணுன் | பலண்டி கந்தப்பா. |

**ஏ. ஐ. ஓ. ஸி.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| ஓ/31971 | பிட்டர் சிப்பாய் 1. | பாபு நாயுடு. |
| ஓ/31140 | எலெக்டிரிக் சிப்பாய்-2 | ஸ்ரீராம். |

### காயப்பட்டவர்கள்.

**இந்தியன் ஆர்டில்லெரி.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 104817 | டிரைவர் | பி. என். மூர்த்தி. |
| 101402 | ஏ. நாயிக் | நல்லைய கௌண்டர். |
| 101532 | கன்னர் | பரசுராமன் |
| 101356 | டிரைவர் | டி. ராமுலு. |

### காணுமற் போய் யுத்தக் கைதியாகி விட்டவர்கள் என்று கருதப் படுகிறவர்கள்.

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 101433 | டிரைவர் | ஆனைமுத்து செட்டியார். |
| 192850 | கன்னர் | அப்பையா படேல். |
| 190065 | யு. பி. லான்ஸ் நாயிக். | அப்பையா. |
| எப் 513 | சமையல்காரர் | சின்னசாமி. |
| 101285 | ஏ. நாயிக் | கோவிந்தசாமி. |
| 102594 | டிரைவர் | எஸ். கொண்டையா. |
| 101512 | யு. பி. லான்ஸ் நாயிக். | கிருஷ்ணசாமி. |
| 103016 | கன்னர் | யு. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு. |
| 100078 | ஷை | கிருஷ்ணசாமி நாயுடு. |
| 101423 | கன்னர். | பி. நாராயண பிள்ளை. |
| எப்.506 | ஐ. டி. சமையல்காரர். | நரசிம்ம நாயுடு. |
| 101237 | கன்னர் | நடேசன். |
| 101369 | டிரைவர் | பரமானந்தம். |
| எப்.507 | ஐ. டி. சமையல்காரன். | பெருமாள்சாமி. |
| எப்.512 | டபுள்யு. சி.ஆர். | ராமன் நாயர். |
| 102490 | கன்னர் | சபாபதி. |
| 102496 | ஷை | சாம்பசிவம். |
| எப்.515 | வெய்டர்/மெஸ் | சுப்பிரமணி பிள்ளை |
| 101370 | நாயிக் | ஐ. சாமி. |
| 100087 | கன்னர் | வீராசாமி. |
| எப்.511 | டபுள்யு. சி. ஆர். | வேலாயுதம். |
| 101310 | யு. பி. லான்ஸ் நாயிக். | வெங்கடாசலம். |
| எப். 12 | பெருக்குவோன். | வெங்கிடசாமி. |
| 102793 | கன்னர் | வேணுகோபால். |

முன்பு காணுமற் போனவர் என்று அறிவிக்கப்பட்டு மீண்டும் படையில் சேர்ந்தவர்.

**சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 63697 | சாப்பர் | ஐயம் பிள்ளை. |

**ஆர். ஐ. ஏ. எஸ். சி.**

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| என்.டி./928946 | சிப்பாய் | ஓய். நரசிம்மலு. |
| எம்.டி./894032 | ஷை | ஆர். சுப்பையா. |

# பர்மாவிலிருந்து வந்தவர்களுக்கு உதவி.

## வழியில் 30 முகாம்கள்.

யுத்தத்திற்கு முன்பு பர்மாவில், 1 கோடிப் பேர்களுக்கு மேல் இந்தியர்கள் வசித்தார்கள். யுத்தம் காரணமாக அவர்களுள் பாதிப் பேர் அதாவது 5 லட்சம் பேர்கள் இந்தியாவிற்கு வந்து சரணடைந்து விட்டார்கள். இன்னும் வந்து கொண்டிருக்கிறுர்கள். ஆனுல் இவர்கள் எண்ணிக்கை கொஞ்சம் தான். காரணம் இப்போது பர்மாவில் பருவ மழை காலம். மழை நின்ற பிறகு இவர்களுடைய எண்ணிக்கை அதிகப் படக் கூடும்.

இவர்கள் தமக்குத் தெரிந்த வழிகள் மூலமும் தெரியாத வழிகள் மூலமும் இந்தியாவிற்கு வந்தார்கள். தரை வழியாக வங்காளத்தில் 2 லட்சம் பேர்களும் அஸ்ஸாமில் 2 லட்சம் பேர்களும் வந்து சேர்ந்தார்கள். மற்றும் கடல் வழியாக 70,000 பேர்களும் விமானங்களில் 12,000 பேர்களும் வந்தார்கள். கடல் வழியாகவும் ஆகாய வழியாகவும் வந்தவர்கள் மிகவும் நெருக்கடிக் குள்ளாகியிருந்தார்கள்.

பர்மாவில் சிவில் அரசாங்கம் நின்று போனவுடனே, போக்கு வரவுகள் தடைப் பட்டு விட்டன. அடிக்கடி விமானங்களி லிருந்து எதிரிகள் தாக்கினுர்கள். இந்திய யுத்தக் கப்பல்கள், சரண் புகுந்தவர்களை ஏற்றிக் கொண்டு இந்தியாவிற்குக் கொண்டு வந்து சேர்த்தன.

ஜப்பான் படைகள் சிந்துவின் ஆற்றை யொட்டி மேலேறிப் போகும் போது, பர்மாவி லிருந்து அஸ்ஸாமுக்குப் போகும் பாதையை வெட்டி விட்டனர். இதனுல், வட பர்மா இரண்டு பிரிவுகளாகி விட்டது. இதனுல் ஏராளமான இந்தியர்கள் ஜப்பானியருக்குத் தப்பி, பிழைக்க, ஓடி வந்தனர். கடைசி நமிஷம் வரையிலும் இவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதுவரை யாருக்கும் தெரியாத வழிகளில் வந்து கொண்டிருந்தவர்களைக் கவனிக்கவும் எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப் பட்டன. அஸ்ஸாம் மாகாணத்தின் வட கிழக்கு மூலை வரையில் சுமார் 10 முகாம்களை வெகு விரைவில் ஏற்படுத்தினுர்கள். அங்கே எல்லா வித சிப்பந்திகளும் டாக்டர்களும் தேவையான பொருள்களும் தயாராக வைக்கப் பட்டிருந்தன. இந்த வழியாக 1[illegible],000 பேர்கள் வந்து சுகமாகச் சேர்ந்திருக்கிறுர்கள்.

**பிரிட்டிஷ் ஆகாய விமான உதவி.**

இந்தக் காட்டுப் பாதைகளைக் கண்டு பிடித்து, அங்கே உணவுப் பொருள்களை விமானங்களி லிருந்து கீழே எறிந்தார்கள். சென்ற 46 நாட்களில் 6 லட்சம் பவுண்ட் உணவுப் பொருள்களும் வைத்தியப் பொருள்களும் எறியப் பட்டன. ஒரு நாளில் மட்டும் 60,000 பவுண்ட் உணவுப் பொருள்கள் எறியப் பட்டன. அங்கெல்லாம் நூற்றுக் கணக்கானவர்கள் பட்டினியால் வருந்திக் கொண்டிருந்தார்கள். அவை அந்த ஜனங்களுக்கு மிகவும் உபயோகமா யிருந்தன. தப்பி வருகிற ஜனங்களுக்கு உதவி செய்கிற கிராமவாசிகளுக்கு சர்க்கார் இனும் தொகைகள் கொடுத்தார்கள். இந்த வழியாக ஆயிரக் கணக்

கான ஜனங்கள் வந்தாலும், அவர்களில் ஒருவராவது பட்டினியால் சாகவில்லை. களைப்பின் மிகுதியினாலும், மலேரியா, வயிற்றுக் கடுப்பு முதலிய நோய்களினாலும் தான் இறந்தார்கள். உணவில்லை என்னும் பேச்சே கிடையாது.

நாகமலை வழியாக ஒரு புது வழி கண்டு பிடிக்கப்பட்டது. இது கடைசியில் இராணுவ ரோடுக்கே போய்ச் சேர்ந்தது. இம்பாலை எதிரிகள் குண்டுகளால் தாக்கினதனால், சில்சாருக்கு ஒரு புதிய வழியைக் கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த வழியில் எல்லா வித வசதிகளுமுள்ள 8 முகாம்கள் அமைக்கப் பட்டன. இந்த வழியாக 35,000 பேர்கள் போனார்கள். இறந்து போனவர்கள் மிகக் கொஞ்சம் பேர்கள் தான். மழை காலம் ஆரம்பமான வுடனே இந்த வழியை மூடி விட வேண்டியதாயிற்று. என்றாலும், சிலர் இந்த வழியாகவும் வந்து கொண்டு தான் இருக்கின்றனர். மழை காலம் ஓய்ந்த பிறகு, இவ் வழியாக வருகிறவர்களுக்கு உதவ வேண்டி, ஒரு ஸ்தாபனத்தையே ஏற்படுத்துவதென்று அஸ்ஸாம் அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கிறார்கள்.

மொத்தத்தில் 30 முகாம்கள் அமைத்தார்கள். இவை ஒவ்வொன்றிலும் 5,000 பேர்களுக்கு இடமுண்டு. இந்த முகாம்களை நடத்துவதற்கு 50 கமாண்டர்களும் உதவிக் கமாண்டர்களும், 50 டாக்டர்களும், சுகாதார சிப்பந்திகளும், போக்கு வரவுகளுக்கு உதவும் உத்தியோகஸ்தர்களும், சப்ளைகளை மேல் பார்க்கும் உத்தியோகஸ்தர்களும், கூலிகளும் போதுமான அளவிற்கு அங்கே வைக்கப் பட்டிருக்கிறார்கள். இன்னும் மற்ற பொது ஸ்தாபனங்களும் உதவி முகாம்களை அமைத்திருக்கின்றன.

**சிக்கலான பிரசினை**

இப்படித் தப்பி வருகிறவர்களுக்கு வேலை கிடைக்கும் வரை அரசாங்கத்தார் ஜீவனாம்சம் கொடுத்து வருகிறார்கள். இந்த ஜீவனாம்சத் தொகையில் ஒருவருக் கொருவர் வேற்றுமை காட்டப்படுகிறது என்று ஒரு சிலர் குறை கூறுகிறார்கள். உண்மை என்னவென்றால், யுத்தத்தில் தப்பி வரும் ஐரோப்பியர்களுக்கு எந்த விகிதப் படி ஜீவனாம்சம் கொடுக்கப் பட வேண்டுமென்று இங்கிலாந்திலுள்ள அரசாங்கத்தார் முந்தியே நிர்ணயித்து விட்டார்கள். அப்போது இந்தியர்களுடைய பிரசினையே ஏற்பட வில்லை. இப்போது ஏராளமான இந்தியர்களும், ஆங்கிலோ—இந்தியர்களும், ஆங்கிலோ—பர்மியர்களும் வருவதால், இந்த விஷயத்தைக் குறித்து மீண்டும் இந்தியா சர்க்கார் பரிசீலனை செய்து, அவரவர்கள், அதற்கு முன் இருந்த நிலைமையை அனுசரித்து, ஒரு குறிப்பிட்ட தொகைக்கு அதிகப் படாமல் கொடுக்கப் பட வேண்டுமென்று மாகாண அரசாங்கங்களுக்கு அறிவித்திருக்கின்றனர். ஐரோப்பியர்களுக்குக் கொடுக்கும் தொகைக்கு இங்கிலாந்து அரசாங்கமும் பர்மாவில் குடியேறி யிருந்த இந்தியர்கள் அல்லாதவர்களுக்குக் கொடுக்கும் தொகைக்கு பர்மா சர்க்காரும் பொறுப்பாளிக ளாவார்கள்.

வேலைக்குத் தேவை யிருக்கும் இடங்களுக்கு இவர்களைச் சிபார்சு செய்யும்படி உள்ளூர் அதிகாரிகளுக்கு இந்தியா அரசாங்கத்தார் கட்டளை யிட்டிருக்கின்றனர். இஞ்சினீர்கள், டாக்டர்கள், கெமிஸ்ட்கள், மின்சார வேலைக்காரர்கள், தச்சர்கள் முதலிய கைத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பது சுலபம். பாதுகாப்பு இலாகாவிற்கு குமாஸ்தாக்கள் ஏராளமாகத் தேவை. இராணுவ முகாம்களுக்கும் விமான நிலையங்களுக்கும், பாதைகள் போடவும், கட்டிடங்கள் கட்டவும் கூலி யாட்கள் தேவை.

தப்பி வந்த மாணாக்கர்களுக்குக் கல்வி வசதிகளும் செய்திருக்கிறார்கள். பர்மா அரசாங்கத்தார் நடத்தும் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு 335 மாணாக்கர்களும், இன்டர்மீடியேட் பரீட்சைக்கு 111 மாணாக்கர்களும், பி. ஏ. பரீட்சைக்கு 44 பேர்களும் எழுதுவார்கள் என்று தெரிகிறது.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஜூலை மீ 24உ, வெள்ளிக்கிழமை [இதழ் 29

## இந்தியாவிற்கு கிளாஸ்டர் பிரபு செய்தி.

### சந்தேகப் பேர்வழிகள் தம்பட்டம்.

### "உங்கள் வேற்றுமைகளை ஒழியுங்கள்."

இந்தியாவை விட்டுப் புறப்படும் முன்பு கிளாஸ்டர் பிரபு புது டில்லி ரேடியோ மூலம் இந்திய மக்களுக்கு ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது :—

ஒரு மாத காலத்தில் நான் இந்தியாவையும் இலங்கையையும் சுற்றி பார்வை யிட்டேன். இதற்கு ஒரு மாதம் போதாது. இந்தியாவின் கோடை காலத்தையும், மழையையும், காற்றையும் நான் அனுபவித்தேன். இவற்றிற்கு ஈடாக மிக அழகான இடங்களையும் நான் கண்டேன். இந்நாட்டிலும் இலங்கையிலும் இராணுவ யத்தனங்கள் வெகுவாக நடைபெறுகின்றன. இவை பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன்.

முதலாவதாக, நான் பிரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந்த எல்லா மாகாணங்களுக்கும் போகவில்லை. பல இந்திய சமஸ்தானங்களுக்கும் போகவில்லை. போக முடிந்த இடங்களிலும் நெடு நேரம் இருக்க முடியவில்லை. இவை பற்றி நான் வருந்துகிறேன். வெகு வேகமாகவும் வெகு தூரமும் நான் பிரயாணஞ் செய்ததில் சில அசௌகரியங்கள் உண்டு; என்றாலும் இந்த நாடு முழுவதையும் பற்றி ஒரு கருத்து அமைய சந்தர்ப்பங் கிடைத்தது. இப்படிப் பட்ட சந்தர்ப்பம் மற்றவர்களுக்கு வாய்ப்பது அரிது.

**இயல்பாகவே ஒற்றுமைப் பட வேண்டும்.**

இந்தியா இயல்பாகவே ஒற்றுமைப் பட்டிருக்க வேண்டிய ஒரு நாடு. இந்தியா பகுக்கப் பட்டிருந்தால், பலவீன மடையும். ஒற்றுமைப் பட்டிருந்தால் மகத்தான ஆதிக்க முடைய நாடாக இருக்கும். மதம், மொழி, வழக்க பழக்கங்கள் ஆகியவற்றில் மிகுந்த வேற்றுமைகள் உள்ள இந்தப் பரந்த நாட்டிலே, ஒற்றுமை மிகவும் அவசியம். இந்த வேற்றுமைகளெல்லாம் ஒழிவதற்குப் பல காரணங்கள் தோன்றி யிருக்கின்றன. இவற்றில் ஒன்று இந்த யுத்தம். இந் நாட்டிலும் இலங்கையிலும் சுற்றிய போதும், எனக்கு வந்த ஏராளமான கடிதங்களி லிருந்தும் ஒரு விஷயம் எனக்குத் தெளிவாய்த் தெரிந்தது. இந்த யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும் என்னும் உறுதி எல்லோருடைய உள்ளத்திலும் பதிந்திருக்கிறது. நாம் நிச்சயமாக வெல்லுவோம் என்னும் உறுதியும் காணப்படுகிறது. இந்த உணர்ச்சி யுடையவர்கள் வாய் பேசாது வேலை செய்து கொண்டு வருகிறார்கள். சந்தேகப் பேர்வழிகள் தான், தம் சந்தேகங்களைத் தம்பட்ட மடித்து கொண்டு வருகிறார்கள். வெற்றி உணர்ச்சி யுள்ளவர்கள் தேசியப் போர் முனை வாயிலாகத் தம் கருத்துக்களை பொது மக்களுக்கு அறிவிக்க இப்போது சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. உலக சரித்திரத்திலேயே ஒருபோதும் ஏற்பட்டிராத ஒரு ஒற்றுமை மகத்தான நம் நேச தேசங்களுக்குள் ஏற்பட்டிருக்கிறது. இவர்களுக்குள்ள மன தைரியம் இந்தியர்களுக்கும் உண்டு என்று உலகத்தார் அறியும்படி இவர்கள் செய்ய வேண்டும்.

**இந்தியா பலமான கோட்டை.**

இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் தொடர்பு ஏற்பட்டது முதல் இதுவரை ஏற்படாத அளவிற்கு இந்தியாவின் இராணுவ பலம் அதிகரித் திருக்கிறது. இப்படைகளையும், அவற்றின் ஊக்கத்தையும் தன்மையையும் கண்டேன். அவர்கள் பாதுகாப்பு வேலைகளையும் உள் நாட்டுப் பாது காவலர்களையும் கண்டேன். தற்கால யுத்த முறைப்படி எந்த நாட்டையும் தகர்த்து விடலாம். இந்தியாவிற்காவது இலங்கைக்காவது நம் எதிரிகள் வந்தால், எதிரி படைகள் கட்டாயம் சிதறிப் போகும். அவர்கள் தோற்று அழிந்தே போவார்கள். என்னுடைய தீர்மானத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு நான் இப்படிச் சொல்லவில்லை. ஜப்பானியர்களோடு போராடி யவர்களோடு நான் கலந்து பேசினேன். ஜப்பானியர்கள் தந்திரங்களை அவர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். சம நிலைமையில் ஜப்பானியர்கள் தம்மோடு போராடினால் நிச்சயமாக ஜெயிக்கக் கூடும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஜப்பானியர்களை ஜெயிக்கக் கூடிய இவர்கள், ஜெர்மானியரையும் இத்தாலியரையும் கூட ஜெயிப்பார்கள்.

கப்பல் படை, தரைப் படை, ஆகாயப் படை இம் மூன்றும் இந்தியாவிலும் இலங்கையிலும் அசைக்க முடியாதபடி வலுத்திருக்கிறது. பிரிட்டிஷ் படைகளும் குடியேற்ற நாட்டுப் படைகளும் நேச தேசப் படைகளும் இங்கே இருக்கின்றன. உங்களுக்குச் சொந்தமான ஒப்புயர்வு இல்லாத இந்தியத் துருப்புகளும் இங்கே இருக்கின்றன.

ஆகவே, என் நண்பர்களே! அவர்கள் பேரிலும் உங்கள் பேரிலும் நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஒரு மாதத்திற்கு முன்பு நான் கொண்டு வந்த என் சகோதரரின் செய்தியில், உங்களுடைய நல்லுணர்ச்சியையும் கூட்டுறவையும் அவர் கோரி யிருந்தார். அவற்றை நான் இங்கே காண்கிறேன்.

**சரியான உணர்ச்சி.**

நான் ஹைதராபாத்துக்குப் போன போது, உருது செய்யுள் ஒன்றை எனக்குக் கொடுத்தார்கள். அது ஜெர்மானியர்களுக்கு எழுதப் பட்டது. அதன் முதல் மூன்று வரிகளில் காணப்படும் கருத்துக்க ளாவன :—

பழைய மகா யுத்தத்தை நீங்கள் மறந்து விட்டீர்களா? எவ்வளவிற் கெவ்வளவு நீங்கள் உயரப் போகிறீர்களோ, அவ்வளவிற் கவ்வளவு ஆழத்தில் விழுவீர்கள். நாங்கள் உங்களை எப்படி ஜெயித்தோம் என்பது ஞாபக மிருக்கிறதா?

இது தான் சரியான உணர்ச்சி. இந்தியர்கள் உள்ளத்தில் இந்த உணர்ச்சி ததும்ப வேண்டும். உங்கள் மனதில் சந்தேகம் தோன்றும் போது, இந்த யுத்தத்தில் உங்களுடைய நண்பர்களின் உணர்ச்சி வெல்ல முடியாதது என்று நீங்கள் உணர வேண்டும். ரஷ்யப் படைகளும் சீனப் படைகளும் மகத்தான முறையில் போராடுகிறார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும். ஒப்புயர்வு இல்லாத வீரத்தோடும் வற்றாத மூல பலத்தோடும் அமெரிக்கா போராடுகிறது. எனவே, வெற்றி நமதே. இந்த உதவிகளைக் கொண்டு இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் ஆதிக்கத்தினாலும், மன உறுதியினாலும் விரைவில் வெற்றி பெறும்படி செய்ய வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு விரைவில் வெற்றி ஏற்படுகிறதோ, அவ்வளவிற் கவ்வளவு நூற்றுக் கணக்கான உயிர்கள்

காப்பாற்றப் படும். கோடிக் கணக்கான மக்களின் துன்பம் நீங்கும்.

'இந்த யுத்தம் அயலார் யுத்தம்; இதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை' என்று யாரும் நினைக்க முடியாது. எல்லா வகையிலும் இது ஒரு உலக யுத்தம். எல்லா நாடுகளும் இதனால் பாதிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இதை யாரும் அலட்சியப் படுத்துவதற் கில்லை. இது முற்போக்குக்கும் பிற்போக்குக்கும் உள்ள போராட்டம்; நாகரிகத்திற்கும் மிருகத்தனத்திற்கும் உள்ள தகராறு; அறிவிற்கும் மூடத்தனத்திற்கும் உள்ள சண்டை. உலகத்திற்கே பண்டைக் காலத்தில் தத்துவ சாஸ்திரத்தைத் தந்த பெருமை இந்தியாவிற்கு உண்டு. உலகத்திற்குக் கலையையும் அறிவையும் தந்த நாடு இது. ஆகையால் இந்தியாவும் இலங்கையும் இப்போது என்ன செய்யும் என்னும் கேள்விக்கே இடமில்லை.

**ஒன்று படுங்கள்.**

உங்கள் வேற்றுமைகளை ஒழியுங்கள்; ஒன்று படுங்கள்; உங்கள் வீடுகளுக்காகவும், மக்களுக்காகவும், கலைக்காகவும், உங்கள் நண்பர்களுக்கு உதவியாயிருந்து போராடுங்கள்; இந்த பயங்கரமான யுத்தம் நம் வெற்றியோடு தான் முடியும்.

பாஸிஸமும், நாஜிஸமும், ஜப்பானியர்களின் பேராசையும் மீண்டும் தலைதூக்கி, உலகத்தைக் கஷ்டப் படுத்தாத படி, ஆழப் புதைக்கப் பட வேண்டும். இதற்கு நாம் எவ்வளவிற் கெவ்வளவு உதவுகிறோமோ அவ்வளவிற் கவ்வளவு விரைவில் நமக்கு வெற்றி கிடைக்கும்.

# இந்தியப் படைகளுக்கு க்ளாஸ்டர் செய்தி.

## "வெற்றி பெறும் வரை போராடுவோம்"

### இந்திய படைத் தலைவர் பதில்.

மேன்மை தங்கிய க்ளாஸ்டர் பிரபு இந்தியாவை விட்டு 1942-ம் ஜுலை மீ 17உ புறப்பட்டு விட்டார். அப்போது நம் இந்தியா படைத் தலைவருக்குக் கீழ்க் கண்ட செய்தியை அனுப்பி யிருக்கிறார்:—

நான் இந்தியாவிலும் இலங்கையிலும் சுற்றி பார்வை யிட்டேன். நான் பார்வை யிட்ட நமது படைகளின் போக்கும், வேலையும், சந்தோஷமான உணர்ச்சியும் என் மனதைக் கவர்ந்தன. இத்தனை வீரப் படைகளை நான் இவ்வளவு கொஞ்ச காலத்திற்குள் பார்க்கும்படி ஏற்பாடுகள் செய்து உதவிய எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவிக்கவும்.

இந்தப் படைகள் போர்க் களத்தில் இறங்கி, போராடுவார்களானால், எப்படிப் பட்ட போர்க் களமாக விருந்தாலும், தம் வீர இனத்திற்குப் பெருமை யுண்டாக்கும் முறையிலேயே போராடுவார்கள் என்று முழுதும் நம்புகிறேன். பொதுவான ஒரு நோக்கத்திற்காக நாமெல்லோரும் பாடு பட்டு வருகிறோம். அதன் பயனாக, நீதி, உண்மை, அன்பு ஆகியவை தழைக்கும் என்றும் நம்புகிறோம். பிறகு நாம் எல்லோரும் நம் ஊர்களில் சமாதானமாக வாழலாம் என்று எதிர் பார்க்கிறோம். இப்படைகளைச் சேர்ந்த எல்லோருக்கும் என் வாழ்த்துதலை அறிவிக்கக் கோருகிறேன். அவர்களுடைய வீரத்தினாலும், ஒழுக்கத்தினாலும், சகிப்புத் தன்மையினாலும், விரைவில் நாம் முழு வெற்றி பெறுவோம்.

### இந்திய படைத் தலைவர் பதில்.

இந்திய படைத் தலைவர் ஜெனரல் சர் ஆர்ச்பால்ட் வேவல் கீழ்க் கண்ட பதிலை மேன்மை தங்கிய க்ளாஸ்டர் பிரபுவுக்கு அனுப்பி யிருக்கிறார்:—

தங்களுடைய ஜுலை மாதம் 14-ம் தேதிக் கடிதம் கிடைத்தது. அதில் காணப்படும் செய்தியின் நிமித்தம், இந்தியாவி லுள்ள எல்லாப் படையினரின் சார்பாக நான் மேன்மை தங்கிய தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். தங்கள் வருகையினால், இந்தியாவிலுள்ள மூன்று வகைப் படைகளுக்கும் ஊக்கம் அதிகப் பட்டிருக்கிறது. அவர்கள் மேல், தங்களுக்கு எவ்வளவு அக்கரை யிருக்கிறது என்று, இந்த வெயில் காலத்தில் தாங்கள் செய்த சுற்றுப் பிரயாணம், தெளிவாகத் தெரிவிக்கிறது. இதை எல்லாப் படையினரும் பெரிதும் பாராட்டுகிறார்கள். நீதியையும் உண்மையையும் நிலை நாட்டும் பொருட்டு, எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும், அவ்வளவையும் சகித்துக் கொண்டு, கடைசியில் வெற்றி பெறும் வரை போராடியே தீருவோம் என்று, தயவு செய்து மாட்சிமை தங்கிய மன்னர் பிரானுக்கு உறுதி கூறும்படி கோருகிறேன்.

# நேர்முகமாகச் செய்யும் வேலையில் நன்மை யுண்டு.

### படையில் சேர இளைஞன் ஊக்கம்.

இந்தியப் படை ஆராய்ச்சிக் காரர் ஒருவர் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார்.—

ஒரு படைத் தலைவர் சமீபத்தில் பஞ்சாப் மாகாணத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து திரட்டிக் கொண்டு வந்த ரிக்ரூட்களை எனக்குக் காட்டிப் பெருமை யடைந்தார். அப்போது அவர்கள் பந்தாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் இளம் சீக்கியன். நல்ல உடற்கட்டுடையவன். அவனைப்பற்றி அப் படைத் தலைவர் கூறியதாவது:—

இவன் மற்ற இளைஞர்களோடு, இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் உத்தியோகஸ்தர் முன் ஆஜரானான். மிகவும் கொஞ்ச வயதுடையவன் என்னும் காரணத்திற்காக, அவனை எடுத்துக் கொள்ள முடியா தென்று அவர் சொல்லி விட்டார். அவன் அடைந்த ஏமாற்றம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. கடைசியாக கர்னல் துரையிடம் போனான். இப்போது இராணுவத்திற் கென்று சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கும் யாருடன் வேண்டு மானாலும் சண்டை போடவோ குஸ்தி செய்யவோ தான் தயார் என்று சொன்னான். அவர்களை விடத் தான் எந்த வகையிலும் தாழ்ந்தவன் அல்ல என்பது அவனுடைய கருத்து. மற்றவர்கள் எல்லோரும் கூடி, தம்முள் திறமைசாலியான ஒருவனை தேர்ந் தெடுத்தார்கள். இவ்விருவருக்கும் சண்டை நடந்தது. பெரியவன் ஜெயித்தான். என்றாலும், மிகவும் கஷ்டப் பட்டே சண்டை யிட வேண்டி யிருந்தது. ஆனால் சண்டையில் இச்சிறுவன் ஜெயிக்கா விட்டாலும் அவனுடைய நோக்கம் நிறைவேறியது. அவனுக்கு "சபாஷ்!" பட்டம் கிடைத்தது. இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டான்.

ஒரு நாள் நல்ல மழை, கர்னலும் அவர் திரட்டிய ஆட்களும் ஒரு ரயில்வே ஸ்டேஷனில் அகப்பட்டுக் கொண்டார்கள். இந்த ஆட்கள் ரயில் வண்டி ஏறியே அறியாதவர்கள். இவர்களை வண்டியில் ஏற்றுவது கர்னலுக்குச் சற்றே கஷ்டமா யிருந்தது. வண்டி குறித்த நேரத்தில் புறப்படுவதற்குத் தடைப் படும் போலிருந்தது. உடனே ரயில்வே கார்டு வந்து, தான் உதவி புரிவதாகக் கர்னலிடம் கூறினார். கர்னலும் ஏற்றுக் கொண்டார். அந்த ஆட்களையெல்லாம் கார்டு, வண்டிகளில் ஏற்றி விட்டார்.



வண்டி புறப்பட இன்னும் கொஞ்சம் நேரம் இருந்தது. "நீரும் படையில் சேரவேண்டும்" என்று கர்னல் விளையாட்டாக கார்டிடம் சொன்னார். உடனே எந்த விதத் தாமதமு மின்றி கார்டு தன் சம்மதத்தைத் தெரிவித்தார். படையில் இப்போது சேர்ந்து பயிற்சி பெற்று வருகிறார். இவருக்கு உள்ள தகுதிகளுக் கேற்ற படி அவரை சற்று உயர்ந்த பதவியில் சேர்த்துக் கொண்டோம்.

கர்னல் ஒரு நாள் ஒரு கிராமத்திற்குப் போனார். அவரிடம் ஒரு கிழவனார் வந்து, தன் இரண்டு பைன்கள் பேரிலும் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சிறு குற்றங்கள் செய்ததாக வழக்கு நடக்கிறது என்றும், அதில் கர்னல் குறுக்கிட வேண்டும் என்றும் கோரினார். கர்னல் கோர்ட்டிற்குப் போனார். மாஜிஸ்ட்ரேட்டைக் கண்டு பேசினார். இருவரும் விடுதலை பெற்றார்கள். இந்த அடங்கா பிடாரிகள் இருவரும் படையில் சேர்ந்தனர். கிழவனாருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவ்விருவரையும் கர்னல் என்னிடம் காண்பித்தார். அவர்கள் மிகவும் சந்தோஷமாகத் தான் காணப் படுகிறார்கள். சிறந்த வீரர்களாவதற்கான இலட்சணங்கள் அவர்களிடம் காணப் படுவதாக அவர்களுடைய படை உபாத்தியாயர் கூறினார்.

நல்ல உயர்ந்த குடும்பங்களில் பிறந்து பள்ளிக் கூடங்களில் படித்த பலரும் படையில் சேர்ந்திருக்கிறார்கள். பந்தாடும் போது, விளையாடத் தெரியாதவர்களுக்கு அவர்கள் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

ஆகவே, எந்தக் காரியமும் நேர்முகமாகச் செய்வதில் நன்மை யுண்டு என்று தெளிவாகத் தெரிகிறது.

## இது என்ன தெரியுமா?



எதிரி படைகள் வரக்கூடிய பாதையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ருஷ்ய மிஷின் பீரங்கி.

# பர்மாவைத் தாக்கும் இந்திய விமானங்கள்

### பெரும் ஆபத்தில் தீரமாக தாக்கின

காற்றும் மழையும் கடுமையாய் அடித்தது. நம் ராயல் இந்திய விமானப் படைக்கு இதெல்லாம் ஒரு பொருட்டாகுமா? இல்லை. பர்மாவில் ஜப்பானியர் கைப்பற்றி யிருக்கும் ஊர்களுக்கு ஓயாது போய்க் கொண்டே யிருக்கிறது. வெடி குண்டு அபிஷேகம் நடத்திக் கொண்டே வருகிறது.

அந்தப் படையைச் சேர்ந்த 'சார்ஜெண்ட் அப்சர்வர்' சமீபத்தில் கல்கத்தா சர்வகலாசாலை மாணாக்கரா யிருந்தவர். ஒரு முறை தான் அனுபவித்த கஷ்டங்களைக் கூறினார். அது வருமாறு:—

வட மேற்கு பர்மாவில் கலிவா என்றொரு ஊர் இருக்கிறது. இந்த ஊரைத் தாக்குவதற்கு நாங்கள் போனோம். திடீரென்று, நாங்கள் மலை ஓரத்தில் பறப்பதைக் கண்டோம். அப்போது அங்கே மேகங்கள் மிகவும் திரண்டிருந்தன. எங்கள் விமானத்தின் இறகுகளின் முனை கூட எங்களுக்குத் தெரியவில்லை. எங்களுக்கு எதிரே ஒரு மலை சுமார் 100 அடி தூரத்தில் இருப்பதாகத் தெரிந்தது. உடனே எங்கள் விமான மோட்டி பளிச் சென்று ஒரு திருப்பு திருப்பினார். அந்தப் பள்ளத் தாக்கை வட்ட மிட்டார். எங்கள் விமானம் அதிக உயரத்திற்கு வந்து விட்டது, அதாவது அந்த மலை யுச்சிக்கு மேலே கிளம்பி விட்டது, பிறகு நேரே நாங்கள் கலிவாவிற்குள் போய் வெடி குண்டுகளை எறிந்து விட்டுத் திரும்பினோம். எங்கள் விமானத்தோடு போராட எதிரி விமானங்கள் எதுவும் வர வில்லை; ஆனாலும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் தாக்கின. எங்கள் விமானங்களில் ஒன்றின் வாலில் மட்டும் எதிரியின் பீரங்கிக் குண்டு பாய்ந்து காயப் படுத்தியது. நமது விமானங்கள் கொண்டு போன எல்லா குண்டுகளையும் உபயோகித்தோம். எதிரிகள், ஆற்றங் கரையில் குடிசைகளில் ஒளிந்து கொண்டிருந்தார்கள். பூமிக் கருகில் எங்கள் விமானங்களைச் செலுத்திப் போய் அந்த குடிசைகளையும் அவர்களையும் அழித்தோம். நம் விமானங்கள் எல்லாம் மற்றபடி சுகமாய்த் திரும்பி வந்து சேர்ந்தன.

## சென்னை மாகாணத்தில் தேக்கு உற்பத்தி

இந்தியாவில் 1 லட்சம் எக்கரில் தேக்கு மரங்கள் வைத்திருக்கிறார்கள். வருஷந் தோறும் 5,000 எக்கர் அதிகமாகப் பயிராக்கிக் கொண்டு வருகிறார்கள். பதியன் போட்டுத் தான் தேக்கைப் பயிராக்குவது வழக்கம். சென்னை மாகாணத்தில் மட்டும் வருஷந்தோறும் 1,500 எக்கர் அதிகமாக பயிராக்குகிறார்கள். இதற்கு 20 லட்சம் முதல் 25 லட்சம் பதியன்கள் வேண்டி யிருக்கிறது.

மலையாளக் கரையிலே தற்காலிகமாக, தண்ணீர் அதிகமாகப் பாய்ச்சாமல் பதியன்களை வளர்பபது நல்லது. ஒரே இடத்தில் பதியன்களை வளர்ப்பதை விட, இடத்தை மாற்றி மாற்றி பதியன் போடுவது நல்லது. ஏனென்றால் ஒரு தரம் பதியன் போட்ட இடத்திலே பூமியின் சத்து குறைந்து விடுகிறது. அல்லாமலும் பூச்சிகளும் பதியன்களை அரித்து விடுகின்றன. இதனால் தேக்கு பயிர் செய்யும் செலவும் முயற்சியும் குறையும்.

## தொழிற்சாலைகளில் ஏ. ஆர். பி. ஏற்பாடுகள்.

இந்தியாவிலுள்ள தொழிற் சாலைகளில் செய்யப்படும் ஏற்பாடுகளுக்கு இந்தியச் சர்க்கார் தொழில் இலாக்காவைச் சேர்ந்த தொழிற் சாலை ஏ.ஆர்.பி. பிரதம அட்வைசர் தான் பொருப்பாளி. இவருடைய உத்திரவுப்படி வேலை செய்ய தேர்ச்சி பெற்ற சிப்பந்திகள் இருக்கிறார்கள். இந்திய பாதுகாப்புச் சட்டப்படி இவருக்கு அதிகாரம் மிகவும் உண்டு. தொழிலாளர்களைக் காப்பாற்றவும் உற்பத்தி தடைப் படா திருக்கவும் வேண்டிய எவ்வித நடவடிக்கை வேண்டுமானாலும் அவர் எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு தொழிற் சாலையிலும் தகுந்தபடி பாதுகாப்பிடங்களும், போதுமானபடி ஏ.ஆர்.பி. நெருப்பணைப் போர்களுக்குத் தகுந்த பயிற்சியளித்தும் வைத்திருக்க வேண்டும்.

சாதாரண போக்கு வரவுகளோ, சப்ளைகளோ தடைப் படுமானால், தொழிலாளர்களுக்குத் தகுந்தபடி சாப்பாடு போடவும் மற்ற நன்மைகளைக் கவனிக்கவும், இயன்ற வரை தொழிலாளர் வெல்பேர் அட்வைசரான தோழர் ஆர். எஸ். நிம்கார் உதவியால் நடைபெறும்.

இங்கிலாந்தில் பாதுகாப்பு முறைகள் எப்படிக் கையாளப் பட்டன என்பது பற்றி பிரதம அட்வைசர் தெரிந்து கொண்டு வருகிறார். யுத்தம் ஆரம்பமானது முதல் இங்கிலாந்தில் விமானப் பாதுகாப்பு இன்ஸ்பெக்டராக விருந்து தொழிற் சாலைப் பாதுகாப்பில் கவனம் செலுத்தி வந்தவர் பிரிகேடியர் பி. டபுள்யு. எல். ப்ரோக்-ஸ்மித். இவர் 5 மாதங்களுக்கு முன்பு இந்தியாவிற்கு விமானத்தில் வந்திறங்கி, தன் அனுபவத்தைத் தெரிவித்தார்.

இங்கிலாந்தில் குண்டுகள் விழும் போது, அங்கேயிருந்து அனுபவம் பெற்ற நிபுணர்களும் இன்ஸ்பெக்டர்களும் சப்ளை மந்திரிக் காரியாலயத்தி லிருந்து இந்தியாவிற்கு 5 பேர்கள் வந்திருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து 3 பேர்களை இங்கிலாந்திற்குத் தேர்ச்சி பெறும்படியும் அனுப்பி யிருக்கிறார்கள். இன்னும் இருவரை அனுப்பப் போகிறார்கள்.

## தப்பி வந்தவர்களுக்கு உதவித் தொகை

### விகிதம் தீர்மானிக்கப்பட்டது

பர்மா, மலேயா முதலிய நாடுகளி லிருந்து எதிரிகளுக்கு தப்பி ஓடி வந்தவர்களுக்கும், அந் நாடுகளில் எதிரிகள் வசம் சிக்கி இருப்பவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இந்திய அரசாங்கங்கள் கொடுக்கும் உதவித் தொகை பற்றி, சில தவறான கருத்துக்கள் இருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தொகைகள் திருப்பிக் கொடுத்து விடப்படும் என்னும் நிபந்தனையின் பேரில் தான் கொடுக்கப் படுகிறது. ஒவ்வொருவருக்கும் எவ்வளவு தொகை கொடுக்கப் பட வேண்டு மென்று மாகாண அரசாங்கங்கள் நிர்ணயிக்கும். இந்த உதவித் தொகை வேண்டியவர்கள் ஜில்லா அதிகாரிகளுக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும். இந்தியர்களுக்கும், ஆங்லோ—இந்தியர்களுக்கும் இத் தொகை உதவும் பொறுப்பை இந்தியா அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் தொகைகள் அந்தந்த அரசாங்கங்களின் மேல் பற்று எழுதப் படும்.

இந்த உதவித் தொகைகளைக் கீழ்க்கண்ட தொகைக்கு அதிகப் படாத விகிதத்தில், கொடுக்க வேண்டு மென்று இந்தியா அரசாங்கத்தார் விதித்திருக்கிறார்கள் :—

| சாதாரண வருவாய், அல்லது அந்த நாடுகளிலிருந்து வந்த தொகை. | தனிப்பட்ட சம்பாத்தியக்காரர், அல்லது வரும் தொகைகளைப் பெற்றுக் கொள்ளுபவர். | மனைவி அல்லது வயது வந்தவர்களோடு வசித்தல். | குழந்தை. |
|---|---|---|---|
| 0–50 | 15 | 25 | 5 |
| 51–150 | :0 | 50 | 8 |
| 151–400 | 60 | 100 | 12 |
| 401-750 | 100 | 170 | 1[illegible] |
| 750-க்கு அதிகமானல். | 150 | 250 | 20 |

ஒருவர் அங்கே சம்பாதித்துக் கொண்டிருந்த தொகையில் ¾ பங்காவது அல்லது ரூ 50-ஆவது (குறைந்த தொகையை மட்டுந் தான்) பெறலாம். அது போலவே, அந் நாடுகளி லிருந்து வந்து கொண்டிருந்த தொகையில் ¾ பங்காவது அல்லது ரூ. 350-ஆவது (குறைந்த தொகையை மட்டுந் தான்) பெறலாம். இந்த விகிதங்கள் 1942-ம் ஞு ஜூலை 1உ முதல் 6 மாதங்களுக்கு அமுலி லிருக்கும். குழந்தைகள், பள்ளிக்கூடம் போகிறதாக ஆதாரங்கள் இருந்தால், அவர்களின் பொருட்டு அலவன்ஸ் கொடுக்க மாகாண அரசாங்கங்களுக்கு அதிகார முண்டு.

இப்படி உதவி பெறுகிறவர்களுக்கு வேலை கிடைத்து விட்டதா என்று மாதந் தோறும் விசாரணை செய்து, தெரிந்து கொண்ட பிறகு தான் இந்த உதவித் தொகைகள் கொடுக்கப் படும்.



## அமெரிக்காவைச் சேர்ந்த "அலபாமா" கப்பல்.



குறிப்பிட்ட தேதிக்கு 9 மாதங்களுக்கு முன்பே, அதாவது சென்ற பிப்ரவரி மாதமே "அலபாமா" என்னும் அமெரிக்கக் கப்பல், கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இது 35,000 டன் கப்பல். இதன் அடக்கச் செலவு 2 கோடி பவுன். இதன் வேகம் 35 மைல்கள். தற்காலத்திய யுத்தத் தளவாடங்கள் எல்லாம் ஏற்றிப் போகத் தகுந்தபடி கட்டப் பட்டிருக்கிறது. கப்பல் கட்டும் திட்டம் வெகு விரைவில் அமெரிக்காவில் முடிகிறது என்பது இதனால் தெரிகிறது.

## உலகப் போக்கு.

**எகிப்தியப் போர் முனை.**

எகிப்தியப் போர் முனையில் இப்போது போராட்டம் நடை பெற வில்லை. இரு கட்சிக் காரர்களும் இப்போது பலந் தேடிக் கொள்ளுகிறார்கள் என்று இதிலிருந்து தெரிகிறது.

சிடி பரானிக்கு வடக்கே சில கப்பல்களை நாம் சமீபத்தில் தாக்கினோம். இதிலிருந்து, எந்தெந்த வழிகளில் தன் சேனையைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமோ அந்த வழிகளி லெல்லாம் எதிரி திரட்டுகிறதாகத் தெரிகிறது.

தரையில் யுத்தம் நடை பெறவில்லை யானாலும் ஆகாய யுத்தம் நடந்தது. பூகா என்னு மிடத்திலுள்ள 4 விமானங்கள் இறங்கும் இடங்களை, நேச தேச விமானப் படைகள் கடுமையாகத் தாக்கின. இதில், 30 எதிரி விமானங்கள் பழுதாயின. நாம் எறிந்த வெடி குண்டுகள் 250 பவுண்ட் வெடி குண்டுகள். இவை கீழே விழுந்த வுடனே, சுற்றி 550 கஜ தூரத்திற்குச் சேதப் படுத்துகின்றன. எனவே, அங்கிருந்த எதிரி விமானங்களில் ஒன்றாவது காயப்படாமல் தப்பி யிருக்குமா என்பது சந்தேகம் தான்.

சென்ற திங்கட் கிழமை மெர்஼ா மத்ரா துறை முகத்தை நம் கப்பற் படை தாக்கியது. துறைமுகக் கட்டிடங்கள் இடிந்தன. துறைமுகத்தி லிருந்த கப்பல்கள் நாசமாயின. இவ்வளவு கடுமையாக இது வரை பிரிட்டிஷ் படை இதைத் தாக்கியதே கிடையாது. வெடி குண்டுகளால் இடிந்த கட்டிடங்கள் ஆகாயத்தில் சிதறி விழுந்தன. எதிரிக் கப்பல்கள் மேல் 400 ஷெல் குண்டுகள் சுடப் பட்டன.

சென்ற இரண்டு வாரங்களாக, எகிப்தியப் போர் முனையில், பிரிட்டிஷ் நிலைமை உறுதியா யிருக்கிறது. இவர்கள் போய் எதிரிகளைத் தாக்குகிறார்கள்.

தன் முழு பலத்தையுங் கொண்டு அலெக்ஸாந்திரியா வழியாகப் புகுந்து தாக்குவதா, அல்லது பிரிட்டிஷ் விமானப் படைகளின் வெடி குண்டுகளுக்குத் தப்பி பந்தோபஸ்தான இடங்களில் இருப்பதா என்று ரோமெல் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார். அநேகமாக முன்னேறி தாக்கத் தான் செய்வார் என்று தெரிகிறது. ஒரே மூச்சில் எகிப்தைக் கைப் பற்றிக் கொள்ளலாம் என்று அவர் கொண்ட எண்ணத்தில், நேச தேசப் படைகள், மண்ணைப் போட்டன.

**டோப்ருக்குக்குப் பிறகு.**

எகிப்தில் நம் படைகள் எதிரிகளை ஏமாற்றிக் கொண்டே போராடிக் கொண்டு பின் வாங்கின. இது மிகச் சிறந்த யுத்த தந்திரம். நியூ சிலந்து படைகளும், மற்ற படைகளும், பிரிட்டிஷ் டாங்கிகளும், 25 பவுண்டர் பாட்டரிகளும் வந்த பிறகு தான் அடுத்தடுத்து நம் நேச தேசப் படைகள் எதிர்த்துத் தாக்கி தக்கபடி எதிரிகளைத் தண்டித்தன. அதன் பிறகு தான் அலமீன் யுத்தம் ஆரம்பமானது. ஒரு வாரம் யுத்தம் நடந்த பிறகு அலமீனுக்கு மேற்கே சில மைல்களுக்கு அப்பால் கடற்கரையி லிருந்து தெற்கே 25 மைல்களுக்கும் அங்கிருந்து நேர் மேற்கே 30 மைல் தூரத்திற்கும் தன் படைகளை ரோமல் நிறுத்தி வைத்தார். தன் போக்கு வரவு வழிகளை நேச தேசப் படைகள் தாக்கிப் பிடித்து விடக் கூடாது என்பதற்காகத் தான், இவர் இப்படிச் செய்தார். நிலைமை எவ்வளவு மாறி யிருக்கிறது என்று இதிலிருந்து தெரிகிறது. எதிரி மீது பாய்ந்து நிச்சயமாக வென்று விடலாம் என்னும் உறுதியுடைய ஒரு படைத் தலைவர், தன் படைகளை இப்படி அணி வகுக்க மாட்டார். என்றாலும், ரோமலின் படைகள் பலமானவை. தளவாடங்களும் ஏராளம். ஆனால்

சமீபத்தில் நடந்த கடும் போரில் ஓரளவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம்.

முதலில் தாக்கியது ரோமெல் அல்ல. ஜூலை மாதம் 10-ம் தேதி ஜெனரல் ஆகின்லெக் அலமீனுக்கு மேற்கே 6 மைல் தூரத்திலிருந்த எதிரி படைகளைத் தாக்கி 2,000 பேர்களை யுத்தக் கைதிகளாகப் பிடித்தார். அநேக எதிரி டாங்கிகளை நாசம் செய்தார். ஜூலை 14-ம் தேதி முதல் இது வரை 4,000 யுத்தக் கைதிகளைப் பிடித்திருப்பதாகத் தெரிகிறது. இதிலிருந்து நாம் எதிரிகளை எதிர்த்து வென்று விட்டோம் என்று நினைக்கப் படாது. இனி ஏற்படக் கூடிய போரில் தான் முடிவு தெரியும்.

நேச தேச விமானப் படைகள் பெங்காசியையும், திரிபோலியையும் மிகக் கடுமையாகத் தாக்கின. எதிரிகளுக்கு சப்ளைகளும், உதவிப் படைகளும் வர ஒட்டாமல் தடுக்க இது ஒரு வழி. இந்தத் தாக்குதலைப் பற்றி 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை நிருபர் ஒருவர் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிறார்:—

> சென்ற வாரம் ஆபிரிக்கப் படைகள் பட்டது போல எந்தப் படையும் இதுவரை விமானத் தாக்குதல்களுக்கு ஆளானதில்லை.

எதிரிகளின் சவுடால் வார்த்தைகள் பலிக்கவில்லை. என்றாலும், எதிரி நைல் நதிக் கரையின் அருகில் நாம் அஞ்சத்தக்க நிலையில்தான் இருக்கிறான்.

**இந்தியப் படைகளின் சிறந்த வேலை.**

இந்தியப் படைகள் தென் பகுதியில் எதிரிகளைத் தாக்குகின்றன. மத்தியப் பகுதியில் ருகிசாத் மலைத்தொடர் நெடுக போராடிக் கொண்டிருக்கின்றன. சென்ற ஞாயிற்றுக் கிழமை இம்மலைத் தொடரைக் கடந்து எதிரிகளைத் தாக்கி அநேகரைக் கொன்றன. கடற் கரைக்கும் மத்திய காரியாலயத்திற்கும் தகுந்தபடி சம்மந்தம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. மலை மேல் நடந்த போரில், 13 டாங்கிகள், 6 பீரங்கி மோட்டார்கள், 1 பெரிய பீரங்கி, 32 டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள், 14 பீரங்கிகள் ஆகியவை நாசஞ் செய்யப்பட்டன. 1 மணி நேரச் சண்டையில் கிடைத்த பலன் தான் இவை.

எகிப்திலுள்ள, ஒரு கனடிய பத்திரிகை நிருபர் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிறார்:—

> "சிறந்த, மன உறுதியுள்ள, எதிரிகளைத் தாக்க வேண்டும் என்னும் உற்சாகமுள்ள படைகள் இப்போது நம்மிடம் எகிப்தில் இருக்கின்றன. என்றாலும், எல்லாம் சரிகு நேர்த்தியாயிருக்கிறதென்று நினைத்து விட வேண்டாம். எகிப்தியப் போரின் கடுமை, இனித் தான் இருக்கிறது."

# ஆசையும், பலனும்

ஆசைக்கு ஒரு அளவில்லை. அது கட்டுப்பாடு ஏதுமின்றி பிரமாதமாக எதை எதையோ எதிர் பார்க்க ஆரம்பித்து விடுகிறது. ஆனால், நாமொன்று நினைக்க தெய்வ மொன்று நினைக்கும் என்ற உண்மையை யாராவது ஆக்ஷேபிக்க முடியுமா? இந்த உண்மைப்படி, பிரமாதமாக வளர்ந்து கொண்டு போகப் பார்க்கும் ஆசையிலே மண் விழுந்து, எல்லாம் பாழாகி விடுகிறது. அதிவேகமாக ஓடிக் கொண்டிருக்கிற ரயில், முன்னால் ஏற்பட்ட ஏதோ ஒரு தடை காரணமாக, 'சடக்' என்று நின்றால், ரயிலுக்குள் உள்ளவர்களுக்கு எப்படி ஒரு அதிர்ச்சி ஏற்பட்டு, எல்லாரும் 'குப்' என முன்னே விழுந்து நிமிருகிறார்களோ, அதே போல், பெரிய ஆசைக்கு இடைஞ்சல் ஏற்பட்டதும், பெரிய அதிர்ச்சி உண்டாகிறது. இதைச் சமாளித்துக் கொள்ள முடியா விட்டால், குப்புற விழ வேண்டியது தான்.

நாஜிகளின் நிலைமை இப்பொழுது இப்படித் தான் இருக்கிறது. டோப்ருக் விழுந்ததும், "லயன் க்ளியர்" ஆகி விட்டது போல் எண்ணி, மடமட வென முன்னேறினர். சூயஸ் கால்வாயின் கரையை அடைந்து விட்டதாகவே எண்ணி விட்டனர். அலெக்ஸாந்திரியா நகரம், சீட்டுகளால் கட்டப் பெற்ற வீடு போல 'பொக்' என விழுந்து விடும் எனக் கனவு கண்டனர். அந்நகரத்திற்குள் வெற்றி மாலையுடன் பிரவேசிக்க, முஸோலினி கூட போர்க் களத்திற்கு வந்து விட்டதாக ஒரு தகவல் எழுந்தது.

ஆனால் நடந்த தென்ன? எல் அலமீன்—அதாவது அலெக்ஸாந்திரியாவிற்கு சுமார் எழுபத்தைந்து மைல் தூரத்திலே, நாஜிகள் நிற்க வேண்டி வந்து விட்டது. இந்த இடத்தில் தான் அவர்களை நிறுத்தித் தடுத்துப் போராட வேண்டுமென சேனாபதி ஆக்கின்லக் நினைத்தார். அவர் நினைத்தபடியே போர் நடந்து கொண்டிருக்கிறது. ஓரிரண்டு இடங்களில், ஜெர்மானியர், தாங்கள் பிடித்த இடங்களைக் காலி செய்யவும் நேர்ந்தது.

ஆனால், ராமெல் சும்மா இருப்பதாகத் தெரியவில்லை. ஓடோடியும் சென்று ஹிட்லரைக் கண்டார். டோப்ருக் என்ற நகருக்கு 'ரோமல்' என்ற புதுப் பெயரைக் கொடுத்ததற்காக 'தாங்க்ஸ்' சொல்ல, அவர் ஹிட்லரிடம் செல்ல வில்லை.

எகிப்தியப் போரின் முக்யத்துவத்தை ஹிட்லருக்கு எடுத்துப் பாடி, அதிகப் படியான உதவி அவசியம் தேவை என்பதை வற்புறுத்துவதற்காகவே, அவர் போயிருக்கக் கூடும், அவர் அங்கு சென்ற பின், எகிப்திற்கு, மள, மளவென உதவி வந்து குவிந்த வண்ணமாகவே இருக்கிறதாம். ஸிட்டி பரானி, டோப்ருக், மெர்ஸா மத்ரு ஆகிய இடங்களை பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கிய போது இதை அந்த விமானிகள் கண்டார்களாம். ஜெர்மானியர் தங்கள் நிலைமையைப் பலப்படுத்திக் கொள்ளுவது போலவே, பிரிட்டிஷாரும் செய்து வருகிறார்கள்.

முடிவான போர் ஒன்று சீக்கிரமே நடக்கலாம். அது மிகவும் கடுமையானதாகத் தானிருக்கும் என்பதில் சந்தேகமே யில்லை. இப்பொழுது எல் அலமீன் பகுதியில் நாஜிகளுக்கு ஏராளமான சேதம். இதை ஈடு கட்டிக் கொண்டபிறகு தானே, ராமலின் யுத்தம் ஆரம்பமாகும்? எல் அலமீன் வரை ஓடி வந்த பிரிட்டிஷ் படைகளும், இந்தியப் படைகளும் ஆஸ்திரேலியரும் எல் அலமீனில் தைரியமாக நின்று, இவ்வளவு அட்டகாசம் செய்து, ஐந்து மைல்கள் முன்னேறி இருப்பது கண்டு, அச்சு நாட்டுப் படைகள் கலக்க மடைந்து விட்டன. வெறும் நாளிலேயே போட்ட திட்டப்படி எதுவும் நடவாது போகையில், யுத்த காலத்திலே, அதுவும் யுத்த களத்திலே நிமிஷத்திற்கு ஒரு நிலைமை ஏற்படுமே ஒழிய, முன்கூட்டி சொல்லப் படும் ஜோசியப்படி எதும் நடவாதய்யா, நடவாது!

இது எகிப்தில் மட்டு மில்லை, ருஷ்யாவிலும் இப்படியே இருக்கிறது. டான் நதி தீரப் போர் ஆரம்பமாகி மூன்று வாரங்கள் கழியப் போகின்றன. அச்சு நாட்டுப் படைகள் வந்த ஜோரையும், டான் நதியைக் கடந்த அவசரத்தையும் பார்த்தால், வாரனேஷ் என்ற நகர் இப்பவோ, அப்பவோ விழுந்து விடப் போகிறது என்று நினைத்திருப்பார்கள் பலர். ஆனால் நடந்த தென்ன?

வாரனேஷ் அருகில் பெரிய ஜெர்மன் சவக் காடானது தான். ஆவலாக சேமியா பாயசத்தை எடுத்து வாயில் போட்டுக் கொள்ளப் போகும் சமயம், வாய்க்கு அருகே அரை 'இஞ்சு' தூரத்தில் கை இருக்கும் பொழுது, அந்தக் கையை யாராவது தட்டி விட்டு விட்டால் என்ன ஆகும்? சேமியா பாயசம் எல்லாம் சிந்தி, வேஷ்டி, உடம்பு, சட்டை எல்லாம் பாழாகு மல்லவா?

அதே போல, ஜெர்மானியர் வெற்றியின் அருகே செல்லும் சமயம் பார்த்து, ருஷ்யர்கள் எப்படியோ



வந்து அவர்களுடைய ஆசைகளிலே மண்ணைப் போட்டு விடுகிறார்கள். வாரனேஷ் நகருக்கு வெகு சமீபத்தில் நாஜிப் படைகள் சென்று விட்டன. சில இடங்களில் தெருச் சண்டை கூட நடந்ததாம். வாரனேஷ் நகரைப் பிடித்து விட்டதாக நாஜி ரேடியோக்கள் அட்டகாசம் செய்தன. நாஜிகளுக்கு, தங்கள் வார்த்தைகளிலேயே நம்பிக்கை இல்லை போலிருக்கிறது. அதனால் அவர்கள் வாரனேஷைக் குறித்து ஓர் சினிமாப் படத்தை பெர்லினில் காட்டினார்களாம். இது ஆகாயத்திலிருந்தே எடுத்த படமாம். இமயமலை உச்சியில் ஏறி விட்டோமென்று, விமானத்திலிருந்து எடுத்த போட்டோவைக் காண்பிப்பது போல்த் தானிருந்திருக்கும் இது. வாரனேஷ் படத்தைப் பார்த்த பெர்லின் நகர புத்திசாலிகள் சிரித் திருப்பார்கள். ஆனால் பகிரங்கமாக அல்ல; அந்தச் சுதந்திரம் தான் அவர்களுக்கு இல்லையே!

வாரனேஷைப் பிடித்து விட்டதாகக் கூட ஜெர்மானியர்கள் சொன்னார்களா? இந்த சமயத்திலே ருஷ்யர்கள் தங்கள் வீரத்தைக் காட்டினர். ஜெர்மானியரது எண்ணங்கள் எல்லாம் பாழ்படும்படிக்கும், அவர்களை, டான் நதியை கடந்து மேல் திசை நோக்கி ஓடும்படியும் செய்தனர் வாரனேஷ் நகரம் சென்ற செவ்வாய், புதன் கிழமைகளில் கூட ருஷ்யர் வசமே இருந்தது.

மளமள வென முன்னேறிச் சென்று, வாரனேஷைப் பிடித்து விடலாம் என எண்ணிக் கொண்டிருந்த எண்ணம் போய், அந்த நகருக்கு வெளியிலே தங்கள் நிலைமையைப் பாது காத்துக் கொள்ள வேண்டி, ஒவ்வொரு வீட்டையும் பலப்படுத்தி, ஒவ்வொரு வீட்டிற்குப் பின்னாலும் ஒவ்வொரு டாங்கியை, பூமியில் பள்ளம் தோண்டிப் புதைத்துக் கொண்டு நிற்க நேர்ந்து விட்டது. சில இடங்களில், இருக்கிற இடத்தையும், பல ஜெர்மானிய வீரர்களது சவங்களையும், காயப் பட்டவர்களையும், விட்டு விட்டு புறமுதுகு காட்டி, தப்பினேன் பிழைத்தேன் என்று ஓட வேண்டி வந்து விட்டது டான் நதிக்குக் கிழண்டை பல மிகுந்த ஜெர்மன் படை இருக்கிறது என்பது வாஸ்தவம். ஆனால், அந்தப் படைக்கு மேற் கொண்டு உதவி போய்ச் சேருவதை ருஷ்யர்கள் சிரமமான வேலையாக ஆக்கி வருகிறார்கள். டான் நதிக்குக் குறுக்கே இருந்த பாலத்தைத் தகர்த்து விட்டார்கள். ஆனாலும், நாஜிகள், படகுகளாலாகிய பாலங்களை அமைத்து வருகிறார்களாம். அவற்றையும் விமானங்களைக் கொண்டு ருஷ்யர்கள் பாழாக்குகிறார்களாம். ஜெர்மானியர் சென்ற பனிரெண்டு மாதங்களில் மட்டும் 24 ஆயிரம் டாங்கிகளை ருஷ்யாவில் இழந்திருக்கிறார்களாம். ஆனாலும் அவர்களது டாங்கிப் படை பலம் பொருந்தியதாகவே இருக்கிறதாம். சென்ற வருஷம் இருந்ததை விட இவ்வருஷம் நாஜிகளின் பலம் குறைவாகத் தானிருக்கிறது. ஆனாலும் சென்ற வருடம் இரண்டாயிரம் மைல் நீள முள்ள போர் முனைகளில் போராடிக் கொண்டிருந்த அவர்கள், இன்று சில நூறு மைல்கள் பரந்துள்ள போர் முனைகளில் தானே போராடுகிறார்கள்!

அதனாலே, ஒரே இடத்தில் அவர்களது சக்தி முழுவதும் பிரயோகிக்கப் படுகிறது. அதனால் தான் அவர்களால், தென் ருஷ்யாவில் முன்னேற முடிந்திருக்கிறது.

ஜெர்மானியருக்கு ருஷ்யரிடம் ஏக பயம் தான்! இல்லா விட்டால், வழி நெடுக முள் வேலிகளைப் போடுவார்களா? ருஷ்யர்களின் போக்கு வரத்துப் பாதைகளைத் துண்டிப்பதே தங்கள் முதற கருமமாகப் பார்ப்பார்களா?

நாஜிகள் இப்பொழுது சிறு சிறு கோஷ்டியினராக, வயல்களில் பதுங்கிப் பதுங்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்களாம். வயல்கள் என்றதும் ஒரு விஷயம் நினைவிற்கு வருகிறது. டான் நதிப் பிரதேசம் வெகு செழிப்பானது. அதே மாதிரி தான் ஸ்டாலின் கிராட் நகர் அருகேயும். அங்கெல்லாம் விளைந்திருக்கும் தானியங்களை, விரோதிகள் கொண்டு போகாதிருக்க வீர ருஷ்யர்கள் ராத்திரி, பகல் என்று பாராமல், அறுவடை வேலையில் இறங்கி விட்டார்களாம். தவிர, டானெட்ஸ் பிரதேசத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களையும் ருஷ்யர்கள் பாழாக்கி வருகிறார்களாம்.

ஆனாலும், தெற்கே ஜெர்மன் படைகளின் கை தான் ஓங்கி யிருக்கிறாப்போ லிருக்கிறது. நிமிஷத்திற்கு நிமிஷம் ராஸ்டாவ் நகருக்கு ஆபத்து அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே அந் நகரில் அக்னி பகவான் தன் திருவிளையாடலை ஆரம்பித்து விட்டார் என்று நாஜிகள் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அந் நகரை நோக்கி மூன்று திசைகளி லிருந்து அச்சு நாட்டுப் படைகள் வந்து கொண்டிருக்கின்றனவாம்.

## பனிக்கட்டி பாதையை மறைக்குமா?



வட துருவக்கடல் வழி பாய் வருகிறது ரஷ்யாவிற்கு பிரிட்டிஷ் உதவி இந்தக் கப்பலுக்குக் காவலாக ஒரு பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் வருகிறது. அதன் விளக்குக்கு மேல் பனிக்கட்டி படிந்திருக்கிறது. அதை ஒரு சிக்னல்மான் துடைத்துச் சுத்தப்படுத்துகிறர்.

மாஸ்கோவி விருந்து அந் நகருக்கு வரும் ரயில் பாதையிலே, நீண்ட தோர் பகுதியை நாஜிகள் பிடித்து விட்டார்கள். மேலும் அப்பாதை வழியே தான் அவர்கள் தெற்கு நோக்கி வந்து கொண்டிருக்கிறார்களாம். ருஷ்யப் படைகளும், ஒவ்வொரு இடத்திலும் சாத்தியமான வரை போரிட்ட பின்பே, ஒழுங்காகப் பின் வாங்குகிறதாம். அப்படைகளுக்கு அதிகத் தொந்திரவைக் கொடுக்க, நாஜிகள் தங்களுடைய விமானப் படைகளையும், பாரசூட் படைகளையும், உபயோகிக்கிறார்களாம். சேனாபதி டிமோஷெங்கோ வெகு சாமர்த்தியமாகவே போரை நடத்தி வருகிறார். பல இடங்களில், எளிதில் நாஜிகளால் வளைக்கப் பட விருந்த ருஷ்யப் படைகளை இவர் தப்ப வைத்திருக்கிறாராம். இவரைக் கண்டாலே நாஜிகளுக்கு வேப்பங் காயாக இருக்கிறதாம். அதனாலே ஜெர்மன் ரேடியோவிலே, 'டிமோஷெங்கோ வேலையிலிருந்து நீக்கப் பட்டார். வேறொருவர் நியமிக்கப் பட்டார்' என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்களாம்.

வட காகஸஸ் பிரதேசத்திற்கு ஆபத்து அதிகமாகி வருவது உண்மை. இந்தப் பிரதேசம் ஜெர்மானியர் வசமாகி விட்டால், அப்புறம் கஷ்டங்கள் அதிகரிக்கும். பிரிட்டனும் தன்னால் சாத்யமான அளவு, தனது தேவையையும் மறந்து, சொன்ன வாக்குப் படி, ருஷ்யாவிற்கு உதவி செய்து விட்டது. ருஷ்யர்கள் தனி தங்களிட முள்ள ஏராளமான ரிஸர்வ் படையை உபயோகிக்க வேண்டி வரலாம்.

ருஷ்யாவிற்கு மேற் கொண்டு உதவி செய்யும் வகையிலே, ஜெர்மனி மீது பிரிட்டிஷ் விமானங்கள் இனி இரண்டு டன் குண்டுகளுக்குப் பதிலாக பத்து டன் குண்டுகளை வீசப் போகிறது. அதோடு பிரிட்டனின் உற்பத்தி சக்தியும் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. விமானங்கள் முன்னிருந்ததை விட இரண்டரை மடங்கும், டாங்கிகள் முன்னிருந்ததைப் போல் நாலு பங்குமாக வளர்ந்து விட்டன. பிரிட்டிஷ் விமானங்களே உலகிலேயே முதல் தரமானவை என்ற பெயரைப் பெற்றிருக்கின்றன. பீரங்கிகளும் அப்படியே! நவீனப் போருக்குத் தக்க டாங்கிகளையும் தயாரிக்கிறார்கள். பிரிட்டிஷ் வெடிகுண்டெறியும் விமானங்களே, உலகிலேயே அதி வேகமாகச் செல்லக் கூடியவை. பிரிட்டனும் அமெரிக்காவும் பரஸ்பரம் கலந்து பேசிக் கொண்டு, ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகின்றன.

ஆனால் கடலிலே கப்பல்களுக்கு ஏற்பட்டு வரும் ஆபத்து இன்னும் குறைய வில்லை. நாஜி சப்மரீன்களின் அட்டகாசம் அதிகமாகத் தானிருக்கிறது. ஆனாலும், அமெரிக்கா இந்த ப்ரச்னைக்குச் சரியான பதிலையே அளித்திருக்கிறது. அடுத்த வருஷத்திற்குள் இரண்டரைக் கோடி டன் எடை யுள்ள கப்பல்கள் தன் வசத்தி லிருக்கும்படி செய்ய அந் நாடு திட்டம் போட்டிருக்கிறதாம். அதோடு அச்சு நாடுகளில் ஒன்று ஜப்பானின் கப்பல்களை, அமெரிக்க சப்மரைன்கள் வேட்டை யாட ஆரம்பித்து விட்டன.

ஜப்பானின் வால் இப்பொழுது அதிகமாக ஆடக் காணோம். ஜப்பானியர் பிடித்த இடங்களை சூடுள்ளதாக ஆக்கி வருகின்றனர் இந்தியாவி லிருந்து செல்லும் விமானிகள். சீனாவிலே இந்த சமயத்திலே ஒரு தினுசாக வெற்றி கண்டு விடலாம் என்று நினைத்து, அங்கே தீவிரமாகப் போரை ஆரம்பித்தனர் ஜப்பானியர்.

ஆனால் அங்கேயும் சில இடங்களில் அவர்களுக்கு உதை தான். கடற் கரை யோரத்திலே எங்கும் சீனர்கள் இருக்கப் படா தென்பது ஜப்பானியரது ஆசை. அந்த நோக்கத்துடனே தான் அவர்கள் தங்கள் போர் முறையையும் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் தாங்கள் பிடித்த இடங்களிலே வெகு நாட்கள் தங்கி யிருக்க முடிவதில்லை. காரணம் சீனர்கள் அவர்களை விரட்டி அடித்து விடுவது தான்.

சீனரால் ஜப்பானியருக்கு எக்காலத்திலும் தொல்லை இருக்கத் தான் போகிறது. அங்கே கட்டாய ராணுவ சேவைத் திட்டத்தை அமுல் படுத்தப் போகிறார்களாம். வருஷத்திற்கு இருபது லட்சம் பேர்கள் வீதம் மூன்று வருஷங்களுக்குத் தயாரிக்கப் போகிறார்களாம்.

ஜப்பானுக்குத் தலைவலி உண்டாக்கக் கூடிய செய்திகள் அமெரிக்காவி லிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன. ஆஸ்திரேலியாவிற்கு மளமளவென விமான மூலமாக அமெரிக்க உதவியைக் கொண்டு சேர்த்து வருகிறார்களாம். படகோட்டிகள், செம்படவர், பந்தய மோட்டா ரோட்டிகள் ஆகியோருக்கெல்லாம் கப்பலோட்டப் பயிற்சி அளிக்கிறார்களாம். ஏனென்றால் ஏராளமாகக் கப்பல் கட்டத் திட்டம் போட்டு விட்டு, கட்டிய கப்பல்களை ஓட்ட ஆளில்லாமல் போனால் கேலிக் கூத்தாகி விடுமல்லவா? அதற்காகவே இந்த ஏற்பாடு. இவர்களுக்கு, சும்மா கப்பலோட்டக் கற்றுக் கொடுப்பது மட்டுமின்றி, படைகளைச் சீக்கிரமே கரையில் கொண்டு இறக்கும் வழியையும் சொல்லிக் கொடுக்கிறார்களாம்.

நாளாக நாளாக அச்சு நாடுகளுக்கு வெற்றி தூரத் தூரத் தான் போய்க் கொண்டிருக்கும். அதனால் தான் ஹிட்லர் அவசரப் படுகிறார். ஆள் சேதத்தையும், பொருள் நஷ்டத்தையும் லட்சியம் செய்கிறா ரில்லை. எப்படியாவது யுத்தத்தை சீக்கிரம் முடித்து விட வேண்டு மென்பது அவரது ஆசை. அவரது ஆசையை நிராசை யாக்கி விட வேண்டு மென்பது நேச நாட்டினரது ஆசை. காலமாக ஆக, எதிரியின் வலுக் குறையும். நமது பலம் பெருகும். அப்பொழுது தாக்கினால் வெற்றி நமது தான். இந்த யோசனையின் பேரிலேயே, சாத்யமான இடங்களில் எல்லாம் விரோதியைக் கடைசி வரை தேக்கி நிறுத்த முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. எதிரிகள் மகா முரடர்கள். தந்திர சாலிகளும் கூட. பொய்ப் பிரசார நிபுணர்கள். மக்கள் உயிரைத் திரணமாக மதிப்பவர்கள். அப்படிப் பட்டவர்களை லாகவமாகத் தானே எதிர்த்துத் தாக்கி இடுப்பை ஒடிக்க வேண்டும். அதற்கான முயற்சிகளே நடந்து வருகின்றன. அதற்கு உங்களாலான உதவியைச் செய்யுங்கள். காசு மிகுந்தவர் பொற்குவை தாரீர்! காசு அற்றவர், வீண் வதந்திகளை நம்பாது, அந்த வதந்திகளை அப்படியே கொன்று புதைத்து, எங்கும் பரவாது செய்யலாம்! அதுவே பெரிய உதவியாகும்.

---

## ஜப்பானியர் வழிப் பறி கொள்ளை

பர்மாவி லிருந்து இந்தியாவிற்குத் தப்பி ஓடி வரும் இந்தியர்களை ஜப்பானியர், பர்மா எல்லைப் புரத்திலும் கலிவா என்னும் இடத்திலும் சோதிக்கிறார்கள்; தங்கமாவது வெள்ளியாவது வைத்திருந்தார்களானால், அதைப் பறிமுதல் செய்து, கொண்டு போய் விடுகிறார்கள். நோட்டுக்கள் வைத்திருந்தால், அவற்றைப் பிடுங்கி நெருப்பு வைத்து விடுகிறார்கள் என்று பர்மாவி லிருந்து தப்பி சென்னை வந்து சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள்.



# துரோகம் தான் அச்சு அரசாங்க பாடம்.

## நாகரிக உலகம் செய்த தவறு.

### வாலிபர் மனதில் விஷம் ஊட்டும் கொள்கை.

"தாத்தா' ஒரு கதை சொல்லுங்க, எனக்கு என்னமோ தூக்கம் பிடிக்கலே" என்று சொன்னான் சுப்பன் தன் பாட்டனாரைப் பார்த்து. பேரனிடத்தில் மிகவும் அன்புடையவர் தாத்தா. அவன் நன்றாகப் படித்து முன்னுக்கு வர வேண்டு மென்பதில், அவருக்கு மிகுந்த அக்கரை. ஆகையால், அவர் சரித்திர சம்மந்தமான கதைகளைச் சொல்லத் தொடங்கினார்:—சாதாரணமா நீ பார்க்கலாம். ஒரு வீட்டுக்காரனுக்கும் பக்கத்து வீட்டுக்காரனுக்கும் எப்போதும் ஓயாத சண்டை யிருந்து கொண்டே யிருக்கும். அது போலவே, ஒரு நாட்டிற்கும் அதற்கு அடுத்திருக்கும் நாட்டிற்கும் பகை இருந்து கொண்டே யிருக்கும். மற்ற நாட்டவர்கள் மேல் சாதாரணமாகப் பகைமை இருக்காது. இது சகஜம்.

முந்தி ஒரு மகா யுத்தம் நடந்துதே ஞாபகமிருக்கா? அப்போ, ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் சண்டை. அடுத் தடுத்த நாடுகள் அல்லவா? ஆனால் இங்கிலாந்து கொஞ்சம் தூரத்திலே இருக்கிறது. சாதாரணமா ஜெர்மன் படைகளுக்கு இங்கிலீஷ்காரர்கள் மேலே பகை உண்டாகவே யில்லை. இதுக்கு ஜெர்மென் உத்தியோகஸ்தர்கள் ஒரு தந்திரம் செய்தாங்க!

இந்தச் சமயத்திலே, அந்த வீட்டில், ஒரு குழந்தை அழுதது. உடனே ஒரு பெண் அக்குழந்தையைத் தொட்டிலில் கிடத்தி, "ஆராரோ ஆரிரரோ, ஆரிரரோ ஆராரோ" என்று இனிமையாகத் தாலாட்டிய உடனே, குழந்தையின் அழுகை நின்று விட்டது.

தாத்தா:—குழந்தை, அழுததே, கேட்டுதா ஒங் காதிலே?

சுப்பன்:—ஆமா?

தாத்தா:—இப்போ ஏன் அழுகை நின்னு போச்சு தெரியுமா?

சுப்பன்:—கதை சொல்லச் சொன்னா, குழந்தை அழுகை ஏன் நின்னு போச்சன்னு கேக்கிறிங்களே?

தாத்தா:—இந்த அவசர புத்தி ஒனக்குக் கூடாது. கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லு.

சுப்பன்:—தாலாட்டைக் கேட்டு........

தாத்தா:—தாலாட்டுன்னா சங்கீதந் தானே; சங்கீதத்துக்குப் பாம்பு கூட கட்டுப் படும்.

சுப்பன்:—கதெயெ விட்டுட்டிங்களே தாத்தா!

தாத்தா:—இல்லேடா இல்லே. ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் ஒரு தந்திரம் செய்தாங்க என்னு சொன்னேனே அது தான் சங்கீதம்.

சுப்பன்:—என்ன தாத்தா ஒண்ணும் புரியிலியே.

தாத்தா:—இங்கிலீஷ் படைகள் மேலே வெறுப்புண்டாகுறாப் போலே, பாட்டுக்களைக் கட்டி, ஜெர்மன் படைங்களெ பாடச் சொன்னாங்க?

சுப்பன்:—பாடினா?

தாத்தா:—இங்கிலீஷ்காரர்கள் மேலே ஜெர்மானியர்களுக்கு தானாகவே வெறுப் புண்டாகுது; சங்கீதத்துக்குத் தான் அந்த சக்தி இருக்குன்னு முந்தியே சொன்னேனெ?

சுப்பன்:—இது இங்கிலீஷ்காரர்களுக்குத் தெரியாமலா போச்சு?

தாத்தா:—தெரிஞ்சுது; ஆனா, இங்கிலீஷ்காரர்கள் ஒரு தமாஷ் பேர்வழிகள். அதே பாட்டெ, அவுங்களே, ஜெர்மன் படைங்களுக்கு முன்னாலே பாடினாங்க!

சுப்பன்:—ஜெர்மன்கராங்க ஏமாந்து போயிருப்பாங்கல்லே?

தாத்தா:—அது மாத்திர மில்லெ; ஜாதி வெறுப்புன்னா இன்னதுன்னே தெரியாதவுங்க இங்கிலீஷ் காரவுங்க என்னு, ஜெர்மனியர் தெரிந்து கொண்டாங்க.

சுப்பன்:—அப்ப, இவுங்க ரண்டு பேரும் வேறே வேறே ஜாதியா?

தாத்தா:—ஆமா! ஜெர்மானியர் 'ஹன்ஸ்' என்கிற ஜாதி; இங்கிலீஷ்காரர்கள் ஆங்கிலோ சாக்ஸன்கள்.

சுப்பன்:—ஹன்ஸுக்கு மட்டும் வெறுப்பு ஏற்படும் போது, ஆங்கிலோ சாக்ஸன்களுக்கு மட்டும் ஏன் ஏற்படலே?

தாத்தா:—நல்ல கேள்வி. ஜெர்மானியர்களுக்கு அக்கம் பக்கத்திலே நாடு களிருக்கு; அவர்களோடே போராடிப் போராடி வெறுப்பை வளர்த்துக் கொண்டாங்க. இங்கிலீஷ்காரர்கள் அப்புடி யில்லே. அவுங்க நாட்டெச் சுத்தித் தண்ணி தான். அவுங்க மனசிலே, அதனாலே வெறுப்பு வளர்றதுக்கு எடமே கிடையாது. அவுங்க கிட்டே அதனாலே தான் சகிப்புத் தன்மை அதிகமாயிருக்கு.

சுப்பன்:—அப்புடின்னா நம்ம ஊரு காரவுங் கிட்டே சகிப்புத் தன்மை கிடையாதா?

தாத்தா:—உண்டு. இந்தியாவைச் சுற்றி கடலும் மலையுந் தான். அதனாலே மற்ற நாட்டுக் காரருங்க இங்கேயும், நம்ம நாட்டுக்காரருங்க அங்கேயும் சுலபமாப் போறதுக் கில்லே. அதனாலே இங்கேயும் சகிப்புத் தன்மை இருக்கு.

சுப்பன்:—எங்கே தாத்தா இருக்கு? ஒசந்த சாதி; தாழ்ந்த சாதி; பணக்காரன்; ஏழை; முதலாளி, தொழிலாளி என்னென்னவோ சச்சரவுங்கள்லாம் இருக்கே இங்கே. சகிப்புத் தன்மை இருந்தா, இந்த சச்சரவுங்கள்லாம் ஏன் உண்டாவுது?

தாத்தா:—இந்தச் சாதிச் சண்டை யெல்லாம் உள் நாட்டுச் சண்டை. ஆனா, வெளி நாட்டார் கிட்டே ரெம்ப பிரியமாகத் தான் நம்ம எல்லாச் சாதியாரும் நடந்து கொள்ளுறுங்க.

சுப்பன்:—அப்படின்னா, ஜெர்மானியங் கிட்டேயும், இத்தாலியங் கிட்டேயும், ஜப்பான்காரங் கிட்டேயும் நம்ப பிரியமாத் தான் இருக்கோமோ?

தாத்தா:—தனிப் பட்ட யார் மேலேயும் நமக்கு விரோத மில்லே; ஆனால் அவுங்க கொள்கை தான் நமக்கு விரோதமானது.

சுப்பன்:—இந்தக் கொள்கைகளை யாரு வகுக்கிறது?

தாத்தா:—அந்தந்த தேசத்தவுங்க.

சுப்பன்:—இதிலே, நமக் கென்ன விரோதம்.

தாத்தா:—அவுங்க உள் நாட்டுக் கொள்கைகளைப் பற்றி நமக்குக் கவலையே இல்லே. ஆனா, வெளி நாட்டுக் கொள்கை நம்மை பாதிக்கக் கூடியதா யிருந்தா?

சுப்பன்:—எப்படி பாதிக்கும்?

தாத்தா:—ஒரு பெரிய நாடு, தன் வரும்படி யெல்லாம் செலவழிச்சு ஒரு பெரிய சேனையைத் தொட்டுறதாக வச்சுக்குவோம்.

சுப்பன்:—பக்கத்திலெ இருக்கிற நாடுங்களைப் பிடிக்கத் தானே?

தாத்தா:—அந்த நாட்டு மனுஷாளையும் அடிமைப் படுத்துவாங்க.

சுப்பன்:—இப்படி பக்கத்து நாடுங்களைப் பிடிக்கப் படாதுன்னு கட்டு திட்டம் எதுவுங் கெடயாதா?

தாத்தா:—உண்டு; நாட்டுக்கு நாடு ஒப்பந்தங்க செஞ்சிருக்காங்க.

சுப்பன்:—இந்த ஒப்பந்தப்படி நடக்குற தில்லியா?

தாத்தா :—இல்லே. நடக்காத நாடுகளைக் கட்டுப் படுத்த சர்வ தேசச் சட்டம் என்று ஒண்ணிருக்கு; அதெயும் அவுங்க சட்டெ பண்றதில்லே.

சுப்பன் :—அவுங்க எந்தச் சட்டத்துக்குத் தான் கட்டுப் பட்டவுங்க?

தாத்தா :—சமய சந்தர்ப்பந் தான் அவுங்க சட்டம்.

சுப்பன் :—அது கெட்ட துரோக மில்லியா?

தாத்தா :—அதுதான் அவுங்களுக்குப் பாலுஞ் சாதமாச்சே!

சுப்பன் :—இப்படிப் பட்ட துரோகங்களுக்கு அவுங்க அரசாங்கம் எப்படித் தான் சம்மதிக்கிதோ?

தாத்தா :—அவுங்க அரசாங்கப் போக்கும் அதுதான்; அரசியல் பாடமும் அது தான்.

சுப்பன் :—அப்புடியானு உலகத்திலே உள்ள நாகரிகமே ஒழிஞ்சு போகுமே?

தாத்தா :—ஆமா. அதனுலே தான் இதெ உலகமே வெறுக்குது. இதெ ஒழிக்கிறதுக்கு உலகமே திரண்டு வருகுது.

சுப்பன் :—இது தான் அவுங்க தேசியக் கொள்கையா?

தாத்தா :—ஆமா! ஆதனுலே தான் ஒரு பாவமும் அறியாத ஹாலந்தைத் தாக்கி ஆயிரக் கணக்கான ஜனங்களெக் கொண்ணுங்க.

சுப்பன் :—ஜப்பான்காரவுங்க தேசீயக் கொள்கை?

தாத்தா :—அமெரிக்கா வோடே சமாதானம் பேசிக்கிட்டே, அமெரிக்காவுக்குச் சொந்தமான 'பெர்ல்' தொறைமுகத்தைத் தாக்கினுங்க.

சுப்பன் :—உலகத்திலே அநாகரிகத்தெ யில்ல வளக்கிறுங்க போலிருக்கு!

தாத்தா :—ஆமா! அதிலே சந்தேகமா?

சுப்பன் :—இதுக்கு முந்தி எத்தினியோ யுத்தங்கள் நடந்திருக்குமே, அதெல்லாம் எதுக்காகத் தாத்தா?

தாத்தா :—நியாயத்துக்காக; உண்மைக்காக. இது வரையிலும் அயோக்கியர்கள் இந்த அளவுக்கு ஜெயிச்சது மில்லே; மனுஷ சமூகமே செத்தது மில்லே.

சுப்பன் :—ஜப்பான்காரனுவது, ஜெர்மன்காரனுவது இந்தியாவை ஜெயிச்சா, இந்தியாவுக்கு விடுதலை குடுப்பான்னு சொல்றுங்களே, தாத்தா! எப்படி?

தாத்தா :—முதல்லெ, அவுங்க நாட்டிலே இருக்குற அவுங்க மனுஷாளுக்கே விடுதலை யுண்டா? கெடையாதே.

சுப்பன் :—அப்போ நமக் கெப்படி விடுதலை கொடுப்பான்?

தாத்தா :—மாட்டான். பணத்தையே கடவுளா நெனச்சுக் கிட்டிருக்கிறவன் எப்படி பொது ஜனங்களுக்கு விடுதலை கொடுப்பான்?

சுப்பன் :—கடசியா இவங்க நோக்கந் தான் என்ன?

தாத்தா :—ஐரோப்பா முழுதையும் ஜெர்மனியும், ஆசியா முழுதையும் ஜப்பானும், அடிமைப் படுத்திக் கொள்ளப் பார்க்குதுக.

சுப்பன் :—இந்த ரெண்டும் மாத்திரம் நேசமாவே என்னென்னைக்கும் இருக்குமோ?

தாத்தா :—அதெப்படி முடியும்? இரண்டுக்கும் சண்டை கட்டாயம் வரத் தான் போவுது.

சுப்பன் :—இவுங்க அரசியல் கொள்கையாலே இன்னும் என்ன நேருது தாத்தா!

தாத்தா :—நாட்டுப்பற்று போய் அடிமைத்தனம் வளருது. இராணுவ வெற்றிக்கு சட்டமும் நீதியும் உட்பட்டதாகுது. கொடிய யுத்தங்களுக்கு இடையே மூச்சு வாங்கிறதுக்குத் தான் சமாதானங்கள் செய்து கொள்வது என்கிற அர்த்தங் கொடுக்குது. தனிப் பட்ட ஒவ்வொருத்தரும், கொடுங் கோல் அரசாங்க இயந்திரத்தின் ஒரு ஆணி என்கிற எண்ணந் தான் உண்டாகுது.

சுப்பன் :—அப்படியானு, இதெ எல்லா மதஸ்தர்களும் வெறுத்து அதுக்கு இடமே குடுக்க மாட்டாங்களே!

தாத்தா :—ஆமா! ஆனுலும், இந்த அரசாங்கங்களை ஆட்டுவிக்கிற கொடுங்கோலனுங்க எப்படி ஜெயிக்கிறுனுங்க தெரியுமா! இவனுங்க, தம்மெ எதிக்கிறவுங்களெ எல்லாம் கொலெ செஞ்சானுங்க. நாகரிகமா இருக்கிறவுங்கள் எல்லாம் இதை ஆட்சேபித்து எதிர்க்கலே; இதனுலே இவனுங்களுக்கு வால் வளர்ந்தது. சிறு சிறு கூட்டமாத் திரட்டிக் கொண்டானுங்க காலிப் பயலுங்களெ. அப்பவே அவுங்க கொட்டத்தெ ஒடுக்காமெப் போனது, இப்போ, உலகத்துக்கே தொந்தரவிலே கொண்டு வந்து உட்டிருக்கு.

சுப்பன் :—வாலிபனுங்க கூடவா இதிலே இவுங்களோடே சேந்தாங்க?

தாத்தா :—வாலிபனுங்க தான் அதிகம். அதிகாரிகள் சந்தேகிக்கிற பேர்வழி ஒரு கிராமத்திலே அல்லது ஊரிலே இருக்கிறதாக சந்தேகப் பட்டாலே போதும். ஊருக்கே நெருப்பு வச்சுடுறுனுங்க. இது தான் நியாய முன்னு கூட நினைக்கிறுங்க. இப்படித் தான் ராட்டர்டாம் என்கிற ஒரு பட்டணத்தையே கொளுத்தி விட்டாங்க!

சுப்பன் :—என் தாத்தா!.

தாத்தா :—ஜெர்மானியர்கள் பிரான்சைத் தாக்கப் போகிற வழியிலே, இந்த ஊரு இருந்தது. அதினுலே 30,000 பேர் நெருப்புக்கு இரையானுங்க!

சுப்பன் :—வாலிபர்கள் மனசிலே வெஷத்தை ஊட்டுறதல்லவா இது! மகா கொடிய அநாகரிக மில்லியா இது!

தாத்தா :—ஆமா! அதினுலே தான் எந்த விதமான சமாதானத்துக்கும் இவனுங்க இலாயக் கில்லே. இவனுங்க கிட்டெ அஹிம்ஸைக் கொள்கை பிரயோஜன மில்லே. சர்வதேசக் கூட்டுறவுக்காகப் போராடியே தீர வேண்டும்.

சுப்பன் :—ஆமா தாத்தா! இப்போ எகிப்திலெ சண்டை நடக்குதாமே; அங்கே யார் சண்டெ போட்ரு?

தாத்தா:—நம்ம நேச தேசப் படைங்க, ஜெர்மனியோடேயும் இத்தாலியோடேயும் சண்டை போடுதுங்க!

சுப்பன் :—அப்போ, எகிப்து தேசத்திலே படையே இல்லியா?

தாத்தா :—இருக்கு ஆனு, தமக்காக நேச தேசங்களே சண்டெ போடுற போது, தாம் சண்டெ போட வேண்டிய அவசியமில்லென்னு இருக்காப் போலேருக்கு.

சுப்பன் :—இந்தச் சண்டையிலே, எதிரிங்க ஜெயிச்சா, எகிப்து தேசம் அவுங்களுக்கு அடிமையாகனுமே!

தாத்தா :—ஆமா! தன் நாகரிகத்தையும் ஸ்தாபனங்களையும் காப்பாத்திக்கிறதுக்குப் போராடாத ஒரு நாட்டை, நாடு என்னு சொல்லக் கூடக் கூடாது. கொடிய இயந்திரங்களைக் கொண்டு போராடுற இந்தக் காலத்திலெ, 'அஹிம்ஸை' என்கிறதுக்கு 'அடிமைத் தனம்' என்று தான் அருத்தம் தரும்.

சுப்பன் :—அடிமைகளா வாழ்வதை விட உயிரையேயே விட்டுடலாம். அப்பத் தான் நம்ப பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் சுகமாக காலங் கழிக்க முடியும் இல்லியா தாத்தா!

தாத்தா :—இதுக்கு நீ என்ன பண்ணப் போறே?

சுப்பன் :—நானும் நேச தேசப் படையிலே சேர்ந்து, ஜனநாயகத்தெயும், நாகரிகத்தெயும் நிலை நாட்டி, நம்ம நாட்டுக்கு விடுதலையையும் தேடப் போறேன்.

தாத்தா !—ஒன் எண்ணம் நிறைவேற கடவுள் அருள் செய்ய வேணும்!

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு ஜூலை மீ 31 உ, வெள்ளிக்கிழமை [இதழ் 30

## வார்தா தீர்மானம்.

### உலகம் முழுதும் வெறுக்கிறது.

### அச்சு அரசாங்கங்கள் ஆனந்தம்!

வார்தா தீர்மானம் அதாவது காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானம் நற்கால நிலைமைக்குக் கொஞ்சமும் பொருத்தமானது அல்ல; இந்தியாவிற்கும் நேச தேசங்களுக்கும் பெரும் தீமை செய்யக் கூடியது என்னும் கருத்தைத் தான் காங்கிரஸ் கட்சியைச் சேராத தலைவர்களெல்லாம் ஒரு முகமாகக் கூறியிருக்கிறார்கள். "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகைக்கு சர் தேஜ் பகதூர் சாப்ரு கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—

> குறிப்பாக இப்படிப் பட்ட சமயத்தில், வார்தா தீர்மானத்தின் தத்துவத்தையும் அதன் பயனையும் போல தீங்கு உண்டாக்கக் கூடியது வேறு எதுவும் கிடையாது. நமது உள் நாட்டுப் பிளவுகளும் சண்டைகளும் ஜப்பானியர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கக் கூடிய இந்தக் காலத்திலே, 40 கோடி மக்களின் உயிர்களையும் பணயம் வைத்துச் சூதாடும் உரிமை எவருக்கும் கிடையாது. வெளிப்படையாகவோ, மறை முகமாகவோ குழப்பத்தைக் குறித்துப் பேசுவதற்கு இது அல்ல சமயம். இப்போதுள்ள நிலைமையில், அராஜகத்தையும் குழப்பத்தையும் வேண்டுமென்றே உண்டாக்க முயற்சிப்பதற்குக் கொஞ்சங் கூட நியாய மில்லை.

இந்தியாவிலும் இங்கிலாந்திலு முள்ள தலைவர்களுங் கூட இதுபோன்ற கருத்துக்களையே கூறியிருக்கிறார்கள். ஜூலை மாதம் 26-ம் தேதி அமெரிக்கர்களுக்கு சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். அதில் அவர் குறிப்பிட்ட தாவது :—

> பொது சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப் போவதாகக் காங்கிரஸ் தலைவர்கள் பயமுறுத்துவது அமெரிக்க பிரிட்டிஷ் யுத்த முயற்சிகளுக்கு மிகுந்த ஆபத்தை உண்டு பண்ணுவது மட்டுமல்லாமல், நம் எதிரிகளுக்கு மிகுந்த திருப்தியை யளிக்கும். ஜப்பானியர்களோடு போராடுவதற்கு கூட்டுத் தளமாக நேச நாடுகள் இந்தியாவை உபயோகிப்பது அவசியம் என்று வற்புறுத்த வேண்டியது அவர்களுடைய கடமையாகும் :—

> இதற்காக என்னென்ன முறைகளைக் கையாள வேண்டுமென்றாலும் கொஞ்சமும் அஞ்சாமல் கையாள வேண்டியதும் அவசியமாகும்.

இந்திய சுயாட்சியைக் குறித்து அவர்கள் விளக்கமாகத் தெரிவித்ததாவது :—

> யுத்தத்தில் வெற்றி கிடைத்த பிறகு, எப்படிப்பட்ட அமைப்பைக் கொண்ட பூர்ண சுயராஜ்யமாயிருந்தாலும், அப்படிப்பட்ட சுயராஜ்யம் கொடுக்கப்படும். ஆனால் முதலில் வெற்றி கிடைக்க வேண்டும். இதற்கு முன்பாக மனக் கோட்டை கட்டும் ஒருவர், என்ன தான் சிறந்த முறையில் சுயராஜ்யத்திற்காகப் போராடியிருந்தாலும், கீழ் நாடுகளில், நம் யுத்த முயற்சிகளைப் பாதிக்கும்படி அலுவல்களைச் செய்யும்படி நாம் அனுமதிக் கொண்டிருக்க முடியாது. இதனால் உலகம் முழுதுக்குமே பாதகம் நேரும். இந்தியாவிலும் மற்றும் சில நாடுகளிலும் குழப்பிக் கொண்டிருக்கும் ஒரு அரசியல் கட்சியார், உலக விடுதலைக்காக வீரத்தோடு போராடும் இந்தக் கடுமையான யுத்தத்தில், அமெரிக்க, சீன, இந்திய, பிரிட்டிஷ் போர் வீரர்களின் உயிர்களை நாசம் செய்யக் கூடாது. இதனால் உண்டாகும் தீமை இந்தியாவிற்கு மட்டும் அல்ல; சீன, பிரிட்டன் முதலிய நேச நாடுகளுக்கும் தான்.

இந்தியாவில் நேசதேசப் படைகளைத் திரட்டி பலப் படுத்தி வைக்க வேண்டியது மிகவும் அவசியம். நம் வீரத் தோழர்களான சீனர்கள் நல் வாழ்விற்கும் வழி தேட வேண்டும். இந்த அவசியத்தை நீங்கள் நன்றாக உணருகிறீர்கள். இவற்றிற்குத் தங்கள் உதவி கட்டாயம் கிடைக்கும் என்று இந் நாட்டில் உள்ள நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

**பத்திரிகைக் கருத்துக்கள்.**

காங்கிரஸ் காரியக் கமிட்டியார் வார்தாவில் நிறைவேற்றி யிருக்கும் தீர்மானத்தைக் குறித்து வெளி நாடுகளில் கட்சிச் சார்புகள் இல்லாத செல்வாக்குள்ள பத்திரிகைகள் திருப்தி கொள்ள வில்லை. காந்தியாரும் மற்ற காங்கிரஸ் தலைவர்களும் மிகவும் பெரிய மனிதர்கள் தான் என்று பிரிட்டிஷ் பத்திரிகைகளும் அமெரிக்க பத்திரிகைகளும் ஒப்புக்கொள்ளுகின்றன. அதே மூச்சில், யுத்தத்தில் மகா நெருக்கடியான இந்தப் பருவத்தில், சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாகக் காங்கிரஸ் பயமுறுத்துவதை மிகக் கடுமையாகக் கண்டிக்கின்றன. இந்த நாடுகள் ஜனநாயக நாடுகள். தம் நாட்டு நிர்வாகங்களைக் குறித்து இதை விடக் கடுமையாகத் தாக்கி எழுதும் பத்திரிகைகள் தான் இவை. இந்தியாவிலுள்ள, காங்கிரஸ் கட்சி யுள்பட உள்ள பல அரசியல் கட்சிகளும் எப்படி இந்தியாவிற்கு சுயராஜ்யம் வேண்டும் என்னும் இலட்சியத்தைக் கொண்டிருக்கின்றனவோ, அது போலவே தான், நூற்றுக் கணக்கான வருஷங்களாக இந்த இலட்சியத்தைக் கொண்டிருந்தன. காங்கிரஸையும் அதன் தலைவர்களையும் மிக மிகக் கடுமையாகத் தாக்கி சில பத்திரிகைகள் எழுதி யிருக்கின்றன. இந்தப் பத்திரிகைகள் எல்லாம் இது வரை, காங்கிரசுக்காகவும் இந்தியாவிற்காகவும் பரிந்து எழுதியவை. இவற்றிற்கு உண்மையாகவே இந்தியாவிடம் நேசமில்லை என்றும் சொல்லி விட முடியாது.

"டைம்ஸ்" என்னும் முக்கியமான பிரிட்டிஷ் பத்திரிகை கூறுவதாவது :—

> இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்து விட வேண்டும் என்னும் கொள்கையை இந் நாட்டவர்கள் முழு மனதோடு ஒப்புக் கொண்டு விட்டார்கள். இப்படிப் பட்ட சுயராஜ்யம், கிடைக்க வொட்டாதபடி தாமதப்படுத்தித் தடை செய்வது,

காங்கிரஸ் தலைவர்கள் தான். எப்படியிருந்தாலும் நன்றாய் செய்யக் கூடியதைக் கட்டாயம் பிரிட்டன் செய்யத் தான் போகிறது. இந்தியப் பிரசினையை ஒரு வழியாக வெற்றிகரமாக முடிவு கட்ட வேண்டியது அவசியம் என்று இந்நாட்டினர் முடிவு கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

"தி டெய்லி டெலிகிரப்" என்னும் பத்திரிகை பிரிட்டிஷ் கான்சர்வேடிவ் கட்சியின் பத்திரிகை. இது காங்கிரசின் போக்கை வெகுவாகக் குறை கூறுகிறது.

> சுயராஜ்யத்தைக் குறித்துக் காங்கிரசுக்குக் கவலையில்லை, ஆனால், தன சர்வாதிகாரத்துவத்தைக் குறித்துத் தான அக்கரையோடிருக்கிறது.

இதுபற்றி சர் ஸ்டாபோர்ட் க்ரிப்சு கூறியது போல, பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு போதும் இதற்கு அனுமதிக்க மாட்டார்கள். காங்கிரஸ் தலைவர்கள் நேச தேசங்களுக்கு எந்த விதமான சிக்கல்களையும் உண்டாக்காதிருக்க மிகவும் ஆவலாயிருப்பதாகக் கூறிக் கொள்ளுகிறார்கள். தம் தீர்மானம் எதிரிகளுக்கு எவ்வளவு திருப்தியளிக்கும் என்றும் அவர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

"யார்க்ஷயர் போஸ்ட்" என்றும் மற்றொரு பத்திரிகை, காங்கிரஸ் தீர்மானத்திலிருந்து, உண்மையான அரசியல் நிலைமைகளைக் காங்கிரஸ் தலைவர்கள் செம்மையாக உணர்ந்து கொள்ளவில்லை என்று தெளிவாகிறது என்று எழுதுகிறது.

"மாஞ்செஸ்டர் கார்டியன்" ஒரு லிபரல் கட்சிப் பத்திரிகை. அதன் கருத்துக்கள் மிகவும் நியாயமானவை தன் என்று காந்தியாரே அதைப் புகழ்ந்திருக்கிறார்; அது கூறுவதாவது :—

> சுயராஜ்யம் அடையும் பொருட்டு ஒரு பெருங் கலகத்தை உண்டாக்கப் போவதாகக் காங்கிரஸ் பயமுறுத்துகிறது; அப்படிப்பட்ட நிலைமை இன்னும் சில வருஷங்களில் இந்தியாவிற்கு வரத் தான் போகிறது.

"டெய்லி ஹெரால்ட்" முக்கியமான தொழிலாளர் பத்திரிகை. இது வரை இது காங்கிரஸ் கட்சியை வெகுவாக ஆதரித்து வந்தது. இது கூறும் குறைபாடுகள் மிகவும் முக்கியமானவை. அது எழுதுவதாவது :—

> நாம் பிரிட்டிஷ் தொழிற் கட்சிக்காரர்கள். இந்தியர்களுக்கு நாம் நண்பர்கள். காந்திக்காகவும் நேருவுக்காகவும் நாம் போராடினோம். நாகரிகத்தை விடுவிக்கும் இந்தப் போராட்டத்தில் நம்மோடு கூட நின்று போராடுவார்கள் என்றும் எதிர்ப்பார்த்தோம். நம் நண்பர்களாகிய இவர்களுக்கு, ஒன்று சொல்ல நமக்கு உரிமையுண்டு. இந்த யுத்தத்தைக் குறித்து பிரிட்டிஷ் தொழிலாளர்களும் அவர்களுடைய அரசியல் பிரதிநிதிகளும் என்ன நினைக்கின்றார்கள் என்று நீங்கள் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். பிரிட்டிஷ் தொழிலாளர்களும் கஷ்டப் படத் தான் செய்கிறார்கள். அவர்களுக்கும் குறைபாடுகள் இருக்கத் தான் செய்கின்றன. முதலாளித்துவத்தையும் தனி உரிமைகளையும் நீங்கள் வெறுப்பது போலவே அவர்களும் வெறுக்கிறார்கள். சர்வதேச முதலாளித்துவத்திற்கும் (ஹிட்லர், தோஜோ, முஸோலினி) ஜனநாயகத்திற்கும் நடக்கும் கடைசிச் சண்டை இது தான் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இந்த மூன்று பேர்களின் நோக்கங்களோடு பிரிட்டிஷ் கான்சர்வேடிவ்களின் போக்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால், முதலாளித்துவமே இங்கே விரைவில் மறைந்து கொண்டு வருகிறது என்று சொல்லலாம். இப்போது இங்கேயுள்ள கான்சர்வேடிவ்கள் ஜனநாயக வாதிகளாகி விட்டார்கள்; ஆகையால் நாங்கள் அவர்களோடு சேர்ந்து விட்டோம். பெருத்த ஆபத்தோடு போராட வேண்டித் தான நாங்கள் சேர்ந்தோம். இப்போது நீங்கள் ஒதுங்கியிருக்கலாமா? அசர நிலைமையயாவது, கொள்கையையாவது உங்கள் போக்கிற்கு ஆதாரமாக நீங்கள் சொல்ல முடியுமா?

**அமெரிக்கர்கள் கருதுக்கள்.**

பரிபூரண சுயராஜ்யம் தமக்கு வேண்டும் என்று இந்தியர்கள் ஆசைப்படுவது நியாயந் தான் என்று அனுதாபம் கொள்ளும் அமெரிக்கப பத்திரிகைகள், காங்கிரஸ் தலைவர்களின் தவறான போக்கைக் குறித்து வருந்துகின்றன. காங்கிரஸ் தீர்மானத்தைக் குறித்து எழுதும் பத்திரிகைகள், இதனால் சீனாவிற்குப் பெரும் பாதகம் நேருமே என்று அஞ்சுகின்றன.

"பால்டிமோர்சன்" என்னும் ஒரு பத்திரிகை ஒரு கேள்வி கேட்கிறது :—

> ஜப்பானியப் படைகள் பர்மாவில் இருக்கின்றன; ஜெர்மன் படைகள் இந்தியாவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. இந்தச் சமயத்தில், இந்தியாவில் சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தால், கட்டாயம் அது சுயேச்சைக்கு விரோதிகளான ஜெர்மானியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் சாதகமாகத் தான் இருக்கும்.

இந்தியப் பாதுகாப்பை முன்னிட்டாவது பிரிட்டிஷாரோடு கொண்டுள்ள மனத் தாங்கலை மறந்து, ஐக்கிய நாடுகளோடு கலந்து கொள்ள வேண்டுமென்று "பிலாடெல்பியா இங்கொயரர்" என்ற பத்திரிகை காந்தியாரைக் கோருகிறது.

"இப்போதுள்ள மக்களுக் குள்ளாக, காந்தியார் தான் மகா பெரியவர்" என்று புகழும் "நியூயார்க் டைம்ஸ்" என்னும் பத்திரிகை, இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையைக் குறித்து மிகவும் கலக்கமடைந்து எழுதுவதாவது :—

> அவர் போதிக்கும் தெய்வீகத் தத்துவங்களை மனித இனம் மேற்கொண்டால், உலகத்தில் போராட்டமே ஏற்படாது. இது வரை அவர் சொல்லாலும் செயலாலும் ஏற்பட்ட பயனோடு, இப்போது அவர் சொல்லையும் செயலையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இது அவருடைய கொள்கைக்கு அது நேர் முரணானது என்று தெளிவாகும்.

"தி நியூயார்க் ஹெரால்ட் ட்ரிப்யூன்" என்பது, அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலுள்ள எதிர்க் கட்சிப் பத்திரிகை. அது கீழ்க்கண்டவாறு எழுதுகிறது :—

> இந்த நெருக்கடியான சமயத்தில், இந்தியாவில் குழப்பத்தை உண்டு பண்ணும் முயற்சியை, அமெரிக்காவிலுள்ள அச்சுக் கூட்டத்தார் தவிர வேறு எந்த வகையினரும் வெறுக்கின்றார்களென்று, உத்தியோக பற்றில்லாதவர்கள் மூலமாக நாம் இந்தியர்களுக்கு உறுதி கூற வேண்டும்.

**அச்சு சர்க்கார்கள் ஆனந்தம்.**

ஜூலை 14-ம் தேதி காங்கிரஸ் செய்த தீர்மானத்தைக் குறித்து அச்சு அரசாங்களின் போக்கு எப்படி இருக்கிறது என்று ஆராய்வது பொருத்தமாகும். இந்தத் தீர்மானத்தை எதிரிகளின் ரேடியோக்கள் வாயிலாக அவர்கள் வரவேற்கிறார்கள். யுத்தத்தின் இவ்வளவு நெருக்கடியான நிலைமையில், ஐக்கிய நாடுகளின் பலத்தை இத் தீர்மானம் குறைக்கிறது.



தீர்மானம் நிறைவேறிய அதே நாளில், சைகோன் ரேடியோ நிலையத்திலிருந்து இந்துஸ்தானியில்,

"இப்படிப்பட்ட சிறந்த வேலைகளால் பிரிட்டிஷ் யுத்த முயற்சிக்குப் பாதகம் உண்டாகும்" என்று குறிப்பிட்டார்கள்.

ஜூலை 13-ம் தேதி, ரோமாபுரி ரேடியோ "அச்சு அரசாங்கங்களோடு நேச நாடுகள் போராடும் இந்தக் காலத்தில், காந்தியார் கடுமையான முறைகளைக் கையாளுகிறார்" என்று கூறும் போது, நியூயார்க் பத்திரிகை யொன்றை தனக்கு ஆதாரமாகக் குறிப்பிடுகிறது. அதில் குறிப்பிட்டிருப்பதாவது :—

> இந்தியாவிற்கு மிகுந்த ஆபத்து ஏற்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில், இந்தியாவைப் பாதுகாக்க முயற்சிக்க வேண்டியது மிகவும் முக்கியமானது. இதை இந்தியக் கட்சிகளின் தலைவர்கள் தடை செய்கிறார்கள்.

ஜூலை 17-ம் தேதி, ஜெர்மன் அஸாத் ஹிந்து ரேடியோ தமிழில் தெரிவித்ததாவது :—

> இப்போது ஆயுதந் தாங்கிய சத்தியாகிரகத்தை, காங்கிரஸ், ஏற்படுத்த வேண்டும். இதற்கு உதவ அச்சு அரசாங்கங்கள் ஆயத்தமாயிருக்கின்றன. எல்லா வகைகளிலும் பிரிட்டிஷ் யுத்த முயற்சிகளைத் தடை செய்யுங்கள்.

மறு நாள் ஜெர்மன் ரேடியோ நிலையத்திலிருந்து தமிழில் அறிவித்ததாவது :—

> அடுத்த என்ன ஏற்படப் போகிறதென்று அச்சு அரசாங்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றன. இனி ஏற்படப் போகும் ஆபத்தைக் குறித்து யாரும் ஆச்சரியப் பட வேண்டியதில்லை.

9-ம் தேதி ஜெர்மன் ரேடியோ மூலமாக இந்துஸ்தானியில் அறிவித்ததாவது :—

'அச்சு அரசாங்கங்களின் மகத்தான வெற்றியை ஒட்டித் தான இந்தியாவின் அரசியல் முன்னேற்றம் அமையும்."

இப்போதுள்ள இந்திய அரசியல் நிலைக்குக் காரணம் ஜப்பான், விசாகப்பட்டினத்திலும் காகினாடாவிலும் குண்டுகளை வீசியது தான் என்றும், இனித் தாம் காத்திருக்க முடியாதென்றும் டோக்கியோ ரேடியோ அறிவித்தது.

அச்சு அரசாங்கங்களுக்கு அளவு கடந்த ஆதிக்கம் இருப்பதாகக் கூறி, இந்தியாவைக் கசக்கிப் பிழிய எல்லா அச்சு அரசாங்க ரேடியோக்களும் பிரசாரம் செய்து வருகின்றன. ஆனால் ரோமாபுரி ரேடியோ மட்டும், தங்களுக்குச் சந்தர்ப்பம் நேருமானால், எப்படி தங்கள் பலத்தை உபயோகப் படுத்தும் என்று தெரிவித்திருக்கிறது. 15-ம் தேதி பிரஞ்சு மொழியிலே அங்கிருந்து செய்த ஒரு பிரசங்கத்தில் "இராணுவ பலம் இல்லாத சுயராஜ்யம் செல்லாக் காசாகத் தான் முடியும்; அதாவது, இந்திய சுயேச்சை என்று சொல்லப்படுவதை அச்சு அரசாங்கங்கள் ஆதரிக்கும்; அதிகாரத்தையும் அவைகளே வகித்துக்கொள்ளும்" என்று குறிப்பிடுகிறார்கள். வெகு தனுக்காகப் பேசும் ஜப்பான, இந்திய சுயராஜ்யத்திற்கு அச்சு அரசாங்கங்கள் எப்படி உதவும் என்று குறிப்பிடுகின்றது. கிழக் கிந்தியத் தீவுகளைக் குறித்து ஜூலை மீ 8-உ ஜப்பான ரேடியோ கூறுவதாவது :—

> "இன்னும் அங்குள்ள அரசியல் கட்சிகளை அடியோடு அழிக்க, ஜப்பான் இராணுவ நிர்வாகிகள், கடுமையான முறைகளைக் கையாளுவார்கள்".

**இந்தியாவும் சீனாவும்.**

தற்போதைய இந்தியாவின் நிலையைக் கொண்டு சீனாவைக் கவிழ்க்க அச்சு அரசாங்கங்கள் பிரசாரம் செய்கின்றன. இந்தியாவில் சுயேச்சை இயக்கம் மும்முரமானால், சீனாவிற்கு நேச தேசங்கள் செய்யும் உதவி கெட்டு விடும் என்று டோக்கியோ கருதுகிறது. ஜெனரல் ஷியாங் கே ஷேக்கைப் பற்றி இந்தியர்களுக்குள் சந்தேகத்தை யுண்டு பண்ண அச்சு அரசாங்கப் பிரசாரம் முயற்சிக்கிறது. இந்தியர்களின் சுயேச்சை முயற்சியைக் கைவிடும்படி மார்ஷல் ஷியாங் கே ஷேக் தூண்டியதாக ஜூலை மீ 16-உ இத்தாலிய ரேடியோ கூறுகிறது. ஆனால், சென்ற பிப்ரவரி மாதம் இந்தியாவிற்கு அனுப்பிய பிரிவுச் செய்தியில் உண்மையான அரசியல் ஆதிக்கத்தைத் தம் பிரிட்டிஷ் நண்பர்கள் கட்டாயம் கூடிய விரைவில் கொடுப்பார்கள் என்று தாம் நம்புவதாக அவர் குறிப்பிட்டதை இந்தியர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

---

# யுத்த முயற்சியில் தொழிலாளர் உதவி

## இதுவல்லவா சரியான உணர்ச்சி !

நெல்லிகுப்பத்தில் பாரி கம்பெனியாருக்குச் சொந்தமான சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. இங்கே வேலை செய்யும் தொழிலாளர் சங்கத்திற்கும் கம்பெனிக்கும் நெடு நாட்களாக ஒரு தகராறு இருந்து வந்தது. அதாவது பொங்கல் திருநாளை முன்னிட்டு 5 நாட்கள் லீவ் விடுவது வழக்கம். இதைக் குறைக்க வேண்டுமென்று கம்பெனியார் விரும்பினார்கள். தொழிற் சங்கம் இது வரை ஆட்சேபித்துக் கொண்டிருந்தது. என்றாலும், யுத்தத்தை முன்னிட்டு பொங்கலுக்கு 2 நாட்கள் லீவ் கொடுத்தால் போதுமென்றும் பாக்கி 3 நாட்களை மற்ற சந்தர்ப்பங்களில் தேவைப் படும் போது தொழிலாளர்கள் எடுத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்றும், இந்த ஏற்பாடு யுத்த காலத்திற்கு மட்டுந் தான் அமுலிலிருக்கும் என்றும் தொழிற் சங்கத்தார் கம்பெனியாருக்குத் தெரிவித்தார்கள். இந் ஏற்பாட்டிற்குக் கம்பெனியாரும் இணங்கியிருக்கிறார்கள். இதுவல்லவா யுத்த முயற்சியில் தொழிலாளர்களின் உண்மையான உதவி.

---

## யுத்த சேத ஜாபிதா.

இந்திய சிக்னல் படையைச் சேர்ந்த 02650-ம் நம்பர் டபுள்யு. சி. சின்னசாமி இறந்து போனார் என்று வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

**காணமற் போய் யுத்தக் கைதிகள் ஆனவர்கள் என்று கருதப் படுகிறவர்கள்.**

ஐ.எம்.எஸ்.

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| எம்./செட். 23503 | காபிதன் | எம். ஜெகராயன். |
| எம்./செட். 20-57 | ஷை | எம். வி. நாயர். |
| எம்./செட். 20747 | ஷை | பி. சி. ஸ்ரீனிவாசன். |

**காணமற் போய் மீண்டும் படையில் வந்து சேர்ந்தவர்கள்.**

| | | |
|---|---|---|
| .. | லெப்டினெண்ட். | கே. பி. என். எஸ். பிள்ளை. |

காணமற் போய் யுத்தக் கைதி தான் என்று உறுதி செய்யப்பட்டவர்.

சென்னை சாப்பர் அன் மைனர்.

| | | |
|---|---|---|
| 15203 | சாப்பர் | சின்ன நாகப்பன். |

# ராக்ஷஸ யுத்தம்

ஒரு புறம் இந்திரஜித்தன் நிகும்பலை யாகம் செய்கிறான். அந்த யாகம் வெற்றியுடன் முடிந்தால், அவனது சக்தி அபாரமான தாகி விடும்; அப்புறம் அவனை தேவராயினும், மூவராயினும் ஜெயிக்க முடியாது என்கிறார்கள். மற்றொரு புறம், கும்பகர்ணன் அட்டகாசம் செய்கிறான். ராவணேஸ்வரனோ மகா சூரன். மாயாவியும் கூட. முக்கண்ணனான மகாதேவன் வாழ்ந்து வந்த கைலயங்கிரியையே அசைத் தெடுத் தெறியத் துணிந்த முரடன். தேவர்களிடமும், மூவர்களிடமும் சாவில்லை என்ற வரம் பெற்றிருக்கிறான். சாதுக்களான முனிவர்களை யெல்லாம் படாத பாடு படுத்தி வந்திருக்கிறான். இவர்கள் எல்லாம், சாந்தமே உருவெடுத்து வந்த தென உள்ள சீதா தேவியைச் சிறை பிடித்து வைத்திருக்கிறான். அந்த சாந்தச் தேவியைச் சிறை மீட்டு, அவளைச் சிறை பிடித்து வைத்துள்ள துஷ்டர் கோஷ்டியையே பூண்டில்லாது அறுத் தெறிந்து விடவேண்டு மெனும் நன் நோக்கத்துடன் ராம, லக்ஷ்மணர்களைத் தலைமையில் கொண்டு சுக்ரீவன், ஆஞ்சநேயர், ஜாம்பவான், மற்றும் கணக் கற்ற வானர சைனியங்கள் எல்லாம் போர் தொடுக்க வந்திருக்கின்றன. அதி பயங்கரமான யுத்தம் நடக்கிறது. இருதரப்பிலும் ஏகச் சேதம். வானத்திலும், கடலிலும், தரையிலும் ராக்ஷஸர்கள் தமது மாயா ஜாலங்களை யெல்லாம் காட்டுகிறார்கள். ஒரு கட்டத்திலே ராம, லக்ஷ்மணர்கள் கூட, இந்திரஜித் தினது பிரமாஸ்திரத்தால் கட்டுப் பட்டு, மூர்ச்சையாகி விழுந்து விடுகிறார்கள். வானர சைனிய மெல்லாம், தம் நாதனை இழந்து விட்டதாக எண்ணி, அழ ஆரம்பித்து விட்டன. நல்ல காலமாக ஆஞ்சனேயர் சஞ்சீவி பர்வதத்தையே சுமந்து வந்து சேர்ந்தார். ராம, லக்ஷ்மணர் ள் நித்திரையிலிருந்து எழுந்திருப்பவர்கள் போல, கண் விழித் தெழுந்தார்கள். பிறகு அஹி, மஹி ராவணர்களிடம் சிக்கிக் கொண்டார்கள். குடியே முழுகிப் போனது போலாச்சு என்று வானர வீரர்கள் கதறி, மனங் கலங்கி நின்றனர். அப்பொழுதும் அஞ்சனை புத்திரன் உதவி புரிந்தான். நிகும்பலை யாகம் நடக்கும் செய்தி ராம சைனியத்திற்கு எட்டியது. ஆஞ்சனேயர் அந்த க்ஷணமே சென்று, யாக குண்டத்தையே ஆபாசப் படுத்தி, யாகத்தைப் பாழாக்கினார். கடைசியாக, ராம ராவண யுத்தம் நடந்தது. ராம, லக்ஷ்மணர்களே சில சமயங்களை த்து நிற்கும்படி நேரிட்டது. இந்தப் போர் எவ்வாறு முடியுமோ என்று சகல தேவர்களும், மானிடர்களும் ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்தனர். முடிவிலே, ராமரது அம்பு ராவணனது இதயத்தில் உள்ள அமிர்த கலசத்தைச் சுக்கல் சுக்கலாக்கிறது. ராவணன் தரை மீது உருண்டான். ராமரது சகாக்கள் 'வெற்றி! வெற்றி!!' என்று முழங்கினர். உலகமே களித்தது. சத்யமே ஜெயித்தது!

இதே போல் தான், இப்பொழுது நடக்கும் யுத்தமும் இருக்கிறது. அவ்வப்பொழுது யுத்த களத்திலிருந்து மோசமான செய்திகள் வருகின்றன. 'ஐயோ! இதென்ன விபரீதமா யிருக்கிறதே! சத்யம் கூட ஜெயிக்காதோ என்று எல்லோரும் பயப்பட நேரிடுகிறது. இந்திரஜித்தன் நிகும்பலை யாகம் செய்தது போல், ஜெர்மன் தொழிற்சாலைகளில் டாங்கிகளும் விமானங்களும், வெடி மருந்துகளும், நீர்மூழ்கிகளும் அல்லும் பகலும் அறுபது நாழிகையும் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், அவற்றை யெல்லாம், பிரிட்டிஷ் விமானிகள் பாழடித்து வருகின்றனர். நடு நடுவே, 'யூகரேன் போச்சு! ராஸ்டாவ்—மாஸ்கோ ரயில் பாதையில் ஒரு பகுதி பிடிப்பட்டது! ஜெர்மானியரின் டாங்கி பலம் ரொம்ப அதிகமா யிருக்கிறது. மேலும் மேலும் அவர்களுக்கு உதவி அதிகமாக வந்து கொண்டே யிருக்கிறது. அவர்களது முன்னேற்ற வேகம் அதிகரித்திருக்கிறது' என்ற செய்திகள் வந்து கொண்டிருந்தன. சென்ற வாரம் என்னடா என்றால், 'பயங்கரப் போருக்குப் பிறகு ராஸ்டாவ் நகரம் காலி செய்யப் பட்டது! ஜெர்மானியர் டான் நதியைப் பல விடங்களில் கடக்கப் பார்க்கின்றனர். ஸ்டாலின் கிராட் என்ற அதி முக்ய மான தொழிற்சாலை நகரை நோக்கியே அவர்கள் போகிறாப் போலிருக்கிறது. ருஷ்யப் போரில் அவர்கள் எண்பது டிவிஷன் துருப்புகள், பல்லாயிர டாங்கிகள், சுமார் நாலாயிர விமானங்கள் இத்தனையையும் ஈடுபடுத்தி யிருக்கிறார்களாம். இத்தனை இருக்கும் பொழுது, அவர்கள இவ்வளவு பிரதேசங்களைப் பிடித்துக் கொண்டது பெரிதா என்ன? ருஷ்யர்கள் அளிக்கும் மகத்தான எதிர்ப்பு மட்டும் இல்லாதிருக்குமானால், நாஜிகள் இதற்குள்ளாக ருஷ்யாவையே முழுங்கி ஏப்பம் விட்டிருக்க மாட்டார்களா? கடைசியாக, உடம்பிலே துளி பலமும், தைரியமும் இருக்கும் வரை போராடியே தீர்த்து விடுவதென ருஷ்யர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்களாம்.

பாருங்களேன், நான்கு வாரங்களுக்கு முன்னாலேயே ஜெர்மானியர் வாரனேஷ் என்ற நகரத்தைப் பிடித்து விட்டதாக ரேடியோ மூலம் தம்பட்டம் கொட்டிக் கொண்டார்கள். ஆனால் நடந்த தென்ன? வாரனேஷ் நகரத்தை மோந்து பார்த்து விட்டு, மேலே விழுந்த சூடான அடி தாளாது பின் வாங்கி ஓடிக் கொண்டிருக்கிறார்கள் நாஜிகள். ருஷ்யாவிலே மட்டும் நாஜிகள் ஜம்பம் சாயவில்லை. அவர்கள் நினைப்பதற்கு நேர் மாறாகவே காரியங்கள் நடந்து வருகின்றன. நாஜிகள் அதிவேகமாக முன்னேறுகிறார்கள். வெகு சீக்கிரமே அவர்கள் செல்லும் திசையில் உள்ள நகரங்கள் எல்லாம் அவர்கள் கைவசமாகிவிடும் என்று தைரியமாக யாரும் சொல்ல முடியாது. எதிர்பாராத இடங்களில் திடீரென்று திரும்பி நின்று நாஜிகளைத் திணற அடித்து விடுகிறார்கள் ருஷ்யர்கள்.

ஆனால் சென்ற நான்கு வாரங்களுக்குள் நாஜிகளுக்கு அமோகமான வெற்றி தான் கிடைத்திருக்கிறது என்பதில் சந்தேகமே யில்லை. அறுபதாயிரம் சதுர மைல்கள் அவர்கள் கையில் சிக்கி யிருக்கின்றன. அதுவும் எப்படிப் பட்ட பிரதேசம்? தங்கமான தங்கம் தான்! நிலக்கரியும், இரும்பும், கோதுமையும் ஏராளமாக உண்டாகக் கூடிய பிரதேசம்! ருஷ்யாவின் ஜீவ நாடிகளில் இப் பிரதேசமும் ஒன்றாகும். இந்த வெற்றியை நாஜிகள் எளிதில் சம்பாதித்து விட வில்லை கண்ட இடங்களில் எல்லாம் அவர்களது பாழான டாங்கிகள் குப்பை குப்பையாய்க் கிடக்கின்றன. வழி நெடுகப் பிணம் மலை தான்! ஐயோ! ராக்ஷஸர்களை மகா சிலவான்களாக்கி விடுகிறார்கள் இந்த ஹிட்லர் கோஷ்டியார்!

'ருஷ்ய நிலைமை, இப்பொழுதிருப்பதைப் போல் இவ்வளவு மோசமாக என்றும் இருந்ததில்லை' எனப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. டாங்கிகள் கட்டும் பிரமாண்டமான தொழிற்சாலை நகரமான ஸ்டாலின் கிராடை நோக்கி, வெறி பிடித்தவர்களென நாஜிகள் ஓடுகிறார்களாம். அந்த நகரையடைய வெகு தூரம் ஒன்றும் இல்லையாம். அந்த நகரையும் பிடித்து விட்டால், பிறகு, நேரே, காஸ்பியன் எனும் கடலோரத்தை நாடி ஜெர்மன் படைகள் செல்லக் கூடும். இவ்வாறு செல்வதால், தெற்கேயுள்ள காகஸஸ் பிரதேசம் முழுவதையும்; ருஷ்யாவின் இதர பாகங்களி லிருந்து கத்தரித்து விடுவது போலாகும். பின்னாலே ஆபத்தை வைத்துக் கொண்டு, முன்னாலே செல்ல, நாஜிகளுக்கு, அதிலும் ருஷ்யாவிலே, தைரியம் இருக்கவே இருக்காது தான்! நாலைந்து இடங்களில் சரியாக விழுந்திருக்கிறதோ இல்லையோ அடி? அதனால் தானே உஷாராகவே அவர்கள் முன்னேறுகிறார்கள். 'ஹிட்லர் அவசரப் படுகிறார்' என்று கூட யுத்த நிருபர்கள் கூறுகிறார்கள்.

அவசரப்படுகிறார் ஹிட்லர் என்பதில் ஆச்சரிய மேது மில்லையே! நாட்களோ ஓடுகின்றன. மளமளவென மறுபடியும் பனிகாலம் வந்து விட்டால் சங்கடம் தான் என்பது ஹிட்லருக்கு நன்றாகத் தெரியும். போன பனி காலத்தில் பட்டக் கஷ்ட நஷ்டங்களை அவர் எளிதில மறக்க முடியுமா என்ன? அசட்டுக் காரியம் என்றால், போன குளிர் காலத்திலே ஹிட்லர் ருஷ்யாவில் நடத்திய போரைத் தான் 'பஸ்டு கிளாஸ்' உதாரணமாகச் சொல்லவேண்டும். திணறிப் போயிட்



டாரோ இல்லையோ மனுஷன்! ஆனை செய்து விடுகிறேன், பூனை செய்து விடுகிறேன் என்று பீத்திக் கொண்டிருந்த மனுஷன் திடீரென்று தனது நாட்டு மக்களிடம் பல்லைக்காட்டி, கெக்கபிக்கே என்று ஏதேதோ சமாதானம் சொல்லி, 'கம்பளிச் சட்டை கொடுங்கள், சால்வைகள் கொடுங்கள், ஆபத்தில் சிக்கிக் கொண்டு விட்டார்கள் நம்மவர்கள், இந்த குளிர் காலம் போகட்டும், அப்புறம் பாருங்கள்' என்று கெஞ்ச வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அம்மாதிரியான நிலைமையில் தன்னை இரண்டாவது முறை வைத்துக் கொள்ள ஹிட்லருக்கு விருப்ப மிருக்குமா? அதனால் தான், சட்புட் என்று குளிர் காலத்திற்குள்ளாகவே முக்யமான இடங்களையெல்லாம் பிடித்துக் கொண்டு தனது படைகளைக் குளிருக்கு அடக்கமாக எங்காவது நிறுத்தி வைத்துக் கொள்ளலாம் என்று அவர் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறது. தவிர, அமெரிக்காவிலும் சரி, பிரிட்டனிலும் சரி, ஐரோப்பாவிலும் இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்க வேண்டு மென்ற அபிப்பிராயம் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. எந்த சமயத்திலும் நேச தேசத்தார் எவாவது இந்த விஷயத்திலே ஒரு முடிவுக்கு வரக்கூடும். இப்பொழுதே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாலும் இருக்கக் கூடும்.

இந்த பயம் வேறு ஹிட்லரைப் பிடுங்கித் தின்று கொண்டிருக்கும். இதை எதிர் பார்த்தே அவர், மேல் திசையில் சாதாரணமாக உள்ள துருப்புகள் தவிர மேற்கொண்டு நாற்பது அல்லது ஐம்பது டிவிஷன் படைகளுக்கு தண்டச் சோறு போட்டு வைத்திருக்கிறாராம். அதோடு, ஜப்பானுக்கும் சரியாக 'டைரு' கொடுத்து வைத்திருக்கிறார் போலிருக்கிறது அவர் இரயில், ரயிலாக துருப்புகளைக் கொண்டுபோய், ஜப்பானியர் மஞ்சூரிய எல்லையில் குவித்துக் கொண்டிருக்கிறார்களாம். பெரிய தோர் தாக்குதலைத் தொடங்க அங்கே பிரமாதமான ஏற்பாடுகள் நடந்து வருகின்றனவாம்.

நாஜிப் படைகள் காகஸஸ் பிரதேசத்தில் எதிர் பார்த்த அளவு பெரிய வெற்றியைப் பெற்று விட்டாலும் சரி, நேச நாடுகள் பேறகே இரண்டாவது போர்

அச்சு சர்க்கார் டாங்கிகள் அவதிப்படும் காட்சி.



லிபியாவில் பிரிட்டிஷ் க்ருய்ஸர் டாங்கிகள், எதிரி டாங்கிகளை விரட்டி அடிக்கின்றன.

முனையை ஏற்படுத்தினாலும் சரி, அதற்குமேல் ஜப்பானியர் ருஷ்யாவைத் தாக்க ஆரம்பித்து விடுவார்கள். எப்படியும் ஜப்பானுக்கும் ருஷ்யாவிற்கும் மாட்டிக் கொள்ளாமல் தப்பாது என்று ராணுவ நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்களாம்.

ருஷ்யர்களுக்கும், அதுகாரணமாக நேச தேசத்தாருக்கு மட்டுமே ஒரு பெரிய சோதனை காலம் தான்! அதிலே சந்தேகமே யில்லை. ராம லக்ஷ்மணர்களுக்கும் அவர்களது சைனியங்களுக்கும் ஏற்பட்ட பயங்கரமான சங்கடங்களும், திகைப்பும் நேச தேசத்தாருக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஆனாலும் முடிவிலே ராக்ஷஸர்கள் சிதற அடிக்கப் பெற்றது. போலவே, நமது பொது எதிரிகள் சிதற அடிக்கப்படுவார்கள் என்பது நிச்சயம்.

அந்த முடிவு ஏற்படுவது தான் எப்போ என்று தெரியவில்லை. 1943 கடைசியிலே எப்படியும் யுத்தம் தீர்ந்து போகும் என்று ஒருவர் அபிப்பிராயம் வெளிவித்திருக்கிறார் 1943 கடைசி என்றாலும் ஒன்றரை வருஷமாக விருக்கிறதே! அதற்குள் என்னென்ன எதிர் பாராத காரியங்கள் நடக்கப் போகிறதோ யார் கண்டார்கள்?

ருஷ்யர்களுக்கு வெளியுதவி கிடைப்பது சிரமமாகத் தானிருக்கும். ஆனாலும் பிரிட்டனும், அமெரிக்காவும் சாத்தியமான வரையில், வெகு கஷ்டத்துடன தான் ருஷ்யாவிற்கு உதவிகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றன. அந்த உதவி, ருஷ்யாவைப் போய்ச் சேரக் கூடிய வழியில் எல்லாம் அச்சு நாட்டினரின் உபத்திரவம் அதிகமாக இருக்கிறது. இப்பொழுது காகஸஸ் பிரதேசத்தில் உள்ள எண்ணெய், ருஷ்யாவின் மத்திய பாகத்திலும், கிழக்கு பாகத்திலும் உள்ள தொழிற் சாலைகளுக்குப் போகவொட்டாமல் படி செய்ய நாஜிகள் முயன்று வருகிறாப் போலிருக்கிறது.

ருஷ்யர்களும் சும்மா இல்லை. ராஸ்டாவ் போன்ற பெரிய நகரங்களி லிருந்த தொழிற் சாலைகளையும், அங்கு வேலைசெய்து கொண்டிருந்த தொழிலாளிகளையும் அப்படியே ஆபத்து அதிகமில்லாத கிழக்கு ருஷ்யப் பிரதேசங்களுக்கு மாற்றி விட்டிருக்கிறார்கள். அதனால் ராஸ்டாவ போன்ற நகரங்கள் ஜெர்மானியர் வசப்பட்ட போதிலும் அதிக நஷ்டமில்லாது போய் விடுகிறது. ஆனால் இதிலே கஷ்டங்கள் என்னவோ அதிகம் தான்! ஆயினும் என்ன செய்வது? அச்சு நாட்டினரின் பலத்தை எப்படியாவது வியர்த்தமாக்கியே தீரவேண்டும். நாளுக்கு நாள் அவர்களது மொத்த பலம் குறைய வேண்டும். அதுவே அனைவரது விருப்பமும்.

அதெப்படி ஐயா, அனைவரது விருப்பம் என்கிறீர் என்று கேட்கலாம். ஜெர்மனி கைப்பற்றி யுள்ள பிரதேசங்களில் இருப்பவர்கள் எல்லாம் சந்தோஷமாகவும், மன நிம்மதி யுடனுமா இருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்? ஜெர்மானியர் அடையும் வெற்றிகள் அவர்களுக்குப் பிடித்திருக்கிற தென்று நினைக்கிறீர்கள்? ஹிட்லர் செய்யும் காரியங்களை, பெர்லினில் உள்ளவர்க ளனைவருமே ஆதரிக்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்? இல்லை, இல்லை, இல்லை என்ற பதில்கள் தான் இந்தக் கேள்விகளுக் கெல்லாம்.

பேர்லினிலே சென்ற சில தினங்களாக ஒவ்வொரு இரவிலும் திடீர் திடீரெனப் பெரிய பெரிய மாளிகைகளில் தீ பிடித்து எரிகிறதாம். அதற்குக் காரணம் என்னவென்றே தெரியவில்லையாம். இவ்வாறு தீ வைப்பவர்களைப் பிடித்துக் கொடுப்போருக்கு 10 ஆயிரம் மார்க்குகள் (பள்ளிக்கூடத்து வாத்தியார் கொடுக்கும் 'மார்க்' இல்லை இது, ஜெர்மன் பணம் இது.) கொடுக்கிறோம் என்று சர்க்கார் அறிவித்திருக்கிறார்களாம். அங்கங்கே பல நாஜி அதிகாரிகள் திடீர் திடீரென யமனுலகிற்கு பயணமாகி விடுகிறார்கள். நார்வேயில் இரண்டு நாஜி அதிகாரிகள் ஒரு இடத்தில் கொல்லப்பட்டார்கள். அதற்காக அந்த இடத்திலிருந்த கிராமத்தையே நாஜிகள் தரை மட்டமாக்கினார்களாம். இப்படியெல்லாம் பயங்கரமான கண்டனையை விதிப்பதிலிருந்தே, நாஜிகள் மனதிலே உள்ள உதைப்பு எத்தகையது என்பது தெரியவில்லையா?

பிரிட்டிஷ் விமானிகள் ஹாம்பர்க் என்ற பெரிய தொழிற்சாலை நகரத்தை சமீபத்திலே இரண்டாம் முறையாக கவனித்தார்கள். ஜெர்மனியின் தொழிற்சாலைகளுக்கு இப்பொழுது அடிக்கடி தலைவலி உண்டாகி வருகிறது. அதனால் தான் ஜெர்மன் தொழிற்சாலைகளையே இத்தாலிக்கு மாற்றி விடலாமா என்று அவர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம்.

இது இப்படியிருக்க, அட்லாண்டிக் கடலிலே ஜெர்மன் நீர் மூழ்கிகள் படுத்தும் பாடு, சொல்லி முடியாதாம். அதனால் சப்பல் நஷ்டமும் அதிகம் தான். இந்த நிலைமையைச் சமாளிக்க நேச நாடுகள் பல திட்டங்கள் போட்டிருக்கின்றன. கரையோரங்களிலே பலமான ரோந்து சுற்றி வர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விமானங்களை ஏராளமாக உற்பத்தி செய்து வருகிறார்கள். விமான கூட்ஸ் சர்வீஸ் ஏற்படுத்தக் கூட திட்டங்கள் போட்டாய் விட்டதாம். கொஞ்சகாலம் கழித்து, ஐரோப்பாவிலே, ஆகாயத்திலேயே இரண்டாவது போர் முனையை ஆரம்பித்து விடலாம் என்று தைரியம் கூறுகிறார்கள் அமெரிக்கர்கள்.

ஜப்பானியர் மீதிலும் அமெரிக்கர்கள் கண் திருஷ்டியை வைத்திருக்கிறார்கள். சில மாதங்களாக கீழ்த்திசையில் பெரிய போர்களோ, பெரிய சம்பவங்களோ ஏதும் நடக்கவில்லை. ஆனாலும் இரு கட்சியார்களும் வரப் போகும் போருக்கு தங்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். ஜப்பானியர் மெல்ல மெல்ல ஏதாவது சேஷ்டைகள் செய்து வருகிறார்கள். ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும் எதிரி ஏஜண்டுகள் நீர் மூழ்கிகள் வழியாக ரகஸ்யமாக வந்து இறங்கியிருப்பதாகக் கூறப் படுகிறது. அவர்களைப் பிடிக்கவும் முயற்சிகள் எடுக்கப் பட்டு விட்டதாம். அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் உள்ள முக்யமான இடங்களை திருட்டுத் தனமாக நாசமாக்குவதே இந்த ஏஜண்டுகளின் வேலையாம்.

தென்மேற்கு பஸிபிக் பிரதேசத்தில் ஜப்பானின் கை இன்னும் ஓங்கியே தானிருக்கிறதாம். ஆனாலும், சீனாவில் ஜப்பான் நடத்தும் சண்டை ஒரு தினுஸாக முடிந்தாலன்றி, ஜப்பான் தெற்கே பெரிய போரைத் துவக்குமென்று தோன்றவில்லை. கீச்சுமூச்சுத் தாம்பாளம் மாதிரி ஜப்பானியருக்கும் சீனருக்கும் வெற்றி தோல்விகள் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. சீன-ஜப்பானிய யுத்த ஆரம்பத்திலே, 'இன்னும் மூன்று மாசங்களிலே சீனாவின் முழங்காலை முறித்து விடுவோம்' என்று சொன்ன அதே ஜப்பானியர் இன்று சீனாவில் முக்கு, முக்கு என்று முக்கி முழிக்கிறார்கள்.

பர்மாவிலே ஜப்பானியர் செய்து வரும் வேலைகளைப் பற்றி அமெரிக்காவிலிருந்து தகவல்கள் எட்டியிருக்கின்றன. உபயோகமற்ற ஜப்பானிய நோட்டுகளை பர்மா எங்கும் செலவாணியாகும்படி செய்து விட்டார்களாம். கிராமத்தார்களை நிர்ப்பந்தம் செய்து ஜப்பானியருக்காகப் பாடுபட்டு உழைக்கச் செய்கிறார்களாம். ஜப்பானிய வியாபாரிகள் மேலும் மேலும் வந்து குவிகிறார்களாம். முன்பு பர்மியர் வேலை பார்த்த இடத்திலே ஜப்பானிய ஆண்களும் பெண்களும் வந்து உட்கார்ந்து வருகிறார்களாம். இன்னும் பர்மாவின் செல்வத்தைக் கொள்ளை கொள்ள, மின்சார உற்பத்திசாலைகளைக் கட்டுகிறார்களாம். இந்தோ சீனாவிற்கும் பர்மாவிற்கும் தொடர்பான ரயில் பாதை போடுகிறார்களாம். ஜப்பான் பாஷையைக் கற்கச் சொல்லுகிறார்களாம்.

இம்மாதிரியான சுரண்டும் குணம் படைத்த ஜப்பானியர்கள் தான் இந்தியா விஷயத்தில் தமக்கு ரொம்ப சிரத்தை இருப்பதாகக் கூறிக் கொள்ளுகிறார்கள். எப்படியிருக்கிறது இந்தத் தமாஷ்?

ஜப்பானியரை இந்திய நாட்டருகே கூட நெருங்க வொட்டாதபடி செய்ய வேண்டுமெனும் எண்ணம் நேச தேசத்தாருக்கு உறுமரத்தாணி போலப் பதிந்து விட்டது. ஆகவே இந்தியாவைப் பிரமாதமான பலமுள்ள நாடாக ஆக்கி வருகிறார்கள் அவர்கள். இதற்கு யார் இடைஞ்சல் உண்டாக்கினாலும் அவர்கள் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் வெகுக் கடுமையானதாகவே இருக்கும் என்பதில் ஐயமே இல்லை. 'பர்மா ரஸ்தாவை மீண்டும் திறப்போம்' என்று மிஸ்டர் அமெரியும் அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கிறார். நேச நாடுகளின் மன உறுதியை வெளிக் காட்ட இதுவும் ஒரு உதாரணமாகும்.

எகிப்தியப் போர், இப்பொழுது கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கொண்டிருக்கிறாப் போலிருக்கிறது. ராமல் ஐயா, அங்கங்கே சுரங்க வெடிகளை மணல் வெளியில் விதைக்கச் சொல்லி யிருக்கிறாராம். அவருக்குச் செல்லும் ஆகாராதி, யுத்த தளவாடங்கள் எல்லாம் பிரிட்டிஷ் விமானிகளாலும், கப்பற் படைகளாலும் தாக்கப் படுகின்றன. ஜெர்மானியர் பிடித்த துறைமுகங்களையெல்லாம் பிரிட்டிஷார் த்வம்சம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு களைத்த ஜெர்மன் வீரன் பிரிட்டிஷாரிடம் சரண் புகுந்தானாம். 'பிரிட்டிஷ் வெடி குண்டுகள் எங்களை எட்டு நாளாகத் தூக்கமே இல்லாதபடி செய்து விட்டன. என் போலவே எல்லோரும் களைத்துக் கிடக்கிறார்கள். கொஞ்சம் தூங்க அநுமதி கொடுங்கள்' என்று கேட்டானாம் அவன். ஹிட்லருக்கே தூக்கம் இல்லாது போயிருக்கும் இந்த சமயத்தில், ஹிட்லர் சிஷ்யனுக்கு தூங்க சந்தர்ப்பம் எங்கே கிடைக்கப் போகிறது இப்பொழுது?

## விமானத் தாக்குதலைத் தெரிவிக்க புதிய முறை

### சீனாவில் சிவப்பு உருண்டை

சீனா மலைகள் மிகுந்த நாடு. விமானத் தாக்குதல் அறிவிப்புச் சங்குகள் ஊதினால் எல்லாப் பகுதிகளுக்கும் அது எட்டுவதில்லை. எனவே, நாலு பக்கங்களிலிருந்தும் பார்த்தால் நன்றாகத் தெரியக் கூடிய பல இடங்களிலும் ஒவ்வொரு கம்பத்தை நட்டு அதில் ஒரு சிவப்பு உருண்டையைக் கட்டி, விமானத் தாக்குதல் காலத்தில் அதை உயர்த்தி ஜனங்களுக்கு அறிவிக்கிறார்கள். ஆபத்து நீங்கி விட்டதை யறிவிக்க அதை கீழே இறக்கி விட்டார்கள். இந்த உருண்டை மூங்கிலால் கட்டப் பட்டு சிவப்புத் துணியால் மூடப் பட்டிருக்கிறது. இதன் குறுக்களவு 6 அடி. இதற்குள், இரவில், விளக்கேரிய ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. சங்குக்கும் இதற்கும் ஒரு வேற்றுமை இருக்கிறது. சங்கு ஆபத்து நீங்கியதை அறிவித்தாலும், அதைக் கவனியாமல் யாரேனும் இருந்தால், இந்த உருண்டையை பார்த்தவுடனேயே தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

இந்த முறையைப் பரீட்சிக்கும்படி இந்தியா சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள்.



## சென்னை பட்டாளத்தின் சிறப்பு

### எதிரி டாங்கிகள் நாசம்

சென்னை சாப்பர்கள் எவ்வளவு கஷ்டமான நிலைமையிலும் தம் கடமைகளைத் தவறாது செய்து முடிக்கின்றனர் என்று மற்ற சாப்பர் பட்டாளங்கள் பொதுவாகப் பாராட்டுகின்றன. அதே போல சென்னைப் பீரங்கிப் பட்டாளமும் சிறந்து விளங்குகின்றது.

லிபியப் போர் முனையில் ஒரு சென்னைப் பட்டாளம் இது வரை யுத்தத்தையே கண்டதில்லை. இதில் தமிழர்களும், ஆந்திரர்களும், மலையாளிகளும் தான் சேர்ந்திருக்கின்றனர். ஒரு நாள் காலையில் ஜெர்மன் பான்ஸர் பட்டாளம் இதைத் திடீரென்று தாக்கியது. உடனே நம் பட்டாளம் எதிர்த்து போராடியது. ஜெர்மன் படைகளை யடுத்து இத்தாலியப் படையும் வந்தன. என்றாலும் சளைக்கவில்லை நம் வீரர்கள். கடுமையாகப் போராடினார்கள். ஜெர்மன் டாங்கிகளை ஒவ்வொன்றாக நாசஞ் செய்தார்கள். எதிரிகளின் எண்ணிக்கை பலம் மிக அதிகம். ஆகையால் நம் படைகள் தோற்க நேர்ந்தது. என்றாலும், அப்போர்க் கலவரத்தில் அப்படையினரில் பெரும்பாலோர் தப்பி, மீண்டும் வந்து சேர்ந்து விட்டனர். புதுத் தளவாடங்களைச் சேகரித்துக் கொண்டு எதிரிகளோடு போராட ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுடைய வீரம் மிகவும் பாராட்டத் தக்கது. சமீபத்தில் பார்லிமெண்டில் கூட, இவர்களைப் பாராட்டி பிரதம மந்திரி தன் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். வட இந்தியர்கள் மட்டுந்தான் பலத்தில் சிறந்தவர்கள் என்னும் தப்பு எண்ணம் இப்போது பறந்து விட்டது.

## படைகளுக்கு வசதி யளிக்க நிதி.

### அடுத்த வாரம் கவர்னர் ரேடியோ பிரசங்கம்.

மனித உணர்ச்சியை மதிப்பதிலேயும் அனுதாபங் கொள்ளுவதிலேயும், இம்மாகாணத் தலைவர் என்ற முறையிலாவது, தனி மனிதர் என்ற முறையிலாவது, மேன்மை தங்கிய சென்னை கவர்னருக்கு ஈடாக யாரையும் சொல்ல முடியாது. ஸர் ஆர்தர் ஹோப் போன்ற, அனுபவமும் புகழும் உடைய எவரும், அடிக்கடி 'புலி வருது, புலி வருது' என்று கூவ மாட்டார்கள்; பொது ஜனங்கள் தாங்க முடியாத தோர் பளுவைச் சுமத்தக் கூடியவரும் அவரல்ல. கவர்னர் உதவி நிதிக்கு உதவி புரியுங்கள் என்று அவர் கேட்டுக்கொண்டதற்கு 2 கோடிக்கு அதிகமாகக் கொடுத்து உதவிய சென்னை மாகாண வாசிகளுக்கு, சமீபத்தில் தான் தன் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்தார். அதிலிருந்து அவருடைய அறிவு அதிகப்படுகிறது. அரசியலிலும் பொருளாதாரத்திலும் தம் நிலைமை மிகவும் குறைந்து கொண்டு வருவது பற்றி, பொது ஜனங்கள் கவலை கொள்ளுவதைக் குறித்து, அனுதாபப்படுகிறார். ஆகையால், இங்கிலாந்தையும் இந்தியாவையும் பாதுகாக்க வேண்டி எல்லா வகைத் தளவாடங்களையும் ஏராளமாகச் செய்யும்படி வெகுவாகத் துரிதப்படுத்திக் கொண்டு வருகிறார்.

மற்றொரு புதிய நிதிக்கு உதவ வேண்டுமென்று கோரி, அடுத்த வாரம், மேன்மை தங்கிய கவர்னர் ரேடியோ மூலம் ஒரு பிரசங்கம் செய்வார். இதன் பெயர் 'படைகள் வசதிக்கான நிதி.' எந்த நோக்கத்திற்காக இதற்கு முன் சென்னை வாசிகள் தாராள நோக்கத்தோடு கொடுத்து உதவினார்களோ, அதை விட, இந்த நிதி திரட்டுவதின் நோக்கம், எந்த வகையிலும் குறைந்ததல்ல என்று, சிந்தனா சக்தியுள்ள ஒவ்வொருவர் மனதிலும் தைக்கும்படித் தான் அவர் பேசுவார்.

சமாதானமாகவே வாழ்ந்து வந்த இந்த மகாணத்தில் சென்ற 2 மாதங்களில் எவ்வளவு அதிக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்று, பிரயாணஞ் செய்ய சந்தர்ப்பமில்லாத சாதாரண ஜனங்கள், பொதுவாகத் தெரிந்து கொள்ள முடியாது. இங்கே பஞ்சாபிகளும் கூர்க்கர்களும், பலுச்சிகளும், ஜட்களும், பிரித்தானியரும் அமெரிக்கர்களும் ஆயிரக் கணக்காக வந்திருக்கிறார்கள். நம் வீடுகளையும் குடும்பங்களையும் சொத்துக்களையும் உண்மையாகவும் திறமையோடும் காப்பாற்ற அவர்கள் முன் வந்திருக்கிறார்கள். தற்கால யுத்தக் கொடுமைகளைப் பொருள்படுத்தாமல், வெற்றி பெறவும் சுதந்தரமான சமாதானத்தை நிலை நாட்டவும் போர்க்களத்திற்குள் பாயச் சித்தமாயிருக்கிறார்கள். இவர்கள் வசிக்கும் முகாம்களில் ஒரு வகை வசதிகளோ சௌகரியங்களோ அவர்களுக்குக் கிடையாது. இவர்கள் இப்போது உள்ள இடமோ அவர்களுக்குப் புதிது.

இவர்கள் மகத்தான தியாகங்கள் செய்கிறார்கள். இன்னும் கடுமையான கஷ்டங்கள் எவை வந்தாலும், அவற்றையும் சகிக்க ஆவலோடு சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தியாகிகளுக்கு நாம் மிகவும் நன்றியறிதலோடு நடந்து கொள்ள வேண்டியது அவசியம். இவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைக் கொடுக்க வேண்டும். ஊக்கத்தை வளர்க்க வேண்டும். இதற்கு ஒரு நிதியும் அமைத்து தகுந்தபடி நிர்வகிக்க வேண்டியதும் அவசியமாகும். இது பற்றி மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் உங்கள் மனதில் தைக்கும்படிப் பேசுவார்கள். ஆகையால், அவர்கள் பேசும் விஷயத்தைக் குறித்து நாம் பேசுவது கூடாது. என்றாலும் ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். யுத்தத்தில் காயம் பட்டவர்களுக்குத் தற்காலிக சிகிச்சை செய்து விரைவாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகவேண்டியது, யுத்த கள ஆம்புலென்ஸ் படையின் சாதாரண வேலை. இப்போது நம் நாட்டில் போர் நடைபெறவில்லை. இராணுவ நிலையம் சமீபமாகவுமில்லை. ஆகையால், காயப்பட்ட படைவீரர்களை அநேக வாரங்கள் வரை ஒரே ஆஸ்பத்திரியில் வைத்திருக்கிறார்கள். அந்நிய நாட்டிலே அவர்களுக்கு அன்பான வார்த்தை சொல்வோர் ஒருவரில்லை. தமக்குத் தேவையான புகையிலை, மிட்டாய், பிஸ்கோத்து, க்ஷவரக் கத்தி முதலியவற்றை வாங்க அவர்களுக்கு வசதியில்லை. படிப்பதற்குப் பத்திரிகைகள் கிடையாது; பார்ப்பதற்கு சினிமாக்கள் கிடையாது; பொழுதைப் போக்குவதற்கு ரேடியோவோ, கிராமபோனோ கிடையாது; வாரக் கணக்காக 3 உத்தியோகஸ்தர்களும், 20 படை வீரர்களும் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் மன நிலை எப்படி இருக்கும். இவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கத் தான நம் கவர்னர் இந் நிதியைத் திரட்ட முன் வந்திருக்கிறார். இது பற்றி அந்தப் படையினர் சென்னைக்கும் கவர்னருக்கும் நிச்சயமாக நன்றி செலுத்துவார்கள்.

## இந்தியாவில் யுத்தத் தளவாட உற்பத்தி அதிகப்படுத்தும் திட்ட வெற்றி

யு. படகுகள் ஆகாய விமானங்கள் ஆகிய ஆபத்துக்களுக்கெல்லாம் தப்பி 'ஆல்கஹால் அவிடோன்' இயந்திரத்தின் ஒரு பாகம் ஆயிரக் கணக்கான மைல்கள் கடல் கடந்து, குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டது. இதைப் பூட்டி முடித்த பிறகு, இந்தியாவில் தளவாட உற்பத்தி மிகவும் அதிகப்படும்.

சென்ற சில வாரங்களுக்குள் 4 அதிகப்படுத்தும் உற்பத்தித் திட்டங்கள் கட்டி முடிந்திருக்கின்றன. இவற்றில் ஒன்று ஒரு எஃகுத் தொழிற்சாலையில் இரும்புத் தடிகள் செய்யும் திட்டம்; மற்றொன்று, வெடி குண்டுகள் செய்யும் தொழிற்சாலையை தற்கால முறைகளுக்குத் தக்கபடி திருத்தியமைக்கிறது. இன்னொன்று, வெடி குண்டு மருந்துச் சாலை; வேறொன்று, வெடி மருந்தை குண்டுகளில் நிரப்பும் தொழிற்சாலை. இன்னொரு தொழிற்சாலையில் காலி தோட்டாக்கள் செய்வதற்கான இயந்திரங்களைக் கட்டி முடிந்துவிட்டன.

அநேகக் கீழ் நாட்டுக் கூட்டுத் திட்டங்கள் தீவிரமாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. நம் நாட்டில் 'தலுவீன' என்னும் பொருள் உற்பத்தியை அதிகப் படுத்த வேண்டி ஒரு அதிகப்படி இயந்திரத்தைக் கட்டி முடிக்க 14,00,000 ரூபாய் அனுமதித்திருக்கிறார்கள்.

இந்தியாவில் 'கால்சியம் கார்பைட்' என்னும் இரசாயன வஸ்துவைச் செய்வது பற்றிய திட்டத்தைக் குறித்து தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சென்ற ஏப்ரல் மே மாதங்களில் அநேக இரசாயனப் பொருள்கள் புதிதாக இந்தியாவில் செய்யப் பட்டிருக்கிறதாகப் பதிவாகியிருக்கிறது. 2 பவுண்டர், 18 பவுண்டர் ரவைகள், ட்ரேசர்ஸ், மார்டர் வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், சனியனைகள் ஆகியவற்றை ஏப்ரல் மாதத்தில் ஏராளமாகச் செய்திருக்கிறார்கள். இந்த அளவிற்கு, ஒரு போதும் செய்ததில்லை.

இராஜபுதனத்தில் 'சோடியம் சல்பேட்' நிலத்தில் படிந்திருக்கிறதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் இதுவரை சோடியம் சல்பேட்டும் சல்பைடும் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியானது. தொழிற்சாலைகளுக்கும் பாது காப்பிற்கும் மிகவும் உபயோகமான இந்தப் பொருள், இங்கே விளைவதே போதும் என்றும், வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லையென்றும் கருதுகிறார்கள்.

சென்ற 1941-42-ம் வருஷம் மே மாதம் கொடுக்கப்பட்ட மரத்தைப் போல் 2½ மடங்கு அதிகம் இந்த வருஷம் கொடுத்திருக்கிறார்கள்.

## அமெரிக்காவில் தங்க இறக்குமதி புள்ளி விவரங்கள்

அமெரிக்காவில் தங்க இறக்குமதி 1941-ம் வருஷம் மிகவும் குறைந்து விட்டது.

**தங்க இருப்பு.** அந்த வருஷத்தில் அங்கே 741,800,000 டாலர் பெறுமான முள்ள 2 கோடி அவுன்ஸ் தங்கம் இருப்பு இருந்தது. அதற்கு முந்திய வருஷத்தில், 351,200 000 டாலர் பெறுமான 124,000,000 அவுன்ஸ் தங்கம் இருந்தது. 1940-ம் வருஷக் கடைசியில் 220 கோடி டாலர் பெறுமானமுள்ள 629,000,000 அவுன்ஸ் தங்கம் இருந்தது. 1941-ம் வருஷக் கடைசியில் 227 கோடி டாலர் பெறுமானமுள்ள 65 கோடி அவுன்ஸ் தங்கம் இருப்பு இருக்குமென்று எதிர் பார்க்கப் பட்டது.

1941-ம் வருஷக் கடைசியில் அமெரிக்க கஜானாவில் வெள்ளி இருப்பு 328 கோடி அவுன்ஸ் இருந்ததாகக் கருதுகிறார்கள். இதில் 1,399.000,000 அவுன்ஸ், அந்த வருஷத்தில் தேடியது. 1934-ம் வருஷம் வெள்ளி வாங்கும் திட்டம் அமுலுக்கு வந்தது முதல், அந்த வருஷந் தான் மிகவும் குறைவாக வாங்கி யிருக்கிறார்கள்.

இந்தியாவில் 19'0-ம் வருஷத்தில், ரூ. 3,24,61,066 பெறுமான 289,3'4 அவுன்ஸ் சுத்தமான, தங்கம் அகப்பட்டது. 1941-ம் வருஷம் 3,27,15301 ரூ. பெறுமான 2ɛ5,162 அவுன்ஸ் சுத்தத் தங்கம் அகப்படுமென்று திட்டம் போட்டார்கள். 19.1 முதல் 1941 வரை அதாவது சென்ற 10 வருஷங்களில், அமெரிக்கா தவிர, உலகத்திலுள்ள மற்ற நாடுகளில் உற்பத்தியானது 293,996,000 அவுன்ஸ். இதில் 1000-ல் 11 பங்குதான அதாவது 3,185,000 அவுன்ஸ் மட்டுந் தான் இந்தியாவில் கிடைத்தது. 1941-ம் வருஷம் செப்டெம்பர் மாதக் கடைசி வரை 9 மாதங்களில் ரூ. :8,065 பெறுமான 18,‹77 அவுன்ஸ் வெள்ளி தான் கிடைத் திருக்கிறது.

1941-ம் வருஷத்தில் உலகத்திலேயே 41,000.000 அவுன்ஸ் தங்கம் விளையுமென்று திட்ட மிட்டார்கள். 19 0-ம் வருஷம் வெள்ளி விளைவு 278,000,000 அவுன்ஸ்கள். ஒரு போதும் இங்கே இவ்வளவு வெள்ளி விளைந்ததில்லை. 1941-ம் வருஷ விளைவு 268,000,000 அவுன்ஸ் என்று திட்டமிட்டிருக்கிறார்கள்.

## ஜப்பான் தளபதி எச்சரிக்கை.

### தோல்வியை சீனு ஒப்புக்கொள்ளவில்லை.

சூங்கிங்கிலிருந்து வெளி வரும் "நாஷனல் ஹெரால்ட்" என்னும் பத்திரிகை எழுதுவதாவது:—

"கிழக்காசியக் கூட்டு முன்னேற்ற" திட்டத்திற்குத் தடையாயிருப்பது சீனு தான் என்று ஜப்பான் பிரதம தளபதி ஒப்புக் கொள்ளுகிறார். அதாவது, சீனர்களை ஜெயிக்க ஜப்பானியர்களால் முடியவில்லை என்று மறைமுகமாக ஒப்புக் கொள்ளுவதாகும். இது ஜப்பானியர்களுக்கு மிகுந்த மனக் கசப்பை உண்டாக்கும். ஏனென்றால் 'சீனுவை 3 மாதங்களில் பணிய வைக்கிறேன்' என்று மார் தட்டிக் கிளம்பினார் ஜப்பான் பிரதம தளபதி. இப்படி அவர் சொல்லுவதற்குத் தகுந்த காரணமிருந்தது. சீன-ஜப்பான யுத்தம் 6 வருஷங்களாக நடை பெறுகிறது; என்றாலும் இன்னும் தம் நோக்கத்தை நிறைவேற்ற முடியாத நிலைமையில் ஜப்பானியர் இருக்கிறார்கள். சீனுவில பரந்த பகுதிகளை ஜப்பானியர்கள் கைப்பற்றியிருந்தாலும், அங்கே விளையும் பொருள்களைக் கொண்டு நேச தேசத்தாருக்கு விரோதமாகப் போராட முடியவில்லை. ஏனென்றால் தன் தோல்வியை சீனு இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை. இதனால் தான், தம் 'கூட்டு முன்னேற்றத் திட்டத்தை நிறைவேற்று முன்பு, சீனுவை ஒழித்து விட வேண்டுமென்று, ஜப்பானிய தளபதி தன் நாட்டினரை எச்சரிக்கிறார். இது அவர்களுக்கும் புதிய பாடமல்ல. சீனுவை ஜெயித்தாலல்லது, உலக அரசியலில் தம் நிலைமையும் கீழானதாகும் என்று அவர்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஆகஸ்ட்டு 7உ, வெள்ளிக்கிழமை [இதழ் 31

## அதிர்ஷ்டக் குறி



இவர் தென்னுப்பிரிக்கர், விமானி. அரை நிமிஷத்தில் 2 ஜெர்மன் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியவர். இதுவரை 4 விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கிறார்; 5 விமானங்களைக் காயப்படுத்தியிருக்கிறார். மற்றொன்றையும் நாசப் படுத்தியிருக்கலாம் என்று தெரிகிறது. அப்போதெல்லாம், அவர் அணிந்திருந்த சட்டையைக் கையில் ஏந்திக் கொண்டிருக்கிறார். அதிலுள்ள மான் தான், தன் அதிர்ஷ்டக் குறி என்று கூறிக் கொள்ளுகிறார்.

145040.

## இந்தியாவில் பாரசூட் பட்டு நெசவு

### ரூ. 18,50,000 செலவிடத் திட்டம்

இப்போது இந்தியாவில் பட்டுப் பாகு, கையால் ஓட்டப் படுகிறது. இதை இனி இயந்திரங்களால் ஓட்டும் முறையை வகுத்திருக்கிறார்கள். இதன் பொருட்டு மன்னர் பிரான் அரசாங்கத்தார் திட்டமிட்டு, ரூ. 18,50,000 இந்தியாவில் செலவிடுவதென முடிவு செய்திருக்கிறார்கள். இந்தியாவிலே சென்னை, வங்காளம் ஆகிய மாகாணங்களிலும் மைசூர் சமஸ்தானத்திலும் தான் பட்டுப் பூச்சியை வளர்க்கிறார்கள். இயந்திரங்களில் ஓடிய பாகைக் கொண்டு நெய்த துணியைக் கொண்டு தான் பாரசூட் செய்ய முடியும். சென்னை மாகாணத்தில் அரசாங்கத்தாரே இந்த வேலையை நடத்துகிறார்கள். மைசூரிலே இது குடிசைத் தொழிலாக இருந்து வருகிறது. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசாங்க உதவி இனிக் கிடைக்கும். தனிப்பட்டவர்களும், கம்பெனிகளும் இத்தொழிலைச் செய்ய அனுமதிக்கப் படுவார்கள். வங்காளத்தில் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசாங்கத்தார் கடன் கொடுத்து உதவுவார்கள். பட்டைப் பரீட்சிக்கவும் செப்பனிடவும் இரண்டு கட்டிடங்கள் கட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கம். இனிமேல் 1942-43-ம் வருஷத்திற்குத் தேவையான அளவிற்கு பாரசூட் செய்வதற்கான பட்டுத் துணி, நாடா, கயிறு முதலியவற்றை இந்தியாவிலேயே தயாரிக்க வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் முடிந்து விட்டன.

# எ கி ப் தி ய ப் போ ர் நி லை மை

## நமது விமான பலம் மிகவும் மேலானது

### அமெரிக்கப் படைகள் லண்டன் விஜயம்

*எகிப்து நிலைமையைக் குறித்து லெப்டினென்ட் ஜெனரல் சர் டக்ளஸ் ப்ரௌன்ரிக் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிறார்:—*

நமக்குச் சாதகமான முறையில் எகிப்திய நிலைமை சற்று தளர்ச்சி யடைந் திருக்கிறது. ஜெர்மன் படைகள் நம் படைகளைத் தாக்கின. நம் படைகள் அவற்றை தடுத்து விரட்டி விட்டன. நம் எட்டாவது படை தன் முயற்சியினால், கடற் கரை நெடுகவும் அங்குள்ள ரயில் பாதை நெடுகவும் முன்னேறி விட்டது.

ஜெனரல் ஆகின்லெக் அளவு கடந்த பொறுமை யோடிருந்தார். பலம் திரட்ட வேண்டியே அவர் இதுவரை பின் வாங்கிக் கொண்டிருந்தார். பலம் சேர்ந்த பிறகு, தாக்குவதற்கு எது ஏற்ற தருணம் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். தகுந்த சமயத்தில் தாக்கினார். அலமீன் போர்முனைக்கு இவரும் போய் இருந்தார். அந்த வெற்றியைப் பொருத்துத் தான் மற்ற எல்லாம் நடை பெற வேண்டி யிருந்தது. அப் போர் முனையில் வலது புரத்தில் ஆழத் தாக்கினார். இங்கேயும் வெற்றி கிடைத்தது. ஒவ்வொரு நாளும் இவர் நிலைமை மேலும் மேலும் பலப் பட்டுக் கொண்டு வருகிறது. அதுபோலவே ரோமெல்லுக்கும் (ஜெர்மன் படைத் தலைவர்) பலம் அதிகப் பட்டுக் கொண்டே வருகிறது.

ஜெர்மன் படைகளை விட நம் படை ஒரு வகையில் உயர்ந்திருக்கின்றது. அது தான் விமானப் படை. பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த நம் விமானிகளான, தென் ஆப்பிரிக்கரும், ஆஸ்திரேலியரும், அமெரிக்கரும், போர்க் களத்தி லுள்ள நம் தோழர்களுக்கு உதவ வேண்டி, எப்படி இடை விடாது பறந்து வந்து கொண்டிருந்தார்கள் என்று கூறும் அறிக்கையை, மிகவும் பெருமை யோடு நாங்கள் படித்தோம். இதில் இன்னொரு விசேஷம் அடங்கி யிருக்கிறது. நம் விமானங்கள் தடை யில்லாமல் பறக்கும் படி எதிரி விமானங்கள் எப்படி அனுமதித்துக் கொண்டிருந்தன என்னும் கேள்வி பிறக்கலாம். எதிரி விமானப் படையை விட, நம் விமானப் படை மேலானதாக இருந்ததனால் தான், இது சாத்திய மாயிற்று.

யுத்தத்தில் எதுவும் நிச்சயமில்லை. க்ரீட் என்னும் தீவிற்கும் வடாப்பிரிக்கக் கடற் கரைக்கும் 200 மைல்கள் தான். இங்கே எதிரி விமானங்கள் அநேகம் வந்திறங்கி யிருக்கின்றனவாம். படைகளும் கூட வந்திருக்கின்றனவாம்.

ருஷ்யப் போர்முனையில் காகஸஸுக்குப் போகும் வழி நெடுக ஜெர்மன் படைகள் போதுமான அளவு முன்னேறிய பிறகு, சைபிரசையாவது சிரியாவையாவது தாக்க இப்படைகளை உபயோகப்படுத்தலாம்; அல்லது, இது வரை யுத்தத்தில் பங்கு கொள்ளா திருக்கும் துருக்கி, மீறி தாக்க ஆரம்பித்தால், அந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டியும் உபயோகப்படுத்தலாம்; ரோமலுக்குத் தேவை அதிகப் பட்டாலும், உபயோகிக்கலாம். அல்லாமலும், அவருக்கு விமான பலம் வந்து கொண்டிருக்கிறதென்று நாம் நிச்சயமாக அறிவோம். ஏனென்றால் சில நாட்களுக்கு முன், நம் விமானங்கள், உதவிக்கு வந்து கொண்டிருந்த எதிரிப் படை விமானங்களைத் தாக்கின. இதில் 12 விமானங்கள், சுடப் பட்டிருக்க வேண்டும்; அல்லது பழுதாக் கப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

**அமெரிக்கப் படைகள் வருகை**

பொது ஜனங்கள் எதிர் பாராத இடங்களில் எல்லாம் அமெரிக்கப் படைகள் வந்திறங்கி யிருக்கின்றன. இது ஒரு திருப்திகரமான அறிகுறி தான். முதல் முதல் அமெரிக்கப் படைகள் ஐஸ்லாந்திற்குப் போய்ச் சேர்ந்தன. பிறகு வட அயர்லாந்திற்கும் அதன் பிறகு ஆஸ்திரேலியாவிற்கும் போய்ச் சேர்ந்தன. ஆஸ்திரேலியாவிலுள்ள நேச தேசப் படைகளுக்குத் தலைமை வகித்து நடத்துகிறவர் அமெரிக்க ஜெனரலான மெக்கார்தர் தான். லண்டனில் அமெரிக்கப் படைகள் வந்திறங்கிய காட்சியைக் கண்டு நாம் எவ்வளவு சந்தோஷப் பட்டோம்! பர்மா யுத்தத்தில் சீனப் படைகளுக்குத் தலைமை வகித்து நடத்தியவர் ஜெனரல் ஸ்டில்வெல். ஜெனரல் அலெக்ஸாந்தர் தலைமையின் கீழிருந்த நம் படைகளோடு இவை இணைந்து போராடின. இந்தப் போர் முனையில் நம் விமானப் படை மிகவும் பலக் குறைவா யிருந்தபோது, அமெரிக்கன் வாலின்டியர் கோஷ்டியைச் சேர்ந்த விமானிகள் மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றினார்கள்.

இதில் சிநேகம் மட்டும் ஏற்படுகிறது என்பதல்ல. இரண்டறக் கலக்குந் தன்மையும் உண்டாகிறது.

ரஷ்யப் போர் முனையிலிருந்து வரும் செய்தி திருப்திகரமா யில்லை. ரஷ்யர்களின் அணிவகுப்பைத் துளைத்துக் கொண்டு சுமார் 100 மைல்கள் வரை, ஜெர்மன் படைகள் 200 மைல் அகலத்திற்கு உள் நுழைந்து விட்டன. வாரனெஜ் நகரத்திற்கு எதிரில் டான் நதியைப் பல இடங்களில் எதிரிகள் கடந்து விட்டார்கள். மாஸ்கோவிற்கும் ராஸ்டோவிற்கும் ஓடிக் கொண்டிருந்த ரயில் பாதையை ஜெர்மானியர் இடையே வெட்டி விட்டார்கள். ஸ்டாலின்கிராட் வழியாகப் போகும் அந்த ரயில்வேயைக் காப்பாற்றுவதை யொட்டி, அநேக விஷயங்கள் அடங்கி இருக்கின்றன.

# யுத்தத்திற்கு தேவையான நிலங்கள்

## தேவைப் படாதபோது உரிமை யாருக்கு

யுத்தத்திற்குத் தேவையான எந்த நிலத்தையும் எடுத்துக் கொள்ள அரசாங்கத்திற்கு உரிமை யுண்டு. இந்தியப் பாதுகாப்புச் சட்டம் இவ்வுரிமையை அவர்களுக்கு அளிக்கிறது. இப்படி எடுத்துக் கொள்ளப் படும் நிலங்கள், இனி தமக்குத் தேவை யில்லை என்று அரசாங்கத்தார் கருதுவார்களானால், தம் உரிமைகளையும், நன்மைகளையும் பாதிக்காத முறையில் அவற்றை திருப்பிக் கொடுத்து விடுவதாக உறுதி கூற வேண்டுமென்று சில நிலச் சொந்தக்காரர்களும் வார பத்தியதைக் காரர்களும் இந்தியா அரசாங்கத்தாருக்கு அறிவித்தனர்.

இது பற்றிய ஒரு முறையை வகுப்பதைக் குறித்து இந்தியா அரசாங்கத்தார் மாகாண அரசாங்கங்களைக் கலந்து கொண்டிருக்கின்றனர். இதற்கிடையில், அவர்களுடைய உரிமைகளையும் நன்மைகளையும் பாதிக்காத முறையில் நடந்து கொள்ளுவார்கள்.



# 'பரிபூரண சுயேச்சை' தருவதுதான் நோக்கம்

## காமன்ஸ் சபையில் இந்தியா நிலைமை பற்றி கேள்விகள்

*அமெரிக்கப் பத்திரிகைகளும் இங்கிலாந்தி லுள்ள பத்திரிகைகளும் இப்போது இடைவிடாது இந்திய நிலைமையைக் குறித்தே தலையங்கங்கள் எழுதிக் கொண்டு வருகின்றன.*

*"மாஞ்செஸ்டர் கார்டியன்" ஒரு லிபரல் கட்சிப் பத்திரிகை. சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவிற்கு வழங்க இருந்த திட்டத்தை இந்தியர்கள் இப்பொழுது விரும்பினாலும் ஏற்றுக் கொள்ளலாம் என்று அமெரி (இந்தியா மந்திரி) செய்த ஒரு பிரகடனத்தைக் குறித்து அப்பத்திரிகை ஆகஸ்ட்டுமீ 4வ வெளியீட்டின் தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது. மேலும் அது கூறுவதாவது:—*

> இங்கேயும் (இங்கிலாந்திலும்) இந்தியாவிலும் பிரிட்டிஷாரைப் போலவே இந்தியர்களும் தம் முழு கவனத்தையும் இதில் செலுத்திப் பார்க்க வேண்டும். கிரிப்ஸ் திட்டத்தைக் குறித்து இன்னமும் கொஞ்சம் பேர்களுக்குத் தப்பு எண்ணம் இருக்கிறதாகத் தெரிகிறது. இந்தத் திட்டத்தைக் காங்கிரஸ் நிராகரித்தது. அதன் பயனாக முஸ்லீம் லீகும் நிராகரித்தது; என்றாலும் இதுபற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அதிகமாக இலட்சியம் செய்ய வில்லை. இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இந்தியத் தலைவர்கள் மறுத்த பிறகு, இதை வாபீஸ் பெற்றுக் கொள்ளுவதா இல்லையா என்பதைக் குறித்து பலவித யோசனைகள் இருந்து வந்தன. இதுபற்றி 1942-ம் வருடு ஏப்ரல்மீ 28வ காமன்ஸ் சபையில் ஒரு அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு இந்தியா மந்திரி கனம் அமெரி கொடுத்த பதிலாவது:—

> இந்தத் திட்ட நகலை வாபீஸ் பெற்றுக் கொள்ளுவது என்பதற்கு என்ன தெளிவான அர்த்தம் என்று கேட்கப்படுகிறது. நாம் அதை வாபீஸ் பெற்றுக் கொள்ளவே கூடாது என்பது தான் நம் நோக்கம். அதாவது, கூடிய சீக்கிரம் இந்தியா முழு சுயேச்சை யடைய வேண்டும். என்னென்ன நிபந்தனைகளின் பேரில் அடைய வேண்டும் என்பது பற்றி, அந்நாட்டு நிலைமைகளுக்குத் தகுந்தபடி அந்நிபந்தனைகளை அவர்களே வகுத்துக் கொள்ள வேண்டும்.

சமீபத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டி அறிக்கை வெளியானதை யொட்டி மீண்டும் காமன்ஸ் சபையில் இதே கேள்வி எழுந்தது. அப்போது அதாவது சென்ற ஜூலைமீ 30வ இந்தியா மந்திரி வாயிலாக பிரிட்டிஷ் அரசாங்கம் அதையே வற்புறுத்திக் கூறியதாவது:—

> இந்தியா பரிபூரண சுயேச்சை யடைவதற்கான எல்லா சந்தர்ப்பங்களையும் கொடுக்கவேண்டு மென்று பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதி கொண்டிருக்கிறது.

இதை ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டு எதிரி ரேடியோக்கள் பிரசாரத்தில் இறங்கி விட்டன. காங்கிரஸார் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப் போவதாகப் பயமுறுத்தியதனால் தான், பிரிட்டிஷ் சர்க்கார் தம் திட்டத்தை மாற்றிக் கொள்ளவோ வாபீஸ் பெற்றுக் கொள்ளவோ முன்வருகிறார்கள் என்று அவை பொய்ப் பிரசாரம் செய்கின்றன. இது பற்றிய தப்பு எண்ணங்களுக்கு இடமில்லா திருக்க வேண்டித் தான், அமெரி தெளிவாக, கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

> காங்கிரஸ்காரர்களின் சமீப காலப் போக்கு எப்படிப் பட்டதாக இருந்தபோதிலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பரந்த நோக்கத்தில் எவ்வித மாறுதலும் கிடையாது.

*அப்போது இந்தியாவில் வியாபாரஞ் செய்யும் பிரிட்டிஷ்காரர்களுடைய நன்மைகளைப் பாது காப்பதைக் குறித்து ஒரு வாக்குறுதியை பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று இந்தியா மந்திரியை காமன்ஸ் சபையில் கேட்டனர். அக்கேள்விக்கு அவர் அளித்த விடையாவது:—*

> பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு விசேஷப் பாது காப்புகள் அளிக்கப்படத் தான் வேண்டு மென்றும் அப்போது தான் அத்திட்டப்படி பரிபூரண சுயேச்சை வழங்கப்படு மென்றும் இத்திட்டத்தில் குறிப்பிடப் படவில்லை. யுத்தம் முடிந்த பிறகு அவர்கள் எந்த விதமான திட்டத்தை வகுத்தாலும் சரியே; அத்திட்டம் அமுலில் இருக்கும் போது தான் இது போன்ற விசேஷப் பாது காப்புகளைக் குறித்துப் பேசி முடிவு செய்து கொள்ளுவதற் கியலும்.

இதே பிரச்னையைக் குறித்து டெவொன்ஷையர் பிரபு, பிரபுக்கள் சபையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

> இந்தியர்கள் நம்மிடம் பாடம் படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்னும் எண்ணம் நம்மை விட்டு மறைந்து விட்டது. உண்மையிலேயே நம்மோடு ஒத்த நிலையில் சமஉரிமைகள் உடையவர்களாகி விட்டார்கள் என்னும் எண்ணம் மேவி வருகிறது.

பிரிட்டிஷ் பிரபுக்கள் இனத்திலேயே மிகச் சிறந்த பதவியி லுள்ள ஒரு பிரபு இப்படிக் கூறிக் கொண்டிருக்கிற அதே வேளையில், ஜப்பான் ரேடியோ சைகோனிலிருந்து என்ன கூறுகிறது என்று கவனிப்பது பொருத்தமாகும். இங்கிலாந்தி லுள்ள கோடீஸ்வரர்களும், பிரபுக்களும் விசேஷச் சலுகைகள் உடையவர்களாம்! தம் இன்ப வாழ்வையும் சொத்துக்களையும் விட்டுக் கொடுக்க மாட்டாதவர்களாம்! இந்தியாவிலுள்ள 100-க்கு 90 பேர்களின் கருத்துக்களுக்கு விரோதமாக 40 கோடி இந்தியர்களையும் ஆளுகிறவர்களாம்! இப்படிப் பட்ட நிலைமையை ஒழிக்க வேண்டித் தான் காங்கிரஸ் வேலை செய்து கொண்டு வருகிறதாம்! வார்தாவில் நிறைவேறிய காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானத்தை எல்லா எதிரி ரேடியோக்களும் மிகவும் உற்சாகமாக வரவேற்கின்றன; ஆதரிக்கின்றன. சென்ற சில நாட்களாக இந்தக் கோரிக்கைகளை வற்புறுத்தும் படியும் காங்கிரஸை அவை தூண்டுகின்றன. அச்சு அரசாங்கங்கள் வெற்றி மேல் வெற்றி யடைந்து கொண்டு வருவதை யொட்டித் தான், பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகமாக விட்டுக் கொடுக்க இசையும் என்றும் சொல்லுகிறார்கள். சென்ற ஜூலைமீ 30வ சைகோன் ரேடியோ கூறியதாவது:—

> "ஸ்டாலின்கிராட் ஆபத்திற் குள்ளாகி யிருக்கிறது; அப்படியே தான் அலெக்சாந்திரியாவும். ஆகையால் இன்னும் அதிகமான வசதிகளை நீங்கள் பெறலாம்"

என்று இந்தியர்களுக்கு அறிவிக்கிறது.

ஆனால் உண்மையான நிலைமையைக் கொண்டு இப்படிப் பட்ட முடிவிற்கு ஒரு போதும் வர முடியாது. இதற்குத் தகுந்த காரணங்க ளுண்டு.

> இரக்க மற்ற எதிரிகள் இந்தியாவைத் தாக்கிக் கைப் பற்ற ஏற்ற சமயத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், யுத்தம் நடை பெறும் வரை எந்த வகையான விசேஷச் சலுகையும் காட்டப் பட மாட்டாது. இல்லா விட்டால், இந்திய அரசாங்க வேலைகள் தடைப் பட்டு அரசாங்கத்திற்கே ஆபத்து நேரக் கூடும். அதனால் இந்தியாவின் பாதுகாப்பே குலைந்து போகும். இதைப் பொருத்துத் தான் யுத்த சப்ளைகளைச் செய்ய வேண்டி யிருக்கிறது. இப்படிப் பட்ட ஆபத்திற் குள் இந்தியாவும் சீனாவும் சிக்கி யிருப்பதனால் தான், வார்தா தீர்மானம்

இந்தியாவிற்கே மகா பாதகமான தென்று அமெரிக்கர்களும் பிரிட்டிஷார்களும் கூறுகிறார்கள். இந்தியாவிற்குப் பரிபூரண சுயேச்சை வழங்கும் விஷயத்தில், அமெரிக்கப் பத்திரிகைகளிலும் பிரிட்டிஷ் பத்திரிகைகளிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்திலும் கூட எந்த விதமான மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை.

கிரிப்ஸ் திட்டத்தை ஏற்றுக் கொள்ள காங்கிரசும் லீகும் மறுத்தவுடனே அச்சு அரசாங்கங்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அப்போது, அதாவது ஏப்ரல் 13உ அச்சு அரசாங்கங்களின் சகாவான ஹெல்சிங்கி ரேடியோ கீழ்க் கண்டவாறு கூறியது:—

இந்தியாவில் கிரிப்ஸ் திட்டத்தை இந்தியர்கள் நிராகரித்தது, அச்சு அரசாங்கங்களுக்கு ஒரு பெரிய வெற்றிக்குச் சமமாகும். இரண்டு நாட்களுக்குப் பிறகு, டோக்கியோ ரேடியோவும் இதுபற்றி குறிப்பிட்டது. அப்போது, இந்தச் சமரச முறிவினால், சீன அரசாங்கம் மிகுந்த ஏமாற்ற மடைந்த தென்றும், தாம் அது கண்டு மகிழ்ந்ததாகவும் அறிவிக்கிறது. இது நிகழ்ந்து 3½ மாதங்கள் ஆகி விட்டன. இந்த 3½ மாத காலமாகவே பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாகப் பிரசாரம் செய்வதே தம் தொழிலாகக் கொண்டிருக்கின்றன இந்த ரேடியோக்கள்.

நிற்க, சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவிற்கு வந்திருந்த போது, உத்தியோகப் பற்றில்லாத முறையில் ஆசிரியர் கூப்லாந்து வந்திருந்தார். அரசியல் அமைப்புப் பிரச்னைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்து இங்கிலாந்திலுள்ள நப்பீல்ட் கல்லூரிக்குத் தன் கட்டுரையை அனுப்பும் பொருட்டு அவர் இங்கு வந்தவர். சர் கிரிப்ஸ், தன் கோஷ்டியில் சேர்ந்து தனக்கு உதவி புரியும்படி அவரை நேரில் கேட்டுக் கொண்டதற் கிணங்க அவர் சேர்ந்தார். இப்படிப் பட்டவர் சில குறிப்புக்களை எழுதி வைத்திருக்கிறார். இந்தியா பரிபூரண சுயேச்சை யடைய, எல்லா வித சந்தர்ப்பங்களும் அளிக்கப்படும் என்னும் கொள்கையை வற்புறுத்திக் கூறுவதென்றால், அதன் அர்த்தம் என்ன என்று அக்குறிப்புகள் தெளிவாக்குகின்றன. சர் கிரிப்சும் பத்திரிகைப் பிரதிநிதிகளும் டில்லியில் சந்தித்தபோது அவர்கள் கேட்ட கேள்விகளும், அளிக்கப்பட்ட விடைகளும் வருமாறு:—

கேள்வி.—பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இந்திய யூனியன் கட்டுப் பட்டிருக்க வேண்டிய தில்லை என்று கூற உரிமை உண்டா?

விடை.—உண்டு.

கேள்வி.—உலகிலுள்ள மற்றெந்த நாடுகளுட னாவது ஒப்பந்தம் செய்து கொள்ள இந்திய யூனியனுக்கு உரிமையுண்டா?

விடை.—உண்டு.

கேள்வி.—கவர்னர் ஜெனரலின் நிலைமை என்ன?

விடை.—அரசியல் அமைப்பை வகுக்கும் ஸ்தாபனத்தார் தம் இஷ்டம் போல் இந்தப் பிரச்னையை முடிவு செய்து கொள்ளலாம்.

கேள்வி.—இந்தியாவை விட்டு எந்தப் பருவத்தில் பிரிட்டிஷார் வெளியேறுவதாக உத்தேசம்?

விடை.—இப்போதுள்ள அரசியல் அமைப்பிற்குப் பதிலாக புதிய அமைப்பை வகுத்து முடித்த வுடனே, பிரிட்டிஷ் அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளும்; அதற்கு ஆதரவு கொடுக்கும். இந்தப் புது அமைப்பு அமுலுக்கு வரும் போது, மாறுதல் ஏற்பட்டு விடும்.

கேள்வி.—தாங்கள் எங்களுக்கு என்ன கொடுக்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெளிவாகச் சொல்லுங்கள் நாங்கள் கோருவதெல்லாம் "விடுதலை" தான்.

விடை.—மிக எளிதென்று நாங்கள் கருதுகிற 'பரிபூரண சுயாட்சி' என்ற பதத்தையே உபயோகிக்கிறோம். இது தான் சரியான பொருளைக் கொடுக்கும் என்று கருதுகிறோம். இதில் பரிபூரண சுய உரிமையும், சுய ஆட்சியும் அடங்கி யிருக்கிறது என்பதைப் பற்றி, கொஞ்சமும் சந்தேகமே கிடையாது.

# பெரும் ஆபத்தில் ருஷ்யாவிற்கு உதவி

## இஞ்சினீர் விம்பர்லி கூறும் விவரங்கள்

இங்லாந்தி லிருந்து ருஷ்யாவிற்கு யுத்தத் தளவாடங்களை எல்லாம் கொண்டு, வட துருவக் கடல் வழியாகத் தான் போக வேண்டி யிருக்கிறது, இத் தளவாடங்கள் இங்கிலாந்தி லிருந்தும் அமெரிக்காவி லிருந்தும் அனுப்பப் படுபவை. வழியோ மிகவும் தூரம். இப்போது அக்கடலில் பகல் வெளிச்சம். எதிரிகளின் தாக்குதல்களுக்கும் சில சமயங்களில் உள்ளாக வேண்டி யிருக்கிறது. இப்படிப் பட்ட ஆபத்துக் களுக் கிடையே தளவாடங்கள் ருஷ்யாவிற்குப் போய்ச் சேர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இவற்றைக் கொண்டு போகும் கப்பல்களுக்குத் துணையாக சில கப்பல்களும் போவது வழக்கம். இப்படிப் பட்ட ஒரு கப்பலில் ஒரு இஞ்சினீர் போனார். அவருடைய பெயர் ஆர். டி. விம்பர்லி. இவர் ஏறிப் போன கப்பலை எதிரிகள் தாக்கினார்கள். அதனால் அவரது கால்களில் ஒன்று முறிந்து போனது. மேலும் பனியினாலும் பெரிதும் அடி பட்டிருந்தார். இப்போது ரெக்ஸாமைச் சேர்ந்த ஹெலிஸ்டன் வைத்தியசாலையில் குணமடைந்து வருகிறார். அவர் கூறியதாவது:—

எங்கள் கப்பலை எதிரிகளின் விமானப் படையும் கப்பற் படையும் வெகுவாகத் தாக்கின. குதிரைப் படை தவிர மற்ற எல்லா வகை சக்தியையும் அவர்கள் எங்கள் மீது விடுத்தனர். பனிக் கட்டி மட்டும் இளகா திருந்தால் கண்டிப்பாகக் குதிரைப் படையையும் எங்கள் மீது ஏவி இருப்பார்கள். நாங்கள் போக வேண்டி யிருந்த பாதையோ மிக மிக பயங்கரமானது. ஒருபுரம் பனிக்கட்டி மலை மலையாக உறைந்து கிடக்கிறது. மற்றொரு புரம் எதிரிக்குச் சொந்தமான ஏராளமான நீர்மூழ்கி கப்பல்கள். இவை வெளிப்படையாக இருந்தாலும், நம் கப்பல்கள் எச்சரிக்கையாகப் போகலாம். ஆனால், அவை பதுங்கிக் கொண்டு தான் இருக்கின்றன. எங்கள் கப்பலுக்குத் துணையாக வந்த மற்றொரு கப்பலின் படைத் தலைவர், உள்ள நிலைமையைக் கவனித்தார். எதிரிகளைத் தாக்குவதில், தன் கப்பல் நாசமானாலும் பழுதில்லை என்று முடிவு செய்து கொண்டார்.

இந்தக் குரூய்சர் கப்பலுக்கும் எதிரி நீர்மூழ்கிக் கப்பலுக்கும் இடையே இருக்கும் பனிக் கட்டிமீது தன் கப்பலை வெகு வேகமாகக் கொண்டு போய் மோதி, தன் கப்பலில் இருந்த எல்லாப் பீரங்கிகளையும் ஒரே காலத்தில் கிளப்பினார். இதன் பயனாக 3 ஜெர்மன் நாசகாரிகள் ஒழிந்தன. இப்படிப் பட்ட பயணங்கள் மிகவும் கொடுமையானவை தான். இருந்தாலும், ரஷ்யாவிற்கு ஓயாது தளவாடங்கள் போய்க் கொண்டு தான் இருக்கின்றன.

ரஷ்யர்கள் நல்ல உடற்கட்டு உடையவர்கள். அறிவுடையவர்கள். தம் உடைமைகளை எவ்வளவு சிறந்த முறையில் பயன் படுத்திக் கொள்ளுவ தென்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு டாங்கியைக் கப்பலை விட்டுக் கரையில் இறக்கிய உடனே, அதைச் செம்மையாகப் பூட்டிக் கொள்ளுகிறார்கள். அதில் அமைக்க வேண்டிய பீரங்கிகள் முதலியவை அமைந்தான வுடனே, மோட்டாரைப் பூட்டி நேரே யுத்த களத்திற்குத் தான் அனுப்புகிறார்கள். இடை வழியில் நிற்பதே கிடையாது. ஏறக்குறைய ஒவ்வொரு இரவும் ஜெர்மானியர்கள் ருஷ்யத் துறைமுகங்கள் மீது வெடிகுண்டுகள் வீசிச் சேதப் படுத்துகிறார்கள். மறு நாள் பகலில் அவற்றை யெல்லாம் ரஷ்யர்கள் பழுது பார்த்து விடுகிறார்கள்.



# புளுகல் நிபுணர்கள்

தான் யமலோகம் போன பிறகு தன்னுடைய மூளையை எடுத்துப் பரிசோதித்துப் பார்க்கலாம் என்று சில பிரபல டாக்டர்களுக்கு 'ஹிட்லர் மகான்' அநுமதி கொடுத்திருக்கிறாராம். ஹிட்லருடைய மூளை ஒரு பெரிய வக்ரமூளை என்பது உலகறிந்த விஷயம். 'இந்த மூளை தான் என்ன மூளை ஐயா!' என்றே பலரும் அதைக் குறித்து ஆச்சரியத்தோடு சொல்கிறார்கள். அந்த மூளையை ஆராய்ச்சி செய்து பார்க்க; பல டாக்டர்கள் துடியாகத் துடித்துக் கொண்டிருப்பார்கள், இப்பொழு தெல்லாம் என்று கூட தைரியமாகச் சொல்லலாம். ஆனாலும் அந்த டாக்டர்கள் தான் வேறென்ன செய்ய முடியும்? நேச தேசத்தாரின் தயவால் தான் தமது ஆவல் சீக்கிரம் தணிய வேண்டும் என்ற எண்ணத்தோடு சும்மா இருக்க வேண்டியது தான்.

ஆனால் ஹிட்லரின் விசித்திர, ஏன்! அதிபயங்கர சகாக்களின் நாக்குகளைப் பற்றி விவரமாக அறியாதவர்கள் இன்று இவ்வுலகத்தில் இருக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறோம். அந்த கப்பல்ஸ் துரைமகனாரின் நாக்கு இருக்கிறதே, அதைக் குறித்து ஆராய்ச்சி செய்ய அந்த துரை மண்டையைப் போடும் வரை காத்திருக்கத் தேவை இல்லை. இப்பொழுதே தெரிகிறதே அதன் அருமை பெருமைகள் எல்லாம்! கப்பல்ஸ் மட்டு மல்ல, ஹிட்லரின் வாடை வீசப் பெற்ற இத்தலியிலும், ஜப்பானிலும் இம்மாதிரியான சிருஷ்டிகள் பலர் இருக்கிறார்கள்.

தினம் விடிந்தால் ஒரு கலகமாவது மூட்டா விட்டால் நாரதர் தலை வெடித்து விடு மென்பார்கள். அதே ரீதியில், இந்த நிபுணர்கள் இருக்கிறார்களே, தினம் விடிந்தால், தினம் அஸ்தமித்தால், ஏதாவது ஒரு புளுகல் புளுக வேண்டு மென்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அகராதியில் உள்ள வார்த்தைகளில் பலவற்றைப் பொறுக்க வேண்டியது; தொகுக்க வேண்டியது; கலர் கொடுக்க வேண்டியது; ஓட்டை உடைசல்களைப் பொத்த வேண்டியது; ரேடியோ மூலம் காற்றோடு ஊதி விட்டு விட வேண்டியது. அப்புறம் அந்தப் புளுகல் ஆனபடி ஆகட்டும். அதைப் பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை.

தினம் ஒரு புளுகல் புளுகுவதிலும் யார் பெரிய புளுகாகப் புளுகுகிறார்கள் என்பதிலுமே அவர்கள் கவனம் எல்லாம் போய்க் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஹிட்லர் தான் சரியான பாடமாக அந்த நாளிலேயே எழுதி வைத்திருக்கிறாரே? அது என்ன பாடமென்று தெரியுமா?

எப்பொழுது புளுக ஆரம்பித்தாலும், மலையத்தனை பெரியதாகப் புளுகி விட வேண்டும். அது கரைந்து, கரைந்து எலுமிச்சங்காய் அளவாவது வந்து நிற்கும்—இதுவே அந்த 'மகான்' செய்துள்ள அருமையான உபதேசமாகும். இதையே அவரது சிஷ்ய கோடிகளும், நண்பர் குழாங்களும் பின் பற்றி நடந்து வருகின்றன.

இதை நாம் மனதிலே வைத்துக் கொண்டால், ஜெர்மனி, இத்தலி, ஜப்பான் ஆகிய தேசங்களிலிருந்து பரப்பப்படும் செய்திகளுக்கு கர்த்தாக்களாக இருப்போரின் நாக்குகளிலே நரம்புகள் தான் இல்லவே இல்லையோ என்ற நினைவே ஏற்படும். அப்பா பாபா! என்ன புளுகல்! என்ன கப்ஸா! 'டேயப்பா! இந்தப் புளுகு கந்த புராணத்திலே கூட இல்லை என் ஆண்டவனே!' என்றானாம் ஒருவன். அவன் சொன்ன வார்த்தைகள் நமது எதிரிகளது பிரசாரங்களைக் கேட்டு விட்டுத் தான் சொன்னவை போலிருக்கிறது.

பாருங்களய்யா! இன்று வெள்ளிக் கிழமையாச்சா! நாளைக்கு மறு நாள் ஞாயிற்றுக் கிழமை! இல்லையா? ஞாயிற்றுக் கிழமை என்ன நடக்கப் போகிற தென்று இன்று எப்படி சொல்ல முடியும்? சாதாரண நாளிலேயே அவ்வாறு தைரியமாக ஏதும் சொல்ல முடியாதே! அதிலும் இப்போது யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. திடீர் திடீர் என்று சேனாதிபதிகள் போடும் திட்டங்கள் எல்லாம் குட்டிச் சுவராகப் போகக் கூடுமல்லவா?

சும்மா இப்படி பொதுவாகச் சொல்லுவானேன்! ருஷ்யாவிலே வாரனேஷ் என்ற நகரத்தைப் பிடித்து விட்டதாக, சுமார் பதினைந்து நாட்களுக்கு முன்பாகவே கூறினார்கள் ஜெர்மன் ரேடியோக்களில். ஆனால் நடந்த தென்ன? அந்த வாரனேஷ் நகர வாசற்படிக்கு அப்பால் ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை இந்த நாஸிகள். இப்பொழுதோ, அந்த நகரை விட்டே துரத்தப் பட்டு, வெகுதூரம் ஓடி விட்டார்கள். இதே மாதிரி, முன்புகூட ராஸ்டாவ் நகரத்தைப் பிடித்து விட்டதாக ஊருக்கு முன்னால் ரேடியோ தம்பட்டம் கொட்டினார்கள், ஆனால், பாவம்! அடிவாங்கு படலம் அதே ராஸ்டாவ் நகரி லிருந்து தான் தொடங்கிற்று.

இது தவிர, பிரிட்டன் மீதும் ருஷ்யா மீதும் படையெடுத்துச் செல்லும் நாஸி விமானிகள் ஆணை செய்து விட்டார்கள், பூனை செய்து விட்டார்கள் என்று ரேடியோவில் கதை அளக்கிறார்கள். ஏதாவது நடு நிலைமை வகிக்கும் நாட்டைச் சேர்ந்த கப்பலொன்றை மூழ்கடித்து விட்டு, அபாண்டமாக, பிரிட்டன் மீதும், மற்று முள்ள தன் எதிரிகள் மீதும் பழியைப் போட்டு, நடு நிலைமை வகித்து வரும் நாட்டைச் சந்தியில் இழுத்து விடப் பார்ப்பதும் நாஸிகள் பழக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கும் முறைகளில் ஒன்றாகும்.

இத்தாலியர்கூட இம்மாதிரி வழிகளை க்ரியாம்சைப் படுத்திப் பார்க்கின்றனர். ஜெர்மானிய முத்தண்ணாக்களைப் போல இவர்கள் அவ்வளவு வெற்றி காண முடிய வில்லை.

ஆனால், குள்ள ஜப்பானியர் இருக்கிறார்களே, பலே ஆட்கள்! எல்லோரும் ஆனைத் தூக்கி வாயில் போட்டுக் கொண்டால், இவர்கள் ஆனை மட்டுமில்லாது நிழலையும் அள்ளி வாயில் போட்டுக் கொண்டு விடுவார்கள் போலிருக்கிறது. இவர்கள் புளுகல் பரீட்சையில் நிபுணத்வம் பெற்று விட்டதோடு நில்லாமல், பசப்பு வார்த்தைகளை அள்ளி விடவும் தங்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். 'பர்மா பர்மியருக்கே!' 'சீனா சீனருக்கே!' 'இந்தியா இந்திய

ருக்கே!' என்ற வாக்கியங்கள் இந்த பசப்பு வார்த்தைகள் என்ற ரகத்தைச் சேர்ந்தவை தான். கேட்பதற்கு ரொம்ப இனிமையான பதங்கள்! ஆனால், அத்தனையும் விஷப் பற்களோடும், அந்தரங்க சுத்தி யில்லாமலும் சொல்லப்படும் மொழிகளாகும்.

'பர்மா பர்மியருக்கே!' என்று பர்மா சண்டை நடந்து கொண்டிருக்கும் பொழுது ஜப்பானியர் பிரமாதமாகப் பேசிக் கொண்டார்கள். ஆனால் இந்தப் பசப்பு மொழிகளைக் கேட்டு மயங்கிய சில பர்மியர்களது உதவியோடு, ஜப்பானியர் பர்மாவைத் தம் வசப்படுத்திக் கொணடு விட்டார்கள்.

அதற்கு மேல் அங்கு நடப்பதென்ன? பர்மிய வியாபாரிகள் கொழுத்துச் செழித்த இடங்களில் ஜப்பானிய வியாபாரிகள் முளைத்து விட்டார்களாம். பர்மிய குமாஸ்தாக்கள் உட்கார்ந்து பேனு கட்டிய ஸ்தானங்களுக்கு ஜப்பானிலிருந்து பையன்களும், குட்டிகளும் வந்து இறங்கி விட்டார்களாம். முக்யமான அதிகாரிகள் எல்லாம் இப்பொழுது ஜப்பானியர்கள் தானும். அவர்கள் எல்லாம், கிராமங்களில் சென்று கிராம வாசிகள் சேர்த்து வைத்திருக்கும் உணவுப் பொருள்களை 'ஸ்வாஹா' செய்து வருகிறார்களாம். பர்மியர்களனைவரும், ஜப்பானியருக்காகவே வேலை செய்ய வேண்டுமென நிர்ப்பந்திக்கப் படுகிறார்களாம். பர்மாவில் கிடைக்கும் பொருள்களை ஜப்பானுக்குக் கொண்டு செல்ல, வழி ரொம்ப சுற்றாக இருக்கிறதல்லவா? அந்தக் குறையை நீக்க புதுப் புது ரயில் பாதைகள் போட்டு, இந்தோ-சீனாவையும் பர்மாவையும் ஒன்றாகப் பிணைக்கப் போகிறார்களாம். தவிர, பர்மாவில் கிடைக்கும் பொருள்களை உடனே தமக்கு உபயோகமுள்ளதாகச் செய்யவே, பர்மாவில் மின்சார உற்பத்தி நிலயத்தை ஸ்தாபிக்கப் போகிறார்களாம். ஒவ்வொரு கச்சா பொருளையும் ஜப்பானுக்குச் சுமந்து சென்று, அங்கே உள்ள தொழிற்சாலைகளில் அந்தப் பொருளை ஆயுதமாகவோ, விமானமாகவோ ஆக்குவது என்றால் சிரமம் தானே? அந்த சிரமத்தைத் தீர்க்கவும், பர்மியர் செலவிலேயே தமக்கு வேண்டியதைச் செய்து கொள்ளவுமான வழி இதெல்லாம். மற்றும் பர்மாவிலிருந்த அசல் பணத்தையெல்லாம் அப்புறப்படுத்தி விட்டு, உபயோக மற்ற ஜப்பானிய நோட்டுகளை ஏகமாகச் செலாவணியில் கொண்டு வந்து விட்டார்களாம், இதற்கெல்லாம் 'பேரேமி'? பர்மா பர்மியருக்கே! ரொம்ப அழகாயிருக் கோல்லியோ கதை?

ஜப்பானியருடைய உண்மைக் குணத்தைத் தான் மஞ்சூகோவிலும், கொரியாவிலும் பார்த்தாச்சே! அதே குணம் தானே அவர்களுக்கு எங்கு சென்றாலும் இருக்கும்! கழுதை என்ன தான் இடி போல் முழக்கிக் கத்தினாலும், அது குதிரையாகி விடுமா? அதே போல, ஜப்பானியர் என்ன தான் கற்கண்டு போல இனிப்பாகப் பேசி, 'எல்லாம் உங்கள் நன்மைக்காகவே தான் நாங்கள் வருகிறோம். நீங்கள் சுகமாக, கஷ்ட மில்லாதிருக்க வேண்டுமென்பதே எங்களது விருப்பம்' என்று கூறிக் கொண்டு வந்தாலும், எல்லாம் வேஷமய்யா! கபட நாடகமய்யா! என்று அதற்கெல்லாம் காது கொடுக்காமல், அவர்களையும் நெருங்க வொட்டாமல் தடுப்பதே புத்திசாலித்தனமாகும். அதை விட்டு, அவர்கள் வார்த்தையை நம்பினாலும் சரி, அவர்களது வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து, அதைப் போய் நாலு பேரிடம் சொல்லி அதற்கு விளம்பரம் கொடுத்தாலும் சரி, நஷ்டமும் கஷ்டமும் தான் உண்டாகுமே ஒழிய லாப மிராது.

'ஆஹா! ஏ கருங் காகமே! உனது மேனி அழகு தான் என்னே! அந்த அழகு என் கண்ணைப் பறிக்கிறதே பெண்ணே! இவ்வளவு மேனி அழகை உனக்களித்திருக்கும் பகவான், அற்புதமான சாரீரத்தையும் கொடுக்க மறந்திருக்க மாட்டான் என்றே நினைக்கிறேன். உனது மேனியழகும், குரலினிமையும் என்னைப் போன்ற ரஸிகர்களது கண்களுக்கும், காதுகளுக்கும் விருந்தளிக்கவே உன்னிடம் அமைந்திருக்கின்றன. ஆகவே, மாட்டேன் என்று சொல்லாமல், அழகாக ஒரு பாட்டுப் பாடம்மா கேட்டு மகிழ்ந்து விட்டுப் போகிறேன்' என்று சொல்லிற்றாம். அப்பத்தை வாயில் கௌவிக் கொண்டிருந்த காகத்தைப் பார்த்து. அதற்கப்புறம் கதை தெரியுமோல்லியோ? நரியின் பசப்பு வார்த்தைகளில் அப்படியே மயங்கி விட்டது காகம். உச்சி குளிர்ந்து, தன்னையும் மறந்து, ஏதோ பாடவென்று வாயைத் திறக்கவே, அப்பம் கீழே தொப் என்று விழுந்தது. 'கப்' என்று நரி அதைக் கௌவி எடுத்துக் கொண்டு, விட்டது சவாரி. நஷ்ட மடைந்தது யார்?

அதே போலத் தான் ஜப்பானியரது பசப்பு மொழிகளையும், புளுகல் பிரசாரத்தையும் காது கொடுத்துக் கேட்பவர்களுடைய கதியும். அவர்கள் 'இந்தியா இந்தியருக்கே! இந்த நிலைமை ஏற்பட நாங்கள் உதவ வருகிறோம்' என்று சொல்லுகிறார்கள். இந்தியா விஷயத்திலே இத்தனை காலமாக இல்லாத அபிமானம் இப்பொழுது எங்கிருந்தய்யா திடுதிப்பென்று முளைத்தது? பொன் விளையும் இந்த நாட்டைச் சுரண்டி, ஓட்டாண்டியாக ஆக்குவதே ஜப்பானின் நோக்கம். இதற்கு நாம் இடம் கொடுக்கலாமா? இந்திய பாஷைகளில் ஜப்பான்காரன் ஏதோ பேசுகிறான் என்று அதைக் கேட்டு நம்பலாமா? துஷ்டர் சகவாசம் பிராண சங்கடம் என்று எழுதி வைத்திருக்கிறார்களே பெரியவாள், அதை மறக்கலாமா? தங்கள் வார்த்தைக்கு இந்தியர் எங்கே மதிப்புக் கொடுக்காது போய் விடுகிறார்களோ என்ற பயத்தால் தான், ஜப்பான்காரனும், ஜெர்மனிக்காரனும் இரண்டு போஸ்களின் குரல்களை இரவல் வாங்கிக் கொண்டு, அந்தக் குரல்களை உபயோகப்படுத்தி, விஷம ப்ரசாரம் செய்கிறார்கள், புளுகல் மூட்டையை அவிழ்த்து விடுகிறார்கள். இதையெல்லாம் நம்பாதே ஐயா, நம்பாதே!

---

## யுத்த சேதம்

ஐ.ஜி.எஸ்.சி.-யைச் சேர்ந்த ஜி.எஸ்.எப். 1347-ம் நம்பர் டபுள்யு. வெய்டர் முனிசாமி யுத்தத்தில் காயப்பட்டார் என்ற செய்தியை வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.



# ஜெர்மனியிலும், ருஷ்யாவிலும்

இன்றைய தேதியில் ஜெர்மனியிலும், ருஷ்யாவிலும் உள்ள நிலைமை பல விசேஷங்களுடன் கூடியதாகவே இருக்கிறது. முதலிலே ருஷ்யாவின் நிலைமையைக் கவனிப்போம். ரஷ்யர்களுக்கு அளவற்ற உணவை அளித்துக் கொண்டிருந்த யூக்ரேன் பிரதேசம், டான், டானெட்ஸ் நதிகள் பாய்ந்தோடும் கரி, இரும்பு உற்பத்தியாகும் பிரதேசம், ராஸ்டாவ் போன்ற முக்யமான தொழிற்சாலை நகரங்கள் எல்லாம் ஜெர்மானியர் வசமாகி விட்டன. காகஸஸிற்கே ஆபத்தை உண்டாக்கும் நிலைமையிலிருக்கிறார்கள் வான் பாக்கின் அச்சு நாட்டுப் படைவீரர்கள். மூன்று திசையிலே இவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். நாளுக்கு நாள் ஆபத்து அதிகமாகி வருகிறது.

'கடைசி வரை ஒவ்வொரு ருஷ்யனும் போராடியே தீர வேண்டும். ஒவ்வொரு போர் வீரனிடமும் ஒப்படைக்கப் பட்டுள்ள ஒவ்வொரு அங்குல இடமும் சாத்யமான வரை பாதுகாக்கப் பட்டே ஆகவேண்டும்' என ஸ்டாலின் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ருஷ்யப் போர்முனையிலே பெரும் போடாகப் போட்டு, ஒரே யடியில் வெற்றி கண்டு விட வேண்டுமெனும் நோக்கத்துடன், நாஸிகள் ப்ரான்ஸிலிருந்தும், எகிப்திலிருந்தும் ஆட்களைக் கொணர்ந்து குவித்துக் கொண்டிருக்கிறார்களாம். டான் பிரதேசத்திலே மட்டும் 6 லக்ஷம் நாஸி காலாட்கள், நாற்பதாயிரம் நாஸி டாங்கிகள், 5 நாஸி விமானப் படை கோஷ்டிகள் போரில் ஈடு பட்டிருக்கின்றனவாம். ருஷ்யர்களின் எதிர்ப்போ அபாரமாக இருக்கிறதாம். ஒரு இடத்திலே ஒரு சிறு ருஷ்யப் படை, பதினயிரத்து எண்ணூறு ஜெர்மானியர்களைச் சரி பார்த்து விட்டதாம். ருஷ்ய சேனாபதி, மேற்கொண்டு ரிஸர்வ் படைகளைக் கொண்டு வருகிறாராம். பெரிய சோதனை காலம் தான் ருஷ்யாவிற்கு!

யூக்ரேன் போனதால், ருஷ்யாவிலே உணவுப் பஞ்சம் ஏற்படும் போலிருக்கிறது. உடனே ருஷ்ய சர்க்கார் ஜரூராக நடவடிக்கை எடுத்து, ஆபத்து அதிக மில்லாத பிரதேசங்கள் பலவற்றைக் காட்டி, அங்கே பயிரிடும்படி ருஷ்யர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. ருஷ்ய மாதரும், பையன்களும் உத்சாகத்தோடு இந்த வேலையில் ஈடு பட்டு விட்டார்கள்.

ஆனால் ஜெர்மனியில் எப்படி? அங்கு வாலிபர்களே கண்களில் தென்படக் காணுமாம். தாத்தாக்களும், பாட்டிகளுமே வயல்களில் வேலை செய்கிறார்களாம். ஜெர்மனி அருமையாகப் பெற்றெடுத்த வாலிபர்களை யெல்லாம் தான், பாழுங் கிணற்றில் தள்ளியது போல் ருஷ்யப் போர் முனையில் பலியாகக் கொடுத்துவிட்டாரே ஹிட்லர்! இப்பொழுது வாலிபர்களுக்கு எங்கே போவது?

அநுதினமும் ஜெர்மனியிலும், ஜெர்மனி பிடித்துக் கொண்டிருக்கும் பிரதேசங்களிலும் பிரிட்டிஷ் குண்டு மழை பெய்த வண்ணமாகவே இருக்கிறது. ஜெர்மனியில் ஹிட்லருக்கு இருக்கும் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறதாம். கொயரிங், வான்பாக், ராமல் போன்றவர்களே இன்றைய ஜெர்மானியரின் திருஷ்டியில் இருக்கிறார்களாம். ருஷ்யாவிலும் எகிப்திலும் கிட்டிய வெற்றி, நாஸிப் படைகளிடை ஏகமாக உத்சாகத்தைக் கிளப்பி விட்டிருக்கிறதாம்.

இரண்டாம் போர் முனை பற்றிய பேச்சு நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. இரண்டாவதாவது, போர் முனையாவது என்று கேலி செய்து கொண்டிருந்த ஜெர்மனியர் எல்லாம் இப்பொழுது வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறார்களாம். அமெரிக்காவிலே அதி நூதனமான, பயங்கர ஆயுதங்களைத் தயாரித்து வருகிறார்களாம். எல்லாம் இந்த நாஸித் தேவதைகளை உருவில்லாமல் செய்யத் தான்! பிரமாதமான கப்பல் சேதத்தாலும், போர்முனைகள் பல இடங்களில் பரவி இருப்பதாலும் நேசநாடுகளுக்கு சிரமம் அதிகரித்திருக்கிறது என்பது உண்மை தான். அதோடு ஆத்திரமும், பலமும் அதிகரித்து வருகின்றன என்பதை மறந்து விடக் கூடாது. அடிக்கிற சமயத்தில் பேயடியாக அறைந்து, கழுதையைக் கீழே விழ அடித்துத் தள்ளி விட மாட்டார்களா? அந்தக் காலம் சீக்கிரமே வரும் போலிருக்கிறது.

---

# சேதம் ஒரு பொருட்டல்ல---
# இலட்சியம் தான் குறி

## ஹிட்லரின் ருஷ்யப் போர்க் கொள்கை

### மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் கருத்து!

'ருஷ்யாவும் நேச தேசங்களும்' என்னும் தலைப்பின் கீழ் மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் கீழ் கண்டவாறு எழுதுகிறார்:—

சில நாட்களுக்கு முன் இருந்த நிலைமையையும் இப்போதுள்ள நிலைமையையும் வெளி நோக்காகப் பார்ப்போமானால், எந்த வித வேற்றுமையும் இருப்பதாகத் தோன்றாது. ஆனால், இந் நிலைமை ஒரு முக்கியமான பலனைத் தரத் தான் போகிறது. இந்தப் பலன், யுத்தத்தையே முடித்து விடும் என்றும் சொல்லுவதற் கில்லை.

ஏராளமான சேதத்திற்குப் பிறகு சிறந்த சில பாகங்களை ரஷ்யாவில் ஹிட்லர் வென்றிருக்கிறார். ரஷ்யப் படைகளான திமோஷாங்கோவின் படைகளை டான் நதிப் பிரதேசத்திலிருந்து பின் வாங்கும்படிச் செய்து விட்டார். மீண்டும் மாஸ்கோவைத் தாக்க ஆயத்தம் செய்து கொண்டிருக்கலாம். ரஷ்யர்களின் எதிர்ப்பை அவர் இன்னும் தகர்த்து விடவில்லை. மிகப் பலமான ரஷ்யப் படைகளோடு இன்னும் அவர் போராடாதிருக்கலாம். தனக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாதபடி, முழு மூச்சாகத் தாக்குவது அவருடைய யுத்த தந்திரம். இப்படித் தான் கீழ் திசையில் தாக்கிப் புகுந்து கொண்டு போயிருக்கிறார். இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் எல்லாம் அப் போர் முனைக்குப் போய்ச் சேரு முன்னதாகவே பெரும் பகுதிகளைப் பிடித்து விட வேண்டும் என்னும் நோக்கத்தோடு தான் சேதத்தைப் பொருட்படுத்தாதபடி முன்னேறிக் கொண்டு போகிறார்.

இருந்தாலும், மிகக் கடுமையாகத் தாக்கப் படுகிற ரஷ்யர்களுக்கு உதவியாக பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் கூடிய விரைவில் ரஷ்யப் போர் முனைக்குப் போகக் கூடும். இப்போது இங்கிலாந்தில் பலமான அமெரிக்க விமானப் படைகளும் தரைப் படைகளும் இருக்கின்றன. எதிரியைத் தாக்குவதற்குக் கட்டளையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. சமீபத்தில், ஐரோப்பியப் போர்முனையிலுள்ள அமெரிக்கப் படைத் தலைவரான ஜெனரல் எய்சினெளவர் ஒரு அறிக்கை விடுத்தார். அதில், தனக்கும் தன் படைகளுக்கும் பிரிட்டிஷ் அதிகாரிகளும் பொதுமக்களும் அளித்த வரவேற்பிலிருந்தும் கூட்டுறவிலிருந்தும், இந்த இரண்டு படைகளும் ஒன்றுபட்டு ஒத்துழைத்தால், வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும், என்று குறிப்பிடுகிறார்.

> நாம் எதிரிகளைத் தாக்குவோம், அதுவும் பலமாகத் தாக்குவோம்; கூடிய விரைவில் நமது பலம் எப்படிப் பட்டது என்று ஜெர்மானியர்கள் உணருவார்கள்.

## காங்கிரஸ் தீர்மானம் பொருத்தமற்றது

### இதற்கு நாட்டில் ஆதரவில்லை

கீழ்கண்ட கட்டுரை ஒரு வாசகரால் அனுப்பப்பட்டது:—

ஜப்பானியர் நம் நாட்டைக் கைப்பற்ற வருவார்களே யானால், நம் நாட்டைக் காப்பாற்ற நாம் என்ன செய்திருக்கின்றோம் என்பதைப் பற்றி யோசனை செய்ய வேண்டும். இப்போது நடக்கும் யுத்தத்தில், எந்தத் தேசமும் தனித்து நின்று ஜர்மானியர் ஜப்பானியர் தாக்குதலை நிர்வகிக்க முடியாது. நேச தேசத்தார்களோடு சேர்ந்து அவர்களுடைய பக்க பலத்தோடு அல்லாது சமாளிக்க முடியாது.

இன்றையத் தினம் நம்முடைய நாட்டில் மகாத்மா காந்தியின் ஆதரவின் பேரில் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் ஆங்கிலேயர் வெளி யேற வேண்டும் என்ற தீர்மானம் நிறை வேற்றி யிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தின் பலனைப் பற்றி சிறிது ஆராய்வோம்.

இந்தத் தீர்மானம் நிறைவேறிய உடனே ஜப்பான் ரேடியோவும், பர்லின் ரேடியோவும் இந்தியர்கள் ஆங்கிலேயரிடத்தில் வெறுப்புக் கொண்டு, தங்களை வரவழைப்பது போன்று பிரசாரம் செய்யத் தொடங்கின. அதற்காக மகாத்மா காந்தி ‘ஹரிஜன்’ பத்திரிகையில், ‘ஆங்கிலேயரைப் போகச் சொன்னால், உன்னை வரவழைப்பதாக அர்த்தமில்லை; நீ தப்பு அர்த்தம் பண்ணாதே, ஜப்பானியரை இந்தியர் விரும்பவில்லை,’ என்று நீண்ட தோர் வியாசம் எழுதி யிருக்கின்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் கமிட்டி தீர்மானப்படி ஆங்கிலேயரும் அவரைச் சார்ந்தவர்களும் இந்த நாட்டை விட்டு வெளி யேறுவார்களே யானால் என்ன நேரிடும் என்று சற்று ஆராய்பவர்களுக்கு இப்படிப் பட்ட தீர்மானம் பொருத்த மற்றது என்பது வெளியாகும்.

1. ஆங்கிலேயர் வெளியேறினால் நாட்டில் குழப்பமும் ஜாதி சமய வேறுபாட்டினால் கலகமும் அதிகமாகும் என்பதில் சந்தேக மில்லை.

2. இத்தீர்மானப்படி ஒத்துழையாமை இயக்கம் ஏற்படுமே யானால், எதிரியாகிய ஜப்பானியருக்கு துணிவு உண்டாகி நம் நாட்டின் மீது படை யெடுத்து நம்மக்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்த இடமுண்டாகும்.

3. அதன் பலனாக நம் நாடு என்றென்றும் அடிமை நாடாகவே இருப்பதற்கு ஏதுவாகும்.

மகாத்மா சொல்வது போன்று ஆங்கிலேயரும் வெளியேற வேண்டும், ஜப்பானியரும் வரக்கூடாது என்றால், ஜப்பானியர் படை யெடுப்பிற்கு நம்மிடம் பாதுகாப்பு என்ன இருக்கிறது? அகிம்சா தர்மமும், ஒத்துழையாமை யுந் தான்! அகிம்சா தர்மத்திற்கு யார் மதிப்புக் கொடுப்பார்கள்? நாட்டு ஆசை பிடித்த ஜப்பானியர் சிறிதும் மதிப்பு கொடுப்பார்கள் என்று நினைக்க முடியாது. இது எதனை ஒத்திருக்கிறது என்றால், தஞ்சை அரசன் ஆதிகாலத்தில் எதிரி வந்த காலத்து துளசியை வழியில் போட்டதை ஒத்திருக்கின்றது! துளசி மகத்தான சக்தியுடையது. அதனைத் தாண்டுவானே யானால் அவன் மகா பாவி. அந்த பாவி வந்த நாட்டில் நாமிருக்கக் கூடாது என்று தஞ்சை அரசன் ஓடியது போல, அகிம்ஸா தர்மம் மேலானது; ஜப்பானியர் வருவாரே யானால் ஒத்துழைக்க மாட்டோம், மீறி நாட்டைக் கொள்ளை கொள்வார்களே யானால், அகிம்சா தர்மத்திற்கு மதிப்புக் கொடாத ஜப்பானியர் வந்த இடத்தில் நமக்கு வேலை யில்லை, என்று ஓட நேரிடும்.

இந்தக் காலத்து யுத்தத்தில் குண்டுக்குக் குண்டு, விமானத்துக்கு விமானம், டாங்கிக்கு டாங்கி கொண்டு சண்டை போடும் நாடுகளெல்லாம் திணறுகின்ற இந்தக் காலத்தில், அத்தளவாடங்கள் உள்ள நாடுகளை விட்டுத் தனித்து நின்று அகிம்ஸா தர்மத்தில் எதிரியை வெல்வேன் என்று கூறுவது எவ்வளவு பொருத்த மற்றது என்பது வெளிப்படை.

இந்தத் தீர்மானத்துக்கு இன்றையத் தினம் நம் நாட்டில் ஆதரவு மிகவும் குறைவு என்பது திண்ணம். முஸ்லீம் லீக்கர்கள் இன்றையத் தினம் இதற்கு ஆதரவு கொடுக்க வில்லை. இந்து மகாசபையார் சீக்கியர்கள், மிதவாதிகள், சமதர்மக் கட்சியார், ஜஸ்டிஸ் கட்சியார் இத்தீர்மானத்தை இன்று எதிர்க்கிறார்கள். நாட்டிற்கு நன்மை பயக்காது என்று காங்கிரஸ் கட்சியிலும் திரு. சி. ராஜகோபாலாச்சாரியாரும் அவரைச் சேர்ந்தவர்களும் விலகி யிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியிலும் பக்தி உள்ளவர்கள் இம்மாதிரியான திட்டங்கள் பலவற்றில் பங்கெடுத்து ஓய்வு பெற்றவர்களாகக் காணப் படுகின்றார்கள். பல தடவைகளில் மகாத்மா காந்தி யவர்கள் தப்பு இழைத்தேன் என்று கூறியபடி, இதிலும் எதிர் காலத்தில் கூறுவாரோ என்று சந்தேகப் படுகிறார்கள். ஆதலால் இந்தத் தீர்மானத்துக்கு பொது ஜன ஆதரவு மிகவும் குறைவு என்பது வெளிப்படை.

---

## பர்மாவிலிருந்து விமானத்தில் வெளியேறியவர்கள்

### புள்ளி விவரம்

பர்மாவி லிருந்து இந்தியாவிற்குள் வந்து சரண் புகுந்து கொண்டவர்களின் எண்ணிக்கையில் எத்தனைப் பேர் விமானங்கள் மூலம் வந்து சேர்ந்தார்கள் என்ற புள்ளி விவரங்கள் இப்போது கிடைத் திருக்கின்றன. இவை உத்தியோக தோரணையில் வெளியிடப் பட்ட புள்ளிகள். 1942-ம் ஆண்டு ஜனவரி மீ 1உ முதல் மே மீ 9உ வரை 11,210 பேர்கள் விமான மூலம் வந்து சேர்ந்திருக்கிறார்கள். ரங்கூன், லாஷியோ, மோடு, ஷ்வெபே ஆகிய இடங்களி லிருந்து சிட்டகாங்குக்கு வந்து சேர்ந்தவர்கள் 6,094. மொத்தம் வந்து சேர்ந்தவர்களில் இந்தியர்கள் 1,830 பேர்கள்; 3,060 ஐரோப்பியர்களும், ஆங்கிலோ இந்தியர்களும் ஆவார்கள். சிட்டகாங் வந்து சேர்ந்தவர்களில் இந்தியர்கள் 2,195 பேர்கள்; ஐரோப்பியர்கள் 291 பேர்கள்; ஆங்கிலோ இந்தியர்கள் 2,156 பேர்கள்; ஆங்கிலோ பர்மியர்கள் 403 பேர்கள்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மீ 14உ, வெள்ளிக்கிழமை [இதழ் 32

## ரெம்ப முடுக்குத் தானே?



ஜெர்மன் கடற்படையைச் சேர்ந்த கைதியை, இராணுவப் பாதுகாப்போடு, லண்டன் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இறக்கி, முகாம் சிறைக்கு அழைத்துச் செல்லும் காட்சி.

# ஜப்பானுக்கு உதவுவதே காங்கிரஸ் கொள்கை

## வாக்குறுதிப்படி பிரிட்டிஷார் நடப்பார்கள்

### காந்தியாரின் உண்மைச் சொரூபம்

சென்ற 1942-ம் ஆகஸ்ட்டுமீ 10உ இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரி அமெரிக்காவுக்கு ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். இந்தியா சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கை இன்னது என்று மறுபடியும் அதில் வலியுறுத்தி யிருக்கிறார். அன்றியும் காங்கிரஸ் கட்சியினரின் செயல்களால் இந்தக் கொள்கை மாறாது என்றும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார். அவர் கூறியதாவது :—

> யுத்தம் முடிந்த உடனேயே, தாமதமின்றி, இந்தியர்கள் தாமே வகுக்கும் ஒரு அரசியல் திட்டத்திற் குட்பட்டு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற் குள்ளும் உலகிலேயும் ஒரு யதேச்சை நாடாக, நிர்வாகம் முழுதையும் அவர்களே நடத்த, முழு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்னும் பரந்த நோக்கந் தான், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இருந்து வருகிறது. இந்த நோக்கம் காங்கிரஸ் தலைவர்களின் தவறான போக்கினால் பாதிக்கப் பட மாட்டாது. இது தான் எங்கள் நோக்க மென்று இந்தியர்களுக்கும், உலகத்திற்கும் நாங்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அதன்படியே நடப்போம்.

இந்த வாக்குறுதியை மீண்டும் வலியுறுத்திக் கூறுவதனால், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நல் லெண்ணம் வெளியாகிறது. இதனால் காங்கிரஸ் தலைவர்களின் எண்ணம் மாறுதிருக்கலாம். ஏனென்றால், உடனடியாக முழு அதிகாரமுள்ள மந்திராலோசனை சபை, அதாவது இப்போதே பரிபூரண சுயாட்சி வழங்கப் பட வேண்டு மென்று காங்கிரஸ் காரியக் கமிட்டி கோருகிறது. இந்தக் கோரிக்கைக்கு சர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸ் இணங்க முடிய வில்லை. இதற்கு அவர் கூறிய முதல் காரணமாவது :—

> முழு அதிகாரமுங் கொண்ட மந்திராலோசனை சபையோடு ஒரு அரசாங்கத்தை அமைப்பதானால், சிக்கல்கள் மிகுந்த பெருவாரியான மாறுதல்களை அரசியல் அமைப்பில் புகுத்தும்படி நேரும்.

இந்தக் காரணத்தைக் காங்கிரஸ் தலைவர்கள் ஒத்துக் கொண்டார்கள்; என்றாலும், இவ்வளவு பெருத்த மாறுதல்களை யுத்த காலமானாலும் செய்யத் தான் வேண்டும் எனக் கூறினார்கள்.

இந்த நிலைமையைக் குறித்து ஆசிரியர் கூப்லந்து கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :—

> மந்திராலோசனை சபையோடு கூடிய அரசாங்கம் வேலை செய்வதற்கு, கமிட்டியார், ஒரு விதிவிலக்கு அளிக்க இசைவார்களாம். இது தான் இராணுவ வேலைகளின் நிர்வாகம். இதுவும் கூட, அதே அரசாங்கப் பொது கொள்கைக்குச் சம்பந்தமே இல்லாததாக இருக்கப்படாதாம்!....................யுத்த காலத்தில் உள்ள அரசாங்கம் பொது ஜனங்களைப் பாது காக்கும் பொறுப்புடையது. இராணுவ வேலைகளை, படைத், தலைவர் சரிவரச் செய்ய வேண்டுமானால், நிர்வாக அங்கத்தினர் அனைவருடைய ஆதரவும் அவருக்கு இருக்கிறதென்று அவருக்கு உறுதி உண்டாக வேண்டும்.

கீழ்க் காணும் நான்கு விஷயங்களும் கவனிக்கத் தக்கன :—

1. யுத்த காலத்தில் நெருக்கடியான நிலைமைகள் ஏற்படக் கூடும். அப்போது சிவில் அதிகாரிகளால் நிலைமையைச் சமாளிக்க முடியாமற் போகலாம். அப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில், உள் நாட்டைப் பாது காக்கும் பொறுப்பு படைத் தலைவருக்குத் தான் உண்டு. அந்தக் காலத்தில் உள்நாட்டு அங்கத்தினருக்கும் படைத் தலைவருக்கும் முழு ஒற்றுமை இருக்க வேண்டிய தவசியம்.

2. இந்த யுத்த நெருக்கடியில், பிரிட்டிஷ் அந்நிய நாட்டுச் சம்பந்தங்களி லிருந்து இந்திய அந்நிய நாட்டுச் சம்பந்தங்களைப் பிரிக்க முடியாது.

3. இந்தியன் சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களில் பாதிப் பேர்கள் இந்தியர்கள். இந்தியன் போலீஸ் உத்தியோகஸ்தர்களில் மூன்றி லொரு பங்குப் பேர்கள் இந்தியர்கள். இந்த இரண்டு வகை உத்தியோகஸ்தர்களையும் கொண்டு தான், இந்திய நிர்வாகம் நடக்கிறது. இவர்களுடைய நடவடிக்கைகளைக் குறித்தும் நன்மைகளைக் குறித்தும் பார்லிமெண்டு சபைக்கு, இந்தியா மந்திரி தான் பொறுப்பாளி.

4. அரசாங்கங்கள் யுத்தத்தில் ஈடு பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், பரிபூரண சுயேச்சையுள்ள பிரிட்டிஷ் இந்தியாவை அமைத்து, இது சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நிறை வேற்ற வேண்டிய கடமைகளை நிறை வேற்ற வேண்டிய தில்லை என்று ஒரு தலைப்பட்சமாக முடிவு கட்டி விடுவதும் முடியாத காரியம்.

ஆசிரியர் கூப்லந்து மேலும் கூறுவதாவது :—

> சுருக்கமாகச் சொல்ல வேண்டு மானால், இனிக் குறைக்க முடியாத அளவிற்குத் தான் பிரிட்டிஷ் சிவில் ஆட்சி நடை பெறுகிறது. இராணுவ ஆதிக்கத்தையும் இதினின்று பிரிக்க முடியாது. அரசியல் அமைப்பையே அடியோடு மாற்றினால் மட்டுந் தான், இந்த இரண்டு வகை ஆதிக்கங்களையும் போக்க முடியும். யுத்தம் முடிந்த பிறகு புதிய ஆட்சி முறை ஏற்பட்டால், இவை மறைந்து விடும். அது வரை, இவை இரண்டும் இருக்கத் தான் வேண்டும்.

சர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸ் வந்த நோக்கத்தைக் குறித்து பிரிட்டிஷ் அரசாங்கத்தார் செய்த பிரகடனத்தில் இரண்டு நோக்கங்களைத் தெளிவாகக் குறிப்பிட் டிருக்கிறார்கள். யுத்தம் முடிந்த பிறகு, இந்தியா எப்படி சுயேச்சை யடைவது என்பது பற்றி, பெரிய இந்திய அரசியல் கட்சிகளுக்குள் ஒற்றுமை உண்டாக்க வேண்டும் என்பது முதல் நோக்கம். அதை அடிப்படையாகக் கொண்டு தற்காலிக அரசாங்கத்தை அமைக்க வேண்டு மென்பது இரண்டாவது நோக்கம்.

காங்கிரஸ் கோரிக்கையை சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் நிராகரித்ததற்கு முதல் காரணத்தை ஏற்கெனவே கூறினோம். இரண்டாவது காரணம், சிறுபான்மைக் கட்சிகள்—முக்கியமாக முஸ்லீம் லீக்—இணங்க வில்லை. காங்கிரஸ் கோரிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏற்றுக் கொள்வார்களானால், காங்கிரஸ்காரர்கள் தயவில் முஸ்லீம்கள் வாழ வேண்டியிருக்கும் என்று ஜனாப் ஜின்னா சென்ற ஏப்ரல்மீ 13உ கூறி யிருப்பதி லிருந்து, இது தெளிவாகத் தெரிகிறது. வார்தா தீர்மானத்தைக் குறித்து 1942-ம் ஆகஸ்ட்டுமீ 1உ அவர் விடுத்துள்ள அறிக்கையில் இதையே தான் மீண்டும் கூறுகிறார்.



நிற்க, இடைக் காலத்தில் அரசாங்க பொறுப்பை, யார் ஏற்றுக் கொள்ளுவது என்னும் பிரச்னை எழுகிறது. பலத்த எதிரிகள் இந்நாட்டைத் தாக்குவதாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். பெரிய கட்சிகளுக்குள்ளும் வகுப்புகளுக்குள்ளும் ஒற்றுமை ஏற்பட வில்லை. இந்த நிலைமையில், ஒரே மூச்சாக சிக்கலான அரசியல் அமைப்பை மாற்றி விடுவது என்பது, முடியாத காரியம். பொறுப்புகளையும் மாற்றி விட முடியாது. அல்லாமலும், யுத்தத்தில் தாக்கவும் தடுக்கவும் உலகம் முழுதும் அமைக்கப் பட்டுள்ள ஏற்பாடுகளின்படி, இந்தியா ஒரு முக்கியமான நிலையை வகிக்கிறது. உலகத்தின் இந்தப் பகுதியில், இப்போ திருப்பதைப் போல் அவ்வளவு பெரிய பிரிட்டிஷ் படை ஒரு போதும் இருந்ததில்லை.

1935-ம் வருஷத்திய இந்திய அரசாங்கச் சட்டத்தை அமுல் நடத்தியதி லிருந்து, இனி ஏற்படக் கூடிய பொறுப்புகளைத், தமது என்று ஒதுக்கி வைத்துக் கொள்வதனால், இது வரை உள்ள ஆதிக்கம் குறைந்து விடும் என்று அர்த்தமாகாது, என்பது தெளிவாகிறது. இதை காங்கிரஸ் மாஜி மந்திரிகளும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

வைசிராய், சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டியவர். சட்டப் பதங்கள் குறிப்பிடும் அளவிற்கு மட்டுந் தான் அவர் வாக்குறுதி கொடுக்கக் கூடும். இந்தச் சட்டப் பதங்களைத் தெளிவாக வியாக்கியானம் செய்தால், அதைவிட அதிகமாக வாக்குறுதி பெறலாம். இப்படிப் பட்ட நிலைமை மாகாணங்களில் ஏற்பட்டிருக்கிறது. இப்போது பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள ஆதிக்கம், தேசிய அரசாங்கம் ஏற்பட்ட பிறகு அது பலப்படுவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களை அளிக்கும். இந்த இடைக் காலத்தில் ஒரு அரசாங்கத்தை யமைக்க இந்தியக் கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒற்றுமைப் பட்டு வருவார்களானால், பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய அரசாங்கம் ஏற்பட்டு விடும். அதாவது, தேசிய வாழ்வின் எல்லாப் பகுதிகளுக்கும் அந்த அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் இருக்கும். இந்தியாவை எல்லாத் துறைகளிலும் பாது காக்கும் பொறுப்பை அது ஏற்றுக் கொள்ளும். இதற்கிடையில் பிரிட்டிஷ் யுத்த மந்திராலோசனை சபையிலும், நேச நாடுகளின் பசிபிக் கௌன்ஸிலிலும் சம அந்தஸ்தோடு இருந்து உயர்ந்த யுத்த தந்திர முறைகளை வகுக்கவும் இந்தியப் பிரதிநிதிகளுக்கு உரிமை யுண்டு.

சென்ற ஏப்ரல் மாதக் கடைசியில் அலகாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டி விவாதங்கள் பற்றிய தஸ்தாவேஜிகள் வெளியாயின. அவற்றுடன், காந்தியாரின் நகல் தீர்மானமும், பண்டித ஜவஹர்லால் திருத்திய தீர்மானமும் வெளியாயின. இவை பற்றி காங்கிரஸ் தலைவர்கள் அடுத்தடுத்து மாறுபட்ட, முன்னுக்குப் பின் முரணான அநேக அறிக்கைகளை வெளி யிட்டார்கள். மே மாதம் 1-ம் தேதியும், ஜுலை மாதம் 14-ம் தேதியும் காங்கிரஸ் செய்த தீர்மானத்தின் அந்தரங்க நோக்கம் என்னவென்று, வெளியான தஸ்தாவேஜுகள் விளக்குகின்றன.

**காந்தியாரின் உள்ளம்.**

யுத்தத்தில் நேச தேசங்கள் தோற்று விடும் என்றும், நேச தேசப் படைகள் இந்தியாவில் இருப்பதனால், ஜப்பானியர்கள் இந்தியாவைத் தாக்கக் கூடும் என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டுந் தான் மே மாதம் 1-ம் தேதி நிறைவேறிய தீர்மானத்தை காந்தியார் வகுத்தார். பிரிட்டிஷாரும் நேசதேசத்தாரும் இந்தியாவை விட்டுப் போய் விட்டால், அவர்களைத் தாக்க வேண்டும் என்னும் காரணத்தையொட்டி ஜப்பானியர்கள் இந்தியாவைத் தாக்க மாட்டார்கள் என்பது, காந்தியாரின் எண்ணம். இந்தப் படைகளும் பிரிட்டிஷாரும் இந்தியாவை விட்டுப் போய் விட்டால், ஜப்பானோடு ஒப்பந்தம் பேச இந்தியா சுயேச்சை யோடிருக்க வேண்டும் என்றும் அவர் நினைத்தார் என்று அந்த நகல் தீர்மானத்தி லிருந்து தெளிவாகத் தெரிகிறது.

காரியக் கமிட்டியி லுள்ள 'ஆமாஞ் சாமிகள்' காந்தியாரின் நகல் தீர்மானத்தை ஆதரித்தார்கள். இந்த யுத்தத்தில் பிரிட்டனுக்கு உதவக் கூடாது என்று தாராளமாகக் கூறினார்கள். நேச நாடுகளுக்கு உதவுவதாக ஏற்கெனவே வாக்குக் கொடுத்திருந்த சில அங்கத்தினர்கள் அதை எதிர்த்தார்கள். இவர்களுடைய ஆட்சேபனைகளை யொட்டி அத்தீர்மானத்தை திருத்தினார்கள். இப்படி திருத்தப் பட்ட தீர்மானத்தை எதிர்த்து, மேலும் அதிகம் பேர் ஓட்டுக் கொடுத்தனர். கடைசியாக, இந்த இரண்டு நகல் தீர்மானங்களுக்கும் முக்கியமான வேற்றுமை ஒன்று மில்லை என்று தலைவர் கூறி வற்புறுத்திய பிறகு தான், திருத்தப் பட்ட தீர்மானம் நிறைவேறியது.

தன் நகல் தீர்மானத்தைத் திருத்தியது பற்றி காந்தியாருக்குக் கோபந் தான். இதைப் பற்றி மேலும் தன் 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதினார். பிரிட்டிஷார், குறிப்பாக பிரிட்டிஷ் படைகளும் நேச தேசப் படைகளும், இந்தியா சுயேச்சை யடையும் பொருட்டு இந்தியாவை விட்டு வெளி யேறி விட வேண்டும்; பிறகு, ஜப்பானோடு சமரசம் பேச சுதந்திர இந்தியாவிற்கு உரிமை இருக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறார். இந்த யோசனையை இந்தியாவிலுள்ளவர்களும் வெளி நாடுகளிலுள்ளவர்களும் வெறுத்தார்கள்.

அதனால் தான், பிறகு, படைகள் திரும்பப் போய் விட வேண்டு மென்று கோரினார். பிரிட்டிஷ் அரசியல் வாதிகளும் போய்விட வேண்டு மென்றும் கோரினார். பிறகு, தன் தோல்வி மனப்பான்மையையும் ஜப்பானுக்குச் சாதகமான மனப்பான்மையையும் படிப்படியாகக் கைவிட்டு வருவதாகப் பிறர் நம்பும்படி நடந்து கொள்ள வேண்டிய அவசியம், அவருக்கு ஏற்பட்டது. ஏனெனில், அவருடைய போக்கை அறுவறுக்கும் அவர் கூட்டத்தவர்களில் சிலரையும் திருப்தி செய்ய வேண்டியிருந்தது. அன்றியும் அமெரிக்கர்கள் மனதிலும் நல்லெண்ணம் உண்டாக வேண்டு மென்றும் விரும்பினார். ஜப்பானியர்கள் இந்தியாவைத் தாக்க ஒட்டாதபடி தடுக்கத் தான், அரசியல் ஆதிக்கம் வேண்டும் என்று ஜுலைமீ 14உ தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பது வெறும் பாசாங்கு தான் என்று தெளிவாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக மற்றொரு விஷயமும் கவனிக்கத் தக்கது. எந்த முறையைக் கொண்டு ஜப்பானியர்களைக் காங்கிரஸ்காரர்கள் தடுக்கப் போகிறார்க ளென்று அத் தீர்மானத்தில் எதுவும் குறிப்பிட வில்லை. இந்தத் தீர்மானத்தைக் குறித்து காங்கிரஸ் தலைவர்கள் செய்துள்ள வியாக்கியானங்கள் ஒன்றிற் கொன்று மிகவும் மாறுபட் டிருக்கின்றன.

ஜப்பானோடு சமரசம் பேசுவதற்காக, பரிபூரண அரசியல் ஆதிக்கம் தமக்கு இருக்க வேண்டு மென்று காந்தியாரும், காரியக் கமிட்டியின் பெரும்பாலான அங்கத்தினர்களும் 3 மாதங்களுக்கு முன்பு தான் கோரினார்கள் என்று அலகாபாத்தில் நடை பெற்ற விவாத சம்பந்தமான தஸ்தாவேஜிகளி லிருந்து தெளிவாகத் தெரிகிறது. இப்போது, ஜப்பானியர்களைத் தடுத்து விட வேண்டும் என்று பிரமாதமாகக் காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள். இந்த 3 மாத காலத்திற்குள் காங்கிரஸ் தலைவர்களின அடிப் படையான கொள்கைகளை அடியோடு மாற்றிக் கொள்ளுவது எப்படி சாத்தியமாகும்? இவ்வளவு சுலபமாகக் காங்கிரஸ்காரர்கள் தலை கீழ் பல்டி அடிக்கக் கூடியவர்களானால், ஆதிக்கம் தம் கைக்கு வந்த பிறகு, ஜப்பானியர்களுக்குச் சாதகமான தம் பழைய கொள்கையை மீண்டும் கையாள மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

உள் நாட்டிலுள்ளவர்களும் வெளி நாடுகளிலுள்ளவர்களும் தெரிந்து கொள்ளுவதற்காகத் தயாரித்துப் பிரசுரமாகும் அறிக்கைகளை விட, கதவுகளை யடைத்துக்கொண்டு நடை பெறும் கூட்டங்களில் கூறப்படும் கருத்துக்கள் தான் அவர்களுடைய உண்மையான கருத்தை வெளியாக்கும். முற்கூறிய தஸ்தாவேஜிகளை எல்லாம், ஒரு வகைக் குறிப்பும் இல்லாமல், அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்திற்கு முன்பே, அப்பட்டமாகப் பிரசுரித்திருக்கிறது. ஏனென்றால், இந்த விவாதங்களிலிருந்து எழக் கூடிய கேள்விகளுக்குத் தகுந்த விடைகள் அளிக்க காரியக் கமிட்டி அங்கத்தினர்களுக்குச் சந்தர்ப்பம் இருக்க வேண்டும். அந்தத் தஸ்தாவேஜிகளை, குறிப்புக்களோடு வெளியிட்டால், அக் குறிப்புக்களால் அவற்றின் உண்மைப் பொருள் மாறிவிட்டது என்னும் பழியும் சாரக் கூடும் என்று தான் அதில் எதுவும் கலவாதபடி பிரசுரிக்க நேர்ந்தது.

**கொடுத்தது, கொடுத்தது தான்.**

பம்பாயில் காங்கிரஸ்காரர்கள் செய்த தீர்மானத்திற்குப் பிறகுங் கூட, இந்தியர்கள் தாமாகவே வகுக்கும் ஒரு அரசியல் திட்டப்படி பரிபூரண சுயேச்சை இந்தியர்களுக்கு வழங்கப்படும் என்னும் கொள்கையை மேலும் பிரிட்டிஷ் சர்க்கார் பின்பற்றுவார்களா என்னும் சந்தேகம் உண்டாகலாம். சென்ற மார்ச்சு மாதக் கடைசியிலே இந்திய சுயேச்சைப் பிரகடனத்தை சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வெளியிட்டார். ஆகஸ்ட்டு மாதம் 6-ம் தேதி அவர் லண்டனில் கூறியதாவது:

> யுத்தம் முடிந்த பிறகு இந்தியாவிற்குச் சுயராஜ்யம் கிடைப்பது உறுதி. இது உண்மை. கொஞ்சமும் இதில் சந்தேகம் வேண்டாம். இந்தியர் வாழ்க்கையை ஒரு புதிய முறையில் அப்போது அமைக்கக் கூடும். இந்த உண்மைகளை மறுப்பதில், தேசீய வாதிகள் என்று தங்களைக் கூறிக் கொள்ளுகிறவர்களுக்கு, எந்த விதப் பயனுமில்லை. இந்த வாக்குறுதியைக் கொடுத்தாகி விட்டது. இதைக் கட்டாயம் காப்பாற்றுவோம்.

இடைக்கால ஏற்பாடுகளைக் குறித்து தான் இப்போது பிரசினை. இது பற்றி முன்னேயே விளக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி தான் முக்கியமான இந்தியக் கட்சித் தலைவர்கள் ஒரு சமரசமான முடிவிற்கு வரக் கூட வில்லை. பெருத்த அரசியல் மாறுதல்களை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் தலைவர்கள் கோரினார்கள். செய்யாவிட்டால், நாடு முழுதும் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாகப் பயமுறுத்தினார்கள், இதிலிருந்து, இந்தியாவைப் பாது காக்கவும் அச்சு அரசாங்கங்களைத் தோற்கடிக்கவும் இவர்கள் உதவினார்களா இல்லையா என்று நாட்டிலுள்ள அனைவரும் சிந்தித்துப் பார்த்து முடிவு கட்டட்டும். இந்த முக்கியமான பிரச்னையைக் குறித்து எல்லா நேசநாடுகளும் ஒரே கருத்தோடிருக்கின்றன. அச்சு அரசாங்கங்களும் கூட தம் போக்கைத் தெளிவு படுத்தி விட்டன. காங்கிரஸ் கொள்கையைக் குறித்துத் தாம் கொண்ட ஆனந்தத்தைக் கொஞ்சங் கூட மறைக்காமல் வெளியிட்டு விட்டன.

**ஜப்பானியர் போக்கு.**

காங்கிரஸ் கட்சி சம்பந்தமாக அச்சு அரசாங்கங்களின் போக்கு எப்படி இருக்கிறதென்று அவர்களுடைய ரேடியோ பிரசங்கங்களிலிருந்து தெரிகிறது. காங்கிரஸ் கோரிக்கைக்கு என்ன பதில் கிடைக்கப் போகிறதென்று ஜப்பான் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறதாம். இந்தியாவில் ஜப்பானிய குண்டுகள் முதல் முதல் விழுந்து 4 மாதங்கள் ஆகிவிட்டன. சென்ற ஏப்ரல் மாதம் 5-ம் தேதிதான் முதல் முதல் இந்தியாவை விமானங்களிலிருந்து ஜப்பானியர் தாக்கினார்கள். மே மாதம் 20-ம் தேதிக்குப் பிறகு இந்தியாவையும் இலங்கையையும் இவர்கள் தாக்கியதாகவே தெரியவில்லை. இந்த 4 மாதங்களில் இலங்கையை 3 முறைகளும், இந்தியாவை 8 முறைகளும் ஜப்பானியர் தாக்கினார்கள். இத்துடன் ஜப்பானியர் ஏன் நின்றுவிட்டார்கள்? சென்ற ஜூலை மாதம் 11-ம் தேதி செய்கோன் ரேடியோ மூலம் இதற்குச் சில காரணங்களை ஜப்பானியர்கள் இந்துஸ்தானியில் கூறியிருக்கிறார்கள்.

அவையாவன:—

> பர்மாவிலுள்ள ஜப்பானிய இராணுவ தளங்களையும் படை வீடுகளையும் பிரிட்டிஷ் விமானப் படை போய்த் தாக்கி வருவதாக டில்லி ரேடியோ நாள் தோறும் கூறுகிறது. ஆனால், இந்தியாவிலுள்ள பட்டணங்களையும் இராணுவத் தளங்களையும் பதிலுக்குப் பதில் ஜப்பான் தாக்குவதில்லை. உண்மையிலேயே ஜப்பான் இந்தியா மீது அனுதாபத் தோடிருக்கிறது. இந்தியர்கள் மீது அன்பும் அவர்களிடம் மதிப்பும் ஜப்பானியருக்கு உண்டு. இந்தியப் பட்டணங்களை வெகு எளிதில் ஜப்பானிய விமானங்கள் தாக்கக் கூடும். வங்காளக் குடாக் கடலிலும் அரபிக் கடலிலும் தாராளமாகப் போய்க் கொண்டிருக்கும் ஜப்பான் கப்பல் படைகள் இந்திய துறை முகப் பட்டினங்களை வெகு எளிதில் தவிடு பொடி யாக்கி விடலாம்....... ஜப்பானியர்களின் உண்மையான நல்ல நோக்கமும் இந்தியர்களிடம் அவர்கள் கொண்டுள்ள அன்புந் தான், இந்தியாவைத் தாக்க ஒட்டாதபடி ஜப்பானியர்களைத் தடுக்கின்றன...... காங்கிரஸின் தீர்மானத்தை ஜப்பான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷாரை இந்தியாவை விட்டு வெளி யேற்றுவதில் காங்கிரஸ் வெற்றி யடைந்தால், இந்தியாவை ஜப்பான் தாக்காது. வெற்றி யடையா விட்டால் கட்டாயம் தாக்கும்.

உடனடியாக இந்தியாவிற்கு சுயராஜ்யம் கிடைத்து விட்டால், ஜப்பானியர் இந்தியாவைத் தாக்க மாட்டார்கள் என்று சமீபத்தில் செய்கோன் ரேடியோ கூறியது. அத்துடன் நேச தேசங்களின் யுத்த முயற்சிகளை எந்த விதத்தில் பலவீனப் படுத்தலாம் என்றும் குறிப்பிடுகிறது. சென்ற ஜூலை 27உ செய்கோன் ரேடியோ "சீன அரசாங்கத்திற்கு மிகவும் தொல்லை கொடுங்கள்" என்று குறிப்பிட்டது. 20-ம் தேதி, "அச்சு அரசாங்கங்கள் இந்தியாவை தாக்க ஆயுத்தமா யிருக்கின்றன" என்று கூறியது. ஜப்பானிய படைத் தலைவரான ஜெனரல் டோஜோ, சீனா, ஆஸ்திரேலியா, இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவற்றை தாக்கப் போவதாக 27-ம் தேதி பயமுறுத்தினார். ஆஸ்திரேலியாவுக்கு எந்த விதமான இரக்கமும் ஜப்பான் காட்டாதென்றும், இந்தியத் தலைவர்கள் எதிர்கால நிலையை நன்கு உணரக் கூடியவர்கள் என்றும் குறிப்பிட்டார். இதிலிருந்து ஜப்பானுடைய நோக்கம் என்னவென்று தெரிகிறது. பிரிட்டிஷாருக்கு விரோதமாகப் பொது ஜனக் கிளர்ச்சியைக் கிளப்பி விட்டால், ஜப்பானியர்களின் கஷ்டம் மிகவும் குறையும். இதற்காகத் தான், இந்திய விடுதலைக் கிளர்ச்சியில் முழு மூச்சாக இறங்குங்கள் என்று எதிரி ரேடியோக்கள் நாள் தோறும் இந்தியர்களைத் தூண்டிக் கொண்டிருக்கின்றன. இப்போது "இந்திய விடுதலை" என்றால், ஜப்பானிய சர்வாதிகாரம் என்று தான் அர்த்தம். இப்படிப் பட்ட விடுதலைக்கு பர்மா ஒரு எடுத்துக் காட்டாயிருக்கிறது. இப்போது சுயேச்சை யுள்ள பர்மா அரசாங்கந் தான் இருக்கிறது. இது பற்றி சந்தேகமே கிடையாது. ஆனால் எல்லா முக்கியமான ஆதிக்கங்களும் ரங்கூனிலுள்ள ஜப்பானிய இராணுவத் தலைவர்களிடமே இருக்கின்றன.

ஜப்பானியர்கள் இந்தியாவைக் கைப்பற்ற விரும்புவார்கள் தான். ஆனால், இந்தியப் படைகளும், பிரிட்டிஷ் படைகளும் நேச தேசப் படைகளும் தடைகளா யிருக்கின்றன. ஆகையினால் தான், இந்தியர்களைத் தட்டிக் கொடுத்துத் தம் காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். அத்துடன் பயமுறுத்துகிறார்கள்; வாக்குறுதிகள் கொடுக்கிறார்கள்; இந்தியர்களைக் கொண்டே இந்தத் தடைகளை விலக்கிக் கொள்ளப் பார்க்கிறார்கள். இதனால் தான் சென்ற 4 மாதங்களில் 11 முறை மட்டுந் தான் விமானங்களிலிருந்து இந்தியாவைத் தாக்கினார்கள். இது தான், பிரசாரத்தைக் கொண்டே தாக்கும் முறை. காங்கிரஸ் கட்சிக்கு ஜப்பான் நன்றி கூறி, தாம் கோரியது இது தான் என்று, இப்போது அறிவிக்கிறது.



**வார்த்தைகளாலே தாக்குகிறார்கள்.**

இந்தியாவை, ஜப்பானியர், வார்த்தைகளைக் கொண்டே தாக்குகிறார்கள். நேச தேசத்தார் ஜப்பானியர்களை வெடி குண்டுகளைக் கொண்டு தாக்குகிறார்கள். இது தான் ஜப்பானியர்களுக்கு உறைக்கும். இந்தியாவிலுள்ள பெரிய பாம்பர் விமானங்கள் இரங்கூன் துறை முகத்தைத் தாக்குகின்றன. பர்மாவில் உள்ள நம் மத்திய பாம்பர் விமானங்கள், பர்மாவில் ஜப்பானியர்கள் போக்கு வரவு சாதனங்களை நாசம் செய்கின்றன. சப்ளை கூடங்களை ஒழிக்கின்றன; முன் புறமுள்ள விமான நிலையங்களைத் தரை மட்ட மாக்குகின்றன. யுனான் மீதும் அஸ்ஸாம் மீதும் ஜப்பானியர்கள் படை யெடுத்து வராமற் படியும், இந்தியாவையும் சீனாவையும் வெடி குண்டுகளால் தாக்காதபடியும் தடுப்பதற்காகத் தான், நம் விமானங்கள் ஜப்பானிய தளங்களைத் தாக்கி நாசம் செய்கின்றன. அக்யாப், மியித்கியானா, மக்வே, மிங்கலேடன் ஆகிய விமான நிலையங்களை, அடுத்தடுத்து நம் படைகள் தாக்கின. சென்ற சில வாரங்களாக அமெரிக்க விமானங்களும் பிரிட்டிஷ் விமானங்களும் மாண்டலே-மியித்கியினா ரயில்வேயைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. பர்மாவிலுள்ள தம் முக்கியமான தளங்களைத் தற்காக்க வேண்டி தம் விமான எதிர்ப்புப் பீரங்கிப் படையைப் பலப் படுத்த ஜப்பானியர்கள் மிகவும் முனைந்து வேலை செய்கிறார்கள். இதிலிருந்து நம் நேச தேச விமானப் படைகள் எவ்வளவு சிறந்த வேலைகளைச் செய்கின்றன என்று தெரிகிறது.

முடிவாகச் சொல்லுமிடத்து, இந்தியாவின் கிழக்குப் பக்கத்திலும் இலங்கையிலும் அசைக்க முடியாதபடி பலமான பாதுகாப்புகளை அமைத்திருக்கிறோம். இப்போதிருப்பதை விட, மிகமிகப் பெரியதோர் விமானப் படையை ஜப்பான் பர்மாவில் சேகரித்து வைத்திருந்தால் மட்டும் தான், இந்தியாவைத் தாக்க முடியுமா என்று அவர்கள் யோசிக்கக் கூடும்.

## பீரங்கிப் படைகளுக்குப் பயிற்சி

### மனதையும் உடலையும் உறுதி செய்யும் முறை

பர்மாவிலும் மலேயாவிலும் ஜப்பானியர்கள் எப்படி தந்திரமாக வந்து இறங்கி விட்டார்கள் என்று நாம் அறிவோம். ஆகையால் நம் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் தரையிலும் ஆகாய விமானத்தை நோக்கியும், சண்டை யிடத் தக்கபடி இருக்க வேண்டும்.

மீண்டும் பர்மாவை நாம் தாக்கும்படி நேரும். அது சற்று கடுமையான வேலை தான். அதற்கு விமான எதிர்ப்பு பீரங்கிப் படைகள் தம்மை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். இதற்கென ஒரு கடுமையான முறையை ஒரு படை வகுத்திருக்கிறது. இந்த முறைப்படி பலவகை கடுமையான தடைகள் அமைக்கப் படுகின்றன. இத்தடைகளைக் கடக்க மிகுந்த தைரியமும் சகிப்புத் தன்மையும் பொறுமையும் உடல் பலமும் வேண்டும். இந்த முறைகளில் பயிற்சி பெற்றவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் நடு நிலைமை தவறாது நடந்து கொள்ளும் சக்தி பெறுவார்கள். ஆறுகளை விரைவில் கடக்கும் திறமையும் அடைவார்கள். பள்ளிக்கூடப் பிள்ளைகள் போட்டித் தடைப் பந்தயங்களை ஒத்திருக்கும் இந்தப் பயிற்சி. இந்தப் பயிற்சி பெறும் பீரங்கி வீரர்கள், முதலில், ஒரு ரயில்வே லைன் அகலமுள்ள ஒரு மரக்கட்டைத் தடைன் மேல் 6 அடி உயரம் ஏறவேண்டும். பிறகு அங்கிருந்து ஓடிப் போய் குறுக்கே யிருக்கும் பல தட்டிகளைத் தாண்ட வேண்டும். பிறகு அங்கே 10 அடி உயரச் சுவர் ஒன்று உண்டு. அது நன்றாக வழுவழுப்பாகப் பூசப் பட்டது. இந்தச் சுவற்றையும் அவர்கள் தாவிக் குதிக்க வேண்டும். இதையுங் கடந்த பிறகு, ஒரு குரங்கைப் போல் ஒரு கயிற்றைப் பிடித்துக் கொண்டே உயரப் போய் மரத்தின் மேல் ஏற வேண்டும். அங்கிருந்து அதாவது 12 அடி உயரத்திலிருந்து ஒரு சமமான தரையில் குதிக்க வேண்டும். இதையும் கடந்து போனால், இரண்டு பள்ளங்களில் தண்ணீர் நிரப்பி வைத்திருக்கிறார்கள். இவற்றிற்கிடையே இருப்பது ஒருஅடிச் சுவர் தான். அந்த இரண்டு பள்ளங்களும் 6 அடி அகல முள்ளவை. இவற்றையும் தண்ணீரில் விழாமல் தாண்ட வேண்டும். மேலும் பல மரக் கட்டைத் தடைகளைக் கடந்து 100 கஜ தூரம் போன பிறகு, இந்தப் பயிற்சி முடிவடைகிறது. இந்தப் பயிற்சி பெறும் போது, முதலில் சாதாரண உடைகளுடனும், பிறகு முழு இராணுவ உடைகளுடனும் பயிற்சி பெறுகிறார்கள். இத்தனைத் தடைகளையும், 90 விநாடிகளுக்குள் கடக்க வேண்டும்.

## இந்திய மாலுமிகள் கிளப்

### ஆரம்ப விழாவில் இந்தியா உதவி மந்திரி பிரசங்கம்

சமீபத்தில் இங்கிலாந்திலுள்ள லிவர்பூர் என்னும் பட்டினத்தில் ஒரு கிளப்பை இந்தியா உதவி மந்திரி டெவன்ஷையர் பிரபு ஆரம்பித்து வைத்தார். அப்போது இந்திய மாலுமிகளைக் குறித்து அவர் கூறியதாவது:—

> பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்களில் உள்ளவர்களில் கால் வாசிப் பேர்கள் இந்தியர்கள். நமது வியாபாரம் இடைவிடாது நடைபெற வேண்டி, எல்லா வகை ஆபத்துக்களுக்கும் அவர்கள் உள்ளாகின்றார்கள். ஆகையால் நாம் அவர்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம். இவர்கள் மிகவும் அருமையான தொண்டு செய்து வருகிறார்கள். இந்த வீரர்களுக்கு நாம் எந்த வகை வசதிகளைச் செய்து கொடுக்க முடியும்? அவர்களுடைய தொண்டிற்கு நாம் செய்யும் உதவி ஒருபோதும் ஈடாகாது.

அந்த விழாவிற்கு விஜயம் செய்திருந்த ஆக்டிங் இந்திய ஹை கமிஷனரான மிஸ்டர் எஸ். லால், ஐ.சி.எஸ்., கூறியதாவது:—

> இங்கிலாந்திலுள்ள இந்திய மாலுமிகள் நன்றாகப் பராமரிக்கப் படுகிறார்களா என்னும் விஷயத்தில் ஹை கமிஷனர்கள் மிகுந்த அக்கரை கொண்டிருந்திருக்கிறார்கள். யுத்தங் காரணமாக இந்த வேலை மிகவும் துரிதப் பட்டு, இந்திய மாலுமிகளின் நன்மைகளைக் கவனிக்கும் பொருட்டு 3 உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறோம். இவர்களில் ஒருவர் லிவர்பூரிலேயே இருக்கிறார்.

இந்தக் கிளப்பை ஆரம்பிக்கும் பொருட்டு 2,000 பவுன், ஜார்ஜ் அரசர் மாலுமிகள் யுத்த நிதியிலிருந்து கொடுத்தார்கள். சென்ற ஜூன் மாதம் 30-ம் தேதியன்று, வைசிராய் யுத்தக் காரிய நிதியின் மூலம் இந்த நிதிக்கு ரூ. 8,67,000 அனுப்பப்பட்டது. இந்தத் தொகையிலிருந்து தான் இந்த 2,000 பவுனும் கொடுக்கப்பட்டது.

# நம் விமானப் படைகளின் சிறந்த வேலை

## பர்மாவை அடுத் தடுத்துத் தாக்குகின்றன

### அநேக ரெயில் வேலைகள் நாசம்

சென்ற ஜூலைமீத்தில் நம் நேச தேச விமானப் படைகள் பர்மாவிற்குப் பறந்து போய், எதிரிகள் வசம் இருக்கும் ரயில்வேக்களையும், ரோடுகளையும், ஆறுகளையும் இடை விடாது தாக்கிக் கொண்டிருக்கின்றன. அன்றியும் பொது ஜனங்களுக்கு உணவுகளையும், ஆகாயத்தி லிருந்து உதவிக் கொண்டிருக்கின்றன. இது வரை உணவுப் பொருள்களும் வைத்திய உதவிக்கான பொருட்களும் 430 டன் வரை உதவியிருக்கிறார்கள்.

ஜப்பானியர்களின் போக்கு வரவு சாதனங்களை எல்லாம் இடைவிடாது நாம் தாக்கிக் கொண்டிருந்த போதிலும், ஜப்பானிய விமானப் படைகள் அதிகமாகத் தலை காட்டுவ தில்லை.

சிந்துவின் ஆற்றுப் பள்ளத் தாக்கான கலிவா என்னும் இடத்தைத் தான் ஜப்பானியர் தம் தளமாக வைத்திருக்கிறார்கள். இதுவரை ஏறக்குறைய 12 முறை இந்தத் தளத்தைத் தாக்கினோம். இந்த மாத ஆரம்பத்தில் கலிமியோவிலும் அதற்கு அருகிலும் இருந்த ஜப்பானியப் படைகளையும் கட்டிடங்களையும் மிகக் கடுமையாகத் தாக்கினோம். அநேக முறை ரயில்வேக்களைத் தாக்கினோம். சென்ற ஜூலைமீ 27உ மாண்டலே-ரங்கூன் ரயில்வே லைனையும் தாழி என்னும் ரயில்வே ஸ்டேஷனையும் மாண்டலேயி லுள்ள சாமான்கள் இறக்கி ஏற்றும் இடங்களையும் கடுமையாகத் தாக்கினோம். இதனால் பல கட்டிடங்கள் நாச மடைந்ததாககத் தெரிகிறது. அநேகக் கட்டிடங்கள் தீக்கிரை யாகின. தண்டவாளத்தி லிருந்த அநேக வண்டிகளும் சேதப் பட்டன. மற்றொரு முறையும் நம் பிரிட்டிஷ் விமானப் படை அநேக ரயில்வே ஸ்டேஷன்களைத் தாக்கின.

பர்மாவின் மேற்குப் பக்கத்தில் ஆக்யாப் என்னும் துறைமுகப்பட்டினம் இருக்கிறது. இதை மே ஜூன் மாதங்களில் வெகு கடுமையாக பிரிட்டிஷ் விமானப் படைகள் தாக்கின. இதை ஜூலை மாதத்திலும் 4 முறை தாக்கின. ஏராளமான சேதம் ஏற்பட்டது. குறிப்பாக ஆற்றங் கரையிலுள்ள கட்டிடங்களும், படகுகள் கட்டு மிடங்களும் வெகுவாகச் சேதப் பட்டன. அத் துறைமுகத்தைச் சேர்ந்த ஆற்றி லிருந்த கப்பல்களையும் விமான நிலயத்தையும் கூடக் கடுமையாகத் தாக்கின.

அமெரிக்க விமானிகளும் பிரிட்டிஷ் விமானிகளும் சிறந்த முறையில் ஜயிதரியாறு என்னுமிடத்திலுள்ள விமான நிலயத்தையும் அதைச் சுற்றியுள்ள படை வீடுகளையும் தாக்கின. அன்றியும் மியித்சியானாவிற்கும் மாண்டலேக்கும் இடையிலுள்ள மோகாங் என்னும் ரயில்வே ஸ்டேஷனையும் தாக்கின.

இப்போது மழை காலமாக விருந்தபோதிலும், நம் விமானப் படைகள் இதைப் பொருட் படுத்தாமல், தம வேலைகளைத் தவறாது செய்து முடித்திருக்கின்றன.

---

# இந்திய பாதுகாப்புகளின் சிறப்பு

## கமிட்டி சுற்றுப் பிரயாணம்

சமீபத்தில் இந்திய சட்ட சபையார் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். இதன் பெயர் பாதுகாப்பு ஆலோசனைக் கமிட்டி. இதில் கனம் பண்டித எச். என். குன்ஸ்ரு, கனம் சர்தார் பூத சிங், கனம் சர் பிரெடிரிக் ஜேம்ஸ், கனம் ஏ ஹஸ்ஸெய்ன் பாய், ஏ. லால்ஜி, கனம் ஜமுனா தாஸ் மேத்தா, கனம் தேஷ்முக், கனம் கயாசுதீன் ஆகியோர் அங்கத்தினர்கள். இவர்கள் கீழ்க்கிந்தியாவில் உள்ள கடற்கரை ப் பாதுகாப்புகளையும் மற்ற இராணுவ ஸ்தாபனங்களையும் பார்வையிட்டு சமீபத்தில் தான் திரும்ப வந்து சேர்ந்தார்கள்.

இந்தியாவின் கீழ் பாகத்தைப் பாதுகாக்க வேண்டி நம் படைகள் செய்துள்ள ஆயத்தங்களைக் குறித்து அவர்கள் மனதில் நன்றாகப் பதிந்தது. தற்காலத்திய யுத்தத் தளவாடங்களும் மற்ற தேவைகளுக்கான சாமான்களும் ஏராளமா யிருக்கின்றன. ஒவ்வொரு படை வீரரும் மிகுந்த ஊக்கத் தோடிருக்கிறார். படை வீரர்களுக்கு மிகவும் உயர்ந்த முறையில் பயிற்சி இரவும் பகலும் அளிக்கப் படுகிறது. இவற்றை எல்லாம் அவர்கள் நேரில் கண்டு திருப்தி யடைந்தார்கள். இந்தப் படைகள் வேறெந்த படைக்கும் இளைத்த தல்ல என்று அந்த அங்கத்தவர்களுள் ஒருவர் கூறினார். இங்கே இந்தியப் படை வீரர்களும் பிரிட்டிஷ் படை வீரரும் ஒன்றாகவே கற்று வசித்து வருகிறார்கள். ஆகவே இவர்களிடம் சகோதர உணர்ச்சி மிகுந்து வருகிறது.

> நாட்டில் எதிரி கால் அடி எடுத்து வைப்பானால், அவனைச் சின்ன பின்னப் படுத்த என் வீரர்கள் பச்சை மிளகாயைப் போல் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

என்று ஒரு படைத் தலைவர் அவர்களிடம் கூறினார்.

வெடி மருந்துகள் செய்யும் தற்கால முறைகளைக் குறித்தும், இவற்றில் உற்பத்தி நாளுக்கு நாள் அதிகப்பட்டுக் கொண்டு போவதைக் குறித்தும், அவர்கள் மிகவும் அக்கரை கொண்டார்கள்.

இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் தாம் பல விஷயங்களைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்த தென்றும், எல்லாம் திருப்திகரமாகவே இருக்கின்றன என்றும் அங்கத்தினர்கள் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டனர். யுத்தத்திற்கான வெடி மருந்துகள் செய்யும் தொழிலாளியும் படைவீரரும், மிகச் சமீப காலத்தில் கண்டு பிடிக்கப் பட்ட யுத்த ஆயுதங்களைக் கையாளுவதைக் கண்டு அவர்கள் மிகவும் திருப்தி யடைந்தார்கள்.



# கைக் குத்தரிசியைச் சாப்பிடுங்கள்

## சிறந்த சத்தான உணவு

கண்ணையாவிற்கு குமுதம் ஒரே பெண். நல்ல புத்திசாலி. வயது 12 இருக்கலாம். தன் தகப்பனாரோடு சாப்பிட உட்கார்ந்தாள் குமுதம். அன்று சோறு சற்று சிவந்திருந்தது. எப்போதும் வெள்ளையான சோற்றை சாப்பிட்டுப் பழகியவள். ஆகையால் அறுவறுப்புக் கொண்டாள்.

கண்ணையா.—என்னம்மா முகத்தைச் சுழிக்கிறெ !

குமுதம்.—சாதத்தெ பாருங்கப்பா ! என்னமோ செவந்திருக்குது.

கண்ணையா.—ஆமாம்மா ! இது கைக்குத்தரிசிச் சோறு. கொஞ்சம் சிவந்து தான் இருக்கும்.

குமுதம்.—இதெ, நம்ப சாப்பிட்டதே கிடையாதே ; உடம்புக்கு ஒண்ணும் செய்யாது ?

கண்ணையா.—ஒன்றும் செய்யாது. உடம்புக்கு ரொம்ப நல்லது. மிஷினில் குத்திய அரிசியை விட இதில் தான் சத்து அதிகம்.

குமுதம்.—அது எப்படி அப்பா ?

கண்ணையா.—மிஷின் அரிசியை நன்றாகத் தீட்டி விடுகிறார்கள். அதனால் அதிலுள்ள சிறந்த உணவுச் சத்து போய் விடுகிறது.

குமுதம்.—அப்படியானால், தவிடு தான் மிகவும் சத்தானது என்கிறீர்களா ?

கண்ணையா.—அமா. அது மட்டுமல்ல. மிஷினில் அரைப்பதில் கண்டுமுத லாகிறதை விட, கைக் குத்தில் அதிகம் கண்டுமுத லாகும்.

குமுதம்.—நம் நாட்டிலே உள்ளவுங்க அத்தனைப் பேருக்கும் போதுமான அளவு, இங்கே நெல் விளைகிற தாப்பா ?

கண்ணையா.—விளைந்து கொண்டு தான் இருந்தது ; ஆனால் சென்ற சில வருஷங்களாகப் போதுமான அளவிற்கு விளை வில்லை.

குமுதம்.—இன்னும் எங்கெல்லாம் நெல் விளைகிறது ?

கண்ணையா.—பர்மா, இந்தோசீனா, தாய்லந்து முதலிய இடங்களில்.

குமுதம்.—அங்கே விளையும் நெல்லை இங்கே அவுங்க அனுப்ப மாட்டாங்களா ?

கண்ணையா.—அனுப்பிக் கொண்டு தான் இருந்தார்கள். வருஷந் தோறும் 11 லட்சம் முதல் 26 லட்சம டன் வரை, சென்ற 10 வருஷங்களாக இறக்குமதியாகிக் கொண்டிருந்தது.

குமுதம்.—இது அவ்வளவும் நம்ப மாகாணத்திலேயே செலவாகி விட்டதுவா ?

கண்ணையா.—இல்லை ; இதில் 5 முதல் 7 டன் வரை வருஷந் தோறும் நம் மாகாணத்தில் செலவானது.

குமுதம்.—நம் மாகாணத்திற்கு வருஷந் தோறும் எவ்வளவு அரிசி தேவைப் படும் ?

கண்ணையா.—50 முதல் 70 டன்கள் வரை.

குமுதம்.—இவ்வளவு அரிசி இறக்குமதி யாகும் போது, ஏன் நாம் கைக்குத் தரிசிச் சாப்பிட வேண்டும்.

கண்ணையா.—முதலாவதாக, உடம்பிற்கு நல்லது என்று முந்தியே சொல்லி யிருக்கிறேன் ; இரண்டாவதாக, இப்போது அரிசி இறக்குமதி நின்று விட்டது.

குமுதம்.—ஏன் நின்று விட்டது ?

கண்ணையா.—நம் நாட்டிற்கு அரிசி அனுப்பிக் கொண்டிருந்த நாடுகள் எல்லாம் இப்போது எதிரி வச மிருக்கின்றன.

குமுதம்.—இன்னும் எந்தெந்த நாடுகளுக்கு அரிசி அங்கிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது ?

கண்ணையா.—இலங்கைக்கும் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இப்போது அங்கேயும் அரிசி கிடைப்பது கஷ்டமாகத் தான் இருக்கிறது.

குமுதம்.—அப்படியானால், அங்குள்ளவர்கள் எதைத் தான் சாப்பிடுகிறார்கள் ?

கண்ணையா.—நம் நாட்டிலிருந்து அவர்களுக்கு அரிசி அனுப்புகிறோம்.

குமுதம்.—நம் நாட்டின் விளைச்சல் நமக்கே போதவில்லையே ; வேறு நாடுகளுக்கு எப்படி ஏற்றுமதி செய்வது ?

கண்ணையா.—அதற்காகத் தான் நாம் கைக்குத்தரிசிச் சாப்பிட வேண்டும் என்று சொல்லுவது. அல்லாமலும் விவசாயிகளெல்லாம் உணவுப் பொருள்களை மிகுதியாகப் பயிராக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் அவர்களுக்கு அநேக வசதிகளை யளித் திருக்கிறார்கள்.

குமுதம் :—இப்போது யுத்தம் நடைபெறுகிறதே, அங்குள்ள படைகளுக்கும் அரிசிவேண்டாமா ?

கண்ணையா :—ஆமா. அவர்களுக்கும் தான் வேண்டும். இதைப் பற்றி ஆலோசிக்க வேண்டி சென்ற ஏப்ரல் மாதம் 6-ம் தேதி புது டில்லியில் அரசாங்கத்தார் ஒரு கூட்டம் நடத்தினார்கள்.

குமுதம் :—அங்கே என்ன நடந்தது.

கண்ணையா :—மிஷின் அரிசிக்குப் பதிலாக கைக்குத்தரிசியைச் சாப்பிடும் படியும், உணவுப் பொருள்கள் சாகுபடியை அதிகப் படுத்தும்படியும் பொது ஜனங்களுக்குச் சிபார்சு செய்வ தென்று தீர்மானித்தனர்.

குமுதம் :—தவிட்டில் சத்தான பதார்த்த மிருக்கிறதென்று சொன்னீர்களே ; புழுங்கல் அரிசியில் சத்தான பதார்த்தமிருக்கிறதா ?

கண்ணையா :—மிஷின் பச்சரிசியை விட, கைக்குத்துப் புழுங்கலரிசியில் சத்து அதிகம்.

குமுதம் :—எதனால் இப்படிச் சொல்லுகிறீர்கள் ?

கண்ணையா :—வட சர்க்காரில் பெரும்பாலும் மிஷன் அரிசியைத் தான் உபயோகிக்கிறார்கள். அவர்களுக்குள் பெரி பெரி என்னும் நோய் அதிகம். புழுங்கலரிசி கையால் குத்தப்பட்டதைச் சாப்பிடுகிறவர்களுக்கு இந்த நோய் வருவது கிடையாது. இதிலிருந்து மிஷின் பச்சரிசியை விட, கைக்குத்தல் புழுங்கலரிசியில் அதிக சத்திருக்கிற தென்று தெரியவில்லையா ?

குமுதம் :—கைக்குத்தரிசியையே எல்லோரும் சாப்பிட்டால், அரிசி கண்டுமுதல் அதிகமாகு மல்லவா ?

கண்ணையா :—ஆமா. மிஷின் அரிசி கண்டுமுதலாவதை விட 100-க்கு 6 பங்கு அதிகமாக கைக்குத்தரிசி கண்டு முதலாகும். அதாவது அதிகப்படியாக 2 லட்சம் டன் அரிசி கண்டு முதலாகும்.

குமுதம் :—மற்ற தானியங்களையும் அதிகமாகப் பயிராக்க வேண்டாமா ?

கண்ணையா :—ஆமா. பயிர் செய்யத் தான் வேண்டும். உதாரணமாக, சோளம், கம்பு, கேழ்வரகு, தினை ஆகியவை மிகவும் சத்தான உணவுகள்.

குமுதம் :—அப்படியானால், அவற்றை ஏன் சாப்பிடக் கூடாது.

கண்ணையா :—அவற்றையும் சாப்பிடலாம். கைக்குத்தரிசியில் உள்ள சத்து இவற்றிலும் இருக்கிறது.

குமுதம் :—இவற்றை சாப்பிடுவதனால் நோய் ஒன்றும் வராதே ?

கண்ணையா :—வராது. பெரி பெரி என்னும் நோய் வர ஒட்டாதபடி இவை தடுக்கின்றன.

குமுதம் :—அப்பா. இனிமேல் நான் ஒரு வேளை கைக்குத் தரிசிச் சோறும், மற்றொரு வேளை அந்தத் தானியங்களில் ஒன்றை சமைத்தும் சாப்பிடுவேன், நீங்களும் அப்படியே சாப்பிடுகிறீர்களா ?

கண்ணையா :—கட்டாயம் சாப்பிடுகிறேன் அம்மா !

## யுத்த சேத ஜாபிதா

கீழ்க்கண்டவர்கள் யுத்தத்தில் இறந்து போனார்கள் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

| நெம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **இந்தியன் இஞ்சினீர்கள்.** | | |
| 13973 | ஜமேதார் | கே. கண்ணன். |
| **சென்னை சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்.** | | |
| 19299 | லான்ஸ் நாயிக், (பி.டி.) | முனுசாமி. |
| 1680 | டபுள்யு. சி. | நாராயணசாமி நாயுடு. |
| **ஆக்ஸிலெரி பயனியர் படை.** | | |
| 189302 | லேபரர் | நாராயண நாயர். |
| **ஐ.எஸ்.சி.** | | |
| 9627 | சிக்னல்மான் | கிருஷ்ண ராவ். |
| 02650 | டபுள்யு/சி. ஆர். | சின்னசாமி. |
| 16108 | நாயிக் | சுப்பிரமணி. |
| 17023 | லான்ஸ் நாயிக் | சீதாராம ரெட்டி. |
| 13753 | ஷை | மகபூப்கான். |
| 17271 | ஷை | மீராகான். |
| 18390 | சாப்பர் | அப்துல் சத்தார். |
| 17623 | ஷை | முகமத் ஈசூப். |
| 16795 | ஷை | ஷேக் இப்ராஹிம். |
| 1100 | டபுள்யு/சி. ஆர். | துரைசாமி. |
| 1296 | சமையல்காரர் | முனுசாமி ராவ். |
| **ஐ.எச்.சி.** | | |
| எச்./86172 | எ. சிப்பாய் | பி. லட்சுமையா. |
| **ஐ.எஸ்.சி.** | | |
| எ. 3387 | சிக்னல்மான் | கிருஷ்ணன். |
| எ. 2671 | யு. லான்ஸ் நாயிக். | டி. சி. சுப்பிரமணியன். |
| ஓ. 2612 | சமையல்காரர் (பி.டி.) | சாமி. |
| **ஐ.ஜி.எஸ்.சி.** | | |
| ஜி.எஸ்.எப்./8100 | மசாலிச்சி | ஜி. துரைசாமி. |

### காணமற் போய் யுத்தக் கைதிகளானவர்கள் என்று கருதப் படுபவர்கள்.

| | | |
|---|---|---|
| **இந்தியன் ஆர்டில்லெரி** | | |
| | டி/மேஜர் | குமாரமங்கலம், பி. பி. |
| **சென்னை சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்** | | |
| 12718 | எ. சுபேதார் | அந்திலிங்கம். |
| 12806 | ஜமேதார் | இராஜலிங்கம். |
| 13820 | ஷை | வெங்கையா. |
| **இந்தியன் இஞ்சினீர்.** | | |
| இ/112832 | ஜமேதார் | ராவ் ஜி. எஸ். |
| **ஆர். ஐ. எ. எஸ். சி.** | | |
| 13568 | பி/எ/சுபேதார் | சந்திரகாசன். |
| எஸ். ஆர்./120430 | ஜமேதார் | என். கே. மகாதேவன். |
| **ஐ. எம். டி.** | | |
| 65/எம். இ. | ஜமேதார் | பரக்கி அச்சுத ராவ் வேணுகோபால். |
| எம். இ/97 | ஷை | வேங்கடேஸ்வரன். |
| **ஐ.எஸ்.சி.** | | |
| எ. 1443 | சிக்னல்மான் | சின்னசாமி. |
| எ. 3971 | ஷை | சி. எச். குன்னி ராமன் நாயர். |
| எ. 1560 | ஷை | டி. வி. குஞ்சன் குட்டி நம்பியார். |
| எ. 3839 | ஷை | நாகபூஷணம். |
| எ. 8771 | ஷை | இராஜகோபால், கே. வி. |
| எ. 2934 | ஷை | இராமநாதன். |
| ஓ. 5118 | சமையல்காரர். | துரைராஜ். |
| ஓ. 2651 | பெருக்குவோன். | முனுசாமி. |
| எ. 1924 | யு. லான்ஸ் நாயிக். | யதார்த்தடு. |

### யுத்தக் கைதிகளானவர்கள் என்று உறுதி செய்யப்பட்டவர்கள் :—

| | | |
|---|---|---|
| **சென்னை சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்.** | | |
| 17575 | சாப்பர் | அப்பலசாமி. |
| 18296 | ஷை | ஓம்மி எல்லையா. |
| 14644 | ஷை | பொன்னுசாமி. |
| 16918 | ஷை | ராயப்பன். |
| 17297 | நாயிக் | துரைசாமி. |

### காணமற் போய் யுத்தக் கைதியானவரென்று கருதப்பட்டு மீண்டும் படையோடு வந்து சேர்ந்தவர்.

| | | |
|---|---|---|
| **ஐ.எம்.எஸ்.** | | |
| எம். ஜெட்/20747 | காப்டன். | பி. சி. சீனிவாசன். |

### காயப்பட்டவர்கள்.

| | | |
|---|---|---|
| **சென்னை சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்.** | | |
| 18319 | சாப்பர் | இராஜகோபால். |
| 13016 | ஷை | புரான் ஷெரீப். |
| 17708 | ஷை | முனுசாமி. |
| 18464 | ஷை | சங்கர். |
| 16283 | ஷை | வரதன். |
| **ஐ. எஸ். சி.** | | |
| 22620 | சிக்னல்மான். | இ. தாமோதரம். |
| எ. 3851 | ஷை | எஸ். பாக்யநாதன். |

### காணமற் போனவர்கள்.

| | | |
|---|---|---|
| **சென்னை சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்.** | | |
| 63723 | சாப்பர் | தேவராஜ படையாச்சி. |
| 1892 | சமையல்காரர் | சீனிவாசன். |
| **ஐ. எ. ஓ. சி.** | | |
| ஓ. 115711 | சிப்பாய்/டர்னர் | அப்துல் கபூர். |
| எம்.டி./948543 | ஷை/டிரைவர் | ஆறுமுகம். |
| 103367 | ஷை/பிட்டர் | கே. கோதண்டம். |
| 103530 | ஷை | பராங்குசம், ஆர். |
| 4936 | பயனியர் | ஏழுமலை. |
| 5011 | ஷை | நாராயணசாமி. |
| 50123 | ஷை | சுப்பிரமணி, பி. |
| 49834 | நாயக் | தாமஸ். |
| 49999 | பயனியர் | வெங்கடப்பா. |
| **ஆர். ஐ. ஏ. எஸ். சி.** | | |
| எம்.டி/901675 | சிப்பாய் | அலாவுதீன்கான். |
| எம்.டி/912512 | பி. எ. லான்ஸ் நாயிக். | பலராம். |
| எம் டி/910671 | சிப்பாய் | பங்காரு. |
| எம்.டி/944339 | ஷை | குன்னம்பு நாயர். |
| **ஐ. ஏ. ஓ. சி.** | | |
| ஓ/74240 | சிப்பாய்/டி. ஆர். | சுப்பிரமணியம். |

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஆகஸ்ட்டு மீ 21வ, வெள்ளிக்கிழமை [இதழ் 33

## ஜப்பானியர் அக்கிரம ஜாபிதா

### பெண்களையும் மானபங்கம் செய்யும் கொடுமை

### நேரில் கண்டவர் கூறும் விவரங்கள்

இந்தக் கட்டுரை சென்னை யுத்த சஞ்சிகையின் ஆங்கிலப் பதிப்பி லிருந்து சுருக்கி மொழி பெயர்க்கப் பட்டது. இதை எழுதியவர் ஜப்பானில் 15 வருஷங்கள் இருந்தவர். அவர்களுடன் நெருங்கிப் பழகியவர். இவருக்கு வெளி நாடுகளி லுள்ள ஜப்பானியர்கள் பலர், நண்பர்கள். தான் தெரிந்து கொண்டிருக்கும் அளவிற்கு, ஜப்பானியர்களைக் குறித்து, வெளி நாட்டார் தெரிந்து கொண்டிருக்க முடியாது என்று அவர் கூறுகிறார். அவர் மேலும் கூறுவதாவது :—

குறிப்பாக ஷாங்கையி லுள்ள ஜப்பானியர்களைக் குறித்து நான் நன்றாக அறிவேன். ஆரம்ப காலத்தில் சீனாவின் சில பகுதிகளை ஜப்பானியர் கைப்பற்றிய போது, அங்கே ஒரு இரகசிய ஸ்தாபனம் ஏற்பட்டது. அதில் நான் ஒரு அங்கத்தினனா யிருந்தேன். அப்போது ஷாங்கை ஜப்பானியர் வசமிருந்தது. ஷாங்கை நகரச் சரித்திரத்திலேயே இது மிகவும் கடுமையான காலம்.

சீனாவில் சர்வ தேசப் பகுதி என்று ஒரு பகுதியிருக்கிறது. இதற்கு பிரஞ்சுக்காரர்கள் பகுதி யென்றும் பெயர். மகா ஷாங்கை என்று ஒரு பகுதியும் அங்கே இருக்கிறது. இந்த இரண்டு பகுதிகளிலும் ஜப்பானியர்களும் சீனர்களும் வெளிக்கு மட்டும் சமாதானமாக வாழ்ந்து வந்தார்கள். இந்தப் பகுதிகளில் ஜப்பானியர்களுக்கு ஆதிக்கம் இல்லை. உத்தியோக முறையிலும் இங்கே யுத்தம் நடைபெறவில்லை. உண்மையிலேயே இரு நாட்டாருடைய மனத்திலும் தீ மூண்டு கொண்டிருந்தது. ஜப்பானிய இராணுவத் தலைவர்கள் சில கையாட்களை வைத்திருந்தார்கள். தேசப் பற்றுடைய சீனர்களையும் சீன வியாபாரிகளையும் அவர்களிடம் அனுதாபமா யிருக்கிறவர்களையும் இந்தக் கையாட்கள் கடுமையான துன்பங்களுக்கு உட்படுத்தினார்கள்.

கொலைகள், ஆட்களையே தூக்கிக்கொண்டு போய் விடுவது, அடிதடிகள், வெடி குண்டுகளை எறிவது ஆகியவை நாள் தோறும் நடைபெற்றன. "ஷாங்கை ஈவினிங் போஸ்ட் அண்டு மெர்குரி" என்னும் தினசரிப் பத்திரிகை ஆபீஸ் வெடி குண்டுகளுக்கு ஆளானதைப் போல, உலகத்திலேயே வேறெந்தப் பத்திரிகை ஆபீசும் ஆளானது கிடையாது.

நான் ஒரு இரகசிய ஸ்தாபனத்தின் அங்கத்தினனா யிருந்தே னென்று முன்னமேயே தெரிவித்தேன். இது போல அநேக ஸ்தாபனங்கள் அங்கே யிருந்தன. சூங்கிங் ஆட்சிக்கு உட்பட்டு, அந்நிய நாட்டார் பகுதியிலிருந்தவர்கள், வசித்து வந்தார்கள். இவர்களுடைய உயிர்களையும் சொத்துக்களையும் காப்பாற்றுவதும் இந்தப் பகுதிக்குப் பக்கத்தில் வசிக்கிற ஜப்பானியப் படைகளைத் துன்பப் படுத்தி சிதறிப் போகும்படி செய்வதும் தான், இந்த ஸ்தாபனங்களின் நோக்கம். இந்த ஸ்தாபனங்களில் பிரித்தானியர்கள், அமெரிக்கர்கள், ரஷ்யர்கள், பிரஞ்சுக் காரர்கள், இரண்டொரு இந்தியர்கள் முதலியோர் அங்கத்தினர்களா யிருந்தார்கள். இவர்களுக்குப் போதுமான அளவு பணம், ஊக்கம், வீரம் ஆகியவை இருந்தன. என்றாலும், அவர்களுக்கு ஒரு கஷ்டம் இருந்தது. இதில் கலந்து கொள்ள முடியா தென்று உத்தியோக முறையில் சீன அரசாங்கத்தார் அவர்களுக்கு அறிவித்து விட்டார்கள்.

போர்க் களத்தி லில்லாத சமயங்களில் ஜப்பானியப் படை வீரர்கள் என்ன வெல்லாம் செய்யக் கூடியவர்கள் என்று தெரிந்து கொள்ள இந்த வருஷம் தான் எனக்கு நல்ல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அந்நிய வட்டாரங்களில் மிகச் சிறந்த முறையில் துப்பறிவதில் ஜப்பானியர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். ஆனால் சீன வட்டாரங்களில் துப்பறிவதற்கு மிகவும் முட்டாள் தனமாகவும் இவர்கள் நடந்து கொண்ட துண்டு. அவர்களுடைய படைத் தலைவர்கள் சில சமயங்களில் திறமை யில்லாமல் நடந்து கொள்ளுகிறவர்கள் என்று வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. படைகளும் தகுந்தபடி பயிற்சி பெற்றில்லை. ஆனாலும் சனியனின் முனையால் தாக்கப்படும் போதுங் கூட, அவர்கள் மகா உக்கிரமாகத் தான் போராடுகிறார்கள். சாதாரணமாக நகரங்களில் வசிக்கும் போது, மிகவும் மரியாதையாகவே நடந்து கொள்ளுகிறார்கள்.

கொடுமைப் படுகிறவர்களுக்கு உதவ வேண்டும் என்பது தான் எனது நோக்கம். இதன் பொருட்டுத் தான் அந்த இரகசிய சங்கத்தில் நான் சேர்ந்தேன். நான் ஜப்பானில் இருக்கும் போது என்னிடம் அவர்கள் மிகுந்த மரியாதை யோடு தான் நடந்து வந்தார்கள். ஜப்பானிய இராணுவங்களை ஒரு வருஷ காலம் நேரில் பார்த்தேன். பிறகு, அவர்களைப் பற்றி நான் கொண்டிருந்த எண்ணத்தை அடியோடு மாற்றி விட்டேன். அவர்கள் மீது வெறுப்பு உண்டாகி விட்டது. இதற்குக் காரணம் அவர்களுடைய மகா மிருகத் தனமான நடவடிக்கைகளும், அயோக்கியத் தனங்களும், பாழாக்கும் மனப் பான்மையும் தான். நேர்மையும் ஒழுக்கமும் உடையவர்கள் யதேச்சையை நாடுகிறவர்கள். இவர்கள், பொய்ப் பிரசாரத்தையும் பொய் வதந்திகளையும் மதிக்க மாட்டார்கள்.

அடுத்த நான்கு வருஷங்கள் நான் சீனாவில் ஒரு பத்திரிகையின் யுத்த நிருபராக விருந்தேன். அப்போது நான் நேரில் கண்ட கொடுமைகளை விவரித்துக் கூறுவது முடியாத காரியம். இடமும் போதாது. என்றாலும், சில சம்பவங்களைக் குறித்து சொல்லாமல் இருக்கவும் முடியாது.

நாங்கிங் நகரம் ஜப்பானியர் வசமானது. அப்போது நான் அங்கே யில்லை. நம்பத் தகுந்தவர்கள் அப்போது அங்கே யிருந்தார்கள். அவர்கள் கூறிய விவரங்களி லிருந்து, கொலையும் கொள்ளையும் எவ்வளவு கொடுமையாக நடந்திருக்கின்றன என்று தெரிகிறது. இவற்றைக் குறித்துக் கேள்விப் பட்ட நாகரிக உலகம் திடுக்கிட்டு விட்டது. இப்படிப் பட்ட நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்னும் பொறுப்பை, துரதிர்ஷ்டவசமாக, அரசாங்கம் உணர வில்லை.

**ஜப்பானியர் செய்த கொடுமைகள்.**

நாங்கிங் நகரத்தை ஜப்பானியர் பிடித்து 6 மாதங்கள் ஆகிவிட்டன. ஒரு ஜப்பானிய காவற் சேவகன் கடைத் தெரு வழியாக வந்தான். ஒரு சீனக் கடைக்காரன் அவனுக்கு வணக்கம் செலுத்தவில்லை. இதைத் தன் தலைவனிடம் அந்தச் சேவகன் சொன்னான். உடனே அந்

தக் கடைக்காரனைக் குடும்பத்தினரோடு இழுந்து வரச் செய்தான். இவருக்கு ஒரு மனைவியும் 3 குழந்தைகளும் இருந்தனர். இவருடைய துணிகளை எல்லாம் உரிந்தனர். மூங்கில் முக்கோணத்தில் இவரைத் தலை கீழாக உயரத்தில் தொங்க விட்டார்கள். இவருடைய மூத்த மகனை, இந்த முக்கோணத்திற்கு மேலே ஏற்றினார்கள். அவன் கையில் கொதிக்கும் தாரைக் கொடுத்தார்கள். ஒரு சல்லடை வழியாக அவனுடைய தகப்பனுடைய உடலில் விழும்படி அதை ஊற்றச் சொன்னார்கள். இச்சிறுவனைச் சுற்றிலும் சனியன்களைக் காட்டி பயமுறுத்தினார்கள். சிறுவன் தானே. மிகவும் பயந்தான். கட்டளைப் படியே ஊற்றினான். அப்போது தன் தந்தை படும் துன்பத்தைக் கண்டான். அங்கிருந்து கீழே விழுந்தான். ஜப்பானியச் சனியன்கள் அவன் மேல் பாய்ந்தன. இருவரும் மடிந்தனர். அதன் பிறகு அவருடைய மனைவியை ஜப்பானியப் படை வீரர்களுக்கு இழுத்துக் கொண்டு போனார்கள். அங்கே என்ன நேர்ந் திருக்கு மென்று சொல்லவே வேண்டிய தில்லை.

ஹாங்கோ என்னும் நகரத்தில் ஹாவர்ட் என்பவர் வசித்து வந்தார். இவர் ஒரு நல்ல பந்தாட்டக்காரர். ஷாங்கையிலும் ஹாங்காங்கிலும் இவருக்கு நல்ல புகழுண்டு. இவருடைய வீட்டிற்குள் ஜப்பானிய போர் வீரர்கள் நுழைந்தார்கள். இவருடைய மனைவியை மான பங்கம் செய்ய முயன்றார்கள். இவர் இதைக் கடுமையாக ஆட்சேபித்தார். இவர் செய்த 'குற்றம்' இது தான். உடனே கட்டளை பிறந்தது. "கேவலமான மேல் நாட்டுப் பாடங்களை உளற கற்றுக் கொண்டிருக்கும் தான் தோன்றி சீனாக்காரனுக்குத் தகுந்த பாடம் சொல்லிக் கொடுக்கிறேன்." என்றார் அந்தப் படைத் தலைவர்.

அங்கே ஜனங்கள் மிகவும் நெருக்கமாக வசிக்கும் இடத்தில் ஒரு மைதான மிருக்கிறது. இந்த மைதானத்தில் ஜப்பானிய வீரர்கள் வட்டமாக நின்று வளைத்துக் கொண்டார்கள். இவர்களுக்கு நடுவே யுள்ள மரத்தில், ஹாவர்டைக் கட்டினார்கள். முகத்தைக் காயப்படுத்தி இரத்தக் களறி யாக்கினார்கள். அவருக்கு முனனே, அவருடைய மனைவியை இழுத்து வந்தார்கள். அந்தம்மாளுடைய முகத்தில் மிகவும் குளிர்ந்த தண்ணீரை வீசினார்கள். எல்லோருக்கும் மத்தியில் அவருடைய உடையை அவிழ்த்தார்கள். ஒவ்வொருவராகப் புணர்ந்தார்கள். இந்தக் கொடுமையைக் கண்ட ஹாவர்ட் உயிர் விட்டார். அடுத்து அவருடைய மனைவியும் உயிர் துறந்தார்.

**மற்றோர் கொடுமை.**

ஒரு தோட்டத்தில் ஒரு ஆறு. அதற்குப் பாலம் ஒன்றிருந்தது. அதன் மேல் ஒரு கருப்பவதி நின்றிருந்தாள். இவள் ஒரு சீனப் பெண். ஒரு ஜப்பானியப் போர்வீரன் அங்கே வந்தான். அப் பெண்ணை வயிற்றில் உதைத்தான். அந்த ஆற்றில் ஒரு பிரிட்டிஷ் கப்பல் இருந்தது. அதிலிருந்து ஒரு இஞ்சினீர் இதைக் காணச் சகியாது அங்கே ஓடினார். மறுபடியும் அப் பெண்ணை உதைக்க அந்த ஜப்பானியன் காலைத் தூக்கினான். அவன் கையி லிருந்த துப்பாக்கியை இந்த இஞ்சினீர் பிடுங்கி, அதனால் அவனை அடித்தார். கீழே விழுந்தான். அவனைத் தூக்கி நிறுத்தி மறுபடியும் ஒரு அடி அடித்தார். ஆற்றில் விழுந்தான். இரண்டு நிமிஷங்களில் அந்த இஞ்சினீர் தலையைப் பிளந்து விட்டார்கள். வயிற்றை கிழித்து விட்டார்கள். ஆனால், இரண்டு ஜப்பானியப் போர் வீரர்களை அந்தக் கப்பலின் தலைவர் சுட்டார். இவர்களுள் ஒருவர் மாண்டார். மற்றொருவர் உயிர் தப்பினார்.

என்றாலும், பிரிட்டிஷ் மாலுமி ஒருவர் குடித்து விட்டு இரண்டு ஜப்பானியர்களைக் கொன்று விட்டதாகவும், அதனால், அவரை ஜப்பானியர் கொல்ல நேர்ந்த தென்றும் பொய்க் கதை கட்டி விட்டார்கள்.

**நடுத் தெருவில் நிர்வாண நாட்டியம்.**

நடுத் தெருவில் நல்ல குடும்பப் பெண்கள் தம் உடைகளை யெல்லாம் அவிழ்த்து வைத்துவிட்டு நிர்வாணமாக ஆட வேண்டு மென்று சனியன்களைக் கொண்டு நிர்பந்தித்தார்கள், அப்படிச் செய்ய மறுத்த ஒரு பெண்ணை, ஒரு மூங்கில் குச்சியால் வயிற்றை கிழித்துக் கொன்றார்கள்.

ஒரு இடத்தில் சுமார் 60 சீனர்கள் பள்ளந் தோண்டிக் கொண்டிருந்தார்கள். பிறகு ஒவ்வொருவர் கையிலும் ஒரு கனத்த மூங்கில் தடியை ஜப்பானியப் போர் வீரர்கள் கொடுத்தார்கள். இந்தத் தடிகளைக் கொண்டு, ஒருவரை யொருவர் அடித்துக் கொல்லும்படி தூண்டினர். ஒரே இரண களந்தான். அநேகர் மாண்டனர். சாகத் தப்பியவர்களை, ஜப்பானியர்களே குத்திக் கொன்றனர். எல்லாப் பிணங்களையும் அவர்கள் தோண்டிய குழிகளிலேயே போட்டுப் புதைத்தனர்.

இப்படியுங் கூட நடந்திருக்கக் கூடுமா என்று சிலர் சந்தேகிக்கலாம். இவை உண்மையாகவே நடந்த சம்பவங்கள். இன்னும், ஜப்பானியர்கள் இந்தியாவைக் கைப்பற்றுவார்களானால், இதுபோலத் தானே நடத்துவார்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் சீனாவிலும் பர்மோசாவிலும் கண்ட காட்சிகளை, இந்தியாவில் ஜப்பானியர்களை வரவேற்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள், கண்டிருக்க வேண்டும்!

# கூட்டு அரசாங்கம் அமைய வேண்டும்.

## இந்திய அரசாங்கம் செய்ய வேண்டிய தென்ன?

### உண்மை நிலையை கட்சிகள் உணர வேண்டும்.

அகில இந்திய தாழ்த்தப்பட்டவர் வகுப்பினர் சங்கத் தலைவரான ராவ் பகதூர் எம். சி. ராஜா எழுதியதன் சுருக்கமாவது:—

இப்போது இந்தியாவிற்குக் கிழக்கே யிருந்தும் மேற்கே யிருந்தும் ஆபத்துக்கள் நேரக் கூடும். இந்தச் சமயத்தில் இந்தியாவை விட்டு ஆங்கிலேய அரசாங்கம் வெளியேறி விட வேண்டு மென்று காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித் திருக்கிறது. இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாக விளங்குகிறது. காலஞ்சென்ற டப்ள்யு சி. பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி முதலியோர் தோற்றுவித்து, திலகர் கோகலே முதலியோரால் வளர்க்கப்பட்டது இது வல்ல வென்று தோன்றுகிறது. டாக்டர் பெசண்ட் அம்மையார் தோற்றுவித்த 'ஹோம் ரூல்' இயக்கத்தைப் பான்றதாகவும் இது இல்லை. அரசாங்கத்தி லுள்ள குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லுவது, அவற்றை எப்படி திருத்திக் கொள்ளுவது என்பது பற்றி யோசனை கூறி, படிப் படியாக சுயராஜ்யம் பெறுவது, ஆகிய இவை தான் அந்தக் காங்கிரஸின் நோக்கங்கள். மற்றும், இந்நாட்டி லுள்ள எல்லா வகைச் சாதியினரையும் ஒனறு படுத்தி, அரசாங்கத் தோடு ஒத்துழைத்து, அரசாங்கமும் பொது மக்களும் ஒன்று தான் என்னும் எண்ணத்தை உண்டாக்குவதும் அந்தக் காங்கிரஸின் நோக்க மாகும்.

பொது ஜனங்களின் தேவைகள் இன்னின்னவை என்று அரசாங்கம் உணர்ந்து கொள்ளுவதற்கு உதவும் பொருட்டு ஒரு ஸ்தாபனம் இருக்க வேண்டு மென்று யோசனை கூறியவர், டப்ரின் பிரபு. இந்தியன் சிவில் சொர்விஸை விட்டு உபகாரச் சம்பளம் பெற்று விலகியவரான ஹியூம் இதைத் தோற்றுவித்து இரவு பகலாக உழைத்தார். இந்த ஸ்தாபனத்திற்கு சர் வில்லியம் வெட்டர்பர்ன், சார்ல்ஸ் ப்ராட்லா போன்றவர்கள் தம் ஆலோசனைகளைக் கூறி வளர்த்தார்கள்.

> காங்கிரசுக்கு, அஸ்திவாரமாக விருந்து ஆக்கந் தேடியது பிரிட்டிஷ் - இந்தியக் கூட்டுறவு தான்.

இது 1920-ம் வருஷம் வரை இருந்த நிலைமை. பிறகு காந்தியார் தலைவரானார். பெசெண்ட் அம்மையார் அரசியல் உலகத்தை விட்டு விலகினார்கள். அரசாங்கத் தோடு ஒத்துழையா திருப்பதே காங்கிரசின் கொள்கை என்று காந்தியார் கூறினார். இது ஒரு சிறப்பு என்றும் சொன்னார். எனவே, காங்கிரஸ், நிலை தடுமாறி விட்டது. நாட்டின் ஆட்சி முறையில் அதற்கிருந்த ஆதிக்கம் அழிந்தது. இதன் பயனாக பிற்போக்காளர்களுக்கு வால் வளர்ந்தது. இந்த ஒத்துழையாமை இயக்கத்தை இவர்கள் ஆரம்பிக்காவிட்டால், 1935-ம் வருஷத்திய புதிய சீர்திருத்தத்தில் இன்னும் அதிக வசதிகளைப் பெற்றிருக்கலாம். இப்போது, 'இந்தியாவை விட்டு வெளி யேறுங்கள்' என்னும் கூச்சலைக் கிளப்பி யிருக்கிறார்கள்.

> காங்கிரஸ் எந்த நோக்கத் தோடு ஆரம்பிக்கப் பட்டதோ, அதற்கு, இது மாறு பட்ட போக்காகும்.

பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவிற்குச் சுயாட்சி கொடுப்பது பற்றி ஒரு கொள்கையை வைத்திருக்கிறார்கள். இந்தக் கொள்கைப் படி இந்தியாவிற்கு ஏற்பட்டிருக்கக் கூடிய நன்மைகளுக்கும், காந்தியாரின் இந்த விசேஷக் கொள்கையால் ஏற்பட்ட நன்மைக்கும் அதிக வேற்றுமை கிடையாது.

"இந்திய அரசியலில் கொந்தளிக்கும் பெட்ரோல் எண்ணெய்" என்று காந்தியாரைக் குறித்து ஒரு முறை பெசண்ட் அம்மையார் குறிப்பிட்டிருக்கிறார். மகா ஞானியைப் போல சாந்தத்தையும் அஹிம்சையையும் போதிக்கும் இந்த வேஷக்காரர், உண்மையிலேயே ஒரு புரட்சிக்காரர் தான் என்று அந்த அம்மையார் அப்போதே தெளிவாக உணர்ந்தார்கள். அவர்கள் அன்று கூறிய மொழிகள், இன்று பலிக்கின்றன. எப்படி என்றால், இந்திய மக்களை இவர் உள் நாட்டுக் கலகங்களுக்கும் கலவரங்களுக்கும் ஆளாக்குகிறார். இதன் பயனாக ஜப்பானியர்கள் எளிதில் தாக்கிக் கைப்பற்றிக் கொள்ள உதவுகிறார். இதனால் என்ன நேரும் என்று அவருக்கும், அவருடைய சீடர்களுக்கும் தெரியும். ஆனால் மற்றவர்கள் தெரிந்து கொள்ளக் கூடாது என்பது அவர்களுடைய எண்ணம்.

இந்தியர்களுக்கு ஜப்பானியர்கள் நண்பர்கள் அல்ல என்று தான் காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் பிரிட்டிஷாருடைய விரோதிகள் என்று மட்டும் அவர்களுக்குத் தெரியும். இது அவர்களுக்குப் போதுமானது. எதிரிகளுக்கு அவர்களுங் கூட நண்பர்கள் அல்ல; ஆனால் ஜப்பானியர்களின் விரோதிகளுக்கு இவர்களும் விரோதிகள், ஜப்பானியர்கள் இந்தியாவிற்கு வந்தால், தமக்கு ஏதோ நன்மை கிடைக்கு மென்று மனப்பால குடிக்கிறார்கள். எதிரிகள் இங்கே வந்தால் தான் தெரியும். அப்போது காந்தியாரின் கோஷ்டிக்கு பிரிட்டிஷ் சர்க்கார் இணங்குவது தவறு என்று பொது ஜனங்கள் குறை கூறுவார்கள்.

கால்முக்ஸ் சாதியாரை அவர்களுடைய அரசருக்கு விரோதமாகப் புரட்சி செய்யும்படி செபக் டார்ச்சி என்பவர் ஏமாற்றி தூண்டினார். இவரை நம்பி, இவரைப் பின் தொடர்ந்து மத்திய ஆசியாவி லுள்ள பாலைவனங்களுக்கும் அவர்கள் போனார்கள். படாத கஷ்டங்கள் பட்டார்கள். அநேகர் மாண்டார்கள். இத்தனைக்கும் காரணம் தெளிவான ஆலோசனை யில்லாதது தான். இது போலவே புரட்சி செய்யும்படி தூண்டக் கூடியவர்கள் இந்தியாவிலும் இருக்கிறார்கள். இப்படிப் பட்ட ஏமாற்றக்காரர் களிடம் யாரும் சிக்கா திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

**குயுக்திவாதம்**

ஜப்பானியர்களை எதிர்ப்பதற்காகத் தான் இப்போது பிரிட்டிஷாரை எதிர்த்து ஆயுதம் செய்து கொள்ளுவது என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள். இப்படிப் பட்ட மன மாறுதல் எப்படி ஏற்பட முடியும்? பிரிட்டிஷாரை எதிர்க்கும் முறையில் நம் நண்பர்களை எதிர்க்கலாம்; ஆனால் எதிரிகளை யல்ல. பிரிட்டிஷாரை எதிர்க்கிறது என்றால், ஜப்பானியர்களுக்கு உதவுவது என்று தான் அருத்தம். விஷயந் தெரிந்தவர்கள் கூட, இப்படி பொது ஜனங்களை ஏமாற்றும் பொருட்டு, தம் அறிவையும் செயலையும் அடிமைப் படுத்திக் கொள்ளுவது மிகவும் வருந்தத் தக்கது தான்.

காங்கிரஸ் உண்மையிலேயே எதற்காகப் போராடுகிறது என்று தெரிந்து கொள்ளுவது கஷ்டமாகத் தான் இருக்கிறது. பூரண சுயாட்சி என்பது ஒரு புகலான காரணம். இதில் பெரும் பகுதி ஏற்கெனவே கிடைத்து விட்டது. சுயேச்சையின் தத்துவம் ஏற்கெனவே இதில் அடங்கி யிருக்கிறது. இந்தியாவிற்குச் சுயாட்சி வழங்கப் போவதாக ஏற்கெனவே உலக மறிய பிரிட்டிஷ் அரசாங்கம் சொல்லி விட்டது. தம் மனம் ஒன்று செயல் வேறாக உள்ளவர்கள் தான், பிரிட்டிஷார், சொல்வது போல நடந்து கொள்ள மாட்டார்கள் என்று கூறுவார்கள். பிரிட்டிஷார் மீது அதிருப்தி ஏற்படுவதற்குக் காரணம் அவர்கள் சொல்லுவது போல் நடந்து கொள்ளுவ தில்லை என்று ஒரு சிலர் கூறுகிறார்கள். இது ஒரு வீண் பழி. தம் அரசியல் நோக்கத்தை யடைவதற்காகவே இப்படிப் பழி சாற்றுகிறார்கள்.

சுயாட்சிக்கு நாம் தான் தடைகளா யிருக்கிறோம். இந்தியாவி லுள்ளவர்களின் வார்த்தைகளை விட, ஒரு ஆங்கிலேயருடைய வார்த்தைக்கு மதிப்பு அதிகந் தான். அதிகாரம் கோருகிறார்களே, அதை யருக்குக் கொடுக்க வேண்டும். காந்தியாருக்கும் அவர்களுடைய சகாக்களுக்குமா? அந்த அதிகாரத்தை நியாயமான முறையில் பயன் படுத்துவார்கள் என்று நம்பலாமா? நமக் குள்ளாகவே நாம் ஒருவரை யொருவர் நம்புவது கிடையாதே. நம்மிடம் ஒற்றுமை யில்லை. இதை நாம் மறுக்க முடியாது. இது தான் இந்தியா சுயாட்சி பெறுவதற்குத் தடையா யிருக்கிறது. இதை காந்தியாரே ஒப்புக் கொள்ளுகிறார். இதைச் சொன்னால் பிரிட்டிஷார் மீது அவருக்குக் கோபம் உண்டாகிறது. இப்படிச் சொல்ல நீங்கள் யார்?" என்று கேட்கிறார். மேலும், "நீங்கள் வெளி யேறி விட்டால் எங்களுக்குள் இருக்கும் வேற்றுமைகளைச் சரிப் படுத்திக் கொள்ளுவோம். எங்கள் கருத்துக்களுக்கு மாறுபடுகிறவர்களை எங்கள் ஆதிக்கத்தைக் கொண்டு பணிய வைத்து விடுவோம்" என்று கூறுகிறார்கள். அப்படி யானால், இப்படிச் செய்யலாமா? செய்ய முடியுமா? செய்ய எவ்வளவு காலம் பிடிக்கும்? அது வரை ஜப்பானியர்கள் காத்திருப்பார்களா? அது வரை பொது ஜனங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமில்லாத பொறுப்பற்றவர்கள் ஆட்சி நடத்தும்படி, அனுமதிப்பதா? இந்தப் பிரச்னைகள் மிகவும் முக்கியமானவை.

இதில் ஒரு விஷயம் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதிகாரம் வகிக்கிறவர்கள் பொறுப்பும் உடையவர்களா யிருக்க வேண்டும். இந்த இரண்டையும் விட்டு விட வேண்டு மென்று தான் பிரிட்டிஷாரைக் காங்கிரஸ் தலைவர்கள் கோருகிறார்கள். அதுவும் எப்படிப் பட்ட சமயத்தில்! பொறுப்போ மிக மிக அதிகம். இதை நிறைவேற்றும் பொருட்டு அதிகாரத்தையும் பயன் படுத்த வேண்டி வரும். இது தம் தொந்தியை நிரப்பிக் கொள்ளும் பொருட்டல்ல; ஆனால் 40 கோடி மக்களின் உயிர்களைப் பாது காக்கத் தான்.

தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் போராடும் முறைகளையும் நுணுக்கங்களையும் தெரிந்த ஒரு இந்திய அரசியல் வாதி யிருக்கிறார். இந்தப் படைகளை யெல்லாம் திரட்டி நம்மைத் தாக்க வரும் எதிரிகளோடு இவர் தகுந்தபடி எதிர்த்துப் போராடக் கூடும்.

நாம் எதைத் தேசீய வாழ்வு என்று நினைக்கிறோமோ, அது உண்மையிலேயே மாகாண வாழ்வாகத் தான் இருக்கிறது. சர்வ தேசப் போக்கை நாம் அடையாதபடி தடுப்பது நமது சமூதாய நிலையும் பொருளாதார நிலையுந் தான். இப்போது நடை பெறுவது உலக யுத்தம்; இந்தச் சமயத்தில் சர்வ தேச மனப் பான்மை யடைய வேண்டியது மிகவும் அவசியம். இந்தியாவை எதிரிகள் தாக்காதபடி காத்துக் கொண்டிருக்கும் பிரிட்டிஷாருக்கும் அமெரிக்கர்களுக்கும் நாம் நன்றி செலுத்த வேண்டும். வருஷக் கணக்காக அஹிம்சையை ஒரு கட்சி போதித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்சிக்கு அதிக்கத்தைக் கொடுக்க, அரசாங்கத்தார் மறுக்கிறார்கள். இந்தக் கட்சியின் தலைவர் காந்தியார் தான். ஜப்பானியர்கள் இந்தியாவில் காலடி எடுத்து வைத்து விடுவார்க ளானால், சாத்வீக முறையில் அவர்களை எதிர்ப்பாராம்!

> உண்மை என்ன வென்றால், காங்கிரஸ் தவிர மற்றெல்லாக் கட்சிகளும் யுத்த முயற்சிகளை வெகுவாக ஆதரிக்கின்றன. ஏராளமானவர்கள் படைகளில் சேருவதி லிருந்தே இது தெளிவாகத் தெரிகிறது. மற்ற நேச நாடுகளோடு இந்தியாவும் ஒத்துழைக்க வில்லை என்று கூறுவது தவறு. இப்படிச் சொல்லுவது ஒரு அரசியல் தகிடுதித்தம். ......

இப்போது இந்திய அரசாங்கம் செய்ய வேண்டியதென்ன? தம்மோடு ஒத்துழைக்காத காங்கிரஸ் கட்சி தவிர மற்றெல்லாக் கட்சிப் பிரதிநிதிகளையும் அழைக்க வேண்டும். ஒரு கூட்டு அரசாங்கத்தை அமைக்கும்படி அவர்களைக் கோர வேண்டும். தேசீயக் காங்கிரஸ் கட்சி அமைக்கக் கூடிய அரசாங்கத்தை விட, இந்த அரசாங்கம் உயர்ந்ததாக இருக்கும். அரசியல் கட்சிகள் உண்மை நிலையை உணர வேண்டும்; அரசாங்கமும் இந்தக் கட்சிகளைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர வேண்டும். அரசாங்கமும் உண்மை நிலையை உணர்ந்து தைரியமாக வேலை செய்ய வேண்டும். வாய் வேதாந்திகளைப் போல, தமக்கு அரசியல் கொள்கைகள் மிக அதிகம் தெரியு மென்று பெருமிதமாக இருந்து, சமரசங்கள் பேசிக்கொண்டு, காலங் கடத்தக் கூடாது. இப்படிக் காலங் கடத்துகிறவர்கள், தம் கொள்கையைத் தான் பெரிதாக மதிப்பார்களே யொழிய, பொது ஜனங்களின் முன்னேற்றத்திலும் இனிய வாழ்விலும் அக்கரை யுள்ளவர்களாயிருக்க மாட்டார்கள்.

## மகா துரோகச் செயல்.

### காங்கிரசின் நன்றிகெட்ட போக்கு.

சர் சிக்கந்தர் ஹயத்கான் பஞ்சாப் பிரதம மந்திரி. இவர் எகிப்தி லுள்ள இந்தியத் துருப்புகளைப் பார்வையிடப் போய் இருந்தார். அப்போது, காங்கிரஸ் தலைவர்கள் கைதியானது பற்றி கேள்விப்பட்டார். அது பற்றி அவர் கூறியதாவது:—

காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானத்தை நிராகரிக்க, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு தைரியம் இல்லாது போனது பற்றி நான் மிகவும் வருத்தப் படுகிறேன்.

> நம் பாதுகாப்பையும், கௌரவத்தையும் முன்னிட்டும், நாட்டிற்கு விடுதலை பெற வேண்டியும், ஆயிரக் கணக்கான நம் இந்திய சோதரர்கள் தம் உயிரையும் மதியாது போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் இப்படிப் பட்ட தீர்மானத்தை நிறைவேற்றியது மகா கடுமையான குற்றம். இது ஒரு மகா துரோகச் செயல்.

நாட்டுப் பற்றுடைய ஒவ்வொரு இந்தியனும் தன் தாய் நாட்டைக் காக்கும் வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டிய காலம் இது. இந்தச் சமயத்தில் நம் நாட்டிற்குப் பாதகம் உண்டாகக் தக்க முறையில் காங்கிரஸ் தீர்மானித் திருப்பது மிகவும் வருந்தத் தக்கது தான்.

பாசிஸ்ட் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளுக்கு நேர்ந்த கதி இந்தியாவிற்கும் ஏற்படக் கூடாது. இந்தியாவைக் காக்க வேண்டும். இதற்காக நம் நாட்டு வீர மக்கள், மனைவி மக்கள் அனைவரையும் விட்டு ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் போராடுகிறார்கள். இந்தச் சமயத்தில் இப்படிப்பட்ட தீர்மானம் நிறை வேற்றுவது நாட்டைக் கோழைத் தனமாகக் காட்டிக் கொடுப்பதாகும் என்று தான், நான் நினைக்கிறேன்.

யுத்தம் முடிந்த வுடனே இந்தியா, அரசியல் வாழ்வை அடையத் தான் போகிறது. இது பற்றி கொஞ்சங் கூட சந்தேகமே கிடையாது. உலகிலே இருக்கும் மற்ற ஏதேச்சை நாடுகளின் நிலையை இந்தியாவும் அடையும். இப்படிப் பட்ட வாக்குறுதியை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கொடுத்திருக்கிறார்கள்.

**யாரால் வந்த வாழ்வு.**

இந்தியாவிற்கு விடுதலையும் கௌரவமான நிலையையும் தேடிக் கொடுப்பவர்கள் யார்? சமீபத்தில் மகா துரோகச் செயல் செய்த காங்கிரஸா? அல்ல. ஆனால், <u>தாய் நாட்டிற்காகப் போராட முன் வந்து, தன்னலத்தைப் போக்கிய வீரப் படையின ரல்லவா?</u>

மிகக் கொடிய பலமான எதிரியோடு நமக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நம் சகோதரர்களை நாட்டுப் பற்றுடைய இந்தியர்கள் குறிப்பாகப் பஞ்சாபிகள் கைவிட்டு விடமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

## விமானங்கள் கட்ட மரங்கள்

இந்தியரவில் விமானங்கள் கட்டுவதற்குத் தகுந்த மரங்கள் இருக்கின்றனவா வென்று இந்திய அரசாங்கத்தார் ஆராய்ச்சி செய்து, ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். அதில், இதற் கேற்ற 10 அல்லது 12 அடி நீளமுள்ள மரங்கள் தான் அகப்படுகின்றன வென்றும், இதை விட நீளமான மரங்கள் அகப்படுவது கஷ்டம் என்றும் அறிவித்தார்கள். இவற்றை ஏராளமாக சப்ளை செய்யும் பொருட்டு காட்டிலாக்கா உத்தியோகஸ்தர் ஒருவரை தனிப்பட நியமித்திருக்கிறார்கள்.



# அரை நிமிஷத்தில் இரட்டை வெற்றி.



இவர் ஒரு தென்னாப்பிரிக்க விமானி, மத்தியான்னத்திற்குப் பிறகு தன் விமானத்தில் கிளம்பினார், இங்கிலீஷ் கால்வாயில் ஜெர்மன் விமானங்களைக் கண்டார், அரை நிமிஷத்திற்குள் இரண்டு விமானங்களைச் சுட்டு வீழ்த்தினார். புறப்பட்ட 20 நிமிஷங்களில் இருப்பிடத்திற்குத் திரும்பி விட்டார்.

# சென்னைப் படையின் சிறந்த வேலை

## பீர் ஹகீமைக் காக்கும் பொறுப்பு

### பிரதம மந்திரியின் பாராட்டு

லிபியப் போர் முனையில் பீர் எல் ஹகீம் என்னும் நகரத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு ஒரு இந்திய பீரங்கிப் படைக்கு ஏற்பட்டது. இந்தப் படையில் 3 பகுதிகள் உண்டு. இதில் ஒன்று மராட்டியப் பகுதி. மராட்டிய உத்தியோகஸ்தர்களே இதில் கிடையாது. மற்றொன்று சென்னைப் பகுதி. இதில் பழைய யுத்தத்தில் சேவகம் செய்த உத்தியோகஸ்தர்களில், இரண்டொரு பேர்கள் மட்டும் தான் சென்னைக்காரர்கள். இந்தப் படையினரின் தாய் மொழிகள், அந்தப் படைகளின் மற்ற உத்தியோகஸ்தர்களுக்குத் தெரியாது. என்றாலும், மிக நெருங்கிய உறவு இவர்களுக்குள் ஏற்பட்டிருந்தது. இந்தப் பகுதிகளின் வீரத்தைப் பாராட்டிச் சமீபத்தில் பிரதம மந்திரி சர்ச்சில் பேசியிருக்கிறார். இந்தப் படைகள் நெடு நாட் பழக்கமுடையவர்களு மல்ல. 6 மாத காலப் பழக்கத்தில் இவ்வளவு சிறந்த முறையில் தம் கடமையை நிறைவேற்றின. இப்படிப் பட்ட அநேக படைகள் இப்போது திரட்டப் பட்டு வருகின்றன.

---

**நீங்கள் தொத்து வியாதியைப் பரப்பி வருகிறீர்களா?**

நம் நாட்டில் ஒரு பயங்கரமான நோய் இருக்கிறது.

அது மக்களுடைய மனத்தைக் குழப்பி தைரியத்தை இழக்கும்படி செய்கிறது.

அந் நோய் தான் வதந்தி யென்பது.

அதை உண்டாக்கியது நமது பொது விரோதி—ஜப்பான்.

உங்கள் நண்பர்களிடம் அதைப் பரப்புவதற்கு உதவி செய்யாதீர்கள்.

**வதந்திகளை நம்பாதீர்கள்.**

**ஜப்பானியர்களுக்கு எதிரிடையாக தேசீயப் போர்முனையை அமையுங்கள்.**

---

2

# புயல் வீசப் போகுது!

பெரும் புயல் வீசப் போகிறது என்றால் திடீரென ஒரு அமைதி ஏற்படுவது இயற்கை. பிறகு காற்றடிக்கும். கடல் குமுறும். வான மிருளும். புயல் வீசும். அந்தப் புயலின் வழியில் சிக்குவ தெல்லாம் த்வம்சமாகும்.

அதே போலத் தான், இன்றைய யுத்த நிலைமையுமிருக்கிறது. ருஷ்யாவிலே, அதிலும் தென் ருஷ்யாவிலே மட்டுமே பெரிய சண்டைகள் நடக்கின்றன. உலகின் மற்றப் பாகங்களிலே அம்மாதிரி சண்டைகள் எதும் நடக்க வில்லை. எகிப்திலே எல்லாம் அமைதியாகவே இருப்பது போலிருக்கிறது. பர்மாவிலே அதிகப் பேச்சு மூச்சைக் காணோம். சீனாவில் தான் என்ன, ஏதோ சண்டை என்று நடக்கிறது. ஆஸ்திரேலியா அருகேயும் அப்படித் தான். இதற்கெல்லாம் அர்த்தம் என்ன? சீக்கிரமே வீசப் போகும் பெரும் புயலுக்கான அறிகுறிகள் தானிவை.

நேச நாடுகள் தீவிரமாக யோசித்து யோசித்து எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்னென்ன என்பதைப் பற்றி பல தீர்மானங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கங்கே நமது பலம் அதிகப் படுத்தப் பட்டு வருகிறது. அமெரிக்காவும், கானடாவும், பிரிட்டனும் சற்றும் தளராது யுத்தத்திற்கான சாமான்களைத் தயாரித்துக் குவித்த வண்ணமாக இருக்கின்றன.

பிரிட்டனிலே பெரிய பெரிய கோஷ்டிகளாக அமெரிக்கப் படைகள், ஏராளமான யுத்த சாதனங்களுடன் வந்து இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டனிலே பல விமான நிலையங்களிலே அமெரிக்க விமானிகள் சிறுசிறு கூடாரங்களில் வசித்துக் கொண்டு, பிரிட்டனில் உள்ள உணவுக் கட்டுப்பாடுகளை யெல்லாம் சகித்துக் கொண்டு, உத்சாகமாக, வரப் போகும் படை யெடுப்பில் பங்கெடுத்துக் கொள்ள சித்தமாக இருக்கிறார்கள்.

சென்ற பல நாட்களாக, பிரிட்டிஷ் விமானங்களுடன் அமெரிக்க விமானங்களும் கலந்து சென்று, நாஜிகள் வசமுள்ள ஐரோப்பாவில் பல இடங்கள் மீது பறந்து சென்று திரும்பினார்கள். பிரஞ்சுக் கரைகளைப் பற்றிய விவரங்களை யெல்லாம் அவர்கள் நேரில் பார்த்துக் கொண்டார்கள். தவிர, பிரிட்டனில், ஐரோப்பா மீது படை யெடுக்க வென எண்ணற்றவர்கள் பழக்கப் பட்டிருக்கிறார்கள். பரீக்ஷார்த்தமாக அவர்கள் அவ்வப்பொழுது, ஐரோப்பியக் கடற் கரையில் சில இடங்களில் போய் இறங்கி, தங்கள் திறமையை வெளிப்படுத்தி, வெற்றிகரமாகத் திரும்பி யிருக்கிறார்கள்.

"ஐரோப்பாவில் விஷ வாயு ப்ரயோக யுத்தம் நடப்பதாக இருந்தாலும், அதற்கும் எங்கள் அமெரிக்கப் படை தயாரா யிருக்கிறது" என்று ஒரு அமெரிக்க அதிகாரி கூறுகிறார். இதிலிருந்தே ஐரோப்பா மீது பாய்வதற்கான ஏற்பாடுகள் எவ்வளவு ஜரூராக நடக்கின்றன என்பதை அறிந்து கொள்ளலாமே!

இது மட்டுமா? அமெரிக்காவில் உள்ள மோட்டார்த் தொழிலாளிகள் எல்லாம் ஒன்று கூடி கூட்டம் போட்டு, அதிலிருந்து ஜெர்மன் தொழிலாளிகளுக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள். "நாஜிகளுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்யுங்கள். நாங்கள் வரப் போகிறோம். இந்த நாஜிகளையும், அச்சு நாட்டு சர்க்கார்கள் எனப் படுவதையும் நிர்மூலமாக்க! எங்களுக்கு நீங்கள் உதவுங்கள்" என்பதே இந்த விண்ணப்பம்.

நிற்க, பிரிட்டனி லிருந்து தினசரி வெளியே பறந்து செல்லும் பிரிட்டிஷ் விமானிகள் ஜெர்மனியின் பிரதானமான தொழிற்சாலை நகரங்களையும், கப்பல் கட்டு மிடங்களையும், நீர்மூழ்கிக் கப்பல்கள் சிருஷ்டிக்கப் படும் இடங்களையும் சேதப் படுத்தி வருகிறார்கள்.

இதை யெல்லாம் பார்த்து ஹிட்லருக்கு உதறல் எடுத்திருக்கிறது என்பது உண்மை. இல்லா விட்டால், அவர் ஏன் பாரிஸ் நகரைப் பாதுகாக்க ஏகப்பட்ட வீரர்களைக் கொண்டு நிறுத்தி யிருக்கிறார்? பிரான்ஸில் உள்ள ராணுவ பலத்தை ஏன் அதிகப் படுத்தி யிருக்கிறார்? நார்வேயில் எல்லாம் படையெடுப்பைத் தடுப்பதற்கான ஒத்திகைகளை ஏன் நடத்தி வருகிறார்? விஷி சர்க்காரை தூண்டி விட்டு, 'பிரான்ஸிலே, இரண்டாவது போர்முனைப் பேச்சே இருக்கப் படாது. அதைப் பற்றி யாராவது பேசினால் கடுமையான தண்டனை தான்' என்று உத்திரவு போடும்படி சொல்லி யிருப்பது ஏன்? உதறல் தான் ஐயா, உதறல் தான்!

ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை மட்டும் ஏற்பட்டால், ஐயோ! அப்பொழுது பார்க்க வேண்டும் சண்டையின் ஜோரை. ஹிட்லரின் கால்களின் கீழே நசுக்குண்டு கிடக்கும் பல கோடி மக்களில் எத்தனையோ பேர் தக்க சந்தர்ப்பம் வரட்டும் என்று உள்ளூரக் குமுறிக் கொண்டிருப்பார்கள் என்பது வாஸ்தவம். பிரான்ஸிலே, எக்கச் சக்கமாகச் சிக்கிக் கொண்டவர்களில், எத்தனையோ ஆயிரம் தீவிர தேச பக்தர்கள் இருக்கிறார்கள். பிரான்ஸிலே அந்நியர் வந்து அட்டகாசம் செய்வதைச் சகிக்காத அவர்கள், நேச தேசத்தார் ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனையை ஏற்படுத்தி விட்டால், குபீர் எனக் கிளம்பக் கூடும். அதே சமயம் ருஷ்யாவிலும் அதன் எதிரொலியைக் காணலாம். இரு தலைக் கொள்ளி எறும்பு போல ஆகிவிடுவார் ஹிட்லர் என்பதில் சந்தேகமா என்ன?

ஆனால், ஹிட்லர் மேற்கு ஐரோப்பாவில் சேர்த்துத் தயாராக வைத்திருக்கும் படை பலம் எவ்வளவு என்பது பிரிட்டனுக்கு நன்றாகத் தெரியும். அந்த பலத்தை விட அதிக பலம் நமக்குச் சேரும் வரை, படையெடுப்பு யோசனையை அமல் படுத்துவது புத்திசாலித் தனமாகுமா? முன் வைத்த காலை அப்புறம் பின்னுக்கு இழுப்பது என்று ஆரம்பித்தால், அனர்த்தம் தான் விளையும். நாஜிகளும் லேசுப்பட்டவர்க ளல்ல. வெறி பிடித் தாடுகிறவ னிடம் அஜாக்ரதையோடோ, அலக்ஷியமாகவோ போகலாமா? அவன் என்ன செய்கிறான் என்பது அவனுக்கே தெரியாதே! மெய் மறந்து, உணர் விழுந்து ஆடுகிறவன் மேலே தான் விழுவானோ, பிடுங்கத் தான் செய்வானோ யார் கண்டார்கள். அவனைக் கட்டிப் பிடிக்க, பூரண ஏற்பாடுகளையும் செய்து கொண்ட பிறகு தானே, அருகில் நெருங்க வேண்டும்? நேச நாடுகள் செய்து கொண்டிருப்பதும் இதுவே! இரண்டாம் போர் முனை ஏற்படுத்தப் படுவதில் தாமதம் இருப்பதற்கான காரணமும் இதுவே! இது தெரியாமல், சிலர், அவசரப் பட்டு, இரண்டாம் போர் முனையை ஆரம்பிக்க வில்லையே, ஆரம்பிக்க வில்லையே என்று கூக்குர லிடுகிறார்கள். கூக்குரலிட்டுப் பயனென்ன? அடுத்து முயன்றாலும், எடுத்த காரியங்களை முடிக்க, தக்க காலம் வர வேண்டாமா? பழம் பழுத்தால் வௌவாலை 'வா' என்று வருந்தி அழைக்க வேணுமா என்ன? அதே போல, பாய்வதற்கான சந்தர்ப்பங்கள் துணிந்து வந்து விட்டால், யாரைத் தான் கேட்கப் போகிறார்கள்? புலியாகப் பாய்ந்து விட மாட்டார்களா? அவ்வாறு பாய்வதற்கான ஏற்பாடுகள் மட்டும் அதி தீவிரமாக நடந்து வருகின்றன என்பதை நாம் நினைவில் வைத்துக் கொண்டால் போதும்.

அச்சு நாட்டாரை அழித் தொழித்து விட வேண்டுமென்று நேச நாடுகள் இருபத்தி ஆறும் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதை மறந்து விட்டீர்களா? இல்லையே! இவ்வாறு கங்கணம் கட்டிக் கொண்டவர்கள் என்ன சாமானியர்களா? எத்தனை ஆயிரம் கோடி டாலர்க ளானாலும், லக்ஷிய மில்லாது எடுத்து வீசி, நினைத்த காரியத்தை முடிக்க வல்ல அமெரிக்கா என்ன, கடற்போரிலே தன் நிகரிலாத வீரர்கள் பல்லாயிரவரையும், எடுத்த காரியத்தில் வெற்றி கண்டே தீருவேன் என்ற உறுதியுட னிருக்கும் மிஸ்டர் சர்ச்சில் அவர்களைத் தலைமையில் கொண்ட பிரிட்டிஷ் சர்க்காரையும் கொண்டுள்ள பிரிட்டன் என்ன, நாஜிகளின் பிடியிலேயே தமது நாட்டை விட்டு விட்டு, ஆக்ரோஷத்துடனும் வீரத்துடனும் போராடத் தயாரா யிருக்கும் மற்ற நாட்டினர் என்ன!— இத்தனை பேர்களும் சேர்ந்து, இந்த ஹிட்லர் கம்பெனியாருக்கே அனைத்தையும் சும்மா விட்டுக் கொடுத்துக் கொண்டு, வேடிக்கை பார்த்து நிற்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?



புயல் வீசப் போகுது. அப்பொழுது தெரியும் இவர்கள் இத்தனை காலம் செய்துள்ள ஏற்பாடுகளின் மகத்தான நன்மை எல்லாம்! அப்பொழுது நீங்களே கண்டு பிரமிக்கப் போகிறீர்கள்!

புயலுக்கு முன் உள்ள அமைதி போலவே தான், பெரிய அமைதி எகிப்திலே ஏற்பட்டிருக்கிறது. இரு கட்சியார்களும் ஜுர வேகத்திலே, தங்களுக்கு வேண்டியவற்றைக் கொணர்ந்து சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். மத்ய தரைக் கடலிலே அவ்வப்பொழுது கடுமையான போர்கள் நடந்து வருகின்றன. எத்தனையோ கஜகர்ணங்கள் போட்டும் ஜெர்மானியர் மால்டா தீவை ஒடுக்க முடிய வில்லை. அது அவர்களுக்கு ஒரு மழுங்கா முனை யுள்ள கூரான முள்ளெனவே இருக்கிறது. அங்கு வந்து சேரும் உதவிகளை நாஜிகளால் வெற்றிகரமாகத் தடுக்க முடிய வில்லை. அதே மாதிரித் தான் எகிப்திற்கும் பல கஷ்டங்களையும் சமாளித்துக் கொண்டு உதவிகளைக் கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் நேச தேசத்தார்.

'இன்னும் ஐம்பது, அறுபது நாட்களுக்குள் எல் அலாமீன் பிரதேசத்திலே பயங்கரமான போர் ஒன்று நடக்கும்' என விஷய மறிந்தவர்கள் கூறுகிறார்கள். அது வரை எகிப்தில் உள்ள நம்மவர்கள் சும்மா இருக்கப் போவ தில்லை. சும்மாவும் இல்லை. தினசரி டோப்ரூக் எல் அலாமீன், மெர்ஸா மத்ரூ போன்ற எதிரி வசமுள்ள முக்யமான இடங்களை யெல்லாம் சேதப் படுத்தி வருகிறார்கள். ஐரோப்பாவி லிருந்து ராமெலுக்கு வந்து சேரும் உதவிகளை, மத்ய தரைக் கடலில் தடுத்து நிறுத்த முயன்று வருகிறார்கள். கிரேக்க நாட்டிலே ஒரு முக்யமான துறைமுகத்தின் மீது பறந்து சென்று, அங்கிருந்த பல இத்தாலிய யுத்தக் கப்பல்களில் மூன்றை மூழ்கடித்து விட்டு வந்தார்கள். ரோட்ஸ் எனும் தீவையும் பாழ் படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய பல முயற்சிகளில் ஒன்றின் போது தான் 'கழுகு' என்ற பெயருள்ள பெரிய தோர் விமானந் தாங்கிக் கப்பல் மூழ்க நேரிட்டது.

புயல் வீசப் போகுது என்பதற்கான அறிகுறிகள் கீழ்த் திசையிலே நன்றாகத் தெரிகின்றன. ஜப்பானியர் கிட்டத் தட்ட எட்டு, ஒன்பது லக்ஷம் பேர்களை ருஷ்யாவின் எல்லைப் புறத்திற்கு எதிரே கொண்டு குவித் திருக்கிறார்களாம். இன்னும் பல படைகள் அங்கு போய்க் கொண்டிருக்கின்றனவாம். ஆனால் இது வரை அப்படைகள் ருஷ்யா மீது பாயாம லிருப்பதி லிருந்து, அச்சு நாட்டினர் எதிர்பார்த்தபடி ருஷ்யாவில் உள்ள அச்சுப் படைகளுக்கு வெற்றி கிடைக்க வில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ருஷ்யாவிற்கு காகஸஸ் பக்கத்தில் தலை தூக்க முடியாத படி அடி என்றேற்பட்டால் தான், ஜப்பான் ருஷ்யா மீது பாய வேண்டு மெனக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தாப் போலிருக்கு! அந்தக் கணக்குப் படி காரியங்களும் நடக்க வில்லை போலிருக்கு. அதனாலேயே ருஷ்ய எல்லையைப் பார்த்துக் கொண்டு, ஜப்பானின் மனசி லிருப்பதை இவ்வளவு பச்சையாக வெளிப் படுத்திக் கொண்டு, அத்தனை லக்ஷம் ஜப்பானியர் அங்கே உட்கார்ந்திருக்கிறார்கள் சும்மா! இவர்களை யெல்லாம் சமாளிக்க, ருஷ்யாவும் தயாரா யிருப்பதாகக் கூறப் படுகிறது.

இதற் கிடையிலே, அமெரிக்கர்கள் ஜரூராக நடவடிக்கை எடுக்க ஆரம்பித்து விட்டார்கள். வடக்கே ஜப்பானியர் கால் வைத்துள்ள அலூஷியன் தீவுகளையும், தெற்கே ஜப்பானியர் உட்கார்ந்திருக்கும் சாலமன் தீவுகளையும் சூடானதாக ஆக்கி விட்டார்கள் அவர்கள். அதிலும் சாலமன் தீவுகளிலே தான் நேச தேசத்தாருக்குச் சாதகமான நிலைமையே ஏற்படும் போலிருக்கிறது. அமெரிக்கத் துருப்புகள் அத் தீவுகளில் இறங்கி, வெகு மும்முரமாகப் போராடி, ஜப்பானியரைத் திகைக்க அடித்து, கிட்டத் தட்ட ஐயாயிரம் சதுர மைல் பிரதேசத்தையும் பிடித்துக் கொண்டு, மூன்று தீவுகளில் தங்களது பிடிகளையும் இறுக்கி வருகிறார்கள். ஜப்பான் இதைக் கண்டு திகைத்தே போயிருக்கும்! முதல் அதிர்ச்சி தீர்ந்த பிறகு தான் அது ஜரூராகி, அமெரிக்கர்களைத் தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்திருக்கும். ஜப்பானியரது எதிர்ப்பு இத்தீவுகளில் கடுமையாகவே இருக்கிறதாம். இந்தச் சண்டை பல நாட்கள் தொடர்ந்து நடக்குமென்றே கூறப் படுகிறது. வெற்றி, தோல்வி சில இடங்களில் மாறி மாறித் தான் வருமென்கிறார்கள்.

ஆனாலும் அமெரிக்கர்கள் பிடித்த பிடியை விட்டு விடுவார்களா என்ன? முக்யமாக இந்த சாலமன் தீவுகளில் அமெரிக்கர் வெற்றி கண்டால், அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியா செல்லும் பாதை கொஞ்சம் 'கிளியர்' ஆகும். அதன் பிறகு ஆஸ்திரேலியா கொஞ்சம் மூச்சு விடும். ஆஸ்திரேலியாவிற்குத் தடங்கல் இல்லாது அமெரிக்க உதவி போய்ச் சேர்ந்து கொண்டிருந்தால், பிறகு தக்க சமயத்தில், தெற்கே யுள்ள ஜப்பானியருக்குச் சூடு கொடுக்க சௌகரியமா யிருக்கும். இதை உத்தேசித்தே சாலமன் தீவுகளில் உள்ள பலமான எதிர்ப்பை யெல்லாம் சமாளித்து, அங்கிருக்கும் ஜப்பானியரைத் துரத்தப் பார்க்கிறார்கள் அமெரிக்கர்கள். அதோடு, இத்தனை காலமாக படை யெடுப்புகளை எதிர்ப்பதிலேயே தம் வீரத்தைக் காட்டிக் கொண்டிருந்தவர்கள், தாங்களாகவே முன்னேறி மேலே விழுந்து சண்டை போட ஆரம்பித்து விட்டதி லிருந்தே, பெரும் புயல் வீசப் போகுது சீக்கிரமே என்பது தெரிய வில்லையா?

இந்தியாவிலும் யுத்த முயற்சிகள் மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றன. இந்திய அரசியல் வானம் இருண்டிருந்த போதிலும், யுத்த முயற்சிக்கு தடை யில்லாது சகல ஏற்பாடுகளையும் செய்ய சர்க்கார் உறுதி யுடனிருக்கிறார்கள். இந்தியாவி லிருந்து செல்லும் விமானங்கள் பர்மாவில் பல எதிரி ஸ்தாபனங்களை நாசப் படுத்தி வருகின்றன. இந்தியாவிலே அவ்வப்பொழுது அமெரிக்க, பிரிட்டிஷ் உதவிப் படைகளும். கணக்கில்லாத ஆயுதங்களும், வழியில் உள்ள அசாத்தியமான கஷ்டங்களையும் சமாளித்துக் கொண்டு வந்து குவிந்த வண்ணமாய இருக்கின்றன. இலங்கையின் பலமோ ஏகமாகப் பெருகி யிருக்கிறது. சென்ற யுத்தத்திலே நமக்கு எதிராகப் போராடியவர்கள் எல்லாம், இப்பொழுது நம் கட்சியில் கலந்து போராட, உத்சாகத் தோடு இலங்கையில் வந்து இறங்கி யிருக்கிறார்கள். புயல் வீச ஆரம்பிக்கும் பொழுது, இந்தியாவும் தனது சமர்த்தைக் காட்டும். ஜப்பானின் தலையில் குட்ட, இந்தியாவையே ஒரு முக்கிய தளமாகக் கொள்ள நினைத்திருக்கிறார்கள் நேச தேசத்தவர்கள். அச்சு நாட்டாரை ஆழத்தில் அமிழ்த்தும் வரை இவர்கள் சும்மா இருக்கப் போவதே இல்லை. அது நிச்சயம்.

நிற்க, 'வரப் போகும் எண்பது நாட்களும், நமது சரித்திரத்திலேயே மகா மோசமான நாட்களாக இருக்கக் கூடும்' என பிரிட்டிஷ் பொருள் உற்பத்தி மந்திரி கூறி யிருக்கிறார். வாஸ்தவம்! சுக மடையு முன் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கத் தானிருக்கும்.

இப்பொழுது ருஷ்யாவைப் பாருங்களேன். ருஷ்ய வீரர்கள் காட்டும் சாகசம் இனி உலகம் உள்ளளவும் மறப்பதற்கு முடியாத வீர சாகசமாகவே இருக்கும். எண்ணிக்கையில் ஏதேஷ்டமான ஜெர்மன் படைகள் பிசாசுகள் போல டாங்கிகளுடன் முன்னேறி வருகின்றன. அவர்களைத் தடுத்து நிறுத்துவது என்பது லேசான காரியமா என்ன? தென் காகஸஸில் நாஜிகள் வெற்றி கண்டிருக்கிறார்கள். அங்குள்ள நிலைமை மோசமாகவே இருக்கிறது. ஜெர்மன் படைகள், தெற்கே உள்ள தொரு எண்ணெய்ப் பிரதேசத்தை அடைந்து மற்றொரு முக்கியமான பிரதேசத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. தவிர, ஸ்டாலின்கிராட், நோவோராஸிஸ்க், அஷ்ட்ராகான் போன்ற நகர்களுக்கு ஆபத்து அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆனாலும் ருஷ்யர்கள் மனந் தளரவில்லை.

வாரனேஷ் என்ற பிரதேசத்தில் ருஷ்யர்களின கை ஓங்கி யிருக்கிறது. ஜெர்மனியர் ருஷ்யாவில் அகலக் கால் வைத்தே போகிறார்கள். அவர்களுக்கு சாமான்களையும், ஆட்களையும் கொண்டு போய்ச் சேர்ப்பதில் உள்ள சிரமம் அதிகரித்து வருகிறது.

இந்தச் சமயத்திலே சர்ச்சில், வேவல், ஸ்டாலின் முதலியோர் மாஸ்கோவில் கூடிப் பேசி, பல முக்கியமான முடிவுகள் செய்திருக்கிறார்கள். திரும்பும் வழியிலே எகிப்திற்கும் சென்று விட்டுப் போயிருக்கிறார் சர்ச்சில். அவர் இங்கிலாந்து சேர்ந்திருப்பார். சீக்கிரமே பார்லிமெண்டில் பேசவும் போகிறார். அப்புறம் புயல் வீசப் போவது எப்பொழுது என்பது தெரியலாம்.




# உள்ளூர் வாசிகள் மனுச்செய்ய வேண்டாம்!

ஜப்பானியர்களுடைய ஆதிக்கத்தின் கீழிருக்கும் சீன தேசத்தில், வியாபாரத் துறையில், தலைமைப் பதவி முதல் கீழ்தர உத்தியோகம் வரையிலும் இருந்த சீன மக்களை எல்லாம் ஜப்பானியர்கள் விலக்கி விட்டார்கள். தொழிற்சாலை முதலாளிகள், கடை வியாபாரிகள், வேறு உத்தியோகஸ்தர்கள், சுறுக் கெழுத்து குமாஸ்தாக்கள், சாதாரண குமாஸ்தாக்கள், முதலியவர்கள்—தெருக்களில் சில்லரைச் சாமான் விற்பவர்கள் கூட—சீனர்கள் யாரும் இப்போது கிடையாது. இவ்வேலைகளை எல்லாம் ஜப்பானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இவை அவர்களுடைய வெற்றிப் பரிசுகளாகப் போய்விட்டன.

ஜப்பானியர்கள் இங்கு வந்தால் இப்படித் தான் நடக்கும். இந்தியாவில் இப்படிப் பட்ட நிலைமை ஏற்படும்படி நீங்கள் விட்டு விடக் கூடாது. நம்முடைய நாட்டுப் பாதுகாப்புகளைப் பலப் படுத்தி உறுதி யாக்குவதற்கு, ஒவ்வொரு ஆண் மகனுடைய பலமும், ஒவ்வொரு பெண் மணியினுடைய ஆதரவும், தேவையா யிருக்கிறது.

**தேசியப் போர் முனையை அமையுங்கள்**

**ஜப்பானியருக்கு எதிரிடையாக.**

# டான் நதிக்கரையில் கடும் போர்

## வீர ரஷ்யர்களின் கடுமையான எதிர்ப்பு

சில வாரங்களாக ரஷ்யாவின் தென் பகுதியில் நிலைமை மிகவும் கவலைக் கிடமாகத் தான் இருந்து வருகிறது. சென்ற 3 மாதங்களாக ஓய்வில்லாமல் ரஷ்யப் படைகள் போராடிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் விரைவில் ருஷ்யாவை வெல்ல வேண்டுமென்று திட்ட மிட்டிருக்கிறார்கள். இதன்படி முதலில் வாரனேஷைத் துளைத்துக் கொண்டு போய், மாஸ்கோவை பின்புரத்தில் தாக்கி, செம்படைகளையே சிதறடித்து விட வேண்டும். இதற்குச் செம்படைகள் கொஞ்சங் கூட இடங் கொடுக்க வில்லை.

இப்போது டான் நதியின் இரு கரைகளிலும் நடைபெறும் யுத்தம் எதற்காக? முதலாவதாக எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்ற-வேண்டும் என்பதற்காகத் தான். ரோஸ்டாவிலிருந்து காஸ்பியன் வரையில் ஒரு ரயில்வே ஓடுகிறது. இந்தப் பாதையில் தான் த்கிஹோரெட்ஸக், ஆர்மவிர் ஆகிய ஊர்கள் இருக்கின்றன. இந்தப் பாதையிலிருந்து க்ராக்னடார் வரை ஒரு கிளை ரயில் போகிறது. இங்கே எண்ணெய் சுத்தம் செய்யும் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. இந்த முதல் ரயில்வேயை ஒட்டித் தான் ஜெர்மானியர்கள் தாக்கி முன்னேற முயற்சிக்கிறார்கள். ஆர்மவிரில் ஒரு எண்ணெய்த் தொழிற்சாலையும், மைகோப் என்னும் இடத்தில் மற்றொரு தொழிற்சாலையு மிருக்கின்றன. இங்கே, வருஷந் தோறும் 10 லட்சம் டன் எண்ணெய் தயாராகிறது. இன்னும் வருஷந் தோறும் 2 கோடி முதல் 2½ கோடி டன் தயாராகும் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. இப்படிப் பட்ட இடங்களில் ஒன்று பாகு. இந்தப் பகுதியை இப்போதைக்கு ஜெர்மானியர்கள் தாக்க முடியாது. காரணம், அந்த நாட்டின் தன்மை தான். இப்போது ராஸ்டோவுக்குத் தெற்கே ஜெர்மானியர்கள் தாக்குகிறார்கள். அவர்களுடைய நோக்கம் வட காக்கஸஸி லுள்ள மெய்கோப், க்ரோஸ்னி ஆகிய எண்ணெய்க் கிணறுகள் மீது தான். ஆனால் இன்னும் 6 மாதங்கள் வரை வட காக்கஸஸ் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து ஒரு துளி எண்ணெய் கூட அவர்களுக்குக் கிடைக்காது. அல்லாமலும், எண்ணெய்த் தொழிற்சாலைகளை ஜெர்மானியர்கள் நாசஞ் செய்தால், அங்கு எடுக்கப்படும் எண்ணை எல்லாவற்றையும் ஒரே குழம்பாக, கருங் கடல் வழியாகக் கான்ஸ்டென்ஸாவிற்கும், ப்ளோயெஸ்டிக்கும் கொண்டு போக வேண்டும்.

டான் நதிக் கரையில் நடைபெறும் போருக்கு **இரண்டாவது** காரணம், போக்கு வரவு சாதனங்களைக் கைப்பற்றுவதற்காக. க்லெட்ஸ்கெயா என்னும் ஊருக்கு அருகே டான் ஆறு வளைகிறது. ராஸ்டோவிலிருந்து கீழ்த் திசையை நோக்கி ஜெர்மன் படைகள் இந்த ஆற்று வளைவு வரை புகுந்து கொண்டு வருகிறார்கள். மகா வீரத்துடன் ரஷிய செம்படையினர் போராடி எதிர்க்கிறார்கள். எண்ணெய்க் கிணறுகளைப் பிடிப்பதை விட, போக்கு வரவு சாதனங்களைப் பிடிப்பது தான் ஜெர்மானியருக்கு அதிக இலாபந் தரும். இதில், ஜெர்மானியர்கள் வெற்றி பெற்றால் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய இலாபத்தை விட, ருஷ்யர்களுக்கு ஏற்படக் கூடிய நஷ்டந் தான் மிகவும் முக்கியமானது. காக்கஸஸிலிருந்து வடக்கே போகக் கூடிய பாதைகள் மூன்று. (1) காரஸ்னோதார்—ஸ்டேலின்கிராட் ரயில்வே, இதை சால்ஸ்க் என்னும் இடத்தில் வெட்டி விட்டார்கள். (2) வால்கா ஆற்றுக் கப்பல் பாதை. இதையும் அடிக்கடி இரவுகளில் தாக்குகிறார்கள். (3) காஸ்பியன் வட கோடியில், அதாவது ஊரல் ஆற்று முகத்துவாரத்தில் உள்ள குரேவ் என்னும் ஊர் வழியாக உள்ளது. இதையும் தம்மால் ஆன வரை தாக்கிப் பார்க்கிறார்கள்.

இவற்றில் வால்கா ஆற்றுப் பாதையை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டால் என்ன நேரும்? காக்கஸஸ் பகுதியிலும், மத்திய வட ரஷ்யப் பகுதியிலும் உள்ள படைகள் ஒன்றிற் கொன்று உதவிக் கொள்ள முடியாமற் போய் விடும். தமக்குத் தேவையான பொருள்களை யெல்லாம் அங்கேயே தேடிக் கொள்ள வேண்டி நேரும்.

**ஐக்கிய நாடுகளின் பொறுப்பு.** இந்தப் போக்கு வரவு சாதனங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு இந்த இரண்டு பகுதிகளிலும் போதுமான அளவிற்குத் தளவாடங்களையும் மற்ற பொருள்களையும் ரஷ்யர்கள் சேகரித்து வைத்திருக்கிறார்கள்.

காக்கேஷியாவை ஜெர்மானியர்கள் பிடித்து வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது நேச நாடுகளுக்கு மிக அதிகமான பொறுப்பு ஏற்பட்டு விடுகிறது. இது மகத்தான பொறுப்புத் தான். கப்பல் போக்கு வரவுக்கு வட கடலில் மிகுந்த ஆபத்துண்டு. இந்தப் பாதை வழியாகத் தான் ரஷ்யாவிற்கு சப்ளைகள் இப்போது அனுப்ப வேண்டி யிருக்கிறது. பாரசீக வழியாகவும் மற்றொரு பாதை இருக்கிறது. இதனால் செலவும் அதிகம்; மிகுந்த தாமதமும் ஏற்படும். என்றாலும் இவற்றைப் பொருள் படுத்தாத படி எல்லா வகை சப்ளைகளும் அனுப்பப் படும்.



# உலகப் போக்கு.

**மாஸ்கோ மகாநாடு** மாஸ்கோ நகரம் ரஷ்யாவின் தலை நகரம். இங்கே ஒரு மகா நாடு நடந்திருக்கிறது. இரண்டு ஐரோப்பிய யுத்தத் தலைவர்கள் அதற்குப் போயிருந்தனர். இது வரை இவ் விருவரும் சந்தித்ததே கிடையாது. அவர்கள் தான் ருஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலினும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும். மிகவும் முக்கியமான விஷயங்களைக் குறித்து இவர்கள் விவாதித்தார்கள். இது, நேச தேசத்தார் இந்த உலக யுத்தத்தை எந்த முறையில் நடத்துவது என்பதைப் பற்றியது. உடனடியாக ரஷ்யாவிற்கு எந்தெந்த வகைகளில் உதவி வேண்டி யிருக்கு மென்றும், இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்கலாமா என்பது பற்றியும் தான் வெகுவாக விவாதித்தார்கள். ரஷ்ய அந்நிய நாட்டு மந்திரி மாலடோவ் சமீபத்தில் லண்டனுக்கும் அமெரிக்காவுக்கும் போயிருந்தார். அப்போது இவரது வருகையைக் குறித்து அரசாங்கத்தார் ஒரு அறிக்கையை வெளியிட்டனர். அதில் 1942-ம் வருஷத்திலேயே இரண்டாவது போர் முனையை அமைத்துக் கொள்ளுவது பற்றிய அவசியத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நல்ல பயன் தரத் தக்க பருவத்தில் தான், இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு ஏற்ற சமயம் எது என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இது பற்றி ராய்ட்டர் ஸ்தாபனத்தின் இராஜ தந்திர நிருபர் எழுதுவதாவது :—

> இது பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் எவ்வளவு முக்கியமானதோ, அவ்வளவுக்கு, ரஷ்யாவுக்கும் முக்கியமானது தான். இதை ஆரம்பிக்கும் போது முழு பலமும், சிறந்த திறமையும், நிச்சயமாக நமக்கு வெற்றி கிடைக்கும் என்னும் நம்பிக்கையும் நமக்கு, இருக்க வேண்டும். குறிப்பிட்ட வேளை தவறாமல் தாக்க வேண்டும். கொஞ்ச நேரம் முந்தியோ பிந்தியோ தாக்கக் கூடாது. அதாவது, ஜெர்மானியர்கள் தமக்கு முழு பலத்தோடு கிழக்குப் போர் முனையிலும் மேற்குப் போர் முனையிலும் போராடும்படி செய்ய வேண்டும்.

மேலும், அவர் கூறுவதாவது :—

இரண்டாவது போர் முனையை ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது என்பது பற்றிய கவலை அச்சு நாடுகளுக்கு மிகவும் அதிகமா யிருக்கிறது. யுத்தத்தில் சம்பந்தப் படாத நாடுகளுக்கு ஜெர்மானியர் அனுப்பும் செய்திகளிலிருந்தும், ஜெர்மன் பத்திரிகைகளிலிருந்தும் இது தெளிவாகத் தெரிகிறது. இரண்டாவது போர் முனை ஏற்பட ஒட்டாதபடி தடுக்க வேண்டி மறை முகமாக எத்தனையோ வகைகளில் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி ஜெர்மானியர்களுக்கு தெரிவிக்கும்படி கோபெல்சுக்கு தைரியம் உண்டானது. இதற்குக் காரணம் ரஷ்யாவில் அவர்களுக்குக் கிடைத்த வெற்றிகள் தான். இங்கிலாந்துக்கும் ரஷ்யாவிற்கும் ஒப்பந்தம் ஏற்பட்ட போதே, இரண்டாவது போர் முனையை அப்போது ஆரம்பித்தால், எந்த வித நஷ்டமும் ஏற்படா தென்று முடிவு கட்டினார்க ளென்றும், இப்போது ஆரம்பித்தால் ஆபத்துகள் மிகவும் உண்டு என்றும் கோபெல்ஸ் முட்டாள் தனமாகக் கூறுகிறார். தாம் செய்து வைத்திருக்கும் பிரமாதமான ஏற்பாடுகளால் நேச நாடுகளுக்கு மகத்தான நஷ்டங்கள் உண்டு பண்ணி விடுவார்களாம். சில நாட்களாக இப்படிப் பட்ட செய்திகளை ஜெர்மன் செய்தி ஸ்தாபனங்கள் வீசிக் கொண்டே யிருக்கின்றன.

**இரண்டாவது மகினட் லைன்** இரண்டாவது போர் முனையை நேச தேசங்கள் ஆரம்பித்தால், இப்போது ஜெர்மானியர்கள் வயப் பட்ட நாடுகளில் பரபரப்பு ஏற்படக் கூடும். இதைத் தடுக்கும் பொருட்டு அபரிமிதமான பிரசாரத்தில் இறங்கி விட்டார் கோபெல்ஸ். ஜெர்மனியரால் கைப்பற்றப் பட்ட நாடுகளில் வசிப்பவர்களுக்கு மற்றொரு, உணர்ச்சியும் ஏற்படலாம். இதனால் ஜெர்மானியர்களுக்குக் கவலை மிகுந் திருக்கிற தென்றும், தம் ஆள் பலத்தைத் திரட்ட வேண்டியே இப்படிப் பிரசாரம் செய்கிறார்கள் என்றும், அவர்கள் உணரக் கூடும். தற்போது ஜெர்மானியர் அமைத் துள்ள பாதுகாப்புக்களைக் குறித்து, 'ஒரு இரண்டாவது மகினட் லைன்' என்று ஒரு பிரஞ்சு இஞ்சினீர் குறிப்பிட்டார். இது சரியான உவமை யல்ல.

இரண்டாவது மாகினட் லைனை அமைப்பதற்கான ஏற்பாடுகளை யெல்லாம் குறித்து, கோபெல்ஸ் பிரசாரம் செய்கிறார். இது பற்றி நேச தேசத்தார் தீர யோசித்து முடிவு கட்டி விட்டார்கள். ஆகவே, இந்த மாதிரி பிரசாரத்தால் நேச நாடுகள் தம் கொள்கையை ஒரு போதும் மாற்றிக் கொள்ள மாட்டா. ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனையை ஏற்படுத்துவதனால் பெரும் நஷ்டத்திற்கு இட முண்டு. ஆகவே, ஜெர்மானியர்களுக்கு மிகவும் மகா அசந்தர்ப்பமான சமயம் பார்த்துத் தான் இது ஆரம்பிக்கப்படும்.

திட்டமிடுவது, உற்பத்தி செய்வது, ஒன்றுபடுத்துவது ஆகியவை யுத்த காலத்திற்கு மிகவும் முக்கியமானவை. இப்போது யுத்த சப்ளை பிரச்னை, மிகவும் முக்கியமா யிருக்கிறது. இதைப் பற்றிய எல்லா நுணுக்கங்களையும் அடிப் படையாகக் கொண்டு தான், இரண்டாவது போர் முனையில் சம்பந்த முள்ள நாடுகள் இதுபற்றி தமக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ளவும் ஆயத்தம் செய்யவும் கூடும். இதற்காகத் தான், இந்த மாஸ்கோ மகா நாடு நடை பெற்றது. சர்ச்சில் மாஸ்கோவிற்குப் போன நோக்கம் ஈடேறி விட்டது என்று பிரிட்டிஷ் பொது ஜனங்கள் கருதுகிறார்கள். இவர் திரும்பி வந்த பிறகு, ஸ்டாலினுக்குக் கீழ்க் கண்டவாறு ஒரு தந்தி யனுப்பி யிருக்கிறார் :—

> "நான் மாஸ்கோவிற்குப் போனது பற்றி மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். நம் சந்திப்பினால் நமது நோக்கம் முன்னேறும் என்று நான் உறுதியா யிருக்கிறேன்."

சர்ச்சில் மாஸ்கோவிற்குப் போன பிறகு கைரோவிற்குப் போயிருந்தார். அப்போது பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் அவரைக் கண்டு பேசினார். பஞ்சாப் பிரதம மந்திரி சர் சிக்கந்தர் ஹையத்கான் ஒரு தலை சிறந்த இந்தியர். இவருடனும் சர்ச்சில் விவாதித்தார். இந்தியப் படைத் தலைவர் ஜெனரல் வேவலும் மாஸ்கோ மகா நாட்டிற்குப் போயிருந்தார். இதிலிருந்து இரண்டாவது யுத்த முனை ஏற்படுத்த வேண்டியதைக் குறித்து விவாதித்திருப்பார்களென்று தெளிவாகத் தெரிகிறது.

## முஸ்லீம்கள் நோக்கம்.

ஈராக் அரசாங்க சபைத் தலைவர் சையத் ஹமீத் அலி கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிறார் :—

ஜன நாயகப் போரில் ஈடுபட்டிருப்பவர்களின் நம்பிக்கைக்கு எகிப்து பாத்திரமாயிருக்கிறது. இது அவர்களுடைய முற்போக்கான கொள்கையைத் தெரிவிக்கிறது. வெகு சீக்கிரத்திலேயே அச்சு நாடுகள் தோல்வி யடையும். இதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. இந்த நிலையைத் தான் உண்மையான ஒவ்வொரு அரபியும் முஸ்லீமும் எதிர் பார்த்துக் கொண்டிருப்பது.

## யுத்த சேத ஜாபிதா.

யுத்தத்தில் சமீபத்தில் கீழ்கண்டவர்கள் காலமான செய்தியை வருத்தத்தோடு அறிவிக்கிறோம் :—

| நம்பர் பட்டாளம். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **சென்னை சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்.** | | |
| 63660 | சாப்பர். | ராமையா. |
| **ஆர். ஐ. ஏ. எஸ். ஸி.** | | |
| எம்.டி. 943278. | சிப்பாய். | ராஜா ராம். |
| **ஐ. ஏ. ஓ. ஸி.** | | |
| ஓ. 76502. | சிப்பாய் டிரைவர். | முருகையன். |

## புறப்படுங்கள் தோழர்களே !

(தோழர்களே என்ற கண்ணி.)

1 நேரிட்டு வந்த நிலை கெட்ட ஜப்பானைப்
போரிட்டு வெல்லப் புறப்படுவீர் தோழர்களே !

2 ஜனநா யகத்தன்னைத் தாக்குகின்ற ஜெர்மனியை
இனிநாமும் விட்டுவைத்தால் என்றும் தோழர்களே !

3 உலகம் அமைதிபெற ஒட்டாமல் எங்கும்
கலகமிடும் ஜெர்மனியின் கட்டழிப்போம் தோழர்களே !

4 சதிகார ஜப்பான் தலையைத் திருகுவது
பொதுஜனங்கள் வேலை ! புறப்படுங்கள் தோழர்களே !

5 ஜப்பானை ஜெர்மனியைத் தாக்கிநாம் வென்றால்தான்
எப்போதும் போல இருக்கலாம் தோழர்களே !

6 அகிலத்தைத் தன்னடிமை ஆக்கவரும் அச்சைப்
புகுந்து தொலைப்போம் ; புறப்படுவீர் தோழர்களே !

7 இந்த உலகத்தை இரண்டொருவர் வெல்வதென்றால்
மந்தையிலே ஆடாநாம் ? வாருங்கள் தோழர்களே !

8 ஜப்பானும் ஜெர்மனியும் தங்கள் பேராசைக்கே
இப்பூமி வந்ததென எண்ணிவிட்டார் தோழர்களே !

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஆகஸ்ட்டுமீ 28உ, வெள்ளிக்கிழமை [இதழ் 34

## காங்கிரஸ் தீர்மான ஆராய்ச்சி

### செல்லாக் காசு ஆகி விட்டதுவே !

### நேர்மை யில்லாத போக்கு

மாலை மணி 6 இருக்கும். சென்னையில் ஒரு பூஞ் சோலையில் இரண்டு மாணவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தப் பேச்சு கடுமையான விவாதமாக முடிந்தது. அதைக் கேட்டுக் கொண்டிருந்தோம். அதை அப்படியே கீழே தந்திருக்கிறோம்.

சந்தர் :—தேசியப் போர் முனை ஆசாமிகள் ஊர் ஊராகப் போய் பிரசாரம் செய்கிறார்களே ! தெரியுமா உனக்கு ?

சுந்தர் :—நன்றாய்த் தெரியும், நேற்றுங் கூட அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

சந்தர் :—என்ன சொன்னார்கள் ?

சுந்தர் :—காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானத்தைக் கண்டித்துப் பேசினார்கள்.

சந்தர் :—வேறே வேலை தான் என்ன இவுங்களுக்கு ?

சுந்தர் :—அதென்ன, அப்படிச் சொல்லுகிறாய் ? அவர்கள் வெகு அழகாகக் காங்கிரஸின் தீர்மானத்தினால் எப்படி நாடு கஷ்டப் பட நேரும் என்று சொன்னார்கள்.

### சென்னை யுத்த சஞ்சிகை.

#### விசேஷ மலர்.

போர் ஆரம்பமாகி அடுத்த வாரம் மூன்றாவது வருஷம் ஆரம்ப மாகிறது. இதை முன்னிட்டு யுத்த சஞ்சிகையின் விசேஷ மலர் ஒன்றும், யுத்த தின சரிக் குறிப்பு அனுபந்தமும் வெளியிடப் படும். சாதாரண வெளியீடுகளி லுள்ள வாசிப்புப் பகுதியைப் போல, இரண்டு பங்கு இந்த வெளியீட்டில் காணப்படும். பல விசேஷக் கட்டுரைகளும், படங்களும் இதில் வெளியிடப் படும்.

சந்தர் :—இவர்களுடைய வேலையா இது ? இது அரசியல்காரர்களின் வேலை. இவர்களுக்கு என்ன இது பற்றி ?

சுந்தர் :—இந்தத் தீர்மானத்தைப் பற்றி அவர்கள் பேசக் கூடாது தான் ; ஆனால் இதனால் நம் நாட்டின் பாதுகாப்பைப் பற்றி ஏற்படக்கூடிய நிலைமையைக் குறித்து கவலை கொள்ளுவது அவர்கள் கடமை யல்லவா ?

சந்தர் :—நம் நாட்டின் பாதுகாப்பிற்கு, காங்கிரஸ் தீர்மானம் உதவுமா ? உதவாதா ?

சுந்தர் :—இந்தத் தீர்மானத்தினால், இந்தியாவை நிச்சயமாகப் பாதுகாக்க கூடு மென்றால், அரசாங்கம் இணங்கா திருந்தாலும், அரசாங்கத்தையும் அவசியமானால் நாம் எதிர்க்கலாம் ; இது நமது கடமையாகும். இந்தத் தீர்மானம் யுத்த முயற்சிகளைத் தடை செய்வதாக விருந்தால், இந்தத் தீர்மானத்தை எதிர்க்க வேண்டியதும் நம் கடமை தான்.

சந்தர் :—அந்தக் காங்கிரஸ் தீர்மானத்தின் அர்த்தந் தான் என்ன ?

சுந்தர் :—இந்த நிமிஷமே பிரிட்டிஷ் அரசாங்கம் வாபீஸ் ஆகி விட வேண்டுமாம் ! அதுவும் இதற்குப் பதிலாக எப்படிப் பட்ட அரசாங்கம் அமைக்கப்பட வேண்டு மென்று முடிவு செய்து கொள்ளும் முன்பே, போய் விட வேண்டுமாம்?

சந்தர் :—அப்படியானால் நாட்டின் நிலைமை என்னாகும் ?

சுந்தர் :—இது பற்றி பண்டித ஜவஹர் லால் என்ன சொல்லி யிருக்கிறார் தெரியுமா ? " பிரிட்டிஷ் படைகளையும், சிவில் நிர்வாக அமைப்பையும் வாபீஸ் பெற்றுக் கொள்ளுவார்களானால், சூன்ய நிலை யொன்று ஏற்படும். உடனடியாக இந்தச் சூன்யத்தைப் போக்குவது என்பது முடியாத காரியம் " என்று சொல்லி யிருக்கிறார்.

சந்தர் :—அப்படியானால், ஒரு தகுந்த திட்டம் இல்லாமலா இப்படிப் பட்ட தோர் தீர்மானத்தை நிறை வேற்றுவார்கள் ?

சுந்தர் :—இந் நாட்டை விட்டு பிரிட்டிஷார் வாபீஸ் ஆகிவிட்டால், உடனடியாக ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்குக் காங்கிரஸ் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறது என்று சிலர் சொல்லு கிறார்கள். இது பற்றி காந்தி யாருங் கூட குறிப்பிட்டிருக்கிறார். அது அவருடைய ஆசையே யொழிய திட்ட மல்ல.

சந்தர் :—காந்தியார் என்ன குறிப்பிட் டிருந்தார் ?

சுந்தர் :—" பிரிட்டிஷ் ஆட்சி நம் நாட்டி லிருந்து வாபீஸ் ஆகி விட்டால், இந்திய மக்களில், பல முக்கியமான இனத்தவர்களில் முக்கியஸ்தர்கள் எல்லாம் ஒன்று பட்டு, ஒரு தற்காலீக அரசாங்கத்தை ஏற்படுத்துவார்கள்." என்று கூறி யிருக்கிறார்.

சந்தர் :—மக்களின் பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுப்பது எப்படி ?

சுந்தர் :—இது மிகவும் கடுமையான தோர் பிரசினை தான்.

சந்தர் :—இப்படி ஏற்படக் கூடிய அரசியல் அமைப்பைக் குறித்தோ, யார் யார் அரசாங்கத்தை நடத்த வேண்டும் என்பதைக் குறித்தோ அந்தப் பிரதிநிதிகளுக் குள்ளாக கருத்து வேற்றுமைகள் உண்டானால், யார் இவை பற்றி முடிவு கட்டுவது ?

சுந்தர் :—இதுவும் ஒரு கடுமையான பிரசினை தான்.

சந்தர் :—இந்தத் தீர்மானத்தை வரைவதற்கே ஏப்ரல் முதல் ஆகஸ்ட்டு வரை, அதாவது 5 மாத காலம் எடுத்துக் கொண்டவர்கள், அரசியல் அமைப்பை எப்படி உடனடியாக அமைத்து விட முடியும் ?

சுந்தர் :—இதுவும் ஒரு நல்ல கேள்வி தான் ; ஆனல், இவற்றிற்கு அத்தீர்மானத்தில் எந்த வித விடையையும் காணக் கூட வில்லை. ஒரு தலைவராவது, இது பற்றி விளக்கமாகக் கூறவில்லை.

சந்தர் :—காந்தியாருங் கூடவா ?

சுந்தர் :—அவர் என்ன சொல்லுகிருர் தெரியுமா ? '' யதேச்சை யடைவதே நமது நோக்கம். அது யாருக்குக் கிடைத்த போதிலும், அவர்கள் அதை எற்றுக் கொண்டு ஆட்சியை நடத்தலாம். பார்ஸிகள் கையில் ஆட்சியை ஒப்புவிக்க வேண்டு மென்று நீங்கள் முடிவு கட்டலாம் ; அதிகாரத்தைப் பார்ஸிகளுக்கு என் கொடுக்க வேண்டு மென்று நீங்கள் கேட்கக் கூடாது ! காங்கிரஸிலேயே கேள்விப் படாத ஒருவருக்கு அரசியல் அதிகாரம் அளிக்கப் படலாம் '' என்று கூறி யிருக்கிருர்.

சந்தர் :—அப்படி யானுல், எதிர் கால அரசியலைக் குறித்து, தெளிவான தோர் திட்டம் எதுவும் இல்லையா ?

சுந்தர் :—தெளிவான திட்டம் எதுவும் இல்லை ; ஆனல், ஆசை மட்டும் இருக்கிறது என்று அதி லிருந்து விளங்குகிறது.

சந்தர் :—அது இருக்கட்டும். நம் நாட்டை எதிரிகள் தாக்குவார்க ளானுல், பாதுகாப்புக்கு என்ன ஏற்பாடுகள் செய்யப் போகிருர்கள் ?

சுந்தர் :—ஜப்பான் நம் மீது பாய அஸ்ஸாமுக்கும், வங்காளத்திற்கும் கிழக்கே காத்துக் கொண்டிருக்கிறது. உண்மையிலேயே இது மிகவும் சிக்கலான நிலமை. இதுபற்றி எந்த வித ஏற்பாட்டையும் காங்கிரஸ் தீர்மானத்தில் காணக் கூட வில்லை.

சந்தர் :—காரியக் கமிட்டியார் இது பற்றி கூடத் தீர்மானிக்க வில்லையா ?

சுந்தர் :—சிந்தனு சக்தி யுள்ள எவரும் திருப்தி யடையத் தக்கபடி, இந்த முக்கியமான பிரசினையைக் குறித்து எந்த வித முடிவும் செய்யாதிருப்பது வருந்தத் தக்கது தான்.

சந்தர் :—சென்ற ஜூலை மீ 14உ வார்தாவில் கூடித் தீர்மானித்தார்களே ; அது என்ன !

சுந்தர் :—எதிரிகளைத் தடுக்க வேண்டு மென்றும், இதன் பொருட்டு '' இந்தியாவில் ஆயுதந் தாங்கிய படைகளை வைத்துக் கொள்ள வேண்டு மென்று நேச நாடுகள் விரும்பினுல், வைத்துக் கொள்ளலாம் என்றும் '' அத்தீர்மானம் கூறுகிறது.

சந்தர் :—ஆயுதங்களைக் கொண்டு நம் நாட்டைப் பாதுகாப்பதில் நமக்குப் பங்கில்லை யென்று தானே இதற்கு அருத்தம் ? இது சரியான போக்காகுமா !

சுந்தர் :—இந்தக் குறைபாட்டைக் காரியக் கமிட்டியார் பிறகு உணர்ந்தார்கள். அதனுல் தான பம்பாயில் நடைபெற்ற கூட்டத்தில் மிகத்தெளிவாக மற்றொரு தீர்மானத்தை நிறைவேற்றினுர்கள்.

சந்தர் :—அது என்ன தீர்மானம் ?

சுந்தர் :—காங்கிரஸ் எற்கெனவே மேற்கொண்டிருந்த நிலமையை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டி மிகத் தெளிவாக தீர்மானித்திருக்கிருர்கள். அதாவது :—

இந்தியா சுயாட்சி பெற்ருல், அதன் மூல பலத்தையெல்லாம் இந்தப் போராட்டத்தில் ஈடு படுத்தும். தற்காலீக தேசிய அரசாங்கத்தின் முக்கிய கடமை, நேச நாடுகளோடு சேர்ந்து, ஆயுதங்களைக் கொண்டும் அஹிம்ஸா முறையிலும் எதிரிகளைத் தடுத்து இந்தியாவைப் பாதுகாப்பது தான்.

சந்தர் :—இந்தத் தீர்மானத்தை காந்தியார் ஒப்புக் கொண்டாரா ?

சுந்தர் :—இல்லை. அஹிம்ஸா முறையிலேயே முழு நம்பிக்கையும் வைத்திருக்கிருர்.

சந்தர் :—எதைக் கொண்டு இதைச் சொல்லுகிருய் ?

சுந்தர் :—சுயாட்சி பெற்று விட்டதனுல் மட்டும் நம் வேலை முடிந்து விட வில்லை. அஹிம்ஸா முறையில், வேலைக் காரர்களாகத் தான் மேலும் இருந்து கொண்டிருக்கநேரும்.

சந்தர் :—அப்படியானுல், காங்கிரஸுக்கும் காந்தியாருக்கும் கருத்து வேற்றுமை உண்டாகி விட்டது என்று தானே அருத்தம் ?

சுந்தர் :—அது பற்றி இப்போது நமக்கு கவலை யில்லை ; ஆனல், ஒன்று மட்டும் மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஆசியாவை எடுத்து எப்ப மிட்டு விடுவேன் என்று தோள் தட்டுகிருன் எதிரி நம் தலைவாசலில். இந்த நெருக்கடியான காலத்தில், இன்னது செய்ய வேணடு மென்று, மிகப் பெரிய ஜனக் கட்சியான காங்கிரஸ் ஒரு வித ஆலோசனையும் தம் கட்சிக்காரர்களுக்குச் சொல்ல வில்லை.

சந்தர் :—இந்த நிலைமையிலே தானு, பரிபூரண சுயாட்சி வேண்டுமாம் ! பிரிட்டிஷ் ஆட்சி முறை வாபீஸ் ஆகிவிட வேண்டுமாம் !

சுந்தர் :—ஆமா.

சந்தர் :—எதற்காக, காங்கிரஸ் இவற்றை கேட்டிருக்கிறது.

சுந்தர் :—இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம்.

1. இந்தியாவிற்கு சுயாட்சி மிக மிக அவசியம்.
2. யதேச்சை இந்தியாவைத் தாக்க யாரேனும் முன்வருவார்களானுல், அவர்களோடு போராடி வெல்லும் பொருட்டு எராளமான படைகள் திரளும்.

சந்தர் :—முதலாவது காரணம் நியாயமானது தான் ; ஆனல், அக்கிரம ஜப்பானை அழித்தாலல்லது, ஆசியாவிலுள்ள எந்த நாடாவது சுயேச்சை யோடு வாழ முடியுமா ?

சுந்தர் :—முடியாது தான்.

சந்தர் :—பரிபூரண சுயேச்சை பெற்ற பிறகு அமைக்கப் படும் அரசாங்கம் பற்றி, இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சியினரும் திருப்தி யடைவார்களானுல் மட்டுந்தானே, யுத்த முயற்சிகள் செவ்வையாக நடை பெற முடியும் ?

சுந்தர் :—ஆமா.

சந்தர் :—காங்கிரஸ் கோரிக்கைகள் தான் இந்தியாவிலுள்ள பெரும்பான்மை மக்களுக்குப் பிடிக்க வில்லையே.

சுந்தர் :—ஆம். முஸ்லீம் லீக்குக்கு இவை பிடிக்கவே இல்லை, ஜின்னு ஒரு எச்சரிக்கை கூட விடுத்திருக்கிருர்.

சந்தர் :—யாருககு ? என்ன எச்சரிக்கை.

சுந்தர் :—பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு. காங்கிரஸ் கோரிக்கைகளுக்கு விட்டுக் கொடுக்காதீர்கள் ; இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான முஸ்லீம்களின் தீர்மானத்திற்கு இது விரோதமாகும் என்று எச்சரிக்கிருர்.

சந்தர் :—முஸ்லீம் லீக் தலைவர் தான் இப்படிச் சொன்னுர் ; இந்து மகா சபைத்தலைவர் சவர்க்கர் என்ன சொன்னுர் ?

சுந்தர் :—காங்கிரஸ் தீர்மானம், இந்துக்களின் நியாயமான உரிமைகளையும், இந்தியா ஒரு உறுதியான அரசாங்கமாக அமைந் திருப்பதையும் பாதிக்கும் என்கிருர்.

சந்தர் :—இவற்றிலிருந்து, காங்கிரஸ் கோரிக்கைகளுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இசைவதாக வைத்துக் கொண்ட போதிலும், யுத்த முயற்சிகளைப் பெருக்க முடியுமா ?

சுந்தர் :—முடியாது தான்.

சந்தர் :—காங்கிரஸ் கோரிக்கைகளுக்கு அரசாங்கத்தார் இணங்கு வார்களானுல் என்ன தான் ஏற்படும் ?

சுந்தர் :—நாட்டில் எந்த வித ஆட்சியும் நடை பெற முடியாத நிலமை ஏற்படும் ; இரண்டாவதாக சுயாட்சியை நடத்துவதற்கு எந்த வித ஏற்பாடுகளையும் காங்கிரஸ் செய்ய வில்லை ; மூன்ருவதாக, ஜப்பானியர் நம் தலை வாசலில் வந்து நிற்கும் இந்தக் காலத்திலேயும், நம் நாட்டை காப்பதற்கான எந்த விதத் திட்டமும் வகுக்கப் பட வில்லை. கடைசியாக, இந்தியாவிலுள்ள வேறெந்த அரசியல் கட்சியும் காங்கிரஸ் கட்சித் தீர்மானத்தை ஆதரிக்க வில்லை.

சந்தர் :—கடைசியாக, மிகச் சிறந்து விளங்கிய காங்கிரஸ் செல்லாக் காசாகவா போய் விட்டது ?



# ஜப்பானிய இரகசிய போலீஸ்.

## பக்கா வேலைகளில் பலே பேர்வழிகள்:

### துப்பறிவதில் அதிக சமர்த்தர்கள் !

ஜப்பானிய ருடன் நெடு நாட் பழகி யிருந்த ஒருவர் கீழ்க் கண்ட வாறு எழுதுகிருர்:—

ஜப்பானியஇரகசியப் போலீசாரின் வேலை முறைகள் ஒரு வகையில் உலகத்திலேயே மிகவும் சிறந்த தென்று சொல்லலாம். இது பற்றி அவர்கள் வெகுவாகப் பீத்திக் கொள்ளுகிருர்கள். இது வீண் டம்பம் என்று சொல்லவும் பல வகைகளில் இடம் உண்டு. கீழ்க்கோடி நாடுகள் முழுவதிலும் இவர்கள் செய்துள்ள வேலைகளைக் கவனித்திருக்கிறேன். அவர்கள் வேலை பக்கா வேலை ; நியாயானியாயம் இல்லாதது. மிகமிக அழகாகவும், மகா கேவலமான முறையில் தந்திரமாகவும் செய்யப் படுவது ; ஜெர்மன் இரகசியப் போலீசான 'ஜெஸ்டபோ'வுக்குத் தான் இவர்களை ஒப்பிடலாம். ஜப்பானுக்கு வெளியே யுள்ள நாடுகளில் உள்ள ஒவ்வொரு ஜப்பானியனும், ஏதேனும் ஒரு முறையில் தம் அரசாங்கத்தின் எஜெண்டாகத் தான் இருந் திருக்கிருன்.

உதாரணமாக சௌத் சீஸ் என்னு மிடத்தில் ஒரு ஜப்பானியன் ஒரு சிறு கடை வைத்திருந்தான். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ஜப்பானுக்குத் திரும்பினுன். மறுபடியும் சௌத் சீஸுக்கு வந்து தன் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தினுன். மீண்டும் ஜப்பானுக்குப் போனுன். மறுபடியும் திரும்பி வந்தான். இப்படிப் பல முறை அந்த வருஷத்தில் போய் வந்தான். வருஷக் கடைசியில் ஒரு யுத்தக் கப்பல் உத்தியோகஸ்தனுகக் காட்சி யளித்தான்.

மற்றொரு உதாரணமும் சொல்ல விரும்புகிறேன். நான் டோக்கியோவி லுள்ள நாட்டுப்புர சங்கத்தில் பந்து ஆடிக் கொண்டிருந்தேன். அப்போது கடற்படை உத்தியோகஸ்தர் ஒருவரை அங்கிருந்த நண்பர்கள் எனக்கு அறிமுகப் படுத்தினுர்கள். பிறகுங் கூட இரண்டொரு முறை நான் அவரை அங்கே சந்தித் திருக்கிறேன். ஆறு வருஷங்கள் கடந்து விட்டன. ஒரு நாள் நான ஹாங்காங் நகரத்தின் கடை வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். ஒரு சிறிய கடையில் எடுபிடி ஆளாக ஒருவர் இருந்தார். அவருடைய முகம் என் ஞாபகத்திற்கு வந்தது. ஆம் அந்த கடற்படை உத்தியோகஸ்தர் தான்! சந்தேகமே கிடையாது ! கடற்படை உத்தியோகப் பதவி எங்கே ? எடுபிடியாள் வேலை எங்கே ? எனக்கு அவரைப் பற்றி சந்தேகம் தோன்றியது. அதனுல், உடனே ஹாங்காங் இரகசியப் போலீசுக்கு இவ் விஷயத்தை யறிவித்தேன். போலீஸார் விசாரணை செய்ததில், அவர் சம்பந்தமான எல்லா தஸ்தாவேஜிகளும் சரியா யிருந்தன. ஆகையால் ஹாங்காங் போலீஸார் அவர் மேல் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

**சீனுவில் பலிக்க வில்லை.**

ஆனுல், இதில் ஒரு ஆச்சரியமான விஷயம். இவர்களுடைய இரகசியப் போலீஸாரின் பாட்சா சீனர்களிடம் மட்டும் பலிக்க வில்லை. சீனுவின் காலஞ் சென்ற சக்கரவர்த்தியின் மனைவியான பெரிய மகாராணி ஜப்பானியர்களைக் குறித்து ஒரு அரசாங்க தஸ்தாவேஜியில் குரங்குத் தீவினர் என்று குறிப்பிட் டிருக்கிருர்கள். ஜப்பானியர்களின் மனப் பான்மையைக் குறித்து அவ்வளவு தெளிவாகச் சீனர்கள் தெரிந்து கொண்டிருக்கிருர்கள் ; ஆனுல், ஜப்பானியர்களோ, சீனர்களின் மனப் பான்மையைத் தெளிவாகத் தெரிந்து கொண்டதே கிடையாது.

ஜப்பானிய இரகசியப் போலீசாரின் சிறந்த வேலையால் கடுமையான இரண்டு யுத்தங்கள் நேராமல் தவிர்க்கப் பட்டன. 1940 ம் ஆண்டில் பிரஞ்சு இந்தோ சீனுவைப் பிடித்துக் குடியேறியது இவர்களுடைய சிறந்த வேலையின் பயனுகத் தான். இரண்டாவதாக 5 மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு, தாய்லந்தும் 1941-ம் ஆண்டு டிசம்பர் மீ 7உ சரண் புகுந்ததற்குக் காரணம், ஜப்பானிய இரகசியப் போலீஸாரின் வேலை தான். இவ்வளவு சிறந்த முறையில் இவர்கள் வேலை செய்திரா விட்டால், இந்த இரண்டு இடங்களும் இரண களமாகத் தான் ஆகி இருக்கும். இந்த இடங்களில் இந்த இரகசியப் போலீஸார் செய்த வேலைகள் என்ன ? கிழக் காசியர்க்காரர்களின் கண்களில் சொக்குப் பொடியைப் போட்டு விட்டார்கள். 'கூட்டு முன்னேற்ற திட்டம்' 'கீழ் நாடுகளில் புதிய முறை' ஆசியா, ஆசியாக்காரர்களுககே' என்று பலவகைப் பிரசினைகளைக் கிளப்பினுர்கள். அநேக வருஷங்களுக்கு முன்னேயே சீனு மீது ஜப்பானியர்கள் பொருளாதார யுத்தத்தை ஆரம்பித்து விட்டார்கள். என்றுலும், இதன் பலன்கள் வெளிக்கு வாராமல் மறைத்து வைத்திருந்தார்கள் ஜப்பான் இரகசியப் போலீஸார். ஜப்பானியர்களின் உள்ளத்திலே 'பொருளாதார யுத்தம்' என்பதற்கும், 'கூட்டு முன்னேற்றம்' என்பதற்கும் ஒரு வித வேற்றுமையும் இல்லை. ஆனுல், இந்தக் 'கூட்டு' என்னும் பகுதிப் பதிலாக 'சொந்த' என்னும் பதத்தை அமைப்பது தான் பொருத்த மாகும். பிற நாட்டவர்களைப் பொருளாதாரத் துறையில் கடுமையான போராட்டத்திற்கு ஆளாக்கி, தாம் மட்டும் எளிதில் முன்னேறிக் கொண்டு போகிருர்கள்.

கூட்டு முன்னேற்றத்தை நான் கண்டிருக்கிறேன். இந்தியாவிடம் நான் அன்பு செலுத்துகிறேன். ஏனென்ருல், அங்கேதான் என் சாந்தி நிலையை யடைந்தேன்.

> இந்தப் பொருளாதார யுத்தம் இந்தியாவையும் பிடிக்காத படி கடவுள் காப்பாற்றுவாராக!

1937-ம் ஆண்டு மகா ஷாங்கையை ஜப்பானியர்கள் கைப்பற்றி குடி யேறினுர்கள். அங்கிருந்த தொழிற்சாலைகளையும், ஆலைகளையும், சொந்த வீடுகளையும் கூட கைப்பற்றிக் கொண்டார்கள். இந்த வகையில் ஜப்பானியப் படைகள் கொஞ்சமும் பாரபட்சமாக நடப்பதில்லை. அந்தச் சொத்துக்கள் சீனர்களுக்கு உரியதா யிருந்தாலும், சீனர்களுக்கும் மற்ற நாட்டினருக்கும் சேர்ந்து உரியதா யிருந்தாலும், ஜப்பானியப் படைகளுக்குத் தேவை என்று ஏற்பட்டால், உடனே " அவர்களுடைய ஆதிக்கத்திற்கு " உட் பட்டாக வேண்டும். எங்கேயாவது பிரிட்டிஷார் அல்லது அமெரிக்கர்களின் உரிமைகள் வெகுவாகப் பாதிக்கப் பட்டு, அது பற்றி அந்த அரசாங்கங்கள் ஜப்பான் அரசாங்கத்திற்கு ஆட்சேபனைகள் அனுப்பி யிருந்தால் மட்டும் தான், ஒரு சிறு தொகையை நஷ்ட ஈடாகக் கொடுத்தார்கள். அந்தச் சொத்தின் மதிப்பில் இருபதில் ஒரு பங்குகூட இருக்காது இருந்த தொகை.

**எல்லோரும் வேலைக்காரர்கள்தான்.**

இப்படிக் கைப்பற்றப் பட்ட ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் ஓட்டுவதற்கு ஆட்கள், ஜப்பானியர்களுக்குத் தேவையா யிருந்தது. ஜப்பானியர் கைப்பற்றிய பகுதிகளில் வசிப்பவர்கள் சர்வ கலாசாலைப் பேராசிரியராய் இருந்தாலும் சரி, பெரிய வியாபாரியா யிருந்தாலும் சரி, டாக்டரா யிருந்தாலும் சரி, அந்த ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் அடிமை வேலைசெய்ய ஆயத்தமா யிருக்க வேண்டும். இதன் பயனுக இங்கே தயார் செய்யப்படும் பொருள்களை மிக மிகக் குறைந்த விலைக்கு சீனுவின் மற்ற பகுதிகளிலும் வெளி நாடுகளிலும் விற்கிருர்கள். இங்கே தயாராகும் பொருள்களுக்கு " சீனுவில் செய்யப்பட்டது '' என்னும் முத்திரையைப் போட்டு விடுகிருர்கள். இதனுல், மற்ற

சீன வியாபாரிகள் தலை தூக்க முடியாதபடி நசிக்கச் செய்து விடுகிறார்கள். இதுமட்டு மல்ல. சீனாவிற்கு வெளியே யுள்ள வியாபாரிகளும் தம்மோடு போட்டியிட முடியாதபடிச் செய்து விடுகிறார்கள். ஜப்பானி லிருந்து வந்திறங்கும் சரக்கை விட சீனாவில் செய்யப்படும் உள்நாட்டுச் சரக்கை மிகக் குறைந்த விலைக்கு விற்க முடிகிறது!

இதற்கிடையில், பேராசை கொண்ட ஜப்பானியர்கள் கடல் கடந்து சீனாவிற்குள் ஆயிரக் கணக்கில் வந்து இறங்கி விட்டார்கள். இவர்களுக்கு ஊக்கமும் பொருளும் கொடுத்து ஜப்பான் அரசாங்கத்தார் உதவுகிறார்கள். நிர்வாகப் பழக்கம் கொஞ்சங் கூட இல்லாத ஜப்பானியர்கள் தோட்டி முதல் தொண்டமான் பதவி வரையிலும் கைப்பற்றிக் கொண்டார்கள். மிகமிகக் கீழ்க் கடையான உத்தியோகங்களுக்கு சீனர்களை நியமித்தார்கள்.

5 வருஷங்களுக்கு முன்பு ஹாங்காங் டாலர் மதிப்பை விட, சீன தேச டாலர் மதிப்பு உயர்ந்திருந்தது. ஹாங்காங் டாலரின் மதிப்பு ஒரு ரூபாயின் மதிப்பை விட சற்று குறைவா யிருந்தது. 1940-ம் வருஷம் நான் ஷாங்கையிலிருந்தேன். ஒரு இளவரசனைப் போல இரண்டு மாதங்கள் வாழ்ந்து வந்தேன். ஆனால் அப்போது எனக்குச் செலவான தொகையைக் கொண்டு ஒரு மாதங் கூட நான் வாழ்க்கையைச் சாதாரணமாக நடத்துவது கூட கஷ்டமாகத் தான் இருக்கும். அமெரிக்க மாலுமிகளுக்கு மாதம் 80 டாலர்கள் சம்பளம். இது ஷாங்கையில் 1,300 டாலர்களுக்குச் சமம். இப்படியாக சீன டாலரின் மதிப்பு மிக மிகக் குறைந்து விட்டது. சீனர்கள் தம் போராட்டத்தில் இது வரை வெற்றி பெறாததற்குக் காரணம் இது தான். சீன டாலர்களின் மதிப்பைக் குறைக்க வேண்டு மென்றே ஜப்பானியர்கள் செய்த சூது தான் இது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு ஜப்பானிய அரசாங்கமும் பண உதவி செய்தது. ஜப்பானியர்கள் செய்த இந்தச் சூதைப் போல் வேறு யாராவது அல்லது எந்தக் கம்பெனியாவது செய்திருந்தால், உலகக் கோர்ட்டார் கடுமையான தண்டனை விதித்திருப்பார்கள். ஜப்பானியர்களுக்கு இதைப் பற்றி என்ன கவலை? ஒரு குற்றமும் செய்யாது சமாதானமாக வாழுகிறவர்களுக்கு, நேர்மையான முறையிலோ கெட்ட வழியிலோ, தீமையையும் தொல்லையையும் அதிகரிக்கும்படி செய்வது தான், அவர்களுடைய முக்கியமான வேலை.

### ஜப்பானியர் மிருகத்தனம்

ஜப்பானிய ஆட்சி முறை எவ்வளவு கேவலமானது, மிருகத் தனமானது என்று எடுத்துக் காட்டுவதற்கு ஏராளமான ஆதாரங்கள் உண்டு. உதாரணமாக பர்மோஸாவை எடுத்துக் கொள்ளுவோம். 1895-ம் வருஷம் ஜப்பானியர்கள் இதைக் கைப்பற்றினார்கள். அப்போது அவர்கள் பாடிய பல்லவி வேறு. "கூட்டு முன்னேற்ற" பல்லவிக்குப் பதிலாக, "உங்களுக்கு நாகரிகத்தைக் கற்பிக்கவும், உங்கள் தீவை அழகு படுத்தவும், முன்னேற்றவுந் தான் நாங்கள் வந்திருக்கிறோம்" என்னும் பல்லவியைப் பாடினார்கள். பழைய மகா யுத்தத்திற்கு முன்பு ஜெர்மானியர்கள் ஆதிக்கத்திற் குட்பட்ட குடியேற்ற நாடுகள் இருந்தன. இங்கே மகா கொடுமையான ஆட்சி முறை தான் நடந்தது. இதை விடக் கடுமையான முறையில் தான் ஜப்பானியர் பர்மோஸாவை ஆண்டு வருகிறார்கள்.

பர்மோசா தீவில் ஜப்பானிய ஆட்சி முறை எவ்வளவு கொடுமையாக இருந்த தென்று ஒரு பாரதம் எழுதி விடலாம். ஜெர்மானியர்கள் தாம் கைப்பற்றிய நாடுகளில் என்னென்ன செய்தார்களோ, அதை விட மிகவும் அதிகமான கொடுமைகளை ஜப்பானியரும் தாம் குடியேறிய நாடுகளில் செய்தார்கள். ஜப்பானியர்கள் செய்யும் கொடுமைகளின் அளவிற்கு, தாமும் கொடுமைகள் செய்ய வேண்டும் என்னும் எண்ணமே நாஜீகளுக்கு உண்டாகி யிருக்க முடியாது. இந்தத் தீவை நிர்வகித்து ஆண்டு வருகிறவர் கடற்படை அல்லது தரைப் படையைச் சேர்ந்த ஒரு கவர்னர். இந்த கப்பற் படை அல்லது தரைப் படைத் தலைவர்களின் செயல்களின் தாரதம்மியங்களைக் குறித்து குறை கூறுவதனால் ஒரு இலாபமும் கிடையாது. அது புத்தி கெட்ட தனமாகக் கூட சில சமயங்களில் போய் முடியும்.

ஆகவே மலேயா, ஹாங்காங், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன் தீவுகள் பர்மா ஆகிய நாடுகளில் அந் நாட்டு மக்களை ஜப்பானியர்கள் எப்படி நடத்துகிறார்க ளென்று இப்போது கிடைத்து வரும் செய்திகளைச் சந்தேகிக்கவே இட மில்லை. ஜூலை மாதக் கடைசியில் ஸ்ரீமதி காஸ்டன், 'க்வெலென்' வந்து சேர்ந்தார். எனக்கு அவரை நன்றாகத் தெரியும். அவர் ஒரு அறிக்கையை வெளி யிட்டிருக்கிறார். அது ஹாங்காங்கி லுள்ள இந்தியர்களைப் பற்றியது. இதை இந்தியர்கள் கட்டாயம் கவனிக்க வேண்டும். இவர் ஹாங்காங்கில் இந்தியர்களுக்குப் பிறந்தவர். இந்திய ரல்லாத ஒருவரைக் கல்யாணம் செய்து கொண்டார். அவருடைய அறிக்கையில் காணப் படுவது அனைத்தும் உண்மை. இந்தியர்களைத் தம் இராணுவத்தில் சேரும்படி எப்படி நிர்ப்பந்திக்கிறார்க ளென்றும், தாம் அமைத் துள்ள இந்திய விடுதலை சங்கத்தில் அங்கத்தினர்களாகும்படி எப்படி இந்தியர்களை அவர்கள் கட்டாயப் படுத்துகிறார்க ளென்றும் அந்த அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார். இவை தான் ஜப்பானியர்கள் உண்மையிலேயே கையாளும் முறைகள்.

இது போலவே தான் தாம் கைப்பற்றிய நாடுகளிலிருந்து ஏராளமான அரிசியை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்து கொள்ளுகிறார்கள். தம் உபயோக மற்ற இராணுவ நோட்டுகளை செலாவணி செய்யும்படி அந் நாட்டு மக்களை நிர்ப்பந்திக்கிறார்கள். ரோடுகள் வெட்டிப் போடும் படியும் காடுகளில் வேலை செய்யும்படியும் நிர்ப்பந்திக்கிறார்கள். வேலை செய்ய முடியாது கீழே விழுந்து விடுவார்களானால், உடனே சுட்டு விடுகிறார்கள்!

இது தான் அவர்கள் பிரமாதமாகப் பேசும் 'கூட்டு முன்னேற்றம்!'. தோல்வி யடைந்தவர்களின் நிலையே இது தான். பிரெஞ்சு இந்தோ-சீனாவிலும், தாய்லாந்திலும் சரண் புகுந்தவர்களின் கதி மட்டும் என்ன? அவர்களுடைய நிலைமையும் இது தான். ஆகவே, ஆசியாவில் உள்ள மற்ற எதேச்சை நாட்டவர்கள் செய்ய வேண்டியது என்ன? தம் நாட்டைத் தாக்க வருகிறவர்களைத் தேக்கிக் கொன்று அழிக்க வேண்டும். கூட்டுறவாம்! எந்த வித சமரசத்திற்கும் இடமே கிடையாது. இந்த நிலைமையில் சமரசத்திற்கு முயற்சிப்பது, நாட்டையே தற் கொலை செய்வதாகும்.

---

பொய் வதந்திகளை—

நம்பாதீர்கள்!



## பிரித்தானிய காலாள்படை டாங்கிகள்.



போர்க் களத்தில் புகுந்து, பாய்ந்து, வென்று, விருதுகளுடன் காட்சி தருகின்றன

## உங்களுக்கு ஜப்பான் மொழி தெரியுமா?

பலருக்குத் தெரியும்.

பொய் வதந்திகளை இவர்கள் பரப்புகிறார்கள்

இதனால்,

**கலவரத்தையும் பெருந்துன்பத்தையும் உண்டாக்குகிறார்கள்**

இந்தப்

பொய் வதந்திகள் ஜப்பானி லிருந்து தான் கிளம்புகின்றன.

இவற்றை

**இலட்சியம் செய்யாதீர்கள்!**

பிறருக்கும்

சொல்லாதீர்கள்!

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியரை எதிர்க்க தேசியப் போர் முனையை அமையுங்கள்!

## யுத்த சேத ஜாபிதா.

கீழ்க் கண்டவர்கள் இறந்து போனார்கள் என்ற செய்தியை வருத்தத் தோடு வெளியிடுகிறோம்:—

| படை நம்பர். | வேலே. | பெயர். |
|---|---|---|
| **இந்தியன் சிக்னல் படை.** | | |
| 17673 | சிக்னல்மான். | டி. வேலாயுதம். |
| **ஆர்.ஐ.ஏ.எஸ்.சி.** | | |
| எம்.டி. 943173 | சிப்பாய். | பலராம். |
| **உதவிப் பயனியர் படை.** | | |
| 187002 | ஆர்.க்யு.எம்.எச். | எஸ். ஜான் ரத்தினம். |
| **சென்னே சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்.** | | |
| 18157 | சாப்பர் | அப்பையா கவுண்டர். |
| 18271 | ஷை | வெள்ளையன். |
| 62060 | ஷை | ஷேக் மஸ்தான். |

### காணுமற் போய் யுத்தக் கைதிகளானவர்கள் என்று கருதப் படுகிறவர்கள்.

| படை நம்பர். | வேலே. | பெயர். |
|---|---|---|
| **ஆர்.ஐ.ஏ.எஸ்.சி.** | | |
| எம்.டி. 891345 | சிப்பாய். | ராஜு நாயுடு. |
| **சென்னே சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்.** | | |
| 18245 | சாப்பர் | அம்முரு. |
| 17061 | ஷை | அண்ணுமலே. |
| 19794 | ஷை | அந்தோணி. |
| 16588 | ஷை | அந்தோணி குரூஸ். |
| 1?251 | ஷை | அப்பலசாமி. |
| 66274 | ஷை | அப்புக்குட்டி. |
| 63436 | ஷை | அருள். |
| 18994 | ஷை | ஆசீர்வாதம். |
| 19367 | ஷை | அஜீஸ். |
| 18?65 | ஷை | பாக்கிய நாதன். |
| 18877 | ஷை | என். ஜே. சாக்கோ. |
| 16876 | ஷை | சென்ராயுன். |
| 16036 | ஷை | சின்னப்பன். |
| 66038 | ஷை | சின்னப்பன். |
| 17915 | ஷை | சின்னசாமி. |
| 18?21 | ஷை | துரை. |
| 15 59 | ஷை | ஏகாம்பரம். |
| 18379 | ஷை | கோபாலன் நாயர். |
| 16071 | ஷை | கோவிந்தராஜுலு. |
| 1?965 | ஷை | கோவிந்தசாமி. |
| 19089 | ஷை | கோவிந்து நாயுடு. |
| 65608 | ஷை | ஐம்பனசத்தியராஜு. |
| 65285 | ஷை | ஜெகநாதன். |
| 13033 | ஷை | ஜான். |
| 18356 | ஷை | காளியப்பா. |
| 60476 | ஷை | கருப்புசாமி. |
| 12985 | ஷை | கதிர்வேலு. |
| 66115 | ஷை | கிருஷ்ணு ரெட்டி. |
| 65612 | ஷை | கிருஷ்ணத் தேவர். |
| 17162 | ஷை | கிருஷ்ணன். |
| 18205 | ஷை | கிருஷ்ணன். |
| 60453 | ஷை | குமாரசாமி. |
| 16062 | ஷை | முகமத் கௌஸ். |
| 18862 | ஷை | முகமத் இஸ்மாயில். |
| 60783 | ஷை | முனுசாமி. |
| 165?1 | ஷை | முனுசாமி. |
| 18691 | ஷை | முனியன். |
| 60447 | ஷை | முருகன். |
| 65287 | ஷை | முருகன். |
| 18215 | ஷை | முத்துகி நஷ்ணேயா. |
| 14217 | ஷை | நாகப்பன். |
| 18?69 | ஷை | நடராஜன். |
| 65217 | ஷை | நுக்கண்ணு. |
| 15479 | ஷை | பெருமாள். |
| 65276 | ஷை | பழனியப்பன். |
| 66181 | ஷை | பௌலோஸ். |
| 18145 | ஷை | கே. ஆர் ரஹிமான். |
| 60521 | ஷை | இராமையாத் தேவர். |
| 16?38 | ஷை | இராமானுஜம். |
| 17738 | ஷை | இராமசாமி. |
| 16530 | ஷை | இராமசாமி. |
| 17827 | ஷை | இராமசாமி. |

### சென்னே சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்—தொடர்ச்சி.

| படை நம்பர். | வேலே. | பெயர். |
|---|---|---|
| 19844 | சாப்பர் | இராமசாமி. |
| 17754 | ஷை | ?ரத்தினம். |
| 13840 | ஷை | ஸ்ரீராமுலு. |
| 18467 | ஷை | சுப்பையா பிள்ளே. |
| 60820 | ஷை | சுப்பையாத் தேவர். |
| 60512 | ஷை | சுப்பிரமணி. |
| 65586 | ஷை | தங்கவேலு. |
| 60609 | ஷை | வீரபத்தினி ஞானுனந்தம். |
| 60563 | ஷை | வெள்ளப்பன். |
| 18105 | ஷை | வெங்கிடசாமி. |
| 16958 | லான்ஸ் நாயிக் | திருநாவுக்கரசு. |
| 17911 | ஷை | ராம்சிங். |
| 18013 | ஷை | புருஷோத்தமம். |
| 14587 | ஷை | பகுபுலெட் சுப்பையா. |
| 16843 | ஷை | இன்னேயன். |
| 60449 | ஷை | ஏ. எம். அனீப். |
| 17473 | ஷை | கமலக் கண்ணன். |
| 17516 | ஷை | செல்வராஜ். |
| 17155 | நாயிக் | தியாகராஜன். |
| 17092 | ஷை | சவுரிமுத்து. |
| 17085 | ஷை | குப்பன் |
| 17004 | ஷை | தானியல். |
| 16864 | ஷை | அருமைநாயகம். |
| 17591 | ஹவில்தார்/1/ஜி. சி. | பிரான்ஸிஸ். |
| 60652 | ஹவில்தார்/111/ ஜி.சி. | இராதாகிருஷ்ணன். |
| 60665 | ஹவில்தார் ஜி.சி. | சுப்பாராவ். |
| 18?38 | யு.பி.எல். நாயிக் | ஷண்முகம். |
| 12456 | பி.ஏ. ஹவில்தார் | எதிராஜ். |
| 1559 | டபிள்யு/சி | கோவிந்தசாமி. |
| 1222 | ஷை | கண்ணன். |
| 1153 | சமையல்காரர் | சுந்தரம். |
| 883 | ஷை | சின்னப்பன். |
| 4623 | எம்/சமையல்காரர் | மாறு. |
| 1558 | ஷை ஐ.டி. | பெருமாள். |
| 4731 | டபுள்யு/மெஸ். | இராஜா. |
| 759 | ஸ்வீப்பர் | அனுமந்து. |
| 13893 | ஹவில்தார் | போலேயா. |
| **ஐ.எஸ்.சி.** | | |
| ஏ. 2246 | சிக்னல்லர் | அப்துல் சத்தார். |
| ஏ. 8604 | ஷை | டி. ஆபிரகாம். |
| 6967 | ஷை | எல். அப்பாராவ். |
| 15185 | ஷை | டி. எச். அதிர்ஷ்ட ராவ். |
| ஏ. 3257 | ஷை | கே. அசரையா. |
| ஏ. 4241 | ஷை | பகானு விக்ரமா. |
| ஏ. 7052 | ஷை | பாஸ் கு?. |
| ஏ. 7059 | ஷை | சி. கே. தாமோதரம் பிள்ளே. |
| ஏ. 2256 | ஷை | தாஸ். |
| 17775 | ஷை | ஜி. ஜார்ஜ். |
| 154?7 | ஷை | வி. கே. ஜார்ஜ். |
| ஏ. 3859 | ஷை | வி. ஆர். ஜார்ஜ். |
| 17?97 | ஷை | யு. கோபால ஷெட்டி. |
| ஏ. 1853 | ஷை | கோவிந்தசாமி. |
| ஏ. 5265 | ஷை | எம். என். கந்த வேலு. |
| ஏ. 7502 | ஷை | கே. காதையன். |
| 15028 | ஷை | வி. கேசவலு நாயுடு. |
| ஏ. 3852 | ஷை | காதர் ஷெரிபு. |
| 15445 | ஷை | கோட்னடயா, எம். |
| ஏ. 1432 | ஷை | குஞ்சிராமன் நம்பியார். |

(10-ம் பக்கம் பார்க்க.)



# உலகப் போக்கு.

**நடைமுறைக்கு உதவாத கொள்கை.**

இந்தியாவைக் குறித்து சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் 'நியூ யார்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு எழுதி யிருக்கும் கட்டுரையில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்;—

"இந்தியாவை விட்டு பிரிட்டிஷார் வெளியேற வேண்டும் என்றால், இந்தியாவில் எந்த விதமான அரசியலோ ஆட்சி முறையோ இல்லை என்று தான் பொருள். இது தான் அராஜகர்களின் லட்சியம். ஜப்பானுக்கும் தகுந்த தூண்டுதல்"

இப்படிப் பட்ட செயல் இந்தியாவி லுள்ள பிரிட்டிஷ் அமெரிக்க, சீனப் பொது மக்களின் உயிர்களுக்கும் போர் வீரர்களின் உயிர்களுக்கும் உலே வைப்பதாகும். அன்றியும் ஐக்கிய நாடுகளின் போர் முனேகளிலும் பெரும் பிளவுகள் ஏற்படும். இந்திய மக்களுக்கு சுயாட்சி வழங்கப் பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். அவர்களிடம் நான் அனுதாபமும் கொள்ளுகிறேன். ஆனால் ஜப்பானியர்களேயாவது வேறெந்த அச்சு அரசாங்கத்தையோ இந்தியாவிற்குள் வரும்படி அனுமதிப்பார்களானல், அவர்களுக்கு சுயாட்சி கிடைக்கவே கிடைக்காது. முதலில் நேச நாடுகள் யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும். இந்த உண்மையை இந்தியர்களில் பெரும்பாலோர் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். விடுதலேப் போராட்டம் நடக்கும் இந்தச் சமயத்தில் இந்திய மக்களுக்குள் மிகுந்த ஒற்றுமை ஏற்பட வேண்டியது அவசியமாகிறது. இதன் பொருட்டுத் தான் பிரிட்டிஷ் யுத்த மந்திராலோசனே சபையிலும், பசிபிக் யுத்த கௌன்ஸிலிலும் இந்தியருக்கு சம அந்தஸ்தோடு கூடிய ஸ்தானம் வழங்கப் பட்டிருக்கிறது. என்றும் இல்லாத அளவிற்குப் படைகளே இந்தியாவில் சேகரித்து வைத்திருக்கிறார்கள். இந்தப் படைகளே பொருத்த முழுப் பொறுப்பும், பிரிட்டிஷாருடையது. ஆகவே, எல்லாப் படைகளும் பிரிட்டிஷ் படைத் தலைவருக்கு உட் பட்டிருக்க வேண்டிய தவசியமாகிறது.

இந்தியாவைக் காக்கும் அடிப்படையான பொறுப்பு இந்தியா அரசாங்கத்தைச் சார்ந்தது. ஆனால், கடைசி பொறுப்பு பிரிடிஷ் அரசாங்கத்தைச் சார்ந்தது. இந்திய அரசாங்கத்திற்கு இந்திய படைத் தலைவர் பொறுப்பாளி. பிரிட்டிஷ் சர்க்காரின் கடைசி பொறுப்பு என்பதற்கு, இந்திய அரசாங்கத்திற் குள்ள அதிகாரத்தைக் குறைப்பது என்று அருத்தமல்ல. அன்றியும் போரை நடத்தும் முறை பற்றி படைத் தலைவருக்கும் அவருடைய கூட்டாளிகளுக்கும் கருத்து வேற்றுமைக்கே இட மிருக்கப் படாது.

நடை முறைக்கு உதவாத கொள்கைகளேக் காங்கிரஸ் மூலமாகப் புகுத்தப் பார்க்கிறார் காந்தியார். இவர் சட்ட மறுப்பு செய்யப் போவதாகப் பயமுறுத்துகிறார். இதனால் நம் எதிரிகளுக்குத் தான் வசதி ஏற்படும். யுத்தம் முடிந்த உடனேயே சுயாட்சி முறையை வகுத்துக் கொள்ள இந்தியர்களுக்கு எல்லா வசதிகளும் கொடுக்கப் படும். அது வரை இப்போதுள்ள ஆட்சி முறை நடைபெறுவது தான் நல்லது.

**இரண்டு முக்கியக் கொள்கைகள்.**

1. யுத்தம் முடிந்த பிறகு, இந்திய அரசியல் வாதிகள் சேர்ந்து வகுக்கும் அரசியல் திட்டப்படி ஆட்சி முறையை வகுத்துக் கொள்ள உரிமை யுண்டு.

2. அதற் கிடையில், இப்போதுள்ள அரசியல் திட்டத்திற் குட்பட்டு, எந்த அளவிற்கு சுயாட்சி வழங்கப் படக் கூடுமோ, அந்த அளவிற்கு வழங்கப்படுவார்கள். இவை தான், இந்தியாவைப் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டுள்ள இரண்டு முக்கிய கொள்கைகள். முதல் கொள்கையை யொட்டித் தான் கிரிப்ஸ் திட்டம் வகுக்கப் பட்டது. பல மாறுபட்ட காரணங்களால் அது நிராகரிக்கப்பட்டது. என்றாலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கத்திலும் கொள்கையிலும் எந்த விதமான மாறுதலு மில்லே. இதற்கிடையில் நடை முறை சுயாட்சி வழங்கிக் கொண்டு வருகிறார்கள். இந்திய அரசியல் கட்சித் தலைவர்க ளெல்லாம் ஒன்று படுவார்களானல், இந்தத் திட்டம் இன்னும் விரிவாகவும் விரைவாகவும் கையாளப் படக் கூடும்.

ஒரு கூட்டத்தார் முழு ஆதிக்கத்தையும் இந்தியர்களுக்குக் கொடுத்து விட வேண்டு மென்கிறார்கள். மற்றொரு கூட்டத்தார், ஆதிக்கத்தில் ஒரு பகுதியை இப்போது கொடுத்தால், எதிர் காலத்தில் அரசியல் அமைப்பை வகுக்கும் போது கஷ்டங்கள் நேரும் என்று ஆட்சேபிக்கிறார்கள்.

**இரண்டு தடைகள்.**

இன்று இந்தியாவிற்கு நடை முறை சுயாட்சி வழங்குவதற்கு (1) யுத்தமும் (2) வகுப்புப் பிரச்சினேயும் தான் தடைகளா யிருக்கின்றன. யுத்தம் சம்பந்தப் பட்ட வரையில், இரண்டாவதாக, மந்திராலோசனேயோடு கூடிய அரசாங்கம், சட்ட சபைகளுக்குப் பொறுப்புடையது.

**முடியாத காரியம்**

பெரும்பான்மை வகுப்பினர் மந்திரிகளா யிருந்து ஆதிக்கம் செலுத்துவதை, சிறுபான்மைக் கட்சியினர் ஆட்சேபிக்கின்றனர். இப்படிப் பட்ட கருத்து வேற்றுமைகள் இருக்கும் வரை, மந்திராலோசனேயோடு கூடிய அரசாங்க முறையை இந்தியாவிற்குக் கொடுப்பது என்பது முடியாத காரியம். ஆகையால் ஒரு புதிய அரசியல் திட்டம் வகுக்கப்படும் வரை, முடிவான அதிகாரம் பார்லிமெண்டு சபைக்குத் தான் இருக்க வேண்டும். இதனால், இந்திய அரசாங்கத்திற்கு உள்ள ஆதிக்கம் குறைந்து விடாது. இந்தியா சம்பந்தமாக பார்லிமெண்டிற்குப் பொறுப்பாளி இந்தியா மந்திரி. இவருக்குள்ள அதிகாரத்திற்கு மேல் இந்திய கவர்னர் ஜெனாலுக்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரங்கள் மிகவும் கடுமையானவையாகத் தோன்றலாம். இது இருப்புச் சரக்காகத் தான் இருக்கும். இதை உபயோகிக்கவே முடியாமற் போகலாம். இந்தியாவின் நன்மைக்காகவும் இந்திய மக்களின் நன்மைக்காகவும் மட்டும் இதை உபயோகிக்கலாம். இந்த அதிகாரங்கள் ஏன் வழங்கப் பட்டிருக்கின்றன வென்றால், முடிவாக பார்லிமெண்டின் நோக்கமும் கொள்கையும் நிறைவேற வேண்டித் தான்.

யுத்தத்திற்குப் பிறகு வகுக்கப் பட வேண்டிய அரசியல் திட்டத்தை இந்தியாவிலுள்ள எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் சேர்ந்து ஒன்று பட்டு வகுப்ப தானல், அரசாங்கத்தார் எல்லா வித வசதிகளும் செய்து கொடுப்பார்கள். இந்தத் திட்டத்தை இப்போதே வகுத்து முடித்து விட்டால், யுத்தத்திற்குப் பிறகு இந்த வேலே இலகுவாகப் போகும். இதற்கிடையில் இதன் சாதக பாதகங்களேத் தெரிந்து கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். என்றாலும் இந்த வேலே இவ்வளவு விரைவாக முடியாது. ஏனென்றால், இதை வகுப்பதற்கு, இந்திய அரசியல் தலைவரும் போர் வீரர்களும் நிர்வாகிகளும் யுத்தம் முடிகிற வரை வேறு எதிலும் சிந்தையைச் செலுத்த முடியாத நிலேயில் இருக்கின்றனர். அல்லாமலும், இப்போது போராடிக் கொண்டிருக்கும் வீரர்களும் எதிர்கால அரசியல் அமைப்பு எப்படி இருக்க வேண்டு மென்று சொல்ல, சந்தர்ப்பங்கள் கொடுக்கப் பட வேண்டும். சமஸ்தானங்களின் நிலேமை எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்றும் நிர்ணயிக்கப் படவும் வேண்டியிருக்கிறது.

# போருத காலம் தான்!

ஒரு பெரிய தோட்டம். அதிலே நிறைந் திருப்பதெல்லாம் "பஸ்ட் கிளாஸ்" பழந் தரும் மரங்கள் தான். அம்மரங்களில் பழுக்கும் கனிகளைப் புசித்து ஆனந்த மடைந்து கொண்டிருந்தார்கள் கணக் கற்றவர்கள். இப்படி யிருக்கும் பொழுது, திடீரென்று ஒருவன் கிளம்பினான். 'சீ! இது என்ன தோட்டம்? பார்க்கவே பிடிக்க வில்லையே! நான் இதைத் திருத்தி யமைக்கப் போகிறேன் பாருங்கள்!' என்ருன. மளமள வென அத்தோட்டத்திற்குள் பல தடியர்களோடு புகுந்தான். மரங்களில் சிலவற்றை வெட்டி வீழ்த்தச் செய்தான். சிலவற்றை வேருடனேயே பிடுங்கி எறியச் செய்தான். தோட்டச் சுவர்களை இடித்துத் தள்ளினுன். தோட்ட நிலத்தை கன்னு பின்னு என்று உழுது தள்ளினுன். எல்லாம் நிர்மூலமாக்கி விட்டான். ஒரு தடவை அந்தத் தோட்டத்தின் அழகை அந்த புத்திசாலி உயரத்திலிருந்து பார்த்தான்.

'பேஷ்! இப்பொழுது தான் ஜோரா யிருக்கிறது. இனிமேல் என்னென்ன விளைகிறது பாருங்கள் இங்கே!' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

'என்ன ஐயா இது?' என்று ஊரா ரெல்லாம் வந்து கூடிக் கேட்டால், 'இது புது முறை! பேசாமல் பார்த்துக் கொண்டே யிருங்கள் என்று மிரட்டினுனும்.

இதே கதையாசத் தானிருக்கிறது ஹிட்லர் மகான் இப்பொழுது ஐரோப்பாவில் செய்து கொண்டிருக்கும் வேலைகள். பல அழகான ராஜ்யங்களாக, நிம்மதியாக இருந்து வந்த, செழிப்பு மிக்க ஐரோப்பாவிலே, புது முறையையும், நவயுகத்தையும் சிருஷ்டிக்கப் போகிறேன் என்று கிளம்பினுர் ஹிட்லர். அவர் கிளம்பி, அநேகமாக மூன்று வருஷங்கள் முடிந்து விட்டன. இந்த மூன்று வருஷங்களுக்குள் அவர் செய்திருக்கும் வேலை என்ன?

அசல் நாச வேலைகள் தான்! இந்த விஷயத்தில், இந்த உலகத்திலே இன்று மாறு பட்ட அபிப்பிராயம் இருக்கு மென்றே தோன்ற வில்லை. ஐரோப்பாவிலே இருந்த எத்தனை பெரிய நகரங்கள் இன்று பாழடைந்து கிடக்கின்றன! பிள்ளைப் பஞ்சம் மிக்க ஐரோப்பிய நாடுகளிலே உள்ள பிள்ளைகள் எத்தனை கோடிப் பேர் மண்ணேடு மண்ணுக அற்பாயுசாகக் குண்டு மழையில் சிக்கி மடிந்திருக்கிறுர்கள்! பொன்னும் மணியும் விளையும் எத்தனை லட்சம் ஏகரா நிலங்கள் கவனிப்பா ரற்றுப் பாழாகக் கிடக்கின்றன! வயிறு நிறைய தாமும் உண்டு, மற்றவர்களுக்கும் தம்மிட முள்ளதை அனுப்பி கொடுத்துக் கொண்டிருந்த எத்தனை கோடி ஜனங்கள் அங்கே இன்று பசி, பசி என்று துடித்து அலறுகிறுர்கள்! நேற்று வரை சுதந்திரம் படைத்த, சுயேச்சை யுடன் வாழ்ந்து வந்தவர்கள் எத்தனை பேர்கள், இன்று ஹிட்லரின் ஆக்ரமிப்பில் சிக்கி, அடிமையிலும் அடிமைகளாக வாழ்கிறுர்கள்! இந்த ஒரு மனுஷனுடைய தலை வெட்டித் தனத்தாலும், கெடுபிடியாலும் இன்று இந்த உலகமே அல்லோல கல்லோலமாகிக் கிடக்கிறதே! 'இந்த நிலைமை என்று மாறப் போகிறதோ தெரிய வில்லையே!' என்றே எல்லோரும் ஏங்கிக் கிடக்கிறுர்கள். எதிரே வருகிறவர்களைப் பார்த்து, 'என்ன ஸார், ஸௌக்யந் தானு? இந்த எழவு சனியன் யுத்தம் எப்போ முடியப் போகிறதோ தெரிய வில்லையே! அவஸ்தை சகிக்கப் பட வில்லையே!' என்றே ஒவ்வொருவரும் கேட்டுக் கொண்டிருக்கிறுர்கள். கேள்வி கேட்கப் படுகிறவருக்கும், கேள்வி கேட்டவரிடம் இதே கேள்வியை போடலாம் என்று தோன்றுகிறதே தவிர, கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. 'மொத்தத்திலே உலகத்துக்கே போருத வேளை ஸார்! அவ்வளவு தான்' என்றே பலர் கூறி வருகிறுர்கள், அது என்னமோ வாஸ்தவம் தான்!

ஒரு விஷயம்! இந்தப் போராத வேளை எப்பொழுது தீரும் என்பது பற்றி நமக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. பெரிய ஜோஸியர் ஒருவர் ரொம்ப நிதானமாக யோசித்தே இதைச் சொல்லியிருக்கிறுர். நம்பிக்கை உள்ளவர்களிடம் மட்டுமே இதைச் சொல்ல வேண்டு மென்றும் தெரிவித்திருக்கிறுர். சொல்லலாமா?

ஹிட்லரும் அவரது சகாக்களும் ஒழிய வேண்டும். நாஸிகளை அடக்கி ஒடுக்க வேணடும். அதற்கு நேச நாடுகளின் கை பிரமாதமாக பலக்க வேண்டும். முன் கூட்டியே, இருபது வருடங்களாக தமது பலத்தை அசாத்தியப் படுத்திக் கொண்டிருக்கிறுர் ஹிட்லர். அதே மாதிரி தான், வியாபாரம் என்கிற போர்வையின் கீழ் ஜப்பானும் தனது ராணுவ பலத்தை ரகசியமாகவே பெருக்கிக் கொண்டிருக்கிறது. இவர்களை யெல்லாம் மட்டந் தட்ட வேண்டுமானுல், நேச நாடுகளின் கைக்கு, நிறைய பலம் வேண்டியது அவசியந் தானே? நேச நாடுகளின் பலம் சிறுகச் சிறுக அதிகரித்து வருகிறது. உங்கள் உதவியும் சேர்ந்தால், அந்த பலம் இன்னும் வேகமாக அதிகரிக்கும். ஆரம்ப ஜோரில் ஹிட்லர் சகாக்கள் தங்களுடைய கை சளைக்கும் வரை எது வேண்டு மானுலும் செய்து கொள்ளட்டும். அவர்கள் கை சளைத்திருக்கும் சமயம் நேச நாட்டினரின் கை நூதன பலத்தோடு தயாராக இருந்தால், ஒரே போட்டிலேயே தீர்த்து விடலாம் காரியத்தை. அதோடு, இந்தப் போருத வேளையும் ஓடியே போய்விடும். சமாதான சூரியன் அப்பொழுதே உதிப்பான். தினசரி உதித்து மறையும் சூரியன் போலல்ல இந்தச் சூரியன். இவனை சீக்கிரமே உதிக்கச் செய்வதும், உதிக்காமலே இருக்கச் செய்து எங்கும் இருளைச் சூழ்ந்திருக்க வைத்திருப்பதும் நம் கைகளி லிருக்கின்றன. நம் வீட்டுக் குள்ளே 'மெயின் ஸ்விட்ச்' இருக்கிறது. வீட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு, வாசலில் உட்கார்ந்து கொண்டு, "வீட்டுக் குள்ளே 'லைட்' இல்லையே! ஒரே இருட்டு மயமாக இருக்கிறதே! உள்ளே போகவே பயமா இருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி யிருக்கும்? எழுந்தோமா, கதவைத் திறந்தோமா, உள்ளே தைரியமாகப் போய் ஸ்விட்சைப் போட்டோமா, 'பளிச்' என்று வெளிச்சம் ஏற்பட்டதாம் என்று இல்லாமல், கையைக் கட்டிக் கொண்டு இருப்பது புத்திசாலித்தன மில்லை தான். இந்த ஜோஸியத்தில் மட்டும் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம்!

நமக்கெல்லாம் தெரிவதற்கு முன்பாகவே, ஹிட்லருக்கு இந்த ஜோஸியம் ரொம்ப நன்றுகத் தெரிந்திருக்கிறது. 'நாளுக்கு நாள் அவருக்கும் அவரது கோஷ்டியாருக்கும் இந்த உலகத்திலே விரோதிகள் அதிகமாகி வருகிறுர்கள்.

சென்ற வாரம் என்ன ஆச்சு? தென் அமெரிக்காவில் உள்ள பிரேஸில் என்ற நாடு, ஜெர்மனி மீதும் இத்தலி மீதும் போர் தொடுத்து விட்டதாக அறிவித்து விட்டது. அதனுல் என்ன? ஏற்கெனவேயேதான் எத்தனையோ நாடுகள், அச்சு நாட்டினர் மீது போர் தொடுத்திருக்கிறுர்களே என்று கேட்பீர்கள்.

பிரேஸிலைப் பற்றிக் கொஞ்சம் தகவல் தெரிந்திருந்தால், இவ்வாறு கேட்டிருக்க மாட்டீர்கள். இத்தனை காலம் அந்நாட்டைப் பற்றி நமக்கு அதிகம் தெரிய வேண்டிய அவசிய மில்லை. உலகத்திலே மிகப் பெரிய, கிட்டத் தட்ட நாலாயிரம் மைல் நீளமுள்ள அமேஸான் என்ற நதி அங்கே தானிருக்கிறது என்பது மட்டும் பலருக்குத் தெரிந்திருக்கும். அதற்கு மேல் ஏதும் தெரிந்திராது. ஆனுல் இனியும் அவ்வாறு தெரிந்து கொள்ளாம லிருக்கலாமா? கூடாது தான். ஆகவே, அந்த நாட்டைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ளுங்கள்.

பிரேஸில் என்பது இந்தியாவைப் போல் இரண்டு பங்குள்ள தோர் நாடு. இது தென் அமெரிக்காவில் ஒரு பகுதி. இங்கே நாலு கோடிப் பேர்கள் தான் வசிக்கிறுர்கள். ஒரு குறிப்பிட்ட ஜாதியார் தான் இங்கிருக்கிறுர்கள் என்ப தில்லை. ஜெர்மானியரும், இத்தாலியரும் கூட அங்கு பல லக்ஷக் கணக்கில் இருக்கிறுர்கள்.



செழிப்பு மிக்கதோர் நாடு இது. காப்பிக் கொட்டை அளவுக்கு மிஞ்சி இங்கே பயிராகிறது. அது தவிர, யுத்தத்திற்கு வேண்டிய மூலப் பொருள்கள் பலவும் இங்கே விளைகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த நாட்டிற்கு நாலாயிரம் மைல் நீளமுள்ள கடற்கரை இருக்கிறது. இந்த நாடு, மேற்கு ஆப்பிரிகாவிற்கு நேர் எதிரே இருக்கிறது. இந்த நாட்டிலே பல பெரிய விமானக் கூடங்களும், துறைமுகங்களும் இருக்கின்றன. இத்தனை காலமாக இந்த நாடு போரில் இறங்காததால், ஜெர்மனி பாடு கொஞ்சம் குஷாலாகத் தானிருந்தது. ஆபிரிகாவி லிருந்து, பிரேஸிலின் கீழ்கரை வெகு சமீபம். ஒரே தாவில் விமானத்தில் இங்கே வந்து விடலாம். இதை ஹிட்லர் மனசில் கொண்டிருந்திருக்கலாம். மேற்கு ஆபிரிகாவில் நிறைய விமானங்களையும், படைகளையும் சௌகரியமான போது சேர்த்துக் கொண்டு, பிரேஸிலுக்குத் தாவி, அங்கே கால் ஊன்றிக் கொண்டு, வட அமெரிக்கா மீது அப்புறம் பாயலாம் என்று அவர் 'பிளான்' போட்டிருக்கக் கூடும். அதற் கேற்றவாறு, பல நாஸி ஸ்தாபனங்கள் ரகசியமாகவே பிரேஸிலில் வேலை செய்து கொண்டிருந்தன. சில இடங்களில் ரகசிய விமான நிலையங்களையும், ரேடியோ நிலையங்களையும் அவர்கள் ஸ்தாபித்திருக்கிறுர்கள் என்பது மெள்ள மெள்ள வெளியாகி வருகிறது. இவை யெல்லாம், பிரேஸில் போர் தொடுத்ததால் பாழாக வேண்டியது தானே! 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி' என்பது போல், சும்மா இருந்த பிரேஸிலுக்குச் சொந்தமான வியாபாரக் கப்பல்களை ஹிட்லரின் நீர் மூழ்கிகள் வேட்டு விட்டுக் கொண்டே வந்தன. பிரேஸிலால் சகிக்கவே முடிய வில்லை. போர் கோலம் பூண்டு விட்டது. இதனுல் ஹிட்லருக்கு ஏக நஷ்டமும், அவஸ்தையும் தான்? போருத வேளை என்பது இதற்குத்தான் பெயர்.

பிரேஸில் போர்க் கோலம் பூண்டு விட்டதால், அந்நாட்டில் உள்ள துறைமுகங்கள், விமான நிலையங்கள் ஆகியவற்றை நேச நாட்டினர் உபயோகபடுத்திக் கொள்ளலாம். ஜெர்மானிய நீர்மூழ்கிகளின் அட்டகாசங்களை அடக்க வழி தேடலாம். ஒரு காலத்தில் ஆப்பிரிகா மீது பாயும் பிரேஸிலை ஒரு தாவும் இடமாகக் கொள்ளலாம். பிரேஸில் போர் தொடுத்ததால் வட அமெரிக்காவிற்கு, இருந்து வந்த ஆபத்து கொஞ்சம் தணிந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

இது இப்படியிருக்க, ருஷ்யாவிலே ஹிட்லருக்குக் குஷி தரும்படியான காரியங்கள் சில நடந்து கொண்டிருக்கின்றன. தடிகாரனுக்கு, குஷிக்கு என்ன குறைச்சல்? பாடுபட்டு பானை தயாரிக்கும் குயவருக்கல்லவோ சிரமம் தெரியும்? பானைகள் படார், படார் என்று உடைவதைப் பார்க்க பார்க்க தடிகாரனின் உத்சாகம் அதிகமாகத் தான் செய்யும்!

அதே போல, ஜெர்மானியரையும், ருமேனியரையும், இத்தாலியரையும், லக்ஷக் கணக்கில் போர்க் களத்தில் பலி கொடுக்கச் செய்வதால், ஹிட்லருக்கு என்ன சிரமம்?' மெய்காப் எண்ணெய் வயல் அகப்பட்டதா? பேஷ்! டான் நதியை நமது படைகள் கடந்தனவா? பலே! ஸ்டாலின்கிராடை மூன்று புறங்களிலிருந்தும் நமது படைகள் தாக்குகின்றனவா? ஸ்டாலின்கிராடுக்கு முப்பது மைலுக்குள் கடுமையான யுத்தம் நடக்கிறதா? ரொம்ப ஜோர்! தென் காகஸஸில், ஒரு கணவாயைப் பிடிக்க நமது படைகள் நஷ்டத்தைப் பொருட்படுத்தாது தீரமாகப் போர் புரிகின்றனவா? ருஷ்யப் படை வரிசையில் ஒரு பெரிய பிளவை நமது படைகள் ஏற்படுத்தி விட்டனவா? பஹ்வா!' இவ்வாருகவே தான் கூறிக் கொண்டிருப்பார் அவர்.

டான் நதியிலே ரத்தம் பெருக் கெடுத்து ஓடுகிறது. ஓரிடத்திலே அந்நியைய படைகளோடும், டாங்கிகளோடும் கடந்து செல்ல முயன்ற நாஸிகள், ருஷ்யர்களால் பின்னுக்குத் துரத்தப் பட்டனர். பலர் நதியில் விழுந்து மூழ்கினர். ருஷ்ய விமானங்கள் வெகுக் கடுமையாகத் தாக்குவதால், பிணக் குவியல்கள் விழுந்த வண்ணமாக இருக்கின்றன என்பதை யெல்லாம் ஹிட்லர் கவனிக்கப் போகிருரா என்ன? ஐரோப்பா முழுவதையும் கட்டி யாளக் கனவு கண்டு கொண்டிருக்கிறுர். இந்த வெறும் ஜெம்பிற்காக, எத்தனையோ கோடி உயிர்களை அழித்துக் கொண்டிருக்கிறுர். தனது கனவை நனவாக்க எது வேண்டு மானுலும் செய்யச் சித்த முள்ளவராக இருக்கிறுர். உலகோரும், அவரது ஆட்களும் படும் கஷ்டம் இப்பொழுது அவரது திருஷ்டியில் படப் போகிறதா என்ன?

ருஷ்யாவிற்கு இப்பொழுது போதாத வேளைதான். குளிர் காலம் சீக்கிரமே வரப் போகிறது. அது வந்து விட்டால் ருஷ்யர்கள் கொஞ்சம் சமாளித்துக் கொள்வார்கள். அது வரை அவர்கள் தாக்குப் பிடிப்பார்களா? இரண்டாவது போர் முனையை எப்பொழுது ஏற்படுத்தலாம்? என்பதை யெல்லாம் தெரிந்து கொள்ள, சர்ச்சில், மாஸ்கோவிற்குச் சென்று திரும்பினுர். சரித்திரத்திலேயே இது போன்ற சம்பவம் நடந்தது கிடையாது. பல நேச நாட்டுப் பிரதி நிதிகளும் கூடி யிருக்க, இவர்கள் எல்லாம் இப்பொழுதைய நிலைமையை அலசி ஆராய்ந்து விட்டார்கள். சீக்கிரமே ஏதாவது நடக்கலாம்.

ஜெர்மானியருக்கு காகஸஸில் விமான பலம் அதிகமாகவே இருக்கிறதாம். அவர்கள் முன்னேற்றத்தால் பாரசீகம், இந்தியா போன்ற நாடுகளுக்கும் ஆபத்து நெருங்கி வருகிறது. ஜப்பானும் இந்தியா மீது பாய ஆள் சேர்த்துக் கொண்டிருக்கிறதாம்.

இதே சமயம் ருஷ்யாவிலே, வரப் போகும் குளிர் காலத்தைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. விளாடிவாஸ்டாக் துறைமுகத்தில் அல்லும் பகலும் மளமள வென வேலை நடக்கிறது. பல டாங்கி உற்பத்தி சாலைகள் கட்டப் பட்டு விட்டன. பொது ஜனங்களும் தத்தமக்கு வேண்டியவற்றை இப்பொழுதே சேமித்து வைத்துக் கொள்ளும்படி உத்திரவிடப் பட்டு விட்டார்கள். சூயாக இருப்பதே ஒரு குற்றம். தேவை யற்ற சமயத்தில் தூங்குவதே ராஜத்வேஷ குற்றம் என்றுர்களாம் ருஷ்யாவிலே!

இது இப்படி யிருக்க, பிரான்ஸிலே ஒரு பிரிட்டிஷ் படையெடுப்பு கோஷ்டி பட்டப் பகலிலே படையெடுத்து, ஹிட்லரின் வயிறிலே புளியைக் கரைத்துச் சென்றது. இருகக்ஷியாருக்கும் ஏக நஷ்டம் தான். ஆனுலும் ஜெர்மானியருக்குப் பீதி விளைவித்த திருப்தி இருக்கிற தல்லவா?

எகிப்திலே விமானப் போர் கடுமையாகி வருகிறது. அங்கிருந்து வரும் அமைதி சீக்கிரமே குலையலாம். அடுத்த வருஷம் பெரிய தாக்குதல் இருக்கு மென்கிறுர் ஜெனரல் ஸ்மட்ஸ். வட ஆப்பிரிகாவில் விரோதிகள் இருக்கும் வரை, தென் ஆப்பிரிகாவிற்கு நிம்மதி யிராதல்லவா? அதற்காகவே தென் ஆப்பிரிகர்கள் துணிந்து போராட வந்து கொண்டிருக்கிறுர்கள்.

மேற்றிசை விஷயம் இப்படி யிருக்க, கீழ்த் திசையிலே ஜப்பான அமெரிக்காவிடம் சரியான உதை வாங்கிக் கொண்டிருக்கிறது. சாலமன் தீவுகளுக்கருகே கோரமான விமான, கடல் போர்கள் நடக்கின்றன. ஜப்பானுக்கு ஏக நஷ்டம். இந்தப் போர் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே முடிவான நஷ்டம் வெளியாக வில்லை. எப்படியாவது ஜப்பானியரை இங்கிருந்து துரத்தி விட்டால், ஆஸ்திரேலியா செல்லும் பாதை ஆபத்தின்றி இருக்கும் என்பது அமெரிக்கரின் எண்ணம். ஜப்பானியர் இங்கு தம்மை ஸ்திரப் படுத்திக் கொள்ள முயன்று வருகிறுர்கள். ஏற்கெனவேயே அவர்களிடம் நிறைய ஆட்களும், விமானங்களும், கப்பல்களும், இருக்கின்றன. ஆகவே யுத்தம் கடுமையாக இருப்பதில் ஆச்சரிய மில்லையே!

சைனுவிலே சீனர்கள் பல இடங்களி லிருந்து ஜப்பானியருக்கு கல்தா கொடுத்து வருகிறுர்கள். சைனுவிற்கு மட்டும் நேச நாடுகளின் பூரண ஆதரவு கிடைத்து விட்டால், ஜப்பானை அந் நாடு திணற அடித்து விடாதா? அதை உத்தேசித்தே சீனுவிற்குப் பல வகையிலும் உதவ நேச நாடுகள் முயற்சி செய்து வருகின்றன. இந்தியாவைப் பலப்படுத்துவதும் அந்த முயற்சிகளில் ஒன்றுகும். இந்த முயற்சியில் உங்களாலான கைங்கரியம் ஏதாவது உண்டா?

## அற்ப வேலை என்பதே கிடையாது

### சமையற்காரர்கள் செய்த சிறந்த வேலை

#### படைத் தலைவர்களின் பாராட்டு

இராணுவத்தில் ஒரு வேலை இருக்கிறது. அந்த வேலைக் காரர்கள் இல்லாமல் எந்தக் காரியமும் நடைபெருது. இந்த வேலைக்காரர்களுக்கு மதிப் பில்லை. வெற்றி வீரர்கள் என்னும் பட்டம் இவர்களுக்குக் கிடையாது. இவர்களைப் பற்றி நினைப்பவர்கள கூட அதிகமா யிருக்க மாட்டார்கள். இவர்கள் படைகளுக்கு இன்றி யமையாத வேலைகளைச் செய்கிறவர்கள். இவர்கள் தம் கடமைகளைச் சரிவர நிறை வேற்ரு விட்டால், படைகள் போராட முடியாது. இவர்கள் மேற்குப் பாலை வனத்தில் மிகச் சிறந்த முறையில் வேலை செய்திருக்கிருர்கள். கடுமையான ஆபத்துக் களுக் கிடையே இவர்கள் செய்துள்ள வேலை பெரிதும் பாராட்டத் தக்கது. இவ்வளவு கடுமையான யுத்தத்திலும் படைகளின் உடல் நலம் குறையாமல் இருப்பதற்குக் காரணம் இவர்களுடைய சிறந்த வேலை தான். முகாம் தெருப் பெருக்குவோர்கள் தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதனுல் கொசு மொய்ப்பது கிடையாது; சலவைத் தொழிலாளர்களுக்குத் தண்ணீர் அளந்து விடப் படுகிறது. என்ருலும் தம் கடமைகளைச் சரி வரச் செய்கிருர்கள். பழுதடைந்த உடுப்புக்களை மீண்டும் சுத்தமாகத் தைத்துக் கொடுக்கும் தையற்காரர்களும் கடுமையாக வேலை செய்கிருர்கள். இவர்கள் அனைவருடைய வேலையையும் பாலை வனத்திலுள்ள படைத் தலைவர்கள் வெகுவாகப் பாராட்டியிருக்கிருர்கள். போராடும் தம் தோழர்களுக்கு எந்த விதத்திலும் வசதிக் குறைவு ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது தம் கடமை என்று அவர்கள் நினைக்கிருர்கள்.

இரண்டு நாட்கள் கடுமையாகப் போர் நடந்தது. ஓய்வு என்பதே கிடையாது. இதை அந்தப் படையைச் சேர்ந்த சமையற்காரர் கவனித்துக் கொண்டிருந்தார். போர் வீரர்கள் உணவு சாப்பிட நேரமே கிடையாது. சமையற்காரர் சாப்பாட்டைத் தயாரித்தார். அதை எடுத்துக் கொண்டு கிளம்பிஞர். வெடி குண்டுகள் பெய்து கொண் டிருக்கின்றன. நெருப்பு மழை பெய்து கொண்டிருக்கிறது. இவற்றை அவர் பொருள் படுத்தவே யில்லை. தனித் தனியே சிதறிக் கிடந்த இடங்களுக்குக் கூடப் போய், அனைவருக்கும் உணவு அளித்து வந்தார்.

மற்ருெரு சமையற்காரர் இவரையும் ஒரு படி மிஞ்சி விட்டார். போர் வீரர்களுக்குத் தண்ணீரும் உணவும் கொண்டு போய்க் கொடுப்பதில் அவர் ஒரு போதும் தவறியதே கிடையாது. பீரங்கிகளில் மருந்து இல்லா திருந்ததை ஒரு நாள் அவர் கண்டார். சற்று பின் வாங்கிஞர். வெடி மருந்தைத் தன் தோழர்களோடு எடுத்து வந்து பீரங்கிகளில் மருந்தை கெட்டித்துக் கொடுத்தார்.

இவை யன்ருே உண்மையிலேயே சிறந்த வேலைகள்.

**எதிரி கூறும் இரகசியம் உங்கள் காதுகளில் கேட்கிறதா ?**

**பொய் வதந்திகளை நீங்கள் கேட்கும் போதெல்லாம்**

இது ஜப்பானியர் கூறும் இரகசியம்,
நம் மனதைக் கெடுக்க முயற்சிக்கிருர்கள்,
நம் எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கிருர்கள்

என்று தான் அர்த்தம்.

ஆகையால்

உறுதி யில்லாத செய்திகளைப் பரவச் செய்து அவற்றை நம்பச் செய்து எதிரிக்கு உதவாதீர்கள்.

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள் !**

ஜப்பானியரை எதிர்க்க தேசியப் போர் முனையை அமையுங்கள் !

## யுத்த சேத ஜாபிதா.

(6-ம் பக்கத் தொடர்ச்சி.)

| படை நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| ஐ. எஸ். சி. | | |
| ஏ. 7978 | சிக்னல்லர் | குட்டி கிருஷ்ணன் நாயர். |
| ஏ. 3624 | ஷை | லூர்து சாமி. |
| 17793 | ஷை | ஆர். மாணிக்கம். |
| ஏ. 2616 | ஷை | முனிரத்தினம். |
| ஏ. 2000 | ஷை | எம். எம். நாயுடு. |
| ஏ. 3243 | ஷை | சி. எச். இராகவன். |
| ஏ. 1748 | ஷை | ஜி. இராமச்சந்திரன். |
| ஏ. 2900 | ஷை | சங்குண்ணி நாயர். |
| 17791 | ஷை | ஸ்ரீதரன் பிள்ளை, எம். ஜி. |
| ஏ. 8898 | ஷை | எம். சுப்பாராவ் |
| 16429 | ஷை | வி. வி. சுப்பாராவ். |
| 16179 | ஷை | ஜி. திருமலை நாயக்கர். |
| ஏ. 7889 | ஷை | பி. வாசுதேவ பிள்ளை. |
| 9393 | ஷை | வெங்கிட நரசிம்மலு. |
| 16772 | ஷை | வேணுகோபால். |
| ஏ. 3834 | ஷை | ஐ. ஜி. ஏசுடையான். |
| ஏ. 7456 | ஷை | ஈசூப் அலிகான். |
| ஏ. 288 | பி. ஏ. நாயிக் | வெங்கிட கிருஷ்ண ராவ். |
| 9615 | ஷை | அச்சுதன் நாயர். |
| ஏ. 1689 | பி. எல். நாயிக் | பி. சி. பக்தவத்சலம். |
| ஏ. 209 | ஷை | மாதவன். |

| படை நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| ஐ. எஸ். சி. | | |
| ஏ. 1125 | பி. எல். நாயிக் | முகமத் சித்திக். |
| 9649 | ஷை | முருகேசன். |
| ஏ. 1691 | பி. எல். நாயிக் | சாமியல் பெனிடிக்ட். |
| ஏ. 854 | ஷை | சங்கரக்குட்டி நாயர். |
| ஏ. 1183 | ஷை | எஸ். ஏ. சையத் சுலேமான். |
| ஏ. 1144 | ஷை | ஷேக் சில்லான். |
| ஏ. 2130 | ஷை | டி. கோவிந்தராஜன். |
| ஓ. 2179 | டபுள்யு/சி. ஆர். | சின்னையா. |
| 9762 | நாயிக் | டி. சாமியல் அருள் மிஞர். |
| ஏ. 1045 | ஷை | ஓஃதா பக்ஷ். |
| ஓ. 2513 | ஸ்வீப்பர் | ஓபிகாடு. |
| ஏ.ஐ.ஓ.சி. | | |
| ஓ. 71429 | சிப்பாய் டிரைவர் | அழகிரிசாமிப் பிள்ளை. |
| ஓ. 71575 | ஷை | அலாபன கூர்மையா. |
| ஓ. 71642 | பி. ஏ. லான்ஸ் நாயிக் | கே. பி. கேசவன். |
| ஓ. 31773 | சிப்பாய் பிட்டர் | முத்துச்சாமி. |

**காயப் பட்டவர்கள்.**

**சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்.**

| | | |
|---|---|---|
| 65471 | சாப்பர் | கோனு கவுண்டர். |
| 60450 | ஷை | மரியப் பிரகாசம். |
| 16260 | ஷை | நாகையா நாயுடு. |

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு செப்டெம்பர் மீ 4௳, வெள்ளிக்கிழமை [இதழ் 35

வின்ஸ்டன் சர்ச்சில்

ஸ்ரீ

பிரதம மந்திரியின் பேரன்.



### சமர்ப்பணம்

யுத்தம் ஆரம்பமாகி இரண்டாவது வருஷம் முடிகிறது. மூன்ருவது வருஷம் ஆரம்பமாகிறது, இதுவே யுத்தத்தின் கடைசி வருஷமாக இருக்க வேண்டு மென்பது தான் நம் மனமார்ந்த ஆசை. இந்தச் சமயத்திலே, "சென்னை யுத்த சஞ்சிகை"யின் விசேஷ மலரை உலக இளைஞர்களுக்கு, குறிப்பாக இந்தப் படத்திலுள்ள இளைருக்குச் சமர்ப்பிக்கின்ருேம்.

# சபாஷ் ! போலீஸ்

**கனம் நீதிபதி வாட்ஸ்ஒர்த் அவர்கள் எழுதியது :—**

சென்ற சில நாட்களாக சில ரயில்வே ஸ்டேஷன்கள் தீக்கு இரையாகின்றன. பல பத்திரங்கள் சாம்பலாயின. இந்தியப் பொது மக்களில் ஒரு சிறு பகுதியார், தம் அறிவை அடமானம் வைத்து விட்டதாகத் தெரிகிறது. தன் அசிங்கமான தலையைத் தூக்குகிறது அராஜகம். இப்படிப் பட்ட நெருக்கடியான காலத்தில் தான, போலீசார் தம்மை வெகுவாக அடக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது தான் என் நினைவில் இருந்து கொண்டிருக்கிறது.

> "போலீஸ் சேவகன் தன் கடமையை நிறைவேற்றும் போது, அவன் வாழ்க்கை இன்பமாக இராது"

என்னும் கருத்துடைய பழமொழியை நீங்கள் அறிவீர்கள்.

சாதாரண காலத்திலேயுங் கூட, இந்தியப் போலீஸாரின் வேலைகள் எப்போதும் கடுமையானவை தான். அடிக்கடி அவர்களுக்கு ஆபத்து நேரவுங் கூடும். இத்தனை மணி நேரந் தான் ஆபீசில் வேலை செய்ய வேண்டு மென்னும் உறுதி யில்லை. சமாதானமாகவும் முறைப் படியும் தம் தினசரி வாழ்க்கையை நடத்தவும் அவர்களால் முடியாது. தன் மனைவி மக்களோடு இன்பமாகக் காலங் கடத்த, ஒரு வார சகவாசம் கிடைப்பது கூட அரிது. அப்போதுங் கூட அரை மணி நேர நோட்டீஸில் அவர்கள் வேலைக்குத் தயாராகி விட வேண்டும். இரவிலும், பகலிலும், கொட்டும் மழையிலும், தகிக்கும் வெயிலிலும் கரடு முரடான காட்டு மார்க்கமாக, ஏதோ ஒரு கொடும் சம்பவம் நடந்துள்ள இடத்திற்குப் போக வேண்டும். இப்படிப் பட்ட இடத்திற்குக் கடும் களைப்போடும் கொடும் பசியோடும் போய்ச் சேருகிறார். தனக்கு என்னென்ன வசதிகள் வேண்டும் என்பதை அடியோடு மறந்து விடுகிறார். உடனே தன் வேலையைச் செய்ய ஆரம்பிக்கிறார். ஒரு இந்தியக் கிராமத்தில் ஒரு பிணங் கிடக்கிறது. அந்தப் பேர்வழி எப்படி இறந்தார் என்பதைப் பற்றி பல வகைப் பொய்க் கதைகள் கிளம்புகின்றன. புழுத்துப்போன சாணத்தின் மேல் எத்தனைக் கொசுக்கள் இருக்குமோ, அத்தனை வகைப் பொய்க் கதைகள் ! இந்தப் பொய் மூட்டைகளி லிருந்து உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டியது அவருடைய வேலை. தான் செய்யும் எல்லா வேலைகளையும் மிக நுணுக்கமாக ஆராய்ந்து பிறர் குறை கூறுவார்கள் என்று அவருக்குத் தெரியும். இந்தப் பிணத்தைக் குறித்த வழக்கை விசாரணைக்குக் கோர்ட்டார் எடுத்துக் கொள்ளுகிறார்கள். அப்போது அது சம்பந்தமாக அவரை பல வகைகளில் குறுக்கு விசாரணை செய்கிறார்கள். இந்த விசாரணை பல வகைகளிலும் மிகவும் கடுமையா யிருக்கும். பாரபட்சமாக நடந்து கொண்டதாகவும், தம் கடமையை அலட்சியம் செய்ததாகவும் குற்றஞ் சாட்டுவார்கள். சாட்சிகள் கூறுகிற பொய்க ளெல்லாம் இவருடைய ஜோடனை என்று வீண்பழி சாற்றுவார்கள். இவை எல்லாம் அவருடைய தினசரி வாழ்க்கை. இவை போதா தென்று, அரசியல் குழப்பங்களும் கிளம்பி விடுகின்றன. முன்னெச்சரிக்கை இல்லாமலேயே பொது ஜனங்கள் திரண்டு விடுகிறார்கள். பல வகைகளில் ஆபத்துக்களை உண்டாக்குகிறார்கள். சொத்துக்களை நாசஞ் செய்வதே அவர்கள் நோக்கம். ஆனால் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு போலீஸ்காரருக்கு உண்டு. அப்போது, ஒரு போலீஸ்காரருடைய வாழ்க்கை எப்படி இன்பமாக இருக்க முடியும் ?

ஒரு ஜில்லாவின் ஒரு மூலையில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிற தென்று வைத்துக் கொள்ளுவோம். அடுத்திருக்கும் ஒரு கிராமத்தில் பொது ஜனங்கள் திரண்டு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸைத் தாக்குகிறார்கள் என்ற செய்தி கிடைத் திருக்கிறது. இந்தக் கலகக்காரக் கூட்டத்தில், சப்-இன்ஸ்பெக்டருக்குத் தெரிந்தவர்கள் தான் இருப்பார்கள். கலகத்திற்குப் பிறகுங் கூட அவர், அவர்களிடையே தான் வசிக்க வேண்டியவர். அவர்களுள் சில பேர்போன போக்கிரிகளும், நன்றாகக் குடித்து விட்டு, கொள்ளையடிப்பதற்கு ஆயத்தமாக இருப்பார்கள். ஆனால் அந்தக் கலகக் கூட்டத்தில் பெரும்பாலும் விஷக ஆத்திரப் படும் இளைஞர்களாகத் தான் இருப்பார்கள். இவர்களில் சிலர் உயர்ந்த குடியில் பிறந்து செல்வாக்கோடு உள்ளவர்களும் உண்டு. இந்தக் கலகக்காரர்களை எப்படி நடத்தினாலும் பொது ஜனங்களின் கடுமையான சாபங்களுக்குத் தான் சப்-இன்ஸ்பெக்டர் ஆளாக வேண்டும். கலக மெல்லாம் அடங்கிய பிறகு, ஆபீஸ் தஸ்தாவேஜிகள் எல்லாம் நாசமாகாமல் காக்கப் பட்டதைப் பாராட்ட மாட்டார்கள் ; ஆனால், காயப் பட்டவர்களைக் குறித்தும் இறந்து போனவர்களைக் குறித்தும் தான் பிரமாதப் படுத்துவார்கள். இந்த நிலைமையில் தைரிய மில்லாமல் தயங்கிக் கொண்டிருப்பாரானால், அவருடைய உத்தியோகத்திற்கே ஆபத்து வந்து விடும். என்றாலும், இவை பற்றி ஆலோசிக்க நேரம் கிடையாது. மிகவும் நெருக்கடியானதும் ஆபத்தானதுமான வேலையைச் செய்து முடிக்க வேண்டி யிருக்கிறது. அது அவருடைய கடமை. சேர்க்கக் கூடிய அளவிற்குப் போலீஸ் சேவகர்களைச் சேர்க்கிறார். அவர்களுக்குத் துப்பாக்கி முதலிய ஆயுதங்களைக் கொடுக்கிறார். ஆறு சேவகர்களைச் சேர்ப்பதே பெரிய காரியம். மற்றவர்கள் சம்மன்கள் ஜாரி செய்யவும், கே.டி.களைத் தணிக்கை செய்யவும் கிராமங்களுக்குப் போயிருப்பார்கள். போலீஸ் ஸ்டேஷன் காவலுக்கும் அவர்களை நியமிக்க வேண்டும். மிகுந்திருப்பவர்களில் ஆறு பேர்கள் தேறுவது கஷ்டம். நூற்றுக் கணக்கான ஜனங்கள கொதித்த உள்ளங்களோடு கூடி இருக்கும் கூட்டத்தைக் கலைக்க, சப்-இன்ஸ்பெக்டர் புறப்படுகிறார்.

போலீஸ் தலையைக் கண்ட வுடனேயே கற்களையும் சோடா புட்டிகளையும் அவர்கள் மீது கலகக்காரர்கள் எறிகிறார்கள். இதனால் சில சேவகர்களுக்குக் காயப்படுகிறது. தன் முகத்தில் ஒரு கல் விழுந்து காயப்படுத்தினால் சாதாரணமாகக் கடுமையான கோபந் தான் உண்டாகும். அமைதி உண்டாகாது. என்றாலும், இந்தச் சமயத்தில் அமைதியா யிருக்க வேண்டியது மிகமிக அவசியம். இந்தச் சமயத்தில் சப்-இன்ஸ்பெக்டர் என்ன செய்ய வேண்டும் ? தடிகளைக் கொண்டு கூட்டத்தைத் தாக்கிக் கலகக் கூட்டத்தைக் கலைக்கும்படி உத்திர விடலாம். சில சேவகர்களைக் கைவசம் வைத்துக்கொண்டு, தடியடியால் கூட்டத்தைக் கலைக்க முயற்சித்தால், பெருத்த ஆபத்தில் தான் போய் முடியும். கூட்டம் எதிர்த்து நின்று சண்டை போட்டால், போலீஸார் சமாளிப்பது கஷ்ட மாகப் போய்விடும், அவர் சற்று பின்வாங்கிக் கொண்டிருந்து, மேற்கொண்ட உதவியை எதிர் பார்க்கலாம். அதற்குள்ளாக, கலகக் கூட்டத்தார் தஸ்தாவேஜிகளை எல்லாம் சாம்பலாக்கி, அளவு கடந்த நாசப் படுத்தி, ஒரு குற்றமும் செய்யாத குமாஸ்தாக்களையும் கொன்று விடக் கூடும். அல்லது சப்-இன்ஸ்பெக்டர் தன் துப்பாக்கியால் சுடலாம். இந்த ஆபத்தான கூட்டத்தை தடுப்பதற்கு இது தான் வழி. தம் உயிரை எப்படிக் காப்பாற்றிக் கொள்ளுவது, இந்தக் கலகத்தினால் என்னென்ன ஏற்படும், என்று யோசிக்க அந்தக் கூட்டத்தி லுள்ள ஒவ்வொருவரும் அப்போது தான் ஆரம்பிப்பார்கள். ஒரு வினாடி நேரத்திற்குள் என்ன செய்ய வேண்டு மென்று சப்-இன்ஸ்பெக்டர் முடிவு கட்டி விட வேண்டும். கலகக் கூட்டமோ கொதித் தெழுந்து நிற்கிறது. கலந்து ஆலோசிக்கவும் யாரும் கிடையாது. இது மிக மிகக் கடுமையான பொறுப்பு. இப்படிப் பட்ட சமயங்களில் கொஞ்சமும் மனதைச் சிதற விடாமல் உறுதியோடிருந்து, சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு எந்த அளவிற்கு பலாத்காரம் தேவையோ, அந்த அளவிற்கு மட்டும் உபயோகித்து, நிலைமையைச் சமாளித்த சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு நம் நன்றி உரித்தாகுக.

சமாதானம் ஏற்பட்ட பிறகு, போலீஸார் மீது குறை சொல்லக் கிளம்புகிறவர்கள் அநேகம் பேர்

(9-ம் பக்கம் பார்க்க)



# தப்பிய வீர இளைஞர்கள்



**பிரான்சில் ஜெர்மானியரின் கொடுமைகளைத் தாங்காத வீர பிரஞ்சு இளைஞர்கள், ஒரு சிறு படகில், 30 மணி நேரத்தில் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து, ஜெர்மன் யூ படகுகளுக்குத் தப்பி, இங்கிலாந்திற்கு வந்து சேர்ந்தார்கள். இவர்களை பிரதம மந்திரி வரவேற்று உபசரிக்கிறார். இவர்கள் டி கால் படையில் இப்போது சேர்ந்திருக்கின்றனர்.**

# நான்காம் வருஷப் போர்

## சென்னை கவர்னர் செய்தி

இந்த விசேஷ மலருக்கு ஒரு செய்தி யனுப்புமாறு நாம் வேண்டிக் கொண்டதற்கு, அன்புடன் இணங்கி, சென்னை கவர்னர் மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் அவர்கள் கீழ்க்கண்ட செய்தியை அனுப்பி யிருக்கிறார்கள் :—

செப்டம்பர் மாதம் 3-ம் தேதி யன்று இந்த உலக யுத்தத்தின் 4-வது வருஷம் ஆரம்பமாகிறது. இந்தப் போராட்டம் மிகவும் கடுமையானது தான். அக்கிரமத்தால் தூண்டப் பட்ட அச்சு நாடுகள் ரஷ்யாவிற்கும், அமெரிக்காவிற்கும் நமக்கும் விரோதமாகத் தலை தூக்கி யிருக்கின்றன. என்றாலும் 1942-ம் வருஷத்தில், நம்மை பாது காத்துக் கொள்ள வேண்டி மிகக் கடுமையாகப் போராட வேண்டி யிருக்கு மென்று நமது பிரதம மந்திரி சர்ச்சில் முந்தியே எச்சரித்திருக்கிறார். வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரக் கூடும் என்றும் தெரிவித்திருக்கிறார். சமாதான காலத்திலேயே அச்சு அரசாங்கங்கள் தம் பலத்தை வெகுவாகப் பெருக்கிக் கொண்டன. சமாதானத்தோடு வாழ்ந்து வந்த நாடுகளின் மீது துரோகத்தனமாகப் படை யெடுத்துத் தாக்கியதனால் இந்த பலம் மேலும் அதிகப்பட்டது. அச்சு நாடுகளில் எதுவும் சேர்த்து அமைக்க முடியாதபடி, அவ்வளவு பெரிய படைகளைத் திரட்டி அமைப்பதற்கு வேண்டிய ஆட்களும் மூலப் பொருள்களும் நம்மிட மிருக்கின்றன வென்று நமக்குத் தெரியும். இவற்றைக் கொண்டு நிச்சயமாக முடிவில் நாம் வெற்றி பெறலாம். இப்படிப் பட்ட படையைத் திரட்டிக் கொண்டிருக்கிறோம். இனி ஏற்படப் போகும் வெற்றிக்கு, டியப்பியை நாம் தாக்கி யடைந்த வெற்றி, ஒரு உதாரணமாகும். 1918-ம் வருஷத்தைப் போலவே 1943-ம் வருஷத்தில் நிலைமை மாறுவதைக் காணலாம்.

> என்றாலும் கடுமையான காலம் இன்னும் இருக்கிறது. ஆகையால் நேர்மையை முன்னிட்டும் விடுதலையை முன்னிட்டும் எல்லோரும் ஒன்று பட்டிருக்க வேண்டிய காலம் இது தான். நம்மால் இயன்ற வரை யுத்த முயற்சிக்கு உதவி செய்ய வேண்டிய காலமும் இது தான். இப்படிச் செய்யாதவர்கள் நாட்டுப் பற்றுடையவர்க ளல்ல; நாட்டுக்குத் துரோகிகள்.

இப்போது நாடெங்கும் கலகங்கள் கிளம்பி யிருக்கின்றன. இவற்றால் நாட்டின் விடுதலைக்கு ஆபத்து உண்டாகும். நம் நாட்டை ஜப்பானியர்கள் தாக்கும் படி வரவேற்பதாகவும் பொருள் தரும். இதனால் யாருக்கும் நன்மை யில்லை ; ஆனால் எதிரிகளுக்குத் தான் நன்மை. நியாயானியாய மில்லாத கிளர்ச்சிக்காரர்களும் தப்பு வழிகளில் செலுத்தப் படும் பொது ஜனங்களும், உள்நாட்டுச் சமாதானத்தைக் குலைக்கப் பார்க்கிறார்கள். இப்படிப் பட்ட நிலைமை ஏற்படாத படி மாஜிஸ்திரேட்டுகளும், போலீஸாரும் தைரியத்தோடு பாதுகாத்துக் கொண்டு வருகிறார்கள். வெளிநாட்டு எதிரிகள் நம்மைத் தாக்காதபடி படை வீரர்களும், கப்பற் படையினரும், ஆகாயப் படையினரும் எப்படி நாட்டுப் பற்றோடு காத்து வருகிறார்களோ, அது போலவே தான், உள் நாட்டி லுள்ள எதிரிகள் தாக்காதபடி இவர்கள் காத்து வருகின்றார்கள்.

அச்சு நாடுகள் வெற்றி பெற்றால், இந்த நாட்டிற்கு அரசியல் விடுதலை கிடைக்கவே கிடைக்காது ; உயர்தரக் கல்வி நசித்துப் போகும் ; நீதி ஸ்தலங்களில் நீதி கிடைக்காது. மதங்களுக் குள்ள ஏதேச்சை தொலைந்து போகும் ; இது வரை ஒருபோது மில்லாத அளவு துன்பத்திற்கு இந்தியா ஆளாக நேரும். போராடும் படைகளுக்கு ஆதரவாக இந்திய மக்கள் இருந்து, உள்நாட்டுக் கலவரங்கள் உண்டாகாதபடி தடுத்துக் கொண்டிருந்தால், நிச்சயமாக யுத்தத்தில் வெற்றி பெறலாம். அதனால் உலகிலுள்ள சுயேச்சையான சாம்ராஜ்ய நாடுகள் எல்லாவற்றிலும் தலை சிறந்ததாக இது விளங்கும்.

# தேசீயப் போர் முனை

## அரசியலில் கலந்தது நியாயமா ?

குழம்பிய உலகில் தோன்றிய குழந்தை ; அரசியல் புயலில் வளர்ந்த குழந்தை ; இந்தக் குழந்தை தான் தேசீயப் போர் முனை. இது இப்போது நடக்கும் பருவத்திற்கு வந்து விட்டது. எந்தக் காரியத்தையும் தன் இச்சையாகச் செய்யும் நிலையை அடைந்து விட்டது. தனக்கு நண்பர்களைத் தேடிக் கொள்ளுகிறது. அரசியல் உலகில் தானும் ஒரு அங்கம் என்னும் உணர்ச்சி பெற்று விட்டது. இந்த உலகமே ஒரு நாடக அரங்கம். அதில், கடவுள் நடத்தும் துக்க நாடகத்தில், தான் நடிக்க வேண்டிய பாத்திரம் எது என்று அதற்குத் தெரியும்.

கட்டுரைகள், பிரசங்கங்கள், சுவரொட்டி விளம்பரங்கள் முதலியவற்றி லிருந்து ஒரு உண்மை தெளிவாகிறது. அதாவது, தேசீயப் போர் முனை அரசியல் சம்பந்த முடைய தல்ல வென்று தெரிகிறது. இது உண்மையிலேயே ஒரு தேசீய முயற்சி. நாட்டி லுள்ள பெரிய அரசியல் கட்சி எப்போதும் அதை வெறுத்தாலும், இன்று அது தங்கள் கவனத்திற் குரியது. தன் இலட்சியத்திற்கு மாருக அரசியல் அரங்கத்தில் அது தலை காட்டுகிறது என்று, அக் கட்சியார் இதன் மீது குறை கூறுகிருர்கள்.

தேசீயப் போர் முனை உடனடியாகச் செய்ய வேண்டிய வேலை என்ன என்று நாம் வகுக்கும் முன்னதாக, ஜூலையீ 14உ யன்று வார்தாவில் நிறை வேறிய தீர்மானத்தின் பயனுக, இதன் போக்கு எவ்வளவு அவசியமானது என்று மெய்ப்பிக்க வேண்டியது அவசியமாகும். இது தோன்றி பல மாதங்க ளாகின்றன. அது முதல் எதிர்ப்புகளைத் தடுக்க வேண்டி நாம் ஒற்றுமையாகவும் கூட்டுற வோடும் இருக்க வேண்டு மென்று வற்புறுத்துகிறது. நாட்டுப் பற்றும் நல்லெண்ணமும் உடைய எல்லோரையும் கவரத் தக்க முறையில், மிகச் சிறந்த உள்ளத்துடனும் பெரிய முறையிலும் வாக்குறுதி ஒன்று வகுத்திருக்கிறது. இந்தச் சங்கத்தில் சேருகிறவர்கள் அந்த வாக்குறுதியில் கையெழுத்திட வேண்டும். காங்கிரஸிலோ, முஸ்லீம் லீக்கிலோ, விவசாயிகள் சபையிலோ மிகவும் பற்றுதலுள்ள எவரும் ஆட்சேபிக்கத் தக்க வார்த்தைகளோ, தத்துவமோ அந்த வாக்குறுதியில் இடையவே இடையாது. நேச தேசத்தாரை துரதிர்ஷ்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது ; ஐரோப்பாவின் கிழ் பகுதியில் ஹிட்லர் கொழுத்துக் கொண்டிருக்கிறுன். நமக்கு அடுத்த வீட்டுத் தோட்டத்தில் தன் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறுன் ஜப்பானியன். இந்தச் சமயத்தில் இந்தியாவிற்கு உள்ள ஆபத்தையும். கண்ணியத்தையும், மகத்தான பலத்தையும் பற்றியும் நாம் வெற்றி பெற வேண்டியது எவ்வளவு அவசியம் என்றும், எடுத்துச் சொல்லி ஊக்க மூட்டக் கூடு மென்று நினைத்தோம். வெற்றி பெற வேண்டி ஒற்றுமைப் பட வேண்டிய அவசியக் கொள்கையை ஒப்புக் கொள்ளும்படி ஓவ்வொரு ஆணையும் பெண்ணையும், அரசனையும் குடியானவனையும், தலைவனையும், ஊழியனையும், அரசியல் வாதியையும், மத குருவையும் கோரினேம். இந்தியர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும், பிராமணர்களுக்கும், பிராமணரல்லாதாருக்கும், மிராசுதார்களுக்கும் குடியானவர்களுக்கும் உள்ள அரசியல் கசப்பை, எதிரிகள் தம் செயல்களால் பெருக்கப் பார்த்தார்கள் ; தேசீயப் போர் முனையின் நோக்கங்கள் கொஞ்சமும் கை கூட வில்லை என்று கூறி, பயத்தை ஊட்டி, அந்த மனக் கசப்பை வளர்த்தார்கள்.

பிறகு தான், கிரிப்ஸ் திட்டம் தோல்வி யடைந்தது. அதன் பிறகு தான் காங்கிரஸ் காரியக் கமிட்டி வார்தாவில் தன் தீர்மானத்தை நிறைவேற்றியது. அதன்படி, தம் கட்சியே மற்ற கட்சிகளை விட பெரிதாகவும் ஆதிக்கம் மிகுந்ததாகவும் இருக்க வேண்டு மென்று கடவுளாலேயே நிர்ணயிக்கப் பட்டிருப்பதாகக் கருதினுர்கள். எதிரிகள் தாக்கக் கூடிய ஆபத்தான நிலைமைகளையும், அந்நியர்கள் நம் நாட்டில் வந்து புகுவதையும், இந்தியர் வாழ்வையும் சமாதானத்தையும் கலையையும் மதத்தையும் அழிக்கத் தக்க முறையில், வேண்டு மென்றே இத் தீர்மானத்தை நிறை வேற்றினுர்கள். அநேக வருஷங்களாக ஜன நாயகத்தைச் சோதித்து வந்தார்கள். இந்தச் சோதனைகள் நேர்மையானவையா யிருக்கலாம். இதன்படி, மிகக் கடுமையாக மாறுபட்டிருக்கும் கொள்கைக்காரர்களையும் ஜாதிக்காரர்களையும் ஒன்று படுத்தி, ஒரு அரசியல் உருப் பெறும்படி செய்யத் தான் இந்தப் பரீட்சைகள் நடந்தன. தன்னலத்திற்காகவே இந்த பரீட்சைகள் நடந்தன வென்று இந்தத் தீர்மானம் மெய்ப்பித்து விட்டது.

> ஆகவே, தேசீயப் போர் முனை தன் கடமையைச் செய்ய வேண்டாமா ? அதனுல் தான் காங்கிரசைக் கடுமையாக எதிர்க்கிறது. இந்த முக்கியமான அரசியல் கட்சியோ, தன்னலத்தினுலும், குறுகிய மனப் பான்மையினுலும், இழிவான தந்திரச் செயல்களாலும், பெரும்பான்மையான மக்களை நடுங்கத் தக்க ஆபத்துக்களுக்கு ஆளாக்குகிறது.

இதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் தேசீயப் போர் முனை முயற்சிக்கிறது. எந்தக் கட்சியிலும் தேசீயப் போர் முனை சேர்ந்திருக்கக் கூடாது. அதன் இலட்சியத்தையும் கைவிடக் கூடாது. இதுதான் அதன் உண்மையான நிலை. இதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியே, ஒரு கட்சிக்கு முரணுன நிலைமையை மேற்கொள்ளும் படியான அவசியம் அதற்கு ஏற்பட்டு விட்டது.

வார்தா தீர்மானம், பிறகு நிறைவேறிய பம்பாய் தீர்மானம், இவ்விரண்டிற்கும் பிறகு நடைபெற்ற கலகங்கள், நாசங்கள், துப்பாக்கிப் பிரயோகங்கள் ஆகியவை பற்றி, நாம் அதிகமாகக் கூறத் தேவையில்லை. தேசீயப் போர் முனை இப்போது எப்படி நடக்கிறது என்று விளக்குவது தான், இந்தக் கட்டுரையின் நோக்கம். உள் நாட்டுக் கலகம் ஏற்படாதபடியும் வெளி நாட்டார் நம்மைத் தாக்காதபடியும் நம்மைப் பாது காக்க வேண்டிய பொறுப்பு, இந்தியா அரசாங்கத்தாருக்கு உண்டு. ஆகையால், அவர்கள் இந்தப் பிரச்சினையைக் குறித்து என்ன செய்கிருர்கள் என்பதை ஆலோசிப்பது தான் இக் கட்டுரையின் நோக்கம்.

அன்னிய அரசாங்கத்திற்கு ஆள்பட்டிருக்கும் வரையிலும், ஜன நாயக அரசாங்கம் இல்லா திருக்கும் வரையிலும், அதாவது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் அரசாங்கத்தை நடத்தா திருக்கும் வரையிலும், ஒரு நாடு யதேச்சையாக இருக்க முடியாது. இந்த அடிப்படையான உண்மையைக் காங்கிரஸ் ஒப்புக் கொண்டிருக்கிறது. இதை ஒருவரும் மறுக்க முடியாது. யுத்தம் முடிந்த உடனேயே, இப்படிப் பட்ட ஒரு அரசாங்கத் திட்டத்தை வழங்கப் போவதாகத் தான் சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் வாக்குறுதி கொடுத்தார். பார்லிமெண்டின் அனுமதியின் பேரில், உலகம் முழுவதும் அறிய, பிரிட்டிஷார் கொடுத்த வாக்குறுதி தான் இது. இதைப் பல முறையும் வற்புறுத்திக் கூறி யிருக்கிருர்கள். இதற் கிடையிலே ஒரு அரசாங்கம் இருக்க வேண்டும். தற்போதைய நிலைமைக்கு ஏற்றபடி, முழுதும் ஜன நாயகத்தை யடிப்ப டையாகக் கொண்டு தான், இப்போது நடை பெறும் சபையோடு கூடிய கவர்னர் ஜெனரலின் ஆட்சி நடை பெறுகிறது. அந்தச் சபையி லுள்ள அங்கத்தினர்கள் முறைப் படி தேர்ந் தெடுக்கப் பட்டவர்கள் அல்ல என்பது உண்மை தான். இந்த முறையில் பிரதிநிதித்துவம் வாய்ந்த அரசாங்கம் இது அல்ல என்பதை யாரும் மறுக்க முடியாது. என்றுலும், அங்குள்ள கனவான்கள் முழுப் பிரதிநிதித்துவம் வாய்ந்தவர்கள் தான். இந்தியாவி லுள்ள பல ஜாதி மதங்கள் வேற்றுமைகள் உள்ள எல்லோருடைய சார்பாகவும் பேசத் தகுதி யுடையவர்கள் தான் இப்போது இந்திய அரசாங்கத்தின் அங்கத்தினர்களா யிருக்கிருர்கள். எப்போதும் இந்தச் சபையினரின் நோக்கம்



## வெற்றிக் குறி



**இந்தியாவில் வந்திறங்கிய ஒரு டாங்கியின் மேல் புரத்தில் வெற்றிக் குறி V வரைகிருர்கள்.**

ஒன்று போல்லே இருந்திருக்கிறது. யுத்தப் புயல்களுக கிடையே, இந்தியாவைக் கரை சேர்ப்பதும், பிறகு தம குத் தேவையான முறையில் அரசாங்கத்தை வகுத்துக் கொள்ளவும், உலகத்திலுள்ள நாடுகளில இந்தியாவின் நிலைமை என்ன என்பதை நிர்ணயிக்கவும் உரிமை பெறும்படி செய்வதுந தான் இந்த அரசாங்கத்தின் ஒரே நோக்கம். இது ஜன நாயகத்தை எதிர்ப்பது என்ருே, அல்லது, அது நசிக்கும்படி செய்யப்படும் சூழ்ச்சி என்ருே இதைச் சந்தேகிக்க முடியாது.

ஒற்றுமையும் கூட்டுறவும் மக்களிடையே இருக்க வேண்டியது அவசியம் என்று அரசாங்கம் வற்புறுத்திக் கூறியதற்குக் காரணமும் இது தான். இதன் பொருட்டு, தேசீயப் போர் முனை உள்ளிட்ட அரசாங்கம் முழுதுமே உழைத்து வந்தது. காந்தியாரும் காங்கரஸ் தலைவர்களும் தம் நோக்கத்தைக் கை விட வில்லை ; ஆகையால் தேசீயப் போர் முனை செய்த பிரசாரம் பயனற்றதாகி விட்டது. என்றுலும் பொது ஜனங்களும், காங்கிரஸைச் சாராத மற்ற எல்லா ஸ்தாபனங்களும் உலகிலுள்ள மற்றெல்லா நாடுகளும் அந் நாடுகளின் அரசாங்கங்களும் காங்கிரஸின் போக்கைக் கடிந்து குறை கூறி யிருக்கிருர்கள். குறிப்பாக, சட்ட மறுப்பு இயக்கத்தைக் கடிந்திருக்கிருர்கள். இப்போது பொது ஜனங்கள் பலாத்காரத்தில் இறங்கி விட்டார்கள். இந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டு விட்டது. இது சம்பந்தமாக அரசாங்கத்தார் செய்யும் செயல்களுக்கு ஆதரவு தேட வேண்டியது தேசீயப் போர் முனையின் முக்கியமான கடமையாகும். இதற்கு அரசாங்கத்தார் வெளியிடும் கண்ணியமான அறிக்கைகளே போதும். என்றுலும் கீழ்க்கண்ட வாசகத்திலும் அரசாங்கம் நம்பிக்கை வைத்திருக்கிறது. ஆகவே, அதை வெளியிடுகிறது.

1. கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமே அரசாங்கத்திற்குக் கிடையாது என்று அவர்கள் கூறுகிருர்கள். காங்கிரஸ் கமிட்டிகள் தங்கள் கொள்கைகளைக் குறித்தும் தத்துவங்களைக் குறித்தும் வாய்ச் சவடால் பேசிக் கொண்டிருந்தன. அப்போது, ஆபத்தான பயங்கரச் செயல்களைச் செய்ய ஒரு பொது ஜன இயக்கத்தை அமைப்பதற்கான வெகு நுட்பமான தோர் திட்டத்தை வகுத்திருந்தார்கள் என்பதற்கான எல்லா சாட்சியங்களும் இருக்கின்றன. வைசிராயை நேரில் சந்தித்துப் பேசவாவது ஒரு சந்தர்ப்பத்தை காந்தியாருக்குக் கொடுத்திருக்க வேண்டு மென்று சிலர் குறை கூறுகிருர்கள். ஆனால் காங்கிரஸார் வகுத்திருந்த இயக்கத்தை அதுவரையிலுமாவது நிறுத்தி வைத்திருப்பதாக அவர்கள் வாக்குறுதி கொடுக்கவே இல்லை.

2. அரசியல் கட்சி என்னும் முன்னணியில் காங்கிரஸை நசுக்க அரசாங்கத்தார் விரும்புவது போல, தேசிய போர் முனை விரும்ப வில்லை. என்றுலும், இந்தியாவின் யுத்த முயற்சிகளை நசுக்கவும், ஐக்கிய நாடுகளுக்கு விரோதமான முறையிலும் அமைக்கப் படும் ஸ்தாபனத்தின் போக்கைத் தடுக்க வேண்டியதும், தேசீயப் போர் முனையின் கடமை. விடுதலை பெற காங்கிரஸ்காரர்கள் ஆசைப் படலாம். ஆசைப் படட்டும். சட்டப்படி அமைந்த ஆதிக்கத்தை அழிக்க அவர்கள் முயற்சிக்கிருர்கள். இதனுல் இந்தியாவின் அரசியல் முன்னேற்றம் பெரிதும் தடைப் படுகிறது.

3. இந்த இயக்கத்தை நடத்த, யார் பலத்தோடும் ஆயுதத்தோடும் இருக்கிருர்களோ, அவர்கள் மீது மட்டும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டால் போதும் என்று தேசீயப் போர் முனையினர் நினைக்கிருர்கள். அதாவது, வந்த பின் தடுப்பதை விட, வரும் முன் தடுப்பதே மேல் என்று கருதுகிருர்கள்.

4. யுத்தத்திற்குப் பிறகு இந்தியா சுயேச்சையோடிருக்கும் என்பது பற்றி அவர்களுக்குக் கொஞ்சங் கூடச் சந்தேகமே கிடையாது. இந்திய அரசாங்கமும், மன்னர் பிரான் அரசாங்கமும் இது பற்றி உலகறிய சத்தியம் செய்து கொடுத்திருக்கிருர்கள். இதைக் கண்டிப்பாகக் காப்பாற்றுவார்கள்.

5. இவை தான தேசீயப் போர்முனையார் மேற்கொண்டுள்ள போக்கு. இவை நேர்மையானவை, தெளிவானவை. இவை முழுதும் தேசீய மயமானதனுல் அரசியல் சம்பந்த மற்றவை. எனவே, பொது ஜனங்களை ஒன்று படுத்தும் சக்தி அதற்குண்டு. ஆகையால் தான், தேசீயப் போர் முனையில் சேருங்கள் ! என்று கோருகிறேம்.

# யுத்தத் தீமையிலும் நன்மை யுண்டு

## சாகுபடி பெருகுகிறது

### வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிகிறது

யுத்தத்தால் தீமைதான் உண்டு. இதில் சந்தேகமே கிடையாது. இதனால் உயிருக்கும் சொத்துக்கும் சேத முண்டாகிறது. பொருளாதார வாழ்க்கையும் ஒழுக்கமும் நாச மடைகிறது. என்றாலும் இந்தத் "தீமையிலும் நன்மை யுண்டு". இதுவும் உண்மை தான். எந்த அளவிற்கு அழிவு வேலை ஆகிறதோ அந்த அளவிற்கு ஆக்க வேலையும் ஆகிறது. சிந்தித்துப் பார்க்கிறவர்களுக்கு, இது நன்ருகத் தெரியும்.

இந்தியா முக்கியமாக ஒரு விவசாய நாடு. இந்திய மக்களில் பெரும்பாலோர் விவசாயிகளும் தொழிலாளர்களும் தான். யுத்தத்திற்கு முன்பு, தம் தேவைக்கு என்ற அளவு கூட, சாகுபடி செய்ய முடியாமல் இருந்தார்கள். எனவே, ஏராளமான அரிசி முதலிய உணவுப் பொருள்களை பர்மா முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருந்தார்கள். இந்த இறக்குமதியையே நம்பிக் கொண்டு மிருந்தார்கள். தம் நாட்டி லுள்ள மூலப் பொருள்களை விருத்தி செய்து கொள்வதைப் பற்றி அவர்கள் கொஞ்சங் கூட கவனம் செலுத்த வில்லை. இப்போது உள் நாட்டு சாகுபடியையே நம்பி இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. தமக் குள்ள அதிகத் தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டி யிருக்கிறது. இலங்கை முதலிய ஊர்களுக்கும் அரிசி ஏற்றுமதி செய்ய வேண்டி யிருக்கிறது. அதனுல் உணவுப் பொருள்களை அதிகமாகச் சாகுபடி செய்யுங்கள் என்ற கூச்சல் கிளம்பி யிருக்கிறது. இந்தக் கிளர்ச்சி தக்க பலனை அளித்திருக்கிறது. ஆகையினுல் இக் கிளர்ச்சியை மேலும் தொடர்ந்து நடத்த வேண்டும். விவசாயம் இன்ன தென்றே தெரியாத பாமர ஜனங்கள் அநேகம் பேர், உணவுப் பயிர்கள் காய்கறிகள், பழமரங்கள் முதலியவற்றை பயிரிட முனைந்து விட்டார்கள். சாகுபடியாகத் தக்க எல்லா நிலங்களிலும் வெகு விரைவாக சாகுபடி நடந்து வருகிறது.

யுத்தத் தீமையிலும் ஒரு நன்மையுண்டு என்று முன்பு சொன்னேம். தன் தேவைக்கு ஏற்ற அளவிற்கு உணவுப் பொருள்கள் சாகுபடி செய்ய இந்தியர்கள் கற்றுக் கொண்டதும் ஒரு நன்மை தானே. அது மட்டு மல்ல. யுத்தத்திற்குப் பிறகும், விலைகள் குறைந்து போனலும் கூட, அதே அளவிற்குச் சாகுபடி செய்யலாம. ஆனல், தகுந்தபடி புத்திசாலித் தனமாக ஏற்றுமதி இறக்குமதி வரி இதற்கு விதிக்க வேண்டும்.

**விலைவாசி உயர்வு.**

விலை வாசிகள் உயர்ந்து விட்டன வென்று பெரும் கூக்குரல் கிளம்புகிறது. ரொக்கக் கூலி பெறுகிறவர்கள் இதனுல் கஷ்டப்பட நேரும் என்பது உண்மை. எனென்றல், இன்றியமையாத தேவைகளுக்குக் கூட, அதிக ரொக்கம் தேவை யிருக்கும். ஆனல், ஜனங்களில் பெரும்பான்மையோர் உணவுப் பொருள்களையே சாகுபடி செய்வார்களானல், தானியங்களையே கூலியாகக் கொடுப்பார்கள். இந்த தானியங்களை விற்றல், முன்பு விற்ற விலையை விட அதிக விலைக்கு விற்கலாம். ஆகையினுல் விலை வாசிகள் உயர்ந்து விட்டது என்னும் கூக்குரலுக்கு அப்போது இடமே இருக்காது. உதாரணமாக 1938-ம்வருஷ முதல் விவசாயிகள் தம் சாகுபடியை 5 கோடி ரூபாய்க்கு விற்றிருக்கிருர்கள். இதில் ஒரு பகுதியை தரகன் பெற்றுக் கொள்ளுகிறுன். ஆனல், விலை வாசிகள் உயர்ந்திருக்கிறதை ஈடு பண்ணத் தக்கபடி, இந்தத் தரகுத் தொகையில் ஒரு பகுதியை ஒதிக்கி யிருக்க வேண்டும். விவசாயியின் வாழ்க்கைச் செலவும் மிகவும் அதிக மல்ல. இதுவரை விவசாயி இலாப மடையாது போனலும், இனியாவது கட்டாயம் இலாப மடையத் தான் வேண்டும்.

பொருளாதாரத் துறையில் கைத்தொழிலை விட விவசாயத்தால் தான் அதிக இலாபம் என்று அடிக்கடி சொல்லுகிருர்கள். ஆனல் இந்த யுத்தங் காரணமாக, பொதுவாகக் கைத் தொழிலும், குறிப்பாக யுத்த சம்பந்தமான கைத் தொழிலும் மிகவும் ஊக்க மடைந் திருக்கிறது. இதனுல் இந் நாட்டிற்கு நிரந்தரமான நன்மை யுண்டு. சென்னை மாகாணத்தி லுள்ள தொழிற்சாலைகளில் 1939-ம்வருஷ 197,000 பேர்கள் வேலை செய்தார்கள்; 1941-ம்வருஷத்தில் 234,000 பேர்கள் வேலை செய்தார்கள். இதுவரை இந்நாட்டில் செய்யப் படாத பொருள்கள் வெகு விரைவாக இப் பாது தயாரிக்கப் படுகி றன. தேர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருக்கிறது. இது பெரிய கைத்தொழில்களில் மட்டு மல்ல; குடிசைத் தொழிலிலும் கூடத் தான். எல்லா வகைக் கைத் தொழில்களிலும் இந்த எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது. இதற்கு 'பிவின் பையன்களையே' உதாரணமாகச் சொல்லலாம். இவர்கள் இங்கிலாந்திலேயே தேர்ச்சி பெற்று வருகிருர்கள். யுத்தத் தொழிற்சாலைகளிலும் அநேகம் பேர் பயிற்சி பெறுகிருர்கள். இது அநேகருக்குத் தெரியா திருக்கலாம். குடிசைத் தொழில்களினுல் தயாராகும் பொருள்கள் சப்ளை இலாக்காவிற்கு மேலும் மேலும் தேவையாய் இருக்கிறதாம். கைத்தறி நெசவாளர்கள் என்னும் இனத்தாரே இதன் மூலம் பெரிதும் நன்மை யடைந்திருக்கிருர்கள்

**வேலையில்லா ஏக்கம் ஒழிந்தது.**

இப்போதாவது வேலையில்லாத் திண்டாட்டம் எப்படி நீங்குகிறது என்று கவனியுங்கள! கீழ் நிலையி லுள்ளவர்கள் மட்டுமன்றி, மத்திய நிலையிலும் உயர்ந்த நிலையிலுமுள்ளவர்கள் கூட, நம் படைகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிருர்கள். தமக்கு வேலை எப்போது கிடைக்கும் என்று ஏங்கி யிருந்த, உயர்ந்த குடியைச் சேர்ந்த இளைஞர்கள், இன்று படைகளில் இந்திய உத்தியோகஸ்தர்களாகவும், டாக்டர்களாகவும், நர்சுகளாகவும் ஏராளமாகச் சேர்ந்திருக்கிருர்கள்.

யுத்தம் முடிந்த பிறகு, நம் படை வீரர்கள் தம் ஊர்களுக்குத் திரும்புவார்கள். அப்போது, அவர்களுக்கு அனுபவமும் அறிவும் மிகவும் அதிகப் பட்டிருக்கும். இதில் கொஞ்சங் கூட சந்தேகமே கிடையாது. இந்திய கிராமங்களில் உள்ள அறியாமையை இவர்கள் பெரிதும் போக்குவார்கள். இவர்களுடைய உணர்ச்சி அதிகப் பட்டிருக்கும்; பரந்த நோக்கம் அமைந்திருக்கும். இதற்குக் காரணம், மற்ற இனத்தவர்களோடும் நாட்டவர்களோடும் கலந்து பழகியது தான். இவர்களுக்கு ஏற்படும் வீரம், சகிப்புத் தன்மை, இரக்கச் சித்தம், மனத் தெளிவு ஆகியவை இந்திய நாட்டிற்கே மிகுந்த நன்மை தரும்.

இராணுவப் படையில் இவர்களைச் சேர்த்துக் கொள்ளுவது மட்டு மன்றி, உள் நாட்டுப் பயனியர் படையிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிருர்கள். 1,200 பேர்களைக் கொண்ட இரண்டு படைகளைத் திரட்ட சென்னைக்கு அனுமதி கிடைத்து விட்டது. இதற்கு விரைவாக ஆட்களைத் திரட்டிக் கொண்டிருக்கிருர்கள். இது மட்டுமா? பெணகள் உதவிப்படை, உள்நாட்டு பாதுகாப்புப் படை, தேசீயப்போர் முனை யங்கத்தினர்கள், ஜீவகாருண்ய வேலையையே செய்யும் செஞ்சிலுவைச் சங்கத்தார் ஆகியவர்கள் செய்யும் வேலைகளைக் கவனியுங்கள்! செஞ்சிலுவை சங்கம் தன்னலமற்ற ஒரு பெரிய ஸ்தாபனம். உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் இருக்கும் படைகளுக்கு இது மிகவும் வசதிகள் செய்து கொடுக்கிறது. இவற்றல் நம் நாட்டின் கண்ணியம் கட்டாயம் உயரத் தான் செய்யும்.

கடைசியாக ஏ.ஆர்.பி. இருக்கிறது. வார்டன் வேலைக்கும், தீயணைக்கும் படைவேலைக்கும், காயப் பட்டவர்களுக்கு உதவி செய்யும் வேலைக்கும், முதலுதவி வேலைக்கும், மீட்சி வேலைக்கும், ஆயிரக் கணக்கானவர்கள் பயிற்சி பெற்றிருக்கிருர்கள். இன்னமும் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிருர்கள். இவர்களில் அநேகர் வலிய வந்து தம் உழைப்பையும், அவகாசத்தையும் இந்த சிறந்த வேலைக்கு உதவுகிருர்கள். ஏ.ஆர்.பி. உணர்ச்சியினுல் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்புணர்ச்சியும் சகோதர உணர்ச்சியும் பெரிதும் மதிக்கத் தக்கவை.

[9-ம் பக்கம் பார்க்க]



## துப்பு கிடைத்ததா ?



போர்ச் சாரணர்கள் வட அயர்லாந்திலே பழகுகிருர்கள்

# விபசாரத்திற்கு அரசாங்க ஆதரவு

## நேர்மையாய் நடந்தால் கொலை தான்

### ஜப்பானியர்களின் அக்கிரமப் போக்கு

பிரஞ்சு அரசியல் மிகவும் சிக்கலானது. சாதாரண மாணவர்களுக்கு அது எளிதில் விளங்காது. அது போலவே தான் ஜப்பான் அரசியலும் சிக்கலானது. இந்த அரசியலில் மின்னல் வெட்டுவது போல் மாறுதல்கள் அவ்வளவு விரைவாக ஏற்படும். இம் மாறுதல்கள் மிகவும் கடுமையாகவும் இருக்கும். இதை வெளி நாட்டவர்கள் எளிதில் உணர்ந்து கொள்ள முடியாது.

அந்நிய நாட்டுக் கொள்கை சம்பந்தப் பட்ட வரை அநேக ஆண்டுகளாக ஒரே கொள்கையைத் தான் ஜப்பான் அரசாங்கம் கைக்கொண்டு வந்திருக்கிறது. 47 வருஷங்களுக்கு முன்பு ஜப்பான் தரைப் படையும் கப்பல் படையும் முனையிலே தான் இருந்தன. என்றுலும் ஒரு பெரிய இராணுவ வெற்றியை 47 வருஷங்களுக்கு முன்பே பெற்றுர்கள். அது முதல் அவர்கள் கனவு காண ஆரம்பித்து விட்டார்கள். அந்தக் கனவு இப்போது பலிக்கிற தென்றும் நினைக்கிருர்கள். 1927-ம்வருஷ ஜப்பான் பிரதம மந்திரியா யிருந்த ஜெனரல் தனுகா கொஞ்சமும் வெட்கமின்றி வெளிப்படையாக அக்கனவைக் குறித்துக் குறிப்பிட்டார்.

இது தான் தனுகா திட்டம். இதை ஒரு மேற்கோளாக அடிக்கடி எடுத்துக் கையாளுகிருர்கள். அதன் முழு விவரங்களையும் எடுத்து எழுத இடமும் அவகாசமும் கிடையாது. அதிலிருந்து ஒரு பகுதியைக் கீழே வெளி யிடுகின்றேம்:—

"கிழக்காசியாவிலுள்ள வேற்றுமைகளைப் போக்க வேண்டி ஜப்பான் மிகக் கடுமையான தோர் கொள்கையைக் கையாள வேண்டும். உலகத்தை வெல்லும் பொருட்டு முதலில் ஆசியாவையும் ஐரோப்பாவையும் ஜப்பான் பிடிக்க வேண்டும். இதற்கு முதலில் சீனவை வெல்ல வேண்டும். இதற்கு மங்கோலியாவையும் மஞ்சூரியாவையும் வெல்ல வேண்டும். இந்த வேலையை 10 வருஷங்களில் செய்து முடித்து விடலா மென்று ஜப்பான் எதிர் பார்க்கிது." இதிலிருந்து அடித்துப் பிடுங்கிக் கொள்ளுவது தான் தம் கொள்கையாகக் கொண்டிருக்கிருர்கள் என்று தெரிகிறது.

தனுகா திட்டம் என்னும் ஒரு திட்டமே கிடையாது என்று அநேக வருஷங்களாக ஜப்பானியர் மறுத்துக் கொண்டு வந்தார்கள். இந்த வருஷம் இந்தத் திட்டம் டோக்கியோ ரேடியோ மூலம் வெட்ட வெளிச்சமாகி விட்டது.

> "தனுகா திட்டத்தில் எங்களுக்கு ஒரு புனிதமான பொறுப்பு வழங்கப் பட்டிருக்கிறது. இதன் முதற் பகுதியை வெற்றிகரமாகச் செய்து முடிக்கத் தகுந்த நிலையில் இருக்கிருேம்"

என்று டோக்கியோ ரேடியோ கூறியது.

இதற்கு ஜப்பானில் எதிர்ப்பே கிடையாது. இது பிரிட்டனுக்குத் தெரியும். 1937-ம்வருஷ வரையில்

" அவர்கள் " என்னும் ஒரு மாயா கூட்டத்தார் அரசனை ஒரு சூத்திரப் பாவையை போல் ஆட்டி வைத்துக் கொண்டிருந்தார்கள். சீன யுத்தம் ஆரம்பமானது முதல், இந்த போர்வழிகளுக்கு ஆதிக்கம் அதிகமாகி விட்டது. இன்று வரை அந்த அரசாங்கம் என்னும் பதத்திற்கு இராணுவக் கட்சியார் நடத்தும் சர்வாதிகாரம் என்று தான் அர்த்தம். இந்தக் கட்சியினர் அவ்வப் போது மாறுவதுண்டு; ஆனால் அவர்களுடைய கொள்கைகள் மட்டும் மாறுவதில்லை. சீனர்கள், மலேயர்கள், இந்தொனேஷியர்கள், பிலிபைன்காரர்கள், இந்தோசீனர்கள், இந்தியர்கள் ஆகிய கோடிக் கணக்கான மக்களுக்கு யுத்தம் என்றால் என்ன வென்று வெகு தெளிவாக தெரியும். இதை ஜப்பானியர்களும் உணர வேண்டும். அப்போது தான் அவர்கள் சமாதானப் பிரியர்களாகவும், சட்டத்திற்குட் பட்டு நடக்கிறவர்களாகவும் ஒழுக்க நேர்மை யுள்ளவர்களாகவும், சகிப்புத் தன்மை யுடையவர்களாகவும் இருந்து, உலக நாடுகளில் தனக்கும் ஒரு நிரந்தரமான இடத்தைத் தேடிக் கொள்ள முடியும். இந்த ஒரு விஷயத்தை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். ஏனென்றால் தற்போதுள்ள அவர்களுடைய சாதிச் சர்வாதிகாரத்துவம் ஜனங்களாகவே விரும்பியது. தலைவர்கள் எந்தக் காரியம் செய்தாலும், பொது ஜனங்கள் அதை அங்கீகரிக்கிறார்கள். சென்ற 5 வருஷங்களாக, ஏக காலத்தில் அநேகரைக் கொலை செய்ததும், வீடுகளைக் கொள்ளை யடித்து நாசம் செய்ததும், கோடிக் கணக்கான மக்களைச் சொல்ல முடியாத துன்பங்களுக்கு ஆளாக்கியதும் ஜப்பான் இராணுவத் தலைவர்கள் மட்டுமன்று; ஜப்பான் பொது ஜனங்களுங் கூடத் தான். சென்ற மார்ச்சு மாதம் 8-ம் தேதி சர் பெர்ஸி ஹாரிஸ் என்னும் பார்லிமெண்டு அங்கத்தினர் காமன்ஸ் சபையில் ஒரு சரியான கேள்வி கேட்டார். "இப்போது நடக்கும் கொடுமைகளுக்கு ஜப்பானிய இராணுவம் மட்டுந் தான் பொறுப்பாளியா? அல்லது ஜப்பானிய சக்கரவர்த்தியும் அரசாங்கமும் பொது ஜனங்களும் கூடப் பொறுப்பாளியா?" என்று கேட்டார்.

சென்ற 21 வருஷங்களுக் குள்ளாக ஜப்பானுக்குள்ளேயே நடைபெற்ற சம்பவங்களி லிருந்து பொது ஜனங்களின் தன்மை தெளிவாக தெரிறது. பிரசுரமான சில சம்பவங்களைக் குறித்து நாம் ஆராய்வோம். சென்ற 20 வருஷங்களாகவே தாராள மனப் பான்மை யோடிருப்பதும் தாராளமானச் செயல்கள் புரிவதும் பாவம்; கொடிய குற்றமாகவும் கருதப்படுகிறது. இப்படிப் பட்ட ஜப்பான் நாட்டிலுங் கூட, இந்தக் கருத்திற்கு மாறுபட்டவர்கள் இருந்தார்கள். இப்படிப் பட்ட சிலருக்கு ஏற்பட்ட கதியைக் குறித்து சில சொல்லுகிறேன்.

1921-ம் வருஷம் ஜப்பான் பிரதம மந்திரியா யிருந்தவர் ஹரா என்பவர். இவரைப் பட்டப் பகலிலே குத்திக் கொன்றார்கள். வாஷிங்டன் கப்பற் படை ஒப்பந்தத்தில் இவர் கையொப்ப மிட்டது தான் இவர் செய்த 'தவறு.' இவரைக் கொன்றவருக்கு மரண தண்டனை கிடையாது.

1930-ம் வருஷம் ஜப்பான் பிரதம மந்திரியா யிருந்தவர் ஹமகுச்சி. இவரை ஒரு மாணுக்கர் சுட்டுக் கொன்றார். விசாரணையின் போது, தனக்கு தனிப்பட்ட முறையில் பிரதம மந்திரியின் மீது எந்த மனத் தாங்கலும் இல்லை யென்றும், ஆனாலும் லண்டனில் செய்யப் பட்ட கப்பற் படை ஒப்பந்தத்தை உறுதிப் படுத்த அவர் தான் பொறுப்பாளியா யிருந்தா ரென்றும் ஆகையால் அவர் கொல்லப் படத் தக்கவ ரென்றும், அம்மாணுக்கர் கூறினார். அவரை இன்றும் ஒரு தேசீய வீரராகக் கொண்டாடுகிறார்கள்.

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, ஒரு கிழவர் பிரதம மந்திரியா யிருந்தார். அவர் பெயர் இனுகை. இவரையும் கொன்றார்கள். இவர் சீன ஜனத் தலைவரான சென் எட் சென்னுடன் நேசமாயி ருந்தாராம். அன்றியும் சீனுவோடு சமாதான முறையில் நடந்து கொண்டாராம்.

193?-ம் வருஷம் ஜப்பான் டயட் சபையில் ஒரு அங்கத்தினர் எழுந்து, "சீனர்களும் நம் போன்ற மனிதர்கள் தான்; மிருகங்க ளல்ல என்ற எண்ணும் முறையில் அவர்களை நடத்தி நம் நல்லெண்ணத்தை அவர்கள் உணரும்படி செய்து கொள்வது நல்லது



## பிரியமான பெயர்க ளெல்லாம் மாறிப் போமே !

ஜப்பானியர் சிங்கப்பூரைப் பிடித்ததும் அம் மாநகருக்கு ஜப்பான் பெயர் ஒன்றை சூட்டினர்! புண்ணிய பூமியாகிய நம் பாரத நாட்டில் சரித்திர கீர்த்தி வாய்ந்தவையும் புராணப் பிரசித்தியுடையவையுமான பட்டணங்கள் எத்தனை -திருக்கோயில்கள், புனித தீர்த்தங்கள்! ஹா! 38 கோடி மக்கள் ஒன்று போல் மிகக் கொண்டாடும் இத்திவ்விய ஸ்தலங்க ளெல்லாம் ஜப்பானியர் வசமாகில், கதி யென்னவ கும் தெரியுமா? ஐயோ! சகலமும் சிங்கப்பூரைப் போல் பெயர் மாறி உருத் தெரியாமல் மிலேச்சப் பட்டுப் போமே! ஈவிரக்க மில்லாத குள்ளர்கள் நம் மனோ பாவங்களை மதிக்கப் போவதில்லை!



இப்படிப்பட்ட அக்கிரமம் நேரப் போம் போது, பாரத வீரர்களாகிய நாம் கையும் கட்டி வாயும் பொத்தி சுத்தப் பேடிகளைப் போல் பயந்து நடுநடுங்கி ஒடுங்கி யிருப்பதா என்ன? ஒருக்காலு மில்லை! எல்லோரும் சேர்ந்து நம் முழு பலத்துடன் இக்குள்ளர்களை ஒரு கை பார்த்தே விடுவோம்!

**ஜப்பானியருக்
கெதிராக
தேசியப் போர் முனை
அமையுங்கள்**



## சபாஷ் போலீஸ்.

(2-ம் பக்கம்—தொடர்ச்சி.)

கள். சப்-இன்ஸ்பெக்டர் செய்தது சுத்த தப்பு என்று வாதித்து மெய்ப்பிப்பார்கள். போலீஸார் தாக்கி யிருந்தால், சுட்டிருக்க வேண்டும் என்பார்கள்; சுட்டிருந்தால் தாக்கி யிருக்க வேண்டும் என்பார்கள். தாக்கியும் சுட்டும் இருந்தால், பின் வாங்கி மேலும் உதவி வந்து சேருகிற வரைக்கும் சும்மா இருந்திருக்க வேண்டும் என்பார்கள். இப்படிக் குறை கூறுகிறவர்களிடம் நேர்மையோ, உண்மை நிலைமையை உணர்ந்து கொள்ளும் சக்தியோ, இருப்பதாகச் சொல்ல முடியாது. கொதித்துக் கிளம்பி வரும் கூட்டத்தோடு, போராட எந்தப் போலீஸ்காரரும் விரும்ப மாட்டார். நமது நன்மையை முன்னிட்டு இப்படிப் பட்டக் கலகங்களைத் தடுக்க வேண்டியது அவருடைய கடமை. சென்ற இரண்டு வாரங்களாக மிகவும் ஆபத்தான நிலைமைகளை தைரியத்தோடும், நிதானத்தோடும் பல போலீஸ் உத்தியோகஸ்தர்கள் சமாளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றியும் வாழ்த்தும் கூறுவோம். இப்படிப் பட்ட ஆபத்தான நிலைமைகளைச் சமாளிக்கத் தவறினவர்களுக்கு நம் அனுதாபம் உரித்தாகுக! பொதுவாக போலீஸ் படைகளையே நாம் பெரிதும் பாராட்டுகிறோம். சில வாரங்களாக இராஜ பக்தியுடனும் வீரத்துடனும், தன்னடக்கத்துடனும் கடுமையான தம் கடமைகளைச் செய்திருக்கிறார்கள். ஆகையால் தான் நாட்டிலுள்ள நல்லவர்கள் எல்லோரும் சேர்ந்து சபாஷ்! போலீஸ்! என்று கூறிப் பாராட்டுகிறார்கள்.

## யுத்தத்தீமையிலும் நன்மை யுண்டு.

(6-ம் பக்கம்—தொடர்ச்சி.)

ஒவ்வொரு பட்டணத்திலும் ஏ.ஆர்.பி. படை யொன்று திறமையோடு வேலை செய்வதைக் காணலாம். இவர்கள் எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியோடு ஒரு குடும்பத்தினரைப் போல் இருந்து வருகிறார்கள். தம் தோழர்களுக்கும் நாட்டிற்கும் கொள்கைக்கும் உதவுவதே தம் கடமை யென்று கருதுகிறார்கள். உள் நாட்டு உணர்ச்சி வளர்ந்து கொண்டு வருகிறது என்பதற்கு மற்றொரு உதாரணம் சொல்லலாம். கூட்டுறவு முறையில் அநேக பண்டகசாலைகளும், லேவாதேவிச் சங்கங்களும் நெசவாளர்கள் சங்கங்களும் மற்ற சங்கங்களும் ஏராளமாகப் பெருகி யிருக்கி தைக் கவனியுங்கள்! இவை சென்னையில் மட்டு மன்றி, நம் நாடு முழுதும் பெருகி யிருக்கின்றன.

சுருங்கச் சொன்னால், யுத்தத்தினால் ஜகைக்குப் காடுபபதில் தீமைகள் இருந்தாலும். எத்தனை ஆஷம் கிடை நாட்டிற்கு இது உதவுகிறது எனக்கு பாதையில் ஆச்சரியப் பட வேண்டி யிருக்கிருக்கிறது. சென்ற துறையாக் கொண்டோ, கொண்டோ ஆராய்வோ இந்தியாவிற்கு இலாப





... தம் எல்லோரும் களுக்குள் தூங்க ஐரோப்பாவில் ஜெர்மானி திடீரென்று விமா யுள்ள நாடுகளிலும் கி; அவர்கள் பாதுகாப்பைப் பற்றியுள்ள ர. இதற்குத் தகுதியான பாங்கி செங்கதிந்து அதற்கு வேண்டிய பாதுகளை யெல்லாம்த்துக் கொள்ள வேண்டும். இது அனுபவித் ரிக்கார் உள் நாட்டு இலாக்காவில் கண்ணீருஷ்மானப் பாதுகாப்புகள்" என்னும் மடிகிளி 6-ம் நம்பர் புத்தக மொன்றை வெளியத்துகிறார்கள், இதன் விலை 2 அணு. ஹிக்பாதம் புத்தகசாலைகளிலும், "சுதேச மித்திரன்" புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

## ...ரக்குத் தடை யில்லை

வருஷம் பல யாத்திரிகர்கள் கஷ்டப்பட்டார்கள். எனவே வேறு வழியாகப் போகும்படி யோசனை கூறுகிறோம். இந்த அனுமதியை எப்போது வேண்டுமானாலும் வாபீஸ் பெற்றுக் கொள்ள அதிகாரமுண்டு என்றும் எச்சரிக்கை செய்கிறோம்.

## தென்னிந்தியாவில் யுத்தப் பொருள்கள்

களுக்குள் யுத்தத் தேவைக் தெரியும். ஆனால் ய் பெறுமான முள்ள கோடரிப் நிலையைத் திருப்பிகள், மரச் சாமான்கள், கத்தி அறிவோடு ளைகள் முதலிய உலோகச் சாமான் கையாள றும் வலைகள் முதலியவற்றை சப்ளை சென்னை மாகாண கைத் தொழில் களிலும் ந

வியாபாரக் கூட்டு டைரெக்டருக்கு, தென்னிந்திய சர்க்கிள் சப்ளை கண்ட்ரோலர் உத்திர விட்டிருக்கிறார். இது வல்லாமல் ஏராளமான கைத் தறியில் நெய்த துணிகளுக்கும் ஏற்கெனவே ஆர்டர் கொடுத்திருக்கிறார்.

தான். அப்போது தான் சீனர்கள் நம்முடன் கூட்டுற வோடிருப்பார்கள்,” என்று கூறினர். இந்த ஆலோசனையைப் பத்திரிகைகள் வெளியிட வில்லை. எ ரு ம் இச்செய்தி பரவியது. அப்படிப் பேசிய வரைக் குத்திக் கொல்ல ஒரு ரிக்ஷாக்காரன், ஒரு மாணவன், ஒரு பாங்கி குமாஸ்தா ஆகிய மூவரும் தனித் தனியே முயற்சித்தார்கள். கொல்ல ஒருவரா லும் முடிய வில்லை; என்றாலும் பாங்கி குமாஸ்தா அவரைக் காயப் படுத்தி விட்டார். பிறகு, மிகவும் உன்னதமான பதவி வகிக்கும் ஒருவரிட மிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், அவர் மன் னிக்க முடியாத தோர் குற்றத்தைச் செய்து விட்டதாக வும், அதற்காக இன்ன படி செய்து கொள்ள வேண்டு மென்று குறிப்பிட் டிருந்தது. அதன் படியே அவ ரும் செய்து கொண்டார். அவருடைய சவச் சடங்கு களுக்கு நானும் போயிருந்தேன்.

அரசியல் ஒழுக்கம் மிகவும் சீர் கெட்டிருக்கும் ஒரு நாட்டில் சமுதாய ஒழுக்கமும் மிகவும் கேவலமாகத் தான் இருக்கும். சுகவாசத்திற்கு தற்கால வசதி கள் அமைந்து சுத்தமாக ஜப்பான் இருக்கிறது என்று நான் ஏற்கெனவே குறி பிட்டிருக்கிறேன். மேலெ ழுந்த வண்ணமாகப் பார்ப்பவர்களுக்கு இப்பிடித் தான் தெரியும். ஆனால், உள் நுழைந்து பார்த் தால் உலகத்தி லுள்ள எல்லா வகை இழிந்த செயல் களும் அசிங்கங்களும் அங்கே புலப்படும்.

ஜப்பானியரின் குடும்ப வாழ்க்கையைக் குறித்து ஒரு கட்டுரையை நான் ஒரு பத்திரிகையில் படித் தேன். அதை எழுதியவர் ஜப்பானையே கண் டிருக்க மாட்டாரென்றும் 1,000 மைல்களுக்கு அப்பால் இருந்தபடியே அக் கட்டுரையை எழுதி யிருக்க வேண்டு மென்றும் தெரிகிறது. அதில் அவர் குறிப் பிடுவதாவது :—

“சீனர்கள் தம் வீட்டை எப்படி மிகவும் பரிசுத்த மானதாகவும் மதிப்புள்ளதாகவும் கருதுகிறார்களோ, அது போலவே தான் ஜப்பானியர்களும் கருதுகிறார் கள்”. இப்படி எழுதியவர் தன்னையும் அறியாமல் லண்டனுக்காக எழுதி யிருக்க வேண்டும்; அல்லது ஜப்பானியர்களிடம் கூலி பெற்றுக் கொண்டு பிரசாரத் திற்காக எழுதி யிருக்க வேண்டும். ஏனென்றால் இந்த வாக்கியத்திற்கு என்னுடைய அனுபவம் முரண் படுகிறது.

ஜப்பானுக்கு வெளியே யுள்ள ஒரு நாட்டில் எனக்கு ஒரு ஜப்பானிய நண்பர் இருந்தார். ஜப்பானியக் குடும்ப உள் உளவுகளைத் தெரிந்து கொளவதற்காக மானுடைய வீட்டிலேயே பணம் கொடுத்துத் தங்கி மாகவும் பிறகு அக்குடும்பத்திற்குப் பணக் கஷ் நாட்டிலும் கூட தெரிந்து கொண்டேன். ஒரு கள் இருந்தார்கள். புறப்பட்டேன். ஒரு சடங்கு பட்ட கதியைக் குறித்துப் பிறகு, அது ஒரு ஆசீர்வாதச்

சடங்கு என்று அந்த வீட்டுக்காரர் என்னிடம் சொன் னார். குடும்பப் பணக் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு, அந்தக் குடும்பத்தின் கடைசி பெண்ணுக்கு பொட் டுக் கட்டு விடுவது போன்ற வியபிசாரத்திற்கு உட்படுத் தும் ஒரு சடங்கு தான் இது. இந்தப் பெண் டோகியோ சர்வ கலாசாலையில் படிக்கும் ஒரு மாணவி. எல்லாம் இனிதாக முடிந்தால் 6 மாதங் கள் கழித்து, மீண்டும் வந்து அப்பெண் சர்வ கலா சாலையில் சேர்ந்து படிக்கலாம். இதற் கிடையில் நான் அவர்களுடைய பணக் கஷ்டத்தைப் போக்கி னால் மிகவும் நன்மையா யிருக்கு மென்று என் னிடம் அவர் கூறினர். நான் ஜப்பானில் தங்கி யிருந்த காலத்தில் இப்படி அநேக சம்பவங்களைப் பார்த்திருக்கிறேன்.

டோக்கியோ நகர வீதிகள் வழியாகப் போனால் நல்ல அனுபவங்கள் ஏற்படும். இதைப் போல மரி யாதை இல்லாமல் நடந்துக் கொள்ளும் ஊர், உலகத் திலேயே வேறெதுவும் கிடையாது. வீட்டு ஜன்னல் களில் பெண்கள் பந்தி பந்தியாக உட்கார்ந் திருக் கிறார்கள். தன் இச்சையை பூர்த்தி செய்து கொள்ள எந்தப் பெண்ணை வேண்டு மானாலும் தெருவில் போகும் ஆண்கள் குறித் தெடுத்துக் கொள்ளலாம்.

“ஆசியாவின் உட்புரம்” என்னும் பெரிய நூல் ஒன்றை ஜான் குந்தர் என்பவர் எழுதி யிருக்கிறார். அதில் அவர் குறிப்பிடுவதாவது :—

> உலகத்திலேயே ஜப்பானில் தான் வியபிசா சார விடுதிகள் மிகவும் அதிகம். வருஷந் தோறும் பெற்றோர்களே தம் பெண்களை வியபிசாரத்திற்காக விற்கிறார்கள். குழந்தை களையும் கூட விற்கிறார்கள். இந்த வியபி சார விடுதி வைத்து நடத்துகிறவனை “கெய்ஷா” என்று கூறுகிறார்கள். ஜப்பானியர்கள் வியபி சாரத்தை இழிவாகவே நினைப்ப தில்லை. ஒரு பெண் அதிர்ஷ்டக் காரியாக இருந்தால், வியபி சாரத்தில் நிறைய பணம் சம்பாதித்துக் கொண்டு வந்து, தன் ஊரிலேயே கலியாணம் செய்து கொண்டு வசிக்கலாம். இந்த வியபிசார விடுதிகளில் குடிக்கக் கூடாது; சூதாடக் கூடாது; சங்கீதமும் கூடாது. வியபிசாரத்தை ஒரு சாதா ரணத் தொழிலாகத் தான் ஜப்பானியர்கள் மதிக்கிறார்கள். இந்தத் தொழிலி லிருந்து அரசாங்கத்தார் வரி கூட வசூல் செய்து கொள்ளுகிறார்கள்.

இப்படிப்பட்ட வியபிசாரிகளின் தகப்பன் மார்களும் உடன் பிறந்தவர்களும் இந்தியாவிற்கு வருவார்க ளானால், இந்தியப் பெண்களின் கற்பு என்னாகும்!

1921-ம் வருஷம் ஜப்பான் தவர் ஹரா என்பவர். இவ குத்திக் கொன்றார்கள். வாஷிங் ஒப்பந்தத்தில இவர் கையொப்ப இவர் செய்த ‘தவறு.’ இவரைக் மரண தண்டனை கிடையாது.

1930-ம் வருஷம் ஜப்பான் பிரதம மந்திரியா தவர் ஹமகுச்சி. இவரை ஒரு மாணுக்கர் சு கொன்றார். விசாரணையின போது, தனக்கு தனி பட்ட முறையில் பிரதம மந்திரியின மீது எந்த ம தாங்கலும் இல்லை யென்றும், ஆனாலும் லண்டனில் செய்யப் பட்ட கப்பற் படை ஒப்பந்தத்தை உறுதிப் படுத்த அவர் தான் பொறுப்பாளியா யிருந்தா ரென் றும் ஆகையால் அவர் கொல்லப் படத் தக்கவ ரென் றும், அம்மாணுக்கர் கூறினர். அவரை இன்றும் ஒரு தேசீய வீரராகக் கொண்டாடுகிறார்கள்.

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, ஒரு கிழவர் பிர தம மந்திரியா யிருந்தார். அவர் பெயர் இனுகை. இவரையும் கொன்றார்கள். இவர் சீன ஜனத் தலை வரான சென் எட் சென்னுடன் நேசமாயி ருந்தாராம். அன்றியும் சீனாவோடு சமாதான முறையில் நடந்து கொண்டாராம்.

193-ம் வருஷம் ஜப்பான் டீட் சபையில் ஒரு அங் கத்தினர் எழுந்து, “சீனர்களும் நம் போன்ற மனி தர்கள் தான்; மிருகங்க ளல்ல, என் எண்ணும் முறையில் அவர்களை நடத்தி நம் நல்லெண்ணத்தை அவர்கள் உணரும்படி செய்து கொளவது நல்லது

## நேசநாடுகளுக்கு அரபிகள் ஆதரவு.

அரபு பத்திரி இதன் விசேஷ கீழ்க் கண்ட என்ற

இது முக்காலும் உண்மை. இதை அவர்கள் தெளிவாக உணர வேண்டும். ஏனென்றால் உலக சமாதானத்திற்கு அடிப் படையா யிருப்பது ஜனநாயகந் தான். நாஜிகள் வெற்றி பெறு வார்களானால், அராபியர்களின் உணர்ச்சிகளை நசுக்கி விடுவார்கள். அராபியர்களைச் சூறை யாடி விடுவார்கள். ஆகையால் அரபு நாட்டை பிரிக்க அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளைக் குறித்து நாம் எச்சரிக்கை யாயிருக்க வேண்டும்.

“அரபிய புரட்சி நாள்” என்னும் தலைப்புடன் க ஆல் ஸாப்’ என்னும் பத்திரிகை கீழ்கண்ட பய தி யிருக்கிறது :—

ஒருக்கால் உலக மக்களைக் கொல்லுகிறார்கள் மூழு வைத்து சுக்கி எறிகிறார்கள். இந் ப் போக் பார்த்தே விடு போராட வேண்டிய அவசியம் ட்டு ட்டது அராபிய நாடு ற்றின் யதேச்சையைக் காப் ன் வெற்றி தோல்வியை நம்மாலான எல்லா டியது நம்முடைய யாது தான் நம் ஜி கோரங் காப்பாற்ற

ஜப்பானியருக்கெதிராக
தேசியப் போர்
அமையுங்கள்



## புதிய டாங்கி



இந்தியத் துறைமுகத்தில், சமீபத்தில் வந்திறங்கிய புதுமுறை டாங்கியை இணைக்கிறார்கள்

## வீடுகளில் விமானப் பாதுகாப் பிடங்கள்.

சுமார் 12 பேர்களடங்கிய குடும்பங்களில், விமா னப் பாதுகாப்பின் நிமித்தம் எங்கே பதுங்கிக் கொள்ளுவது என்பது பற்றியும், என்னென்ன முறைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பது பற்றி யும், ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள ஆவலா யிருக்கிறார்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் உள்ளவர்கள் பதுங்கிக் கொள்ளுவதற்கு இரண்டு வகைகளில் பாதுகாப்புக்க ளுண்டு. வீட்டிற் குள்ளாகவோ, வீட்டை யடுத்தோ பள்ளந் தோண்டி பாதுகாப் பிடங்களைக் கட்டிக் கொள் ளலாம் அல்லது அந்த வீட்டிற் குள்ளாகவே மிக வும் பொருத்தமான ஒரு அறையை மேலும் பந்தோ பஸ்து செய்து அதைப் பாதுகாப்பு அறையாக உபயோ கிக்கலாம்.

இரண்டாவது முறையை விட, முதலாவது முறை தான் மேலான பாதுகாப்பாகும். ஆனால் வீட்டிற் குள்ளாகவோ, வீட்டை யடுத்தோ எல்லா இடங்களி லும் பள்ளந் தோண்டுவதற்கு இட மிருக்காது. அல்லாமலும் செலவும் அதிகம் பிடிக்கும். தோட் டத்தி லிருக்கும் பாதுகாப்புப் பள்ளத்தைப் போலவே தான் தகுந்த பாதுகாப்பறையிலும் பதுங்கி இருக்க லாம். வீட்டுக் காரர்கள் பொதுவாகப் பாதுகாப்பறை களைத் தான் அமைத்துக் கொள்ளுவார்கள். தம் வீடுகளுக் குள்ளாகவே இருக்கத் தான் எல்லோரும் விரும்புவார்கள். இந்த அறைகளுக்குள் தூங்க லாம். இரவுகளிலும் பகலிலும் திடீரென்று விமா னத் தாக்குதல் ஏற்பட்டால், அவர்கள் பாதுகாப் பிடங்களில் இருப்பார்கள். இதற்குத் தகுதியான ஒரு அறையைக் குறித்து அதற்கு வேண்டிய பாது காப்புக்களை அமைத்துக் கொள்ள வேண்டும். இது பற்றி இந்திய சர்க்கார் உள் நாட்டு இலாக்காவில் “வீடுகளில் விமானப் பாதுகாப்புக்கள்” என்னும் தலைப்புள்ள 6-ம் நம்பர் புத்தக மொன்றை வெளி யிட்டிருக்கிறார்கள், இதன் விலை 2 அணு. ஹிக் கின்பாதம் புத்தகசாலைகளிலும், “சுதேச மித் திரன்” புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

### ஹாஜ் யாத்திரைக்குத் தடை யில்லை

ஈராக்குக்கோ, ஈராக் வழியாக ஹாஜுக்குப் போகவோ, அனுமதிச் சீட்டுகள் கொடுப்பதில் எந்த வகைத் தடையும் இந்த வருஷம் கிடை யாது. என்றாலும் நஜாஸ்-மதீனா பாதையில் நிலைமை கஷ்டமாகத் தான் இருக்கிறது. சென்ற வருஷம் பல யாத்திரீகர்கள் கஷ்டப்பட்டார்கள். எனவே வேறு வழியாகப் போகும்படி யோசனை கூறுகிறோம். இந்த அனுமதியை எப்போது வேண்டுமானாலும் வாபீஸ் பெற்றுக் கொள்ள அதிகாரமுண்டு என்றும் எச்சரிக்கை செய்கிறோம்.

### தென்னிந்தியாவில் யுத்தப் பொருள்கள்

இன்னும் 4 மாதங்களுக்குள் யுத்தத் தேவைக் காக 9 லட்ச ரூபாய் பெறுமான முள்ள கோடரிப் பிடி, ஆயுதப் பிடிகள், மரச் சாமானகள், கத்தி கள், பக்கிள்ஸ்கள் முதலிய உலோகச் சாமான் கள், உருமாற்றும் வலைகள் முதலியவற்றை சப்ளை செய்யும்படி சென்னை மாகாண கைத் தொழில் வியாபாரக் கூட்டு டைரெக்டருக்கு, தென்னிந்திய சர்க்கிள் சப்ளை கண்ட்ரோலர் உத்தர விட்டிருக்கிறார். இது வல்லாமல் ஏராளமான கைத் தறியில் நெய்த துணிகளுக்கும் ஏற்கெனவே ஆர்டர் கொடுத் திருக்கிறார்.

# இருட்டி லிருந்து வெளிச்சத்திற்கு!

இன்று நாலாந் தேதி. இன்று ஆரம்பிக்கிறது அந்த பயங்கர இரண்டாவது மகா யுத்தத்தின் நாலாவது வருஷம். இந்த சமயத்திலே சென்ற வருஷத்திய கணக்கையும் கொஞ்சம் பார்த்துக் கொள்ளலாம் என்று யாருக்கும் தோன்றத் தானே செய்யும்? அந்த இயற்கை விதிக்கு மாருக நாம் மட்டும் நடந்து கொள்ளுவானேன்?

## மூன்ருவது வருஷ லாப, நஷ்ட கணக்கு.

**லாபம்.**

(1) நேச நாடுகளின் கட்சியிலே அமெரிக்கா நேர்படச் சேர்ந்தது.
(2) பல இடங்களில் ஏற்பட்ட தோல்வியால் கிடைத்த அனுபவம்.
(3) மடகாஸ்கரைக் கைப்பற்றி, ஜப்பானியரின் ஆசையில் மண்ணைப் போட்டது.
(4) பிரேஸில் போர் தொடுத்தால், அந்நாட்டில் உள்ள முக்கிய துறைமுகங்களும், விமான நிலையங்களும், அளவற்ற விளை பொருள்களும் நமது உபயோகத்திற்குக் கிடைத்திருப்பது.
(5) பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் இடைவிடாத உற்பத்தி இருந்த காரணமாக, மூன்ருவது வருடம் சமாளித்து நின்று, அச்சுநாட்டினருடைய 'ஸ்டாக' வரவரக் குறைந்து போகும்படி செய்தது. எதிரியின் சக்தி குறைவது நமக்கு லாபம் தானே?
(6) இந்தியாவை நன்ருக பலப் படுத்திக் கொண்டிருப்பது.
(7) நேச நாட்டு மக்கள் இறுதி வெற்றியில், பூரண நம்பிக்கை வைத்திருப்பது.
(8) டீப்பி என்ற இடத்திலே பிரிட்டிஷ் படைகள் போய் இறங்கிப் போர் புரிந்து, இரண்டாவது போர் முனையை ஏற்படுத்துவதற்கு வெள்ளோட்டம் பார்த்து வந்ததால் ஏற்பட்ட அநுபவம்.

**நஷ்டம்**

அளவற்ற நஷ்டம், ஹாங்காங், மலேயா, சிங்கப்பூர், பர்மா, நியூ கினிவாவில் கொஞ்சம்; லிபியா, எகிப்திலே ஒரு துண்டு; இம்மாதிரியாகப் பல மணியான பிரதேசங்களை தாரை வார்த்து விட்டோம். நமது கட்சியி லிருக்கும் டச்சு சர்க்காருக்கும், அமெரிக்கருக்கும் முறையே, கிழக்கிந்தியத் தீவுகளான சுமத்ரா, ஜாவா, பாலி ஆகியவையும், பிலிப்பைன் தீவுகளும் நஷ்டக் கணக்கிற்கு வந்து விட்டன. அந்தமான தீவு போச்சு எத்தனையோ கப்பல்களும், விமானங்களும், ஆர்க்ராயல் என்ற உலக பிரசித்தி பெற்ற விமானந் தாங்கியும், நீர் மூழ்கிகளும் கடலுக்கடியில் போய்விட்டன. அவ்வளவுதான்.

மேற் கண்ட லாப நஷ்டக் கணக்கி லிருந்து, ஆக மொத்தம் போட்டுப் பார்த்தால் என்ன தெரிகிறது? பொருள், ஆள் நஷ்டங்கள் ஓங்கி நிற்கின்றன வென்றும், அநுபவ லாபம் அதிகப் படியாக இருக்கின்றதென்றும் தெரிகிறது இது சந்தோஷப் படத் தக்க நிலைமையா? கன்னத்தல் கையை வைத்துக் கொண்டு, மன மிடிந்து அப்படியே உட்கார்ந்து போகக் கூடிய நிலைமையா? வியாபாரம் தொடர்ந்து நடக்குமா? பட்ட நஷ்டத்திற் கெல்லாம், ஈடு கட்டி விடலாமா? என்ப தெல்லாம் ஆராயப் பட வேண்டிய விஷயங்கள் அல்லவா? நல்ல வியாபாரி இதையெல்லாம் பார்க்கத் தான் செய்வான்? நாமும் பார்க்கத் தான் போகிருேம். பார்த்துக் கொண்டே தானிருக்கிருேம். சீமையிலே, மகா சூரரான பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சிலைத் தலைமையில் கொண்ட பிரிட்டிஷ் சர்க்கார் செய்து கொண்டிருப்பதும் அதுவே. மற்றவர்களைப் போலல்ல சர்ச்சில். அப்பட்டமாக அவரைப் போல் யாரும் பேசத் துணிய மாட்டார்கள். 'கண்ணீரும், ரத்தமும் ஆருக ஓடத் தான் வேண்டி யிருக்கும். இடை விடாமல் உழைக்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும். இந்த நிலைமையில் எத்தனை காலம் கழிய வேண்டுமோ தெரியாது. ஆனுல் கடைசியில், வெற்றி நமதே!' என்று தானே, ஆதியி லிருந்தே சொல்லி வருகிருர் அவர். அவரது திறமையில் சம்பூரணமான நம்பிக்கை நமக்கெல்லாம் இருந்து வருகிறது. பாவம்! தள்ளாத வயது தான்! ஆனுலும், உலக க்ஷேமத்தை முன்னிட்டு, எங்கெங்கோ ஓடித் திரிந்து கொண்டிருக்கிருர். சீமை எங்கே, அமெரிக்கா எங்கே, ருஷ்யா எங்கே, எகிப்து எங்கே—இங்கெல்லாம் சென்று கொண்டிருக்கிருர். அவர் புதிது புதிதான திட்டங்களைப் போடச் செய்கிருர். நமக் கெல்லாம் நம்பிக்கையை ஊட்டி வருகிருர். போகப் போக லாபம் நமக்கே என்ற நம்பிக்கை பிறக்க ஆரம்பித் திருக்கிறது.

'லாபமாவது? எங்கே இருக்கு அது!' என்று கேட்கலாம் நீங்கள். நன்ருகக் கவனித்துப் பாருங்கள். நேச நாடுகள் இத்தனை காலமாகக் காரிருளில் கிடந்து உழன்று வந்தது, ஆனுல் இன்றைய நிலைமை என்ன?

தூரத்தே, அடி வானத்திலே, வெளிச்சம் வருகிற தென்பதற்கு அறிகுறியான கோடுகள் தென்படுகின்றன. அருணன் உதயமான பின் ஆதவன் வராது போவ துண்டா? அருணன் தலை காட்டிய பின், மறுபடியும் இருள் நீடித் திருப்ப துண்டா? பளிச் சென்று பகல் வரப் போகிறது.

சென்ற மகா யுத்தத்திலும், இப்படித் தான் ஜெர்மானியர் ஆரம்பத்தில் உலகத்தையே திடுக்கிடச் செய்யத் தக்க பிரமாண்டமான வெற்றிகளை மூட்டையாகக் கட்டிக் கொண்டார்கள். ஆனுல் கடைசியில் என்ன ஆச்சு? எருமையைப் பார்த்து, 'தம்' பிடித்து வயிறு உப்பிய தவளையைப் போல், டபார் என வெடித்து விட்டது அவர்களது வெற்றி மூட்டை. நொறுங்கி விழுந்து விட்டார்கள், கீழே. உலகமே மகிழ்ந்தது.

அதே மாதிரி தான் இப்பொழுதும் நடக்கப் போகிறது என்பதில் சர்ச்சிலுக்கு சந்தேகமே யில்லை. எப்பொழுது பேசினுலும் இதையே தான சொல்கிருர் அவர்.

எந்த வியாபாரத்தையும் எடுத்துக் கொள்ளுங்களேன். நஷ்டக் கணக்கு பூஜ்யமாகவும், எல்லாம் லாபமாகவும் இருப்பது எங்குமில்லை. பெரிய வியாபாரி, புது வியாபாரம் ஆரம்பிக்கிருர். கணக்குப் புஸ்தகங்கள் போடுகிருர் அங்கு செலவு இனம் இல்லாமல் போய் விடுகிறதா? வருஷக் கடைசியில் 'ஆடிடர்' பார்த்து, லாப நஷ்டக் கணக்கு என்று தானே போட்டுக் கொடுக்கிருர். அதி லிருந்து வரவர வியாபாரம் விருத்தி யாகிறது என்று தெரிந்தால் போதுமே! முதல் வருஷம் லக்ஷ ரூபாய் நஷ்டம், இரண்டாவது வருஷம் தொண்ணூறு ஆயிரம் நஷ்டம், மூன்ரும் வருஷம் ஐம்பதாயிரம் நஷ்டம் என்று கணக்கு காண்பித்தால், இது விருத்தி யடைகிற வியாபாரம் தான்; சீக்கிரமே லாபத்தை நிச்சயம் தருமிது என்று கொள்வது தானே நியாயம். பங்குதாரர்களைச் சேர்த்துக் கொண்டு, பெரிய சுரங்க வேலை இரும்பு உருபத்துத் தொழிற்சாலை, காகித உற்பத்தி ஆலை என்றெல்லாம் ஆரம்பிக்கிருர்கள். அத்தகைய கம்பெனிகள் பக்குவமான நிலைமைக்கு வரும் வரை பங்குதாரர்களுக்கு வருடாந்திரக் கணக்கு, வருடாந்தரக் கூட்டம் இவை சம்பந்தமான காகிதங்கள் தான் வரும்படியாக இருக்குமே ஒழிய, தம்பிடி கூட வராது போகலாம். அதனுல் அந்த பங்குதாரர்கள் இடிந்து போய் விடுவார்களா என்ன? தாங்கள் சேர்ந்துள்ள கம்பெனி முழு ஸ்வரூபத்துடன் வேலை செய்ய ஆரம்பித்து விட்டால், வெகுத்து வாங்கும் லாபம் என்ற விஷயம் அவர்களுக்குத் தெரியும். அதனுல் பொறுமையாக, அந்த சுபிஷ்ட காலம் வரும் வரை காத்திருப்பார்கள் அவர்கள். அதே போல் நாமும் பொறுமையோடு நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டு, நம்மாலான உதவியும் செய்து கொண்டிருந்தால், இறுதி வெற்றி என்னும் பெரிய புதையல் நமக்குக் கிடைத்தே தீரும். அந்தப் புதையலின் அளவைக் குறித்து ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனுலும் விவரிக்க முடியாது. அந்தப் புதையலில் உலகோர் அனைவருக்குமே தாராளப் பங்கு கிடைக்கும் என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்.



'அது கிடக்கட்டும். இப்பொழுது, கிழக்கே கொஞ்சம் வெளுத்திருக்கிருப் போலிருக்கிறது என்கிறீர்களே, அது என்ன விஷயம்?' என்று கேட்பீர்கள்.

கடந்து போன மூன்ருவது வருஷத்திலே தான் ஜப்பானியர் திடீரென்று, எடுத்த எடுப்பிலேயே, தமது மோசக் கார குணத்தைக் காட்டிக் கொண்டு, போரில் இறங்கினுர்கள். அமெரிக்காவிலே, அதிகாரிகளுடன், ஜப்பானிய தூதர்கள் ஏதோ பிரமாதமாக சமரசப் பேச்சுப் பேசிக் கொண்டிருந்தார்கள். அதே சமயம், அதாவது டிஸம்பர் மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமை யன்று, திடுதிப்பென்று, அமெரிக்கா அருகேயுள்ள விதாவாய்த் தீவுகள் மீதும், மலேயா அருகில் உள்ள சிங்கப்பூர், மற்றும் பிலிப்பைன் தீவுகளிலும் குண்டுகளை வீசி விட்டு, ஜப்பானியர் தாம் யுத்தத்தில் இறங்கி யிருப்பதை உலகோருக்கு அறிவித்தனர். ஒரு கை முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டே யிருக்கையில், மற்ருெரு கை, இருதயத்தை நோண்டி எடுக்க யத்தனிப்பது போலில்லையா இந்தக் கதை? திடீரென்று ஜப்பான் போருக்குக் கிளம்பியதாலும், சென்ற இருபது வருடங்களாக அது அதி ரகசியமாக பெரிய போருக்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்துக் கொண்டிருந்தாலும், எடுத்த எடுப்பிலே ஜப்பான் பல பெரிய வெற்றிகளைக் கண்டு விட்டது. விலை யிலா மாணிக்கம் போன்ற பல பிரதேசங்கள் அதன் கைக்குக் கிடைத்து விட்டன. அதை ஜீரணித்த பிறகு தானே, மேற்கொண்டு இரை தேடப் புறப்பட வேணும் அது?

மலைப்பாம்பு இருக்கிறது? பெரிய காட்டெருமையை முழுங்கி விடுகிறது. ஒரே மூச்சில் அதனை ஜீரணித்து விட முடியுமா? அந்தக் காட்டெருமையின் கொம்புகளே அதன் வயிற்றைக் கிழித்து விடக் கூடும். அதுவே இல்லை. இரை தின்ற பாம்பு போல் என்பது பழமொழி இல்லையா? இரை தின்றதும் பேசாது, நகரவும் திறமை யற்று கீழே கிடக்கும் இந்த மலைப் பாம்பு. அப்பொழுது வேடர்கள் பார்த்தால், அதை எளிதில் 'க்ளோஸ்' செய்து விடுவார்கள்.

இந்த இரை தின்ற பாம்பைப் போல் தான் கிடக்கிறது ஜப்பான். இப்பொழுது தான் சமய மென இதை சிக்ஷிக்கக் கிளம்பி யிருக்கிறது. அமெரிக்கா. சில காலத்திற்கு முன்னே, பவழக் கடல், நடுவழித் தீவு இங்கெல்லாம் ஜப்பானிய கடற் படைக்கு அமெரிக்க கடற்படை சரியான சூடு கொடுத்தது. இப்பொழுது ஸாலமன் தீவுகளிலே ஜப்பானியர் வெதும்ப உதை வாங்கிக் கொண்டிருக்கிருர்கள். அமெரிக்கப் படைகள் இந்தத் தீவு கோஷ்டிகளில் ஆறு தீவுகளைக் கைப்பற்றி விட்டன.

இந்த யுத்தம் நடந்து கொண்டிருக்கும் பொழுது, ஜப்பானியர் மெள்ள, ஆஸ்திரேலியாவிற்கு ஐநூறு மைல் தூரத்தில் உள்ள மில்னேபே என்ற இடத்தில் போய் கால் வைத்தார்கள். இதனுல் ஆஸ்திரேலியாவிற் குள்ள ஆபத்து அதிக மாயிற்று. ஆனுல், ஆஸ்திரேலியப் படைகளும், அமெரிக்கப் படைகளும் போட்ட போட்டிலே, சப்தம் போடாது இந்த இடத்தையே காலி செய்து விட்டு, ஜப்பானியர் எடுத்து விட்டார்களாம் ஓட்டம். ஓடுகிற ஓட்டத்திலே, வழக்கத்திற்கு மாருக காயம் பட்டவர்களையும், செத்து விழுந்தவர்களையும் விட்டு விட்டு ஓடி விட்டார்களாம். அமெரிக்கர்களின் கை நாளுக்கு நாள் ஓங்கி வருகிறது. ஸாலமன் போரில் ஜப்பானியருக்கு ஏக நஷ்டம். இந்த அடியால் உண்டான வலி தீரவே ஜப்பானுக்குப் பல நாள் பிடிக்கும்.

இது போதா தென்று, சீனுவிலேயே வேறே ஜப்பானியருக்கு பலத்த காயம். ஜப்பான் மீது குண்டு வீசுவதற்கு, கிளம்பிச் செல்லக் கூடியதாக உள்ள சில முக்யமான இடங்களை சீனர்கள் பிடித்திருக்கிருர்கள். ஜப்பானியர் பெருவாரியாக பல முக்யமான பிரதேசங்களை விட்டு வெளி யேறிய வண்ணமிருக்கிருர்கள். இதெல்லாம் கிழக்கே வெளுக்கிறது என்பதைக் காட்ட வில்லையா? சென்ற ஆறேழு மாதங்களாக அதன் காட்டிலே மட்டுமே மழையாக இருந்தது. ஜப்பானுக்கு ஆனந்தம் தாங்க வில்லை. ஆனுல், எப்பொழுதுமே, ஒரே இடத்திலேயே மழை பொழிவது இயற்கையின் வழக்க மில்லையே! அதனுல், ஜப்பானியருக்கு இனி மேல் தொடர்ந்து பூசைக் காப்பு விழுந்தாலும் விழக் கூடும்.

ஆனுல், ஜப்பானியர் இவ்வாறு திடீரென்று சீன நகரங்களைக் காலி செய்து விட்டு பின் வாங்குவதன் ரகசிய மென்ன? இது கவனிக்கப் பட வேண்டிய விஷயமாகும். தென் மேற்குப் பருவக் காற்றும், மழையும் அடிக்கும் காலம் தீர்ந்து போய் விட்டது; இனி அஸ்ஸாமில் மழை நின்று விடும் என்பதை மனசில் கொண்டு, ஜப்பானியர் பர்மாவுக்கு, சீனுவில் உள்ள ஆட்களைக் கொண்டு வருகிருர்களா? அல்லது, மஞ்சூரிய எல்லைக்குக் கொண்டு போய், ருஷ்யா மீது பாயப் போகிருர்களா? இல்லை, தெற்கே ஆஸ்திரேலியா அருகே அனுப்புகிருர்களா இப்படையை? ஒன்றுமே தெரிய வில்லை. ஆனுல் ஜப்பானுல் வெகு காலம் சும்மா இருக்க முடியாது என்பது மட்டும் உண்மை. அதற்குள் நேசதேசத்தாரும், ஜப்பானியர்களை எங்கு வேண்டுமானுலும் சந்திக்கத் தயாராகி விடுவார்கள். ஜப்பானியர் கடுமையான விரோதிகள் தான். 'கடைசி ஜப்பானிய சோல்ஜர் வரை கொன்று தீர்த்தா லொழிய சண்டை நிற்காது' என்று ஜப்பானி லிருந்து அமெரிக்கா திரும்பிய அமெரிக்க அதிகாரிகள் கூறுகிருர்கள். ஆகவே, ஜப்பான் விஷயத்தில் நேசதேசத்தார் விசேஷ சிரத்தை காட்டுவார்கள் என்பதும் நிச்சயம்.

கடந்த மூன்ருவது வருஷப் போரிலே, நேசதேசத்தாருக்கு ஏக நஷ்டம் என்கிருேமா? அது உண்மை. அதை யாரும் மறைக்க வில்லை. மறுக்கவு மில்லை. ஆனுல் இந்த நஷ்டங்களால் ஏற்பட்ட அநுபவம் உண்டே, அது விலை மதிப் பற்ற லாபமாகும். நமது விரோதியின் தந்திரங்கள் எல்லாம் நமக்குத் தெரிந்து விட்டது. அதனுல் தான் அபிரிகாவிலே ராமல், முன்னேறுவதற்குத் திணறுகிருர். சென்ற இரண்டு மாத காலமாக அவரால் அங்கு எதுமே செய்ய முடிய வில்லை. இப்பொழுது தான் அவர் மெதுவாக முன்னேறப் பார்க்கிருர். ஆனுல் இத் தடவை, தயாரா யிருக்கும் நேச தேசப்படைகளோடு அவர் போராட வேண்டி யிருக்கும். அது காரணமாக ஏக நஷ்டத்திற்கும் தயாராக இருக்க வேண்டும். மூன்ருவது வருஷத்தில் ஏற்பட்ட நஷ்டங்களில், லிபியா நம் கையிலிருந்து போனது பெரிய நஷ்டம் தான்.

ஆனுல், ருஷ்யாவிலே ஜெர்மானியருக்குத் தான் ஏக நஷ்டம். சென்ற பனி காலம் முழுவதிலும் அவர்கள் இழந்த ஆட்களுக்கும், விமானங்களுக்கும். டாங்கிகளுக்கும் கணக்கு வழக்கே இல்லை. ஆயினும், வசந்த காலம் வந்ததும் நாஜிகள், தங்கள் கடைசி யத்தனமாக, ருஷ்யா மீது பாய்ந்திருக்கின்றனர். அவர்கள் எதிர்பார்த்ததை விட, குறைவான லாபமே அவர்களுக்கு கிடைத் திருக்கிறது. ஆனுல் ருஷ்யர்களுக்கு காகஸஸ், யூக்ரேன் பிரதேசங்கள் எல்லாம் போய் விட்டது. இப்பொழுது நாஜிகள் ஸ்டாலின் கிராடைச் சூழ்ந்து கொண்டிருக்கிருர்கள்.

இந்த நிலைமையிலும் ருஷ்யர்கள் தளரா மனத்தோடு, தம் வீரத்தைக் காட்டிக் கொண் டிருக்கிருர்கள். ருஷ்யாவின் மத்யப் பகுதியிலே அவர்கள் நாஜிகளைத் தாக்கி, பின்வாங்கச் செய்து வருகிருர்கள். இது சந்தோஷப்படத் தக்க தோர் செய்தியேயாகும்.

இது மட்டு மில்லை, பிரிட்டிஷ் விமானிகள் ஜெர்மானிய தொழிற்சாலைகளைப் போய் நாசமாக்கி, பல்லாயிரம் டன் கணக்கில் குண்டுகளை வீசி வருவதும் ஒரு நற் செய்தி தான். இரண்டாவது போர்முனைக்கான ஏற்பாடுகள் நடந்து வருவதும் ஒரு நற் செய்தி தான். டீப்பி என்ற இடத்திலே, பட்டப் பகலிலே பிரிட்டிஷ் படைகள் போய் இறங்கி, எதிரியின் ஏற்பாடுகளைப் பற்றி நேராக விஷய மறிந்ததும் ஒரு நல்ல சேதி தான். பிரேஸில் யுத்தத்தில் இறங்கி விட்டதால், ஆப்பிரிக்காவி லிருந்து, அமெரிக்காவிற்கு ஏற்படக் கூடிய ஆபத்து குறைந்திருப்பதும் ஒரு சந்தோஷச் சேதி தான். பிரிட்டனிலே உள்ள ஒவ்வொரு ஆடவனும், ஸ்திரீயும் யுத்த முயற்சிக்காகச் சேவை செய்யத் துடித்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதும், சாம்ராஜ்ய சேனைகள், அதிலும் இந்தியச் சேனை, அதி சாகசமான காரியங்களைச் சாதித்து வருகிறது என்பதும் மகிழ்ச்சி யூட்டக் கூடிய சேதிகளே. இம்மாதிரி இன்பம் தரக் கூடிய விஷயங்கள் எத்தனையோ சேர்ந்திருப்பதால், தைரியமாகவே, நாம் இருட்டி லிருந்து வெளிச்சத்திற்கு வரக் கூடிய காலம் நெருங்கி வருகிறது' என்று சொல்லிக் கொள்ளலாம். சர்ச்சில் கூறியது போல், 'அதி மோசமான காலத்திலும் நமது முகத்திலே புன்னகை தான்' இருந்தது. அப்படி யிருக்க இப்பொழுது நமது முகம் மலர்ந்திருப்பதில் ஆச்சரிய மென்ன இருக்கிறது?

# பொது ஜனங்களின் பொறுப்பு.

சர் ராபர்ட் டெனிஸ்டன் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார் :—

சென்ற மகா யுத்தத்தின் போது மார்ஷல் பாக் ஒரு படைத் தலைவரா யிருந்தார். எதிரிகள் முன்னேற வொட்டாதபடி தடுக்க முடியுமா வென்று ஒருவர் அவரைக் கேட்டார். அதற்கு அவர் என்ன விடை யளித்தார் தெரியுமா? உள் நாட்டிலுள்ள பொது ஜனங்கள் உறுதியா யிருப்பார் களானால், நிச்சயமாகத் தடுத்து விட முடியும் என்று கூறினார். சென்ற மகா யுத்த காலத்திலேயே பொது மக்கள் அவ்வளவு முக்கியமானவர்களாக இருந் திருந்தால், இன்னும் அதிக முக்கியமானவர்களாக வல்லவா இப்போ திருக்க வேண்டும். 1914-ம் வருஷத்தில் பாதுகாப் பில்லாத பட்டணங்களின் மீது வெடிகுண்டுகளை வீசி நாசஞ் செய்யும் இழிவான முறையை ஜெர்மானியர்கள் கையாள வில்லை. பிரசாரம் ஆரம்ப நிலையிலே தான் இருந்தது. இந்த ஆரம்ப நிலையிலேயே அதை நசுக்கி எறியாது போனது உண்மையிலேயே ஒரு துரதிர்ஷ்டந்தான். அனேனியாவை கோபல்ஸ் இன்னும் அறை கூவி அழைக்க வில்லை. அராஜகத்தை மிக மிக இலேசான முறையில் "மிர்ரர் ஆப் ட்ரூத்" என்னும் இத்தாலிப் பத்திரிகை பிரசாரம் செய்தது. பாம்பு சீறுவது போல டோக்கியோ ரேடியோ சீறி அப்போது தன் வெறுப்பைத் தெரிவிக்க வில்லை. இப்படிப் பட்ட இழிவான காரியங்களுக்கு ரேடியோ பயன் படும் என்று உண்மையிலேயே அதைக் கண்டு பிடித்த மார்கோனிக்குத் தெரிந்திருந்தால், தான் கண்டு பிடித்ததை வெளியிட் டிருப்பாரா என்று கூட நான் சில சமயங்களில் சந்தேகிப்ப துண்டு. அதாவது, கம்பியில்லாத் தந்தி ஏற்பட்ட பிறகு, அதுவும் ஒரு யுத்த ஆயுதமாகக் கையாளப் படுகிறது. அதனால், ஒரு யுத்தத்தில் படை வீரனுக் குள்ள ஒரு முக்கியத்துவம் சாதாரண ஒரு பேர்வழிக்குக் கூட ஏற்பட்டு விடுகிறது.

பிரிட்டன், தன் விமானப் படைகளுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறது என்று மிஸ்டர் சர்ச்சில் கூறி இருக்கிறார். இந்தச் சிறப்பு பல தலைமுறைகள் வரைக்கும் நிலைத்திருக்கும். இந்தியப் படை வீரர்களுக்கு இந்த நாடு எவ்வளவு கடமைப் பட்டிருக்கிறது என்று யாராவது நினைத்துப் பார்க்கிறார்களா? இந்தியாவிற்காகப் போராடி அவசியமானால் உயிரையும் கொடுப்பது கண்ணியமானதா? அல்லது எதிரிகள் இந்தியாவின் தலைவாசலைத் தட்டிக் கொண்டிருக்கும் இந்தப் பருவத்தில், அரசியல் கிளர்ச்சியைக் கொண்டு ரயில்வே லைன்களைக் கழற்றி விடுவதும், தபால் ஆபீசுகளை எரிப்பதும், முக்கியமான போக்கு வரவுச் சாதனங்களை நசாஞ் செய்வதும் கண்ணியமான வேலைகளா? நல்ல வேளையாக இந்தியப் போர் வீரர்கள் இருககிறார்கள். நாம் எந்த வகைகளில் அவர்களை ஆதரிக்கலாம்? பொது மக்களின் மன நிலைமை சிதறிப் போகாமல் பாதுகாப்பதன் மூலம் தான். இது சமூக வாழ்வில் கீழ்க் கடையில் உள்ளவர்களால் தான் இயலும். பெர்லின், ரோமாபுரி, டோக்கியோ ஆகிய நகரங்களிலுள்ள ரேடியோக்கள் மூலமாக விஷத்தைக் கக்கி, பொது மக்கள் மனதில் விஷத்தை யூட்டுவது போல, நாம் செய்வ தில்லை. இந்த துர்ப்பிரசார முறையில் நாம் நம் எதிரிகளை விட கெட்டிக் காரர்களல்ல. ஆனால், தேசியப் போர் முனையை ஸ்தாபிப்பதன் மூலம் இந் நாட்டுப் பொது மக்களின் மனோ நிலையை உறுதிப் படுத்தி யிருக்கிறோம். இதில் அங்கத்தினராகச் சேர வேண்டுமானால், அந்த ஸ்தாபனத்தின் வாக்குறுதியில் பரிபூரண நம்பிக்கை கொள்ள வேண்டும். அந்த வாக்குறுதியாவது :—

> "நான் ஒரு இந்தியக் குடி என்பதில் பெருமையடைகிறேன். ஆகையால், தோல்வி மனப் பான்மையைப் போக்கி, பயங்கரமானப் பொய் வதந்திகளை நசுக்கி விடுவேன். இந்தியாவின் கௌரவத்தையும் பாதுகாப்பையும் எந்த ஆபத்தையும் எதிர்த்து நின்று போராடுவேன். வெற்றி நமக்கு நிச்சயம் என்னும் பரிபூரண நம்பிக்கை யோடு நாள்தோறும் உழைத்து வருவேனாகவும்".

இந்த மிகச் சாதாரண வாக்குறுதியை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எவரும் 'இந் நாட்டில் இருப்பார்களா? இருக்கிறதாகத் தெரிகிறது. இந்நாட்டு நன்மைக்காகவும், பொது ஜனங்களின் நன்மைக்காகவும், பொதுவாக நாகரிகத்தின் நன்மைக்காகவுமே' யுத்த முயற்சிக்கு எல்லா வகைகளிலும் தடை செய்யும் கூட்டத்தாரும் இருக்கிறார்கள். ஆகையால் நல்லெண்ணம் உள்ளவர்களின் பொறுப்பு அதிகமாகிறது. எனவே தேசீயப் போர் முனையில் சேருங்கள். துர்ப்பிரசாரத்திற்கு எதிர்ப்பிரசாரம் செய்கிறவர்களாக ஒவ்வொரு அங்கத்தினரும் இருக்க வேண்டும். மனத் தளர்ச்சி யுள்ளவர்களுக்கு ஊக்கம் கொடுங்கள். பொய் பிரசாரத்தைப் பலி கொடுங்கள். வேண்டு மென்றே பொய் பேசுகிறவனை மறுத்து அவன் வாயை அடக்குங்கள். உங்கள் படை வீரர்களைக் குறித்து நீங்கள் பெருமை யடையுங்கள். இறுதியில் வெற்றி நமது தான் என்று மனதார நம்புங்கள், அப்போது தான் உங்கள் வேலையை நீங்கள் செய்து முடித்தவர்களாவீர்கள்.

# உணவுப் பொருள் அதிகப் பட வேண்டும்.

அரிசி தான் இம்மாகாண மக்கள் பொதுவாகச் சாப்பிடுவது. அரிசியையும் மற்ற தானிய உணவுகளையும் அதிகமாகச் சாகுபடி செய்ய தம்மாலான எல்லா முறைகளையும் அரசாங்கத்தார் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த உணவுப் பொருட்களில் காய்கறிகளும் பழவகைகளும் சேர்ந்தவை தான். இவை உடலுக்கு சுகந் தரும் உணவுகள். உருளைக் கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, முள்ளங்கி முதலிய கிழங்கு வகைகளிலும் மாச்சத்து மிகவும் அதிகம். ஆகையால் தானிய உணவுகளுக்குப் பதிலாக இவற்றையும் சாப்பிடலாம். ஆகவே காய்கறி சாகுபடியை அதிகப் படுத்தினால் இரண்டு வகைகளில் நன்மை யுண்டு. பொது ஜனங்களின் உடல் நிலையையும் உணவையும் முன்னேற்றும். தானிய உணவுச் செலவும் குறையும். சாகுபடியைப் பெருக்க வேண்டும் என்னும் திட்டத்தில், கீரை வகைகளும் பழ வகைகளும் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படவேண்டும்.

தம் தேவைகளுக்காகவும் விற்பனைக்காகவும் உணவுப் பொருள்கள் சாகுபடி செய்கிறவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து கொடுத்து ஊக்க வேண்டு மென்று விவசாய இலாகாவிற்கும், ரிவின்யூ இலாகாவிற்கும் அரசாங்கத்தார் உத்திர விட்டிருக்கிறார்கள். வீடுகளை யடுத்துள்ள நிலங்களிலும் நீர்ப்பாசனக் கால்வாய்களை யடுத்திருக்கும் சாகுபடியாகாத நிலங்களிலும், மற்ற நிலங்களிலும், பப்பாளி, வாழை, முலாம்பழம் முதலிய விரைவில் பலன் தரும் பழ மரங்களையும் காய்கறிகளையும் சாகுபடி செய்ய வேண்டு மென்று இந்த இலாக்காக்களின் உத்தியோகஸ்தர்கள் வெகுவாகப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். விதைகளும் நாற்றுக்களும் விவசாய டிப்போக்களிலும் ஆராய்ச்சி செய்யப் படும் இடங்களிலும் கிடைக்கும். விவசாய டிப்போக்களில், பள்ளிக்கூடத் தோட்டங்களில் சாகுபடி செய்ய இலவசமாக விதைகள் கொடுத்துதவும்படி அரசாங்கத்தார் உத்திர விட்டிருக்கிறார்கள். சர்க்கார் கட்டிடங்களில் வசிக்கிறவர்கள் தம் காம்பவுண்டுக்குள் இருக்கும் நிலத்தில் சாகுபடி செய்து கொள்ள அனுமதித்திருக்கிறார்கள். இதற்கு கிஸ்தியோ தண்ணீர் தீர்வையோ வசூலிக்க மாட்டார்கள். நீலகிரியில், உருளைக் கிழங்கு முதலிய உணவுப் பொருள்கள் சாகுபடியை அதிகப் படுத்த வேண்டி, தண்ணீர் தீர்வை முழுதையும், 1351-ம் பசலியிலும் அதற்குப் பிறகும் தரிசாகக் கிடந்து இப்போது சாகுபடிக்குக் கொண்டு வரப் பட்ட நிலங்களுக்கு விதிக்கப்படும் வரியில் பாதியும், வஜா செய்து விட்டார்கள். ஒரே சதுக்கமாக உள்ள தரிசு நிலத்தைப் பயன் படுத்திக்

(16-ம் பக்கம் பார்க்க.)



# உலகப் போக்கு.

சென்ற சில நாட்களாக அச்சு நாடுகளின் துர்ப்பிரசாரம் வெகு பலமாக இருந்தது. இந்திய நிலைமையைத் திரித்துக் கூறி பிரசாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், வெகு விரைவாக, அரசாங்கத்தார் இந்த பிரசாரம் ஓங்க ஒட்டாதபடி, சட்ட மறுப் பியக்கம் தோன்று முன்னுடி; முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டார்கள். இது கண்டு அச்சு நாடுகள் திகைத்துப் போயின. உதாரணமாக சென்ற ஆகஸ்ட்டுமீ 7உ டோக்கியோ ரேடியோ கூறியதாவது :—

> "அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முடிவைக் குறித்தே உலகத்தி லுள்ள எல்லா மக்களின் கவனங்களும் பதிந்திருக்கின்றன. இது சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? காங்கிரஸ் தீர்மானத்தைக் குறித்து ஒரு வித முடிவிற்கு வர பிரிட்டிஷ் சர்க்காருக்குக் குறைந்தது ஒரு வாரமாவது செல்லும்."

இதை எதிர் பார்த்துத் தான் பொய்ப் பிரசாரத்தை அச்சு நாடுகள் சற்று நிறுத்தி வைத்தன போலும். ஏனென்றால், இத் தீர்மானம் நிறைவேறி பல நாட்களுக்குப் பிறகு தான், இந்தியா சம்பந்தமான துர்ப் பிரசாரத்தை மீண்டும் வெகுவாக நடத்த, அச்சு நாடுகள் ஆரம்பித்தன. பம்பாயில் இந்தத் தீர்மானம் நிறை வேறுவதற்கு முன்பு, பிரிட்டிஷ் சர்க்காருக்கும் காங்கிரசுக்கும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்ப மாகலா மென்றும், எவ்வித சமரசத்திற்கும் காங்கிரஸ் ஒப்புக் கொள்ளக் கூடா தென்றும் அச்சு நாட்டு ரேடியோக்கள் கூறின.

எதிரி பிரசாரத்தின் நோக்கங்களாவன:—(1) இந்தியாவில் ஒன்றுக் கொன்று போராடிக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகளுக் குள்ளும், இந்த அரசியல் கட்சிகளுக்கும் அரசாங்கத்திற்கும், எந்த விதமான ஒற்றுமையும் ஏற்பட வொட்டாமல் தடுப்பது. இந்தியா ஒன்று பட்டு தன்னைத் தற்காத்துக் கொள்ளக் கூடும் என்று எண்ண இட முண்டென்று தெரிந்தவுடனேயே, ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் மிகப் பலமான படைகளிருக்கின்றன வென்றும், இப்படைகள் இந்தியா மீது படையெடுக்கும் என்றும் பிரமாதமாகப் பீத்திக் கொண்டு ரேடியோ மூலம் பயமுறுத்துகிறார்கள். (2) இந்தியாவின் பாதுகாப்புக்களைக் குலைப்பதற்கு என்னென்ன செய்யக் கூடுமோ அவ்வளவும் செய்யும்படி தூண்டுகிறார்கள். அதனால் தான், இந்திய யுத்த முயற்சியை நாசம் செய்யும்படியும், இந்தியாவைப் பாதுகாக்கும் பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் வேலை செய்யாதபடியும் தடுக்கும்படி, அடிக்கடி பிரசாரம் செய்கிறார்கள்.

டில்லியி லிருந்து ரேடியோ மூலம் சொல்லப் படும் மொழிகளைக் குறித்து வியாக்கியானங்கள் தப்பு முறையில் செய்கிறார்கள். உதாரணமாக மகாதேவதேசாய் இறந்து போனதைக் குறித்தும் இப்படியே தான் தப்பு வியாக்கியானம் செய்கிறார்கள். அநேக ஆயிரம் மைல்களுக்கு அப்பால் தான் அச்சு நாடுகளின் ரேடியோக்கள் இருக்கின்றன. இவர்களுக்கு இந்தியா சம்பந்தமான செய்திகளை அறிந்து கொள்ள டில்லி ரேடியோ ஒன்று தான் வழி. ஆனால் டில்லி ரேடியோவி லிருந்து கிடைக்கும் இச்செய்திகளைத் திரித்துக் கூறி தப்புப் பிரசாரம் செய்கிறார்கள். மகாதேவ தேசாயிக்கு விஷங் கொடுத்துக் கொன்று விட்டார்களென்று பெர்லின் ரேடியோ இரண்டு நாட்கள் வரை பிரசாரம் செய்து கொண்டிருந்தது. இது அவர்களுக்கு மிகவும் இலேசான காரியம். ஏனென்றால், ஹிட்லர் ஆதிக்கம் பெற்றது முதல், எத்தனை அரசியல் கொலைகள் அங்கே நடந் திருக்கின்றன! இந்தக் கட்டுக் கதையை டோக்கியோ ரேடியோவும் பிரசாரம் செய்தது. ஆனால் இந்தப் பிரசாரத்தை வெகு கெட்டிக் காரத் தனமாகவே செய்கிறார்கள். காலஞ் சென்ற தேசாயின் உடலை இந்து முறைப்படி காந்தியார், மற்றும் அவருடைய நண்பர்கள் முன்னிலையில் தீ வைக்கப்பட்டது என்று அவர்கள் வெளி யிடவே இல்லை. இந்தச் செய்தியை வெகு பக்குவமாக விட்டு விட்டார்கள், இந்தச் செய்தியைக் குறித்த ருசுக்கள் டோக்கியோவிற்கோ பெர்லினுக்கோ கிடைக்கு முன்னதாகவே, பரத்தி விட்டார்கள். புகழ் வாய்ந்த அமெரிக்க டாக்டரான எச். சி. மெங்கல், எம். டி. அவர்கள் இச்செய்தி ஒரு முழுப் பொய் என்று தெளிவு படுத்துகிறார். அவர் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார்:—

> மகா தேவ தேசாய் இளைஞரென்றும், நல்ல உடல் நிலை யோடிருந்தவ ரென்றும், எந்த விதமான இரத்தாசய நோயினாலோ, மயக்கத்தினாலோ வருந்தியது கிடையா தென்றும், ஆகையால், யாரோ அவருக்கு விஷங் கொடுத்திருக்க வேண்டு மென்றும், அதனால் தான் திடீரென்று அவர் மரண மடைய நேர்ந்த தென்றும், எதிரிகள் குற்றஞ் சாட்டுகிறதைக் கண்டேன். சென்ற சில வருஷங்களாக நான் அவரை அறிவேன். நான் பெரிதும் பாராட்டும் நண்பர்களில் அவரும் ஒருவர். என்னிடம் அவர் வைத்தியம் செய்து கொள்வ துண்டு.......தன் உடல் நிலையில் திடீரென்று ஏற்படக் கூடிய மாறுதல்களினால் தன் உயிர் நீங்கக் கூடு மென்று அவர் அடிக்கடி கூறுவ துண்டு. அவருடைய சொந்த நண்பர்களுக்கும் வைத்தியர்களுக்கும் தெரிந்தவற்றிற்கு விரோதமான எந்தச் செய்தியும், அரசாங்கத்தார் வெளி யிட்ட அறிக்கையில் காணப்பட வில்லை.

இப்படிப்பட்ட செய்திகளைத் திரித்துக் கூறி பிரசாரம் செய்யச் சந்தர்ப்பம இல்லாது போனால், அச்சு நாட்டார் செய்திகளை கற்பனை செய்கிறார்கள். இந்த கற்பனைச் செய்திகள் இப்போது வெகு அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. பெர்லினி லிருந்தும் டோக்கியோவி லிருந்தும் வரும் உத்தரவுகளின்படித் தான் இந்தப் பிரசாரங்கள் நடக்கின்றன.

சைகோன் ரேடியோ சென்ற ஆகஸ்ட்டுமீ 4உ, தான் என்ன செய்தியை வெளி யிட வேண்டு மென்று டோக்கியோ ரேடியோவை உத்திரவு கேட்டது. சென்ற 1942-ம் வருஷ ஜூன்மீ 27உ பல்கேரியாவைச் சேர்ந்த சோபியா ரேடியோ, புக்கமாச்சி மனிச்சி, ஷாங்கைக்கு அனுப்பிய செய்தியைத் தடுத்துப் பார்த்தோம். அதுவும் மிகவும் முக்கியமானதாகவே இருக்கிறது. அதன் மொழி பெயர்ப்பாவது :—

> "ஷாங்கையி லுள்ள ஜெர்மன் நியூஸ் ஏஜென்சியார்கள் இந்தியச் செய்திகளை இலவசமாக கொடுக்க விசேஷ ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன. உங்கள் பத்திரிகையில் அதைக் குறைக்காமல் கட்டாயம் வெளியிடவும். அந்த செய்தி ஸ்தாபனத் தலைவருக்கு பெர்லினி லிருந்து உத்திரவுகள் போரும். அவரைச் சந்திக்கவும்."

இந்தியா சம்பந்தமாகப் பொய் வதந்திகள் அச்சு நாடுகளி லுள்ள ரேடியோக்கள் மூலமாகவும், அவர்களுடைய கூட்டாளி நாடுகளி லுள்ள ரேடியோ மூலம் தான் வெளியாகின்றன. இச்செய்திகள் இந்தியாவிற்கு அநேக ஆயிர மைல்களுக்கு அப்பாலுள்ள ஷாங்கை, லிஸ்பன், ஸ்டாக்ஹாம் ஆகிய ஊர்களிலிருந்து தான் பிறக்கின்றன. எதிரி ரேடியோக்களுக்குக் கிடைக்கக் கூடிய செய்தியை விட, டில்லி ரேடியோவுக்கு நம்பத் தக்க செய்திகள் விரைவில் கிடைக்கும். ஒவ்வொரு இரவும் எதிரி ரேடியோக்கள் பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்ட வண்ணமாகவே இருக்கின்றன. இந்தியாவில் உள் நாட்டுக் கலகங்கள் நடப்பதாகவும், இவற்றை ஒடுக்க வேண்டிய இந்தியா அரசாங்கத்தார் வெடி குண்டுகளை ஜனங்கள் மீது எறிந்தார்களென்றும் பொய்ப் பிரசாரம் செய்தன. இதிலிருந்து எதிரியின் நோக்கம் இன்னது என்றும், இந்தச் செய்தி முழு கற்பனை தான் என்றும், இதை யாரும் நம்ப முடியா தென்றும் தெளிவாகத் தெரிகிறது.




## உணவுப் பொருள் அதிகப்பட வேண்டும்

(14-ம் பக்கம்—தொடர்ச்சி.)

கொள்ளவும் அனுமதித் திருக்கிறார்கள். நீலகிரியில், தரிசாகக் கிடக்கும் நிலங்களில் உருளைக் கிழங்கு முதலிய சீர்மைக் காய்கறிகளைச் சாகுபடி செய்வதற்கு, எரு, உழவுக்கான ஆயுதங்கள், ஆடுமாடுகள் ஆகியவற்றை வாங்குவதற்குக் கடன் கொடுத்து சுலபமான முறைகளில் வசூல் செய்து கொள்ளுவதைப் பற்றி அரசாங்கத்தார் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். நீலகிரியிலும், மைசூர் சமஸ்தான எல்லையை அடுத்து சித்தூர் ஜில்லா சரகத்திற் குட்பட்ட மதனபள்ளி, புங்கனூர் முதலிய தாலூக்காக்களிலும் உள்ள சில குறிப்பிட்ட விவசாயிகளுக்கு, சீர்மைக் காய்கறிகள் சாகுபடி செய்ய விதைகளை இலவசமாகக் கொடுக்கப்படும். காய்கறி சாகுபடியை விருத்தி செய்ய வேண்டி இன்னும் சில இடங்களை ஒதுக்குவதைக் குறித்து அரசாங்கத்தார் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஹு செப்டெம்பர் மீ 11உ, வெள்ளிக்கிழமை [இதழ் 36

## காங்கிரஸ் தலைவர்கள் சந்தேகம்.

### கிரிப்ஸ் முயற்சி தோற்றதேன் ?.

### தேவை யில்லாத நிபந்தனை.

*சர் பிரோஸ் கான் நூன் இந்திய அரசாங்க அங்கத்தினர். இவர் சமீபத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். 'இந்தியாவின் தற்கால நிலைமை' என்னும் பொருள் பற்றித் தான் அவர் பேசினார். அதில் சில பகுதிகளைக் கீழே வரைந் திருக்கிறோம் :—*

இந்திய அரசாங்க நிர்வாக சபை யங்கத்தினர்களெல்லாம் வைசிராய் ஆட்டுவிக்கிறபடி ஆடுகிற பொம்மைகள் என்று இந்நாட்டிலுள்ளவர்கள் பொதுவாக நினைக்கிறார்கள். இந்திய நிர்வாகம் முழுவதையும் வைசிராய், தானே நடத்துகிறார் என்றும், எங்களுக்கு அது பற்றி எந்த விதமான சக்தியும் கிடையா தென்றும் பொதுவாக நினைக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலைமையில் வேலை செய்ய, எங்களில் ஒருவருக்காவது முடியாது என்று நான் சொல்லுகிறேன். நான் 1941 ம் வருஷம் அக்டோபர் மாதம் 3-ம் தேதி முதல் இந்தப் பதவியி லிருக்கிறேன். நான் இந்தப் பதவி எற்றது முதல் ஒரு முறையாவது என்னுடைய ஆலோசனையை வைசிராய் நிராகரித்தது கிடையாது. நான் பஞ்சாபில் 9½ வருஷ காலம் மந்திரியா யிருந்திருக்கிறேன். அரசியல் அமைப்புச் சட்டப் படி மந்திரியின் ஆலோசனைகளை நிராகரிக்க கவர்னருக்கு அதிகாரம் கிடையாது. ஆகையால் என் யோசனைகளை அந்தப் பஞ்சாப் கவர்னர்கள் எற்று நடந்து வந்தார்கள். இப்போது வைசிராயும் அது போலவே தான் நடந்து வருகிறார். நிர்வாக அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும், தம் யோசனைகளை வைசிராய் நிராகரித்ததே கிடையாது என்று என்னிடம் கூறி யிருக்கிறார்கள். நிர்வாக சபையில் மாறுபட்ட கருத்துகளுக்கு இடந் தரும் பிரசினைகள் எழுந்த துண்டு. அப்போ தெல்லாம் பெரும்பான்மையோர் தீர்மானம் எப்படியோ, அப்படியே தான் வைசிராயும் நடந்து வந்திருக்கிறார். பெரும்பான்மையோர் தீர்மானத்தை அவர் ஒரு போதும் நிராகரித்த த கிடையாது. அந்தச் சபையிலுள்ள ஆங்கிலேயக் கூட்டாளிகளும் கூட, மிகவும் நேர்மையான முறையிலே தான் நடந்து கொண்டார்கள்.

> "சபையோடு கூடிய கவர்னர்-ஜெனரலுடைய நிர்வாக சபைக் கூட்டத்தில் எந்த விஷயத்தைப் பற்றியாவது கருத்து வேற்றுமை யுண்டாகுமானல், அக்கூட்டத்திற்கு வந்திருப்பவர்களில் பெரும்பான்மையோர் செய்யும் தீர்ப்பே முடிவான தாகும். அந்த விஷயத்தைப் பற்றிய கருத்து வேற்றுமை சமமாக இருந்தால், கவர்னர்-ஜெனரலாவது, அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் வேறெவராவது தமக்குள்ள விசேஷ ஓட்டை உபயோகிக்க வேண்டும்."

இது தான் இந்திய அரசாங்கச் சட்டம் 9-வது ஷெட்யூல் 41-வது செக்ஷன். இது இன்னும் அமுலில் இருக்கிறது. என்றாலும் இதற்கு சில விதி விலக்குகளும் இருக்கின்றன. பிரிட்டிஷ் இந்தியாவின் பாதுகாப்பு, சமாதானம், நன்மைகள் முதலியவை சம்பந்தமாக, கவர்னர்-ஜெனரல் கருத்துக்குப் பெரும்பான்மை யங்கத்தினர்களின் கருத்து வேறு பட்டிருந்தால் மட்டும், அப் பெரும்பான்மையோரின் முடிவை கவர்னர்-ஜெனரல் நிராகரிக்கலாம். அப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை யங்கத்தினர்களுள் இருவருடைய கருத்துக்களை இந்தியா மந்திரிக்கு அனுப்ப வேண்டு மென்பது விதி. இந்த விதி எழுத்தளவிலே தான் இருக்கிறதே யொழிய, ஒரு தரமாவது இப்படிப் பட்ட சந்தர்ப்பம் எற்பட்டதே கிடையாது. இது மட்டு மல்ல. தன் நிர்வாக சபையினர் சம்மதத் தோடும் சட்டப்படியும் செய்ய முடியாத ஒன்றைச் செய்ய, இந்த விதி, கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரம் கொடுக்க வில்லை.

பிரிட்டிஷ் மந்திராலோசனை சபைக்குக் கூட, எழுத்து மூலமாக எந்த விதமான பாதுகாப்பும் கிடையாது. தன் சபையினரின் தீர்ப்பை நிராகரிக்க அரசருக்கு அதிகாரம் இருந்த போதிலும், ஒரு போதும் பெரும்பான்மையோரின் கருத்துக்கு விரோதமாக அவர் எதுவும் செய்வ தில்லை. அது போலவே தான், இந்தியாவிலும் பாதுகாப்புக்கள் எழுத்து மூலமாக அளிக்கப் பட்டிருந்த போதிலும் அதனல் பயனென்ன ? காங்கிரஸில் முஸ்லீம்களுக்குப் பாதுகாப்புக்கள் அளிக்கப்பட வில்லையா ? அவற்றல் அவர்களுக்கு என்ன நன்மை உண்டானது ? இப்போதுள்ள நிர்வாக சபையில் பாதிப் பேர்களுக்கு மேல் இந்தியர்கள் தான். இவர்களின் உதவியைக் கொண்டு நடத்தப் படும் ஆட்சி தான், சரியான ஆட்சி முறை என்று வெட்ட வெளிச்சமாகத் தெரியும்.

அநேக விஷயங்களைக் குறித்து நிர்வாக அங்கத்தினர்களே முடிவு செய்து விடுகிறார்கள். வைசிராயிக்கு இவை பற்றி ஒன்றுமே தெரியாது. முக்கியமான பிரசினைகளைப் பற்றி மட்டுந் தான், நிர்வாக அங்கத்தினரின் முடிவு என்ன வென்று அவர் கேட்பார். அல்லது இரண்டு நிர்வாக அங்கத்தினர்களுக்குள் கருத்து வேற்றுமை யுண்டானலும், அல்லது மிகவும் கஷ்டமானதாகவோ, முக்கியமானதாகவோ இருந்தாலும் தான், நிர்வாக சபைக்கு அவ்விஷயத்தைக் கொண்டு போவார்கள். இந்த சபைக்கு வைசிராய் தலைமை வகிக்கிறார். இந்தச் சபையில் வைசிராய் உள்பட மொத்தம் 16 அங்கத்தினர்கள். இவர்களில் 11 பேர்கள் இந்தியர்கள். இந்தியர்கள் இந்த அரசாங்கத்தில் எந்த அளவிற்கு ஆட்சி நடத்துகிறார்கள் என்று இப்போது தெரிய வரும். 11-வது இந்திய அங்கத்தினர் இப்போது யுத்த மந்திராலோசனை சபை யங்கத்தினராக இங்கிலாந்திற்குப் போகிறார். அந்நிய நாட்டிலாக்காவையும் மற்றும் சில விசேஷப் பொறுப்புகளையும் மட்டுந் தான் 1935-ம் வருஷத்திய இந்திய அரசாங்கச் சட்டப்படி வைசிராய் நிர்வகிக்கிறார்.

(10-ம் பக்கம் பார்க்க).

# யுத்தத்திற்கான பொருள்கள் உற்பத்தி

## நாள் தோறும் பெருகிக் கொண்டிருக்கிறது

### சில புள்ளி விவரங்கள்

யுத்தம் ஆரம்பித்து 3 வருஷங்கள் ஆகி விட்டன. நான்காவது வருஷம் பிறந்து விட்டது. யுத்தத்திற்கான சாமான்களைத் தயாரிக்க வேண்டி யிருப்பதனால், அநேகக் கைத் தொழில்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றன. யுத்தம் ஆரம்பமானது 1939-ம் வருஷம். 1939–40-ல் தொழில்களைப் பெருக்குவதைப் பற்றி ஆராய்ச்சி செய்தார்கள்; மறு வருஷம் திட்ட மிட்டார்கள். அதற்கு மறு வருஷம் முதல், அத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார்கள்.

யுத்தம் ஆரம்பித்த முதல் வருஷத்தில் 83 கோடி ரூபாய்க்கும், இரண்டாவது வருஷம் 165 கோடி ரூபாய்க்கும், இநத வருஷம் ஜூலைமீ 31உ வரைக்கும் 165 கோடி ரூபாய்க்கும் ஆக மொத்தம் 365 கோடி ரூபாய்க்கு யுத்த சம்பந்தமான சாமான்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது மாதந் தோறும் 20 கோடி விகிதம் ஆர்டர்கள் கொடுக்கப் படுகின்றன. இந்த இலாக்காவை நிர்வகிக்க 1939-ம் வருஷம் ஒரு சப்ளை டைரக்டர் ஜெனரல் மட்டும் இருந்தார். இந்த இலாக்காவை நிர்வகிக்கும் வைஸ்ராய் நிர்வாக சபை அங்கத்தினருக்கு, இவர் உதவியா யிருந்தார். 1941-ம் வருஷம் இதற்கென்று ஒரு நிர்வாக அங்கத்தினரை நியமித்தார்கள். இவருக்குட் பட்டு 3 டைரக்டர் ஜெனரல்கள் ஏற்பட்டார்கள். ஒருவர் தளவாட உற்பத்திக்கும், மற்றவர் சப்ளைகளை மேல் பார்க்கவும், இன்னொருவர் கப்பல்களைக் கட்டவும் பழுதுபார்ப்பதை மேல் பார்க்கவும் ஏற்பட்டார்கள். இந்த உத்தியோகஸ்தர்கள் மட்டு மன்றி, திட்ட மிட்டு கொள் முதல் செய்யவும் உத்தியோகஸ்தர்களை நியமித்தார்கள்.

யுத்தத்திற்கு முன்பு தயாரானதை விட பல மடங்கு அதிகமாக இப்போது யுத்தத் தளவாடங்கள் தயாராகின்றன. துப்பாக்கிகள் 6 மடங்கும், மிஷின் பீரங்கிகள் 8 மடங்கும், 10 மடங்கு சனியன்களும், 24 மடங்கு பீரங்கிக் குண்டுகளும், 9 மடங்கு பீரங்கிகளும், பீரங்கி வண்டிகளும் அதிகமாகத் தயாராகின்றன. இப்படி விருத்தி செய்ய வேண்டி, அபிவிருத்தித் திட்டத்தின் பொருட்டு 7 கோடி ரூபாய் செல விடப் பட்டது. 16 கோடி ரூபாய்த் திட்டமொன்றை இப்போது நடத்தி வருகிறார்கள்.

டி.என்.டி. போன்ற பெருத்த வெடிகள் முதல் முதலாக இப்போது தான் இந்தியாவில் தயாரிக்கப் படுகின்றன. மற்றும் பல வகைப் பொருள்களையும் உற்பத்தி செய்ய, பல இயந்திரங்களை அமைத்திருக்கிறார்கள். இயந்திரங்களும் அதிகப் பட்டிருக்கின்றன. பயிற்சியும் அதிகமாக அளிக்கப் படுகிறது. இதன் பயனாகத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகப் பட்டுக் கொண்டு வருகிறது. பிவின் பயிற்சித் திட்டப்படி இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்ட 250 இளைஞர்களில் 122 பேர்கள் பயிற்சி பெற்று திரும்பி விட்டார்கள். யுத்தம் முடிகிற வரை 3 மாதங்களுக் கொரு முறை 50 பேர்கள் இங்கிலாந்திற்கு இப்பயிற்சி பெறும் பொருட்டு அனுப்பப் படுவார்கள். தொழிற் பயிற்சித் திட்டப்படி இந்தியாவிலேயே 39,000 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இங்கிலாந்தி லிருந்தும் அமெரிக்காவி லிருந்தும் யுத்தத் தேவைகளுக்கான பொருள்கள் இயன்ற அளவிற்குப் பறந்து வந்து கொண்டிருக்கின்றன. அநேக புதிய இயந்திரங்களையும் மிஷின் ஆயுதங்களையும் இந்தியாவிலேயே செய்வதை மேல் பார்ப்பதற்கு, தேர்ந்த பேர்வழிகளை அனுப்ப அமெரிக்கத் தொழில் மிஷன்காரர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

கலவை எஃகு செய்வதற்கு இந்தியாவிலேயே ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இந்தியாவிற்குத் தேவையான எஃகில் ஒரு பாதி இந்தத் தொழிற்சாலையில் தயாராகும். இந்தியாவிலேயே அலியூமினியம் செய்யவும் ஒரு பெரிய திட்டம் இட்டிருக்கிறார்கள். இதன் பயனாக நாளடைவில் இந்தியாவிற்குத் தேவைப் படும் அளவிற்கு இங்கேயே உற்பத்தி செய்யக் கூடும். பல வகைத் தளவாடங்கள் செய்யவும் பல புதிய தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. யுத்த ஆரம்பத்தில் 600 தொழிற்சாலைகள் தான் இருந்ததாகத் தெரிகிறது. இப்போது யுத்தத் தளவாட உற்பத்தி டைரக்டர் ஜெனரல் மட்டும் 1,500 இஞ்சினீரிங் தொழிற்சாலைகளை நடத்துகிறார். இவற்றில் 840 தொழிற்சாலைகளில் பொதுவான இஞ்சினீரிங் சாமான்களைச் செய்கிறார்கள்; 300 தொழிற்சாலைகளில் ஆயுதங்கள் செய்கிறார்கள்; மீதி 345 தொழிற்சாலைகளிலும் 23 ரயில்வே தொழிற்சாலைகளிலும் யுத்தத் தளவாடப் பாகங்களைச் செய்கிறார்கள். இவை மட்டு மன்றி அநேக சில்லரைச் சாமான்களுக்கும் பல சப்-கண்டிராக்டுகள் விட்டிருக்கிறார்கள்.

1942-ம் வருஷம் ஜூன்மீ வரையிலும் நம் படைகளுக்காக 120 கோடி ரூபாய் பெறுமான முள்ள துணிகள் வாங்கி யிருக்கிறார்கள். அடுத்த வருஷத்தில் மட்டும் 70 கோடி ரூபாய் பெறுமான முள்ள துணிகள் வாங்க வேண்டி யிருக்கும் என்று தெரிகிறது. நடப்பு வருஷத்தில் 12 கோடி ரூபாய் பெறுமான முள்ள கூடாரத் துணிகளும் 5 கோடி ரூபாய் பெறுமான முள்ள கம்பளிகளும் வாங்குகிறார்கள். ஒரு மாதத்தில் 1 கோடித் துணிகள் தயாராகின்றன. யுத்தத்திற்கு முன்பு ஒரு தொழிற்சாலையில் மட்டுந் தான் இராணுவ உடுப்புக்கள் தயாராகி வந்தன. இப்போது 10 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் உட்பட்ட பல சென்டர்கள் இருக்கின்றன. இவற்றில் மொத்தம் 1 லட்சம் பேர்கள் வேலை செய்கிறார்கள். விமானங்களி லிருந்து தப்பி இறங்கும்படி உதவும் பாரச்சூட் துணிகள் நெய்வதற் கென்று ஒரு தனி தொழிற்சாலையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். தோல் சாமான்கள் உற்பத்தி செய்வதில் யுத்தத்திற்கு முன்பு 2,000 பேர்கள் வேலை செய்தார்கள்; இப்போது 15,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். இவர்கள் மட்டு மின்றி 700 கண்டிராக்டர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு உட்பட்டு 34,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். ஒரு வருஷத்தில் 20 கோடி ரூபாய் பெறுமான முள்ள தோல் சாமான்கள் தேவைப் படு மென்று தெரிகிறது. 1940 41-ல், 242,000 டன்னிலிருந்து 396,000 டன்னும், 1941–42-லிருந்து 1942-43-ம் வருஷத்திற்குள் 5 லட்சம் டன் மரமும் தயாராகு மென்று தெரிகிறது. இதன் விலை 4 கோடி ரூபாய் ஆகு மென்றும் கணக்கிட் டிருக்கிறார்கள். கப்பல்கள் கட்டுவதற்கும் பழுது பார்ப்பதற்கும் 30,000 பேர்களை நியமித்திருக்கிறார்கள். இது போலவே எல்லா வகைத் தொழில்களையும் வெகுவாக அதிகப் படுத்தி யிருக்கிறார்கள்.

யுத்தத்திற்கு முன்பு மிகச் சில சத்திர சிகிச்சைக்கான ஆயுதங்களை இந்தியாவிலே செய்தார்கள். இப்போது பாதுகாப்புப் படைகளின் தேவைகளுக்கும் உதவி, அதிகப்படியா யுள்ளவற்றில் 80,000 ஆயுதங்கள் ருஷ்யாவிற்கும் அனுப்பி யிருக்கிறார்கள். மாதந தோறும் 4 முதல் 5 லட்ச ரூபாய் பெறுமான முள்ள ஆயுதங்களை அரசாங்கத்தார் சோதித்து அங்கீகரிக்கிறார்கள். இப்படியாக எந்த விதக் குறைபாட்டிற்கும் இட மில்லாமல், உற்பத்தி நாளுக்கு நாள் அதிகப் பட்டுக் கொண்டே போகிறது.



# யுத்தத்திற்குப் பிறகு உலக சமுதாயம்

## அட்லாண்டிக் பிரகடனம் தான் ஏற்றது

### ஜனநாயக வாழ்வின் உயர்வு

இந்த யுத்தத்தில் வெற்றி பெற வேண்டியது மிகவும் ஒரு மகத்தான வேலை. இதன் பொருட்டு நேச தேசப் படைகள் எல்லாம் அரும் பாடு பட்டுக் கொண்டிருக்கின்றன. உடனே கவனிக்கப் பட வேண்டிய பிரசினை இது. இதைத் தள்ளி வைப்பது என்பதும் முடியாத காரியம். இது போலவே முக்கியமான பிரசினை மற்றொன் றிருக்கிறது. இந்த பாஸிச அக்கிரம யுத்தத்தில் வெற்றி யடைந்த பிறகு, எப்படிப் பட்ட நிலைமையி லுள்ள உலகில் நாம் வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடும்?

ஒரு முக்கியமான விஷயத்தை நாம் ஞாபகத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். இந்தப் பொதுப் போராட்டத்தில் நேச நாடுக ளெல்லாம் அப்போது ஒன்று பட்டிருக்க வில்லை. வெற்றி கிடைக்காது என்னும் மனப் பான்மை தோன்ற வில்லையானலும், விரைவில் வெற்றி பெற முடியாது என்னும் எண்ணம் தோன்றி யிருந்த காலம். அப்போது, அதாவது 1941-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 14உயில், சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் சேர்ந்து அட்லாண்டிக் பிரகடனத்தின் நக லொன்றை வெளி யிட்டார்கள். இது ஒரு சர்வதேச உரிமை மசோதா என்று சுருக்கமாகக் கூறலாம். அதன் சுருக்கமாவது:—ஒரு எல்லைக் குள்ளாகவோ, எல்லைக்கு அப்பாலுமோ, பிறரைச் சுரண்டி பெருமை யடைகிறவர்கள் சட்ட விரோதிகள். பிறரை அடக்கி யாளும் காலம் முடிவடைய வேண்டும். (2) அந்தநத நாட்டு மக்கள் விருப்பத்திற்கு மாறாக நாடுகளைக் கைமாற்றுவது ஒழிய வேண்டும். (3) தமக்கு எப்படிப் பட்ட ஆட்சி முறை அமைய வேண்டு மென்று வகுத்துக் கொள்ளும் உரிமையை மதிக்க வேண்டும். பிறர் பலாத்காரத்தினல் தம் அரசுரிமையையும் சுயாட்சியையும் இழந்துள்ளவர்களுக்கு, அவை மீண்டும் வழங்கப் பட வேண்டும். (4) எல்லா நாடுகளும் பெரிதா யிருந்தாலும், சிறிதா யிருந்தாலும், தோற்றிருந்தாலும், வென்றிருந்தாலும், ஒத்த நிலைமையில் இந்த நாடுகளோடு வியாபாரம் செய்ய அனுமதி வேண்டும். ( ) தொழிலாளர்கள் நிலையையும் பொருளாதாரத்தையும், சமூக வாழ்வையும் உயர்த்தவும் எல்லா நாடுகளும் ஒன்று பட்டு வேலை செய்ய வேண்டும். (6) முடிவான வெற்றி கிடைத்த பிறகு, இதனல் ஏற்படக் கூடிய சமாதானத்தின் பயனாக, எல்லா நாடுகளிலு முள்ள எல்லா மக்களும் யதேச்சையுடன் அச்சத்திற்கும் வறுமைக்கும் ஆளாகாமல் வாழக் கூடும் என்னும் உறுதி ஏற்பட வேண்டும். (7) எந்தக் கடலிலும் யார் வேண்டு மானலும் போகலாம் எனத் தக்க முறையில், ஒரு சமாதானம் ஏற்பட வேண்டும். (8) முடிவாக, அக்கிரமமாகப் போர் தொடுக்கும் நாட்டிலும் இனி தொடுக்கக் கூடிய நாட்டிலும் ஆயுதங்களே வைத்துக் கொள்ளக் கூடாது. இதனல் பெரும் படைகளை வைத்திருக்கும் செலவு குறைந்து விடும். இதைக் குறித்து அமெரிக்க அந்நிய நாட்டு மந்திரி மிஸ்டர் ஹல் கூறுவதாவது:—

> "இது ஒரு அடிப்படையான தத்துவத்தைக் குறிப்பிடுகிறது. இதற்கு உலகிலுள்ள நாகரிக நாடுக ளெல்லாம் ஆதரவு கொடுத்திருக்கின்றன. உலகம் முழுதும் இத் திட்டப்படி அமைகிற வரையில், இந்த ஆதரவு இருந்து கொண்டே யிருக்கும்."

இந்தத் திட்டத்தை 1942-ம் வருஷம் ஜனவரிமீ 1உ 26 நாடுகள் ஒப்புக் கொண்டன. அதற்குப் பிறகு மற்ற நாடுகளில் அநேகம் ஒப்புக் கொண்டன.

சென்ற 1942-ம் வருஷம் ஜனவரிமீ 6உ அமெரிக்கக் காங்கிரஸ் சபையின் முன்பு, ரூஸ்வெல்ட் ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது யுத்தத் தளவாட உற்பத்தி எந்த அளவிற்கு முன்னேறிக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

> "ஐக்கிய நாட்டினராகிய நாம் என் இவ்வளவு மனித உழைப்பையும் உயிர்களையும் தியாகஞ் செய்கிறோம் தெரியுமா? சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு உலகம் இருந்த நிலையில் இந்த யுத்தத்திற்குப் பிறகும் இருப்பதற்காக வல்ல; ஆனல், நாட்டி லுள்ள எல்லா மக்களும், அவர்களுடைய தலை முறை தலைமுறைக்கும் மக்கள், பாதுகாப்போடு முன்னேற்றம் அடைவதற்கும், சமாதானம் உண்டாவதற்கும் தான், நாம் போராடுகிறோம். பழைய கொடுமைகளையும் தீமைகளையும் அகற்றுவதற்காகத் தான் நாம் போராடுகிறோம். கடவுள் முன்னிலையில் மக்கள் அனைவரும் சமம் என்னும் கொள்கையை நிலை நாட்டத் தான், நாமும் நம் முன்னேர்களும் போராடியது."

பிரமாதமான இந்தக் கொள்கைகள் எல்லாம் பழைய பாடந் தான் என்று சில மூலைக் கோளாறுக்காரர்கள் சொல்லக் கூடும். முன்பும் இதே பாடத்தைத் தான் படித்தார்கள் என்றும், ஆனல், அதன் படி நடந்து கொள்ள வில்லை யென்றும் சிலர் குறை கூறுவார்கள். சென்ற யுத்தத்திற்குப் பிறகு, இத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டப்படி, நிலைமை மாறும் என்று, தம் எண்ணப் படியே எல்லாம் நடக்க வேண்டு மென்று விரும்புகிறவர்கள், கோருவார்கள். இப்படி அற்றி மக்கள் இனத்திற்கே தரப் பட்ட வாக்குறுதி நிறை வேற்றப் பட வில்லை. ஆனல் பல வகைகளில், இப்போது நடைபெறும் யுத்தம், முன்பு நடைபெற்ற யுத்தத்தின் தொடர்ச்சி என்று தான் சொல்ல வேண்டும். இது வரை கிடைத்த அனுபவத்தைக் கொண்டு, இதற்கு முன்பு நாம் செய்த தவறுகளை மீண்டும் செய்யாது தடுக்க, உலகிலுள்ள நல்லெண்ணமும் அறிவும் படைத்த அனைவருக்கும் இலகுவா யிருக்கும்.

> "நமக்கு முன் தலைமுறையார் கடுமையான தவறுகள் செய்தார்கள். அனுபவம் என்னும் தீயில் எல்லா பிரசினைகளையும் இப்போது புடம் போட்டு எடுக்கிறார்கள். இன்று உலகம் முழுதும் கஷ்டந் தான். உலகிலுள்ள யதேச்சை மக்கள் எல்லோரும் ஒன்று பட வேண்டும் அப்போது தான் ஆட்சி உரிமை என்னும் உயர்ந்த இலட்சியம் கைகூடும். உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் சமாதானம் நிலவும்; விடுதலையும் கிடைக்கும். இந்த உயர்ந்த இலட்சியம் இன்று கெட்டுப் போகவே இல்லை"

என்று 1942-ம் வருஷம் ஜனவரிமீ 15உ ரியோடி ஜெனரோ என்னும் இடத்தில், அமெரிக்கக் குடியரசின் அந்நிய நாட்டிலாகா மந்திரிகள் கூடிய மூன்றுவது கூட்டத்தில். அமெரிக்க இரண்டாவது மந்திரி சும்னர் வெல்ஸ் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

> "உலகத்தின் மேற்குப் பகுதிக்கும் உலக விவகாரங்களுக்கும் சிறந்த கூட்டுறவு அமைந்திருக்கிறது. இதற்குக் காரணம் அமெரிக்கர்கள் அனைவரும் கூடி மகா நாடுகள் நடத்தியதும், அடுத்துள்ளவர்களோடு சமரசமாக வாழும் அவர்களுடைய கொள்கையுந் தான். இதை உலகிலுள்ள எல்லா யதேச்சை நாடுகளும் கைக் கொள்ள வேண்டும். இதைத் தான் அமெரிக்கர்களாகிய நாங்கள் விரும்புகிறோம். யுத்தத்திற்குப் பிறகு உலக நிலைமை அமைய வேண்டியதற்கு அடிப் படையாக அமெரிக்கர்களின் போக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் போக்கும் அமைந்திருக்கின்றன."

(11-ம் பக்கம் பார்க்க).

# ஐயோ! பாவம்!

குடுகுடு என்று வந்தாலும், குடுமியைச் சிரைத் க் கொண்டாலும் என்று ஒரு பழமொழி ணடு. அதே போலத் தான் சென்ற வாரத்தில் ல தமாஷான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ந்தச் சம்பவங்கள் தமாஷாக மட்டு மில்லாமல், ல உண்மைகளையும் எடுத்துக் காட்டி யிருக்கின் ன. அது என்ன ஐயா அது என்று கேட்டீர் ்ளா! சொல்லுகிறோம், கேளுங்கள்.

இரண்டு மாச காலமாக எல்லோருக்கும் எரிச்சல் ண்டாக்கும் வகையிலே எகிப்திலே ஒண்ணும் ்க்காம லிருந்தது. ஒன்னு மேலே விழுந்து டித்து நொறுக்கணம்; இல்லா விட்டால் விரட்டி த்து விட வேண்டும். இந்த இரண்டு மில்லாமல், ப்பிள்ளையையும் பெண்ணையும் ஊஞ்சலில் உட்கார வத்து விட்டு, 'நீ பாடு! நீ தான் பாடேன்' நாமாட் ண்டி யம்மா! 'நீ தான் பாடணம்' என்று, ங்கு கூடி யுள்ள பெண்கள் எல்லாம் ஒரு ரைப் பார்த்து ஒருவர் சொல்லிக் கொண்டு நேரத் தக் கடத்தி, பெண்களின் பாட்டைக் கேட்க வன்று வந்து தூரத்தே இருக்கும் ரஸிகர்களுக்கு வறுப்பு ஏற்படும் படி செய்வது போல, போர் னையிலும், இரு கட்சியார்களும் 'கம்' என்று ண்ட காலம் சும்மா 'புர்ர், புர்ர்' என்று மானத்தில் போய் வேவு பார்த்து வருவதோடு நுப்தி யடைந்து கொண்டிருந்தால், யாருக்கும் ிப்பு ஏற்படத் தானே செய்யும்' இந்த நிலைமை ான் எகிப்திலே நீடித்து வந்தது.

ஆனால், இந்த மத்ய காலத்திலே, நாஜிப் டைத் தலைவரான ராமல் தனது பலத்தை திகப் படுத்திக் கொண்டிருந்தார். பாவம்! ாம்பச் சேதம் அவருடைய படைக்கு! லிபியா ருந்து ஒரே ஓட்ட மாக எகிப்திற்குள் வெகு தூரம் ரை வந்து விட்டா ரல்லவா? அவருக் கென்ன, சந் தரித்த ராணுவ மோட்டாரில் 'விர்' ரென்று கமாகப் பறந்து வந்திருப்பார். அவருடைய ட வீரர்களில் பலர் நடந்தே வர வேண்டு மல்ல ? மோட்டார் டாங்கிப் படைகளுக்கோ, எமன் ் போல, பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்கள் ட விடாமல் தலைக்கு மேலே வட்டமிட்டு எகச் தத்தை விளைவித்துக் கொண்டிருந்தன. எகிப்திற் குள்ளே வந்ததும், ராமலின் படைகளது ன்னேற்றத்திற்கு முற்றுப் புள்ளி குத்தப் பட்டு ்டது. ரொம்பவும் களைத்து விட்டார் அவர். ப்படிப் பட்ட சமயத்திலே அவரையும் அவரது படை ரயும் அடித்து விரட்டி யிருக்கலாமே என்று ்கலாம்.

அடித்து விரட்டி யிருக்கலாம். வாஸ்தவம்! னல், நமது படைகளின் பலமும் அப்பொழுது சீர்கு ந்திருந்ததே! எண்ணிக்கையிலும் ஆயுத பலத் லும் அதிகமாக உள்ள எதிரி துரத்தி விட, பல ட நஷ்டங்களோடு நம்பவர்கள் எகிப்தில் ஒரு ்யமான இடம் வரை பின் வாங்க நேர்ந்தது. தற்கு மேல் எதிரிகளை முன்னேற விடுவ தில்லை ற்ற திர சங்கல்பத்தோடு, பிரிட்டிஷ் படைகள் ாராடின. வெற்றியும் பெற்றன. ராமல் நின்று ானர்.

அப்புறம், அவர் தனது படையின் பலத்தை ிகப் படுத்திக் கொள்ள ஆரம்பித்தார். அதே பம் பிரிட்டிஷ் படைகளும் தம் காயங்களுக்குச் ர்சை செய்து கொண்டு, அடுத்த சண்டைக்கு அதி ராக ஆயத்தம் செய்யலாயின.

பிரிட்டிஷ் படைகள் தீரமாகப் போராடிய தாலேயே, ் முக்யமான அலெக்ஸாந்திரியா துறைமுகத் கு எழுபது மைல் தூரத்திற்குள் வந்தும் கூட, லுக்கு அலெக்ஸாந்திரியாவை அடையும் ்கியம் கிட்ட வில்லை.

இரண்டு மாதங்கள் கழிந்தன. பிரதம மந்திரி சில் மாஸ்கோ சென்று விட்டு, எகிப்து வழியாக மக்குத் திரும்பினர். சீக்கிரமே எகிப்தில் போர் ஆரம்பமாகலாம் என்று ஜோஸ்யம் சொன் னர்கள். அதன்படியே ராமல் 'குபீர்' என்று பாய்ந்தார். இன்னும் கொஞ்சம் நாமதித் திருந் தால், பிரிட்டிஷாரே முன்னேறித் தாக்கி யிருக்கக் கூடும்.

இந்தத் தாக்குதலை ஆரம்பித்த போது, ராமல் தனது படையினரை நோக்கி, 'சீக்கிரமே நம்ப எல்லாம் கெய்ரோ போய் சேரப் போகிறோம்' என்று குஷாலாகக் கூறி, எல்லோருக்கும் சிகரெட் டுகள் வழங்கினராம். ஆனால் பாவம், புறப்பட்ட சில தினங்களுக் குள்ளாகவே, யதா ஸ்தானத்திற்குத் திரும்பப் போகிறோம் வெறுங் கையோடும், முதுகிலே உதையோடும் என்று அவர்களுக்கு அப்பொழுது தெ ரிந்திருக்கப் போகிறதா என்ன? அச்சு நாட்டுப் படைக ளின் வரவை, பிரிட்டிஷ் படைகள் ஆவலோடு எதிர் பார்த்திருந்தன. முனைபெல்லாம் இருந்தது போல் அவசர அடியில் ஏற்படுத்தப் பெற்ற யுத்த களம இல்லை பாருங்கள் இரண்டு மாத காலமாகத் தயார் செய்யப் பட்ட இடம். ஆகவே, ராமலின் படைகளது ஜம்பம் சாய வில்லை. இரு கட்சிகளுக்கும் ஏக நஷ்டம். ராமல் போனது, முன்பிருந்த இடத்திற் கே திரும்பி விட்டார். கீழே விழுந்த லும் மீசை யிலே மண் ஒட்ட வில்லை என்ற கதையாக, 'சும்மா நோட்டம் இல்ல பார்த்தேன்' என்கிறாராம். பார்க் கட்டும், பார்க்கட்டும். யார் வேண்டாம் என்கிறார் கள். பார்க்கப் பார்க்கத் தானே பூசைக் காப்பும் பலமாக விழும். ஹிட்லரிடம் உண்மையைத் தெரி விக்கலாம்.

என்ன உண்மை? எங்கும் நேச நாடுகளின் பலம் அதிகரித்து வருகிறது எனபதையும், முன்பு போட்ட திட்டம் போல, வரப் போகிற குளிர் காலத்திற்குள் ளாக, காகஸஸிலே உள்ள அச்சு நாட்டுப் படைக ளோடு, எகிப்து வழியாக வரும் படைகள் சேர்ந்து கொள்வ தென்பது கனவில் கூட நினைக்கும் காரிய மாக இல்லை என்பதையும் ராமல் தெரிவிக்கலாமா இல்லையா? ராமலுக்கு இது ஒரு பெரிய தோல்வி. ஆனாலும் இந்த மனுஷன் ஆபத்தானவன் தான். அதில் சந்தேகமே யில்லை.

சென்ற வாரத்தில் அமெரிக்காவி லிருந்து மாஸ் கோ போகும் வழியிலே எகிப்திலே இறங்கிய அமெ ரிக்கப் பிரமுகரான வெண்டல் வில்கி (தலைவர் பத விக்கு ரூஸ்வெல்ட்டுடன் போட்டி போட்டவர் இவரே!), இதையே சொன்னர்.

எகிப்திற் குள்ள ஆபத்து இப்பொழுது கொஞ்சம் விலகி யிருக்கிறது. ராமல் விரட்டப் பட்டிருக்கிறார். ஆனால் பூரணமாக முறி யடிக்கப் படவில்லை. திரும் பவும் சண்டைக்கு வருவார் என்று கூறினரவர்.

அது மட்டு மில்லை. அமெரிக்கப்படைகள் எகிப் தில் போருக்கு சித்தமாக இருக்கின்றன என்பதை யும், சமீபத்தில் ராமல் துரத்தி யடிக்கப் பட்டதற்குக் காரணம் புது ராணுவத் தலைவரான ஜெனரல் மாண்ட்கமரி, அமெரிக்க விமானங்களை வெகு தந் திரமாகவும், திறம் படவும் உபயோகித்தது தான் என்பதையும், இன்னும் நிறைய விமானங்களும், பீரங்கிகளும், வேறு சில சாமான்களும் மட்டும் இருந்திருந்தால், நேச நாட்டினரது கை ரொம்ப வும் ஓங்கி யிருக்கும் என்பதையும் தெரிவித்திருக்கி றார். ஒரு விஷயத்தில் சந்தோஷம். அவர் வந்த சமயமும் பிரிட்டிஷ் படைகள் தம் சமர்த்தைக் காட் டிய சந்தர்ப்பமும் ஒத்துக் கொண்டதே! அவருடைய கண் எதிரிலேயே, தலைக்கு மேலேயே நேச நாட்டு விமானங்கள், ஜெர்மானிய விமான மொன்றை சுட்டு வீழ்த்தினவாம். அதோடு, அவர் சென்ற வழியில் இருந்த பிரிட்டிஷ் படைகள் எல்லாம், 'இன்னும் நிறைய ஆயுதங்களையும், டாங்கிகளையும், விமானங்களையும் அனுப்புங்கள். நாங்கள் அவற் றைத் திறமையோடு உபயோகித்து, போராடுகி றோம்' என்று கூறினர்களாம். ஏற்கெனவே அமெரிக்கா ஏராளமாக, படைகளையும், ஆயுதங்களை யும், தன்னால் சாத்தியமான வரை அனுப்பிக் கொண்



டிருக்கிறது. இப்பொழுது தலைவர் ரூஸ்வெல்ட்டால் அனுப்பப் பெற்றிருக்கும் வில்கி பெரியார், நாம் நேரில் கண்டதை வேறே, அமெரிக்கா போய், தலைவ ரிடம் கூறும் பொழுது, அமெரிக்க உதவி, பெரும் வெள்ளமாகப் பெருகி வரும் என்று எதிர்பார்க்கலா மல்லவா? ஐயோ பாவம்! ராமலுக்கு இத்தகைய படு தோல்வி ஏற்படு மென்று ஹிட்லர் கடு களவு கூட எதிர் பார்த் திருக்க மாட்டாரே! என்ன செய்வது? புயல் வீசப் பேகிறது என்று தான் நாம் முன்பே சொல்லி யிருக்கிறோமே! அச்சு நாட்டினர் இருக் கும் திசைகளைப் பார்த்தே இது வீசப் போகிறது. அதனால் அதில் சிக்கிக் கொண்டு அவதிப் பட வேண்டி யதே, அச்சு நாட்டினரின் தலைவிதி. அதிலிருந்து அவர்கள் தப்ப முடியாது.

நேச நாடுகளிடை நாளுக்கு நாள் ஐக்ய பாவம் அதிகரித்து வருகிறது. ஹிட்லரையும் அவரது கொள்கைகளையும் வெட்டி, ஆழத்தில் போட்டு, மீண்டும் அவை முளைத் தெழா வண்ணம் நன்குகப் புதைத்து விட வேண்டு மென்ற எண்ணமாகிய ஜலம், நேச நாடுகள் எனும் சிமிட்டி அணுக்களுடன் கலக் கக் கலக்க, இந்த சிமிட்டி பெரிய கட்டப் பாறைக்கும், வெடி மருந்நுக்கும் எளிதில் உடைக்க சாத்ய மற்ற உறுதி மிக்க கட்டி யாகி விடும் என்பதில் யாருக்கா வது சந்தேக முண்டா?

ராமலது படைகள் எகிப்தில் முன்னேறிப் பின் வாங்கினவா? சீனாவில் ஜப்பானியர் ரொம்ப ஜோராகப் பல ஊர்களைக் காலி செய்து விட்டு ஓடிக் கொண்டிருக்கிறர்கள். சீனர்கள் பல இடங்களில் வெற்றிக் கொடி நாட்டியாச்சு. ஜப்பான் மீது குண்டு கள் வீசக் கூடிய தூரத்தில் உள்ள சீன விமான நிலையங்கள் திரும்பவும் சீனர்கள் கைக்கு வந்து விட்டன. கூடிய சீக்கிரமே ஜப்பானிய மக்களுக்கு, தங்களுடைய வாண வேடிக்கையை அமெரிக்க விமானங்கள் காட்டும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால், அரும்பாடு பட்டு, அக்ரமங்கள் பல செய்து பிடித்த இடங்களை, ஜப்பானியர் இவ்வாறு திடீரெனக் கைவிடுவதேன்? இது ஒரு ரஸமான கேள்வி தான். இதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடை அளித்து வருகிறர்கள். அவற்றில் எது உண்மையாகப் போகிற தென்பது, போகப் போகத் தானின் தெயும்.

சைபீரியா, இந்தியா, ஆஸ்திரேலியா இந்த மூன்று பிரதேசங்கள் தான் ஜப்பானியரது திருஷ்டியில் இருப் பவை. வட கிழக்கு இந்தியாவிலே, இது வரை இருந்த மழைக் காலம் அனேகமாகத் தீர்ந்து விட்டது போல் தான். ஆகவே, அஸ்ஸாம் மாகாணத் தருகே ஜப்பானியர் இனி கொஞ்சம் சுறுசுறுப்பாக இருக்கக் கூடும். என்ன தான் வாயளவில், 'இந்தி யாவை நாங்கள் எதும் செய்யப் போவ தில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தாலும், இந்தியா மீது ஜப் பானுக்கு ஒரு கண் என்பதை யாராவது மறுக்க முடியுமா? திருடர் போல் நமது எல்லையில் இருக் கும் ஜப்பானியர், அங்கிருந்து சும்மா போய் விடு வார்களா?

இவ்வளவு அருகில் இருக்கும் அவர்களை நம்ம வர்களும் சும்மா விட்டு விட வில்லை. இந்தியாவி லிருந்து செல்லும் வெடி குண்டெறியும் விமானங் கள் 'செமித்தியாய்' பர்மாவில் உள்ள ஜப்பானி யருக்கு தங்களால் சாத்யமான வரை 'சாதித்து' வருகின்றன.

ஜப்பானியர் இந்துமகா சமுத்திரப் பக்கம் கூட வாலை ஆட்டுவார்கள் போலிருக்கிறது. சமீபத்தில் ஆஸ்தி ரேலியா அருகே நல்ல உதை வாங்கினர்கள். இப்பொழுது, சீனாவி லிருந்து சிங்கப்பூர், இந்தோ சைனாப் பக்க மெல்லாம் ஜப்பானியத் துருப்புகள் வந்து கொண்டிருக்கின்றதாம். 'இலங்கைக்கு எந்த சமயத்திலும் ஆபத்து உண்டாகலாம். ஆகவே, அனை வரும் எப்பொழுதும் சித்தமாகவே இருக்க வேண்டும்' என அறிவித்திருக்கிறார் இலங்கையி லிருக்கும் தலைவர்.

இந்தச் சமயத்திலே, ஜப்பானிய சர்க்காரி லிருந்து, அந்நிய மந்திரி ராஜிநாமா செய்திருக்கிறார். அவர் பெயர் டோகோ (ஜப்பானிய பிரதம மந்திரி பெயர் டோஜோ!) அவருக்கு ருஷ்யா வுடன் ஜப்பான் போர் தொடுக்கும் விஷயத்தில் இஷ்ட மில்லையாம். ஆனால் டோஜோவின் அபிப்பிராயம் வேருக இருந் திருக்கும். ஆகவே தான், அவர் தூர விலகி விட்டார் போலிருக்கிறது. இதிலிருந்து, ஜப்பானியர் சைபீரியா மீது பாயக் கூடும் என்று யூகிக்கிறர்கள் சிலர்.

இதெல்லாம் எப்படியாவது போகக் கூடும். நேச நாடுகள் இப்பொழுது எதற்கும் சித்தமாக இருக்கின் றன. ஆனால் தற்சமயம் கவலையைத் தந்து கொண் டிருப்பது ருஷ்யாவிலே, ஸ்டாலின் கிராட் நகர் அருகிலும், காகஸஸ் பிரதேசங்களிலும் நடக்கும் பயங்கர யுத்தம் தான்.

ஸ்டாலின்கிராட் நகருக்கு ஏற்பட்டிருந்த நெருக் கடி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இங் கிருந்த இயந்திரங்கள் எல்லாவற்றையும் அப்புறப் படுத்தி விட்டார்கள். ஆனாலும் ருஷ்யர்கள் விடாது போராடுகின்றனர். கருங்கடல துறைமுகங்கள் சில வற்றிற்கும் ஆபத்து உண்டாகி விட்டது. தெறகே எண்ணெய் வயல் பிரதேசங்களை நோக்கி அச்சுப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

இதற் கிடையில் சர்ச்சிலும், ஸ்டாலினும் சந்தித் தார்ச்சு. ருஷ்யாவைக் கைவிடுவ தில்லை என்பதே நேச நாட்டினரது உறுதி எண்ணம் என்பதை சர்ச் சில், ஸ்டாலின் மனதில் பதியும்படி செய்து திரும்பி யிருக்கிறார். தொடர்ந்த உதவி, ருஷ்யாவிற்கு அனுப்பப் படும். இரண்டாவது போர்முனை ஆரம் பித்தால், ருஷ்யர்களுக்குச் சௌகரியமா யிருக்கும். இந்த இரண்டாவது போர்முனையைத் தொடங்குவ தற்கு, பிரிட்டனில் சகல ஏற்பாடுகளும் முடிந்து விட் டன. ஆனால், அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா அல்லவா? உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம் பரு வத்தில தானே பழுக்கும்? அது போல, இரண் டாவது போர் முனையைத் தொடங்க, சரியான காலம் வர வேண்டாமா? அது இன்னும் வர வில்லை. ஒரு வேளை அடுத்த வருஷம் தான் அந் தக் காலம் வரும் போலிருக்கிறதாம்.

பிரிட்டனில் உள்ள தொழிலாளர்கள் எல்லாம் இரண்டாம் போர்முனையை ஆரம்பித்து விட வேண்டு மென்று துடிக்கின்றனர். ருஷ்யாவிற்கு தங்களா லான வரை உதவ அவர்கள் தயார். ஆனாலும் என்ன செய்வது? தக்க காலத்தையே நம் தலை வர்கள் எதிர் பார்த்திருக்கிறர்கள். பள்ளிக்கூடத் துப் பையன்கள் சண்டை மாதிரியா? நினைத்ததும் 'உஸ்' என்று கிளம்பி விட முடியுமா? கிளம்பி விட்டால், இனி பின் வாங்கக் கூடாது. ஒரே போடா கப் போட்டு அமுக்கி விட வேண்டும். 'வெற்றிகள் நிறையக் கிடைக்கும் சமயத்தில் தான், தோல்வியும் ஏற்படக் கூடும்' என்று அறிவாளிகள் சொல்லி யிருக் கிறர்கள். , ஹிட்லர் விஷயத்தில் அது உண்மை ஆக லாம்.

கடைசியாக ஒரு விஷயம். இந்தப் போர் சீக்கிரம் முடியும் என்று தோன்ற வில்லை. அமெரிக்காவில் எல்லாம் 'ஐந்து வருஷப் போருக்கு ஒவ்வொரு வரும் தம்மைச் சித்தப் படுத்திக் கொள்ளவே ணும்' என்று சொல்லி வருகிறர்கள். ஆகவே, நாமும் இன்னும் பல தியாகங்களைச் செய்யத் தயாராக வேண்டியது அவசியம். இறுதி வெற்றி நமக்கே என்பதை நினைவில் வைத்துக் கொண்டு விட்டால், இன்னும் எத்தனையோ காரியங்கள் செய்யலாமே! நமது சேனை உறுதி கண்டு, ஐயோ பாவம்! அந்த ஹிட்லர் கோஷ்டியினருக்கு நாளுக்கு நாள் அஸ்தியில் ஜுரம் கண்டு வருகிறது! ஆப் பைப் பிடுங்கின குரங்கைப் பார்த்து, 'ஐயோ பாவம்!' என்று சொல்வது போலவே, இவர்களையும் பார்த்து உலகோர் பரிதாபப் படப் போகிறர்கள் சீக்கிரமே!

# யுத்த நிலமை பற்றி முதல் மந்திரி கருத்து

## காமன்ஸ் சபையில் சர்ச்சில் பிரசங்கம்

### ஸ்டேலினின் சிறப்பு

நான்கு வார விடு முறைக்குப் பிறகு இன்று காலை பார்லிமெண்ட் திரும்பக் கூடியது. பிரதம மந்திரி யுத்த நிலைமையைப் பற்றியும் தனது மத்தியக் கிழக்குப் பிரதேச மாஸ்கோ பிரயாணங்களைப் பற்றியும் குறிப்பிட்டார். காமன்ஸ் சபையில் கூட்டம் அதிகமாக இருந்தது. மிஸ்டர் சர்ச்சில் எழுந்த போது சபையோர் கரகோஷஞ் செய்தனர்.

**மால்டாவுக்கு உதவி.**

மால்டாத் தீவிலுள்ளவர்கள் தீரமாகப் போராடி வருகின்றனர். அங்கு ள்ளவர்கள் இன்னும் பல மாதங்கள் தீரமாக வாழவும் எதிர்த்து நிற்கவும் இயலும்படி செய்வதற்காக அதற்கு சப்ளைக் கப்பல்களை அனுப்பினேம். இதற்காக 3 விமானக் கப்பல்களையும் பலமான யுத்த விமான கோஷ்டியையும் சக்தி வாய்ந்த குரூட்ஸர் கோஷ்டிகளையும் ஜிப்ரால்டர் ஜலசந்தி வழியாக அனுப்பினேம். இதனைத் தாக்க 300 அல்லது 400 ஜெர்மன் விமானங்களும் மோட்டார் டார்பிடோப் படகுகளும் சப்மரீன்களும் அனுப்பப் பட்டன. பாதுகாப்பிற்குச் சென்ற பிரிட்டிஷ் கப்பற் படைகளும் சரக்குகளை ஏற்றிச் சென்ற கப்பல்களும் பெரும் நஷ்ட மடைந்தன. 'ஈகில்' என்ற விமான மேற்றும் கப்பலும் 2 குருய்ஸர்களும் ஒரு நாசகாரியும் மூழ்கின. மற்றுஞ் சில கப்பல்கள் சேத முற்றன. ஆனல் அடைந்த பலனை உத்தேசிக்கு மிடத்து இந்த நஷ்டத்தை அளவுக்கு மிஞ்சியதாகக் கருத முடியாது.

2 இதாலியக் குருய்ஸர்கள் படுசேத முற்றன. 2 ஜெர்மன் நீர்மூழ்கிகள் மூழ்கின. நமது விமானக் கப்பல்களில் சென்ற விமானங்களும் கப்பல்களிலிருந்த பீரங்கிகளும் 56 அச்சு விமானங்களைத் திட்டமாக அழித்தன. மற்றும் 15 அச்சு விமானங்கள் அழிந்து போயிருக்கலாம். இதல்லாமல் மால்டாவில் 16 எதிரி விமானங்களை நமது ஸ்பிட்பயர் யுத்த விமானங்கள் அழித்தன. விரோதி விமானங்கள் நமது சப்ளைக் கப்பல்களுக்கோ யுத்தக் கப்பல்களுக்கோ பெருஞ் சேதம் விளைவிக்க முடிய வில்லை. இந்தச் சம்பவத்தால் கடலில் விமானக் கப்பல்களின் ஒத்துழைப்புடன் வேலை செய்வதன் முக்கியத்தையும் கப்பல்களி லுள்ள பீரங்கிகளது சக்தி அதிகரித்திருப்பதும் ருசுவாவதாகக் கொள்ள வேண்டும்.

**டிப்பித் தாக்குதலின் முக்கியம்.**

டிப்பித் தாக்குதலே இரண்டாவது முக்கியமான போர் நடவடிக்கையாகும். இந்த விடத்தைத் தாக்கிய படையினரில் 6-ல் 5 பாகத்தினர் கனடியர். கனடியர்கள் கடற்படை எல்லோரையும் டிப்பிக்கு ஏற்றிச் சென்றது. அது அங்கு போனவர்களில் பெரும்பாலோரைத் திரும்ப ஏற்றி வந்தது. இவ்வளவு தீரமாகத் தாக்கிய பெருமை கடற் படைக்கும் கனடியருக்குமே உரியதாகும். இது வெறும் வேவு பார்ப்பதற்கான தாக்குதலே யாகும். யுத்தம் அதிகரிக்க அதிகரிக்க, இம்மாதிரியான கோர சச்சரவுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

பிரிட்டனுக்கு அமெரிக்கப் படைகளும் இதர படைகளும் வேகமாக வந்து கொண்டிருப்பது எதிரிக்குத் தெரியும். ஆனல் நாம் எங்கு எப்பொழுது எந்தப் படைகளைக் கொண்டு எந்த மாதிரியான முறையில் தாக்கப் போகிறேம் என்பது தான் எதிரிக்குத் தெரியாது. இது பற்றி எதிரி சிந்தித்துக் கொண்டிருக்கும்படி நாம் விட்டு விடுவதே விரும்பத் தக்கதாகும்.

**விமான பலம் அதிகரிக்கிறது.**

யுத்தப் போக்கு நமக்குச் சாதகமாக மாறி வருகிறது. நேச தேசத்தினரது விமான ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. ஜூன் மாதம் முதல் செப்டெம்பர் முதல் வாரம் வரை நாம் ஜெர்மனி மீது சென்ற வருஷத்தில் இதே காலத்தில் வீசியதை போல, இரு மடங்கு அதிகமான வெடிகுண்டுகளை முன்னிலும் அதிகக் குறிப்புடன் வீசினேம். பட்டப் பகலில் அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீச முடியும். இது புதிய முக்கியமான அம்சமாகும். அமெரிக்காது பறக்கும் கோட்டை விமானங்களால் அதிக உயரத்தி லிருந்து குண்டுகளை வீச முடியும். இதனல் விமானப் போரில் புதிய வசதிகள் ஏற்படுகின்றன.

**கடல் போர்.**

இன்னும் கடலில் ஏற்படும் சேதம் மிக்க அதிகமாக இருக்கிறது. ஆனல் ஜூலை, ஆகஸ்ட்டு, செப்டம்பர் மாதங்களில் இன்று வரை ஏற்பட்ட சேதம், முன் மாதங்களை விடக் குறைவானது. இதற்கு அமெரிக்க கடற் கரையோரங்களில் உள்ள கப்பல் கூட்டம் பாதுகாப்பு முறையை அபிவிருத்தி செய்ததே காரணமாகும். மூழ்கிப் போகும் கப்பல்களை விட புதிதாக் கட்டப் பட்ட வியாபாரக் கப்பல்களது தொகை இந்த மாதங்களில் அதிகரித்திருக்கிறது. நீர் மூழ்கிகள் மீது நாம் நடத்தும் போரில் முன்னை விட அதிக வெற்றிகரமான பலன் ஏற்பட் டிருக்கிறது (கரகோஷம்(. புதிதாகக் கட்டப் படும் நீர்மூழ்கிகளின் விகிதத்திற்குச் சமமாக மூழ்கடிக்கப்படும் நீர்மூழ்கிகளது விகிதம் இருக்கு மென்று நான் சொல்ல வில்லை. ஆனல் நமது குண்டு வீச்சால் நீர் மூழ்கிகள் கட்டும் தொழில் அதிகமாகப் பாதிக்கப்படும். கடல் போர் தான் நேசதேச முயற்சிகளுக் கெல்லாம் ஆதாரமாகும்.

**பிரிட்டனுக்கு அமெரிக்கத் தூது.**

ஜூலை மாதத்தில் ரூஸ்வெல்ட் இந்நாட்டிற்கு ஜெனரல் மார்ஷல், அட்மிரல் கிங், ஹாப்கின்ஸ் இவர்களைக் கொண்ட தூது கோஷ்டியை அனுப்பினர். 10 நாட்களில் யுத்தப் பிரச்சினைகள் அனைத்தையும் குறித்து கலந்து விவாதித்தார்கள். ஐரோப்பாவில் மட்டு மின்றி உலக மெங்கும் போர் நடவடிக்கைகளைப் பாதிக்கக் கூடிய முக்யமான முடிவுகள் செய்யப்பட்டன. உலகிலுள்ள ஒவ்வொரு போர்க் களம் சம்பந்த மாகவும் உற்பத்தி, நிர்வாக நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பூரண உடன்பாடு ஏற்பட்டது,

**வட ஆப்பிரிக்கா யுத்தம்.**

பார்லிமெண்ட் விடுமுறையில்நான் மத்தியக் கிழக்குப் பிரதேச ராணுவத்தையும் ஸ்டேலினையும் பார்க்கச் சென்றேன். பாலைவனப் படையின் நிலைமையும் எகிப்துப் படைகளின் நிலைமையும் முற்றிலும் திருப்திகரமாக இல்லை என்று நம்ப எனக்குச் சிறிது காரண மிருந்தது. கஸாலாவைச் சுற்றி நடந்த போராட்டங்களிலும் அல் அமீனுக்குப் பின் வாங்கி போர டுவதில் ஏற்பட்ட நிர்ப்பந்தத்திலும் ராணுவ அமைப்பு வெகுவாகக் குலைந்து விட்டது. ஜெனரல் ஆச்சின்லக் அல் அமீனில் போர் முனையை உறுதிப் படுத்தினர். ஜெர்மனியரை நேர்முகமான தனிப் போரில்தோற்கடிக்க முடியு மென்று எல்லோரும் நம்பிய போதிலும் ராணுவத்திற்கு இவ்வளவு அபஜெயங்கள் ஏன் ஏற்படுவ தென்பது புரியாமல் அவர்கள் திகைத்து வந்தனர் (சபாஷ்).



**படைத்தலைவர்கள் மாற்றம்.**

துருப்புகள் உற்சாகத்துட னிருந்தன. ஆனல், படைத் தலைவர்களை அடியோடு மாற்ற வேண்டுவது அவசிய மென எனக்குத் தோன்றியது. என்னுடன் வநத படை நிர்வாகிகளும் பீல்டு மார்ஷல் ஸ்மட்ஸும் இதே மாதிரியான யோசனையைக் கூறினர்.

ஜெனரல் ஆச்சின் லக்கிற்குப் பதிலாக ஜெனரல் அலெக்ஸாந்தர் நியமிக்கப் பட்டார். படைகளின் நம்பிக்கையைப் பெற்ற ஜெனரல் காட் 8-வது படைத் தலைவராக மந்திரி சபையினல் நியமிக்கப்பட விருந்தார். ஆனல் அவர் விரோதியினல் கொலை யுண்டு போனர். 8-வது படையின் தற்போதையத் தலைவரான ஜெனரல் மாண்ட்கோமரி மிக்க திறமைசாலி, அவர் சில வேலைகளுக்காகப் பிரிட்டனுக்கு வேண்டியவராக இருந்தார். ஆனல், மேற்குப் பாலைவனப் போர் ஏற்படும் போலிருந்ததால் அவரை 8-வது படைத் தலைவராக நியமிப்பதைத் தவிர நமக்கு வேறு வழி யில்லாமல் போயிற்று. இவர்களுடன் ஜெனரல் மாக்கிரீரி நிர்வாகியாக நியமிக்கப் பட்டிருக்கிறர். இந்த 3-பேர்களும் நமது தேவைக்கு ஏற்றவர்கள். தற்சமயம் நம்மிட முள்ள சிறந்த படைத் தலைவர்கள் இவர்கள் தான். ஜெனரல் ஆச்சின்லக் தமது வேண்டுகோளின் மேல் ரஜாவில் போயிருக்கிறர். பெருஞ் சேத மேற்பட்ட போதிலும் பாலைவனப் படை முன்னிலும் அதிக பலமாக இருக்கிறது. ஏராளமாக உதவிப் படை வந்திருப்பதால் புதிய படையே ஏற்பட்டிருக்கிறது.

**மாஸ்கோ சம்பாஷணை.**

கெய்ரோவில் அரசர் பரூக்கும் டெஹரானில் பாரசீக அரசரான ஷாவும் என்னை வரவேற்று நேசதேசத்தினர் கட்சியில் விசுவாசங் கொண்டிருப்பதாகக் கூறினர். மாஸ்கோவுக்கு ரூஸ்வெல்ட் பிரதிநிதியான ஹாரிமனுடன் சென்றேன். 4-நாட்கள் ஸ்டாலினுடன் நாள்தோறும் நாங்கள் 5- அல்லது 6-மணி நேரம் பேசினேம். மனம் விட்டு எல்லா விஷயங்களையும் பற்றி விவாதித்தோம். 2-ரஷ்ய படைத் தலைவர்களுடன் வேவலும் பிரிட்டிஷ் ராணுவ நிர்வாகியும் ராணுவ விஷயங்களைப் பற்றி விவாதித்தனர். முடிவுகள் ரகசியமாக இருக்க வேண்டும். ஆனலும், நான் ஒன்று மட்டும் சொல்வேன். நாமும் அமெரிக்காவும் போதுமான அளவிற்கு அவர்களுடைய பொறுப்பு குறைபத் தகுந்தபடி செய்துவிட்டோம் என்று, ருஷ்யர்கள் நினைக்கவில்லை.

தியாகங்களையும் நஷ்டங்களையும் பெருட் படுத்தாமல் கூடிய சீக்கிரம் ரஷ்யருக்கு நாங்கள் உதவி செய்ய தீர்மானங் கொண்டிருப்பதில் ரஷ்யத் தலைவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படி செய்தோம். ரூஸ்வெல்ட்டை சுலபமாக நம்பும்படி செய்தது போலவே ரஷ்யரையும் நம்மைச் சுலபமாக நம்பும்படி செய்வதற்காகவே நான் மாஸ்கோ போனேன். இதில் நாம் வெகுவாக வெற்றி பெற்று விட்டோமென்று நம்புகிறேன்.

ஸ்டேலின் ஒரு முரடர். யுத்தத்தலைவர். இவரைத் தலைவராகக் கொண்டிருக்கும் ருஷ்யா ஒரு பாக்கியசாலியான நாடு தான். இப்போதுள்ள கடுமையான காலத்திற்கு இவர் ஏற்றவர். நல்ல பலசாலி. ஸ்டாலின் அளவில்லாத தீரமும் மனேதிடமும் வாய்ந்தவர். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசும் சுபாவத்தினர். பெரிய தலைவர்களுக்கு அத்தியாவசியமான ஹாஸ்ய உணர்ச்சியும் வாய்ந்தவர். வீண் பிரமைகள் அற்றவர் என்றும் ஆழ்ந்த அறிவும் அடங்கிய மனமும் அவர் உடையவரென்ற எண்ணந் தான் எனக்கு உண்டானது. எந்த விஷயத்தைக் குறித்தும் தெளிவான கருத்துடையவர்.

இந்தப் போரில் நாம் எல்லோரும் உண்மையும் விசுவாசமும் வாய்ந்த தோழர்களென்பதையும் அதனை வார்த்தைகளை விட செயல்களே நிரூபிக்கு மென்றும் ஸ்டாலின் உணரும்படி நான் செய்தேன்.

ஹிட்லரிஸம் இறுதியாக வீழ்த்தப் படும் வரை போராட ரஷ்யா உறுதி கொண்டிருக்கிறது. ரஷ்யர்கள் இயற்கையாகவே சாந்த புருஷர்கள என்றும் ஆனல் தங்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளால் ஆத்திரமுற்ற ரஷ்யரது இயற்கை மனேபாவமே அடியோடு மாறிவிட்ட தென்றும் ஸ்டாலின் என்னிடம் கூறினர்.

**நாஜிகள் தண்டிக்கப் படுவர்.**

சென்ற 2 வருஷங்களில் நிலைமை அளவில்லாத முறையில் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. நாம் தனியாக இல்லை. ஸ்திரமாக பூரண வெற்றி ஏற்படும் வரை போராடுவதெனத் தீர்மானங் கொண்ட பெரிய தேசத்தார்களுடன் நாம் இருந்து வருகிறேம். ஐரோப்பாவில் ஒவ்வொரு தேசத்திலும் ஜெர்மனி யிடம் இதற்கு முன்பு ஒரு போதும் கண்டிராத அவ்வளவு வெறுப்பும் துவேஷமும் ஏற்பட்டிருக்கிறது. வெற்றி ஏற்படும் சமயமே தண்டனையை அனுபவிக்க வேண்டிய காலமாகவுமிருக்கும் (பலத்த கரகோஷம்.)

## விஷ அம்புகள்.

# பொய் வதந்திகள் பற்றி எச்சரிக்கை!

### அவை எதிரிகள் விடுக்கும் விஷ அம்புகள்.

உங்கள் மனதைக் குழப்பவும்
பகுத்தறிவைக் குலைக்கவும்
தவருன வழியில் நீங்கள் நடக்கவும்
தான் இவற்றை பரப்புகிருர்கள்.

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியர்களுக்கு விரோதமாக
தேசியப்போர் முனையை அமையுங்கள்!

# உலகப் போக்கு.

இந்தியா சம்பந்தமாகப் புழுகும் வித்தையில் விசேஷப் பயிற்சி பெற்று விட்டன அச்சு நாடுகளின் ரேடியோக்கள். இவர்கள் உபயோகிக்கும் இயந்திரங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. இவைகளின் எண்ணிக்கையும் அதிகம். அவைகள் எந்த நாட்டிற்குச் செய்திகளைப் பரப்ப வேண்டுமோ, அந்த நாட்டிலிருந்தே அச்செய்தி வெளி வருவதாகச் சொல்லுகிறார்கள். ஐரோப்பாவில் ஜெர்மன் ஆதிக்கத்திற்குட் பட்ட அநேகம் ரேடியோக்கள், தாம் பிரிட்டிஷ் ரேடியோக்கள் என்று சொல்லி ஏமாற்றி, பிரிட்டிஷ் பொது ஜனங்களில் ஏமாந்த கூட்டத்தாரை மேலும் தப்பு வழியில் செலுத்த முயற்சிக்கின்றன. 1940-௵ கோடை காலத்தில் பிரிட்டன் தாக்கப் பட்ட போது தான் இந்தத் தப்பு பிரசாரம் முதல் முதல் ஆரம்பமானது. ஆனால் பிரிட்டிஷாரிடம் இந்தப் பாச்சா பலிக்க வில்லை. இருந்தாலும் 'எறும்பூறக் கல்லுந் தேயும்' என்பதில் ஜெர்மானியர்களுக்கு நம்பிக்கை யுண்டு. எனவே தம் தப்புப் பிரசாரத்தை ஓயாது செய்து கொண்டே யிருக்கிறார்கள்.

சென்ற ஜூன்௴ 21௳ இந்தப் போலி பிரிட்டிஷ் ரேடியோ ஒரு கட்டுக் கதையை அளந்து கொட்டியது. அது இந்தியாவைப் பற்றியது. அது 'நியூ பிரிட்டிஷ்' பிராட் காஸ்டிங் ஸ்டேஷனி லிருந்து வெளி வருவதாகக் கூறியது. அச்செய்தியாவது :—

"எங்கள் ரேடியோவைக் கேட்கிறவர்களுக் கெல்லாம் ஒரு கடுமையான எச்சரிக்கை விடுத்தோம். அதாவது, இந்தியாவை பலாத்காரத்தினுல் தான் ஆள முடியும் என்னும் நிலைமைக்கு வந்துவிட்டோம் என்று குறிப்பிட்டோம்."

பிரிட்டிஷாரின் கருத்து இது தான் என்று பிறர் எண்ண வேண்டு மென்பதற்காகத்தான் இப்படிப்பட்ட செய்திகளைப் பரவச் செய்கிறார்கள். இப்படிப் செய்வதன் நோக்கந் தான் என்ன ? 1. இங்கிலாந்தில் இது பற்றி கருத்து வேற்றுமைகளை உண்டாக்க வேண்டும். 2 ரேடியோவைக் கேட்கிறவர்கள் மனதில் திகிலை யுண்டாக்கவேண்டும். 3. ஜெர்மன் பிரசார வாயிலாகக் கடுமையாகக் குறை சொல்லப் படத் தக்க செயல்களைச் செய்யும்படி அரசாங்கக் கொள்கையின் போக்கை யமைப்பது. இந்தியா சம்பந்தமாக எவ்வளவு அயோக்கியத் தனமாகப் பிரசாரம் நடை பெறுகிறது என்று தெரிந்து கொள்ள, இது ஒன்றே போதுமான சாட்சியமாகும்.

இந்தச் செய்திகளை இந்தியாவி லிருந்தே வெளியிடப் படுவதாக இந்தியர்கள் நம்புவார்கள் என்று எதிரிப் பிரசார நிபுணர்கள் நினைக்கிறார்கள். இதிலிருந்து இந்தியாவை எவ்வளவு துச்சமாக அச்சு நாடுகள் கருதி யிருக்கின்றன வென்று விளங்குகிறது. "ஹிமாலய ரேடியோ" என்னும் பெயரோடு ஒரு ரேடியோ செய்திகளைப் பரப்பியது. உண்மையிலேயே ஹிமாலய மலையிலிருந்து இச்செய்தி வெளியிடப் படுவதாக பிறர் நம்ப வேண்டும் என்னும் காரணத்திற்காக, இமயமலையின் அழகுகளை வர்ணிக்கிறது. ஆனால், 'கெட்டவன் புழுகு எட்டு நாளையில் தெரியும்' என்பது போல, சென்ற 1941-௵ மே௴ 14௳ அதன் வண்ட வாளம் வெளியாகி விட்டது. அந்த ரேடியோவின் ஒலியலை நீளத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக ரோம் ரேடியோ மட்டும் அறிவித்ததே யொழிய, அந்த 'ஹிமாலய ரேடியோ' அறிவிக்கவே யில்லை. "கறடி கற்றவன் இடறி விழுந்தால் அதுவும் ஒரு வரிசை" என்பான். அது போலவே 'ஹிமாலயன் ரேடியோ'வும் ஒரு சமாதானம் சொல்லியது. ஒலியலை நீளம் மாறியதை அறிவிக்காதது பற்றி மன்னிப்புக் கேட்டுக் கொண்டது. இந்த ரேடியோ செய்தி கிடைக்காமல் 10 நிமிஷங்கள் வரை தடுமாறி பிறகுதான் ரோம் ரேடியோ இக்குற்றத்தை கண்டு கொண்ட தென்றும் அதன் பிறகு அது தானுகவே இந்த மாற்றத்தை அறிவித்த தென்றும் சாமர்த்தியமாகக் கூறியது. 'ரோம் ரேடியோ 10 நிமிஷ நேரம் தடுமாறியது என்று 'ஹிமாலய ரேடியோவிற்கு எப்படித் தெரியும்'? ஹிமாலய ரேடியோவின் ஒலியலை நீளம் அதிகப் பட்டிருக்கிற தென்று ரோம் ரேடியோவிற்கு எப்படித் தெரியும் ? இந்த வண்டவாளங்க ளெல்லாம் வெளியான பிறகு 'ஹிமாலய ரேடியோவின்' பேச்சே கிடையாது.

மற்றொரு போலி ரேடியோவின் பெயர், 'அஸாத் ஹிந்த்'. இதுவும் ஒரு முழுப் புரட்டு என்று வெளியாகி விட்டது. 1942-௵ ஆகஸ்ட்௴ 3௳ இது கீழ்கண்ட செய்தியை வெளியிட்டது :—

"சென்னையில் ஐரோப்பியர்கள் தனிமையாகப் போக பயப்படுகிறார்கள். இருட்டில் தம் வீடுகளை விட்டு வெளியே போவ தில்லை."

இந்தியாவில் பெருத்த கலவரமும் குழப்பமும் இருப்பதாகப் பிறர் எண்ணும்படி செய்வது தான் இதன் நோக்கம். உண்மையில் இது வல்ல நிலைமை. வெளி நாடுகளி லிருந்து ஏற்படக்கூடிய பெரும் ஆபத்துக்களுக்கு உள்ளாகி யிருக்கும் இந்தியாவை மேலும் கவிழ்க்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு தான் இப்படிப் பட்ட பகீரத முயற்சிகளை அச்சு நாட்டு ரேடியோக்கள் செய்கின்றன. 'இந்திய எதேச்சைச் சங்க ஒலி' என்னும் பெயரோடும் மற்றும் இது போன்ற ஏமாற்றுப் பெயர்களோடும் தனக்குட்பட்ட ரேடியோக்கள் வாயிலாக டோக்கியோ ரேடியோ பிரசாரம் செய்கிறது. ஜெர்மனியோ, 'இந்திய தேசியக் காங்ரஸ் ரேடியோ நிலையம்' என்ற ஒன்றை சிருஷ்டித் திருக்கிறது. இதன் ஒலியலை நீளமும் நாஜிகளின் 'அஸாத் ஹிந்த்' ஒலியலை நீளமும் ஒரே யளவா யிருக்கிறது. இதை நெடு நாட்கள் நடத்த முடிய வில்லை. ஆகவே, இந்தப் புதிய நிலயத்தை, வெளி நாடுகளிலிருந்து தப்பி வந்து அங்கு சேர்ந்த இந்திய தேசபக்தர்கள் நடத்துகிறார்க ளென்று "அஸாத் ஹிந்த" ரேடியோ அறிவித்தது. இவர்களை 'இந்திய விடுதலை வீரர்கள்' என்று ஹிட்லர் கூறினுர்.

"இந்திய மக்களிடையே பொய் வதந்திகள் பரப்பப் படுகின்றன" வென்று டோக்கியோ ரேடியோ 1942-௵ ஆகஸ்ட்௴ 21௳ அறிவித்தது. தன் பொய் பிரசாரம் வெற்றி பெற்றது என்று கூற வேண்டித் தான் இப்படி அது கூறியது. இது பொய் மூட்டை தான். இதற்கும் முன்னதாக, இந்தியாவிலுள்ள அநேக நகரங்களையும் பட்டணங்களையும் வெடிகுண்டுகளால் நாசம் செய்து விட்டதாகவும் விஷப்பூச்சிகளைப் பெருக்கும் குண்டுகளால் பிரிட்டிஷார் இந்திய மக்கள் அனைவரையுமே ஒழித்து விடுவ தென்று திட்ட மிட்டிருக்கிறார்க ளென்றும் கூறியது. இந்தியாவிற்கு ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பா லுள்ள ஸ்டாக்ஹோம் முதலிய இடங்களி லிருந்து இச்செய்தி கிடைத்ததாக டோக்கியோ ரேடியோ கூறுகிறது. இப்படிப் பட்ட பொய்ப் பிரசாரத்திற்கு இந்திய மக்கள் காது கொடுத்துக் கேட்க மாட்டார்கள்.

### யுத்தச் செலவு.

நாளது மாதம் 9-ம் தேதி பிரிட்டிஷ் நிதி மந்திரி சர் கிங்ஸ்லி உட் 100 கோடிப் பவுன் கடன் வாங்குவதற்கு, காமன்ஸ் சபையின் அனுமதி கோரி ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது அவர் சில புள்ளி விவரங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அவை வருமாறு :—

சென்ற சில வாரங்களாக நாள்தோறும் சராசரி $1\frac{1}{4}$ கோடிப் பவுன் செலவாகிறது. சென்ற ஜூன் மாதம் செலவான தொகையை விட இது 25 லட்சம் அதிகம். சென்ற இரண்டு வருஷங்களாக செலவாகுந் தொகை மிகவும் அதிகப்படுகிறது. இதிலிருந்து, யுத்தத் தளவாட உற்பத்தி எவ்வளவு அதிகமாக உயர்ந்திருக்கிறது என்பதைத் தான் குறிக்கும். 1940-41-ல் செலவிடுவதற் கென்று பிரிட்டிஷ் வரவு செலவுத் திட்டத்தில், 388 கோடி 40 லட்சம் பவுன்கள் ஒதுக்கப் பட்டிருந்தன. நடப்பு வருஷத்திற்கு, 528 கோடி 60 லட்சம் பவுன்கள்



ஒதுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். யுத்தம் நடைபெறுவரும் சென்ற 3 வருஷங்களாக பிரிட்டன் 1 கோடி செலவிட் டிருக்கிறது. கடன் தொகையையும் சமாதான காலத்தில் அரசாங்கத்திற்குச் செலவாகுந் தொகையையும் சேர்த்து மொத்தத்தில் 1210 கோடி பவுன் செலவாகி யிருக்கிறது. இதில் 481 கோடி பவுன் வரிகளாக வசூலிக்கப் பட்டது. இது பற்றி அவர் கூறியதாவது :—

யுத்தப் பொருள் நிலையை இதுவரை சரியான போக்கிலேயே நடத்தி வந்தோம். இதே முறையைப் பின் பற்றி ஏற்றபடி பொருள் நிலையைக் கையாண்டு கொண்டு வருவோமானுல் எதிர்கால நிலைமையை நம்பிக்கையோடு சமாளிக்கலாம்.

### பொருளாதார அற்புதம்.

பிரிட்டிஷ் சர்க்கார் இந்த யுத்தத்தின் பொருட்டு தம் பொருள் பலத்தையும் மூலாதாரத்தையும் எப்படி நிர்வகிக்கின்றார்கள் என்ற ஆராய்ச்சி விரும்பத் தக்கது தான். 1938-ம் வருஷத்தில் மூலாதாரப் பொருள்களில் 5-ல் 1 பங்கு தான் யுத்தத்திற்குப் பயன் படுத்தினுர்கள். ஆனுல் இந்த 3 வருஷங்களுக்குள் ஒரு பொருளாதார அற்புதத்தை பிரிட்டன் செய்து விட்டது. மூலப் பொருட்களில் பாதி, யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கான வழிகளில் செலவாயின. அரசாங்கத்தார் தொழிலாளர்களைக் கட்டுப் படுத்தி விட்டார்கள். அது போலவே மூலப் பொருள்களையும் கட்டுப் படுத்தி விட்டார்கள். அரசாங்கத்தின்னை த் தொழிற் சக்தியும் அளவோ டிருந்தது. இக்காரணங்களால், ஜனங்களுக்கு அவசியம கத் தேவைப் படாத சாமான்களைச் செய்வது நின்று விட்டது. அல்லாமலும் வரியை உயர்த்திய தோடு எல்லா வகைப் பொருள்களும் ஒவ்வொருவரும் இந்த அளவிற்குத் தான் செலவிட வேண்டு மென்று கட்டுப் படுத்தி விட்டார்கள். இது பற்றி 1941-௵ டிசம்பர்௴ 2௳ சர்ச்சில் கூறியதாவது :—

"சென்ற மகாயுத்தம் ஆரம்பமாகி 48 மாதங்களுக்குப் பிறகு எத்தனைப் பேர்கள் தொழில்களிலும், உத்தியோகங்களிலும் படைகளிலும் வேலைகளில் அமைந்திருந்தார்களோ, அந்த அளவிற்கு தற்போதைய யுத்தம் ஆரம்பமான 27-வது மாதத்திலேயே அமைந்துவிட்டார்கள்."

இப்போது ஒரு திட்டத்தை பிரிட்டிஷார் வகுத்திருக்கிறார்கள். இதன்படி பொது ஜனங்களில் பாதிப் பேர் போர்க் களத்தில் போராடிக் கொண்டிருக்க வேண்டும். மற்ற பாதிப் பேர்கள் போர்க் களம் புகுவதற்கு ஆயத்தமா யிருக்க வேண்டும். இத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக வேலை செய்கிறது என்று மிஸ்டர் எர்னெஸ்ட் பிவின் குறிப்பிட்டார். "1942-ம் வருஷம் பிரிட்டனில் உற்பத்தியானதைப் போல, உலகத்தில் வேறெந்த நாட்டிலும் உற்பத்தியான தில்லை" என்று அவர் கூறினுர். மிகுந்த கஷ்டங்களுக்கிடையே தான் பிரிட்டிஷ் உற்பத்திகள் நடக்க வேண்டி யிருந்தது. ஏனென்றால், பள்ளிக்கூடங்களின மீதும் வைத்தியசாலைகள் மீதும் ஈவிரக்க மில்லாமல் குண்டுகளை ஜெர்மன் ஆகாயப் படையினர் வீசி கடும் சேதத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தனர். இந்தக் கஷ்டத்தையும் பொருள்படுத்தாமல் பல வகைகளில் உற்பத்தி நடந்துகொண்டிருந்தது. இவற்றில் ஒன்று தான் சிதறும் முறை. இதுபற்றி 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் சர்ச்சில் என்ன சொன்னுர் தெரியுமா ?

"பிரிஸ்டலில் இருந்த ஒரு பெரிய கம்பெனியை 48 சிறிய பகுதிகளாகப் பிரித்துவிட்டோம். 20, 30, 40 உட்பகுதிகளாகப் பிரிக்கப் பட்ட கம்பெனிகளின் பெயர்களை நான் கூறக் கூடும்."

அதற்கு ஒரு வருஷத்திற்கு முன்பு 1940-ல் பீவர் புருக் பிரபு கீழ்க் கண்டவாறு பிரிட்டிஷ் பொது மக்களுக்கு அறிவித்தார் :—

• சென்ற வருஷத்தில் லண்டனில் செய்யப் பட்ட விமானங்களை விட இவ்வருஷம் ஆகஸ்ட்டு மாதம் முதல் நவம்பர் மாதத்திற் குள்ளாக இரண்டு மடங்கு விமானங்கள் தயாராகி விட்டன.

இப்படியாக, பிரிட்டனின் தளவாட உற்பத்தி எதிர் பார்த்ததை விட மிகவும் அதிகமாக உயர்ந்திருக்கிறது. இங்கிலாந்தி லிருந்து கிளம்பிப் போய்ப் பாராடும் விமானங்களில் 100-க்கு 87 விமானங்கள் இங்கிலாந்தில் கட்டப் பட்டவை வெளி நாடுகளில் உள்ள பிரிட்டிஷ் விமானப் படையிலுள்ள விமானங்களில் முக்கால் பங்கு இங்கிலாந்தில் கட்டப்பட்டன. 1941-௵த்தில் மட்டும் வெளி நாடுகளிலுள்ள போர்க் களங்களுக்கு சுமார் 10,000 விமானங்களை அனுப்பினுர்கள். அங்கே இறக்குமதியான விமானங்களின எண்ணிக்கையைப் போல 4 மடங்கு உற்பத்தியாகி யிருக்கிறது. சென்ற 1942-ம் வருஷம் கோலோன் நகரத்தைத் தாக்கிய 1000 விமானங்களும் பிரிட்டனில் செய்யப்பட்டவை.

வெடி மருந்துகள் உற்பத்தியும் இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது. வருஷந் தோறும் 40,000 பெரிய பீரங்கிகளும், $2\frac{1}{2}$ கோடி தோட்டாக்களும், வெடி மருந்துகளும், கோடிக் கணக்கான சிறு ஆயுதங்களும் உற்பத்தியாகின்றன. இது ஒரு பெரிய வெற்றி தான். இதைக் குறித்து முதல் மந்திரி சர்ச்சில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார் :—

"பிரிட்டன் வாழ்வதற்காக வேண்டிய ஏராளமான ஆயுதங்களைச் செய்யும் போது, கடைசல் பட்டரையிலேயே தொழிலாளர்கள் மயங்கி விழுந்து விடுகிறார்கள்."

சென்ற 1941-ம் வருஷம் செய்து முடிக்கப் பட்ட டாங்கிகளின் எண்ணிக்கையை விட இரண்டு மடங்கும், 1941 பிப்பிரவரியில் செய்யப் பட்டதைப் போல 3 மடங்கும், 1940 ஆகஸ்டில் செய்யப்பட்டதைப் போல 5 மடங்கும் இப்போது அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள்.

### பிரிட்டனின் உயிர் நாடி.

பிரிட்டனின் உயிர் நாடி கப்பல் வியாபாரந் தான். இந்தக் கப்பல் போக்கு வரவுகளைக் கெடுத்து பிரிட்டனைப் பட்டினி போட அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஹிட்லர் வைத்துள்ள கப்பற் படைகளால் முடிய வில்லை. 1941-ல் $12\frac{1}{2}$ லட்சம் டன் வியாபாரம் இங்கிலாந்தில் நடை பெற்றிருக்கிறது. யுத்தம் ஏற்படுவதற்கு முந்திய 3 மாதங்களில் ஏற்றுமதியான யுத்தத் தளவாடங்களை விட இப்போது 4 மடங்கு அதிகமாக ஏற்றுமதி யாகிறது. வியாபாரமோ இரண்டு மடங்கு அதிகரித்தது. இது பற்றி 1942-ம் வருஷம் ஜூன் மாதத்தில் மிஸ்டர் லிட்டில்டன் கூறியதாவது :—

சென்ற 12 மாதங்களில் மட்டும் நாம் நம் யுத்தத் தளவாட உற்பத்தியை இரண்டு மடங்கு அதிகமாகவே செய்து முடித்திருக்கிறோம்.

உற்பத்தி மிகவும் அதிகப் பட்டு விட்டது, ஆனால் பொது மக்களின் உணவுப் பொருள்களுங் கூட அளவெப்படி தான் வழங்கப் படுகின்றன. இந்த அளவு மிகவும் குறைவு தான் என்றாலும் இதை மகிழ்வோடு பொது ஜனங்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஒரு வாரத்தில் ஒருவர் 2 அவுன்ஸ் வெண்ணெய்க்கு மேலாகவோ 2 அவுன்ஸ் தேயிலைக்கு அதிகமாகவோ வாங்க முடியாது. பழங்கள் கிடைக்கவே கிடைக்காது. முழு யுத்தத்தில் இறங்கி யிருக்கும் நாடுகளில் பிரிட்டன் ஒன்று மட்டுந் தான், வருஷங்கள் ஆக ஆக, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதையும் அதிகப் படுத்தி வந்திருக்கிறது. 40 லட்சம் ஏக்கர் நிலத்தில் இப்போது புதிதாகச் சாகுபடி செய்கிறார்கள். இங்கே 120,000 இயந்திர ஏர்களை உபயோகிக்கிறார்கள். உலகிலேயே இயந்திர ஏர்களை இங்கிலாந்தில் உபயோகிப்பதைப் போல வேறெங்கும் உபயோகிப்பதில்லை. தம் தேவைகளில் 3-ல் 2 பங்கு இங்கிலாந்திலேயே தயார் செய்து கொள்ளுகிறார்கள். 55 லட்சம் குடும்பங்கள் தம் தேவைக்கான காய்கறிகளைத் தம் தோட்டங்களிலேயே சாகுபடி செய்து கொள்ளுகிறார்கள். யுத்தத்திற்கு முன்பு கோதுமை பயிரான நிலத்தைப் போல 3-ல் ஒரு பங்கு அதிக நிலத்தில் இப்போது

பயிரிடுகிறார்கள். உருளைக் கிழங்கு மூன்றில் இரண்டு பங்கும், காய்கறிகள் மூன்றில் ஒரு பங்கும் அதிமாகச் சாகுபடி செய்கிறார்கள்.

இங்கிலாந்தில் உடுப்புக்கள் கட்டுப்பாடும் இருக்கிறது. ஒரு வருஷத்திற்குத் தேவையான துணிகளை வாங்கிக் கொள்ள 66 கூப்பன்கள் கொடுக்கிறார்கள். ஒரு சூட் வாங்க 26 கூப்பன்கள் கொடுக்க வேண்டும். ஒரு பெண்ணின் உடுப்பிற்கு 11 கூப்பன்கள் கொடுக்க வேண்டும். சென்ற 3 வருஷங்களாக, இங்கிலாந்து யுத்தத்திற்கு உள்ளாகி யிருந்தும், நாஜிகள் ஆட்சிக்குட்பட்ட நார்வேயைப் போல கடுமையான திட்டங்களுக்கு உள்ளாக வில்லை. இங்கு கொடுக்கப்படும் சூட்டுத் துணியில் 75 பங்கு சீர்மைச் சுண்ணும்பும் பஞ்சும் இருக்கின்றன. ஜெர்மனியிலோ கழிவு துணிகளால் தைக்கப்பட்ட ஒரு ஷர்ட்டின் விலை ரூ. 22-8-0. இந்தப் புதிய திட்டங் காரணமாக 7½ லட்சம் பேர்கள், முன்பு உல்லாச வாழ்வின் தேவைப் பொருட்களைச் செய்து கொண்டிருந்தவர்கள் இப்போது யுத்த உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள் இப்போது யுத்தத் தேவைகளுக்காக 3 லட்சம் டன் யுத்தத் தளவாடங்கள் ஏற்றுமதியாயின. சமாதான காலத்தி லிருந்த வசதிக ளோடு இன்று பிரிட்டன் இல்லை தான். தான் வாழவும் விடுதலை பெறவும் போராடும் எந்த நாடும் இதை விட வசதிக ளோடு இருக்க முடியாது. யுத்தம் முடிந்த பிறகுங் கூட, இதே பிரசினைகளுக்கு பிரிட்டிஷ் ஜனங்கள் உள்ளாக நேரும். இது பற்றி நிதி மந்திரி சர் கிங்ஸ்லி உட் காமன்ஸ் சபையில் கூறியதாவது:—

இன்று நாம் எந்தெந்த பிரசினைகளை வெல்ல வேண்டி யிருக்கிறதோ, அதே பிரசினைகளைத் தான் யுத்தம் முடிந்த சில காலம் வரை எதிர்த்துப் போராட வேண்டி யிருக்கும். யுத்த காலக் கட்டுப்பாட்டு முறைகளை, யுத்தம் முடிந்த பிறகும் கொஞ்ச காலம் வரை அமுலில் வைத்திருக்க வேண்டும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி).

சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவிற்கு வந்த போது வைசிராய் உள்பட நிர்வாக சபையில் 13 அங்கத்தினர்கள் தான் இருந்தார்கள். இவர்களில் 7 பேர்கள் தான் இந்தியர்கள். கிரிப்ஸ் முயற்சி முழு வெற்றி பெற வேண்டு மென்பது தான் எங்கள் ஒவ்வொருவருடைய ஆசை. ஆகவே, நம் நாட்டிலுள்ள பெரிய அரசியல் கட்சியார் பதவி ஏற்றுக் கொள்ள ஜனப் பிரதிநிதிகள் என்னும் முறையில் விரும்புவார்களானால், அவர்களுக்கு இடங் கொடுக்க நாங்கள் அனைவரும், எங்கள் ஐரோப்பிய கூட்டாளிகளும் கூட, பிரியமா யிருந்தோம். சர் கிரிப்ஸ் முயற்சியில் நாங்கள் கலந்து கொள்ளவே யில்லை. ஏனென்றால், அதில் நாங்கள் தலையிட்டால், தப்பர்த்தத்திற்கும் அது இடங் கொடுக்கும். நிர்வாக அங்கத்தினரில் ஒருவராவது, தானே அப்பதவியை வகிக்க வேண்டு மென்று, விரும்பவே இல்லை. நம் நாடு ஏதேச்சை யடைய வேண்டு மென்று மற்றவர்கள் மனம் எந்த அளவிற்கு துடிக்கிறதோ, அதை விட எங்கள் துடிப்பு, கொஞ்சங் கூடக் குறைந்த தல்ல. ஆனால் நாட்டுப் பற்றுடைய இந்தியர்கள் அனைவரும் காங்கிரஸில் மட்டுந் தான் இருக்கிறார்கள் என்று சொல்லப் படுகிறதை நாங்கள் ஒரு போதும் ஒப்புக் கொள்ள முடியாது. இந்தியா மீது பற்றுதலும், அது விடுதலை யடைய வேண்டியதில் அக்கரையும் மற்றவர்களுக் கிருப்பது போலவே, எங்கள் சபையி லுள்ள ஒவ்வொரு இந்திய அங்கத்தினருக்கும் உண்டு. என்றாலும் பொது ஜன உரிமை பெற வேண்டி பலாத்காரத்தி லிறங்க வேண்டு மென்பது எங்கள் கருத் தல்ல; சமரசம் செய்து கொள்வது அவசிய மல்ல என்றும் நாங்கள் கருதவில்லை.

சர் கிரிப்ஸ் முயற்சியை முறித்தது காங்கிரஸ். இதற்கு பல காரணங்கள் கூறுகிறார்கள். இங்கிலாந்தி லுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஒரு வாக்குறுதி தர வேண்டு மென்று, காங்கிரஸ் தலைவர்கள் கோரினார்களாம். இதன்படி, ஒரு மந்திரி சபையின் தீர்மானத்தை இந்திய அரசாங்கத்தார் எப்படி அங்கீகரிப்பார்களோ அது போலவே, தாம் பதவி யேற்று நிர்வாக சபையை அமைத்தால், அதன் தீர்மானத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று கோரினார்களாம். இந்தக் காரணத்தாலும் சமரசப் பேச்சு முறிந்ததாம். இந்தச் சபையோர்கள் செய்யும் தீர்மானத்தை ரத்து செய்து விட மன்னர் பிரானுக்கும் வைசிராயிக்கும் உள்ள விசேஷாதிகாரத்தை ரத்து செய்து விட வேண்டு மென்று அவர்கள் கோரினார்கள். சமரசம் முறிந்து போனதற்கு இது தான் காரணமானால், என் கிராமத்தில் நடந்த ஒரு சம்பவத்தைத் தான் இதற்கு ஒரு உபமானமாகக் கூறுவேன்

எங்கள் கிராமத்தில் ஒரு கடைக்காரன் இருந்தான். அவன் மகன் வயலுக்குப் போயிருந்தான். அங்கே ஒரு விவசாயியின் மகனோடு சண்டை போட்டுக் கொண்டான், விவசாயியின் மகன் சண்டையில் கீழே விழுந்தான்; கடைக்காரன் மகன் அவன் மேலே ஏறி உட்கார்ந்து கொண்டு தன் கையால் அவனைக் குத்திக் கொண்டிருந்தான். ஆனால், அவனும் பெருங் குரலெடுத்து அழுது கொண்டிருந்தான். வழியில் போகிற ஒருவர் 'ஏனப்பா அழுகிறாய்?' என்று கேட்டார். அதற்கு அவன், 'இந்தப் பயல் என்னைக் கீழே தள்ளி என மேலேறி என்னை அடிப்பானே என்று தான அழுகிறேன்' என்றான். "அடே மடையா! இப்போது நீ அவன் மேலே இருக்கிறாயே; ஏன் நீ சந்தோஷமா யிருக்கப் படாது? அவன் உன்னைக் கீழே கொண்டு வர முடியாமல் போகலாமல்லவா?" என்று வழிப் போக்கர் சொன்னார்.

இந்திய அரசாங்கத்தை நடத்த காங்கிரஸ் தலைவர்களுக்குச் சந்தர்ப்பங்கள் கொடுக்கப் பட்டன. எதிர்காலத்தில் ஏதோ ஒரு நிலைமை ஏற்படக் கூடு மென்று அவர்கள் எதிர் பார்த்தார்கள். அந்த நிலைமையில் என்ன செய்வது என்று ஒரு பிரசினையைக் கிளப்பினார்கள். இது பற்றி கருத்து வேற்றுமை முளைத்தது. அதைக் காரணமாகக் கொண்டு கிரிப்ஸ் திட்டத்தை காங்கிரஸ் தலைவர்கள் நிராகரித்தார்கள். தம் நாட்டிற்குத் தொண்டு செய்ய அவர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை அவர்கள் அலட்சியம் செய்து விட்டார்கள். மந்திரி சபைகளின் தீர்மானங்களை, நிராகரிக்க எல்லா நாடு களிலும் விசேஷாதிகாரம் இருக்கிறது. இன்று இங்கிலாந்திலும் இருக்கிறது. பொது ஜனப் பிரதிநிதிகளும் மனிதர்கள் தானே யொழிய கடவுள்கள் அல்லவே. அவர்கள் இன்று செய்யும் ஒரு செய்கை மகத்தம் தவறானது என்று நாளை தெரிந்து, தம் செய்கைக்காக வருத்தப் படவுங் கூடும். இப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில் மந்திரி சபையினரின் தீர்மானத்தை நிராகரிக்க விசேஷாதிகாரம் இருக்க வேண்டியது அவசியம். இது இல்லையானால் நாட்டிற்குப் பெருந் தொல்லைகள் வந்து விடும். அமெரிக்க ஐக்கிய மாகாண அரசியல் திட்டம் மிகவும் கடுமையானது. இதிலும் கூட, அநேக விசேஷாதிகாரங்கள் இருக்கின்றன. இது எழுதப் பட்ட ஒரு அரசியல் திட்டம். இது நிர்வாக சபையின் பெரும்பான்மையோர் நிலைமையை உறுதிப் படுத்துகிறது. நமது மந்திராலோசனை சபை போன்ற அநேக சபைகள் கடுமையான விதிகளுக்குக் கட்டுப் பட்டிருக்க வில்லை. இருந்தாலும், எல்லா இடங்களிலும் நடைமுறைப் பழக்கம் என்று ஒன்று உண்டு. இங்கேயும் அதன்படியே வைசிராய், ஒரு முதன் மந்திரியாகப் பெயரளவிலே தான் இருக்கிறார். தன் சபையி லுள்ள பெரும்பான்மை யோரின் போக்கை ஒட்டித் தான் எல்லாம் நடத்துகிறார். இந்தப் பழக்கம் இருந்து வருவதனாலே, எந்தக் கட்சியாராவது தாம் பதவி ஏற்றுக் கொள்ளும் முன்னதாகவே, இப்படிப் பட்ட வாக்குறுதியை எழுத்து மூலம் தர வேண்டு மென்று கோருவார்களானால், அளவு கடந்த சந்தேகப் பேர்வழிகளாகத் தான் அவர்கள் இருக்க வேண்டும். சாதாரணமாக என்ன செய்ய வேண்டு மென்றால், முதலில் பதவி ஏற்றுக் கொள்ள வேண்டும்; பிறகு, நீங்கள் விரும்புகிறபடி அங்கே நிலைமை இல்லை என்று தெரிந்தால், வெளி யேறப் போவதாகப் பயமுறுத்த வேண்டும். அப்போது தான் உங்கள் நிலைமை பலமாக இருக்கும்.



## வெற்றி வீரர்களே! வருக!



இந்த யதேச்சை பிரஞ்சு நீர் மூழ்கிக் கப்பல் ஜெர்மன் எல்லைக்குள் போய் 4,000 டன் ஜெர்மன் கப்பலை மூழ்கடித்தது. கடலில் போதுமான ஆழம் இல்லாததனால் மூழ்கி வரக் கூட வில்லை. 3 நாட்கள் கடலில் மிதந்து, பிரிட்டிஷ் துறைமுகம் வந்து சேர்ந்தது. கப்பலுக்காவது அதில் போன படைவீரர்களுக்காவது எவ்விதச் சேதமும் கிடையாது. அந்தக் கப்பலில் வெற்றிக் குறியை வரைகிறார்கள்.

(3-ம் பக்கம்—தொடர்ச்சி)

ஜனநாயகத்தில் பரம்பரைப் பற்றுள்ளவர்கள் அமெரிக்கர்கள்; ஆகையால் ஜனநாயக வாழ்வைத் தான் விரும்புவார்கள். அவர்களுடைய நன்மையும் நாகரீகமும் முன்னேறுவதற்கு இது தான் காரணம். இந்த முறையை உலகம் முழுதும் கையாளுவது தான் சரி. இது கோணல் புத்தியினால், வேறு நாடுகளி லிருந்து கொண்டு வரப்பட்ட புதிய அரசாட்சி முறை யல்ல; கட்டுப் பாடுகள் மிகுந்த அரசியல் தத்துவமு மல்ல. இந்தக் கோணல் புத்தி தான் பாஸிசத்தின் உண்மைத் தத்துவம். இந்தத் தத்துவத்தை அடியோடு ஒழிக்கத் தான் நாம் விரும்புகிறோம். நுட்பமான கட்டுப்பாடுகளுக்குள் அமெரிக்கர்களின் வாழ்க்கை நலன்கள் அமைந் திருக்க வில்லை; ஆனால், பரந்த நோக்க முடைய ஜனநாயக வாழ்வில் தான் அடங்கி யிருக்கிறது. உலகிலுள்ள யதேச்சை நாடுகளில் ஆட்சி செலுத்துவது குடியரசா முடியரசா என்பது பற்றி அமெரிக்கர்களுக்குக் கவலை யில்லை. ஆனால், பொது ஜனங்களின் நன்மையின் பொருட்டுத் தான், ஆட்சி நடைபெற வேண்டுமே யொழிய, ஆளுகிறவர்களின் நன்மைக்காக வல்ல என்பதில் தான், அவர்களுடைய அக்கரை எல்லாம்.

தனிப் பட்டவர்களை மதிப்பது என்பது தான் ஜனநாயகத்தின் இரத்தினச் சுருக்கம். யதேச்சையும் மதிப்பும் உள்ள இடத்தில் தான் பொறுப்பு இருக்கும். இனி உலகி லுள்ள நாடுகள் தனித் திருந்து வாழ முடியாது. அது குறுகிய மனப் பான்மையைத் தான் குறிக்கும். எல்லா நாடுகளும் ஒன்றையொன்று சார்ந்து தான் வாழ முடியும் என்னும் உண்மையைச் சமீப கால சம்பவங்களி லிருந்து தெரிந்து கொண்டு, எதிர் காலக் குடியரசுகள் அமையும் என்று எதிர் பார்க்கப் படுகிறது. இந்த யுத்தத்திற்குப் பிறகு ஒரு புதிய சமுதாயம் அமையப் போகிறது. உலக மக்களைப் பொறுத்த பிரசினைகள் அட்லாண்டிக் பிரகடனத்தில் அடங்கி யிருக்கின்றன. இவற்றை உணர்ந்து அதன்படி நடந்து கொள்ள வேண்டுமானால், உண்மை விவரங்களைத் தெளிவாக உணர்ந்து கொண்டு கூட்டுறவோடு வேலை செய்ய வேண்டும். பொது ஜன நன்மைகள் முன்னேற்ற மடைய வேண்டி, இதுவரை நிராகரிக்க முடியாதவை என்று கருதப் பட்ட சில ஆட்சி உரிமைகளை விட்டுக் கொடுக்கும்படி நேரும். இது ஒரு கஷ்டமான காரிய மல்ல. இந்த யுத்தத்தில், நம் சொந்த நலன்களை, பொது நன்மைகளை முன்னிட்டு எந்த அளவிற்குத் தியாகம் செய்திருக்கிறோம் என்று கவனித்தால், தெரியும். அது போலவே, பொது மக்களுக்கு நன்மை ஏற்படுவதா யிருந்தால், நாடுகளும் தம் நன்மைகளை விட்டுக் கொடுக்கத் தான் வேண்டும்.

யுத்தத்திற்குப் பிறகு உலக சமுதாயம் எப்படி அமைய வேண்டு மென்று இப்போது எத்தனையோ எழுதி வருகிறார்கள். இது பற்றி ஆராய்ச்சிகள் வெகுவாக நடை பெறுகின்றன. இவர்கள் முடிவில் எப்படிப் பட்ட திட்டத்தை வகுத்தாலும், அது ரூஸ்வெல்ட் அட்லாண்டிக் பிரகடனத்தில் குறிப்பிட்ட நான்கு வகை யதேச்சைகளுக்கு உட்படும்; நேசநாடுகளின் கூட்டுப் பிரகடனத்திற்கு உட்படும். இவை இரண்டும் சேர்ந்தது தான் நம் கொள்கை. இந்தக் கொள்கைப் படியே நாம் வாழ வேண்டியது அவசியம். இனி ஏற்படப் போகும் உலக அரசியல், ஜனநாயக அரசியலாகத் தான் அமையும்.

# யுத்தத் தளவாட உற்பத்தி.

## பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் திட்டம்.

### எதிர்பார்த்ததை விட அதிக வெற்றி.

1942-ம் வருஷத்திற்குள் 60,000 விமானங்களும், 45,000 டாங்கிகளும், 20,000 விமான எதிர்ப்புப் பீரங்கிகளும், 80,000 டன் வியாபாரக் கப்பல்களும் கட்டி முடிய வேண்டும். 1942-ம் வருஷத்தில், 125,000 விமானங்களும் 75,000 டாங்கிகளும், 35,000 விமான எதிர்ப்புப் பீரங்கிகளும், 1,000,000 டன் வியாபாரக் கப்பல்களும் கட்டி முடிக்க வேண்டுமென்று திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க ஜனநாயகத் தலைவர் ரூஸ்வெல்ட் அந் நாட்டுக் காங்கிரஸ் சபைக்கு 1942-ம் வருஷம் ஜனவரி மீ 6உ அறிவித்தார். இது ஒரு பைத்தியக்காரத் திட்டமாகத் தோன்றலாம்.

பிரான்ஸ் தோல்வியடைந்து வீழ்ந்த போது அமெரிக்கத் தலைவராக ரூஸ்வெல்ட் தான் இருந்தார். இதனால் அமெரிக்காவிற்கும் யநேசநாடுகளுக்கும் அதிர்ஷ்டம் தான். ஏன் என்றால், நாஜிகளும் ஜப்பானும் மேற் கொண்டுள்ள கொடிய கொள்கைகளால், அமெரிக்கா உள்பட உலகம் முழுதுக்குமே ஆபத்து நேரக் கூடுமென்று அவர் தெளிவாக அப்போதே உணர்ந்தார். அமெரிக்கப் பொது மக்களுக்கும் இதை எடுத்துக் கூறினார்.

இதன் பயனாகப் பதிய வேலைகள் ஆரம்பமாயின. 1920-ம் வருஷம் முதல் 1930-ம் வருஷம் வரை எந்த விதமான கப்பல் கட்டுந் திட்டத்தையும் மேற் கொள்ளாத அமெரிக்கா, 1933-37-ம் வருஷங்களில் கப்பல்கள் கட்டுவதற்கு ஏராளமான தொகை அனுமதித்தது. இதற்கு ரூஸ்வெல்டின் செல்வாக்குத் தான் காரணம். இதன் பயனாக அநேகக் கப்பல்கள் தற்கால முறைப்படி திருத்தியமைக்கப் பட்டன. அநேகம் புதிய கப்பல்களும் கட்டப்பட்டன. மறு ஐந்து வருஷங்களில் கப்பல் படைகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகப்பட்டு விட்டது. அநேகம் பெரிய கப்பல்களும் விமானந் தாங்கிகளும் கட்டப் பட்டன.

1940-ம் வருஷம் ஜூன் மீ பிரான்சு தோற்றது. அப்போது தன் நாட்டு மக்களுக்கு ரூஸ்வெல்ட் ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். அதில் அந்த வருஷம் பிரிட்டனும் பிரான்சும் ஏராளமான யுத்தப் பொருள்களுக்கு ஆர்டர் கொடுத்திருந்தும் கூட, அமெரிக்கா யுத்தத் தளவாட உற்பத்தி நாடாக மாறவில்லையென்றும், ஒரு சில தொழிற்சாலைகளில் மட்டுந் தான் யுத்தத் தளவாடங்கள் உற்பத்தி செய்யப்பட்டனவென்றும் குறிப்பிட்டு, உடனே ஏராளமான யுத்தத் தளவாடங்களை அந்நாடு சயாரிக்கா விட்டால், பெரும் ஆபத்திற்குள்ளாக நேருமென்றும் எச்சரித்தார்.

அந்த வருஷம் அந் நாட்டில் சமாதானம் தான் நிலவியது. என்றாலும் இளைஞர்கள் எல்லோரும் இராணுவத்தில் சேர வேண்டுமென்று ஒரு அரசாங்க உத்திரவு பிறந்தது. அதன்படியே பெரும் மகிழ்ச்சியோடு அனைவரும் சேர்ந்தனர். யுத்தத் தளவாடங்களும் ஏராளமாக உற்பத்தியாயின.

1940-ம் வருஷம் செப்டம்பர் மீ ரூஸ்வெல்ட் தூண்டுதலினால், அமெரிக்கக் கப்பற் படையைச் சேர்ந்த 50 நாசகாரிகளை பிரிட்டிஷ் கப்பற் படைக்கு மாற்றினார்கள். இதிலிருந்தே பொது மக்களின் நன்மைக்கு எது வழி என்று தெரிந் திருக்கலாம். பிறகு 1941-ம் வருஷம் ஜனவரி மீ அமெரிக்க கடன் மசோதா நிறைவேறியது. உடனே தளவாட உற்பத்தி பல வகைகளிலும் அதிகப் பட்டது. நாடு முழுதும் அநேக புதிய தொழிற்சாலைகளைக் கட்டினார்கள். விமானங்கள் பீரங்கிகள், குண்டுகள், வெடி மருந்துகள் முதலிய யுத்தத் தளவாடங்களை ஏராளமாகச் செய்தார்கள். புதிய கப்பல் தளங்களும் கட்டப் பட்டன. இந்தத் தொழிற் சாலைகள் நன்றாக வேலை செய்தால் மட்டுந் தான், போர் செம்மையாக நடைபெற முடியும் என்னும் உண்மையைப் பொது ஜனங்கள் நன்கு உணரத் தலைப்பட்டு விட்டார்கள்.

இப்படியாக, பவளத் தீவை 1941-ம் வருஷம் டிஸம்பர் மீ 7உல் ஜப்பானியர்கள் தாக்கிய போது, அந் நிலைமையைச் சமாளிக்க அமெரிக்கா தயாராகத் தான் இருந்தது. அப்போது தான் நாடு முழுதும் மக்கள் உறுதிப்படத் தலைப் பட்டார்கள். இது வரை, ஒதுங்கியிருந்தவர்கள் இப்போது ஒன்று பட்டார்கள். ஆனால் ரூஸ்வெல்ட் திட்டமிட்டபடி நடக்குமா? புள்ளி விவரங்களை இரகசியமாக வைத்திருக்க வேண்டியிருக்கிறது. எனவே, வெளியிடக் கூடவில்லை. என்றாலும், ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்லலாம். 1942-ம் வருஷத்திற்குத் திட்டமிட்டதை விட, அதிகமாகவே உற்பத்தி செய்யப்படும். அமெரிக்காவிலுள்ள எல்லா மோட்டார் தொழிற் சாலைகளிலும் யுத்தத்திற்கான சாமான்களையே உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். சென்ற ஜூலை. ஆகஸ்டு மாதங்களில் மாத மொன்றிற்கு 5,000 விமானங்கள் கட்டி முடிந்திருக்கின்றன.

சில மாதங்களுக்கு முன்பு டெட்ராய்க்கு அருகில் திடலாய்க் கிடந்த ஒரு இடத்தில் போர்த் தொழிற் சாலையைக் கட்டியிருக்கிறார்கள். இதன் நீளம் ½ மைல்; அகலம் ¼ மைல். இந்தக் கட்டிடம் ஒரு மெத்தையுடையது. இதில் 90,000 ஆண்களும் பெண்களும் வேலை செய்கிறார்கள். இரவும் பகலும் இங்கே வேலை நடக்கிறது. நாளொன்றிற்கு 4 மோட்டார் பாமர் விகிதம் கட்டி முடிக்கிறார்கள்.

வெடி மருந்துகள், ஷெல்கள், குண்டுகள், துப்பாக்கிகள், பீரங்கிகள் ஆகியவைகள், திட்டமிடப் பட்டதை விட அதிகமாகவே தயாராகின்றன. புதிய முறையில் தயாரிக்கப்படும் டாங்கிகளும் கூடத் தான்.

ஆகஸ்ட்டு மாதத்தில் மூழ்கடிக்கப் பட்ட அமெரிக்க வியாபாரக் கப்பல்களை விட, கட்டப் பட்ட வியாபாரக் கப்பல்களின் எண்ணிக்கை தான் அதிகம். யுத்த உற்பத்தி வேலைகளில் ஈடுபட்டிருக்கிறவர்களின் எண்ணிக்கை மாதந் தோறும் அதிகப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜனவரி மீ 1உ, 69 லட்சம் பேர்கள் வேலை செய்தார்கள்; ஆனால் ஜூன் மாதத்தில் 125 லட்சம்பேர் வேலை செய்தார்கள். இந்த வருஷக் கடைசியில் 170 லட்சம் பேர்களும் 1943 ம் வருஷக் கடைசியில் 2 கோடிப் பேர்களும் வேலை செய்வார்கள்.

ரூஸ்வெல்ட் வகுத்த திட்டம் மிகப் பெரிது. ஆகவே இதற்கு எல்லை கிடையாது. யுத்தச் சாமான்கள் செய்வதற்கு எந்த அளவிற்கு மூலப் பொருள்கள் கிடைக்கின்றனவோ, அந்த அளவிற்கு யுத்தத் தளவாடங்கள் செய்யப்படும்.



# யுத்த சேத ஜாபிதா.

கீழ்க் கண்டவர்கள் யுத்தத்தில் இறந்து போனார்கள் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்:—

#### கொல்லப்பட்டவர்கள்.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **இந்தியன் ஆர்டில்லெரி.** | | |
| 102487 | கன்னர் | பி. இராமண்ணா. |
| 100615 | லான்ஸ் ஹவில்தார் | வீராசாமி. |
| **ஐ.ஏ.ஓ.சி.** | | |
| ஓ/74159 | சிப்பாய் டிரைவர் | துரைசாமி. |
| ஓ/107688 | சிப்பாய் பிட்டர் | அப்துல் கபூர். |
| ஓ/103654 | ஷெ | டி. என். இராஜு நாயுடு. |
| என் ஒய்.ஏ. | தையற்காரர் | முகமத் ஜமான். |
| ஓ/76483 | சிப்பாய் டிரைவர் | சி. வேலுகுட்டி. |
| ஓ/119266 | சிப்பாய் (இன்ஸ்ட்ருமெண்ட் மெக்கானிக்.) | தாமஸ் டிகாஸ்டா. |
| 13368 | சிப்பாய் | ஷாதாத் கான். |

#### காணாமற் போய் கொல்லப் பட்டவரென்று கருதப் படுகிறவர்.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **ஐ.எம்.எஸ்.** | | |
| | காபிதன் | என். இ. சாரங்கபாணி. |

#### காயப்பட்டவர்.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **ஆர்.ஐ.ஏ.எஸ்.சி.** | | |
| என்.டி/985476 | சிப்பாய் | மணிராம். |

#### காணாமற் போய் யுத்தக் கைதியாகவும் காயப்பட்டும் போனவரென்று கருதப் படுகிறவர்.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **இந்தியன் ஆர்டில்லெரி.** | | |
| 101190 | யு/எல்/நாயிக் | கிருஷ்ணன் நம்பியார். |

#### காணாமற் போய் யுத்தக் கைதிகளானவர்களென்று கருதப் படுகிறவர்கள்

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **இந்தியன் ஆர்டில்லெரி.** | | |
| 101429 | கன்னர் | பாலகிருஷ்ண நாயுடு. |
| 106880 | ஷெ | கே. கோபால். |
| எப்/551 | டபுள்யு. வெய்ட்டர் III | துரைக்கண்ணு. |
| எப்/500 | ஷெ I | கோபால். |
| 101115 | டிரைவர் | கோவிந்தசாமி. |
| எப்/552 | டபிள்யு. வெய்ட்டர். | எம். மதுரை. |
| 101041 | பி/ஏ/நாயிக் பிட்டர் | ஐ. இராஜு. |
| 101425 | ஹவில்தார் கிளர்க்கு 2-வது கிரேட் | சவுரிமுத்து. |

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்.** | | |
| 15467 | ஹவில்தார் | அப்துல் குதூஸ். |
| 17019 | ஷெ | சந்திரப்பிரகாஸ். |
| 16014 | ஷெ | குருமூர்த்தி. |
| 18925 | ஷெ III | ஜி. சி. லிங்கசாமி. |
| 16691 | ஷெ III | ஜி.சி. ரேணுகோபால். |
| 17110 | லான்ஸ் ஹவில்தார் | செல்வராஜ். |
| 17980 | நாயிக் | ஆரோக்கியசாமி. |
| 16501 | ஷெ | செல்லையா. |
| 17278 | ஷெ | சுப்பிரமணியம். |
| 17832 | லான்ஸ் நாயிக் | டேவிட். |
| 16669 | ஷெ | கோவிந்தசாமி. |
| 13934 | ஷெ | கோதண்டபாணி. |
| 11937 | ஷெ | முனுசாமி. |
| 13117 | ஷெ | முனுசாமி. |
| 17973 | ஷெ | துரைசாமி. |
| 17946 | ஷெ | கோவிந்தசாமி. |
| 16536 | ஷெ | கண்ணன். |
| 14948 | ஷெ | முனுசாமி. |
| 17997 | ஷெ | ரஹிமுல்லா ஷெரீப். |
| 16329 | ஷெ | வெங்கடாசலம். |
| 16998 | ஆக்டிங் நாயிக் | ரங்கசாமி. |
| 17953 | ஷெ | பார்த்தசாரதி. |
| 16021 | சாப்பர் | ஆறுமுகம். |
| 60860 | ஷெ | ஐயக் கோனார். |
| 15503 | ஷெ | சின்னக் குழந்தை. |
| 18525 | ஷெ | கோபாலாச்சாரி. |
| 65450 | ஷெ | கோவிந்தசாமி. |
| 13758 | ஷெ | குருவா. |
| 19008 | ஷெ | ஜாஜு. |
| 17968 | ஷெ | ஜோசப். |
| 60778 | ஷெ | கனகையா. |
| 68216 | ஷெ | கந்தசாமி. |
| 17896 | ஷெ | கண்ணன். |
| 19075 | ஷெ | குள்ளன். |
| 16502 | ஷெ | லட்சுமணன். |
| 13962 | ஷெ | மகாதேவன். |
| 60162 | ஷெ | மாணிக்கம் பிள்ளை. |
| 65184 | ஷெ | மொஹிதீன். |
| 60797 | ஷெ | முனிகிருஷ்ணன். |
| 18509 | ஷெ | முசலையா. |
| 19020 | ஷெ | நாகமையா. |
| 65801 | ஷெ | நரசிம்மன். |
| 16492 | ஷெ | உலகநாதன். |
| 16101 | ஷெ | பெருமாள். |
| 18581 | ஷெ | இராஜமாணிக்கம். |
| 19084 | ஷெ | இராஜு. |
| 17504 | ஷெ | இராமசாமி. |
| 65459 | ஷெ | இராமசாமி. |
| 60632 | ஷெ | இரத்தினம். |
| 13290 | ஷெ | சாபு சாஹீப். |
| 16181 | ஷெ | சத்தியநாதன். |
| 18663 | ஷெ | ஷேக் பாச்சா லால். |
| 18582 | ஷெ | ஷேக் மாபூப். |
| 66045 | ஷெ | சிகிரெட்டி ஆதிநாராயணா. |

யுத்த சேத ஜாபிதா—தொடர்ச்சி.

சென்னை சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்—தொடர்ச்சி.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 17922 | சாப்பர் | ஸ்ரீராமுலு. |
| 65269 | ஷை | சுப்பிரமணி. |
| 14221 | ஷை | தாந்தோணி. |
| 60002 | ஷை | வேதமாணிக்கம். |
| 13716 | ஷை | வெள்ளை. |
| 16886 | ஷை | வெள்ளையன். |
| 60782 | ஷை | வெங்கிடராமன். |
| 17290 | ஷை | எல்லையா. |
| 60636 | ஷை | அண்ணாமலை. |
| 18966 | ஷை | அருளப்பன். |
| 60832 | ஷை | அருணாசலம். |
| 60868 | ஷை | செங்கல்ராயடு. |
| 60810 | ஷை | சின்னசாமி. |
| 13901 | ஷை | கோவிந்தராஜு. |
| 17118 | ஷை | ஜெகந்நாதன். |
| 60119 | ஷை | ஜானகிராம். |
| 17975 | ஷை | ஜோசப். |
| 18520 | ஷை | கந்தசாமி. |
| 67343 | ஷை | கண்ணன் நாயர். |
| 60794 | ஷை | கிருஷ்ணமூர்த்தி. |
| 14862 | ஷை | குப்புசாமி. |
| 17836 | ஷை | லட்சிமியா. |
| 18271 | ஷை | லூர்துநாதன். |
| 66120 | ஷை | மாணிக்கம். |
| 18863 | ஷை | முகர் காசிம் சாயபு. |
| 14766 | ஷை | முனியப்பன். |
| 15405 | ஷை | முனிரத்தினம். |
| 60859 | ஷை | முனிசாமி. |
| 17876 | ஷை | முத்துச்சாமி. |
| 13667 | ஷை | நரசிம்மன். |
| 17011 | ஷை | நடேசன். |
| 15462 | ஷை | ராஜு. |
| 60806 | ஷை | ராஜு. |
| 14262 | ஷை | இராமசாமி செட்டியார். |
| 16879 | ஷை | இராமையன். |
| 17860 | ஷை | ரங்கசாமி. |
| 15125 | ஷை | சங்கரையா. |
| 60802 | ஷை | ஷேக் ஜமால். |
| 18955 | ஷை | ஷேக் மலிக் அகமத். |
| 14263 | ஷை | சுப்பராயன். |
| 65166 | ஷை | வேதாசலம். |
| 60475 | ஷை | வீராசாமி. |
| 60789 | ஷை | வேலாங்கண்ணி. |
| 18445 | ஷை | வெங்கடேஸ்வரலு. |

காணாமற்போய், யுத்தக் கைதியானர் என்று கருதப்பட்டு மீண்டும் படையில் வந்து சேர்ந்தவர்.

இந்தியன் இஞ்சினீர்.

இ./112832 ஜமேதார் ஜி. எஸ். ராவ்.

காணாமற்போய், யுத்தக் கைதியானதாகக் கருதப்பட்டு, இப்போது உறுதியாக்கப் பட்டவர்.

ஐ. எம். எஸ்.

எம். செட்./23502 காபிதன் எம். ஜெகராயன்.





உள்ளூர் வாசிகள் மறுச்செய்ய வேண்டாம்!

ஜப்பானியர்களுடைய ஆதிக்கத்தின் கீழிருக்கும் சீன தேசத்தில், வியாபாரத் துறையில், தலைமைப் பதவி முதல் கீழ்தர உத்தியோகம் வரையிலும் இருந்த சீன மக்களை எல்லாம் ஜப்பானியர்கள் விலக்கி விட்டார்கள். தொழிற்சாலை முதலாளிகள், கடை வியாபாரிகள், வேறு உத்தியோகஸ்தர்கள், சுருக்கெழுத்து குமாஸ்தாக்கள், சாதாரண குமாஸ்தாக்கள், முதலியவர்கள்—தெருக்களில் சில்லரைச் சாமான் விற்பவர்கள் கூட—சீனர்கள் யாரும் இப்போது கிடையாது. இவ்வேலைகளை எல்லாம் ஜப்பானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இவை அவர்களுடைய வெற்றிப் பரிசுகளாகப் போய் விட்டன.

ஜப்பானியர்கள் இங்கு வந்தால் இப்படித் தான் நடக்கும். இந்தியாவில் இப்படிப் பட்ட நிலைமை ஏற்படும்படி நீங்கள் விட்டு விடக் கூடாது. நம்முடைய நாட்டுப் பாதுகாப்புகளைப் பலப் படுத்தி உறுதி யாக்குவதற்கு, ஒவ்வொரு ஆண் மகனுடைய பலமும், ஒவ்வொரு பெண் மணியினுடைய ஆதரவும், தேவையா யிருக்கிறது.

ஜப்பானியருக்கு எதிரிடையாக. தேசியப் போர் முனையை அமையுங்கள்


MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு செப்டெம்பர்மீ 18உ, வெள்ளிக்கிழமை [இதழ் 37

## பிரிட்டிஷ் விமானிகளுக்கு அமெரிக்கா பாராட்டு.

இங்கிலாந்தில் மிகக் கடுமையான யுத்தம் நடந்து இரண்டு வருஷங்கள் ஆகி விட்டன. இந்த ஆண்டு விழாவை முன்னிட்டு, அமெரிக்க விமானப் படைத் தலைவரான லெப்டினென்ட் ஜெனரல் எச். எச். ஆர்னால்ட் கீழ்க் கண்ட செய்தியை, பிரிட்டிஷ் விமானப் படை ஸ்டாப் அபீசரான சர் சார்லஸ் போர்டலுக்கு அனுப்பி யிருக்கிறார்.

"இங்கிலாந்து யுத்தத்தில் மிகச் சிறந்த வெற்றி பெற்ற இரண்டாவது ஆண்டு விழா வன்று, பிரிட்டிஷ் விமானிகளாகிய உங்களுக்கு, அமெரிக்க விமானிகளின் சார்பாக வாழ்த்துக் கூறுகின்றேன்."

"1940-ம் ஞு செப்டெம்பர்மீ 15உ உங்கள் விமானிகள் கடற்படையையும் தரைப் படையையும் உதவிக்குக் கொண்டு போய் 185 எதிரி விமானங்களைக் கீழே வீழ்த்தினார்கள்."

"அன்று உங்கள் வீரர்கள் செய்த செயலால், யுத்தத்தின் போக்கே மாறி விட்டது. உலகத்தையே வெல்ல வேண்டு மென்று நாஜிகள் கொண்டிருந்த எண்ணத்தில் மண்ணைப் போட்டீர்கள். நேச நாடுகள் வெற்றி பெறுவதற்கான வழியைக் கோலினீர்கள்."

"எதேச்சையும் வெற்றியும் பெற வேண்டி தம் உயிரை மகிழ்ச்சியோடு கொடுத்த வீரர்களின் நினைவு நாள் இது. இதை எதேச்சையா யுள்ள மக்கள் அனைவரும் கொண்டாடுவார்கள்."

**பதில் செய்தி.** இந்தச் செய்திக்கு பிரிட்டிஷ் விமானப் படைத் தலைவர் சர் சார்லஸ் போர்ட்டல் அனுப்பிய பதில் செய்தியாவது:—

"தங்கள் பெருந் தன்மையான பாராட்டுதலை நாங்கள் பெரிதும் போற்றுகிறோம். அமெரிக்க விமானப் படைகளை இங்கே தருவிப்பது பற்றி நாங்கள் பெருமை யடைகிறோம். ஏற்கெனவே, தம் செயல்களால், அவர்கள் புகழ் பெற்று விட்டார்கள்."

"அவர்களுடைய பலம் ஓங்கி வளர்ந்து வருவதை நாங்கள் மிகுந்த பாராட்டுதலோடு கவனித்துக் கொண்டிருக்கிறோம். இவர்கள் பலத்தோடு, எங்கள் பலமும் ரஷ்ய பலமும் ஒன்று பட்டால், நம் எதிரிகளை, நாம் அடியோடு அழித்து விடலாம்."

---

## எதிரி விமானங்களுக்கு ஏற்ற எதிர்ப்பு.

### பலூன் படைகளின் உபயோகம்.

எதிரி விமானங்கள் வந்து இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள கடற் கரை பட்டணங்களைத் தாழ வந்து தாக்காதபடி தடுக்க வேண்டி, பலூன் படைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். சில இடங்களில் பலூன்களைக் குறித்து பொது ஜனங்கள் மிகவும் பழக்கப் பட்டு விட்டார்கள். இன்னும் சில முக்கியமான இடங்களில் கூடிய சீக்கிரம் இந்த பலூன்கள் பறப்பதைக் காணலாம். சென்ற 3 வருஷங்களாக பிரிட்டிஷ் பலூன் படையைச் சேர்ந்தவர்களில் தலை சிறந்தவர்கள் தான் இந்திய பலூன் படைகளில் இப்போது இருக்கிறார்கள். இந்தியப் படை உத்தியோகஸ்தர்களையும் படையினரையும் கொண்டு இந்த பலூன் படைகளை நடத்த ஏற்பாடுகள் நடை பெறுகின்றன. அப்போது ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களோடு இவர்களும் சம நிலையி லிருப்பார்கள்.

இந்திய கடற்கரை வியாபாரத்திற்கும் இந்த பலூன் படை பாதுகாப்பு அளிக்கிறது. ஆகாய யுத்தத்தில் பலூன் படை முக்கியமானது என்று இப்போது பொதுவாக எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். திரிகோணமலையை ஜப்பானிய விமானங்கள் தாக்கிய போது, பலூன் படைகள், எதிரிகளை விரட்டி யடித்து வெற்றி பெற்றன. இதைக் கண்டு எதிரிகள் பெரிதும் திடுக்கிட்டுப் போனார்கள்.

யுத்தத்திற்கு முன்பு இந்த பலூன் படைகளால் பலனில்லை என்று பொதுவாக நினைத்தார்கள். பெருவாரியாக ஜெர்மானியர்கள் தாக்கிய போது பலூன் படைகள் செய்த அருமையான வேலைகளைக் கண்டு அவர்கள் திகைத்துப் போனார்கள். எனவே, பிரிட்டிஷ் படைத் தலைவர்கள் இந்தப் படையை அதிகப்படுத்த ஆரம்பித்தார்கள்.

பலூன் படையின் முக்கியமான நோக்கம் எதிரி விமானங்களை அழிப்ப தல்ல. ஆனால், தாழப் பறக்காதபடி தடுப்பது தான். வேகமாகப் பறக்கக் கூடிய விமானிக்கு, பலூனுடைய கம்பிகள், கண்ணுக்குத் தெரியாது. கீழே பறந்தால் அதிக அபத்து. மிகவும் உயரத்தில் பறந்தால், குறி தவறுமல் குண்டுகளை எறிய முடியாது. தரைப் படையினரைப் போலவே பலூன் படையினரும் நன்றாகப் பயிற்சி பெற்றவர்கள் தான். அவர்கள் பலூனுக்கு ஆபத்து ஏற்படும் போலிருந்தால், விரைவாக அதன கம்பிகளை அறுத்து விடலாம். உடனே அவர்கள் காலாட் படையினராக மாறி, மிஷின் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் கையாளுவார்கள்.

# டன்கர்க் வீரர் அனுபவங்கள்.

## மன்னரோடு விருந்து உண்டார்.

### பட்டப் பகலில் பெற்ற வெற்றி.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு 24 இந்தியர்கள் வெளி நாடுகளில் போராடுவதற் கென்று தம்மைப் பதிவு செய்து கொண்டார்கள் அவர்களுள் ஒருவர் மிஸ்டர் ஷாஹி. இவருக்குச் சொந்த ஊர் லாகூர். இவர் இப்போது ராயல் விமானப் படை உத்தியோகஸ்தரா யிருக்கிறார். ஜெர்மானியர்களுக்குச் சொந்தமான ப்ரெஸ்ட், டன்கர்க் ஆகிய இரண்டு நகரங்கள் மீதும் விமானங்களி லிருந்து வெடி குண்டுகள் எறிந்த கூட்டத்தாரில் இவரும் ஒருவர். சமீபத்தில் இவர் இங்கிலாந்தி லிருந்து லாகூருக்குத திரும்பி வந்திருக்கிறார். இவர் தன் அனுபவங்களைக் கீழ்க் கண்டவாறு தெளிவாக விளக்கிக் கூறுகிறார் :—

"முழு நிலா ஒளி வீசிக் கொண்டிருந்தது. எங்கள் விமான தளத்தி லிருந்து எங்கள் விமானப் படை கிளம்பியது. இங்கிலாந்தின் கடற் கரையைக் கடந்தவுடனேயே, எதிரிகள் ஆராய்ச்சி வெளிச்சம் எங்கள் கண்களுக்குத் தென்பட்டது. டன்கர்க் நகரத்தி லிருந்து வீசிய ஒளியி லிருந்து, அங்கே விளக்குகளை அணைப்ப தில்லை என்று நான் கருதினேன். எங்கள் விமானப் படையின் கடைசி விமானத்தில் தான் நான் இருந்தேன். எதிரிகளின் ஆராய்ச்சி வெளிச்சம் எங்கள் மீது பட்டது. எங்களைத் துரத்திக் கொண்டு ஒரு எதிரி விமானம் வந்து கொண்டிருப்பதாக எங்கள் விமானத்தின் பின்புரத்தி லிருந்த ஒரு பீரங்கிக் காரர் சொன்னார். உடனே, அதைத் தவிர்க்க வேண்டி யிருந்தது. பளிச்சென்று கீழே பாய்ந்தோம். கடலுக்கு வந்து விட்டோம். மீண்டும் கிளம்பிப் பறந்து டன்கர்க்கின் மீது வெடி குண்டுகளை எறிந்து விட்டு எங்கள் தளத்திற்குத் திரும்பினோம். இது தான் எனக்கு விமானத் தாக்குதலின் முதல் அனுபவம். அப்போது எனக்குக் கொஞ்சம் மன நடுக்கம் இருந்தது.

இரண்டாவது முறையாக ப்ரெஸ்ட் நகரத்தைத் தாக்கினோம். அதுவும் பட்டப் பகலில். அந்தத் துறைமுகத்தில் "ஸ்கார்ன் ஹார்ஸ்ட்," "ஞெய்சினு" என்னும் இரண்டு ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் இருந்தன. இவற்றிற்கு பிரிட்டிஷ் விமானப் படையினர் "சால்மன்," "க்ளச்ஸ்டீன்" என்று புனை பெயர்கள் சூட்டி யிருக்கின்றனர். நாங்கள் பெரும் படையாகத் தான் போனோம். நாங்கள் அங்கே போன போது, ஸ்டர்லிங்சும், ஹலிபாக்சும் அங்கிருந்த யுத்தக் கப்பல்கள் மீது வெடி குண்டுகள் எறிந்து கொண்டிருப்பதைக் கண்டோம். எங்கள் விமானங்களை நடத்திச் சென்ற போர் விமானங்களை, எதிரிப் போர் விமானங்கள் தடுத்தன. எங்களைச் சுற்றிலும் நாய்ச் சண்டை போல் போர் நடந்தது. எதிரிகளின் விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் மிக மிகக் கடுமையாக முழங்கின. இருந்தாலும் எங்கள் படையினர் கொஞ்சங் கூடக் குலையாமல், குறிக்கப் பட்டிருந்த நேரத்தில் வெடி குண்டுகளை எறிந்து விட்டு, அப்படியே திரும்பினோம். நான் கீழே பார்த்தேன். ஒரு கப்பலி லிருந்து ஏராளமாகப் புகை வந்து கொண்டிருந்தது. நாங்கள் எடுத்த படங்களி லிருந்து எங்கள் குறி தவற வில்லை என்று தெளிவாகத் தெரிந்தது. இந்த முறை என் மனம் கலவரப் பட வில்லை. நிம்மதியாகத் தான் இருந்தேன். இது ஒரு நல்ல வேடிக்கையாகத் தான் எனக் கிருந்தது. இது பற்றி நான் பெருமை யடைகிறேன். ஏனென்றால் எங்கள் படைத் தலைவருக்கு இதனால் ஒரு வெகுமதி கிடைத்தது.

நாங்கள் திரும்பி வந்த போது எங்கள் விமானத்தின் பின்புரத்திலும் இரக்கைகளிலும் மற்றொரு பாகத்திலும் 11 துளைகள் இருந்தன. எங்கள் இஞ்சின் தப்பியது தம்பிரான புண்ணியம். டன்கர்க்கைத் தாக்கிய போது, எங்கள் விமானத்தில் 7 துளைகள் தான் ஏற்பட்டன.

நான் இந்தியன் நாஷனல் ஏர் வேஸில் முன்பு இருந்தவன். பிறகு, வட இந்திய விமான சங்கத்தில் கொஞ்ச காலம் உபாத்தியாயராக இருந்தேன். சமீபத்தில் கட்டப் பட்ட லங்காஸ்டர் போன்ற விமானங்களில் எனக்கு நல்ல அனுபவ முண்டு. லங்காஸ்டர் விமானம் ஒன்றில் நான் காபிதனாக இருந்தேன். இந்த விமானத்தில் ஒரு கனடியர் விமான மோட்டியாகவும் நியூசிலந்துக்காரர் ஒருவர் பீரங்கிக் காரராகவும் என்னோ டிருந்தார்கள். பிறகு நான் இங்கிலாந்திற்குப் போய் 19 மாதங்கள் விமானப் படையில் சேர்ந்திருந்தேன்.

**ஆங்கிலேயர்கள் அன்பு.**

என்னிடத்திலும் மற்ற இந்திய விமானிகளிடத்திலும் மிகவும் அன்பாகவே ஆங்கிலேயர்கள் நடந்து கொண்டார்கள். நாங்கள் எங்கு சென்றாலும் சிறந்த வரவேற்புக்கள் தான். நாங்கள் ஒரு சம்பவத்தை மறக்க முடியாது. நாங்கள் வின்சர் மாளிகைக்குப் போனோம். அங்கே மாட்சிமை தங்கிய மன்னர் பிரானும் அரசியாரும் எங்களுக்குத் தேநீர் விருந் தளித்தார்கள். பிரிட்டிஷ் விமான நிலயங்களிலும் மற்றும் நாங்கள் எங்கு சென்றாலும் எங்களை வெகு அன்பாகவே அனைவரும் நடத்தினார்கள். எங்கள் சொந்த ஊருக்கு அப்பால் வெகு தூரத்தி லிருக்கிறோம் என்ற உணர்ச்சியே எங்களுக்கு அப்போது உண்டாக வில்லை. பிரபுக்கள் சபையில் இரண்டு முறை எனக்கு விருந்து அளித்தார்கள். காமன்ஸ் சபைக்கும் சென்றிருந்தேன். அங்கேயும் மிகவும் அன்பாகத் தான் என்னிடம் நடந்து கொண்டார்கள்.

நான் பிரிட்டிஷ் விமானப் படையில் சேர்ந்த போது அந்தப் படையினர் எனக்கு அளித்த வரவேற்பை நான் மறக்க முடியாது. ஸ்ட்ரெய்ட்ஸ் செட்டில் மெண்ட் விமானப் படையில் நான் சேர்ந்து வேலை செய்தது பற்றி மிகவும் பெருமை யடைகிறேன். அந்தப் படையில் ஆங்கிலேயர்களும், நியூசிலந்துக்காரர்களும், கனடியர்களும், ஆஸ்திரேலியர்களும் இருந்தார்கள். அவர்களில் நான் மட்டுந் தான் இந்தியன். அவர்கள் அனைவரும் சகோதர வாஞ்சை யுடனே தான் என்னுடன் பழகினார்கள்.

எதிரிகளுக்குச் சொந்தமான ஆக்ஸ்பர்க் என்னு மிடத்தை சமீபத்தில் என் விமானப் படை பகலில் தாக்கியது. அதில் நான் கலந்து கொள்ள முடியாமல் இந்தியாவிற்குத் திரும்பி விட்டேன். இது ஒன்று தான் எனக்கு வருத்தம்."

இவர் 1940-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் இந்திய விமானப் படையில் சேர்ந்தார். இப்போது இந்திய விமானப் படை உத்தியோகஸ்தராக இந்தியாவிலேயே வேலை செய்கிறார்.



# ஏ மா ந் த சோ ணா கி ரி க ள்.

ஆசை தாசில் பண்ணனும் என்கிறது ; ஆனால் அதிருஷ்டமோ தவசிப் பிள்ளை வேலைக்கே உதவி பண்ணாது என்றொரு பழமொழி இருக்கிறது. அதே போல, ஹிட்லருக்கு இருக்கிற ஆசையோ கடலிலும் பெரிது. ஆனால் அவருக்கு லபித்து இருப்பதோ குட்டையிலும் குறைந்தது.

அந்த மனுஷர் இந்த இரண்டாவது மகா யுத்தத்தை ஆரம்பித்த போது, இந்தப் பூவுலக முழுவதையுமே, அதி விரைவினில் பஞ்சாய்ப் பறக்க அடித்து விடலாம் ; அனைத்திற்கும் தானே ஏக சக்ராதிபனாக இருந்து மகிழலாம் என்று கனவு கண்டிருப்பார். அதற்கு ஏற்றாப் போல், சண்டை ஆரம்பித்த முதல் வருஷத்திற் குள்ளாகவே, ஜெர்மனியின் உருவம் நன்றாகப் பருத்து விட்டது. பல நாடுகள் அவரது பிரமாண்டமான ஆயுத பலந் தாங்கிய படைகளுக்கு முன் சமாளித்து நிற்க முடியாது, முருங்கைக் கிளைகளென முறிந்து முறிந்து விழுந்து விட்டன.

சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு, மற்ற தேசங்கள் எல்லாம் தாம் கொடுத்த வாக்குப்படி, யோக்யமாக நடந்து கொண்டிருந்தன. ஆனால் ஜெர்மனி மட்டும் ரகசியமாகவே, தனது வாக்குக்கு விரோதமாக, மற்றொரு யுத்தத்திற்கு தனனைத் தயார் செய்து வந்திருக்கிறது. இருபது வருட காலமாகவே இந்த வேலை நடந்திருக்கிறது.

இவ்வளவு காலம் இதை ஏன் மற்றவர்கள் கண்டு கொள்ள வில்லை ? முன் கூட்டியே கண்டு பிடித்து ஜெர்மனியை எச்சரித் திருக்கலாமே! இல்லா விட்டால் மற்ற நாட்டினரும் உஷாராக ஆயிருக்கலாமே! என்ற கேள்விகள் எழக் கூடும். ஜெர்மானியர் இப்படி சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டு விட்டு, அந்தக் கையெழுத்துப் போட்ட மசி உலருவதற்கு முன்பாகவே, அயோக்யத் தனமான காரியத்தில் இறங்குவார்கள் என்று யாராவது எதிர் பார்க்க முடியுமா ? அதோடு, அவர்கள் செய்த வேலைகள் எல்லாம் வெகு இரகசியமாகவே நடந்து வந்திருக்கின்றன என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டியது தான். ஆனால் ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்தது முதலே, உலகத்தார்க்கு சந்தேகம் தோன்ற ஆரம்பித்து விட்டது. இந்த பிரமசாரி சும்மா இருக்க மாட்டான் போலிருக்கிறதே ! உலகிலே நிலவும் சமாதானம் எனும் ஓடத்தைக் கவிழ்த்து விட்டு, உலகோரைத் தத்தளிக்க வைப்பான் போலிருக்கிறதே என்று பலர் அபிப்பிராயப் பட்டிருப்பார்கள். ஆனால், நாளாக ஆக காரியம் மிஞ்சிக் கொண்டே வந்து விட்டது. பேச்சு முறையால் ஹிட்லரைத் தட்டிக் கொடுத்து, அவரை ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடச் செய்து, சத்பத்திற்குக் கட்டுப்படச் செய்யலாம் என எண்ணி, சிலர் சில முயற்சிகளைச் செய்தனர். ஹிட்லர் அதற் கெல்லாம் இணங்குபவர் போலவே நடந்து கொண்டார். நடந்து கொண்டார் என்பதை விட நடித்தார் என்று சொல்வதே சரியான வார்த்தையாகும். ஆமாமய்யா ! ஹிட்லர் பெரிய கூத்தாடி தான் ! அவர் ஆடுகிற கூத்தைக் கண்டு இன்று உலகமே திகிலடைந்து கிடக்கிறதே ! தமது வாழ்க்கை நாளுக்கு நாள் கஷ்டமாகி வருவதைக் கண்டு, எத்தனை கோடி நாக்குகள் அவரையும் அவரது கூத்தாடிக் கம்பெனியாரையும் இன்று வசவுகளால் அர்ச்சனை செய்து கொண்டிருக்கும் தெரியுமா ?

ஹிட்லர் வாக்குக் கொடுத்து விட்டார் சேஷ்டை ஒன்றும் செய்வதில்லை என என்று எண்ணி எல்லோரும் சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஹிட்லரோ கூடிய சீக்கிரமே தனது ஸ்வரூபத்தைக் காட்டி விட்டார். காத்திருப்ப தெல்லாம் கழுகு போல் பாய்வதற்குத் தான் என்பதை உண்மை யாக்கி விட்டார். உலக சமாதானம் சீர்குலையத் தொடங்கியது. மெள்ள மெள்ள யுத்தத் தீ உலகெங்கும் பரவ ஆரம்பித்தது. இன்று அது எங்கும் பிரமாதமாக எரிந்து கொண்டிருக்கிறது. இந்தியாவையும் அந்தத் தீ, தனது கோர நாக்கால் நக்கிக் கொடுத்து, நாசத்தை உண்டாக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

ஆனால், இந்த யுத்தத்தை ஆரம்பித்து வைத்த ஹிட்லரும், அவரது சகாக்களும இன்று எப்படி இருக்கிறார்கள் என்று கவனிப்பது ரஸமான தோர் வேலையாகும். உதாரணத்திற்காக, தெருக் கோடியில் இருக்கும் வைக்கோல் போரில் ஒரு பையன் தீ மூட்டுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தத் தீ, வைக்கோற் போரில் மட்டும் பிடித்து எரிந்து கொண்டிருக்கும் வரை பையன் வேடிக்கை பார்த்து, 'ஏ அப்பா ! எவ்வோ உசரம் எரியுதுடா !' என்று மனதிற்குள் ஆனந்தப் பட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால், அந்தத் தீ அருகில் உள்ள அவனது தெருவிற்கும் பாய்ந்து, அவனது சொந்த வீட்டையும் சூழ்ந்து கொண்டு விட்டால், பையனது மனோ நிலைமை எப்படி யிருக்கும் ? அதற்கும், ஹிட்லருடைய தற்கால மனோ நிலைமைக்கும் அதிக வித்தியாசமே இராது.

ஹிட்லருக்கு வயது அதிகமா யிருந்தாலும், சுத்த விளையாட்டுக் காரப் பிள்ளை தான். கூரை வீட்டு மீது நின்று வாணம் சுத்தும் பிள்ளைக்குள்ள மூளை தான் அவருடைய மூளை. எல்லோரும் தவித் திருக்க, எதிரே நின்று தனது சமர்த்தை எண்ணி, இடி இடி என்று சிரிப்பது மனுஷத் தனமா ? அது ராக்ஷஸத் தன மல்லவா ?

இந்த ராக்ஷஸத் தனத்தினால் தான், இன்று ஜெர்மனி முழுவதுமே தன் சொற்படி கேட்டு நடக்கிறது ; தன்னை யாரும் எதிர்த்துப் பேசத் துணிவ தில்லை என்று ஹிட்லர் நினைத் திருக்கக் கூடும்.

வாஸ்தவம் ? ஜெர்மனி முழுவதுமே ஹிட்லருக்காக ஏராளமான தியாகங்கள் செய்திருப்பது உண்மை தான். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள், அது போல, தொட்டிலில் இருந்தே, யூத த்வேஷம், பிரிட்டிஷார் மீதும் ருஷ்யர் மீதும் வெறுப்பு ஏற்படும்படி, ஜெர்மானியருக்கு 'இஞ்செக்ட்' செய்து வந்திருக்கிறார்கள். இருபது வருஷங்களுக்கு முன் தொட்டிலில் கிடந்தவர்கள், இன்று தோள் வலிமை மிக்க சோல்ஜர்களாக வளர்ந்து விட்டார்கள், அர்த்த மற்ற வெறியுடன் விளங்கும் அவர்களை ஹிட்லர் கூசாது போர் முனைக்கு கழுத்தைப் பிடித்துத் தள்ளி வருகிறார். கோடிக் கணக்கில் யுத்த யமனுக்கு அவர்களைக் காவு கொடுக்கிறார். யுத்த ஆரம்ப நாட்களிலே, பெல்ஜியத்திலும், பிரான்ஸிலும், போரிடச் சென்ற இளைஞர்கள், எதிரி லிருந்து எழுந்து வரும் பீரங்கி வெடிகளையும் லக்ஷ்யம் செய்யாது, 'ஹெயில் ஹிட்லர்' என்ற கோஷத்தோடு, முன்னால் சென்று கொண்டிருந்தனர்.

ஆனால், அந்த ஆரம்ப உற்சாக மெல்லாம் வர வர மழுங்கி வருகிறதாம். ஓரிரண்டு வருடங்களிலேயே உலகமே தம் முன்னால் மண்டி போட்டு, மண்ணைக் கௌவப் போகிறது என்ற எண்ணத் தாடு கிளம்பினார்கள் அல்லவா ஜெர்மானிய வீரர்கள் ! அவ்வளவு நம்பிக்கையை ஹிட்லர் அவர்கள் மனதில் எழச் செய்திருந்தார்.

ஆனால்,, வருடங்கள் மூன்று முழுசாகக் கழிந்து விட்டது. இன்னும் யுத்தம் நின்ற பாடில்லை. எங்கோ வாண வேடிக்கை என்று பேசிக் கொண்டிருந்த பெர்லின் நகர வாசிகள், தங்கள் தலைக்கு மேலேயே பிரிட்டிஷாரும், ருஷ்யர்களும் வந்து வாண வேடிக்கையை நடத்திக் காட்டுவதை, பதுங்கு மிடங்களி லிருந்து கேட்க வேண்டிய காலமாகி விட்டது. பிரிட்டிஷார் ஜெர்மனியில் உள்ள ரயில் பாதைகளையும், ரஸ்தாக்களையும் தொழிற்சாலைகளையும் நொறுக்கு நொறுக்கு என்று நொறுக்க ஆரம்பித்து விட்டார்கள். நேச தேசத்தார்க்கு யுத்தத்தை தொடர்ந்து நடத்த சமுத்திரப் பாதைகள் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு, இந்த ரயில், ரஸ்தாக்கள் ஜெர்மானியருக்கு அவசியம். ஆகையினால் தான், அவற்றைப் பிரிட்டிஷ் விமானிகள் நாசம் செய்யத் தொடங்கி விட்டார்கள். மேற்கே இரண்டாவது போர் முனை ஆரம்பமானால், அப்பொழுது ஹிட்லர் அந்த

முனைக்கு அதிகப் படியான உதவியைக் கொண்டு சேர்ப்பது இனி, கொஞ்சம் சிரமமாகத் தானிருக்கும்.

பிரிட்டிஷாரின் குண்டு வீச்சினால், பதினைந்து லக்ஷம் ஜெர்மானியர், வீடு வாசலின்றித் தவிக்கிறார்களாம். அரண்மனை கட்டிக் கொடுக்கிறேன்; அதில் போய் ஆனந்தமாக வசிக்கலாம் என்று ஐயாவை அவர் வசித்து வரும் குடிசையி லிருந்து வெளியேற்றி, அந்தக் குடிசையையும் இடித்துத் தள்ளினானாம் ஒரு பிரகஸ்பதி. அதே காரியத்தைத் தான் செய்திருக்கிறார் ஹிட்லரும். அகண்ட ஜெர்மனியை சிருஷ்டிக்கப் போகிறேன் என்று, அநேக கோடிப் பேர்களை நமனுலகிற்கு அனுப்பி, அழகிய ஜெர்மானிய நகரங்களைப் பாழ் நகரங்களாக மாற்றி வருகிறார் அவர்.

சுமார் பதினான்கு மாதங்களுக்கு முன் ஹிட்லர் ருஷ்யா மீது பாய்ந்த போது, ருஷ்யாவைப் பத்தே வாரங்களில் ஜெயித்து விடலாம் என்று எண்ணியிருந்ததாகக் கூறப் பட்டது. ஆனால், அவரது எண்ண மெல்லாம் சீட்டுகளால் கட்டப் பெற்ற வீடு மாதிரி, நொறுங்கி விழுந்து விட்டன. ஒரு பனிக் கால மாச்சு, இரண்டாவது பனிக் காலம் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது. இன்னும் ரஷ்யாவில் பிடிக்க வேண்டிய பிரதேசமோ ஏராளமாக இருக்கிறது. இதற் குள்ளாகவே, அளவற்ற சேதம் ஏற்பட்டு விட்டது.

இரண்டாவது பனிக் காலம் பூரணமாகத் தோன்றி, உபத்திரவ மளிக்கு முன், பத்திரமான இடங்களில் கொண்டு போய், தன் படைகளை நிறுத்தி வைக்க ஹிட்லர் அரும் பாடு பட்டு வருகிறார். சென்ற பனிக் காலத்தில் தானே, பின்னாலே ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தன அவரது படைகள். அந்தக் கதையைத் திரும்பவும் இவ்வருடம் ஏற்பட விடக் கூடாது என்பது அவருடைய ஆவல்.

அதனால் தான் ஸ்டாலின்கிராட் நகரைத் தாக்க, பல லக்ஷக் கணக்கான படைகளையும், எண்ணற்ற டாங்கிகளையும், எகப்பட்ட விமானங்களையும் அனுப்பியிருக்கிறார். ரொம்ப முக்கியமான நகர மாதலால், பலமாகப் பாதுகாக்க முன்னேற்பாடுகள் செய்திருக்கிறார்கள் ருஷ்யர்கள். ஒவ்வொரு சஜ நிலத்தையும், கடுமையாகப் போரிட்டே ஜெர்மானியர் கைப்பற்ற வேண்டி யிருக்கிறதாம். இந்த நகரின் நீளம் இருபத்திஆறு மைலாம். இந்த நகருக்கு மூன்று திசைகளி லிருந்து ஆபத்து, மணிக்கு மணி அதிகமாகி வருகிறது. வால்கா நதியைக் கடக்கும் ருஷ்யர்களை நாஜி விமானங்கள் வெகுவாகத் துன்பப் படுத்துகின்றன. ஆனாலும் ருஷ்யர்கள் இன்னும் சலியாது அவர்களை தைரியத்தோடு எதிர்த்து வருகிறார்கள் என்று தினசரிச் செய்திகள் கூறுகின்றன.

ஸ்டாலின்கிராட் ருஷ்யர்கள் கைகளில் இருக்கும் வரை, வட காகஸஸில் உள்ள ஜெர்மன் படைகள் பாடு ஆபத்துத் தான். ஏனென்றால், இன்னும் சில நாட்களில், ஸ்டாலின்கிராடிற்கு வடகே, சீதோஷ்ண மாறுதலால், ஒரே சேராக மாறி விடுமாம். தெற்கேயோ, காகஸஸிலே பனி மழை பெய்ய ஆரம்பித்து விடும். பள்ளம், மேடு, ஆறு, குளம் எல்லாம் ஒரே மட்டமாகப் பனிக் கட்டியால் மூடப்பட்டு விடும். இந்த நிலைமையிலே, காகஸஸில் உள்ள நாஜிகளுக்கு உதவி வந்து சேருவது ரொம்ப ரொம்பக் கஷ்டமாகி விடும். அதனால் தான், என்ன ஆனாலும் சரி, ஒரு கைபார்த்து ஸ்டாலின் கிராடைப் பிடித்து விடுவதென நாஜிகள் கங்கணம் கட்டிக் கொண்டு போராடுகிறாப் போலிருக்கிறது.

அதோடு காகஸஸில் கிடைத்த பிடியை விடப்படாதென்றே, கருங்கடல் துறைமுகங்களையும் நாஜிகள் தங்கள் வசமாக்கிக் கொள்ள முயன்று வருகிறார்கள். அதி முக்யமான நோவோ ராஸிஸ்க் என்ற கருங்கடல் துறைமுகப் பட்டினத்தை ருஷ்யர்கள் காலி செய்து விட்டார்கள். அந்தத் துறைமுகத்திற்கு உள்நாட்டி லிருந்து செல்லும் கணவாய்ப் பாதைகளைக் கைப்பற்ற நாஜிகள் போராடி வருகிறார்கள். கொஞ்சம் வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

இதனால் கருங்கடல் வழியாகவும் காகஸஸிற்கு நேராகவே உதவியைக் கொண்டு சேர்க்கலாம். அவர்கள் காகஸஸில் கிரான்ஸில் கிராஸ்னி எண்ணெய் வயல்களை நோக்கி ஒரு நாஜிப் படை முன்னேறிக் கொண்டிருக்கிறது. அப் படைக்கு நல்ல எதிர்ப்பு இருந்து வருகிறது. இதெல்லாவற்றையும் விட, ஸ்டாலின் கிராட் சண்டை தான் முக்யமானது. அது யார் கையி லிருக்கிறதோ அவர்களுக்குத் தான் எதிர்காலத்தில் அதிக சௌகரியம். ராஸ்டாவில் சென்ற வருடம் நடந்ததைப் போல் ஸ்டாலின் கிராடிலே இவ்வருடம் ஒரு அதிசயம் நடக்காது என்று யாரும் தைரியமாகக் கூற முடியாது. ஆகவே மேற்கொண்டு என்ன நடக்கிற தென்று பார்ப்போம்.

இதற் கிடையில், லெனின் கிராட்டிற் கருகிலே ருஷ்யர்கள் முன்னேறித் தாக்கி ஜய மடைந்து வருகிறார்கள். அதே போல, மத்யப் பிரதேசத்திலும் ஜெர்மானியருக்கு ருஷ்யர்கள் தொல்லையளித்து வருகிறார்கள். ஜெர்மானியர் பலமான எதிரிகள் தான். ஆனால் ருஷ்யர்களோ அந்த எதிரிகளையும் தண்ணி காட்ட வல்ல சூரர்களாக இருக்கிறார்கள். அதுவும் நன்மைக்கே!

ருஷ்யா மட்டும் சும்மா இருந் திருந்தால், ஜெர்மானியர்கள் இதற்குள் பிரட்டனிடம் போய் வாலாட்டியிருப்பார்கள். ஆனால் இப்பொழுதோ, ஆப்பைப் பிடுங்கிய குரங்கைப் போல் ஆகி விட்டார்கள். நேச நாட்டினர் இரண்டாவது போர்முனையைத் தொடங்கி, ஜெர்மானியரை வேறு திசையில் திருப்ப ஆரம்பிக்கும் வரை, ருஷ்யா மட்டும் தாக்குப் பிடித்து விட்டால், அப்புறம் நேசநாடுகள் பாடு வேட்டை தான். ருஷ்யாவிற்கு சமாளிக்கும் பலம் இருக்கிற தென்பது இது வரை தெளிவாகி வந்திருக்கிறது. அடுத்த வருஷம் நேச நாட்டினர் நிச்சயம் இரண்டாவது போர்முனையை ஆரம்பித்து வைத்து விடுவார்கள் என்று பெரிய தலைவர்கள் பலர் சொல்லி விட்டார்கள். பிரிட்டன் இப்பொழுது ஒரு நாளைய யுத்தத்திற்கு நூற்று இருபத்திரண்டரை லக்ஷம் பவுன் செலவழித்து வருகிறது. நாளுக்கு நாள் அதன் பலம் அதிகமாகி வருகிறது.

அமெரிக்காவிலே, நூற்றுக்கு ஐம்பதிற்குக் கொஞ்சம் அதிகமாகத் தான் உற்பத்தி நடந்து வருகிறதாம். அதன் முழு உற்பத்தி சக்திப்படி வேலை நடக்க ஆரம்பித்து விட்டால், அதிலிருந்தே நேசநாடுகள் பக்கம் நல்ல காற்று வீசத் தொடங்கி விடும் என்கிறார் தலைவர் ரூஸ்வெல்ட். அந்தக் காலம் வெகு தூரத்தில் இல்லை என்றே தோன்றுகிறது.

ஹிட்லர் இதை யெல்லாம் கேட்டுத் தான் அவசர அவசரமாகத் தன் வேலையை முடிக்கப் பார்க்கிறார் போலிருக்கிறது. ஜெர்மனிக்குத் தான் வெற்றி கிட்டப் போகிறது என்று தனது ராணுவத்தினருக்கு நம்பிக்கை வார்த்தை சொல்லி வருகிறாராம். நீர் மூழ்கிகளில் வேலை செய்யும் சிப்பந்திகள் இந்த விஷயத்தையே சொல்லுகிறார்களாம். இந்த நம்பிக்கையைக் குலைக்க பிரிட்டிஷாரும் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஜெர்மானியரிடம் இப்பொழுது சென்ற வருஷத்தை விட அதிகப் பட்ட நீர்மூழ்கிகள் இருக்கின்றனவாம். அவை நேச தேசக் கப்பல்களுக்கு ஏராளமான சேதம் விளைவித்து வருகின்றன. இந்த நிலைமையை பிரிட்டிஷார் சீக்கிரமே மாற்றி விடக் கூடும்.

பனிகாலம் வருகிறது. இதற்கு ஹிட்லர் நல்ல ஏற்பாடுகள் செய்திருக்கிறாராம். ருஷ்ய நகரங்களுக்கு வெளியே அரண்கள் பல கட்டச் செய்திருக்கிறாராம். சிப்பாய்களுக்கு இவ்வருடம் போதிய உடை அளித்திருக்கிறாராம். வீடுகளும் கட்டச் செய்திருக்கிறாராம். இதோடு, அடுத்த வருஷப் போருக்கும் ஆயத்தங்கள் செய்து வருகிறாராம். ஜெர்மன் மக்களுக்கு நாளுக்கு நாள் மனச் சலிப்பு ஏற்பட்டு வருகிறதாம். உணவுப் பஞ்சம் வந்தால் எந்த தேசத்தார் தான் நிம்மதியாக இருக்க முடியும்?

ஹிட்லரின் வார்த்தையையும், ஜெர்மனியரது பலத்தையும் நம்பிப் போரில் இறங்கினார்கள் ஜப்பானியர்கள். பிறர் தூங்கிக் கொண்டிருக்கும் வரை

(10-ம் பக்கம் பார்க்க.)



# உலகப் போக்கு.

ஸ்டேலின்க்ராட் கோட்டை வாயிலில் கடுமையான போர் நடக்கிறது. செஞ் சேனைகளுக்குப் பின்புறம் வால்கா ஆறு பாய்கிறது. எதிரில் அச்சு நாடுகளின் படைகள். இவற்றின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவற்றோடு செஞ் சேனை, கடும் போராடுகிறது. எதிரிக்கு சில வெற்றிகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அதற்குள் எதிரிகளுக்கு ஏற்பட்ட சேதம் கொஞ்ச மல்ல. இங்கே 12,000 பேர்கள் ஜெர்மானியரும், ருமானியர்களும் இத்தாலியர்களும் மடிந்தார்கள். மிகக் கடுமையாக சோவியத் படைகள் போராடிக் கொண்டிருக்கின்றன. கடைசி ஆள், கடைசி குண்டு உள்ள வரை போராடியே தீர வேண்டு மென்று அவர்களுக்குக் கட்டளை பிறந்திருக்கிறது. இதில், எதிரிக்கு நேரிட்ட சேதத்தைக் குறித்து ஒரு பிரிட்டிஷ் இராணுவ நிருபர் குறிப்பிடுவதாவது:

> “எதிர்பார்த்ததை விட மிகவும் அதிகமாக எதிரி துன்பப்படுகிறார். அவருடைய தேவையை விட மிகக் குறைவான அளவிற்குத் தான், அவர் இதுவரை சாதித்துக் கொண்டிருக்கிறார்.”

ஜெர்மன் படைகளுக்கு மிகுந்த கஷ்டம். சேதமும் மிகவும் அதிகம். இந்த அளவிற்குக் கஷ்டமும் சேதமும் ஏற்படு மென்று அவர்கள் எதிர்பார்க்கவே யில்லை. எவ்வளவு சேதம் ஏற்பட்டாலும் அவ்வளவு சேதத்திற்கும் ஜெர்மன் படைத் தலைவர் வான் பக் தயாரா யிருக்கிறார். ஏனென்றால், அவருக்கு வேறு வகை யில்லை. எப்படியாகிலும் ஒரு முடிவுக்கு அவர்கள் வந்தே தீரவேண்டும். ஆரம்பத்தில் கார்க் காலைப் பிடித்த காலம் முதற் கொண்டே, ஜெர்மானியர்கள் ஒரு முடிவு காண முயலுகிறார்கள். ஆனால், இயல வில்லை. ஒரு பத்திரிகை நிருபரிடம் ஒரு ஜெர்மன் இராணுவ அதிகாரி கீழ்க் கண்டவாறு கூறினார்:—

> “ரஷ்யா முழுதையும் கைப்பற்றி வசப்படுத்திக் கொள்ளுவது முடியாத காரியம் என்பதை இப்போது ஜெர்மன் தலைமை அதிகாரி உணருகிறார். ஆகவே இப்போது கைப்பற்றி யுள்ள எல்லைக்குள், மீண்டும் ரஷ்யர்கள் வந்து கைப்பற்றிக் கொள்ளாதபடி காப்பாற்றிக் கொண்டு, தம் தேவைகளுக்கு ஏற்ற அளவு பொருள்களை கைப்பற்றிக் கொள்ளக் கூடியபடி, நிலப் பகுதிகளை ஜெர்மன் இராஜ்யத்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டு மென்று, நினைக்கிறார். வால்கா ஆற்றிற்குப் பின்புறம் ரஷ்யப் படைகள் பின் வாங்கினாலும் கூட, எந்த விதத்திலும் நமக்கு இலாப மில்லை. சோவியத் இராணுவ வசதிகள் எல்லாம் அடியோடு அழிக்கப் படவேண்டும்; அவை மீண்டும் தலை தூக்காதபடி ரஷ்ய இராணுவத் தொழில்கள் எல்லாம் ஸ்தம்பித்துப் போக வேண்டும். வெளி நாடுகளிலிருந்து பாரசிகம், மர்மான்ஸ்க், ஆர்க்கேஞ்சல் வழியாக வரும் யுத்தத் தளவாட உதவிகளும் தடைப்பட வேண்டும். அப்போது தான் ஜெர்மானியர் நோக்கம் ஈடேறும்.”

இப்போதே ரஷ்யர்களை அடித்து நொறுக்கி சிதறும்படி செய்யா விட்டால், மழைக் காலத்தில் அவர்கள் திரண்டு வந்து நம்மைத் தாக்குவார்கள் என்று அவர் கருதுகிறார். சென்ற வருஷம் இப்படித் தான் செய்தார்கள். இப்போதும் அப்படியே செய்வார்களானால், லட்சக் கணக்கான ஜெர்மன் யுத்த வீரக்கள் இருந்த இடத்திலேயே இருக்கும்படி நேரும். அப்போது, மிகவும் இன்றியமையாததான தளவாட உற்பத்தி ஜெர்மனியில் வெகுவாகத் தடைப் பட்டு போகும்.

### ருஷ்ய விமானப் படை பலம்.

சமீபத்தில் ரஷ்ய விமானப் படைகள் கிழக்கு பிரஷ்யா, போலாந்து, பெர்லின் ஆகிய பகுதிகளைத் தாக்கின. இது ஒரு முக்கியமான கட்டம். ரஷ்யப் போர் முனையில், தன் முழு விமான பலத்தையுங் கொண்டு ஜெர்மன் விமானங்களோடு போராட வேண்டிய இந்தப் பருவத்தில், ரஷ்யன் விமானப் படை இங்கெல்லாம் வந்து தாக்கின என்றால், அதன் பலத்தின் உயர்வைத் தான் அது குறிப்பிடுகிறது. ரஷ்ய விமான தளத்திலிருந்து பெர்லினுக்கும் 800 மைல்கள், கிழக்குப் பிரஷ்யாவிலுள்ள காணிக்ஸ்பர்க்குக்கு 480 மைல், வார்சாவிற்கு 500 மைல். இப்போதுள்ள நெருக்கடியில் ரஷ்ய விமானங்கள் இவ்வளவு தூரம் பறந்து வந்து தாக்கின என்றால், அது அவற்றின் தைரியத்தைத் தான் குறிக்கிறது. ஜெர்மனியின் மேற்குப் பக்கத்தில் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்குவது போல, அவ்வளவு முக்கியமானவை யல்ல இந்தத் தாக்குதல்கள். என்றாலும் இவையும் மிகவும் உபயோகமானவை தான். ஆகவே, சென்ற வருஷத்தைப் போலவே இந்த வருஷமும் இரட்டைத் தீக்கு இடையே ஜெர்மனி இருக்கிறது. ஆனால், சென்ற வருஷத்திய தீயை விட இந்த வருஷத் தீ மிகவும் கடுமையானது. இது ஜெர்மனியர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் இன்னும் அமெரிக்கர்கள் தாக்க ஆரம்பிக்க வில்லை.

* * * * *

### எகிப்திய நிலைமை.

அமெரிக்காவின் பிரசிடென்ட் ரூஸ்வெல்ட். இப்பதவிக்கு இவரோடு போட்டி யிட்டவர் வெண்டல் வில்கி. இவர் அமெரிக்க அரசாங்க சபை எதிர்ப்புக் கட்சித் தலைவர். இவருக்கு மிகுந்த செல்வாக் குண்டு. இவர் சமீபத்தில் பக்தாதுக்கு வந்திருந்தார். அவருக்கு பக்தாதிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் ஒரு வரவேற்பு அளித்தார். அப்போது மிஸ்டர் வில்கி கூறியதாவது:—

> “மேலப் பாலை வன நிலைமையைக் குறித்து எனக்கு முழு நம்பிக்கை யுண்டு. சமீபத்தில் நாம் அங்கே ஒரு சரியான வெற்றி பெற்றோம்.”

இவருடைய நம்பிக்கைக்குக் காரணம் என்ன? சமீபத்தில் நம் கப்பற் படை டோப்ருக்கைத் தாக்கியதும், இப்போது எகிப்திலுள்ள நிலைமையுந் தான். நேச நாடுகளின் பலம் ஓங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தான், இது குறிக்கிறது. செப்டெம்பர் மீ 13உ இரவில் நமது சிறு கப்பல் படையும் சிறு தரைப் படையும், விமானப் படையும் டோப்ருக்கைத் தாக்கின. பிரிட்டிஷ் படைகள் டோப்ருக்கில் இறங்கி, எதிரிகளுக்கு ஏராளமான சேதத்தை உண்டு பண்ணி விட்டுத் திரும்பின. மற்றொரு சிறு படை, டாபா பக்கங்களி லுள்ளதும் எதிரிகள் போக்கு வரவுக்கு உதவுவதுமான பாதைகளை நாசஞ் செய்தது. ரோமெல் எகிப்தைக் கடுமையாகத் தாக்குவதற்கு முன்பு இரவுகளில் எதிரி விமானங்கள் ரோந்து சுற்றுவதில்லை. இப்போது ரோந்து சுற்றுவதில் மிகவும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றன. நம் 8-வது படையின் நிலைமையைக் குறித்த உண்மைத் தகவல்களை அறிந்து கொள்ள, எதிரி இப்போது மிகவும் ஆவலாய் இருப்பதாகத் தெரிகிறது. இதுவரை எந்த வித முடிவிற்கும் வரவில்லை. இன்னொரு முறை எதிரி நம்மைத் தாக்கவுங் கூடும்.

“டைம்ஸ்” பத்திரிகை கீழ்க்கண்டவாறு எழுதுகிறது:—

> ஜெர்மானியர்களுக்குச் சரியான உதை கிடைத்தது. இதைப் பற்றி கொஞ்சங் கூட சந்தேகமே கிடையாது. பிரிட்டிஷ் படைகளின் பக்கங்களில் எதிரிகள் திடீரென்று தாக்கிய போது எதிரிப் படைகளுடன், எல்லா ஆப்பிரிக்கப் படைகளும் சேர்ந்திருந்தன. நம் படைகளில் பலக் குறைவான பகுதி எங்கேனும் இருப்பதாகத் தெரிந்தால் நிச்சயமாக அந்தப் பகுதியில் எதிரிகள் தாக்கி யிருப்பார்கள். அந்தப் படைகள் நம்மைத் தாக்கிய போது அரண் செய்யப் பட்ட கோட்டைகளில் ஒன்றிற் குள்ளாகவாவது புக எதிரிகளால் முடிய வில்லை. எகிப்தியப் போர் முனை இன்னும் இரண்டாந் தர மானதாகத் தான் இருக்கிறது. என்றாலும், இதுவே முதல் தரப் போர்முனையாக வேண்டிய சின்னங்கள் இருக்கின்றன.

## சந்தேகியா யிருங்கள்.

எதுவும் உண்மை என்று தெளிவாகத் தெரிந்தால் அல்லது, சந்தேகி எதையும் நம்பமாட்டான். பொய் வதந்திகள் சம்பந்தப் பட்டவரை, சந்தேகி யாகவே இருங்கள். உங்களுக்குத் தப்பான கருத்துக்களை உண்டாக்க வேண்டி இந்தப் பொய் வதந்திகள் பெரும்பாலும் ஜப்பானி லிருந்து கிளம்புகின்றன.

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியர்களுக்கு விரோதமாகத்
தேசியப் போர் முனையை அமையுங்கள்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு மட்டுமன்றி ரஷ்யாவிற்குங் கூட, எகிப்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் மிகவும் முக்கியமானதாகி விட்டது. எதிரியின் நோக்கத்தை யொட்டிப் பார்த்தால், அது இன்னும் முக்கியமானதாகத் தோற்றுகிறது. இது உலக யுத்தம். இதன் முடிவு, போக்குவரவுப் பாதைகளின் பாதுகாப்பைப் பொருத்திருக்கிறது. எகிப்து இப்பாதைகளில் முக்கியமான இடத்தி லிருக்கிறது. ஆகவே, இயற்கையாகவே இது ஒரு போர்க்களமாகத் தான் இருக்க வேண்டும். பிரான்சின் ஆதிக்கம் சிதைந்து போனதாலும் மத்தியதரைக் கடல் பகுதியில் எதிரி விமான பலம் மிகுந் திருப்பதாலும், எகிப்தின் சிறப்பு குலைந்திருக்கிறது. இந்த நிலைமையைப் பரிகரித்தால், நிலைமை சற்று சீர்ப்படும். ருஷ்யாவிற்கும் இதில் பங்குண்டு.

8-ம் படையோடு "டெய்லி ஹெரால்ட்" பத்திரிகை நிருபர் ஒருவர் இருக்கிறார். அவர் எகிப்திய யுத்தத்தைக் குறித்துக் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்:—

புது எதிர்ப்புக்கு இடங் கொடுக்காதபடி இரண்டு கட்சிகளும் ஒன்றோ டொன்று போட்டி யிட்டுக் கொண்டிருக்கின்றன. என்றாலும் ஆயத்தங்கள் தீவிரமாகச் செய்து கொண்டிருக்கின்றன. சேதப்பட்டு, பந்தோபஸ்தான இடத்திற்குப் பின் வாங்கியுள்ள ஜெர்மன் படைகளை நொறுக்கித் தள்ள, பிரிட்டிஷ் படைகள் கடுங் கோபத்தோடு சந்தர்ப்பத்தை எதிர் நோக்கி யிருக்கின்றன.

எகிப்திய நிலைமையைக் குறித்து சர்ச்சில் விடுத்திருக்கும் அறிக்கையை எகிப்தியப் பத்திரிகைகள் வரவேற்கின்றன.

> யுத்தத்தை நடத்தி நிர்வகிக்கிறவர்கள் மீது பரிபூரண நம்பிக்கை வைக்க வேண்டும்.

என்று குறிப்பிடுகின்றன. "அல் பலாக்" என்பது கெய்ரோவி லிருந்து வெளிவரும் பத்திரிகை. இப் பத்திரிகை இப் பொறுப்பாளிகளைக் குறித்து எழுதுவதாவது:—

"அவர்கள் நிரந்தரமான உஷார் பேர்வழிகள். இடை விடாது கவனமா யிருக்கிறார்கள். இது உறுதி. சில சமயங்களில் இவர்கள் வாயை மூடிக் கொண்டு மௌனம் சாதிக்க வேண்டி யிருக்கிறது. இதற்குக் காரணம் அவர்கள் மேற் கொண்டிருக்கிற கடுமையான பொறுப்புத் தான்."

ரோமலுக்குப் போகும் ஜெர்மன் சப்ளை கப்பல்களை எப்படி பிரிட்டிஷ் நீர் மூழ்கிக் கப்பல்கள் விரட்டிச் சண்டை யிட்டன என்று இப்பத்திரிகை விவரமாகக் கூறுகிறது. மேலும் அப்பத்திரிகைக் கீழ்க் கண்டவாறு எழுதுகிறது:—"இப்படித் தொடர்ந்து தாக்குவார்கள். ரோமல் படைகளின் இரக்கைகளை ஒடிப்பதற்கு இது தான் சரியான வழி".

## ஆராய்ச்சி வெளிச்சக் காரர்களின் அருமையான வேலை
### இந்திய வீரர்களின் போர்த் திறமை

நாலா பக்கங்களிலும் குண்டுகள் விழுந்த வண்ணமா யிருந்தன. இதன் நடுவே ஆராய்ச்சி வெளிச்சக் காரர்கள் தம் விளக்கின் ஒளியைக் கொண்டு ஆகாயத்தில் பறக்கும் எதிரி விமானங்களைக் கண்டு பிடிப்பது தான் இவர்கள் வேலை.

எகிப்துப் போர் முனையில் ஒரு ஆராய்ச்சி வெளிச்சக் கூட்டத்தார் ஒரு நாள் இரவு முழுதும் போராடிக் கொண்டிருந்தார்கள். மறு நாள் பகல் முழுதும் பிரயாணஞ் செய்து மற்றோர் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இதுவும் ஒரு முக்கியமான போர்க் களம். அந்தி வேளை தம் ஆராய்ச்சி விளக்குகளை நாலா பக்கங்களிலும் திருப்பினார்கள். கொஞ்ச நேரத்தில் ஜெர்மன் விமானம் ஒன்று மேலே பறந்து வந்தது. தன் ஆராய்ச்சி விளக்கின் ஒளியைக் கொண்டு இந்தக் கூட்டத்தார் இருந்த இடத்தை நோக்கி வெடிகுண்டுகளை அது வீசியது. அந்தக் குண்டுகள் இவர்கள் இருந்த இடத்தைச் சுற்றிலும் சிதறி விழுந்தன. நம் ஆராய்ச்சி ஒளிக்குத் தப்பி மறைய ஒரு எதிரி விமானம் முயன்றது. உடனே நம் ஆராய்ச்சி வெளிச்சக் கூட்டத்தார் பீரங்கியால் அதைச் சுட்டி வீழ்த்தினார்கள். இது அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதை விட மிகவும் கடுமையான வேலை. இதைக் கண்ட எதிரி விமானங்கள் தப்பி ஓடும் போது 8 மைல்களுக்கு அப்பால் குண்டுகளை எறிந்து விட்டுப் போயின. இந்த வீரர்களை, படைத் தலைவர் பெரிதும் பாராட்டினார்.



## இந்தியாவில் பாரச்சூட் தயாரிப்பு.
### பட்டுப் பூச்சிகளை வளர்க்க ஏற்பாடு.

விமானங்களில் பறக்கும் போது ஏதேனும் ஆபத்து ஏற்படுமானால், தப்பிக் கொள்ள ஒரு வசதி இருக்கின்றது. இதற்கு 'பாரச்சூட்' என்று பெயர். உறுதியான பட்டுத் துணியாலும் பட்டுக் கயிறுகளாலும் தான் இதைச் செய்கிறார்கள். இதை இப்போது இந்திய அரசாங்கத் தொழிற்சாலையிலேயே செய்கிறார்கள். இதன் உருவம் குடை போன்றது. ஆகவே இந்த பாரச்சூட்டை உபயோகிக்க இந்தியப் படைகளுக்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த சென்ற வருஷங் கூட அரசாங்கத்தார் வெகுவாக நினைக்க வில்லை; இந்த வருஷ ஆரம்பத்தில் தான் நினைத்தார்கள். பிரிட்டிஷ் விமானப் படை உபயோகிக்கும் பாரச்சூட்டைக் கண்டு பிடித்த மிஸ்டர் வெஸ்லி இர்வினைத் தருவித்தார்கள். இந்தத் தொழிற்சாலை கட்டி யமைப்பதை இவர் நேரே பார்வை யிட்டார். வெகு விரைவாக வேலைகள் நடந்தன. தொழிற்சாலை ஆரம்பமான சில மாதங்களிலேயே முதல் பாரச்சூட் தயாராகி பரீட்சிக்கப் பட்டு வெளி வந்தது. இப்போது நம் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தக்க அளவிற்கு இவை தயாராகின்றன.

இவற்றை உபயோகிக்கு முன்பு இவற்றை கடுமையாகப் பரீட்சிக்கிறார்கள். 20 வருஷ அனுபவ முள்ள நிபுணர்கள், இந்தியாவில் செய்யப் பட்டுள்ள பாரச்சூட்டுகள் மிகவும் உறுதியானவை என்று கூறி யிருக்கிறார்கள். பாரச்சூட்டின் குடைகள் செய்வதற்கான சுத்தமான இந்தியப் பட்டு, ஏராளமாகக் கிடைக்கிறது. இன்னும் அதிகமாகப் பட்டு தயார் செய்வதற்கு மல்பெரி செடியை அதிகமாக வளர்க்க ஏற்பாடுகள் நடை பெறுகின்றன. இந்த மல்பெரி தழைகளைத் தின்று தான், பட்டுப் பூச்சிகள் வளர்ந்து பெருகுகின்றன.

யுத்த கால முயற்சிகளில் பாரச்சூட்டுகள் செய்வதும் ஒன்று. பிரிட்டிஷார் உதவி யில்லாமலேயே இந்தியாவிலேயே இதைச் செய்வதற்கான நிலைமை ஏற்பட்டு வருகிறது.

மேலும், பாரச்சூட் படைகள், விமானத்தில் பறக்கும் போது தேவையான எல்லாவற்றையும், பெரும்பாலும் இந்தியாவிலேயே செய்து முடிக்கிறார்கள்.

## 6 பீரங்கி டாங்கிப் பயிற்சி.



இது அமெரிக்காவில் செய்யப்பட்ட "லீ" டாங்கி. இதன் கனம் 30 டன். இதில் ஒரு 3 அங்குல பீரங்கியும், 5 மிஷின் பீரங்கிகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன. கனடியப் படையினர் இதை உபயோகிக்கும் முறைகளைப் பயின்று கொண்டிருக்கின்றனர்.

## இந்தியாவில் அரிசி உற்பத்தி:

முன்பு பர்மாவி லிருந்தும், இந்தோ-சீனாவிலிருந்தும், தாய்லாந்தி லிருந்தும் ஏராளமான அரிசி இந்தியாவில் இறக்குமதி ஆனது. இப்போது அது நின்று விட்டது. எனவே இப்போது அரிசிப் பஞ்சம் ஏற்படும் போல் இருக்கிறது. ஆகையால் உணவுப் பொருள் சாகுபடியை அதிகப் படுத்த முயற்சிகள் நடை பெறுகின்றன. இதை முன்னிட்டு விவசாய விற்பனை இலாகா அறிக்கையில் அரிசி விற்பனையைப் பற்றி குறிப்பிட்டுள்ள பகுதியைச் சுருக்கி தனிப்பட வெளியிட்டிருக்கிறார்கள். நெல் விளையும் நாடுகளில் இந்தியா இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது. அப்படி யிருந்தும் ஏராளமான நெல்லும், அரிசியும் இறக்குமதி செய்து 1937-38-ம் வருஷத்தில், 29,530,000 டன் அரிசி இந்தியாவில் உற்பத்தியானது. இதில் 250,000 டன் மட்டுந் தான் ஏற்றுமதி செய்தது; ஆனால், இறக்குமதியானதோ 1,398,000 டன். ஆகவே இந்தியாவிற்குத் தேவைப் பட்டது 30,678,000 டன் தான். இதன் விலை 292 கோடி.

ஆகவே, இந்தியாவிற்குத் தேவையான அளவிற்கு இங்கேயே நெல் சாகுபடி செய்ய வேண்டும். இதற்கு சிறந்த விதைகளை விதைப்பதோடு, மேலான முறையில் சாகுபடி செய்ய வேண்டும். அப்போது தான் சாகுபடி கண்டு முதல் அதிகப்படும். 1938-39-ம் வருஷத்தில், இந்தியாவில் ஒரு ஏக்கரில் 731 பவுண்ட் கண்டு முதலானது. ஆனால், அமெரிக்கா, ஜப்பான், எகிப்து, இத்தாலி முதலிய நாடுகளில் 1936-37-ம் வருஷ முதல் 1938-39-ம் வருஷ வரை சராசரி, வருஷத்திற்கு முறையே 1,481, 2,307, 2079, 3,000 பவுண்டுகள் ஒரு ஏக்கரில் கண்டு முதலாயின.

அன்றியும், சரியான முறையில் பணத்தைப் பயன் படுத்த வேண்டும். சாகுபடி கண்டு முதலானதை விவசாயியே நேர்முகமாக விற்க வேண்டும். அப்போது கொள்முதல் செய்கிறவர்கள் கொடுக்குந் தொகையில் பெரும் பகுதி விவசாயி கைக்கு வந்து சேரும், என்று அந்த அறிக்கை வற்புறுத்துகிறது.

மேலும், விவசாயியின் நன்மையை முன்னிட்டு அரிசி இராசிகளை இன்னும் மேலான முறையில் நிர்ணயிக்க வேண்டியது அவசியம் என்றும், 'அக்மார்க்' திட்டப்படி அரிசியை இராசி பிரிக்க என்ன முறைகள் கையாளப் பட்டன வென்றும், இந்தத் துறையில் எவ்வளவு வெற்றி கிடைத்த தென்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

# யுத்த சேத ஜாபிதா.

யுத்தத்தில் கீழ்க் கண்டவர்கள் இறந்து போனுர்கள் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்:—

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| ஐ.எச்.எஸ். | | |
| 210007 | ஏ/சிப்பாய். | காளி. |
| 83254 | ஷை | எம். ராமன். |
| ஐ.எஸ்.சி. | | |
| ஏ. 7822 | சிக்னல் மான் | கந்தசாமி. |
| ஏ. 5881 | யு/எல்/நாயிக் | மாத வாரியர். |
| ஏ. 5085 | பி/எல்/நாயிக் | வெங்கிடசாமி. |
| ஏ. 5249 | சிக்னல் மான் | டி. சதாநாதன். |
| 17887 | ஷை | டி. எம். கோஷி. |
| 55328 | ஷை | பக்கீர் மீரான். |

காயப் பட்டவர்கள்.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| உதவிப் பயோனியர் படை. | | |
| 189306 | லேபரர் | ஐயப்பன். |
| 189305 | ஷை | கே. காரப்பன். |
| 189450 | ஷை | சங்குண்ணி நாயர். |
| ஐ.ஏ.ஓ.சி. | | |
| ஓ/121185 | ஹவில்தார் கிளார்க் III எஸ். | எம். தாசன். |
| ஐ.எஸ்.சி. | | |
| ஓ. 5119 | எம்/வெய்ட்டர் | ஆரோக்கியசாமி. |
| 26130 | சிக்னல் மான் | எஸ். கிருஷ்ணசாமி. |
| எம்.டி/ 948960 | சிப்பாய். | பி. குருநாதன். |

காணுமற் போய் யுத்தக் கைதிகளானவர்கள் என்று கருதப் படுபவர்கள்.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| சென்னை சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ். | | |
| 14112 | ஹவில்தார் | பாலகுருசாமி நாயுடு. |
| 16781 | ஷை | ஜெல்லி பீடர். |
| 16645 | ஷை | முகமத் அப்துல் ரவூப். |
| 16427 | ஷை | நரசையா. |
| 16867 | ஷை | ஷேக் பகீர். |
| 62420 | நாயிக் | ஜெகராஜ். |
| 16181 | ஷை | கிருஷ்ணன். |
| 12344 | ஷை | மதுரமுத்து. |
| 16534 | ஷை | ரங்கசாமி. |
| 60137 | லான்ஸ் நாயிக் | அந்தோனி சவரை. |
| 60203 | ஷை | கிருஷ்ணசாமி. |
| 60196 | ஷை | நரசிம்மா ரெட்டி. |
| 19220 | ஷை | பரசுராமன். |
| 17865 | ஷை | ஷேக் அகமத். |
| 2016 | ஐ. டி. சமையற் காரர் | சின்னசாமி. |
| 1849 | ஷை | துரைசாமி. |
| 1562 | ஷை | முனுசாமி. |
| 1606 | ஷை | சுப்பிரமணியன். |
| 1644 | பி. டி. சமையற் காரர் | கண்ணி ராஜு. |
| 1599 | பி. மேக்கர் | குப்பையா. |
| 1598 | ஷை | முனுசாமி. |
| 1651 | எம். சமையற் காரர் | மதுரை. |
| 1834 | டபிள்யு/சி | முனுசாமி. |
| 1693 | வண்ணுன் | ரங்கசாமி. |
| 1568 | பெருக்குவோன் | துக்ரா. |
| 19097 | சாப்பர் | அக்பர் அலி. |
| 60951 | ஷை | அல்லா பக்ஷ். |
| 19537 | ஷை | அந்தோனி. |
| 60995 | ஷை | அப்பலசாமி. |
| 61285 | ஷை | அப்பாசாமி. |
| 18655 | ஷை | அப்பாவு பிள்ளை. |
| 19103 | ஷை | ஆறுமுகம். |
| 19928 | ஷை | ஆறுமுகம். |
| 19937 | ஷை | பாலகிருஷ்ணன். |
| 13960 | ஷை | பங்காரு. |
| 62322 | ஷை | பாட்சா. |
| 19921 | ஷை | பாட்சா. |

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| 62247 | சாப்பர் | சின்ன அப்படு. |
| 60970 | ஷை | சின்னக் குழந்தை. |
| 19090 | ஷை | சின்னப்பா. |
| 63542 | ஷை | சின்னப்பன். |
| 60626 | ஷை | சின்னசாமி. |
| 60914 | ஷை | தாஸ். |
| 60967 | ஷை | தேவதானம். |
| 60983 | ஷை | தனபால். |
| 12712 | ஷை | தனராஜ். |
| 60907 | ஷை | துரைசாமி. |
| 62397 | ஷை | கணபதி. |
| 19100 | ஷை | கோபால். |
| 60986 | ஷை | கோவிந்தன். |
| 62395 | ஷை | கோவிந்தன். |
| 60442 | ஷை | கோவிந்தராஜு. |
| 60888 | ஷை | ஜேக்கப். |
| 62349 | ஷை | கருப்பசாமி. |
| 60401 | ஷை | கோட்டையா. |
| 60184 | ஷை | கிருஷ்ணன். |
| 60203 | ஷை | குக்கல ரெட்டி. |
| 19948 | ஷை | குஞ்சன் பிள்ளை. |
| 18979 | ஷை | குப்புசாமி. |
| 60962 | ஷை | குப்புசாமிக் கோனுர். |
| 60965 | ஷை | மானியல். |
| 60153 | ஷை | மாணிக்கம் என்கிற தெய்யன். |
| 60183 | ஷை | மரகத பாண்டியன். |
| 60894 | ஷை | மாரியப்ப செட்டி. |
| 19003 | ஷை | மார்க்கண்டன். |
| 60134 | ஷை | மட்ட எம்மானியல். |
| 17070 | ஷை | முகமத் சவார்கான். |
| 61264 | ஷை | முனுசாமி. |
| 60890 | ஷை | நரசிம்மலு. |
| 19922 | ஷை | நரசிம்மன். |
| 62346 | ஷை | நாராயணு. |
| 13136 | ஷை | நாராயணசாமி. |
| 17405 | ஷை | நடராஜன். |
| 15551 | ஷை | நடேசன். |
| 60515 | ஷை | பெரியசாமி. |
| 62370 | ஷை | பெருமாள் பிள்ளை. |
| 19943 | ஷை | பொன்னுசாமி. |
| 60631 | ஷை | பொன்னுசாமி. |
| 62323 | ஷை | பொன்னுசாமி. |
| 19764 | ஷை | பூராசாமி. |
| 60142 | ஷை | புஷ்பநாதன். |
| 19061 | ஷை | ராகவன். |
| 60978 | ஷை | ராஜகோபால். |
| 62305 | ஷை | ராஜு. |
| 60928 | ஷை | ராமச்சந்திரன். |
| 60175 | ஷை | ராமகிருஷ்ணன். |
| 62209 | ஷை | ராமகிருஷ்ணன். |
| 62207 | ஷை | ராமா ரெட்டி. |
| 60899 | ஷை | ராமு. |
| 19059 | ஷை | சம்பங்கி. |
| 60909 | ஷை | சங்கீத ராவ். |
| 60876 | ஷை | சாந்தப்பன். |
| 18971 | ஷை | சந்யாசி. |
| 60537 | ஷை | சத்தியநாதன். |
| 60918 | ஷை | சவுரிமுத்து. |
| 60190 | ஷை | சுப்பா ராஜு. |
| 62266 | ஷை | சுப்பையா. |
| 60938 | ஷை | சுவாமிக்கண்ணு. |
| 19941 | ஷை | தங்கப்பன் நாயர். |
| 60171 | ஷை | திம்மராயன். |
| 62337 | ஷை | திருநாவுக்கரசு. |
| 63520 | ஷை | தாமஸ். |
| 19924 | ஷை | வேணு. |
| 65991 | ஷை | எல்லையா. |
| ஐ.எச்.சி. | | |
| 63117 | பி.டி. சமையற் காரர். | ஆரோக்கியசாமி. |
| 188794 | எம். சமையற் காரர். | ஆரோக்கியசாமி. |



| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| எச்/85624 | ஏ/சிப்பாய் | சின்னக்குழந்தை. |
| எச்/90589 | ஷை | சூரமணி. |
| 85622 | ஷை | கண்ணன். |
| 85618 | ஷை | குழந்தை. |
| எச்/85621 | ஷை | குட்டப்பெருமாள். |
| எச்/93023 | ஷை | மல்லையா. |
| எச்/90569 | ஷை | பத்மா. |
| எச்/85567 | ஷை | எம். சத்யநாராயண மூர்த்தி. |
| ஐ.ஏ.ஓ.சி. | | |
| ஓ/109517 | எஸ்/எலக்ட் | டி. அருள்தாஸ். |
| ஓ/32441 | எலக்ட்ரிஷியன் | எஸ்.என்.எஸ். பிரகாசம். |
| எம்.டி. | | |
| 504276 | ஷை | சேவியர் அந்தோனி |
| ஓ/122800 | ஹவில்தார் கிளார்க் எஸ். III. | என். பாஸ்கரன். |
| ஓ/123041 | ஹவில்தார் கிளார்க் II. | என். ஆர். சீனிவாசன். |
| ஓ/122825 | ஷை | சி. வி. சுப்பிரமணியன். |
| ஓ/71548 | சிப்பாய் டிரைவர் | சின்னதுரை. |
| ஓ/72634 | ஷை | தேவதானம், பி. |
| ஓ/74559 | ஷை | எம். தேவதாஸ். |
| ஓ/71202 | ஷை | கோவிந்தசாமி. |
| ஓ/75384 | ஷை | மார்க்கசகாயம். |
| ஓ/70880 | ஷை | எம். வி. நாயுடு. |
| ஓ/70903 | ஷை | எஸ். எம். பிள்ளை. |
| ஓ/71561 | ஷை | திருமலை நாயுடு. |
| ஓ/71622 | ஷை | வேலுச்சாமி. |
| எம்.டி. | | |
| 500675 | பிட்டர் | தேவராஜ். |
| எம்.டி. | | |
| 504471 | ஷை | ராமையா. |
| ஓ/31811 | சிப்பாய் பிட்டர் | ஜி. கோவிந்து. |
| ஓ/31820 | ஷை | கே. சத்யநாராயணு. |
| எம்.டி. | | |
| 500936 | டர்னர் | ஹனுமந்து. |
| எம்.டி. | | |
| 500952 | ஷை | லட்சுமணதாஸ். |
| ஓ/134194 | பிட்டர்/ஏ.பி.எல். நாயிக். | கே. புண்யகோடி. |
| ஓ.என்.சி. | | |
| 1047 | லஸ்கர் | டி. கே. ராமகிருஷ்ணன். |
| ஓ/31675 | பிட்டர்/நாயிக் | ஏ. செல்வராஜ். |
| ஐ.எஸ்.சி. | | |
| சி/3333 | எஸ்/மேக்கர் | அம்பியார் கோவிந்தசாமி. |
| ஏ/2755 | பி.ஏ. நாயிக் | பாலகிருஷ்ணன் நாயர். |
| ஓ/3960 | ஐ.டி.சி. | குப்புசாமி. |
| ஏ/5762 | சிக்னல்மான் | எம். ஹரிகிருஷ்ணலு. |
| 15057 | ஷை | ஜெயராம் நாயுடு. |
| ஏ/5146 | ஷை | முருகொண்டா சுப்ப ராவ். |
| 25047 | ஷை | வி. கே. நாராயணன் நாயர். |

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| ஏ/5090 | சிக்னல்மான் | பெரியசாமி. |
| ஏ/3732 | ஷை | ராஜா. |
| ஏ/5261 | ஷை | சிவநாராயண ராம். |
| ஏ/2341 | ஷை | கே. விஸ்வநாதன் நாயர். |
| ஆர்.ஐ.ஏ.எஸ்.சி. | | |
| எஸ்.ஆர்/174542 | ஹவில்தார் கிளார்க். | கே. பி. குமரன் குட்டி நாயர். |
| எஸ்.ஆர்/776803 | லான்ஸ் நாயிக் | பி. செல்லபதி நாயுடு. |
| எஸ்.ஆர்/776789 | ஷை | கே. வி. சுப்பண்ணு |
| எஸ்.ஆர்/765074 | ஷை | பி. வெங்கடரங்கம். |
| என்.டி/934326 | சிப்பாய் | பி. ஜீவரத்தினம். |
| எஸ்.ஆர்/120269 | ஜமேதார் கிளார்க்கு. | டி. எஸ். ராமகிருஷ்ணன். |
| 768153 | கசாப்புக்காரர். | அனுமப்பா. |
| எஸ்.ஆர்/733376 | பி. ஏ. நாயிக். | (ஏ.எஸ்.எம்.) பெருமாள் ராகவ குருப். |
| எஸ்.ஆர்/776808 | பி. எஸ். நாயிக். | (ஏ.எஸ்.எம்.) என். ரங்காராம். |

காணுமற் போனவர்கள்.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| உதவிப் பயனியர் படை. | | |
| 189237 | லேபரர் | ஜி. ஆதையா. |
| 189477 | ஷை | ஆண்டி. |
| 189252 | ஷை | பி. அசரையா. |
| 191295 | ஷை | சின்னப் பையன். |
| 189403 | ஷை | சின்னசாமி. |
| 191135 | ஷை | தேவுடு, பி. |
| 191208 | ஷை | கோவிந்தன். |
| 189243 | ஷை | கே. கண்ணையா. |
| 189211 | ஷை | ஜி. கோட்டையா. |
| 189112 | ஷை | குப்பன். |
| 189174 | ஷை | கே. குட்டன் பிள்ளை. |
| 189208 | ஷை | ஒய். லட்சையா. |
| 191445 | ஷை | வி. நாகபூஷணம். |
| 189387 | ஷை | நந்தன். |
| 191322 | ஷை | பி. கே. நாணு பிள்ளை. |
| 191166 | ஷை | பரமசிவன். |
| 191297 | ஷை | பெரியசாமி. |
| 189187 | ஷை | பிச்சைக்காரன். |
| 191428 | ஷை | பிச்சையா. |
| 191440 | ஷை | பி. போத்தராஜு. |
| 189441 | ஷை | வி. பிரகாசம். |
| 191124 | ஷை | கே. இராகவலு. |
| 189342 | ஷை | இ. ராகவையா. |
| 191286 | ஷை | ராஜகோபால். |
| 191477 | ஷை | ராஜு. |
| 191228 | ஷை | கே. ராமுலு. |
| 191158 | ஷை | ஏ. ராமையா. |
| 189372 | ஷை | எம். ருக்மாங்கத ராவ். |

| படை நெம்பர். | வேலே. | பெயர். |
|---|---|---|
| 189271 | லேபர், | டி சாமுவேல். |
| 191316 | ஷை | சங்கரன். |
| 189360 | ஷை | எஸ்..சத்யம். |
| 189430 | ஷை | டி. சுந்தரராவ். |
| 189377 | ஷை | தலுபுலு. |
| 191170 | ஷை | தங்கையாத் தேவர். |
| 191142 | ஷை | எம். வீராசாமி.. |
| 189476 | ஷை | எம். வெங்கண்ணு |
| 189254 | ஷை | டி. வெங்கடேஸ்வரலு. |
| 191259 | ஷை | ஒய்யிரு, எம். |
| 189230 | ஷை | எம். எல்லேயா. |
| 189266 | ஷை | கே. எசுரத்தினம். |
| 191400 | ஐ.டி. சமையற்காரர். | மாணிக்கம். |
| 191020 | ஏ. காங்கர் | ஏ. சாம்பமூர்த்தி, |
| 191027 | ஐ.டி. சமையற்காரர். | தங்கவேலு. |
| ஐ.ஜி.எஸ்.சி. | | |
| ஜி.எஸ்.எப்/1422 | சமையற்காரர். | பி. டி. அருள்தாஸ். |
| ஜி.எஸ்.எப்/174 | பெருக்குவோர். | பாபு. |
| ஜி.எஸ்.எப்/19122 | வண்ணுர் | கங்கையா. |
| ஜி.எஸ்.எப்/17529 | ஷை | மாணிக்கம். |
| ஜி.எஸ்.எப்/17528 | ஷை | ராமசாமி. |
| ஜி.எஸ்.எப்/7077 | சமையற்காரர் | கோபீயா. |
| மெஸ் III. | | |
| ஜி.எஸ்.எப்/5373 | மசாலிச்சி | கண்ணன். |
| ஜி.எஸ்.எப்/5374 | ஷை | பாவாடை. |
| ஜி.எஸ்.எப்/8098 | ஷை | ஷண்முகம். |
| ஜி.எஸ்.எப்/4230 | தையற்காரர். | ஏ. கே. ராகவன். |

**காணுமற் போனு ரென்று கருதப்பட்டு மீண்டும் படையில் வந்து சேர்ந்தவர்.**

| ஐ.எச்.சி. | | |
|---|---|---|
| 190809 | வண்ணுர் | நாராயண். |

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

யில் அட்டகாசம் செய்தார்கள். இப்பொழுது அதிகமாக வாலாட்டக் காணும். ஆனுலும் அவர்கள் சும்மா இல்லே. எங்காவது ஒரிடத்தின் மீது பாய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிருர்கள். அது சைபீரியா மீதா, இந்தியா மீதா, ஆஸ்திரேலியா மீதா, தெரிய வில்லே.

ஆனுல், ஸ்டாலின்கிராட் விழுந்ததும், ஜப்பான் ருஷ்யா மீது பாய ஒப்புக் கொண்டிருக்கிறது என்று சொல்லுகிருர்கள். ஸ்டாலின்கிராட் சீக்கிரமே விழுந்து விடும் என்று ஹிட்லரும், ஜப்பானிய டோஜோவும் எண்ணி யிருந்தார்கள் போலிருக்கிறது. ஆனுல் ஸ்டாலின் கிராட் யுத்தம் இத்தனே நாள் வரை இழுத்து அடித்து விட்டது. சைபீரியாவிலே பனி காலம் ஆரம்பமாகப் போகிறது. ஆகவே ஹிட்லரும், டோஜோவும் அசல் ஏமாந்த சோணகிரிகளாக ஆகி யிருக்கிருர்கள் என்பதில் சந்தேகமே யில்லே. இந்த சோணகிரிகளின் சோம்பேறித் திட்டத்தால், சாதுவான ஜனங்களுக் கெல்லாம் பேரவஸ்தையாக இருக்கிறது. அதை நினைத்தால் தான் மனதிற்குக் கஷ்டமாக இருக்கிறது.


# பாரத நாட்டின் பயிர்ச் செழிப்பு...



ஐரோப்பாவில் ஜெர்மானியர் கைப் பற்றி யுள்ள நாடுகளிலும் சரி, சீனுவில் ஜப்பான் கைப் பற்றி யுள்ள நாடுகளிலும் சரி, செழிப் போங்கி செங்கதிர் பூத்து நிற்கும் விளே நிலங்களே யெல்லாம் பகைவர்கள் அறுவடை செய்து அனுபவித் தாண்டு வர, அந்தத் தேச மக்கள் கண்ணீரும் கம்பலேயுமாக பட்டினி கிடந்து மடிகிருர்கள். என்னே கோரக் காக்ஷி! விவசாயத்தையே ஜீவ மூலாதாரமாகக் கொண்டுள்ள நம் தாய் நாட்டிற்கும் இது போன்ற கொடிய கதி நேர, நாம் கண்டு சகித்திருப்பதா? நீர் வளம் நில வளம் மிகுந்து, சகல நற் சீர்களுடனும் விளங்கும் இத் திரு நாடு, எதிரிகள் கண்களே மிகக் கவர்ந்து நிற்பதில் அதிசய மொன்று மில்லே. பசப்பு வார்த்தைகளால் நம்மை மதி மயக்கி அவர்களுக்குப் பணியச் செய்யப் பார்க்கிருர்கள் ஜப்பானியர்கள். உஷார்! ஏமாந்து மட்டும் போகாதீர்கள்! எல்லோரும் கையும் மெய்யு மொத்து, நம் பூரண பலத்துடன் இங்குள்ளர்களுக்குச் சரியான பாட மொன்று கற்பிப்போம். இவர்களே இங்கு நுழைய விட்டோமானுல், நம் பெண்டிர் பிள்ளேகளின் கதி, முற்றும் பட்டினி முழுப் பட்டினி யல்லோ ஆகி விடும்!

**ஜப்பானியருக் கெதிராக**
**தேசீயப் போர்**
**முனையை**
**அமையுங்கள்.**




Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு செப்டெம்பர்மீ 25உ, வெள்ளிக்கிழமை [இதழ் 38

## இங்கிலாந்தில் கப்பல் கட்டும் வேகம்.

### இருட்டிலும் குண்டு மாரியிலும் வேலே.

கடற்படையைச் சேர்ந்த 3-வது லார்ட் வைஸ் அட்மிரல் டபுள்யு. எப். வேக் வாக்கர். இவர் சமீபத்தில், அமெரிக்காவிற்கு ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். அப்பொழுது இங்கிலாந்தில் . கப்பல் கட்டும் முயற்சி எந்த அளவி லிருக்கிற தென்று தெரிவித்தார்

வியாபாரக் கப்பல்களேக் கட்டி முடிக்க 4 மாதங்கள் ஆகின்றன. அவற்றை கடலில் மிதக்க விட 3 மாதங்கள் ஆகின்றன. இதன் பொருட்டு அமெரிக்காவில் செலவாவதில் ஒரு பாதித் தொகை தான் இங்கிலாந்தில் செலவாகிறது. வேகமாகப் போகும் காவல் படகுகளே இப்போது உலகம் முழுவதும் கட்டுகிருர்கள். இவற்றிற்கான பாகங்களேயும் இயந்திரங்களேயும் பிரிட்டனி லிருந்து அனுப்புகிருர்கள்.

கப்பல் கட்டும் வேலேகளில் ஈடுபட்டிருக்கிறவர்களில் பாதிப் பேர்கள் இப்போது பழுது பார்க்கும் வேலே செய்கிருர்கள். 25,000 இடங்களில் யுத்தக் கப்பல்களேப் பழுது பார்க்கவும் இணைக்கவும் வேண்டி யிருந்தது. அன்றியும், மொத்தத்தில், 14 கோடி டன் வியாபாரக் கப்பல்களே அதாவது 35,000 கப்பல்களேப் பழுது பார்த்துத் தயாராக்கி யிருக்கிருர்கள். டைன், க்லேட் என்னும் இடங்களி லுள்ள கப்பற் கட்டும் தொழிற்சாலேகள் குறுகியவையா யிருக்கின்றன. போதுமான அளவிற்கு அவகாசமும் தொழிலாளர்களும் இல்லே. அதனுல், வேறிடங்களிலும் கப்பல் கட்டும் தொழிற் சாலேகளே ஏற்படுத்த முடிய வில்லே. இரவுகளில் விளக்குள் வைப்பதற் கில்லே. குண்டு மாரி அடிக்கடி பெய்து கொண்டிருக்கிறது. இத்தனேக் கஷ்டங்களுக்கு இடையே, நாம் செய்திருக்கும் வேலே பெரிதும் பாராட்டத் தக்கது தான்.

## கடற்படை உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பள உயர்வு

இந்திய கப்பற் படை உத்தியோகஸ்தர்களின் சம்பளம் அலவன்ஸ் ஆகியவை பற்றிய விதிகளில் சில மாறுதல்கள் அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதல் அமுலுக்கு வரும். கமிஷன் பெற்ற உத்தியோகஸ்தர்களுக்கும், வாரண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் மிகுந்த சாதகங்கள் இதனுல் உண்டாகிறது. கப்பல் படையைச் சேர்ந்த மற்றவர்களுக்கு இந்த வருஷ ஆரம்பத்திலேயே தகுந்தபடி சம்பள உயர்வு கொடுக்கப் பட்டது.

கமிஷன் உத்தியோகஸ்தர்களுக்குக் கிடைக்கக் கூடிய சாதகங்களே மூன்று தலைப்புக்களின் கீழ் குறிப்பிடலாம்:—

இவர்கள் கலியாண மாகாதவர்களாயிருந்தால், அவர்களுடைய சம்பளத்தில் 100-க்கு 5 விகிதமும், கலியாணம் ஆனவர்களா யிருந்தால் 10 விகிதமும் வீட்டு வாடகை கொடுக்கப் படும்.

தம் நாட்டை விட்டு வெளி நாடுகளில் வேலே பார்க்கிறவர்களுக்கு, வெளி நாட்டுச் சம்பளத்திற்கு ஈடான ஒரு அலவன்ஸ் கொடுக்க ஏற்பாடாகி யிருக்கிறது.

தற்போ துள்ள விதிப்படி கரையி லுள்ள உத்தியோகஸ்தர்கள் கரை அல்வன்ஸ் என்று ஒரு தொகை பெறுகிருர்கள். கப்பலிலேயே இருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு இது கிடைக்காது. இந்த வேற்றுமை இனி கிடையாது. அடுத்த மாதம் முதல் புதிய திட்டப் படி தம் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளுவதாக இந்த உத்தியோகஸ்தர்கள் பதிவு செய்து கொள்ளலாம். இந்தப் புது திட்டப்படி கரை அலவன்ஸ் என்பதே இல்லாமற் போய் விடுகிறது. என்றுலும், அவர்கள் வருவாய் பாதிக்கப் படாது. அதாவது, கப்பலில் உள்ள எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் உண்மையிலேயே சம்பள உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று தான் அர்த்தம்.

உதாரணமாக ஒரு சப்-லெப்டினெண்ட் கலியாணமாகா திருந்தால் ரூ. 455-க்கு குறையாமலும், கலியாணமாகி யிருந்தால் ரூ. 515-க்குக் குறையாமலும் பெற்றுர். ஆனுல், இந்தச் சம்பள உயர்வின்படி கலியாணமாகாதவர் ரூ. 530-ம் கலியாணமானவர் ரூ. 590-ம் பெறுவார்கள்.

சில சந்தர்ப்பங்களில் இந்த உத்தியோகஸ்தர்கள் தம் குடும்பத்தை விட்டுப் பிரிந் திருப்பதற்காகவும், சாப்பாட்டிற்காகவும் தனி அலவன்ஸ்கள் பெறுவார்கள். ஒரு உத்தியோகஸ்தர் ஒரு குறிப்பிட்ட வேலேயைச் செய்து கொண்டிருந்தார் என்பதற்காகக் கொடுக்கப் பட்டு வந்த சம்பள ஏற்றத் தாழ்வு, இனி இருக்காது. இஞ்சினீர் உத்தியோகஸ்தர்களும், மற்ற உத்தியோகஸ்தர்களும் ஒரே திட்டப் படி சம்பளம் பெறுவார்கள்.

மற்ற படைகளி லுள்ள வாரண்டு உத்தியோகஸ்தர்களின் நிலைமைக்குச் சமமாக கப்பற்படை வாரண்டு உத்தியோகஸ்தர்களின் சம்பள விகிதத்தையும் தகுந்தபடி உயர்த்தி யிருக்கிருர்கள். இது வரை வாரண்டு ஆபீசராக நியமிக்கப் பட்டவர் மாதச் சம்பளம், ரூ. 130. இனி நியமிக்கப் படுகிறவர்களுக்கு ரூ. 300. இதே விகிதப்படி அதிக சர்விஸ் உள்ளவர்களுக்கு அதிகச் சம்பளம் கிடைக்கும். வீட்டு வாடகை, கலியாணம், சாப்பாடு, குடும்பத்தை விட்டுப் பிரிந்திருத்தல் ஆகியவற்றை முன்னிட்டு முக்கியமான சாதனங்கள் இதனுல் ஏற்படுகின்றன.

கமிஷன் உத்தியோகஸ்தர்களுக்கும், வாரண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் சாதாரண உத்தியோகஸ்தர்களுக்கும், ரிசர்வ் உத்தியோகஸ்தர்களுக்கும், அவரவர் சம்பள சம்பந்தமாகப் புது விதிகள் அமுலுக்கு வரும். என்றுலும், பழைய விகிதப் படிக்கான சம்பளத் திட்டத்தையே விரும்புகிறவர்கள் அதன்படியே பெற்றுக் கொள்ளலாம்.

# நாஸிகளுக்கு நாக்கில்லையா ?

'என்ன ப்ரதர் ! சண்டை எப்படி இருக்கிறது ? '

'இருக்கிற தென்ன ? ஓய்வு ஒழிவில்லாமே நடந்து கிட்டுத் தான் இருக்கிறது. அதுக்கு முடியற காலம் எப்போ வரப் போகுதோ, கடவுளுக்கே வெளிச்சம் !'

'அந்த வேதாந்த மெல்லாம் இருக்கட்டும் பிரதர் ! விஷயத்தைச் சொல்லுங்க. அஞ்சாறு நாளா வீட்டிலே ரொம்ப வேலைங்க. ஆபீஸுக்கும் போகலே. பேப்பரையும் கண்ணுலே கூடக் காணலே. அது தான் உங்களைக் கேட்டாத் தெரியு மேன்னு கேட்டா, நீங்க வேதாந்தம் பேச ஆரம்பிக்கிறீங்களே !'

'நான் என்ன நேசப் படைகளுக்கு சேனாதிபதின்னு நினைச்சிக் கிட்டீங்களா ? இல்லே, பிரசார இலாகாவிலே....'

'அட சட் ! சொல்றதாணச் சொல்லுங்க, இல்லாட்டா சும்மா இருங்க ப்ரதர் ! விளையாட்றத்துக்கு நேரம் இல்லே ?'

'அவ்வளவு கோவிச்சிக்கிடாதிங்க சொல்றேன் ! கொஞ்சம் பொறு ஐயா ! நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதுக்கு மட்டும் பதில் சொல்லிடுங்க. '

'என்னது ?'

'வேறே ஒண்ணு மில்லே ! உங்களுக்கு இந்த ஊரிலே இருக்கவே பிடிக்கலேன்னு சொல்லி கிட்டு இருந்தீங்களே, வெளியே போக இப்போ ஆசைப் பட்றீங்களா ? அதைத் தான் கேக்க வந்தேனுங்க.'

'அதுக்கும் இப்போ நம்ம பேசற விஷயத்துக்கும் என்ன சம்பந்தம் ப்ரதர் ?'

'இருக்குதுங்க !'

'சரி ! எனக் கென்னமோ வேறே ஊருக்கு மாத்திக் கிட்டுப் போகணும்னு தான் இருக்குதுங்க. வீட்டிலே அவ்வளவு பிடுங்க லுங்க இருக்குதுங்க. '

" அப்படியானா 'ரைட்' உங்களைக் கட்டாயம் இப்பவே ஏரோப்ளேன்லே ஏத்தி அனுப்பிற வேண்டியது தானுங்க !"

'என்னுங்க ப்ரதர் ! உங்களுக்கு உடம்பு, கிடம்பு சரியா இலேலங்களா ?'

'எனக்கு உடம்புக்கு ஒண்ணும் இல்லிங்க ! பையன் ! இன்னும் ரெண்டு போண்டா சாம்பார் போட்டுக் கொண்டா ! முறுகலா ஒரு தோசை போடச் சொன்னியா தம்பி ! அ ! உங்களைக் கட்டாயம் ஏரோப்ளேன்லே அனுப்பிவிட வேண்டியது தான் !'

'எங்கேயோ ?'

'ஜெர்மனிக்குத் தான் !'

'எதுக்குங்க ப்ரதர், அவ்வள ஆத்திரம் உங்களுக்கு எம் மேலே ?'

'உங்க மேலே ஆத்திரம் ஒண்ணு மில்லேங்க. உங்க குணத்தைக் கண்டு சொல்றேன் இப்படி ! கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே கொஞ்சம் தமாஷாப் பேச ஆரம் பிச்சதுமே, சுர்ர்ர்னு பத்திக்கிச்சே உங்களுக்கு கோபம். இது மாதிரி மனுசங்க ஜெர்மனியிலே ஒருத்தங் கூட இல்லேபோ லிருக்குது. அதுக்காகத் தான் உங்களை யாவது அனுப்பலாமென்னு சொன்னேனுங்க. அங்கே இருக்கிற பசங்கள்ளாம், மொத்தத்திலே இந்த நாஸிகள் எல்லாமே, நாக்கு இல்லாத பசங்க தான் போலிருக்கு. அது தவிர, அவங்கள்ளாம் சுத்தக் கோழைங்க போலிருக்கு. '

'என்னுங்க இப்படி ஒரே அடியாக அடிச்சிட்டீங்க' நாஸிகள்ளே ஒவ்வொருத்தனும் ஒரு ராக்ஷஸப் பயல் மாதிரி ஆச்சே !'

'இருந் தென்ன பிரயோசனம் ? ஆளைப் பார்த்தா அழகுபோலே, வேலையைப் பார்த்தா எழவு போலேன்னு சொல்லுவாங்களே ! அந்த மாதிரி தான் போலிருக்கு இந்த நாஸிங்க. அவங்களுக்கு உங்களைப் போலே பேச நாக்கும் இருந்து, தைரியமும் இருந்தா, இதுக்குள்ளாக ஹிட்லரைப் பார்த்து, 'ஏ ! மனுசா ! என்ன அக்ரமம் பண்றய்யா நீ ? கேள்வி முறை இல்லையா ? என்னமோ பிரமாதமாப் பேசினே ! கண் சிமிட்ற நேரத்திலே உலகத்தையேக் கட்டிப் பிடிச்சிக் கொண்டாந்துடலாம்னு சொன்னே ! நம்மை எதுக்க, ஒரு பய இனி மேலே தான் பிறக்கணும்னு சொன்னே ! ஆரம்ப ஜோர்லே, என்னமோ ஆசைக்கு நாலு இடம் பிடிச்சிக் காட்டினே ! அடுத்தாப்லே ருஷ்யா மேலே பாயச் சொன்னே ! பனியிலே ஆப்பிட்டுக் கிட்டா அவதி படுவாங்க என்கிறதையே மறந்து, அநியாயமாக எத்தனையோ லக்ஷக் கணக்கானவங்களை சாக அடிச்சே ! அட சனியன் போகட்டும். எப்படியாவது சண்டை தீந்து, ஜெயத்தோடே ஊர் வந்தாப் போதும்னு, ருஷ்யச் சண்டை ஓயற பாடாக் காணோமே ஐயா ? அடுத்த பனி காலம் வந்தாச்சு ! பெரிய மலைப்பாம்பு மாதிரி ஆச்சு நம்ம பிழைப்பு. சக்திக்கு மிஞ்சின ஆகாரத்தை முழுங்கப் போய், பாதி உடலை மட்டும் முழுங்கி விட்டு, அதை ஜீரணம் செய்து கொண்டு, பாக்கி பாதியை அப்படியே வாய்க்கு வெளியே வைத்துக் கொண்டு, பேசாது கிடக்கிற அந்த முரட்டு மலைப் பாம்பு போலே கொணந்து ச்சிட்டயே ஜெர்மனியின் நிலைமையை ! எவ்வளவு பெரிய மலைப் பாம்பானாலும், இரை தின்னுட்டு மேலே சொன்னபடி இருந்தா, தெருவிலே போற சின்னப் பையன் கூட பெரிய கல்லை எடுத்துப் போட்டு, கொன்னு தள்ளிடலாமே அதை அது மாதிரி, ருஷ்யாவைப் பூரா முழுங்க முடியாமல் கிடந்தால், மத்தவங்க பாத்துக் கிட்டு சும்மா இருப்பாங்களா ? கொன்னு தள்ள ஆரம்பிச்சிடுவாங்களே ஐயா ! நீ நாடு பிடிச்சிக் கொடுக்க சண்டை நடத்தற லக்ஷணம் ! நிறுத்தய்யா சண்டையை !' என்று சொல்லி யிருக்க மாட்டாங்களா ? அந்த ஊமைப் பசங்கய்யா ! கேள்வாகிலே நெய் ஒழுகுதுன்னு, கேக்கறவனுக்கு எங்கே ஐயா போச்சு ஞானம் ? அது போலே, என்னமோ சர்வாதிகாரத் திமிர் பிடிச்சிப் போய், ஒரு பயல் சண்டைக்குப் பானாம். இவங்க கிளம்பிட்டாங்களாம். உலகத்திலே எத்தனை பேர் தவைகளாகி கண்ணீர் விட்றுங்களோ, கடவுளுக்கே தெரியும் ! எத்தனை பேர் அநாதைகளாகிட்டாங்களோ ! எத்தனை பேர் வீடுவாசல் இழந்து, பிச்சை எடுக்கப் புறப்பட்டுட்டாங்களோ ?"

'ப்ரதர் ! ஏதேது ? பெரிய ப்ரசங்கி ஆயிட்டீங்களே ! அந்த ஹிட்லர் எங்கேயாவது கண்ணிலே பட்டால், முதல்லே அவரு பல்லை உடைச்சிக் கையிலே கொடுத்திட்டுத்தான் வேறே வேலை பார்ப்பீங்க போலிருக்குங்க ! ஆனா நான் ஒண்ணு சொல்றேன் கேளுங்க. உங்களுக்கு இந்த உத்யோகம் மட்டும் வேணாம். '

'எந்த உத்யோகம் ?'

'பிரசங்கம் செய்கிற வேலே, இது வாணாம். இந்த வேலையை ஆரம்பிச்சிட்டா, அப்பாலே சூடா எதுவும் திங்க முடியாதுங்க. இந்தா இப்பவே பாருங்களேன், உங்களுக்கு முன்னாலே பிளேட்டிலே இருக்கிற போண்டாவும், தோசையும் பழையதா சில்லிட்டுப் போயிருக்குமே !' என்று சிரித்தார் ஒருவர்.

'பரவா யில்லேங்க ! ஜெர்மனியிலே நடக்கிறது சுத்த அக்ரமங்க. இதை வாய் திறந்து கேக்கறத்துக்கு அங்கே ஆளில்லையேன்னு தான் வருத்தமா இருக்குங்க !'

'நீங்களும் நானும் வருத்தப் பட்டுப் பிரயோசனம் என்னுங்க ? கடவுளைப் பாத்துத் தான் வழி வைக்கணுங்க இதுக் கெல்லாம். சாப்பிடுங்க' என்றார் மற்றொருவர்.



ஜெர்மனி ஒரு சர்வாதிகாரியின் கீழ் அடங்கிய நாடு. அங்கு, இன்று, மேற்கண்டவாறு ஏதாவது ஒரு ஹோட்டலில் பேச்சு நடந் திருந்தால், இந்த இருவருடைய மனைவிமார்களும் அதற்கு மறுநாளை கறுப்பு உடை தரித்து, கண்ணீரும் கம்பலையுமாக இருக்க நேர்ந்திருக்கும். சர்வாதிகாரி எது செய்தாலும் பேசாத ஊமைப் பதுமைகளாக இருக்க வேண்டியதே, அவனுக்குக் கீழ் உள்ள மக்களின் தலைவிதி ஆகும். இந்தத் தலைவிதி உலகெங்கிலு முள்ளவர்களுக்கு ஏற்படக் கூடா தென்றே, நேச தேசத்தார், தமக்கு ஏற்பட்டு வரும் பயங்கரமான நஷ்டங்களையும், கொடிய கஷ்டங்களையும் சமாளித்துக் கொண்டு, மேலும் மேலும் போராடி வருகிறார்கள். பதினாயிரக் கணக்கான மைல் தூரம் பரந்து கிடக்கும் பல யுத்த அரங்கங்களுக்கு, சலியாது, மேலும் மேலும் உதவிகளனுப்பி வருகிறார்கள். எல்லா உதவிகளும் கப்பல்கள் வழியாகவே போய் ஆகவேண்டி யிருக்கிறது. அதற்காக ஒழி வில்லாது கப்பல்களைக் கட்டும் வேலையைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

இதை உணர்ந்தே ஜெர்மனி நீர் மூழ்கிகளை ஏராளமாகக் கட்டி வைத்திருக்கிறது. ஜப்பானோ, பலமான தோர் கடற்படையைச் சிருஷ்டித்து வைத்துக் கொண்டிருக்கிறது. நேச நாடுகளுக்கு ஏகப் பட்ட கப்பல் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும், சென்ற இரண்டு வருடங்களில் ஏற்பட்ட நஷ்டங்களை, புதுத் தயாரிப்புகளால் ஈடு கட்டி விட்டார்கள் பிரிட்டிஷார்.

அமெரிக்காவிலே விமானந் தாங்கிக் கப்பல்கள் நிறையக் கட்டி வருகிறார்கள். கடல் போர்களிலே, இந்த மாதிரிக் கப்பல்கள் உதவுவது போல, வேறு எதுவும் உதவுவ தில்லை. ஆயிரம் காக்கைகளுக்கு ஒருகல் வீசினால் போதுமல்லவா ? அதுபோல, எத்தனை கப்பல்கள் போனாலும், ஆகாய மூலமாக வந்து தாக்கும் விரோதியை, ஆகாயத்திலேயே அல்லவா சந்தித்துப் போராட வேண்டும் ? அதற்கு விமானந் தாங்கிகள் வெகு அவசியம்.

ஜப்பானைப் பாருங்களேன். ஏதோ ஒரு புது நீர் மூழ்கியைக் கண்டு பிடித்திருக்கிறதாம். அதன் மீது விமானத்தை ஏற்றிச் செல்லலாமாம். விமானங்களால் சாதிக்கக் கூடியவை என்னென்ன என்பதை உணர்ந்து தானே ஜப்பானியர் இவ்வாறு புது யோசனைகள் செய்திருக்கிறார்கள் !

நேச நாடுகளின் விமான பலமும் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. பிரிட்டனிலே எண்ணற்ற விமானக் கூடங்கள் கட்டி முடித்தாயிற்று, இன்னும் பலவற்றைக் கட்டுகிறார்கள். இவற்றில் எல்லாம் சீமையில் தயாராகும் விமானங்களும், அமெரிக்காவி லிருந்து வந்து குவியும் விமானங்களும் நிறைந்திருக்கும். தக்க சமயம் வந்ததும், ஜெர்மனி மீது பாய இவை அனைத்தும் உபயோகிக்கப்படும். ஜெர்மனியிலே மூலை முடுக்குகளில் உள்ள ஊர்களை யெல்லாம், விமான மூலமே போயடைய வழி செய்து கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் வெடிகுண்டுகளை நான் பார்க்க முடியாமல் போச்சே என்று ஜெர்மனியில் உள்ளவர்கள் யாரும் கவலைப் படவே வேண்டாம் போலிருக்கிறது.

ஜெர்மனியிலே நாஸிக் கட்சி பிறந்த நகரம் ம்யூனிச் அல்லவா ? அந்த நகரத்திற்கு, சமீபத்தில் பிரிட்டிஷ் விமானங்கள் விஜயம் செய்து, நொறுக்கித் தள்ளி விட்டு திரும்பின. இதே போல, ஜெர்மனியின் மற்ற நகர்களுக்கும் வெடிகுண்டு விநியோகம் நடந்து வருகிறது.

ஹிட்லருக்கு இப்பொழுது தூங்கவே அவகாசம் இராது என்பது நிச்சயம். அவரது சூர சேனாபதிகளில் ஒவ்வொருவராக மூன்று நான்கு பேர்கள் மண்டையைப் போட்டு விட்டார்கள். ஸ்டாலின்கிராட் நகரமோ லேசில் விழமாட்டேன் என்கிறது. புதன் கிழமை வரை அது விழ வில்லை. அது நாஸிகள் வசமாகாமலே நின்று சமாளித்துக் கொள்ளும் என்ற நம்பிக்கை ருஷ்யர்களிடை அதிகரித்ததாம் அன்று. ஏனென்றால் ருஷ்யர்களுக்கும் உதவிப் படை வந்து கொண்டிருக்கிறதாம். ஓரிடத்தில் நாஸிப்படைகளை ருஷ்யர்கள் ஒரு மைல் தூரம் பின்னால் துரத்தியடித்தனராம். வரும்படி காணாததும்படி கவலையில்லை, செலவு காலணா கணக்கில என்றால், ஆசாமி லக்ஷவரம் தானே ? அதுபோல, முன்னேறுவது கஜம், பின் வாங்குவது மைல் என்றால் எது அதிகம் ?

ஸ்டாலின்கிராட் நகரிலே பெரும் பகுதி எங்கள் கைகளில் விழுந்து விட்டது என்கிறார்களாம் நாஸிகள். அவர்களில் பலருக்கு நாக்கு இல்லை, சிலருக்கு நாக்கில் நரம்பே இல்லை. அண்டப் புளுகு புளுகி விடுவார்கள். அந்தப் புளுகுகளில் இதுவும் ஒன்று என்கிறார்கள் ருஷ்யர்கள்.

அந்த நகரில் பயங்கரத் தெருச் சண்டை நடக்கிறது. நாஸிகள் ஆயிரக் கணக்கான விமானங்களையும், அநேக லக்ஷம் படைகளையும் கொண்டு, அந் நகரை பாழாக அடித்தாயிற்று. பல லக்ஷம் பேர்களைப் பலியாகவும் கொடுத்தாயிற்று. எங்கு பார்த்தாலும் எரி நெருப்பு. குழந்தைகளும், பெரியோரும், ராணுவத்தில் இல்லாதவர்களும் அந்நகரை விட்டு வெளியேற்றப் படடு விட்டனர். ஒன்றுபட்டுத் தீரமாகப் போராடி நகரைக் காப்போம். அதனால் யுத்தத்தின் போக்கே மாறும். இல்லை, நகர் போவதானால், அதற்குள் சாத்தியமான வரை நாஸிகளை ஹதம் செய்து தீர்ப்போம் என்று தானிருக்கிறார்கள் ருஷ்யர்கள்.

வர வர பனிகாலம் நெருங்கி வருகிறதே, காகஸஸ் மலைகளில் பனி பெய்ய ஆரம்பித்து விட்டதாம், நாஸிகள் பாடு கஷ்டம் தான் !

இந்தப் பனிகாலத்திற்கு ஹிட்லர் ஏதாவது ஏற்பாடுகள் செய்திருக்கலாம். போன தடவை போல் குளிரால் விரைத்துப் போய் பலர் சாக மாட்டார்கள். ஆனால் ஹிட்லருக்குப் பயம் என்னவோ பயம் தான் ! ரேஸுக்குப் போனதில் அதிக லாபம் இல்லா விட்டாலும், கொண்டு போன காசும், ரயில் சார்ஜுக்குக் காசும் மிஞ்சினால் போதாதா ? அதே போல, ருஷ்யாவில் பிடித்ததில் கொஞ்சம் போனாலும், அவர்களை ஜெர்மனிக்கு அருகே நெருங்க விடாது தடுத்து நிறுத்தினால் போதாதா ? இந்த யோசனையோடு தான் ஹிட்லர் ஒரு பலமான கிழக்குச் சுவரை எழுப்பி வருகிறாராம். வடக்கே ஆர்ச் எஞ்சல் நகரிலிருந்து, அஷ்டராசான் என்ற (காஸ்பியன் கடல்) துறைமுகம் வரை இது பரந்திருக்குமாம். இதோடு, அடுத்த வருஷச் சண்டைக்கும் மும்முரமாக ஏற்பாடுகள் செய்து வருகிறாராம்.

இந்தப் பனி காலத்திலே, பிரிட்டன் மீது பெரிய விமானப் போர் நடக்கும் என்று ஜோஸியம் சொல்லி வருகிறார்கள் சிலர். அதற்கு பிரிட்டன் தயாராகவே இருக்கிறதாம். அதுவும் ஜெர்மன் நகரங்கள் மீது வீச புதுப் புது வெடிகுண்டுகளைத் தயாரித்து வருகிறதாம். லெமனேட் புட்டிகள் மாதிரி புட்டிகளைத் தயாரித்து அதில் ஒரு தினுசு வெடிகுண்டு தயாராகி யிருக்கிறதாம். டாங்கிகளும் மிக நூதனமானவையாகச் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றனவாம்.

ருஷ்யாவிற்குச் சாத்தியமான வரை உதவி சென்று வருகிறது. ஆனால், ஜெர்மனிக்குக் கூட, ஜப்பானிலிருந்து சாக்குகள் வரத் தொடங்கி இருக்கின்றனவாம். பஸிபிக் மகா சமுத்திரம் வழியாக இந்த உதவி வருகிறதாம். இதைத் தடுக்காமலா இருக்கப் போகிறார்கள் நேச தேசத்தார் ?

ஜப்பானியர் மீண்டும் சாலமன் தீவுகளண்டை பெரிய போரை நடத்த, திட்டங்கள் போட்டிருப்பதாகத் தோன்றுகிறது. அவர்களுடைய யுத்தக் கப்பல்கள் பல, அமெரிக்க விமானங்களின் குண்டுகளுக்கு இரையாகி, ஜல வாசம் செய்யப் போய் விட்டன. பர்மாவிலே ஜப்பானியர் நடமாட்டம் அதிகமாக இருக்கிறதாம். சைபீரியா மீது பாயும் எண்ணமும் ஜப்பானுக்கு இருக்கு மென்றே தோன்றுகிறதாம். சீனாவி லிருந்து கப்பலேற பல ஜப்பானியப் படைகள் சித்தமாக இருக்கின்றனவாம். புதுப் போர் அரங்கம் எது என்பது இன்னும் சில வாரங்களில் தெரியலாம். எதற்கும் நாம் சித்தமாக இருக்கிறோம். மடகாஸ்கர் போன்ற இடங்களில் முன் கூட்டியே நடவடிக்கை எடுத்துக் கொண்டு விட்டோம். எகிப்திலே பிரமாத மாறுதல்கள் எதும் நடந்து விடவில்லை. டோப்ருக் துறைமுகம் நல்ல குண்டடிபடுகிறது. இன்னும் எந்தெந்தத் துறைமுகங்களுக்கு இதே கதி நேரிடப் போகிறதோ தெரிய வில்லை. நேச தேசத்தினர் வலு அதிகமாக அதிகமாக, அடியும் பலமாக விழுமா இல்லையா ? ஊமை நாஸிகளையும், குண்டு அடிகள் பேச வைத்து விடக் கூடும்.

## இந்தியப் படையினருக்குப் பட்டங்கள்.

சென்ற 1941-ம்௵ நவம்பர்௴ 1-ம் தேதி முதல் 1942-ம்௵ எப்ரல்௴ 30-ம்௳ வரை மத்திய கிழக்குப் போர் முனையில் மிகுந்த வீரத்தோடும் சிறந்த முறையிலும் இந்தியப் படையினரில் சிலர் போராடினர்கள் என்பதைப் பாராட்டி கீழ்க்கண்டவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப் பட்டிருப்பதாக 1942-ம்௵ செப்டெம்பர்௴ 9-ம்௳ வெளியான லண்டன் கெஜெட்டில் வெளியிட்டிருக்கிறார்கள் :—

**எம்.சி. என்ற பட்டம்.**

காப்டன் வேதாந்த ரங்காச்சாரி, எம்.பி., பி.எஸ்., ஐ.எம்.எஸ்.

**ஐ.டி.எஸ் எம்.**

நெ. 15342 நாயிக் கோவிந்தன், சென்னை சாபர்ஸ் அண்டு மைனர்ஸ்.

**டி.எஸ்.ஓ.**

மேஜர் குமாரமங்கலம், டி.எஸ்.ஓ.; இந்தியப் படை.

# ஜப்பான் சிறையில் ஜெர்மானியர்கள்.

## இந்தோ-சீனுவில் ஜப்பானியர் கொடுமை.

'டெய்லி மெய்ல்' என்னும் பத்திரிகைக்கு டோக்கியோவி லிருந்து சமீபத்தில் வந்த ஒரு ஆங்கிலேயர், போரில் தம் கூட்டாளிகளா யிருக்கிறவர்களை ஜப்பானியர்கள் எப்படி நடத்துகிறார்கள் என்று தெளிவு படுத்தி ஒரு கட்டுரை எழுதி யிருக்கிறார். அதில் அவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார் :—

"ஜப்பான் முழுதிலும் ஜெர்மானியர்களுக்கு விரோதமான உணர்ச்சி வெகு பலமாக ஓங்கி வளர்ந்து கொண்டு வருகிறது. அந் நாட்டில் ஜெர்மானியர்களைக் கொண்டு வந்து இறக்கிய நாள் முதலே, இந்த உணர்ச்சி வளர்ந்து வருகிறது. இந்த ஒவ்வொரு நாஜியும் ஐந்தாம் படையைச் சேர்ந்தவன் என்று உணர்ந்து கொள்ள, ஜப்பானியர்களுக்கு நெடு நாட் செல்லவில்லை. வேவு பார்த்த குற்றத்திற்காக, இன்று ஜப்பான் சிறையில், மற்றெல்லா நாட்டவர்களையும் விட, ஜெர்மானியர்கள் தான் அதிகமாயிருக்கிறார்கள். ஜப்பானிய சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றும் பொருட்டு மிகவும் அக்கரையோடும் கடுமையாகவும் வேலை செய்யும் ஜப்பானிய இரகசியப் போலீஸாரின் திறமையால் தான் இத்தனைப் பேர்களும் சிறைப் பட்டார்கள்"

"ஹிட்லரின் வேதமாகிய" மெய்ன் காம்ப்" என்னும் தஸ்தாவேஜியின் ஒவ்வொரு வாக்கியத்தையும் ஜப்பானிய அறிஞர்கள் மிக நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

**ஹிட்லர் இந்த யுத்த யுத்தத்தில் வெற்றி பெற்றால், தம் சாம்ராஜ்யத்தை நிலை நாட்டிக் கொள்ளும் பொருட்டு ஜெர்மனி யோடு போராட வேண்டிய அவசியம் ஏற்படும், என்று ஒவ்வொரு ஜப்பானியருக்கும் நன்றாகத் தெரியும்.**

ஹிட்லர் கட்டளைப்படி ஜப்பான் யுத்தத்தில் இறங்கவில்லை, ஆனால் ஜப்பான் யுத்தத்தில் இறங்கிய அதே நாளில், ரஷியாவின் மேல் முன்னேறிப் போவதை ஜெர்மானியர்கள் நிறுத்தி விட்டார்கள். இது ஒரு முக்கியமான விஷயம். அது முதல் ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் இருந்து வந்த தொடர்பு குலையத் தலைப் பட்டது. இரண்டு வழிகளிலும் தம்மைச் சந்தியில் இழுத்து விட ஹிட்லர் முயன்றார் என்று ஜப்பானியர்கள் அனுமானித்தார்கள். இந்த எண்ணம் அவர்கள் மனதை விட்டு அகலவே யில்லை.

இந்தப் பகையை அதிகப் படுத்தியது நாஜிகளின் அகம்பாவம். வெளி நாட்டு ஆலோசகர்கள் பலரை ஜப்பான் எப்போதும் வைத்துக் கொண்டிருந்தது. பிறர் ஆலோசனையை ஜப்பான் ஏற்றுக் கொள்ளுகிறது. ஆனால் பிறர் கட்டளை யிடுவதை வெறுக்கிறது. நாஜிகளோ எப்போதும் கட்டளையிடும் இயல்புடையவர்கள். ஜெர்மானியர்கள் ஏராளமாகப் பொருட் செலவிட்டு ஜப்பானியர்களை மகிழ்விக்கப் பார்க்கிறார்கள்; என்றாலும், அவர்களுக்கு மிகக் கொஞ்சம் பேர் தான் நண்பர்களா யிருக்கிறார்கள். இப்போது ஜப்பானி லுள்ள ஜெர்மன் ஸ்தானிகர் பெயர் மேஜர் ஜெனரல் ஆட். இவர், "இந்த யுத்தத்தில் ஜெர்மனி தோற்றால், **ஜெர்மனியின் ஸ்தானிகனாக நான் இங்கிருப்பதை விட, கடலில் அழுந்திப் போகும் ஒரு கப்பலிலுள்ள ஒரு எலியாக இருக்கத் தான் விரும்புவேன்**" என்று ஒரு முறை குறிப்பிட்டார்.

**இந்தோ-சீனுவில் ஜப்பானியர் அக்கிரமம்.**

அமெரிக்க அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குக் கிடைக்கும் தகவல்களி லிருந்து, பிரஞ்சு இந்தோ—சீனுவில் பொது ஜனங்களின் நல்லுறவைச் சம்பாதிக்க ஜப்பானியர் செய்த முயற்சிக ளெல்லாம் பயன்பட வில்லை யென்றும், ஜப்பானைப் பொது ஜனங்கள் பெரிதும் வெறுக்கிறார்க ளென்றும் தெரிகிறது.

ஜப்பானியப் படைகள் வந்திறங்கிய கொஞ்ச நாள் வரை, பொது ஜனங்களிடம் அன்பாகவே அவர்கள் நடந்து கொண்டார்கள். அங்கே யுள்ள அன்னும் மாகாண வாசிகள் தமக்குத் தனியாக ஒரு ஆட்சி முறை வேண்டு மென்று கோரிக் கொண்டிருந்தார்கள். இதை வழங்குவதாக அவர்களுக்குச் சொல்லி பொது மக்களுக்குள் பிளவை யுண்டாக்கப் பார்த்தார்கள் ஜப்பானியர்கள். ரிக்ஷாக்களில் ஏறிச் சென்று இரட்டிப்புக் கூலி கொடுத்தார்கள். இலவசமாக எல்லோருக்கும் சிகரெட்டுகள் வழங்கினார்கள்.

அதிகப் படியான படைகள் வந்திறங்கின. ஜப்பானியரின் நேச மனப் பான்மை மாறி விட்டது. அநேகரை கட்டாயமாக இராணுவத்தில் சேர்த்தனர். இவர்களிடம் இரட்டிப்பு வேலை வாங்கிக் கொண்டு, மிகக் குறைந்த கூலி கொடுத்தார்கள். வண்டி வண்டியாக ரயில்வேக்கள் மூலம் வடக்கேயிருந்து தெற்கே ஆட்களைக் கொண்டு போனார்கள். என்றாலும், அவர்களுடைய குடும்பங்களுக்கு எந்த வித ஏற்பாடும் செய்ய வில்லை. இவர்களை மிகக் குறுகிய இடங்களிலே வசிக்கும்படி செய்தனர். புளி மூட்டைகளைப் போல, இராணுவ லாரிகளில் இவர்களை ஏற்றிக் கொண்டு, வேலைத் தலங்களுக்குக் கொண்டு போனார்கள்.

ஒரு நாள் தம் வேலைக்கு ரயில் வண்டி நிறைய ஆட்கள் ஜப்பானியர்களுக்குக் கிடைக்கவில்லை. உடனே தம் வாத்தியக் காரர்களை விட்டு ஒரு சதுக்கத்திலிருந்து கொண்டு ஜனங்கள் பெரிதும் விரும்பிக் கேட்கும் இராகங்களை வாசிக்கச் செய்தார்கள். அங்கே ஒரு பெரும் கூட்டம் சேர்ந்து விட்டது. உடனே ஜப்பானியப் படையினர் அந்தக் கூட்டத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில், தாம் நாள் தோறும் வேலைக்குப் போகிறவர்கள என்று மெய்ப்பித்தவர்களை மட்டும் ஒவ்வொருவராக விட்டு விட்டார்கள். மற்ற அனைவரையும் வண்டியில் ஏற்றி நிரப்பிக் கொண்டார்கள். வண்டி புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தது, வழியில் ஒரு பெரிய பிரஞ்சு அதிகாரி குறுக்கிட்டு வண்டியை நிறுத்தினார். நெடுநேர விவாதத்திற்குப் பிறகு, வண்டியைத் திருப்பி, அது புறப்பட்ட இடத்திற்கே கொண்டு வந்து சேர்த்தார்கள்.



## வெற்றிக்கு வழி



இங்கிலாந்தில் இப்போது ஏராளமான கப்பல்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தொழிற் சாலையில் கனத்த எஃகுத் தகட்டில் ஒரு தொழிலாளி துளை போட்டுக் கொண்டிருக்கிறார்.

# பிவின் திட்டப் பயிற்சி.

## தேறியவர்களின் வாழ்க்கை உயர்வு.

### அரசாங்கத்தார் நல் முயற்சி.

இந்தியத் தொழிற்சாலைகளி லிருந்து சற்று தேர்ந்த இளந் தொழிலாளர்களை அரசாங்கத்தார் தேர்ந் தெடுத்து இங்கிலாந்திற்கு அனுப்பி வருகிறார்கள். அவர்கள் அங்கே யுத்தத் தொழிற்சாலைகளிலே "பிவின் திட்டப்படி" பயிற்சி பெற்று திரும்புகிறார்கள். திரும்பிய பிறகு, தாம் முன்பு பெற்று வந்த கூலியை விட 2½ மடங்கு அதிகத் தொகையைச் சம்பளமாகப் பெறுகிறார்கள்.

இப்படிப் பயிற்சி பெற்று இந்தியாவிற்குத் திரும்பியவர்கள் 122 பேர்கள். இவர்களில் 105 பேர்களுக்கு வேலை கிடைத்து விட்டது. இவர்கள் பெறும் சம்பளம் முன்பு பெற்றதை விட 145 சதமானம் இப்போது அதிகம். மீதி 17 பேர்களும் சமீபத்தில் தான் வந்து சேர்ந்தவர்கள். இவர்களுக்கு வேலைகள் தேடிக் கொடுக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இவர்கள் இங்கிலாந்தில் பெறும் பயிற்சியின் உபயோகத்தைப் பொதுவாக ஜனங்கள் உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டு விட்டால், இவர்களுக்குத் தொழில் ஸ்தாபனங்களி லுள்ள மதிப்பு படிப்படியாக உயரத் தான் செய்யும்.

உதாரணமாக லாகூரில் மாதம் 75 ரூபாய் கூலிக்கு வேலை செய்து கொண்டிருந்த பிட்டர் இப்போது வெடி மருந்து தொழிற்சாலை சார்ஜமனாக மாதம் 170 ரூபாய் முதல் ரூ. 290 வரை உயரக் கூடிய படி இப்போது சம்பளம் பெறுகிறார். சிந்துவி லிருந்த பிட்டர் ரூ. 70 சம்பளம் பெற்றுக் கொண்டிருந்தவர், இப்போது மற்றொரு அரசாங்கத் தொழிற்சாலையில் 180 ரூபாய் சம்பாதிக்கிறார். மாதம் 65 ரூபாய் கூலிக்கு வேலை செய்து கொண்டிருந்த ஒரு மெக்கானிக் இப்போது 155 ரூபாய் சம்பளத்தில் சூபர்வைசராக வேலை பார்க்கிறார். பம்பாய் ரயில்வே ஒர்க் ஷாப்பில் மாதம் 140 ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருந்த ஒரு பிட்டர் இப்போது விமானத் தொழிற்சாலை ஒன்றில் ரூ. 248 சம்பளத்தில் உதவி போர்மனாக வேலை பார்க்கிறார். பீஹாரில் டர்னர்—பிட்டர் வேலை செய்து மாதம் 75 ரூபாய் சம்பாதித்துக் கொண்டு இருந்தவர் இப்போது ரூ. 200 சம்பாதிக்கிறார்.

சென்னையி லிருந்து, தான் இங்கிலாந்திற்கு போகு முன் நாளொன்றிற்கு ரூ. 2 கூலி பெற்றுக் கொண்டிருந்த ஒரு இம்புரூவர், இப்போது இந்தியன் இஞ்சினியர் படையில் எமெர்ஜென்ஸி கமிஷன் உத்தியோகஸ்தராக இருக்கிறார். மற்றொரு இம்புரூவர் இப்போது ரூ. 200 சம்பளத்தில் யுத்தத் தொழிற்சாலை ஒன்றில் சார்ஜமனாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார். பஞ்சாபில் ஒரு ரயில்வே தொழிற்சாலையில் செம்பு வேலையும், தகர வேலையும் ரூ. 30 சம்பளத்தில் செய்து கொண்டிருந்த ஒருவர், இப்போது ஒரு தொழிற்சாலையில் ரூ. 200 சம்பளத்தில் போர்மனாக இருக்கிறார். வங்காளத்தில் மாதம் 22 ரூ. சம்பளத்தில் பிட்டர் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர், இப்போது இராணுவ இஞ்சினீயரிங் இலாக்காவில் மாதம் ரூ. 130 சம்பளத்தில் வேலை பார்த்து வருகிறார். ரூ. 45 சம்பளத்தில் வெல்டராக இருந்த ஒருவர், இப்போது ஒரு விமானத் தொழிற்சாலையில் ரூ. 165 சம்பளத்தில் உதவி போர்மனாக இருக்கிறார். பயிற்சி பெற்று திரும்பியவர்களில் மீதிப் பேர்களை இராணுவத்திலும், கப்பற் படையிலும் எடுத்துக் கொண்டார்கள்.

இதிலிருந்து ஒரு உண்மை தெளிவாகத் தெரிகிறது. பிவின் திட்டப்படி பயிற்சி பெற்று திரும்பியவர்களுக்கு நிச்சயமாக வேலை கிடைத்து விடுகிறது. அதுவும், அவர்கள் முன்பு பெற்றுக் கொண்டிருந்ததை விட மிகவும் உயர்ந்த சம்பளத்தில். இந்தத் திட்டத்தின்படி பயிற்சி பெறுவதனால், அவர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்களாகி விடுவ தில்லை. அவர்கள் அனைவருக்கும் வேலை கொடுப்பதாக அரசாங்கம் கட்டுப் பட்டிருக்கவு மில்லை. என்றாலும், அவரவர் விருப்பத்திற் கேற்றபடி வேலைகள் தேடித் தர அரசாங்கத்தார் முயற்சிப்பார்கள்.

# யுத்த சேத ஜாபிதா.

நெ. 122.

**வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்கள்.**

**காயப் பட்டவர்.**

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **ஐ.எம்.டி.** | | |
| எம். இ. 289 | ஜமேதார். | கே. எஸ். ஜே. சாஸ்திரி. |

**மற்றவர்கள்.**

**யுத்தக் கைதியானவர்கள் என்று கருதப்பட்டு கொல்லப்பட்டவர்கள் என்று தெரிகிறவர்கள்.**

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **சென்னை சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்.** | | |
| 16375 | சாப்பர். | அந்தோனிமுந்து. |
| 17575 | ஷை | அப்பலசாமி. |
| 16215 | ஹவில்தார். | ஆரோக்கியசாமி. |
| 18316 | சாப்பர். | ஆரோக்கியசாமி. |
| 18150 | ஷை | பார்சா. |
| 18586 | ஷை | சின்னப்பன். |
| 18529 | ஷை | ஆர். தானியல். |
| 17297 | நாயிக். | துரைசாமி. |
| 1000 | பெருக்குவோன். | எல்லகாடு. |
| 13900 | சாப்பர். | வி. எஸ். கணேஷ் |
| 18012 | ஷை | ஞானப்பிரகாசம். |
| 18523 | ஷை | கிருஷ்ண பிள்ளை. |
| 13552 | ஷை | மாணிக்கம். |
| 16050 | ஷை | முனுசாமி. |
| 14796 | ஷை | முத்துசாமி. |
| 18296 | ஷை | ஒம்மி எல்லையா. |
| 15014 | ஷை | பாஞ்சாலி. |
| 14644 | ஷை | பொன்னுசாமி. |
| 14741 | ஷை | ராஜு. |
| 16918 | ஷை | ராயப்பன். |
| 16108 | நாயிக். | சுப்பிரமணி. |
| 15192 | சாப்பர். | சுப்பிரமணியன். |
| **ஐ.எஸ்.சி.** | | |
| 9351 | சிக்னல்மான். | அப்துல் அஜீஸ். |
| எ. 3850 | ஷை | அப்துல் ஹபீஸ். |
| எ. 1430 | ஷை | அப்துல் ஹபீஸ் கான். |
| 9726 | ஷை | என். கோபாலசாமி. |

| படை, நெம்பர் | வேலை. | பெயர். |
|---|---|---|
| ஒ. 2580 | சமையற்காரர். | கோவிந்தன். |
| எ. 2670 | சிக்னல்மான். | ஜி. என். காரியப்பா. |
| எ. 1764 | பி.எல். நாயிக். | ஜி. கேசவ ராவ். |
| எ. 3887 | சிக்னல்மான். | கிருஷ்ணன். |
| எ. 1624 | நாயிக். | ஆர். பெருமாள். |
| ஒ. 2412 | பெருக்குவோன். | பூசின். |
| எ. 2681 | சிக்னல்மான். | சங்குண்ணி நாயர். |
| எ. 2671 | யு.எஸ். நாயிக். | டி. சி. சுப்பிரமணியம். |
| **ஐ.எச்.சி.** | | |
| எச். 185084 | பி. டி. சமையற்காரர். | பாடி. |
| 93330 | எ. சிப்பாய். | கே. எ. கோபால். |
| 63006 | டபுள்யு. செர்வென்ட். | மகிமைதாஸ். |
| எச். 186256 | உ. ஜி. பெருக்குவோன். | முனியப்பா. |
| எச். 185250 | வண்ணான். | பலண்டே கந்தப்பா. |
| **ஏ.ஐ.ஒ.சி.** | | |
| ஒ. 31971 | பிட்டர் சிப்பாய். | சி. எம். பாபு நாயுடு. |
| **ஐ.ஜி.எஸ்.சி.** | | |
| ஜி.எஸ்.எப். 18100 | மசால்சி. | ஜி. துரைசாமி. |

**இறந்துபோனவர்.**

| படை, நெம்பர் | வேலை. | பெயர். |
|---|---|---|
| **இந்தியன் இஞ்சினீர்.** | | |
| 50124 | பி.என்.ஆர். | ஆண்டி. |

**ஜாபிதா நெ. 123.**

| படை, நெம்பர் | வேலை. | பெயர். |
|---|---|---|
| 49832 | ஹவில்தார். | காளிமுத்து தேவர். |
| **ஆர்.ஐ.ஏ.எஸ்.சி.** | | |
| எஸ். ஆர். 78498 | லான்ஸ் நாயிக். | பால் ராஜ். |
| எம்.டி. 891047 | சிப்பாய். | என். பால முத்து. |
| 181583 | துருத்திப் பையன். | குல் ஹுஸ்ஸெய்ன் ஷா. |
| எம்.டி. 948655 | சிப்பாய். | கந்தசாமி. |
| **உதவிப் பயோனியர் படை.** | | |
| 187002 | பி. க்யூ. எம். எச். | எஸ். ஜான் ரத்தினம். |
| 116709 | லேபரர். | கே. வெங்கையா. |


## அங்கேயே இருந்தவர் கூறக் கேட்டேன்.

**அவர் யார்? அவர் அங்கிருந்தது உண்மை தானா? பொய் வதந்திகளைப் பரப்பாதீர்கள்! அவற்றால் சந்தேகமும், துன்பமும், நஷ்டமுந் தான் உண்டாகின்றன. இப் பொய் வதந்திகளை எதிரிகள் கிளப்பி விட்டு, ஏமாந்தவர்கள் இவற்றை பரப்புவார்கள் என்று நம்புகிறார்கள்.**

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

**ஜப்பானியர்களுக்கு விரோதமாகத்**
**தேசியப் போர் முனையை அமையுங்கள்!**




# உலகப் போக்கு.

**கிரிப்ஸ் திட்டம் சுயராஜ்யம் தான்.**

இந்திய நிலைமையைச் சமாளிக்க வேண்டி, சீர்திருத்த நிர்மாணத் திட்டம் எதையும் பிரிட்டிஷ் அரசாங்கம் வகுக்கவில்லை யென்று பலர் மத்திய சட்ட சபையில் குறை கூறினார்கள். அவர்களுக்கு இந்தியா அரசாங்க சட்ட அங்கத்தினரான கனம் சர் சையத் சுல்தான் அகமத் பதிலளித்தார். அதாவது:—

> கலகம் இன்னும் ஒடுக்கப் பட வில்லை. கலகக்காரர்கள் செய்யும் காட்டு மிராண்டித் தனங்களும் அக்கிரமங்களும் இன்னும் ஓய்ந்த பாடில்லை. இந்தத் தருணத்தில் இப்படிக் கோருவது எனக்கு மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது. 'நிர்மாணத் திட்டம்' என்னும் சொற்றொடருக்கு என்ன அர்த்தம் இருந்தாலும் இருக்கட்டும். இப்படிப் பட்ட நெருக்கடியான காலத்திலே, அரசாங்கம் உட்கார்ந்து கொண்டு சாவதானமாக நிர்மாணத் திட்டத்தைக் குறித்து ஆலோசிக்கும் என்று எதிர் பார்ப்பது கொஞ்சங் கூட நியாயமே யல்ல வென்று கருதுகிறேன்.

**நிற்க, மன்னர் பிரான் அரசாங்கத்தார் வகுத்த கிரிப்ஸ் திட்டம் இருக்கவே இருக்கிறது. இதைத் துரதிர்ஷ்ட வசமாகப் புறக்கணித்து விட்டார்கள். அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தால், இந்தியா கோரிக் கொண்டிருந்த சுயராஜ்யம் கிடைத்திருக்கும் என்பது தான் என் கருத்து என்று இச்சபையோருக்குத் தெரிவிக்கிறேன்.**

தன் சபையினரின் தீர்மானத்தை நிராகரிக்கும் விசேஷாதிகாரம் வைசிராய்க்கு உண்டு என்னும் காரணத்தைக் கொண்டும், மற்றும் சில காரணங்களைக் கொண்டுந் தான், அத் திட்டத்தை நிராகரித்தார்கள். பொது ஜனப் பிரதிநிதிகளின் அனுமதியைக் கொண்டு, காங்கிரஸ் கோரும் வழக்கமுறையைச் சாதாரணமாக ஏற்படுத்தக் கொள்ளலாமென்று அவர்கள் உணர்ந்தார்களா? வழக்கமுறைகளை சட்ட புத்தகத்தில் ஏற்றி விட்டாலும், ஒரு ஒப்பந்தத்திற் குட்படுத்தினாலும், அவை வழக்கமுறைகளாகவே இருக்கமாட்டா. அறிவு படிப்படியாக உயருவது போலவே, வழக்கமுறைகளும் வளரும். ஏற்கெனவே இருந்து வந்த வழக்கத்தை விட்டு வேறு முறையில் ஒரு காரியத்தைச் செய்தால், அதுவும், பிற்பாடு ஒரு முன் மாதிரியாக மாறுகிறது. ஆகவே அரசியல் அமைப்பு மிகவும் விசாலப்படுகிறது.

**இங்கிலாந்தின் அரசியல் அமைப்பில் நிகழ்ந்த பெரும் மாறுதல்கள், சட்ட மூலமாக ஏற்பட்டவையல்ல; ஆனால், எழுதப் படாத வழக்க முறைகளை யொட்டித் தான் ஏற்பட்டன.** முதல் மந்திரியையோ, மந்திராலோசனை சபையையோ சட்டம் அறியாது. என்றாலும், பார்லிமெண்ட் ஆட்சி முறைக்கு அச்சாணி போன்றது மந்திராலோசனை சபையின் வேலை தான். அதாவது, ஆட்சி முறையை நடத்துவதில் பார்லிமெண்டிற்கும் பொது ஜனங்களுக்கும் கூட்டுப் பொறுப்புடைய நிர்வாகிகளின் வேலை தான். கிரிப்ஸ் திட்டத்தை யொட்டி ஒரு அரசியல் அமைப்பு அமையுமானால், அதை யொட்டி பல நல்ல வழக்க முறைகளும் ஏற்படும். அதனால், பொது ஜனங்களின் நன்மையை முன்னிட்டே அரசியல் நிர்வாகம் நடைபெறும். கிரிப்ஸ் திட்டத்தை பிரிட்டிஷ் அரசாங்கமும் பிரிட்டிஷ் பொது ஜனங்களும் ஒரு முகமாக ஆதரிக்கிறார்கள். வெற்றி கிடைத்த பிறகு, தம் இஷ்டம் போல ஒரு அரசியல் அமைப்பை இந்தியர்கள் அமைத்துக் கொள்ளட்டும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறியது உண்மையிலேயே நல்லெண்ணத்தோடு கூறியது தான். இப்படிச் செய்ய, இன்னமும் இடம் உண்டு.

**ஐரோப்பியர்களும், பிரிட்டிஷார் வாக்குறுதியும்.**

மத்திய சட்ட சபை ஐரோப்பியக் கட்சியின் தலைவர் சர் ஹென்றி ரிச்சார்ட்ஸன். இவர் ஐரோப்பியர்களின் போக்கை எடுத்து சட்ட சபையில் நாளிது மாதம் 15-ம் தேதி கூறினார். இந்தியாவிற்கு யதேச்சை யளிப்பதாக பிரிட்டன் வாக்குறுதி கொடுத் திருக்கிறது என்று வற்புறுத்திக் கூறினார்.

> "இந்த வாக்குறுதியை நிறை வேற்றுவதில் எல்லா வகைகளிலும் உதவி செய்ய ஐரோப்பியர்களாகிய நாங்கள் வேண்டிய முயற்சி செய்வோம்,"

என்று குறிப்பிட்டார். பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு விசேஷச் சலுகை காட்டுவதை ஒரு நிபந்தனையாகக் கொண்டு அம்முடிவு ஏற்படுமா என்று கேட்டதை, பிரிட்டன் மறுதளித்தது. அதை இங்கே ஞாபகப் படுத்தலாம். இந்தியாவி லுள்ள பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு விசேஷச் சலுகை காட்டப் படு மென்று இந்தியா மந்திரியான மிஸ்டர் அமெரி வாக்குறுதி கொடுப்பாரா என்று சென்ற ஏப்ரல்மீ 28உ காமன்ஸ் சபையில் ஒரு கேள்வி பிறந்தது. இந்தக் கேள்விக்கு அவர் முறையாகக் கூறிய பதில் வருமாறு:—

> யுத்தம் முடிந்த பிறகு, எப்படிப் பட்ட அரசியல் திட்டத்தை இந்தியர்கள் வகுத்தாலும், அதை ஏற்றுக் கொள்ளு முன், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு விசேஷப் பாது காப்புக்கள் அளிக்கப்பட வேண்டு மென்பது ஒரு நிபந்தனை யாகாது. எதிர்காலத்திய இந்திய அரசாங்கத் தோடு தான் இந்த விஷயத்தைக் குறித்துக் கலந்து பேசுவது பொருத்தமாகும்.

இந்தியாவி லுள்ள பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு எந்த வித விசேஷப் பாதுகாப்பும் அளிக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப் படாம லிருந்தும் கூட, மத்திய சட்ட சபையில் ஐரோப்பியக் கட்சித் தலைவர் அப்படிக் கூறி யிருப்பதி லிருந்து, யுத்தம் முடித்த பிறகு, இந்தியாவிற்குப் பூரண சுயாட்சி வழங்கப் படு மென்று பிரிட்டன் கொடுத்த வாக்குறுதியை இவர் பெரிதும் ஆதரிக்கிறா ரென்று தெரிகிறது.

**ஸ்டாலின்கிராட் யுத்தம்.**

ஸ்டாலின்கிராடைப் பாதுகாக்கும் படையினர், பொதுவாக மிகவும் கடுமையாகப் போர்க் களத்தில் நடந்து கொள்ளுகிறார்க ளென்றும், சில பகுதிகளில் முன்னேறி யிருக்கிறார்க ளென்றும் மாஸ்கோவி லிருந்து கிடைத்த செய்தியி லிருந்து தெரிகிறது. ஸ்டாலின்கிராடி லுள்ள ஒவ்வொரு வீட்டி லுள்ள ஒவ்வொரு அறையும் ஒரு போர்முனையாக மாறிவிட்டது என்று மாஸ்கோ ரேடியோ கூறுகிறது. அந்த வீடுகளின் மெத்தைப் படிகளி லெல்லாம் ஜெர்மன் பிணங்கள் விழுந்து கிடக்கின்றன. தெருக்களில் நேருக்கு நேர் கைச் சண்டை நடக்கிறது. இந்நகரம் எப்படிப் பாதுகாக்கப் படுகிறது என்பதைக் குறித்து ஸ்டாக்ஹோம் ரேடியோ மூலம் மிஸ்டர் டேவிட் ஆண்டர்சன் செய்த பிரசங்கத்தில் கீழ்க் கண்டவாறு கூறினார்.

> "ஸ்டாலின்கிராடி லுள்ள ஒவ்வொரு வீடும், கட்டிடமும் ஒரு கோட்டையாக மாறி விட்டது. நகரத்தின் எல்லைப் புரத்தில் சிமின்டினால் ஒரு கட்டிடம் கட்டி, அத்துடன் இரும்பு உப்பரிகையும் கட்டி, அதில் சுழலும் கோபுரங்களும் அமைத்திருக்கிறார்கள். அன்றியும் டாங்கிப் பொறிகளை வைத்திருக்கிறார்கள். எல்லைப் புரங்களில் சுரங்க வெடிகளை விரவி யிருக்கிறார்கள். பீரங்கிகளை, ஏற்ற இடங்களில் அமைத்திருக்கிறார்கள். இவை யல்லாமல் நகர வாயிலை முள் வேலி கொண்டு அடைத்திருக்கிறார்கள். இப்ப

டிப் பட்ட அரண்களுக்குள் இருக்கும் ரஷ்யப் படைகள் சரண் புகுவதை விடச் சாவதே மேல் என்னும் உறுதியுடன் இருக்கின்றன. இது ரஷ்யர்கள் செய்யும் பிரசாரம் போலத் தோன்ற லாம். ஆனால், இன்று உண்மையாகவே பெர் லினும் இப்படித் தான் சொல்லுகிறது.

“ ரெட் ஸ்டார் ” என்பது செஞ்சேனையார் நடத்தும் பத்திரிகை. இது எழுதுவதாவது :—“ நகர வாழ்க் கைக் குலைந்து போனாலும், பாதுகாப்புக்கான வசதி கள் இருக்கத் தான் செய்கின்றன.”

ரஷ்யா உடனே வீழ்ந்து விடும் எனத் தக்க செய்தி களைப் பத்திரிகைகள் வெளியிடும்; மறு நாளே, ரஷ் யப் பாதுகாப்புக்கள் மிகச் சிறந்த முறையில் அமைந் திருக்கின்றன வென்று வெளியிடும். இதற்குக் கார ணம் என்ன வென்றால், பெருத்த படைகளையும் தள வாடங்களையும் கொண்டு குறுகிய இடத்தில் தான் ஜெர்மானியர்கள் தாக்குகிறார்கள். பிறகு சற்று ஓய்ந்திருக்கிறார்கள். இந்த ஓய்வு நேரத்தில் தான், பழுதான தம் தளவாடங்களைச் செப்பனிட்டுக் கொள் ளுவதும் சப்ளைகளைச் சேகரித்துக் கொள்ளுவதும். இந்தச் சமயத்தில் தான் ரஷ்யர்கள் கூடிய வரை மேலேறித் தாக்குகிறார்கள்.

* * * *

ஒரு வாரத்திற்கு முன்பு மைல் கணக்கில் வென்று கொண்டு வந்த ஜெர்மானியர்களுக்கு, இப்போது கஜக் கணக்கில் தான வெல்ல முடிகிறது. ரஷ்யா வைப் பாதுகாக்கிறவர்கள் உண்மையிலே மிகவும் சிக்கலான நிலைமையில் தான் இருக்கிறார்கள். இந்த நிலைமைக்கு ரஷ்யப் படைகள் வந்தாலுங் கூட, அவை திடீரென விழுந்து விடுவ தில்லை. முடிவில் மாஸ் கோவில் கிடைத்ததைப் போல வெற்றி கிடைக்கலாம். அல்லது செபஸ்டபோலில் கிடைத்தது போலத் தோல்வி கிடைக்கலாம். போரிட்டுக் கொண்டு ரஷ்யர் கள் முன்னேறிப் போகும் வரை, தொடர்ந்து தடுத்துக் கொண்டு தான் இருப்பார்கள். ஸ்டாலின் கிராட் நகரத்திற்கு வெகு தூரத்திற்கு அப்பால் தான் அதன் விதி நிர்ணயிக்கப்படும்; அந்த நகரத்திற்குள் அல்ல. ரஷ்யாவின் முக்கியப் படைகள் ஸ்டாலின் கிராடுக்குள் இல்லை யென்றும், வால்கா ஆற்றிற்கு வட புரத்தில் தான் இருக்கின்றன வென்றும் ஸ்வீ டிஷ் இராணுவ நிபுணர் ஒருவர் கூறுகிறார். இது உண்மையானால், எத்தனை காலத்திற்கு ஸ்டாலின் கிராடிலுள்ள படைகள் அந் நகரத்தைக் காத்துக் கொண்டிருக்கின்றனவோ, அத்தனை நல்லது. அப் போது டிமோஷாங்கோ தன் இருப்புப் படைகளைத் திரட்டிக் கொண்டு, தெற்கே போய், வான் பாக்கின் படைகளை டான், வால்கா ஆறுகளுக்கு இடையிலே இடது புரத்தில் தாக்கக் கூடும். இதற்கு, எத்தனை நாட்களுக்கு ஸ்டாலின்கிராடைக் காக்கக் கூடுமென் பது இரண்டு விஷயங்களைப் பொருத்திருக்கிறது. அதாவது, கஷ்டங்களைத் தாங்கத் தக்க உடற் சக்தி வேண்டும். இரண்டாவதாக எதிரியின் விமான பலத்தைக் குறைக்க வேண்டும். ஸ்டாலின்கிராட் மட்டும் விழாம லிருக்குமானால் 1942–43-ம் வருஷத் திற்கு ஜெர்மானியர் வகுத்த திட்டம் தோல்வியுற்றது என்று தான் சொல்ல வேண்டும். ஜெர்மானியர்கள் ஸ்டாலின்கிராடைப் பிடித்து விடுவார்களானால், வான் பாக் படையைச் சேர்ந்த 10 லட்சம் பேர்களையும் 2,000 முதல் 3,000 டாங்கிகளையும், 2,000 முதல் 3,000 விமானங்களையும் அவர்கள் மற்ற போர் முனை களுக்கு அனுப்பக் கூடும்.

* * * *

ஸ்டாலின்கிராடைக் கைப்பற்ற வேண்டியது ஜெர் மானியர்களுக்கு மிகவும் முக்கியம். ஏனென்றால் ! காகஸஸ் மலையின் வட பக்கங்களில் வெளியேறும் வழிகளில் ஆதிக்கம் அவர்களுக்குக் கிடைக்கலாம். வட காகஸஸ் பிரதேசத்தில் முதலில் இவர்கள் தாக்கினார்கள். இவர்களுடைய நோக்கம் டான், வால்கா, டோக், குபான் ஆகிய ஆறுகளைக் கைப்பற் றிக் கொள்ள வேண்டு மென்பது தான். இந்த முயற்சியின் பயனாகத் தான் கருங் கடல் துறைமுகப் பட்டினமான ‘ நொவொரோஸிஸ்க் ’ வந்து சேர்ந் தார்கள். இந்தப் பட்டினம் அவர்கள் வசப்படு மானால், அவர்கள் போக்கு வரவிற்கு மிகுந்த வசதி யுண்டாகி விடும். கான்ஸ்டென்ஸாவி லிருந்து நேரே அவர்கள் வந்து சேர முடியும். இதற்கு, கருங் கட லில் உள்ள ரஷ்யக் கப்பல் படைகளை அழித்தாக வேண்டும். நொவொரோஸிஸ்க் பட்டினம் எதிரி கள் கைப் பட்டாலும் கூட, டுவப்சி, சுகும், போதி, ஆகிய துறைமுகங்களையும், பாகும் முகத்துவாரத்தை யும் ரஷ்யக் கப்பற் படைகள் காவல் புரிந்து கொண் டிருக்கும். ஜெர்மானியர்கள் காகஸஸ் மலைத் தொடரின் மேற்குக் கடைசி வரை போராடிக் கொண்டே போய், அங்கிருந்து தெற்கே கருங் கட லின் கரைக்கு, ரோடு வழியாக வந்து சேர முடியுமா என்பது தான பிரசனை. அங்கே, அநேக சுரங்கப் பாதைகளும், மலை யுச்சிகளும், செங்குத்தான பாறைகளும், மயிர்க் கூச் செறியத் தக்க வளைவு களும் இருக்கின்றன. அச்சு நாட்டுப் படைகள் கரை வழியாக பாகுமுக்குப் போவ தென்பது மிகவும் கஷ் டம் தான். என்றாலும் அது முடியாத தல்ல. இதைப் பிடித்து விட்டார்களானால், காகஸஸுக்கு அப்பாலும் தாக்குவதற்கு இடங் கிடைக்கும். ஆனால் இங்கே, ரஷ்யப் படைகளோடும், 9-ம் படையைச் சேர்ந்த பிரிட்டிஷ் இந்தியப் படைகளோடும் கடும் போராட வேண்டி யிருக்கும்.

ரஸ்டோவி லிருந்து க்ரோஸ்னி எண்ணைக் கிணறு கள் வரை யுள்ள எண்ணைக் குழாய்களையும் ரயில் வேயையும் எதிரிகள் தாக்கினார்கள். பிறகு அங் கிருந்து காஸ்பியன் கடலி லுள்ள மக்காச் என்னு மிடத்தையும் தாக்கினார்கள். இந்தப் பக்கத்தில் கடுமையான யுத்தம் நடை பெறலாம். க்ரோஸ்னி, கிஸ்லியார், மக்காச் ஆகிய இம் மூன்று நகரங்களும் முக்கோண வடிவமாக அமைந் திருக்கின்றன. இது காக்கேஷியாவிற்கு அப்பாலுள்ள பகுதியையும், சோவியத் யூனியனுக்கு மேற்கேயும் உள்ள பகுதி களையும் இணைக்கும். ஆகவே, இந்தப் பகுதியில் ஜெர்மானியரோடு ரஷ்யா போராட வேண்டு மானால், காலாகாலத்தில் தேவையான தளவாடங்கள் சப்ளை ஆக வேண்டும். காகஸஸ் மலைகளைத் தாண்டித் தாக்குவது உண்மையிலேயே கஷ்டந் தான். பாகுவி லிருந்து ஆஷ்ட்ரகானுக்குக் கடல் வழியாகவும் தரை வழியாகவும், எண்ணை, சோவியத் யூனியனுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. இதைத் தடுக்க வேண்டு மானால், ஜெர்மானியர்கள் ஸ்டாலின்கிராடைக் கைப்பற்றி யாக வேண்டும்.

“ செஞ்சேனையை அடியோடு ஒழித்து விட வேண் டும் என்னும் நோக்கங் கொண்டு தான் ஜெர்மானி யர்கள் சென்ற வருஷம் மாஸ்கோ மீது படையெடுத்து இரத்தக் காட்டின் வழியாக வந்தார்கள்; இந்த வருஷமும் கார்கோவி லிருந்து ஸ்டாலின்கிராட் வாயில்கள் வரை வந்திருக்கிறார்கள்,” என்று “ டெய்லி எக்ஸ்பிரஸ் ” எழுதுகிறது. ” ஜெர்மன் படைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் கொல்ல வேண்டு மென்று ரஷ்யர்கள் முனைந் திருக்கிறார்கள். ஸ்டா லின்கிராட் யுத்தம் இத்தோடு முடிவ தில்லை. ரஷ்யப் படைகளுக்கும் ஜெர்மன் படைகளுக்கும் சென்ற 15 மாதங்களாக நடை பெறும் யுத்தத்தில், இது ஒரு முக்கியமான சம்பவம் என்று தன் கொள்ள வேண்டும்.” மேலும் அப்பத்திரிகை எழுதுவதாவது :—

> நமக்குத் திடீரென ஆபத்தாகத் தோன்றி யவை எல்லாம, இந்த வருஷம் முழுதுமே தெளிவாக ரஷ்யத் தலைவர்களுக்குத் தெரிந் திருக்கிறது. தம் திட்டத்தை விட்டு அவர்கள் மாற வில்லை. பின் வாங்குவது மில்லை. சவ காசம் உண்டாக்கிக் கொள்ளும் பொருட்டு, டிமோ ஷாங்கோவின் படைகள் போரிட்டன. மாரி காலம் வருகிற வரை, அவகாசம் பெற்று விட் டார்கள். இப்போது தான் ரஷ்யா எதிரிகளை நாசம் செய்ய முடியும்.



# காகிதச் சிக்கன முறைகள்

## அரசாங்கத்தார் ஆலோசனைகள்

காகிதத்தை மிகவும் சிக்கனமாக உபயோகித்தா லல்லது அடுத்த சில மாதங்களில் கட்டாயம் காகி தப் பஞ்சம் வந்து விடும். வைசிராய் நிர்வாக சபையின் யுத்த மூலப் பொருள்கள் கமிட்டியார் இந்தப் பிரசினையைக் குறித்து செவ்வையாக ஆராய்ச்சி செய்து சில முடிவுகளுக்கு வந்திருக்கிறார் கள்.

இதன்படி, தனிப்பட்டவர்களும், வியாபார ஸ்தா பனங்களும், சொந்த ஸ்தாபனங்களும், பொது விடுதிகளும், சங்கங்களும், அரசாங்கக் காரியாலயங் களும் பெருவாகப் பாதிக்க படலாம். அரசாங்கக் காரியாலயங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் சில வகை களில் சிக்கனம் கையாளப்படுகிறது. இம்முறைகளை இன்னும் கடுமையாகக் கையாள வேண்டும் என்று அக்கமிட்டியார் முடிவு கட்டி யிருக்கிறார்கள். அன் றியும், பல பிரசுரங்களை அரசாங்கத்தார் வெளியிடு கிறார்கள். இவற்றுள் சில, யுத்த காலத்திற்கு மிகவும் அவசிய மல்ல. அவற்றை வெளியிடுவதை நிறுத்தி விட வேண்டும்; அல்லது, அவற்றின் சுருக்கத்தை மட்டும் வெளியிட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கீழ்க் கண்ட முறைகளைக் கையாளும்படி முற் கூறிய ஸ்தாபனங்களுக்குச் சிபார்சு செய்வ தென்று தீர் மானித்திருக்கிறார்கள் :—

(1) காகிதக் கூடுகளை ஒட்டுவதற்குப் பதிலாக, அவற்றின் வாய்களில் ஒரு தனி துண்டுக் காகிதத்தை ஒட்டி அதன் மறு நுனியை அந்தக் கூட்டின் மேலே ஒட்டி, அந்தத் துண்டுக் கடிதத்தில் விலா சத்தை எழுதி யனுப்பலாம்.

(2) இரண்டு பக்கங்களிலும் டைப் அடித்த சிறு துண்டுக் கடிதங்களை உபயோகிக்கலாம்.

3. மேலொப்பக் கடிதங்கள் எழுதுவதையும், கூட்ட நடவடிக்கைகளை அங்கத்தினர்களுக்கு அனுப் புவதையும், வரவுக் கடிதங்கள் எழுதுவதையும், மிகவும் அவசிய மில்லாத போது நிறுத்தி விடலாம்.

இங்கிலாந்தில் மிகக் கடுமையான சிக்கன முறை களைக் கையாண்டிருக்கிறார்கள். அந்த முறைகளை இங்கேயும், கையாள வேண்டிய அவசியம் நேராத படி, அரசாங்க உத்தியோகஸ்தர்களும் மிகவும் ஊக் கத்தோடு சிக்கன முறையைக் கையாள வேண்டும்; பொது ஜனங்களும் இதில் ஒத்துழைக்க வேண்டும்.



### பிரியமான பெயர்க ளெல்லாம் மாறிப் போமே !

ஜப்பானியர் சிங்கப்பூரைப் பிடித்ததும் அம் மாநகருக்கு ஜப்பான் பெயர் ஒன்றை சூட்டி னர் ! புண்ணிய பூமியாகிய நம் பாரத நாட்டில் சரித்திர கீர்த்தி வாய்ந்தவையும் புராணப் பிர சித்தியுடையவையுமான பட்டணங்கள், எத்தனை -திருக்கோயில்கள், புனித தீர்த்தங்கள் ! ஹா ! 38 கோடி மக்கள் ஒன்று போல் மிகக் கொண்டாடும் இத்திவ்விய ஸ்தலங்க ளெல்லாம் ஜப்பானியர் வசமாகில், கதி யென்னவாகும் தெரி யுமா ? ஐயோ ! சகலமும் சிங்கப்பூரைப் போல் பெயர் மாறி உருத் தெரியாமல் மிலேச்சப் பட்டுப் போமே ! ஈவிரக்க மில்லாத குள்ளர் கள் நம் மனோ பாவங் களை மதிக்கப் போவ தில்லை !



இப்படிப் பட்ட அக்கிரமம் நேரப் போம் போது, பாரத வீரர்களாகிய நாம் கையும் கட்டி வாயும் பொத்தி சுத்தப் பேடிகளைப் போல் பயந்து நடுங்கி ஒடுங்கி யிருப்பதா என்ன ? ஒருக்காலு மில்லை ! எல்லோரும் சேர்ந்து நம் முழு பலத்துடன் இக்குள்ளர்களை ஒரு கை பார்த்தே விடுவோம் !

**ஜப்பானியருக் கெதிராக தேசியப் போர் முனை அமையுங்கள்**




MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஆண்டு அக்டோபர்மீ 2உ, வெள்ளிக்கிழமை [இதழ் 39

## சென்னை லான்ஸ் நாயிக்குப் பதக்கம் பரிசு.

*லான்ஸ் நாயிக் சொக்கலிங்கம் சென்னை காலாட் படையின் சிக்னல் பகுதியைச் சேர்ந்தவர். இந்து. தமிழர். மதுரை ஜில்லா, பெரிய குளம் தாலுக்கா, மேல் மங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர். சமீபத்தில் மேலைப் பாலைவனத்தில் நடைபெற்ற யுத்தத்தில், மிகுந்த வீரத்தோடு இவர் போராடியதைப் பாராட்டி இவருக்கு 'இந்தியன் டிஸ்டிங்குவிஷ்ட் சர்விஸ் மெடல்' என்னும் பதக்கத்தை அரசாங்கத்தார் அவருக்கு அளித்திருக்கிறார்கள்.*

## ஜெனரல் வேவல் பிரசங்கம்

### "பர்மாவை மீண்டும் பிடிப்போம்"

### "கடும் போராடினால் தான், ஐரோப்பாவை மீட்கலாம்"

**"பர்மாவை நாம் இழந்தது முதல் மீண்டும் அதைக் கைப்பற்றுவதற்காக நான் திட்ட மிட்டுக் கொண்டிருக்கிறேன். ஏனெனில் போர்த் தந்திர நூலின் படி, அது மிகவும் பொருத்தமான இடம். ஜப்பானோடு போராடுவதற்கு மிகவும் முக்கியமான பகுதிகளில் இதுவும் ஒன்று. சீனர்களோடு நாம் சம்பந்தம் வைத்துக் கொள்ள இது அவசியமா யிருக்கிறது. ஜப்பானைத் தாக்குவதற்கு, நமக்கு, ஒரு தளம் வேண்டி யிருக்கிறது."**

*என்று புது டில்லியில் பிரிட்டிஷ் பத்திரிகைக்காரர்களும் அமெரிக்கப் பத்திரிகைக் காரர்களும் சேர்ந்து அவருக்கு நடத்திய விருந்தின் போது, இந்தியப் படைத் தலைவர் ஜெனரல் வேவல் கூறினார். மேலும் அவர் கூறியதாவது :—பர்மாவை மீண்டும் கைப்பற்றுவதைக் குறித்து நான் மிகவும் கவனமாக ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன். என் திட்டம் என்னவென்று நான் சொல்ல முடியாது. அது கடுமையான தோர் வேலை.*

*யுத்தத்திற்குத் தேவையான சாமான்கள் கிடைப்பது கஷ்டமாக உள்ள நிலைமையில் தான், நான் இருக்கிறேன். ரோமெல் எகிப்தில் முன்னேறி போய்க் கொண்டிருந்தார். காகஸஸ் பிரதேசத்தைத் தாக்குவார் போலிருந்தது. அப்போது படைகளையும் சப்ளைகளையும் அங்கே அனுப்ப வேண்டி ஏற்பட்டிருக்கும். ஆனால் இப்போது நிலைமை மாறி விட்டது. நமக்குத் தேவையானவை இப்போது கிடைத்துக் கொண்டிருக்கின்றன.* **இந்தப் போரிலேயே மிகவும் கடுமையான பகுதி எது வென்றால், கப்பல்கள் போக்கு வரவிற்காக நடைபெறும் போராட்டம் தான்.**

**ஜப்பானியர் ஏமாற்றி விட்டார்கள்.**

*பழைய கால முறைப்படி பழகியவர்கள் ஜப்பானியர்கள் என்று நாம் நினைத்திருந்தோம். மிக இலேசான கப்பல்களில் வெகு வேகமாகப் பிரயாணஞ் செய்வார்கள் என்றும் நாம் நினைக்க வில்லை. இதில் நாம் ஏமாந்து விட்டோம். ஜப்பானியர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது தான் இப்போது கேள்வி. சீரண மாகாத உணவைச் சாப்பிட்டு விட்டுக் கஷ்டப் படும் மண்ணுளிப் பாம்பைப் போலக் கஷ்டப்படுகிறார்கள். ஆஸ்திரேலியாவை யாவது இந்தியாவை யாவது தாக்குவது போன்ற பெரிய விவகாரங்களில் தலையிட்டுக் கொள்ள மாட்டார்கள் என்று தான் நினைக்கிறேன்.*

*ஜப்பானியப் படைகளில் அவர்களுடைய விமானப் படை தான் சற்று பலவீனமானதாகி விடும் என்று நினைக்கிறேன். தம் தீவைக் காக்கும் பொருட்டும் போதுமான அளவிற்குப் பெரிய விமானப் படையை அவர்கள் அங்கே வைத்திருக்க வேண்டி யிருக்கிறது. ரஷ்யா தம் மீது போருக்கு வாராதபடிக் காத்திருக்க மஞ்சூரியாவிலும் பெரும் விமானப் படையை வைத்திருக்க வேண்டி யிருக்கிறது. தென் மேற்கு பசிபிக் தீவுகளிலும் விமானப் படை தேவை. ஆசியாவிலேயே கூடிய சீக்கிரத்தில் தன் ஆதிக்கத்தை நிலை நாட்ட வேண்டு மென்று ஜப்பான் ஆசை கொண்டிருக்கிறது. இதற்கு முதலில் ரஷ்யர்களோடும் இரண்டாவது சீனர்களோடும் போராடித் தீர வேண்டி யிருக்கிறது ஜப்பானியர்களுக்கு.*

**ரஷ்யா தான் முக்கியம்.**

*இதில் முக்கிய ஸ்தானத்தை ரஷ்யா தான் வகிக்கிறது. இது இந்தியாவைப் பாதிக்கும் பிரச்னை.* 1917-*ம் வருஷத்திய வேனிற் காலத்தில் ஜெர்மானியர்கள் நம்பிக்கைகள் எல்லாம் சிதறிப் போனது போல, இப்போதும் ரஷ்யர்கள் சிதறடிக்கிறார்கள். மழை காலத்தில் தமக்குத் தேவையான பொருள்களைத் திரட்டிக் கொண்டு, மேற்கே யிருந்து தாக்குகிறவர்களைத் தடுக்கலாம் என்று நினைத் திருக்கலாம்; அல்லது மேல் நோக்கித் தாக்க வேண்டும் என்றும் நினைத் திருக்கலாம். அடுத்த வருஷத்தில் மத்திய கிழக்குப் போர் அரங்கத்தில் அவர்கள் தாக்க வெகுவாக முயற்சிக்கக் கூடும். போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டிய பருவம் வந்து விட்டது. அன்றியும் மழையைக் குறித்தும் நாம் மிகுந்த எச்சரிக்கை யோடு ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. வெயில் காலத்தில் பாலை வனத்தில் போராட ஒரு நாளும் நம்மால் முடியாது என்றுதான் என்னிடம் சொன்னார்கள். நாம் இப்போது அங்கே போராடினோம். அபிசீனியாவில் மழை காலத்திலும் நாம் போராடினோம். வடக்கே ரஷ்யப் படைகள் பலமா யிருக்கிற வரையிலும். தெற்கே காகஸஸ்*

(3-ம் பக்கம்—தொடர்ச்சி.)

# "சர்ச்சில் போன்ற தலைவர் தான் தேவை."

## யுத்தத்திற்குப் பிறகு நேச நாடுகளின் பொறுப்பு.

### ஆந்தனி ஈடன் பேச்சு.

*மிஸ்டர் ஆந்தனி ஈடன், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அந்நிய நாட்டு மந்திரி. இவர் சென்ற சனிக் கிழமை வாஷிங்டன் நகரத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்க மாவது :—*

நமது பாம்பர் விமானங்கள் ஜெர்மனியைத் தாக்கிக் கொண்டு வருகின்றன. இதனால் யுத்தப் போக்கே பாதிக்கப் படலாம். ஆ வே இத்தாக்குதல்கள் மிகவு முக்கியமானவை. ஜெர்மன் விமானப் படைகள் 1941-ம் வருஷம் வெற்றி பெறுவதற்குக் காரணம், தம் படையின் திறமையில் அவர்களுக்கு நம்பிக்கை யில்லை. போதுமான அளவிற்குப் பெரும் படை யில்லாமல் தான, ஜெர்மானியர்கள் தாக்க ஆரம்பித்தார்கள். பிரிட்டனுக்கு மேல் நடை பெற்ற விமான யுத்தத்தில், தான் ஜெர்மானியர்களுக்கு ஏராளமான சேதம் ஏற்பட்டது. இது அவர்களாகவே தேடிக் கொண்ட சேதந் தான். அதுவும் பட்டப் பகலில்.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு சர்ச்சில் ஒரு வாக்குறுதி கொடுத்திருந்தார். அது இப்போது நிறைவேறுகிறது. நமது விமானப் படைகள், ஜெர்மனியில் யுத்தத் தளவாடங்கள் செய்யப்படும் தொழிற் சாலைகள் உள்ள நகரங்கள் மீது, வெடி குண்டுகள் எறிந்து நாசம் விளைத்து வருகின்றன. இந்தச் செய்தியை டாக்டர் கோபெல்ஸ் மறைத்து விட பெரிதும் முயன்றார். என்றாலும் முடிய வில்லை.

1940-ம் வருஷம் ஜூன், ஜூலை மாதங்களில் மட்டும் பிரிட்டிஷ் விமானப் படைகள் ஜெர்மனி மீது 350 டன் வெடி குண்டுகளையும் 1941-ம் வருஷம் ஜூன், ஜூலை மாதங்களில் 8,500 டன் வெடி குண்டுகளையும் 1942-ம் வருஷம் ஜூன், ஜூலை மாதங்களில் 13,000 டன் வெடி குண்டுகளையும் எறிந்திருக்கின்றன. இந்த வருஷம் செப்டெம்பர் மாதம் முதல் 14 நாட்களில் 9 முறை தாக்கி 5,000 டன் வெடி குண்டுகளை எறிந்தன. ஆனால் நாஜிகளோ இந்த 14 நாட்களில் 2 முறை தான் லண்டனை விமானங்களி லிருந்து தாக்கினார்கள். கொலோன் நகரத்தைப் போல 5 மடங்கு பெரிது லண்டன். இந்தக் கொலோன் நகரத்தின் மீது 90 நிமிஷங்களில் 1,000 டன் வெடி குண்டுகளை நம் விமானங்கள் வீசி யிருக்கின்றன. அத்லாண்டிக் கரையில் பிரெமன், வில்லெம்ஷேவன், டெசெல்டார்ப் ஆகி வை முக்கியமான குறிகள். இந்த இடங்களையும் இடைவிடாது பலத்த குண்டுகளைக் கொண்டு தாக்க வேண்டும். இது தான் வெற்றிக்கு வழி. **ஜெர்மானியர்களைப் பயமுறுத்தும் நோக்கத் தோடு தாக்குகிறோம் என்று சொல்லுவது தவறு. ஆனால் ஜெர்மனியன் கையை ஒடித்து, மேலும் பிறரைத் துன்பப் படுத்தா மலிருக்கும் படித் தடுப்பது தான்.**

நமது விமானப் படையினர் குறி தவறுமல் வெடி குண்டுகள் எறிவதில் மிகவும் தேர்ச்சி பெற்று விட்டனர். ஆனால் ஜெர்மன் போக்கு வரவு முறை மிகவும் சிக்கலானது ; கஷ்டமானது. இதனால் மேற்கு ஜெர்மனியி லுள்ள தம் தொழிற் சாலைகளி லிருந்து, கிழக்கு ஜெர்மனியி லுள்ள தம் படைகளுக்குத் தளவாடங்களை அனுப்ப, ஜெர்மானியர் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். இந்தப் பகுதிகளை நம் விமானப் படைகள் தாக்க வேண்டியது அவசியம் என்று அரசாங்கத்தார் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். எனவே, வாரந் தோறும், மாதந் தோறும் இத்தாக்குதலை அதிகப் படுத்த அரசாங்கத்தார் எல்லா வித முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அச்சு நாட்டார் மிகவும் கடுமையான கொடுமைகளை மற்றவர்களுக்குச் செய்திருக்கிறார்கள். ஆகவே, **அவர்களைத் தக்கபடி தண்டிக்காமல் விடுவ தில்லை** யென்று உறுதி கொண்டிருக்கிறோம். **அவர்களை பழி வாங்க வேண்டு மென்பது நம் நோக்க மல்ல நாகரிகத்தையும் நியாயத்தையும் அழிக்க முற்படுகிறவர்களுக்குச் சரியான பாடம் கற்பித்த பிறகு தான் நாகரிகமும் நியாயமும் நிலைக்கும் என்பது என் துணிபு. கர்ம பலன் கைமேல் நிச்சயமாக விரைவில் கிடைக்கத் தான் போகிறது. எப்படி ? நேச நாடுகளின் பலம் நாளுக்கு நாள் ஓங்கிக் கொண்டு வருகிறது. எதிரிகளை நம் நேச நாட்டுப் படைகள் அடியோடி விரட்டி விட வேண்டும். சட்டமும் சமாதானமும் மீண்டும் நிலை பெற வேண்டும். சிவில் நிர்வாகம் நடை பெற வேண்டும். போக்கு வரவு சாதனங்கள் பழுது பார்க்கப் பட வேண்டும். நகரிக வாழ்விற்குத் தேவையான முக்கியமான வேலைகள் மீண்டும் ஆரம்பமாக வேண்டும்.**

ஆரம்பத்தில் இந்த வேலைகள் இராணுவ மேற்பார்வையில் தான் நடை பெற வேண்டும். ஏனென்றால் பொது ஜனங்களின் இன்றியமையாத தேவைகள் நீங்கினால் மட்டுந் தான், நேச நாட்டு இராணுவமும் சரிவர நிர்வாகத்தை நடத்த முடியும் மீட்சி பெற்ற நாடுகளில் இராணுவ நிர்வாகம் படிப்படியாகத் தம் பொறுப்பை சிவில் நிர்வாகத்திற்கு ஒப்புவித்து விட வேண்டும். குறிப்பாக பாதுகாப்பு இலாக்காவையும், உணவுப் பொருள்கள சப்ளை இலாக்காவையும் முதலில் மாற்ற வேண்டும். இந்த மாற்றம் ஏற்படுகிறது என்ற உணர்ச்சியே ஏற்படாத படி அது மாற வேண்டும்.

அமெரிக்காவும் இந்த யுத்தத்தில் இறங்கியதை முன்னிட்டு, இந்த விஷயத்தைக் குறித்து மீண்டும் ஆராய்ந்து பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இது பற்றி அமெரிக்க அதிகாரிகளுடன் பல முறை கலந்து பேசி யிருக்கிறோம். சோவியத் அரசாங்க ஸ்தானீகருடன் நானே நேரில் கலந்து பேசி யிருக்கிறேன். கீழ்க் கோடி நாடுகளுக்கு உதவி வழங்குவது பற்றி சீன அரசாங்கத்தாரோடும் பேசி யிருக்கிறோம். இனி மீட்சி பெறும் நாடுகளுக்கு உதவி வழங்குவதைக் குறித்து எப்படிப் பட்ட திட்டத்தை வகுத்தாலும், நேச நாடுகளெல்லாம் இத்திட்டத்தை நடத்துவிக்கும் பொறுப்பைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். இந்த வேலையைத் திடீரென்று செய்து விடவும் முடியாது. ஆகவே, அதற்கு இப்போதிருந்தே ஆயத்தம் செய்து வர வேண்டும். இந்த ஆயத்த வேலையும் நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு மன உறுதியும், திறமையும் நேச நாடுகளுக்கு இருக்க வேண்டும். இந்த நாடு சம்மந்தப் பட்ட வரை, ஐரோப்பாக் கண்டத்தி லுள்ள நேச நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லைகளைப் போக்க வேண்டி, மிகுந்த தியாகங்கள் செய்ய பிரிட்டிஷார் தயாராய் இருக்கிறார்கள்.

**யுத்தத்திற்கு பிற நிலை என்ன ?**

யுத்தத்திற்கு பிறகு உலக நிலை எப்படி அமைக்கப் பட வேண்டும் ? சர்வ தேச சம்பந்தத்தை எப்படி அமைப்பது ? அது நமது நாகரிகப் போக்குக்கு இயைந்ததாக விருக்க வேண்டும். ஆயுதத்தைக் கொண்டோ, இரக்க மற்ற கொடும் முறைகளைக் கொண்டோ ஏற்படுத்தப் படுகிற சமாதானம் பயனில்லாதது. உண்மையான சமாதானந் தான் நெடு நாட்கள் நிலைத்திருக்கும். அப்படிப் பட்ட சமாதானந் தான் நிறுவப் பட வேண்டும். இது கைகூடுவதற்கு நேச நாடுகளின் கூட்டுறவு மிகவும் அவசியம். குறிப்பாக நேச நாடுகளைச் சேர்ந்த வல்லரசுகளின் கூட்டுறவு மிகவும் அவசியம். எல்லா விதக் கொள்கைகளிலும் நாம் அமெரிக்காவோடு ஒத்துப் போக வேண்டு மென்று உறுதி கொண்டிருக்கிறோம். **யுத்தத்திற்குப் பிறகு சோவியத் ருஷ்யாவோடு கலந்து கொண்டு தான் சமு**



தாயத்தைத் திருத்தி யமைப்போ மென்று ஆங்கிலோ சோவியத் ஒப்பந்தத்தில் கண்டுள்ள படியே நிறைவேற்றுவோ மென்று உறுதி கூறி யிருக்கிறோம். இந்தத் திட்டத்தில் சீனவும் கூட நான்காவது கூட்டாளி. சிறு சிறு நாடுக ளெல்லாம் ஒன்று சேருவதற்கு பிரிட்டன் இது வரை ஊக்கங் கொடுத்ததைப் போலவே, இனியும் கொடுத்து வரும். என்றாலும் தனித் தனிக் கூட்டங்களாக அவை சேருதல் கூடாது. ஏனென்றால், பெரிய வல்லரசுக ளோடு சேர்ந்து நாட்டில் சமாதானத்தை நிலை நாட்ட அப்போது தான் முடியும்.

நிரந்தரமான சமாதானம் நிலைக்க வேண்டும். யுத்தத்திற்குப் பிறகு உலக மக்களின் நிலை உயர வேண்டும். இவற்றிற்குத் தெளிவான அறிவு வேண்டும் ; நம்பிக்கை வேண்டும் ; உண்மையான குறைபாடுகளை உணர்ந்து அவற்றை போக்கும் முயற்சி வேண்டும். ஜெர்மானியரும், இத்தாலியரும், ஜப்பானியரும் சிதறடிக்கும் முன்பே, பழைய உலக கலக நிலை மாறி விட்டது. இப்போது ஏற்படப் போகிற திடீர் புரட்சியால் உண்டாகும் மாறுதல்களுக்கு நாம் தப்ப முடியாது. இதற்குத் தப்பினாலும் கூட, யுத்தத்திற்குப் பிறகு ஏற்படக் கூடிய சிக்கல்களி லிருந்து மீள, ஒரு நல்ல வழி யுண்டு. அதாவது நாமும் இந்நாட்டு மக்கள் என்னும் தன்னம்பிக்கை ஏற்பட வேண்டும். உலக ஆதிக்கம் பெற்றிருக்கும் நாம், உலக மக்களுக்கே பொறுப்பாளிகளா யிருக்கிறோம் என்னும் உணர்ச்சி ஏற்பட வேண்டும். இந்தப் பொறுப்புகளை உணர்ந்து, நம் நேச நாடுகள் சிறியவையா யிருந்தாலும், பெரியவையா யிருந்தாலும் அவற்றோடு ஒத்துழைத்து வருவோமானால், அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குச் சற்று இலகுவாகும்.

**தனக்குச் சாதகமாக ஓட்டுக்களை சேகரிக்கும் பொருட்டு**

*மிஸ்டர் சர்ச்சில், மக்களின் மா பெருந் தலைவர். தேனைப் போல் இனிக்கப் பேசும் தன்மை இவருக்குக் கிடையாது. உண்மை எத்தனைக் கொடியதானாலும், கொஞ்சமும் கூசாமல் அதை எடுத்துச் சொல்லி விடுபவர்.* **யுத்த காலத்திலும் சரி, சமாதான காலத்திலும் சரி, இப்படிப் பட்ட தலைவர்கள் தான் நமக்குத் தேவை. சமாதான காலத்தில் வேறு வகையான ஆபத்துக்களையும் கஷ்டங்களையும் நிர்வகிக்க வேண்டும். இவற்றை வெல்லுவதற்குத் தைரியம் வேண்டும். நாட்டு மக்கள் எல்லோரும் ஒன்று பட்டுத் தான், தலைவராக, அவர் இருக்க வேண்டும் அந்நாட்டு மக்களின் நோக்கத்தை ஈடேற்ற அவருக்குத் திறமை இருக்க வேண்டும்.**

## ஹிட்லர் திட்டம் தோற்றது.



✻

பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் காவல் புரிந்து கொண்டிருக்கிறது. சப்ளை கப்பல்களைத் தகர்க்க ஜெர்மன் படைகள் செய்யும் முயற்சியை, இந்த யுத்தக் கப்பல் குலைத்துக் கொண்டிருக்கிறது.

✻

(1-ம் பக்கம் தொடர்ச்சி.)

படைகள் பலமா யிருக்கிற வரையிலும், ஜெர்மானியர்களுடைய எண்ணம் நிறைவேறாது. ஸ்டேலின் கிராடை ஜெர்மானியர்கள் பிடித்துக் கொள்ளலாம். அதனால் நிலமை வெகுவாக மாறி விடாது. வால்கா ஆற்றின் கடைசிப் பகுதியில், வருஷக் கடைசியில் பனி கடுமையாகப் பெய்கிறது. காகஸஸ் மலையின் தென் பகுதி யிலுள்ள கணவாய்களில் இப்போதே பனி பெய்யத் தலைப் பட்டு விட்டது.

**இந்தியாவிற்கு ஆபத்து இல்லை.**

இப்போதாவது அடுத்த வெயில் காலத்திலாவது ஜெர்மானியர் காகஸஸ் வழியாகத் தெற்கே வந்து பாரசீகத்திலுள்ள எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்றிக் கொள்ளுவார்கள் என்று நான் நினைக்க வில்லை. இது இந்தியாவின் **மேற்கெல்லைக் கருகில் இருப்பதனால்,** நாம் இது பற்றி அக்கறை யோடிருக்க வேண்டும்.

சமீபத்தில் நடை பெற்ற கலவரங்களினால் யுத்த முயற்சி ஓரளவிற்குப் பாதிக்கப் பட்டிருந்தாலும், பொதுவாக இங்குள்ள நிலைமையைக் குறித்து நான் திருப்தி யடைகிறேன். **இதில் முக்கியமான விஷயம் என்ன வென்றால் மாதந் தோறும் 70,000 பேர்கள் படைகளில் புதிதாகச் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். அன்றியும் இராணுவத்தில் எந்த விதக் கலவரமும் உண்டாக வில்லை.**

ஜெர்மனியை விமானங்களைக் கொண்டு தாக்குகிறோம். ருஷ்யாவில் ஏராளமான வீரர்களும் தளவாடங்களும் ஜெர்மனிக்கு நஷ்டம். ஆகவே இந்த மழை காலத்தில், வேலை செய்யும்படி ஜெர்மானியரைத் தூண்டுவது மிகவும் கஷ்டமான தோர் வேலை தான் நெபோலியன் திட்டம் எப்படி அழிந்ததோ, அது போலவே தான், இந்தத் திட்டத்தை ஐரோப்பாவிலும் அருவருப்பார்கள். தம் நன்மைக்காக ஐரோப்பாவையே ஜெர்மானியர்கள் சூறையாடுகிறார்கள். கடுமையாக ஜெர்மானியரோடு போராடிய பிறகு, தான் ஐரோப்பாவை நாம் மீட்க முடியும். சென்ற மகா யுத்தத்தில் சோமியில் நடந்த கடும் போரில் முதல் நாளில் பிரிட்டிஷ் படையின் சிறந்த வீரர்கள் 60,000 பேர்கள் மடிந்தார்கள். ஆனால் ஜெர்மன் படைகள் அடியோடு சிதைந்து போயின. இந்த யுத்தத்தின் முடிவைக் குறித்து எனக்குச் சந்தேகமே கிடையாது. வீர உணர்ச்சியும் சகிக்கும் தன்மையும் நிச்சயமாக வெற்றி தரும். கடைசி வரை அமெரிக்காவும், ருஷ்யாவும் சீனவும் போராடத் தான் போகிறார்கள்.

# யுத்தப் போக்கு.

பிரிட்டிஷ் விமானப் படை ஞாயிறு விழாவை செப்டெம்பர் மாதம் 20-ம் தேதி புது டில்லி ரிடெம்ஷன் கோவிலில் கொண்டாடினார்கள். அன்று மாலை விமானப் படை உத்தியோகஸ்தர்களையும் படை வீரர்களையும் முன்னிட்டு விசேஷ வழிபாடு நடைபெற்றது. பிரிட்டிஷ் விமானப் படையின் சிறந்த வேலைகளைப் பாராட்டி எத்தனையோ பேர்கள் பேசியிருக்கிறார்கள். எதேச்சையை நாடும் உலக மக்களின் நன்றியை, 'மிஸ்டர்' சர்ச்சிலைப் போல அவ்வளவு சுருக்கமாகவும் அழுத்தமாகவும் வேறு யாரும் சொன்னதே கிடையாது. அவர் கூறியதாவது :—

> **மிகச் சிலருக்கு (விமானப் படையினருக்கு), உலகத்திலுள்ள இத்தனைப் பேர்கள், இந்த அளவிற்குக் கடமைப் பட்டிருந்தது போல, உலகச் சரித்திரத்திலேயே ஒரு போதும் இருந்ததில்லை.**

பிரிட்டிஷ் விமானப் படை அநேக சிறந்த வெற்றிகள் பெற்றிருக்கிறது. இந்த யுத்தத்திலேயே ஒரு வெற்றி மட்டும் மகா உன்னதமானது. சென்ற 1940-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 15-ம் தேதி, பிரிட்டனுக்கு மேலே ஆகாயத்தில் நடைபெற்ற யுத்தத்தில் 185 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது மிகச் சிறந்த வெற்றி யல்லவா? இந்த வெற்றியின் இரண்டாவது ஆண்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. அப்போது அமெரிக்கக் விமானப் படைத் தலைவரான லெப்டினனட் கர்னல் எச் எச். ஆர்னல்ட், பிரிட்டிஷ் விமானப் படைத் தலைவரான சர் சார்லஸ் போர்டலுக்கு ஒரு வாழ்த்துச் செய்தி யனுப்பினார். அதில் அவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருந்தார் :—

> "அன்று தங்கள் விமானிகளின் செயல்கள் யுத்தத்தின் போக்கையே மாற்றி விட்டன. உலகத்தையே வெல்லுவோம் என்று நாஜிகள் கொண்டிருந்த எண்ணத்தில் மண்ணைப் போட்டன. முடிவில் நேச நாடுகளுக்கு வெற்றி கிடைப்பதற்கான வழி கோலின. எதேச்சையும் வெற்றியும் பெற வேண்டி, தம் உயிர்களை மகிழ்ச்சியோடு தியாகம் செய்த வீரர்களை நினைவூட்டும் இந்த விழாவை, எதேச்சையா யுள்ளவர்கள் எல்லோரும் கட்டாயம் கொண்டாடுவார்கள்."

எதேச்சையை நாடியும் வெற்றியை முன்னிட்டும் நடந்த கடும் போராட்டத்தில் கிடைத்த சில வெற்றிகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். இந்த வருஷம் செப்டெம்பர் மாதம், முதல் 15 தேதிக்குள் 10 முறை பெரும் படையாய் பிரிட்டிஷ் விமானங்கள் போய், ஜெர்மனி யிலுள்ள குறிப்பிட்ட இடங்களின் மேல் குண்டுகளை வீசின. அல்லாமலும் எதிரி வயப் பட்டிருந்த நாடுகளின் மீதும் கடலின் மீதும் கூட, பிரிட்டிஷ் விமானப் படை குண்டுகளை வீசின. பத்து முறை படை எடுத்ததிலும், பிரிட்டிஷ் விமானப் படைக்கு 91 பாம்பர் விமானங்கள் மட்டுந்தான் சேதம். இரண்டு வருஷங்களுக்கு முன்பு பிரிட்டனுக்கு மேலே நடைபெற்ற விமான யுத்தம் உச்ச நிலையி லிருந்தது. 1940-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் முதல் 15 நாட்களுக்குள் பிரிட்டனை வந்து தாக்கிய ஜெர்மன் விமானப் படை 696 விமானங்களை இழந்தது. ஆனால் இந்த வருஷம் செப்டெம்பர் மாத முதல் பாதியில், 3 நாட்களுக் கொரு முறை பகலிலும், 2 நாட்களுக் கொரு முறை இரவிலும் மட்டும் தான் தாக்கின. அதுவும் தனித்தோ, இரண்டு அல்லது நான்கு விமானங்கள் சேர்ந்தோ தான் தாக்கின. ஆனால் செப்டெம்பர் மாதம் 8-ம் தேதி இரவு மட்டும் 12 எதிரி விமானங்கள் வந்து கிழக்குப் பக்கத்தில் தாக்கினவாம். இந்தப் பதினைந்து நாட்களில் பிரிட்டனுக்கு மேல் 10 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன. இந்தப் புள்ளி விவரங்களி லிருந்து பிரிட்டனுக்கு மேலே நடைபெற்ற விமான யுத்தத்தை விட, ஜெர்மனிக்கு மேலே நடைபெற்ற விமான யுத்தம் மிஞ்சி விட்ட தென்று தெரிகிறது.

**எதிரி விமானச் சண்டைக் குறைவு.**

எதிரி விமானத் தாக்குதலினால், பிரிட்டனில் பொது ஜனங்களில் காயப் பட்டவர்கள் எண்ணிக்கையும் இறந்து போனவர்களின் எண்ணிக்கையும் கவனித்துப் பார்த்தால், எதிரிகளின் தாக்குதல் வெகுவாகக் குறைந் திருக்கிற தென்று தெளிவாகத் தெரியும். ஒரு மாதத்தில் ஏற்பட்ட சராசரி சேதமாவது :—

| | |
|---|---|
| 1940 .. .. .. .. | 3,869 |
| 1941 .. .. .. .. | 1,647 |
| 1942 .. .. .. .. | 325 |

1940-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 6,955 பேர் பொது ஜனங்கள் கொல்லப் பட்டார்கள். ஆனால், சென்ற மாதத்தில் 403 பேர்கள் தான் கொல்லப் பட்டனர்.

கீழ்க் கண்ட புள்ளி விவரங்கள், பிரிட்டிஷ் விமான மந்திரி காரியாலயத்தி லிருந்த தஸ்தாவேஜிகளி லிருந்து திரட்டப் பட்டவை. 1939-42-ம் வருஷங்களில் ஏற்பட்ட சேதத்தின் ஏற்றத் தாழ்வைக் கீழே காணலாம் :—

| | ஜெர்மன் விமானப் படை. | இங்கிலீஷ் விமானப் படை. |
|---|---|---|
| 1939-40 | 1,549 | 383 |
| 1940-41 | 2,080 | 501 |
| 1941-42 | 286 | 7 |
| மொத்தம் ... | 3,915 | 891 |

1941-ம் வருஷம் ஜூன் மாதத்தில், ஜெர்மன் விமானப் படையைச் சேர்ந்த பாம்பர் படையில் முக்கியமானவை, கிழக்கே ரஷ்யாவிற்கும், தெற்கே மத்திய தரைக் கடலிற்கும் போய் விட்டன. அது முதல் தான், எதிரிகளின் விமானங்கள் பிரிட்டனைத் தாக்குவது சற்று குறைந் திருக்கிறது. அல்லாமலும், அந்த ஒரு வருஷம் முழுதிலும் இங்கிலாந்தைப் பாது காக்கும் விமானங்களில் 7 மட்டுந் தான் சேதமாயின. இதிலிருந்து எதிரிகளின் தாக்குதல் சற்று தளர்ந் திருக்கிற தென்று தெளிவாகத் தெரிகிறது. மேற்கே எதிரிகளின் தாக்குதல், சற்று குறைந் திருந்த அதே சமயத்தில், பிரிட்டிஷ் விமானப் படை எதிரிகளைத் தாக்கத் தலைப் பட்டு விட்டது. நடப்பு வருஷத்தில் பிரிட்டிஷ் விமானப் படை எதிரி நாடுகளைத் தாக்கியதை, 1939-ம் வருஷம் தாக்கிய தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அது சாதாரணமாக சுற்றிப் பார்த்ததாகத் தான் கருத வேண்டும்.

பாதுகாப்பதை விட, எதிர்ப்பதனால் தான் சேதம் அதிகம். 1939-40-ம் வருஷம் ஜெர்மனிய விமானப் படைகளுக்கு நேர்ந்த சேதத்தில் மூன்றில் இரண்டு பங்கு அளவு தான், பிரிட்டிஷ் விமானப் படைகளுக்குச் சேதம். சரியானபடி ஜெர்மனியைப் பிரிட்டன் தாக்க ஆரம்பித்தது, பிரான்ஸ் ஜெர்மானியர் வயப் பட்ட பிறகு தான். 1940-41-ம் வருஷத்தில் எதிரிகளுக்கு ஏற்பட்ட சேதத்தை விட, பிரிட்டிஷ் விமானப் படைக்கு சேதம் இரண்டு மடங்கு அதிகம். யுத்தத்தின் மூன்றாவது வருஷத்தில் இந்தச் சேதம் மூன்று மடங்காக உயர்ந்து விட்டது. ஐரோப்பாவின் மேல் பகுதியில் நேர்ந்த சேத விவரமாவது :—

| | ஜெர்மன் விமானப் படை. | பிரிட்டிஷ் விமானப் படை. |
|---|---|---|
| 1939-40 | 1,082 | 671 |
| 1940-41 | 662 | 1,173 |
| 1941-42 | 744 | 1,993 |
| தொத்தம் .. | 2,488 | 3,837 |



1941-42-ம். வருஷத்தில், ஹிட்லர் ஆதிக்கத்திற்குட் பட்ட ஐரோப்பிய நாடுகளின் மீது பிரிட்டிஷ் விமானப் படை 40,000 முறைகளுக்குக் குறையாமல் தாக்கி யிருக்கின்றது. ஆனால், அதே காலத்தில், பிரிட்டனை, ஜெர்மனி தாக்கியதைத் தாராளமாகக் கணக்கிட்டால் 4,000 முறைகளுக்கு மேல் இராது.

**விமான யுத்தத்தால் அதிக நன்மை.**

யுத்தம் ஆரம்பமாகி நான்கு வருஷங்களாகின்றன. இதனால் விமான யுத்தத்தில் பிரிட்டனுக்கு மிகுந்த நன்மைகள் ஏற்படுகின்றன. அமெரிக்கக் கோட்டை விமானங்கள் இங்கிலாந்தி லிருந்து கிளம்பி எதிரிகள் வச முள்ள நாடுகளில் பட்டப் பகலில் பல முறை தாக்கின. ஒவ்வொரு முறையும் சராசரி 100 டன் வெடி குண்டுகளை வீசிக் கொண்டு போயின. இந்தக் கோட்டை விமானங்களைப் போல, அநேக விமானங்கள், பிரிட்டனிலுள்ள 150 விமானத் தளங்களிலும் வந்து நிறைந்து விடும். கனடிய விமானங்கள் முதல் முதல் செப்டெம்பர் மாதம் 8-ம் தேதியும் பிறகு 13, 14-ம் தேதிகளிலும் வெடி குண்டுகளைக் கொண்டு ஜெர்மனியைத் தாக்கின. இனி நாளடைவில் 40 கனடிய விமானப் படைகளை இங்கிலாந்தில் வைத்திருப்பார்கள் என்று எதிர் பார்க்கிறார்கள்.

அமெரிக்கத் தொழிற் சாலைகளிலும் பிரிட்டிஷ் தொழிற்சாலைகளிலும் சேர்த்து மாதந் தோறும் 7,500 விமானங்கள் கட்டி முடிக்கிறார்கள். அதாவது, ஏற்கெனவே யுள்ள விமானங்களுக்கு மேல், மாதந் தோறும் 5,000-க்குக் குறையாமல் போராடும் விமானங்கள் கட்டப் படுகின்றன என்று தான் அருத்தம். ஜெர்மனியையும் ஜெர்மனி கைப் பற்றி யுள்ள நாடுகளையும் தாக்குவதற்கு, விமான பலம் பெருகிக் கொண்டு வருகிறது என்பதைத் தான் இது குறிக்கிறது.

**எகிப்திய நிலமை.**

'நியூஸ் கிரானிகல்' பத்திரிகையைச் சேர்ந்த இராணுவ நிருபர் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—மீண்டும் எகிப்தின் பொருட்டு நடைபெறும் போராட்டத்தின் முதல் கட்டம், முடிந்து விட்டது. இதைத் தெளிவாகத் தெரிவித்து விட்டார்கள். ஆபிரிக்கப் படைகள் தம் முழு பலத்தையுங் கொண்டு நம் படையின் தென்புரத்தைத் தாக்கித் துளைத்தன. என்றாலும், அவற்றைத் தடுத்துத் தந்திரமாகத் தரையில் போராடினோம். கடைசியாக விமானங்களைக் கொண்டும் போராடினோம் எதிரி படைகள் தம் இருப் பிடத்திற்குத் திரும்பி விட்டன. எதிரிகளுக்கு 40 டாங்கிகளுக்குக் குறையாமல் நஷ்ட மென்று நிச்சயமாகத் தெரிகிறது. இன்னும் அநேகம் நாசமாகி யிருக்கலாம். நூற்றுக் கணக்கான மோட்டார் வண்டிகளும் எதிரிகளுக்கு நஷ்டம். தம் காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்னும் உறுதி யோடு தான் ஆபிரிக்கப் படைகள் வந்தன. ஆனால் பலிக்க வில்லை. மீண்டும் அவைகள் முயற்சிக்கலாம். ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்லலாம். நம் விமானப் படை மிகவும் பல முள்ளதாய் இருந்தது. 6 பவுண்டர் டாங்கி எதிர்ப்புப் பீரங்கிகளும் ஏராளமாய் வந்து சேர்ந்தன. இவை ஒவ்வொன்றும் 22 அந்தர் கனமுள்ள சிறந்த ஆயுதங்கள். இது வரை மிகவும் நன்றாகவே இருந்து வருகிறது போரின் நிலமை.

**ஸ்டாலின் கிராட் வீரப் போர்.**

ஸ்டாலின்கிராட் நகருக்குள் இருப்பவர்கள் அதை இன்னும் பாதுகாத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். விமானப் படை பலத்தில் ஜெர்மானியர்கள் மற்ற அனைவரையும் விட மிகவும் உயர்ந்த நிலைமையில் இருக்கின்றார்கள் என்று சொல்லப்படுகிறது. ஜெர்மன் விமானங்கள் ராட்டர்டாமைத் தாக்கி நிர்த் தூளியாக்கியது போல, ஆகஸ்ட்டு 25-ம் தேதி ஸ்டாலின் கிராடையும் தாக்க வேண்டு மென்று முயற்சித்தார்கள். ஆனால் அவர்கள் எண்ணம் இங்கே பலிக்க வில்லை. 30 நிமிஷங்களில் 47 விமானங்களை எதிரிகள் இழந்தார்கள். மறு நாளும் 45 விமானங்களைப் பலி கொடுத்தார்கள். ஜெர்மானியர்களுக்கு விமான பலம் அதிகமாக இருக்கலாம். ஆனால் ஆகாயம அவர்களுக்கு மட்டும் உரிய தல்ல. வட மேற்கிலிருந்தும் தென் மேற்கி லிருந்தும் எதிரிப் படைகள் வந்து ஸ்டாலின்கிராடுக்கு மேற்கே திரண்டு கூடி யிருக்கிறார்கள். டிமோஷெங்கோவின் படைகள் உறுதியா யிருக்கின்றன. டான் நதிக்கு மேற்கேயிருந்து ரஷ்யப் படைகள் தெற்கு நோக்கி வந்து வான் பக்கின் படைகளின் வட பகுதியைத் தாக்குகின்றன. இதனால் எதிரிப் படைகளின் போக்கு வரவிற்கு மிகுந்த ஆபத்து உண்டாகிறது.

யுத்தத் தளவாட உற்பத்தியும் நடந்து கொண்டிருக்கின்றது. ஸ்டாலின்கிராடிலும் கூட அப்போதைக் கப்போது தேவைப்படும் யுத்தத் தளவாடங்களைச் செய்து கொள்ளுகிறார்கள். என்றாலும், முக்கியமான தொழிற்சாலைகள் எல்லாம் ஊரல் பிரதேசத்திற்கு மாற்றப் பட்டு விட்டன. ஸ்டாலின்கிராடில் யுத்தத் தளவாட உற்பத்தியும் அதிகம்; அவ்வூரில் வசிப்பவர்களும் மனங் கலங்காத உறுதி யுள்ளவர்கள். விரைவில் மழை காலம் வரப்போகிறது. அப்போது ஸ்டாலின்கிராட் சோவியத் அரசாங்கத்தார் வசமே இருக்கு மானால், இதன் முடிவு எப்படியாகும் என்பது பற்றி கொஞ்சங் கூட சந்தேகமே கிடையாது.

"டைம்ஸ்" பத்திரிகை "வெற்றிக் குரிய போர்த் தந்திரம்" என்னும் தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதி யிருக்கிறது. மிஸ்டர் வின்டெல் வில்கி மத்திய கிழக்கிற்கும் மாஸ்கோவிற்கும் போயிருந்ததை அதில் குறிப் பிட்டிருக்கிறது "இவர் இங்கெல்லாம் போயிருந்தது பருவத்திற் கேற்ற சிறந்த தொண்டு" என்று அப்பத்திரிகை கூறுகிறது. மேலும் அது கூறுவதாவது :—

இவர் பட்ச பாதமற்றவர். இவர் கூறும் வார்த்தைகள் மதிப்பிற் குரியன. இரண்டாவது போர் முனையை ஏற்படுத்துவதற்கான காரணங்களை அவர் பொதுவாகக் கூறி யிருக்கிறார். இந்த யோசனை தகுந்த தகவல்களை ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிக்கப் படாததா யிருக்கலாம்; அல்லது தப்பு வழிக்குக் கொண்டு போவதாகவும் இருக்கலாம். குறும்பத் தனமானதாகவு மிருக்கலாம். ஆனால் மிகவும் முக்கியமான கருத்துக்களை அடிப்படையாய்க் கொண்டதாக இருக்கலாம்.

**நாம் வெற்றி பெறும் முன்பு, இரண்டு அல்லது அதிகமான போர்முனைக்கு ஜெர்மானியரை இழுத்துக்கொண்டு வர வேண்டும். 1918-ம் வருஷம் போர்க் களத்திலேயே ஜெர்மன் படை வீரர்களைத் தோற்கடித்தது போலவே, இப்போதும் தோற்கடிக்க வேண்டும்.**

வெளிப் படையாக இராணுவத்திற்குத் தார் போட்டுக் குத்திக் கிளப்பியது பற்றி அமெரிக்காவில் வில்கியின் செயலை எதிர்க்கிறார்கள். இது பற்றி சென்ற செவ்வாய்க் கிழமை "நியூ யார்க் டைம்ஸ்" பத்திரிகை தன் தலையங்கத்தில் கீழ்க் கண்டவாறு எழுதுகிறது :—

**மாஸ்கோவி லிருந்து கிளம்பி லண்டன் வழியாக நியூ யார்க் நகரத்திற்கு வந்தால், இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பதைக் குறித்து கருத்து வேற்றுமையே கிடையாது. எங்கே? எப்போது? இந்த முடிவு அரசியல் காரணங்களையுங் கூட கொண்டதா? அல்லது யுத்த தந்திரக் காரணங்களை மட்டும் கொண்டதா?**

ஐரோப்பாவில் நேச நாடுகள் நாச மடைந்தால் அவற்றின் பொது நோக்கம் எப்படி ஈடேறும்? எனவே, ரஷ்யாவின் எதிரியான ஜெர்மனியை செம்மையாகத் தலை தூக்காத படி அடிக்க வேண்டும். சரியான பருவத்திலே இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி அந்தப் பத்திரிகைக் கூறுவதாவது :—

> ஸ்டாலின்கிராட் நாச மடைந்து கொண்டு வருகிறது; அநேகர் அங்கு நடை பெற்று வரும் போரில் மாண்டனர்; இன்னும் மாண்டு கொண்டு யிருக்கின்றனர். இவற்றி லிருந்து

ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது. அதாவது ரஷ்யர்களை ஜெயிக்க ஒருக்காலும் முடியாது. ஸ்டாலின்கிராட் முற்றுகையினின்று அந்நகரத்தை விடுவிக்க பிரிட்டனாலும் அமெரிக்காவிலும் முடியாமற் போகலாம். இப்போது உணர்ச்சியைக் கொண்டு தான் அந்நகரத்தைப் பாதுகாத்துக் கொண்டு வருகிறார்கள். அதே உணர்ச்சியைக் கொண்டு அம்முற்றுகையினின்று அந்நகரத்தை மீட்க அவர்களால் முடியும்.

இரண்டாவது போர் முனையை ஏற்படுத்துவதனால், என்னென்ன லாபலன்கள் ஏற்படும் என்பதைக் குறித்த ஆராய்ச்சியும் விவாதங்களும் மிகவும் முக்கியமானவை யாகிவிட்டன. இதற்குப் பல காரணங்கள் உண்டு. இங்கே ஒரு முக்கியமான சம்பவத்தை ஞாபகப் படுத்துவது பொருத்தமாகும். சென்ற ஜூன் மாதம் பிரிட்டனுக்கும் சோவியத் ரஷ்ய அரசாங்கத்திற்கும் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகி முடிந்தது. அந்தச் சமயத்தில், பிரிட்டிஷ் அந்நிய நாட்டுக் காரியாலயத்தி லிருந்து ஒரு அறிக்கை பிறந்தது. அதில், 1942-ம் வருஷத்திற்குள் ஐரோப்பாவிற் குள்ளேயே இரண்டாவது போர்முனையை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமான தோர் காரியம் என்பதை பிரிட்டன், அமெரிக்க, ரஷ்யா ஆகிய நாடுகள் தெளிவாக உணர்ந்திருக்கின்றன என்று குறிப் பிட்டிருக்கிறது. 1942-ம் வருஷத்திலேயே இந்த இரண்டாவது போர்முனையை ஏற்படுத்தி விடுவோம் என்று அந்த அறிக்கை வாக்குறுதி கொடுக்க வில்லை. ஆனால், அப்படிச் செய்வது அவ்வளவு அவசரமானது என்று விரும்பத் தக்கது என்றுதான் அந்த அறிக்கை ஒப்புக் கொள்ளுகிறது. என்றாலும், அப்படிப் பட்ட வாக்குறுதியை அந்த அறிக்கை கொடுக்கிறது என்று சிலர் கருதுகிறார்கள். இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு, சென்ற ஜூலை மாதம் ஆங்கிலோ-அமெரிக்க இராணுவ மகா நாடு நடைபெற்றது. அதை யடுத்து, சர்ச்சில் மாஸ்கோவிற்குப் போனார். அதன் பிறகு, வின்டன் வில்கியும் போனார். இரண்டாம் போர் முனையை ஆரம்பிக்க எந்தத் தேதி ஏற்றது என்று நேரில் விவாதித்து வரும் பொருட்டுத் தான் சர்ச்சில் ஸ்டேலினைக் காண மாஸ்கோவிற்குப் போனார் என்று கூட நினைத்தார்கள்.

இதினின்று இரண்டு கேள்விகள் பிறக்கின்றன.

**ரஷ்யாவிற்கு உதவி மகா முக்கியம்.**

இரண்டாவது போர் முனையை இந்த வருஷமே ஆரம்பிப்பதாயிருந்தால், இப்போதே ஆரம்பிக்க வேண்டாமா? உடனே ஆரம்பிக்காது போனால் ரஷ்யாவைக் கை நழுவ விட்ட தாகாதா? ஸ்டாலின்கிராட் நகரத்தை மகா தீரத்துடன் ரஷ்யர்கள் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இரண்டாவது போர் முனை ஆரம்பிப்பதில் கால தாமதம் கூடாது என்ற விசேஷ உணர்ச்சி உண்டாகிறது. இப்போது எகிப்தில் நாம் முன்னேறி தாக்குகிறோம். விமானங்களில் ஜெர்மனிக்குப் போய், குண்டுகளை வீசித் தாக்கிக் கொண்டு வருகிறோம். என்றாலும், இவை எல்லாம் ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனையை ஏற்படுத்துவதற்கு ஈடாகாது. இதை உலகம் முழுதும் ஒப்புக் கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் ஏன் ஐரோப்பாவில் இரண்டாம் போர் முனையை இன்னும் ஆரம்பிக்க வில்லை? ரஷ்யாவிற்கு உதவி செய்ய வேண்டும் என்னும் ஒரே காரணத்தைக் கொண்டு ஆலோசித்துத் தான், இந்தக் கோள்விக்கு ஒரு முடிவு காண வேண்டும். இரண்டாவது போர்முனையை ஐரோப்பாவில் ஏற்படுத்துவதனால் ரஷ்யாவிற்குத் தோல்வி ஏற்பட்டால், அதனால் உண்டாகும் தீங்கு மிக அதிகமா யிருக்கும்; ஆனால் இரண்டாவது போர்முனையில் போராட்டம் நடைபெறும் போது, ரஷ்யர்களுக்குக் கிடைக்கக் கூடிய வசதி அத்துணைப் பெரிதாகவும் இருப்பதற் கில்லை. அப்போது ஏற்படக் கூடிய நஷ்டத்திற்கு, ஈடு செய்ய வேண்டும். இதற்கு நாட்கள் செல்லும். இதற் கிடையில் ஜெர்மானியர்கள் தம் யுத்தத் தளவாடங்களைக் கொண்டு வந்து பலமாக ரஷ்யாவைத் தாக்குவார்கள். இன்னும் கொஞ்ச காலம் ரஷ்யா தாக்குப் பிடிக்குமானால், இரண்டாவது போர் முனையை விரைவில் ஆரம்பித்து நெடு நாட்களுக்குப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருப்பார்கள். அப்போது நாஜிவைத்திற்கே சாவு மணி யடித்தாகி விடும். அதாவது இராணுவப் போக்கை ஒட்டித் தான் இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்கும் பிரச்னையை முடிவு கட்ட வேண்டும். இதை ஆரம்பிக்க வேண்டு மானால் 6 முக்கியமான நிபந்தனைகளிருக்கின்றன :—

1. விமான பலத்தில் முதன்மை ஸ்தானத்தை நாம் பெற வேண்டும்.

2. போதுமான அளவிற்குக் கப்பல் பலம் இருக்க வேண்டும். இந்தக் கப்பல்களில் ஏராளமான படைகளை அங்கங்கே கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். அப்போது தான் கிழக்கே யுள்ள தன் பலத்த படைகளை மேற்கே கொண்டு வந்து சேர்க்கும் அவசியம், எதிரிக்கு ஏற்படும்.

3. இப்படிக் கப்பல்களில் ஏற்றிச் செல்லப் படும் படைகளின் ஆயுத பலம், எதிரி ஆயுத பலத்திற்குச் சமமான தொகையாக இருக்க வேண்டும்.

4. இரண்டாவது போர்முனையை ஆரம்பிப்பதினால், எகிப்திற்காவது இந்தியாவிற்காவது பெரிதும் பாதகம் உண்டாகாது என்னும் உறுதி நமக்கு இருக்க வேண்டும்.

5. இந்தப் புதிய போர்முனைக்கு பிரிட்டனிலிருந்தும் அமெரிக்காவி லிருந்தும் படைகளையும் தளவாடங்களையும் உதவிக் கொண்டிருக்கக் கூடும் என்னும் உறுதி நமக்கிருக்க வேண்டும்.

6. எதிரிகள் போக்கு வரவுப் பாதைகளில் அவர்களை மடக்கி யடித்து, பாதைகளை நாசஞ் செய்ய நமக்குப் பலம் வேண்டும்.

இரண்டாவது போர் முனையை ஏற்படுத்துவதை விட, அதை ஏற்படுத்தித் தோற்றுப் போவது மிகவும் மோசமானது என்று தெளிவாகத் தெரிகிறது. இரண்டாவது போர் முனை ஏற்படத் தான் போகிறது. அதனால் வெற்றி நமக்குக் கிடைத்து, அந்த வெற்றியை நிலை நாட்டிக் கொள்ளக் கூடும் என்னும் நம்பிக்கை ஏற்பட்டவுடனேயே, இது ஆரம்பிக்கப்படும். பிரான்சில் போய் இறங்கி விடுவது என்பதல்ல, இரண்டாம் போர்முனையின் நோக்கம் என்று நாம் உணர வேண்டும். ஆனால் நாம் ஜெர்மனிக் குள்ளும் போக வேண்டும். இரண்டாம் போர் முனை ஒரே இடத்தில் நிலைத் திருக்க முடியாது. ஒன்று முன்னேறிப் போக வேண்டும்; அல்லது பின்வாங்கி வர வேண்டும்.. இதற்கு மகத்தான ஆயுதங்களை வெகு ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். அதனால் தான், இது பற்றி ஒரு முடிவு காணும் முன், இராணுவ முறைகளை யொட்டி ஆலோசனை செய்ய வேண்டியிருக்கிறது. உள் உளவு ஒரு சில தலைவர்களுக்கு மட்டுந் தான் தெரியும். ரஷ்யாவிற்கு உதவி செய்ய வேண்டி, இரண்டாம் போர்முனை எந்தத் தேதியில் எத்தனை மணிக்கு ஆரம்பிக்க வேண்டு மென்று அவர்களுக்குத் தான் தெரியும். ஆகையால் அதை அவர்களே கவனித்துக் கொள்ளட்டும்.



# இந்தியப் போர் முனை.

யுத்தம் ஆரம்பமான முதல் வருஷத்தில் 83 கோடி ரூபாய்க்கும், இரண்டாவது வருஷத்தில் ஏறக்குறைய 165 கோடி ரூபாய்க்கும், மூன்றாவது வருஷம் 365 கோடி ரூபாய்க்கும் யுத்த சாமான்கள் இந்தியாவில் தயார் செய்யப் படுகின்றன. அதாவது மாதந் தோறும் 20 கோடி ரூபாய் விழுக்காட்டிற்குத் தயார் செய்யப் படுகின்றன.

யுத்தத்திற்கு முன்பு தயாரானதை விட இப்போது பல மடங்கு அதிகமாக வெடி மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கிறார்கள். புதுமாதிரி ஷெல் குண்டுகள், $3\frac{3}{4}$ அங்குல விமான எதிர்ப்புப் பீரங்கிகள், இரும்புக் கவசத்தையும் துளைக்கும் பல வகை டாங்கி எதிர்ப்பு ஷெல்கள், 37 அங்குல பீரங்கிகள் உள்பட பலவகை புதுமாதிரியான பீரங்கிகள், விமான எதிர்ப்பு பீரங்கிகள் ஆகியவற்றை இடை விடாது செய்து கொண்டே யிருக்கிறார்கள். முதன் முறையாக இந்தியாவில் இப்போது தான் பெரிய டி. என். டி. வெடிகளையும் தயார் செய்கிறார்கள். கலவை எஃகு செய்வதற்குப் பெரிய இயந்திரங்களைப் பூட்டி யிருக்கிறார்கள். ‘பெர்ரோ - சிலிகான்’ செய்வதற்கு இந்தியத் தொழிற்சாலை யொன்றில், ஏற்பாடாகி யிருக்கிறது. இந்தியாவிற்குத் தேவைப் படும் ‘பெர்ரோ சிலிகானி’ல் ஒரு பாதி இங்கே தயாரிக்கப்படும். விரைவில் இந்தியாவில் அலியுமினியம் தயாரிக்கப் படும். யுத்த ஆரம்ப காலத்தில் ஏறக்குறைய 600 தொழிற்சாலைகள் தான் யுத்த வேலைகளைச் செய்து கொண்டிருந்தன. ஆனால், இப்போது இஞ்சினீரிங் தொழிற்சாலைகள் மட்டும் 1,500 வகை வேலைகள் செய்கின்றன.

1942-ம் வருஷம் ஜூன் மாதம் வரையில் படைகளுக்கு துணிக்காக மட்டும் 120 கோடி செலவாகி யிருக்கிறது. அடுத்த வருஷத்தில் 70 கோடிக்கு மட்டுந் தான் வாங்கும்படி யிருக்கும் என்று திட்ட மிட்டிருக்கிறார்கள். நடப்பு வருஷத்தில் கூடாரங்களுக்காக 12 கோடியும், கம்பளிகளுக்காக 5 கோடியும் செலவாயின. ஒரு வருஷத்தில் 50 லட்சம் நெட்டித் தொப்பிகளும், 10 கோடி கெஜம் துணியும் இந்தியாவின் பாதுகாப்பின் பொருட்டு இந்தியாவில் தயாராயின. ஒரு மாதத்தில் 1 கோடி உடுப்புகள் தயாராகின்றன. யுத்தத்திற்கு முன்பு துணித் தொழிற்சாலை ஒன்று மட்டுந் தான் இந்தியாவில் இருந்தது. இப்போது 10 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றையும் ஒட்டி அநேகமாய் ‘சென்டர்’கள் இருக்கின்றன. இங்கே மொத்தத்தில் 1 லட்சம் பேர்கள் வேலை செய்கிறார்கள்.

பாரச்சூட் சாமான்கள் தயாரிக்கும் பொருட்டு பாரச்சூட் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித் திருக்கிறார்கள். யுத்தத்திற்கு முன்பு அரசாங்க சேவா வேலைகளில் 2,000 பேர்கள் ஈடு பட்டிருந்தார்கள்; இப்போது 15,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். இவர்கள் போதாமல் 700 கண்டிராக்டர்களை அரசாங்கத்தார் நியமித் திருக்கிறார்கள். இவர்களுக்கு உட்பட்டு 34,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். இந்தியாவில் கப்பல் கட்டுவதிலும் பழுது பார்ப்பதிலும் 30,000 பேர்களுக்கு அதிகமாகவே ஈடுபட்டிருக்கிறார்கள்.

மர உற்பத்தியும் ஏராளமாக அதிகப் பட்டிருக்கிறது. 1941–42-ம் வருஷத்தில் மட்டும் 3,96,000 டன் தயாராகி யிருக்கிறது. 1942–43-ல் 5 லட்சம் டன் தயாராகு மென்று எதிர்பார்க்கிறார்கள்.

சத்திர சிகிச்சைக்கான கருவிகளை இந்தியாவில் ஏராளமாகச் செய்கிறார்கள். இந்தியப் பாதுகாப்பிற்குத் தேவையான அளவிற்கு மேல், 80,000 கருவிகளைச் செய்து ரஷ்யாவிற்கு அனுப்பி யிருக்கிறார்கள். ஏ.ஆர்.பி.-யின் தேவைக்கான உற்பத்தியும் சமீபத்தில் வெகுவாக முன்னேறி யிருக்கிறது. எஃகுத் தொப்பிகள் இன்னும் அதிகமாகச் செய்யப் படுகின்றன. இந்த வருஷத் தேவை 430,000 தொப்பிகள் என்று திட்ட மிட்டிருந்தனர். இதற்குள் எல்லாம் தயாராகி இன்னும் 1,000 தொப்பிகள் மட்டுந் தான் இன்னும் தயாராக வேண்டும்.

இந்தியாவின் பண உதவியும் பெரிதும் பாராட்டத் தக்கது. 1940-ம் வருஷம் ஜூன் மாதம் இந்தியப் பாதுகாப்புக் கடன் பத்திரங்களை வெளியிட்டது முதல் 1942-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 29-ம் தேதி வரை ரூ. 1,21,24,24,000 வசூலாகி யிருக்கிறது.

அன்றியும் லட்சக் கணக்கானவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். நம் படைகளுக்கும் பொது ஜனங்களுக்கும் தேவையான உணவுப் பொருள்களைச் சாகுபடி செய்கிறார்கள். இதன் பயனாக, இந்தியாவில் உணவுப் பஞ்சம் என்கிற வார்த்தைக்கே இட மில்லை.


## உங்களுக்கு ஜப்பான் மொழி தெரியுமா?

பலருக்குத் தெரியும்.

பொய் வதந்திகளை இவர்கள் பரப்புகிறார்கள்.

இதனால்,

**கலவரத்தையும் பெருந்துன்பத்தையும் உண்டாக்குகிறார்கள்**

இந்தப்

பொய் வதந்திகள் ஜப்பானி லிருந்து தான் கிளம்புகின்றன.

இவற்றை

**இலட்சியம் செய்யாதீர்கள் !**

பிறருக்கும்

சொல்லாதீர்கள் !

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள் !**



ஜப்பானியரை எதிர்க்க தேசீயப் போர் முனையை அமையுங்கள்!

# (கண்டது பேசேல்!)

'வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று பேசாதே!' எனப் பெரியோர்கள் சொல்வார்கள். அதைத் தான் இங்கே 'கண்டது பேசேல்' என சுறுக்கமாகச் சொல்லுகிறோம். இதையே தான் பிரிட்டிஷ் மந்திரி சபையில் உள்ள மேஜர் அட்லி துரையும் சரி பிரதம மந்திரி சர்ச்சிலும் சரி சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் என்ன வந்தது என்று கேட்பீர்களே!

ருஷ்யாவிலே, பயங்கர மகா யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. ஸ்டாலின்கிராட் நகரை எப்படியும் பிடித்து விட வேண்டுமென்று இருபது லக்ஷம் ஆட்களையும், எண்ணற்ற டாங்கிகளையும், எகிப்து, சிஸிலி, பிரான்ஸ் ஆகிய பிரதேசங்களில் வைக்கப்பட்டிருந்த விமானங்களையும் ஹிட்லர் அனுப்பி வைத்திருக்கிறார். இரவு பகல் என்றில்லாது எந்த நேரமும் குண்டுகள் வெடிக்கின்றன. வீரர்கள் பல்லாயிரவர் மண்ணுலக வாழ்க்கை ஒழிந்து, விண்ணுலகு ஏகிக் கொண்டிருக்கிறார்கள். அருமையாகக் கட்டப்பெற்ற ஆயிரக் கணக்கான மாடமாளிகைகள் இடிந்து நொறுங்கி விழுந்து கொண்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் எரி நெருப்பு. க்ஷணம் தவறாது வானத்திலே நாஜி விமானங்கள் வட்ட மிட்ட வண்ணமாக இருக்கின்றன. இடிந்த கட்டிடங்களைக் கைப்பற்ற ஜெர்மானியரும், ருஷ்யரும் போட்டியிடுகிறார்கள். ஒவ்வொரு இடிந்த சுவரும் ஒவ்வொரு மறைவிடமாகவும், மெஷின் பீரங்கி வைத்துச் சுட லாயக்கான இடமாகவும் ஆகுமல்லவா! இடிந்த மனைகளுக் கடியில் எத்தனையோ ஜெர்மானியரும், ருஷ்யரும் புதைந்து கிடக்கிறார்கள். தன் வினை தன்னைச் சுடும் என்பது போல, நாஜி குண்டுகளே நாஜிகளை நாசமாக்கி வருவதும் சகஜமாகி விட்டது. இடிந்த மனைகளின் மீதிலும், இடைவெளிகள் உள்ள பிரதேசங்களிலும் பயங்கரமான வேகத்துடன், பெரும் குடியனைப் போல நாஜி டாங்கிகள் பாய்ந்து பாய்ந்து வருகின்றன. ஊரில் இடியாத வீடே பாக்கி இல்லை என்கிறார்கள். சாதாரண ஜனங்களை, அதாவது ராணுவத்தில் சம்பந்தப் படாதவர்களை அந்த நகரை விட்டு வெளியேற்றி விட்டார்கள். மேலும் மேலும் புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்புவது போல் நாஜிப் படைகள் தரை வழியாகவும், ஆகாய வழியாகவும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

ஸ்டாலின்கிராட் நகருக்கு ஒரு புறம் டான் நதி; மறு புறம் வால்கா நதி. ஊருக்குக் குறுக்கே முப்பத்தைந்து மைல் நீளம் (ஒருபுறத்திலிருந்து மறுபுறம் செல்ல) இருக்கிறது. அந்தப் பிரதேசத்தைக் கடந்து வால்கா நதியை அடைந்து, அங்கு தங்கள் கைகளை வலுப் படுத்திக் கொள்ள முயலுகிறார்கள் ஜெர்மானியர். அரிசி வாங்கிக் கொண்டு வரும் பொழுதே 'இட்லி ரெடி!' என்பது போல், ஸ்டாலினகிராடிற்குள் நுழையும் பொழுதே, 'ஸ்டாலின்கிராடு வீழ்ந்து விட்டது' என்று பறை சாற்றின ஜெர்மன் ரேடியோக்கள்.

நிலைமை என்னமோ ரொம்ப மோசம் தான். மகா சக்தி வாய்ந்த ராவணனை எதிர்ப்பவர், சர்வ லோக நாயகனான மஹா விஷ்ணுவின் அவதாரமான ராமனுனும், ஒரு சமயம் நாகாஸ்திரத்தால் கட்டுப் பட்டு மூர்ச்சையாகி விழுந்து விட்டாரல்லவா? அப்பொழுது அருகிலிருந்த அதிதீரனான ஆஞ்சநேயன் அதிவிரைவில் சென்று சஞ்சீவி பர்வதத்தையே பெயர்த்தெடுத்து வந்து, அதிலிருந்த மூலிகையை எடுத்துப் பிழிந்து, சார் ஊற்றி ராமனைத் தெளிய வைத்ததாகப் புராணம் கூறுகிறதல்லவா?

அதே மாதிரி, ருஷ்யர்களை (ராமனை முதலில் எல்லோரும் சாதாரண மனிதன் என்று நினைத்தார்களே, அதுவே போல்) எல்லோரும் வெகு சாதாரணமாகவே நினைத்தார்கள். நமக்கு எப்படி அவர்கள் ஜெர்மானியரை இத்தனை சாகசத்தோடு எதிர்ப்பது திகைப்பை உண்டாக்குகிறதோ, அதைப் போல் பல்லாயிர மடங்கு திகைப்பு ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்குமென்பதில் சந்தேகமேயில்லை. நேற்று முன் தினம் அவர் ஜெர்மனியில் பேசிய அழகைக் கேட்டீர்களோ இல்லையோ! ஐயோ! பரிதாபமாக இருக்கிறதே, அவர் பாடியிருக்கும் பாட்டு.

'ஐயா! ஜெர்மன் மக்களே! அடுத்த பனி காலம் வந்து விட்டது. உங்களுக்காகப் போர் முனைக்குச் சென்றுள்ள வீரர்களுக்கு கம்பளியும், துணி, மணிகளும் கொடுத்து உதவுங்கள் என்று கேட்டிருக்கிறார்.

ருஷ்யாவில் விழுந்த உதையின் பலன் இது! சென்ற வருடம் பனி காலத்தில் ஜெர்மானியர் ருஷ்யாவில் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமா என்ன! ஆகவே இப்பொழுதிலிருந்தே ஹிட்லர் தன் நாட்டு மக்களை இவ்வருஷத்திய பனி காலத்திற்கு தயார் செய்கிறார் போலும்!

ஒரு விஷயம்! ஹிட்லர் என்னமோ சாதாரண மனுஷனல்ல. பிரமாதமான திட்டங்கள் போட்டுக் கொண்டு, அதி ரகசியமாகவே பல்லாண்டுகளாக பல யுத்த சாதனங்களைத் தயாரித்துக் கொண்டு, உலகோரையே சவாலுக்கு இழுக்கத் துணிந்த மனுஷர். எரிகிற நெருப்புகு மேல் காற்றும் சேர்ந்தாப் போல என்பார்கள். அதுபோல அவருக்கு ஜப்பானின் நேசமும் கிடைத்தது. ஜப்பானும் ஒரு பெரிய தீக்கொளுத்தி தான் என்பது சென்ற பத்து மாதங்களில் ருசுவாகி விட்டது. அதன் மீது நேச நாட்டினர் ஒரு கண்ணை வைத்திருக்க வேண்டிய நிலைமை வந்து விட்டது.

ஆனால், இப்போதைக்கு ஸ்டாலின்கிராட் நகரில் நடக்கும் போர் மீது தான உலகோரின் கவனமெல்லாம் இருக்கிறது. ஹிட்லருக்கும் சரி, ஸ்டாலினுக்கும் சரி, சர்ச்சில், ரூஸ்வெல்ட் ஆகியமூவர்க்கும் சரி, அந்நகரப் போரின் முடிவைப் பற்றியே சிந்தனையாக இருக்கும்".

அவ்வளவு முக்யம் வாய்ந்த நகரம் அது. அது போனால் அவ்வளவு தான். இன்னும் ஒரு காத தூரம் நேச தேசத்தின் வெற்றி ஒதுங்கிப் போனது மாதிரி தான். யுத்த காலம் காரணமாக ரயில் போக்கு வரத்து குறைந்திருக்கிறது; காலையில் ஒரு வண்டி; அது தவறினால் ராத்திரி தானிருக்கிறது அடுத்த வண்டி என்பது போலாகி விடும் இப்பொழுது ஸ்டாலின்கிராடை விட்டு விட்டால்.

நல்ல காலமாக சென்ற ஓரிரண்டு தினங்களாக ருஷ்யாவிலிருந்து நல்ல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மார்ஷல் டிமோஷெங்கோ வெகு சாமர்த்தியமாக ஸ்டாலின்கிராட் நகரத்தின் வடமேற்குத் திசையிலே பெரியதோர் படையை அனுப்பினார். அப்படை ஜெர்மன் பாதுகாப்புகளைத் தகர்த்துக் கொண்டு, மெள்ள மெள்ள நகருக்குள் புகுந்து, உள்ளே சிக்கியிருக்கும் ருஷ்யப் படைகளோடு சேரப் பார்க்கிறதாம். அதோடு, ஜெர்மானியருக்கு மேற்கொண்டு வரும் உதவிகளை எடுத்து வரும் பாதைகளையும் அப்படை துண்டிக்க முயற்சிக்கிறதாம். தவிர, அப்படை டான் நதிக்கரையை அடைந்து விட்டதாம். இதை யறிந்த ஜெர்மானியர் இன்னும் மூர்க்கமாகப் போராடுகிறார்களாம். எப்படியாவது ஸ்டாலின்கிராடு தப்பினால் போதும் என்றிருக்கிறது எல்லோருக்கும். அப்படியில்லாவிட்டாலும், இன்னும் மூன்று நான்கு வாரமாவது அது தாக்குப் பிடித்து விட்டால் அப்பால் ஜெர்மானியர் திணறிப் போய் விடுவார்கள் என்றும் கூறப் படுகிறது.

அதற்காகவே, எத்தனையோ கஷ்டங்களையும் நஷ்டங்களையும் பொருட் படுத்தாது, சீமையிலிருந்து வட கடல் வழியாக ருஷ்யாவிற்கு ஏராளமான சாமான்களை அனுப்பி வைத்தார்கள். ஜெர்மானியர் அவற்



றைப் பலமாகத் தாக்கியும், சாமான்களில் பெரும் பகுதி ருஷ்யா போய்ச் சேர்ந்து விட்டது.

ருஷ்யர்கள் இந்த மாதிரி கிடைக்கும் உதவிகளைக் கொண்டும், தங்கள் வீரத்தைக் கொண்டும், லெனின்கிராடு முனையிலும், மத்ய முனையிலும் எதிரிகளை விட தங்கள் கை உயர்ந்திருக்க வழி தேடிக் கொண்டிருக்கிறார்களாம். பனி காலம் அதி வேகமாக சமீபித்துக் கொண்டிருக்கிறது. பிரிட்டன் மீது நாஜிகள் மறுபடியும் ஈவிரக்கமில்லாது குண்டு மழை பொழியக் கூடும். அதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இது மட்டுமா? வீர சீன தேசம் சென்ற ஐந்தாறு வருடங்களாகவே இணையற்ற தியாகங்களைச் செய்து ஜப்பானை எதிர்த்து நிற்கிறது. சமீப காலத்தில், சில இடங்களில் அது ஜப்பானியரைப் புற முதுகு காட்டி ஓடவும் செய்திருக்கிறது. சீனா இருக்கும் வரை, ஜப்பானுக்கு நிம்மதி இராது என்பது நிச்சயம். சீனா இருக்கும் வரை, ஜப்பானை என்றாவது ஒரு நாள் அடித்து நொறுக்கலாம் என்று நாம் நம்பியிருக்கலாம். ஆனால், சீனாவிற்கு நம் உதவி அத்தியாவசியம். அந்த உதவியைத் தாராளமாக அளிப்பதற்கு சௌகரியமில்லாது செய்து விட்டார்கள் பாழும் ஜப்பானியர், இந்த பர்மாவைப் பிடித்துக் கொண்டு.

ஆகவே, சீனாவிற்கு உதவவும், ஜப்பானை அடுக்கவும் பர்மாவைப் பிடிக்க வேண்டியது அவசியம். இதையே சேனாபதி வேவலும் கூறினார். பர்மாவைப் பிடிக்க என்னென்ன வழிகள் இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறார் அவர். ஜப்பானியரை பர்மாவிலிருந்து விரட்ட, இந்தியாவில் ஏராளமான படைகளையும், யுத்த சாதனங்களையும், விமானங்களையும் வைத்திருக்க வேண்டும். ராமல் எகிப்திற்குள் நுழைந்ததனால், ருஷ்யாவிற்கு உதவி அனுப்ப நேர்ந்தது காரணமாகவும், ஜெர்மன் நீர் மூழ்கிகள் அட்லாண்டிக்கில் செய்யும் அட்டகாசத்தால் கப்பல்கள் ஏராளமாக மூழ்கியது காரணமாகவும், இந்தியாவிற்கு, எதிர்பார்த்த அளவு உதவி, முன்பு கிடைக்கவில்லை. இப்பொழுது அந்த உதவியும் வந்து விட்டது என்கிறார் வேவல்.

இப்படியெல்லாம் இருக்கிறது நிலைமை. அதோடு, வெகுநாள் 'ப்ளான்' போட்டு, டீப்பி என்ற ஜெர்மன் வசமுள்ள துறைமுகத்தை பிரிட்டிஷார் படையெடுத்து நோட்டம் பார்த்தனர். அங்கு படையெடுத்துச் சென்றதில் ஒரு பாடம் கற்றார்கள். அங்கு போனவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்களை பிரிட்டிஷார் இழக்க நேர்ந்தது என்றும், ஏராளமான டாங்கிகளும் நஷ்டமாயின என்றும், ஜெர்மன் படைகளின் எதிர்ப்பு அசாத்தியமாகவே இருந்ததென்றும் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பாகத் தான் பார்லிமெண்டிலே பிரதம மந்திரி சர்ச்சில் சொன்னார்.

இதை யெல்லாம் புரிந்து கொள்ளாது, இந்த உலகிலே உள்ளவர்கள் பலர், திடீரென்று எப்பொழுது எடுத்தாலும், 'அ'! பிரிட்டனும் அமெரிக்காவும் சும்மா இருக்கின்றனவே! இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்கிறது தானே? இரண்டாவது போர் முனையை ஆரம்பிக்கிறேன், ஆரம்பிக்கிறேன் என்று எத்தனை நாளாக நேச தேசத்தார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்! இன்னும் ஒன்றும் காணுமே! இப்பொழுது படையெடுத்தால் தானுச்சு! இல்லா விட்டால் பிரயோஜனமே இல்லை' என்றெல்லாம் பல்லவி பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ருஷ்யப் பத்திரிக்கைகளில் சிலவும், இந்தியப் பத்திரிகைகளில் சிலவும் அடிக்கடி இந்த இரண்டாம் போர் முனை ஆரம்பத்தைப் பற்றி எழுதி வந்திருக்கின்றன. சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதியின் பிரதிநிதியாக வெண்டல் வில்கி ருஷ்யாவிற்குச் சென்றார். அவர்கூட, ருஷ்ய மக்கள் இரண்டாவது போர் முனை ஆரம்ப விஷயத்தில் ரொம்ப ஏமாற்றமடைந்திருப்பதாகவும், உடனே ஏதாவது செய்தாக வேண்டும் என்றும் பகிரங்கமாகத் தெரிவித்து விட்டார். பார்லிமெண்டிலும் சிலர் அடிக்கடி இது விஷயமாக நோண்டித் துளைத்து ஏதேதோ கேட்கிறார்கள்.

இப்படி யெல்லாம் கண்டவர்கள் கண்டபடி பேசுவதைப் பார்த்து விட்டுத் தான், மேஜர் அட்லியும், பிரதம மந்திரி சர்ச்சிலும் 'கண்டது பேசேல்' என்று ஒரு சாட்டை கொடுத்திருக்கிறார்கள். ரொம்ப நியாயமான உபதேசம் தானது!

நேச நாட்டினர் என்ன சும்மா உட்கார்ந்திருக்கிறார்களா? இது வரை உலகோர் எந்தக் காலத்திலும் கேட்டிராத அதிசயங்களை யெல்லாம் செய்து வருகிறார்கள் அவர்கள். அமெரிக்காவிலே, ஒரு பிரமாண்டமான கப்பல் கட்ட ஆரம்பித்த பதின்மூன்றுவது நாளிலே ய அக்கப்பலை மிதக்க விட்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு கப்பல் கட்ட, பல மாதங்களாகும். அல்லும் பகலும் அறுபது நாழிகையும், டக, டக, டக, டக என்று ஓயாது ஒழியாது அமெரிக்க, பிரிட்டிஷ் கப்பல் கட்டுமிடங்களில் இரைச்சலாகவே இருக்கிறது. இந்த இரைச்சலின் ஓசை இதற்குள் டோகியோ, ரோம், பெர்லின் ஆகிய இடங்களுக் கெல்லாம் கட்டாயம் கேட்டிருக்கும். ஒவ்வொரு கப்பலில் முடுக்கப் படும் ஆணியும், அச்சு நாட்டு எமன்களை மூடும் சவப் பெட்டிகளில் இறக்கும் ஆணிகளாகவே நேச தேசத் தொழிலாளர்கள் கருதி, வேலை செய்கிறார்களாம். எல்லாப் போர் முனைகளும் நேச தேசத்தார்க்கு ஒரே போர் முனை போல் தான். ஒன்றைக் கவனித்து விட்டு, பாக்கியை மறந்திருக்க முடியுமா? எல்லா இடங்களுக்கும் தான் உதவி அனுப்பி வருகிறார்கள். அதற்கு மேற்கொண்டு தான் இரண்டாவது போர் முனைக்கு சாமான்களைச் சேகரிக்க வேண்டும்.

எகிப்திலே ஒரு பெரிய படை; இந்தியாவிலே ஒரு படை; ஈரான், ஸிரியா, ஈராக் ஆகிய இடங்களில் வேறு படை; ஆஸ்திரேலியாவுக்கு உதவி, மடகாஸ்கரில் நடக்கும் வெற்றிகரமான போருக்கு உதவி— இதற்கெல்லாம் சாமான்களை அனுப்ப வேணுமா, வேண்டாமா?

சென்ற ஒரு வருத்திற்குள் அமெரிக்கா மட்டும் ஐந்நூறு சாமான் தூக்கிக் கப்பல்களைக் கட்டிக் கொண்டிருக்கிறது ஜெர்மனியோ நீர் மூழ்கிகளை அதிகமாகக் கட்டி வந்திருக்கிறது. அவற்றால் சேத மதிகம் தான். அவற்றை ஒழிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இரண்டாவது போர் முனைக்கான ஏற்பாடுகளும் ரகசியமாகவும், ஜரூராகவும் நடந்து கொண்டு தானிருக்கின்றன.

மரத்து மேலிருக்கிறவனைப் பார்த்து, 'குதி, குதி! குதிக்கிறது தானே!' என்று கீழே இருப்பவன் கத்தினால், மரத்தி லிருப்பவன் சட்டென்று குதித்து விட முடியுமா? குதித்து விடலாமா? மரத்து மீதிருக்கும் பூனை போன்ற மிருகம் கூட அல்லவா, கீழே அங்கு மிங்கும் பார்த்து லாகவமாய்க் குதிக்கிறது. இல்லா விட்டால் கால் ஒடிந்து போகாதா?

இதை யெல்லாம் மனதில் கொண்டே, நேச தேசத்தார் தக்க பலத்தைச் சேர்த்துக் கொண்டு, தகுந்த சமயத்தையும் எதிர் பார்த்திருக்கிறார்கள். ஊரி லிருக்கிறவர்கள் ஆயிரம் சொல்லுவார்கள். ஆனால் காரியத்தி லிறங்குகிறவன் ஆயிரம் தடவை யோசித்துத் தானே செய்வான் எதையும்? ஊர்க் காரன் சொல்லுகிறான் என்பதற்காக, மொட்டைத் தாதனை எடுத்து குட்டையிலே போட்டு விட முடியுமா என்ன? தவிர, தாங்கள் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் என்பதையும் சர்க்கார் முன் கூட்டி வெளியிட முடியுமா என்ன!

ஆனால் இரண்டாவது போர் முனை என்றோ ஒரு நாள் ஏற்படத் தான் போகிறது. ஹிட்லருக்கே அது தெரியுமே! இல்லாவிட்டால், நார்வே தேசத்தின் வட கோடிக்கு அவர் இப்பொழுது ஏன் ஏராளமான படைகளை அனுப்புகிறார்? பிரான்ஸின் மேல் கரையில் உள்ள மக்களுக்கு பிரிட்டிஷார் எச்சரிக்கை செய்து விட்டார்கள் 'உள் நாட்டுக்குப் போங்கள்' என்று. யானை வரும் பின்னே, மணி ஓசைவரும் முன்னே என்ற பழமொழியை இங்கே உபயோகித்துக் கொள்ளலாம் போலிருக்கிற தல்லவா? வாஸ்தவம்!

## இந்தியப் படையினருக்கு அதிகப் பணம்.

இந்தியப் படையினருக்கு முக்கியமான பண வசதி கிடைக்கப் போகிறது. இவர்களுடைய சம்பளத்தில் இருந்து மீத்து வைக்கப்படும் ஒவ்வொரு 50 ரூபாய்க்கும் நூற்றிற்கு 6 வீதம் கால் வருஷத்திற்கு ஒரு முறை வட்டி சேரும்.

இதற்கு முன்பு இப்படிப் பட்ட ஏற்பாடு கிடையாது. என்றாலும், அநேகர் தம் சம்பளத்தில் ஒரு பகுதியை வாங்கிக் கொள்ளாமலே, தம் கணக்கில் சேர்ந்திருப்படி வைத்துக் கொண்டிருந்தார்கள். இப்படிப் பட்டவர்களின் சிக்கனத்திற்குத் தான் அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதல், தகுந்த நன்மை கிடைக்கப் போகிறது.




உள்ளூர் வாசிகள் மனுச்செய்ய வேண்டாம்!

ஜப்பானியர்களுடைய ஆதிக்கத்தின் கீழிருக்கும் சீன தேசத்தில், வியாபாரத் துறையில், தலைமைப் பதவி முதல் கீழ்த்தர உத்தியோகம் வரையிலும் இருந்த சீன மக்களை எல்லாம், ஜப்பானியர்கள் விலக்கி விட்டார்கள். தொழிற்சாலை முதலாளிகள், கடை வியாபாரிகள், வேறு உத்தியோகஸ்தர்கள், சுருக் கெழுத்து குமாஸ்தாக்கள், சாதாரண குமாஸ்தாக்கள், முதலியவர்கள்—தெருக்களில் சில்லரைச் சாமான் விற்பவர்கள் கூட—சீனர்கள் யாரும் இப்போது கிடையாது. இவ்வேலைகளை எல்லாம் ஜப்பானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இவை அவர்களுடைய வெற்றிப் பரிசுகளாகப் போய் விட்டன.

ஜப்பானியர்கள் இங்கு வந்தால், இப்படித் தான் நடக்கும். இந்தியாவில் இப்படிப் பட்ட நிலைமை ஏற்படும்படி நீங்கள் விட்டு விடக் கூடாது. நம்முடைய நாட்டுப் பாதுகாப்புகளைப் பலப் படுத்தி உறுதி யாக்குவதற்கு, ஒவ்வொரு ஆண் மகனுடைய பலமும், ஒவ்வொரு பெண் மணியினுடைய ஆதரவும், தேவையா யிருக்கிறது.

ஜப்பானியருக்கு எதிரிடையாக.
தேசியப் போர் முனையை அமையுங்கள்

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் அக்டோபர் 9௳, வெள்ளிக்கிழமை [இதழ் 40

## "வெளியூர் போகாதீர்கள்!"

### சென்னை வாசிகளின் கடமைகள்

### சென்னை அரசாங்கத்தார் செய்யும் நன்மைகள்

சென்ற எப்ரல் மாதம், ஜப்பானிய யுத்தக் கப்பல்களும், துருப்புகள் தாங்கிச் செல்லும் கப்பல்களும் வங்காளக் குடாக்கடலுக்கு வந்த போது, அரசாங்கத்தாரும் சென்னைப் பொது ஜனங்களும் அதி விரைவாக ஆலோசிக்க வேண்டியவர்களா யிருந்தார்கள். அப்போது வேண்டிய அளவுக்குத் தகுதியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் படவில்லை. அந்த நிலைமையில், இதற்காக யாரையும் குற்றம் சொல்வதற் கில்லை. அரசாங்கத்தாரும், பொது ஜனங்களும் வெவ்வேறு விதமான அபிப்பிராயங் கொண்டிருந்தார்கள். இந்த மாறுபாட்டின் பயனாக எல்லோரும் திருப்தி யடைவ தென்பது முடியாத காரியம்.

ஆறு மாதங்கள் கடந்து விட்டன. தென்மேற்குப் பருவக் காற்றும் நின்று விட்டது. ஜப்பானியர்கள் பர்மாவிலும் அந்தமானிலும் இன்னும் இருக்கிறார்கள். முன்பு குழப்பத்தையும் துன்பத்தையும் உண்டாக்கியது போலவே இப்போதும் அவர்கள் உண்டாக்க கூடும் என்று ஜனங்கள் நினைப்பது சகஜம் தான். இதற் கிடையில் இப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டால், அதைச் சமாளிக்க என்னென்ன ஏற்பாடுகளை அரசாங்கத்தார் செய்திருக்கிறார்கள் என்று அறியாமல் மயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏராளமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது தான் இதற்குச் சரியான பதில். ஜப்பானியர்கள் இந்தியாவை படையெடுத்துத் தாக்கலாம், அல்லது எப்போதாவது சிலமுறை விமானத் தாக்குதல்கள் நடத்தலாம். ஆனால் இந்த நிலைமை இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறது. இருந்த போதிலும், அபாயம் இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இந்த அபாயத்தைப் பற்றி பொது ஜனங்கள் ஒரு விஷயத்தை அறிந்து தைரியங் கொள்ள ஆசைப் படுவார்கள். அது என்னவென்றால், சிவில், ராணுவ, தேசியப் போர் இலாக்காக்களைச் சேர்ந்த அதிகாரிகள் பாதுகாப்பு சம்பந்தமான தங்களுடைய அபிப்பிராயங்களை ஒரு பொது ஏற்பாடு அமைப்புத் திட்டமாக ஒன்று சேர்த்திருக்கிறார்கள்; அவைகள் சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது உடனே அமுலுக்குக் கொண்டு வரப்படும்; என்பது தான். அம்மாதிரியான சந்தர்ப்பங்கள் ஏற்படமாட்டா என்று நாம் நியாயமாக நம்புவதற்கு இடமிருக்கிறது. இருந்த போதிலும், அபாயம் இருக்கும் வரையில் அப்படிப் பட்ட சந்தர்ப்பங்கள் நேரக் கூடும்.

இதில் இரண்டு விஷயங்களை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். முதலாவது: பொது ஜன அமைதி; இரண்டாவது: இராணுவத் திறமை. பொது ஜன அமைதியை யொட்டித் தான் இராணுவத் திறமை ஏற்படும். இந்த மாகாணத்தி லுள்ள ஜில்லாக்களில், தைரியமா யிருக்கும்படி தேசியப் போர் முனைக்காரர்கள் எடுத்துச் சொல்லி, ஜனங்கள் மனதில் ஒரு வித ஊக்கத்தை ஊட்டிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, இந்தக் கட்டுரை வெளி வரும் இந்தச் சமயம் சென்னை நகர வாசிகளுக்குக் கூட மிகவும் பொருத்தமானது தான். தைரியமாய் இருக்க வேண்டி நாம் என்னென்ன செய்ய நேர்ந்தாலும், "தைரியமா யிருங்கள்" என்ற பல்லவியை எல்லோரும் பாடலாம். இல்லை யானால், சென்ற எப்ரல் மாதம் ஏற்பட்டது போல், பொது ஜனங்கள் எந்த ஊருக்குப் போய் உயிர் தப்புவது என்று தெரியாது திகைப்பார்கள். பல வகைக் கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். இப்படி வெளி யேறிப் போவதனாலும் அவர்களுக்கு எந்த வகையான நன்மையு மேற்படாது.

அதிகாரிகளின் கட்டளை யில்லாமலும், தகுந்தபடி ஆராய்ந்து பார்க்காமலும் பொது ஜனங்கள் ஊரை விட்டுக் காலி செய்து கொண்டு வெளியூருக்குப் போனால் என்ன நேரும் என்று பொது வாகக் கவனிப்போம், சாதாரண வாழ்க்கை அடியோடு ஸ்தம்பித்து விடும். தொழிற் சாலைகள் நின்று விடும். அதை யொட்டி சப்ளைகளும் நின்று விடும். இதனால் போராட்டத்திற்குக் குந்தக முண்டாகும். போர் முயற்சியும் மிகவும் தடைப் படும். பொது ஜனங்களுக்கு உபயோகமாக உள்ள வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் அவரவர்கள் வேலை செய்யும் ஊர்களிலேயே இருந்து விட வேண்டியது அவர்கள் கடமை யாகும். மிகவும் சிறு குழந்தைகளா யிருப்பவர்கள், மிகவும் வயதானவர்கள், பெண்களை வெளியூர்களுக்கு அழைத்துப் போய் அவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமையி லுள்ளவர்கள் மட்டும் இதற்கு விதி விலக்காவார்கள். இங்கே வேலைகள் கிடைக்கின்றன. தேவையான பொருள்கள் இருக்கின்றன. கடைகள் திறந்திருக்கின்றன. கடைகளில் வியாபாரம் செய்கிறவர்களும் இருக்கின்றார்கள். விமானப் பாதுகாப்புப் படையின் பராமரிப்பும் இருக்கிறது. வைத்திய உதவியும் போலீசார் காவலும் உண்டு. இவ்வளவு வசதிகளையும் விட்டு விட்டு, வீடு வாசலில்லாமல், பாதுகாப்போர் யாருமில்லாமல், பசியோடு, 'நடுத் தெரு நாராயணா' வென்று ஊர் பெயர் தெரியாத ரயில்வே ஸ்டேஷன்களிலும், அளவிற்கு மீறி ஜனங்கள் குடி யேறி யுள்ள கிராமங்களிலும் போய் திண்டாடுவது கூடாது என்று பொது ஜனங்கள் தெளிவாக உணர வேண்டும். சுருங்கச் சொன்னால் சென்னை வாசிகள் தைரியமாக உள்ளூரிலேயே யிருப்பார்களானால் வழக்கம் போல் வியாபாரம் நடை பெறும், வாழ்க்கை இனிதா யிருக்கும். அவரவர் எண்ணப்படி செய்ய இட முண்டு.

இரண்டாவது விஷயம் இராணுவத் திறமை. இது பற்றி பொது ஜனங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்க நியாய மில்லை. என்றாலும், இது மிகவும் முக்கியமானது தான். நமது பாது காப்பிற்காகவும் எதிரிகளை யழிப்பதற்காகவும், பெரும் படையை நாம் இங்கே வைத்திருக்கிறோம். சமீபத்தில் இந்தப் படையின் ஒரு பகுதி பெரும் ஊர்வலமாகச் சென்னை தெருக்களில் வந்தது. ஒரு படை திறமை யோடு வேலை செய்ய வேண்டுமானால், எந்த விதத் தடையுமில்லாமல் வேகமாகப் போவதற்கு எவ்வளவு இடம் வேண்டி யிருக்கும் என்று சாதாரணமாக பொது ஜனங்களுக்குத் தெரிவதில்லை. சென்னையை யடுத்திருக்கும் பல விடங்களிலும் ஒரு பெரும் படை யிருக்கிறது. ரயில்வேக்கள், ரோடுகள், பாலங்கள், தந்தி லைன்கள் ஆகிய எல்லா போக்கு வரவுச்

சாதனங்களையும் எந்த விதத் தடையுமின்றி இராணுவ அதிகாரிகள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது கொள்கை. இந்தப் போக்கு வரவு சாதனங்களில் பொதுஜன நடமாட்டம் அதிக மிருக்கும்படி அனுமதிக்க அவர்களால் முடியாது. அநேக ஜட்காக்கள், மாட்டு வண்டிகள், பொதி மாடுகள், சாமான்களை ஏற்றிப் போகும் கை வண்டிகள் முதலியவற்றை ஏராளமாகப் போகும்படி அனுமதித்தால், போர் முனைக்கும் போகும் படைகளின் வேகம் தடைப் படும். எதிரியின் படைகளை வெல்லுவதற்குப் பொது ஜனங்களிடமும் ஒரு ஆயுதம் இருக்கிறது. அது தான் இராணுவங்களுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பது. ஜப்பானியர்கள் வாராத போனாலும் கூட, நம் படைகளை நாம் ஆயத்தமாகவே வைத்திருக்க வேண்டி யிருக்கிறது. படையினர் தம் கடமைகளை நாள் தோறும் நிறை வேற்றுகிறார்கள். பெருந் தொகையினராக ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு அடிக்கடி போய்க் கொண்டிருக்கிறார்கள். இத்தனையும் பொது ஜனங்களின் சௌகரியத்திற்காகவும் அவர்களைக் காப்பாற்றும் பொருட்டாகவும் தான். ஆகவே எல்லா வகைகளிலும் படைகளுக்கு முதல் இடமும் பொது ஜனங்களுக்கு இரண்டாவது இடமுந் தான் கொடுக்கப்பட வேண்டும்.

இது ஒரு குற்ற மற்ற யோசனை. ஏதேனும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டால், இராணுவ வேலைகளுக்கும் பொது ஜன வேலைகளுக்கும் தடங்கல் ஏற்படாதபடி நடந்து கொள்ள வேண்டிய அளவிற்கு, சென்னை வாசிகள் தைரியமா யிருப்பார்களா ?

விமானங்களி லிருந்து எதிரிகள் நம்மைத் தாக்கியதாகவும், அதனால் பெரும் பீதி ஏற்பட்டு விட்டதாகவும், சந்தேகப் பேர்வழிகள் நினைத்துக் கொள்ளட்டும். அப்போது, எதிர் பார்த்ததை விட அதிகமாகவே, பெண்களும் குழந்தைகளும், கிழவர்களும், நோயாளிகளும் அதிக பந்தோபஸ்தான இடங்களுக்கு உடனே ஏக காலத்தில் கிளம்பிப் போய்விட்டதாகவும் அவர்கள் நினைக்கலாம் "இதுபற்றி அரசாங்கத்தார் என்ன சாதித்து விட்டார்கள்" என்று பொதுவாக ஜனங்கள் கேட்பதுபோலவே அவர்களும் கேட்பார்கள். அரசாங்கத்தார் தாம் என்னென்ன செய்திருக்கிறார்கள் என்று ஏற்கெனவே பிரசுரித்திருக்கிறார்கள். இவற்றை அநேகர் மறந்து விட்டார்கள். எதிரிக் கப்பல்கள் வங்காளக் குடாக் கடலுக்குள் வருவதற்கு 2 மாதங்களுக்கு முன்பே பெரிய முகாம்களை அரசாங்கத்தார் கட்டினார்கள். அங்கே சாப்பாடு, தண்ணீர், வைத்தியம், சுகாதாரம் முதலிய வசதிகளையும் அமைத் திருந்தார்கள். இந்த முகாம்களுக்குச் சென்னையி லிருந்து 24 மணி நேரத்தில் நடந்து போய்ச் சேர்ந்து விடலாம். இப்படி 6 முகாம்கள் அமைத் திருந்தார்கள். அப்போது 360,000 பேர்களுக்கு அரிசி, காய்கறி, தண்ணீர், இருப்பிடம், முதலியவற்றை வாரத்திற்கு உதவுகிறதற்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்திருந்தார்கள். முன்பு இந்த முகாம்கள் அமைக்கப் பட்டிருந்த இடத்தை விட்டு வேறிடத்திற்கு இதை மாற்றி யிருக்கலாம். இவற்றில் எத்தனை நாட்கள் தங்கி யிருக்கலாம் என்பதைப் பற்றிய விதியும் மாறி யிருக்கலாம். இப்போது 6 மாத சவகாசம் கிடைத்திருந்தது. இப்போது இந்த முகாம் ஏற்பாடுகள் முன்னைய விட மேலான முறையில் தான் இருக்குமென்று நிச்சயமாக நம்பலாம்.

மேற்கே போகிற ஒரு ரஸ்தாவில் 20 மைல்களுக்கு ஒரு முகாம் ஏற்படும். இந்த ரஸ்தாவின் பெயர் ஏற்ற சமயத்தில்தான் பிரசுரிக்கப்படுமே யொழிய இப்போது அறிவிக்கப்பட மட்டாது. ஆனால் ரயில் வண்டிகளை அவர் எதிர் பார்க்க முடியாது. அவசியமான வேலைகளுக்காகவும் இராணுவத் தேவைகளுக்காகவும் எல்லா வண்டிகளையும் இராணுவ அதிகாரிகள் பேசிவிட்டார்கள். அல்லாமலும் இவர்கள் பிரயாணம் செய்யும் பாதை இராணுவப் போக்கு வரவுகளைத் தடை செய்யாத பாதையாக இருக்க வேண்டும். சுமைகளை அதிகமாகத் தூக்கிக் கொண்டு போக முடியாது. மாட்டு வண்டியோ ஜட்கா வண்டியோ அங்கே கிடையாது. வேறெந்த வகை வண்டியும் கிடைக்காது. என்றாலும், மோட்டார் வண்டிகள் ஒரு சில இடங்களில் கிடைக்கலாம். என்றாலும் ஒரு ஊரை விட்டு மற்றொரு ஊருக்கு அவை வெகு விரைவில் போய் விடும். சைகில் வண்டியில் போகிறவர்கள் நெடுந் தூரம் போக வேண்டி வரும். ஏனென்றால் இந்த முகாம்களில் அவர்களை ஒரு இரவிற்கு மேல் தங்க அனுமதிக்க மாட்டார்கள். ஆம். மிகுந்த அசௌகரியந்தான். என்றாலும், அவசியம் நேரும் போது எப்போது, எப்படி வெளியேறி விட வேண்டுமென்று சென்னை வாசிகளுக்கு அறிவிப்பதாக அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இப்படிப் பட்ட தேவை ஏற்படுவதற்கு முன்னதாகவே இப்போது செய்யப் பட்டிருப்பதை விட அதிகமாக வேறு என்ன தான் அரசாங்கம் செய்ய முடியும் ?

1. ஆபத்துகள் ஏற்படுமானால் (எதுவும் ஏற்பட இட மில்லை என்றுதான் மீண்டும் சொல்லுகிறோம்) ஒவ்வொரு ஆண்மக்களும், தன் கடமையையும், அறிவையும், அரசாங்க விருப்பத்தையும் இராணுவம் திறமையோடு வேலை செய்ய வேண்டிய அவசியத்தையும் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். தம் நண்பர்களுக்கும், ஆபீசிலுள்ளவர்களுக்கும், வேலைகளிலிருக்கிறவர்களுக்கும், இனத்தாருக்கும் தைரியமூட்ட வேண்டும்.

2. பொய் வதந்திகளை நம்பி பீதி கொண்டவர்கள் வெளியூர்களுக்குப் போய் விட வேண்டுமென்று முடிவு செய்வார்களானால், அதற்கும் அரசாங்கத்தார் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

3. பெருந் தீமை நேருமானால், இந்தப் பழமையான நகரத்தை நாம் காலி செய்ய நேரும். (அப்படிபட்ட நிலைமை ஏற்படாதபடி கடவுள் காப்பாற்றுவாராக !) அரசாங்கமும் வெளியேறுவதற்கு ஆயத்தமா யிருக்கிறது.

4. இந்த யுத்த காலத்தில் இத்தனையும் அரசாங்கத்தாரின் தேவையைப் பொருத்துத் தான் இருக்கின்றன. புத்திசாலித் தனமாகப் பொது ஜனங்கள் நடந்து கொண்டால், பொது ஜனங்களின் பாதுகாப்பை முன்னிட்டு சிவில் அரசாங்கம் செய்திருக்கும் ஏற்பாடுகளில் இராணுவம் குறுக்கிடாது. ஆனால் பொது ஜனங்கள், அவர்கள் போராட்டத்திற்கு எந்த விதமானத் தடைகளையும் உண்டாக்கக் கூடாது: போக்குவரவு சம்மந்தமாக ஏற்படும் விதிகளை அமுல் நடத்துவதில் ஒரு படைவீரர் எப்படி கட்டளை யிடுகிறாரோ, அது போலவே பொது ஜனங்களும் நடக்க வேண்டும். சென்னை நகரத்திலும் மாகாணத்திலுமுள்ள நாம் ஒவ்வொருவரும் போராடிக் கொண்டிருக்கிறோம். இந்த யுத்தம் உலக யுத்தம். உலக யுத்தம் என்றால் என்ன என்பதைக் குறித்து நாம் ஓரளவிற்கு இப்போது எழுதி யிருக்கிறோம்.



# யுத்தப் போக்கு.

பத்திரிகை நிருபர்களுக்கு இந்திய பிரதம தளபதி ஜெனரல் வேவல் பேட்டி கொடுத்த போது பேசிய முழு விவரங்களும் சென்ற வார வெளியீட்டில் பிரசுரித்திருந்தது. அப்போது, இது வரை இந்தியாவைப் பாதுகாத்துக் கொண்டிருந்த நாம், இனி எதிரியைத் தாக்க ஆரம்பிக்கிறோம் என்று தெளிவாக அவர் குறிப்பிட் டிருந்தார். தன் கருத்துக்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் அவர் மகா நிபுணர். எதிர் காலத்தில் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் மிகவும் எச்சரிக்கை யோடு தான் ஆலோசித்துச் செய்கிறார். எதிரிகள் கொஞ்சங் கூட எச்சரிக்கை பெறுதபடி, திடீரென்று எக்காரியத்தையும் செய்து முடிக்கிறார். இவர் இப்போது பர்மாவைத் தாக்க இந்தியா ஆயத்தமாக வேண்டுமென்று கூறுகிறார். பர்மாவி லிருந்து ஜப்பானியர்கள் இந்தியாவைத் தாக்கவும் கூடும். இதில் ஒரு விஷயம் முக்கியமானது. இந்தியாவி லிருந்து பர்மாவை நேச நாடுகள் நிச்சயமாகத் தாக்கக் கூடும் என்றேற்பட்டு விட்டது.

ஆறு மாதங்களுக்கு முன்னால் இதே ஜெனரல் வேவல் பேசும் போது, மலேயாவில் நேர்ந்த தவறுகளைத் தானே ஏற்றுக் கொண்டார். இன்னும் என்னென்ன நஷ்டங்கள் ஏற்படக் கூடுமென்றும் தெரிவித்தார். இப்படிக் கிருந்துங் கூட, அவர் பேச்சை அப்போது கேட்டவர்களுக்கு அவருடைய திறமையைப் பற்றி முழு நம்பிக்கை ஏற்பட்டது. நாம் பர்மாவை மீண்டும் கைப்பற்றி குடியேறிவிடுவோமென்று அவர் கூறியுள்ள வார்த்தைகள், அவருடைய மன உறுதியைக் குறிக்கின்றன. இதன் பொருட்டு நெடு நாட்களாக ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்ததாகவும் குறிப்பிடுகிறார். இதிலிருந்து கூடிய சீக்கிரத்தில் முக்கியமான தோர் போராட்டம் ஏற்படப் போகிற தென்று தெரிகிறது. இதன் பயனாக மிகச் சிறந்த பலன்கள் உண்டு.

சமீபத்தில் வின்டெல் வில்கி சுங்கிங் நகரத்திற்குச் சென்றிருந்தார். அப்போது அவர் கூறியதாவது :—

> "ஆசியாவில் நேச நாடுகள் தைரியமாகத் தாக்க வேண்டியது மிகவும் அவசியந் தான். இது இரண்டாவது போர் முனையை ஆரம்பிப்பதற்குச் சமமாகும்."

இதே கருத்தைத் தான் ஜெனரல் வேவலும் கூறி யிருக்கிறார். இந்தியாவில் தரைப் படை வலுத்துக் கொண்டு வருகிறது. நேச நாடுகளின் விமான பலமும் படிப்படியாக உயர்ந்து கொண்டு வருகிறது. பர்மாவை விட்டு ஜப்பானியர்களை விரட்டி யடிக்க வேண்டும். சீனாவோடு போக்கு வரவிற்கு ஏற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும்.

## நாச கால வேலை.

ஜப்பானியர்களின் அக்கிரமங்களைத் தடுக்க வேண்டி சீனா மிகவும் சிறந்த முறையில் போராடிக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் 'சீனாவிற்கு ஐக்கிய உதவி நிதிக் கூட்டம்' என்று ஒன்று நடைபெற்றது. அப்போது சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் கூட வந்திருந்து பேசினார். சீன தூதரான டாக்டர் வெல்லிங்டன் கூவும் அங்கு வந்திருந்தார். அவர் கூறியதாவது :—

மிகவும் பலசாலியான எதிரி யோடு சென்ற ஐந்து வருஷங்களாக சீனா போராடிக் கொண்டிருக்கிறது. சம பல மில்லாத இரு கட்சியினர் இவ்வளவு காலம் போராடிக் கொண்டிருந்தது, உலக சரித்திரத்திலேயே கிடையாது. தற்போது மிகவும் கஷ்டங்களும் தொல்லைகளும் உண்டானாலும், தம் கட்சி மிகவும் நியாயமான கட்சி என்று சீனர்கள் களங்க மற உணர்ந்து கொண்டார்கள். ஏதேச்சையை நாடும் உலக மக்கள் அனைவருடைய கட்சியும் இதுதான் என்றும் உணருகிறார்கள். அநாகரிகக் கொடுங்கோலர்களான ஜப்பானியர்களோடு இது வரை தனித்திருந்து போராடிய சீனர்களுடன் ஜனநாயக நாடுகள் சேர்ந்து விட்டன. இது பெரிதும் சந்தோஷப் படத்தக்க செய்தியே. நேச நாடுகளெல்லாம் கூடி நடத்தும் போராட்டத்தில் சீனாவும் தன் கடமையைச் சரிவர நிறை வேற்ற இது மிகவும் ஊக்கந் தரும். இந்த யுத்தத்தின் முக்கியமான பகுதி நாச கால வேலை தான். இந்த முறையைத் தான் சீனர்கள் பின் பற்றுகிறார்கள். ரஷ்யர்களும் கூடத் தான். இந்தியாவில் இந்தக் கொள்கையைப் பற்றி கருத்து வேற்றுமைகள் அதிகமா யிருக்கின்றன. இதை ஆதாரமாகக் கொண்டு அச்சு நாட்டு அரசாங்கங்கள் புளுகத் தலைப்படுகின்றன. இது இந்தியாவிற்கு ஏற்ற முறையல்ல என்று கூறுகிறார்கள். பாலங்கள், ரயில்வேக்கள், வெடி மருந்து தொழிற்சாலைகள் முதலிய இராணுவ சம்மந்த முள்ள முக்கியமான இடங்களை அழித்து விடுவதோடு, பயிர்களையும் பண்ணைகளையும் கூட, அதாவது கிராமப் புரங்களையே அழித்து விட வேண்டும். அன்றியும், சீனர்கள் தம் இருப்பிடத்தை விட்டு விட்டு மேலைச் சீனாவிற்குக் குடியேறியதை போல், இடம் பெயரவும் வேண்டும். இதற்குத் தான் நாச கால வேலை என்று பெயர். நாச கால வேலைக்கும், எதிரிகளுக்கு எந்த வகை உதவியும் கிடைக்காமற் செய்து விடுவதற்கும் வேற்றுமை யுண்டு. இதைப் பற்றி விளக்கி சென்ற செப்டம்பர் மாதம் 26-ம் தேதி இந்தியா மேல் சபையில் ஜெனரல் ஹார்ட்லி தெளிவாக எடுத்து விளக்கினார். அவர் கூறியதாவது :—

> "நாசகால முறையைக் கையாளுவதற்குப் பதிலாக, எதிரிகளுக்கு எந்த வகை வசதிகளும் கிடைக்காதபடி செய்துவிடக் கூடியது தான் நம் கொள்கை. இதன்படி எதிரிகளுக்குக் கிடைக்கக் கூடிய எல்லா உதவிகளையும் நாசஞ் செய்து விட வேண்டும். ஆனால் பொது ஜனங்கள் வாழ்விற்குத் தேவையான பொருள்களைக் கூட நாசஞ் செய்வது தான் நாச கால வேலை. ஆகவே இவ்விரண்டு முறைகளுக்கும் மிகுந்த வேற்றுமை யுண்டு.

## இந்தியாவில் கலகத்தை எப்படி ஒடுக்குகிறார்கள்.

அச்சு நாட்டு முழுப் புளுகு ஒன்றை ஜெனரல் ஹார்ட்லி மறுத்தார். இந்தியாவிலுள்ள சில நகரங்களையே இந்திய அரசாங்கம் வெடி குண்டுகளை எறிந்து நாசம் செய்ததாக எதிரி ரேடியோக்கள் புளுகின. இது பற்றி அவர் கூறியதாவது :—

சென்ற ஆகஸ்ட்டு மாதம் 9-ம் தேதி பீஹாரிலும், வங்காளத்திலும் உள்ள 4 ஊர்களிலும், சமஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு ஊரிலும் கலகக் கூட்டத்தை ஒடுக்க வேண்டி ஆகாயத்தி லிருந்து மிஷின் பீரங்கிகளை உபயோகிக்க நேர்ந்தது. இங்கே வெடி குண்டு எதையும் எறியவில்லை. இங்கெல்லாம் மேலும் கலகம் நேராமல் தடுக்கத்தான் மிஷின் பீரங்கிகளை உபயோகித்தார்களேயொழிய கலகம் செய்தவர்களைத் தண்டிப்பதற்காக வல்ல. விமானத்திலுள்ள மிஷின் பீரங்கிகளைக் கொண்டு கலகக்காரர்களின் தலை மேலும் அவர்களுக்கு உதவி செய்கிறவர்கள் தலை மேலும் சுடலாம். அதாவது உண்மையிலேயே கலகம் செய்து கொண்டிருக்கிறவர்களின் தலை மேலேயே சுடலாம். அப்போது நிதான மில்லாமலும் கணக்கு வழக் கில்லாமலும் சுடுவ தில்லை. மிகவும் எச்சரிக்கையுடனே தான் சுட்டார்கள். வெடிகுண்டு எறிந்தால் ஜனங்களுக்குக் கட்டாயம் காயப் படும். ஜனங்களைப் பயமுறுத்தும் பொருட்டு வெடிகுண்டுகளை எறியக் கூடாது. பொது ஜனங்கள் வசிக்கும் இடங்களில் வெடி குண்டுகளை வீசுவது என்றால், நிதான மில்லா

மல் வீசுவது என்று தான் ஓரளவிற்கு அர்த்த மாகும். நேச நாட்டுப் போர் முறைக்கும் அச்சு நாட்டுப்போர் முறைக்கும் எவ்வளவு வேற்றுமை யுண்டோ, அவ்வளவு வேற்றுமை, ஆகாயத்தி லிருந்து மிஷின் பீரங்கியால் சுடுவதற்கும் வெடி குண்டுகளை எறிவதற்கும் உண்டு. 'எம் விமானங் களிலிருந்து வெடி குண்டுகளை எறிந்தும், டாங்கி களைக் கொண்டும், தம் வயப்பட்ட ஐரோப்பிய நாட்டு மக்களைப் பணியச் செய்துவிடுவேன்' என்று ரிப்பன்ட்ராப் என்னும் ஜெர்மன் தள கர்த்தர் கூறிய வார்த்தைகளை இங்கே ஞாபகப் படுத்தலாம். இது நிதான மில்லாமல் பீதியை யுண்டாக்கும் முறை. இந்தியாவில் கையாளப் படுவது, மேலும் கலகங்கள் நேர ஒட்டாதபடி நிதானத்தோடு தடுக்கும் முறை. அதாவது கலகத்தை ஒடுக்க எந்த அளவிற்கு பலாத்காரம் தேவையா யிருந்ததோ, அந்த அளவிற்கு மட் டுந் தான் அதை உபயோகித்தனர்.

**ஜப்பானின் எண்ணம் என்ன ?**

இனி ஜப்பான் என்ன செய்யப்போகிறது ? கீழ்க் கோடியில் பல சம்பவங்கள் நடை பெறுகின்றன. அமெரிக்காவிற் கும் ஆஸ்திரேலிய தளங்களுக் கும் போக்கு வரவு நடப்பதை வெட்டி விட ஜப்பானியர்கள் மிகவும் முயற்சிக்கிறார்க ளென்று தெரிகிறது. பசிபிக் மகா சமுத்திரத்தின் தென் மேற்கு பகுதி யில் ஜப்பானியப் படைகள் திரண்டிருக்கின்றன. சாலமன் தீவுகளை மீண்டும் கைப்பற்ற ஜப்பான் அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. மார்ஸ்பி துறைமுகத்தைப் பிடிக்க வேண்டு மென்று ஜப்பான் உறுதி கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இவற்றைக் கொண்டு ஜப்பானின் எண்ணம் என்ன வென்று நிர்ணயிக்கக் கூடும். தாம் கைப்பற்றிய நாடுகளை யாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்பது தான் அவர்களுடைய பெருங் கவலை. அவர்கள் பெரிய சாம்ராஜ்யத்தை வென்று விட்டார்கள். இது இந்தோ சீனாவிலிருந்து இந்தோ பர்மிய எல்லை வரையிலும், பிலிப்பைன் தீவுகளிலிருந்து நியூ கினியா வரையிலும் பரவி யிருக்கிறது. நான்கு புரங்களிலு மிருந்து இந்தப் பகுதியைத் தாக்கலாம். வடக்கே விலாடிவாஸ்டாக் கிலிருந்தும், கிழக்கே பசிபிக் பெரும் படையும், தெற்கே இந்தோ-பர்மா எல்லைப் புரத்திலிருந்தும் தெற்கே ஆஸ்திரேலியா விலிருந்தும் தாக்கலாம்.

ஜப்பானுக்கும் ரஷ்யாவிற்கும் யுத்தம் மூண்டால் மட்டுந் தான் விலாடிவாஸ்டாக்கி லிருந்து ஜப்பான் தாக்கப் படலாம். சென்ற சில வாரங்களாகவே சைபீரியாவை ஜப்பான் தாக்கப் போவதாக வதந்தி கள் பிறந்தன. தம் மொத்த தரைப் படைகளில் மூன்றி லொரு பகுதியை ஜப்பான் வட கோடி யில் ஆயத்தப் படுத்தி வைத்திருக்கிறது. ஜப் பான் அந்நிய நாட்டு மந்திரி டோகோவை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள். ரஷ்யாவோடு போராடக் கூடாது என்பது ஜப்பானியர்கள் கொள் கையாம். டோகோவை வேலையை விட்டு நீக்கி விட்டத னால், இந்தக் கொள்கையில் மாறுதல் உண்டா கும் என்று நினைக்கக் கூடா தென்று ஜப்பான் அர சாங்கத்தார் கூறுகிறார்கள். ஜப்பான் பிரதிநிதிகள் வாஷிங்டனில் சமரசம் பேசிக் கொண்டிருக்கும் போதே, பெர்ல் துறைமுகத்தை அவர்கள் தாக்கியது ஞாபகமிருக்கலாம். அந்த அளவிற்குத் தான் இந்த ரஷ்ய ஜப்பான் ஒப்பந்தத்தையும் ஜப்பானியர் மதிப் பார்கள் என்று நினைக்க வேண்டும். எது எப்படி இருந் தாலும் சோவியத் ரஷ்யா எதற்கும் ஆயத்த மாகத் தான் இருக்கிறது. கீழ்க் கோடி யிலுள்ள செஞ் சேனைகள் எண்ணிக்கையிலும் ஆயுத பலத்திலும் மிக உயர்ந்திருக்கின்றன. இப்போது ஸ்டேலின் கிராடிற்குப் போயிருக்கும் படைகள் மேற்குச் சைபீரி யாவைச் சேர்ந்தவை. கிழக்குச் சைபீரியாவைச் சேர்ந்தவை யல்ல. இதிலிருந்து, ஜப்பான் உடனே சைபீரியாவைத் தாக்காது என்றும் முடிவு கட்டி விடக் கூடாது. விலாடிவாஸ்டாக்கி லிருந்து கடல் மூலமாகவும் விமான மூலமாவும் டோக்கியோ முதலிய நகரங்களைத் தாக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது ஜப்பானின் முதல் கடமை யாகும். ஒரு வருஷத்திற்கு முன்னதாகவே ரஷ்யாவின் மேற்குப் பாகத்தில் பலமான சேனை யிருந்தது. அப்போது ரஷ்யர்கள் விரும்பி யிருந்தால் ஜப்பானைத் தாக்கி யிருக்கலாம் ; ஆனால், தாக்க வில்லை. இப் போது வாழ்வதா சாவதா எனத் தக்க முறையில் அச்சு நாட்டுப் படைகளோடு, ரஷ்யா போராடிக் கொண்டிருக்கிறபோது எப்படித் தாக்கும் ?

ஜெர்மனி எந்த அளவிற்கு ரஷ்யாவை இடுப்பு உடைக்கும் ? தெற்கேயும் மேற்கேயும் நேசநாடுகள் ஜப்பானுக்கு எந்த அளவிற்கு நெருக்கடியை உண் டாக்கும் ? இவ் விரண்டையும் ஒட்டித் தான் ஜப்பா னின் போக்கு அமையு மென்று தெரிகிறது. சைபீரி யாவைத் தாக்குவதனால் ஜப்பான், தனக்கும் அச்சு நாடுகளுக்கும் நன்மைகளைத் தேடிக் கொள்ள வேண்டும். பணம் ஒன்றே பெரிது என்று மதிப்ப வர்களின் கொள்கை இது தான். சைபீரியாவைத் தாக்கும்படி ஜப்பானை ஜெர்மனி வற்புறுத்திக் கொண்டிருப்பதாக, யுத்தத்தில் கலக்காத நாடு களி லிருந்து செய்தி கிடைக்கிறது. என்றாலும் இந்த வதந்திகளை முழுவதும் உண்மை என்றும் அர்த்தம் செய்து விடக் கூடாது. ஜப்பான் வடக்கே போய்த் தாக்க வேண்டு மென்பது அச்சு நாடுகளின் ஏற்பாடு என்ற எண்ணத்தை யுண்டாக்கினால், ஜெர்மனிக்குத் தான் சௌகரியம்.

நிற்க, இந்தியாவை ஜப்பானியர் ஒரு பெரும் படை கொண்டு தாக்குவார்கள் என்று நினைப்பதற்கும் இட மில்லை. ஏனென்றால், தாம் ஜெயித்த பர்மாவைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு ஜப்பானி லிருந்து அதிகம் படைகளை அனுப்பி இந்தோ-பர்மிய எல்லைப் புரத்தில் தகுந்த பாதுக்காப்புகளை இன்னும் ஏற் படுத்திக் கொள்ள வில்லை. அல்லாமலும் சேக்யாங் மாகாணத்தி லிருந்த தம் படைகளையும் தருவித்துக் கொண்டார்கள். சீனர்களிட மிருந்து கைப்பற்றிய 'பாம்ப்-டோக்கியோ' விமான தளங்களையும் விட்டுக் காலி செய்து விட்டார்கள். இதற்குப் பிறகு, சூங்கிக் நகரத்தைத் தாக்கப் போவதாக ஜப்பான் ஒரு தரம் கூடக் கூறத்துணியவில்லை.

**மோர்ஸ்பி மீது ஜப்பான் கண்ணோட்டம்.**

ஜப்பானியர்கள் தம் முழு கவனத்தையும் தென் மேற்குப் பசிபிக் பகுதியில் தான் செலுத்திக் கொண்டிருக்கிறார் கள். ஜப்பான் கை ஓங்க வேண்டு மானால், நியூ கினியா வையும், அதன் முக்கியமான துறை முகமான மார்ஸ்பியையும் வென்று கைப்பற்ற வேண்டும். சாலமன் தீவுகளை யும் மீண்டும் கைப்பற்ற வேண்டும். அமெரிக்காவும் ஆஸ்திரேலியாவும் பலம் மிகுந்த நாடுகள். இவற் றோடு போராட வேண்டிய நிர்பந்தம் ஜப்பானுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தரைப் படை, கப்பற் படை, விமானப்படை ஆகிய மூன்று வகைப் படைகளையும் ஜப்பானியர்கள் திரட்டி வைத்திருக் கிறார்க ளென்று நாம் நினைக்க இடமுண்டு. மார்ஸ்பி துறைமுகத்திற்கு எதிரில் கடும் யுத்தம் ஆரம்ப மாகி விட்டது. இன்னும் கடுமையான முறையில் இந்த யுத்தம் நடை பெறலாம். இதன் ஆரம்பத்தி லேயே ஜப்பானியர்கள் தோற்றுக் கொண்டிருக்கிறார் கள். இப்போது வெற்றி பெற்றால் மட்டுந் தான் முடிவில் இவர்கள் வெற்றி பெற முடியும். மார்ஸ்பி துறைமுகப் போராட்டம் மிகவும் முக்கியமானது தான். அது போலவே தென்மேற்குப் பசிபிக் கடல், இந்தியாவின் எல்லை புரம், சைபிரியாவின் எல்லைப் புரம், ஸ்டாலின்கிரட் தெருக்களில் நடைபெறக் கூடிய சண்டைகளுங் கூட மிகவும் முக்கியமானவை தான்.



# இந்தியாவில் படைகளுக்கு வசதிகள்:

## டில்லியில் வேவல் பிரசங்கம்.

நாளது மாதம் 3-ம் தேதி மாலை டில்லி ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் இந்திய பிரதம தளபதி ஜெனரல் வேவல் ஒரு மோட்டார் சிற்றுண்டிச் சாலை யைத் திறந்து வைத்தார். அப்போது அவர் கூறிய தாவது :—

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியப் படை வீரர் களுக்கு வேண்டிய வசதிகளைக் குறித்துப் பேசுவது பொருத்த மாகும். நமது கடமைகள் எவை என் றும், நம் கஷ்டங்கள் எப்படிப் பட்டவை என்றும் சுருக்கமாகத் தங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நெருக்கடியான காலத்தில் நம் கடமைகள் எவை என்று நம் படையினருக்கு நான் எடுத்துக் கூற வேண்டிய தேவையே கிடையாது. இவர்கள் நல்ல வேலை செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் பெரிதும் கடமை பட்டிருக்கிறோம். இப்போது நம் படைகளிலுள்ள ஐரோப்பியர்களும் இந்தியர் களும் சாதாரண பொது ஜனங்கள் தான். ஆனால் இராணுவ உடுப் பணிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த உண்மையை இந்தியாவிலுள்ள நாம் எளி தில் உணர்ந்து கொள்ளுவ தில்லை. இன்னும் ஒரு 'வாலண்டியராகத்' தான் இந்தியப் படை வீரர்கள் இருக்கிறார்கள் என்பது உண்மை தான். இந்தியப் பொது மக்கள் அனைவரின் பிரதிநிதியாகத்தான் இந்தியப் படை வீரர்கள் இன்று இருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலைமையில் அவர்கள் ஒரு போதும் இருந்த தில்லை. இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் இன்றுள்ளது போல அத்தனைப் பேர்கள் ஒரு போது மிருந்ததில்லை. பொது ஜனங்களில் பல பகுதிகளி லிருந்தும் இப்போது படையில் சேர்ந்திருப்பது போல ஒரு போதும் சேர்ந்தது மில்லை. இராணுவப் படை யினர் என்று அவர்களைக் கூறுவதை விட, பொது ஜனப் படையினர் எனக் கூறுவது தான் பொருத்த மாகும். அது போலவே, இப்போது இந்தியாவி லுள்ள பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் படை வீரர்களும் இராணுவத்தைச் சேர்ந்திருந்தவர்க ளல்ல, ஆனால் சிவில் உத்தியோகங்களி லிருந்த வர்கள்.

இவர்கள் தம் அலுவல்களையும், குடும்பங்களையும், வீட்டையும் விட்டு விட்டு பொது நன்மைக்காகப் போ ராட வந்தவர்கள். இவர்கள் அந்நிய நாட்டிற்கு வந் திருக்கிறார்கள். இந்தியாவின் சீதோஷ்ணத்தைக் குறித்தும் நிலைமைகளைக் குறித்தும் அவர்களுக்குத் தெரியாது. ஆகையால், அவர்களை முழு மனதோடு வரவேற்று, கூடிய வரை உதவி புரிய வேண்டும். இவை நமது கடமைகள்.

**சில கஷ்டங் கள்.**

இனி நம் கஷ்டங்களைக் குறித்துச் சில சொல்லுகி றேன். ஏனென்றால் படைவீரர் களுக்குப் போதுமான அளவிற்கு வசதிகள் செய்யப்பட வில்லை என்று சிலர் குறை சொன்னார் கள். இந்த யுத்தம் ஆரம்பித்த முதல் 2½ வருஷங்கள் வரை, வெளி நாடுகளில் நடைபெறும் யுத்தத்தைக் குறித்தே நாம் கவனம் செலுத்தி வந்தோம். இந்தியாவில் படைகளைத் திரட்டினோம் ; பயிற்சி தந்தோம் ; இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியமான போர்முனை களுக்கு அனுப்பினோம். இந்தியப் படைகளோடு வெளி நாடுகளுக்குப் போயிருக்கிறவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பதிலேயே நம் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தோம். ஜப் பான் யுத்தத்தில் இறங்கிய உடனே, இந்தியாவிற்கு ஆபத்து உண்டாகலாம் எனத் தெரிந்து, ஏராளமான பிரிட்டிஷ் படைகளும் நேச தேசப் படைகளும் விமா னப் படைகளும் திடீரென வந்து சேர்ந்து விட்டன. இந்த ஆயிரக்கணக் கான வீரர்களுக்கும் வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பது சற்று கஷ்டமான காரி யந் தான். கப்பல் போக்கு வரவும் குறைவு. எனவே, இந்தப் படையினருடைய வசதிகளை முன்னிட்டு வெளி நாடுகளி லிருந்து எதுவும் தருவிக்கவும் முடிய வில்லை. இவர்களை யெல்லாம் வரவேற்றுக் களிப்பூட் டக் கூடிய இடங்கள் இந்தியாவில் இல்லை.

இது மிகவும் கஷ்டமான பிரச்சினை தான் என் றாலும், தர்ம சிந்தையுள்ளவர்களின் உதவியால் இந்த நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டு வருகிறோம். இன்று நாம் இங்கே கூடியிருப்பதும் இதன் பொருட்டுத் தான். உத்தியோக முறையிலும், உத்தியோகப் பற்றில்லாதவரைக் கொண்டும் நாம் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண்போம். ஒரு படைவீரர் எந்த நாட்டவரா யிருந்தாலும், தம் வசதி கள், கிளப்புகள், மோட்டார் சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றை விட எதை வெகுவாகப் பாராட்டுகிறார் கள் தெரியுமா ? தமக்கு அளிக்கப்படும் வரவேற்புக் களையும் தமக்குக் கிடைக்கும் பாராட்டுதலையும், அந் நாட்டவர்களைப் போலவும் நண்பர்களைப் போலவும் நடத்துவதையுந் தான் பெரிதும் பாராட்டுகிறார்கள். ஏனென்றால் அவர்களும் பொது நன்மைக்காகத் தியாகம் செய்கிறார்கள். ஒரு படைவீரர் எந்த நாட்ட வராயிருந்தாலும், எந்த இனத்தவராயிருந்தாலும் என்னபதவி யிலிருந்தாலும், அவர்களை நன்கு வர வேற்று உபசரியுங்கள். இதன் பயனாக அவர்களு டைய மன நிலை உயர்வடையும்.


**விஷ அம்புகள்.**

**பொய் வதந்திகள் பற்றி எச்சரிக்கை!**

**அவை எதிரிகள் விடுக்கும் விஷ அம்புகள்.**

உங்கள் மனதைக் குழப்பவும்
பகுத்தறிவைக் குலைக்கவும்
தவறான வழியில் நீங்கள் நடக்கவும்
தான் இவற்றை பரப்புகிறார்கள்.

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியர்களுக்கு விரோதமாக
தேசியப் போர் முனையை அமையுங்கள்!

# வாழ்க ஸ்டாலின்கிராட்!

சோழ ராஜன் தர்பார் கூடி யிருக்கிறது. எண்ணற்ற ஜனங்கள் வந்து கூடி யிருக்கின்றனர். மன்னன் மகிழ்ச்சி யோடு சிம்மாசனத்தில் வந்தமர்ந்தான். ஒவ்வொருவராக அரசனுக்கு வாழ்த்துக் கூறி சன்மானம் பெற்ருர்கள். ஒவ்வொருவரும் தத்தம் திறமையைக் காட்ட வேண்டி, பிரமாதமாகப் பாமாலைகள் பலவற்றை தயாரித்து வந்திருந்தார்கள். அவை அனைத்தையும் கேட்டு அரசன் மகிழ்ந்தான். கடைசியாக வந்தாள் ஔவையார் கிழவி. 'வரப் புயர' என்று ஒரே ஒரு வார்த்தை மட்டும் கூறி விட்டு தன் இடத்திற்குச் சென்ருள். அரசனுக்கு வந்து விட்டது கோபம். மகா சூரனை தன்னைப் பார்த்து, ஔவையார் இவ்வாறு வரப்பு, கிரப்பு என்று சொன்னது, தன்னை அவமானப் படுத்துவது போலாகுமென்றே எண்ணி விட்டான் அவன். ஆகவே, ஔவையார்க் கிழவி மறுபடியும் எழுந்து, தான் சொன்ன வார்த்தைக்கு வியாக்கியானம் கூற வேண்டி வந்தது.

'வரப் புயர என்று சொன்னே னல்லவா? வரப் புயர்ந்தால் வயலிலே என்ன ஆகும்? வரப் புயர நீர் உயரும். நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோல் உயரும், கோல் உயர கோன் உயர்வான். ஆகவே வரப்பு உயர்வதிலிருந்து, அரசன் க்ஷேமமாகவும், புகழுடனும் வாழ்வதற்கு இட முண்டாகிறது. இதையே நான் சுருங்க கூறினேன்' என்ருளாம் ஔவையார்.

அரசன் அப்படியே பிரமித்துப் போய் விட்டானும். ஔவையாரின் வாக்குச் சாதுர்யத்தை எண்ணி, எண்ணி மகிழ்ந்தானும்.

ஔவையார் வரப் புயர என்று சொன்னதில் எவ்வளவு அர்த்தம் பொதிந்து கிடந்ததோ, அவ்வளவு அர்த்தம், 'வாழ்க ஸ்டாலின்கிராடு' என்ற இரண்டு வார்த்தைகளில் அடங்கி யிருக்கின்றது.

ஸ்டாலின்கிராடு நகரம் நாளுக்கு நாள் பாழடைந்து வருகின்றது என்பது உண்மையே! அந்நகரை அணுகும் பிரதேசங்களிலும், அந்நகரின் தெருக்களிலும் இடிந்து கிடக்கும் மாட மாளிகைகளின் மீதிலும், எண்ணற்ற சவங்கள் குவியல் குவியலாக கிடக்கின்றன. காயம்பட்டு கிடப்போரின் கதியும், செத்த பிணங்களின் கதியும் ஒன்ருகவே இருக்கிறது. இவர்களைக் கவனிப்பதற்குக் கூட அவகாசமேது?

இந்த ஒரு நகரைத் தகர்க்க மூவாயிரம் பீரங்கிகளாம்! ஐயோ! நினைத்தாலும் குடல் நடுங்குகிறதே! அல்லும் பகலும் அறுபது நாழிகையும் இந்த பீரங்கிகளின் குழாய்களில் உள்ள சூடு தணியாமலே இருக்கின்றதாம். இவற்றின் முழக்கம் ஒரு புறம்; இவற்றி லிருந்து கிளம்பும் குண்டுகளின் சப்தம் ஒரு புறம்; வானத்திலே குடை போல் பறக்கும் நாஜி விமானப் படைகளின் இரைச்சல் ஒருபுறம்; அவை உதிர்க்கும் குண்டுகள் வெடிக்கும் பயங்கர பேரிடி முழக்கம் மற்ருெர் புறம். தெருக்களில் கைச் சண்டை போடுவோரின் கோஷம் இன்னொரு புறம். நிமிஷத்திற்கு நிமிஷம் இடிந்து விழும் கட்டிடங்களின் சப்தம் வேறே! ஒரே நரக லோகக் காட்சி தான்!

நாஜிகள் நமன்களைப் போல் போராடுகிருர்கள் என்ருல், ருஷ்யர்கள் மார்க்கண்டேயர்களைப் போல் சமாளித்து நிற்கிருர்கள். ஸ்டாலின்கிராடுக்கான போர் ஆரம்பமாகி இரண்டு மாதங்களுக்கு மேலாகி விட்டது. ஆரம்பத்திலே இருந்த கேவலமான நிலைமையை விட, இப்போதைய நிலைமை ஒன்றும் மோசமாகி விட வில்லை என்பதே சிலரது கருத்து. ஜெர்மன் படைகளுக்கு, முன் போல் புது ஆள் உதவி வந்து சேர வில்லையாம். எப்படிடா தெரிந்தது இது என்ருல், சில தெருச் சண்டைகளில் பிடி பட்ட ஜெர்மன் கைதிகளை விசாரித்ததில், அவர்கள் எல்லாம் பாலங்களைக் கட்டுவதற்கான எஞ்சினீர்கள் என்றும், தெருச் சண்டை விஷயமே அதிகம் அறியாதவர்க ளென்றும், மேற் கொண்டு உதவி வரும் வரை போராட வேண்டு மெனும் உத்திரவோடு தாங்கள் போரி லிறங்கியதாகவும் அவர்கள் கூறினுர்களாம்.

ஸ்டாலின்கிராடு நகருக் குள்ளே நின்று போராடும் ருஷ்யர்களுக்கு, பல கஷ்டங்களுக் கிடையே, வால்கா நதி வழியாக, உணவுப் பொருள்கள் கிடைத்து வருகின்றன. அங்குள்ள படைகளில் பல ஸ்திரீகளும் இருக்கிருர்களாம். அவர்களின் தேச பக்தியும், தியாக புத்தியும் அளவிட முடியாத தாகும். வீடுகளுக் குள்ளிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்கிருர்களாம் அந்த ஸ்திரீகள். அதோடு, அக்கினித் திராவகங்களை ஜெர்மானியர் மீது கொட்டுகிருர்களாம். அவர்களது மனதில் அச்ச மென்பதே கிஞ்சித்தும் இல்லையாம்.

மாஸ்கோவி லிருந்து, உத்சாக மூட்டும் மொழிகள் ஸ்டாலின்கிராட் நகரைக் காப்பவர்கள் செவிகளுக்கு எட்டிக் கொண்டிருக்கின்றன. 'உறுதி யோடு போராடுங்கள். பின் வாங்க இடமில்லை; நீங்கள் ஜெயித்தே தீரவேண்டும்' என்று பத்திரிகைகள் கதறுகின்றன. ஸ்டாலின்கிராட் நகரி லிருந்த கணக்கற்ற தொழிற்சாலைகளில் பல காலியாகி விட்டன. பாக்கி உள்ளவற்றிலே, தொழிலாளர்கள் ஊக்கத் தோடு வேலை செய்கிருர்களாம்.

ஒரு ஆலையிலே முக மூடி யணிந்து, தடங்கலில்லாமல் தம் வேலைகளை நடத்திக் கொண்டிருந்தார்களாம் பல தொழிலாளிகள். இன்னொரு ஆலையிலே, அந்த ஆலை வாசலுக்கு தெருச் சண்டை பரவி வரும் வரை, தொழிலாளர்கள் தங்கள் வேலை மீதே கண்ணுக இருந்தார்களாம். எத்தகைய இரும்பு மனம் பாருங்கள்!

இதைக் கண்டு ஹிட்லரே பிரமிக்கிருர். அவரது சிஷ்யர்களும், இந்த ஸ்டாலின்கிராடு போரின் முக்கியத்தைக் குறைத்துக் காட்ட முயல வில்லை. ஹிட்லருக்கு ஒரு கை போலிருக்கும் கொயரிங் கூட ஒரு அழுகை அழுதிருக்கிருர்.

'பிரிட்டிஷ் விமானிகள் ஜெர்மனி மீது படையெடுத்து வந்து, நமது தொழிற்சாலைகளுக்கும், போக்கு வரத்துப் பாதைகளுக்கும், ஜெர்மன் குழந்தைகள், மற்று முள்ள மக்களுக்கும் கஷ்டங்களை உண்டாக்கும் பொழு தெல்லாம், பதிலுக்குப் பதில் சீமையிலே படு சேதத்தை விளைவித்து விட்டு வர வேண்டு மென என் மனம் ஆசைப் படுகிறது. ஆனுல், நமது விமானங்களில் பெரும்பாலானவை ருஷ்யாவில் போய் மாட்டிக் கொண்டிருக்கின்றனவே! அங்கே வேலை வெற்றிகரமாக முடிந்த பிறகு தானே, அந்த விமானங்கள் வேறு திசைக்கு வரக் கூடும்' என்று கண்ணீர் வடித்திருக்கிருர் அவர்.

ஒரு நாளைக்கு ஒரு டிவிஷன் வீதம் (ருஷ்யப் போர் முனைகள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டால்) ஜெர்மானியருக்கு நஷ்ட மேற்பட்டு வருகிறதாம். இப்படியே போய்க் கொண்டிருந்தால், ஜெர்மனியால் எத்தனை காலம் தான் தாக்குப் பிடிக்க முடியும்? ஒரு கட்டத்திலே, போர் முனையில் நிற்பவர்கள் புது உதவியைப் பெருது, வெகு தூரம் முன்னேறிச் சென்று, திடீரென மாட்டிக் கொண்டு முழிக்கவும் நேரிடலாம்.

மொத்தத்திலே ருஷ்யர்கள் மீது தான் ஜெர்மனியின் மூல சக்தி முழுவதும் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது. அந்த மூல சக்தியை, நிகரற்ற தியாகங்களைச் செய்து வீர ருஷ்யர்கள் மளமள வெனக் குறைத்து வருகிருர்கள். உலக சரித்திரத்திலேயே அதி பயங்கரமானதாகவும், மிகப் பெரியதாகவும் கருதக் கூடிய போர்கள் ஸ்டாலின்கிராடில் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பேருதவிக்கு, ருஷ்யர்களுக்கு நேசதேசத்தார் பெரிதும் கடமைப் பட்டிருக்கிருர்கள். நேச தேசத்தார் எதிர் பார்க்கும் இறுதி வெற்றியைப்



பெற்றளிக்க ஸ்டாலின்கிராடு போர் பெரிதும் உதவி செய்வ தாகிறது.

ஸ்டாலின்கிராடு சமாளித்து நின்று, அங்கிருந்து ஜெர்மானியர் விரட்டி யடிக்கப் பட்டு விட்டால், அதை விட அமோகமான தோர் வெற்றி இந்த இரண்டாவது மகா யுத்தத்திலேயே இருக்க முடியாது.

இரு கட்சியினரும் இந்நகரப் போரில் அயர்ந்து போயிருக்கிருர்கள். வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்து போய்க் கொண்டிருக்கின்றன. நகரில் சிக்கிக் கொண்டு நகரைப் பாது காக்கப் போராடும் படைகளுக்கு உதவி செய்ய, மார்ஷல் டிமோஷிங்கோ, நகரின் வடமேற்கிலே ஒரு பலமான தாக்குதலை ஆரம்பித்து வைத்திருக்கிருர். பலமான எதிர்ப்பு இருந்த போதிலும், இந்தத் தாக்குதல் ருஷ்யர்களுக்குச் சாதகமாகவே இருந்து வருகிறது. இதே மாதிரி ஸ்டாலின்கிராடிற்குத் தெற்கிலும் ருஷ்யர் தாக்க ஆரம்பித் திருக்கின்றனர். ஜெர்மானியரிடம் ஸ்டாலின்கிராடைப் பறி கொடாது காக்கலாம் என்ற நம்பிக்கை ருஷ்யர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. 'எங்கள் மானேதிடம் எவருடைய மனேதிடத்திற்கும் மட்டானதல்ல! நாஜிகளுக்கு லேசில் பணிந்து விட மாட்டோம் நாங்கள்' என்று ஸ்டாலின் கூறி யிருக்கிருர்.

இதை எல்லாம் உத்தேசித்தே, சுருக்கமாகவே, 'வாழ்க ஸ்டாலின்கிராடு' என்று வாழ்த்த விரும்பினேம். ஸ்டாலின்கிராடு வாழ்வதால், ருஷ்யா வாழும். ருஷ்யா வாழ்வதால், ஜப்பானின் கை கீழக்கே அதிகமாக ஓங்காது. அவ்வளவுக் கவ்களவு ஜெர்மானியருக்குக் கஷ்டம். ஜெர்மானியருக்குக் கஷ்டம் என்ருல், நேச நாட்டினருக்குக் கொண்டாட்டம் தானே!

---

# ஆஹா! இது என்ன புதுமை!

நியூ கினியா என்பது ஆஸ்திரேலியா அருகே இருக்குமோர் பெரிய தீவு. இதிலே தானிருக்கிறது போர்ட் மார்ஸ்பி என்ற முக்கியமான துறைமுகம். இத் துறைமுகத்தை எப்படியாவது பிடித்து விட வேண்டுமென ஜப்பானியர்கள் சென்ற சில மாதங்களாக முக்கு முக்கு என்று முக்குகிருர்கள். ஒன்றும் பலிக்க வில்லை. இந்த மார்ஸ்பி துறைமுகத்தை ஜப்பானியர் பிடித்துக் கொண்டால் ஆஸ்திரேலியாவைத் தாக்க அவர்களுக்கு அதிய சௌகரியம் கிடைத்தது போலாகும். இதை உணர்ந்தே ஆஸ்திரேலிய வீரர்கள் இத் துறைமுகத்தை வெகு ஜாக்கிரதையாகவே காத்து வருகிருர்கள்.

சமீபத்தில் ஜப்பானியர் இந்தத் துறைமுகத்திற்கு முப்பது மைல் வரை சமீபித்து விட்டார்கள்.

ஆனுல் ஒரு வேடிக்கை பாருங்கள். சென்ற வாரம் ஆஸ்திரேலிய வீரர்கள் வந்தது வருகிற தென இந்த ஜப்பானியரை எதிர்க்க வேண்டி முன்னேறித் தாக்கினர். ஆனுல் அத்தனை பேர்களும் ஏமாற்ற மடைந்தனர். மளமள வென முன்னுலே போய்க் கொண்டே இருக்கிருர்கள். ஒரு துப்பாக்கிக் குண்டு கூட செலவாக வில்லை. கண் எட்டிய வரை ஜப்பானியரே தென்பட வில்லை. எதிர்ப்பே கொஞ்சம் கூட இல்லை. அதைக் கண்டு ஆஹா! இது என்ன புதுமை! என்று ஆஸ்திரேலிய சோல்ஜர்கள் பாடி யிருக்கக் கூடும்.

இம்மாதிரி தாங்கள் இருந்த இடத்தை துப்புரவாகக் காலி செய்து கொடுத்து விட்டு, அப்படி எங்கே போய் விட்டார்கள் ஜப்பானியர்கள்? இது ஒரு முக்கியமான கேள்வி தான்!

சாலமன் தீவுகள் என்பது நியூ கினியாவிற்கு அடுத்தாப் போல் உள்ளவை தான். அந்த சாலமன் தீவுகளில் சில இடங்களில்தான் அமெரிக்கர்கள் சென்று இறங்கி யிருக்கிருர்களே! அவர்களை விரட்டும் நோக்கத்துடனே சாலமன் தீவுகளை ஜப்பானியர் அடிக்கடி தாக்கி வருகின்றனர். அவர்களுடைய கப்பல்களை அமெரிக்க நேசதேச விமானங்கள் 'படார்! படார்' என்று வெடித்து மூழ்கச் செய்து வருகின்றன. இப்படியாக சாலமன் தீவுகளிலும், நியூ கினியா தீவிலும் ஏககாலத்தில் சண்டை போடுவதில் பல சிரமங்களை ஜப்பானியர் அநுபவித் திருக்கக் கூடும். ஆகவே, நியூ கினியாவில் தங்கள் வேலையைக் குறைத்துக் கொண்டு அங்கிருக்கும் படைகளை வேறு இடங்களுக்கு அழைத்துப் போயிருக்கக் கூடும். அவர்கள் எங்கு போனுல் தான் என்ன? அகலக் கால் வைத்து விட்டார்கள் ஜப்பானியர். ஆயிரக் கணக்கான மைல்களுக் கப்பால் பல்லாயிரக் கணக்கில் ஜப்பானிய வீரர்கள் இருக்கிருர்கள். அவர்களைப் பட்டினி போட முடியுமா? புதிது புதிதாக அவர்களுக்கு உதவி அனுப்பாம லிருக்க முடியுமா? வெகு காலம் சும்மா வைத்துக் கொண்டிருக்க முடியுமா? சீனுவில் சீனர்கள் தங்களுடைய அபாரமான கஷ்டங்களை எல்லாம் லக்ஷியம் செய்யாது குறைந்த பக்ஷமுள்ள தொழிற்சாலைகளி லிருந்து உற்பத்தியாகும் சாதனங்களைக் கொண்டு தீர மனதுடன் பல் மடங்கு பலசாலிகளான ஜப்பானியரைச் சலியாது எதிர்த்து நிற்கிருர்கள். இப்படிப் பட்ட வஜ்ஜிர மனசுள்ள சீனுவும் இரும்பு மனசுள்ள ருஷ்யாவும் மட்டும் இல்லா திருந்தால் இந்த யுத்தம் எப்பவோ கோவிந்தா ஆகி யிருக்கும்!

யுத்தத்தைத் தொடங்கி ஐந்தாறு மாதங்களாகு முன் சண்டப் பிரசண்டமாக அடித்து வாங்கிய ஜப்பானியர், இப்பொழுது தாமாகவே பல இடங்களைக் காலி செய்து வருவது புதுமையிலும் புதுமையாகவே இருக்கிறது.

ஒரு வேளை அவர்கள் சீர் குலைந்து போன தங்கள் விமானக் கப்பல் பலங்களைச் சரிப்படுத்திக் கொண்டிருக்கிருர்களோ என்னமோ? விரோதியின் சக்தியை என்றும் குறைத்துப் பேசாதே என்ருெரு பழமொழி உண்டு. அதன்படி ஜப்பானின் சக்தியை குறைவாக எண்ணி விடுவதற்கும் இல்லை. ஜெனரல் வேவலே ஜப்பானியரின் திறமையைக் குறைத்துப் பேச வில்லை. எண்ணிக்கையில் ஜப்பானிய விமானங்கள் குறைவாக இருக்கலாமே ஒழிய, அவ்வாறு குறைந்திருக்கும் விமானங்களைக் கையாளுவோரின் சமர்த்து ஒன்றும் குறைந்ததாக இல்லை என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிருர் வேவல். குள்ளன் பலே குள்ளன் தான்! அதி முக்கியமான பர்மாவை அவன் பிடித்துக் கொண்டான். ஆகவே இந்தக் குள்ளனை முதலில் பர்மாவி லிருந்து துரத்த வேண்டும். இது விஷயத்தில் அதிகாரிகள் கவனஞ் செலுத்தி வரத் தான் செய்கிருர்கள். நேசதேச விமானங்கள் பர்மா மீது அடிக்கடி பறந்து சென்று ஜப்பானிய ராணுவ நிலையங்களைத் தகர்த்து வருகின்றன. ஜப்பானே இங்கும் அதிகம் வாலாட்டாது, 'கம்' என்றிருக்கிறது. இதைப் பார்த்தாலும் இது என்ன புதுமை என்றே சொல்லத் தோன்றுகிறது.

ஒரு மைனர் இருக்கிருர். பாங்கியில் அவருக்குக் கொஞ்சம் பண மிருக்கிறது, வயல்களும் இருக்கின்றன. அவர் குடி, கூத்தியார் விஷயங்களுக்காக ஆரம்பத்தில் தாம் தூம் என்று செலவழிக்கிருர் என்று வைத்துக் கொள்ளுங்கள், பாங்கியிலும் பணம் தீர்ந்துபோய், வயல் அறுவடை ஆவதற்கும் காலம் வர வில்லை என்ருல், மைனர் என்ன செய்வார்? ஆடிப் பாடி ஓய்ந்து வீட்டிலே அடைந்து கிடப்பாரல்லவா? அதே போல் தான் தப்பு வழியில் இறங்கி யிருக்கும் ஜப்பானும் ஆரம்பத்தில் அட்டகாசம் செய்து விட்டு தனது நிலைமையைச் சீர்திருத்திக் கொள்ள அடக்க ஒடுக்கமாய் நல்ல பிள்ளை போலிருக்கிறதோ என்னமோ? விடிந்தால் தெரிகிறது வெளிச்சம்.

## பெல்ஜியத்தில் ஜெர்மானியர் திண்டாட்டம்.

பெல்ஜியம் இப்போது ஜெர்மானியர் கையில் இருக்கின்றது. என்றாலும் உண்மைத் தேசபக்தர்களான பெல்ஜியர்கள், தம் அரசாங்கத்தை லண்டனிலிருந்து நடத்தி வருகிறார்கள். இவர்களுக்கு பெல்ஜியத்திலிருந்து சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இவற்றிலிருந்து, அங்கே நடைபெறும் ஜெர்மன் ஆட்சிக்கு விரோதமாகப் பெருங் கிளர்ச்சிகளும் கலவரங்களும் நடைபெறுவதாகத் தெரிகிறது.

நாள் தோறும் எங்கேனும் ஒரு இடத்தில் ஆர்பாட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இங்கே சில இரகசிய ஸ்தாபனங்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. இவை திருட்டுத்தனமாக சில பத்திரிகைகளும் நடத்திக் கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் மீது பெல்ஜியர்களுக்கு ஏற்கெனவே கடுங்கோபமுண்டு. இந்தப் பத்திரிகைகள் இந்தக் கோபத் தீயை வளர்க்கின்றன.

ப்ரஸெல்ஸ் நகருக்கு வடமேற்கே ஒன்பதாவது மைலில் ஆல்ச்சி என்ற ஒரு ஊர் இருக்கின்றது. இதை யடுத்து ஒரு தொழிற்சாலை. இங்கே ஆஸ்பால்ட் செய்து கொண்டிருந்தனர். சில நாட்களுக்கு முன்பு இத் தொழிற்சாலையில் தீப்பற்றிக் கொண்டது. இதை அணைக்க பல மணி நேரம் ஜெர்மன் படைகள் தீயோடு போராட வேண்டியிருந்தது. அப்படியிருந்தும் அத்தொழிற்சாலை அடியோடு நாசமானது.

ஜெர்மன் ரகசியப் போலீஸ் ஏஜெண்டுகள் சுமார் 2,000 பேர்கள் ப்ரஸ்ஸெல்ஸ் பகுதியில் மட்டும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை விடக் கொடுமையானவர்கள் 'பீல்ட் ஜென்டர்மரி'. இவர்களையும் ஏராளமாக ஜெர்மானியர்கள் அங்கே வைத்திருக்கிறார்கள். இவர்களில் மாஜி படை வீரர்கள், சென்ற மகா யுத்தத்தில் போராடிய பழைய போர்வழிகள், ஆகியோர் சேர்ந்திருக்கின்றனர். நேச நாடுகள் ஸான்ஸ் நகரைக் கைப்பற்றிய காலத்தில் அரசியல் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களும் இதில் சேர்ந்திருக்கிறார்கள்.

பெல்ஜியத்திலுள்ள நாஜிஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களை இடைவிடாது தாக்கிக் கொண்டேயிருக்கிறார்கள் பெல்ஜியர்கள். பெல்ஜியன் தேசீய வீரர் ஒருவர் சமீபத்தில் ஜெர்மன் காவல் படையைச் சேர்ந்த இருவரைக் கொன்று விட்டார். நாஜி முறைப்படி அவர்களுடைய சவங்களை அடக்கம் செய்தனர். அந்தச் சவச் சடங்கின்போது அங்கே நின்று கொண்டிருந்த ஒரு கிழவர் சவத்திற்கு வணக்கம் செய்யவில்லை. உடனே காவலாளிகள் அவரைக் கைது செய்தனர். இந்தச் சம்பவத்தை, அதற்கடுத்திருந்த ஒரு வீட்டின் ஜன்னலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண் 'மிருகங்கள்!' என்று ஜெர்மன் காவற்படையினரைக் கூவினார். உடனே அக்காவற் படையினர் அவ்வீட்டிற்குள் புகுந்தார்கள். சில நிமிஷங்களுக்குள் அந்த வீட்டையே நாசம் செய்து விட்டார்கள்.

ப்ரஸெல்ஸில் ஜெர்மனியர்களுக்காக ஒரு கம்பெனி நடந்து கொண்டிருந்தது. அந்தக் கட்டிடத்திலிருந்த ஒரு ரேடியேட்டர் மேலே யாரோ ஒரு வெடிகுண்டை வைத்திருந்தார்கள். அது வெடித்து அந்தக் கட்டிடமே தரைமட்டமானது. அதிலிருந்த 8 பேர்கள் இறந்து போனார்கள். அதே சமயத்தில் டெலிபோன் கம்பங்களில் சோவியத் கொடிகளை ஏற்றியிருந்தனர். அவற்றை, தீயணைக்கும் படையினர் அப்புறப்படுத்தினர். என்றாலும், உடனே மீண்டும் அங்கே சோவியத் கொடிகள் பறந்தன. கம்யூனிஸ்ட்களில் 100 பேர்களை நாடு கடத்தி விடுவது என்று ஜெர்மானியர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இவர்கள் ப்ரஸெல்ஸ், ஜலீஜ். நான்ஸ் ஆகிய ஊர்களிலுள்ள போக்குவரவுச் சாதனங்களையும், பேசுந் தந்திகளையும், தொழிற்சாலைகளையும் அரசாங்கத்திற்கு விரோதமாக உபயோகித்தார்கள் என்பது தான் அவர்கள் மேல் சுமத்தப்பட்ட குற்றம். சான்ஸுக்கு அருகில் ப்ரே, ஹவேர் என்னும் ஊர்கள் இருக்கின்றன. அங்கே கடும் பஞ்சம். எனவே, இவ்வூர்களின் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளிலும், பலத்த ஆர்பாட்டங்கள் நடைபெற்றன.




ஐரோப்பாவில் ஜெர்மானியர் கைப்பற்றியுள்ள நாடுகளிலும் சரி, சீனாவில் ஜப்பான் கைப்பற்றியுள்ள நாடுகளிலும் சரி, செழிப்போங்கி செங்கதிர் பூத்து நிற்கும் விளை நிலங்களையெல்லாம் பகைவர்கள் அறுவடை செய்து அனுபவித்தாண்டு வர, அந்தத் தேச மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக பட்டினி கிடந்து மடிகிறார்கள். என்னே கோரக் காக்ஷி! விவசாயத்தையே ஜீவ மூலாதாரமாகக் கொண்டுள்ள நம் தாய் நாட்டிற்கும் இது போன்ற கொடிய கதி நேர, நாம் கண்டு சகித்திருப்பதா? நீர் வளம் நில வளம் மிகுந்து, சகல நற் சீர்களுடனும் விளங்கும் இத் திரு நாடு, எதிரிகள் கண்களை மிகக் கவர்ந்து நிற்பதில் அதிசயமொன்று மில்லை. பசப்பு வார்த்தைகளால் நம்மை மதி மயக்கி அவர்களுக்குப் பணியச் செய்யப் பார்க்கிறார்கள் ஜப்பானியர்கள். உஷார்! ஏமாந்து மட்டும் போகாதீர்கள்! எல்லோரும் கையும் மெய்யு மொத்து, நம் பூரண பலத்துடன் இக்குள்ளர்களுக்குச் சரியான பாட மொன்று கற்பிப்போம். இவர்களை இங்கு நுழைய விட்டோமானால், நம் பெண்டிர் பிள்ளைகளின் கதி, முற்றும் பட்டினி முழுப் பட்டினி யல்லோ ஆகி விடும்!

ஜப்பானியருக் கெதிராக
தேசீயப் போர்
முனையை
அமையுங்கள்.



PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD. MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம்௵ அக்டோபர்௴ 16௳, வெள்ளிக்கிழமை [இதழ் 41

## குறி தவறவே தவருது!



*

லிபியாவிலுள்ள பிரிட்டிஷ் படைகளுக்குப் போகும் தளவாடங்கள் மிகுந்த விமான பாது காப்புக்களோடு போகின்றன. பிரிட்டிஷ் "வால்ரஸ்" ஆம்பிபியன் விமானத்தின் இரு புரங்களிலும் பீரங்கிகள் இருக்கின்றன. ஒரு பீரங்கியைக் கொண்டு எதிரி கப்பலை இவர் சுடுகிறார்.

*

## காந்தியடிகளும் அச்சு நாட்டுப் பிரசாரமும்

காந்தியடிகளின் 74-வது பிறந்த நாள் விழா அக்டோபர் மாதம் 2-ம் தேதி நடைபெற்றது. இதை அச்சு நாட்டு ரேடியோக்களும் கொண்டாடின. அன்று இந்தியாவிற்கு பல விசேஷச் செய்திகளை அந்த ரேடியோக்கள் அனுப்பின. உலகத்தையே வென்று அடிமைப் படுத்த வேண்டுமென்பது தான் அச்சு அரசாங்கங்களின் திட்டம். இந்தத் திட்டத்திற்கு உதவத் தக்க செயல்கள் செய்கிறவர்களின் நோக்கம் எதுவாயிருந்தாலும் அவைகளுக்குக் கவலையில்லை. அவர்களை ஆதரிக்க வேண்டியது தம் கடமை என்று அவை நினைக்கின்றன. இந்த உணர்ச்சி இன்னும் இருந்து வருவதாக, பெர்லின், டோக்கியோ, ரோமாபுரி ரேடியோக்களின் போக்கிலிருந்து மீண்டும் தெளிவாகிறது. காங்கிரஸ் தலைவர்களைப் பற்றி அவைகள் கொண்டிருந்த எண்ணமெல்லாம் தலைகீழாக மாறி விட்டன. இன்று அவர்கள் யாரைப் போற்றுகிறார்களோ, அவர்களை நாளை தூற்றுவார்கள். தமக்குச் சாதகமான முறையில் அவர்களுடைய நடவடிக்கை இருக்கும் வரை, அச்சு அரசாங்கங்கள் அவர்களைப் புகழும். எதிரி ரேடியோக்கள் சில மாதங்களுக்கு முன்பு கூறியதற்கும் காந்தி-விழா வாரத்தின் போது கூறியதற்கும் எவ்வளவு ஒற்றுமை வேற்றுமை உண்டென்று ஒப்பிட்டுப் பார்ப்போம். நாளிது அக்டோபர்௴ 1௳ யன்று 'அஸாத் ஹிந்த்' என்னும் ஜெர்மன் ரேடியோ தமிழில் கூறியதாவது:—

"அரசாங்கத்தாரோடு எந்த வித சமரசத்திற்கும் காந்தியடிகள் வரவில்லை என்பது பற்றி இந்தியர்களாகிய நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பிரிட்டிஷாரோடு ஒரு சமரச முடிவு செய்து கொள்ளுவாரானால், சுயேச்சை பெற வேண்டும் என்னும் அவருடைய முயற்சியே வீணதாகும். இந்த முயற்சியிலேயே தன் வாழ்க்கையில் 50 வருஷங்களை அவர் கழித்திருக்கிறார்",

ஆனால் சென்ற பிப்பிரவரி௴ 4௳ ஜெர்மன் ரேடியோ கூறிய தென்ன?

"காந்தியடிகளின் அஹிம்சைக் கொள்கை அடியோடு தோற்றுப் போனது. அதனால், தகுந்த பலன் ஒன்றும் ஏற்படவில்லை. இந்திய மக்களில் பெரும் பான்மையோர் பெரிதும் ஏமாற்றமடைந்தார்கள். **இதற்குக் காரணம் காங்கிரஸின் நிலையற்ற கொள்கை தான்.** ஆகவே, விரைவில் சுயாட்சி பெற வேண்டுமென்னும் நோக்கத்தோடு பல கட்சிகளை ஏற்படுத்துகிறார்கள்.

சென்ற எப்ரல் மாதம் 10௳ பெர்லின் ரேடியோ ஹிந்துஸ்தானியில் கூறியதாவது:—

"காந்தியடிகளும், மிஸ்டர் நேருவும் மோசமான பிரிட்டிஷ் ஏஜெண்டுகள்"

அதற்கு முன் தினம் அது கூறியதாவது:—

"இந்தியத் தலைவர்கள் தவறான வழியில் போய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பிரிட்டிஷாரின் கையாட்கள்."

இன்று அச்சு நாட்டு ரேடியோக்கள் காந்தியடிகளுக்குப் புகழ் மாலை பாடுகின்றன.

'உலக சரித்திரத்திலேயே ஒரு பெரிய மகானாக விளங்குகிறவர் காந்தியடிகள்' என்று நாளது அக்டோபர்௴ 2௳ டோக்கியோ ரேடியோ கூறியது. மேலும் அது கூறியதாவது:—அவர் மகா அடக்கமுடையவர். தளராத உணர்ச்சியுள்ளவர். மகா தியாகி. வேறு யாருக்கும் அவர் ஒரு நாளும் கையாளாக மாட்டார். இந்தியாவின் நன்மையில் மிகுந்த அக்கரையும் தளராத தியாக புத்தியும்

**யுத்தக் கைதிகளுக்கு விலங்கு.**

புதிய முறையில் கொடுமைப் படுத்த இப்போது ஹிட்லர் ஆரம்பித் திருக்கிறார். இதற்குக் காரணம் அவருடைய பயந் தான். நார்வேயி லுள்ள வட முனையி லிருந்து தெற்கே பேயோனி லுள்ள ஸ்பெய்ன் எல்லை வரை 2,000 மைல்கள். இந்தப் பகுதியை ஜெர்மானியர்கள் தம் மிருக பலத்தி ைலும் கொடிய முறைகளாலும் அடிமைப் படுத்தி வைத்திருக்கிறார்கள். அதாவது நார்வே, டென்மார்க், பெல்ஜியம், பிரான்சு ஆகிய நாடுகள் ஹிட்லர் கைக்குள் இருக்கின்றன. இவை, புரட்சி செய்ய வேண்டு மென்று தவித்துக் கொண்டிருக்கின்றன. டென்மார்க் தவிர மற்ற நாடுகளி லெல்லாம் ஜெர்மன் கொலைஞர்கள் மிகவும் பொறுப்போடு தம் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு குற்றமும் செய்யாதவர்களையும் ஊரிலுள்ள முக்கியஸ்தர்களையும் நாள் தோறும் கைது செய்து ஊருக்கு வெளியே கொண்டு போய் சுட்டுக் கொன்று கொண்டிருக்கிறார்கள். ஜனங்களுக்குள் பீதியை உண்டாக்க வேண்டு மென்பது தான் அவர்கள் நோக்கம். ஆகவே, அந்நாட்டு மக்களுக்கு ஜெர்மானியர்கள் மீது வெறுப்பும் கோபமும் பெருகிக் கொண்டிருக்கிறது. டென்மார்க்குக்கும் இதே நிலைமை ஏற்படத் தான் போகிறது. இந்த நீண்ட கடற் கரையை பிரிட்டிஷ் திடீர் படைகள் பல விடங்களில் தாக்கின. இது ஆரம்ப நிலை. இனித் தான் உண்மையான தாக்குதல்கள் இருக்கின்றன. இதனால் தான் ஹிட்லரும் அவருடைய கூட்டாளிகளும் பெரிதும் கலங்கி போயிருக்கிறார்கள். சந்தர்ப்பங் கிடைத்தால் தம்மைக் கொன்று விடக் கூடியவர்களிடையே தான், ஜெர்மன் படைவீரர்கள் இந்நாடுகளில் வசிக்கிறார்கள். இதுமட்டு மல்ல. ஜெர்மானியர்கள் வசமுள்ள துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் பிடுங்கிக் கொண்டு அடிக்கடி பலர் இங்கிலாந்துக்கு வந்து சேருகிறார்கள். எனவே பழி வாங்கும் பொருட்டு யுத்தக் கைதிகளுக்கு-விலங்குகளை மாட்டி வைக்கும்படி செய்திருக்கிறார் ஹிட்லர். இப்போது அமுலி லிருக்கும் சர்வ தேச விதிப்படி இது தவறு.

**ஒரே நாளில் 54,000 பேர் கொலை.**

ஐரோப்பாவின் மேல் பகுதியில் நாஜிகள் மிருகத் தனமாக நடந்து கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் ஜெர்மானியர் வயப் பட்ட ரஷ்யாவில் இவர்கள் செய்திருக்கிற கொடுமைகளோடு இவற்றை ஒப்பிடுவதற் கில்லை. ரஷ்யாவில் அத்தனைக் கொடுமை செய்து விட்டனர். படை வீரர்களையும் பெண்களையும் குழந்தைகளையும் கூடக் கொன்றார்கள். போலந்து யூகோஸ்லேவியா முதலிய நாடுகளைக் கைப்பற்றிய போது, ஜெர்மன் படைகளும் விசேஷப் போலீஸ் படைகளும் பதினாயிரக் கணக்கான வர்களைக் கொலை செய்தார்கள். ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் அநேகரைக் கொலை செய்யும்படி ஹிட்லர் உத்திர விட்டார். அது போல் 200 மடங்குப் பேர்களைக் கொல்லும்படி கிழக்கு ஐரோப்பாவிலும் மத்திய ஐரோப்பாவிலும் உத்திர விட்டிருக்கிறார். கீவ் நகரத்திற்குள் நுழைந்த அன்றே 54,000 பேர்களை ஹிட்லர் கொன்றார். இப்படிப் பட்ட கொடியவனுக்கு எந்த வித தயா தாட்சண்யமும் காட்டப் பட மாட்டாதென்று உறுதி சொல்லுகிறேன்.

**மற்றொரு காரணம்.**

பிரிட்டிஷ் யுத்தக் கைதிகளை ஜெர்மானியர்கள் கொடுமைப் படுத்துவதற்கு மற்றொரு காரண மிருக்கிறது. ரஷ்யாவை இரண்டாம் முறை ஹிட்லர் தாக்கியது இது வரை பயன் படவில்லை. ஸ்டாலின் கிராட் நகரத்தை மகா வீராவேசத்தோடு ரஷ்யர்கள் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். மகா சிறந்த ரஷ்யப் படைகள் வலுத்திருக்கின்றன. சிதைய வில்லை. தோற்கவு மில்லை. ஆனால் லெனின்கிராடி லிருந்து காகஸஸ் வரை வியக்கத் தக்க பலத்தோடு எதிர்த்துத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்களுக்கு ஏராளமான நஷ்டம். அடுத்த குளிர் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த உண்மைகளை மறைக்க முடியாது. இவை எல்லாம் ஜெர்மானியர்கள் மனதில் ஒரு பெரும் திகிலை உண்டாக்கி விட்டன. போதாக் குறைக்கு அடிக்கடி பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மனிக்குப் போய், சேத முண்டாக்கி வருகின்றன. இவற்றை பற்றி உலகத்தார் விவாதிக்கக் கூடாது என்பது ஹிட்லரின் ஆசை. ஆகவே, அவர்கள் கவனத்தை மாற்ற வேண்டித் தான் இக் கொடுமைகளைச் செய்கிறார். அப்போது இந்தக் கொடுமைகளைக் குறித்தே உலக மக்கள் கவனம் செலுத்தி விவாதிப்பார்களே யொழிய, முன்னே குறிப்பிட்டிருக்கும் குறைபாடுகளில் கவனம் செலுத்த மாட்டார்கள் என்பது அவர் எண்ணம். இந்த நிலையி லுள்ள ஜெர்மன் மக்கள் தம் தலைவரைத் துயரத்தோடு பார்க்கிறார்களே யொழிய, வாயைத் திறக்கத் துணிவ தில்லை. என்றாலும் 'ரஷ்யாவை என் போய் தாக்கினீர்கள்?' என்னும் கேள்வி பிறக்கிறது. இது பற்றி கோயரிங் தெளிவு படுத்தி விட்டார். அவர் கூறியதாவது :—

> யுத்தத்தை நடத்துகிறவர் ஹிட்லர் தான். ரஷ்யாவைத் தாக்குவதற்குப் பொறுப்பாளியும் அவர் தான். அவர் கட்டளைப் படி நடக்கிறவர்கள் தான் படைத் தலைவர்களாகிய நாங்கள்."

ரஷ்ய யுத்தக் கைதிகளைச் சுட்டுக் கொல்வதிலும், போலந்து, செக்கோஸ்லோவேகியா, யூகோஸ்லேவியா ஆகிய நாட்டு மக்களைக் கொடுமை படுத்துவதிலும் கைதேர்ந்த ஹிட்லருக்கு (ஜெர்மன் போலீஸ் தலைவர்) புதிய பதவியும் பதக்கங்களும் கௌரவங்களும் கிடைத் திருக்கின்றன. இதற்குக் காரணம் உள்நாட்டில் யாரும் தலை தூக்காதபடித் தடுக்கத் தான்.

ஜெர்மானியர்கள் யூ படகுகளைக் கொண்டு போராடுகிறார்கள். இதைச் சமாளிப்பது சற்றே கஷ்டமாக இருக்கலாம். ஆனால் எதிரியைத் தாக்கி, நம்மையும் பாதுகாத்துக் கொள்ளும் போது இந்தக் கஷ்டம் நீங்கி விடும். ஏனென்றால், அவ்வளவு பெருத்த ஏற்பாடுகளை நாம் செய்து கொண்டிருக்கிறோம். இந்த வேலையில் பிரிட்டன், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகள் ஈடு பட்டிருக்கின்றன. (கரகோஷம்.) சென்ற ஜனவரி மாதத்தி லிருந்து இன்று வரை, சென்ற செப்டம்பர் மாதந் தான் மிகவும் சிறந்தது என்று சொல்ல மாட்டேன். என்றாலும், கூடியவரை சிறந்த மாதந் தான்.

> இந்த மாதத்தில் தான், நஷ்டமான கப்பல்களை விட அதிகக் கப்பல்கள் கட்டப் பட்டிருக்கின்றன. (கரகோஷம்) ஜெர்மனியில் என்று மில்லாத அளவிற்கு அதிகமாக வெடிகுண்டுகள் வீசப் பட்டன. பிரிட்டிஷ் தீவுகளில் ஏராளமான அமெரிக்கப் படைகள் பந்தோபஸ்தாக வந்து சேர்ந்தன. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளின் விமான பலத்தை விட, நேச நாடுகளின் விமான பலம் அதிகப் பட்டிருக்கிறது. (கரகோஷம்) பசிபிக் சமுத்திரத்தில் நம் நேசர்களான அமெரிக்கப் படைகளோடு ஆஸ்திரேலியப் படைகளும் நியூ கினீயாவில் வெகுவாக முன்னேறி யிருக்கிறார்கள். இவை முழுதும் உண்மை. இந்த நிலைமைகளை யெல்லாம் சீர் தூக்கிப் பார்த்தால், மன உறுதியோடும் உணர்ச்சி யோடும் நடந்து கொள்ள வேண்டிய பருவம் இது தான் என்று தெளிவாகத் தெரியும்.

அந்தக் காலத்தில் நாம் தனித் திருந்தோம். நம் எதிரிகள் பலம் உள்ளவர்கள் என்றாலும், நாம் அஞ்ச வில்லை. கோபமும் ஆத்திரமும் நமக்குப் பொங்கி வந்தன. அந்த நிலைமையில் நாம் இன்று இல்லை. பல அரசாங்கங்கள் நமக்குத் துணை நிற்கின்றன. இந்த அரசாங்கங்களுக்கும் நமக்கும் பிரிக்க முடியாதபடி ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. தத்தம் நாடுகளைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டும் தான் இந்த ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறதே யொழிய, கௌரவத்திற்காக வல்ல. கடும் ஆபத்துக்கள் இன்னும் நமக்குண்டு. நாம் களைப் படையக் கூடாது. தயா தாட்சண்யம் பாராட்டக் கூடாது. அற்ப விஷயங்களில் மனத் தாங்கல் அடையக் கூடாது. நம்மால் இயன்ற வரை முயற்சிக்க வேண்டும். அறிவையும் தைரியத்தையும் கைக் கொள்ள வேண்டும். நாம் ஒன்றுபட்டு முன்னேற வேண்டும். கொஞ்சங் கூட விட்டுக் கொடுக்கவே கூடாது. கடவுள் அருளினால் நம் எண்ணங்கள் கைகூடும். இதற்கு வழி திறக்கிறது. இது அகன்றதோர் வழி.



# யுத்த சேத ஜாபிதா.

## நெ. 135.

### காணாமற்போய் யுத்தக் கைதிகளானதாகக் கருதப் படுகிறவர்கள்.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **இந்திய ஆஸ்பத்திரிப் படை.** | | |
| 86069 | ஆம்பியுலென்ஸ் சிப்பாய். | கல்யாணி. |
| 86154 | ஷை | எஸ். கிருஷ்ண ராவ். |
| 186687 | டபுள்யு. மான். | கிருஷ்ணன். |
| 85844 | ஆம்பியுலென்ஸ் சிப்பாய். | கிருஷ்ண யாதவ். |
| 85099 | ஷை | கிருஷ்ணமூர்த்தி. |
| 186752 | பெருக்குவோன். | முனுசாமி. |
| 18584 | எஸ். ஹவில்தார். | கே. என். மூர்த்தி. |
| 40043 | என். சிப்பாய். | கே. கே. நம்பியார். |
| 85499 | ஆம்பியுலென்ஸ் சிப்பாய். | பெரியசாமி. |
| 186009 | சமையற்காரர். | ராம ரெட்டி. |
| 85498 | ஆம்பியுலென்ஸ் சிப்பாய். | ராமசாமி. |
| 210755 | ஏ. நாயிக். | சதானந்தசாமி. |
| 8641 | சி. ஹவில்தார். | வி. செல்வநாயகம். |
| **ஐ.ஏ.ஓ.சி.** | | |
| ஓ. 73213 | சிப்பாய். டிரைவர். | சி. கே. அச்சுதன். |
| ஓ. 72681 | ஷை | அனடி கேசவன் நாயர். |
| **ஓ.என்.சி.** | | |
| 1414 | சமையல்காரர். | தர்மராஜ். |
| ஓ. 32320 | பிட்டர். | எம். கேசவ ராமச்சந்திரம் பிள்ளை. |
| ஓ. 33362 | எஸ். எலெக்ட்ரீஷியன். | மணிந்திரநாத சக்கிரவர்த்தி. |
| ஓ. 104281 | தச்சர். | வி. முருகேச நாயக்கர். |
| ஓ. 102735 | எலெக்ட்ரீஷியன். | நித்யானந்தா. |
| ஓ. 105250 | பி.எஸ்.எம். பி.ஏ., லான்ஸ் நாயிக். | பரசுராம். |
| ஓ. 102845 | எஸ். பிட்டர். | கே. பர்வகுட்டி. |
| ஓ. 105254 | சிப்பாய் பி.எஸ்.எம். | பாலகொல்லு புல்லையா. |

## நெ 136.

### காயப் பட்டவர்கள்.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **ஐ.ஏ.ஓ.சி.** | | |
| ஓ. 72009 | சிப்பாய் டிரைவர். | பி. ஷண்முகத் தேவர். |
| **இந்திய ஆஸ்பத்திரிப் படை.** | | |
| ஆர். 85520 | ஏ. சிப்பாய். | எஸ். முகமத். |
| **ஜி.எஸ்.** | | |
| 8068 | டபுள்யு. வேலைக்காரர். | முகமத் இஸ்மாயில். |

## நெ. 137.

### வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்கள்.

#### இறந்து போனவர்.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **இந்தியன் இஞ்சினீர்.** | | |
| 49202 | சுபேதார். | குப்பன் ஆர். |

### மற்றவர்கள்.

#### இறந்து போனவர்கள்.

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| **சென்னை சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்.** | | |
| 1494 | பி. டி. சமையற்காரர். | செல்வமணி. |
| 65165 | சாப்பர். | சுந்தரம். |
| **இந்தியன் இஞ்சினீர்.** | | |
| 43437 | லான்ஸ் நாயிக். | பி. வி. கோபால குருப். |
| 104145 | பி. என். ஆர். | ராக்கு மாலி. |
| 63940 | சாப்பர். | சுப்பிரமணிய பிள்ளை. |
| **இந்திய சிக்னல் படை.** | | |
| 55306 | சிக்னல்மான். | பி. எம். சாக்கோ. |
| **ஐ.ஏ.ஓ.சி.** | | |
| எம்.டி. 971511 | சிப்பாய் டிரைவர். | சாமிமுத்து. |
| **ஐ.ஜி.எஸ்.சி.** | | |
| 1764 | டபுள்யு./வெயிட்டர் கிரேட் 1. | எஸ்.எல். துரைசாமி. |
| **ஜி.எஸ்.எப்.** | | |
| 117427 | தொழிலாளி. | ரங்கசாமி. |


**யுத்த சஞ்சிகை**

**விசேஷ மலர்**

**அடுத்தவாரம் வெளிவரும்**

படைகள் சம்பந்தமான பல
அரிய கட்டுரைக ளுடனும்
சுமார் 20 படங்க ளுடனும்
24 பக்கங்க ளோடு வெளிவரும்

உடையவர் ஓயாது காந்தியடிகள் மீது பழி கூறிக் கொண்டிருந்த அச்சு ரேடியோக்கள், இப்போது புகழ் மாலை சூட்டுகின்றன. இப்படிப் பட்ட அச்சு நாடுகளின் பிரசாரத்தின் உண்மையான நோக்கம் என்ன? சட்ட மறுப்பு இயக்கம் அச்சு அரசாங்கங்களுக்குச் சாதகமானவை யாகையால், அவர்கள் அதற்குச் சாதகமாகப் புகழுகிறார்கள்.

இனி, ஐக்கிய அரசாங்கங்கள் அவரைப் பற்றி எப்படிப் பட்ட கருத்தைக் கொண்டிருந் திருக்கின்றன வென்று கவனிப்போம். காந்தியாரின் அரசியல் கொள்கை எப்படி யிருந்தாலும், அவர் மகா ஒழுக்க சீலர் என்று அச்சு நாடுகளிலுள்ள தலைவர்கள் எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அவருடைய 70-வது பிறந்த நாள் விழா வன்று ஜெனரல் ஸ்மட்ஸ், ஹலிபாக்ஸ் பிரபு போன்றவர்களுங் கூட, அவருக்கு வாழ்த்துக் கூறி யிருக்கிறார்கள். இப்போது அரசியல் வேற்றுமைகள் தான் தலை தூக்கி நிற்கின்றன. இது பற்றி பொதுவாக ஏமாற்றமும், வருத்தமும் கோபமுந் தான் பொது மக்கள் அடைகிறார்கள். மகா ஒழுக்க சீலரான இவர், முறையில்லாத முறையைக் கைக் கொள்ளுகிறார். தன் நாட்டு மக்களின் முயற்சியையே இம் முறைகள் நாசப் படுத்தும். எதிரிகளுக்கு இதனால் ஆனந்த முண்டாகும்.

---

# பார்லிமெண்ட் சபையில் இந்தியா பற்றி விவாதம்.

## சட்ட மறுப் பியக்கக் கண்டனம்.

சென்ற செவ்வாய்க்கிழமை இந்தியா—பர்மா மசோதா மூன்றாவது முறையாகக் காமன்ஸ் சபையில் நிறைவேறியது இனி பிரபுக்கள் சபைக்குப் போகும். இதை இரண்டாம் முறையாக நிறைவேற்றிய போது தான் இந்தியாவைப் பற்றிய விவாதம் நடை பெற்றது. இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரியும், எதிர்ப்புக் கட்சித் தலைவர் மிஸ்டர் ஆர்தர் க்ரீன்வுட்டும், டிபுடி முதல் மந்திரி மிஸ்டர் அட்லியும் சென்ற வாரம் செய்த பிரசங்கங்களை வாசகர்கள் படித்திருப்பார்கள். இவர்கள் பெரும்பாலும் முன்பு கூறப்பட்ட விஷயங்களைக் குறித்துத் தான் பேசினார்கள். என்றாலும் அவர்கள் பிரசங்கங்களில் பரந்த கருத்துகளும், புதிய விஷயங்களும் இருக்கின்றன. இவற்றைக் குறித்து வற்புறுத்துவதும் நியாயம் தான். முதலாவதாக சபையினர் அனைவரும் ஒருமுகமாக சட்ட மறுப்பு இயக்கத்தைக் கண்டித்தார்கள். இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. சட்ட மறுப்பு இயக்கம் ஒரு புரட்சி இயக்கம். அதுவும் யுத்த நெருக்கடி மிகவும் கடுமையா யிருக்கும் இந்தக் காலத்தில்! இந்த இயக்கம் நிறுத்தப் பட வேண்டும். இதன் பயனாக ஏற்பட்ட பலாத்காரங்களுக்கும் இந்த இயக்கத்திற்கும் சம்பந்த மில்லை யென்று அவர்கள் வெளிப் படையாகக் கூறி விட வேண்டும். அப்போது தான் பிரிட்டிஷ் பார்லிமெண்டும் பிரிட்டிஷ் பொது ஜனங்களும் இந்த இயக்கக்காரர்களோடு ஒரு வித ஒப்பந்தத்திற்கு வரக் கூடும். மற்றொரு முடிவிற்கும் காமன்ஸ் சபையார் வந்திருக்கிறார்கள். அதாவது பல கட்சிக ளிருக்க, அவற்றிற்குப் பாதகமான முறையில் ஒரு கட்சிக்கு மட்டும் ஆட்சியை ஏக போக உரிமையாகக் கொடுப்பது என்பது முடியாத காரியம். இந்திய மக்கள் யதேச்சை யோடும் திருப்தி யோடும் வாழ வேண்டுமானால், ஒரு கட்சி ஆட்சி கூடவே கூடாது. இந்த விவாதங்களி லிருந்து இந்த இரண்டு அபிப்பிராயங்கள் தான் ஏற்பட்டன.

**சுயாட்சிக்கு வழி.**

தம் இஷ்டம் போல் ஒரு ஆட்சி முறையை வகுத்துக் கொள்ள இந்தியர்களுக்கு உரிமை இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தை காமன்ஸ் சபையினர் பொதுவாக ஏற்றுக் கொள்ளுகிறார்கள். இந்தியர்கள் விரும்பினால் சுயாட்சி பெறலாம் என்பது தான் இதன் அருத்தம். இது பற்றி மிஸ்டர் அமெரி வெகு தெளிவாகக் கீழ்க் கண்டவாறு கூறி யிருக்கிறார் :—

"தன் தலை யெழுத்தை நிர்ணயித்துக் கொள்ள இந்தியாவிற்குச் சந்தர்ப்பம் அளிக்கப் பட்டது. இதனால் ஏற்படக் கூடிய அரசியல் அமைப்பு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உள்பட்டதாக இருக்கலாம். இந்த நிலமை தமக்குத் தேவையில்லை என்று நினைத்தால், அதற்கு அப்பாற் பட்டதாகவு மிருக்கலாம்."

இந்த மொழிகளில் தனக்குள்ள நம்பிக்கையைக் குறித்து, சுயேச்சைத் தொழிற் கட்சித் தலைவர் மிஸ்டர் மாக்ஸ்டன் கூறுவதாவது :—

"பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சம்பந்தமே தமக்குத் தேவை யில்லை யென்று இந்தியர்கள் கூறுவார்களானால், அவர்களுக்குப் பரிபூரண சுயாட்சி வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்."

இந்த விவாதத்தி லிருந்து மற்றொரு விஷயம் தெரிய வந்தது. எல்லோருக்கும் கௌரவம் தரத் தக்க முறையில், கூடிய சீக்கிரத்தில் ஒரு முடிவு ஏற்பட வேண்டு மென்று எல்லாக் கட்சியினரும் அக்கரை யோடிருந்தார்கள். இப்படிப் பட்ட தோர் முடிவு ஏற்பட வேண்டு மென்று மே. த, வைசிராய் பிரபுவுக்கும் ஆசை யுண்டு. அதனால் தான் இந்தியத் தலைவர்களோடு அவர் இன்னும் இது பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், அப்படிப் பட்ட சமரச முடிவு எப்போது ஏற்படும்? இதற்கு என்னென்ன நிபந்தனைகள் அவசியம்? முதலாவதாக சட்ட மறுப் பியக்கத்தை நிறுத்த வேண்டும். இரண்டாவதாக, இந்தியாவின எதிர்கால அரசியல் அமைப்பு எப்படிப் பட்டதாய் இருக்க வேண்டு மென்பது பற்றி, கட்சிகளுக்குள் ஒற்றுமை ஏற்பட வேண்டும். ஒவ்வொரு இனத்தார்களின் ஆசைகளையும் தொகுத்து, இவை தான் இந்தியாவின் தேவைகள் என்று தீர்மானிக்க வேண்டும். அப்போது தான் எந்த விதமான நஷ்டமோ குறைபாடோ இல்லாதபடி ஒரு சமரசம் ஏற்பட வழி யுண்டு. அரசியல் சமரசப் பேச்சுக்கள் ஒரு புதிய கடுமையான முறையிலும், படிமான மில்லாதபடியும் நடை பெற்றன. எப்படி என்றால், சமரசப் பேச்சுக்கள் நடத்தியவர்கள் ஆதிக்கத்திற்காகத் தான் முயற்சித்தார்களே யொழிய, பதவிகளுக்குரிய உரிமைகளைக் குறித்து பேரம் பேசவில்லை. இன்று இந்தியாவின் அரசியல் தேவை, திட்ட மிடுவது தானே யொழிய, பேரம் பேசுவ தல்ல. இன்றைய உலக அரங்கத்திலே இந்தியர்களின் கடமை போராடுவது தானே யொழிய, அசட்டையா யிருப்ப தல்ல. போராடுவதனால், சுயேச்சைக்கு இட முண்டாகும். திட்ட மிட்டால், யுத்தத்தில் வெற்றி கிடைத்த பிறகு, சுயேச்சை நிச்சயமாகக் கிடைக்கும்.



# ஹிட்லர் புலம்புகிறார்.

## காரண மென்ன?

### எடின்பரோவில் சர்ச்சில் பிரசங்கம்.

சமீபத்தில் பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் எடின்பரோ நகரத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது :

நம் கடற் படையை இப்போது தான் பார்வை யிட்டு விட்டு வந்திருக்கிறேன். இதில் அநேகம் கப்பல்கள் மத்தியதரைக் கடலி லிருந்தும், மற்றும் சில கப்பல்கள் ருஷ்யாவிற்குக் கொண்டு போகப்படும் தளவாடக் கப்பல்களுக்குத் துணைக் கப்பல்களாகவும் போய்த் திரும்பியவை. இந்தப் படை ஸ்காட்லந்தி லுள்ள கப்பல் படைத் துறைமுகத்தி லிருக்கின்றது. சில வாரங்களுக்கு முன்பு தான் நான் ஆபிரிக்கப் பாலைவனங்களில் போராடும் நம் படைகளைக் கண்டு வந்தேன். இந்த இரண்டு வகைப் படைகளுக்கும் மிகுந்த வேற்றுமை யுண்டு. ஒன்று தண்ணீரிலேயே மிதக்கிறது; மற்றொன்று தண்ணீ ரில்லாத பாலைவனத்தி லிருக்கிறது. வெளிச்சம், நிறம், உடை, யுத்தத் தளவாடங்கள் ஆகியவையுங் கூட ஒன்றிற் கொன்று மிகவும் மாறு பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் இந்த இரண்டு வகைப் படைகளும் ஒத்திருக்கின்றன. **ரோமல் எகிப்தைப் பிடிக்க ஒட்டாதபடி செய்து விடுவதென்று பாலைவனத்தி லுள்ள நம் படைகள் உறுதி கொண்டிருக்கின்றன. அதுபோலவே ஐரோப்பாவின் கொடுங்கோலன் உலகத்தைக் கட்டி யாள ஒட்டாதபடித் தடுத்து விடுவ தென்று நம் கப்பற் படைகள் உறுதி கொண்டிருக்கின்றன.**

ஒரு நாளு மில்லாத அளவிற்கு நம் நாட்டு மக்கள் ஒன்றுபட்டு உழைத்து வருகிறார்கள். பிரான்சில் நமது 51-வது டிவிஷன் படை நாச மடைந்தது. இது நமக்குக் கடுமையான நஷ்டந் தான். என்றாலும், இந்த நஷ்டத்தை மிகுந்த மன தைரியத் தோடு சகித்துக் கொண்டோம். இப்போது புதிய 51-வது படை திரண்டு விட்டது. இது தன் பழைய பெருமையை யடைந்து, பழிக்குப் பழி வாங்கும் என்று நான் உறுதியாய் நம்புகிறேன். எதிரிகள் விமானங்களைக் கொண்டு நம்மைத் தாக்கினார்கள். அப்போது நாம் தைரியத் தோடிருந்தோம். அவற்றோடு போராடி விரட்டுவதற்குப் போதுமான பலம் நமக் கிருந்தது தரைப் படைகளிலும், கப்பல் படைகளிலும் விமானப் படைகளிலும் வியாபாரக் கப்பல்களிலும் ஸ்காட்லந்துக்காரர்கள் இந்தப் பருவத்தில் மிக அருமையான வேலை செய்து தம் புகழையும் நிலை நாட்டி விட்டனர்.

**எதிரிகள் புலம்பல்.**

சமீப காலத்தில் நம் எதிரிகள் வெகுவாக வாய்ப் பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள். ரிப்பன்டிராப், கோயரிங், ஹிட்லர் ஆகியவர்கள் கொஞ்ச காலமாகச் செய்யும் பிரசங்கங்கள் அவர்களுடைய மன நிலையை வெள்ளையாக எடுத்துக் காட்டுகின்றன. தாம் சாதித்தவை பற்றி வெகுவாகப் பீற்றிக் கொள்ளுவது அவர்கள் வழக்கம். என்றாலும், இப்போது அவர்கள் செய்யும் பிரசங்கங்களில் துயரக் குரல் தொனிக்கிறது. தம் நிலை பற்றி புலம்புகிறார்கள்.

இவர்களுக்கு தாம் செய்த குற்றம் இன்னது என்று தெரியும். இவர்களுக்குச் சட்டமும் தெரியும். 1940-ம் வருஷம் பிரான்சைப் பிடித்தார்கள். ஐரோப்பாவின் கீழ் பாகத்தைத் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினார்கள். சமயம் பார்த்து, நாம் அசந்திருக்கும் போது முஸோலினி நம்மைத் தாக்கினார். அப்போது நாம் மட்டும் தனித் திருந்தோம். மக்கள் இனம் விடுதலை பெற்று பழம் பெருமையைய நிலை நாட்டும்படி உதவ வேண்டிய பொறுப்பு, நம்மைச் சார்ந்திருந்தது. அந்தக் காலத்தில் அவர்கள் தம் பிரசங்கங்களில் பிறப்பிக்கும் கட்டளைகளுக்கும், இப்போது அவர்கள் பாடும் புலம்பலுக்கும் எவ்வளவு வேற்றுமை! கொடுமைகளாலும் யுத்தத்தாலும், இரத்தக் களறி யாக்குவதனாலும் பலவீனர்களை நசுக்குவதனாலும் பயனில்லை யென்று அந்தக் கொடியவர்கள் மனதில் படத் தக்கபடி ஏதோ சம்பவங்கள் நேர்ந் திருக்க வேண்டும்.

தான் பெற்ற வெற்றிகளைக் குறித்துப் பாராட்டுவோரில்லை யென்று ஹிட்லர் ஒப்பாரி வைக்கிறார். இதுதான் அவருடைய பிரசங்கத்தின் விசித்திரமான பாகம்.

"நான் பெற்ற வெற்றிகள் என்ன! நான் தாக்கி அடிமைப் படுத்திய நாடுகள் என்ன! மற்றவர்கள் நாடுகளில் ஆயிரக் கணக்கான மைல் தூரம் நான் நுழைந்து பிடிக்க வில்லையா? நான் போரில் கைப் பற்றிய கொள்ளைப் பொருள்க ளென்ன? நான் எத்தனைப் பேர்களைக் கொன்றிருப்பேன்! எத்தனைப் பேர்களைக் கைதியாக்கி யிருப்பேன்! இவற்றை விட நேச நாட்டினர் என்ன சாதித்து விட்டார்கள் என்று ஒப்பிட்டுப் பாருங்கள்! அவர்கள் ஏன் மனந் தளரவில்லை? இத்தனை வெற்றிகள் எனக்குக் கிடைத்தும், அத்தனைத் தோல்விகள் அவர்களுக்கு ஏற்பட்டும், அவர்களுடைய ஊக்கம் மட்டும் ஏன் குறையவில்லை."

இது தான் ஹிட்லர் மனதைக் குழப்பிக் கொண்டிருப்பது. கோப மூட்டுவது. உடலை நடுங்கச் செய்கிறது. ஏனென்றால், இத்தனை வெற்றிகளும் திரண்ட அதிர்ஷ்டமும் வாய்த் திருந்தும், தனக்கு இறங்கு காலம் வந்து விட்ட தென்று அவர் நன்றாக உணருகிறார். ஆனால், இந்த இரண்டு வருஷங்களாக பிரிட்டன், அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் பல வகைக் கவலைகளிலும் தொல்லைகளிலும், படிப்படியாக முன்னேறிக் கொண்டே வருகின்றன. (கரகோஷம்) **நாம் அடைந்த தோல்விகள் எல்லாம் வெற்றி பெறுவதற்கான வழிகள். ஆனால் அவர் அடைந்த வெற்றிக ளெல்லாம் அவர் நாசமடையும்படிச் செய்யும் படிகள்.** இதை அவர் நன்றாக உணர்ந்து அதிசயப் படுகிறார்.

**காரணம் என்ன ?.**

இதற்குக் காரணம் என்ன? பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் சமாதானப் பிரியர்கள். சமாதான காலத்தில் தம் பாதுகாப்பைக் குறித்துக் கவலை யில்லாமல் இருப்பவர்கள். எந்த விதக் கவலையும் அவர்களுக்குக் கிடையாது. பிறரை அவர்கள் சந்தேகிப்பதில்லை. தோல்வி என்பதையே அறியாதவர்கள். முன்னெச்சரிக்கையோ டில்லாதவர்கள். மகா மோசமான நிலையி லுள்ளவர்கள் என்று கூடக் கூறலாம். இவர்கள் இராணுவக் கலையை அவமதிக்கிறார்கள். யுத்தம் மகா கொடுமையான தென்றும், ஆகவே மீண்டும் யுத்தம் ஏற்படா தென்றும் நினைக்கிறவர்கள்.

நிற்க, சதிய லோசனைக்காரர்கள் தம்மைத் தகுந்தபடி அமைத்துக் கொண்டார்கள்; ஆயுதங்களைத் திரட்டிக் கொண்டார்கள்; பல வருஷங்களாக இரகசியமாகத் திட்டம் இட்டுக் கொண்டார்கள். மனிதர்கள் செய்யக் கூடிய மகா புண்ணிய காரியம் யுத்தந் தான் என்று பெருமை பேசினார்கள். கொலைகளாலும் கொடுமைகளாலும் தான் புகழோங்கும் என்றார்கள். விஞ்ஞான அறிவையும் ஒழுக்க முறைகளையும் தமக்குச் சாதகமாகப் பண்படுத்தி கொண்டார்கள். இவர்கள், சமாதானத் தோடும் முன்னெச்சரிக்கையில்லாமலும் இருப்பவர்களைத் தாக்கினால், மிகுந்த கஷ்டமும் துன்பமுந் தான் உண்டாகும். அந்தக் கொடிய மூர்க்கர்கள், தம் மிருகத் தனத்தைக் கண்டு பெரும் மகிழ்ச்சி யடைகிறார்கள். இத்துடன் இது நின்று விட வில்லை. இதுதான் முதல் படலம். இந்த மூர்க்கர்களின் தாக்குதலைத் தாங்கிக் கொண்டு கொஞ்ச காலம் இருந்தால், இரண்டாவது படலம் ஆரம்ப மாகும். இந்தப் படலம் பிரிட்டிஷ் தீவுகளுக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் மிகுந்த புகழுண்டாக்கும். ஏனென்றால் நாம் ஒரு வருஷம் தனித்திருந்து போராடினோம். இதனால் நாகரிக ஜனநாயக நாடுக ளெல்லாம் ஒன்று சேர்ந்து இந்தக் கொலைகாரனைத் தொலைக்க முயற்சிப்பதற்கு நமக்குச் சவகாசம் கிடைத்தது. இதனால் தான் நமக்கு மகத்தான புகழ்! (கரகோஷம்.)

# தன் வினை யாரைச் சுடும்?

தன் வினை யாரைச் சுடும்? இது தெரியாதா? தன்னையே தான் சுடும்! கரிந்து போன தொரு அப்பத் துண்டை எடுத்து ஆத்திரத் தோடு தன் வீட்டுக் கூரை மேலே எறிந்தானும் ஒருவன். அதே அப்பம் அவனது வீடு முழுவதையுமே சுட்டு எரித்து விட்டதாம். தன் வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்; கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழிகள் எல்லாம் பாட்டிமார் முதல் பேரப் பிள்ளைகள் வரை எல்லோருக்கும் தெரிந்தது தான். ஆனால் தற்சமயம் ஜப்பான், ஜெர்மனி, இத்தலி இம்மூன்றும் சேர்ந்து செய்யும் காரியங்களைப் பார்த்தால், அந்த மூன்று நாடுகளுக்கும் மேற்கண்ட பழமொழிகள் நினைவி லில்லை என்றே தோன்றுகிறது. அந்நாட்டவர்க்கும், அவர்களின் கண்மூடித் தலைவர்களுக்கும் இவற்றை நினைவு மூட்ட, அங்கு தக்க மனுஷர்களும் இல்லை போலிருக்கிறது. இதெல்லாம் காலக் கோளாறுல் ஏற்பட்ட அவஸ்தைகள் தான்!

சும்மா இருந்த உலகின் மத்தியிலே, சுடச்சுட ஒரு குண்டை முதன் முதலில் எடுத்து வீசியது ஜெர்மனி தானே? அது காரணமாகவே, இப்பொழுது உலகெங்கும் பெருந்தீ பற்றி எரிகிறது. அந்தத் தீயால் ஜெர்மனிக்கும் அதன் சகாவாக இருக்கும் நாடுகளுக்கும் ஏற்பட்டிருக்கும் நஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. இதை அந்த நாட்டில் உள்ளவர் யாரும் மறுக்கவே முடியாது.

ஆஸ்திரேலியாவிலே ஒரு விளையாட்டு உண்டு. அதிலே கலந்து கொள்ளுகிறவர்கள், ஒரு தினுஸான வளைந்த கொம் பொன்றை எடுத்து, வீசி எறிவார்கள். அது வெகு தூரம் போய் விட்டு, திரும்பவும், எறிந்தவர் கையிலேயே வந்து சேரும். அதை எறிபவர் சாமர்த்தியமாக அதைப் பிடித்துக் கொள்ளாவிட்டால், அது அவர் மூக்கையோ, மண்டையையோ, தாடையையோ உடைத்துவிடும்.

இதே போன்ற ஆபத்தான விளையாட்டைத் தான் அச்சு நாட்டவர்கள் தொடங்கி யிருக்கிறார்கள். அது காரணமாக அவர்களது முகங்களில் அடி விழுந்து கொண்டு தானிருக்கிறது. ஏககாலத்தில் ஒரு வளைவு கம்பை வீசி எறிந்தால், அது எங்கேடாப்பா திரும்பி வருகிறது என்று ஜாக்கிரதையோடு பார்த்துப் பிடித்துக் கொள்ளலாம். அதை விட்டு, ஒரே சமயத்தில் ஒன்பது கம்புகளைப் பல திசைகளில் எறிந்து விட்டால், அவற்றைத் திரும்பப் பிடிக்க முடியுமா என்ன? உடம்பிலே பல இடங்களிலே அவை காயத்தை உண்டாக்கத் தான் செய்யும். அதே போல, ஜெர்மானியரும் சரி, ஜப்பானியரும் சரி, பல இடங்களில் போய் வாய் வைத்து விட்டார்கள். ஒரு இடம் சுடுகிறது. ஒரு இடம் கொதிக்கிறது. இன்னொரு இடம் புளிக்கிறது. ஆனால் இனிப்பாக உள்ள இடங்களும், வாயால் ருசி பார்த்து உள்ளே தள்ளக் கூடிய இடங்களும் இருக்கத் தான் செய்தன. ஒரு ஹோட்டல் என்று போனால், எல்லாமே சூடாக இருந்து விடுமா என்ன?

பிரமாதமான மனக் கோட்டை கட்டிக் கொண்டு தான் ஹிட்லர் திடீரென்று யுத்தத்தைத் துவக்கினார். சென்ற மகா யுத்தம் முடிந்தது முதலே, ரகசியமாகவே ஜெர்மனி இந்த இரண்டாவது மகா யுத்தத்திற்குத் தயார் செய்து வந்திருக்கிறது; இந்த இருபது வருட கால யுத்த ஏற்பாடுகளைக் கொண்டு, இந்த உலகையே அடித்து நொறுக்கி கபளீகரம் செய்து விடலாம் என்று எண்ணி யிருப்பார் ஹிட்லர். உண்மையில், அவரது படைகளால் தாக்கப் பட்ட நாடுகள் பல, யுத்தத்திற்குத் தயாராகவே இல்லை. அது காரணமாக அந் நாடுகள் எல்லாம் வெகு எளிதில் அவரது கைகளில் விழுந்து விட்டன. ஆனால் பிரிட்டன் மட்டும் அவரது அக்ரமச் செயல்களைக் கண்டிக்கும் முறையில் தனக் கேற் படக் கூடிய கஷ்டங்களைப் பொருட்படுத்தாது ஹிட்லரையும், அவரது கொள்கைகளையும் எதிர்த்துப் போர் செய்யப் புறப்பட்டது.

யுத்தத்திற்குக் கிளம்பிய போது பிரிட்டனிடம் பிரமாதமாக விவரிக்கும்படியான யுத்த விமானங்களோ, விமான எதிர்ப்பு பீரங்கிகளோ, பெரிய படையோ கிடையாது. ஆனால் யுத்தம் ஆரம்பமாகி மூன்று வருடங்களாவதற்குள் பிரிட்டனின் பலம் எவ்வளவு வளர்ந்திருக்கிறது தெரியுமா? பிரிட்டிஷ் தீவுகளனைத்துமே அசைக்க முடியாததோர் அற்புதமான கோட்டை போலிருக்கிறது. அங்கு தயாராகும் யுத்த சாதனங்களுக்குக் கணக்கே இல்லை.

'ஜெர்மனி மேலே எந்த விரோதிப் பயலாவது பறக்க முடியுமா என்ன?' கொண்டு தள்ளி விட மாட்டோமா? என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள் ஜெர்மன் அதிகாரிகள். ஆனால் இன்று அங்கு நடப்பதென்ன? பிரிட்டனி லிருந்து செல்லும் வெடி விமானங்கள் போடுகிற போட்டைக் கண்டு ஜெர்மன் மக்களும் சரி, அவர்களால் கடவுளாகப் பாவிக்கப் படும் அந்த ஹிட்லர் பெரியாரும் சரி, நடுநடுங்கிக் கொண்டு கிடக்கிறார்கள்.

ஜெர்மன் தொழிற்சாலைகள், ரயில்வே ஜங்ஷன்கள், ரஸ்தாக்கள், கப்பல் கட்டு மிடங்கள் எல்லாவற்றையும் பாழாக்கி வருகின்றன. பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்கள் இராக் காலங்களில் தாங்கள் போடும் குண்டுகள் சரியானபடி சேதத்தை விளைவித்தனவா, இல்லையா என்பதை அறிய பிரிட்டிஷ் விமானங்களில் உள்ள சக்தி வாய்ந்த காமிராக்கள் வெகு சுலபமாகப் படங்களைப் பிடிக்க புது ஏற்பாடு செய்திருக்கிறார்கள். என்ன ஏற்பாடு தெரியுமா? காமிராவில் படம் விழுவதற்கு அதன் பார்வைக்குள் விழும் பிரதேசங்கள் பிரகாசமாக இருக்க வேண்டும். அந்தப் பிரகாசத்தை அளிக்க வெடி குண்டுகளுடனே ஒரு மருந்தை கலந்திருக்கிறார்கள். அந்த வெடி குண்டு வெடிக்கும் போது கோடி சூரியப் பிரகாசத்தைக் கக்குகிறதாம். சட்டென்று அப்பொழுது எல்லாவற்றையும் காமிரா படம் பிடித்து விடுகிறது.

ஜெர்மனியில் மட்டு மின்றி ஜெர்மானியர் பிடித்து வைத்திருக்கும் பிரதேசங்களிலும் பிரிட்டிஷார் குண்டு மழை பொழிந்து வருகிறார்கள். சென்ற வாரம் கூட லில்லி என்றதோர் தொழிற்சாலையை ஐந்நூறு பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்கள் 'க்லோஸ்' செய்து விட்டு வந்தன. இது தவிர, அடிக்கடி பிரஞ்சுக் கரைகளில் போய் பிரிட்டிஷ் வேவுப் படைகள் இறங்கி நோட்டம் பார்த்து விட்டு வருகின்றன. இத்தகைய குட்டிப் படையெடுப்புகளில் பிரபலமானது தான் டீப்பி என்ற ஊரில் நடந்தது.

இதனால் எல்லாம் பிரிட்டிஷாருக்குப் பிரமாதமான லாபம் எதுவு மில்லை என்பது வாஸ்தவம். நாளை வரப் போகும் பெரிய தாக்குதலுக்கு நேற்றும், முந்தா நாளும் நடந்த இத்தாக்குதல்கள் நல்ல பயிற்சியை அளித்திருக்கின்றன. ஆனால், இவைஎல்லாம் ஹிட்லருக்கு நல்ல தலைவலியை உண்டாக்கி யிருக்கின்றன என்பதில் சந்தேகமே யில்லை.

ஆரம்பத்திலே அட்டகாசமாகப் பேசிக் கொண்டிருந்த மனுஷர், இன்று நன்றாகத் திணறுகிறார் என்பது மட்டும் நிச்சயமாகி விட்டது. தற்சமயம் மேற்குத் திசையைப் பற்றி சதா நினைத்துக் கொண்டே இருக்கிறார். அவர் கீழ்த் திசையைப் பார்த்தாலே அவருக்கு திக் திக் என்கிறது.

அப்படி மேற்றிசையிலே என்ன இருக்கிறது? என்ன நடக்கிறது? என்று கேட்பீர்களே! ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும், சர்ச்சிலும் கம்பீரமாகப் பேசுகிறார்கள். அந்தப் பேச்சை ஹிட்லர் கேட்காமல், தன் காதுகளில் பஞ்சை அடைத்துக் கொண்டிருந்திருப்பார் என்று நினைக்கிறீர்கள்?

'நமது பலம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. சில விஷயங்களில் நமது கை, அச்சு நாடுகளின் கைகளை விட உயர்ந் திருக்கிறது. அது இன்னும் உயர்ந்து கொண்டே போகும். அமெரிக்காவில் உள்ள தொழிற்சாலைகளை நானே நேரில் போய் பார்த்து விட்டு வந்திருக்கிறேன். அங்கு ஆடவர்களும், பெண்டிரும், அதி யானந்தத் தோடு, வெற்றி நமதே என்ற திட நம்பிக்கை யுடனே அல்லும் பகலும் அறுபது நாழிகையும் வேலை செய்து வருகிறார்கள். நமது கப்பல்களை நாஸி நீர் மூழ்கிகள் மூழ்கடிக்கும் வேகத்தை விட, நாம் கப்பல் கட்டும் வேகம் அதிகமாகி விட்டது. நமது நாட்டில் நடக்கும் யுத்த முயற்சி வேலைகளை, ஜெர்மானிய, அல்லது ஜப்பானிய, அல்லது இத்தாலியத் தலைவர்கள் வந்திருந்தால், அவர்களை என்னோடு அழைத்துப் போய் எல்லாவற்றையும் காட்டி யிருப்பேன். அதற்கப்புறம் அவர்கள் யுத்தத்தை மேற் கொண்டு நடத்தும் ஆசையையே கைவிட் டிருப்பார்கள். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, அவர்கள் என்னோடு வர முடியாது போய் விட்டது. ஆனாலும் நாம் சும்மா இருக்கலாமா? நாம் என்ன செய்கிறோம் என்பதே தெரியாது இருந்து விடப் போகிறார்களே அவர்கள் என்ற யோசனை யோடு, இங்கு தயாராகும் வெடிகுண்டுகளையும், பீரங்கிகளையும், விமானங்களையும், டாங்கிகளையும் நேரே அவர்களிருக்கு மிடத்திற்கே அனுப்புகிறோம். நம்முடைய கைவேலையை அவர்கள் பார்க்கவில்லை என்று இனி முறை யிட முடியாது.

போரை நடத்தும் வகையில், நேசநாட்டினரிடையே எப்பொழுதும் நெருங்கிய தொடர்பு இருந்தே வருகிறது. ஆகவே, பத்திரிகைக் காரர்கள் கலாட்டா செய்கிறார்கள் என்று எதும் செய்து விடுவதற்கில்லை. கூடிய சீக்கிரமே, ருஷ்யாவி லிருந்தும், சீனாவி லிருந்தும் அச்சு நாட்டினரை வேறு திசையில் இழுக்க ஏற்பாடு செய்யப் போகிறோம். அப்புறம் பாருங்கள் கதையை! என்று சொல்லி யிருக்கிறார் அவர்.

இது மட்டு மின்றி, ருஷ்யா, சீனா முதலிய நாடுகளுக்குச் சென்று விட்டு, வாஷிங்டன் நகர் திரும்பி யுள்ள வெண்டல் வில்கி சேகரித்து வந்துள்ள தகவல்களை யெல்லாம் அவர் கேட்கப் போகிறார். அப்புறம் என்ன செய்வ தென்று தீர்மானிக்கப் போகிறார். இனி சும்மா பாதுகாப்பு சண்டை மட்டும் நடத்திக் கொண்டிருந்தால் போதாது; மேலே விழுந்து கடிக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டார்கள் நேச தேசத்தார். அதைச் செய்வது எப்பொழுது, எங்கே என்பது தான் இனி தீர்மானிக்கப் படவேண்டும்.

இது ஒரு சுப செய்தி தான். ரூஸ்வெல்ட் பேசு முன், சீமைப் பிரதம மந்திரி சாசசில் பேசி யிருக்கிறார் சீமையிலே. 'நமக்கு ஏற்படும் கஷ்டங்களையும், தோல்விகளையும், ஏமாற்றங்களையும் வெற்றிக் கான படிகளாகக் கொள்ள வேண்டும். ருஷ்யாவையும், சீனாவையும் நாம் எந்நாளும் கைவிட மாட்டோம். கானடாவில் உற்பத்தியாகும் டாங்கிகள் எல்லாம், அப்படியாக ஒரே மொத்தமாக இனி ருஷ்யாவிற்கே அனுப்பப் படும். குளிர் காலம் வந்ததும், ஜெர்மானியர் படு கோபத்தோடு சீமை மீது பயங்கரமாகக் குண்டு வீசுவார்கள்; இம்முறை அவர்கள் குண்டு போடும் வேகத்தை முன் தடவை அவர்கள் குண்டு போட்ட வேகத்தோடு ஒப்பிட்டால், முன் தடவை போட்டது வெறும் கொசுக் கடிபோ லிருக்கும் என்று சிலர் எதிர் பார்க்கிறப்போ லிருக்கிறது. ஜெர்மனியின் கை சோர்ந்து போய் விட்டதய்யா? பழைய ஜோர் இல்லை அதற்கு! அதனுடைய பல் எல்லாம் உடைந்து போய் விட்டது. ஆகவே பயப்பட வேண்டாம். நாம் அதற்குப் பதிலாக, இன்னும் ஜோராக ஜெர்மனி மீது தினம் தவறாது விமானங்களை அனுப்புவோம்' என்று சொல்லி யிருக்கிறார் சர்ச்சில்.

இப்பொழுது தென் ஆபிரிக்கப் பிரதம மந்திரியான ஜெனரல் ஸ்மட்ஸ் சீமைக்குப் போயிருக்கிறார். சீமையை பார்க்க அல்ல. எதிர் காலத்தில் செய்யக் கூடிய தென்ன என்பதைப் பற்றி சர்ச்சிலோடு கலந்து பேசத் தான். தென் ஆபிரிக்காவிலே, ஏராளமான அமெரிக்கப் படைகள் வந்து இறங்கி விட்டன என்ற செய்தியையும், 'இனிமேல் நமது போர் முறையை மாற்றிக் கொண்டு, முன்னேறித் தாக்கும் காலம் வந்து விட்டது' என்று ஸ்மட்ஸ் அபிப்பிராயம் தெரிவித்திருப்பதையும் சேர்த்துப் பார்த்தால், கூடிய சீக்கிரமே மத்ய கிழக்கு போர் முனையில், அதாவது எகிப்திலே, நேச தேசத்தார் ஏதோ பெரிய வேலை செய்யக் காத்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

தவிர, ஜெர்மானிய நீர்மூழ்கிகள் ஆபிரிக்கா வண்டை வந்து வாலாட்டுவதி லிருந்து என்ன தெரிகிறது? அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலே, அமெரிக்காவை யடுத்த பிரதேசங்களிலே அவற்றின் ஜம்பம் சாய வில்லை? அங்கு அமெரிக்கர்கள் நீர்மூழ்கிகளை நீரிலே முழுகியே கிடக்கும்படி செய்து விடுகிறார்கள் என்பது தெரிகிறது.

இன்னொரு விஷயம். அமெரிக்காவின் சைனியத்தின் தொகையும் நாளுக்கு நாள் பிரமாதமாகப் பெருகி வருகிறது. அதோடு, அங்கே ராணுவத்தில் சேர வேண்டிய வயசு இருபதாக இருந்தது. அதை பதினெட்டாகக் குறைத்து விட்டார்கள். ஆகவே, இன்னும் அதிகமான வாலிபர்கள் பட்டாளத்தில் சேர முடியு மல்லவா?

இம்மாதிரி யுத்த முயற்சியைப் பெருக்கிக் கொண்டே போகப் போகிறது அமெரிக்காவும், பிரிட்டனும். ஆனால், அச்சு நாடுகளோ, தமது பெருக்கும் சக்தியின் உச்ச நிலையை அடைந்து விட்டன. இனி அந்த சக்தி உயர இடமில்லை. ஒரு கல்லை மேலே எறிகிறோம். அது நாலு பனை உயரம் வேண்டு மானாலும் போகட்டும். அந்த உச்சி நிலையை அடைந்த பிறகு அது என்ன செய்கிறது. கீழே நோக்கி இறங்கத் தானே செய்கிறது? அது போல், அச்சு நாடுகளின் சக்தி இனி குறையத் தான் செய்யும். இதை நினைத்துப் பாராமலா இருந்திருப்பார் ஹிட்லர்? அவருக்கு வயிறைக் கலக்காமலா இருந்திருக்கும்?

மேல் திசை விஷயம் இப்படி யாச்சா? கீழ் திசையைப் பார்க்கும் பொழுதே அவருக்கு உதைப்பாகத் தானிருக்கும். அந்த ஸ்டாலின்கிராடு, ஜெர்மன் ராக்ஷஸர்களை எதிர்த்து நிற்கும் திறமையைப் பார்த்து உலகமே பிரமிக்கிறது. மாஸ்கோ, லெனின்கிராட் நகர்கள் தமக்குச் சம்பாதித்துக் கொண்ட இணையற்ற பெருமையை இந்த ஸ்டாலின்கிராடு நகரமும் சம்பாதித்துக் கொள்ளப் போகிறதோ என்னமோ. ஆனால், முதலில் சொன்ன இரண்டு நகரங்களை விட, இந்த ஸ்டாலின்கிராடின் நிலைமை ரொம்ப மோசம் தான்'' மகா நெருக்கடியானதும் கூட.

பனி காலம் ஆரம்பமாகப் போகிறது என்பதை அறிவிக்கும் மழை ஸ்டாலின்கிராடில் பெய்ய ஆரம்பித்து விட்டது. நகருக் குள்ளே ஒரே சேறும் தண்ணீருமாக ஆகி விட்டது. இதெல்லாம் டாங்கிகளின் போக்கைத் தடை தானே செய்யும்? கூடிய சீக்கிரமே பனிகாலம் ஆரம்பித்து விடப் போகிறது. ஆகவே, நம் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது எப்படியாவது ஸ்டாலின்கிராடைப் பிடித்தாக வேண்டும் என்று எண்ணுவார் ஹிட்லர். இதற்காகவே அவர் இந்தப் போர் முனைக்குக் கூட வந்திருப்பதாகக் கூறப் படுகிறது.

ஆனால், ஆரம்பத்தி லிருந்த ஜோரோடு ஜெர்மன் படைகள் தாக்க வில்லையாம. இதற்குக் காரணம் அப்படைகளுக்கு ஏற்பட்ட பயங்கர எதிர்ப்பும், அதன் காரணமாக உண்டான களைப்பும், சளைப்பும் தான். போதாக் குறைக்கு வீரர் டிமோஷிங்கோ, இந்நகரின் வடமேற்குப் பாகத்தில் தனது படைகளை வெற்றியுடன் முன்னேறச் செய்து விட்டார். டான் நதியையும் வெகு சிரமத்தோடு அவரது படைகள் கடந்து மேல் கரைக்குப் போய் விட்டன. அங்கிருந்து நேர் தெற்கே வந்தால், ஜெர்மன் படைகளுக்கு உதவி வரும் பாதை இருக்கிறது. அதை டிமோஷிங்கோவின் படை கண்டித்து விடக் கூடும். அவ்வாறு டிமோஷிங்கோவிற்கு இடங் கொடுத்து விடக் கூடாதென, ஜெர்மன் படைகள் அவரை எதிர்த்துச் செல்லுகின்றனவாம்.

ஸ்டாலின்கிராடு நகரம் முக்கால் வாசி பாழாகி விட்டதாம். அக்கினி பகவானின் கோரத் தாண்டவத்திற்கு அந் நகர் இலக்காகி விட்ட போதிலும், ஜெர்மானியர் கையில் அது விழ வில்லை. போர்முனைக்கு அதி சமீபமாக வுள்ள டாங்கி உற்பத்தி சாலையில் இன்னும் வேலை அதி மும்முரமாகவே நடந்து கொண்டிருக்கிறதாம். உச்சி மீது வானிடிந்து விழுகின்ற போதிலும், குலையா மனதுடன் ருஷ்யர்கள் அங்கு வேலை செய்கிறார்களாம்! ஆஹா! எத்தகைய வீரம்! ஜெர்மன் முண்டர்களுக் கேற்ற கிண்டர்கள் நாங்கள் என்பதை உலகோ ரறியச் செய்து விட்டார்கள் ருஷ்யர்கள்.

ஸ்டாலின்கிராடுப் போர் ஹிட்லரைத் திணறச் செய்திருக்கிறது. அந்நகரம் இன்னும் விழா திருப்பதால் அவர் போட்ட பிளான்கள் பல பாழாகிப் போய் விடும் போலிருக்கிறது. நேச தேசத்தாரின் வலக்கை போலிருக்கும் ருஷ்யாவை வெட்டி விட்டு விட்டு, தன்னிஷ்டப்படி கூத்தடிக்கலாம் என்று வீண் கனவு கண்டு கொண்டிருக்கிருர் ஹிட்லர். இதை, தன் பிரசங்கத்தில் கூடச் சொல்லி விட்டாரே! அனுல் ஸ்டாலின்கிராடோ உறுதியாக நிற்கிறது. ஹிட்லரின் மானமோ காற்றில் பறக்கிறது. அந்தக் கோபத்திலே, அங்கே நாஷிப் படைத் தலைவராக இருந்த வான்பாக்கைகல்தா கொடுத்து பெர்லினுக்கு அனுப்பி வைத்தார். வான் லிஸ்ட் என்பவரை அவருக்குப் பதிலாக அனுப்பி வைத்தார் போர் முனைக்கு. இந்தப் புதுப் புள்ளி என்ன செய்யப் போகிருரோ தெரிய வில்லை.

ஸ்டாலின்கிராடில் ஏற்பட்ட ஆள் சேதம் எட்டிலடக்க முடியாது போய் விட்டது போலிருக்கிறது. ஜெர்மனியில் உள்ளவர்களிடை இது மனக் கசப்பை உண்டாக்கி விட்டு விட்டதோ என்னமோ? இல்லாவிட்டால், 'இனி ஸ்டாலின்கிராட் முற்றுகையில், காலாட் படைகளை உபயோகிக்க வேண்டி யிராது.' என்று கூறுவாரா அவர்?.

ஸ்டாலின்கிராடில் இப்பொழுது பீரங்கி யுத்தம் நடக்கிறது. இரு கட்சியினரும் சிதறிக் கிடக்கும் தங்கள் படைகளை ஒருங்கு திரட்டுகிருர்கள். இன்னும் சில தினங்களில் ஜெர்மானியர் கடைசியாக ஒரு ரோடு போட முயலக் கூடும். அதன் விளைவையே பொறுத்திருக்கிறது மேற் கொண்டுள்ள யுத்தத்தின் போக்கு.

இது இப்படி யிருக்க, ஜப்பானியர் கீழ்த் திசையில் சரியான உதை பெற்று வருகிருர்கள். அவர்கள் சாலமன் தீவுகளிலேயே கண்ணுகப் போராடி வருகிருர்கள். அங்கு தான் அமெரிக்கர் வந்து இறங்கியிருக்கிருர்களே! அவர்களைத் துரத்த ஜப்பானியர்கள் ஆசைப் படுகிருர்கள். அந்த ஆசையோடு வரும் ஜப்பானியரது யுத்தக் கப்பல்களை அமெரிக்க விமானங்கள் 'பணுல்' ஆக்கி வருகின்றன.

இன்னொரு பெரிய ஜப்பானியக் கப்பற் படை சமீபத்தில் தென் திசை நோக்கி வேகமாகச் சென்றதாம். தவிர, ஜப்பானியர் பர்மாவில் தங்கள் பலத்தை அதிகப் படுத்தி வருகிருர்களாம். சீனுவின் தென் கோடிப் பிரதேசத்தைத் தாக்கவே இந்த ஏற்பாடாக இருக்கலாம் என்கிருர்கள். அது எந்த ஏற்பாடாக இருந்தால் எங்களுக் கென்ன என்று இந்தியாவிலிருந்து செல்லும் விமானிகள், குண்டுகளை பர்மாவில் உள்ள ஜப்பானியர் மீது உதிர்த்து வருகிருர்கள்.

ஜப்பானியருக்கோ இப்பொழுது ஆகாயத்தில் பாதுகாப்பு போத வில்லை. முன்பு இந்த வகையில் நேச தேசத்தார் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது கதையே மாறி விட்டது. சீனுவின் கையையும் நேச தேசத்தார் பலப் படுத்தி வருகிருர்கள். இதெல்லாம் ஜப்பானுக்கு அவஸ்தை புராணம் ஆரம்பமாகப் போகிறது என்பதைக் காட்ட வில்லையா?

---

# அதிவேக விமானப் படை

## ஜெர்மன் ரகசியப் போலிஸ் ஆபீசைத் தாக்கியது

"டெய்லி ஹெரால்ட்" பத்திரிகையின் விமானப் படை நிருபர் கீழ்க் கண்டவாறு தெரிவிக்கிருர்:—

பிரிட்டிஷ் விமானப் படையில் மிகவும் வேகமாகப் பறந்து போகக் கூடிய வகை விமானங்கள் இருக்கின்றன. இதற்கு 'மஸ்கிடோ' என்று பெயர். இந்த விமானப் படை ஒரு புதிய முறையைக் கையாளுகிறது. இது பகலிலேயே எதிரி நாடுகளுக்கு மேலே பறந்து வெடிகுண்டுகளை எறிகின்றது. வெகு தூரம் பறந்து செல்லுகின்றது. இதற்குத் துணைப் படை எதுவுந் தேவையில்லை. முக்கியமான இடங்களைக் குறி தவருமல் தாக்குகின்றன. பிரிட்டன் மீது படையெடுத்து வந்த ஜெர்மன் விமானப் படை ஒன்றுவது இவ்வளவு வேகமாகப் பறந்தது மில்லை, இவ்வளவு உயரத்திலிருந்து குறி தவருமல் குண்டுகளை வீசியது மில்லை.

வெகு சமீபத்தில் தான் இந்தப் படையைப் பற்றிய செய்திகள் வெளியாயின. கொஞ்ச காலமாக இந்தப் படைகள் எதிரிகளின் முக்கியமான குறிகளைத் தாக்கிக் கொண்டிருந்தன. ஜெர்மன் இரகசியப் போலீஸ் தலைமை காரியாலயம் ஓஸ்லோ என்னும் இடத்தி லிருக்கிறது. அதையுங் கூடப் பட்டப் பகலிலேயே பிரிட்டிஷ் விமானப் படை தாக்கிய போது தான், இந்தக் படையின் அரிய வேலைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஜெர்மன் முக்கிய தளபதி சென்ற செப்டெம்பர் மாதம் -ம் தேதி வெளியிட்ட அறிக்கையில், கீழ்க் கண்டவாறு தெரிவித்திருக்கிருர்:—

"பகலில் இரண்டு பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மனியை முழு மூச்சாகத் தாக்கி விட்டுப் போயின. ஒரு விமானத்தைச் சுட்டு வீழ்த்திளுேம்."

ஒரு வாரத்திற்குப் பிறகு பிரிட்டிஷ் விமான மந்திரி காரியாலயத்தி லிருந்து வெளி வந்த அறிக்கையில், 'இலேசான பாம்பர் விமானங்கள் துணை விமானங்கள் இன்றியும், மறைவதற்கு மேகங்களுமில்லாமல், ஜெர்மனியைச் சேர்ந்த விஸ்பேடனுக்கு அருகி லுள்ள முக்கியமான இராணுவக் குறிகளை, இருட்டும் வேளையில் தாக்கின' எனக் குறிப்பிடுகிருர்கள். லண்டனுக்கும் விஸ்பேடனுக்கும் 400 மைல்கள் தூரம். இதில் பெரும் பகுதி எதிரி நாடுகளைக் கடந்து தான் வர வேண்டும். என்றுலும், நம் படைகளில் இலேசான பாம்பர் விமானம் ஒன்று கூடத் தவருமல் திரும்பி வந்து சேர்ந்தன. ஓஸ்லோவைத் தாக்கிய விமானப் படைதான், ஜெர்மனிக் குள்ளாக பகலில் இவ்வளவு தூரம் போய்த் தாக்கி யிருக்க முடியும்.

மிக நெருங்கிய பிரிட்டிஷ் விமான தளத்திலிருந்து, ஓஸ்லோவிற்குப் போய் வர 1000 மைல்கள். அதாவது ஆக்ஸ்பரோவை லங்காஸ்டர் விமானப் படை தாக்கியது போலவே, இந்த விமானப் படையும் ஆஸ்லோவைத் தாக்கக் கூடும். லங்காஸ்டர், விமானத்தைப் போல அவ்வளவு கனமான வெடி குண்டுகளை இலேசான விமானங்கள் ஏற்றிப் போக முடியாது. என்றுலும் லங்காஸ்டர் விமானத்தை விட வேகமாகவும், கொஞ்சச் செலவிலும் இவை போகும். இதில் அதிகம் பேர் ஏறிப் போக முடியாது.

இப்போது அதிவேக விமானப் படை உபயோகத்திலிருந்து வருகிறது. பகலில் தாக்கும் இலேசான விமானங்களும் கனமான விமானங்களும் அவசியமா இல்லையா என்பது பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டி யிருக்கிறது. எந்த விதமான உதவிப் படையுமின்றி, பகல் காலத்திலேயே ஏராளமான விமானக் கோட்டைகளை ஜெர்மனிக்கு மேலே அனுப்பி, அவை எந்த அளவிற்குப் பயன் படு மென்று சோதிக்க வேண்டும். விமானக் கோட்டைப் படையும் அதிவேக விமான படையும் பகல் காலத்தில் தாக்குவற்குப் பெரிதும் பயன் படும் என்று தெரிகிறது.



# ரஷ்ய தளபதியின் இரகசியக் காரியாலயம்.

## உண்மைத் தியாகிகளின் வீரம்.

### ரஷ்யக் கவிஞர் கூறும் விவரம்.

கௌஸ்டான்டின் சுமனேவ் என்பவர் ஒரு ரஷ்ய கவி. அவர் ஸ்டாலின்கிராடி லிருந்து சமீபத்தில் தான் மாஸ்கோவிற்குத் திரும்பி வந்தார். அந் நகரத்தைப் பாதுகாக்க வேண்டி எவ்வளவு அற்புதமான முறையில் அங்கே ஏற்பாடுகள் செய்திருக்கிருர்கள் என்று அவர் விளக்கிக் கூறினுர்.

எரிந்து சாம்பலாகப் போன பல அடுக்கு மெத்தை வீட்டின் தளத்திற்கு அடியில் ஒரு அறை பூமிக்குக் கீழே இருக்கிறது. தெருவி லிருந்து படிக் கட்டுகளின் வழியாக அந்த அடி தளத்திற்குப் போனேன். அங்கே, வெடிகுண்டுப் பாதுகாப்பின் பொருட்டு அமைக்கப் படும் மணல் மூட்டை அணை போன்ற ஒரு அணை யிருந்தது. இதைக் கடந்து உள்ளே சென்றேன். மேலும் பல படிகள் கீழே போயின. பாதை மிகவும் இருண்டிருந்தது. இந்தச் சுரங்க அறையில் தான் ஸ்டாலின்கிராட் பாதுகாப்பு தலைமைக் காரியாலயம் இருந்தது. இந்த இருண்ட அறைக்கு ஆதாரமாக பருத்த தூண்கள் நிறுத்தப் பட்டிருந்தன. இந்தப் படைத் தலைவரின் பெயரை இப்போதைக்கு வெளி யிட முடியாது. என்றுலும் புகழோடு ஒரு காலத்தில் அது துலங்கும்.

இந்த இருட்டறையில் ஸ்டாப் ஆபீசர்கள் சென்ற ஒரு மாத காலமாக ஓயாது வேலை செய்து கொண்டிருக்கிருர்கள். அவர்கள் க்ஷவரம் செய்து கொள்ளுவ தில்லை. தாம் வேலை பார்க்கும் மேசை மீதே ரொட்டியையும் அயிரை மீனையும் சாப்பிடுகிருர்கள். நாள் தோறும் சுடச் சுட அவர்கள் சாப்பிடுவது முட்டைக் கோஸ் ரசமும் ஒரு பெரிய துண்டு இறைச்சியும் மட்டுந் தான். அந்த நில அறைக்குள் காற்று மிகவும் அசுத்தமா யிருந்தது. ஆகையால் ஈக்குச்சி அங்கே பற்றுவ தில்லை.

ஸ்டாலின்கிராட் போர் முனையின் தென் பகுதியில் முன்னணியிலிருக்கும் படைத் தலைவர் காரியாலயத்திற்கு, இந்த இருட்டறையிலிருந்து ஒரு 'ஸ்டாப் ஆபீஸர்' ஒரு டெலிபோன் செய்தி யனுப்புகிருர். இங்கே தான் மிகவும் பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த முன்னணி படைத் தலைவரின் காரியாலயம் பல அடுக்கு மெத்தைகள் உள்ள ஒரு வீட்டின் 5-வது மெத்தையி லிருக்கிறது. இது ஒரு இஞ்சினீர் சாப்பிடும் இடம். இங்கே வில்வெட்டு மெத்தை தைத்த நாற்காலிகளில் உத்தியோகஸ்தர்கள் உட்கார்ந் திருக்கிருர்கள். அங்கே மேசையின் மேல் ஒரு சில இராணுவப் படங்களும் ஒரு சிறுவர் நோட்டுப் புத்தகமும் இருக்கின்றன. அந்த அறையை யடுத் துள்ள ஜன்னலுக்குக் கீழே, அழகிய பூஞ் செடிச் சட்டிகள் வைக்கப் பட்டிருக்கின்றன.

தூர திருஷ்டிக் கண்ணுடி யில்லாமலேயே ஜெர்மானியர்களை அங்கிருந்து பார்க்கலாம். அதோ ஒருவர் மோட்டார் சைகிளில் போய்க் கொண்டிருக்கிருர். இங்கே தான் போன வாரம் செஞ் சேனைக் காவலாளிகளை மகா கடுமையாக ஜெர்மானியர்கள் தாக்கினுர்கள். முதலில் திடீ ரென்று ஜங்கர்களைக் கொண்டும் பீரங்கிப் படையைக் கொண்டும் வழக்கம் போல் எதிரிகள் தாக்கினுர்கள். பிறகு 200 டாங்கிகளும் மோட்டார் காலாட் படைகளும் பின் பற்றி வந்தன. இவை ஒரே நாளில் 12 முறை தாக்கின. இவற்றில் 42 டாங்கிகளை செஞ்சேனைக் காவலர்கள் அடித்துத் தள்ளி விட்டனர். பிறகு, ஜெர்மானியர்கள் ரஷ்யர்களோடு நேரில் போராடுவதை விட்டு, பக்க வாட்டில் பீரங்கிக் காரர்கள் மட்டும் நுழைந்தார்கள்.

இங்கே ஒரு உயர்ந்த கட்டிடத்தில் கடுமையான போர் நடந்தது. ஒவ்வொரு மெத்தையையும் ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். அந்தக் கட்டிடத்திற்குள் போகும் எல்லாப் பாதைகளையும் தம் பீரங்கிகளைக் கொண்டு தம் வசப்படுத்திக் கொண்டிருந்தார்கள். என்றுலும் செஞ்சேனைக் காவலர்கள் உள்ளே போனுர்கள். முதல் தளத்திலிருந்து இரண்டாவது தளத்திற்குப் போரிட்டுக் கொண்டே போனுர்கள். அது போலவே தான் அதன் ஒவ்வொரு பாதைகளிலும் கடும் போர் நடந்தது. பல முறை பல அறைகள் கைமாறின. அதாவது ரஷ்யர்களிட மிருந்த பல அறைகளை ஜெர்மானியர்கள் கைப்பற்றினுர்கள். அவற்றை மீண்டும் ரஷ்யர்கள் கைப்பற்றினுர்கள்; மீண்டும் ஜெர்மானியர்கள் கைப்பற்றினுர்கள். இப்படியாகப் பல முறை அவை கைமாறின. ஜெர்மானியர்கள் கை ஓங்குவதை ரஷ்யர்கள் கண்டார்கள். கடைசியாக, அந்தக் கட்டிடத்திற்கே வெடி வைத்து விடுவதென்று முடிவு செய்து விட்டார்கள் ரஷ்யர்கள்.

யார் வெடி வைப்பது? செஞ் சேனைக் காவலாளிகளில் ஐந்து பேர் முன் வந்தனர். அந்தக் கட்டிடத்தை எதிரிகள் பீரங்கிகளைக் கொண்டு தாக்கிக் கொண்டிருப்பதை அவர்கள் பொருள் படுத்த வில்லை. உள்ளே வெடிகளுடன் புகுந்தார்கள். கட்டிடம் இடிந்து நொறுங்கியது. அதிலிருந்த ஜெர்மானியர்கள் அனைவரும் புதைந்தார்கள். இந்த 5 பேர்கள் மட்டும் எப்படித் தப்பி யிருக்க முடியும்? அவர்களும் மடிந்து போய்த் தான் இருக்க வேண்டும். தியாகிகள்!

**ஜெர்மானியர் பின் வாங்குகின்றனர்.**

இந்தப் பகுதியில், ஜெர்மானியர் பின் வாங்கி, தம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தப் பகுதிக்கு அருகிலுள்ள ஒரு மூலையி லுள்ள பள்ளத்தில் ஜெர்மானியர்கள் பதுங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பகுதித் தலைமைக் காரியாலயத்தி லிருந்து பார்த்தால், இந்த இடம் நன்ருகத் தெரியும். அந்த மூலையில் கொஞ்ச நேரத்திற்கு முன்பு போலீஸ் சேவகர் நின்று கொண்டு போக்கு வரவுகளைச் சீர் படுத்திக் கொண்டிருந்தார். இப்போது, அந்த இடத்தில் வேருெருவர் நிற்கிருர். இவர் ஒரு பீரங்கிக்காரர்.

இங்கே ஒரு ஸ்டாலின்கிராட் தொழிற் சாலை யிருக்கிறது. இது ஒரு அகன்ற இடம். போராடும் பொருட்டு வெளி வருவதைத் தவிர, மற்ற நேரங்களில் தொழிலாளர்கள் ஓயாது வேலை செய்து கொண்டே யிருக்கிருர்கள். சென்ற வாரம் ஒரு தொழிற் சாலைக்குள் ஜெர்மானியர்கள் புகுந்து விட்டனர். அது ஒரு பழுது பார்க்கும் பட்டரை. அங்கிருந்த தொழிலாளர்கள் உடனே டாங்கிகளில், குதித்தார்கள். நேரே தொழிற் சாலை வாசலுக்கு விரைந்து போனுர்கள். அங்கே கடும் போர் நடந்தது. அவர்களை யடுத்து தொழிலாளர் ஹோம் கார்டுகள் 'புரொபஸர் பாசெங்கோ' தலைமையில் விரைந்து போனுர்கள். மற்ருெரு படையும் அங்கிருந்து கிளம்பியது. இதற்குத் தலைமை வகித்து நடத்தியவர் ஸ்டாலின்கிராட் போலீஸ் தலைவர்.

புரட்சிக் காலத்தில் ரஷ்யர்கள், மேல் அங்கியைப் போட்டுக் கொண்டு தான் போராடினுர்கள். அது போலவே தான் இப்போதும் இவர்கள் போராடினுர்கள். புரட்சிக் காலத்தில் ரஷ்யர்கள் தமக்குள்ளாகவே போராடி யிருக்கலாம். இவர்கள் தம்

மனைவி யோடும் பெண் மக்களோடும் போர் முனைக் குச் சென்முர்கள். உணவையும் வெடி குண்டுகளை யும் இப் பெண்கள் போர் முனைக்குக் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருந்தனர். இளம் பெண்கள், பதுங்கும் பள்ளங்களுக்குப் போய் காயப் பட்டவர்களுக்குச் சிகிச்சை செய்து, அவர்களைத் தொழிற் சாலைகளுக்குத் தூக்கிக் கொண்டு வந்தனர். செஞ் சேனைக் காவலர்களுக்குத் தகுந்த உதவி வருகிற வரை, அதாவது அன்று மாலை வரை, அந்தப் பெண்கள் ஒரு கல் பாலத்திற் குள்ளாகவே அவர்களுக்கு உதவியா யிருந்தனர். காவலர்கள் அன்று மாலை உதவிக்கு வந்த வுடனே, தொழி லாளர்கள் மீண்டும் தம் தொழிற் சாலைக்குப் போய், போராடுவதற்காக அங்கே டாங்கிகள் செய்து கொண்டிருந்தனர்.

வால்கா ஆற்றின் வழியாகத் தான் படைகளும், வெடி மருந்துகளும், உணவும், பீரங்கிகளும், போர் முனைக்கு வருகின்றன. முதல் உதவிப் படை யைச் சேர்த்த நர்ஸுகளும் இவ்வழியாகத் தான் வருகிருர்கள். காயம்பட்டவர்களை இவர்கள் தூக்கிக் கொண்டு திரும்ப அதே ஆற்றின் வழியாகப் படகு களில் கொண்டு போய்க் கரை சேர்க்கிருர்கள். அங்கிருந்து ஸ்டாலின் கிராடுக்கு வெகு தூரத்தி லுள்ள வைத்திய சாலைக்கு மோட்டார் லாரிகளில் அவர்களைக் கொண்டு போகிருர்கள்.

இந்தப் படகுகள் போய் நிற்கு மிடத்தில் பல கருங் கட்டைகள் கிடந்தன, அருகே, எரிந்து சாம்ப லான ஒரு கப்பல் நின்றிருந்தது. இதை எதிரிகள் வெடி குண்டெறிந்து நாசஞ் செய்து விட்டார்கள் போலிருக்கிறது. அங்கே கிடந்தவை கருங் கட்டை களா? அல்ல. பிணங்கள். அந்தக் கப்பலில் தப்பிப் போக முயன்றவர்கள். வெடி குண்டுக்கு ஆளானவர்கள். ஸ்டாலின் கிராட் நகரத்தை விட்டுத் தப்பிப் போக முயன்ற அநேகம் பெண்களும் குழந்தைகளும் இறந்து போனுர்கள். எரிந்து கொண்டிருக்கும் அந்நகரத்தில் ஒருவரும் கிடையாது. அங்கிருந்த வீடுக ளெல்லாம் இன்னும் காலியாகத் தான் இருக்கின்றன.

## செஞ் சேனைகளின் உறுதி:

### வெற்றி நிச்சயம் என்ற உறுதி.

ரஷ்யர்கள் மிகச் சிறந்த தோர் காரியத்தைச் செய்து முடித் திருக்கிருர்கள். அதாவது எதிரிகளின் இடது புரத்தில் ஒரு போர்முனையை ஆரம்பித்து விட்டார்கள். இயற்கைச் சங்கடங்கள் சில இருந்தன. அவற்றை யும் வென்று விட்டார்கள். இதற்கு அவர்களுடைய அறிவுத் திறமையும் மன உறுதியுந் தான் காரணம். சென்ற வருஷம் கடும் மழை காலத்திலும் இதே நிலைமையில் தான் இருந்தார்கள்.

ஸ்டாலின்கிராடை யொட்டி பரந்த சதுப்பு நிலங் களிருக்கின்றன. இங்கே 3 மாதங்கள் பனி பெய்த பிறகு, கடும் காற்று வீசுகின்றது. இந்தக் காலத்தில் ஒதுங்குவதற்குக் கூட இடங் கிடைக்காது. வட பக்கத் தில் சதுப்பு நிலங்கள் எல்லாம் பாறை போல் உறைந்து இருக்கும்.

ஸ்டாலின்கிராட் போர் முனையில் வட மேற்குப் பகுதி தான் மிகவும் கடுமையானது. இங்குள்ளவர் கள் நல்ல பொறுமை சாலிகள்; பலசாலிகள்; எளிய வாழ்க்கை முறை யுள்ளவர்கள். இவை ரஷ்யர்களின் இயற்கைக் குணங்கள் போலிருக்கிறது. இங்கே செஞ் சேனைகள், ஜெர்மானியர்களைத் திருப்பி விரட்டியடிக் கின்றன. நிச்சயமாக வெற்றி பெறலாம் என்னும் உறுதி யோடு தான் ரஷ்யர்கள் போராடுகிருர்கள். யுத்தத்தினுல் ஏற்படக் கூடிய எல்லாக் கஷ்டங்களும் ஜெர்மானியர்களுக்கே வாய்க்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு என்னென்ன செய்யக் கூடுமோ, அவ் வளவும் அவர்கள் செய்கிருர்கள்.

இப்போது ஸ்டாலின்கிராட் தெருக்களில் மிகக் கடுமையான போர் நடை பெறுகிறது. இது மிகவும் முக்கியமான தோர் போராட்டந் தான். அது போலவே மிகவும் முக்கியமானவை தான் அதை யடுத்துள்ள பரந்த சதுப்பு நிலங்கள். இங்கே ஜெர்மானியர்கள் மிகச் கடுமையாக எதிர்த்துத் தாக்குகிருர்கள். என் ருலும் கொஞ்சங் கொஞ்சமாக ரஷ்யப் படைகள் முன் னேறிக் கொண்டு வருகின்றன.

## பிரிட்டிஷ் விமான பலம் பெருகுகிறது.

பிரிட்டிஷ் படை விமானங்களில் பல வகை யுண்டு. அவைகளில் ஒன்று கனத்த பாம்பர் விமானம். இதன் மொத்த எடையில், கால் பங்குக்கு அதிக மான கன முள்ள வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்லக் கூடாது. இதில் ஒரு முக்கியமான அம்ச முண்டு. இதை யொட்டித் தான் தற்காலத்திய கனத்த பாம்பர் விமானங்கள் கட்டப் பட வேண்டும். விமா னத்தில் உள்ள பெட்ரோல் எண்ணெயின் கனமும் வெடி குண்டுகளின் கனமும் ஒன்றிற் கொன்று மாற்றிக் கொள்ளத் தக்கபடி யிருக்க வேண்டும். ஒரு விமானத்தில் நிறைய வெடி குண்டுகள் இருந் தால், அதன் போக்கின் அளவு குறையும்; அது போலவே, விமானத்தின் டாங்கி நிறைந்திருந்தால், அதன் மீதுள்ள வெடி குண்டுகளின் கனமும் குறைந் திருக்க வேண்டும். அதாவது விமானம் வெகு தூரம் பறந்து போகத் தக்கபடி போதுமான அளவு டாங்கிகள் அதில் அமைக்கப் பட வேண்டும். அப்போது 4,000 டன் வெடி குண்டுகள் மட்டுந் தான் அதில் ஏற்றிப் போகலாம். ஏனென்ருல், இது தான் விமானங்களில் ஏற்றிப் போகக் கூடிய வெடி குண்டு களின் குறைந்த அளவு.

இரண்டாவது விஷயம் வேகம்: இதைக் கொண்டு தான் ஒரு பெரிய பாம்பர் விமானத்தின் மதிப்பை நிர்ணயிக்கலாம். ஒரு விமானத்தின் சக்திக் கேற்ற அளவு கனத்தை அமைத்துத் தெளிவான முறையில் திட்ட மிட்டுக் கட்டப் பட்ட விமானங்கள் வெகு தூரம் போகின்றன. விமான இரக்கைகளில் ஏற்றக் கூடிய கனத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக அதிகப் படுத்திக் கொண்டு வருகிருேம். இப்போது சாதாரணமாகப் பெரிய விமானங்களில் உள்ள இரக்கைகளில் ஒரு சதுர அடிக்கு 40 பவுண்டு கனத்திற்கு அதிகமாகவே ஏற்றக் கூடிய நிலையில் இன்றிருக்கிருேம். கனத்த பாம்பர் விமான நிலையங்களி லெல்லாம் விமானங்கள் புறப்படுவதற்குப் போதுமான சம வெளி யிருக்க வேண்டிய தவசியம். இவற்றை முன்னிட்டும், விமான மோட்டார்கள் செய்வதில் ஏற்பட்டுள்ள விருத் திகளை முன்னிட்டும், இன்று, ஏறக்குறைய ஒரு மணி க்கு 220 மைல் வேகம் விமானங்கள் பறக்கின்றன.

பல மத்திபமான பாம்பர் கட்டுவதற்குத் தேவை யான ஆட்களைப் போல, லெங்காஸ்டர் விமானங்கள் கட்ட, அத்தனை ஆட்கள் தேவை யில்லை.

யுத்த ஆரம்பத்தில் ஒரு கனத்த விமானம் ஏற்றிச் சென்றதைப் போல 3 பங்கு பளு இப்போதுள்ள அதே அளவுள்ள விமானங்கள் ஏற்றிச் செல்லு கின்றன. இவற்றில் ஏற்றிச் செல்லும், வெடி குண்டுகளின் கனத்தைப் போல இரண்டு பங்கு கனமுள்ள வெடி மருந்துகளையும், அரைப் பங்கு கனமுள்ள விமானிகளையும் ஏற்றிச் செல்ல லாம். அல்லாமலும் கனத்த பாம்பர் விமானங் களில் ஏறிப் போய் ஆபத்திற் குள்ளாகிறவர்களின் எண்ணிக்கை இப்போது அவ்வளவு அதிக மல்ல. லெங்காஸ்டர்ஸ், ஹலிபாக்ஸஸ், ஸ்டெர்லிங்ஸ் ஆகியவை மூன்று வகை விமானங்கள். இவை ஆறு வருஷங்களுக்கு முன்னதாகவே திட்டமிட்டு வகுக்கப் பட்டவை. இதிலிருந்து பிரிட்டிஷ் விமானத் தொழில் எவ்வளவு திறமை யோடிருக்கிற தெனத் தெளிவாகிறது.

—"ஏரோப்ளேன்."



## நாஜிகளின் கடும் ஏக்கம்

### ஜெர்மனி புளுகு மூட்டை

ஒரு வகையில் ஜெர்மானியர்கள் மகா கெட்டிக் காரர்கள். ஒன்றை பத்தாக்கிப் பெருக்கிப் புளுகுவ தில் அதிக சமர்த்தர்கள். ரஷ்யாவிற்கு பிரிட்டனி லிருந்தும் அமெரிக்காவி லிருந்தும் ஏராளமாக யுத்தத் தள வாடங்கள் தகுந்த பாது காப்புக்க ளுடன் கப்பலில் போய்க் கொண்டிருக்கின்றன. இவற்றை ஏராளமாக ஜெர்மன் விமானங்களும் நீர் மூழ்கிக் கப்பல்களும் நாசஞ் செய்து விட்டதாகப் புளுகிக் கொண்டிருக்கிருர்கள் ஜெர்மானியர்கள். இதி லிருந்து ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. நாஜி பிரதம தளபதி மிகுந்த ஏக்கம் கொண்டிருக் கிருர் என்பதைத் தான் இது விளக்குகிறது.

"டெய்லி டெலிகிராப்" பத்திரிகை மேலும் கூறு வதாவது:—

பிரிட்டனுக்குச் சொந்தமானது மால்டா தீவு. இது மத்திய தரைக் கடலில் உள்ளது. இதற்கும் யுத்தத் தளவாடங்கள் துணைக் கப்பல்க ளோடு போய்க் கொண்டிருக்கின்றன. கடைசியாகப் போன துணைக் கப்பலைத் தாம் நாசஞ் செய்து விட்டதாக ஜெர்மன் தளபதி புளுகினுர். இந்தப் புளுகுச் செய்தியை அச்சு நாட்டு ரேடியோக்கள் வெகு ஆர்ப்பாட்டத் தோடு தெரிவித்தன. ஆனுல், உண்மையில் நடந் தது என்ன? அந்தத் தீவிற்குத் தேவையான எல் லாத் தளவாடங்களும் பத்திரமாக அங்கே போய்ச் சேர்ந்தன.

நிற்க, ரஷ்யாவிற்கோ ஏராளமான தளவாடங் கள் இப்போது தேவை. அதுவும் மிக அவசரமாகத் தேவை. ஏனென்ருல் ஸ்டாலின்கிராட்டில் மிகக் கடுமையாகப் போராடுகிருர்கள். இந்தப் போர் நெடு நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. ஜெர்மானி யர்கள் வால்காவை நோக்கி முன்னேறப் பார்க்கிருர் கள்; காகஸஸ் மலைப் பிரதேசத்தையும் கைப்பற்றப் பார்க்கிருர்கள். இந்தக் காரணத்தால் ரஷ்யர்கள் கடுமையாகப் போராட வேண்டி யிருக்கிறது. அதனுல் மூலப் பொருள்கள் சேகரிக்கவோ, அவற்றைக் கொண்டு யுத்தத் தளவாடங்களை உற்பத்தி செய்யவோ முடிவ தில்லை. இதனுலும் ரஷ்யர்களுக்கு நஷ்டம்.

என்ருலும், மகா வீரா வேசத்தோடு ரஷ்யப் படை கள் போர் புரிகின்றன. ஆகவே, ஏராளமான சப்ளை கள் அவர்களுக்கு அனுப்ப வேண்டும். இது நேச நாட்டினரின் கடமை. கொஞ்ச காலமாக அமெரிக்க பாம்பர் விமானங்கள் ஜெர்மனியைத் தாக்கிக் கொண் டிருந் திருக்கின்றன. இந்த விமானக் கோட்டைக ளின் எண்ணிக்கை இரண்டு அல்லது மூன்று மடங்கு, விரைவில் அதிகப்படும். இந்த விமானங்கள் தாக்கிய இடத்தி லிருந்து தான் தளவாடங்களும் படைகளும் ரஷ்யப் போர் முனையிலுள்ள ஜெர்மன் படைகளுக்குப் போய்ச் சேர வேண்டும். இவற்றை தாக்குவதின் பயனுக, ரஷ்யாவிற்கு எளிதில் தளவாடங்கள் போய்ச் சேருகின்றன.

செங்கடலுக்குப் போகும் பாதை மிகவும் நீண்டது. அது போலவே தான் பாரசீக வளைகுடாவிற்கும். இதற்குக் கப்பலில் மட்டும் போனுல் போதாது. ஈரான் வழியாகவும் ஈராக்கு வழியாகவும் நெடுந் தூரம் தரை வழியாகப் போவதற்குப் பாதை போட வேண்டும்.

மத்திய கிழக்கிலும் ஏராளமான விமானங்களும், டாங்கிகளும், பீரங்கிகளும், துறைமுகத் தளங்களும், இஞ்சினீரிங் ஸ்தாபனங்களும் வேண்டி யிருக் கின்றன.

சமீபத்தில் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் கூறியதாவது:—

சீனுவிற்கு விமான பலமும் இயந்திர பலமும் மிகவும் தேவையா யிருக்கின்றன. அது போலவே தான் இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் தேவை. என்ருலும் இந்நாடுகள் ஒவ்வொன்றிற் கும் ஓரளவிற்குத் தான் இப்போது தளவாடங்கள் அனுப்ப முடிகிறது. இதற்குக் காரணங்கள் இரண்டு —(1) உற்பத்தியின் அளவு. (2) அவற்றை அனுப்பி வைப்பதனுல் நேரக் கூடிய நஷ்டம். பெரிய பாம்பர் விமானங்கள் நெடுந் தூரம் பறக்கக் கூடும். உதாரண மாக ஒரு பெரிய பாம்பர் விமானம் தென் அமெரிக் காவி லுள்ள பிரேசிலி லிருந்து, மேற் காப்பிரிக்கா விற்குப் பறக்கலாம். ஆனுல் போராடும் விமானங் கள் கப்பல் மூலமாகத் தான் கொண்டு வரப் படக் கூடும். இவற்றை மட்டும் கொண்டு யுத்தத்தில் வெற்றி பெறக் கூடுமா? தரைப் படைகளுக்கு வேண் டிய தளவாடங்களும் தேவை. இவற்றையும் கப்பல்

## சந்தேகியா யிருங்கள்.

எதுவும் உண்மை என்று தெளிவாகத் தெரிந்தால் அல்லது, சந்தேகி எதையும் நம்ப மாட்டான். பொய் வதந்திகள் சம்பந்தப் பட்ட வரை, சந்தேகி யாகவே இருங்கள். உங்களுக்குத் தப்பான கருத்துக்களை உண்டாக்க வேண்டி, இந்தப் பொய் வதந்திகள் பெரும்பாலும் ஜப்பானி லிருந்து கிளம்புகின்றன.

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியர்களுக்கு விரோதமாகத் தேசியப் போர் முனையை அமையுங்கள்.

வழியாகத் தான் கொண்டு வர வேண்டும். ஒரு இடத்தி லிருந்து ஏராளமான டாங்கிகளையும் பீரங்கிகளையும் அனுப்ப வேண்டு மென்றால், கப்பல்களில் அவற்றிற்கு இடங் கிடைப்பது கஷ்டமா யிருக்கிறது.

பல கப்பல்களை எதிரிகள் மூழ்கடிக்கிறார்கள். என்றாலும், இப்படி மூழ்கடிக்கப் படும் கப்பல்களின் எண்ணிக்கையை விட, அதிகம் கப்பல்களைப் புதிதாகக் கட்டுகிறோம். இது பற்றி சமீபத்தில் ஒரு ஜெர்மன் ரேடியோ ஒப்பாரி வைத்தது. யு படகுகளின் வேலை எவ்வளவு கடினமாகி விட்ட தென்று புலம்பிற்று. இதிலிருந்து ஒரு உண்மை வெள்ளையாகத் தெரிகிறது. ஜெர்மானியர் கொண்டிருந்த மன உறுதி தளர்ந்து விட்டது என்பதைத் தான் இது காட்டுகிறது. என்றாலும் நாம் எச்சரிக்கையோடு தான் இருக்க வேண்டும். நாஜிகள் போர்த் தந்திரத்தில் கெட்டிக் காரர்கள். எனவே, நம் கப்பல்கள் போக்கு வரவைத் தகர்க்க முயற்சிப்பார்கள். வழிகளில் தகுந்த படைகளை வைத்திருப்பார்கள். பல அற்புதச் செயல்களை நம் கப்பற் படைகளும் வியாபாரக் கப்பல்களும் இதற்கு முன்பு செய்திருக்கலாம்; மகா வீரத் தோடும் திறமையோடும் போராடி யிருக்கலாம். ஆனால், நாஜிகளின் ஆதிக்கம் ஒழிய வேண்டும். அப்போது தான் அச்சம் இல்லாமல் கப்பலில் பிரயாணம் செய்யலாம்.

"நேச நாடுகளுக்கு மேலும் மேலும் கப்பல்கள் தேவை," என்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் சமீபத்தில் குறிப்பிட்டார். வெயில் காலத்தில் அநேகக் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டன. ஆகவே, அவற்றிற்கு ஈடு செய்ய வேண்டி யிருக்கிறது. ஏனென்றால் அமெரிக்காவி லிருந்து மத்திய கிழக்குப் போர் முனைக்குக் கப்பல்களை யனுப்ப வேண்டும். இந்தக் கப்பல்கள் நன்னம்பிக்கை முனை வழியாகத் தான் போக வேண்டியிருக்கிறது. அதாவது, இதனால் நெடுந் தூரம் கப்பல்கள் பிரயாணம் செய்ய வேண்டி யிருக்கிறது. அது போலவே தான், அமெரிக்காவின் மேல் கரையிலிருந்து புறப்படும் கப்பல்களும் வெகுதூரம் பிரயாணஞ் செய்ய வேண்டி யிருக்கிறது. இதற்குப் பல மாதங்கள் பிடிக்கின்றன.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் ஒரு பிரகடனம் செய்தார். அதில், நேச தேசப் படைகள் எதிரிகளைத் தாக்க வேண்டு மென்று குறிப்பிட்டார். அவர்கள் நெஞ்சைப் பிளக்க வேண்டு மென்று கூறினார். ஒவ்வொரு யுத்த ஆலோசனை சபையும் இந்தக் கொள்கையைத் தான் அடிப்படையாகக் கொள்ள வேண்டும். நேச நாடுகளின் பலம் குலையா திருக்க வேண்டு மானால், அவற்றின் படைகள் ஒன்று பட்டு வேலை செய்ய வேண்டும். எந்த இடத்தில் தாக்கினால் எதிரிக்கு மிகவும் சேதம் உண்டாக்கக் கூடுமோ, அந்த இடம் பார்த்துத் தாக்க வேண்டும்.



## பிரியமான பெயர்க ளெல்லாம் மாறிப் போமே !

ஜப்பானியர் சிங்கப்பூரைப் பிடித்ததும் அம் மாநகருக்கு ஜப்பான் பெயர் ஒன்றை சூட்டினர்! புண்ணிய பூமியாகிய நம் பாரத நாட்டில் சரித்திர கீர்த்தி வாய்ந்தவையும் புராணப் பிரசித்தி யுடையவையுமான பட்டணங்கள், எத்தனை திருக்கோயில்கள், புனித தீர்த்தங்கள்! ஹா! 38 கோடி மக்கள் ஒன்று போல் மிகக் கொண்டாடும் இத்திவ்விய ஸ்தலங்க ளெல்லாம் ஜப்பானியர் வசமாகில், கதி யென்னவாகும் தெரியுமா? ஐயோ! சகலமும் சிங்கப்பூரைப் போல் பெயர் மாறி உருத் தெரியாமல் மிலேச்சப் பட்டுப் போமே! ஈவிரக்க மில்லாத குள்ளர்கள் நம் மனோ பாவங்களை மதிக்கப் போவதில்லை!



இப்படிப் பட்ட அக்கிரமம் நேரப் போம் போது, பாரத வீரர்களாகிய நாம் கையும் கட்டி வாயும் பொத்தி சுத்தப் பேடிகளைப் போல் பயந்து நடுங்கி ஒடுங்கி யிருப்பதா என்ன? ஒருக்காலு மில்லை! எல்லோரும் சேர்ந்து நம் முழு பலத்துடன் இக்குள்ளர்களை ஒரு கை பார்த்தே விடுவோம்!

**ஜப்பானியருக் கெதிராக தேசியப் போர் முனை அமையுங்கள்**



PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு அக்டோபர்மீ 23உ, வெள்ளிக்கிழமை [இதழ் 42

## பிரிட்டிஷ் கோட்டை விமானம்



இது அமெரிக்காவில் கட்டப்பட்டது. ப்ரெஸ்ட் நகரத்தைத் தாக்க, பிரிட்டிஷ் விமானப் படையோடு புறப்படுகிறது.

## தேசியப் போர்முனை சேர்வீர் !

1. இராகம்—தேசிகம். தாளம்—ஆதி.

பல்லவி

தேசியப் போர் முனை—சேர்ந்து செய்வீர் வினை
தெளிந்தும் உதவி செய்வீர் தேசமும் வாழவே (தே)

அனுபல்லவி

1. நாசி எனுங் கொடிய நாகங்க ளாலே
நாடு பல விஷங்கொண் டொழிந்தன வாலே
நசுக்கியே கொல்வீர்—நாசியை வெல்லுவீர்
நாளும் உலகம் வாழ நல்வார்த்தை சொல்லுவீர் (தே)

2. பஞ்சமா பாதகங்கள் பலத்தவ தாரம்
பாரில் எடுத்தனபோல் பயங்கரக் கோரம்
படிந்திடும் மேனியர்—இடிந்த ஜப்பானியர்
பதைத்திடவேயவரை வதைத்திடக் கூடுவீர் (தே)

3. நாட்டினில் ஒற்றுமையை நாட்டிட வேண்டும்
நாவலந் தீவில் உள்ளோர் நலம் பெறயாண்டும்
நாளுமே வாயிதம்—நவின்றிட ஆயுதம்
நாடிக்கொண்டெதிரி நாட்டினை யோட்டுவீர் (தே)

# உலகப் போக்கு

சீனவிற்கு பிரிட்டிஷ் தூதுக் கோஷ்டி யொன்று போய்க் கொண்டிருக்கிறது. பிரபுக்கள் சபை யங்கத்தினர் இருவரும், காமன்ஸ் சபை யங்கத்தினர் இருவரும் சேர்ந்தது இந்தக் கோஷ்டி. சீனத்தலைவர் ஜெனரலிஸிமோ சியாங்-கே-ஷேக் விருப்பப்படி தான் இது சூங்கிங்குக்குப் போகிறது. சென்ற சனிக்கிழமை லிஸ்பன் நகரத்தை இது கடந்து விட்டது.

சீனவில் பிரிட்டிஷாருக்கும் அமெரிக்கர்களுக்கும் தனித் தனியாக சில பகுதிகளை ஒதுக்கிக் கொடுத்திருந்தார்கள். இந்தப் பகுதிகளில் அவர்களுக்கு விசேஷ உரிமைகள் இருந்தன. இவற்றை இப்போது பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் விட்டுக் கொடுத்து விடும் எண்ணத் தோடிருக்கிறார்கள். பிரிட்டிஷாருக்கும் அமெரிக்கர்களுக்கும் சீனர்களிட முள்ள நேசத்திற்கு இது அறிகுறியாகும். ஆகவே, சீனர்கள் இந்தக் கோஷ்டியை மிகுந்த உள்ளன்போடு வரவேற்பார்கள் என்பது நிச்சயம்.

1939-ம் வருஷம் ஜனவரி மீ 14 உ, 1940-ம் வருஷம் ஜூலை மீ 18 உ, 1941-ம் வருஷம் ஜூன் மீ 11 உ தேதிகளில் மன்னர்பிரான் அரசாங்கத்தார் சில பிரகடனங்கள் செய்தார்கள். இவற்றை யொட்டி 1942-ம் வருஷம் அக்டோபர் மீ 10 உ ஒரு அறிக்கையை வெளி யிட்டிருக்கிறார்கள். இதன் படி, சீனவில் தமக்கு உள்ள விசேஷ உரிமைகளை விட்டுக் கொடுப்பதைக் குறித்து, கீழக்கோடி யுத்தம் முடிவடைந்தவுடனே, சீன அரசாங்கத்தாரோடு கலந்து பேசுவார்கள். இது போலவே, அமெரிக்க அரசாங்கமும் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. சீனத் தோழர்களிடம் தமக்குள்ள சிநேகத்தை இது எடுத்துக் காட்டுகிறது. சீனவில் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் பகுதிகளில் அவர்கள் அனுபவிக்கும் விசேஷ உரிமைகளையும் அவர்கள் விட்டுக் கொடுப்பார்கள்.

**முக்கியமான 3 விஷயங்கள்.**

இந்த அறிக்கையினால் மூன்று விஷயங்கள் தெளிவாகின்றன. 1. பல வருஷங்களுக்கு முன்னால் சீன அரசாங்கத்திற்கு பிரிட்டிஷ் அரசாங்கம ஒரு வாக்குறுதி கொடுத் திருந்தது. அதன்படி இந்த விசேஷ உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டும். அந்த வாக்குறுதி இப்போது நிறைவேறப் போகிறது. 2. பசிபிக் நாடுகளில் ஆங்கிலோ அமெரிக்கக் கூட்டுறவைப் பற்றிய ஏற்பாடுகளின் முதல் பிரகடனம் இது தான் 3. ஜப்பான் 'கூட்டு முன்னேற்றக் கொள்கைக்கு' இது முற்றும் முரணனது. ஜப்பானியரை பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் தகுந்த தருணம் பார்த்து தாக்குவார்கள் என்றும் இது அறிவிக்கிறது.

நிற்க, 1926-ம் வருஷம் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். இதன் படி சீனவிலுள்ள பிரிட்டிஷாரை சீனச் சட்டங்களுக்கு உட்படுத்த இசைந்தார்கள். இதை யொட்டி பிரிட்டிஷார் ஆதிக்கத்தி லிருந்த ஹாங்கோ, சியான் கியாங், கியு கியாங் ஆகிய விசேஷப் பகுதிகளை மீண்டும் சீனவிற்கே திருப்பிக் கொடுத்து விட்டார்கள். இந்த விசேஷ உரிமைகளை விட்டுக் கொடுத்து விடுவது திடீரென்று இப்போது ஏற்பட்டக் கொள்கை யல்ல. ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கமும் அமெரிக்க அரசாங்கமும் நெடு நாட்களாகச் சாதகமான முறையில் ஆலோசித்து வந்த தோர் விஷயமாகும். இதன் முதல் 'படிதான்' சீனவையும் சர்வதேச சங்கத்தில் சேர்த்துக் கொண்டது. இரண்டாவதாக, 'பாக்சர்' பொறுப்பில் சீனவிற் குள்ள பகுதியை அமெரிக்கா கொடுத்து விட்டது. இதன் பயனாக, சீனவில் கல்வி முறை நன்கு அமைந்தது. மூன்றாவதாக, 16 வருஷங்களுக்கு முன்பு ஹாங்கோ முதலிய பிரிட்டிஷ் பகுதிகளைத் திரும்பவும் சீனவிற்குக் கொடுத்தது. இது பற்றி ஏற் கெனவே குறிப்பிட்டிருக்கிறோம்.

சீனவில் அந்நிய நாட்டார் தனிப் பகுதிகளில் வாழும்படி அனுமதிக்கப் பட்டனர். தம் வழக்க பழக்கங்களையே அவர்கள் கைக் கொண்டு வந்தார்கள். தாங்கள் வகுத்த சட்டப்படியே நிர்வகித்து வந்தார்கள். இதே முறையை யொட்டித் தான் கிரேக்கர்களையும், ஆர்மீனியர்களையும், துருக்கி அரசாங்கம் பிரித்து தனிப் பகுதிகளில் வசிக்கும்படி செய்தது. துருக்கி சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வசித்த போதிலும், தமக்குத் தனியாக சட்ட திட்டங்கள் வகுத்து அவற்றின்படியே நிர்வாகத்தை அவர்களும் நடத்தி வந்தார்கள். துருக்கியின் ஆதிக்கம் குறையத் தலைப் பட்ட வுடனே, விசேஷப் பகுதிகளை அந்நியர்கள் நிர்வகித்து வந்தது, மிகுந்த ஆபத்திற்கு இடமாயிருந்தது. முதலில், நிர்வாகத்தைப் பிரிப்பதனால் சௌகரியமான முறையு மென்று எண்ணினார்கள். ஆனால் அது அரசியலில் இழிவு ஏற்பட, இடமளித்தது.

* * * * * *

**வேலியே பயிரை மேய்ந்தது.**

இதே நிலைதான் சீனவிற்கும் ஏற்பட்டது. அந்நிய நாட்டார் தம் நாட்டில் வந்து குடியேறுவதை, சீனர்கள் விரும்ப வில்லை. எனவே அவர்களைத் தனிப் பகுதிகளில் வைத்து விட வேண்டு மென்று விரும்பினார்கள். இதன் பயனாக பல பகுதிகள் அந்நிய நாட்டாருக்கு என்று ஏற்பட்டன. அவர்கள் அங்கே தமக்கு ஆதிக்கத்தைத் தேடிக் கொண்டார்கள். இத்தலையும் சீனவிற்கும் மத்தியிலேயே. இந்த விசேஷ உரிமைகளால், சாம்ராஜ்ய உரிமைக்கே பாதகம் நேரும் என்று கருத இட மிருந்தது. "வேலியே பயிரை மேய்ந்தது"

அந்நிய நாட்டாருடைய வழக்க பழக்கங்களுக்கும் சட்டங்களுக்கும், உள்நாட்டுச் சீனர்களுடைய வழக்க பழக்கங்களுக்கும் சட்டங்களுக்கும் மிகுந்த வேற்றுமை யிருந்தது. அதனால் தான் அந்நியர்களுக்கு விசேஷ உரிமைகள் அளிக்கப் பட்டன. ஆனால், இந்த வழக்க பழக்கங்களையும் சட்டங்களையும் இணைப்பது தான், தற்காலப் போக்கு. இதற்குக் காரணம், கருத்துக்களைத் தாராளமாகப் பரிமாறிக் கொள்வது தான். ரோமன் சட்டத்தை யொட்டித் தான் நெபோலியன் சட்டம் வகுத்தார். இதை யொட்டித் தான் மற்ற எல்லாச் சட்டங்களும் ஏற்பட்டன. ஆங்கிலோ சாக்ஸன்கள் தவிர, உலகிலுள்ள எல்லா இனத்தாரும் ரோமன் சட்டத்தின் தத்துவங்களை ஒப்புக் கொள்ளுகிறார்கள். முன் கூறிய விசேஷ உரிமைகளை விட்டு விடுவதனால், எல்லோரும் ஒரே சட்ட திட்டங்களுக்கு உட்பட்டவர்கள் ஆகிறார்கள். இதில் இன்னொரு முக்கிய தத்துவமு மிருக்கிறது. அதாவது, இதே முறைப்படி பாரசீகத்திலும் விட்டுக் கொடுத்தால், ரூஸ்வெல்ட் செய்த அட்லான்டிக் பிரகடனம் ஆசியாவுக்கும் பொருந்துவ தாகும். இந்த பிரிட்டிஷ் தூதுக் கோஷ்டி சீனவிற்கு விஜயம் செய்வதால், இந்த முக்கியமான ஒற்றுமையின் அறி குறியும் நெருங்கிய தொடர்பும் மேலும் உறுதிப் படுகின்றன.

---



# யுத்தப் போக்கு

ராய்ட்டர் விசேஷ நிருபர் மாஸ்கோவி லிருந்து கீழ்கண்டவாறு நாளது அக்டோபர் 20-ம் தேதி எழுதுகிறார் :—

ஸ்டாலின்கிராட் யுத்தம் மிகவும் நெருக்கடியான நிலைமையி லிருக்கிறது. வட பாகத்தை ஜெர்மனியர்கள் கைப்பற்றிக் கொள்ளுவார்க ளானால் மத்திய பாகத்தின் நிலைமை சற்று கடினமானதாகி விடும். இந்தப் போரின் பலாபலன் எப்படி யிருந்த போதிலும், ஒரு விஷயம் மட்டும் தெளிவாகிறது. **சோவியத் யூனியனையோ செஞ் சேனையையோ தகர்க்க ஜெர்மனியரால் முடிய வில்லை என்பது உண்மை.** இதை ஜெனரல் டிட்மார் முதலிய இராணுவ நிபுணர்கள் மனையார சமீபத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். லெனின்கிராட், மாஸ்கோ பகுதிகளில் போராடியதில், ஜெர்மனியர்களுக்கு மிகுந்த அனுபவமுண்டாகி விட்டது. இதை ஆதாரமாகக் கொண்டு இந்தப் பனிகாலத்தில் தாம் கைப்பற்றிய பகுதிகளைக் காப்பாற்றிக் கொள்ளலா மென்றும், மேலும் ரஷ்யர்கள் தம்மைத் தாக்காதபடி தற்காத்துக் கொள்ளலா மென்றும் நினைக்கிறார்கள். சென்ற வருஷம் பனி காலத்தில் ஜெர்மானியர்கள் ரிஷேவ், ப்ரியான்ஸ்க், வியாஸ்மா, ஓரெல், கார்கோவ் ஆகிய முக்கியமான இடங்களை அரண் செய்து கொண்டார்கள். இந்த அரண்களைச் சுற்றி சுரங்க வெடிகளை யமைத்தார்கள்; பீரங்கி பாட்டரிகளையும் டாங்கி எதிர்ப்பு பட்டரிகளையும் அமைத்துக் கொண்டார்கள். இவற்றைக் கொண்டு, ரஷ்ய டாங்கிகளோடு கடும் போராடித் தடுத்தார்கள். இதே முறையைத் தான் இப்போதும் கையாளப் போவதாகத் தெரிகிறது. இந்த வெயில் காலத்திலும் கூட, இதே முறையைத் தான் பின் பற்றினார்கள்.

**ஹிட்லர் பீத்துகிறார்!**

"ஸ்டாலின்கிராடை ஒரு முறை பிடித்து விட்டால், பிறகு விட மாட்டோம்" என்று ஹிட்லர் பீததிக் கொள்ளுகிறார். இதிலிருந்து ஒரு விஷயம தெரிகிறது. ஜெர்மனியர்கள் கட்டும் அரண் சுவரை வால்கா வரைக் கட்டிவிடுவது என்று முடிவு செய்திருக்கிறார்கள் என்று எண்ண வேண்டி யிருக்கிறது. செஞ் சேனைகள் முன்னேறி வர ஒட்டாதபடி இந்தச் சுவர் தடுக்கும் என்று எண்ணுகிறார்கள். இதன் பயனாக இரும்பு, நிலக்கரி, எண்ணெய் ஆகியவை ரஷ்யர்களுக்குக் கிடைக்காமற் செய்து விடலா மென்று ஹிட்லர் மனப் பால் குடிக்கிறார். அன்றியும் ரஷ்யாவில் போராடிக் கொண்டிருக்கும் தன் படைகளையும் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு வரலா மென்றும் எதிர் பார்க்கிறார். ஆனால், ஒரு விஷயத்தை அவர் மறந்துவிட்டார். இவை இப்போது இங்கிலாந்தி லிருந்தும் அமெரிக்காவி லிருந்தும் ஏராளமாக ரஷ்யாவிற்கு மர்மான்ஸ், பாரசீகம் வழியாக வந்து கொண்டிருக்கின்றன. அன்றியும் ஊரல் பகுதிகளில் இந்தப் பொருள்களை ஏராளமாகக் கையிருப்பு சேர்த்து வைத்திருக்கிறார்கள். ஒருக்கால், தாம் பின் வாங்க நேர்ந்தால், ஊரல் பகுதிகளுக்குத் தான் பின்வாங்க நேருமென்று எதிர்பார்த்த ரஷ்ய ஜெனரல்கள், இங்கே ஏராளமான கையிருப்புச் சேர்த்து வைத்திருக்கின்றனர். இவை நெடு நாட்களாகச் சேர்க்கப் பட்டவை.

நிற்க, ஜெர்மனியர் திட்டத்தில் இன்னும் பல குறைபாடுகள் இருக்கின்றன. அதாவது ஸ்டாலின் கிராட் வரை தொடர்ச்சியாக பலமான கோட்டைகளைக் கட்டிவிடுவது என்றும், இவற்றின் உதவியால் தெற்கே யுள்ள ரஷ்யப் படைகள் வடக்கே வராதபடி தடுத்து விடலா மென்றும் நினைக்கிறார்கள். இப்படி யமைக்கப்படும் அரண், அநேக மைல்கள் நீளமுள்ளது. இவ்வளவு நீண்ட அரண்களைப் பாதுகாப்பது என்பது முடியாத காரியம். ஆகவே, டான் ஆற்றின் வட பகுதியிலும், வாரனேஜுக்குத் தென் பகுதியிலும் ரஷ்யப் படைகள் வெகு இலகுவில் இந்த அரணைத் துளைத்துப் புகுந்து விட முடியு மென்று அவர்கள் கருதாது போய் விட்டார்கள். இந்தப் பகுதிகளில் ரஷியர்கள் பலம் மிகவும் அதிகப் பட்டிருக்கிறது.

**மேற்குப் போர் முனையில் நிலைமை.**

இனி மேலப் பகுதி யுத்தத்தைப் பற்றி கவனிப்போம். மேல் ஐரோப்பாவில் தம் எதிரிகள் சடுதியாகத் தாக்குவார்கள் என்று ஜெர்மனியர்கள் எதிர்பார்க்கிறார்கள். ரஷ்யாவில் செய்வதைப் போலவே சங்கிலி கோர்த்தாற் போல, பல அரண்களைக் கட்டிக் கொண்டால், எதிரிகளைத் தடுத்து விடலா மென்று மனப்பால் குடிக்கிறார் ஹிட்லர். ரஷ்யர்களுக்கு மிகவும் முக்கியமான பொருள்கள் கிடைக்க வொட்டாதபடி செய்து வெற்றி பெறலா மென்று நினைப்பது போலவே, இங்கேயும் தன் யு-படகுகளைக் கொண்டு வென்று விடலா மென்று நினைக்கிறார். இப்போது நேச நாட்டுக் கப்பற் படைகளில் புதுப் புது முறைகளைக் கொண்டு கப்பல்கள் கட்டி யிருக்கிறார்கள். அன்றியும் பாதுகாப்புக் கப்பல்கள் மிகவும் பலமாகவும் அதிகமாகவும் இருக்கின்றன.

தம் ஆதிக்கத்திற்குட் பட்ட ஐரோப்பிய மக்களைக் கொண்டு போராட வேண்டு மென்று ஜெர்மானியர்கள் திட்ட மிட்டிருக்கின்றனர். கிழக்கே யிருந்தும் மேற்கே யிருந்தும், தெற்கே மத்திய தரைக் கடலிலிருந்தும் யாரும் நுழையாதபடி ஜெர்மானியர்கள் தடுத்து விட்டார்கள். ரஷ்யாவில் ஓரளவிற்குப் பிடித்து விட்டார்கள். இங்கிருந்து அவர்களுக்கு கோதுமை, இரும்பு, நிலக்கரி, நிக்கல் ஆகியவை கிடைக்கின்றன; ஆனால். எண்ணெய் மட்டும் கிடைக்கவில்லை. சமீபத்தில் கடும் கோபத்தோடு பேசிய கோயரிங் இதைப் பற்றித் தான் குறிப்பிட்டார். அதாவது:—ரஷ்யர்களின் சிறந்த பகுதிகளை நாம் கைப்பற்றி விட்டோம் என்பதை மறந்து விடாதீர்கள். சதுப்பு நிலங்கள் நமக்குத் தேவையில்லை. நமக்கு உபயோகமான பகுதிகளைத் தான் கைப்பற்ற நாம் திட்ட மிட்டிருக்கின்றோம்."

* * * *

**ஐரோப்பா நாஜி தொழிற் சாலை ?**

இப்போழுது ஜர்மானியர்களுக்கு ஆட்கள் அதிகம் தேவை. ஐரோப்பா முழுவதையும் அடிமைப் படுத்தி, தம் அடிமைகளைக் கொண்டு நடத்தும் ஒரு நாஜித் தொழிற் சாலையாக ஐரோப்பா முழுவதையும் ஆக்க வேண்டுமென்று ஜெர்மானியர்கள் உறுதி கொண்டிருக்கிறார்கள். போலந்து செக்கோஸ்லோவேகியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்த அடிமை நிலையில் தான் இப்பொழுது இருக்கின்றன. நார்வேயிலும் பெல்ஜியத்திலும் மிகக் கொடுமையான மிருகத் தனமான முறையில் பொது மக்களை ஜெர்மானியர்கள் நடத்துகிறார்கள். $1\frac{1}{2}$ தேர்ந்த தொழிலாளிகளை அனுப்ப வேண்டு மென்று பிரான்சுக்கு ஜெர்மன் அரசாங்கம் உத்திர விட்டது. இவர்களைத் திரட்டு வதில் லவால் இப்பொழுது கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார். நார்வேயிலும் பெல்ஜியத்திலும் நடக்கும் கொடுமைகள் பிரான்சுக்கும் ஏற்படலாம். மேற்கு ஐரோப்ப வில் தாம் கைப்பற்றிய நாடுகளில் உள்ள பொது ஜனங்களைக் கொண்டு தமக்குத் தேவையான அனைத்தும் செய்து கொள்ள வேண்டி, அவர்களைக் கொடுமைப் படுத்தி வைக்க வேண்டு மென்று சரியான திட்டம் போட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இது பற்றி ஒரு நிபுணர் குறிப்பிட்டதாவது:—

இதனால் ஐரோப்பிய நாடுகள் பல பிரிவுகளாகச் சிதறிப் போகும். எதிர்த்துப் பேசுவோர்கள் அழிய வேண்டியது தான். உபயோக மற்றவர்கள் பட்டினி கிடந்து சாக வேண்டியது தான். உபயோக முள்ளவர்களை ஏராளமாக வெளி நாடுகளுக்கு அனுப்பி விடுவார்கள். இப்படிச் செய்து முடிக்கிறவர் ஹிட்லரும் அவருடைய கையாட்களும் தான்.

தாம் கைப்பற்றிய ஐரோப்பிய நாடுகளி லுள்ள மக்களையும், மூலப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும், தொழிற் சாலைகளையும் மகா கொடிய அநாகரிக முறையில் அடக்கி, தமக்குச் சாதகமான முறையில் பயன் படுத்த ஜெர்மானியர்

(8-ம் பக்கம் பார்க்கவும்)

# பேய்க்கு வாழ்க்கைப் பட்டால்?

பெண் ரொம்ப நல்ல பெண் தான். ஆனால், அவள் தலை விதி சரியாக இல்லை. பெரிய இடத்தில் தான் அவளுக்குக் கலியாண மாகும் என்று எல்லோரும் நினைத்தி ருந்தார்கள். திடுதிப் பென்று பாருங்கள், ஒரு பேய் வந்து அவளைத் தூக்கிக்கொண்டு போய் விட்டது. அப்புறம் அந்தப் பேயுடனே அவள் காலத் தைத் தள்ள வேண்டி வந்தது. இப்படி இருக்கும் பொழுது ஒரு நாள் அந்தப் பேய், அவளை ஒரு புளிய மரத்தின்மேல் ஏறி, உச்சிக் கொப்புக்கு வரச்சொன் னது. 'ஐயோ நான் மாட்டேன்!' என்று அழுதாள் பெண். பேய் சும்மா விடுமா? அவள் தலையிலே இரண்டு அறை வைத்து மேலே இழுத்துக் கொண்டு போயிற்றாம். பெண் பாடு பெரிய அவஸ்தையாகவே போய் விட்டது. தினம் விடிந்தால் புளிய மரத்தின் மீதும், முருங்கை மரத்தின் மீதும் ஏறுவ தென்றால் யாரால் முடியும்? ஆனால் பேய்க்கு வாழ்க்கைப் பட்ட பின், இந்த மரங்களில் ஏறாமல் முடியுமா? அப் புறம் அம்மா என்று அழுதாலும், அப்பா என்று அழுதாலும் அவஸ்தை தீருமா? அழ, அழ இன் னும் இரண்டு அறை தான் விழும். இல்லா விட்டால், மேலே இருந்து கீழே தள்ளி உயிரை வாங்கப் போகி றது பேய்! தினம் விடிந்தால் வயிற்றிலே நெருப்பைக் கட்டிக்கொண்டு தானிருக்க வேண்டும் அல்லவா?

இதே கதி தான், இன்று ஹிட்லரைக் கட்டிக் கொண்டு அழுகிறவர்களுக் கெல்லாம் ஏற்பட்டிருக் கிறது. கொதிக்கிற நெய்யை வாயில் எடுத்து ஊற்றிக் கொண்ட பின், அதை முழுங்குவதா அல்லது வெளியே துப்புவதா என்று தெரியாமல் தவிக்கிற பேர் வழிகளைப் போலே, தவிக்கிறார்கள் அவர்கள் எல்லாம். அவர்களைப் பார்த்தால் நமக்கெல்லாம் பரிதாப மாகத் தானிருக்கிறது. நேற்றுவரை நன்றாக இருந்தவர்கள் தான், விதிக் கோளாறால் இன்று ஹிட்லருடன் தங்கள் வாழ்க்கையைப் பிணைத்துக் கொண்டு, காலந் தள்ள நேர்ந்திருக்கிறது. அவர்கள் எல்லாம் ஹிட்லரையும், அவரது கையாட்களையும் பூண்டில்லாமல் ஒழித்தால் தான், மேற்கண்ட நல்ல ஆத்மாக்களுக்கு கதிமோக்ஷம் ஏற்படும். அதுவரை அவர்கள் பாடு அவஸ்தை தான்!

பிரான்ஸை எடுத்துக் கொள்ளுங்கள். அது எப்ப டிப்பட்ட நாடு! ஆனால் அது இன்று ஹிட்லரின் ஆதிக்கத்தி லிருக்கிறது. அதன் வீர மக்களில் பல்லா யிரவர் ஜெர்மனியிலே கைதிகளாக இருக்கிறார்கள்.

தற்சமயம் ஹிட்லருக்கு, ஜெர்மானிய தொழிற் சாலைகளில் வேலை செய்ய எண்ணற்ற ஆட்கள் வேண்டி யிருக்கிறது. ஸ்டாலின்கிராட் நகரும், ருஷ் யாவில் உள்ள மற்ற போர் அரங்கங்களும், பிரிட்டிஷா ரும் அமெரிக்கரும் எடுத்துக் கொண்ட கடுமையான நடவடிக்கைகளும், ஜெர்மனியின் ராணுவ பலத்தை யும், ஆயுத பலத்தையும், நீர் மூழ்கிக் கப்பற் படை களின் பலத்தையும், அளவு மீறிப் பலியாகக் கொண்டு விட்டன. அது காரணமாக, தொழிற்சாலைகளில் இருந்த வேலையாட்களையும் போர் முனைக்கு அனுப்ப வேண்டி வந்து விட்டது.

ஆனால், இவ்வாறு ஆட்களை அனுப்பி விட்டு தொழிற் சாலைகளை மூடி வைத்திருக்க முடியுமா? போர் முனை யில் உள்ளவர்களுக்கு மேலும் மேலும் விமானங்களை யும், டாங்குகளையும், பீரங்கிகளையும், பீரங்கி மருந்துகளை யும், லாரிகளையும், ஆகாரத்தையும் அனுப்ப வேண் டாமா? மேலும் மேலும் நீர்மூழ்கிகளையும், யுத்தக் கப்பல்களையும் கட்ட வேண்டாமா? இதற்காக நல்ல தொழிலாளர்கள் இப்பொழுது ஜெர்மனிக்கு வெகு அவசியமாக இருக்கிறது.

பிரான்ஸிலே ஏராளமாகத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களிலே, 'ஒன்றரை லக்ஷம் பேர்களை உடனே ஜெர்மனிக்குப் பிடித்து அனுப்பு!' என்று ஹிட்லர் பிரான்ஸின் தலைவராக உள்ள லவாலுக்கு உத்திர விட்டார். அவ்வாறு ஒன்றரை லக்ஷம் பேர்களை அனுப்பினால், ஜெர்மனியில் கைதி யாகி இருப்பவர்களில் பலரை தான் விடுதலை செய் வதாகவும் ஹிட்லர் சொன்னார்.

லவால் என்ன செய்வார் பாவம்! ஏதோ அதி கார மோகத்தாலே, 'நீங்க சொல்றபடி யெல்லாம் செய்கிறேன்' என்று ஹிட்லருக்கு வாக்குக் கொடுத்து விட்டார். இப்பொழுது பின் வாங்கினால் எப்படி?

பிரான்ஸில் இருப்பவர்கள் மனோபாவம் எப்படி இருக்கிறது தெரியுமா? தினேதினே அங்கு நாஜிகள் படுத்தும் பாடு அவர்களால் சகிக்கவே முடிய வில்லை. உள்ளூரக் குமுறிக் கொண்டிருக்கிறது. அவர்களுக் கெல்லாம் தக்க சந்தர்ப்பம் வந்ததும், 'குபீர்' என்று கிளம்பி விட வேண்டு மென் றிருக்கிறார்கள். பாரிஸ் நகரிலே ரகசியமாக எத்தனை ஜெர்மனிய சோல்ஜர்களது தலைகளை 'அபேஸ்' செய்து கொண்டு போய் விட்டார்கள். தினம் விடிந்தால் அந்நகர் நதியில் பல ஜெர்மனிய முண்டங்கள் மிதந்து கொண்டிருக்கும்.

சுதந்திரத் தோடு வாழ்ந்த மக்கள். சுகத்திலேயே மூழ்கிக் கிடந்தவர்கள். கலா ஞானத்தில் சிறந்தவர் கள். இன்று கால் கட்டோடு கிடந்து தவித்துக் கொண் டிருக்கிறார்கள் பாவம்! இத்தகைய மக்களை, 'ஜெர்மனிக்குப் போ' என்றால் எப்படி யிருக்கும்?

ஆனால், இதை யெல்லாம் ஹிட்லர் கவனிக்கப் போகிறாரா என்ன? 'என்னை மேன் சும்மா இருக்கிறே? ஆள் கேட்டேனே, ஆள் எங்கே? என்று கெடுபிடி செய்யத் தான் போகிறார் அவர். எப்படி யாவது ஆள் பிடித்தனுப்பும் கங்காணிப் பிழைப்புப் பிழைக்க வேண்டி வந்துவிட்டது லவால் துரைக்கு.

'யார் யார் ஜெர்மனிக்குப் போகப் போகிறார்கள்? அவர்களுக் கெல்லாம் அங்கு நல்ல சம்பளமும் வயிறார உணவும் அளிக்கப்படும்' என்று லவால் அறிவித்தார். பிரான்ஸிலே முன்போல் தாராள மாக உணவு கிடைப்ப தில்லை தான். இந்த ஜெர்மன் பிடுங்காசுரன் தான், தான் கை வைத்த இடத்தை யெல்லாம் சுர்ரண்டிக் காலி செய்து விடுகிறானே! ஆகவே, ஜெர்மனியிலே வயிறார ஆகாரம் அளிக்கப் படும் என்று சொன்னால் ஒரே யடியாக ஒரு வேளை பிரஞ்சு மக்கள் கிளம்பி விடக் கூடும் என்று நினைத் தார் போலிருக்கிறது லவால்.

ஆனால் மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டு, பல நாட்களாகியும் எதிர்பார்த்தபடி ஆட்கள் முன் வரவே யில்லை. என்ன செய்வது? நீங்கள் 'ஜெர்மனிக்குச் சென்றால் தான், அங்கு கைதியாக இருக்கும் நம்ம வர்களுக்குக் கதி மோக்ஷம் பிறக்கும்' என்பதையும் எடுத்துச் சொன்னார். அதுவும் பயன் பட வில்லை. கடைசியாக, கட்டாயப் படுத்தியே ஆள் சேர்க்க வேண் டிய நிலைமை வந்து விட்டது. 'பதினெட்டு வயதிற்கு மேற்பட்டு ஐம்பது வயதுக் குள்ளவர்கள்; அதிலே வாரத்திற்கு முப்பது மணி நேரங்களுக்குக் குறை வாகவே, வேலைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் தங்கள் பெயரை சர்க்காரிடம், பதிவு செய்து கொள்ள வேண்டும், என்ற உத்திரவு பிறந்தது.

இந்த உத்திரவை இப்பொழுது அமுல் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பல நாட்களாகியும் எதிர் பார்த்த எண்ணிக்கை சேரவில்லை. பிரஞ்சு சர்க்கா ரும், பத்திரிகைகளும் (இவை ஜெர்மானியரது கட்டுப் பாட்டிலே அடங்கி நடப்பவை) பொது ஜனங்களிடம் கெஞ்சுகிறார்கள். ஹிட்லர் வைத்த கெடு, தீரப் போகி றது. கெடுபிடியும் அதிக மாகிறது. ஹிட்லர் கேட்ட எண்ணிக்கையை, குறித்த காலத்திற்குள் கொடா விட்டால், ஹிட்லரின் கோபத்திற்கு லவால் குறியா வார். அவர் கேட்டபடி கொடுத்து விட வேண்டுமா னால், பயங்கரமான தண்டனைகளை விதிப்பேன் என்று கூறி, தன் நாட்டு மக்களை உபத்திரவப் படுத்த வேண டும். இரண்டு வழிகளும் ஆபத்தான வழிகள் தான். ஒரு புறம் எரி நெருப்பு; மற்றொரு புறம் பாம்பு பயம் என்றால் ஒரு மனுஷன் என்ன தான் செய் வான்? நரக வேதனை தான் அவனுக்கு. என்ன செய் வது? ஹிட்லரோடு குலவாட வேண்டுமானால் இந்த கதி தான்.

பிரான்ஸ் விஷயம் இப்படி யாச்சா? ருமேனியா, இத்தலி, மற்றும் ஆக்ரமிக்கப் பெற்ற சிறு நாடுகளில்



இருப்பவர்கள் பாடு ரொம்ப மோசம் தான். ஆழந் தெரியாமல் ருஷ்யாவில் காலை வைத்து விட்டார் ஹிட்லர். இனி இங்கே பேசாதிருப்பதோ, பின் வாங்க நினைப்பதுவோ, ஹிட்லரின் ஆட்சிக்கே முற்றுப் புள்ளி குத்துவது போலாகும். அதை நன்றாக உணர்ந்த ஹிட்லர் மேலும் மேலும் படைகளை கிழக்குப் போர் முனைக்கு அனுப்பிக் கொண்டே யிருக்கிறார்.

ஜெர்மனியிலே உள்ளவர்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் பயிற்சி பெற்று வரும் வரை ருஷ்யர்கள் காத்திருக்கப் போகிறார்களா என்ன? ஹிட்லர் அகலக் கால் வைத்து விட்டார். பிரான்ஸ் தேசத்தின் கடற்கரையைப் பலப்படுத்த வேண்டி யிருக்கிறது. டென்மார்க்கிலே உள்ள டேனிஷ் துருப்புகளை முக்யமான பிரதேசங்களி லிருந்து நவம்பர் மாத மத்திக்குள் வெளியேற்றி விட, ஹிட்லர் திட்டம் போட்டிருக்கிறார். நார்வேயில் ஏராளமான படையை வைத்திருக்கிறார். ஐரோப் பாவின் மேல் கரையிலே, பல இடங்களில் பெரிய பீரங் கிகளை வைக்கச் செய்திருக்கிறார். அந்த பீரங்கிகளில் சில, பிரான்ஸின் கரையி லிருக்கின்றன. அவை பிரிட்டனை நோக்கியும் சுடும்; அவசியம் வந்தால், மறுபக்கம் திரும்பி பிரான்ஸைப் பார்த்தும் சுட்டுக் கொளுத்துமாம். இந்த ஏற்பாடுகளை எல்லாம், ஹிட் லர் தாமாகவே பார்க்கிறாராம்.

இதற்கெல்லாம் நம்பிக்கையான ஜெர்மன் வீரர் களை வைத்திருக்க வேண்டும். ஆனால், ருஷ்யப் போரரங்கம் சாதாரணமானதாக இல்லையே! ஹிட்லர் செய்த பெருந் தவறுகளில் அவர் ருஷியா மீது படை யெடுக்கத் தீர்மானித்தது மகா மகா மகா மகாப் பெரிய தவறாகும். அதைப் பற்றி இப்பொழுது நினைத் தென்ன பிரயோசனம்? எதிரி எத்தனைக் கெத்தனை அதிக தவறுகள் செய்கிறானோ, அவ் வளவுக் கவ்வளவு நமக்கு லாபம் தானே? அதே போல ஹிட்லர் செய்த பிசகுகள் எல்லாம் பிரிட்ட னுக்கும், நேச தேசத்தாருக்கும் நன்மையாகவே இருந்தன.

ருஷ்யச் சண்டை லேசிலே முடியக் காணோம். வருஷம் ஒன்றரை ஆகப் போகிறது அது ஆரம்பமாகி. இன்னும் அந்த ஹிட்லர் மலைப் பாம்பு, ருஷ்யா விலே ஒருக் 'காலை'க் கூட விழுங்கித் தீர்க்க வில்லை. ஆனால் இதற்குள்ளாக, மகா சூராதி சூரர்கள் பலரை ருஷ்ய மண்ணிற்கு பலி கொடுத்து விட்டா ரவர்.

இப்பொழுது ஸ்டாலின் கிராடில் நடந்து வரும் கோர யுத்தத்தில் அவர் எப்படியாவது வெற்றி பெறப் பார்க்கிறார். ஆனால், அவரது படைகள் பாறையாலாகிய தோர் கோட்டை மீது மோதுவது போல் தான். இரண்டு மாதங்களுக்கு மேலாக அந் நகரைத் தாக்கி, வெற்றி காணா திருக்கிறார்கள். இதற்குள் ஆயிரக் கணக்கிலே டாங்கிகளும், விமானங் களும் அங்கு நொறுங்கலாச்சு. ஆயுதங்களையாவது தயாரித்து விடலாம். அவற்றைத் திறமையோடு கை யாள, ஆட்கள் வேண்டாமா?

அதைத் தான் ருமேனியாவி லிருந்தும், இத்தலி யிலிருந்தும் அனுப்பு என்கிறார் ஹிட்லர். முஸோ லினி என்றால் அந்தப் பெயரை மதித்து செப்புக் காசு கூடக் கொடுக்க மாட்டார்கள் போலிருக்கிறது இனி யாரும். பாவம்! இந்த மனுஷன் ஒரு காலத் தில் படுத்திய பாடும், செய்த ஆர்ப்பாட்டமும் கொஞ்ச நஞ்சமா? இப்பொழுது ஆடிப் பாடி அயர்ந்து போய் விட்டார் இந்த ஆத்மா. ஹிட்லர் ஏவ வேண்டியது தான், 'அச்சா சர்க்கார்!' என்பது போல், அதன் படியே நடக்க முயலுகிறார். லக்ஷக் கணக்கில் அங் கிருந்தும் ருஷியாவிற்கும், வட ஆபிரிக்காவிற்கும் படைகள் போயாச்சு. இன்னும் போத வில்லை ஹிட் லருக்கு.

ருமேனியாவின் உதவியையும் பெரிதும் நாடுகிறார் ஹிட்லர். ருமேனியா தனக்கு ஆள் கொடுத்து உத வினால், அதற்கு பக்கத்து நாட்டி லிருந்து கொஞ்சம் கருவிக் கொடுப்பதாக வாக்குக் கொடுக்கிறார் அவர். ஆனால் அது காரணமாக ருமேனியாவிற்கும், பக்க த்து நாட்டுக்கும் பிய்த்துக் கொள்ளும் போலிருக் கிறது. ருமேனியாவிலே, ஹிட்லர் போல் சர்வாதி காரம் பெற்ற அண்டனஸ்கு என்றொருவர் இருக் கிறார். அவர் அட்டகாசம் தான் செய்கிறார். ஆனா லும், ருமேனிய மக்களுக்கு ஜெர்மானியரைக் கண்டால் வெறுப்பாகத் தானிருக்கிறது. அங்கு ஒரு பெரிய கொரில்லாப் படை அதி தீரமான செயல்களைச் செய்து கொண்டிருக்கிறது. ஆக மொத்தம் ஐரோப் பாவில் யாருக்குமே மன நிம்மதி யில்லை. என்ன செய்வது? பேய்க்கு வாழ்க்கைப் பட்டது மாதிரி தானிருக்கிறார்கள் அவர்கள்.

அனைவரது கவனமும் இப்பொழுது ஸ்டாலின் கிராடு மீதிலேயே தானிருக்கிறது. அங்கு நாஜி களின் கை வலுவாகத் தானிருக்கிறது. ஆனாலும் ருஷ்யர்கள் சளைக்க வில்லை. 'நாங்கள் நாஜிகளுக் குச் சரணடைய மாட்டோம்' என்று ஸ்டாலின்கிரா டில் சிக்கி, பயங்கரமாகப் போராடுகிறவர்கள், ஜெர் மானியரது முற்றுகைக்குள் ஒரு வருஷத்திற்கு மேலாகச் சிக்கிக் கொண்டிருக்கும் லெனின்கிராடு வாசிகளுக்கு ஒரு செய்தியனுப்பி யிருக்கிறார்கள். அங்குள்ள ஒவ்வொரு தொழிலாளியும் சோல்ஜராக மாறி விட்டான். குண்டு மழையிலும் தொழிற்சாலை யில் நடத்தும் வேலையை நிறுத்துவ தில்லை. தங் களுக்குள் ஒரு போட்டி ஏற்படுத்திக் கொண்டு, யார் யார் அதிகப் படியான ஜெர்மானியரைக் கொல்லு கிறார்களோ அவர்களுக்குப் பரிசு என்று வைத்துக் கொண்டு, உத்சாகத் தோடு வேலை செய்கிறார்கள்.

ஹிட்லர் ருஷ்யா மீது படை யெடுக்கத் தீர்மானித்த போது, ருஷ்யாவின் ஆயுத பலத்தையோ, யுத்த ஏற்பாடுகளையோ தவறாகக் கணக்கிட வில்லை. ஆனால், ருஷ்ய மக்களின் மனோதிடத்தையும், பற்று ஆபத்தி லும் அவர்கள் கொள்ளக்கூடிய உற்சாகத்தையும், அவர்களின் பிடிவாதமான எதிர்ப்பு சக்தியையுமே தவறாகக் கணக்கிட்டு விட்டார். அது காரணமாக, ஆப்பைப் பிடுங்கப் போன குரங்கு போல், சிக்கிக் கொண்டிருக்கிறார்.

ஸ்டாலின் கிராட்போரின் கடைசிக் கட்டம் இப்பொ ழுது நடந்து கொண்டிருக்கிறது. பயங்கரமான காவு களைக் கொடுத்து, முக்யமான பிரதேசங்களை ஜெர் மானியர் கொடுத்து வருகிறார்கள். அவர்களிட முள்ள விமான பலம் ருஷ்யாவின் விமான பலத்தை விட அதிகமா யிருப்பதால், ஸ்டாலின்கிராடு நகரத் திலிருந்து போராடும் சூரர்களுக்கு எதிர் பார்த்தபடி ஏராளமான உதவியை விடாது அனுப்பிக் கொடுக்க வசதி யில்லாம லிருக்கிறது. தங்களுடைய ராக்ஷஸ பலத்தால் ஜெர்மானியர் இந்நகரைப் பிடித்தாலும் அது வெறும் பாழ் நகரமாகவே இருக்கப் போகிறது. ஆனால், அதன் பின் தென் ருஷ்யாவுடன் வட ருஷ் யாவை இணைக்கும் நடுச் சங்கிலி அறுபட்டது போலாகி விடும். அதனாலேயே ருஷ்யர்கள் இதைக் காக்க இவ்வளவு பாடு படுகிறார்கள். நாஜிகளும் விடமாட் டேனென்கிறார்கள். என்ன நடக்கிறதோ பார்க்க லாம்!



# சிப்பாய் இராமலிங்கம் திருமணம்

மாலை வேளை. தயங்கித் தயங்கித் தவித்து மறைகிறன் சூரியன் மேல் திசையில். கிராமத்தின் கிணற்றங் கரையில் கன்னியர்கள் படை. இவர்கள் கைக் கொண்ட ஆயுதங்கள் மண் குடமும் பனையோலைக் குவளையுந் தான். இந்தக் குவளைகளைக் கொண்டு தான் கிணற்றி லிருந்து தண்ணீர் மொள்ளுகிறார்கள். கன்னியர் கூடினால் கேட்கவும் வேண்டுமோ? சிப்பு, விளையாட்டு, இரகசியங்கள், கிண்டல்கள், நையாண்டிகள் இவை தான் அதிகம். உலகம் முழுவதிலும் 2, 3, பெண்கள் சேர்ந்து விட்டால், இந்த நிலை தான் ஏற்படும். இவர்களில் கண்ணம்மாள் தான் முக்கியமானவள். நல்லஅழகி. கன்னிகள் அனைவருக்கும் அவளே தலைவியாக விளங்கினாள்.

கண்ணம்மாளின் சிறப்புக்களைக் குறித்து இன்னும் கொஞ்சம் சொல்லலாம். திரண்ட உருவம். உருவத்திற் கேற்ற உயரம். பொன்னிறம். நீண்டு இயற்கையாகவே நெளிந்த முடி. வேல் போல் மின்னிச் சேல் போல் பாயுங் கண்கள். இரட்டைத் தாமரை பூத்தது போன்ற கன்னங்கள். எள்ளின் பூவோடு உறவு கொண்ட மூக்கு. கோவையினும் சிவந்த உதடுகள், முல்லைப் பூவைவிட வெண்மையான பற்கள், சுருங்கச் சொன்னால், இயற்கையில் தோன்றி, இயற்கையில் வளர்ந்து, இயற்கையாய் இலங்கும், இளம் கன்னி. இவள் பள்ளிக்கூடத்தில் படித்த வளல்ல. என்றாலும் அவள் முகத்தில் அறிவுக் கலை, ஆனந்தத் தாண்டவம் ஆடியது. தன் காதல் நாதன் யார்? என்று வருவார்? என்று ஏக்கங் கொண்டு அவள் கனவு காண்பது முண்டு.

இராமலிங்கம் ஒரு இளைஞன். விவசாயி, நேர்மையானவன். கடுமையான உழைப்பாளி. என்றாலும் சுத்தமாக இருப்பவன். பெருமை என்பது திலையும் அவனிடம் கிடையாது. தான் மிகவும் ஏழை என்று அவன் நன்றாக உணர்ந் திருந்தான். இவனுக்குச் சொந்த நலம் கிடையாது. எனவே, வயிறுப் பிழைப்பதற்காகத் தானும் தன் தந்தையும் உழைக்க வேண்டி யிருந்தது. இவர்கள் கொஞ்சம் கடன் பட்டிருந்தார்கள். இதைத் திருப்பிக் கொடுக்க வழி யல்லை. இந்தக் கடன் தொல்லையினின்று நீங்க, இராமலிங்கத்திற்கு வழி தோன்றவில்லை. ஆயு ளெல்லாம் உழைத்துக் கடனைத் தீர்க்க வேண்டும் என்னும் முடிவிற்குத் தான் வந்தான். கடைசியாக மழை யில்லை. இவன் கவலையும் அதிகப்பட்டது. வேலை கிடைப்பதும் அரிதாகி விட்டது. கிடைத்தாலும் கட்டைக் கூலி. இவன் உள்ளத்தில் காதல் பூத்தது. கண்ணம்மாள் அவனுடைய மன வீதியில் உலவினாள். அந்தக் கிராமத்து இளைஞர்களில், எவர் தான அவளுடைய காதலைப் பெற தவங் கிடக்க மாட்டார்கள்?

தன் காதலுக்குப் போட்டியாக வேறொருவன் கிளம்பி விட்டான் என்று உண்மையாகவே இராமலிங்கம் உணர்ந்தான். அதுவும் கடுமையான போட்டி. அந்தக் கிராம வாசிகளில் இவன் கொஞ்சம் பணக்காரன். அவன் பெயர் முத்துச்சாமி. இரட்டைக் காளை கட்டை வண்டி யொன்று அவனுக்குச் சொந்தம். கொஞ்சம் நிலமும் உண்டு." இதல் சாகுபடியாவது அவனுக்குப் போதுமானது. அவன் வீடு மண் வீடு; என்றாலும், மேலே ஓடு வேயப்பட்டது. அந்த கிராமத்து இளைஞர்கள் பீடி தான் பிடிப்பார்கள். ஆனால் முத்துச் சாமிக்குக் 'குஷி' பிறந்து விட்டால், சிகரெட்டுத் தான் பிடிப்பான். மற்றவர்கள் இவனைப் பார்த்துப் பொறுமை கொள்ளுவார்கள். சிகரெட்டு வாங்கிப் பிடிக்க இவர்களுக்குப் பணம் இல்லை இவனைக் கண்டு அந்தக் கிராமக் கன்னிகள் அவன் மேல் காதல் கொள்ளுவது, இயற்கை தான். அவன் இடுப்பில் சாய வேஷ்டி கட்டி யிருந்தான் அது கிழியாமலும், சுத்தமாகவும் இருந்தது. முக்கியமான சந்தர்பங்களில் அவன் ஒரு ஷர்ட் போட்டுக் கொள்ளுவதும் உண்டு. அவன் தலைக்குத் தடவிய எண்ணெய், நெற்றியில் வழிந்து கொண்டிருக்கும். அவன் சுவைத்த வெற்றிலைச் சாயம் அவன் பற்களில் பாறிக் கொண்டிருந்தது. சமீபத்தில் வெளியான சினிமா பாட்டுகளைக் கூட அவன் பாடுவான். அவனைக் கணவனாகப் பெறுகிறவள் பாக்கிய சாலி தான். ஆனால் அந்தக் காதற் கள்ளனின் கருத் தெல்லாம், கண்ணம்மாள் மேலே தான் கவிந் திருந்தது.

கன்னிய ரெல்லாம் கிணற்றங் கரையி லிருந்தனர் என்று முன்பே சொன்னோம். கண்ணம்மாளும் கிணற்றி லிருந்து தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். ஆடு மாடுகள் தம் மேய்ச்சல் தலத்தி லிருந்து கட்டுத் துறைகளுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தன. இவற்றின் கழுத்தில் கட்டப் பட்டிருந்த மணிகள் கண கண வென்று


## உங்களுக்கு ஜப்பான் மொழி தெரியுமா?

பலருக்குத் தெரியும்.

பொய் வதந்திகளை இவர்கள் பரப்புகிறார்கள்

இதனால்,

கலவரத்தையும் பெருந்துன்பத்தையும் உண்டாக்குகிறார்கள்

இந்தப்

பொய் வதந்திகள் ஜப்பானி லிருந்து தான் கிளம்புகின்றன.

இவற்றை

இலட்சியம் செய்யாதீர்கள்!

பிறருக்கும்

சொல்லாதீர்கள்!

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியரை எதிர்க்க தேசியப் போர் முனையை அமையுங்கள்!




ஒலித்துக் கொண்டிருந்தன. இராமலிங்கம் வயலிலிருந்து வந்தான். நீராடிக் கரை யேறினான், அவன் தந்தையைக் கண்டான். அவர் முகத்தில் துயரம் தாண்டவ மாடியது. தன் மகனைப் பார்த்து, "அப்பா ராமு! செட்டியாரிடம் போய் இன்னும் ஒரு மாதத் தவணையில் தொகையை கட்டி விடுவோம் என்று சொல்லி, தவணைப் பெற்று வா" என்று கோரினார். கடன் பட்ட ராமலிங்கம் கலங்கினான். பய னென்ன? தந்தையின் கட்டளையை நிறை வேற்ற கிளம்பினான். துயரம் அவன் உள்ளத்தை துளைத்தது. ஊர்ப் புரத்திலுள்ள கிணறு அவனுக்கு எதிர்ப்பட்டது. கண்ணம்மாள் காட்சி தந்தாள் அங்கே. தன் துயரத்தை ஒருவாறு மறந்தான். காதல் சிந்தனையில் கவிந் திருந்தன். இந்த இன்பத்தில் இளைத் திருக்க இயல வில்லை அவனால். கண்டான் முத்துச்சாமியும் ஒரு மரத்தின் மேல் சாய்ந்து கொண்டிருப்பதை.

## II

ஒரு சிறு குட்டி "மாடு! மாடு!" என்று ஒரு கூச்சல் போட்டாள். மதி மயங்கி நின்றிருந்த இராமலிங்கம் ஒரே தாண்டாகத் தாண்டிக் குதித்தான். தண்ணீர் நிறைந்த தொட்டி யொன்றில். அவன் கால் மாட்டியது. கீழே விழுந்தான் மட் குடத்தின் மேல். குடம் ஆயிரம் சுக்கல்களாக நொறுங்கியது. அது கண்ணம்மாளின் குடம். பெண்க ளெல்லாம் கை கொட்டி கெக்கலி செய்து வானமே இடிந்து விழுவது போலச் சிரித்தார்கள். ஒவ்வொருத்தியும் தன் மனம் போனபடி யெல்லாம் அவனைக் கேலி செய்தனள். தன் காலில் உண்டான வலியை விட தனக்கு ஏற்பட்ட அவமானத்தை அவன் தாங்கக் கூட வில்லை. "அவனுக்கு கண் தெரிய வில்லை; மஞ்சள் காமாலை நோயோ என்னவோ" என்றாள் ஒருத்தி; "சுத்த கோழை" என்றாள் இன்னொருத்தி; "இப்படியும் பயப்படுவானா ஒரு ஆண் பிள்ளை" என்பாள் மற்றொருத்தி. "நீ தான் தூக்கி விடேண்டி! பாவம! எழுந்திருக்க கூட முடிய வில்லை!" என்பாள் வேறொருத்தி. "அவன் ஒரு பெண் அல்லவே" என்றாள் மற்று மொருத்தி. இவற்றை எல்லாம் கேட்ட இராமலிங்கம் வெட்கத்தால் தலை குனிந்தான். அங்கே மாடு எதுவும் வர வில்லை யென்றும், விளையாட்டிற்காகவே அச்சிறுமி கூவினாள் என்றும் கேட்ட இராமலிங்கம், மேலும் வெட்கமடைந்தான்.

தலை கவிழ்ந்த இராமலிங்கம் அவர்களைத் தாண்டிப் போக ஆரம்பித்தான். கூச்சலுக்கு மேலே கிளம்பியது கண்ணம்மாளின் குரல். "எய்! என் குடத்திற்கு என்ன வழி? உடைத்து விட்டு மெதுவாக நழுவுகிறாயே! விட மாட்டேன் உன்னை. என் குடத்தின் விலை இரண்டணா. கொடுத்தால் தான் விடுவேன்" என்றாள். கன்னியர் படை கவிந்தது இராமலிங்கத்தைச் சுற்றி. அவன் அடைந்த வெட்கத்தை விட, இந்தக் கேள்வி அவனைப் பெரிதும் திகைக்கச் செய்தது. பெண்க ளெல்லாம் பெருங் குர லெடுத்துச் சிரித்தனர். அவர்கள் சிரிப்புக்கு மேல் கேட்டது முத்துச்சாமியின் சிரிப்பு. அங்கிருந்த எல்லோரும் கூடி பஞ்சாயத்து செய்து "அவன் இரண்டணா கொடுக்கத் தான் வேண்டும்" என்று முடிவு கட்டினர். மனமுடைந்து சுற்றிப் பார்த்தான் இராமலிங்கம். தன் இடுப்பில் கை வைத்தான். தன் வேஷ்டியின் நுனியில் முடிந் திருந்த ஒரு முடிச்சை அவிழ்த்தான். அதிலிருந்த செப்பு நாணயங்களை கண்ணம்மாள் கையில் கொடுத்தான். பெண்க ளெல்லோரும் கேலி செய்வதைக் காதில் வாங்கிக் கொண்டே, தன் நிலைமைக்கு வெட்கப் பட்டுக் கொண்டு நடந்தான்.

ஒரு நாள் நடு இரவு. "திருடன், திருடன்! விடாதே! பிடி! பிடி!" என்ற கூக்குரல் கிளம்பியது. திருடன் தப்பி யோடப் பார்த்தான். வீர இளைஞர்கள் அவனைப் பிடிக்க விரைந்து ஓடினர். அப்போது முத்துச்சாமி தன் வீட்டுத் திண்ணை மேல் தூங்கிக் கொண்டிருந்தவன் விழித் தெழுந்து, கண்களைக் கசக்கிக் கொண்டே திண்ணையை விட்டு இறங்கினான். திருடன் இருட்டில் தடுமாறி அவன் மேல் விழுந்தான். இருவரும் விழுந்தனர். விரட்டிக் கொண்டு வந்த இளைஞர்கள் திருடனைப் பிடித்துக் கொண்டனர். ஆனால், ஊரெல்லாம் திருடனைப் பிடித்தவன் முத்துச்சாமி என்ற பேச்சுத் தான்.

மறுநாள் காலை வழக்கம் போல இராமலிங்கம் தன் வேலைக்குப் போய்க் கொண்டிருந்தான். அப்போது கண்ணம்மாளும் முத்துச்சாமியும் ஒரு மரத்தடியில் நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான். அப்போது ஒரு வீரனைப் போலவே முத்துச்சாமி நடந்து கொண்டான். கண்ணம்மாளும் மிகவும் அவனிடம் அக்கரை கொண்டிருப்பது போல அவளுடைய முகக் குறி காட்டியது. இனி இந்தப் பேரழகியின் காதல் தனக்குக் கிடைக்காதென்று முடிவு கட்டி விட்டான் இராமலிங்கம்.

## III

அன்று மாலை வேலையி லிருந்து வந்தான். கிராமத்தில் ஏதோ ஆர்ப்பாட்டமாக இருந்தது. தெருவில் கூட்டம் கூடி விட்டது. ஷர்ட்டும், கோட்டும் போட்ட ஒருவர் கூட்டத்தா ரோடு பேசிக் கொண்டிருந்தார். இராமலிங்கமும் நெருங்கிப் போய் அவர் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவர் படைகளுக்கு ஆள் சேர்க்கிறவர் என்று தெரிந்து கொண்டான். இது வரை ஒருவராவது அந்தக் கிராமத்தி லிருந்து பட்டாளத்திற்குப் போனதில்லை. ஆகையால் அந்த நாட்டுப் புரத்தா ரெல்லாரும் பின் வாங்கினார்கள். பட்டாளத்தில் சேருவதனால் ஏற்படக் கூடிய வசதிகளைக் குறித்து அந்த ஏஜெண்டு தெளிவாக எடுத்துக் கூறினார். "உணவு, உடுப்பு, பணம் எல்லாம் கிடைக்கும், புதுப் புது ஊர்களைப் பார்க்கலாம். பட்டாளம் கலைக்கப் படும் போது அரசாங்கத்தார் கொடுக்கும் வெகுமதி ஆகியவற்றைப் பற்றி யோசித்துப் பாருங்கள். நீங்கள் திரும்ப வரும் போது ஒரு புதிய மனிதராகத் தான் வருவீர்கள். உங்களை இவ்வூரார் பெரிதும் மதிப்பார்கள்" என்று அவர் கூறினார்.

கூட்டம் கலைந்தது. இராமலிங்கம் மட்டும் போக வில்லை. அவன் மனதில் ஒரு யோசனை திடீரெனத் தோன்றியது. அந்த ஏஜெண்டோடு பேசுவது என்று முடிவு செய்து கொண்டான். அந்த ஏஜெண்டும் தன் கூரிய கண்களால் இவனை ஏற இறங்கப் பார்த்தார். புன் சிரிப்போடு இவனுக்கு ஒரு சிகரெட்டு கொடுத்தார். இருவரும் அந்தத் திண்ணையின் மேல் உட்கார்ந்தனர். "நீ சுத்தமாகவும் புத்திசாலித் தனமாகவும் இருக்கிறாய். கடுமையாகவும் உழைக்கிறாய். உன்னைப் போன்றவர்கள் தான் பட்டாளத்திற்கு ஏற்றவர்கள். பல புதிய விஷயங்களையும் சிறந்த விஷயங்களையும் உனக்கு அங்கே சொல்லிக் கொடுப்பார்கள். உன் கௌரவத்தை உயர்த்துவார்கள். உன் பையில் நிறைய பண மிருக்கும். உன் கடன் எல்லாம் ஒழிந்து போகும்." என்று ஏஜெண்டு கூறினார். ஏஜெண்டின் முயற்சி பலித்தது. இராமலிங்கம் அங்கேயே முடிவு செய்து விட்டான். "நல்லது, நான் வருகிறேன், என் தகப்பனாரிடம் போவோம்" என்றான்.

பொழுது விடிந்தது. கிணற்றங் கரையி லிருந்து கிளம்பியது செய்தி. "இராமலிங்கம் பட்டாளத்திற்கு போய் விட்டான்" இதே ஊரெங்கும் பேச்சாயிருந்தது.

"இப்படிச் செய்வா னென்று யார் நினைத்தது? ஐயோ பாவம்! அவன் அங்கே சந்தோஷமாகவா இருக்கப் போகிறான்" என்று வருந்தினாள் கண்ணம்மாள். இது பெண்களின் இயல்பு. என்றாலும் அவள் எதுவும் செய்ய முடியாத நிலையிலிருந்தாள். ஏனென்றால், இன்னாரைத் தான் கலியாணம் செய்து கொள்ள வேண்டு மென்று அவள் அது வரை முடிவு செய்ய வில்லை. என்றாலும், வழக்கப்படி இவள் கிணற்றிற்குப் போகும் போதெல்லாம் முத்துச்சாமி மரத்தில் சாய்ந்து கொண்டிருப்பான். அவனைக் காணும் போதெல்லாம், அவனை அருவருத்தாள். அவள் வாழ் நாளிலேயே அப்போது தான் அக்கரையோடு ஆலோசிக்க ஆரம்பித்தாள்.

படை திரட்டும் ஆபீசுக்குப் புறப்பட்டு விட்டான் இராமலிங்கம். போகிற வழியில், 'இது தான் எனக்குச் சிறந்த வழி; நான் கடுமையாக உழைத்து என் கவலைகளை மறந்து விடுகிறேன்; என் கடனைத்

தீர்க்க ஒரு வழி ஏற்பட்டது பற்றி ரொம்பச் சந்தோஷம்; தகப்பனாரும் சந்தோஷப் படுவார்' என்று எண்ண மிட்டுக் கொண்டே போனான்.

## IV

மூன்று மாதங்கள் கடந்தன. இராமலிங்கத்திற்கு இராணுவப் பயிற்சி முடிந்தது. லீவும் கிடைத்தது. தன் கிராமத்திற்குத் திரும்பி வந்தான். இந்த 3 மாதங்களுக் குள்ள மிகவும் உபயோகமான விஷயங்கள் பலவற்றைத் தெரிந்து கொண்டான். தன் உடுப்புக்களை எப்படிப் போட்டுக் கொள்ளுவதென்றும், சற்று எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டான். ஆண்மை மிக்கவனாகத் தோன்றினான். அவன் நடை மிகவும் உறுதியா யிருந்தது.

இராமலிங்கம் திரும்ப வந்திருக்கிறான் என்ற செய்தி கிணற்றங் கரையினின்று கிளம்பியது. அவன் எப்படி இருக்கிறான்? என்ன உடுத்தி யிருந்தான்? கிணற்றங் கரைக்கு வருவானா? அல்லது ரொம்பப் பெருமையா யிருக்கிறானா? என்றெல்லாம் கிணற்றங் கரைப் பெண்கள் ஒருவரை யொருவர் கேட்டுக் கொண்டனர். கண்ணம்மாள் இக்கேள்விகளைத் தன் மனதிற் குள்ளேயே கேட்டுக் கொண்டாள்.

இல்லை. இராமலிங்கம் பெருமைக்கார னல்ல. தன் உடுப்பைக் குறித்து மட்டும் பெருமை கொள்ளுகிறான். அதைப் போட்டுக் கொண்டு அவன் எங்கு வேண்டு மானாலும் போகலாம் போலிருக்கிறது. இப்போது அவனுடைய போக்கில் எந்த விதக் காலதாமதமும் கிடையாது. அவனுடைய குரல் கனத்து உரத்திருக்கிறது. அவன் வெகு தெளிவாகக் காண்கிறான். அவனுடைய உடுப்புக்கள் அவனுக்கு மிக அழகாகப் பொருந்தி யிருக்கின்றன. அந்தக் கிராமத்தார் அனைவரையும் விட மிகுந்த அனுபவசாலியாக நடந்து கொள்ளுகிறான். அவன் கனத்த இராணுவ பூட்சைக் காலில் போட்டுக் கொண்டு நேராக நிமிர்ந்து நடக்கிறான். அவனுடைய இனிய முகத்தில் புன் சிரிப்பும் மகிழ்ச்சியும் விளங்குகின்றன. கையில் ஒரு சிறு பிரம்பைச் சுழற்றிக் கொண்டே சிகிரெட் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

அந்தக் கிணற்றங் கரையில், இந்த அளவிற்குப் புகழ்ந்து பாராட்டிப் பேசப் பட்டவர் அந்தக் கிராம சரித்திரத்திலேயே வேறு யாரும் இல்லை. அவன் கிணற்றங் கரைக்கு வநது சாதாரணமாக நின்று சிறிது சிரித்துக் கொண்டே, "ஓ! என்ன கண்ணம்மா!" என்றான். கண்டாள் கண்ணம்மாள். அவள் கண்ணிமைகள் தாழ்ந்தன. விவரிக்க முடியாத ஒரு மன எழுச்சி அவளுக்கு உண்டானது. "இவனன்றோ என் கருத்தைக் கவர்ந்த க தலுக்குரிய கண்ணாளன்!" என்று தனக் குள்ளாகவே சொல்லிக் கொண்டாள்.

"சற்று பொறு"! என்று கூறிய கண்ணம்மாள் தன் தாவணி நுனியில் முடி யிட்டிருந்த முடிச்சை யவிழ்த்து, அதிலிருந்த துட்டை இராமலிங்கத்திடம் நீட்டிக் கொண்டே, "என் குடத்தை உடைத்ததற்கு நீ கொடுத்த நஷ்ட ஈட்டுத் தொகையை திரும்பப் பெற்றுக் கொள்" என்றாள்.

இராமலிங்கம் வெள்ளை மனதோடு உரக்கச் சிரித்தான். கண்ணம்மாளும் மற்ற பெண்களும் கூடச் சிரித்தார்கள். கண்ணம்மா! உனக்கு நான் வாழ்த்துக் கூற வேண்டும். நீ முத்துச்சாமியை எப்போது கலியாணம் செய்து கொண்டா யென்று எனக்குத் தெரியாது, என்றான் இராமலிங்கம்.

மீண்டும் எல்லாப் பெண்களும் சிரித்தார்கள். "கண்ணம்மாள் முத்துச்சாமியைக் கலியாணம் செய்து கொண்டா ளென்று உனக்கு யார் சொன்னார்கள்? அவள் தான் மறுத்து விட்டாளே" என்று எல்லாப் பெண்களும் கேட்டனர் இராமலிங்கத்தை. "ஏன் மறுத்து விட்டாள்?" என்று, திகைப்போடு கேட்டான். இதற்குள் கண்ணம்மாளும் தண்ணீர்க் குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு கிளம்பினாள். இருவரும் பேசிக் கொண்டே கிளம்பினார்கள் வீடு நோக்கி.

இராம:—"உங்கள் இருவருக்குள் முடிவு செய்து கொண்டீர்கள் என்றல்லவா நான் நினைத்தேன்?

கண்ணம்:—இந்தக் குடத்தைத் தூக்கிக் கொண்டு உன்னோடு பேசுவது சற்று கஷ்டமா யிருக்கிறது. நீ வீட்டிற்கு வாயேன்!

இரண்டு வாரங்கள் கடந்தன. இராமலிங்கத்திற்கு லீவ் முடிந்து ஊருக்குப் புறப்பட்டான். அவனுடைய தந்தையும் புது மனைவி கண்ணம்மாளும் வழி யனுப்பினார்கள். தன் மன்னருக்கும் நாட்டிற்கும் இப்போது இந்தியாவில் 'எங்கோ ஓரிடத்தில்' சேவகம் செய்து கொண்டிருக்கிறான் இராமலிங்கம்.

---

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

கள் விரும்புகிறார்கள் பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் ஜெர்மனியை முற்றுகை யிட்டால், அதைத் தாங்கத் தக்க அளவிற்கு ஜெர்மனியைப் பலப்படுத்திக் கொள்ள ஹிட்லர் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார். தாம் தாக்கி வென்ற நாடுகளைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி, கடுமையான பர்துகாப்பு முறைகளை அவர்கள் கையாள வேண்டி யிருக்கிறது.

சமீபத்தில் ஹிட்லர் செய்த பிரசங்கத்தில் ஒரு விஷயத்தைத் தெளிவாக ஒப்புக் கொண்டு விட்டார். ஒவ்வொரு எதிரியையும் தனித் தனியே போராடித் தன்னால் வெல்ல முடிய வில்லை என்று தெளிவாகக் கூறி விட்டார். இனி பாதுகாப்பு முறைகளைத் தான் கையாள வேண்டி யிருக்கிற தென்றும் குறிப்பிடுகிறார். நேச நாடுகள் சம்பந்தப்பட்ட வரை, அவர்களுக்கு இருந்த ஆபத்துக் காலம் கடந்து விட்டது. இது பற்றி எல்லோரும் திருப்தி கொள்ளத் தான் செய்வார்கள். இதைக் கொண்டு, நாம் வென்று விட்டதாகக் கருத முடியாது. பிரிட்டிஷ் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் ஒன்றுபட்டு ஜெர்மனியின் கையையும் காலையும் ஒடித்து விடத் தக்க திட்டத்தை வகுத்து அதை வெற்றி பெற நடத்துவார்கள். அதனால் தான் நாம் வெற்றி பெறக் கூடும். அந்த நாளை நாம் ஆவலோடு எதிர் நோக்குவோமாக!

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

விசேஷப் படை மலர்

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் வருஷம் அக்டோபர் மீ 23உ. வெள்ளிக்கிழமை [இதழ் 42

## தாக்குக!



# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் வருஷம் அக்டோபர்மீ 23௳, வெள்ளிக்கிழமை [இதழ் 4

## அட்டவணை


| | பக்கம் |
|---|---|
| பட்டாளத்தில் புதிதாகச் சேருதல் .. .. .. | 3 |
| இராணுவ வாழ்வின் சிறப்பு .. .. .. | 5 |
| மூன்று மாத அனுபவங்கள் .. .. .. | 8 |
| இராணுவ உத்தியோகஸ்தர்கள் பயிற்சி .. .. | 9 |
| தென்னிந்தியப் பட்டாளப் பயிற்சிகள் .. .. | 12 |
| இந்திய வீரர்களின் தீரச் செயல்கள் .. .. .. | 14 |
| நெருப்புக்கு முன்னும் நிம்மதி .. .. .. | 16 |
| சென்னை நகரப் படைப் பூர்வீகச் சரித்திரம் .. .. | 17 |
| சென்னை இராணுவப் பயிற்சி சாலை .. .. .. | 19 |
| படையில் சேருவதின் அனுகூலங்கள் .. .. | 20 |
| சென்னைப் படை ஆரம்ப விழா .. .. .. | 21 |
| இராணுவ வீரர் வாழ்வின் உயர்வு .. .. .. | 23 |
| மகாராஜாவும் வேலையாளும் .. .. .. | 24 |
| 'எல் ஆதம்'கோட்டை யுத்த சம்பவங்கள் .. .. | 26 |
| பிரிட்டிஷ் சிப்பாய்கள் நடந்து கொள்ளும் முறை .. | 28 |


## படங்களின் அட்டவணை


| | |
|---|---|
| புது ரிக்ரூட்டுகளுக்குத் துப்பாக்கிப் பயிற்சி .. .. | 3 |
| 38 அங்குல மார்பு அளவு! பேஷ்! .. .. | 4 |
| புதிய ரிக்ரூட்டுகள் உடற் பயிற்சி செய்கிறார்கள் .. .. | 5 |
| எதிரியைத் தாக்கும் பயிற்சி: முள் வேலியைத் தாண்ட முயற்சி. | 6 |
| எதிரி தாக்கினால், புகை வாயுவைக் கொண்டு தடுக்கும் பயிற்சி. | 7 |
| தடைப் பந்தயம்: ஒரே மூச்சில் தட்டியையும் தண்ணீரையும் தாண்டுகிறார். | 7 |
| தடைப் பந்தயம்: நீண்ட கோலை ஊன்றி குட்டையைத் தாண்டுகிறார். | 7 |
| சிப்பாய் வாழ்க்கையே சுக வாழ்க்கை! .. .. | 11 |
| போலிப் போராட்டத்தில் காலாட் படை முன்னேறுகிறது .. | 12 |
| போலிப் போராட்டத்திற்குப் போகும் காலாட் படை .. | 13 |
| டாங்கிப் போர் நடை பெறுகிறது .. .. .. | 13 |
| போலிப் போராட்டத்திற்குப் போகும் டாங்கி .. .. | 13 |
| புகழ் பெற்ற சாப்பர்கள் வாத்தியக் கோஷ்டி .. .. | 14 |
| படை வீட்டைச் சுற்றி கட்டப் படும் காவல் கூடங்களில் ஒன்று. | 15 |
| முள் வேலி போடுகிறார்கள் .. .. .. | 17 |
| செய்தி கொண்டு போகும் தூதர்கள் .. .. .. | 18 |
| சென்னைக் காவலர்கள் ஆற்றைக் கடக்கிறார்கள் .. | 19 |
| தென்னிந்தியப் படைத் தலைவர் லெப்டினெண்ட் ஜெனரல் சர் நோயல் பெரஸ்போர்ட் பியர்சும் மே. த. சென்னை கவர்னரும். | 21 |
| பழைய படை வீரர்களோடு சென்னை கவர்னர் .. .. | 22 |
| கேசவ பாஸ்லே .. .. .. .. .. | 24 |
| பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் இந்தியப் படையினரும் நீந்துகின்றனர். | 28 |




# பட்டாளத்தில் புதிதாகச் சேருதல்.

## சிப்பாய்கள் ஆக விரும்புகிறவர்கள், செய்ய வேண்டியவை.

### இராணுவச் சேவையின் அனுகூலங்கள்.

புதிதாக படையில் வந்து சேருகிறவர் தான் 'ரிக்ரூட்'. அவரைத் திடீரென்று அவருடைய கிராமத்திலே யிருந்து பிடித்துக் கொண்டு வந்து விடுவதில்லை. படைகளுக்கு ஆள் திரட்டும் பிரசாரக்காரர்கள் பேசுவதை அவர் பல மாதங்களாகக் கேட்டிருக்க வேண்டும். அல்லது சுவரொட்டி விளம்பரங்களைப் பார்த்திருக்க வேண்டும். அல்லது அவருடைய கிராமத்தி லிருந்து படையில் சேர்ந்திருந்து, திரும்பி வந்தவர் யாரேனும் தம் அனுபவத்தையும் இராணுவ வாழ்க்கையின் ஆச்சரியங்களையும் எடுத்துச் சொல்லி யிருக்க வேண்டும்.

பிறகு, தானும் படையில் சேருவ தென்று முடிவு செய்து கொள்கிறார். தன் குடும்ப விஷயங்களை யெல்லாம் ஒருவாறு முடிவு செய்து கொள்ளுகிறார். நேரே கிராம முனிசிப்பிடமாவது, படைக்கு ஆள்திரட்டும் எஜெண்டிடமாவது போகிறார். நூற்றுக் கணக்காக இந்த எஜெண்டுகள் சென்னை மாகாணத்திலுள்ள பல கிராமங்களுக்கும் போய்க் கொண்டிருக்கிறார்கள். கிராமவாசிகள் இவர்களை இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளுகிறார்கள். அவர்கள் காக்கி உடுப்பு அணிந் திருக்கிறார்கள். அவர்கள் சட்டைக் கையில் ஒரு பச்சை நிறப் பட்டை இருக்கிறது. இவரைக் கண்ட உடனே, அவருக்குப் படையில் சேருவதால் உண்டாகும் நன்மைகளைக் குறித்தும், சம்பள விவரங்களைக் குறித்தும் அவர் தெரிவிக்கிறார். அவருடைய சம்மதியின் பேரில், எக்ஸ்ட்ரா உதவி ரிக்ரூட்டிங் ஆபீசுக்கு அவரை அந்த எஜெண்டு அழைத்துப் போகிறார்.

தான் படையில் சேருவ தென்று தீர்மானம் செய்தது முதல் அவருக்கு எஜெண்டு தான் சாப்பாடு போடுகிறார். பணத்தைக் குறித்து அவர் கவலைப் படவேண்டியதே கிடையாது. சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு எக்ஸ்ட்ரா அஸிஸ்டெண்ட் ரிக்ரூட்டிங் ஆபீஸ் இருக்கிறது. சில ஜில்லாக்களில் 2 அல்லது 3 ஆபீசுகளும் இருக்கின்றன. ஆகையால் ஒரு ரிக்ரூட் தன் கிராமத்தி லிருந்து ஒரு ரிக்ரூட்டிங் ஆபீசுக்குப் போக 70 மைல்களுக்கு மேல் போகும்படி இருக்காது. எக்ஸ்ட்ரா அஸிஸ்டெண்ட் ரிக்ரூட்டிங் ஆபீசர் சதா சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டு தான் இருப்பார். ஆகையால், தன் சொந்தக் கிராமத்துக்கு அவர் வரும் போதே, ஒரு ரிக்ரூட் நேரில் அவர் முன் ஆஜராகி படையில் சேர, தான் விரும்புவதாக அறிவிக்கலாம்.



புது ரிக்ரூட்டுகளுக்குத் துப்பாக்கிப் பயிற்சி.

இந்த உத்தியோகஸ்தர் ஒரு சுபேதாராகவோ, சுபேதார் மேஜராகவோ, ஒரு தாசில்தாராகவோ இருக்கலாம். இவர் ரிக்ரூட்டின் கருத்தை யறிய வேண்டி சில கேள்விகள் கேட்கிறார். அளந்து பார்க்கிறார். நிறுத்துப் பார்க்கிறார். ஒரு டாக்டரைக்

கொண்டு பரிட்சித்துப் பார்க்கிறார். பிறகு இராணுவத்தில் இன்ன வேலைக்குத் தான் அந்த ரிக்ரூட் தகுந்தவர் என்று அந்த உத்தியோகஸ்தர் தெரிவிக்கிறார். அந்த ஆபீசிலேயே அந்த ரிக்ரூட் தங்கியிருக்கிறார். அநேக ரிக்ரூட்டுகள் சேர்ந்த வுடனே அவர்களை எல்லாம் ஒரு பஸ் மூலமாகவோ, ரயில் மூலமாகவோ அஸிஸ்டெண்ட் ரிக்ரூட்டிங் ஆபீஸரின் தலைமை ஆபீசுக்கு அந்த ஆள் சேர்க்கும் எஜெண்ட் அழைத்துக் கொண்டு போகிறார்.

இங்கே, ரிக்ரூட்டுகள் தங்குவதற்கு விடுதிகள் இருக்கின்றன. குளிப்பதற்கும் சமைப்பதற்கும் தனித் தனி யிடங்கள் இருக்கின்றன. இங்கே தான் இராணுவத்தார் கொடுக்கும் ஏராளமான உணவுப் பொருள்களைக் கொண்டு சமைத்துச் சாப்பிடுகிறார்கள். இங்கே தான் இராணுவ ஆரம்பக் கட்டு திட்டங்களுக்கு ரிக்ரூட்டுகள் ஆளாகிறார்கள். குழல் ஊதிய உடனே, கவாத்துக்குத் தயாராகி விட வேண்டும். அப்போது அஸிஸ்டெண்ட் ரிக்ரூட்டிங் ஆபீஸர் இவர்களைப் பார்வை யிடுவதும் உண்டு. மூன்று மூன்று பேர்களாக அணி வகுத்து இராணுவ முறைப்படி நடந்து போகவும் வரிசைப் படி நிற்கவும் ஆரம்பப் பயிற்சி ஆரம்பமாகிறது. விளையாட்டுகளும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

அஸிஸ்டெண்ட் ரிக்ரூடிங் ஆபீசர்கள் இந்தியர்களாகவோ, ஐரோப்பியர்களாகவோ தான் இருக்கிறார்கள். அவரவர்கள் வேலை செய்யும் ஜில்லாக்களைக் குறித்த எல்லா விவரங்களையும் அவர்கள் நன்கு அறிவார்கள். அந்த ஜில்லாக்களில் பேசப் படும் மொழிகளையும் பேசுகிறார்கள். இவர்களுடைய தலைமைக் காரியாலயத்தில் ஒவ்வொரு ரிக்ரூட்டையும் மீண்டும் டாக்டர் சோதிக்கிறார். உயரம், எடை, கல்வி முதலியவை பற்றியும் தணிக்கை செய்கிறார்கள். கடைசியாக அவரை இன்ன படைக்குத் தகுதியானவர் என்று அந்த உத்தியோகஸ்தர் தானே நேரில் நியமிக்கிறார். இதில் ரிக்ரூட்களின் கருத்தையும் ஒட்டித் தான் நியமிக்கிறார்.

உடல் வலிமை, கல்வித் தகுதி இவ் விரண்டையும் ஒட்டித் தான் ஒவ்வொரு ரிக்ரூட்டையும் இன்ன பதவிக்குத் தகுதி யுடையவர் என்று முடிவு கட்டுகிறார்கள். உயரமாகவும் பருத்தும் இருக்கிறவர்களை பீரங்கிப் படைக்கும், மற்றவர்களை ஆர்.ஐ.ஏ.எஸ்.சியைச் சேர்ந்த எம்.டி. பகுதிக்கும், சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸைச் சேர்ந்த காலாட் படைக்காவது, க்யு.வி.ஓ. வாகவாவது சேர்த்துக் கொள்ளுகிறார்கள். படித்தவர்களாக விருந்தால் அதாவது 6-வது வகுப்பு தேறி, கொஞ்சம் இங்கிலீஷ் பேசக் கூடியவர்களாக இருந்தால், நானகமிஷன் உத்தியோக மாணவர்களாகவோ கடற்படையில் ஸ்டோக்கர்களாகவோ சீமென்களாகவோ சேர்த்துக் கொள்ளுகிறார்கள்.

இதற்கு அடுத்தபடி, பட்டாளத்தில் தாக்கலாவது. இதற்குச் சில சடங்குகள் இருக்கின்றன. ரிக்ரூட்டுகள் எல்லோரையும் வரிசையாக நிறுத்துகிறார்கள். 13 கேள்விகளுக்கு அவர்கள் விடை சொல்ல வேண்டும். இந்தக் கேள்விகளை ரிக்ரூட்டுகள் உணர்ந்து கொண்டு அவற்றிற்குத் தகுந்த விடைகளைக் கூறி விட்டார்கள் என்று அந்த உத்தியோகஸ்தர் திருப்தி கொண்டாரானால், தாக்கல் பத்திரத்தில் கையெழுத்துப் போடுகிறார். அது முதல் அந்த ரிக்ரூட் இந்தியப் படையைச் சேர்ந்தவ ராகிறார்.

10 முதல் 100 ரிக்ரூட்கள் சேர்ந்த பிறகு, அவர்களை ரயிலேற்றி படைகள் உள்ள ஊர்களுக்கு அனுப்புகிறார்கள். ரயிலில் இவர்களுக் கென்று தனிப் பெட்டிகள் ரிசர்வ் செய்கிறார்கள். படைக்கு ஆள் சேர்க்கும் எஜெண்டும் அவர்களுடனே போய் படை அதிகாரிகள் வசம் அவர்களை ஒப்புவித்து விடுகிறார். பிறகு தான், படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சில மாதங்களுக்குப் பிறகு ரஜாவில் படை வீரர் திரும்பி வருகிறார். அப்போது, தான் அணிந்து கொண்டு வரும் இராணுவ உடுப்புக்களைக் குறித்துப் பெருமை யடைகிறார். பையில் பணம் கலகலக்கிறது. இராணுவத்தில் சேருவதனால் உண்டாகும் சிறப்புக்களைக் குறித்து அடிக்கடி தன் கிராமத்தாருடன் பேசிக் கொண்டிருக்கிறார். இப்படி ரஜாவில் தம் ஊர்களுக்குத் திரும்பி வரும் படை வீரர்கள் தான், இந்திய ராணுவத்தைக் குறித்தும், படைகளுக்கு ஆள் சேர்ப்பதைக் குறித்தும் சிறந்த முறையில் பிரசாரம் செய்யக் கூடியவர்கள்.




38 அங்குல மார்பு அளவு ! பேஷ் !



# இராணுவ வாழ்வின் சிறப்பு

## கல்வியும் ஒழுக்கமும் வேண்டும்

### படையின் தனிப் பெருமை

ஒருவர் போர் வீரராக விருந்தால், அவரைப் பற்றி சிலர் எவ்வளவு தப்பெண்ணங்கள் கொள்ளுகிறார்கள் தெரியுமா ? இந்த மகா யுத்தம் ஆரம்பமாகி 3 வருஷங்கள் ஆகி விட்டன. இவ்வளவு காலத்திற்குப் பிறகுங் கூட, ஒரு போர் வீரராகவோ சிப்பாயாகவோ இருப்பது பற்றி சிலர் பயப்படுகிறார்கள். அது, ஒரு கேவலமான வேலை யென்றும், துப்பாக்கியைக் கையில் தூக்கிக் கொண்டு போக வேண்டியதைத் தவிர வேறு வேலை கிடையா தென்றும் நினைக்கிறார்கள். இந்தத் தப்பிதமான எண்ணத்தினால், எவ்வளவு மகத்தான கேடு உண்டாகியிருக்கிற தென்று, இந்த யுத்தம் வெகு தெளிவாக நமக்கு எடுத்துக் காட்டி யிருக்கிறது. ஏனென்றால், இன்றையப் படை வீரர், சிறந்த புத்திசாலிகளாகவும், நடக்க முடியும். வழியில் உண்டாகும் தடைகள் எல்லாம் அப்போது ஒரு பொருட் டல்ல. நெடுந் தூரமானாலும் லட்சிய மில்லை. முகத்தில் ஒரு இன்பக் குறி தாண்டவ மாடுகிறது. கண்களில் ஒளி வீசுகிறது. தன் நம்பிக்கை யுண்டாகிறது. எல்லா வித படை ஆயுதங்களையும் கையாளுவதில் மிகவும் திறமை யுண்டாகிறது. கடும் வெயிலிலும் மணிக் கணக்காக ஓயாமல் பள்ளங்களைத் தோண்டிக் கொண்டிருக்கக் கூடும். இடையில் அவர் சிகரெட் பிடிப்ப தில்லை; தண்ணீர் குடிப்பதில்லை. அது போலவே மணிக் கணக்காக இரும்பு முள் வேலிகள் அடைக்கலாம். விஷ வாயு தன்னைத் தாக்காத படி தடுத்துக் கொள்ளலாம். இப்படிப் பட்டவர், எதிரியை எங்கே தாக்கலா மென்று தேடிக் கொண்டிருப்பார். எப்போதும் எச்சரிக்கையாகவே



புதிய ரிக்ரூட்டுகள் உடற் பயிற்சி செய்கிறார்கள்.

கற்று தேர்ந்தவர்களாகவும், பெரிதும் முன்னேற்ற மடைந்தவர்களாகவும் இருக்க வேண்டியதா யிருக்கிறது.

ஒரு ரிக்ரூட் பெறும் பயிற்சி, ஒரு மனோகரமான கல்வி; உடல் நிலையைத் திருத்தி யமைப்பது ; ஒழுக்க முறையைச் சீர் படுத்துவது. படை வீரருக்குரிய எல்லாத் தகுதிகளும் பெற்றவர் தான் உண்மைப் படை வீரர். பின் வாங்காது போர் புரியும் திறமை இவருக்கு இருக்க வேண்டும். இதற்கு, கல்வியின் உண்மையான நுட்பங்களை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும். அடுத் தடுத்து நேர்ந்த பல சம்பவங்களை ஒன்றாகத் தொகுத்து, சுருக்கமாகவும் தெளிவாகவும் செய்தி எழுதி யனுப்ப அவர் திறமை வாய்ந்தவராய் இருக்க வேண்டும். நன்றாகப் படித்துத் தேறியவர்கள் கூட, இதைச் சரிவர எழுதுவதில்லை. ஒரு தேசப் படத்தைக் கொண்டு, தான் உள்ள இடத்தையும், தான் போக வேண்டிய பாதையையும் தெரிந்து கொள்ள வேண்டும். அது பற்றி தெளிவாக அறிக்கை எழுதி அனுப்பும் திறமையும் அவருக்கு வேண்டும். இவற்றிற்கு, படிக்கவும், எழுதவும், கணக்குப் போடவும், பூகோளமும் நன்றாகப் படித் திருக்க வேண்டும்.

உடல் நன்றாகத் தேறி, பலமாகவும் கட்டாகவும் இருந்தால், கைகளையும் கால்களையும் நன்றாக வீசி இருப்பார். இவை எல்லாவற்றையும் விட, மிகவும் முக்கியமான தோர் பழக்கம் அவருக்கு அமைந்திருக்க வேண்டியது அவசியம். அதாவது, **மேல் அதிகாரிகள் எப்படிப்பட்ட கட்டளை யிட்டாலும் கொஞ்சங் கூடத் தாமதிக்காமல், முழு மனதோடு, சந்தோஷமாக, உடனே அதை நிறை வேற்ற வேண்டும்.**

இப்படிச் செய்ய எல்லா ரிக்ரூட்டுகளாலும் முடியாது. அதனால் மிகவும் சிறந்த தகுதி யுள்ளவர்களைத் தான் இப்போது சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இந்தத் தகுதிகள் எல்லாம் ஒரு ரிக்ரூட்டுக்கு ஏற்பட்டு விடுகிற தென்று வைத்துக் கொள்ளுவோம். அப்போது சிவில் வாழ்வி லுள்ள அநேகரை விட, இவர் மிகவும் மேலானவராகவும், அதிக சுகாதாரத்தோடும், மிகவும் சந்தோஷமாகவும் இருப்பார்.

**ரிக்ரூட்கள்.**

இந்தப் பயிற்சி பெறுங் காலத்தில், தாம் என்னென்ன செய்ய வேண்டுமென்று கேள்விப் பட்டு அவர் மனங் குழம்பிப் போவது முண்டு. ஆனால், அவர்களுக்கு அங்கே நல்ல உணவு கிடைக்கிறது. சிறந்த முறையில் அவர்களை நடத்துகிறார்கள். இவர்களுடைய உபாத்தியாயர்களும் மிகவும் ஊக்கத் தோடும் புத்திசாலித் தனமாகவும், இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கின்றனர். இவற்றால்

அவருடைய மனக் குழப்பம் மாறுகிறது. மனம் உறுதிப் படுகிறது. மகிழ்ச்சி யோடும் ஊக்கத் தோடும் பயிற்சியில் முன்னேறுகிறார்.

"ஒழுக்க"த்தைப் பற்றி இந்த யுத்தத்தில் நாம் வெகுவாகக் கேள்விப் படுகிறோம். ஒழுக்கத்தில் உயர்ந்துள்ள ஒரு படை, ஒழுக்க மில்லாத அதே எண்ணிக்கையுள்ள மற்றொரு படையை வெகு எளிதில் வென்று விரட்டி விட முடியும்.

வங்காளத்தில் ப்ளாஸி யுத்தத்தில் 50,000 பேர்களைக் கொண்ட பெரும் படையை 3,000 பேர்களைக் கொண்ட சென்னைப் படையினரைக் கொண்டு க்ளைவ் பிரபு வெல்ல வில்லையா? அவருடைய உத்வேகத்தாலும் ஊக்கத்தாலும், இவருடைய படையின் ஒழுக்க நிலை மிகவும் ஓங்கி யிருந்தது. தம் தலைவர் கட்டளை எதுவானாலும், அதை நிறை வேற்ற அவர்கள் அனைவரும் ஆயத்தமா யிருந்தனர். ப்ளாஸி யுத்தம் நடை பெற்ற போது கடும் மழை, மின்னல், இடி, இவ்வளவு கஷ்டத்திலும் சென்னைப் படையினர் திடுக்கிடத் தக்கபடி வெற்றி பெற்றனர்.

**படையின் தனிச் சிறப்பு.**

ஒவ்வொரு படைக்கும் தனிப் பெருமை யுண்டு. இது பற்றி அந்தப் படையினர் பெருமை யடைகிறார்கள். இதற்கும் அந்தப் படையின் ஒழுக்கத்திற்கும் சம்பந்த முண்டு. இதனால் தான் ரிக்ரூட்களுக்கு அவரவர் படைகளின் சரித்திரத்தையும் சொல்லிக் கொடுக்கிறார்கள். எப்போதும் ஒவ்வொரு இராணுவ உத்தியோகஸ்தருக்கும் உயர்ந்த நோக்கம் ஒன்று உண்டு. மற்ற படைகளை விட, தன் படை, ஒழுக்கத்திலும் போராட வேண்டும் என்னும் உணர்ச்சியிலும், மிகவும் உயர்ந் திருக்க வேண்டு மென்று விரும்புவது தான் அந்த நோக்கம்.

சலாம் செய்வது, தம் உடுப்புக்களைச் சுத்தமாக மடிப்பு குலையாமல் முறைப்படி வைத்திருப்பது, நாள் தோறும் காலையில் க்ஷவரம் செய்து கொள்ளுவது, தாம் இன்ன படையைச் சேர்ந்தவர் என்பது பற்றி பெருமை கொள்ளுவது ஆகியவைகளையும் இராணுவத்தார் ஒழுக்கம் என்று தான் கூறுகிறார்கள். இது ஆச்சரியந் தான்.

தம் படையின் ஒழுக்கத்தை புதிய ரிக்ரூட்கள் வெகு விரைவில் தெரிந்து கொள்ளுகிறார்கள். புகழ் பெற்ற பட்டாளங்களைப் பல துண்டுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவோடும் பல ரிக்ரூட்களைச் சேர்த்து, தனித் தனிப் படைகளாக அமைத்திருக்கிறார்கள். என்றாலும் அந்த மூலப் படைக்குப் புகழ் தேடித் தந்த வீரர்களைப் போலவே, இந்தப் பிரிவுப் படைகளின் வீரர்களும் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் அந்தப் படை புணர்ச்சி தான்.

கடும் உழைப்பைத் தாங்கத் தக்க உடற் பயிற்சியும், மனம் உறுதி யடையத் தக்க பயிற்சியும் மட்டும் போதுமா? போர் முறைப் பயிற்சியும் வெகுவாக அளிக்கப் படுகிறது. இவை மட்டு மன்றி வழக்கம் போல வகுப்புக்களில் நடை பெறும் பாடங்களும், சந்தர்ப்பங்களில் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான பயிற்சிகளும் தற்காலப் போர் முறைகளைக் குறித்த பாடங்களும் சினிமாப் படங்களைக் கொண்டு சொல்லிக் கொடுக்கப் படுகின்றன. யுத்தத்தின் போக்கைக் குறித்து கேள்விகள் கேட்கவும் விவாதிக்கவும் பள்ளிக்கூட நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி யிருக்கிறார்கள். அப்போது, இராணுவ நிலைமையைக் குறித்தும், அரசியல் நிலைமையைக் குறித்தும் இராணுவப் பயிற்சியையும் கொள்கையையும் குறித்த எந்த விஷயத்தைப் பற்றியும் அவர்கள் விவாதித்துப் பேசலாம். பெங்களூர் பள்ளிக் கூடம் உள்ளிட, எல்லா இராணுவப் பள்ளிக் கூடங்களிலும் தற்கால இராணுவ சம்பந்தமான புத்தகங்களும் அரசியல் சம்பந்தமான புத்தகங்களும் கொண்ட சிறந்த புத்தகசாலைகளை வைத்திருக்கிறார்கள். இன்னும் பல காதற் கதைப் புத்தகங்களும், மற்ற பல வகைப் புத்தகங்களும் அங்கே உண்டு.

திறமை யுள்ள கமிஷன் உத்தியோகஸ்தராக ஒருவர் ஆக வேண்டுமானால் 6 மாத காலப் பயிற்சி மிகவும் கொஞ்சம் தான். எல்லோரும் நல் லெண்ணத்தோடு கடுமையாக உழைத்தால் தான், இப்பயிற்சி வெற்றி தரும். இந்தப் பயிற்சி எல்லா வகைகளிலும் மிகவும் ப்ரந்தது. திறமை சாலியாய் இருந்தால் மட்டுந் தான் இதில் மீள முடியும்.

**இந்த யுத்தத்தில் நாம் வெல்ல வேண்டு மானால், நம் படைகளைத் தலைமை வகித்து நடத்திப் போகுந் திறமைசாலிகள் தான் வேண்டும்.**



எதிரியைத் தாக்கும் பயிற்சி : முள் வேலியைத் தாண்ட முயற்சி.





எதிரி தாக்கினால், புகை வாயுவைக் கொண்டு தடுக்கும் பயிற்சி.



தடைப் பந்தயம்—ஒரே மூச்சில் தட்டியையும் தண்ணீரையும் தாண்டுகிறார்.



தடைப் பந்தயம்——நீண்ட கோலை ஊன்றி குட்டையைத் தாண்டுகிறார்.

# மூன்று மாத அனுபவங்கள்.

## சிப்பாயின் வாழ்க்கையின் சிறப்பு.

ஒரு ஹவில்தார். படையில் சேர்ந்து 3 மாதங்கள் தான் ஆகின்றன. தன் அனுபவத்தை இவர் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—

நான் என் படையுடன் போய்ச் சேரும் பொருட்டுப் போய்க் கொண்டிருந்தேன். வழியில் அந்தப் படையைச் சேர்ந்த குமாஸ்தாவும் என்னுடன் வந்து சேர்ந்தார். நான் போராடும் படையில் சேருவதானல், எனக்கு மிகவும் கஷ்டமா யிருக்கும் என்றும், மிகக் கடுமையான கட்டு திட்டங்களுக்குத் தக்கபடி நான் என் போக்கை மாற்றி யமைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படு மென்றும், ஏதேனும் சிறு குற்றம் செய்து விட்டாலுங் கூட, இராணுவ விசாரணைக்கு உள்ளாக நேரு மென்றும் என்னிடம் அவர் கூறினார். இதைக் கேட்டு உண்மையிலேயே நான் கொஞ்சம் அச்சங் கொண்டேன். இங்கிலாந்தில் முன் காலத்தில் நடை பெற்ற இராணுவ விசாரணைகளைப் பற்றிய கதைகளை நான் படித்திருக்கிறேன். குற்றவாளிகளை முக்கோணத்தில் கட்டி சவுக்கினால் அடித்ததாக நான் படித்ததுண்டு. அவர் கூறியது பேலவும், நான் பயந்தது போலவும், இங்குள்ள நிலைமை இல்லை யென்று நான் இங்கே வந்த பிறகு தான், எனக்குத் தெரிகிறது.

எந்தக் காரியத்தைச் செய்வதானாலும், அதற்கு வேளை, இடம், செய்முறை ஆகியவை தனித் தனியே இருக்கின்றன. ஆகையால் ஒழுங்கு முறை, கூட்டுணர்ச்சி, கடமையை நிறை வேற்ற வேண்டும் என்னும் பொறுப்புணர்ச்சி, ஆகிய சிறந்த குணங்கள் இராணுவ வாழ்க்கையால் ஏற்படுகின்றன. புத்தியும் அலசிப் பார்க்கும் தன்மையு முடைய எவரும் இதை ஒப்புக் கொள்ளுவார்கள். ஆனல் பொதுவாக ஜனங்கள் என்ன நினைக்கின்றார்கள் : படையில் சேருவ தென்றால் யம லோகத்திற்குள் நுழைவது போலத் தான். கட்டளை பிறந்த வுடனேயே இரக்க மில்லாமல் சுட்டுத் தள்ளும் தன்மை இவர்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே, அவர்கள் கொடியவர்களாகத் தான் இருப்பார்கள் என்று தான் நினைக்கிறார்கள். இவை எல்லாம் சரியான கருத்துக்கள் அல்ல என்பது தான் என் எண்ணம். இப்படிப் பட்ட தவறான எண்ணங்கள் தோன்றுவதற்குக் காரணம், பெரும்பாலும் நம்மவர்களுக்கு இராணுவ உணர்ச்சி யில்லாதது தான். பழைய காலத்தில் சாதாரண ஒரு சிப்பாய்க்கு ரூ. 7, 9, தான் சம்பளம். இப்போதோ ரூ. 16 சம்பளம். அக்காலத்தில் சாதாரண சிப்பாய்களாகச் சேர்ந்தவர்கள் அநேகம் பேர் இப்போது தென்னிந்திய உத்தியோகஸ்தர்களாக இராணுவத்தில் இருக்கிறார்கள். இந்த உண்மையைப் பொதுவாக ஜனங்கள் உணருவார்களானல், அவர்களுடைய அச்ச மெல்லாம் நீங்கி விடும்.

நெடு நாள் ஊழியத்தினாலும், தம் இராணுவக் கடமைகளைத் திறமையோடு நிறை வேற்றியதனாலும் தான், இவர்கள் இந்தப் பதவிகளை யடைந்தார்களே யொழிய, பள்ளிக் கூடங்களிலோ காலேஜிகளிலோ படித்துத் தேறியதனால் அல்ல. பள்ளிக் கூடங்களில் படித்துத் தேறாத காரணத்தினால் தான், பொது ஜனங்க ளோடு அவர்கள் நெருங்கிப் பழகியுங் கூட, அவர்கள் மனதில் படும்படி இராணுவ வாழ்க்கையின் சாதக பாதகங்களை எடுத்துச் சொல்ல அவர்களால் கூடுவ தில்லை. இதனால் தான் இராணுவ வாழ்க்கையின் பாங்கை பொது ஜனங்கள் செவ்வையாக உணர்ந்து கொள்ள முடியாமற் போயிற்று. இங்கே இப்போது அநேக இளைஞர்கள் இருக்கிறார்கள். எல்லா இனத்தவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் நன்கு கற்று தேறியவர்கள். இவர்களுடைய சம்பளமும் உயர்ந் திருக்கிறது.

என் சொந்த அனுபவங்களைத் தான் எடுத்துச் சொல்ல முன் வந்தேன். ஆனல், அதை விட்டு, முன் காலத்திலும், இந்தக் காலத்திலும் இராணுவப் போக்கிலுள்ள வேற்றுமைகளைப் பற்றியே சொல்லிக் கொண்டிருந்து விட்டேன். இப்போது ஒரு கிராமத்தில் நான் நியமிக்கப் பட்டிருக்கிறேன். இது பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். இந்தக் கிராமத்திற்கும் அடுத்துள்ள கிராமத்திற்கும் 5 மைல்கள் தூரம் இருக்கிறது. இந்தக் கிராமத்தின் சீதோஷ்ண நிலைமை உடலுக்கு மிகவும் ஏற்றது. நான் இயற்கையின் அழகில் ஈடுபட்டிருப்பவன். ஆகையால் இயற்கை யோடு இயைந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை நான் மிகவும் விரும்பினேன். எங்கள் முகாம் இருந்த இடத்தைச் சுற்றி ஒரு பெரிய வெளி. புகையை கக்கும் பட்டணங்கள் அங்கே இல்லை.

எனக்கும் என் கூட்டாளிகளுக்கும் ஒரு சிறந்த வசதி யிருந்தது. அதாவது, எங்களை, படை வீர குமாஸ்தாக்கள் என்று அழைத்தார்கள். நாங்கள் பேனாவைக் கொண்டும் துப்பாக்கியைக் கொண்டும் வேலை செய்தோம். பேனா மிகுந்த பல முள்ளது. அதன் கனம் அரை ரூபாய் எடை தான். பல வருஷங்களாகப் பேனாவையே கையாண்டு வந்தோம். இப்போது 10 பவுண்ட் கனமுள்ள துப்பாக்கியைக் கையாள வேண்டி யிருக்கிறது. இது சற்று கஷ்டந் தான்.

நான் ஒரு போர் வீரன் என்னும் முறையில் நாள் தோறும் உடற் பயிற்சிக் கவாத்தும் இராணுவக் கவாத்தும் செய்ய வேண்டி யிருக்கிறது. உடற் பயிற்சிக் கவாத்தாலும் மிகவும் நன்மை யுண்டு.

நாள் தோறும் உடுத்திக் கொள்ளுவதற்கு முழு செட் உடுப்புக்கள் எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். குளிர் காலத்தில் போட்டுக் கொள்ள தடித்த கம்பளியால் தைக்கப் பட்ட நெடுஞ் சட்டையும், சாதாரணமாக அணிந்து கொள்ளுவதற்கு ஒரு செட் இந்துஸ்தானி உடுப்புக்களும் கொடுக்கிறார்கள். இந்தச் சாதாரண உடுப்புகளை யணிந்து கொண்டு கவாத்து செய்யக் கூட நாங்கள் போகலாம். எங்கள் படையின் கர்னல் கூட இதே உடைகளைத் தான் அணிந்து கொண்டு கவாத்துக்கு வருவார். எந்தக் கமிஷன் உத்தியோகஸ்தரையாவது, அவருக்குக் கீழ்ப் பட்ட உத்தியோகஸ்தரையாவது படை வீரரையாவது கண்டால், இராணுவ விதிகளின்படி சலாம் செய்ய வேண்டும். அது போலவே அந்த உத்தியோகஸ்தர்களும் திரும்பச் சலாம் செய்கிறார்கள். ஆனல், தமக்குக் கீழ்ப் பட்ட நிலைமையி லுள்ளவர்கள் தம்மை சலாம் செய்தால், உயர் நிலையி லுள்ள சிவில் உத்தியோகஸ்தர்கள் தலையசைப்பது, புன் சிரிப்புப் புரிதல், கை விரல் ஒன்றை மட்டும் உயர்த்துவது, வழக்கம். அப்படி இராணுவ உத்தியோகஸ்தர்கள் செய்ய மாட்டார்கள்.

படையில் எல்லோருக்கும் ஒரே மாதிரி உணவு தான் அளிக்கப் படுகிறது. படை வீரர்களுக்குக் காலா காலத்தில் சரியானபடி உணவு அளிக்கப்படுகிறதா என்றும், குறை சொல்லுவதற்கே இடம் இருக்கப் படாதென்றும் உத்தியோகஸ்தர்கள் மிகுந்த அக்கரை கொள்ளுகிறார்கள்.

வைத்தியமும் மிகவும் நல்ல முறையில் தான் நடக்கிறது என்று தான் நான் சொல்லுவேன். ஒவ்வொருவரும் நோய் வராமல் தடுத்துக் கொள்ள வேண்டும். நோய்க்கு இடங் கொடுத்து அதை வளர்க்கவே கூடாது. உண்மையாகவே ஏதேனும் நோயுண்டானல், கட்டாயமாக அவர் உடனே வைத்தியம் செய்து கொள்ளத் தான் வேண்டும். சீக்கு லீவ் கொடுக்கப் பட வேண்டு மென்று வைத்தியர்கள் சிபார்சு செய்வார்களானல், முழுச் சம்பளத் தோடு

(10-ம் பக்கம்—பார்க்க.)



# இராணுவ உத்தியோகஸ்தர்கள் பயிற்சி.

## இராணுவப் பள்ளிக் கூடங்களின் நோக்கம்.

### வாழ்க்கை முறையைத் திருத்தக் கூடியது.

இராணுவ உத்தியோகஸ்தர்களின் பயிற்சி சாலை யொன்று பெங்களூரில் இருக்கிறது. அதன் இரண்டாவது ஆண்டு விழா சமீபத்தில் தான் நடை பெற்றது. இரண்டு வருஷங்களுக்கு முன் இதில் 400 மாணவர்கள் தான் பயிற்சி பெற்று வந்தார்கள். இப்போது 1,400 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இனி இவர்களுடைய எண்ணிக்கை குறையு மென்று கருத இட மில்லை.

பொது ஜனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இவர்கள் இராணுவ உத்தியோகஸ்தர்கள் பயிற்சி சாலையைப் பற்றி அக்கரை கொள்ளுவார்கள். இந்தப் பள்ளிக் கூடங்களைப் பற்றி உண்மையான நிலைமையை எடுத்து பொது ஜனங்களுக்கு உணர்த்துவது என்பது சற்று கஷ்டந் தான். இரண்டு வகையினருக்குத் தான் இதைப் பற்றி தெரியும் என்று ஒருவாறு சொல்லலாம். இரண்டு மாறு பட்ட நிலைகளி லிருந்து அவர்களுடைய கருத்துக்கள் அமைகின்றன. இவ்விரு வகையினர், அந்தப் பள்ளிக்கூடத்தி லுள்ள ஆசிரியரும், மாணாக்கர்களுந் தான்.

இந்தப் பயிற்சி இப்போது வர வர கடுமையானதாகவும், விரிவானதாகவும் ஆகி விட்டது. வேலை நேரமும் அதிகம். உழைப்பும் சற்று கடுமையானதாகி விட்டது. இந்தப் பள்ளியில் ஒருவர் படித்துத் தேறிய பிறகு தான், 'எமர்ஜென்ஸி கமிஷன் ஆபீசர்' என்னும் உயர்ந்த உத்தியோகத்திற்குத் தகுதி யுடையவர் ஆகிறார். மாணாக்கர் நிலையை விட, இந்த உத்தியோக நிலை மிகவும் இன்பமானது தான். மாணாக்கர்களா யிருக்கும் போது, அவர்களுடைய முறைகள் எல்லாம் ஒழுங்கு படுத்தப் படுகிறது. ஆகவே, தாம் மாணாக்கர்களாக இப் பயிற்சி சாலையில் இருந்த போது மிகுந்த இன்பத் தோடிருந்ததாக, கமிஷன் பெற்ற உத்தியோகஸ்தர்கள் கருத மாட்டார்கள். இராணுவ முறைகளைப் பற்றி யாதொன்றும் தெரியாதவர்களும், எந்த வித ஒழுக்க முறைக்கும் கட்டுப் படா திருந்தவர்களுக்குந் தான் இராணுவப் பயிற்சியின் கட்டுப் பாடுகள் சற்று கடினமாகத் தோன்றும். ஏனெனில், இப்படிப் பட்ட வாழ்க்கை அவர்கள் இது வரை வாழ்ந்ததே கிடையாது. அந்த நிலைமை இங்கே மாறி விடும் எப்படி என்றால் இப் பயிற்சி சாலையில் சேர்த்துக் கொள்ளப்படும் முன்பு அவர்கள் ஒழுக்கத்தைப் பண்படுத்த வேண்டி, ஆரம்பப் பயிற்சிப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துகிறார்கள். இராணுவ உத்தியோகத்தின் பலா பலன்களைக் குறித்து எதுவும் தெரியாதவர்கள், அதற்கு, தாம் ஏற்றவர்கள் தானா, என்று தெரிந்து கொள்ள இது சந்தர்ப்பம் அளிக்கும்.

பெங்களூரிலும் மற்ற ஊர்களிலு முள்ள உத்தியோகஸ்தர்கள் பயிற்சி சாலைகளின் மூலம், நாம் என்ன சாதிக்க முடியும்? காலாட் படை உத்தியோகஸ்தர்களாகப் போகிறவர்கள் தவிர, மற்றவர்களுக்கு, பீரங்கிக்காரர்களாகவும், சிக்னல்காரர்களாகவும், ஆர். ஐ. ஏ. எஸ். சி.காரர்களாகவும் விசேஷப் பயிற்சி யளிக்கப் படுகிறது. இவர்கள் பயிற்சி காலமோ மிகச் சுருக்கம். இதற்குள் சுருக்கமாக, இராணுவ வாழ்க்கையின் போக்கை விளக்க வேண்டும் என்பது தான் எமது நோக்கம். காலாட் படையில் சேருகிறவர்களை, தம் பட்டாளத்திற்குத் தலைமை தாங்கி நடத்தக் கூடிய அளவிற்குப் போதுமான அறிவும் பயிற்சியும் உடையவர்களாகச் செய்வது தான், எமது நோக்கம். இவர்கள் தம் படைகளில் சேர்ந்த உடனேயே, இரண்டாவது தலைமை ஸ்தானத்தை வகிக்க வேண்டியவர்கள். அதாவது தம் படைத் தலைவருக்குப் பதிலாக எந்த நிமிஷத்திலும் வேலை செய்யக் கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

இப்பயிற்சி சாலைகளில் பயிலும் மாணாக்கர்கள் எல்லாம், தேசப் படங்களைப் பார்த்து தெரிந்து கொள்ளவும், யுத்த தந்திரத்திலும், தலைமைத் தன்மையிலும் கெட்டிக் காரர்களாக வேண்டு மென்று தான் குறிப்பாக எதிர் பார்க்கப் படுகிறார்கள். இவற்றில் தேறாத மாணவர்கள் இராணுவத்திற்குத் தகுதியான நிலைமையை யடைவது கஷ்டம். பள்ளிக் கூடங்களிலும் காலேஜிகளிலும் மிகத் திறமையோடு படித்துத் தேறியவர்களில் சிலர், தலைமை தாங்கி அடக்கி யாளும் திறமை யில்லாதவர்களா யிருக்கிறார்கள். இந்தத் திறமைகள் இல்லாதவர்களுடைய கையில், யுத்த களத்தில் போராடும் இவருடைய படை வீரர்களுடைய உயிர்களை ஒப்படைப்பது என்பது, முடியாத கரியம்.

தலைமை வகித்து நடத்தும் தன்மை தமக் குண்டு என்று மெய்ப்பிப்பதற்கு இம்மாணவர்களுக்குக் கூடிய வரை அநேக சந்தர்ப்பங்கள் அளிக்கப் படுகின்றன. ஒரு பிரிவுப் படை முதல், முழுப் படை வரை தலைமை தாங்கி நடத்த அவர்களுக்குச் சந்தர்ப்பங்கள் கொடுக்கப் படுகின்றன. படை வீடுகளில் நாள் தோறும் செய்ய வேண்டிய வேலைகளிலும், போர்க் களத்தில் தந்திரத்தைக் கையாள வேண்டிய வேலைகளிலும், பயிற்சி பெற மிகவும் இடம் உண்டு. இவற்றில் மிகவும் உயர்ந்த அளவிற்குப் பயிற்சி பெற வேண்டு மென்பது அவசிய மில்லை. இவற்றில் கொஞ்சங் கூட தகுதி யில்லாதவர்கள் மட்டுந் தான் தேறாமற் போவார்கள். சுறுசுறுப்பும் மன உறுதியும் ஓரளவிற்குத் தேவையா யிருக்கிறது. தடைப் பந்தய ஓட்டப் பயிற்சியும், தாக்கும் பயிற்சியும், மாணாக்கர்களின் மன உறுதியின் நிலைமையையும், மன தைரியத்தையும் விளக்குகின்றன. இவ்விரண்டும் போதுமான அளவிற்கு இல்லையானல், அவர்கள் ஒரு படைக்குத் தலைமை தாங்கி நடத்தும் திறமை அற்றவர்க ளாவார்கள். இவர்கள் மிக உயர்ந்த முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கப் பட மாட்டாது. அவர்கள் மன உறுதி தான் சோதிக்கப் படும். அப்போது தான், அவர்கள் எவ்வளவு அதிகமாகக் களைத் திருந்த போதிலும், தம் வேலைகளைச் சரிவரச் செய்யக் கூடியவர்களா யிருக்க வேண்டும். ஒவ்வொரு மாணாக்கரும் தன் இராணுவ உடுப்புக்களையும் ஆயுதங்களையும் அணிந்து கொண்டு தடைப் பந்தய ஓட்டத்தில் ஓடி வந்த வுடனேயே, இராணுவ அணி வகுப் போடு வேகமாக நடந்து போய், அந்த உடுப்புக்களுடனும் ஆயுதங்களுடனும் நீந்தும் பரீட்சைக்கும் உள்ளாக வேண்டும். இவ்வளவு கடுமையான உழைப்புக்களுக் கெல்லாம் தகுதி யுள்ளவராக ஒவ்வொரு இளம் உத்தியோகஸ்தரும் இருக்க வேண்டும்.

இராணுவ விளையாட்டுகள், வாத்தியங்கள், சங்கீதக் கச்சேரிகள், இராணுவ வழக்க பழக்கங்கள், முதலியவற்றாலும் இராணுவ உணர்ச்சி வளருகிறது. அன்றியும், உத்தியோகஸ்தர்களுக்கும் வாரண்டு உத்தியோகஸ்தர்களுக்கும், நான்கமிஷன் உத்தியோகஸ்தர்களுக்கும், படை வீரர்களுக்கும் நேர் முகமாக ஏற்படும் சம்பந்தத்தாலும் இந்த உணர்ச்சி வளருகிறது.

யுத்தம் முடிந்த பிறகு, படையினர், தம் இராணுவ வாழ்க்கையை விட்டு பழைய சிவில் வாழ்வு நடத்தும்படி நேரும். ரிக்ரூட்களாகச் சேரும் போது அவர்கள் வாழ்ந்து வந்ததை விட, மிகவும் உபயோகமான முறையில் அவர்கள் வாழ்க்கை அமையும்படி செய்ய வேண்டியது ஒவ்வொரு படைத் தலைவரின் நோக்கமா யிருக்க வேண்டும். யுத்த காலத்தில், சிவில் வாழ்விற்கான பயிற்சி எதுவும் அவர் கொடுக்க முடியாது. என்றாலும், அவர் கொடுக்கும் மனப் பழக்கம், படை வீரர்களின் வாழ் நாள் முழுதுக்கும் பயன படும்.

# தென்னிந்திய பட்டாளப் பயிற்சிகள்

## நேரில் கண்டவர் அனுபவங்கள்

ஞாயிற்றுக் கிழமை காலை படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்தேன். சமையற்காரப் பையன் வந்து சத்தம் கொடுத்தான். படுக்கையை விட்டு எழுந்தேன். காலைக் கடன்களை முடித்துக் கொண்டேன். சாப்பிட்டேன். இவ்வளவு அவசரம் என்ன வென்று நீங்கள் கேட்பீர்க ளல்லவா? ஆம். இன்று கடுமையான போராட்டம் நடக்கப் போகிறது. இதைக் காண நம் மேன்மை தங்கிய கவர்னர் சர் ஆர்தர் ஹோப் அவர்களும் ஆலோசகர்களும் புறப்படுகிறார்கள். குண்டு எதுவும் அவர்கள் மேல் பாய்ந்து விடக் கூடாதே என்று கவலைப் படுகிறீர்களா? நியாயந் தான். இந்தச் சண்டை ஒரு போலிச் சண்டை தானே யொழிய, ஒருவரை யொருவர் கொன்று மடித்துக் கொள்ளும் சண்டை யல்ல. ஆக வ போராடுகிறவர்களுக்கும், வேடிக்கை பார்க்கிறவர்களுக்கும் ஆபத்துக் கிடையாது. ஆகவே, போர் முனைக்குப் போய், போர் நடை பெறுவது எப்படி என்று தெரிந்து கொள்ளுவதை விட, இந்த டிருந்த இடம், சற்று உயர மானது. இதற்கு முன்பு பள்ளங்கள். இங்கே தான் 'எதிரி' படைகள் பதுங்கி யிருந்தன. செலவில்லாமல், ஆபத்திற்கிட மில்லாமல் கண் கொள்ளாக் காட்சியைக் காணும் பாக்கியம் அன்று எனக்குக் கிடைத்தது.

கொஞ்ச தூரத்திற்கு அப்பால், ஒரு அடர்ந்த தோப்பு. அதிலிருந்து சில டாங்கிகள் கிளம்பின. உலகமே நடுங்கத் தக்க வீராவேசத்தோடு இவை ஒன்றின் பின் ஒன்றாகப் போர் முனைக்குப் புறப்பட்டன. எத்தனை டாங்கிகள் என்று எண்ணத் தொலையாது. இவை, விசிறியை வீசியது போல, பல திசைகளிலும் பரவின. இவற்றிற்குப் பின் காலாட் படையும் கிளம்பி வந்தது.

டாங்கிகள் சிவப்புப் பச்சை குண்டுகளைக் கொண்டு 'எதிரி'களைச் சுட்டன. எதிரிகள் தம் துப்பாக்கிகளைக் கொண்டு, 'படபட'வென்று சுட்டார்கள். என்றாலும்,



போலிப் போராட்டத்தில் காலாட் படை முன்னேறுகிறது.

போலிப் போர் மூலமும் தெரிந்து கொள்ளலா மல்லவா? அதனால் தான் நானும் புறப்பட்டேன் அங்கே போக.

நாங்கள் கலாவிக்கு அருகில் போனோம். அங்கே ஒரு உத்தியோகஸ்தர் இருந்தார். மூன்று இரவு பகல் அவர் உறங்கவே யில்லையாம். நாங்கள் விரைவாகப் போனால், டாங்கிப் போர் நடப்பதைக் காணலா மென்று அவர் சொன்னார். இது ஒரு மகத்தான காட்சி என்றும் கூறினார் அவருக்கு நன்றி கூறி விட்டு, வேகமாகக் கிளம்பினோம். ரஸ்தாவில் மேடு பள்ளங்கள் அதிகம். புழுதியும் ஏராளம். ஆகையால் நாங்கள் ஏறிப் போன மாட்டார் வண்டி குதித்துக் குதித்துப் பாய்ந்து கொண்டு போனது. தெரு வெல்லாம் ஒரே மட்டாகக் புழுதி கிளம்பி விட்டது. நவம்பர் மாதத்தில் லண்டனில் உண்டாகும் மூடு பனியைப் போல் இந்தப் புழுதி யிருந்த தென்று எங்கள் டிரைவர் சொன்னார். 'போர்க்கள'த்திற்கு நாங்கள் போய்ச் சேர்ந்தோம்.

**போர்க் கள அமைப்பு.**

இந்த போலிப் போரில் எதிரிகளாக நடித்தவர்கள் ஜட் படையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நீல உடை யணிந்திருந்தனர். முகங்களில் மூடி யணிந்திருந்தனர். மேன்மை தங்கிய கவர்னர் அவர்களும், அரசாங்க ஆலோசகர்களும் மற்ற முக்கியஸ்தர்களும் நின்று கொண்

இந்த நீல உடைப் படைகள் தடுமாறி சிதறி ஓடிப் போனார்கள். இந்த 'எதிரி'ப் படையின் பக்கங்களிலும் மத்தியிலும் டாங்கிகள் புகுந்து எதிரிகளைப் பிடித்தனர். பிறகு தான், மரங்களுக்குக் கீழே நிழலில் உட்கார்ந்து இளைப்பாறி சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார்கள் இந்த வெற்றி வீரர்கள்.

அன்று டாங்கிகள் வெற்றி பெற்றன. அவை மகத்தானவை யல்லவா? மலையும் சமவெளியும் ஆறுகளும் அவற்றை தடை செய்ய முடிய வில்லை. வெற்றியை நாடி வேகமாகப் பாய்ந்து சென்றன.

மாலை வேளை. நாங்கள் திமிரி ரோட் வழியே போய்க் கொண்டிருந்தோம். அங்கே பிரிட்டிஷ் படைகளைப் பார்த்தோம். அங்கே அவைகள் அந்த இடத்தைச் சுத்தம் செய்து 'எதிரி'கள் கரை யோரத்திற்குப் போக ஒட்டாதபடி தடுத்தன. அந்தப் படை வீரர்கள் உடம்பிலும் உடையிலும் புழுதி ஏராளமாய்ப் படிந் திருந்தது. மிகவும் களைப் படைந்திருந்தார்கள். அவர்கள் க்ஷவரம் செய்திருக்க வில்லை. அவர்கள் முகத்தி லிருந்து வேர்வை சொட்டிக் கொண்டிருந்தது. அடுத்த முகாமுக்கு அவர்கள் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். தலையில் எஃகுத் தொப்பியும் மூக்கில் கண்ணாடியு மணிந்து மோட்டார் சைகில் வீரர்கள் விரைந்து போய்க் கொண்டிருந்தனர். அதனாலும் புழுதி கிளம்பியது. சாமான்களை ஏற்றிப் போகும் சப்ளை வண்டிகளும்

(22-ம் பக்கம் பார்க்க.)





போலிப் போராட்டத்திற்குப் போகும் காலாட் படை.



டாங்கிப் போர் நடை பெறுகிறது.



போலிப் போராட்டத்திற்குப் போகும் டாங்கி.

# இந்திய வீரர்களின் தீரச் செயல்கள்

## குண்டுகளுக் கிடையிலும் கடமையில் தவற வில்லை

### பெரும் புகழுக்கு உரியவர்கள்

**மல்லிகார்ச்சுனர் பொறுப்பு.**

சென்ற ஜனவரி மாதம் 30-ம் தேதி வெள்ளிக் கிழமை ஒரு சென்னை சாப்பார்ஸ் அண்ட் மைனர்கள் படையைச் சேர்ந்த ஒரு கம்பெனிக்கு, ஒரு காபிதன் தலைமை வகித்தார். அந்தப் படையைச் சேர்ந்த 3-ம் பகுதிக்கு, ஜமேதார் மல்லிகார்ச்சுனர் தலைவர். இவர், அந்தக் காபிதன் ஆணைக்கு அடங்கி நடக்க வேண்டியவர். இந்த 3-ம் பகுதியை, கம்பெனியை விட்டுப் பிரித்து, மோல்மீனில் சி.ஆர். இ. கட்டளைப் படி கட்டிடங்களை இடிக்கவும் மற்றும் முக்கியமான பல வேலைகளைச் செய்யவும் இவரை அனுப்பினார்கள். இந்தப் பகுதிப் படை தன் வேலையை முடித்தது. திருப்பி அனுப்பும் பொருட்டு அந்தப் படையினரை கரையி லிருந்த ஸ்டீம் படகில் ஏறும்படி உத்திர விட்டார் காபிதன். வெள்ளிக் கிழமை இரவு ஜமேதார் உள்ளிட்ட படையினர் அனைவரும் ஏறினார்கள். திரும்ப மார்தபானுக்குப் புறப்படுகிற வேளை. ஜப்பானியர்கள் அப்போது தான் கொஞ்சங் கொஞ்சமாக வந்திறங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் சிதறிப் போன நம் மற்ற படையினர் வந்து அங்கே சேர்ந்தார்கள். இந்தப் படகில் ஏறிய படையினர் அனைவரும் உடனே இறங்கி துறைமுகத்தைக் காக்கும்படி பிரிகேட் மேஜர், காபிதனுக்கு உத்திர விட்டார். சிதறிக் கிடந்து பிறகு ஒன்று சேர்ந்த படையினரை அந்தப் படகில் ஏற்றி அனுப்பி விட்டார். ஜமேதார் மல்லிகார்ச்சுனரும் அந்தப் படையினரும் துறைமுகத்தின் உச்சியைக் காவல் புரிந்து கொண்டிருந்தார்கள். அருகி லிருந்த ஒரு மோட்டார் லாரியில் படுக்கைகள் சுருட்டிக் கிடந்தன. அவற்றை யெல்லாம் சேர்த்து ஒரு அணையைத் துறை முகத்திற்கு மேலே கட்டிக் கொண்டார்கள். கொஞ்ச நேரத்திற் கெல்லாம் காபிதன் காயப்பட்டு இறந்து போனார். உடனே ஜமேதார் மல்லிகார்ச்சுனர் அந்தப் படைத் தலைமையை ஏற்றுக் கொண்டார். கொஞ்ச நேரத்திற் கெல்லாம், 'புரிபை'ச் சேர்ந்த பூரிஜ் ஓ.சி. படைத் தலைவர் அங்கு வந்து சேர்ந்தார். அதன் பிறகு அங்கு என்ன நடந்த தென்று அவர் சி. ஆர். இ. யிடம் கீழ்க் கண்டவாறு கூறினர் :—

“ ஸ்டீம் படகு திரும்பி வர வில்லை யென்று எங்களுக்குத் தெளிவாகத் தெரியும் வரை அந்த அணைக்குக் கீழேயே தங்கி, எதிரி வர ஒட்டாதபடி பார்த்துக் கொண்டிருந்தோம். எல்லை யில்லாமல் எந் நேரம் நாங்கள் அங்கேயே இருப்பது ? ஆகவே, நானும், ஜமேதாரும், அவருடைய படையினரும் முழங்கால் வரை சகதியில் பதிந் திருக்க, துறை முகத்தை யடுத்துள்ள அணைக்குப் பின்புரம் மறைந்து கொண் டிருந்தோம். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, ஜப்பானியர்கள் தம் பீரங்கிகளை துறைமுகத்தின் மேல் நிறுத்தினார்கள். அதற்குக் கீழே தான் நாங்கள் பதுங்கி யிருந்தோம். நாங்கள் எங்கேனும் நகர்ந்து போவோ மானால் எங்களை எதிரிகள் கண்டு கொள்ளுவார்கள். தம் பீரங்கிகளைக் கொண்டு எதிரிகள் மார்தபானைத் தாக்கினார்கள். மாலை வந்தது. இருள் சூழ்ந்தது. நாங்கள் இருந்த இடத்திற்கு அருகில் ஸ்டீல் ப்ரதர்ஸ் தொழிற்சாலை இருந்தது. அந்தக் கடற் கரை யோரத்தில் இருந்து, ஒரு வகைச் சத்தம் கிளம்பியதைக் கேட்டேன். சுற்றிப் பார்த்தேன். ஜமேதாரையும் படையினரையும் காணவில்லை. அவர்கள் ஒருக்கால் தப்பி யோட முயற்சித்து எதிரிகள் அவர்களைக் கண்டு பிடித் திருக்க வேண்டும் என்று நினைத்தேன். மேலும் அச் சத்தம் கேட்டது. அதன் காரணத்தை அறிய வேண்டு மென்று முடிவு செய்தேன். மிகுந்த எச்சரிக்கையோடு நான் முன் நோக்கிப் போனேன். அங்கிருந்த சுவற்றின் மறைவி லிருந்து கொண்டு நான் மெல்ல எட்டிப் பார்த்தேன். நான் கண்ட காட்சி என்ன ! நம் படையினர் பீப்பாய்களைக் கொண்டு ஒரு படகு கட்டிக் கொண்டிருந்தார்கள். ஜமேதார் பாக்கிங் பெட்டி மீது நின்று கொண்டு தாழ்ந்த குரலில் அவர்களிடம் வேலை வாங்கிக் கொண்டிருந்தார். படகு கட்டி முடிந்தது. தண்ணீரில் அதை இறக்கினார்கள். ஜமேதாருக்குத் திருப்தி யில்லை. கட்டிய படகை மறுபடியும் பிரிக்கச் சொன்னார். அதில் சேர்த்திருந்த ஓட்டைப் பீப்பாயை எடுத்து விட்டு மீண்டும் அதைக் கட்டச் சொன்னார். கட்டி முடிந்தது. தண்ணீரில் இறக்கினார்கள். அவருக்குத் திருப்தி யில்லை. மறுபடியும் அதைப் பிரித்துக் கட்டச் செய்தார். மூன்றாவது முறை கட்டி முடிந்தது. அவருடைய முகமும் மலர்ந்தது. நேரே என்னிடம் வந்தார். சுறுசுறுப்பாக எனக்குச் சலாம் செய்தார். “படகு தயாராகி விட்டது துரைகளே !” என்று எனக்கு அறிவித்தார். நாங்கள் படகில் ஏறினோம். தடிகளைக் கொண்டு அப்படகைத் தண்ணீரில் இறக்கினால் சத்தம் எதிரிகள் காதில் விழுந்து விடக் கூடும். எனவே, அவர், தன் படையினரின் உடுப்புக்களை அவிழ்த்து, ஒன்றாகக் கட்டி, அதைக் கொண்டு அப் படகை தண்ணீரில் இறக்கினார்கள். நாங்கள் அந்தப் படகில் ஏறித் தப்பினோம்.



புகழ் பெற்ற சாப்பர்கள் வாத்தியக் கோஷ்டி.



எதிரிகளுக்கு இரையாகக் கூடிய சமயத்திலேயுங் கூட, கொஞ்சங் கூட கலவர மில்லாமலும் பொறுமையோடும் ஜமேதார் மல்லிகார்ச்சுனன் தெளிவாக ஆலோசனை செய்து உண்மையிலேயே புகழ் பெற்றார். தன் படையினருக்குச் சிறந்த முன் மாதிரியா யிருந்து, தன் சொந்த முயற்சியால், என்னையும், இன்னும் இரண்டு உத்தியோகஸ்தர்களையும் அவருடைய படையினரையும் எதிரிகளிட மிருந்து காப்பாற்றினர்.

* * *



படை வீட்டைச் சுற்றிக் கட்டப்படும் காவல் கூடங்களில் ஒன்று.

**சமையல்கார லட்சுமணன் தீரம்.**

ஜனவரி மாதம் 31-ம் தேதி காலையில் மோல்மீனை விட்டு கடைசியாக படை வாபீஸானது. அப்போது கம்பெனி தலைமைக் காரியாலயமும், கம்பெனியின் 2-வது பகுதியும் சென்னை சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ் படையுந் தான் அங்கே வேலை செய்து கொண்டிருந்தன. மோல்மீனுக்குப் போக வர அநேக படகுகள் இருந்தன. அவற்றில் சமையல் அறைகளும் அமைக்கப் பட்டிருந்தன. படையிலிருந்து சிதறிப் போய் வந்து சேருகிறவர்களுக்கும் சிவில் ஜனங்களுக்கும் இங்கே உணவு அளிக்கப் பட்டது. 1851-ம் நெம்பர் சமையற்கார லட்சுமணன் 6 நாட்களாக வருகிறவர்கள் அனைவருக்கும் உணவு சமைத்துப் போட்டுக் கொண்டிருந்தார். இத்துடன், தான் சேர்ந்துள்ள படையினருக்கும் சமைத்துப் போட்டுக் கொண்டிருந்தார். கடைசியாக மோல்மீனை விட்டுப் புறப்பட்டு வரும் படகுகள் மீது எதிரிகள் பீரங்கிகளைக் கொண்டு சுட்டார்கள். படகுகள் மார்த்தபான் வந்து சேர்ந்த போது, ஒரே குழப்பந் தான் ஏற்பட்டது. படகுகளில் விரைவில் இறங்கித் தப்பிக் கொள்ள வேண்டி ஒருவரை யொருவர் பிடித்துத்தள்ளி முந்திக்கொண்டிருந்தார்கள். இந்தத் துறைமுகத்தையும் ஜப்பானியர்கள் வெடி குண்டுகளால் தாக்கினார்கள். சில நிமிஷங்களுக்கு முன்பு ஒரே கலவரமாகவும் குழப்பமாகவும் இருந்த இடத்தில், அப்போது அமைதி நிலவியது. அந்த இடம் முழுதும் சுத்தமானது. ஒருவரை யாவது காணக் கூட வில்லை. படகுகளி லிருந்து இறங்கிய சாப்பர்களில் எத்தனைப் பேரைத் திரட்டக் கூடுமோ அத்தனைப் பேர்களைத் திரட்டினேன். எங்கள் கம்பெனிக்கு அழைத்துப் போனேன். ஐ.எப். கம்பெனி படகுகளை அழிக்கவும் துறை முகத்தை இடிக்கவும் வேண்டி, இந்தப் படையினரை நான் அங்கே அழைத்துப் போனேன். அப்போது ஒரு படகின் சமையல் அறையில் 1851 ஐ.டி. சமையல்கார லட்சுமணன் பருப்பும் சாதமும் சுடச் சுட கொண்டு வந்ததைக் கண்டு, நான் மிகவும் ஆச்சரியப் பட்டேன். அங்கு அன்று காலை நடந்த கலவரங்களிலும் குழப்பங்களிலும் அவர் தன் அறையிலேயே இருந்து தன் கடமைகளைச் சரிவர நிறை வேற்றிக் கொண்டிருந்தார். அவரைக் கண்டதும், ‘ சபாஷ் !’, என்று என்னையும் அறியாமலேயே கூவினேன். எங்கள் படை வீட்டிற்கு அவரை அழைத்துப் போனேன். அப்போது எங்கள் கம்பெனியைச் சேர்ந்த எல்லாவற்றையும் 4 ரயில் வண்டிகளில் போட வேண்டி யிருந்தது. இந்த வேலையைச் செய்ய என்னிடம் சாப்பர்கள் 6 பேர்கள் தான் இருந்தனர். மற்றவர்கள் எல்லோரையும் துறைமுகத்தை இடிக்கும்படி அனுப்பி விட்டேன். இந்த 6 பேர்களுக்கு உதவியாக, லட்சுமணனும் சேர்ந்தார். எங்கள் படை வீடுகளின் மீது எதிரிகளின் வெடி குண்டுகள் வந்து விழுந்த வண்ணமா யிருந்தன. என்றாலும் குறிப்பிட்ட நேரத்தில் ரயில் வண்டிகளில் எல்லாச் சாமான்களையும் இவர்கள் ஏற்றி விட்டார்கள்.

1851-ம் நம்பர் லட்சுமணன் குண்டு மாரி பெய்து கொண்டிருக்கும் போது கூட, தன் இடத்தை விட்டுப் பெயராது தன் கடமைகளை நிறை வேற்றி பெரும் புகழ் பெற்றார்.

# "நெருப்புக்கு முன்னும் நிம்மதி"

## சென்னைப் படையின் சரித்திரம்

1780-ம் வருஷத்தில் சென்னை பீரங்கிப் படைக்குத் தலைவரா யிருந்தவர் லெப்டினெண்ட் மூர்ஹௌஸ். இவர் ஸ்டோர் கமிஷ்னாருங் கூட. இவருக்கு ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் ஒரு கட்டளை கொடுத்தார்கள். அதன்படி 2 கம்பெனி பயனியர் படைகளைத் திரட்ட வேண்டும். ஒவ்வொரு கம்பெனியிலும் 115 பேர்கள் இருக்க வேண்டும். அவர்களுடைய வேலை, முக்கியமாக ரோடு போடுவதும் ஆரம்ப வேலைகளும் தான். அப்போது கோட்டைகளின் எண்ணிக்கை வெகு அதிகம். அவற்றைக் குறைக்க வேண்டி, அவற்றில் பலவற்றை முற்றுகை யிடும் போதும், இந்தப் படை உதவியா யிருக்க வேண்டுமென்பது தான் அவர்கள் நோக்கம். இதற்கு முன்பு இருந்த படை வீரர்களுக்கு "மண் வெட்டிக்காரர்கள்" என்று பெயர். இந்தப் படையைத் தேவைக்கு ஏற்ற படி திரட்டிக் கொள்ளுவது வழக்கம். அது தற்காலீகமானது. 1780-ம் வருஷம் இந்தப் படையை நிரந்தரப் படுத்தினார்கள். மற்ற பீரங்கிப் படைகளிலிருந்தும் லைன் 'ரிஜிமெண்டி' லிருந்தும், இந்தப் படைகளைத் தலைமை வகித்து நடத்த உத்தியோகஸ்தர்களும் நான்கமிஷன் உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப் பட்டார்கள்.

இந்தப் பயனியர் படை பெருகியது. 1823-ம் வருஷம் 2 பட்டாளங்கள் இருந்தன. ஒவ்வொன்றிலும் 8 கம்பெனிகள் சேர்ந்திருந்தன. மொத்தத்தில் 2,400 பேர்கள் இருந்தனர். இதற் குள்ளாக அதன் வேலையின் போக்கும் அதிகப் பட்டது. ஆகவே உத்தியோகஸ்தர்களும் படை வீரரும் தொழில் திறமையில் சிறந் திருக்க வேண்டி படையைச் சேர்ந்த 8 கம்பெனிகளை மட்டும் மாற்றி யமைத்தார்கள். 1833-ம் வருஷம் வரையில் மற்றொரு பட்டாளத்தைச் சேர்ந்த கம்பெனி பயனியர் படையாகத் தான் இருந்தது. இந்தக் கம்பெனியையும் புதுப்படையோடு 1833-ம் வருஷம் சேர்த்துக் கொண்டார்கள்.

இந்தப் புதிய படைக்குத் தலைவராக சென்னை இஞ்சினீர்களுள் ஒருவரான காப்டன் லாவை நியமித்தார்கள். மற்ற உத்தியோகஸ்தர்களையும் சென்னை இஞ்சினீர்களாகவே நியமிக்க வேண்டு மென்று எண்ணினார்கள். இதன் படியே முதலில் இஞ்சினீர்களையே நியமித்தார்கள். பிறகு, இஞ்சினீர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. ஆகவே, மீண்டும் மற்ற படைகளி லிருந்து உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் படியான அவசியம் ஏற்பட்டது. ராயல் இஞ்சினீர்களை இராணுவ உத்தியோகஸ்தர்களாக நியமிக்கும் வழக்கம் 1885-ம் வருஷம் அடியோடு நின்று விட்டது.

இராணுவத்தை 1831-ம் வருஷம் மாற்றி யமைத்தது முதல், படையினருக்கு தொழில் பயிற்சியும் ஏற்பட்டது. தலைமைக் காரியாலயத்திலும் கம்பெனிகளிலும், இதன் பொருட்டு, தொழிலில் தேர்ச்சி பெற்ற மேஸ்திரிகளை நியமித்தார்கள். பிறகு படிப் படியாக தேவையான ஆயுதங்களை யெல்லாம் அதிகப் படுத்தினர். பாலங்கள் கட்டவும், ரோடுகள் அமைத்தல் முதலிய பல வேலைகளைச் செய்யவும் சற்றுக் கொண்டு வரும்படி 1861-ம் வருஷம் வரை அடிக்கடி நான்கமிஷன் உத்தியோகஸ்தர்களை சாதாமுக்கு—இங்கிலாந்திலுள்ள ஒரு நகரம்—அனுப்பினார்கள். இங்கே தேர்ந்தவர்களைத் தான், ராயல் இஞ்சினீர்களுக்குப் பதிலாக நியமித்தார்கள்.

1876-ம் வருஷம், மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியார் "க்வீன்ஸ் ஓன்" என்னும் பட்டத்தை இப்படைக்கு வழங்கினார். அந்தப் படைச் சின்னத்தில் தனது சின்னத்தையும் சேர்த்துக் கொள்ளும் படி அனுமதித்தார். அதே சமயத்தில், வேல்ஸ் இளவரசரை இந்தப் படையின் கௌரவ கர்னலாக நியமித்தார். 1903-ம் வருஷம் வரை, இப்பதவியை அவர் வகித்து வந்தார். இவர் மன்னர்பிரான் ஆன பிறகு, 1903-ம் வருஷத்தில் தலைமைக் கர்னலாக ஆகிக் கொண்டார். இந்தப் படையின் பெயரில் அவ்வப்போது சிறு சிறு மாறுதல்கள் ஏற்பட்டன. இவை எல்லாவற்றிலும் "க்வீன் விக்டோரியாஸ் ஓன் சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்" என்னும் பெயர் தான் மிகச் சிறந்தது. 1923-ம் வருஷந் தான் இந்தப் பெயர் ஏற்பட்டது. இதோடு "க்ரூப் இந்தியன் இஞ்சினீர்ஸ்" என்னும் படையும் சேர்ந்தது. 1933-ம் வருஷ முதல் இந்திய இஞ்சினீர் படையில் இந்தியர்களையும் சேர்க்கிறார்கள்.

1933-ம் வருஷம் சென்னைப் பயனியர் படையைக் கலைத்தார்கள். அந்தப் படையைச் சேர்ந்த சின்னங்களை, இணைக்கப் பட்ட இந்தப் படையிடம் ஒப்புவித்தார்கள். கலைக்கப் பட்ட பயனியர் படையைச் சேர்ந்த 930 பேர்களை இந்தப் படையில் சேர்த்துக் கொண்டார்கள்.

இந்தப் படையின் கம்பெனிகள் 162 வருஷங்கள் சேவகம் செய்திருக்கின்றன. மூன்று கண்டங்களில் உழைத் திருக்கின்றன. 1840–42 வருஷங்களில் நடை பெற்ற சீன யுத்தத்தில் இந்தப் படையும் போராடியது. இந்தச் சேவையைப் பாராட்டி, "முடி சூடிய பறக்கும் பாம்புச் சின்னத்தை" அணிந்து கொள்ள, இந்தப் படையினர் அனுமதிக்கப் பெற்றனர். பிறகு, 1901-ம் வருஷம் எகிப்தில் போர் நடந்தது. அதற்குத் தலைமை வகித்து நடத்தியவர் சர். ஆர். அபெர் க்ராம்பி. இங்கேயும் இந்தப் படை சேவை செய்தது. இதைப் பாராட்டி எகிப்திய உருவச் சின்னமொன்றை அணிந்து கொள்ள இந்தப் படைக்கு அனுமதி கிடைத்தது. பிரிட்டிஷ் படைகள் தவிர வேறெந்தப் படைக்கும் இந்தப் பெருமை கிடைத்ததில்லை.

இவை மட்டு மன்றி, கிழக்கு இந்தியக் கம்பெனியார் நடத்திய பல யுத்தங்களிலும், பர்மா யுத்தத்திலும், சிப்பாய்க் கலகத்தை ஒடுக்குவதிலும், ஆப்கானிஸ்தான் யுத்தத்திலும், வடமேற்கு எல்லைப் புர மாகாணங்களில் நடந்த கலவரங்களை அடக்குவதிலும் இந்தப் படையின் கம்பெனிகள், சிறந்த சேவை செய்தன. 1914–18-ல் நடைபெற்ற மகா யுத்தத்திலும் கூட, இந்தப் படையின் பகுதிகள் பிரான்சு, பிளான்டர்ஸ், எகிப்து, பாலஸ்தீனம், ஈராக், கிழக்காபிரிகா, வட மேற்கு எல்லைப்புரம் ஆகிய இடங்களில் சிறந்த சேவை செய்திருக்கின்றன.

1780-ம் வருஷத்தில் இந்தப் படையில் ஏறக்குறைய 250 பேர்கள் இருந்தார்கள். 1914–18-ம் வருஷங்களில் நடை பெற்ற மகா யுத்த காலத்தில் 1816-லிருந்து 7,000 பேர்களாக இவர்களுடைய எண்ணிக்கை அதிகப் பட்டது. இப்போது இந்தியப் படைகள் போராடும் எல்லாப் போர்முனைகளிலும் இந்தப் படையின் பகுதிகள் இருக்கின்றன. 1939-ம் வருஷம் செப்டெம்பர் மீ 3-ம் உ 3,300 பேர்கள் தான் இதில் இருந்தார்கள். இப்போது அவர்களுடைய எண்ணிக்கை பல மடங்கு அதிகப் பட்டு விட்டது.

இதற்குச் சென்னை மாகாணத்தின் பல பாகங்களிலுமிருந்தும் ஆட்களைச் சேர்க்கிறார்கள். இவர்களுக்கு இராணுவப் பயிற்சியும் போர்க் கள 'இஞ்சினீரிங்' பயிற்சியும் கொடுப்பதோடு, ஒரு கைத்தொழிலும் கற்றுக் கொடுக்கிறார்கள். தொழிலை கவனத்தோடு கற்றுக் கொள்கிறவர்களுக்கு சிற்பமும் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஒரு சிலருக்கு மோட்டார் ஓட்டவும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

சிறந்த புகழ் பெறும் பாக்கியம் இந்தப் படைக்குக் கிடைத்தது. இதற்கு காரணம் அதிலிருந்த இந்திய உத்தியோகஸ்தர்களும், நான்கமிஷன் உத்தியோகஸ்தர்களும் படை வீரர்களும் செய்த அருமையான சேவை தான். 1888-ம் வருஷம் ஜெனரல் வைகவுண்ட் உல்ஸ்லி கூறிய புகழுரையைத் தான் இவர்களுக்கும் கூற வேண்டும். அதாவது:—

> **"நான் இந்தியாவில் வேலை பார்த்தேன். பல இந்தியப் படைவீரர்கள் என்னிடம் வேலை பார்த்தார்கள். இவர்கள் அனைவரிலும் சென்னை சாப்பர்கள் தான் எல்லா வகைகளிலும் கெட்டிக் காரர்கள். நெருப்புக்கு முன்பும் நிம்மதி யோடிருக்கிறார்கள். ஆபத்துக்களை அலட்சியம் செய்கிறார்கள். இவர்களுடைய ஒழுக்கத்தி லிருந்தும் படைப் பெருமையிலிருந்தும், இவர்கள் முதல் தரமான படை வீரர்கள் என்று எளிதில் முடிவு கட்டி விடலாம்."**



# சென்னை நகரப்படை—பூர்வீகச் சரித்திரம்.

சென்னைக்கு அருகில் சென்தோம் இருக்கிறது. 420 வருஷங்களுக்கு முன்பு இங்கே தான் முதல் முதல் போர்த்துக்கீசியர்கள் வந்து குடி யேறினார்கள். 320 வருஷங்களுக்கு முன்பு தான் பிரான்ஸிஸ் டே என்னும் ஆங்கிலேயர் கூவம் ஆற்றிற் கருகிலுள்ள ஒடுக்கமும் நீளமுமான கடற் கரையில் வந்திறங்கினார். அப்போது சந்திரகிரி அரசர் கிழக் கிந்தியா கம்பெனியாருக்குக் கொடுத்த அந்த இடத்தில், ஒரு கோட்டை கட்டிக் கொண்டார். அந்தக் காலம் முதல், ஆங்கிலோ-இந்தியர்கள் முக்கியமான வேலைக ளெல்லாம் செய்திருக்கிறார்கள். தென் இந்தியா விருத்தி யடைவதற்கு இவர்கள் செய்துள்ள தொண்டு கொஞ்ச மல்ல. பல யுத்தங்களிலும் ஆங்கிலோ-இந்தியர்கள் சிறந்த புகழ் பெற்றிருக்கிறார்கள். (பழைய) வெல்லிங்டன் காலத்தில் தான், தென்னிந்தியாவில் சமாதானம் நிலவியது. அது வரை அவர்கள் அரும் பாடு பட்டிருக்கிறார்கள். அது முதல் எல்லா வகை நிர்வாகங்களிலும், தொழில்களிலும், போலீசிலும், ரயில்வேயிலும், வியாபாரத்திலும் இந்தியாவில் குடியேறியுள்ள ஐரோப்பியர்களும் ஆங்கிலோ-இந்தியர்களும் நல்ல பதவி வகித்து வந்தார்கள். சாம்ராஜ்யப் படைகளிலும் தகுந்த பதவிகளை வகிக்க அவர்கள் கொண்டிருந்த ஆசை கொஞ்ச மல்ல.

1857-ம் வருஷம் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அப்பொது ஹாரிஸ் பிரபு சென்னை கவர்னராக விருந்தார். சென்னையில் ஒரு 'வாலின்டியர்' படையை அமைக்க வேண்டியது அவசியம் என்று அவர் கருதினார். அப்போது சென்னையி லிருந்த ஐரோப்பியர்களைக் கொண்டு ஒரு வாலின்டியர் படையை அந்த வருஷம் ஜூலை மாதம் 2-ம் தேதி ஏற்படுத்தினார். இந்தியாவிலே தோன்றிய முதல் 'வாலின்டியர்' படை இது தான். பிற்காலத்தில் இதன் பெயர் பல முறை மாறியது. "சென்னை இன்பெண்ட்ரி வாலின்டியர் படை" யென்றும், "இன்பெண்ட்ரி வாலின்டியர் கார்ட்" என்றும் மாறின. சமீபத்தில் இதற்கு "சென்னைக் காவலர்கள்" என்று பெயரிட்டார்கள். இதில் வெகு நாட்களாகவே ஐரோப்பியர்களும் ஆங்கிலோ இந்தியர்களும் தான் இருக்கிறார்கள். இதிலிருந்து பல முக்கியமான படைகள் தோன்றின.

1870-ம் வருஷத்திற்கு பிறகு பக்கிங்ஹாம் அன்ட் சான்டர்ஸ் பிரபு சென்னை கவர்னரா யிருந்தார். அப்போது தான் "சென்னை ஆர்டில்லெரி வாலின்டியர் படை" ஏற்பட்டது. இதற்கு "டியூக்ஸ் ஓன்" (பிரபுவின் சொந்தப்) படை யென்று பெயர். அதினின்று ஏற் பட்ட "சென்னை கடற் கரை பாட்டரி"க்கும் கூட 'டியூக்ஸ் ஓன்' என்னும் பெயர் இன்னும் இருந்து வருகிறது.

சென்னைக் காவலர்களின் குதிரைப் படைப் பகுதியை 1910-ம் வருஷம் தனியாகப் பிரித்து "சதர்ன் பிரவின்ஸெஸ் மௌண்டெட் ரைபில்ஸ்" என்று பெயரிட்டனர்.

இந்தப் படையி லின்று தோன்றியது தான் 'சென்னை சிக்னல் கம்பெனி.' 15 வருஷங்களுக்கு முன் 'ஆர்டில்லெரி' படையி லிருந்து இதைப் பிரித்து விட்டார்கள்.

பழைய காலத்தில் சைகில் படையினர்களைக் கொண்டது "எ" கம்பெனி. இதில் பெரும்பாலும்



முள் வேலி போடுகிறார்கள்.

வைத்தியக் கலை மாணவர்கள் தான் இருந்தார்கள். ஆனல் 1901-ம் வருஷத்தில் இது தனி படைக் கம்பெனியாக இல்லை. வைத்தியம் படிக்கும் இராணுவ மாணவர்கள் தான் சென்னைக் 'காவலர்' படையில் அதிகமா யிருந்தார்கள். அதைச் சேர்ந்த ஐ.எம்.டி. உத்தியோகஸ்தர்கள் பலர் இப்போது மிருக்கக் கூடும். தம் படையின் இன்பமான வாழ்க்கையை இவர்கள் இன்னும் ஞாபகப் படுத்திக் கொள்ளுவார்கள்.

ஐரோப்பியர்களை மட்டும் கொண்ட பகுதி தான் "பி" கம்பெனி. "ஸி", "டி", "இ" கம்பெனிகளில் எல்லோரும் ஆங்கிலோ-இந்தியர்களே. இன்றும் இந்தப் படையில் உள்ள அத்தனைப் பேரும் ஐரோப்பியர்களும் ஆங்கிலோ-இந்தியர்களும் தான். திறமையையே தம் குறியாகக் கொண்டு இவர்கள் சந்தோஷமாகக் கலந்து வேலை செய்கிறார்கள்.

இந்தப் படையைச் சேர்ந்த பலர் தனித் தனியாக ஆபிரிக்கா யுத்தத்திற்குப் போய்ப் போராடினர்கள். சென்னையை ஜெர்மன் க்ரூய்சர் படகு 'எம்டென்' தாக்கிய வுடனேயே சென்னைக் காவலர்கள் இரண்டு கம்பெனிகளை ஏற்படுத்தினர்கள். இந்த இரண்டு கம்பெனிகளும் யுத்தம் முடிகிற வரைக்கும் சேவை செய்து வந்தன. இந்தப் படையின் உத்தியோகஸ்தர்கள் வேறு வேலைகளும் செய்து கொண்டு இதைக் குறை நேர வேலையாகச் செய்து வந்தார்கள். இந்தக் கம்பெனியில் இடங்கள் காலியானல் உடனுக் குடனே புதிய ஆட்களைக் கொண்டு வந்து சேர்த்தனர். இந்தக் கம்பெனிகளைச் சேர்ந்த தனிப் பட்ட நபர்கள் போராடப் போனர்களே யொழிய, இவற்றின் பகுதி எதவும் போர்முனைக்குப் போக வில்லை. என்றாலும், இந்தியாவி லிருந்து ஒரு ஆங்கிலோ - இந்திய பாட்டரி மெசொபடோமியாவில் போராடிக் கொண்டிருந்தது. அந்தப் படையில் இறந்து போனவர்களுக்கும் காயப் பட்டவர்களுக்கும் பதிலாக சென்னை ஆர்டிலெரி வாலின்டியர்ஸ், ஒரு பகுதியை அனுப்பியது.

1898-ம் வருஷம் சென்னைக் காவலர்களின் தலைமைக் காரியாலயம் சேப்பாக்கத்தி லிருந்தது. 1903 ம் வருஷம் இதற் கென்று அரசாங்கத்தாரிட மிருந்து கடன் வாங்கி எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஒரு கட்டிடத்தை விலைக்கு வாங்கினர்கள். சமீபத்தில் இந்தக் கட்டிடத்தை போலீஸ் ஆபீசுக்காக எடுத்துக் கொண்டார்கள். அப்போது சென்னைக் காவலர் காரியாலயம் செய்ன்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் வேலை செய்ய ஆரம்பித்தது.


செய்தி கொண்டு போகும் தூதர்கள்.

இந்த இராணுவ சரித்திரத்திலேயே முக்கியமான பகுதி என்ன வென்றால் வெங்கிடகிரி மகாராஜாவும் இதில் சேர்ந்திருந்தது தான்.

இந்த யுத்தத்தினலே முதன் முதலாக இந்தப் புகழ் பெற்ற காலாட் படை வெகுவாக விருத்தி யடைந் திருக்கிறது.

முழுப் பட்டாளம் ஏற்பட்டதனல், போராடப் போக வேண்டும் என்னும் ஆசையை அது மூட்டி விட்டது. ஆங்கிலோ—இந்தியர்களின் நெடு நாள் ஆசையும் இது தான். ஏறக்குறைய மூன்று வருஷங்களாகப் பெற்ற கடுமையான பயிற்சியும் ஒழுக்கமும், நல்ல பலனளித்தது. இன்னும் பெரிய காரியங்களைச் செய்ய வேண்டிய காலம் வரும் போது, இந்தப் படையினர் அனைவரும் கொஞ்சங் கூடத் தயங்காமல் அவற்றை செய்து முடிப்பார்கள்.




சென்னை காவலர்கள் ஆற்றைக் கடக்கிறார்கள்.

# சென்னை இராணுவப் பயிற்சி சாலை.

## பழைய பெருமையை நிலை நாட்டும் படை.

இன்று செப்டெம்பர்மீ 23உ. முக்கிய மான சம்பவம் ஒன்று இன்று நடை பெற்றது. இது பற்றி சென்னை வாசிகள் அக்கரை கொள்ளுவார்கள். 15 வருஷங்களுக்கு முன்பு கலைக்கப் பட்ட சென்னை 3-வது படை, மீண்டும் இன்று அமைக்கப் படுகிறது. இதில் இன்னொரு விசேஷம். இந்தப் படை அஸ்ஸேயில் மகத்தான வெற்றி பெற்ற அதே தேதியில் 15 வருஷங்களுக்குப் பிறகு, இன்று மீண்டும் அமைக்கப் பெறுகிறது.

அந்தக் காலத்தில் இந்தப் படை பெற்ற வெற்றிகள் அநேகம். இப்போது பயிற்சி சாலையில் வந்து சேர்ந் துள்ளவர்களைப் பார்த்தாலே, பழம் பெருமையை இவர்கள் நிலைநாட்டுவார்களா என்று தெளிவாகத் தெரிகிறது.

அநேகம் போர் முனைகளில் சென்னைப் படையினர் உயிர் கொடுத்துப் போராடி யிருக்கிறார்கள். அவற்றுள் ஒன்று தான் இனன்டைன போர். இப்படிப் பட்ட கௌரவம் வேறெந்தப் படைக்கும் கிடைத்த தில்லை. இந்தச் சின்னங்களையும் கண்டோம். சிரங்கப் பட்டணத்தில் பெற்ற புகழையும் அங்கே கண்டோம்.

இன்று கவாத்து நடந்தது. மேன்மை தங்கிய கவர்னர் அங்கே வந்திருந்தார். வயதான ஒரு இந்திய உத்தியோகஸ்தரை அவர் அப்போது கௌரவித்தார். அவருடைய பெயர் ஜமேதார் இஸ்மயில் கான். வயது 92. பழைய இந்தியப் படையைச் சேர்ந்த இந்திய உத்தியோகஸ்தர்கள் பலர், அப்போது வந்திருந்தார்கள். அப்போது 3-வது சென்னைப் படையைச் சேர்ந்த ஒரு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் புதிதாக அமைக்கப் பட்ட சென்னைப் படைக்கு, பழைய படைச் சின்னத்தைக் கொடுத்த காட்சியே காட்சி. அதைக் கொடுக்கும் போது, அவர் கூறியதாவது:—

"பழைய சென்னைப் படையின் பிரதிநிதி என்னும் முறையில், புதிய சென்னை 3-ம் படையினராகப் பயிற்சி பெறும் உங்களுக்கு எங்கள் படையின் சின்னத்தைக் கொடுக்கிறேன். அதை நீங்கள் காப்பாற்றுவீர்களாக!"

இந்தப் பழைய படை மிகவும் புகழ் வாய்ந்தது. இதிலிருந்து பிரிந்த பல பட்டாளங்கள் இப்போதிருக்கின்றன. அவை எத்தனை என்று இப்போது வெளியிடுவதற் கில்லை. என்றாலும் இந்தச் சொற்ப காலத்திற்குள் படையில் சேர வேண்டி எத்தனைச் சென்னை வாசிகள் முன் வந்திருக்கின்றனர்! இது பற்றி அவர்கள் பெருமை யடைய வேண்டும்.

இன்று இராணுவப் பயிற்சி சாலை ஆரம்ப விழா. இதற்கு மேன்மை தங்கிய கவர்னர் அவர்களும் வந்திருந்தார்கள். சென்னை மாகாணப் பிரதிநிதிகள் பயிற்சி சாலையைப் பார்வை யிட்டார்கள். இங்கே பயிற்சி பெறுகிறவர்கள் தான், எதிர் காலத்தில் போரின் முன்னணியில் நின்று போராடக் கூடியவர்கள். இந்தப் பயிற்சி சாலையிலேயே தான் அந்தப் படையினர் வசிக்கிறார்கள். தம் படைக்குக் கிடைத் துள்ள பழம் பெருமையைக் குறித்து அவர்களும் பெருமை கொள்ளுகிறார்கள். உத்தியோகஸ்தர்களுக்கும் படை வீரர்களுக்கும் சிறந்த தோழமையை உண்டாக்கிக் கொள்ளுகிறார்கள். இவர்கள் ஆபிரிக்கப் பாலைவனங்களில் போராடி சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றுவார்களா? அல்லது வட மேற்கு எல்லைப் புரத்திலா, அல்லது இந்தியாவின் கிழக் கோடியிலா போராடுவார்கள் என்று இப்போது சொல்ல முடியாது. எங்கே எப்படிப் பட்ட வேலை அவர்களுக்குக் கொடுக்கப் பட்டாலும், தம் பழைய சென்னைப் பட்டாளத்தின் பெருமைக் கேற்ப வீரத்தோடும் உணர்ச்சியோடும் அவ்வேலைகளைச் செய்து முடிப்பார்கள்.

இன்று ஒரு மகத்தான நாள். தன் பழைய நம்பரோடும் சின்னத் தோடும் மீண்டும் சென்னைப் படை அமைந்திருக்கிறது. போர் முனையி லுள்ள மற்ற சென்னைப் படையின ரோடு சேர்ந்து நின்று போராட ஆயத்தமா யிருக்கிறது.

# படையில் சேருவதின் அனுகூலங்கள்.

## எதிர் கால வாழ்விற்கு உதவும்.

### இந்தியாவில் படை திரட்டும் முறை.

"பட்டாளத்திற்குப் போனவர்கள் எங்கள் கிராமத்தில் ஒருவர் கூடக் கிடையாது. ஆகையால் பட்டாளத்தைப் பற்றி நான் எதுவும் விசாரித்துத் தெரிந்து கொள்ளக் கூட வில்லை. நான் பட்டாளத்தில் சேர்ந்தால், எப்படி நான் இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியாது. அந்த வாழ்க்கை எனக்குப் பிடிக்குமா? சரியானபடி எனக்குச் சாப்பாடு போடுவார்களா? அல்லது நாள் தோறும் என்னை அடிப்பார்களா?"

சென்னை மாகாணத்தி லுள்ள நூற்றுக்கணக்கான இளைஞர்கள் மனதில் இந்தக் கேள்விகளெல்லாம் தோன்றுகின்றன.

சில நாட்களுக்கு முன்பு நான் ஒரு பட்டாளத்தைப் பார்வை யிட்டேன். அதில் இருந்தவர்கள் எல்லோரும் மதராஸ் காரர்கள். அங்கே முதலில் நான் ஒருவரைக் கண்டேன். அவருடைய பெயர் பாஸ்கர். அவருடைய சொந்த ஊர் கடப்பை. இவருடைய சட்டைக் கையில் ஒரு வெள்ளைக் கோடிருந்தது. இவர் 80 பேர்களுக்குத் தலைவரா யிருந்தார். இவர்களெல்லாம் புதிதாகப் படையில் சேர்ந்தவர்கள். படைகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் உத்தியோகஸ்தரிட மிருந்து அப்போது தான் அவர்கள் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் வந்து படையில் சேர்ந்த வுடனேயே, அவர்களுக்கு இராணுவ உடுப்புக்களும் அணிகலன்களும் கொடுக்கப் படுகின்றன. ஸ்டோரி லிருந்து இந்த 20 பேர்களுக்கும், அவற்றை, இவர் வாங்கிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவற்றை அணிந்து கொள்ளும் விதத்தையும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏனென்றால். கிராமங்களில் இருக்கும் போது இப்படிப் பட்ட உடுப்புக்களை அவர்கள் போட்டுக் கொண்டதே கிடையாது. நான் பாஸ்கரோடு பேசினேன். அப்போது அவர், தான் 2 மாதங்களுக்கு முன்பு தான் இராணுவத்தில் சேர்ந்ததாகவும், மிகவும் சந்தோஷமாகக் காலங் கழித்து வருவதாகவும் சொன்னார். அவர் முகத்திலிருந்தே அது தெளிவாகத் தெரிந்தது. அல்லாமலும், நான் அவரைச் சந்தித்த வுடனேயே அவர் விரைப்பாக நின்று இராணுவ முறைப் படி எனக்குச் சலாம் செய்தார். அவருடைய பயிற்சி காலத்தில் ஒரு விநாடியைக் கூட அவர் வீணாக்க வில்லையென்றும், ஒருவர் முன்னேற்ற மடைய வழி எது வென்று அவர் உணர்ந்து கொண்டிருக்கிறார் என்றும அவர் செய்த சலாம் எனக்கு அறிவித்தது.

அடுத்த அறை தான் உணவுச் சாலை. சற்று வயதான ஒரு படை வீரரை நான் அங்கே கண்டேன். அவருடைய சட்டை மார்பில், இரண்டு வரிசைப் பதக்கங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. எல்லோருக்கும் உணவு அளிக்க அவர் ஆயத்தமாயிருந்தார். அவருடைய பெயர் ஹவில்தார் ராமசாமி. இவர் பெங்களூரி லுள்ள மைசூர் போலீஸ் லைனி லிருந்தவர். சென்ற மகா யுத்தத்தில் போராடியவர். இப்போதும் அவர் படையில் சேர்ந்து விட்டார். அவருக்கு வயது சற்று அதிகமாயிருந்தாலும் கூட, சுறுசுறுப்பாக இராணுவ வேலைகளைச் செய்யக் கூடியவர். இராணுவ வேலைக்குத் தகுதியானவர் என்று வைத்தியர்களும் கூறி விட்டார்கள். எல்லா வகைகளிலும் இவர் இராணுவத்திற் குத் தகுதியானவர் தான்.

"நான் மீண்டும் போர்க் களத்திற்குப் போய் என் மன்னர் பிரானுக்காகப் போராடும் நாள் என்றோ என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று, அவர் என்னிடம் சொன்னார்.

அங்கிருந்து கவாத்து மைதானத்திற்குப் போனேன். அங்கே 214474-ம் நம்பர் ஹூஸ்ஸெய்ன் கானைச் சந்தித்தேன். திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த கோட்டார் பகுதி வடசேரி தான் இவருடைய சொந்த கிராமம். கவாத்து உபாத்தியாயராக ஆவதற் குரிய பாடங்களை அவர் படித்துக் கொண்டிருந்தார். இவர் படையில் சேர்ந்து 5 வாரங்கள் தான் ஆயின. இவ்வளவு விரைவில் இவர் இந்தப் பதவிக்கு வந்தது சற்று ஆச்சரியந் தான். அவர் மிகவும் நல்லவர். பட்டாளத் திடம் மிக் அழகாகக் கவாத்து வாங்கினார். கூடிய விரைவில் இன்னும் உயர்ந்த பதவிகளை அவர் அடைவார் என்பது நிச்சயம்.

புதிதாகப் படையில் சேர்ந்த ரிக்ரூட்டுகளில் பலர் நொண்டி யடித்தல் முதலிய ஆட்டங்களை, மேல் சட்டை யில்லாமல் ஆடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய உடற் பயிற்சியில் இதுவும் ஒரு பகுதியாகும். அவர்கள் அனைவருடைய முகங்களும் மலர்ந் திருந்தன. இது அவர்களுடைய மன மகிழ்ச்சியைக் குறிக்கிறது. வேளா வேளைக்கு சாப்பாடும், அதிகப்படி சாப்பாடும் அவர்களுக்குக் கிடைக்கிறது. அதனால், அவர்களுடைய உடலும் உறுதியாகி வளர்கிறது. இராணுவத்தில் சேருகிறவர்களை எப்படி நடத்துகிறார்கள் என்றும் எப்படி சாப்பாடு போடுகிறார்களென்றும் இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. நான் சென்ற மகா யுத்தத்தில் போராடியவன். என்றாலும், இவர்கள் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த போது அவர்களோடு நானும் சேர்ந்து விளையாட வேண்டும் என்னும் ஆசை எனக்கும் பிறந்தது. இப்படிப் பட்ட ஆசை யாருக்கும் உண்டாகத் தான் செய்யும்.

இவர்களில் சிலர் பல மாதங்கள் பயிற்சி பெற்றவர்கள். பர்மா, மலேயா முதலிய நாடுகளிலிருந்து வந்து சரண் புகுந்தவர்களும் அவர்களுள் இருந்தனர். சிலர் துப்பாக்கி சுடக் கற்றுக் கொண்டிருந்தார்கள். வேறு சிலர் லாரி ஓட்டப் பழகிக் கொண்டிருந்தனர். வேறு சிலர் ரோடுகள் போடவும், சைக்கிள்கள் விடவும், வெடி மருந்துகளை உபயோகிக்கவும் கற்றுக் கொண்டிருந்தனர். மற்றொரு பகுதியில் தொழிலாளர்கள் தம் தொழில்களைச் செய்து கொண்டிருந்தனர். அங்கிருந்த ஒவ்வொருவரும் ஒரு தேனீயைப் போல சுறுசுறுப்பாக இருந்தார்கள். ஒரு தற்காலப் போர் வீரனுக்கு வேண்டிய நூற்றுக் கணக்கான பொருள்கள் எவை என்பது பற்றியே அவர்கள் மிகுந்த அக்கரை கொண்டிருந்தார்கள்.

இவர்கள் தம் கடமைகளில் மிகவும் அக்கரையோடிருக்கிறார்கள். மகிழ்ச்சி யோடு அவற்றை நிறை வேற்றுகிறார்கள். இவை என் மனதைக் கவர்ந்தன. சென்னைக் காரர்களின் இயல்புகள் இவை போலும். சென்னை வாசிகள் இப்போது படைகளில் ஏராளமாகச் சேருகிறார்கள். பரம்பரை இராணுவப் பெருமை இவர்களுக்கு உண்டு. அதை இவர்கள் நிலை நாட்டுவார்கள் என்று நான் முழுதும் நம்புகிறேன்.



# சென்னைப் படை ஆரம்ப விழா.

## மே. த. கவர்னர் பிரசங்கம்.



தென்னிந்தியப் படைத் தலைவர் லெப்டினென்ட் ஜெனரல் சர் நோயல் பெரஸ்போர்ட் பியர்ஸும், மே. த. சென்னை கவர்னரும்.

சென்னை 3-வது படை மீண்டும் அமைக்கப்பட்டது. இந்த ஆரம்ப விழா மதுக்கரையில் சென்ற செப்டெம்பர் 23உ. நடைபெற்றது. அப்போது மேன்மை தங்கிய சென்னை கவர்னர் சர். ஆர்தர் ஹோப் வந்திருந்தார். அவர் அப்போது கூறியதாவது:—

இப்போது சென்னை கவர்னர் என்ற முறையில் இங்கே வந்திருப்பது பற்றி நான் பெருமை யடைகிறேன். ஏனென்றால், இன்று சென்னை 3-ம் படை மீண்டும் அமைக்கப் படுகிறது. கொஞ்ச காலத்திற்கு முன்பு தென் இந்தியாவி லிருந்து படைக்கு ஆட் சேர்ப்பதில்லை என்ற கொள்கை யிருந்தது, உங்களுக்குத் தெரிந்திருக்கும். இந்த இடைக் காலத்தில் இந்தக் கொள்கையால், படைகளுக்கு நேர்ந்த நஷ்டம் எவ்வள வென்று யுத்த நிலைமையால் தான் விளங்குகிறது.

தென் இந்தியர்கள் படை வீரர்களாகத் தக்கவர்கள் அல்ல வென்று சொன்னவர்களு முண்டு. அது சுத்தப் பொய். உலகில் மற்ற எந்தப் பகுதியி லிருந்து படை வீரர்கள் வந்திருந்தாலும், அவர்களுக்குச் சமமாகவே சென்னைப் படையினரும் போராடினார்கள். முன்பு நடைபெற்ற யுத்தத்திலும் இப்போது நடைபெறும் யுத்தத்திலும் அவர்களுடைய போர்த் திறமை உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெளிவாகத் தெரிகிறது.

நான் கவர்னர் பதவியை ஏற்றுக் கொண்டது முதல், ஒன்றல்ல, பல சென்னைப் படைகளை மீண்டும் அமைக்க வேண்டு மென்று என்னால் ஆன வரை மேல் அதிகாரிகளைத் தூண்டிக் கொண்டு வந்திருக்கிறேன். அப்படி மீண்டும் அமைக்கப் படும் விழாவை முன்னிட்டுத் தான், நாம் இங்கே கூடி யிருக்கிறோம். இந்தப் படைக்கு, அதன் பழைய சின்னங்கள் கொடுக்கப் படும். பழைய சென்னைப் படை உத்தியோகஸ்தர்களும், நான்கமிஷன் உத்தியோகஸ்தர்களும், படை வீரர்களும், இப்போது அமைக்கப் படும் சென்னைப் படையினரோடு மீண்டும் சேருவார்கள்.

இந்தப் படை என்ன செய்ய வேண்டும்? இந்த 10-வது பட்டாளம் வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்களையும் நான்கமிஷன் உத்தியோகஸ்தர்களையும், தயார் செய்யும். மற்ற பட்டாளங்களுக்கும் சென்னைப் படைகளுக்கும் அனுப்பும். இந்தப் பட்டாளத்திலிருந்து கிளைத்து, பல பட்டாளங்கள் சென்னைப் படை என்னும் பெயரோடு கிளம்பும். பழைய உதவாக்கரைக் கொள்கை காரணமாக, வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்களும் நான்கமிஷன் உத்தியோகஸ்தர்களும் தென் இந்தியாவில் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. இப்போது இந்தப் பதவிகளிலுள்ளவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இந்த வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்களையும் நான்கமிஷன் உத்தியோகஸ்தர்களையும் மற்ற படைகளுக்கு மாற்றுவதும் மிகவும் கஷ்டமா யிருக்கிறது.

இந்தக் காலத்தில் படைகளுக்கு ஆட்களைச் சேர்ப்பது கஷ்டம் என்று சொல்லுகிறவர்களு முண்டு. இது சர்வ முட்டாள் தனம், முழுப் பொய். தம் நாட்டைக் காக்கவும், பொது நன்மைக்காகப் போராடவும் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலு மிருந்து ஏராளமான பேர்கள் படையில் வந்து சேருகிறார்கள். ஆனால், அவர்களை நடத்துவதற்கு உத்தியோகஸ்தர்களும் நான்கமிஷன் உத்தியோகஸ்தர்களும், கிடைப்பது தான் கஷ்டமா யிருக்கிறது. ஆகவே இந்தப் படைக்கு ஒரு முக்கியமான பொறுப்பு இருக்கிறது. அதாவது, நான் ஏற்கெனவே சொன்னது போல், சரியான தகுதியுள்ளவர்களை வைசிராய் கமிஷனுக்கும் நான்கமிஷன் உத்தியோகஸ்தர்களாகவும் தயார் செய்ய வேண்டும். பிறகு, அவர்களை மற்ற சென்னைப் படைகளுக்கு அனுப்ப வேண்டும்.

படையி லுள்ள எல்லோரும், முன்னுக்கு வர, சம சந்தர்ப்ப முண்டு. நீங்கள் யாரா யிருந்தாலும், எந்த ஊர்க் காரரா யிருந்தாலும், எந்த மதத்தினரா யிருந்தாலும், எந்த இனத்தவரா யிருந்தாலும் பாதக மில்லை. நீங்கள் எல்லோரும் உயர்ந்த

பதவிகளை யடையலாம். இன்று இங்கே கூடி யிருக்கும் உங்களில் பலர், படையில் பெரும் புகழையும் சிறப்பையும் அடைவீர்கள் என்பது பற்றி எனக்குக் கொஞ்சங் கூடச் சந்தேகமே கிடையாது. இந்தப் பதவிகளில் நீங்கள் நெடு நாள் சுகிப்பீர்களாக ! எதிர் காலத்தில் என்ன நேரும் என்று இப்போது சொல்ல முடியாது. ஆனால் இந்தப் படை கூடுமான வரை நிரந்தரமானதாக இருக்கு மென்றே நான் நம்புகிறேன். உங்கள் படைக்குப் பழம் பெருமை மிகவும் உண்டு. அந்தப் பெருமையை நிலை நாட்டும் போக்கில் தான் நீங்களும் நடந்து வருகிறீர்கள். எதிர் காலத்தில் நீங்கள் எங்கே போக நேர்ந்தாலும், எப்படிப் பட்ட வேலை செய்யும்படி ஏற்பட்டாலும், எப்படிப் பட்ட ஆபத்துக்களையும் கஷ்டங்களையும் சகிக்கும்படி நேர்ந்தாலும், உங்கள் கடமைகளைத் தவறாது நீங்கள் நிறை வேற்ற வேண்டு மென்று கோருகிறேன். உங்கள் நன்மைக்காகவும், உங்கள் குடும்பத்தாரின் நன்மைக்காகவும், உங்கள் நாட்டின் நன்மைக்காகவும் 3-வது சென்னைப் படையாகிய உங்கள் படையின் பழம் பெருமையை நிலை நாட்டவும் நீங்கள் இப்படிச் செய்ய வேண்டியது அவசியம். உங்கள் படையின் பழைய சரித்திரம் மிகவும் பெருமையுடையது. அது போலவே பெருமை யுடையதாக உங்கள் (புதுப்) படையும் விளங்கு மென்று எதிர்பார்க்கிறேன்.

சென்னைப் படைகளைக் குறித்து மிகுந்த அக்கரையோடேயே நான் நெடு நாட்களாகக் கவனித்து வந்திருக்கிறேன். இந்தப் பட்டாளத்திற்குச் செய்யக் கூடிய உதவி ஏதேனும் இருந்தால் நான் கட்டாயம் செய்வேன். அப்படி ஏதேனு மிருந்தால், உங்கள் படைத் தலைவர் எனக்குத் தெரிவிப்பார்.

இந்த விழாவில் கலந்து கொள்ள எனக்குச் சந்தர்ப்பங் கிடைத்தது பற்றி நான் பெரிதும் நன்றி செலுத்துகிறேன். பெருமையும் அடைகிறேன். அல்லாமலும் இன்று, புகழ் வாய்ந்த அஸ்ஸே போரின் ஆண்டு விழா நாள். இந்தப் போராட்டத்தில் இந்தியப் படைகளில், சென்னைப் படைகள் மட்டுந் தான் போராடின. இது வரை நீங்கள் பெற்றுள்ள தேர்ச்சி பற்றி, நான் உங்களைப் பெரிதும் பாராட்டுகிறேன். மீண்டும் உங்களைச் சந்திக்கும் நாளை எதிர்பார்க்கிறேன். உங்கள் படைத் தலைவர் முதல், சமீபத்தில் வந்து படையில் சேர்ந்த ரிக்ரூட் வரை, அனைவரையும் வாழ்த்துகிறேன்.

(12-ம் பக்கம் தொடர்ச்சி.)

ஓயாது போய்க் கொண்டே யிருந்தன. படை வீரர்களையும் வெடி மருந்துகளையும் ஏற்றிக் கொண்டு போகும் வண்டிகள் ஒன்றின் பின் ஒன்றாக வந்து கொண்டே யிருந்தன. படைவீரர்கள் சிலர் திறந்த வெளியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். மற்றும் சிலர், விறகு சேகரித்துக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் பல் துலக்குவதற்குக் குச்சியைத் தேடிக் கொண்டிருந்தனர். தம் க்ஷவரச் சாமான்களையும் ஒரு சிலர் தேடிக் கொண்டிருந்தனர். அப்போது மாலை மணி 5. இது தான் போர் முனை !

இப்படியாக இந்தப் போலிப் போராட்டத்தின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் முடிவையும் கண்டோம். இதுவரை படைவீரர்களுக்கு உட்காரவும் நேர மில்லை. பகல் முழுதும் போராடிக் கொண்டிருந்தார்கள். இரவில் புது முகாமுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இது தான் உண்மையான இராணுவ வாழ்க்கை. ஓயாத வேலை. உறக்கம் இல்லை ; ஓய்வு இல்லை. இத்தனையும் நீல நிற உடுப்புகளணிந்த படைகளை வெல்லும் வரை.

பப்ளிக் ரிலேஷன்ஸ் உதவி டைரக்டரும் அவருடைய சிப்பந்திகளும் மிகவும் அன்போடு எங்களையும் மற்றவர்களையும் அங்கே உபசரித்தார்கள். எங்களை உபசரிப்பதில் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம். இந்தப் போர்ப் பழக்கம் பற்றி, டைரக்ட் செய்யும் உத்தியோகஸ்தர் செய்த பிரசங்கமும் எங்களுக்கு இன்ப மளித்தது.

மூன்று நாட்கள் வரை நாங்கள் கூடாரங்களில் வசித்தோம். யுத்த காலத்தின் வாழ்க்கை எப்படிப் பட்டது என்று உணர்ந்து கொண்டோம். அரசாங்க ஆலோசகர்களும் எங்களைப் போல் கூடாரங்களில் தான் தங்கி யிருந்தார்கள். எங்களுடன் ஒரே மேசையில் தான் சாப்பிட்டார்கள். அப்போது எங்களுக்குள் சிறந்த தோழமை ஏற்பட்டது. நாங்கள் கண்டவை எல்லாம் எமக்கு மிகுந்த இன்பமும் நல்ல பலனும் தரக் கூடியவையா யிருக்க வேண்டு மென்று, அங்குள்ள எல்லோரும் முயன்றார்கள்.

எங்கள் மோட்டார் டிரைவர் படையில் சேரு முன்பு லண்டனில் பல சரக்கு மளிகை வைத்திருந்தவர். இவருக்கு ஒரு இளம் மனைவியும் ஒரு குழந்தையும் உண்டு. அவர்களை லண்டனிலேயே விட்டு விட்டு படையில் சேர்ந்தார். அவரையுங் கூட மிகவும் உயர்ந்த பதவிக்கு நாங்கள் உயர்த்த வேண்டும்.



பழைய படை வீரர்களோடு சென்னை கவர்னர்.



# இராணுவ வீரர் வாழ்வின் உயர்வு.

## அனுபவமும் அறிவும் அதிகப் படுகிறது.

### எதிர்காலத்தில், இந்திய கிராமங்களின் நிலை.

பல நாடுகளில் இந்தியப் போர் வீரர் பிரயாணஞ் செய்வதனால், என்ன பலன் உண்டு என்பது பற்றி பொதுவாக யாரும் கவனிப்பது கிடையாது. பம்பாயிலும் கராச்சியிலும் இருந்து மத்திய கிழக்குப் போர்க் களத்திற்குப் புறப்பட்டுக் கப்பல் ஏறிய அநேக வீரர்களைக் கண்டு பேசி யிருக்கிறேன். அவர்கள் மிகவும் கூச்ச முள்ளவர்களாகவும் இடுங்கிய மன முடையவர்களாகவும் காணப் பட்டார்கள். ஒரு வருஷத்திற்குப் பிறகு அவர்கள் திரும்பி வந்தார்கள். இவர்கள் கூச்ச மெல்லாம் பறந் தோடி விட்டது. உள்ளத்தில் உறுதி விளங்கியது. கடல் அலைகளைக் கண்டு அஞ்சியவர்கள், இப்போது கடல் பிரயாணத்தில் ஆசை கொள்ளுகிறார்கள். இப்போது மிகுந்த தன்னம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். உடல் பலம் மிகுந்திருக்கிறது. ஏதேச்சை யுணர்ச்சி மிகுந்திருக்கிறது. தமது நல்ல வீரச் செயல்களைக் குறித்துப் பெருமித மடைகிறார்கள். தம் தலைவர்கள் அளிக்கும் புக ழுரைகளை மதிக்கிறார்கள். சுத்தமாக இருக்கிறார்கள். தம் உடலையும் நல்ல நிலையில் வைத்துக் கொள்ளுகிறார்கள்.

பல்லாயிரக் கணக்கானவர்கள் மத்திய கிழக்குப் போர்முனைக்கும் மற்ற போர் முனைகளுக்கும் போய் இருக்கிறார்கள். இப்போது, அவர்கள் கற்கும் விஷயங்கள் எல்லாம் யுத்தத்திற்குப் பிறகு பெரிதும் பயன் தரும். இந்தியக் கிராம வாழ்வின் முன்னேற்றத்திற்கு இது மிகவும் உதவும். மேல் நாட்டு வாழ்க்கை முறையும் கீழ் நாட்டு வாழ்க்கை முறையும் இணைந் திருப்பதை கெய்ரோவிலும் அலெக்சாந்திரியாவிலும் இவர்கள் பார்த்திருக்கிறார்கள். பல நாடுகளி லுள்ள பல வகை மக்களைக் கொண்டு தற்கால நாகரிகம் படிப் படியாக எப்படி வளர்ந்தது என்று அவர்கள் தெரிந்து கொள்ளக் கூடும். யூதர்கள் தொழில் திறமையும் விடா முயற்சியும் உடையவர்கள். இவர்கள் உழைப்பின் பயனாக பாலீஸ்தீனம் தேனும் பாலும் கொழிக்கும் நாடாக மாறிக் கொண்டு வருகிறது. இதையும் அவர்கள் கண்டார்கள். தம் தாய் நாடாகிய இந்தியாவில், கிராமங்களில் உள்ளவர்கள் எவ்வளவு எளிய நிலையி லிருக்கிறார்களோ, அதை விட எளிய நிலை யிலிருக்கும் ஈராக்குக் கிராமவாசிகளின் வாழ்க்கையையும் கண்டார்கள்.

பிரயாணத்தின் போது தம்மையும் அறியாமல் அநேக விஷயங்களை உணருகிறார்கள். புத்தகங்களைப் படிப்பதை விட, படங்களைப் பார்ப்பதை விட, நேரில் நடை பெறும் சம்பவங்கள் மனதில் நன்கு பதிகின்றன. போர்முனைகளில் நேரில் போரிடும் ஆயிரக் கணக்கான படையினர் உள்பட எல்லா வகைப் படையினரும், ஒரு இடத்தி லிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றப் படுகிறார்கள். அப்போது பல நாடுகளிலு முள்ள வாழ்க்கை நிலையை நேரில் தெரிந்து கொள்ளுகிறார்கள். **தொழில் முயற்சியும், சிக்கனமும், நாளைக்கு வேண்டுமே என்னும் நினைவும், அவர்களுக்கு உண்டாகின்றன.**

நம் நாடு முழுதிலு மிருந்து, படைகளுக்கு ஆட்களைத் திரட்டி யிருக்கிறார்கள். சென்ற மகா யுத்த காலத்தில் இராணுவ வகுப்பினர்களைத் தான் வெகுவாகத் திரட்டினார்கள். ஆனால் ஒவ்வொரு தாலுக்காவி லிருந்தும் இப்போது திரட்டி யிருக்கிறார்கள். வடக்கே காஷ்மீரம், நேபாளம் முதல் தெற்கே கொச்சி, கன்னியாகுமரி வரையிலும், கிழக்கே வங்காளம் முதல், மேற்கே பெலுச்சி ஸ்தானம் வரையிலும், தக்காணத்திலும், மதராஸ் மாகாணத்திலும் திரட்டப் பட்டவர்கள் இப்போது போர் முனையில் ஒன்று பட்டுப் போராடுகிறார்கள். இவர்கள் யுத்தத்திற்குப் பிறகு தம் கிராமங்களுக்கு வரத் தான் போகிறார்கள். அப்போது, இந்த அனுபவங்கள் எல்லாம் மிகவும் பயன் தரும்.

சைப்ரஸ் தீவு இந்தியாவிற்கு வெகு தூரத்தி லிருக்கிறது. ஆனால், யுத்த காலத்தில் தூரம் ஒரு பொருட்டா ? அங்கே நான் ஒரு இளைஞரைச் சந்தித்தேன். அவருடைய சொந்த ஊர் பம்பாய் மாகாணத்தி லுள்ள சதாரா என்னும் கிராமம். அவர் பெயர் லட்சுமண பாஸ்லே. இவருடைய பெற்றோர்கள் பண்ணைக் காரர்கள். இவர் கொஞ்சங் கொஞ்சம் மராட்டி மட்டுந் தான் படித் திருந்தார். இவர் தன் கிராமத்திலேயே இருந் திருந்தால், காலை முதல் இரவு 10 மணி வரை உழைத்து விட்டு, கால் வயிற்றுக் கஞ்சிக்குக் காத்திருக்க வேண்டி யிருக்கும். ஒரு சிறு குடிசைக்குள் தன் முன்னோர்களைப் போலவே, தன் இளம் மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருந் திருப்பார். பூனாவிற்கோ, பம்பாயிக்கோ போக அவருக்கு சந்தர்ப்பங் கிடைத்தால், அது அவருடைய வாழ்க்கையிலேயே முக்கியமானதாக அவர் நினைத்திருப்பார்.

இவை எல்லாம் இப்போது மாறி விட்டன. லட்சுமணன் பம்பாயை மட்டு மல்ல, உலகிலுள்ள பல முக்கியமான நகரங்களைப் பார்த் திருக்கிறார். தன் குக்கிராமத்தி லிருந்து கெய்ரோ நகரத்திற்குப் போவதற்குள் மனித மனம் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று தெளிவாக அவருக்குத் தெரியாது. ஆனால், எகிப்திலும் சைப்ரஸிலும் அவர் சில மாதங்கள் தங்கி யிருந்த பிறகு, தன் கிராமத்திலுள்ள பெரியோர்கள் எவ்வளவு கீழான நிலையில் வாழுகிறார்கள் என்று உணர்ந்து கொள்ளுகிறார்.

யுத்தம் முடிந்து அவர் திரும்ப தன் கிராமத்திற்கு வந்த பிறகு, இவரால் அந்தக் கிராமத்திற்கு நிச்சயமாக இலாப முண்டு. சைப்ரஸில் எப்படி சிக்கனமான முறையில் விவசாயஞ் செய்கிறார்கள் என்று தன் கிராம வாசிகளுக்குச் சொல்லுவார். மரங்களை எப்படி நடுகிறார்க ளென்றும், புது மாதிரி ஏர்களை எப்படிப் பயன் படுத்துவ தென்றும், அவற்றை எப்படி குதிரைகளைக் கொண்டோ மோட்டாரைக் கொண்டோ ஓட்டுவது என்றும் அறிவிப்பார். வெளி நாடுகளில் பிரயாணம் செய்ததனால், அவருடைய மனப் போக்கு விரி வடைகிறது. எனவே, புதிய திட்டங்களையும் சீர்திருத்தங்களையும் வர வேற்கிறார். தானாகவே எதையும் செய்ய வேண்டும் என்னும் ஊக்கத்தையும், தலைமை வகித்து நடத்தும் திறமையையும், இவர் பெற்ற இராணுவப் பயிற்சி, இவருக்கு அளிக்கிறது. இவர், இப்போது, சற்று உயர்ந்த வாழ்க்கை முறையில் பழகி விட்டார். ஆகையால், இவருடைய கிராம வாழ்க்கை நிலையை முன்னேற்ற அவர் நிச்சயமாக முயற்சிப்பார்.

இவரைப் போன்ற ஆயிரக் கணக்கான இளைஞர்கள் இருக்கிறார்கள். நிறைந்த அனுபவத் தோடும் அறிவோடும் தம் கிராமங்களுக்குப் போவார்கள். இவர்கள் தம் இராணுவ வாழ்க்கையில் ஒழுங்கு முறை, வீரம், சகிப்புத் தன்மை ஆகிய துறைகளில் நன்றாகப் பழகித் தேறியவர்கள். ஆகவே, எதிர் காலத்தில் இந்தியக் கிராம வாழ்விற்கு இவர்கள் பெரும் மதிப்புக் கொடுப்பார்கள். யுத்தம் முடிந்த பிறகு, இந்தியாவைத் திருத்தி யமைப்பதற்கு, இவர்களுடைய அனுபவமும் அறிவும் பெரிதும் உதவும்.

# மகாராஜாவும் வேலையாளும்

## உண்மையான அன்பு



கேசவ பாஸ்லே.

கேசவன் 8-வயது பையன். அவன் தாய் இறந்து விட்டாள். தகப்பன் மறு மணம் செய்து கொண்டான். மாற்றாந் தாயின் கொடுமை கேசவனுக்கு அதிகமானது. அவன் வசித்து வந்த ஊரில் ஒரு மகாராஜா இருந்தார். இச் சிறுவன் மேல் அவர் இரக்கப் பட்டார். தன் அரண்மனைக்கு அவனைத் தருவித்தார். அன்று முதல் கேசவன் அரண்மனையிலேயே வளர்ந்து வந்தான். வில் வித்தை, துப்பாக்கி குறி தவருமல் சுடுதல், குதிரை ஏறுதல் முதலிய கலைகளைக் கற்றான். இவற்றில் நல்ல தேர்ச்சி பெற்றான். தன் நிலைமைக்குக் காரணம் மகாராஜா தான் என்று நன்றாக உணர்ந்தான். அன்பும் நன்றியும் அவரிடம் கொண்டான். கேசவன் இளங்காளை. அவனுடைய வளர்ச்சியையும் நல்லொழுக்கத்தையும் திறமையையும் மகாராஜா கண்டார். அவன் மீது அவர் கொண்டிருந்த அன்பு அதிகப் பட்டது. வேட்டைக்குப் போகும் போதெல்லாம் கேசவனையும் கூட அவர் அழைத்துப் போனார். நிழல் போல மகாராஜா வுடன் இருந்து அவருக்குப் பணிவிடைகள் செய்து வந்தான்.

இந்த யுத்தம் ஆரம்ப மானது. மகாராணி நல்ல திறமைசாலி. தன் நாட்டின் நிர்வாகத்தை அவர் கையில் ஒப்புவித்தார் மகாராஜா. இந்தியப் படையின் உத்தியோகஸ்தராகப் பயிற்சி பெற அவர் கிளம்பி விட்டார். ஆரம்பப் பயிற்சி சாலை யொன்று இந்தூரில் உண்டு. அங்கே அவர் போனார். கூடவே போனான் கேசவனும். அங்கிருந்து மோவி லுள்ள உத்தியோகஸ்தர்கள் பயிற்சி சாலைக்குப் போனார். அங்கேயுங் கூட கேசவன் போனான். இங்கே பரீட்சையில் தேறிய பிறகு மன்னர் பிரான கமிஷன் உத்தியோகம் இவருக்கு அளிக்கப் பட்டது. அங்கிருந்து இராணுவப் பயிற்சி பெறப் போனார்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு தன் படையுடன் போய்ச் சேர அவர் வெளி நாடுகளுக்குப் போக வேண்டி வந்தது. அவருடைய சமஸ்தானத்தி லிருந்து ஒரு வேலைக்காரனையும் அழைத்துப் போகும்படி அரசாங்கத்தார் அவரை அனுமதித்தார்கள். மகாராஜா சில நாட்கள் ரஜா வோடு திரும்பித் தன் சமஸ்தானத்திற்கு வந்தார். தன் அலுவல்களை எல்லாம் முடித்துக் கொண்டு ஒரு வேலைக்காரனை யும் தயார் செய்து கொள்ள வேண்டும் என்பது தான் அவருடைய நோக்கம். தன் மெய்காவல் படையைச் சேர்ந்த ஒரு ஹவில்தாரை அழைத்துப் போவ தென்று முடிவு செய்து விட்டார்.

இதைக் கேள்விப் பட்டான் கேசவன். நேரே மகாராஜா விடம் போனான். தன்னை அழைத்துக் கொண்டு போகும்படி வேண்டினான். கேசவன் போராடும் கலை எதுவும் அறியாதவன். இளைஞனும் கூட. இந்தக் காரணங்களால் அவனை அழைத்துப் போக முடியாது என்று மகாராஜா கூறினார். தன்னை அழைத்துத் தான் போக வேண்டு மென்று மீண்டும் மகாராஜாவைப் பணிவுடன் வேண்டினான். மகாராஜாவோ பிடிவாதமாக மறுத்து விட்டார். கேசவன் மன முடைந்து, வாய் பேசாது, வெளியே போய் விட்டான்.

மறு நாள் காலை கேசவன் மகாராஜாவுக்கு முன்னே வந்து வணங்கி நின்றான்.

மகாராஜா—என்ன சமாசாரம் கேசவா?

கேசவன்—மகாராஜா! சமூகத்தில் விடை பெற்றுப் போக வந்தேன்.

மகாராஜா—எங்கே போகப் போகிறாய்?

கேசவன்—நம் நாட்டை விட்டு மகாராஜா!

மகாராஜா—ஏன் நீ போக வேண்டும்?

கேசவன்—ஊரார் என் மீது சொல்லும் பழிக்கு அஞ்சித் தான் மகாராஜா!

மகாராஜா—நீ என்ன செய்து விட்டாய், அப்படி ஊரார் உன் மேல் பழி சொல்ல?

கேசவன்:—மகாராஜா வேட்டையாடும் போதும் சந்தோஷமாக இருக்கும் போதும், அவரோடு இருந்து அனுபவித்த இவன், ஆபத்துக் கிடமான யுத்த முனைக்குப் போகும் போது விலகி விட்டான் என்று ஊரார் என்னைத் தூற்றுவார்களே என்று கவலையா யிருக்கிறேன் மகாராஜா!

இதைக் கேட்ட மகாராஜாவின் மனம் இளகியது. கடைசியாக அவனையே அழைத்துப் போவ தென்று முடிவு செய்து கொண்டார். மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான் கேசவன். வெளியே ஓடினான். புறப்படுவதற்கு ஆயத்த மானான். மகாராஜா வோடு பயிற்சி சாலைக்குத் திரும்பவும் வந்தான். படையில் சேர்ந்தான். மகாராஜாவின் வேலைக்காரனுகக் கப்பல் ஏறினான்.

மகாராஜாவும் கேசவனும் மேலப் பாலைவனத்திலுள்ள தம் படையுடன் போய்ச் சேர்ந்தார்கள். மகாராஜாவிற்கு ஒரு பதுங்கும் இடமும் கேசவனுக்கு வேறொரு பதுங்கும் இடமும் அங்கே கொடுத்தார்கள். இப்படி நேரும் என்று கேசவன் எண்ணவில்லை. இந்த ஏற்பாட்டை வெகுவாக ஆட்சேபித்தான். எந்த குண்டாவது மகாராஜாவின் மேல் படுவதா யிருந்தால், அது தன் மேல் பாய்ந்த பிறகு தான் அவர் மேல் பட வேண்டும் என்று கூறினான். ஒரு உத்தியோகஸ்தர் உறங்கு மிடத்திலேயே வேலைக்காரனும் தூங்குவது என்பது இராணுவ வழக்கமே அல்ல. இப்படிப் பட்ட சம்பவத்தைக் குறித்து இது வரை யாரும் கேள்விப் பட்டதே கிடையாது. தன்



மகாராஜா விடம் கேசவன் கொண்டிருந்த சிறந்த பற்றுதலைக் கண்ட இராணுவ அதிகாரிகள், மகாராஜா வுடனேயே வசிக்கும்படி அவனை அனுமதித்தார்கள். அது முதல், வெளி நாட்டில் மகாராஜா இருக்கும் போதெல்லாம் அவருடைய கால் மாட்டிலேயே கேசவன் தூங்கினான்.

இவர் இருந்த படை வீட்டிற்கு அப்பால் 8-வது மைலில் ஒரு கணவாய் இருக்கிறது. அதைக் கடந்து எதிரி படைகள் வரக் கூடும் என்று எதிர் பார்த்தனர். ஒரு டாங்கி எதிர்ப்புப் பீரங்கி யோடு, அந்தக் கணவாயைக் காவல் புரியும்படி மகாராஜாவிற்குக் கட்டளை வந்தது. இது மிகவும் கடினமான தோர் வேலை. ஆகவே கேசவனிடம் அவர் இதைப் பற்றிச் சொல்ல வில்லை. அவனை விட்டு விட்டுப் புறப்படுவ தென முடிவு செய்து கொண்டார்.

அன்று மாலை வரை கேசவன் எதிர் பார்த்தான் மகாராஜாவை. அவர் காணப் பட வில்லை. அவன் மனம் பெரிதும் சஞ்சல மடைந்தது. அவரைப் பற்றி விசாரணைகள் செய்தான். புலன் ஒன்றும் தெரிய வில்லை. அவனுடைய சந்தேகம் அதிகப் பட்டது. தனக்கு எதுவும் அறிவிக்காதபடி ஏதோ ஆபத்தான வேலைக்குத் தான் மகாராஜா போய் இருக்க வேண்டு மென்று எண்ணினான். நேரே சுபேதார் மேஜரிடம் போனான். "மகாராஜா எங்கே?" என்று அவரைக் கேட்டான். இக்கேள்வி அவருக்குத் தமாஷா யிருந்தது. மகாராஜா இன்ன வேலைக்காக இன்ன இடத்திற்குப் போயிருக்கிறார் என்று பதில் கூறினார். உடனே மகாராஜா விடம் தன்னையும் அனுப்ப வேண்டு மென்று கோரினான் கேசவன். அது முடியா தென்று கூறி விட்டார் சுபேதார் மேஜர். கேசவன் அப்போது செய்த ஆர்ப்பாட்டத்தை அவர் கண்டு, இரவு 9-மணிக்கு அங்கே போன ஒரு மோட்டார் காரில் அவனை ஏற்றி விட்டார். அவன் வரும் போது தன் பையில் மகாராஜாவிற்கு உணவும் தாகத்திற்கும் கொண்டு வந்து கணவாய் வந்து சேர்ந்தான். மகா ராஜாவிற்கு எந்த வித ஆபத்தும் நேராதபடி அன்றிரவு முழுதும் அவர் பக்கத்தி லிருந்து காவல் புரிந்து கொண்டிருந்தான்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, மகாராஜா எங்கே போனாலும் கேசவனும் கூடவே போக வேண்டும் என்னும் முடிவு ஏற்பட்டது.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, மகாராஜாவின் பட்டாளத்தை எதிரிப் படைகள் தாக்கின. யுத்தம் கடுமையாக நடை பெற்றது. எந்தப் பக்கங்களி லிருந்து குண்டுகள் வந்தாலும் அங்கெல்லாம் கேசவன் நின்றுகொண்டு, குண்டு மகா ராஜா மேல் விழாதபடி தடுத்துக் கொண்டிருந்தான். இரண்டொரு முறை குண்டுகளுக்கு அவர்கள் தப்பினார்கள். பிறகு, கொஞ்சங் கூடக் காயப் படாமல் இளைப்பாறும் இடத்திற்கு இவ்விருவரும் வந்து சேர்ந்தார்கள். தன் சமஸ்தான விஷயமாக, ஏதோ அவசரமாக மகாராஜா விமானத்தில் திரும்ப இந்தியாவிற்குப் புறப்பட்டார். அதே விமானத்தில் கேசவனுக்கும் இடங் கிடைத்தது. இருவரும் சந்தோஷமாகத் தம் சொந்த ஊர் வந்து சேர்ந்தனர்.

இந்தக் கதையி லின்று, எஜமான விசுவாசமும் வீரமும் எவ்வளவு சிறந்த குணங்கள் என்று விளங்குகின்றன. மகாராஜா தன் இராஜரீகத்திற்குரிய போக வாழ்வை மறந்தார். படை உத்தியோகஸ்தர்களுக் குரிய கடுமையான பயிற்சிக்கும் உள்ளானார். போர்க் களத்தின் கஷ்டங்களையும் ஆபத்துக்களையும் அவர் பொருள் படுத்த வில்லை. சிவாஜியின் பரம்பரையைச் சார்ந்த அவருக்கு அச்சம் என்பதேது? இவர் தான் லெப்டினெனண்ட் சர் விக்ரமசிங்க ராவ் போவார், கே. சி. ஐ. இ. இவர் திவான் சீனியர் மகாராஜா. 5-வது மாராட்டிய லைட் காலாட் படையை இவர் சேர்ந்திருந்தார். இவரிடம் அந்தரங்க பக்தியுள்ள சேவகன் நெ. 18630 கேசவ பாண்டு ரங்க போஸ்லே.

இந்தக் கதை முக்கியமாகக் கேசவனுடைய கதை தான். இதில் மற்றொரு படிப்பினையு முண்டு. தன் நாட்டிற்கு ஆபத்து வந்த போது மகாராஜா தன் சமஸ்தானத்தை விட்டுக் கிளம்பினார். சாதாரண ஒரு இளைஞனைப் போல இராணுவ ஆரம்பப் பயிற்சி பெற்றார். ஏனென்றால், உரம் மிகுந்த மராட்டியப் போர் வீரர்களுக்குத் தலைமை வகித்து நடத்தும் பொருட்டு தான் கீழ்தர உத்தியோகஸ்தர் பதவியையும் மேற் கொண்டார். அதிலிருந்து அநுபவப் பட்டு உயர்ந்த இராணுவப் பதவிகளை அடைய வேண்டும் என்பது அவருடைய ஆசை.

சமாதான காலத்தில் அரசாங்கத்தை நிர்வகிப்பதற்கும், யுத்தத்தில் போர்வீரர்களை நடத்திச் செல்லுவதற்கும் மிகுந்த வேற்றுமை யுண்டு என்று அவர் கண்டார். மராட்டியப் போர் வீரர்களின் உயிர்களை அனாவசியமாகப் பலி யிடாதபடி அவர்களை நடத்திச் செல்ல வேண்டி, அத்தக் கலையை ஆரம்ப முதல் படிக்க வேண்டியது அவசியம் என்றும் உணர்ந்தார். இந்த உணர்ச்சி மராட்டியத் தலைவர்களுக்கு இருக்கும் வரையிலும் மகா சிவாஜி ஊட்டிய வீர உணர்ச்சி அற்றுப் போகும் என்னும் அச்சமே நமக்கு வேண்டியதில்லை.

### ஒரு அதிசயம்.

லாமெதேர் ஒரு பிரஞ்சு டாக்டர். இவருடைய அறையில் ஒரு போர் வீரர் படுத்திருந்தார். அவருக்கு பெரிய காய மிருந்தது. சத்திர சிகிச்சை அவசியமா யிருந்தது. அதற்கான ஆயத்தங்கள் செய்தார்கள். அவருக்கு ரத்தக் கழிவு அதிகம். எனவே மிகவும் களைத்திருந்தார். முகம் வெளுத்திருந்தது. கண்களில் ஒளி யில்லை. உடல் குளிர்ந்திருந்தது. நிமிஷத்திற்கு 180 முறை அவருடைய நாடி இலேசாக அடித்தது. டாக்டர் இவருடைய நாடியைப் பார்த்தார். அந்தக் கையைத் தொப்பென்று போட்டார். கடுங் கோபங் கொண்டார். "மகா கோழை" என்று அப் போர் வீரரை வைதார். மிகக் கேவலமாக அவரை ஏசினார். பிறகு, உள்ளே மற்றொரு அறைக்குப் போய் விட்டார்.

பக்கத்திலிருந்த அவருடைய உதவியாளர் அசந்து போனார் இதைக் கண்டு. அவரும் டாக்டருக்குப் பின்னே போனார். சற்று தூரம் போன பிறகு "திரும்பிப் போய் அவருடைய நாடியைப் பார்த்து வந்து எனக்கு அறிவி" என்று டாக்டர் அவரிடம் கூறினார். உதவி டாக்டர் திரும்பி வந்தார். போர் வீரரும் கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்தார். அவருடைய நாடியைச் சோதித்த போது நிமிஷத்திற்கு 120 முறைகள் அடித்துக் கொண்டிருந்தன. அச்செய்தியை டாக்டர் கேள்விப்பட்டார். உள்ளே அவரைக் கொண்டு வரச் செய்தார். சத்திர சிகிச்சை நடந்தது. குணமடைந்தார். டாக்டரின் சிகிச்சை முறையைப் புகழாதார் யார்?

—கர்னல் பெய்லி கே. ஆஷ்போர்டு.

## பிரிட்டிஷ் சிப்பாய்கள் நடந்து கொள்ளும் முறை.

**அந்நிய நாடுகளில் தம் படை வீரர்கள் இருக்கும் போது அவர்களுடைய மனோபாவங்களும் நடவடிக்கைகளும் எப்படி யிருக்கின்றன வென்று பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் உணர்ந்து கொள்ளுவதனால் பல முக்கியமான நன்மைகள் உண்டு என்று இந்த கட்டுரையி லின்று தெளிவாகிறது.**



பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் இந்தியப் படையினரும் நீந்துகின்றனர்.

இது வரை தன் சொந்த நாட்டை விட்டே வெளியேறி யறியாத பிரிட்டிஷ் படை வீரர் இந்தியாவிற்கு வந்திறங்கினால், ஒரு புது உலகில் புகுந்தது போலத் தான்.

அவர் மன நிலை அப்போது எப்படி இருக்கிறதோ அதே அளவிற்குத் தான் அவன் சந்தோஷப் படக் கூடும். தன் வீடு வாசலை, மனைவி மக்களை விட்டு வந்தது பற்றி வருந்தக் கூடும். அல்லது உள்ளதைக் கொண்டு எந்த அளவிற்குப் பயன் படுத்திக் கொள்ளலாமோ அப்படிச் செய்ய வேண்டும் என்றும் நினைக்கலாம். இதைப் பொறுத்துத் தான் இருக்கிறது அவருடைய சந்தோஷமும் துயரமும்.

ஒரு படை வீரர் சரியான மனோபாவத் தோடிருக்க வேண்டும். இல்லையானால், தான் ஏதோ ஒரு பெரிய வீரச் செய்கை செய்யக் கிளம்பி யிருப்பதாக அவர் நினைப்பார். அவர் இந்நாட்டைக் குறித்து நன்கு உணர்ந்து கொள்ளுவாரானால், அவருக்கு அக்கரை அதிகப் படும்.

முதலில் இந்தியாவி லுள்ள மக்களைக் குறித்து தெரிந்து கொள்ள விரும்புவார்கள். பிரிட்டிஷ் இனத்தைச் சேர்ந்தவர்க ளல்ல இந்தியர்கள். அதனால் பிரிட்டிஷ் இனத்தாருக்குத் தாழ்ந்த இனத்தவரு மல்ல. நமது வழக்க பழக்கங்களுக்கும் அவர்களுடைய வழக்க பழக்கங்களுக்கும் மிகுந்த வேற்றுமை யுண்டு. **உலகத்தி லுள்ள எல்லா வகை மக்களிலும் இவர்கள் தான் மிகுந்த மரியாதை யுள்ளவர்கள்.** இதை யாரும் மறுக்க முடியாது. எல்லா இனத்தவர்க ளிடத்திலும் நல்ல பழக்கங்களுண்டு, கெட்ட பழக்கங்களு முண்டு. மரியாதையாகவும் அன்போடும் ஒரு இந்தியர் எப்போதும் நடந்து கொள்கிறார். அவர்கள் உணர்ச்சி மேன்மையானது. அவர்களை நீங்கள் விரும்புகிறீர்களா இல்லையா வென்று வெகு எளிதில் தெரிந்து கொள்ளுகிறார்கள். தம் வழக்க முறைகளைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறார்கள். தம் குடும்ப விஷயங்களைக் குறித்துச் சொல்ல அவர்கள் ஆசைப் படுவதில்லை.

பேசும் மொழி தெரியாதே! இதற் கென்ன செய்வது? சென்னை மகாகாணத்தில் அநேக இந்தியர்கள் இங்லீஷ் பேசுகிறார்கள். ஆனால் பம்பாய் மாகாணத்தில் தம் கருத்துக்களை அம்மாகாணத்தவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமானால், கொஞ்சம் உருது கற்றிருக்க வேண்டும்.

இந்தியர்களோடு பிரிட்டிஷார் மிகுந்த நெருங்கிய நேசத் தோடிருக்கலாம். தம் படை வீரர்களோடு சொந்த முறையில் பல பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் நண்பர்களாகி விடுகிறார்கள்.

வெளி நாட்டி லுள்ள ஒவ்வொருவரும், தன் நாட்டின் தூதர். இதனால் நாம் இந்தியர்களிடம் எப்படி நடந்து கொள்ளுகிறோமோ அதைப் பொறுத்துத் தான் இருக்கிறது நம் நாட்டவருக் குள்ள மதிப்பு. நாம் அவர்களிடம் முரட்டுத் தனமாக நடந்து கொண்டால், யுத்த முயற்சிக்குக் குந்தகமாகும்; மரியாதையாக நடந்தால் நாட்டிற்கு நன்மை யுண்டு.

பிரிட்டிஷ் படை வீரர்களுக்கு எல்லா வகைகளிலும் உதவி செய்ய இராணுவத்தார் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். தென்னிந்தியாவைப் பற்றிய எல்லாத் தகவல்களும் கொடுக்கிறார்கள். ஆனால், "தன் கையே தனக் குதவி" என்னும் பழமொழியை நீங்கள் மறந்து விடக் கூடாது. இந்தப் பழமொழிப் படி நடந்தால் நல்ல பலனுண்டு. இங்குள்ள நகரங்களில் பல சிறந்த அழகான கட்டிடங்களிருக்கின்றன. நாட்டுப் புறங்களில் இங்கிலாந்தி லுள்ள இயற்கை யழகு தாண்டவ மாடுகிறது. இந்த அழகிலும் இங்கிலாந்திற்கு இந்தியா தாழ்ந்த தல்ல, ஆனால் வேறு வகையில் அழகாய் அமைந் திருக்கிறது.

கடைசி வார்த்தை. அரசியல் விஷயங்களைப் பேச வேண்டாம். எந்த இந்தியராவது பேச விரும்புவார்களானால், "நான் ஒரு படை வீரனே யொழிய, அரசியல் வாதி யல்ல" வென்று அவரிடம் சொல்லுங்கள். இப்படிப் பட்டவர் தான், அச்சு அரசாங்கங்களை நேசநாடுகள் வென்ற பிறகு, இந்தியா எதேச்சையோடு முன்னேற்ற மடையும் பொருட்டு, உழைத்தவ ராவார்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் வருஷம் அக்டோபர்மீ 30உ, வெள்ளிக்கிழமை [இதழ் 43

## இளம் வீரரின் குறி தவறாது!



ஆகாயத்தில் வட்டமிட்டுப் பார்க்கும் பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த இந்த இளைஞர் குறி பார்த்துச் சுடுகிறார்.

## "பிணிதனை வெல்லும் முன்னணி"

இராகம்—அடாணா. தாளம்—ரூபகம்.

பல்லவி

மனது வைத்தே வருவீர்—இன்று
மாநிலத்தின் தன்மை தானினைத்தே நன்மை (மனது)

அனுபல்லவி

1. "தனது இத்தாரணி தடைசெய் வோரைத்துணி"
என வுரைசெய் பிணி தனைவெல்லும் முன்னணி (மனது)

2. "எனதே இந்நாடுமே ஈண்டு நிற்கேடுமே
என் துயிர் வாடுமே!" எனவந்து கூடுமே (மனது)

3. மாட்சிமை மன்னரும் மகிமைவிற் பன்னரும்
ஆட்சி செய்தே வரும் ஆட்படை முன்னரும் (மனது)

4. நாசியத்தைக் கொல்ல நாளும் ஓங்கவல்ல
தேசியப் போர் நல்ல சீர் முன்னணி வெல்ல (மனது)

5. பொல்லாத தோர் நாயைப் பொய்வதந்திப்பேயைக்
கொல்லாவிடில் வாயை வெல்லும் நமை மாயை (மனது)

யுத்தப் போக்கு —1

# எகிப்தில் புதிய பெரும்போர் ஆரம்பம்

## பிரிட்டிஷ் எட்டாம் படையின் தாக்குதல்

"சபாஷ்! அப்படிப் போடு!" என்றது எட்டாம் படை நேச தேச பாம்பர் விமானங்களைப் பார்த்து. ஏன் தெரியுமா? எகிப்தியப் போர் முனையின் வட பகுதியில், சென்ற திங்கட்கிழமை அச்சு நாடுகளின் தரைப் படைகளைப் போடு போடென்று போட்டுத் தள்ளி விட்டன, இந்த பாம்பர் விமானங்கள். இந்தப் போர் முனையில் ஆரம்பத்திலேயே எட்டாம் படை வெற்றி பெற்றது. ஆகவே, ஏதேச்சையை நாடும் உலக மக்கள் யாவரும் இந்த எட்டாம் படைக்கே சபாஷ் சொல்லி யிருக்கலாம். எல் அலமீனுக்கு எதிரில் எதிரிகள் கைப்பற்றி யிருந்த இடங்களை மிகக் கடுமையாக எட்டாம் படை தாக்கியது. அன்றியும் அந்தப் போர் முனை எங்கெல்லாம் பரவி யிருந்ததோ, அங்கெல்லாம் தாக்கினார்கள். இப்படித் தாக்குவார்கள் என்று அச்சு நாட்டு அரசாங்கங்களுக்குத் தெரியும். இதனால் தான் மால்டா தீவில் விமானத் தாக்குதல் மேலும் கடுமையானது; அல்லாமலும், நேரிடக் கூடிய சேதத்தைப் பொருட் படுத்தாமல், ஏராளமான உதவிப் படைகளையும் தளவாட சப்ளைகளையும் கொண்டு வந்து குவித்துக் கொண்டிருந்தார்கள்.

அக்டோபர் மாதம் 23-ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு, நிலவு ஒளி வீசிக் கொண்டிருந்தது. மிகப் பெரிய பீரங்கிப் படை யொன்று கிளம்பியது. இவ்வளவு பெரிய படை வடாப்பிரிக்காவிலேயே இருந்தது கிடையாது. இது தான் எட்டாம் படை. பத்திரிகைப் பிரதிநிதிகள் அப்படைத் தலைவரான ஜெனரல் மாண்ட்காமரியைக் கண்ட போது, "ஜெனரல் ஸ்மட்ஸ் கூறியது போல நாம் தாக்க ஆரம்பித்து விட்டோம்" என்று கூறினார். மேலும் அவர் கூறியதாவது:— இந்தப் போரில் எட்டாம் படையும் அதற்கு உதவியாக விமானப் படையும் ஒருமுகப் பட்டிருக்கின்றன. இந்த ஒற்றுமையில் தான் நம் பலம் இருக்கிறது. இவ்வளவு பலத்தோடு எகிப்தின் முன் வாசலுக் கருகிலேயே கடுமையாகத் தாக்குகிறோம். இதன் பலனாக, முக்கியமான புதிய நிலைமை ஏற்படலாம். ஏனென்றால், இங்கே தான் யாருக்கு அதிக பலம்? நேச நாட்டுப் படைகளுக்கா? அல்லது அச்சு நாட்டுப் படைகளுக்கா? என்று முடிவு கட்ட முடியும். இந்த எட்டாம் படை எதிரிப் படைகளைக் கடுமையாகத் தாக்கியதன் பயனாக, அவர்கள் தவிடு பொடியாகி விட்டனர். இதனால் ஏற்பட்ட இடை வெளிகளில் எட்டாம் படையினர் புகுந்து மேலும் தாக்கினர்.

கொஞ்ச காலத்திற்கு முன்பு ரோமல் கண்ணை மூடிக்கொண்டு மகா கடுமையாக நம் படைகளைத் தாக்கிய போது, அவரைத் தலை தூக்க ஒட்டாதபடி அடித்தது இந்த எட்டாம் படை தான். இது மிகச் சிறந்த தோர் வேலை தான். ரோமலின் படைகள் பின்வாங்கியோடி எல் அலமீன் நகரத்திற்கு எதிரில் கட்டுப்பட்டுக் கிடக்கும்படி இந்த எட்டாம் படை செய்தது மிகவும் அற்புதமான செயல் தான். மிகவும் நெருக்கடியான நிலைமையில், நாம் எங்கே தோற்றுவிடுவோமோ வென்று சிந்தித்துக் கொண்டிருந்த சமயத்தில், இப்படிப்பட்ட வெற்றி கிடைத்தது பெரிதும் பாராட்டத் தக்க தல்லவா? ஏராளமான படைகளைக் கொண்டு தாக்கி, திடீரென்று விரைவாக வளைந்து கொள்ளுவது தான் ரோமல் கையாண்ட யுத்த தந்திர முறை. இந்தத் தந்திரம் எட்டாம் படையிடம் பலிக்க வில்லை. ரோமல் படைகள் தாக்கியவுடனே, எட்டாம் படையும் எதிர்த்துத் தாக்கியது. அதனால் தான், அங்கே ரோமல் கை ஓங்க முடியவில்லை. அவருடைய தாக்கும் சக்தி மிகவும் குறைந்து விட்டது. இது பற்றி கெய்ரோ நகரத்திலிருந்து "டைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:—"ஆபிரிக்க (ரோமல்) படைகள் விமானங்களி லிருந்து அடி வாங்கியதைப் போல், வேறெந்தப் படையும் இதுவரை வாங்கினதே கிடையாது என்று சொல்லலாம். அதன் பயனாக அவர்கள் நிலை தடுமாறிப் போனார்கள்." அப்போது எட்டாம் படைக்கும் மிகுந்த இடைஞ்சல்கள் இருந்தன. அப்போது நம் படைகள் தோற்றுக் கொண்டு இருந்தன; போதுமான அளவிற்கு டாங்கிகள் இல்லாதபடியால் நாம் பலக் குறைவோடிருந்தோம். இவை, அந்தப் படையின் ஊக்கத்தைக் குலைக்கக் கூடியவை. ஆனால் எட்டாம் படையின் ஊக்கம் மட்டும் கொஞ்சங் கூட தளர்ச்சி யடைய வில்லை. ஆனால், அச்சு நாட்டுப் படைகளோ மிகவும் ஊக்கம் பெறத் தக்க நிலையி லிருந்தன. அடுத்தடுத்து முன்னேறிக் கொண்டிருந்தன. மகத்தான வெற்றி பெறப் போவதாகக் கொண்டாட்டம் போட்டுக் கொண்டிருந்தன. பிறகு அலெக்ஸாந்திரியாவிலும் கெய்ரோவிலும் விருந்துண்டு இளைப்பாறலா மென்றும் மனப்பால் குடித்தன. உண்மையிலேயே அப்போது நம் எட்டாம்படை மிகவும் பலக் குறைவாகத் தான் இருந்தது. டாங்கிகளும், பீரங்கிகளும், டாங்கி எதிர்ப்புப் பீரங்கிகளும் மிகவும் கொஞ்சமாகத் தான் இருந்தன. என்றாலும், எட்டாம் படை சளைக்க வில்லை. பின் வாங்க வில்லை. எதிரிப் படைகளைப் புகுந்து தாக்கியது. கடலுக்கும் குவெட்டேராவிற்கும் 35 மைல்கள். இது ஜெர்மானியர் வசமிருந்தது. இதை எட்டாம் படை புகுந்து தாக்கிக் கைப்பற்றியது.

### சிறந்த முறையில் போராடினீர்கள்!

முதலில் நிலைமை மகா ஆபத்தாகத் தான் இருந்தது. எந்த நிமிஷம் வேண்டுமானாலும் எதிரி டாங்கிகள் நம் படைகளைச் சூழ்ந்து கொள்ளும் போலிருந்தது நிலைமை. இவற்றை நேசதேசப் படையின் டாங்கிகளும் பீரங்கிகளும் தடுத்திருக்க முடியாது. நீல நதி 'டெல்ட்டா' விற்கு மிகவும் அருகில், மிகவும் ஆபத்து உண்டாக்கத் தக்க இடங்களில் ஜெர்மன் படைகள் இருந்தன. அப்போது, விரைவாக முன்னேறிப் போய் அலெக்ஸாந்திரியாவையும் கைப்பற்றி விட வேண்டு மென்னும் ஆசை ரோமலுக்கும் அவருடைய படைகளுக்கும் மிகவும் அதிகம். இந்த நிலைமை கொஞ்ச காலந் தான் இருந்தது. இரு தரத்தாரும் தம் படைகளைக் கொண்டு மிகக் கடுமையாக ஒருவரை யொருவர் தாக்கிக் கொண்டிருந்தார்கள். என்றாலும் புகுந்து தாக்கி வெற்றி பெறத்தக்க பலம் இரு தரத்தாருக்கும் இல்லை. ஆகவே, யாருக்கு விரைவில் போதுமான பக்க பலம் வந்து சேருகிறதோ அவர்களுக்குத் தான் வெற்றி. இந்தச் சமயத்தில் தான், பிரிட்டிஷ் முதல் மந்திரி சர்ச்சில் எகிப்திற்கு வந்து படைகளைப் பார்வை யிட்டார். "மிகச் சிறந்த முறையில் நீங்கள் போராடினீர்கள்; உங்களுக்கு ஏராளமான பக்க பலம் வந்து கொண்டிருக்கிறது" என்று படைகளிடம் கூறினார். "இங்கிலாந்திற்காக எவ்வளவு கஷ்டப் பட்டுப் போராடுவோமோ, அவ்வளவு கஷ்டப் பட்டு மன உறுதியோடு எகிப்திற்காகவும், நீல நதியை யடுத்துள்ள நாடுகளுக் காகவும் போராடுவோம்" என்று எகிப்தியர்களுக்கு சர்ச்சில் கூறினார். அந்தப் போர் தான் மகா கடுமையாக இப்போது நடைபெற்று வருகிறது.

எகிப்தைத் தற்காத்துக் கொள்ளும் பொருட்டு சென்ற இரண்டு வருஷங்களாகப் போராடுகிறோம். 1939-ம் வருஷம் ஜூன் மீ தான் இத்தாலி யுத்தத்தில் இறங்கியது. ஆபிரிக்காவில் ஒரு மகத்தான சாம்ராஜ்யத்தைக் கட்டிக் கொள்ளலா மென்று பகற் கனவு கண்டதும் அப்போது தான். 1940-ம் வருஷம் செப்டம்பர் மீ 15உ தான் எகிப்திய எல்லைப் புரத்தை இத்தாலிய படைகள் கடக்க ஆரம்பித்தன. 1940-ம் வருஷம் செப்டம்பர் மீ 18உ அலெக்ஸாந்திரியாவிற்குள் வெற்றி வாகையோடு தான் புகப் போவதாக மார்ஷல் கிரேசியானி சோதிடம் சொன்னார். இந்தப் பாக்கியம் 1940-வருஷத்திலும் அதற்குப் பிறகுங் கூட கிரேசியானிக்குக் கிடைக்க வில்லை. அது போலவே 1942-ல் ரோமலுக்கும் கிடைக்க வில்லை.

(10-ம் பக்கம் பார்க்க.)



யுத்தப் போக்கு—2.

# ஸ்டாலின்கிராட் யுத்தம்: ரஷ்ய வெற்றி

## ஜெர்மானியர்கள் சங்கடம் திமோஷேங்கோவின் திறமை

### ஆயத்தம் செய்யப்பட்ட கோட்டை.

ஸ்டாலின்கிராடில் மிகக் கடுமையான யுத்தம் நடந்து கொண் டிருக்கிறது. ரஷ்யர்கள் தம் எதிரிகளை மிகக் கடுமையாக தாக்கி, கடுமையாகச் சேதப் படுத்திக்கொண் டிருக்கிறார்கள். குளிர் சற்று குறைந்திருக்கிறது. இது ஜெர்மனியர்களுக்குச் சாதகம். எனவே, 25,000 பேர்களைக் கொண்ட படைகளும் 100 விமானங்களும் அநேக டாங்கிகளும் கொண்டு ஜெர்மனியர்கள் அடுத்தப் பகுதிகளை வளைத்துக் கொண்டு ஸ்டாலின்கிராடைச் சேர்ந்த தொழிற் சாலைக் கோட்டை யொன்றைக் கடுமையாய்த் தாக்குகிறார்கள். இவர்கள் என்ன தான் வெடி குண்டுகளைக் கொண்டும் ஷெல் குண்டுகளைக் கொண்டும் தாக்கிய போதிலும், பாதாள தொழிற்சாலைகள் வேலை செய்து கொண்டு தான் இருக்கின்றன. அங்கே பீரங்கிகளையும் டாங்கிகளையும் இரவு பகலாக பழுது பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற சில நாட்களாக பலமான உதவிப் படையை வால்கா ஆற்றின் வழியாக இங்கே ரஷ்யர்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். சோவியத் படைகள் மீண்டும் அங்கே ஊன்றிக் கொண்டு விட்டன. ஸ்டாலின்கிராடின் வடமேற்குப் பகுதியில் அவர்கள் பெரிதும் முன்னேறி யிருக்கிறார்கள். ஸ்டாலின்கிராடிற்கு வடமேற்கே, ஜெர்மானியர்கள் கட்டியுள்ள பான்சர் அரண் சுவரை திமோஷேங்கோவின (ருஷ்ய படைத் தலைவர்) படைகள் தவிடுபொடியாக்குகின்றன வென்று ஜெர்மன் அறிக்கை யொன்று அறிவிக்கிறது. இன்னும் சில நாட்களில் கூட, ஸ்டாலின்கிராடைக் கைப்பற்ற முடியாது என்று ஜெர்மன் அரசாங்கத்தைச் சார்ந்த அதிகாரிகள் கூறுகிறார்கள். சென்ற இரண்டு மாதங்களாக இடைவிடாமல் மகா கடுமையாகப் போராடியுங்கூட, ஸ்டாலின் நகரத்தைக் கைப்பற்ற அவர்களால் முடியவில்லை. இந்நகரம் இப்போது ஒரு பெரும் கோட்டையாக மாறிவிட்டது. இதில் ஒரு ஆச்சரியப்படத் தக்க விஷயம் ஒன்று உண்டு. ஜெர்மானியர்கள் ஸ்டாலின்கிராடைக் கைப்பற்றி விட்டார்கள் என்று சொல்லத் தக்க நிலைமையி லிருந்தது. ஜெர்மானியர்கள் வெகு விரைவாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள். இந்த முன்னேற்றம் திடீரெனத் தடைப்பட்டது. அது, பிறகு நெடுநாள் முற்றுகையாக மாறியது. இந்நகரம் கைத் தொழில் மிகுந்தது. 40 மைல் நீளமுள்ளது. ஜிப்ரால்டரைப் போல், நன்றாக அரண் செய்யப்பட்டது. அப்படி யிருந்தும் ஜெர்மன் முற்றுகையினால், ஓரளவிற்குத் தடுமாறியது.

### மன உறுதி தான் முக்கியம்.

இத்தனை நாட்களாக ஸ்டாலின்கிராட் நகரத்தைப் பாதுகாத்து வருவதைப் போல, உலக சரித்திரத்திலேயே வேறெந்த ஊரையும் யாரும் பாதுகாத்த தில்லை. "எந்தப் போராட்டத்திலும் மன உறுதி தான் மகா முக்கியமானது" என்று கூறிய கிளாஸ்விட்ஸ் என்னும் யுத்த நிபுணரின் வார்த்தைகள் முற்றும் உண்மை என்று இந்தப் போராட்டம் மெய்ப்பிக்கிறது. தங்கள் மாபெருந் தலைவரின் பெயரால் விளங்கும் அந்நகரம், ஜெர்மானியர் வசப்படக்கூடா தென்று ரஷ்யர்கள் பெரும் உறுதி கொண்டார்கள். அதனால் தான் ஜெர்மானியர்கள் தாக்குதலைத் தடுக்க வேண்டிய தற்கான எல்லா முறைகளையும் கண்டு பிடித்தார்கள். இதிலே ரஷ்யர்களுக்கு ஒரு வசதிக் குறைவு இருக்கிறது. அதாவது, ரஷ்யப் படைகளுக்குப் பின்னே 1 மைல் அகலமுள்ள வால்கா ஆறு இருக்கிறது. இதன் வழியாகத் தான் மேலும் மேலும் படைகளையும் தளவாடங்களையும் அனுப்ப வேண்டியிருக்கிறது. அல்லாமலும், போர்க்களத்தில் காயப் பட்டவர்களையும் இந்த ஆற்றின் வழியாகத் தான் வெளியேற்ற வேண்டி யிருக்கிறது. இது வரை இந்த ஆற்றில் தடையில்லாமல் ரஷ்ய சப்ளை கப்பல்கள் போய்க் கொண்டிருந்தன. இப்போது ஜெர்மன் பீரங்கிகளை ஒரு உயர்ந்த இடத்தில் அமைத்திருக்கிறார்கள். அங்கிருந்து ஆற்றிலுள்ள கப்பல்களைச் சுட்டுச் சேதப்படுத்தலாம். மத்திய ரஷ்யாவிற்கும் காக்கேஷியாவிற்கு அப்பாலுக்கும் சப்ளை போக வர உதவியா யிருந்த வால்கா ஆற்றுப் பாதை, இப்போது அடைபட்டுப் போய் விட்டதனால் நாசமடைந் துள்ள ஸ்டாலின்கிராட் நகரத்தைப் பெருமைக்காக மட்டுந் தான் ஜெர்மானியர் பிடிக்க வேண்டி யிருக்கு மென்று சில இராணுவ நிபுணர்கள் கூறுகிறார்கள். இது தவறு. குளிர் காலத்தில் தங்குவதற்கு ஜெர்மானியர்களுக்கு இந்நகரம் மிகவும் தேவை. அன்றியும், ஜெர்மானியர்கள் போக்குவரவுப் பாதை மிகவும் நீண்டது. அது செம்மையாகவு மில்லை. அது வட காக்கஸஸ், க்ரான்ஸி, கணவாய்கள் வழியாகச் செல்லுகிறது. ஆகவே அவர்களுக்கு இந்தப் பாதுகாப்புக் கோத்தளமும் தேவையா யிருக்கிறது.

### திமோஷேங்கோ வெற்றி

ஜெர்மானியர்கள் இந்நகரத்தைத் தாக்க எவ்வளவு ஆயத்தத் தோடு வந்தார்கள் தெரியுமா? 10 லட்சம் பேர்களைக் கொண்ட படைகள், அநேக டாங்கிகள், விமான எதிர்ப்பு பீரங்கிகள், இவற்றிற்குத் தேவையான தளவாடங்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றோடு முழு மூச்சாகத் தாக்கினார்கள். இந்தத் தாக்குதலைத் தடுத்து வெற்றி கண்டார் மார்ஷெல் திமோஷேங்கோ. ஒரு இடத்திலேயே தம் முழு பலத்தையும் கொண்டு தாக்குவது தான் ஜெர்மன் படைகள் சாதாரணமாக மேற்கொள்ளும் முறை. இப்போது அவர்கள் ஒரு பெரும் தவறு செய்து விட்டார்கள். ஸ்டாலின்கிராடைக் கைப்பற்றி விட முயலும் போதே, காகஸஸ் மலையையும் கடந்து விட முயற்சித்தனர். திமோஷேங்கோ வெற்றி பெறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். ஸ்டாலின்கிராடிலுள்ள ரஷ்யப் படைகளுக்குச் சற்று ஓய்வு கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் மார்ஷெல் திமோஷேங்கோ ஜெர்மன் படையின் இடது பக்கத்தில் தாக்கினார். இந்தத் தாக்குதலை உடனே தடுக்க ஜெர்மன் படைகளால் முடியவில்லை. மிகக் கடுமையாக எதிரிகள் ஸ்டாலின்கிராடைத் தாக்கியுங் கூட, பல நாட்களாகக் கைவிடாதபடி ரஷ்யர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் ரஷ்யர்கள், டான் ஆற்று வளைவிலிருந்து ஜெர்மன் படைகளைத் தாக்குவதற்குப் பெரிதும் உதவியா யிருந்தது. அச்சு நாட்டுப் படைகளின் பலத்தை நாம் குறைவாக மதிக்கப் படாது. ஸ்டாலின்கிராட் நகரத்திற்கு முன்பு இருக்கும் ஜெர்மன் படைகளை மார்ஷெல் திமோஷேங்கோ இலகுவில் வென்று விடக் கூடும் என்றும் நினைப்பதற்கில்லை. ஆனால் ஒரு விஷயம், ஜெர்மன் படையின் இடது புரத்திலுள்ள வாரனேஜ் முதல் ஸ்டாலின்கிராட் வரையிலும் ரஷ்யர்கள் தாக்குதல் படிப்படியாக அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது.

வான் பாக் என்னும் ஜெர்மன் படைத் தலைவர், ஸ்டாலின்கிராடிற்கு வடக்கே போய் மாஸ்கோவைக் கைப்பற்ற வேண்டு மென்று விரும்பினாராம். ஆனால், ஹிட்லர், தெற்கே போய் இராக்கிலும் பாரசீகத்திலும் உள்ள எண்ணெய்க் கிணறுகளை கைப்பற்ற வேண்டுமென்று சொன்னாராம். இந்தக் கருத்து வேற்றுமை காரணமாகத் தான் வான் பாக்கை ஹிட்லர் டிஸ்மிஸ் செய்து விட்டா ரென்றும் சொல்லுகிறார்கள். இந்த இரண்டு போக்குகளையும் தடுக்க வேண்டியது ரஷ்யர்களின் கடமையாகி விட்டது. இந்த இரண்டு இடங்களிலும் ஜெர்மனியர்கள் முன்னேற ஒட்டாதபடி ரஷ்யர்கள் வெகு வீரத்தோடு தடுத்து விட்டார்கள். வெற்றி பெற்றே தீருவது என்னும் மகா உறுதியுடன் ரஷ்யப் படைகளும் போராடிக் கொண்டிருக்கின்றன. அது போலவே தான் ஜெர்மன் படைகளும் போராடிக் கொண்டிருக்கின்றன.

(10-ம் பக்கம் பார்க்க.)

# "பீதி கொள்ளுவது மிருகத் தனம்."

## "இருந்த இடத்திலேயே இருங்கள்."

### நீதிபதி வாட்ஸ் ஓர்த் அறிவுரை.

சென்னை ஹைக் கோர்ட்டு நீதிபதி எஸ். வாட்ஸ் ஒர்த், சமீபத்தில், சென்னை ரேடியோ மூலம் ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது :—

ஒரு கிழவி தெருவின் குறுக்கே தள்ளாடிக் கொண்டு போகிறாள். திடீரென்று அவள் அருகே மோட்டார் கார் சத்தம் கேட்கிறது. திடுக்கிடுகிறாள். முன்னே ஓடப் பார்க்கிறாள் அவள் மனம் மாறுகிறது. அவள் கால்கள் பின் இழுக்கின்றன. இதற்கிடையில் அந்த மோட்டார் டிரைவர் பாடு திண்டாட்டமாகி விடுகிறது. அந்த வண்டிக்குள்ள எல்லாத் தடைகளையும் போட்டு அமுக்குகிறார். கிழவிக்கு ஆபத்து நேர்ந்து விடக் கூடாதே என்பது அவருடைய பெருங் கவலை. சத்தங் கேட்டவுடனேயே கிழவி, அந்த இடத்திலேயே நின்று, சற்று ஆலோசித்திருப்பாளானால், ஆபத்திற்கே இடமிராது; அல்லது மேலும் நெடுக போய்க் கொண்டிருந்தாலும் ஆபத்து ஏற்படாது. இப்படிச் செய்தால், டிரைவர் வண்டியை வளைவாக ஓட்டிக் கொண்டு போய் விடுவார். ஆனால், இப்படிப் பட்ட நெருக்கடியான சந்தர்ப்பங்களில் நாமெல்லோரும் ஓடிப் போகத் தான் பார்க்கிறோம். இது நமது இயற்கை. நம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் உணர்ச்சி நமக்கு இயற்கையாகவே ஏற்படுகிறது. இதன் பயனாகப் பல சமயங்களில் நாம் நாசந் தான் அடைகிறோம்.

1940-ம் வருஷம் மே மாதம் வட பிரான்சிலும் பெல்ஜியத்திலும் இது போலவே தான் நடந்தது. இந்தப் பகுதிகளி லிருந்து தப்பி யோடி சரண் புகுந்தவர்கள் ஓடியதைக் குறித்து வருணித்து எழுதப் பட்டுள்ள பல புத்தகங்களை நீங்கள் படித்திருப்பீர்கள். அவை மிகவும் பரிதாபமான காதைகள். ஏனெனில் அவை உண்மைச் சம்பவங்கள். ஒரு நகரத்திற்கு அருகில் ஜெர்மன் படை வருவதற்கு முன்னாலேயே, 'இதோ வந்துவிட்டான்! அதோ வந்து விட்டான்! ஜெர்மனியன்' என்று பொய் வதந்திகள் கிளம்பின. இதைக் கேட்ட பொது மக்கள் எல்லோரும் பீதி கொள்ளுவது இயற்கை தான். தம் உயிரைக் காத்துக் கொள்ள வேண்டும் என்னும் உணர்ச்சிக்கு அவர்கள் ஆளானார்கள். இதன் பயனாக முடிவில் அவர்கள் நாச மடைந்தார்கள்.

அதாவது, பீதி கொண்ட பொது மக்கள் ஆயிரக் கணக்கில் ஊரை விட்டு வெளி யேறினார்கள். தெருக்கள் எல்லாம் இவர்கள் கூட்டந் தான். கைவண்டிகள், மாட்டு வண்டிகள், ரிக்ஷாக்கள், ஜட்காக்கள், மோட்டார் கார்கள் எல்லாம் தெரு நிறைய அடைத்துக் கொண்டு போயின. இவை நிறைய சாமான்களோடு ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அடைந் திருந்தனர். இதனால் போர் முனைக்குப் போகும் படைகள் வேகமாகப் போகக் கூட வில்லை. அவற்றின் வேகம் பெரிதும் தடைப் பட்டது. இந்தக் காரணத்தினால், தடை யில்லாமல் ஜெர்மானியர்கள் முன்னேற முடிந்தது.

இப்படித் தப்பி யோடுகிறவர்கள் எங்கேனும் நிற்பதாகத் தோன்றினால், எதிரி விமானங்கள் தாழப் பறந்து வெடி குண்டுகளை அவர்கள் மீது எறிந்தன. நிராதரவான ஜனங்களை மிஷின் பீரங்கிகளைக் கொண்டு படு கொலை செய்தார்கள். இவற்றாலும் மேலும் அதிக பீதி ஏற்பட்டது. கணவன் ஒரு புரம், மனைவி வேறொரு புரம்; பெற்றோர்கள் ஒரு புரம்; மக்கள் மற்றோர் புரம் தெருப் பக்கங்களில் மடிந்து கிடந்தார்கள். இந்தக் கொடும் பீதியால் தூண்டப் பட்ட ஆயிரக் கணக்கான மக்கள் மேற்கு நோக்கித் தப்பி யோடினார்கள். இவர்கள் இப்படி ஓடியதனால், அந் நாடுகளைக் காக்கும் பொருட்டு முன்னேறிப் போய்க் கொண்டிருந்த படைகளின் வேகம் தடைப் பட்டது மட்டு மன்றி, அவற்றின் ஊக்கமும் சற்று தளர்ந்தது. முன்னேறிக் கொண்டு வந்த எதிரிப் படைகள், தப்பி யோடும் பொது, ஜனங்களை மடக்கி மிஷின் பீரங்கிகளால் சுட்டு, அவர்களுக்கு ஊடே ஒரு வழியைத் தமக்கு உண்டாக்கிக் கொண்டார்கள். இதனால், எத்தனை உயிர்கள் மடிந்தன வென்று யாருக்குந் தெரியாது. ஆனால் ஏராளமான பேர்கள மடிந் திருக்க வேண்டு மென்பது மட்டும் நிச்சயம். உயிரைக் காப்பற்றிக் கொள்ளும் பொருட்டுத் தப்பி யோடிய லட்சக் கணக்கானவர்கள், தம் வீட்டிலேயே இருந் திருப்பார்க ளானால், தம் உயிர்களை இழந்திருக்கவே மாட்டார்கள். இது உறுதி. நேச தேசப் படை களும் விரைந்து போய, ஜெர்மன படைகள் முன்னேறி வர ஒட்டாதபடி தடுத் திருக்கக் கூடும்.

எதிரி தாக்குதலுக்குப் பயந்து கொண்டு ஓடிப் போவது மகா ஆபத்தான விஷயம். ஒரு பெருங் குற்றம். ரங்கூனில் முதல் முதல் ஜப்பானிய விமானங்கள் தாக்க ஆரம்பித்த உடனே, ஏராளமான ஜனங்கள் தெருக்களில் அங்கு மிங்கும் பைத்தியக் காரத் தனமாகவும், முட்டாள் தனமாகவும் ஓடினார்கள். இந்த ஒரு காரணத்தினால் தான் அங்கே ஏராளமான பேர்கள் மடியும்படி நேர்ந்தது. தம் வீடுகளி லிருந்த பாதுகாப் பிடங்களில் இவர்கள் மறைந்து கொண்டிருந் திருப்பார்க ளானால், சேதமே ஏற்பட் டிருக்காது. சென்ற 3 வருஷங்களாக, ஜெர்மானியர்கள் இங்கிலாந்தை விமானங்களைக் கொண்டு தாக்கியதன் பயனாக, எத்தனைப் பேர்கள் சேதமானார்கள் தெரியுமா? லண்டனிலும் அதைச் சுற்றிலும் மட்டும் ஆயிரக் கணக்கான குண்டுகளை எதிரிகள் வீசினார்கள். அவற்றால் விளைந்த சேதத்தை மிகவும் அற்பம் என்று தான் சொல்ல வேண்டும். அந்தப் பகுதிகளில் வசித்தவர்களில் நூற்றுக்கு எத்தனைப் பேருக்குச் சேதம் என்று சொல்லுவதற் கில்லை. ஏனென்றால், அந்தப் பகுதிகளி லிருந்த குழந்தைகளையும் வேலைக்குத் தகுதி யில்லாதவர்களையும் அப்புறப் படுத்தி விட்டார்கள். அங்கிருந்த மீதிப் பேர்களில் ஆயிரத்திற்கு ஒருவர் அல்லது 10,000-க்கு ஒருவர் தான் மடிந் திருப்பார்கள்.

**வாந்திபேதிக்கு பயப்படுவதில்லை.**

இந்தியாவிலுள்ள ஒரு கிராமத்தில் வாந்திபேதி கண்டு விட்ட தென்று வைத்துக் கொள்ளுவோம். சில வாரங்களில் அந்தக் கிராமத்தில் பெரும் பகுதியினர் மடிந்து போகிறார்கள். இதைச் சர்வ சாதாரணமாகத் தான் பொதுவாக ஜனங்கள் மதிக்கிறார்கள். ஆனால், தாம் வசிக்கும் இடத்திற்கு அருகில் 5 அல்லது 6 வெடி குண்டுகள் விழுந்து விட்டாலோ, ஆயிரக் கணக்கான மக்கள் தம் குழந்தை குட்டிகளுடன், மூட்டை முடிச்சுக்களுடன் தம் சொந்த ஊரை விட்டு ஓடிப் போகின்றார்கள். இதிலிருந்து என்ன விளங்குகிறது? லண்டனிலுள்ளவர்களை விட இந் நாட்டிலுள்ளவர்களுடைய தைரியம் குறைந்தது என்றேற்படுகிற தல்லவா? வாந்திபேதி நோய் கண்டு விட்டால், இந்தியர்கள் மிகுந்த தைரியத்தோடு தான் இருக்கிறார்கள். இது பற்றி மலையாளத்தில் நடந்த சம்பவ மொன்றை நான மறக்கவே முடியாது. ஒரு விசாரணைக் கைதியை ஒரு போலீஸ் சேவகர் ரோடு வழியாக 15 மைல்கள் தூரத்திலுள்ள ஒரு மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கு நடத்திக் கொண்டு போனார். நடு வழியில் திடீரென்று போலீஸ் சேவகருக்கு வாந்திபேதி கண்டு விட்டது. அந்தக் கைதி அப்போது வெகு இலகுவாகத் தப்பிக் கொண்டிருக்கலாம். ஆனால், அவர் செய்த தென்ன? வாந்தியும் பேதியும் ஆகிக் கொண்டிருந்த அந்தச் சேவகரைத் தன் முதுகின் மேல் சுமந்து கொண்டு, பல மைல்கள் தூரம் நடந்து, அங்கிருந்த ஒரு பட்டணத்தில் ஒரு டாக்டரிடம் கொண்டு போய்ச் சேர்த்தார். அந்த டாக்டர் அந்தச் சேவகருக்குத் தகுந்த சிகிச்சை செய்து அவருடைய உயிரைக் காப்பாற்றினார். இந்தக் கைதியின் தொண்டை விடச் சிறந்த தொண்டையோ, தைரியமான செயலையோ நான் கேள்விப் பட்டதே கிடையாது. தைரிய மில்லாத காரணத்தால், குண்டுகளுக்குப் பயந்து ஜனங்கள் ஓடுவதில்லை. ஆனால் இப்படிப் பட்ட ஆபத்துக்களுக்கு அவர்கள் இதுவரை உள்ளாகிப் பழகாதது தான் காரணம். அப்படிப் பட்ட நிலைமை ஏற்படக் கூடாது என்பது தான என் ஆசை. எதிரிகள் சென்னையை விமானங்களி லிருந்து அடிக்கடி தாக்குவதாக வைத்துக் கொள்ளுவோம். அப்போது சென்னை வாசிகளுக்கு இது சர்வ சாதாரணமாகி விடும். இது பற்றி எனக்குக் கொஞ்சங் கூடச் சந்தேகமே கிடையாது. அப்போது தம் வேலைகளை நாள் தோறும் வழக்கம் போல் செய்து கொண்டிருப்பார்கள். கொஞ்சமும் கலவர மடைய மாட்டார்கள். லண்டனை எதிரி விமானங்கள் தாக்கிய போது லண்டன் வாசிகள் கொண்டிருந்த மன உறுதியை உலகமே பாராட்டியது. அவர்களுடைய மன உறுதியை விட, இந்தியர்களின் மன உறுதி கொஞ்சமும் குறைந்த தலல.



**பகுத்தறிவை பறி கொடுக்காதீர்கள்.**

விமான பலத்தில் கிழக் கரங்கத்திலும் மேற்கரங்கத்திலும் நேச நாட்டுப் படைகள் வெகுவாக பலத்து விட்டன என்ற எண்ணம் நம் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது. நம் கரையோரங்களிலுள்ள ஊர்களை எதிரிகள் தாக்கக் கூடு மென்று சில மாதங்களுக்கு முன்பு எதிர் பார்த்தார்கள். இப்போது அதிருஷ்ட வசமாக அந்த நிலை மாறி விட்டது. அப்படிப் பட்ட நிலைமைக்கு இடம் ஏற்படுமானால், அதைத் தடுக்க நாம் தக்க ஆயத்தத்தோடு தான இப்போ திருக்கிறோம். இந்த யுத்தத்தில் நாம் எதிர்பாராதவை தான், சாதாரணமாக நிகழ்கின்றன. இனி நமது கடற்கரையிலுள்ள ஊர்களுக்கு ஆபத்தில்லை என்று நம்பி எந்தக் காரியத்தையும் செய்வது முட்டாள் தனமாகத் தான் முடியும். இனி எதுவும் நேரா தென்னும் எண்ணத்தோடு நாம் ஆயத்த மில்லாம லிருப்பதும் ஆபத்தாகத் தான் முடியும். மீண்டும் எதிரிகள் நம் கடற் கரையிலுள்ள ஊர்களை தாக்குவதாக வைத்துக் கொள்ளுவோம். ஏ.ஆர்.பி. முதலிய பாதுகாப்பு வேலைகளில் இல்லாத சாதாரண பொது மக்கள் அப்போது என்ன செய்ய வேண்டும்? அவர்கள் கடமையை மூன்றே வார்த்தைகளில் சொல்லி விடலாம். அதாவது **"இருந்த இடத்திலேயே இருங்கள்"**. உள்ள இடத்தை விட, மேலும் பாதுகாப்புள்ள இடம் எங்கே என்று, தேடிக் கொண்டு வெளியே ஓடாதீர்கள். அருகிலுள்ள கட்டிடங்களுக்குள்ளாகவாவது, பாதுகாப்புப் பள்ளங்களிலாவது போய் மறைந்து கொள்ளுங்கள். நம் படைகள் எதிரிகளோடு போராட வேண்டிப் போனார்களானால், வேடிக்கைப் பார்க்கும் பொருட்டு வெளியே தெருவில் ஓடாதீர்கள். நீங்கள் அப்படி ஓடினால், உங்கள் பேரிலும் ஏதேனும் விழக் கூடும்.

முதல் தாக்குதல் முடிந்த வுடனே, ரயில்வே ஸ்டேஷனுக்கு உங்கள் பெண்டு பிள்ளைகளுடனும் மூட்டை முடிச்சுகளுடனும் ஓடிப் போய் இந்தியாவின வட கோடிக்குப் போக டிக்கெட்டு கேட்காதீர்கள். இப்படிச் செய்வீர்களானால், உங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டு மென்னும் உணர்ச்சிக்கு ஆளாவீர்களே யொழிய, பகுத்தறிவைப் பறி கொடுத்தவர்களாவீர்கள். அப்படிச் செய்வீர்களானால், மோட்டார்காருக்கு முன்னே தடுமாறி ஆபத்திற்குள்ளாகும் கிழவியின் கதையாகத் தான முடியும். எதிரி விமானங்கள் அருகாமையில் இருந்தால், ரோடுகளுக்கும் ரயில்வே ஸ்டேஷன்களுக்கும் கண்டிப்பாகப் போகவே கூடாது. மற்ற எல்லா இடங்களையும் விட, உங்கள் வீடே மிகுந்த பாதுகாப்புள்ள இடமாகும் உங்கள் வீட்டில் பாதுகாப்புப் பள்ளங்கள் வெட்டி யிருந்தால் மேலும் நல்லது. இது சம்பந்தமாக நம் எல்லோருக்கும் ஒரு கடமை யுண்டு. நம் நாட்டின் பாதுகாப்பைத் தடை செய்யக் கூடிய எந்தக் காரியத்தையும் நாம் செய்யக் கூடாது. நம் போக்கு வரவு சாதனங்கள் நாசம் அடைவதனால், நம் எதிரிகளுக்குத் தான் மகத்தான நன்மை. ரயில் வேக்கள் வழியாகவும் ரோடுகள் வழியாகவும் பொது ஜனங்கள் ஏராளமாகப் போய்க் கொண்டிருப்பார்களானால், நம்மைப் பாதுகாக்கும் படைகள் எதிர்த்துப் போகும் வேகம், பெரிதும தடைப் படும். சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய வெற்றியும் இதனால் கிடைக்காமற் போகக் கூடும்.

**சோல்ஜர்களும் மனிதர்கள் தான்.**

தென்னிந்தியாவில் வசிக்கும் நாம் நெடுங் காலமாக யுத்தம் என்பதையே அறியோம். ஆகையால் யுத்தத்தில் நாட்ட முடை யவர்களைப் பற்றியோ யுத்தத்திற்கான பொருள்களைப் பற்றியோ நமக்கு எதுவும் தெரியாது. சிப்பாய்களை புலி, சிங்கம் போன்றவர்கள என்று தான் நாம் மதித்திருந்தோம். ஆகவே, அவர்களுடைய சகவாசமே கூடாது என்று ஒதுங்கிக் கொண்டிருந்தோம். இப்போது சிப்பாய்களோடும் சோல்ஜர்களோடும் சகஜமாகி விட்டோம். அவர்கள் யார் என்பதை நாம் இப்போது உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டு விட்டோம். அவர்களும் நம்மைப் போல சாதாரண மனிதர்கள் தான. நம்மைப் பாதுகாக்கத் தான் அவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டிருக்கிறோம். அந்தச் சிப்பாய்களுக்கும் சோல்ஜர்களுக்கும், உங்களில் சிலர் பழகப் பட்டிருக்கலாம். அவர்களுக்கு, அவர்களுடைய சொந்த ஊரில், மனைவி மக்களுண்டு. அவர்களைக் காண வேண்டு மென்னும் ஆசை அவர்களுக்கு மிக அதிகம். இது இயற்கை தான். இது அவர்களுக்கு அந்நிய நாடு. அவர்களுக்கு தோழர்கள் யாரும் இங்கே கிடையாது அவர்களை உள்ளன்போடு யாரேனும் நேசித்தால், அதை அவர்கள் இங்கே வெகுவாகப் பாராட்டுகிறார்கள். அவர்கள் இனிது வாழத் தக்க பல காரியங்களை நாம் செய்யலாம். அவர்கள் எல்லோரையும் நம் வீடுகளுக்குத் தருவித்து விருந்து நடத்த முடியாம லிருக்கலாம் ஆனால், நாம் அவர்களைக் காணும்போது, அவர்களிடம் அன்பாக நடந்து கொள்ளக் கூடும். இவர்கள் அந்நியர்கள்; வேற்று நாட்டிற்கு வந்திருக்கிறார்கள் அதுவும் நம்மைப் பாதுகாப்பதற்காக. இவர்கள் பிரிட்டிஷ் சோல்ஜரா யிருந்தாலும் சரி, அல்லது இந்திய சிப்பாயா யிருந்தாலும் சரி, அவர்கள் அனைவரிடத்திலும் அன்பாக நாம் நடந்து கொள்ள வேண்டும். நம் அரசியல் போக்குகள் எப்படி யிருந்தாலும் கௌரவ முள்ள நம் விருந்தினராகவே நாம் அவர்களை நடத்த வேண்டும். அரசியல் கொள்கைகளிலோ, கட்சிக் கொள்கைகளிலோ அவர்களுக்குச் சம்பந்தம் கிடையாது. பொதுவான நோக்கத்திற்காகப் போராட அவர்கள் வந்திருக்கிறார்கள். அந்த நோக்கம் நம் எல்லோருக்கும் எப்படிப் பொதுவானதா யிருக்கிறதோ, அது போலவே தான் அவர்களுக்கும் பொதுவானது. இந்த நோக்கம் கைகூட வேண்டுமானால், பலவகை ஆபத்துக்களையும் கஷ்டங்களையும் சகிக்க வேண்டி யிருக்கிறது. அப்போது தான கொடுமையை வெல்லலாம். இதற்காகத் தான் தம் வீடு வாசல் மனைவி மக்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, இங்கே வந்திருக்கிறார்கள். ஆகையால், அவர்கள் எந்த வகுப்பினரா யிருந்தாலும், நண்பர்களாகவே அவர்களை நாம் வரவேற்போம்.

**இந்தியரின் அருந் தொண்டு.**

சில வாரங்களுக்கு முன்பு சென்னையில் ஒரு சம்பவம் நடந்தது. அது எனக்குப் பெரும் மகிழ்ச்சியளித்தது. நடு இரவு. நிலவு இல்லை. இருள் சூழ்ந்திருந்தது. மூன்று பேர்கள ஒரு ரோட்டில் வழி தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தனர். அந்த ரோடு வழியே ஒரு மோட்டார் கார் வந்தது. அதிலிருந்தவர் இவர்களுடைய திண்டாட்டத்தைக் கண்டார். தன் காரில் ஏற்றிக் கொண்டு தன் வீட்டிற்கு அழைத்துப் போனார். அவர்கள் படுத்துக் கொள்ள படுக்கை தந்தார். மூவரும் நன்கு உறங்கினார்கள். விடிந்தது. அவர்களுக்கு ஒவ்வொரு கோப்பை காபி கொடுத்தார். பிறகு அவர்கள் போய்ச் சேர வேண்டிய வழியை அவர்களுக்குக் காட்டினார். இம்மூவரும், சோல்ஜர்கள். பூனமல்லி ஹை ரோடில் திண்டாடிக் கொண்டிருந்தனர். காரில் வந்தவர் ஒரு இந்தியர். டாக்டர். இவர்

(10-ம் பக்கம் பார்க்க.)

# ஏ. ஆர். பி. வார்டனின் பொறுப்பு.

## பொது மக்களின் வழி காட்டி.

பிரிட்டன் உள் நாட்டுப் பாதுகாப்பு இன்ஸ்பெக்டர் ஜெனரலான விங் கமாண்டர் டி. ஜே. ஹாட்செல் கீழ்க் கண்டவாறு எழுதுகிருர் :—

பிரிட்டனில் ஏ.ஆர்.பி. 'வார்டன்கள்' உத்தியோகம் ஏற்பட்ட காலத்தில், அதற் கென்று ஒரு சட்டம் செய்தார்கள். அதில் 'வார்டன்'களைக் குறித்து என்ன எழுதி யிருக்கிறார்கள் தெரியுமா? "பொது மக்களின் வழி காட்டி" என்று குறிப்பி டிருக்கிறார்கள். இந்தப் பெயர் அவர்களுக்கு மிகவும் பொருந்தும். இதற்கு, அனுபவமே தக்கந்த சாட்சி. பொது ஜனங்களை எதிரிகள் திடீ ரென்று தாக்கிய போதெல்லாம், எதிரிகள் எண்ணம் பலிக்க வில்லை. இதற்குக் காரணம், இந்த வார்டன்கள் செய்த அருமையான வேலை தான் என்று சொன்னால் மிகை யாகாது.

வார்டன்கள் செய்யும் வேலையின் முக்கியத்துவத்தை நாம் சரியானபடி உணர்ந்து கொள்ள வேண்டுமானால், ஜெர்மனியிலும், இத்தாலியிலும், ஜப்பானிலும் எதைப் பூரண யுத்தம் என்று குறிப்பிடுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். பரிபூரண யுத்தம் என்னும் வார்த்தைகளிலேயே அதன் அருத்தம் தெளிவாகத் தெரிகிறது. அதாவது இதில் எல்லோரும் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்று தான அர்த்தம். இதிலிருந்து இந்த யுத்த த்திற்கே பொது ஜனங்கள் தான மிகவும் முக்கியமானவர்கள் என்றேற்படுகிறது. யுத்தம் என்னும் வண்டிக்கு பொது ஜனங்கள் தான் அச்சு. அந்த வண்டியை இழுத்துக் கொண்டு போகும் குதிரை தான், நம் படைகள். ஒரு சக்கரம் தளவாட உற்பத்தியைக் குறிக்கும். மற்றொரு சக்கரம் உணவுப் பொருள் உற்பத்தியைக் குறிக்கும். அச்சு முறிந்து விட்டால் வண்டியும் நொறுங்கி விழ வேண்டியது தானே. அது போலவே, பொது ஜனங்கள் சேதமானால், யுத்தத்தில் வெற்றி பெற முடியாது. பொது ஜனங்களைப் பல வகைகளிலும் எதிரிகள் தாக்கி நாசம் செய்யலாம். ஆனால், விமானங்களிலிருந்து விழும் குண்டுகளைப் பற்றி தான் நாம் இங்கே கவனிக்க வேண்டும்.

**தைரியம் வேண்டும்.**

இரவிலும், பகலிலும் வெடி குண்டுகளைப் பொது ஜனங்கள் மீது, விமானங்களிலிருந்து எறிந்து பீதியை உண்டாக்க வேண்டு மென்பது ஹிட்லருடைய யுத்த தந்திரங்களில் ஒன்றாகும். அவருடைய நோக்கம் ஈடேறுமானால், எல்லாவற்றையும் நாம் இழந்தவர்களாவோம். எனவே தான, ஹிட்லர் எண்ணம் நிறைவேறாதபடி தடுக்க வேண்டி, பொது ஜனங்களைக் கொண்டே ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித் திருக்கிறோம்.

வெடி குண்டு தம் மேல் விழுந்தால், யாருக்கும் மனதிற்குக் கஷ்டமாகத் தான் இருக்கும். குறிப்பாகப் பொது ஜனங்களுக்கு மிகவும் கஷ்டமாகத் தான் இருக்கும். ஏனென்றால், இவர்களுக்கு இராணுவப் பயிற்சி கிடையாது. கட்டுப் பாடான வாழ்க்கையை அவர்கள் நடத்திய தில்லை. போலீஸார் இருக்கிறார்கள் தான். அவர்கள் எத்தனை இடங்களில் தான் இருக்க முடியும்? ஆகையல் தான், இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும், நகரங்களிலுள்ள ஒவ்வொரு தெருவிலும், சில வார்டன்களை நியமிக்க வேண்டு மென்று முடிவு செய்தோம். ஏனென்றால், அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். என்னென்ன செய்ய வேண்டு மென்று அவர்களுக்குத் தெரியும். தம் நடத்தையாலும் செயல்களாலும் பொது ஜனங்களுக்குத் தம் மீது நம்பிக்கையை உண்டாக்கிக் கொள்ளுவார்கள். பொது ஜனப் பாதுகாப்பு ஸ்தாபனத்திற்கும், பொது ஜனங்களுக்கும் ஒரு வித சம்பந்தத்தை உண்டாக்கக் கூடியவர்கள் இவர்கள் தான். அது போலவே, அரசாங்கத்திற்கும் பொது ஜனங்களுக்கும் இவர்கள் தொடர்பு ஏற்படும்படிச் செய்கிறார்கள்.

**செய்தி யனுப்புதல்.**

பல முக்கியமான வேலைகள் ஒரு வார்டனுக்கு உண்டு. தன் பகுதிக்குட் பட்ட ஜனங்களுக்குத் தலைவரா யிருப்பதும் இவற்றுள் ஒன்று. இது போன்ற மற்றொரு முக்கியமான வேலையும் அவருக்கு உண்டு. எந்த விதமான வெடி குண்டு விழுந்தாலும் அதனால் ஏற்படும் சேதத்தைப் பற்றி உடனே வெகு தெளிவாக எழுதி விரைவாக அனுப்ப வேண்டும். பொது ஜனப் பாதுகாப்பு ஸ்தாபனத்தின் வேலை இந்த அறிக்கையைப் பொருத்துத் தான் இருக்கிறது. இது பற்றி இன்னும் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன.

ஒரு வெடி குண்டு விழும் சத்தத்தை ஒரு வார்டன் கேட்கிறார்; அல்லது விழுவதைப் பார்க்கிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். அது வெடிக்கிறதா வென்று காது கொடுத்துக் கவனிக்க வேண்டும். வெடி எங்கெல்லாம் சிதறித் தாக்குகிற தென்று நன்றாகக் கவனிக்க வேண்டும். விழுந்த வுடனேயே அது வெடிக்கா விட்டால், அது தாமதித்து வெடிக்கும் வெடி குண்டு என்று தெரிந்து கொள்ள வேண்டும். என்ன நேர்ந்தாலும், உடனே அவர் அந்த இடத்திற்குப் போக வேண்டும். என்னென்ன சம்பவித்தன வென்று கண்டு பிடிக்க வேண்டும். யாரேனும் இறந்து போனார்களா, அல்லது காயப்பட்டார்களா, அல்லது இடிந்து போன வீடுகளுக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறார்களா என்று கண்டு பிடிக்க வேண்டும். தண்ணீர்க் குழாய், மின்சாரக் குழாய் முதலிய எவற்றிற்காவது சேதம் ஏற்பட்டிருக்கிறதா வென்றும் கண்டு பிடிக்க வேண்டும். உடனே தன் அறிக்கையை அவர் எழுத வேண்டும். இதற்குத் தான் அவசர அறிக்கை என்று பெயர். இதில் மிகச் சுருக்கமாக விவரங்களை எழுதி, 'ரிபோர்ட் சென்டர்' அல்லது 'கண்ட்ரோல் சென்ட'ருக்கு அனுப்ப வேண்டும்.

அந்தக் குறிப்பிட்ட இடத்திற்கு எப்படிப் பட்ட உதவிகள் தேவை என்று அந்த 'சென்டரி'லுள்ள உத்தியோகஸ்தர் தெரிந்து கொள்ள விரும்புகிறார். தாமத மில்லாமல் அவை கிடைக்கத் தக்கபடி, வார்டன் தன் அறிக்கையில் தகவல்களை எழுதி யனுப்ப வேண்டும். நெருப்புப் பிடித் திருந்தால் உடனே அடுத்திருக்கும் தீயணைக்கும் படைக்கு, நேராக அறிவிக்கிறார். இதனால் தாமதத்திற்கு இடமிருக்காது.

வெடி குண்டுகள் விழுந்து சேதம் ஏற்பட்ட விடத்தில் பல வார்டன்கள் வந்து சேரக் கூடும். முதலில் அவசர அறிக்கை அனுப்பி முடிந்த பிறகு, ஒரு வார்டன் அந்த இடத்தைச் சுற்றிப் பார்வை யிடுகிறார். எல்லாத் தகவல்களையும் திரட்டுகிறார். இவற்றைக் கொண்டு முழு விவரங்களையும் கொண்ட மற்றொரு அறிக்கையைத் தயார் செய்கிறார். இதற் கிடையில், மற்ற வார்டன்கள், காயப் பட்டவர்களுக்கு உதவுவதிலும், சிக்கிக் கொண்டவர்களை மீட்பதிலும், நெருப்பை யணைப்பதிலும் உதவிக் கொண்டிருப்பார்கள். இதற்குள்ளாக, மீட்சிப் படை, தீயணைக்கும் படை, முதல் உதவிக் கோஷ்டியினர் ஆகியோர் வந்து விடுவார்கள்.

ஆகவே, ஒரு வார்டனுடைய முதல் வேலை அறிக்கை எழுதி யனுப்புவது; இரண்டாவது வேலை உடனே உதவி புரிவது. ஏராளமாக விமானத் தாக்குதல் ஏற்பட்டு, இந்த உதவிப் படைகள், ஒரு சம்பவம் நடந்த இடத்திற்கு வர முடியாது போனால், பொது ஜனங்களின் உயிர்களையும் சொத்துக்களையும் காப்பாற்ற வேண்டியது வார்டனுடைய பொறுப்பு. இதை அவர் மறந்து விடக் கூடாது. இதை முன்னிட்டுத் தான் வார்டன்களுக்கும், முதல் உதவி வேலையிலும், மீட்சி வேலையிலும் பயிற்சி யளிக்கிறார்கள். முதலுதவிக்கான கருவிகளைக் கூட அவர்களுக்குக் கொடுத் திருக்கிறார்கள். அன்றியும் 'இன்சின்டியரி' வெடி குண்டுகளை எப்படி அணைக்க வேண்டும் என்றும் சொல்லிக் கொடுக்கிறார்கள். அந்தச் சமயத்தில் உடனே என்னென்ன செய்யப் பட வேண்டுமோ, அவற்றை எல்லாம் திறமை யோடு செய்யத் தக்கபடி, வார்டன்களுக்குப் பயிற்சி யளிக்கப் படுகிறது.



**பகுதியைப் பற்றிய அறிவு.**

இந்தப் பயிற்சி மிகவும் முக்கியந் தான். ஒரு வார்டன் சிறந்த முறையில் தொண்டு செய்ய வேண்டுமானால், இது போலவே முக்கியமான மற்றொரு விஷயம் இருக்கிறது. அதாவது தன் பகுதியைப் பற்றிய எல்லா விவரங்களையும் அவர் நன்றாக அறிந்திருக்க வேண்டும். ஒவ்வொருவரும் வசிக்கும் இடம், அவர்கள் மறைந்து கொள்ளுவதற் கேற்ற இடம், நெருப்பணைக்குந் தண்ணீர்க் குழாய்கள் உள்ள இடம், டெலிபோன்கள், வாயு (காஸ்) குழாய்கள், தண்ணீர்க் குழாய்கள், அருகி லுள்ள முதலுதவி நிலையம், மீட்சி விடுதிகள் முதலியவை எங்கெங்கே இருக்கின்றன வென்று தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு வெடி குண்டு விழுந்த இடத்தில், குழப்பமும் புழுதியும் மிகுதியா யிருக்கும். அப்போது இருட்டாகவும் இருக்கலாம். அப்போது நிலைமையைத் திறமை யோடு சமாளிக்க வேண்டுமானால், முற் கூறிய தகவல்கள் தெரிந்திருந்தால் மிகவும் உதவியா யிருக்கும். இந்தத் தகவல்களைத் திரட்டித் தெரிந்து கொள்ளுவதற்குக் கொஞ்சம் காலம் செல்லும். உண்மையிலேயே திறமை யுள்ள ஒரு வார்டன், இவற்றை யெல்லாம் நன்கு தெரிந்து கொண்டிருப்பார். வார்டன்கள் நிலையம் ஒவ்வொன்றிலும், அந்தந்தப் பகுதியின் படம் ஒன்று பெரிதாக மாட்டப் பட்டிருக்கிறது. இது மிகவும் உபயோகமானது. இதிலிருந்து பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். இந்தப் பாடம் இரவிலும் பகலிலும் பயன் படத் தக்கதா யிருக்க வேண்டும்.

பொது ஜனங்கள், வார்டன்களிடம் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டிய அவசியம் என்ன வென்று இப்போது நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். வார்டன் தன வேலைகளைச் செய்யும் போது, அவருக்கு உதவியாகப் பொது ஜனங்கள் இருந்து அவருக்குத் தேவையான நியாயமான தகவல்கள் எல்லாவற்றையும் அவருக்குச் சொல்ல வேண்டும். வார்டனிடம் அவர்களுக்கு நம்பிக்கை யிருந்தால் தான், அந்தத் தகவல்களை அவர்கள் கூறுவார்கள். பொது ஜனங்களில் யாராவது வெளியூருக்குப் போனால், வார்டனிடம் அறிவித்து விட்டுப் போக வேண்டும். அவர்கள் வீட்டிற்கு யாரேனும் விருந்தினர் வந்திருந்தால், வார்டனுக்கு அது தெரிந் திருக்க வேண்டும். தன் பகுதியைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் மட்டும் ஒரு வார்டன் தெரிந்து கொண்டிருந்தால் போதாது. நாள் தோறும் தன பகுதியில் நடைபெறும் எல்லா விஷயங்களையும் அவர் உணர்ந்து கொண் டிருக்க வேண்டும். ஒரு வார்டனுக்குத் தெரிந் துள்ள திட்டமான தகவல்களைப் பொருத்துத் தான், பலர் உயிர்கள் இருக்கின்றன.

விமானத் தாக்குதல் நேரிட்டால், பொது ஜனங்கள் அவரவர்கள் வீட்டில் எந்த இடத்தில் மறைந்து கொள்ள வேண்டு மென்று ஆலோசனை கூறவும் வேண்டும்.

நெருப்பு எங்கேனும் பிடிக்கிறதா வென்று கவனிக்கும் பொருட்டு, ஒரு சிலரை நியமித் திருக்கிறார்கள். இவர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் ஒரு வகைப் பயிற்சி யளிக்கப் படுகிறது. இதில் வார்டன்களும் சேர்ந்து கற்றுக் கொடுக்கிறார்கள். இந்தப் பயிற்சியைக் கொண்டு தான், 'இன்சின்டியரி' வெடிகுண்டுகள் விழுந்தாலும், சிறு நெருப்பு முண்டானாலும், அவற்றால் சேதம் ஏற்படாதபடி தடுப்பது. தம் பல வகை வேலைகளிலும் நல்ல பயிற்சி பெற்றவர்களாக வார்டன்கள் இருக்க வேண்டும். நெருப்பையாவது, பெரிய வெடிகுண்டையாவது, விஷ வாயுவையாவது, சமாளிக்க வேண்டிய அவசியம் ஒரு வார்டனுக்கு ஏற்படலாம். ஆகவே, எல்லா சந்தர்ப்பங்களிலும், என்னென்ன செய்ய வேண்டு மென்று ஒவ்வொரு வார்டனுக்கும் தெரிந் திருக்க வேண்டியது அவசியம் எந்த வித நெருக்கடி ஏற்பட்டாலும் ஒரு வார்டன் மனம் பதறக் கூடாது. மன அமைதியோ டிருக்க வேண்டும்.

தங்களையும் எப்படிக் காப்பாற்றிக் கொள்ள வேண்டு மென்று அவர்கள் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். விமானத் தாக்குதல்கள் நடந்து கொண்டிருக்கும் போது கூட, தம் கடமையை நிறைவேற்றும் பொருட்டு, அவர்கள் வெளியே போகலாம். அப்போது அவர்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படவுங் கூடும். ஆனால் வார்டன்களில் அனாவசியமாக யாரும் காயம் படவோ சாகவோ ஒட்டாதபடி தவிர்க்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

**பெண் வார்டன்கள்.**

இது வரை வார்டன்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தேன். இப்போது நான் ஆண்களைக் குறித்துத் தான் பேசிக் கொண்டிருந்தேன் என்று நீங்கள் இலகுவில் அனுமானித் திருக்கலாம். பெண்களும் கூட ஆண்களைப் போலவே வார்டன்களாக நல்ல வேலை செய்கிறார்கள். இது பற்றி வற்புறுத்திக் கூற விரும்புகிறேன. சில சமயங்களில் ஆண்களை விடப் பெண்கள் மிஞ்சி விடுகிறார்கள். பெண்கள் மட்டுந் தான் திறமை யோடு செய்து முடிக்கக் கூடிய சில வேலைகளும் இருக்கின்றன. இங்கே வார்டன் உத்தியோகத்தில் அநேக பெண்கள் இருக்கிறார்கள். பல பொறுப்புள்ள பதவிகளையும் வகிக்கிறார்கள். நூற்றுக் கணக்கான வார்டன்களுக்கு மேலதிகாரியாக ஒரு பெண் இருக்கிறார். அவருடைய கட்டளை எதுவானாலும், அந்த வார்டன்கள் அத்தனைப் பேரும் தவறாமல் செய்கிறார்கள். பொது ஜனங்களையும் அவர் காப்பாற்றுகிறார். அவர், அந்தப் பக்கத்தில் உள்ள வரையிலும் தமக்கு என்ன நேர்ந்தாலும், தாம் அது பற்றி கவலை கொள்ள வேண்டிய தில்லை யென்று, அங்குள்ள பொது ஜனங்கள் சொல்ல, நான கேட்டிருக்கிறேன். ஒரு வார்டனுக்கு இதை விடச் சிறந்த பாராட்டுதலும் வேண்டுமா?

**வெற்றி பெற உழைப்பு.**

தங்கள் பகுதியைச் சேர்ந்த எல்லா நுணுக்கங்களையும் வார்டன்கள் தெரிந்து கொண்டிருக்க முடியாது, ஒரு சம்பவத்தைக் குறித்து விரைவாகவும் தெளிவாகவும் அறிக்கைகள் எழுதி யனுப்புவதிலும் நல்ல பழக்கம் இருக்க முடியாது. அறிக்கை எழுதி யனுப்புவது சுலபமாகத் தோன்றலாம். சாதாரண காலத்தில் அறிக்கைகள் எழுதி யனுப்புவதற்கும், வெடிகுண்டுகள் விழுந்து வெடித்து நெருப்புப் பாய்ந்து எரிந்து கொண்டிருக்கும் போது அறிக்கை எழுதி யனுப்புவதற்கும், மிகுந்த வேற்றுமை யுண்டு. எவ்வளவு கடுமையான சமயமா யிருந்த போதிலும், சரியானபடி அறிக்கை எழுதி யனுப்பும் பழக்கம் இயற்கையாகவே ஏற்பட வேண்டும். அன்றியும் தங்கள் தங்கள் பொறுப்பின் பேரிலேயே எந்தக் காரியத்தையும் செய்ய வார்டன்கள் ஆயத்தமா யிருக்க வேண்டும். சாதாரணமாக, ஒரு சம்பவம் நேர்ந்த இடத்திற்கு உதவிப் படைகளை யனுப்பும் படி நேரே அவர்களுக்கு அறிவிக்க வேண்டு மென்று நாம் சொல்ல வில்லை. ஆனால் போக்கு வரவு முறிந்து போனால், நேர்முகமாகத் தான் அறிவிக்க வேண்டி யிருக்கும். அந்தச் சமயத்தில் பொறுப் பேற்றுக் கொண்டு வேலை செய்ய அவர்கள் அஞ்சக் கூடாது,

வார்டன்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்று ஓரளவிற்குச் சொன்னேன். யுத்தத்திற்குப் பிறகு இந்த வீரப் படையினருக்கு நல் வாழ்வு உண்டாகு மென்று எதிர்பார்க்கிறேன். இதற்கிடையில், இவர்கள் பொதுமக்களுக்கு வழிகாட்டிகளாக நடந்து கொண்டிருப்பார்களானால், நாம் வெற்றி பெறுவதற்கு, நிச்சயமாக அருந் தொண்டு ஆற்றியவர்கள் ஆவார்கள்.

# யுத்த சேத ஜாபிதா.

நெ 139.

**இறந்து போனவர்கள்.**

| படை, நம்பர். | வேலை. | பெயர். |
|---|---|---|
| ஆர் ஐ.ஏ.எஸ்.ஸி. | | |
| என்.ஓய்.ஏ. எம்.டி. | டபுள்யு.ஸி. | நாராயண நாயுடு. |
| 985341 | சிப்பாய். | வாசுதேவன் பிள்ளை. |

நெ. 140.

**காயப் பட்டவர்கள்.**

| | | |
|---|---|---|
| ஐ.ஏ.ஓ ஸி. | | |
| ஓ. 71433 | சிப்பாய் டிரைவர். | பட்டம்செட்டி வெங்கடரத்தினம். |
| ஓ. 71468 | ஷை | முனுசாமி. |

**காணமற் போய் 'யுத்தக்' கைதிகள் என்று எண்ணப் படுகிறவர்கள்.**

| | | |
|---|---|---|
| ஐ.ஏ.ஓ.ஸி. | | |
| ஓ. 72391 | சிப்பாய் டிரைவர். | கே. அப்பலசாமி. |
| ஓ. 71446 | சிப்பாய் டிரைவர், பி. ஏ. ஹவில்தார். | அச்சண்ணு. |
| ஓ. 105232 | பி.எஸ்.பி.ஏ. லான்ஸ் நாயிக். | பாபா ராஜு. |
| ஓ. 32521 | பிட்டர் III சிப்பாய். | நாயுடு, என். ஆர். |

நெ. 141.

**காணமற் போய் யுத்தக் கைதிகளானவர்கள் என்று கருதப் படுகிறவர்கள்.**

| | | |
|---|---|---|
| ஐ.ஏ.ஓ.ஸி. | | |
| ஓ. 73597 | சிப்பாய் டிரைவர். | பெருமாள். |
| ஓ. 73252 | ஷை | பி. பிரகாசம். |
| ஓ. 73265 | ஷை | சாந்தப்பா. |
| ஓ. 73248 | பி.ஏ. லான்ஸ் நாயிக். | சூசைநாதன். |
| எம்.ஆர். | | |
| 855637 | சிப்பாய் டிரைவர், பி.ஏ., லான்ஸ் நாயக். | சுப்பையா பிள்ளை. |
| ஓ. 32322 | பிட்டர் III சிப்பாய். | சாமி ஜோன்ஸ் வில்லியம். |
| ஓ. 73262 | சிப்பாய் டிரைவர். | வேதநாயகம். |
| ஓ. 73249 | ஷை | ஏசுரத்தினம். |

**அன்றியும் கீழ்க்கண்ட வாறு சேதங்கள் ஏற்பட்டன.**

| | |
|---|---|
| கொல்லப் பட்டவர்கள் .. .. | 12 |
| காயப் பட்டவர்கள் .. .. .. | 109 |
| காணமற் போய் கொல்லப் பட்டதாகக் கருதப படுகிறவர் .. .. .. | 1 |
| காணமற் போய் யுத்தக் கைதிகளாக கருதப் படுகிறவர்கள் .. .. | 189 |
| யுத்தக் கைதிகளானதாகக் கருதப் படுபவர்கள் .. .. .. | 2 |

நெ. 142.

**காணமற் போய் யுத்தக் கைதியானதாகக் கருதப் படுகிறவர்.**

**இந்திய பீரங்கிப் படை.**

| | | |
|---|---|---|
| ஏப். 536 | டபுள்யு. ஓய்ன் III. | சின்னப்பன். |

**அன்றியும் கீழ்க்கண்ட சேதங்களும் ஏற்பட்டன.**

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் .. .. | 13 |
| காயப் பட்டவர்கள் .. .. .. | 107 |
| யுத்தக் கைதிகளானவர்கள் .. .. | 14 |

நெ. 143.

**முன்பு யுத்தக் கைதிக ளானவர்கள் என்று அறிவிக்கப்பட்டு, இப்போது கொல்லப் பட்டவர்க ளெனத் தெரிகிறவர்கள்.**

**சென்னை சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்.**

| | | |
|---|---|---|
| 16915 | நாயிக். | முத்து. |
| 17023 | லான்ஸ் நாயிக். | சீதாராம் ரெட்டி. |

**காணமற் போய் கொல்லப்பட்டதாகக் கருதப் படுபவர்கள்.**

**இந்தியன் சிக்னல் படை.**

| | | |
|---|---|---|
| ஓ. 6349 | மெஸ் வெய்ட்டர். | தர்மலிங்கம். |
| நெம்பர். | | பெயர். |
| ஏ. 4257 | சிக்னல்மான். | ஏ. வேதக் கண்ணு. |

**காயத்தால் இறந்தவர்.**

| | | |
|---|---|---|
| ஐ.ஏ.ஓ.ஸி. | | |
| ஓ. 72493 | சிப்பாய் டிரைவர். | வெள்ளைச்சாமி. |

**மேலும் கீழ்க்கண்ட சேதங்களும் ஏற்பட்டன.**

| | |
|---|---|
| கொல்லப் பட்டவர்கள் .. .. | 76 |
| காயப் பட்டவர்கள் .. .. .. | 201 |
| காணமற் போய் கொல்லப் பட்டதாகக் கருதப் படுகிறவர்கள் .. .. | 8 |

நெ. 144.

**கொல்லப் பட்டவர்.**

**சென்னை சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்.**

| | | |
|---|---|---|
| 52756 | சாப்பர் | நாராயணசாமி. |

**காயப் பட்டவர்.**

**இந்தியன் சிக்னல் படை.**

| | | |
|---|---|---|
| ஏ. 8119 | சிக்னல்மான். | என். மாரிமுத்து. |

**மேலும் கீழ்க் கண்ட சேதங்களும் ஏற்பட்டன.**

| | |
|---|---|
| கொல்லப் பட்டவர்கள் .. .. | 33 |
| காயப் பட்டவர்கள் .. .. .. | 15 |
| காணமற் போய் கொல்லப் பட்டதாகக் கருதப் படுகிறவர்கள் .. .. | 2 |
| காணமற் போய் யுத்தக் கைதிகளானவர்களாகக் கருதப் படுகிறவர்கள் .. | 27 |
| மீண்டும் படையில் சேர்ந்தவர்கள் .. | 2 |

நெ. 145.

**வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்.**

**காணமற் போனவர்.**

| | | |
|---|---|---|
| ஆர்.ஐ.ஏ.எஸ்.ஸி. | | |
| சுபேதார் | | ருஸி. கே. சதா. |

**மற்றவர்கள்.**

**காணமற் போனதாக அறிவிக்கப்பட்டு, யுத்தக் கைதியானதாகக் கருதப்பட்டு இப்போது காயப்பட்டதாக அறிவிக்கப் படுகிறவர்.**

**இந்தியன் சிக்னல் படை.**

| | | |
|---|---|---|
| 15059 | சிக்னல்மான். | ஜெயராம் நாயுடு. |

**காணமற் போய் யுத்தக் கைதிகளானதாகக் கருதப் படுகிறவர்கள்.**

| | | |
|---|---|---|
| ஆர்.ஐ.ஏ.எஸ்.ஸி | | |
| ஓ. 78833 | சிப்பாய் .. | கே. துரைசாமி. |
| ஓ. 78832 | ஷை .. | என். வெங்கடேஸ்வரலு. |
| ஐ.ஜி.எஸ் ஸி. ஜ.எஸ்.எப். | | |
| 8075 | மெஸ் வெய்ட்டர் III. | ஜும்மான். |
| 9803 | சமையல்காரர் III. | மோகன். |
| 3864 | பெருக்குவோன். | இராமச்சந்திரன். |

**இறந்து போனவர்கள்.**

**சென்னை சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்.**

| | | |
|---|---|---|
| 63504 | சாப்பர் .. | ஜோசப். |
| 17423 | பி. ஏ. நாயிக் .. | பிடி ரெட்டி. |
| 67998 | சாப்பர் .. | சுப்பராயன். |

**இந்தியன் இஞ்சினீர்கள்.**

| | | |
|---|---|---|
| 43971 | பயனியர் .. | கோவித்த ரெட்டி. |
| 43860 | ஷை .. | செல்லப்பா. |
| ஆர்.ஐ ஏ.எஸ்.ஸி. | | |
| எம்.டி. | | |
| 986147 | சிப்பாய் .. | கோவிந்த ராஜா. |
| எஸ்.ஆர். | | |
| 173421 | ஷை .. | ஹரி ஹர். |
| எம் டி. | | |
| 957574 | ஷை .. | பழனியப்பன். |
| 50775 | டிரைவர் .. | ரல்லா. |
| எம்.டி. | | |
| 984995 | சிப்பாய் .. | பி. வி. சங்கரன் நாயர். |
| 984974 | லான்ஸ் நாயிக். | வெங்கண்ணு. |

**இந்தியன் ஆஸ்பத்திரிப் படை.**

| | | |
|---|---|---|
| 41059 | என்/சிப்பாய் .. | ஜெகந் நாத். |
| ஜி.ஜி.எஸ் ஸி. எஸ் எப். | | |
| ஜி. 27056 | சமையற்காரர் .. | எஸ். அந்தோணி. |



| பெயர். | | நெம்பர். |
|---|---|---|

**உதவிப் பயனியர் படை.**

| | | |
|---|---|---|
| 117022 | தொழிலாளி .. | கந்தசாமி. |
| 43611 | பயானியர் .. | கண்ணப்பன். |
| 261063 | தொழிலாளி .. | முத்து. |
| 255525 | ஷை .. | ராஜாராம். |
| 255450 | ஷை .. | விடோப நாராயண். |

**ஐ.எஸ்.எப். ஆள்வார் காலாட் படை.**

| | | |
|---|---|---|
| 1707 | சிப்பாய் .. | கன்னையா. |

**அன்றியும் கீழ்க் கண்ட சேதங்களும் சம்பவித்தன.**

| | |
|---|---|
| கொல்லப் பட்டவர் .. .. .. | 1 |
| காயப் பட்டவர்கள் .. .. .. | 52 |
| யுத்தக் கைதியானவர்கள் .. .. | 84 |
| இறந்து போனவர்கள் .. .. | 83 |
| மீண்டும் படையில் வந்து சேர்ந்தவர்கள் .. .. .. .. | 4 |

நெ. 147.

**காயப் பட்டவர்கள்.**

**இந்தியன் சிக்னல் படை.**

| | | |
|---|---|---|
| ஏ. 8832 | சிக்னல்மான் .. | முருகேசன். |
| ஏ. 8311 | ஷை .. | வி. நாராயணன். |

**இறந்து போனவர்கள்.**

**6-வது கொச்சி லேபர் படை (ஐ.எஸ்.எப்.)**

| | | |
|---|---|---|
| 43 | தொழிலாளி .. | அந்தோணி. |
| 1 | ஷை .. | ஐயப்பன். |
| 6 | ஷை .. | ஜான் |
| 7/8 | ஷை .. | கொச்சு ராமன். |
| | ஷை .. | பாப்பு. |
| 35 | ஷை .. | பரமு. |
| 10/14 | ஷை .. | வாசு. |

**அன்றியும் கீழ்க் கண்ட சேதங்களும் சம்பவித்தன.**

| | |
|---|---|
| கொல்லப் பட்டவர்கள் .. .. .. | 2 |
| காயப் பட்டவர்கள் .. .. .. | 16 |
| காணமற்போய் யுத்தக் கைதிகளானதாக் கருதப் படுகிறவர்கள் .. | 3 |
| யுத்தக் கைதியானவர்கள் .. .. | 69 |
| இறந்து போனவர்கள் .. .. | 27 |

நெ. 148.

**காணமற் போனவர்கள்.**

**இந்திய பீரங்கிப் படை.**

| | | |
|---|---|---|
| 15455 | சிக்னல்மான். | கங்காதரன். |
| பி. 638 | ஷை | சி. குமரன் நாயர். |
| 15425 | ஷை | இராதா கிருஷ்ணன். |
| 15397 | ஷை | சஞ்சீவி ராவ் |
| 15580 | ஷை | சுப்பா ராவ். |

**இறந்து போனவர்.**

**5-ம் நெம்பர் திருவாங்கூர் தொழிலாளர் படை.**

| | | |
|---|---|---|
| 3909 | | சர்தார் எஸ். இராகவன். |

**மேலும், கீழ்கண்ட சேதங்களும் ஏற்பட்டன.**

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் .. .. .. | 15 |
| காயம்பட்டவர்கள் .. .. .. | 24 |
| காணமற்போய், கொல்லப்பட்டதாகக் கருதப்படுகிறவர்கள் .. .. .. | 56 |
| காணமற்போய், யுத்தக் கைதிகளானதாகக் கருதப்படுகிறவர்கள் .. .. | 2 |
| மீண்டும் படையில வந்து சேர்ந்தவர்கள் | 20 |
| இறந்து போனவர்கள் .. .. .. | 12 |

நெ. 149.

**கொல்லப்பட்டவர்கள்.**

**இந்தியன் சிக்னல் படை.**

| | | |
|---|---|---|
| 25380 | சிக்னல்மான். | மாதவ மேனோன். |
| ஏ. 61 | ஹவல்தார். | சங்கர நாயர். |

**காயப்பட்டவர்.**

| | | |
|---|---|---|
| 15682 | சிக்னல்மான். | எஸ். சோமநாதன். |

**காணமற் போனவர்கள்.**

**சென்னை சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்.**

| | | |
|---|---|---|
| 18975 | லான்ஸ் நாயிக். | டேவிட் டிக்ரூஸ். |
| 18418 | ஷை | எலங்காமணி நாயுடு. |
| 63163 | சாப்பர். | இராமசாமி. |

**இந்தியன் சிக்னல் படை.**

| | | |
|---|---|---|
| ஏ. 3973 | சிக்னல்மான். | கிருஷ்ண குட்டி. |
| ஏ. 5831 | ஷை | முத்து மோயன். |
| ஏ. 3828 | ஷை | பெரியசாமி. |
| 15356 | ஷை | இராசமாணிக்கம். |
| 15580 | ஷை | சுப்ப ராவ். |

| நெம்பர். | தொழில். | பெயர். |
|---|---|---|
| ஓ. 4912 | டபுள்யு./ஸி. | சுப்பிரமணியன், |
| 15397 | சிக்னல்மான். | சஞ்சீவி ராவ். |
| ஏ. 3921 | ஷை | தங்கவேலு. |

**காணமற்போய் மீண்டும் படையில் சேர்ந்தவர்கள்.**

**சென்னை சாப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்.**

| | | |
|---|---|---|
| 62801 | சாப்பர். | இராமசாமி. |

**இந்தியன் சிக்னல் படை.**

| | | |
|---|---|---|
| ஓ. 8876 | சிக்னல்மான். | மோசஸ் பாஸ்கரன். |

**மற்றும் கீழ்க்கண்ட சேதங்கள் ஏற்பட்டன.**

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் .. .. .. | 59 |
| காயப்பட்டவர்கள் .. .. .. .. | 86 |
| காணமற் போனவர்கள் .. .. .. | 118 |
| மீண்டும் படையில் சேர்ந்தவர்கள் .. .. | 26 |

நெ. 150.

**காணமற்போய் யுத்தக் கைதிகளானதாகக் கருதப்படுகிறவர்கள்.**

| | | |
|---|---|---|
| ஐ ஏ ஓ.ஸி. | | |
| ஓ. 74597 | பி.ஏ. லான்ஸ் நாய்க் டிரைவர். | அங்கப்ப நாயுடு. |
| ஓ. 74581 | சிப்பாய் டிரைவர். | சி. ஞானப்பிரகாசம். |
| ஓ. 74520 | ஷை | வி. கிருஷ்ணசாமி. |
| எம.டி. | | |
| 949278 | லான்ஸ் நாய்க் டிரைவர். | நல்லப்பா. |
| எம்.டி. | | |
| 949569 | சிப்பாய் டிரைவர். | மாலப்பா. |
| ஓ. 74604 | ஷை | நாராயண நாயர். |
| ஓ. 103231 | ஷை | ராமதாஸ். |
| ஓ. 72741 | ஷை | சுந்தாராமன். |

**இறந்து போனவர்.**

**இந்தியன் சிக்னல் படை.**

| | | |
|---|---|---|
| ஓ. 5667 | சிக்னல்மான் | பி. கே. குண்டுண்ணி நாயர். |

**மற்றும் கீழ்க்கண்ட சேதங்களும் ஏற்பட்டன.**

| | |
|---|---|
| காணமற்போய் யுத்தக் கைதியானவர்களாகக் கருதப்படுகிறவர்கள .. | 215 |
| இறந்து போனவர்கள் .. .. .. | 2 |
| காணமற்போனவர் .. .. .. | 1 |
| மீண்டும் படையில் சேர்ந்தவர் .. | 1 |
| காணமற்போய் தண்ணீரில மூழ்கிவிட்டதாகக் கருதப்படுகிறவர்கள்... .. | 10 |

நெ. 152.

**உத்தியோகஸ்தர்.**

**காணமற்போய் யுத்தக் கைதிகளானதாக அறிவிக்கப்பட்டு இப்போது உறுதி செய்யப்பட்டவர்.**

**இந்தியபீரங்கிப்படை.**

| | | |
|---|---|---|
| டி. மேஜர். | | பி.பி. குமாரமங்கலம். |

**வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்கள்.**

**காணமற்போய் யுத்தக் கைதிகளானதாக அறிவிக்கப்பட்டு இப்போது உறுதி செய்யப்பட்டவர்கள்.**

| | | |
|---|---|---|
| ஆர் ஐ ஏ.எஸ்.ஸி. | | |
| 13568/ஐ. ஓ. | பி/ஏ/சுபேதார். | சந்திரகாசன். |
| எஸ்/ஆர்/120430. | ஜமேதார். | என். ஆர். மகாதேவன் |

**மற்றவர்கள்.**

**காயப்பட்டவர்கள்.**

| | | |
|---|---|---|
| ஐ.ஏ.ஓ.ஸி. | | |
| எம்.டி./929090. | சிப்பாய் டிரைவர். | சென்னிமுத்து. |
| ஓ./17036. | டிரைவர் பி/ஏ. லான்ஸ் நாய்க். | வேதநாயகம். |

**காணமற்போய் யுத்தக் கைதிகளானதாகக் கருதப் படுவர்.**

| | | |
|---|---|---|
| ஆர்.ஐ.ஏ.எஸ்.ஸி. | | |
| எம்.டி./895348. | சிப்பாய். | எம். குப்பன். |

**அன்றியும் கீழ்க்கண்ட சேதங்களும் எற்பட்டன.**

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் .. .. .. | 2 |
| காயப்பட்டவர்கள் .. .. .. .. | 56 |
| காணமற்போய் கொல்லபபட்டதாகக் கருதப் படுபவர்கள் .. .. .. | 3 |
| காணமற்போய் யுத்தக் கைதிகளானதாகக் கருதப்படுபவர்கள் .. .. .. | 60 |
| காயங்களால் இறந்துபோனவர்கள்.. .. | 5 |
| காணமற்போனவர்கள் .. .. .. | 1 |
| மீண்டும் படையில் சேர்ந்தவர்கள்.. .. | 6 |
| இறந்து போனவர்கள் .. .. .. | 12 |

(2-ம் பக்கம்—தொடர்ச்சி)

சிதறிக் கிடந்த படைகளைத் திரட்டித் தான் எட்டாம் படையை அமைத்தார்கள். இங்குள்ள படைகளில், மிகத் திறமையுடன் போராடிய படைகளில் எட்டாம் படையும் ஒன்று. யுத்த அரங்கத்திலே மிகவும் நெருக்கடியான பகுதியில் இது காவல் புரிந்து கொண்டிருக்கிறது. இந்தப் பகுதி ரஷ்யப் படைகளின் தென் கோடியாகவும், பிரிட்டிஷ் கிழக்காப்பிரிக்காவிற்கும், தென்னாப்பிரிக்காவிற்கும் முதல் வாசலாகவும் விளங்குகிறது. அன்றியும், ஐரோப்பிய அச்சு நாடுகளை மட்டுமன்றி, ஆசியாவில் ஜப்பானும் முன்னேற ஒட்டாதபடி இது தடுத்துக் கொண்டிருக்கிறது.

எட்டாம் படைத் தலைவரான ஜெனரல் மான்ட்காமரி மிகவும் கெட்டிக்காரர். தைரியத்தோடும் மன உறுதியோடும் அவர் போராடுகிறார். தெற்குப் போர் அரங்கத்தின் வெற்றி தோல்வி அவரும் அவருடைய படையினரும் போராடுவதைப் பொருத்து இருக்கிறது.

(5-ம் பக்கம்—தொடர்ச்சி)

செய்த அருந் தொண்டின் பயனாக, இந்தியர்களைப் பற்றி மிக உயர்வான எண்ணந் தான் அவர்கள் மனதில் பதிந்திருக்கும். இந்தியர்களின் உயர்ந்த குணங்களைக் குறித்து என்ன தான் எடுத்து அந்த சோல்ஜர்களுக்குச் சொன்ன போதிலும், இந்த அளவிற்கு அவர்கள் மனதில் பதிந்திருக்குமா ?

நாட்டின் மீது வெறுப்புண்டாகத் தக்க நாச காலக் கொள்கைகளைப் பிரசாரம் செய்கிறவர்கள், நாடு விடுதலையடைய வேண்டியே பாடுபடுவதாகக் கூறுகிறார்கள். இவர்கள் செய்யும் வேலையை விட, இந்த இந்திய டாக்டர் செய்த அருந் தொண்டு, பலவகைகளிலும் உயர்ந்தது. தன் நாட்டை நேசிப்பது தான் உண்மையான நாட்டுப்பற்றே யொழிய, பிற நாட்டவர்களை வெறுப்பதல்ல. இந்தியா விடம் அன்பு கொண்டவர்கள் எல்லோரும் இந்தியாவிற்குள்ள நல்ல பெயரைப் பற்றி பெருமை கொள்ள வேண்டும். இந்தியாவின் பாதுகாப்பிற்குக் குந்தகம் செய்யக் கூடிய எதையும் செய்யக் கூடாது. மீண்டும் ஒரு நெருக்கடி ஏற்பட்டு எதிரிகள் நம்மைத் தாக்க வருவார்களானால், நம் நாட்டைப் பாதுகாக்க வேண்டியது தான் நம் முதல் வேலையாயிருக்க வேண்டுமே யொழிய, நம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதல்ல. நாம் பீதி கொள்ளக் கூடாது. பீதி கொண்டால், மிருகங்களுக்குச் சமமான இழிந்த நிலைமையைத் தான் நாம் அடைகிறோம். இதன் பயனாக பெரும் ஆபத்துத் தான் சம்பவிக்கிறது. வெடிகுண்டுகள் விழுந்தால், நாம் அமைதியாக இருக்க வேண்டும். இது தான் நம் நாட்டிற்கு நாம் செய்ய வேண்டிய கடமை நம் முன் மாதிரியை அப்போது தான் மற்றவர்களும் பின் பற்றுவார்கள். அதனால் ஏற்படக் கூடிய நன்மை என்ன ? நம்மைப் பாதுகாக்கும் படைகள் எந்த விதத் தடையு மின்றி முன்னேறிப் போய் எதிரிகள் முன்னேற ஒட்டாதபடி தடுக்கக் கூடும். இப்படிப் பட்ட நிலைமை ஏற்படாது என்று தான், நான் நினைக்கிறேன். ஏற்படுமானால், வெடிகுண்டு சத்தமும் மிஷின் பீரங்கிச் சத்தமும் உங்கள் காதுகளில் விழும். **அப்போது நீங்கள் அமைதியாக பாதுகாப்பிடங்களில் இருந்தபடியே இருங்கள்.**

## விஷ அம்புகள்.

## பொய் வதந்திகள் பற்றி எச்சரிக்கை!

### அவை எதிரிகள் விடுக்கும் விஷ அம்புகள்.

**உங்கள் மனதைக் குழப்பவும்**
**பகுத்தறிவைக் குலைக்கவும்**
**தவறான வழியில் நீங்கள் நடக்கவும்**
**தான் இவற்றை பரப்புகிறார்கள்.**

### பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!

**ஜப்பானியர்களுக்கு விரோதமாக**

**தேசீயப் போர் முனையை அமையுங்கள் !**

(3-ம் பக்கம்—தொடர்ச்சி.)

**ஜெர்மனியர் திண்டாட்டம்.**

கிழக்கரங்கத்தில் யுத்தம் முடிவடையக் கூடிய நிலைமையில் இருக்கிறது. ஸ்டாலின்கிராட் நகரத்தை ரஷ்யர்கள் இப்போது காப்பாற்றிக் கொள்ளக்கூடும் என்று சொல்லலாம். மழை ஆரம்பமாகி விட்டது. இதுவரை யுத்தத் தளவாட வண்டிகள் தாராளமாகப் போய்க் கொண்டிருந்த ரோடுகளெல்லாம் இப்போது சதுப்பு நிலங்களாக மாறி விட்டன. இந்நகரத்திற்கு வெளியே இருப்பது ஜெர்மன் படைகளால் முடியாத காரியம். ஏனென்றால் உக்ரேனை விட, இங்கே குளிர் அதிகம், அன்றியும் ஸைபீரியாவிலிருந்து குளிர் காற்றும் வீசும். வட துருவத்தைத் தவிர, உலகத்திலே வேறெந்தப் பாகத்திலும், இவ்வளவு குளிர்ந்த காற்று வீசுவதில்லை.

சமீபத்தில் ஒரு ஜெர்மன் இராணுவத் தலைவர் ஒரு அறிக்கை விடுத்தார் அதில், காலாட் படைகளைக் கொண்டு ஸ்டாலின்கிராட் நகரத்தைத் தாக்குவதற்குப் பதிலாக, பெரிய பீரங்கிகளைக் கொண்டு அதை நாசஞ் செய்யப் போவதாக குறிப்பிட்டார். ரஷ்யர்கள் தம்மைத் தாக்கியதனால் தமக்கு நேர்ந்த சேதத்தை ஈடு செய்து கொள்ள அவகாசம் வேண்டுமென்பதற்காகத் தான் அவர் இப்படிக் குறிப்பிட்டார் என்று தெளிவாகத் தெரிகிறது. இது ரஷ்யாவிற்கு மகத்தான வெற்றி என்று தான் சொல்ல வேண்டும்.



# சொன்னால் சொன்னபடி!

போன வாரந்தான் ஜெனரல் ஸ்மட்ஸ் சீமையிலே, பார்லிமெண்டிலே சொன்னார், 'நாம் முன்னேறித் தாக்கும் காலம் சீக்கிரமே வரப்போகிறது' என்று. அவர் சீமையிலிருந்து ஆபிரிகா திரும்புவதற்கு முன்பாகவே, அந்தக் காலம் வந்து விட்டது. இவ்வளவு சீக்கிரமாக, நேசதேசப் படைகள் வலுப் பெற்று, வெளுத்து வாங்கும் நோக்கத்துடன், முன்னேறி வரும் என்று அச்சு நாட்டினர் கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்கள். நேசதேசத்தார் எல்லோருமே வெற்றியில் பூரண நம்பிக்கை வைத்தே பேசி வருகிறார்கள். இதைப் பார்த்த அச்சு நாட்டார், இது ஒரு யுத்த தந்திரம் ; அதனால் தான் இவ்வாறு பேசுகிறார்கள் ; இவர்கள் பேச்செல்லாம் வெறும் பேச்சு என்றே நினைத்திருப்பார்கள். ஆனால் நேச தேசத்தாரோ, 'நாங்கள் சொன்னால் சொன்னபடி தான். இதோ வாங்கிக் கொள் பூசை' என்று ஆரம்பித்து விட்டார்கள், வட ஆபிரிக்காவிலே, எகிப்து பிரதேசத்திலே, ஒரு பெரிய தாக்குதலை.

அன்று நிறைந்த பௌர்ணமி. பூரணச் சந்திரன் வெகு உல்லாசமாக வான வீதியில் தோன்றினான். அவனை அன்று கூர்ந்து கவனித்திருந்தால், அவன் முகத்தில் ஒரு கேலிச் சிரிப்பு தோன்றிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கலாம். எத்தனையோ பௌர்ணமிகள் வருகின்றன ; அவற்றுள் இதுவும் ஒன்று என்றே நீங்கள் நினைத்திருப்பீர்கள். ஆகவே அன்று சந்திரனைக் கவனித்திருக்க மாட்டீர்கள். யார் கவனித்தால் என்ன, கவனிக்காவிட்டால் என்ன என்று சந்திரன் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தான்.

இரவு எட்டு மணி வரை எங்கும் நிற்சப்தமாகவே இருந்தது. அச்சு நாட்டுப் படைகள் குஷாலாக உட்கார்ந்து, நிலா வெளிச்சத்தில் வம்பளந்து கொண்டிருந்தன. திடீரென்று நேச தேசப் படைகள் போருக்குக் கிளம்பி விட்டன.

வழக்கமாக, டாங்கிப் படைதான் முதலிலே போவது வழக்கம். அது வழி செய்து கொண்டு போகப் போக, காலாட் படைகள் பின்னை அவ்வழியே செல்லும். ஆனால், எகிப்தில் உள்ள போர் முனையோ வெகு குறுகியது. ஆகவே, பிரமாதமான பாதுகாப்பு ஏற்பாடுகளை எதிரிகள் செய்து வைத்திருந்தனர். எங்கு பார்த்தாலும் சுரங்க வெடிகள் மயமாகத் தூவியிருந்தனர். அது காரணமாக, நேச தேசத்தினர் தங்களது போர் முறையை மாற்றிக் கொண்டு விட்டனர்.

முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள சுரங்க வெடிகளைத் தகர்க்கும் வேலையே முதல் வேலையாகக் கொண்டு, காலாட் படைகளையே முதலில் அனுப்பினர். சிறிது நேரத்திற்கு மேல் தரை பீரங்கிகள் ஏகமாக முழங்கின. விமானங்கள் வண்டுகள் போல விரைவில் கிளம்பி வந்து, விமான எதிர்ப்பு பீரங்கிகள் பலவற்றின் வாயை மூடிவிட்டன. படுக்கப் போகலாம் என்று சாதா உடை அணிந்திருந்த பலர், நேச தேசத்தாரிடம் கைதியாக வந்து சேர்ந்தனர் ஓரிரண்டு நாட்களுக்குள் ஆயிரத்தைந்நூறு பேர்களுக்குமேல் கைதி என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

நேச தேசத்தாரின் எட்டாவது சேனைக்கு சென்ற இரண்டு மாதங்களாகவே, மளமளவென்று புது உதவிகள், தென் ஆப்பிரிக்காவைச் சுற்றி வரும் மார்க்கத்தில் வந்து சேர்ந்து கொண்டிருந்தன. இதை அறிந்தே, ஜெனரல் ஸ்மட்ஸ் தைரியமாகவே, எதிர் காலத்தில் நடக்கப் போவதைப் பற்றி ஜோஸியம் சொல்லிக் கொண்டிருந்தார் போலிருக்கிறது. அச்சு நாட்டாருக்கும் இவ்விஷயம் புரிந்திருக்கிறது. இல்லா விட்டால் அவர்கள் திடீரென அட்லாண்டிக் மகாசமுத்திரத்திலே, மேல் பாகத்திலே வளைய வந்து கொண்டிருந்த தங்கள் நீர்மூழ்கிக் கப்பல்களை, ஆபிரிக்கா வண்டையிலும், அரபிக் கடலிலும் வேலை செய்ய வரவழைத்ததேன் ?

பலவித இடைஞ்சல்களையும் பொருட்படுத்தாது, நேச தேசத்தார் முந்திக் கொண்டு தாக்க ஆரம்பித்து விட்டனர். சில முக்யமான இடங்களையும் பிடித்து விட்டனர். இருகட்சியிலும் ஏகசேதந் தான். சண்டை என்றால் சேதம் இருக்காதா என்ன ? தாங்கள் பிடித்த இடங்களைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்க முயலுகிறார்கள். அவர்கள், ஆரம்பத்தில் அச்சு நாட்டு விமானங்கள் அதிகமாகத் தென்பட வில்லையாம். ஆனால், நாளாக ஆக, ஜெர்மன் விமானங்களும் நிறைய வந்து விட்டனவாம்.

ராமல் சமீபத்தில் ஹிட்லரை நேரில் போய்ப் பார்த்து வந்தாரே, வேறு எதற்கு என்று நினைக்கிறீர்கள் ? ஆபிரிக்காவில் வெற்றி கண்டாலல்லாது, இத்தனை காலம் பட்ட பாடெல்லாம் வீண்தான் என்பதை அழுத்தந் திருத்தமாக, ஹிட்லருக்குப் புரிகிற பாஷையில் சொல்லிவிட்டு, மேற்கொண்டு தடங்கல் இல்லாது உதவியை அனுப்பும்படி அவரிடம் கூறிவிட்டு வந்திருக்க வேண்டும்.

அவர் திரும்பியதற்கும் மால்டா மீது திரும்பவும் தடபுடலாகக் குண்டு மாரி பொழிந்ததற்கும் சரியாக இருந்தது. கோவிலிலே மணி அடித்தால், நைவேத்ய பூஜை நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாமா இல்லையா ? அதே போல, மால்டா மீது குண்டு மழை என்றால், ராமலுக்கு உதவி போகிறது என்று புரிந்து கொள்ளலாம். இவ்விதமாக, ராமலுக்கு உதவி கிடைத்த போதிலும், அவர் இப்பொழுது தாக்குவதற்கு ஏற்பாடு செய்யவில்லை போலிருக்கிறது. பணக்காரர் வீட்டில் விருந்து நடக்கும்பொழுது சில சோம்பேறிப் பிரமுகர்கள், அந்த வீட்டு வாசலில் அங்குமிங்கும் உலாவிக் கொண்டேயிருப்பார்கள். சமயம் பார்த்து, 'டபக்' என்று உள்ளே புகுந்து விடுவார்கள்.

அதேபோல, ராமலின் படைகளும், அலெக்ஸாந்திரியாவிற்கு வெகு சமீபம் சென்றும், அந்நகரை அடைய முடியாது, சென்ற இரண்டரை மாதங்களாக சும்மா உட்கார்ந்திருந்தன. ராமல் ஜெர்மனிக்குப் போய்விட்டு, சாவதானமாகத் திரும்பி வருவதற்குக் கூட அவகாசம் இருந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

என்றிருந்தாலும் இந்த நேச தேசத்தார் முன்னேறித் தாக்கப் பேகிறார்களா என்ன என்று அச்சு நாட்டுப் படைகள் இருந்து விட்டன போலிருக்கிறது. ஆனால் நேச நாட்டினர் கண்டு மகிழும்படியாக, எட்டாவது சேனை முன்னேறிக் கொண்டிருக்கிறது.

இப்போரின் முடிவு என்ன ஆகுமென்று இப்பொழுது சொல்ல முடியாது. ராமலும் லேசுப்பட்ட மனுஷரா ? ஆகவே நமது திறமை யெல்லாம் காட்டியாக வேண்டும். போர்க்களத்திற்குப் போன பின், வெற்றி தோல்விக்குத் தயாராகத் தானே இருக்க வேண்டும். அது ஒருபுற மிருக்கட்டும். அச்சு நாட்டாரை வட ஆபிரிக்காவிலிருந்து விரட்டியாக வேண்டியது வெகு அவசியம். இல்லாவிட்டால், மத்யதரைக் கடலில் உள்ள ஆபத்து குறையவே குறையாது. அது குறையாத வரை, நேச தேசத்தாருக்கு ஏகக் கஷ்டங்கள் ஏற்படத் தான் செய்யும், மூக்கை நேரே தொடுவதற்குப் பதிலாக, தலையைச் சுற்றித் தொடுவது போல, மத்யதரைக் கடல் வழியாக, சீக்கிரமே, மத்ய கிழக்குப் பிரதேசத்திற்கும், ருஷ்யாவிற்கும், இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் கப்பல்களை ஓட்டிச் செல்லுவதை விட்டு, தென் ஆப்பிரிகாவைச் சுற்றி, இன்னும் பல ஆயிர மைல்களைக் கடந்து சென்று வருகின்றன நமது கப்பல்கள். இருபது நாட்களில் இந்தியா வந்து சேரக் கூடிய கப்பல் இரண்டு மாதம் கழித்து வருகிறது. ஆகவே மத்ய தரைக் கடலில நமது ஆதிக்கம் மீண்டும் ஏற்படும்படி செய்ய வேண்டியது அத்யாவசியம். இதை மனதில் கொண்டே, எப்படியாவது ராமலை விரட்டி ஓட்டிவிடுவது என்று நேசதேசத்தார் இப்பொழுது பெருந் தாக்குதலை நடத்தி வருகிறார்கள். சென்ற ஒரு வாரமாக நேசதேசத்தார் கண்டதல்லாம் வெற்றி தான். அச்சுநாட்டார் படுவதெல்லாம் அவதிதான்

எகிப்தில் மட்டுமல்ல. எங்குமே இப்பொழுது அவர்கள் அவதிப்படத் தான் செய்கிருர்கள். ருஷ்யாவில் பாருங்களேன், திணறுகிருர்கள். அந்த ஸ்டாலின் கிராட் நகர் மட்டும் எத்தனை நாஜிகளையும், நாஜிகள் நிர்ப்பந்தத்திற்குப் பயந்து வந்து போராடிய மக்களையும், எத்தனை விமானங்களையும், டாங்கிகளையும் பலியாகக் கொண்டிருக்கிறது! சென்ற பதினைந்து நாட்களில் மட்டுமே முப்பதாயிரம் பேர் 'கோவிந்தா' ஆகி விட்டார்களாம். ஐந்நூறு டாங்கிகள் 'அரோஹராவாம்' கணக்கற்ற விமானங்கள் நொறுங்கி விட்டனவாம்.

ஆனாலும் நாஜிகளுக்கு மேலும் மேலும் உதவி வந்து கொண்டே யிருக்கிறது. ஸ்டாலின் கிராடுபோருக் கென்று, ஒரு இடத்திலே வேண்டிய சாமான்களைச் சேகரித்து வைத்திருக்கிருர்கள் போலிருக்கிறது. அந்த 'ஸ்டாக்' தீரு முன் ஸ்டாலின் கிராடு அவர்கள் கைகளில் விழா விட்டால், ஜெர்மானியர் பாடு கஷ்டந் தான்.

அதனால் தான், ஒவ்வொரு தடவை தாக்கும் பொழுதும் வெகு மும்முரமாகத் தாக்குகிருர்கள். ஒருபுறம் மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. அதைத் தொடர்ந்து குளிரும் வந்து விட்டது. ருஷ்யப் பனி காலம் எத்தகையது என்பது அச்சு நாட்டாருக்குத் தெரியும். சாதாரண காலத்தில் யுத்த களத்தில் காயம்பட்டுக் கிடப்பவர்களில் அநேகர் பிறரது உதவியால், சில நாட்களான பிறகு கூட, தப்பிப் பிழைப்பதுண்டு. ஆனால் பனி கொட்டும் பொழுது, காயம் பட்டு விழுந்தால் ஆபத்துத் தான். லேசிலே ஆருது காயம். அதோடு ஆள் 'கயா' தான்.

ஆகவே, பனி காலம் மும்முரமாக ஆரம்பிக்கு முன் ஸ்டாலின்கிராடு நகருக்குள் தம்மை ஸ்தாபித்துக் கொண்டு விட வேண்டுமென அச்சு நாட்டார் துடிக்கிருர்கள்.

சொந்த வீடா என்ன, தடதட என்று உள்ளே போய், கட்டிலில் படுக்க. வீர ருஷ்யர்கள் சுடச் சுட சரியானபடி கொடுத்துக் கொண்டிருகிருர்கள் ஜெர்மானியருக்கு. ஒரு நாளில், இருநூறு கஜம் முன்னேறினுர்கள் என்ருல் அதுவே பெரிய சங்கதியாக இருகிறது. ஒவ்வொரு தெருவிலும் டாங்கிகளைப் புதைத்து வைத்து, அதிலுள்ள பீரங்கிகளைத் தாராளமாக ருஷ்யர்கள் உபயோகிக்கிருர்களாம். அதனால், தெருக்களை கடந்து செல்வது மகா சங்கடமாக இருக்கிறதாம். ஒவ்வொரு வீட்டையும் ஒரு கோட்டையாகப் பாவித்து, அவற்றில் பீரங்கிகளைப் பொருத்திச் சுடுகிருர்களாம்.

ஸ்டாலின் கிராடை முப்புறத்திலும் எதிரிகள் சூழ்ந்திருக்கின்றனர். மற்ருேர் புறத்தில் வால்கா நதி இருக்கிறது. அந்நதி வழியாகத் தான், ஸ்டாலின் கிராடைப் பாதுகாத்து வரும் வீர ஸ்திரீ, புருஷர்களுக்கு ராத்திரி வேளைகளில் உதவி வந்து கொண்டிருக்கிறது. பகல் வேளைகளில் நாஜி விமானங்கள் அந்நதி வழி செல்லும் படகுகளை யெல்லாம் த்வம்சம் செய்யப் பார்க்கின்றன. இராத்திரியிலும் வான வேடிக்கை நடக்கத் தான செய்கிறது. ஆனாலும் இராத்திரி வேளை கொஞ்சமாவது தப்பிச் செல்ல வகை இராமல் போய் விடுமா என்ன!

ஸ்டாலின்கிராட்டின் தென் பகுதியில் இன்னும் பல சாதாரண ஜனங்கள் இருக்கிருர்களாம். அவர்கள் நகரை விட்டு வெளி யேறுவதாகக் காணேம். அதற்குப் பதிலாக, போராடும் வீரர்களின் தலைவர்களை அணுகி, 'ஐயா! இந்தப் பாவிப் பய ஜெர்மானியர்களைத் துரத்த இன்னும் எத்தனை நாள் பிடிக்கும் ஐயா!' என்று கேட்கிருர்களாம். சல்லடைக் கண்கள் போல துளைக்கப்பட்டு விட்டதாம் ஒரு மின்சார யந்திர சாலை. அதை இன்னும் விடாது காப்பாற்றி வருகிருர்களாம் ருஷ்யர்கள்.

பாழடைந்த நகருக்குள் இருக்கும் ருஷ்ய வீரர்களுக்கு உதவி புரிந்து, அவர்களின் சங்கடத்தைக் குறைக்க, ருஷ்ய சேனுபதி மார்ஷல் திமோஷெங்கோ, ஸ்டாலின்கிராட்டிற்கு நாற்பது மைல் தூரத்தில் ஒரு பெரிய படையைக் கொண்டு வருகிருராம்.

இதற் கிடையில் நாஜிப் படைகள், ஸ்டாலின் கிராடின் வட திசையில் உள்ள தொழிலாளர், ஆலைப் பகுதிகளில் சிறிது வெற்றி கண்டு, ருஷ்யப் படை வரிசையைக் குலைத்துக் கொண்டு, வால்கா நதியை அடைந்து விட்டதாம். இந் நதியின் வட பாகத்திலே நாஜிகளுக்குப் பிடி கிடைத்து விட்டால், பாட்டிலுக்கு 'கார்க்' போட்டது மாதிரி ஆகிவிடும். அப்புறம் ஸ்டாலின்கிராடிற்கு ருஷ்ய உதவி கிடைப்பது மகா சிரமம். நிலைமை நெருக்கடியாகிக் கொண்டு தானிருக்கிறது. தெற்கு ருஷ்யாவிலும், கருங்கடல் அருகிலும் போரின் வேகம் குறைய வில்லை. வெகு கஷ்டத்துடன் காகஸஸ் பிரதேசத்தில் ஜெர்மானியர் கொஞ்சம் முன்னேறி யிருக்கிருர்களாம். இதெல்லாம எந்த மூலைக்கு? இன்னும் முக்கால் ருஷ்யா இருக்கிதே! இது லேசிலே ஆகிற காரியமா? பத்து வாரம் என்று பிளான் போட்டாரல்லவா அவர்! ஐயோ பாவம்! வெட்கம், மானம் அனைத்தையும் காற்றில் விட்டு விட்டாப்போலிருக்கிறது அவர்!

ருஷ்ய விஷயம் இப்படி யிருக்க, பிரிட்டிஷ் விமானிகள் சக்கைப் போடு போடடுக் கொண்டிருக்கிருர்கள். வசப் பட்ட பிரான்ஸில் உள்ள பல விமான கூடங்களையும், ரயில்களையும் தவிடு பொடியாக்கி யிருக்கிருர்கள். வட ஆபிரிகாவிற்கு சாமானை அனுப்ப உதவி புரியும் இத்தாலியத் துறைமுகங்களை யெல்லாம் இடித்துத் தள்ளி யிருக்கிருர்கள். மிலான் என்ருெரு நகர் மீது, பட்டப் பகலில் நாலாயிரம் பவுண்டு குண்டுகளை வீசி யிருக்கிறர்கள். அது மட்டுமா? 'அட மண்டுகளா! ஜெர்மனியோடு குலவாடுகிறீர்களே! ஜெர்மானியருக்கும் கிடைக்கும் உணவை விட உங்களுக்குக் கிடைபபது குறை வாச்சே! இதைப் பார்த்துக் கொண்டு சும்மாவா இருக்கப் போகிறீர்கள்?' என்று எழுதப் பெற்ற துண்டுப் பிரசுரங்கள் இத்தாலி மீது எறிந்திருக்கிருர்கள்.

ஜெர்மன் விமானங்கள் பிரிட்டன் மீது பறந்து கொண்டிருக்கின்றன. கூடிய சீக்கிரமே பிரிட்டிஷ நகரங்களுக்கு அதிகத் தலைவலி ஏற்படக் கூடும் என்கிருர்கள். இம்முறை ஹிட்லர் விஷ வாயுவைக் கூட பிரயோகிக்கச் செய்யலாம் என்கிருர்கள். இதையெல்லாம் தவிர்த்துக் கொள்ள போதிய ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிருர்கள் லண்டனில்! ஒரு நாளைக்கு $127\frac{1}{2}$ லக்ஷம் பவுன் யுத்தத்திற் கென்று செலவிடுகிருர்கள் பிரிட்டிஷார். மாதத்திற்கு கூட விமானங்கள் தயாரிக்கிருர்களாம். அமெரிக்காவிலும் யுத்த ஏற்பாடுகள் ஒன்றும் குறைவாக இல்லை. அங்கு ராணுவத்திற்குக் கட்டாய முறையில் கூட ஆள் சேர்க்கத் தயார் செய்துகொண்டிருக்கிருர்கள். அமெரிக்க உதவி உலகெங்கும் பரவிச் செல்லுகிறது.

இந்தியாவிலே கூட ஏகப்பட்ட அமெரிக்கர்களும், அமெரிக்க விமானங்களும் நம்மைப் பாதுகாக்க வந்திருப்பது உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா? தெரியா விட்டால் தெரிந்து கொள்ளுங்கள்.

பர்மாவை எப்படியும் பிடித்து விட வேண்டும் என்ற எண்ணத்தோடு, இந்தியாவில் ஏற்பாடுகள் எல்லாம் நடந்து வருகின்றன. இதை அறிந்து தானே என்னமோ, ஜப்பானிய விமானங்கள் சென்ற ஒரு வாரமாக, இந்தியாவிற் குள்ளிருக்கும் அஸ்ஸாமிய விமானக் கூடங்களையும், சிட்டகாங் விமானக் கூடத்தையும் தாக்கி வருகின்றன.

அமெரிக்க விமானங்கள் பர்மாவில் ஜப்பானியரது கேந்திர ஸ்தானங்களை நொறுக்க முயலுகின்றன. அதோடு, சைனுவிற்கும் சென்று ஹாங்காங், கான்டன் நகரங்களைக் கவனித்து வந்திருக்கின்றன.

வேறு பல அமெரிக்க விமானங்களும், அமெரிக்கக் கப்பல்களும், ஆட்களும் குடால்கனுர் என்ற முக்கியமான தீவைக் கைவிடாதிருக்க அரும்பாடு பட்டு, அற்புதமாகப் போராடுகின்றன. அங்கு அமெரிக்கருக்கும், ஜப்பானியருக்கும் பயங்கரமான, நில, ஆகாய, சமுத்திரச் சண்டைகள் நடக்கின்றனவாம். இரு கட்சியினருக்கும் ஏக நஷ்டமாம். ஜப்பானியரது டாங்கிகள் அமெரிக்கர் வசமுள்ள தோர் விமான நிலையத்தைக் கைப்பற்ற முயலுகின்றனவாம். இடைவிடாது சண்டை நடக்கிறதாம்.

[PRI]NTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம்௵ நவம்பர் ௴ 6௳, வெள்ளிக்கிழமை [இதழ் 41

## வெட்கமா யிருக்கிறதோ !



சில மாதங்களுக்கு முன்பு லிபியாவில் கைதியான ஜெர்மன் படையினரை நடத்திச் செல்லும் காட்சி.

### "ஜர்மானியரைப் பழி வாங்கிடுவீர்"

இராகம்—காபி. தாளம்—ஆதி.

பல்லவி

இனமுறும் இந்தியர் எல்லோருமே
மனமுற முந்தி மகிழ்ந்தேவாரீர் , (இன)

அனுபல்லவி

1 வனமிருகங்களின் வாழ்வேதரும்
வஞ்சக நெஞ்சர்ஜப் பானை வெல்லுவீர் (இன)

2 பொய் வதந்திகளைப் புதைத்திடுவீர்
பொல்லாங்கு சொல்வாரைச் சிதைத்திடுவீர் (இன)

3 ஜயக்கொடி தானேங்கத் தாங்கிடுவீர்
ஜர்மானியரைப் பழி வாங்கிடுவீர் (இன)

14540

# தொடாதே!

மகா சக்தி வாய்ந்த மின்சாரப் புனல் ஓடுகிற கம்பிகளுக்கும், சாதாரண தாமிரக் கம்பிகளுக்கும் வித்யாசமே தெரியாது தான். ஆனால், புத்திசாலிகளுக்கு, இந்த இரு கம்பிகளுக்கும் உள்ள வித்தியாசம் ரொம்ப நன்றாகத் தெரியும். தாமிரக் கம்பிகள் கடையில் இருக்கிற வரை சாதாரணமானவை தான். ஆனால், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மின்சாரப் புனலைப் பாய்ச்சுவதற்கு உபயோகமாகும் பொழுது, அதனுடைய சக்தி அபாரமானதாகி விடுகிறது. அது சாதாரண மனிதர்களுக்கு, பார்த்ததும் தெரியாது. அதற்காகவே, அந்தக் கம்பிகளைத் தாங்கி நிற்கும் கம்பங்களின் மீது, 'தொடாதே! அபாயம்'! என்ற போர்டுகள் எழுதித் தொங்கவிடப் படுகின்றன.

'த்சு! என்னடா அப்படி பொல்லா அபாயம் வந்துடப் போகுது இந்த கம்பியை சும்மா தொட்டுட்டா!' என்று நினைக்கிறவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் முதலில், மேற்கண்ட போர்டுகள் தொங்கும் கம்பங்களை சும்மா தொட்டுப் பார்ப்பார்கள். ஒன்றும் இராது.

'அ! பாத்யா! ஒண்ணுமில்லையே! சும்மாத்துக் காணும், மேலே இருக்கிற கம்பியை எவனாவது எடுத்துக் கிட்டுப் போயிடப் போறானென்னு இப்படி எழுதிப் போட்டிருக்கான் போலிருக்கு!' என்று எண்ணிக் கொண்டே, மேலே உள்ள கம்பியை, அந்தக் கம்பத்தில் ஏறியோ, ஒரு கம்பி கொண்டோ தொட்டு வைப்பார்கள். அப்புறம், அவ்வளவு தான்! அவருடைய பெயர் இரண்டாந் தடவையாக ஜனன மரண ரிஜிஸ்தர் ஆபீஸ் ரிஜிஸ்தரில் ஏறி விடும். சில சமயங்களில், அந்த மின்சாரக் கம்பிகளைத் தொடுவோர் அப்படியே கருகிப் போய்விடுவதும் உண்டு. அவ்வளவு தூரம் போவானேன். கீழே அறுந்து கிடக்கும் மின்சாரக் கம்பிகளை, மிதித்தால் கூட ஆபத்துத் தான! இது எல்லோருக்கும் தெரியாது. படியாதவர்களுக்கு தெரியவே தெரியாது. ஆனால், படித்த மனிதனொருவன் இந்தக் கம்பிகளைப் போய் தொட்டான் ஆனால், 'சுத்த மடப் பயல்' என்று அவனைக் கூறுவதில் தவறு என்ன இருக்கிறது? அந்தப் பட்டத்தைப் பெற ஆள் பிழைத்திருக்க வேண்டுமே என்று கேட்கிறீர்களா? அதுவும் வாஸ்தவமே!

படித்து படியாதவன் போல நடந்து, 'சுத்த முட்டாப் பயல்' என்ற பட்டத்தைப் பெறுவோர் கோஷ்டியிலே ஹிட்லரைச் சேர்ப்பதற்கு, எதிர் கால சரித்திரக்காரர்கள் கொஞ்சமும் தயங்கவே போவதில்லை என்பது நிச்சயம். ஏன் தெரியுமா? ஹிட்லரின் மடத்தனத்தைக் காட்ட, ருஷ்யா மீது அவர் தனது படைகளை ஏவிய ஒரு காரியமே போதுமே! ருஷ்யா முழுவதிலுமே, மேலே விவரித்தது போன்ற, அபாய மிக்க மின்சாரக் கம்பிகளை நிகர்த்த இடங்கள், நிறைந்திருக்கின்றன. ஆனால் 'தொடாதே! அபாயம்' என்று போர்டுகள் அங்கு தொங்க விடப் படவில்லை.

பட்டிக்காட்டான் ஒருவன் மின்சாரக் கம்பிகளைப் பார்த்ததும் என்ன நினைத்தானோ, அதையே ஹிட்லரும் (ருஷ்யாவைப் பார்த்ததும்) நினைத்திருக்கிறார். இந்த ருஷ்யா, எனது நிகரிலா, சண்டப் பிரசண்டப் படைகளுக்கு முன் எம்மாத்திரம்? ஆடிக் காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சு போல் ஆகிவிடப் போகிறது இது. பத்தே வாரங்களில இதைப் பறக்கடித்து விடலாம் என நினைத்தார். ஆனால், ருஷ்யா, மகா சக்தி வாய்ந்த, தொட்டாலே உயிரை வாங்கும் 'உயிருள்ள' மின்சாரக் கம்பி போலாகி விட்டது. ஹிட்லரின் உயிரையே அது வாங்கப் பார்க்கிறது என்று சொல்வது கூட மிகை படக் கூறுவது ஆகாது. ஹிட்லரின் விழிகள் பிதுங்குகின்றன. தடுமாடுகிறார் மனுஷர்! முன்னாலேயும் போக முடியவில்லை; பின்வாங்கவும் மனமில்லை; நிற்குமிடத்திலும் நிம்மதியில்லை என்றிருக்கிறது ஜெர்மன படைகளின் கதி.

யுத்தம் ஆரம்பமாகி இரண்டு வருஷகள் கழியும் வரை, ஹிட்லர்பாடு கொண்டாட்டமாகவே இருந்தது. ஹிட்லரை ஜெர்மானியர் பெரியதோர் தெய்வமாகவே பாவித்து வந்தார்கள். அவர் சொன்னால் சொன்னபடி நடந்து வந்து கொண்டிருந்தது. ஆனால், அதற்கப்புறம் மெள்ள மெள்ள, அவர் சொல்லும் விஷயங்கள் உருவாகாது போகும் நிலைமை தோன்ற ஆரம்பித்தது. இப்பொழுதோ, வெற்றி என்ற வார்த்தைகளே ஜெர்மானியருக்கு வெகு அரியவைகளாகி வருகின்றன. அங்கே அடி; இங்கே உதை; எகிப்தில் ஏகப்பட்ட சேதம், ஸ்டாலின் கிராடில் எண்ணற்றவர்கள் கூண்டோடு கைலாசம் என்ற செய்திகளே அவர்கள் காதில் போய் விழக் கூடும். ஆனால், (ஹிட்லரைப் பற்றி எழுதும் போது, தற்சமயம் இந்த ஆனால் என்ற பதத்தை சிக்கனம் பார்க்காது தான உபயோகிக்க வேண்டியிருக்கிறது). ஹிட்லரின் கையாட்கள் அரும்பாடு பட்டு, ஜெர்மானியர் காதுகளில் இந்த கோரச் செய்திகள் அதிகமாக விழாதபடி அடக்கு முறை மூலம் செய்து வருகிறார்கள். ஆனால், ஸ்டாலின்கிராடு விழுந்ததா? கிராஸ்னி எண்ணெய் வயலுக்கு நமது படைகள் எப்பொழுது போய்ச் சேரும்? கருங்கடல் ஓரத்தில் என்னென்ன இடங்கள் பிடி பட்டிருக்கின்றன? இந்த ருஷ்ய யுத்தம் எப்பொழுது தீரப் போகிறது? கொடிய ருஷ்யப் பனிகாலம், இந்த மாதக் கடைசியில் அதிபயங்கரமாக ஆரம்பமாகி விடுமே! நமது மக்களும், கணவன்மாரும், சகோதரர்களும், உற்றார் உறவினர்களும், எந்த ஊரில் போய் பத்திரமாகத் தங்கப் போகிறார்கள்? என்ற கேள்விகளை எல்லாம் ஜெர்மானியர் கேட்க ஆவலுள்ளவர்களாக இருப்பார்கள் அல்லவா? தங்கள் ஆவல் தீர, அவர்கள் என்ன கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கலாம். சரியான பதில் மட்டும் கிடைக்காது.

அது மட்டுமா? முன்பெல்லாம் அடிக்கடி ஆர்ப்பாட்டத்துடன் பேசிக் கொண்டிருந்த ஹிட்லர் இப்பொழுது எப்பொழுதோ கார்த்திகைப் பிறை மாதிரி காட்சி யளிக்கிறார். ஏதோ பேசிக் கொட்டுகிறார். அவரது பேச்சுகளில் முனபிருந்த முடுச்சைக் காணோம். சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரப்போகிறது? ஆழந் தெரியாமல் ருஷ்யாவில் போய், காலை விட்டுவிட்டார். இபபொழுது அவதிப்படுகிறார். வாய் திறக்க தைரியம் வரவில்லை ஜெர்மன் மக்களுக்கு ஒவ்வொரு தடவையும் என்ன சமாதானம் சொல்லுகிறது? அவர்களும் பேசாது எவ்வளவோ தியாகங்களை செய்தாச்சு. சென்ற ஒரு வருட காலமாக, பிரிட்டிஷார் வீசும் குண்டுகளுக்கும் ஏகமாகப் பலி கொடுத்தாச்சு. சோற்றுக்கே தாளம் போடுகிறார்கள். இந்த அவதிக்கு ஒரு முடிவு காணுவ தெப்பவோ என்று தான் உள்ளூற நினைத்துக் கொண்டிருப்பார்கள். இந்த நிலைமையில் வரவர ஹிட்லர் மீது நாஜிகளுக்குள்ள நம்பிக்கை குறையக் கூடுமல்லவா? பொது ஜன நம்பிக்கையை ஹிட்லர் இழந்து விட்டால், அப்புறம் அவருடைய திட்டங்கள் ஏதும் உருப் படவே போவதில்லை. போன இடத்தில் எல்லாம் அவரது முகத்தில் கரி பூசப் பட்டால், அவரை யார் தான் மதிப்பார்கள்?

ஸ்டாலின்கிராட் நகரம் ஒன்றே போதுமே அவரது மானத்தை வாங்க! 'இதோ நம் கையில் விழுந்து விடப் போகிறது?' என்று அவர் சொல்லி எத்தனை நாட்களாச்சு? ஸ்டாலின்கிராடு இன்னும் ருஷ்யர் வசமே இருக்கிறது. ஒரு வீடு, ஒரு தெரு இவற்றைப் பிடிப்பதற்குள்ளாகவே, எத்தனையோ ஆயிரம் டன் வெடி குண்டுகள், பல டாங்கிகள், பீரங்கி குண்டுகள், காலாட்படைகள் எல்லாம் பாழாகி விடுகின்றன. ருஷ்யர்களின் நெஞ்சிலே தோல்வி மனப்பான்மை ஏற்படவே இல்லை.

நகரின் வட பகுதியிலே, தொழிற்சாலைகள் பல மைல்கள் தொடர்ந்திருக்கின்றன. அப்பிரதேசத்தில் நாஜிகள் புகுந்திருக்கிறார்கள். அங்கே உள்ளவர்களை நாஜிகள் நடத்தும் விதம் கேட்கச் சகிக்கவில்லையாம். அங்கிருந்து முன்னேறித் தாக்க வரும்

(4-ம் பக்கம் பார்க்க.)



## சாகுபடியை அதிகப்படுத்துங்கள்.



கவர்னர் மாளிகையைச் சேர்ந்த தோட்டத்திலேயே சாகுபடியை அதிகப்படுத்துகிறார்கள்

## குடும்பத்தைப் பற்றிய கவலை வேண்டாம்.

### இராணுவக் குடும்பங்களுக்குப் பல வசதிகள்.

சிவில் லியெய்சான் உத்தியோகஸ்தர் என்று ஒருவர் இருக்கிறார். லட்சக் கணக்கான குடும்பங்களுக்கு அவா ஒரு தகப்பனாரைப் போல் விளங்குகிறார். இந்தியப் படையினர் தமக்குள்ள கவலைகளையும் தொல்லைகளையும் போக்கிக் கொள்ளும் பொருட்டு, அவருக்கு அறிவிக்கிறார்கள்.

போர் முனையிலுள்ள இந்தியப் படையினர் தம் சொந்த ஊரிலுள்ள உறவினர்களைக் குறித்தும் தோழர்களைக் குறித்தும் கவலை கொள்ளுவார்கள் என்று இராணுவ அதிகாரிகள் நினைத்தார்கள். ஆகையால், அவர்களுடைய நன்மையைக் கவனித்துக் கொள்ளும் பொருட்டு, ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு வெல்பேர் உத்தியோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள். இராணுவக் குடும்பங்களின் நன்மைகளைக் கவனிப்பதோடு, கப்பல் படையினர் குடும்பங்களின் நன்மைகளையும் விமானப் படையினர் குடும்பங்களின் நன்மைகளையும் இவர் கவனித்துக் கொள்ளுகிறார்.

சென்னை மாகாணத்திலும் ஒரு இராணுவ வெல்பேர் உத்தியோகஸ்தர் இருக்கிறார். இவருடைய ஆதிக்கத்திற்குட்பட்டு ஒரு லியெய்சான் உத்தியோகஸ்தரும், ஒரு டிபுடி இராணுவ உதவித் தலைவரும், 12 ஜில்லா இராணுவ வெல்பேர் உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள்.

**பல வகை உதவிகள்.**

தம் மேற்பார்வைக்குட்பட்ட இந்தக் குடும்பங்களுக்கு இந்த உத்தியோகஸ்தர்கள் பல வகைகளிலும் உதவுகிறார்கள். இந்தக் குடும்பப் பிள்ளைகள் படிப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கின்றனர். நோயாளிகளுக்கு வைத்தியம் இலவசமாகச் செய்ய ஏற்பாடுகள் செய்கிறார்கள். சினிமாவுக்கு இலவசமாகப் போவதற்கு பாஸ்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள்.

போர் முனைக்குப் போய் இருக்கிறவர்களிடமிருந்து கடிதம் வரா விட்டால் வெல்பேர் உத்தியோகஸ்தர்களிடம் அவருடைய உறவினர்கள் முறையிடுகிறார்கள். தம் குடும்பத்தாருக்கு என்று ஒதுக்கி வைக்கப் பட்ட மாதத் தொகையோ, பென்ஷனோ கிடைக்கா விட்டாலும், அக் குடும்பத்தார்கள் இவர்களிடம் முறை யிடுகிறார்கள். சட்ட சம்பந்தமான வழக்குகளை போர் முனையிலுள்ள சிப்பாய்கள் கவனிக்க வேண்டியிருந்தால், அவர்கள் சார்பாக, இந்த உத்தியோகஸ்தர்கள் கவனிக்கிறார்கள்.

படையினர் படையை விட்டு விலகித் தம் சொந்த ஊர்களுக்குத் திரும்ப வந்த போதிலும், அவர்களையும் மறந்து விடுவதில்லை. இவர்களுக்காகவே ஒரு தனி இலாக்காவை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். வேலையை விட்டு நீங்கிய சிப்பாய்களுக்கு வேலை தேடிக் கொடுத்து, இந்த இலாக்காக்காரர்கள் உதவுகிறார்கள். நோயா யிருக்கும்போது அவசியமானால் வைத்திய உதவிக்கும் ஏற்பாடு செய்கிறார்கள். மிகவும் ஏழைகளா யிருந்தால், இந்திய இராணுவ உதவி நிதியிலிருந்தும் பணம் கொடுக்கிறார்கள்.

சிவில் லியெய்சான் உத்தியோகஸ்தர் தன் மேல் பார்வையிலுள்ள 270,000 பேர்களைக் கொண்ட பெரிய "குடும்பத்தை" நேர்முகமாக மேல்பார்க்க வேண்டி, அவர்கள் உள்ள பல ஊர்களுக்கும் அவ்வப்போது போய் சுற்றுப் பிரயாணம் செய்கிறார். இவர் வேலை, வெல்பேர் உத்தியோகஸ்தர் வேலைக்கு மிகவும் உதவியா யிருக்கிறது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஜெர்மானியர், தங்களுக்கு முன்பாக, ருஷ்ய மக்களை ஒரு 'திரை' போல வைத்துத் தள்ளிக் கொண்டே வருகிறார்களாம். ருஷ்யர்கள் அந்த ஜெர்மானிடரைப் பார்த்துச் சுட்டால், முதலில் உள்ள ருஷ்யர்கள் தானே மடிவார்கள்? ஐயோ! நமது சகோதரர்களாச்சே என்று அவர்கள் பேசாதிருக்கட்டும், நாம் முன்னேறி விடலாம் என்பது ஜெர்மானியரது எண்ணம்.

ஸ்டாலின்கிராடு நகரில் உள்ள வீரர்களுக்கு உதவி செய்ய வடக்கே யிருந்து வரும் டிமோஷிங்கோவின் படைகள் மெல்லமெல்ல வெற்றி பெற்றுவருகின்றன. சில இடங்களில் ருஷ்யர்கள் சில தெருக்களிலிருந்து ஜெர்மானியரை விரட்டி யடித்திருக்கிறார்கள். ஸ்டாலின்கிராடு நகருக்குத் தெற்கிலும் ருஷ்யப் படைகள் நாஜிப் படைகளுக்குத் தொல்லை விளைவித்துக் கொண்டிருக்கின்றன. பாழாய்க் கிடக்கும் நகரை வேறு எந்தக் காரணத்திற்காக இல்லா விட்டாலும், பனி காலத்திற்குப் பதுங்கிப் பிழைக்கும் இடமாக உபயோகிக்க வேண்டு மென்பதற்காகவாவது ஜெர்மானியர் பிடிக்க முயலுவார்கள்.

லெனின்கிராடு அருகிலும், ஸ்டாலின்கிராடு சமீபத்திலும், ருஷ்யாவில் வேறு பல பிரதேசங்களிலும் ஜெர்மானியர் பனி காலத்தில் தங்குவதற்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்து விட்டார்களாம். ருஷ்யர்களும் பனி கால உடையை அணிந்து கொண்டு விட்டார்கள். பனிக் கட்டி மீது சறுக்கிக் கொண்டே வந்து போராடும் படையினர் எந்த நிமிஷம் வேண்டுமானாலும் கிளம்பத் தயாராக இருக்கிறார்கள். ருஷ்யாவின் பெருமையை உலகம் உள்ளளவும் மறையாது காக்க வேண்டு மென்னும் மன உறுதியுடன் போராடுகிறவர்களை யாரால் தான் அசைக்க முடியும்?

காகஸஸ் பிரதேசத்தில் உள்ள எண்ணெய் வயல்களைப் பற்றிய ஆசையை நாஜிகள் இவ்வருடம் மறந்து விட வேண்டியது தான் போலிருக்கிறது. அங்கே நால்சிக் என்ற ஊரை வெகு பாடுபட்டுப் பிடித்தார்கள். எல்லாம் பனி காலத்திற்காகத் தான்.

ருஷ்யர்கள் இந்தப் பனி காலத்தில் சும்மா இருக்கப் போவதில்லை. மாஸ்கோவிற்கு மேற்கே ஒரு நூற்றைம்பது மைல்களுக்கப்பால், முன்னேறித் தாக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். லெனின்கிராடு நகருக்குச் சென்ற ஒரு மாதமாக ரயில் ரயிலாக உணவுப் பொருள்கள் போய்க் குவிந்திருக்கின்றன. ஆகவே, பனி காலத்திலே ஜெர்மானியருக்கு ஓய்வே கிடைக்கப் போவதில்லை.

ஓய்வு கொடுக்கப்படாது தான். போன வருஷம் அவர்களுக்கு ஓய்வு கொடுக்காததால் தான், ஜெர்மனியில் உள்ள தொழிலாளர்களே போர் முனைக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நன்றாகப் பழகிய தொழிலாளர்கள், போர் முனைக்குச் சென்று விட்டால், போர் முனையில் உள்ளவர்களுக்கு ஆயுதம், ஆகாரம் எல்லாம் தயாரிப்பது யார்? ஆகவே, தான் பிடித்த நாடுகளி லிருந்து தொழிலாளர்களைப் பலவந்தத்தின் பேரில் ஹிட்லர் இழுத்து வர வேண்டி யிருக்கிறது. இதிலே எத்தனையோ கஷ்டங்களிருக்கின்றன.

'பிரான்ஸிலிருந்து ஒரு லக்ஷத்து ஐம்பதினாயிரம் தொழிலாளர்களை அனுப்ப வேண்டும்; இல்லாவிட்டால்......உம்! கபர்தார்!' என்று மிரட்டினார் ஹிட்லர். லவால் ஓடியாடி ஏதேதோ செய்து பார்த்தார். பத்திரிகைகள் மூலம் கெஞ்சிப் பார்த்தார். அக்டோபர் பதினைந்தாம் தேதி வரை ஹிட்லர் கெடுவைத் தள்ளி வைத்துப் பார்த்தார். ஒன்றும் பிரயோசனப் படவில்லை. தொழிலாளர்கள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்துவிடப் போவதாக எச்சரிக்கை செய்து விட்டார்கள். லவால் ஹிட்லரிடம் விஷயத்தைச் சொன்னார். எந்த சமயத்திலே நேச தேசத்தார் இரண்டாம் போர் முனையை ஆரம்பிப்பார்களோ என்றுள்ள இந்தச் சமயத்திலே, பிரான்ஸிலே வேறு கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால், ஏதாவது விபரீதமாக முடிந்து விடப் போகிறதே என்ற பயத்தால் ஹிட்லர் சும்மா இருந்து விட்டார்.

ஆகவே, இவ்வருடமும் ருஷ்யாவில் நாஜிகளுக்கு ருஷ்யர்கள் ஓய்வு கொடாது உபத்திரவம் செய்து கொண்டிருப்பார்களே யானால், ஜெர்மானியத் தொழிற்சாலைகளில் நெருக்கடி ஏற்படும். அவ்வாறு நெருக்கடி ஏற்பட்டு விட்டால், ஜெர்மன் ராணுவ யந்திரம் சுகமாக ஓட முடியாது. அந்த இயந்திரம் ஓடாது நிற்க ஆரம்பித்துவிட்டால் நேச நாடுகளுக்கு வெற்றி கிடைப்பது திண்ணம்.

ஹிட்லர் ருஷ்யாவில் கண்ட கனவும் பலிக்கவில்லை. எகிப்திலே ராமல் கண்ட சொப்பனமும் பலிக்கவில்லை. எகிப்திலே, ராமலின் படைகளை, பிரிட்டிஷ் எட்டாவது சைனியம் நொறுக்கித் தள்ளிக் கொண்டிருக்கிறது. ஓரிடத்திலே ஜெர்மன் வியூகத்தைத் துளைத்துக்கொண்டு ஒரு பிரிட்டிஷ் பட்டாளம் முன்னேறி விட்டதாம். அச்சு நாட்டுப் படைகளுக்குள்ள ஆபத்து இதனால் அதிகமாகி விட்டது. ராமலின் படைகள் இப்பொழுது தான் சமாளித்து நிற்கப் பார்க்கின்றனவாம். பலமான பாதுகாப்பு அரண்களைத் தான் ராமல் கட்டி வைத்திருக்கிறார். அவைகளைத் தகர்ப்பது கொஞ்சம் சிரமமாக இருந்தபோதிலும், பிரிட்டிஷ் படையினருக்கு வெற்றி கிடைத்துக் கொண்டுதானிருக்கிறது.

அச்சு நாட்டுப் படையிலிருந்து சிறைபிடிக்கப்பட்டவர்களைக் கவனிக்கும் பொழுது, பல உண்மைகள் வெளியாகின்றன. அவர்களில் பலர், பழைய எதிரிகளாம். கிரேக்க நாட்டில் நம்மவர்களோடு போராடியவர்களாம் மற்றவர்கள் போலந்து, ஸ்லோவேகியா, பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களாம். இதிலிருந்து, ருஷ்யாவில் எவ்வளவு நாஜிகள் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதோடு, செத்து விழும் தமது சகோதர வீரர்களிட முள்ள துப்பாக்கிகளையும், தூரதிருஷ்டிக் கண்ணாடிகளையும், அருகிலிருப்பவர்கள் சேகரிக்கிறார்களாம். ஒரு கைதியிடம் நான்கு பிஸ்டோல்களிருந்தனவாம். இவ்வளவு செட்டாக இருக்க வேண்டிய நிலைமை வந்திருப்பது, ஜெர்மனியில் உள்ள ஆயுத உற்பத்திசாலைகளுக்கு நேர்ந்திருக்கும் கஷ்டங்களை எடுத்துக் காட்டவில்லையா?

பிரிட்டிஷ், அமெரிக்க யுத்தத் தளவாட உற்பத்திகளோ 'கிர்'ரென்று மேலே ஏறிக் கொண்டிருக்கின்றன. ஜப்பானியருக்கும் ஏக கஷ்டம் ஏற்பட்டுவருகிறது. அச்சு நாட்டாரது நாடி ஒடுங்க ஆரம்பித்திருக்கிறாப் போலிருக்கிறது. தக்க சமயம் வந்ததும், நம்மவர்கள் தட்டி வீழ்த்தாமலா இருக்கப் போகிறார்கள் நம் எதிரிகளை?







ஒரு பெரிய பிரிட்டிஷ் யுத்தக் கப்பலி லிருந்து ஒரு தெப்பக் கூடத்தை இறக்கியிருக்கிறார்கள். இதிலிருந்து, நடுக் கடலில், கப்பலைப் பழுது பார்க்கிறார்கள். எதிரிகளின் சுரங்க வெடிகள் தாக்காதபடி பாதுகாப்புகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. எதிரி விமானங்கள் தாக்காதபடி பலூன்களையும் பறக்க விடுகிறார்கள்.

## எதிரிகளால் ஹாஜ் யாத்திரைக்குத் தடை.

### அச்சு நாட்டு ரேடியோக்களின் பொய்ப் பிரசாரம்.

இந்துக்கள் காசிக்கு யாத்திரை போவது போல, முஸ்லீம்கள் மெக்காவிற்கும் மற்றும் பல ஊர்களுக்கும் யாத்திரை போய் வருவது வழக்கம். இதற்குத் தான் 'ஹாஜ் யாத்திரை' என்று பெயர். இந்த யாத்திரையை முடித்துத் திரும்பியவர்களைத் தான் ஹாஜி என்னும் பட்டப் பெயர் கொண்டு அழைக்கிறார்கள். கொஞ்ச காலத்திற்கு முன்பு இந்த யாத்திரீகர்கள் 300 பேர்கள் கராச்சி துறை முகத்தில் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் தம் ஹாஜ் யாத்திரையை முடிக்கத் தமக்குக் கப்பல் வசதிகள் செய்து கொடுக்கும்படி இந்தியா அரசாங்கத்தாரைக் கோரி மனுச் செய்து கொண்டிருந்தனர். இதற்கு 1942-ம் ஞு அக்டோபர் மீ 28 உ கராச்சி ஹாஜ் யாத்திரீகர்கள் கமிட்டியாருக்கு இந்தியா அரசாங்கத்தார் பதில் தந்தி கொடுத்தார்கள். அதில் குறிப்பிட்டிருந்ததாவது:—

> கடல் வழியாக ஹாஜ் யாத்திரை செய்ய யாரும் ஏற்பாடுகள் செய்யக் கூடாதென்று எச்சரித்து இந்தியா அரசாங்கத்தார் ஏராளமாக விளம்பரம் செய்திருந்தும் கூட, இந்த யாத்திரீகர்கள் கராச்சி வந்து சேர்ந்து விட்டனர். ஈராக் வழியாகப் போக வேண்டுமானாலும் கடலைக் கடந்து தான் போக வேண்டி யிருக்கிறதாகையால், அந்த வழியாகவும் அனுமதிக்க இயலவில்லை. இது பற்றி சென்ற மாதம் அரசாங்கத்தார் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த முடிவிற்கு வந்ததற்குக் காரணங்களை அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "தற்போதுள்ள ஆபத்தான நிலைமையில் ஹாஜ் கப்பல்களும் யாத்திரீகர்களும் ஆபத்திற்குள்ளாக நேருமாகையினால், இந்த வருஷம் ஹாஜ் யாத்திரைக்கு இந்தியா சர்க்கார் ஏற்பாடு செய்து கொடுக்க முடியாதவர்களா யிருக்கிறார்கள்." துறைமுக ஹாஜ் கமிட்டிப் பிரதிநிதிகளோடும், மத்திய ஹாஜ் கமிட்டி யங்கத்தினர்களோடும், மற்ற முஸ்லீம் பிரதிநிதிகளோடும் கலந்து பேசிய பிறகு தான் இந்தத் தீர்மானத்திற்கு இந்தியா அரசாங்கத்தார் வந்தார்கள். இந்தத் தீர்மானத்தை அந்த முஸ்லீம் பிரதிநிதிகள் அனைவரும் ஒத்துக் கொண்டனர்.

* * * *

**1940-41-ல் மட்டும் நிலைமை வேறு?**

1940-41-ம் வருஷத்திலும் யுத்தம் நடந்து கொண்டு தான் இருந்தது. அப்போது மட்டும் ஹாஜ் யாத்திரைக்கு இந்தியா அரசாங்கத்தார் ஏற்பாடு செய்தார்களே! இப்போது மட்டும் ஏன் செய்யக் கூடாது என்னும் கேள்வி எழுவது இயற்கை தான். 1940-ல் பிரிட்டனுடன் இத்தாலியும் ஜெர்மனியும் மட்டுந் தான் போராடிக் கொண்டிருந்தன. ஜெர்மனியர்களால் தான் கப்பல்கள் போக்கு வரவிற்கு ஆபத்துக்கள் ஏற்படக் கூடும். அப்போது இத்தாலியில் ஏராளமான முஸ்லீம்கள் இருந்தனர். எனவே "முஸ்லீம்களின் பாது காவலன்" என்னும் பட்டப் பெயரை முஸோலினி தனக்குச் சூட்டிக் கொண்டிருந்தார். ஆகையால் தன் மீது அன்பாக உள்ள முஸ்லீம்களின் வெறுப்புக்கு அவர் ஆளாக விரும்ப மாட்டார். எனவே முஸ்லீம்களுக்கு விரோதமாக, அவர் எதுவும் செய்ய மாட்டார். ஆனால் இப்போது ஜப்பானும் யுத்தத்தில் கலந்து விட்டது. எனவே, நிலைமை மாறி விட்டது. ஜப்பானில் முஸ்லீம்கள் கிடையாது என்று தான் சொல்ல வேண்டும். எனவே தாம் கைப்பற்றி யுள்ள நாடுகளிலுள்ள முஸ்லீம்களின் உணர்ச்சிகளை அவர்கள் மதிப்பதில்லை, ஆகையால் ஜப்பானிய நீர் மூழ்கிக் கப்பல்களால், ஹாஜ் யாத்திரைக் கப்பல்களுக்கு ஆபத்து நேரக் கூடும். இந்த நீர் மூழ்கிகள் இந்திய சமுத்திரத்திலும் அரபிக் கடலிலும் சஞ்சரிக்கின்றன வென்று கருத இடமிருக்கிறது.

* * * *

**எதிரிகள் பொய்ப் பிரசாரம்.**

இந்திய அரசாங்கத்தார் செய்துள்ள இந்தத் தீர்மானத்தைக் குறித்து எதிரி ரேடியோக்கள் பிரமாதப்படுத்துகின்றன. முஸ்லீம்கள் மனதில் தப் பெண்ணங்கள் தோன்றும்படி பிரசாரம் செய்கின்றன. அரேபியாவிலுள்ள ஒரு இத்தாலி ரேடியோ 1942-ம் ஞு அக்டோபர் மீ 4 உ யன்று கூறியதாவது:—"அச்சு நாட்டு நீர்மூழ்கிக் கப்பல்களால் ஹாஜ் யாத்திரீகர்களின் கப்பல்களுக்கு ஆபத்துண்டாகி விடும் என்னும் போலிக் காரணத்தைக் கொண்டு, சென்ற வருஷமும் கூட ஹாஜ் யாத்திரையை இந்தியா அரசாங்கத்தார் தடுத்து விட்டார்கள்." அதற்கு முன் தினம் ரோம் ரேடியோ, இதற்குக் கூறிய காரணம் என்ன தெரியுமா? கப்பல்களின் எண்ணிக்கை குறைவா யிருப்பதனால் தான் ஹாஜ் கப்பல்களுக்கு ஏற்பாடு செய்யப்படவில்லை என்று கூறியது. இது தான் எதிரிகள் துர்ப்பிரசார முறை. உண்மையில் 1940-ம் வருஷத்தில் 5 யாத்திரைக் கப்பல்களும் 1941-ம் வருஷத்தில் 9 கப்பல்களும் விடப்பட்டன. சென்ற வருஷம் 10,713 யாத்திரீகர்கள் யாத்திரையை முடித்தார்கள்.

# எகிப்தில் பிரிட்டிஷ் வெற்றி.

## அச்சு நாட்டுப் படைகள் தடுமாட்டம்.

**எல் அலமீனில் நடைபெறும் யுத்தம் ஒரு முடிவடையத் தக்க நிலைமைக்கு வந்து விட்டது. இதிலிருந்து ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது.**

நேச தேசப் படைகள் எதிரி அரண்களை நொறுக்கித் தள்ளிக் கொண்டு, ரோமல் படைகளின் இடது புரத்தைத் தூளைத்துக் கொண்டு, தாண்டிப் போய் தாம் எதிரிப் படைகளுக்கு மேற்கே வேரூன்றிக் கொண்டன. ஆகவே ரோமல் படைகளில் பல இப்போது வலையில் சிக்கியது போலச் சிக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த வலையை உறுதியாக வைத்துக்கொள்ள நேச நாட்டுப் படைகள் பெரிதும் முயன்று வருகின்றன. இதற்கு இடங் கொடுக்கக் கூடாதென்னும் நோக்கத்தோடு ரோமல் தன் டாங்கிப் படைகளைக் கொண்டு கடுமையாகத் தாக்கினார். ஆனால் இந்த டாங்கிகளும் வலையில் சிக்கிக் கொண்டன. மீளுவது கஷ்டம். நம் நேச நாட்டுப் படைத் தலைவர் ஜெனரல் மான்ட்காமெரி இன்னும் கடுமையான யுத்தத்திற்குத் தன்னை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும்.

நேர் முகமாகவே போராடி எதிரியை வெல்ல வேண்டுமென்று ஜெனரல் மான்ட்காமெரி விரும்புகிறார். இது சற்று கடினம் தான்; நெடுங் காலமும் செல்லும். ஆனால் இந்த முயற்சிக்கு ஊக்கங் கொடுக்கக் கூடிய 4 அறிகுறிகள் இப்போது தோன்றுகின்றன. ஒன்று மிகுந்த விமான பலம். மத்தியதரைக் கடலில் நேச நாட்டு விமானப் படைகள் நடத்திய போராட்டத்தைக் கொண்டு நம் விமானம் பலம் மிகவும் மேலானது என்று தெரிகிறது. சென்ற செப்டெம்பர் மாதம் ரோமல் தோல்வியுற்றது முதல், எதிரி துறைமுகங்களையும் அவர்களுக்கு வரும் சப்ளை கப்பல்களையும் நாசம் செய்து, அவர்கள் கையிருப்பில் வைத்திருந்த விமானங்கள், பெட்ரோல், வெடி மருந்துகள், போக்கு வரவிற்கான மோட்டார் வண்டிகள், பல எதிரி கப்பல்கள் ஆகியவற்றை மத்தியதரைக் கடலிலேயே விமானங்களிலிருந்து தாக்கி மூழ்கச் செய்து விட்டனர். வடஆப்ரிக்காவிற்கு எதிரிகள் சப்ளை போக ஒட்டாதபடி தடுக்க வேண்டித் தான் ஜினோவா, டூரின், மிலான் ஆகிய ஊர்களை நேச நாட்டு விமானங்கள் கடுமையாகத் தாக்கின. ஜினோவா எதிரிகளின் முக்கியமான துறை முகங்களில் ஒன்று. இங்கிருந்து தான் சிசிலி தீவிற்கும், அங்கிருந்து லிபியாவிற்கும், எதிரிகள் தம் படைகளுக்கு சப்ளை அனுப்புகிறார்கள். டூரின் ஒரு கைத்தொழில் நகரம். மிலான் ஒரு துறைமுகம். கரை வழியாக வரும் ஜெர்மன் சப்ளை சாமான்களை இங்கிருந்து தான் கப்பலேற்றி சிசிலி வழியாக வடஆப்ரிக்காவிலுள்ள தம் படைகளுக்கு அனுப்புகிறார்கள். க்ரீட் தீவிலுள்ள சூடா விரிகுடாவிற்கு தென் மேற்கே மேலிம் விமான நிலையம் இருக்கிறது. இதன் வழியாகத் தான் ரோமலுக்கு விமான பலம் அவ்வப்போது வந்து கொண்டிருந்தது. இதையும் நேச நாட்டு விமானங்கள் நாசஞ் செய்து விட்டன.

இரண்டாவதாக, ரோமலின் படைகள் என்ன தான் கடுமையாகத் தம்மைத் தாக்கினாலும், அதைச் சமாளித்துக் கொள்ளும் பலம் நேச நாட்டுப் படைகளுக்கு உண்டு.

மூன்றாவதாக, எதிரி அரண்களில் முதல் இரண்டு வரிசைகளில் கடுமையான பிளவுகள் கண்டிருக்கின்றன. எதிரிகள் தம் அரண்களாகச் சுரங்க வெடிகளை அமைத்திருந்த போதிலும், அந்தப் பகுதியிலும் நேச நாட்டுப் படைகள் பிளவு கண்டு, எதிரிகளின் பலமான பாகங்களை அழித்து விட்டார்கள். விமானங்களிலிருந்தும் வெடி குண்டுகளை எறிந்தார்கள் இந்த உதவியால், நம் காலாட் படைகளுக்குப் பக்கத் துணையாக பிரிட்டிஷாருக்கும் அமெரிக்கர்களுக்கும் சொந்தமான டாங்கிப் படையும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆனால் இப்போதுள்ள கடலுக்கும் கட்டாராவிற்கும் இடையிலுள்ள போர்க்களத்தில், ஒரே மட்டாகப் பெரும் படைகளைக் கொண்டு தாக்குவது என்பது முடியாத காரியம். தாக்க வேண்டுமானால், எதிரியின் அரண்களை நம் காலாட் படைகள் தகர்த்து வெல்ல வேண்டும்.

முதலில் சதாரணமாகத் தகர்க்க முடியாத அரண்களைத் தகர்க்கிறதற்காகத் தான் டாங்கிகளைக் கண்டு பிடித்தார்கள். நாளடைவில் யுத்தத் தளவாடங்களில் முக்கியமானதாக இது ஆகி விட்டது. டாங்கிகளை எதிர்த்துப் போராட வேண்டுமானால், வழியில் சுரங்க வெடிகளைப் போட்டு டாங்கிகளைத் தடுத்து பீரங்கிகளைக் கொண்டு அவற்றை நாசஞ் செய்ய வேண்டும். ஆகையால் டாங்கிப் படைகளுக்கு முன்னே காலாட் படைகளை அனுப்பி சுரங்க வெடிகளை எல்லாம் அப்புறப் படுத்திய பிறகு தான், நேச நாட்டு டாங்கிப் படைகள் முன்னேறிப் போகின்றன. பிறகு இந்தப் படைகள் குதிரைப் படையைப் போல வேலை செய்கின்றன.

நான்காவதாக, எதிரிப் படைகள் உள்ள இடம் 400 அடி பள்ளத்திலிருக்கிறது. ஆகவே இங்கிருந்து அவர்களை இலகுவில் வெல்லக் கூடும்.

இவை நமக்குள்ள வசதிகள் என்றாலும், சில வசதிக் குறைவுகளும் நமக்கு இருக்கின்றன. இயற்கைத் தடைகள் இருக்கின்றன. எதிரிகள் கட்டிய அரண்கள் பலமான ஆபிரிக்கப் படைகளின் கடும் எதிர்ப்பு ஆகியவை நமக்குள்ள வசதிக் குறைவுகள். இந்த ஆபிரிக்கப் படைகள் தம் நிலைமைகளைக் காப்பாற்றிக் கொள்ள, மகா பிடிவாதத் தோடு போராடக் கூடியவை. ரோமல் அமைத்துள்ள அரண்கள் மிகவும் உறுதியானவை. ஆகையால் அவற்றைத் தகர்க்க நேச நாட்டுப் படைகளுக்குக் கொஞ்ச காலம் செல்லும். அதுவரை போர்முனையிலிருந்து முக்கியமான எந்தச் செய்தியும் கிடைக்காதென்று தெரிகிறது. டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள், பரந்த இடங்களில் சுரங்க வெடிகளைப் போட்டு வைத்தல், முள் வேலிகளை அமைத்தல், மறைவான இடங்களில் மிஷின் பீரங்கிகளை மறைத்து வைத்தல், பீரங்கிகளை தகுந்த இடங்களில் நிறுத்தி வைத்தல். இத்தனை வகை அரண்களுக் குள்ளாகத் தான் இத்தாலியப் படைகளும் ஜெர்மென் படைகளும் அங்கே இருக்கின்றன.

காலாட் படைகளைக் கொண்டு எதிரி அரண்களைத் தகர்க்கும் முறையை ஜெனரல் மான்ட்காமெரி இப்போது விட்டு விட்டு, வேறொரு புதிய முறையைக் கையாளுகிறார்கள். இது வரை இல்லாத அளவிற்கு ஒரு பெரிய பீரங்கிப் படையை அவர் திரட்டி வைத்துக் கொண்டு இருக்கிறார். எதிரி பீரங்கிகளை வைத்திருக்கும் இடங்களையும் எதிரிகளுக்கு சப்ளைகள் வரும் பாதையையும் விமானங்களிலிருந்து தாக்கும்படி செய்து, அதே சமயத்தில், நன்றாகத் தேர்ந்த காலாட் படைகளை முன்னேறும்படி செய்கிறார். ஷெல் குண்டுகளைக் கொண்டே எதிரி அரண்களைத் தகர்த்து விட வேண்டுமென்று விரும்புகிறார். இதில் வெற்றி பெறுவார் என்பது உறுதி.



# பிரிட்டனின் தளவாட உற்பத்தி

## அபரிமிதமாக அதிகரிக்கிறது

வைஸ் அட்மிரல் வேக் வாக்கர், பழுது பார்க்கப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கைகளைக் குறித்து ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில், யுத்தம் ஆரம்பமானதிலிருந்து 23,000 யுத்தக் கப்பல்களுக்கதிகமாகவே பழுது பார்க்கப்பட்டும், சுமற்றிக் கட்டப்பட்டுமிருந்தன வென்று குறிப்பிடுகிறார். இதில் வியாபாரக் கப்பல்களின் மொத்தம் 14 கோடி டன், 35,000 கப்பல்கள் மீண்டும் பழுது பார்க்கப்பட்டு தயார் செய்யப்பட்டன.

இதுபற்றி "ஜர்னல் ஆப் காமர்ஸ்" என்னும் பத்திரிகைக் கீழ்க்கண்டவாறு எழுதுகிறது :—

இது மிக மகத்தான வேலை. கப்பல்களைப் பழுது பார்க்கும் கம்பெனிகளும் தொழிலாளர்களும் இந்த மிகக் கடுமையான கடமையை நிறை வேற்றினார்கள். இதிலிருந்து என்ன விளங்குகிறது? 100 டன்னுக்கும் அதற்கு அதிகமாகவும் பதிவாகியிருந்த வியாபாரக் கப்பல்களின் எண்ணிக்கை 7,009; மொத்தத்தில் பழுது பார்க்கப்பட்ட கப்பல்கள் 17,948,158 டன்கள். யுத்தம் ஆரம்பமானதிலிருந்து, இந்தக் கணக்கின்படி, ஒவ்வொரு வியாபாரக் கப்பலும் 5 முறைகள் ஏதேனும் ஒரு வகையில் பழுது பார்க்கப்பட்டது. டன் கணக்குப்படிப் பார்த்தால் 7 முறைகள் பழுது பார்க்கப்பட்டன வென்று கணக்கிட வேண்டும்.

ஒரே சமயத்தில், 20 லட்சம் டன் கப்பல்கள் பழுது பார்க்கப்பட்டன. சென்ற மகா யுத்தத்தின் 4-வது வருஷத்தில் (1918-ல்) கப்பல் கட்டிப் பழுது பார்க்கும் தொழிற் சாலைகளில் வேலை பார்த்த தொழிலாளர்களை விட, இப்போது 1 லட்சம் பேர்கள் குறைவாயிருக்கிறார்கள். குறைந்த ஆட்களைக் கொண்டு மிகுந்த வேலையைச் செய்து முடித்திருப்பது இங்கே கவனிக்கத் தக்கது.

1917-ம் வருஷத்தில் கட்டப்பட்ட வியாபாரக் கப்பல்களின் டன்களை விட அதிகமாகவே, 1930-ம் வருஷம் ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் 1931-ம் வருஷம் மே மாதம் 31-ம் தேதி முடிய (1 வருஷம்) கட்டி முடித்திருக்கிறோம். அதாவது 1918-ம் வருஷம் கட்டப்பட்ட அளவிற்குச் சமமாகவே கட்டி முடித்திருக்கிறோம்.

முன்னைய விட இப்போது அதிகக் கப்பல்கள் பழுது பார்க்கப் பட்டிருக்கின்றன. டாங்கிகளை ஏற்றிப்போகும் கப்பல்களும், மற்றும் பல வகைப்பட்ட கப்பல்களும் பழைய மகா யுத்த காலத்தில் தேவையில்லாதிருந்தன. இப்போது அவை பெரிதும் தேவை. இவற்றையும் ஏராளமாகச் செய்திருக்கிறோம். இதனால், கப்பல்கள் கட்டும் தொழிலாளர்களின் வேலை, மேலும் கடுமையாகி விட்டது.

### அமைப்பு.

மிஸ்டர் என். டபிள்யு. இப்ஸிங் என்பவர் தளவாட உற்பத்தி மந்திரியின் காரியாலயத்தைச் சேர்ந்தவர். அதன் ரீஜனல் பகுதிக்குத் தலைவர். இஞ்சினீரிங் தொழிலைச் சேர்ந்தவர்கள் கூட்டமொன்றில் 1942-ம் வருஷம் அக்டோபர் மாதம் 8-ம் தேதி ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது :—

"நாள் ஒன்றிற்கு 75 லட்சம் அல்லது ஒரு நிமிஷத்திற்கு 5,000 பவுன் பெறுமான சாமான்களுக்கு 30,000 கம்பெனிகளுக்கு அதிகமாகவே ஆர்டர்கள் கொடுக்க வேண்டிய கடுமையான வேலை இந்த மந்திரிக் காரியாலயத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கம்பெனிகளில் கோடிக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்".

அமெரிக்காவைச் சேர்ந்த ஒஹியோவில் க்லீவ்லண்ட் என்று ஒரு ஊர் இருக்கிறது. அங்கே சர் ஹாயி பீல் என்பவர் பேசிய போது, யுத்தத் தளவாட உற்பத்தி சம்பந்தமாகக் கையாளப்படும் தந்திர முறைகள் மாற்றப்பட்டதைக் குறித்து ஒரு உதாரணம் சொன்னார். அதை "இஞ்சினீர்" என்னும் பத்திரிகை தன் அக்டோபர் மாதத்திய வெளியீட்டில் வெளியிட்டிருக்கிறது. அது வருமாறு :—

"இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சிறந்த உதாரணமொன்றை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ள பல கம்பெனிகளிலும் இருந்து வந்த போட்டி ஒழிந்து விட்டது. ஒரு பொருளைச் செய்யும் ஒரு கம்பெனி, அந்தப் பொருளில் சேரக் கூடிய பாகங்களை ஒவ்வொன்றையும் செய்ய, ஒவ்வொரு கிளைக் கம்பெனிகளை அமைத்துக் கொள்வது வழக்கம். இதன் மூலம் இந்தக் கம்பெனி உற்பத்திக்கு வேண்டிய பகுதிகளை, பிற கம்பெனிகளில் இருந்து வாங்க வேண்டிய அவசியம் சாதாரணமாக இல்லாது போய் விடுகிறது. இதற்குத் தான் "கட்டுக் கோப்பு" முறை (Pooling system) என்று பெயர். இதுவும் இப்போது ஒழிந்து விட்டது."

யுத்த வேலை சம்பந்தமாக ஒரு க்ரேஜ் கம்பெனி என்ன செய்து கொண்டிருக்கிறது என்று அவர் குறிப்பிடுகிறார். "இந்தக் கம்பெனி தொழிற்சாலை இருக்கும் இடத்தை யடுத்து சுமார் 100 சிறு கம்பெனிகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவற்றில் 10 பேர்களுக்குக் குறைவாக வேலை பார்க்கும் கம்பெனிகள் 52; 10 முதல் 25 பேர்கள் வரை வேலை பார்க்கும் கம்பெனிகள் 36; 25 பேர்களுக்கு அதிகமாக நியமித்திருக்கும் கம்பெனிகள் 17 மட்டுந் தான். இவை இடை விடாது வேலை செய்து கொண்டிருக்கின்றன. இங்கே பீரங்கி வண்டிகளும் வெடி மருந்துகளும் தயாராகின்றன. இங்கே தயாராகும் பொருள்கள் திருப்திகரமாகவும் இருக்கின்றன. தமக்குக் கொடுக்கப்படும் எல்லா வேலைகளையும் ஒப்புக் கொண்டு நிறை வேற்ற, இந்தக் கம்பெனியாரால் முடியவில்லை. அன்றியும் இங்கே ஷெல்களையும், வெடிகுண்டின் பகுதிகளையும், சிறு துப்பாக்கி முதலியவற்றையும் கூடச் செய்கிறார்கள். இந்தக் கம்பெனி வேலையைக் குறித்து இன்ஸ்பெக்டர்கள் அனுப்பி யிருக்கும் அறிக்கைகள் மிக மிகச் சிறந்தவை. வேலையே கிடைக்காமல் இருந்த இந்தக் கம்பெனியில், இப்போது வாரம் ஒன்றிற்கு 50,000 டாலர் பெறுமானமுள்ள வேலைகள் நடைபெறுகின்றன. இங்கே வேலை செய்பவர்களும் நன்றாகத் தேர்ந்தவர்களல்ல. அவர்கள் கையாளும் ஆயுதங்களும் மிகச் சாதாரணமானவை. அங்கே 2,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் 1,300 பேர்கள் பெண்கள்; 700 பேர்கள் ஆண்கள். 200 பேர்கள் மட்டுந் தான் தொழில் தேர்ச்சி யுள்ளவர்கள். 1,800 பேர்கள் தொழில் தேர்ச்சி யில்லாதவர்கள். அநேகம் தொழிற்சாலைகளில் 3 ஷிப்ட்கள் வேலை நடக்கின்றன. இவற்றிற்குப் பொருள் உதவுவது, கணக்கு வைப்பது, மேல் பார்ப்பது ஆகிய எல்லாப் பொறுப்பும் அந்த க்ரேஜ் கம்பெனியைச் சார்ந்தது தான்".

## சோவியத் கப்பற் படை அதிகப்படுகிறது.

"சோவியத் யுத்தச் செய்தி" என்னும் பத்திரிகைக் கீழ்க் கண்டவாறு எழுதுகிறது :—

சென்ற 3 மாதங்களுக் குள்ளாக சோவியத் கப்பற் கட்டும் தொழில் 100-க்கு 20 விகிதம் அதிகப்பட்டிருக்கிறது. கப்பற் கட்டுவதற்கும் பழுது பார்ப்பதற்கும், யுத்தத்திற்கு முன்பு தேவையா யிருந்த நேரத்தை விட மிகக் குறைந்த நேரத்திலேயே வேலைகள் முடிந்து விடுகின்றன. நாளது நவம்பர் மாதத்தில் சோவியத் புரட்சியின் 25-வது ஆண்டு விழா நடை பெறும். அப்போது, பல புதிய கப்பல்கள் கட்டி சோவியத் கப்பற் படைக்கு ஒப்புவிக்கப்படும்.

ஒருதரம் ஒரு பெரிய கப்பலைப் பழுது பார்க்க வேண்டி யிருந்தது. கப்பல்கள் பழுது பார்ப்பதற்காக ஒதுக்கப் பட்டுள்ள இடம், இந்தக் கப்பலுக்குப் போதவில்லை. நிபுணர்கள் உடனே கூடினார்கள். ஒரு நல்ல யோசனை பிறந்தது. பழுது பார்க்கும் இடத்தில் இருக்கக் கூடிய பகுதியில் அந்தக் கப்பல் எந்த அளவிற்குக் கொள்ளுமோ, அந்த அளவிற்கு மட்டும் வைத்துக் கொண்டு, மிகுந்திருக்கும் கப்பல் பாகத்தைக் கடலிலேயே நிறுத்தி விடுவது என்று முடிவு செய்தனர். இப்படியாக அந்தக் கப்பல் பழுது பார்க்கப்பட்டு முடிந்தது.

ஒரு பெரிய கப்பல் கட்டும் தளத்தின் டைரக்டரான ட்குஷ்ன், யுத்தத்திற்கு முன்பு தன் தொழிற்சாலையில் கட்டப் பட்டு வந்த யுத்தக் கப்பல்களை விட, 8 மடங்கு அதிகமான கப்பல்கள் இப்போது கட்டப் படுகின்றன வென்று அறிவிக்கிறார். மற்றொரு கப்பல் கட்டும் தளத்தின் டைரக்டர் சர்குசேவ். இவர் சமீபத்தில் தான் போர்முனையிலிருந்து திரும்பினவர். முன்னையை விட அரை மடங்கு அதிகமாக இப்போது தன் தொழிற் சாலையில் வேலை நடக்கிறதாக அவர் அறிவிக்கிறார்.

சோவியத் ஆற்றங் கரைகளிலும் இப்போது கப்பல்கள் கட்டும் தளங்கள் அமைத்துக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கப்பல் கட்டும் தளத்தில் டால்ஸ்டிக் என்னும் டைரக்டரின் மேற்பார்வையில், சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் 6 மடங்கு அதிகம் கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அது போலவே நிச்கிபொரோவ் என்பவர் மேல் பார்வையில் கப்பல் உற்பத்தி சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் 3 மடங்கு அதிகப்பட்டிருக்கிறது.

லெனின்கிராட் நகரத்தை ஜெர்மானியர்கள் முற்றுகையிட்டு பீரங்கிகளைக் கொண்டு தாக்கிக் கொண்டிருக்கும் போதுகூட, குறிப்பிட்ட காலத்தில், அங்குள்ள கப்பல்கல் கட்டும் தளங்களில் டதுக் கப்பல்களும் கட்டினார்கள். பழுதான கப்பல்களையும் பழுது பார்த்தார்கள். சமீபத்தில் ஒரு கப்பலை, இரவு பகலாய் பழுது பார்த்து முடித்தார்கள். யுத்தத்திற்கு முன்பு இதைச் செப்பனிட எவ்வளவு காலம் செல்லுமோ, அதைவிட இப்போது 2 மாதங்களுக்கு முன்னதாகவே செய்து முடித்து விட்டார்கள்.

### 150 உணவுத் தொழிற் சாலைகள்.

இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு தொழிற்சாலை விகிதம் புதிது புதிதாக இங்கே முளைக்கின்றன. இவற்றில் உணவுப் பொருள்களைத் தயார் செய்கின்றனர். பெரும்பாலும் கிழப் பகுதிகளில் தான் இருக்கின்றன. அரசாங்கத் திட்டப்படி நடப்பு வருஷத்தில் 150 புதிய உணவுப் பொருள் தொழிற் சாலைகள் ஏற்பட வேண்டும். இவற்றுள் 50 ஏற்கனவே வேலை செய்து கொண்டிருக்கின்றன. இவை சர்க்கரை மில், சாராயம் காய்ச்சும் இயந்திரங்கள், எண்ணெய் மில்கள், தகர டப்பிகள் செய்து உணவுப் பொருள்களை அவற்றுள் அடைக்கும் தொழிற் சாலைகள், ரொட்டிக் கிடங்குகள் ஆகியன. சில சிகிரெட்டு மில்களும் இருக்கின்றன. மத்திய ஆசியாவிலுள்ள குடியரசு நாடுகளில் டப்பிகளில் உணவுப் பொருள்களை அடைக்கும் தொழில் மிகவும் அதிகமாக விருத்தியாகி யிருக்கிறது. இதற்குப் புதிய தொழிற் சாலைகள் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அன்றியும், மாஸ்கோ, துலா, கலினின், ஸ்மாலென்ஸ்க், ரியாஸான் ஜில்லாக்களை எதிரிகளிட மிருந்து மீண்டும் கைப்பற்றிய போது, அங்கிருந்த 108 தொழிற் சாலைகளிலும் வேலையை மீண்டும் தொடங்கி விட்டார்கள் மத்திய ஆசியாவி லிருக்கும் ஒரு இறைச்சிக் கம்பெனி எந்த விதம் அதிக வசதியு மில்லாமல் 2½ மடங்கு அதிகமாக இப்போது உற்பத்தி செய்கிறது.

---

## அங்கேயே இருந்தவர் கூறக் கேட்டேன்.

அவர் யார்? அவர் அங்கிருந்தது உண்மை தானா? பொய் வதந்திகளைப் பரப்பாதீர்கள்! அவற்றால் சந்தேகமும், துன்பமும், நஷ்டமுந் தான் உண்டாகின்றன. இப் பொய் வதந்திகளை எதிரிகள் கிளப்பி விட்டு, ஏமாந்தவர்கள் இவற்றை பரப்புவார்கள் என்று நம்புகிறார்கள்.

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியர்களுக்கு விரோதமாகத்

தேசியப் போர் முனையை அமையுங்கள்!



## மிகச் சிறந்த நோக்கம்

யுத்தத்தினால் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. என்றாலும், இதனால் இந்த வருஷ கிருஸ்மஸ், புது வருஷப் பண்டிகைகளுக்கு வாழ்த்துக் கடிதங்கள் பரிமாறிக் கொள்ளும் வழக்கத்தை கைவிடப் போவ தில்லை.

ஒரு ஆலோசனை. இந்த நெருக்கடியான காலத்தில், வாழ்த்துக் கடிதங்கள் அச்சிட்டுத் தயார் செய்வதும் கஷ்டந் தான். ஆனால் இதனால் கிடைக்கும் இலாபத்தை தகுந்த தர்மத்திற்காகப் பயன் படுத்துவதானால், குறிப்பாக காயப்பட்டவர்களுக்கும் நோயாளிகளுக்கும் பயன் படுத்துவதானால், அச்சிடலா மல்லவா ?

இந்தத் தருமத்தை யடைவதற்கு செஞ்சிலுவைச் சங்கத்தை விட மேலான ஸ்தாபனம் இல்லை யென்றே சொல்லலாம். எனவே, "செஞ் சிலுவை வாழ்த்துக் கார்டு"களை இந்நாட்டிலுள்ள எல்லா ஜெனரல் தபாலாபீசுகளிலும் அடுத்த டிசம்பர் மாதம் முதல் விற்பார்கள். இந்த விற்பனையால் கிடைக்கும் இலாபம், இந்தச் சிறந்த தர்மத்திற்குப் பயன் படும். ஆகவே, இந்த வாழ்த்துக் கார்டுகளை வாங்கும் பொருட்டுக் கொஞ்சம் பணம் கையில் வைத்துக் கொள்ளுங்கள்.

## "யுத்த வெற்றி" போட்டி

### லண்டன் பெண்கள் பார்லிமெண்ட் முயற்சி.

யுத்தத்திற்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வதில் இங்கிலாந்தி லுள்ள அநேகம் பெண்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் தொழிற்சாலைகளிலும், தெருக்களிலும், நகரப்பகுதிகளிலும், காரியாலயங்களிலும், டிப்போக்களிலும் வேலை செய்கிறார்கள். இவர்கள் 'லண்டன் பெண்கள் பார்லிமெண்ட்' என்னும் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இங்கே சமீபத்தில் ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்கள். அதன்படி உற்பத்தியை அதிகப்படுத்துவதிலும், அதிக நேரம் வேலை செய்வதிலும், தவறாது வேலைக்கு வருவதிலும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான நிலக்கரி முதலிய பொருள்களை மிகச் சிக்கனமாக உபயோகிப்பதிலும், தமக்குள்ளாகப் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போட்டி தொழிற்சாலைகளுக் குள்ளாகவும், தெருக்களில் வேலை செய்யும் பெண்களுக் குள்ளாகவும் ஏற்படுகிறது. இந்தப் போட்டியை முன்னிட்டு, தொழில் செய்யும் பெண்கள், தம்மை கூட்டங் கூட்டமாக வகுத்துக் கொண்டார்கள். இந்த ஒவ்வொரு கூட்டத்திற்கும் "ஷாக பிரிகேட்" (Shock brigade) என்று பெயர். இவர்களுடைய பார்லிமெண்டின் 4-வது பொதுக் கூட்டத்தில் இந்தப் போட்டியின் முடிவு அறிவிக்கப்படும். வெற்றி பெற்ற கூட்டத்தினர் தாம் எந்த முறையைக் கையாடியதினால் வெற்றி பெற முடிந்தது என்பதை அக்கூட்டத்தில் அறிவிப்பார்கள்.

இந்தப் போட்டியில் 350 தொழிற்சாலைகளும், 200 கோஷ்டிக் குடும்பப் பெண்களும் கலந்து கொள்ளுவார்கள் என்று தெரிகிறது. இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முதலில் முன் வந்தது ஒரு லண்டன் தொழிற்சாலை. இங்கே 3 000 பேர்கள் வேலை செய்கிறார்கள். இணைக்கும் பட்டடையிலும், இயந்திரப் பட்டடையிலும், மற்றப் பட்டடைகளிலும் வேலை செய்யும் பெண்கள், தனித்தனி கோஷ்டிகளாகத் தங்களை வகுத்துக் கொண்டு ஒவ்வொரு கோஷ்டியினரும் போட்டிகளில் கலந்து கொள்ளுகின்றனர். இவர்கள் தங்களுக் குள்ளாகவே போட்டியிடுகின்றனர். ஒரு தொழிலாளர் பொதுக் கூட்டத்தில் இதைப் பற்றி குறிப்பிட்ட போது, மிகுந்த உற்சாகத்தோடு இதை ஏற்றுக் கொண்டார்கள். ஒவ்வொரு இலாகாவிலும் உற்பத்தியாகிறதை அறிவிக்கும் படமொன்றை அந்த இலாகா வாயிலில் மாட்டி வைப்பதென்றும், எல்லா உற்பத்தியையும் சேர்த்து 'பாரமீட்டர்' (வாயு மானி) போன்ற ஒரு அளவுகோலை அத்தொழிற்சாலை வாசலில் கட்டி வைப்பதென்றும் முடிவு செய்திருக்கிறார்கள். இந்த அளவுகோல், உற்பத்தி எவ்வளவு ஆகியிருக்கிறதென்று தெரிவிக்கும்.

இந்தப் போட்டியைப் பரிசீலனை செய்து முடிவு கட்டுகிறவர்கள் முதலாளிகளும், பெரிய மேஸ்திரிகளும் தான். இதில் வெற்றி பெறுகிறவர்களுக்கு 3 பரிசுகள் வழங்கப்படும். இவை சேம நிதிப் பத்திரங்கள். வெற்றி பெற்ற இலாகாவிற்கு ஒரு பெரிய கொடியைப் பரிசாகக் கொடுக்கப்படும். அந்தக் கொடியை அந்த இலாகா வாசலில் அவர்கள் கட்டிக்கொள்ளுவார்கள்.

## ஜப்பானியர் வாக்குறுதியை நிறைவேற்றும் அக்கிரமம்.

### 10 நாட்கள் தொடர்ச்சியாகத் தலைகளை வெட்டினர்.

ஜப்பானியப் படையினர் தம் காம இச்சையைத் தணித்துக் கொள்ள வியபிசார விடுதிகளை வைத்திருக்கின்றார்கள். இங்கே 9,000 இளம் பெண்கள் இருக்கிறார்கள். இந்திய யுத்தக் கைதிகளைத் துணியை அவிழ்த்துக் கொண்டு கோவணத்தோடு திரியும்படி விடுகிறார்கள். நடுத்தெருவில் 10 நாட்கள் கொலைகள் செய்து கொண்டிருந்தார்கள். ஜப்பானியர் வசம் சிக்கி இந்தக் கொடுமைகளுக்கு ஆளானவர்கள் சொன்ன உண்மைகள் தாம் இவை.

சூரியோதயத்தைத் தம் சின்னமாகக் கொண்டிருந்த மலேயாவிலும் பர்மாவிலும் இப்போது எப்படி கடும் இருள் கவிந்திருக்கிறது என்று தெரிவிக்கக் கூடிய தஸ்தாவேஜி ஒன்று இப்போது கிடைத்திருக்கிறது.

பொது ஜனங்களை அன்பாக நடத்துவதாக ஜப்பானியர் கொடுத்த உறுதிமொழியை எந்த அளவிற்குக் காப்பாற்றுகிறார்கள் என்று, சிங்கப்பூரில் நிகழ்ந்த சம்பவத்தை இது குறிப்பிடுகிறது.

சிங்கப்பூர் எதிரி வசமானது. அங்கிருந்த சீனர்களை எல்லாம் கைதி செய்தனர். தமக்குத் தாமே புதை குழிகளைத் தோண்டிக் கொள்ள வேண்டுமென்பது அவர்களுக்கு ஜப்பான் அதிகாரிகள் கொடுத்த கட்டளை. பிறகு அவர்கள் அந்தக் குழியில் முழங்காலிட்டு உட்கார்ந்து கொள்ள வேண்டும். ஒரு ஜப்பானிய உத்தியோகஸ்தன் முதல் குழியிலிருப்பவருடைய தலையை வெட்டுகிறான். அவனுடைய சிப்பந்திமற்ற குழிகளிலுள்ளவர்கள் தலைகளை வெட்டுகிறார்கள். அடுத்த வரிசையிலுள்ள சீனக் கைதிகள் இவர்களுடைய பிணங்களை அந்தந்தக் குழியில் போட்டுப் புதைத்து விட்டு, தாமும் வெட்டப் படுவதற்குத் தயாராகவேண்டும். இத்தனையும் சிங்கப்பூர் நடுத் தெருவில் தொடர்ந்து 16 நாட்கள் நடைபெற்றன.

13 வயதிற்கு மேல் 25 வயதிற்குட்பட்ட எல்லா பெண்களையும் அழைத்துப் போய் ஜப்பானிய இராணுவத்தார் வைத்து நடத்தும் வியபிசார விடுதிகளில் வைத்துக் கொண்டிருக்கின்றனர்.




ஐரோப்பாவில் ஜெர்மானியர் கைப் பற்றியுள்ள நாடுகளிலும் சரி, சீனாவில் ஜப்பான் கைப் பற்றியுள்ள நாடுகளிலும் சரி, செழிப் பொங்கி செங்கதிர் பூத்து நிற்கும் விளை நிலங்களையெல்லாம் பகைவர்கள் அறுவடை செய்து அனுபவித் தாண்டு வர, அந்தத் தேச மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக பட்டினி கிடந்து மடிகிறார்கள். என்னே கோரக் காக்ஷி! விவசாயத்தையே ஜீவ மூலாதாரமாகக் கொண்டுள்ள நம் தாய் நாட்டிற்கும் இது போன்ற கொடிய கதி நேர, நாம் கண்டு சகித்திருப்பதா? நீர் வளம் நில வளம் மிகுந்து, சகல நற் சீரகளுடனும் விளங்கும் இத் திரு நாடு, எதிரிகள் கண்களை மிகக் கவர்ந்து நிற்பதில் அதிசயமொன்று மில்லை. பசப்பு வார்த்தைகளால் நம்மை மதி மயக்கி அவர்களுக்குப் பணியச் செய்யப் பார்க்கிறார்கள் ஜப்பானியர்கள். உஷார்! ஏமாந்து மட்டும் போகாதீர்கள்! எல்லோரும் கையும் மெய்யு மொத்து, நம் பூரண பலத்துடன் இவர்களுக்குச் சரியான பாட மொன்று கற்பிப்போம். இவர்களை இங்கு நுழைய விட்டோமானால், நம் பெண்டிர் பிள்ளைகளின் கதி, முற்றும் பட்டினி முழுப் பட்டினி யல்லோ ஆகி விடும்!

ஜப்பானியருக் கெதிராக
தேசியப் போர்
முனையை
அமையுங்கள்.

---

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு நவம்பர் மீ 13உ, வெள்ளிக்கிழமை [இதழ் 45



## நமது யுத்த நோக்கங்கள்

"நமது முதலாவது நோக்கம்:—ஹிட்லரின் ஆட்சியையும் அதை ஆட்டுவிக்கிறவர்களையும் அடியோடு அழிக்க வேண்டும்

நமது இரண்டாவது நோக்கம்:—ஹிட்லரின் படைகளையும் அவற்றின் தலைவர்களையும் அழிக்க வேண்டும்

நமது மூன்றாவது நோக்கம்:—ஐரோப்பாவின் 'புதிய அமைப்பை' அழித்து, அப்படி அமைக்கிறவர்களைத் தண்டிக்க வேண்டும்

தோழர்களே! விடுதலையை முன்னிட்டுப் பெரும் போராட்டத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இதில் நாம் தனித்துப் போராட வில்லை; நம் நேயர்களோடு சேர்ந்து போராடுகிறோம். மனித இனத்திற்கே கொடும் விரோதியான ஜெர்மன் ஏகாதிபத்தியத்தையும் பாசிஸ்ட் ஏகாதிபத்தியத்தையும் கட்டாயம் வெல்லுவோம்"

—"ஸ்டாலின்"

# எதிரிகள் பிரசாரத்திற்கு சவுக்கடி

## இதுவரை யில்லாதபடி ஒற்றுமை ஏற்பட்டு விட்டது

### யுத்தத்திற்குப் பிறகு உலக மக்கள் நிலை

நேச தேசத்தார்களுக்குள்ளாக, குறிப்பாக பிரிட்டனும் அமெரிக்காவும் ஒரு புற மிருந்து கொண்டு ரஷ்யாவிற்கு விரோதமாகக் காரியங்களைச் செய்கிறார்கள் என்று விரோதி ரேடியோக்கள் நெடு நட்களாகப் பிரசாரம் செய்கின்றன. இது பச்சைப் புளுகு என்று பல முறை மெய்ப்பிக்கப் பட்டிருக்கிறது. சமீபத்தில் ரஷ்யப் புரட்சியின் 25-வது ஆண்டு விழா நடைபெற்றது. அப்போது ரஷ்ய மக்களின் தலைவரான தோழர் ஸ்டாலின் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் எதிரிகளின் பிரசாரம் முழுப் பொய் என்பதை அவர் படிப்படியாக விளக்கிக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது :—

இரண்டு கட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. இத்தாலியும் ஜெர்மனியும் சேர்ந்தது ஒரு கட்சி ; மற்றொரு கட்சி பிரிட்டன், சோவியத் ரஷ்யா, அமெரிக்கா சேர்ந்தது. எதேச்சையை நாடும் மக்களின் மீது, ஹிட்லரைத் தலைவராகக் கொண்ட ஜெர்மானியர்கள் யுத்தம் நடத்துகிறார்கள். இந்த இரு கட்சியார்களின் திட்டங்களும் ஒன்றிற் கொன்று முரண்பட்டன.

இத்தாலிய-ஜெர்மன் கூட்டுக் கட்சியின் திட்டமாவது :—

> பிற இனத்தவர் மீது வெறுப்பு. குறிப்பிட்ட ஒரு சில நாட்டவர்கள் தான் உயர்வு என்னும் எண்ணம். மற்ற நாட்டவர்களை அடிமைப் படுத்தி வைப்பது. தோற்ற நாட்டினைப் பொருளாதாரத் துறையில் அடிமைப் படுத்துவது. அந் நாட்டின் சொத்துக்களைச் சூறையாடுவது. ஜன நாயக உணர்ச்சியை யழிப்பது. எங்கும் ஹிட்லர் ஆட்சியை நிலை நாட்டுவது.

ஆனால், ஆங்கிலோ சோவியத் அமெரிக்கன் கூட்டுக் கட்சியின் திட்டமாவது:—

> எந்த இனத்தவரையும் ஒதுக்கி வைப்பது என்பது ஒழிய வேண்டும். எல்லா நாட்டவரும் சமம் என்னும் கொள்கையை நிலை நாட்ட வேண்டும். அவரவர் எல்லைப் புறங்கள் நிரந்தரமா யிருக்க வேண்டும். அடிமைப் பட்ட நாட்டு மக்களை விடுவிக்க வேண்டும். அவர்கள் மீண்டும் தம் ஆட்சி உரிமை பெற உதவ வேண்டும். தம் இஷ்டம் போல் ஒரு ஆட்சி முறையை யமைத்துக் கொள்ள அவர்களுக்கு உதவ வேண்டும். துன்பத்திற் காளான நாட்டு மக்களுக்குப் பொருளாதார உதவி புரிய வேண்டும். அவர்கள் முன்னேற்ற மடைய பல வகைகளிலும் உதவ வேண்டும். ஜன நாயக உரிமைகள் மீண்டும் அவர்களுக்குக் கிடைக்கும்படி உதவ வேண்டும். ஹிட்லர் ஆட்சியை அடியோடு அழிக்க வேண்டும்.

மேலும் ஸ்டாலின் கூறியதாவது :—ஆங்கிலோ சோவியத் அமெரிக்கக் கூட்டுக் கட்சி ஒழுக்கத்திலும் அரசியல் துறையிலும் பெரிதும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இதன் பயனாக கோடிக் கணக்கான மக்கள், ஹிட்லரின் கொடுமைகளை வெல்ல ஒன்று கூடி முற்பட்டிருக்கிறார்கள். ஹிட்லரோடு போராடி வெல்ல இந்தக் கூட்டுக் கட்சியின் திட்டமே போதுமானது. மிஸ்டர் சர்ச்சில் மாஸ்கோவிற்கு விஜயம் செய்ததே ஆங்கிலோ-சோவியத் ஒற்றுமைக்குச் சிறந்த உதாரணமாகும். அப்போது எல்லா விவரங்களையும் இருவரும் உணர்ந்து கொள்ளத் தகுந்த சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அவர் தன் பிரசங்கத்தின் கடைசியில், சோவியத் ரஷ்யா இந்தப் போராடுவதற்கு, மூன்று காரணங்கள் கூறினார்.

1. ஹிட்லரின் ஆட்சியையும் அதை ஆட்டுவிக்கிறவர்களையும் அடியோடு அழிக்க வேண்டும்.

2. ஹிட்லர் படைகளையும் அவற்றின் தலைவர்களையும் அழிக்க வேண்டும்.

3. ஐரோப்பாவின் 'புதிய அமைப்பை' அழித்து அதை அமைக்கிறவர்களைத் தண்டிக்க வேண்டும்.

"தோழர்களே ! விடுதலையை முன்னிட்டுப் பெரும் போராட்டத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இதில் நாம் தனித்துப் போராட வில்லை. நம் நேயர்களோடு சேர்ந்து போராடுகிறோம். மனித இனத்திற்கே கொடும் 'விரோதியான ஜெர்மன்' ஏகாதிபத்தியத்தையும் பாசிஸ்ட் ஏகாதிபத்தியத்தையும் கட்டாயம் வெல்லுவோம்.

**சரியான சவுக்கடி.**

நேச நாட்டவர்களுக்குள் வேற்றுமைகள் மிகவும் உண்டு என்று கோபல்சும் அவருடைய கூட்டாளிகளும் செய்யும் பொய்ப் பிரசாரத்திற்கு தோழர் ஸ்டாலின் செய்த பிரசங்கம் சரியான சவுக்கடி யாகும். பொய்ப் பிரசாரம் வெகு அதிகமாக நடைபெற்றிருக்கின்றபடியால், சில விஷயங்களை நாம் பரிசீலனை செய்ய வேண்டி யிருக்கிறது. ஆங்கிலோ-சோவியத்-அமெரிக்கக் கூட்டுறவினால், நேச நாட்டினர் என்னென்ன சாதித்திருக்கின்றனர் ; இன்று அவர்கள் படைகள் மிகவும் பல முள்ளவையாக இருப்பதற்குக் காரணம் என்ன வென்று பரிசீலனை செய்ய வேண்டும். ஹிட்லருடைய படைகள் அடியோடு அழிகிற வரை போராடித் தீருவது என்று நேச நாடுகள் ஒன்றிற் கொன்று வாக்குறுதி கொடுத்துக் கொண்டதைக் குறித்து முதலில் கவனிப்போம். இந்த ஜாபிதாவில் மிகவும் முக்கியமானது, 194 -ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 14-ம் தேதி ரூஸ்வெல்ட் வெளியிட்ட அத்லாண்டிக் பிரகடனம். இதில், 26 நாடுகளின் பிரதிநிதிகள் கையொப்ப மிட்டிருக்கின்றனர். பிறகு 4 நாடுகள் இவற்றோடு சேர்ந்தன. இதில் உலக மக்கள் அனைவருக்கும் 4 வகைகளில் விடுதலை ஏற்பட வேண்டு மென்று குறிப்பிட்டிருந்தது. 1942-ம் வருஷம் பிப்பிரவரி மாதம் 23-ம் தேதி அமெரிக்க பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறியதாவது :—

"முக்கியத்திலும் கௌரவத்திலும் சம நிலையிலுள்ள எதேச்சையான மக்கள் சேர்ந்த சங்கந் தான் நேச நாடுகள். நம்மில் அவரவர் மேற்கொண்ட வேலையைத் தவறாது நிறைவேற்ற வேண்டும். நேச நாடுகள் ஒவ்வொன்றும் இன்றியமையாதது. இவை ஒவ்வொன்றும், ஒன்றை யொன்று சார்ந்திருக்கிறது. சாம்ராஜ்யத்திலே குடியேற்ற நாட்டந்தஸ்து என்றால் என்ன என்பதை 1926-ம் வருஷம் பெல்போர் பிரபு ஒரு பிரகடனத்தின் மூலம் விளக்கியதை இது ஒத்திருக்கிறது. பிறகு நேச நாடுகள் 1942-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதி ஒரு பிரகடனம் செய்தார்கள். "அதில் கையெழுத்துப் போட்ட எல்லா நாடுகளும் ஒன்றோடொன்று ஒத்திருப்பதாக வாக்குறுதி கொடுத்தன" பிறகு பல ஒப்பந்தங்கள் உலகிலுள்ள எதேச்சையான எல்லா நாடுகளும் செய்து கொண்டன. இவற்றுள் மிகவும் முக்கியமானவை:— (1) 1942-ம் வருஷம் மே மாதம் நடைபெற்ற ஆங்கிலோ-ரஷ்ய ஒப்பந்தம். (2) 1941-ம் வருஷம் ஜூலை மாதம் ரஷ்யாவிற்கும் போலந்திற்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். (3) க்ரீசுக்கும் யூகோஸ்லேவியாவிற்கும் 1942-ம் வருஷம் ஜனவரி மாதம் ஏற்பட்ட ஒப்பந்தம். (4) 1942-ம் வருஷம் பிப்பிரவரி மாதம் ரியோ என்னும் ஊரில் தென் அமெரிக்க நாடுகளுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தம். இந்த ஒப்பந்தங்களாலும் பிரகடனங்களாலும், எதேச்சையையும் ஜனநாயகத்தையும் ஆதரிக்கும் நாடுகளெல்லாம் ஒன்று பட்டன.



**ஸ்டாப் தலைவர்கள் கமிட்டி.**

இந்த யுத்தத்தில், ஒன்றுபட்ட நோக்கத்தாலும் எண்ணத்தாலும் என்ன சாதிக்க முடிந்தது ? இந்தப் போராட்டத்தை நடத்த ஒரு கூட்டு ஸ்தாபனம் அமைக்கப் பட்டு விட்டது. 1942-ம் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். இதில் 3 அமெரிக்க உத்தியோகஸ்தர்களும் 3 பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் அங்கத்தினர்களா யிருந்தனர். இதற்கு "ஸ்டாப் தலைவர்கள் கமிட்டி" என்று பெயர். யுத்தத்தை எந்த முறையில் நடத்த வேண்டு மென்பது பற்றி திட்டம் வகுக்கும் பொருட்டுத் தான் இந்தக் கமிட்டியை ஏற்படுத்தினார்கள். இதற்கு உதவியாக ஜெனரல் மார்ஷல் அமெரிக்காவிலிருந்து லண்டனுக்கு வந்தார். மாஸ்கோவில் இது போன்ற கமிட்டி எதுவும் அமைக்கப்பட வில்லை. ஏனென்றால், ரஷ்யர்களுக்கு தம் போராட்டத்தை நடத்துவதற்கு, ஆங்கிலோ அமெரிக்கர்களின் உதவி தேவை யில்லை, என்றாலும் மாஸ்கோவில் மூவகைப் படைகளிலும் பிரிட்டிஷ் இராணுவ மிஷன்களும் அமெரிக்க இராணுவ மிஷன்களும் இருக்கின்றன. அது போலவே, ரஷ்ய இராணுவ மிஷன்கள் லண்டனிலும் வாஷிங்டனிலும் இருக்கின்றன. ஆகவே இந்த மூன்று நாடுகளின் இராணுவங்களுக்குள் ஒரு வகைத் தொடர்பு அமைந்திருக்கிறது. சென்ற ஆகஸ்டு மாதம் மிஸ்டர் சர்ச்சில் தோழர் ஸ்டாலினைச் சந்தித்துப் பேசினார். இதிலிருந்து ஒரு உண்மை விளங்குகிறது. இவர்கள், தகவல்களையும் உதவியையும் பரிமாறிக் கொள்வது மட்டு மன்றி, கலந்து பேசி ஒரு திட்டம் வகுத்திருக்க வேண்டு மென்றும் தெளிவாகிறது. பசிபிக்போர் முனையில் ஒரு விசேஷ யுத்தக் கௌன்சிலை நியமித்தார்கள். இது லண்டனிலும் வாஷிங்டனிலும் கூடுகிறது. பசிபிக் யுத்தத்தில் சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளின் (சீனா உள்பட) பிரதிநிதிகளும் இதில் அங்கத்தினர்களா யிருக்கிறார்கள். சீனத் தலைவரான ஜெனரலிஸிமோ ஷியாங் கெய் ஷேக்கின் ஸ்டாப் தலைவராக ஜெனரல் ஸ்டில்வெல் நியமிக்கப் பட்டிருக்கிறார். ஜெனரலிஸிமோவே பல முறை பிரயாணம் செய்து ஜெனரல் வேவலையும் ஜெனரல் ஸ்டில்வெல்லையும் கலந்து பேசியிருக்கிறார். இப்படியும் விசேஷத் தொடர்பு ஏற்பட்டது.

யுத்தத்திற்குத் தேவையான சாமான்களைச் செய்து விநியோகிப்பது பற்றியும் பல கூட்டு ஸ்தாபனங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவற்றுள் முதலில் ஏற்பட்டது : 1942-ம் ஜனவரியில் ஏற்பட்ட கூட்டு உற்பத்தி போர்டு. பிரிட்டிஷ் அமெரிக்க உற்பத்தித் திட்டம் நிறைவேறுவதற்கு இது மிகவும் உதவுகிறது. இதன் பயனாக, போராடும் (Fighters) விமானங்களை பிரிட்டனிலும், வெடிகுண்டுகளை எறியும் விமானங்களை அமெரிக்காவிலும் தயாரிக்கிறார்கள். வெடி மருந்துகள் தயார் செய்வதிலும், கூட்டு ஸ்தாபனங்கள், வேலைகளைப் பகிர்ந்து கொண்டு செய்து முடிக்கின்றன. அது போலவே கப்பல்கள் கட்டுவதிலும் பகிர்ந்து கொண்டு வேலை செய்கிறார்கள். கூட்டு உணவு போர்டின் உதவியினால் பிரிட்டனில் உணவுப் பிரசினை ஒருவாறு தீர்ந்தது. சம்பந்தப் பட்ட நேச நாடுகளின் பிரதிநிதிகளோடு இந்த போர்டுகளின் அங்கத்தினர்கள் அவ்வப்போது கலந்து ஆலோசிக்கிறார்கள்.

• • • •

**இராணுவக் கூட்டுறவு.**

இராணுவ தளங்களையும் படைகளையும் ஒன்று படுத்துவதிலும் கூட நெருங்கிய கூட்டுறவு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு உதாரணமாக 1940-ம் ஆண்டில் கரிபியன் தளங்களை அமெரிக்காவிற்குக் குத்தகையாகக் கொடுத்ததைச் சொல்லலாம். பர்மாவில் பிரிட்டிஷ் படைகளும் சீனப் படைகளும் அமெரிக்கப் படைகளும் ஒத்திருந்து போராடியது மற்றொரு உதாரணமாகும். சமீபத்தில் அலாஸ்கா வழியாக ஒரு வழியை ஏற்படுத்தியதும், வட அமெரிக்காவில் கூட்டு விமானப் பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்ததும் இதற்கு உதாரணங்கள் தான். கடன் குத்தகைத் திட்டத்தால் பிரிட்டனுக்கும் அமெரிக்காவிற்கும் நன்மை தான். நீர் மூழ்கிக் கப்பல்களோடு போராடுவதற்கு அமெரிக்காவிற்கு பிரிட்டன் கப்பல்களைக் கொடுத்து உதவுகிறது. 1942-ம் மார்ச்சு 3உ நடைபெற்ற அமெரிக்க காங்கிரஸ் கூட்டத்தில், 12,56.,100,000 பவுன் பிரிட்டனுக்குக் குத்தகைக் கடன் கொடுப்ப தென்று தீர்மானித்தனர். 1942-ம் ஜூன் வரையிலும் 1,301,250,000 பவுன் பெறுமான முள்ள சாமான்களை அனுப்பி விட்டார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு மட்டு மன்றி இதர 35 நாடுகளுக்கும் குத்தகைக் கடன் கொடுக்க வேண்டு மென்று தீர்மானித்திருக்கின்றனர். இவற்றில், நடு நிலைமை வகிக்கும் நாடுகளும் இருக்கின்றன.

நேச நாடுகளிடம் தோன்றியுள்ள இந்த ஒற்றுமையும் கூட்டுறவும் யுத்தம் முடிந்த பிறகுங் கூட இருக்கும். யுத்தம் முடிந்த பிறகு பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும், இராணுவத் துறையிலும் கூட்டுறவு எப்படி அமைய வேண்டு மென்பது பற்றிய யோசனைகள் வெகுவாக முன்னேறியிருக்கின்றன. யுத்தம் முடிந்த பிறகு உலகம் எப்படி அமைக்கப்பட வேண்டு மென்பதை முன்னிட்டு, பலவித ஆயத்தங்கள் செய்யப்பட்டன. அவற்றுள் சில :—அத்லாண்டிக் பட்டயம், 1942-ம் பிப்ரவரியில் ஏற்பட்ட ஆங்கிலோ சோவியத் பரஸ்பர உதவி ஒப்பந்தம், யுத்தத்திற்குப் பிறகு ஏற்படும் தேவைகளைப் பொறுத்த நேச நாட்டுக் கமிட்டி, நேச நாட்டு கோதுமைச் சேகரம், யுத்தம் முடிந்த பிறகு 20 வருஷங்கள் வரை கூட்டுறவு அமைந்திருக்க வேண்டும் என்பதை விதியாகக் கொண்ட ஆங்கிலோ சோவியத் ஒப்பந்தம் ஆகியன. உலக சரித்திரத்திலேயே இவ்வளவு சிறந்த முறையில் மகத்தான கூட்டுறவு இதுவரை ஏற்பட்டதே கிடையாது. அப்படியிருந்தும், அச்சு நாட்டவர்கள், நேச நாட்டவர்களுக்குள் ஒற்றுமை யில்லை என்று பொய்ப் பிரசாரம் செய்வது எவ்வளவு இழிவானது !

---

**மே. த. சென்னை கவர்னர் நம்பிக்கை**

**மாறுதல் ஏற்பட்டு விட்டது.**

திருவனந்தபுரத்தில் நாளது மாதம் 6உ யன்று மே. த. சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப் அவர்கள் செய்த பிரசங்கத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார் :—

"ஜப்பானியர்கள் இந்தியாவில் இல்லை. இந்தியாவில் இனி அவர்கள் இருக்க மாட்டார்கள் என்று நான் தாராளமாகச் சொல்லுவேன். அவர்கள் இங்கே கொஞ்ச தூரம் வந்தாலும் கூட, இந்தியப் படைகளும் பிரிட்டிஷ் படைகளும் மட்டு மன்றி, இந்திய மக்கள் அனைவருமே ஒரு முகமாகச் சேர்ந்து நாட்டை விட்டு அவர்களை விரட்டி யடித்து விடுவார்கள்".

"உண்மையிலேயே ஒரு மாறுதல் ஏற்பட்டு விட்டதென்று நான் மனப் பூர்வமாக நம்புகிறேன். கிருஸ்மஸ் பண்டிகைக்கு முன்னதாகவோ, ஈஸ்டர் பண்டிகைக்கு முன்னதாகவோ நாம் இந்த யுத்தத்தில் வெற்றி பெற்று விடுவோ மென்று நான் சொல்ல வில்லை. ஆனால் மாறுதல் ஏற்பட்டு விட்டது என்று மட்டும் நான் உறுதியாக நம்புகிறேன்".

# ரஷ்ய விமானப் பெண்ணின் தீரம்

## பொறுப்புணர்ச்சிக்கு சிறந்த உதாரணம்

தோழர் நக்ரசோவ் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார்:—“ நானும் விமானப் படைத் தலைவரும் விமான ஓட்டியின் அறைக்கு, படிக்கட்டு வழியாக ஏறிப் போய்க் கொண்டிருந்தோம். ‘நமது வீராங்கனையிடம் தங்களை அறிமுகப் படுத்த விரும்புகிறேன்; வாருங்கள் போவோம்’ என்றார் அவர் என்னைப் பார்த்து. நாங்கள் இருவரும் ஒரு சிறு அறைக்குள் நுழைந்தோம். அது, ஆச்சரியப்படத் தக்கபடி அவ்வளவு அடக்கமானதா யிருந்தது. அதில் நான்கு படுக்கைகள் இருந்தன. அவற்றின் மேல் விரிக்கப் பட்டிருந்த துணிகள் தும்பைப் பூவைப் போல் வெண்மையா யிருந்தது. அது ஒரு பெண்ணின் அறை. சந்தேகமில்லை. மெல்லிய திரைச் சீலைகள் அந்த அறையின் சாளரங்களை அலங்கரித்தன. பல இடங்களிலும் கண்ணாடிகள் பதிக்கப் பட்டிருந்தன. அறையில் கம கம வென்று வாசனை வீசியது. அங்கிருந்த மேசை மீது ஒரு அடுக்குப் புத்தகங்கள் ஒழுங்காக வைக்கப் பட்டிருந்தன. அந்த மேசைக்கு அருகிலிருந்த நாற்காலியி லிருந்த ஒரு நங்கை எங்களைக் கண்டதும் எழுந்து வந்து வரவேற்றார். வயது 25 இருக்கலாம். பச்சைக் காக்கிச் சட்டையும் நீல நிறப் பாவாடையும் அணிந் திருந்தார். அந்தச் சட்டையில் இரண்டு புதிய அணிகலன்கள் விளங்கின. அவருடைய வீரச் செயல்களுக்காக அவை பரிசளிக்கப்பட்டவை.

‘நமது படைக்கே பெருமையை யுண்டாக்கிய மருசியா சிக்கிரிவா ‘இவர் தான’ என்று கூறி எனக்கு அப் பெண்மணியை படைத் தலைவர் அறிமுகப் படுத்தினார். அப் பெண்மணியின் கரு விழிகள் உடனே கவிந்தன. கன்னங்கள் நாணத்தால் சிவந்தன. ‘இவ்வளவு விளம்பரம் ஏன்? படைத் தலைவரவர்களே!’ என்று சற்று தாழ்ந்த குரலில் கேட்டார்.

நாங்கள் நட்பு முறையில் பேசத் தலைப்பட்டவுடனே அவருடைய நாணம் நீங்கியது. தன் வாழ் நாளைக் குறித்தும் விமானத் தொழிலில் தனது அனுபவங்களைக் குறித்தும் கூறினார்.

இவர் போன்ற பெண்கள் சோவியத் யூனியனில் ஆயிரக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். பல வருஷங்களுக்கு முன்பு இவர் மாஸ்காவில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலையில் மெருகு போட்டுக் கொண்டிருந்தவர். அப்போது தனக்கு ஓய்வு கிடைக்கும் போது விமானப் பயிற்சி பெற்றார். பிறகு விமானப் பயிற்சி சாலையில் சேர்ந்து ஒரு ரேடியோ ஆபரேடராகத் தேர்ச்சி பெற்றார். ஆபத்துக் காலத்தில் ஹிட்லர் படைகளோடு எதிர்த்துப் போராட முன்வந்தார். அவர் சேர்ந்திருந்த படை போர் முனைக்குப் புறப்படும் போது, இஷ்டமிருந்தால், அவர் போர்முனைக்கு போகலாமென்றும், இல்லாவிட்டால் வேறு ஒரு படைக்கு மாற்றிக் கொண்டு விடலா மென்றும் அதிகாரிகள் கூறினார்கள். அப்போது கொஞ்சங் கூடத் தாமதமின்றி, ‘நான் இருக்க வேண்டிய இடம் போர் முனை தான்’ என்று பதில் கூறினார். ரஷ்யாவில் யுத்தம் ஆரம்பமான 3-ம் நாளே அவர் போர் முனைக்குப் போய் விட்டார்.

**தலை சிறந்த ஆபரேடர்.**

அவருடைய படையின் தலை சிறந்த ரேடியோ ஆபரேடராக அவர் விளங்கினார். அவருடைய தைரியமும் சலனமற்ற மனமும் அவருக்கு உற்ற துணைகளாக அமைந்தன. எதிரிகளின் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் பல முறை இவருடைய விமானத்தைத் தாக்கின. எத்தனையோ முறை எதிரி விமானங்களோடு தனித்து இவருடைய விமானம் போராட வேண்டி யிருந்தது. என்றாலும் ஒரு போதும் தன் ரேடியோ ஸ்தானத்தை அவர் விட்டு அகன்றதே கிடையாது.

ஒரு ஊரை ஜெர்மானியர்கள் நெடுநாட்களாக முற்றுகை யிட்டுக் கொண்டிருந்தனர். இவருடைய படை அப்போதெல்லாம் அந்த ஊருக்குப் போய், அந்நகரத்தைக் காத்துக் கொண்டிருக்கும் படைகளுக்கும் பொது ஜனங்களுக்கும் உணவுப் பொருள்கள் கொண்டு போய்க் கொடுத்துக் கொண்டும், அங்கே காயப்பட்டுக் கிடந்தவர்களையும், பெண்களையும், குழந்தைகளையும் அப்புறப் படுத்திக் கொண்டும் இருந்தது.

ஒரு நாள் மழையும் காற்றும் அதிகமா யிருந்தது. இவருடைய விமானம் போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர முடிய வில்லை. எனவே, வழியில் ஒரு இடத்தில் இறங்க நேர்ந்தது. இந்த விமானம் பூமியில் இறங்குவதை எதிரி விமானக் கூட்டம் ஒன்று கண்டு விட்டது. மருசியா பதற வில்லை. மகா பயங்கரமான போருக்குப் புறப்படும் போது வீரருக்கு உண்டாகும் ஒரு வகை உணர்ச்சி இவருக்கும் உண்டானது. படைத் தலைவர் இவரைப் பார்த்து, ‘பிரயாணிகள் மீது ஒரு கண்ணிருக்கட்டும். அவர்களுக்குள் கலவரமுண்டாகாதபடி பார்த்துக் கொள்ளவும். இதற் கிடையில்......’ என்று ஏதோ சொல்ல வந்தவர் தன் வாக்கியத்தை முடிக்காதபடி மிஷின் பீரங்கிகளை நோக்கி ஓடினார். மேகங்கள் சூழ்ந்திருந்தன. எதிரியின் விமானங்கள் மூன்று ஆகாயத்தில் தென்பட்டன. அவற்றை நோக்கி பீரங்கியால் சுட்டார்.

உடனே, மருசியா தன் காதுக் குழாயைக் கழற்றி விட்டு பிரயாணிகளிடம் ஓடினார். அங்கிருந்த பெண்கள் மிகவும் பயந்து விட்டனர். சிலர், விமானத்தி லிருந்து கீழே குதித்து விட யத்தனித்தனர். அவர்களுக்கு இதமாகச் சொல்லி, மருசியா அவர்களைப் படுக்கச் செய்தார். அங்கிருந்த எல்லாப் பெண்களும், குழந்தைகளும் தன் போக்கைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்க ளென்று அவர் தெரிந்து கொண்டார். ஒன்றன்பின் ஒன்றாக மூன்று வெடி குண்டு சத்தங்கள் கேட்டன. பிறகு பல வெடிகள் ஏக காலத்தில் வெடித்து காதுகளைச் செவிடுபடச் செய்தன. எங்கும் ஒரே குழப்பம். அவற்றில் ஒன்று மருசியாவின் விமானத்தை யடுத்து விழுந்தது. இதனால் இவருடைய விமானம் ஆட்டங் கொடுத்தது. மருசியா இருந்த இடத்தை விட்டு தூரத்தில் எறியப் பட்டார். மயக்கப் பட்டு விட்டார். மயக்கந் தெளிந்த பிறகு அங்கிருந்த பிரயாணிகளில் பலர் காயப் பட்டிருப்பதைக் கண்டார். தன் தலையிலும் தோளிலும் உள்ள காயங்களைக் குறித்துக் கவனிக்க அவருக்கு நேர மில்லை. ஆனால், வழக்கம் போல், காயப்பட்ட மற்றவர்களுக்குச் சிகிச்சை செய்ய ஆரம்பித்தார்.

படைத் தலைவர் ஸ்கிரில்னிகோவ் மிஷின் பீரங்கிக் குழியை விட்டு வெளிக் கிளம்பி ‘எப்படி இருக்கிறது?’ என்று கேட்டார். அதற்கு, மருசியா ‘மூவருக்குக் காயம்’ என்று விடை தந்தார். விமானம் எப்படி யிருக்கிறது? என்றார். ‘நன்றா யிருக்கிறது; ஆனால் அதன் ப்யூசிலேஜில் மட்டும் 2 துளைகள் இருக்கின்றன’ என்றும் விடை கிடைத்தது.

சில நிமிஷங்களில் அந்த விமானம் கிளம்பியது. மீண்டும் மருசியா தன் இடத்தி லிருந்து ரேடியோ வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் மிகவும் பலவீனமா யிருந்தார். காயத்தினால் அவருடைய தலை சுழன்று கொண்டிருந்தது. அவருடைய இடது கை நொண்டியாகித் தொங்கிக் கொண்டிருந்தது. மகா கொடுமையை ஒவ்வொரு நிமிஷமும் அனுபவித்துக் கொண்டிருந்தார். என்றாலும் தன் வேலையை விட்டு அகல வில்லை. தலைமைக் காரியாலயத்திற்குச் செய்திகள் அனுப்பிக் கொண்டும், அங்கிருந்து செய்திகள் பெற்றுக் கொண்டுமிருந்தார்.

தமக்கு இடப்பட்ட வேலை எவ்வளவு கடினமானதானாலும், மிகுந்த பொறுப்புணர்ச்சியோடும் வீரத்தோடும் சோவியத் பெண்கள் அவற்றை நிறைவேற்றுகிறார்கள்”.



# காக்கசஸ் பிரதேசத்தில் - - - - - - - - ஜெர்மானியர் திண்டாட்டம்

## ஜெர்மானியர் பிரசார மோசடி

### பழி வாங்கும் ரஷ்யப் பொது மக்கள்

காக்கசஸ் மலைப் பிரதேசத்தில் மஸ்டாக், காங்மைகோப், நவரோசிஸ்க் என்பவை கருங் கடலையடுத்த பட்டினங்கள். இவற்றை யடுத்துத் தான் வட காக்கசஸ் ரயில்வே போகிறது. இந்த ரெயில்வேயை யொட்டி இரண்டு திசைகளி லிருந்து நாஜிப் படைகள் முன்னேறப் பார்க்கின்றன. எதிரிப் படைகள் முன்னேற ஒட்டாதபடி, படிப்படியாக ரஷ்யப் படைகள் தடுத்துக் கொண்டு வருகின்றன. ஆகவே, ரஷ்யப் படைகளின் பலம் நாளுக்கு நாள் படிப்படியாகப் பெருகிக் கொண்டு வருகிறது. நாளுக்கு நாள் எதிரிகளின் சேதம் அதிகப் பட்டுக் கொண்டு வருகிறது. எதிரிப் படைகள் ஒரு மைல் முன்னேற வேண்டுமானால், பெருஞ் சேதத்திற்கு ஆளாக வேண்டி யிருக்கிறது.

**பழைய கனவு.**

காக்கசஸ் பிரதேசத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பது ஜெர்மானியர்களின் பழைய கனவு. 19[illegible]-ம் வருஷம் ஜெர்மனி தோற்று விடும் நிலையி லிருந்தது. அப்போது ஆஸ்திரிய ஜெனரல் ஸ்டாப் படைத் தலைவர் ஆர்ஸ், தன் மேலதிகாரிகளுக்குக் கீழ்க் கண்டவாறு எழுதினார் :—

“பகுதி பாரசீகம் வழியாக மெசொபொடோமியாவிற்கும் அரபியாவிற்கும் போக பந்தோபஸ்தான வழியை யமைத்துக் கொள்ள ஜெர்மானியர்கள் மிகவும் ஆசையோடிருந்தார்கள். இப்போது உக்ரேன் அவர்கள் வசப்பட்டு விட்டபடியால், தம கனவு பலிக்கும் என்று ஜெர்மானியர்கள் எதிர்ப் பார்க்கிறார்கள். அங்கிருந்து கிழக்கே போகும் வழி, கீவ், செபஸ்டொபோல் வழியாகப் போகிறது. அங்கிருந்து, பாகும், ட்ரிபிசாண்ட் என்னும் ஊர்களுக்குப் போகலாம். இதன் பொருட்டுத் தான் க்ரிமியாவை ஒரு குடியேற்ற நாடாகவாவது மற்றெந்த வகையிலாவது வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஜெர்மானியர்கள் நினைக்கிறார்கள் போலும்.”

இவர் தன் பதவியை விட்டு விலகிய பிறகு ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது :—

“கீழ் திசையிலே ஜெர்மானியர்கள் அக்கிரமங்கள் செய்தார்கள். அதை அடக்கத் தக்க சக்தி அப்போது ஆஸ்திரியப் படைகளுக்கு இல்லாது போயிற்று. இது துரதிர்ஷ்டம் தான். எனவே ஜெர்மானியர்களோடு ஆஸ்திரிய அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும். அப்போது தான் ஜெர்மானியர்கள் அடிக்கும் கொள்ளைகளில் ஆஸ்திரியர்களுக்கும் பங்கு கிடைக்கும்.”

“வரப்போகும் ஆபத்தை உணர்ந்து கொள்ளும் சக்தி அந்த ஆஸ்திரிய படைத் தலைவர்களுக்கு இல்லாது போயிற்று. அதனால் தான், அப்போது ஆஸ்திரியர்களும் ஜெர்மானியர்களும் அடியோடு தோற்றுப் போனார்கள்”. மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

“மேல் திசையில் ஜெர்மன் சாம்ராஜ்யம் பரவ ஒட்டாதபடி பிரிட்டன் தடுக்கிறது; எனவே கீழ்த் திசையில் உக்ரேன், கிரிமியா வழியாக, இந்தியா மீது ஜெர்மனி தன் கவனத்தைச் செலுத்த வேண்டும்” என்று ஜெர்மன் படையைச் சேர்ந்த லெப்டினெண்ட் ஜெனரல் க்ரோயெனர் குறிப்பிட்டிருந்தார். ஜெர்மானியரின் இப்போதையப் போக்கு, இதற்கு ஒத்திருக்கிறது. 1918-ம் வருஷத்திலேயே ஜெர்மானியர்கள் ஒரு திட்டம் போட்டிருந்தனர். அதன்படி, படிப் படியாக உக்ரெய்ன், காக்கசஸ் மலைப் பிரதேசம், ட்ரிபிசாண்ட் என்னும் துருக்கித் துறைமுகம், சின்ன ஆசியா ஆகிய அனைத்தையும் கைப்பற்றிக் கொண்ட பிறகு, இந்தியாவைத் தாக்க வேண்டும். இதைக் கொண்டு உலகத்தையே கட்டியாள வேண்டுமென்னும் இச்சையை இது பெருக்கியது.”

இந்தச் செய்தியை மிகுந்த பேராவலோடு பாசிஸ்ட் பத்திரிகைகள் இப்போது வெளியிடுகின்றன. உதாரணமாக, “டுயெட்ஸ்கி உக்ரேனர் செய்துங” என்னும் பத்திரிகை சென்ற செப்டெம்பர் மாதம் 8-ம் தேதி வெளியீட்டில் எழுதியதாவது :—

“1918-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் கான்ஸ்டான்டிநோபிலி லிருந்து ஜெனரல் க்ரெஸ் (ஜெர்மன் படைத் தலைவர்) கிளம்பினார். கருங் கடலைக் கடந்தார். பாகுமுக்குப் போனார். அன்றியும் டைபிலிஸி லிருந்து பவேரிய ஆல்பைன் படை யொன்று கிளம்பி ஜார்ஜியாவிலுள்ள இராணுவ ஸ்தாவிற்குப் போனது. அங்கே போல்ஷிவிக் படைகள் வாராதபடி காவல் காக்கத் தான் இந்தப் படை அனுப்பப்பட்டது. இப்போது, மீண்டும் அதே ஜில்லாக்களில் ஜெர்மன் ஆல்பைன் படைகள் இறங்கி யிருக்கின்றன.”

**ஜெர்மானியர் உரிமைகள்.**

இது போன்ற அநேகக் கட்டுரைகள் பல ஜெர்மன் பத்திரிகைகளில் வெளி வருகின்றன. காக்கசஸ் மலைப் பிரதேசத்தை தமதாக்கிக் கொள்ள ஜெர்மானியருக்குத் தான் உரிமை யுண்டு என்பதை உறுதிப் படுத்த, போதுமான காரணங்களைக் குறிப்பிட்டு பல விசேஷக் கட்டுரைகள் பல சஞ்சிகைகளிலும் வெளி வந்தன. இந்தப் பிரசாரம் ஒவ்வொரு வருஷமும் நடைபெற்றுக் கொண்டு வந்தது. இப்போது அந்தப் பகுதியைக் கைப்பற்றிக் கொள்ளும் பொருட்டு ஜெர்மன் விமானப் படை அங்கு வட்ட மிட்டுக் கொண்டே யிருக்கின்றது.

சோவியத் யூனியனைச் சேர்ந்த இதர பாகங்களில் நடைபெற்ற கொரில்லாச் சண்டைகள் ஜெர்மானியர்களுக்குத் தகுந்த படிப்பினையாக விருந்தது எனவே தம் படைகளுக்கு ஜெர்மன் படைத் தலைவர் ஒரு உத்திரவு பிறப்பித்தார். அதன் படி, ஜெர்மன் படைகள் கைப்பற்றும் பகுதிகளி லுள்ள பொது மக்களை அதிகமாகச் சூறையாடக் கூடாது; அவர்களுடைய வழக்க பழக்கங்களுக்கு மாறாக நடக்கப் படாது. பெண்களைச் சோரம் செய்யலாகாது. சோரம் செய்தால், பொது மக்கள் மிகக் கடுமையாகப் பழி வாங்குவார்கள் என்று ஜெர்மானியர்களுக்குத் தெரியும்.

ஆனால், நாஜிப் படைகள் அக்கிரமத்திலேயே பழகியவர்கள். ஆகையால், இந்த உத்திரவுப் படி, அவர்கள் நடந்து கொள்ளுவதில்லை. பீரங்கிகளும், மிஷின் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் தான் அவர்களுடைய அக்கிரமங்களை ஒடுக்கத் தக்கவை. இந்த உத்திரவே தந்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. தம் கொள்ளைகளையும் சோரத்தையும் கொஞ்சம் நாள் கழித்து, அதாவது அந்தப் பிரதேசம் முழுவதையும் கைப்பற்றிக் கொள்ளும் வரை ஒத்திப் போடும்படியும், பிறகு வட்டியும் முதலுமாகச் சேர்த்துத் தம் வேலையை இஷ்டம் போல் நடத்தலா மென்பதுந் தான் அந்தக் கட்டளையின் புதை பொருள்.

உலகிலுள்ள மற்றெல்லோரும் முட்டாள்கள்; தாம் மட்டுந் தான் அறிவாளிகள் என்பது தான் ஜெர்மானியர்கள் கருத்து. உதாரணமாக தாம் யுத்தக் கைதியாகப் பிடித்த ஒரு கோழையை அல்லது அயோக்கியனைத் தயார் செய்கிறார்கள். மற்ற கைதிகளின் கூட்டத்தி லிருந்து அவனைத் தனியே பிரித்

## கடல் விமானப் பயிற்சி



இந்த விமானப் படகில் பிரிட்டிஷ் இளைஞர்கள் இராணுவப் பயிற்சி பெறுகிறார்கள்

துக் கொண்டு போகிறார்கள். அவனுக்கு நல்ல உணவு கொடுக்கிறார்கள். சிறந்த முறையில் நடத்துகிறார்கள். ஜர்மனியர்கள் மிகவும் நல்லவர்கள் என்னும் எண்ணத்தை அவனுடைய மனதில் உண்டாக்கி விடுகிறார்கள். பிறகு அவனைப் போர்க் களத்தில் முன்னணிக்கு அனுப்புகிறார்கள். அங்கே அவன் ஜெர்மன் சிறைக் கூட வாழ்க்கை மிகச் சிறந்ததென்று பிரசாரம் செய்கிறான். ஜெர்மானியர்கள் செய்யும் தந்திரங்களில் இதுவும் ஒன்று. பிரசாரம் பொருட்டு அவர்கள் செய்யும் மோசடி அவர்களுடைய முட்டாள் தனத்தைத் தான் குறிக்கிறது.

காக்கஸ் பிரதேசத்தில் வசிக்கிறவர்கள் பல வகுப்பினர். இவர்களைச் சூறையாடுகிறவர்கள் இவர்களுக்குள் பிளவுகளை உண்டு பண்ணி, தம் காரியத்தைச் சாதித்துக் கொண்டு வந்தனர். ஆனால், ரஷ்யப் புரட்சியின் பயனாக, இங்கே முதலாளித்துவம் ஒழிந்தது மட்டுமல்லாமல், பொது மக்கள் தம் உண்மை நிலையை உணரத் தலைப்பட்டு விட்டனர். தாம் ஒருவருக்கொருவர் விரோதிகள் அல்ல வென்றும், ஒன்றுபட்டால், சிறந்த முறையில் வாழ்க்கை நடத்தலாமென்றும் உணர்ந்தார்கள். இதன் பயனாகத் தான் அவர்கள் பொருளாதாரத் துறையிலும் அறிவுத் துறையிலும் முன்னேறத் தலைப்பட்டார்கள். ஏராளமான தொழிற்சாலைகள், ரோடுகள், வைத்தியசாலைகள், பள்ளிக்கூடங்கள், ஆட்டக் கொட்டகைகள் முதலியவற்றைக் கட்டினார்கள். மக்களின் அறிவு ஓங்கியது. பள்ளிக்கூடம், சங்கம், ஆட்டக் கொட்டகை, பந்தாட்டம் ஆகியவற்றால், ஒற்றுமையுணர்ச்சி மக்கள் உள்ளத்தில் தழைத்தது. இப்போது புதிதாக மலைகளின் மேல் போடப்பட்ட ரஸ்தாக்களின் உதவியினால், போக்கு வரவு வசதி அதிகப்பட்டது. இதனாலும் மக்கள் ஒன்றுபட இடங் கிடைத்தது. இதன் பயனாக, காக்கஸ் பிரதேசத்திலிருந்து மக்கள் ஒன்றுபட்டு வாழத் தலைப்பட்டு விட்டார்கள். ஒருவருக்கொருவர் இடையூறு செய்வதே கிடையாது. அங்குள்ள ஒவ்வொரு இனத்தவரும் தத்தம் இனச் சிறப்புகள் ஓங்கத் தக்க முறையில் தான் வாழுகிறார்கள். என்றாலும் தாம் அனைவரும் சோவியத் ஆட்சியின் கீழ், ஒரே குடும்பத்தைப் போல் வாழுகிறோம் என்னும் உணர்ச்சி தான் அவர்களுக்கு மேலோங்குகிறது. ஒவ்வொரு இனத்தவரிலிருந்தும் அநேக பேர்கள் விமானப் படைகளில் சேர்ந்து தம் நாட்டைக் காக்க அரும் பாடு படடுக் கொண்டு வருகிறார்கள். காக்கசஸ் மலைப் பிரதேசமே ஒரு சோவியத் கிராமம் என்று நினைக்கிறார்கள். சோவியத் எல்லைக் குட்பட்ட எல்லா ஊர்களையும் தம் சொந்த ஊராக அவர்கள் மதிக்கிறார்கள். அவர்களுக்குள் இருந்த இனச் சண்டையொழிந்து விட்டது. நல்லுணர்ச்சியும் கூட்டுறவும் ஏற்பட்டு விட்டன. தன்னலம் தலை காட்டுவதில்லை. கூட்டுப் பண்ணைகளும், தொழிற்சாலைகளும் தோன்றின. விஞ்ஞான அறிவும், இலக்கியமும், கலையும் ஓங்கின.

எதிரிகள் முன்னேறுகிறபடி செட்டைகள் தடுத்துக் கொண்டிருக்கின்றன. பொது மக்கள் தம்மைச் சரியானபடி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜெர்மன் படைகளைப் பின்புறத்தில் வந்து தாக்கி எதிரிகளில் அநேகரைக் கொன்று விடுகிறார்கள். வட காக்கசஸ் பிரதேசத்திலுள்ள 'கொரில்லா'ப் படைகள் எதிரிப் படையினர் ஏறி வரும் ரயில் வண்டிகளைக் கவிழ்த்து விடுகிறார்கள். பாலங்களை நொறுக்கி விடுகிறார்கள். வெடி மருந்து சாலைகளை நாசஞ் செய்து விடுகிறார்கள். நிஸ்வெஹாருக்பாக் என்னும் ஒரு கிராமத்தில் ஒரு ரஷ்ய இளைஞனை நாஜிப் படையினர் கொன்று விட்டனர். ஜெர்மன் படைகள் போகும் ஒரு ரஸ்தாவில். அவனுடைய தகப்பனும், தமையனும், பாட்டனும், ஒரு பாலத்திற்குக் கீழே 4 நாட்கள் வரை ஒளிந்து காத்துக் கொண்டிருந்தார்கள் ஒரு மோட்டார் கார் வந்தது. அதில் 3 ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கிராம வாசிகள் மூவரும் திடீரெனப் பாய்ந்து அந்த வண்டியை நிறுத்தினர். அந்த மூன்று உத்தியோகஸ்தர்களையும் இரண்டு மோட்டார் டிரைவர்களையும் கத்தியால் குத்திக் கொன்று பழி தீர்த்துக் கொண்டனர் வட காக்கசஸ் மலையடிவாரத்திலுள்ள ஒரு 'கொரில்லா'ப் படை மட்டும், 500 பேர்களை அதாவது ஜெர்மன் உத்தியோகஸ்தர்களையும் ஆட்களையும் கொன்றிருக்கிறது. எதிரிகளால் கைப்பற்றப்பட்ட வட காக்கசஸ் பகுதிகளில் பொது மக்கள் இந்த யுத்தத்தை மிகக் கடுமையாக நடத்துகிறார்கள். காக்கசஸ் மலைக்கு அப்பால் உள்ளவர்களுங் கூட, தம் நாட்டைக் காக்கக் கிளம்பி விட்டார்கள். இந்தப் பகுதிகளைச் சேர்ந்த படைகள் செம்படைகளோடு சேர்ந்து ஜெர்மானியர்களோடு போராடுகிறார்கள். அங்குள்ள தொழிலாளிகளும் விவசாயிகளும் அறிஞர்களும் யுத்தத்திற்கு எந்தெந்த வழிகளில் உதவலாம் என்று ஆலோசித்து கொண்டிருக்கிறார்கள். காக்கசஸ் மலை வாசிகளை அடிமைப் படுத்தி, மலை வழியாக இந்தியாவிற்கு வழியமைக்க வேண்டுமென்பது ஜெர்மானியர்களுடைய ஆசை அவர்களுடைய ஆசையில் நாம் மண்ணைப் போடலாம் எதிரிகளின் சவக் குழிகளாக காக்கசஸ் மலையை நாம் ஆக்குவோம்.

—"சோவியத் யுத்தச் செய்திகள்"



# "எதிரிகள் பல்லைப் பிடுங்கி விட்டோம்"

## எகிப்தியப் போரில் அமோகமான வெற்றி

### லார்டு மேயர் விருந்தில் சர்ச்சில் பிரசங்கம்

வருஷந் தோறும் லண்டன் லார்டு மேயர் ஒரு விருந்து நடத்துவது வழக்கம். அது போலவே இந்த வருஷமும் சென்ற செவ்வாய்க் கிழமை ஒரு விருந்து நடத்தினார். அதற்கு பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் விஜயம் செய்திருந்தார். அவர் அங்கே செய்த பிரசங்கத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார் :—

ரோமலின் படை அடியோடு முறியடிக்கப் பட்டு விட்டது. அதன் பல்லைப் பிடுங்கி விட்டோம். சரியான இடம் பார்த்துத் தான் எதிரிப் படைகளை முறியடித்தோம். ஏனென்றால், இந்த இடத்தில் முறியடிக்கப் பட்டால், மீண்டும் தலை தூக்க முடியாது. அல்லாமலும் அது ஒரு தண்டனையாகவும் இருக்கும். இங்கே இந்தியப் படைகள் அருமையான முறையில் போராடி அழியாப் புகழுக்கு ஆளானார்கள். அது போலவே தான் போராடும் பிரஞ்சுப் படைகளும், கிரேக்கப் படைகளும் செக்கோஸ்லோவேகியப் படைகளும், ஆதிக்கம் மிகுந்த அமெரிக்க விமானப் படைகளும் கடுமையாகப் போராடி வெற்றி பெற்றன. முன்னதாகவே நாங்கள் திட்டமிட்டிருந்தபடியே தான் எகிப்திய யுத்தம் நடைபெற்றது. இதையடுத்து மத்திய தரைக் கடலின் மேலக் கடைசியில் அமெரிக்கா யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றும் திட்ட மிட்டிருந்தோம். அதாவது பிரஞ்சு வட ஆப்பிரிக்காவைத் தாக்குவதென்று திட்டமிட்டிருந்தோம் இது ஒரு தனி அரசியல் யுத்த தந்திரப் போக்கு. இதை வகுத்தவர் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட். இந்தத் துறையில் நான் அவருக்கு வலது கை போலிருக்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற நெடு நாட்கள் பிடித்தன இந்த நோக்கம் ஈடேறு மென்று நாங்கள் நம்பியிருந்தது மிகவும் நியாயந் தான்.

ஆப்பிரிக்காவில் மேற்கொண்ட இந்த இரண்டு பொறுப்புகளில் முதலாவது பொறுப்பை மட்டும் குறித்து சற்று விளக்கிக் கூற விரும்புகிறேன். 1916– 8-ம் வருஷங்களில் முன்னேறித் தாக்கியதன் பலனாகத் தான், கடந்த மகா யுத்தத்தில் பிரிட்டிஷ் படைகள் வெற்றி பெற்றன. அது போலவே தான், இப்போதும் ரோமல் படைகளை ஜெனரல் மாண்ட்காமரியின் படைகள் முன்னேறித் தாக்கியதனால் வெற்றி பெற்றன. என்றாலும் இவ்விரண்டிற்கும் அடிப்படையான வேற்றுமையுமுண்டு. ரோமல் அலெக்சாந்திரியாவை நோக்கிக் கிளம்பிய போது, அவருடைய போக்கைத் தடுத்த நாள் முதல், தாம் கைப்பற்றியுள்ள ஊர்களைத் தகுந்தபடி அரண் செய்து கொள்ளுவதிலேயே தம் முழு கவனத்தையும் அவர் செலுத்திக் கொண்டு வருகிறார். இதன் பயனாக மிகக் குறுகிய இடத்தில் தான் பிரிட்டிஷ் படைகள் போராட வேண்டியிருந்தது. ஏனென்றால், இந்த அரணின் ஒருபுறம் கடலும் மறுபுறத்தில் கட்டாறு பள்ளமு மிருக்கின்றன.

இப்படிப் பட்ட சமயங்களில் சாதாரணமாக மேலைப் பாலைவனத்தில் எப்படித் தாக்குவது என்றால், ஆயுதபாணிகளான படைகளை எதிரிக்குத் தெற்கு புறத்தில் திடீரெனக் கொண்டு போய் வளைத்துக் கொள்ள வேண்டும்.

#### புது யுத்த முறை.

ஆனால் ஜெனரல் மாண்ட்காமரி இந்த முறையைத் தள்ளி விட்டார். ரோமலை விரட்டியடிக்கப் புது முறை யொன்றைக் கண்டு பிடித்தார். அதாவது காலாட் படை, பீரங்கிப் படை, விமானப் படை ஆகிய மூன்றையுங் கொண்டு ஒரே காலத்தில் தாக்கி, அதன் பிறகு டாங்கிப் படைகளைக் கொண்டு தாக்கினார். இப்படித் தாக்கப் பல வாரங்களுக்கு முன்னதாக, எதிரிகளின் பலத்தை விடத் தம் பலம் உயர்ந்தது என்பதை நிலை நாட்டிக் கொண்டனர். இதற்கு அறிகுறியாக எதிரி படைவீடுகள் மேலும், போக்குவரவு சாதனங்களின் மேலும், துறைமுகங்களின் மேலும், வெடிமருந்து கிடங்குகளின் மேலும்,

## மகத்தான வேலை

### சென்னைப் படைக்கு ஜாம் சாஹிப் பாராட்டு

ஹிஸ் ஹைனெஸ் நவாநகர் ஜாம் சாஹிப் கீழ்க்கண்ட செய்தியை சென்னை கவர்னருக்கு அனுப்பியிருக்கிறார் :—

"இங்கிலாந்திலுள்ள சென்னைப் படையை நான் சமீபத்தில் பார்வையிட்டேன். அவர்கள் மகத்தான வேலைகளைச் செய்திருக்கிறார்கள்; இன்னும் செய்து கொண்டுமிருக்கிறார்கள். தங்கள் (மே. த. சென்னை கவர்னர்) மூலமாக அம்மாகாணவாசிகளுக்கு அவர்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக நான் அவர்களுக்குக் கூறினேன். தம் மாகாணத்தின் பெயரைத் தாங்கியிருப்பதில் அவர்கள் பெருமை யடைகிறார்கள்."

### மே. த. சென்னை கவர்னர் பதில்

"சென்னைப் படையினர் சென்னை வாசிகளுக்கு அனுப்பிய வாழ்த்துப் பற்றி அவர்கள் பெரிதும் நன்றி செலுத்துகிறார்கள். அன்றியும் தம் வாழ்த்தையும் அவர்களுக்கு அறிவிக்கும்படிக் கோருகின்றனர். புகழுக் குரிய அவர்களுடைய அருஞ் செயல்கள் பற்றி, நாங்கள் பெருமை யடைகிறோம். இவ்வளவு சீக்கிரம் தாங்கள் இந்தப் படையைப் பார்வையிட்டது பற்றி நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம்."

## " இனியாகிலும் மனம் இனிதுற உதவுவாய் "

இராகம்—கண்டகவுளம். தாளம்—ஆதி.

பல்லவி

ஏ தமிழா ஏன்றதை உன்றுலே
இனியாகிலும் மனம் இனிதுற வுதவுவாய் (ஏ)

அநுபல்லவி

1 எமக்கின்று நாசம் இழைத்திடும் பகைவன்
எதிர்த்து நம் வாசலில் வாரான்
ஏனே இனும் வாதம் விடுவாய்—ஏதிலரைச் சுடுவாய் (ஏ)

2 வருமோர் பகைவன் வந்தபின் நையவே
வகை நீ செப்வாயே
வாதே நீதாம் வந்திவித்தாராய்—வார்த்தை தானுமே
யிதமாய் (ஏ)

விமான நிலயங்களின் மேலும் இரவும் பகலும் வெடி குண்டுகளைக கொண்டு தாக்கிக் கொண்டே யிருந்தார்கள். இதன் பயனாக எதிரிப் படைகள் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்குப் போகக் கூட வில்லை. ஆகாயத்தில் எதிரிகள் தம்மைத் தற்காத்துக் கொள்ளவும் கூடவில்லை ; எதிர்த்துப் போராடவும் கூடவில்லை. அச்சு அரசாங்கங்களுக்குச் சொந்தமான ஏராளமான கப்பல்களையும் விமானங்களைக் கொண்டு தாக்கி நாசப்படுத்தினோம். மத்திய தரைக் கடலைக் கடந்து வந்து கொண்டிருந்த அநேக அச்சு சப்ளை கப்பல்களை, பிரிட்டிஷ் நீர்மூழ்கி கப்பல்கள் நாசஞ் செய்திருக்கின்றன. டோப்ருக், பங்காஜி, ஜிலோ ஆகிய ஊர்களை, 8-ம் படை தாக்கி, பூர் வாங்க வேலையில் பங்கு கொண்டிருக்கிறது.

சென்ற அக்டோபர் மாதம் 23-ம் தேதி இரவு நடுநிசி. மூவகைப் படைகளும் பரிபூரணமாக ஒன்று பட்டு விட்டன. தரைப் படையின் போக்கை மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டு தான் விமானப் படைகள் தாக்கின. எதிரி விமானங்கள் தாழப் பறந்து நம் காலாட் படைகளுக்குச் சேதம் விளைக்காதபடி பிரிட்டிஷ் விமானப் படை ஒரு குடையைப் போல் நம் படைகளுக்கு மேலே கவிந்து கொண்டது. அன்றியும் விமானங்களி லிருந்து பீரங்கிகளால் எதிரிகளைச் சுட்டுத் தள்ளியது. போர்முனையிலிருந்து எதிரியின் முக்கிய தளம் வரை எதிரி வசமிருந்தது. அந்தப்பகுதி முழுதையும் இந்த விமான பீரங்கிகள் நாசஞ் செய்து விட்டன. மெர்ஸா மத்ராவிற்கும் டோப்ருக்குக்கும் இடையே யுள்ள ரோடையும், பெங்காஜிக்கும் ஜினோவாவிற்கும் (600 மைல்கள்) இடையே யுள்ள பாதையையும கூட நாசம் செய்து விட்டார்கள். இவ்வாறாக, பாதுகாப்பதிலும், எதிர்த்துத் தாக்குவதில் நேசநாட்டுப் படைகள் மேம்பட்டு விளங்கின. இதுபற்றி, தென் ஆப்பிரிக்காவி லுள்ள ஜெர்மன் யுத்த நிருபர் ஒருவர், சமீபத்தில் செய்த ரேடியோ பிரசங்கத்தில், " எண்ணிக்கையில் நம்மைவிட மிகவும் அதிகம் பேர்களைக் கொண்ட எதிரியோடு பல நாட்களாகப் போராடிக் கொண்டு வருகிறோம் " என்று குறிப்பிட்டார்.

**ரோமல் பின் வாங்க நேர்ந்தது.**

எகிப்தியப் போராட்டத்தில் நேசநாடுகள் வெற்றி பெற்றதற்கு இதுதான் முக்கியமான காரணம். எகிப்தில் வேரூன்றிக் கொண்டிருந்த நம் எதிரிகள், வழியில் நிறகாதபடி லிபியாவிற்கு ஓட்டமெடுக்க வேண்டியதாயிற்று. இரண்டு மாதங்களுக்கு முன்பு ஆபிரிக்கப் படைகள் ஜெர்மன்) சாதிக்க முடியாததை, நேச நாட்டுப் படைகள் இப்போது சாதித்து விட்டன. சென்ற செப்டெம்பர் மாதம் 1-ம் தேதி தன் முழு படை பலத்தையும் கொண்டு நம் 8 ம் படையை அழுத்திக் கொண்டு, நீல நதிக்கரையை அடைந்து விட வேண்டு மென்று ரோமல் முயன்றார். இதன் பொருட்டு ஒரு வாரம் போராடினார். முடிவில் அவர் பின்வாங்கும்படி நேர்ந்தது. ஏனென்றால், அவருக்கு பெரும் சேதங்கள் ஏற்பட்டன. சரியாக 2 மாதங்கள் கழிந்தன. எதிரியின் பலமான அரண்களைத் தூளைத்துக் கொண்டு ஜெனரல் அலெக்சாந்தர் உள் நுழைந்தார். 12 நாட்கள் கடும் போர் நடந்தது. கடைசியாக, எதிரி மேற்கு நோக்கி ஓட நேர்ந்தது. இந்தப்போரில் 13,000 பேர்கள் அச்சுநாட்டுப் படையினர் கைதியானார்கள். ஜெர்மன் ஆப்பிரிக்கப் படைத் தலைவரான ரிட்டர்வான் தோமாவும் கைதியானார். ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் சொந்தமான 320 டாங்கிகளும் 2 0 பீரங்கிகளும கைப்பறறப் பட்டன. 3(0 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. தளத்திலேயே 360 எதிரி விமானங்கள் நாசஞ் செய்யப் பட்டன. பின்வாங்கி ஓடுகிறவர்கள் ஜெர்மானியர்கள் தான். இத்தாலியர்கள, பினவாங்கும் படைகளின பின்புறத்தி லிருந்தே போராடிக் கொண்டு பின்வாங்குகிறார்கள்.

எகிப்தில் இப்போது நேசநாட்டுப் படைகள் போராடி வெற்றி பெறுவது, கடந்த மகாயுத்தப் போராட்டத்தை நினைவூட்டுகிறது. வெர்டுன், யைப்பிரஸ், சோம்மி, பாஸ்சென்டேல் ஆகிய இடங்களில் நம் படைகள் முன்புறமாகச் சென்று தாக்கின. இந்த யுத்தத்தில் இது ஒரு முக்கியமான போக்கு. இதிலிருந்தும், உயரத்தில் விமானங்களிலிருந்தும், பக்கங்களிலிருந்தும் தாக்கி ஒரு படையை வெல்ல

(12-ம் பக்கம் பார்க்க.)



## சந்தேகியா யிருங்கள்

எதுவும் உண்மை என்று தெளிவாகத் தெரிந்தால் அல்லது,
சந்தேகி எதையும் நம்ப மாட்டான். பொய் வதந்திகள்
சம்பந்தப் பட்ட வரை, சந்தேகி யாகவே இருங்கள்.
உங்களுக்குத் தப்பான கருத்துக்களை உண்டாக்க
வேண்டி, இந்தப் பொய் வதந்திகள்
பெரும்பாலும் ஜப்பானி லிருந்து
கிளம்புகின்றன.

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியர்களுக்கு விரோதமாகத்
தேசியப் போர் முனையை அமையுங்கள்.

# வட ஆபிரிகாவில் தீபாவளி

இந்த வருடம் இந்தியாவில் தீபாவளி பண்டிகை அவ்வளவு ஸ்வாரஸ்யமாக இல்லை தான். துணிமணிகளின் விலையோ, யானை விலை, குதிரை விலையாக ஆகிவிட்டது. பட்டாசுகளை அதிகமாகக் கண்ணிலேயே படவில்லை. எங்கோ, டுப், டிப் என்று வெடித்துக் கொண்டிருந்தது. அவ்வளவு தான்.

ஆனால் வட ஆபிரிகாவிலே இவ்வருடத்திய தீபாவளி ரொம்ப 'மோக்ளா' வாக நடந்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் மலர்ந்த முகங்கள் தான். கண்டவர்கள் எல்லாம் வெற்றி கோஷம் செய்து கொண்டிருந்தனர். எகிப்திலும், லிபிய எல்லையிலும், ஆல்ஜியர்விலும், மேலைக்கடல் ஓரத்திலும் ஏக தடபுடலாக வெடிகள் முழங்கிக் கொண்டிருந்தன. வட ஆபிரிகாவில் உள்ள நேசதேசத்தினருக்கு உலகோர் அனைவருமே (அச்சுநாட்டினர் தவிர) வாழ்த்துக்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

இதென்ன இது, சுத்தக் கேலியாக இருக்கிறதே! வட ஆபிரிகாவிலேயாவது, தீபாவளி பண்டிகையாவது என்று நீங்கள் கேட்கலாம். ஏன்? அங்கு உலகோர் கவனத்தைக் கவரும் முறையில் போராடி நிற்கும் இந்தியர் இல்லையா? அவர்களுக்குத் தீபாவளி கிடையாதா என்ன? ஆனால், அங்குள்ள மற்ற நேசதேசப் படையினரும் தீபாவளி யன்று குஷியாக இருந்தார்கள். ஒரு பண்டிகையைக் கொண்டாடுவது என்பது என்ன? அன்றையத் தினம் சம்பிரமமாகச் சாப்பிட்டு விட்டு, ஜோராக இருக்கிறது தானே? இந்த முறையில் தீபாவளியன்று வட ஆபிரிகாவில் இருக்கும் நேசதேசப் படைகள் தீபாவளியைக் கொண்டாடி யிருக்கின்றன.

சென்ற வெள்ளி யன்று ராத்திரி, சனிக்கிழமை காலை தீபாவளியோ இல்லையோ! அன்று ராத்திரி ஒரு மணிக்கு அமெரிக்கப் படைகள் ஏகப்பட்ட பலத்துடன் திடுதிப்பென்று, ஆபிரிகாவின் வட கரையிலும், மேல் கரையிலும், பிரான்ஸிற்குச் சொந்தமாக உள்ள பிரதேசங்களில் சென்று இறங்கி விட்டன. அதற்கு முதல் நாளிரவு தான் கிருஷ்ண பரமாத்மா, சத்யபாமையின் உதவியோடு நரகாசுரனோடு போராடி அவனை மாய்த்தாராம். நாஸி நரகாசுரனை வதைக்க வேண்டும்; அவனது பிடியில் சிக்கி அவதிப்படுவோரை விடுவிக்க வேண்டுமெனும் எண்ணத் தோடு அன்றையதினம், பிரிட்டிஷ் கடற்படையின் சகாயத்தோடு, அமெரிக்கப் படைகள் ஆபிரிக மண்ணில் அடியெடுத்து வைத்தன. அப்பொழுது முதல், அப்படைகள் மேலும் மேலும் பல முக்யமான இடங்களில் இறங்கி வருகின்றன. ஆங்காங்கே சிறிது எதிர்ப்புகள் இருந்த போதிலும், அமெரிக்கப் படைகள் அதிக சிரமமின்றி, வெற்றி கண்டு வருகின்றன. அப்படைகள் கடற்கரை ஓரமாகவே கிழக்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றனவாம்.

ஆல்ஜியர்ஸ் என்பது மத்யதரைக் கடல் பக்கத்தில் உள்ளதோர் முக்யமான துறைமுகம். அங்கு தான் பிரஞ்சுக் கடற்படைத் தலைவரான டார்லான இருந்தார். அவரும் இப்பொழுது கைதியாகி, அமெரிக்க சேனாபதி ஒருவரது விருந்தாளியாக இருக்கிறாராம். அமெரிக்கப் படைகள் ட்யூனீஷியா எனும் பிரதேசத்திற்குள் புகுந்து விட்டனவாம்.

'இதெல்லாம் என்ன கூத்து ஐயா?' என்று பிரமிக்கிறீர்களா? இன்று நேற்றல்ல; சென்ற ஐந்து மாத காலமாகவே, ரூஸ்வெல்ட் இந்தப் படையெடுப்பைப் பற்றிப் பிரமாதமான திட்டங்கள் போட்டு வைத்திருந்தாராம். சர்ச்சில் சென்ற ஜூன் மாதம் அமெரிக்காவிற்குப் போயிருந்த போது, ரூஸ்வெல்ட் தனது மனசிலிருக்கும் பிளானை சொன்னாராம். அதேமாதிரி, ருஷ்யாவில் உள்ள ஸ்டாலினுக்கும் இது தெரியுமாம். ஆனால் இவ்வளவு அமர்க்களமாக ஒரு 'படா' படையை ரூஸ்வெல்ட் அனுப்பி வைப்பார் என்று அவரும் சரி, சர்ச்சிலும் சரி எதிர் பார்த்திருக்கவே மாட்டார்கள். அதைப் பற்றி என்ன? அனைவருக்கும் அளவிலா ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடிய விதத்தில், தீபாவளி யன்று ராத்திரி தொடங்கி, அற்புதமான காரியங்கள் ஆபிரிகாவில் நடந்து வருகின்றன.

'இரண்டாம் போர்முனை, இரண்டாம் போர்முனை' என்று எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தார்களே, இதோ அதற்குத் தான் சக்கலாம்பரதரம் குட்டிக் கொண்டிருக்கிறார்கள். இனிமேல் போகப் போக என்னென்ன நடக்கிறது என்று பாருங்களேன்!

ஒன்றரை லக்ஷம் அமெரிக்கத் துருப்புகள் அங்கு வந்து இறங்கி யிருப்பதாக விஷி ரேடியோ தெரிவித்தது. ஆனால். ஆபிரிகாவிற்கு வந்திருக்கும்

அமெரிக்கப் படையின் உண்மை எண்ணிக்கை எத்தனை என்பது இன்னும் தெரியாது. மேலும் மேலும் பல முக்கியமான இடங்களை அப்படைகள் பிடித்து வருகின்றன என்பதும், அசாத்திய பலம் பொருந்திய படை அது என்பதும், அதி நூதன ஆயுதங்கள் அவற்றினிடமிருக்கின்றன என்பதும், பாரசூட் படையினரும், விமானப் படையினரும், கடற் படையினரும், தரைப் படையினரும் உத்சாகத்தோடு அங்கு வந்திருக்கிறார்கள் என்பதும் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் பேச்சிலிருந்து தெரிய வருகிறது.

வட ஆபிரிகாவில் உள்ள பிரஞ்சுப் பிரதேசங்களை அமெரிக்கப் படைகள் பறித்தெடுத்துக் கொண்டதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானது, நாஜிகளின் பிடியில் சிக்கி அவதிப்படும் பிரஞ்சு மக்களை விடுவிப்பது தான். லவால் ஹிட்லரின் கைப்பொம்மை. மார்ஷல் பீத்தானோ மேற்படி, மேற்படிதான். ஹிட்லர் ஆள் வேண்டும் என்று உத்தி விட்டால், 'சித்தம்' என்று பிரான்ஸிலிருந்து ஆள் சேர்த்தனுப்ப ஆரம்பிக்கும் ஆசாமிகள் இவர்கள். பிரான்ஸின் சொத்து, சுதந்திரமெல்லாம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. அதைத் தடுத்து நிறுத்த இவர்களால் முடிய வில்லை. பிரான்ஸிலே, நாஜிகளால் ஆக்ரமிக்கப்பட்ட பிரதேசம் என்றும், ஆக்ரமிக்கப் படாத பிரதேசங்கள் என்றும் இருந்தது உண்மை. ஆனால், ஆக்ரமிக்கப் படாத பிரதேசத்திலே, விஷி சர்க்கார் தன் இஷ்டப்படி ஏதாவது செய்ய முடிந்ததா? அந்த சர்க்காரின் பல்லைத் தான் ஹிட்லர் பிடுங்கி விட்டாரே! அந்த விஷி சர்க்காரின் அதிகாரத்திற்குள் தான் பிரஞ்சு வட ஆபிரிகா, மேல் ஆபிரிகா பிரதேசங்கள் இருந்தன. ஆனால், ஹிட்லர் இப்பிரதேசங்களில் தனக்கு என்னென்ன காரியங்கள் ஆகவேண்டுமோ அவற்றையெல்லாம் இதுவரை தம் இஷ்டப்படி நடத்திக் கொண்டு தானிருந்தார். இந்த வட ஆபிரிகா பிரஞ்சுப் பிரதேசங்களிலிருந்தே அமெரிக்காவைத் தாக்கவும் திட்டம் போட்டிருந்தாராம்.

தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் வேலை மகா மோசமானது என்பதை மனதில் கொண்டே ஜனாதிபதி ரூஸ்வெல்ட் வெகு ரகசியமாக ஒரு திட்டம் போட்டு, நாஜிகள் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுதே, அவர்கள் தொடைகளில் கயிறு திரித்து விட்டார்.

தவிர, எகிப்திலே எட்டாவது பிரிட்டிஷ் படை, ரோமலின் படைகளை நொறுக்கு நொறுக்கு என்று நொறுக்கித் தள்ளிக் கொண்டிருக்கிறது. ரோமலின படைகள் சின்னா பின்னமடைந்து எகிப்து எல்லையைத் தாண்டி, லிபியாவில் தம் ஓட்டத் திறமையைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. பல மாதங்களாகவே, பொறுமையோடு தனது பலத்தை அதிகரித்துக் கொண்ட எட்டாவது படை வெற்றி மேல் வெற்றியாகச் சேர்த்துக் குவித்து வருகிறது.

எகிப்திலே தென் திசையிலிருந்து தான் பிரிட்டிஷார் தாக்கக் கூடும் என ரோமல் எதிர்பார்த்திருந்தார் போலிருக்கிறது. ஆனால், ஜெனரல் மாண்டகாமரியும், அலெக்ஸாந்தரும் கூடி ஆலோசித்து, ரோமலின் படைகளை வட திசையில் திடீரெனத் தாக்கினர். ரோமலுக்கு முன்னிருந்தது போல் அவ்வளவு விமான பலம் இல்லை. ஸ்டாலின்கிராடிலும், காகஸஸிலும், கருங்கடல் ஓரத்திலும் நடக்கும் சண்டைகளில் தான் ஏகப்பட்ட விமானங்கள் மாட்டிக் கொண்டிருக்கின்றனவே! ரோமலுக்கு எங்கிருந்து விமானங்களை அனுப்புவார் ஹிட்லர்.

இந்நாளைப் போரில், விமான ஆதிக்கம் இல்லாத கட்சி எதுவானாலும், அதன்பாடு அவஸ்தை தான். இந்த முறையில் ரோமல் அவஸ்தைப்பட்டது இயற்கை தானே? அவஸ்தையென அவஸ்தையா? தலை பிழைத்தால் போதும் என்று தப்பி ஓட வேண்டி வந்து விட்டது அவரது நிலைமை.

இதில் ஒரு அக்ரமம் என்னவென்றால், இத்தாலியப் படைகளை பின்னால் விட்டு விட்டு, ஜெர்மன் சேனைகளைப் பத்திரமாக அப்புறப் படுத்தப் பார்ப்பது தான். பல இத்தாலிய வீரர்கள் அப்படியே மொத்த மொத்தமாக நடுப் பாலைவனத்தில் உண்ண உணவும், குடிக்கத் தண்ணீரும் மற்று வங்கித் திரிகிறார்களாம். வேறு பலர் திடீரென்று நம்மவர்களால் சூழப்பட்டிருக்கின்றனர். ஆயுதங்கள், வெடி மருந்துகள் எல்லாம் அப்படியே அலுங்காது நம் வசமாகி விட்டன. இது வரை கைதியானவர்களின் தொகை அரை லக்ஷத்திற்கு எட்டிப் பார்த்து விட்டது.

ரோமலின் படைகளும் எகிப்தை விட்டுப் போய் விட்டன. நைல் பிரதேசத்திற்கு இருந்த பெரிய ஆபத்து இப்போதைக்கு நீங்கி விட்டது. ஹிட்லருக்கு இது ஒரு பெரிய அவமானக் கேஸ் தான். அவசர அவசரமாக நான்கு டிவிஷன் படைகளை ருஷ்யாவிலிருந்து மூட்டைகட்டி, லிபியாவிற்கு அனுப்பியிருக்கிறாராம் அவர். பல விமானங்களும் வந்து கொண்டிருக்கின்றனவாம்.

பேஷ்! இது தானே நாம் விரும்பியது. ஸ்டாலின் வேண்டுமென்றது. எப்பொழுது ருஷ்யாவிலிருந்து நாஜிப் படைகள் இரண்டு மூன்று கூறுகப் பிரிய நேரிடுகிறதோ, அப்பொழுதிலிருந்தே நாஜிகளுக்குச் சாவு மணி அடிக்க ஆரம்பித்து விட்டது போலத் தான் என்று பல நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஒரு புறம் எட்டாவது பிரிட்டிஷ் சேனை அச்சு நாட்டுப் படைகளை விரட்டி யடித்துக் கொண்டிருக்கின்றன. இந்தச் சமயம் பார்த்து அமெரிக்கப் படைகள் மறு புறம் வந்து இறங்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. நடுவிலே சிக்கிக் கொண்ட அச்சு நாட்டுப் படைகளின் நிலைமையைப் பார்த்து யாவது பெருமைப் படுவார்களா இனி?

வட ஆபிரிகாவிலிருந்தே அச்சு நாட்டினரை வாலில் ஓலையைக் கட்டி விரட்டி யடித்து விட வேண்டுமென்பது தானே நேசதேசத்தினரது விருப்பம். ஏன் தெரியுமா? அச்சு நாட்டினர் வட ஆபிரிகாவில் இருக்கும் வரை, மத்யதரைக் கடல் போக்கு வரத்து ஆபத்தின்றி இராது. இத்தனை காலமாக எகிப்திலிருந்த எட்டாவது படைக்கு ஆபிரிகாவின் தென் கோடியைச் சுற்றி, பத்தாயிரம் மைல் அதிகமாகக் கடந்து சென்றல்லவா பிரிட்டனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் உதவிகள் போய்க் கொண்டிருந்தன! அதோடு, தென் ருஷ்யாவிற்கும் நேசதேசங்கள் மளமளவென உதவி செய்ய முடியாது போய் விட்டது. அதற்காகவே, வட ஆபிரிகாப் போரில் ஹிட்லரும் சரி, நேசதேசத்தினரும் சரி பிரமாத சிரத்தை காட்டி வந்தார்கள்.

'வட ஆபிரிகாவில் தான் இந்த இரண்டாவது மகா யுத்தத்திற்கு முடிவு காணப் போகிறோம்' என்று ஒரு ராணுவ நிபுணர் கூறியிருக்கிறார். அவர் வாய்க்கு சர்க்கரை போடவேண்டும். அச்சு நாட்டினரை ஆபிரிகாவில் முறியடித்து விட்டால், அப்புறம் யுத்தத்தின் போக்கு எப்படியிருக்கும் என்று ஒரு தினுஸாகச் சொல்லி விடலாமே!

வட ஆபிரிகாவிலிருந்து கொண்டே, அதிகப் பாதுகாப்பற்ற இத்தலி, கிரீஸ், தென் பிரான்ஸ் ஆகிய பிரதேசங்களை நேச தேசத்தவர் தாக்கலாம். மத்ய தரைக்கடற் ஆதிக்கம் நாஜிகளிடமிருந்து பறிக்கப் பட்டு விட்டால், அவர்களுக்கு பாதி பலம் தானாய் போனது போலாகி விடும்.

இந்த பீதி ஹிட்லருக்கு இப்பொழுதே ஏற்பட்டு விட்டதென்று தெரிகிறது. அதோடு, ஏமாந்து போனோமே பிரஞ்சு ஆபிரிகாவிலே என்ற எண்ணமும் தோன்றி யிருக்கிறது. அந்த மனுஷர் முன்பு பேசிக் கொண்டிருந்த ஜோர் எங்கே! இப்பொழுது பேசும் தினுஸு எங்கே! பாவம்! ஸ்ருதி ஒரேயடியாகத் தணிந்து போய்விட்டது.

'இப்பொழுது உதை படுகிறோம். வாஸ்தவம், ஆனால் வாரா வாரம் புதுப்புது வெற்றிகளை எதிர் பார்க்க முடியா என்ன? எந்தச் சண்டையிலும், முடிவைத் தான் கவனிக்க வேண்டுமே ஒழிய, இடைக் காலத்தில் ஏற்படும் சம்பவங்களைக் கவனிக்கக் கூடாது. வட ஆபிரிகாவிலே அமெரிக்கர் வந்து இறங்கி யிருக்கிறார்கள். பிரஞ்சு சாம்ராஜ்யம் இத



## அதி வேக விமானங்கள் தயார்!



ரஷ்யாவில் சமீபத்தில் அதி வேகமாகப் பறக்கக் கூடிய விமான மொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அது மிக அதிகமாக நெருப்பையும் கக்குகிறது. இந்த விமானங்களை இணைக்கும் தொழிற்சாலைக் காட்சி

னால் பாழாகப் போகப் போகிறது. அதை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எப்படியும் அதைக் காப்பாற்றியே தீருவேன் நான். ஐரோப்பாவில் ஒரு பலமான பிரான்ஸின் எதிர் காலத்தில் எனக்கே சிரத்தை. ஆகவே, விஷி சர்க்காரிட முள்ள பிரஞ்சு பிரதேசங்களை எனது படைகளைக் கொண்டு பாதுகாக்கும்படி உத்திர விட்டிருக்கிறேன்.

போன யுத்தத்தில் கெய்ஸர் செய்ததுபோல் நான் இப்பொழுது செய்ய மாட்டேன். அவரை விட எனக்கு எவ்வளவோ சேனாபலமும், ஆயுத பலமும் இருக்கின்றன. ஒரு கை பார்த்துவிடப் போகிறேன். பாதுகாப்பு யுத்தத்திலேயே இப்பொழுது என் கவனம் சென்று கொண்டிருக்கிறது. மேல் விழுந்து தாக்குவதை விட, பாதுகாப்பு யுத்தமே மலிவானதாகும். அதோடு, பிடித்த பிரதேசங்களைப் பலப்படுத்திக் கொள்ளவும் வேண்டாமா?' என்று கேட்கிறார் அவர்.

எத்தகைய மாறுதல் பார்த்தீர்களா? வட பிரான்ஸிலே நடக்கும் சம்பவங்களால் ஏற்பட்ட மாறுதல் தானிது. அந்தச் சம்பவங்களால், இன்னும் பல விசித்திரங்கள் நேரிடலாம். ஸ்பெயின் என்ன செய்யப் போகிறது என்பதும் சீக்கிரத்திலே தெரியலாம். அதோடு, ருஷ்யாவிலிருந்து நாஜிப் படைகளும், விமானங்களும் தென் பிரான்ஸையும், இத்தாலியையும், மற்ற தென் ஐரோபிய பிரதேசங்களையும் காக்க ஓடி வரக் கூடும். இது காரணமாக ருஷ்யா கொஞ்சம் மூச்சு விடக் கூடும்.

ஆனால், அடிபட்ட புலி கடைசியாகக் கிளம்பிப் பாய்வது போல, நாஜிகளும் ருஷ்யாவில் போராடக் கூடும். ஸ்டாலின்கிராடு போரும், காகஸஸ் போரும் நடந்து கொண்டே யிருக்கின்றன, ஆனால் முன்போல அவ்வளவு ஜோராக இருக்க முடியாது இந்தச் சண்டைகள்.

இப்பொழுது ஹிட்லரின் கவலை எல்லாம் தென் பிரான்ஸைக் குறித்துத் தானிருக்கும். மார்சேல்ஸ் முதலிய துறை முகங்களில் நாஜிப் படைகள் தோன்றி விட்டனவாம். இதே சமயம் வட ஆபிரிகாவில் உள்ள பிரஞ்சுப் படைகள் போர் செய்வதை நிறுத்தி விட வேண்டுமென அட்மிரல் டார்லான் உத்திர விட்டுவிட்டார் என்ற செய்தி வந்து விட்டது. ஆனால், பிரஞ்சுப் படைகள் போரை நிறுத்தப் படாதென பாரிஸ் ரேடியோ அலறிற்று. ஆயினும் பிரஞ்சு வட ஆபிரிகாவில் போர் நின்று விட்டதாகவே கூறப்படுகிறது. இது ஒரு பெரிய சந்தோஷச் செய்தி தான். இனிமேல், அமெரிக்கப் படைகள் ட்யூனிஷியா பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டு, பிறகு லிபியாவிற்குள் நுழையலா மல்லவா? தீபாவளியன்று ஆரம்பித்த அவர்களது படையெடுப்பு நிர்விக்னமாயும் இதுவரை வெற்றிகரமாகவும் முடிந்திருப்பது கண்டு, நேசதேசத்தாரின் மனம் மகிழ்ந்திருக்கிறது.

இங்கு நடந்துகொண்டிருக்கும் சம்பவங்களும், நடக்க வேண்டிய காரியங்களும், உலகின் மற்றப் பாகங்களில் நடக்கும் போர்களை எல்லாம் ஒளி மங்கச் செய்து விட்டன. நேசதேசத்தாரைச் சூழ்ந்திருந்த இருள் விலகும் சமயம் வந்து விட்டாப் போலிருக்கிறது. இனி ஜோர் தான். ஆதவன் உதயமாகப் போகிறான் என்றால், ஆனந்த மடையும் ஜீவராசிகளுக்குக் கணக்குண்டோ?

(8-ம் பக்கம்—தொடர்ச்சி.)

லாமென்று தெரிகிறது. அன்றியும் ஒரு படையைத் துளைக்க, பீரங்கிப் படையும் காலாட் படையும் இப்போதுங் கூட வேண்டி யிருக்கின்றன. இப்படித் துளைக்கப் பட்ட இடத்தைப் பூர்த்தி செய்து கொள்ளு முன்னதாகவே, நம் படைகள் அதன் வழியாக உள்ளே புகுந்து விடுகின்றன. பழைய காலத்தில் குதிரைப் படை எவ்வளவு பயனுள்ளதாக இருந்ததுவோ, அவ்வளவு பயனுள்ளதாக இப்போது டாங்கிப் படைகள் இருக்கின்றன.

சுருக்கமாகச் சொல்லுவோமானால், ரோமல் அடியோடு முறியடிக்கப்பட்டார். எல் அலமீன் போராட்டத்தில் நேசநாட்டுப் படைகள் பரிபூரண வெற்றி பெற்றன. என்றாலும் மேலைப் பாலை வன யுத்தம் இன்னும் முடிந்த பாடில்லை. இவ்வளவு ஏராளமான சேதம் ஏற்பட்டுங் கூட, ரோமலுக்கு இன்னும் பலமிருக்கிறது. தென் ஆப்பிரிக்காவிற்கு அச்சு நாட்டு உதவிப் படைகள் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் உதவியைக் கொண்டு, இனி, மேலும் பின் வாங்கக் கூடாது என்பது எதிரிகளின் கருத்து. நேச நாட்டுப் படைகள் மேலும் மேற்கே போவதென்றால் போக்கு வரவுப் பாதைகளை அதிகப் படுத்த வேண்டும். அப்போது எதிரிப் படைகளின் போக்கு வரவு லைன்கள் மிகவும் சிறியவை யாகத் தான் இருக்கும். இது எதிரிகளுக்கு வசதியல்லவா? எகிப்துக்கு இப்போது ஏற்பட விருந்த அபாயம் நீங்கி விட்டது. நேச நாட்டுப் படைகளுக்கு மகத்தானதோர் வெற்றி கிடைத்தது. 8-ம் படையின் இராணுவத் தலைமையும், அமைப்பும், ஒழுக்கமும் மிகவும் சிறந்தன என்பதைத் தான் இது குறிக்கிறது.

மிகவும் நெருக்கடியான இந்தச் சமயத்தில் ஜெனரல் அலெக்சாந்தரும் ஜெனரல் மான்ட்காமரியும் நேச நாடுகளின் பொருட்டு செய்த அரும் சேவையைப் பாராட்டி, அவர்களுக்கு மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் உயர்ந்த சிறப்புக்களை வழங்கும்போது உலக மக்களனைவரும் அதைப் பாராட்டத் தான் செய்வார்கள்.





# உள்ளூர் வாசிகள் மனுச்செய்ய வேண்டாம்!

ஜப்பானியர்களுடைய ஆதிக்கத்தின் கீழிருக்கும் சீன தேசத்தில், வியாபாரத் துறையில், தலைமைப் பதவி முதல் கீழ்த்தர உத்தியோகம் வரையிலும் இருந்த சீன மக்களை எல்லாம், ஜப்பானியர்கள் விலக்கி விட்டார்கள். தொழிற் சாலை முதலாளிகள், கடை வியாபாரிகள், வேறு உத்தியோகஸ்தர்கள், சுருக்கெழுத்து குமாஸ்தாக்கள், சாதாரண குமாஸ்தாக்கள், முதலியவர்கள்—தெருக்களில் சில்லறைச் சாமான விற்பவர்கள் கூட—சீனர்கள் யாரும் இப்போது கிடையாது. இவ்வேலைகளை எல்லாம் ஜப்பானியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இவை அவர்களுடைய வெற்றிப் பரிசுகளாகப் போய் விட்டன.

ஜப்பானியர்கள் இங்கு வந்தால், இப்படித் தான் நடக்கும். இந்தியாவில் இப்படிப் பட்ட நிலைமை ஏற்படும்படி நீங்கள் விட்டு விடக் கூடாது. நம்முடைய நாட்டுப் பாதுகாப்புகளைப் பலப் படுத்தி உறுதி யாக்குவதற்கு, ஒவ்வொரு ஆண் மகனுடைய பலமும், ஒவ்வொரு பெண் மணியினுடைய ஆதரவும், தேவையா யிருக்கிறது.

ஜப்பானியருக்கு எதிரிடையாக தேசியப் போர் முனையை அமையுங்கள்


PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம்௵ நவம்பர்௴ 20௳, வெள்ளிக்கிழமை [இதழ் 46

## உணவுப் பொருள் கும்மி

1. வாருங்க ளாருயிர்த் தோழிகளே! தமிழ்
வையக மெங்கு முணவதி கம்
சேருங்க ளுற்பத்தி செய்யுங்க ளென்றுமே
செப்பிடு வோம்கும்மி ஒப்பிடு வோம்.

2. நாட்டி லமைதியு நடிடு நல்வாழ்வு
நாணய முமிகு ஒற்றுமை யும்
கூட்டுற வாலெய்து மேயறி யாமலே
கொடிய போர்வழிப் பட்டா ரடி.

3. ஐந்தெழுத் தாகிய கூட்டுற வுஅது
யாருக்கும் பொதுவாம் உண்மை யடி
மந்திர மாமிதை மறந்து தானடி
மாகொடும் போரிலி றங்கின ரால்.

4. விண்ணிலும் மண்ணிலும் நீர்நிலைஎங் கணும்
வெற்பிலும் சுரங்க வீட்டிலு மாய்
எண்ணிரக் கமில்லாக் கொடிய போரடி
இந்திய தேசத்தைச் சுற்றுத டி.

5. வந்தது ஆபத்து வந்தது என்னினும்
வேண்டா மடிகொஞ்ச மும்மயக் கம்
சொந்தநம் நட்டிலோர் செம்பிடி மண்கூட
சேர தடி இந்தச் சோரர் கட்கே.

6. போர்க்களம் வாலிபர் போயிடு வார்—வெற்றி
பூண்டுமே தாயகம் மீண்டுவார்—எனில்
ஊக்குள் ளிருப்பவ ராம்நமக்கு முண்டு
உற்றக டமைகள் பற்பல வாம்.

7. நாட்டினைக் காத்திடும் நம்முடை வீரர்க்கு
நல்லுண வுகளை நல்கிடு வோம்
நாசப்போர் நீங்கியோர் நல்வழி யாம்வரை
நாமும்ப சிப்பிணி நீக்கிடு வோம்.

8. ஆகையால் பெண்மயில் தோகைய ரேநாமும்
ஆடவர் பெண்களும் யாவர்க ளும்
சோகத்தைப் போக்கி செழிப்பு உலாடா கிட
செய்பொருள் உணவைச் சேர்த்திடு வோம்.

9. நெற்றிவி யர்வை நிலத்திற் கொழுதர
நித்தமும் பாடுபட் டேசிறப் போம்
வெற்றிநமக் கென்று வீறிட்டுப் போரிடும்
வீரமக் களுக்கு ணவளிப் போம்.

10. கூட்டுற வுமுறை கொண்டிடு வோம்—யாரும்
கோருமத் துறையில் சென்றிடு வோம்
நாட்டிலுள் ளமூலை நேருமுடங் கெல்லாம்
நாமுணவுப் பயிர் நாட்டிடு வோம்.

11. காடுமலைக் குன்று சாயலிலும் புஞ்சைக்
கரிசல் செவ்வல்த ரிசினிலும்
மேடுபள் ளமென்று சோம்பலு றுமலே
வெட்டித்தி ருத்திப்பண் செய்திடு வோம்.

12. அரச சலுகையு முண்டாமடி—எங்கும்
ஆகாரப் பயிர்கள் செய்வ தென்றால்
தரிசுநிலங் களும் தந்தா டி வரி
தந்திட வும்வேண்டா மென்ற ரடி.

13. உழுதுமே உண்டுநாம் வாழ்வதற்கே யொப்பு
உலகிலே உண்டோஉ ணர்ந்திடு வாய்!
பழுதற ஆழமா யுழுதிடுவோம் நிலம்
பண்படச் செய்நேர்த்தி பண்ணிடுவோம்.

14. வித்துவ கைகளும் சத்துவ கைகளும்
வேளாண்மை செய்யனு போகங்க ளும்
நித்தம்வி வசாயப் பண்ணையி லேகண்டு
நேமகம் செய்து நலன்பெறு வோம்.

15. வண்ணத் தினைகம்பு சோளமும் வாலியும்
வன்மைய வித்திடும் கேழ்வரகும்
மண்ணுக்கு கந்தவி ளைதவிதைப் போமடி
வங்கப்ப ருத்திம றந்துவி டோம்.

16. உண்ணத் தெவிட்டாத ஊன்பொருள் நெய்விதை
உளுந்து பயறுடன் காய்கறியும்
மண்ணுள்ம றையுங்கி ழங்கிடு வோம்புனல்
வாய்ப்பினில் நெல்வகை பாவிடு வோம்.

17. ஆற்றுநீர்ப் பாசனம் தேக்கிடு வோம்—அன்றி
ஆழ்கிக்கி ணறும் றைத்திடு வோம்
ஊற்றுப்பெ ருகிடத் தோண்டிடு வோம்வான
உதவி நாடியே வேலை செய்வோம்.

18. வேளைமு றைப்படி நீர்பாய்ச்சி—யதில்
வீழும் களையை யுடன் போக்கி
நாளொரு மேனிப் பொழுதொரு வண்ணமாய்
நற்பயி ரோங்கவ ளர்த்திடு வோம்.

19. வரப்பு யர்ந்திட நீர்வள ரும்பயிர்
வானமு யர்ந்திட மனவளரும்
சுரப்பி டும்பயிர்க் கெவ்வித நோய்களும்
சூழவி டோம்அவை தாழவி டோம்.

20. கண்ணினைக் காக்கும் இமைபோ லயுத்தக்
காவலர் நாடடினைக் காப்பது போல்
உண்ணுமு யர்நிலை காத்திடுவோ மிதை
ஊடுருவித் தென்றல் வேலைசெய் யும்.

21. பால்கொண்டு சூல்கொண்டு தள்ளா டிவளர்
பச்சைப்ப யிர்நிறம் மாறி நின்று
கால்மணி முத்தித் திரளா குமததி
காதல் விளைவினை யொப்பிடுவோம்.

22. நாள்கதிர் கொண்டாடிக் கும்பிடு வோம்—திரு
நன்னாள றுவடை செய்திடு வோம்
ஆள்துணை யோடுநாம் சென்று களத்தடி
அன்றே மணித்தொகை யாகிடு வோம்.

23. காற்றுள்ள பொழுதே தூற்றிடுவோ—மதைக்
களத்து வாயிலில் சேர்த்திடு வோம்—பல
நூற்றுக்க லநெல்லை நாள்தொறும் நாடியே
நோன்பிருந் தாயினும் சேர்த்திடு வோம்.

24. சேர்த்திடு வோமடி பால்பழ உணவும்
சிக்கன வாழ்வுநாம் செய்திடுவோம்
தூர்த்தசெ லவையும் ஆடம்ப ரத்தையும்
தூரத்தி லேயேநி றுத்திடு வோம்.

25. ஆகாரம் சேர்த்திடல் மாத்திரம் போதுமோ
யாவருமே பகிர்ந் துண்டிடு வோம்
ஒகார உண்மைவே றில்லையென் போமடி
ஓமென்று கூடி உழைத்திடு வோம்.

26. வெற்றிந மதென்று கூட்டுற வின்சுய
வீரசு தந்திரம் பாடிடுவோம்
முற்றிலும வெற்றிநம் மன்னருக் கேயென்று
முழங்கிக் குமமிய டித்திடு வோம்.

# வட ஆப்பிரிக்காவில் நேசநாடுகளுக்கு வெற்றி

## சப்ளை கப்பல்கள் தாராளமாகப் போகலாம்

### பிரான்சை ஜெர்மானியர்கள் எப்படிச் சுரண்டுகிறார்கள் ?

பிரஞ்சு வடாப்பிரிக்காவை நேச நாட்டுப் படைகள் கைப் பற்றிக் கொண்டது பற்றி, அமெரிக்கர்கள் என்ன கருதுகிறார்கள் என்று, "டெய்லி டெலிகிராப்" பத்திரிகையின் வாஷிங்டன் நிருபர் எழுதுவதாவது :—

"இந்த யுத்தத்தில் முதன் முறையாக அமெரிக்கப் படையினர் ஏராளமாகப் பாய் போராடியது இது தான் முதல் முறை. இந்த வெற்றியின் பயனாக, யுத்தத்தின் போக்கே மாறி விட்டது. இந்தப்போரில், பெரிய அமெரிக்கப்படை இறங்கி போராடியது என்றாலும், எல்லாப் பத்திரிகைகளும் நேசதேசப்படைகளே, அதாவது பிரிட்டிஷ், அமெரிக்க, 'போராடும்' பிரஞ்சு முதலிய நேசதேசப் படைகளே வெற்றி பெற்றன வென்று குறிப்பிட்டன."

இந்தப் போரில், அந்நாடுகளைக் கைப்பற்றி, முதல் முதல் அங்கே போய் இறங்கவும், இந்தப் போரை நடத்தவும் அமெரிக்கப் படையினருக்கே பொறுப்பேற்பட்டது. மத்திய தரைக் கடலின் தென் கரையில் அச்சு நாட்டாருக்கு இருந்த ஆதிக்கம் அடியோடு அழிந்துவிட்டது என்று அமெரிக்க இராணுவ நிபுணர்கள் கருதுகிறார்கள். இது காரணமாக ரஷ்யாவில் நடைபெறும் யுத்தத்திலும், கிழக்கோடியில் நடைபெறும் யுத்தத்திலும் அச்சு நாடுகள் அவதிப் பட்டுப் போகுமென்றும் கருதுகிறார்கள். இந்த கருத்து ஏற்படக் காரண மென்ன ?

இதுவரை நேச நாட்டு சப்ளை கப்பல்கள் ஆபத்திற்காளாகாமல் மத்திய தரைக் கடலில் போக முடியாதிருந்தது. ஆகவே ஆயிரம் மைல்களுக் கதிகமாகவே சுற்றிக் கொண்டு, ஆபிரிக்காக் கண்டத்தின் தென் கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனை வழி யாகத் தான் போக வேண்டியிருந்தது இதனால், மிகுந்த தாமதமும் பெரும் செலவும் ஏற்பட்டது. இப்போது மத்தியதரைக் கடலில் அச்சு நாடுகளுக் கிருந்த ஆதிக்கம் அழிந்து விடவே, அதன் வழியாக சப்ளை கப்பல்களை வெகு விரைவாகக் குறைந்த செலவில் ரஷ்யாவிற்கும், எகிப்திற்கும், இந்தியாவிற்கும் அனுப்பக் கூடும்.

அமெரிக்க யுத்தக் கப்பல் நிர்வாகி, வைஸ் அட்மிரல் எமொரி எஸ் லாண்ட் இதுபற்றி கூறியதாவது :—" மத்திய தரைக் கடலில் போக்கு வரவு ஏற்பட்டு விட்டால், அமெரிக்கக் கப்பல்களும் நேசநாடுகளின் கப்பல்களும் சப்ளைகள் கொண்டு போகத் தாராளமாக இட மேற்பட்டுவிடும்." அன்றியும் எண்ணெய், நிலக்கரி, கலம் முதலியவைவயும் மிகவும் குறைவாச் செலவாகும். அதாவது அநேகங் கப்பல்கள் உபயோகதி லிருப்பதற்கு இது சமம். முன்பு 3 மாதங்களுக்கு ஒரு முறை ஒரு கப்பல் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேர்ந்தால், இப்போது 10 முறைகள் போய் வரலாம். அதாவது 10 கப்பல்கள் ஒரே காலத்தில் போய்ச் சேருவதற்குச் சமானம். பத்து கப்பல்கள் போவதானால், இப்போது கொண்டுபோகப் படும் சப்ளைகளைப் போல 10 பங்கு சப்ளைகளைக் கொண்டு போகக் கூடும்."

தளத்திற்கு ஆயிரம் மைல்களுக்கு அப்பால், கடலில் இதுவரை பேர் நடந்ததே கிடையாது. இப்போது மத்திய தரைக் கடலில் இப் போர் நடந்தது. நேசதேசத்தாரின சிறந்த பலம் அவர்களுக்கு வெற்றி தந்தது. இது பற்றி " டைம்ஸ் " பத்திரிகை எழுதுவதாவது :—" நேச தேசப் படைகள் பிரஞ்சு வட ஆப்பிரிக்காவில் கால் வைக்கும் வரை கடல் யுத்தந் தான் நடநதது. அன்றியும் இந்தப் படைகளுக்கு, ஆகாயத்தி லிருந்து ஆபத்துகள் நேராதபடி பாதுகாக்க, விமானப் படைகளும் பறந்து கொண்டிருந்தன. இந்தப் பெருஞ் சேனையைப் பாதுகாக்க மிகப் பெரும் விமானப் படையை உபயோகிக்க வேண்டி யிருந்தது. அருகில் நேசநாடுகளுக்குச் சொந்தமான விமான நிலையங்கள் கிடையாது. எனவே, விமானந் தாங்கிக் கப்பல்களையும் ஏராளமாகக் கொண்டு போக வேண்டி யிருந்தது. மொராக்கோவிலும் அல்ஜீரியாவிலும் உள்ள விமான நிலையங்களைக் கைப்பற்றும் வரை பிரிட்டிஷ் அமெரிக்க விமானங்கள் வட்ட மிட்டுக் கொண்டிருந்தன. அன்றியும் குறிப்பிட்ட காலந் தவறாது நேசதேசப் படைகள் ஆங்காங்கே வந்து இறங்கி வேரூன்றி விட்டன.

ஜெனரல் எய்செனவர் திட்டப்படி நம் படைகளை அந்தந்த இடங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கும் பொறுப்பு பிரிட்டிஷ் கப்பற் படைக்கு ஏற்பட்டது. இதன் தலைவர் அட்மிரல் கன்னிங்ஹாம். இவர் ஒப்புயர்வில்லாத ஒரு வீர மாலுமி.

அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் இது பற்றி செய்த ஒரு ரேடியோ பிரசங்கத்தில் கூறியதைச் சென்ற வார வெளியீட்டில் குறிப்பிட்டிருந்தோம். அப்போது அவர் கூறியதாவது :—

> பிரான்சை விடுவித்து, வட ஆப்பிரிக்காவிலுள்ள ஜெர்மன் இத்தாலியப் படைகளை அழிக்கும் நோக்கத்தோடு தான் அமெரிக்கப் படைகள் அங்கே இறங்கின. அச்சு அரசாங்கங்களின் ஆதிக்கத்தை அழித்த பிறகு, பிரான்சுக்குச் சொந்தமான நாடுகளை யெல்லாம் மீண்டும் அதனிடம் ஒப்படைக்கப் படும். இந்த நிலைமைக்குக் காரணம் விஷி அரசாங்கத்தார் ஜெர்மனிக்கு அடிமைப் பட்டு அதன் கையாட்களாக நடந்து கொண்டு வருவது தான். விஷி அரசாங்கத்தார் இப்படியே நடந்து கொண்டிருப்பார்களானால், மத்திய தரைக் கடலில் நேசநாடுகள் போராடுவதற்குப் பாதக மேற்படக் கூடும்.

1940-ம் வருஷம் பிரஞ்சு அரசாங்கம் தோற்றுப் போன போது ஒரு சமாதானம் ஏற்பட்டது. பிறகு பிரஞ்சு சாம்ராஜ்யத்திறகுள் ஜெர்மானியர்கள் நுழைய வொட்டாதபடி பிரஞ்சு அரசாங்கத்தார் தடுத்து விடுவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால், இதில் ஏமாற்ற மடைந்தோம். நாஜிகள் பிரஞ்சு சாம்ராஜ்யத்திற்குள் நுழைந்தார்கள். பிரஞ்சு மக்களின் உணர்ச்சிகளைப் பாழாக்கினார்கள். உள் நாட்டுக் கலகங்களை உண்டு பண்ணினார்கள். ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் சமாதானம் நேர்ந்த போது, வட ஆபிரிக்காவிற்கு ஒரு சமாதான கமிஷன் வந்தது அந்தக் கமிஷன் இந்த அயோக்கியத் தனத்தை சாமர்த்தியமாகச் செய்து கொண்டிருந்தது.

இந்த வேலையைப் பற்றி, 1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் 27-ம் நாள் விஷி அரசாங்கப் பிரதிநிதியாக பாரீஸிலிருக்கும் கௌண்ட் டிபிரினன் அமெரிக்கப் பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் கூறியதாவது :— " இந்த யுத்தத்தில் ஏற்கெனவே பிரிட்டன் தோற்று விட்டது என்னும் முடிவிற்கு நாம் வந்திருந்தால், நம் நாட்டின நன்மையைத் தான் நாம் கவனிக்க வேண்டும். அப்போது நாம் வட ஆப்பிரிக்காவில் ஜெர்மானியரோடு ஒன்று பட்டு வேலை செய்வது பற்றி ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். முன்பு வடாப்பிரிக்காவி லிருந்த ஜெர்மானியர்களுக்கு விரோதமாக விருந்த பிரஞ்சுக்காரர்களின் போக்குக்கு இவர் கூறுவது மாறுபட்டிருக்கிறது. இங்கே கவனிக்கத் தக்கது கேவலமான முறையில் நாஜி ஏஜெண்டுகள் பிரஞ்சு சாம்ராஜ்யத்திற்குள் கொஞ்சங் காஞ்சமாக நுழைந்து, விஷி அரசாங்கத்தின் ஆதிக்கத்தை அழித்து விட்டார்கள். காலத்திற் கேற்றபடி விஷி அரசாங்கமும் சரணாகதி யடைந்து விட்டது. இதற்குக் காரணம் டார்லன், லாவல் போன்றவர்கள் பிரான்சு நாட்டுக்குச் செய்த துரோகமும் ஜெர்மானியர்களோடு சேர்ந்து செய்த சூழ்ச்சியுந் தான். வட ஆப்பிரிக்காவில் நாஜிகள் வேரூன்றிக் கொண்ட பிறகு, விஷி அரசாங்கத்தைத் தம் மனம் போல ஆட்டிவைத்தார்கள். நாஜிகள் பிரஞ்சு சாம்ராஜ்யத்தில் வந்திறங்குவதைத் தடுகக விஷி அரசாங்கத்தால் முடியவில்லை. தடுத்தால் கடுமையான ஆபத்துக்கள் நேரும் போலிருந்தது.





பிரிட்டிஷ் டாங்கிப் படையைப் பார்வையிடும் பொருட்டு மன்னர் பிரான் விஜயம் செய்தார். அந்த அணி வகுப்பின் ஒரு பகுதி

வந்து நுழைந்த நாஜிகள் முதலில் பொருளாதாரத் துறையில் தான் கை வைத்தார்கள். பிரான்சிலும், பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளிலும் உள்ள விளை பொருள்களையும் மூலப் பொருள்களையும், ஜெர்மனிக்கும் நாஜிகள் கைப்பற்றிய இதர ஐரோப்பிய நாடுகளுக்கும் கொண்டு போயினர். இந்தப் பொருள்களுக்கு மிகவும் அதிக விலை கொடுத்துத் தான் வாங்கினார்கள். என்றாலும் அவர்கள் கொடுத்தது காயிதப் பணந் தான். அச்சு நாடுகளுக்கு ஐரோப்பாவில் ஏராளமாகப் பொருளாதாரச் செல்வாக்கு உண்டு என்னும் எண்ணத்தை உண்டாக்க வேண்டி, வடாப்பிரிக்காவில் வெகு தாராளமாக நாஜிகள் செலவு செய்தனர்.

துனிசியா ஒரு பிரஞ்சுக் குடியேற்ற நாடு. இங்கிருந்து லிபியாவிலுள்ள அச்சு நாட்டுப் படைகளுக்கு உணவுப் பொருள்கள் அனுப்பக் கூடா தென்று சிவில் சப்ளைகளுக்கும் இராணுவ சப்ளைகளுக்கும் பொறுப்பாளியா யிருந்த ஜெனரல் ஜாக்கெட் ஆட்சேபித்தார். ஆனால் அவருடைய ஆட்சேபனையை அதிகாரிகள் மதிக்க வில்லை. எனவே, அவர் தன் பதவியை இராஜி நாமா செய்து விட்டார்.

கைத் தொழில் துறையிலும் நாஜிகள் தம் கை வரிசைகளைக் காட்டினார்கள். சுரங்க வேலை, மின்சார உற்பத்தி, மோட்டார் போக்கு வரவு, பெட்ரோலியம் உற்பத்தி, பாஸ்பேட்டுகள் உற்பத்தி முதலியவை பிரஞ்சு ஆபிரிக்க உற்பத்திகள். இந்தத் தொழில்களை 'கவிமம் நாட் ஆப்ரிகன்' என்னும் ஒரு நாஜி கம்பெனி தான் நடத்தி வந்தது இதில் சம்பந்தப் பட்டிருந்தவர்கள் பிரஞ்சு மொராக்கோ முதலாளிகள். இவர்களை வடாப்பிரிக்காவிலுள்ள லாவல் கையாட்கள் என்று கூறுகிறார்கள். நாஜிகள் ஆட்டுவிக்கிறபடி இவர்கள் ஆடுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் தயாரிக்கும் சரக்குகளுக்கு அங்கே விலை கிடைக்கிறது.

வடாப்பிரிக்காவில் நாஜி இராணுவங்களை வேரூன்றச் செய்ய வேண்டு மென்று, பிசெர்ட்டா, அல்ஜியர்ஸ், ஓரான், செனித்ரா, கசப்லாங்கா ஆகிய ஊர்களில் அச்சு அரசாங்க சமாதானக் கமிஷன்களை நியமித்தார்கள். 1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் 5-ம் தேதி தான், பிரஞ்சு மொராக்கோவில் ஜெர்மன் படைகள் இறக்கின்றன வென்று காமன்ஸ் சபையில் முதல் முதல் அறிவிக்கப்பட்டது. அது முதல், இடைவிடாது கொஞ்சங் கொஞ்சமாக நாஜி இராணுவம் அங்கே போய் இறங்கிக் கொண்டிருந்தது. கசப்லாங்கா, மேரல்-கபீர் என்னும் இரண்டு பிரஞ்சு துறைமுகத் தளங்களையும் ஜெர்மன் நிபுணர்கள் வந்து அரண் செய்தார்கள். அன்றியும், மொராக்கோவில் ஒரு விமான நிலையத்தையும் கட்டி முடித்தார்கள். ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் சமரசம் ஏற்பட்ட போது, கசப்லாங்கா விமான நிலையத்திலிருந்த 400 விமானங்களையும் ஜெர்மானியர்கள் ஒப்புக் கொண்டனர்.

விஷியில் டார்லன் ஆட்சியின் பயனாக, வட ஆப்பிரிக்காவில் அச்சுப் படைகளின் பலம் மேலும் அதிகப்பட்டது. சிவில் நிலையங்களையும் இராணுவ நிலையங்களையும் மாற்றி யமைத்ததன் பயனாக, ஆதிக்க மிக்க பகுதிக ளெல்லாம் அச்சுப் படையினரின் ஆட்கள் கைக்கு மாறி விட்டன. பிரான்சில் ஹிட்லரின் கையாளாக லவால் மாறிய வுடனே, டார்லன் அச்சு நாடுகள் மீது விரோதங் கொண்டார். இவர் தகுந்த தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் போலிருக்கிறது. சமீபத்தில் நேச நாட்டுப் படைகள் வட ஆப்பிரிக்காவில் இறங்குவதற்கு இவரும் ஒத்திருந்து உழைத்தார். இப்படியாக, ஹிட்லர் மீதும் லவால் மீதும் பழி வாங்கிக் கொண்டார். இப்போது அவர் நிலைமை 'திரிசங்கு சுவர்க்கத்தி' லிருக்கிறது. மார்ஷல் பிடெய்ன், இவர் தன்னைச் சார்ந்தவ ரல்ல வென்று கூறி விட்டார். அது போலவே டிகாலும் கூறி விட்டார். இது பற்றி நவம்பர்மீ 17உ செவ்வாய்க்கிழமை அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் ஒரு பத்திரிகைக் காரர்கள் மகா நாட்டில் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிடுவதாவது :—

> வட ஆப்பிரிக்காவிலும் மேற்காப்பிரிக்காவிலும் டார்லனோடு ஜெனரல் எய்சனவர் செய்திருக்கும் அரசியல் ஏற்பாடுகளை ஒப்புக் கொண்டிருக்கிறேன். இதற்கு முந்திய இரண்டு வருஷத்திய சரித்திரத்தி லிருந்து டார்லனுடன் எந்த வித நிரந்தரமான ஒப்பந்தமும் செய்து கொள்ளக் கூடாதென்று பொதுவாகக் கருதினார்க ளென்பதையும் நான் அறிவேன், " யுத்த நெருக்கடியை முன்னிட்டுத் தான் இந்தத் தற்காலீக ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருக்கின்றன."

இதன் பயனாக, அச்சு நாடுகளின் கையினின்று பிரஞ்சு வட ஆப்பிரிக்கா காப்பாற்றப் பட்டது. நேச நாடுகளுக்கும் பிரான்சுக்கும் இருந்த ஒரு வகை அச்சமும் நீங்கியது.

.1A

# சோல்ஜர்களிடம் இந்தியர்கள் அன்பு

ஒரு நாள் சில சோல்ஜர்கள் தம் முகாமி லிருந்து கிளம்பினார்கள். தம்மோடு கொஞ்ச உணவு தான் கொண்டு போனார்கள். அவர்கள் போக வேண்டிய ஊர் 50 மைல்கள் தூரத்தி லுள்ளது. பகலில் அவர்கள் போகும் வழியில், கிராமவாசிகள் அவர்களுக்குப் பழங்களும் தின் பண்டங்களும் கொடுத்தார்கள். இரவு வந்தது. அப்போது அங்கிருந்த கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர் தன் பள்ளிக்கூடத்தைத் திறந்து, அவர்களுக்கு உணவளித்து, படுக்கைகளும் கொடுத்து உதவினார். அக்கிராம வாசிகள் அவர்களுக்குப் பழம் முதலியன கொடுத்து நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தனர். உபாத்தியாயர் இவர்களுக் கிடையே மொழி பெயர்ப்பாளராக விருந்து உதவினார்.

மற்றொரு ஊரில் இவர்கள் தங்கும்படி நேர்ந்தது. அப்போது அந்த ஊர் நாவிதர் இவர்களை வரவேற்று தன் வீட்டிலேயே உணவளித்து படுக்கைகளைக் கொடுத்துதவினார். பொழுது விடிந்தது. காலையில் சோல்ஜர்கள் தேநீர் குடிக்கும் பழக்கம் உடையவர்கள் என்று அவருக்குத் தெரியும் போலும். அவர்களுக்கு முட்டைகள், வெண்ணெய், ரொட்டி, தேன், பழச்சத்து, பழங்கள், தேநீர், முதலியன வழங்கி மகிழ்ந்தார். இது மட்டுமா ? அவர்கள் அனைவருக்கும் இலவசமாக க்ஷவரமும் செய்தார்.

இந்த சோல்ஜர்கள் இவ்வளவு அன்போடு கிராமவாசிகள் நடந்து கொள்வார்கள் என்று எதிர் பார்த்ததே கிடையாது.

---

# நமது படையினருக்குச் சம்பள உயர்வு.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு நம் படையினர் சம்பாதித்த தொகையை விட மிக அதிகமாகவே இப்போது சம்பாதிக்கின்றனர். இத் தொகை எவ்வளவு என்றே அவர்களில் பலர் அறிந்து கொள்ளுவதில்லை.

**ஆரம்பச் சம்பளம்.—**

1942-ம் வருஷம் செப்டெம்பர் மீ 1உ முதல் எல்லா இந்திய சோல்ஜர்களுக்கும் சிப்பாய்களுக்கும் 2 ரூபாய் சம்பள உயர்வு கிடைத்திருக்கிறது. ஆகவே இப்போது இந்திய சோல்ஜருக்கு ரூ. 18-ம் இந்திய சிப்பாய்க்கு ரூ. 17-ம் ஆரம்பச் சம்பளம்.

**கெட்டிக்காரத் தனத்திற்குச் சம்பளம்.—**

ஒரு வருஷ சேவகத்திற்குப் பிறகு, படைத் தலைவர் யுக்தப்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 2–8–0 வீதம் இது வரை கொடுத்து வந்தார்கள். இப்போது 6 மாத சேவகத்திற்குப் பிறகு ரூ. 1 வீதமும், ஒரு வருஷ சேவகத்திற்குப் பிறகு ரூ. 3–8–0 வீதமும் கொடுக்கப்படலாம்.

**நல்ல வேலைக்குச் சம்பளம்.—**

கமிஷன் உத்தியோகஸ்தர்களல்லாதவர்கள் மிகுந்த ஊக்கத்தோடும் திறமையோடும் வேலை செய்வார்களானால் படைத் தலைவர் தன் யுக்தப்படி 2, 4, 6 வருஷ சேவகம் செய்தவர்களுக்கு, முறையே ரூ. 2, 4, 6 வீதம் கொடுத்து வந்தார். இப்போது 1, 2, 3 வருஷம் சேவகம் செய்தவர்களுக்குக்கூட ரூ. 2, 4, 6, வீதம் முறையே கொடுக்கலாம்.

**வெளி நாடு போவதற்கு அலவன்ஸ்.—**

வெளி நாடுகளில் வேலை செய்யும் இந்தியப் படைகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த இந்த அலவன்ஸை 1940-ம் வருஷம் டிசம்பர் மீ 2 ரூபாய் அதிகமாக உயர்த்தினார்கள். அதன்படி கீழ் கண்ட வாறு இத் தொகை கொடுக்கப்படுகிறது :—

| | மாதம். ரூ. |
|---|---|
| சுபேதார் மேஜர் .. .. .. | 22 |
| சுபேதார் .. .. .. .. | 22 |
| ஜமேதார் .. .. .. .. | 14 |
| ஹவில்தார் .. .. .. .. | 11 |
| நாயிக் .. .. .. .. | 11 |
| லான்ஸ் நாயிக் .. .. .. | 7 |
| சிப்பாய் .. .. .. .. | 7 |

படி.—

போர் முனையிலுள்ள இந்தியப் படைகளுக்கு இது வழங்கப் படுகிறது. இதிலும் சென்ற 1942-ம் வருஷம் டிசம்பர் மீ 2 ரூபாய் உயர்த்தினார்கள். இதன்படி

| | மாதந் தோறும். ரூ. |
|---|---|
| சுபேதார் மேஜருக்கு .. .. | 18 |
| சுபேதாருக்கு .. .. .. | 18 |
| ஜமேதாருக்கு .. .. .. | 11 |
| ஹவில்தாருக்கு .. .. .. | 8 |
| நாயிக்குக்கு . .. .. .. | 8 |
| லான்ஸ் நாயிக்குக்கு.. .. .. | 5 |
| சிப்பாயிக்கு .. .. .. .. | 5 |

கொடுக்கிறார்கள்.

**சாப்பாட்டு அலவன்ஸ்.—**

சமாதான காலத்தில் கொடுக்கப்படும் உணவுப் பொருள்களுடன் இதையும் கொடுக்கிறார்கள். 1940 ம் வருஷம் டிசம்பர் மீ த்திற்கு முன்பு தலா மாதம் 10 அணா வீதம் கொடுத்து வந்தார்கள். பிறகு ரூ. 2 வீதம் கொடுத்தார்கள். 1942-ம் வருஷம் செப்டம்பர் மீ 1உ முதல் இதை ரூ. 3 வீதம் உயர்த்தியிருக்கிறார்கள்.

**சேம நிதி.—**

இந்தத் தொகை மாதந் தோறும் ஒவ்வொரு சோல்ஜருக்கும் உண்டு. ஆனால், வைஸிராய் கமிஷன் உத்தியோகம் கிடைக்கும் வரையிலும் அல்லது படையை விட்டு நீங்குகிற வரையிலும் பட்டுவாடா செய்யப்பட மாட்டாது. படையை விட்டு விலகும் காலத்தில், அவர்கள் இன்பமாக வாழுவதற்கு உதவும் பொருட்டே இத் தொகை சேமிக்கப்படுகிறது. இந்திய சோல்ஜர்களுக்கு மாதம் 1 ரூபாய் வீதம் கொடுக்கப்பட்டு வந்ததை 1942-ம் வருஷம் ஏப்ரல் மீ முதல் ரூ. 3 வீதம் உயர்த்தி யிருக்கிறார்கள். இந்தத் தொகை மற்ற சிப்பாய்களுக்கு இதற்கு முன்பு கிடையாது. இப்போது மாதம் தோறும் 1 ரூபாய் வீதம் அவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

**நல உரிமைத் திட்ட நிதி.—**

இந்திய சோல்ஜர்களின் நன்மையை முன்னிட்டும் அவர்களுடைய குடும்பத்தாரின் நன்மையை முன்னிட்டும் திட்டம் வகுத்திருக்கிறார்கள். இந்த நிறைவேற்ற ஒரு நிதியை யமைத்திருக்கிறார்கள். 1942-ம் வருஷம் ஏப்ரல் மீ முதல் இந்த நிதிக்கு சேவகத்திலுள்ள ஒரு சோல்ஜரின் சார்பாகவும் வருஷம் ஒன்றிற்கு ரூ. 2 வீதம் கொடுக்கப் படுகிறது.



# டச்சுக் கிழக்கிந்திய தீவுகளில் ஜப்பானியர்.

## முஸ்லீம்களை வயப்படுத்த முயற்சி.

### அநீதத் தாண்டவம்.

ரேடென் லாக்மென் ட்ஜஜாதீன்கிராட் என்பவர் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளின் கல்வி இலாக்கா டைரக்டர். இவர் நெதர்லந்து பொருளாதாரக் கோஷ்டியின் அங்கத்தவராக வாஷிங்டனுக்குப் போயிருக்கிறார். அமெரிக்கத் தலை நகரம் தான் வாஷிங்டன். அங்கே பத்திரிகைப் பிரதிநிதிகள் அவரை பேட்டி கண்ட போது, ஜப்பானியர்களைக் குறித்து அவர் கூறியதாவது :—

> "என் நாட்டு மக்களுக்கு ஜப்பானியர்கள் ஒரு கண்ணில் சுண்ணாம்பும் ஒரு கண்ணில் வெண்ணெயும் தடவுகிறார்கள்."

எங்கள் நாட்டில் பெரும்பாலும் முஸ்லீம்கள் தான். இது ஜப்பானியர்களுக்கு நன்றாகத் தெரியும். தம் "புது அமைப்பை" முஸ்லீம்கள் வெறுக்கிறார்கள் என்றும் அவர்களுக்குத் தெரியும். இவர்கள் மற்ற மதங்களை வெறுப்பது போலவே தான் முஸ்லீம் மதத்தையும் உள்ளூர வெறுக்கிறார்கள். என்றாலும், தம்மைப் பற்றி முஸ்லீம்கள் நல்லெண்ணம் கொள்ள வேண்டும் என்பதில் மிகவும் அக்கரை கொண்டிருக்கிறார்கள். கிருஸ்துவப் பண்டிகை நாட்களுக்கு விட்டு வந்த லீவை ரத்து செய்து விட்டு, அவற்றிற்குப் பதிலாக ஜப்பானிய விருந்துகள் நடத்துகிறார்கள். இப்படிப் பட்டவர்கள் முஸ்லீம்களைத் தட்டிக் கொடுக்க வேண்டி, அவர்களுக்கு ஏற்கெனவே உள்ள பண்டிகை லீவ்களோடு, எங்கள் வருஷப் பிறப் பன்றும் லீவ் விடுகிறார்கள். இது ஒரு அத்தியாயம்.

அங்காடி வியாபாரிகளுக்குச் சரக்குக் கொடுக்காமல், அவர்களை அழித்து விட்டார்கள். ஜப்பானியர்கள் தம் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டதனால் **உண்ண உணவின்றி, யாரேனும் சிறிது திருடி விட்டால் கையை வெட்டி விடுகிறார்கள். மிகச் சிறிய குற்றங்களுக்குக் கூட, தலையை வாங்கி விடுகிறார்கள்.**

சமீபத்தில் எங்கள் இராணியார் ஒரு புதிய திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரப் போவதாக வாக்குறுதி கொடுத்தார்கள்.

> யுத்தம் முடிந்த பிறகு, ஆதிக்கம் செலுத்துவதை விடுத்து, கூட்டுறவு முறையில் ஒரு புதிய சமுதாயம் அமையக் கூடு மென்று எதிர் பார்க்கிறேன். எங்களுக்கு அறிவை யூட்டியவர்களின் உறவை நாங்கள் அறவே வெட்டி விட விரும்ப வில்லை. நாமெல்லாம் ஒரு பொதுவான நோக்கத்திற்குப் பாடு படுகின்றோம்; ஆகவே கூட்டுறவு முறையில் யதேச்சை ஏற்பட வேண்டு மென்று தான் கோருகிறோம்.

---

# பர்மாவில் ஜப்பானியர் பயங்கர ஆட்சி

## பர்மிய விவசாயிகளா ? கொள்ளைக்காரர்களா ?

ஜப்பானியர்கள் பர்மாவைப் பிடித்துக் கொண்டதன் பயனாக பொருளாதார நெருக்கடி அங்கே அதிகப்பட்டது. உண்ண உணவின்றி பர்மிய விவசாயிகள் கொள்ளை யடிக்கத் தலைபட்டு விட்டார்கள். தாராவாடி என்னும் பட்டணத்தைக் கொள்ளை கொண்டு விட்டார்கள். மற்ற ஜில்லாக்களி லுள்ள பர்மிய மிராசுதாரர்களும் இந்திய மிராசுதாரர்களும், இவர்களுக்குப் பயந்து மலைக்காடுகளில் போய் மறைந்து வசிக்கிறார்கள். இவர்கள் தான் பர்மா இப்போதுள்ள நிலைமைக்குக் காரணம் என்று, விவசாயத் தொழிலாளர்கள் நினைக்கத் தக்கபடி, ஜப்பானியர்கள் பக்குவமாகப் பிரசாரம் செய்ததன் பயனாகத் தான் கொள்ளைகள் ஆரம்பமாயின. அன்றியும் அங்குள்ள போலீஸ் படையும் மிகச் சிறிது. இந்தப் படை, இலஞ்சம் முதலிய இழிகுணங்களும் உடையது. இப்படிப் பட்ட போலீஸ் படை எப்படி பொது ஜனங்களைப் பாதுகாக்கும் ?

இந்தியாவின் கிழக்கெல்லைக்குப் போய்வந்த ஒரு அமெரிக்கப் பத்திரிகை நிருபர் தன் பத்திரிகைக்கு அனுப்பிய செய்தியில், "இந்தியாவிற்கு வந்து சரண் புகுந்த பர்மியர்கள், மீண்டும் பர்மாவைக் கைப்பற்றி, குடியேறி, சமாதானம் நிலவும்படி செய்யுமாறு நேசநாட்டு அரசாங்கங்களை வேண்டிக் கொள்ளுகிறார்கள்" என்று அறிவிக்கிறார்.

நற்க, இந்திய மிராசுதாரர்களைக் காப்பாற்ற தம்மால் முடியாதென்று அங்குள்ள ஜப்பானிய அதிகாரிகள் கூறிவிட்டனர். உண்மையில் யாரையும் காப்பாற்ற அவர்களால் முடியவில்லை. ரயில் ரோடுகளின் பக்கங்களிலுள்ள ஊர்களிலும், கடற்கரையிலுள்ள துரைமுகப் பட்டினங்களிலும், முக்கியமான ஊர்களிலும் மட்டுந் தான் இந்தக் கையாலாகாத போலீஸாரை வைத்திருக்கிறார்கள். மற்ற விடங்களில் ஈவிரக்கமின்றி கொள்ளை யடிக்கும்படி ஜப்பானியர்கள் தம் கையாட்களை ஏவி விட்டிருக்கிறார்கள்.

அன்றியும் ஒரு ரூபாயை நூறு சதங்களாக வகுத்து, வெள்ளிச் சதங்களுக்குப் பதிலாக காகித நோட்டுச் சதங்களை வெளியிட்டிருக்கிறார்கள். இவற்றில் இங்கிலீஷிலும் ஜப்பானிலும் எழுத்துகளை அச்சிட்டிருக்கிறார்கள்.

---

# அந்தமானில் ஜப்பானியர் அட்டூழியம்

சென்ற மார்ச்சு மாதம் 23-ம் நாள் ஜப்பானியர்கள் அந்தமானைக் கைப்பற்றினார்கள். உடனே, கடும் சிறையில் தனிமையாக வைக்கப் பட்டிருந்த மகா ஆபத்தான கைதிகளையுங் கூட, வெளியே விட்டுவிட்டனர். கைதிகளும், உள்ளூர்வாசிகளும், மற்றவர்களும் அந்தமானில், விமான நிலையம், கப்பல்தளம் தவிர, மற்றெல்லா விடங்களுக்கும் தாராளமாகப் போகும்படி அனுமதித்தனர்.

இவர்கள் கைபற்றிய முதல் வாரத்திலேயே வீடுகளையும் வியாபார ஸ்தலங்களையும் தாராளமாகக் கொள்ளை யடித்தார்கள். ஏராளமான சொத்துக்களை அழித்து நாசப் படுத்தினார்கள். பெண்களையும் குழந்தைகளையுங் கூடக் கற்பழித்தார்கள். ஒரு கிராமத்தில் ஒரு வீட்டிற்கு நெருப்பு வைத்தார்கள். அதை யாரும் அவிக்கக் கூடாதென்று கடுமையாகத் தடுத்து விட்டார்கள். அதன் பயனாக 50 வீடுகள் வரை எரிந்து சாம்பலாயின. வீடு வாசல்களின்றி அநேகர் நடுத் தெருவில் பரிதபித்து நின்றார்கள். அங்குள்ள ஒவ்வொருவரும் சூரியோதயத்தி லிருந்து சூரியன் மறைகிற வரையிலும் கூலி வேலை செய்ய வேண்டு மென்று நிர்ப்பந்திக்கிறார்கள். அவர்கள் இதற்குக் கொடுக்கும் கூலியோ, அணா எட்டு மட்டுந் தான்.

# இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள் ?

‘ இது கொஞ்சங்கூட நியாயமே இல்லே. ஜெர்மனியின் முழு ராணுவ பலத்திற்கும் ருஷ்யா ஒன்றே ஈடு கொடுத்துக் கொண்டிருக்கும்படியான நிலைமையை எத்தனை காலம் தான் நீடிக்க விட்டு வைத்திருப்பது ? சீக்கிரமே இரண்டாம் போர்முனையை ஆரம்பிக்க வேண்டாமா ? சும்மா இருந்தால் எப்படி ? ’ என்று சிலர் கோபமாகக் கேட்டார்கள்.

‘ நேசநாடுகள் எங்களுக்கு கொடுத்து வரும் உதவி போதவே போதாது. சீக்கிரமே இரண்டாம் போர் முனையை ஆரம்பித்து, ஜெர்மனியின் படைகளை இரு கூறுகப் பிரிக்க வேண்டும் ’ என்று ஸ்டாலின் கூறினுர்.

பிரிட்டிஷ் பொது ஜனங்களில் பலரும், பல பத்திரிகைக் காரர்களும் இதே மாதிரியே பிரிட்டிஷ் சர்க்காரையும் குறை கூறிக்கொண்டே யிருந்தனர். ஆனுல் பிரிட்டிஷ் பிரதம மந்திரி கல்லுப் பிள்ளையார் மாதிரி இதை யெல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமலே இருந்து விட்டார்.

‘ இப்படி இருப்பது தான் நியாயமா ? ’ என்று நீங்கள் கேட்கலாம். இந்தக் கேள்விக்கு அவரே சென்ற வாரத்தில் மணியாகப் பதில் சொல்லிவிட்டார். வேண்டு மென்றே காரியார்த்தமாகக் கல்லுப் பிள்ளையார் மாதிரி இருப்பதற்கும், ஒன்றும் செய்ய சக்தி இல்லை என்பதால் கல்லுப் பிள்ளையார் மாதிரி இருந்து விடுவதற்கும் வித்தியாசம் இல்லையா ?

சர்ச்சில்துரை ‘ கம் ’ என்று இருந்து விட்டதற்கு ஏகப் பட்ட காரணங்கள் இருக்கின்றன். நேச தேசத்தார் வெற்றியடைந்தே தீர வேண்டும் என்று எண்ணுகிறவர்களில் அவரை விட அதிக அக்கரை யுள்ளவர்கள் வேறு யாராவது இருக்கிறுர்கள் என்று சொன்னுல், அதை நம்பவே முடியாது. அட, மற்றதெல்லாம் தான் போகட்டும். சுயநலத்தைத உத்தேசித்தாவது அவ்வாறு நினைக்க மாட்டாரா அவர் ? சுயநல மென்றுல் எப்படி ?

பிரிட்டனின் பிரதம மந்திரி அவர். இந்த யுத்தத்தில் ஏற்படும் வெற்றி தோல்விகளில் அவருக்கும் பூரண பங்கு உண்டு. நாளை ஏதாவது மோசமான முடிவு ஏற்பட்டு விட்டால், உலகோரும் சரி, எதிர்கால சரித்திரக்காரர்களும் சரி என்ன சொல்லுவார்கள் ? எல்லாப் பழியையும் இவர் தலைமீது தானே தூக்கிப் போடுவார்கள் ? அத்தகைய நிலைமையை சர்ச்சில் போன்ற தீவிரமான தேசபக்தர்கள் ஏற்க விரும்புவார்களா ? ஒருக்காலும் மாட்டார்கள்.

ஆகவே சர்ச்சில் துரை ‘ கம் ’ என்று இருந்தது, காரணமாகத் தான். அவர் அமெரிக்காவிற்கும், ருஷ்யாவிற்கும் பறந்து சென்றது சும்மா ஊர் சுற்றிப் பார்த்து மகிழ்ந்து வரவும் அல்ல ; எதிரிகளுக்கு வயிற்றிலே புளியைக் கரைத்து விடுவதற்காகவும் அல்ல. மனசிலே தீர்க்கமான தோர் திட்டத்தை வைத்துக் கொண்டு, அதை ஜனதிபதி ரூஸ்வெல்டிற்கும், ருஷ்யத் தலைவர் ஸ்டாலினுக்கும் தெரிவிக்க வேண்டியே அங்கெல்லாம் சென்றுர்.

ஐரோப்பாவிலே 1942-ல் இரண்டாம் போர் முனை இருக்கும் என்று சர்ச்சில் துரை ஒருமுறை பகிரங்கமாகச் சொன்னது வாஸ்தவம். இது நம் எதிரியை ஏமாற்றுவதற்காக. அந்த ஜோரில் நம்மவர்களில் பலரும் ஏமாந்திருப்பார்கள். அதற்கென்ன செய்வது ? ஆனுல் சர்ச்சில் துரை ஸ்டாலினிடம் மட்டும் உண்மையை தெரிவித்து விட்டார். ‘ ஐரோப்பாவில் 1942-ல் இரண்டாம் போர் முனையைத் தொடங்க ஏற்பாடு செய்கிறும். ஆனுல் நிச்சயமாக இவ் வருடம் இப்போர் முனையை ஏற்படுத்த முடியுமா என்று சொல்ல முடியாது ’ - என்று கூறிவிட்டார் அவர். ஸ்டாலினுக்கு இப்பதில் திருப்தியை அளித்திருக்க முடியாது.

ஆனுல் ஜனதிபதி ரூஸ்வெல்டும், சர்ச்சில் துரையும் கலந்து போட்டிருந்தார்கள் மற்றொரு பிளான். ஜூன்மீ 20உயன்றே போட்டாச்சு இது. ஆனுல் அந்த பிளானை அமுல் படுத்த நாலு மாதங்களாகி விட்டன. அந்த பிளான் என்ன சொல்லிற்று தெரியுமா ?

‘ எகிப்திலிருந்த எட்டாவது சேனைக்கு அதிநூதனமான, சக்திவாய்ந்த அமெரிக்க டாங்கிகளை ஏராளமாக அனுப்ப வேண்டும். எட்டாவது சேனையை இன்னும் நன்றுகப் பழக்கவேண்டும். ஐம்பதாயிரம் பேர்கள் வரை அங்கிருந்து தெரிந்தெடுத்து, அவர்களுக்குத் திடீர்ப் பாய்ச்சல் போர் முறையைக் கற்றுக் கொடுக்க வேண்டும். தக்க சமயத்தில் அவர்களைக் கொண்டு, ரோமலின் படைகள் மீது பாய்ச்சல் செய்து விட வேண்டும். இதே சமயம் பெரிய தொரு அமெரிக்கப் படையை வடமேற்கு ஆபிரிகாவிற்கு அனுப்ப வேண்டும். அதிக ஆபத்தின்றி பிடித்துக் கொள்ளக் கூடிய பிரதேசம் அதுதான். அங்கிருந்து நம் கைவரிசையைக் காட்டலாம். அங்கே வெற்றி கிடைத்தால் ஐரோப்பாவின் தென் பகுதியை அழ வைக்கலாம் ’ என்பதே பிளான்.

ஆனுல் இதே சமயத்தில் ஐரோப்பிய இரண்டாம் போர்முனையைப் பற்றி சர்ச்சில் மறந்தே போனுரா என்று கேட்கலாம். மறக்க வில்லை, மறக்க வில்லை. ஐரோப்பாவில், அதாவது பிரிட்டனின் எதிர்க் கரையில் போயிறங்கி, படையெடுப்பது என்றுல், சாமானியமல்ல. எண்ணற்ற கப்பல்கள் வேண்டும். அதற்கு ஏராளமான படை வேண்டும். பிரான்ஸின் கடற்கரைகளும், வடக்கே நார்வே வரை உள்ள பிரதேசங்களும் ஜெர்மனியரால் வெகு நன்றுகப் பலப் படுத்தப் பட்டிருக்கின்றன. ஜெர்மனியின் விமானங்களில் மூன்றிலொரு பங்கு ஐரோப்பாவின் மேல் திசையைக் காப்பதற் கென்றே தூசு கூடப் படாமல் புதிதாக வைக்கப் பட்டிருக்கிறது. நன்றுகப் பழக்கப் பெற்ற சிறந்த நாவிப் படைத் தலைவர்கள் பலர் பிரான்ஸிலும், மற்ற இடங்களிலும் இருக்கிறுர்கள். தவிர, இங்கிலீஷ் கால்வாய் பிரதேசமே ஒரு அவஸ்தைப் பிடித்த பிரதேசம். நினைத்தால் ஜலம் வற்றிப் போகும், திடீரென்று ஜலமட்டம் உயர்ந்து விடும். திடுதிப்பென மூடுபனி கவிந்து விடும். ஒன்றுமே கண்ணுக்குத் தெரியாது. இந்தச் சங்கடங்களையெல்லாம் சமாளித்தாக வேண்டும். இதற்கான ஏற்பாடுகள் பூரணமாக வில்லை. இவை அரை குறையாக இருக்கிறபோது, அசட்டுப் பிசட்டென்று ஏதாவது செய்வது உசிதமா ? இவ்வாறு முழு ஏற்பாடுகளும் பூர்த்தியாகவில்லை என்பதைத் தான் வெளியிலே சொல்லலாமா ? எதிரி குதூகலிக்க மாட்டானு ? அவனைக் குதூகலிக்கச் செய்வதா நமது நோக்கம் ? காரியத்திலேயே கண்ணுக இருக்கவேண்டுமே ஒழிய, கண்டவர்கள் சொல்வதை யெல்லாம் காதில் கேட்டுக்கொண்டு, நிமிஷத்திற்கு நிமிஷம் அவர்கள் சொல்வதற்கெல்லாம் சமாதானம் சொல்ல முயற்சிப்ப தென்றுல், அது சர்ச்சில் போன்ற காரியப் புலிகளுக்கு ஏற்றதல்ல. இதை யெல்லாம் மனதில் கொண்டே அவர் சும்மா இருந்து விட்டார். “ ஊரார் சொல்வதைக் கவனியாமல் நீங்கள் உங்கள் பாட்டுக்கு ” ஜமாய்த்துத் தள்ளுங்கள். நாம் போட்ட பிளான் சரியானபடி நடந்து விட்டால், அப்புறம் தானுக எல்லோரும் ‘ பேஷ் ! பேஷ் ! ’ என்று சொல்லிவிட்டுப் போகிறுர்கள் ” என சர்ச்சில் துரை, ராணுவ அதிகாரிகளிடம் கூறி விட்டிருக்கிறுர். சும்மா கடியாரம் போல், வேலைகள் வெகு கணக்காக நடந்திருக்கின்றன. அதன் பலன் என்ன ?

ரோமல் எதிர் பாராத சமயத்திலே, பிரிட்டிஷ் எட்டாவது சேனை ஏற்கனவே போட்டிருந்த பிளான்படி நொறுக்கித் தள்ள ஆரம்பித்து விட்டது. ரோமலும் அவரது ஆட்களும் ஒரே அலங்கோலமாக ஓட ஆரம்பித்து விட்டனர். அந்த ஓட்டம் இன்னும் நின்றபாடில்லை. மள மள வென கடற் கரையோரமாகவுள்ள முக்யமான துறை முகங்களும், மற்ற இடங்களும் நம் கைக்குத் திரும்பவும் வந்துவிட்டன. அச்சு நாட்டு ஆபிரிக்கப் படைகளுக்கு உயிர் கொடுத்து வரும் பெங்காஸித் துறை முகத்தில் இரவும் பகலும் ‘ வாண வேடிக்கை ’ தொடர்ந்து நடந்து வருகிறது. பெங்காஸிக்கு எழுபது மைலில் நம் படைகள் இப்பொழுது இருக்கின்றன. இந்தச் சமயத்தில் தான், ரூஸ்வெல்ட் ஒன்றரை லக்ஷம் பேர்களைச் சிறந்த ஆயுதங்களுடன் வடமேற்கு ஆபிரிக்காவில் போய் இறங்கச் செய்தார். இந்த அமெரிக்கப் படைகளுக்கு பிரிட்டிஷ்



உதவியும் இருந்தது. சரித்திரத்திலேயே கண்டிராத அளவில், சுமார் எண்ணூற்றைம்பது கப்பல்கள் ஆனந்தமாக ஆபிரிகா போய்ச் சேர்ந்தன. இதிலே பாராக் கொடுக்க வென்று முந்நூற் றைம்பது யுத்தக் கப்பல்கள் இருந்தன.

பாவம் ! ஹிட்லர் தூங்கிக் கொண்டிருந்து விட்டார். அவர் ஏகமாக ஜம்ப மடித்துக் கொண்டிருந்தாரே, தனது நீர் மூழ்கிக் கப்பல்களின் வீரதீரப் பிரதாபங்களைப் பற்றி. அந்த நீர் மூழ்கிகளுக்கெல்லாம் இத்தனை கப்பல்களும் கடுக்காய் கொடுத்து வந்தது ஒரு பெரிய ஆச்சரியமே ! இதை விட ஹிட்லருக்கு வேறு அவமானம் எதுவும் வேண்டாம்.

ஹிட்லர் எப்படி ஏமாந்து போயிருக்கக் கூடும் தெரியுமா ? அவர் பிறருக்குச் சொல்லிக் கொடுத்த பாடமே அவருக்கு வினையாக முடிந்து விட்டிருக்கிறது. அவர் என்ன சொல்லிக் கொடுத்திருக்கிறுர். “புளுக ஆரம்பித்தால் அண்டப் புளுகாகப் புளுகு” என்று.

அவரது சிஷ்ய கோஷ்டிகளும் தம் குரு சொல்படியே ஏகமாகப் புளுகிக் கொண்டிருந்தார்கள், புளுகிக் கொண்டிருக்கிறுர்கள். இந்த ஹிட்லர் திடீரென அப்புளுகல்களில் சிலவற்றை உண்மையெனவே நம்பி விட்டார் போலிருக்கிறது. “ ஜெர்மானிய யு படகுகள் அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும், மற்ற இடங்களிலும் ஏகமாக அட்டகாசம் செய்கின்றன, பல லக்ஷக்கணக்கான டன் நிறையுள்ள நேச தேசக் கப்பல்கள் ‘ பஜல் ’ ஆகிவிட்டன. நேச தேசத்தார்க்கு ஏகமாகக் கப்பல் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது ” என்று பிரசார மந்திரி பொய் நிபுணர் டாக்டர் கப்பல்ஸின் கீழ் வேலை செய்யும் நாவிகள் ரேடியோ மூலம் முழக்கிக் கொண்டிருந்தார்கள். அதற் கற்றுப் போல, பிரிட்டிஷ் அதிகாரிகளும் அடிக்கடி, ‘ நாம் இன்னும் சமாளிக்க வேண்டியது, இந்த யு படகுகளால் ஏற்படுத்தப்படும் தொல்லைகள் தான் ’ என்று சொல்லி வந்திருக்கிறுர்கள். ஆகவே, உண்மையில் நேச தேசத்தாருக்குக் கப்பல்கள் நிறைய இல்லை என்றே ஹிட்லர் நம்பி விட்டார் போலிருக்கிறது. இப்பொழுது ஒரே கோஷ்டியாக எண்ணூற்றைம்பது கப்பல்கள் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்து வந்திருக்கின்றன. ஜிப்ரால்டரைத் தாண்டும் வரை, அக்கப்பல்களில் இருந்த டாக்டர்களுக்குக் கொஞ்சம் கூட வேலையே இல்லை. இவ்வாறு வந்த கப்பல்களில் இருந்த ஒவ்வொருவரும் அச்சு நாட்டினர்க்குச் சாவு மணி கொட்டும் திட எண்ணத்துடனேயே வந்திருக்கிறுர்கள். எடுத்த எடுப்பிலேயே அவர்கள் வடமேற்கு ஆபிரிகாவில் பிரமாதமான வெற்றி கண்டு விட்டார்கள். பிரஞ்சுத் தலைவர்களில் முக்யமானவரான டார்லனைத் தங்கள் வசப்படுத்திக் கொண்ட அவர்கள், அல்ஜீரியா, மொராக்கோ பிரதேசங்களில் சட், புட் எனச் சண்டை நிற்கும்படி செய்து விட்டார்கள். இப்பொழுது, அச்சு நாட்டினர் வசமுள்ள ட்யூனிஸியா பிரதேசத்திற் குள்ளும் அவர்கள் நுழைந்து விட்டார்கள். அவர்களின நோக்கம், மேற்கு நோக்கி தலைவிரி கோலமாக (ஜெர்மன் படையினருக்கு தலை மொட்டையாக அல்லவா இருக்கும் ? தலையை விரித்துக் கொண்டு எப்படி ஓட முடியும் என்று கேட்காதீர்கள். அவர்கள ஓடுகிற திணுசைப் பார்த்தால், வழக்கமாக உள்ள அந்தப் பழைய வார்த்தை தான் சட்டென வருகிறது பேனு முனைக்கு) ஓடிக் கொண்டிருக்கும் அச்சுப் படையினரை மறு பக்கம் தாக்க வேண்டு மென்பது தான் அதோடு, வட ஆபிரிகா மண்ணிலிருந்தே அச்சு நாட்டினரை வாலில் ஓலையைக் கட்டி விரட்டி யடித்து விடவேண்டு மென்பதும் அவர்களின் லக்ஷ்யமாகும்.

ஏன் தெரியுமா ? வட ஆபிரிகா அவ்வளவு முக்யமான பிரதேசமாகும். ‘ ஆசியவிற்கும், ஐரோப்பாவிற்கும் தொடர்பு ஏற்படுத்தும் பாலம் போலாகும் வட ஆபிரிகாப் பிரதேசம். இதை யார் தம் வசப் படுத்திக் கொண்டிருக்கிறுர்களோ, அவர்களே பாக்கிய சாலிகள் ’ என்று நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை சொல்லி யிருப்பது முற்றிலும் உண்மையே !

வட ஆபிரிகப் பிரதேசத்திலே தட்டிக் கேட்க யாருமில்லாத நிலைமையிலே நாவிகளை இருக்க விட்டு விட்டால், அப்புறம் மத்யதரைக் கடலிலே நேச தேசக் கப்பல்கள் ஒன்று கூடப் பத்திரமாகப் போகமுடியாது. அப்புறம் மால்டா வாசிகள் என்ன செய்வார்கள் ? இரண்டாயிரம் நாஸி விமானப் படையெடுப்புகளைச் சமாளித்துக் கொண்டு இன்னும் முடி வணங்கா திருக்கும் அத்தீவு வாசிகள் இத்தனை காலம் பட்ட பாடெல்லாம் வியர்த்தமாகி விடாதா ? அப்புறம் எகிப்து, சூயஸ் பிரதேசங்களுக் கெல்லாம் ஆபத்தல்லவா ? அதற்கு மேல், நாஸிகள் ஸிரியா, இராக், இரான் பிரதேசங்களை யெல்லாம் சும்மா விட்டு விடுவார்களா ? அவ்வளவு தூரம் வெற்றி கிடைக்குமானுல், இந்தியாவிற் குள்ளும் தலை நீட்டிப் பார்க்காம லிருப்பார்களா ? தனது சகா இவ்வளவு ஜோராக வருகிறுன் என்றுல், ஜப்பானுக்கும் குஷி பிறக்காதா ? இப்படியாக வட ஆபிரிகாவில கோட்டை விட்டால், எல்லாம் பாழாகப் போய் விடக் கூடு மல்லவா ?

நேச தேசத்தார் வசமே வட ஆபிரிகா முழுதும் இருக்குமானுல், ஐரோப்பாவின் அடிவயிறு போன்ற இத்தலி, கிரீஸ், தென் பிரான்ஸ் முதலியவற்றை வட ஆபிரிகாவி லிருந்தே அடித்து நொறுக்கலாம். அதோடு, மத்யதரைக் கடல் வழியாக ருஷ்யாவிற்குத் தைரியமாக உதவி அனுப்பலாம். இதை உத்தேசித்தே வட ஆபிரிகா விஷயத்தில் நேச தேசத்தார் மிகுந்த சிரத்தை காட்டி வந்திருக்கிறுர்கள்.

வடமேற்கு ஆபிரிக்காவில் அமெரிக்கப் படைகள் பெற்ற வெற்றியும், ட்யூனிஸியாவில் தலைமை ஸ்தானத்தை ஏற்படுத்திக் கொண்டு, மேற்கொண்டு பூசை கொடுக்க ‘ பிளான் ’ போட்டுக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் முதல் சேனையின் சாகசமும், லிபியாவில் வெற்றிக் கொடி நாட்டி வரும் எட்டாவது சேனையின் புகழும், ஹிட்லரின் தூக்கத்திலே மண்ணைப் போட்டிருக்கு மென்பது திண்ணம். அதோடு ரோமலுக்கு அவர் தனது சேவகனாலேயே எத்தகைய அபிஷேகம் நடத்தி யிருப்பார் என்பதையும் நாம் எளிதில் யூகித்துக் கொள்ளலாம். ‘ எது வந்தாலும் வரட்டும், ட்யூனிஸியாவிலே நேச தேசப் படைகளை ஒரு கை பார்த்து விடுங்கள் ’ என்று ஹிட்லர் உத்திரவிட்டு விட்டாராம். எகிப்தையும், லிபியாவையும் மறந்து, ரோமல் ட்யூனிஸியாவிற்கு ஓடி யிருக்கிறுராம். அந் நாட்டிற்குள்ளே அச்சுப் படைகள் போய் குவிகின்றனவாம். விமான மூலமாக டாங்கிகள் போயிறங்குகின்றனவாம். மேற் கொண்டு ட்யூனிஸியாவிற்கு உதவி யனுப்பவும், இத்தலியைப் பலப்படுத்தவும், ஹிட்லர் பதினறு டிவிஷன படைகளை இத்தலியில் கொண்டு வைத்திருக்கிறுராம். ட்யூனிஸியாவில் உள்ள விமானக் கூடங்களைக் கைப்பற்ற பிரிட்டிஷ் பாரசூட் படைகள் மும்முரமாக வேலை செய்கின்றனவாம். டியூனிஸியா அருகே ஒரு பெரிய கடற் போர் நடக்கிறதாம்.

வட ஆபிரிகாவிலே இத்தனை கலாட்டாக்கள் நடப்பதைக் கண்டு, ஹிட்லர் பிரான்ஸ முழுவதையும் பிடித்துக் கொண்டுவிட்டார் இத்தலியின் எல்லையைப் பலப் படுத்துகிறுர். டூலானில் உள்ள விஷிக்குச் சொந்தமான கடற் படையை மடக்குகிறுர். தென் பிரான்ஸிலே வீரர்களைக் கொண்டு நிறுத்துகிறுர். ஸ்பெயின் தேசத்தின எல்லைக்கு ஆட்களை அனுப்புகிறுர். ருஷ்யாவில் தென்பட்ட தலைகள் பல இங்கெல்லாம் காணப்படுகின்றன. ஸ்டாலின் கேட்டதும் இதுதானே ?

வட ஆபிரிகாவில் நடக்கும் நிகழ்ச்சிகள் இரண்டாவது போர் முனைக்கான முதற்படி என்பதை எல்லோருமே ஒப்புக் கொள்ளுகிறுர்கள். மேற் கொண்டு வரப் போவது என்ன என்பது அச்சு நாட்டினருக்கு நன்றுகத் தெரியுமே ! யுத்தத்தின் போக்கிலேயே பெரிய மாறுதல் இருக்கப் போகிறது, மாறும் காலம் இதுதான் என்பதும் உள்ளங் கை நெல்லிக் கனி போலத் தெரிகிறது. மேலே விழுந்து தாக்கும் சக்தி நேச தேசத்தாருக்கும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பதும், அச்சு நாட்டினருக்குப் போதாத காலம் ஆரம்ப மாகிவிட்ட தென்பதும், யாராவது ஒருவன் நொந்து போயிருக்கையில் அவன் சட்டைப் பையிலிருந்து தம்பிடி திருடுபவனைப் போல் நடந்து கொண்ட முஸோலினியும், அவரிடம் அகப்பட்டு முழிக்கும் இத்தாலியர்களும் சீக்கிரமே நேச தேசத்தாரின் குண்டு வீச்சால் அவதிப் பட்டு,

(9-ம் பக்கம் பார்க்க.)

# சீனாவில் அந்நியர்களுக்கு விசேஷ உரிமைகள்

## சீனப் புரட்சியும் மக்களின் மீட்சியும்

### மார்ஷல் ஷியாங்-கெய்-ஷேக் தோற்றம்

கிட்டு தன் தாத்தாவைக் கேட்டு சீனாவைப் பற்றிய சில ரசமான விஷயங்களைத் தெரிந்து கொண்டான். அவை வருமாறு :—

கிட்டு.—சீனா அரசாங்கத்தார் அந்நிய நாட்டார்களுக்கு ஏதோ சௌகரியம் செய்திருக்கிறார்களாமே; அது என்ன ?

தாத்தா.—அப்படி யல்ல அது. ஏற்கெனவே சுமார், 100 வருஷங்களுக்கு முன்னேயே, சீனாவி லிருந்த அந்நிய நாட்டார்களை அந்த அரசாங் கத்தார் ஒதுக்கி வைத்திருந்தார்கள்.

கிட்டு.—ஏன் ?

தாத்தா.—வழக்க பழக்கங்கள், சட்ட திட்டங்கள் எல் லாம் மாறு பட்டவை யல்லவா? கலையும் நாகரீகமுங் கூட மாறு பட்டவை தான்.

கிட்டு.—நம் பிரிட்டிஷாரை எங்கே ஒதுக்கி வைத்திருந் தார்கள் ?

தாத்தா.—காண்டன் என்னும் துறைமுகத்தில். அல் லாமலும் சீனாவுடன் வியாபாரம் செய்ய கிழக்கிந்தியா கம்பெனி யென்றிற்குத் தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏகபோக உரிமை கள் வழங்கி யிருந்தார்கள்.

கிட்டு—வியாபாரம் ஓங்கி நடந்ததா ?

தாத்தா—நடந்தது. ஆனால், இந்த இரண்டு அரசாங் கங்களுக்கு மட்டும், மனத் தாங்கல் இருந்து கொண்டிருந்தது.

கிட்டு—காரணம் ?

தாத்தா.—அந்நிய அரசாங்கங்கள் தமக்குச் சம மானவை யல்ல; தமக்குக் கப்பங் கட்ட வேண்டும் என்று சீன அரசாங்கம் எதிர் பார்த்தது.

கிட்டு.—ஆனால், அந்நிய நாட்டவர்களை எப்படி சீன அரசாங்கத்தார் ஆண்டனர் ?

தாத்தா.—அந்தந்த நாட்டு ஸ்தானீகர்கள் தத்தம் நாட்டு சட்டங்களின் உதவியால் ஆட்சி புரிந் தனர். சீனப் போலீஸாருக்கு அந்நியர்கள் உட்பட்டவர்களல்ல.

கிட்டு.—இதனால் சீன அரசாங்கத்திற்கு என்ன நன்மை ?

தாத்தா.—நன்மை யில்லை. ஆனால், தீமை தான்.

கிட்டு.—எப்படி ?

தாத்தா.—முன்னேற்ற நோக்கமுள்ள சீனர்களுக்கு ஐரோப்பிய சட்டங்கள் மிகவும் பிடித்தமாக இருந்தன. அன்றியும், ஸ்தானீகர்கள் அளிக் கும் தீர்ப்புக்கள், சீனக் கோர்ட்டுகள் அளிக் கும் தீர்ப்புக்களை விட, மிகவும் நேர்மை யான வையா யிருந்தன. இதனால் பழைமைப் பற்றுடைய சீன அதிகாரிகள் தான் மிகவும் கஷ்டப் பட்டார்கள்.

கிட்டு.—கிழக்கிந்தியா கம்பெனியார் காண்டனில் எவ் வளவு காலம் ஏக போக உரிமை யோடு வியா பாரம் செய்தார்கள் ?

தாத்தா.—1834-ம் வருஷம் இந்த உரிமையை பிரிட் டிஷ் அரசாங்கத்தார் ரத்து செய்து விட்டார் கள். உடனே பிரிட்டனுக்கும் சீனாவிற்கும் போர் மூண்டது.

கிட்டு.—எதனால் ?

தாத்தா—அபினி வியாபாரம் படுத்து விட்டது தான் காரணம் என்று சொல்லுவார்கள். உண்மை யில், சர்வ தேசத்தவர்களும் ஒருவரோ டொருவர் நெருங்கிப் பழகும் முறையிலும் நீதி பாவிக்கப் படும் முறையிலும் சீனாவிற் கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் உள்ள அடிப் படையான கருத்து வேற்றுமை தான் காரணம்.

கிட்டு.—பிறகு.

தாத்தா.—1839-ம் வருஷம் நவம்பர் மாதம் இந்திய அபினியை சீன அரசாங்கத்தார் பறி முதல் செய்து விட்டனர்.

கிட்டு.—மேற்கொண்டு என்ன நடந்தது ?

தாத்தா.—1856-ம் வருஷம் சீன அதிகாரிகள் நல்ல முறையில் நடந்து கொள்ளாததால், மீண்டும் கலவரம் ஏற்பட்டது,

கிட்டு.—இந்தக் கலவரம் எவ்வளவு காலம் இருந் தது ?

தாத்தா.—1858-ம் வருஷம் ஒரு ஒப்பந்தம் ஏற்பட் டது; அது வரை.

கிட்டு.—பிறகு, கலவரம் ஏற்படவே யில்லையா ?

தாத்தா.—ஏற்பட்டது. ஆனால் அதற்குக் காரணம் கிருஸ்துவ பாதிரிகள் சீனாவின் உள் நாட்டிற் குள் புகுந்து தம் மதத்தைப் பரவச் செய்தது தான்.

கிட்டு.—அந்நிய நாட்டார்கள் சீனக் கலைகளையும் நாகரிகத்தையும் பின் பற்ற வில்லையா ?

தாத்தா.—இல்லை; ஆனால், ஐரோப்பியக் கலைகளை யும் நாகரிகத்தையும் சீனர்களில் சிலர் பின் பற்றினார்கள். இதன் பயனாக, சீனர்களுக் குள்ளாகவே பெரும் கலவரங்கள் உண் டாயின.

கிட்டு.—ஐரோப்பிய நாகரிகத்தையும் கலைகளையும் பரவச் செய்தவர்கள் யார் ?

தாத்தா.—1854-ம் வருஷம் அமெரிக்கத் தலைவராக விருந்த ஆபிரகாம் லிங்கனும், பிரிட்டிஷ் முதல் மந்திரியாக விருந்த க்லாட்ஸ்டனும் இருந்தார்கள். இவர்கள் தான் ஐரோப்பிய நாகரிகத்தையும் கலைகளையும் பரவச் செய்த வர்கள்.

கிட்டு.—அப்போது சீன அதிகாரிகள் இவற்றை ஏற் றுக் கொண்டார்களா ?

தாத்தா.—பெரிதும் வெறுத்தார்கள்.

கிட்டு.—அப்படியானால், எப்போது தான் அவர்கள் இவற்றை ஏற்றுக் கொள்ளத் தலைப் பட்டார் கள ?

தாத்தா.—1894–95-ம் வருஷத்தில் சீனாவை ஜப்பா னியர்கள் வென்று மேல் நாட்டுக் கருத்துக் களைப் புகுத்தினார்கள். அப்போது தான்.

கிட்டு.—சீன அரசாங்கத்தார் ஒன்றும் செய்ய வில்லையா ?

தாத்தா.—இவற்றிற்கு விரோதமாகப் புரட்சி செய்ய முயன்றார்கள்; என்றாலும் பலிக்க வில்லை.

கிட்டு.—எதனால் பலிக்க வில்லை ?

தாத்தா.—தேசியத்தின் பெயரால் அங்கிருந்த அன் னியர்களை அவர்கள் மிகவும் அக்கிரமமாக நடத்தத் தலைப்பட்டனர். உடனே பல அந்நிய நாட்டுப் படைகளும் ஒன்று சேர்ந்து, அந்த ஆட்சிக் கொடுமைகளை ஒடுக்கினர். அந்தக் காலம் முதல் சீனாவில் சதா கலகங்களும், புரட்சிகளும் ஆயுதந் தாங்கிய கொள்ளை களும் தான்.

கிட்டு.—அந்நியர்கள் சீனாவிற்குள் குடியேறி தமக்கு விசேஷச் சலுகைகள் வேண்டு மென்று கோரு வது என்ன நியாயம ?

தாத்தா.—பொது மக்களின் உடைமைகளையும் உயிர் களையும் காப்பாற்ற சீன அரசாங்கத்திற்குத் திறமை யில்லை; ஆகையால், தற்காப்பின் நிமித்தந் தான விசேஷ உரிமைகளை அனுப வித்து வந்தார்கள்.



கிட்டு.—திறமை யில்லாத அந்த அரசாங்கத்தின் கீழ் மக்கள் எப்படி நிம்மதியாக வாழ முடியும்?

தாத்தா.—முடியாமல் தான் ஒரு பெரும் புரட்சி யங்கே தோன்றியது. அதன் பிறகு தான் குடியாட்சி ஆரம்பமானது.

கிட்டு.—புரட்சி எப்போது ஆரம்பமானது ?

தாத்தா.—1911-ம் வருஷம் அக்டோபர் மாதம்.

கிட்டு.—இப்போதுங் கூட அன்னியர்கள் அங்கே விசேஷ உரிமைகளை அனுபவித்துக் கொண் டிருக்கிறார்களா ?

தாத்தா.—வெர்ஸெய்ல்ஸ் ஒப்பந்தப்படி ஜெர்மனி தன் விசேஷ உரிமைகளை அங்கே இழந்தது. ரஷ்யர்கள் தமக்கு இந்த உரிமைகள் வேண் டிய தில்லை யென்று தெரிவித்து விட்டார்கள்.

கிட்டு.—ஏன் ?

தாத்தா.—ஸ்தானீகர்களைக் கொண்டு நடைபெற்ற ஆட்சியை விட, புதிய சீன அரசாங்கம் சோவி யத் கொள்கைகளைக் கொண்டே நன்றாக ஆட்சி புரிந்தது.

கிட்டு.—மற்ற நாடுகள் ?

தாத்தா.—1922-ம் வருஷம் வாஷிங்டன் நகரில் ஒரு மகா நாடு நடைபெற்றது. அதில் 9 அரசாங்கங் கள் கலந்து கொண்டன. இதில் பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய அரசாங்கங் களும் கலந்து கொண்டன. தமக்குள்ள விசேஷ உரிமைகளை விட்டுக் கொடுத்து விடுவ தென்று அங்கே தீர்மானித்தனர். இதை எந்த முறையில் நிறைவேற்ற வேண்டும் என் பது பற்றி 1926-ம் வருஷம் யோசித்து முடிவு செய் தனர். இதன்படி சீன அரசாங்கத்தை பலப் படுத்தி, திறமை யுள்ள தாக்க வேண்டு மென்று முடிவு கட்டினர்.

கிட்டு.—இதை நிறை வேற்றினார்களா ?

தாத்தா.—இல்லை. இதற்குள்ளாக, சீனப் படைத் தலைவர்களுக்குள் தகராறுகள் உண்டாயின. அன்றியும் 1931-ம் வருஷம் முதல் ஜப்பானியர்க ளோடு சீனர்கள் போராடிக் கொண்டிருக்க வேண்டி யிருந்தது. இன்னொரு முக்கிய மான விஷயம். எதிர்ப்பில்லாத சீனத் தலை வராகத் தோன்றினார் மார்ஷல் ஷகங் கெய் ஷேக். பிரிட்டன் அமெரிக்கா ஆகிய இரு அரசாங்கங்களின் உதவியைக் கொண்டு, இவர், தன் ஆட்சி சீன சாம்ராஜ்யம் முழுதும் பல முடையதாக ஆக வேண்டு மென்பது, அவரு டைய முயற்சி தன் நாட்டைத் தாக்கும் கொள்ளைக்கார ஜப்பானியர்களின் கொட்டத் தை ஒடுக்கி, சீனாவை விட்டு அவர்களை விரட்ட, இந்த இரு அரசாங்கங்களின் உதவியை நாடு கிறார்.

கிட்டு.—அவர் கோருகிறபடி உதவி கிடைக்குமா ?

தாத்தா.—கிடைத்திருக்கிறது. ஏனென்றால், அவ ருடைய நோக்கம் உயர்ந்தது, நட்பும் சிறந்தது. இவருடைய ஆட்சி, புரட்சிக்குப் பிறகு தோன்று கிறது. எனவே, அதில் மக்கள் அனைவரும் இனிது வாழ்வார்கள். அன்னியர்களுக்கு விசேஷ உரிமைகள் தேவை யில்லை.

கிட்டு.—அப்படியானால் விட்டு விட்டார்களா அவ் வுரிமைகளை ?

தாத்தா.—ஆமா. அதுவும் சீனப் புரட்சி தோன்றிய 31-வது ஆண்டு விழாவன்று; அதாவது 1942-ம் வருஷம் அக்டோபர் மாதம்.

கிட்டு.—தாத்தா! இப்போது தெளிவாகப் புரிந்தது விஷயங்கள். போய்ப் படுத்துக்கொள்ளுவோம்.

---


## அங்கேயே இருந்தவர் கூறக் கேட்டேன்.

அவர் யார்? அவர் அங்கிருந்தது உண்மை தானா? பொய் வதந்திகளைப் பரப்பாதீர்கள்! அவற்றால் சந்தேகமும், துன்பமும், நஷ்டமுந் தான் உண்டா கின்றன. இப் பொய் வதந்திகளை எதிரிகள் கிளப்பி விட்டு, ஏமாந்தவர்கள் இவற்றை பரப்புவார்கள் என்று, நம்புகிறார்கள்.

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியர்களுக்கு விரோதமாகத்
தேசியப் போர் முனையை அமையுங்கள்!


(7-ம் பக்கம் தொடர்ச்சி.)

'எண்டாப்பா இந்தச் சண்டையில் கலந்து கொண் டோம்' என்று துடிக்கப் போகிறார்கள் என்பதும் தீர்மானமாகத் தெரிகிறது. ஸ்பெயினும் யுத்தத் திற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டிருக்கிறது. அது புத்திசாலித் தனமாக நடந்து கொள்ளப் போகிறதா, அச்சு நாடுகளோடு சேர்ந்து அசட்டுக் காரியம் செய்யப் போகிறதா என்பது தெரியவில்லை. ஆனால் நேச நாடுகளுக்கு இனிமேல் புதுப் புது வெற்றிகள் வரப் போகின்றன என்பது தெளிவாகி விட்டது. இரண்டாவது போர் முனை வேண்டும்; நேச தேசத்தார் தூங்குகிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களே, இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள் ?

## இந்தியாவில் இராணுவ முயற்சி

### மேஜர் இராஜேந்திர சிங்ஜி கூறும் விவரம்

மேஜர் ராஜேந்திர சிங்ஜி இரண்டாவது வங்காள லான்ஸர் படையைச் சேர்ந்தவர். இவர் வட ஆபிரிக்காவில் மிகச் சிறந்த முறையில் போராடினார். எனவே, அவருக்கு படைத் தலைவர் ஒரு பதக்கத்தைப் பரிசாக அளித்தார்.

இவர் சமீபத்தில் நியூ யார்க்குக்குப் போயிருந்தார். அப்போது பத்திரிகைப் பிரதிநிதிகள் அவரை பேட்டி கண்ட போது, அவர் கூறியதாவது :—

1938-ம் வருஷம் இந்தியப் படைகளில் மொத்தம் 1,77,000 பேர்கள் இருந்தார்கள். இப்போது 1,500,000 பேர்கள் இருக்கிறார்கள். தம் மிச்சையாக, உலகில் வேறெங்கேயும் இவ்வளவு பேர்கள் படையில் சேர்ந்ததே கிடையாது. தகுந்தபடி தளவாடங்களும் மற்ற வசதிகளும் இந்தியப் படையினருக்குக் கொடுத்தால், ஜப்பானியர்களோடு போராடி நிச்சயமாக வெல்லக் கூடும்.

ஒரு குறிப்பிட்ட இனத்தவர்களை மட்டுந் தான் படைகளில் சேர்த்துக் கொள்ளுவது என்னும் பழைய வழக்கம் மாறி விட்டது. இப்போது மாதந்தோறும் 70,000 பேர்கள் படையில் சேருகிறார்கள். தம் நாட்டைக் காக்க வேண்டி, வெளிநாடுகளிலிருந்து கொண்டு 3½ லட்சம் இந்தியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் யுத்தத் தளவாட உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கிறது. பீரங்கிகள், வெடிமருந்துகள், பாதரட்சைகள், கம்பளிகள் ஆகியவையுங் கூட, அதிகமாகத் தயாராகின்றன. அன்றியும், அமெரிக்க விமானங்களின் பகுதிகளைச் சேர்த்து இணைக்கத் தக்க இயந்திரமும் இந்தியாவில் இப்போது இருக்கிறது.



### பிரியமான பெயர்களெல்லாம் மாறிப் போமே !

ஜப்பானியர் சிங்கப்பூரைப் பிடித்ததும் அம் மாநகருக்கு ஜப்பான் பெயர் ஒன்றை சூட்டினர் ! புண்ணிய பூமியாகிய நம் இந்திய நாட்டில் சரித்திர கீர்த்தி வாய்ந்தவையும் புராணப் பிரசித்தி யுடையவையுமான பட்டணங்கள், திருக்கோயில்கள், புனித தீர்த்தங்கள் எத்தனை ! ஹா ! 38 கோடி மக்கள் ஒன்று போல் மிகக் கொண்டாடும் இத்திவ்விய ஸ்தலங்களெல்லாம் ஜப்பானியர் வசமாகில், கதியென்னவாகும் தெரியுமா ? ஐயோ ! சகலமும் சிங்கப்பூரைப் போல் பெயர் மாறி உருத் தெரியாமல் மிலேச்சப் பட்டுப் போமே ! ஈவிரக்க மில்லாத குள்ளர்கள் நம் மனோ பாவங்களை மதிக்கப் போவதில்லை !



இப்படிப் பட்ட அக்கிரமம் நேரப் போம் போது, இந்திய வீரர்களாகிய நாம், கையும் கட்டி வாயும் பொத்தி சுத்தப் பேடிகளைப் போல் பயந்து நடுங்கி ஒடுங்கி யிருப்பதா என்ன ? ஒருக்காலு மில்லை ! எல்லோரும் சேர்ந்து நம் முழு பலத்துடன் இக்குள்ளர்களை ஒரு கை பார்த்தே விடுவோம் !

**ஜப்பானியருக்கெதிராக தேசியப் போர் முனையை அமையுங்கள்**

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஞு நவம்பர் மீ 27உ, வெள்ளிக்கிழமை [இதழ் 47

## பிறப்பு பெரிதல்ல! தொண்டு தான் பெரிது !

பிரிட்டிஷ் முதல் மந்திரி சர்ச்சிலின் கடைசி மகள் மேரி இப்போது பெண்கள் பட்டயில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகிறார். இப் பயிற்சி சாலையில் தன் கூட்டாளிகளோடு வசிக்கும் அறையை, அவர் சுத்தம் செய்கிறார்.



### " நித்யமும் நாமே நிமிர்ந்து நடப்போம் "

இராகம்—தேசிகம். தாளம்—ஆதி.

பல்லவி

சத்யகுணப் போரில் ஐயமதிருக்க,
நித்யமும் நாமே நிமிர்ந்து நடப்போம். (சத்ய)

அனுபல்லவி

1. நாடிழந்தாலென்ன நாமிறந்தாலென்ன
கோடி ஜயம் நாளையே கூடியுண்டாகும் (சத்ய)

2. பதினெட்டு நாட்களாய்ப் பாண்டவர் பதைப்பினும்
கதிகெட்ட பகைவரைக் கலங்கிடச் செய்தார் (சத்ய)

3. உறுதிச் சூரபத்மன் ஓங்கிச் சண்டைசெய்தும்
இறுதியில் வேலன் கையில் ஏங்கித் தவித்தான் (சத்ய)

4. அக்ரமக்காரன் ஆதியில் ஓங்கினும்
தக்க தண்டனை தன்னைத் தான் அடைவான் பின் (சத்ய)

# பிரிட்டன் என்ன செய்கிறது தெரியுமா ?

## இங்கிலாந்தில் கடும் சிக்கனம்

### வெற்றிக்குப் பாடுபடும் பொது மக்கள்

பிரிட்டிஷார் என்ன சாதித்து விட்டார்கள் என்னும் கேள்வி அடிக்கடி கிளம்புகிறது.

தன் முழு பலத்தையும் கொண்டு ஹிட்லர் பிரிட்டனை 2 வருஷங்களுக்கு அதிகமாகவே மிகக் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருந்தார். என்றாலும் பிரிட்டனுக்கு 18 மைல்களுக்கு அப்பாலேயே அவர் நின்று விட வேண்டியதாயிற்று. பிரிட்டிஷ் படைகள், எதிரிகளை உள்ளே நுழைய வொட்டாதபடி தடுக்கா திருந்தால் வின்ஸர் அரண்மனைக்குள் அல்லவா ஹிட்லர் இன்று இருப்பார். அது மட்டுமா ? தன் படைகளைக் கொண்டு அமெரிக்காவைத் தாக்குவதற்கு அட்டவாவிலும் கூட அவர் இருப்பார்.

இந்த யுத்தத்தில் நமக்குப் பங்கு உண்டு ; அது போலவே, யுத்தம் முடிந்த பிறகு ஏற்படக் கூடிய சமாதானத்திலும் நமக்குப் பங்கு உண்டு. ஆகையால், பிரிட்டிஷார் இது வரை செய்து கொண்டு வந்ததையும் இப்போது செய்து கொண்டிருப்பதையும் நம்மில் ஒவ்வொருவரும் மகா முக்கியமானதாகக் கொண்டாட வேண்டும்.

சர்க்கரை, மண் எண்ணெய், மோட்டார் டையர்கள் முதலியவற்றைப் பகிர்ந்து அனைவருக்கும் கிடைக்கத் தக்கபடி மிகவும் கொஞ்ச அளவிற்கு விற்பதனால் நேரக் கூடிய அசௌகரியங்கள் தமாஷாகத் தோன்றக் கூடிய காலம் சீக்கிரத்திலேயே வரப் போகிறது. அதாவது, நெடு நாட்களாக பிரிட்டிஷ் பொது மக்கள் தம் தேவைகளில் பெரும்பாலானவற்றை விட்டு விட்டு, துறவிகளைப் போல வாழ்ந்து வருவதைப் போலவே நாமும் வாழும்படி நேரலாம்.

இந்த யுத்தத்தில் வெற்றி பெற வேண்டி, இங்கிலாந்தி லுள்ள ஒவ்வொரு பொருளும் ஒவ்வொருவரும் முற்பட்டிருக்கிறார்கள். மொத்தத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பேர்கள் (ஆண், பெண், குழந்தைகள் உள்பட உறுதியான உடலுள்ளவர்கள் அனைவரும்) 14 வயதிற்கு மேல் 65 வயதிற்குட் பட்ட அனைவரையும் படையிலும், உள்ளூர் பாதுகாப்புப் படைகளிலும், யுத்த கைத் தொழிற் சாலைகளிலும் சேர்த்துக் கொண்டார்கள். இங்கிலாந்தில், மிகவும் பலக் குறைவாகி படுத்த படுக்கையாகக் கிடந்தாலல்லது 18½ முதல் 51 வயதிற் குட்பட்டவர்கள் ஆயுதந் தாங்கிப் படைகளில் சேர்ந்திருக்க வேண்டும் ; அல்லது யுத்தத்திற்குத் தேவையான முக்கியமான தொழிற் சாலைகளில் வேலை செய்ய வேண்டும். 70 லக்ஷம் பெண்களும் தம் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். 20 முதல் 30 வயதிற் குட்பட்ட பெண்கள் தரைப் படையிலும், கப்பற் படையிலும், விமானப் படையிலும் உதவியாளராக நியமிக்கப் படுகிறார்கள். அல்லாமலும் 55 லட்சம் பெண்கள் ஏற்கெனவே தளவாட உற்பத்தித் தொழிற் சாலைகளில் கடுமையாக உழைத்து வருகிறார்கள். கோடிக் கணக்கான மற்ற பெண்கள் இத் தொழிற் சாலைகளில் குறை நேர வேலை செய்கிறார்கள்.

**உள் நாட்டுப் பாது காப்பு.** விமானத் தாக்குதல் நேரும் போதெல்லாம் ஏதேனும் ஒரு கடமையை நிறைவேற்றத் தக்கபடி, பேசக் கூடிய ஒவ்வொருவரையும் பயிற்றுவித்திருக்கிறார்கள். 15 லட்சம் உள் நாட்டுப் பாதுகாப்பாளர்களும், 44 லட்சம் தீ யணைக்கும் படையினரும், எதிரிகள் வந்து தாக்காதபடி தடுக்கும் 20 லட்சம் ஹோம் கார்டுகளும் அங்கே யிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஆலைகளிலோ, சுரங்கங்களிலோ, வயல்களிலோ வேலை செய்கிறவர்கள். என்றாலும் இந்த வேலையும் தம் கடமை என்று தெளிவாக உணர்ந்து அவற்றை நிறைவேற்றுகிறார்கள்.

நிற்க, தொழிற் சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், தமக் கென ஒரு தொழிற் சங்கத்தை உண்டாக்கி யிருக்கிறார்கள். இச் சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் 65 லட்சம் பேர்கள் வேலை செய்கிறார்கள். இவர்கள் தம் வேலைகளை விட்டு நின்று விட முடியாது. அது போலவே முதலாளிகளும் அரசாங்கத்தார் கட்டளை யில்லாமல் அவர்களில் ஒருவரையும் வேலையை விட்டு நிறுத்தக் கூடாது. முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் தகராறுகள் ஏதேனும் உண்டானால், இரு தரத் தாரிலும் ஒரு சிலர் சேர்ந்துள்ள கமிட்டி யொன்று, தகுந்தபடி விசாரணை செய்து அத்தகராறைத் தீர்க்கிறது.

இது வரை எதிரி தாக்குதலினால், இங்கிலாந்தில் ஐந்தில் ஒரு பங்கு வீடுகள் நாசமாயின அல்லது சேதப் பட்டன ; பொது ஜனங்களில 44 ஆயிரம் பேர்கள் மடிந்தார்கள்.

**ரஷ்யாவிற்கு உதவி.** நாள் தோறும் இவ்வளவு இரத்தத்தைச் சிந்தியும், வியர்வையை வடித்தும், கண்ணீரைக் கொட்டியும், பிரிட்டிஷாரால் எதைச் சாதிக்க முடிந்தது ? சென்ற வருஷம் 2,500 விமானங்களை நாம் பிரிட்டனுக்கு அனுப்பினோம். பிரிட்டனில் செய்யப்பட்ட 9,781 விமானங்களை பிரிட்டன் நேச தேச விமானப் படைக்கு அனுப்பியது. நாம் அனுப்பியது 200 டாங்கிகள் தான். அவர்கள் 3,000 டாங்கிகளைப் போர் முனைக்கு அனுப்பி யிருக்கிறார்கள். இந்த வருஷம் இன்னும் மிகவும் அதிகமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். லிபியாவிலுங் கூட சென்ற 12 மாதங்களில் அவர்களுடைய உற்பத்தியை இரண்டு மடங்கு பெருக்கிக் கொண்டார்கள்.

சாதாரணமாக மிகச் சிக்கனமான முறையில் உபயோகித்தாலுங் கூட, ஒரு பூட்ஸ், சராசரி பிரட்டிஷ் காரருக்கு 2 அல்லது 3 வருஷங்களுக்கு வரும். ரஷ்யாவிற்கு 40 லட்சம் ஜதை பூட்சுகள் பிரிட்டனிலிருந்து அனுப்பினார்கள். அதனால் தான் பூட்சுக்கு அதிக கிராக்கி ஆகிவிட்டது.

அமெரிக்காவி லிருந்து ஒரு விமானத்தை இங்கிலாந்தில் இறக்குமதி செய்தால், 4 விமானங்களை இங்கிலாந்தில் செய்து ரஷ்யாவிற்கு அனுப்புகிறார்கள். எட்டு மாதங்களில் 2,000 டாங்கிகளை ரஷ்யாவிற்கு அனுப்பி யிருக்கிறார்கள். சாதாரணமாக 1,000 ரயில் வண்டிகள் செய்து முடிப்பதற்கு பிரிட்டிஷ் ரயில் ரோடு தொழிற் சாலையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு ஒரு வருஷம் செல்லும். இப்போது அந்த வேலையை 10 வாரங்களில் முடித்து 'டிரான்ஸ் பெர்சியன் லைனு'க்கு அனுப்பினார்கள். பிரிட்டனிலிருந்தும் அமெரிக்காவி லிருந்தும் சப்ளைகள் கொண்டு போகும் அமெரிக்க இஞ்சினீர்கள் இவற்றைக் கொண்டு போய்க் காக்கசஸில் சேர்த்தார்கள்.

அன்றியும் பிரிட்டன் என்ன செய்கிறது தெரியுமா ? இங்கிலாந்திலும், நேச நாடுகளுடனும் வந்து சேர்ந்துள்ள 'போராடும் பிரஞ்சுப் படைகள்', நார்வீஜியப் படைகள், போலிஷ் படைகள், நாடு கடந்து வந்திருக்கும் நெதர்லாந்து அரசாங்கப் படைகள் ஆகியவற்றிற்கு உணவு, உடை, தளவாடங்கள் முதலியவற்றை தந்து பராமரித்து வருகிறார்கள்.

அன்றியும் கொள்ளை இலாபம் அடிக்கும் முதலாளியே இப்போது இங்கிலாந்தில் கிடையாது. ஒரு குடும்பஸ்தருக்கு வருஷத்தில் 3,000 பவுன் வருமானம் இருந்தால் 955 பவுன் வருமான வரி கொடுத்து விடுகிறார் ; 25,000 பவுன் வருமான மிருந்தால், 15,000 பவுன் அதிக இலாப வரி செலுத்தி விடுகிறார். சேம நிதிப் பத்திரங்களை அதில் குறிப் பிடப் பட்டுள்ள விலை கொடுத்து 318 பவுன்களுக்கு வாங்கி யிருக்கிறார்கள். ரஷ்ய யுத்த உதவிக்கு பிரிட்டிஷார் 1½ கோடி பவுன் உதவி யிருக்கிறார்கள்.



# போர் முரசு

## ரஷ்யப் போர் முனை

**ஆர்ட்ஸோனிகிட்ஸ்** என்னு மிடத்தில் பல நாட்களாகப் போர் நடைபெற்றது. முடிவில் ஜெர்மானியர்கள் தோற்றுப் போனார்கள். 13-வது ஜெர்மன் டாங்கி டிவிஷனையும் ப்ரான்டென்பர்கர் படையையும் 45-வது பட்டாளத்தையும், 7-வது சாப்பர் பட்டாளத்தையும், 525-வது டாங்கி எதிர்ப்புப் படையையும், முதலாவது ஆல்பைன் ஜெர்மன் டிவிஷனைச் சேர்ந்த ஒரு பட்டாளத்தையும், 356-ம் நம்பர் தனிப் பட்டாளத்தையும் ரஷ்யப் படைகள் விரட்டி யடித்து விட்டன. இந்தப் பாரில் இறந்து போன ஜெர்மானியர்களின் எண்ணிக்கையை விட காயப்பட்டவர்களின் எண்ணிக்கை தான் அதிகம். இங்கே 5,000 பேர்களுக்கு அதிகமாகவே இறந்து போனார்கள்.

**க்ராஸ்னி** என்னும் இடத்தில் எண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. இவற்றைப் பாதுகாக்க வேண்டி மஸ்டாக் என்னும் இடத்தில் தகுந்தபடி அரண்களை அமைத்திருக்கிறார்கள். இந்த அரண்களைக் கடந்து வந்து எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்ற ஜெர்மன் படைகள் முயன்றன. இந்த எண்ணத்தில் ரஷ்யப் படைகள் மண்ணைப் போட்டன. தம் ஸ்தானங்களை விட்டுத் தப்பி ஓடி மலைக் காடுகளில் ஜெர்மனியர்கள் ஒளிந்து கொண்டு தலை தப்பப் பார்க்கிறார்கள். தம் வசமிருந்த பீரங்கிகள், டாங்கிகள், மோட்டார் லாரிகள், யுத்தத் தளவாடங்கள் முதலியவற்றை அப்படி யப்படியே விட்டு விட்டு ஓட்ட மெடுத்திருக்கிறார்கள். தம்மைத் துரத்திக் கொண்டு வரும் செம்படைகள் கண்ணுக்குத் தென்படாமல் ஒளிந்து கொள்ளப் பெரிதும் முயற்சிக்கிறார்கள்.

**வால்கோவ்** என்னு மிடத்தில் இப்போது கடுமையான மூடு பனி. டாங்கி எதிர்ப்புப் பாதுகாப்பிற்கு இது பெரிதும் உதவுகிறது. சில நாட்களுக்கு முன்பு ஒரு ஊரைப் பிடிக்க வேண்டி ஜெர்மன் படைகளை ஏராளமாகக் கொண்டு வந்து ஜெர்மானியர்கள் குவித்தார்கள். என்றாலும், எதிரிகளைத் தோற்கடித்து, 5,000 ஜெர்மனியர்களைக் கொன்றார்கள்.

**ஸ்டாலின்கிராட்** போர் முனையின் ஒரு பகுதியில் ரஷ்யப் படைகளைப் பின்புறத்திலிருந்து தாக்கி இரண்டு இடங்களில் பிளவுகளை உண்டாக்கி விட்டனர். என்றாலும் நம் ரஷ்யப் படைகள் அவர்களை எதிர்த்து தாக்கி 170 ஜெர்மனியர்களை நாசஞ் செய்தன. 5 டாங்கிகளையும் அழித்து விட்டன.

வடமேற்குப் பகுதியில் ருமேனியப் பட்டாளத்தோடு ரஷ்யப் படைகள் போராடி சுமார் 100 ஜெர்மனியர்களைக் கொன்று விட்டன.

40, 50 மைல்கள் தூரத்தில் ஸ்டாலின் கிராடுக்கு வடமேற்கிலிருந்தும், தெற்கே யிருந்தும் அந்நகரத்தை நோக்கி ரஷ்யப் படைகள் வந்து கொண்டிருக்கின்றன. டான் நதியின் கீழ் கரையை யடுத்திருக்கும் கலாச் என்னு மிடத்தை ஜெர்மனியர்களிட மிருந்து மீண்டும் ரஷ்யப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. இந்த இரண்டு திசைகளிலுமிருந்து வந்த படைகள் ஸ்டாலின்கிராடை யடுத்து ஜெர்மன் படைகளோடு கடும் போராடினார்கள். சிராபிமோவிச் என்னும் இடத்தில் சுமார் 20 மைல்களுக்கு எதிரிகள் பாதுகாப்புக்கள் அமைத்திருந்தார்கள். இது டான் நதியின் மேற்குக் கரையிலிருக்கிறது. ஸ்டாலின்கிராடிற்கு வடமேற்கே 100 மைல்கள் வரைக்கும், தெற்கே 15 மைல்கள் வரையிலும் நம் படைகள் 3 நாட்களாகக் கடும் போராடி ஜெர்மானியர்களின் எதிர்ப்புக்களை வென்று 40, 50 மைல்கள் முன்னேறி யிருக்கிறார்கள்.

நிற்க, கலாச்சுக்கு அருகிலுள்ள ப்ரிவுமின்ஸ்கய சோவ்ட்ஸ்க் என்ற ரயில்வே ஸ்டேஷனையும், ஆப்கனிரோவோ என்னும் பட்டணத்தையும் கைப்பற்றினார்கள். இதன் பயனாக ஜெர்மனிக்கு சப்ளைகள் போய்க் கொண்டிருந்த ரயில் பாதை துண்டிக்கப் பட்டு விட்டது. இங்கே நடை பெற்ற மூன்று நாட் போரில் 13,000 ஜெர்மானியர்கள் கைதிகளாயினர். 360 பீரங்கிகளும், அநேக மிஷின் பீரங்கிகளும், மோட்டர்களும், துப்பாக்கிகளும், லாரிகளும், யுத்தத் தளவாடச் சேகரங்களும், உணவுப் பொருள்களும் ஜெர்மானியர்களிட மிருந்து ரஷ்யப் படைகள் கைப்பற்றின. இங்கே 14,000 பேர்கள் ஜெர்மன் உத்தியோகஸ்தர்களும் படையினரும் மடிந்து கிடந்தார்கள். 60 ஜெர்மன் விமானங்கள் நாச மடைந்தன.

நொவரோசிஸ்க், தாப்சி, நில்சிக், கால்மக், முதலிய ஊர்களை ஜெர்மானியர்கள் வசமி ருந்து மீட்க, ரஷ்யப் படைகள் கடும் போராடி வெற்றி பெற்று வருகின்றன.

ஸ்டாலின்கிராடுக்கு வட மேற்கே முன்னேறிப் போன ரஷ்யப் படைகள் 12 மைல் தூரம் போய், சேர்னி சேவ்ஸ்கயா, பெரிலாசோவஸ்கி, பொகோடின்ஸ்கி என்னும் பட்டணங்களை கைப்பற்றிக் கொண்டன. இங்கே 11,000 ஜெர்மானியர்களை யுத்தக் கைதிகளாகப் பிடித்திருக்கிறார்கள். இந்தப் போர்முனையில் இதுவரை 24,000 ஜெர்மானியர்களை பிடித் திருக்கிறார்கள்.

ஸ்டாலின் கிராடுக்குத் தெற்கே சுமார் 12 மைல்கள் முன்னேறி துண்டுடோவோ, அகசே என்னும் ஊர்களை மீண்டும் கைப்பற்றினார்கள். இங்கு நடந்த போராட்டத்தில் நவம்பர் 23-ம் தேதி மட்டும் 12,000 ஜெர்மன் உத்தியோகஸ்தர்களும் படையினரும் கொல்லப் பட்டனர். ரஷ்யப் படைகள் வெற்றி மேல் வெற்றி பெறுகின்றன.

## ஆபிரிக்கப் போர் முனை

நேச நாடுகளோடு வட ஆப்பிரிக்காவில் அட்மிரல் டார்லன் ஒத்துழைப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். இதை ஒப்புக் கொண்டு தன் வசமுள்ள படைகளை அவரிடம் ஒப்புவிப்பதாக பிரஞ்சு வடாப்பிரிக்க கவர்னர் ஜெனரல் ஒரு பிரகடனம் விடுத்திருக்கிறார். இதனால் பிரஞ்சு வடாப்பிரிக்கா நேச நாடுகளுடன் சேர்ந்திருக்கின்ற தென்று தான் சொல்ல வேண்டும். இதனால், அதற்குப் பல வகைகளில் நன்மை யுண்டு. சிறந்த துறைமுகத் தளங்களும், உதவிக்குக் கப்பல்களும், படைகளும், மூலப் பொருள்களும் ஏராளமாகக் கிடைக்கின்றன. தென் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தி லுள்ள யு படகுகளுக்கு இதனால் ஆட்ட ஓட்ட மில்லாமல் போய் விடும். பிரஞ்சு மேற்கிந்தியத் தீவுகளிலும் பிரஞ்சு கினியாவிலும் அச்சு நாடுகள் கால் வைக்க முடியாதபடி அரண் செய்திருக்கிறார்கள்.

பிரஞ்சு வடாப்பிரிக்கா 18 லட்சம் சதுர மைல்களுக்கு அதிகமானது. அங்கே 1½ கோடி ஜனங்கள் வசிக்கிறார்கள். பிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான துறைமுகங்களில் மூன்றாவது ஸ்தானத்தை வகிக்கும் டாகர் இங்கே தான் இருக்கின்றது. முதல் இரு ஸ்தானங்களிலு முள்ள துறைமுகங்கள் மார்ஸெய்ல்ஸும், லா ஹவரும் தான். டாகர் துறைமுகத்தில் பெரிய யுத்தக் கப்பல்கள் தங்கலாம். டாகர் நேசநாடுகளுக்குச் சாதகமா யிருக்கும் போது, பிரிட்டிஷ் காம்பியாவி லுள்ள பாதர்ஸ்ட் என்னும் ஊரை ஜெர்மானியர்கள் தாக்கக் கூடும் என்ற நினைப்பிற்கே இடமில்லை. இங்குள்ள சிங்களப் படைகளும் சீக்கியப் படைகளும் தகுந்தபடி போர் கொடுப்பார்கள்.

பிசெர்டாவிலிருந்து டியூனிஸ் வரையிலு முள்ள ஜெர்மன் படை வீடுகளை பிரிட்டிஷ் படைகளும் நேச நாட்டுப் படைகளும் கடுமையாகத் தாக்கி 40 ஜெர்மனியர்களை யுத்தக் கைதிகளாகக் கொண்டு வந்திருக்கின்றனர். நேசநாட்டு விமானப் படைகள் டுனிசியாவிற்கு மேலே போய்த் தாக்கியது மட்டு மன்றி, நம் தரைப் படைகளுக்குக் காவலாகவும், இருந்தன. அப்போது நடை பெற்ற போராட்டத்தில், 9 எதிரி விமானங்கள் நாசமாயின.

(8-ம் பக்கம் பார்க்க)

# எதிரி படைகள் சிறு சிறுத்துப் போயின

## 8-ம் படை பழிக்குப் பழி வாங்கி விட்டது

### மூன்று முக்கியமான விஷயங்கள்

எகிப்தியப் போர் முனையில் நேச தேசப் படைகள் மகத்தான வெற்றி பெற்றன. இந்தப் படைத் தலைவர் ஜெனரல் மான்ட்காமரி. இவர் புது முறைகளைக் கண்டார். சிறந்த ஆயுதங்களைக் கை யாண்டார். இவ் விரண்டையும் துணைக் கொண்டு எதிரிகளை மேலான முறையில் தாக்கினார். அதனால் தான் வெற்றி பெற முடிந்தது. இது மட்டுமல்ல. இதனால் உண்டாகும் நன்மை, எதிர் காலத்தில் கூட பெரிதும் உதவத் தக்கது.

தன்னை மிகக் கடுமையாக ஜெனரல் மான்ட்காமரியின் படைகள் தாக்குகின்றன வென்று ரோமல் கண்டார். உடனே தன் படைகளை டோப்ருக் பக்கம் வெகு வேகமாகத் திருப்பிக் கொண்டு போய் விட்டார். இவர் இப்படிச் செய்யாமல், நேச நாட்டுப் படைகளுக்கு மேலும் தொந்தரவு கொடுத்திருக்கலாம். ஆனால், தன் வயப்பட்ட பகுதிகளில் முன்னணியிலுள்ள இடங்களை அரண் செய்வதிலேயே தன் படைகள் எல்லா வற்றையும் பயன் படுத்தினார். இதற்கு இரண்டு காரணங்கள் இருக்க வேண்டும். தன் படையின் தென் பகுதியை யாரும் வெல்ல முடியாது என்னும் மன உறுதி அவருக்கு இருந் திருக்க வேண்டும்; அல்லது பெர்லின் அரசாங்க உத்திரவுப் படி அவர் நடந்திருக்க வேண்டும்.

ஜெனரல் மான்ட்காமரிக்கு இது மிகவும் சிறந்த சந்தர்ப்பம்; என்றாலும் செய்யப்பட வேண்டிய வேலையோ மிகக் கடுமை யானது. தற்கால யுத்த முறைகளில் மிகச் சிறந்த முறைகளைக் கொண்டு, அச்சு நாடுகளுக்குச் சொந்தமான ஆபிரிக்கப் பட்டாளம், தம் இடங்களை யெல்லாம் வெகுவாக அரண் செய்து கொண் டிருந்தன. இந்தப் படைகளைப் பிளந்து கொண்டு போக வேண்டி யிருந்தது ஜெனரல் மான்ட்காமரியின் படைகள். ஒரு முறை பிளந்து கொண்டு போய் விட்டால், எதிரிகளுக்கு மகத்தான பாதகம் நேரும். பிரிட்டிஷ் முன்னணிப் படை தன் படையைத் தாக்கும் போது, தன் 'பான்ஸர்' படைகளைக் கொண்டு எதிர்த்துத் தாக்கி வென்று விடக் கூடு மென்று ரோமல் மனப் பால் குடித்துக் கொண்டிருந்தார். ஆனால் அச்சு நாடுகள் சிறு சிறுத்துப் போகும்படி ஜெனரல் மான்ட்காமரியின் படைகள் தாக்கின. இதன் பயனாக அச்சு நாட்டுப் படைகள் பின் வாங்கி யோடின. இவர்கள் பின் வாங்கிய வழி யெல்லாம் நாசந் தான்.

மிகுந் திருந்த ஆபிரிக்கப் படை கள் பின் வாங்கிக் கொண்டே கடற்கரை யோரத்திலுள்ள புகா என்னு மிடத்திலும், மெர்ஸா மத்ருவிலும், எல் ஆதமிலும் எதிர்த்துப் போராடினார்கள். இதற்கு முன் பெல்லாம், ரோமல் படைகள் பின் வாங்கும் போது, வெகு வேகமாகப் போய் வெகு தூரத்தி லிருந்து கொள்ளுவது வழக்கம். அதனால் ரோமலின் எதிரிகளான நேச நாட்டுப் படைகள் தம் எதிரிகள் எங்கே போய்ச் சேர்ந்தார்கள் என்று தெரிந்து கொள்ள முடியாமல் போய் விடக் கூடும். அந்தச் சமயத்தில், சிதறிப் போன தன் படைகளையும் சப்ளைகளையும் திரட்டிக் கொண்டு மேலும் ரோமல் போர் தொடுக்க வருவது வழக்கம். ஆனால் புகாவிலும் மெர்ஸா மத்ருவிலும் இப்படிச் செய்யக் கூட வில்லை. போக்கு வரவு வசதிகள் அங்கே இல்லாதது தான் இதற்குக் காரணம். அல்லாமலும் அப் படைகள் அடியோடு அப்போதே அழிந்து விடக் கூடிய நிலைமையி லிருந்தன.

**இத்தாலிக்கு ஜெர்மனி துரோகம்.**

இத்தாலியப் படைகளுக்கு ஜெர்மனி ஏதோ பிரமாத மாக உதவி செய்கிறதாகப் பொது வாக ஜனங்கள் நினைக்கிறார்கள். இது தவறு. மத்தியப் பகுதியிலும் தென் பகுதியிலும் இருந்த இத்தாலிய காலாட் படையின் 5 டிவிஷன்கள் பின் வாங்க முயற்சித்தன. ஆனால், அவர்கள் பின் வாங்கிப் போக எந்த வித சாதனமும் அமைக்காமல் எல்லா வண்டிகளையும் சப்ளைகளையும் ஜெர்மன் படைகள் கொண்டு போய் விட்டன. கடைசியாக இத்தாலியப் படைகள் வறட்சையாலும் பசியாலும் மடிந்து போயிருப்பார்கள். இவர்களைக் காப்பாற்றி கைது செய்து வரும் பொருட்டு, பிரிட்டிஷ் விமானப் படைகளும், தரைப் படைகளும் அங்கே அனுப்பப் படுகின்றன.

சென்ற மகா யுத்தத்தில் கூட இது போலவே தான் ஜெர்மானியர்கள் செய்தார்கள். ஜெரூஸலம் போர் முனையில் அலென்பி, ஜெர்மன் படைகளைத் துளைத்துக் கொண்டு முன்னேறிய போது, துருக்கியர்களைக் கை விட்டு விட்டு ஜெர்மானியர்கள் ஓட்ட மெடுத்தார்கள். இதை முஸ்லீம் மக்கள் மறக்க வில்லை. அந்தச் சம்பவத் தோடு இதையும் இப்போது ஒப்பிடுகிறார்கள்.

நவம்பர் மாதம் 11-ம் நாள் பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது :—

> "டோப்ருக்கில் ஜெர்மானியர் பெற்ற வெற்றியைக் குறித்து சரித்திரக் காரர்கள் வெகுவாக எழுதலாம். ஆனால் 8-ம் படை அதை விட அதிகச் சிறப் போடு இப்போது போராடி யிருக்கின்றது. பழிக்குப் பழி வாங்கி விட்டது."

மான்ட்காமரி, தோற்றுப் போன தன் எதிரியை விரட்டிக் கொண்டே சிரெனெய்காவின் உள் நாடுகளுக்குப் போய்க் கொண்டிருக்கும் போது, டோப்ருக்கை ரோமல் கைப்பற்றி விட்டதாக லண்டனுக்குச் செய்தி எட்டியது. அப்போது பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் வாஷிங்டனி லிருந்தார். இச் செய்தியைக் கேட்ட போது, அவர் கொஞ்சமும் கவலை கொள்ள வில்லையாம்.

லிபியப் பாலைவனம் மிகப் பரந்தது. இதில் எதிரிகளை விரட்டிக் கொண்டு போவதும் கஷ்டம். அவர்கள் கை விட்டுப் போகிறவற்றைக் கைப்பற்றிக் கொண்டு போவது, மேலும் கஷ்டம்.

இவர்களை விரட்டி யடிக்க வேண்டு மானால் நாம் மூன்று விஷயங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். (1) ஒப்புயர் வில்லாத விமான பலம் நமக்கு ஏற்பட வேண்டும். அப்போது தான் எவ்வளவு வேகமாக எதிரிகள் பின் வாங்கினாலும், நாமும் தொடர்ந்து போக முடியும். எதிரிகள் கை விட்டுப் போகும் விமான நிலையங்களையும் நாம் கைப்பற்றிக் கொள்ளக் கூடும். (2) கடல் வழியாகவும், நாம் மீண்டும் கைப்பற்றிக் கொண்ட துறைமுகங்களைக் கொண்டும் சப்ளைகளைச் சுலபமாக அனுப்பத் தக்க படி ஏற்பாடுகள் செய்ய வேண்டும். (3) ரோமலுக்கு இப்போது பெட்ரோல் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் தான் அச்சு நாடுகளுக்குச் சொந்தமான ஒரு டாங்கராவது வடாப்பிரிக்கத் துறைமுகம் போய்ச் சேரக் கூட வில்லை. இதற்குக் காரணம் நேச நாட்டு விமானப் படைகள் எதிரிகளின் லாரிகளையும் பெட்ரோல் சேகரங்களையும் நாசம் செய்தது தான்.



# ஜெனரல் மான்ட்காமரி வாழ்க்கை

## சிகிரேட் பிடிப்பதில்லை - சாராயம் குடிப்பதில்லை

### மிகக் கடுமையான பயிற்சிக் காரர்



ஜெனரல் மான்ட்காமரி.

இப்போது ஆப்பிரிக்கப் போர்முனையில் நேச நாட்டுப் படைகளுக்குத் தலைவராக இருப்பவர் ஜெனரல் மான்ட்காமரி. இவருடைய தகப்பனார் ஒரு பிஷப். பாட்டனார் பஞ்சாப் மாகாணத்தில் லெப்டினென்ட் கவர்னராக இருந்தவர். இந்த இருவருடைய இயல்புகளும் மான்ட்காமரியிடம் சிறந் திருந்தன. இப்போது அவருக்கு வயது 54.

தன் 20-வது வயதிற் குள்ளாகவே கல்வியையும் இராணுவப் பயிற்சியையும் முடித்துக் கொண்டு இரண்டாவது லெப்டினென்டாகப் படையில் சேர்ந்தார்.

சென்ற மகா யுத்தத்தில் முதல் முதல் பிரான்சில் போய் அடி வைத்தது மான்ட்காமரி தான். உடனே அவருக்கு 'டெம்பரரி காப்டன்' பதவி கிடைத்தது. 3 வருஷங்கள் மேற்குப் போர் முனையில் சேவகம் செய்தார். இரண்டு முறை அப்போது அவர் காயப் பட்டார். இவர் திறமையைப் பாராட்டி படைத் தலைவருக்கு 6 கடிதங்கள் எழுதப்பட்டன. பிறகு டி.எஸ்.ஓ. என்ற வீரப் பதக்கமும், 'பிரஞ்சு க்ராஸ் டி கார்' என்னும் வீரப் பதக்கமும் பெற்றார். அந்த மகா யுத்தம் முடிய சில மாதங்களுக்கு முன்பு வரை, டெம்பரரி லெப்டினென்ட் கர்னலாகவும், முதல் கிரேட் ஜெனரல் ஸ்டாப் ஆபீசராகவும் இருந்து வந்தார். ரைன், அயர்லாந்து, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் ஸ்டாப் ஆபீசராக வேலை பார்த்தார். பிறகு ஸ்டாப் கல்லூரியிலும் கொஞ்ச காலம் வேலை பார்த்தார். பிறகு கம்பர்லியிலும் குவெட்டாவிலும் உள்ள படைப் பயிற்சி சாலைகளில் உபாத்தியாயராக இருந்தார்.

1937-ம் ஆகஸ்டுமீ தத்தில் இவருக்கு பிரிகேடியர் பதவி கிடைத்தது. பிரிட்டனிலுள்ள தென் பகுதிப் படைகளுக்குத் தலைவரானார். 1938-ம் மேஜர் ஜெனரல் ஆனார். தற்போதைய யுத்தம் ஆரம்பமான போது 3-வது டிவிஷன் படைக்குத் தலைமை தாங்கி பிரான்சுக்குப் போனார். அங்கே போர் நடைபெறும் வரை யிருந்தார். அங்கே டன்கர்க்கை விட்டுத் திரும்பிய பிறகு, பிரிட்டனிலேயே ஒரு படைக்குத் தலைவரா யிருந்தார். அதன் பிறகு இங்கிலாந்தில் தென் கிழக்குப் படைத் தலைமையை ஏற்றுக் கொண்டார். இப்போது ஆப்பிரிக்கப் பாலைவனத்தில் உள்ள 8-ம் படைக்குத் தலைமை தாங்கி நடத்துகிறார்.

**இவர் இயல்புகள்.**

இவர் பிரிட்டனின் தென்கிழக்குப் படைகளின் ஜெனரல் ஆபீசர் கமாண்டிங்காக இருக்கும் போது, 40 வயதிற்குட்பட்ட ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் குமாஸ்தாவும் காலை 7 மணிக் குள்ளாக உடற்பயிற்சி செய்வதற்கு ஆயத்தமாக வந்திருக்க வேண்டும். ஒரு சாதாரண சோல்ஜர் முதல் பிரிகேடியர் வரை வாரம் ஒரு முறை காடு மலைகள் வழியாக ஆறு மைல் தூரம் ஒரே மூச்சாக ஓட வேண்டும். ஜெனரல் மான்ட்காமரி, ஜெனரல் பதவி வகித்தாலும், தானும் இப்படி இவ்வளவு தூரம் ஓடினார். ஆகவே, மற்றவர்கள் முணுமுணுக்க இடமே இல்லை.

எதிரி மகா கொடியவன்; ஈவிரக்கமில்லாதவன் என்று இவருக்குத் தெரியும். அதனால் தான், தன் படையினரை இவ்வளவு கடுமையான முறைகளில் பழக்குகிறார். இவ்வளவு கடுமையான பயிற்சிகளுக்குப் பிரிட்டிஷ் சோல்ஜர்கள் ஆளானதே கிடையாது. இந்தப் பயிற்சிகளை மேலும் மேலும் கடுமையாக்குவதற்கு புதுப் புது முறைகளைக் கண்டு பிடிக்கிறார். இந்தப் பயிற்சிகளுக்கு உள்ளாகிறவர்கள், இதைவிட, போர் முனைக்கே போய் விடலா மென்று கருதுவ துண்டு.

இவர் தன் ஆபீசில் ஒரு மணி நேரந் தான் உட்காருவது வழக்கம். மற்ற நேரங்களில் தன் படைகளுடன் இருப்பதைத் தான் அவர் விரும்புகிறார். இதற்காகத் தன் ஆபீசில் காலை 6-மணி முதல் 7-மணிக்குள்ளாக தன் வேலைகளை யெல்லாம் முடித்துக் கொள்ளத் தக்கபடி ஏற்பாடுகள் செய்திருந்தார். குளிர் மிகுந்த இரவுகளில், தன் சொந்தப் படுக்கையில் எப்படித் தூங்குவாரோ, அதுபோலவே ஒரு வேலிக்கு அடியிலும் படுத்துத் தூங்குவார்.

இரவுகளில் 9-மணிக்கு மேல் அவர் விழித்துக் கொண்டிருப்ப தில்லை. விடியற்காலையில் அனைவருக்கும் முன்பே விழித்துக் கொள்ளுகிறார்.

இவர் சிகரெட்டு, சுருட்டு முதலியவற்றை பிடிப்பதில்லை. சாராய வகைகளை உபயோகிப்ப தில்லை. 23 வயது முதல் 30 வரை தான், ஒரு சோல்ஜர் மிகச் சிறந்த முறையில் போராடக் கூடுமென்று கருதுகிறார். நல்ல அறிவும், சுறுசுறுப்பும், கஷ்டங்களைச் சகிக்கத் தக்க உடலும் உடையவர்கள் தான் நல்ல சோல்ஜர்களாகலாம். ஒரு கம்பெனி தலைவருக்கு 35 வயதிற்கு மேல் இருக்கப்படாது. ஒரு பிரிகேடியர் 40 வயதிற்கு மேல் இருக்கப்படாது. தன் படையைச் சேர்ந்தவர்கள் நல்ல சுகத்துடனும், அறிவோடும், தைரியத்தோடும், கடுமையான ஒழுக்க முறைகளில் பண்பட்டவராகவும் இருக்கவேண்டு மென்றும் அவர் எதிர்பார்க்கிறார். இவர் மதப் பற்றுடையவர். கடுமையான ஒழுக்க முடையவர்; என்றாலும் மிகுந்த இரக்க சித்த முடையவர். உஷாராகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கிறார். கொஞ்சமும் களைப் பில்லாமல் தன் படைகளிடம் கடுமையாக வேலை வாங்குகிறார். அவருடைய ஊக்கத்திற்கும் சக்திக்கும் அளவே கிடையாது. தன் 20-வது வயதில் படையில் சேர்ந்த போது எவ்வளவு சுறுசுறுப்பாக இருந்தாரோ, அது போலவே இப்போதும் 54-வது வயதிலும் இருக்கிறார்.

## ஒரு பிரிவு உபசாரம்

மஞ்சள் வெயிலில் கொஞ்சி ஒளிகிறான் சூரியன். ஏன்? பிரிவாற்றாமைக்காக படை உத்தியோகஸ்தர்கள் வருந்துவதைக் கண்டு. சென்னை மூன்றாம் படையைச் சேர்ந்த சுபேதார் மேஜர் கோவிந்தனும், சுபேதார் கே. ஓ. குன்னிராமன் நம்பியாரும், தம் படையை விட்டு, உயர்ந்த உத்தியோகத்திற்குப் பயிற்சி பெற வேண்டி, டேராடூன் பயிற்சி சாலைக்குப் போகிறார்கள். ஆகவே, அந்தப் படையைச் சேர்ந்த வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்கள் சங்கக் கட்டிடத்தில் அவர்களுக்கு பிரிவு உபசார விழா ஒன்று நடந்தது. அப்போது அப்படையைச் சேர்ந்த பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய மனைவிமார்களும் வந்திருந்தனர். அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. இரு விருந்தினருக்கும், பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களுக்கும் அவர்களுடைய மனைவிமார்களுக்கும் மாலைகள் அணிந்தனர்.

இவ்விருவருடைய சிறந்த இயல்புகளைப் பாராட்டி பேசிய சுபேதார் நீலாம்பரம், சுபேதார் மேஜர் கோவிந்தன் தனக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர்களை மிகவும் திறமையோடும் கெட்டிக்காரத் தனமாகவும் நடத்தி வருவதில் மகா சமர்த்தர் என்று கூறினார்.

இந்தப் படைக்கு ஆள் சேர்க்கும் கடுமையான வேலையில், இந்த இரண்டு உத்தியோகஸ்தர்களும் தனக்கு மிகவும் உதவி யிருந்தார்களென்று, படைத் தலைவர் கூறி பெரிதும் வாழ்த்தினார்.

12-வது மலையாளப் பட்டாளத்தில் சுபேதார் மேஜர் கோவிந்தனை விட அதிக காலம் சேவகம் செய்தவர் ஒரே யொருவர் தான். சுபேதார் மேஜர் கோவிந்தன் 1931-ம் வருஷம் இந்தப் படையில் சேர்ந்தவர். சென்ற ஏழு வருஷங்களாக சுபேதார் மேஜராக வேலை பார்த்து வருகிறார். இவரைப் போலவே சுபேதார் நம்பியாரும் 1932-ம் வருஷம் பட்டாளத்தில் சேர்ந்தவர்.

## தமிழர் தீரம்

சுப்பையா பிள்ளை ஒரு சிப்பாய். தமிழர். திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த ஆனைக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர். சமீபத்தில் இவர் வட மேற்கு எல்லைப் புற மாகாணத்தி லிருந்த ஒரு படையின் "பி" கம்பெனியில் சேவகம் செய்து கொண்டிருந்தார். நவம்பர் மாதம் 2-ம் நாள் அப்படையைச் சேர்ந்த இரட்டைக் குதிரை வண்டி ஓடிக் கொண்டிருந்தது. திடீரென்று குதிரைகள் மிரண்டன. பாய்ந்து கொண்டு கிளம்பின. மலைமேலிருந்து கீழ் நோக்கி ரோடு வழியாக வண்டி அதி வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அப்போது பட்டாளத் தலை வாசலில் சுப்பையா பிள்ளை காவலிருந்து கொண்டிருந்தார். நிலைமையைக் கண்டார். இவருடைய மனம் பதறவில்லை; ஆனால் என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்தது. அதுவும் ஒரே விநாடி. உடனே ஒரு கத்தியை உருவினார். தனித்துப் போய் ரோடுக்குக் குறுக்கே நின்று குதிரைகளை மறித்துப் பிடித்து விட்டார். உயிருக்கும் பொருளுக்கும் எந்த விதச் சேதமுமில்லை. இவரைப் போற்றிப் புகழாதார் யார்?

* * * * *

பயனியர் பி 1 கம்பெனியைச் சேர்ந்தவர் சிப்பாய் செல்வம். ஒரு நாள் பைத்தியங் கொண்ட ஒரு நாய் அவரைக் கடிக்க வந்தது. அவர் அதன் இரண்டு பின்னங் கால்களையும் பிடித்தார். என்றாலும் அவரைக் கடித்து விட்டது. அவரும் விடாமல் அந்தக் கால்களைப் பற்றி, அதைச் சுழற்றிக் கொண்டே போய் ஒரு சுவற்றில் அதை அடித்துக் கொன்றார். அவர் அப்படிச் செய்யா விட்டால், பலரை அந்த நாய் கடித்து தொல்லைக்கு உள்ளாக்கி யிருக்கும். செல்வம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## 92 வயது இளைஞர்

ஜமேதார் இஸ்மாயில் கான், 3-வது சென்னைப் படையைச் சேர்ந்தவர். இவருக்கு வயது 92. இந்த வயதிலும் தன் இராணுவ உடைகளை அவர் அணிந்து கொள்ளுகிறார். 30 மைல்கள் தூரம் பிரயாணம் செய்கிறார். கவாத்து மைதானத்திற்கும் போகிறார்.

3-வது சென்னைப் படையின் பயிற்சிசாலையை 15 வருஷங்களுக்கு முன்பு மூடி விட்டார்கள். இதைச் சமீபத்தில் மீண்டும் திறந்தார்கள். அன்று, அஸ்லேயில் பிரிட்டிஷ் படைகள் மகத்தான வெற்றி பெற்ற ஆண்டு விழா. சென்னை 3-ம் படையின் சின்னங்களைப் புதிய படையினருக்கு அன்று கொடுத்தார்கள். இந்த விழாக்களுக்கு நம் ஜமேதார் இஸ்மாயில் கான் வந்திருந்தார். அப்போது இந்திய உத்தியோகஸ்தர்கள் உணவுச் சாலையில் நடைபெற்ற விருந்தில் பரிபூரணமாகக் கலந்து கொண்டார். தனக்குப் பரிமாறப் பட்ட உணவு வகைகளில் ஒன்றேனும் அவர் மிச்சம் வைக்க வில்லை. அவ்ருடைய வயது மட்டுந் தான் அதிகம். அவருடைய உள்ளமோ மிகவும் இளமையா யிருக்கிறது.

## சென்னை சிப்பாய்களுக்கு உதவிகள்

சென்னை மாகாணத்தைச் சேர்ந்த சிப்பாய்கள் பலர் தம் சொந்த ஊர்களை விட்டு வெகு தூரத்தில் சேவகம் செய்கிறார்கள். அவர்களுடைய உறவினரும் நண்பர்களும் அவர்களை மறந்து விடமுடியுமா?

இவர்களுக்குச் சமீபத்தில், ஒரு மாதத்தில் 95,000 பீடிகளும், 25,000 அப்பளங்களும், 625 பவுண்ட் முந்திரிப் பருப்பும், 21 டஜன் புட்டிகள் ஊறுகாயும், புத்தகங்களும், பத்திரிகைகளும், 4 பெட்டிகளும், 220 கிராமபோன் ரிக்கார்டுகளும் அனுப்பி யிருக்கிறார்கள்.

## சென்னை சாப்பர்சும் மைனர்சும்



பலமான சாப்பாடு—



—நல்ல உடற் பயிற்சி



—சிறந்த சிப்பாய்கள் ஆவார்கள்.

(3-ம் பக்கம்—தொடர்ச்சி)

பெசர்டா துறைமுகத்தை பிரிட்டிஷ் விமானப் படைகள் தாக்கி எதிரி கப்பல்கள் போக்குவரவை நாசஞ் செய்து விட்டன.

மொராக்கோ சுல்தானுக்கு அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட் ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார். அதில், அவர் குறிப்பிட்டிருப்பதாவது :—

> அச்சு நாடுகளை நாம் வென்றால், அதனால், சமாதானமும் முன்னேற்றமும் உண்டாகும். தாங்களும் தங்கள் குடிகளும், பிரஞ்சுத் தலைவர்களுடனும் எமது படைகளுடனும் மிகுந்த கூட்டுறவோடு உழைக்கிறீர்கள் எனக் கேட்டு பெரிதும் மகிழ்கிறேன். இந்த நல்லுறவு பழைய காலத்தை எமக்கு ஞாபகப் படுத்துகிறது. முதலாவது அமெரிக்க ஜனத் தலைவரான ஜார்ஜ் வாஷிங்டனுக்குத் தங்களுடைய முன்னோர்களில் ஒருவர் தன் அன்பிற்கு அறிகுறியாக ஒரு கட்டிடத்தைக் கொடுத்தார். இதில் தான் இன்றும் லிகேஷன், காரியாலயம் இருந்து வருகிறது.
>
> நம் இரு நாடுகளுக்கும் அச்சு நாட்டார் எதிரிகள் ஆகி விட்டனர். வடாப்பிரிக்காவை அரசியல் துறையிலும் இராணுவத் துறையிலும் அடிமைப் படுத்தப் பார்த்தனர். எதிரியின் பேராசை காரணமாக மொராக்கோவின் எல்லாத் துறைகளிலும் அவர்கள் சூறையாடத் தலைப் பட்டார்கள். அந்த எதிரியை அழிக்க வேண்டும் என்னும் பொது நோக்கத்தில் நாம் ஒன்றுபட்டிருப்பது நம் அதிர்ஷ்டம் என்று தான் நினைக்கிறேன்.

கப்ஸாவிற்கும் கைரொவானுக்கும் இடையேயுள்ளது ஸ்பீட்வா என்னும் பகுதி. இங்கே எதிரிகள் நுழைந்து கொண்டு தம்மை உறுதிப் படுத்திக் கொள்ள முயற்சித்தார்கள். ஆனால், அவர்கள் எண்ணம் பலிக்க வில்லை. இங்கே நடை பெற்ற போரில் அநேகம் பேர்களை யுத்தக் கைதிகளாகப் பிடித்தோம், எதிரிகளுக்குச் சொந்தமான 10 டாங்கிகளை நாசஞ் செய்தோம்.

டியூனிசுக்கு மேற்கே எதிரிப் படைகளோடு நேச நாட்டுப் படைகள் போரிட்டன. எதிரிகளின் அரண்களைத் தாக்கி முக்கியமான பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டன. பெசெர்டா, டியூனிஸ் ஆகிய இரண்டு ஊர்களிலும் விமான நிலையங்கள் இருக்கின்றன. அவற்றையும் நம் நேச நாட்டு விமானப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

இன்னமும் விமானங்களின் மூலம் எதிரிப் படைகளைக் கொண்டு வந்து இறக்கிக் கொண்டு தான் இருக்கிறார்கள். உடனே அவற்றை யழிக்கும் பொருட்டு நேச நாட்டுப் படைகள் அங்கே விரைந்து செல்லுகின்றன.

## கீழ்க் கோடிப் போர் முனை

சாலமன் தீவுகளில் சமீபத்தில் நடை பெற்ற போரில் ஜப்பானுக்குச் சொந் மான 5 யுத்தக் கப்பல்கள் மூழ்கி விட்டன. 3 பழுதாக்கப்பட்டன. இந்தப் போரில் அமெரிக்கக் கப்பற் படைகளும் பங்கு கொண்டன.

'பாயிஸ்' என்பது ஒரு தனிக் கப்பல். இது அமெரிக்காவிற்குச் சொந்தமானது. காடாலங்கார் போர் முனையில் ஜப்பானியர்கள் தம் படைகளைக் கொண்டு வந்து மேலும், மேலும் இறக்காதபடி தடுக்க வேண்டியது இதன் பொறுப்பு. இதை மிகத் திறமையோடு இக்கப்பல் நிறை வேற்றியது. இதைத் தாக்கிய ஜப்பானியர் இது எரிந்து முழுகி விட்டது என்று நினைத்து விட்டுப் போயினர். ஆனால் அக்கப்பலிலிருந்த படையினர் மிகுந்த தைரியத்துடன் அங்கே எரிந்து கொண்டிருந்த நெருப்பை யணைத்து, அதற்கேற்பட்டிருந்த துளைகளை யெல்லாம் படுக்கைகளைக் கொண்டு அடைத்து விட்டார்கள். என்றாலும், இது பல ஜப்பான் கப்டல்களுக்கு எமனாக விருந்தது. இங்கே கிடைத்த வெற்றி மிகச் சிறந்த வெற்றியாகும்.

ஜப்பானுக்குச் சொந்தமான இரண்டு முக்கியமான கோட்டைகளில் ஒன்றான கோனாவிற்குள் ஆஸ்திரேலியப் படைகள் நுழைந்து விட்டன. அதற்கடுத்துள்ள என்டலடியர் எனனும் முனையையும் கைப் பற்றிக் கொண்டார்கள். அமெரிக்கப் படைகள் புனாவிற்கு ஒரு மைல் தூரத்திலிருக்கின்றன. விரைவில் இதையும் பிடித்து விடக் கூடும்.

மாதணிக்கா ஆற்றிற்கு மேற்கேயுள்ள எதிரியின் இடங்களை இடைவிடாது அமெரிக்க விமானப் படை தாக்கிக் கொண்டிருக்கிறது. நவம்பர் மாதம் 12-ம் தேதிக்குப் பிறகு விமான யுத்தம் எதுவும் இங்கே நடை பெற வில்லை.

## நாஜி பொய்ப் பிரசாரத்திற்கு ஆப்பு

போர் முனையில் பிரிட்டிஷ் படைகளைப் பின்னணிகளில் நிறுத்திக் கொண்டு, இந்தியப் படையினரையே முன்னணியில் நிறுத்துகிறார்களென்று எதிரிகள் சாதாரணமாகப் பொய்ப் பிரசாரம் செய்து வருகிறார்கள். லிபியப் பாலைவனத்தில் ஏற்பட்ட சேதக் கணக்கைக் கொண்டு இந்தப் பொய்ப் பிரசாரம் எப்படிப்பட்ட பச்சைப் புளுகு என்று விளக்கலாம். 1941-ம் ஆண்டு நவம்பரீ முதல் 1942-ம் ஆண்டு ஜூலையீ வரை, பிரிட்டிஷ் உத்தியோக தோரணையில் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரப்படி, நேர்ந்த சேத விவரமாவது :—

| | | |
|---|---|---|
| பிரிட்டிஷ் ஐக்கிய நாட்டுப் படைகள் .. .. | 50 | சதமானம். |
| தென் ஆப்பிரிக்கப் படைகள் .. .. .. | 25 | ,, |
| இந்தியப் படைகள் ... .. .. .. | 20 | ,, |
| மற்ற படைகள் ... .. .. .. .. | 5 | ,, |

இப்போது நடைபெறும் யுத்தத்தில் பிரிட்டிஷ் ஐக்கிய நாட்டுப் படைகளுக்கு நேர்ந்த சேதம் 9 சதமானம் அதிகமாகும். இந்தியப் படைகளுக்கு நேர்ந்த சேதத்தின் சதமானப் புள்ளி விவரங்கள் கிடைக்க வில்லை. என்றாலும் முன்பு நேர்ந்ததை விடக் குறைவாகத் தான் இருக்கும்.

இப்படிப் பொய்ப் பிரசாரம் செய்யும் ஜெர்மானியர்கள் தம் இத்தாலியத் தோழர்களைக் கைவிட்டுக் காட்டிக் கொடுத்துவிட்டு, ஓட்ட மெடுத்தார்கள் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது.



# வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ?

நிறையப் புளியம் பழமே தின்றுக் கொண்டிருந்தானும் ஒருவன். அவன் வீட்டுக்கு வந்ததும், 'பஸ்டு கிளாஸ்' மாம்பழ மாகப் பார்த்து ஒன்றை எடுத்து வீட்டில் உள்ள ஒருவர் அவனிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னாராம். அதை ஒரு கடி கடித்ததுமே, 'ஐயே! ஒரே புளிக்காடியாக இருக்கிறதே! பல் எல்லாம் போய்விடும் போலிருக்கே! என்ன மாம்பழமய்யா இது? சீ!' என்றானாம் அவன். புளித்தது எது? அவனது வாயா? மாம் பழமா?

இந்தக் கதையை இப்பொழுது நமது ஞாபகத்திற்கு வரும்படி செய்திருக்கிறார் ஹிட்லர். ஒரு தடவை, இவர் என்ன சொன்னாராம் தெரியுமா? அப்பொழுது ரொம்ப ஜோரிலிருந்தார் அவர். உலகத்தில் உள்ள மற்ற தேசங்கள் எல்லாம் உலக க்ஷேமத்தையும், தங்கள் தங்கள் நலத்தையும் உத்தேசித்து சமாதான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கையில், ஹிட்லர் மட்டும் ரகசியமாகவே, தனது தேசத்தை ராணுவ மயமாக்கிக் கொண்டிருந்தார். ஏராளமான விமானங்களை உற்பத்தி செய்து கொண்டிருந்தார், நீர் மூழ்கிகளை மேலும் மேலும் கட்டச் செய்தார். இந்த ஏற்பாடுகள் வெற்றிகரமாக நடந்து வருவதைக் கண்டு, அவை பூர்த்தியானால் அவற்றின் உதவியால், உலகையே ஒரே அமுக்கில் அமுக்கி, எங்கும் ஜெர்மன் கொடியை ஏற்றிப் பறக்க விட்டுவிடலாம் என்ற எண்ணம் அவர் மனதில் ஏற்பட்டு விட்டது. தன்னையே மறந்து விட்டார் அவர். தானாக் கிருந்த ஜோரில், ஏதேதோ பேசிவிட்டார். ஒரு முறை ஒருவரது வாயிலிருந்து ஒரு விஷயம் உதிர்ந்து விட்டால், அதை மறுபடியும் எடுத்து வாயில் போட்டு மென்று முழுங்கி அமுக்கி விட முடியுமா என்ன? அதிலும் ஹிட்லர் போன்ற பெரிய தலைகள் எது பேசினாலும் தான் 'ரிக்கார்ட்' ஆகி விடுகிறதே! சரியான சமயத்தில் அந்த 'ரிக்கார்டைப்' புரட்டிப் பார்த்து விடுகிறோம். என்னய்யா அப்பொழுது ஏதேதோ சொன்னீரே, இப்பொழுது என்ன நடக்கிறது பார்த்தீரா? என்று கேட்டு விடுகிறோம். ஆசாமி இரண்டு ஆட்டில் ஒரு ஆடு திருடின கள்ளன் மாதிரி ஆந்தை போல் முழிக்கிறார். இதற்குத் தான் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று அவசரப் பட்டு எதும் பேசிவிடப் படாது என்று சொல்லி யிருக்கிறார்கள் பெரியோர்கள்.

பெரியவாள் வார்த்தைகளை லக்ஷியம் செய்கிற ஆத்மாவா என்ன இந்த ஹிட்லர் ஆத்மா? எல்லாம் தலை வெட்டி வியாபாரம் தானே! அனைத்தும் எட்டிக்குப் போட்டி தான். 'கற்பே, ஸ்தீரீகளுக்கு அணிகலன்' என்று பெரியவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். 'கற்பாவது, கத்தரிக்கா யாவது? கற்பின்மையே ஜெர்மன் ஸ்திரீகளுக்குப் பெருமை. வாழ்க்கை முழுவதும் ஒரே மனைவியோடு மாரடிப்பதும், ஒரே புருஷனோடு திருப்தி யடைந்திருப்பதும் சுத்த மடத்தனம். எவ்வளவுக் கெவ்வளவு அதிகப்படியான குழந்தைகளைப் பெற முடிகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு எப்படியாவது பெற்றுத் தள்ளி விட வேண்டும். ஜனத் தொகை அதிகமாக உள்ள தேசத்திற்குத் தான் மதிப்பு அதிகம். ஆகவே, நம் ஜெர்மனியின் ஜனத் தொகையை அதிகரிக்கச் செய்யும் விஷயத்தில் ஒவ்வொரு ஸ்திரீயும் தன்னாலான வரை உதவி செய்ய வேண்டும். இதற்கு சர்க்கார் எவ்வளவு வேண்டுமானாலும் சௌகரியங்கள் செய்து கொடுக்கக் காத்திருக்கிறார்கள். பிள்ளைகள் புத்தியில்லாது, பெற்றோர்களின் வார்த்தைகளைக் கேட்கப் படாது. தேசத்திற்காக ஒவ்வொருவரும் தம் உயிரை விட வேண்டும். உலகத்தையே நாம் கட்டி ஆளலாம். தேசமே கடவுள். தேசத்திற்குத் தலைவராக உள்ள ஹிட்லரே கடவுளின் மறு ஸ்வரூபம். அவரது வார்த்தையைத் தட்டாதே! தட்டினால் ஆள் காலி' என்ற தினுசில் ஜெர்மனியில் பிரசாரங்கள் நடக்கின்றன. புஸ்தக மூலமாக உபதேசங்கள் செய்கிறார்கள். எல்லாவற்றிற்கும் ஹிட்லர் தூண்டு கோலாக இருக்கிறார்.

இப்படிப் பட்டவர் தனது படைகளுக்கு ஒரு முறை சொல்லி யிருக்கிறார்: "ராணுவ மக்குகளுடன் போராடும் பொழுது ரொம்ப உஷாராக இருக்க வேண்டும். அவர்கள் எந்தச் சமயத்தில் எங்கு தாக்குவார்கள் என்பதை நிச்சயமாகவே சொல்ல முடியாது"

அவர் ராணுவ மக்குகள் என்று குறிப்பிட்டது யாரை? பிரிட்டிஷ் படைகளையும், நேசதேசப் படைகளையும் தான். ஆனால் பாவம்! இந்த 'ராணுவ மக்குகள்' இப்பொழுது என்ன செய்து விட்டன என்பதை நினைத்துப் பார்க்கும் பொழுதெல்லாம், ஹிட்லருக்கு மூர்ச்சை போடத் தான் செய்யும். எங்கு பார்த்தாலும் அச்சு நாட்டினர் ஏக முஸ்தீபுடன் இருக்கிறார்கள். பிரஞ்சு சர்க்காரோ ஹிட்லர் சொல்வதற் கெல்லாம் 'எஸ்' போட்டு, தலையை ஆட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே, பிரஞ்சு வடக்கு ஆப்பிரிக்காவில் ஹிட்லரின் ஆதிக்கம் இருப்பது போல் தான். இப்படிப் பட்ட பிரதேசத்திலே, 'ராணுவ மக்குகள்' இறங்கி, சென்ற ஒரு மாத காலமாக அச்சு நாட்டாரை வெளு, வெளு என்று வெளுத்துக் கட்டி வருகிறார்கள். சென்ற இடமெல்லாம் வெற்றி தான். போன இடமெல்லாம் புகழுரை தான். கண்டவர்கள் எல்லாம் கரம் நீட்டி வரவேற்கிறார்கள். மேற்கு, வடக்கு பிரஞ்சு ஆப்பிரிக்காவில் சட், புட் என்று யுத்தம் நின்றது. அநியாயமாக உயிர்ச் சேதம் எதும் ஏற்பட வில்லை. 'ராணுவ மக்குகள்' மள மளவென முன்னேறி ட்யூனிஷியாவிற்குள் புகுந்து விட்டனர்.

மற்றோர் புறத்தில் இந்த 'ராணுவ மக்குகள்' ரோமலின் படைகளைச் சின்னா பின்னப்படுத்தி, அலங்கோலமாகப் பின்வாங்கி ஓடச்செய்து விட்டனர். காற்றினும் வேகமாக ஓடுகிறார்கள் ஐயா ரோமலின் வீரர்கள்!

பெங்காஸித் துறைமுகத்தையே தங்களது முக்ய ஸ்தானமாகக் கொண்டு, மேலும் மேலும் உதவிகளைக் கொண்டு வந்து இறக்கி, அட்டகாசம் செய்து கொண்டிருந்தார்கள் நாஜி 'புத்திசாலிகள்'. இப்பொழுது அந்த பெங்காஸியையும், அதுபோன்ற முக்யமான இடங்களையும் சொல்லாமல் கொள்ளாமல் விட்டு விட்டு ஓடுகிறார்கள்.

ரோமலின் படைகள் லிபியாவை விட்டு வெளியே சென்று விட்டதாகக் கூறப்படுகிறது. எல்லாம் ட்யூனிஷியாவிற்குள் போய் நிற்கக் கூடும். ட்யூனிஷியாவிலே தான் பிஸர்டா என்ற பெரிய துறைமுகம் இருக்கிறது. இதை தம் கையில் வைத்துக் கொண்டு தான் அச்சு நாட்டார் ஆட்டம் போட்டு வருகிறார்கள். ஆகவே, இதைப் பிடிக்க 'ராணுவ மக்கு'கள் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். மும்முரமான போர் நடக்கிறது. ஆகாயத்திலும்; தரையிலும், கடலிலும் அச்சு நாட்டார் எதிர்த்து நிற்க ஆரம்பித்திருக்கிறார்கள். நேச தேசத்தினரது விமானத் தாக்குதல்களையும் லக்ஷியம் செய்யாது விமான மூலமாக ஏராளமான படைகளை ட்யூனிஷில் கொணர்ந்து குவிக்கிறார்கள் எதிரிகள். கடும்போர் ஒன்று சீக்கிரமே நிகழலாம். அதுவே முடிவான போராகவும் இருக்கக் கூடும்.

ட்யூனிஷியாவிலே, தெற்கே பல பிரதேசங்களை ராணுவ புத்திசாலிகள் என நினைத்துக் கொண்டிருக்கும் அச்சுநாட்டார் கைவிட்டு விட்டார்கள். ஆகவே, அவர்கள் கடற்கரை ஓரமாக உள்ள சிறியதோர் பிரதேசத்தில் தான் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். பிரஞ்சுப் படைகளும் இப்பொழுது அச்சு நாட்டுப் படைகளைத் தாக்கி வருகின்றன. நேச தேசத்தினர் இப்பொழுது ஸ்பெயின் தேசத்தி லிருந்து கிழக்கே வெகுதூரம் வரை உள்ள மத்யதரைக் கடல் பிரதேசத்தை, அபாயகரமானதாக ஆக்கி விட்டார்கள். தென் பிரான்ஸிற்கு உதவி போகாது தடுக்கவே, இந்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. 'ராணுவ புத்திசாலி'களான ஜெர்மானியரை விட, 'ராணுவ மக்கு'களிடம் வட ஆப்பிரிக்காவில் விமான பலம் அதிகமாகி விட்டது. ரோம

லின் பல் பிடுங்கப்பட்டு விட்டது. ஜெனரல் மாண்ட் கொமரிக்குக் கொண்டாட்டந் தான். சரித்திரத்திலே தனக்கொரு இடம் தேடிக் கொண்டுவிட்டார் அவர் என்பதில் சந்தேகமே யில்லை. தனது விரோதிகளை 'ராணுவ மக்குகள்' என்று கூறியது தெரியாத் தனம் தான்; அந்த மக்குகள் போட்ட போடு தலைதூக்க முடியாத போட்டாக ஆகிவிட்டதே என்று வருந்தக் கூடும் ஹிட்லர்.

அவரை விட முஸோலினியின் கவலை தான் பெருங் கவலையாக இருக்கும். வட ஆப்பிரிக்காவில் தாங்கள் பெற்ற வெற்றியை நேசதேசத்தார்கள் ஊர்ஜிதம் செய்து கொண்டு, அதையே தாவு மிடமாகக் கொண்டு, ஹிட்லரின் இடுப்பை ஒடிக்க பிளான்கள் போடக் கூடும். ருஷ்யா தன்னுடைய சொந்த பலத்தைக் கொண்டே இத்தனை காலம் பிரமாதமாகச் சமாளித்துக் கொண்டிருந்து விட்டது. இப்பொழுது வட ஆப்பிரிக்கா முழுவதும் நம் கையில் இருக்குமானல், ருஷ்யாவிற்கு எவ்வளவு சீக்கிரமாக மேற்கொண்டு உதவியை அனுப்பலாம்! ஒரு ஸ்டாலின் கிராடு நகரம், ஹிட்லரின் ரத்தத்தில் பெரும் பகுதியை உறிஞ்சி விட்டதே! வட ஆப்பிரிக்காவில் நேசதேசத்தினர் அடைந்த வெற்றி ஸ்டாலின் கிராடு முனையில் அச்சு நாட்டினர் காட்டி வந்த காரத்தைக் குறைந்து போகச் செய்துவிட்டதே! அச்சு நாட்டாரது கை அசந்திருக்கிறது என்று தெரிந்ததும், ருஷ்யர்கள் உஷாராகி விட்டனர். அதோடு குளிர்காலமும் ஆரம்பமாகி விட்டது.

திடீரென்று ஸ்டாலின்கிராடிற்கு வட மேற்கிலும், தெற்கிலும் முன்னேறித் தாக்க ஆரம்பித்து விட்டனர். பல மைல்கள் வரை முன்னேறியும் சென்று விட்டார்களாம். ஸ்டாலின்கிராட் நகருக்குள் பொறுக்க முடியாத குளிருடன் மழையும் பெய்கிறதாம். ஆயினும் அங்குள்ள அச்சு நாட்டுப் படைகள், வெளி உலகில் நடப்பது என்ன வென்பதையே அறியாது, கடுமையாகப் போராடி மடிந்து வருகின்றனவாம்.

இதே சமயம் தென் காகஸஸிலே ருஷ்யப் படைகள் பெரிய வெற்றியை கண்டு விட்டன. அங்கே ஜெர்மனியப் படைகள் நிலைகெட்டுத் தடுமாறிப் பின் வாங்கி வருகின்றனவாம். அச்சு நாட்டினர் இந்தக் குளிர் காலத்தை டான் நதி யருகே கழிக்க உத்தேசித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்களாம். ஆனால் ருஷ்யர்கள அவர்களை அங்கேயே இருக்க விடுவார்களா என்பது சந்தேகந் தான்!

வட ஆபிரிக்க வெற்றியால் ஏற்பட்ட விளைவு தானிது. யுத்தத்தின் போக்கே இப்பொழுது மாறி விட்டது. மத்யதரைக் கடல், இங்கிலீஷ் கால்வாய் இவ்விரண்டின் எதிரிலும் நேசதேசத்தினரும், அச்சு நாட்டினரும் இருக்கிறார்கள். இதன் பலனாக ஹிட்லரின் கூட்டாளிகளுக்குத் தான் முதல் ஆபத்து. இப்பொழுது பாருங்களேன்! ஜினோவா, ட்யூரின், மிலான் ஆகிய பெரிய பெரிய இத்தாலிய நகரங்கள் மீதெல்லாம் தினம் விடிந்தால் பதினாயிரக் கணக்கான டன் குண்டுகள் விழுந்து வருகின்றன. ஜினோவா துறைமுகம் இனி பைஸா பெருதபடி ஆகி விட்டதாம். ஹிட்லர் பிரெண்ணர் கணவா யண்டை பல பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகிறாராம். தென் பிரான்ஸிலும் அத்தகைய ஏற்பாடுகள் நடக்கின்றனவாம்.

இத்தாலியிலே ஹிட்லர் தனது படைகளை நிறுத்தி வைப்பாரா? அல்லது முஸோலினியைச் சந்தியில் நிறுத்தி வைப்பாரா என்பது போகப் போகத் தான் தெரியும். அவ்வாறு நிறுத்தி வைக்கப் பட்டால், இத்தாலி வெகு நாள் நேசதேசத் தாக்குதலைச் சமாளிக்க முடியாது. மானம் போனாலும், உயிராவது தப்பட்டும் என்று இத்தாலி நேச தசங்களுடன் சமரசம் செய்து கொண்டாலோ, ஹிட்லர் கொன்று தள்ளி விடுவார். ஆகவே இத்தாலி ஒரு பெரிய மத்தளமாகி விட்டது. அதற்கு இனி இரு புறத்திலிருந்தும் அடி கிடைக்கக் கூடும். ராணுவ புத்திசாலிகளோடு சேர்ந்து, ராணுவ மக்குகளுக்கு விரோதமாகக் கச்சங் கட்டி திருட்டுத் தனமாக நின்றதன் பலனை இத்தாலி அனுபவிக்கப் போகிறது.

இதிலே இன்னுமொரு வேடிக்கை. சென்ற மகா யுத்தத்திலே, தெற்கே யிருந்த சோணி நாடுகள் தான் முதலில் மண்டையைப் போட்டன. அதிலிருந்தே ஜெர்மனிக்குப் போறாத காலம் ஆரம்ப மாயிற்று. அந்த கதை தான் இப்பொழுதும் நடக்கும் போலிருக்கிறது.

ஜப்பான் விஷயமென்ன? அச்சு நாட்டுக் கூட்டாளி என்ற முறையில், அது, ஜெர்மனி வெற்றி பெறுகையில் தானும் வெற்றியைக் கண்டு வருகிறது. ஜெர்மனியர் உதை படுகையில் தானும் உதை படுகிறது. குடால்கனாலிலும், நியூ கினியாவிலும் ஜப்பானியர் அடைந்து வரும் தோல்விகளும், ஆள், ஆயுத நஷ்டங்களும் இன்னும் கொஞ்ச நாள் போனால் கணக்கிலேயே அடங்காது போலிருக்கிறது. நேச தேசத்தினரது கை எங்குமே ஓங்கி வருகிறது. கண்டபடி பேசிய ஹிட்லரும் அவரது சகாக்களும் திணறுகிறார்கள். உலகோருக்கு ஒரு பெரிய புத்திமதி தானிது. வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று அவசரப்பட்டு, தன்னை மறந்து எதுவும் கூறப்படாதய்யா, கூறப்படாது. இன்று 'மக்கு' போல் தோன்றுகிறவன், நாளை 'நொக்கி' விட ஆரம்பித்து விடுவான்.

## நல்லுறவிற்கு வழி

சமீபத்தில் நம் மாகாணத்தில் ராவ் பகதூர் பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு ஒரு தே நீர் விருந்து நடத்தினர். அதில் பொது ஜனங்களில் முக்கியமானவர்களும், பல வகைப் படைகளையும் சேர்ந்த 100 பேர்களும் கலந்து கொண்டார்கள். அப்போது ராவ் பகதூர் நாயுடு கூறியதாவது:—

"நம் படையினர் மேற் கொண்டுள்ள பொறுப்புகள் எவ்வளவு மகத்தானவை என்று பொது மக்கள் நன்முக உணர்ந்து, அவர்களிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். அது போலவே படையினரும் பொது மக்களிடம் மரியாதையாக நடந்து கொள்ளவேண்டும். ஒருவரையொருவர் மதித்து நட்புரிமை யோடிருந்தால், நம் நாட்டுப் பாதுகாப்பும் பலப்படும்; நன்மையும் உண்டாகும்.

படையினர் சார்பாக ராவ் பகதூர் நாயுடு அவர்களுக்கு நன்றி கூறிய ஒரு இராணுவ உத்தியோகஸ்தர் கூறியதாவது:—

"பொது மக்களின் உயிர்களைக் காப்பாற்றும் பொருட்டுத் தன் உயிரையும் கூட விட்டு விடச் சித்தமா யிருப்பதாக ஒவ்வொரு சோல்ஜரும் சத்தியம் செய்ய வேண்டி யிருக்கிறதென்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எதிர் காலத்திலும் உங்கள் உயிர்களைக் காக்கும் பொறுப்பு அவர்களுக்கு உண்டு. படையில் சேர்ந்து போருக்குப் போகிறவர்களை விட, பொது மக்களுக்குப் பல வகைகளிலும் கஷ்டமுண்டு. நாம் ஒருவரையொருவர் நன்முக உணர்ந்து கொள்ளாததனல் தான், எல்லா வகைத் தகராறுகளும் முளைக்கின்றன.

இப்படிப் பட்ட தே நீர் விருந்துகள் நம் நாட்டின் பல விடங்களிலும் நடை பெறுகின்றன. இதனல், தத்தம் உணர்ச்சிகளை மதிக்க, இரு சாராருக்கும், சந்தர்ப்பங்கள் இங்கே உண்டாகின்றன.



## ஜப்பானியர் சாயம் வெளுக்கிறது

விமான பலம் வெற்றி தரும். இதை நேச நாடுகள் நன்முகத் தெரிந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக நியூ கினியாவிலும் சாலமன் தீவுகளிலும் நடை பெறும் போரில் இது தெளிவாகத் தெரிகிறது. இந்த மாத ஆரம்பத்திலேயே கொகோடா என்னும் விமான நிலையத்தையும் குடால்கனாலிலுள்ள ஹென்டர்சன் விமான நிலையத்தையும் நேச நாட்டு விமானப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. இந்த ஊர் நியூ கினியாவில் மிகவும் முக்கியமான இடத்தில் அமைந் திருக்கிறது. இதை, சென்ற 2-ம் தேதி மீண்டும் ஆஸ்திரேலியப் படைகள் கைப்பற்றின. சென்ற 3 மாத காலமாக இது ஜப்பானியர் வசமிருந்தது. ஜப்பானியர்கள் சென்ற ஜூலை 28-ம் தேதி கொகோடாவைப் பிடித்தார்கள். 44 நாட்களுக்குள் தெற்கே ஆவன் ஸ்டான்லி மலையைக் கடந்து மார்ஸ்பி துறை முகத்திற்கு 40 மைல் தூரத்தில் வந்து சேர்ந்து விட்டார்கள். இந்தத் துறைமுகந் தான் ஆஸ்திரேலியாவிற்கு வடக்கே யுள்ள முக்கியமான நேச நாட்டுத் தளம். ஜப்பானியர்கள் ஐயோரிபைவா வரை முன்னேறிக் கொண்டு வந்தார்கள். பிறகு நேச தேசப் படைகள் எதிரிகளைப் புறங் காட்டி ஓடும்படி அடித்து 35 நாட்களில் கொகோடாவைத் திரும்ப பிடித்து விட்டார்கள். இதன் பயனக, மார்ஸ்பி துறை முகத்திற்கு நேரிடவிருந்த ஆபத்து நீங்கி விட்டது. நேச நாடுகளுக்கு ஒரு விமான நிலையம் கிடைத்தது. புனு—கோனு பகுதியை விட்டு ஜப்பானியர்களை விரட்ட இது பெரிதும் உதவும். ஜப்பானியர்களின் எண்ணிக்கை இங்கே குறைந்து கொண்டு வருகிறது. ஜெனரல் மெக்கார்தரின் படைகள் புனுவிற்கு ஒரு மைல் தூரத்தி லிருக்கின்றன. கோனுவைக் கைப்பற்றி விட்டனர்.

தமக்கு இங்கே நேர்ந்த தோல்விகளால் ஜப்பானியர்கள் மிகவும் கலக்க மடைந் திருக்கிறார்கள். தமக்கு நேர்ந்த நஷ்டங்களை ஈடு செய்து கொள்ள அரும் பாடு படுகிறார்கள். புனுவில் பெரும் படைகளைக் கொண்டு வந்து இறக்க முயற்சித்தார்கள். ஆனல் பலிக்க வில்லை. மேலும் ஜப்பானியப் படைகள் வந்து இறங்காதபடி தடுக்க வேண்டி, புனுவிற்கு 100 மைல்களுக்குக் கிழக்கே யுள்ள குட்சினப் தீவை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

**ஜப்பான் கப்பல் சேத விபரம்.**

சுமார் 1 மாதத்திற்கு முன்பு ஜப்பான் கப்பற் படை சாலமன் போர் முனையிலிருந்து பின் வாங்கியது. சென்ற அக்டோபர். மாதத்தில் மட்டும் ஜப்பானுக்குச் சொந்தமான 369 விமானங்களை தென் மேற்குப் பசிபிக் பகுதியில் சுட்டு நாசப் படுத்தி யிருக்கிறார்கள். நவம்பர் 13 முதல் 15 தேதிகளில் சாலமன் தீவுகளில் நடைபெற்ற போரில் ஜப்பானியருக்கு ஏராளமான கப்பல்கள் நஷ்டம். இது வரை 142 பெரிய ஜப்பானிய போர்க் கப்பல்கள் நாசமாகி யிருக்கவேண்டும், அல்லது பழுதாகி யிருக்க வேண்டும். முழு விபரங்களாவன:—

| | |
|---|---|
| **போர்க் கப்பல்கள்.** | 2 மூழ்கப் பட்டன அல்லது நாசமாயின; 5 சேதப்பட்டன. |
| **விமானந் தாங்கிக் கப்பல்கள்.** | 6 மூழ்கப்பட்டன அல்லது நாசமாயின; 6 சேதப்பட்டன. |
| **நாசகாரிகள்.** .. | 27 மூழ்கப்பட்டன அல்லது நாசமாயின; 4 நாசமாகி யிருக்க வேண்டும்; 18 சேதப்பட்டிருக்க வேண்டும். |
| **க்ரூய்சர்கள்** .. | 27 மூழ்கப்பட்டன அல்லது நாசமாயின; 1 நாசயாகி யிருக்க வேண்டும்; 27 சேதப் பட்டிருக்க வேண்டும். |

இவை பற்றி அமெரிக்க கப்பற் படை மந்திரி **கர்னல் நாக்ஸ்** கூறுவதாவது:—

"அந்தத் தீவை இப்போது உறுதியாகக் கைப்பற்றி விட்டோ மென்று துணிந்து சொல்லலாம். எதிரிகள் மேலும் படைகளைக் கொண்டு வரவும் கூடும். என்றாலும் அவர்கள் போராடினல் தான் அவர்களுக்கு வழி கிடைக்கும். இது வரை அவர்கள் போராடி வழி தேடிக் கொள்ள இயல வில்லை."

* * * *

**அச்சு நாடுகளுக்கு இரட்டைத் தோல்வி.**

வடாப்பிரிக்காவில் அச்சு நாடுகளுக்குப் படு தோல்வி. சாலமன் தீவுகளிலும் அது போலவே ஜப்பானுக்குப் படு தோல்வி. இதனல் அச்சு அரசாங்கங்களுக்கு இடிப்பு ஒடிந்திருக்கும். ஜப்பானியர்கள் ஒரு முறைக்கு மூன்று முறை அமெரிக்க கப்பற் படையிடம் தோற்றார்கள். இது பற்றி "டெய்லி மெயில்" பத்திரிகை எழுதுவதாவது:—

"பவளத் தீவிலும் நடுவழித் தீவிலும் நடைபெற்ற போரில் விமானந் தாங்கிக் கப்பல்களைத் தளமாகக் கொண்டு தான் நெடுந் தூரத்திலிருந்து கொண்டு தாக்கினார்கள். ஆனல் சாலமன் தீவுகளில் இரு தரத்தாரும் நேருக்கு நேர் நின்று பீரங்கிகளைக் கொண்டு போராடினார்கள். இதிலிருந்து கப்பல் போரிலும் கூட, இராணுவ சதுக்கங்கள் மிகவும் முக்கியமானவை என்று தெரிகிறது.

அமெரிக்கர்கள் கொஞ்சங் கொஞ்சமாக விமான பலத்தின் துணை கொண்டு குடால்கனாலில் தொடர்ந்து மேற்கே போய்க் கொண்டிருக்கிறார்கள்.

எதிரி திரும்பவும் தாக்கக் கூடும். ஆகையால் நேச நாடுகள் எல்லா ஏற்பாடுகளையும் மிகுந்த கவனத் தோடு செய்து முடித்திருக்கிறார்கள்.

## உதிர்ந்த மலர்கள்

ஹைதராபாத் நிஜாம் பிரிட்டிஷ் படைகளுக்கும் இந்தியப் படைகளுக்கும் படக் காட்சிகள் காட்டும் பொருட்டு வசதிகள் செய்ய வேண்டி ரூ. 33,000 உதவி யிருக்கிறார். இதைக் கொண்டு, சென்னையிலிருந்து லிபியா வரையிலும் உள்ள நம் படைகளுக்கு அவை இருக்கும் இடங்களிலேயே ஆங்கிலத்திலும், இந்திய மொழிகளிலும் சினிமாப் படங்கள் காட்ட ஏற்பாடாகி யிருக்கிறது.

* * * *

தென்னிந்தியாவில் படைப் பயிற்சி யொன்று நடைபெற்றது. அப்போது அந்த ஊரிலுள்ள ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் வேடிக்கை பார்க்கும் பொருட்டு வந்து கூடி விட்டார்கள். பயிற்சி முடிந்தது. படையினர் அக்கிராமவாசிகளுடன் இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தனர். மிகவும் மரியாதையோடு நடந்து கொண்டனர். இதில் விசேஷம் எதுவும் இல்லை. ஆனல், இது தான் உண்மை இந்தியரின் இயல்பு.

* * * *

ஒரு இந்திய கிராமத்தை யடுத்து ஒரு கிணறு இருந்தது. இதைச் சுற்றி கைப்பிடி சுவர் கிடையாது. அந்த கிராமத்திற்கு அருகில் ஒரு படை, முகாம் அமைத்திருந்தது. ஒரு நாள் இரவு ஒரு சிப்பாய் அந்தக் கிணற்றில் தவறி விழுந்து விட்டார். ஒரு கிராமவாசி சற்று தூரத்தி லிருந்தவர் இதைக் கண்டார். விரைந்து கிணற்றிற்கு ஓடினார். உள்ளே குதித்தார். சிப்பாயைத் தூக்கிக் கொண்டு வெளிப்பட்டார். அவருக்கு ஏதேதோ சிகிச்சைகள் செய்தார். பயனில்லை. அவர் முயற்சி வீணனது பற்றி மிகவும் ஏமாற்ற மடைந்தார். இச்செய்தியை யறிந்த அப்படைத் தலைவர், அவரைத் தன் முகாமுக்கு தருவித்து, தகுந்தபடி வெகுமதி கொடுத் தனுப்பினார் அவருடைய தைரியத்தை பாராட்டி.

* * * *

இராணுவ வைத்தியசாலைகளில் நோயாயிருக்கிறவர்களுக்கு இந்தியப் பெண்கள் பலவகைகளில் உதவி செய்து சந்தோஷப் படுத்துகிறார்கள். குறிப்பாக அவரவர்களுடைய தாய்மொழியில் பேசியும், அவரவர்களுடைய கடிதங்களை எழுதிக் கொடுத்தும் உதவுகிறார்கள். நாம் வெற்றி பெற, இவர்களும் மிகவும் உதவுகிறவர்கள் தான்.

## பிரஞ்சு வடாப்பிரிக்காவில் சுதேசிகள் நிலை

### ஆசை காட்டி மோசம் செய்யும் ஜெர்மானியர்கள்

கிட்டு —தாத்தா! வடாப்பிரிக்காவிலே பிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமா யிருந்த நாடுகள் எவை?

தாத்தா.—மொராக்கோ, டூனிஸ், அல்ஜீரியா இம்மூன்றுந் தான்.

கிட்டு.—அங்கே எத்தனை பேர் வசிக்கிறார்கள் தாத்தா?

தாத்தா.—மொராக்கோவில் 6,648,888 பேர்களும், டூனிசில் 2,335,623 பேர்களும், அல்ஜீரியாவில் 6,201,144 பேர்களும் வசிக்கிறார்கள்.

கிட்டு.—இவ்வளவு கணக்காக எப்படிச் சொல்லுகிறீர்கள்?

தாத்தா.—1936-ம் வருஷம் அங்கே ஜனத் தொகைக் கணக் கெடுத்தார்கள். அந்தக் கணக்கிலிருந்து சொல்லுகிறேன்.

கிட்டு.—பிரான்சு ஜெர்மனியோடு ஒப்பந்தம் செய்து கொண்டதே; அப்போது வடாப்பிரிக்காவிலிருந்து பிரஞ்சு நாடுகளின் கதி என்ன?

தாத்தா.—நாஜிகள் ஆதிக்கம் இங்கேயும் தலை விரித்து ஆடியது. இங்கிருந்து அநேகரைப் பிடித்து ரஷ்யப் போர் முனைக்கு அனுப்பினர். மற்றும் பலரை தம் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்படி அனுப்பி நிர்ப்பந்தப்படுத்தி வேலை வாங்கினர்.

கிட்டு.—இப்படி எத்தனைப் பேர்களை அனுப்பி யிருக்கின்றனர்?

தாத்தா.—17,500 அரபுகளை அனுப்பி யிருக்கிறார்கள்.

கிட்டு.—எப்படி அனுப்பினார்கள்?.

தாத்தா.—பிரான்சில் உயர்ந்த சம்பளங்களில் வேலைக்கு அமர்த்துவதாக ஆசை காட்டி பிரான்சுக்கு அழைத்துப் போய், அங்கிருந்து ஜெர்மனியி லுள்ள தொழிற்சாலைகளுக்கும் போர்முனைக்கும் அனுப்புகிறார்கள்.

கிட்டு.—இது எப்படி உங்களுக்குத் தெரியும்? பத்திரிகைகளில் இச்செய்தி வெளி வந்ததா?

தாத்தா.—சென்ற ஜூலை மாதம் 25-ம் நாள் மாஸ்கோ ரேடியோ அறிவித்த செய்தியிலிருந்து நான் சொல்லுகிறேன்.

கிட்டு.—அது என்ன செய்தி?

தாத்தா.—விஷியி லிருந்து கிடைக்கும் செய்தியிலிருந்து கீழ்க்கண்ட விவரங்கள் வெளியாகின்றன:—

"வடாப்பிரிக்காவில் பிரஞ்சுக் காரர்களுக்குச் சொந்தமான நாடுகளி லிருந்து, சுதேசிகளை இன்னும் கொண்டு வந்து இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். படைக்கு ஆள் திரட்டுவதற்கு முக்கியமான காரியாலயத்தை ஆல்ஜியர்ஸில் தான் வைத்திருக்கிறார்கள். 3 ரயில் வண்டித் தொடர்கள் நிறைய சமீபத்தில் இவர்களைக் கொண்டு வந்து இறக்கினார்கள். ஜூன் மாதத்திலும் ஜூலை மாத ஆரம்பத்திலும் மட்டும் 3,000 பேர்களைக் கொண்டு வந்து இறக்கினார்கள்.

கிட்டு—பிறகு, இவர்களைக் கொண்டு போய் இறக்கவில்லையா?

தாத்தா.—ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் 10,000 பேர்களைக் கொண்டு போய் இறக்கினார்கள்.

கிட்டு.—இவர்களையும் தொழிற்சாலைகளுக்கும் போர் முனைக்குந் தான் அனுப்பினார்களா?

தாத்தா.—இல்லை; இவர்களில் பெரும்பாலோர் மீது விஷ வாயு பரிட்சைகள் நடத்தினார்கள்.

கிட்டு.—இது மகா அக்கிரமமல்லவா?

தாத்தா.—ஆம், அக்கிரமத்திற்காகத் தானே ஆதிக்கம் தேடுகிறார் ஹிட்லர்.

கிட்டு.—தாத்தா, இன்றைக்கும் சில முக்கியமான விஷயங்களைத் தாங்கள் தெரிவித்தீர்கள். படுத்துத் தூங்கப் போகலாமா?

தாத்தா.—சரி, தூங்கு.

**விஷ அம்புகள்.**

**பொய் வதந்திகள் பற்றி எச்சரிக்கை!**

**அவை எதிரிகள் விடுக்கும் விஷ அம்புகள்.**

உங்கள் மனதைக் குழப்பவும்
பகுத்தறிவைக் குலைக்கவும்
தவறான வழியில் நீங்கள் நடக்கவும் தான்
இவற்றை பரப்புகிறார்கள்.

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியர்களுக்கு விரோதமாக
தேசியப் போர் முனையை அமையுங்கள்!

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் டிசம்பர்மீ 4உ, வெள்ளிக்கிழமை [இதழ் 48



## சர்ச்சில் ரேடியோ பிரசங்கம்

சென்ற நவம்பர் மாதம் 29-ம் தேதி இரவு லண்டன் ரேடியோவில் பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில் ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது:—

"ஒரு விஷயத்தைக் குறித்து நம் மனம் நாளுக்கு நாள் மிகவும் உறுதி யடைந்து கொண்டு வருகிறது. நம் வாழ்க்கையையே நாசஞ் செய்யக் கூடிய ஆபத்து நம் தலைக்கு மேல் இருந்தது. நாம் போற்றி வந்தவை அனைத்தையும் அது நாசஞ் செய்திருக்கும். என்றாலும், அந்த மகத்தான ஆபத்தை நாம் வென்று விட்டோம். மனித இனத்திற்குத் தொண்டு செய்யும் பொருட்டு நாம் காப்பாற்றப் பட்டோம்."

"போர் நெடு நாட்கள் நடக்காது என்று நம்புவதற்கோ இட மில்லை; ஆகவே எதிர் காலம் வெறுக்கத் தக்கதாகவும் கொடுமையானதாகவும் இருக்கலாம். ஆசியாவில் நடைபெறும் போர் முடிவடையு முன்பு, ஐரோப்பாவில் நடைபெறும் போர் முடிவடையவுங் கூடும். அத்லாந்திக் அரங்கத்தில் அமைதி நிலவலாம்; அப்போது பசிபிக் அரங்கத்தில், கடும் போர் ஏற்படக் கூடும். அப்படி நேர்ந்தால், அமெரிக்காவிற்கும் நம் சகோதரர்களான ஆஸ்திரேலியர்களுக்கும், நியூசிலந்தியர்களுக்கும், நம் முழு பலத்தையுங் கொண்டு உதவி, ஜப்பானியருக்கு விரோதமாகப் பாடு படுவோமாக!

"சமீபத்தில் எகிப்தில் எல் அலமீன் என்னும் இடத்தில் நம் படைகள் மகத்தான வெற்றி பெற்றன. இரண்டு வாரங்களுக்கு முன்பு அந்த வெற்றி விழாக் கொண்டாடினோம். அப்போது கோவில் மணிகள் முழங்கின. இந்த முழக்கம் வெற்றி முழக்கம் மட்டும் அல்ல. கடவுளுக்கு நன்றி செலுத்தும் முழக்கமும் கூட. நமது குற்றங்களும் குறைபாடுகளும் பல. நம்மை விடுவிக்கத் தக்க நிலைக்குக் கடவுளின் அருள், நம்மைக் கொண்டு வந்து விட்டிருக்கிறது. நாம் இன்னும் விடுதலை பெற்று விடவில்லை. ஒரு விஷயத்தைக் குறித்து நம் மனம் நாளுக்கு நாள் மிகவும் உறுதி யடைந்து கொண்டு வருகிறது. நமது வாழ்க்கையையே நாசஞ் செய்யக் கூடிய பெருத்த ஆபத்து நம் தலைக்கு மேல் இருந்தது. நாம் போற்றி வந்தவை அனைத்தையும் அது நாசஞ்செய்திருக்கும். என்றாலும் அந்த மகத்தான ஆபத்தை நாம் வென்று விட்டோம். மனித இனத்திற்குத் தொண்டு செய்யும் பொருட்டு நாம் காப்பாற்றப் பட்டோம். சென்ற 3 வருஷங்களாக நாம் போன வழி என்ன? எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளானோம் என்று சற்று சிந்தித்துப் பார்த்தால் தான், நாம் எங்கெல்லாம் தப்பித்துக் கொண்டிருக்கிறோம்; என்னென்ன சாதித்து முடித்திருக்கிறோமென்று சரிவர நிர்ணயிக்க முடியும். நாம் வீண் பெருமை கொள்ளக் கூடாது; அளவிற்கு மிஞ்சிய நம்பிக்கை கொள்ளக் கூடாது. இவை, உண்மை நிலையை உணர ஒட்டாதபடி நம் அகக் கண்களை மறைத்து விடும். எதிர் காலத்தில் உலக விடுதலைக்காகப் பாடு பட வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இதுவும் நம் பாக்கியந் தான். உலகில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த எல்லா நாடுகளும் மக்களும் அந்த ஆபத்தான காலத்தில் ஒன்று பட்டிருந்தனர். இவற்றிற்குத் தலைமையாய் பிரிட்டிஷ் தீவு தனித்திருந்தது. மற்ற ஐரோப்பிய நாடுகள் எல்லாம் தடுமாறிக் கொண்டிருந்தாலும், நாம் மட்டும் உறுதியோடிருந்தோம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த ஒரு இனத்தாராவது தடுமாற வில்லை."

"இங்கே நாம் ஏற்றி வைத்த விளக்கு, அமெரிக்காவிலுங் கூட ஒளி வீசியது. அதனால் தான், மீண்டும் நாம் கடுமையான போராட்டத்தில் இறங்கு முன்பு, கடவுளுக்கு வணக்கம் செலுத்த வேண்டும். இந்த மணி யடித்தது முதல், நம நல்ல நோக்கம் ஈடேறிக் கொண்டு வருகிறது. தன் சேனையைக் கொண்டு எகிப்தையே கைப்பற்றப் போவதாக ரோமல் பீத்திக் கொண்டிருந்தார். இது உண்மையென்று ஹிட்லரும் முஸோலினியும் நம்பிக் கொண்டிருந்தார்கள். இந்தப் படையை 400 மைல் தூரத்திற்கு நம் படைகள் விரட்டி யடித்தன. மற்றொரு யுத்தம் திருபோலி தானியாவின் வாயிலில் மிகக் கடுமையாக நடை பெற வேண்டி யிருக்கலாம். ஒரு போர் ஆடி முடிகிற வரை, நான் அது பற்றி ஒரு வார்த்தை கூட முன்னதாகக் கூற மாட்டேன். வடாப்பிரிக்க யுத்த அரங்கம் மிகப் பரந்தது. இங்கே போராடும் நம் படையினர் பல வகைக் கஷ்டங்களுக்கு உள்ளாகின்றார்கள். ஒரு நாளைக்கு 20, 30, 40, 50 மைல்கள் விகிதங் கூட நடக்கும்படி நேருகிறது. நம் படைத் தலைவர்களான அலெக்ஸாந்தர், மான்ட்காமரி, நம் படைவீரர்கள், விமானிகள் ஆகியோர் மீது நமக்கு மிகுந்த நம்பிக்கை யுண்டு.

எகிப்திற்கு மேற்கே சுமார் 1,000 மைல்களுக்கு அப்பால் அமெரிக்கப் படைகளும் நம் படைகளும் சேர்ந்து மிகச் சிறந்த வெற்றி பெற்றிருக்கின்றன. இந்தப் போர் அரங்கத்தில் பதினாயிரக் கணக்கான சோல்ஜர்களைக் கடல் வழியாகக் கொண்டு போய் இறக்க வேண்டி யிருந்தது. கடலில் எதிரிகள் நிறைய 'யு' படகுகளை வைத்திருக்கிறார்கள். இவற்றிற்குத் தப்பி நம் துருப்புக் கப்பல்கள் போகவேண்டி யிருந்தது. இந்தக் கப்பல்கள், திட்டமிட்ட படியே, தாம் போய்ச் சேரவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்தன. வெவ்வேறு 12 இடங்களில் ஒரே காலத்தில், முன்னதாகத் திட்டமிட்டபடியே தாக்கின. இப்படிப்பட்ட சிறந்த முறையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளை யார் தான் பாராட்டா திருக்க முடியும்?

**சிறந்த ஒத்துழைப்புத் தான் காரணம்.**

அமெரிக்க உத்தியோகஸ்தர்களும் படைகளும் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் படைகளும் மிகச் சிறந்த முறையில் ஒத்துழைத்தது தான் இந்த வெற்றிக்குக் காரணம். இந்தப் போராட்டத்தை நடத்தும் மகத்தான பொறுப்பை மேற்கொண்டவர் அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட். நமது 1-ம் நம்பர் படை யுள்பட அப்போர் அரங்கத்திலுள்ள எல்லாப் படைகளுக்கும் தலைவர் அமெரிக்கப் படைத் தலைவரான ஜெனரல் எய்ஸினோவர். இவருடைய திறமையிலும் ஊக்கத்திலும் நமக்கு முழு நம்பிக்கை யுண்டு. அன்றியும் நம் கப்பற் படைக்கு உதவியாக அமெரிக்கக் கப்பற் படையும் அங்கே இப்போது வந்து சேர்ந்திருக்கிறது. இவற்றிற்குத் தலைவர் அட்மிரல் கன்னிங்ஹாம். மத்திய தரை கடலினுள்ளும் வெளியிலும் நம் படைகள் போய் இறங்கின. சென்ற 10 நாட்களுக்குள்ளாக நடைபெற்ற போரில் எதிரிகளுடைய 'யு' படகுகள் தலை தூக்க மாட்டாமல் அடிக்கப் பட்டு விட்டன. நாம் இழந்த போக்கு வரவுக் கப்பல் அல்லது சப்ளை கப்பல் ஒவ்வொன்றிற்கும் பதிலாக ஒவ்வொரு எதிரியின் 'யு' படகுகளை மூழ்கடித்து விட்டோம் அல்லது சேதப்படுத்தி விட்டோம். அமெரிக்காவும் பிரிட்டனும் இழந்த கப்பல்களைப் போல் இரண்டு பங்கு கப்பல்கள் வடாப்பிரிக்கத் துறைமுகங்களிலிருந்து நமக்குக் கிடைத்தன. ஆகவே இந்தப் போர் மற்றொரு போருக்குப் பொருள் திரட்டுகிறது.

வடமேற்கு ஆப்பிரிக்காவில் எதிரிகளைத் தாக்கும் அதே சமயத்தில், எகிப்தில் தானும் எதிரிகளைத் தாக்க வேண்டும் என்னும் ஏற்பாட்டைச் செய்து முடித்திருந்தார் ஜெனரல் அலெக்சாந்தர். இப்படிச் செய்வதால், எக்கட்சியிலும் சேராமல் ஒதுங்கி யிருக்கும் நாடுகளுக்கு ஊக்கந் தரும். அப்போது அவர்கள் தம் நடு நிலைமை தவறாது இருக்கக் கூடும். இப்படிப் பட்ட சமயத்தில் தம் கடமைகள் எவை என்று வடாப்பிரிக்காவிலுள்ள பிரஞ்சுக்காரர்களுக்கு உணர்த்துவது மாகும். இப்போது துனிஷியாவில் இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் சொந்தமாக வுள்ள பகுதிகளைத் தாக்குவதில் அமெரிக்கப் படைகளும் பிரிட்டிஷ் படைகளும் ஒன்றோடொன்று போட்டி போடுகின்றன.

**பாய்ச்சல் தளம்.**

தாமதித்துப் போராடுவதற்கு ஆப்பிரிக்கா வல்ல இடம். அது ஒரு பாய்ச்சல் தளம். ஆப்பிரிக்காவின் தென் கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கொண்டு இராணுவ சப்ளைகளைக் கொண்டு போவதை விட, மத்தியதரைக் கடல் வழியாகக் கொண்டு போவது மிகவும் வசதியானது. இது குறுக்கு வழி. எதிரி 'யு' படகுகளையும் தகுந்தபடி நாசஞ் செய்யலாம். இதில் மற்றொரு நன்மையுமுண்டு. வடாப்பிரிக்கக் கரை முழுவதும் நம் வசமாகி விடும். மிகக் கடுமையான விமான யுத்தம் இங்கே ஆரம்பிக்கிறோம். இதில் ஏராளமான பிரிட்டிஷ் விமானங்களும் அமெரிக்கா விமானங்களும் பங்குகொள்ளுகின்றன. எதிரி விமானங்கள் போராட வேண்டிய அவசிய நிலையி லிருக்கும் போது, தரையிலுள்ள நம் படைகள் மேலும் மேலும் முன்னேறிப் போக ஏதுவா யிருக்கும்; அல்லாமலும் ஜெர்மனியில் விமானத் தொழிற்சாலைகள் சரியானபடி வேலை செய்ய முடிகிற தில்லை; ஆகையால், எதிரிகளின் விமான பலம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது. ஆனால் நேசநாடுகளின் விமான பலமோ, நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. இதிலிருந்து, ஒரு விஷயம் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. 1943-ம் வருஷம் நம் படைகள் முன்னேறிப் போக பல சந்தர்ப்பங்கள் நிச்சயமாக ஏற்படும். மூன்றாவது, இந்த யுத்தக் கொடுமையை

(4-ம் பக்கம் பார்க்க.)



# கல் தூண் வளையுமா?

சுயமரியாதை, மானம் இதையெல்லாம் கணக்கில் எடுத்து கவனிப்போரை கல்தூணுக்கு ஒப்பிடுவதுண்டு. எவ்வளவு தான் ஆபத்து வந்தாலும் கல் தூண் சற்றாவது வளைந்து கொடுக்குமா? கொடுக்கவே கொடுக்காது. படாரென்று நடுவே ஒடிந்து போகுமே ஒழிய வளையாது. அதே போலத் தான் கண்யமானவர்கள் தமக்கு எவ்வளவு கஷ்டங்கள் வந்தபோதிலும் தமது மானத்திற்கும், சுயமதிப்பிற்கும், சுயமரியாதைக்கும் பங்கம் ஏற்படும் படியாக நடந்து கொள்ளவே மாட்டார்கள். கேவலம் தமது உயிர் பிழைத்திருக்க வேண்டுமே, இந்த உலகில் இன்னும் கொஞ்ச காலம் வாழ வேண்டுமே, நாலு காசு கிடைத்தால் அது வரை லாபமாச்சே என்று எண்ணி, சமயம் வந்தால் பல்லைக் காட்டி, கூழை கும்பிடு போடும் குணம் அவர்களிடம் இருக்கவே இருக்காது. உயிர் போனாலும் பரவாயில்லை; மானத்தையும், சுதந்திரத்தையும் விற்க மாட்டோம் என்றே உறுதியாக இருப்பார்கள் அவர்கள். அவர்களது புகழ் என்றும் நிலைத்திருக்கத் தான் செய்யும்.

இத்தகைய கல்தூண் மனப்பான்மை கொண்ட உத்தமர் கோஷ்டியிலே சென்ற வாரம் பல வீர பிரஞ்சுக்காரர்கள் சேர்ந்து விட்டனர். எங்கே?

வட ஆபிரிக்காவிலே நேச தேசப் படைகள் புகுந்த உடனே, ஹிட்லர் விஷீ சர்க்காரின் ஆதிக்கத்திலிருந்த, வசப்படாத பிரான்ஸ் முழுவதையும் தன் வசப்படுத்திக் கொண்டாரல்லவா? அப்பொழுது டூலோன் எனும் துறைமுகத்தை மட்டும் விட்டு வைத்திருந்தார். அங்கு தான் பலமிக்கதோர் பிரஞ்சுக் கடற் படை இருந்தது. அதன் மீது ஹிட்லருக்கு ஒரு கண் தான். அது அவர் வசப்பட்டு விட்டால், நேச தேசத்தினருக்கு மத்யதரை கடல் பிரதேசத்தில் கொஞ்சம் சிரமம் ஏற்படும் என்ற நிலைமை இருக்கத்தான் இருந்தது. ஆகவே நேச தேசத்தாரும் டூலோனில் உள்ள கடற் படை என்ன ஆகிறது என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தனர். அதை வட ஆப்பிரிக்காவிற்குப் புறப்பட்டு வரும்படி அட்மிரல் டார்லான் கூட உத்திரவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஆனால், சென்ற வெள்ளிக் கிழமை யன்று அதி காலையில் திடீரென டூலோன் நகருக்குள் ஜெர்மன் பட்டாளம் புகுந்து விட்டது. மளமளவென அந்நகரில் உள்ள ஒவ்வொரு முக்கியமான இடத்தையும் அந்தப் பட்டாளம் பிடித்துக் கொண்டே வந்தது. வானத்தில் பந்தல் போட்டது போல் நாஜி விமானங்கள் அந்நகர் மீது பறந்தன. அவற்றுள் பல அந்தத் துறைமுகத்தி லிருந்த யுத்தக் கப்பல்களை அடையாளம் கண்டு கொள்ள வேண்டி, பந்த வெடிகளை வீசின. ஆங்காங்கே கடல் வெடிகளையும் தூவின. பல நாஜி வீரர்கள் படகுகளில் சென்று பிரஞ்சு யுத்தக் கப்பல்கள் மீது ஏற முயன்றனர்.

ஆனால், அந்தக் கப்பல்களில் உள்ள பிரஞ்சுக்காரர்களின் ரத்தத்திலே, வீர சுதந்திர பிரஞ்சு ரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. அவர்களது உள்ளங்கள் கொதித்துக் கொண்டிருந்தன. தங்களது தாய் நாட்டை மொட்டை யடித்து, அதன் சுதந்திரத்தைப் பறித்து, எங்கும் க்ஷாமமே ஏற்படச் செய்த அக்ரமக்காரர்களிடம் தங்கள் கப்பல்களை ஒப்புவிக்க அவர்களது மனங்கள் சம்மதிக்க வில்லை. நாஜிகளிடம் சிக்கி நாயப் பிழைப்பு பிழைக்கவும் அவர்கள் விரும்பவில்லை. அதோடு, தங்கள் கப்பல்களை நாஜிகளிடம் எதிர்ப்பின்றி ஒப்படைத்து விட்டால், பிறகு அதே கப்பல்கள் அவர்களுடைய சகோதர மக்கள் மீதும், அவர்களுடைய விடுதலையிலே சிரத்தை காட்டும் நேச தேசத்தினர் மீதும் குண்டுகளை வீசி, அவர்களுக்கெல்லாம் யமனாக ஆகக் கூடுமே என்ற எண்ணமும் அவர்களுக்குத் தோன்றியது. இதெல்லாம் ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக அதிவேகமாகவே அவர்களது மனங்களில் தோன்றின. இதற்கு ஒரு முடிவும் கண்டு பிடித்து விட்டார்கள். அந்த முடிவு என்ன என்பதை அதிசீக்கிரமாகவே எலும்புத் துண்டுக்கு ஆசைப்பட்டு வரும் நாய் போல் நாடிவரும் நாஜிகள் கண்டுகொண்டனர்.

மேலே பறந்த விமானங்களை நோக்கி அந்தப் பிரஞ்சுக் கப்பல்களி லிருந்து குண்டுகள் பறந்தன. அதைக் கண்டு நாஜிகளும் பதிலுக்கு வெடி குண்டுகளை வீசினர். ஆனால் சிறிது நேரத்திற் கப்பால் நடந்த காட்சி அங்கிருந்த நாஜிகளை மட்டுமின்றி உலகோரையே பிரமிக்கச் செய்து விட்டது.

திடீரென்று ஒரு பிரமாண்டமான யுத்தக் கப்பலின் நடுவிலிருந்து ஒரு பெரிய வெடி வெடித்தது. அது டூலோன் நகரையே அதிரச் செய்துவிட்டது. பல வீடுகள்கூட அதனால் சேதமாகி விட்டனவாம். அந்த வெடி வெடித்த சிறிது நேரத்திற்கெல்லாம், மற்றக் கப்பல்களிலிருந்தும் வெடிகள் வெடித்தன. ஒரு கப்பலிலிருந்து மற்றொன்றை நோக்கி வெடிகள் சுடப்பட்டன என்று கூடக் கூறப்படுகிறது. அரை மணி நேரத்திற்குள் அந்தத் துறைமுக முழுதுமே பெரியதோர் அக்னி குண்டமாக மாறிவிட்டது. ஒரே புகை மயம் தான்.

சற்று முன் வரை அனைவராலும் போற்றப்பட்டு வந்த அற்புதமான பிரஞ்சுக் கடற்படை, அப்பொழுது இருக்குமிடம் தெரியாமல் சுக்கு நூறாகி மறைந்து விட்டது. அதோடு, அதில் இருந்த வீர சுதந்திர புருஷர்கள் சில ஆயிரவரும் தம் தாய் நாட்டுக் கொடியை வணங்கியவாறே ஜலத்திற்குள் மறைந்து விட்டனர். ஜெர்மானியருக்கு அப்படையில் ஒரு சுள்ளாணி கூட கிடைக்கப் போவதில்லை. ஆனால் இத்தகையதோர் அரிய கடற்படையை அநியாயமாக அழியச் செய்த பாபம் மட்டும் அவர்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும். தம் தாய் நாட்டின் விடுதலைக்காகவும், தங்களது சுதந்திரத்திற்காகவும் தங்கள் உயிர்களையும், அவற்றினும் பெரிதாகத் தாங்கள் மதித்த தங்கள் கடற்படையையும் தியாகம் செய்த அந்த பிரஞ்சு வீரர்களின் புகழ், உலகம் உள்ளளவும் அழியாது. அவர்களது தியாகத்திற்கு எதிர்கால சரித்திரத்தில் நிச்சயமாக ஒரு இடம் உண்டு. கல்தூண்போல் இருந்து, ஒடிந்து மறைந்து விட்ட அவர்களை, ஒவ்வொரு பிரஞ்சுக்காரனும் மறக்கவே போவதில்லை. அவர்களது அகால மறைவிற்குக் காரணமாக இருந்த ஹிட்லர் கோஷ்டிகளையும், அவர்கள் மறக்கப் போவதில்லை. யானை கொள்ளும் வைரம் போல, அவர்களும் காத்திருந்து தக்க சமயத்தில் தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டு, பழிக்குப்பழி வாங்கப் போகிறார்கள் என்பது நிச்சயம். எல்லா வகைகளிலும் இப்பொழுது ஹிட்லருக்கு ஏமாற்றம் தான்! எங்கும் அவருக்கு ஏக இடி தான். அவருடைய பாக்ய காலமெல்லாம் மூன்றே வருடங்களிருந்து பறந்தோடி விட்டாப் போலிருக்கிறது. 'நமக்கும் நல்லகாலம் வராமல் போய்விடாது' என்ற நம்பிக்கையோடு பொறுத்திருந்த பிரிட்டிஷாருக்கும், நேசதேசத்தினருக்கும் இப்பொழுது தான் நல்ல காலம் வர ஆரம்பித்திருக்கிறது. 'வெற்றி! வெற்றி! வெற்றி!!!' என்று எட்டுத் திசைகளி லிருந்தும் அவர்கள் செவிகளில் ஆனந்தமான செய்திகள் வந்து விழுந்து கொண்டிருக்கின்றன. மனசிலே குஷி என்றால், தானாகவே தேகத்திலும் வலு ஏறுமென்பார்கள். அது உண்மை. நேசதேசத்தாரின் வலு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு தானிருக்கிறது. அவர்களது கட்சியிலே இப்பொழுது வட ஆபிரிக்காவி லிருந்த பல வீர பிரஞ்சு மக்களும் சேர்ந்து போராடுகிறார்கள். அனைவருமாகச் சேர்ந்து ஐரோப்பாவை நாஜிகளின் ராட்சதப் பிடிப்பி லிருந்தும் சீக்கிரமே விடுவிக்கவேண்டும்; உலகத்தில் க்ஷேமம் விரைவில் பிறக்க வேண்டும் என்பதே நமது ஆசை. அந்த ஆசை பூர்த்தியாகும் காலம் துரிதமாக வந்து கொண்டிருக்கிறாப் போல் தானிருக்கிறது. மேற்கிலும் கிழக்கிலும் இருண்டு கிடந்த வானத்திலே இப்பொழுது வெளிச்சம் தெரிகிறது. இது நமது நன்மைக்கே! இருளும், இரவும் யாருக்கு வேணும்? திருடனுக்குத் தானே? வெளிச்சமும் பகலும் நேர்முறையில் நிம்மதியாக வாழ

(6-ம் பக்கம் பார்க்க.)

## கப்பல் பழுது பார்ப்பதில் இந்தியர் திறமை

அமெரிக்கக் கப்பற் படையைச் சேர்ந்தது "போய்ஸ்" என்னும் க்ரூய்சர். சமீபத்தில் சாலமன் தீவுகளிற்கு அருகில் இது ஆடிய போராட்டத்தைக் குறித்து நம் வாசகர்கள் பத்திரிகைகளில் படித்திருக்கக் கூடும். சென்ற மார்ச்சு மாதம் இந்தக் கப்பலை பம்பாயில் இந்தியத் தொழிலாளர்களைக் கொண்டு பழுது பார்த்தார்கள். இது சாலமன் தீவுகளுக் கருகில் ஆடிய போராட்டத்திலிருந்து, இந்தியத் தொழிலாளர்கள் கப்பல்களை பழுது பார்ப்பதில் முதல்தரமானவர்கள் என்று விளங்குகிற தல்லவா?

---

## சர்ச்சில் ரேடியோ பிரசங்கம்.

(2-ம் பக்கம்—தொடர்ச்சி)

இத்தாலியப் பொதுமக்கள் உணரத் தக்கபடி நாம் செய்ய வேண்டும். டுனிஷியாவி லிருந்து எதிரியை விரட்டி யடித்து விடுவது தான் நம் நோக்கம். இது கைகூடிய பிறகு, தெற்கு இத்தாலியிலுள்ள துறைமுகங்கள் தொழிற்சாலைகள் முதலியவற்றின் மேலே விமானங்களி லிருந்து கடுமையாகத் தாக்க வேண்டும். இத்தாலியர்கள் கனவு கூட கண்டிருக்க முடியாதபடி அவ்வளவு கடுமையாக நாம் தாக்கப் போகிறோம். இத்தாலியை இந்த அகதிக்கு உள்ளாக்குகிறவர் ஒரு தனி மனிதர். இந்த நிலை தமக்குப் பொருந்துமா அல்லவா என்று நிர்ணயிக்க வேண்டியது 4 கோடி இத்தாலியர்களுக்கு உரியது

**இத்தாலிக்கு எச்சரிக்கை.**

செத்த பாம்பை அடிப்பதில் முஸோலினிக்கு வெகு பிரியம். ஓய்ந்து சாய்ந்துபோன பிரான்ஸைத் தாக்கினார். பிரிட்டனுக்கு உதவி யில்லை என்னும் நினைப் போடு நம்மிடமும் வாலாட்டினார். ஏகாதிபத்தியப் பெருமைப் பைத்தியம் அவருடைய தலைக் கேறியது. பிறர் நாடுகளை வென்று அவர்களுடைய பொருள்களைச் சூறையாட வேண்டு மென்னும் பேராசை அவரை உந்தியது. அகம்பாவத்தில் ஆழ்ந்தார். அளவு கடந்த கொடுமைகள் இழைத்தார். அதன் பலனை இப்போது அனுபவிக்கிறார். நான் இவை பற்றி அவரை எச்சரித்தேன்; ஆனால், அவர் கேட்கவில்லை. அமெரிக்கத் தலைவர் ஆழ்ந்த யோசனையின் பேரில் விடுத்த வேண்டு கோளை, அவருடைய கல் மனம் ஏற்றுக் கொள்ள வில்லை. இன்று, தன் சாம்ராஜ்யத்தை இழந்தார். நம் வசமுள்ள யுத்தக் கைதிகளில் நூறு பேருக்கு அதிகமான இத்தாலிய ஜெனரல்களும் 3 லட்சம் சோல்ஜர்களும் இருக்கிறார்கள். அழகிய இத்தாலி ஆபத்திற் குள்ளாகி யிருக்கிறது. இத்தாலியர்கள் உழைப்பாளிகள்; அறிஞர்கள். முஸோலினி ஆதிக்கத்திற்கு வருகிற வரை இன்பமாக வாழ்ந்தவர்கள். பிரிட்டிஷாரோடு எந்த விதமான தகாறும் வைத்துக் கொள்ளாதவர்கள். இவர்களைத் திண்டாட்டத்திற்கு உள்ளாகி விட்டார் முஸோலினி. இந்தக் கஷ்டம் இன்னும் எவ்வளவு காலத்திற்கோ தெரியவில்லை.

ஆபிரிக்காவில் நாம் வெகு விரைவாகவும் உறுதியாகவும் வெற்றி பெற்றோம். என்றாலும் கிழக்கரங்கத்தில் ரஷ்யர்கள் மகா வீரத்தோடு போராடுவது பற்றி உலகமே ஆச்சரியப் படுகிறது. சென்ற ஆகஸ்ட்டு மாதம் நான் ஸ்டாலின் வசிக்கும் 'க்ரெம்லின்' அரண்மனையை விட்டுக் கிளம்பும் போது, "எகிப்தில் ரோமலை முடிவாக வென்றவுடனே தங்களுக்குத் தந்திச் செய்தி யனுப்புகிறேன்" என்று ஸ்டாலினிடம் சொன்னேன். உடனே அவர் அங்கிருந்த தேசப் படத்தில் ஒரு அம்பு போல் குறியிட்டு "நாம் எதிர்த்துத் தாக்கும் போது, தங்களுக்குத் தந்தி மூலம் தெரிவிக்கிறோம்" என்று கூறினார். இதன் படியே இருவரும் தந்திகள் பரிமாறிக் கொண்டனர். இப்போது நடைபெறும் போரில் மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது. வெண் கடலிலிருந்து கருங்கடல் வரையிலுள்ள பரந்த தேசத்தின் ஒரு பகுதியில் தான் இந்த வெற்றி கிடைத்தது. என்றாலும், இந்தப் பகுதி முழுதும் ரஷ்யப் படைகள் ஜெர்மன் படைகளை விரட்டிக் கொண்டிருக்கின்றன. போதாதற்கு குளிர் காலம் வருகிறது. ரஷ்யா மீது போர் தொடுக்கக் கிளம்பிய 180 ஜெர்மன் டிவிஷன்களும் இப்போது சில பிரிகேட்கள் என்று சொல்லத் தக்க அளவிற்குக் குறைந்து விட்டன. இவர்களுடன் பலவந்தமாக ஹிட்லரால் போர்க் களத்திற்கு இழுத்து வரப்பட்ட இத்தாலியர்களும், ருமானியர்களும், ஹங்கேரியர்களும் எண்ணிக்கையில் மிகவும் குறைந்து விட்டார்கள். சோவியத் படைகள் தம் முழு பலங் கொண்டு இவர்களைத் தாக்குகின்றன. போதாததற்கு குளிர் காலமும் பிறந்து விட்டது.

வடாப்பிரிக்காவில் நம் படைகளை நாம் கொண்டு போய் இறக்க வேண்டு மென்று திட்ட மிட்ட போதே, உடனே பிரான்சில் சில மாறுதல்கள் நிகழும் என்று எதிர்பார்த்தோம். ஹிட்லர், தான் பிரான்சுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்து, பிரான்சுக்குள் நுழைந்து போய், டுலோன் துறைமுகத்திலுள்ள பிரஞ்சுக் கப்பற் படையைப் பிடித்துக் கொள்ளுவார் என்பது பற்றி எனக்குக் கொஞ்சமும் சந்தேகமே கிடையாது. இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட வேண்டு மென்று தான் நேச தேசத்தார் விரும்பினார்கள். ஏனென்றால், அப்போது தான் விஷி அரசாங்கத்தின் மோச நாடகத்திற்கு ஒரு முடிவு காண முடியும். இந்த முடிவைக் கண்டால் தான், பிரான்சு மீண்டும் ஒன்று பட முடியும். அப்போது தான் மீட்சிக்கு இட முண்டு. இப்போது பிரான்சில் ஜெர்மானியர் வசப்பட்ட நாடுகள் வசப்படாத நாடுகள் என்றும் வேற்றுமையே கிடையாது. எல்லோரும் ஜெர்மன் கொடுங் கோலாச்சிக்கே உட்பட்டிருக்கின்றனர். ஆகவே எல்லோரும் மிகவும் அதிகமாக ஜெர்மானியர்களை வெறுக்கத் தான் செய்வார்கள். வெளி நாடுகளிலுள்ள பிரஞ்சுக்காரர்கள் தம் பொது எதிரி மீது சீறி விழுவார்கள் தான். இவ்வளவும் நிகழ்ந்த பிறகு 'போராடும் பிரான்சின்' உணர்ச்சி தளராது. பிரஞ்சு மக்களை இனி மோசஞ் செய்ய முடியாது.

எதிரிகள் தலை தூக்க ஒட்டாதபடி நசுக்கி விட வேண்டும் என்பது ஹிட்லர் சித்தாந்தம். ஆனால் டுலோனி லிருந்த பிரஞ்சுக் கப்பற் படை வீரத்தோடு தற்கொலை புரிந்துக் கொண்டது. எதிரிகளுக்குப் பயன் பட விரும்ப வில்லை. தோல்வியிலும் தைரியத்தை இழக்கக் கூடியவர்களல்ல பிரிட்டிஷார். அது போலவே வெற்றியிலும், நிதானத்தையும் உறுதியையும் இழக்க மாட்டார்கள். மிகுந்த நம்பிக்கையாலாவது அச்சத்தாலாவது நமது புத்தியைச் சிதற விடலாகாது. கடமையை நிறைவேற்றுவதிலேயே கண்ணும் கருத்துமா யிருக்க வேண்டும்.

தனது இராணுவ பலத்தைக் கொண்டும், இரகசியப் போலீஸ் உதவியைக் கொண்டும் ஐரோப்பாக் கண்டத்தையே ஆட்டிப் படைக்கிறார் ஹிட்லர். என்றாலும் தன் உயிருக்கும் ஆபத்து உண்டு என்பதை அவர் உணரா திருக்கிறார். நமக்கு இப்போது கிடைத்துள்ள வெற்றியை ஒரு தூண்டு கோலாகக் கொண்டு மேலும் வெற்றிகள் பெற நாம் முயல வேண்டும்.

ஆசியப் போர் முடிவடையு முன்பு ஐரோப்பியப் போர் முடிவடையக் கூடு மென்று முன்பே சொன்னேன். அப்படி நேர்ந்தால், ஐரோப்பிய நாடுகளின் நிலைமையைப் பங்கீடு செய்யப் போதுமான அவகாசம் இருக்கின்றது. அன்றியும் கீழ் நாடுகளில் நடக்கக் கூடிய போராட்டத்திற்கு நேச நாடுகளும் உட் பட்டன. எனவே, சகோதர உணர்ச்சி, இந் நாடுகளுக்குள்ளாக ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கும். சென்ற மகா யுத்தத்திற்குப் பிறகு நேச நாடுகளுக்குள் இருந்த சகோதர உணர்ச்சியை விட, இப்போது நெருங்கிய உணர்ச்சி நிலவும். இது பற்றி இப்போது யூகித்துக் கொண்டிருப்பதில் பலனில்லை. ஏனெனில் நாஜிகளும் பாசிஸ்டுகளும் ஒழியும் போது, உலக நிலைமை எப்படி இருக்கு மென்று சொல்லுவதற்கில்லை.

## அலாஸ்காவில் பெரிய பாதை







அலாஸ்காவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே மற்றொரு பாதை அமைக்க வேண்டு மென்னும் யோசனை யொன்று இருந்து வருகிறது. இதை உள் நாட்டு மந்திரி ஆமோதிக்கிறார். இந்தப் பாதை, கடற் கரையிலிருந்து 125 மைல்கள் உள் நாட்டிற்குள் செல்லும். இப்போதுள்ள பெரிய பாதையோடு இதுவும் போய்ச் சேரும்.

## கிளிக்கண்ணி:

(D. K. பட்டம்மாள் பாடும் விதம்.)

1. குண்டுமழை விழ்ந்தாலென்ன
கோபுரங்கள் தாழ்ந்தாலென்ன
அண்டமெல்லாம் சூழ்ந்தாலென்ன-கிளியே-
அச்சமில்லை அச்சமில்லை

2. கேடுபல சூழ்ந்தாலென்ன—கீழ்த்திசையும்
வீழ்ந்தாலென்ன
மேடுபள்ளமில்லாமலே-கிளியே-
நாடுமுண்டோ மேதினியில்

3. பெற்றபிள்ளையோடு தாயும்
பீரங்கிக்கே இரையாயும்
சுற்றமெல்லாம் அற்றபோதும்-கிளியே-
சற்றும் அச்சம் சாரோமடி

4. கோயில்கள் இடிந்தா லென்ன
கோட்டைகள் படிந்தால் என்ன
நோயில்பல சேர்ந்தா லென்ன-கிளியே-
நோவதென்ப தாவ தில்லோம்

5. செல்வங்களும் தேய்ந்தாலென்ன
செங்குருதிபாய்ந்தா லென்ன
பல்வளங்கள் மாய்ந்தா லென்ன-கிளியே-
வெல்வர் இந்தி யாவின்வீரர்

## கல்தூண் வளையுமா?

(3-ம் பக்கம் தொடர்ச்சி.)

விரும்புவோருக்கு அவசியம் வேண்டு மல்லவா? அத்தகைய இரவு போய் இத்தகைய பகல் வருகிறதென்றால், நாமெல்லோரும் சந்தோஷப்பட வேண்டாமா? சில தினங்களுக்கு முன் ஒரு நாள் ஆலய மணிகள் எல்லாம் ஆனந்தமாக ஒலித்தன. நமக்கு ஒருமட்டிலும் ஒரு வெற்றியை அளித்த பகவானுக்கு நன்றி செலுத்துவதிலேயே அந்நாள் முழுவதையும் கழிக்கச் செய்தார் நமது பிரதம மந்திரி சர்ச்சில். இத்தகைய சந்தர்ப்பங்கள் பலவற்றை அடிக்கடி அவர் நமக்களிப்பார் என்றே எதிர்பார்க்கிறோம்.

ஒரு விஷயம் இப்பொழுது தான் நினைவிற்கு வருகிறது. நமது பிரதம மந்திரி சர்ச்சில் இருக்கிறாரே, அவரைப்போன்றவர்கள் இனிப் பிறக்கத்தான் வேண்டும். வணங்கா முடியர் என்றால் அவர் தான். கல்மழையே பொழிந்தாலும், கனல் வர்ஷமே வர்ஷித்தாலும் அவரது மனம் கடுகளவும் கலங்காது. கல்தூண் போல்தான் அம்மனம் எதையும் லக்ஷ்யம் செய்யாது, நல்ல காலம் வரத்தான் செய்யும் என்றிருக்கும். அவரது பேச்சைக் கேட்டு ஆனந்தப் படாதவர்கள் பாவம்! சும்மா, மணிகளையும், ரத்னங்களையும் கோர்த் தெடுத்து உலகோருக்கு அளிப்பது போலிருக்கும் அவரது பிரசங்கங்கள். உள்ளதை உள்ளவாறே கூறிவிடுகிறார். சென்ற வாரம் கூட அவர் ஒரு முறை பேசினார். பிரமாதம் போங்கள் அப்பேச்சு!

'இந்த யுத்தம் நீண்ட காலம் நடக்காதென்றோ, அதிகோரமாக இராதென்றோ நான் சொல்லத் தயாராக இல்லை என்று அப்பட்டமாகச் சொல்லிவிட்டார். ஹிட்லரின் யுத்த முஸ்தீப்பு பல வருஷங்களாக நடந்ததாகும். அதோடு அவரது கையின்கீழ் பல நாடுகள் அடிமையாகக் கிடந்து அவருக்காக வேலை செய்கின்றன; ஏராளமான ஆயுதங்களை அவர் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்; தனது படைகளுக்கு நல்ல பயிற்சி அளித்திருக்கிறார். ஜெர்மனியை அடக்க நேசதேசத்தார் மேல் திசையிலிருந்து செல்ல வேண்டுமானால் கடலைக் கடந்து செல்லவேண்டும் என்பதையெல்லாம் அவர் மறக்கவில்லை. அதனால் தான் அவர் உஷாராகவே பேசியிருக்கிறார் ஆனால் இறுதி வெற்றியில் மட்டும் அவருக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. அதை யாரும் அசைக்கவே முடியாது. இத்தகைய ஒருவரை, பிரிட்டன் இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பத்திலே, தன் தலைவராகக் கொண்டிருப்பது பிரிட்டன் செய்த பாக்யம் தான். சென்ற திங்கட்கிழமை தான் அவருக்கு அறுபத் தெட்டாவது பிறந்த தினம். இவ்வளவு வயசாகியும் அவரது மனமும், உடலும் கட்டுவிடாம லிருப்பது ஆச்சரியமே! தனது நாட்டின் மீதும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மீதும், உள்ள அபிமானமே அவருக்கு இவ்வளவு சக்தியைக் கொடுத்து வருகின்றது இந்த சக்தியை இன்னும் பல வருடகாலம் அவருக்கு நீடித்தளித்து வரவேண்டும் என பகவானைப் பிரார்த்திக்கலாம் நாம்.



# போர் முரசு

## ரஷ்யப் போர் முனை

### டான் நதிப் பகுதிப் போர் முனை

டான் பிரதேசச் சமவெளிகளில் சர்வோகினோவைச் சுற்றிலும், டான் வளைவின் வடமேற்கு மூலையிலும், க்லெட்ஸ்கயாவிற்குக் கீழும், கல்முக் சமவெளிகளிலும் ஸ்டாலின்கிராட் நகருக்குள்ளாகவும் கடும் போர் நடந்து கொண்டிருக்கிறது. சொரப்னோவிச்சைச் சுற்றி 20 மைல்கள் தூரம் சோவியத் படைகள் முன்னேறி யிருக்கின்றன.

டான் நதிக்குக் கிழக்கே ரயில் பாதையுள்ளவரை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்தனர். ஸ்டாலின் கிராடைச் சுற்றி யிருந்த சோவியத் படைகள் ரயில்வே லைன்கள் வரைக் கைப்பற்றிக்கொண்டன. அதாவது ரயில்வே லைனுக்கு ஒரு புறம் ஜெர்மன் படையும் மறுபுறம் சோவியத் படைகளும் இருக்கின்றன. இந்தப் பகுதியில் மேலும் 5 நகரங்களையும் கிராமங்களையும் சோவியத் படைகள் கைப்பற்றின. டான் வளைவின் வடக்கு மூலையிலுள்ள எதிரி படைகளை வளைத்துக் கொள்ளும் பொருட்டு, ஒரு சோவியத் படை சுரோவிகினோ என்னுமிடத்தில் ரயில்வே லைனை வெட்டி விட்டது. மற்றொரு படை டான் நதியின் கிழக் கரை ஓரமாக காகச்சுக்கு அருகிலுள்ள க்ரிவோமுஸ்கின்கயா என்னும் ஊருக்கு அருகில் இருக்கின்றது.

க்லெட்ஸ்கயாவை ரஷ்யர்கள் மீண்டும் கைப்பற்றினர். அங்கிருந்த வீடுகளெல்லாம் நாசமடைந்திருந்தன. அதில் 7 பேர்கள் மட்டுந் தான் இருந்தார்கள். மற்றவர்களை ஜெர்மானியர்கள் தாம் பின்வாங்கும் போது தம்மோடு இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

செஞ் சேனைகள் எதிரிகளை எதிர்த்துத் தாக்க ஆரம்பித்துப் பத்து நாட்களில் பல இடங்களில் வெற்றி பெற்று வருகின்றன. இதன் பலனாக ஸ்டாலின்கிராட், சொரபிமோவிச், கொடெல்னிகேவோ, கால்முக் ஏரிகள் ஆகியவற்றை அடியோடு அழித்துவிடக் கூடும்.

ஜெர்மானியர்கள் போக்குவரவுப் பாதைகள் எல்லாம் ரஷ்யர்கள் கையில் சிக்கிக் கொண்டன.

டான் வளைவில், கலாச்கின், பெரிபால்னி, வெர்க்னி, ஜிராசிமோவ், நிழ்னி, அகடாவ்ஸ்க் ஆகிய ஜனங்களுள்ள ஊர்களை ரஷ்யர்கள் மீண்டும் கைப்பற்றிக் கொண்டார்கள்.

நவம்பர் மாதம் 19-ம் தேதி முதல் 26-ம்தேதிக்குள்ளாக, பல வகை பீரங்கிகளில் 1360-ம், 3851 மிஷின் பீரங்கிகளும், 50,000 துப்பாக்கிகளும், 1320 சேதமடைந்த டாங்கிகளும், 9,000 குதிரைகளும், ஏராளமான யுத்தத் தளவாடங்களும், வெடி மருந்துகளும், உணவுப் பொருள்களும் ரஷ்யர்கள் வசமாயின.

ஜெர்மானியர் ஒன்றுபட ஒட்டாதபடி ரஷ்யப் படைகள் அவற்றை சிதறடிக்கின்றன.

வெலிகி லுகி என்னும் நகரத்தை ஜெர்மானியர்கள் வெகுவாக அரண் செய்திருந்தார்கள். என்றாலும் இந்த அரண்களை சோவியத் படைகள் நாசஞ் செய்து கொண்டு அதில் புகுந்து கொண்டிருக்கின்றன. ர்ழேவ் நகரத்திற்கு மேற்கேயும் ஜெர்மன் அரண்களை சோவியத் படைகள் துளைத்து விட்டன. 7 முதல் 19 மைல்கள் வரை உட்புகுந்து போயிருக்கின்றன. வெலிகி லுகியிலிருந்து நெவலுக்கும், நொவெசோகாய்னிகிக்கும், ர்ழேவி லிருந்து வியாஸ்மாவிற்கும் போகும் ரயில்வே லைனையும் சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன. நம் படைகள் முன்னேறிப் போகும் வழியிலுள்ள 300 கிராமங்களை ரஷ்யர்கள் மீட்டார்கள். எதிரிகளின் 4 காலாட் படைகளையும், ஒரு டாங்கி டிவிஷனையும் நாசஞ் செய்தார்கள்.

ரஷ்யப் படைகள் மாஸ்கோவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. ரஷ்யாவிலேயே ஜெர்மன் படை ஒன்று கூட இல்லாதபடி நிர்மூலப்படுத்த ஸ்டாலின் வகுத்த திட்டத்தில் இதுவும் ஒரு பகுதிதான். இப்போது தம் உயிருக்காக ஜெர்மானியர்கள் அங்கே கடும் போராடுகிறார்கள். ஆகவே, யுத்தத்தின் முடிவைப் பற்றி நாம் இப்போது எதுவும் கூறுவதற்கில்லை. ஸ்மாலென்ஸ்கிலிருந்து மாஸ்கோவிற்குப் போகும் ரோடையும், மற்ற முக்கியமான ரோடுகளையும் சோவியத் படைகள் கைப்பற்றினால், ஸ்மாலென்ஸ்கை தாமதமில்லாமல் கைப்பற்றலாம். அன்றியும் மத்தியப் பகுதியிலுள்ள எல்லா ஜெர்மன் படைகளுக்கும் மகா ஆபத்துண்டாகும். அதற்கு வடக்கிலுள்ள ஜெர்மன் படைகளின் நிலைமையும் மிகவும் பயங்கரமானதாகிவிடும். இந்த நிலைமையில் சாதாரணமாக ஜெர்மானியர்கள் ரஷ்யாவை விட்டு வெளியேற வேண்டியவர்கள் தான். இந்த வெளியேற்றம், நெபோலியன் மாஸ்கோவை விட்டு வெளியேறியதை விட மிகவும் இழிவானதாய் இருக்கும்.

டான் பகுதியிலும், வால்கா பகுதியிலும், கல்முக் சம வெளிகளிலும் ஜெர்மன் படைகளை சோவியத் படைகள் வளைத்துக் கொண்டன. கடும் போர் அங்கே நடைபெறுகிறது. டான் நதிக்கும் வல்கா நதிக்கும் இடையே சிக்கிக் கொண்டிருக்கும் தம் படைகளுக்கு விமானங்கள் வழியாக ஜெர்மன் படைகளைக் கொண்டுவர முயற்சிக்கிறார்கள் ஜெர்மானியர்கள். இந்த முயற்சியைக் கவிழ்த்து விடுகிறார்கள் ரஷ்யர்கள்.

ஜெர்மன் படைகளுக்கு வந்து கொண்டிருந்த சப்ளைகளைக் கைப் பற்ற வேண்டி வழியிலேயே பாலங்களை உடைத் தெறிந்தும் ரோடுகளைப் பழுதாக்கியும் விடுகிறார்கள் ரஷ்யர்கள். இதன் பயனாக, ரஷ்யர்கள் முன்னேறிப் போகும் போது இந்த சப்ளைகளைக் கைப் பற்றிக் கொள்ளுகிறார்கள். இப்படிக் கைப் பற்றப் பட்ட பொருள்கள் ஏராளமாக ரஷ்யப் படைவீடுகளுக்கு வந்து சேருகின்றன.

டான் நதியின் கிழ்கரையிலுள்ள பல இடங்களை ஜெர்மானியர்கள் கைப்பற்றி அரண செய்திருந்தார்கள். இவற்றை மீண்டும் ரஷ்யர்கள் வென்று கைப்பற்றிக் கொள்ளுவார்களானால், ஜெர்மன் படையின் நிலைமை மேலும் மோசமாகி விடும். ஏனென்றால் ஸ்டாலின்கிராட் நகரத்திலிருந்து மேற்கு நோக்கி வரும் சோவியத் படை ஜெர்மன் படைகளை மேற்கு நோக்கி விரட்டிக் கொண்டு வருகிறது. எனவே, இரு புறத்திலும் ரஷ்யப் படைகள் தாக்கினால் ஜெர்மன படைகளின் நிலை மேலும் மோசமாகி விடும்.

ர்ழேவில் ஜெர்மானியர்களின் நிலைமை மிகவும் ஆபத்தா யிருக்கிறது. மேல்புறமிருந்து சோவியத் படைகள் ர்ழேவ அரண்களைத் துளைத்துக் கொண்டு உட்புகுந்தது பாராட்டத் தக்க செயல் தான். ஸ்டாலின்கிராடில் ரஷ்யப் படைகள் துளைத்துக் கொண்டு உட்புகுந்ததை விட, இது மிகவும் மேலானது. ஏனென்றால் 7, 8 மாதங்களாக அரண் செய்யப்பட்டதோர் இடத்தைத் துளைத்துக் கொண்டு உட்புகுவது சாமானய மல்ல.

## ஸ்டாலின்கிராட் போர்முனை

இங்கு நடைபெறும் போராட்டத்தில் நாள்தோறும் சராசரி 30,000 ஜெர்மானியர்கள் சேதமாயினர். இந்நகருக்கு வடமேற்குப் பகுதியில நாள் ஒன்றிற்கு 15 மைல் விகிதம் 5 நாட்களில் 80 மைல்கள் தூரம் சோவியத் படைகள் முன்னேறின. க்லெட்ஸ்

கயாவிற்கும் சடோவபாவிற்கும் இடையேயுள்ள பகுதிகளில் ஜெர்மானியர்கள் சென்ற மூன்று மாதங்களாக ஊன்றியிருந்தார்கள். இப்போது அவர்கள் அழியவேண்டும்; அல்லது சரணடையவேண்டும். ஸ்டாலின்கிராடுக்கு வெளியேயுள்ள ஜெர்மன் படைகள் இப்போது போராடுவது போல ஒரு போதும் போராடியதில்லை.

வட பகுதியில் செஞ்சேனைகள் ஜெர்மன் கம்பெனியொன்றை நாசப்படுத்தினது. டாங்கிகளின் ஆதரவோடு கிளம்பி வந்த ஜெர்மன் கலாட் படையொன்றை நம் படைகள் நாசஞ் செய்துவிட்டன. மற்றொரு பகுதியில் சோவியத் டாங்கிப் படை எதிரி படைகளுக்குள் புகுந்து சென்று சுமார் 700 ஜெர்மானியர்களை நாசஞ் செய்தது.

ஸ்டாலின்கிராடுக்குத் தென்மேற்கே ஜெர்மானியர் தாக்குதலைத் தடுத்து சோவியத் படைகள் எதிர்த்துத் தாக்கின. டாம்சிக்கு வடகிழக்கே ஒரு முக்கியமான இடத்தை சோவியத் படைகள் கைப்பற்றின.

சென்ற எழு மாதங்களில் லெனின்கிராடில் மட்டும் நவம்பர் 27உ வரை 19,240 ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டனர்.

8-ம் நாள் எதிர்த்துத் தாக்கியதில் சுரோவிகினோவிற்குத் தென்மேற்கேயுள்ள க்ராஸ்னோயி, செலோ, ஜெனாலோவ் ஆகிய நகரங்களை சோவியத் படைகள் மீண்டும் கைப்பற்றிக் கொண்டன. அன்றியும் பல கிராமங்களையும் ஏராளமான உணவுப் பொருட்களையும் தளவாடங்களையும் கைப்பற்றினார்கள்.

ஸ்டாலின்கிராடுக்குக் கீழே சோவியத் படைகளூடே நுழைந்து போக ஜெர்மன் படைகள் பெரிதும் முயற்சிக்கின்றன. என்றாலும் அவைகளால் முடியவில்லை. வட பகுதியில் 4 பெரிய கட்டிடங்களை ரஷ்யர்கள் மீண்டும் கைப்பற்றி அங்கிருந்த 250 ஜெர்மானியர்களை கொன்றுவிட்டனர். அங்குள்ள தொழிற்சாலைப் பகுதிகளில் ரஷ்யப் படைகள் முன்னேறி ஜெர்மன் உத்தியோகஸ்தர்களையும் படைகளையும் 700 பேர்களுக்கு அதிகமாகவே நாசம் செய்துவிட்டனர்.

வடமேற்குப் பகுதியில், சோவியத் படைகள் முன்னேறி 1,000 ஜெர்மானியர்களுக்கு அதிகமாகவே கொன்றனர். மூன்று ஜெர்மன் விமானங்களைக் கைப்பற்றினர். மற்றொரு பகுதியில் 66 எதிரி டாங்கிகளையும், 23 விமானங்களையும் நாசஞ் செய்தனர். அன்றியும் 19 ரயில்வே இஞ்சின்களையும் 100 வண்டிகளையும் ஏராளமான தளவாடங்களையும் கைப்பற்றினர்.

சென்ற திங்கட்கிழமை ஸ்டாலின்கிராட் நகரில் நடைபெற்ற போராட்டத்தில், எதிரிகள் கைப்பற்றி பலமாகச் செய்திருந்த அரண்களை யெல்லாம் தகர்த்துக்கொண்டு 4 முதல் 6 மைல்கள் தூரம் ரஷ்யப் படையினர் உட்புகுந்து விட்டனர். அரண் செய்யப்பட்ட பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். இங்கு நடைபெற்ற போரில் நவம்பர் 26உ முதல் 30உக்குள் 20,000 ஜெர்மானியர்கள் இறந்து கிடந்தார்கள்.

டிஜெடீடா என்பது ஒரு முக்கியமான ரயில்வே ஜங்ஷன். இது டியூனிசுக்கும் பெசர்ட்டாவிற்கும் இடையே இருக்கிறது. டியூனிசுக்கும் இதற்கும் 12 மைல்கள் தூரம். இதை நேசதேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. மேற்கொண்டும் கீழ்த்திசையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன.

டியூனிசுக்கும் பெசர்ட்டாவிற்கும் இடையேயுள்ள ரோடிற்கு மேற்கே சில மைல்களுக்கப்பால் கடுமையான போர் நடக்கிறது. இந்த ரோடை நேசதேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டால், இந்த இரண்டு ஊர்களுக்கும் போக்குவரவில்லாமற் போய்விடும்.

டுனிஷியாவின் வடகிழக்குப் பகுதி முழுவதையும் வளைத்துக் கொள்ள வேண்டுமென்பது தான் ஜெர்மன் படைத் தலைவரான ஜெனரல் நேரிங்கின் அசல் திட்டம். பிரிட்டிஷ் முதற்படை கொடுத்த சவுக்கடியினால், இந்த திட்டம் ஈடேறவில்லை. அங்குள்ள ரயில்வேயையும் பிரிட்டிஷார் கைப்பற்றிக் கொண்டதனால், ஜெர்மன் படைகளும் அவைகளுக்கு சப்ளைகளும் போகவர மிகவும் கஷ்டமாயிருக்கிறது. எனவே நேசதேசப் படைகள் முன்னேறிவராதபடி அங்கங்கே யுள்ள பாலங்களையும் ரோடுக்களையும் பழுதாக்கி விடுகிறார்கள். என்றாலும் விமானங்களின் உதவியால் நேசதேசப் படைகளின் போக்கு வரவு சுலபமாகவிருக்கிறது.

மழையும் காற்றும் அதிகமாயிருந்த போதிலும், நேசநாடுகளின் விமானத் தாக்குதல்கள் மிகவும் அதிகப்பட்டிருக்கின்றன. நேச நாடுகளின் விமான பலம் இவ்வளவு என்று உணர இப்போது தான் பெசர்ட்டா தலைப்பட்டிருக்கிறது.

சென்ற சில நாட்களில், பெசர்ட்டாவிலும் ஏபாக்ஸ் பகுதியிலும் 230 எதிரி விமானங்கள் நாசமாயின. போன் விமான நிலையப் பகுதியில் அநேக எதிரி விமானிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஜெர்மன் ஆபிரிக்கப் படைகளுக்கு அனுப்பப்பட்ட சப்ளைகளும் தளவாடங்களும் அவற்றிற்குப் போய்ச் சேரவொட்டாதபடி சென்ற ஞாயிற்றுக்கிழமை திரிபோலியை மிகக் கடுமையாக நேசநாட்டு விமானப் படைகள் இடைவிடாது 12 மணி நேரம் தாக்கின.

பிரிட்டிஷ் முதற்படையும் அமெரிக்கப் படைகளும், ஜெர்மானியர்கள் கெட்டிக்காரத்தனமாக அமைத்துள்ள சுரங்க வெடிக்கெல்லாம் தப்பி, ஆகாயத்திலிருந்து குண்டுகளை வீசும் எதிரி விமானங்களுக்கு இரையாகாமல், டியூனிஸை அடுத்துள்ள முக்கியமான தோர் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

> ஹிட்லர் தன் தளகர்த்தர்களை பெர்ட்டஸ்ரேடன் என்னுமிடத்தில் சந்தித்ததாகத் தெரிகிறது. ஆபிரிக்கப் போரை எப்படி நடத்துவது என்பது பற்றி அப்போது ஆலோசித்திருக்கலாம். அதே சமயத்தில் ரோமாபுரியிலும் ஒரு மகாநாடு நடந்தது. அதற்கு ஜெர்மன் தளகர்த்தரான ஜெனரல் நேரிங்கும் ஜெனரல் மில்க்கும் வந்திருந்தனர். டுனிஷியாவிலிருந்தும் திரிபோலியிலிருந்தும் அச்சு நாட்டுப் படைகள் 6 நாட்களில் காலி செய்துகொண்டு திரும்பிவிடுமென்று விஷயமுணர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

டொடிகனீஸ் தீவுகளில் ஒன்றான லீராஸ் தீவில் போர்ட்டலாகோ என்றொரு விரிகுடா இருக்கிறது. இங்கேயுள்ள கப்பல்கள் பழுது பார்க்கும் தளங்களை அமெரிக்க ஒன்பதாவது விமானக் கோட்டைப் படை தாக்கியது. துறையிலிருந்த இரண்டு வியாபாரக் கப்பல்கள் நாசமாயின. இவை பற்றி எரியும் போது கிளம்பிய தழல் 25 மைல் தூரத்திற்குத் தெரிந்தது.

திரிபோலியானுவிலுள்ள அச்சு நாட்டுப் படைகளுக்கு இத்தாலியிலிருந்து உணவுப் பொருள்களும் தளவாடங்களும் கொண்டு வந்து கொண்டிருந்த 9 கப்பல்களையும் இத்தாலி நாசகாரியொன்றையும் சிசிலிகரைக் கடுத்து, பிரிட்டிஷ் நீர்மூழ்கிகள் நாசஞ் செய்துவிட்டன.

சென்ற வருஷம் நவம்பர் மாதமிருந்த நிலைமைக்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் மிகுந்த பொருத்தமுண்டு. சென்ற 1941-ம் வருஷம் நவம்பர் மாதம் 22-ம் தேதி லெனின்கிராடை அடுத்து ஜெர்மானியர்கள் வந்து விட்டார்கள். டிக்வினைக் கைப்பற்றினார்கள். மாஸ்கோவை மூன்று புறங்களிலும் வளைத்துக் கொண்டார்கள். மத்தியப் பகுதியில், எலெட்சுக்கு அப்பாலும் போய் உக்ரேன், கிரிமியா ஆகிய மாகாணங்களுக்குள் நுழைந்தார்கள். ரோஸ்டாவ் நகரத்தையும் பிடித்தார்கள். ஆனால் இந்த வருஷம் ஸ்டாலின்கிராடுக்கு அருகில் அரண் செய்து கொண்டிருக்கிறார்கள். டான் நதியைக் கடந்து வட காக்கஸிலும், மத்திய காக்கஸிலும் புகுந்தார்கள். இதன் பயனாக, நவரோஸிஸ்க், தாப்ஸி, க்ரோஸ்னி ஆகிய நகரங்களுக்கு ஆபத்துண்டு. சென்ற வருஷம் ரஷ்யர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுவதிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு உதவியாக குளிர் காலமும் வந்தது. ஜெனரல் ஆகின்லெக், பெங்காசியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார். இதனால், ஜெர்மன் விமானப் படையின் பெரும் பகுதியை அங்கிருந்து ஆபிரிக்கப் பாலைவனத்திற்கு மாற்றிக் கொண்டார்கள். இந்த வருஷமும் குளிர் காலம் வந்து விட்டது. எகிப்திலும், பிரஞ்சு வடாப்பிரிக்காவிலும் நடைபெறும் யுத்தம் காரணமாக ஜெர்மன் விமானப் படை பல போர் அரங்கங்களிலும் சிதறிப் போய் இருக்கின்றன. இதன் பயனாக ரஷ்யர்கள் பல பகுதிகளிலும் எதிரிகளைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.



ஹிட்லர் சம்பந்தப் பட்ட வரை, நிலைமை மோசமாகி விட்டது. சென்ற வருஷம், குளிர் காலத்தில் தன் படையில் பெரும் பகுதியினரை ஜெர்மனிக்கு அனுப்பி, தளவாட உற்பத்தி செய்யும்படி ஏற்பாடுகள் செய்தார். நேச தேசத்தார் மேல் திசையில் தம்மைத் தாக்குவார்கள் என்ற அச்சம் அப்போது இடையாது. கிழக்குப் போர் முனையில் போராட்டம் தடைப் படாதிருக்க வேண்டி, நேச தேசத்தார் மீது பாயும்படி, சென்ற டிசம்பர் மாதம் 7-ம் தேதி ஜப்பானியர்களைத் தூண்டினர். இந்த வருஷமோ, இப்படிப் பட்ட சௌகரியங்களுக்கு இடமே கிடையாது. இதற்குக் காரணம், வடாப்பிரிக்காவிலும் ரஷ்யாவிலும், தென் பஸிபிக் போர் முனையிலும் நேச நாட்டினருக்குக் கிடைத்த வெற்றி தான். ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் அச்சு நாடுகள் தம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கின்றன.

1941-ம் வருஷம் குளிர் காலத்தில் ஹிட்லர் தன்னை பலப் படுத்திக் கொண்டார். இந்த வருஷம் குளிர் காலத்தில் அவருடைய பலமெல்லாம் சிதறிப் போயின. ஏராளமான பொருள்களும் படைகளும் சேதமடையுங் கூட ஜெர்மானியர்கள் முடிவான வெற்றி பெறக் கூடவில்லை. பாதுகாப்பு முன்போல் பலமானதாயில்லை. ஜெர்மன் 'யு' படகுகள் அத்லாண்டிக் சமுத்திரத்திலும், வட சமுத்திரத்திலும் மத்தியதரைக் கடலிலும் காவல் புரிந்து வருகின்றன. ஐரோப்பாவில் தான் கைப்பற்றியுள்ள நாடுகளைக் காப்பற்றிக் கொள்ள வேண்டி, கிழக்கிலும், மேற்கிலும், தெற்கிலும் தகுந்தபடி அரண் செய்து கொள்ள வேண்டும். குறிப்பாக வடாப்பிரிக்காவில், நேச நாடுகள் புதிதாகப் பிடித்த இடத்திலிருந்து தன்னைத் தாக்காதபடி அரண் செய்து கொள்ள வேண்டும்.

இது தன் அழிவிற்கு ஆரம்ப காலம் என்று ஹிட்லர் உணர்ந்திருக்க வேண்டும்.

## ஆப்பிரிக்கப் போர் முனை

திரிபோலியை நம் பிரிட்டிஷ் விமானப் படை மீண்டும் தாக்கியது. சிசிலிக்கு வடக்கே, தெற்கு நோக்கிப் போய்கொண்டிருந்த ஒரு எதிரி வியாபாரக் கப்பலை பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த விமான மொன்று நாசப்படுத்தியது. சிசிலியைச் சேர்ந்த கேலா விமான நிலையத்தின் மீது பிரிட்டிஷ் விமானப் படை, வெடிகுண்டுகள் வீசி பெரிய கட்டிடங்களையும் பாதுகாப்பிடங்களையும் தாக்கின. நிற்க, திரிபோலிதானியாவைச் சேர்ந்த மிசுரட்டாவில் ஒரு வியாபாரக் கப்பலையும் நாசப்படுத்தின.

ஜெனரல் மான்ட்காமரி மிகவும் எச்சரிக்கையாகவே கொஞ்சங் கொஞ்சமாகத் தன் 8-ம் படையை முன்னேற்றிக் கொண்டு போகிறார். எதிரியின் பலத்தையும் தந்திரத்தையும் நன்கு உணர்ந்திருக்கிறார். அதனால் தான் இவ்வளவு எச்சரிக்கை.

பெசர்ட்டா கப்பல் தளங்களின் மேல் இராக் காலத்தில் நேச தேச விமானப் படையைச் சேர்ந்த பாம்பர் விமானங்கள் வெடி குண்டுகளை எறிந்தன.

மத்திய தரைக் கடலில் ஒரு பகுதி இருக்கிறது. இதற்கு எல்லைகளாக சார்டினியா, சிசிலி, டுனிஷியா ஆகியவை, அமைந்திருக்கின்றன. இது மிகவும் முக்கியமானது. ஏனென்றால், தென் ஐரோப்பாவைக் காப்பதற்கு ஒரு கொத்தளமாக ஜெர்மானியர்களுக்கு உதவும். பிரான்ஸையும் இத்தாலியையும் தாக்குவதற்கு ஏற்ற தளமாக நேச நாடுகளுக்கு அது உதவும்.

வட மேற்கு ஆபிரிக்காவிலிருந்து கீழ் நாடுகளுக்கும் ரஷ்யாவிற்கும் சப்ளைகள் போக ஒட்டாதபடி தடுக்க வேண்டுமென்பது ஜெர்மனியர் விருப்பம். இதற்கு மத்தியதரைக் கடலின் மத்திய பாகத்திலே சில விமான நிலையங்களைத் தம் கைவசப் படுத்த வேண்டுமென்று ஜெர்மானியர்கள் விரும்புகிறார்கள். நேச நாட்டுப் படைகள் டுனிஷியாவிலும் அல்ஜீரியாவிலும் நுழைய விடாதபடி தடுக்க வேண்டுமென்பது தான் ஜெர்மானியர்கள் எண்ணம். எனவே டியூனிசுக்கும் பெசர்ட்டாவிற்கும் தென்மேற்கே பாவியிருக்கிறார்கள். என்றாலும் நேச நாட்டுப் படைகள் டுனிஷியாவிற்குள் புகுந்து விட்டன. பெசர்ட்டாவிற்கு மேற்கே சில மைல்களுக்கு அப்பால் எதிரிப் படைகள் நம் படைகளை எதிர்த்தன. ஆனால் பிரிட்டிஷ் விமான பாரசூட் படைகள் வந்திறங்கி எதிரிகளை வென்றன.

திடீரென்று மத்தியதரைக் கடல் பகுதியில் நேச நாடுகள் புகுந்து வெற்றி கொண்டது பற்றி பி.பி.சி. பிரசார நிபுணர் டபிள்யு. எ. சிங்க்லேர் செய்த ரேடியோ பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது:—

> இத்தாலியர்களுக்குள்ளாகவும் ஜெர்மானியர்களுக்குள்ளாகவும் குழப்பம் மிகுந்து வருகிறது. இவர்கள் பிரசாரப் போக்கும் தனித் தனியானது. எகிப்திலும் ருஷ்யாவிலும் போராட்டம் ஒரே மாதிரியாக நடக்கிறது என்பது ஜெர்மானியர்கள் பிரசாரம். ஆனால் இத்தாலியர்களோ இந்த யுத்தத்திலேயே இது தான் மிகவும் முக்கியமான போராட்டக் கட்டம் என்று கூறுகிறார்கள்.

ரோம் ரேடியோவில் மாரியோ அபல்லோ என்னும் இத்தாலியர் கூறியது இங்கே குறிப்பிடத் தக்கது:—

> இந்த யுத்தத்தில் இத்தாலி மீதே பிரிட்டன் தன் முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டு வந்திருக்கிறது. இது நமக்கு ஒரு பெரும் பாரம் தான். என்றாலும், தற்காலத்தில் மகத்தான பலமுள்ள ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் தாக்குதல்களைச் சமாளித்து வரும் பாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். ஆப்பிரிக்கப் போராட்டத்திற்குத் தலைவராக ஒரு இத்தாலிய தளகர்த்தர் இருக்கும் வரை, அச்சு நாடுகளுக்கு வெற்றி கிடைத்து வந்தது. கொஞ்ச காலமாக ஜெனரல் ரோமல் தலைமை வகிக்கிறதாகச் சொல்லுகிறார்கள். ஜெர்மனியர்களைக் கண்டால் இத்தாலியர்கள் பயப்படுகிறார்கள்; எனவே, வெறுக்கிறார்கள். ஜெர்மானியர்கள் இத்தாலியர்களை இழிவாகக் கருதுகிறார்கள்; என்றாலும் இவ்விரு இனத்தவர்களும் ஒன்று சேர்ந்து வாழ வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.
>
> இத்தாலியர்களின் ஒழுக்கம் சற்று சிதைந்திருப்பதாகத் தான் தெரிகிறது. உறுதியாக நின்று போராடும்படி தம் படைகளை வேண்டிக் கொள்ளும் இத்தாலியர்கள், தம் படையினர் சிங்கம் போல் அஞ்சாது போராடுகிறவர்கள் என்று பிரமாதமாகப் புகழ்ந்து கொண்டு பிரசாரம் செய்கிறார்கள். டன்கர்க்கை ஜெர்மானியர்கள் கைப் பற்றிய போது பிரிட்டிஷ் படைகள் எவ்வளவு மன உறுதியோடு நடந்து கொண்டனவோ, அவ்வளவு மன உறுதியோடு இத்தாலியப் படையினரும் இப்போது நடந்துகொள்ள வேண்டுமாம்.

ஜெர்மனியில் அதிருப்தி மிகுந்திருக்கிறதென்று ஜெர்மன் அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிறது. இதைவிட இன்னும் அதிருப்தி ஏற்பட்டாலும், அதையும் சகித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று ஜெர்மன் அரசாங்கம் முடிவு கட்டியிருக்கிறது. ஆனால், இதன் பயனாக, எவ்வித கிளர்ச்சிக்கு மட்டும் இடங் கொடுக்காது.

"டாஸ் ரீச்" என்னும் பத்திரிகையில் கோபல்ஸ் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார்:—

ஜெர்மன் மக்களின் உணர்ச்சி தற்காலிகமானது. பிறகு மாறிவிடும். இவை பற்றி கவலையில்லை. ஆனால் அவர்களின் போக்கைத் தான் நாம் கவனிக்க வேண்டும்.

ஜன நாயக முறைப்படி ஜனங்களுக்குள் அதிருப்தியுண்டானால் அரசாங்கத்தை பலவீனப் படுத்தும்.

# நான்கு தந்திகள்

இவ்வளவு பெரிய உலகிலே தினம் விடிந்தால் ஒரு இடத்தி லிருந்து மற்றொரு இடத்திற்கு எத்தனையோ ஆயிரக் கணக்கான தந்திகள் பறந்து கொண்டிருக்கும். இவற்றிலே நாம் குறிப்பிடும் நான்கு தந்திகள் வெகு முக்கியமானவை. அவை எவை என்று கேட்டால், நீங்கள் சட்டென பதில் கூற முடியாது திகைக்கத் தான் செய்வீர்கள். நாம் சொல்லுகிறோம் கேளுங்கள் :

'நான் சொன்னேனே அப்பொழுது ; அது இப்பொழுது வெற்றிகரமாக நடந்தேறி விட்டது பார்த்தீர்களா ?' என்பது ஒரு தந்தியி லிருந்த சமாச்சாரம்.

'நான் தெரிவிப்பதாக முன்பு உங்களிடம் சொல்லி யிருந்தேனே, அந்த சம்பவம் வெகு ஜோராக நடந்து விட்டது " என்பது இரண்டாவது தந்தியிலுள்ள வாசகம்.

'சபாஷ் ! மிஸ்டர் ஸ்டாலின் !' என்பது மூன்றாவது தந்திச் செய்தி.

'பேஷ் ! மை டியர் சர்ச்சில் !' என்பது கடைசி தந்தியில் உள்ள வார்த்தைகள்.

இப்பொழுது தெரிகிறதா யார் யாரிடமிருந்து, யார் யாருக்கு இந்த நான்கு தந்திகளும் போயிருக்கின்றன என்று. இத் தந்திகளைப் பற்றித் தான் சர்ச்சில் சென்ற வாரம் ரேடியோவில் பேசிய பொழுது குறிப்பிட்டார்.

மூன்று மாதங்களுக்கு முன் அவர் ருஷ்யா போய் வந்தாரல்லவா ? அப்பொழுது ஸ்டாலினிடம் சொல்லி வந்தாராம், 'எகிப்தில் உள்ள ராமலைக் காலை வாரி விட்டு, அத் தேசத்திற்கு வெளியே விரட்டி அடித்ததும் உங்களுக்கு ஒரு தந்தி அடிக்கிறேன்' என்று.

'ஸ்டாலின்கிராடு நகரை ஜெர்மானியர் வசம் சிக்காமலே வைத்திருந்து சமாளித்துக் கொண்டு, திடீரென நாஜிகளை விரட்டி ஓட்டி விட்டு நானும் உங்களுக்குத் தந்தி கொடுக்கிறேன்' என்றாராம் ஸ்டாலின்.

தான் தான் முதலில் தந்தி அனுப்ப வேண்டும் என்ற ஆவலோடு சர்ச்சிலும், ஸ்டாலினும் போட்டியிட்டுக் கொண்டு வேலை செய்திருக்கிறுப் போலிருக்கிறது. அதன் பயனைத் தான் எல்லாம் ஏக காலத்தில் நடந்திருக்கிற தெனத் தோன்றுகிறது. எகிப்திலே பாய்ச்சல், அமெரிக்கப் படைகளின் வரவு, ருஷ்யாவின் பனிகாலத் தாக்குதல் இத்தனையும் நாஜிகளைத் திணற அடித்துக் கொண்டிருக்கின்றன.

வட ஆபிரிகாவிலே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் பிரிட்டிஷ் முதலாவது சேனையைச் சேர்ந்தவர்களும், அமெரிக்கப் படை அதிகாரிகளும், கிழக்கிலிருந்து மேற்கே நாஜிகளை விரட்டி வரும் எட்டாவது சேனையிலிருப்போரும் ட்யூனிஷியாவில் சந்தித்துப் பேசியாகி விட்டது. ட்யூனிஷியாவிலே கடும் போர் நடக்கிறது. அப் பிரதேசத்தின் தலை நகரமான ட்யூனிஸிற்கு வெகு அருகிலே நேச நேசப் படைகள் நெருங்கி விட்டன. அச்சு நாட்டாரும் அதி வேகமாகப் புதுப் படைகளைக் கொண்டு இறக்கி வருகிறார்கள். அவர்களது நீர் மூழ்கிகள் மத்தியதரைக் கடலில் அதிகமாக நடமாடுகின்றனவாம். ஆனால் பிரிட்டிஷ் நீர் மூழ்கிகளும் சும்மா இல்லை. அமெரிக்க வெடி விமானங்கள் மேலும் மேலும் மேற்கு ஆபிரிக்கக் கரையில் வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றன. இத்தாலிக்குத் தலை வலி அதிகமாகிக் கொண்டே வருகிறது. நாஜிகளை ஆபிரிகாவை விட்டே துரத்த வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்து வருகிறார்கள்.

ருஷ்யாவிலே, ஸ்டாலின்கிராடை முற்றுகை யிட்டுக் கொண்டிருந்த நாஜிகளை விரட்டி யடித்துக் கொண்டிருக்கிறார்கள் வீர ருஷ்யர்கள். அதோடு நின்றதாகவா ? இல்லை, ஒரு வாரத்தில் ஒரு லக்ஷம் நாஜிகள் உயிரிழந் திருக்கிறார்கள். பல லக்ஷக் கணக்கானவர்கள் ருஷ்யர்களின் இடுக்கி தாக்குதலில் சிக்கி, பிரமித்து நிற்கிறார்கள். மாஸ்கோவிற்கு வட மேற்கேயும், காகஸஸிலும் ருஷ்யர்கள் முன்னேறி வருகிறார்களாம். எங்கும் ஹிட்லருக்குத் தோல்வி தான்.

அவரோடு கை கோர்த்துக் கொண்ட ஜப்பானின் நிலைமையும் பார்த்துப் பொறாமைப் படும் படியாக இல்லை. நியூ கினியாவிலே நேச தேசத்தினரே அதிக வெற்றி கண்டு வருகிறார்கள். இந்து மகா சமுத்திரத்திலே ஒரு சாதாரண இந்திய கப்பல் ஒரு பெரிய ஜப்பானிய யுத்தக் கப்பலை மூழ் கடித்து வெற்றிக் கொடியோடு இந்தியா திரும்பி யிருக்கிறது. பர்மாவிலும், இந்தோ சீனாவிலும் உள்ள ஜப்பானிய விமானக் கூடங்களையும், தொழிற் சாலைகளையும் அமெரிக்க விமானங்கள் அடித்து நொறுக்கி வருகின்றன.

'எங்கள் வேள்விக் கூட மீதில்
ஏறுதே தீ ! தீ இந் நேரம் !
பங்க முற்றே பேய்களோட
பாயுதே ! தீ தீ இந் நேரம் !

என்று ஒரு கவி பாடி வைத்திருக்கிறார். அது இன்றைய நிலைமைக்கு வெகுவாகப் பொருந்துகிறது. நேச தேசத்தினரின் வேள்விக் கூடமெல்லாம் அவர்களது ஆயுத உற்பத்தி சாலைகள் தான். அங்கு மூட்டப் பட்ட தீ அணையாது ஓங்கி வளர்ந்து கொண்டே யிருக்கிறது. தினம் விடிந்தால் எண்ணற்ற விமானங்களும், டாங்கிகளும், குண்டுகளும், பீரங்கிகளும் அங்கிருந்து தயாராகி வருகின்றன. அத்தனையும் பேய் போல் கூத்தாடும் அச்சு நாட்டினரை விரட்டி ஓட்டத் தானே ?

---

(முன் பக்கம் தொடர்ச்சி.)

அப்படியே, ஜெர்மன் அரசாங்கமும் பலவீனப் பட்டிருக்கிற தென்றும் அதனால் நாம் எளிதில் வென்று விடலா மென்றும் நினைத்து விடக்கூடாது. பணத்தையே முக்கியமாகக் கொண்ட அரசாங்கத்தில் பொது ஜனங்களின் அதிருப்தியினால் கொஞ்ச அளவிற்குத் தான் அசௌகரியங்கள் உண்டாகும். பொது ஜனங்களின் உணர்ச்சி, அச்சு அரசாங்கங்கள் அடையும் படு தோல்வியினால் மிகுந்த அதிருப்தி கொண்டால், அவர்களுடைய போக்கைக் கூட மாற்றி விடும். 1918-ம் ஆண்டு கூட இப்படித் தான் நடந்தது.

டூலோனி லிருந்த பிரஞ்சுக் கப்பல் படையைக் கைப்பற்றிக் கொள்ளும் பொருட்டு ஜெர்மன் படைகள் வந்த போது, எதிரிகள் கையில் சிக்கிக் கொள்ளுவதை விட மடிவதே மேல் என்று அந்தக் கப்பற் படை தானாகவே மூழ்கி விட்டது. இத்தப் படையைச் சேர்ந்த மர்சோயின், கசபியங்கா என்னும் இரண்டு நீர் மூழ்கிகள் ஆல்ஜியர் கரை வந்து சேர்ந்து விட்டன.

## கீழ்க் கோடிப் போர் முனை

சென்ற சனிக் கிழமை குடல்கனார் தீவில் இரண்டு ஜப்பானியக் கப்பல்களில் யுத்தத் தளவாடங்களை ஏற்றிக் கொண்டு பாது காப்புக்களுடன் வந்து கொண்டிருந்தனர். இவற்றை நேச நாட்டு விமானங்கள் குண்டுகளால் தாக்கி நாசஞ் செய்தன. இவற்றை நாசஞ் செய்த விமானிகள் இல்லினாய்சைச் சேர்ந்த மார்ஷல் நெல்சனும், ஒக்லஹோமோவைச் சேர்ந்த காப்டன் ஜேன்டல் டானியல்சும் தான்.

புனாவில் தம் படைகளைக் கொண்டு வந்து இறக்க ஜப்பானியர்கள் பெரும் முயற்சி செய்கிறார்கள். ஜப்பானியப் படைகள் நாசகாரிகள் நீர் மூழ்கிகள் முதலியவற்றுடன் நியூகினியா கரையோரங்களில் வெகுவாக நடமாடிக் கொண்டிருக்கின்றன. ஆனால் நேச நாட்டு விமானிகள் இவர்கள் எண்ணத்தில் மண்ணைப் போடுகின்றனர்.

கரையை யடுத்து ஜப்பானிய நீர் மூழ்கிகள் இருப்பதி லிருந்து ஒரு உண்மை தெளிவாகிறது. தரையிலுள்ள ஜப்பானியர்களுக்கு சப்ளைகள் இல்லை ; நீர் மூழ்கிகள் அவற்றைக் கொண்டு வந்து சேர்ப்பிக்கின்றன.

ஜப்பானியப் படைகளைத் துளைத்துக் கொண்டு நேச நாட்டுப் படைகள் கோனா கடற்கரைக்கு வந்து விட்டன. புனா கோனா பகுதியில் மிகக் கடுமையாகப் போராட்டம் நடக்கிறது. 7 ஜப்பானிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

ஜப்பானியர்கள் கண் முன்பாகவே மொத்தத்தில் 70,000 டன் ஏற்றிக் கொண்டு போகக் கூடிய 8 ஜப்பான் கப்பல்களை, அமெரிக்க நீர் மூழ்கிகள் நாசஞ் செய்து விட்டன.



# இந்திய கப்பற் படையின் மகத்தான வெற்றி

## ஜப்பான் போர்க் கப்பல் மூழ்கியது

எதிரிக் கப்பல்கள் போகும் பாதைகளில் சுரங்கங்களைக் கடலில் மிதக்க விடுவது வழக்கம். இந்தச் சுரங்கங்களில் கப்பல்கள் மோதினால் நாசமாகி விடும். ஆகவே பெரிய கப்பல்களுக்கு முன்னே சுரங்க வாரிக் கப்பல்களை அனுப்புவது வழக்கம். இவை, மிதக்கும் சுரங்கங்களை ஒதுக்கி விட்டு, கப்பல்களுக்குப் பாதையைச் செப்ப னிடும்.

சென்ற மாதம் ஜாவா தீவிற்குத் தென் மேற்கே 1,000 மைல்களுக்கு அப்பால் ஒரு எண்ணெய்க் கப்பல் போய்க் கொண்டிருந்தது. அதன் எடை 6,341 டன்கள். பெயர் 'ஒண்டினா'. இது ஒரு டச்சுக் கப்பல். இதற்குத் துணையாக இந்திய கப்பற் படையைச் சேர்ந்த 'வங்காளம்' என்னும் நாசகாரியும் போனது. அப்போது அங்கே 2 ஜப்பான் கப்பல்கள் தென் பட்டன. இவை விமானந் தாங்கிகள். ஒவ்வொன்றிலும் இரண்டு விமானங்களும் $5\frac{1}{2}$ அங்குல பீரங்கிகள் 6-ம் இருந்தன. ஒன்றின் பெயர் 'கிகோகு மாரு' (10,000 டன்கள்) ; மற்றொன்று 'குனிகவா மாரு' (6,863 டன்கள்).

இவற்றை கண்ட வுடனே, தான் இவற்றோடு போராடிக் கொண்டிருக்கும் போதே தப்பிக் கொண்டு போய் விடும்படி 'வங்காளம்' (சுரங்கவாரி) 'ஒண்டினா'விற்கு அறிவித்தது. ஆனால் 'ஒண்டினா' ஒத்துக் கொள்ள வில்லை. இதற் கிடையில் 'கிகோகு மாரு'வை 'வங்காளம்' இடை விடாது தாக்கியது. 'கிகோகு மாரு'வின் பீரங்கிகளும் முழங்கின. ஒன்றும் 'கிகோகு மாரு' மீது கடைசியாக ஒரு வெடி வெடித்தது. அப்போது, அது பற்றி எரிந்து அடியோடு முழுகியது. 'ஒண்டினா'வின் சில பாகங்கள் சேதமாயின. இதற் கிடையில், 'குனிகவா மாரு' கடுமையாகப் போர் கொடுத்தது, 'வங்காள'த்திற்கும் சில காயங்கள் பட்டன. 'ஒண்டினா' கப்பல் தலைவரும் முதல் இஞ்சினீரும் 3 சீனர்களும் மடிந்தனர். அப்போது அதிலிருந்த எல்லாத் தளவாடங்களும் தீர்ந்து விட்டன. அந்தக் கப்பலை எதிரிக் கப்பல் விட்டு விட்டது. பிறகு 'கிகோகு மாரு' கப்பலிலிருந்தவர்களைத் தேடி, யாரும் அகப்படாததால் அது போய் விட்டது.

பிறகு 'ஒண்டினா'வின் 2-வது தலைவரும், 3-வது இஞ்சினீரும் மற்றும் சிலரும் அக் கப்பலை நடத்திக் கொண்டு போனார்கள்.

'வங்காளம்', 'ஒண்டினா' இவ்விரண்டிலும் 4 அங்குல பீரங்கிகள் ஒவ்வொன்று தானிருந்தன.

சுரங்க வாரியின் இந்த மகத்தான வெற்றி நேச நாடுகளுக்கே, குறிப்பாக இந்தியாவிற்கு மிகவும் பெருமை யளிக்கிறது. இப்படிப்பட்ட வெற்றி யாருக்கும் இந்த யுத்தத்தில் ஏற்பட வில்லை என்று சொல்லலாம். ஒரு சிறு பீரங்கி யுடைய சிறிய நாசகாரிக்குத் தாங்காமல் மூழ்கிப் போனது, 6 பெரிய பீரங்கிகளும் 2 விமானங்களு முடைய பெரிய ஜப்பானியப் போர்க் கப்பல் ! இவர்கள் தான் கீழ் நாடுகளின் பாது காவலர்களாம் ! இந்த வெற்றியைப் பாராட்டி, படைத் தலைவர் அந்தக் கப்பல்களின் தலைவர்களுக்குத் தந்தி யனுப்பி யிருக்கிறார்.


# உங்களுக்கு ஜப்பான் மொழி தெரியுமா ?

பலருக்குத் தெரியும்

பொய் வதந்திகளை இவர்கள் பரப்புகிறார்கள்

இதனால்,

**கலவரத்தையும் பெருந்துன்பத்தையும் உண்டாக்குகிறார்கள்**

இந்தப்

பொய் வதந்திகள் ஜப்பானி லிருந்து தான் கிளம்புகின்றன.

இவற்றை

**இலட்சியம் செய்யாதீர்கள் !**

பிறருக்கும்

சொல்லாதீர்கள் !

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள் !**

ஜப்பானியரை எதிர்க்க தேசியப் போர் முனையை அமையுங்கள் !

## வள்ளியைக் கொன்றது யார் ?

வள்ளி ஒரு சிறுமி. வயது எட்டிருக்கலாம். 'பிறந்த ஒரு வருஷத்திற்கெல்லாம் தாயைச் சாப்பிட்டு விட்டாள்' என்று இவளை ஏசுவோரும் உண்டு. இந்த மொழிகள், அவளுடைய காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போலிருக்கும். என்றாலும் வள்ளியின் தந்தை மட்டும் தன் மகளைத் தன் கண்ணே போல் காத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான். அவன் தன் மனைவியினிடம் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தவன். அவள் இறந்து போகவே, ஆறுமுகம் உயிரை விட்டு விடுவான் என்றே எல்லோரும் பொதுவாக நினைத்தார்கள். ஆனால், ஆறுமுகம் முட்டாளல்ல. தன் பொறுப்பை நன்கு உணர்ந்தவன். தன் அருமை மகள் வள்ளியே தன் உலகம் என்று கூறுவான்.

வள்ளியின் புத்தி கூர்மை அவன் அன்பை மேலும் அதிகப் படுத்தியது. அக்கிராம வாசிகள் அனைவரிடத்திலும், அவளும் அன்பாகவே நடந்து கொண்டாள். வள்ளியின் காலில் பட்டதைத் தம் கண்ணில் பட்டதாக நினைத்து அவளை அனைவரும் பராமரித்து வந்தனர்.

ஒரு நாள் காலை ஆறுமுகம் வழக்கம் போல் வீட்டை விட்டு வெளிப்பட வில்லை. அவனுடைய தோழனான வடிவேல் ஆறுமுகம் வீட்டிற்குப் போனான். ஒரு ஜமுக்காளத்தின் மேல் உட்கார்ந்திருந்த ஆறுமுகத்தின் மடியில், வள்ளி தலையை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். என்றாலும், ஆறுமுகத்தின் முகத்தில் கவலைக் குறி தாண்டவமாடியது. வள்ளி அடிக்கடி பெரு மூச்சு விட்டாள். ஏதேதோ பினத்தினாள். காரணத்தை ஆறுமுகம் அறிவிக்கு முன்பே வடிவேலு உணர்ந்து கொண்டான்.

வடிவேலு.—நம்ம வைத்தியரைக் கூட்டிக் கொண்டு வரட்டுமா ?

ஆறுமுகம்.—வந்து போய் விட்டார். இதைக் குணப்படுத்த, தன்னால் முடியாதென்று சொல்லி விட்டார்.

வடிவேலு.—யாரையாவது மதுரைக்கு அனுப்பி டாக்டரை அழைத்து வரச் சொல்லட்டுமா ?

ஆறுமுகம்.—நான் முருகனை முந்தியே அனுப்பி விட்டேன்.

வடிவேலு.—ரயிலில் தானே போயிருக்கிறான் ?

ஆறுமுகம்.—ஆமா.

இருவரும் வள்ளிக்கு அருகிலேயே இருந்தனர். வெளியே காலடிச் சத்தங் கேட்டது. முருகன் டாக்டரை யழைத்து வந்து விட்டானென்றே நினைத்தார்கள். வள்ளி நிச்சயமாக சுக மடைவாள் என்று எண்ணினார்கள். ஆனால் பெருத்த ஏமாற்றமடைந்தார்கள்.

வடிவேலு.—நீ மதுரைக்குப் போக வில்லையா ?

முருகன்.—(தாழ்ந்த குரலில்) ரயில் போக வில்லை.

வடிவேலு.—ரயிலில்லையா ?

முருகன்.—இல்லை. வழியில் தண்டவாளங்களை எல்லாம் கழற்றிப் போட்டு விட்டார்களாம்.

வடிவேலு.—யார் அப்படிச் செய்தது ?

முருகன்.—எனக்குத் தெரியாது.

நிலைமை சிக்கலாகி விட்டது. செய்வ தின்னதென்று தெரியாது அனைவரும் திகைத்தனர். திடீரென வடிவேலுக்கு ஒரு புது யோசனை முளைத்தது.

வடிவேலு.—முருகா ! நம்ம மயிலைக் காளையை அவிழ்த்து நம்ம வண்டியிலே கட்டிக் கொண்டு ரோடு வழியாப் போடா.

முருகன்.—இப்போது நான் புறப்பட்டால், மதுரைக்குப் போய்ச் சேர நடு இரவு ஆகி விடுமே. அந்நேரத்தில் டாக்டர் வருவாரா ?

வடிவேலு.—எல்லாம் வருவார்.

ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து முருகன் வெளியேறினான்.

* * * *

பொழுது புலரும் வேளை. அருணன் கதிர்கள் ஆகாயத்தில் தலை காட்டுகின்றன. இரவு முழுதும் இவ்விருவர் கண்களும் உறங்கவே இல்லை. தூரத்தில் வண்டி வரும் சத்தம் கேட்டது. டாக்டரை எதிர் கொண்டழைக்கும் பொருட்டு வடிவேலு வெளிப்பட்டான். ஆம். முருகன் கொண்டு போன வண்டி தான். ஆனால், வண்டியில் வேறு யாரும் காணப்படவில்லை.

வடிவேலு.—என்டா, முருகா ! டாக்டர் வரமாட்டேனென்று விட்டாரா ?

முருகன்.—மதுரைக்கு யார் போனது ?

வடிவேலு.—பின்னே ?

முருகன்.—4-வது கல்லிலேயே என்னை மடக்கிக் கொண்டார்களே !

வடிவேலு.—திருடர்களா ?

முருகன்.—திருடர்களல்ல ; சில அயோக்கியர்கள் என் வண்டியைப் போக விடமாட்டேனென்றார்கள்.

வடிவேலு—நீ வாயை மூடிக் கொண்டு வந்து விட்டாயோ ?

முருகன்—நான் எவ்வளவோ தூரம் எதிர்த்து வாதாடினேன்.

வடிவேலு.—இதற்குக் காரணம் என்ன சொன்னார்கள் ?

முருகன்.—" நீ நாட்டுப்புறத்தான் ; உனக் கென்னடா தெரியப் போகிறது " என்று சொன்னார்கள்.

வடிவேலு.—பிறகு ?

முருகன்.—ரோடிலுள்ள தந்திக் கம்பிகளை யெல்லாம் அறுத தெறிந்துவிட்டார்கள்.

* * * *

வள்ளியின் நோய் முற்றியது. கடைசியாக இந்தக் கொடிய உலக வாழ்வை நீத்தாள். அவள் மரணத்திற்குக் காரணம் யார் ? வாசகர்களே யூகித் தறிந்து கொள்ளட்டும்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, " VICTORY HOUSE ", MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஆண்டு டிசம்பர் மீ 11உ, வெள்ளிக்கிழமை [இதழ் 49



பிரிட்டிஷ் "வாலன்டைன்" டாங்கிகளை நேச தேசத்தார் போராடும் பல யுத்த அரங்கங்களுக்கும் அனுப்புகிறார்கள். ஸ்டாலின்கிராடையும் மாஸ்கோவையும் பாதுகாக்கும் பொருட்டு அநேக டாங்கிகள் அனுப்பப் பட்டன. அவற்றுள் ஒன்று, சப்லை கப்பலில் ஏற்றப் படுகிறது.

### " ஒருநாள் ஒருபொழுதாகிலும் "

(என்னும் பாகவதர் மெட்டு.)

பல்லவி.

ஒருநாள் ஒருபதமாகிலும் மனமார உச்சரிக்கவேண்டும்
—ஜெயமே நேச நாடுற (ஒரு)

அநுபல்லவி.

உறு நாள் தூங்கிற்பின் உலகோர்க் குறுதுயர்
ஓதற் கொண்ணுவகை பாதைப்படுத்துமே (ஒரு)

சரணம்.

கொண்டு கொள்ளை நாடு—கொன்று நாளும் ஜனம்
கொடுமையோடு வரும் கள்ளன்-தனைக்கண்டு நெஞ்சில் வேகம்கொண்டு
துண்டுசாடியுடல் தூளாகிவிழப்பள்ளம்-தனில்
கொண்டு சேர்த்து விடுவோம்—ஹிட்லரைக்
கொளுத்தி யின்று சுடுவோம்—இனிநாம்
தொண்டுசெய்தனுதினமே-நினைந்தே-தோழராகி இனமே
இதமாய் (ஒரு)

# பர்மாவைத் தாக்கும் பிரிட்டிஷ் விமானப் படை

## சராசரியில் நாள் ஒன்றிற்கு ஒரு முறை தாக்கியது

### ஆக்யாப் துறைமுகம் நிர்த்தூளி யானது



மத்தியதரைக் கடலிலுள்ள ஒரு விமானந் தாங்கிக் கப்பலிலிருந்து "ஸ்வோர்ட் பிஷ்" என்னும் டார்பிடோ பாம்பர் விமானம் எதிரியைத் தேடித் தாக்கக் கிளம்புகிறது.

சென்ற நவம்பர் மாதத்தில், அதற்கு முந்திய மாதங்களை விட, ஜப்பானியர் வயமான பர்மாவை பிரிட்டிஷ் விமானப் படை, கடுமையாகத் தாக்கியது. சென்ற அக்டோபர் மாதத்தில் 8 பகல்களில் 13 முறை எதிரி இடங்களை நம் விமானப் படை தாக்கியது. அன்றியும் 10 இரவுகளிலும் தாக்கியது. சென்ற மாத மத்தியில் நமது பாம்பர் விமானங்கள் முறைப்படி ஆக்யாப் துறை முகத்திலுள்ள எதிரி கப்பல்களை இரவில் தாக்க ஆரம்பித்தன. அன்று மறு நாள் காலையிலுங் கூடத் தாக்கிக் கொண்டிருந்தன. துறை முகத்திற்குச் சேதம் விளைத்தது மட்டு மன்றி, ஒரு ஜப்பான் கப்பல் மூழ்கியது; மற்றொரு கப்பல் பழுதானது. அன்று தான் பலமான எதிரி விமானப் படை கிளம்பி போர் தொடுத்தது. அப்போது நம் பாம்பர் விமானங்களுக்குத் துணையாகப் போன போராடும் விமானங்கள் அவற்றோடு போராடி 4 ஜப்பானிய விமானங்களை நாசம் செய்தன. மற்றும் பலவற்றை சேதப் படுத்தின. இன்று ஆக்யாப் துறை முகம் மனித சஞ்சார மற்றுக் கிடக்கிறது. அதில் இரண்டு ஜப்பான் கப்பல்கள் மூழ்கிக் கிடக்கின்றன.

நவம்பர் மாதம் 17-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை (19-ம் தேதி தவிர) இரவு தோறும் நம் பாம்பர் விமானங்கள் எதிரி விமான நிலையங்களைத் தாக்கிக் கொண்டிருந்தன. மிங்கல்டன், மாக்வா, மைக்திலா, ஹேங்கூ முதலிய விமான நிலையங்களையும் தாக்கின. அதன் பிறகு எடுக்கப்பட்ட படங்களிலிருந்து, குறி தவறாமல் வெடி குண்டுகள் விழுந்தன வென்று தெளிவாகத் தெரிகிறது. அவை பற்றி எரிந்த நெருப்பு 120 மைல்களுக்கு அப்பால் கூட தெரிந்ததாக அந்த விமானிகள் அறிவித்தார்கள். பகலில் விமான நிலையங்கள், ரயில்வே ஸ்டேஷன்கள், ஜப்பானியர் வசிக்கும் கட்டிடங்கள் முதலியவற்றின் மீது நம் பாம்பர் விமானங்கள் வெடி குண்டுகளை வீசின. இந்த பாம்பர் விமானங்களுக்குத் துணையாகப் போன போராடும் விமானங்கள் கூட, விமான நிலையங்களையும், எண்ணெய் கிணறுகளையும், எதிரிப் படைகளையும், படைகளையும் சப்ளைகளையும் ஏற்றிக் கொண்டுபோகும் படகுகளையும், சுட்டுத் தள்ளினார்கள். இவை தம் பீரங்கியால் சுட்டதன் பயனாக, ஆறுகளில் போகும் ஒரு ஜப்பானியக் கப்பல் மூழ்கியது.

துணைக் கப்பல்களாகப் போவதும், எதிரி நீர் மூழ்கிக் கப்பல்களைக் கண்டு பிடித்து அவற்றை அழிப்பதும் மிகவும் கஷ்டமான வேலைகள் தான். இந்த மாதம் முழுதும் இந்த வேலைகள் நடைபெற்றன. எதிரிகளை இடை விடாது தேடி ஆயிரக்கணக்கான மைல்கள் பெரிய பறக்கும் கப்பல்கள் கடலில் போயிருக்கின்றன.

வெகு தூரத்திலிருந்து தாக்கும் திறமை வெல்லிங்டன் பாம்பர்களுக்கு உண்டு. இவையும் நவம்பர் மாதத்தில் இந்தியாவிலிருந்து போய்த் தாக்கின. ஆகவே, பிரிட்டிஷ் விமானப் படையும், அமெரிக்க விமானப் படையும், சேர்ந்து எதிரி இடங்களைத் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருக்கின்றன. சென்ற மாதம் 9 முறை தாக்கினோம். பாங்காகில் எண்ணெய் சுத்தம் செய்யும் இடம் ஒன்றிருக்கிறது. தாய்லாந்திலேயே இந்த ஒரு இடத்தில் தான் பெட்ரோலியம் தயாராகிறது. இது இப்போது ஜப்பானியர் ஆதிக்கத்திற் குட்பட்டிருக்கிறது. இதையும் நம் விமானப் படை தாக்கி சேதப் படுத்தியது. மானாடலே ஒரு முக்கியமான ரயில்வே ஸ்டேஷன். இங்கேயும் அநேக டன் எடையுள்ள பெரிய வெடி குண்டுகளை எறிந்தது. பிரிட்டிஷ் விமானப் படை மிங்கலடான் விமான நிலையத்தைத் தாக்கியது. அமெரிக்க விமானப் படை இரண்டு நாட்களில் நடுப் பகலில் துறைமுகம், கப்பல்கள் பண்டக சாலைகள் முதலியவற்றைத் தாக்கி நாசஞ் செய்தன. அன்றியும், நவம்பர் மாதம் முழுதும் அமெரிக்க விமானப் படைகள் எதிரிகளைத் தாக்கப் போகும்போ தெல்லாம், மிகவும் உபயோகமான தகவல்களைக் கொண்டு வந்தன. மேலும், ஷிங்டயாங், மெய்ன்குவான், டெய்பாகா என்னும் இடங்களிலுள்ள ஜப்பானியப் படைகளைக் கண்டு, தாழப் பறந்து அவற்றிற்குக் கடும் சேதத்தை உண்டு பண்ணின.

மிக உயரத்தில் எதிரி விமானங்கள் இந்தியாவிற்கு வந்து வட்ட மிட்டனவே யொழிய, வெடி குண்டுகளை எறிய வில்லை என்று தெரிகிறது.

அமெரிக்க விமானப் படையும் பிரிட்டிஷ் விமானப் படையும் சேர்ந்து இந்த நவம்பர் மாதத்தில் சராசரி நாள் ஒன்றிற்கு ஒரு முறை எதிரிகளைத் தாக்கி யிருப்பதாகக் கூறலாம். இந்தப் படைகளின் சக்தி பெருகப் பெருக, இன்னும் பல முறை இவை எதிரிகளைத் தாக்கு மென்று எதிர் பார்க்கலாம்.





துரோகியான ஜெர்மானியர்கள் ஹாலந்தை தாக்கிய போது டச்சு யுத்த கப்பல்களும் நீர் மூழ்கிகளும் தம் தளங்களிலிருந்து தப்பி வந்து பிரிட்டிஷ் கப்பற் படையோடு சேர்ந்து கொண்டன. டச்சு நீர் மூழ்கியில் வேலை செய்யும் ஒரு சோல்ஜர் உல்லாசமாக எதிரிகளைத் தாக்கக் கிளம்புகிறார்.

# வெற்றி வீரர்கள் கூறிய விவரம்

## ஜப்பான் போர்க்கப்பல் மூழ்கிய விதம்

### இந்திய வீரர்களின் சிறந்த வெற்றி

ஜாவா தீவிற்குத் தென்மேற்கே "ஒண்டினா" என்னும் எண்ணெய்க் கப்பலுக்குத் துணையாகப் போன "வங்காளம்" என்னும் இந்திய நாசகாரிக் கப்பல், ஒரு பெரிய ஜப்பான் போர்க் கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது என்று சென்ற வார இதழில் அறிவித்திருந்தோம். அந்த நாசகாரியில் அப்போதிருந்த இருவர் கூறும் விவரங்கள் வருமாறு :—

ஜப்பானியர் குண்டுகள் சுற்றிலும் விழுந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் விடும் அக்கினிக் குண்டுகள் அதி வேகமாகப் பாய்கின்றன. என்றாலும் இந்தக் கப்பற் படையைச் சேர்ந்த "வங்காளம்" என்னும் கப்பல் அஞ்சவில்லை. இதில் இருந்தவர்கள் 7 சிப்பாய்கள் தான். இவர்கள் பெயர்கள் பெட்டி ஆபீஸர் முகமத் இப்ராஹிம், மகமத் கான், இஸ்மாயில் மகமத், ரகுநாத சாஹி, இஸ்மாயில் பாபர், பி. கே. நாயர், பாலசந்திரா. இவர்கள் எதிரிகள் மீது ஓயாது தம் 12 பவுண்டர் பீரங்கிகளைக் கொண்டு சுட்டுக் கொண்டே யிருந்தனர்.

பெட்டி ஆபீசர் முகமத் இப்ராஹிம் கப்பற் படையில் 9 வருஷ காலம் வேலை பார்த்தவர். அவருக்குச் சொந்த ஊர் பம்பாய். இந்தப் போராட்டத்தில் தன் சிப்பாய்களின் அநுபவங்களைக் குறித்து அவர் கூறியதாவது :—

"நான் ஸ்டார்போர்ட் மிஷின் பீரங்கியைச் சுத்தம் செய்து கொண்டிருந்தேன். உடனே போராட்டத்தை நடத்தும்படி அறிவிக்கும் சத்தம் கேட்டது. உடனே எங்கள் பீரங்கி யண்டையில் ஓடினோம். பயிற்சியின் போது நாங்கள் இப்படி ஓடுவதுண்டு. எங்கள் கப்பல் நோக்கி வெகு வேகமாக 2 ஜப்பான் போர்க் கப்பல்கள் வருவதைக் கண்டோம். முதலில் எதிரிகள் தான் எங்கள் கப்பலை நோக்கிச் சுட்டனர். எங்களை வெகு விரைவில் வந்து பிடித்து விடுவார்கள் போலிருந்தது. உடனே எங்கள் கப்பலின் காபிதன் கிளம்பினார். சுடும்படி உத்தரவு பிறந்தது. ஜப்பானியர்களைச் சுட்டுத் தள்ளுவதில் எங்களுக்கு மிகுந்த ஆசை. எனவே வெகு விரைவாகச் சுட்டோம். நாங்கள் ஆறுவது முறை சுடும் போது, எதிரி கப்பலின் வெடி மருந்து சாலை தீப் பற்றிக் கொண்டது. அது மகா அற்புதமான காட்சி. நாங்கள் எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். எங்கள் பீரங்கிக்குக் கீழே ஒரு எதிரி ஷெல் குண்டு வெடித்தது. அது எங்களை நோக்கிச் சுடப் பட்டதாகத் தான் இருக்க வேண்டும். அதன் குறி தவறி விட்டது. என்றாலும் ஒரு சம்பவமும் நடவாதது போல என் சிப்பாய்கள் தம் வேலைகளைச் சரிவர செய்து கொண்டே யிருந்தார்கள், இனிச் சுட வேண்டா மென்று காபிதன் உத்திரவிட்ட போது நாங்கள் உண்மையிலேயே வருத்தப் பட்டோம். ஏனென்றால் நாங்கள் மேலும் சுட வேண்டு மென்று விரும்பினோம். ஆனால் அப்போது எங்களிட மிருந்த வெடி மருந்தும் தீர்ந்து விட்டது. எதிரி கப்பல் கொழுந்து விட் டெரியுங் காட்சி வெகு அற்புதமாயிருந்தது. நாங்கள் நல்ல வேலை செய்தோ மென்று எங்களுக்குத் தெரியும். ஆனாலும், அங்கிருந்து நாங்கள் வெளி யேறிவிடக் கூடு மென்று நினைக்கவே இல்லை."

லெப்டினெண்ட் ஜே. மோரா இந்திய கப்பற் படை ரிசர்வைச் சேர்ந்தவர். இவர் ஒரு பஞ்சாபி. இத்தாலியக் கிழக் காபிரிக்கா வோடு போராடிய போது, செங்கடலில் சேவகம் செய்தவர். அவர் இது பற்றி கூறியதாவது :—

"கப்பலோட்டும் உத்தியோகஸ்தர் என்னும் முறையில் நான் கப்பலின் பாலத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்போது எதிரி கப்பல்கள் முதல் முதல் தென்பட்டன. உடனே போராட்டத்தை நடத்தும்படி சட்டளை பிறந்த சத்தம் கேட்டது. அங்கிருந்தவர்களில் ஒருவராவது அதற்கு முன் போராடியவர்கள்

(7-ம் பக்கம் பார்க்க)

# ஹிட்லர் இராணுவ முயற்சி தோற்று விட்டது

## ரஷ்யரின் வீரச் செயல்கள்

### டிமோஷெங்கோ ஜெர்மானியருக்கு முட்டுக் கட்டை

ரஷ்ய மக்கள் அனைவரும் ஞாபகப் படுத்திக் கொள்ளத் தக்க நாள் சென்ற வெள்ளிக் கிழமை. ஏனென்றால், மாஸ்கோவி லிருந்து ஜெர்மானியர்களைத் திருப்பி விரட்டி யடிக்க ஆரம்பித்த நாளின் முதல் ஆண்டு விழா, அன்று தான். சென்ற வருஷத்தை விட இந்த வருஷம் 3 வாரங்களுக்கு முன்னதாகவே சோவியத் படைகள் ஜெர்மன் படைகளை எதிர்த்துத் தாக்க ஆரம்பித்து விட்டன. இதனால் எதிரிக்கு ஏராளமான நஷ்டம். ஸ்டாலின்கிராட் போர் முனையில் மட்டும் 1 லட்சம் ஜெர்மானியர்களை ஹிட்லர் இழந்தார். இந்நகரைக் கைப்பற்ற 3 மாத காலம் மிகக் கடுமையாக முயற்சித்தார்கள் ஜெர்மானியர். பலிக்கவில்லை. இப்போது, அந்நகரைப் பாதுகாத்துக் கொண்டிருந்த படையினர் ஜெர்மானியர்களை எதிர்த்துத் தாக்கி, அவர்கள் படையின் பின் பகுதியில் மகத்தான சேதத்தை உண்டாக்கி விட்டார்கள். ஜெர்மன் படைகளில் ஆயுதந் தாங்கிய 3 டிவிஷன்களை அடியோடு நாசஞ்செய்து விட்டார்கள். இதன் பயனாக ஜெர்மனியின் தாக்கும் சக்தி பெரிதும் தடைப்பட்டு விட்டது.

வடக்கி லிருந்தும் தெற்கி லிருந்தும் ரஷ்யப் படைகள் ஒன்றை யொன்று நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இவை அவசரமாகத் திரட்டப்பட்டவையல்ல; தகுந்தபடி தளவாடங்கள் அமைக்கப் பெற்றவை. மிகுந்த சக்தி வாய்ந்தவை. தகுந்தபடி தாக்குதற்கு முறைப்படி தேர்ச்சி பெற்றவை. டான் நதியின் வலது கரையிலும் வால்கா ஆற்றிற்கு குறுக்கே அதாவது ஸ்டாலின் கிராடிற்குச் சற்று மேலேயும் பல இடங்களில் கோர்வையாக ஜெர்மானியர்கள் அரண்களைக் கட்டி யமைத்திருந்தார்கள். ஸ்டாலின்கிராடின் நிலைமை மிகுந்த நெருக்கடியாயிருந்தபோது இந்த அரண்களைத் தகர்க்க மார்ஷல் டிமோ ஷெங்கோ எவ்வளவோ முயன்றார். பலிக்கவில்லை. ஆனால் இப்போது தாக்கிக் கொண்டு முன்னேறும் சக்தி சோவியத் படைகளுக்கு ஏற்பட்டு விட்டது. ஏராளமான பீரங்கிப் படையும் பெரிய டாங்கிகளும் இந்த பலமான அரண்களைத் துளைத்துக் கொண்டு சுமார் 80 மைல்கள் உள்ளே போயிருக்கின்றன.

இப்போது ஸ்டாலின்கிராடிலும் ராஸ்டோவிலும் உள்ள படைகள் தம் ஸ்தானங்களைப் பலப் படுத்திக் கொண்டு மேற்கு நோக்கி டான் நதி வளைவை நோக்கிப் போவார்களானால், காகஸஸுக்குப் போகும் பாதையை யடைத்து விடுவார்கள். அப்போது வட காக்கஸஸி லிருந்து மூட்டை முடிச்சுகளுடன் ஜெர்மன் படைகள் கிளம்பி வெளியேறிவிட வேண்டியது தான். இப்படிப் பட்ட நிலைமை ஏற்படக் கூடுமென்று எதிர்பார்த்து, காக்கஸஸுக்குப் போகும் வழியைக் காப்பாற்றும் பொருட்டு, ஒரு பலத்த படையை அங்கே ஹிட்லர் வைத்திருப்பா ரென்று எதிர் பார்க்கலாம். ஸ்டாலின்கிராட் போர் முனையிலுள்ள தன் படைகளை மீட்டுக் கொள்ளவும் அவர் முயற்சிக்கலாம், ஆனால் வடக்கே யுள்ள தன் படைகளில் பெரும் பகுதியைத் தெற்கே ஹிட்லர் கொண்டு போவாரானால், பெருத்த ஆபத்துக்கள் நேரக் கூடும். ஏனென்றால் சென்ற வருஷமே, எதிர்த்துத் தாக்குவதில் செம்படைகள் எவ்வளவு திறமை வாய்ந்தவை என்று மெய்ப்பித்திருக்கின்றன.

* * * * *

#### ஹிட்லர் என்ன செய்வார்?

தற்போதுள்ள நிலைமையில் ஹிட்லர் என்ன செய்வார்? இப்போது வால்கா ஆறு உறைந்து விடும். ஆகையால் வசந்த காலம் வருகிற வரை இந்நகரம் இராணுவ முக்கியத்துவ மற்றது என்று கூடச் சொல்லலாம். இந்தச் சமயத்தில், தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி, ஸ்டாலின்கிராடில் தன் நிலைமையை வேரூன்றச் செய்யும் பொருட்டு ஏராளமான நஷ்டங்களுக்கு அவர் உள்ளாவாரா? வட பகுதியிலும் மத்தியப் பகுதியிலும் ரஷ்யர்கள் தாக்கக் கூடுமாகையால், காகஸஸிலுள்ள 700 மைல் வளைவையும் தன் வசமே வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புவாரா? மாஜி ஜெர்மன் ஸ்டாப் தலைவர் ஹால்டர் தனக்கு ஆலோசனை கூறியது போல, காகஸஸ் வளைவிலுள்ள 700 மைல்கள் நாட்டை விட்டுக் கொடுத்து. அதற்குப் பதிலாக, வாரனேஜுக்கும் ராஸ்டோவிற்கும் இடையேயுள்ள 300 மைல் பகுதியைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்று ஆலோசனை சொன்னார். இது போலவே தான் ஒரு வருஷத்திற்கு முன்பு கூட ப்ராசிடாக்கும் தெரிவித்தார். இதை முன்னிட்டு, தன் போர் முனையின் அளவைக் குறைத்துக் கொண்டு, தன் படைகளையும் திரட்டி அழைத்துக் கொள்ளுவாரா? அவர் எந்த முடிவிற்கு வந்தபோதிலும், குளிர் காலத்தை அவர் அனுபவிக்கத் தான் வேண்டும். அப்போது தம் போர் முனையைக் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் தம்முடைய எல்லா மூலபலங்களையும் மனோபலத்தையும் துணைக் கொள்ள வேண்டும். ஓய்வுக்காகவாவது, புதுப்பிக்கவாவது, ஐரோப்பாவின் தென் பாகத்திலும் மேற்குப் பாகத்திலும் உள்ள தேவைகளுக்கு ஈடு செய்யும் பொருட்டாகவாவது, கிழப் போர் முனையிலுள்ள பெரும்பாலான தரைப் படைகளை திரும்பி வரும்படி அவர் உத்தரவிடுவார் என்று கருத இடமில்லை.

இந்த வருஷம் ஹிட்லருடைய இராணுவ முயற்சி தோற்றுவிட்டது. இதில் சந்தேகமே கிடையாது. எதனால் தோற்றார் என்று இங்கே ஆராய்வது பொருத்தமாகும்.

1\. ரஷ்ய மக்களின் நாட்டுப் பற்று, தியாக உணர்ச்சி சகிப்புத் தன்மை ஆகியவற்றை மிக்க குறைவாக ஹிட்லர் மதித்திருந்தார்.

2\. ரஷ்யாவில் போதுமான நிலக் கரியும், எண்ணெயும் கிடையாது. எனவே, பண்ணைகளிலும் தொழிற்சாலைகளிலும் இயந்திரங்களைத் தகுந்தபடி ஓட்டக் கூட வில்லை. இதனால் உரேனிலும், காகஸஸிலும் கோதுமை சாகுபடி பெரிதும் குறைந்து விட்டது. இதனால் ரஷ்யர்கள் பட்டினி கிடக்க நேரிடும். "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்." ஆகவே ரஷ்யர்கள் இந்த நிலைமையைத் தாங்கமாட்டார்கள் என்று எதிர் பார்த்தார்.

3\. மற்ற ஐரோப்பிய நாடுகளில் தன் அனுபவத்தைக் கொண்டு, ரஷ்யர்களும் படிந்துவிடுவார்கள் என்று ஹிட்லர் எதிர்பார்த்தார்.

அவருடைய நம்பிக்கைகள் எல்லாம் பிழை பட்டன. ரஷ்யப் போரை அடக்க அவரால் முடியவில்லை. செம்படைகளையும் அடியோடு அழிக்கும் ஆற்றல் அவருக்குக் கிடையாது. செம்படைகள் சிதறிவிடாதபடி காப்பாற்றிய பெருமை மார்ஷல் டிமோஷெங்கோவிற்கு உரியது. இதன் பொருட்டு மிகச் சிறந்த நஞ்சை நிலங்களையும் உலோகச் சுரங்கங்கள் உள்ள பகுதிகளையும் தியாகஞ் செய்து மகத்தான நஷ்டத்திற்கு ஆளாக வேண்டியிருந்தது. ஸ்டாலின்கிராட் யுத்தம் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. 3 வாரங்களுக்கு முன்பு ரஷ்யர்கள் ஜெர்மனியரைத் தாக்க ஆரம்பித்தனர். ஜெர்மானியர்கள் தம் படைகளைத் தகுந்தபடி அமைத்துக் கொண்டு எதிர்த்துத் தாக்க இப்போது தான் ஆரம்பித்திருக்கிறார்கள். இதன் பொருட்டு ராஸ்டோவிலிருந்து வட காகஸஸ் ரயில்வே லைனையொட்டித் தன் படைகளைக் கொண்டு போகிறார் ஹிட்லர். இந்த ரயில்வே லைன் இன்னும் ஜெர்மானியர் வசந் தான் இருக்கிறது. ஸ்டாலின்கிராட்



## 700 ஏக்கர் நிலத்தை உழுகிற ஏர்



இங்கிலாந்தில் சென்ற மகா யுத்த காலம் முதல் இந்த நிலம் தரிசாய்க் கிடந்தது. இதில் பெண்கள் படையினர் சாகுபடி செய்யும் பொருட்டு, இயந்திர ஏர்களைக் கொண்டு உழுகிறார்கள்.

போர் முனையின் தென்மேற்குப் பகுதியிலுள்ள செம்படைகளை ஜெர்மன் படைகள் கடுமையாகத் தாக்கின. ஆனால் பலிக்க வில்லை. ஜெர்மன் படைகளுக்கு ஏராளமான நஷ்டம். ஸ்டாலின்கிராடின் வடமேற்கில் செம்படையின் தாக்குதல் கொஞ்சமும் தளர்வடையவில்லை. முக்கோணப் பகுதியிலும் சில ஆற்றுப் பகுதியிலும் கடுமையாகத் தாக்குகிறார்கள். ஜெர்மானியரின் அக்கிரமங்களை எதிர்த்து நிற்கும் உணர்ச்சியின் சின்னமாக ஸ்டாலின்கிராட் இன்று விளங்குகிறது. ஸ்டாலின்கிராட் சம்பந்தமாக எப்படிப்பட்ட கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும், அத்தனையையும் ஏற்றுக் கொள்ளுவ தென்று சோவியத் படைத் தலைவர்கள் முடிவு செய்து விட்டார்கள். 'எப்பாடுபட்டாவது ஸ்டாலின்கிராடைப் பிடித்துத் தீருவேன்' என்று ஹிட்லர் கூறினார். ரஷ்யர்களோ தம் மகா பெரிய தலைவரான ஸ்டாலினுடைய பெயரால் விளங்கும் நகரத்தை எப்பாடு பட்டாவது காப்பாற்றித் தீருவ தென்று முடிவு கட்டி விட்டார்கள். நாஜிகள் வசமிருந்து ஸ்டாலின்கிராடை மீட்க இதுவரை இல்லாதபடி மிகக் கடுமையாக போராட வேண்டி யிருந்தது. மூன்று விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு தான் சோவியத் படைகள் போராடின. அவையாவன :—

1\. ரஷ்யப் படையினர் மிகச் சிறந்த வீரர்கள். அவர்களுக்குப் பக்க பலமும் உண்டு, எனவே, தகுந்தபடி எதிர்த்துத் தாக்குவதற்கு ஆயத்தங்கள் செய்து தாக்கும் வரை, ஆபத்தான நிலைமையிலேயே ஜெர்மானியர்களை வைத்திருக்கக் கூடும்.

2\. மழை காலக் கஷ்டத்தை சகித்து அதை வெல்ல ரஷ்ய மக்களால் இயலும்.

3\. மத்திய ரஷ்யாவிலும் யூரால் பகுதிகளிலும் ரஷ்யப் பொது ஜனங்கள், மிகச் சிறந்த முறையில் ஸ்தாபனங்களை அமைத்திருக்கிறார்கள். பிரிட்டனும், அமெரிக்காவும் அனுப்பிக் கொடுத்திருக்கும் பெரிய டாங்கிகளும், யுத்த தளவாடங்களும் பெரிய துணையாக அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றன. இவற்றைக் கொண்டு தன் முழு பலத்தோடும் மழை காலத்தில் மிகுந்த கஷ்டத்தோடும் ரஷ்யர்கள் போராடினார்கள்.

இந்தத் திட்டங்கள் எல்லாம், மிகுந்த ஜாக்கிரதையோடு தான் வகுக்கப்பட்டன. தன் மூல பலத்தைச் சிதற விடும்படி ஹிட்லர் ஆசைகாட்டப் பட்டார். காயப்பட்டவர்கள் நீங்கலாக, கைதியானவர்களும் இறந்து போனவர்களும் ஜெர்மானியர்களில் 12 டிவிஷன்கள் ஒழிந்தன. தளவாடங்களும் ஏராளமாக நஷ்டம். இத்தனையும் ஸ்டாலின்கிராடில் ரஷ்யாவின் கை ஓங்கிய பிறகு தான். ஸ்டாலின்கிராடைத் தாக்கிக் கொண்டே இருந்து விட்டாரே யொழிய, காகஸஸ் வழியில் தனக்கு மகத்தான ஆபத்து ஏற்படக் கூடுமென்று அவர் நினைக்க வில்லை. இந்த ஆபத்தை அவர் நீக்கிக் கொள்ளவும் இல்லை. இரண்டு காரியங்களை ஒரே சமயத்தில் சாதிக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். 1. க்ராஸ்னி எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்ற வேண்டும். 2. கருங்கடலிலுள்ள துறைமுகங்களி லிருந்து செம்படைகளை விரட்டிவிட வேண்டும். அப்போது தான் கருங்கடல் துறைமுகங்களிலுள்ள படகுகளை வெளியேற்றக் கூடும். அப்போதுதான் காக்கேஷியாவிற்கு அப்பாலும் பாகு எண்ணெய்க் கிணறுகளுக்கும் ஹிட்லர் போகக் கூடும். இந்த இரண்டு முயற்சிகளும் பலிக்கவில்லை. இந்தப் போராட்டத்தில் இவர்களுடைய இரண்டு நோக்கங்களும் ஈடேறவில்லை, எத்தனைக் கஷ்டங்கள் வந்தாலும் சகித்துக் கொண்டு இருக்கிறது ருஷ்யர்களின் இயற்கை. வேறு எவரும் இந்தச் சமயத்தில் இவ்வளவு சகிப்புத் தன்மையோடிருக்க மாட்டார்கள். தாம் வென்று விடுவது உறுதி என்னத் தக்க அளவிற்கு நம்பிக்கையை எதிரிக்கு உண்டாக்கி, பிறகு சிதறி ஓடும்படி யடிப்பது தான் ரஷ்யர்கள் வழக்கம்.

## இராணுவ வைத்திய சாலைகளுக்கு ஆண் நர்சுகள்

தற்போதுள்ள அவசரத்தை முன்னிட்டு இராணுவ வைத்தியசாலைகளில் வேலை செய்ய ஆண் நர்சுகளை நியமிக்கப் போவதாக இந்திய அரசாங்கத்தார் சென்ற ஏப்ரல் மாதத்தில் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள்.

இவர்களுக்கு உள்ள சம்பளம் முதலியவற்றை இப்போது அதிகப்படுத்தி யிருப்பதாக அவர்கள் அறிவிக்கிறார்கள். அவர்கள் சம்பளத்திற்கு மேல் அதிகப்படி அவசர அலவன்ஸ் என்று மாதந் தோறும் ரூ. 25 இனிக் கொடுப்பார்கள். இவர்களுக்கு இப்போது "முதல் வகுப்பு வாரண்டு ஆபீசர்கள்" பதவி ஏற்பட்டிருக்கிறது. இவர்கள் முதலில் பதவி ஏற்றுக் கொள்ளும் பொருட்டுப் போகும் போது, அவர்களுக்கு 2-வது வகுப்பு உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் பிரயாணப் படியைப் போலவே கொடுக்கிறார்கள்.

# யுத்தக் கூட்டு தர்ம டிப்போவின் வேலை

## படையினருக்கு சிறந்த வசதிகள்

யுத்தம் ஆரம்பித்த காலம் முதல், 'யுத்த கூட்டு தரும டிப்போ,' படையினருக்குப் பல வகைகளி லும் வசதியளித்துக் கொண்டு வருகிறது. முத லில் கம்பளி நூலை வாங்கி, அதைக் கொண்டு சட் டைகளைப் பின்னி மத்திய கிழக்குப் போர்முனையி லுள்ளவர்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. இதற்கு மேல் எதுவும் செய்யக் கூடவில்லை. சென்ற வருஷம் கிருஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு வெளி நாடுகளிலுள்ள இந்தியப் படையினருக்கு இனாம் களை அனுப்ப வேண்டி, ஒரு விசேஷ வேண்டுகோள் அனுப்பினார்கள். 21,000 பேர்களுக்குக் காணத் தக்க உணவு அனுப்பப்பட்டது. இது 9 இந்தியர் களுக்கு ஒரு ஐரோப்பியர் விகிதம் அனுப்பப்பட் டது. அன்றியும் ரேடியோக்கள், கிராமபோன்கள், பிஸ்கோத்துகள், மிட்டாய்கள், முதலியவைகளையும் விசேஷ வெகுமதிகளாக அனுப்பினார்கள்.

அன்றியும் பர்மாவிற்குப் புறப்பட்டுக் கப்பல் ஏறும் படைகளுக்குத் துறைமுகத்தில, தேயிலைத் தண்ணீர், குளிர்ந்த பானங்கள், சிகிரெட், பிஸ கோத்து, சோப்பு முதலியன கொடுத்து உதவினார் கள்.

1942-ம் ஏப்ரலில் இதன் வேலையின் போக்கு முழுதும் மாறுதலடைந்தது. வெளி நாடுகளி லுள்ள படைகளுக்கும் வெளி நாடுகளுக்குக் கப்பல் ஏறும் படைகளுக்கும் நாம் என்னென்ன செய்யக் கூடும் மென்ப தல்ல இந்தப் பிரசினை.

> சென்னை நகரமே ஆபத்திற்குள்ளாக விருந் தது. அப்போது நம்மைக் காக்கும் பொருட்டு இங்கே வந்திருந்தவர்களுக்கு நாம் என் னென்ன வசதிகள் செய்து கொடுக்கக் கூடுமோ அவை எல்லாம் செய்ய வேண்டி யது நமது கடமையாயிருந்தது.

அவர்களில் பெரும்பாலோர் மிகவும் வசதிக் குறைவாயிருந்தார்கள். இன்னும் அப்படித் தான் இருக்கிறார்கள். தகுந்த ஆயத்தங்கள் இல்லாமல் அவசரமாக அவர்கள் புறப்பட்டு வந்தவர்கள். அவர்கள் வெயிற்கால ஆரம்பத்தில் வந்தவர்கள். அநேகர் அப்போது தான் இங்கிலாந்திலிருந்து வந்து இறங்கியவர்கள். அவர்கள் உஷ்ணமான நாடுகளி லிருந்து பழகாதவர்கள். பல சமயங்களில் இரக்க மற்ற கண்டிராக்டர்களின் பேராசைக்கு இவர்கள் ஆளாக நேர்ந்தது; ஏனென்றால் இவர்களுக்கு எது வும் தெரியாது. ஏனென்றால், அவர்கள் வசதியை முன்னிட்டு எந்த வித ஏற்பாடும் முன்னதாகவே செய்யப்படவில்லை.

இந்தப் படைகளுக்கு (பிரிட்டிஷ் படைகளுக்கும் இந்தியப் படைகளுக்கும்) வசதிகள் அமைக்கும் பொருட்டு நிதி உதவுமாறு சென்னை கவர்னர் ஒரு விசேஷ வேண்டுகோள் விடுத்தார். சில இடங்களில் அந்தந்தப் பகுதியிலுள்ளவர்களே இப்படையின ருக்கு, வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கின்ற னர். இப்படி ஆரம்பிக்கப்படும் சிற்றுண்டிச் சாலை களுக்கு இந்த நிதியிலிருந்து தொகைகள் உதவு கின்றனர். சென்னையை யடுத்துள்ள பகுதிகளி லுள்ள படைகளுக்கு உதவத் தக்கபடி, மோட்டார் லாரிகளில் சிற்றுண்டிச் சாலைகளை யமைத்துக் கொண்டு போகிறார்கள். மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் மாளிகையின் சாப்பாட்டு மண்ட பத்தில் இந்த யுத்தக் கூட்டு தர்ம டிப்போ அமைந் திருக்கிறது. படைகளுக்கு அனுப்பும் பொருட்டு ரேடியோ செட்டுகள், கிராமபோன்கள் விளையாடுவதற் குரிய பொருள்கள் முதலியவை அங்கே வைக்கப்பட் டிருக்கின்றன. மனசாந்தி யடைதற்கு இடமில்லாமல் போர்முனைக்குப் போய் இருக்கிறவர்களுக்கு, இவை சற்று மனச் சாந்தி தரும். படையினர் பணங் கொடுத்து வாங்கக் கூடிய நிலைமையில் இருப் பார்களானால், மொத்தமாக வாங்கி, அவர்களுக்குக் கொடுக்கிறோம். இதனால் சாதாரணமாகச் சில்லறை யில் விற்கப்படும் விலையை விட மிகக் குறைந்த விலைக்கு வாங்கலாம். கொஞ்சம் பணம் வைத் திருக்கிறவர்களுக்கு, அந்தக் கொஞ்சத் தொகையைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்குத் தேவையான பொருள்களை தவணையின் பேரில் கொடுக்கிறோம். தனிப்பட்ட இடங்களிலிருக்கும் பகுதிப் படைகளுக்கு கிராமபோன்களும் விளையாடுவதற்கு உபயோகமான பொருள்களும் இலவசமாகக் கொடுக்கிறோம். இந்த நிதிக்கு ஏராளமான தொகைகள் வந்து கொண் டிருந்தால், ஏராளமான பொருள்களை இலவசமாக உதவக் கூடும்.

அன்றியும், சென்னைக்கு அருகிலுள்ள படையின ருக்கு புத்தகங்களும் கிராமபோன் ரிகார்டுகளும் இலவசமாகக் கொடுத்து வாங்குகிறோம். 60 அல் லது 70 மைல்களுக்கு அப்பாலுள்ளவர்கள் கூட இவற்றை உபயோகிக்கின்றனர்.

இவ்வசதிகள் சென்னை மாகாணத்திலுள்ள படை களுக்கு மட்டுமல்ல; இவர்களைப் போலவே, வெளி நாடுகளிலுள்ள சென்னைப் பட்டாளங்களும் இவ் வசதிகளைப் பெற உரிமையுடையவை. இவற்றில் சிலர் இந்தியாவின் மற்ற பாகங்களிலுமிருக்கிறார் கள். அங்கே சென்னை மாகாண மொழிகள் பேசப் படுவதில்லை. அப்படிப் பட்டவர்களுக்கு தமிழ், தெலு ங்கு, மலையாளம் புத்தகங்களும், சஞ்சிகைகளும், கிராமபோன் ரிகார்டுகளும், சங்கீதக் கருவிகளும் விளை யாடுதற்குத் தேவையான பொருள்களும், பீடி, சுருட்டு, ஊறுகாய், அப்பளம், புளி, முந்திரிப் பருப்பு முதலியவைகளையும் அனுப்பி யிருக்கிறோம். இவற்றை மிகுந்த ஆவலோடு அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். படைகளுக்கு வசதி நிதியைப் பொது மக்கள் வெகுவாக ஆதரிப்பார்களானால், இன்னும் அநேக வசதிகளைச் செய்யலாம். சென் னையிலிருந்து, இங்கே வழங்கும் மொழிகளிலுள்ள புத்தகங்களையும், சங்கீத வாத்தியங்களையும் உணவுப் பொருள்களையும் வெளியூர்களிலுள்ள படையின ருக்கு நாம் அனுப்புவது நியாயந் தான். இது போலவே, வட இந்தியாவிலுள்ள ஸ்தாபனங்களும் செய்து, இங்குள்ள வட இந்தியப் படைகளுக்கு உதவினால் நன்று யிருக்கும். இப்படிப்பட்ட ஸ்தா பனம் எதுவும் வட இந்தியாவில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால நம்மால் இயன்ற வரை வட இந்தியப் படையினருக்கும் உதவுகிறோம்.

உருது, பஞ்சாபி மொழிகளில் புத்தகங்களும் கிராமபோன் ரிகார்டுகளும் நமக்குக் கிடைப்பதில்லை. தென்னிந்தியாவில் அனுபவத்தி லில்லாத வாத்தி யங்கள் வேண்டுமென்று இங்குள்ள வட இந்தியப் படையைச் சேர்ந்தவர்கள் கேட்கிறார்கள். இவற்றை யும் தருவித்துக் கொடுக்க நாம் ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம்.

பிரிட்டனிலிருந்தும் வட இந்தியாவி லிருந்தும் இங்கு வந்து சேர்ந்த படையினருக்கு இந்த ஊர் மிகவும் புதியது. இந்த ஊர் மொழி அவர்களுக் குத் தெரியாது. எதையாவது வாங்க வேண்டுமா னால், அது எங்கே கிடைக்கும் என்று அவர்களுக் குத் தெரியாது. அவர்களில பெரும்பாலோர் கடை களுக்கு வெகு தூரத்திற்கு அப்பால் இருக்க வேண்டி யிருக்கிறது. இவர்கள் தேவைகளைக் கண்ட் ராக்டர்கள் மூலமாகத் தான் பெற முடிகிறது. இந் தக் கண்ட்ராக்டர்களில் பலர் இந்தச் சந்தர்ப்பத்தில் கொள்ளை இலாபம் சம்பாதிக்கிறார்கள். இந்தக் குறையைப் போக்க வேண்டி இரண்டொரு பகுதிப் படைகளில் ஒரு முயற்சி செய்தோம். அதாவது, கண்ட்ராக்டர் உதவி இல்லாமலே அந்தந்தப் படையி னரே உணவுச் சாலைகளை நடத்தினார்கள். எவ் வளவு குறைந்த விலைக்குச் சரக்குகள் கிடைக்கக் கூடுமோ அவ்வளவு குறைந்த விலைக்கு நாம் அவர் களுக்கு கொடுத்து உதவினோம். இந்த முயற்சி சிறந்த முறையில் நடைபெற்றது. எனவே சென்னைக்கு லாரிகளில் வரும் படையினருக்கு அவர்களுக் குத் தேவையான பொருள்களைக் கொடுக்கிறோம். ரயில் வழியாகவும் அனுப்புகிறோம். உணவுப் பொருள்கள் மட்டுமன்றி, சிகிரெட்டு, புகையிலை, சோப்பு, க்ஷவரக் கத்தி, பல் துலக்கும் ப்ரஷ், மிட் டாய், துணிகள் முதலியவைகளையும் அனுப்புகிறோம். இந்த டிப்போ ஒரு கூட்டுறவு மொத்த வியாபார ஸ்டோர் போல் இப்போது வேலை செய்து வருகிறது. இங்கே இலாபமோ, கமிஷனோ கிடையாது.



இந்த நிதியின் பொருட்டு உதவப்படும் ஒவ்வொரு அணாவும், படைகளின் நன்மைகளுக்காகவே செல வாகிறது. இந்த டிப்போவில் வேலை செய்கிறவர் களுக்குச் சம்பளம் கிடையாது. இங்கே வேலை செய் கிற குமாஸ்தாக்களுக்குச் சம்பளமும் கமிஷன் தொகையும் சென்னை அரசாங்கம் கொடுக்கிறது. இங்கு செய்யப்படும் வேலையைப் படைகளே பெரிதும் பாராட்டுகின்றன. போதுமான தொகை இந்த நிதிக்குச் சேர்ந்தாலல்லது, இந்த வேலைகளைக் குறைத்துக் கொள்ளும்படி நேரலாம். விலைவாசி கள் உயர்ந்து கொண்டு போகின்றன. ரேடியோக் களும் கிராமபோன்களும் கிடைப்பது அரிதாயிருக் கிறது. இவை கிடைக்கிற போது நாம் மொத்தமாக வாங்கி வைத்துக் கொண்டால் அல்லது, படைகளுக் குத் தேவைப்படும் போது நாம் அவற்றை கொடுத்து உதவ முடியாமற் போகும்.

ஒரு தமிழர் படையோ, தெலுங்கர் படையோ, மலையாளிப் படையோ தம் ஜில்லாவில் இருக்க வேண்டுமென்று சில ஜில்லாக்கள் கோரலாம். ஒரு குறிப்பிட்ட படை இன்ன இடத்தி லிருக்கின்றது என்னும் செய்தி மிகவும் இரகசியமா யிருக்க வேண்டும். என்றாலும், முற் கூறிய பொருள்களை எந்தப் படைக்கு வேண்டுமானாலும் இந்த டிப்போவி லிருந்து அனுப்பலாம். அவை அங்கே போய்ச் சேர்ந்ததாக நன்றியறிதலோடு தெரிவிக்கிறார்கள். எனவே இந்த நிதிக்கு பொருளுதவி மிகவும் அவசியம்.



### பெரிய பாம்பர் விமானங் கள் தயாராகின்றன.

இந்த "ஸ்டர்லிங்" பாம்பர் விமா னங்கள் கட்டும் தொழிற்சாலை யின் ஒரு பகுதியில் 5 பிரிட்டிஷ் பெண்கள் வேலை செய்கிறார்கள்.

(3-ம் பக்கம்—தொடர்ச்சி)

அல்ல. உடனே அனைவரும் அவரவர்கள் இடங்களுக் குப் போய்ச் சேர்ந்தார்கள். எதிரி கப்பலைச் சுட்டுத் தள்ளவேண்டு மென்பது அவர்கள் ஆசை போலும்.

கப்பலின் காபிதன் மிகச் சிறந்த முறையி லிருந் தார். அவர் கொஞ்சங் கூடப் பதற வில்லை. அவ ருடைய போக்கி லிருந்து அமைதியோடும் தைரியத் தோடும் இருக்க எங்களுக்கு ஊக்கம் ஏற்பட்டது..... போராட்டம் பயனற்றதாகவே ஆரம்ப முதல் எமக் குத் தோன்றியது. என்றாலும், தைரியமாக எதிரி யைத் தாக்கியே தீருவது என்று அவர் உடனே முடிவு செய்தார். இது பற்றி கொஞ்சங் கூடச் சந்தேகமே கிடையாது.

எதிரி கப்பல் 10,000 டன் கப்பல். அதில் 5·5 அங் குல பீரங்கிகள் அமைக்கப் பட்டிருந்தன. இந்தக் கப்பல் இந்திய கப்பற் படையைச் சேர்ந்த "வங்கா ளம்" என்னும் கப்பலை கடும் நெருப்பைக் கக்கித் தாக்கிக் கொண்டிருக்கும் சமயத்தில், ஒரு தமாஷான சம்பவம் நடந்தது. அந்தக் கப்பலின இஞ்சினீர் தன் இஞ்சின் அறையை விட்டு வெளியே தலையை நீட்டி, என்ன நடக்கிற தென்று பார்க்க விரும்பி யவர், காபிதனைக் கண்டார். அவரைக் கூவி, அழைத்து "இந்தக் காட்டு மிராண்டி அலைகள் இப் போது என்ன சொல்லுகின்றன ஐயா?" என்று கேட்டார். இதைக் கேட்ட அனைவரும் சிரித்தனர்.

வாழ்வதா சாவதா எனத் தக்க போராட்டம் நடை பெற்றுக் கொண்டிருக்கும் போதுங் கூட, இவர்கள் தமாஷ் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றால், அவர்களின் உணர்ச்சி எப்படி இருந்தது என்பது இங்கே கவனிக்கத் தக்கது.

# முதலாவது வருஷாப்திகம்

பூஜைக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு, அப்படியே கொஞ்சம் உல்லாசமாக 'வாகிங்' போய் விட்டு வரலா மென்று வெளியே புறப்படுகிறோம், வானம் களங்கமற் றிருக்கிறது. அதனால் குடை, கிடை எதையும் கையில் எடுத்துக் கொள்ள வில்லை.

கடைத் தெருவிற்குப் போய் பூஜா திரவியங்களை எல்லாம் வாங்கிச் சேகரித்துக் கொண்டாகி விட்டது. அந்தச் சமயத்திலே திடீரென வானம் இருளுகின்றது. வாடைக் காற்று வீசுகிறது. சட்டையைச் சரிப்படுத்திக் கொண்டு, கழுத்துப் பொத்தானையும் மாட்டிக் கொள்ளுகிறோம். மழை வந்து விடுமோ என்று எண்ணுவதற் குள்ளாகவே, தடதட என்று மழை கொட்ட ஆரம்பித்து விடுகிறது. மின்னல், இடி, காற்று எல்லாம் பிரமாதமாகஇருக்கிறது, 'சட சட சட சட்' என்ற பேரொலி யோடு ஒரு இடி இடிக்கிறது. சமீபத்திலே எங்கேயோ ஓரிடத்தில் இடி விழுந்திருக்கிறது என்று எண்ணுகிறோம். கொஞ்ச நேரத்திற்குள் விஷயம் நம் காதிற்கு எட்டி விடுகிறது. பச்சைப் பனை மரம் ஒன்றின் மீது இடி விழுந்தது காரணமாக, அது பற்றி எரிகிறது என்றும், அதற்கு சமீபத்தில் இருந்த பெரிய மரத் தடியிலே மழைக்காக ஒதுங்கி யிருந்த பலரில், சில பெண்களும், குழந்தைகளும், ஒரு பசு மாடும் இறந்து விட்டார்கள் என்றும், மின்னலைப் பார்த்ததன் பயனாக ஒரு சிலரது கண் பார்வை மழுங்கி விட்ட தென்றும் கூறப் படுகிறது. மழை பெய்கிற ஜோரைப் பார்த்தால், ஊரையே பாழடித்து விட்டுத் தான், இந்த மழை நிற்குமோ என்று எண்ண வேண்டி யிருக்கிறது. வீட்டிற்குப் போய்ச் சேரப் போகிறோமா, நல்ல காரியமான பூஜை இடைஞ்சலில்லாமல் நடக்கப் போகிறதா என்ற கவலைகள் தோன்றுகின்றன. ஆனால் அந்த மழை ஒன்றல்ல, இரண்டல்ல, ஒன்பது நாட்கள் விடாது அடித்தாலும், எப்படியும் ஒரு நாள் நின்று தானே தீர வேண்டும்; வருடம் 365 நாட்களும் வானம் இருண்டு கொண்டும், மேகங்கள் அட்டகாசம் செய்து கொண்டும், உலகோர் அவஸ்தைப் பட்டு கொண்டுமா இருக்கிறார்கள்? இல்லையே? அப்படியானால், இப்பொழுது பொழிந்து தள்ளும் மழையைக் கண்டும் பயப்பட வேண்டியது இல்லையே! மழை நின்று, இந்தச் சமயம் படு மோசமாகத் தோன்றும் நிலைமை மாறி, எங்கும் பயிர்கள் செழித்து வளர்ந்து, ஊரார் மகிழும் காலம் வருவது இயற்கை தானே என்ற நம்பிக்கை நம் மனதிலே தோன்ற வேண்டியது தான் நியாயம்.

மேலே விவரிக்கப் பெற்றுள்ள காட்சிக்கும், சென்ற வருஷம் டிஸம்பர் மாதம் ஏழாந் தேதி அதி காலையில் பஸிபிக் மகா சமுத்திரத்திலே நடந்த சம்பவங்களுக்கும், அதன் பின் நடந்து வரும் சம்பவங்களுக்கும் பலவிதங்களில் ஒற்றுமை இருப்பதைக் கவனியுங்கள்.

சென்ற வருடம் டிசம்பர் மாதம் ஏழாந் தேதியன்று இரு ஜப்பானிய தூதர்கள், அமெரிக்கத் தலைநகருக்குச் சென்று, அமெரிக்க அதிகாரிகளுடன் சமரசப் பேச்சுப் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுதெல்லாம் பஸிபிக் மகா சமுத்திரத்திற்கு மேலே ஒரு களங்கமு மில்லாதிருந்தது. ஐரோப்பாவில் நடக்கும் அட்டூழியங்களைத் தடுத்து நிறுத்தி, உலகிலே சமாதானத்தை நிலை நாட்ட அரும் பாடு பட்டுக் கொண்டிருந்த பிரிட்டனுக்கும், மற்ற நேச நாடுகளுக்கும் உதவும் நோக்கத்துடன், அமெரிக்கா, குத்தகைக் கடன் முறையில் பலவித உணவுப் பொருள்களையும் யுத்தத் தளவாடங்களையும் அனுப்பிக் கொண்டிருந்தது. அவ்வளவு தான். அதற்கு மேற்கொண்டு, அதற்கு போரிலிறங்கும் எண்ணம் லவலேசமும் கிடையாது. இந்த உலகத்திலே எந்த ஒரு மூலையில் யுத்தம் எனும் தீ மூண்டாலும், அதனால் உலகின் மற்ற பாகங்களில் உள்ளவர்களுக்கு எப்படியாவது அவஸ்தைகள் ஏற்பட்டே தீரும்; காற்று கொஞ்சம் சாதகமாகவும் வேகமாகவும் வீசத் தலைப்பட்டால், எதிர்பாராத பிரதேசங்களுக் கெல்லாம் அந்த நெருப்பு திடீரெனப் பாயக்கூடும்; அதுவரை அந்த நெருப்பைக் கவனியாது விட்டு வைப்பது சரியல்ல என்ற எண்ணத்தோடு தான் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் நேச நாடுகளுக்கு உதவி செய்ய, பல சட்டங்களை மளமளவென சிருஷ்டித்து, அவற்றை அமுல் படுத்தவும் ஆரம்பித்தார்.

ஆனால், ஜப்பான் சமாதானம் பேசுகிறேன் என்ற போர்வையின் கீழ், அமெரிக்காவை மோசமான முறையில் தாக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் என்று பலர் எதிர்பார்க்கவே யில்லை. அதன் பலன் என்ன? ஆரம்பத்திலே அமெரிக்காவுக்கும் சரி, நேச தேசத்தினருக்கும் சரி ஏக நஷ்டங்கள் ஏற்பட்டு விட்டன.

எதிர்பாராத சமயத்தில் பஸிபிக் மகா சமுத்திரத்தின் மீது வானம் இருண்டது. இடியும், புயலும், மழையும் ஏக காலத்தில் சேர்ந்து அடிப்பது போல், ஜப்பானியர் 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் 7-ந் தேதியன்று ஹாவாய்த் தீவில் உள்ள முத்துத் துறைமுகத்தையும், சிங்கப்பூர் அருகே உள்ள பிரதேசங்களையும் தாக்கி அட்டகாசம் செய்து விட்டனர். அப்புறம் அமெரிக்கர் சும்மா இருப்பார்களா? ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும் போர் மூண்டு விட்டது என்ற செய்தி உலகோர் செவிகளில் விழுந்தது. அனைவரும் திடுக்கிட்டனர்.

அமெரிக்கருக்கு ஏற்பட்ட நஷ்டங்களையும், சிங்கப்பூர் அருகே இருந்த இரு பெரிய யுத்தக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன என்ற செய்தியையும் கேட்ட போது, இனி என்ன ஆகப் போகிறதோ என்ற கவலை எல்லோரது மனங்களிலும் எழுந்தது உண்மை. "சாது, சாது என்கிற சந்நியாசி, தடிபோல இரண்டு பிள்ளைகளைப் பெற்றான்" என்கிற பழமொழிப்படி, ஏதோ 'கீச கீச' என்று கத்தும் ரப்பர் பலூன்களையும், தலையாட்டி 'செலுலாயிட்' பொம்மைகளையும், சீவச்சீவ ஒடிந்து விழும் பென்ஸில்களையும் தயாரித்துத் தள்ளிக் கொண்டிருக்கும் ஜப்பான் தேசம், உண்மையில் பரம சாதுவான தேசம் என்றே எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கையில், அது ரகசியமாகவே ஒரு பெரிய யுத்தத்திற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டிருக்கிறது என்பது நாளடைவில் தெரியலாயிற்று.

தூரக் கீழ்த்திசையில் இவ்வாறு ஜப்பான் யுத்தத்தைக் கிளப்பி விடும் என்ற எண்ணமே இல்லாததால், அப்பிரதேசத்திற்கு அதிகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை அப்பொழுது செய்து வைத்திருக்க வில்லை. அதை அறிந்து கொண்ட ஜப்பானியர், மளமளவென வெற்றிமேல் வெற்றியாக வாரிக் கொட்டிக் கொண்டு விட்டார்கள். அவர்கள் கையில் சிக்கும் பிரதேசங்களின் பரப் பளவையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் கவனித்தபோது, 'ஏதேது, ஜப்பானை இனித் தடுத்து நிறுத்தவே முடியாது போலிருக்கிறதே!' என்ற கவலை ஏற்படத் தான் செய்தது.

ஹாங்காங், மலேயா, சிங்கப்பூர், ஜாவா, சுமத்ரா, பாலி, அந்தமான், பிலிப்பைன் தீவுகள் எல்லாம் அதி வேகமாக அவர்கள் வசப்பட்டன. நியூ கினியாவிலும், சாலமன்ஸ் தீவுகளிலும் அவர்கள் இடம் பிடித்துக் கொண்டுவிட்டார்கள். ஆஸ்திரேலிய நகரங்கள் சிலவற்றின் மீது ஜப்பானிய விமானங்கள் குண்டுகளை வீசத் தொடங்கிவிட்டன. அமெரிக்கா செல்லும் பாதையில் உள்ள சில முக்யமான தீவுகளையும் ஜப்பானியர் பிடித்து விட்டார்கள். இந்தோ சீனா, தாய்லாந்து தேசங்களோடு, பர்மாவும் அவர்கள் ஆதிக்கத்தில் சிக்கிவிட்டது. அரிசி, எண்ணெய், ஈயம், ரப்பர், சர்க்கரை இத்தகைய பொருள்கள் அளவில்லாது அவர்களுக்குக் கிடைத்து விட்டன. ஜப்பானியர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே யில்லை. ஆஸ்திரேலியா மீது கூட படை யெடுத்து விடுவார்களோ என்று, நேச நாட்டினர் நினைத்தனர். அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு உதவி வரும் மார்க்கத்தில் எல்லாம் ஜப்பானியரது தொல்லை இருந்தது. இந்து மகா சமுத்திரத்தில் கூட, ஜப்பானியர் தென்பட்டனர். இலங்கை மீதும்,



இந்தியத் துறைமுகங்கள் சிலவற்றின் மீதும் கூட குண்டுகளை வீசி விட்டார்கள். சென்னையிலும் ஒரு நாள் அபாய அறிவிப்புச் சங்கு ஊதி விட்டது. ஊரே அல்லோல கல்லோலப்பட்டுப் போய்விட்டது. ஜப்பானியர் அடையும் வெற்றிக்கு முடிவே கிடையாதா? அடுத்தாப் போல அவர்கள் இந்தியா மீது பாயப் போகிறார்களா? ஆஸ்திரேலியாவின் கழுத்திலே கத்தியை வைக்கப் போகிறார்களா? ருஷ்யாவோடு மாட்டிக் கொள்ளப் போகிறார்களா? என்ற கேள்வியையே ஒவ்வொருவரும் கேட்கலாயினர்.

இதற்கிடையிலே அமெரிக்கா உஷாராகி விட்டது. ரோஷத்தோடு அந்நாட்டினர் யுத்த முயற்சியில் ஈடுபட்டனர். சதா சர்வகாலமும் சுக வாழ்விலேயே ஈடுபட்டிருந்த அவர்கள், தங்கள் சுகங்களை மறந்தனர். ஜப்பானியரது கொட்டத்தை அடக்குவது எனத் தீர்மானித்தனர். அளவற்ற செல்வம் படைத்த அந்நாட்டினர் நினைத்தால், நடவாத காரியமும் உண்டா என்ன? அங்குள்ள பிரமாண்டமான தொழிற்சாலைகளில் அதுவரை செய்யப்பட்டு வந்த வேறு வேலைகளுக் கெல்லாம் முற்றுப்புள்ளி குத்திவிட்டு, எங்கும் யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யும் வேலையைத் தொடங்கினர்.

அமெரிக்க சரித்திரத்திலேயே இதுவரை கேள்விப் பட்டிராத அவ்வளவு வேகத்துடன் புதுக் கப்பல்கள் கட்டப்பட்டன. மகா சக்தி வாய்ந்த "பறக்கும் கோட்டைகள்" என்னும் விமானங்கள் கணக்கின்றித் தயாரிக்கப்பட்டு, உலகின் பல கோடிகளுக்கும் அனுப்பப் பெற்றன.

அப்பால் பவளக் கடலிலும் சரி, மிட்வே தீவுகள் அருகிலும் சரி, ஜப்பானியருக்கும் அமெரிக்கருக்கும் கடும் போர் மூண்டது. அங்கெல்லாம் அமெரிக்கர்கள் ஜப்பானியரது வாலை அறுத்துத் துரத்திவிட்டனர். அப்புறம் தான் ஸாலமன் தீவிலும், குடால்கனாலிலும், நியூகினியாவிலும் அமெரிக்கரது பிடி வலுத்தது. இங்கெல்லாம் ஜப்பானியர் அடைந்த நஷ்டங்களுக்கு அளவே யில்லை.

ஆரம்பத்திலே ஒரேயடியாக இருண்டு போன வானம் இப்பொழுது தான் மெள்ள மெள்ள வெளுக்கத் தொடங்கி யிருக்கிறது. இந்தச்சமயத்தில் 1942-ம்௵ டிசம்பர்௴ 7உ வந்து போய்விட்டது. ஆகவே, ஜப்பான் அமெரிக்காவைப் போரிலிறங்கச் செய்து, சரியாக ஒரு வருஷம் பூர்த்தியாகி விட்டது.

இந்த ஒரு வருடம் பூர்த்தியான இந்தச் சமயத்திலே, ஜப்பானின் நிலைமை என்ன, அமெரிக்காவின் நிலைமை என்ன என்று கவனிப்பது ரஸமான விஷயமல்லவா?

சென்ற வருஷம் டிசம்பர் 7உக்கு முன்பாக ஜப்பான் சீனாவுடன் போராடுவதிலேயே பூரணமாக ஈடுபட்டிருந்தது. ஆயுத வலு அதிகமில்லாத அந்த நாட்டினிடம் நடத்தும் போரிலேயே வெற்றி காணாத ஜப்பான், மகா பலிஷ்டர்களான நேச நாட்டினரையும் பகைத்துக் கொண்டது. அதனால், ஜப்பானிய ராணுவத்திற்கும், விமானப் படைக்கும், கப்பற் படைக்கும் புது வேலைகள் நிறைய வந்து விட்டன. சீனாவில் கிடைத்திருந்த வெற்றிகளில் பல, தோல்விகளாக மாறின. அகலக் கால் வைத்துவிட்டதன் பயனாக, பொறுப்புக்களும் அதிகமாயின. பாதுகாப்பு வேலையும் சிரமமாகி விட்டது. முன்போல் இல்லை அதன் சக்தி இப்பொழுது. அதனுடைய கப்பற் படை இப்பொழுது பெரிதும் சீர்குலைந்திருக்கிறது. ஏகப்பட்ட கப்பல்கள் நீருக்கடியில் போய்விட்டன. இதுவரை இறந்தோ, காயப்பட்டோ போன ஜப்பானியரது எண்ணிக்கை இரண்டரை லக்ஷத்திற்கும் மேலாகிவிட்டது. இதிலே கடற் படையைச் சேர்ந்தவர்களது எண்ணிக்கை முப்பத்தேழாயிரமாம், அதாவது ஜப்பானின் கடல் வீரர்களில் பத்திலொரு பங்கினர், கோவிந்தா ஆகிவிட்டார்கள். இன்னும் எத்தனை பேர்கள் காலியாகப் போகிறார்களோ தெரியவில்லை.

ஜப்பானியரது கையில் உள்ள பர்மா, இந்தோ சீனாப்பிரதேசங்கள்மீது அமெரிக்க விமானங்கள் தினம் பட்டப் பகலிலேயே குண்டுகளை வீசி வருகின்றன. அமெரிக்காவின் உற்பத்தி சக்தி நாளுக்கு நாள் பெருகி வருகிறது. இப்பொழுது அங்கே ஐம்பதாயிரம் விமானங்களுக்கும் அதிகமாகத் தயாரிக்கப்பட்டு விட்டது. வருகிற வருடத்திலே இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகக் கூடும். சென்ற சில நாட்களுக்குள் பல யுத்தக் கப்பல்களும், விமானந் தூக்கிகளும் பூர்த்தியாகி, ஜலத்தில் மிதக்க விடப்பட்டன. அமெரிக்க இராணுவத்திலே சேரும் ஆட்களின் எண்ணிக்கைக்கு அளவேயில்லை. ஒரு நாளைக்கு 20 கோடி டாலரைச் செலவழிக்கிறது அமெரிக்கா என்றால், அதன் யுத்த முயற்சி எத்தகையது என்று பார்த்துக் கொள்ளுங்களேன்.

இத்தகையதோர் தேசம் ஜப்பானை இன்னும் என்னென்ன பாடு படுத்தப் போகிறது என்பதை இப்பொழுது நாம் சொல்லத் தயாராக இல்லை. நீங்களே எல்லாவற்றையும் பார்க்கப் போகிறீர்கள்! சென்ற வருடம் இருந்ததைப் போன்ற அவ்வளவு வலு ஜப்பானியருக்கு இப்பொழுது இல்லை. இவ்வருடம் உள்ள வலுவை விட, வருகிற வருடம் உள்ள வலு குறையத் தான் செய்யும். ஜெர்மனியோடும், இத்தலியோடும் கைகோர்த்துக் கொண்டு உலகோரின் பழிப்பிற்குக் குறியான பலன் ஒன்றைத் தவிர, ஜப்பான் தனது பங்காளிகளிடமிருந்து ஏதாவது உருப்படியான உதவியைப் பெற்றிருக்கிறதா? பெறமுடியுமா? எல்லாம் வீண் சிநேகம் தான். இப்பொழுது ஜப்பானின் நிலைமையையும், அது அடைந்து வரும் தோல்விகளையும், பெருகி வரும் அமெரிக்காவின் சக்தியையும் கவனிக்கும் பொழுது, 1942-ம்௵த்திய டிசம்பர்௴ 7உயன்று நடந்து போனது ஜப்பானிய அமெரிக்க யுத்தத்தின் முதலாவது வருட முடிவு என்று சொல்லுவதற்குப் பதிலாக, ஜப்பானுக்கே முதலாவது வருஷாப்திகம்; அதாவது அதன் முடிவின் முதல் வருஷம் என்று சொல்லுவதே சரியாக இருக்கும் என்று படுகிறது. நேற்றையத்தினம் நம்மை ஒருவன் திடீரென எதிர்பாராத சமயத்தில் தாக்கினான், அதனால் நாம் ரொம்ப அவஸ்தைப் பட்டுப் போனோம் என்பதால், இன்றும் நாம் அஜாக்ரதையாகவோ, பலமற்றோ இருக்க வேணுமென்ப தில்லை பாருங்கள்! இன்று நாம் உஷாராகி விட்டோம். எவன் வந்தாலும் பல்லை உடைத்துக் கையில் கொடுக்கச் சித்தமாக இருக்கிறோம். எதிரியும் இதைத் தெரிந்து கொண்டிருப்பான். தன் பற்களை உதிர்த்துக் கொள்ள ஆசைப்படுவானா என்ன அவன்?

## மீட்சி வேலைக்கு இனாம்

இந்திய கடற்கரையை யடுத்துள்ள கடலில் சிக்கித் தவிக்கும் விமானிகளை மீட்கிறவர்களுக்கு இனாம் வழங்குவதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. இது பற்றி செம்படவர்களும் கரை யோரங்களில் ஓடிக் கொண்டிருக்கும் படகுக் காரர்களும் ஒத்துழைக்குமாறு கோரப்படுகிறது. இப்படி மீட்கிறவர்களுக்கோ, அல்லது மீட்சி ஸ்தாபனங்களுக்கோ, உள் நாட்டு சிவில் அதிகாரிகள் மூலமாகக் கீழ்க்கண்ட விகிதப்படி இனாம் தொகைகள் கொடுக்கும்படி இந்தியா அரசாங்கத்தார் அனுமதித்திருக்கிறார்கள்.

உயிரோடு காப்பாற்றப்பட்ட ஒவ்வொருவருக்காக .. .. .. ரூ. 100

மீட்கப்பட்ட ஒவ்வொரு பிணத்திற்கும் ரூ. 50

நம் நாட்டுக் கடற்கரை மிகவும் நீளமானது. இது நெடுக நம் விமானங்கள் பறக்கின்றன. இவற்றில் ஏறிப் போகும் விமானிகளுக்கு ஆபத்து ஏதேனும் நேர்ந்தால், அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட மீட்சிக்காரர்கள் வேலை ஒருபுற மிருக்க, பொது ஜனங்களின் ஒத்துழைப்பு மிகவும் சிறந்த பலன் தரும்.

## சென்னையின் தாராளம்

**7-வது குதிரைப் படை தலைவர் கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் சென்னை கவர்னருக்கு எழுதி யிருக்கிறார் :—**

"ஆயுதந் தாங்கிய 19 காரியர்களையும் 5 மோட்டார் கார்களையும் தாங்கள் அதிக தாராளப் போக்கோடு கொடுத்துதவியதை இப்படையைச் சேர்ந்த அனைவர்களும் பெரிதும் பாராட்டுகிறார்கள். அவர்கள் சார்பாக நான் தங்களுக்குப் பெரிதும் நன்றி செலுத்துகிறேன்."

"ஆதியில் இந்தப் படை சென்னைப் படையாகத் தான் இருந்தது. அப்போது இதன் பெயர் 'சென்னைக் குதிரைப் படை' தங்களுடைய தாராளப் போக்கின் பயனாக, நம் பழைய உறவு மீண்டும் நம் ஞாபகத்திற்கு வருகிறது. சென்னை மாகாணத்திலுள்ள சில இனத்தவர்களின் பெயர்களால் வழங்கப்படும் இந்த ஆயுதங்களைக் கொண்டு, போர்முனைக்குப் பெருமையோடு நாங்கள் போவோம்."



லிபியப் பாலை வனத்தில் நடைபெற்ற போராட்டத்தின் போது கைதியான ஜெர்மானியர்கள்.

## சந்தேகியா யிருங்கள்

எதுவும் உண்மை என்று தெளிவாகத் தெரிந்தால் அல்லது, சந்தேகி எதையும் நம்ப மாட்டான். பொய் வதந்திகள் சம்பந்தப் பட்ட வரை, சந்தேகி யாகவே இருங்கள். உங்களுக்குத் தப்பான கருத்துக்களை உண்டாக்க வேண்டி, இந்தப் பொய் வதந்திகள் பெரும்பாலும் ஜப்பானி லிருந்து கிளம்புகின்றன.

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியர்களுக்கு விரோதமாகத் தேசியப் போர் முனையை அமையுங்கள்.



# "ஜெர்மனியை ஒருகை பார்த்து விடுவது"

## உலகமே சோவியத் மக்களைப் பாராட்டுகிறது

"ரஷ்யா மீண்டும் அடிக்கிறது" என்னும் தலைப்போடு லெப்டினென்ட் ஜெனரல் ஜி. என். மோல்ஸ்ஓர்த் டில்லி ரேடியோ மூலம் சமீபத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கமாவது :—

சோவியத் ரஷ்யாவில் நடைபெறும் யுத்தத்தைக் குறித்து சென்ற ஜூன் மாதம் நான் ஒரு பிரசங்கம் செய்தேன். இனித் தாமதமில்லாமல் ஜெர்மன் படைகள் சோவியத் படைகளைத் தாக்கும் என்று நான் கூறினேன். அதன்படியே ஜெர்மானியர்கள் கடுமையாகத் தாக்கினார்கள். அந்தத் தாக்குதலை எப்படி சோவியத் படைகள் தடுத்தன என்பதைக் குறித்து இப்போது சில வார்த்தைகள் சொல்லலாமென்று நினைக்கிறேன்.

கிழக்கு நோக்கி மேலும் மேலும் என் தாக்கிக் கொண்டு போக வேண்டிய அவசியம் ஹிட்லருக்கு ஏற்பட்டது என்பதை, நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அப்போது தான் ரஷ்யப் போராட்டத்தின் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளவும், பொதுவாக யுத்தத்தின் போக்கிற்கும் அதற்கும் உள்ள தொடர்பையும் உணர்ந்து கொள்வதற்கும் கூடும். இவற்றை உணர்ந்து கொள்ளாவிட்டால், சோவியத் படைகள் வெற்றியடைந்ததற்கு முக்கியமான காரணங்கள் எவை என்று தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியாது.

1941-ம் வருஷத்தில் ஜெர்மானியர்கள் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்க வில்லை. தம்மைத் தாக்கிய ஜெர்மன் படைகளை சோவியத் படைகள் நன்றாகத் தடுத்தன. அன்றியும் நாசகால வேலையையும் ரஷ்யர்கள் மேற் கொண்டார்கள். இலகுவாகவும் விரைவாகவும் தாம் சோவியத் படைகளை வென்று விடக் கூடுமென்று ஹிட்லர் மனப்பால் குடித்துக் கொண்டிருந்ததில், மண்ணைப் போட்டார்கள். தன் கடுமையான தாக்குதலினால் சோவியத் படைகள் கவிழ்ந்து விடுமென்று நினைத்தார் ஹிட்லர். ஆனால் ஜெர்மானியர்களின் கடும் தாக்குதலினாலும் கொடிய மிருகத் தனத்தினாலும், ரஷ்யர்கள் கோபம் பொங்கியது. ஊக்கம் மிகுந்தது. ஜெர்மனியை ஒரு கை பார்த்து விடுவது என்று, அந்நாட்டு மக்கள் அனைவரும் கொதித் தெழுந்தனர். ஜெர்மானியர்களின் சிறந்த படைகளுக்குச் சரியானபடி பதில் சொல்லக் கூடியவர்கள் ரஷ்யர்கள் தான் என்று உலக மக்கள் அனைவரும் பாராட்டத் தக்க நிலையைத் தமக்குத் தேடிக் கொண்டார்கள். சோவியத் நாட்டிற்குள் ஹிட்லர் வெகுவாகப் புகுந்து உயிருக்கும் பொருளுக்கும் ஏராளமான நாசத்தை விளைத்தார். என்றாலும், அவர் போராடி ஓய்கிற போதுங் கூட, சோவியத் படைகள் முன் போலவே கடுமையாக எதிர்த்துப் போராடுவதைக் கண்டார். அன்றியும் ஏராளமான படைகளையும் தளவாடங்களையும் தான் இழந்ததையும் உணர்ந்தார். போதாக் குறைக்குக் குளிர் காலமும் வந்து விட்டது. இந்தக் குளிரைத் தாங்கிக் கொள்ளத் தக்க வசதிகள் ஜெர்மன் படைகளுக்கு இல்லை. அந்தப் படைகள் எவ்வளவு கஷ்டப் பட்டன வென்று நமக்குத் தெரியாது.

என்றாலும், ஒரு விஷயம் மட்டும் உண்மை தான். என்ன தான் நாடுகளைக் கைப்பற்றியதாகத் தன் நாட்டு மக்களுக்கு ஹிட்லர் எடுத்துச் சொன்னாலும், முதலில் திட்டமிட்டபடி எதுவும் நடைபெற வில்லையென்று அவர்கள் தெரிந்து கொண்டார்கள்.

ஜெர்மானியர்களுக்கு ஒரு புறம் ஆள் பலமும் ஆயுத பலமும் ஏராளமாக நஷ்டம். மற்றொரு புறம், சோவியத் படை பலத்தை நாசஞ் செய்து விடவேண்டு மென்னும் நோக்கம். இவை ஈடேற வில்லை. கடைசியாகப் பொருளாதாரத்தைக் கைப்பற்ற வேண்டு மென்னும் நோக்கமும் ஈடேற வில்லை. ரஷ்யாவின் சிறந்த களஞ்சியங்களையும் எண்ணெய்க் கிணறுகளையும் ஜெர்மானியரால் கைப்பற்றக் கூடவில்லை.

**தானியங்களும் எண்ணெயும் தேவை.**

ஐரோப்பாவில் இத்தனை நாடுகளையும் ஜெர்மனி கைப்பற்றி யிருந்தும் கூட, தானியங்களும் எண்ணெயும் ஹிட்லருக்கு இன்னும் வேண்டி யிருக்கிறது. உக்ரெய்ன் மாகாணத்தை 1941-ம் வருஷத்திலேயே ஹிட்லர் கைப்பற்றிக் கொண்டார். இங்கே ஏராளமான தானியம் விளைகிறது. என்றாலும் ஹிட்லரின் தேவைகளுக்கு இவை போத வில்லை. அது போலவே, அவர் வெகு இலகுவில் கைப்பற்றிய ருமேனிய எண்ணெய்க் கிணறுகளி லிருந்து தன் தேவைக்குப் போதுமான அளவு எண்ணெயைப் பெற அவரால் முடிய வில்லை. 1941-42-ம் வருஷத்திற்குள் கட்டாயம் 'குபான்' என்னும் பெரும் தானியக் களஞ்சியத்தைக் கைப்பற்றி விடலாமென்று ஹிட்லர் நினைத்தார். இக் களஞ்சியம் டான் ஆற்றிற்கும் காகஸஸ் எண்ணெய்க் கிணறுகளுக்கும் தென்புற மிருக்கிறது. காஸ்பியன் கடலையடுத்து விளைச்சல் நிலங்கள் இருக்கின்றன. இங்கிருந்து வட ரஷ்யாவிற்கு சப்ளைகள் அனுப்ப வேண்டுமானால், வால்கா ஆற்றின் வழியாக அனுப்ப வேண்டும். இந்தப் பாதையை இந்த வருஷத்திலேயே வெட்டி விட வேண்டு மென்று ஹிட்லர் விரும்பினார். இரண்டாவதாக, காகஸஸ் எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்ற வேண்டு மென்று எண்ணினார். மூன்றாவதாக' குளிர் காலம் வரு முன்பு, தான் கைப் பற்றிய காக்கஸஸ் பக்கத்தில் ரஷ்யப் பகுதிகளில் வேரூன்றிக் கொள்ள வேண்டு மென்றும் விரும்பினார். 1943-ம் வருஷத்தில் ஈரான் வழியாக, தென் ஈரான், ஈராக்கு, பாரசீக வளைகுடா, ஆகிய இடங்களிலுள்ள எண்ணெய்க் கிணறுகளைக் கைப்பற்ற வேண்டு மென்பதும் அவருடைய நோக்கம் போலிருக்கிறது.

1941-42-ம் வருஷத்திய மழை காலத்தில் ஜெர்மன் படைகளைப் புதுப்பித்து அமைத்தார். வசந்த காலம் பிறந்ததும் தான் ஏதோ பிரமாதமாகத் தாக்கப் போவதாக விளம்பரப் படுத்திக் கொண்டிருந்தார். ஆனால் ஜெனரல் டிமோஷெங்கோ கார்கோவைத் தாக்கி, இந்த எண்ணத்தில் மண்ணைப் போட்டார். இதனால், ஜெர்மன் வசந்த காலத்

தாக்குதல் தடைப்பட்டது. முதலில் தான் எப்படியும் உள்ளே நுழைந்து விடவேண்டு மென்னும் நோக்கத்தோடு தன் படைகளுக்கும் தளவாடங்களுக்கும் நேரக் கூடிய நஷ்டங்களையும் பொருட் படுத்தாதபடி, ஏராளமான எல்லா வகைப் படைகளையுங் கொண்டு ஹிட்லர் தாக்கினார். செபஸ்டபோலிலும், கொர்ச்சிலும், சோவியத் படைகள், எதிரிகளின் தாக்குதலுக்குத் தகுந்தபடி எதிர்த்து நின்றன. இதனாலும் ஹிட்லர் முன்னேற்றம் தடைப் பட்டது. என்றாலும், கிரிமியாவும், டான் நதிக் கரையிலுள்ள ரஸ்டோவ் நகரமும் ஜெர்மானியர் வசமாயின. வட கடலில் உள்ள துறைமுகங்கள் மூலமாக ரஷ்யர்களுக்கு ஏராளமான டாங்கிகளையும், விமானங்களையும் தளவாடங்களையும் அரும்பாடு பட்டு அனுப்பிக் கொண்டிருந்தன. அதே சமயத்தில் ஜெர்மன் விமானப் படைகளின் கவனத்தைச் சிதறடிக்கும் நோக்கத்தோடு மேல ஜெர்மனியிலுள்ள கைத் தொழில் பகுதிகளில், ஏராளமான வெடி குண்டுகளை பிரிட்டிஷ் விமானப் படை கொண்டு போய் எறிந்து வந்தது. நிற்க, காகஸஸ பக்கம் ஜெர்மன் படைகள் புகுந்து முன்னேறுவது குறையத் தலைப் பட்டது. அதே சமயத்தில் ஸ்டாலின்கிராட்டில் போராட்டம் கடுமையாக ஆரம்பமானது. நாட்கள் கழிந்தன; மழை காலமும் வந்தது. ஸ்டாலின்கிராடை சோவியத் படைகள் தற்காத்துக் கொண்டிருக்கக் கூடுமானால், ஜெர்மானியர்களுடைய எண்ணங்கள் பலிக்காமற் போகும் போலிருந்தது. இங்கே வெற்றியுந் தோல்வியும் மாறி மாறி ஏற்பட்டன. இங்கே ஜெர்மன் படைகள் இருப்பதனாலேயே வால்கா ஆற்றில் ஜெர்மன் கப்பல்கள் போக்கு வரவு மிகவும் கஷ்டமா யிருக்கும். ஆனால் ஸ்டாலின்கிராடிலுள்ள சோவியத் படையின் முக்கியமான நோக்க மென்ன வென்றால், காக்கேஷியாவிற்கு அப்பாலுள்ள பகுதிகளைக் காத்துக் கொண்டிருக்கும் சோவியத் படைகளை வெல்லுவதற்கு ஹிட்லர் கொண்டு வரும் படைகளை வளைத்து மடக்கிக் கொள்ள வேண்டு மென்பது தான்.

காகஸஸ் பிரதேசத்தில் மட்டு மன்றி ஸ்டாலின் கிராடுக்கு வடக்கேயும் தெற்கேயுங் கூட சோவியத் படைகள் ஜெர்மன் படைகளைத் தாக்க ஆரம்பித்து விட்டன. ஸ்டாலின்கிராடிலுள்ள ஜெர்மன் படைகளுக்கும் மற்ற ஜெர்மன் படைகளுக்கும் தொடர்பு ஏற்படாதபடி செய்து, பிறகு அப் படைகளை அழித்து விட வேண்டும் என்பது தான் சோவியத் படைகளின் நோக்கம். இந்த முயற்சி வெற்றி பெற்றால், சிறந்த பலனுண்டு. என்றாலும் ஒரு விஷயத்தை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சமபூமிகளைச் சேறாக்கும் மழை காலம் கடந்து விட்டது. இப்போது கடுமையான வரண்ட குளிர் காலம். படைகளும் ஆயுதந் தாங்கிய வண்டிகளும் போக வரத் தகுந்தபடி அங்கே தரை இறுகி இருக்கிறது. இதற்கு முன்பு, மழை காலத்தில் பெய்யும் பனிக் கட்டிகள் தரை யெல்லாம் நிறைந் திருந்தன; ஆகையால் அப்போது போக்கு வரவு மிகவும் கஷ்டமா யிருந்தது.

இது தான் நிலைமை. ஜெர்மானியர் எண்ணங்கள் பலிக்க வில்லை. ஹிட்லரும் அவருடைய படையினரும் சோர்வடைந் திருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் குளிர் காலமும் வந்து ஒத்துக் கொண்டது.

இவற்றால் எதிர் காலத்தில் ஏற்படக் கூடிய இலாப நஷ்ட மென்ன? ஹிட்லர் திட்டப்படி நடக்க வில்லை. நேச நாடுகளின் பலம் பெருகப் பெருக, ஒரு நிமிஷங் கூட அவர் விளைக்க முடியா திருக்கிறார். இரண்டாவதாக, அவருக்கு மிகவும் அவசரமாக எண்ணெய் வேண்டி யிருக்கிறது. அதுவும் அவருக்குக் கிடைக்க வில்லை. மூன்றாவதாக ஏராளமான படைகளையும் தளவாடங்களையும் அவர் இழந்து போயிருக்கிறார். நான்காவதாக உலகத்தில் தனக்கிருந்த மதிப்பையும் இழந்து கொண்டிருக்கிறார்.

### ஹிட்லரைக் குழப்பும் கேள்வி.

வடக்கே லெனின்கிராடி லிருந்து தெற்கே டான் ஆறு வரை யுள்ள மிகவும் நீண்ட போர் முனையில், மிகக் கடுமையாகப் போராட வேண்டிய அவசியம், ஹிட்லருக்கும் அவரோடு சேர்ந்து அரை மனதோடு போராடும் அவருக் குட்பட்ட நாடுகளின் படைகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது. தாக்குதலைத் தாங்குவதில் மட்டு மன்றி, தாமே எதிரிகளைத் தாக்குவதிலும் தாம் சிறந்தவர்கள் என்று சோவியத் படைகள் மெய்ப்பித்து விட்டன. அடுத்தாற் போல் எப்போது எங்கே தாக்குவார்கள்? ஹிட்லர் மனதைக் குழப்பிக் கொண்டிருக்கும் கேள்வி இது தான். இன்னும் ஏன் எண்ணெய் கிடைக்க வில்லை யென்றும் பக்கூவிலும், டைப்லிஸிலும் ஏன் இன்னும் ஜெர்மன் கொடி பறக்கவில்லை யென்பதற்கும் ஜெர்மன் மக்களுக்கு என்ன சமாதானம் சொல்லுவது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார் ஹிட்லர். தானியக் களஞ்சியங்களைக் கைப் பற்றி விட்டதாக அவர் கூறிக் கொள்ளலாம். அவற்றால் பய னென்ன? சாகுபடி எல்லா வற்றையும் சோவியத் மக்கள் நாசஞ் செய்து விட்டார்களே. கூபான் பிரதேசத்தில் சாகுபடி செய்வதற்கு வேண்டிய ஆட்களும் இயந்திரங்களும் ஹிட்லரிடம் இல்லை. தான் இழந்த படையினரை எப்படி ஈடு படுத்துவது என்பது ஹிட்லருக்கு ஒரு கடும் பிரசினையா யிருக்கிறது. ஜெர்மானியர்கள் வசப்பட்ட ஐரோப்பிய நாடுகளில் தளவாட உற்பத்தி மிகவும் அதிகப்பட்டிருக்கிறது. ஆகவே இழந்த தளவாடங்களை ஈடு படுத்துவதைக் குறித்து அவர் அதிகக் கவலை கொள்ள வில்லை. ஆனால் அடுத் தடுத்துக் கடுமையான தோல்விகள் ஏற்பட்ட போதிலும், தளராது போராடக் கூடிய தேர்ந்த படையினருக்குப் பதிலாக, எங்கே போய் ஆள் பிடிப்பது என்பது தான் அவருடைய கவலை.

ரஷ்யாவிலும், ஆப்பிரிக்காவிலும், பசிபிக்கிலும் சமீபத்தில் நேர்ந்த சம்பவங்களி லிருந்து உலக மக்களின் மனதில் சிறந்த மாறுதல்கள் உண்டாவதைக் காணலாம்.

இவை வெற்றி பெறும் வழிகளே யொழிய, வெற்றி யல்ல. இந்த வெற்றியைப் பற்றி நாம் மனச் சாந்தி பெறலாம் என்றாலும், உண்மை நிலையை நாம் உணர வேண்டும். அளவு கடந்த நம்பிக்கைக்கு இடங் கொடாமல், நம்அறிவைக் கொண்டு ஆராய்ப் பார்க்க வேண்டும். வெற்றிக்கான அறிகுறிகள் வெகுவாகக் காணப் படுகின்றன; என்றாலும் இன்னும் பல வகைக் கஷ்டங்களுக்கு நாம் ஆளாகித் தீர வேண்டி யிருக்கிறது. வெற்றி பற்றி மகிழ்ச்சி யடைவதற்கு, இது வல்லசமயம். அச்சுப் படைகளில் காணப் படும் பிளவுகள் அகலப் படவேண்டும். இந்தப் பிளவுகள் மீண்டும் மூடி விடாதபடி பார்த்துக் கொள்ள, மேலும் அதிக முயற்சியை நேச நாடுகள் கைக் கொள்ள வேண்டும்.

நாம் இன்னும் கடுமையாக அடி மேல் அடி அடித்துக் கொண்டிருக்க வேண்டும். நம் தலைக்கு மேலே இருண்ட யுத்த மேகங்கள் கவிந் திருக்கின்றன. இம்மேகங்களை விரட்டி, வெற்றி சூரியன் ஒளி வீச வேண்டும். சமாதானமும் இன்பமும் நாட்டில் நிலவ வேண்டும். இவற்றிற்கு இது தான் வழி.

INTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE"; MOUNT ROAD, MADRAS.

Registered No. M-4483.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஆண்டு டிசம்பர்மீ 18உ, வெள்ளிக்கிழமை [இதழ் 50



பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த "பல்மார்" விமானம் தலைகீழாகப் பாய்ந்து தாக்கப் பழகுகிறது. இங்கே காணப்படுவது ஒரு விமானந் தாங்கிக் கப்பல். இந்தக் கப்பலி லிருந்து தான் இந்த விமானம் கிளம்பியது.

## போர் முரசு

### வடாப்பிரிக்கப் போர் முனை

ட்யூனிசுக்குத் தென் மேற்கே, நேச தேச விமானப் படையைச் சேர்ந்த பாரச்சூட் படையினர் விமானங்களிலிருந்து இறங்கி, அந்நகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றனர். இவர்கள் போகும் வழி நெடுக நாசப் படுத்திக் கொண்டு போகின்றனர். ட்யூனிசுக்கு 10 மைல் தூரம் வரை சென்று விட்டனர்.

* * * *

எதிரிப் படைகளை நேச தேசப் படைகள் அடித்து நொறுக்கி விட்டனர். இதன் பயனாக, அவர்கள் டெபூர்பா பகுதிக்குப் பின் வாங்கிக் கொண்டனர்.

* * * *

இது வரை டெபூர்பாவில் நேச தேசப் படைகளிடம் போதுமான அளவிற்குத் தளவாடங்கள் இல்லை. இப்போது அமெரிக்கப் பீரங்கிப் படைகள் ஏராளமாக வந்திறங்கி விட்டன. ஏராளமான விமானங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

* * * *

எல் அகெலா பகுதியில் எதிரிகளுடன் ஓயாது போராடிக் கொண்டிருக்கின்றன நேச நாட்டுப் படைகள்.

* * * *

பெங்காஸிக்குத் தெற்கே யுள்ள மக்னேலிலிருந்து எல் டபா வரை விமானங்கள் இறங்கத் தக்க இடங்கள் சுமார் 100-க்கு அதிகமாகவே இருக்கின்றன. இந்தப் பாதையில் எதிரிகளுக்குச் சொந்தமான 513 விமானங்கள் பல இடங்களிலும் நாசமாகிச் சிதறிக் கிடந்தன. இவற்றுள் 400 விமானங்கள் ஜெர்மன் விமானங்கள், 106 இத்தாலிய விமானங்கள், 3 பிரஞ்சு விமானங்கள். இவற்றுள் சில உபயோகப் படத் தக்கவை.

* * * *

டிசம்பர் மாதம் 6-ம் தேதி 20 எதிரி டாங்கிகள் நாசமாயின. அன்றியும் 3 விமானங்களும் அழிந்தன.

* * * *

பிசெர்ட்டா–டெபூர்பா–மேட்டூர் பகுதியில் ரோந்து வரும் அமெரிக்கப் படைகளும் பிரிட்டிஷ் படைகளும் ஜெர்மன் அரண்களைத் துளைத்துக் கொண்டு புகுந்து விட்டன.

* * * *

டுனிஷியாவில் ஜெர்மானியர்களுக்கும் இத்தாலியர்களுக்கும் தகராறுகள் ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

* * * *

வட ஆப்பிரிக்கப் போர் முனையில் விமானப் படையையும் தரைப் படையையும் நேச நாட்டுப் படைத் தலைவர் வெகுவாகத் திரட்டிக் கொண்டிருக்கிறார். நாள் தோறும் ஒரு புதிய விமானம் போருக்குக் கிளம்புகிறது. ஜெனரல் அன்டர்சன் படைகளுக்குத் துணையாக, அமெரிக்க விமானங்களும் பிரஞ்சு விமானங்களும் வந்து சேர்ந்து கொண்டே யிருக்கின்றன.

* * * *

பிரஞ்சு மேற்காப்பிரிக்க கவர்னர் ஜெனரல், பெர்ரி பாய்சன். 'இவரைச் சமீபத்தில் பத்திரிகைப் பிரதிநிதி பேட்டி கண்ட போது அவர் கூறியதாவது :—

"பிரஞ்சு ஆப்பிரிக்காவிற்கு அமெரிக்காவிலிருந்து யுத்தத் தளவாடங்களெல்லாம் வந்து சேர்ந்த வுடனே ஜெர்மனிக்கு விரோதமாக, எங்கள் முழு பலத்தையுங் கொண்டு கிளம்புவோம்."

* * * *

அட்மிரல் டார்லன் அரசாங்கம் ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறது. அதன்படி, பிரஞ்சு வடாப்பிரிக்காவிலுள்ள எல்லா ஜெர்மானியர்களும் தம் தஸ்தாவேஜிகளுடன் போலீசாரிடம் தம்மை ஒப்புக் கொடுத்து விட வேண்டும். **தவறியவர்கள் கைது செய்யப் படுவார்கள்.**

* * * *

ஆல்ஜியர்சுக்கும் டுனிஷியாவிற்கும் இடையே யுள்ள பகுதியில் எதிரிகளுக்குச் சாதகமா யிருந்த 200 பேர்களை பிரஞ்சு அதிகாரிகள் கைது செய்திருக்கிறார்கள்.

* * * *

மத்திய கிழக்குப் போர் முனை அறிக்கை யொன்றிலிருந்து கீழ்க்கண்ட விவரங்கள் வெளியாகின்றன:—

நமது ரோந்துப் படை முன்னேறிப் போய்க் கொண்டிருந்தது. மீண்டும் நம் போராடும் விமானங்கள் "மார்பில் ஆர்ச்" விமான நிலயத்தைத் தாக்கின. இங்கு நடை பெற்ற போரில், எதிரிக்குச் சொந்தமான 7 மெஸர்ஷிமிட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்டன ; பல விமானங்கள் சேதப்பட்டன. 88-ம் நெ. ஜங்கர் விமானம் ஒன்றையும் சிரெய்னெய்கா கரைக் கருகில் சுட்டு வீழ்த்திஞேம். அன்றியும் 101-ம் நெ. மெஸர்ஷிமிட் விமானத்தையும் சுட்டு வீழ்த்தியதாகத் தெரிகிறது.

* * * *

மிசுரதாவையும், ஹோம்ஸ் என்னும் விமான நிலையத்தையும் பெசாட்டா துறைமுகத்தையும் கடல் விமான தளத்தையும் தாக்கி, ஒரு நாசகாரிக் கப்பலையும், எண்ணெய் டாங்கிகளையும், ஒரு பெரிய கட்டிடத்தையும், டியூனிஸ்-கேப்ஸ் ரயில்வேயையும் நாசம் செய்தோம் என்று நேசதேசப் படை வீட்டு அறிக்கையொன்று கூறிகிறது.

* * * *

லம்பிடுசா தீவிற்கு அப்பால் எதிரிகளுக்குச் சொந்தமான 3 போக்கு வரவு விமானங்களையும் அவற்றிற்குத் துணையாகப் போன போராடும் விமானம் ஒன்றையும் நேச தேச விமானப் படை சுட்டு வீழ்த்தியது.

* * * *

டிசம்பர் மாதம் 7-ம் தேதி, 3 இத்தாலிய விமானங்களையும் 5 போராடும் ஜெர்மன் விமானங்களையும் நேச நாடுகளின் விமானப் படை சுட்டு வீழ்த்தியது.

* * * *

ஸ்பாக்ஸ் நகரத்திற்கு அப்பால், மத்திய தரைக் கடலில் போய்க் கொண்டிருந்த ஒரு இத்தாலிய கப்பலை நம் டார்பிடோ கப்பல் ஒன்று தாக்கி மூழ்கடித்தது.

* * * *

எல் அகேலாவில் வேரூன்றிக் கொண்டிருந்தார், அச்சுப் படைகளின் தலைவர். ஆனல் நேச நாட்டுப் படைகள் போட்ட போடில், குடிசையைக் கிளப்பிக் கொண்டு தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்று மேற்கு நோக்கி ஓட்ட மெடுக்கிறார். இவர் பின் வாங்கும் போதே, சுரங்க வெடிகளை வழியில் போட்டுக் கொண்டே போகிறார். நேச நாட்டுப் படைகள் அவ்வழியிலே தன்னைத் துரத்திக் கொண்டே வந்தால், சுரங்க வெடிகள் வெடித்து அவர்கள் மடிய வேண்டும் என்பது அவருடைய எண்ணம்.

* * * *

இந்த ஓட்டத்தைக் குறித்து ராய்ட்டர் யுத்த நிருபர் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார் :—

"ஜெனரல் மான்ட்காமரி சரியானபடி அடித்தார். அவர்களைக் கொல்ல வேண்டுமென்றே அந்தப் போடு போட்டார். ஜெர்மன் ஆப்பிரிக்கப் படைகளை ஒழித்து விடுவதென்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்.

எல் அலமீனில் தன் வேலையை மிகவும் கெட்டிக்காரத்தனமாகச் செய்து முடித்தார். இங்கே தப்பியோடியவர்கள் தான் எல் அகேலா போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் எண்ணிக்கை மிகவும் கொஞ்சம். என்றாலும் இந்த இடம் மிகவும் குறுகலானது. எனவே இப்படைகள் நின்று போராடுவதற்கு சற்று வசதியா யிருக்கிறது.

தனக்கு நல்ல காலம் இருக்கும் போதே எதிரியை அடித்து நொறுக்கித் தீர்த்து விடுவது என்று ஜெனரல் மான்ட்காமரி முடிவு கட்டிக் கொண்டார். எனவே, தன் படைகளை எல்லாம் திரட்டினார். எல் அகேலாவிற்கும் திருபோலிக்கும் இடையே அரண் செய்யப்படக் கூடிய இடமே கிடையாது. என்றாலும் மிசுரதா என்னும் ஒரு துறைமுகம் திரிபோலிக்கு 80 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. பெங்காசி துறைமுகத்தின் வழியாக சப்ளைகள் இப்போது வரக் கூடுமாகையால் நேச தேசப் படைகளின் வேலை இங்கே மிகவும் இலகுவாகி விட்டது.

ஒரு வாரத்திற்கு முன்பு நான் ஜெனரல் மான்ட்காமரியைக் கண்டேன். அப்போது அவர் கூறியதாவது :—

"இப்போது ஆரம்பிக்கப் படும் யுத்தம், சரித்திரத்திலேயே என்று மில்லாதபடி அவ்வளவு முடிவான தாக இருக்கும். யுத்தத்தின் போக்கையே இது மாற்றிவிடும். ஆப்பிரிக்காவை விட்டு இந்தப் பொக்கிகளைக் கண்டிப்பாக விரட்டி விடுவோம்.

**போர் விவரம்.**

எல் அகேலாவில் எதிரிகளை விரட்டி யடித்தது மகா ஆச்சரியமான சம்பவந்தான். இப்படிப்பட்ட சம்பவம் இராணுவ சரித்திரத்திலேயே ஏற்பட்டது கிடையாது. நெருப்பைக் கக்கும் பாலைவனத்தில் நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து படைகளையும் தளவாடங்களையும் சப்ளைகளையும் ஒரு இடத்தில் சேகரிப்பது முடியாத காரியம் என்றே சொல்லலாம். அப்படிப்பட்ட கடுமையான வேலையைச் செய்து முடித்த பெருமை ஜெனரல் மான்ட்காமரிக்கு உரியது. சென்ற அக்டோபர் மாதம் 23-ம் தேதி பிரிட்டிஷ் படைகள் எல் அலமீனைத் தாக்க ஆரம்பித்தன. இங்கிருந்து 7½ வாரங்களில், ஜெனரல் மான்ட்காமரியின் படைகள் 700 மைல்கள் முன்னேறி யிருக்கின்றன. அதுவும் எதிர்ப்பில்லாமலோ ? பல வகைத் தடைகள். முதலாவது ரோமலின் படைகளை விரட்டிக் கொண்டே போக வேண்டும். இரண்டாவது, அவ்வப்போது போராட்டத்தில் சிதறிப் போகும் தம் படையினரைத் திரட்டி உடனழைத்துக் கொண்டு போக வேண்டும். மூன்றாவதாக, எதிரிகள் ஏற்கெனவே அமைத்து வைத்திருந்த அரண்களைத் தகர்த்துக் கொண்டே போக வேண்டும். நான்காவதாக எதிரிகள் அமைத்துக் கொண்டே பின் வாங்கும் போது போட்டுக் கொண்டு போகும் சுரங்க வெடிகளை அப்புறப் படுத்திக் கொண்டே போக வேண்டும். இத்தனைத் தடைகளையும் வென்று கொண்டு 8-ம் படை 7½ வாரங்களுக்குள்ளாக 700 மைல்கள் முன்னேறுவ தென்றால், அது உண்மையிலேயே ஆச்சரியப் படத் தக்க செயலல்லவா ?

## ரஷ்யப் போர் முனை

டிசம்பர் மாதம் 7-ம் தேதி முதல் 12-ம் தேதிக்குள் அதாவது ஒரு வாரத்தில், 407 ஜெர்மன் விமானங்கள், விமான எதிர்ப்புப் பீரங்கிகளுக்கு இரையாகின. இவற்றுள் 225 விமானங்கள் போக்கு வரவிற்கு உபயோகிக்கப்படும் 3 இன்ஜின் விமானங்கள்.

* * * *



ஸ்டாலின்கிராட் தொழிற்சாலைப் பகுதியில் ரஷ்ய பீரங்கிப் படைகள் எதிரி பீரங்கிப் படைகளோடு போராடின. 11 'ப்ளாக்' வீடுகளிலிருந்தும் பல கட்டிடங்களி லிருந்தும் ஜெர்மானியர்களை சோவியத் படைகள் அப்புறப்படுத்தி விட்டன. இங்கே 180 பேர்கள் ஜெர்மன் உத்தியோகஸ்தர்களும் படையினரும் கொல்லப் பட்டனர்.

* * * *

நகரத்தின் தெற்குக் கடைசியில், சோவியத் படைகள் முன்னேறி எதிரிகளின் முதல் இரண்டு அரண்களையும் தகர்த்துக் கைப்பற்றின.

* * * *

ஸ்டாலின் கிராட் நகரின் வட மேற்குப் பகுதியில் பல முக்கியமான இடங்களை செஞ் சேனைகள் கைப்பற்றி விட்டன. இங்கே எதிரிகள் 400 பேர்கள் மாண்டனர்.

* * * *

மற்ருெரு பகுதியில் 49 ஜெர்மானியர்களைக் கைதியாகப் பிடித்தது சோவியத் படை.

* * * *

ஸ்டாலின் கிராடுக்குத் தெற்கே ஜெமானியர்கள் செம் படையினரைக் கடுமையாகத் தாக்கினர். என்றாலும், திருப்பி யடிக்கப் பட்டனர். மீண்டும் அன்று, மூன்று முறை தாக்கினார்கள். ஒவ்வொரு முறையும் திருப்பி யடிக்கப்பட்டனர். இங்கே 15 ஜெர்மன் டாங்கிகள் சேதமாயின ; 7 டாங்கிகள் கொளுத்தப் பட்டன. இங்கே 900 பேர்கள் ஜெர்மன் உத்தியோகஸ்தர்களும் சோல்ஜர்களும் மடிந்தனர்.

* * * *

ஸ்டாலின் கிராட் நகரத்திற்குத் தென் மேற்கே 100 மைல்களுக்கு அப்பால், கடுமையான போர் நடை பெறுகிறது. இங்கே நாஜிப் படைகள் தம் இருப்புப் படைகளையும் தளவாடங்களையும் கொண்டு பல முறை பல இடங்களில் தாக்கி செம்படைகளைத் துளைத்துக் கொண்டு போக வேண்டு மென்று முயற்சித்தன. ஆனல் பலிக்கவில்லை. இங்கே போர் இன்னும் கடுமையாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

* * * *

ஒரு சோவியத் யுத்த அறிக்கை கூறுவதாவது :—

ஸ்டாலின்கிராட் தொழிற்சாலைப் பகுதியில் ஜெர்மானியர்கள் வசமிருந்து 13 'ப்ளாக்' வீடுகளையும் அவற்றி லிருந்த வெடி மருந்துகளையும் சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன. ஸ்டாலின்கிராடுக்கு வடமேற்கே ஒரு நாளில் மட்டும் 16 'ப்ளாக்' வீடுகளிலிருந்த ஜெர்மானியர்கள் வெளியேற்றப் பட்டனர். மற்ருெரு பகுதியில் ஜெர்மன் டாங்கிப் படையையும் காலாட் படையையும் சோவியத் படைகள் சூழ்ந்து கொண்டு தாக்கின. 9 ஜெர்மன் டாங்கிகள் நாச மாயின. 600 எதிரிகள் கொல்லப்பட்டனர்.

* * * *

ஸ்டாக்ஹாமி லிருந்து சோவியத் நியூஸ் ஏஜென்ஸிக்குத் கிடைத்த செய்தியாவது :—

"மார்ஷல் வான் பாக்குக்கு நெருங்கிய தோழராயிருந்தவர், ஜெர்மன் படைக் கோஷ்டியின் தலைவரான கர்னல் ஜெனரல் கார்த். அவர் தன் பதவியை இராஜிநாமா செய்து விட்டார், அல்லது அவருடைய தலைமைப் பதவியி லிருந்து அவர் நீக்கப்பட்டிருக்க வேண்டும்."

* * * *

### அறிவிப்பு.

**நாளது டிசம்பர் மாதம் 25-ம் நாள் வெள்ளிக்கிழமை கிருஸ்மஸ் பண்டிகை. அதை முன்னிட்டு அன்று 'யுத்த சஞ்சிகை' வெளி வராது. அடுத்த வெளியீடு 1943-ம்ஞூ ஜனவரிமீ 1உ வெளி வரும்.**

யுத்தம் ஆரம்பமானதி லிருந்து இது வரை செஞ்சேனைகள் 80 லட்சம் ஜெர்மானியர்களைக் கொன்றிருக்கின்றது.

* * * *

மத்தியப் பகுதியில், போராட்டம் கொஞ்சம் கூட தளர்வடைவதாகத் தெரியவில்லை. ஜெர்மானியர்கள் செம்படைகளைத் திரும்பவும் அடிக்கடித தாக்குகிறார்கள். தற்காப்பின் பொருட்டாக இவர்கள் போராடுகிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும். சென்ற இரண்டு வாரங்களில் 75,000 ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டார்கள். இரண்டு லக்ஷம் பேர்கள் காயப்பட்டார்கள். ரிழேவுக்கு மேற்கே கைது செய்யப்பட்ட ஒரு ஜெர்மானியன், தன் படையைச் சேர்ந்த 1,400 பேர்களில் 12 பேர்கள் மட்டுந்தான் மிஞ்சியதாகத் தெரிவித்தான்.

* * * *

ஜெர்மன் படைகளுக்குப் பின்புரம் உள்ள ரயில்வே ஸ்டேஷனைச் சேர்ந்த இடங்களில் ஏராளமான பொருள்கள் இருந்தன. சென்ற சில நாட்களாக இந்த ஸ்டேஷனையும் சோவியத் விமானப் படை தாக்கிக் கொண்டு வருகிறது.

* * * *

ஸ்மாலென்ஸ்க்குக்கு 130 மைல்கள் தூரத்தி லிருப்பது விலிகியி லூகி. இந்தப் பகுதியில் ஒரு முக்கியமான ஜன நெருக்கமுள்ள ஊர் இருக்கின்றது. இதை ஜெர்மானியரிட மிருந்து கைப்பற்ற ரஷ்யர்கள் முன்னேறுகிறார்கள். இதைத் தடுக்க ஜெர்மன் படைகள் அரும்பாடு படுகின்றன.

* * * *

ரிழேவுக்கு மேற்கே ஜெர்மானியர்கள் ருஷ்யப் படைகளை எதிர்த்துக் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். 11-ம் தேதியில் மட்டும் 11 ஜெர்மன் பாம்பர் விமானங்களை ரஷ்யப் படைகள் சுட்டு வீழ்த்தின.

* * * *

ரஷ்யா பரந்த நாடு. போக்குவரவுகளுக்கு இங்கே ஆறுகளை உபயோகிக்கிறார்கள். ஆனல் ஆறுகள் குளிர் காலத்தில் உறைந்து விடும். அப்போது ஆற்றைக் கடப்பது ஆபத்தில் கொண்டு போய் விடும். எனவே, இது ஜெர்மன் படைகளுக்கு எவ்வளவு தூரம் பாதகமோ, அவ்வளவு தூரம் சோவியத் படைகளுக்கும் பாதகம் தான். இந்தக் கஷ்டத்தை போக்குவதைக் குறித்து ரஷ்ய இஞ்சினீர்கள் வெகுவாக ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். உறைந்து போன ஆற்றைக் கடக்க மூன்று முறைகளைக் கையாளலாம். (1) உறைந்து போயிருக்கும் ஆற்றைக் கடக்க வேண்டிய இடத்தில், பனிக்கட்டி கரைந்து விடாதபடி தண்ணீரை அப்பாதையில் ஊற்றிக் கொண்டே யிருக்க வேண்டும். (2) அவற்றின் மேல்புரமுள்ள பனியை அப்புறப்படுத்தி விட்டால் அதன் கீழுள்ள பனிக்கட்டி இறுகி விடுகிறது. (3) இந்த இரண்டு முறைகளையும் கையாள ஒட்டாதபடி கால நிலை இருக்குமானல், பனிக்கட்டிக்குக் குறுக்கே மரப் பலகையைக் கொண்டு பாலம் அமைத்துக் கொள்ளலாம். அல்லது பனிக்கட்டியில் முளையடித்து, அதன் மேல் மரப் பலகையைக் கொண்டு பாலங் கட்டலாம்

## கீழ்கோடிப் போர் முனை

11 ஜப்பானிய நாசகாரிகள் குடல்கனலை நோக்கி வந்து கொண்டிருந்தன. குடால்கனலிலுள்ள ஜப்பான் படைகளுக்கு இவை சப்ளைகள் கொண்டு வந்தன போலும். இவற்றை குடால்கனலில் காவல்புரியும் விமானங்கள் கண்டு விட்டன. மகா தைரியத்தோடு

(7 -ம் பக்கம் பார்க்க)

# நல்ல சேதி வருகுது !

" நல்ல காலம் பொறக்குது ! நல்ல காலம் பொறக்குது ! ஐயாவுக்கு மேற்கே யிருந்து ஒரு நல்ல சேதி வரப்போகுது ! உங்களைக் கறுவிக்கிட்டிருந்த விரோதி ஐயோன்னு போகப் போருன் ! குடு குடு ! குடு குடு ! குடு குடு ! குடு குட்டி குடுகுடு ! பலுக்கவே, பலுக்கவே ! மஞ்சிவாக்கு பலுக்கவே !" என்று அதிகாலை வேளையிலே, அதோ, வீட்டு வாசலிலே வந்து நின்று அழுத்தந் திருத்தமாகக் கூறிக் கொண்டிருக்கிருன் ஒரு குடுகுடுப்பாண்டி. நாம் எழுத ஆரம்பித்த சமயத்திற்கும், அவன் வந்து மேற்கண்ட வாறு சொன்னதற்கும் ரொம்ப, ரொம்ப சரியாக இருந்தது. இவ்வாறு இவை இரண்டும் ஒத்துப் போனதற்கு உவமையாக, பிரிட்டிஷ் எட்டாவது சேனை, ஜெனரல் ரோமலின் பிடரியில் உறை கொடுத்ததற்கும் அமெரிக்கப் படை அதி வெற்றிகரமாக, மேற்கு ஆப்பிரிக்கக் கரையில் வந்து இறங்கினதற்கும் எவ்வளவு 'கரெக்டாக' இருந்ததோ, அதைத் தான் சொல்ல வேண்டும்.

மேற்கண்ட குடுகுடுப்பை சொன்னதெல்லாம் உண்மையில் இந்த தேச மக்களுக்கே சொன்ன சொற்களாகவே பட்டது. பிரிட்டிஷ் எட்டாவது சேனைக்கு ஏற்பட்ட புது வெற்றிகளைப் பற்றியும், ருஷ்யாவிலே எங்கு திரும்பினலும் ருஷ்யர்கள் ஜமாய்த்துத் தள்ளுவதையும், இவன் எப்படி முன் கூட்டியே அறிந்து கொண்டான் ? இந்தியாவிற்கு மேற்கே என்பது, ஆப்பிரிக்கா, ருஷ்யா எல்லாவற்றையும் பொதுவாகக் கொள்ளலாமே ! அதை எண்ணித் தான் மேற்கே யிருந்து நல்ல சேதி வரப்போகுது என்று இவன் சொன்னுனே ? 'உங்கள் எதிரி ஐயோன்னு போகப் போகிருன் என்றுனே ! நமது எதிரி யார்? நமது எதிரிகளில் பெரிய எதிரி ஜெர்மானியர் தான். அவர்கள் தான் இப்பொழுது, ட்யூனிஸியாவிலும், லிபியாவிலும் பின்னலே போய்க் கொண்டிருக்கிருர்கள் ! இதெல்லாம் எப்படித் தெரிந்தது இவனுக்கு ? என்றெல்லாம் எண்ணத் தோன்றிற்று. ஒரு வேளை இவன் உளவறியமாறு வேடத்தில் வந்த ஜப்பானியனே என்று கூட நினைக்கும்படி இருந்தது. ஆனல், சேனபதி வேவல் தான் நிச்சயமாகச் சொல்லி யிருக்கிருரே ! இங்கு ஜப்பானியன் காலடி வைத்தால், சுடச் சுட சாத்துமுறை கிடைக்கும் என்று. எத்தகைய நெருக்கடி வந்தாலும் அதைச் சமாளிக்க, இங்கு சரியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நம் சேனபதியின் வாக்கு ஊர்ஜிதப்படுத்துவதால், குடுகுடுப்பையைப் பற்றி எத்தகைய சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை ; அவன் எதோ தன் வழக்கப்படி வயிற்றுப் பிழைப்பிற்காகச் சொல்லி வைத்தான் ; அது தற்சமயத்திற்கு வெகு பொருத்தமாக இருக்கிறது என்று முடிவு கட்ட வேண்டி வந்தது.

உண்மையிலேயே, வட ஆப்பிரிக்காவில் நடந்து வரும் சம்பவங்கள் உலகோரின் கவனத்தை நிச்சயமாகக் கவர்ந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. அதோடு, அச்சு நாட்டாருக்கு, போருத காலமும், போகும் காலமும் ஆரம்பமாகி விட்டது என்பதிலும் சந்தேகமில்லை.

இதோ பாருங்களேன் ! பிரிட்டிஷ் எட்டாவது சேனை எனும் பிரம்மாண்டமான ரதம் எகிப்திலிருந்து தன் பூரண சக்தியுடன் கிளம்பி எட்டு வாரங்களே ஆகின்றன. இதற்குள் அது தங்கு தடங்கலின்றி, ரோமலின் படைகளைச் சின்னபின்னப் படுத்திக் கொண்டே, எண்ணூறு மைல்கள் முன்னேறிவிட்டது.

எல் அகேலா என்ற இடம் மிகக் குறுகலான இடம். சமுத்திரக் கரையிலிருந்து பல மைல்கள் வரை ஒரே சதுப்பு நிலமாக இருக்கும் ; அதற்கப்பால் மணற் குன்றுகள் அதிகம். அதற்கும் அப்பால் மலைகளும், காடுகளும் இருக்கின்றன. பதுங்கி இருந்து, பாதுகாப்புப் போரை நடத்துவதற்கே ஏற்ற இடம் இது ; முன்னேறித் தாக்குவது மகா சிரமம் இங்கே ; ஆகவே, ரோமல் இங்கு சமாளித்து நிற்க முயலுவார் என்று ராணுவ நிபுணர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஆனல் வெற்றி ஒன்றையே தம் கண் முன் கொண்டிருந்த எட்டாவது சேனையினரின் திருஷ்டியில் இந்த இடையூறுகள் ஒன்றும் படவே யில்லை. மளமளவென அவர்கள் எதையும் லக்ஷயம் செய்யாது முன்னேறி விட்டார்கள். ட்ரிபோலி எனுமிடத்தில் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதாகக் கேள்வி ; அங்கு போய் ரோமல் கொஞ்சம் வாலை ஆட்ட முயலக் கூடும். ஆனல், பிரிட்டிஷ் முதலாவது சேனையும், அமெரிக்கப் படையும், ட்யூனிஸியாவிலே உள்ள அச்சுக் கூட்டத்தினருக்கு யமன்களாகக் காட்சி யளித்துக் கொண்டிருக்கிருர்களே ! அவர்கள் ரோமல் ஸ்வாமிக்குப் பின்னல் வந்து திடீர் தரிசனம் கொடுத்து, ஒரே யடியாக ரோமலையும், அவரது படைகளையும் காலைவாரி, மத்யதரைக் கடலிலோ, ஐரோப்பாவிலோ) விட்டு விடக் கூடுமல்லவா ? இல்லாவிட்டால் ரோமலே தலைபிழைத்தால் போதும் என்று ஓடக் கூடும். அச்சு நாட்டினரை ஆப்பிரிக்க மண்ணிலிருந்து ஒரே யடியாகத் துரத்தி ஒழித்தாலன்றி, தென் மத்யதரைக் கடலில் உள்ள ஆபத்துப் பூரணமாக நீங்காது. எதிரிகள் ட்யூனிஸியாவிலே சரியானபடி வேர்விட்டு நின்று கொண்டிருக்கிருர்கள். பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்கள், பிஸர்ட்டா, ட்யூனிஸ், ஸோஸி துறைமுகங்களை நொறுக்கி வருகின்றன. மத்ய தரைக் கடலிலே, பிரிட்டிஷ் நீர் மூழ்கிகள் குஷியாக வேலைசெய்து, வட ஆப்பிரிக்காவில் தளர்ந்து நின்று போராடி வரும் அச்சு நாட்டுப் படைகளுக்கு அவசர அவசரமாக உதவியைக் கொணர்ந்து சேர்க்கும் கப்பல்களை 'கோவிந்தா' ஆக்கி வருகின்றன.

அதுமட்டுமா? ஒரு சில நீர் மூழ்கிகள் வெகு துணிச்சலோடு, இத்தாலியக் கரைக்கு வெகு சமீபமாகச் சென்று, கரையில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளையும், ரயில்களையும், தொழிற்சாலைகளையும் பீரங்கிப் பிரயோகம் செய்து, பாழாக்கி விட்டுத் திரும்பி யிருக்கின்றன. 'இதென்னடா கூத்தாக இருக்கிறதே' என்று அங்குள்ள இத்தாலியர் பார்த்து, அந்த நீர்மூழ்கிகளில் உள்ளோரின் தைரியத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டுக் கொண்டே நின்றிருந்தார்கள் என்று யாராவது சொன்னல் கூட, நாம் அதை நம்ப மறுக்க மாட்டோம்.

பாவம் ! இத்தாலியர்களின் தற்போதைய நிலைமை சித்தப்ரமை கொண்டு நிற்பவர்களின் நிலைமையை ஒத்துத் தானிருக்கிறது. அவர்களது நாட்டிலே, அழகிற் சிறந்தவை என நேற்று வரை உலகோரால் பாராட்டப்பட்டு வந்த நகரங்கள் பல (அவர்கள் அறியாத்தனத்தால் ஹிட்லரோடு கைக்கோர்த்துக் கொண்ட பாவத்தால்), இன்று பிரிட்டிஷ் வெடி விமானங்களின் குண்டு மழைக்குக் குறியாகி, பாழாகி வருகின்றன. பல வருடங்களுக் கப்பால், ஏன், வருகிற தலைமுறையைச் சேர்ந்தவர்கள், அந்தப் பாழடைந்த மண்டபங்களினிடையிலும், பின்னப்பட்டு நிற்கும் சிலைகளுக்கு எதிரிலும் நிற்கும் பொழுது, தங்கள் முன்னேர்கள் செய்த தவறை எண்ணி கண்ணீர் விடத் தான் செய்வார்கள். தங்களது முன்னேர்கள் செய்த காரியம் தர்ம நியாயத்திற்கு மீறியது என்பதை நினைக்கும் பொழுது அவர்களது மனம் பெரிதும் கஷ்டப்படத் தான் செய்யும். அதற்கென்ன செய்வது ?

இத்தாலிக்கு இனிமேல்தானிருக்கிறது பெரிய பூஜை எல்லாம். இப்பொழுது தானே மணி ஓசை கேட்டிருக்கிறது. இனிமேல் தான் நைவேத்தியம், பூஜை எல்லாம் நடக்கவேண்டும். அதன் பின் இத்தலி யெங்கும் ஒரே கோஷமாக இருக்கும். வட ஆப்பிரிக்கச் சண்டை சீக்கிரமே முடிந்து விட்டால், அடுத்த பூஜை இத்தலியிலே உடனே ஆரம்பமாகும்.

இத்தாலிக்கு முத்தண்ணவான ஜெர்மனி படுந்துயரம் கொஞ்ச நஞ்சமல்ல. அங்குள்ளவர்களுக்கு மன நிம்மதியே இல்லை. தினம் பொழுது போனல், மறுநாள் பொழுது விடிந்தால், மேலும் மேலும் வெற்றிச் செய்திகளையே கேட்டு வந்த காலம் மாறி, தினம் 'ஒன்றும் மாறுதலில்லை ! புதிதாக ஒன்றுமில்லை !' என்ற தகவல்களைமட்டும் கேட்டுத் திருப்தி யடையவேண்டிய காலம் வந்துவிட்டது. அதற்கு மேற்கொண்டு அவர்களுக்கு எந்தச் செய்தியும் எட்டுவதில்லை. தலைக்கு மேலே பெரிய குடைபோல் சேர்ந்து பறந்து வரும் விமானங்களையும், அவை வீசும் குண்டுகளையும், அதனால் ஏற்படும் சேதங்களையும் பார்க்கக்கூடாது என்று ஹிட்லரால் தடுக்க முடியாது.

ஆனல், ருஷ்யாவிலும் சரி, ஆப்பிரிக்காவிலும் சரி என்ன நடக்கிறது என்பது அவர்களுக்குத் தெரிய முடியாதல்லவா? ருஷ்யாவிலே, எங்கும் ருஷ்யர் கை ஓங்கியிருக்கிறது ; பனிக்கட்டி மீது சறுக்கிச் செல்லுவதில் நிபுணரான ருஷ்யப் படையினர் ஜெர்மன் படையை திடீர் திடீரென்று சூழ்ந்து கொண்டு, தாக்கச் செய்கிருர்கள் ; யுத்தம் ஆரம்பமானது முதல், ருஷ்யாவில் மட்டும் என்பது லக்ஷம் பேர்கள் கணக்காகி விட்டார்கள் ; எண்ணற்ற ஜெர்மன் உயிர்களைப் பலியாகக் கொடுத்துக் கைப்பற்றிய இடங்களை எல்லாம், ருஷ்யர்கள் ஒவ்வொன்றாக, ஜெர்மானியருக்குப் பலத்த சேதத்தை விளைவித்து விட்டு திரும்ப பிடித்துக் கொள்ளுகிருர்கள் ; பல இடங்களில் ஜெர்மானியர் புதுத் தாக்குதல் நடத்திய போதிலும் ருஷ்யர்களை எள்ளளவும் அசைக்க முடியவில்லை ; ருஷ்யப் படையோ கொல்லுகிறது ; ருஷ்யர்கள் மளமளவென முன்னேறி விட்டாலும், வெற்றி அறிக்கைகள் அவர்களது தலைமைக் காரியாலயங்களிலிருந்தே வெளிப்படுகின்றன ; தங்கள் நாட்டோடு சேர்ந்த [illegible]டைய ஆட்டமும், அட்டகாசமும் ஓய்ந்து போய் விட்டன ; நியூகினியாவில் அநியாய நஷ்டம் அவர்களுக்கு ; பர்மாவில் உள்ள அவர்களது படைத்தளங்கள் மீதும், ரங்கூன் மாந்தலை முதலிய இடங்கள் மீதும், அந்தமான் தீவிலும் அமெரிக்க வெடி விமானங்கள் குண்டுகளை உதிர்த்துக் கொண்டிருக்கின்றன ; ஜப்பானியர் எந்தப் பக்கம் போவதென்று தெரியாது தவிக்கிருர்கள் என்பதெல்லாம், ஜெர்மனிக்குள் ஹிட்லரின் கட்டுப்பாட்டில் அடங்கி, ஊமைப் பூச்சிகளாகக் கிடக்கும் ஜெர்மன் மக்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

அதுமட்டுமில்லை. ஹிட்லர் அசாத்தியப் பேர்வழி. ஜெர்மன் மக்களுக்கு, ஜெர்மன் ராணுவத்தில் சேர்ந்தவர்களுக்கு ஏற்படும் நஷ்டம் இத்தகையது என்பதே தெரியக் கூடாது என்று எண்ணுவதோடன்றி, யுத்தகளத்தில் காயப்பட்டவர்களைக் கூட தாய் நாட்டிற்கு கொண்டு வர அநுமதிப்பதில்லை. வட ஆப்பிரிக்காவிலே காயம்பட்டவர்களை நேரே பல்கேரியாவிற்கு அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டார். அதே மாதிரி ருஷ்யாவில் காயம் பட்டோரை ஆங்காங்கே இடங்கள் ஏற்படுத்தி அங்கேயே சிகிச்சைக்கு வசதிகள் செய்யச் சொல்லி விட்டாராம்.

காயம்பட்டவர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது ; ஏட்டில் எழுதித் தொலையாது ; அத்தனை பேர்களையும் அவரவர்கள் ஊருக்குத் திரும்ப விட்டுவிட்டால், கல் நெஞ்சும் இளகிவிடும் ; இளநெஞ்சும் கல்லாகிவிடும் ; இந்த யுத்தத்தின் கோரம் இப்படியா இருக்கிறது என்று ஜெர்மன் மக்கள் தம் கண்களாலேயே பார்த்துத் தெரிந்து கொண்டு விடுவார்கள். அப்புறம் ஹிட்லர் பாடு திண்டாட்டம் தான் ! எல்லோரும் சேர்ந்து ஒரே நாளில் அவருக்கு உலை வைத்து விடுவார்கள். அந்த நிலைமையை நினைக்கும் பொழுதே ஹிட்லருக்குக் குலை நடுங்கத் தான் செய்யும். நடுங்காதா ஐயா ! ஜெர்மனியில் ஹிட்லர் தவிர வேறு கடவுள் கிடையாது என்று எல்லோரையும் நம்பும்படி பலாத்கார முறையால் செய்துவிட்டு, இப்பொழுது அந்த (ஹிட்லர்) கடவுளுக்கே தடுமாற்றம் ; தலை குப்புற விழவேண்டிய காலம் என்றால், மனதிற்குக் கஷ்டமாகத் தானே இருக்கும் !

போதாக் குறைக்கு, அமெரிக்காவிலிருந்து அவ்வப்பொழுது வரும் அறிக்கைகள், ஹிட்லரின் செவிகளில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றுவது போலவே இருக்கும். "நாளுக்கு நாள் எங்கள் விமான பலம் பெருகிக் கொண்டே இருக்கிறது. எட்டு, பரந்த பிரதேசங்களில் எங்கள் விமானங்கள் வெற்றிமேல் வெற்றியாக வாரிக் கட்டிக் கொண்டிருக்கின்றன. கூடிய சீக்கிரமே எங்கள் விமான உற்பத்தி உச்ச நிலையை அடையும். அச்சு நாட்டாரது கூட்டு உற்பத்தியைவிட இப்பொழுது எங்கள் தனி உற்பத்தி அதிகரித்து விட்டது. அச்சு நாட்டாருக்கு இது இறங்கு காலம். அவர்களுடைய நீர்மூழ்கிகள் அட்லாண்டிக்கில் உக்ரமாகப் போராடி வந்தபோதிலும், நாங்கள் பயப்படவில்லை. ஜெர்மன், இத்தாலிய நகரங்கள் மீது, இனி அன்று, இன்று என்றில்லாது, சண்டை முடியும் வரை, என்றுமே, தினசரி அதிகனமான குண்டுகளை வீசப் போகிறோம். இந்த மாசக் கடைசிக்குள் பத்து லக்ஷம் அமெரிக்கர்கள் வெளி நாட்டரங்கங்களில் போர் புரிந்து கொண்டிருப்பார்கள். இது மட்டுமா ?"

" ஒரு நூதனமான, அதி பயங்கரமான புது ஆயுதத்தைத் தயாரித்து வருகிறோம். கூடிய சீக்கிரமே ஹிட்லர் கோஷ்டியார் முன் அதை உபயோகப்படுத்திக் காட்டுவோம். அதைக் கண்டு அவர்கள் கதி கலங்கப் போகப் போகிருர்கள் என்கிருர் ஒருவர். அச்சு நாட்டினர் கதி கலங்கிஞல், அது 'உலகினருக்கு நல்ல காலம் பிறக்குது' என்பதைக் காட்டுமோ இல்லையா ? மேற்கே இருந்து மட்டுமல்ல, கிழக்கே இருந்தும் நல்ல செய்திகள் தொடர்ந்து வரவேண்டும், அது காரணமாக யுத்த கோரத்தைப் பார்க்கும் பாவத்தை இந்தியர்களாகிய நாம் பார்க்க முடியாது போக வேண்டும் என்று பகவானைப் பிரார்த்திப்போமாக !"



## சென்னை அகில இந்திய ரேடியோ

1943-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் இரண்டு வாரங்களில் யுத்த சம்பந்தமான பிரசங்கங்கள் கீழ்கண்ட அட்டவணைப் படி ரேடியோ மூலம் நடைபெறும் :—

| தேதி. | நேரம். | விஷயம். | மொழி. |
|---|---|---|---|
| 2—1—43 | மாலை 7 மணி | காலத்தின் போக்கு .. | தமிழ். |
| 4—1—43 | காலை 8 ஷை | காலத்திற்கேற்ற பேச்சு .. | ஷை |
| 5—1—43 | மாலை 1-20 மணி | W. A. R. P. C. .. .. | ஷை |
| | மாலை 7 மணி | யுத்தச் சக்கரம் | |
| | | 1, ஒன்றுபட்ட தலைமை .. | ஷை |
| 9—1—43 | மாலை 7 ஷை | இரட்டை நாக்கு .. .. | ஷை |
| 11—1—43 | காலை 8 ஷை | காலத்திற் கேற்ற பேச்சு .. | ஷை |
| 12—1—43 | மாலை 7 ஷை | அமைதியிலும் வெற்றி | |
| | | 1, பொது எல்லைகள் .. | ஷை |

# இந்திய கப்பற் படையைச் சேர்ந்த "வங்காளம்" என்னும் கப்பலின் உத்தியோகஸ்தர்கள்



சமீபத்தில் 10,000 டன் ஜப்பானிய போர்க் கப்பலே வென்று மூழ்கச் செய்த "வங்காளம்" என்னும் கப்பலின் உத்தியோகஸ்தர்கள்



"வங்காளம்" கப்பலின் பீரங்கிப் படையினர் போருக்கு ஆயத்தமாகும் காட்சி



# ஜப்பான் செய்த துரோகம்.

அமெரிக்கா யுத்தத்தில் கலந்து கொண்ட முதல் ஆண்டு விழாவின் போது சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் ஒருவரை யொருவர் பாராட்டி செய்திகள் பரிமாறிக் கொண்டார்கள். இது பற்றி "டெய்லி டெலிகிராப்" என்னும் பத்திரிகை ஒரு தலையங்கம் எழுதி யிருக்கிறது. அதில், ஜப்பானின் அக்கிரம ஆதிக்கம் அடியோடு அழிக்கப் படவேண்டு மென்று அப் பத்திரிகை கூறுகிறது. மேலும், இக் கொடுமைகள் செய்ததின் ஜப்பானுக்கு ஓரளவிற்குக் கை மேல் கிடைத்து விட்டது என்றும், தம் படைகளிலும், வியாபாரக் கப்பல்களிலும் ஐந்தில் ஒரு பங்கு நஷ்டமானதாக ஜப்பான் அரசாங்கம் ஒப்புக் கொள்ளுவதி லிருந்தே இது தெளிவாகிற தென்று அப் பத்திரிகை அறிவிக்கிறது.

கர்னல் நாக்ஸ், அமெரிக்கக் கப்பற் படை மந்திரி, ஜப்பான் கப்பல்களுக்கு நேர்ந்திருக்கிற சேதம் மிகவும் அதிக மென்றும், இதனால் யுத்த சப்ளைகள் போக்கு வரவு பெரிதும் தடைப் படு மென்றும் அவர் கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது—

"ஜப்பான் மூலப் பொருள்களின் அளவைக் குறித்தோ ஜப்பானியின் முரட்டுப் பிடிவாதத்தைக் குறித்தோ, யாரும் குறைவாக மதிப்பிட முடியாது. மேற் நாடுகளிலுள்ள மக்களின் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் பெரும் பாதகமாய் ஜப்பான் இப்போது முளைந்திருக்கிறது."

மிஸ்டர் எம்ப்ரன் ஒரு ஆங்கிலேயர்; நல்ல படிப்பாளி; பல வருஷங்கள் ஜப்பானில் இருந்தவர்; டோக்கியோ சர்வகலாசாலையில் வேலை பார்த்தவர். இவர் சமீபத்தில் ஒரு கட்டுரை எழுதி யிருக்கிறார். அதன் சுருக்கமாவது:—

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டனும் மற்ற நாடுகளும் ஜப்பானோடு உறவு கொண்டிருந்தன. ஏனென்றால், ஜப்பான் ஒரு பெரிய கைத் தொழில் நாடாக மாறி, ஆசியாவி லுள்ள மற்ற நாட்டவர்களை மீட்கும் என்று எதிர்பார்த்தார்கள். மேல் நாட்டு அரசாங்கங்களின் உதவி பெற வேண்டி ஜப்பான் அயோக்கியத் தனமாகவும் போலித் தனமாகவும் நடந்து கொண்டது. ஜனநாயகக் கொள்கைகளை வாயளவில் ஆதரித்தது. சர்வ தேச ஒழுக்க முறைகளை ஒப்புக் கொண்டதாகப் பாசாங்கு செய்தது. யுத்தத்திற்கான ஆயுதங்கள் செய்ய எல்லாச் சாமான்களும் தேவையா யிருந்தன. இவற்றைத் திரட்டிக் கொண்ட பிறகு தான், உலக மக்கள் மீது போர் தொடுக்கக் கூடிய அயோக்கியத் தனம் ஜப்பானுக்கு ஏற்பட்டது. இதில், ஜப்பான் வெகு எச்சரிக்கையாகவே நடந்து கொண்டிருக்கிறது. அச்சு நாடுகளோடு சரச மாடியது; பிரிட்டனைக் கண்டும் அமெரிக்காவைக் கண்டும் புன்முறுவல் பூத்தது. பழைய இரும்பு, மிஷின் கருவிகள் முதலியவற்றில் வியாபாரம் செய்ய அமெரிக்காவோடு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தது. தன் எண்ணம் பலிக்க ஐரோப்பிய நிலைமை சாதகமா யிருப்பதாக ஜப்பான் நினைத்தது. தான் போர்த்திக் கொண்டிருந்த 'பசுத் தோலை'ப் பியத் தெறிந்தது. கடுமையாகப் போராடக் கிளம்பியது. இதற்கும் ஒரு பெரிய தடை இருந்தது. அது தான் சீனு. மஞ்சூரியாவை ஜப்பான் எளிதில் கைப் பற்றிக் கொண்டது. சில வாரங்களிலாவது மாதங்களிலாவது சீனு முழுவதையும் தம் வசப்படுத்திக் கொள்ளலா மென்று ஜப்பான் மனப் பால் குடித்தது. ஆனால் ஜப்பானின் அக்கிரம ஆதிக்கத்தை எதிர்த்து, ஆசியாவை விடுவிக்கும் வீரனாகக் கிளம்பியது சீனு. பல வகைகளிலும் சீனுவிற்குக் குறைபாடுகளிருந்தும் மகத்தான வீரத் தோடு ஜப்பானோடு சீனு போராடியது. "சீனு வோடு யுத்த மாடுவதனால், ஏராளமான செலவோடு மிகவும் கஷ்டமாகவும் இருக்கிற" தென்று இந்த வருஷம் ஜப்பான் பிரதம மந்திரி டோஜோவே குறிப்பிட்டிருக்கிறார். இது ஜப்பான் இராணுவ உத்தியோகஸ்தர்களுக்குத் திடுக்கிடத் தக்க செய்தியாகும். சீனுவை வெகு எளிதில் வென்று விடக் கூடு மென்று அவர்கள் எதிர் பார்த்தார்கள். இவர்களுடைய கீழ்க் கடையான எண்ணங்கள் ஈடேற ஒட்டாதபடி மகா வீரத் தோடு சீனு தடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. இதைக் கண்டு "இந்தப் பழம் புளிக்கும்" என்று சொன்ன நரியைப் போல, சீனுவையோ மற்ற நாடுகளையோ கைப் பற்ற வேண்டும் என்னும் எண்ணம், தமக்கு இல்லை யென்று பிறர் நினைக்கும்படி செய்து வருகிறது.

(3-ம் பக்கம்—தொடர்ச்சி)

மேழ பாய்ந்து குண்டுகளை வீசும் விமானங்களும், 'கோப்ரா' விமானங்களும் கிளம்பின. 5 ஜப்பான் நாசகாரிகள் மீது குண்டுகளை வீசின. மறு நாளும் குடால்கனலை நோக்கி ஜப்பான் நாசகாரிகள் வந்து கொண்டிருந்தன. அந்தத் தீவின் பாதுகாவலர்கள் இதைக் கண்டு விட்டார்கள். அமெரிக்கப் படை எதிரியைத் தாக்கியது. எதிரியின் ஒரு நாசகாரி மூழ்கியது; மற்றொரு நாசகாரி தீக்கு இரையானது; இது மூழ்கி இருக்கவேண்டும். வேறொரு நாசகாரி சேதமடைந்தது.

* * * *

நியூ ஜார்ஜியாவில் மண்டா என்னும் இடத்தில் ஒரு விமான நிலையம் இருக்கிறது. இது ஜெர்மானியருக்குச் சொந்தமானது. சென்ற 11-ம் தேதி இந்த விமான நிலையத்தின் மீது 100 பவுண்டு கனமுள்ள 155 வெடிகுண்டுகளை அமெரிக்க விமானக் கோட்டைகள் எறிந்தன. இவற்றால் நேர்ந்த சேதம் எவ்வளவு என்று தெரிந்து கொள்ள முடியாதபடி புகை அங்கே சூழ்ந்து கொண்டது.

* * * *

புனு பகுதியின் வலது பக்கத்தில் மேலும் கொஞ்ச தூரம் நாம் கைப்பற்றினோம். அப்போது நம் விமானப் படை ஓயாது நம் எதிரிகளுக்குத் தொல்லை விளைவித்துக் கொண்டிருந்தது.

* * * *

நியூ கினியாவில் நடைபெற்ற போரில், 10 ஜப்பான் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 4 ஜப்பான் விமானங்கள் சேதமடைந்து தம் தளங்களுக்குத் திரும்ப வில்லை.

* * * *

காஸ்மதா கரையோரத்தி லுள்ள விமான நிலையங்களை நேச தேச விமானப்படை வெடி குண்டுகளைக் கொண்டு தாக்கியது.

* * * *

புனு என்பது முக்கியமான தோர் கடற்கரைப் பட்டணம். இதை ஜப்பானியர்களிட மிருந்து கைப்பற்ற 20 நாட்கள் கடும் போராட வேண்டியிருந்தது. அந் நாட்களில் இரண்டு முறை ஆஸ்திரேலியர்கள் ஊருக்குள் போனார்கள். அப்போது ஜப்பானியர்களை அடியோடு விரட்டிவிட முடியவில்லை யானாலும், 200 கஜ அகலமும் 400 கஜ நீளமு முள்ள ஒரு கட்டுக்குள் மடக்கி விட்டார்கள். அப்போது ஜப்பானியர்கள் பள்ளங்களைத் தோண்டி அவற்றிற்குள் பதுங்கிக் கொண்டார்கள். அதுபோலவே தான் ஆஸ்திரேலியப் படையினரும் செய்தார்கள்.

இராக் காலங்களில் வீரமுள்ள ஆஸ்திரேலியர்களுள் சிலர் தனித்தனியே வெளிக் கிளம்பி மார்பால் நகர்ந்து கொண்டு ஜப்பானியர் தங்கியிருக்கும் பள்ளத்திற்கு அருகில் சென்று வெடிகுண்டுகளை அவர்கள் மேல் உருட்டிவிட்டுத் திரும்பினர். சில சமயங்களில் துப்பாக்கியால் சுடுவதும் வசதியாயிருந்தது. மேற்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு சோல்ஜர் ஒரே நாளில் 16 ஜப்பானியர்களைக் கொன்றார். இப்படி இறந்துபோனவர்களின் பிணங்களை தம் குழிகளுக்கு அணையாக வெளியே குவித்து வைத்திருந்தார்கள். இந்தப் பிண நாற்றம் சகிக்கமாட்டாமல், விஷவாயு முகமூடிகளை, மிஞ்சிய ஜப்பானியர்கள் அணிந்து கொண்டிருந்தார்கள். இந்தப் பிணங்களைப் புதைக்கும் பொருட்டு இவர்கள், பள்ளங்களை விட்டு வெளியேறினால், விமானத் தாக்குதலுக்கு ஆளாக நேரும்.

# ரோமலே வென்றதின் இந்தியர் பங்கு

**சமீபத்தில் டில்லி அகில இந்திய ரேடியோவில் காப்டன் எம். எல். கட்ஜு, எம்.சி., செய்த பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பாவது :—**

நான் மத்திய கிழக்கி லிருந்து இப்போது தான் திரும்பி வந்தேன். அங்குள்ள இந்தியப் படைகளோடு நான் ஒன்றரை வருஷகாலம் இருந்தேன். அவர்களுடைய இன்ப துன்பங்களில் நானும் பங்கு கொண்டேன். அவர்கள் வெற்றியிலும் தோல்வியிலும் நானும் கூட விருந்தேன். பெங்காஸிக்கும் அக்டேபியாவிற்கும் நாங்கள் விரைந்து ஓடினோம். கடுமையாகப் போராடிக் கொண்டே நாங்கள் கஸாலாவிற்குத் திரும்பி வந்தோம். ஜூன் மாதம் பிறந்தது. கஷ்ட காலமும் தொடர்ந்தது. எல். ஆதம், பெல் ஹமித் முதலிய கடுமையான போர் முனைகளிலும் நான் இருந்திருக்கிறேன். தன் கைக்குக் கிடைத்தவற்றை எல்லாம் கொண்டு ரோமல் எங்களைத் தாக்கினர். நாங்களும் கொஞ்ச காலம் இதைச் சமாளித்தோம். எதிரியின் ஆயுத பலம் வலுத்திருந்தது. ஆகவே, நாங்கள் விட்டுக் கொடுத்து ஹால்கயாவிற்குப் பின்வாங்கினோம். அங்கிருந்து மாத்ருவுக்கு நாங்கள் வந்து சேர்ந்தோம். இங்கே எதிரிகள் எங்களை வளைத்துக் கொண்டார்கள். என்றாலும் எதிரி படைகளுக் கூடே ஒரு வழியை உண்டு பண்ணிக் கொண்டு எல் அலமீன் போய்ச் சேர்ந்தோம். இங்கிருந்து எங்களை அசைக்க ரோமலாலும் அவருடைய படைகளாலும் முடியவில்லை. எல். அலமீனில் நடைபெறும் யுத்தத்தைப் பற்றித்தான் நான் உங்களுக்கு இன்று சொல்லப் போகிறேன்.

இந்த யுத்தம் ஜூலை மாதம் ஆரம்பமானது; நவம்பர் மாதம் வரை நடைபெற்றது. கடைசியாக எதிரிப் படைகள் "போதும், போதும்!" என்று கூவிக் கொண்டு ஓட்ட மெடுத்தனர். அன்று அவர்கள் ஓடியது போல அவர்கள் ஜன்மத்திலேயே ஓடியிருக்க மாட்டார்கள்.

இது ஒரு மகத்தான யுத்தம். எப்படி என்றால், மத்திய கிழக்குப் போர்முனையில் யாருக்கு வெற்றி கிடைக்கும் என்பதை இந்த யுத்தம் முடிவு கட்டக் கூடும். அன்றியும், அச்சு நாட்டார் அக்கிரமங்களுக்கு உலக மக்கள் ஆளாகாதபடி காக்கும் பொருட்டு நடைபெறும் யுத்தத்தை முடிவு செய்யக் கூடியது இந்தப் போர் தான்.

நான் மாத்ருவிலிருந்து அலமீன் போய்ச் சேர்ந்த நாள் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அந்தப் பாலைவனத்தின் பல திசைகளிலு மிருந்து நம் படைகள் வந்து சேர்ந்து கொண்டிருந்தன. அவர்கள் உடலெல்லாம் புழுதி. தலையோ வாரிவிடப்படவில்லை. தம் கைக்குக் கிடைத்த ஆயுதங்களைக் கையில் எடுத்துக் கொண்டு, சந்திக்கிறதற்கு ஏற்கெனவே ஏற்பாடாகி யிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வெகுவாகக் களைத்திருந்தார்கள்; என்றாலும் மன உறுதியோ டிருந்தார்கள், களைத்திருந்த அவர்கள் உடலி லிருந்து சொட்டிக் கொண்டிருந்த வெயர்வை உலரு முன்பே, பள்ளங்களைத் தோண்டி, சுரங்க வெடிகளை அமைக்கத் தலைபட்டு விட்டார்கள். தங்கள் அதிர்ஷ்ட வசத்தால் தான் அவ்விடத்திற்குத் தாங்கள் வந்திருப்பதாக, அவர்கள் உண்மையாகவே நம்பினார்கள்.

அலமீனிலிருந்து அதாராவிற்கு நான் போனது எனக்கு நன்றாக ஞாபக மிருக்கிறது, அப்போது தான் வந்து சேர்ந்த நியூசிலந்து படையும் இந்தியப் படையும் வெகு அவசரமாக, பாதுகாப்புக்களை அமைத்துக் கொண்டிருந்தன. இதைக் கண்டவுடனே கடவுளே! நமக்கு அங்கே நிச்சயம் வெற்றி கிடைக்க வேண்டு மென்று நான் வாய் விட்டுக் கூவியது எனக்கு ஞாபகமிருக்கிறது. சுரங்க வெடிகளைப் பற்றியும், முட்கம்பிகளைப் பற்றியும், டாங்கிகளைப்பற்றியும், பீரங்கிகளைப் பற்றியும் தான் என் சிந்தனை எல்லாம். மனிதத் தன்மையின் உயர்வைக் குறித்தே நான் கருத வில்லை. மனித உணர்ச்சி எதற்கும் விட்டுக் கொடுக்காது: ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் விட மிகவும் உறுதியானது. "எதிரி தப்ப முடியாது" என்று கூறியது இந்த முயற்சி.

எதிரியும் தப்ப வில்லை. இரண்டொரு முறை முன்னேறினர். ஆனால் இந்தியர்கள் விடவில்லை. அதன் பயனாகத் தான் மத்திய கிழக்குப் போர் முனை நம் வசமிருக்கிறது. நாசஞ் செய்யப் பட்ட ஐரோப்பாவை மீட்பதற்கு இது தான் முதற் படி என்று அச்சு நாட்டாருக்கு அறிவிப்போம்.

**ருவிசத் மலே.**

ருவிசத் மலைத் தொடர், கடற் கரைக்கு 10 மைல்களுக்கு உட்புரம் நெடுக போய்க் கொண்டிருக்கிறது. கடற் கரையை யடுத்துள்ள காடுக்கும் ருவிசத்துக்கும் இடையே ஒரு பள்ளத் தாக்கு இருக்கிறது. இது மணற் பாங்கான பூமி. ருவிசத் மலை யார் வச யிருக்கிறதோ, அவர்கள் ஆதிக்கத்திற் குட்பட்டுத் தான் இந்தப் பள்ளத் தாக்கும் இருக்கும். ஆகவே கடற் கரை வழியே போகும் முக்கியமான ரோடு இந்த பள்ளத் தாக்கின் மேல் தான் போகிறது. இந்த மலை வட திசையில் மிகவும் உயர்ந்திருக்கிறது. இந்தச் சிகரங்களை அவற்றின் உயரத்திற் கேற்ற படி 63-வது பாயிண்ட், 64-வது பாயிண்ட் என்று கூறுகிறார்கள். இவற்றை பாதுகாத்துக் கொள்ள, நாம் ஓயாது முயன்று கொண்டிருக்க நேர்ந்தது. ஏனென்றால் இந்தச் சிகரங்களிலிருந்து அப் பள்ளத் தாக்கு முழுதும் பார்வையிடலாம். அம் மலையின் தென் பகுதியையும் கூட பார்க்கலாம். உதாரணமாக 63-வது பாயிண்ட் ஒரு கட்சியார் வசம் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். எதிர் கட்சியார் தம் பீரங்கிகளின் உதவியைக் கொண்டு வெகு தூரம் அந்தப் பகுதியில் கைப்பற்றி விட முடியாது. மலையிலேயே பல இடங்களில் பாறையாகவும் சில இடங்களில் மணற் பாங்காகவும் இருக்கின்றது. சிகரங்க ளெல்லாம் உறுதியான பாறைகளாகவே யிருக்கின்றன. இவற்றில் பள்ளந் தோண்டுவது முடியாத காரியம். இங்கே தான் ரோமல் தோற்றார்.

**ஹிட்லருக்கு ரோமல் அழைப்பு.**

கெய்ரோ நகரத்தை யடுத்து 'மினு ஹௌஸ்' என்றொரு மாளிகை இருக்கிறது. அங்கு வரும்படி ஹிட்லரை ரோமல் விருந்துக்கு அழைத்திருந்தார். நீல நதியில் உள்ள மீன்கள் மிகவும் சுவையுள்ளவை. காட்டு வாத்துக்களின் இறைச்சியுங் கூட மிகவும் சுவையாக இருக்கும். இவற்றைக் கொண்டு ஹிட்லருக்கு விருந்து செய்ய வேண்டு மென்பது ரோமலின் ஆசை. அலெக்ஸாந்திரியா நகரத்தைக் கொள்ளையாடலா மென்று தன் படையினருக்கு ரோமல் சொல்லி யிருந்தார். அவருடைய படையினர் அலெக்ஸாந்திரியாவுக்குள் நுழைந்தார்கள். எந்தக் கோலத்தில்? வெற்றி வீரர்களாக வல்ல; யுத்தக் கைதிகளாக. இதை நான் நேரில் கண்டேன். ரோமலுக்கு எப்படிப்பட்ட வரவேற்பளிக்க ஹிட்லர் காத்துக் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை. ஆனால், ஒன்று மட்டும் உறுதி. அந்த வரவேற்பை ஒரு போதும் ரோமல் விரும்ப மாட்டார்.

சென்ற ஆகஸ்ட்டு மாதத்தில் எங்கள் முன் வரிசைப் படை முன்னேறி போய்க் கொண்டிருந்தது. ருவிசத்தில் எங்கள் இடத்தை பலப் படுத்திக் கொள்ள வேண்டு மென்பது தான் எங்கள் நோக்கம். அப்போது நாங்கள் ஒரு இத்தாலிய ஜெனரலையும், அவருடைய முக்கியமான ஸ்டாப் உத்தியோகஸ்தர்கள் இருவரையும் கைதிகளாகப் பிடித்தோம். அவர்களை அலெக்ஸாந்திரியாவிற்குத் திரும்ப விரட்டிக் கொண்டு வந்தோம். அப்போது அந்த ஜெனரல புலம்பத் தலைப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நாங்கள் நெடு நாட்களுக்கு முன்பே இந்தப் பிரயாணத்தை முடிப்போ மென்று எதிர் பார்த்தோம். அதுவும் எங்கள் வண்டிகளிலாவது, பிரிட்டிஷாரிட மிருந்து கைப் பற்றிய வண்டிகளிலாவது தான். மத்தியதரைக் கடலைப் பாருங்கள்; இது அழகா யில்லையா? அலெக்ஸாந்திரியாவும் ஒரு அழகிய நகரமாகத் தான் இருக்க வேண்டு மென்று நினைக்கிறேன். இந்தக் கோலத்தோடு நாங்கள் இந் நகரத்தை பார்ப்போ மென்று எதிர் பார்க்கவில்லை".



அவருடைய மற்றொரு நண்பர் தன் கைகளை உதறிக் கொண்டு "இது மகா கஷ்டம்; மகா கஷ்டம்; நாங்கள் (இத்தாலியர்கள்) எதிர்பார்த்தபடி அலெக்ஸாந்திரியாவைக் காணக் கூடவில்லை" என்று கூறிக் கதறினார்.

**ரோமலின் கடைசி முயற்சி.**

ஹிட்லருக்குத் தான் கொடுத்த வாக்குறுதியை நிறை வேற்ற கடைசி முறையாக ரோமல் சென்ற செப்டெம்பர் மாதம் முயன்றார். தென் பக்கத்தில் சுரங்கங்கள் போடப்பட்டிருந்த பகுதியின் வழியாகத் தன முழு பலத்தையும் திரட்டிக் கொண்டு கிளம்பினார். இன்னும் 2 அல்லது 3 நாட்களில் அலெக்ஸாந்திரியா போய்ச் சேர்ந்து விடலா மென்று தன் படையினருக்குக் கூறினார். ஆனால் 23 நாட்களுக்குப் பிறகும், அவர் புறப்பட்ட இடத்திலேயே இருக்கும்படி நேர்ந்தது. அப்போது ஜெர்மன் ஜெனரல் ஒருவரை நாம் கைதியாகப் பிடித்தோம். அவருடைய பெயர் வான் தோமா. ஜெர்மானியரின் யுத்த தந்திர முறையைப் பற்றி கூறிய அவர், சுரங்கப் பகுதிகளைக் கடந்த பிறகு வட கிழக்குப் பகுதியை துண்டு படுத்தி விட வேண்டு மென்பது தான் ஜெர்மன் படைத் தலைவரின் நோக்கம் என்று கூறினார். அன்றியும் ருவிசத் மலையைக் கடந்து கடற் கரையை அடைந்து, அங்கிருந்து கொண்டு, 8-ம் படையை வெட்டி விட வேண்டு மென்பதும் அவருடைய நோக்கமாம். ருவிசத் மலைப் பகுதிகளை இந்தியப் படைகளும் பிரிட்டிஷ் படைகளும் காவல் புரிகின்றதனால், தம் எண்ணம் பலிக்கவில்லை யென்று வான் தாமஸ் ஒப்புக் கொண்டார். இவ்வளவு சிறந்த பாதுகாப்புக்கள் இங்கே இருக்கு மென்று அவர்கள் எதிர்பார்க்க வில்லை.

இது தான் தன் கடைசி முயற்சி யென்று ரோமலுக்கும் தெரியும். நமக்குப் பக்க பலம் ஏராளமாக வந்து கொண்டிருந்தது. பள்ளங்களைத் தோண்டி, தன் படைகளுக்கு வேண்டிய பாதுகாப்புக்களுக் கெல்லாம் ஏற்பாடுகளைச் செய்தார் ரோமல். தன் நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு மிகக் கடுமையாக ஒரு நாள் போராட வேண்டி யிருக்கு மென்று அவருக்குத் தெரியும். அக்டோபர் மாதத்தில் இந்த நிலைமை உண்டானது. அன்று, ஆஸ்திரேலியர்களும் தென் ஆபிரிக்கர்களும் கரை நெடுக இருந்தனர். இந்தியப் படைகள் ருவிசத் மலை மேல் காவலிருந்தன. இங்கிருந்த நியூசிலந்தியர்களை, உதவிப் படையாக அமர்த்திக் கொள்ளும் பொருட்டு கொண்டு போய் விட்டார்கள். ஆகவே, அவர்கள் பார்த்து வந்த வேலையையும் இந்தியப் படைகளே பார்க்க வேண்டிய தாயிற்று. இன்னும் தெற்கே 7-வது ஆர்மர் பிரிட்டிஷ் டிவிஷன் இருந்தது. கரை யோரத்தி லிருந்த ஆஸ்திரேலியர்களுக்கும் தென் ஆபிரிக்கர்களுக்கும் பின்புரம் பலமான ஆயுத பலம் அமைந்திருந்தது. அப் படைகளில் ஏதேனும் சேதம் நேர்ந்தால், அங்கே விரைந்து போய் எதிரிகளைத் தவிடு பொடி யாக்குவது தான் இந்த ஆயுத பலத்தின் நோக்கம்.

நாம் எதிரிகளைத் தெற்கே யிருந்து தாக்குவதாக நம்பும்படி செய்தோம்; எனவே, அவர் தன் படைகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார். ஜெர்மன் படைகள் வட பகுதியி லிருந்தன. இந்தியப் படைகளுக்கு எதிரில் பாரச்சூட் படைகள் இருந்தன. தென்புரத்தி லிருந்த எதிரிப் படைகள் பெரும்பாலும் இத்தாலியர்களே.

**இதுவே சமயம்.**

தக்க சமயம் வாய்த்தது. நம் முக்கியமான தாக்குதல் வட புரத்தில் தான். தென் புரந் தாக்கியது இரண்டாந் தரந் தான். ருவிசத் மலையி லிருந்த இந்தியப் படைகளும் போடு போடென்று போட்டுக் கொண்டிருந்தன. எதிரிகள் திகைத்துப் போனார்கள்.

ஆரம்ப யுத்தத்தைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். எதிரிகளின் முன் அணியி லிருந்த பாதுகாப்புக்களை, பிரிட்டிஷ் பீரங்கிகளி லிருந்து கிளம்பிய நூற்றுக் கணக் கான வெடி குண்டுகள் தவிடு பொடி யாக்கி விட்டன. மற்ற பீரங்கிகள், எதிரிகள் தலை தூக்க ஒட்டாதபடி தகர்த்துக் கொண்டிருந்தன. இந்த யுத்தத்தைப் பற்றி விவரமாகச் சொல்ல வேண்டு மானால், அவகாசம் போதாது. ஆனால் இந்தியர்கள் என்ன செய்தார்கள் என்று மட்டும்

(10-ம் பக்கம் பார்க்க.)

**அங்கேயே இருந்தவர் கூறக் கேட்டேன்.**

அவர் யார்? அவர் அங்கிருந்தது உண்மை தானா? பொய் வதந்திகளைப் பரப்பாதீர்கள்! அவற்றால் சந்தேகமும், துன்பமும், நஷ்டமுந் தான் உண்டாகின்றன. இப் பொய் வதந்திகளை எதிரிகள் கிளப்பி விட்டு, ஏமாந்தவர்கள் இவற்றை பரப்புவார்கள் என்று, நம்புகிறார்கள்.

**பொய் வதந்திகளை நம்பாதீர்கள்!**

ஜப்பானியர்களுக்கு விரோதமாகத்
தேசியப் போர் முனையை அமையுங்கள்!

SECRETARIAT LIBRARY 1943 MADRAS GOVERNMENT

## 700 ஏக்கர் நிலத்தை உழுகிற ஏர்



இங்கிலாந்தில் சென்ற மகா யுத்த காலம் முதல் இந்த நிலம் தரிசாய்க் கிடந்தது. இதில் பெண்கள் படையினர் சாகுபடி செய்யும் பொருட்டு, இயந்திர ஏர்களைக் கொண்டு உழுகிறார்கள்.

சொல்லி விடுகிறேன். அன்று கூர்க்கர்களும் பஞ்சாபிகளும் சுரங்கப் பகுதிகளையும், முள் கம்பிகளையும் கடந்து ரவிசத்தில் எதிரிகள் அமைத்து வைத்திருந்த அரண்களைத் தாக்கினார்கள். ஒரு பார்ஸி உத்தியோகஸ்தர் பொம்மைகள் செய்வதில் கெட்டிக்காரர். படைகள் அணி வகுத்து நிற்பது போல் பொம்மைகளைச் செய்து வைத்திருந்தார். இவை உண்மைப் படைகளென்றே நம்பி, எதிரிகள் தம் பீரங்கிகளைக் கொண்டு வெகு கடுமையாகத் தாக்கினார்கள். எதிரி "சாங்கர்"களுக்குள் நெடுந் தூரம் கூர்க்கர்கள் துளைத்துக் கொண்டு புகுந்து விட்டார்கள். ஆனால், பஞ்சாபியர்களைத் தடுத்து விட்டார்கள் எதிரிகள். பஞ்சாபியர்கள் ஒரு நல்ல வேலை செய்தார்கள். நாம், மத்தியப் பகுதியிலும் கூடத் தாக்குவதாக எதிரிகள் நம்பும்படிச் செய்து விட்டார்கள். இதன் பயனாக எதிரிகளுக்குள்ளே பெருங் குழப்பம் ஏற்பட்டது.

நம் வட பகுதிப் படை படிப்படியாக, ஆனால் உறுதியாக முன்னேறிப் போய்க் கொண்டிருந்தது. அப்போது ஜெர்மன் படைகள் திரும்பத் தாக்காதபடி தடுத்துக் கொண்டிருந்தது இந்தியப் படைகள். ஒவ்வொரு இரவும் நம் ரோந்துப் படைகள் மிகவும் கடுமையாக உழைத்து வந்தன. எதிரி பலமோ மிகவும் அதிகம். அதிலே மிகச் சிறந்த வீரர்களும் இருந்தார்கள்.

நம் படைகள் முன்னேறிக் கொண்டு போகப் போக ரவிசத்தி லிருந்த இந்தியப் படைகள் கொஞ்சங் கொஞ்சமாக வடக்கே போகத் தலைப் பட்டன. எதிரிப் படைகள் மிகவும் கஷ்டப் பட்டுத் தான் போராடிக் கொண்டிருந்தன. கடைசி அடி அடிக்கும்படி எங்களுக்கு எப்போது உத்திரவு பிறக்கு மென்று ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம்.

**நல்ல வேளை வந்தது.**

நவம்பர் மாதம் 4-ம் தேதி இரவில் தாக்கும்படி நம் 5-வது இந்தியக் காலாட் படைக்கு உத்திரவு பிறந்தது. இந்தப் படைக்கு முன்னே 400 பீரங்கிகள் போயின. அருணன் தோன்றுவதற்கு முன்பே நம் படைகள் தம் நோக்கத்தை ஈடேற்றிக் கொண்டனர். அங்கே பெரும் பிளவு எதிரிகளிடையே கண்டு விட்டது. இதன் வழியாக் எதிரி டாங்கிகளுக்குக் கொஞ்சம் கூட அஞ்சாமல், நம் படைகள் தாராளமாகப் போகலாம். இங்கே காவலிருந்தது இராஜபுத்திரப் படையும் எஸ்ஸெக்ஸ் படையும். அதுவும் நூற்றுக் கணக் கானவர்கள் தான். இவர்களுக்கிடையே நம் டாங்கிப் படைகள் கிளம்பிப் போயின. ஆயுதந் தாங்கிய மோட்டார்கள் அநேகம் போயின. நாம் வெற்றி கொண்டோம். எதிரிகளை விரட்டத் தலைபட்டோம்.

இந்த இந்தியப் படையின் சிறந்த வேலையைப் பாராட்டி அந்த படைத் தலைவர் ஒரு செய்தியை அனுப்பி யிருக்கிறார்.

முன்பு வெற்றி வாகை சூடிக் கொண்டு கசாலாவிற்கு வரும் போது ரோமல் என்ன சொன்னார் தெரியுமா? "எட்டாம் படையைச் சேர்ந்தவர்கள் மகா கீழ்க் கடையானவர்கள்; ஆனால் அதைச் சேர்ந்த இந்திய டிவிஷன் மட்டும் அப்படிப் பட்டதல்ல" என்று சொன்னார். இப்போது இந்த 8-ம் படையைக் குறித்து அவர் என்ன சொல்லுவாரோ தெரியவில்லை.

**களைப்பிலும் இன்பம்.**

நான் அலமீனை விட்டுக் கிளம்பினேன். கரையிலே இந்தியர்கள் தம் உடைகளைத் துவைத்துக் கொண்டும் நீராடிக் கொண்டு மிருந்தார்கள். அவர்கள் முகம் களைத் திருந்தது. என்றாலும் மகிழ்வோ டிருந்தார்கள். 5 மாத காலமாகப் போராடிக் கொண்டிருந்தவர்கள்! இப்போது தான் அவர்களுக்குச் சற்று ஓய்வு கிடைத் திருக்கிறது.

நான் திரும்பி வர நேர்ந்தது பற்றி வருந்தினேன். நம் படைகளோடு பெங்காஸிக்கும் அதற்கு அப்பாலும் போக வேண்டு மென்று விரும்பினேன். அதுவும் தன்னலத்தைக் கோரித் தான் விரும்பினேன். போர்க் களத்திலே, தண்ணீரும் உணவும் அளந்து கொடுக்கப் படுகின்றன. கொசு உபத்திரவம் விமானத் தாக்குதலை விட மோசமா யிருந்தது. இந்த நிலையில் நம் படையினரை விட்டு, கெய்ரோவிற்கும் ஸைப்ரஸுக்கும் நான் வந்து சௌக்கியமாக இளைப்பாறிக் கொண்டேன்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.

145640